6353

ஸ்ரீ மஹாபாரதம்.

அநுசாஸனபர்வ

MAHAMAHOPADHYAYA
V. SWAMINATHAIYA
TIRUVANMIYUR, MA

தம்பகோணம் காலேஜ், ரிடயர்ட் ஸம்ஸ்கிருதபண்டிதர்

மஹாவித்வான்

சதாவதானம, ஸ்ரீ - உ.வே. - வேங்கட

தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியர்

அவர்களால மொழிபெயர்க்கப்பெற்று,

தம்பகோணம் காலேஜ், ரடயர்ட் தமிழ்ப்பண்டிதர்

ம. வி. இராமாநுஜாசாரியரால்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூபா 6 : தபால்சார்ஜ் வேறு.

MADRAS :

PRINTED AT THE COMMERCIAL PRESS,

TRIPLICANE.

1923

(*All Rights Reserved.*)

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்

அநுசாஸன பர்வம்.

விஷய ஸூசிகை.

தாநதர்ம பர்வம்.

அத்யாயம்.		பக்கம்.
1	கடவுள் வாழ்த்து	1
	தர்மபுத்ரர் பங்குராசத்தைப்பற்றிப் பீஷ்மரிடம் பலவாறு புலம்பியது	1 - 2
	ஸுகதுக்கங்களுக்கு வினையே காரணமென்பதைப்பற்றிய கௌதமிவேடன்முதலியோரின்கதை	2 - 8
2	இல்லறத்தின் சிறப்பைவிளக்கும்ஸுதர்சனன் கதை ...	8 - 16
3-5	ப்ராமணத்தன்மை பிறப்பினலன்றி வராதென்பதைப்பற்றிய மதங்கன்கதை	16 - 22
6	தர்மபுத்ரர், விச்வாமித்ரர் ப்ராம்மணரானதைச் சொல்லும் படி கேட்டது	22 - 24
7	விச்வாமித்ரர் ப்ராம்மணரானது	24 - 28
8	வீதஹவ்யரும் ஹவன்வம்சமும் ப்ராம்மணரானது ...	28 - 33
9	முயற்சியின்சிறப்பு	33 - 37
0	கல்வினேதிவினைகளின்பயன்	37 - 40
	இன்னஇன்ன கல்வினையுடையோர் இன்னஇன்ன பயன் பெறுவரென்பது	38 - 39
	ஆசையைவிட்டவருக்கே ஸுகமென்பது	39
	வினை செய்தவனையேதொடருமென்பது	39
	பெற்றோரையும் குருவையும் பூஜிப்பவர் பூஜியாதவரின் பயனகள்	40
	வீண்பேச்சினல்வரும் தோஷங்கள்	40
11	அன்னமென்மையைவிளக்கும் கிளியின்கதை ...	40 - 42
12	ப்ராம்மணர்களின்சிறப்பு	43 - 45
	பெண்களுக்குக் கணவனே தெய்வமும் கதியும் அவனது பணிவிடையே தர்மமுமென்பது	44
	ப்ராம்மணரைப் பூஜிப்பவர் பூஜியாதவரின்கதிகள் ...	45

அத்யாயம்.

		பக்கம்.
13	அதிதிபூஜையின்சிறப்பும் கோபத்தின் இழிவும். ...	46
14	பிராம்மணன் பதிவிரதை இவர்களின்சிறப்பு ...	46 - 4
15	மத்ராஜன் யாகமுதலியவற்றைப்பற்றி வ்யாஸரைக் கே	
	டது	47
	வ்யாஸர் யாகமுதலியவற்றைப்பற்றிக் கிருஷ்ணனைக்கேட்	
	கச்சொல்லியது	48
	ஒருபிராம்மணன் வாஸுதேவர் வேதங்களையறியத் திறமை	
	யுள்ளவரென்றது	48
	கிருஷ்ணனுக்கும் வ்யாஸருக்கும் ஸம்பாஷணையும் வ்யாஸர்	
	வாஸுதேவரே மேலானவரென்றதும்	48
16-18	விஷ்ணுவின்மகிமை	49 - 5
19	பீஷ்மர் கிருஷ்ணனிடம் கருடன்கதையைச்சொல்ல அனுமதி	
	கேட்டதும் அவர் அனுமதிகொடுத்ததும்	52 - 5
20-29	கருடன்பிறப்புமுதலியவரலாறு	53 - 7
	புத்திரன்என்பதன்பொருள்	57
30	வாக்குத்தத்தஞ்செய்ததைக் கொடாததனாலும் பிராம்மண	
	பொருளைப் புஜித்ததனாலும் உண்டாகும் தீமையைவிளக்	
	கும்எறுரங்குகளின்கதை	70 - 7
31	சூத்ரன் ரிஷிகளின் ஆச்ரமத்தின்ஸமீபத்தில் குடிசைகட்டிக்	
	கொண்டு தவம்செய்தது	74
	சூத்ரன் தன் ஆச்ரமத்திற்குவந்துகொண்டிருந்தஒருரிஷியை	
	ச்ராத்தத்தைமுடித்தும்படி வேண்டியது	74
	ரிஷி சூத்ரனுக்கு சாஸ்த்ரமுறையைக் கூறியது ...	74
	சூத்ரனும் ரிஷியும் இறந்து அரசனும் புரோஹிதருமாகப்	
	பிறந்தது	75
	அரசன் நகைத்ததும்புரோஹிதர் காரணங்கேட்டதும் ...	75 - 7
	அரசன் நகையின்காரணங்கூறிப் புரோஹிதரைச் சுத்தி செயது	
	கொள்ளச்சொல்லியது	76 - 7
	புரோஹிதர் தவஞ்செய்து மேன்மையுற்றது	77
	தாழ்ந்தவருக்குப் உபதேசிக்கலாகாதென்பது	77 - 7
32	லக்ஷ்மி தான்வலிக்குமிடங்களையும் வலியாதவிடங்களையும்,	
	ருக்மிணிக்குச் சொல்லியது	78 - 8
33	நன்றிகொன்றவரின் பிராயச்சித்தவிஷயமான வத்ஸகாபரிந்	
	கதை	81 - 8
34	சோர்க்கையில் யாருக்கு இன்பம் அதிகமென்பதைப்பற்றிய	
	பங்காஸ்வனன்கதை	83 - 8
35	தீவினைகளைநீக்கி நல்வினைகளைச்செய்பவர் கடவுளருளைப்	
	பெறுவரென்பது	87

அத்யாயம்.		பக்கம்.
36	தர்மபுத்திர் உலகவாழ்க்கையினுள்ள துக்கத்தைக்கூறிப் பீஷ்மரை வைஷ்ணவதர்மத்தைச்சொல்லும்படி கேட்டது ...	88-92
37	முக்தியுபாயம்	93-94
38-39	உலகஸ்ருஷ்டிமுதலியவற்றைப்பற்றி நாரதருக்கும் ஸநத்குமாரருக்கும் ஸம்பாஷணம்	96-102
40-43	தேவாஸுரயுத்தத்தில பிரம்மதேவர் விஷ்ணுவைத்துதித்ததும், விஷ்ணு அஸுரரைவதஞ்செய்து மறைந்ததும் ...	103-104
	தேவர்கள் தம்மைக்காத்தவர் யாரென்று பிரம்மதேவரைக் கேட்டது	104-105
	ரிஷிகள் விஷ்ணுவின் ஸ்வரூபமுதலியவற்றைச் சொல்லும்படி கருடனைக்கேட்டது...	105-106
	கருடன் விஷ்ணுவின்மஹிமையைரிஷிகளுக்குச்சொல்லியது	106-122
	கருடன் விஷ்ணுவுக்கு வாகனமும் கொடியுமானது ...	107
	கஸ்யபர் விஷ்ணுவின்மஹிமையைக் கருடனுக்குச் சொல்லியது	108-109
	விஷ்ணு கருடனுக்கு அபயங்கொடுத்தது	109-112
	விஷ்ணுமறைந்ததும் கருடன் அவரைத் துதித்ததும் ...	112-115
	விஷ்ணு கருடனைத்தேற்றியதும் இருவரும் பதரிகாஸ்ரமம் வந்ததும்	115-116
	விஷ்ணு தமதுமஹிமையைக் கருடனுக்கு உபதேசித்தது ...	117-121
44	முற்கூறியவிஷ்ணுமஹிமையாகிய கதையைப்படிப்பது முதலியவற்றின்பயன்	123-124
45-48	பீஷ்மர் கிருஷ்ணனை யுதிஷ்டிரருக்குச் சிவமஹிமையைச் சொல்லச்சொல்லியது	125-126
	கிருஷ்ணன் சிவனதுமஹிமையையும் ஸஹஸ்ரநாமத்தையும் தர்மபுத்திரர்முதலியோருக்குச் சொல்லியது ...	126-212
	ஜாம்பவதி கிருஷ்ணனிடம் புத்ரனைவேண்டினது ...	126
	கிருஷ்ணன் தவஞ்செய்யச்சென்றதும் உபமன்யுமுனிவர் சிவமஹிமையை உபதேசித்ததும்	127-152
	சிவனைப்பூசித்துமேன்மைபெற்றவர்	127-132
	உபமன்யு பாலை விரும்பியது	132
	உபமன்யுவின்தாய் சிவனருள்பெற்றவருக்குப் பால்கிடையாதென்றது	133
	உபமன்யு தம்தாயினிடம் சிவனைவழிபடுமுறையைக் கேட்டதும் அவள் உபதேசித்ததும்	133-136
	சிவன் இந்திரவடிவத்தோடு உபமன்யுவைப் பரீக்ஷித்ததும் உபமன்யு இந்திரனைமறுத்துச் சிவனே மேலானவரென்றதும்	136-142
	சிவன் காட்சியளித்ததும் உபமன்யு துதித்ததும் ...	114-149

அத்யாயம்.		பக்கம்.
	உபமன்யு வரங்கேட்டதும் சிவன் பாற்கடலையும் மற்றும் பல வரங்களையும் அளித்ததும்	151
	கிருஷ்ணன் தவஞ்செய்ததும் சிவன் பிரத்யக்ஷமானதும்	153
	கிருஷ்ணன் சிவனைத் துதித்தது	154-156
	சிவனும் உமையும் கிருஷ்ணனுக்கு வரமளித்தது ...	157
	உபமன்யு தண்டிமுனிவர் செய்த சிவஸ்தோத்ரத்தைக் கிருஷ்ணனுக்குச் சொல்லியது	158-163
	தண்டிமுனிவர் சிவனைத் துதித்து வரம்பெற்றது ...	158-163
	உபமன்யு சிவஸஹஸ்ரநாமத்தைக் கிருஷ்ணனுக்குச் சொல்லியது	166-212
	சிவஸஹஸ்ரநாமஅகராதியும் பொருளும்	172-210
	சிவஸஹஸ்ரநாமத்தைப் படித்தல் முதலியவற்றின் பலனும் அதன் வரலாறும்	211-212
49	வ்யாஸர்முதலியோர் சிவமஹிமையைத் தர்மபுத்திரருக்குச் சொல்லியது	212-216
	கிருஷ்ணன் சிவமஹிமையையும் அவரைத்துதிப்பதன்பலனையும் தர்மபுத்திரருக்குச் சொல்லியது	217-219
50	அஷ்டாவக்ரர் வதான்யரிடம் ஸுப்ரபையைக் கேட்டது...	220
	வதான்யர் அஷ்டாவக்ரரைப் பெண்ணே ஆளும் தன்மையை அறிந்துவரச்சொல்லியது	220-221
	பெண்கள் கணவனுகவிரும்பத்தக்கவன் யாரென்பது ...	220
	அஷ்டாவக்ரர் வடதிசை சென்றது	221
	வடதிசைத்தேவதை தன்னைச்சேரும்படி அஷ்டாவக்ரரை வற்புறுத்தியதும் அவர் மறுத்ததும்	224-227
51	வடதிசைத்தேவதை அஷ்டாவக்ரரைப் பரிசோதித்தது ...	227-229
52	அஷ்டாவக்ரர்வடதிசைத்தேவதையிடம் விடைபெற்றுவந்து ஸுப்ரபையை மணந்தது.	229-231
53	தாழ்ந்தஜாதிப் பெண்களுக்குப் பிறந்தவர்கள் பிரம்ம ரிஷிகளானது	232-234
54-59	நாரதர் மார்க்கண்டேயருக்குத் தர்மங்களைச் சொல்லியது	234-248
	தர்மம் எந்தஎந்தயுகத்தில் எப்படிஎப்படியிருக்குமென்பது	235-236
	மந்திரத்தினுல்பரிசுத்தமானஹவ்யகவ்யங்கள்கெடாவென்பது	236
	மந்திரமுதலியவையில்லாமல் கொடுக்கும்ஹவ்யகவ்யங்கள் யாரைச்சேருமென்பது	236
	நான்குஜாதியிலும் சோதவர் கொடுக்கும் ஹவ்யகவ்யங்கள் யார்யாரைச் சேருமென்பது	236
	கன்னிகையைக் காலத்தில்கொடாதவருக்கு வரும்தோஷங்கள்	237

விஷய ஸூசிகை

அத்தியாயம்.		பக்கம்.
	பாணிக்ரஹணமானபின் கணவனிறந்த கன்னிகையின் விவர்க முறை	237
	புனர்ப்பூ யாரென்பது	237
	கர்ப்பிணியானகன்னிகையின் விவாகமுறை	237-238
	கன்னிகைக்குப்பிறந்தவர் யாருக்கு ஹவ்யகவ்யங்களைக் கொடுக்கவேண்டுமென்பது	238
	ஸஹோடன் யாரென்பது	238
	கன்னிகையிடம் புத்ரனையுண்டாக்கினவருக்குப் பாவமன்றிப் பலனில்லையென்பது	238
	கௌமாரி யாரென்பது	238
	கௌமாரியின்புத்ரர் ஔரஸாதயெனபது	238
	கௌமாரி புண்யகாமங்களில் பத்நியாயிருக்கத் தகாதவளென்பது	238
	கன்னிகைகளின் மங்களங்களுக்குரிய சிறப்புக்கள் ...	238-239
	எட்டுவகைமணவிகளும் அவர்களின்ஸந்ததிகளும் ...	239-240
	ஆஸ்ரமத்திலிருக்கும் பெண்களும் அவர்களின்ஸந்ததிகளும்...	240
	கணவனிறந்தபின் மற்றொரு கணவனை அடைபவள் ...	240
	பிதர்மணவியைச் சேர்ந்தவர்களின் புத்ரபலன் ...	241
	குண்டகோளகர்களின் இழிவும்,அவர்களை உண்டாக்கினவரும் தாயின்கணவரும் அடையும் கதியும், அவர்களின் ஹவ்யகவ்யங்களும்	241-242
	மாதர்களின் வியபிசாரப்பிராயச்சித்தமுதலியன ...	242-243
	பெண்களில் யார்யார் விடத்தக்கவர் தகாதவரென்பது முதலியன	243-245
	மனிதர்களின்உடம்பிலுள்ள தீர்த்தங்கள்	245-246
	பெண்ணும்பொருளும் மயக்குமென்பது	246
60	தானத்துக்கு யார் பாத்ரரென்பதுமுதலியன... ...	248-251
	யார்யாருக்குத்தானஞ்செய்வதில் பலனதிகமென்பது ...	251-252
61	தேவபித்ருகாரியங்களின்காலம்	252
	எப்படிப்பட்டஅன்னம் ராக்ஷஸருக்குரியதென்பது, ...	253
	ஸ்ராத்தத்தில் வரிக்கத்தக்கவரும் தகாதவரும் ...	253-255
	ஸ்ராத்தயோக்கியமான பொருள்முதலியவை ...	255
	ஸ்நானமுதலியவற்றின்காலங்களும் தேவபித்ருகாரியங்களின் முறையும்	255-256
	முதலில் வரித்தவனைவிட்டு மற்றோரிடத்தில் புகுபவருக்கு வரும்பாவமும் முதல் மூன்றுவர்ணங்களுக்கும் உபநயன முதலியவற்றின்முறையும்	256
	ஸ்ராத்தத்தில் அனுசாரமாகப்புகுக்கும்பிராம்மணனுக்கும்மேல் வர்ணத்தாரிடம் புகுக்கும் சூத்ரனுக்கும்வரும் பாவங்கள்...	256-257

அத்யாயம்.		பக்கம்.
62	எவருக்குக்கொடுப்பதில் பலனதிகமென்பதும் ஸ்வர்க்கத்தும் கும் நரகத்துக்கும் போகிறவர்களும்	257-261
63	கொல்லாமலே வரும் பிரம்மஹத்திதோஷம் ...	261-262
64	புண்யதீர்த்தங்களின் மஹிமை...	263-267
65	ஒருஸ்த்ரீ ஒருபிராம்மணருக்குக் கங்கையின் மஹிமையைக் கூறியது	269-277
66	நாரதர் பூஜிக்கத்தக்கவர்களைக் கிருஷ்ணனுக்குச் சொல்லியது	277-279
67	அடைக்கலம் புகுந்தவரைக்காப்பதைப்பற்றிய சிபிசக்ரவர்த்தி கதை	280-282
68	பிராம்மணரைப் பூஜிப்பது அரசரின் முக்கியமானகடமையென்பது	283-285
69	பூமிதேவி பிராம்மணர்மஹிமையைக் கிருஷ்ணனுக்குச் சொல்லியது	287
70	பிராம்மணரின்மஹிமைமுதலியன	287-289
71	சம்பரன் பிராம்மணர்மஹிமையை இந்திரனுக்குச் சொல்லியது	290-291
72	தானம்பெறத்தக்கவர் யாரென்பது முதலியன ...	292-293
73	பஞ்சசூடை பெண்களின்இயற்கை ய நாரதருக்குச் சொல்லியது	293-295
74	பெண்களின் கெட்டஇயற்கைமுதலியன	296-297
75-78	பெண்களைக்காப்பது கடினமென்பதற்கு உதாரணமான விபுலர்கதை	298-308
79	விவாஹமுறைமுதலியன	309-314
80	சுல்கம்வாங்கினகன்னிகை கணவனை அடையாவிடில செய்ய வேண்டியவிதி	314-315
	பெண்களுக்குத் தாயபாகங்கொடுத்தல்முதலியவை ...	315-316
81	பெண்களுக்குப்பொருள் கொடுத்தல் அன்போடுகூடத்தல் முதலியன	317-318
82	பலவானப்பெண்களிடம் பிறர்தபிள்ளைகளுக்குப் பொருளைப் பாகித்தல் முதலியன	319-323
83	ஸங்கரஜாதிகளின் வரலாறுமுதலியன	324-328
84	பன்னிருவகைப்பிள்ளைகள் யார்யாரென்பதுமுதலியன ...	329-332
85-86	ஸஹவாஸஸ்நேஹத்தைப்பற்றிய சுவயனர்கதை ...	333-338
87-91	பரசுராம விச்வாமித்ர ஜனனவிஷயமான சுவயனர் குரிகனிடம் வலித்த கதை	339-354
92	தானம்தானமுதலியவற்றின்சிறப்பு	355-358
93	தோட்டம்வைத்தல் குளம்வெட்டல் முதலியவற்றின்பயன்...	358-360

6353

அத்தியாயம்.		பக்கம்.
94	பிராம்மணர்களைப்பூஜித்தல்முதலியவற்றின்சிறப்பு ..	361-364
95	யார் தானம்பெறுவதற்குரியவரென்பதுமுதலியன ...	364-365
96	அரசன்செய்யத்தக்கதானம்யாகமுதலியன	366-369
97	பூமிதானத்தின்சிறப்பு	369-373
	ப்ருஹஸ்பதி இந்திரனுக்குத் தானங்களைப்பற்றிச் சொல்லியது	373-376
98	நாரதர் அன்னதானத்தின்சிறப்பை பீஷ்மருக்குச்சொல்லியது	377-380
99	நாரதர் கேஷத்ரங்கள் இருபத்தேழிலுள் முறையே ஒவ்வொன்றி லும் தர்ஜஞ்செய்யும்முறையையும் பலனையும் தேவகிக்குச் சொல்லியது...	381-383
100	ஜலம் பொன் செய்முதலியவற்றின் தானபலன்முதலியன ...	384-385
101	பாதரக்ஷை எள் பூமி பசு அன்னம்இவற்றின் தானபலன்முத லியன	385-389
102	தண்ணீர்கொடுப்பதன் பலன்முதலியன	390-391
103	எள்முதலியவற்றின் தானத்தைப்பற்றி யமனுக்கும் ஒருபிராம் மணனுக்கும் ஸம்பாஷணை	391-393
104	கோதானம் பூதானம் பசுக்களையும் பிராம்மணர்களையும் காத் தல்முதலியன	394-396
105	பிராம்மணர்பொருளைக் கவரலாகாதென்பதற்கு உதாரண மான ந்ருகன் கதை	397-399
106	யமன் காசிகேதருக்குக் கோதானமுதலியவற்றின்சிறப்பைச் சொல்லியது	401-404
107	இந்திரன்கோதானத்தைப்பற்றிப் பிரம்மதேவரைக்கேட்டது...	405
108	பிரம்மதேவர் கோதானத்தின்சிறப்பை இந்திரனுக்குச்சொல் லியது	406-410
109	பிரம்மதேவர் பசுவைத்திருடுவதுகொல்வதுமுதலியவற்றின் தீமையை இந்திரனுக்குச் சொல்லியது	410-411
110	தவமுதலிய பலபுண்ணியங்களின்பலன்	412-415
111	ப்ருஹஸ்பதி மாந்தாதாவுக்குக் கோதானத்தின்முறைமுத லியவற்றை உபதேசித்தது	415-418
112	கோதானத்தின்சிறப்பும்கபிலைகளின்வரலாறுமுதலியவையும்.	418-421
113-115	வஸிஷ்டர் ஸௌதாஸனுக்குப்பசுக்களின்சிறப்பைஉபதே சித்தது	422-425
116	வ்யாஸர் பசுக்களின்சிறப்பைச் சுகருக்குஉபதேசித்தது ...	428-431
117	கோலோகம் எல்லாவற்றுக்கும் மேலிருப்பதன்காரணம் ...	431-433
118	ஸுரபியின்ஸந்ததிகள்முதலியன	433-435
119	இந்திரன் • ஸுரபியின்பாலைக்குடித்து இறவாமைமுதலிய வற்றைஅடைந்தது	435-436
	இந்திரன் வரம்பெற்று எல்லாத்தேவர்களோடும் கோக்களிடம் வணங்கியது	436

அத்யாயம்.		பக்கம்.
	யார்யார் கோக்களின் எந்தந்த அங்கங்களில் வஸிக்கின்றன ரென்றது	436-437
120	ஸுமித்ரர் பேனபரென்னும்பெயர்பெற்றது ...	437-439
121	ஸுமித்ரர்பசுக்கள் அவரைக்கொல்ல நிச்சயித்தது	440-441
	கபிலைகள் பசுக்களுள் சிறப்புற்றது	441
122	கோமாதாக்கள் ஸ்ுமித்ரரைக் கோலோகத்துக்குக் கொண்டு போனதும் ,அவர்பசுக்கள் அவருடலை நசுக்கியதும் ...	441-442
	பசுக்கள் சாபம் பெற்றது	442
123	ரந்திதேவன்யாகத்தில் பசுக்கள்சென்று உபயோகப்பட்டதும், உடன்பாட்டின்படி யாகம் நிறுத்தப்பட்டதும் ...	443-444
124-127	பசுக்களின் சிறப்பைப்பற்றி வ்யாஸருக்கும் சுகருக்கும் நடந்த ஸம்பாஷணை	445-451
	கபிலையைத்துன்புறுத்துபவரடையும்தீங்கு	448
	பசுக்கள் கபிலநிறம்பெற்று மேன்மையுற்றது... ...	449
	கபிலைகளின் லக்ஷணமும் அவற்றைத்துன்புறுத்துபவரடையும்கெட்டகதியும்	450-451
128	ஸ்ரீதேவிக்கும் பசுக்களுக்கும் ஸம்வாதமும் ஸ்ரீதேவி பசுக்களிடம்வஸித்ததும்	451-453
129	ப்ரம்மதேவர், கோலோகம் தேவலோகத்துக்குமேலிருப்பதன் காரணத்தை இந்திரனுக்குச் சொல்லியது	455-457
130-131	பொன்னின்வரலாறும் ஸுப்ரமணியரின்ஜனனமும் ...	458-468
	தவனையும் யாகனையும் இளியும் அக்னியைவெளியிட்டுச் சாபமும் அனுக்ரகமும் பெற்றது	464-466
132	ருத்ரர் செய்தயாகத்தில் பருகுமுதலியோருண்டானதும் ஸ்வர்ணதானத்தின்சிறப்பும்	469-475
133	கருடன்முதலியோர், ஸுப்ரமண்யருக்கு வாகனமுதலியவற்றைக் கொடுத்தது.	476-477
	தாரகன்வதம்.	477
134	ஒவ்வொருதிதியிலும் சிராத்தம்செய்வதன்பலன். ...	478-479
135	ஸ்ராத்தத்தில்கொடுக்கத்தக்கபொருள்களும் அவ்வவற்றிஞ் பலன்களும்	479-481
136	நக்ஷத்திரங்களில்செய்யும் சிராத்தபலனையமன்சசபிந்துவுக்குச் சொல்லியது	481-482
137	ஸ்ராத்தத்தில் நிமந்த்ரணத்துக்குத்தகாதவர்களும் தக்கவர்களும்	482-487
138	ஸ்ராத்தத்தின்வரலாறும் அதில்விடவேண்டியவையும் ...	487-490
139	ரிஷிகள் ஸ்ராத்தஞ்செய்தது	490
	தேவர்களும் பித்ருக்களும் அஜீர்ணமடைய அக்நி தூண்ணை செய்தது	490-491

அத்யாயம்.		பக்கம்.
140	உபவாஸமுதலியவற்றின் லக்ஷணமுதலியன ...	492-493
141	தானம்வாங்கத்தக்கதும் வாங்கத்தகாததுமான இடத்தை அறிவிப்பதான வ்ருஷாதர்ப்பிக்கும் ஸப்தரிஷிகளுக்கும் ஸம்வாதம்	493-495
	ஆசைகொடிதென்பதைப்பற்றி அத்ரிமுதலியோர் சபதஞ் செய்தது	496
	வ்ருஷாதர்ப்பி, ஸப்தரிஷிகள்முதலியோரைக் கொல்லுப்படியாதுதானியை ஏவியது	497
142	சுனஸ்ஸகன்வந்ததும் ஸப்தரிஷிகள் சுனஸ்ஸகன்பருத்திருப்பதன் காரணங்கூறியதும்	498
	ஸப்தரிஷிகள் முதலியோர் யாதுதானிக்குத் தங்கள்பேரை அறிவித்தது	499-502
	சுனஸ்ஸகன் யாதுதானியை நீருக்கியது	502
	ஸப்தரிஷிகள்முதலியோர் தாமரைக்கிழங்குகளையும் மலர்களையும் பறித்துவந்தது	502
	ஸப்தரிஷிகள்முதலியோர் தாமரைக்கிழங்குகள் காணுமற்போனதற்காகச் சபதஞ்செய்தது	503-504
	சுனஸ்ஸகன் தன் உண்மையைவெளியிட்டுத் தாமரைக்கிழங்குகளைக் கொடுத்தது	504-505
143	ரிஷிகள்முதலியோர் யாத்ரைசெய்ததும் தாமரைக்கிழங்குக்காகச் சபதஞ்செய்ததுமுதலியவையும்	505-510
144-145	குடைபாதரக்ஷைகளின் தானத்துக்குக் காரணமான ஸூர்யனுக்கும் ஜமதக்நிக்கும் ஸம்வாதம்	510-513
146-152	பராசரரின்உபதேசம் ; சூத்ரதர்மமுதலியவை ...	514-532
	காலுவர்ணங்களுக்கும் எதுஎது தனமென்பது ...	515
	சௌசமுறை	516-518
	சூத்ரன் ஸ்யாவஸிகளுக்குப் பணிசெய்யுமுறை ...	519-522
	மரணத்தை முன்னரே அறியும்குறிகள்	525
	சூத்ரன் வரவர மேற்பிறப்பையடைவதும் பிராம்மணப்பிறப்பையடைந்தவன் ஸ்வர்க்கமோக்ஷங்களுக்குப்போவதும்...	525-530
	மோக்ஷத்திற்கு உரியதர்மங்கள்	530-532
153	தேவர்களும்மஸ்கரிக்கத்தக்கவர்களைப்பற்றி மாதலிக்கும் இந்திரனுக்கும் ஸம்பாஷணை	533-534
154	கிருஹஸ்தாச்ரமத்தைப்பற்றிக் கிருஷ்ணனுக்கும் பூமிதேவிக்கும் ஸம்பாஷணை	534-536
155	ஸ்வாயம்புவமனு புஷ்பம் தூபம் தீபமுதலியவற்றைப்பற்றி ஸ்வர்ணருக்குச் சொல்லியது	537-541
156-157	புஷ்பதூபதீபமுதலியவற்றின் தானபலனைப்பற்றிய சுகுஷன் கதை	541-546

அத்யாயம்.		பக்கம.
158	பிராம்மணன்பொருளைக்கவர்வதன் தோஷத்தைப்பற்றி க்ஷத்ர பந்துவுக்கும் சண்டாளனுக்கும் ஸம்பாஷணை ...	547-549
159	புண்யலோகங்கள் பலவென்பதைப்பற்றிக் கௌதமருக்கும் இந்திரனுக்கும் ஸம்பாஷணை	550-555
160	உபவாஸத்தின் சிறப்பையும் பிராம்மணவாக்கின் சிறப்பையும் பற்றிப் பிரம்மதேவருக்கும் பகீரதனுக்கும் ஸம்பாஷணை ...	556-559
161	ஆயுள்விருத்திமுதலிய நன்மைகளுக்குக்காரணமான ஆசாரங்கள்	560-572
162	ஸகோதரர்கள் ஒருவரிடம்ஒருவர் நடந்துகொள்ளுமுறை முதலியன	572-574
163	உபவாஸத்தின்பலன்	574-579
164	யாகஞ்செய்யஅசக்தர் உபவாஸங்களாலேயே யாகபலனை அடைவரென்பது	580-588
165-169	சிவனுக்கும் ஸனத்குமாரருக்கும் தத்துவமுதலிய வற்றைப்பற்றிய ஸம்பாஷணை	589-608
170	எதுஎது தீர்த்தமென்பதும் சுத்தமென்பதும் ...	609-610
171	பன்னிரண்டுமாதங்களிலும் பன்னிரண்டுநாமங்களிலுள் விஷ்ணுவைஆராதிப்பதன்பலன்	611
172	அழகுசெல்வமுதலியவற்றைப் பெறுதற்காகச் செய்யத்தக்கவை	612
173-175	தர்மபுத்ரருக்கும் ப்ருகஸ்பதிக்கும் ஸம்பாஷணை ...	613-624
	கர்மங்களுக்கேற்றபடி ஸ்வர்க்கநரகங்களும் பிறப்பும் வருமென்பது	613-621
	பாவத்தைப்போக்கஉபாயமும் அன்னதானத்தின்சிறப்பும் ...	621-623
	கொல்லாமையின் சிறப்பு	623-625
176	கொலைபுலாலுண்ணல்முதலியன ஆகாவென்பது ...	625-626
177	கொல்லாமையை வற்புறுத்திக்கூறியதும் புலாலைவிட்டபூர்விகஅரசர்களும்	627-632
178	புலாலுண்பதும் கொல்வதும் தகாவென்று வற்புறுத்தியது...	632-635
179-181	எந்தப்பிராணியும் உயிரைவிடத் துணியாதென்பதைப் பற்றி வ்யாஸருக்கும் ஒருபுழுவுக்கும் ஸம்பாஷணை ...	636-640
182-184	ஞானம் தவம் தானம்இவற்றின்சிறப்பைப்பற்றி மைத்ரேயருக்கும் வ்யாஸருக்கும் ஸம்பாஷணை	641-646
185	ஸ்த்ரீதர்மத்தைப்பற்றிய ஸுமனைசாண்டிலிகளின ஸம்பாஷணை	647-648
186	நாரதர் விஷ்ணுஆராதனம்முக்யமென்பதைப் புண்டரீகருக்கு உபதேசித்தது	649-650
187	இன்சொல்லின் சிறப்பைப்பற்றி ஒருராக்ஷஸனுக்கும்ஒரு பிராம்மணனுக்கும் ஸம்பாஷணை	651-654

அத்யாயம். பக்கம்.

188 தேவதாதனுக்கும் இந்திரனுக்கும் ரிஷிகளுக்கும் பித்ருக்களுக்கும் ப்ருஹஸ்பதிக்கும் ஸ்ராத்தத்தைப்பற்றியஸம்பாஷணை 656-660

189 விஷ்ணுமுதலானதேவர்களும் பலதேவர்முதலான ரிஷிகளும் கோக்களும் சொல்லியதர்மங்கள் ... 660-664

190 சூரியன்முதலியோர் சொல்லியதர்மங்கள் 664-666

191 வாயுசொல்லியதர்மங்கள் 666

192 லோமசர்சொல்லியதர்மங்கள் 667-668

193 அருந்ததியும் ஸூர்யனும் யமனும்சொல்லியதர்மங்கள் ... 668-671

194 ப்ரமதர்கள் தம்மால் மனிதருக்குப்பீடைவருங்காரணத்தையும் அதைத்தடுக்கும்உபாயத்தையும் கூறியது ... 671-672

195 திக்குயானைகள் நாகபலிஅவசியமென்று ரேணுகனுக்குச் சொல்லியது 672-673

196 சிவன் கோதானத்தின்சிறப்பைச் சொல்லியது ... 673-674

197 ஸுப்ரம்மண்யர் தர்மஞ்சொல்லியது 674-675

விஷ்ணு எல்லாத்தர்மங்களையும் புகழ்ந்தது ... 675

198 யாரிடத்தில் புசிக்கலாம் யாரிடத்தில்புசிக்கலாகாதென்பது 676-677

199 தானம்வாங்குவதற்கும் போஜனம்செய்வதற்குமுள்ள ப்ராயச்சித்தங்கள் 678-679

200 தவத்தினாலும் தானத்தினாலும் தர்மத்தினாலும் மேலுலகம் பெற்றவர்கள் 680-681

201 ஐந்துவகைத்தானங்கள் 682-683

202 தர்மபுத்ரர் திரும்பவும் தர்மங்கேட்டதை வைசம்பாயனர் ஜனமேஜயருக்குச் சொல்லியது 683-684

203 கிருஷ்ணன்முகத்திலுண்டான அக்ஷி மலையைஎரித்தது ... 685-686

கிருஷ்ணன் எரித்தமலையைத் திரும்பவும் செழிக்கச்செய்து அதன்காரணத்தை ரிஷிகளுக்குக் கூறியது ... 686-687

204 நல்லவிஷயத்தைச் சொல்லும்படி கிருஷ்ணன்கேட்டதும் நாரதர் உமாமஹேஸ்வரஸம்வாதத்தைச் சொல்லத் தொடங்கியதும் 687-689

205-250 உமை சிவனுடையகண்களைப்பொத்தியது ... 690

சிவனுக்கு மூன்றுவதுகண் உண்டானதும் அதனால் இமயமலை எரிக்கப்பட்டதும் 691

உமை தயரமுற்றதும்,சிவன் இமயமலையைச்செழிப்பித்ததும் 691-692

உமாமஹேஸ்வரஸம்வாதம்... 692-853

சிவனுக்கு மூன்றுவதுகண் உண்டானதன் காரணம் ... 692-693

சிவனுக்கு நான்குமுகமும் கரியகண்டமும் பிணகமென்னும் வில்லும் விருஷபவாகனமுமிருப்பதன்காரணங்கள் ... 693-696

அத்யாயம்.		பக்கம்.
சிவன் மயானத்தில்வஸிப்பது உருவம்உக்ரமாயிருப்பது சிரத்தில் பிறைதரிப்பது இவற்றின் காரணங்கள்	...	696-699
ரிஷிகள் சிவபூஜை தூஷித்தது ...	...	... 699
வர்ணாச்ரமதர்மங்கள் ...	...	... 700-704
ரிஷிதர்மங்கள் ...	...	... 705-707
வானப்ரஸ்ததர்மமுதலியன ...	...	... 708-711
கிருஹஸ்ததர்மம் மோக்ஷதர்மமுதலியன ...		... 711-715
அரசன் ஏற்பட்டது ...	...	... 716
கொடியசெய்கைகளாலும் பாவம்வராமைமுதலியன		... 716-721
கொல்லாமையின்சிறப்பு ...	...	... 722-725
விதியின் வன்மை ...	...	... 725-726
போரிலிறந்தவரின் கதிமுதலியன	...	... 727-730
ராஜதர்மம்முதலியன ...	...	... 730-733
அறம்பொருளின்பம்முதலியன	...	... 733-738
வர்ணாச்ரமதர்மங்கள் ...	...	... 739-740
மூன்வினைப்பயன் மறுஜன்மத்தில்வருவது ...		... 741-770
தன்புறுத்தியும் நல்லபலனடைவது	...	... 770-771
நால்வகைப்பிராணிகளின் உற்பத்திமுதலியன		... 771
இயற்கையறிவு கல்வியறிவு இறந்தபின்பிழைப்பது கனவு காண்பதுமுதலியன ...		... 771-773
தெய்வம் முயற்சி ஆத்மாகர்ப்பத்தில்சேர்வதுமுதலியன		... 774-778
பிராணிகள் யமலோகம்போவதுமுதலியன ...		... 778-781
ஜந்துவகைநரகமுதலியன ...	...	... 782-785
மனமொழிமெய்களாலுண்டாகும்பாவம் மதுபானமுதலியன.		785-788
குடியரின்செய்கைகள் ...	...	... 787-788
மூன்றுவகைப்புண்யங்கள் ...	...	... 789-791
ஆசாரசுத்தங்கள் ...	...	... 791-792
புலாலுண்பதன்பாவமும் விடுவதன்புண்ணியமும்		... 792-793
குருபூஜையின் அவசியமும் பலனும் ...		... 794-795
உபவாஸம் பிரம்மசர்யம் தீர்த்தஸ்நானமுதலியவற்றின் முறையும் பலனும் ...	...	... 795-797
தானமுறைமுதலியன ...	...	... 797-800
தானத்துக்குரிய ஆறுகுணங்கள்	...	... 797
அன்னம், பொன், பசு, பூமி, கன்னிகை, வித்தைஇவற்றின் தானமுறையும் பலனும்	...	... 800-806
திலதானமுதலியவற்றின்சிறப்பு	...	... 806-808
வைதிகம்லௌகிகமென்னும் இருவகையாகமுதலியன		... 808-810

வி ஷ ய ஸூ சி MAHOPADHYAYA
U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR. MADRAS.

அத்யாயம்.

ஸ்ராத்தவிதிமுதலியன 810-814
தானபலன் தர்மஸங்கடத்தில் தானஞ்செய்யுமுறைமுதலியன 815-817
புண்யலோகங்கள் பலவென்பது 817-819
நரகத்துக்குரியவர்களையும் ஸ்வர்க்கத்துக்குரியவர்களையும்அறி
யும் முறை 820-821
பலவகைமரணமுதலியன 821-823
மோக்ஷதர்மமுறை 824-827
வைராக்கியமடைவதுமுதலியன 827-832
ஸாங்க்யத்தின் கொள்கை 832-836
யோகத்தின்முறை 837-840
பாசுபதயோகமுறை 841-843
உமை ஸ்த்ரீதர்மம்சொல்லத் தொடங்கியது ... 844-845
ஸ்த்ரீதர்மம் 846-853
ஸ்த்ரீகளின் விவாகமும் கற்பும் இரண்டுமனைவியரின் கதையும் 846-848
பெண்களின்பலதர்மங்களும் இயற்கைகளும் ... 848-853
251 சிவன் விஷ்ணுவின்பெருமையை ரிஷிகளுக்குச்சொல்லியது... 853-858
252 கிருஷ்ணன்மஹிமையும் அர்ஜுனனும் கிருஷ்ணனும் நாராயணரென்பதும் 858-862
253 ஒருபிராம்மணப்பெண்ணுக்கும் யமனுக்கும் ஸம்வாதம் ... 863
254 விஷ்ணுஸஹஸ்ரநாம அவதாரிகை 864-870
விஷ்ணுஸஹஸ்ரநாமம் 873-881
விஷ்ணுஸஹஸ்ரநாமத்தைப் படித்தல்கேட்டல் முதலியவற்றின் பலன் 881-884
விஷ்ணுஸஹஸ்ரநாமஅகராதியும் பொருளும் ... 884-997
255 ஜபிப்பதனால் புண்யத்தையும் கார்யஸித்தியையும்தரும்தேவர்கள் முதலானவர்களின் நாமங்கள் 997-1003
256 பிராம்மணமஹிமை 1003-1005
257-262 கார்த்தவீர்யார்ஜுனன் தத்தாத்ரேயரிடம் வரம்பெற்றது 1005-1006
கார்த்தவீர்யார்ஜுனன் தன்னைப்புகழ்ந்தது ... 1006
அசரீரி பிராம்மணன் மேலானவனென்றதும் கார்த்தவீர்யார்ஜுனன் மறுத்ததும் 1006
வாயுவுக்கும்கார்த்தவீர்யார்ஜுனனுக்கும் பிராம்மணமஹிமையைப்பற்றிய ஸம்பாஷணை 1007-1018
கஸ்யபர் பூமியாயிருந்தது 1009
உசத்யர் வருணனை வென்றது 1009-1011
அகஸ்தியர் அஸுரர்களை வென்றது 1011-1012

அத்யாயம். பக்கம்.

வஸிஷ்டர் அஸுரர்களை வென்றது 1012-1013
ஸரயு உண்டானது 1013
அத்ரி சந்திரனைது 1013-1014
சியவனர் அச்வினீதேவர்களை அம்ருதபானம்செய்வித்தது... 1014-1016
கபர்கள் பூமியையும் ஸ்வர்க்கத்தையும் ஆக்ரமித்தது ... 1016
பிராம்மணர் கபர்களை வென்றது 1017-1018
263 கிருஷ்ணபகவானுடையமகிமை 1019-1024
264 கிருஷ்ணன்பிராம்மணபூஜையின்சிறப்பையும்துர்வாஸரைப் பூஜித்ததனால் தமக்குண்டானமேன்மையையும் தர்மபுத்ரருக்குச் சொல்லியது 1024-1028
265-266 கிருஷ்ணன் தர்மபுத்திரருக்குச் சங்கரர்மகிமையைச் சொல்லியது 1029-1034
267 தர்மஸந்தேகம்வந்தால் நிச்சயிக்கும்வகை 1034-1036
268 தர்மபலன்களும் பலதர்மங்களும் 1036-1039
269 விதிக்கும்முயற்சிக்குமுள்ள வித்தியாஸமுதலியன ... 1040
270 தர்மத்தை அனுஷ்டிக்குமுறைமுதலியன ... 1040-1042
271 சொல்வதனால்பாவங்களைப்போக்கும் தேவநாமங்களும் ரிஷி நாமங்களும் 1042-1043
272 பீஷ்மர்விடைகொடுத்ததும், தர்மபுத்ரர்ஹஸ்தினபுரம் சென்றதும் 1046-1047

பீஷ்மஸ்வர்க்காரோஹண பர்வம்.

273 உத்தராயணம்வந்தபின் தர்மபுத்ரர் பீஷ்மரிடம்வந்தது ... 1047-1048
பீஷ்மர் தம்மிடம்வந்தவர்களுக்குத் தர்மங்களைச்சொல்லி விடைபெற்றது 1049-1051
274 பீஷ்மர் ஸ்வர்க்கம்சென்றதும் அவருடைய உத்தரக்ரியைகளும் 1051-1052
கங்கை பீஷ்மருக்காகப்புலம்பியதும், கிருஷ்ணன் தேற்றியதும் 1052-1053

விஷயஸூசிகை முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ கணேசாயவாஸுதேவாயநமஸ்.

ஸ்ரீ கணேசாயவாயுதாயநமஸ்.

ஸ்ரீ மஹாபாரதம்

அநுசாஸனபர்வம்.

முதலாவது அத்யாயம்.

தானதர்மபர்வம்.

1 நாராயணம் நமஸ்க்ருத்ய நரம்சைவ நரோத்தமம்,
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத்॥

(யுதிஷ்டிரர் சோகித்ததும், பீஷ்மர் கௌதமியையும் வேடன்முதலியோரையும்பற்றிய கதையைச் சொல்லித் தேற்றியதும்.)

யுதிஷ்டிரர், 2சரதல்பத்தில்படுத்திருக்கும் மஹாத்மாவும் தோல்வியடையாதவருமான பீஷ்மரிடம்அணுகி நமஸ்கரித்துப் பின்வருமாறு வினவலானார். "பிதாமஹரே! யாருக்கும்தெரியாத பலவகைதர்மான ஆறுதல்களை நீர் உரைத்தீர். இப்படிப்பட்ட இந்தச்சொல்லைக் கேட்டும் என்மனத்தில் ஆறுதலுண்டாகவில்லை. பிதாமஹரே! இந்தவிஷயத்தில் ஆறுதலுக்குப் பலவிதமானகாரணங்களை உரைத்திருக்கிறீர். பலகாரணங்களாலும், தீனைசெய்தகுற்றத்திற்கு ஆறுதலேது? வீரரே! உமதுசரீரம் அம்புகளால்நிரப்பப்பட்டுக் கடும்புண்பட்டிருப்பதைக்கண்டு என்பிழைகளையே நினைக்கும்எனக்கு ஆறுதலுண்டாகவில்லை. புருஷப்புலியே! உதிரத்தால் அங்கம்நனைந்து, அருவியைப்பெருக்கும் மலைபோன்ற உம்மைப்பார்த்து, மழைக்காலத்துத் தாமரைமலர்போலக் கஷ்டப்படுகிறேன். பிதாமஹர் எனக்காக யுத்தத்தில் 3எதிரிகளால் இந்நிலைமையை அடைவிக்கப்பட்டதைப்

1 உரைவீசுகூத்தை ஆதிபர்வம் முதலாவதுபக்கம் குறிப்பிற்காண்க.

2 பாணங்கள்சார்ந்திய சயனம்.

3 எதிர்த்து யுத்தஞ்செய்தவீரர்களான தங்களாலென்பது கருத்து.

பார்க்கிலும் அதிககஷ்டம் எனக்கு என்னவிருக்கிறது? மற்ற அரசர் களும் புத்ரர்களோடும் பந்துக்களோடும் எனக்காக மரணமடைந்த னர். இதைவிட அதிககஷ்டம் என்ன இருக்கிறது? அரசரே! நாங் களும் த்ருதராஷ்ட்ரபுத்ரர்களும் ஆசைக்கும் கோபத்திற்கும்வசப் பட்டு இந்தஇகழத்தக்ககார்யத்தைச்செய்து என்னகதியை அடையப் போகிறோம்? ஜனங்களுக்கதிபரே! இந்நிலைமையை அடைந்திருக்கும் உம்மைப் பாராமலிருப்பதே துர்யோதனனுக்கு நலமென்றுநினைக்கி றேன். அரசரே! வேண்டினவர்களுக்கு மரணத்தையும் துயரத்தை யும்செய்தநான் வெறும்தரையில் கஷ்டப்படும் உம்மைப்பார்த்து ஆறு தலையடையாமலிருக்கிறேன். குலத்தைக்கெடுத்த துராத்மாவான துர் யோதனன், க்ஷத்ரியதர்மமாகிய இந்தயுத்தத்தில் ஸைனிகளோடும் தம்பிமாரோடும் கொல்லப்பட்டான். அவன், இப்போது தரையில் விழுந்திருக்கும் உம்மைப் பார்க்கவில்லையே. அதனால் மரணமே மேலென்றுநினைக்கிறேன். நான் இவ்வுலகத்தில் ஜீவித்திருப்பதை மேலாகநினைக்கவில்லை. வீரரே! வ்ரதம்தவறுதவரே! முன்னமே நானும் ஸ்நேஹிதர்களுடன்கூடப் பகைவர்களால்கொல்லப்பட்டிருப் பேனையின், பாணங்களினால்பீடிக்கப்பட்டு மிகத்துயரப்படும்உம்மைப் பார்த்திருக்கமாட்டேன். ஓ! தேவந்தரே! நாங்கள் பாவச்செய்கை யுள்ளவர்களாகவே ப்ரம்மதேவரால் படைக்கப்பட்டோமென்பது திண்ணம். அரசரே! எனக்கு நன்மைசெய்யவிரும்புவீராயின் வேறு உலகத்திலாவது நாங்கள் பாபத்தினின்றுவிடுபடும்வகையை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"சிறந்தபாக்யமுள்ளவனே! கர்மத்தின்வசத்திலிருக்கும்உன் னைக் காரணமென்று நீ நினைப்பது எப்படி? இந்தக்கர்மங்களின் ஸ்வ ரூபம் புலன்களுக்குப்புலப்படாத நுட்பமன்றோ? இந்தவிஷயத்தில் யமன், கௌதமி, காலன், வேடன், ஸர்ப்பம்இவர்களின்ஸம்பாஷணை யாகிய இந்தப்பழமையானசரித்ரத்தைக் கூறுகின்றனர். காமக்ரோ தங்களற்ற கௌதமிஎன்னும் ஒருகிழவி இருந்தாள். அவள், பாம்பி னால்கடிக்கப்பட்டுஇறந்துபோன தன்மகனைக் கண்டாள். பிறகு, அர் ஜுனகன்என்னும் ஒருவேடன் கோபமுற்று நரம்புச்சுருக்கினால் அந்தஸர்ப்பத்தைச் சுருக்கிட்டுக் கௌதமியினிடம்கொண்டுவந்து, 'மிக்கபாக்யமுள்ளவளே! உன்புத்ரனைக்கொன்ற நீசப்பாம்பு இது தான். இதை எவ்வகையால் கொல்லலாம்? தீயில்போடலாமா? துண்டுதுண்டாகத் துணிக்கலாமா? சீக்கிரம்சொல். குழந்தையைக் கொன்ற இந்தப்பாவி நீண்டகாலம்ஜீவித்திருப்பது தகாது' என்று

சொன்னான். அதைக்கேட்ட கௌதமி, 'அர்ஜுனகா! நீ அறிவில்லாதவன். இந்தப்பாம்பை நீ கொல்லக்கூடாது; இதை விட்டுவிடு. விதியிருக்கும்போது மதியுள்ளவன் எவன் தன்னைப்பெரியவனாக நினைப்பான்? புண்ணியத்தினால் லேசாயிருக்கும்மனிதர்கள் ஜலத்தில் ஓடங்கள் மிதப்பதுபோல, [1]உலகத்தில் மிதக்கின்றனர். பாவத்தினால் பாரமுள்ளவர்கள்ஜலத்தில்விழுந்தஆயுதம்போல [2]அமிழ்ந்துபோகின்றனர். இப்படி இந்த ஸர்ப்பத்தைக்கொல்வதனால் இந்தக்குழந்தை இறவாமலிராது. இந்தஸர்ப்பம்ஜீவித்திருந்தால் அது உனக்கு என்ன கெடுதலாகும்? இந்தஉயிருள்ளப்ராணியின் உயிரைப்போக்குவதால் அளவற்றஉலகத்தில் எவன் இறப்பில்லாமலிருப்பான்?' என்றுசொன்னான். அதற்கு வேடன், 'எனக்குத்தெரியும். எப்போதும் யோகத்திலிருக்கும்பெரியோர்கள் இவ்வுலகத்தில் குணங்களையும் குற்றங்களையும் அறிகிறதில்லை. ஸ்வர்க்கத்தைப்பற்றியஅவர்களின் உபதேசங்கள் நல்லவைகளாகவேயிருக்கும். ஆதலால், இந்தஸர்ப்பத்தைக்கொல்லப்போகிறேன். சாந்தியைவிரும்புகிறவர்கள் நேர்ந்தகாலத்தையும் விட்டுவிடுவார்கள். கார்யத்தைக்கவனிப்பவர்கள் (ஸமயம்நேர்ந்தபொழுது அக்கார்யத்தைச்செய்து) உடனே தூயரத்தை விட்டுவிடுவார்கள். என்றும்துயரப்படுகின்றவர்களுக்குப் பாக்யம் கெடுகின்றது. ஆகையால், இந்தப்பாம்பைக்கொன்றதனால் துன்பத்தை விட்டுவிடு'என்றுசொன்னான். கௌதமி, 'நம்மைப்போன்றவர்களுக்குத் தூயரமேயில்லை. ஸாதுக்கள் எப்போதும் தர்மத்தையே உயிராகக்கொண்டவர்களல்லரோ? நாள்தோறும் தூயரப்படுகிறவர்கள் [3]சிறுவர்கள். நான் அப்படியல்லேன். தர்மம் கெடும். இந்தஸர்ப்பத்திற்கு நான் அதிகாரியல்லேன். ப்ராம்மணர்களுக்குக் கோபமேயிருப்பதில்லை. கோபத்தினால் பிறரைப்பீடிப்பது ஏது? நல்லவனே! கோபத்தைத் தணித்துப்பொறுத்துக்கொள். இவ்வரவத்தை விட்டுவிடு' என்றுசொன்னாள். வேடன், 'இதைக்கொல்வதனாலுண்டாகும் புண்யமே எனக்கு அழிவில்லாதலாபமாகும். உடனேகிடைக்கும்லாபம் தேவஸ்த்ரீகளினாலுண்டாவதைவிடச் சிறந்தது. காலக்ரமத்தினால்கிடைக்கும்புண்யலாபம் இப்படிப்பட்டஅயோக்யனைக்கொல்வதனால்உடனேகிடைக்கும்' என்றுசொன்னான். கௌதமி, 'பகைவனைப்பிடித்துக்கொல்வதனால் என்னபயன்கிடைக்கும்? கையிலகப்பட்ட சத்ருவைவிடாமலிருப்பதனால் மனத்திற்கு என்னமகிழ்ச்சியுண்டாகும்? நல்லவனே! நமதுபாம்பின்விஷயத்தில் நான் ஏன் பொறுமையிருப்பேன்?

[1]பற்றற்றிருக்கின்றனர். [2]நரகத்தை அடைகின்றனர். [3]அறிவில்லாதவர்.

முக்திக்குஸாதனமாகியகார்யத்தை நான் என்செய்யாமலிருப்பேன்?' என்றுசொன்னள். வேடன், 'கௌதமியே! இந்தஒருஸர்ப்பத்தினால் அனேகரைக்காப்பாற்றுவது தகுமேயன்றி 1அனேகரால் இவ்வொன்றைக்காப்பாற்றுவது தகாது. குற்றம்செய்தவனைத் தர்மத்திற்காக விலக்கிவிடுகின்றனர். நீயும் இந்தப்பாவியானஸர்ப்பத்தை விலக்கிவிடு' என்றுசொன்னன். கௌதமி, 'வேடனே! இந்தப்பன்னகம் கொல்லப்படுவதனால் என்புதல்வன் ஜீவிக்கப்போவதில்லை. இதைக்கொல்வதில் வேறொருப்ரயோஜனமும் எனக்குத் தெரியவில்லை. வேடனே! ஆகலால், ஸர்ப்பத்தை உயிருடன் விட்டுவிடு' என்றுள். வேடன், 'தேவேந்திரன் வ்ருத்ராஸுரனைக்கொன்றுமேன்மையையடைந்தானல்லனே? சிவபெருமானும் யஜ்ஞபுருஷனைக்கொன்று ஹவிர்ப்பாகத்தை அடையவேயடைந்தார். தேவர்கள்செய்ததை நீயும்செய். சீக்கிரம் ஸர்ப்பத்தைக் 2கொல். உனக்கு ஸந்தேஹமும்வேண்டாம்' என்றுசொன்னன். சிறந்தபுத்ரிமையுள்ள அந்தக் கௌதமி, வேடனால் ஸர்ப்பத்தைப்பற்றிப் பலமுறைஉரைக்கப்பட்டும், அதற்குத்தீங்குசெய்ய எண்ணங்கொள்ளவேயில்லை. சுருக்கினால்நெருக்கப்பட்டுக் கொஞ்சம்மூச்சுவிட்டுக்கொண்டிருந்த அந்தப்பன்னகம் கசக்கப்பட்டுத் தைர்யப்படுத்திக்கொண்டு மனிதனைப்போல மெல்லவார்த்தைசொல்லத்தொடங்கிற்று. 'அர்ஜுனா! தெரியாதவனே! இந்தக்குழந்தைவிஷயத்தில் என்குற்றம்பாடது? பராதீனமாயிருக்கும் என்னை நான் எண்ணுமலேயமன் கட்டளையிட்டான். அவன்கட்டளையினால் இந்தச்சிறுவனைக்கடித்தேனேயன்றி இவன்மேல் பகையினாலாவது உணவின்விருப்பத்தினாலாவது நான் கடிக்கவில்லை. வேடனே! பாவம் ஏதாவதிருக்குமாயின் அது அந்தயமனுடையது' என்றது. வேடன், 'நாகமே! மற்றொருவனுக்குவசப்பட்டு நீ இந்தத் தீங்கைச்செய்திருந்தாலும் நீயும் இதற்குக் காரணர்தானே? ஆதலால், நீயும் குற்றவாளிதான். ஸர்ப்பமே! ஒருமண்பாத்ரம்செய்வதற்குத் தடி சக்ரமுதலியவையும் காரணங்களாகநினைக்கப்படுவதுபோல நீயுமாகிறாய். பாவம்செய்தவனை நான் கொல்லவேண்டும். பன்னகமே! நீயும் பாவம்செய்தவனாகிறாய். ஸர்ப்பமே! உன்னையும் இதற்குக் காரணமாகத்தானே நீயேசொல்லுகிறாய்' என்றுசொன்னன். ஸர்ப்பம், 'அந்தத்தடிசக்ரம்முதலியவைபெல்லாம் எப்படித்

---

1 'இது ஒன்றைக்கொன்றால் அனேகரைக் காப்பாற்றியதாகும். இல்லாவிட்டால் இதனால்கடிக்கப்பட்டு அனேகர் இறந்துபோவார்'. என்பது கருத்து.

2 கொல்ல அனுமதிகொடு என்பதுபொருள்.

தாமேகார்யம்செய்யத்தகாதவையோ அப்படித்தான் நானும். ஆதலால், என்மேல் குற்றத்தை நீயே நிணைக்கமாட்டாய். அல்லது அந்த மண்பாத்திரத்தின்காரணங்களும்ஒன்றையொன்று நடத்துகின்றவையென்று நீ நிணைக்கிறாயின் ஒன்றையொன்று நடத்துவதனால் எது நடத்துவது, எதுநடத்தப்படுவது என்பதில் ஸந்தேஹமும் உண்டாகிறது. இவ்வாறாயின், என்மேல்மாட்டும்குற்றமில்லை. நான்மாட்டும் குற்றவாளியல்லேன். குற்றவாளியல்லாதவனென்னை வதம்செய்யத்தகாது. பிழையிருப்பதாக நீ நிணைத்தால் அந்தப்பிழை பொதுவில் ஏற்படும்' என்றுசொல்லிற்று. வேடன், 'இதற்குக்காரணமாகாவிடின் இதைச் செய்யாதவனையிருப்பாய். மரணத்துக்கு நீயும் காரணம். ஆதலால், நீ கொல்லத்தகுந்தவனென்று நான் நிணைக்கிறேன். பன்னகமே! கெட்டகார்யம் செய்யப்பட்டும் அது செய்தவனைப்பற்றுதாயின் அந்தக்காரணத்தினால் குற்றம்செய்தவனெனவும் [1]கொல்லத்தக்கவனுகான். என்மிகுதியாகப்பேசுகிறாய்?' என்றுசொன்னன். ஸர்ப்பம், 'செய்யப்படும்பொருள் ஒன்றில்லாவிடின், காரணமிருந்தாலும் இல்லாவிடினும் செய்கையுண்டாகாது. ஆதலால், இவை எல்லாம் ஸரியானகாரணங்களாகவிருக்க எனக்குமட்டும் என்னவிசேஷமென்பதைச் சொல்லவேண்டும். வேடனே! உண்மையில் நானும் காரணமென்று நீ நிணைத்தால் இந்தவிஷயத்தில் என்னையும் எவுகிறவன் வேறுஒருவன் இருக்கவேண்டும். ஒருப்ராணியைக்கொல்வதில் உனக்கு என்னபயன்?' என்று கேட்டது. வேடன், 'கெட்டபுத்தியுள்ளவனே! நீசப்பாம்பே! குழந்தையைக்கொன்ற கொடுஞ்செய்கைக்காரனுகிய நீ என்னால் கொல்லப்படவேண்டியவன்தான். கொல்லப்படத்தக்கவனுயிருப்பவன் என்ன அதிகமாகப்பேசுகிறாய்?' என்று சொன்னன். ஸர்ப்பம், 'வேடனே! யாகத்தில் ஹோமங்களைச்செய்யும் ரித்விக்குக்கள் எப்படி அதின்பயனை அடைவதில்லையோ அப்படியேதான் நானும் இந்தச்செய்கையின்பயனுக்கு உரியவனல்லேன்' எனறது. யமனை ஏவப்பட்ட அந்தபபனனகம அவவாறு சொல்லிக்கொண்டிருக்கையில், யமனும் அங்கேவந்து பன்னகத்தைப்பார்த்துப் பேசலானன். 'பன்னகமே! நான் காலத்தினால் ஏவப்பட்டு உன்னை ஏவினேன். இந்தக்குழந்தையென்னும் ப்ராணியின் மரணத்திற்கு நீயும் காரணமல்லை; நானும்காரணமல்லேன். காற்றுண்டு பலவிடங்களிலிருந்து மேகங்களை இழுத்துக்கொண்டுவரும்போது அவைகள் காற்றுக்கு உட்பட்டிருப்பதுபோல நான் காலத்து

[1] குற்றத்திற்குத் தண்டனையே அற்றுப்போமென்பது கருத்து.

க்குஉட்பட்டிருக்கிறேன். ஸர்ப்பமே! ஸாத்விக ராஜஸ தாமஸங்களாகிய தன்மைகளனைத்தும் காலத்தை அனுஸரித்தே தப்ராணிகளிடத்தில் செல்லுகின்றன ஸர்ப்பமே! ஆகாயத்திலும் பூமியிலுமுள்ள ஜங்கமங்கள் ஸ்தாவரங்களனைத்தும் காலத்தால் நடத்தப்படுகின்றவை. இவ்வுலகமே காலத்துக்குட்பட்டது. இவ்வுலகத்தில் செய்கைகளும் ஒழிவுகளும் அவற்றின்பயன்களும் அனைத்தும் காலத்தின் வசத்திலிருப்பவையென்று நினைக்கப்படுகின்றன. பன்னகமே! ஆதித்யன், சந்த்ரன், விஷ்ணு, ஜலம், காற்று, இந்த்ரன், அக்னி, ஆகாயம், பூமி, மித்ரனென்னும் தேவதை, மேகம், வஸுக்கள், அதிதிதேவதை, நதிகள், ஸாகரங்கள், சக்தி, அசக்தி இவையெல்லாம் அடிக்கடி காலத்தினால் ஆக்கவும் அழிக்கவும் படுகின்றன. ஸர்ப்பமே! இவ்வாறு அறிந்திருந்தும் என்னைக் குற்றவாளியாக நீ நினைப்பது எவ்வகை? இப்படியிருந்தும் என்னிடத்தில் பிழையிருக்குமாயின் நீயும் பிழையுள்ளவன்தான்' என்றான். ஸர்ப்பம், 'ம்ருத்யுதேவ! உன்னைக் குற்றவாளியென்றுவது குற்றமில்லாதவனென்றுவது நான் சொல்வதில்லை. உன்னால் நான் ஏவப்பட்டவன் என்றமட்டுந்தான் சொல்லுகிறேன். காலத்தின்மேல் குற்றமிருந்தாலுமிருக்கட்டும்; இல்லாமலிருந்தாலுமிருக்கட்டும். குற்றம் நாம் பரிசோதிக்கவேண்டியதன்று. ஏனெனில், அதற்கு நாம் அதிகாரிகளல்லோம். அந்தக்குற்றத்தை என்னிடத்திலிருந்து விலக்கிக்கொள்வது எனக்கு எப்படி முக்யமோ அப்படியே ம்ருத்யுவுக்கும் குற்றமில்லாமலிருக்க வேண்டுமென்பது என்னுடையப்ரயோஜனம்தான்' என்று ம்ருத்யுவுக்குச்சொல்லி, அர்ஜுனனைப்பார்த்து, 'ம்ருத்யுசொன்னதைக் கேட்டாயா? நிரபராதியான என்னை நீ சுருக்கிட்டுத் துன்பப்படுத்தத்தகாது' என்று சொல்லிற்று. பிறவேடன், 'ஸர்ப்பமே! ம்ருத்யுவின்சொல்லையும் உன்சொல்லையும் கேட்டேன். பன்னகமே! அவ்வளவினாலேயே உன்னிடத்தில் குற்றமில்லாமை ஏற்படவில்லை. இந்தச்சிறுவன் இறந்துபோனதற்கு நீயும் ம்ருத்யுவும்தாம் காரணம். உங்கள் இருவரையும் காரணங்களாக நினைக்கிறேனேயன்றி, காரணமாயிருக்கும் உன்னைக் காரணமல்லாதவனாக நான் நினைக்கவில்லை. பெரியோர்களுக்குத் துன்பத்தைத் தரும்துராத்மாவும் கொடியவனுமான ம்ருத்யுவையும் இகழவேண்டும். பிறருடைய தீங்குக்குக் காரணமாகிய உன்னையுமே நான் கொல்லப்போகிறேன்' என்றுசொன்னான். யமன், 'நாங்களிருவரும் ஸ்வதந்த்ரமற்றவர்கள்; காலத்துக்குட்பட்டவர்கள்; கட்டளையிட்டதைச் செய்பவர்கள். நீ நன்றாக ஆராய்ந்து பார்ப்பாயாயின் எங்களிடத்தில்

குற்றம் நினைக்கத்தகாது' என்று சொன்னான். தேவடன், 'யமனே! பன்னகமே! நீங்களிருவரும் காலத்திற்குட்பட்டவராயின், உங்கள் மேல் எனக்குளீக்ஷாவதுகோபமாவதுஏன்உண்டாகவேண்டும்? இதை அறியவிரும்புகிறேன்' என்று கேட்டான். ம்ருத்யு, 'தேவடனே! (உலகத்தில்) எந்தச்செய்கையுண்டானாலும் அதெல்லாம் காலத்தினால் நடத்தப்படுவதென்பதை முன்னமே உண்மைபாக நான் சொல்லியிருக்கிறேன். ஆதலால், நாங்களிருவரும் காலத்திற்கடங்கினவர்கள்; சொன்னதைச்செய்பவர்கள். வேடனே! நீ எங்களைக் குற்றவாளிகளாக ஒருகாலும் நினைக்கத்தகாது' என்று சொன்னான். அந்தத்தர்மவிஷயமான ஸந்தேஹம் வந்தபோது, காலபுருஷனை நேரில்வந்து, பன்னகத்தையும் ம்ருத்யுவையும் அர்ஜுனகனென்னும் வேடனையும்பார்த்துச் சொல்லலானான். 'வேடனே! நானும்இந்த யமனும் இந்தப்பன்னகமும் இந்தக்குழந்தை இறந்ததற்குமுதற்காரணங்களல்லோம். ஆதலால், நாங்கள் குற்றவாளிகளல்லோம். அர்ஜுனனே! இந்தக்குழந்தைசெய்தகர்மந்தான் எங்களைத் தூண்டிற்று. இவனிறந்ததற்குக்காரணம் வேறுஒருவனல்லன். தன்கர்மத்தாலேயே இவன் கொல்லப்பட்டான். இவன்செய்த கர்மத்தினாலேயே இவன் மரணமடைந்தான். இவன் மரணத்திற்குக்காரணம் இவன் கர்மம்தான். நாங்களனைவரும் கர்மத்திற்குட்பட்டவர்கள். இவ்வுலகத்தில் கர்மம் ஒருபாகஸ்தன். ஒவ்வொருவனுக்கும் தன்தன்வினைச் சம்பந்தமே இலக்கணம். கர்மங்கள் எங்களை ஏவுகிறதற்குத்தக்கபடிதான் நாங்கள் ஒருவரையொருவர் ஏவுகிறோம். செய்கிறவன் மண்ணுண்டைகளினால் விரும்பினவற்றையெல்லாம் செய்துகொள்வதுபோல, மனிதன் கர்மங்களைச்செய்து, அவற்றின்பலனைப்பெறுகிறான். நிழலும்வெய்யிலும் எப்போதும்இடைவிடாமல் தொடர்ந்திச் சேர்ந்திருப்பதுபோல, கார்யமும் கர்த்தாவும் முன்வினைகளால் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். ஆதலால், நான், யமன், ஸர்ப்பம், நீ, இந்தப்ராம்மணக்குழவி இன்னும்யாரும் இந்தச்சிசுமரணத்திற்குக் காரணமல்லோம். அந்தச்சிசுவே காரணம்' என்றான். தர்மராஜனே! காலபுருஷன் அவ்வாறுசொல்லும்போது கௌதமியென்னும் ப்ராம்மணி, உலகமெல்லாம்தம்கர்மத்தைக் காரணமாகவுடையனவென்று அறிந்து அர்ஜுனகனைப்பார்த்து, 'இந்தவிஷயத்தில், காலமும் ஸர்ப்பமும் யமனும் காரணங்களல்லர். தான்செய்தகர்மங்களினால் இந்தப்பாலன் காலம்வந்தபோது மரணமடைந்தான். என்னுடைய இந்தப்பிள்ளை மரணமடையத்தக்ககர்மம் நானும் செய்திருக்கிறேன். கால

மும்ம்ருத்யுவும் செல்லட்டும் அர்ஜுனகா! பன்னகத்தை விட்டு விடு' என்றுசொன்னள். பிறகு, ம்ருத்யுவும் காலனும் பன்னகமும் வந்தவாறே சென்றனர். அர்ஜுனகனும் கௌதமியும் துயரமற்ற வர்களாயினர். அரசனே! இதைக்கேட்டு ஆறுதலடை. துயரப்பட்டுக்கொண்டிராதே. யுத்தங்களில் ஜயிப்பவனே! மூவுலகங்களும் தம் கர்மங்களில் சார்ந்திருப்பவையென்றறி. அரசர்கள் இறந்துபோனதற்குக் காரணமானசெய்கை உன்னுலும் துர்யோதனனுலும் செய்யப்பட்டதன்று; காலத்தினுல் செய்யப்பட்டதென்றறி" என்றுசொன்னர். சிறந்தபராக்ரமசாலியும் தர்மந்தெரிந்தவருமான யுதிஷ்டிரர், இவ்வாறு பீஷ்மர்சொன்னதைக்கேட்டுத் துயரமற்றிருந்தார்.

இரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(இல்லறத்தின்சிறப்பைவிளக்கும் ஸுதரிசனன்கதை.)

யுதிஷ்டிரர், "பேரறிவாளரும் எல்லாச்சாஸ்த்ரங்களிலுங்தேர்ந்தவரும் புத்திமான்களிற்சிறந்தவருமான பிதாமஹரே! இந்தப்பெருங்கதையை நான் கேட்டேன். அரசரே! திரும்பவும் அறம்பொருள்களடங்கிய ஒருவிஷயத்தை நீர் சொல்லக் கேட்கவிரும்புகிறன். அதனை எனக்குவகைக்கக்கடவீர். தர்மத்தைக்கைப்பற்றி மரணத்தை வென்றவனுன இல்லறத்தோன்யாவன்? வேந்தரே! இந்தக்ருஹஸ்த தர்மத்தை உள்ளபடி எனக்குச் சொல்வீராக" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அரசனே! இல்லறத்திலிருப்பவன் தர்மத்தைக்கைப்பற்றி ம்ருத்யுவையஜயித்தான் என்னும் விஷயத்தில் இந்தப் பழையசரித்ரத்தைக் கூறுகின்றனர். ப்ரஜைகளைப்படைத்தவராகிபமனுவுக்கு இக்ஷ்வாகுவென்னும் ஒருமைந்தன் பிறந்தான். ஸர்யணீப்போல ப்ரகாசிக்கும் அவ்வரசனுக்கு நூறுபுத்ரர்கள் பிறந்தார்கள். பாரதனே! தர்மாத்மாவும் ஸத்யமானபராக்ரமமுடையவனும் இக்ஷ்வாகுவின் பத்தாவதுபிள்ளையுமான தசாச்வனென்பவன் மாஹிஷ்மதிநகரில் அரசாட்சிசெய்தான். மிக்கதர்மிஷ்டனும், எப்போதும் ஸத்யத்திலும் தவத்திலும் தானத்திலும் மனமூக்கமுள்ளவனும், தனுர்வேதத்திலும் வேதத்திலும் எப்போதும் பயிற்சியுள்ளவனுமான மதிராச்வன்என்றபூமியில்புகழ்பெற்றஅரசன்தசாச்வனுடையபுத்ர

ணகவிருந்தான். மிகுந்தபாக்யமும் பராக்ரமமும் தைர்யமும் தேக வன்மையுமுள்ள த்யுதிமானென்னும் அரசன், மதிராச்வனுடைய மைந்தன். த்யுதிமானுக்கு ஸுவீரன்என்னும் பெயரினல் எல்லா உலகங்களிலும் கீர்த்திபெற்றவனும் மிக்கதர்மிஷ்டனும் தர்மத்தில் மனமுள்ளவனும் நிரம்பின பொக்கசமுள்ளவனும் மற்றொருதேவேந் த்ரன்போன்றவனும் அரசனுமாகிய ஒருபுத்ரனிருந்தான். ஸுவீர னுக்கு, ஆயுதம்பிடித்தவர்கள் எல்லாரிலும் சிறந்தவனும் எல்லா யுத்தங்களிலும் வெல்லக்கூடாதவனும் துர்ஜயன்என்று பெயர் பெற்றவனுமான ஒருபுத்ரன் இருந்தான். இந்த்ரனுக்கு நிகரான உருவமுள்ள துர்ஜயனுக்கு அக்னிக்கொப்பான காந்தியுள்ளவனும் மஹாராஜாவும் ராஜரிஷிகளிற்சிறந்தவனுமான துர்யோதனன் என் னும் ஒருபுத்ரனிருந்தான். இந்த்ரனுக்குநிகரானவீர்யமுள்ளவனும், யுத்தங்களில் பின்வாங்காதவனுமான அந்தத்துர்யோதனனுடைய தேசத்தில் இந்த்ரன் நன்றாக மழைபொழிந்தான். அக்காலத்தில் அவனுடையநகரத்திலும் தேசத்திலும் ரத்னங்களும் தனங்களும் பசுக்களும் பலவகைப்பயிர்களும் நிரம்பியிருந்தன. அவனுடைய அந்தத்தேசத்தில் எங்கும் லோபியாகவும் ஏழையாகவும் நோயாளி யாகவும் இளைத்தவனாகவும் ஒருமனிதனும் இருக்கவில்லை. அவன் மிக்கஅன்புள்ளவனும் இன்சொல்சொல்லுகிறவனும் பொறுமைஅற்ற வனும் பொறிகளைஅடக்கினவனும் தர்மத்தில்மனமுள்ளவனும் தயை யும் பராக்ரமமுமுள்ளவனும் தற்புகழ்ச்சியில்லாதவனும் விதிப்படி யாகங்களைச்செய்தவனும் அடக்கமும் புத்திக்கூர்மையுமுள்ளவனும் ப்ராம்மணர்களிடம் அன்புள்ளவனும் சொல்தவறுதவனும் யாரையும் அவமதியாதவனும் கொடையாளியும் வேதங்களிலும் வேதாங்கங்களி லும் கரைகண்டவனுமாகஇருந்தான் பாரதனே! பாவத்தைப்போக் குவதும் குளிர்ந்ததண்ணீருள்ளதும் ஆரோக்யத்தைத்தருவதுமாகிய தர்மதையென்னும் தேவநதி தன்தேவதாரூபத்தோடு அந்தப்புருஷ ச்ரேஷ்டனுன துர்யோதனன் மேல் காதல்வைத்தது. அரசனே! அப் பொழுது அவ்வரசனுக்கு அந்தநதிதேவதையினிடம் தாமரைமலர் போன்ற கண்களையுடையவளும் அழகினல் காட்சிக்கினியவளுமாகிய ஸுதர்சனையென்னும் பெயருள்ளகன்னிகை பிறந்தாள். யுதிஷ்டிரர்! சிறந்தபெண்ணுகிய துர்யோதனன்மகள்போல அழகுள்ளவள் பெண் களில் யாரும் அதற்குமுன்னிருந்ததில்லை. அக்னிபகவான், சரத்கால ஸூர்யனுக்குநிகரானஒளியுள்ள அழகிய மானிடஉருவத்தையெடுத் துக்கொண்டு அந்தஸுதர்சனையென்னும் ராஜகுமாரியைநேரில்விரும்

பிஞன். பிதாவுக்குப் பணிவிடைசெய்யு நிச்சயஞ்செய்துகொண்ட அவள், பிதாவினுல் அக்னிஹோத்ரசாலையில் நியமிக்கப்பட்டு அக்னி கார்யம்செய்யஆரம்பித்தாள். மனத்தைக்கவர்வதாகிய அவளுருவத் தைக்கண்டு அக்னிபகவான், மன்மதனுல் தூண்டப்பட்டு அவளைத் தன்மனைவியாகச்செய்துகொள்ள ரஹஸ்யமாக ஆரம்பித்தான். 'குற்ற மற்றஅங்கமுள்ளவளே! தாமரைமலர்போன்றகண்களும் மான்குட்டி போன்றபார்வையும் பூர்ணசந்த்ரனுக்குநிகரானமுகமும் வாழைமரம் போன்ற தொடைகளும்உடையவளே! என்னிடம்நேசித்து என்னை அடையக்கடவாய். தாமரையிதழ்போன்றகண்களுள்ளதும் கொடி கள்போன்ற புருவங்களினுல் அழகியதும் மனத்தைக்கவர்வதுமாகிய இந்த உன்அழகானமுகத்தை நான் கண்டபிறகு என்னை மன்மதன் பீடிக்கிறான். பிறைச்சந்த்ரனுக்கொப்பானதும் கூந்தலால் அலங்கரிக் கப்பெற்றதும் தாழம்பூமடல்போல அழகியதுமான உன்நெற்றியைக் கண்டஎன்னை அனங்கன் மிகத்துன்பப்படுத்துகிறான். இளவெய்யிற் பட்டுமலர்ந்த தாமரைமலர்போன்றதும் வேர்த்து மயிர்பொடித்திருப் பதும் கோவைப்பழம்போன்ற அதரமுடையதும் மிகஅழகான வில்லா ஸமுடையதுமான உனதுமுகம் என்னை மிகவும் மயக்குகிறது. தங் தங்களின்கிரணமென்னுமகயிற்றினுல் கட்டப்பட்டதுபோல வெளிப் படாமல் காப்பாற்றப்பட்டஉன்வாக்கும் இளந்துளிர்போன்ற இந்த நாவும் என்மனத்தை இழுக்கின்றன. உனதுபற்கள் ஏற்றத்தாழ்வில் லாதவையாகவும் பளபளப்பாகவும் அழகானவடிவமுள்ளவையாகவும் நெருக்கமாகவும் இருக்கின்றன. [1]ப்ராம்மணன்மனைவியே! அழகா யிருக்கிறாய். நீ தயைசெய்து என்னையடையக்கடவாய். அழகிய தும் அழகியகடைக்கண்பார்வையுள்ளதுமாகிய உனதுமுகம் உள்ளத் தைக்கவர்கிறது. அச்சமுள்ளவளே! ஒன்றோடொன்றுசேர்ந்தவை யும் ஹாரங்களாலும் ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவையும் பழுத்தவில்வக்கனிகள்போன்றவையும் தளராதவையுமான உன்இரு கொங்கைகளும் 'அணைதற்குரியன. ஆழ்ந்தநாபியுடன் அழகாயிருக் கும் சிறந்தநிறமுள்ளவளே! என்னை அடையக்கடவாய்' என்று சொன்னன். மஹாத்மாவான அக்னிதேவனுல் ரஹஸ்யத்தில் இவ் வாறுசொல்லப்பெற்ற அந்தப்பெண் மனத்தில் கொஞ்சம்நடுக்க முற்று வெட்கத்துடன் பேசலானுள். 'ஐயா! மேற்குலத்தில்பிறந்த கண்ணிகைகளைக்கொடுப்பதற்கு முக்யமாகத் தாய்தந்தையரும் சுற்றத் தாரும் அதிகாரிகள் அல்லரோ? பாணிக்ரஹணத்துக்குரிய மந்த்ரங்க

1 அக்னி ப்ராம்மணவடிவாயிருந்ததாகத்தெரிகிறது.

ளைச்சொல்லி அக்னியில்ஹோமம்செய்து பெரியோர்களின்ஸபையில் விவாஹம்செய்தபெண்ணுக்குக் கணவனே தஞ்சம். தேவனே! ஆதலால், நான் ஸ்வதந்த்ரமுள்ளவளல்லேன். என்தந்தையைக் கேள்' என்றாள். அதன்பிறகு, சிலகாலத்துக்குப்பின் துர்யோதன ராஜன் யாகத்துக்குரியபொருள்களைச்சேகரிப்பதில்ஸமர்த்தர்களான மந்த்ரிமார்களையழைத்து, 'நான் யாகம்செய்யப்போகிறேன். எனக்குவேண்டியபொருள்களைச் சேகரிக்கவேண்டும்' என்றுசொன்னான். பிறகு, அந்தராஜாவினுடையவேள்வியானது ப்ராம்மணர்களால் ஆரம்பிக்கப்பட்டபோது அக்னிபகவான் அந்தணவடிவத்துடன் அரசனிடம் கன்னியைக் கேட்டான். அவ்வரசனோ அவனுக்குப்பெண்கொடுக்க எண்ணம்கொள்ளவில்லை. 'இவன் ஏழை; நமதுவர்ணம் அல்லன்' என்றுநினைத்து, அவன் அந்தப்ராம்மணனுக்குக் கன்னிகையைக்கொடுக்க எண்ணங்கொள்ளவில்லை. அம்மஹாத்மாவான அரசன் யாகதீக்ஷைஎடுத்துக்கொண்டபிறகு, ஹோமத்திற்காக வேதிகையில்வைக்கப்பட்ட அக்னி மறைந்தது. பிறகு, அவ்வரசன் மிகப்பயந்து பொறிகள்கலங்கி மந்த்ரிகளையும் ப்ராம்மணர்களையும்நோக்கி, 'என்யாகத்தில் ஜ்வலித்த அக்னிபகவான் மறைந்துபோனது யாதுகாரணம்பற்றியிருக்கலாம்? மந்த்ரங்களில்தேர்ச்சியுள்ளவர்களும்வேதங்களில்கரைகண்டவர்களுமாகிய அனேகப்ராம்மணர்களையும் மந்த்ரங்கள்தெரிந்தரித்விக்குக்களையும்கொண்டு அக்னியைப் பூஜிக்கலாமா?' என்றுகேட்டான். பிறகு, ரிக் ஸாமம் யஜுஸ்என்னும்வேதங்களில் கரைகண்டவர்களும் வேதங்களின்உண்மைப்பொருள்களை அறிந்து தேர்ந்தவர்களுமான ப்ராம்மணர்கள் ஸோமலதையை முன்னிட்டு, ரஹஸ்யமான நாமங்களெல்லாவற்றையும்சொல்லி அக்னியை அழைத்தனர். பிறகு, சரத்காலஸூர்யனுக்குநிகரானஒளியுள்ள மஹாத்மாவான அக்னிபகவான், மிக்ககாந்தியுள்ளஉருவத்தை எடுத்துக்கொண்டு அந்தப்ராம்மணஸ்ரேஷ்டர்களைநோக்கி, 'நான் துர்யோதனன்புதல்வியை எனக்காகக்கேட்கிறேன்' என்றுசொன்னான். பிறகு, அந்தப்ராம்மணர்களனைவரும் ப்ரியப்புற்றவர்களாகி விடியற்காலம்எழுந்து அக்னிபகவான்சொன்னதை அவ்வரசனுக்கு அறிவித்தனர். அந்தப்புத்திமானை அரசன் ப்ரம்மரிஷ்டர்களானப்ராம்மணர்களின் அந்தச்சொல்லைக்கேட்டவுடன், மிக்கமகிழ்ச்சியுற்று, 'ஆகு' என்றுசொன்னான்; அந்த அக்னிபகவானைப்பார்த்து, 'ஓ! அக்னிபகவானே! நீர் இவ்விடத்திலேயே எக்காலமும் [1]இருக்கவேண்டும்.

---

[1] 'ஸாந்நித்யம்' என்பது மூலம்.

இதுதான் (கன்யாசுல்கம்)' என்று கேட்டுக்கொண்டான். அக்னிபகவானும் அவ்வாறே ஆகட்டுமென்று அவ்வரசனுக்குச் சொன்னான். அதுமுதல் இப்பொழுதும் மாஹிஷ்மதிநகரத்தில் 'அக்னிபகவானுடைய ஸாந்நித்யமிருக்கிறது. அந்த ஸஹதேவன் திக்விஜயம் செய்தபோது கண்டானல்லனோ? அதன்பிறகு, 1துர்யோதனராஜன் அந்தக்கன்னிகைக்கு அலங்காரம்செய்து கோடிஉடுத்து மஹாத்மாவான அக்னிபகவானுக்கு அவளைக் கொடுத்தான். அக்னிபகவான் ஸுதர்சனையென்னும்ராஜகன்னிகையை, யாகத்தில்நெய்த்தாரையை வாங்கிக்கொள்வதுபோல, வேதத்தில் சொன்னவிதியோடு வாங்கிக் கொண்டான். அவளுடைய அழகினாலும் ஒழுக்கத்தினாலும் குலத்தினாலும் தேகக்கட்டினாலும் ஒளியினாலும் அவள்மேல் அக்னிபகவான் அன்புகூர்ந்து அவளிடத்தில் கர்ப்பத்தையுண்டாக்கினான். அவளுக்கு அக்னிபகவானால் ஸுதர்சனன்என்னும்பேருள்ளபுத்ரன் பிறந்தான். அந்தஸுதர்சனன் அழகில் நிறைமதிக்கு நிகராகவிருந்தான். அவன் குழந்தையாயிருக்கையிலேயே நித்யமும் சிறந்ததுமான வேத முழுமையும் ஓதினான். அக்காலத்தில் ந்ருகன்என்னும் அரசனுக்குப் பிதாமஹனாகிய ஓகவான்என்னும் ஓர்அரசன்இருந்தான். அவனுக்கு ஓகவதியென்னும்கன்னிகையும் ஓகரதன்என்னும்புத்ரனும் இருந்தனர். ஓகவானென்னும் அரசன் தேவதையைப்போன்ற உருவமுள்ள அந்த ஓகவதியென்னும்பெண்ணை விதிவாஞ்ஞைஅந்தஸுதர்சனனுக்கு மனைவியாகக்கொடுத்தான். அரசனே! அந்தஸுதர்சனன் அந்தஓகவதியுடன்கூடக்குருக்ஷேத்தரத்தில் க்ருஹஸ்தாச்ரமதர்மத்தைச் செய்துகொண்டிருந்தான். ப்ரபுவே! வேந்தனே! சிறந்தஅறிவும்விளங்கும்மஹிமையுமுள்ள அந்தஸுதர்சனன், 'நான்க்ருஹஸ்தனாகஇருந்தேயமனைவெல்வேன்' என்று சபதம்செய்தான். அரசனே! அக்னியின் புத்ரனானஸுதர்சனன் அந்தஓகவதியைநோக்கி, 'நீ எவ்வகையிலும் விருந்துவந்தவனுக்கு விரோதம்செய்யலாகாது. என்னஎன்னவகையினால் விருந்துவந்தவன் த்ருப்தியடைவனோ அவற்றையெல்லாம் தன்னைக்கொடுப்பதாகவிருந்தாலும் ஒருகாலும் நீ ஆலோசிக்கவேண்டாம் இந்தவ்ரதம் எப்போதும் என்மனத்திலேயே இருக்கிறது. அழகானநிதம்பமுடையவளே! இல்லறத்தோருக்குவிருந்துக்குமேற்பட்டதொன்றுமில்லை. அழகியதொடைகளையுடையவளே! சிறந்தவளே! என்சொல்லில் உனக்கு நம்பிக்கையிருக்குமாயின் நீ மாறுமல்இந்தச் சொல்லை எப்போதும் உள்ளத்தில்வைக்கக்கடவாய். மங்களமுள்ள

---

[1] ஸபாபர்வம் 32-ம் அத்தியாயம்பார்க்க; அங்கு நீலராஜன் என்றிருக்கிறது.

வளே! குற்றமற்றவளே! என்னிடம் உனக்கு நம்பிக்கையிருக்கு மாயின் நடுன் வெளியிற் போயிருந்தாலும் வீட்டிலிருந்தாலும் அதிதி யை நீ அவமதிக்கத்தகாது' என்றுசொன்னன். அப்போது ஓகவதி யானவள் அவனோக்கிச் சிரமேல்கரங்குவித்து, 'எனக்கு உமது கட்டளையினல் செய்யத்தகாதது எதுவும் எவ்வகையிலும் இல்லே' என்று சொன்னுள். அரசனே! ஸுதர்சனனேவெல்லக்கருதி ஸமயம் பார்த்திருந்த யமனனவன் எப்போதும் வீட்டில் அவனேப் பின்தொ டர்ந்துகொண்டிருந்தான். அக்னியின்புத்திரனை அந்தஸுதர்சனன், ஸமித்துக்கள்கொண்டுவரச்சென்றபோது, ஓர்அழகுள்ள அதிதியான ப்ராம்மணன் அந்த ஓகவதியைப்பார்த்து,'பெண்ணரசியே! இல்லறத் திற்குரியதர்மத்தில் உனக்கு நம்பிக்கையிருக்குமாயின் இப்போது எனக்கு நீ விருந்துசெய்வதை நான் விரும்புகிறேன்' என்றுசொன் ஞன். மன்னவ! புகழ்பெற்ற அந்தராஜகுமாரி அந்தப்ராம்மணனுல் இவ்வாறு சொல்லப்பெற்றவளாய் வேதத்தில் சொல்லிய விதிப்படி அவனே வரவேற்றுள். அவள் அந்தப்ராம்மணனுக்கு ஆஸனத்தையும் பாத்யத்தையும் அளித்து அவனேப்பார்த்து, 'உமக்கு ஆகவேண்டிய தென்ன? உமக்கு நான் எதைக் கொடுக்கக்கடவேன்?' என்று கேட் டாள். உடனே, அந்தப்ராம்மணன் அந்தராஜபுத்திரியான ஓகவதியை நோக்கி, 'சிறந்தபெண்ணே! எனக்கு நீதான்வேண்டும். நீ சங்கி யாமல் இதைச்செய்யக்கடவாய். அரசியே! இல்லறத்திற்குரியதர் மத்தில் உனக்கு நம்பிக்கையிருக்குமாயின் நீ உன்னையே அளித்து என் விருப்பத்தை நிறைவேற்றக்கடவாய்' என்று சொன்னன். அந்த ப்ராம்மணன் அந்தராஜகுமாரியினல், வேண்டத்தக்கமற்றப்பொருள் களேக்கொடுப்பதாக ஆசைகாட்டப்பட்டும் அவன் தன்னேக்கொடுப் பதைத்தவிர வேறென்றையும் அவளிடத்தில் விரும்பவில்லே. அந்த ராஜகுமாரியோவெனில் முதலில் தன்கணவன் சொன்னதைநினைத்து நாணமுற்று அந்தப்ராம்மணஸ்ரேஷ்டனுக்கு 'அப்படியே ஆகட்டும்' என்று மறுமொழிசொன்னுள். அந்தப்ரம்மரிஷி உடனே நகைத் துக்கொண்டு உட்கார்ந்தான். அவளும் இல்லறத்தைவிரும்பின கண வன்சொல்லேநினைத்துக் கூடஉட்கார்ந்தாள். அப்போது கொடிய எண்ணமுள்ளயமனுல் எக்காலமும் சுற்றப்போலஅனுஸரிக்கப்பட்ட ஸுதர்சனன் ஸமித்துக்களேயெடுத்துக்கொண்டு வந்துசேர்ந்தான். அந்தஸுதர்சனன் ஆச்ரமத்துக்கு வந்தவுடன்,அந்தஓகவதியை,'நீ எங்கேபோயிருந்தாய்?' என்று பலமுறை கூவினன். அப்போது அந்த ஓகவதியானவள் தன்கணவனுக்கு மறுமொழி சொல்லவில்லே.

பர்த்தாவின் நியமத்தைக் காப்பாற்றுகிறவளாகிய அந்தப் பதிவ்ரதை யானபெண் அந்தப்ராம்மணன்கைகளிலுல்லதாடப்பட்டதலுல் தான் எச்சிலாகிவிட்டதாக நினைத்துத் தன்கணவனிடம் வெட்கப்பட்டவ ளாகவும் ப்ராம்மணன்கோபத்துக்குப் பயந்தவளாகவும் ஒன்றும் பேசாமலிருந்தாள். பிறகு, அந்தஸுதர்சனன், 'என்ன இது? அந்தக் கற்புள்ள பெண் எங்கே? அவள் எங்கே போனுள்? பதிவ்ர தையும் ஸத்யம் தவறுதவளும் எப்போதும் நேரானநடையில் விரு ப்பமுள்ளவளுமான ஒகவதி, முன்போல நகைத்துக்கொண்டு இப் போது என்னை ஏன் எதிர்கொண்டு அழைக்கவில்லை? எனக்கு இதை விடப்பெரிதென்னவிருக்கிறது?'என்று சொன்னன். ஆச்ரமத்திலிரு ந்த ப்ராம்மணன் அந்தஸுதர்சனனைநோக்கி, 'ஓ! அக்னிபுத்ரனே! நான் ப்ராம்மணன்; அதிதியாகவந்திருக்கிறேனென்று அறி. ப்ராம் மண! உத்தமனே! இந்தஉன்மனஸ் பலஸ்தங்களான அந்தஸுத காரங்களை எனக்குச் செய்யவேண்டினுளாயினும் இவளையே நான் விரும்பினேன். அழகியமுகமுள்ள இவள் தன்னைக்கொடுப்பதென் னுமுறையினுல் என்னை ஆராதிக்கிறுள். இந்தவிஷயத்தில் வேறு எது தகுதியானதோ! அதை நீ செய்யலாம்' என்றுசொன்னன். யமன், 'இந்தஸமயத்தில் ப்ரதிஜ்ஞைதவறும்போது இவனைக்கொல் வேன்' என்றுநினைத்து இருப்புத்தடியைக்கையில்எடுத்துக்கொண்டு அந்த ஸுதர்சனனைத் தொடர்ந்துகொண்டிருந்தான். ஸுதர்சனன் மனத்திலும் செய்கையிலும் பார்வையிலும் சொல்லிலும் பொறுமை யையும் கோபத்தையும்விட்டுப் புன்னகையுடன், 'ப்ராம்மணோத்தம ரே! [1]* * * எனக்கு மித்ரஸங்தோஷம். வந்தவிருந்துக்கு த்ருப்திசெய்விப்பதுதான் க்ருஹஸ்தனுக்கு முக்ய மான தர்மம். எந்தக்ருஹஸ்தனுல் விருந்தினன் பூஜிக்கப்பெற்றுச் செல்கிறுனே அவனுக்கு அதைவிடப் பெரியதர்மம் மற்றொன்றும் இல்லையென்று அறிஞர் சொல்லுகின்றனர். என்உயிரும் மனைவியும் மற்றுமுள்ள பொருள்களுனைத்தும் அதிதிகளுக்குக் கொடுக்கத்தக்க வைஎன்பது நான் கொண்டிருக்கும் வ்ரதம். ப்ராம்மணோத்த! இந்தச் சொல்லை மனத்தில் ஐயப்படாமல் நான் சொல்லியிருக்கிறேனென்று என்னுடம்பைத்தொட்டு நான் ஸத்யம்செய்கிறேன். கர்மானுஷ்டா னமும் செய்பவரில்சிறந்தவரே! நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், புத்தி, ஆத்மா, மனம், காலம், திசைஆகிய இப்பத்துப்பொருள்க ளும் மனிதர்களின் தேகங்களிலிருந்துகொண்டே நல்வினையையும் தீவினையையும் எப்போதும் பார்க்கின்றன. இப்போது நான்சொன்ன

1 'ஸுரதம் தேஸ்து' என்பது மூலம்.

இந்தச்சொல் பொய்யன்று. இந்தஸத்தியத்தினால்என்னைத்தேவர்கள் காக்கவாவது ஸரிக்கவாவது செய்யலாம்' என்றுசொன்னான். பாரதனே! அப்போது எல்லாத்திசைகளிலும் 'இது உண்மை' என்றும் 'இதுபொய்யன்று' என்றும் இவ்விதம் அடிக்கடிசப்தமுண்டாயிற்று. உடனே அந்த ப்ராம்மணன், வாயுபகவானைப்போல ஆகாயத்தையும் பூமியையும் தன்தேஹத்தினால் வ்யாபித்துவளர்ந்தவனாக அந்த ஆஸ்ரமத்திலிருந்து வெளிவந்தான். அந்தப்ராம்மணன் வேதஸ்வரூபமாகவும் தர்மஸ்வரூபமாகவும் ஸூர்யனுடன் மூன்று உலகங்களிலும் ஒளிபரவும்படி தர்மந்தெரிந்த அந்தஸுதர்சனரைப் பேரிட்டு அழைத்துச் சொல்லலானான்.

'குற்றமற்றவனே! உனக்கு நன்மையுண்டாகக்கடவது. நான் தர்மதேவதை; உன்னை அறிவதற்கு வந்தேன். உன்னுடைய உண்மையை அறிந்தபிறகு உன்மேல் எனக்கு மிகுந்தஅன்புஉண்டாயிருக்கிறது. எப்போதும் ஸமயம்பார்த்துக்கொண்டு உன்னைத்தொடர்ந்துகொண்டிருக்கும்இந்தயமன் உன்னுடையஉறுதியினால்வெல்லப்பட்டு வசப்படுத்தப்பட்டான். மனிதர்களில் உத்தமனே! பதிவ்ரதையும் நல்லொழுக்கமுள்ளவளுமாகிய இந்த உன்மனைவியைக் கண்ணெடுத்துப்பார்க்கவும் சக்தியுள்ளவன் மூவுலகங்களிலுமில்லை. உன்னுடைய குணங்களாலும் இவளது கற்புக்குரிய குணங்களாலும் இவள் காப்பாற்றப்பட்டிருக்கிறாள். இவள் யாராலும் வெல்லக்கூடாதவள். இவள் எதுசொன்னாலும் மாறாது. தான்செய்த தவப்பயன்பெற்றவளும் ப்ரம்மஜ்ஞானமுள்ளவளுமாகிய இந்தமிக்கபாக்யவதியானவள் உலகத்தின் பாவத்தைப்போக்குவதற்காக ஒருபாதிச்சரீரத்தினால் ஓகவதியென்ற பெயருள்ள சிறந்த நதியாகிவிடுவாள்; மற்றொருபாதிச்சரீரத்தினால் உன்னை அனுஸரித்திருப்பாள். யோகசக்தியானது இவளுக்கு வசப்பட்டிருக்கிறது. நீ உன்தவத்தினால் ஸம்பாதிக்கப்பட்ட உலகங்களுக்கு இவளுடன் கூடவேசெல்லுவாய். எங்கேபோனவன் திரும்பிவருவதில்லையோ அந்த அழிவில்லாத உயர்ந்த லோகங்களை நீ இந்தச்சரீரத்தோடே அடைவாய்.' யமன் உன்னால் ஜயிக்கப்பட்டான். உனது சக்திமிகச்சிறந்தது. உனதுசக்தியினால் ஐந்துபூதங்களையும் தாண்டி மேன்மேலகம்பெற்றிருக்கிறாய். இந்த இல்லறஒழுக்கத்தினாலேயே காமக்ரோதங்களையும் ஜயித்தாய். 1அரசனே! ராஜபுத்ரியானஸுதர்சனையும் உனக்குப்பணிவிடைசெய்து விருப்பையும் பற்றையும் சோம்பலையும் அஜ்ஞானத்தையும் பிறருக்குத்தீங்குசெய்வதையும் முழுவதும் ஒழித்துவிட்டாள்' என்றான். மஹர்ஷிபோ

1 ராஜகுமாரிக்குப்பிறந்ததனால், 'அரசனே!' என்றது.

ருந்தியதேவேந்திரனும் ஆயிரம் வெள்ளைக்குதிரைகள் பூட்டப்பட்ட சிறந்தரதத்திலேறிக்கொண்டு அவனிடம்வந்தான். இவ்வாறு யமனையும் தன்மனத்தையும் புண்யலோகங்களையும் தேகத்திலுள்ள ஐந்து பூதங்களையும் புத்தியையும் காலத்தையும் கர்வத்தையும் விருப்பு வெறுப்புக்களையும் ஸுதர்சனன் ஜயித்தான். புருஷஸ்ரேஷ்டனை யுதிஷ்டிரனே! ஆதலால், இல்லறத்திலிருப்பவனுக்கு விருந்தைவிட மற்றொருதெய்வமில்லையென்பதை மனத்தில் ஆராய்ந்துபார். பூஜிக்கப்பெற்ற அதிதி மனப்பூர்வமாக ஆசீர்வதிப்பதினாலுண்டானபுண்யத்திற்குஈடானபுண்யம் தூறுயாகங்களினாலும்உண்டாவதில்லையென்று அறிஞர் கூறுகின்றனர். பூஜிக்கப்படாத அதிதி முன்செய்த நல்ல தானங்களையும் நற்கருமங்களையுங்கூட ஆட்டிவிடுவான். நல்லொழுக்கமுள்ள யோக்கியனை விருந்தினனை அடைந்து பூஜியாமலிருப்பவனைவனை அவனுக்கு அந்த அதிதி தன்பாவத்தைக்கொடுத்து அவனதுபுண்யத்தை எடுத்துக்கொண்டு செல்வான். மைந்தனே! ஒருக்ருஹஸ்தனால் முன்னர் யமன் எப்படி வெல்லப்பட்டானென்பதைப் பற்றிய இந்தஒருசிறந்தகதையை உனக்குச் சொன்னேன். மேன்மைபெறவிரும்புகிறவன் தனத்தையும் புகழையும் ஆயுளையும் தருவதும் எல்லாப்பாவங்களையுமழிப்பதுமாகிய இந்தச்சிறந்தசரித்திரத்தை நீனைவில்வைக்கவேண்டும். பாரதனே! ஸுதர்சனனுடைய இந்தச் சரித்திரத்தை எந்தவித்வான்நாள்தோறும்உரைப்பானோஅவன் புண்ய லோகங்களை அடைவான்" என்று சொல்லினர்.

[1] மூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ப்ராம்மணத்தன்மை ஜன்மத்தினால் வருவதேயன்றி இடையில் வராதென்பதைப்பற்றிய மதங்கன்கதை.)

யுதிஷ்டிரர், "தர்மிஷ்டர்களிற்சிறந்தவரே! நீர் புத்தியும் கேள்வியும் ஒழுக்கமும் அடக்கமும் பிராயமும் இன்னும்பலவகையான குணங்களைத்தும் பொருந்தினவர். அறிவிலும் புத்திக்கூர்மையிலும் தவத்திலும் இதுவரையிலிருந்த ஸத்புருஷரெல்லாரினும் நீர்

---

1. 3, 4, 5 இந்த அத்யாயங்கள் வ்யாக்யானபாடத்தில் 27, 28, 29-வது அத்யாயங்களாயிருக்கின்றன. இவை இங்கு இல்லாவிடில், அடுத்த அத்யாயத்தில், 'ப்ராம்மணத்வத்தை மற்றமூன்றுவர்ணத்தாரும் பெறுவது அரிதாயின்' என்று அனுவாதமாக எடுத்திருப்பது பொருந்தாது.

சிறந்தவரென்பதில் ஐயமில்லை. ஆதலால், உம்மிடத்தில் தர்மம் கேட்கிறேன். கேட்கப்பட்டத்தக்கவர் உம்மைக்காட்டிலும் வேறொருவர் உலகத்தில் பிறந்தவர்களில் இல்லை. ராஜச்ரேஷ்டரே! க்ஷத்ரியனும் வைச்யனும் சூத்ரனும் எதனால் ப்ராமணத்தன்மையை அடையலாம்? அதனை எனக்கு விரித்துரைப்பீராக. அரசரே! பிதாமஹரே! தவத்தினாலும் *மிகச்சிறந்தஸம்ஸ்காரத்தினாலும் வேதமோதுவதனாலும் மற்றமூன்றுவர்ணத்தாரும் ப்ராம்மணத்தன்மையை அடைவது அரிதானால், ப்ராம்மணனாக விரும்புகிறவன் அதனையடையும்வகை யாது?' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"யுதிஷ்டிர! ப்ராம்மணத்தன்மையானது க்ஷத்ரியர்முதலான மூன்றுவர்ணத்தாரும் பெறுவதற்கரிது. அஃது எல்லாப்ராணிகளுக்கும் மேற்பட்டஇடம். அப்பா! உலகவாழ்க்கையில் அனேகம்ஜன்மங்களெடுத்துப், பலமுறைபிறந்துகொண்டிருக்கையில் ஒருமுறையில் ப்ராம்மணனாகப் பிறக்கிறான். யுதிஷ்டிர! இந்தவிஷயத்திலும் மதங்கனுக்கும் பெண்கழுதைக்கும் நடந்த ஸம்பாஷணையாகிய இந்தப்பழமையான சரித்ரத்தைக்கூறுகின்றனர். அப்பா! ஒருப்ராம்மணனுக்கு ஒத்தவர்ணப்பெண்ணினிடத்தில் எல்லாத்குணங்களும் நிரம்பினவனாகிய மதங்கன் என்னும் பெயருள்ள ஒரு புதல்வன் பிறந்தான். குந்திபுத்ரனே! பகைவர்களைக்கொல்பவனே! அவன் யாகத்திற்காகத் தந்தையால் அனுப்பப்பட்டுக் கழுதைகள்கட்டிவிரைவாகச் செல்லும்தேரில் ஏறிச்சென்றான். அரசனே! அவன் தேரிழுக்கும் இளையவயதுள்ளகழுதையை அதன்தாயின் முன்னிலையில் சாட்டையினால் மூக்கில் அடிக்கடி அடித்தான் மூக்கில் அடிக்கப்பட்ட அந்தக்கழுதையைக்கண்டு பிள்ளையின்மேல் அன்புள்ள அந்தப் பெண்கழுதை, 'மைந்தனே! வ்யஸனப்படாதே.' சண்டாளன் *உன்னை அடிக்கிறான். ப்ராம்மணன் கொடியவனாகப்பிருப்பதில்லை. ப்ராம்மணன், எல்லாப்ராணிகளுக்கும் அன்பனென்று சொல்லப்படுகிறான். எல்லாப்ராணிகளுக்கும் கற்பிக்கும் ஆசார்யனாகிய ப்ராம்மணன் அடிப்பானோ? பாவத்தையே இயற்கையாகவுடைய இவன், வாலிபனான (உன்னிடத்தில்) தயைசெய்யவில்லை. இவன் தன்பிறப்பைக் கர்வப்படுத்துகிறான். செய்கையே பிறப்பை நிச்சயப்படுத்துகிறது' என்றுசொல்லிற்று. அந்தப்பெண்கழுதையின் இந்தக்கொடியசொல்லைக்கேட்டு, மதங்கன் தேரிலிருந்து விரைவாகஇறங்கி அந்தப்பெண்கழுதையை நோக்கி, 'ஓ! நற்குணமுள்ளகழுதையே! என்தாய் யாராலே கெடுக்கப்பட்டாள்? என்னைச்சண்டாளனென்று எப்படி அறிகிறாய்? என்

னுடையப்ராம்மணத்தன்மை யாரால்கெட்டது? மிகத்தெரிந்ததே! இவற்றையெல்லாம் உண்மையாகவும் தெளிவாகவும் எனக்குச்சொல்லவேண்டும்' என்றுகேட்டான். அந்தப்பெண்கழுத்த, 'நீ கள்மயக்கமுள்ள ப்ராம்மணப்பெண்ணினிடம் சூத்ரனைநாவிதனுக்குப் பிறந்தவன். அதனால், நீ சண்டாளனுகிறாய். அதனால், உன்ப்ராம்மணத்வம் போயிற்று' என்றது. இவ்வாறு சொல்லப்பட்ட மதங்கன், மறுபடியும் வீட்டுக்குத் திரும்பிச்சென்றான். அவன் திரும்பிவந்ததைக் கண்டு அவன்தந்தை, 'யாககார்யம் நிறைவேற்றுவதற்காகப் பெரிய வேலையில்நியமிக்கப்பட்டநீ ஏன் திரும்பிவந்தாய்? உனக்கு ஸுகமில்லையா? என்ன?' என்றுகேட்டார். அதற்கு, மதங்கன், 'பிதாவே! சண்டாளஜாதியிலும் மற்ற இழிவானஜாதியிலும்பிறந்தவன் எப்படி ஸுகமுள்ளவனுவான்? இந்தத் தாயைப்படைத்தவனுக்கு ஸுகமேது? தந்தையே! மானிடஜாதியாயிராத இந்தப்பெண்கழுதை என்னைப்பார்த்து ப்ராம்மணப்பெண்ணினிடம் சூத்ரனுக்குப்பிறந்தவனென்று தெரிவிக்கிறது! ஆதலால், நான் பெருந்தவம் செய்யப்போகிறேன்' என்றுசொல்லினான்; இவ்வாறு பிதாவுக்குச்சொல்லி நிச்சயம் செய்துகொண்டு புறப்பட்டான். பிறகு, பெரியகாட்டில்சென்றுமிக்க பெரும்தவம்செய்தான். அந்தமதங்கன் தன் நற்செய்கையினலாவது மிகச்சிறந்தஜாதியை அடையக்கருதித் தவம்செய்து, தவத்தினுல் தேவர்களுக்கும் தாபத்தையுண்டுபண்ணினான். அவ்வாறு தவம்செய்யும் அவனைநோக்கி, தேவேந்திரன், 'மதங்கா! மானிடர்க்குரியஸுகங்களைவிட்டு நீ ஏன் தவம்செய்கிறாய்? ஐயோ! உனக்கு வரம்தருகிறேன். நீ விரும்புவதைக்கேள். நீ அடையக்கூடியதாக உன்மனத்திலிருப்பதையெல்லாம் சொல்லலாம். தாமதம்வேண்டாம்' என்றுகேட்டான். அதற்கு மதங்கன், 'நான் ப்ராம்மணத்வம்விரும்பி இந்தத்தவம்செய்யஆரம்பித்தேன். உன்னிடத்தில் அதைஅடைந்துநான் செல்வேன். இந்தவரம்தான் நான் கேட்பது' என்றுசொன்னான். இந்தச்சொல்லைக்கேட்டு இந்திரன் அவனைநோக்கி, 'மதங்க! நீ ப்ராம்மணத்வத்தை வேண்டுகிறாய். அது கிடைக்காது. மதிகெட்டவனே! ஆத்மசக்தியில்லாதவர்கள் பெறக்கூடாத ப்ராம்மணத்வத்தைவேண்டுகிறநீ அழிந்துபோவாய். ஆதலால், உடனே ஓய்ந்துவிடு. எல்லாப்ராணிகளிலும் எதுசிறந்ததோ, எது தவத்திற்கும் மேற்பட்டதோ அந்தச்சிறந்த ப்ராம்மணத்வத்தைவிரும்புகிறநீ விரைவில்கெடுவாய். தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் மானிடர்களுக்கும் எது மிகப்பரிசுத்தமென்று நிணைக்கப்பட்டதோ அதைச் சண்டாளப்பிறப்பில் பிறந்தவன் எவ்வகையிலும் அடையமுடியாது' என்றுசொன்னான்.

நான்காவது அத்யாயம். 6353

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(மதங்கன்கதைத் தொடர்ச்சி.)

இந்த்ரனில் இவ்வாறு உரைக்கப்பட்ட மதங்கன், மனவுறுதியுடனும் நியமந்தவறாமலும் நூறுவர்ஷகாலம் ஒற்றைக்காலால் அசையாமல் நின்றான். பெரும்புகழ்பெற்ற இந்த்ரன், அப்போது திரும்பவும் அவனிடம்வந்து, 'அப்பா! அடைவதற்கரிதான ப்ராம்மணத்தன்மையைவேண்டுகிற நீ அதை அடையவேமாட்டாய். மதங்கனே! உயர்ந்தஜாதியைவிரும்புகிறநீ கெடுவாய். புத்ரனே! ஆய்ந்துபாராத கார்யத்தைச் செய்யாதே. நீ செய்வதும் தர்மத்தின்வழி அன்று. வழிதப்பித்தேதடுகிறநீ எவ்வகையிலும் உருப்படமாட்டாய். மதிகெட்டவனே! நீ இந்தப்பிறப்பில் ப்ராம்மணத்தன்மையைப் பெறுவதுமுடியாது. பெறக்கூடாததை விரும்புகிறநீ விரைவில்கெடுவாய். மதங்கனே! பலமுறை என்னால் தடுக்கப்பட்டிருந்தும் நீமோஹனஜாதியைத் தவத்தினால் உண்டாக்கிக்கொள்ளவே கருதுகிறாய். எப்படியும் உருப்படாய். திர்யக்ஜாதியில்பிறந்தவையனைத்தும் மானிடஜன்மத்தை அடையுமாயின், சண்டாளனுகவாவது [1]புல்கஸனுகவாவது பிறப்பதுதிண்ணம். மதங்கனே! இவ்வுலகத்தில் புல்கஸன்முதலானகீழ்ஜாதியாகக்காணப்படுகிறவன், வெகுகாலம் அந்தஜாதியிலேயே சுற்றுகிறான். (திரும்பத்திரும்ப ஜனிக்கிறான்.) அவ்வாறு ஆயிரம் தடவையானபிறகு, அவன் சூத்ரஜன்மத்தை அடைகிறான்; அதன்பிறகு சூத்ரஜன்மத்திலும் பலமுறை சுற்றுகிறான். அவ்வாறு முப்பதுமுறையானபிறகு, அவன்வைச்யஜன்மத்தைஅடைகிறான். அந்தவைச்யஜன்மத்தில் வெகுகாள் சுற்றுகிறான். பிறகு, அறுபதுமுறையானபின் க்ஷத்ரியனுக ஜனிக்கிறான். அதில் அறுபதுமுறைஜனித்தபிறகு ப்ராம்மணஜாதியில் தாழ்வானஜன்மத்தையடைகிறான். தாழ்ந்தப்ராம்மணனுகவே வெகுகாலம் பலமுறை ஜனிக்கிறான். அவ்வாறு இருநூறுமுறைஜனித்தபிறகு, ஆயுதம்பிடித்துஜீவிக்கும் ப்ராம்மணனுகிறான். வெகுகாலம் ஆயுதம்பிடித்துஜீவித்துக்கொண்டு அந்தப்பிறப்பிலேயே மாறிமாறிப் பிறக்கிறான். அவ்வாறு மூன்றூறுமுறை ஆனபிறகு ஜபம்செய்யும் ப்ராம்மணனுக ஜனிக்கிறான். அதையடைந்தும் வெகுகாலம் அந்தஜாதியிலேயே சுற்றுகிறான். அவ்வாறு

[1] மாகதஜாதிப்பெண்ணினிடம் சண்டாளனுக்குப்பிறந்தவன்.

நானூறுமுறையானபிறகு, [1]ஸ்ரோத்ரியன் என்பவனுகப் பிறக்கிறான். அவன் அந்தஸ்ரோத்ரிய ஜன்மத்திலேயே வெகுகாலம் மாறிமாறிப் பிறக்கிறான். புத்ரனே! ஆதலால், துயரமும் மகிழ்ச்சியும் விருப்பும் வெறுப்பும் அதிககர்வமும் அதிகப்பேச்சும் தாழ்வான ப்ராம்மணனிடம் வந்துசேருகின்றன. அந்த ப்ராம்மணன் மேற்சொன்னபகைகளைவெல்லுவானுயின், அப்போது நற்கதியை அடைவான். அவ்வாறின்றி அப்பகைகள் அவனைவெல்லுமாயின் பழுத்தபனங்கனிபோல [2]விழுவான். மதங்கா! இவற்றையெல்லாம் நிச்சயமாகத்தெரிந்துகொண்டு, நான் உனக்குக்கட்டளையிட்டபடி வேறுவரம்கேள். ப்ராம்மணனுவது சிறிதும் முடியாது' என்று சொன்னன்.

ஐந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(மதங்கன்கதைத் தொடர்ச்சி.)

இந்த்ரனால் இவ்வாறுசொல்லப்பட்ட மதங்கன், மனவுறுதியோடு நியமந்தவறுமல் த்யானம்செய்துகொண்டு ஆயிரம்வர்ஷகாலம் ஒற்றைக்காலால் நின்றான். பலாஸாரணியும் வ்ருக்ஷாஸாரணியும் கொன்றவனை தேவேந்த்ரன் ஆயிரம்வர்ஷகாலங்களுக்குப்பின் அவனைப்பார்க்கவந்து, முன்சொன்னசொல்லையே திரும்பவும் சொன்னன். அதற்கு, மதங்கன், 'இந்த ஆயிரம்வர்ஷகாலமும் நான் ஐம்புலன்களையும் அடக்கி மன்உறுதியுடன் ஒற்றைக்காலால் நின்றேன். ப்ராம்மணத்வத்தை ஏன் அடையத்தகாது?" என்றுகேட்டான். இந்த்ரன், 'சண்டாளஜன்மத்தில்பிறந்தவனுக்கு ப்ராம்மணத்வம் எவ்வகையிலும் கிடைக்காது. நீ வேறுவரம்கேள். உனது இந்தப்பரயாஸம் வீண்போகலாகாது' என்றுசொன்னன். இவ்வாறு சொல்லக்கேட்ட மதங்கன், மிகத்துயரமுற்றவனுகி, கையைக்குச்சென்று, நூறுவர்ஷகாலம் காற்கட்டைவிரலால் நின்றான். யாருக்கும்செய்யமுடியாததவத்தைமேற்கொண்டு இளைத்து உடம்பெல்லாம் நரம்புகளோடித் தோலும் எலும்புமாயிருந்து தர்மத்திலேயேமனம்வைத்து அவன் தவம் புரிந்தானென்று நமக்குக்கேள்வி. வரன்கொடுக்கவல்லவனும் கொடுப்

---

[1] வேதங்களைப் பொருளுடன் அறிந்து அனுஷ்டிப்பவன்.

[2] தாழ்ந்தஜன்மத்தில் பிறப்பான்.

பவனும் எல்லாப்பிராணிகளுக்கும் நன்மையைக்கருதுகிறவனுமான தேவேந்திரன், தவம்செய்யும்மதங்கன்முன்வந்து அவன்கையைப்பிடித்து, 'மதங்கா! நீ இந்தஜன்மத்தில் ப்ராம்மணனுவது விசேஷமாகக் காணப்படுகிறது. ப்ராம்மணத்வமானது அநேகஜன்மசத்ருக்களால்சூழப்பட்டது; அடைவதற்கு மிகக்கடினம். ப்ராம்மணனைப் பூஜிப்பவன் ஸுகம்பெறுகிறான்; பூஜியாதவன் துன்பமுறுகிறான். எல்லாப்பிராணிகளின் [1]யோகக்ஷேமங்களும் ப்ராம்மணனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. ப்ராம்மணன்திருப்தியடைவதனாலேயே பித்ருக்களும் தேவர்களும் திருப்தியடைகின்றனர். மதங்கா! எல்லாப்பிராணிகளிலும் ப்ராம்மணன் உயர்ந்தவனென்று சொல்லப்படுகிறான். ப்ராம்மணன் எதைஎதை எப்படிஎப்படி நினைக்கிறானோ அதைஅதை அப்படிஅப்படியே செய்யக்கூடியவன். இந்தப்ரபஞ்சத்தில் பலயோனிகளில் பிறந்தபின், ஒருதடவையில் ப்ராம்மணஜன்மத்தையடைகிறான். ஆதலால், ஆத்மசுத்தியில்லாதவர்கள் பெறுதற்கரிதான ப்ராம்மணத்வத்தைவிட்டு நீ வேறுவரம்கேள். உனக்கு இந்தவரம் கிடைக்காது' என்றுசொன்னான். மதங்கன், 'துயரத்தினால்பீடிக்கப்பட்ட என்னைப்பின்னும் ஏன் துயரப்படுத்துகிறாய்? செத்தஎன்னைச்சாவஅடிக்கிறாய். நீயும் ப்ராம்மணத்தன்மையையடைந்து மேலாக விரும்பாமலிருப்பதற்காக, உன்னைப்பற்றியே நான் துயரப்படுகிறேன். ப்ராம்மணத்வம் அரிதாகவும் மற்றமூன்றுவர்ணத்தாரும் பெறத்தகாததாகவுமிருந்தும் அவ்வருமையான ப்ராம்மணத்தன்மையைப்பெற்றும் மனிதர்கள் எப்போதும் அதற்குத்தக்க ஒழுக்கமுள்ளவர்களாயிருப்பதில்லை. கிடைக்கத்தகாதசெல்வத்தைஅடைந்தவன்போல ப்ராம்மணத்தன்மையை அடைந்தவன் அதை அலக்ஷ்யம்செய்தானானால் அவன் பாவிகளிலும் மிகக்கெடுதலானபாவிகள் எவரோ அவர்களிலும் தாழ்ந்தவன். ப்ராம்மணத்வத்தைப் பெறுவதுகடினம்; கிடைத்ததைக் காப்பாற்றுவதுகடினம். கிடைக்கத்தகாததையடைந்தும் மனிதர்கள், அதன்படி ஒழுக்கமுடையவர்களாயிருப்பதில்லை. இந்திரனே! நான் [2]ஒன்றிலேயேமனத்தைச்செலுத்தி [3]இரண்டைவிட்டு, 'நான், எனது' என்ற பற்றில்லாதவனாகி அஹிம்ஸை புலன்களையடக்கல் இவற்றைக்கைப்பற்றியிருந்தும், ஏன் ப்ராம்மணனாகத் தகுந்தவனல்லேன்? புரந்தரனே! நான் தர்மந்தெரிந்தவனாயிருந்தும் என்தாயின் குற்றத்தினால் இந்தநிலைமையை அடைந்தேனே? இந்தஎன்விதியாது?

---

1 சாந்திபர்வம் 488-ம் பக்கம் 1, 2, குறிப்பிற்காண்க.

2 ப்ராம்மணத்வத்திலேயே. 3 சீதோஷ்ணம், ஸுகதுக்கமுதலியன.

விதியை முயற்சியினல்வெல்லுவது முடியாதென்பது திண்ணம். ப்ரபுவே! எதற்காக முயற்சிசெய்தீரேனு அந்தப்ராம்மணத்வத்தை நான் பெறவில்லேயே? தர்மந்தெரிந்தவனே! இக்கிலேமையில் உன் அனுக்ரஹத்துக்கு நான் உரியவனுகவும் கிஞ்சித்தேனும் புண்யம்செய்தவனுகவுமிருந்தால், எனக்கு நீ வரம்கொடுக்கக்கடவாய்' என்று கேட்டான். அப்போது தேவேந்த்ரன் அவனைப்பார்த்து, 'வரம்கேள்' என்றுசொன்னன். தேவேந்த்ரனல் அனுமதிகொடுக்கப்பெற்றமதங்கன், 'நான் நினைத்தபடி ஸஞ்சரிப்பவனும் நினைத்தஉருவம் எடுப்பவனும் ஆகாயத்தில் பறக்குந்திறமையுள்ளவனும் ஆகக்கடவேன். ப்ராம்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் வைச்யர்களுக்கும் மிகுந்தமரியாதையையும் நான் பெறக்கடவேன். புரந்தரனே! எப்படி என்னுடையகீர்த்தி அழிவில்லாமலிருக்குமோ அப்படி நீ செய்யக்கடவாய். தேவனே! உன்னைத் தலையால்வணங்கி வேண்டுகிறேன்' என்று சொன்னன். இந்த்ரன், 'மதங்கனே! நீ செல்லலாம். நீகேட்டது கேட்டபடியே உடனே நடக்கும். உலகத்திலுள்ள ஸ்த்ரீகளனைவரும் செல்வத்தைக் குறித்துச்செய்யும் கர்மங்களில் உன்னையே பூஜிக்கப்போகின்றனர். சந்தோஷதேவன்என்று க்யாதிபெற்று ஸ்த்ரீகளால் பூஜிக்கப்படத்தக்கவனுவாய். புத்ரனே! உனது கீர்த்தியும் ஒப்பற்றதாக மூவுலகங்களிலும்பரவும்' என்றுசொன்னன். தேவேந்த்ரன் இவ்வாறு அவனுக்குவரம்கொடுத்து மறைந்தான். மதங்கனும் உயிரைவிட்டு அந்த 1 உயர்ந்தநிலேமையை அடைந்தான். பரதஸ்ரேஷ்டனே! இவ்வாறு, 'ப்ராம்மண்யமென்பது மனிதர்களில் உயர்ந்தநிலேமை. அது பெறுதற்கரிது' என்று மஹாத்மாவானஇந்த்ரனுலேயே சொல்லப்பட்டது" என்றார்.

ஆறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் விஸ்வாமித்ருக்கு ப்ராம்மண்யம் வந்ததைக்கேட்டது.)

யுதிஷ்டிரர், 'மனிதர்க்கதிபதியும் புருஷஸ்ரேஷ்டரும் தர்மாத்மாவுமான மஹாராஜரே! ப்ராம்மணத்வத்தை மற்றமூன்றுவர்ணத்தாரும்பெறுவது அரிதாயின்,மஹாத்மாவான விஸ்வாமித்ரரென்னும்

1 தேவதத்தன்மையை அடைந்தும் ப்ராம்மணத்தன்மையை அடையவில்லே என்பது.

க்ஷத்திரியர் ப்ராம்மணத்வத்தையடைந்தது எப்படி? அதன்உண்மை யைக்கேட்க் விரும்புகிறேன். பிதாமஹரே! எனக்கு அதைச்சொல்ல வேண்டும். பிதாமஹரே! அளவற்றமஹிமையுள்ளவிச்வாமித்ரர், தமதுதவவன்மையினால் மஹாத்மாவான வஸிஷ்டருடைய நூறுபுதல் வர்களையும் விரைவில் அழித்துவிட்டாரல்லரோ? கோபத்தினால் தே கத்தில் ஆவேசங்கொண்டவிச்வாமித்ரரால், காலபுருஷனுக்கும் யம னுக்கும் ஒப்பானவர்களும் கொடியபராக்ரமமுள்ளவர்களுமாகிய அனேகம்ராக்ஷஸர்கள் படைக்கப்பட்டார்கள். அனேகப்ரம்மரிஷிகள் நிரம்பினதும் வித்வான்களான ப்ராம்மணர்கள்பொருந்தினதுமாகிய சிறந்த குசிகவம்சம் இம்மானிடலோகத்தில் நிலைபெறுத்தப்பெற்றது. ரிசீகருடையபுதல்வனும் சிறந்ததவமுள்ளவனுமாகிய சுனச்சேபன் மஹாயாகத்தில் பசுவாகச்செய்யப்பட்டிருந்தும் (அவரால்) விடுவிக் கப்பட்டான். அந்தச்சுனச்சேபன், ஹரிச்சந்த்ரனுடையயாகத்தில் தனதுமஹிமையினால் தேவர்களை ஸந்தோஷப்படுத்தி, சிறந்தஅறி வுள்ளவிச்வாமித்ரருக்குப் புத்ரனானன். மன்னரே! தேவர்களால் கொடுக்கப்பட்டு விச்வாமித்ரரால் ஜ்யேஷ்டபுத்ரனாக எடுத்துக்கொள் ளப்பட்டஅவனை, விச்வாமித்ரபுத்ரர்ஐந்நூற்றுவரும் நமஸ்கரியாமை யால், சண்டாளராகும்படி அவரால் சபிக்கப்பட்டனர். வேண்டின வர்களான வஸிஷ்டபுத்ரர்களால்விடப்பட்ட த்ரிசங்குவென்னும் இக்ஷ் வாகுவம்சத்தரசன், விச்வாமித்ரரால் அன்புடன் தலைகீழாகவஸ்வர் க்கத்திலேற்றப்பட்டு இப்போதும் தென்திசையைச்சார்ந்திருக்கி றான். விச்வாமித்ரரின்ஸஹாதரி தேவரிஷிகளாலும் ப்ரம்மரிஷிக ளாலும்தேவர்களாலும் கொண்டாடப்பட்டகௌசிகியென்னும் புண்ய நதியாகச் செய்யப்பட்டாள். விச்வாமித்ரர் தவத்திற்கு இடையூறு செய்த [1]பஞ்சசூடையென்றுசொல்லப்பட்ட ரம்பையென்னும் சிறந்த அப்ஸரஸ், அவர்சாபத்தினால் கல்லாயினள். அப்படியே, மேன்மை பொருந்தியவஸிஷ்டர், முற்காலத்தில்விச்வாமித்ரருடையபயத்தினால் [2]தம்மைக்கட்டி ஜலத்தில்முழுகவைத்து,மறுபடியும் கட்டறுத்துஎழு ந்தார். அதுமுதல் அந்தநதி, மஹாத்மாவானவஸிஷ்டருடைய அந் தச்செய்கையினால், [3]விபாசைஎன்னும் புகழ்பெற்ற புண்யமான மஹா நதியாயிற்று. ப்ரபுவும் பெருமைபொருந்தினவனுமான தேவேந் த்ரன், விச்வாமித்ரருக்கு ஸ்துதியினால்வசப்பட்டு அவர்மேல் அன்பு

---

1 ஐந்துவகை தரித்தவன்.

2 விவரம் ஆதிபர்வம் 707 - ம் பக்கத்திற்காண்க.

3 ஆதிபர்வம் 707 - ம் பக்கம் குறிப்பிற்காண்க.

கூர்ந்து அவரைச் 1சாபத்தினின்றுவிடுவித்தான். அவர் வடதிசையைச் சார்ந்து உத்தானபாதன்புத்ரனை த்ருவனுக்கும் ஸப்தரிஷிகளுக்கும் நடுவில் எப்போதும் ப்ரகாசிக்கிறார். கௌரவரே! இவையும் இவை போன்ற இன்னும் அனேகசெய்கைகளும் க்ஷத்ரியராணஷிஸ்வாமித்ர ரிடம் இருந்தனவென்பதனால் எனக்கு ஆச்சர்யமுண்டாயிருக்கிறது. பரதஸ்ரேஷ்டரே! இம்மிதல்வாறு உண்டானதென்பதை உண்மையாகச் சொல்லக்கடவீர். வேறுபேதகம்புகாமல் அவர் ப்ராம்மணரான தெப்படி? பிதாமஹரே! இதையெல்லாம் எனக்குஉள்ளபடி சொல்ல வேண்டும். மதங்கனுக்குப்போலத்தானே இவருக்கும். பரதஸ்ரேஷ்டரே! மதங்கன் ப்ராம்மணனாதிருந்தது ஸரி. சண்டாளஜாதியில்பிறந்தவன் ப்ராம்மணனாவது எது? இதைப்பற்றி எனக்குச்சொல்லும்" என்றுகேட்டார்.

ஏழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(விஶ்வாமித்ரருக்கு ப்ராம்மணத்தன்மைவந்தது.)

பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "அப்பா! குந்திபுத்ரனே! முன்னர் விஶ்வாமித்ரர் ப்ராம்மணரானதும் ப்ரம்மரிஷியானதும் எப்படி என்பதை விசதமாகச் சொல்லுகிறேன்; கேள். பரதஸ்ரேஷ்டனே! பரதனுடையவம்சத்தில் விதிப்படி யாகங்களைச்செய்தவனும் தர்மத்தைக்காப்பவரிற்சிறந்தவனுமான மிதிலன் என்னும் ஓர் அரசனிருந்தான். அவனுக்கு மஹாராஜாவாகிய ஜனகனென்னும்புத்ரனிருந்தான். மஹாத்மாவான அந்தஜனகனுக்குக் கங்காதேவி பெண்ணாள். அவனுக்குக் குணங்களில் தந்தைக்கொப்பானகுணமுள்ளவனும் பெரும்புகழ்பெற்றவனுமாகிய வஸிந்துத்வீபன்என்னும்புத்ரனுண்டானான். பஹுபல்சாலியான பலாகாஶ்வன்என்னும் ராஜரிஷி வஸிந்துத்வீபனுடையபுத்ரன். தர்மமே இரண்டாவதுஉருவங்கொண்டு

---

1 'விஶ்வாமித்ரர், த்ரிசங்குவுக்குயாகம்செய்விக்கும்போது, 'சண்டாளனுக்குயாகம்செய்விக்கும் நீ சண்டாளனாவாய்' என்று வஸிஷ்டபுத்ரர்கள்கொடுத்தசாபத்தினால், பஞ்சம்வந்து பசியினால்வருந்தினகாலத்தில் நாயமாம்ஸத்தைத் திருட்டுத்தனமாகக்கொண்டுவந்து சமைக்கத்தொடங்கும்போது இந்த்ரன் பருந்துரூபமாக அதைக் கொண்டுபோனான். அப்போதே அவர் சாபத்தினின்றுவிடுபட்டு இந்த்ரனைத் துதித்தார், மழைபெய்து பஞ்சம்நீங்கிற்று' என்பது பழையஉரை.

வந்ததுபோன்ற வல்லபனென்பவன் பலாகாச்வனது மைந்தன். இந்த்ரனுக்கொப்பானபராக்ரம்முள்ளகுசிகன் வல்லபனதுபுதல்வன். குசிகனதுமைந்தனுகிய சிறப்புற்ற காதியென்னுமரசன் ஸந்ததியற்றவனுகி ஸந்ததியைவேண்டித் தபோவனத்தில் வாஸம்செய்தான். அவன் வனத்தில்வஸிக்கும்போது புவியில்நிகரற்ற அழகுள்ளவளாகியஸத்யவதியென்றுபேயருள்ள [1]கன்னிகை பிறந்தாள். ப்ருகுவம்சத்தில்பிறந்தவரும் ச்யவனருடையபுத்ரரும் பெருந்தவத்திலிருப்பவரும் மஹிமைபொருந்தினவருமான ரிசீகரென்பவர் அந்தக்கன்னிகையைக்கேட்டார். பதைவர்களேயடக்குபவனுகியகாதியென்பவன் அம்மஹாத்மாவானரிசீகரைத் தரித்திரரென்றுநினைத்து அவருக்கு அந்தப்பெண்ணைக் கொடுக்கவில்லை. மறுத்தபின் செல்லத்தொடங்கின அம்முனிவரைப்பார்த்து மறுபடியும் அந்தராஜஸ்ரேஷ்டன், 'எனக்கு ஒருகன்யாசுல்கம் கொடுக்கவேண்டும்; அதன்பிறகு என்பெண்ணை மணம் புரிவீர்' என்றுசொன்னன். அதற்கு ரிசிகர், 'அரசர்களில்சிறந்த அரசனே! உனது பெண்ணுக்காக உனக்கு என்னசுல்கத்தை நான் கொடுக்கவேண்டும்? தடையின்றிச் சொல். அதில் உனக்குச் சங்கைவேண்டாம்' என்றுகேட்டார். காதி, 'ஓ! பார்க்கவரே! ஒற்றைக்காது கறுத்தவையும் சந்த்ரகிரணம்போல (வெண்மைபாக) ப்ரகாசிப்பவையும் வாயுவேகமுள்ளவையுமான ஆயிரம்குதிரைகளைக் கொடும்' என்றுகேட்டான். ப்ருகுவம்சத்தில்சிறந்தவரும் ச்யவனரதுபுத்ரரும் சக்தியுள்ளவருமாகிய ரிசிகர், உடனே, ஜலத்திற்கதிபதியும் அதிதியின்குமாரனுமான வருணபகவானைப்பார்த்து, 'தேவஸ்ரேஷ்டனே! ஒற்றைக்காதகருமையும் சந்த்ரன்போன்றநிறமும் காற்றைப்போல்வேகமுமுள்ள ஆயிரம்குதிரைகளை உன்னிடம் யாசிக்கிறேன்' என்றுகேட்டார். அதிதியின்புத்ரனை வருணபகவானும் ப்ருகுவம்சஸ்ரேஷ்டரான ரிசிகரைப்பார்த்து, 'அவ்வாறே ஆகட்டும். எந்த இடத்தில் நீர் நினைப்பீரோ அந்தவிடத்திலேயே குதிரைகள் எழும்பும்' என்றுசொன்னன். ரிசிகர்நினைத்தமாத்திரத்தில் சந்த்ரன்போன்றநிறமுள்ளவையும் மிக்கவேகமுள்ளவையுமான ஆயிரம்குதிரைகள் கங்கையின்ஜலத்தினின்று எழும்பின. காந்யகுப்ஜதேசத்திற் கருகில் அந்தச்சிறந்த [2]கங்கைத்துறையை அச்வதீர்த்தமென்று இப்போதும் மனிதர்கள் கூறுகின்றனர். அப்பா! ரிஷிகளிற்சிறந்த ரிசிகர் உடனே ஸந்தோஷத்துடன் அந்தச்சிறந்தஆயிரம்குதிரைகளையும்

1 'ஸுதாத்' என்பது வேறுபாடம். 'யாகத்தினுல்' என்பது பழையஉரை.
2 'தீரம்' என்பது 'தீர்த்தம்' என்று இருத்தல்வேண்டும்.

பெண்ணுக்குப்பரிசமாகக் காதிக்குக் கொடுத்தார். பிறகு, காதி யென்னும்அரசன் வியப்புற்றுச் சாபத்திற்குப்பயந்து அத்தப்பெண் ணுக்கு அலங்காரங்களைச்செய்து அவளை ரிசீகருக்குக்கொடுத்தான். அந்தச்சிறந்த ப்ரம்மரிஷியானரிசீகர் விதிப்படி அவளைப் பாணிக்ர ஹணம்செய்துகொண்டார். அவளும் அவரைப் பதியாகவடைந்து மிகமகிழ்வுற்றாள். பாரதனே! அந்தப்ரம்மரிஷி அவளுடையஒழுக் கத்தினால் ஸந்தோஷமடைந்து அந்தச்சிறந்தபெண்ணுக்கு வரமளிப் பதாகச் சொன்னார். ராஜஸ்ரேஷ்டனே! அந்தப்பெண் அவர்சொன் னதையெல்லாம் தன்தாய்க்குச் சொன்னாள். அப்போது அவள்தாய், நாணத்தினால் சிறிதுதலைகுனிந்திருக்கும்மகளை நோக்கி, 'பெண்ணே! உன்பர்த்தாவானவர், எனக்கும் ஸந்ததியைக்கொடுத்து அனுக்ரஹம் செய்யக்கடவர். அவர் சிறந்ததவமுள்ளவர்; ஸமர்த்தர்' என்று சொன்னாள். அரசனே! பிறகு, அந்தப்பெண் விரைவாகச்சென்று தன் தாயின்கருத்தை முழுதும் தெரிவித்தபோது அவளைப்பார்த்து ரிசீ கர், 'நீயும் அவளும் குணமுள்ள பிள்ளையைப் பெறுவீர்கள். பெண் ணரசியே! உன்தாயினுடையவேண்டுகோள் வீணாகத்தகாது. குண ங்களில்சிறந்தவனும் நமதுஸந்ததியைவ்ருத்திசெய்கிறவனுமான சிற ந்தபுத்ரனும், தாய்வம்சத்தைவ்ருத்திசெய்யும்ஸோதரனும் உனக் குப் பிறக்கப்போகின்றனர். சிறந்தவளே! ருதுஸ்நானம்செய்தபிறகு, உன்தாய் அரசமரத்தையும் நீ அத்திமரத்தையும் தழுவிக்கொள் ளுங்கள். உடனே விரும்பினதையடைவீர்கள். வெளுத்தபுன்னகை யுள்ளவளே! மந்த்ரத்தினால் ஜபிக்கப்பட்டுப் பரிசுத்தமாயுள்ள இவ் விரண்டு [1]ஹவிஸ்களையும் உன்தாயும் நீயும் உண்ணுங்கள். அதனால், புத்ரர்களையடைவீர்கள்' என்றுசொன்னார். பிறகு, ஸத்யவதி மகிழ் ந்து ரிசீகர் சொன்னதைத் தாய்க்குச்சொல்லி, அவ்விரண்டு ஹவிஸ் களையும் காண்பித்தாள். பிறகு, தாயானவள் தன்பெண்ணை ஸத்ய வதியைப்பார்த்து, 'பெண்ணே! மூத்தவளாகிய நான் சொல்வதைச் செய். குற்றமற்றவளே! தாயாகிய என்சொல்லில் உனக்குக் கௌர வமிருக்குமாயின் உன்பர்த்தா மந்த்ரத்தினால் ஸம்ஸ்காரம்செய்து உன க்குக்கொடுத்தஹவிஸை நீ எனக்குக்கொடு; என்னுடையஹவிஸை நீ எடுத்துக்கொள். வெளுத்தபுன்னகையுள்ளவளே! இரண்டுமரங் களையும் நாமிருவரும் மாற்றிக்கொள்வோம். எவனும் தன்ஸந்ததி சிறந்ததாகவும் குற்றமில்லாததாகவுமிருக்கவிரும்புவான். மஹிமை

---

1 இந்தக்கதையை, சாந்திபர்வம் 156-ம் பக்கத்தில் 'பரசுராமாஜனனம் சொல்லுமிடத்தும் காண்க.

பொருந்திய ரிஷிகளும் இந்தவிஷயத்தில் இவ்வாறேசெய்திருக்க வேண்டுமென்பது வெளிப்படை. அழகிய இடையுள்ளவளே! அதனால், எனக்கு உன்னிலும் உன்மாதரத்திலும் எண்ணமிருக்கிறது. ஸோஹாதரன் சிறந்தவனை எப்படியுண்டாவானென்பதைத்தான் நீ நினைக்கவேண்டும்' என்றுசொன்னாள். ஸத்யவதியும் அவள்தாயும் அவ்வாறேசெய்தனர். யுதிஷ்டிர! பிறகு, அவ்விருவரும் கர்ப்பங்களைத் தரித்தனர். ப்ருகுவம்சஶ்ரேஷ்டரான ரிஷிகமஹரிஷி கர்ப்பந்தரித்திருந்ததம்மனைவியான ஸத்யவதியைக்கண்டு துயரத்துடன், 'சிறந்தவளே! உன்னை நீ மாறுதலாகஉட்கொண்டிருக்கவேண்டுமென்பது நிச்சயம். மரத்திலும் மாறுதல் நடத்தப்பட்டதென்பதில் ஸந்தேஹமில்லை. என்னால், ப்ரம்மதேஜஸ் அனைத்தும் உன்னுடையஹவிஸிலும் க்ஷத்ரியசக்திமுழுதும் உன்தாய்ஹவிஸிலும் பொருத்தப்பட்டன. மூன்றுலகங்களிலும் புகழ்பெற்றப்ராம்மணனை நீயும், அப்படியே சிறந்தக்ஷத்ரியனை உன்தாயும் பெறுவீர்களென்று நான் இதைச்செய்தேன். சிறந்தவளே! நீயும் உன்தாயும் மாறுதல்செய்துவிட்டபடியால், உன்தாய் சிறந்தப்ராம்மணனைப் பெறுவள். அன்புள்ளவளே! நீயோவெனில் கொடியசெய்கையுள்ள க்ஷத்ரியனைப் பெறுவாய். பெண்ணரசியே! தாயினிடத்திலுள்ள அன்பினால் சரியானகார்யம் செய்யாமற்போனாய்' என்றுசொன்னார். தர்மராஜனே! அந்தப்பெண்ணரசியானஸத்யவதி அதைக்கேட்டுத் துயரத்தினால்கொதிப்புற்று, அறுக்கப்பட்டஅழகியகொடிபோலத் தரையில் விழுந்தாள். காதியின்பெண்ணும் ரிசிகரின் மனைவியுமான அந்தஸத்யவதி மூர்ச்சைதெளிந்தபிறகு பார்க்கவஶ்ரேஷ்டரான தன்பர்த்தாவைத் தலைவணங்கிநமஸ்கரித்து, 'ப்ரம்மஜ்ஞானிகளிற்சிறந்தவரே! உம்முடைய பார்யையானநான் ப்ரார்த்திக்கிறேன். ப்ரம்மரிஷியே! அனுக்ரஹம் செய்யும். எனக்கு க்ஷத்ரியனைபுத்ரன் உண்டாகாமலிருக்கவேண்டும். ப்ராம்மணரே! கொடியசெய்கையுள்ள பேரன்பிறந்தாலும் பிறக்கட்டும். என்பிள்ளை அப்படியிருக்கலாகாது. இந்தவரத்தை எனக்குக் கொடுக்கவேண்டும்' என்றுகேட்டாள். மிகச்சிறந்ததவமுள்ளரிசிகர், 'அப்படியே ஆகட்டும்' என்று தம்மனைவிக்குச் சொன்னார். பிறகு, அந்தஸத்யவதி ஜமதக்னியென்னும் சிறந்தபிள்ளையைப் பெற்றாள். அரசர்க்கரசனே! புகழ்பெற்றவளான காதியின்மனைவி ரிசிகமஹரிஷியின் அனுக்ரஹத்தினால், வேதங்களைவெளியிடுகிறவரும் ப்ரம்மரிஷியுமான்விஶ்வாமித்ரரைப்பெற்றாள். அதனாலேதான் சிறந்ததவமுள்ளவிஶ்வாமித்ரர், க்ஷத்ரியராயிருந்தும் ப்ராம்மணத்வத்தை

அடைந்து பின்னும் ப்ராம்மணஸந்ததியை உண்டுபண்ணினர். அவருடையபுத்ரர்களும், மஹாத்மாக்களும் ப்ராம்மணவம்சத்தைவ்ருத்தி செய்கிறவர்களும் தவத்தில்சிறந்தவர்களும் ப்ரம்மஜ்ஞானிகளும் கோத்ரங்களுக்குமுதற்புருஷர்களுமாகவே இருந்தனர். பகவானுடைமதுச்சந்தன், தவவன்மையுள்ளதேவராதன், அக்ஷீணன், சகுந்தன், பப்ரு, காலபதன், பெயர்பெற்றயாஜ்ஞவல்க்யன், சிறந்ததபமுள்ள ஸ்தூணன், உலூகன், யமதூதன், ஸைந்தவாயனனென்னும்ரிஷி, மகிமைபொருந்தியபர்ணஜங்கன், 1காலவமஹரிஷி, வஜ்ரனென்னும்ரிஷி, க்யாதிபெற்றஸாலங்காயனன், லீலாட்யன், நாரதன், கூர்ச்சாமுகன், வாதூலி, முஸலன், வக்ஷுாக்ரீவன், ஆங்கிரிகன், நைகத்ருக், சிலாயூபன், வஸிதன், சுசி, சக்ரகன், மாருதந்தவ்யன், வாதக்நன், அபர்வலாயனன், பர்யாமாயனன், கார்க்யன், ஜாபாலி, ஸுஸ்ருதன், காரீஷி, ஸம்ச்ருத்யன், பரன், பௌரவன், தந்து, கபிலமஹரிஷி, தாடகாயனரிஷி, உபகஹனன், ஆஸுராயணரிஷி, மார்த்தமரிஷி, ஹிரண்யாக்ஷன், ஜங்காரி, பாப்ரவாயணி, பூதி, விபூதி, ஸுதன், ஸுரக்ருத், அராலி, நாசிகன், சாம்பேயன், உஜ்ஜயனன், நவதந்து, பகநகன், ஸேயனன், யதி, அம்போருகன், சாருமத்ஸ்யன், சிரீஷி, கார்த்தபி, ஊர்ஜயோனி, உதாபேக்ஷி, நாரதியென்னுமஹரிஷி ஆகிய விச்வாமித்ரர்மைந்தர்களனைவரும், வேதங்களைவெளியிட்டமஹரிஷிகள். தர்மராஜனே! அதனாலேதான்க்ஷத்ரியரானவிச்வாமித்ரர் சிறந்ததவமுள்ளப்ரம்மரிஷியானர். யுதிஷ்டிர! ரிசீகரால்வைக்கப்பட்ட அந்தமந்த்ரம் பெரிது. பரதச்ரேஷ்டனே! சந்த்ரன்ஸூர்யன்அக்னிஇவர்களுக்கொப்பானமஹிமையுள்ள விச்வாமித்ரருடைய ஜனனமுழுதும் உள்ளபடி உனக்குச் சொல்லப்பட்டது. அரசச்ரேஷ்டனே! இன்னும்எந்தஎந்தவிஷயத்தில் உனக்கு ஸந்தேஹமிருக்கிறதோ அந்தஅந்தவிஷயங்களிலும் என்னைக் கேள். உன்ஸந்தேஹங்களைப் போக்குவேன்" என்றார்.

எட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வீதஹவ்யராஜனும் அவன்வம்சமும் ப்ராம்மணரானவரலாறு.)

யுதிஷ்டிரர், "குருவம்சச்ரேஷ்டரே! பேசுகிறவர்களிற்சிறந்தவரே! ப்ராம்மணத்வத்தைப்பெறுவது மிகக்கடினமென்று நீர்சொல்லிய இந்தச்சிறந்தசரித்ரத்தை நான் கேட்டேன். மஹாராஜரே!

1 மூலத்தில் 'காவல்ய' என்றிருக்கிறது.

பிதாமஹரே! ராஜாவான விஶ்வாமித்ரர்ப்ராம்மணத்வத்தைஅடைந்த வகையெல்லாம் உம்மால் விரிவாக உரைக்கப்பட்டது. அறிஞரிற் சிறந்த அரசரே! அவற்றையெல்லாம் நான்கேட்டேன்.கௌரவர்களை வ்ருத்திசெய்கிறவரே! எங்களுக்கு மேலானஞானம் உம்மாலேதான் உண்டாகிறது. ப்ரபுவே! கங்காபுத்ரரே! வீதஹவ்யனென்னும் அரசன் ப்ராம்மணத்வத்தை அடைந்ததாக நான் கேட்டிருக்கிறேன். அதைப்பற்றித்தான் (இப்போது) கேட்கவிரும்புகிறேன். அரசரிற் சிறந்த அவன், வரத்தினாலேயா தவத்தினாலேயா என்னசெய்கையினால் ப்ராம்மணத்தன்மையை அடைந்தானென்பதை எனக்கு உரைக்கக் கடவீர்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அரசனே! பெரும்புகழ்ஞாநிய வீதஹவ்யனென்னும்ராஜரிஷி, பெறுதற்கரிதும் உலகங்களினால் கொண்டாடப்பெற்றதுமாகிய ப்ராம்மணத்வத்தை அடைந்தவகையைக் கேள். அப்பா! ப்ரஜைகளைத்தர்மமாகரக்ஷித்த மஹாத்மாவானமனுவுக்குச் சர்யாதியென்று பெயர்பெற்றவனும்தர்மத்தில்ஊக்கமுள்ளவனுமான ஒருபுத்ரன் இருந்தான். ஜயிப்பவரிற்சிறந்தஅரசனே! அவன்வம்சத்தில் ஹைஹயன் தாலஜங்கனென்னும் இரண்டு அரசர்கள் வத்ஸதேசத்திலிருந்தனர். அரசர்க்கரசனைபாரதனே! ஹைஹயனுக்குப் பத்துமனைவிகளிடம் போரில்பின்வாங்காமல் வெற்றிபெறும் சூரர்களும் தேஜஸ்வன்மையும் ஓரேவிதமானஉருவமும் மஹிமையுமுள்ளவர்களுமான நூறுபிள்ளைகள் உண்டாயினர். அவர்கள் தனுர்வேதத்திலும் எல்லாவேதாங்களிலும் உழைத்திருந்தனர். வேந்தனே! ஜயிப்பவரிற்சிறந்தவனும் திவோதாஸனுக்குப்பாட்டனுமாகிய ஹர்யஶ்வன் என்றுபெயர்பெற்ற அரசன் காசிதேசத்திலிருந்தான். புருஷர்ஶ்ரேஷ்டனே! வீதஹவ்யனென்றுபெயருள்ள ஹைஹயனுடையமைந்தர்கள்காசிதேசத்திற்குவந்து கங்கைக்கும் யமுனைக்கும்நடுவிலுள்ளதேசத்தில் நட்ந்தபோரில் அந்த ஹர்யஶ்வனைக் கொன்றனர். மஹாரதர்களும் யாரிடத்திலும் அச்சமற்றவர்களுமான அந்தவீதஹவ்யன் புதல்வர்கள், அவ்வரசனைக்கொன்றபின் வத்ஸதேசத்தின் அழகானராஜதானிக்குத் திரும்பிச்சென்றனர். தேவதையைப்போன்றவனும் தர்மமே இரண்டாவதுருவமெடுத்துநேரேவந்ததுபோன்றவனுமாகிய ஹர்யஶ்வன்மைந்தனை ஸுதேவன் காசிராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்யப்பெற்றான். தர்மத்தில் மனமுள்ள அந்தஸுதேவன் பூமியையாண்டுகொண்டிருக்கும்போது வீதஹவ்யன் மைந்தர்களனைவரும் அங்கே வந்து யுத்தத்தில் அவனை ஜயித்தனர். அவனை யுத்தத்தில் ஜயித்தபிறகு அவர்கள் வந்தவழியே

திரும்பிச்சென்றனர். அதன்பிறகு, ஸுதேவன்புதல்வனுகிய திவோதாஸனென்பவன் காசிராஜாவாகஅபிஷேக்ம்செய்யப்பெற்றான். அரசஸ்ரேஷ்டனே! சிறந்த பராக்ரமமுள்ள திவோதாஸன் மன உறுதியுள்ளவர்களான வீதஹவ்யன் புத்ரர்களின்பராக்ரமத்தையறிந்து இந்த்ரனது கட்டளையினுல் ப்ராம்மணர்களும்க்ஷத்ரியர்களும் வைஸ்யர்களும் சூத்ரர்களும் நிரம்பினதும் மிக்கபொருட்குவியல்களையுடையதும் நிரம்பின கடைகளோடும்கடைத்தெருக்களோடும் கூடியதும் இந்த்ரனது அமராவதியைப்போன்றதுமான வாராணஸியென்னும் ராஜதானியைக் கோமதிநதியின்தென்கரையில் கங்கையின் வடகரையோரத்தில் உண்டுபண்ணினன். பாரதனே! அரசரிற்சிறந்தஅந்தத் திவோதாஸராஜன் அங்கே வஸிக்கையில் வீதஹவ்யபுத்ரர்கள் திரும்பவும்வந்து சூழ்ந்துகொண்டனர். சிறந்தபலமும்பெரும்புகழுமுள்ள அந்தத்திவோதாஸனென்னும் அரசன், ஊரிலிருந்துவெளிப்பட்டுத் தேவாஸுரயுத்தத்திற்கொப்பான பயங்கரமானயுத்தத்தை அவர்களுக்குக் கொடுத்தான். மஹாராஜனே! அவன் நூறுதினங்கள்நடந்த அந்தயுத்தத்தில் யானைகுதிரைகள் முதலியவாஹனங்கள் பெரும் பாலும் அடிபட்டதனுல் சோர்வையடைந்தான். அரசனே! பிறகு, யோர்வீரர்களிறந்தும் பொக்கசங்கள் செலவழிந்தும் போனதனுல் திவோதாஸராஜன் நகரைவிட்டு ஓடத்தலைப்பட்டான். பகைவரை வெல்லுகிறவனே! அவ்வரசன், சிறந்தஞானமுள்ளபரத்வாஜரின் அழகான ஆச்சிரமத்திற்குச்சென்று கரங்குவித்து அவரைச்சரணமடைந்தான். ப்ருஹஸ்பதியின் மூத்தகுமாரரும் நல்லொழுக்கமுள்ளவரும் புரோஹிதருமானபரத்வாஜர், அந்தத்திவோதாஸராஜனைப்பார்த்து, 'அரசனே! நீவந்தகார்யம் யாது? எல்லாவற்றையும் எனக்குச்சொல். உன்விருப்பத்தை நான்செய்வேன். அதில் எனக்கு ஆலோசனையில்லை' என்றுகேட்க, அவ்வரசன், 'பகவானே! வீதஹவ்யன்புத்ரர்களினுல் எனதுகுலமே போரில் அழிக்கப்பட்டது. நான்ஒருவன் தப்பியரப்பட்டு உங்களைச் சரணமடைந்தேன். பகவானே! சிஷ்யனென்று அன்புவைத்து நீர் என்னைக்காப்பாற்றக்கடவீர். கெட்ட செய்கைக்காரரான வீதஹவ்யபுத்ரரால் என்வம்சத்தில் நானொருவனே மிச்சமாகச்செய்யப்பட்டேன்' என்றுசொன்னன். மஹானுபாவரும் சிறந்தசக்தியுள்ளவருமான பரத்வாஜர், அவனை நோக்கி 'ஸுதேவன்மைந்தனே! பயப்படவேண்டாம்; பயப்படவேண்டாம். உனதுபயம்விலகிப்போகட்டும். வேந்தனே! நான் உனக்குப் புத்ரனைக்குறித்து ஒருயாகம்செய்வேன். அந்தப்பிள்ளையால் அநேக ஆயி

ரம்வைதஹவ்யர்களே நீ அடிப்பாய்" என்றுசொன்னர். பிறகு, அந்த ரிஷி அவ்வாசனுக்குப் புத்ரகாமேஷ்டியைச் செய்தார். பிறகு, அந்தத்திவோதாஸனுக்கு ப்ரதர்த்தனனென்னும்புத்ரன்பிறந்தான். பரதனே! சிறந்தஞானமுள்ள பரத்வாஜருடைய யோகசக்தியினல் அவன் பிறந்தவுடன் பதின்மூன்றுவயதுள்ளவனகவளர்ந்து, வேதம், தனுர்வேதம் எல்லாவற்றையும் சொன்னன். உலகத்திலுள்ள சக்திகளனைத்தும் அவன் தேஹத்தில் ப்ரவேசித்திருந்தன. பிறகு, கவசம் தரித்து வில்லெடுத்துத் தேவரிஷிகளாலும் அதிக்கப்பெற்று வந்திகளால் விருதகள்படிக்கப்பெற்ற அந்தப்ரதர்த்தனன் உதயமானஸூர்யன்போல விளங்கினன். அவன் தேரிலேறிக் கத்திகட்டிக்கொண்டு ஜ்வலிக்கின்ற அக்னிபோலவிளங்கினன். அவன், வில்லை உதறிக்கொண்டு மழைபொழியத்தொடங்கும் மேகம்போலப் புறப்பட்டான். திவோதாஸன் அவனைக்கண்டு மிகமகிழ்வுற்றன். திவோதாஸன், வீதஹவ்யன்புத்ரர்கள் எரிக்கப்பட்டதாகவேமனத்தில் நினைத்தான். பிறகு, அவன் ப்ரதர்த்தனனை இளவரசனுகப் பட்டாபிஷேகம்செய்வித்து, தான் க்ருதார்த்தனனதாக நினைத்தான். பிறகு, திவோதாஸராஜன் வீதஹவ்யபுத்ரர்களை வதம்செய்வதற்காக, தன்புத்ரனும் பகைவர்களையிப்பவனுமான ப்ரதர்த்தனனை அனுப்பினன். பராக்ரமசாலியும் பகைவர்களின்நகரங்களையிப்பவனுமான ப்ரதர்த்தனன் ரதசைன்யத்தைக்கங்கையை விரைவாகத்தாண்டி வைதஹவ்யர்களின் நகரத்துக்குச் சென்றன். வீதஹவ்யபுத்ரர்களும் மிகப்பெரிதான தேரொலியைக்கேட்டு நகரங்கள்போன்றவையும் அயஸார்தேர்களை முறிப்பவையுமான ரதங்களில்ஏறிப் புறப்பட்டனர். சித்ரயுத்தம்செய்யத்தக்க புருஷஸ்ரேஷ்டர்களான வீதஹவ்யபுத்ரர்கள்கவசங்களைப்பூண்டுவில்லெடுத்துச் சரமாரிகள்பொழிந்துகொண்டு புறப்பட்டு ப்ரதர்த்தனனைச் சந்தித்தனர். யுதிஷ்டிர! பலவகைகளான ரதக்கூட்டங்களுடன் இமயமலையின்மேல் மேகங்கள் மழைபொழிவதுபோல ப்ரதர்த்தனராஜன்மேல் அஸ்த்ரங்களைப்பொழிந்தனர். சிறந்த பராக்ரமசாலியான ப்ரதர்த்தனராஜன் அவர்களின் அஸ்த்ரங்களை அஸ்த்ரங்களாலேயே தடுத்து இடிக்கும்அனலுக்குமொப்பானசரங்களினல்அவர்களை அடித்தான். அரசனே! அவர்கள், நூறுயிரக்கணக்கான அர்த்தசந்த்ரபாணங்களினல் சிரங்கள் துணிக்கப்பட்டு உதிரத்தினல் அங்கங்கள் நனைந்து வெட்டப்பட்ட [1]பலாசமரங்கள்போல்விழுந்தனர். வீதஹவ்

---

[1] பலாசமரங்களின்மலர்கள் ரக்தம்போலச் சிவந்திருப்பதனல் உவமையாயின.

யன் தனது புத்ரர்கள்எல்லாரும்கொல்லப்பட்டபிறகுதனதுநகரத்தை விட்டு ப்ருகுமஹரிஷியின் ஆஸ்ரமத்திற்குஓடினன். வீதஹவ்யராஜன் ப்ருகுமஹரிஷியை அடைக்கலம்அடைந்தான். அந்தவீதஹவ்யனுக்கு ப்ருகுவானவர் அபயம் அளித்தனர்; தம்சிஷ்யர்களின் நடுவில் அவனுக்கு மேறுஆஸனத்தையும் அளித்தனர். உடனே ப்ரதர்த்தனனும் விரைவாகத்தொடர்ந்து அங்கேவந்தான். அவன் ப்ருகுவின் ஆஸ்ரமத்தையடைந்து, 'ஓ! ஓ! மஹாத்மாவான ப்ருகுவின்சிஷ்யர்கள் யார் இந்த ஆஸ்ரமத்திலிருந்கின்றனர்? நானும் முனிவரைக்காணவிரும்புகிறேன். என்னை அவருக்குத் தெரியுங்கள்' என்றுசொன்னன். அந்த ப்ருகுவானவர் அவனைத்தெரிந்துகொண்டு உடனேஆஸ்ரமத்திலிருந்துவெளியில்வந்து அந்தராஜப்ரேஷ்டனை முறைப்படி உபசரித்தார்; அவனைப்பார்த்து, 'அரசர்க்கரசே! பூமிக்கதிபதியே! உனக்கு ஆக வேண்டியகார்யம் என்ன? சொல்' என்றுகேட்க, அவ்வரசன் தான் வந்தகாரணத்தை அவருக்குத் தெரிவிக்கலானன். 'ப்ராம்மணரே! இந்தவீதஹவ்யனென்னும்அரசன்இங்கிருந்து விட்டுவிடப்படவேண்டும். அந்தணரே! இவனதுபுத்ரர்களினால் என்வம்சமெல்லாம் அழிக்கப்பட்டது; என்னுடைய காசிதேசமும் ரத்னக்குவியலும் அபஹரிக்கப்பட்டன. பராக்ரமத்தினால்கர்வங்கொண்ட இவ்வரசனது நூறுபுத்ரர்கள், என்னால் கொல்லப்பட்டனர். இப்போது இவனைவதம்செய்து என்பிதாவின்கடனைத் தீர்க்கப்போகிறேன்' என்றான். தர்மத்தைக் காப்பவரிற்சிறந்தவரான ப்ருகு, வீதஹவ்யன்மேல் கருணைகூர்ந்தவராய் ப்ரதர்த்தனனைப்பார்த்து, 'இங்கே க்ஷத்ரியன்எவனுமில்லையே? இவர்களனைவரும் ப்ராம்மணர்களல்லரோ?' என்றுசொன்னர். ப்ருகுவின் இந்தஉண்மையானசொல்லைக்கேட்டு ப்ரதர்த்தனன், ஸந்தோஷம்அடைந்து அவர்பாதங்களைப்பிடித்துக்கொண்டு மெதுவாக, 'பகவானே! இப்படிச்செய்தும் நான் க்ருதார்த்தனானேன்; ஸந்தேஹமில்லை. ஏனெனில், நான் என்பராக்ரமத்தினால், இந்தவீதஹவ்யராஜனைத் தன்ஜாதியை விடும்படிசெய்தேன். ப்ராம்மணரே! எனக்கு விடைகொடும். எனக்குக்ஷேமமுண்டாகும்படி நினைக்கக்கடவீர். ப்ருகுவம்சத்தலைவரே! இவ்வரசன் தன்ஜாதியை என்னால் விடுவிக்கப்பட்டானல்லனோ?' என்றுசொன்னன். மஹாராஜனே! பிறகு, ப்ருகுவினால்விடைகொடுக்கப்பட்ட ப்ரதர்த்தனராஜன் விஷத்தை விட்டுவிட்டஸர்பம்போலவந்தவழியேசென்றான். மஹாராஜனே! அந்த வீதஹவ்யன், ப்ருகுவின் அந்தச்சொல்மாத்திரத்தினாலேயே ப்ரம்ம ரிஷியும் ப்ரம்மஜ்ஞானியுமானன். அவனது புத்ரனை க்ருத்ஸமதன்

உருவத்தில் இரண்டாவது இந்த்ரன்போல இருந்தான். அவன் அஸுரர்களால், 'நீதான் இந்த்ரன்' என்று பிடிக்கப்பட்டானும். அந்த மஹாத்மாவான க்ருத்ஸமதனுடைய சிறந்த 1ஸ்ருதியானது ரிக்வேதத்திலிருக்கிறது. அரசனே! அந்தக்ருத்ஸமதன் அதனால் ப்ராம்மணர்களால் பூஜிக்கப்படுகிறான். அந்தச்சிறப்புள்ள க்ருத்ஸமதன்என்னும் ப்ரம்மரிஷி ஜிதேந்திரியனாகவிருந்தான். அந்தக்ருத்ஸமதனுக்கு ப்ராம்மணனான ஸாவைநஸன் என்னும்புத்ரன் உண்டானான். ஸாவைநஸனுடையபுத்ரன் விதஸ்த்யன். விதஸ்த்யனுடையபுத்ரன் சிவஸ்தன். சிவஸ்தனுடையபுத்ரன் ஸ்ரவஸ்என்னும்ரிஷி. ஸ்ரவஸினுடைய புத்ரன் தமஸ்என்பவன். ப்ரகாசனென்னும் ப்ராம்மணஸ்ரேஷ்டன் தமஸின்புதல்வன். ஜயிப்பவரிற் சிறந்தவனான வாகிந்த்ரன் ப்ரகாசனுடைய புத்ரன். வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவனான்ப்ரமதி வாகிந்த்ரனுடையபுத்ரன். ப்ரமதிக்கு க்ருதாசியென்பவளிடம் ருருவென்னும் மைந்தன் பிறந்தான். ருருவுக்கு ப்ரமத்வரையினிடம் சுனகனென்னும் புத்ரனுண்டானான். சுனகனுடைய புத்ரர் சௌனகர் என்னும் ப்ரம்மரிஷி. அரசர்க்கரசனே! க்ஷத்ரியத்தலைவனே! க்ஷத்ரியனாகவிருந்த வீதஹவ்யராஜன் ப்ருகுவின் அனுக்ரஹத்தினால் இவ்வாறு ப்ராம்மணத்வத்தையடைந்தான். அரசனே! க்ருத்ஸமதனுடைய இந்த வம்சத்தை உனக்கு விரிவாகச் சொன்னேன். மஹாராஜனே! மற்றுமென்ன கேட்கிறாய்?" என்றார்.

ஒன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(முயற்சியின் சிறப்பு.)

யுதிஷ்டிரர், "சிறந்த ஞானமுள்ளவரும் எல்லாக்கலைகளிலும் நிபுணருமான பாட்டனாரே! தெய்வம் முயற்சியென்னும் இரண்டனுள் எது சிறந்ததாகும்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"யுதிஷ்டிர! இந்த விஷயத்திலும் வஸிஷ்டருக்கும் ப்ரம்மதேவருக்கும்நடந்த ஸம்பாஷணையாகிய இந்த ஒரு பழையசரித்ரத்தைக் கூறுகின்றனர். முன்னர் மஹிமைபொருந்திய வஸிஷ்டர், ப்ரம்மதேவரைப்பார்த்து, 'ஊழ்வினை மனிதன்முயற்சியென்னும் இரண்ட

1அவன் பார்த்தமந்த்ரம். மந்த்ரங்கள் நித்யமாயிருந்தாலும் ஒவ்வொரு மஹாத்மாவுக்கு யோகமஹிமையினல் புத்திக்குப் புலப்பட்டதாகாரணமாக அவரவர் பார்த்த மந்த்ரங்களென வழங்குகின்றன.

னுள் எது சிறந்தது?' என்றுகேட்டார். அரசனே! பிறகு, தாமரை மலரில் பிறந்தவரும் தேவர்க்கும் தேவருமான ப்ரம்மதேவர் காரணங்களும் கார்யங்களும் அடங்கிய இன்சொல்லைச் சொல்லலானார். 'வித்திலிருந்து முளை முளைக்கிறது. முளையிலிருந்து இலையுண்டாகிறது. இலையிலிருந்து காம்புஉண்டாகிறது. காம்பிலிருந்து கிளையுண்டாகிறது. கிளையிலிருந்து மலர்உண்டாகிறது. மலரிலிருந்து கனியுண்டாகிறது. கனியினுல் வித்துஉற்பத்திஆகிறது. வித்திலிருந்து திரும்பவும் உற்பத்தி ஆகிறது. வித்தில்லாமல் ஒன்றும் உண்டாவதில்லை. வித்தின்றிப் பழமில்லை. வித்திலிருந்து வித்துண்டாகிறது. வித்தில்லாவிடில் பலனில்லை. விதைவிதைப்பவன் நிலத்தையடைந்து எவ்வகையான விதையை விதைக்கிறானோ அவ்விதமான பலனை அடைவதுபோல, நல்வினைக்கும் தீவினைக்கும் தக்கபலனை மனிதன் அடைகிறான். [1]நிலமில்லாமல் விதைக்கப்பட்டவிதை பயன்படாததுபோல, முயற்சியில்லாத ஊழ்வினை பயன்படுவதில்லை. செய்வினை பூமியாகவும் ஊழ்வினை விதையாகவும் கூறப்படுகின்றன. நிலமும் வித்தும் சேர்வதனால் வித்திலிருந்து பயிர்வளர்கின்றது. செய்பவன் தன் செய்கையினுல் உண்டானபலனைத் தானே அனுபவிக்கிறான். செய்ததும் செய்யாததும் உலகத்தில் ப்ரத்யக்ஷமாகக் காணப்படுகின்றன. நல்வினையினுல் இன்பமும் தீவினையினுல் துன்பமும்உண்டாகின்றன. கார்யத்தைச் செய்பவன் பாக்யத்தினுல் தேகாகப்பெற்று எல்லாவற்றிலும் லாபத்தை அடைகிறான். செய்யாதவன் தன் நிலைகுலைந்து புண்ணில் உப்புநீர் விட்டதுபோன்ற துயரத்தை அடைகிறான். தவத்தினுல் தேஹத்தின் அழகும் பலவகைரத்னங்களும் கிடைக்கின்றன. முயற்சியினுல் எல்லாம் கிடைக்கின்றன. முயற்சிசெய்யாதவனுக்கு அதிருஷ்டத்தினுல் வருவது ஒன்றுமில்லை. அவ்வாறே ஸ்வர்க்கமும் காமஸுகமும் தான்விரும்பினஐச்வர்யமும் இவையனைத்தும் இங்கே செய்த முயற்சியினுல் அடையப்படுகின்றன. நக்ஷத்ரங்களும் தேவர்களும் நாகர்களும் யக்ஷர்களும் சந்த்ரன் ஸூர்யன் வாயு இவர்களனைவரும் மனிதர்களாயிருந்து, முயற்சியினுல் தேவத்தன்மையை அடைந்தவர்கள். செல்வமும் ஸ்நேஹர்களும் ராஜ்யமும் குலமும் தேஜஸும் கர்மம்செய்யாதவர்களுக்கு அனுபவிக்கக்கிடைக்காதவை. ப்ராம்மணன் தூய்மையினுலும் க்ஷத்ரியன் பராக்ரமத்தினுலும் வைச்யன் விடாமுயற்சியினுலும் சூத்ரன் பணிவிடையினுலும் ஐச்வர்யத்தை அடைகின்றனர். தானம்செய்யாதவனையும் பயந்தவனையும் முயற்சி

[1] பலிக்கத்தக்க பூமியில்லாமல்.

யில்லாதவனையும் சோம்பேறியையும் சூரத்தனமில்லாதவனையும் தவமில்லாதவனையும் [1]செல்வங்கள் அடைவதில்லை. மூன்றுலகங்களும் தேவர்தானவரனைவரும் எவரால்படைக்கப்பட்டனரோ அந்தப்பகவானவிஷ்ணு, இப்போதும் கடலில் தவம்செய்கிறார். 'தம்தம்செய்கைகளுக்குப் பயனில்லாமல்போமாயின், உலகம் தெய்வத்தையே எதிர்பார்த்துக்கொண்டு, ஒன்றும் செய்யாமலிருந்துவிடும். அப்போது எல்லாம் வீணாய்ப்போம். மானிடம்செய்யும் முயற்சியைச்செய்யாமல் தெய்வத்தையே நம்பியிருப்பவன், ஆண்மையில்லாதகணவனையடைந்தபெண்போல வீணாகவருத்தப்படுகிறான். புண்யபாவங்களுக்குத் தேவலோகத்தில் சீக்ரமாகப் பயனுண்டாவதுபோல மானிடலோகத்தில் உண்டாவதில்லை. செய்யப்படும்முயற்சியானது தெய்வத்தை அனுஸரித்தேயிருக்கிறது. முயற்சியில்லாதபோது தெய்வமானது யாருக்கும் எதையும் கொடுக்கமாட்டாது. தேவர்களிலும் அவரவர் நிலைமைகள் நிலையற்றனவாகக் காணப்படுகின்றனவே. தெய்வத்தையே ஸாதிப்பவனுக்கு அது செய்கையில்லாமல் எப்படிகிடைக்கும்? தேவர்கள் இவ்வுலகத்தில் யாருக்காகவும் முயற்சிசெய்வதில்லை. அவர்கள், 'நாம் தாழ்த்தப்படுவோம்' என்ற அச்சத்திலை கொடிய இடையூற்றையே உண்டுபண்ணுகின்றனர். ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் எப்போதும் விரோதமிருக்கிறது. தெய்வமும் காரணமாயிருப்பதனால் அது இல்லையென்று யார் சொல்லக்கூடும்? தெய்வாதீனமாக நடக்குங்கார்யம் உண்டாவதெப்படி? இவ்வுலகிற்போலவே தேவலோகத்திலும் சிறந்தஸுகம் அடையப்படுகிறது. தானே தனக்கு நண்பன். தானே தனக்குப்பகைவன். தான்செய்ததற்கும் செய்யாததற்கும் தானே ஸாக்ஷி. செய்கருமம் ஒன்று கெடுமாயின் பெரு முயற்சியால்கூடிவரும். நல்வினையும் தீவினையும் புண்யமும் பாவமும் முயற்சியில்லாதவனுக்கு வருமா? தேவமேலாகமும், புண்யபலனே. எவையும் புண்யங்களாலேயே அடையப்படுகின்றன. புண்யமில்லாத மனிதனையடைந்து, தெய்வம் என்னஎன்னசெய்யக்கூடும்? முன்னர், [2]யயாதி ஸ்வர்க்கத்தினின்று தள்ளப்பட்டு நழுவிப் பூமியில்விழுந்தபோது அவனுடையதௌஹித்ரர்கள் தம்தம்புண்ணியகர்மங்களினால் அவனைத் திரும்பவும் ஸ்வர்க்கத்திலேற்றினர். முன்னர், [3]ஐலனென்றுபெயர்பெற்றவனும்பூமிக்கதிபதியுமான புரூரவன் என்னும்ராஜ

1இவர்களுக்கு ஒருலாபமும் கிடைக்கிறதில்லை.

2இவன் கதைக்ய ஆதிபர்வம் 272-ம் பக்கமுதல் காண்க.

3இலேயின்மகன்.

ரிஷி, ப்ராம்மணர்களின்சொல்லினல்ஸ்வர்க்கம்அடைந்தான். அஸ்வ மேதமுதலானயாகங்களினல் மேன்மைபெற்ற கோஸலதேசாதிபதி யான ஸௌதாஸன் (வஸிஷ்ட) மஹரிஷியின்சாபத்தினல் ராக்ஷஸத் தன்மையை அடைந்தான். வில்லாளிகளானஅஸ்வத்தாமாவும் பரசு ராமரும் ரிஷிபுத்ரர்களாயிருந்தும் வேதோக்தமானகர்மத்தினல் [1]ஸ்வ ர்க்கம்பெறவில்லை. இரண்டாவது இந்த்ரன்போன்றவஸுவென்பவன், அனேகயாகங்கள்செய்தும் ஒருபொய்சொன்னதனல் பாதாளலோக த்தினடியிற்சென்றான். விரோசனன்புதல்வனானபலி, தேவர்களால் தர்மமென்னுமாயிற்றினல் கட்டப்பட்டவனாகி, விஷ்ணுவின்முயற்சி யினல் பாதாளத்திலிருக்கும்படி [2]செய்யப்பட்டான். அப்படியே, இந்த்ரனுடையரதத்தின்நடுவில் நிலைபெற்றிருந்த [3]ஜனமேஜயன், ப்ரா ம்மணஸ்த்ரீகளைவதம்செய்தபோது தெய்வத்தினல் ஏன்தடுக்கப்பட வில்லை? அறியாமையால் ப்ரம்மஹத்தியையும் சிசுஹத்தியையும்செய் தது பாவத்தினல்ஆக்ரமிக்கப்பட்ட [4]வைசம்பாயனரென்னும்ப்ரம்ம ரிஷி தெய்வத்தினல் ஏன் [5]தடுக்கப்படவில்லை? முன்னர் நருகன்என் னும்ராஜரிஷி மஹாயாகத்தில் ப்ராம்மணர்களுக்குத் தவறுதலாகக் கோதானம்செய்ததனல் ஒணான்ஜன்மத்தையடைந்தான். துந்துமா ரனென்னும் ராஜரிஷி ஸத்ரயாகம்செய்தே மூப்பையடைந்தான். அவன், அன்பினல் தேவர்கள்கொடுத்தவரமே வாங்கிக்கொள்ளாமல் கிரி வ்ரஜமென்னும்ஊரில் [6]தூங்கினான். மிக்கபலசாலிகளான த்ருதராஷ் ட்ரபுத்ரர்களால் கவரப்பட்ட பாண்டவர்களின்ராஜ்யம் திரும்பவும் அவர்களால் மீட்டுக்கொள்ளப்பட்டதும் கைவண்மையாலன்றித் தெய் வத்தாலன்று. தவத்தில் உறுதியுள்ளவர்களும் கடுமையானவ்ரதங் களை அனுஷ்டிப்பவர்களுமான முனிவர்கள் சாபம்கொடுப்பது தெய் வத்தின்வன்மையினலா? அன்று; தமதுசெய்கையினலேதான். உல கத்தில் ஆசையும் அறிவின்மையுமுள்ள பாவியாகிமனிதனுக்குக் கிடைக்கத்தகாதனவெல்லாம்கிடைத்தும் அவனை அவைகள் விட்டு விடுகின்றன. தெய்வம் அவனைக் காப்பதில்லை. மிகச்சிறியநெருப்

---

1 அசுவத்தாமா தூங்கினவர்களைக்கொன்றதனலும், பரசுராமர் தம்புண்ய லோகங்களை ராமர் பாணத்தினல் தடுத்ததனலும்.

2 இங்கு, 'க்ருப:' என்பது 'க்ருத:' என்றிருத்தல் வேண்டும்.

3, 4 இவர்கள் வேறு.

5 நன்மைக்கும்தீமைக்கும் செய்தவனே உத்தரவாதியாதலால், தெய்வத் தைச்சாட்டலாகாதென்பது கருத்து

6. 'முயற்சியை விட்டிருந்தான். தேவர் வரம்கொடுத்தாலும் பெற்றுக் கொள்ளும்முயற்சியில்லாதவனுக்கு அது பயன்படாது' என்பது கருத்து.

பாயினும் காற்றினால்தூண்டப்பட்டுப் பெரிதாவதுபோலத் தெய்வம் முயற்சியுடன்சேர்ந்து நன்றாக அபிவிருத்தியடைகிறது. எண்ணெய் வற்றுவதினால் தீபம் மங்கிப்போவதுபோல முயற்சிக்குறைவினால் தெய்வம் ஒய்வடைகிறது. இவ்வுலகில் முயற்சியில்லாதமனிதன், பெரியதனக்குவியலையும்வண்டிண லைளக்கங்களையும்பெண்களையும் அடைந்தும் அனுபவிக்கத் திறமையில்லாதவனாகிறான். விதியினால் நன்றாகக்கொடுக்கப்பட்டதும் தேவர்களால்காப்பாற்றப்பட்டதுமான பொருளையும்கூட, இவ்வுலகில், விடாமுயற்சியுள்ள மஹாத்மாவான மனிதன்தான் அனுபவிக்கிறான். முயற்சியினால் காரியங்களைச்சாதிப்பவன், செலவிடும் தன்னையனையினும் அவனைச் செல்வங்கள் அடைகின்றன. மானிடலோகத்தைவிடத் தெய்வலோகம் சிறந்ததன்று. மனிதர்களின்வீடுகளும் மிக்கஅதிகச்செல்வம் நிரம்பினவையாகக்காணப்படுகின்றன. 1தேவர்களின்வீடுகளும் ப்ரஹ்மசாலத்துவீடுகளுக்குஒப்பாகக் காணப்படுகின்றன. இந்தப்ராணிவர்க்கங்களுள் முயற்சியில்லாதவன் பலனைப் பெறுவதில்லை. விதிதப்பிநடப்பவனைத் தெய்வம் தடுப்பதில்லை. ஸ்வதந்த்ராதிகாரம் தெய்வத்தின்கண்ணில்லை. குருவைச் சீஷன் அனுஸரிப்பதுபோல மனிதன்செய்த சிறந்தகர்மத்தைத் தெய்வம் அனுஸரிக்கிறது. விடாமற்செய்யப்பட்ட முயற்சியே ஆங்காங்குநடத்துகிறது ரிஷிஸ்ரேஷ்ட! இவற்றையெல்லாம் நான் உனக்குச் சொன்னேன். எப்போதும் முயற்சிதான் பலனுள்ளதென்று உண்மையாகக்கண்டறிந்து, விடாமுயற்சியினால் தெய்வத்தைத்தூக்கிவிட்டு விதியும்வினையும்சேருவதனால் ஸ்வர்க்கத்தின்வழியை அடையலாம்' என்பதுதான் வஸிஷ்டருக்கு ப்ரம்மதேவர் உரைத்தது" என்றார்.

பத்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(நல்வினைதீவினைகளின்பயன்.)

யுதிஷ்டிரர், "பரதஸ்ரேஷ்டரே! மஹான்களிற்சிறந்தவரே! பலனுள்ளனவாகிய எல்லாக்கர்மங்களின் பலன்களையும்பற்றி யான் கேட்பதற்கு மறுமொழிசொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

---

1 முயற்சியில்லாமல் தேவர்களுக்குஞ் செல்வமில்லை.

"ஆ! ஆ! பாரதனே! யுதிஷ்டிர! நீ என்னைக் கேட்பதற்குச் சொல்லுவேன். ஒருவன், தான்வெகுநாளாக விரும்பின [1]கதியை இறந்த பின் அடைவது எந்தக்கர்மத்தினாலென்பது ரிஷிகளுக்கும் ரஹஸ்ய மானது. அதைச் சொல்லுகிறேன்; கேள். எவன் ஏந்தஎந்தத் தேஹங்களினால் என்னஎன்னகர்மங்களைச் செய்கிறானோ அவன் அந்தஅந்தத் தேஹங்களினால் அவ்வவற்றின்பலன்களை அனுபவிக் கிறான். நல்லது அல்லது கெட்டதாகிய எந்தக்காமத்தை எந்த எந்த நிலைமையிற்செய்கிறானோ அந்தக்கர்மத்தை ஜன்மந்தோறும் அந்தஅந்த நிலைமையிலெல்லாம் அனுபவிக்கிறான். மனத்துடன் சேர்ந்த ஐம்புலன்களினாலும் இந்தத்தேஹத்தில் செய்யப்பட்டகர்மம் அழிவ தில்லை. இவனதுநல்வினைக்கும் தீவினைக்கும் அந்தஐம்புலன்களும் ஆறாவதானமனமும்சாக்ஷிகள். ஆதலினால் [2]கண் ணைக்கொடுக்கவேண்டும்; [3]மனத்தைக் கொடுக்கவேண்டும்; உண்மை யும் அன்புமுள்ளவாக்கைக் கொடுக்கவேண்டும்; பின்செல்லல்வேண் டும். அவனிடம் காத்திருக்கவேண்டும். அஃதே இவ்வைந்துசாக்ஷி களோடுகூடிய ஒருயாகம். முன் தெரியாதவனும் பசித்தவனு மானஒருவரிப்போக்கனுக்கு மனமகிழ்ச்சியோடு அன்னமிடுபவன் எவ னோ அவனுக்குப் புண்யபலன்பெரிது. தரையில்படுப்பதென்னும்விரத முள்ளவர்களுக்கு வீடுகளும் மஞ்சங்களும் உண்டாகின்றன. மர வுரிகளையுடுப்பவர்களுக்கு வஸ்த்ரங்களும் ஆபரணங்களும் உண்டா கின்றன. தவத்தையே தனமாகக்கொண்டு யோகத்தில் மனத்தைச் செலுத்தினவர்களுக்குக் குதிரைகளும் தேர்களும் வருகின்றன. த்ரேதாக்னியின் அருகில்படுத்தஅரசனுக்குப் பராக்ரமம்விருத்தியாகி றது. சுவைகளைக்கட்டினவனுக்குச் செல்வம்வருகிறது. மாம்ஸங் களைவிட்டவன் பசுக்களையும் குமாரர்களையும் அடைகிறான். தலைகீழா கத்தொங்கியும் ஜலத்திலேயிருந்தும் தவளைபோல் ஜலத்தில்படுத் தும் தவம்செய்யும் மனிதன். விரும்பின போகங்களைப் பெறுகிறான். அதிதிபூஜைசெய்வதற்காகப் பாத்யத்தையும் ஆஸனத்தையும் தீபத் தையும் அன்னத்தையும் தங்குமிடத்தையும் கொடுப்பது, ஐந்துசாக்ஷி களோடுகூடிய யாகமாகிறது. [4]வீராஸனத்தையும்வீரசயனத்தை

1 பயனை. 2 கண்ணைக்கவேண்டும். 3 அன்புவைக்கவேண்டும்.

4 வீராஸனம், யுத்தங்களில் நிலைமாறாமலிருப்பது. வீரசயனம், போர்க் களத்திலேயே வீழ்மரைப்போலப் படுப்பது. வீரஸ்தானம், யுத்தத்தில் பின் வாங்காமல்நிற்பது. இங்கு, வீராஸனம்=போர்க்களம்; அதில் வீரசயனம் என்னும் மரணத்தை அடைந்து, வீரஸ்தானமானஸ்வர்க்கம் சென்றவனுக்கு' என்பது பழையஉரை.

யும் வீரஸ்தானத்தையும் அடைந்திருப்பவனுக்கு, எல்லா விருப்பங்களும் பொருந்தியும் அழிவில்லாமலும் இருக்கின்ற லோகங்கள் வருகின்றன. அரசனே! தானஞ்செய்வதனால் தனலாபத்தையும் மௌனமிருப்பதனால் ஆஜ்ஞைசெலுத்தும் தகைமையையும் தவத்தினால் ஸுகபோகங்களையும் ப்ரம்மசர்யவ்ரதத்தினால் ஆயுர்வ்ருத்தியையும் ஒருவன் அடைகிறான். அழகும் ஐஸ்வர்யமும் ஆரோக்யமும் பிரகாசத்தைச் செய்யமையின் பயன்களாக அநுபவிக்கிறான். கணிகளையும் கிழங்குகளையும் புஜிப்பவனுக்கு ராஜ்யமும், இலைகளைப்புஜிப்பவனுக்கு ஸ்வர்க்கமும் உண்டாகின்றன. அரசனே! [1]பராபவசம் செய்பவனுக்கு எல்லாவுலகங்களிலும் ஸுகமுண்டாவதாகச் சொல்லப்படுகிறது. [2]சாகவ்ரதம் செய்பவன் பசுக்களை நிரம்பினவனாகவும், புல்லைப் புஜிப்பவன் ஸ்வர்க்கத்தைப்போகிறவனாகவும் ஆவர். மூன்றுகாலமும் ஸ்நானஞ்செய்பவன் ஸ்த்ரீகளை அடையாமல் வாயுபக்ஷணம் செய்பவன் யாகபலனை அடைவான். பொய்பாராமையால் ஸ்வர்க்கத்தையும் வ்ரதத்தினால் உயர்குலத்தையும் அடைகிறான் ஜலபானஞ்செய்கிறவன், விடாமல் அக்நிஹோத்ரஞ்செய்யும் பரிசுத்தனை ப்ராம்மணனாக ஜனிக்கிறான். காற்றைப புஜிப்பவனுக்கு ராஜ்யமும், உண்ணுமல் உபவாஸமிருப்பவனுக்கு ஸ்வர்க்கமும் வருகின்றன அரசனே! மூன்றிரண்டு ராத்ரிகளாவது நீக்கித் தூங்கொண்டுபவாஸத்தையும் ஸ்நானத்தையும் செய்வதனால், [3]ஸ்வர்க்கலோகத்திற்கும் மேற்படுகிறான். எல்லாவேதங்களையும் ஓதுவதனால் துயரத்தினின்றும் உடனே விடுபடுகிறான். படித்தவேதங்களை மறவாமலிருப்பதனால் ஸ்வர்க்கத்தையும், அவற்றின் பொருளை அறிவதனால் மோக்ஷத்தையும் அடைகிறான். வைராக்யத்துடன் வேதத்தை ஜபம் செய்பவர்களுக்கு, ஸ்வர்க்கமும் மோக்ஷமும் பலனைச் சொல்லப்பட்டிருக்கின்றன. மனப்பூர்வமாகத் தர்மத்தைச்செய்பவன் ஸ்வர்க்கலோகத்தை அடைகிறான். மதிகெட்டவர்கள் எதைவிடமுடியாதோ, நேதஹம்தளர்ந்தும் எது தளராதோ, உயிர்போம்வரையில் உள்ள ரோகம் எதுவோ அந்த ஆசையை எவன் விடுகிறானோ அவனுக்குத்தான் ஸுகம். கன்றுனது அனேக ஆயிரம் பசுக்களில் தன்தாயைத்தெரிந்து அடைவதுபோல, முன் செய்தகர்மம் செய்தவனைத்தொடர்கிறது. பூக்களும் கனிகளும் யாரானும் கட்டளையிடப்படாமலே, தம்தம்காலம் கடவாமல் (உண்டாவது)

---

1 சாந்திபர்வம் 377-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

2 கறிகளை விலக்குவது.

3 மேலுலகத்தையடைகிறான்.

போல மூன்செய்தகர்மமும் காலத்தில் வெளிப்படுகின்றது. மூப்படைபவனுக்கு மயிர்கள் நரைக்கின்றன ; பற்கள் தளருகின்றன ; கண் காதுகள் ஒய்ந்துபோகின்றன ; ஆசை ஒன்றுமட்டும் மாறுவதில்லை. எவன்மேல் தந்தை ஸந்தோஷமடைகிறானோ அவன்மேல் ப்ரம்ம தேவர் ஸந்தோஷிக்கிறார். எவன்மேல் தாய் த்ருப்திஅடைகிறாளோ அவனால் பூமிதேவியே பூஜிக்கப்பட்டவளாகிறாள். எவனால் உபாத்யாயர் த்ருப்திசெய்விக்கப்படுகிறாரோ அவனால் ப்ரம்மமே பூஜிக்கப்பட்டதாகிறது. இம்மூவருக்கும் பூஜைசெய்தவன் எவனோ, அவன் எல்லாத்தர்மங்களையும் செய்தவனாகிறான். இம்மூவரையும் ஆதரியாதவன் எவனோ அவனுடைய க்ரியைகளனைத்தும் பயனற்றவை" என்றார்.

பீஷ்மருடைய இந்தச் சொல்லைக்கேட்டு, கௌரவஸ்ரேஷடர்களனைவரும் ஆச்சர்யத்துடன் மனமகிழ்ந்து மிகுந்தபக்தியுள்ளவர்களாயினர். பாரதரே! பீஷ்மர், மறுபடியும், "மந்த்ரத்தை வீணாக உபயோகித்தாலும் ஸோமலதையை வீணாகப்பிழிந்தாலும் அக்னியில் வீணாக ஆஹுதிசெய்தாலும் என்ன (தோஷங்கள்) உண்டோ அவையெல்லாம் வீணாகப்பேசுவதிலுண்டாகின்றனவென்று ரிஷியினால் சொல்லப்பட்டதை உனக்கு நான் சொன்னேன். கல்வினீவினைகளின் பலன்கள் வருவதைப்பற்றி இதற்குமேல் நீ என்னகேட்க விரும்புகிறாய்?" என்றுகேட்டார்.

பதினேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பூததயை பக்தி இவைகளின் மேன்மையை விளக்குவதான இந்த்ரனுக்கும் ஒரு கிளிக்கும் நடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "தர்மந்தெரிந்தபிதாமஹரே! பூததயையின் சிறப்புக்களையும் பக்தியுள்ள ஜனங்களின் மேன்மைகளையும்பற்றிக் கேட்க விரும்புகிறேன். அவற்றை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

"இந்தவிஷயத்திலும் இந்த்ரனுக்கும் நல்லதன்மையுள்ளஒருகிளிக்கும்நடந்த ஸம்வாதமாகிய ஒருபழையசரித்ரத்தைக் கூறுகின்றனர். காசிராஜனுடையதேசத்தில், ஒருவேடன் விஷமுள்ளபாணத்தை எடுத்துக்கொண்டு சேரியிலிருந்து புறப்பட்டு மானைத்தேடிப்போனான்.

அங்கு ஒரு பெரியவனத்தில், மான்கள் அருகிலிருக்கக்கண்டு மாம்ஸத்திலாலிசப்பட்ட அந்தவேடனால் பாணம் தொடுக்கப்பட்டது. தடுக்கமுடியாதபாணத்தையுடைய அந்தவேடன் பிருதத்தை அடிக்கவிரும்பினபோது, பாணம்குறிதப்பினதனால், அந்த காட்டிலுள்ள ஒரு பெரியமரம் அடிக்கப்பட்டது. கொடியகிஷ்டம்கடினபாணத்தினால் மிக்கவேகத்துடன் குத்தப்பட்ட அம்மரம், கார்பகமும்இலைகளும்உதிர்ந்து உலர்ந்துபோயிற்று. அம்மரம்அவ்வாறானபோது, அதன்பொந்துகளில்வெகுநாளாகவஸித்திருந்தஒருகிளி, அம்பபத்தின்மேலுள்ளபற்றினால் தன்னிருப்பிடத்தை விடவில்லை. கன்றியறிந்ததும் தர்மத்தில் மனமுள்ளதுமாகிய அந்தக்கிளி வெளியில்ஸஞ்சரியாமலும் இரையெடாமலும் சிலதும் குரல்தழுதழுத்தும் மரத்துடன்கூடவே உலர்ந்தது. சிறந்தகுணமுள்ளதும் பிரஹ்மஸ்வபாவமுள்ளதும் மனிதர்க்குமேற்பட்டசுபக்ஷையுள்ளதுமான அந்தக்கிளி,(அம்மரத்தைப்போலவே) தூக்கத்தையும் ஸுகத்தையும் அறவிட்டிருக்கக்கண்ட தேவேந்த்ரன் திகைப்படைந்தான். அதன்பிறகு, இந்த்ரன், 'இந்தப் பக்ஷி திர்யக்ஜாதிகளுக்கு இருக்கத்தகாதகருணையை அடைந்திருப்பது எவ்வகை?' என்றறிஞ்சான். பிறகு, 'இதில் ஆச்சர்யப்படவேண்டியதில்லை. எல்லாப்ராணிகளிலும் (குணாகுற்றம்) எல்லாம் காணப்படுகின்றன' என்றுஎண்ணமுற்று இந்த்ரனுக்குஉண்டாயிற்று. பிறகு, இந்த்ரன் மானிடஉருவமெடுத்து, ஓர் அந்தணன்வடிவமாகப் பூமியில் இறங்கி, அந்தப்பக்ஷியைப்பார்த்து, 'ஓ! பக்ஷிகளில்சிறந்தகிளியே! (உன்தாயாகிய) [1]தாக்ஷாயணி, உன்னை நல்லஸந்ததியுள்ளவளாகிறாள். கிளியாகிய உன்னை நான் கேட்கின்றேன். இந்தமரத்தை நீ ஏன்விடாமலிருக்கின்றாய்?' என்று கேட்டான். இந்த்ரனால் இவ்வாறு கேட்கப்பட்டகிளியானது, அவனுக்குத் தலைவணங்கி நமஸ்காரம்செய்து, 'தேவராஜாவே! உனக்கு கல்யாணமா? நான், தவத்தினால் உன்னைத் தெரிந்துகொண்டேன்' என்றுசொல்லிற்று. பிறகு, தேவேந்த்ரன், 'ஸாது! ஸாது!' என்றுசொல்லி, 'என்னஅறிவு!' என்றுமனத்திற்கொண்டாடினான். இவ்வாறு, சிறந்தசெய்கையுள்ளதும் தர்மத்தையேமுக்யமாகக்கொண்டதுமாகிய அந்தக் கிளியைப்பார்த்து, இந்த்ரன், தான்கேட்பது பாவமென்றுதெரிந்திருந்தும், கேட்கத்தொடங்கினான். 'இலைகளும் கனிகளும்இன்றி உலர்ந்து பக்ஷிகளுக்காதாரவற்ற இம்மரத்தை ஏன்காக்கின்றாய்? இது பெருவனமாயிருக்கிறதே. புத்திசாலியே! இலைகளிலுண்டாகும்பொருள்களும் ஸஞ்சரிக்கப்போதுமானஇட்டமுள்ள இன்னும்அனேகஅழகானமரங்கள் இந்தப்

[1]தக்ஷன்மகள்.

பெரியவனத்திலிருக்கையில், முதிர்ச்சியடைந்து சக்தியற்று ரஸம்வற்றி ஒளிகெட்டுப்போனஇலையற்றஇம்மரத்தை,புத்தியினால்ஆராய்ந்து பார்த்து விட்டுவிடு' என்றான். அந்தஇந்த்ரன்சொல்லைக்கேட்டுத் தர்மாத்மாவான அந்தக்கிளி, மிகவும்நீண்டபெருமூச்செறிந்து, துயரத்துடன் பின்வருமாறு சொல்லத்தொடங்கிற்று. 'இந்த்ராணியின்கணவனே! தேவர்க்கதிபதியே? யாராலும்வெல்லமுடியாத தேவர்களிருக்கும் உலகத்திலிருக்கும் நீ, நான் சொல்வதைத் தெரிந்துகொள். அனேகநற்குணங்கள்பொருந்தியஇம்மரத்தில்நான் பிறந்தேன்; இளமைப்பருவத்தில் நன்றாகப் பாதுகாக்கப்பட்டேன்; பகைவர்களாலும் பீடிக்கப்படாமலிருந்தேன். குற்றமற்றவனே! தயையும் பக்தியுமுள்ளவனுக வேறுஇடம்செல்லாமலிருக்கும் என்விஷயத்தில் அனுக்ரஹம்வைத்து, என்ஜன்மத்தை என்பயன்படாமல்செய்கிறாய்? நான் அன்பும் பக்தியுமுள்ளவன்; [1]அக்னியைத்தீண்டேன். உபகாரிகள் விஷயத்தில் தயைசெய்வதுதானே தர்மத்திற்கு 'முக்கியமானலக்ஷணம், தயைசெய்வதே, நல்லோர்களுக்கு எப்போதும் மனத்திருப்தியையுண்டாக்குகிறது. எல்லாத்தேவர்களும் [2]தர்மத்திலுள்ள ஸந்தேஹங்களை உன்னிடத்திலேயே கேட்கின்றனர். அதனாலேதான் நீ தேவராஜேந்த்ரர்களுக்கும் அதிபதியாகப் பட்டாபிஷேகம்செய்யப்பட்டிருக்கிறாய். இந்த்ரனே! வெகுகாலமாகவிருந்தமரத்தை நான் விடும்படி, நீ சொல்லலாகாது. நல்லஸ்திதியிலிருந்ததை அடுத்துப் பிழைத்தவன்,கெட்டஸ்திதிக்குவந்தவுடன் அதை எப்படிவிடலாம்?' என்றது. அதனுடைய அழகானசொல்லினால் மகிழ்வுற்ற இந்த்ரன், அது தயைவைத்ததைப்பற்றி த்ருப்தியடைந்து, தர்மந்தெரிந்த அந்தக்கிளியைப்பார்த்து, 'ஒருவரம்கேள்' என்றுசொன்னான். எப்போதும் பிறர்நோவாமையையே பெரிதாகக்கருதின அந்தக்கிளி, அம்மரம் செழிப்பதையே வரமாகக்கேட்டது. அந்தக்கிளியினுடைய உறுதியானபக்தியையும் நிரம்பின நல்லொழுக்கத்தையும் அறிந்து, ஸந்தோஷமடைந்தஇந்த்ரன், உடனே அம்மரத்தின்மேல் அம்ருதம்பொழிந்தான். அதனால், கனிகளும் இலைகளும் அழகானகிளைகளும் உண்டாயின. கிளியினுடையஉறுதியானபக்தியினால் அம்மரமும் செழித்தது. மஹாராஜனே! தயையின்பயனுகிய அந்தச்செய்கையினால் கிளியும் தன்ஆயுள்முடிந்தபிறகு இந்த்ரலோகத்தை அடைந்தது. மணிதர்க்கதிபதியே! இவ்வாறு பக்தியுள்ளவனே அடைந்தவன், கிளியை அடைந்தமரம்போலவே எல்லாக்கார்யங்களின் வ்ருத்தியையும் அடைவான்" என்றார்.

---

1 பாவம்செய்யேன். 2 'தர்மஸம்சயாந்' என்றபாடம்கொள்ளப்பட்டது.

அநுசாஸனபர்வம்.

பன்னிரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ப்ராம்மணர்களின் சிறப்பு.)

யுதிஷ்டிரர், "பாரதரே! அரசரே! பூஜைக்கும் நமஸ்காரத்திற்கும் உரியவர் யாவர்? நீர் யாரை விரும்புகிறீர்? முடிவான ஆபத்தை அடைந்திருக்கும்போதும், உமதுமானம், இம்மனிடலோகமனைத்துள்ளும் யாரிடத்தில் செல்லுகிறது? இம்மையிலும் மறுமையிலும் நன்மைபயப்பது யாது?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"எவர்களுக்குப் பரப்ரம்மமேஉயர்ந்தபொருளோ, எவர்களுக்கு ஞானமே ஸ்வர்க்கமோ, தவமே வேதாத்யயனத்திற்குக் கருவியோ அந்தப்ராம்மணர்களை நான் விரும்புகிறேன். எவர்களில் சிறுவர்களும் கிழவர்களும் தக்கபண்பாட்டன் வரிசையாகவந்த சம்மாவுஷ்டான மென்னும் பாரத்தைச் சோர்வின்றி வஹிக்கின்றனரோ. அவர்கள் மேல் எனக்கு விருப்பமிருக்கிறது. அப்பா! யுதிஷ்டிர! எல்லாவித்தைகளையும் நன்றாகக்கற்பிக்கப்பட்டவரும் அடக்கமுடையவரும் நயமாகப்பேசுகிறவரும் எப்போதும் கேள்வியையும் ஒழுக்கத்தையும் விடாதவரும் ப்ரம்மஜ்ஞானிகளுமான ஸாதுக்கள், அரசர்கள் கேட்க விரும்பியபோது, ஸபைகளில் கூட்டங்கூட்டமாகச்சேர்ந்து ஹம்ஸங்கள்போலவும் தேவலோகத்துமேகங்கள் (=அமுதம்பொழியும் மேகங்கள்) போலவும் மங்களகரமாகவும் மதுரமாகவும் தெளிவாகவும் இம்மையிலும் மறுமையிலும் ஸுகத்தைத்தரும்படியும் பேசினபேச்சுக்களைக் கேட்கிறீரல்லவா? ஸபைகளில் மதிக்கப்பெற்றவர்களாயும் அறிவும் குணமும் நிரம்பினவர்களாயுமுள்ள எவர்கள், மேற்சொன்னவர்களிடம் கேட்கின்றனரோ அவர்களிடத்திலும் என்றும் எனக்கு விருப்பமுண்டு. அரசனுன் யுதிஷ்டிரனே! செவ்வையாகப் பாகம் செய்யப்பட்டவையும் சுத்தமுள்ளவையும் சுவைமுதலிய) குறைவுள்ளவையுமான உணவுகளை ப்ராம்மணர்களின் த்ருப்தியைக் கருதி ப்ரத்தையுடன் எக்காலமும் போடுகிறவர்கள் எவரோ அவர்க

---

1 முதல் அரைஸ்லோகம் வேறுபாடம். கிருஷ்ணசார்யர் பதிப்பின்படி 'கௌரவத்தைக் கொடுப்பவரே! அரசரே! நமஸ்கரிக்கத் தக்கவர்களென்று இந்த்ரனால் சொல்லப்படுபவர் நீர் நினைத்தும் விரும்பியுமிருக்கிறவர்கள் யார்?' என்று பொருள் கொள்ளவேண்டும். ஐந்தாவது அத்யாயத்தில் மதங்கனுக்கு இந்த்ரன்சொன்னதையனுஸரித்துக் கேட்டதாகும்.

2 பரமஸுகமோ.

னிடத்திலும் எனக்குவிருப்பமுண்டு. போர்க்களத்தில் போர்செய்வது முடியும். வெறுக்காமல் கொடுப்பது முடியாது. யுதிஷ்டிர! உலகத்தில் [1]சூரர்களும் [2]வீரர்களும் வெகுவாயிருக்கின்றனர். அவர்களைஎண்ணிப்பார்க்கையில் இல்லையென்னுமளவும் முகங்கோணுமளவும் கொடுக்கும் தானசூரன் மேற்பட்டவன். தானம்செய்பவன் நல்லஜன்மத்தை அடைந்து ஸாதாரணப்ராம்மணனுவான்; பிறகு, பந்துக்களுள்ள மேற்குலத்தில்பிறந்து, அடைதற்கரிய புருஷார்த்தத்தையடைவான். சாந்தனே! நான் மறுஜன்மத்தில் ஹீனப்ராம்மணனுகவாவது ப்ரம்மகுலத்தில் பிறந்து, தர்மத்தைவிடாமல் தவத்தையும் ஞானத்தையும் முதன்மையாகக் கொண்டிருப்பேனுயின், அத்தருணத்தில்எனக்கு உன்னைவிட மேலான அன்பன் இவ்வுலகத்தில் இல்லை. பாரதனே! ப்ராம்மணர்கள்மட்டும் உன்னைவிட அதிக அன்பர்கள். கௌரவஸ்ரேஷ்டனே! எனக்கு ப்ராம்மணர்கள் உன்னைவிட மிக்கஅன்பர்களென்னும் ஸத்யத்தினுல், சந்தனுஇருக்கும்லோகங்களுக்கு நான் செல்லக்கடவேன். என் தந்தையும் தந்தைக்குத் தந்தையும் மற்றவேண்டினவர்களெவரும் ப்ராம்மணர்களைவிட அதிக அன்பர்களாக எனக்கிருந்ததில்லை. இவ்வுலகத்தில் நற்கருமங்களைச் செய்யும் ப்ராம்மணர்கள்விஷயத்தில் சிறிதாவதுபெரிதாவது யாதொரு அபராதமும் எனக்கிருந்ததில்லை. பகைவரைத்துன்புறச்செய்பவனே! செய்கையினுலும் மனத்தினுலும் வாக்கினுலும் ப்ராம்மணர்களுக்கு நான் என்னசெய்தேனே [3]அதைப்பற்றி இப்போது எனக்கு வருத்தமில்லை. என்னை ப்ராம்மணப்ரியனென்று உலகத்தார் சொல்லுகின்றனர். அந்தச்சொல்லினுல் நான் த்ருப்தியடைந்திருக்கிறேன். இதுதான் எல்லாத்தியாகத்திலும் சிறந்ததென்று நினைக்கப்படுகிறது. ப்ராம்மணர்களை ஸந்தோஷப்படுத்துவதனுல் பாவம்நீங்கி, பரிசுத்தமானலோகங்களிருப்பதை நான் பார்க்கிறேன். குழந்தாய்! விரைவாகவோ காலங்கடந்தோ அவ்வுலகங்களுக்கு நான் போகவேண்டும். யுதிஷ்டிர! 'உலகத்தில் பெண்களுக்கும் கணவனைப்பற்றியதே தர்மம்; அவனே தெய்வம்; அவனே கதி; வேறு இல்லை' என்பதைப் படியோ அப்படியே சூத்ரியனுக்கு எல்லாம் அந்தணர்தாம். பத்து வயதுள்ள ப்ராம்மணத்தமனியும் நூறுவயதுள்ள சூத்ரியனியும் பிதாவும் புத்ரனுமாக அறியவேண்டும். அவர்களுள், ப்ராம்மணன் பிதா. ஒருபெண் கணவனிறந்தபோது [4]மைத்துனனைக் கணவனுகச்

---

1 எடுத்ததை முடிப்பவர். 2 பராக்ரமமுள்ளவர்.
3 நீமை செய்யாமையால் பிழை வருத்தமில்லையென்பது கருத்து.
4 ஆதிகாலத்திலுள்ள தர்மம். அது கலியில் நீக்கப்பட்டது.

செய்துகொள்ளுகிறாள். பூமியும் ப்ராம்மணன்கிடையாதபொழுது க்ஷத்ரியனே ராஜாவாகச்செய்துகொள்ளுகிறது. க்ஷத்ரியர்கள் புரோஹிதர்களுடன்சேர்ந்து, ப்ராம்மணர்களிடம் அனுமதிபெற்று, ராஜ்யத்தை அடையவேண்டும். ப்ராம்மணர்களைரக்ஷிப்பதனால் அரசனுக்கு ஸ்வர்க்கமும் அவர்களின்கோபத்தினால் முடிவில்லாநரகமும் வரும். கௌரவஶ்ரேஷ்டனே! நீயும் ப்ராம்மணர்களை, புத்ரனைக்காப்பாற்றுவதுபோலவே காப்பாற்றவேண்டும்; குருவைப்போலவே பணியவேண்டும்; அக்னியைப்போலவே பூஜிக்கவேண்டும். உன்னும்புறமும்ஒத்தவர்களும் ஸாதுக்களும் ஸத்யரிலிருஷிகளும் எல்லாப்ராணிகளுக்கும் நன்மைசெய்வதிலேயே ஊக்கமுள்ளவர்களும் கோபித்தால் ஸர்ப்பங்களைப்போன்றவர்களுமான அந்தணர்களை க்ஷத்ரியன் எப்போதும் உபசரிக்கவேண்டும். யுதிஷ்டிர! மஹிமைக்கும் சாந்தத்திற்கும் எப்போதும் பயப்படவேண்டும். மஹிமைசாந்தம் இவ்விரண்டிலும் அகப்படாமல் விலகியிருக்கவேண்டும். அவ்விரண்டிலுந்தாம், உடனே காரியத்தைச்செய்யும். மஹாராஜனே! சிறந்ததவமுள்ளப்ராம்மணர்கள் கோபித்தால் கெடுத்துவிடுவர். ப்ராம்மணஸ்த்ரீகளைத் தாயைப்போலப்பூஜித்துத் தூரத்திலிருந்து நன்றாகக்காப்பாற்றவேண்டும். கோபமில்லாதவன்விஷயத்தில் பிழைசெய்வதனால் நீண்டகாலம் நரகத்தை அனுபவிப்பான். ப்ராம்மணனைக் கோபியாமலிருக்கச்செய்வதனால், அவனுக்கு மஹிமை தவம் இரண்டையும் கொடுத்ததாகும். ப்ராம்மணனுக்குத் தானம்செய்ததில் மிச்சமெடுத்துக்கொள்ளாமலிருப்பவன், அவனது தவம்மஹிமையிரண்டிலும் பாகம் அடைவான். ஆமேய்ப்பவன், கையில்தடியெடுத்துக்கொண்டு கொட்டிலை எக்காலமும் காப்பதுபோல, ப்ராம்மணர்களிடமிருக்கும் ப்ராம்மதேஜஸை க்ஷத்ரியன் காக்கவேண்டும். ப்ராம்மதேஜஸ் நிரம்பின ப்ராம்மணர்களை, மக்களைத் தந்தை காப்பதுபோலக் காப்பாயாக. அவர்களின்வீடுகளில் ஜீவனத்திற்காக என்ன இருக்கிறதென்று கவனிக்கக்கடவாய்.

[1]பதின்மூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(அதிதிபூஜையின்சிறப்பையும் கோபத்தின் இழிவையும்பற்றி நான்கு வேதங்களுக்கும் நடந்தஸம்பாஷணை.)

புத்ரனே! இந்தவிஷயத்திலும் நாலுவேதங்களும் ஒன்றோடொன்று பேசிக்கொண்டதாகச்சொல்லும் ஒருபழையகதைசொல்லுகிறார்கள். அதைக் கேள். நிகரில்லாதமானது, க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்து அக்னிஹோத்ரம் செய்துகொண்டிருப்பவனுடைய புண்யத்தையெல்லாம், ஸாயங்காலத்தில் வந்து பூஜிக்கப்படாத அதிதி வாங்கிக்கொள்ளுகிறான்' என்றது யஜுர்வேதம். 'ப்ராம்மணன் வாயில் செய்யப்பட்ட [2]ஹோமம் நிந்துவதில்லை; வற்றுவதில்லை. அதன்பலனை மேலே போவதுமில்லை. ஆதலால், 'அது அக்னிஹோத்ரத்திலும் மிகச்சிறந்தது' என்றது. ஸாமவேதம், 'தந்தையையும் தாயையும் ப்ராம்மணனையும் கொல்லுவதையும் நிந்திப்பதையும் தவிர, மற்றெந்தப்பாவத்தையும் அதிதி த்ருப்தியடைவதனால் போக்கிவிடுவான்' என்றுசொல்லிற்று. அதர்வணவேதம், 'கோபமுள்ளவன், எந்தயாகம் எந்தத்தானம் எந்தத்தவம் எந்தஹோமம் செய்தாலும் அவற்றையெல்லாம் யமன் கொண்டுபோகிறான். கோபக்காரன் செய்யும்செய்கை பயன்படாமல் போகிறது' என்று சொல்லிற்று.

பதிநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ப்ராம்மணன் பதிவ்ரதை இவர்களின்சிறப்பு.)

அரசர்க்கரசனே! தாமத்தை அனுஷ்டிப்பவரிற்சிறந்தவனே! இன்னும் தர்மங்களைக்கேள். இந்த விஷயத்தில் இந்த்ரன், அக்னி, ஸூர்யன், இந்த்ராணி இவர்களுடைய பழமையான ஒருசரித்ரம் கூறுகின்றனர். அதை நான் சொல்லுகிறேன்; கேள். இந்த்ரனானவன், 'நான், எனதுராஜ்யத்தில் காமக்ரோதங்களற்றவர்களான ப்ராம்மணர்

---

1 13-வது அத்யாயமுதல் 29-வது அத்யாயம்வரையுள்ளவை வ்யாக்யான பாடத்தில் இல்லாதவை.

2 ப்ராம்மணனுக்கு இடும் அன்னம்.

களைப் பார்க்கிறேன். இந்த ஸத்யவாக்யத்தினால் இந்தக்குடத்தின் காற்பாகம் நிரம்பட்டும்' என்றுசொன்னான் அக்னி, 'ப்ராம்மணர்கள் உண்ணுதலிடத்தில். நான் உண்பதில்லையென்னும் இந்த ஸத்யவாக்யத்தினால் இந்தக்குடத்தின் (மற்றொருகாற்பாகம்) நிரம்பட்டும்' என்று சொன்னான். ஸூர்யன், 'பசுக்களுக்காகவும் ப்ராம்மணர்களுக்காகவும் நான் எனதுசக்திக்குத்தக்கபடி உஷ்ணத்தை உண்டுபண்ணுவதிலிருக்கிறேன். இந்தஸத்யவாக்யத்தினால் இன்னும்ஒருகாற்குடம் நிரம்பட்டும்' என்றான். இந்த்ராணி, 'நான் செய்கையினாலும் எண்ணத்தினாலும் சொல்லினாலும் இந்த்ரனை அவமதிப்பதில்லையென்னும் இந்தவாக்யத்தினால். கூடத்தின்மற்றொருகாற்பாகமும் நிரம்பட்டும்' என்றுசொன்னாள்

பதினேந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(மத்ராஜன் யாகமுதலியவற்றைப்பற்றி வ்யாஸரைக்கேட்டதும், கிருஷ்ணனுக்கும் வ்யாஸருக்கும் ஸம்பாஷணையும்.)

குருபுத்ரனே! மத்ரதேசத்தரசனும் மஹாத்மாவானவ்யாஸருக்கும் நடந்தஸம்வாதமாகிய ஒருபழையசரித்ரத்தையும் இவ்விஷயத்தில் உதாரணமாகக் கூறுகின்றனர் பிறன்னர். உனதுயஜ்ஞகார்யம் நடத்தப்படும்போது. அந்தவ்யாஸனாகவன், யாகவிஷயமாகச்சொன்னதை நீ கேட்டாயல்லையோ? மத்ராராஜன், வ்யாஸரைநோக்கி, 'பகவானே! புண்யதீர்த்தங்கள் எவை? பலன்களைத்தரும் ஆச்ரமங்கள் எவை? யாகத்தில் ஆராதிக்கப்படுகிறவன் யார்? யாகம் யார்? யூபஸ்தம்பம் யார்? எந்தம் வியாபிப்பவன் யாவன்? யாகத்தில் ஸாமகானங்களின்ஸ்வரங்களினால் ஆராதிக்கப்படுகிறவன் யார்? யாகத்தில் அழகானபாஷைகளினால் பாடப்படுகிறவன் யார்? வேதவாக்யங்களாலும் ஸ்தோத்ரங்களாலும் துதிக்கப்படுகிறவன் யாவன்? அத்வர்யுக்கள் என்னும்ரித்விக்குக்கள், யாகத்தில் யாருக்காக ஹவிஸைப் பாகம்செய்கின்றனர்? வர்ணாச்ரமதர்மத்திலும் பசுக்களிலிருந்துஉண்டான பால் வெண்ணெய்முதலியவற்றிலும் ஸோமரஸத்திலும் இருப்பவன் எவன்? ஓங்காரமாயிருப்பவன் எவன்? வேதப்பொருள்சேருமிடமாயிருப்பவன் எவன்? எவனுடைய அறிவு உலகத்திற்குச் சிறந்ததென்று சொல்லுகிறார்கள்? மஹரிஷியே! இவற்றையெல்லாம் உண்மைக் கேட்கிறேன்; எனக்குச் சொல்லும்' என்றுகேட்டான்.

வ்யாஸர், 'பரிசுத்தமனமுள்ளவர்களுமும் வேதத்தை முதன்மையாகக்கொண்டவர்களுமான ப்ராம்மணர்கள், உலகத்தில் தங்களுடைய அறிவு சிறந்ததென்றும் பிறப்புக்களில் எவருடைய பிறப்புச் சிறந்ததென்றும் சொல்லுகின்றனரோ, அப்படிப்பட்ட இந்தக்ருஷ்ணரிடம் இந்தக்கேள்வியைத் தெரிவிக்கலாம்' என்று சொன்னார். அதைக் கேட்டு, யாகத்தில்ஒருப்ராம்மணர், 'வீரனானமத்ரராஜனே! [1]என்றும் பால்யரும் க்ஷத்ரியதர்மத்தையும் பொருளையும்விடாதவரும் வஸுதேவருக்குத் தேவகியினிடம்ஜனித்தவரும் யாதவர்களில்சிறந்தவருமான தாமரைக்கண்ணர் க்ஷத்ரியராயிருந்தாலும் வேதங்களை அறியத்திறமையுள்ளவர்' என்றுசொன்னர். வாஸுதேவர், 'ப்ராசரபுத்ரரே! ப்ரம்மாவுக்கொப்பானவரும் சிறந்த அறிவும் எல்லாருக்கும்மேலான தேஜஸும்பொருந்தியவருமாகிய நீர் தர்மராஜாவின் யாகத்தைப்பற்றிக் கேட்கப்பட்டபோது தர்மராஜாவுக்கும் உலகத்துக்கும் எதுநன்மையோ அதனை ப்ராம்மணர்களிடம் அன்புவைத்துச் சொல்லக்கடவீர்' என்றுசொன்னர். அதற்கு வ்யாஸர், 'நீர் என்னைப்பார்த்துச் சொன்னதற்கு மறுமொழி முன்னமே கூறப்பட்டது. இப்போது இந்தஸபையில் உலகத்திற்கெல்லாம்மூத்தவரும் உலகமெல்லாமாயிருப்பவரும் (ப்ரம்மதேவரிற்பிறந்த) சிறந்தஞானியுள்ளவருமான உம்மைப்போன்றவரிருக்கையில் இவ்வரிய தர்மவிஷயத்துத் தெளிவானமறுமொழி சொல்லி ஸந்தேஹநிவர்த்திசெய்வதற்கு நான் சக்தனல்லேன்' என்றுசொன்னர். அதற்கு, க்ருஷ்ணபகவான், 'ஓ! மஹரிஷியே! நீர்சொல்லத்தகுந்ததும் விஷ்ணுவைப்பற்றிஸரியாகஉரைப்பதாகிய வசனத்தை நீர்சொல்லக்கடவீர். உள்ளபடி அறியுந்திறமைஉமக்கு இருப்பதனால் நான் ஸந்தோஷமடைகிறேன். ஆதலால், யாகத்தின் அங்கங்களைப்பற்றிய தர்மவிஷயத்துக்கு முடிவுசொல்லக்கடவீர்' என்றார். யாதவஶ்ரேஷ்டரானகருஷ்ணன் சொல்லிமுடித்தபிற்கு, வ்யாஸர் ப்ராம்மணர்களுடன்கூட, தேவர்களுக்கும்தேவரானவிஷ்ணுவும் வஸுதேவரின்புத்ரருமாகிய கண்ணபிரானைக் கரம்குவித்து நமஸ்கரித்துச் சொல்லலானர்.

'உலகங்களைப்படைத்தவரே! உமக்கு அளவில்லை. உமதுஇந்த உருவமானது எல்லாவற்றிற்கும் முற்பட்டதும் பின்னரும் அழியாததும் மாறுதலாயிருக்கிறது. உம்மை யார் அறிவார்? வேதவாக்யங்களிலும் இவ்வளவுதான் சொல்லப்படுகிறது. இவ்வுலகத்தை நீர் தாம் தந்தைபோல நடத்துகிறவர்' என்றார்.

[1] மூப்பில்லாதவர்.

MAHAMAHOPADHYAYA
பதினெட்டாவது அத்யாயம்
TIRUVANMIYUR. MADRAS-41

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(விஷ்ணுவின் மஹிமை.)

முன்னர்;த்வாரகாநகரத்தில், இந்தமுனிஸ்ரேஷ்டரானவ்யாஸர், நண்ணன் வேதரூபியாகவும் ப்ராம்மணரூபியாகவும் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். அதைச் சொல்லுகிறேன்; கேள். வ்யாஸர், 'தத்வஜ்ஞானியானவன், க்ருஷ்ணனே யாகத்தின் யூபமாயிருப்பவ ரென்றும் விஷ்ணுவென்றும் தெரிந்துகொண்டு, எல்லாப்ராம்மணர்க ளுக்கும் உபதேசிக்கிறான். ப்ராம்மணன், த்ரிவிக்ரமாவதாரம்செய்த விஷ்ணுவே வஸுதேவபுத்ரரென்றறிந்து தத்வஜ்ஞானம்பெற்றபிறகு தான் ப்ராம்மணத்தன்மையை அடைகிறான். 'யாகமும் விஷ்ணு. யாகத்தினால் ஆராதிக்கப்படுகிறவரும் விஷ்ணு. எல்லாவற்றிற்கும் ஈச்வரரான விஷ்ணு க்ருஷ்ணனே. வேதவாக்யங்களும் வேதாங்கங் களும் க்ருஷ்ணனே' என்றறியும்ப்ராம்மணன் பரப்ரம்மத்தை அடை கிறான். யாகத்தைச்சேர்ந்த அங்கங்களனைத்தும் விஷ்ணுவைச்சார்ந் தவை. நான்கு ரித்விக்குகளால்செய்யப்படும் சாதுர்ஹோத்ரமென் னும் கர்மமும் விஷ்ணுவினுடையதுதான். அவற்றில், முழுபக்தி யோடி எல்லா உபசாரங்களினாலும் க்ருஷ்ணபகவானே ஆராதிக்கப் படுகிறார். (அதனால்) ப்ராம்மணர்கள் புண்யலோகங்களை அடைகின்ற னர். யாகத்தில்பிழியப்பட்ட ஸோமரஸத்தை நல்லபக்தியுடன பானம் செய்கின்றவர்களும், தத்வஜ்ஞானம் அடைந்து சிறந்தகர்மத்தை ஆச ரிக்கின்றவர்களும் தங்களுக்குப்ரியமான ஈச்வரரூபத்தைத் தனிமை யாக த்யானிப்பவர்களும் நியமத்தின் உண்மையை அறிந்தவர்களுமான வர்கள் மேலுல்கைச்சேர்ந்து நிலைபெறுகின்றனர். 'ஓம்' என்பதை த்யானம்செய்யும் ப்ரஹ்மணன், பாபச்செய்கையுள்ளவனுயினும் நரக மார்க்கத்திற்குச் செல்லான். 'எல்லாம்.வாஸுதேவரான க்ருஷ்ணன்' என்று த்யானம்செய்யும் ப்ராம்மணர்கள் கெட்டகதியை அடையார். யாகத்தைச்சேர்ந்த ஒவ்வொருகர்மத்தையும் ஆரம்பிக்கும்போதும் நடத்தும்போதும் முடிக்கும்போதும் நெய், யாகம், ஸ்ருக்ஸ்ருவம் என்னும் யாகபாத்ரங்கள், யாகம்செய்யும்யஜமானன், யாகபலன், பத்னி,[1] யாகசாலை, அன்னங்கள், ஸமித்துக்கள், புரோடாசம் என் னும் ஹவிர்த்ரவ்யம், ரித்விக்கு ஆகிய எல்லாம் விஷ்ணுவென்று ஏப்

[1] 'பத்நிசாலா' என்பது மூலம்.

போதும் அறிகிறவன், அந்தவிஷ்ணுவை அடைகிறான்; இஷ்டலாபத் திற்குரியகார்யங்களில் இஷ்டப்ராப்தியையும் அனிஷ்டநிவ்ருத்திக் குரியகார்யங்களில் அனிஷ்டநிவ்ருத்தியையும் அடைவான்.

பதினேழாவது அத்யாயம்.

தர்மபர்வம். (தொடர்ச்சி.)

(விஷ்ணுவின் மஹிமைத் தொடர்ச்சி.)

கர்மபக்ஷ்ரங்களைவிட்டு எல்லாப்ராணிகளையும் ஸமமாகநினைத்து ஸ்ரத்தையோடு தானம்செய்வதையும் சாந்தகுணத்தையும் பூஜையையும் ஸத்யத்தையும் தர்மத்தையும் நல்லசெய்கையையும் எவன் செய்துவருகிறானோ ஸ்ரத்தையினால் பரிசுத்தமுள்ள அவன் எல்லாயாகங்களுக்கும் தகுதியுள்ளவன். எந்தயாகத்தில் எல்லாப்ராணிகளும் த்ருப்தியடைந்து எல்லாக்ரியைகளும் சாஸ்த்ரத்தில்சொன்னபடி நடக்கின்றனவோ, தர்மத்திலும் த்ரவ்யத்திலும் குறைவுபடாமல் அப்படிப்பட்டயாகம் செய்பவர்கள், பரிசுத்த ஆத்மாக்களாய்ப் புண்ய பலன்ஒன்றையே அடைகின்றனர். ப்ராம்மணர்கள் நியமத்தோடும் நம்பிக்கையோடும் [1]ஓரெழுத்தும் [2]ஈரெழுத்துமாகிய ஒருவனையே எப்போதும் பூஜிக்கின்றனர். அறிந்து, சிறிதுபூஜைசெய்தாலும் ஸாதுக்களுக்குக்கதியாகிய அந்தஈச்வரனை அடைவதுதிண்ணம். காமக்ரோதங்களினால்மூடப்பட்டுப் பாபசிந்தனையுள்ளவர்களும் க்ருஷ்ணனிடத்தில் பக்தியைத்து நாமஸங்கீர்த்தனம்செய்வராயின், அவர்களுடையஆத்மா பரிசுத்தமாகி நல்லஞானம் அடைந்து யாகங்களைச் செய்து முடிவில் கீர்த்தியையும் புண்யலோகங்களையும் அடைவார். [3]நான்குபாதங்களும் [4]மூன்றுகுணங்களுமுடையதும் [5]பரப்ரம்மத்தையே தலையாகவுடையதுமான ஒருவேதம், ப்ராம்மணர்களுக்கிருந்தது. த்ரேதாயுகம்வந்தபோது ஒவ்வொருபாதத்தை ஒவ்வொரு வேதமாக ப்ராம்மணர்கள் கூறினர். அந்தக்ருஷ்ணனே அநந்தத்தலை யென்றறி.

---

[1] அகரம். [2] ஹரி, விஷ்ணு, கருஷ்ண.
[3] ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம்.
[4] மந்த்ரம், ப்ராம்மணம், அர்த்தவாதம.
[5] 'ப்ரம்ம' என்பது இங்கே, உபநிஷத் அல்லது வேதாந்தம்.

அநுசாஸனபர்வம்.

பதினேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(விஷ்ணுவின் மஹிமைத் தொடர்ச்சி.)

எல்லாவேதங்களும் எல்லாவேதப்பொருள்களும் [1]எல்லாச் சாஸ்த்ரங்களும் எல்லாயாகங்களும் யாகங்களால் ஆராதிக்கப்படும் தேவர்கள்யாவரும் க்ருஷ்ணனே. மத்ராஜனே! க்ருஷ்ணனே உண்மையாக அறியும்ப்ராம்மணர்கள் எவரோ அவர்களுக்கு எல்லாயாகங்களும் முடிந்தவைதாம். வேதங்களினுல் தத்வத்தையுணர்ந்தப்ரம்மரிஷிகளால் அறியக்கூடியவரும் தேவர்க்கும்தேவருமான க்ருஷ்ணமூர்த்தி, ஈச்வராராயிருப்பதனுல் மூவுலகங்களிலும் எல்லாயாகங்களையும் எல்லாப்ராம்மணர்களையும் ப்ரம்மாண்டத்தையும் வ்யாபித்துநின்றார். இந்த்ரன் யாகம்செய்து முதன்மையானஈச்வரனைப் பூஜைசெய்யும்போது, இந்தக்ருஷ்ணபகவான் அன்புடன்சொல்லலானார்.

'இந்த்ரன் வேதத்தின் உண்மைப்பொருளைக்கொண்டு என்னை அறியவில்லை. என்மேல்பக்திவைத்து அந்தப்பக்தியினுல் மனப்பரிசுத்தமாகி மேன்மையடைந்தான்.. என்னை ப்ரபஞ்சத்திற்குத் தலையாகவும் ப்ரபஞ்சத்திற்குக் காரணமாகவும் எனக்கொருகாரணமில்லாதவனாகவும் ப்ரபஞ்சரூபியாகவும் எல்லாவற்றிலும் மிகச்சிறந்தவனாகவுமட்டும் எல்லாரும் அறிகின்றனர். நான் எங்கும் எக்காலமும் இருப்பவன். [2]நித்யமான ஆத்மாவுக்கு ஈச்வரனும் எல்லாவேதமும் அக்னியும் நானே. நான் குணமற்றவனும் அளவற்றமஹிமையுள்ளவனுமாயிருப்பவன். எல்லாத்தேவர்களும் புத்தியினுல் அனேக அவதார உருவங்களைத் தேடிப்பார்த்து, வாஸுதேவமூர்த்தியையே யாகங்களினுல் ஆராதிக்கின்றனர். இம்மூன்றுலோகங்களிலும் க்ருஷ்ணனுடையநாமத்தைச்சொல்வதனுல் எல்லாஸுகங்களையும் மிகுதியாகப் பெறுகின்றனர். யாகம்செய்பவர்கள் யாகங்களினுல் ஆராதிப்பது க்ருஷ்ணனையே. யுத்தவீரர்கள் ப்ராம்மங்களினுல் ஆராதிப்பதும் க்ருஷ்ணனையே. விவேகிகள் ஜபஸ்தோத்ரங்களினுல் ஆராதிப்பதும் க்ருஷ்ணனையே. அஜ்ஞானம்தொலைந்தமுக்தர்களும் க்ருஷ்ணனையே ஆராதிக்கின்றனர். வித்தையுள்ளவர்கள் யாகங்கள்செய்து, ஸோமபானம்பண்ணிப் பாபங்கள்போனபிறகு, க்ருஷ்ணன் ப்ரத்யக்ஷமாகவேண்டுமென்று ப்ரார்த்திக்கின்றனர். இவ்வாறே, எல்லா ஆஸ்ரமத்

---

[1] தர்மசாஸ்த்ரமுதலியவை. [2] 'சாஸ்வதேச:' என்பது மூலம்.

தாரும் நன்முகத்தவம்செய்து, முடிவில் என்னுல்வ்யாபிக்கப்பட்ட பெரிய தேவலோகமெல்லாவற்றையும்கடந்து, மோக்ஷலோகத்தை யடைகின்றனர். என்னை அறிகிறவர்கள், துன்பமற்றலோகங்களுக் குச்செல்கின்றனர். என்னைத்யானம்செய்வதற்காகத் தீக்ஷையெடுத் துக்கொள்ளுகிறவர்கள், பாவம்விலகித் தேஜோரூபர்களாகித் தேவ லோகமாகிய மேலுலகத்தை அடைகின்றனர். வாஸுதேவனுகிய என் னையறிந்து ப்ரத்தையோடும் உத்ஸாஹத்தோடும் பூஜிப்பவர், உலகத் தில் பூஜிக்கப்படுகின்றனர். பக்தியினுல் நான் ஸந்தோஷம் அடை ந்து பக்திசெய்கிறவனுக்கு ஸதவகுணத்தைக் கொடுக்கிறேன். ஸத்வ குணம் அடைந்தவன், மோக்ஷமடைகிறான் என்னிடம்வருகிறான்' என்று சொன்னர். 'உலகத்தில் பரிசுத்தமான ஸூர்யன், சந்த்ரன்முதலிய சுடர்களும் மூவுலகங்களும் அவற்றின் அதிபதிகள்மூவரும் மூன்று அக்னிகளும் [1] ஐந்து ஆஹுதிகளும் எல்லாத்தேவர்களும் க்ருஷ்ண னே' என்றுசொன்னர். மத்ரராஜன் ரிஷிகளுடன்கூட இந்தவ்யா ஸர்சொல்லைக்கேட்டு மனமகிழ்ந்து அவரையும் க்ருஷ்ணனையும் சாஸ் த்ரப்படி பூஜித்தான்" என்றார். கவியும் பராசரமஹரிஷியின்புத்ரரு மாகிய வ்யாஸர்சென்றபிறகு, அவர்சொன்னதைக்கேட்டு, மஹாத்மா வானபீஷ்மர் தலைபூமியில்படும்படி க்ருஷ்ணனுக்கு நமஸ்காரம்செய் தார்.

பத்தொன்பதாவது அத்யாயம்

தா ண தர் ம பர் வம். (தொடர்ச்சி)

(கிருஷ்ணன் பீஷ்மரைக் கருடர்கதையைச் சொல்லச்சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! சிறந்தகைகளையுடையவரே! நீர் முன்னம் அர்ஜுனனைப்புகழ்ந்தபோது, 'கருடர் பக்ஷிகளுக்கெல்லாம் சிறந்தவர்' என்றுசொன்னீர் அதைக்கேட்பதில் என்புத்தி ஆவ லுடன்செல்லுகிறது. பகைவனைவாட்டுகின்றவரே! கருடர்பக்ஷிகளுள் ச்ரேஷ்டரானது எவ்வகை? அவர் நல்லசிறகுளளவரும் வினதையின் குமாரரும் நாகங்களுக்குச் சத்ருவும் ஆனதெப்படி? அவருடையபல மும் ஸாமர்த்யமும் எப்படிப்பட்டவை? பாரதரே! இதைச்சொல்லக் கடவீர்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

---

[1] ப்ராண, அபான, வ்யான, உதான, ஸமான எனற ஐந்துபராணவாயுக்க ளுக்கும் ஆஹுதியாகப் போஜனத்தொடக்கத்தில் அன்னத்தைப்பிடித்துச் சாப்பிடுவது.

"வஸுதேவபுத்ரரே! சிறந்தகைகளையுடையவரே! உம்மால் தேவகி கல்லபுத்ரரைப் பெற்றவளானாள். எனக்கு ஸந்தோஷத்தை வருத்திசெய்கிறவரே! தர்மராஜன்சொல்லைக் கேட்டீரா? 'கருடரைக் குறித்துச் சொல்லும்' என்று யுதிஷ்டிரன் என்னைக் கேட்கிறான். சிறந்தமஹிமையுள்ளவரே! உம்மால் உத்தரவுகொடுக்கப்பெற்று இவனுக்குச் சொல்லக்கருதுகிறேன். சிறந்தகைகளையுடைய கௌரியே! கேளுவரே! முதலும் முடிவுமில்லாததாகிய காலத்தில் தீர்தாமே ஸுபர்ணரென்றும் கருடரென்றும் சொல்லப்பட்டவர். மாதவரே! ஆதலால், முதலில் உம்மைக்கேட்டுக்கொண்டு, புத்திசாலியான தர்மபுத்ரனுக்குப் பக்ஷிஸ்ரேஷ்டரான கருடரைப்பற்றிச் சொல்லக்கருதுகிறேன்" என்றார். க்ருஷ்ணன், "என்னை நீர் எப்படி அறிவீரோ அப்படி யுதிஷ்டிரரும் அறிவார். கருடன்எப்படியுண்டானானென்பதை நீர் இவருக்குத் தெளிவாகச்சொல்லும்" என்று சொன்னார்.

இருபதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(அருணன், பிறந்ததும், வினதையைச்சபித்ததும்.)

[1] பீஷ்மர், "யுதிஷ்டிரனே! சிறந்தகைகளையுடைய அரசனே! பக்ஷிகளிற்சிறந்தவரும் வினதையின்புத்ரரும் மிக்கபலசாலியுமான கருடரைப்பற்றிக்கேள். அவர் எப்படி ஸுபர்ணரும் கருடரும் ஆனாரென்பதையும் ஸர்ப்பங்களை ஏன் கொல்லுகிறாரென்பதையும் சொல்லுகிறேன்; கேள். அப்பா! அரசனே! நான் முன்னம் அழகானகைலாஸசிகரத்தில், ஆயிரக்கணக்கான ம்ருகங்களை வேட்டையாடும்போது, சிறந்தபுத்திமானான பரசுராமரை ஸந்தித்தேன், அப்பா! நான் அவரைக்கண்டவுடன் ஆயுதங்களெல்லாவற்றையும் விட்டுவிட்டு முதலில் அவருக்கு அபிவாதனம்செய்து வணக்கத்துடன் அருகிலிருந்தேன். பேசிமுடியும்போது எனக்கு வரம்கொடுக்கத்தொடங்கின அந்தப்பரசுராமரிடம் கருடருடையபலத்தையும் ப்ராக்ரமத்தையும்பற்றிக் கேட்டேன். யுதிஷ்டிர! அவரும் அன்புடன் எனக்கு இதைச் சொல்லலானார். 'தக்ஷப்ரஜாபதிக்குக் கத்ருவென்றும் வினதையென்றும் இரண்டு பெண்கள் இருந்தனர். மரீசியின்குமாரரும் மஹிமையுள்ளவருமான கஸ்யபர், அவ்விருவரையும் சாஸ்த்ரப்படி விவாஹம் செய்துகொண்

[1] கருடன்கதை ஆதிபர்வம் 20-வது அத்யாயமுதல்சொல்லியிருப்பதற்கும் இங்குசொல்வதற்கும் வித்யாஸமிருக்கிறது.

டார். மிகச்சிறந்ததவமுள்ள கச்யபர், அந்தமனைவிகளின்மேல் அன்பு கூர்ந்து, அவர்களுக்கு வரமளித்தார். அவ்விருவருள் கத்ருவென்பவள், எல்லாரும் ஒரேசக்தியும் ஒரேமஹிமையுமுள்ள ஆயிரம்பிள்ளைகள் ஏககாலத்தில்பிறப்பதைக் கேட்டாள். பரதச்ரேஷ்டனே! விநதையென்பவள், வேகத்திலும் பராக்ரமத்திலும் கத்ருவின்பிள்ளைகள் ஆயிரவருக்கும்ஒப்பான வீரர்களான இரண்டுபிள்ளைகளைக் கேட்டாள். சிறந்ததவமுள்ளகச்யபர் அவ்விருவருக்கும், 'அப்படியேஆகுக' என்றுசொல்லி வரத்தைக்கொடுத்தார். பிறகு, தாம் முதலில்வரம்கொடுத்தபடி அவ்விரண்டுமனைவிகளிடத்திலும் அவ்வகையானகுமாரர்களை உண்டாக்கினர். கத்ரு, ஆயிரம் முட்டைகளையும் விநதை மிகஅழகிய சிறந்த இரண்டுமுட்டைகளையும் பெற்றனர். கத்ருவினதைகளுடைய அந்தமுட்டைகளை ரோமவிபாடுகூடியதுடங்களில் வேலைக்காரர்கள் வைத்தனர். பிறகு, ஐந்நூறுவருஷங்களுக்குப்பின், கத்ருவின்பிள்ளைகளானஸர்ப்பங்கள் முட்டைகளிலிருந்து வெளிப்பட்டனர். மஹாத்மாக்களான அந்தநாகர்கள்பிறந்தபோது, சிறந்தபலமும் ஒளியுமுள்ள அவர்களைக்கண்டு, புத்ரனில்லாதவளும் புத்ரனைப்பற்றியவருத்தமுள்ளவளுமானவினதை, ஐந்நூறுவருஷமாகியும் புத்ரனுண்டாவதைக்காணுமையால், 'இத்தமுட்டையினால் நான் என்னசெய்யப்போகிறேன்' என்று சொல்லி ஒருமுட்டையை உடைத்தாள். அவள், அரைக்குமேல் வலியசரீரமுள்ளவனும் கீழ்ப்பாகமில்லாதவனுமாக முட்டையினின்று சிறகில்லாமல்வெளிப்பட்ட சிறந்ததேர்யசாலியான ஒருபுத்ரனைக் கண்டாள்; அப்படிப்பட்டஉருவமுள்ளபிள்ளை முழுச்சரீரமில்லாமலிருந்ததைக்கண்டு, புத்ரனைப்பற்றிய துக்கத்தினால் கண்ணீர்விட்டாள். அவ்வாறுஇருந்தஅத்தப்பக்ஷியும் ஸந்தோஷமில்லாமல் [1]நீர்ததும்பும்கண்களையுடைய தாயாரைப்பார்த்து, 'நீ இந்தவிஷயத்தில் [2] அவசரப்பட்டாய். நான் கெட்டேன். முன்னே எவ்வளவுகாலம் கடந்துபோனதோ அவ்வளவுகாலம் பின்னேயும் காவாமல்போனால். நாங்களிரண்டுபுத்ரர்களும் காற்றைவிடபலசாலிகளாகப் பிறப்போம். என்தாயே! நீ கோபத்தினாலும் பொறுமையிழந்தும் மூடப்பட்டு என்னை இவ்வாறுசெய்துவிட்டாய். ஆகலால், நீ அடிமையாவாய். ஐந்நூறுவருஷகாலமாக எவளுடன்கூடக் கலக்கப்படுகின்றாயோ அவளுக்கே தாதியாவாய். மஹானுபாவையானதாயே! பலவான்களில்சிறந்தபலசாலியான இந்தஎன்இளையஸஹோதரன், உன்னை அடிமைத்தன்மையிலிருந்து விடுவிப்பான்' என்று கண்ணீர்விட்டுக்கொண்டுசொன்னன்.

---

[1] 'பர்யச்ருநயந:' என்பது 'பர்யச்ருநயநாம்' என்றிருத்தல் வேண்டும்.
[2] 'சபலாஸீத்' என்பது 'சபலாவீத்' என்றிருத்தல் வேண்டும்.

இருபத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கத்ருவும்விநதையும் பந்தயம் ஏற்படுத்திக்கொண்டது.)

பாரதனே! மகனைப்பற்றிய துயரத்தினால் பீடிக்கப்பட்டவளும் சாபத்திற்குப் பயந்தவளுமான விநதை, தன்புத்ரன்குறித்தகாலத்தை எதிர்பார்த்திருந்தாள். பிறகு, ஐந்நூறுவருஷங்களாகிய பாகம் கடந்த போது, மஹாபலபராக்ரமசாலியும் பலசாலியும் ஸர்ப்பங்களைப் புஜிப்பவரும் அழகானமுகமுள்ளவரும் கிரீடமுள்ளவரும் குவிந்த இறகுள்ளவரும் ஆமைகளைக்கள்போன்ற நகங்களுள்ளவரும் சிவந்தகண்களும் பருத்தகழுத்தும் குட்டைக்கால்களும் பெரியசிரஸ்ஸும் உருவமுள்ளவருமான கருடா பிறந்தார். பரந்தபரேஷ்டனே! அண்டம் உடைந்து வெளிப்பட்டவனும் முதற்புதனுமான அருணன், ஸூர்யோதயகாலத்தில் கிழக்குதிசையைச்சார்ந்து ஆகாயத்தில் காணப்படுகிறான். அவன் ஸூர்யனைப்போலச் சிவந்திருப்பதனால் [1] அருணன் என்று பெயரிடப்பட்டான். பன்னகங்களைப்புஜிப்பவரும் ஆகாசத்தில் பறப்பவருமாகிய கருடர் பிறந்தவுடன் தாயைவிட்டு எல்லாத்திசைகளிலும் விரைவாகஓடினர். அரசனே! அவர் ப்ரம்மதேவரால் அளிக்கப்பெற்ற ஆஹாரத்தினாலும் வேண்டினவையெல்லாவற்றினாலும் கௌரவிக்கப்பட்டு உடனே அதிகமாகவளர்ந்தார். அந்தப்பக்ஷி தம்மிச்சைப்படி அங்ஙனேவளர்ந்துகொண்டிருக்கையில் கத்ருவும் விநதையும் கடலோரம்போயினர். குளித்துத் தண்ணீர்குடித்து விரைவாகத்திரும்பிவரும்போது உச்சைஸ்ரவமென்னுமஶ்வத்தை அவ்விருவரும் அருகில்கண்டனர். அப்போது, கத்ருவானவள் நகைத்துக்கொண்டே விநதையைப்பார்த்து, 'சிறந்தவளே! இந்தக்குதிரையின் நிறமென்ன? உனக்குத்தோன்றுவதைச் சொல்' என்றுகேட்டாள். அதற்கு, விநதை, 'அரசியே! இந்தக்குதிரை ஒரேநிறமுள்ளதுதான்; அதாவது முழுதிலும்வெளுப்பென்று நான் நினைக்கிறேன். சிறந்த மனமுள்ளவளே! நீதான் இந்தக்குதிரையின் நிறத்தை என்னென்று எண்ணுகிறாய்?' என்றுசொன்னாள். அதற்கு, கத்ரு, 'கல்யாணி! இந்தச்சிறந்தகுதிரை முழுதும் வெளுப்பென்பது உன்கருத்து; பெண்ணரசியே! வேறுநிறமிருப்பதைப்பற்றிப் பந்தயம்வைப்போமா? சொல்' என்றாள். விநதை, 'பெரியவளே! நீ என்னுடன் பந்தயம்

[1] சிவப்பு, ஸூர்யன்.

வைப்பாயாகில், நமக்கு என்னபந்தயமிருக்கலாம்? அதைஅறிந்த பிறகு, உன்னுடன்பந்தயம் வைப்பேனே வைக்கமாட்டேனே' என்று சொன்னாள். கத்ரு, 'கறுத்தகண்களையுடையவிநதையே! குதிரை ஒருநிறம் பலநிறமென்னும்விஷயத்தில், நீ தோற்றால் எனக்கடிமை யாகக்கடவாய்; நான் தோற்றால் உனக்கடிமையாவேன். உனக்கு இஷ்டம்தானே? அரசியே! தாதியாகும்படி பந்தயம்கட்டுவதில் எனக் கிஷ்டமிருக்கிறதில் ஸந்தேஹமில்லை. ஸத்யத்தைப்பிடி. உனக்கு ஸுகமுண்டாகக்கடவது. நானும் ஸத்யத்திலிருப்பேன்' என்று சொன்னாள்.

இருபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கத்ரு நாகங்களை உச்சைச்சிரவத்துக்கு வால்மயிர்களாகவியது.)

விநதை, 'அவ்வாறேஆகட்டும்' என்றுசொல்லிப் பந்தயம்வை த்துவிட்டுப் [1]படித்துக்கொண்டாள். கத்ருவும், 'அப்படியே' என்று சொல்லித் தன்பிள்ளைகளைப்பார்த்து, 'பிள்ளைகளே! நான் விநதை யுடன்கூட உச்சைச்சிரவம்என்னும்குதிரையைப்பற்றிப் பந்தயம்போட் டிருக்கிறேன். ஸர்ப்பங்களே! அதைக் கேளுங்கள். அந்தக்குதிரை பலநிறங்களுள்ளதென்று நான் சொன்னேன்; ஒருநிறமுள்ள தென்று அவள் சொன்னாள். பிள்ளைகளே! நான்தோற்றாலும் அவள் தோற்றாலும் அடிமையாகவேண்டும். ஸந்தேஹமில்லை. அந்தக்குதிரை ரோமநிறமுள்ளதுதான்; சந்த்ரனுக்கும் வெண்தாமரைமலருக்கும் ஒப்பானநிறமுள்ளது. பிள்ளைகளே! ஆதலால், நான்தான் தோற்று அடிமையாவேனென்பதில் ஐயமில்லை. ஆதலால், நீங்கள் பின்வாங் காமல், முழுதும்வெண்மையான அந்தச்சிறந்த குதிரையின்வாலில் மைநிறமானமயிர்களாகச் சேருங்கள்' என்றுசொன்னாள்; அதற்கு, ஸர்ப்பங்கள், 'தாயே! வஞ்சகமாகஜயிப்பது நன்மையாகாது. எங்க ளுடைய உண்மையானசொற்களைக் கேள். இப்படிச்செய்வதில் இக் காலத்திலும் எதிர்காலத்திலும் புண்யமில்லை. தாயே! ஆதலால், நமதுகுலத்துக்கேகெடுதலும் தர்மத்திற்குவிலக்குமான மோசஞ் செய்தஜயிப்பதை எவ்வகையிலும் செய்யாதே. நாங்கள் அதர்மத்தி

[1] 'பந்தயத்தைப்பற்றி ஸந்தேஹித்துக்கொண்டிருந்தாள்' என்றும் பொ ருள்கொள்ளலாம். சிந்தித்துக்கொண்டிருந்தாள் என்றபடி.

னல்ஜயிப்பதை எங்கேயாவது கருதுவோமாயின், 'அப்படிச்செய்யா தீர்கள்' என்று நீ கட்டாயமாகத் தடுக்கவேண்டியவளல்லவோ? அப் படிப்பட்ட நீ ஆசையினல்மயங்கி, பாபத்தைவிட்டு லாபமான எண் ணத்துடனிருக்கும் யோக்யர்களான எங்களையும் பாபத்தில் சேர்க்க நினைக்கிறாயே? தாயே! திரும்பவும் இப்படிப்பட்ட உன்சொல்லைக் கேளாமலிருக்கும்படி உன்னைவிட்டுப் பத்துத்திசைகளிலும் ஓடிப் போவோம். கர்வத்தினல் காரியாகார்யங்களை அறியாமல் தப்புவழியில் போகும்குருவையும் விடும்படி சாஸ்த்ரம் விதிக்கிறது' என்று கூறின. கத்ரு, 'என்னைக் கெட்டவழியிலிருந்து திருப்புவதற்காகக் காரணங்க ளோடு நீங்கள்சொல்லிய பலசொற்களையும் கேட்கிறேன். அவற்றை நான் விரும்பவில்லை. மதிகெட்டவர்களே! இதைத்தவிரவேறுவகை யில் அந்தப்பந்தயத்தை ஜயிக்கமுடியாதே. பிள்ளைகளே! நான் சொன்னதைக்கேட்டு வஞ்சகமாகஜயித்து எனக்கு க்ஷேமத்தைச் செய்யுங்கள். பிள்ளைகளே! நாளைக்காலையில் நான்தோற்றுப் பந்த யத்தின்விதிப்படி விநதைக்கு வேலைக்காரியாகிவிடுவேனென்பது திண்ணம். இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும்பயன்படுவதற்காகத் தான் தாயார்கள் பிள்ளைகளை விரும்புகிறார்கள். உங்களைப் புத்ரர்க ளாக அடைந்ததனல் எனக்கு இந்தவிருப்பம் நெட்டுப்போயிற்று. புத்ரன் தாய்தந்தையரை இவ்வுலகத்திலும் வேறு உலகத்திலும் கரை யேற்றவேண்டியவன். இதில் புதுமையொன்றுமில்லை. பரிசுத்தம்செய் வதனலேதான் [1] புத்ரன் ஆகிறான். மனைவேகமுள்ள எனதுபுத்ரர் களே! ஆதலால், நீங்களும் என்ஆபத்தைத் தாண்டுவிப்பதற்காக மைந்நிறமுள்ளவால்மயிர்களாகி உச்சைஸ்ரவம் என்னும் சிறந்த குதி ரையைச் சேருங்கள். அதர்மம் எல்லாவற்றையும் நான் அறிவேன். விநதை, வஞ்சகத்தினல்தான் வெல்லப்படவேண்டியவள். எனது அடிமைத்தன்மை உங்களையும் துயரப்படுத்தும். வஞ்சகத்தினல் ஜயிப்பது நலமா, தோற்று அடிமையாவது நலமாவென்ற இரண்டை யும் நிச்சயிக்கும்போது ஜயிப்பதுதான் தர்மம். அதுதான் சிலாக்யம். அதர்மமாக ஜயிப்பதனலுண்டாகும்பாபம் உங்களையும்தான் தொடும். ஆனல், பெரியோர்சொல்லைச்செய்வதனல் தர்மமும் உண்டாகும் என்றாள்.

[1] 'பு' என்பது பரிசுத்தம்செய்வதென்னும் பொருளுள்ளது.

இருபத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(விநதை அடிமையானது.)

அந்த ஸர்ப்பங்கள், கோபமுற்றதாயின்சொல்லைக்கேட்டு வருத்தத்துடன் ஒப்புக்கொண்டன. மற்றும்சில அவளைவிட்டுத் திசைகளில் ஓடிப்போயின. எப்போதும் பகையையேபாராட்டுகிறவளாகிய நாகமாதாவானகத்ருவானவள் திசைகளில் ஓடின நாகங்களின்மேல் மிகவும்கோபமுற்று, 'பாண்டுவம்சத்தில் வில்லாளிகளிற்சிறந்தவனும் குந்திபுத்ரனுமானதனஞ்சயனுக்கு நாலாவதுதலைமுறையில் ஜனமேஜயனென்னும் அரசன் பிறக்கப்போகிறான். குருவம்சத்தைத்தாங்குகிறவனை அவ்வரசன் கோபித்து ஸர்ப்பயாகம் செய்யப்போகிறான். அந்தயாகத்தில் உங்களை அக்னியினால் கொல்லப்போகிறான்' என்று சாபம்கொடுத்தாள். இங்ஙனம்கோபித்த நாகமாதாவானவள் தர்மத்தைவிடாமலிருந்த நாகங்களைப்பார்த்துப் பெரியோலைவிட்டதனால் உண்டான இந்தச்சாபம் மாறுதென்றும்சொன்னாள். தர்மத்தைச்செய்யும்பொருட்டு இவ்வாறுசபிக்கப்பட்டதனால் கோபித்து எப்போதும்பகைசெய்பவளாகிய தாயைவிட்டுப் பலதிசைகளிலுஞ்சென்றன. அவைகளுள், அவள்சாபத்தைப் பெறுதலர்ப்பங்கள்மட்டும் அந்தக் குதிரைக்குக் கறுத்த நிறமுள்ளவால்மயிர்களாயின. அந்தப்பிள்ளைகள் வாலிலிருந்ததைக்கண்டு மனமகிழ்ந்தகத்ருவானவள் வினதையை நோக்கி, 'இந்தக்குதிரையைப்பார். சிறந்தவளே! இது ஒருநிறமா? அன்று? நமதுபந்தயம் நன்றுகநிச்சயமாகிவிட்டது. பெண்ணரசியே![1] ஜலத்தினின்றுகரையேறும்போது இந்தக்குதிரையைப்பார்' என்று சொன்னாள். பார்த்தனே! நேரான எண்ணமுள்ள வினதாதேவி கபடமாக நடக்கும் தன்ஸவத்னியைப்பார்த்து, 'மங்களமானவளே! ஆ! ஆ! பார்ப்போம்; போவோம்; நாம் நல்லபந்தயம் வைத்துக்கொண்டோம். நானுவது உனக்கடிமையாவேன். நீயாவது எனக்கடிமையாவாய்' என்று சிறிதுநகைத்துக்கொண்டே சொன்னாள். குருஸ்ரேஷ்டனே! அவ்விரண்டுஸவத்னிகளும் பந்தயத்தை இவ்வாறு உறுதிப்படுத்திக்கொண்டு, தங்களுக்குத் தங்களையே ஸாக்ஷியாகவைத்துக்கொண்டு, அந்தக்குதிரையைப் பார்த்தனர். அந்த வினதை சந்த்ரகிரணங்களைப்போன்ற வாலுள்ளதும் மஹாவேகமுள்ளது

[1] அப்போது இருக்கும்விதம் ஸரியானதென்று கருத்து.

மான அந்தவெண்மையான குதிரையின்வால் கறுத்திருந்ததைக்கண்ட வுடன் துக்கத்தையும் வெட்கத்தையும் அடைந்து, கண்ணீர்த்துளி கள் சொட்ட, 'இந்தக்குதிரையின்வால் கறுப்பாகத்தானிருக்கிறது. நீ ஜயித்துவிட்டாய். நான் அடிமையானேன். சிறந்தவளே! உன் னிஷ்டத்திற்குட்பட்ட தாஸியானஎன்னை உன்வேலைகளில் ஏவலாம். ப்ரபுக்களின் இஷ்டங்களை வேலைக்காரிகள் செய்யவேண்டியவர்களென் பதில் ஸந்தேஹமில்லை' என்று மெல்லச்சொன்னாள்.

இருபத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கத்ரு அம்ருதம்கொணர்ந்தால் அடிமைநீங்குமென்று கருடருக்குச் சொல்லியது.)

அதன்பிறகு, கத்ருவானவள் நகைத்துக்கொண்டே, தர்மத்தை அனுஷ்டிப்பவளாகிய வினதையை வேலைக்காரியைப்போல ஏவினாள். அவளும் அவள்சொன்னதையெல்லாம் செய்தாள். தாமரைமலர்கள் போன்ற கண்களையுடைய வினதையானவள் முகமலர்ச்சி குன்றாமலும் மனம்சலியாமலும் கோபமும் துன்பமுமில்லாமலும் கத்ரு கட்டளை யிட்டகார்யங்களைச் செய்தாள். அவள் வேலைக்காரியாகவே இந்த நாற்றிசைகளிலும் நடந்தாள். பிறகு, கருடருக்குப் பலமும் கர்வமும் வ்ருத்தியாயின. அரசனே! கர்வம்மேற்கொண்டு ஸமீபத்திலோடும் கருடரைத் தேவரிஷியாகியநாரதர் கண்டார். (அந்த) தேவரிஷியான நாரதர் அந்தக்கருடரைப்பார்த்து நகைத்துக்கொண்டு, 'நீ பலத்தினால் எப்போதும் கர்வம் அடைந்து, 'நான்' என்ற எண்ணத்துடன், நாக ராஜனுடையமாதாவான கத்ருவுக்கு வேலைக்காரியாகி அவள் வீட்டுக் குள்ளிருக்கும் தாயையும் கவனியாமலிருக்கிறாயே? ஏன் எப்போதும் இவ்வளவுகர்வம் மேற்கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டார். அதற்கு வைநதேயர், 'சிறந்தபுத்தியுள்ளவரே! நான் புத்ரனிருக்கையில் என் தாய் பரிதாபப்படத்தக்க அடிமையானாளா? அது என்னகாரணம்?' என்று நாரதரைக் கேட்டார். பிறகு, நாரதரிஷி, 'ஓ! பக்ஷியே! உன்தாய் முன்நாகமாதாவானகத்ருவுடன் பந்தயம் போட்டபோது, அவள் தன்பிள்ளைகளைக்கொண்டு வஞ்சகமாக உன்தாயை வென்று விட்டாள்' என்றுசொன்னார். கருடர், 'பகவானே! என்தாய் வஞ்சகமாகஜயிக்கப்பட்டதெப்படி? அதை நடந்தபடி எனக்குச்

சொல்லும். கேட்டபிறகு, அதன்மேல்நடக்கவேண்டியதை அறிந்து கொள்வேன்' என்றுகேட்டார். ஓ! பரதஸ்ரேஷ்டனே! 'அப்போது நாரதர், நடந்தவற்றையெல்லாம் நடந்தபடி அந்தக்கருடருக்குச் சொன்னர். அதைக்கேட்டபின், கருடர்மனத்தில ,கோபமூண்டாயிற்று.' பகைவரைத் துன்புறச்செய்யும் பக்ஷிராஜர் பன்னகங்களினத்தையும் அவற்றின் தாயையும் இகழ்ந்து கோபத்தோடும் துக்கத்தோடும் விரைவாகக்கிளம்பித் தம்தாய் மிகச்கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்றார். அங்கே துயரமுற்று ஜடைதரித்து அழுக்கடைந்து இனைத்து மேகத்தினால் மூடப்பட்டஸூர்யகாந்தி போல இருக்கும் தம்தாயைக் கண்டார். அவருக்குத் துக்கத்தினாலும் கோபத்தினாலும் கண்களினின்றும் கண்ணீர் பெருகிற்று. மேல் முயற்சிசெய்வதிலேயே உறுதியான எண்ணமுள்ளவரும் தர்மாத்மாவுமான பக்ஷிராஜர், தாம்செய்வதையும் செய்யாமலிருப்பதையும்பற்றித் தம்தாயிடம் ஒன்றும்சொல்லாமல் கத்ருவைப்பார்த்தே பின்வருமாறு சொல்லலானர். 'நீ எனக்கு மூத்ததாயாகவிருக்கிறாய். நீ என் தாயை நியாயமாகஜயித்திருந்தாலும் அநியாயமாகஜயித்திருந்தாலும் அதெல்லாம நியாயமென்றே நான் நினைக்கிறேன். அம்மா! ஆனால், நான்புத்ரனிருக்கும்போது இவள் அநாதையாகவும் துயரமுள்ளவளாகவும் இருக்கலாமா? தர்மந்தெரிந்தவளே! எண்ணப்பற்றி அவளை நீ விட்டுவிடுவதுநலம்' என்றார். சிறந்தபுத்தியுள்ள வைநதேயருடைய சொல்லைக்கேட்டுத் துஷ்டபுத்தியுள்ள கத்ருவானவள் இயற்கைமாறித் துயரமேற்கொண்டு, 'வினதையின்மகனே! உனக்கும் உன்தாய்க்கும் விருப்பத்தை நான் எவ்வகையிலும் செய்யமாட்டேன். ஆகாயத்தில்பறக்கும்பறவையே! வேண்டாதவனான நீ என்னிடம் ஏன்பேசுகிறாய்?' என்றுசொன்னாள். இவ்வாறு அன்பில்லாமலும் கொடுமையாகவும்பேசும் தயையற்ற கத்ருவைக் கருடர் உண்மையும் அன்புமுள்ளசொற்களினால் நயப்படுத்தத்தொடங்கினர். 'நற்குணங்கள் நிரம்பின பெண்ணரசியே! நீ என்தாய்க்கு அன்புள்ள மூத்தஸஹோதரி. எனக்கு நீ பெரியதாய்; ஸந்தேஹமில்லை' என்றார். கத்ரு, 'ஆகாயத்தில்பறக்கும் பறவையே! நினைத்தபடியெல்லாம் செல்லுகிறவனே! உன்னிஷ்டப்படி செல்லலாம். பக்ஷியே! இன் சொற்களினால் நீ உன்தாயைத் தாஸியாகாமற்செய்வது முடியாது. பறவையே! வினதையின்மகனே! அம்ருதம்கொண்டுவருவாயாயின் உனது இந்தத்தாயை எனக்கடிமையாயில்லாமல் பார்க்கலாம். இது நிச்சயம்' என்றுசொன்னாள்.

இருபத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கச்யபர், கருடருக்கு யானை ஆமைகளின் வரலாறுகூறியது.)

மிகுந்தசக்தியுள்ளகருடர், 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி அம்ருதம் கொண்டுவருவதாக ப்ரதிஜ்ஞைசெய்து உடனே பிதாவினிடம் சென்று, 'நான் உண்மையும் அன்புமுள்ளசொற்களைப் பலமுறைசொல்லி என்தாய்க்கு விடுதலையைக் [1]கேட்டேன். கத்ருவோ ஒப்புக்கொள்ளவில்லை. அவள் இடியைப்போன்றபலசொற்களை என்மேல் ப்ரயோகித்தாள். பகவானே! பெரும்புகழ்பெற்றவரே! என்தாயாகியவிநதை தாஸியாயிருக்கிறாள். கத்ருவானவள் அவளை ஏவுகிறாள். 'இவள் தாஸி' என்றும் சொன்னாள். பிறகு, 'அம்ருதம் கொண்டுவா; விநதை விடப்படுவள்' என்றுசொன்னாள். (அதன்மேல்) நான் தாயைவிடுவிப்பதற்காக அவள் சொன்னதை அங்கீகரித்து, 'அம்ருதம்கொண்டுவருவேன்' என்றுசொல்லி, உடனே அதைக் கொண்டுவரப் [2]புறப்பட்டேன்' என்றுசொன்னார். அதற்கு அவர் பிதா, 'அம்ருதம் தேவர்களாலும் பெறமுடியாதது; நீ கொண்டு வருவதெப்படி? புத்ரனே! அது காவற்காரர்களால் மிகவும் காக்கப் படுகிறது. அதைச் சொல்லுகிறேன்; கேள். ஐயா! மிகவும் நன்றாக நாலுபக்கமும் தண்ணீரால்சூழப்பட்டு ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அதன்பிறகு, ஜ்வலிக்கின்ற அக்னியினால் ரக்ஷிக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப்பிறகு, பதினையிரமும் நூறுயிரமும் பத்துலக்ஷமுமாகிய நிஷ்காரர்கள்என்னும் [3]ராக்ஷஸர்களும் அதிஜாக்ரதையுடன் அம்ருதத்தைக் காக்கின்றனர். குழந்தாய்! சக்தியாயுதங்களும் தடிகளும் சூலங்களும் சதக்நி(ப்ரேங்கி)களும் பட்டஸ்ங்களும் இடிக்கொப்பானகதைகளும் அந்தக்காவற்காரர்களின் ஆயுதங்கள். குழந்தாய்! இந்த்ரனுடையகட்டளையினால் அந்தக்காவற்காரர்களுக்கு வெளிப்பக்கம் பெரிய இருப்புவலையினால் மூடப்பட்டிருக்கிறது அப்பா! விநதையின்புத்ரனே பக்ஷியே! வஜ்ராயுதத்தைத்தரிப்பவனை இந்த்ரனும் தேவர்களாலும் நாகர்களாலும் கத்திகள், கற்கள், ஜலமுதலியவற்றினாலும் இவ்வாறு நன்றாகக்காக்கப்பட்ட அம்ருதத்தை நீ எப்படி விரும்பு

[1] 'யச்சாப்யதஜ்ஞாம்' என்பது, 'யாச்ஞாம்யதஜ்ஞாம்' என்றிருத்தல் வேண்டும்.

[2] 'ப்ரார்த்திதः' என்பது, 'ப்ரஸ்திதः' என்றிருத்தல் வேண்டும்.

கிறாய்?' என்றுசொன்னார். கருடர், 'பிதாவே! நான் புத்ரனென்ற ஸ்வதந்த்ரத்தினால் இந்த என்நிச்சயத்தைச் சொல்லுகிறேன்; கேளும். பலவானும் உபாயந்தெரிந்தவனுமாக இருக்கிறேன். இன்னும் நான் என்னசெய்யவேண்டுமென்று நீர் நினைக்கிறீர்?' என்றுகேட்டார். லந் தோஷமடைந்த பிதாவானவர், பலமுறைசிரித்துக் கருடரைப்பார் த்து, 'அப்பா! மிகக்கொடியஆமை யானை இரண்டினையும் நீ பக்ஷிப்பா யாயின், அதனால், உன்பலம் அளவிடக்கூடாததாகுமென்பதில் லந் தேகமில்லை. அம்ருதத்தையும் கொண்டுவரத்தக்கவனுவாயென்பது நிண்ணம்' என்றுசொன்னார். கருடர், 'மஹாநுபாவரே! அந்த க்ரூரமானயானையும் ஆமையும் எங்கேயிருக்கின்றன? பிதாவே! பலம் அதிகப்படுவதற்காக அவற்றை நான் பக்ஷிப்பேன்' என்று கேட்க, கச்யபர் சொல்லலானார். 'மூன்னே தேவக்கூட்டங்களாலும் ஏறமுடி யாமலிருந்த உரகமென்னுமலை ஆகாயத்தைத்தடித்ததுபோலக் கடற் கரையிலிருக்கிறது. தாழ்வரைகளில் மரங்கள் எப்போதும் புஷ்பித் திருக்கும் அம்மலை அனேக [1] கவ்யூதிகள் அகலமுள்ளது. அப்பா! மிக்கவண்மையுள்ளயானையினால் அம்மலையில் வழிபுண்டாக்கப்பட் டது. புத்ரனே! பதினறுகவ்யூதி உயரமுள்ள அம்மஹாபர்வதம் அந்தயானைபோவதனாலும் வருவதனாலும் தேய்ந்துபோய்விட்டது. அப்பா! அவ்வளவுஉயரமானமலை, தரைமட்டமானவழியாகச் செய் யப்பட்டது. அந்தயானை தண்ணீர்குடிப்பதற்காக அந்தவழியே சென்று யுத்தம்செய்யக்கருதுகிறது. அந்தமலைக்கப்பால் சாமரை மலர்நிரம்பின கனகம்என்றுபெயர்பெற்ற மடுவொன்றிருக்கிறது. அம் மடுவில் மிக்கபலமுள்ள ஓர் ஆமையிருக்கிறது. அந்தஆமை அனேக கவ்யூதி அகலமுள்ளது. அந்தஆமையும் யானையும் தேகஅளவிலும் மனஉக்கத்திலும் தேகவண்மையிலும் ஒன்றுக்கொன்று ஒப்பானவை. பூர்வஜன்மத்தில்அறிவில்லாமல் ஒருவரையொருவர் கொல்லக்கருதின மதுகைடவர்கள்தாம் இந்தயானையும் ஆமையுமாக மறுஜன்மம் எடுத் திருக்கின்றனர். அந்தயானை தண்ணீர்குடிப்பதற்காக அம்மடுவில் எப் போதுபோகிறதோ அப்போது மஹாபலசாலியான ஆமை கோபத் துடன் அதை எதிர்த்துச்செல்கிறது. நீரிலிருக்கும்ஆமையானது அடிக்கடி மூழ்கிக்கிளம்பி நகங்களாலும் பற்களாலும் அந்தயானை யின் துதிக்கைதுனியைக் கிழிக்கிறது. சிறந்தயானையும் தாகித்துத் தண்ணீர்குடிக்கப்போய்க் கால்களாலும் துதிக்கைதுனியாலும் தந் தங்களினாலும் ஆமையைத்தடுக்கிறது. அந்தஆமையானது தண்

[1] கவ்யூதி = இரண்டுயோஜனையளவு; யோஜனை = இரண்டுமைல்.

ணீரைவிட்டுக் கரைக்குப்போகாமலே யானைக்கூட்டத்தலைவனை அந்தமஹாகஜத்தை நகங்களாலும் பற்களாலும் தடுக்கிறது. தண்ணீர்குடிக்கவந்தயானை அதனால் தடுக்கப்பட்டு ரக்தத்திலுள் துதிக்கை துளிகூடநீங்காது ஈரமாகவே திரும்பவும்தன்வனத்திற்குச்செல்லுகிறது. புத்ரனே! உன்னல்முடியுமாயின் நீ போய் அவ்விரண்டும்சேர்ந்திருக்கும்போது தின்றுவிடு. பலசாலிகளான அவை தனித்துஜாக்ரதையாயிருக்கும்போது பிடிக்கமுடியாதவை' என்றசொன்னர்.

இருபத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கருடர் யானையையும் ஆமையையும் தூக்கிக்கீழ்சென்று ஒருமரக்கிளையில் உட்கார்ந்ததும், அதுமுறிய அதைத்தூக்கிக்கீழ்சென்று கடற்கரையில்போட்டதும்.)

கருடர், 'பகவானே! அந்தயானையையும் ஆமையையும் ஒரேகாலத்தில் நான் பிடிப்பதற்குஎப்படிக்கூடும்? அதற்கு உபாயத்தை நீர் சொல்லவேண்டும்?' என்றுகேட்க, கஸ்யபர், 'அந்தயானையானது யுத்தம்செய்யக்கருதிச் சற்றுநேரமிருக்கும்போது அந்தஆலமரமும் யுத்தம்செய்யவிரும்பித் தண்ணீரினின்று அடிக்கடி விரைவாக மேலே இளம்பும். அப்பா! பக்ஷிராஜாவே! ஆமைவெளிக்கிளம்பியும் யானை அதன்மேல் கவனம்வைத்துமிருக்கையில் நீ பிடிக்கலாம். இதற்கு வேறுஉபாயம்இல்லை' என்று விடைகூறினர். அவரால் இவ்வாறு சொல்லப்பட்டகருடர் அந்தச்சிறந்தவனத்திற்குச்சென்று மேகம் போலும் மலைபோலுமிருக்கும் அந்தப்பெரியயானையைக் கண்டார். பாரதனே! அந்தயானை முன்சொன்ன அம்மலைவழியில் வந்தது. அதைக்கண்டவுடன் அம்மஹாபலவானகருடருக்கு மயிர்கள் சிலிர்த்தன. அரசனே! யானையையும் ஆமையையும் புசிக்கக்கருதினவரும் உக்ரரூபமுள்ளவரும் மஹாத்மாவுமானகருடருக்கு அப்போது மிகப்பெரியமகிழ்ச்சியுண்டாயிற்று. அப்போது மிகபலசாலியான் அந்தக்கருடர், ஸ்ரமப்பட்டு அங்கத்தையெல்லாம் குறுக்கிக்கொண்டு மிகவேகத்துடன் அந்தயானையைப் பின்தொடர்ந்தார். அந்தப் பலசாலியும் பெருமூச்சுள்ளதுமானகஜராஜன், அவ்வாறு அந்தவழியைக் கடந்து கனைத்தலினால் கனைப்பைத்தீர்ப்பதற்காகப் பெருமூச்செறிந்

தது. அதன்மூச்சுக்காற்றினாலும் மதஜலத்தின்மணத்தினாலும் அவ வாணையைத்தடுக்கும் பெரியஆமையானது மேலேகிளம்பிற்று. இந்த்ர னுக்கும் ப்ரஹ்லாதனுக்கும்நடந்ததுபோல அந்தப்பெரியஆமைக்கும் யானைக்கும்நடந்த கடும்சண்டையைப் பக்ஷிராஜர்பார்த்தார். பார்த்த னே! அந்தயானைக்கூட்டத்தரசு நுனித்துதிக்கையினால் தண்ணீரைத் தொடும்போதே *அதைப்பற்களாலும் நகங்களாலும் ஆமைதடுத்தது. அவ்வாறே யானையும் மூழ்கிக்கிளம்பும்ஆமையைக் கால்களாலும் துதிக்கையினாலும்தடுக்க அவ்விரண்டிற்கும் சற்றுநேரம் பயங்கரமான காட்சியுள்ளயுத்தம் நடந்தது. அரசனே! பிறகு, ஆமை அந்தஜலத்தி னின்று கரைக்குவந்தது. அந்தயானை தோற்கச்செய்யப்பட்டிருந்தும் தண்ணீரைவிரும்பியிருந்ததனால் திரும்பிப்போகவில்லை. தாகத்தினால் தண்ணீரைவிரும்பினயானை மெதுவாகப் பின்னே நகர்ந்தது. யுத்தத் தைவிட்டுப் பின்னேநகரும் அந்தயானையைக்கண்டு ஆமையான இந்த்ரன் அலட்சரனையெதிர்ப்பதுபோல மிகவிரைந்து எதிர்த்தோ டிற்று. கோபத்துடன்கரையேறின அந்தஆமை (தண்ணீரை) அடை யாத அந்தயானை இரண்டையும் சருடர் சேர்த்துப்பிடித்தார். பலவா னான அவர் அந்தச்சிறந்தயானையை இடக்காலினாலும் துடிக்கும் ஆமையை வலக்காலினாலும்பிடித்தார். சிறந்தஸர்ப்பங்களைக்கொல்லு திறவரும் தோல்வியடையாதவருமாகியசருடர் சிறகுகளினால் மேலுல கத்தையும் இடைவெளியையும் (மறைத்துக்கொண்டு) அங்கிருந்து விரைந்துகிளம்பினர். கருடர்விரைவாகப்பறக்கும்போது வஜ்ராயுதத் தினால் செய்யப்பட்டலவமேபோன்ற மிகக்கூர்மையான அவருடைய நகங்களினால் உறுதியாகப்பிடிக்கப்பட்ட அவ்விரண்டும் உடனே உயி ரைவிட்டன. பலவானாகிய கருடர், கால்களும் கழுத்துக்களும் தளர் ந்துபோன அவ்விரண்டினையும் பிடித்துக்கொண்டு கூத்தாடுபவர் போல ஆகாயத்தில் விளையாடிக்கொண்டு விரைவாகச்சென்றார். அர சனே! அதன்பிறகு அவற்றைத்தின்னக்கருதின அந்தவீரர், பூமியில் இடம்பார்த்தும் தாம்உட்காருவதற்குப்போதுமானமரம் ஒன்றையும் பார்க்கவில்லை. அரசர்க்கரசனே! பிறகு, சிறந்தபராக்ரமமுள்ளகருட தேவர்களின்வனமாகிய நைமிசாரண்யத்தைச்சார்ந்துசிறுகிளைகளாலும் பெருங்கிளைகளாலும் மறைக்கப்பட்டதும் இரண்டுயோஜனை உயர முள்ளதும் நாற்புறத்திலும் நானூறுமுழம்பரவியஅடியுள்ளதும் இமய மலைச்சிகரம்போன்றதுமான ஒருமரத்தைக்கண்டார். அம்மரத்தின்ஒரு கிளை அடியும்நுனியும்உறுதியானதும்வஜ்ராயுதம்போன்றதுமாகிலகள்நிறை ந்ததும் ஐந்துயோஜனை நீளமுள்ளதுமாயிருந்தது. வைகதேயர், அவ்

விரண்டையும்பிடித்துக்கொண்டு உண்பதற்காக அந்தக்கிணையில் வேக மாக உட்கார்ந்தார். அவ்ருடையவேகத்தினால் அந்தக்கிணை விழுந் தது. அரசனே! அதுவிழுவதையும் அதன்மேழே வஸுக்களும் வைகானஸர்கள்என்னுமரிகளும் வாலகில்யர்களும் இன்னும்அனேக ரிஷிகளும் கூட்டமாக யாகம்செய்துகொண்டிருப்பதையும் கண் டார். பாரதனே! அவ்விடத்தில் அந்தரிகள் தேவர்களோடு (வஸு க்களோடு) உட்கார்ந்திருப்பதைப்பார்ந்தபிறகு பக்ஷிராஜருக்குப் பய முண்டாயிற்று. அந்தப்பக்ஷிராஜர் அந்தக்கிணையை மூக்கினாலும் அந்த ஆமையையும், யானையையும் கால்களினாலும் பிடித்துக்கொண்டே கிளம்பி விளையாடுகிறவர்போல ஆகாசத்திற்சென்றார். பெரியபாரங் களைத்தூக்கிக்கொண்டுகிளம்பின அந்தப்பக்ஷியைப்பார்த்து, 'வீரனும் தர்மத்தில்எண்ணமுள்ளவனுமாகிய இந்தப்பக்ஷிராஜன் பெரியபாரங் களைஎடுத்துக்கொண்டு விளையாடுகிறவன்போல ஆகாயத்தில் செல்லு கிறான். இவனைப்போலச்செய்ய யாருக்கும் இயலாது. [1]குருவான பாரத்தைவஹிப்பதனால் இவனுக்கு, 'கருடன்' என்றுபெயரிருக்கட் டும்' என்று அந்தரிஷிகள்எல்லோரும் கூறினர். அந்தக்காரணத்தினா லேயே வஸுக்களும் தேவர்களும்கூடப் பக்ஷிராஜருக்கு, 'கருடன்' என்றேபெயரிட்டனர். அந்தப்பக்ஷி பூமியெல்லாம்திரிந்து ஆங்காங்கு ஓடி மரத்தின்கிளையைப் போடக்கருதியும் ஓரிடத்தையும்காணவில்லை. ஒருதேவதூதன் மேலிருந்து, 'கருடா!' என்றழைத்து, 'விநதா புத்ரனே! மிக்கபலசாலியே! ஸமுத்ரக்கரையில் குவிந்தரென்னும் ஒருஜாதியாரின்மேல் இந்தமரக்கிளை போடத்தக்கது. அவர்கள் தர்மத்திலெண்ணமில்லாதவர்கள்' என்று தெளிவாகப்பேசின அசரீர வாக்கைக் கேட்டார். அதைக்கேட்டு, கருடர் உடனே பாவத் தொழில்உள்ளவர்களும் அறிவீனர்களுமான அந்தக்குவிந்தர்களின் இருப்பிடமாகிய கடற்கரைக்குச் சென்றார். அந்தப்பக்ஷிஸ்ரேஷ்டர் அந்த இடத்தைச்சேர்ந்து அங்கே கிளையைப் போட்டார். அரசனே! அப்போது அந்தக்கிணையினால் இருபத்தாறுதேசங்கள் அழிக்கப்பட் டன. அரசருட்சிறந்தவனே! சிறந்தசக்தியுள்ளகுவிந்தர்களின் இருப் பிடமும் மிக்கபயங்கரமுமான அந்தத்தேசம் இப்போது, [2]'சாகாபத கம்' என்று பெயர்பெற்றிருக்கிறது.

[1] பெரிய. [2] பக்ஷி கிளைபோட்ட இடம்.

இருபத்தேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கருடர் அம்ருதம்கொணர்தற்காக ஸ்வர்க்கஞ்சென்றது.)

நியமமுள்ளபக்ஷிராஜர் அந்தக்குவிந்தர்களின்தேசத்தைஅழித்த பிறகு ஸந்தோஷத்துடன் மலைச்சிகரத்தில்உட்கார்ந்து அந்தயாணை ஆமைஇரண்டையும் பக்ஷித்தார். பகைவரைவாட்டுபவனே! அவற் றின்ரக்தத்தையும் கொழுப்பையும்குடித்து ஒப்பற்றவன்மையையும் உத்ஸாஹத்தையும்அடைந்த பக்ஷிஸ்ரேஷ்டரானகருடர் இந்த்ரலோகத் திற்குச்சென்றார். அம்ருதத்தை ரக்ஷிப்பதற்காக இரவும்பகலும் பொறிகளுடன்ஜ்வலிக்கின்ற அக்னிபகவானைப்பார்த்து நமஸ்காரம் செய்தபிறகு பக்ஷிராஜருக்கு மிக்கபயம் உண்டாயிற்று. ஜலத்திற் கும் காவற்காரர்களுக்கும் அவர் பயப்படவில்லை. தாம்பக்ஷியாயிருப் பதையும் அக்னிஜ்வலிப்பதையும்கண்டு பயந்தார். பிறகு, அந்தக் கருடர் ப்ரம்மதேவரிடம்சென்று அவரைக் கண்டார். [1] பக்ஷிராஜ ரானகருடர், மஹாத்மாவானப்ரம்மதேவருக்குவந்தனம்செய்து கை கூப்பித் தெளிவாகத் தாம்நினைத்ததைச் சொல்லலானார். 'பகவானே! நான் என்தாயை அடிமைத்தன்மையிலிருந்துவிடுவிப்பதற்காகப் பெ ரியகார்யத்தில் ஆரம்பம்உள்ளவனென்றும் தர்மத்தில் நிச்சயமுள்ளவ னென்றும் குற்றமற்றவனென்றும் அறியும். ஈஸ்வரரே! நான் கத் ருவினிடத்திற்கு அம்ருதம்கொண்டுபோகவேண்டும். தேவரே! அப் போதுதான் என்தாய் அடிமைத்தனத்தினின்று விடப்படுவாள். ஈஸ் வரரே! தேவலோகத்தில் அக்னிபகவான் இந்த்ரனுடையகட்டளையி னல் எப்போதும் ஜ்வலித்துக்கொண்டு அம்ருதத்தைக் காப்பாற்று கிறான். தேவஸ்ரேஷ்டர்களுக்கும்ஈஸ்வரரே! ப்ரபுவே! அக்னிஜ்வ லிப்பதையும் நான்பக்ஷியாயிருப்பதையும்கண்டு எனக்கு அதிகபய முண்டாகிவிட்டது. நான்அக்னியைத்தாண்டுவதற்கு எப்படிமுடி யும்? வரமளிக்கும்ப்ரபுவே! அதற்கு உபாயம்சொல்ல நீரே ஸமர்த் தர்' என்றார். பெரும்பாக்யமுள்ளதர்மராஜனே! அவ்வாறுவருந் தப்படும் அந்தக்கருடரைப்பார்த்து ப்ரம்மதேவர் பலமுறைநகைத் துக்கொண்டு அக்னியைத்தணிக்க உபாயம்சொல்லலானார். 'குழந் தாய்! ப்ராணிகளின்சரீரத்திலிருக்கும்அக்னிகூடப்பாலினாலும் நெய்

[1] 'பன்னகேச்வர:' என்பது 'பதகேச்வர:' என்றிருத்தல் வேண்டும்.

யினும் அடங்குகிறது. பூமியில்ஜீவலிக்கும் அக்னியைப்பற்றிச் சொல்லவேண்டுமா? நீ வெண்ணெயையாவது பாலையாவது அக்னியில் பொழி. பிறகு, விருப்பப்படி செல்லலாம். உன்னை அக்னி தஹிக்காது' என்றார்.

இருபத்தெட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கருடர் வஜ்ராயுதத்தைக் கௌரவிப்பதற்காக ஒற்றையிறகை விட்டது.)

பறவைகளுக்கரசரானகருடர் ப்ரம்மதேவர்சொல்லக்கேட்டு வெண்ணெய்கொண்டுவருவதற்காக ஓர் இடைச்சேரிக்குச் சென்றார். அவ்விடத்தில் கடைந்துகுடத்தில்வைத்திருக்கும் வெண்ணெயைக் கண்டு உடனே அதைஎடுத்துக்கொண்டு அந்த அம்ருதம்பாதுகாக்கப்படும் இடத்துக்குச் சென்றார். மஹாபலசாலியான அத்தக்கருடர் அவ்விடத்தில் ஜலத்தைக்குறுக்காகத்தாண்டி அக்னியைக்கண்டு விலகி அதில் வெண்ணெயைப் போட்டார். ஜ்வாலைகளோடுகூடியிருந்த அந்த அக்னி வெண்ணெயினல் த்ருப்திசெய்விக்கப்பட்டு வேகமடங்கி எரியாமல் புகையமட்டும்விட்டது. கருடர், மனமகிழ்ச்சியுடன் அந்தஅக்னியை விரைவாகக்கடந்து சிறகுக்காற்றினுலேயே ராக்ஷஸர்களைத்தள்ளித் தாண்டிவிட்டார். கருடர்சிறகுக்காற்றினல் அடிக்கப்பட்டஅவ்வரக்கர்கள் ஆயுதங்களையும் கேடகங்களையும் போட்டுவிட்டுத் தலைகளும் முழங்கால்களும் கீழேபடவிழுந்தனர். மேற்ளம்பிச் சுற்றியிருக்கும்நாகங்களைக்கொன்று ஆர்களின்சந்தினல் சக்ரத்தையும்தாண்டித் தலையினல்வலையைக்கிழித்துக்கொண்டு ஓடினர். வேகத்தில் வஜ்ராயுதத்துக்கு ஒப்பானகருடர் வலையைத் தலையால் கிழித்தவுடன், அம்ருதத்தை விரைவாகத் தூக்கிக்கொண்டார். அம்ருதத்தை எடுத்துக்கொண்டகருடர் காற்றைப்போல விரைந்தோடினர். பிறகு, இந்த்ரன் தேவர்களுடன்கூட யுத்தஸந்நாஹம் செய்தான். அதன்பிறகு, மாதலியென்னும்ஸாரதியினல் பொன்மாலைபூண்ட ஹரிகளென்னும்குதிரைகள்பூட்டப்பட்டதும் ஸூர்யனுக்கும் அக்னிக்கும்ஒப்பான ஒளியுள்ளதுமாகிய தேரில் விரைவாக ஏறினன். வ்ருத்ராஸுரனையும், பாகாஸுரனையும் வதம்செய்தவனும் வஜ்ராயுதம்தரித்தவனும் மிக்கபலசாலியுமான இந்த்ரன் கூரானவஜ்ராயுதத்தைஒங்கிக்கொண்டு கருடரை எதிர்த்துச்சென்றான். அரசனே! அப்படியே கருடரும் வஜ்ரபாணியான இந்த்ரனை எதிர்த்துச்சென்றார். அப்

போது இந்த்ரன் மாதலியைப்பார்த்து, 'குதிரைகளை வேகமாக நடத்து' என்றுசொன்னன். உக்ரமானவேகமும் பராக்ரமமுமுள்ள இந்த்ரன் மிக்கபயங்கரமான சிறந்தவஜ்ராயுதத்தைக் கருடர்மேல் எறிந்தான். தேவேந்த்ரன் வஜ்ராயுதத்தை விடத்தொடங்குவதைத் தெரிந்துகொண்ட பக்ஷிராஜாவான கருடர் மிக்கவேகமாகச்சென்றார். ப்ரம்மாவினிடம்[1] வரம்பெற்ற சிறந்தஆயுதமென்றறிந்து கருடர் இந்த்ரனைநோக்கி, 'வ்ருத்ராஸுரனைக்கொன்றவனே! இந்த உன்வஜ்ராயுதம் ப்ரம்மாவினுடைய[2] வரம்பெற்றது. அதனால், அதை வெகுமானிக்கக்கருதி ஒற்றையிறகை விடுகிறேன். வ்ருத்ரனைக்கொன்றவனே! உனக்குச்சக்தியிருக்குமானால் உன்னுடையமுழுபலத்தையுங்காட்டி இத்தச்சிறந்த ஆயுதத்தினால் என்னை அடிப்பாயாக. நான் ஒருநீங்கு மில்லாமற்செல்கிறேன்' என்றுசொன்னார். பாரத! உடனே இந்த்ரன் தன்முழுபலத்துடனும் வஜ்ராயுதத்தை மிக்கவேகமாகப் போட்டான். அது கருடரை அதிகமாகத் தாபப்படுத்தவில்லை. அரசனே! பிறகு, ஆகாயமார்க்கமாகஸஞ்சரிக்கும்தேவரிஷிகள் அந்த வஜ்ராயுதம் பக்ஷியின் சிறகில் ஒட்டிக்கொண்டிருக்கக்கண்டு, 'இந்தக்கருடனென்னும் பக்ஷிதான்[3] ஸுபர்ணன். ஏனெனில், வ்ருத்ராஸுரனைக்கொன்ற தேவேந்த்ரனது என்றுமழியாத சிறந்தஆயுதம் இவனதுசிறகில் ஒட்டிக்கொண்டதே' என்னும்வசனத்தைக் கூறினர். பராக்ரமசாலியான கருடர்என்னும்பக்ஷி, ஸுபர்ணரானது இவ்விதமாகும். அவரை அக்னியென்றும் விஷ்ணுவென்றும் வேதங்களினால் மிகத்துதிக்கப்பட்டவரென்றும் புண்யங்களின் பலன்களைத்தருகிறவரென்றும் ரிஷிகள் அறிகின்றனர். அப்போது மயில்கள், ஸுபர்ணருடைய சிறியஇறகுகளை எடுத்துக்கொண்டன. அந்தமயில்களெல்லாம் கர்வமடைந்து இந்த்ரனை எதிர்த்தோடின.

இருபத்தொன்பதாவது அத்யாயம்.

தாநதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கருடர் அம்ருதங்கொண்டுசேர்ந்ததும், விநதை அடிமைநீங்கியதும் கருடர் திரும்பவும் அம்ருதத்தை இந்த்ரனிடம் கொடுத்ததும்.)

ஆயுதங்களில்சிறந்த வஜ்ராயுதம் ஒட்டிக்கொண்டதையும் ரிஷிகள் துதிப்பதையும் கண்டவுடன் தேவேந்த்ரன், கருடரைப்பார்த்து, 'ஸுபர்ணனே! உன்னுடையமஹிமையை நான் அறியவில்லை. அத

---

[1] 'லப்தவரः' என்பது 'லப்தவரம்' என்றிருத்தல்வேண்டும்.

[2] 'வரோலப்தः' என்பது 'வரலப்தः' என்றிருத்தல்வேண்டும்.

[3] சிறந்தசிறகுகளை உடையவன்.

னால், யுத்தம்செய்தேன். இதைவிட வேறுவிதமாக நான் அம்ருதத்தை ரக்ஷிக்கமுடியாது. இந்தவஜ்ராயுதம் என்னுடன்கூடவே யாதொரு பயனுமில்லாமல் போனபடி திரும்பிற்று' என்றுசொன்னன். பாரதனே! இவ்வாறுசொல்லி இந்த்ரன் திரும்பிப்போனபிறகு, கருடர் அம்ருதத்தை எடுத்துக்கொண்டு விரைவாகக் கத்ருவினிடம்சென்று, 'அந்த அம்ருதத்தை என்தாய்க்காக நான் விரைந்து கொண்டுவந்தேன். தர்மத்திலிருப்பவளாகிய அந்தவிநதை இனி அடிமையாயில்லாதிருக்கவேண்டும்' என்றுசொன்னர். கத்ரு, 'விநதையின்புதல்வனே! உனக்கு நல்வரவு. நீ அம்ருதம்கொண்டுவந்தது நன்று. 'புத்ரனே!சிறந்தவளாகிய உன்தாய் இனி அடிமையாயிராமல் ஸ்வதந்த்ரையாயினள்' என்றுசொன்னள். அவள் இவ்வாறுசொன்னபிறகு அந்த விநதையும் தன்வீடுசேர்ந்தாள். பலவான்களிற்சிறந்தவராகிய கருடர், நியாயப்படி (அம்ருதத்தைக்) கொண்டுவந்தபிறகு, தம்தாயை மோசமாகஜயித்ததனிமித்தம் அந்தக்குதிரைக்குக் கறுத்தவால்மயிர்களாயிருந்தநாகங்களைக் கொல்வதைப்பற்றி நிச்சயம்செய்தும் கத்ருவைப்பார்த்து, 'நீ வஞ்சகமாகத்தானே ஜயித்தாய். ஆதலால், அந்யாயம்' என்றுசொல்லி, உடனே அம்ருதத்தை எடுத்துக்கொண்டு வேகமாக ஆகாயத்தில் ஸஞ்சரிப்பினர். தோல்விஅடையாதகருடர் அம்ருதத்தைஎடுத்து விரைவாகச்செல்லக்கண்டு நாகமாதாவான கத்ருவானவள் 'வைநதேயனே! கெட்டபுத்தியுள்ளவனே! உத்தமமான அம்ருதத்தைக்கொண்டுவந்து என் திருப்பிக்கொண்டுபோகிறாய்? ஒருக்காலும் பாபம்செய்யாதே' என்றுசொன்னள். அதற்கு, கருடர், 'என்தாய்க்காக நீ அம்ருதம்கொண்டுவாவென்று கட்டளையிட்டதுபற்றி நான் இப்போது அம்ருதம்கொண்டுவந்தேன். விரைவாக அம்ருதமும் கொண்டுவரப்பட்டது. என்தாயும் விடுபட்டாள். எங்கிருந்து இதைக் கொண்டுவந்தேனோ அவ்விடத்திற்கே நான் மறுபடியும் கொண்டுபோகிறேன்; 'அம்ருதத்தை எனக்குக் கொடு' என்று நீசொல்லியிருந்தால் அப்படிச் செய்திருப்பேன்; செய்யாமலுமிருப்பேன். எனினில், நீ அம்ருதத்துக்குத் தகாதவள்; நான் தர்மத்தோடும் ஸத்யத்தோடும் விநதையை மீட்டுக்கொண்டேன்' என்றுசொன்னர். உடனே கருடர் அங்கிருந்துசென்று, புரந்தரனோக்கி, 'வ்ருத்ரசத்ருவே! உனது இந்தஉத்தமமான அம்ருதம் என்தாய்க்காக என்னால் கொண்டுபோகப்பட்டது; கொண்டுபோனபடியே திரும்பியும் கொண்டுவரப்பட்டது. இதை வாங்கிக்கொள். தேவராஜனே! நாகமாதாவுக்கு அடிமைத்தொழில் செய்துகொண்டிருந்த என்தாய் இந்த அம்

ருதம்கண்டதினுலேயே விடப்பட்டாள்' என்று சொன்னர். ஆயிரம் கண்களையுடையதேவேந்திரன் இதைக்கேட்டு லக்தோஷமடைந்து கருடரைவெகுமதித்து, 'நல்லகார்யம், நல்ல கார்யம்' என்றுசொன் ஞன். இந்திரனிடம்காத்திருக்கும் ரிஷிகளும் தேவர்களனைவரும் விஸ்வேதேவர்களும் லந்தோஷம் அடைந்தனர். பரதச்ரேஷ்டனே! பிறகு, ரிஷிகள்தேவர்கள்எல்லாரும் மகிழ்ச்சியடைந்து இந்திரனைப் பார்த்து, 'கருடன் இங்கே வரம்பெறவேண்டும்' என்றுகூறினர். பிறகு, இந்திரன், 'இந்தப்பக்ஷிராஜனைகருடன் தானே வஸுதேவ ருடையக்ருஹத்தில் ஐம்புலன்களையும்கடந்தும் தாமரைக்கண்ணனை க்ருஷ்ணனைத் தர்மரக்ஷணம்செய்வதற்காகத் தன்னைநபாகத்தினுல் அவதரிக்கப்போகிறுன்' என்றுசொன்னன் பாண்டவச்ரேஷ்டனே! பக்ஷிராஜாவும் வைநதேயநும் லுபர்ணருமாயிருக்கும் கருடரைப் பற்றி உனக்குச் சொன்னேன். உனக்கு நன்மைபுண்டாகக்கடவது. பரதச்ரேஷ்டனே! இத்தக்கருடருடையசரித்ரம் சொல்லப்பட்டது. சிறந்தகைகளையுடையவனே! இன்னும் உனக்கு என்னசொல்வேன்?" என்றுசொன்னர்.

முப்பதாவது அத்யாயம்.

தான கர்மபலம். (தொடர்ச்சி.)

(வாக்குத்தத்தம்செய்துவிட்டு லோபத்தினுல் கொடாமலிருப்பவர்களின் நரகங்களின் கதை.)

யுதிஷ்டிரர் "பிதாமஹரே! இவ்வுலகத்தில் ப்ராம்மணர்களுக்கு வாக்குத்தத்தம்செய்துவிட்டு லோபத்தினுல் கொடாமலிருப்பவர்கள் எவ்வகையாகிறார்கள்? தர்மம்செய்பவரிற் சிறந்தவரே! சொன்னபடிகொடாமலிருக்கும் துராத்மாக்களான மனிதர்களின் தர்மத்தைப்பற்றி எனக்குத் தெளிவாகச் சொல்லக்கடவீர்' என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"சிறிதானலும் பெரிதானலும் கொடுப்பதாகவாக்குத்தத்தம் செய்ததைக் கொடாமற்போகிறவன் எவனே அவனுடையஎல்லா எண்ணங்களும் நபும்ஸகனது விவாஹம்போலப் பயனற்றவையாகும். பரதச்ரேஷ்டனே! அத்தப்பாபியானவன் என்றைத்தினம் பிறக்கிறு னே, என்றைத்தினம் இறக்கிறுனே அவற்றினிடையில் அவன் செய்தஹோமம் தானம் தவம் ஆயபுண்யங்கள் அனைத்தும் கெடு மென்று தர்மசாஸ்த்ரங்கள்தெரிந்தவர்கள் சொல்லுகின்றனர். பரதஸ்

அநுசாஸனபர்வம்.

ராஜ்டனே! தர்மசாஸ்த்ரம்தெரிந்தவர்கள் மிக்கவுக்குமுள்ளபுத்தி யினால் ஆராய்ந்து, 'கறுத்தகாதுள்ளகுதிரை ஆயிரத்தைத் தானம் செய்து இந்தப்பாவத்தினின்றும் விடுபடுகிறான்' என்றும் சொல்லு கின்றனர். பாரதனே! இந்தவிஷயத்தில் நரிக்கும் குரங்குக்கும் நடந்த லம்வாதமாகிய ஒருபழையசரிதரத்தையும் கூறுகின்றனர். வீரனே! அவ்விரண்டும் முந்தியமானிடஜன்மத்தில் கட்பாயிருந்து பிறகு நரியும் குரங்குமாகிய வேறுபிறப்பை அடைந்தன. ஆங்காங்கு கலந்துபேசுவதனால் அவற்றிற்கு ஞானமுண்டென்று ஸ்பஷ்டமுண்டா யிற்று. பிறகு மயானத்தின்கடியில் பிணங்களைத்தின்றுகொண்டிருக் கும் நரியைக்கண்டு, முன்ஜன்மம்மறவாத குரங்கு, 'மயானத்தில் நாற்றமெடுத்த அருவருப்பானபிணங்களைத் தின்னுகிறாயே? நீ முன் னர் மிகச்சொடியபாபகார்யம் என்னசெய்தாயோ?' என்றுகேட்டது. இவ்வாறு கேட்கப்பட்டநரி, வானரத்தைப்பார்த்து, 'ஓ! குரங்கே! நான் ஒருப்ராம்மணனுக்கு வாசகுதத்தம்செய்ததைக் கொடுக்க வில்லை. அதனால், இந்த இழிவானபிறப்பில் பிறந்திருக்கிறேன். ஆத லால், பசித்தபோது இவ்விதஉணவை உண்ணுகிறேன்' என்றுசொல் கிறது. அரசனே! திரும்பவும் நரி குரங்கைப்பார்த்து, 'நீ என்ன பாபகார்யம் செய்தாய்? எதனால குரங்காகப்பிறந்தாய்?' என்று கேட்டது. அதற்கு, குரங்கும், 'ப்ராம்மணர்களுடைய கனிகளைத் தின்று குரங்காயினேன். ஆதலால், தெரிந்தவன் ஒருபோதும் ப்ராம் மணன்பொருளை எடுக்கலாகாது; எல்லையைப்பற்றி விவாதம்வந்த போது ப்ராம்மணன்பொருளை விட்டுவிடவேண்டும்; வாக்குத்தத்தம் செய்ததைக் கொடுத்துவிடவேண்டும்' என்றுசொல்கிறது. அர சனே! இந்தவிஷயம் தர்மந்தெரிந்த ஒருப்ராம்மணன் புண்யமான பழையகதையைச சொல்லும்போது நான் கேட்டது. அரசனே! பாண்டவனே! ப்ராம்மணனைப்பற்றிய இந்தக்கவதையை முன்னர் வ்யாஸர்சொல்லும்போது திரும்பவும்கேட்டேன். 'ப்ராம்மணர்களின் தனத்தைஎடுக்கலாகாது. அவர்கள்விஷயத்தில் எக்காலமும் பொறுத் தல் வேண்டும். சிறுவராயினும் வறியராயினும் அசக்தர்களாயினும் அவர்களை அவமதிக்கலாகாது. 'கொடுக்கிறேன்' என்றுசொன்ன தைக் கொடுக்கவேவேண்டும். ப்ராமமணனுக்கு ஆசையை[1] உண்டாக்கலாகாது' என்பதுதான், எனக்கு ப்ராம்மணர்கள் எப் போதும் உபதேசிப்பது. அரசனே! முதலில் உண்டாக்கப்பட்ட

[1] ஆசையினால் தூண்டப்பட்டப்ராம்மணனை ஸமித்துக்களில் ஜ்வலிக்

[1] பலன்கிடைக்குமென்ற எண்ணம்.

கும் அக்னிபோலாகிறானென்று சொல்லப்படுகிறது. அரசனே! ப்ராம்மணன் முதலில் ஆசையுண்டானதனால் கோபித்து' எவ்வீனப் பார்ப்பனை அவனி விறகை அக்னி எரிப்பதுபோல் எரித்துவிடுவானல்லனை? பாரதனே! அவனே ஸந்தோஷமடைந்து வாக்கினால் ஆசீர்வாதம் செய்வானுயின் அந்தராஜாவின்தேசத்திற்கு மருந்து போலாகிறான். ப்ராம்மணன் கோபியாமையானது வேண்டினவற்றை யெல்லாம் அளிதனுப் புத்ரர்களையும் பேரர்களையும் பசுக்களையும் சுற்றத்தாரையும் மந்திரிகளையும் ராஜ்யத்தையும் தேசத்தையும் அபிவ்ருத்தி செய்யும். அரசனே! ஆயிரம்கிரணங்களையுடைய ஸூர்யனிடத்தில் ஒளிகாணப்படுவதுபோல இந்தச்சிறந்தமஹிமை பூமியில் ப்ராம்மணனிடத்தில் காணப்படுகிறது. பரதஸ்ரேஷ்டனே! யுதிஷ்டிரனே! ஆதலால், ஒருவன் நல்லஜன்மத்தை அடையவிரும்புவானுயின், 'கொடுக்கிறேன்' என்றுசொன்னதைக்கொடுக்கவேவேண்டும். ப்ராம்மணனுக்குக் கொடுப்பதனால் எல்லாவற்றிலும்மேலான ஸ்வர்க்கமானது முக்யமாக அடையக்கூடியதென்பது நிண்ணம். தானமென்பது உயர்ந்த கார்யமன்றே? இவ்வுலகத்தில் செய்யும்தானத்தினால் தேவர்களும் பித்ருக்களும் ஜீவிக்கின்றனர்; ஆதலால், தெரிந்தவன் ப்ராம்மணர்களுக்குத் தானங்களைச் செய்யவேண்டும். பரதஸ்ரேஷ்டனே! ப்ராம்மணன் முதன்மையான புண்யதீர்த்தமென்று சொல்லப்பெறுகிறான். எந்தஸமயத்திலும் ப்ராம்மணன் பூஜிக்கப்பெறுமல் செல்லலாகாது" என்றார்.

மூப்பத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தாழ்ந்தகுலத்துக்கு உபதேசிக்கலாகாதென்பதற்கு உதாரணமான ஒரு ரிஷி கூறின இவ்வரலாற்றின்கதை.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! ராஜரிஷியே! ஸ்ரேஷ்டனது ஸ்ரேஷ்டமாகிய காரணமாகக் கீழ்க்குலத்தோனுக்கு உபதேசம்செய்கிறவனெவனை அவனுக்குப் பாவம்உண்டாகுமா? உண்டாகாதா? இதைத் தெளிவாகச் சொல்லவேண்டுகிறேன். தர்மத்தின்வழி நுட்பமானது. அதில் மனிதர்கள் மயங்குகின்றனர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"அரசனே! இவ்விஷயத்தில் முன்னோர் ரிஷிகள் நியாயங்களையும் சாஸ்த்ரங்களையும் அனுஸரித்துப்பேசிக்கொண்டிருந்ததை நான்கேட்

டபடியே முறையாகச் சொல்லப்போகிறேன். என்சொல்லைக் கேள். ஜாதியில்இழிவானவனுக்கு உபதேசம்செய்யக்கூடாது. அப்படி உபதேசிப்பதில் உபதேசிப்பவனுக்குப் பெரும்பாவம் சொல்லப்படுகிறது. இவ்வுலகத்தில் சூத்ரனுக்கு வேதத்தை ஓதுவிக்கவும் யாகம்செய்விக்கவும்கூடாது. பரதசிரேஷ்டனேயுதிஷ்டிரனே! அரசனே! உபதேசிக்கத்தகாதவனுக்கு உபதேசிக்கும்விஷயத்தில் முன்னர் அழகான இமயமலைச்சாரலில பிராம்மணர்களின் ஆஸ்ரமத்தில்நடந்ததாகிய ஓர் உதாரணம் நான் சொல்லுகிறேன்; கேள். பரதசிரேஷ்டனே! அந்த இமயமலைச்சாரலில் அனேகவிருக்ஷக்கூட்டங்களும் பலவிதச்செடிகளும் கொடிகளும்நிரம்பினதும் மிருகங்களாலும் பக்ஷிகளாலும் அடையப்பட்டதும் வித்தர்கள் சாரணர்களென்னும் தேவஜாதியர்களின் ஸங்கீதசப்தமுள்ளதும் அழகாகப்புஷ்பித்த காடுகளையுடையதும் அனேகம்ப்ரம்மசாரிகளாலும் தபஸ்விகளாலும் ஸூர்யனுக்கும் அக்னிக்கும்ஒப்பானவர்களும் நியமங்களையும் உபவாஸங்களையும் த்யானத்தையும்விடாதவர்களும் தீக்ஷாபுள்ளவர்களும் ஆகாரத்தைக்கட்டினவர்களும் பரிசுத்தமனமுள்ளவர்களுமாகிய மஹானுபாவர்களான ப்ராம்மணர்களாலும் வாலகில்யர்களென்னும அனேகம்ஸங்யாவிகளாலும் வியாபிக்கப்பட்டதும் வேதகோஷங்கள் முழங்கிக்கொண்டிருப்பதும் பரிசுத்தமுமான ஓர்ஆஸ்ரமம உண்டு. தயாளகுணம்பொருந்தினஒருசூத்ரன் விருப்பங்கொண்டு அந்தஆஸ்ரமத்திற்கு வந்தான்; ரிஷிகளால் கௌரவிக்கவும்பெற்றான். பாரதனே! தேவர்களேப்போன்றவர்களும் பலவகையானதீக்ஷையைவகிப்பவர்களும் சிறந்தமஹிமையுள்ளவர்களுமான அம்முனிவர்களேக்கண்டு மகிழ்ந்தான். பரதசிரேஷ்டனே! பிறகு, அவனுக்குத் தவம்செய்ய எண்ணமுண்டாயிற்று. பாரதனே! அவன், [1]'குலபதியென்று சொல்லப்பட்டவரும் அந்தரிஷிக்கூட்டங்களுக்குத் தலைவருமான ஒருரிஷியின்பாதங்களேப்பிடித்துக்கொண்டு, 'ஓ! ப்ரும்மம்மணேத்தமரே! உங்களனுக்ரஹம்பெற்றுத் தவம்செய்யஎன்னுதுகிறேன். அதற்காகவந்தனைக்கு நீர் ஸங்யாஸம் கொடுக்கக்கடவீர். ஸாதுக்களிற்சிறந்தபகவானே! நான் ஜாதியில் சூத்ரன்; தாழ்ந்தவர்ணத்தான்; உங்களுக்குப்பணிவிடைசெய்யவிரும்புகிறேன். சரணமடைந்த என்விஷயத்தில் தயைசெய்யக்கடவீர்' என்றுகூறினன். அந்தக்குலபதியானவர், 'சூத்ரன் ஸங்யாஸிவேஷத்தைஎடுத்து இங்கேஇருக்கமுடியாது. சுசுரூஷையில் மட்டுமுள்ளவனாயிரு. அதற்குஎண்ணமிருந்தால் இருக்கலாம். சுசுரூஷையிலு

[1] ஆதிபர்வம் 2-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

லேயே மேலானலோகங்களையடைவாய். ஐயமில்லை' என்றுசொன்னார். அரசனே! அந்தரிக்ஷியினால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்தச் சூத்ரன், 'இதற்கு நான் என்னசெய்யலாம்? எனக்குத் தவம்செய்யத்தான் விருப்பமிருக்கிறது. ஆ! ஆ! தெரிந்தது. இப்படியே இருக்கட்டும். என துவிருப்பத்தை நானே செய்துகொள்வேன்' என்றுநினைத்தான். அவன் அந்தஆஸ்ரமத்திற்குத்தூரத்தில்சென்று ஒருகுடிசைகட்டிக்கொண்டான். பரதசிரேஷ்டனே! அந்தக்குடிசையில் திண்ணையையும் ஸமபூமிகளையும் தேவதாக்ருஹங்களையும்அமைத்துத் தவம்செய்துகொண்டு ரிஷியானான். ஸ்நானம்பண்ணி நித்யகர்மமுடித்துப் [1]பூதபலிகொடுத்து ஹோமத்தைச்செய்து தேவதார்ச்சனக்ருஹத்தில் தேவதையையும் பூஜித்தான். நிச்சயிததநியமந்தவறுமல் கனிகளைப்புஜித்துக்கொண்டு புலன்களையடக்கித் தனக்குக்கிடைத்த காய்கனிகளால் வந்தவிருந்தினர்களையும் முறைப்படி எக்காலமும்பூஜித்தான். அவனுக்கு இவ்வாறு மிகநீண்டகாலம்சென்றது. பிறகு, அவனுடையஅந்தஆஸ்ரமத்திற்கு ஒருரிஷியானவர் தற்செயலாய்வந்தார். (அவன்) அவரை நல்லவரவுவிசாரித்து விதிப்படி பூஜைசெய்து இனியுஷம்பாஷணைகள்ஸம்பாஷித்து வந்தகார்யத்தைவிசாரித்துத் திருப்திசெய்வித்தான். பரதசிரேஷ்டனே! வேந்தனே! சிறந்தப்ரம்மதேஜஸுள்ளவரும் தர்மத்தில்மனமுள்ளவரும் தவத்தில் உறுதியுள்ளவருமாகிய அந்தரிஷி அந்தச்சூத்ரனைப்பார்ப்பதற்கு அவனுஸ்ரமத்திற்கு இப்படியே அனேகம்தரம்போனார். பரதசிரேஷ்டனே! பிறகு, அந்தச்சூத்ரன், அம்முனிவரைப்பார்த்து, 'பித்ருக்களுக்கு ஸ்ராத்தம் செய்யப்போகிறேன். அவ்விஷயத்தில் நீர் எனக்கு அனுக்ரஹம் செய்யக்கடலீர்' என்றுகேட்டான். பரதசிரேஷ்டனே! அவனுக்கு அம்முனிவர், 'ஆகட்டும்' என்றே விடைகூறினர். அந்தச்சூத்ரன் ஸ்நானம்செய்து, அம்முனிவர்பாதத்துக்கு ஜலம்கொண்டுவந்தான். பரதசிரேஷ்டனே! பிறகு, காட்டிலுள்ளதர்ப்பங்களையும் காய்முதலியவற்றையும் பரிசுத்தமானபீடத்தையும் தர்ப்பாஸனத்தையும் கொண்டுவந்தான். பிறகு, அம்முனிவர், அந்தச்சூத்ரன் தெற்குமுகமாகத்திரும்பிக்கொண்டு தர்ப்பாஸனத்தை மேற்கேதலையாகப் போட்டது முறைத்தவறுஎன்பதைக்கண்டறிந்து, 'இந்தஆஸனத்தைக் கிழக்குத்தலையாகப் போடு. நீயும் வடக்குமுகமாகஇருப்பதுதான் சுத்தம்' என்று அவனுக்குச் சொன்னார். சிறந்தபுத்தியுள்ள அந்தச்சூத்ரன் அந்தரிஷியினால்சொல்லப்பட்ட தர்ப்பம் அர்க்யமுதலானவற்றை

[1] பிராணிகளுக்கன்னம்போடுவது.

யெல்லாம் அவர்விதித்தபடி ஸரியாகச் செய்தான். அவன் தர்மமார்க்கத்திலேயேயிருந்துகொண்டு சிராத்தகார்யங்கள் நடத்தும்போதெல்லாம் [1] ஹவ்யகவ்யங்களின்விதிகளைஅத்தையும் அம்முனிவர் சொன்னார். அம்முனிவர் அவனுடையபித்ருகார்யம் முடிந்தபின் அவனால் அனுப்பப்பட்டுத் திரும்பிச்சென்றார். வனத்தில் தவம்செய்துகொண்டிருந்த அந்தச்சூத்ரமுனிவன் நீண்டகாலத்துக்குப்பிறகு இறந்தான். அந்தப்புண்யத்தினால் அவன் ஒருமஹாராஜாவின்குலத்தில் சிறந்த பராக்ரமமுள்ளவனாகப் பிறந்தான். அப்பா! அந்தரிஷியும் அப்படியே மரணம்அடைந்தார். அந்தப்ராம்மணர், அவனுக்குப்பட்ட புரோஹிதகுலத்தில் பிறந்தார். இவ்வாறு ஒரேகாலத்தில் அவ்விரண்டு குலங்களிலும்பிறந்த அந்தச்சூத்ரன்ரிஷிஇருவரும் காலக்ரமத்தினால் வளர்ந்து கலைகளில் தேர்ந்தவரானார். ரிஷியானவர் அதர்வணவேதத்திலும் மற்றவேதங்களிலும் மிகத்தேர்ச்சியடைந்தார்; கல்பஸூத்ரங்களின்படி யாகமுதலான நிலையகள்செய்வதிலும் சோதிடசாஸ்த்ரத்திலும் மேன்மையை அடைந்தார். தத்வசாஸ்த்ரத்திலும் அவருக்கு மிக்கவிருப்பம் விருத்தியாயிற்று. அத்தராஜபுத்ரன் அவனதுதந்தையிறந்தபிறகு மந்த்ரிகளால் ராஜாவுக்குரியசடங்குகள் செய்விக்கப்பட்டு ராஜாவாகப் பட்டாபிஷேகம்செய்யப்பட்டான். ராஜ்யபட்டாபிஷேகம்செய்யப்பட்ட அரசனால் அந்தரிஷி புரோஹிதராக [2] அபிஷேகம்செய்யப்பட்டார். பரதசிரேஷ்டனே! அவ்வரசன் அவரைப் புரோஹிதராகவைத்துக்கொண்டு ஸுகமாகவிருந்தான்; ப்ரஜைகளைக்காப்பாற்றிக்கொண்டு தர்மமாக ராஜ்யத்தைஆண்டான். புண்யாஹவாசனமும் யாகமுதலான தர்மகார்யங்களும் நடக்கும்போதெல்லாம் அரசன் புரோஹிதரைப்பார்த்துப் புன்னகையாகவும் வெளிப்படையாகவும் பலமுறைசிரித்தான். தர்மராஜனே! இவ்வாறு அனேககாலங்களில் புரோஹிதரைப்பார்த்து நகைத்தான். அவ்வரசன் பலமுறைநகைப்பதையும் எப்போதும் புன்சிரிப்போடிருப்பதையும்கண்டு அந்தப்புரோஹிதர் கோபமுற்றார். பிறகு, யாருமில்லாதபோது அந்தப்புரோஹிதர் அரசனிடம்போய் இனியஸம்பாஷணைகளினால் அரசனை ஸந்தோஷப்படுத்தினர். பரதசிரேஷ்டனே! அப்போது அந்தப்புரோஹிதர் அரசனைநோக்கி, 'ஓ! சிறந்தபராக்ரமசாலியே! நீ எனக்கு ஒருவரம்தர நான் விரும்புகிறேன்' என்றுகேட்டார். அதைக்கேட்டஅரசன், 'ப்ராம்மணோத்தமரே! ஒருவர

[1] தேவர்க்கும் பித்ருக்களுக்கும்உரியஅன்னம்.

[2] நியமிக்கப்பட்டார்.

மென்ன ? நூறுவரங்களை உமக்குக் கொடுப்பேன். உம்மிடத்திலிருக்கும்நேசத்தினாலும் கௌரவத்தினாலும் உமக்குக்கொடுக்கத்தகாதது எனக்கு ஒன்றுமில்லை' என்றுசொன்னான். அதற்குப்புரோஹிதர், 'அரசனே ! நான் ஒருவரம்தான் கேட்கிறேன். உனக்கு என்னிடத்தில் அன்பிருக்குமாயின் நீ அம்மாத உடனே வாக்குத்தத்தம்செய் ; ஸத்யம்சொல் ; பொய்சொல்லாதே' என்றுசொன்னார். யுதிஷ்டிர ! அரசன், 'அப்படியே ஆகட்டும் ; தெரிந்தால் சொல்வேன். அறியாமல் சொல்லமாட்டேன்' என்று அவருக்கு மறுமொழிசொன்னான். பிறகு, புரோஹிதர், 'புண்ணியாஹவாசனமும் யாகமுதலானகிரியைகளும் தோஷசாந்திக்காகச்செய்யும் ஹோமங்களும் நடக்கும்போதெல்லாம் நீ என்னைப்பார்த்து ஏன் நகைத்துக்கொண்டேயிருக்கிறாய் ? நீசிரிப்பதனால் என்மனம் வைக்கப்படுகிறது. அரசனே ! உன்ஸுகத்தின்மேல் ஆணைவைத்திருக்கிறேன். நீ உண்மையல்லாததைச் சொல்லலாகாது. இதற்குக் காரணமிருக்கவேண்டும். நிஷ்காரணமாக உனக்குச் சிரிப்புவராது. எனக்குத் தெரிந்துகொள்வதில் ஆவல் மிகஅதிகமிருக்கிறது. எனக்கு உண்மையைச்சொல்' என்றுகேட்க, அரசனவன், 'பிராம்மணரே ! நீர் இவ்வாறு கேட்டபிறகு, சொல்லத்தகாததாயிருப்பினும் அதை அவசியம் சொல்லத்தான்வேண்டும். அந்தணரே ! ஒரேமனத்துடன் கேளும். ப்ராம்மணோத்தமரே ! பூர்வஜன்மத்தில்நடந்ததைத் தெரிந்துகொள்ளும். ப்ராம்மணரே ! எனக்குப் பூர்வஜன்மம் ஞாபகமிருக்கிறது. ஊக்கத்துடன் என்சொல்லைக் கேளும். நான் முன்ஜன்மத்தில் சூத்ரனாகப் பிறந்து தவம்செய்யஅசக்தியுள்ளவனாயிருந்தேன். ப்ராம்மணோத்தமரே ! நீரும் அப்போது உக்ரமானதவமுள்ளரிஷியாயிருந்தீர். குற்றமற்ற ப்ராம்மணரே ! ரிஷிசிரேஷ்டரே ! அப்போது நீர் என்மேல் அன்புகூர்ந்து என்னை அணுக்ரஹிப்பதில் எண்ணமுள்ளவராய் ஸ்ராத்தகார்யம்நடந்தபோது ஆஸனத்தினும் தர்ப்பங்களினும் ஹவ்யகவ்யங்களினும் எனக்கு ஸரியானமுறையைக் கற்பித்தீர். ஊதுசெய்கையிலுள்ள இத்தக்குற்றத்தினால் நீர் புரோஹிதராகப் பிறந்தீர். ப்ராம்மணோத்தமரே ! நான் ராஜனாகப் பிறந்தேன். காலத்தினுடைய வித்யாஸத்தைப் பாரும் எனக்கு உபதேசம்செய்ததற்காக உமக்கு இத்தப்பலன்கிடைத்தது. ப்ராம்மணோத்தமரே ! பெரியவரே ! இத்தக்காரணத்தினாலேதான் உம்மைப்பார்த்து நான் நகைப்பது. உம்மை அவமதிப்பதற்காகநகைக்கவில்லை. அந்தணரே ! நீர் ஆசாரியர். உமக்கு இத்தவித்யாஸம்நேர்ந்ததனால் எனக்குத் துயரமாயிருக்கிறது.

அதனால் என்மனம் கொதிக்கிறது. உமதுபூர்வஜன்மம் எனக்குத் தெரிந்திருப்பதனாலேதான் உம்மைநிர்ப்பந்தித்து நமக்கிசைந்தேன். உம் முடைய கடுந்தவம்கூட உபதேசகரினாலன்றோ இப்படிக் கெடுக்கப் பட்டது? நீர் புரோஹிதக்கணத்தைவிட்டு மறுபடியும் கூஷ்மத்தை அடையமுயலும். பிராம்மணரே! நிகிலிருந்த தின்னம்நிழிவான ஜன்மத்தை நீர் அடையலாகாது. நிர்யோபாரான்ப்ராம்மணரே! பொருள்களோ வாங்கிக்கொள்ளும் ஆத்மசக்தமுள்ளவராகக்கடவீர்' என்றுசொன்னான். பிறகு, ஆசனம் அலங்கரிக்கப்பட்ட ப்ராம்மணர் அனேகம பிராம்மணர்களுக்குப் பொருள் பூமி ரதங்கள் முதலிய வற்றையெல்லாம் தானமசெய்தார்; க்ஷத்ரியர்கள் எனனும் பிராயச் சித்தங்களையும் சான்றோர்நிலைசொன்னபடி ப்ராம்மணர்களைத்தமர்களால்செய்வித்துச்கொண்டு, தீர்த்தயாத்ரைசெய்து, ப்ராம்மணர்களுக் குக் கோதான முதலான பலதானங்களையும்செய்து, ஆத்மசுத்தியை அடைந்து, ஆத்மஜ்ஞானமுள்ளவராய், முன்னிருந்த ஆஸ்ரமத்துக்கே சென்று பெரும்தவம்செய்தார். ராஜரிஷ்ரேஷ்டனே! அதன்பிறகு, அந்தப்ராம்மணர் சிறந்ததவப்பயனைப்பெற்று அந்தஆஸ்ரமத்தில் வஸித்திருந்தவரெல்லாராலும் மதிக்கப்பெற்றிருந்தார்; ராஜரிஷ்டனே! ரிஷியாயிருந்தும் இவ்வாறு பிராம்மணத்வத்தை அடைந்தார். ஆதலால், தாழ்ந்தவர்ணக்காரருக்கு ப்ராம்மணன் உபதேசம்செய்யலாகாது. அரசனே! அந்தணனை உபதேசிப்பதை எப்போதும் விட்டுவிடவேண்டும். உபதேசம்செய்பவன் ப்ராம்மணன் துன்பம்அடைவான். ராஜரிஷ்டனே! பிராம்மணன் ஒருகாலும் ஆசைப்படலாகாது. தாழ்ந்தவர்ணக்காரருக்கு வாக்கினால் ஒன்றும்சொல்லலாகாது. ப்ராம்மணர், க்ஷத்ரியர், வைசியர்என்ற மூன்றுவர்ணத்தாரும்தாம் [1]த்விஜர்கள். அரசனே! இவர்களுக்குச்சொல்வதனால் ப்ராம்மணன் கெடான். ஆதலால், ஸாதுக்கள் யார்முன்னிலையிலும் பொய்யும் சொல்லலாகாது. தர்மத்தின்வழி நுட்பமானது; மனத்தாய்மையில் லாதவர்கள் அறியக்கூடாதது. ஆகலிலேதான் முனிவர்கள் சிரத்தை யுடன் மௌனத்திற்காகத் [2]தீக்ஷையைத்தெரிந்துகொள்ளுகின்றனர். அரசனே! சொற்குற்றத்திற்குப்பயந்துதான் அவர்கள் ஒன்றும்பேசவு தில்லை. தர்மத்தைச்செய்பவரும் குணங்கள்நிரம்பினவரும் உண்மை யையும் மனம்வாக்குக்காயங்களின் ஒற்றுமையையும் அடைந்திருப்ப வருமான ஸாதுக்களும் வாக்கினால் தவறுசெசொல்வதனால் இவ்வுல கத்தில் பாவத்தை அடைகின்றனர். அறியாமல் எவனுவதுஒருவனு

[1] இருபிறப்பாளர். [2] நியமம்.

க்கு உபதேசம்செய்யலாகாது. ஒருவனுக்கு உபதேசம்செய்வதனால், அவனுடையபாபத்தை ப்ராம்மணன் அடைவான். ஆதலால், தர்மத்தில் ஆசைப்படும் அறிவுள்ளப்ராம்மணன் ஆராய்ந்துபேசவேண்டும். பொருளாசையால்செய்யப்படும்உபதேசமானது உபதேசிப்பவனைக் கெடுத்துவிடும். ஒருவனால்விரும்பப்பட்டவன், தான்சொல்வதில்லையென்று ஸங்கல்பமிருப்பதாகச் சொல்லவேண்டும். தான் எதனால் தர்மத்தை அடையலாமோ அதுஉபதேசத்தைத்தான் செய்யலாம். உபதேசக்கைப்பற்றியதெல்லாம் உனக்கு என்னால் சொல்லப்பட்டது. பெருங்கஷ்டமிருப்பதனால் இவ்வுலகத்தில் உபதேசிப்பது பிழை" என்றார்.

நூற்றிரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(லக்ஷ்மி தானவஸிக்குமிடங்களையும் வஸியாதஇடங்களையும் ருக்மிணிக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஐயா! பரதஸ்ரேஷ்டரானபிதாமஹரே! எப்படிப்பட்டபுருஷர்கள் அல்லது ஸ்த்ரீகளிடத்தில், 'ஸ்ரீ' என்ற லக்ஷ்மியானவள் எப்போதும் குடியிருக்கிறாள்? அதை எனக்குச் சொல்லுவம்" என்றுகேட்க, பீஷ்மர், சொல்லலானார்.

"இந்தவிஷயத்தில் முன்நடந்திருக்கும்சரித்ரத்தை நான்கேட்டபடி உனக்குச்சொல்வேன். ப்ரத்யும்னனுடையதாயான ருக்மிணியானவள் க்ருஷ்ணனுடன் இருக்கையில் நாராயணரிடையமடியிலிருந்துகொண்டு ப்ரகாசிப்பவளும் தாமரைமலர்போன்றமுகமுள்ளவளுமாகிய ஸ்ரீதேவியைக்கண்டு ஆச்சர்யத்தினால் அழகானகண்கள்மலர்ந்தவளாய், 'மூன்றுலோகங்களுக்கும் நாதராயிருப்பவரின் காதலியே! ப்ருகுமஹரிஷியின் பெண்ணே! நீ எந்தப்பிராணிகளை அடைகிறாய்? யாரிடத்தில் நிலைபெற்றிருக்கிறாய்? [1] யாரை நீ அடைவதில்லை? உண்மையாக எனக்குச் சொல்லு' என்றுகேட்டாள். ருக்மிணிதேவியினால் கண்ணன்முன்னிலையில இவ்வாறுகேட்கப்பட்ட சந்திரன்போன்றமுகமுள்ள ஸ்ரீதேவியானவள் க்ருஷ்ணரைக்கூர்ந்து ப்ரியமாகஅழைத்து இன்சொல்லாகச் சொல்லலானாள். 'அழகும் தைர்யமும் வேலைத்திறமையுமுள்ளவனும் வேலைசெய்துகொண்டிருப்பவனும் கோபமில்

[1] 'காஸிநஸேவஸே' என்றபாடம் கொள்ளப்பட்டது.

லாதவனும் தெய்வபக்தியுள்ளவனும் நன்றிமறவாதவனும் ஐம்புலன்களையும் அடக்கினவனும் ஸத்வகுணம் எப்போதும் தலையெடுத்தவனுமாகிய மனிதனிடம் நான் நித்யமாவஹிக்கிறேன். தொழில்களைச் செய்யாதவனிடத்திலும் நாஸ்திகனிடத்திலும் ஜாதிலங்கரம்செய்பவனிடத்திலும் நன்றிகெட்டவனிடத்திலும் ஒழுக்கக்தவறினவனிடத்திலும் 'கொடுஞ்செய்கையுள்ளவனிடத்திலும் அடக்கமில்லாதவனிடதிலும் பெரியோரிடத்தில் பொறுமைப்படுகிறவனிடத்திலும் நான் வஹிப்பதில்லை. பராக்ரமமும் தேகவன்மையும் மனஉத்ஸாஹமும் கௌரவமும்குறைந்து எல்லாவற்றிற்கும்தயரப்பட்டும் கோபித்தும் நினைத்ததைசுடத்தமாட்டாமலுமிருக்கிற மனிதர்களிடத்தில் நான் இரேன். மனததில் மேன்மேல் பயணிக்காதாதவர்களும் இயற்கையிலேயே மனச்சோர்வை அடைந்தவர்களும் அல்பத்தில்திருப்திஅடையும் தன்மையுள்ளவர்களுமாகிய மனிதர்களிடம் நான் ஒருகாலும் நன்றாயிருப்பதில்லை. தர்மத்தை அனுஷ்டிப்பவரும் தர்மந்தெரிந்தவரும் பெரியோரை அடிப்பவரும் அடக்கமுடையவரும் பிறர்மனத்தை அறிகிறவரும் காலத்தைச் சிறிதும்வீணாக்காதவரும் தானத்திலும் சுத்தத்திலும் ஊக்கமுள்ளவரும் புலன்களையடக்குவதையும் தியானம்செய்வதையும் சுத்வஜ்ஞானத்தையும் விரும்புகிறவரும் கோவினிடத்திலும் ப்ராம்மணர்களிடத்திலும் பக்தியுள்ளவருமான மஹாத்மாக்களிடம் எப்போதும்வஹிக்கிறேன். அழகும் அடக்கமுமுடையவரும் தேவதைகளிடத்திலும் ப்ராம்மணர்களிடத்திலும் பக்தியுள்ளவரும் வீடுகளையும் பாத்ரங்களையும் சுத்தமாகவைத்துக்கொண்டு பசுக்களையும் தானங்களையும் ஊக்கத்துடன்பார்ப்பவருமாகிய பெண்களிடத்தில் எப்போதும் வஹிக்கிறேன். தர்மத்தை அறிந்தவரும் தம்தர்மத்தை அனுஷ்டிப்பவரும் அடக்கத்துடன் பெரியோர்களுக்குப் பணிவிடைசெய்வதில் ஊக்கமுள்ளவரும் சுத்தமனமும் பொறுமையும் ஸாமர்த்தியமுமுள்ளவருமான புருஷர்களிடத்திலும் பொறுமையும் அடக்கமும் ஸத்யமும் நல்லநியதிகையும் மனம் வாக்குக்காயங்களின் ஒற்றுமையுமுள்ளவர்களும் தேவர்களையும் ப்ராம்மணர்களையும்பூஜிப்பவர்களுமான பெண்களிடத்திலும் வஹிக்கிறேன். பண்டங்களைக்காப்பாற்றுதலும் ஆராய்ந்துசெய்யாதவளும் எப்போதும் கணவனுக்குவிரோதமாகப்பேசுகிறவளும் பிறர்வீட்டில்நோக்கமுள்ளவளும் நாணமற்றவளுமான பெண்ணை விட்டுவிடுகிறேன். ஆசையுள்ளவளும் காரியத்தில்நிதானமில்லாதவளும் தூர்வமுள்ளவளும் சுத்தமில்லாதவளும் கலகத்தில்மனமுள்ளவளும் தூக்

கம் அதிகரிப்பவளும் எப்போதும் படித்திருப்பவளுமானஸ்த்ரீயை விட்டுவிடுகிறேன். எப்போதும்உண்மையுள்ளவர்களும் கர்ட்சிக்கினியவர்களும் அழகும் குணங்களுமுள்ளவர்களும் சுற்புள்ளவர்களும் மங்களாசாரங்களுள்ளவர்களும் அலங்காரமுள்ளவர்களுமான மங்கையர்களிடம் வஸிக்கிறேன். வாகணங்களிடத்தும் கன்னிகைகளிடத்தும் ஆபரணங்களிடத்தும் யாகங்களிடதத்தும் மழைபொழியும்மேகங்களிடத்தும் புஷ்பித்ததாமரைக்கொடிகளிடத்தும் சரத்காலத்திய நக்ஷத்ரவிசைகளிடத்தும் யாணைகளிடத்தும் மாட்டுக்கொட்டில்களிடத்தும் ஆசார்களின்வீம்பாஸனங்களிடத்தும் புஷ்பித்தகருநெய் தல்களும் தாமரைகளுமுள்ள தடாகங்களிடத்தும் அன்னங்களும் அன்றிலளும் கூவுதலினல் விளங்குகின்றவையும் கரையிலுள்ளமரங்கள் ஜலத்தில்தழைந்திருப்பதலுல் சோபிப்பவையும் முனிவர்களாலும் ஸித்தர்களாலும் ப்ராம்மணர்களாலும் அடையப்பட்டவையும் எப்போதும் ஜலம்மிகநிரம்பினவையும் வீம்மங்களினலும் யாணைகளினலும் கலக்கப்பட்டஜலமுள்ளவையுமான நதிகளிடத்தும் நான் வஸிக்கிறேன். மதயாணையினிடத்திம சிறந்தகல்விஷத்தினிடத்தும் அரசனிடத்தும் வீம்மாஸனதத்தினிடத்தும் ஸாதுக்களிடதத்தும் எப்போதும் வஸிக்கிறேன். எந்தவீடுகளிலுள்ளஜனங்கள் காலத்தில் அக்னிஹோத்ரம்செய்துகொண்டிம கோக்களையும் ப்ராம்மணர்களையும் தேவர்களையும்பூஜித்துக்கொண்டிம புஷ்பங்களினல் அர்ச்சனைசெய்துகொண்டுமிருக்கின்றனரோ அந்தவீடுகளில் நிதயவாஸம்செய்வேன். எக்காலமும் வேதாத்யயனம்தவறுதப்ராம்மணர்களிடத்தும் எப்போதும் தம்கடமையில் ஊக்கமுள்ள க்ஷத்ரியர்களிடத்தும் பயிர்செய்வதில் ஊக்கமுள்ளவைஸ்யர்களிடத்தும் எக்காலமும் பணிவிடையில் ஊக்கமுள்ள சூத்ரனிடத்தும வஸிக்கிறேன். நாராயணரிடத்தில்மட்டும் முழுஅன்புடன் வேறெங்கும்மனம்செலுத்தாமல் சரீரமெடுத்து வஸிக்கிறேன். ஏனெனில், மிகப்பெரியதர்மமும் ப்ராம்மணர்களிடத்தன்பும் யாரும்விரும்பத்தகுதியும் அவரிடத்திலிருக்கின்றன. 'அரசியே! மற்றவிடங்களில நான் இவ்வாறு சரீரத்தைதொடிருப்பதுமில்லை. இவ்வாறு என்னல் பேசவும் முடியாது. எவனிடத்தில் என்கருத்தினல் நான் இருக்கிறேனோ அவன் புண்யம, புகழ், பொருள், இன்பம எல்லாவற்றிலும் மேலாகிறான்' என்றுள்" என்றுசொன்னர்.

மூப்பத்துமூன்றுவது அத்யாயம்.

தாநதர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(நன்றிகொன்றவனின் பிராயச்சித்தவிஷயமாக வத்ஸநாபரின்கதை)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! நன்மிமறக்கவர்களுக்கு ப்ராயசித்தமென்னவென்றுசொல்லும். ஐயா! நிறந்தலைகளோடையவரே! எந்தஅறிவீனர், தாய்தகைபையரையும் ஆசார்யரையும் அமைதிக்கின்மனரோ, மற்றுமவர் வெட்கமிலலாமல செய்நநன்றிமறக்கின்றனரோ அவர்களடையும்கதியை உண்மையாகக்கேட்க விரும்புகிறேன்" என்றுசொல்ல, பீஷ்மர் சொல்லதொடங்கினர்.

"அப்பா! நன்மிமறந்தாருக்குப் பலவர்ஷகாலம் நரகமே. தாய்தகைபையர்ஆசாரியர்களின சொலபடிநடவாதவர், பூச்சி புழு எறும்புஜாதிகளிலும் மரம்செடிமுதலியஸ்தாவரங்களிலும பிறக்கின்றனர். திரும்பவும் அவர்கள மானிடப்பிறப்பிலபிறப்பது அரிது. இந்தவிஷயத்திலும ஒருபழையசரிதரகதைதக் கூறுகின்றனர். அதைச்சொல்லுகிறேன். மிகத்தெரிந்தவரும் நியமதவறுதவருமாய வத்ஸநாபரென்னுமஹரிஷிஇருந்தார் அந்தப்ரம்மரிஷி புற்றுமூடும்படியிருந்து மிகவும்தபஞ்சசெய்தார். பரதபீஷ்மனே! அவர்தவம் செய்யும்போது தேவேந்திரன் பின்னலவளமேகங்களைக்கொண்டு மிகவும்அதிசயமானமழையைப் பொழிந்தான். அங்கே இந்திரன் ஏழுநாள் மழைபெய்வித்தான். அந்தப்ரம்மரிஷி கண்ணைமூடிக்கொண்டு அந்தமழையை ஏற்றுக்கொண்டார். குளிர்காற்றோடுகூடிய அம்மழைவிழும்போது இடியினால் அடிக்கப்பட்டபுற்றானது நானிகதறிக்கரைந்துபோயிற்று. புற்றுக்கரைந்துபோனபிறகு மஹாத்மாவானவத்ஸநாபர் மழையினால அடிக்கப்படும்போது தர்மதேவதை அவர்மேல் தயைசெய்து நல்லெண்ணம்வைத்தது; மிகதர்மிஷ்டராகத்தவம் செய்யும் அந்தப்ரம்மரிஷியை நினைக்கும்போது தர்மதேவதையின் இயற்கையில்அமைந்தநல்லெண்ணம் உடனே வெளிப்பட்டது. தர்மதேவதை அழகுள்ளதும் மிகப்பெரியமான எருமையின்வடிவமாகத் தண்ணீச்செய்துகொண்டு வத்ஸநாபரைக்காப்பதற்காக நாலு கால்களாலும் மேலேகின்றது. தர்மதைதக் காப்பவரிற்சிறந்த பரதபீஷ்மனே! காற்றோடுகூடியமழையுந்தவுடனே தர்மதேவதை எருமை வடிவத்துடனேயே புற்றைவிட்டு மெள்ளவிலகிச்சென்றது. மழை ஓய்ந்தபோது அந்தச்சிறந்ததவமுள்ளவத்ஸநாபர் திசைகள்திறந்திருப்பதையும் மலைச்சிகரங்களையும் பூமியெல்லாம் ஜலத்தினல்நனைக்கப்

பட்டுத் தடாகங்களெல்லாம் தண்ணீர்நிரம்பியிருப்பதையும்கண்டு மகிழ்ந்தார். அவர் ஆச்சர்யத்துடன், 'நான் யாரால் இந்தமழையினின்றும் காப்பாற்றப்பட்டேன்?' என்றுநினைத்தார்; உடனே அருகில்நின்ற ஏருமையைக் கண்டார். 'விலங்குஜாதியிலேயும் தர்மத்தில் அன்புள்ளது காணப்படுவது என்னவியப்பு! இந்தப் புண்யமானமஹிஷம் இதோ கற்பாறையின்மேல் நிற்கிறது; ஆனால் பருத்து வன்மையுள்ள தாயிருக்கிறது. இதனிடம் மாம்ஸம் மிகுதியாயிருக்கும்' என்று நினைத்தார். மறுபடியும் அம்முனிவருக்குத் தர்மத்தைப்பற்றியஎண்ணம் பின்வருமாறு உண்டாயிற்று. 'நன்றிமறந்தவரும் நம்பினவனைக் கொன்றவரும் நரகமடைவார்கள். நன்றிகெட்டவர்களுக்கு ப்ராணனை விட்டாலன்றி வேறுஎவ்வகையிலும் பரிகாரம் எனக்குத் தெரியவில்லை. மாதாபிதாக்களைக்காப்பாற்றுமிடமும், குருதக்ஷிணைகொடுமிடமும் நன்றிமறந்தும்இருப்பதற்கு மரணம்தான் முடிவானப்ராயச்சித்தம் என்று தர்மசாஸ்த்ரமறிந்தவர் சொல்லுகின்றனர். அப்படிச் செய்யநினைத்தாலும் பிறர்செய்வதைமறுக்காமலிருந்தாலும் அது பெரியஉபபாதகம். ஆதலால், ப்ராயச்சித்தம்செய்வதாக ப்ராணனை விடுவேன்' என்றுநினைத்தார். இவ்வாறுப்ராயச்சித்தம்செய்யக்கருதினதில் தேகப்பற்றைவிட்டு மேநமலைச்சிகரம்சென்று தேகத்தை விட முயற்சிபண்ணிய தர்மந்தெரிந்தமுனிவர் தர்மதேவதையினால் கையில் பிடிக்கப்பட்டார். தர்மதேவதை, 'ஓ! வத்ஸநாபரே! மிகத் தெரிந்தவரே! அனேகஸாத்ரங்களைஜீவிப்பவரே! பற்றைவிட்டுத் தேகத்தைவிடுவதனால் உம்மிடத்து ஸந்தோஷம்அடைந்தேன். தர்மத்தைக்காப்பாற்றுகிறவர்களனைவரும் நன்மையையும் தீமையையும் இவ்வாறே ஆலோசிப்பர். ஆனால், உமக்கு ஒப்பு யாருமில்லை. உம்முடையமனம் தடைப்படவில்லை. நீர், யாதொருகெடுதலுமின்றித் தர்மத்தை முழுதும்நடத்தச்சக்தியுள்ளவர். மிகத்தெரிந்தவரே! நீர் பரிசுத்த ஆத்மாவாகிறீர். நீர் நீண்டகாலம் ஜீவிப்பவராகத் திரும்பிச் செல்லும்' என்றுசொல்லிற்று" என்றார்.

முப்பத்துநான்காவது அத்யாயம்.

தான தர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்த்ரீபுருஷர்களின்கேர்தைகளில் யாருக்குஸுகமதிகமென்
பதைப்பற்றிய பீஷ்மனின்கதை)

யுதிஷ்டிரர், "அரசரே! ஸ்த்ரீபுருஷர்களின்புணர்ச்சியில ஸ்பரிசலுக்ஷம் யாருக்கு அதிகமாயிருக்குமென்னும் ஐயத்துக்கு ஸரியான நிச்சயம்சொல்லக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்தவிஷயத்தில் பங்காஸ்வனனென்னும் அரசன்மேல் இந்திரனுக்குப் பகையுண்டானதைப்பற்றிய ஒருபுராதனசரித்திரத்தைச்சொல்லுகின்றனர். ஓ! புருஷஸ்ரேஷ்டனே! முன்னர் மிக்கதர்மிஷ்டனான பங்காஸ்வனனென்னும் ஒருராஜரிஷி இருந்தான். மிக்கபலசாலியான அந்தராஜரிஷி புத்ரனில்லாமலிருந்ததனால் புத்ரேஷ்டிகருதி அக்னிஷ்டுதம் என்றபெயருள்ளதும் இந்திரனுக்குத்ருப்திகரமுமான யாகத்தைச் செய்தான். அந்தயாகம் மனிதர்களுக்கு ப்ராயச்சித்தத்திற்காகவும் புத்ரபலனுக்காகவும் விதிக்கப்பட்டிருக்கிறது. சிறந்தமஹிமையுள்ளவனும் தேவர்க்கதிபதியுமானஇந்திரன் அந்தயாகம்நடப்பதையறிந்து நியமந்தவறாதஅந்தராஜரிஷியின்வழுவுதல் தேடிக்கொண்டிருந்தான். அரசனே! அம்மஹாத்மாவினிடம் இந்திரன் தவறுதலைக் கண்டுபிடிக்கவில்லை. பிறகு, சிலகாலத்திற்கெல்லாம் அவ்வரசன் வேட்டைக்குச் சென்றான். இந்திரன், 'இதுஸமயம்' என்றுநினைத்து அவ்வரசனைப் புத்திமயங்கச்செய்தான். இந்திரனால் புத்திமயக்கப்பட்ட அந்தராஜரிஷி ஒற்றைக்குதிரையோடுதிரிந்து திசைதெரியாமல் பலதாகங்களினால் வருத்தமுற்றான். அரசனே! அவன் இங்குமங்கும்திரிந்து களைப்பினாலும் தாகத்தினாலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் சிறந்த தண்ணீர்நிரம்பின ஓர் அழகியதடாகத்தைக் கண்டான். அப்பா! அவன் அந்தத்தடாகத்தில் இறங்கிக் குதிரையைத் தண்ணீர்குடிப்பித்தான். தண்ணீர்குடித்தகுதிரையை மரத்தில்கட்டி அந்தராஜரிஷிரேஷ்டன் தானும்அதிலிறங்கி ஸ்நானம்செய்தவுடன் பெண்ணுருவம்அடைந்தான். அந்தராஜரிஷிரேஷ்டன் தான் பெண்ணாக்கப்பட்டதைக்கண்டு வெட்கிமனத்தில் வலிமைமிகுந்த பொறிகளும் புத்தியும்கலங்கி, 'நான் எப்படிக் குதிரைமேல் ஏறுவேன்? எப்படி ஊருக்குப்போவேன்? அக்னிஷ்டுதமென்னுமியாகம்செய்து என்தர்மபத்னியினிடம் மிக்கபலசாலிகளான நூறுபுதல்வர்கள் பிறந்திருக்கின்றனரே. அவர்களுக்கும் என்சொந்தமனிசிக்கும் நகரத்திலும் தேசத்திலுமுள்ள ஜனங்களுக்கும் நான் என்னசொல்வேன்? மென்மையும் இனிப்பும் பிறருக்குட்படுதலும் நகையும் விளையாட்டுமுதலியவையும் தேகஒளியும் பெண்களின்சிறப்பில்லாசையும் பெண்களின்குணங்களென்று தர்மங்களின்உண்மைகளைத்தெரிந்தரிஷிகள் சொல்லுகின்றனர். தேகப்பயிற்சியும் வன்மையும் சூரத்தனமும் புருஷனுக்குரியகுணங்கள். எனக்குப்புருஷத்தனம்போய்விட்டது. ஏதனாலேயோ பெண்தன்மையுண்டாயிற்று. 'பெண்ணாயிருப்பதனால் நான் மறுபடியும் எப்படி,அந்தக்குதிரையேறக்கூடும்?' என்றுநினைத்தான். அப்பா! பெ

அந்தராஜரிஷ்டன் மிக்க ஸ்ரீகாமத்தின் குதிரையின்மேலேறி ஊருக்குத்திரும்பிவந்தான். பிள்ளைகளும் பெண்ணும் வேலைக்காரர்களும் பட்டணத்தோரும் தேசத்தாரும் அவனைக்கண்டு, 'இதுஎன்ன' என்று மிக்கவியப்புற்றனர். பேசுதிறமையில்லாதவனும் பெண்ணுருவங் கொண்டவனுமான அந்தராஜரிஷி, 'நான் நினைத்தபோதெல்லாம் வரவேட்டையாடப்போனேன். தெய்வத்தினால் மதிமயங்கித் திரிந்துகொண்டு பயங்கரமான காட்டில் நுழைந்தேன். மிகுபயங்கரமான காட்டில் தண்ணீர்விருப்பத்தினால் வருத்தப்பட்டு அறிவுதப்பியநான் பார்க்கமிகஅழகியதும் பறவைகளினால் சூழப்பட்டதுமான ஒருதடாகத்தைக் கண்டேன்; அதில் ஸ்நானம்செய்ததும் பெண்ணுமானேன். அது தெய்வத்தினாலென்பது நிச்சயம். ஸந்தேஹமில்லை. மக்களிடத்தும் மஹிஷிகளிடத்தும் பொருளிலும் எனக்கு ஆசைதீரவில்லை' என்றுசொன்னான். பெண்ணுருவடைந்த அந்தராஜரிஷ்டன் அதன் பிறகு பேர்களையும் கோத்திரங்களையும்சொல்லித் தன்மனைவிகளையும் மந்திரிகளையும் அழைத்துத் தன்புத்திரர்களைப்பார்த்து, 'பிள்ளைகளே! வனம்போகப்போகிறேன். நீங்கள் அன்புடன் ராஜ்யத்தை அனுபவியுங்கள்' என்றுசொன்னான். அவ்வரசன் நூறுபுத்திரர்களுக்கும் ராஜ்யபட்டாபிஷேகம்செய்வித்துக் காடுசென்றான். அந்தப்பெண்ணை அரசன் காட்டிற்குச்சென்று ஓர்ஆச்ரமத்தில் ஒருரிஷியை அடைந்தான். ஆச்ரமத்தில் அந்தரிஷியினால் அந்தப்பெண்ணுக்கு நூறுபுத்திரர்கள் உண்டாயினர். பிறகு, அவள் அந்தப்புத்திரர்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு முன்தியபுத்திரர்களிடம்வந்து, 'நீங்கள், ஆணுயிருந்தபோது எனக்குப் பிறந்தபிள்ளைகள்; இந்த நூற்றுவரும் பெண்ணைபிறகு பிறந்தவர்கள். புதராகளே! நீங்களனைவரும் ஸஹோதரஸ்நேஹத்துடன் ஒரேஇடத்தில் ராஜ்யத்தை அனுபவியுங்கள்' என்றுசொன்னாள். பிறகு, அந்தஸஹோதரர்கள் சேர்ந்து ராஜ்யத்தை அனுபவித்தனர். கோபத்தினால் துடித்துக்கொண்டிருந்த தேவேந்திரன், அவர்கள் ஸஹோதரஉணர்ச்சியோடு ஒயர்ந்தராஜ்யத்தைஅனுபவிப்பதைக்கண்டு, 'இந்தராஜரிஷிக்கு நான்செய்தது உதவியானதேயன்றித் தீங்காகவில்லையே' என்றுநினைத்தான். தேவேந்திரனை இந்திரன், உடனே ப்ராம்மணவடிவங்கொண்டு, அந்தநகரத்துக்குச்சென்று, அந்தராஜாவின்முன்தியகுமாரர்களைக்கண்டு, 'ஒருதந்தைக்குப்பிறந்த ஸஹோதரர்களுக்கே ஸஹோதரஸ்நேகமிருப்பதில்லை. தேவர்களும் அஸுரர்களும் கச்யபரின்புத்திரர்கள்தாம். கச்யபபுத்திரர்களானதேவாஸுரர்கள், ராஜ்யத்தைப்பற்றியே கலகப்பட்ட

னர். நீங்கள் பங்கால்வனனுக்குப்பிறந்தவர்கள். மற்றவர்கள் ரிஷிக்குப்பிறந்தவர்கள். உங்கள்பிதாவின் ராஜ்யத்தை ரிஷியின்பிள்ளைகள் அனுபவிக்கிறார்கள்' என்று மித்ரபேதஞ்செய்தான். இந்திரனல்கலைக்கப்பட்டஅந்தப்புத்ரர்கள் யுத்தத்தில் ஒருவரையொருவர் கொன்றனர். அந்தரிஷிபத்னியானவள் அதைக்கேட்டு மனம்கொதித்து அழுதாள். அப்போது இந்திரன் ப்ராம்மணரூபமாக அவளருகில் வந்து, 'சிறந்தமுகமுள்ளவளே! எந்தகாரணத்தினால் வருத்தப்பட்டு நீ அழுகிறாய்?' என்றுகேட்டான். அந்தப்பெண் அந்தப்ராம்மணனைக்கண்டு அழுதுகொண்டே, 'ப்ராம்மணரே! எனது இருநூறுபிள்ளைகளும் காலத்தினால் அழிக்கப்பட்டனர். ப்ராம்மணரே! நான் முன்னே ராஜனுடனிருந்தேன். ப்ராம்மணரைத்தவிர' அப்போது அழகியரூபமுள்ள நூறுபிள்ளைகள் எனக்குப்பிறந்தனர். ப்ராம்மணரைத்தவிர! ஒருகால் நான் வேட்டைக்குப்போயிருந்தபோது பெருங்காட்டில்திரிந்து ஒருதடாகத்தில் ஸ்நானம்செய்தவுடன் பெண்ணுருவிட்டேன். அதன்பிறகு, பிள்ளைகளை ராஜ்யத்தில்வைத்துவிட்டுக் காடு புகுந்தேன். ப்ராம்மணரே! பெண்ணுருப்போனதனக்கு ஓர்ஆஸ்ரமத்தில் மஹாத்மாவான ஒருரிஷியிடலை நூறுபிள்ளைகள் பிறந்தனர். அவர்களை நான் பட்டணத்தில்கொண்டுபோய்ச்சேர்த்தேன். ப்ராம்மணரே! காலம்வந்ததினால் அந்தப்புத்ரர்களுள் பகையுண்டாயிற்று. ப்ராம்மணரே! தெய்வத்தினால்பீடிக்கப்பட்டநான் இதற்காகத் துயரப்படுகிறேன்' என்றுசொன்னாள். இந்திரன்துயரப்படும் அவளைக்கண்டு, 'அம்மா! முன்னே யஜமானனையிருந்தவண்ணமழையாமல் இந்திரத்வேஷமுள்ளவராகத்தைச்செய்து எனக்குத் தாங்கமுடியாததுயரத்தை நீ உண்டுபண்ணினாய்; மதிகெட்டவளே! நான் இந்திரன்; நீசெய்தபகையைத் தீர்த்துவிட்டேன்' என்ற கடினமானசொல்லைச் சொன்னான். அந்தபங்காஸ்வனனென்னும் ராஜரிஷி இந்திரனைப்பார்த்து அவன்பாதங்களில் தலையால்வணங்கி, 'தேவேந்திரனே! நான் புத்ரனைவிரும்பி அந்தயாகத்தைச் செய்தேன். அந்தவிஷயத்தில் தயைசெய்து என்னை க்ஷமிக்கவேண்டும்' என்றுசொன்னான். அவன்காலில்விழுந்ததனால் ஸந்தோஷமடைந்த தேவேந்திரன் அவனுக்கு வரம்கொடுப்பதற்காக, 'ஓ! அரசனே! உனக்கு எந்தப்பிள்ளைகள் பிழைக்கவேண்டும்? ஆணையிருக்கையில் பிறந்தவர்களா? பெண்ணையிருக்கையில் பிறந்தவர்களா? எனக்கு இதைச்சொல்' என்றுகேட்டான். அந்தரிஷிஸ்த்ரீ உடனே இந்திரனைப்பார்த்துக் கைகூப்பிக்கொண்டு, 'இந்திரனே! எனக்குப் பெண்ணையிருக்

கைபில்பிறந்தபிள்ளைகள் ஜீவிக்கவேண்டும்' என்றுசொன்னாள். இந்திரன் ஆச்சர்யமடைந்து அந்தஸ்த்ரீயைப்பார்த்து, 'உனக்கு ஆண் யிருக்கையில பிறந்தபிள்ளைகள் வெறுக்கத்தக்கவரானதேன்? அவாகளிடத்திருப்பதைவிட பெண்ணாகயில் பிறந்தபிள்ளைகளிடத்தில் அதிகமான அன்பு எப்படி? அதற்காரணத்தைக் கேட்கவிரும்புகிறேன். எனக்கு நீ சொல்லவேண்டும்' என்று மறுபடியும் கேட்டான். அதற்கு அந்தஸ்த்ரீ, 'இந்திரனே! ஸ்த்ரீக்குப் புத்திரஸ்நேஹமும் அதிகம் புருஷனுக்கு அப்படியில்லை. ஆதலால், ஸ்த்ரீயாயிருக்கையில பிறந்தவர்கள் ஜீவிக்கவேண்டும்' என்றுசொன்னாள். இவ்வாறுசொல்லக்கேட்ட இந்திரன், தயையுடையவனாகி, 'உண்மை பேசுகிறவனே! உன்னுடையபுதரர்களெல்லோரும் இப்போது ஜீவிக்கட்டும். அரசர்க்கரசனே! நல்லதாழ்ள்ளவனே! உனக்கு ஆண் தன்மைவேண்டுமா? பெண்தன்மைவேண்டுமா? 'உனக்கு எதுவேண்டுமோ அந்தவரத்தையென்னிடத்தில்கேள்' என்றுசொன்னான். அந்தஸ்த்ரீ, 'இந்திரனே! பெண்தன்மையைத்தான்விரும்புகிறேன். ஆண் தன்மையை விரும்பவில்லை' என்றுசொன்னாள். அவளால் இவ்வாறு சொல்லப்பட்டதேவேந்திரன் அவளைப்பார்த்து, 'அரசனே! ஆண் தன்மையைவிட்டுப் பெண்தன்மைக்குஆசைப்படுவதெப்படி?' என்று கேட்க, பெண்தன்மையிலிருக்கும ராஜரிஷியிடன், 'இந்திரனே! ஸ்த்ரீபுருஷர்களின்சேர்க்கையில ஸ்த்ரீக்குத்தான் எப்போதும் இன்பம்அதிகம். இதற்காரணம்பற்றி ஸ்த்ரீதன்மையையே நான் வேண்டுகிறேன். தேவரிஷிஸ்ரேஷ்டனே! உண்மையாகவே ஸ்த்ரீயாயிருப்பதில் எனக்கு அதிகஸந்தோஷம் இதஸ்த்ரீத்தன்மையிலேயே திருப்தி அடைந்திருக்கிறேன். தேவராஜனே! நீசெல்லலாம்' என்று மறுமொழிசொன்னான். தேவேந்திரன், 'அப்படியே இருக்கட்டும்' என்றுசொல்லி, அந்தப்பெண்ணினிடம்விடைபெற்றுக்கொண்டு ஸ்வர்க்கத்துக்குச் சென்றான். மஹாராஜனே! "இவ்வாறு பெண்ணுக்குத்தான் அதிகஇன்பமென்றுசொல்லப்படுகிறது" என்று கூறினர்.

முப்பத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மப்பர்வம். (தொடர்ச்சி.)

(தீவினைதனைத்தீர்த்து நல்வினைகளைச் செய்பவர் கடவுளினருளைப்பெறுவரென்பது.)

யுதிஷ்டிரர், "இவ்வுலகவாழ்க்கையில் தனக்கு நன்மையை விரும்பினமனிதன் என்னசெய்யவேண்டும்? எப்படிப்பட்டஒழுக்க

முள்ளவனுகி உலகவாழ்க்கையை எப்படிநடத்தவேண்டும்?' என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"ஒருவன் தன்தர்மங்களைச்செய்து பரிசுத்தமானமனத்துடன் நாராயணரிடத்திலும் சங்கரரிடத்திலும் பக்திவைத்து லாதுக்களைப் பூஜித்து த்யானித்து ஜபம்செய்யவேண்டும். தேகத்தினால்செய்யப்படும் மூன்றுவகைக்கர்மங்கள் வாக்கினால்செய்யப்படும் நான்குவகைக் கர்மங்கள் மனத்தினால்செய்யப்படும் மூவகைக்கர்மங்கள் ஆகப்பத்து வகைக்கர்மங்களையும் விடவேண்டும். உயிர்களைப்போக்குவது திருடுவது பிறர்மனைவிகளைத்தொடுவது ஆகிய தேகத்தினால்செய்யப்படும் பாவங்கள் மூன்றையும் முற்றும் விடவேண்டும். அரசர்க்கரசனே! கெட்டபேச்சு, கடுஞ்சொல், கோட்சொல்வது, பொய்சொல்வது இந்நான்கையும் வாக்கினாலும செய்யலாகாது; மனத்தில் நினைக்கவு மாகாது. பிறர்பொருளைவிரும்பாமை, எல்லாப்பிராணிகளிடத்தும் அன்பு, புண்யபாபங்களுக்குப் பலன்உண்டென்றநம்பிக்கை இம் மூன்றுவகைக்கர்மங்கள் மனத்தினாலசெய்யவேண்டியவை. ஆதலால், மனிதன் வாக்கினாலும காயத்தினாலும மனத்தினாலும கெட்டகர்மத் தைச் செய்யலாகாது. இவ்வுபாயத்தில் நல்லகர்மங்களேயேசெய்து நாராயணரிடத்தில்பக்தியுள்ளவன் அவருடைய அநுக்கிரஹத்தினால் யாருக்குந்தெரியாதமேலானபதத்தை அடைவான்" என்றார்.

முப்பத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்ரர், உலகவாழ்க்கையிலுள்ளதுக்கத்தை எடுத்துச்சொல்லி, பீஷ்மரை வைஷ்ணவதர்மத்தைப்பற்றிச் சொல்லும்படி கேட்டது.)

யுதிஷ்டிரர், "ஐயா! பிதாமஹரே! இவ்வுலகத்தில் மேலான பொருளாயுடையாமலிருக்கும்என்னதுரித்தம் பரிதபிக்கிறது. பாவங் களைப்போக்குகிறவராகிய நாராயணரைத்தவிரத தாவரமும்ஜங்கமமு மாகிய இவ்வுலகமுழுத்தும் அநித்யமாகத்தோன்றுகிறது. தாமரைக் கண்ணராகிய நாராயணரிடமே உலகதத்துவஞ்செல்லாம் அந்தர்யாமியான புருஷர். குற்றமற்றவரே! அந்தநாராயணராகவேயிருக்கும் இந்தக் கண்ணபிரானுடையமகிமையையாவும் உம்மால் கேட்கப்பட்டதாக விருக்குமே" என்றுசொல்ல, பீஷ்மர், சிறந்த அறிவுள்ளயுதிஷ்டி ரனே! யுத்தத்தில் என்னால் காணவும்பட்டது" என்றுசொன்னர்.

பிறகு, யுதிஷ்டிரர் சொல்லலானார். "ராஜஸ்ரேஷ்டரே! ராஜதர்மங்களை நீத்தும், நாரதரால்சொல்லப்பட்ட பூர்வசரித்திரமஹத்தும், [1]மூன்று விதத்துன்பங்களையும்போக்குவதும் ரஹஸ்யமுமாகிய நாராயணருடையசரித்திரமும் உம்மிடத்திலிருந்து நான் கேட்டேன். மஹாபாவரே! என்மேல் அனுக்ரஹம்வைத்து ஒரேதெய்வப்பற்றுள்ளவர்களின் தர்மங்களும் நியமங்களும் சுருக்கியும் விரித்தும் உம்மால் சொல்லப்பட்டன. அந்தப்பகவானே உலகத்தைக்காப்பவரென்பதும் அதிதிகளைப்பூஜிக்கும்விதியும தவங்களும் அனுஷ்டானங்களும் வேதவாக்யங்களில் நன்றாகக்கூறப்பட்டவையும் பொருள்களினுள்நிறைவேற்றத்தக்கவையும் அக்னிஹோத்ரத்தை அனுஸரிப்பவையுமான வாஜபேயமுதலியயாகங்களும் தவத்திலிருக்கும் .ப்ராம்மணர்களுக்குரிய பலவகை ஜபங்களென்னும்யாகங்களும் ப்ராம்மணர்கள்செய்யும் பதினெருவகை [2] ஹவிர்யாகங்களும் அவற்றின்பலன்களின்வேறுபாடுகளும் வானப்ரஸ்ததர்மங்களும் சொல்லப்பட்டன. சிறந்தஅறிவுள்ளவரே! ஒவ்வொருநாளும் ப்ராமமணர்கள்செய்யத்தக்க [3] பஞ்சமஹாயஜ்ஞங்களும் வேதஸ்ருதிக்கேட்பதனாலுண்டாகும் புண்யங்களும் ப்ரம்மயஜ்ஞத்தின்பலனும் வேதத்திற்சொல்லப்பட்டவ்ரதங்களின்விதிகளும் வேதோக்தங்களான நித்யகர்மங்களும் [4] ஸ்வாஹா [5] ஸ்வதா இவற்றைச்சொல்லுபதும் யாகமுதலியவற்றிற்கும தானதர்மங்களுக்குமுள்ளபயன்களும் நான்குஆஸ்ரமங்களில் ஒன்றுக்குமேல்ஒன்றை அடைவதினுள்ளபலனும்தனித்தனியே ஒவ்வோர்ஆஸ்ரமத்தில்மட்டும் நிலைபெற்றிருப்பதின்பயனும் மாஸநதியும் பக்ஷத்தினும் உபவாஸமிருப்பதின்பயனும் தெளிவாகஉரைக்கப்பட்டன. ஆகாரத்தைவிட்டவர்களுக்கும் பஞ்சாக்னிமத்தியில் தபஞ்செய்பவர்களுக்கும் வீரமார்க்கமாகிய யுத்தமரணத்தை அடைந்தவர்களுக்கும் நித்யம் அக்னிஹோத்ரம்செய்பவர்களுக்கும் உள்ளலோகங்களும் சொல்லப்பட்டன. வேனிற்காலத்தில் பஞ்சாக்னிமத்தியிலிருந்தும் பனிக்காலத்தில் தண்ணீரிலிருந்தும் மழைக்காலத்தில் தரையிற்படுத்தும் தவம்செய்பவரின் தவப்பயனும் சொல்லப்பட்டது. இவ்வுலகத்தில் தேசஸஞ்சாரம்செய்யும் ப்ராம்மணர்களுக்குச்சொல்லியபலனும் அன்

---

[1] (1) ஆதியாத்மிகம் = தேகத்தில்உண்டாகும் பிணிமுதலியன. (2) ஆதிதெய்விகம் = மழை, காற்று, இடிமுதலியன. (3) ஆதிபௌதிகம் = தேள், பாம்புமுதலிய பராணிகளாலுண்டாகும் தின்பமுதலியன.

[2] அன்னஹோமத்தோடுகூடியயாகங்கள்.
ஆதிபர்வம் 259-ம் பகுதி குறிப்பிற்காண்க.

[3] தேவர்க்குக்கொடுப்பது. [4] பித்ருக்களுக்குக்கொடுப்பது.

னதானமுதலானதானங்களின்பலனும புண்யதீர்த்தங்களிலலலாவற்றி லும் ஸ்நானம்செய்யும் மனிதர்களுக்குண்டாகுபலனும தியாயமாகக் குடிகளைக்காப்பாற்றும் அரசர்களின்தர்மங்களும சொலலப்பட்டன. பேசுகிறவரிற்சிறந்தவரே! உலகத்தில ஸ்தயஞ்சொல்லுதலவர்களுக்குமம, தீர்த்தயாத்திரைசெயது சிறபபாயடலவர்களுக்குமம, தாயதகுகையங்கு கும் ஆசாரயருக்குமம பணிவிடைசெயபவர்களுகுமம, பசுவையும பரா ம்மணர்களையுமரகஷிப்பதறகாக யுத்தத்தைச்சாயதாகவும அரச சதகதைவிட்டுத்தாயத திடன் ஸந்தோஷத்துடன்வாங்கிக்கொள்ளு கலுக்கும், ஆபரிக்கும்படி தனதுஜீவனைத்தரும்படியான வர்த்தமும உள்ள தகிகள சொல்லபபடடன. ஏனைய தர்மங்களிலலாதனன்னபடி நன்றாகஉப தேசிக்கப்பெற்று உறுதியான தியாகத்துடனை ஸந்தியாவந்தனத்தை யும யோகவித்தையையும உணர்ந்தபின்பு அவைபற்றியும சொலலப பட்டது. சிறந்தகுருவான நான் ஏன்மீண்டும் மீண்டும் ஸ்ருதிஸ்ம்ருதிகளான கருதிகளை விளக்தாகநன்னின தியாயமான ரூப தியாஸ புராணத்தினின்றுமெடுத்தவை களை நான் சேர்த்தேனை யலலாமலிருக்கவும மவர்களுக்குச் சார்ந்திருக் கின்றனவோ அந்தப்பரஞ்சுடமஹாயஜ்ஞங்களும அவற்றின அங்கங்களா கடகதுமமுறைகளும முறறிலுமற்றுப்போகாமலிருக்கவும அவைபற்றியலலாமல பெரியோரால அவ்வாறு சொலலப்படடனவாதலின அவறறையாருமே தூஷிப்பதறகுமுடியாதது. மஹாவிஷ்ணுவாக்குரிய உயர்ந்த மானது இந்தகதர்மங்களிற்சிறந்ததது பகவானுடையவிஷ்ணுவானவர பகதர்களின தம்மேற்கதைப்பரிபாலக்கபபடற்குரியது. கூதிர்களில்சிறந்தவரே! இவ்வுலகதத்தில பலனைக்கருதிசெயயதகருமஙகளின்பலனை அநுபவித்த தேதீரவேண்டுமென்னும வியாஸமஹரிஷி சொலலியிருக்கிறார். பலனை அநுபவித்ததினாலே ஜீவனுக்குப்பிழவுகளிலிருந்து முழுவிடுதலை கூடாதபடட்டது. இந்தக்காரணமாகத்தானே ஸகலதர்மஸ்வரூபியான மஹாவிஷ்ணுவை அவரவர்கள தங்களுக்குரிய தர்மங்களினால ஆராதிக்கிறார்கள. ஐயனே! தர்மஸ்வரூபியான மஹாவிஷ்ணுவை ஆராதிக்கும்படியான முறைகளை நான் கேட்கவிரும்புகிறேன். பிதாமஹரே! ஸகலத

தர்மங்களில் நிச்சயமுண்டாயிற்று. சிறந்தஞானமுள்ள கௌரவஸ்ரேஷ்டரே! எது பிறப்பு இறப்பு மூப்புகளைப் போக்குகிறதோ அந்தத்தர்மத்தை உமதுஅனுக்கிரகத்தினால் கேட்கவிரும்புகிறேன். தாபத்தை உண்டாக்கும் வைதரணீநதியும் கத்திகளாயிருக்கும்இலைகளுள்ள அந்த அவிபத்ரவனமும் தெருப்பினால்கொதித்துக்கொண்டிருக்கும் குண்டங்களும் கத்திமுள்ளையில்நடக்கவேண்டியவழியும் கூர்மையானமுட்களினால் மிச்சயங்கரமான இருப்புஇலவமரமும் தாய்தந்தையர்களுக்காகவும் ஸ்நேஹிதர்களுடைமைக்காகவும் தமக்காகவும் மனிதர்கள் செய்தபாவங்களின கடினமான பலனைநுகர்பவனென்று வியாஸமஹரிஷிசொன்னார். [1]கும்பிபாகமென்றும்நரகத்தில்தள்ளிக்கப்பட்டும் சூலங்களினால்கதறக்கதற குத்தப்பட்டும் ரௌரவமென்னும்நரகத்தில்போடப்பட்டு அடிகளினால்அங்கங்கள் நசுக்கப்பட்டும் கதறக்கதற வெட்டப்பட்டுத் தங்கள்உதிரத்தையே குடித்துக்கொண்டும் கட்டிவதனால் கூவிக்கொண்டும் தணணீர்தாதாவதினால் உதடுமிகஞ்சுமலாகவும் தழுதழுத்தும் பிரஜைகளைப்பிரியும் எல்லாதபுயாங்களினாலும் மேற்கொள்ளப்பட்டும் அலறிக்கேட்டுக்கொண்டுமிருக்கும் கோபுற்றமனிதர்களிடத்தில் யமனுக்குக தயையில்லையே! வேதங்களினால்கஷ்டப்படுகின்றவர்கள் பத்துத்தினைசளும்நிரம்பும்படியன்றே கதறுகின்றனர்! ஒருவன் தன்பந்துக்களுடன்சேர்ந்து உலகஇன்பங்களைஅனுபவிப்பதற்காகப் பாபங்களைச்செய்கிறான். அவனுடைன்கஷ்டமானபயணமானுடையவீட்டில் அன்வொருவனே அனுபவிக்கிறான். மலமூத்ரங்கள் எலும்பில்சேறுகப்பிடித்துகொண்டு அனேகஜந்துக்கள் நிரம்பியிருக்கும்கர்ப்பப்பையில் மலமூத்ரம்புழுஇவற்றின் நடுவில்வவிப்பதாகியகதியை எதனால் ஒருவன் அடையாமலிருப்பன்? கர்ப்பவாஸத்திற்குமேற்பட்டவேறுநரகம வற்படுத்தப்படவில்லை. நரகவாஸத்தினால் உண்டாக்கப்பட்டபயன்தான் கர்ப்பவாஸமென்றுசொல்லப்படுகிறது. கர்ப்பத்தினின்றுபிறந்தவன் ஆயாங்கள்அதிகப்பட்டவனாகிறான். அவனுக்குத் துக்கங்கள் நீங்கவேண்டுமென்னுமான்ச நிறைவேறுகிறதில்லை. ஏனெனில், மனிதன்பிறந்தவுடன் மனத்திலும் வாக்கிலும் தேகத்திலும்உள்ளகஷ்டங்கள் அவனுக்கு வந்துசேருகின்றன. பயங்கரமான அந்தத்துன்பங்களினால் நெருக்கப்பட்டு ஸ்வாதீனம் தப்பிப்போகிறான். அந்தத்துன்பங்களினால் தன்வசமில்லாமலே கர்ப்பத்தில்புகுந்து திரும்பவும்ஜனிக்கிறான். மனிதன் ஸ்வதந்த்ரமில்லாமலே முயற்சிக்கிறான்; ஸ்வதந்த்ரமில்லாமலே நடக்கிறான்; ஸ்வதந்த்ர

[1] சாலில்போட்டுவேகவைப்பது.

மில்லாமலே மூப்பினால் உருமாறிப்போகிறான்; ஸ்வதந்த்ரமில்லாமலே மூப்பினால் தேஹத்தளர்ச்சியையும் அடைகிறான். இவ்வாறு மனிதர்களுக்குக் காலநிச்சயமில்லாமல் எக்காலத்திலும் மரணம் வந்தேதீருகிறது. ஒருவன் கர்ப்பத்திலேயே உறக்கிறான். மற்றொருவன் பிறக்கும்போதே இறக்கிறான். அநேகர் பிறந்தபின் இறக்கின்றனர். மற்றும்சிலர் யௌவனப்ராயத்திலிறந்துபோகின்றனர். சிலர் நடுவயதில் விழுந்துபோகின்றனர். முதிர்ந்தவன் இறந்தவனேதான். ப்ரம்மதேவனுயிருந்தாலும் ஜன்மத்திற்ஞாதவன் யார்? ஐயா! மரணத்தின்கையில்அட்ங்கிய எங்களிப்போன்றவனுக்குச் சொல்லவேண்டுமா? கௌரவஶ்ரேஷ்டரே! இத்தப்பயம் என்மனத்தில் எப்போதும் புகுந்துகொண்டிருக்கிறது. சிறந்தபுத்தியுள்ளவரே! காலத்தைச்சரீரமாகவுடைய பரமாத்மாவினிடத்தில் எப்போதும் அடங்கியிருந்தும் அவருடையகுணங்களை அறியாதநான் சற்றுகேரமும் ஸுகம்பெறவில்லை. இன்னுஞ்சிலர் பலவகைஉணவுகளினால் வளர்க்கப்பட்டும் பலவகை உடுப்புக்களினால்போர்த்தப்பட்டும் சந்தனம்அகியவ்வோர் அவயவங்களிலும்பூசப்பட்டும் ரத்னங்களினாலும் முத்துக்களினாலும் அலங்கரிக்கப்பட்டும் பலவகைவாகனங்களிலேறிச்சென்று (யாவரா லும்) ஸகரீதியாகக்கொண்டாடப்படும் யௌவனத்தினால் ப்ரகாசிக்கும் அழகுள்ளவர்களும் மதுவாகத்தளர்நடைநடக்கின்றவர்களும் அன்புள்ளவர்களும் மனத்திற்கினியவர்களுமான சிறந்தபெண்களோடு தலையின்றி வெகுகாலம் ரமித்துக்கொண்டிருந்தும் அளவற்ற ஔியுள்ளதானசரீரத்தையும் உயிரையும் ஸுகானுபவத்தில் ஆசை தீராமலேவிட்டுவிட்டுச் செல்லுகின்றனர். ஸ்வர்க்கத்திலும் அதற்கு மேலுலகத்திலுமுள்ளஐசுவரியம்கூட நிலையற்றதுதான். தேவர்களும் விதிக்குட்பட்டவர்களே. ஆதலால், தேவத்தன்மையையும் யான் விரும்பவில்லை. ஆசைகளுக்கு முடிகில்லை ஆசையற்றவன்தான் நிவ்ருத்திமார்க்கத்தையடைகிறான். தர்மங்களெல்லாம் உலகங்களைச் சேர்ப்பதற்காகவே உள்ளவையென்பதில் ஸந்தேஹமில்லை. தர்மம் தெரிந்தவரே! அவை [1] ஊஞ்சலுக்குலமானமானவையென்று வ்யாஸமஹரிஷி சொன்னர். ஆதலால், ஊஞ்சலின்செய்கையில்லாதநேரான வழியிருக்கையில் தெரிந்தவனெவன் கடினமானதுக்கமார்க்கத்தில் ஏறுவான்? இவ்வுலகத்தில் எல்லாவற்றிலும் ப்ரியமானதன் ஆத்மாவை ஊஞ்சலுக்குலமானமாக எவன்செய்வான்? ஜங்கமங்களும் ஸ்தாவரங்களுமாயுள்ளஎல்லாஉயிர்களும் இவ்வுலகத்திலிருந்து வேறுலகத்திற்

[1] மேலுங்கீழும் ஆடிக்கொண்டே இருப்பவை.

குத் தடையின்றிச்செல்லவேண்டும். கட்டுசோறில்லாமலும் வழி காட்டுபவனில்லாமலும் காப்பவனும் சுற்றத்தாருமில்லாமலுமிருக் கும் கொடியஇருளில் ப்ரவேசிக்கவேண்டும். தர்மத்திலிருந்தவர்க ளும் ஐம்புலன்களையும் அடக்கினவர்களும் கபடத்தில் உறுதியுள்ளவர் களுமாகிய மனிதர்கள் நாராயணரால் சொல்லப்பட்ட அந்தத்தர்மத்தை வேறுசிலர் [illegible] அவர்கள் அந்தத்தர்மத்தி னுலேயே உயர்ந்த [illegible] கடைகின்றனர். பகவானை விஷ்ணுவாகவும் ப்ரஜாபதியாகவும் கம்பீரத்தைப்போல் சரப்பறற்று இருப்பர். ஆதாரம் [illegible] காலசக்ரத்தில் சுற்றப்பட்டு பிறவிகளில் [illegible] ஆகையால் தர்மத்தையே அடைதல்வேண்டும். மனிதனுடன் தாய்தகப்பனாகளின் முன்னோர் குடிச் சம்பந்தம் [illegible] அவனுடைய பிறப்பிலிருந்தே [illegible] கருப் பத்தில் [illegible] வகைகளை [illegible] ஒன்றுமில்லாத [illegible] யில்லை. கஷ்டப்படுகிறவனுக்கு [illegible] அடிக்கடி கவலைகள் தோன்றுகின்றன. கஷ்டப்படுகிறவர்கள் கஷ்ட மாயிருக்கிறது. வழிப்போக்கர்கள் வழியிலுள்ளதிலுலப்பற்றி ஒரு விதொடொனவா சேர்ந்தபடியோ அப்படியே உலகம் இவ்வாறு கர்மங்களுக்குட்பட்டதாகும். தனக்கு வகுலமாகச் சுற்றத்தாரின் சேர்க்கைகளை அடைகிறது. கூடப்பிறந்தது நிருபம்பவும் தன்கா தலிகளில்காண்பிக்கப்பட்ட வழியில் மனிதன் செல்லுகிறான். கௌர வரிஷ்டமோ உலகத்திலுள்ள இந்தச் சேர்க்கை இவ்வகையென்று கண்டறிந்திருக்கிறது. விஷ்ணுவைப் பிறப்பே [illegible] இந்த ஸ்லோகத்தை அனுபவித்துக்கொண்டு [illegible] விஷ்ணுவை தர்மத்தை விரிவாகவும் [illegible] வயதுக்கு மிண்ணமுண்டாயிருக் கிறது. கௌரவரே! ஆதலால், இப்போது நான் உமதுபாதங்களைத் தலையினல்வணங்கிமன்னிப்பை நான் நிச்சயமாகத்தெரிவிப்பதற்கு உம்மைச் சரணமாக அடைகிறேன். சிறந்தபுத்திவுள்ளவரே! கௌரவ ஸ்ரேஷ்டரே! பிறப்பு இறப்பு முப்புரங்களினால் பயமடைந்து மூன்று தண்டங்களினாலும் பீடிக்கப்பட்டநான் முன்னுள்ளதர்மத்தை இப்போது கேட்டிப்பதினால் அமைதியடைந்து உமக்கல்காக்கப்படவிரும்புகிறேன். இந்தத்தர்மம் சிருஷ்டியுகத்திலுண்டானது; திரேதாயுகத்தில் மறைந் தேபோயிற்று. அர்த்தசாஸ்திரமெல்லாவற்றையும் தலைபாயனமுனிவர் சொல்லியிருக்கிறார்" என்றார்.

[1] ஒக்கத்தோடுசேர்க்க [2] ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம, ஆதிபௌதிகம்.

முப்பத்தேழாவது அத்யாயம்

தானதர்மபர்வம். (தொடர்ச்சி)

பரஶுராமர் க்ஷத்ரியப்பரம்பரையைக் கேட்டறிந்தது

யுதிஷ்டிரர், "ராஜரிஷிகளான உன்னுழைச் சார்ந்திருக்கும் குலத்திற்குரும் இது தகுதி. மனிதர்களிற் சிறியோர், பெரியோர், ஐக்யூகங்களினாலாகிய இருதத்துவத்திலிருந்து பலவினமான செழிப்புள்ளதும் வரிகளும் நிற்பதாகவுள்ள வசப்படுத்தலும் பிறவாழ்பதத்திற்கொர்பான ஸுகமும் சிறப்புள்ளதுமான பெரியாயுளைப் பெற்றுக்கொண்டும் ராஜரிஷிகளான தங்களுடைய குற்றங்களையும் பார்ப்பானே? ராஜனே! நீ உன்னுடைய நல்லபரிணாமத்தினால் நமதுபரிசோதனைகளை விஞ்சியுள்ளாய். மஹாராஜனே! கர்மபரமாகிய ஸுகமும் சிறந்த புத்திமானும் பெரிய புகழ்பெற்றவனுமாகிய நீ நரனையும் சிறந்த விவேகமுள்ள ஸனத்ஸுஜாதனும் ஞானஸ்வரூபத்தைப்பற்றி நன்கறிந்திருக்கிறாய். டிருப்பவருமே சிவபரஞ்ஜோதியிலும் கண்களுடையவருமான ப்ரம்மாமுதலானதேவர்களாகியும் ஆஸுரராக்ஷஸர்களாயும் நீ விஞ்சியுள்ளாய். இவ்வுலகம் நிலையற்றது; அதைச்சுற்றிக்கொண்டிருக்கிறதென்பதில் ஸந்தேஹமில்லை. சிறந்ததலைவனேயுடையவனே! ப்ரம்மாமுதலானதேவர்களும் அஸுரர்களும்கூட இவ்வாறே எப்போதும் நிலையற்றிருப்பதைப்பார். மனிதர்முதலானவர்களைப்பற்றிப்பேசுவதற்கு என்ன? பிராணிகளை உத்பத்திசெய்யும் தன்மையுள்ளதும் ரூபமில்லாததும் கொல்லுக்கெட்டாததும் ஆகாயத்துமேற்பட்டதுமாகிய ப்ரஜாஸ்ருஷ்டியைமட்டும் செய்யப்படாததென்றும் நித்யமென்றும் சாஸ்த்ரம் சொல்லுகிறது. அது நிக்ஸ-ஸ்வபாவமென்றும் சுத்தமென்றும் "நிர்வாணமென்கிறபெயருள்ளதென்றும் முதன்மையானவர்களனைவரும் ப்ரம்மலோகத்தரிஷிகளும் பூமியிலுள்ளமஹரிஷிகளும் சொல்லுகின்றனர். குற்றமற்றவனே! இயற்கையாகத்தானே நடப்பவன் மானிடவடிவமாயிருக்கும் அந்த[1] ப்ரஜாஸ்ருஷ்டியைக்காண ப்ரஜாஸ்ருஷ்டியென்றுசொல்லப்பட்ட மோக்ஷத்தை அடையவிரும்புகிறேன் ராஜனே! இதற்குக்காரணத்தின் தாத்பர்யமானது முதல்புகழான் நடையுடனில் விளங்குகிறது. பரதஸ்ரேஷ்டனே! வீரனே! மற்றபுகழ்களிலும் ஸனாதனமார்க்கத்துக்குரிய

---

[1] ஆத்மாவைத்தானடைய விரும்புவது

[2] மோக்ஷம். [3] ஆத்மாவின் இயற்கை

[4] வண்ணல்பாட்சுதியிலிருந்து தாமதத்தைச்செய்தபிறகுதான் முக்திப்பேறு வதென்பது.

வையும் ஜனனத்தைத்தருகின்றவையுமான தர்மங்களே மிகுதியாக விளங்குகின்றன. எல்லாக்காரணங்களிலும் மூலப்ரக்ருதிதான் நித்ய மென்றுசொல்லப்படுகிறது. இவ்வாறு காரணங்களோடசேர்ந்த தர்மங் கள் மேலானமூலப்ரக்ருதியை ஆஸ்ரயித்திருக்கின்றன. உலகத்தில் காட்சிக்குப்பட்டவற்றையும் அகப்படாதவற்றையும் காண்பிக்கும் ப்ரக்ருதியையே சிலதார்கிகர் அறிகின்றனர். ஸத்வகுணத்தைத் தலை மையாகவுடைய க்ருதயுகம்முடிந்து த்ரேதாயுகம்பிறக்கையில் ப்ரம்ம மணர்கள் விஷயஸுகங்களை விரும்பும்போது அந்தத்தர்மம் மறைந் தது. கௌரவனே! அரசனே! கலியுகத்தில் கெட்டமார்க்கங்களான தர்மங்கள் தலைப்பட்டபொழுது கல்லதர்மத்தின் நடமாட்டமே ஒய் ந்துபோயிற்று. ப்ரம்மாதிதேவர்களும் எக்காலமும் எவனிடத்தில் பக்திசெய்கின்றனரோ அந்தஉலகரூபியும் பற்றில்லாதவனுமாயிருக் கும் புருஷனைமட்டும் நித்யனென்றறியவேண்டும். "அவனே நாராயண னென்றும சாசுவதமானபரப்ரம்மமென்றும் அறி. வேந்தனே! சரீ ரத்தினுல் அவனுடையஆராதனமாகிய கர்மத்தைச்செய் மனத்தி னுல் அவனே த்யானம்செய் வாக்கினுலும் எப்போதும் அவன்நாமத் தைச்சொல். அடையத்தக்கதும் அழியாததும் புனர்ஜன்மமில்லாத தும் மாகிய அவனுடையஸ்தானத்தையடை. சிறந்தகைகளையுடையவனே! இவ்வாறு விஷ்ணுவைஆஸ்ரயித்தபிறகுதான் ஸம்ஸாரமென்னும்பேய் விடுமென்பதை உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்க நினைக்கிறாய்" என்றார்.

முப்பத்தெட்டாவது அத்யாயம்.

தா ன த ர் ம ப ர் வ ம். (தொடர்ச்சி)

(உலகஸ்ருஷ்டியைப்பற்றி நாரதருக்குச் ஸனத்குமாரருக்குச் ஸம்பாஷணம்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பிராணிகள் ஜனனமரணக்கடலில் கஷ்டப்படுகையில் எதையடைந்தபின் கஷ்டத்தைஅடையாவோ அதை எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்தவிஷயத்திலும் ஸாதுக்களானஸனத்குமாரருக்கும் நார தருக்கும்நடந்த ஸம்பாஷணமாகிய ஒரு பழமையானசரித்ரத்தைக் கூறுகின்றனர். மிகப்புகழ்பெற்றஸனத்குமாரபகவான் ப்ரம்மாவின் புத்ரர். ஸனகர், ஸனந்தனர், ஸநாதனர்என்னும் மூன்றுப்ரம்மரிஷி

டர்கள் ஸநத்குமாரருக்கு முன்பிறந்தவர்களென்று சொல்லப்படுகின்றனர். அவர்களனைவரும் பிறந்தபோதே ஞானிகளென்றுகேள்வி. அவர்களுள் நாலாமவராகிய ஸநத்குமாரபகவான் யோகசாஸ்த்ரம்தெரிந்தவரில்சிறந்தவரென்று மஹரிஷிகள் கூறுகின்றனர். பெயர்பெற்ற வஸிஷ்டமுனிவர் ப்ரஹ்மாவின் ஐந்தாவதுபுத்ரரென்று சொல்லப்படுகிறார். திருசூலம்தரித்தவரும் அறிவிற்சிறந்தவரும் ஸ்வரூபமுள்ளவருமாகிய பகவானைசிவபிரான் ஆராதித்தவர். அவரைநோக்கிப்பின்னிட்ட மரீசிமுதலான இருபத்தொருரிஷிகள் அநுக்ரஹத்தையடையாகத்தில் ப்ரஹ்மாவின்மனத்திலிருந்து அக்னியினின்றும்உண்டானவர். மரீசிக்குஇளையவர் ப்ருகு. ப்ருகுவுக்குஇளையவர் அங்கிரஸ். அங்கிரஸுக்குப்பின் பிறந்தவர் அத்ரி. அத்ரிக்குப்பின்பிறந்தவர் புலஸ்த்யர். வித்வானும் சிறந்தமஹிமையுள்ளவருமான புலஹர் புலஸ்த்யருக்கு இளையவர். அளவிடக்கூடாதமஹிமையுள்ள இவர்கள் ப்ரஹ்மாவினிடம்பிறந்தவர்களென்று தெரிந்தவர்களால் சொல்லப்படுகின்றனர். மஹாராஜனே! முதல்ஆசார்யரும் சிறந்தவரும் ஸமாந்தரும் ஸர்வவ்யாபியும் அளவற்றபெருமையுள்ளவரும் உலகத்துக்குத்தந்தையுமாகிய ப்ரஹ்மதேவர் இவர்களெல்லாவரையும் உண்டுபண்ணினார். இவர்கள் பிருகுத்வமுள்ளவர்களாய்த் தமதுதவவன்மையினாலேயே தேகங்களோடேயே இறவாமலிருந்தனர். அவர்களுள் ஸனகர்முதலானவர்கள் (தேகம் இந்திரியமுதலிய எல்லாவற்றையும் அழியச்செய்து தேகமென்னும்பந்தத்திலிருந்துவிடுபட்டுப் பரமபதத்தை அடைந்தனர். மஹிமையுள்ளவரும் யோகத்தெரிந்தவருமாகிய ஸனத்குமாரர்மட்டும் யோகத்தைக்கைப்பற்றி அதினாலுண்டானசிறந்தசக்தியினால் மூவுலகங்களிலும் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார். அரசர்களிற்சிறந்தஅரசனே! பெரும்புகழ்பெற்றருத்விர் எட்டுஅங்கங்களும் மிகப்பெருமையோகசக்தியை அடைந்தார் மற்றவர்கள குறுகியஎட்டங்கங்களுள்ளயோகத்தை அடைந்தனர். அப்பா! ராஜஸ்ரேஷ்டனே! மரீசிமுதலானவர்களனைவரும் ஸ்ருஷ்டிசெய்வதற்காகவே கட்டளையிடப்பட்டனர். அவர்களின்ஸ்ருஷ்டியை நான் சொல்லுகிறேன்; கேள். இவர்கள் ஏழுப்ரம்மாக்களென்று புராணங்களில் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றனர். வேதங்களிலும் [1] ஸ்ம்ருதிகளிலும் அவ்வாறே எல்லாரும் சொல்லப்பட்டிருக்கின்றனர். ஸந்தேஹமில்லை. இதிகாஸங்களிலும் புராணங்களிலும் நெடுநாளாக இது சொல்லப்படுகிறது. வேதாந்தங்களில்கரைகண்டப்ராம்மணர்கள் இந்த [2] ஏழுப்ரம்மாக்களையும்

[1] ஸம்ஹிதைகளிற்சேராமல் தனித்திருக்கும்ரிக்குக்கள்.

[2] மரீசிமுதலானவர் அறுவரும் குரோரும்சேர்ந்து ஏழுவர்.

வரன்கொடுப்பவரென்றுசொல்லுகின்றனர். அப்பா ! மஹாராஜனே! ரூபத்தோடும ரூபமிலாமலுமிருக்கும் [1]ஏழுகூட்டத்தாராகிய பிதிரு தேவதைகள் மேற்சொன்னஏழுவரின் புத்ரர்களென்றுசொல்லப்படு கின்றனர். அரசர்க்கரசே ! தேவர்களை பிதிருதேவர்களினுபுதராக ளென்றுகேள்வி. இவ்வுலகங்களை தேவாகளிலுலவியாபித்துப்பட்டிரு க்கின்றனவெல்லாம்மீட்டிருக்கிறோம். அரசனே ! கிருஷ்ணதுவைபா யனர் தேவஸ்தானா மதவலா ரா யாபா ஸ்வாதமா கொளண்டின்யா பாரதவாஜர் மாரகண்டேயா தேவமகா உலூபரிவிகளிடத்தும இதை நான் கேட்டிருக்கிறேன். கூரகாகர்ணர் [2]பஞ்சயஜ்ஞபிதா வும் சிராதகாலத்தில் சொல்லியிருக்கிறார். பாரதனே ! எல்லாவற் றிற்கும் நீ என்னிடமிருந்தே கேட்கிறாய். அதனுசிறந்தகாரணமும் பரமாத்மாவைருப்பிரியமுமான வேதார்த்தம இனிசொல்லுவேன் அர சனே ! அந்தவிஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறதிதிபண்டிதரான ஸனத குமாரருக்கும நாரதருக்கும நடந்ததாகவும் மனமுமாபுத்தியும வேறுபடாதிருக்கும நாரதருக்கும ஸனத்குமாரருக்கும நடந்ததாகவும் ஞானவரதமஸ்மாரியிலும் எல்லாவற்றிற்கும்மேலாக விளங்குகிறார். வேரொளியுள்ளஸனத்குமாரர் கைக்கடை விரல அளவானஉருவத துடன் திகழ்ந்துகொண்டிருந்தார். அரசனே ! ஒருகால அமமஹா மே பாவர் மேருமலையின்மேல் பிரமமஹர்ஷிகளான நாரதமுனிவருடன் சேர் ந்தார். அப்பா ! பிரமமமேகவரித்தில உண்மைப்பொருளை ஆராய்ந் துகொண்டிருப்பவரான அவ்விரண்டுபேரவதர்களும் பிரம்மஜ்ஞானம பெறக்கருணைவரப்பெற்றபிரம்மதேவர் ஸபீபத்திலுள்ளவரையொருவாஸந தித்தனர். அரசனே ! [3]மனவடக்குகிறவனே! அப்போது புத் திக்கூர்மையும் சாஸ்திரஜ்ஞானமுடையவருமான சரீரத்தியாகமுள வருமான உலகநன்கறிந்தவருமான சிறந்தபாஹ்மிடையுள்ளவருமான நாரத முனி புதிதிகளுக்கர்மமார்க்கமும் சாஸ்திரஜ்ஞானத்தினுலும் சரீரஆத்மஜ்ஞா னத்தினுலும் அறியவேண்டிய விஷயங்களெல்லாவற்றையும் அறிவதி னுலும உலகத்தைத்தன்னறிவினுலும பிரசரிறந்தவருமான வேதபொருளுகளை லாவற்றினுலும சாஸ்திரங்களெல்லாவற்றினுலும பிரகாசிக்கிறவருமான

ஸாங்க்யதத்தையும [4]யோகதத்தையும உள்ளபடிநெல்லிக்கனிபோல அறிந்தவருமான ஸனத்குமாரபகவானைப்பார்த்து 'ஓ' மஹரிஷியே! அவ்யக்தமென்னப்பட்ட மூலபருக்கிருதியைசரசார்த்த [5]இருபத்துமூன்

---

[1] வஸு, ருத்ர, ஆதித்ய, ஸோம, யம அங்கிரஸ்ஸு, அக்னி.
[2] தத்வங்களினஞானம. [3] தேகமனபயிற்சிஞானம.
[4] மஹத்த ; அகங்காரம ; ஞானேந்திரியம ஐந்து ; கர்மேந்திரியம் ஐந்து ; மனம் ; பருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாயம்ஆகிய பூதங்கள் ஐந்து ; சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களாகிய தன்மாத்ரம ஐந்து.

றுதத்வங்களின்உற்பத்தியையும் பிரளயத்தையும் தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். அத்யாத்மம் அதிபூதம் அதிதெய்வமென்னும்விஷயங் களையும் காலத்தின்ஸங்க்யையையும் ஸ்ருஷ்டியையும் இவ்வுலகமெல் லாம் எவனை ஆதாரமாகப்பற்றியிருக்கிறதோ, எவனால் வியாபிக்கப் பட்டிருக்கிறதோ, எவனையடைந்தவர்கள் இவ்வுலகத்துக்குத் திரும்பி வருவதில்லையோ அந்தஸ்ருஷ்டிகர்த்தாவான பரமபுருஷனையும் நீர் சொல்லக்கடவீர்' என்றுகேட்டார். அதற்கு, ஸனத்குமாரர் சொல்ல லாஞர். 'சிறந்தபுத்தியுள்ளவரே! உலகம யாரை ஆதாரமாகப்பற்றி யிருக்கிறதோ,' பரமபுருஷனென்று யாரைச சொல்லுகின்றனரோ அந்தநிர்மலனை நாராயணனைப்பற்றிச் சொல்வதைக் கேளும். உல கம் எவனை ஆஸ்ரயித்திருக்கிறதோ அவன்தான் நாராயணனென்ப வன். ஸ்ருஷ்டிப்பவனும் கட்டளையிடுபவனும் போஷிப்பவனும் காப்பாற்றுபவனும் ஸ்வாமியாயிருப்பவனும் அவனே ஆத்மதியா னம்செய்யுபஸந்யாஸிகள் அவனையடைகிறது (பிறகு உலகத்திற்குத்) திரும்புவதில்லை. நாரதரே! நீர்கேட்பதற்கு நான்சொல்லக்கூடியது இவ்வளவுதான். இதற்குமேல அவன்தன்மையை நான் அறியேன். அவன் எவ்வளவு; நான் எவ்வளவு. விஜிகீர்ஷுரே! அவன் முயற் றும் ஸ்ருஷ்டிப்பதில்லை. இருபத்துமூன்றுதத்வங்களையும் அத்யாத் மம் அதிபூதம் அதிதெய்வமென்பவற்றையும் காலத்தின்ஸங்கியை யையும் (காலத்தைக்குத்தக்கபடி) ஸ்ருஷ்டியையும் இவையெல்லாவற் றையும்பற்றி விரிசையாகக்கேளும். ப்ரம்மரிஷ்டாகளும் எப்போதும் ஆத்மவிசாரம்செய்பவர்களுமாகிய ப்ராம்மணர்கள், தமஸ்என்னும் மூலப்ரக்ருதியிலிருந்து உண்டாகுமஸ்ருஷ்டியைத தாமஸஸர்க்கமென் றுசொல்லுகின்றனர். அதற்கு அனேகநாமங்களை அறிஞர் கூறு கின்றனர். அவற்றை உமக்குச் சொல்லுவேன். அதை நீர் மனஒரு க்கதுடன் கேளும. பிரமமரிஷியே! [1] மஹார்ணவம், [2] அர்ணவம், ஜலம், முக்குணங்கள், மீதம், தவம், யாகம், தர்மம, பகவான், விபு, ப்ராணன், ப்ரளயாக்னி, அக்னி, ஆகாயம், காலமென்னும்இவைகள ஈஸ்வரனுடையசரீரமாகிய ப்ரக்ருதியின்பெயர்கள். ப்ரம்மணஸ்ரேஷ் டரே! இவை சாஸ்த்ரத்தைஅனுஸரித்து முன்னால உரைக்கப்பட்டன. (காமக்ரோதமுதலான) பலகைளைவென்றவரே! ததவஜ்ஞானமுள்ள ப்ராம்மணர்களை நாலுயுகங்களையும் அனேகமாயிரம் [3] சதுர்யுகங்களை

[1] பெருங்கடல். [2] கடல்.

[3] நாலுயுகம்சேர்ந்தது ஒருசதுர்யுகம், தேவயுகம் ஆயிரம்சேர்ந்தது ஒரு கல்பம்.

யும் ஆயிரம்கல்பங்களையும் காலப்பிரிவுகளாகச்சொல்லுகின்றனர். யோகமும் ஸாங்க்யமுந்தெரிந்தவர்கள் அழிவில்லாதமூலப்ரக்ருதிக்குப் பதினாயிரம்கல்பங்கள் பெரிய [1]ராத்ரியென்றும் அவ்வளவேபகலென்றும் சொல்லுகின்றனர். ராத்ரியிலே தூங்கியிருந்தபரமாத்மா ராத்ரியின் முடிவில் விழித்துக்கொண்டார். விழித்தபிறகு [2]ஜலத்தை ஸ்ருஷ்டித்தார். அந்தஜலத்தில் தமது [3]வீர்யத்தை விட்டார். அது பொன்மயமான [4]அண்டமாயிற்று. ஸ்தாவரஜங்கமங்களுக்கும் ஆக்மாவும் ஸ்வாமியுமானஈச்வரர் பிறகு, 'நானே இவர்' என்றுசொல்லி அவ்வண்டத்தில் ஹிரண்யகர்ப்பரென்னப்பட்ட ரிஷிபரன்ப்ரம்மாவை முட்டைக்குள்ளிருக்கும்ஜலத்தைப்போலப் படைத்தார். நடந்தது நடக்கிறது இனிநடப்பது ஆகியஎல்லாவற்றிற்கும்கர்த்தாவும் குற்ற மற்றவரும் பெரியசக்தியுள்ளவரும் உலகத்துக்கு ஸுகத்தைஉண்டு பண்ணுகிறவருமான ஸ்வயம்புவும் [5]அணிமா [6]லகிமா [7]ப்ராப்தி [8]ஈசித்வ முள்ளவருமான ஒளியுள்ளவருமான நரன் என்றுசொல்லப்படுகிற மஹாத்மாவானப்ரம்மதேவரைத் தேகமுள்ளவராகப் படைத்தார். பெரும் புகழுள்ளபகவான் இதுவரையில்படைத்து அதர்த்தானமானார். இந்தப்ரம்மதேவருக்கு [9]ஆயிரமகலபகல்கள் இரவென்றும் அவ்வளவே பகலென்றும் வேதங்களிலும் வேதாங்கங்களிலும் நிரைகண்டவர் சொல்லுகின்றனர். அந்தக்தமஸ்என்னும் மூலப்ரக்ருதியிலிருந்த ப்ரம்மதேவர் முறையே ஸ்ருஷ்டியைச் செய்யலானார். அவர் அகமென்று சொல்லி [10]அகங்காரமென்றபெயருள்ள சாஸ்வதராணபரமேஷ்டியென்னும் ப்ரம்மாவைப் படைத்தார். அகமென்னப்பட்ட அகங்காரத்தினால் உலகங்கள் வ்யாபிக்கப்பட்டன. அகங்காரம்பிரவேசிப்பதினாலேதான் பிராணிகள் பிரச்ருதியென்னும்கடலில் மூழ்குகின்றன. தேவர்களும் ரிஷிகளும் தானவர்களும் மனிதர்களும் யக்ஷர்களும் கந்தர்வர்களும் இன்னரார்களும் மேலேகீழாகவும் குறுக்காகவும் மூழ்கிக் களைபடுகின்றனர். மூலமுதலதுஸ்ருஷ்டிசெய்த இந்தப்ரம்மதேவருக்கும்

---

[1] ராத்ரியென்பது ப்ரளயம் பகலென்பது ஸ்ருஷ்டி.

[2] மூக்குணங்களிலுமாறச்செய்தாரென்பது கருத்து.

[3] சேதனசக்தியை. முட்டை.

[5] அணுவாதல். [6] இலேசாதல். [7] நினைத்தஇடத்தைச்சேருவது [8] நாம் நினைத்தபடி எல்லாவற்றையுமாட்டுவது [9] ஏற்றைகணக்கியதினால் முறையே இவற்றிற்கு எதிரான மஹிமாவும் சரியாவும் ப்ராகாம்யமும் வசித்வமும் கொள்ளப்படுமே.

மூலப்ரக்ருதியிலிருந்துவந்த அந்த பரமாத்மா மஹத்; அவரிடமிருந்து வந்தவர் அகங்காரமென்றுஅறிக.

மூவாயிரம்கல்பங்கள் இரவென்றும் அவ்வளவேபகலென்றும் சொல்லுகின்றனர். அகங்காரம் பூமி, ஜலம், தேயு, வாயு, ஆகாயம்என்னும் ஐந்துமஹாபூதங்களையும் அவற்றின்குணங்கள்என்று ப்ராம்மணர்கள் சொல்லும். சப்த ஸ்பர்சரூப ரஸ கந்தங்களென்னும் ஐந்துகுணங்களையும் படைத்தார். இவ்வைவர்துகுணங்களிலும் பற்றுள்ளவர்கள் ப்ரக்ருதியென்னும் டலில் அடக்கப்பட்டு ஸ்வாதீனக்கப்பினவர்களாகிச் சேற்றில்புதைந்த யானைகள்போல் வெளிப்படவில்லை. மேற்சொன்ன பூதஸ்ருஷ்டியாகியகாலாவஸ்ருஷ்டியைஅனுசரித்த அகங்காரத்துக்கு இரண்டாயிரம்சதுர்யுகங்கள பகல்; அவ்வளவே இரவு. இதுதான் [1] அனந்தமென்னும்பெயர்பெற்ற ஐந்தாவதுஸ்ருஷ்டியென்றுசொல்லப்படுகிறது. ஐயா! வேதத்தில்சொல்லியபடி [2]பத்துஇந்திரியங்களும் பதினோராவதுமனமும் இவ்வுலகமனைத்தும் படைக்கப்பட்டன. மற்றப்பூதங்கள் மனத்தைத்தவிர்போல வெளிப்படையல்ல. [3]இதிலிருந்துண்டானது ஆறாவதுஸ்ருஷ்டியென்று ப்ராம்மணர்கள் சொலலுகின்றனர். இதற்குஆயிரம்சதுர்யுகம் பகல்; இரவும் அவ்வளவே. [4]ஊர்த்வஸ்ரோதஸ்என்பது ப்ரம்மாவின் ஏழாவதுஸ்ருஷ்டியென்று அறிகின்றனர். [5]அதஸ்ரோதஸ் எட்டாவதென்றும் [6]திர்யக் ஒன்பதாவதுஸ்ருஷ்டியென்றும் சொல்லப்படுகின்றன. குற்றமற்றமஹரிஷியே! இவ்வொன்பதுஸ்ருஷ்டிகளும் [7]இருபத்துநான்குதத்வங்களாக எண்ணப்பட்டிருக்கின்றன. மஹரிஷிய! அழிவற்றவரும் ப்ரக்ருதிக்கும் மூலப்ரக்ருதிக்கும் ஆதாரமும் பரபுருஷமானநாராயணர் இவையணைத்துக்கும் ஆதிகாரணமென்று முன்னமே சொன்னேன். இனிஎவ்வெவற்றிற்கு எதுஎது ஈச்வரனென்பதையும் அதயாத்மம் அதிபூதம் அதிதெய்வம்என்னுமவற்றையும்பற்றி நான் கேட்டும் கண்டுமுள்ளபடி ஸரியாகச்சொல்லுவேன். அதை என்னிடம் தெரிந்துகொள்ளும்.

[1] அளவில்லாதது.

[2] கண்[1] காது, நா, மூக்கு, உணர்ச்சி ஆகிய ஐந்துஞானேந்திரியங்கள்; வாக்கு, கை, கால், பாயு (ஜலமலங்களைவிடுவது,) உபஸ்தம். (வீர்யத்தைவிடுவது) ஆகிய ஐந்துகர்மேந்திரியங்கள்

[3] விருப்புவெறுப்புமுதலியவை

[4] மேலாகநிற்கும்மானிடர் தேவர்முதலியவர்கள்.

[5] கீழ்நோக்கிச்செல்லும்செடிமுதலியவை.

[6] குறுக்காயிருக்கும் பசுபக்ஷிமுதலியன

[7] பூதங்கள்ஐந்து, குணங்கள்ஐந்து, ஞானேந்திரியங்கள்ஐந்து, கர்மேந்திரியங்கள்ஐந்து, மனம்ஒன்று, அஹங்காரம்ஒன்று, மஹத்ஒன்று, ப்ரக்ருதிஒன்று.

முப்பத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(அத்யாத்மம் அதிபூதம் அதிதெய்வம் என்பவற்றை விவரிப்பது.)

அதஸ்ரோதஸ் ஊர்த்வஸ்ரோதஸ் இவ்விரண்டிற்கும் ஊர்த்வஸ்ரோதஸ்களுள்ளும்ஸ்ருஷ்டியே [1]ஈஸ்வரனென்றியத்தக்கது. கர்மேந்திரியங்களுக்குத்தக்கும் புத்தி ஈஸ்வரன்; ஞானேந்திரியங்களிற்கும் மனம் ஈஸ்வரனென்றுசொல்லப்படுகிறது. மனத்திற்குச் சப்தஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களென்னும் ஐந்துகுணங்களானபஞ்சபூதங்கள் ஈஸ்வரனென்றுசொல்லுகின்றனர். உயர்ந்தஸ்தானத்திலிருப்பவராகிய ப்ரம்மதேவர் எல்லாப்ராணிகளுக்கும் ஈஸ்வரரென்றறியவேண்டும். இவ்வுலகத்தர்மங்களிலும் இவ்வுலகிற்குமேற்பட்ட தர்மங்களிலும் நீர் ஸமர்த்தரன்றோ? கல்பமென்னும்ப்ரம்மதேவருக்குப் பகலின்முடிவில் ப்ரளயகாலாக்னியானது ஜ்வாலாவளியினால் உலகத்தையெரித்துவிடுகிறது. அதனால் தாவரங்களும ஜங்கமங்களுமாகிய எல்லாப்பொருள்களும் பஞ்சபூதங்களும் எரிக்கப்பட்டுத் தமதம்காரணங்களில சேர்ப்பிக்கப்படுகின்றன. பூமியானது அப்போது ப்ரளயகாலாக்னியினால் தர்ப்பங்களும் முட்களும மரமெடிகளும் புற்பூண்டுகளும்எரிக்கப்பட்டு ஆமைமுதுகுபோலாகிறது. ஜங்கமங்களுந் தாவரங்களும் பூமியில் லயித்தபிறகு பூமியும் ப்ரளயமாகிறது. பிறகு, கந்ததன்மாத்திரையழிந்து நுண்ணியதாகிப் பூமி ஜலமாகவேயாகிறது. பிறகு, ஸூர்யனுடையகிரணங்களினால ஜலமடிக்கப்படுகிறது. ப்ராம்மணேத்தமரே! அப்போது ஜலதன்ஸாரமாகிய ரஸதன்மாத்திரையும் ஸூர்யனிடத்தில் லயமாகிறது. பிறகு, ஆகாயத்திலுள்ளபிராணிகளை அவ்வனல் பிடிக்கிறது. அப்போது ஆகாயமும அனலாயிருக்கிறதென்றுசொல்லுகின்றனர் அவ்வாறுவலிக்குமக்னியைப் பலமும் வேகமுமிகுதியாயுள்ளகாற்றானது பிருதுதன்துபலத்தினால் அழித்துவிடுகிறது. அந்தக்காற்றை ஸூர்யன் இழுத்துக்கொள்ளுகிறான். வாயுவின்குணமான ஸ்பரிசதன்மாத்திரையை ஆகாயம் விழுங்கிவிடுகிறது. அப்போது காற்றுஅடங்கிப்போகிறது. ஆகாயமட்டும் சப்தத்துடன் நிற்கிறது. அப்பொழுது, ஆகாயத்திலுடைய அந்தச்சப்ததன்மாத்திரையை மனம் வாங்கிக்கொள்ளுகிறது. அந்தஆகாயம் சப்தமென்னுங்குணம்போய் உருவமட்டும்நிற்கிறது. ஐயா! பிறகு, திசை

[1] இங்கு, கடத்துவது என்பதுபொருள்.

உருவமாயிருக்கும்ஆகாயத்தையும் மனமானது புசித்துவிடுகிறது. ஆகாயரூபமழிந்து [1]ஸங்கல்பமாகியரூபம் விருத்தியாயிருக்கிறது. [2]சித்தமானது தனதுசக்தியினால் ஸங்கல்பரூபத்தை இழத்துக்கொள்ளுகிறது. முன்னிரேஷ்டரே [3]பிறகு அகங்காரம் சித்தத்தை விழுங்கிவிடுகிறது. சித்தமேபோனபிறகு அகங்காரம் மஹத்தாகிறது. பிரஜைகளேப்படைத்தும் மஹதென்னும் ப்ரம்மதேவர் அவ்வஹங்காரத்தை இழுத்துக்கொள்ளுகிறார். அகங்காரம்கெட்டபிறகு மஹதென்று சொல்லப்படுகிறமஹதேவர் விஷ்ணுவாகிறார். மூன்றுலோகங்களிலும் மூன்றுசூர்யர்களிலும் முதன்மூர்த்திகளிலும் முதன்மூர்த்தியாகஉண்டானவரும் கடினமும் த்ரவமுமாயிருப்பதும் மூவற்றிலுமிருக்குணமாகவுடையதுமான இவ்வுலகமானைத்தையும்படைத்தவராகிய ப்ரம்மதேவர் வ்யக்தம்அவ்யக்தமென்னும் காரியகாரணங்களினுற்பத்தியையும் விழுங்கிவிடுகிறரென்பது நிச்சயம அழிவில்லாதப்ரகிருதிதான் பிரளயம். இதை நான் உமக்குசொன்னேன். [4]அத்யாதமம் [5]அதிபூதம் [6]அதிதெய்வங்களேப்பற்றியும் சொல்லுகிறன். ஆகாயம் முதலாவதுபூதம் சோத்ரேந்திரியம (செவி) அதன்அத்யாதமம்; சப்தம அதிபூதம்; திசைகள் அதிதெய்வதம். வாயு இரண்டாவதுபூதம்; [7]த்வகிந்திரியம் அத்யாதமம்; ஸ்பரிசம அதிபூதம்; ஸ்ரியுக் (பின்னல்) அதிதெய்வதம். தேஜஸ் மூன்றம்பூதம்; [7]சக்ஷுரிந்திரியம அத்யாதமம்; ரூபம் (நிறம்) அதிபூதம்; ஸூர்யன் அதிதெய்வதம. அப்பு நான்காம்பூதம்; ரஸனேந்திரியம் (நா) அத்யாத்மம்; ரஸம (நீர்) அதிபூதம்; வருணன் அதிதெய்வதம். பூமி ஐந்தாம்பூதம்; க்ராணேந்திரியம் (மூக்கு) அத்யாதமம்; கந்தம் அதிபூதம்; [8]வாயு அதிதெய்வதம. ஐந்துபூதங்கள் அவற்றின் அத்யாத்மமம் அதிபூதம் அதிதெய்வதமென்னும்இந்த நான்கையும் சொல்லினும். இனி இந்த்ரியங்களேயும் அவற்றின் அத்யாத்மம அதிபூதம அதிதெய்வதங்களேயும் சொலவோம். பாதம் அத்யாத்மம; செல்லுமிடம் அதிபூதம; விஷ்ணு அதிதெய்வதம். கை அத்யாத்மம்; செய்யப்படும்தொழில் அதிபூதம்; இந்த்ரன் அதிதெய்வதம். பாயு அத்யாத்மம்; ஜலமலங்களேவிடுவது) அதிபூதம்; மித்ரன் அதிதெய்வதம். உபஸ்தம் அத்யாதமம்; ஆனந்தம் அதி

---

[1] எண்ணம. [2] ஸங்கல்பத்திற்கு ஆதாரம்.

[3] ஞானத்திற் தரியது. [4] இந்திரியம; அந்த அந்தஇந்திரியங்களுக்குவியமாகிய சபதஸ்பர்சாதிகலியகுணங்கள். [5] அவ்வவற்றிற்கு அதிஷ்டானதேவதை.

[6] உணரும்இந்த்ரியம். [7] கண்

[8] முன்சொன்னவாயு பூதம்; இங்கு வாயு தேவதை.

பூதம்; [1]பிரஜாபதி அதிதெய்வதம். வாக்கு அத்யாத்மம்; பேசுஞ் சொல் அதிபூதம்; அக்னி அதிதெய்வதம். மனம் அத்யாத்மம்; நினைப்பது அதிபூதம்; சந்திரன் அதிதெய்வதம். [2]அகங்காரம் அத்யாத்மம்; [3]அபிமானம் அதிபூதம்; [4]விராட்சன் அதிதெய்வதம். புத்தி அத்யாத்மம்; நிச்சயம் அதிபூதம், ப்ரஹ்மா அதிதெய்வதம். [5]இவ்வாறு அநுபியானபகவான் எல்லாப் பிறவியும் ஒரேகாலத்தில் படைக்கவும் ஒரேகாலத்தில் அழிக்கவும்செய்கிறார். எதனால், [6]நினைத்தபோதே நினைத்தபடி நடக்கும்படி. ஸூர்யன் கண்களை விரிப்பதும் சுருக்குவதும் போல அநுபியானபகவான் நினைத்தவுடனே விகாரப்பொருள்களைப் படைப்பதும் அழிப்பதும் ஸமுத்ரத்திலிருந்து அலைகள் எழும்புவதும் அமுங்குவதும் காற்றினால் மின்னலோடும் முழக்கத்தோடும் மேகம் ஆகாயத்தில் நினைத்தபடி நடப்பதும் அவ்விடத்திலேயே மறைவதும் ஆமையானது கண்களை விரித்துமூடுவதும் திரும்பஇழுத்துக்கொள்வதும் எப்படியோ அப்படியே அநுபியானபகவான் (ஸதவம ரஜஸ் தமஸ்என்னும் குணங்களின் பரிணமங்களான) உலகங்களை வெளிப்படுத்துவதும் உள்ளடக்குவதும். இப்படி இருபூதத்தைத்தாம்தத்வமாகியபகவான் சேதனரும் பரிசுத்தருமாகஇருப்பவர். பிரஹ்மாவானது அவரோடுஸம்பந்தப்படுவதனால் உணருகிறது. யாருக்கும்புலப்படாதபகவான் இவ்வாறுசெய்யுமபோதும் செய்யாமலிருக்கும்போதும் பிரஹ்மாவும்அவரைப்போலவே எப்போதுமிருக்கிறது. (அவர் நினைத்துச்செய்தால் தானும செய்கிறது; செயயாவிட்டால் செய்யாமலிருக்கிறதென்பதாம்.) முயற்சிப்புகளற்றவரும் க்ஷேத்ரமாகிய பிரஹ்மாவை அறிந்திருப்பவருமாகிய நாராயணரென்னும் பெயருள்ளபுருஷர்தாம் [7]இயற்கையாகச்சிலசெயல்கள்செய்பவர்' என்றார். அரசனே! ஞானியான ஸநத்குமாரரால இந்தவிஷயம் இவ்வாறு நாரதருக்குச் சொல்லப்பட்டது. பராம்மணன் இதைக்கேட்பதனால் எல்லாயாகங்களின்பயன்களையும அடைவான்" என்று பீஷ்மர் சொன்னார்.

[1] பரம்மாவி ன்பெயர் ஒருசேவனைகளே பெயர்களால் அதிகாரவேறுபாடுண்டு என்பதி னிந்த்ரன் மஹேந்தரன்என்னுமபெயர்களைபற்றி மீமாம்ஸையில் காணலாம்

[2] மகத்திலிருந்துண்டானது

[3] நானென்கிறஎண்ணம் [4] பரமமாவின்பெயர்.

[5] கண்காதுமுதலிய ஐம்புலன்களையும பூதங்களிற்சொல்லியிருபபதனால் அவை இங்கே கூறப்படவில்லை அவற்றிற்கும் இவ்வாறே ஊகித்துக் கொள்ளலாம் [6] யாதொருபிரயோஜனத்தையும்கருதாமல்.

நாற்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பிரம்மதேவர் நாராயணரிடமிருந்து தேவர்களுக்குச் சொல்லியகதையில், கருடனுக்குக் கசியபருக்கும் ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "மிகுதெரிந்தகௌரவகிரேஷ்ட ரே! பிதாமகரே! த்ரோதாக்னிரனைத் தம்மிதகத்நிலேயே ஆவாஹனம்செய்து தவத்தையும் [1]ஜபயஜ்ஞதனதையும் [2]மாகஸ்யாகத்தையும் வெளியாகங்களையும் செய்துகொண்டும் அக்னிக்குமேற்பட்டதில்லையென்னும் உறுதியான எண்ணத்தோடிருக்கும்ப்ராம்மணர்கள் அடையும்கதியாது? அவர்கள் என்னகருதுகிள்ளவாதனென்பதை உமதிடத்தில் தெளிவாகக் கேட்கவிருமபுகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர்சொல்லலானார்.

"பாரதனே! இந்தவிஷயத்தில் விஷ்ணுவுக்கும் கருடருக்கும் நடந்தஸம்பாஷணையாகிய ஒருபழையசரித்ரத்தை உனக்குச் சொல்லுவேன். அமிர்தமுண்டானபோது அறுபத்தொன்பதிரம்வருஷகாலம்தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் தேவாஸுரயுத்தமென்னும் சண்டைநடந்தது. அந்தயுத்தத்தில் தேவர்கள் பிரதானியவர்களான அஸுரர்களால்கொல்லப்பட்டனர். அஸுரஸ்ரேஷ்டர்களால்கொலைப்பட்ட தேவர்களைக்காப்பவர் யாருமில்லை. துயரமடைந்ததேவர்கள் அஸுரர்களால் கொல்லப்படும்போது காப்பவனைத்தேடித் தேவஸ்ரேஷ்டர்களுக்கும்ஈஸ்வரரும் மிகத்தெளிந்தபரமான ப்ரம்மதேவரை அடைந்தனர். ப்ரம்மாவானவர் அந்ததேவர்களைக்கண்டு ஐம்பொறிகளும் மனமும்கலங்கி அவர்களுடன்கூடப்பகவரனை விஷ்ணுவைச் சரணமாகஅடைந்தார். அரசனே! அபபோது தேவர்களோடுகூடிய ப்ரம்மாவானவர் குற்றமற்றவரானநாராயணரைக் கைகூப்பித் துதிக்கலானார். 'பச்தர்களிடம்அன்புள்ளவரே! தாமரைக்கண்ணரே! தலைமையானஈஸ்வரரே! பாவங்களையொழிப்பவரே! பாமாதமாவே! விகாரமற்றவரே! நாராயணரே! உமமுடையஉருவத்தை த்யானிப்பதனலும் உம்முடையநாமங்களை நினைபபதனலும் உம்மை ஆராதிப்பதனலும் உபமைப்பற்றித் தவமதியான முக்கியவற்றைச் செய்வதனலும் ஞானிகள் மோக்ஷத்தை அடைகனரனர். அபபோது உம்மை நமஸ்கரிக்கிறோம். எல்லாஉலகங்களுக்கும முதற்பொருளே! எல்லா

[1] மந்த்ரஜபம்செய்வது. [2] கபகபோதபுருஷலியவற்றை ஒழிபபதையேஅக்னியில்ஹோமஞ்செய்வதாகக்கொண்டபடி.

வற்றிற்கும் அந்தர்யாமியே! அறிவுக்குமெட்டாதமஹிமைபொருந்திய வரே! நடந்தவைகடக்கப்போகின்றவையெல்லாவற்றிற்குமீச்வரரே! எல்லாப்ராணிகளுக்கும் முக்கியமாயுள்ளநாதரே! உமக்கு நமஸ்காரம். நீர் தேவர்களுக்குகதேவர்; எல்லாஉபாஸனைகளுக்கும் முக்யமான விஷயம் உலகத்தின்னிதாக்கள் சேநமிடமும் உலகத்திற்குமேற் பட்டவருமாயிருக்கிறீர் வீரரே! ஜயிப்பவரிற்சிறந்தவரே! அஸுரர் முதலானவர்களால் நிகவும் துண்பப்படுத்தப்பட்டதேவர்களையும் உல கங்களையும் உலகபாலகர்களையும் ரிஷிகளையும காப்பாற்றக்கடவீர் ஆறு அங்கங்களோடுமஉபநிஷத்துகளோடுமஇதிஹாஸபுராணங்களோடும் ஓங்காரத் தோடும் 1 வஷட்காரத்தோடுமகூடின வேதங்கள உமமையே உத் தமமானயஜ்ஞமென்றுகூறுகின்றன. நீர பவித்ரங்களுக்கும் பவித் ரம்; மங்களங்களுக்கும் மங்களம. நீரே தவமசெய்பவருக்குத் தவம்; தேவர்களுக்கும்தேவனாய்' என்னும் இம முதலான ஸ்தோத்திரங்களி னலும் 2 ரிக் ஸாமம் யஜுஸ்ஸான் றும் வேதகங்களினாலும் தேவர் களும் ப்ரம்மரிஷிகளுமஎல்லோரும்சேர்ந்து விஷ்ணுவைத துதிதத னர். அப்போது ஆகாயகத்தில், 'நீங்கள என்னுடன்கூடவே அஸுர ர்களை யுத்தத்தில் வெலலப்போகிறீர்கள்' என்னும் வாக்கானது மேக கர்ஜனைபோலக் கம்பீரமான குரலோடு உண்டாயிற்று பிறகு தேவர்களும தானவர்களும யுத்தம்செய்கொண்டிருக்கையில் சார் ங்கம் சக்கரம் கதைகளைவைத்துப் பேரொலியோடுகூடியபகவான் கரு டன்மேலேறித் தம்தேஜஸினால்பிறரைஎரிப்பவரைபோல அங்கே தோன் றினார்; தமதுகிறந்தசைகளின்வண்மையினால் அஸுரரனைவரையும் ஜயித்விட்டார். மஹாராஜனே! தைத்யர்கள்தானவர்களில்முதன்மை யானவர்கள் அவரை யுதத்தில் எதிருக்கினவுடன் தீயையண்டின விட்டிற்பூச்சிகள்போல அழிந்தனர். பேராற்றலுள்ள அந்தப்பகவான் அஸுரதானவரனைவரையும ஜயித்தபிறகு தேவர்கள்பார்த்திருக்கும் போதே அங்கேயே மறைந்தார். அளவற்றமஹிமையுள்ள அந்த விஷ்ணு அந்தர்த்தானமடைந்தகண்டு ஆசசர்யத்தினாலகண்கள மலர் ந்ததேவர்கள ப்ரம்மதேவனைமுன்னிட்டு, 'பகவானே' எனறஉலகங் களுக்கும்ஈச்வரரே! பிதாமஹரே! இது மிக்கஆசசர்யமாக நடந்திருக் கிறது. இதை எங்களுக்குச சொல்லக்கடவீர். பிரபுவே! இந்தத தேவாஸுரயுத்தத்தில் நாம யாரால் காப்பாற்றப்பட்டோமோ அவர்

---

1 ஹோமம்செய்யும்மந்த்ரம்.

2 அதாவணவேதம் ரிக்கில் சேர்ந்ததாகக்கருத்து.

எங்கே? அவர் உண்மையில் யார்? நம்மைக்காப்பாற்றிவிட்டுப் பேசாமலே வந்தடி திரும்பிச்சென்ற திவ்யரூபமுள்ளவர் யார்? அவரை நாங்கள் அறிந்துகொள்ளவிரும்புகிறோம். எங்களுக்குச்சொல்லக் கடவீர்' என்றுகேட்டனர். ராஜனே! மீதவர்கள்எல்லாராலும் இவ்வாறுகேட்கப்பட்டவ நம் சொல்லும்பொருளும்உணர்ந்தவருமாகிய ப்ரம்மரிஷிவர் பத்மநாபர் துஷ்கிஸ்வரூபத்தைப்பற்றிச் சொல்லலானார்.

'உலகங்களுக்கெல்லாம்ஈச்வராரும் குணங்களற்றவரும் குணங்களுள்ளவரிற்சிறந்தவருமாகிய ஆதித்யபரியமான அந்தப்பகவானே உலகம் ஸரியாகஆரியத்திறமையில்லாதது. தேவர்களே! அந்தவிஷயத்தில் கருடருக்கும் ரிஷிகளுக்குமிடைந்த ஸம்பாஷணையாகிய ஒருபழமையான இதிஹாஸத்தை உங்களுக்குச் சொல்லுவேன். முற்காலத்தில் இமயமலையின்மேல ப்ரம்மரிஷிகளும் ஸித்தர்களும் ஸர்வேச்வரனைப் பற்றிப் பலவிதமான ஸம்பாஷணை செய்துகொண்டிருந்தனர். அவர்களபேசிக்கொண்டிருக்கும்பேச்சு முடியும்போது சக்ரத்தையும் கதையையும்கொண்ட சிருமாலின்வாஹனமும் சிறந்தபஹுமையுள்ளவருமான பக்ஷிராஜர் அங்கே வந்தார். மஹாபராக்ரமசாலியும் மிக்க பலசாலியும் பிருத்தஹ்ருதியுள்ளவருமாகிய மஹாகுள்ளவரிற்சிறந்தவருமான அந்தவைனதேயர் இறங்கி அம்மஹரிஷிகளிடம்சென்று அவர்களால நல்லரவவிசாரித்துப் பூஜிக்கப்பெற்று அடக்கத்துடன்தலை வணங்கிப் பூமியில் உட்கார்ந்தார். உட்கார்ந்திருக்கும் பெரியதேஜஸ்வள்ள அம்மஹாத்மாவானவைனதேயரைச் சிறந்தவருமுள்ள மஹாத்மாக்களானரிஷிகள், 'வைனதேயரே! எங்கள்மனத்தில் தெரிந்துகொள்ளவேண்டியஆசை அதிகமாயிருக்கிறது. நாங்களோப்புழிப்பவரே! அதற்குச்சொல்லதக்கவர் உம்மைவிடவேறயாருமில்லை. அந்தச்சிறந்தகேள்விக்கு இப்போது நீர்மறுமொழிசொல்வதை விரும்புகிறோம்' என்று இதற்கேள்வியைக் கேட்டனர்.' இவ்வாறுகேட்கப்பட்டகருடர் வணக்கூப்பிக்கொண்டு, 'ப்ரம்மரிஷிகளிற்சிறந்தவர்களே! நீங்கள் பொறுமையின்றி அன்புடன் என்னிடம்கேட்கவேண்டியதைக்கேட்கவிரும்புவதனால் நான் தன்யனும் அனுக்ரஹிக்கப்பெற்றவனுமாகிறேன். பேசுகிறவரிற்சிறந்தவரே! நான் சொல்லவேண்டியதும் செய்யவேண்டியதும் என்ன? சொல்லுங்கள். நீங்கள் உங்கள் உசிதப்படி எல்லாவற்றையும் என்னைக்கேட்பதற்கு உரியவர்கள்' என்று மறுமொழிசொன்னார். பிறகு, அங்கே அந்தரிக்ஷசாரிகள் அநந்தராணவிஷ்ணுவுக்கு நமஸ்காரஞ்செய்து மகாபலசாலியவனவைனதேயரைக் கேட்கத்தொடங்கினர். 'தேவர்க்கும்தேவரும்

மஹாத்மாவும் குற்றமற்றவரும் வேண்டினவற்றைக்கொடுப்பவரு மான நாராயணரை நீர் ஸேவிக்கிறீர். அவர் எங்கிருப்பவர்? உண் மையில் எப்படிப்பட்டவர்? அவருக்குக் காரணமும் கார்யமும் எப் படிப்பட்டன? இருப்பிடம் யாது? அந்தப்பகவான் எங்கேதான் நிலையாயிருப்பவர்? இதைப்பற்றி உம்மிடம் கேட்கிறோம். அந்தப் பகவான் பக்தர்களுக்கு அன்பர். அவருக்குப் பக்தர்கள் அன்பர்கள். நீர் அவருக்கு அன்பரும் பக்தருமானவர். கஸ்யபகுமாரரே! வேறு யாரும் உம்மைப்போலில்லை. மனதையும் கண்களையும்பறிப்பவர் போலக் காணக்கூடாததிருமேனியுடையவரும் முதலிடைகடையற் றவருமாகிய அகலப்பிரபு எங்கிருப்பவரென்று நாங்கள் அறியோம். தாம்ஒருவரே உண்மைப்பொருளும் எங்கும்நிலைத்தவரும் காலவரை யறையும் விகாரமுமற்றவருமாய் உலகாவற்றிற்கும் அந்தர்யாமியுமாக அந்தப்பகவான் வேதங்களிலும் சொல்லப்படுகிறார். ஆகிலும், தெளி வாக நாங்கள் அறியவில்லை. ஐயா! நிலம் நீர் தேயு வாயு ஆகாயம் இவ்வைகுபூதங்களும் அவற்றின்குணங்களும்கரணமும் உற்பத்தியும் நாச மும் ஸத்வரஜஸ்தமோகுணங்களும் அந்தக்குணங்களின் பரிணமங் களாகியபொருள்களும் மனமும் புத்தியும் சக்தியும் புத்தியினலறி யப்பட்டஸூக்ஷ்மவிஷயங்களும் அவரிடத்திலிருந்தலலவோ உளடா கின்றன? அந்தப்பரபு அவற்றினுள்ளிருக்கிறார். அறிவினல் பலவகை களாக ஆராய்ந்துபார்த்தபிறகு அந்தப்பரமபுருஷபரஸ்வரூபத்தைத் தெளிவாக நாங்கள் அறியவில்லை. அதை எங்களுக்கு உளளபடி சொல்லக்கடவீர். இந்தஒரு பெரியகேளவியையமட்டுந்தான் நாங்கள் தெரிந்துகொள்ள விருப்பத்துடன் இவ்வாறு உம்மைக் கேட்கிறோம். அதை எமக்குச் சொல்லக்கடவீர்' என்றனர். அதற்குக் கருடர் சொல்லலானார்.

'பகவானுனவர் நமக்குத்தெரியாமல அவருக்குமட்டும் தெரிந்த ஏதோஒருகாரணத்தினல் மூவுலகங்களையுமகாப்பதற்காக ஸ்தூலரூ பத்தைஎடுத்துக்கொண்டு காட்சிக்குஅகப்படுகிறார். ஸ்ரீவத்ஸமென் னுமமடையாளமுள்ளவரும எக்காலமும்இருப்பவரும்மான அந்தப்பக வானிடத்தில் முன்னர்யான்கண்ட ஓருபெரியஆச்சர்யத்தை முற்றி லும கேளுங்கள். அவரைஅறிவதற்கு வேறுவகையிலும எண்ணலும் முடியாது; உங்களாலும் முடியாது. அந்தப்பகவான்எனக்குச்சொன் னதை அப்படியேசொல்லுகிறேன்; நீங்கள் கேளுங்கள். ரிஷிகளுட் சிறந்தவர்களே! தேவர்கள்பார்த்திருக்கையில் அமிருதத்தைக்காத் திருந்தகாவலாளிகளோடு அந்தயந்திரத்தையுமுடைத்து யுத்தத்

தில் இந்திராதிதேவர்களையும் மருத்[illegible]யும் [illegible]செய்து மலைகளைப்பெயர்த்துக் கடலிலக்கலர்ந் விரைவில் அபிருகம்கொண்டு வந்தேன். அந்தவன்பராக்கிரமத்தைப்பார்த்து அசரீரவாணி, 'ஓ! வைனதேயமே! நலைஉறுதியுள்ளவனே! உனதுபிருகச்செய்கையினல் ஸந்தோஷமடைந்தேன். வன்கொல உனக்குவேண்டுகலாகாது. நான் உனக்கு என்ன செய்யக்கடவேன்? சொல்' என்றுசொல்லிற்று. இவ்வாறுசொல்லும் அந்தவாக்குக்கு நான், 'நீயாரென்று தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். அதன்பிறகு நானக்கு நீ வரன்கொடுப்பாய். நீ காரணமா? காரியமா? தேவனு? அஸுரனு?' என்றுவினவினேன். அதன்பிறகு, பேசுகிறவர்களிற்சிறந்தவரும் வரன்கொடுப்பவருமான பகவான் எனமேலன்புகூர்ந்து கலகத்து, 'பக்ஷிகளிற்சிறந்தவனே! காலக்ரமத்தில் நீ என்னை அறிவாய். காயத்தைஸாதிப்பவனே! நீ எனக்கு வாகனமாயிருக்கக்கடவாய். உனக்குச் சிறந்தவரம்தருகிறேன். உலகத்தில் தேவன் தானவன்எவனும் பராக்கிரமத்தில் உனக்குச்சரியாக இருக்கப்போவதில்லை. வன்ஸ்மிருகத்தையடைந்து யார்க்கும்வெல்லக் கூடாதவனுவாய' என்று மேககர்ஜனைபோலக் கம்பீரமாகப்பேசினர். இவ்வாறுசொல்லும் தேவர்க்குருதேவருடும் எல்லாவற்றிற்கும்மேற்பட்டவருமான அநுதப்ரபுவை அடக்கத்துடன் நமஸ்கரித்து தலைவணங்கி வருதனம்செய்து, 'சிறந்தவைகளையுடையவரே! ஸரி; நீர்சொன்னதெல்லாம் இப்படியேயாகும். எனக்குநீர் கட்டளையிட்டபடி நான் உமக்கு வாகனமாவேன். பேரறிவுள்ளவரே! என்னுடையவிண்ணப்பத்தையும் நீர் கேட்கவேண்டும். நீர் மிகவிரைவிருக்கும்போது உமக்கு நான் கொடியாயிருக்கவேண்டும். இதுவும் நிச்சயமாகவேண்டும்' என்றுகேட்டேன். பெரியபான மூள்ள அந்தப்பகவான் மறுபடியும் என்னைப்பார்த்து, 'அப்படியேயாகட்டும். நீயும் நுகங்கொண்டுவரும் போதுநேர்ந்ததைத்தவிர வேறு நீசெல்லுமிடங்களுக்கு இவ்வகையான இடையூறுவராது' என்றுசொன்னர். தேவருக்குருதேவரும் நித்யருமான்பகவான் என்னிடம் இவ்வாறு உடன்படிக்கைசெய்துகொண்டு, 'நீ செல்லலாம்' என்று எனக்குச்சொல்லித் தம்மிஷ்டப்படிசென்றார். சிறந்தவர்களே! நான் யாரோஒருவரோடு ஸம்பாஷணை செய்தேனென்றுநினைத்து அவரைத்தெரிந்துகொள்ள ஆவலால்தூண்டப்பட்டவனுய் என்தந்தையான கச்யபரை அடைந்தேன். என்தந்தையிடம்சென்று நமஸ்காரமும்[1] அபிவாதனமும்செய்து நடந்தபடி

[1] நமஸ்காரம்செய்தலாவது தன்னுடையபெயர்முதலியவற்றைத் தெரிவித்துத் தன்னை ஆசீர்வதிக்கச்செய்தல்

முழுதும் அவரிடம்சொன்னேன். என்னிடம்இதைக்கேட்டபிறகு, மகிமையுள்ளஎன்தந்தை தியானம்செய்தார். பேசுகிறவரிற்சிறந்தஅவர் சற்றுநேரம்தியானம்செய்தபிறகு எனக்குச் சொல்லலானார் 'குழந்தாய்! யார்க்குந்தெரியாதபரமாத்மாவான அம்மஹாத்மாவுடன் நீ ஸம்பாஷணம்செய்ததினால் நன்மையும் அனுக்ரஹிக்கப்பெற்றவனும் ஆகிறாய். மூலப்ரக்ருதியின்உற்பத்தி பிரளயங்களுக்கு இடமானவரும் புலன்களாகஸ்வரூபத்திலிருப்பவருமாகிய அந்தபகவான் சிற்சிலகிமித்தங்களைப்பற்றிக் காணத்தகாதஸ் வரூபத்தோடு காணப்படுவார் மேலொளியுள்ளவரும் சிறந்ததசக்தியுள்ளவரும் தவங்களுக்கு இருப்பிடமுமாகிய அந்தபகவான் முன்னால் அவர்ஓ நாவிடத்திலே யோமனத்தைசெலுத்தி த்யானத்துடன் உக்ரமானதவஞ்செய்து ஆராதிக்கப்பட்டார். புத்தனே! அதன்பிறகு என்னைஸ்ருஷ்டிப்பதற்காகவே வெளுப்பு, பொன்னிறம், சிவப்பு, ஊதா, [1]கபிலவர்ணம், செம்மட்டைநிறம், மிகநுண்டசிவப்பு, நீலம், கருமைஆகியபலநிறங்களாகவும் ஆயிரம்வயிறுகளும் கைகளும இரண்டாயிரம்பெரியவாய்களுமுள்ளவராகவும் ஒருகண்ணுள்ளவராகவும் நூறுகண்களுள்ளவராகவும் தம்மை எனக்குக் காண்பித்தார். ஸூர்யனைப்போன்ற ஒளியினால்விளங்குபவர்களை பிக்கரஹஸ்யமானவரும அழியாதவரும் மாறுதவருமான அவரை ஆகாரமில்லாமலும் ஓய்வில்லாமலும் தியானித்தேன். உலகமெல்லாம்தாமாகவும் சரணுதரஷ்டிகராகவுமிருக்குமவரை அணுகித் தலையினால்வணங்கி ரிக்யஜுஸ்ஸாமவேதத்தினாலும் நிதானச் சரணுகதிசெய்தேன் ஜயிப்பவரிற்சிறந்தவரான அந்தப்பகவான் பெரியமேகக்கூட்டத்தின் முழக்கம்போலக் கம்பீரமான தொனியுடன், 'புதரா! புதரா!' என்று என்னை அழைத்து, 'ஓ! மஹரிஷியே! நீ ஐசுவரியத்தைவிரும்பித் தவம்செய்தாய் நீ பற்றுக்களைவிடாததினால் மோக்ஷம்பெறுமல் இப்போது என்னைப பார்க்கிறாய். ப்ராம்மணனே! வர்போது பற்றைவிட்டு அஜ்ஞானமும்ஆசையும் நீங்கினவனாவையோ அப்போது பரபரம்மமாகியஎன்னை இடைவிடாமல்தியானிப்பாய். ப்ராம்மணனே! வேறுபொருள்களையும் பயன்களையும்கருதாது நிச்சயபுத்தியுடன் என்னிடம்பக்திவைத்து என்னையேபரமாகக்கருதினபிறகு அஜ்ஞானம்நீங்கி என்னை உண்மையாய்அறிவாய்' என்றுசொன்னார். ஸ்வபாவமாகவே எல்லாருக்கும்நன்மையையேவிரும்புகிறவரும் மஹாத்மாவும் உலகத்தைத்தம்சரீரமாகவுடைய வருமான அந்தபரமபுருஷரோடு நீ ஸம்பாஷணம்செய்திருக்கிறாய்.

[1] மட்செ்சிவப்பு.

அவரையே சீக்கிரம் ஆராதனம்செய். அவரை ஆராதனம்செய்தபிறகு நீ தாழமாட்டாய்' என்றார். ப்ரம்மரிஷிகளிற்சிறந்தவர்களே! எல்லாம்தெரிந்தஎன்பிதாவினால் இவ்வாறு நியாயங்களைச்சொல்லி மனத்தில்நிச்சயமுண்டாக்கப்பட்டபிறகு நான் என்னிடத்திற்குச் சென்றேன்.

நாற்பத்தோராவது அத்யாயம்.

தானப்ரம்ஸபர்வம். (தொடர்ச்சி.)

(பகவானை த்யானிப்பதே ஒருவனுக்கு நூறு அச்வமேதங்களுக்கு ஸமமானது)

நான் என்தந்தையினிடம்விடைபெற்றுக்கொண்டபிறகு அந்தப் பகவானுடையரூபத்தில்லையே மனம்சென்றவனாகி என்னிருப்பிடம் சேர்ந்ததும் அந்தவிஷயத்தையே நினைத்துக்கொண்டிருந்தேன். அவருடையரூபத்தில் புத்தியும்மனமும்சென்று மனமேதன்மயமாகி எக்காலமுமிருப்பவரும் விகாரமற்றவரும் எல்லாவற்றிற்கும்மேலானவருமாகிய கோவிந்தரையே தியானித்துக்கொண்டிருந்தேன். நாராயணரைக்காணவிரும்பிக்கொண்டு மனம் அதிலேயே உறுதியாயிருந்தது. மனத்திற்கும்காற்றிற்கும் ஒப்பானவேகமுள்ளநான் என்வேகத்தையெடுத்துக்கொண்டு அழகியபதும் விசாலமுமான பதரிகாச்ரமத்தென்னும் நாராயணரதுஆச்ரமத்திற்குச் சென்றேன். பிறகு, அங்கே பாவங்களைஒழிப்பவரும் உலகங்களுக்குமூலகாரணமும் ஈச்வரரும் தாமரைக்கண்ணருமாகிய கோவிந்தரைக்கண்டு அவரைத் தலையால் வணங்கினேன். பரிக்ரமஞ்செய்துடன் பிரியஜ்ஞாஸாமவேதங்களினால் அவரைத் துதித்தேன். பிறகு, பகவானுக்குமிடமாகிய மிகப்பெரிய அரசமரமொன்றைக் கண்டேன். நாலுலக்குகளுக்கும்தக்கபடி இரட்டிப்புப்பருமனான பதாள்களையுடையவரும் சங்கம்சக்ரம்கதைகளை வஹிப்பவரும் மத்யான்னஸூர்யனைப்போலப்பிரகாசிப்பவரும் தம்மொளியினால் திசைகளைப்ரகாசிக்கச்செய்கிறவருமான ஆதிபுருஷரும் பீதாம்பரந்தரித்தவரும் கண்மைபோலச்யாமவர்ணருமான புருஷோத்தமரும் பகவான் என்னால்துதிக்கப்பட்டவராகி என்னை வாவென்றுசொல்லித் தம்மொளியினால் திசைகளையும் மூலைகளையும் விளங்கச்செய்துகொண்டு வடதிசைக்குத்திசையாகப் புறப்பட்டார். அளவற்றசக்தியுள்ளவரும் குற்றமற்றவருமான அந்தத்திவ்யபுருஷர் போகும்போது மெதுவாகச்செல்லுகின்றஅவரை நான் வேகமாகப் பின்தொடர்ந்

தேன். அறுபத்தெண்ணூயிரம் நூறாயிரம் லக்ஷம் நூறுலக்ஷம் இரு நூறுலக்ஷம் யோஜனை தூரம்சென்றபிறகு அங்கே விறகில்லாமல் பெரு மஜ்வாலைகளோடுஜ்வலிக்கும் நூறுயோஜனை அகலமும் இருநூறுயோ ஜனைநீளமுமுள்ள பெரியஅக்னியைக் கண்டேன். அக்னியைப்பே பன்றஒளியுள்ள அம்மஹாயோகியானவர் அவ்வக்னியில் ப்ரவேசித்த தார். அவ்விடத்தில் சிறந்தமேதாவலதயாகியசங்கர் உமாதேவியுடன் தவம்செய்துகொண்டிருந்தார். அவர் அருடன்ஸம்பாஷணைசெய்து அக்னியைத்தாண்டினார். நான் கணப்பிரஜைலோகத்தை ரக்ஷிப்பட்டுப் பின்தொடர்ந்தேன். அவர் ஸூர்யனைப்ரகாசிக்கச்செய்யப்பட்ட நீண்டவழியைத்தாண்டினபின் ஸூர்யனில்லாமலும் முடிவில்லாமலு மிருக்கும்பேரிருளில் ப்ரவேசித்தார். பிறகு, அவ்விடத்தில் என் பார்வை கடைப்பட்டுப்போயிற்று. எல்லாவற்றிற்கும்ஆத்மாவும் பேரொளியுள்ளவருமான அந்தப்பகவான் வழக்கம்போல அதற்குள் ப்ரவேசித்தார். அப்போது நான் புத்தியையும் குருடனையும் செவி டனையும்போல ஒன்றுந்தெரியாமலிருந்தேன். இருளமூடியிருந்தத னல் திசைகளும் மூலைகளும் எனக்குத தெரியவில்லை. அந்தமூட்ட மான இருளில் ஒன்றையுமறியாதநான் மனம்பதைத்து மிகத்துயர மடைந்தேன். பிறகு, நான் கைகூப்பிக்கொண்டு தேவர்க்குத்தேவ ரும் நித்யருமான அந்தப்பகவனை பணத்தினால்சரணமடைந்து வாக் கினால் பின்வருமாறுதுதிக்கலானேன். பகவானே! நடந்தவற்றிற் கும் நடக்கின்றவற்றிற்கும்ஈஸ்வரரே! இருக்கிறதையும் இருந்ததை யும்படைத்தவரே! விகாரமற்றவரே! பகைவரையடக்குகிறவரே! சரணமடைந்தஎன்னைக் காப்பாற்றுக்கடவீர். நீர் யாவர், யாருடைய வர், எங்கிருப்பவர்என்னும்உண்மையையறியக்கருதிய நான் உமது வழியில்வந்தேன். ஈஸ்வரரே! நீர் என்னைக் காப்பாற்றக்கடவீர்' என்றேன். பழமையானஉருவமுள்ளவரும் எக்காலமுமிருப்பவரும் உலகத்திற்கெல்லாம்தஞ்சமும் ஆத்மாக்களுக்குஆதாரமும் ஈஸ்வரரு மாகியபகவான் மேற்புறத்தில் கண்முன்னேதோன்றி, என்னிடம் 'வாவென்றுசொல்லிப் பார்க்கமுடியாதநிருமேனியுடையவராகி என் னைமயங்கவைத்தார். அபயம்கொடுக்கும்பிரபு தாமாகவே தம்மியற் கையை அங்கேகாண்பித்து எனக்குஸ்ரமத்தையும் பயத்தையும் உண் டுபண்ணினார். அழிவில்லாதவரும் அடித்தவரைத்தவறவிடாதவரு மான பகவான் நான் ஸ்ரமமடைந்திருப்பதையறிந்து தம்வாக்கினால் எல்லைத்தேற்றிப் பேரிருளில்பிரவேசித்தார். நான் அவரையேதொட ர்ந்துசெல்லும்போது கணப்பிரஜைலோய்ந்து தேவஸ்ரேஷ்டர்களு

க்கும் ஈஸ்வரரான அவனையே மனத்தினால் தியானம்செய்யத்தொடங் கினேன். அளவற்றமஹிமையுள்ளபகவான் நான் அவ்வகையாயிருக் கதைக்கண்டு எனக்கு அநுக்ரஹம்செய்யக்கருதியே அவ்விருஷப் போக்கினர். அவ்விருஷ்போனவுடன் விளங்குகின்றமத்யான்னஸூர் யனைப்போல ஒளியெங்கும்பரவும்படி ப்ரகாசிக்கும்அவரைக் கண் டேன். அவ்விடத்தில் தம்மொளியினாலேயே ப்ரகாசிக்கும்புருஷர் களும் மிக்க ஆச்சர்யமுள்ளஸ்த்ரீகளும் ஆயிரக்கணக்காயிருப் பதை மனங்கலங்காமற்பார்த்தேன். அவ்விடத்தில் ஸூர்யனும் நக்ஷத்ரங்களும் சந்த்ரனும் ப்ரகாசிப்பதில்லை. நூறுகிலோடுகூடிய காற்றும் அடிப்பதில்லை. அவ்விடத்தில் எல்லாத்திசைகளிலும் அனேகவாத்தியங்களும் ஸ்தோத்ரபாடல்களும் - ண்ணுக்குஉருவம் தெரியாமல் மனத்துக்கினியனவும்படி கேட்கப்பட்டன. [1] வைடூர்யக்கல் தரைகளுள்ளமலையும் சாமஜங்களும் நெய்தல்களும் மீன்களும் நிரம் பினவையும் முத்துமயமானமணற்குன்றுகளையும் கலைகளையுமுடைய வையும் தெளிந்தஜலமுள்ளவையுமான நதிகள் பெருகி ஓடுகின்றன. அதே தேவரும் அஸுரரும் கந்தர்வரும் நாகரும் இயக்ஷரும் அரக் கரும் போகுமிடமன்று. அங்குள்ளபுருஷர்கள் தம்மொளியினால் பரகாசித்து ஆச்சர்யரூபமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். பர மாத்மாவைஅனுபவிக்கும் அவர்களின்ஒளிக்குத் தேவர்களும் ஈடா கார் தேவர்களாலும் பூஜிக்கப்பட்டபகவான் அவர்களையும்தாண்டி விறகில்லாமல் ஜ்வலிக்கின்ற ஒப்பற்ற அக்னியிலே ப்ரவேசித்தார். என் மேல் ஜ்வாலைகள்ப்ரவேசிக்கும்படி ப்ரஜாபக்ஷமும்ஜ்வலிப்பதும் தைத் யராலும் தானவராலும் அரக்கராலும் தேவராலும் தாங்கமுடியாத தும் ஜ்வாலைகளே மாலைகளாகவுடையதும் அழிவில்லாததுமாகிய அந்தஅக்னி என்னால்பொறுக்கவேமுடியாதென்றுஅறிந்து மனத் தில், நான், 'அனேகயுத்தங்களிலே பெரும்ஜ்வாலைகளோடுகூடிய அக் கினியில் ப்ரவேசித்தமிருக்கிறேன்; அலைத்த தள்ளியுமிருக்கிறேன். எங்கும்அது என்னைச் சுட்ட தில்லை. இந்தஅக்னி எப்போதும் பொறு க்கமுடியாததாயிருக்கிறது. இந்தஅக்னி தன்ஒளியினால் அக்னி ஸோமன் இவைகளுடையஒளிகளையும் ஜ்வாலைகளையும் மிஞ்சிப் பெரி தாக ஜ்வலிக்கிறது' என்றுநினைத்தேன். அதிகஜ்வாலையோடுகூடிய அவ்வக்னியினால் நான் அவ்வாறுதடுக்கப்பட்டும் சங்சுமச்சக்ரம்கதை

[1] இங்கு 'வைதூர்யலதாஃ' என்றிருக்கிறது, 'வைடூர்யமயமான தாமரைமுத லிய கொடிகளுள்ளவையும்' என்றுகொள்ளவேண்டும்.

கௌரவர்களை அந்தப்பகவானிடமே அடைக்கலம்பற்றினேன். 'ப்ரபுவே! பக்தன், அனுஸரித்தவன்என்று என்னைக் காப்பாற்றுக்கடவீர். ஈஸ்வரரே! என்னை அக்னிபரிக்காமலிருக்கும்படி உடனேசெய்ய வேண்டும்' என்றேன். இவ்வாறு புலம்புகின்றஎன்னுடையசொல் லைக்கேட்டு, ப்ரபுவானவர் மேகம்போலக் கம்பீரமானதொனியோடு, 'பயப்படாதே' என்றுசொன்னார். ப்ரபுவானபகவான்என்னைத் தேற்றியபிறகு, 'யோக்கியனே! எனக்கு உன்னைத் தெரியும். என் னுடையஉண்மையை ஸரியாகக்கண்டறிந்தற்காக நீ உன்தொழிலில் சட்டனேயிடப்பட்டபெரியவிஷயமாக எனக்குத் தெரிந்திருக்கிறது. வைரதேயனே! எவ்வகையிலாவது நான் ப்ரத்தரால்அபயப்பட வேண்டு மென்பதுதான் எனக்குத்தும. ஆனால், எனது இந்தஸ்வரூபம்பெரிது; எவ்வகையிலும் நீ அறியக்கூடாதது. ஞான தகிலங்களிலேபெற்றவரும் நான்எனதென்பதையும் பலனளிலே ஆசையையும் உலகப்பற்றையும் விட்டவர்களுமான விதவாங்கள் என்னை அடைகின்றனர். பக்ஷிகளிற் சிறந்தவனே! ஆகலால், எப்போதும் என்னிடத்தில் மனம்வைத் தூப்பக்திசெய்யுமதியும் உலகத்திற்குக்காரணமாயிருக்கும் எனது ஸ் தூலரூபத்தைமட்டுந்தான பார்ப்பாய்' என்றுசொன்னார்.

நாற்பத்திரண்டாவது அத்யாயம்.

தாண தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(அந்தர்த்தானாளவிஷ்ணு கருடனுதுசித்தகன்மேல் திருப்பவும் ப்ரத்யக்ஷமானதும் நருநாரயணர்பதரிகாச்ரமஞ்சேர்ந்ததும்)

ரிஷிகளுட்சிறந்தவர்களே! அவரால் இவ்வாறு அபயமளிக்கப் பெற்றநான் அதனால் ஒருகொடியில தயாரமும் கவலைப்பும் பயமுமற்றவ னானேன்; பிறரைவளிதிலெல்லும்சக்தியுள்ள அந்தப்பகவான் மெல்ல நடந்துசெல்லுகின்றார். நானோ மிகக்குடியவேகத்தைஅடைந்ததுக்கொ ண்டு அவர்பின்செல்லுகிறேன். அடங்காதமநிலையுள்ளவரும் தம் உண்மையைத்தாமேஅறிந்தவருமான அந்தப்பகவான நீண்டவெளி யான ஆகாசத்திற்சென்று மனத்தினாலுமசெலலக்கூடாத [1] இடத் திற்குச் சென்றார். பிறகு, அந்தப்பகவான் மனத்திற்கொப்பானவே கதையடைந்து என்னைப்ரமிக்கச்செய்து ஒருகொடியில் அங்கேயே மறைந்தார். பேசுவதில்லைமர்த்தராகிய அந்தப்பகவான் மேகம்போலக்

[1] 'தேவம்' என்பது, 'தேசம்' என்றிருத்தல்வேண்டும்.

கம்பீரமும் நாதமும்காப்பதுமாகியஒலியுடன், 'ஓ!' என்றசொல்லா லழைத்து, 'ஓ! இதோ நானிருக்கிறேன்' என்றவசனத்தைச்சொன் னார். அந்தக்குரலையனுஸரித்துக்கொண்டு நான் உடனே அந்தஇடத் திற்குச்சென்றேன். அங்கே அண்ணப்பறவைகள்நிரம்பின அழகுள்ள ஒருதடாகத்தைக் கண்டேன். ஆகமஜ்ஞானிகளிற்சிறந்தவரான அந் தப்பகவான் தமதுமேகூந்தராகாரஜலத்தில் பிரவேசித்தார். 'ஓ!' என்றதைத்தது எதிரொலிப்பதாகியதொனியுடன் என்னைப்பார் த்து, 'தக்கவனே! ஜலத்தில்புகு; நாம் இங்கே ஸுகமாகவஸிப் போம்' என்றுசொன்னார். உடனே அகஸாஹஸாத்மாவுடன்கூட அந்த ஜலத்தினிறங்கினேன். அக்ஸரஸில் யாராலும்மூட்டப்படாமலும் விறகுகளில்லாமலும் பற்றிக்கொண்டு நெய்ப்பற்றுடனும் எப்போ தும் ஜ்வாலைகளோடும் பலஇடங்களில் ரெகாசிப்பவையும் சிறந்தஒளி யுள்ளவையுமான அக்னிகளைக்கண்டது பிரகாஸாச்சர்யம். அவ்வக்னி கள் நெய்விடாமலே நெய்விட்டவைபோலும் விறகுபோடப்படாமலே விறகுபோடப்பட்டவைபோலும் ஜ்வலித்துரெகாணடிருந்தன. பிறகு, எனக்குவரங்கொடுத்தவருமே சேர்ந்துவருகவருகவென்றபகவானை அங்கே நான் காணவில்லை. அதன்பிறகு, மயக்கமடைந்து பெருங்குரலழுதேன். அப்போது அனேகஇடங்களில் பாதாளங்களைப்போலுண்டுபட்டு நெய்யாகுதிசெய்யப்பட்டஅக்னிஹோத்ராக்களை நூற்றுக்கணக்கு ஆயிரக்கணக்குமாகக் கண்டேன். புஷ்பங்களைப்பரப்பப்பட்டும் தர்ப்பங்களோடும் தாமரைமலர்களோடும் கருநெய்தலமலர்களோடும் சேர்ந்தும் தரைபெருக்கப்படாமலிருக்கும் வேதிகைகளையும் பொற் குடங்களையும் கண்டேன். நூற்றுக்கணக்கும் ஆயிரக்கணக்குமான புதியபுதியஅக்னிஹோத்ராக்களையும் அக்னிஹோத்ரத்திற்குரிய திர வியங்கள்பலவற்றையும் அங்கே நிரம்பக்கண்டேன். அந்தஅக்னி யானது புண்யத்தைத்தெரிவிப்பதும் நலவாஸனையுள்ளதும் மனத் திற்கினியதும் நெய்மமணத்தினுலமணத்தைப்பிழப்பதும் மூகருக்கும் கண்ணுக்கும் ஸுகமேற்படுத்தக்கூடியதாயிருந்தது. மந்திரங் களினுலதூண்டப்பற்ற ஆயிரக்கணக்கான அக்னிஹோத்ரங்களின் ஸமீபத்தில் மற்றொரு மாறுதலான ஆசசாயத்தைக் கண்டேன். அக்னிகளின்ஸமீபத்தில் சந்திரபிம்பம்போலவும் நாணற்பூப்போல வும் மூடுபனிபோலவும்வெளுத்திருப்பனவும் மாசற்றஸூர்ய னைப்போலொளியுள்ளவருமான புருஷர்களுடைய ஒளியுள்ளபெரிய யாகபூமிகளை ஆயிரக்கணக்காகக்கண்டேன். அந்தஅக்னிகளின்ஸமீ பங்களில் தங்கள்ப்ரபாவத்தினுல்மறைந்துகொண்டு ரிக்யஜுஸ்ஸாம

வேதங்களைத் தெளிவான அக்ஷரங்களோடுஉச்சரிக்கும் புருஷர்களுடைய அழகானஸ்வரங்களோடுகூடிய இனிமையானவாக்குகளைக் கேட்டேன். பரிசுத்தம்செய்யப்பட்டதரைகளில் ஜ்வலிக்கின்றதேஜஸோடுகூடிய அந்தப்பெரியஅக்னிகளினுல் ஆத்மசுத்தம்செய்யப்பட்டதான் சீக்ரமாகச்செலலக்கூடியவனேனன். அங்கே யாகம்செய்பவரின்யாகசாலைகளில அக்னிகள்ஜ்வலிக்கும்போது அவ்விடத்திற்கு நமஸ்காரம்செய்து அந்தப்பகவானைத் தேடத்தொடங்கினேன். மிக்க வேகத்துடன் அனேகமாயிரம்அக்னிஹோத்ரசாலைகளில் நிற்கும் அந்தப்பகவானைக்காணுதகான் அதனுல் துக்கமடைந்தேன். அவ்விடங்களில் தனித்தஜ்வாலைகளோடு பிரகாசமாகஜ்வலிக்கும் அக்னிஹோத்ரங்களில் தேவர்களுக்குத்தானான அந்தநித்யபுருஷரை நான் காணவில்லை. பிறகு, ஏபாதிகளைவிணவனை ஜ்வலித்த அந்தஅக்னிகளைப்ரதக்ஷிணம்செய்து அவற்றின்முடிவைக்காணுமல் கனைத்தேன் பயமும் மயக்கமுமுள்ளவனை எங்கும்பார்வையை விட்டுப்பார்த்து அதிகப்பிரமதத்தையடைந்து ஒன்றுந்தெரியாமல், 'நான் பார்த்த அப்படிப்பட்டபொருளிருக்குமிடமெதில நான் இருசகவில்லையோ? ரிக்யஜுஸ்ஸாமவேதங்களின்சப்தமட்டுமே கேட்கப்படுகிறது. ஒன்றுமே காணப்படவில்லையே. ஓங்குவரும்படி யாரால்கட்டளையிடப்பட்டேனை அந்தஈசுவரையுமே காணவில்லையே' என்று சிந்தையடைந்து தியானம்செய்யத்தொடங்கினேன். மனதில்பிரமை கொண்டு நான் தியானித்திருக்கும்போது எனக்குமிகவும்பயத்தைத் தரும் ஒருபெரியசப்தம் உண்டாயிற்று. உடனே அவ்விடத்தில் அந்தச்சப்தம்அதிகப்படுவதைக் கேட்டேன். பிறகு, ஆயிரங்களும் பதினுயிரங்களுமாகக் கருடர்களைக் கண்டேன். அதிகமான ஒளியும் வேகமுமுள்ள அந்தக்கருடர்கள் எண்ணிடத்தில்வந்தனர். அவர்களின் மஹிமையினுல் நான் எவ்வகையிலும தாழ்ந்தவனுனேன். அதிக காந்தியுள்ள கருடர்களிடைவரையும் நான் சுற்றிலும் சூழப்பட்டதைக்கண்டு எனக்கு அதிகப்பரபரப்புண்டாயிற்று. மன்மடங்கித் தலைவணங்கி ஆதியும்அந்தமுமில்லாத மஹாத்மாவான பரமாத்மாவைப் பின்வரும்நாமங்களைச்சொல்லி நமஸ்காரம்செய்தேன்:— [1]நாராயணரும் சுத்தரும் சாஸ்வதரும் த்ருவரும் பூதபவ்யபவேசரும் சிவனும் சிவமூர்த்தியும் சிவயோனியும் சிவாதயரும் சிவபூஜ்யதமரும் கோரரூபரும் மஹானும் யுகாந்தகாரணரும் விஸ்வரூபரும் விஸ்வதேவரும்

[1] இந்தநாமங்களின் உரைவிசேஷங்களைப பின்வரும் 'விஷ்ணுஸஹஸ்ரநாமத்திற்காண்க.

விஶ்வேஶரும் மஹாத்மாவும் ஸஹஸ்ரோதரபாதரும் ஸஹஸ்ராக்ஷரும் ஸஹஸ்ரபுஹ்னும் ஸஹஸ்ரவதனரும் சுசிஶ்ரவரும் மஹாஹனும் ருத்ரியும் ஸம்வத்ஸரரும் ரிக்யஜுஸ்ஸாமவக்த்ரரும் அதர்வஶிரஸ்ஸும் ஹ்ருஷீகேஶரும் க்ருஷ்ணனும் த்ருஹிணரும் உக்ரமரும் ப்ருஹத்வேகரும் தார்க்ஷ்யரும் ஏகஶ்ருங்கவராகரும் சிபிவிஷ்டரும் ஸத்யரும் ஹரியும் சிகண்டியும் ஹரகாசரும் ஊர்தவவக்த்ரரும் ரௌத்ராகேரும் ஸாதியும் விஶ்வதுவும் விஶ்வவர்ஷஹாவும் தேவவிஶ்ருவும் கருத்மானும் தரிணக்ரரும் ஸுதாமரும் விருஷாக்ருத்ரும் ஸம்ராட்டும் உக்ரரும் ஸங்க்ருதியும் சிரஜரும் ஸமபவரும் பவரும் விருஷரும் விருஷாரூபரும் விபுவும் பூர்பபுவரும் தீப்தஜிஹ்வரும் யஜ்ஞரும் ஸ்திரரும் ஸ்கஶிரரும் அரக்தரும் த்ரிஷாரரும் வீரரும் ஸமரும் ஜிஷ்ணுவும் புருஹூதரும் விஶிஷ்டரும் வரரும் ஸத்யேசரும் ஸுரேசரும் ஹரியும் சிண்டியும் பர்ஹிஷரும் ஹிரண்யரும் வஸுவும் விஶ்வவேதஸும் தீப்தியும் ஸுரேசரும் வாஸுதேவரும் சுஷ்மியும் ப்ரஹ்மதக்ஷயஜ்ஞேஷ்ணரும் யுக்யரும் குஹ்யரியும் ப்ரியஜரும் விபுவும் பாகவாஜரும் அபயரும் பாஸ்கரரும் சக்ரரும் பத்மநாபரும் பூரியும் புனர்வஸுப்ரஸாதத்வரும் ஜீவப்ரபவிஷ்ரும் வஷட்காரரும் ஸ்வாஹாவும் ஸ்வதாவும் சிதனரும் சிக்ரும் யஜ்ஞஸாமும் ஸாமமும் த்ரைலோக்யாதியும் ஸ்ரீபத்மரும் ஆத்மஸம்ஸ்தரும் தாரணீதாரியும் பரரும் விஸாமயாவிஸாமாம்ஸ்வரூபரும் ஸௌமபரும் ஸுமனஸுமும் விஶ்வரூபஸுவிச்வரூபரும் விஶ்வரூபாக்ஷரும் கோவரும் ஸுகேசரும் ரச்மிகேசரும் பூரியும் ஹிரண்யகர்ப்பரும் விஸாமயரும் விருஷரூபியும் நாராயணரும் அக்ரியவபுஸும், புருஹூதரும் வஜ்ரியும் வர்மியும் விருஷகேஸனரும் தர்மகேஸனரும் ரோதஸுமமுனியும் ஜ்வரமுக்தரும் ஜ்வராதிபதியும் அமோக்தரும் த்ரிணேத்ரரும் பிங்கலரும் விதிர்தியும் கபோப்ரம்மதிதானரும் யுகபர்யாயியும் சர்மணரும் சரண்யரும் பக்தவத்ஸரரும் ஸர்வபூதேசரும் பூதபவ்யபவரும் ஆகிய உம்மை நம்ஸ்கரிக்கிறன். தேவஶ்ரேஷ்டர்களுக்கும் ஈஸ்வரரே! நீர் வாக்குக்கெட்டாதசித்யராயிருக்கிறீர்; என்னைக் காப்பாற்றக்கடவீர்' என்றுசொல்லி, ரக்ஷிப்பதில்ஸமர்த்தரும் ப்ரம்மதேவருக்குக் காரணமுமாகிய அவரைச் சரணமடைந்தேன். துதிக்கத்தக்கவரும் துதிஸ்வரூபமுமாகிய அவரைத் துதிக்கும்போதே என்இருள் போய்விட்டது; என்பயம் தொலைந்தது; பக்ஷிகள்மறைந்து போயின; ஆகாயத்தில் உருவம்தெரியாமலே, 'கருதமானே! பயப்படாதே. என்னுல் அடக்கப்பட்டாய். திரும்பவும் இந்த்ராதிதேவர்களோடை

நது உனவ்டடிறகுசமசனறு புகராகளையும சுறறத்தாரையும் பார்ப பாய்' என்னும்மங்களவாக்குண்டானதைக் கேட்டேன். பிறகு, ஒருநிமிஷத் தக்கெல்லாம் சிறந்தஒளியும் சிறந்தசக்தியுமுள்ள அவர் எனக்கெதிரில் ஸமீபமாகத் திருவொன்றுகாணப்பட்டார். மங்கள ரூபியான அந்தப்பரமாத்மாவை நான்ஸந்தித்தபிறகு அந்த ஆதி தேவர் எண்மடங்கு அதிகமாகக் காலேபிடிலைத்து நாகாராயணஸ்வரமத்திற்குவ நவதைக் கண்டேன். யாகம்செய்யும்ரிஷிகளையும் தானிக்கும்தேவர்களையும் தானம்செய்யும் புனிவர்களையும் வரித்திபெற்று மணஸ்திதைவராமலிருக்கும்பியாரிகளையும் வீடுகளில் ஜபம்செய்துகொண்டும் ஆராதனம்செய்துகொண்டிருந்தபடியையும் கற்றிலும் பூமாரிகளால்அர்ச்சிக்கப்பட்டதும் தூபதீபங்கள் அளிக்கப்பட்டதும் நமஸ்கரிக்கப்பட்டதும் தண்ணீர்தளித்துப் பெருக்கப்பட்டதுமாகிய நாகாராயணஸ்வரமத்வதையும் கண்டேன். அந்த ஆச்சர்யத்தைக்கண்டு நான தினைத்திருந்தேன். குந்தமற்றவர்களே! அப்போது உறுதியானமனத்துடன் அந்தப்பரவாஸுதேவரை நமஸ்கரிக்கவணங்கினேன். எல்லாருக்கும்மேலுமகராமான அந்தப்பரமாத்மாவினது மிக்கஆச்சர்யமாகப்பராக்கிரமத்தை, 'இது என்ன' என்றுசிந்தித்தேன். யாராலும்வெல்லமுடியாதவரும் சிரேஷ்டர்களுக்குமேலாம் மிக்கசிரேஷ்டருமான அவரை அடிக்கடி வணங்கிஸ்துதிப்பதாலும் வியப்பினால் மலர்ந்தகண்களுடன் சிரமேற்கூப்பிவணங்கி நமஸ்கரித்துக் கொண்டிருந்ததாலும், 'பகவானே! தேவரே! கடக்கவற்றிற்கும் கடக்கின்றவற்றிற்கும் கடப்பவற்றிற்கும்ஸ்வாமியே! உமக்குநமஸ்காரம். முதலும் இடையும் கடையுமில்லாதஓர்ஆச்சர்யம் உம்மிடம்சேர்ந்ததாக நான்கண்டேனே. அது என்ன? சொல்லவேணுமே. என்னைப்பார்த்தென்றுசிரித்தது என்னிடத்தில் உம்மதுஅனுக்ரஹமுமிருந்தது, இது நான் கேட்கக் கூடியதாகவுமிருந்தால், எல்லாவற்றையும் முழுதும் சொல்லக்கடவீர். உமதுஇயற்கையும் ஜனனமில்லாதஉமதுஅவதாரமும் அறிதற்கரியன. நிகழ்கின்றவற்றிற்கும் சென்றவற்றிற்கும் வருபவற்றிற்கும். நாதரே! எவ்வகையிலும் நீர் அறியக்கூடாதவர். மஹரிஷியே! அந்த ஆச்சர்யமெல்லாவற்றையும் விடாமலுசொல்லக்கடவீர். நரஸுபக்தமுமிருந்தஅந்தஅக்னிகளிலிருந்தபுதுமை யாது? அந்தஅக்னிஹோத்ரங்கள் யாவை? எப்போதும் பரப்ரம்மத்தைப்பற்றியேகேட்டுக்கொண்டு கண்ணுக்குத்தெரியாமலிருந்தமஹாத்மாக்களின்வாக்கைக் கேட்டேனே. அவரெவர்? அக்னிகளின் அருகிலிருந்துகொண்டு மந்

த்ரங்களீச்சொல்லிக்கொண்டிருக்க அந்தப்ரம்மாணத்திதிகள் யார்? பகவானே! கிருஷ்ண! இவையெல்லாவற்றையும் விடாமல் எனக்கு உரைக்கக்கடவீர்' என்றுகேட்டேன்.

நாற்பத்துமூன்றுவது அத்யாயம்.

தர்மதர்மபர்யாயம். (தொடர்ச்சி.)

(விஷ்ணுஸஹஸ்ரநாமஸ்தோத்ரபாராயணப்ரஸ்தாவம்)

அதற்குப் பரமன் பிரமலலாடனை. "ஸத்யகுணமுள்ளவனும் யாருக்கும்புலப்படாதஆகாரமாயிருப்பவனும் அழியாதவனுமாகிய என்னைத் தேவர், கந்தர்வர், யக்ஷர்கள், ஆதித்யர்களிவருடனும் உண்மையாக அறியார். இறந்தகாலம் நிகழ்காலம் வருங்காலமாகிய மூன்றுகாலங்களுக்கு முதலும் நடுவும், அழிவும் உலகத்தை முகலில்படைத்தவனுமாகியநான் உலகங்களின்நன்மையைக்கருதி என் ஸ்வரூபத்தை நான்கு பகுதிகளாகச் செய்துகொண்டிருக்கிறேன். பிருதிவி அபபு தேயு வாயு ஆகாசம்என்னும்பஞ்சபூதங்களும் மனம், புத்தி, அகங்காரம், ஸத்வரஜஸ்தமோகுணங்கள், ப்ரக்ருதி, மஹத், விக்தை, அவிக்தை ஆகிய இவை என்னிடத்திலிருந்து உண்டானவென்றவை. நான் இவற்றினின் றுண்டானதுவல்லகையிலுமிலை நன்மையுள்ளதும் நன்மைக்குச்சிறந்தகாரணமும் தர்மமுள்ளகார்யமும் அதனையுண்டாகும்பலனும் நானே அப்படிப்பட்டநான் குற்றமற்றவன். ப்ரக்ருதியையும்ஆத்மஸ்வரூபத்தையும் அறிந்தவர்களாலும் பலவியாக்யானங்களைக்கொண்டு அறியப்படுகின்றவனும் முதலிடைகடையென்னும்மூன்றிலுமிருப்பவனும் நித்யனுமான அந்தர்யாமி நானே. புலன்களுக்குத்தப்புலப்படாதவற்றைக் காண்பவரும் மனத்திற்குஎட்டாதவிஷயங்களையே உணர்வன்றவருமான ஞானிகளால் மட்டும்எனது நிர்குணஸ்யமானஸ்வரூபம் அறியப்படும். ஆதலால், என்னுருவுள்ளவனுமாகியநான் அழிவில்லாதவன். இவ்வுலகம் முதலில்வ்யாபிக்கப்படாதிருந்ததேபோல் அதிதான் அழிவில்லாதவனது பரமஸ்வரூபம். அப்படிப்பட்டநானே எல்லாப்ராணிகளும் எல்லாப்ராணிகளுக்குமகாரணமும் விகாரமற்றவனுமாகிறேன். காருடனே! உலகப்பொருள்கள் என்னிடமிருந்துஉண்டாகின்றன. அவை இரவுமபகலும் எனதுலீலையே தங்கியிருக்கின்றன. பிரளயகாலத்தில் என்னிடத்திலேயே முடிவையடைகின்றன. கர்யபபுத்ரனே! என்னை எவன் எவ்வகையாகத்தியானிக்கிறானோ அவனுக்கு அவ்வகையாக நான்

[1] 1. வாஸுதேவன் 2. ஸங்கர்ஷணன் 3. பரத்யுமனன. 4. அனிருத்தன்.

இருக்கிறேன் பக்ஷியே! மனத்திலும் புத்தியிலுமிருந்து நன்மையைச் செய்கிறேன். பக்ஷிராஜனே! நீ என்னையறியவிருப்பங்கொண்டாய். 'நான் யார், எதிலிருந்துவந்தவன், எதற்காகயத்தனம்செய்கிறேன் என்பதைக்கேள். மனதையடக்கி மூண்டு அக்கினிகளையே மூக்ய மாய்ஆராதித்துக்கொண்டு எக்காலமும் அக்னிகார்யத்தையும் ஔபாஸனத்தையும் தலைமையாகக்கொண்டிருப்பவனும் கர்மஆத்மாவிலேயே அனிகளை ஆஹனனம்செய்து புலன்களை அடக்கி கர்மசெய்பவனுமாகிய அனைவரும் பிரஜாபதிமனத்தை அக்கினிகளில் பண்ணிட்டு மனதை செய்கின்றனர். ஜ்ஞானத்தையே காரணமாகச்செய்பவரும் மனத்தைவிஷயங்களிலிருந்துவிலக்கிட்டு நிர்வாணமென்னும் நிர்வாணஸ்யாகமஞ்செய்பவரும் ஸம்பிரதாயத்தைப்பரிசுத்தர்களாக வேறுகாயஞ்செய்கிறவர்களும் அக்னியே முக்யமான ஆதாரமென்னும் நிச்சயத்துடன் அக்னியையே ஆஸ்ரயித்து உபாஸிப்பவருமாகிய உறுதியானமனமுள்ளவர்கள் என்னையே அடைகின்றனர். உலகவிருப்பங்களிலிருந்து நிவர்த்திகடாமல் ஞானத்தில்லாப்பிரதிஷ்டையுள்ளவர்கள் ஆகமஜ்ஞனிடத்திலே ஆகனீயஅக்னிஹோத்ரமஞ்செய்து ஆகாரத்தைவிட்டு வந்தப்பயணத்தையுங்கடாமல் உலகின் பங்களில் முயற்சியற்றவர்களாகவும் பற்றற்றவர்களாகவும் ஒன்றி ஸமமனம்படைத்தவர்களாகவும் அறிவுகண்ணுடனும் இயற்கையாகவேயிருக்கிற மாறுபடாதபுத்தியுள்ள ஞானிகள் என்னையே அடைகின்றனர். பக்ஷியே! தாமரைநூலைக்கருங்கல்களைப்போன்ற ஒருகடலாகத்தைத் தீ ஆகாயத்திற்கண்டாயல்லவோ? அந்தஒருகடலில் அக்னிகள் விறகுகளைமேல் எரிந்துகொண்டிருக்கின்றனவே. அவ்விடத்திலே அறிவினால்தெளிந்தமனமுள்ளவர்களாகவும் சுத்தர்களாகவும் பிறப்பு இறப்பு என்ற வெண்ணிறமுள்ளவர்களாகவும் அக்னிஹோத்ரத்தைப்புஜித்துக்கொண்டும் தரித்துக்கொண்டும் வாழ்த்துவிளங்காமல்போகிக்கொண்டும் அந்தஅக்னிஹோத்ரத்தைத்தரித்துக்கொண்டும் பரிசுத்தர்களாயிருக்கார்கள். அவர்கள் என்னிலேயே ஆத்மசுத்திசெய்யப்பெற்று என்னிடத்திலேய பரிபோதம் அன்புவைத்துக் குற்றம்நீங்கி ஒளியுடையவர்களாயிருந்து என்னையே தியானித்துக்கொண்டிருப்பவர். ஆசை முதலியன அற்றவர்களும் நியமந்தவறாதவர்களுமான அவர்கள் அவ்விடத்திலேய வலிக்கத்தக்கவர். ஆஹாரத்தைவிட்டுத் தொழிலற்றுச் சுத்திகரணத்திற்கொப்பான ஒளியுள்ளவர்களும் அழுக்கற்றவர்களும் அஹங்கார மும்பதார்த்தமும்விருப்பமும் அற்றவர்களுமாகிய அவர்கள்தாம் என்னிடம் விடாதுபற்றுள்ளவர்கள். எனக்கும அவர்மேல் பற்றுண்டு நான் உலகத்தின்நன்மைக்காக நான்குவிதமானஉருவங்களைப் பகுத்துக்கொண்டு ஸஞ்சரிக்கிறேன்.

உலகங்களைத் தாங்குவதற்காகத்தொழிலும் செய்கிறேன். அதையெல்லாம் ஸரியாக என்னிடத்தில் நீ கேட்கவேண்டும். நிர்க்குணமென்று சொல்லப்பட்டவனது [1]முதலுருவம் [2]மோக்ஷமென்பதாகச் செய்கிறது. ஸ்ரீயாக [3]இரண்டாவதுரூபம் ஸ்தாவரஜங்கமங்களானவற்றுள் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமாகியுலகத்தை அழிக்கிறது; தனக்குத்தகாமனே ஆகாரமாயிருக்குமவ்வுலகம் தன்னைப்போலவேயிருக்கச் செய்து உலகத்தை அழிப்பதாக அறியப்படுகிறது; காமனெல்லாவற்றிற்கும் ஆகாரமாயிருக்கிறான். தனது மாயையினால் எல்லாவுயிர்களையும்ஒதுக்கித் தனதுமாயையினுள்ளடக்கிச் [4]ருத்ரனாய்ச் செய்கிறது [5]காலமானது பெரியமூர்த்தியானது உலகங்களைப் பாதிப்பது விடாமல் காலத்தால் நிகழ்கிறது [6]ஹரனானவனுருவங்களைக் கூடியவன் [7]ஆகாயத்திலுள்ளவனாயிருப்பவன். இவ்வுலகமாகிய மண்ணில் வியாபிக்கப்பட்டவை மண்ணிட தங்கி நிலைபெற்றிருப்பவை எல்லா உலகங்களுக்கும் நாதனான விதாதா; எங்கும் நிறைபவன்; அழியாதவன். பகவனே! நீயார்? எதனிலிருந்தோ காலங்களும் அதனதனிலிருந்து மீண்டும் தோன்றுமிவை எதனிலிருந்து தோன்றினவோ அதனிலேயே சேருவார். அவனுடையசிறந்த சக்தியுமே நன்றாக நிலைபெற்றிருப்பதாகிய நான் தான். அவர்களனைவரும் என்னிடத்திலேயேயிருப்பவர். நானும் அவரிடத்தில் இல்லாமலிருப்பவன். எல்லாவற்றிலும் பற்றை விட்டு என்னிடத்திலேதோய்ந்தபிறகு அறிவுகண்ணுடையிருப்பவன் எனனை அடையக்கூடும். உருவத்தோடிருப்பவன் உலகத்திற்குக்காரணமாகவும் காரியமாகவும் இருப்பவனென்றறி. தேவலோகமுதலியஉலகங்களும் என்னிடத்தினின்றுண்டானவையென்று அறி. திருப்பவும் என்னுடைய பிராணிகளிடத்து நான் பகுதிகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. பாவமாக்கும் [8]ஆதமாவாக இருப்பது [9]வாஸுதேவவடிவம். புத்தியிலிருப்பது அநிருத்தவடிவம். அகங்காரத்திலிருப்பது ஸங்கர்ஷணவடிவம். மனதிலிருப்பது பிரத்யுமனவடிவம். பஞ்சேந்திரியங்களிலும் நான்குபகுதிகளுண்டு. அவற்றையும் நீ நன்றாகக் கேட்கவேண்டியது. முதலில் ஒருபதமம்உண்டானதன்றோ? அதில் பரமமா உண்டானது பரம்மாவினிடமிருந்து

[1] வாஸுதேவன். [2] ஞானரூபமான தத்வதத்வம் [3] அநிருத்தன்
[4] ஸங்கர்ஷணன். [5] பரதியுனன் [6] ஆதாரமில்லாதவன்.
[7] அந்தர்யாமியாக.

சிவனுண்டானார். சிவனிடமிருந்து ஸதாப்ரம்மன்யர் உண்டானார். இவ்வாறு ஸ்ருஷ்டிகள் பத்மமும்சேர்ந்து நாலுவகையென்றறி. இவ்வாறே எப்போதும் தைதயர்கள்தானவர்களின் மாதத்தையடக்குகிறவன் நான்என்றறி. விஸ்தாரமாகச்சொலலுகிறவனே! தைத்யர்களும் தானவர்களாலும் அரக்கர்களாலும் தர்மம்பிடிக்கப்படுமிடமாகத் தர்மத்தை அபிவருத்திசெய்வதற்காக நான் மீதமெடுத்து அவதரிப்பேன். வேதங்களையும் அபாதரிசென்னகிலையாலையும் முக்யமாகக்கொண்டு நம்பிக்கையுள்ள புதரிபுடனிருக்கும்ஞானிகளுடம யோகாப்யாஸம் செய்யும்யோகிகளும் என்னைக் காண்பர் அவரவகையாகக் காணமுடியாது. நான் ஜகதீதாடமதேஹத்தைப்பவன்; முன்கையும்விட்டுப் பிரிந்திருப்பவன்; சுதிலுபிப்பவன்; அவற் நிலில்லாமலுயிருப்பவன் உறதியானநிச்சயத்துடன் சுகீனத்தினிப் வர்களேரோ அவர்தாம் என்னைக் காண்பார். ஆகாயம், வாயு, அப்பு, அக்னி, பூமி இவை ஐந்தாகவுயிருப்பவன் நானென்றறியவேணும். இவையல்லாமல் வேறுயிருப்பவையும் எதும் நிசயம். சப்தம ஸ்பரிசம் ரூபம் ரஸம் கந்தமென்றைம்குணங்களாகிய பஞ்சவாக்கியனாய் நான் எப்போதும் இருப்பவனென்றுப் நீவற்றைக்காடாதவனென்றும் மாறுமலிருப்பவனென்றும் அறியவேண்டும். எவர்களின்புத்தி ரஜோகுணத்தினலும் தமோகுணத்தினலும் அக்ரமிக்கப்பட்டு நிசயம்பெறு பலிருக்கிறதோ அவர்கள் பெருந்தவம்செய்தாலும் என்உண்மையைக் காண்பதில்லை. உபவாஸங்களாலும் இந்திரியங்களையடக்குவதனாலும் பலவகைவிரதங்களாலும் எனதுயர்ந்தஸ்வரூபத்தைக்காணவும் மனத்தினல்அறியவும் முடியாது. ஆகிலும், அஜ்ஞானமென்னும் ஆழமானசேற்றில்பூழ்கியிருப்பவர்களுக்குத தஞ்சம் விஷ்ணுவே. ஓர் உறதியுடன் தயானததிலிருப்பவர்களை யல்லாவற்றையும ஸந்யாஸம் செய்து என்னைப்பற்றின்றனர். எவர்களின்புத்தி ஸத்வகுணம்பொருந்திப் பற்றுதலினின்றும்விலகி ஆத்மாவினிடத்தில்நிசயமுள்ளதாயிருக்கிறதோ அவர்கள் தங்களுக்குஅந்தர்பாமியும் அழிவில்லாதவனும் பரமாதமாவுமானஎன்னை பார்க்கின்றனர் எல்லாப்ராணிகளுக்கும தீங்குசெய்யாமையும அவற்றிற்குவஞ்சகம்செய்யாமையும் முக்யம். அவைகளிடத்தும் நன்றுகமனம்வைத்திறுகுதான் நித்யனைஎன்னை அடையலாம். மிக்கஆச்சர்யமுமான ஒருவிஷயம் இப்போதுசொல்லப்படும். அதையெலலாம் ஜாக்ரதையுடன் சரியாகக்கேட்பாயாக. அக்னிஹோத்ரங்களைத் தவறுமல்

[1] பஞ்சபூதம்.

செய்துகொண்டும் ஜபயாகங்களை முக்யமாகநடத்திக்கொண்டிருந்தவர்களை நீ கண்டாயல்லவோ? அவர்கள் பரப்ரஹ்மத்தையே உபாஸிப்பவர்கள்; சாஸ்த்ரங்களிலுள்ளவிஷயங்களெல்லாம் தெரிந்தவர்கள்; எண்ணத்தினால் வேறுமுஞ்சிலும் பற்றில்லாதவர்கள். அவர்களைதாம் என்னை அறியமுடியும். ஏனெனில், என்னை அழிவற்றதாயும் எல்லாவற்றிற்கும்மேலானதாயும் ஸாங்க்ய தத்வமாகவும் யோகத்வரூபமாகவும் அறிந்தது ஸமத்தர்களாயிருப்பவரால் மனமுழுதிய நிறையாயின் எல்லாவற்றிற்குமேலான பரமகதியை அடையலாம். ஆதலால், பரிசுத்தமான ஞானத்தினால் மனம்பக்குவமடைந்து ஆசார ஸ்தானமென்பதாயிருக்கின் எவனுக்கு தூய நிலமே ஸ்வர்க்கமாகவும் ஸ்வயம்ப்ரகாசமான சிதாகாரமான ஆத்மாவே ப்ரஹ்மமாகவும் பரிசுத்தமான சிந்தாகாரமான ஆத்மாவே ப்ரஹ்மணபரிஷத்துகள் மனதிலிருந்தவாறு என்னிடத்தில் வைராக்யத்தை உயர்ந்ததாகியைப் பெறுகின்றனர். புதர்க்காட்டுக்கதிறுகதாகவும் உருவமே தோற்றுதுமாகிய ஸாங்க்யயோகமென்னும் தத்வஜ்ஞானத்தினாலும் ஸகயாஜ்ஞமான ப்ரஹ்மணர்களால் அடையப்படுகின்றது. அதனிடமே காற்றடிப்பதில்லை; ஸூர்யனுடைய வெப்பமடிப்பதில்லை; நீர் நிலம் ஆகாயங்களுமில்லை; மலமுதலியவுமில்லை. பகுதியே காணப்படுமபொருள்களெல்லாம் அதனிடமிருந்து உண்டாகின்றன. அந்தநிர்மலனைப்பற்றி அவ்வெல்லாவற்றிற்குமே ஈச்வரன். சுற்றமற்றவனே! நீ இப்போதுகண்டது என்னுடைய ஸ்தூலமானஉருவம். இது ஸாங்க்யமத்திற்குவழி. கார்யங்களுக்குக் காரணம் நானே. அளவற்றசக்தியுள்ளவனே! ஆதலால், அந்தஸமயத்தில் உன்னால் காணப்பட்டேன். நான்சிந்தித்ததாக நீ கண்ட தடையற்றதான் ப்ரமமாவினுடைய பகலிரவுகளென்று தெரிந்தவர்களால் கணக்கிடப்படும் காலம். யுகத்தையறிந்தவர்கள் யுகமென்றும் வேதமறிந்தவர்கள் வேதமென்றும் தவம்செய்பவர்கள் ஜபயஜ்ஞமென்றுமிதனை அறிகின்றனர். [1]பசுகிறவனும் [2]நினைக்கிறவனும் [3]நுகர்அறிகிறவனும் [4]முகருகிறவனும் [5]பார்க்கிறவனும் காண்பிக்கிறவனும் [7]அறிகிறவனும் அறிவிக்கிறவனும் [8]செல்லுகிறவனும் [9]கேட்கிறவனுமாகஇருப்பவன் ஞானஸ்வரூபியானநான். என்னைக்குறித்தது யாதுகளைசெய்துதான் ஸ்வர்க்

[1] ஸமதேகயற்ற. [2] மனம். [3] நா. [4] மூக்கு. [5] கண். [7] புத்தி. [8] பாதம். [9] செவி

பாணி பாயு உபஸ்த்தங்களென்னுங் கர்மேந்த்ரியங்களும் ஸ்பரிசமென்னும் ஞானேந்த்ரியத்தையும் உபலக்ஷணமாகக்கட்டிக்கொள்க. காண்பிப்பவன் தெரிவிப்பவன்என்பவை அந்தச்சக்திகளைக்கொண்டிப்பவன் என்னும்பொருளுள்ளவை. மற்றச்சக்திகளுக்கும் இதுவே உபலக்ஷணம்.

கத்திற்குச் செல்லுகின்றனர். பற்றற்றமனத்தினால் என்னையே தியானித்துத்தான் முடிவில் உயர்பதமாகியமுக்தியைப் பெறுகின்றனர். ப்ராம்மணர்களிடமுள்ள ப்ரமமதேஜஸ் நானே. எனது [1]தேஜஸ் தான் ப்ராம்மணர்கள். என்னிடமுள்ள தேஜஸ்வின்உருவமே அக்னி யென்றறியவேண்டும். தேகதாரிகளில் உயிரைக்காபபவன் நானே. யோகிகளுக்கும் தத்வஜ்ஞானிகளுக்குமே நானதான் ஈஸ்வரன். ஸ்ருஷ்டிக்குமுன் இவ்வுலகாணதும் என்னிடமிருந்தது. கர்மார்த்தகாம மோக்ஷங்களும் பனதத்தியையும் பூமியும் ஸகலராஜஸ்ஸுமிராகுணங்களும் அவரவர்களாகமாறளினலேஉண்டாகுபாவனைமாறுகளுமாகானே. அழிவிலாதநான் அவ்வுதமானஉருவத்தைத்தவிர முன்னே உன்னால் காணப்பட்டேனனறோ? அதறகுடன், பிரகாசமானஉருவமுள்ளவன் நீக்காலச்ரமத்தில் நீ அறியலாம. அதியாதுமம அலசவறறதும் குற்றமற்றதுமாகிய என்னி, ருபஉருவம அறிவுக்கு விரயமாடாதது. ஆதலால, நாராயணரென்றுசொலலபபடட பகவானனனை அறிவுக்கு மிகவும்அகபபடாதது. ஸாபபங்களுக்குசசந்நவே! ஐசுவரியம்பெற்றவர்களுக்கு அவ்வுருவம அறியத்தரான். முயறசிகளுமநமஸ்காரங்களுமபிராணதக்ஷணஞ்களுமாகிய ஸாஸாரபந்தங்களைவிட்டவிட்ட மஹாதமாக்கள சாசுவதபானபரம்மமாகிய அநதநாராயணரை அடைகின்றனர். குறறமறறவளகளியே! இவ்வாறு வெளிதோற்றமுள்ள என்உருவதனைத நீ கண்டாய. பண்ணசஙசளிபபுகிபவனே! உன்னைததவிர மேலுமொருவன இவ்வுலகையும அறியான். உனது புத்தி இனிச் கெடாது. இஃது எல்லாவற்றிறகும்மேலானஇடம். நீ எப்போதும என்னிடத்தில் பக்தியுளளவனாயிரு. அதன்பிறகு என்ஸ்வரூபதனைத ஆறிவாய். தேவர்க்குமமனிதர்க்கும ரகஸ்யமாயுளள இநதவிஷயமனைததும் உனக்கு உரைக்கபபட்டது இதுதான் எல்லாவற்றிலும் மேலானரகஸ்யம. இத்த மோகூபசெலலுகிறவர்களின் வழியெனறறி' என்றார். அந்தப்பகவான இவ்வாறுசொலலி அங்கேயே அந்தர்தானமானார். தமக்குத்தாமேஆதாரமான அம் மஹாயோகி நான்பார்த்திருக்கையிலேயே தம்மிடமசென்றார். மஹாத்மாவும மாறுதல்லபாவமுள்ளவரும் அறிவுக்கெட்டாதவருமாகிய அநதப்பகவானுடைய இவவிதமானமஹிமையை நான் முன்னே கண்டேன். ஆச்சர்யமானசெய்கையுளளவரும் சிறந்தஞானமுள்ளவருமான அந்தப்பகவானுடையதும நான்நேரில்கண்டனுபவித்ததுமாகிய இந்தச்செய்கையையெல்லாம் உங்களுக்குச் சொன்னேன்' என்றார்.

---

[1] மகிமை.

நாற்பத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(மேற்கூறிய கதையைப்படிப்பதாலுண்டாகுமலிபலன்.)

இவ்வாறு கூறுடர்சொல்லக்கேட்டபிறகு, அம்முனிவர்கள் அனைவரும், 'ஆ! ஆ! புண்யத்வமும் புகழையும் ஆயுளையும் ஸ்வர்க்கத்தையும் சிறந்தமோக்ஷத்தையுமளிக்கவல்லதும், மிக்கஆச்சர்யமுள்ளதுமான இக்கதையிற்சரித்ரத்தைக் கங்கைநதிநீர் சொண்ணீர் பகைவரைத்தின்பப்பிறந்தவரே! இக்கதைசரித்ரம் பாவங்களைப்போக்குவது; தேவர்களுக்கும்பிடாதவரையும் கூட, ஞானிகள் அறியத்தக்கவிஷயமும் அடையத்தக்கவையாகவும் இதுதான். தற்புண்ணர்ந்த எவன் பர்வகாலங்களிலாவது இக்கதையைப் பிறருக்குச் சொல்வனோ அவன் தேவர்களாலும் ரிஷிகளாலும் புகழப்பெற்றபுண்யலோகங்களை அடைவான். ஒருவன் பரிக்ஷித்தனபிறகு ஸ்ராத்தகாலத்தில் பிராம்மணர்களை இக்கதையைக் கேட்பிப்பானையின் அந்த ஸ்ராத்தத்தில் ராக்ஷஸர்களுக்கும் அஸுரர்களுக்கும் பாகமிராது. பொறுமையையும் கோபத்தையும்விட்டு எல்லாப்ராணிகளின்நன்மையிலுமேலாகத்துடன் எப்போலமும் இடைவிடாது இதைப்படிப்பவன் அந்தப்பகவானுடையலோகத்தை அடைவான். (இதைப்படிப்பதனால்) ப்ராம்மணன் வேதங்களில்கரைகண்டவனாவான்; க்ஷத்ரியன் ஜயம்பெறுவான்; வைசியன் தனதான்யங்களைப்பெறுவான்; சூத்ரன் ஸுகம்பெறுவான்' என்றுசொல்லி வைஸம்பாயரைப்பூஜித்துத் தங்கள்ஆச்ரமங்களுக்குச்சென்று சாந்திஒன்றையே முகன்மையாகக் கொண்டிருந்தனர் என்றார். தர்மபுத்ரனான அநுஷ்டிப்பதிற்சிறந்தமஹாராஜாவான யுதிஷ்டிரனே! தாமதமைப்பற்றிய இந்தஉபதேசத்தை மனத்தூய்மையின்றி வெளிதுகேட்டதில் யுதிஷ்டிரனைத்தவர்கள் வலிந்துஇழுத்து அறிவதற்குமுடியாது. வீரனே! ஆச்சர்யத்துடன் கேட்டதேவர்களுக்கு ப்ரம்மதேவரால் இந்தக்கதைசொல்லப்பட்டது. அப்பா! மன்தாயாரிடத்தில் நானிருக்குமபோது ஸுதவகுணம்நிரம்பின அஷ்டவஸுக்கள் இக்கதையை [1]எனக்கு உரைத்தனர். நானும் இப்போது உனக்குச சொன்னேன். ஆதலால், அக்னிஹோத்ரத்தைவிடாமலும் ஜ்யம்என்னும் யாகத்தைத் தலைமையாகக்கொண்டும் ஆசையென்னும்பந்தத்தையொழித்துமிருக்கும் ஸாதுக்கள்தாம் பர

[1] 'மயா' என்றது, 'மம' என்றிருத்தல்வேண்டும்.

ப்ரம்மஸாயுஜ்யத்தை அடைவர். தேகவியாபாரங்களாகிய யாகங்களை விட்டு ஜபமென்னும்யாகத்தை முக்யமாகக்கொண்டு மனத்நிலை விஷ்ணுவைத்யானிப்பவர் உயர்கதியெய்துவர். பாரதனே! நிறத்தமோக்ஷமும் மோக்ஷத்தின்வாயிலும இதுதான். ஆத்மஜ்ஞானமுள்ளவர்கள் இதனாலேதான் பரகியடைவா" வன்றா.

நாற்பத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி)

(கிருஷ்ணன், பீஷ்மாகோடித்தெரிவிட்டபடி தர்மபுத்ரருக்கு பாகவிஷ்ணுவை யடைவதற்கு சொல்லியது)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! சங்காபுத்ரரே! லோகாதிரிக்தவரும் உலசமெல்லாவற்றையும தமதுமாயையினுலேகூடகுறிவருரும் ப்ரம்மதேவருக்கும்ஈச்வரரும் சிலவாணரமுள்ளவருரும உலகமெல்லாம் தமது சரீரமாகவுடையவரு நய உலகங்களுக்கெலலாம்பிரபுவும் தேவர்களுக்கும் அஸுரர்களுக்குமதக்தையும, மூலப்பிரக்ருதிக்குக்காரணமும் பகவானுமாகிய சங்கர நடையநாமங்களையும மஹிமையையும்பற்றி நீர்கேட்டிருப்பதை இப்போது எனக்குஉள்ளபடிசொலலும்" என்று கேட்க, பீஷ்மர், 'சிறுதஞானமுளளவரான மஹாதேவருடைய குணங்களைச்சொலல நான் சக்தனலலேன். அதத்தேவர் பல்லாயிடங்களிலுமஇருபபவர்; ஓரிடத்திலும காணபபடுவதுமிலலை, ப்ரம்மாவையும விஷ்ணுவையுப இச்சரீரையுப்படைததவர்; இவர்களுக்கும்பிரபுவானவர்; ப்ரம்மா முதல் பிசாசம்ஈறகவுள்ள தேவர்கள் அவரை உபாஸனைசெய்கின்றனர். அவர் பிரபாவத்தை, ருஷிகளென்று சொலலப்படட ஆத்மாவுக்குமே லேயபடட யோகமார்க்கத்தையறிந்து உண்மைஸ்வரூபதைதக்கண்டு நசுகும்விஷயமல அவர் தியானிக்கப்படுகிறார் அழிவுறாபரப்பிரம்மமும் அவரே. காரியமாகவும் இருப்பது இல்லாததாகவுமிருப்பவரும தேவர்க்குந்தேவரும் பிரஜைகளுக்குஸ்வயம்புவாகியவர் தமதுசக்தியினல் பிரதான புருஷர்களைக் [1]கலக்கி அதினின்று ப்ரம்மாவைப் படைத்தார். காப்பவரும், பிறப்பு, மூப்பு, இறப்புகளுளளமானிடன்எவன் தேவர்க்குந்தேவரான ஸர்வஜ்ஞருடைய குணங்களைச்சொல்லத் திறமையுள்ளவனவன்? புத்ரனே! சங்கம் சக்கரம் கலைகளைத்தரித்திருக்கும் நாராயணரைத்தவிர எண்ணிப்போன்றவன் பரமேசுவரரானசங்கரரை அறி

[1] அசைவண்டாக்கி.

யத்தக்கவன்? எல்லாக்திசைகளிலும் குணங்களிற்சிறந்தவரும் யாராலும் எவ்வகையிலும் வெல்லமுடியாதவரும் திவ்யஜ்ஞானமுடையவரும் சிறந்தமஹிமையுள்ளவருமாகிய இருதயிஷ்ணு யோகமென்னும் கண்ணினுல்பார்த்தறிந்து மஹாத்மாவான கண்ணபிரான் நுக்ரீடம்பக்தி செய்கிறவிலதாய ஜகத்தை வியாபித்திருக்கிறார். அதர்க்கரசமே! பாரதனே! முகாலகதில் இவர் பதரிகாஸ்ரமத்தில் அநதச்சங்கரரை ஆராதித்துப் பிரன்தீபான்கனகளையுடைய மஹேஸ்வரிடத்திலிருந்து பல்லாயிரம்வருஷங்களுக்குமேலாக விஷயங்களைப்புறக்கணித்து அதிகப்பிரியமாயிருக்கும்படியை அடைந்தார். வாங்மெகரிப்பவரும், சராசரங்களுக்குத்தந்தையாகிய சிவபெருமானை ஆயிரம்வருஷகாலம் நிரம்பும்வரை ஆராதித்து இருதயகண்ணபிரான் தபஸ்செய்தார். ஒவ்வொரு யுகத்திலும் கிருஷ்ணனை மஹாபுருஷர் ஆராதிக்கப்பெற்றார். அவர் அம்மஹாத்மாவின்சிறந்தபக்தியினால் அநுக்கிரகம்செய்தார். உலகத்திற்குக்காரணமும் மஹாத்மாவுமாகிய பகவானுடைய மஹிமை எப்படிப்பட்டதென்பதை அச்சதரான இவர் புத்ரவரம்பெற்றபோது நேரிற்கண்டார். பாரதனே! எவருக்குமேற்பட்டவர்யாவராலும் நான்பார்க்கவில்லையோ அந்தத்தேவர்க்குத்தேவரானசங்கரதாமங்களை முழுதும் [1] சொல்லயான் வல்லேனல்லேன். அரசனே! சிவபெருமானுடையகுணங்களையும் உண்மையான ஈஸ்வரசக்தியையும் முழுவதுமேசொல்வதற்கு மகாவீரரான இருதக்ருஷ்ணபகவான் சக்தியுள்ளவர்" என்றார். சிறந்தபுகழுள்ள பிதாமஹரான வியாஸர் யுதிஷ்டிரருக்கு இவ்வாறுசொல்லிக்ருஷ்ணனைப்பார்த்துச் சிவபிரானதுமஹிமையைப்பற்றிப் பின்வருமாறு சொல்லலானார். "தேவர்க்கும் அஸுரர்க்கும்பிதாவே! பகவானே! ஸ்ரீஸ்ரீ! மங்களமானரூபதேஜஸ்யுடையவரும் ஈஸ்வரருமான சிவபிரானுடையஆயிரநாமங்களை முன்னர் பிரமமஹரிஷியினுல் பிரம்மலோகத்தில் பிரம்மஜ்ஞானியான தண்டிமஹரிஷியினுல் பிரமதேவருக்குச்சொல்லப்பட்டனவல்லவா? அவற்றை யுதிஷ்டிரன் எனக்கேட்கிறான். அவனுக்கு நீர்சொல்லக்கடவீர். தபஸ்ஸையுடையவரும் அணிமாதிஸித்திகளையுடையவரும் இந்திரியங்களைஜயித்தவருமாகிய இந்த வியாஸர்முதலான ரிஷிகளும் நீர்சொல்வதைக் கேட்கட்டும். அழிவில்லாதவரும் ஆனந்தரூபியும் [2] மஹாமஹேசுவரும் காப்பவரும் உலகத்தைப்படைப்பவரும் [3] அக்நியும் [4] தலையில்கேசங்களில்லாதவ

---

[1] 'வ்யாகரிதும்' என்பது, 'வ்யாகர்தும்' என்றிருத்தல் வேண்டும்

[2] ஸமஸ்தாரம்பகேசுவர்.

[3] எல்லாவற்றையும் மேலானபதத்திற்குக் கொண்டுபோகிறவர்.

[4] 'வ்யோமகேசர்' என்ற ஆகாயத்தைகேசமாகக் கூறியிருப்பதினால் அதற்கு உருவமில்லாமையினல் கேசமில்லாதவர் என்று சொல்லப்பட்டது.

ரும் ஜடைதரித்தவருமான ஈஸ்வரரது மிக்கமகிமைமையைச் சொல்லும்" என்றார்.

அதைக்கேட்ட கிருஷ்ணபகவான், "ஈஸ்வரர்செயல்களின்வழி யைச் சரியாகஅறிவது முடியாது ஸூக்ஷ்மஜ்ஞானிகளாகிய ப்ரம்மா இந்த்ரன்முதலியதேவர்களுமம மஹரிஷிகளுமம ஸாதகர்களுக்காதாரமான எவரதுமுடிவையும் முதலிலும் அறியவில்லையோ அவனைப் பெயர் களினால்மட்டுமறிவது எப்படிக்கூடும்? யஸுரர்களைக்கொன்றவனும் தவங்களினால் ஆராதிக்கப்படுகிறவனுமாகிய யுகாந்தபகவானுடைய குணங்களிற்சிலவற்றை உள்ளபடி நான் உங்களுக்கு உரைப்பேன்" என்றுசொல்லி, ஆசமனம்செய்து பரிசுத்தராயிருந்துகொண்டு மஹாத் மாவும் சிறந்தஞானமுள்ளவருமான சங்கரனுடைய குணங்களைச் சொல்லலானார்.

"ப்ராமணச்ரேஷ்டர்களே! தேவகளுமம, ஐயா! யுதிஷ்டிரரே! தீரும், ப்ரீஷ்மரே! தீரும, ஜகத்ப்ரபுவானசங்கரருடையநாமங்களைக் கேளுங்கள். முன்னே நான் ஸாம்பனுக்காகப் பெறுதற்கரியபேறு பெற்றதையும் கேளுங்கள. முன்னே நான் யோகசக்தியினால் சிவ பெருமானை நிஜரூபத்துடன் கண்டேன். யுதிஷ்டிரரே! சிறந்தபுத்தி மானான ப்ரத்யும்னனால முன்னர, சம்பராஸுரன்கொலலப்பட்டுப் பன்னிரண்டுவருஷங்களடைந்தபின் ப்ரத்யும்னன் சாருதேஷ்ணன் முதலான நான்கினிளின்புதரர்களை ண்டு ஜாம்பவதியானவள் புதரனை யிரும்பினவளாய் என்னிடமவந்து, 'அசுரதமே! சூரனும பலசாலி களிறசிறந்தவனும அழகியஉருவமுள்ளவனும் குற்றமற்றவனும் உம் மைப்போலிருப்பவனுமான ஓருபுத்ரனை எனக்கு விரைவிறகொடுக் கக்கடவீர். இமமுனறுலகங்களிலும உமகுக் நிகடயாததொன்று மில்லை யதுவம்சத்தைக்காபபவரீ! நீர் நினைத்தால வேறுலோகங் களையும் உண்டாக்குவீர; நீர்பன்னிரண்டுவருஷங்கள்நோன்பெடுத்து உடமபைஉலர்த்திப் பசுபாதியைஆராதித்து நற்மிணியினிடம் புத்ரர் களைப்பெற்றீர. மதுஸூதனரே! சாருதேஷ்ணன், ஸுசாரு, சாரு வேஷன், யசோதரன், சாருஸ்ரவன், சாருயசஸ், ப்ரத்யும்னன், சம்பு என்னும் சிறந்தபராக்ரமசாலிகளானபுதரர்களை ருக்மிணியினிடம் உண்டாக்கினதுபோல எனக்கும் புத்ரனைக்கொடும' என்றுகேட் டாள். இவ்வாறுகேட்ட நுண்ணிடையாளான ஜாம்பவதியைநோக்கி, நான், 'அரசியே! எனக்குவிடைகொடு. நீ சொன்னதைச் செய்யப் பேசுகிறேன்' என்றுசொன்னேன். அவளும் என்னைப்பார்த்து, யாத வரே! க்ஷேமமுண்டாகவும் ஜயமுண்டாகவும் செல்லக்கடவீர்.

ப்ரம்மா, சிவன், காஸ்யபர், நதிகள், தேவர்கள், புண்யக்ஷேத்ரங்கள், ஓஷதிகள், த்ரோதாக்னிகள், மீவதங்கள், ரிஷிக்கூட்டங்கள், யாகங்கள், கடல்கள், தக்ஷிணைகள், ஸாமங்கள், நக்ஷத்ரங்கள், பித்ருதேவதைகள், நவக்ரகங்கள், தேவபதினிகள், தேவகன்னிகைகள், தேவமாதர்கள், [1]மன்வந்தரங்கள், பக்ஷங்கள், சந்திரன், ஸூர்யன், விஷ்ணு, காயத்ரி, ப்ரமமவித்தை, ருதுக்கள், ஆண்டுகள், க்ஷணம், லவம், முகூர்த்தம், நிமிஷம், யுகபரிவர்த்தனங்களிலும் உமாதேவியின் திருக்கல்யாணத்திற்கு அனுகூலமாக நீர் செலவிடவேண்டிய இடங்களிலும் ஸர்வகாலமும் உம்மைக்காப்பாற்றுவேன். குற்றமற்றவளே! நீர் ஜாக்ரதையோடு மிக்க ஸுகமாக வழியிற்செலலும்' என்று சொன்னாள். ஜாமதக்நியினால் ஸ்ரீவத்ஸ மங்களாசாஸனம்செய்யப்பெற்ற கரன் அவளிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு புருஷச்ரேஷ்டரான மன்தரகுலத்தின் மூன்று காயினிகளுடனும் ராஜாவான ஆஜமீடகுலத்தினிடமுமிருந்து 'விதபாதரராஜன் பெண்ணை [2]ஜாம்பவதி பிக்ஷை யாசரத்துடன் வண்டி மகாரண்யத்தைத்தெரிவிக்க, வெகுகஷ்டப்பட்டு அவர்களைவிடைசெய்துகதபிறகு கதம்பமும் மிக்கபலசாலியான பலராமரையும் ஆயுதங்களுடன் அவர்களிருவரும், 'உனதுதவம் இடையூறின்றிப்பயனைப்பதாகடவது' என்று அன்புடன்கூறினர். நான் பெரியோரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டபிறகு கருடனிருந்த தேசம், கருடன் வந்ததை தூக்கிக்கொண்டுசென்றான். இமயமலையைச்சார்ந்து கருடன் அனுபவித்திட்டேன். அந்தஇமயமலையில் ஆச்சர்யமானவிஷயங்களைக் கண்டேன். தவத்திற்குமிகச்சிறந்தஇடமும் மிக்கஆச்சர்யமானதும் தேவர்களாலும் கந்தர்வர்களாலும்பூஜிக்கப்பெற்றதும் ப்ரம்மதேஜஸ்ஸினால்வ்யாபிக்கப்பெற்றதும் [3]தவம், மருது, கடம்பு, தென்னை, மருதாணி, தாழை, நாவல், பாதிரி, ஆல், வருணம், வதஸநாபம், வில்வம, ஸரளப, விளா, பரியாளம், ஆச்சா, பலா, இலந்தை, குருக்கத்தி, புன்னை, அசோகம, மா, பசலிலை, இலுப்பை, கோவிதாரம், சண்பகம், பலாமுதலிய பழங்களையும புஷ்பங்களையும்கொடுக்கும காட்டுமரங்கள் அசோகங்களாலும் பூத்திருக்கும் புதர்களினாலும் கொடிகளினாலும் வாழைதோட்டங்களினாலும்விளங்குவதும பலவகைபக்ஷிகளாலுண்டான பட்ட கனிகளையுடையமரங்களினாலும் பலஇடங்களிலவைக்கப்பட்ட திருநீற்றுக்குவியல்களினாலும் அலங்கரிக்கப்பட்டதும புளினமான்கள், குரங்குகள், புலிகள்,

---

[1] எழுபதொருதேவயுகங்கள்

[2] இவனே வீதபாதரராஜனுமகள்என்றுசொன்னது ஜாம்பவான் தேவனும் சம்வர்த்தனும்அபிப்பிராயத்தினால். [3] ஒருமரம்.

ஸிம்மங்கள், வேங்கைகள், மான்கள், மயிலகள், பூனைகள், பாம்புகள், எருமை, கரடி முதலிய பலவகைமிருகஜாதிகள்நிரம்பியதும எப்போதும் மதம்பொருந்தும யானைகளினுலேசோபிப்பதும களித்திருக்கும்பல வகைப்பறவைகளினுல்சூழப்பட்டதும மேகங்களைப்போலிருக்கும்பலநிறமான புஷ்பங்களுளளமரசோலைகளினுல அலங்கரிக்கப்பட்டதுமான வ்யாகரபாகபுரி எனமஹாகமாவுமான உபமன்யுமஹரிஷியின் திவ்யாஸ்ரமத்தைக் கண்டேன் பலவம்சகமலாகளின் மகரந்தங்களுடன்சேர்ந்ததும யானைகளின மதஜலவாஸனையுளளதும மெய்வப்பெண்களின் லங்கீதநாதம்கேட்பதுபோனகாற்று எனக்கு களைதீரவீசிற்று. வீரரே! ஆருஷி னிலை ஓலைகளைனு, பறவைகளின்கூவுதல்களும், யானைகளின அழுகான ராஜஹம்ஸங்களும, ரெனனார்களின சிறந்த லங்கீதங்களும், ஸாமவேதகானம் பாடுபவர்களின் அழகியகுரல்களும் கேட்கப்பட்டன. வரி ப பறவை ன மனதைமயக்குகின்றது; அநேகரட வகைகளினுலவீசுகிறது; புஷ்பங்கள நிரம்பின விசாலமான பூங்கா ஹஸ்தாரிகளினுல அலங்கரிக்கப்பட்டது; மன்னரே! உலகமுழுவதும்புகழ்பெற்றதும ஆகாசகங்கையிலுல்லப்போதும மடைப்பள்ளிமை அலங்கரிக்கப்பட்டிருப்பது; தர்மிஷ்டர்களிற்சிறந்தவரும அதிதிகுசலபானமான பிரபாவமுள்ளவருமான மஹாதபாரினுலை சிலாகிக்கப்பெற்றிருப்பது; காற்றையும் ஜலதலத்தையும் புகையையும ஆகிமையும பாலையும ஆகாரமாகக்கொண்டவரும எப்போதும ஸ்நானம, ஜபம, தியானங்களை விடாதவருமான யோகிகளானபராம்மணஸ்ரேஷ்டர்களால் எங்கும் அடையப்பட்டிருப்பது; பசுக்களைப்போலும் மானகளைப்போலும்புல் முதலியவற்றைமேய்பவரும, சற்களினுல் தான்யங்களைத் தேய்த்து எடுத்துக்கொளகிறவருமு, பாகளையே உல்களாகவைத்துக்கொண்டு உமிழுதலியவற்றைற உமிழ்ந்துஉண்பவருமு, சுருதிபிரமாணங்களையும தூரசாஸ்யமருடி பபவருமு, அரசமபழுகளைதினபவருமு, நீரில்படுபவருமு, மரவுரியையும தோலையுமஉடையாகதரிபவருமும், இன்னுமமிசக்கடினமான பலநியமங்களை மேற்கொண்டு சிறந்ததவங்களசெய்பவருமான அநேகரிஷிகளைகண்டு அவனாஸ்ரமதல் பிரவேசிசகதைதொடங்கினேன. பாரதரே! மன்னரே! மஹாதமாகளும பரிசுதமான செய்கைகளையுடையவருமாகிய சிவபிரான்முதலானதேவர்களாலும எக்காலமும் மிகவுமபூஜிக்கப்பட்ட அந்தஆசிரம மண்டலம், ஆகாயத்தில சுகரிமண்டலம்விளங்குவதுபோல விளங்கிற்று. சிறந்ததவமுள்ள மகாத்மாக்களின்மகிமையினுல் அவர்களின்

ஸமீபத்தில், கிரிகள்பாம்புகளோடும் புலிகள்மான்களோடும் ஸ்நேஹி தர்கள்போல விளையாடின. வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டவர்களும் பலவிதகியமங்களிலபெயர்பெற்றவர்களும் மிகச் சிறந்தமனமுள்ளவர்களுமாகிய ரிஷிகள்ால்அடையப்பட்டதும், எல் லாப்பிராணிகளின்மனங்களையும கவருவதுமாகிய அந்தச்சிறந்தஆஸ்ர மத்தில்பிரவேசிக்கும்போதே ஜலடையும்மரவுரியும்தரித்தவரும் மகிமை பொருந்தியவரும் ஒளியினாலும் கவதகினாலும் அக்நியைப்போல ஜ்வலிப்பவரும் சிஷ்யர்களால அனுஸரிக்கப்பெற்றவரும் மனததை யடக்கினவரும் இளமைப்பருவத்திலிருப்பவருமாகிய ஒருப்ராம்மண ஸ்ரேஷ்டரைக் கண்டேன். அந்தஉபமன்யுவென்னும்முனிவர், தலை வணங்கி வந்தனம்செய்த என்னைப்பார்த்து, 'தாமரைக்கண்ணரே! உமதுவரவு நல்வரவு. நான்பூஜிப்பதற்குரியீர் என்னைப்பூஜிப்பதினாலும் நான்காணவேண்டியீர் என்னைக்காணக் கருதுவதனாலும் எங் கள்தவங்கள் பயன்பெற்றன. ஸர்வவியாபியான நீர் மானிடத்தன் மையை அனுஸரித்திருப்பதை நாங்கள அறிந்திருக்கிறோம்' என்று சொன்னர். நான் அவரிடம் லகுகூபபிக்கொண்டு விலங்குகள், பக்ஷி கள, அக்னிகள், தவம, சிஷ்யாகள் எல்லாவற்றினுடையகேஷமங்களை யும் விசாரித்தேன. பிறகு, முக்காலங்களையும அறிந்த அந்தஉப மன்யு முனிவா என்னைப்பார்த்து மிக்கஅழகான இன்சொலினால பேசலானர். 'கிருஷ்ணா' உம்மைப்போன்ற புத்ரனை நீர் அடைவது நிண்ணம. மிகப்பெருந்தவம்செயது லோகநாதரானசிவபெருமானை ஆராதனமசெய்யும். விஷ்ணுவே! மஹாதேவர் உமாதேவியுடன் இங்கே விளையாடுகிறார். ஜனார்த்தனரே! முன்னர், தேவர்களும் ரிஷிக்கூட்டங்களும் இவ்விடததில் தவத்தினாலும் பிரம்மசரியவிரதத் தினாலும ஸத்யவாக்யத்தினாலும மனததையடக்குவதனாலும் தேவ சிரேஷ்டரான சங்கரரை ஆராதித்தத தாங்கள்விரும்பின மேலான பயன்களைப் பெற்றனர. பகைவர்களைக்கொல்லுகிறவரே! நீர்யாரைத் தேடுகிறீரோ? சிந்தைக்கெட்டாதவரும் மஹிமைக்கும்தவத்துக்கும் இருப்பிடமுமாகிய அந்தச்சிவபெருமான் நன்மைகளைப்பெருக்கிக் கொண்டும் தீலமசளைசுருக்கிக்கொண்டும தேவியுடன் இங்கே இருக்கிறார். மேருமலையையும அசைப்பவனாகிய ஹிரண்யகசிபுவென் னும்ஓர்அஸுரன் இருந்தானல்லனே? அவன் பதத்துக்கோடிவருஷம் எல்லாத்தேவர்களையும ஆளும்திறமையைச் சிவபிரானால் அடைந் தான். அவன்புத்ரர்களில சிறந்தவனும் புகழ்பெற்றவனுமாகிய ஆம னன்என்பவன் மகாதேவரிடமவரம்பெற்று இந்திரனைத்தோற்கப் பத்

துக்கோடிவருஷகாலம் போர்செய்தான். ஐயா! கேசவரே! விஷ்ணு வினது அந்தஉக்கிரமானசக்கரமும் இந்திராணுடையவஜ்ராயுதமும் மந்தாரன்என்னும்பெயருள்ள க்ருஷ்ணன்என்னும் அஸுரனுடைய தேகத்திற்பட்டுச்சிதறிபோயின. குற்றமற்றவரே! ரிஷபக்கொடி யுடையசிவபெருமானால் முன்னர்உண்டாக்கப்பட்டதும் ஜ்வலிக்கின்ற அக்னியைப்போன்றதும் சக்தியினால் யாராலும் வெல்லமுடியாத ஆச் சரியமுள்ளதும் சங்கரனைத்தவிர மற்றவரால் பார்க்கவுமுடியாததுமான சக்ராயுதம், ஜலத்துக்குராஜனுரிப்பவனும் பலத்தினால்கர்வங்கொண் டவனுமான அஸுரனிக்கொன்று அந்தப்பகவானால் உமக்களிக்கப் பட்டதன்றே? அந்தசக்கரம் ஸுதர்சனமென்று பெயருள்ளதா யிருக்கட்டுமென்று ஆதியிலேயே சங்கரனால்சொல்லப்பட்டது. அது முதல் அதற்கு ஸுதர்சனமென்னும்பெயர் உலகத்தில்நிலைநின்றது. ஐயா! கிருஷ்ணா! அதுசக்கரம் நிசனுடைய அங்கங்களில் தெறித் திப்போயிற்று. வரமளிப்பதனால் மிக்கபலசாலியும் புத்திசாலியு மானநிசனுடையஉடம்பில் நூற்றுக்கணக்கானசக்ரம் வஜ்ரமுதலிய ஆயுதங்களும் செல்லவில்லை. மிக்கபலசாலியான நிசனால்பீடிக்கப் பட்டதேவர்கள் சிவபிரானிடம் வரம்பெறுக்கொண்டபிறகு அஸு ரத்தலைவர்களை அதிகமாகக்கொன்றனர். சிவபெருமான் வித்யுத்பிரபன் என்னும் அஸுரன்மேலும் அபராஜிதனுக்குமுன்றுமுகங்களுக்கும் ஈச்வரனுயிருக்குத்தன்மையை அளித்தனர். அவன் நூறுயிரம்வருஷ காலம் எல்லாஉலகங்களுக்கும் ஈச்வரனுயிருந்தான். 'எப்போதும் என்வேலைக்காரனுயிருப்பாய்' என்றும் அவனுக்குச்சொன்னர். அவ னுக்குக் கோடிகுமாரர்களையும் பிரபுவானவர் கொடுத்தார். பிறப்பில் லாதஅந்தப்பகவான் குசதவிபத்தை அவனுக்கு ராஜ்யமாகக்கொடுத் தார். அவ்வாறே சதமுகனென்னும்பெரியஅஸுரன் ப்ரம்மாவினால் படைக்கப்பட்டான். அவன் நூற்றிருபதுவருஷகாலம் தனதுமாம் ஸத்தை அக்னியில் ஹோமம்செய்தான். அவனிடத்தில்திருப்தைகூர் ந்து பகவானைசங்கரர், 'உனக்கு நான என்னசெய்யவேண்டும்?' என்றுகேட்டனர். அவரைப்பார்த்துச சதமுகன், 'தேவஸ்ரேஷ்ட ரே! எனக்கு ஆச்சரியமானயோகசக்தியும் எக்காலமும்அழியாத தேகவன்மையும் கொடுக்கவேண்டும்' என்றுகேட்டான். பிரபுவான பகவானும்அவன்கேட்டதற்கு, 'அப்படியேயாகட்டும்' என்றுசொன் னர். முன்பு ப்ரம்மதேவரும் தியானத்தினால் ஆதமாவினிடம் மனம் லயித்துப் புத்ரனுக்காக மூன்றுவருஷகாலம் ஒருயாகம்செய்தார்.

[1] 'வராஜக்த:' என்று பாடங்கொள்ளப்பட்டது.

அவருக்கும் அந்தயாகத்திற்குத்தக்கமஹிமையுள்ள ஆயிரம்புத்ரர்களை மஹாதேவர் கொடுத்தார். கிருஷ்ணை! தேவர்களாலும் புகழப்பெற்ற யோகீச்வரரை உமக்கு நிச்சயமாகத்தெரியுமே. யாஜ்ஞவல்க்யர் என்றபெயர்பெற்ற அதுதச்சிஷ்யரானரிஷி மஹாதேவரை ஆராதித்து ஒப்பற்றபுகழைப்பெற்றார். யோகசக்திலமனம்செலுத்தினவரும் பராசரர்பௌத்ரரானவேதவ்யாஸமுனிவரும் சங்கரரை ஆராதித்துத்தான் நிகரில்லாதகீர்த்தியையடைந்தார். முன்னர் வாலகில்யர் என்னும் மஹரிஷிகள் தரித்ரரால் அவமதிக்கப்பட்டுக் கோபமுற்றுத்தவத்தினால் சிவபிரானை ஆராதித்தனர். தேவர்களுள்சிறந்தவரும் லோகாதாரமாயிய மஹாதேவர் அவர்கள்மேல்கருணைவைத்து, 'அமிருதத்தைக்கொண்டுவரும் கருணை உங்களை தவத்தினால் உண்டாக்குவீர்கள்' என்றுசொன்னார். முன்னம், மஹாதேவருடைய கோபத்தினால ஜகத்தெல்லாமற்றுப்போயிற்று தேவர்கள் சிவபிரானைப்பற்றி ஸப்தகபாலமென்னும் யாகமசெய்ததினால் வேறுஜலம் உண்டாக்கப்பட்டது. சிவபிரான் அருள்செய்தபிறகுதான் பூமியில் ஜலமுண்டாயிற்று. பிறபுவே' அத்ரியின்பாரியையும் சங்கரரால்கொடுக்கப்பட்ட தத்தாத்ரேயர், சுகதரன், தூர்வாஸரென்னும் மூன்றுகுமாரர்களை அடைந்தாள். பிரமஜ்ஞானமுள்ளவளும் அத்ரிபத்னியுமான அனஸூயை தனபாதிவ்ரத்யத்தால், 'ரிஷியே! நான் இனி உமக்கு உப்பட்டவளாக எவ்வகையிலும இரேன்' என்றுசொல்லி, அவரைவிட்டு மஹாதேவரை சரணமடைந்தாள். அத்ரிமஹரிஷியினிடம் பயந்தினால அவள சங்கரரது அநுக்ரஹத்தைவேண்டி முந்நூறு வருஷகாலம் ஆகாரமில்லாமல் உலக்ஷணங்களின்மேல் படுத்திருந்தாள். ஈச்வரர் அவளைப்பார்த்து நல்லதாகசொன்னது, 'உனக்குப்பிள்ளையுண்டாவன்; உனவனிலலாமமேல் ருத்ரா அநுக்ரஹத்தினால் உண்டாகப்போகிறன். ஸந்தேகமில்லை. உன்வம்சத்தில் உன்பேராலேயே நீ விரும்பும்கீர்த்தியை அடைவான்' என்றுசொனனார். மதுஸூதனரே! மஹிமைபொருந்திய விசுவாமித்ரரிஷியும பரதர்களுக்கு நன்மையை அளிக்கும மஹாதேவரை ஆராதித்துத் தவஸித்தியை அடைந்தார். கேசவரே! கூடமையான மனமுள்ளசாகல்யமுனிவா தொள்ளாயிரவருஷகாலம் மனுஷ்யாகத்தினால சிவபிரானை ஆராதித்தார் அவரிடம் அன்புகூர்ந்தபகவான்' அவரைப்பார்த்து, 'குழந்தாய்! நீ இரந்தகார்த்தாவாவாய். மூன்றுலகங்களிலும் அழிவில்லாத கீர்த்தி உனக்கு உண்டாகும. உனகுலம் மஹரிஷிகளினால அலங்கரிக்கப்பட்டதும் அழிவற்றதுமாயிருக்கக்கடவது. ஸுதரங்களைச்செய்பவ

னும் ப்ராம்மணஸ்ரேஷ்டனுமான குமாரன் உனக்கு உண்டாவன்' என்றுசொன்னர். கிருதயுகத்தில் ஸாவர்ணியென்று ஜயாதிபெற்ற ஒருரிஷியிருந்தார். அவர் இவ்விடத்தில் ஆறுயிரவருஷகாலம் தவம் செய்தார். பகவானைருத்ரர் அவரிடம் பிரத்யக்ஷமாக வந்து, 'குற்றமற்றவனே! உன்மேல் அனுக்ரகம் வைத்திருக்கிறேன். உலகத்தில் ஜயாதிபெற்று, ப்ரஜாகர்த்தாவாகவும் மூப்பிறப்புகளில்லாதவனாகவும் இருப்பாய்' என்றுசொன்னர். ஜனார்த்தனரே! முற்காலத்தில் இந்திரன் பக்தியுடன் திசைகளை ஆடையாய் உடையவரும் கீறணிந்தவருமாகிய மஹாதேவரைக் காசியில் ஆராதித்துத் தேவராஜ்யத்தையடைந்தான். முன்னே நாரதமகரிஷியினால் பக்தியோடு சங்கரர் ஆராதிக்கப்பெற்றார். தேவதிரேஷ்டரும் உலகத்திற்குத்தந்தையும் ஆசார்யருமான மஹாதேவர் அவர்மேல் அனுக்ரகம்வைத்து, 'மஹிமையிலும் தவத்திலும் புகழிலும் உமக்குஈடாக யாருமிரான். பாட்டினாலும் வாத்தியத்தினாலும் எப்போதும் என்னை ஸந்தோஷப்படுத்துவீர்' என்றுசொன்னர். பாணாஸுரன் ஸுப்ரம்மண்யருக்கோப்பாயிருத்தலையும், மன்மதன் கர்வபங்கத்தையும், லவணாஸுரன் மற்றவரால் கொல்லக்கூடாமையையும், ராவணன் மிகுந்த பராக்ரமத்தையும், யமன் நாசத்தையும் அடைந்தனர். அவருக்குமேலான பிரபு வேறு யார்? ஐயா! பிரபுவே! மாதவரே! நானும் முன்னே தேவர்க்குத் தேவரான பசுபதியை நேராகக்கண்டேன் அதையும் கேளும். பிரபுவே! நான் அவ்வாறு நியமத்துடன் சிறந்தசக்தியுள்ளஈஸ்வரரை எதற்காக ஆராதித்தேனென்பதையும் விரிவாகக்கேளும். குற்றமற்றவரே! தேவர்க்குந்தேவரான மகேஸ்வரரிடமிருந்து யான் அடைந்தவற்றையெலாம முழுதும் உமக்குச் சொல்லுவன். ஐயா! முன்னம் கிருதயுகத்தில் வேதங்களிலும் வேதாந்தங்களிலும் கரைகண்டவரும் பெரும்புகழ்பெற்றவருமான வியாக்ரபாதரென்னும்ரிஷிஒருவர் இருந்தார். நான் அவருடையகுமாரன். எனக்கு இளையவர் தௌமியரென்பவர். மாதவரே! பிறந்துசிலகாலத்துக்கெல்லாம் தௌமியருடன்கூடவிளையாடிக்கொண்டே ஆத்மஜ்ஞானமுள்ளமுனிவர்களின் ஆஸ்ரமத்திற்குச்சென்றேன்; அவ்விடத்தில்கறக்கப்படும்பசுமாட்டையும் ருசியில் அமிருதத்திற்கொப்பான அதன்பாலையும் கண்டேன். மதுஸூதனரே! அதுமுதல் என்மாதாவிடம், 'தாயே! எனக்குப் பால்கொடு, பால்கொடு' என்றழுதேன். மாதவரே! அவ்வாறு என்னால்கேட்கப்பட்ட என் அன்னை பாலில்லாமையால் துயரப்பட்டுக்கொண்டு மாவைத்தண்ணீரில்கரைத்து எங்கள் இருவருக்கும் பாலை

ன்று குடிப்பதற்குக் கொடுத்தாள். ஐயா! அதன்பிறகு, ஒருகால் பசுவின்பாலையே நான் குடித்தேன். செல்வமுள்ள எங்களுறவினர் வீட்டிற்கு யாகம்நடக்கும்போது என்னை என்பிதா அழைத்துக் கொண்டுபோனால் அவ்விடத்தில் தேவர்களைப்போஷிப்பதாகிய தெய் வப்பசுவானகாமதேனு பால்சுறந்தது. ஐயா! நதியில் அமிருதத்துக் கொப்பான அதுபபாலைக்குடித்து அதனுண்டாகும் விசுத்தியும் பா லின்குணங்களையும் அறிந்துகொண்டபிறகு அந்த மாட்டைவாத்தஜலம் எனக்கு வேண்டியிருக்கவில்லை. அப்போது குழந்தையாயிருந்த னால் என்தாயைப்பார்த்து, 'தாயே! நீ எனக்குக்கொடுத்தது பால் சேர்ந்தஆகாரமன்றோ?' என்றுகேட்டேன். மாகவீர! அதன்பிறகு, என்தாய் துக்கத்தினால் கண்ணீர்விட்டுப் பிள்ளையினிடமுள்ள அன்பி னால் தழுவி உச்சிமோந்து, 'குழந்தாய்! ஆச்சமத்யானத்திலிருந்து கொண்டு இழுங்குகளையும் வேர்களையும் கனிகளையும் உண்டு எக்கால மும் வனத்திலேயேவஸிக்கும் முனிவர்களுக்குப் பாலன்னம் ஏது? வாலகில்யரால் அடையப்பட்ட தேவருஷியாகிய கங்கையைச்சார்ந்து வனங்களிலும் மலைகளிலும்வஸிக்கும் முனிவர்க்குப் பாலேது? குமார! தேசங்களிலுள்ளஆகாரங்களைவிட்டுக் காட்டுச்சனிகளைப்புசித் துக் காட்டிலுள்ள ஆச்ரமத்திலேவஸிக்கும் பரிசுத்தர்களும் நீரைக்குடி ப்பவர்களுமான ரிஷிகளுக்குப் பசுமாதிகளின் வாசமேயில்லாதகாட் டில் பாலில்லையே? நதிகளிலும் குகைகளிலும் மலைகளிலும் பலவித மான புண்ணியதீர்த்தங்களிலும் தவதலங்களும் ஜபத்தலங்களும் விராம ரிருக்கும்நபக்குச சிவபிரானேமுக்கியமான ஆதாவு. குழந்தாய்! முக்கண்ணருமை வாய்ந்தவர்களுக்கொடுப்பவரும், அழிவற்றவருமான சிவ பிரானையாராதிப்பவருமான பாலன்னமும ஸுகங்களும் ஆடைகளும் எப் படிக்கிடைக்கும்? குழந்தாய்! முழுக்கருத்துடன் அந்தச்சங்கரரைச் சரணமடை. அன்புள்ளமகனே! அவரனுக்ரகத்தினால் நீ விரும் பினதற்குமேலான பலன்களைப் பெறுவாய்' என்றுசொன்னாள்.

இவ்வாறு தாயசொல்லியதைக்கேட்டு நான் கைகூப்பிநமஸ்காரம செய்து, 'அமமா! மஹாதேவர் யார்? அவர் எப்படி அனுக்ரகம் செய்வார்? அவர் எங்கேவஸிப்பவர்? அவரை எவ்வகையிற்காண லாம்? அவர் எவ்வகையினுல் ஸந்தோஷமடைவார்? அவரது உருவம் எவ்வகையானது? அவரை எப்படி அறியலாம்? தாயே! அவர் அனுக் ரகம்செய்து எனக்குத் தம்ரூபத்தைக் காண்பிப்பாரா?' என்றுகேட் டேன். கிருஷ்ணகவானே! கோவிந்தரே! மதுஸூதனரே! தேவ தேவேஷ்டரே! இவ்வாறு என்னல்கேட்கப்பட்ட என்தாய் பிள்ளையின்

மேலன்புடன் நீர்நிரம்பினகண்களுள்ளவளாய் உச்சிமோந்து எனை
ஜடம்பைத்தடவிக்கொடுத்து மனம்தளர்ந்து பின்வருமாறு சொல்ல
லானாள். 'மஹாதேவரை அறிவதும் [1] ஆராதிப்பதும் கடினம். அவர்
மூடரில்லாதவர்; தடுக்கவும் பிடிக்கவும்கூடாதவர்; மனத்தூய்மை
யில்லாதவர்களால் காணக்கூடாதவர். அவருடையஉருவங்களும் இட
ங்களும் அவரது மாளிகைகளும் அனேகமென்றும் புதிதுபுதிதா
யிருப்பவையென்றும் புத்திமான்கள் கூறுகின்றனர். தேவர்க்குத் தல
ராணஈஸ்வரர் முன்னே பன்ன பன்னரூபங்கள் எடுத்தாரென்று அவ
ருடையசரித்திரத்தை ஸரியாக அறிகிறவன் யாவன்? எல்லா
ப்ராணிகளின் ஹ்ருதயங்களிலும் இப்பவரும் உலகஸ்வரூபியுமான
மஹேஸ்வரர் அனுக்ரஹம்செய்வதற்காகவே லீலையாடுகிறார். குழந்
தாய்! பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக ஈஸ்வரர்காட்டிகொடுத்ததாகிய
மங்களகரமான அவருடையதிவ்யசரித்ரத்தை ரிஷிகள்சொன்னதை
யும் ப்ராம்மணர்களை அனுக்ரஹிப்பதற்காக அவர் எடுத்தரூபங்களைப்
பற்றித் தேவர்கள்சொன்னதையும் நீவன்னைக்கேட்டதை நான்கேட்ட
படி சுருக்கமாக உனக்குச் சொல்லுகிறேன். கேள். ப்ரம்மா விஷ்ணு
இந்த்ரன் ருத்ரர்கள் ஆதித்யர்கள் அச்வினிதேவர்கள்முதலான எல்
லாத்தேவர்களுடையரூபங்களையும் அவர் தரிப்பவர். மனிதர்கள் தே
வர்கள் பெண்கள் பிசாசங்கள் பிசாசர்கள் [2]நாகர்கள் [3]சபரர்கள் பல
வகைஜலஜந்துக்கள் காட்டுஜனங்கள் எல்லாருடையரூபங்களையும் ப
வான் எடுக்கிறார்; ஆமையும் மீனும் பலழுக்கெடியின்முகங்களால்
அலங்கரிக்கப்பட்ட சங்குமாலையை நிகர்க்கிறார்; யக்ஷர்கள், ராக்ஷஸர்கள்,
ஸர்ப்பங்கள, தைத்யர், தானவர், எலி, பெருச்சாளிமுதலியவற்றின்
தேகங்களையும் எடுக்கிறார்; புலி, சிங்கம, மான், சிறுதுதை, கரடி, நாய்,
நரிமுதலிய மிருகங்கள் கோட்டான் முதலிய மற்றப்பக்ஷிகளின்ரூபங்
களையும் எடுக்கிறார். ஹம்ஸம்; காச்சை, மயில், ஒணான், ஸாரஸம்,
நாரை, கழுகு, சக்ரவாகமுதலியவற்றின் ரூபங்களையும் எடுக்கிறார்;
மலையையும் தாங்குகிறார். மஹாதேவரானவர் மாடு, யானை, குதிரை,
ஒட்டகம், கழுதை, ஆடு, புலிமுதலான அநேகமிருகங்களின்ரூபங்
களைத் தரிப்பவர்; சிறந்தபக்ஷிகளின் ரூபங்களையும் தரிப்பவர்; தண்ட
கமண்டலுக்களோடும் குடையோடும் ப்ராம்மணரை ஆதரிப்பவர்;
ஆறுமுகங்களோடும் அனேகமுகங்களோடும் மூன்றுகண்களோடும்
பலதலைகளோடுமிருப்பவர்; அநேகம் இடுப்புகளும் அனேகம் கால்

[1] 'தராராதோ' என்றுபாடம்கொள்ளப்பட்டது.

[2], [3] மிலேச்சஜாதியாரின்பிரிவுகள்

களும் அனேகம்வயிறுகளும் அனேகம்வாய்களும் அனேகம்கைகளும் அனேகம்விலாப்புறங்களுமுடையவர்; அதிககணங்களினும் சூழப்பட்டவர். அவர், ரிஷிகள் கந்தர்வர்கள் யக்ஷர்கள் சாரணர்களின் ரூபங்களையும் எடுக்கிறார். திருநீறணிந்துவெளுத்ததேகமுள்ளவரும் மதியின்பிறையைக் கலையிலணிந்தவரும் பலவகைவாத்தியமுழக்கங்களினல் திருப்திக்கப்பெற்றவரும் பலவகைத தோத்திரங்களினல துதிக்கப்பட்டவரும் எல்லாப்பிராணிகளுக்கும் முடிவுசெய்கிறவரும் எல்லாமாயிருப்பவரும் எல்லாலோகங்களிலும் நிலைபெற்றவரும் எல்லாஜனங்களுக்கும் அந்தர்யாமியும் எங்கும்வியாபித்தவரும் எல்லாம்பேசுகிறவரும் எல்லாப்பிராணிகளின் உள்ளங்களிலுமிருப்பவருமான அந்தப்பகவானே எல்லாவிடங்களிலும் பிரியலாம். எவன் என்னபயனே விரும்புகிறீரோ, எவனைக்குறித்துப் பூஜைசெய்கிறீரோ அவற்றையெல்லாம் அந்தத் தேவஸ்ரேஷ்டர் அறிகிறார். உனக்கு விருப்பமிருந்தால் அவரைச சரணமடை. அவர் கருதிதாவிப்பார்; கோபிப்பார்; 'உம்' என்று பயமுறுத்தவும் செய்வார். அவர் சக்கரத்தையும் சூலத்தையும் கதையையும் உலக்கை கத்தி பட்டஸங்களையும் கையில் தரித்திருப்பவர்; பூமியைத் தாங்குபவர்; நாகங்களை மேகலையாகவும் காதிற்குண்டலமாகவும் யஜ்ஞோபவீதமாகவும் அணிந்துகொண்டிருப்பவர்; பாம்புரித்தாடையையே மேலவஸ்திரமாகவுடையவர்; கணங்களுடன்சேர்ந்து நமஸ்கரிப்பவர்; மனதைத்தைக் கவரும்படி பாடுவர்; ஆடுவர்; பலவகைவாத்யங்களையும் வாசிப்பர்; துள்ளுவர்; கொட்டாவிவிடுவர்; அழுவர்; அழவைப்பர்; பித்தன் போலவும் கள்மயக்கமுள்ளவன்போலவும் இனியகுரலோடு பேசுவர்; பயங்கர உருவத்தோடு கண்களினல் ஜனங்களைப் பயமுறுத்திக்கொண்டு மிகுதியாகச்சிரிப்பர். தம்மிஷ்டப்படி விழித்துக்கொண்டும் தூங்கிக்கொண்டும் கொட்டாவிவிட்டுக்கொண்டுமிருப்பர்; ஜபம்செய்வர்; பிறரால் ஜபம்செய்யப்பெறுவர்; தவஞ்செய்வர்; தவம்செய்யப்பெறுவர்; கொடுப்பர்; வாங்குவர்; தியானிப்பர்; தியானிக்கப்படுவர்; யாக்ஞவேதியின் நடுவிலும் யூபஸ்தம்பத்திலும் கொட்டில்நடுவிலும் அக்னியிலும் காணப்படுவர்; குழந்தையாகவும் கிழவராகவும் இளமைப்பருவமுள்ளவராகவும் காணப்படுவர்; ரிஷிப்பெண்களோடும் ரிஷிபத்னிகளோடும் விளையாடுவர்; நெறித்தமயிர்களும் பெருத்தலங்கமும். பயங்கரமான கண்களுமுள்ளவரும் திகம்பரரும் மஞ்சள், பச்சை, கறுப்பு, வெளுப்பு, புகைநிறம், சிவப்பு ஆகியபல

[1] 'ஜும்ஸ்துதி:' என்று பாடம் கொள்ளப்பட்டது.

நிறங்களுள்ளவருமாயிருப்பர்; பயங்கரமானகண்களோடும் விசால மானகண்களோடும் இருப்பர்; நிகும்பராயுமிருப்பர்; எல்லா ஆடை களையும் தரிப்பவராகவுமிருப்பர். அரூபருந் சிறந்தரூபமுள்ளவரும் எல்லாரூபங்களையும் தாண்டினவரும் எல்லாவற்றுக்கும் ஆதியான ரூபமுள்ளவரும் ஜனனமில்லாதவருமான பகவானுடைய ஆதியும் அந்தமுமில்லாத ஸ்வரூபநிச்சயத்தை எவன் ஸரியாக அறிவான்? ஹிருதயத்திலுள்ள பிராணனுகவும் மனமாகவும் ஜீவாத்மாவாகவும் இருப்பவரும் யோகத்தில் சித்தமுள்ளவரும் யோகமும்தியானமுமா யிருப்பவரும் பரமாத்மாவுமான மகேஸ்வரர் பக்தியினுலேதான் வசப் படுத்தக்கூடியவர்; வாத்தியம்வாசிப்பவர்; பாடுகிறவர்; ஆயிரம்கண் களும் நூறுகண்களுமுள்ளவர்; ஒருமுகம, இரண்டுமுகம், மூன்று முகங்கள், அநேகமுகங்களுள்ளவர். புதரனே! மஹாதேவரிடம் பக்திசெய்து அவரையேசரணமடைந்து அவரையே ஆதாரமாகவும் பரகதியாகவும்நம்பி உபாஸனைசெய். அதனல் நீ வேண்டினதைப் பெறுவாய்' என்றுள். பகைவர்களைக் கொல்பவரே! மாதாவினு டைய அந்தச்சொல்லைக்கேட்டு எனக்கு அப்போதுமுதல் மஹாதேவ ரிடம் நிலையானபக்தியுண்டாயிற்று. அதன்பிறகு, நான் தேவவரு ஷத்தினல் ஆயிரவருஷகாலம் இடக்கால்கட்டைவிரலுனிலையூன்றி நின்றுகொண்டு தவம்செய்து சங்காரைச் சந்தோஷிக்கச் செய்தேன். அப்போது முதல்நூறுவருஷகாலம் கனிகளே ஆகாரமாகக்கொண்டி ருந்தேன். இரண்டாவது நூறுவருஷங்கள் உதிர்ந்தசருகுகளைப்புசித் துக்கொண்டும் மூன்றுவது நூறுவருஷங்கள் ஜலபானம் செய்துகொ ண்டுமிருந்து பிறகு எழுநூறுவருஷகாலங்கள் காற்றையே பக்ஷித் துக்கொண்டுமிருந்தேன். இவ்வாறு தேவவருஷங்களால் ஆயிரவருஷ காலம் நான் சிவபிரானை ஆராதித்தேன். அதன்பிறகு, எல்லாலோ கங்களுக்கும் ஈஸ்வரரும் ஸர்வசக்தருமான மஹாதேவர் என்னை உறு தியானபக்தியுள்ளவனென்று அறிந்து மன்மேலன்புடன் பரீக்ஷை செய்யத் தொடங்கினர். பெரும்புகழுள்ள அந்தச்சங்கர் இந்திரன் வடிவமெடுத்துத் தேவக்கூட்டங்கள் எல்லாவற்றலும் சூழப்பெற்று ஆயிரம்கண்களோடு கையில்வஜ்ராயுதம்பிடித்து அம்ருதம்போல வெளுத்ததும் சிவந்தகண்களும் நெறித்தகாதுகளுமுடையதும் மத மதிகரித்து நாலுதந்தங்களிலும் தந்திக்கையைச் சுற்றிக்கொண்டிருப் பதும் உக்ரமூர்த்தியான ஐராவதத்தின்மேலேறித் தம்மொளியினுல்பிரகா சித்துக்கொண்டு கிரீடம் முத்தாரம் தோள்வளைகளினுல் அலங்கரிக்கப் பெற்றும் தலையிலவெண்குடைபிடிக்கப்பெற்றும் அப்ஸரஸுகள்சூ

தர்வர்களின் சிறந்தகானங்களினால் ஆராதிக்கப்பெற்றும்வந்தார். அந்தத்தேவேந்திரன் என்னைப்பார்த்து, 'பிராம்மணோத்தமனே! நான் உன்னிடம் அன்புகூர்ந்திருக்கிறேன். நீ மனத்திற்கருதுகிறவரத்தை என்னிடம்கேள்' என்றுசொன்னன். இந்திரன் சொல்லிக்கேட்டு என்மனத்தில் ஸந்தோஷமுண்டாகவில்லை. கிருஷ்ணை! நான் அப்போது தேவேந்திரனைப்பார்த்து, 'ஓ! ப்ரஸன்னனே! நான் உன்னிடத்திலும் மஹாதேவர்ஒருவரைத்தவிர வேறுஎந்தத்தேவதையிடத்திலும் வரம்கேட்கவில்லை. இதை உண்மையாக உனக்குச் சொல்லுகிறேன். இந்திரனே! இது உண்மை! உண்மை! நமது இந்தச்சொல் மிக்க உறுதியானது. மஹேஸ்வரரைத்தவிர மற்றவர்களைப்பற்றிய பிரஸ்தாவமே எனக்கு ருசிக்கவில்லை. பசுபதியின் சொல்லினால் உடனே நான் புழுவும் பலகிளைகளோடுகூடியமரமுமாவேன். பசுபதியல்லாதவர்களுடைய அணுக்ரஹத்தினால்வரும் திரிலோகாதிபத்யம் என்னும் ஐஸ்வர்யமும் நான் விரும்பவில்லை. சிவனதுபாதங்களை வந்தனம்செய்வதில் ஆசையோடு சண்டாளன்கடலில்பிறப்பதும் எனக்கு இருக்கலாம்; ஈஸ்வரரிடத்தில்பக்தியில்லாமல் இந்திரன் வீட்டில் பிறப்பதும் வேண்டாம். தேவர்க்கும்அஸுரர்க்கும்முதல்வரான லோகநாதரிடத்தில் பக்தியில்லாதமனிதன் காற்றையும் நீரையும்புசித்துக் கொண்டிருந்தாலும் அவனுக்குத் துக்கம் ஒழிவதேது? எவருக்கு ஒருநிமிஷமும் சிவனுடையபாதத்தியானம் விட்டுப்போவது வெறுப்பாயிருக்கிறதோ அவர்களுக்கு மற்றத்தர்மங்களுள்ளவேறுபேச்சுக்களால்ஆவதென்ன? தர்மமில்லாதகலியுகத்தில்பிறந்தவன் சிவனுடைய பாதங்களில் பற்றுள்ளமனத்தோடிருத்தல்வேண்டும். சிவபக்தியென்னும் [1]ரஸாயனத்தைக் குடித்தபிறகு ஸம்ஸாரபயமுண்டாவதில்லை. சிவனதுஅனுக்ரகம்பெற்றவனுக்கு ஒருநாள், அரைநாள், ஒருமுகூர்த்தம், ஒருநிமிஷம், ஒருகொடிகூடச் 'சிவனிடத்தில்' பக்தியுண்டாவதில்லை. இந்திரனே! சங்கரருடைய ஆஜ்ஞையினால் புழுவும் விட்டிற்பூச்சியுமாவேன். உன்னால்கொடுக்கப்படும் திரிலோகாதிபத்தியத்தையும் நான் விரும்பவில்லை. மஹேஸ்வரர்கட்டளையினால் நாயாகவும்பிறப்பேன். அது நாம் மிகவிரும்பத்தக்கது. மஹேஸ்வரர் கட்டளையின்றித் தேவலோகாதிபத்யமும் எனக்குவேண்டாம். ஸ்வர்க்கவாஸத்தையும் தேவேந்திரபதத்தையும் பிரம்மலோகத்தையும் மோக்ஷத்தையும் மற்றுமுள்ளஎந்தப்பலன்களையும் நான்கேட்கவில்லை; சிவனுக்குத்தாஸனாயிருப்பதைமட்டுமே கேட்கிறேன். வெண்ணெ

[1] தேகபுஷ்டியைத்தரும் ஓர் ஔஷதம்.

யும் தெளிவுமானசந்திரனைக் கிரீடமாகத்தரித்தவரும் பசுபதியும் பகவானுமான ஈஸ்வரர் எனக்கருள்செய்யும்வரையில் பிறப்பிறப்புமூப்புக்கள்பலபீடிப்பதனால் தேகத்திலுள்ளதுக்கங்களை நான் வகிக்கிறேன். ஸூர்யனும் சந்திரனும் அக்னியும்போலவிளங்குபவரும் மூவுலகங்களுக்கும் ஒப்புயர்வற்ற சிறந்தபொருளும் முதலவரும் ஜ்யரையும் மரணமுமற்றவருமாகிய ருத்ரரது அருளைப்பெறுமல இவ்வுலகத்தில் எவனுக்குச் சாந்தியுண்டாகும்? கெட்டமார்க்கத்திற்போவதை விடுவிப்பவராகிய ருத்ரர் எவர்களின் உள்ளங்களில இருக்கவில்லையோ சீ! சீ! அவர்கள் நிந்திக்கத்தக்கவர்கள்; நிந்திக்கத்தக்கவர்கள்; பின்னும்நிந்திக்கத்தக்கவர்கள். சீ! எனதுபாவங்களினால் மறுபடியும் ஜன்மமுண்டாகுமாயின் அதனதஜன்மங்களிலும் எனக்கு அழியாதசிவபக்தியுண்டாகவேண்டும்' என்றுசொன்னேன். இந்திரன், [1]'காரணத்திற்குங்காரணமானஈஸ்வரரிடத்தில் நீஅருள்பெறுவதற்குஉபாயம்என்ன இருக்கிறது? எதுபற்றிச சிவனேத்தவிரமற்றவரின் அனுக்ரகத்தை விரும்பாமலிருப்பது?'என்றுகேட்டான். 'பிரம்மஞிஷ்டர்கள் எவரை [2]ஸத்என்றும் [3]அஸத்என்றும் [4]வியக்தமென்றும் [5]அவ்யக்தமென்றும் [6]ஏகமென்றும் [7]அனேகமென்றும் எப்போதும்சொல்லுகின்றனரோ அவரிடத்தில் நாம் வரங்கேட்கிறோம். எவருடையஞானமும்ஐஸ்வரியமும் ஆதிமத்யாந்தங்களற்றவையென்றும் சிந்தைக்கெட்டாதவையென்றும் சொல்லுகின்றனரோ அந்தப்பரமாத்மாவிடத்தில் வரங்கேட்கிறோம். எவருடைய [8]ஐஸ்வரியமஜ்ஞதும் ஆக்கவும்அழிக்கவும படாததோ, வித்தாயிராதவிடத்திலிருந்து வித்தானப்ரகிருதியுண்டானதோ அவரிடத்தில் வரம்கேட்கிறோம் இருள் என்றுசொல்லப்பட்டபிரக்ருதிக்குமேற்பட்ட ஒளியாகவும் தவம்செய்பவருக்குச் சிறந்ததவமாகவுமிருக்கின்ற எவரையறிந்தபிறகு துயரப்படுவதில்லையோ அவரிடம் வரங்கேட்கிறோம். இந்திரனே! எல்லாப்பிராணிகளையும்படைப்பவரும் எல்லாப்பிராணிகளின்கருத்துகளையும் அறிந்தவரும் எல்லாப்பிராணிகளுக்கும் மேற்பட்டவரும் எங்குமிருப்பவரும் எல்லாவற்றையும்கொடுப்பவருமான ஈஸ்வரரைப் பூஜிக்கிறேன். தர்க்கநியாயங்களுக்கெட்டாதவரும் ஞானத்திற்கும்யோகத்திற்கும் பலன்களைக்கொடுப்பவரும் எல்லாவற்றிற்கும் மேறபட்டவருமான எவரைத் தத்வஞானிகள் உபாஸனைசெய்கின்றனரோ அவரிடத்தில் வரங்கேட்

[1] 'காரணங்களுக்குக்காரணமான ஈசுவரர் இருப்பதற்கு பரமாணமென்ன?' என்பது பழையஉரை. [2] ஆத்மா. [3] ஜடம். [4] காரியம். [5] காரணம். [6] ஸ்ருஷ்டிக்குமுன் ஒன்றுமிருப்பது. [7] ஸ்ருஷ்டிக்குப்பின் பலஉருவங்களாயிருப்பது. [8] மோக்ஷம்.

கிறோம். இந்திரனே! எவரை இந்திரனுக்கு ஆத்மாவாகவும் தேவர்க்கும் ஈச்வரராகவும் எல்லாப்பிராணிகளுக்கும் தந்தையாகவும் கூறுகின்றனரோ அவரிடத்தில் வரங்கேட்கிறோம். உலகங்களைப்படைத்தவரான பிரம்மதேவரையும் முதலில்படைத்தவரும் ஆகாசத்தைவிரப்பினை அண்டமாயிருப்பவரும் எவரோ அவரிடம் வரங்கேட்கிறோம். அக்நி, அப்பு, வாயு, பூமி, ஆகாயம், புத்தி, மனம், மஹத் இவைகளைப்படைத்தவர் பரமேச்வரைத்தவிர வேறுயாரிருப்பார்? சொல். இந்திரனே! மனம், புத்தி, அகங்காரம், சப்தஸ்பரிசரூபரஸகந்தங்களென்னும் ஐந்துதன்மாத்ரைகள், பஞ்சபூதங்கள் ஆகியஇவைகளைப்படைத்தவர் பரமசிவனைவிட வேறுயார்? இவ்வுலகம்படைத்தவர் ப்ரம்மதேவரென்று சொல்லுகின்றனர். அவரும்தேவச்ரேஷ்டரான பரமசிவனை ஆராதித்துத்தான் பெரியஐச்வர்யத்தை அநுபவிக்கிறார். பிரம்மவிஷ்ணுக்களுமுதலானவர்களின் உயர்ந்தஐச்வர்யமும் பகவானை பரமசிவனிடத்திலிருக்கிறது. மஹாதேவரான பரமேச்வரைத்தவிர ஐச்வர்யமுள்ளவர் வேறுயாரிருக்கிறார்? தைத்யர்தானவர்முதலானவர்களுக்கும் நாதரும் பகைவரையழிப்பவரும் தேவர்க்கும்ஈச்வரருமாகிய சங்கரரைவிட வேறுயார் திதிக்குப் புத்ரர்களுண்டாகவரம்கொடுக்கவல்லவர்; திசை, காலம், ஸ்த்ரியன், ஒளி, நவக்ரஹங்கள், காற்று, சந்த்ரன், நக்ஷத்ரங்கள் இவையனைத்தும் மஹாதேவரிடத்திலிண்டானவை என்றறி. யாகத்தையும் த்ரிபுரர்களையும் தைத்யர்கள்தானவர்களில முக்யமானவரையும் உண்டாக்கியும் அழித்தும் காப்பாற்றியும் நிப்பவரும் பகைவர்களைக்கொல்பவரும் பரமேச்வரரைவிட வேறுயாரிருக்கிறார்? சொல். புரந்தர! தேவராஜனே! வித்யாதர்களாலும், கந்தர்வர்களாலும், தேவர்களாலும், ரிஷிகளாலும் பூஜிக்கப்பட்ட ஆயிரங்கண்ணனை உன்னையேகண்டபிறகு அனேகயுக்திவாதங்களைப் பொருந்தச்சொல்வது எதற்கு? தேவேந்த்ரனே! உன்னுடையஐச்வர்யமெல்லாம் தேவர்க்குந்தேவரான ஈச்வரருடைய அநுக்ரஹத்தினாலேதான். இந்திரனே! சேதனங்களையும் அசேதனங்களையும் தலைமையாகவுடைய உலகங்களிலுள்ளவையெல்லாம் யாருக்கும் புலப்படாதவரும் ப்ரகிருதியிலிருந்துவிடுபட்டவரும் ப்ரம்மதேவர்க்கும்ஈச்வரருமாகிய சிவபிரானுக்காக ஏற்பட்டவையென்றும் ஸர்வவ்யாபியான அவரையே ஆத்மாவாகவுடையவையென்றும் அம்மஹேச்வரரிடத்திலிருந்தே வந்தவையென்றும் அறி. பகவானை இந்திரனே! உண்மையையறிந்தஜனங்கள் [1]பூலோகமுதல் மஹர்லோகம்

[1] பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் மஹர்லோகம்.

ஈறுகவுள்ளஉலகங்களிலும், [1] மற்றுமுள்ளலோகங்களிலும், பூமியிலுள்ளதீவுகளிலும், மேருவின்மேல்பிரதேசங்களிலும், ஸப்தமருத்துக்களின்ஸ்தானங்களிலும் ஈஸ்வரரிருப்பதாகச் சொல்லுகின்றனர். இந்திரனே! வேறுஈஸ்வரரூபத்தைத்தேவர்கள் காண்பாராயின் அவர்கள் அரசர்களால்நசுக்கப்படும்போதும் என் அதைச் சரணமடையவில்லை? தேவர்களுக்கும் யக்ஷர்களுக்கும் நாகர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் யுத்தங்கள்நேர்ந்து ஒருவரால்ஒருவர் அழிக்கப்படும்போது அவரவரிடங்களையும் ஐஸ்வரியங்களையும் கொடுப்பவர் சிவபிரானே. அந்தகன், சுக்ரன், மஹிஷவடிவமான துந்துபி இவ்வஸுரர்களுக்கும் யக்ஷராஜாவுக்கும் பலன்என்னும் அஸுரனுக்கும் ராக்ஷஸர்களுக்கும் நிவாதகவசர்களுக்கும் வரங்கொடுத்ததும் கெடித்ததும் மஹேச்வரரைவிடவேறுயார்? சொல். தேவர்க்கும்அஸுரர்க்கும்பூஜ்யனை அக்னி பகவானுடையமுகத்தில் எவருடையரேதஸ் முன்னே விடப்பட்டது? சிவனைத்தவிர வேறுயாருடையரேதஸினால் பொன்மலை செய்யப்பட்டது? வேறுஎவன் நிகம்பரனென்றும் ஊர்த்வரேதஸ்என்றும் உலகத்திற்சொல்லப்படுகிறான்? எவருக்கு மனைவி தேகத்திற்பாதியாயிருக்கிறாள்? எவரால் மன்மதன் வெல்லப்பட்டான்? எவருடைய உயர்ந்தஇடமானது தேவர்களாலும் துதிக்கப்படுகிறது? எவருக்கு ஸ்மசானத்தில் விளையாட்டுக்காகஇடமிருக்கிறது? கூத்தாடுவதில் எவர் சிலாகிக்கப்படுகிறார்? எவருடையஐஸ்வரியம் தம்மையடித்த பூதங்களுக்குப்பொதுவாயிருக்கிறது? எவர் பூதங்களுடன் விளையாடுகிறார்? தேவக்கூட்டங்கள் யாருடையபலத்தையடைந்து ஐஸ்வரியத்தினால் கர்வித்திருக்கின்றன? இந்திரனே! சொல். மூன்றுலகங்களிலும் பூஜிக்கப்பெற்ற கைலமலை யாருடைய ஸ்திரஸ்தானமென்று பறையறையப்படுகிறது? மழையைப்பெய்வதும் வெயிலை வீசுவதும் ஜ்வாலையோடுஜ்வலிப்பதும் வேறெவர்? யாரால் ஓஷதிகள் உண்டாகின்றன. தனத்தைக்காப்பாற்றுகிறவர் யார்? சராசரங்களடங்கியமூவுலகங்களிலும் இஷ்டப்படி விளையாடுகிறவர்யார்? யோகிகளாலும் ரிஷிகளாலும் கந்தர்வர்களாலும் வித்தர்களாலும் ஞானம், தவம், கருமங்கள், யோகம்இவற்றினால்ஆராதிக்கப்பட்ட முதற்காரணமென்றுசொல்லப்பட்டவர் யார்? தேவர்களாலும் அஸுரர்களாலும் தானதர்மங்களையும் யாகங்களையும் தவங்களையும் யோகங்களையும் செய்து எப்போதும் ஆராதிக்கப்படுகிறவரும் கர்மப்பயன்அற்றவருடனே அவரையே காரணமென்று நான் சொல்லுகிறேன். மஹேச்வர

[1] ஜனலோகம் தபோலோகம் ஸத்யலோகம்.

ரதபரஸ்வரூபமானது, ஸ்தூலமும் ஸூக்ஷ்மமும் உவமையற்றதும் அறிவுக்கெட்டாததும் [1]குணங்களுக்கிடமானதும் [2]குணங்களற்றதும் [3]குணத்தைஉண்டாக்குவதும் எல்லாவற்றிற்கும்ஸ்வாமியும் காரணங்களுக்குங்காரணமும் உலகங்களின் இருப்புக்கும் முடிவுக்குங்காரணமும் உண்டாதலும்உண்டாகிறதலும்உண்பதுமாகிய எல்லாவற்றிற்கும்முதற் பொருளும் ஆத்மாவுக்குஆத்மாவும் ப்ரகிருதியும் வித்தையும் அவித்தையும் செய்கையும் செய்கையல்லாததும் கர்மமும் அகர்மமுமாக இருக்கிறது. இந்திரனே! அதனால், அவரையே காரணமென்றும் நான் சொல்லுகிறேன். ஓ! தேவேந்திரனே! தேவர்க்குந்தேவரும் ஸ்ருஷ்டிக்கும் ஸம்ஹாரத்திற்குங்கர்த்தாவுமாகிய ருத்ரரால் இவ்வுலகத்தில் பகத்தின் அடையாளத்தோடுகூடினலிங்கம் உண்டாக்கப்பட்டிருப்பதை நீ ப்ரத்யக்ஷமாகக்காணலாம். இதுதான் உலகத்திற் காணக்கூடியகாரணமென்று முன்னர் கண்டதாதனைக்குச்சொன்னது. இந்திரனே! ஈசுவராருக்குமேற்பட்டது ஒன்றுமில்லை. இந்திரனே! உனக்குவிருப்பமிருந்தால் அவரைச் சரணமடை. தேவேந்திரனே! காரியங்களும் காரணங்களுமடங்கிய மூன்றுலோகங்களும் [4]லிங்கங்களின்சேர்க்கையினால் உண்டாகின்றனவென்றும் ப்ரம்மா முதலியவர்களின் ரேதஸினின்றுஉண்டானவையென்றும் உனக்குத் தெரியுமே. அனேகவிருப்பங்களினால் வேறுபட்டபுத்திகளோடுகூடிய ப்ரம்மா, இந்திரன், அக்நி, [5]விஷ்ணுமுதலானதேவர்களும் அஸுர சிரேஷ்டர்களும் ஈசுவரரைவிட வேறுஒன்றையும் சிறந்ததாகச்சொல்லவில்லை. சராசரங்களடங்கிய உலகங்களுக்குஸ்வாமியும் அறியத்தக்கவற்றுள்உத்தமனென்றுகூறப்பட்டவருமான அந்தச்சங்கரரையே மனத்தில்நியானித்துப் போகத்தையும் மோக்ஷத்தையும்பற்றிக் கேட்கிறேன். ஈசுவரர் காரணங்களுக்குங்காரணமென்பதற்கு வேறுநியாயங்களால் ஆவதென்ன? மற்றொருவனுடையலிங்கத்தைத் தேவர்கள் அர்ச்சித்ததாக நாம் கேட்கவில்லையன்றோ? மஹேச்வரரைவிட வேறு யாருடையலிங்கமானது எல்லாத்தேவர்களாலும் இப்போதாவது முன்னேயாவது பூஜிக்கப்பட்டிருக்கிறது? உனக்குக்கேள்விஇருந்தால் சொல். ப்ரம்மாவும் விஷ்ணுவும் நீயும் தேவர்களும் யாருடைய லிங்கத்தை எப்போதும் பூஜிக்கிறீரோ அவர் அந்தக்காரணத்தினாலேயே மிகச்சிறந்தவரல்லரோ? [6]தாமரைமலரையாவது [6]சக்கரத்தையாவது [7]வஜ்ரிராயுதத்தையாவது அடையாளமாகக்கொண்டு ப்ரஜை

[1] ஞானசக்திமுதலியகுணங்கள். [2] ஸத்வரஜஸ்தமோகுணங்கள்.
[3] ப்ரகிருதியை. [4] ஆண்பெண்குறிகள்.
[5] ப்ரம்மாவினது. விஷ்ணுவினது. [7] இந்திரனது.

கள் பிறப்பதில்லை; லிங்கத்தையும் பகத்தையும் அடையாளமாக வுடையவைகளாகப் பிறக்கின்றன. ஆதலால், பிரஜைகள் ஈஸ்வர ருடையவை. பெண்களெல்லாரும் உமாதேவியின்காரணரூபத்திலிரு ந்துஉண்டாக்கப்பட்டதனால் பகம்அடையாளமாகப் பிறந்திருக்கின்ற னர். புருஷர்களனைவரும் சிவனுடையலிங்கத்தினால் அடையாளம் செய்யப்பட்டிருப்பது பிரத்தியக்ஷமாயிருக்கிறது. சராசரங்களடங் கிய இம்மூவுலகங்களிலும் ஈசுவரரைவிட வேறுகாரணம்உளதென் றும் தேவியின்அடையாளம் இல்லையென்றும் சொல்லும் கெடுமதி யுள்ளமனிதன் நாஸ்திகனுவான். ஆண்குறியுள்ளவையனைத்தும் ஈசு வரரென்றும் பெண்குறியுள்ளவையனைத்தும் உமையென்றும்அறி. சராசரங்களாகிய இவ்வுலகமனைத்தும் இவ்விரண்டுரூபங்களினாலும் வியாபிக்கப்பட்டது. இந்திரனே! நான் வேண்டுகிறபலனையும் மர ணத்தையும் அவரிடத்திலிருந்தே விரும்புகிறேன். இந்திரனே! பலா லுரணக்கொன்றவனே! உன்னிஷ்டப்படி சென்றாலும்செல்; நின்ற லும்நில். மகேஸ்வரரால் எனக்கு இப்போது வரங்கிடைத்தாலும் கிடைக்கட்டும்; சாபங்கிடைத்தாலுங்கிடைக்கட்டும். நான் விரும் பினபலன்களெல்லாவற்றையும் கொடுப்பதாயினும் மற்றொருதேவதை யை நான் வேண்டுவதில்லை' என்று நான் சொன்னேன். தேவேந் திரனுக்கு இவ்வாறுசொலலியபின், 'சிவன் அனுக்கிரகம்செய்யவில் லையே; இது என்ன?' என்றுசிந்தித்துத் தியானத்தினால் பொறிகள் கலங்கினின்றநான் ஒருநிமிஷத்துக்குள் அக்கஜாவதமே ஹரம்ஸம், குருக்கத்திப்பூ, சந்திரன், தாமரைக்கிழங்கு, வெள்ளி, திருப்பாற் கடல் இவற்றின்நிறமுள்ளதும் கறுத்தலால்மயிரும் பருத்ததேகமும் தேன்போல்பசுமைநிறமான கண்களுமுடையதும் வச்சிரம்போலவன் மையுள்ளவையும் புடம்போட்டபொன்னிறமுள்ளவையும் மழமழப் பும் சிவப்புமுள்ளவையுமான நகங்களுள்ளவையும் மிகக்கூர்மைய மான கொம்புகளினால் பூமியைக்கிளறிக்கொண்டிருப்பதும் பொன்மாலை யினால் தேகமுழுதும்அலங்கரிக்கப்பட்டதும் அழகானமுகமும் குள ம்புகளும் மூக்கும் காதுகளும் இடுப்பும் விலாப்புறங்களுமுள்ளதும் பருத்தகொண்டையுள்ளதும் அழகானஉருவமும் பார்வையுமுடை யதுமான ரிஷபமாகஇருந்ததைக் கண்டேன். அதன்கொண்டை தோளை நிரப்பிக்கொண்டு இமயமலைச்சிகரம்போலவும் உண்டையான வெண்மேகம்போலவும் விளங்கிற்று. தேவர்க்குந்தேவரான மஹா தேவர் உமாதேவியுடன்கூட அதன்மேலேறிக்கொண்டு பூர்ணிமைச் சந்திரன்போல விளங்கினர். அவருடையகிரீடமும் ஜடாபாரமும்

ஸர்ப்பமுதலான ஆபரணங்களும் வஜ்ரம் சூலமுதலான ஆயுதங்களும், யாணபோன்றகும்பிரமாணகளையும் புன்னகையும்விளங்கின. அவரதுதேஜஸ்வினின் றண்டான அக்னியானது கர்ஜிக்கின்றமேகங்களுடன் ஆயிரம்ஸூர்யர்கள்போல உலகத்தையெல்லாம் வியாபித்திருந்தது. மிகச்சிறந்த தேஜஸோடுகூடிய பிரளயகாலாக்நிபோல மிகச்சிறந்ததேஜஸுள்ளஈஸ்வரர், யுகங்களின்முடிவில் எல்லாப்பொருள்களையும் எரிக்கத்தொடங்கினவர்போல விளங்கினர். அவரது ஒளியினால் எங்கும்வியாபிக்கப்பட்டுப் பார்க்கக்கூடாமற்போனஉலகத்தைக்கண்டு மனத்தில்அச்சமுற்று, 'இது என்ன' என்று திரும்பவும்சிந்தித்தேன். அந்தஒளியானது பத்துத்திசைகளிலும் சற்றுநேரம்வியாபித்தது. அதனஈஸ்வரருடையமாயையினால் உடனே அடங்கிற்று. அதன்பிறகு, விருஷபாரூடரும் புகையிலலாதஅக்னிபோலப்ரஸன்னரும் ஆருளோடுகூடியமனமுளளவரும் முக்கண்ணரும் யாராலும்வெல்லப்படாதவரும் அங்கமெல்லாம் அழகானபார்வதியோடுகூடியவரும் எல்லாருக்கும்மேலானஈஸ்வரரும் கறுத்தகண்டமுடையவரும் மஹாத்மாவும் எங்குமதடைப்படாதவரும் எல்லாச்சக்திகளுக்கும்இருப்பிடமும் பதினெட்டுப்புஜங்களுடையவரும் ஸ்திரமாயிருப்பவரும் எல்லாஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவரும் வெள்ளீவஸ்திரம்தரித்துவிளங்குபவரும் வெணமாலைகள்சூடி வெண்பூச்சுப்பூசியிருப்பவரும் வெள்ளீக்கொடியுள்ளவரும் வெள்ளீப்பூணூல்தரித்தவரும் கலங்காதவரும் தமக்கொப்பானபராக்ரமமுள்ள பக்கத்திலிருக்கும்திவ்யபுருஷர்கள் பாடியும ஆடியும் வாத்யம்வாசித்தும்சுற்றும்சூழப்பெற்றவரும் மதியிண்பிறையைக் கிரீடமாகதரித்தவரும் சரத்காலத்தில் உதயமானசந்திரனப்போல வெளுத்தநிறமும் ஒளியுமுள்ளவரும் மூன்றுஸூர்யர்கள் உதயமானதுபோலிருக்கும் மூன்றுநேத்ரங்களினால் ஒளியையுண்டுபண்ணுகிறவரும் எல்லாவித்தைகளுக்கும்அதிபதியும் பகவானுமான பரமேஸ்வரரைக் கண்கள்குளிர ஸந்தோஷமாகநான்கண்டேன். பொற்றாமரை மலர்களினால் தொடுக்கப்பட்டதும் ரத்னங்களினால் அலங்கரிக்கப்பட்டதுமான ஒருமாலை அந்தப்பகவானுடைய வெண்ணிறமானதேகத்தில் விளங்கிற்று. கோவிந்தரே! அளவற்றசக்தியுள்ள சிவனுடையஅஸ்த்ரங்கள் ஒளிகளெல்லாம்சேர்ந்து உருவங்கொண்டவைகளும் சரீரமுள்ளவைகளுமாக என்னாற்காணப்பட்டன. பிதாகமென்றுபுகழ்பெற்ற அம்மஹாத்மாவின் வில்லானது ஆயிரம்வானவிற்களுக்கொப்பாயிருந்தது. அது ஏழு தலைகளும் பெரியஉடலும் கூரானகோரப்பற்களும் கொடியவிஷமும்

முள்ளதும் நாணினால்சுற்றப்பட்ட பெருங்கழுத்துள்ளதும் மகாநாக மூமாகிய வாஸுகியே மாணிடதேகத்துடன்வந்ததாக இருந்தது. ஸூர்யனைப்போலப்பிரகாசிப்பதும் திரிபுரஸம்ஹாரம்செய்ததும் எல் லாத்தேவர்களின் ஸாரமூமாகியபாசுபதம்என் னும்பாணமும், ஆயிரம் கைகளும் நாக்களும் வாய்களுமுடையதும் பயங்கரமுமான ஸர்ப்ப ரூபமுடையதாகச் சங்குகள் சூலங்கள் கத்திகள் பட்டஸங்களுடன் நின்றது. மிகக்கொடியதாகிய அந்தப்பாசுபதம்என் னும் சிறந்த திவ் யாஸ்திரமானது நிகரற்றது; சொல்லுக்கெட்டாதது; எல்லாப்பிராணி களுக்கும் பயத்தைத்தருவது. அது நெருப்புப்பொறிகளோடு கூடியதும் பெரியஉருவமுள்ளதும் அக்நியவாயுவழிப்பதுபோன்ற தும் ஒற்றைக்காலும் பெருங்கோரப்பற்களும் ஆயிரம்தலைகளும் வாய் றுகளும் கைகளும் நாக்களும் கண்களுமுடையதும் நெருப்பைக்கக் குவதுபோன்றதுமாக இருந்தக்கண்டேன். சிறந்தலக்ஷணமுடைய வரே! அது பிரம்மாஸ்த்ரம், நாராயணாஸ்த்ரம், ருத்ராஸ்த்ரம், ஆக் நேயாஸ்த்ரம், வாருணாஸ்த்ரம்என் னும் இவ்வஸ்த்ரங்களிலும் சிறந் தது; எல்லா அஸ்த்ரங்களையும்தடுப்பது. கோவிந்தரே! முன்பு அந்த ஒரேஅஸ்த்ரத்தினால் மஹாதேவா திரிபுராஸுரர்களை ஒருகொடியில் விளையாட்டாகஎரித்து நீறுக்கினார். பஹாதேவர்களைனால்பிரயோ கிக்கப்படும் அவ்வஸ்த்ரமானது சராசரங்களடங்கியமூவுலகங்களின் னத்தையும் அரைநிமிஷத்தில் பரித்துவிடுமென்பதில் ஸந்தேகமில்லை. இவ்வுலகத்தில் அவ்வஸ்த்ரத்தினால் வதமடையாதவன் பிரம்மா விஷ்ணுமுதலானதேவர்களிலுமில்லை. அப்படிப்பட்ட இந்தஉயர்ந்த ஆச்சரியத்தை நான் அவரிடத்திற்கண்டேன். அந்தச்சிறந்தஅஸ்த்தி ரம் யாருக்குந்தெரியாதது. அதற்கொப்பும்உயர்வும் வேறொன்று மில்லை. சூலமென்று எல்லாஉலகங்களிலும் கியாதிபெற்ற அவருடைய ஆயுதமிருக்கிறதன்றோ? அது அவரால்பிரயோகிக்கப்பட்டால பூமி யெல்லாவற்றையும் கிழித்துவிடும்; கருங்கடலையும் வற்றச்செய்யும்; உலகத்தையெல்லாம் அழித்துவிடும். கோவிந்தரே! முன்னர், யுவனஸு வன்புதல்வனும் சக்ரவர்த்தியும் சிறந்தசக்தியுள்ளவனும் மூன்று உலகங்களையும்ஜயித்தவனுமாகிக்கவன்மையுள்ளவனும் இந்திரனுக் கொப்பான பராக்ரமமுள்ளமஹாவீரனுமான மாந்தாதாவென்னுமர சன் லக்ஷணைகளுடன் லவணஸுரனைகையிலிருந்த அந்தச்சூலாயுதத்தி னால் கொல்லப்பட்டான். மிகக்கூர்மையானமுனையுள்ளதும் மயிர் வுரடிக்கச்செய்யும்மிக்கபயங்கரமுமான அந்தச்சூல்மானது மூன்று பகுதிகளாகப் புருவநெறிப்பைச்செய்து பயமுறுத்துவதுபோலிருந்

தது. கோவிந்தரே! புகையில்லாமல்ஜ்வலிக்கும் அக்நிபோலும் பிரளய காலத்திலுதயமான ஸூர்யன்போலுமிருப்பதும் வர்ணிக்கமுடியாததுமான அவ்வஸ்த்ரம், ஸர்ப்பத்தையும் பாசாயுதத்தையும் கையில் வைத்திருக்கும்யமனைப்போல ருத்ரஸந்நிதானத்தில் இருக்கக்கண்டேன். கோவிந்தரே! ப்ருகுவம்சத்தில் பிறந்தவரானபரசுராமருக்கு மஹாதேவர் அன்புகூர்ந்து அளித்ததும் அந்தச் சிறந்த செய்கையுள்ளபரசுராமர் சக்ரவர்த்தியான கார்த்தவீர்யார்ஜுனனை மகாயுத்தத்திற்கொன்றதற்கும் இருபத்தொருமுறை பூமியில் க்ஷத்ரியனில்லாமற்செய்ததற்கும் கருவியாயிருந்ததும் ஜ்வலிக்கின்ற மூன்றும் மிகக்கொடியவாயுமுள்ளதும் ஸர்ப்பத்தின்கழுத்தின்மேல் இருப்பதுமான அந்தக்கோடாலியானது அநேக அக்னிகள் ஏககாலத்தில் ஜ்வலிப்பதுபோலச் சிவபிரானதுஸமீபத்திலிருந்தது. குற்றமற்றவரே! ஸர்வஜ்ஞரான அவருடையதிவ்யாஸ்த்ரங்களை எண்ணமுடியாது. இந்தமுக்கியமான அஸ்த்ரங்களைமட்டும் நான் உமக்குச்சொன்னேன். உலகங்களுக்குப்பிதாமஹராகிய ப்ரம்மதேவர் அன்னப்பறவைகள்கட்டினதும் மனோவேகமுள்ளதுமான திவ்யவிமானத்திலேறிக்கொண்டு ஈச்வரருடைய வலப்பக்கத்திலிருந்தார். சங்கசக்ரகதாபாணியாகியநாராயணரும் கருடன்மேலேறிக்கொண்டு அவரதுஇடப்புறத்திலிருந்தார். ஸுப்ரம்மண்யர் மயில்மேலேறிக்கொண்டு சக்தியாயுதத்தையும்மணியையும்எடுத்துக்கொண்டு இரண்டாவது அக்நிபோல உமாதேவியின்ஸமீபத்திலிருந்தார். பகவானுடையமுன்னிலையில் சூலத்தையூன்றிக்கொண்டு இரண்டாவதுசங்கரைப்போல அசையாமல் நின்றுகொண்டிருந்த நந்திகேச்வரரையும் கண்டேன். ஸ்வாயம்புவர்முதலான மனுக்களும் ப்ருகுமுதலானரிஷிகளும் இந்த்ரன்முதலானதேவர்களும் பூதங்களின்எல்லாக்கணங்களும் எல்லா [1]மாதாக்களும் வந்துநின்றனர். அந்தத்தேவர்கள் அம்மஹாதேவரான மகாதேவருக்கு வந்தனம்செய்து அவரை நாற்புறமும்சூழ்ந்துகொண்டு பலவகைஸ்தோத்ரங்களைச்சொல்லித் துதித்தனர். பிரம்மதேவர் உலகத்தின்உருவமாகிய மகாலிங்கத்தையும் அதன்நடுவில் பெருவடிவமுள்ளசிவனையும்கண்டு ரதந்தரமென்னும்ஸாமத்தைச்சொல்லி ஸ்தோத்ரம்செய்தார். அப்போது, நாராயணர் ஜ்யேஷ்டஸாமம் என்னும் ஸாமத்தைச்சொல்லித் தேவர்க்குமீச்வரரான சிவபெருமானைப் பாடினர். தேவேந்த்ரன் சதருத்ரியம் என்னும் உத்தமமானவேதத்தைச்

[1] ப்ராம்மி, மாஹேச்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, இந்த்ராணி, சாமுண்டாவன எழுவர்.

சொல்லிப் பரப்பிரம்மத்தைத் துதித்தான். பிரம்மா நாராயணர் தேவர்களுக்கதிபதியான இந்திரன் இம்மூன்று மஹாத்மாக்களும் மூன்று அக்னிகள்போல விளங்கினர். அவர்களின நடுவிலிருந்த பகவானை சிவபெருமான் சரத்காலத்தில்மேகங்கள்விலகிப் பரிவேஷம் என்னும் மண்டலத்திற்குள்ளிருக்கும் ஸூர்யன்போல விளங்கினர். கேசவரே! ஆகாயத்தில் பதினாயிரம்சந்திரர்களையும் ஸூர்யர்களையும் கண்டேன். சிறந்ததவமுள்ளவரே! அதன்பிறகு, நான் பின்வரும் ஸ்தோத்தாத்தைச்சொல்லிப் பகவானைத் துதிக்கலானேன்.

'தேவர்க்கும்மேலான தேவருக்கு நமஸ்காரம். மஹாதேவராகிய உமக்கு நமஸ்காரம். இந்திரன்வடிவமெடுத்து இந்திரன் ஆபரணம் முதலானவைகளைத்தரித்து வஜ்ராயுதத்தைக்கையிற்பிடித்து இந்திரனுக்குவேயிருக்கும் உமக்கு நமஸ்காரம். செம்மட்டைநிறமும் சிவப்பு நிறமுமுள்ளவரும் பிங்கலமென்னும்விலிலை எப்போதும் கையிற்பிடிப்பவரும் சங்கையும் சூலத்தையும் தரித்திருப்பவருமாகிய உமக்கு நமஸ்காரம். கறுத்தும்சுருண்டுமிருக்கும் தலைமயிரை உடையவரே! கறுப்புவஸ்திரம்தரித்தவரும் கிருஷ்ணஜினதலத்[1] உத்தரியமாகப் போர்த்தவரும் கிருஷ்ணபக்ஷஅஷ்டமியில் பிரீதியுள்ளவருமானஉமக்கு நமஸ்காரம். வெண்ணிறமுள்ளவரும் பரிசுத்தரும் வெள்ளைவஸ்திரம்தரித்தவரும் வெண்ணீறணிந்தவரும் பரிசுத்தமானதாமங்களில் விருப்பமுள்ளவருமாகிய உமக்கு நமஸ்காரம். சிவப்புநிறமுள்ளவரும் சிவப்பு ஆடைஉடுத்தவரும் சிவபபுகொடிசசீலையுடையவரும் சிவந்தமாலைகளும் சந்தனப்பூச்சுக்களுமுடையவருமாகிய உமக்கு நமஸ்காரம். பொன்னிறமுள்ளவரும் பொன்னிறமுள்ள ஆடையுடுத்தவருமாகிய உமக்கு நமஸ்காரம்; தூக்கிப்பிடிக்கப்பட்டகுடையுள்ளவரும் சிறந்தகிரீடமணிந்தவரும் பாதிப்பாகத்தில் ஹாரம், தோளவீர, குண்டலம் அணிந்தவருமாகிய உமக்கு நமஸ்காரம். சாற்றுமவேகமுள்ளவர்க்கு நமஸ்காரம். ஈஸ்வரருக்கு நமஸ்காரம். தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் இந்திரனுக்கு இந்திரனுமாயிருக்கும் உமக்கு நமஸ்காரம். தேஜத்தின்பாதிப்பாகத்தில் கருநெய்தல்மலர்கள் இடையில்தொடுக்கப்பட்ட தாமரைமாலையையும் சந்தனத்தையும் அணிந்திருப்பவருக்கு நமஸ்காரம். ஸூர்யனைமுகமாகவும் கண்ணாகவுமுடையவர்க்கு நமஸ்காரம். ஸூர்யன் நிறமுள்ளவரும் ஸூர்யனைப்போன்றவருமானஉமக்கு நமஸ்காரம். உலகமெயாடுகூடினவரும் சந்திரன்போலிருப்பவரும் அனுக்கிரகத்தோடுகூடியமுகமும் அழ

[1] உமையின்பாகத்தில்.

இயரூபமுமுள்ளவரும் அழகானபற்களோ அலங்காரமாகவுடையவரும் எல்லாருக்கும்முதன்மையாயிருப்பவருமானஉமக்கு நமஸ்காரம். கறுத்தவரும் வெளுத்தவரும் பாதித்தேகம்பொன்மையும் பாதித்தேகம் வெண்மையுமுடையவருமாயிருப்பவர்க்கு நமஸ்காரம். பெண்ஆண் சரீரங்கள்சேர்ந்து பெண்ணுகவும்ஆணுகவும்இருக்கும்உமக்கு நமஸ்காரம். விஷ்வரூபாகணமுடையவரும் மதயானைபோலநடப்பவருமான உமக்கு நமஸ்காரம். அறியவும்அடையவும்கூடாதவரும் தாமேவரு இவருமானஉமக்கு நமஸ்காரம். ப்ரமதகணத்தினரால்துதிக்கப்பெற்றவரும் அவர்கள்மேல்அன்புள்ளவரும் அவர்கள்பின்செல்லும்வழியுள்ளவரும் அவர்களைவிடாமலிருப்பதே நோன்பாகக்கொண்டவருமானஉமக்கு நமஸ்காரம். வெண்மேகநிறமும் செவ்வானநிறமுமுள்ளவர்க்கு நமஸ்காரம. பேராலகுரிப்பிடங்கூடாதவரும் தாமேதமக்கிலக்கணமாயிருப்பவருமான உமக்கு நமஸ்காரம் தலைப்புச்சிவந்த மேலாடையையும் சிவந்தஉருவஸ்திரத்தையும்தரித்தவரும் சிவப்புயஜ்ஞோபவீதமும் சிவப்புமாலைகளும் அணிந்தவருமாகியஉமக்கு நமஸ்காரம். ரத்னகிரீடத்தையும் பிறையையும் விசித்திரமானரத்னாலங்காரங்களையும் தலையிலணிந்து [1]ஈரட்டிவகைப்புஷ்பங்களைத்தரிக்கும் உமக்கு நமஸ்காரம. அக்னியைநெற்றிக்கண்ணுகவுடையவரும் ஸூர்யசந்திரர்களைஇருகண்களாகவுடையவரும அக்நிபோன்றரூபமுள்ளவரும் மனத்திற்கினியவரும் அறியக்கிட்டாதவருமான உமக்குநமஸ்காரம். ஆகாயத்திலஸஞ்சரிப்பவரும ஐமபுலன்களிலுமிருந்து விஷயங்களிற் பிரவ்ருத்திப்பவரும் பூமியிலிருப்பவரும் பூமியிலிருப்பவருமாயிருப்பவரும் மூடிவற்றவரும் மங்களகாரருமானஉமக்கு நமஸ்காரம. எப்போதும திசைக்களை ஆடையாகத்தரித்தும் எப்போதும் நன்மணமுள்ளநலலவஸ்திரம தரிததுமிருப்பவர்க்கு நமஸ்காரம. உலகங்களுக்கிருப்பிடமும் அடைவதற்கெளியவருமானஉமக்கு நமஸ்காரம். எக்காலமும் கிரீடதையும் சிறந்ததோளவளையையும்தரித்துக் கழுத்தில் ஸர்ப்பஹாரத்தையும் விசித்திரமான பலஆபரணங்களையும அணிந்திருப்பவரான உமக்கு நமஸ்காரம். உலகங்களைநடத்துபவனவாகிய ஸூர்யன் சந்திரன் அக்னிஎன்னுமமூன்றையும் கண்களாகவுடையவரும் ஆயிரம் நூறுகண்களையுடையவரும் பெண்ணுகவும் ஆணுகவும் அலியாகவும் ஸாங்கியராகவும் யோகியாகவுமிருப்பவருமானஉமக்கு நமஸ்காரம். ஸுகத்தைப்பெருக்குபவரும் அதர்வவேதஸ்வரூபருமான உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். எல்லாத்துன்பங்களையும் துயரங்களையும்

[1] பஞ்சபூதங்கள் மனம் புத்தி அஹங்காரங்கள்.

போக்குகிறவர்க்கு நமஸ்காரம் மேகம்போன்ற குரலுள்ளவரும் அநேகமாயைகளைத்தரிப்பவருமாகியஉமக்கு நமஸ்காரம். [1]பித்தையும் நிலத்தையும்காப்பவரும் படைப்பவருமானஉமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். தேவருக்கும் அஸுரருக்கும் ஈஸ்வரரானஉமக்கு நமஸ்காரம். லோகநாதரானஉமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். காற்றுவேகமுள்ளவர்க்கு நமஸ்காரம் காற்றுரூபமாயுள்ளவர்க்கு நமஸ்காரம். பொன்மாலையணிந்தவருக்கு நமஸ்காரம். மலைகளைமாலையாகஅணிந்த விஸ்வரூபிக்கு நமஸ்காரம். அஸுரரை [2]மாலையாகஅணிந்தவருக்கு நமஸ்காரம். கடியவேகமுள்ளவருக்கு நமஸ்காரம். பிரம்மதேவரின்சிரத்தைஅறுத்தவருக்கும் மஹிஷாஸுரனைக்கொன்றவருக்கும் நமஸ்காரம். [3]பெண்ணுருவமுடையவருக்கும் [4]யாகத்தைஅழித்தவருக்கும் நமஸ்காரம். திரிபுரம் அழித்தவருக்கும் யாகத்தைக்கெடுத்தவருக்கும் நமஸ்காரம். காமனதுஅங்கத்தைஅழித்தவருக்கும் காலனைத்தண்டித்தவருக்கும் நமஸ்காரம். தமதுசிதம்பினவீர்யத்தைஸுப்ரம்மண்யராகஉண்டாக்கினவருக்கு நமஸ்காரம். பிரம்மாவைத்தண்டித்தவருக்கு நமஸ்காரம். [5]பவருக்கும் [6]சர்வருக்கும் நமஸ்காரம். விஸ்வரூபருக்கு நமஸ்காரம். ஸம்ஸாரத்தைக்கெடுப்பவரும் அந்தகாஸுரனைக்கொன்றவருமானஈஸ்வரருக்கு நமஸ்காரம். எல்லாவற்றிலுள்ளும் பிரவேசித்திருப்பவருக்கு நமஸ்காரம. சிந்தைக்கெட்டுகிறவரும் எட்டாதவருமாகிய மாயாவிக்கு நமஸ்காரம். நீர்தாம் எமக்குத்தஞ்சம். நீர்தாம் எல்லாரிலும்சிறந்தவர். என்னுள்ளமே நீர்தாம். நீர் தேவர்கள்எல்லாரிலும் பிரம்மதேவர்; ருத்ரர்களுள் நீலலோஹிதர்; எல்லாப் பிராணிகளுக்கும் ஆத்மாவானவர்; ஸாங்கியசாஸ்திரத்தில் புருஷர் என்றுசொல்லப்படுகிறவர்; பரிசுத்தவஸ்துக்களுள் [7]சிறந்தவர்; யோகிகளுக்கு அரூபியானசிவன்; நாலாஸ்ரமிகளாலும் கிருஹஸ்தர்; ஈஸ்வரர்களுக்கும்பெரியஈஸ்வரர்; யக்ஷர்களெல்லாரிலும் குபேரனாகிறீர்; யாகங்களுக்கு விஷ்ணுவென்றுசொல்லப்படுகிறீர். நீர் மலைகளுள் மேருமலை; நக்ஷத்திரங்களுள்சந்திரன்; ரிஷிகளுள் வஸிஷ்டர்; திரகங்களுள் ஸுபாயன்என்றுசொல்லப்படுகிறீர். பரமேஸ்வரராகிய நீர் காட்டிலுள்ளமிருகங்களுள் ஸிம்மம்; நாட்டுப்பசுக்களுள் விருஷபம்; லோகங்களில் மிகப்பூஜிக்கப்பெற்றவர். நீர் ஆதித்யர்களில் விஷ்ணுவென்னும்ஸூர்யன்; வஸுக்களில்பாவகன்என்பவர்; பக்ஷி

[1] புருஷரேயும் ப்ரகிருதியையும்.
[2] அஸுரரால் தீங்குசெய்யப்படாதவர். [3] பார்த்தேதகத்தில்.
[4] தக்ஷயாகம். [5] ஆக்கினவர். [6] அழித்தவர். [7] மந்திரமாயிருப்பவர்.

களில் கருடன்; ஸர்ப்பங்களில் சேஷன்; வேதங்களில் ஸாமவேதம்; யஜுர்வேதத்தில் சதருத்ரியமென்னும்பாகம்; யோகிகளில் ஸநத்குமார்; ஸாங்கியர்களில் கபிலராயிருக்கிறீர். ஸ்வாமி! தேவர்களில் இந்திரனுயிருக்கிறீர். பித்ருதேவதைகளில் அக்னியாயிருக்கிறீர். உலகங்களில் பிரம்மலோகம். கதிகளில் மோக்ஷமாகச்சொல்லப்படுகிறீர். கடல்களுள் திருப்பாற்கடல். மலைகளில் இமயமலை. வர்ணங்களில் பிராம்மணவர்ணம். பிராம்மணர்களில் யாகதீக்ஷைசெய்துகொண்டபிராம்மணர். உலகங்களுக்குமுதலும் முடிவானகாலனும் நீரே. இவ்வுலகத்தில் எல்லாச்சக்திகளும் பிருந்ததாகச்சொல்லப்படும் மற்றவையெல்லாங்கூட நீர்தாமென்பது என்உறுதியானஎண்ணம். பகவானே! தேவரே! உமக்குநமஸ்காரம். பக்தர்கள்மீது அன்புள்ளவரே! உமக்குநமஸ்காரம். யோகத்தைகடத்துகிறவரே! உமக்கு நமஸ்காரம். உலகங்களுக்குமுதல்வரே! உமக்கு நமஸ்காரம். பக்தியுள்ளவனும் வேறுகதியில்லாதவனும் ஏழையுமானஎன்மேல் அருள்செய்யும். என்றுமிருப்பவரே! சக்தியில்லாதஎனக்குத் தஞ்சமாகக்கடவீர். தேவர்க்குமீஸ்வரானபரமேஸ்வரரே! 'இவன் எனது பக்தன்' என்றுநினைத்து நான் அறியாமற்செய்தபிழைகளையெல்லாம் பொறுக்கக்கடவீர் தேவருக்குமீஸ்வரரே! நீர் உமதுரூபத்தை மாற்றி என்னை மயங்கவைத்தீர். மகேஸ்வரரே! அதனாலே, நான் உமக்கு அர்க்கியபாத்யங்களையும் ஸமர்ப்பிக்கவில்லை' என்றேன்.

நான் இவ்வாறு ஈஸ்வரரைத்துதித்துப் பத்தியோடுகரங்களைக் குவித்து அர்க்கியபாத்யங்கள்முதலானஉபசாரங்களையெல்லாம் அவருக்கு அர்ப்பணம்செய்தேன். ஐயா! அப்போது குளிர்ந்தஜலம் கலந்ததும் உயர்ந்தமணிமுள்ளதுமாகிய சிறந்தபூமாரி என்தலையில் பொழிந்தது. அப்போது தேவலோகத்தில் தேவதூதர்களால் பேரிகை அடிக்கப்பட்டது. நல்லகந்தமுள்ளதும் ஸுகந்தத்தைத்தருவதும் பரிசுத்தமுமானகாற்றும் அடித்தது. பிறகு, ரிஷபக்கொடியுடையவரான மஹாதேவர் உமாதேவியுடன் ஸந்தோஷமுள்ளவராய் என்னை ஸந்தோஷப்படுத்துவதற்காக அங்குள்ளதேவர்களைப்பார்த்து, 'ஓ! தேவர்களே! மஹாத்மாவானஉபமன்யுவுக்கு என்னிடத்தில் எப்போதும் ஒரேஉறுதியோடிருக்கும் சிறந்தபக்தியை நீங்களெல்லாரும் பாருங்கள்' என்றுசொன்னர். கிருஷ்ண! சூலபாணிஇவ்வாறுசொல்ல, அந்தத்தேவர்களனைவரும் அப்போதுஅவருக்குநமஸ்காரம்செய்துகைகூப்பிக்கொண்டு, 'பகவானே! தேவருக்குந்தேவரானஈஸ்வரரே! லோகநாதரே! உலகத்தைக்காப்பவரே! இந்தப்ராம்மணத்தமர் எல்லா

விருப்பங்களுக்குமேலான பலனை உம்மிடத்தில் அடையட்டும்' என்று சொன்னார்கள். பகவானும் ஈஸ்வரருமாகியசங்கர் ப்ரம்மாதிதேவர்களால் இவ்வாறுசொல்லப்பட்டபிறகு நகைத்துக்கொண்டு என்னைப் பார்த்து, 'குழந்தாய்! உபமன்யுவே! முனிஸ்ரேஷ்டனே! நான் உன் தோஷமடைந்தேன். என்னைப்பார். ப்ரம்மரிஷியே! உறுதியான பக்தியுள்ளவனாயிருக்கிறாய். நான் உன்னைப் பரீக்ஷையன்றோசெய்தேன். இந்தஉன்பக்தியினால் நான் மிகவும்தோஷமுள்ளவனாயிருக்கிறேன். ஆதலால், நீ விரும்பினபலன்களெல்லாவற்றையும் உனக்கு இப்போது கொடுக்கிறேன்' என்றுசொன்னார். எல்லாம்வல்லதிரிந்த மஹாதேவரால் இவ்வாறுசொல்லப்பட்டஎனக்கு அப்போதே ஆனந்தக்கண்ணீர்சொரிந்தது; மயிர்பொடித்தலுண்டாயிற்று. பகவானே! அப்போது நான் முழங்கால்களைப்பூமியில்பதித்துப் பலமுறைநமஸ்காரம்செய்து ஸந்தோஷத்தினால் தழுதழுத்தகுரலோடு, 'ஸ்வாமி! இப்போதுதான் யான்பிறந்தேன். மஹாதேவரே அனுக்ரகம்வைத்து என்முன்னேநேரில்நிற்பதனால் என்ஜன்மம் இப்போது பயன்பெற்றது. அளவற்றசக்தியுள்ளஎவரைத் தேவர்களும் பிரத்யக்ஷமாகக் காணரோ அந்தஈஸ்வரரை நான் கண்டேன். என்னைக்காட்டிலும் மிக்கபாக்கியசாலி யாரிருக்கிறான்? உற்பத்தியும் நாசமும இல்லாத நித்யமும் ஞானரூபமுமான பரதத்வத்தை விசுப்பிரஹித்தமான இவ்வுருவமுள்ளதாகத்தான் வித்வான்கள் தியானம்செய்கின்றனர். எல்லாப்பிராணிகளுக்கும் முதல்வரும் மாறுதலவரும் எல்லாப்பொருள்களின் க்ரமங்களையும் அறிந்தவரும் பிரகிருதியும் புருஷனும் அவற்றிற்குமேற்பட்டவருமாக இருக்கும்பகவான் இந்தஈஸ்வரர்தாம். உலகங்களைப்படைக்கும் ப்ரமதேவரை வலப்பக்கத்திலிருந்தும் உலகங்களைக்காப்பவராகியவிஷ்ணுவை இடப்பக்கத்திலிருந்தும் இந்தஈஸ்வரர்படைத்தார். பிரபுவானஈஸ்வரர் ப்ரளயகாலம்வந்தபோது ருத்ரரைப்படைத்தார். அந்தருத்ரர் ப்ரளயகாலாக்னியும் காலரூபியுமாயிருந்து தாவரஜங்கமங்களானஉலகங்களனைத்தையும் ஸம்ஹாரம்செய்தபிறகு பரப்ரம்மத்தைச்சேருகிறார், ப்ரளயகாலத்தில் எல்லாப்பிராணிகளையும் விழுங்குகிறவர்போலிருக்கிறார். ஈஸ்வரரான இந்த மஹாதேவர் சராசரங்களாகியஉலகங்களைப்படைத்துப் ப்ரளயகாலம் வந்தபோது எல்லாருடைய அறிவையும்எடுத்துக்கொண்டேநிற்கிறார்; எங்குமிருப்பவரும் எல்லாப்பிராணிகளுக்கும் அந்தர்யாமியும் எல்லாப்பிராணிகளின் உற்பத்திக்கும் விருத்திக்கும்காரணமும் எல்லாத் தேவர்களுங்காணக்கூடாதவருமாக எங்கும் எப்போதுமிருக்கிறார்.

தேவர்களுக்கும்ஈஸ்வரரானதேவரே! ப்ரபுவே! என்மேல் உமக்கு அனுக்ரகம்உண்டாயிருந்த எனக்கு வாக்கொடுக்கவுங்கூடுமானால் எனக்கு உம்மிடத்தில் எப்போதும் பக்தியிருக்கவேண்டும். தேவர்களுக்குமேலானபிரபுவே! உமது அனுக்ரகத்தினால் கடந்தது வருவது நிகழ்கிறதுஎல்லாவற்றையும்நான் அறியக்கடவேனென்பது என் விருப்பம். என்பந்துக்களுடன் எப்போதும் குறையில்லாமல் பாலண்ணம்புசிக்கக்கடவேன். நமது ஆஸ்ரமத்தில் உமதுசிறந்தஸாந்நித்யம் எப்போதும்இருக்கக்கடவது' என்றுசொன்னேன். உலகங்களினால் பூஜிக்கப்பெற்றவரும் எல்லாவற்றிற்கும்ஈஸ்வரரும் சிறந்தமஹிமையுள்ளவருமான் சராசரங்களுக்குத்தந்தையுமான சிவபெருமான் என்னிலிவ்வாறுசொல்லப்பட்டபோது என்னைப்பார்த்துப் பின்வருமாறு பேசலானார். 'நீ ஐசுரியும்மாணமுமில்லாமல் புகழும் மஹிமையும் திவ்யஜ்ஞானமுமுள்ளவனாயிருக்கக்கடவாய். உன் அனுக்ரகத்தினால் ரிஷிகள் வந்தடையத்தக்கவனும் மல்லாமுக்கமும் குணங்களும் நிரம்பினவனும் ஸர்வஜ்ஞனும் எல்லாருக்காண விரும்பத்தக்கவனுமாவாய். உனக்கு மாறுதலென்வனமும் அக்கினிக்கொப்பானதேஜஸும் உண்டாகக்கடவன. நீ விரும்பினஇடமெல்லாம் உனக்குத் திருப்பாற்கடல் வந்துசேரும். பந்துக்களோடுசேர்ந்து அமிருதத்தோடுகூடியபாலன்னத்தை ஒரு [1]கல்பகாலம் புசிப்பாய். பிறகு, என்னைச் சேருவாய். உன்னுடையபந்துக்களும் குலமும் கோத்திரமும் எப்போதும் அழியாமலிருக்கும். அந்தணரிற்சிறந்தவனே! என்னிடத்தில் உனக்கு நிலையானபக்தியும்இருக்கும். பிராம்மணரைத்தமனே! உன் ஆஸ்ரமத்தில் எப்போதும் நான், ஸாந்நித்யமாயிருப்பேன். குழந்தாய்! உன்னிஷ்டப்படியிரு. என்னைப்போராமையினால் வருத்தமடையாதே. பிராம்மணரே! நீ நினைத்தபோது உனக்குக் காட்சிதருவேன்'என்றார். கோடிஸூர்யருக்குச்சம்மான ஒளியுள்ள அந்தப்பகவானஈஸ்வரர் இவ்வாறுசொல்லி வரங்களையளித்து அந்தஇடத்திலேயே அந்தர்த்தானமானார். கிருஷ்ணே! அந்தத்தேவதேவரை நான் இவ்வாறுஸமாதியினால்கண்டேன். எல்லாவற்றையும் அறிந்தவரான அவர் சொன்னவையெல்லாம்எனக்குக்கிடைத்துமிருக்கின்றன. கிருஷ்ணே! உமதுகண்ணதிரிலே வித்தர்களும் ரிஷிகளும் வித்யாதரர்களும் யக்ஷர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் இங்கிருப்பதைப்பாரும். செடிகளும் கொடிகளும் புதர்களும் எல்லாருக்குக்கண்ணுமுள்ள எல்லாப்புஷ்பங்களையும் பழங்களையும்கொடுத்துக்கொண்டு அழகான இவ்வு

[1] நாலுயுகம்.

களுடன் நல்லமண்முள்ளவையாயிருப்பதைப்பாரும். சிறந்தகைகளை யுடையவரே! மஹாத்மாவும்தேவருக்குக்தேவருமானஈஸ்வரருடைய அனுக்கிரகத்தினால் இவையெல்லாம் தேவலோகத்தின் ஸ்வபாவமுள்ளவையாயிருக்கின்றன' என்றார். இவ்வாறு அத்தஉபமன்யுமுனிவர்சொன்னதைக்கேட்டு, நான் பிரத்யக்ஷமாகக் கண்டதைப்போல மிக்கஆச்சரியப்பட்டு அம்மஹாமுனிவரைப்பார்த்து, 'ப்ராம்மணஸ்ரேஷ்டரே! நீர் பாக்கியசாலியாயிருக்கிறீர். புண்ணியம்செய்தவர் உம்மைவிட வேறுயாரிருக்கிறார்? தேவருக்குக்தேவரானஈஸ்வரர் உம்முடைய ஆஸ்ரமத்தில் ஸாக்ஷித்யமாயிருக்கிறாரே! ரிஷிகளிற்சிறந்தவரே! அத்தப்பகவானைசங்கர் உமக்குத்தரிசனங்கொடுத்ததுபோல எனக்குங்கொடுப்பாரா? சங்கரர் உமக்குஅனுக்கிரகம்செய்ததுபோல எனக்கும்செய்வாரா?' என்று கேட்டேன். உபமன்யுமுனிவர், 'தாமரைக்கண்ணரே! குற்றமற்றவரே! சீக்கிரம் மஹாதேவரை நான்கண்டதுபோல நீரும்காணுவீர்; ஸந்தேகமில்லை. அளவற்றசக்தியுள்ள ஈஸ்வரரை ஞானக்கண்ணினால் நான் பார்க்கிறேன். புருஷோத்தமரே! நீர் ஆறுவதுமாஸத்தில் மஹாதேவரைப் பார்ப்பீர். யாதவரிற்சிறந்தவரே! உமாதேவியோடுகூடியமகேஸ்வரரிடத்திலிருந்து இருபத்துநான்குவரங்களை நீர் பெறப்போகிறீர். இதை உமக்கு உண்மையாகச் சொல்லுகிறேன். சிறந்தகைகளையுடையவரே! அத்தஸர்வஜ்ஞருடைய அனுக்கிரகத்தினால் நடந்ததும் நடக்கிறதும் இனிநடப்பதும் எனக்கு எப்போதும் தெரிந்திருக்கின்றன. ஈஸ்வரரானவர் இவற்றையும் மற்றும் ஆயிரம்வரங்களையும் அனுக்கிரகித்தார். மாதவரே! அத்தப்பகவான் உமக்கு ஏன் அனுக்கிரகம்செய்யமாட்டார்? ப்ராம்மணப்பிரியரும் யாருக்குந்தீங்குசெய்யாதவரும் சிரத்தையுள்ளவருமான உம்மைப்போன்றவருடையசேர்க்கை தேவர்களுக்கும் சிறந்ததன்றோ? ஜபிக்கத்தக்கஒருமந்திரத்தை உமக்கு உபதேசிப்பேன். அதனால், நீர் சங்கரரைப்பார்ப்பீர்' என்றுசொன்னார். நான் அவரைப்பார்த்து, 'ஓ! ப்ராம்மணரே! மஹாமுனிவரே! அஸுரக்கூட்டங்களை அழிப்பவரும் தேவர்களுக்கும்ஈஸ்வரருமான அவரை உமதுஅனுக்கிரகத்தினால் நான் பார்க்கக்கடவேன்' என்றுகேட்டேன். பாரதரே! இப்படி மஹாதேவரைப்பற்றியகதையை அவர்எனக்குச்சொல்லிக்கொண்டிருக்கும்போதே எட்டுத்தினங்கள் ஒருமுகூர்த்தம்போலச் சென்றன. எட்டாவதுநாள் அந்தப்ப்ராம்மணரால் சாஸ்த்ரப்படி நான் தீக்ஷைசெய்விக்கப்பட்டேன்; [1]தலைமொட்டையாகவும் உடம்பில்நெய்

[1] 'முண்ட' என்பது மூலம். 'க்ஷௌரம்செய்துகொண்டு' என்னவுமாம்.

தடவிக்கொண்டும் தண்டத்தையும் தர்ப்பத்தையும் எடுத்துக்கொண்டும் மரவுரியுடுத்தும் [1]மேகலைகட்டிக்கொண்டேன்; முதல்மாதம் கனிகளைப்புசித்தேன்; இரண்டாவதுமாதம் ஜலபானம்செய்தேன்; மூன்றுகாலு ஐந்தாவதுமாதங்களில் வாயுபக்ஷணம்செய்துகொண்டு கைகளை மேலேதூக்கி ஒற்றைக்காலால் தளராமல்நின்றேன். பாரதமே! ஆகாயத்தில் ஆயிரம்ஸூர்யர்களின் ஒளியைக்கண்டேன். பாண்டுபுத்ரரே! அந்தஒளியின்நடுவில் வானவில்லைத்தரித்ததும் மின்னல்வரிசையைச் சாளரமாகவுடையதும் கறுத்தமலைக்கூட்டம்போலிருப்பதும் வெள்ளைகாரைகளையே ஆடையாகத்தரித்திருப்பதுமாகிய ஓர்ஒளியைக் கண்டேன். அதில் சிறந்தஒளியுள்ள பகவானைவர் தவத்தினாலும் ஒளியினாலும் அழகினாலும்பிரகாசிக்கின்ற தம்பாரியையாகிய உமாதேவியுடன் இருந்தார். அந்தஒளியில் உமாதேவியுடனிருந்தபகவானை மகேச்வரர், ஸூர்யன் சந்திரனுடன்சேர்ந்து மேகத்திலிருப்பதுபோல விளங்கினர். குந்திபுத்ரரே! நான் மயிர்பொடித்து ஆச்சர்யத்தினால்மலர்ந்தகண்களுடையவனாய்த் தேவக்கூட்டங்களுக்கு ஆதாரவும் துன்பத்தைப்போக்குகிறவரும் கிரீடத்தைத்தரித்தவரும் கதையையும்சூலத்தையும் கையில் வைத்துக்கொண்டவரும் புலித்தோலுடுத்தினவரும் ஜடாதாரியும் தண்டாயுதத்தையும் பிநாகம்என்னும்வில்லையும் வஜ்ராயுதத்தையும்கையில்வந்தியவரும் கூர்மையானகோரப்பற்களும் அழகியதோள்வலிகளுமுடையவரும் ஸர்ப்பத்தைப்பூணூலாக அணிந்தவரும் குதிகால்வரையில்தொங்கும் அநேகநிறங்களையுடைய தேவலோகத்துப்பூமாலையைமார்பிலணிந்து செவ்வானத்தோடும் [2]பரிவேஷத்தோடுங்கூடிய சரச்சந்திரனைப்போலிருப்பவருமாகிய அந்தப் பரமசிவனைக் கண்டேன். பிரமதகணங்களினால் சுற்றிலும்சூழப்பட்டுச் சரத்காலத்தில் பரிவேஷத்துடன் பார்க்கக்கூடாதஸூர்யனைப் போலிருப்பவரும் மனத்தைஜயித்தவரும் சிறந்தசெய்கையுள்ளவருமான அந்தவிருஷபவாகனரை ஆயிரத்துநூறுருத்ரர்கள் அவர்செய்கைகளைச்சொல்லித் [3]துதித்தனர். ஆதித்யர்களும் வஸுக்களும் ஸாத்யர்களும் விச்வேதேவர்களும் அச்வினிதேவர்களும், எல்லாருக்குந் தேவதையானஈச்வரரை எலலாஸ்தோத்திரங்களாலும்சொல்லித் துதித்தனர்.' அதிதியின்புத்ரர்களாகியஇந்திரனும் பகவானைவிஷ்ணுவுமாகிய இருவரும் ப்ரம்மதேவரும் சிவனதுஸமீபத்தில ரதந்தரமென்னும்ஸாமத்தைச் சொல்லுகின்றனர். யோகீச்வரர்கள் அநேகரும், பிர

[1] இடுப்புக்கயிறு. [2] ஸூர்யசந்திரர்களைச்சுற்றிய மண்டலம்.
[3] 'அஸ்துவன்' என்றபாடம் கொள்ளப்பட்டது.

ம்மரிஷிகளும் அவர்களின்புத்ரர்களும் தேவரிஷிகளும், யோகத்தைக் கொடுத்தஆசாரியருட் தந்தையுமான சிவபிரானைத் துதித்தனர். அரசரே! பூமி, ஆகாயம், நக்ஷத்திரங்கள், கிரஹங்கள், மாஸங்கள், பக்ஷங்கள், ருதுக்கள், ராத்திரிகள், வருஷங்கள், க்ஷணங்கள், முகூர்த்தங்கள், நிமிஷங்கள், யுகங்கள், வித்யைகள் இவைகளெல்லாம் திவ்ய சரீரத்துடன் அவரை நமஸ்கரிக்கின்றன. யுதிஷ்டிரரே! ஸத்வகுண மூள்ளவர்களாகியஸநத்குமாரர், தேவர்கள், இதிஹாஸங்கள், மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்தியர், புலஹர், க்ரது, ஸப்தமனுக்கள், சந்த்ரன், அதர்வாவென்பவர், ப்ருஹஸ்பதி, ப்ருகு, நக்ஷத்ர, ஸர்பபர், வவிஷ்டர், காஸ்யர் இருதரிஷிகளும் வேதங்களும மீமாம்ஸைகளும் யாகங்களும் தக்ஷிணைகளும் அக்னிஷ்டுத் ஹவிஸ்ஸும் யாகத்திற் தரியதிரவியங்களும் சரீரமெடுத்து அவரை நமஸ்கரிக்கின்றனர். பிரஜைகளைக் காப்பாற்றுகிறவர்களனைவரும் நதிகளும் நாகர்களும் மரங்களும் தேவமாதாக்களும் தேவபத்நிகளும் தேவகன்னிகைகளும் ஆயிரமாயிரம்பத்துக்கோடிரிஷிகளும மலைகளும் ஸாகரங்களும் திசைகளும் சாந்தரானபிரபுவை நமஸ்கரிக்கின்றனர். பாட்டி ஹ்மவாத்யங்களினும் தேர்ச்சியுள்ளகந்தர்வர்களும் அப்ஸரஸ்களும் தேவதாளங்களோடு பாடிக்கொண்டு ஆச்சர்யரூபியானசிவபிரானைத் துதிக்கின்றனர். மகாராஜரே! வித்யாதரர்கள் அஸுரர்கள் யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் இவர்களும் ராசரங்களாகியஎல்லாப்பிராணிகளும் வாக்காலும் மனத்தாலும் காயத்தாலும் பிரபுவை நமஸ்காரம்செய்கின்றனர். தேவருக்குமீஸ்வரரானசிவபிரான் என்முன் நின்றார். பாரதரே! ஈஸ்வரர்என்முன்னே நின்றதைக்கண்டு ப்ரம்மா இந்திரன்முதலானஉலகம் எண்ணியேபார்த்தது. அப்போது மஹாதேவரைக்கண்ணெடுத்துப்பார்க்க எனக்கு முடியாமற்போயிற்று. பிறகு, ஈஸ்வரர் என்னைப்பார்த்து, 'கிருஷ்ணே! பாரும்; பேசும். உம்மால் நான் நூறுதடவைகளும் ஆயிரந்தடவைகளும் ஆராதிக்கப்பெற்றிருக்கிறேன். உம்மைப்போல எனக்கன்பர் மூவுலகங்களிலுமில்லை' என்றுசொன்னர். ஈஸ்வரரை நான் தலைவணங்கிவந்தனம்செய்தபிறகு உமாதேவியும் அன்புகூர்ந்தாள். பிறகு, ப்ரம்மாதிதேவர்களால்துதிக்கப்பட்ட பரமசிவனைப்பார்த்து நான் சொல்லலானேன்.

'என்றுமிருப்பவரே! எல்லாவற்றிற்கும்காரணரே! உமக்கு நமஸ்காரம். ரிஷிகள் உம்மை ப்ரம்மாவுக்கும ஈஸ்வரனென்றுசொல்லுகின்றனர். தவமும் ஸத்வரஜஸ்தமோகுணங்களும் ஸத்யமும் நீரே யென்று பெரியோர்கள் சொல்லுகின்றனர். பிரம்மாவும் ருத்ரரும்

வருணனும் அக்னியும் மனுவும் [1]பவரும் [2]தாதாவும் [3]த்வஷ்டாவும் [4]விதாதாவும் நீரே. நீரே ரெபு; எங்கும்முகங்களையுடையவர். சராசரங்களானபொருள்கள் உம்மிடத்திலிருந்துண்டானவை. சராசரங்களடங்கினஇம்மூவுலகங்களும் முற்றும்உம்மால்படைக்கப்பட்டவை. ரும்புலன்கள் மனம் ஸப்தமருத்துக்கள் முன்றக்கினிகள் தேவலோகங்கள் தேவர்கள் இவையெல்லாவற்றிற்கும் மேற்பட்டவரென்று உம்மை ரிஷிகள் சொல்லுகின்றனர். தேவதங்கள் பாகங்கள் ஸோமம் என்னுங்கொடி தக்ஷிணை அக்னி ஹவிஸ் மற்றுமுள்ளயாகத்திற் குரியதிரவியங்களெல்லாம் பகவானேயீரென்பது திண்ணம். பகவானே [1]யாகம், கொடை, ஓதல், நோன்புகள், நியமங்கள், [5]வெட்கம், புகழ், செல்வம், ஒளி, ஸந்தோஷம், இவற்றின்பயனுமியமம், காமம், குரோதம், பயம், லோபம், மாய்கம், கர்வம், பகை, துன்பங்கள், நோய்கள்இவை உமதுதேகங்கள். உம்முடையமுயற்சி, அதினுண்டானபிரபஞ்சம், அவற்றில்உமக்குண்டானஅன்பு, நித்யமும்காரணமுமாயுள்ளபிரக்ருதி, மனத்திற்கும்மேற்பட்ட இடமாகியஉமதுமஹிமைஇவைஎன்றுமுள்ளவை. நீர் புலப்படாதவர்; நினைவுக்கும்எட்டாதவர்; பரிசுத்தர்; ஆயிரங்கிரணங்களையுடையவர்; பொன்மயமாயிருப்பவர்; பிரமகாரணங்களெல்லாநடக்குங் கலைவர்; உரியகாரமானவர். நீரே பரமாத்மா. புத்தியும்நீரே. ப்ரமமா [6]விஸ்வர் [7]சம்பு [8]ஸ்வயம்பு இவர்களும்நீரே புத்தி, பிரஜைகளை, உபலப்தி, ஸம்ஸ்பர்சம், நியாதி, த்ருதி, ஸ்மிருதிஎன்ற அறிவைவச்சொல்லும பலசப்தங்களினாலும் பரமாத்மாவானநீர் சொலலப்படுகிறீர். ப்ரமமணன் வேதத்தினால் உம்மையறிந்து மயக்கந்தெளிகின்றன். எல்லாப்பிராணிகளுக்கும் ஹ்ருதயமாகியநீர் கேஷத்ரஜ்ஞரென்று ரிஷிகளால துதிக்கப்படுகிறீர்; எல்லாப்புறங்களிலும் கைகளும் கால்களும் கண்களும் தலைகளும் வாய்களும் காதுகளுமுள்ளவராக உலகமனைத்தையும் வியாபித்திருக்கிறீர். ஸூர்யன்செய்கைகளாகிய விநாடிமுதலான காலப்பிரிவுகளுக்கு நீர் தாம் பலனளிருக்கிறீர். ஸூர்யனுக்குஒளியும் அக்னிக்குஷ்ணமும் எல்லாருடைய ஹ்ருதயத்திலுமிருக்கும ஆத்மாவும் நீர்தாம். அணிமா, மஹிமா, ப்ராப்தி, ஈசித்வமுதலானவித்தைகளும் நீரே. மாறாத ஒளியும் நீரே. அறிவும் நினைவும் லோகங்களும் உம்மிடத்திலேயே அடைந்திருக்கின்றன. மனவுறுதியுள்ளவர்களும் இந்திரியங்களை

---

[1] ஸம்ஸாரதத்திற்கதிஷ்டானதேவதை. [2] போஷிக்கிறதேவதை. [3] விஸ்வகர்மா. [4] அதிருஷ்டதேவதை. [5] அகார்யத்தில்கூச்சம். [6] அத்தர்யாமீ. [7] ஸுகத்தைத்தருகிறவர். [8] பிறரால்உண்டாக்கப்படாதவர்.

ஜயித்தவர்களும் இடைவிடாதுயோகம்செய்பவருமான ரிஷிகள் உம்மையே தியானிக்கின்றனர். நித்யரும் மனத்திற்குள்ளிருப்பவரும் ஈச்வரரும் புராணபுருஷரும் உலகவடிவமாயிருப்பவரும் பொன்னுருவமானவரும் ஞானிகளுக்குச்சிறந்தகதியுமாகியஉம்மை எவன் அறிகிறானோ அந்தப்புத்திசாலியானவன் மற்றப்புத்திகளைக் கடந்திருக்கிறான். [1] ஏழுஸாங்க்யங்களையும் [2] ஆறு அங்கங்களையுமுடைய உம்மூடையவடிவத்தைக்கண்டு ப்ரகிருதிர்குணவேறாக ஆத்மாவைப்பிரித்து அறிவதாகிய யோகத்திலிருக்கும்மித்ரன் உம்மையே அடைகிறான்' என்றேன். குந்திபுத்ரரே! துக்கத்தைப்போக்கும்சிவபிரான் இவ்வாறு என்னால்துதிக்கப்பட்டபோது சராசரங்களாகியஉலகங்களனைத்தும் விம்மஹாதம்செய்தன. அப்போது, ப்ராம்மணர்கள் தேவர்கள் அஸுரர்கள் நாகர்கள் பிசாசர்கள் பிதருக்கள் பக்ஷிகள் ராக்ஷஸர்கள் பூதங்கள் மஹரிஷிகள்ஆகியஎல்லாரும் அந்தஈச்வரரை நமஸ்கரித்தனர். சிறந்தமணமுள்ள தேவலோகத்துமலர்களின்குவியல்கள் என்தலையில் விழுந்தன. காற்று மிகஇனிமையாக வீசிற்று. உலகங்களுக்குநன்மைசெய்கிறவராகிய பகவானுசங்கரர் உமாதேவியையும் என்னையும் இந்திரனையும்பார்த்து, தாமாகவே எனக்குச் சொல்லலானார். 'கிருஷ்ணா! பகைவர்களைக்கொலலுகிறவரே! மம்மிடத்தில் உமக்குச் சிறந்தபக்தியிருப்பதை யாமறிவோம். உமதுநன்மையைச் செய்துகொள்ளலாம். உம்மிடத்தில் எனக்கு மிகஅன்புஇருக்கிறது. கிருஷ்ணா! எட்டுவரங்களை நீர் கேட்கலாம். மிகச்சிறந்தவரே! உமக்கு அவற்றைக் கொடுத்தேன். யாதவசிரேஷ்டரே! நீர்விரும்புகின்றவை அடைவதற்குமிகஅரியவையாயினும் அவற்றைச் சொல்வீராக' என்றார்.

நாற்பத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன், பார்வதீபரமேச்வரர்கள் தமக்குவாங்கொடுத்ததைத் தர்மபுத்ரருக்குச் சொல்லியது.)

அந்தத்திரண்டஒளியின்நடுவிலிருக்கும்பகவானை மிகுந்தஸந்தோஷத்தோடும் அடக்கத்தோடும் தலைவணங்கி நமஸ்காரம்செய்து

---

[1] மஹத், அகங்காரம், பஞ்சபூதங்களுக்குக்காரணமாகிய ஐந்ததன்மாத்திரைகள்.

[2] ஸர்வஜ்ஞராயிருத்தல், திருப்தி, என்றுமிருக்கும்ஞானம், ஸ்வதந்திரராயிருத்தல், சக்திகுன்றுமை, சக்திக்குஅளவில்லாமை.

பிறகு, 'தர்மத்தில்உறுதியையும் யுத்தத்தில்பகைவர்களைக் கொல்லும் சக்தியையும் சிறந்தபுகழையும் மேலானதேகவன்மையையும் யோகத்தையும் எல்லாருக்கும்பிரியமாயிருக்கையையும் உமக்குச் சமீபத்திலிருக்கையையும் பதினாயிரம்புத்ரர்களையும் வேண்டுகிறேன்' என்று சொன்னேன். என்னால் இவ்வாறுகேட்டுக்கொள்ளப்பட்ட சங்கரர், 'அவ்வாறேஆகட்டும்' என்றுசொன்னார். அதன்பிறகு, லோகமாதாவும் எல்லாவற்றையும்தாங்குகிறவளும் பரிசுத்தம்செய்கிறவளும் தவங்களுக்குஇருப்பிடமும் சிவபிரான்மனைவியுமான உமாதேவி அருள் கூர்ந்து என்னைப்பார்த்து, 'குற்றமற்றவரே! உமக்கு ஸாம்பன்என்னும்புத்ரன் பகவானால்கொடுக்கப்பட்டான். என்னிடத்திலும் வேண்டின எட்டுவரங்களை வாங்கிக்கொள்ளும்; கொடுக்கிறேன்' என்று சொன்னாள். பாண்டுபுத்ரரே! அவளையும் நான் தலைவணங்கிப் பிராம்மணர்களிடத்தில் கோபமில்லாமையையும் தந்தையின் அனுக்கிரகத்தையும் நூறுகுமாரர்களையும் சிறந்தஇன்பத்தையும் குலத்தின்மேல் அன்பையும் தாயின்அனுக்கிரகத்தையும் புலன்களின் அடக்கத்தையும் காரியங்களின்ஸாமர்த்தியத்தையும் கேட்டுக்கொண்டேன். உமாதேவி என்னைப்பார்த்து, 'தேவசக்தியுள்ளவரே! அப்படியேயாகும். நான் சொல்வது ஒருபோதும் பொய்யாவதில்லை. பதினாயிரம்மனைவிகளையும் அவர்களிடத்தில்அழியாத அன்பையும் பந்துக்களின் மிக்கவிருப்பத்தையும் [1]தேஜஸ்ஸின் அழகையும் உமக்குக்கொடுக்கிறேன். [2]உமதுஜிருகத்தில் ஏழாயிரம்அந்திகள் எப்பொழுதும் புஜிப்பார்கள்' என்றுசொன்னாள். பாரதரே! பிரமனுக்குமூத்தவரே! ஈஸ்வரரும் ஈஸ்வரியும் எனக்கு இவ்வாறு வரங்களையளித்தபிறகு கணங்களுடன் அந்தநிவிஷத்திலேயே மறைந்தனர். ராஜஸ்ரேஷ்டரே! இதமிக்க ஆச்சர்யமானவிஷயத்தையெல்லாம் அதிகமஹிமையுள்ளவரான உபமன்யுவென்னும்பிராம்மணருக்குமுன்னர் நான் சொன்னேன். நல்லநியமமுள்ளவரே! அந்தப்பிராம்மணர் தேவருக்குந்தேவரான சங்கரருக்கு நமஸ்காரம்செய்து, 'சிவனுக்குஒப்பான தேவனையில்லை, சிவனுக்குச்சமமானதஞ்சமில்லை. கொடுப்பதில் சிவனைப்போன்றவரில்லை. யுத்தத்தில் சிவனுக்கொப்பானவரில்லை' என்றுசொன்னார்.

[1] [2] இவை கேளாதலால்.

நாற்பத்தேழாவது அத்யாயம்.

தாணதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உபமன்யு, தண்டிமுனிவர்செய்த பாசுபதவ்ரதத்தைக் கிருஷ்ணனுக்குச் சொல்லியது)

உபமன்யு பின்னும்சொல்லலானர். 'ஐயா! க்ருதயுகத்தில் தண்டி என்றபெயர்பெற்ற ஒருரிஷியிருந்தார். அவர் பதினாயிரம்வருஷகாலம் பக்தியோடு தியானம்செய்து சிவனை ஆராதித்தார். அதன் பலனைக் கேளும். அவர் பிரபுவானமஹாதேவரைப்பார்த்து ஸ்தோத்திரங்களைச் சொன்னர். தண்டியானவர் அழிவில்லாதவரும் மஹாத்மாவுமானபரமாத்மாவைத் தவவன்மையினால் தியானஞ்செய்து மிக்க ஆச்சரியத்துடன், 'ஸாங்கியசாஸ்திரிகள் எவரை மூலப்பிரகிருதியென்றுசொலலுகின்றனரோ, யோகிகள் எவரைப் பிரகிருதியைக்கடந்தபுருஷராகியஈஸ்வரர்என்று தியானிக்கின்றனரோ, படைத்தற்கும் அழித்தற்கும் எவர் காரணமென்று வித்வான்கள் அறிகின்றனரோ, தேவர்களிலும் அஸுரர்களிலும் முனிவர்களிலும் எவருக்குமேற்பட்டவரில்லையோ ஜனனமில்லாதவரும் எல்லாவுறையும் கடந்துநிறைவரும் முதலும்கடையுமறறவரும் சக்தியுளளவரும் எல்லாவற்றிற்குமேமேற்பட்டஆனந்தமுள்ளவரும் குற்றமற்றவருமான அந்தப்பகவானைச் சரணமடைகிறேன்' என்றுசொன்னர். இவ்வாறுசொல்லிக்கொண்டிருக்குமபோதே தபோநிதியும் குற்றமறறவரும் உபமையில்லாதவரும் சிந்தைக்கெட்டாதவரும் என்றும் நிற்பவரும் மாறுதலவரும் பகுதியற்றவரும் பூர்ணரும ஹிரண்யகர்ப்பரும் முக்குணங்களாகிய பிரகிருதியிலிருப்பவரும் யோகிகளுக்கு மோக்ஷமென்று சொல்லப்பட்ட அழியாதபேரானந்தமும் மஹேந்திரன் அக்னி வாயு உலகம் ப்ரம்மதேவர் இவர்களுக்கும்மேலும் யாருக்கும் வசப்படாதவரும் தொழிலற்றவரும் தூயவரும் புத்தியினுலளட்டத்தக்கவரும் மனோமயமாயிருப்பவரும் பகுத்தறியக்கூடாதவரும் குணங்களேஎண்ணவும் கூடாதவரும் மனத்தூய்மையற்றவர்கள் அடைவதற்குமுடியாதவரும் எல்லாஉலகங்களும்உண்டாகும்இடமும் பிரகிருதிக்குமேலானஆத்மாவுக்கும்மேற்பட்டவரும் பிராணனைநடத்துகிறவரும் அந்தர்யாமியும் ஜீவனதஜ்ஞரியும் மனமும் அந்தப்பரப்ரம்மமுமான ஈஸ்வரரைப்பார்த்துவிரும்பித் தண்டிமுனிவர் அநேகவருஷங்கள் உக்ரமானதவத்திலிருந்து ஈஸ்வரரைக்கண்டபிறகு துதிக்கலானர். 'சிறந்தவரே!

நீர் சுத்தங்களையும் சுத்தம்செய்பவர்; நல்லதையைத்தருபவர்களுக்கும் கதியாயிருப்பவர்; ஒளிகளுக்கும் மேலான ஒளி; தவங்களுக்கும் சிறந்ததவமாயிருப்பவர். விஸ்வாவஸுவென்னுங்கந்தர்வன் இரண்யாக்ஷனென்னும்அஸுரன் தேவேந்திரனிவர்களால் நமஸ்கரிக்கப்பெற்றவரே! அதிகமங்களாகவைகொடுப்பவரே! பிரபுவே! நீர்தாம் மேலானஸ்தம்பம். உமக்கு நமஸ்காரம். ப்ரபுவே! ஜனனமரணங்களுக்குப்பயந்து தவத்தில்முயலுகின்றயதிகளுக்கு மோக்ஷத்தைக் கொடுப்பவரே! ஆயிரங்ரேணங்களையுடையவரே! ஸுகத்துக்காதாரமாயிருப்பவரே! உமக்கு நமஸ்காரம். ப்ரம்மா இந்த்ரன் விஷ்ணு விஸ்வேதேவர்கள் மஹரிஷிகள் (யாரும்) உம்மைச் சரியாக அறியவில்லை; நாங்கள் அறிவதெப்படி? எல்லாம் உம்மிடத்திலிருந்துண்டாகின்றன. எல்லாம் உம்மிடத்திலிருக்கின்றன. காலமென்றும் புருஷரென்றும் ப்ரம்மாவென்றும் விபுவாகுமவர் நீரே. பூர்வரிருத்தாந்தங்கள் தெரிந்ததேவரிஷிகள் உமக்கு [1]மூன்றுமூர்த்திகள் இருப்பதாகச் சொல்லுகின்றனர். [2]அதிப்பளருஷம், [3]அத்யாத்மம், [4]அதிபூதம், [5]அதிதெய்வம், [6]அதிலோகம், [7]அதிவிஜ்ஞானம், [8]அதியஜ்ஞம் எல்லாம் நீரே. ஞானிகள ஆத்மாக்களிடத்திலும் [9]தேவர்களிடத்திலுமிருப்பவரும் தேவர்களாலும் அறியப்படாதவருமான உம்மை அறிந்தபிறகு ப்ரதிருதியையிட்டுத் துயரமற்றஉயர்ந்தஸ்வரூபத்தை அடைகின்றனர். ப்ரபுவே! நீர் நிஷேயாதவரையில் ஜனனமரணங்கள் அனேகமுண்டு. ஸ்வர்க்கநரகத்திற்கும் மோக்ஷத்திற்கும் மார்க்கங்களை எடுப்பவரும் கொடுப்பவரும் நீர். ஸ்வர்க்கமோக்ஷங்களும் காமக்ரோதங்களும் ஸதவரஜஸ்தமோகுணங்களும் நீரே. மேலும் நீர்தாம். கீழும் நீர்தாம். ப்ரம்மா, விஷ்ணு, சிவன், ஸ்கந்தன், இந்த்ரன், ஸூர்யன், யமன், வருணன், சந்த்ரன், மனு, தாதா, விதாதா, குபேரன் இவர்களும் நீரே. பூமி, வாயு, ஜலம், அக்னி, ஆகாயம், வாக்கு, புத்தி, இருப்பு, நினைப்பு, செய்கை, பொய், மெய், உண்மை, இன்மை இவையும்நீரே. இந்த்ரியங்களும் சப்தாதிவிஷயங்களும் ப்ரகிருதிக்குமேற்பட்டநிதயவஸ்துவும் உலகுமுழ உலகத்துக்குமேற்பட்ட பொருளும் அதற்கும்மேற்பட்ட பொருளும் சிருஷ்டிக்குவட்டுபவரும் எட்டாதவரும் நீர்தாமே பரப்ரம்மமும் ஸாங்கியாகளும் யோகாக்களும் அடையும் பரகதியும் நீர்தாமென்பதில் ஸந்தேகமில்லை. இப்போது

---

[1] ப்ரமமா, விஷ்ணு, சிவன். [2] ஆதமாவிலுள்ளது. [3] தேகத்திலுள்ளது. பஞ்சபூதங்களிலுள்ளது. [5] தேவாகளில் உள்ளது. [6] உலகங்களில் உள்ளது. [7] ஞானத்திலிருப்பது. [8] யாகத்திலிருபபது.

நாங்கள் கிருதார்த்தர்களானேமென்பது நிச்சயம். ஞானத்தினால் தெளிந்த புத்தியுள்ளவர்கள் எந்தக்கதிக்கு ஆசைப்படுகின்றனரோ அந்தலாபத்தையடையும்கதியை நாமும் நிச்சயமாக அடைந்தோம். ஆ! ஆ! இவ்வளவுநீண்டகாலம் அறிவில்லாமல் மயங்கியிருந்தோம். நித்யரானஸச்சிதானந்தமேவரை வித்வான்களறிகின்றனரோ அவரை நாம் அறியாமலிருந்தோம். நாண் இவ்வளவுஜன்மங்களுக்குப்பின் நேரே உம்மிடத்தில் பக்தியைப்பெற்றேன். எவரையறிந்தபின் மோக்ஷம் பெறலாமோ அந்தப்பகவான் பக்தியுள்ளவர்களுக்குத்தான் அனுக்கிரகம்செய்கிறவர். தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் முனிவர்களுக்கும்தெரியாமல் குகையில்வைக்கப்பட்டதும் வேதத்தால் அறியக்கூடாததுமான பரப்ரம்மம் எதுவோ அது இந்தப்பகவானுனீசுவரர் தாம். இவர் எல்லாவற்றையும்படைத்தவர்; எங்கும் முகங்களுள்ளவர்; எல்லாவற்றிற்கும் ஆத்மா; எல்லாவற்றையும் பார்ப்பவர்; எல்லாவற்றிலுமிருப்பவர்; எல்லாவற்றையுமறிகிறவர்; தேகத்தையுண்டுபண்ணினவர்; தேகத்தைப்போஷிப்பவர்; எல்லாவற்றையும் தமக்குத்தேகமாகவுடையவர்; தேகத்தை அனுபவிக்கும் ஆத்மாவாகவும் ஆத்மாக்களுடையும்கதியாகவுமிருப்பவர்; உயிரையுண்டாக்கினவர்; உயிரைக்காப்பவர்; உயிர்களைவதிப்பவர்; உயிரைக்கொடுப்பவர்; உயிர்களுக்கு ஆதாரவானவர்; ஆத்மஜ்ஞானத்துடன் அன்புவைத்துத்தியானம்செய்கிறவர்களின் ஆத்மாக்களுக்காதாரமான கதியாயிருப்பவர். திரும்பவும் ஜனியாமலிருக்கவிரும்புகிறவர்களுக்குத் தஞ்சமாயிருப்பவர் ஈஸ்வரரே. எல்லாப்பிராணிகளுக்கும் நல்லகதியையும் கெட்டகதியையுங்கொடுப்பவர் இவர். எல்லாப்பிராணிகளுக்கும் ஜனனமரணங்களைச்செய்பவர் இவர். தவஸித்தியை விரும்புகிறவருக்கு அதைநிறைவேற்றும் உபாயமும் இவர். பலனைக்கொடுப்பவருமிவர். பூமிமுதலானஉலகங்களையும் தேவர்களையும்படைத்து அவர்களை[1] எட்டுச்சரீரங்களினுள்தாங்கிக் காப்பாற்றுகிறார். இவரிடமிருந்தே எல்லாமுண்டாகின்றன. இவரிடத்திலேயே எல்லாம் நிலைபெற்றிருக்கின்றன. இவரிடத்திலேயே எல்லாம் பிரளயமாகின்றன. இவர் ஒருவரே என்றுமிருப்பவர். ஸத்யலோகத்தை விரும்புகிறவருக்கு ஸத்யலோகமிவரே. ஸாதகர்களுக்கும் பரம்பொருளிவரே. முக்திபெற்றவர்களுக்கு மோக்ஷமிவரே. ஆத்மாவையறிந்தவர்களுக்குக் [2]கைவல்யமிவரே. இந்தப்பிரபுவானவர் தேவருக்கும் அஸுரருக்கும்

---

[1] ஐந்துபூதங்கள் ஸூர்யன் சந்திரன் யாகம்செய்யும் யஜமானன்.
[2] பிரிருதியைவிட்டிருத்தல்.

மனிதருக்கும் தெரியாமலிருக்கவேண்டுமென்றே ப்ரம்மாமுதலான ஞானிகளால் ரகஸ்யமாக மறைத்துவைக்கப்பட்டிருக்கிறார். ஆதலால், தேவர்களும் அஸுரர்களும் மனிதர்களும் மனத்திற்குள்மறைத்திருக்கும் இந்தப்ரபுவினுலேயே மயங்கச்செய்யப்பட்டவர்களாய் இவருடைய உண்மையை அறியாமலிருக்கின்றனர். எவர்கள் பக்தியோகத்தினுல் மனத்தூய்மையை அடைந்து இவரைச் சரணமடைகின்றனரோ அவர்களுக்குமட்டுமே உள்ளத்திலிருப்பவராகிய இவர் தம்மைக் காண்பிக்கிறார். எவரையறிந்தபின் ஜனனமரணங்கள் இராவோ, அறியத்தக்கவற்றுள் முதன்மையான எவரையறிந்தபின் அறியவேண்டியதொன்றுமில்லையோ, ஞானியானவன் எந்தச்சிறந்தலாபத்தை யடைந்தபின் அதற்குமேலாக எதையும நினைப்பதில்லையோ, எவரை மாறுதலுமெடுதலுமில்லாததும் அறிவுக்கெட்டாததுமான பரகதியென்று அடைகின்றனரோ, ஸத்வரஜஸ்தமோகுணங்களின் ஸ்வரூபங்களையறிந்தவரும் ஆத்மஜ்ஞானத்தில் நிபுணரும் மிக்கஸூக்ஷ்மஜ்ஞானமுள்ளவர்களுமாகிய ஸாங்கியர்கள் எந்தஸூக்ஷ்மத்தையறிந்து ஸம்ஸாரத்தினின்றுவிடுபடுகின்றனரோ, வேதமறிந்தவர்கள் ப்ராணயாமம்செய்துகொண்டு வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் அறியவேண்டியபொருளாகிய எவரை எக்காலமும் தியானித்துக்கொண்டும் ஜபித்துக்கொண்டுமிருக்கின்றனரோ அந்தமஹேஶ்வரரை ஓங்காரமென்னும் ரதத்திலேறிக்கொண்டு ஞானிகள் சேருகின்றனர். தேவயானமென்றுசொல்லப்படும் அர்ச்சிராதிமார்க்கத்தின் வாயிலாகிய ஆதித்தியனென்று சொல்லப்படுகிறவர் இவர். பிதருயானமென்றுசொல்லப்படுகிற தூமாதிமார்க்கத்திற்குவாயிலாகிய சந்த்ரன் என்றுசொல்லப்படுகிறவரும் இவரே. நிலசகளும் மூலிகளும் வருஷங்கள் யுகங்களுமுதலியவையும் தேவலோகத்திலும மற்றலோகங்களிலுமுள்ள சிறந்தஸ்தலங்களும் தக்ஷிணயனமும் உத்தராயணமும் இவரே. ப்ரம்மதேவர் முற்காலத்தில் நீலலோஹிதரென்றுபெயருள்ள இவரைப் பலவகைஸ்தோத்திரங்களினுல் ஆராதித்துப் புத்ரவரம்கேட்டார். ரிக்வேதிகள் கர்மங்களில்சொல்லப்படும் மந்த்ரங்களினுல் எவரைப் பரதத்வமாகக்கூறுகின்றனரோ, யஜுர்வேதிகள் யாகங்களில் மூன்று அக்னிகளாக அறியப்படும் எவரிடத்தில் யஜுர்வேதவிதிப்படி ஹோமம்செய்கின்றனரோ, பரிசுத்தமானஞானமுள்ள ஸாமவேதிகள் ஸாமங்களினுல் எவரைப் பாடுகின்றனரோ, அதர்வணவேதிகளான ப்ராம்மணர்கள் கர்மத்திற்கும் ஞானத்திற்கும்பயனுகிய பரப்ரம்மமென்று எவரைத்துதிக்கின்றனரோ, அந்த இவர்தாம் யாகத்திற்கு

முதற்காரணமென்றும் முதன்மையானதேவதையென்றும் நினைக்கப் படுகிறார். இவர் இரவுபகல்களைக் காதுகளும் கண்களுமாகவுடைய வர்; பகலைக்கனியும் மாலைங்களையும் கைகளும்தலைகளுமாகவுடையவர்; ருதுக்களை வீரியமாகவும் தவத்தைத் தரியாகவும் வருஷங்களைக் குறி, தூடை, பாதங்களாகவும் உடையவர். [1]மிருத்யுவும் [2]யமனும் அக்நியும் ஸம்ஹாரம்செய்வதில் வேகமுள்ளகாலனும் காலத்திற்கு முதற்காரண மும்நித்ய முமான மகாகாலமும் இவரே சந்த்ரன் ஸூர்யன் நக்ஷத்ரங்கள் கிரஹங்கள் வாயு திருவன் ஸப்தரிஷிகள் ஏழுஉலகங்கள் ஸூக்ஷ்மமானஸூலப்ரகிருதி மாத்ரமுதல்கடைசிக்காரியம் வரையிலுமான ஸிருஷ்டிகள் ப்ரம்மா முதல் தூரும்புவரையிலுமுள்ள உலகம் சேதனசேதனங்கள்சேர்ந்தப்ராணிகள் (பஞ்சபூதங்கள் மன்ம புத்தி அஹங்காரம் ஆகிய) எட்டுப்ப்ரகிருதிகள் ப்ரகிருதிகளுக்குமேற் பட்ட ஈச்வர்ன் இவையெல்லாம் பரமசிவனுடையபாகமாகவே நடந்து கொண்டிருக்கின்றன. நித்யமும் எல்லாவற்றிற்கும் மேற்பட்டது மாகிய ஆனந்தமும் இவர் தாம். பற்றற்றவர்கள் அடையும் கதியும் ஸாதுக்கள் தியானிக்கும் மேலானபொருளும் இவர்தாம். இவர்தாம் அச்சமற்றஇடம். இவர்தாம் அழிவில்லாதபரப்ரம்மம். சாஸ்திரங்களை யும் வேதங்களையும் வேதாங்கங்களையும் அறிகவருக்கு இவரைத் தியானிப்பதுதான் சிறந்தஉபாயம். முடிவானஇடம் இவர்தாம். முடி வானஞானம் இவர்தாம். முடிவானதவப்பயன் இவர்தாம். முடிவான நல்வழி இவர்தாம். மேலானஇந்த்ரியஜயமும் இவர்தாம். மேலான ஆனந்தம் இவர்தாம். யோகிகள் இவரையடைந்தபிறகு ஆகவேண்டிய தொன்றுமில்லையென்று நினைக்கின்றனர். இவரே ஸந்தோஷம்; இவரே ஜயம்; இவரே வேதம்; இவரே தர்மசாஸ்திரம்; அன்புள்ளவர்களின் ஆத்மாசேருமிடமும் விதவான்களுக்கு அழியாதபயனும் இவர்தாம் மிருதியாகத்தக்ஷிணைகளைக்கொடுத்துப் பலன்களைக்கருதி யாகம்செய் யும் யஜமானர்களுக்கும் நிர்தாம்கதியென்பதில் ஸந்தேகமில்லை. ஸ்வாமீ! செம்மையாகயோகாப்யாஸமும் ஜபமும்செய்து ஐம்புலன் களையும் அடக்கித தேகத்தைப்பீடிக்கும் விரதங்களைச்செய்து தவம் புரிவோரின் முக்கியமானகதியும் நீரே. எவனுமழியாதவரே! எல்லா விஷயங்களிலும்பற்றைவிட்டுக் கர்மஸந்யாஸம்செய்தவர்கள் ப்ரம்ம லோகத்திலடையுமகதியும் நீரே. மோக்ஷத்தைவிரும்பி ஆசைகளை யறத்துப் பிரகிருதியின்ஸ்வபாவத்தை விட்டிருப்பவருக்கு மோக்ஷ கதியும் நீரே. ஸ்வாமி! உலகஞானமும் ஆத்மஞானமுமுள்ளவர்க

[1] மரணம்செய்கிறவன். [2] பாவத்திற்குத்தண்டிப்பவன்.

ளுக்கு காமரூபங்களில்லாததும் குற்றமில்லாததுமாகிய கைவல்யம் என்னும் சிறந்தகதியும் நீரே. பிரபுவே! வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் சொல்லப்பட்ட [1]அவ்வைந்துகதிகளும் உமது அனுக்கிரகத்தினாலல்லது வேறுபாயத்தினால் கிடைப்பதில்லை' என்று தவங்களுக்கெல்லாம் இருப்பிடமாகியதண்டிமஹாமுனிவர் முன்னர் உலகம்படைத்தப்ரம்மதேவர் எந்தப்பரப்ரம்மத்தைத் துதித்தாரோ அந்தப்பரப்ரம்மமாகிய ஈச்வரரை மனமாரத் துதித்தார். ப்ரம்மஞானியானதண்டியினால் இவ்வாறு துதிக்கப்பெற்றவரும் உமையோடுகூடியவரும் பிரபுவும் மங்களகரமானமகாதேவர், 'ப்ரம்மாவும் இந்திரனும் விஷ்ணுவும் விச்வேதேவர்களும் மஹரிஷிகளும் உம்மை யறியார்கள்' என்றுசொன்னதனால் ஸந்தோஷமடைந்த தண்டிமுனிவரைப்பார்த்து, 'நீ குணமும் குற்றமுமில்லாதவனும் துக்கமில்லாதவனும் புகழும் பிரம்மதேஜஸும் திவ்யஜ்ஞானமுமுள்ளவனுமாவாய். அந்தணரிற்சிறந்தவனே! ரிஷிகளால் ஆபரணமிக்கத்தக்கவனும் ஸந்தோஷம் செய்யத்தக்கவனுமானபுத்ரன் என்னுடைய அநுக்கிரகத்தினால் உனக்கு உண்டாவன். ஸந்தேகமில்லை. இன்னும்என்னவரத்தை உனக்கு இப்போது நான்கொடுப்பேன்? குழந்தாய்! நீ விரும்புவதைச்சொல்' என்றுசொன்னார். அந்தத்தண்டிமுனிவர் மகிழ்ச்சிகொண்டு, 'உம்மிடத்தில் உறுதியானபக்திதான் எனக்குவேண்டும்' என்றுகேட்டார். ஈச்வரர் அந்தத்தண்டிமுனிவருக்கு மேற்சொன்னவரங்களையெல்லாம் அளித்துத் தேவரிஷிகளால் நமஸ்கரிக்கப்பட்டவராகவும் தேவர்களால் துதிக்கப்பட்டவராகவும் அவ்விடத்திலேயே அந்தர்த்தானமானார். யாதவஸ்ரேஷ்டரே! பகவானவர் தம்பரிஜனங்களுடன் அந்தர்த்தானமானபிறகு, தண்டிமுனிவர் இங்கே என் ஆச்ரமத்திற்குவந்து எனக்கு இதைச்சொன்னார். மனிதர்களுள் சிறந்தவரே! முதலில் தண்டிமுனிவர் எனக்குச்சொன்ன பிரஸித்தமான நாமங்களைச் சொல்லுகிறேன். உமதுகாரியஸித்திக்காக நீர் கேளும். பிரம்மதேவர் தேவலோகத்தில் பதினாயிரம் நாமங்களைச் சொன்னார். எல்லாஜனங்களுக்குமாக ஆயிரம் நாமங்கள் சாஸ்திரங்களில் இருக்கின்றன. அசுசுதரே! தேவதேவேச்வரரும் மஹாத்மாவுமாகிய பகவானுடைய இந்த ரகஸ்யமான நாமங்களை அவருடைய அனுக்கிரகத்தினால் தண்டிமுனிவர் முன்னே எனக்குச்சொன்னார்' என்றனர்.

[1] யாகம்செய்பவரின்கதி, தவம்செய்பவரின்கதி, கர்மஸந்யாஸம்செய்பவரின்கதி, மோக்ஷத்தைவிரும்புகிறவரின்கதி, கைவல்யம்.

நாற்பத்தெட்டாவது அத்யாயம்.

தா ன த ர் ம ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன், உபமன்யு தமக்குச் சொன்ன சிவஸஹஸ்ரநாமத்தைத் தர்மபுத்திரருக்குச் சொல்லியது)

ஓயா! யுதிஷ்டிரரே! உடனே அந்த உபமன்யுவென்னும் பிரம்மரிஷி, பக்தியுடன் கைகூப்பிக்கொண்டு நாமங்களின் தொகுதியை முதலிலிருந்து சொல்லத்தொடங்கினர். 'பிரம்மாவினாலும் ரிஷிகளாலும் சொலலப்பட்டவையும், வேதங்களிலிருந்தும் வேதாங்கங்களிலிருந்துமுண்டானவையும், மகான்களினால் வற்புறுத்தப்பட்டவையும், உண்மையானவையும், எல்லாப்பயன்களையும் ஈட்டற்குரியனவையென்று ப்ரஸித்தமானவையும், வேதங்களில்தேர்ந்த புத்தியுள்ள தண்டி மகரிஷியினால் பக்தியுடன் சொல்லப்பட்டவையுமான நாமங்களினால் எல்லாஉலகங்களிலும்பூஜிதிபெற்றவரும் துதிக்கத்தக்கவருமான ஈஸ்வரரைத் துதிக்கப்போகிறேன். யோகியர்களும் புகழ்பெற்றவர்களும் தத்வஞானிகளுமான ரிஷிகளாற்சொல்லப்பட்டவையும் பிரம்மலோகத்திலிருந்து மற்ற எல்லாஉலகங்களுக்குமாகக் கொண்டுவரப்பட்டவையுமான வேதத்திலுள்ள ஸத்யமான நாமங்களினால் எல்லாரிலும் சிறந்தவரும் முதல்வரும் ஸ்வர்க்கத்தைக்கொடுப்பவரும் எல்லாப் பிராணிகளுக்கும் அனுகூலரும் சுபத்தைத்தருகிறவரும் சாஸ்வதமான பரப்ரம்மமென்று பிரம்மதேவரால் சொல்லப்பட்டவருமான ஈஸ்வரரைச்சொல்லப்போகிறேன். யாதவரிற்சிறந்தவரே! நீர் ஸாவதானமாய் என்னிடம்கேளும். பக்தராகிய நீர் எல்லாவற்றிற்கும்காரணமும் ஈஸ்வரருக்கும் ஈஸ்வரருமாகிய பரமசிவனைப் பிரார்த்தித்துக்கொள்ளும். அதனால், அந்த நித்யமான பரப்ரம்மத்தை உமக்கு நான் சொல்வேன். ஒருவன் யோகியாயிருந்து அனேகநூறுவருஷங்கள் சொன்னாலும் ஈஸ்வரருடையமஹிமையை முற்றும் விரித்துச்சொல்லமுடியாது. மாதவரே! எவருடைய ஆதியும் நடுவும் முடிவும் தேவர்களாலும் அறியப்படாதவையோ அவருடைய குணங்களை முற்றிலும்சொல்ல யாரால் முடியும்? ஆகிலும் ஸர்வஜ்ஞரான அந்தமஹாதேவருடைய அனுக்ரஹத்தினாலேயே அவருடையசரித்திரத்தைக் கூடியவரையில் பொருளும் சொல்லும் எழுத்தும் சுருக்கமாகச்சொல்லுகிறேன். அவருடைய அனுமதிபெற்றுக்கொள்ளாமல் ஈஸ்வரரைத்துதிக்கமுடியாது. எனக்குஅவர் அனுமதிகொடுத்தபோதுதான் நான் அவரைத் துதித்திருக்கிறேன். ஆதியும்முடிவுமில்லாதவரும் உலகத்திற்குக்காரணமும்

மூலப்பிரகிருதியைத் தமக்குக்ஷேத்திரமாகவுடையவருமான அந்த மகாத்மாவின் நாமங்களிறுடைய ஒருகுறிப்பைச் சொல்லப்போகிறேன். கிருஷ்ணா! வரங்கொடுப்பவரும் பிரார்த்திக்கத்தக்கவரும் உலகவடிவம்மாயிருப்பவரும் எல்லாமறிந்தவருமான ஈச்வரருடைய நாமங்களின்தொகுதியைப் ப்ரமமதேவர்சொன்னபடி சொல்லுகிறேன்; கேளும். ப்ரம்மதேவர்சொன்னவை பதினாயிரம் நாமங்கள். அவற்றை மனத்தினாற்கடைந்து தயிரிலிருந்தவெண்ணெய்போலவும் மலையிலிருந்து பொன்போலவும் பூவிலிருந்துதேன்போலவும் வெண்ணெயிலிருந்துநெய்போலவும் இந்தஸாரம் எடுக்கப்பட்டது. எல்லாப் பாவங்களையும்போக்குவதும் நாலுவேதங்களுமடங்கியதுமாகிய இது மனஸமாதானத்தோடும் முயற்சியோடும் அறியவும் மறவாமல்கொள்ளவும் தக்கது; மங்களங்களையும் தேகபுஷ்டியையும் தருவது; ராக்ஷஸர்களைப் போக்குவது; பலிகப்பரிசுத்தமானது; பக்தியும் சிரத்தையும் நம்பிக்ஷையுமுள்ளவனுக்கே கொடுக்கத்தக்கது; சிரத்தையில்லாதவனுக்கும் நாஸ்திகனுக்கும் மனத்தையடக்காதவனுக்கும் காரணரூபியான ஈச்வரரைப்பகைக்கிறவனுக்கும் கொடுக்கத்தகாதது. கிருஷ்ணா! அப்படிக்கொடுப்பவன் தன்முன்னோர்களோடும் பிள்ளைகளோடும் நரகத்திற்குப்போவான். இதுகான் தியானம். இதுவே யோகம். இது வே தியானிக்கத்தக்கஉயர்ந்தபொருள். ஜபிக்கத்தக்கதும் இது. ஞானமும் இது. உயர்ந்தரஹஸ்யமும் இது. மரணகாலத்தில் இதையறிந்தாலும் உயர்கதியையடையலாம். இது பாவங்களைப்போக்குவது; மங்களங்களைத்தருவது; யாகம்போல் பரிசுத்தம்; சிறந்த கண்மை. எல்லாஉலகங்களையும் படைத்தவராகியபிரம்மதேவர் முன்னேஇதைச் செய்து தேவலோகத்தியஸ்தோத்திரங்கள எல்லாவற்றிற்கும் ராஜாவாகவற்படித்தினர். மஹாத்மாவானஈச்வரருடையஇந்தஸ்தோத்திரம் அதுமுதலாகத்தான் ஸ்தோத்திரராஜாவென்று உலகத்தில்கியாதி பெற்றுத் தேவர்களால் பூஜிக்கப்படுகிறது. இந்தஸ்தோத்திரராஜ மானதுப்ரம்மலோகத்தினின்று ஸ்வர்க்கலோகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. முன்னே தண்டிமஹரிஷி ஸ்வர்க்கலோகத்தில் இதை அடைந்தார். இது ஸ்வர்க்கலோகத்தினின்று பூலோகத்திற்குத் தண்டியினால்கொண்டுவரப்பட்டதினால் தண்டிசெய்ததாயிற்று. சிறந்த கைகளையுடையவரே! எல்லாமங்களங்களுக்கும்மங்களமும் எல்லாப் பாவங்களையும் அழிப்பதும் ஸ்தோத்திரங்களுள் உத்தமமுமாகிய இந்தஸ்தோத்திரத்தை உமக்குச் சொல்வேன். எவர் ப்ரம்மாக்களுக்கும்ப்ரம்மாவும் சிறந்தவர்களுள்ளுஞ்சிறந்தவரும் தேஜஸுகளுக்குத்

[1] தேஜஸ்ஸும் தவங்களுக்குத்தவமும் சாந்திகளுக்கும் சாந்தியும் ஒளிகளுக்கும் ஒளியும் ஜிதேந்திரியர்க்கும் ஜிதேந்திரியரும் ஞானிகளுக்கும் ஞானியும் தேவர்களுக்குத்தேவரும் ரிஷிகளுக்கும் ரிஷியும் யாகங்களுக்கும்யாகமும் சிவர்களுக்கும்சிவனும் ருத்ரர்களுக்கும் ருத்ரரும் சக்தர்களுக்கும் [2]சக்தரும் யோகிகளுக்குமியோகியும் காரணங்களுக்கும்காரணமுமாய் இருப்பவரோ, எவரிடத்திலிருந்து [*]உலகங்களுண்டாகின்றனவோ, மறுபடியும் எவரிடத்தில் லயிக்கின்றனவோ எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும் அளவற்றமஹிமையுள்ளவராகவுமிருக்கின்ற அந்தப்பரமசிவனுடைய ஆயிரத்தெட்டு நாமங்களையும் என்னிடத்தில் கேளும். புருஷஸ்ரேஷ்டரே! அவற்றைக்கேட்டபிறகு எல்லா அபீஷ்டங்களையும் பெறுவீர்.

சிவஸஹஸ்ரநாமம்.

ஸ்திரர், ஸ்தாணு, ப்ரபு, [3]பாது, பரவரர், வரதர், வரர், ஸர்வாத்மா, ஸர்வவிக்யாதர், ஸர்வர், ஸர்வகரர், பவர், ஜடி, சர்மி, [4]சிகண்டி, ஸர்வாங்கர், ஸர்வபாவகர், ஹரர், ஹரிணக்ஷர், ஸர்வபூதஹரர், ப்ரபு, ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி, நியதர், சாச்வதர், த்ருவர், ஸ்மசாநவாஸி, பகவாந், கசரர், கோசரர், அர்த்தகர், அபிவாத்யர், மஹாகர்மா, தபஸ்வி, பூதபாவகர், உன்மத்தவேஷப்ரச்சந்நர், ஸர்வலோகப்ரஜாபதி, மஹாரூபர், மஹாகாயர், விருஷரூபர், மஹாயசஸ், மஹாத்மா, ஸர்வபூதாத்மா, விச்வரூபர், மஹாஹநு, லோகபாலர், அந்தர்ஹிதாத்மா, ப்ரஸாதர், ஹயகர்த்தபி, பவித்ரர், மஹாந், நியமர், நியமாச்ரிதர், ஸர்வகர்மா, ஸ்வயம்பூதர், ஆதி, ஆதிகரர், நிதி, ஸஹஸ்ராக்ஷர், விசாலாக்ஷர், ஸோமர், நக்ஷத்ரஸாதகர், சனத்ர், ஸ்ரீர்யர், சநி, கேது, க்ரஹர், க்ரஹபதி, வரர், அதரி, அத்ரியா நமஸ்கர்த்தா, ம்ருகபாணர்ப்பணர், அநகர், மஹாதபஸ், கோரதபஸ், அதீநர், தீநஸாதகர், ஸம்வத்ஸரகர், மந்த்ர், ப்ரமாணர், பரமந்தபர், யோகி, யோஜ்யர், மஹாபீஜர், மஹாரேதஸ், மஹாபலர், ஸ்வர்ணரேதஸ், ஸர்வஜ்ஞர், ஸுபீஜர், பீஜவாஹநர், தசபாஹு, அநிமிஷர், நீலகண்டர், உமாபதி, விச்வரூபர், ஸ்வயம்ச்ரேஷ்டர், பலவீரர், [5]பலர், கணர், கணகர்த்தா, கணபதி, திக்வாஸஸ், காமர், மந்த்ரவித், பரமோமந்த்ரர், ஸர்வபாவ

---

[1] மஹிமை. [2] 'பரபு:' என்றபாடம் கொள்ளப்பட்டது.

[3] 'பீமர்' என்பது வேறுபாடம்; 'ஸம்ஹாரம் செய்பவர்' என்பது பழையஉரை.

[4] வேறுபாடம்; 'சிகி, கட்கி' என்பது மூலத்தின்பாடம்.

[5] அபலர் என்றுபிரித்தால், ஸஹாயத்தை அபேக்ஷியாதவர் என்பது பொருள்.

கர், ஹரர், [1]கமண்டலுதர், [2]தண்டி, [3]பாணஹஸ்தர், [4]கபாலவான், [5]அசனி, [6]சதக்ரது, [7]கட்கி, [8]பட்டிசி, [9]ஆயுதி, மஹான், [10]ஸ்ருவஹஸ்தர், லாங்கூபர், தேஜஸ், [11]தேஜஸ்கரர், நிதி, உஷ்ணீஷி, ஸாவக்த்ரர், உதக்ரர், விநதர், தீர்க்கர், ஹரிகேசர, ஸாதீர்த்தர், க்ருஷ்ணர், ஸ்ருகாலரூபர், ஸ்ரீத்தார்த்தர், முண்டர், ஸர்வசுபங்கரர், அஜர், பஹாரூபர், கந்ததாரி, சுபர்த்தி, ஹர்த்ருபேதஸ், ஹர்த்ருலிங்கர், ஹர்த்ர சாயி, நபஸ்தலர், திரிஜடி, சிரவாஸஸ், ருத்ரர், ஸேநாபதி, விபு, அஜஸ்சரர், நக்தஞ்சரர், நிர்மமந்யு, ஸாவர்ச்சஸர், ரஜஹரா, தைத்யஹரா, காலர், லோகதாதா, குணகரர், விம்மசார்த்தூலரூபர், ஆர்த்ரசர்மாம்பரா விருதர், காலயோகி, மஹாகாதர், ஸர்வகாமர், சதுஷ்பதர், நிசாசரர், ப்ரேதசாரி, பூதசாரி, மஹாஸ்வரர், பஹாபூதர், பஹாதரர், ஸ்வர்ப்பானு, அமிதர், கதி, நிருதயப்பியர், நித்யகர்த்தர், கர்த்தகர், ஸர்வலாலஸர், கோரர், மஹாதபஸ், பாசர், நித்யர், நிரிருஹர், நபர், ஸஹஸ்ரஹஸ்தர், விஜயர், வ்யவஸாயர், அதந்த்ரிதர், அதர்ஷணர், தர்ஷணாக்ஷர, யஜ்ஞஹரா, காமநாசகர், தக்ஷயாகாபஹாரி, ஸாஹஹர், மத்யமர், தேஜோபஹாரி, பலஹரா, முண்டர், அர்த்தர், அஜிதர், அவரர், கம்பீரகோஷர், கபீரர், கம்பீரபலவாஹநர், ந்யக்ரோதரூபர், ந்யக்ரோதர், விருக்ஷகர்ணஸ்திதி, விபு, ஸாதீக்ஷ்ணதசகர், மஹாகாயர், பஹாநகர், விஷ்வக்ஸேநர், ஹரி, யஜ்ஞர், ஸமயுகாபீடவாஹநர், தீக்ஷ்ணதம்ஷ்டர், ஹர்யக்ஷர், ஸஹாயர், கர்மகாலவித், விஷ்ணுப்ரஸாதித, யஜ்ஞர், ஸமுத்தர், படபாமுகர், ஹாதாசநஸஹாயர், ப்ரசாந்தாத்மா, ஹாதாசநர், உக்ரதேஜஸ், பஹாதேஜஸ், ஜங்யர், விஜயகாலவித், ஜ்யோதிஷாம் அயநர், விதி, ஸர்வவிக்ரஹர், [13]சிகி, [13]முண்டி, [14]ஜடி, ஜ்வாலி, மூர்த்திஜர், மூர்த்தகர், பலி, வேணவி, பணவி, தாரணி, கலி, காலகடங்கடர், நக்ஷத்ரவிக்ரஹமதி, குணபுத்தி, லயர், [15]அகமர், ப்ரஜாபதி, விஸ்வபாஹு, விபாகர், ஸர்வகர், அமுகர், விமோசநர், ஸாஸரணர், ஹிரண்யகவசோத்பவர், மேட்ரஜர், பலசாரி, மஹீசாரி, ஸ்ருதர், ஸர்வதூர்யநிநாதி, ஸர்வாதோத்யபரிக்ரஹர், வ்யாலரூபர், குஹாவாஸி, குஹர், மாலி, தபங்கவித, தரிதசர், த்ரிகாலத்ருக், காமஸர்வபந்தவிமோசநர், அஸாரோகத்ராணம்பந்தநர்,

1 - 10 'முண்டர், 'தசபாஹு' எனமுடியுமிடத்தை இங்கு பத்து ஆயுதங்கள் கூறப்பட்டன' என்பது பழையவுரை.

11 'தேஜஸ்கரோநிதி' என ஒருநாமமாகக்கொண்டு, 'பக்தர்களுக்கு ஒளியைக்கொடுக்கும் நிதிபோன்றவர்' என்பது பழையவுரை.

12, 13, 14. நான்கு ஆஸ்ரமங்களும் கூறப்பட்டது காண்க.

15 'கமர்' என்று பிரித்தால் எல்லாராலும் அடையப்படுகிறவர் என்பது.

யுகிசத்ருவிநாசநர், ஸாங்க்யப்ரஸாதர், துர்வாஸர், ஸர்வஸாதுநிஷேவிதர், ப்ரஸ்கந்தநர், விபாகஜ்ஞர், அதுல்யர், யஜ்ஞபாகவித், ஸர்வவாஸர், ஸர்வசாரி, துர்வாஸர், வாஸவர். அமரர், ஹைமர், ஹேமகர், அயஜ்ஞர், ஸர்வதாரி, தமோத்தமர், லோஹிதாக்ஷர், மஹாக்ஷர், விஜயாக்ஷர், விசாரதர், ஸங்க்ரஹர், நிக்ரஹர், கர்த்தா, ஸர்ப்பசிரோநிவாஸநர், முக்யர், அமுக்யர், நேதர், சாஹலி, ஸர்வகாமதர், ஸர்வகாலப்ரஸாதர், ஸுபலர், பலரூபத்ருத, ஸர்வகாமவரர், ஸர்வதர், ஸர்வதோமுகர், ஆகாசநிர்விரூபர், நிபாதி, அவசர், நகர், ரௌத்ரரூபர், அம்ச, ஆதித்யர், பஹுரச்மி, ஸுவர்ச்சஸி, வஸுமேகர், மஹாமேகர், மநோமேகர், நிசாசரர், ஸர்வவாஸி, ஸ்ரீயாவாஸி, உபதேசகரர், அகரர், முநி, ஆத்மயோநிர்லோகர், ஸம்பக்நர், ஸஹஸ்ரதர், பக்ஷி, பக்ஷரூபர், அதிதீப்தர், விசாம்பதி, உக்ஷாதர், மதநர். காமர். அச்வத்தர், அர்த்தகரர், யசஸ், வாமதேவர், வாமர், ப்ராக், தக்ஷிணர், வாமநர், ஸித்தயோகி, மஹர்ஷி, ஸித்தார்த்தர், ஸித்தஸாதகர், பிக்ஷு, பிக்ஷுரூபர், விபணர். ம்ருது, அவ்யயர், மஹாஸேநர், விசாகர், ஷஷ்டிபாகர், சவாம்பதி, விஶ்ரஹஸ்தர், விஷ்கம்பி, சமஸ்தம்பநர், வ்ருக்ஷாவ்ருக்ஷசர, தாலர், மது, மதுகலோசநர், வாசஸ்பத்யர், வாஜஸநர், நித்யம் ஆஸ்ரமபூஜிதர், ப்ரம்மசாரி, லோகசாரி, ஸர்வசாரி, விசாரவித், ஈசாநர், ஈஸ்வரர், காலர், நிசாசாரி, பிநாகவாந், நிமிததஸ்தர், நிமித்தர், நந்தி, நந்திகரர். ஹரி, நந்தீஸ்வரர், நந்தி நந்தகர். நந்திவர்த்தநர், பகஹாரி, நிஹந்தா, காலர், ப்ரம்மா, பிதாமஹர், சதுர்முகர், மஹாலிங்கர், சாருலிங்கர், லிங்காத்யக்ஷர். ஸுராத்யக்ஷர், யோகாத்யக்ஷர், யுகாவஹர், பீஜாத்யக்ஷர், பீஜகர்த்தா, அத்யாத்மாநுகதர், பலர், இதிஹாஸர், [1] கல்பர், கௌதமர், நிசாகரர், தம்பர், அதம்பர், வைதம்பர், வஸ்யர், வஸுகர, கலி, லோககர்த்தா, பசுபதி, மஹாகர்த்தா, அநௌஷதர், [2] அக்ஷரர், பரமம்ப்ரம்ம, பலவத், சக்ரர், நீதி, அநீதி, சுத்தாத்மா, சுத்தர், மாந்யர், கதாகதர், பஹுப்ரஸாதர், ஸுஸ்வப்நர், தர்ப்பணர், அமித்ரஜித், வேதகாரர், மந்த்ரகாரர், வித்வாந், ஸமரமர்த்தநர், மஹாமேகநிவாஸி, மஹாகோரர், [3] வஸிகரர், அக்நிஜ்வாலர், மஹாஜ்வாலர், அதிதூம்ரர், ஹுதர், ஹவி, வ்ருஷணர்,

[1] 'ஸகல்பர்' என றுகொண்டு, 'யஜ்ஞவித்திகளைக் கல்பிக்கும மீமாம்ஸாந், நியாயங்களோடு கூடியவர்' என்பது பழையவுரை.

[2] 'அக்ஷரம்பரமம்ப்ரம்ம' என ஒன்றாகவும் கொள்ளலாம்.

[3] 'வசி, கரர்' என இரண்டாகக்கொண்டு, வசி - எல்லாவற்றையும் தம் சக்தியில் வைத்திருப்பவர்; கரர் - ஸம்ஹாரம்செய்பவர்' என்பது பழைய உரை.

சங்கரர்; நித்யம்வர்ச்சஸ்வி; தூமகேதகர்; நீலர்; அங்கதுப்தர்; சோபகர்; நிரவக்ரஹர்; ஸ்வஸ்திதர்; ஸ்வஸ்திபாவர்; பாகி; பாககரர்; லகு; உத்ஸங்கர்; மஹாங்கர்; மஹாகர்ப்பபராயணர்; க்ருஷ்ணவர்ணர்; ஸுவர்ணர்; ஸர்வதேஹிநாம்இந்த்ரியர்; மஹாபாதர்; மஹாஹநுஸ்தர்; மஹாகாயர்; மஹாயசஸ்; மஹாமூர்த்தா; மஹாமாத்ரர்; மஹாகேத்ரர்; நிசாயர்; மஹாங்குகர்; மஹாகர்ணர்; மஹோஷ்டர்; மஹாஹநு; மஹாநாஸர்; மஹாகம்பு; மஹாக்ரீவர்; சமசாநபாக்; மஹாவக்ஷஸ்; மஹோரஸ்கர்; அந்தராத்மா; மநுகாலயர்; லம்பகர்; லம்பிதோஷ்டர்; மஹாமாயர்; பயோநிதி; மஹாதந்தர்; மஹாதம்ஷ்ட்ரர்; மஹாஜிஹ்வர்; மஹாமுகர்; மஹாநகர்; மஹாரோமர்; [1]மஹாகேசர்; மஹாஜடர்; ப்ரஸங்கர்; ப்ரஸாதர்; ப்ரத்யயர்; கிரிஸாதநர்; ஸ்நேஹநர்; அஸ்நேஹநர்; அஜிதர்; மஹாமுநி; வ்ருக்ஷாகாரர்; வ்ருக்ஷகேது; அநலர்; வாயுவாஹகர்; கண்டலி; மேருதாமர்; தேவாதிபதி; அதர்வசீர்ஷர்; ஸாமாஸ்யர்; ருக்ஸஹஸ்ராமிதேக்ஷணர்; யஜுஷ்பாதபுஜர்; குஹ்யர்; ப்ரகாசர்; ஜங்கமர்; அமோகார்த்தர்; ப்ரஸாதர்; அபிகம்யர்; ஸுதர்சநர்; உபகாரர்; ப்ரியர்; ஸர்வர்; கநகர்; காஞ்சநச்சவி; நாபி; நந்திகரர்;பாவர்; புஷ்கரஸ்தபதி; ஸ்திரர்; த்வாதசர்; த்ராஸநர்; ஆத்யர்; யஜ்ஞர்; யஜ்ஞஸமாஹிதர்; நக்தர்; கலி; காலர்; மகரர்; காலபூஜிதர்; லகணர்; கணகாரர்; பூதவாஹநஸாரதி; பஸ்மசயர்; பஸ்மகோப்தா; பஸ்மபூதர்; தரு; கணர்; லோகபாலர்; அலோகர்; மஹாத்மா; ஸர்வபூஜிதர்; சுக்லர்; த்ரிசுக்லர்; ஸம்பநநர்; சுசி; பூதநிஷேவிதர்; ஆச்ரமஸ்தர்; க்ரியாவஸ்தர்; விச்வகர்மமதி; வரர்; விசாலசாகர்; தாம்ரோஷ்டர்; அம்புஜாலர்; ஸுநிச்சலர்; கபிலர்; கபிசர்; சுக்லர்; ஆயுஸ்; பரர்; அபரர்; கந்தர்வர்; அதிதி; தார்க்ஷ்யர்; ஸுவிஜ்ஞேயர்; ஸுசாரதர்; பரச்வதாயுதர்; தேவர்; அநுகாரி; ஸுபாந்தவர்; தும்பவீணர்; மஹாகோதர்; ஊர்த்வரேதஸ்; ஜலேசயர்; உக்ரர்; வம்சகரர்; வம்சர்; வம்சநாதர் அநிந்திதர்; ஸர்வாங்கரூபர்; மாயாவி; ஸுஹ்ருதர்; அநிலர்; அநலர்; பந்தநர்; பந்தகர்த்தா; ஸுபந்தவிமோசநர்; [2]யஜ்ஞாரி; [2]காமாரி; மஹாதம்ஷ்ட்ரர்; மஹாயுதர்; பஹுதாநிந்திதர்; சர்வர்; சங்கரர்; சங்கரர்; அதநர்; அமரேசர்; மஹாதேவர்; விச்வதேவர்; ஸுராரிஹா; அஹிர்புத்நியர்; அநிலாபர்;சேகிதாநர்; ஹவிஸ்; அஜைகபாத்;காபாலி; த்ரிசங்கு; அஜிதர்; சிவர்; தந்வந்தரி; தூமகேது; ஸ்கந்தர்; வைச்ர

[1] 'மஹாகோசர' என்பது வேறுபாடம். 'பெரிய வயிறுள்ளவர்' என்பது பழையவுரை.

[2] இங்கே 'யஜ்ஞாரி, காமாரி' எனப்பிரித்தால் முறையே, 'தக்ஷயாகத்தையழித்தவர்' என்றும், 'காமனையெரித்தவர்' என்றும் பொருளாம்.

ர்; தாதா; சக்ரர்; விஷ்ணு; மித்ரர்; த்வஷ்டா; த்ருவர்; தரர்; ப்ரபாவர்; ஸர்வகோவாயு; அர்யமா; ஸவிதா; ரவி; உஷங்கு; விதாதா; மாந்தாதா; பூதபாவநர்; விபு; வர்ணவிபாவி; ஸர்வகாமகுணவஹர்; பத்மநாபர்; மஹாகர்ப்பர்; சந்த்ரவக்த்ரர்; அநிலர்; அநலர்; பலவாந்; உபகாந்தர்; புராணர்; புண்யசஞ்சு; ஈ; குருகர்த்தா; குருவாஸி; குருபூதர்; குஞைளஷதர்; ஸர்வாசயர்; தர்ப்பசாரி; ஸர்வேஷாம்ப்ராணிநாம்பதி; தேவதேவர்; ஸுகாஸக்தர்; ஸத்; அஸத்; ஸர்வரத்நஷித்; கைலாஸகிரிவாஸி; ஹிமவத்கிரிஸம்ச்ரயர்; கூலஹாரி; கூலகர்த்தா; பஹுவிதயர்; பஹுப்ரதர்; வணிஜர்; வர்த்தகி; வ்ருக்ஷர்; வகுளம்; சக்ரதம்; சதம்; ஸாரக்ரீவர்; மஹாஜத்ரு; அலோலர்; மஹௌஷதர்; விக்தார்த்தகாரி; [1] விக்தார்த்தர்; [1] சந்தோவ்யாகரணைத்தர்; விம்மஹாதர்; விம்மதம்ஷ்ட்ரர்; விம்மகர்; விம்மவாஹநர்; ப்ரபாவாத்மா; ஜகத்காலஸ்தாலர்; லோகஹிதர்; தரு; ஸாரங்கர்; நவசக்ராங்கர்; கேதுமாலி; ஸபாவநர்; பூதாலயர்; பூதபதி; அஹோராத்ரர்; அநிந்திதர்; ஸர்வபூதாகாம்வாஹிதா; நிலயர்; விபு; பவர்; அமோகர்; ஸம்யதர்; அச்வர்; போஜநர்; ப்ராணதாரணர்; த்ருநிமாந்; மதிமாந்; தக்ஷர்; ஸத்க்ருதர்; யுகாதிபர்; கோபாலி; கோபதி; க்ராமர்; கோசர்மவஸநர்; ஹரி; ஹிரண்யபாஹு; ப்ரவேசிநாம்குஹாபாலர்; ப்ரக்ருஷ்டாரி; மஹாஹர்ஷர்; ஜிதகாமர்; ஜிதேந்த்ரியர்; காந்தாரர்; ஸுவாஸர்; தபஸ்லக்தர்; ரதி; நரர்; மஹாகீதர்; மஹாக்ருத்யர்; அப்ஸரோகண ஸேவிதர்; மஹாகேது; மஹாதாது; நைகஸாநுசரர்; சலர்; ஆவேதநீயர்; ஆதேசர்; [2] ஸர்வகந்தஸ்ஸுகாவஹர்; தோரணர்; தாரணர்; வாதர்; [3]பரிதீபதி; [4]கேசரர்; [5]ஸம்யோகர்; [6]வர்த்தநர்; வ்ருத்தர்; அதிவ்ருத்தர்; குணாதிகர்; நித்யாத்மஸஹாயர்; தேவாஸுரபதி; பதி; யுக்தர்; யுக்தபாஹு; [7]திவிஸுபர்வணேதேவர்; ஆஷாடர்; ஸுஷாடர்; த்ருவர்; ஹரிணர்; ஹரர்; ஆவர்த்தமாநேப்யோவபு; வஸுச்ரேஷ்டர்; மஹாபதர்; நிரோஹாரி; விமர்சர்; ஸர்வலக்ஷணலக்ஷிதர்; ரதயோகிஅக்ஷர்; ஸர்வயோகி; மஹாபலர்; ஸாமாம்நாயர்; அஸாமாம்நாயர்;

---

[1] இவற்றை ஒருநாமமாகக்கொண்டு, 'சந்தஸுகளாலும் வ்யாகரணங்களாலும் விளக்கப்பட்டுப் பூர்வபக்ஷங்களைத்தள்ளி நிச்சயிக்கப்பட்டபொருளாயிருப்பவர்' என்பது பழையஉரை.

[2] 'ஸர்வகந்தர், ஸுகாவஹர்' எனப்பிரித்தால், 'எல்லாக்கந்தங்களும் பொருந்தினவர்; அடுத்தவர்களுக்கு ஸுகத்தைச்செய்பவர்' என்பதுபொருள்.

[3], [4]. இங்கு, 'பரிதி - அழகாயிருப்பவர்; பதிகேசரர் ராஜாவானபக்ஷி, கருடர்' எனப்பிரித்துக்கூறுவது பழையஉரை.

[5], [6]. 'வர்த்தநஸ்ஸம்யோகம்' எனஒன்றாகக்கொண்டு, 'வ்ருத்திசெய்கிறஸம்யோகம்; அதாவது, ஆண்பெண்சேர்க்கை' என்பது பழையஉரை.

தீர்த்ததேவர்; மஹாரதர்; நிர்ஜீவர்; ஜீவகர்; மந்த்ரர்; சுபாக்ஷர்; பஹுகர்க்கசர்; ரத்நப்ரபூதர்; ரத்நாங்கர்; மஹார்ணவநிபாநவித்; மூலர்; விசாலர்; அம்ருதர்; வ்யக்தாவ்யக்தர்; தபோநிதி; ஆரோஹணர்; அதிரோஹர்; சிலதாரி; மஹாயசஸ்; ஸேநாகல்பர்; மஹாகல்பர்; யோகர்; யுகசரர்; ஹரி; யுகரூபர்; மஹாரூபர்; மஹாநாகஹநர்; [1]வதர்; ந்யாயநிர்வபணர்; பாதர்; பண்டிதர்; அசலோபமர்; பஹுமாலர்; மஹாமாலர்; [2] சசிஹராலோசகர்; [3] விஸ்தாரர்; [4] லவணர்; [5] கூபர்; த்ரிபுகர்; லபலோதயர்; த்ரிலோசநர்; விஷ்ணுநேத்ர்; மணிவித்தர்; ஜடாதரர்; பிங்கள; விஸர்க்கர்; ஸாமுகர்; சரர்; ஸர்வாயுதர்; ஸஹர்; நிவேதநர்; ஸாரஜாதர்; ஸாகந்தாரர்; மஹாதநு; கந்தபாலீபகவாக்; ஸர்வகர்மணாமுத்தாகர்; மந்தாநோபஹாலோவாயு; ஸகலர்; ஸர்வலோசகர்; [6] தலஸ்தாலர்; கரஸ்தாலி; ஊர்த்வஸம்ஹநர்; மஹாக்; சத்ரர்; ஸாச்சத்ரர்; விக்பாதோலோகர்; ஸர்வாச்ரயக்ரமர்; முண்டர்; விரூபர்; விக்ருதர்; [7]தண்டி; [8]குண்டி; விகுர்வணர்; ஹர்யக்ஷர்; கருபர்; வஜ்ரி; சதஜிஹ்வர்; ஸஹஸ்ரபாத்; ஸஹஸ்ரமூர்த்தா; தேவேந்த்ரர்; ஸர்வதேவமயர்; குரு; ஸஹஸ்ரபாஹு; ஸர்வாங்கர்; சரண்யர்; ஸர்வலோகக்ருத்; பவித்ரர்; த்ரிககுந்மந்த்ரர்; கநிஷ்டர்; க்ருஷ்ணபிங்களர்; ப்ரம்மதண்டவிநிர்மாதர்; சதக்ரீபாசசக்திமாந்; பத்மகர்ப்பர்; மஹாகர்ப்பர்; ப்ரம்மகர்ப்பர்; ஜலோத்பவர்; கபஸ்தி: ப்ரம்மக்ருத்; ப்ரம்மி; ப்ரம்மவித்; ப்ராம்மணர்; கதி; அநந்தரூபர்; நைகாத்மா; திக்மதேஜாஸ்வயம்புவர்; ஊர்த்வகாத்மா; பசுபதி; வாதரம்ஹஸ்; மநோஜவர்; சந்தநி; பத்மகராளாக்ரர்; ஸாரப்யுத்தரணர்; கரர்; காந்திகாரமஹாஸ்ரக்வி; நீலமௌலி; பிநாகத்ருத்; உமாபதி; உமாகாந்தர்; ஜாஹ்நவீத்ருக்; உமாதவர்; வரோவராஹர்; வரதர்; வரேண்யர்; ஸாமஹாஸ்வநர்; மஹாப்ரஸாதர்; தமநர்; சத்ருஹா; சவேதபிங்களர்; பீதாத்மா; பரமாத்மா; ப்ரயதாத்மா; ப்ரதாநத்ருத்; ஸர்வபார்ச்வமுகர்; த்ரியக்ஷர்; தர்மஸாதாரணவரர்; சராசராத்மா; ஸாக்ஷ்மாத்மா; அம்ருதோகோவ்ருஷேச்வரர்;

---

[1] 'அவதர்' என்றுபிரித்தால், 'தமக்குவதமில்லாதவர்' என்பது பொருள்.

[2] இரண்டாகபிரித்தால், 'சசி - சந்த்ரனுயிருப்பவர். ஹரஸாலோசகர் - பாவங்களைப்போக்கும் அழகியகண்களையுடையவர்' என்பதுபொருள்.

[3], [4], [5] இவற்றையொன்றாகக்கொண்டு, 'பெரியஉப்புக்கிணறு; அதாவது, கடலாயிருப்பவர்' என்பது பழையஉரை.

[6] தலர் - எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பவர்; தாலர் - எல்லாவற்றையும் தாமிருப்பவர் என்று பிரித்தலுமாம்.

[7], [8] பிரம்மசாரியாயிருப்பவர்என்பது.

ஸாத்பரிவ்ரு; ஆதித்யவஸு; [1]விவஸ்வாந்; [2]ஸவிதா; [3]அம்ருதர்; வ்யாஸர்; ஸம்க்ஷேபோவிஸ்தரஸ்ஸர்க்கர்; பர்யயோகரர்; ருது; ஸம்வத்ஸரம்; மாஸம்; பக்ஷம்; ஸங்க்யாஸமாபகர்; கலே; காஷ்டை; லவம்; மாத்ரை; [4]முஹூர்த்தம்; [5]அஹஸ்; [6]க்ஷபா; க்ஷணம்; விச்வக்ஷேத்ரம்; ப்ராஜாபீஜம்; லிங்கம்; ஆத்யநிர்க்கமம்; ஸத்; அஸத்; வ்யக்தம்; அவ்யக்தம்; பிதா; மாதா; பிதாமஹர்; ஸ்வர்க்கத்வாரம்; ப்ரஜாத்வாரம், மோக்ஷத்வாரம்; த்ரிவிஷ்டபம்; நிர்வாணம்; ஹ்லாதநர்; ப்ரம்மலோகர்; பரகதி; தேவாஸுரவிநிர்மாதா; தேவாஸுரபராயணர்; தேவாஸுரகுரு, தேவர்; தேவாஸுரநமஸ்க்ருதர், தேவாஸுரமஹாமாத்ரர்; தேவாஸுரகணேச்வரர்; தேவாஸுரகணத்யக்ஷர்; தேவாஸுரகணேச்வரர்; தேவாதிதேவர்; தேவரிஷி; தேவாஸுரவரப்ரதர்; தேவாஸுரேச்வரர்; விச்வர்; தேவாஸுரமஹேச்வரர்; ஸர்வதேவமயர்; அசிந்த்யர்; தேவதாத்மா; ஆத்மஸம்பவர்; உத்பித்; த்ரிவிக்ரமர்; வைத்யர்; விராஜர்; நீரஜர்; அமரர்; ஈட்யர்; ஹ்ருஸ்தீச்வரர்; வ்யாக்ருர்; தேவஸிம்மர்; நரர்ஷபர்; விபுதர்; அக்ரவரர்; ஸர்வேக்ஷமர்; ஸர்வதேவர்; தபோமயர்; ஸுயுக்தர்; சோபநர்; வஜ்ரி; ப்ராணாபாம்ப்ரபவர்; அவ்யயர்; குஹர்; காந்தர்; நிஜஸர்க்கர்; பவித்ரர்; ஸர்வபாவநர்; ச்ருங்கி; ச்ருங்கப்ரியர்; பப்ரு; ராஜராஜர்; நிராமயர்; அபிராமர்; ஸுரகணர்; விராமர்; ஸர்வசாதநர்; லலாடாக்ஷர்; விச்வதேவர்; ஹரிணர்; ப்ரம்மவர்ச்சஸர்; ஸ்தாவராணாம்பதி; நியமேந்த்ரியவர்த்தநர்; ஸித்தார்த்தர்; ஸித்தசூதார்த்தர்; அசிந்த்யர்; ஸத்யவ்ரதர்; சுசி; வ்ரதாதிபர்; [7]பரம்ப்ரம்ம; பக்தாநாம்பரமாகதி; விமுக்தர்; முக்ததேஜஸ்; ஸ்ரீமாந்; ஸ்ரீவர்த்தநர்; [8]ஜகத்.

சிவஸஹஸ்ரநாம அகராதியும் பொருளும்.

அக்நிஜ்வாலர் - அக்நியைப்போல் ஜ்வாலையுள்ளவர்.

அக்ரவரர் - யாகத்தில் முதல்பாகம்வாங்குகிறவர்.

அகமர் - சலியாதவர்; 167 - ம் பக்கம்பார்க்க.

அக்ரர் - ஒன்றும்செய்யாதவர்.

---

[1], [2], [3] இவற்றையொன்றாகக்கொண்டு, 'பூமியைமூடுங் கிரணங்களுள்ளவரும் உலகங்களோப்படைப்பவரும் அழிவற்றவருமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

[4], [5], [6] இவற்றையொன்றாகக்கொள்வது பழையவுரை.

[7] 'பரம்=விஸ்வ தைஜஸ ப்ராஜ்ஞர்களுக்குமேல் நான்காவது சிவனாயிருப்பவர்; ப்ரம்ம=தேசகாலவஸ்துக்களால் அளவிடக்கூடாத அகண்டரூபமான வஸ்து' என இரண்டாகப்பிரித்துக்கூறுவது பழையவுரை.

[8] 'ஸ்ரீமர்' என்றதொடங்கி 'ஜகத்' என்றமுடித்ததால், 'வ்யாபகரான பரமாத்மாவிடத்தில் உலகம்பொய்த்தோற்றம் என்றசொல்லப்பட்டதாகிறது' என்பது பழையவுரை.

அங்கஹீனர் - தம்அவயவமாகியலிங்கத்தில் லாக்ஷித்யமாயிருப்பவர்.
அச்வத்தர் - அஸ்வத்தவ்ருக்ஷரூபியாயிருப்பவர்; 'ஸம்ஸாரவ்ருக்ஷமா யிருப்பவர்' என்பது பழையவுரை.
அச்வர் - ஸ்யாபிப்பவர்; 'உச்சைசிரவமுதலிய குதிரைகளாயிருப்ப வர்' என்பது பழையஉரை.
அசனி - வஜ்ராயுதத்தைத்தரிப்பவர்.
அசலோபமர் - மலைபோன்றவர்; தம்ஞானத்தை வெளிப்படுத்தாதவர் என்பது. 'தத்வஜ்ஞானி' என்பது பழையவுரை.
அகிந்த்யர் - தாம் சிந்திக்கவேண்டியதொன்றுமில்லாதவர். குறைவில் லாதவர் என்பது.
அகிந்த்யர் - உபாஸனைக்குமெட்டாதவர்.
அத்யாத்மாநுகதர் - ஆத்மாவைஅநுஸரித்திருப்பவர்.
அத்ரி - சந்த்ரனுக்குப் பிதாவானரிஷி; முக்குணங்களுமற்றவர். 'புதன்' என்பது பழையஉரை.
அத்ரியாநமஸ்கர்த்தா - அத்ரிபத்நியாகிய அநஸூயைக்குத் தர்வா லஸ்என்னும்புத்ரனைப்பிறக்கு அவளைநமஸ்கரித்தவர்.
அதந்த்ரிதர் - சோம்பலில்லாதவர். (அதாவது ஓய்வில்லாதவர்.)
அதநர் - தனமில்லாதவர்.
அதம்பர் - தம்மையடக்குமிறவரிலலாதவர்.
அதர்வசீர்ஷர் - அதர்வவேதத்தைத் தலையாகஉடையவர்.
அதர்ஷணர் - அசைக்கமுடியாதவர்.
அதிதி - தேவமாதா ; பூமியென்னவுமாம்.
அதிதீப்தர் - மிகப்பிரகாசமாயிருப்பவர்.
அதிதாம்ரர் - மிக்கபுகையுடையவர்.
அதிரோஹர் - மேல்பதத்திலிருப்பவர்.
அதிவ்ருத்தர் - பெரியவற்றிற்கும்பெரியவர்.
அதீநர் - உதாரமனமுள்ளவர்.
அதுல்யர் - ஒப்பற்றவர்.
அந்தர்ஹிதாத்மா - வெளிப்படாதஸ்வபாவமுள்ளவர்.
அந்தராத்மா - அந்தர்யாமியாயிருப்பவர்.
அநகர் - தகுந்தயாகத்தைஅழித்தும் பாபமண்டாதவர்.
அநந்தரூபர் - அளவில்லாதஸ்வரூபமுடையவர்.
அநலர் - திருப்தியில்லாதவர்.
அநலர் - அக்நியாயிருப்பவர்.
அநலர் - அக்நிபோலப் பாபங்களைஎரிப்பவர்,

அநிந்திதர் - இகழப்படாதவர்.
அநிந்திதர் - குற்றமற்றவர்.
அநிமிஷர் - இமைகொட்டாதவர்.
அநிலர் - காற்றுயிருப்பவர்.
அநிலர் - உயிரைத்தருகிறவர்.
அநிலாபர் - காற்றைப்போலிருப்பவர்; கண்ணுக்குப் புலப்படாதவ ரென்பது.
அநீதி - பிறரால்நடத்தப்படாதவர்.
அநுகாரி - பக்தர்மனத்தை அனுசரித்துச்செய்கிறவர். 'பீஷ்மரைக் கொல்ல ஆயுதப்ரயோகத்தைஅபிநயித்த ஸ்ருஷ்ணுயிருப்பவர்' என்பது பழையவுரை.
அநுஸ்தர்-தடுக்கமுடியாதவர்; 'அன்னத்தைப்புஜியாதவர்' என்பது பழையவுரை.
அப்ஸரோகணஸேவிதர் - அப்ஸரஸுகளின் கூட்டங்களினாலடுக்கப் பட்டவர்.
அபரர் - பிந்தினவர்.
அபிகம்யர் - அடையத்தக்கவர்.
அபிராமர் - மனத்துக்கினியவர்.
அபிவாத்யர் - யாவராலும் நமஸ்கரிக்கவும் துதிக்கவும்பெற்றவர்.
அம்சு - கிரணமாயிருப்பவர்; 'அம்சுவென்னும்தேவதையாயிருப்பவர்' என்பது பழையவுரை
அம்புஜாலர் - ஜலச்சேர்க்கையானகடலாயிருப்பவர்.
அம்ருதகோவ்ருஷேச்வரர் - பூமியிலுள்ளதர்மத்திற்கு அழிவில்லாத ஈச்வரர். 'பயிர்விரும்பாமற்செய்யும் அழிவில்லாததர்மத்தி ற்கு ஈச்வரர்' என்பது பழையவுரை.
அம்ருதர் - அமுதமேபோன்றவர்.
அம்ருதர் - நித்யர்; சந்த்ரரூபிஎன்னவுமாம்; 172-ம் பக்கம்பார்க்க.
அமரர் - மரணமில்லாதவர்.
அமரர் - அழிவில்லாதவர்.
அமரேசர் - தேவர்களுக்கும்ஈச்வரர்.
அமித்ரஜித் - சத்ருக்களைஜயிப்பவர்.
அமிதர் - அளவில்லாதவர்.
அமுக்யர் - கடைசியாயிருப்பவர்; தமக்குமுதன்மையானவரில்லாதவ ரென்னவுமாம்.
அமூடர் - மூடமில்லாதவர்; பர்ஃபக்டறிவாயிருப்பவரென்பது.

அமோகர்-வீணுகாதவர்; அவரை ஆஸ்ரயிப்பதுவீண்போகாதென்பது.
அமோகார்த்தர் - பிரார்த்தனைவீண்போகாதவர்.
அயஜ்ஞர் - யஜ்ஞமுதலியகர்மங்களற்றவர்.
அர்த்தகரர் - வேண்டினதைக்கொடுப்பவர்.
அர்த்தகர் - துஷ்டர்களைப்பீடிப்பவர்.
அர்த்தர் - பிரார்த்திக்கப்படுகிறவர்.
அர்யமா - சூரியனுடையபெயர்.
அலோகர் - உலகத்தைக்கடந்தவர்.
அலோலர் - ஆசையற்றவர்.
அவ்யக்தம் - புலப்படாதவர். 'நான் அறியேன்என்னும் அநுபவமொன்றினால் தோற்றும் அஜ்ஞானம்' என்பது பழையஉரை.
அவ்யயர் - மாறுதவர்.
அவ்யயர்-பலவகைகளால் அடையக்கூடாதவர்; ஏகபக்தியினால் அடையப்படுகிறவர் என்பது.
அவசர் - யாருக்கும்உட்படாதவர்.
அவரர் - தமக்குமேற்பட்டவரில்லாதவர்.
அஜர் - ஜனனமில்லாதவர்.
அஜிதர் - யாவராலும்ஜயிக்கப்படாதவர்.
அஜிதர் - ஜயிக்கப்படாதவர்.
அஜிதர் - மூக்குணங்களினாலும் வெல்லமுடியாதவர்.
அஜைகபாத் - ஏகாதசருத்ரரில்லொருவர்.
அஸ்நேஹநர் - பற்றற்றவர்.
அஸத் - கார்யமாயிருப்பவர். 'காரணமாயிருப்பவர்' என்பது பழையவுரை.
அஸத் - கார்யம். 'காரணம்' என்பது பழையஉரை.
அஸமாம்நாயர் - வாஸ்திரமுதலியவையாயிருப்பவர்; வேதத்திற்கு மெட்டாதவரென்னவுமாம்.
அஸுரேந்த்ராணும்பந்தர் - அஸுரஸ்ரேஷ்டர்களைக் கட்டினவர்; 'வாமனரூபமாகிப் பலிசக்ரவர்த்தியைக்கட்டினவர்' என்பது பழையவுரை.
அஹர்ஸ் - பகலாயிருப்பவர்; 172 - ம பக்கம்பார்க்க.
அஹர்ஸ்சரர் - பகலில்சஞ்சரிக்கும்தேவதையாயிருப்பவர்.
அஹிர்புத்நியர் - ஒருதேவதை; 'பிரம்மாண்டத்தின் அடியிலிருக்கும் சேஷனையிருப்பவர்' என்பது பழையவுரை.
அஹோராத்ரர் - இரவுபகல்களாயிருப்பவர்.

அக்ஷரர் - அழிவில்லாதவர்; 168 - ம் பக்கம்பார்க்க.

ஆகாசநிர்விரூபர் - ஆகாசம்போன்ற தம்மிடத்தினின்றும் அநேக ரூபங்களேஉண்டாக்குகிறவர்; அல்லது, 'ஆகாசம்போல விசேஷ ரூபமில்லாதவர்.

ஆச்ரமஸ்தர் - நான்குஆஸ்ரமங்களிலுமிருப்பவர்.

ஆத்மகிராலோகர் - தம்ஸ்வரூபத்தில்பிறர்பார்வைவராதவர்; 'ஜீவனிடத்தில் நிச்சயமாகத்தம்மைப்பார்ப்பவர்' என்பது பழையவுரை.

ஆத்மஸம்பவர் - தாமேஉண்டானவர்.

ஆத்யநிர்க்கமர் - உலகத்தின் முதல்முனேயாயிருப்பவர். 'அஹம்என்னும் முதல்நினைவு' என்பது பழையவுரை.

ஆத்யர் - முதல்வர்.

ஆதி - முதல்வர்.

ஆதிகரர் - முதல்வரானபிரம்மதேவரையும் படைத்தவர்.

ஆதித்யர் - பகன்என்னும்தேவதை; ஸூர்யன்என்னவும் ஆதியில் இருப்பவர் என்னவுமாம்.

ஆதித்யவஸு - அதிதிபுத்ராகிய வஸுஎன்பவராயிருபபவர்; ப்ரகாசிக்குமசூரியனுயிருப்பவர். என்னவுமாம்.

ஆதேசர் - உபதேசமாயிருப்பவர்.

ஆயுதி - எல்லாஆயுதங்களேயும்தரிப்பவர்; நன்முகயுத்தம்செய்பவர். 'தமக்கேயுரிய சூலாயுதத்தைததரித்தவர்' என்பது பழையவுரை.

ஆயுஸ் - ஆயுளாயிருப்பவர்.

ஆர்த்ரசர்மாம்பராவ்ருதர் - ரக்ததிலுல்நனைந்த யானைத்தோலேஆடையாகவுடையவர்.

ஆரோஹணர் - பக்தர்களே ஏறச்செய்பவர.

ஆவர்த்தமாநேப்போவபு - ஸ்ம்ஸாரத்தில் பலமுறைதிரும்புவோர்க்குச் சரீரத்தையளிப்பவர்.

ஆவேதநீயர் - குருவினுல்உபதேசிக்கப்படத்தக்கவர்.

ஆஷாடர் - எல்லாவற்றையும் பொறுக்கும்சக்தியுள்ளவர்.

இதிஹாஸர் - பாரதமுதலிய இதிஹாஸமாயிருப்பவர்.

ஈ - லக்ஷ்மியாயிருப்பவர்.

ஈச்வரர் - வ்யாபிப்பவர்.

ஈசாநர் - எல்லாவற்றையும் நடத்துகிறவர்.

ஈட்யர் - துதிக்கத்தக்கவர்.

உக்ரதேஜஸ் - உக்ரமான தேஜஸையுடையவர்.

உக்ரர் - எல்லாவற்றையும் விழுங்குகிறவர்.

உத்பித் – அவித்தையைப்பிளந்துகொண்டு ஆவிர்ப்பவிப்பவர்.

உத்ஸங்கர் - பற்றற்றவர்.

உதக்ரர் - உற்றதியான ரூபமுள்ளவர்.

உன்மத்தவேஷப்ரச்சந்நர் - பித்தன்வேஷத்தினால் தம்மைமறைத்திருப்பவர்.

உன்மாதர் மோஹிக்கச்செய்கிறவர்

உபகாரர் - உபகாரம் செய்பவர்.

உபசாந்தா - தம் ஸாமாத்தியத்தை வெளிக்குக்காட்டாதவர்.

உபதேசகரர் - உபதேசம் செய்பவர்.

உமாகாந்தர் - உமாதேவியினால் விரும்பப்பட்டவர்.

உமாதவர் - உமையின் கணவர்.

உமாபதி - பார்வதிக்குக் கணவர்.

உமாபதி-பார்வதிக்குநாதர் பிரம்மவித்தைக்கு அதிபதி என்னவுமாம்.

உஷ்ணீஷி - கிரீடமுள்ளவர்.

உஷங்கு - தஹிக்கும் கிரணங்களையுடையவர்.

ஊர்த்வகாத்மா - ப்ரகிருதிமண்டலத்துக்கு மேற்போனஸ்வரூபத்தையுடையவர்.

ஊர்த்வசாயி - அண்ணாந்து படுத்திருப்பவர்.

ஊர்த்வரேதஸ் - மேல்நோக்கிய ரேதஸையுடையவர் ; ஜிதேந்திரியர்.

ஊர்த்வரேதஸ் - எல்லாருக்கும் மேற்பட்ட பிரம்மாதிகளைச் சிருஷ்டி செய்கிறவர்.

ஊர்த்வலிங்கர் - மேல்நோக்கிய குறியையுடையவர்.

ஊர்த்வஸம்ஹாரகர்-மிக்க வலிமையுள்ளவர் ; உயரமானதேகமுள்ளவர்.

க்ரஹபதி - எல்லாக்ரஹங்களுக்குந் தலைவர் ; 'அங்காரகன்' என்பது பழையவுரை.

க்ரஹர்-எல்லாவற்றையும் க்ரஹிப்பவர்; 'ராகு' என்பது பழையவுரை.

க்ராமர் - ஜனச்சேர்க்கையாயிருப்பவர்.

க்ரியாவஸ்தர் - யாகமுதலிய க்ரியைகளில் இருப்பவர்.

க்ருஷ்ணபிங்களர் - கரியநிறமும் சிவப்பு நிறமுமுள்ளவர் ; 'ஹரிஹர ரூபி' என்பது பழையவுரை.

க்ருஷ்ணர் - ஸதானந்தமாயிருப்பவர் ; 'க்ருஷ்ணனாக அவதரித்தவர்' என்பது பழையவுரை.

க்ருஷ்ணவர்ணர் - கறுத்தவர்ணமுடையவர். விஷ்ணுரூபி என்பது.

கஹர் - ஹ்ருதயாகாசத்திலிருப்பவர்.

ககுபர் - திசைகளாயிருப்பவர்.

கசரர் - ஹ்ருதயத்துள்ளிருக்கும் வெளியாகிய தகராகாசத்தில் வஸிப்பவர்.

கட்கி - கத்தியைத்தரிப்பவர்.

கண்டலி - மேடுகளிலிருப்பவர்.

கணகர்த்தா - ப்ரமதகணங்களையுண்டுபண்ணுகிறவர்.

கணகாரர் - பாணன்முதலியபக்தர்களைத் தம் கணங்களாகச்செய்பவர்

கணபதி - ப்ரமதகணங்களுக்கு ஈசுவரர்.

கணர் - யாவராலும் எண்ணப்படுகிறவர் ; தத்வத்தைதாகுதியானவர்.

கணர் - ப்ரமதகணமாயிருப்பவர்.

கதாகதர் - போய்வந்துகொண்டிருப்பவர் ; அந்தர்த்தானமும் ப்ரத்யக்ஷமுமாவரென்பது ; 'ஸம்ஸாரரூபி' என்பது பழையவுரை.

கதி - யாவராலும் அடையப்படுகிறவர் ; 'முக்தர்களால் அடையப்படுபவர்' என்பது பழையவுரை.

கதி - யாவருக்கும் சாதகமாயிருப்பவர்.

கந்ததாரி - வாஸனையைத் தரிப்பவர்.

கந்தபாலீபகவாந் - ப்ரளயகாலத்தில் கர்மவாஸனைகளைக் காப்பாற்றும் ஈசுவரர்.

கந்தர்வர் - சித்ரரதன்முதலிய கந்தர்வராயிருப்பவர்.

கநகர் - பொன்னுயிருப்பவர்.

கநிஷ்டர் - மிகச்சிறியவர் ; சூக்ஷ்மரூபியென்பது ; 'அங்கிரஸின் புத்ரர்களில் கநிஷ்டரான வாமனர்' என்பது பழையவுரை.

கபர்தி - சடைமுடியையுடையவர்

கபஸ்தி - சூரியனுக்குக் கிரணமாயிருப்பவர்.

கபாலவாந் - ப்ரம்மகபாலத்தைஏந்துபவர்.

கபிசர் - பொன்னிறமாயிருப்பவர்.

கபிலர் - கபிலவர்ணமாயிருப்பவர் ; செம்மட்டைவர்ணமாயிருப்பவர்.

கம்பீரகோஷர் - பெரியவாத்யமுழக்கங்களுள்ளவர்.

கம்பீரபலவாஹநர் - அயலாரால் அசைக்கக்கூடாதவண்மையுள்ள வ்ருஷபவாகணமுள்ளவர்.

கம்பீரர் - அறிவுக்கெட்டாதவர்.

கமண்டலுதரர் - கமண்டலு என்னும் பாத்ரத்தைத்தரிப்பவர்.

கர்ணிகாரமஹாஸ்ரக்வீ - சிறந்தகொன்றைப்பூமாலையையணிந்தவர்.

கர்த்தா - எல்லாவற்றையுமுண்டாக்கினவர்.

கர்மகாலவித் - கர்மங்களின்காலங்களையறிந்திருப்பவர்.

கர்மஸர்வபந்தவிமோசகர் - கர்மங்களாலுண்டான பந்தங்களெல்லாவற்றையும் விடுவிப்பவர்.

கரஸ்தாலி - கையையேபாத்ரமாகவுடையவர்.

கல்பர் - கல்பஸ்ரீத்ரமாயிருப்பவர் ; 168 - ஆம் பக்கம் பார்க்க.

கலி - நெற்களத்துக்குப் பதி ; க்ஷேத்ராதிபதி.

கலி - யுத்தரூபியாயிருப்பவர்.

கலி - கலியாயிருப்பவர் ; 'மஹாமோஹத்தின்கார்யமான காமக்ரோதமுதலியவையாயிருப்பவர்' என்பது பழையவுரை.

கலே - கலியென்னும் காலத்தின் சிறியபிரிவாயிருப்பவர்.

கவாம்பதி - இந்த்ரியங்களை நடத்துகிறவர்.

கஜஹா - யானையாகவந்த அஸுரனைக்கொன்றவர்.

காஞ்சநச்சவி - பொன்னிறமுள்ளவர்.

காந்தர் - ஆனந்தத்தின் எல்லையாயிருப்பவர்.

காந்தாரர் - பூமியைத்தரிப்பவர் ; 'காந்தாரமென்னும் ஸ்வரமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

காபாலி - கபாலமுள்ளவர் ; 'ப்ரம்மாண்டத்திற்கு அதிபதி' என்பது பழையவுரை.

காமகாசகர் - மன்மதனையழித்தவர்.

காமர் - எல்லாராலும் விரும்பப்படுகிறவர் ; மன்மதனைப்போல அழகுள்ளவர்.

காமர் - விரும்பப்படும் சப்தாதிவிஷயமாயிருப்பவர்.

காலகடங்கடர் - யமனுடையஆவரணமாகிய மாயையைமூடுகிறவர்.

காலபூஜிதர் - யமனால் பூஜிக்கப்பெற்றவர்.

காலயோகி - காலத்தைச்சேர்ப்பிப்பவர்.

காலர் - காலமாயிருப்பவர் ; யமன், அல்லது எல்லாவற்றையும் நடத்துகிறவர்.

காலர் - புண்யபாபங்களின் பலனைச்செய்பவர் ; 'பலனைக் கொடுப்பதற்காகி எல்லாப்ராணிகளின் புண்யபாபங்களையும் அறியும் சித்ரகுப்தனுயிருப்பவர்' என்பது பழையவுரை.

காலர் - கலஜ்ஞானங்களுக்கு இருப்பிடமானவர்.

காலர் - காலமாயிருப்பவர் ; 'பிறப்புஇறப்புக்களின் பெருக்காயிருப்பவர்' என்பது பழையவுரை.

காஷ்டை-காஷ்டையென்னும்காலத்தின் ஒருசிறியபிரிவாயிருப்பவர்.

காஹலி - காஹலவாத்யமுள்ளவர்.

கிரிசயர் - கைலாசத்தின்மேலிருப்பவர்.

கிரிஸாதகர் - மேருமலையை வில்லென்னும்கருவியாகவுடையவர்.
குண்டி - கமண்டலுவுள்ளவர் ; 171 - ஆம் பக்கம் பார்க்க.
குணபுத்தி - குணங்களையறிகிறவர்.
குணகரர் - குணங்களுக்கெல்லாம்இருப்பிடமானவர்.
குணதிகர் - குணங்கள் மிகுதியாக உள்ளவர்.
குணௌஷதர் - குணங்களை விருத்திசெய்கிறவர்.
குரு - ஆசாரியர்.
குருகர்த்தா - குருக்ஷேத்ரமென்று சொல்லப்பட்ட கர்மஸ்தானத்தை யும் உபாஸநஸ்தானத்தையும் செய்தவர்.
குருபூதர் - கர்மஸ்தானம் உபாஸநஸ்தானம் இரண்டுமாயிருப்பவர்.
குருவாஸி - கர்மஸ்தானம் உபாஸநஸ்தானம் இரண்டிலும் வஸிப்பவர்.
குஹ்யர் - மறைந்திருப்பவர் ; 'உபநிஷத்தாயிருப்பவர்' என்பது பழைய வுரை.
குஹர் - ஸுப்ரம்மண்யர்.
குஹர் - மறைந்திருப்பவர் ; 'குமாரர்' என்பது பழையவுரை.
குஹாவாஸி - யோகியாயிருப்பவர் ; அல்லது ஹ்ருதயகுகையிலிருப் பவர்.
கூபர் - பூமியைக்காப்பவர். 171 - ஆம் பக்கம் பார்க்க.
கூலகர்த்தா - தர்மவ்யவஸ்தையாகிய கரையையுண்டுபண்ணுகிறவர். 'புஷ்கர முதலிய மஹாதடாகங்களைச்செய்தவர்' என்பது பழைய வுரை.
கூலஹாரி - நீர்ப்பெருக்கு வடிவமாயிருந்து கரையையிடிப்பவர்.
கேசரர் - ஆகாயத்திலிருப்பவர் ; தமக்கு ஓர் ஆதாரமும் வேண்டா தவர் என்பது. 170 - ஆம் பக்கம் பார்க்க.
கேது - கொடிபோல் எங்கும் விளங்குகிறவர்.
கேதுமாலி - கொடியினால் சோபிப்பவர்.
கைலாஸகிரிவாஸி - கைலாஸமலையிலிருப்பவர்.
கோசர்மவஸநர் - மாட்டுத்தோலை ஆடையாக உடுத்தவர்.
கோசரர் - இந்த்ரியங்களிலிருப்பவர்.
கோபதி - ரிஷிகளுக்கு அதிபதி.
கோபாலி - இந்த்ரியங்களைக் காப்பவர்.
கோரதபஸ் - ஸம்ஹாரகாலத்தில் உக்ரமான ஆலோசனையுள்ளவர்.
கோரர் - உக்ரமாயிருப்பவர்.
க்லேதமர் - ந்யாயசாஸ்த்ரஞ்செய்தவர்.
ச்மசாநபூத் - ச்மசாநத்தையடைந்திருப்பவர்.

சுமசானவாஸி - சுமசானத்தில்வஸிப்பவர்; 'காசியில்' என்பது பழையவுரை.

சுருங்கப்ரியர் - கைலைமலைச்சிகரத்தில் பிரியமுள்ளவர்.

சுருங்கி - உயர்வுள்ளவர்; 'கொம்புள்ள வ்ருஷபமுதலியவையாயிருப்பவர்' என்பது பழையவுரை.

சுவேதபிங்களர் - வெளுப்பும் சிவப்புமான நிறங்களுடையவர்; 'அர்த்தநாரீசுவரரூபி' என்பது பழையவுரை.

சுசுரர் - சுகத்தியுள்ளவர்.

சுகர் - இந்திரன்.

சுங்கரர் - சுகத்தைக்கொடுப்பவர்.

சுங்கரர் - தாருகாவனவாஸிகளுக்குச் சுகத்தைச் செய்தவர்.

சுங்கரர் - சுகத்தைக் கையில்வைத்திருப்பவர்; 'சுந்தேஹங்களையறுப்பவர்' என்பது பழையவுரை.

சுசிஹரஸ்லோசனர் - கெட்டவழிபோகிறவர்களையழிக்கும் அழகான கண்களையுடையவர்; சுந்திரஸூர்யர்களே அழகியகண்களாகவுடையவர்; 'சிவனுடைய அழகானகண்ணையே சந்த்ரனாயிருப்பவர்' என்பது பழையவுரை; 171 - ஆம் பக்கம் பார்க்க.

சுத்ரர் - குடையாயிருப்பவர். தாபத்தைநிவிருத்திசெய்பவரென்பது.

சுத்ருஹா - சத்ருக்களைக் கொல்லுகிறவர்.

சுதக்நி - சக்தியாயுதமுள்ளவர்.

சுதக்நீபாசசக்திமாந் - பிரங்கி, கயிறு, வேல் முதலிய ஆயுதங்களையுடையவர்.

சுதம் - ஏழிலைம்பாலைமரமாயிருப்பவர்.

சுதஜிஹ்வர் - நூறுநாக்களையுடையவர்.

சுதுர்முகர் - நான்குமுகங்களையுடையவர்.

சுதுஷ்பதர் - நான்குவழிகளையுடையவர். விச்வர், தைஜஸர், பிராஜ்ஞர், சிவன்என்னும் நான்குவழிகளால் உபாஸிக்கப்படுகிறவர்; அல்லது ஞானம், யோகம், சரியை, கிரியை என்னும் நான்கு வழிகளையுடையவர்.

சுந்த்ரர் - சுந்தோஷப்படுத்துகிறவர்.

சுந்த்ரவக்த்ரர் - மதிபோன்ற முகமுடையவர்.

சுந்தநம் - சந்தனமரமாயிருப்பவர்.

சுந்தநி - சந்தனம் பூசிக்கொண்டவர்.

சுந்தோவ்யாகரணேத்தரர் - வேதங்களுக்கும் வேதாங்கங்களுக்கும் மேற்பட்டவர். 170 - ஆம் பக்கம் பார்க்க.

சஸி - மெதுவாகவிருப்பவர்

சமூஸ்தம்பகர் - அஸுரஸேனைகளை நிறுத்துகிறவர்.

சர்மி - புலித்தோலையும் யானைத்தோலையும் உடுத்தவர்.

சர்வர் - ஹிம்ஸிப்பவர் ; தாருகாவனமுனிவரை மயங்கச்செய்தவர்.

சரண்யர் - காப்பவர்.

சரர் - சிதறஅடிப்பவர்; 'பாணமாயிருப்பவர்' என்பது பழையஉரை.

சராசராத்மா - ஜங்கமமும் ஸ்தாவரமுமாயிருப்பவர் ; இங்கு, 'ரகரத்துக்கும் ளகரத்துக்கும் பேதமில்லை' என்றுகொண்டு, திரும்பிவருவதும், திரும்பிவராததுமாகிய அர்ச்சிராதி மார்க்கமும் தூமாதிமார்க்கமுமாயிருப்பவர்' என்பது பழையஉரை.

சலர் - ஓரிடத்திலும் நில்லாதவர் ; நிலையாக க்ரஹிக்கக்கூடாதவரென்பது.

சாச்வதர் - நித்யர்.

சாருவிங்கர் - அழகான ரூபத்தையுடையவர்.

சிகண்டி - ஜடைமுடியையுடையவர்.

சிஷி - சிகையுள்ளவர்; 'குடுமியுள்ளக்ருஹஸ்தர்' என்பது பழையவுரை.

சிரோஹாரி - பிரம்மாவின்தலையையறுத்தவர்.

சிவர் - பரிசுத்தர்.

சீரவாஸஸ் - மரவுரியைத்தரித்திருப்பவர்.

சீலதாரி - நல்லொழுக்கத்தைக்காப்பவர்.

சுக்லர் - சுத்தர்.

சுக்லர் - வெண்ணிறமாயிருப்பவர்.

சுசி - பரிசுத்தர்.

சுசி - சுத்தர் ; ப்ரக்ருதியிலிருந்து விலகியிருப்பவரென்பது.

சுத்தர் - குற்றமற்றவர்.

சுத்தாத்மா - ப்ரிசுத்தசித்தமுள்ளவர்.

சுபாக்ஷர் - அனுக்ரஹத்தினால் சிறந்தகண்ணுள்ளவர்.

சேஷிதாரர் - செவ்வையாக அறிகிறவர்.

சோபநர் - மங்களகரர்.

சோபநர் - கல்யாணமாயிருப்பவர்

த்ராஸநர் - பயப்படுத்துகிறவர்.

த்ரிககுன்மந்த்ரர் - பீஜம், சக்தி, கீலகம் என்னும் மூன்று முக்ய அம்சங்களையுடைய மந்த்ரமாயிருப்பவர்.

த்ரிகாலத்ருக் - இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகிய மூக்காலங்களையும் தரிப்பவர்.

த்ரிசங்கு - லத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களையும் ஆணி கள்போல ஆதாரமாகவுடையவர்.

த்ரிசுக்லர் - மனம்வாக்கு காயம் மூன்றும் சுத்தமாயிருப்பவர்.

த்ரிதசர்-ஜநநம் மரணம் வாழ்க்கைஆகிய மூன்றுதசைகளையும் பிராணி களுக்குக் கொடுப்பவர்.

த்ரியக்ஷர் - முக்கண்ணர்.

த்ரியுகர் - (மூவிரண்டு,) ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறுகுணங்களுள்ளவர்; 'கலிதவிரமற்றமூன்று யுகங்களாயிருப்பவர்' என்பது பழையவுரை.

த்ரிலோசநர் - முக்கண்ணர்.

த்ரிவிக்ரமர் - மூவுலகங்களையும் வ்யாபித்திருப்பவர்; 'த்ரிவிக்ரமராயிருப்பவர்' என்பது பழையவுரை.

த்ரிவிஷ்டபம் - ஸ்வர்க்கலோபி. 'ஸ்வர்க்கஸாதநமானதர்மம்' என்பது பழையஉரை.

த்ரிஜடி - மூன்றுஜடைகளையுடையவர்.

த்ருதிமாந் - தைரியமுள்ளவர்.

த்ருவர் - அசைவற்றவர்.

த்ருவர் - ஒரு நக்ஷத்திரம்.

த்ருவர் - சலியாதவர்.

த்வஷ்டா - விசுவகர்மா; எல்லாவற்றையும் குறைப்பவர்; அழிப்பவ ரென்னவுமாம்.

த்வாதசர் - பன்னிரண்டு ஸூர்ய்யர்களாயிருப்பவர்; 'மனிதர்களுக்குக் கர்ப்பவாஸமுதலுள்ள தசைகளில் பன்னிரண்டாவது தசையாகிய மோக்ஷஸ்தி' என்பது பழையவுரை.

தசபாஹு - பத்துக்கைகளையுடையவர்.

தண்டி - தடியுள்ளவர். 171 - ஆம் பக்கம் பார்க்க.

தந்வந்தரி - வைத்யசிரேஷ்டர்; பிறவிப்பிணிக்குச் சிகித்ஸைசெய்பவ ரென்பது.

தந்வி - வில்லையுடையவர்.

தபஸ்வி - தவமுள்ளவர்.

தபஸ்ஸக்தர் - தவத்திலிருப்பவர்.

தபோநிதி - ரிஷி.

தபோமயர் - தவமேபுருக்கொண்டவர்.

தம்பர் - சத்துருக்களை யடக்குகிறவர்.

தமநர் - துஷ்டர்களை யடக்குகிறவர்.

தர்ப்பசாரி - தர்ப்பங்களில் வைக்கப்பட்ட ஹவிஸ்ஸுகளைப்பக்ஷிப்பவர், அல்லது, தர்ப்பங்களில் ஸஞ்சரிப்பவர்; அவற்றைப் பரிசுத்தஞ் செய்பவர் என்பது.

தர்ப்பணர் - கண்ணுடிபோலிருப்பவர்.

தர்மஸாதாரணவரர் - புண்ணியத்திற்குத்தக்கபயனையிருப்பவர்.

தர்ஷணத்மா - பிறரைப்பயப்படுத்துகிறவர்.

தரங்கவித் - அலைகளையுடையவர்; இங்கு, ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்கள் அலைகள் என்பன; 'விஷயசுகங்களையடைபவர்' என்பது பழையஉரை.

தரர் - ஒருவஸு.

தரு - ஆபத்தைத்தாண்டுவிப்பவர்.

தரு - கல்பகமுதலிய மரமாயிருப்பவர்.

தரோத்தமர் - எல்லாவற்றையுந்தாங்குகிற ஆதிசேஷன்முதலானவர்களுக்கும் மேலானவர்.

தலஸ்தாலர் - கைத்தாளமாயிருப்பவர். 171 - ஆம் பக்கம் பார்க்க.

தக்ஷயாகாபஹாரி - தக்ஷருடையயாகத்தையழித்தவர்.

தக்ஷர் - காரியங்களில்திறமையுள்ளவர்.

தக்ஷிணர் - ஸமர்த்தர்.

தாதா - ப்ரம்மா.

தாம்ரோஷ்டர் - சிவந்தஉதடுள்ளவர்.

தார்க்ஷ்யர் - கருடர்.

தாரணர் - ஸம்ஸாரத்தைத்தாண்டுவிப்பவர்.

தாலர் - ஸம்ஸாரக்கடலின் தலம்என்றுசொல்லப்பட்ட ஆழத்தையறிந்தவர்; 'சுத்தப்ரம்மத்தையறிந்தவர்' என்பது பழையஉரை.

தாளி - தாளமுள்ளவர்.

திக்மதேஜாஸ்வயம்புவர் - ப்ரம்மாவுக்குந் தாங்கமுடியாத பராக்ரமமுடையவர்.

திக்மமந்யு - உக்ரமான கோபமுள்ளவராயிருப்பவர்.

திக்வாஸஸ் - திசைகளே வாடையாயுடுத்துகிறவர்.

திவிஸ்பர்வணேதேவர் - தேவலோகத்திலிருக்கும் இந்த்ரனுக்கும் பூஜ்யர்.

தீநஸாதகர் - ஏழைகளுக்கு உபகாரம்செய்பவர்.

தீர்க்கர் - நெடியவர்.

தீர்த்ததேவர் - பரிசுத்ததேவதை.

தீக்ஷ்ணதாபர் - உக்ரமானதாபத்தைச்செய்யும் அக்நியாயிருப்பவர்.
தும்பவீணர் - சுரைக்காய்கட்டின வீணையுடைவர் ; இதனாலேதான் அதனை ருத்ரவீணையென்பது.
தூர்வாஸர் - ஆடையில்லாதவர்.
தூர்வாஸர் - தூர்வாஸமுனிவராக அவதரித்தவர்.
தூமகேதநர் - புகைக்கொடியுள்ள அக்நியாயிருப்பவர்.
தூமகேது - வால்நக்ஷத்ரமாயிருப்பவர்.
தேவதாத்மா - தேவர்களுக்கு அந்தர்யாமி.
தேவதேவர் - தேவர்க்குந்தேவர்.
தேவர் - ஜயிப்பவர் ; விளங்குகிறவர்என்னவுமாம்.
தேவர் - ஜயிக்கஎண்ணமுள்ளவர் ; காந்தியுள்ளவரென்றுமாம்.
தேவரிஷி - தேவதையாகவும் ரிஷியாகவுமிருப்பவர் ; 'நாரதர்முதலியோராயிருப்பவர்' என்பது பழையஉரை.
தேவலிங்கம் - தேவஶ்ரேஷ்டர்.
தேவாதிதேவர் - இந்த்ரியங்களுக்குஎட்டாமல் விளங்குபவர்.
தேவாதிபதி - தேவர்களுக்குஅதிபதி.
தேவாஸுரகணக்ரணி - தேவாஸுரக்கூட்டங்களை முன்னுக்குக் கொண்டுபோகிறவர்; 'கார்த்திகேயர், நாரதமுதலியவராயிருப்பவர்' என்பது பழையஉரை.
தேவாஸுரகணச்ரயர் - தேவாஸுரக்கூட்டங்களினால் அடையப்படுகிறவர்.
தேவாஸுரகணத்யக்ஷர் - இந்த்ரன் விரோசனன்முதலிய தேவாஸுரக்கூட்டங்களுக்குத் தலைவர்.
தேவாஸுரகுரு - தேவாஸுரரால் பூஜிக்கப்பெற்றவர் ; 'குரு சுக்ரர்களாயிருப்பவர்' என்பது பழையஉரை.
தேவாஸுரநமஸ்க்ருதர் - தேவாஸுரர்களால் நமஸ்கரிக்கப்பட்டவர்.
தேவாஸுரபதி - தேவருக்கும் அஸுரருக்கும் தலைவர்.
தேவாஸுரபராயணர்-தேவாஸுரர்க்குமுக்யமானஆதரவாயிருப்பவர்.
தேவாஸுரமஹாமாத்ரர் - தேவாஸுரர்களுக்கு முக்யமந்த்ரியாயிருப்பவர்.
தேவாஸுரமஹேச்வரர் - தேவாஸுரர்களை நியமிப்பவர்களையும் நியமிப்பவர்.
தேவாஸுரவரப்ரதர் - பிரம்மா ருத்ரர்முதலியோராயிருந்து தேவாஸுரருக்கு வரமளிப்பவர்.
தேவாஸுரவிநிர்மாதா - தேவாசுரரைப்படைப்பவர்.

தேவாஸுரேச்வரர் - தேவாஸுரர்களை நியமிப்பவர்.

தேவேந்த்ரர் - தேவர்களுக்கும்ஈசுவரர்.

தேஜஸ் - ஒளியாயிருப்பவர்.

தேஜஸ்கரர் - ஸூர்யன்முதலியவற்றிற்கும் ஒளியையுண்டுபண்பவர். 167 - ஆம் பக்கம்பார்க்க.

தேஜோபஹாரி - பிறர்சக்திகளையபஹரிப்பவர்.

தேஹர் - விருத்தியாகிறவர்.

தைத்யஹா - அஸுரர்களைக்கொன்றவர்.

தோரணர் - மூக்கிக்கு வாயிலாயிருப்பவர்.

ந்யக்ரோதர் - ஆலமரத்தின்கீழ் தக்ஷிணமூர்த்தியாயிருப்பவர்.

ந்யக்ரோதரூபர் - கீழேவளர்வதாகிய ஸம்ஸாரவ்ருக்ஷமாயிருப்பவர்.

ந்யாயநிர்வபணர் - நியாயசாஸ்த்ரத்தை உலகத்திற்குக்கொடுத்தவர்; 'தர்மப்ரகாரம் தானம்செய்பவர்' என்பது பழையஉரை.

ந்ருத்யப்ரியர் - நர்த்தனத்தில் விருப்பமுள்ளவர்.

நக்தஞ்சரர் - இரவில் ஸஞ்சரிக்கும்ராக்ஷஸர்முதலியவராயிருப்பவர்.

நக்தர் - இரவாயிருப்பவர்; 'மஹாமோஹமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

நந்தகர் - சந்தோஷப்படுத்துகிறவர்.

நந்தி - தாமே நந்தியாகவுமிருப்பவர்.

நந்தி - ஸம்பத்தாயிருப்பவர்.

நந்திகரர் - பூர்த்திசெய்கிறவர்.

நந்திகரர் - ஸம்பத்தைச்செய்பவர்.

நந்திவர்த்தநர் - பகைவன்ஸந்தோஷத்தையழிப்பவர்.

நந்தீச்வரர் - நந்தியென்னும்வாஹநத்துக்கு ஈசுவரர்.

நபர் - ஆகாயம்போலப் பற்றற்றிருப்பவர்; அல்லது, புலன்களுக்கு விளங்காதவர்.

நபஸ்தலர் - ஆகாயத்தையே இடமாகவுடையவர்.

நர்த்தகர் - எல்லாவற்றையும் ஆட்டிவைப்பவர்.

நரர் - எல்லாவற்றையும் நடத்துகிறவர்; ஜீவரூபியென்னவுமாம்; 'பிரம்மாண்டத்தைநடத்தும் விராட்புருஷர்' என்பது பழையவுரை.

நரர் - ஒன்றையுமடையாதவர்; பற்றற்றவர்என்பது.

நரர்ஷபர் - மனிதசிரேஷ்டர்.

நவசக்ராங்கர் - புதியசக்ரங்களாகிய சூரியசந்த்ரர்களைத் திரிபுரஸம்ஹாரத்தில் தேருக்கு அங்கங்களாகவுடையவர்; சக்கரவடிவுள்ளான ஒன்பதுத்ரவ்யங்களையும் அங்கத்தில்உடையவர் என்னவுமாம்; 'புதுஹம்ஸமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

நக்ஷத்ரவிக்ரஹமதி - நக்ஷத்ரம்போலப்ரகாசிக்கும் தேகமும் புத்தியு முடையவர்.

நக்ஷத்ரஸாதகர் - நக்ஷத்ரங்களைப்படைத்தவர்.

நாபி - உலகத்திற்கு ஆதாரமாயிருப்பவர்.

நிக்ரஹர் - தண்டிப்பவர்.

நிசாகரர் - சாந்த்ரவ்யாகரணம்செய்த சந்திராசாரியராயிருப்பவர்.

நிசாசரர் - இரவாகிய அவித்தையைக்கொண்டு ப்ரவ்ருத்திப்பவர்.

நிசாசரர் - இரவில் ஸஞ்சரிப்பவர்.

நிசாசாரி - ப்ரளயமென்னுமாத்ரியில் ஸஞ்சரிப்பவர்.

நிசாலயர் - ராத்ரிஎன்றுசொல்லப்பட்ட அவித்தையை லயிக்கச்செய் கிறவர்.

நித்யகர்த்தர் - எப்போதும் நர்த்தனம்செய்பவர்.

நித்யம் ஆச்ரமபூஜிதர் - எப்போதும் எல்லாஆச்ரமங்களாலும் பூஜிக் கப்பெற்றவர்.

நித்யம்வர்ச்சஸ்வீ - எப்போதும் ஒளியுள்ளவர்.

நித்யர் - அழிவில்லாதவர்.

நித்யாத்மஸஹாயர் - ஆத்மாக்களுக்கு என்றும்துணையானவர்.

நிதி - அடைந்தவர்களுக்குப் புதையல்போன்றவர்.

நிதி - எல்லாஒளிக்கும் இருப்பிடமானவர்; 167 - ஆம் பக்கம்பார்க்க.

நிபாதி - தேகத்திற்குள் ப்ரவேசிப்பவர்.

நிமித்தர் - காரணமாயிருப்பவர்.

நிமித்தஸ்தர் - காரணங்களிலிருப்பவர்.

நியதர் - இந்த்ரியங்களைஜயித்தவர்.

நியமர் - எல்லாவற்றையும் நியமிப்பவர்; 'நியமத்தால் அடையக்கூடி யவர்' என்பது பழையவுரை.

நியமாச்ரிதர் - எல்லாத்தவங்களினாலும் அடையப்பட்டவர்.

நியமேந்த்ரியவர்த்தகர் - தவத்தினால் ஐம்புலன்களையும் அறுப்பவர்.

நிர்வாணம் - மோக்ஷரூபி.

நிர்ஜீவர் - ஜடப்பொருளாயிருப்பவர்.

நிரவக்ரஹர் - தடையில்லாதவர்.

நிராமயர் - குற்றமற்றவர்.

நிலயர் - எல்லாப்ராணிகளுக்கும் இருப்பிடமானவர்.

நிவ்ருத்தி - ஒழிவாயிருப்பவர்.

நிவேதகர் - எல்லாவற்றையுமறிவிப்பவர்.

நிஜஸர்க்கர் - தமதுஸ்ருஷ்டியாயிருப்பவர்; ஸ்வயம்புஎன்பது.

நிஹந்தா - கொல்லுகிறவர்.

நீதி - ராஜநீதியாயிருப்பவர்.

நீரஜர் - ரஜோகுணத்தை நிவ்ருத்திக்கச்செய்கிறவர்; ப்ரளயஜலத்திலிருந்துஉண்டானவரென்னவுமாம்.

நீலகண்டர் - கறுத்தகண்டமுடையவர்.

நீலமௌலி - தலையில் இந்த்ரநீலக்கல் கிரீடம்தரித்தவர்.

நீலர் - கறுத்தநிறமுள்ளவர்; 'மரகதவர்ணமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

நைகஸாநுசரர் - அநேகமலைச்சிகரங்களில சஞ்சரிப்பவர்.

நைகாத்மா - அநேகதேஹங்களையெடுப்பவர்.

ப்ரக்ருஷ்டாரி - காமக்ரோதாதிகளையசத்ருக்களை மிகவொடுக்குபவர்.

ப்ரகாசர் - வெளிப்படையாயிருப்பவர்; 'கர்மகாண்டமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

ப்ரசாந்தாத்மா - அலைவற்றகடல்போல அடங்கியிருப்பவர்.

ப்ரத்யயர் - ஞானமாயிருப்பவர்.

ப்ரதாநத்ருத் - ப்ரக்ருதியைத்தரிப்பவர்.

ப்ரபாவர் - ஒருவஸு.

ப்ரபாவாத்மா - சக்தியை உருவாகக்கொண்டவர்.

ப்ரபு - அந்தர்யாமி.

ப்ரபு - எல்லாவற்றையுமனுபவிப்பவர்.

ப்ரம்மக்ருத் - வேதங்களையுண்டுபண்ணினவர்.

ப்ரம்மகர்ப்பர் - பிரம்மாவைத் தம்கர்ப்பத்தில்உடையவர்; 'வேதத்தைக் கர்பத்தில்உடையவர்' என்பது பழையஉரை.

ப்ரம்மசாரி - பிரம்மத்தினிடத்திலிருப்பவர்.

ப்ரம்மதண்டவிநிர்மாதா - பிரம்மதண்டமென்னும் ஆயுதத்தைச்செய்பவர்; பிரம்மாவுக்குத் தண்டனைசெய்பவர் என்னவுமாம்.

ப்ரம்மலோகர் - பரப்ரம்மமாகப்பார்க்கப்படுகிறவர்; 'ஸத்யலோகம்' என்பது பழையஉரை.

ப்ரம்மவர்ச்சஸர் - பிராம்மணருக்குப் பிரம்மதேஜஸாயிருப்பவர்.

ப்ரம்மவித் - வேதமறிந்தவர்.

ப்ரம்மா - மிகப்பெரியவர்.

ப்ரம்மி - வேதமோதினவர்.

ப்ரமாணர் - மெய்யறிவிற்குக்காரணமாயிருப்பவர்.

ப்ரயதாத்மா - பரிசுத்தமனமுள்ளவர்.

ப்ரவ்ருத்தி - உலகமுடையாயிருப்பவர்.

ப்ரவரர் - சிரேஷ்டர்.

ப்ரவேசிநாம்குஹ்யாபாலர் - தம்மைத்தியானிப்பவர்களின் மனத்தைக் காப்பவர்; 'சரீரத்தைக்காப்பவர்' என்பது பழையவுரை.

ப்ரஜாத்வாரம் - ஸந்ததிக்குக்காரணமான ஆசை.

ப்ரஜாபதி - ஜனங்களுக்குஈசுவரர்.

ப்ரஜாபீஜம் - பிரஜைகளுக்குவித்தாயிருப்பவர்; மாயையுடன்சேர்ந்த சித்தாயிருப்பவர் என்பது.

ப்ரஸ்கந்தநர் - எல்லாரையும் நழுவச்செய்கிறவர்.

ப்ரஸங்கர் - அநுக்ரஹமுள்ளவர்.

ப்ரஸாதர் - அநுக்ரஹமாயிருப்பவர்.

ப்ரஸாதர் - அநுக்ரஹிப்பவர்.

ப்ரஸாதர் - ஆனந்தமயமானவர்.

ப்ராக் - முந்தினவர்.

ப்ராணதாரணர் - உயிரைநிறுத்துகிறவர்.

ப்ராம்மணர் - ப்ராம்மணப்ரியர்.

ப்ராஸாநாம்ப்ரபவர் - பிராஸங்கள்என்னும் ஆயுதங்கள் உண்டாகும் இடம்.

ப்ரியர் - இனியவர்.

ப்ரேதசாரி - ப்ரேதங்களுடன் ஸஞ்சரிப்பவர்.

பக்தாநாம்பரமாகதி - பக்தியுள்ளவர்களுக்குச் சிறந்தஆதரவு.

பகவான் - ஞானம் சக்தி பலம் ஐசுவரியம் வீர்யம் தேஜஸ்என்னும் ஆறுகுணங்களையும் உடையவர்.

பகஹாரி - ஐசுவரியத்தையழிப்பவர்; கொடுப்பவரென்றுமாம்.

பசுபதி - ஆத்மாக்களுக்குப்பதி.

பசுபதி - ஜீவன்களுக்குஸ்வாமி.

பட்டிசி - பட்டிசம்என்னும் ஆயுதம்உள்ளவர்.

படபாமுகர் - வடவாமுகமென்னும் அக்நிஸ்வரூபி.

பண்டிதர் - எல்லாந்தெரிந்தவர்.

பணவி - பணவவாத்யமுள்ளவர்.

பத்மகர்ப்பர் - பிரம்மதேவராயிருப்பவர்.

பத்மநாபர் - உலகத்திற்குக்காரணமான பத்மத்தை நாபியிலுடையவர்.

பத்மநாளாக்ஷர் - தாமரையின்காம்பைத் தமக்குமுன்னதாகவுடையவர்; பிரம்மதேவர், தாமிருக்குந்தாமரைமலரின் காம்புமுடிவைக் காணுவதற்கு அதிலிழிந்தும் அதைக்காணுமற்போனர்; அந்தக் காம்புக்கு முன்னிருப்பவராதலால் ப்ரம்மதேவரால்காணக்

கூடாதவர்என்பது; காமரைக்காம்பின்முனையினிருந்து பூக்கச் செய்பவர் என்னவுமாம்.

பதி - எல்லாவற்றிற்கும் ஸ்வாமி.

பந்தகர்த்தா - ஸம்ஸாரபந்தத்தையுண்டுபண்ணுகிறவர்.

பந்தநர் - ஸம்ஸாரபந்தமாயிருப்பவர்.

பப்ரு - கபிலநிறமுள்ளவர்; 'சனியாயிருப்பவர்' என்பது பழைய உரை.

பயோநிதி - கடலாயிருப்பவர்.

பர்யோநர: - நாற்புறமும் வியாபித்திருக்கும் ஸமஷ்டிஜீவனாயிருப்பவர்.

பரகதி - அடையப்படுவனவற்றுள் மேன்மையானவர்.

பரச்வதாயுதர் - கோடாலியை ஆயுதமாகவுடையவர்.

பரம்ப்ரம்ம - பரப்ரம்மமாயிருப்பவர்; 172 - ஆம் பக்கம்பார்க்க.

பரமந்தப: - சிறந்ததவமாயிருப்பவர்.

பரம்ம்ப்ரம்ம - பரப்ரம்மம்; 168 - ஆம் பக்கம்பார்க்க.

பரமாத்மா - அன்னமயம், ப்ராணமயம், மநோமயம், விஜ்ஞாநமயம், ஆனந்தமயம்என்னும் ஐந்துக்குமேல் ஆறுவதான சுத்தாநந்தமாயிருப்பவர்.

பரமோமந்த்ர: - சிறந்தஆலோசனையாயிருப்பவர்.

பரர் - முந்தினவர்.

பரிதீபதி - ஸேனைகளின்ஓரத்தைக்காப்பவர்; 170-ஆம் பக்கம்பார்க்க.

பலசாரி - ப்ரமதகணமாகிய ஸேனையுடன்சஞ்சரிப்பவர்; 'காட்டில் சஞ்சரிக்கும் வேடரூபமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

பலர் - சமர்த்தர்; 166 - ஆம் பக்கம்பார்க்க.

பலர் - பலத்தையுடையவர்.

பலரூபத்ருத் - பலராமரூபத்தைத்தரித்தவர்; பலத்தையும்அழகையும் தரித்தவர் என்னவுமாம்.

பலவத் - பலமுள்ளபொருள்.

பலவாந் - சாமர்த்தியமுள்ளவர்.

பலவீர: - தம்சக்தியினால் சத்ருக்களைஜயிக்கும்சூரர்.

பலஹா - இந்த்ரரூபியாகிப் பலாஸுரனைக்கொன்றவர்; அஸுரஸேனையைக்கொன்றவர் என்னவுமாம்.

பலி - பலமுள்ளவர்.

பவ: - உற்பத்திலயங்களுக்குக் காரணமாயிருப்பவர்.

பவ: - எல்லாப்ராணிகளுக்கும் உற்பத்திகாரணமானவர்.

பவித்ரர் - பரிசுத்தஞ்செய்கிறவர்; 'ஸம்ஸாரமென்னும் இடியிலிருந்து காப்பவர்', என்பது பழையவுரை.

பவித்ரர் - ஆத்மாக்களைச் சுத்தப்படுத்துகிறவர்.

பவித்ரர் - இடிபோன்றதுக்கங்களிலிருந்து காப்பவர்.

பஸ்மகோப்தா - திருநீற்றினால் உலகத்தைக்காப்பவர்.

பஸ்மசயர் - திருநீற்றில்படுத்திருப்பவர்.

பஸ்மபூதர் - தாமேநீறுகவுமிருப்பவர்.

பஹுகர்க்கசர் - ஸம்ஸாரத்தில் மிகக்கடினமாயிருப்பவர்.

பஹுதரர் - அநேகங்களைத்தரிப்பவர்.

பஹுதாக்ஷிதர் - தாருகாவனவாஸரிஷிகளால் மிகவும் ஸ்தித்திக்கப் பட்டவர்.

பஹுப்ரதர் - மிகுதியாகக்கொடுப்பவர்.

பஹுப்ரஸாதர் - மிக்கஅநுக்ரஹமுள்ளவர்.

பஹுபூதர் - தாமே அநேகஉருவங்களானவர்.

பஹுமாலர் - அநேகலீலைகளையுடையவர்.

பஹுரச்மி - அநேககிரணங்களையுடையவர்.

பஹுரூபர் - அநேகரூபங்களைத்தரிப்பவர்.

பஹுவித்யர் - அநேகவித்தைகளையுடையவர்.

பக்ஷம் - பக்ஷமென்னுங்காலத்தின் பிரிவாயிருப்பவர்.

பக்ஷரூபர் - ஸகாயமாயிருப்பவர்.

பக்ஷி - க

பாகதர் - மற்றத்தேவர்களுக்கு யஜ்ஞபாகத்தைப் பிரித்துக்கொடுப்பவர்.

பாகி - யஜ்ஞபாகமுள்ளவர்.

பாசர் - எல்லாவற்றையும் மாயையினால்கட்டுகிறவர்.

பாணஹஸ்தர் - கையில் அம்புவைத்திருப்பவர்.

பாதர் - எல்லாருமடையுமிடமானவர்.

பாது - ப்ரகாசிப்பவர்; 166 - ஆம் பக்கம்பார்க்க.

பாவர் - செய்கையாயிருப்பவர்.

பிதா - தந்தை.

பிதாமஹர் - கூடஸ்தர்; 'விஷ்ணுவுக்கும்பிதா' என்பது பழையவுரை.

பிதாமஹர் - தந்தைக்குத்தந்தை.

பிங்கு - அநுஸ்வாரமானவர்; அழிப்பவர்என்றுமாம்.

பிநாகத்ருத் - பிநாக்மென்னும்வில்லைத்தரிப்பவர்.

பிநாகவான் - பிநாகமென்னுந்தனுஸ்ஸையுடையவர்.

பிக்ஷு - பிரம்மசாரியாயிருப்பவர்; 'தண்டமுதலிய அடையாளங்களுள்ளஹம்ஸஸந்யாஸியாயிருப்பவர்' என்பது பழையஉரை.

பிக்ஷுரூபர் - பிக்ஷுயெடுப்பவனைப்போலிருப்பவர்; 'பரமஹம்ஸராயிருப்பவர்' என்பது பழையவுரை.

பீதாத்மா - பொன்னிறமுள்ளவர்.

பீஜகர்த்தா - காரணமாகியப்ரக்ருதியை ப்ரவ்ருத்திக்கச்செய்கிறவர்.

பீஜவாஹநர் - காரணங்களைவஹிப்பவர்.

பீஜாத்யக்ஷர் - தர்மாதர்மங்களுக்கும் ஈசுவரர்; காரணமாகியப்ரக்ருதிக்கும்ஈசுவரர்.

புண்யசஞ்சு - புண்யத்தினால் அறியப்படுகிறவர்

புராணர் - முதன்மையானவர்.

புஷ்கரஸ்தபதி - பிரம்மாண்டத்தைசெய்தசிற்பி.

பூதசாரி - பூதங்களுடன் ஸஞ்சரிப்பவர்.

பூதநிஷேவிதர் - ஸத்துக்களாலே ஸேவிக்கப்பட்டவர்.

பூதபதி - பூதங்களுக்குஈசுவரர்.

பூதபாவநர் - பஞ்சபூதங்களையும் உற்பத்திசெய்பவர்.

பூதபாவநர் - ப்ராணிகளையெலலாம்காப்பவர்; 'எல்லாப்ராணிகளுமாகமயங்குவதற்குஇடமானவர்' என்பது பழையஉரை.

பூதவாஹநஸாரதி - பூதங்களென்னும்வாஹநங்களுக்குச் சாரதியாயிருப்பவர்; 'ப்ராணிகளைநடத்துகிறவராகிய் பிரமமதேவரைச் சாரதியாகவுடையவர்' என்பது பழையவுரை.

பூதாலயர் - பஞ்சபூதங்களிலிருப்பவர்.

போஜநர் - எல்லாருக்கும்உணவையளிப்பவர்

ம்ருகபாணர்ப்பணர் - மான்வடிவமானயாகத்தின்மேல்பாணப்ரயோகம்செய்தவர்.

ம்ருகாலயர் - மாமிஸைவத்திருப்பவர்.

ம்ருது - கருணையுள்ளவர்.

மகரர்-முதலைரூபமானசிம்சுமாரசக்ரம் என்னும்காலசக்ரமாயிருப்பவர்.

மணிவித்தர் - காதில்ரத்நாபரணமணிந்தவர்.

மத்யமர் - நடுநிலைமையுடையவர்; பக்ஷபாதமில்லாதவரென்பது.

மதகர் - ஸந்தோஷிக்கச்செய்கிறவர்; 'மன்மதரூபி' என்பது பழையஉரை.

மதிமாந் - புத்தியுள்ளவர்.

மது - வஸந்தரூபியானவர்.

மதுகலோசநர் - தேன்போன்றசிவப்புவர்ணமானகண்களையுடையவர்.

மந்த்ரகாரா - மந்திரங்களையுணடுபண்ணினவர்.

மந்த்ரர் - தம்மைமந்த்ரியாளிப்பவரைக்காப்பவர்.

மந்த்ரர் - ப்ரணவமுதலியமந்திரமாயிருப்பவர்; 'இறந்தவரைப்பிழைப் பிக்கும் மந்த்ரமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

மந்த்ரவித் - மந்திரங்களையறிந்தவர்.

மந்தாநோபஹலோவாயு - ப்ரளயகாலத்தில உலகங்களைக்களைந்தெடுக் கும் பெருங்காற்று; தேகத்தில் வ்யாபித்து நரம்புகளைச்சீர்ப் படித்தும் பிராணவாயு என்னவுமாம்.

மநோவேகர் - மநோவேகமுள்ளவர்.

மநோஜவர் - மநோவேகமுள்ளவர்.

மஹரிஷி - பெரியஞானமுள்ளவர்; 'வஸிஷ்டர்முதலியவராயிருப்பவர்' என்பது பழையவுரை.

மஹாக்ரீவர் - பெருங்கழுத்தையுடையவர்.

மஹாக்ரோதர் - ஸம்ஹாரகாலத்தில் உக்ரமானகோபமுள்ளவர்.

மஹாகம்பு - சங்குவாத்தியத்தையுடையவர்; 'சங்குபோன்றகழுத்தை யுடையவர்' என்பது பழையவுரை.

மஹாகர்ணர் - பெரியகாதுகளையுடையவர்.

மஹாகர்த்தா - கர்த்தாவையும்படைத்தவர்.

மஹாகர்ப்பபராயணர் - சிறந்தகர்ப்பத்திற்குக் காரணமானவர்; ப்ரம் மாண்டத்திற்குள் எல்லாவற்றையும் உண்டாக்கினவர்என்பது.

மஹாகர்ப்பர் - ப்ரளயகாலத்தில் உலகம்அடங்கியிருப்பதனால் பெருங் கர்ப்பமுடையவர்; 'ப்ரம்மாமுதலானவர்களை வயிற்றில்வைத் திருப்பவர்' என்பது பழையவுரை.

மஹாகர்ப்பர் - விசாலமானஉள்பாகத்தையுடையவர்; எல்லாவற்றிற் கும்மேல் வ்யாபித்திருப்பவரென்பது.

மஹாகர்மா - ஸ்ருஷ்டிமுதலியபெருங்கார்யங்களைச்செய்கிறவர்.

மஹாகல்பர் - சிறந்தஆபரணங்களையுடையவர்.

மஹாகாயர் - விராட்என்னும்பெரியசரீரமுள்ளவர்.

மஹாகாயர் - பெரியசரீரமுடையவர்.

மஹாகாயர் - பெரியதேகமுடையவர்.

மஹாகீதர் - சிறந்தபாட்டையுடையவர்.

மஹாகேசர்-பெரியதலைமயிரினையுடையவர்; 169-ஆம் பக்கம்பார்க்க

மஹாகேது - சிறந்தவ்ருஷபக்கொடியையுடையவர்.

மஹாகோரர் - மிகஉக்ரமானவர்.

மஹாங்கர் - பெரியலிங்கத்தையுடையவர்.

மஹாத்மா - பெரியமனமுள்ளவர்.

மஹாத்மா - நிரம்பினரூபமுள்ளவர்.

மஹாதந்தர் - பெரியபற்கனையுடையவர்.

மஹாததி - சிறந்தவில்லியுடையவர்.

மஹாதபஸ் - உலகைப்படைக்கத்தக்கசிறந்தஆலோசனையுள்ளவர்.

மஹாதபஸ் - சிறந்ததவமுள்ளவர்.

மஹாதம்ஷ்ட்ரர் - நீண்டகோரப்பற்களையுடையவர்.

மஹாதம்ஷ்ட்ரர் - பெருங்கோரப்பற்களையுடையவர்.

மஹாதாது - சிறந்ததாதுக்களோடுகூடிய மேருமலையையுடையவர்.

மஹாதேவர் - தேவர்களுக்கும்தேவர்.

மஹாதேஜஸ் - பேரொளியுள்ளவர்

மஹாந் - பூஜ்யர்.

மஹாந் - சிறந்தவர்.

மஹாந் - மகத்என்னும் தத்வமாயிருப்பவர்.

மஹாந்தகர் - யமனுக்குயமன்.

மஹாந்ருத்யர் - சிறந்தநர்த்தனத்தையுடையவர்.

மஹாநகர் - பெரியநகங்களையுடையவர் ; 'நரஸிம்மமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

மஹாநகர் - பெரியவாயுள்ளவர்.

மஹாநாகஹநர் - பெரியயானையைக்கொன்றவர்.

மஹாநாதர் - பெரியசப்தமாயிருப்பவர் ; 'ஆகாசவ்யாபியான அநாஹதநாதமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

மஹாநாஸர் - பெரியமூக்குடையவர்.

மஹாநேத்ரர் - பெருங்கண்களுடையவர்.

மஹாப்ரஜாதர் - பெரிய அநுக்ரஹமுள்ளவர்.

மஹாபதர்-பெரியமார்க்கமாயிருப்பவர் ; எளிதில்முக்தியடையும்வழி.

மஹாபலர் - சிறந்தபராக்ரமமுள்ளவர்.

மஹாபலர் - சிறந்தபலமுள்ளவர்.

மஹாபாதர் - பெரியகால்களையுடையவர்.

மஹாபீஜர் - காரணத்திற்குங் காரணமானவர்.

மஹாமாத்ரர் - பெரியஅளவுடையவர்.

மஹாமாயர் - பெரியமாயையையுடையவர்.

மஹாமாலர் - சிறந்தபூமாலையையணிந்தவர்.

மஹாமுகர் - பெரியவாயையுடையவர்.

மஹாமுநி - பெரியரிஷி.

மஹாமூர்த்தா - பெருந்தலையையுடையவர்.

மஹாமேகநிவாஸி - ப்ரளயகாலமேகங்களில்வஸிப்பவர்.

மஹாயசஸ் - பெருங்கீர்த்தியுள்ளவர்.

மஹாயசஸ் - பெரும்புகழுள்ளவர்.

மஹாயுதர் - சிறந்தஆயுதமுடையவர்.

மஹார்ணவநிபாநவித் - மஹாப்ரளயகாலத்தில் பெருங்கடலையும் குடிப்பவர் ; அதாவது வற்றச்செய்பவர்.

மஹாரதர் - பெருந்தேருடையவர். த்ரிபுரஸம்ஹாரத்தில் பூமியே தேராக இருந்ததுகாண்க.

மஹாரூபர் - அளவற்றரூபமுள்ளவர்.

மஹாரூபர் - பெரியரூபமுள்ளவர்.

மஹாரேதஸ் - பொன்மலை வெள்ளிமலைகளையுண்டாக்கும் சிறந்தரேதஸையுடையவர் ; தமதுப்ரதிபிம்பமாகிய ஆத்மாவை ப்ரக்ருதியில் ப்ரவேசிக்கச்செய்பவர் என்னவுமாம்.

மஹாரோமர் - பெரியரோமங்களையுடையவர் ; 'வராஹமாயிருப்பவர்' என்பது பழையஉரை.

மஹாலிங்கர் - பூஜிக்கத்தக்க லிங்கத்தையுடையவர்.

மஹாவக்ஷஸ் - பெரியமார்பையுடையவர்.

மஹாவேகர் - மிக்கவேகமுள்ளவர்.

மஹாஜ்வாலர் - பெரியஜ்வாலையுள்ளவர்.

மஹாஜடர் - பெரியஜடையுள்ளவர்.

மஹாஜத்ரு - பெரியகழுத்தெலும்புமுண்டுகளையுடையவர்.

மஹாஜிஹ்மர் - பெரியநாலையுடையவர்.

மஹாஸேநர் - பெரும்படையையுடையவர் ; 'தேவஸேநாபதியான கார்த்திகேயராயிருப்பவர்' என்பது பழையஉரை.

மஹாஹநு - உலகத்தைப்பக்ஷிக்கப்போதுமான பெரியகபோலங்களையுடையவர்.

மஹாஹநு - பெரியகன்னங்களையுடையவர்.

மஹாஹர்ஷர் - பேரானந்தமுடையவர்.

மஹாஹஸ்தர் - பெரியகைகளையுடையவர்.

மஹாக்ஷர் - எங்கும்வ்யாபித்த பெரும்புலன்களையுடையவர்.

மஹீசாரி - பூமியெல்லாம்சஞ்சரிப்பவர்.

மஹேச்வரர் - எல்லாருக்கும் மேலானஈசுவரர்.

மஹோரஸ்கர் - பெரியமார்பையுடையவர்.

மஹோஷ்டர் - பெரியஉதடுகளுள்ளவர்.

மஹௌஜஸ்தர் - சிறந்ததான்யங்களாயிருப்பவர்.
மாத்ரை - மாத்ரையென்னும் காலத்தின் சிறியபிரிவாயிருப்பவர்.
மாதா - தாய்.
மாந்தாதா - ஓர் அரசன் ; 'நான்என்றுசொல்லப்பட்ட ஜீவனைப்போஷிப்பவர்' என்பது பழையவுரை.
மாந்யா - பூஜிக்கத்தக்கவர்.
மாயாவி - மாயையுள்ளவர்.
மாலி - மாலையைத்தரித்திருப்பவர்.
மாஸம் - மாஸமென்னும் காலத்தின் பிரிவாயிருப்பவர்.
மித்ரர் - பன்னிரண்டுசூரியரைச்சேர்ந்தவர் ; அல்லது, எல்லாவற்றையுமளப்பவர் ; எல்லாம் அவர்க்கு அடங்கின்றவையென்பது.
முக்தமைதுனர் - ஆச்ரிதரக்ஷணத்திற்காகத் தமதுசக்தியையிழந்தவர் ; 'லிங்கசரீரத்தைவிட்டவர்' என்பது பழையஉரை.
முக்யர் - முதன்மையானவர்.
முண்டர் - ஸங்யாஹீ.
முண்டர் - தலையிற்கேசங்களில்லாதவர்.
முண்டி - தலைமொட்டையாயிருப்பவர் ; சிரோமுண்டனம் இருவகையெனக்கொண்டு, 'ஸங்யாஸியும் கேவலப்ரம்மசாரியுமாயிருப்பவர்' என்பது பழையவுரை.
முதிதர் - எப்போதும் ஆனந்தமாயிருப்பவர்.
முநி - மௌனமாயிருப்பவர். [172 - ஆம் பக்கம்பார்க்க.
முஹூர்த்தம் - முஹூர்த்தமென்னும்காலத்தின்பிரிவாயிருப்பவர்.
மூர்த்தகர் - தலையில் இருப்பவர் ; ஸுஷும்நாகாடியில் ப்ரகாசிப்பவரென்பதுகருத்து. [கிறவர்.
மூர்த்திஜர் - சரீரத்திலுண்டாகிறவர் ; மனிதசரீரத்தில் ப்ரத்யக்ஷமாகிறவர்.
மூலர் - உலகத்திற்குவேராயிருப்பவர்.
மேட்ரஜர் - லிங்கத்தில் ஆவிர்ப்பவிப்பவர்.
மேருதாமர் - மேருவிலிருப்பவர்.
மோக்ஷத்வாரம்-மோக்ஷத்திற்குக்காரணமானவைராக்யமாயிருப்பவர்.
யசஸ் - கீர்த்தியாயிருப்பவர்.
யஜ்ஞபாகவித் - யாகத்திலுள்ள ஹவிர்ப்பாகங்களையடைகிறவர்.
யஜ்ஞர் - யாகரூபி.
யஜ்ஞர் - பூஜிக்கப்படுகிறவர்.
யஜ்ஞர் - யாகமாயிருப்பவர் ; 'ஜீவனையும் ஈச்வரனையும்சேர்க்கும் யோகமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

யஜ்ஞஸமாஹிதர் - யாகத்திலிருப்பவர்; 'யோகமொன்றிலேயே அடையக்கூடியவர்' என்பது பழையவுரை.

யஜ்ஞஹா - தக்ஷயாகத்தைக்கெடுத்தவர்; 'பலியஜ்ஞத்தைக்கெடுத்தவர்' என்பது பழையவுரை.

யஜுஷ்பாதபுஜர் - யஜுர்வேதமே கால்களும்கைகளுமாகவுடையவர்.

யுக்தபாஹு - முயற்சியுள்ளகைகளையுடையவர்.

யுக்தர் - எல்லாவற்றிலும்சேர்ந்திருப்பவர்; 'யுத்தனஸ்கத்தராயிருப்பவர்' என்பது பழையவுரை.

யுககரர் - யுகங்களையுண்டுபண்ணுகிறவர்.

யுகரூபர் - யுகமென்னுங்காலமாயிருப்பவர்.

யுகாதிபர் - ஸுகதுக்கம், லாபாலாபம், ஜயாபஜயம், சீதோஷ்ணமுதலான இரண்டுகளுக்கு அதிபதி; நான்குயுகங்களையும்காப்பவர் என்னவுமாம்.

யுகாவஹர் - யுகங்களையுண்டுபண்ணுகிறவர்.

யுதிசத்ருவிநாசகர் - யுத்தத்தில் சத்ருக்களையழிப்பவர்.

யோகர் - யோகமாயிருப்பவர்.

யோகாத்யக்ஷர் - யோகத்தினால் லக்ஷ்யாத்காரிக்கப்படுபவர்.

யோகி - யோகத்திலிருப்பவர்.

யோஜ்யர் - யோகத்தினால் அடையத்தக்கவர்.

ரக்தபரமூதா - மிகுதியானரதநகளையுடையவர்.

ரக்தாங்கர் - ரக்தம்போலச்சிறந்தஅங்கமுடையவர்.

ரதயோகிஅக்ஷர் - தேரிற்சேர்ந்தஅச்சாயிருப்பவர்; உலகத்திற்காதாரமானவர் என்பது.

ரதி - ஸுகரூபி.

ரவி - சூரியனுடையபெயர்.

ராஜராஜர் - அரசர்க்கும்அரசர்; சந்த்ரனைவிளங்குபவர் என்னவுமாம்; 'குபேரனைஇருப்பவர்' என்பது பழையவுரை.

ரிக்ஸஹஸ்ராமிதேக்ஷணர்- அநேகரிக்குகளை அநேகம்கண்களாகவுடையவர்.

ருத்ரர் - ஸம்ஹாரகாலத்தில் எல்லாப்ராணிகளையும் அழச்செய்பவர்; 'எல்லாருக்கும்ப்ராணரூபர்; ஸுத்ராத்மா' என்பது பழையவுரை.

ருது - ருதுவென்னுங்காலத்தின் பிரிவாயிருப்பவர்.

ரௌத்ரரூபர் - மஹாபைரவரூபமுள்ளவர்.

லகு - சீக்கிரமாகஅனுக்ரஹிப்பவர்.

லம்பகர் - அநேகம்பிரம்மாண்டங்கள் தம்மிடத்தில் தொங்கும்படியிருப்பவர்.

லம்பிதோஷ்டர் - ப்ரளயகாலத்தில் உலகங்களைப்பக்ஷிக்கிறதற்குத் தொங்குகிறஉதட்டையுடையவர்

லயர் - எல்லாவற்றையும்லயிக்கச்செய்கிறவர்.

லலாடாக்ஷர் - நெற்றிக்கண்ணுள்ளவர்.

லவணர் - லம்ஹரிப்பவர். 171 - ஆம் பக்கம்பார்க்க.

லவம் - லவமென்னும்காலத்தின் சிறியபிரிவாயிருப்பவர்.

லிங்கம் - மஹத்என்னும் தத்வமாயிருப்பவர்.

லிங்காத்யக்ஷர் - ப்ரமாணங்களினால் அறியப்படுகிறவர்.

லோககர்த்தா - லோகங்களைப்படைத்தவர்.

லோகசாரி - லோகங்களிற்சஞ்சரிப்பவர்.

லோகதாதா - லோகங்களுக்கெல்லாம் ஈசுவரர்.

லோகபாலர் - திக்பாலர்களாயிருப்பவர்.

லோகபாலர் - உலகத்தைக்காப்பவர்.

லோகஹிதர் - உலகங்களுக்குஅனுகூலர்

லோஹிதாக்ஷர் - சிவந்தகண்களையுடையவர்.

வ்யக்தம் - புலப்படுபவர்.

வ்யக்தாவ்யக்தர் - பக்திக்குப்புலப்பட்டும் இந்த்ரியங்களுக்குப் புலப்படாமலும்இருப்பவர்; 'காரியகாரணரூபர்' என்பதுபழையவுரை.

வ்யவஸாயர் - உற்சாகமாயிருப்பவர்.

வ்யாக்ரர் - வ்யாக்ரேச்வரரென்னும் லிங்கமாயிருப்பவர்.

வ்யாலரூபர் - ஸர்ப்பரூபமாயிருப்பவர்; 'ஆதிசேஷரூபி' என்பதுபழைபவுரை.

வ்யாலர் - வ்யாளரூபி.

வ்ரதாதிபர் - நோன்புகளைக்காப்பவர்.

வ்ருத்தர் - விருத்தியடைந்தவர்; த்ரிவிக்ரமராயிருந்தவர் என்பது.

வ்ருத்தாவ்ருத்தகரர் - யுத்தத்தில் மண்டலமாகச்சுற்றுவதையும் ஜயித்துத்திரும்புவதையும்செய்பவர்.

வ்ருஷாணர் காமபலன்களைவர்ஷிப்பவர்.

வ்ருஷரூபர் தர்மமேஉருவமாகக்கொண்டவர்,

வ்ருஷாகர்ணஸ்திதி - விருஷாத்திலுடையகாதுபோன்ற இலையின்மேலிருப்பவர்; ஆலிலைமேல்படுத்திருக்கும் விஷ்ணுரூபியென்பதுகருத்து.

வ்ருஷாகேது - ஸம்ஸாரவ்ருக்ஷத்திற்குக்கொடிபோலிருப்பவர்.

வ்ருக்ஷர் - மரமாயிருப்பவர்.

வ்ருக்ஷாகாரர் - ஸம்ஸாரவ்ருக்ஷத்தின் வடிவமாயிருப்பவர்.

வகுளம் - மகிழமரமாயிருப்பவர்.

வச்யர் - பக்தருக்கு வசப்படுகிறவர்.

வசகரர் - எல்லாரையும்வசப்படுத்துகிறவர்.

வசீகரர் - எல்லாவற்றையும் தம்அதீனத்திலவைத்திருப்பவர்.

168 - ஆம் பக்கம்பார்க்க.

வணிஜர் - வர்த்தகராயிருப்பவர்.

வதர் - மிருத்யுவாயிருப்பவர் ; 171 - ஆம் பக்கம்பார்க்க.

வம்சகரர் - ஸந்ததிவிருத்திசெய்கிறவர்.

வம்சநாதர் - புல்லாங்குழலின் ஸ்வரமாயிருப்பவர்.

வம்சர் - புல்லாங்குழலாயிருப்பவர்.

வர்ணவிபாவி - நிறங்களைப் பலவகைகளாகக்காட்டுகிறவர் ; நான்குவர்ணங்களையுண்டுபண்ணினவர் என்னவுமாம்.

வர்த்தகி - தச்சனாயிருப்பவர். [பக்கம்பார்க்க.

வர்த்தநர் - ஆத்மாவையுமதேகத்தையும் வ்ருத்திசெய்பவர். 170-ஆம்

வரதர் - வரங்களைக்கொடுப்பவர்.

வராதர் - வரங்கொடுப்பவர் ; 'சிறந்தஉருவங்களெடுத்துத் தயைசெய்பவர்' என்பது பழையவுரை.

வரர் - எல்லாவற்றையும்மறைத்து வ்யாபித்திருப்பவர்.

வரர் - க்ரஹங்களினால்ப்ரார்த்திக்கப்பட்டவர் ; 'பிருகஸ்பதி, சுக்கிரன்' என்பது பழையவுரை.

வரர் - விரும்பப்படுகிறவர்.

வரேண்யர் - வரங்கேட்கத்தக்கவர்.

வரோவராஹர் - ஆதிவராஹரூபி.

வஜ்ரஹஸ்தர் - வஜ்ராயுதத்தைக்கையிற்பிடித்தவர் ; "பர்வதங்களைப் பிளக்கும் இந்த்ரனாயிருப்பவர்' என்பது பழையவுரை.

வஜ்ரி - இந்த்ரனாயிருப்பவர்.

வஜ்ரி - வஜ்ராயுதம்தரித்தவர்.

வஸுவேகர் - வாயுவேகமுள்ளவர்.

வஸுச்ரேஷ்டர் - த்ரவ்யத்திலுஞ்சிறந்தவர்.

வாசஸ்பத்யர் - பிருஹஸ்பதியைஅநுசரித்தவர் ; புரோஹிதராயிருப்பவரென்பது.

வாதர் - யாவராலுமடையப்பட்டவர்.

வாதரம்ஹஸ் - காற்றுவேகமுள்ளவர்.

வாமதேவர் - பிரார்த்திக்கப்படும்தேவர்; 'கர்மபலன்களுக்குரியவர்' என்பது பழையவுரை.

வாமகர் - குறளாயிருப்பவர்; 'வாமகாவதாரம்செய்த விஷ்ணுரூபி' என்பது பழையவுரை.

வாமர் - அழகானவர்; 'ஆனந்தஸ்வரூபர்' என்பது பழையவுரை.

வாயுவாஹநர் - காற்றை வாஹநமாகவுடையவர்.

வாஜஸநர் - வாஜஸனேயம்என்னும் சாகையை ப்ரவ்ருத்திக்கச்செய்தவர்.

வாஸவர் - இந்திரனாயிருப்பவர்.

விக்யாதோலோகர் - வெளிப்படையான ப்ரகாசமானவர்.

விக்ருதர் - ஸ்வபாவம் மாறுகிறவர்.

விகுர்வணர் - கெட்டவரைக்கோபிப்பவர்; 'கர்மத்தினால் அடையப்படாதவர்' என்பது பழையவுரை.

விச்வகர்மமநி - விச்வகர்மாவென்னும் தேவசிற்பியின்புத்தியாயிருப்பவர்; உலகத்திலுள்ளசெய்கைகளையறிபவர் என்னுமாம்.

விச்வதேவர் - எல்லாருக்கும்தேவர்; 'விச்வமஎன்னப்பட்டவிஷ்ணுவுக்கும் தேவர்' என்பது பழையவுரை.

விச்வதேவர் - உலகத்தால் விரும்பப்படுகிறவர்.

விச்வபாஹு - உலகங்களில்வ்யாபிக்கும் கைகளையுடையவர்.

விச்வர் - எல்லாவற்றையும தம்மிடமாவைத்திருப்பவர்.

விச்வரூபர் - எங்கும்காணப்படுகிறவர்.

விச்வரூபர் - எல்லாஉருவங்களையும்படைத்தவர்.

விச்வக்ஷேத்ரம் - உலகங்களுக்கு ஆதாரமானவர்.

விசாகர் - குமாரக்கடவுளாயிருப்பவர்; 'இந்த்ரன் வஜ்ராயுதத்தினால் அடித்தபோது கார்த்திகேயரிடமிருந்துஉண்டாகி அவருக்குச் சகாயமாயிருந்தவர்' என்பது பழையவுரை.

விசாம்பதி - மனிதர்களுக்குநாதர்.

விசாரதர் - எல்லாம்தெரிந்தவர்.

விசாரவித் - ஆத்மவிசாரம்அறிந்தவர்.

விசாலசாகர் - பெரியகைகளையுடையவர்.

விசாலர் - வ்யாபித்திருப்பவர்.

விசாலாக்ஷர் - அகன்றகண்களையுடையவர்.

விதாதா - கட்டளையிடுகிறவர்; 'பலவகைகளால் போஷிப்பவர்' என்பது பழையவுரை.

விததா - வணக்கமுள்ளவர்.

விபணர் - விலையில்லாதவர்; ' வ்யவஹாரம் இல்லாதவர்; தண்டமுதலியன இல்லாதவர்' என்பது பழையவுரை.

விபாகர் - உலகத்திலிருந்து தனித்திருப்பவர்; அவயவமில்லாதவ ரென்னவுமாம்.

விபாகஜ்ஞர் - அவரவர்சர்மங்களுக்குத்தக்கப்டி பலன்களைப் பகுக்கத் தெரிந்தவர்.

விபு - அநேகம்ரூபங்களாயிருப்பவர்.

விபு - எல்லாப்ராணிகளுக்கும் ஈசுவரர்.

விபு - பலரூபங்களாக ஆகிறவர்.

விபு - வ்யாபித்திருப்பவர்.

விபுதர் - விசேஷமாக அறிந்தவர்.

விமர்சர் - ஞானரூபி.

விமுக்தர் - முழுதும்விடுபட்டவர்.

விமோசநர் - ஸம்ஸாரத்தைவிடுவிப்பவர்.

விரஜர் - ரஜோகுணமற்றவர்.

விராமர் - பகைவஸ்ரயொழிப்பவர்; விஷயங்களிலிருந்து ஒழிந்திருப் பவரென்னவுமாம்.

விரூபா - உருவமாறியிருப்பவர்; பல உருவங்களாகத் தோற்றுகிறவர் என்பது.

விவஸ்வாந் - கிரணங்களையுடையவர்; 172-ஆம் பக்கம்பார்க்க.

விஜயகாலவித் - ஜயிக்கும்தருணம் அறிந்தவர்.

விஜயர் - ஜயமாயிருப்பவர்.

விஜயாக்ஷர் - எல்லாவற்றையும் ஜயிக்கும்தேரையுடையவர்.

விஷ்கம்பி - விஸ்தாரமுள்ளவர்.

விஷ்ணு - பன்னிரண்டுசூரியரைச்சேர்ந்தவர்; அல்லது, வ்யாபிப்பவர்.

விஷ்ணுப்ரஸாதிதர் - விஷ்ணுவினால் ஆராதிக்கப்பட்டவர்; 'சக்ரத் தைப் பெறுவதற்காக விஷ்ணுவினால் ஆராதிக்கப்பட்டவர்' என் பது பழையவுரை.

விஷ்வக்ஸேநர் - எங்கும் பரவும்ஸேனையுடையவர்.

விஷ்ணுங்கர் - விசனத்தினால் ஒய்ந்த அங்கமுடையவர்; 'பூமிமுத லிய அங்கங்கள் அவரிடம முழுதும்லயிக்கின்றன; அதனால் அடங்கிய அங்கங்களுள்ளசுத்தர்; வ்யாபகர்' என்பது பழைய வுரை.

விஸ்தாரர் - எல்லாவற்றையும்மறைப்பவர்; 171-ஆம் பக்கம்பார்க்க.

விலர்க்கர் - விலர்க்கமானவர்; படைப்பவர்என்றுமாம்.

வேணவி - வேணுவாத்யமுள்ளவர்.

வேதகாரர் - வேதங்களையுண்டுபண்ணினவர்.

வைச்ரவணர் - குபேரர்.

வைத்யர் - வித்தைகள்நிரம்பினவர்.

வைதம்பர் - கபடமில்லாதவருக்கு வேண்டினவர்.

ஜ்யோதிஷாம்அயநர் - நக்ஷத்திரமுதலியவற்றிற்கு மார்க்கமாயிருப்பவர்.

ஜ்வாலி - ஜ்வாலைகளையுடையவர்.

ஜகத் - உலகத்திலுள்ள பொருள்கள்யாவுமாயிருப்பவர்; 'எப்பொழுதும் மாறிக்கொண்டேயிருப்பதனால் அவ்யாக்ருதமுதல் கடம் வரையிலுள்ள அழியும் ஸ்வபாவமுள்ள வஸ்துவாயிருப்பவர்' என்பது பழையவுரை.

ஜகத்காலஸ்தாவர் - உலகத்தைவிழுங்கும்யமனையே போஜன பாத்ரமாக உடையவர்; யமன்வழியாக எல்லாவற்றையும் தாமேயழிப்பவர் என்பது.

ஜங்கமர் - சஞ்சரிப்பவர்.

ஜடாதரர் - ஜடையைத்தரிப்பவர்.

ஜடி - ஜடைதரிப்பவர்

ஜடி - ஜடையுள்ளவர்; 'வானப்ரஸ்தர்' என்பது பழையவுரை.

ஜங்யர் - யுத்தத்தில் ஸமர்த்தர்.

ஜலேசயர் - ஜலத்தில்படுத்திருப்பவர்: 'ஜலத்தில் சேஷன்மீதுபடுத்திருக்கும் விஷ்ணுவர்யிருப்பவர்' என்பது பழையவுரை.

ஜலோத்பவர் - ப்ரளயஜலத்திலுண்டானவர்.

ஜாஜ்வல்யமாந்: - கங்காதரர்.

ஜிதகாமர் - காமனையடக்கினவர்.

ஜிதேந்த்ரியர் - ஐம்புலன்களையுமடக்கினவர்.

ஜீவகர் - ஜடப்பொருளுக்குச் ஜீவனையுண்டுபண்ணுகிறவர்.

ஷஷ்டிபாகர் - அறுபதிபாகங்களையுடையவர்; அவையாவன; ஜாக்ரத வஸ்தை 1, வெளியில் பிரவ்ருத்திக்கும்ஞானம் 1, சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்கள் 5, நினைக்கத்தக்கது அறியத்தக்கது 2, ஞானேந்த்ரியங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, பிராண அபான வியான உதான ஸமானன்களென்னும் வாயுக்கள் 5, மனம், புத்தி, அகங்காரம், சித்தம் 4, உலகத்திலுள்ள ஸ்தூலமானபொருள் 1, இவை இருபத்தொன்பது; பிறகு, ஸ்வப்நாவஸ்தை 1, உள்ளே

ப்ரவ்ருத்திக்கும்ஞானம் 1, அதில்தோற்றும் ஸ்ரீசக்ரமமாயுள்ள மேற்சொன்னசப்தமுதலியவை 27, இவை இருபத்தொன்பது; ஸ்ரீஷோடி 1, அதிலுள்ள கேவலஸ்ரீசக்ரம் 1, ஆகமுப்பது.

ஸ்கந்தர் - ஸுப்ரமண்யரூபி.

ஸ்தாணு - ஸ்தம்பம்போல உலகங்களுக்கு ஆதாரமானவர்.

ஸ்தாவராணாம்பதி - மலைகளுக்கு அரசான இமயமலையாயிருப்பவர்.

ஸ்திரர் - அழியாதவர்.

ஸ்திரர் - ஸ்தாவரமாயிருப்பவர்.

ஸ்நேஹகர் - ஆச்ரிதரிடத்தில் அன்புள்ளவர்.

ஸ்ருகாலரூபர் - நரியுருவமெடுத்த இந்திரனையிருப்பவர். இக்கதையைச் சாந்திபர்வம் 612 - ஆம் பக்கமுதல் விரிவாகக்காண்க.

ஸ்ருதர் - எங்கும்வ்யாபிப்பவர்.

ஸ்ருவஹஸ்தர் - ஸ்ருவமென்னும் யாகபாத்ரத்தைக் கையில்வைத்திருப்பவர்.

ஸ்வயம்ச்ரேஷ்டர் - தம்மாலேயே மேன்மையையடைந்தவர்.

ஸ்வயம்பூதர் - தாமேபுண்டானவர்.

ஸ்வர்க்கத்வாரம் - ஸ்வர்க்கத்திற்குக் காரணமானதவம்.

ஸ்வர்ணரேதஸ்-பொன்மயமான அண்டமாகப்பரிணமிக்கும் ரேதஸையுடையவர்.

ஸ்வர்ப்பானு - ராகுவாயிருப்பவர்; அல்லது, ஸ்வர்என்று சொல்லப்பட்ட நித்யானந்தத்தினுல் ப்ரகாசிப்பவர்.

ஸ்வஸ்திதர் - மங்களத்தைக்கொடுப்பவர்.

ஸ்வஸ்திபாவர் - சிறந்தஇருப்பையுடையவர்.

ஸகணர் - ப்ரமதகணங்களுடன்கூடினவர்.

ஸகலர் - நிறைந்திருப்பவர்.

ஸகாமாரி - காமசத்ருக்களானயோகிகளோடிருப்பவர்; 169-ஆம் பக்கம்பார்க்க.

ஸங்க்யாஸமாபகர் - ருது, ஸம்வத்ஸரம், மாஸம், பக்ஷம் இவற்றின் ஸங்க்யைகளைமுடிக்கும் கடைசித்தினமாயிருப்பவர்.

ஸங்க்ரஹர் - எல்லாரையும் அங்கீகரிப்பவர்; 'பாணன்முதலிய அடியார்களைச் சேர்த்துக்கொள்பவர்' என்பது பழையஉரை.

ஸத் - காரணமாயிருப்பவர்; 'காரியமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

ஸத் - காரணம்; 'கார்யம்' என்பது பழையவுரை.

ஸத்க்ருதர் - யாவராலும் பூஜிக்கப்பெற்றவர்.

ಸತ್ಯವ್ರತಃ - ಸತ್ಯತ್ತಯೇವಿರತಮಾಗವುಟಯವರ್.

ಸಪಲೋತಯರ್ - ತಾಂ ಪ್ರತ್ಯಕ್ಷಮಾವತು ಪಯಣ್ಪಡುಂಪಡಿಯೇಯಿರುಪ್ಪವರ್.

ಸಪಾವಕರ್ - ಸಪೈಕಳೈಕ್ಕಾಪ್ಪವರ್.

ಸಂಪಕ್ಷರ್ - ಎಲ್ಲಾರಾಲುಂ ಸೆಂಮೈಯಾಕ ಆಚ್ರಯಿಕ್ಕಪ್ಪಟ್ಟವರ್.

ಸಂಪಂಗರ್ - ಎಲ್ಲಾಂನಿರಂಪಿನವರ್.

ಸಂಶ್ರಯತರ್ - ಆಶ್ರಿತರ್ಕಳುಕ್ಕುಕ್ ಕಟ್ಟುಪ್ಪಾಟ್ಟವರ್.

ಸಂಪುಕಾಪೀಡವಾಹನರ್ - ಯುಕ್ತತತ್ತಿಲ್ ತ್ವಜಮಾಯಿರುಕ್ಕುಂ ವೃಷಭವಾಹನಮುಡೈಯವರ್.

ಸಂಯೋಕರ್ - ಆತ್ಮಾವೈಯುಂ ತೇಹತ್ತೈಯುಂಸೇರ್ಪ್ಪವರ್; 170 - ಆಂ ಪಕ್ಕಂಪಾರ್ಕ್ಕ.

ಸಂವತ್ಸರಕರರ್ - ವರುಷಮುತಲಾನ ಕಾಲಚಕ್ರತ್ತೈನಡತ್ತುಕಿಱವರ್.

ಸಂವತ್ಸರಂ - ಸಂವತ್ಸರಮೆನ್ಱುಂ ಕಾಲತ್ತಿನ್ ಪಿರಿವಾಯಿರುಪ್ಪವರ್.

ಸಂಹೃತಪೋವಿಸ್ತರಸ್ಸಾಕ್ಷರ್ - ಮುಱೈಯೇ ಸುರುಕ್ಕಮುಂ ವಿರಿವುಮಾಕಿಯ ಸ್ರುತಿಸ್ತಿರಂ ಪಾಷ್ಯಮುತಲಿಯ ಗ್ರಂತಂಕಳಾಯಿರುಪ್ಪವರ್.

ಸಮರಮರ್ತ್ತಕರ್ - ಯುತ್ತತ್ತಿಲ್ ಪಕೈವರೈಮಾಯ್ಪ್ಪವರ್.

ಸಮಾಂಗಾಯರ್ - ವೇತಮಾಯಿರುಪ್ಪವರ್.

ಸಮುತ್ತರ್ - ಸಮುತ್ತರುಪಿ.

ಸಯಜ್ಞಾರಿ-ಯಜ್ಞಸತ್ರುಕ್ಕಳಾನ ಜಯರ್ಕಳೈಯುಮ್ ಇರುಪ್ಪವರ್; 169–ಆಂ ಪಕ್ಕಂಪಾರ್ಕ್ಕ.

ಸರ್ಪಶೀರಶಿವಾಸಕರ್ - ಪಾಂಪುಚ್ಚಟ್ಟೈಯೈ ಆಟೈಯಾಕವುಟೈಯವರ್; 'ಪಾಂಪೈಯೇ ವಸ್ತ್ರಾತ್ತಿನ್ ನಡುಕ್ಕಟ್ಟುವಾಕವುಟೈಯವರ್' ಎನ್ಪತು ಪೞೈಯವುರೈ.

ಸರ್ವಕಂತಸ್ಸಾಕ್ಷಾವಹರ್ - ಎಲ್ಲಾ ವಾಸನೈಕಳಿನ್ ಸ್ವರೂಪಂಕಳೈಯುಂ ಉಣ್ಡುಪಣ್ಣುಕಿಱವರ್; 170 - ಆಂ ಪಕ್ಕಂಪಾರ್ಕ್ಕ.

ಸರ್ವಕರ್ - ಎಂಗುಮಿರುಪ್ಪವರ್.

ಸರ್ವಕರ್ಮಣಾಮುದ್ಭವಕರ್ - ಕಲ್ವಿನೈ ತೀವಿನೈಯೆಲ್ಲಾವಱ್ಱೈಯುಂ ಸ್ರುಷ್ಟಿಕಾಲತ್ತಿಲ್ ತಲೈಯೆಡುಕ್ಕಚ್ಚೆಯ್ಪವರ್.

ಸರ್ವಕರ್ಮಾ - ಎಲ್ಲಾಚ್ಚೆಯ್ಕೈಕಳೈಯುಮುಡೈಯವರ್.

ಸರ್ವಕರರ್ - ಎಲ್ಲಾವಱ್ಱಿಱ್ಕುಂ ಕರ್ತ್ತಾ.

ಸರ್ವಕಾಮಗುಣವಹರ್ - ಯಾವರುಂ ವಿರುಂಬತ್ತಕ್ಕ ಗುಣಂಕಳೈಯುಣ್ಡು ಪಣ್ಣುಕಿಱವರ್.

ಸರ್ವಕಾಮದರ್ - ಎಲ್ಲಾ ಇಷ್ಟಂಕಳೈಯುಂ ಕೊಡುಪ್ಪವರ್.

ಸರ್ವಕಾಮರ್ - ಎಲ್ಲಾ ಇಷ್ಟಂಕಳೈಯುಂ ಅಡೈಂತವರ್.

ಸರ್ವಕಾಮವರರ್ - ವಿರುಂಬಪ್ಪಡುಪವಱ್ಱಿಲೆಲ್ಲಾಂ ಸಿಱಂತವರ್.

ಸರ್ವಕಾಲಪ್ರಸಾದರ್ - ಎಲ್ಲಾಕ್ಕಾಲಂಕಳಿಲುಂ ಅನುಕ್ರಹಞ್ಚೆಯ್ಪವರ್.

ஸர்வகோவாயு - எங்குமிருக்கும்வாயு ; காற்று.
ஸர்வசாரி - எங்கும்சஞ்சரிப்பவர்.
ஸர்வசாரி - எங்குமிருப்பவர்.
ஸர்வசுபங்கரர் - எல்லாமங்களங்களும்செய்பவர்.
ஸர்வதர் - எல்லாவற்றையும்கொடுப்பவர்.
ஸர்வதாரி - எல்லாவற்றையுந்தாங்குகிறவர்.
ஸர்வதூர்யநிநாதி - எல்லாவாத்யசப்தங்களுமுள்ளவர்.
ஸர்வதேவமயர் - எல்லாத்தேவர்களாகவுமிருப்பவர்.
ஸர்வதேவமயர் - எல்லாத்தேவர்களையும் தம்அங்கங்களாகவுடையவர்.
ஸர்வதேவர் - எல்லாத்தேவர்களின்சக்திகளும் ஒன்றுசேர்ந்தவர்.
ஸர்வதேஹிநாம்இந்த்ரியர் - எல்லாப்பிராணிகளின் புலன்களாகவு மிருப்பவர்.
ஸர்வதோமுகர் - எங்கும்முகங்களுள்ளவர்.
ஸர்வபார்ச்வமுகர் - எல்லாப்பக்கங்களிலுமுகங்களுடையவர்.
ஸர்வபாவகரர் - எல்லாப்பதார்த்தங்களையும் உற்பத்திபண்ணுகிறவர்.
ஸர்வபாவநர் - எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர்.
ஸர்வபாவநர் - எல்லாரையும் பரிசுத்தமாக்குகிறவர்.
ஸர்வபூதஹ்ருத் - எல்லாப்பிராணிகளையும் ஸம்ஹரிப்பவர். [யவர்.
ஸர்வபூதாத்மா - எல்லாப்பிராணிகளையும் தமக்குத் தேகங்களாகவுடை
ஸர்வபூதாநாம்வாஸிதா - எல்லாப்பிராணிகளையும் நடத்துகிறவர்.
ஸர்வபூஜிதர் - யாவராலும் பூஜிக்கப்பெற்றவர்.
ஸர்வயோகி - எல்லாவற்றிலும்சேர்ந்திருப்பவர்.
ஸர்வர் - அபிமுகமாகவருகிறவர்.
ஸர்வர் - தாம்வியாபித்திருப்பதனால் எல்லாமாயிருப்பவர்.
ஸர்வரத்நவித் - எல்லாச்சிறந்தபொருள்களையும் அடைந்திருப்பவர்.
ஸர்வலக்ஷணலக்ஷிதர் - எல்லாநல்லலக்ஷணங்களும்பொருந்தினவர்.
ஸர்வலாலஸர் - எல்லாரிடத்தும் அன்புள்ளவர்.
ஸர்வலோகக்ருத் - எல்லாஉலகங்களையும்படைப்பவர்.
ஸர்வலோகப்ரஜாபதி - எல்லாலோகங்களிலுமுள்ள் ப்ரஜைகளுக்கும் தலைவர்.
ஸர்வலோசநர் - எல்லாவற்றையுமறிகிறவர்.
ஸர்வவாஸர் - எங்குமிருப்பவர்.
ஸர்வவாஸீ - எல்லாஇடங்களிலுமிருப்பவர்.
ஸர்வவித்பாதர் - எல்லாஇடங்களிலும் எல்லாக்காலங்களிலும் எல்லா ப்ராணிகளுக்கும் ப்ரவித்தமாகத்தெரிந்திருப்பவர்.

ஸர்வவிக்ரஹர் - எல்லாவற்றையும் தமக்குச்சரீரமாயுடையவர்.

ஸர்வஜ்ஞர் - எல்லாவற்றையும்அறிந்தவர்.

ஸர்வதாதகர் - எல்லாப்பயன்களையும்கொடுப்பவர்.

ஸர்வஸாதுநிஷேவிதர் - எல்லாஸாதுக்களாலும் அடையப்பெற்றவர்.

ஸர்வாங்கர் - உலகங்களெல்லாம் தமக்கு அங்கங்களாகவுடைய விராட்புருஷர்.

ஸர்வாங்கர் - எல்லாவற்றையுமடைந்திருப்பவர்; உலகமெல்லாம் தமக்கு அங்கமாகஉடையவர் என்னவுமாம்.

ஸர்வாங்கரூபர் - எல்லா அங்கங்களிலும் அழகுள்ளவர்.

ஸர்வாச்ரயக்ரமர் - எல்லாவற்றிலுமுள்ள ஒழுங்காயிருப்பவர்.

ஸர்வாசயர் - எல்லாவற்றிற்குமிருப்பிடமானவர்.

ஸர்வாத்மா - எல்லாவற்றிற்கும் ஆத்மாவாயிருப்பவர்.

ஸர்வாதோத்யபரிக்ரஹர் - எல்லாவாத்தியங்களையும் க்ரஹிப்பவர்; 'எல்லாஜீவன்களையும் குடும்பமாகவுடையவர்' என்பது பழைய வுரை.

ஸர்வாயுதர் - எல்லாஆயுதங்களையும்தரிப்பவர்.

ஸர்வேஷாம்ப்ராணிநாம்பதி - எல்லாப்ராணிகளுக்கும்ஸ்வாமி.

ஸவிதா - சூரியனுடையதந்தையர்.

ஸவிதா - படைப்பவர்; 172 - ஆம் பக்கம்பார்க்க.

ஸஹர் - சக்தர்.

ஸஹஸ்ரதர் - மிகுதியாகக்கொடுப்பவர்.

ஸஹஸ்ரபாத் - ஆயிரம்கால்களையுடையவர்.

ஸஹஸ்ரபாஹு - ஆயிரம்கைகளையுடையவர்.

ஸஹஸ்ரமூர்த்தா - ஆயிரம்தலைகளையுடையவர்.

ஸஹஸ்ரஹஸ்தர் - ஆயிரம்கைகளையுடையவர்.

ஸஹஸ்ராக்ஷர் - ஆயிரம்கண்களையுடையவர்; எங்கும்பார்ப்பவர் என்பது கருத்து.

ஸஹாயர் - யாருக்குந்துணையாயிருப்பவர்.

ஸாங்க்யப்ரஸாதர் - ஆத்மஸ்வரூபத்தைத் தெளிவித்தவர்; 'கபிலரூபி' என்பதும், 'தத்தாத்ரேயரூபி' என்பதும் பழையவுரை.

ஸாத்யரிஷி - ஸாத்யர்களென்னும்தேவர்களுக்கு ஞானத்தையளிப்பவர்.

ஸாமாஸ்யர் - ஸாமவேதத்தை வாயாகவுடையவர்.

ஸாரக்ரீவர் - உறுதியானகழுத்தையுடையவர்; விஷ்ணுதாங்கினதினால் என்றகருத்து.

ஸாரங்கர் - சிறந்த அங்கமுள்ளவர்; அல்லது, சிறந்தபொருள்களையுடை பவர்; 'சாதகபக்ஷி' என்பது பழையவுரை.

ஸித்தபூதார்த்தர் - தவஸித்திபெற்றவர்கள் அடைந்தபயனையிருப்பவர்.

ஸித்தயோகி - ஸித்திபெற்றயோகி; 'ஸநத்குமாரர்முதலியோராயிருப் பவர்' என்பது பழையவுரை.

ஸித்தஸாதகர் - தவஸித்திபெற்றவர்களுக்கு அபீஷ்டத்தை ஸாதிப்ப வர்; 'ஞாணம்வந்தபின் ஸந்யாஸத்தையிருப்பிய யாஜ்ஞவல்க்யர் முதலிய ஸித்வான்களான ஸந்யாஸிகளாயிருப்பவர்' என்பது பழையவுரை

ஸித்தார்த்தகாரி - ஸித்தர்களுக்கு ப்ரயோஜனத்தைச்செய்பவர்.

ஸித்தார்த்தர் - விரும்பினவையெல்லாம் அமைந்திருப்பவர்.

ஸித்தார்த்தர் - பிரயோஜனங்களெல்லாம் சித்தித்திருப்பவர்; 'ரிஷபர் தத்தாத்ரேயர்முதலியோராயிருப்பவர்' என்பது பழையவுரை.

ஸித்தார்த்தர் - கையிலுள்ளபொருளாயிருப்பவர்; 170 - ஆம் பக்கம் பார்க்க.

ஸித்தார்த்தர் - எல்லாப்பயன்களுமே கைகூடினபரிபூரணர்.

ஸித்தி - கார்யஸித்தியாயிருப்பவர்.

ஸிம்மகர் - ஸிம்மம்போலநடப்பவர்.

ஸிம்மசார்த்தூலரூபர் - சிங்கம் புலி உருவமாயிருப்பவர்.

ஸிம்மதம்ஷ்ட்ரர் - ஸிம்மம்போலக் கோரப்பற்களுள்ளவர்.

ஸிம்மநாதர் - ஸிம்மம்போலக் கர்ஜிப்பவர்.

ஸிம்மவாஹநர் - ஸிம்மத்தை வாகனமாகவுடையவர்.

ஸுகந்தாரர் - நல்லமணத்தையுடையவர்; நல்லகாந்தாரதேசத்திற் பிறந்தவர்' என்பது பழையவுரை.

ஸுகோஜாதர் - ஸுகத்திற்காகப்பிறந்தவர்; அல்லது, ஸுகரூபியாகப் பிறந்தவர்.

ஸுகாஸக்தர் - இன்பங்களிற்பற்றில்லாதவர்.

ஸுச்சத்ரர் - அழகானகுடையுள்ளவர்; தமக்குத்தாபமில்லாதவர் என்பது.

ஸுசாரதர் - இனியவாக்குள்ளவர்.

ஸுதர்சநர் - மங்களகரமானபார்வையுடையவர்.

ஸுதீர்த்தர் - நல்லஆசார்யர்.

ஸுதீக்ஷ்ணதசநர் - மிகக்கூர்மையான பற்களையுடையவர்.

ஸுநிச்சலர் - மிகவும் அசையாதவர்; 'மலைமுதலியவையாயிருப்பவர்' என்பது பழையவுரை.

ஸுபந்தவிமோசகர் - ஸமஸாரபந்தத்தைவிடுவிப்பவர்.

ஸுபலர் - லோகோபகாரமான ஸாமாதியமுள்ளவர்.

ஸுபாந்தவர் - நல்லஉறவினர்.

ஸுபீஜர் - விதையிருக்கும்மூலப்பிருதியைத தம ஸம்பந்தத்தினால் பயன்படச்செய்தவர்.

ஸுமஹாஸ்வநர் - மிகச்சிறந்தகோணியுள்ளவர் ; 'ஹயக்ரீவரூபமுள்ளவர்' என்பது பழையவுரை.

ஸுமுகர் - நலலமுகமுள்ளவர்.

ஸுயுக்தர் - மிக்கஜாக்ரதையுள்ளவர்.

ஸுரகர்ணர் - தேவர்களால ஸேவிக்கப்படுகிறவர்.

ஸுரபுத்தாணி - குணமுள்ளவராகவேக் கரைமேறறுகிறவர் ; 'சிவனுடைய சிரஸைப்பார்த்ததாகப்ரமமதேவர் பொய்சொனனதற்குக் காமதேனுவைச் சாக்ஷியாகக் கூறியதனால் அதைச்சபித்துக் கீழ்ப்படுத்தினவர்' எனபது பழையவுரை.

ஸுராத்யக்ஷர் - தேவர்களுக்கு அதிபதி.

ஸுராரிஹா - அசுரரைக்கொன்றவர்

ஸுரூபர் - அழகான நிறமுள்ளவர்

ஸுவக்த்ரர் - அழகானமுகமுள்ளவர்

ஸுவர்ச்சஸர் - அழகானதேஜஸ்பெற்றுள்ளவர்.

ஸுவர்ச்சலி - அழகானஒளியுள்ளவர்.

ஸுவர்ணர் - அழகானநிறமுள்ளவர்.

ஸுவாஸர் - சிறந்தவாஸஸ்தலமுள்ளவர் ; சிறந்தவாஸனையுள்ளவர் என்னவுமாம்.

ஸுவிஜ்ஞேயர் - எளிதாக அறியக்கூடியவர்

ஸுஷாடர் - எல்லாவற்றையுமெளிதாகத்தாங்குகிறவர்.

ஸுஸ்வப்நர் - சிறந்தயோகநித்திரையுள்ளவர் ; 'ஸ்வப்நாவஸ்தைக்கு அபிமானதேவதையான தைஜஸர்' என்பது பழையவுரை.

ஸுஸரணர் - எளிதாக அடையக்கூடியவர்.

ஸுஸஹர் - மிகபபொறுப்பவர்.

ஸுஹ்ருதர் - நல்லஹ்ருதயமுள்ளவர்.

ஸுஹ்ருத் - எல்லாவற்றையுமே நடத்துகிறவர்.

ஸுஹ்ருஷ்மர் - ஸூக்ஷ்மஜ்ஞானமுள்ளவர்.

ஸுக்ஷ்மாதமா - அறிவுக்கெட்டாத ஸ்வரூபமுடையவர்.

ஸோமகாமல்பர் - ஸோமனிடமேயுண்டுபண்ணுகிறவர் ; 'ஸோமனுக்கு அலங்காரமான பராக்ரமமாயிருப்பவர்' என்பது பழையவுரை.

ஸோமபதி - ஸோமனுக்குத்தலைவர்.

ஸோமர் - ஸோமலதாரூபி.

ஹ்லாதநர் - ஆனந்தமுண்டுபண்ணுகிறவர்.

ஹயகர்த்தபி - குதிரைகளும் கோவேறுகழுதைகளும் கட்டினதேரேறுகிறவர்.

ஹர்யச்வர் - பச்சைநிறமான குதிரைகளையுடையவர். ஸூர்யரூபி என்பது கருத்து.

ஹர்யக்ஷர் - விஷ்ணுரூபி

ஹரர் - பல்லாப்பதார்த்தங்களையும் அழிப்பவர்.

ஹரர் - தம்குணங்களினால மனத்தையிழுப்பவர்; பக்தியினால் வசப்படுத்துகிறவர் என்னவுமாம்; 'பல்லாரையும்கொல்வதான சூலாயுதத்தைக் கரஹிபபவர்' என்பது பழையவுரை.

ஹரர் - துயரங்களைஹரிப்பவர்.

ஹரி - ஆஞ்சநேயராயிருப்பவர்; 'இராமாவதாரஞ்செய்த விஷ்ணுவுக்கு ஸஹாயர்' என்பது பழையவுரை.

ஹரி - துக்கத்தைஹரிப்பவர்.

ஹரி - விஷ்ணுரூபி.

ஹரி - விஷ்ணுரூபியானவர்.

ஹரிகேசர் - செம்மட்டைமயிர்களையுடையவர்; 'இந்திரியங்களையே கிரணங்களாகவுடையவர்' என்பதும், 'பிரம்மா விஷ்ணு மகேசுவரரென்னும் மும்மூர்த்திகளுமானவர்' என்பதும் பழையவுரை.

ஹரிணர் - பொன்னிறமானவர்; தக்ஷயாகத்தில் மானுகவடிவமெடுத்தவர்; வெளுப்பாயிருப்பவர்; 'சுத்தர்' என்பது பழையவுரை.

ஹரிணர் - பொன்னிறமானவர்; 'மான்வடிவமானவர்' என்பது பழையவுரை.

ஹரிணாக்ஷர் - சிவந்தகண்களையுடையவர்; 'ம்ருகேந்த்ரர்' என்பது பழையவுரை

ஹவி - ஹோமத்ரவ்யமாயிருப்பவர்.

ஹவிஸ் - அன்னரூபியாயிருப்பவர்.

ஹஸ்தீச்வரர் - காலஹஸ்தீசுவரரென்னும் வாயுலிங்கரூபி.

ஹிமவத்கிரிஸமச்ரயர் - இமயமலையிலிருப்பவர்.

ஹிரண்யகவசோத்பவர் - பொன்மயமான கவசத்தினால்பிரகாசிப்பவர்; மாயையே கவசமென்பது கருத்து.

ஹிரண்யபாஹு - அழகானகைகளையுடையவர்.

ಹೃತಾ - எல்லாராலும் ஓமத்தினால் திருப்திசெய்விக்கப்படுகிறவர்.
ಹೃತಾಶನಃ - அக்நியாயிருப்பவர்.
ಹೃತಾಶನಸಖೋ - வாயுஸ்வரூபி.
ಹೇಮಕರಃ - பொன்னையுண்டாக்குகிறவர்.
ಹೇಮಾ - பொன்னிறமாயிருப்பவர் ; ' இமயமலைரூபமாயிருப்பவர் ' என்பது பழையவுரை.
ಹೇಮಾಂಗಃ - ஹேமனென்னுங்காலத்தின் சிறியபிரிவாயிருப்பவர்.
ಹೋತಾ - இரவாயிருப்பவர் ; 172 - ஆம் ஸ்லோகம்பார்க்க.
ಶ್ರೀಯಾವಾನ್ - ஸ்ரீயென்றுசொல்லப்பட்டவித்தையுடன் வஸிப்பவர்.
ಶ್ರೀಮಾನ್ - ஐசுவரியமுள்ளவர்.
ಶ್ರೀವರ್ಧನಃ - அடியாரவருக்கு ஐசுவரியத்தை வருத்திப் பண்ணுகிறவர்.

இவ்வாறு முக்கியமான நாமங்களினால் பகவானை நான் துதித்தேன். துதிக்கத்தக்கவரும் பூஜிக்கத்தக்கவரும் நமஸ்கரிக்கத்தக்கவருமான பரமேச்வரரை ப்ரம்மாதிதேவர்களும் ரிஷிகளும் உண்மையாக அறியார்களோ அவரை யாவன் துதிக்கவல்லவன்? ஆனால், நான் பக்தியைமுன்னிட்டு அவரிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு பாகங்களுக்குஸ்வாமியும் ஞானவான்களிற்சிறந்தவருமான அந்தப் பிரபுவை இவ்வாறு துதித்தேன். நினைத்தாறும் மனஸுக்குமும் சுத்தமும் பக்தியுமுள்ளவனுக்குச் செல்வத்தையளித்துச்செய்யும் இந்தநாமங்களினால் பகவானைசிவனைத் துதிப்பவன் தனதுத்மாவைப் பரமாத்மாவினிடம்சேர்ப்பான். இந்தச்சங்கராதாம பரப்ரம்மம். ஆதலால், துதிப்பவன் பரப்ரம்மத்தை அடைவான். ரிஷிகளும் தேவர்களும் இந்தஸ்தோத்திரத்தினாலேதான் அந்தப்பரம்பொருளைத் துதிக்கின்றனர். பக்தர்களிடம் அன்புள்ளவரும் ஆத்மாக்களுக்கு நல்லநிலைமையைச்செய்கிறவரும் பிரபுவுமாகிய பகவான்மஹாதேவர் மனத்தில் பக்தியோடுதுதிப்பதனால் அனுக்ரஹமூர்த்தியாகிறார். அப்படியே மனிதர்களிலும், ஆஸ்திகர்களும் சிரத்தையுள்ளவர்களும் பக்தியுள்ளவர்களும் அளவற்றமஹிமையுள்ளவர்களுமானசிறந்தவர்கள் தமக்கு மேலில்லாதஈசுவரரும் அநாதியும் பரதேவதையுமான அந்தச்சிவபெருமானை அனேக ஜன்மங்களில் பக்தியுடன் ஸ்தோத்திரங்களினால் துதித்துத் தூங்கும்போதும் விழித்துக்கொண்டிருக்கும்போதும் நடக்கும்போதும் உட்காரும்போதும் இளைப்பைத்தீர்க்கும்போதும் மூமும்போதும் உள்ளன்புடன் மனம்வாக்குக்காயங்களினால் அடிக்கடி தியானிப்பவர்களும் கேட்பவர்களும் கேட்பிப்பவர்களும் ஒருவருக்கொருவர் அவரைப்பற்றியே சொல்லிக்கொண்டிருப்பவர்களுமாகிப் பிறரால்

D. G. V. SWAMINATHA PILLAI

புகழப்பட்டு ஸந்தோஷமடைந்து ஸகலபாபங்களினின்றும் பிரபஞ்சத்தில் பலபிறப்புக்களிலும் அநேகமாயிரங்கோடி முறைபிறந்து பாவந் தொலைந்தமனிதனுக்குச் சிவபிரானிடத்தில் பக்தியுண்டாகிறது. முழு அன்போடும் முழுமுயற்சியோடும் காரணமானசங்கரரையே எல்லா வகையாலும் நினைந்தவனுக்கு அவரிடத்தில் ஏகபக்தியுண்டாகிறது. இடையூறில்லாமலும் மற்றத்தேவதைகளிடம்போகாமலும் ருத்திரரிடத்திலிருந்தும் உறுதியானபக்தியானது தேவர்களுக்கே கிடைப்பதரிது; மனிதர்களுக்குக் கிடைப்பதேயில்லை. அவருடைய குணங்களிலேயே மனம்சென்று மேலானசித்திபெறத்தக்கபக்தியானது அவ்ருடைய அனுக்ரஹத்தினால்மட்டும் மனிதருக்குஉண்டாகிறது. முழுதன்பையும்வைத்து மஹேசுவரரைச் சரணமாகஅடைகிறவர் எவரோ அவரைச் சரணடைதரிடம் அனுக்ரஹமுள்ள அந்த ஈசுவரர் ஸம்ஸாரத்தினின்று கரையேற்றுவார். சிவபெருமானைத்தவிர மற்றத்தேவர்கள் மனிதர்களுக்கு ஸம்ஸாரத்திலிருந்துமோக்ஷத்தைச் செய்யமாட்டார்கள். ஏனெனில், அவர்களுக்குச் சக்தியும் தவவன்மையுமில்லை. கிருஷ்ண! பரிசுத்தபுத்தியுள்ளவரும் இந்திரனுக்கொப்பானவருமான அந்தத்தண்டிமுனிவரால் சேதனசேதனங்களுக்குஈசுவரரும் தோலாடைஉடுத்தவருமானசிவபெருமான் இவ்வாறுதுதிக்கப்பட்டார். சிவபெருமானுடைய இந்தஸ்தோத்திரத்தை ப்ரம்மதேவர் தமக்குள்ளே வைத்துக்கொண்டிருந்தார். ப்ரம்மதேவர் சங்கரஸந்நிதானத்தில் இதைப்பாடித்தான் சங்கரரை அறிந்தார். இது புண்ணியத்தைச்சேர்ப்பது; மனச்சுத்தம்செய்வது; பாவங்களை எப்போதும் அழிப்பது; யோகத்தையும் மோக்ஷத்தையும் ஸ்வர்க்கத்தையும் ஸந்தோஷத்தையும் கொடுப்பது. இவ்வாறு சங்கரரிடத்தில் ஏகபக்தியுடன் இந்தஸ்தோத்ரத்தைப்படிப்பவர்கள் ஸாங்கியர்களும் யோகிகளும்அடையும்கதியை உடனே அடைவார். எப்போதும் முயற்சியோடும் பக்தியோடும் ருத்ரஸந்நிதானத்தில் இந்தஸ்தோத்திரத்தை ஒருவருஷகாலம்சொல்லுகிறவன் நினைத்தபலனை அடைவான். இது ப்ரம்மாவின்மனத்திற்குள்ளிருந்த முக்கியமானரஹஸ்யம். இதை ப்ரம்மா இந்திரனுக்குச் சொன்னார்; இந்திரன் மிருத்யுவுக்குச்சொன்னான்; மிருத்யு ருத்ரர்களுக்குச்சொன்னான்; ருத்ரர்களிடமிருந்து தண்டிக்குவந்தது; தண்டியானவர் மிகுந்ததவத்தினால் ப்ரம்மலோகத்தில் இதையடைந்தார். தண்டி சுக்ரருக்குச்சொன்னார். சுக்ரர் கௌதமருக்குச்சொன்னார். மாதவரே! கௌதமர் வைவஸ்வதமனுவுக்குச்சொன்னார். வைவஸ்வதமனு லிங்கிபெறுவதற்காக ஸமாதி

நிஷ்டையிலிருந்த சிறந்தஞானியான நாராயணமஹரிஷிக்குச் சொன்னர். மஹிமைபொருந்தியவரும் தவத்தைஸாதிப்பவரும் நியமம்தவறுதவருமானநாராயணர் தருமதேவதைக்குச்சொன்னர். ஸூர்ய புத்திரனும் மஹிமைபொருந்தினவனுமான யமன் ஹரிகேதஸ்என்னும் ரிஷிக்குச் சொன்னன். விருஷ்ணிகுலத்தவரே! ஹரிகேதஸ் மார்க்கண்டேயருக்குச்சொன்னர். ஜனார்த்தனரே! நான் மார்க்கண்டேயரிடமிருந்து தவத்தினால் இம்மந்தப் பெற்றுக்கொண்டேன் பகைவர்களையழிப்பவரே! ஸ்வர்க்கத்தையும் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் தனத்தையும்கொடுப்பதும் வேதத்திற்கொப்பானதும் யாருக்குந் தெரியாததுமான இந்தஸ்தோத்திரத்தை உமக்கும் நான் கொடுப்பேன். அஸுரர்கள் யக்ஷர்கள் பிரம்மராக்ஷஸர்கள் பிசாசர்கள் ராக்ஷஸர்கள் கிங்கரர்கள் நாகர்கள் யாரும் இதற்கு இடையூறு செய்யமாட்டார்கள்' என்று உபமன்யுமுனிவர் சொன்னர். தர்மபுத்ரரே! பரிசுத்தனாகி ப்ரம்மசாரிவிரதமிருந்துகொண்டு ஐம்புலன்களையும் மடக்கித் தியானம்கெடாமல் ஒருவருஷகாலம் இந்தஸஹஸ்ரநாமஸ்தோத்திரத்தைப்படிப்பவன் அசுவமேதயாகத்தின்பலனையடைவான்" என்று கிருஷ்ணன்சொன்னர்.

நாற்பத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் முதலிய மஹரிஷிகள் யுதிஷ்டிரரிடம் சிவபிரான் மகிமையைச் சொன்னது.)

மஹாயோகியான வ்யாஸமுனிவர், தர்மராஜரைப்பார்த்து, "புத்ரனே! நீ இந்தஸ்தோத்ரத்தைச் சொல். மகேசுவரர்கிருபையினால் உனக்குக்ஷேமமுண்டாகட்டும் புத்திரனே! மகாராஜனே! முன்னே நான் புத்ரோத்பத்திக்காக மேருமலையில் பெருந்தவம்செய்தபோது இந்தஸ்தோத்ரத்தை முழுதும்சொன்னேன். பாண்டுபுத்ரனே! நான் கருதினபலனையும் அடைந்தேன். அப்படியே நீயும் மஹேசுவரரால் எல்லாவிருப்பங்களையும் பெறுவாய்" என்றார். பிறகு, தேவரால்பூஜிக்கப்பெற்றவரும் ஸாங்கியசாஸ்திரஞானியுமான கபில மகரிஷி, "என்னாலும் அநேகஜன்மங்கள் பக்தியோகத்தினால் ஆராதிக்கப்பெற்றசிவபெருமான் அன்புவைத்து ஸம்ஸாரதாபத்தையொழிக்கும்தீர்த்தஞானத்தை எனக்குஅளித்தார்" என்றுசொன்னார். பிறகு,

இந்திரனுக்கன்புள்ளதண்பரும் ஆலம்பாயனரென்று புகழ்பெற்றவரும் தயையேஉருக்கொண்டவருமான சாருசீர்ஷரென்பவர், "ஓ! பாண்டவின்மைந்தனே! முற்காலத்தில் நான் கோகர்ணக்ஷேத்திரத்தையடைந்து, நூறுவருஷகாலம் தவம்செய்து சிவானுக்ரஹத்தினால் தாயின்வயிற்றிற்பிறவாதவர்களும் ஸ்திரீகர்ப்பியர்களும் தர்மதேஹிகளுமான சிறந்தபிரம்மதேஜஸ்ஸுள்ளவர்களும் மூப்பும்துயரமுமில்லாமல் நூறுயிரவருஷகாலம் ஜீவித்திருப்பவர்களுமான நூறுபுத்ரர்களையடைந்தேன்" என்றுசொன்னார். வால்மீகிபகவானும் யுதிஷ்டிரரைப்பார்த்து, "பாரதனே! நான் வேதவிரோதமானவாதம்சொன்னபோது திரேதாக்நிகளாலும் முனிவர்களாலும் 'நீ பிரம்மஹத்திசெய்தவனுவாய்' என்றுசொல்லப்பட்டு ஒருநிமிஷத்திற்கெல்லாம் அந்தப்பாவத்தினால் பற்றப்பட்டேன். அப்போது நான் குற்றமற்றவரும் அடித்தவரைக் கைவிடாதவருமானசுவரரைச் சரணமடைந்தேன்; அதனால், அந்தப்பாவத்தினின்று விடுபட்டேன் என்தபரத்தை அழித்தவராகிய அந்தத்த்ரிபுராரி என்னிடம்பார்த்து, 'உனக்குச்சிறந்தபுத்ரன்உண்டாகும்' என்றார்" என்றுசொன்னார். தர்மிஷ்டரிற்சிறந்தபரசுராமர் ஜ்வலிக்கின்றஸூர்யன்போல ரிஷிகளடுவிலிருந்துகொண்டு தர்மராஜரைப்பார்த்து, "பாண்டவாகளின் முதல்வனே! வேந்தனே! பிதாவுக்குச்சமமானதமையன்மார்களிலவதம்செய்ததனால் தயரமுற்றநான் பரிசுத்தனாகி மகாதேவரைச் சரணமடைந்தேன்; ஸஹஸ்ரநாமங்களைச்சொல்லி அவரைஸ்தோத்ரம்செய்தேன் அதன்பிறகு அவர் ஸந்தோஷமடைந்தார். பிறகு, கோடாலியையும் சிறந்தபடைகளையும் எனக்கு அளித்தார். 'உனக்குப் பாபம்இராது. யாராலும்ஜயிக்கப்படாதவனுவாய் உனக்குமரணமும்வராது. மூப்பில்லாமலுயிருப்பாய்' என்று சுடைமுடியுள்ள அத்தச்சிவமூர்த்தியான பகவான் எனக்குச்சொன்னார். அந்தஸர்வஜ்ஞருடைய அனுக்ரஹத்தினால் அவையெல்லாம் எனக்குக்கிடைத்தன" என்றுசொன்னார். அப்போது, ஸுசுவாபித்ரர், "நான் முன்னே க்ஷத்ரியனுயிருந்தேன்; பிராம்மணனுகவேண்டுமென்று சிவனை ஆராதித்தேன். அவருடைய அனுக்ரஹத்தினால் யாருக்குங்கிடைக்காத சிறந்தபிராம்மண்யம் எனக்குக்கிடைத்தது" என்றுசொன்னார். அவரிதன்னைப்பட்டதேவர் தர்மராஜரைப்பார்த்து, "குந்திபுத்ரனே! பிரபுவே! எனக்கு முன்னே இதிஹாஸபுராணத்தினால் தர்மம் அழிந்துபோயிற்று. அப்போது அந்தத்தர்மத்தையும், சிறந்தபுகழையும், தீர்க்காயுஸையும், பிரபு கொடுத்தார்" என்றுசொன்னார். இந்திரனுக்குப்பிரியமுள்ள

சிஷ்டர்களும் ப்ருஹஸ்பதிக்குச்சமமான மதியுள்ளவரும் மூக்கால முமறிந்தவருமான க்ருத்ஸமதர்என்னும்ரிஷி தர்மராஜரைப்பார்த்துச் சொல்லலானார் "ஒருதைக்கெட்டாதவனான தேவேந்திரனுடைய ஆயிரம்வருஷம்நடத்தப்படும் ஸத்ரயாகத்தில் ரதந்தரமென்னும் ஸாமத்தை நான்உச்சரிக்கும்போது சாகஷ்வமனுவின்புதல்வராகிய வர்ஷ்டர்என்னும்மஹரிஷி 'ஓ! ப்ராம்மணஸ்ரேஷ்டரே! இது சரியாயில்லை. ப்ராம்மணோத்தமரே! பாபத்தைவிட்டு மறுபடியும் புதுதியினுல் ஆராய்ந்துபாரும் நிசயம் கெட்டபுதிதிருள்ளவரே! யாகமஹிமைவேறுமஹிருக்கும் (கொற்பிழையாலான) பாபத்தை நீர் செய்திருக்கிறீர்' என்றுசொல்லித் திரும்பவும் மிக்கரோபத்துடன், 'ஞானமிலலாதநீர் பதினேராயிரத்து எண்ணூறுவருஷம் ஜலமும்காற்றும் இல்லாமலும் மற்றும்நிருங்களஞ்ஞரியாமலும்புள்ளிமான்களும் விம்மங்களும் இருப்பதும் யாகத்திற்குஉதவாதமரங்களுள்ளதுமாகியவனத்தில் எப்போதும் பயந்துகொண்டும் மிகத்துயரப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு கொடியமிருகமாகப் பிறப்பீர்' என்று ' சொன்னார். 'தர்மராஜனே! அவர்வார்த்தைமுடியும்போதே நான் விலங்காய்விட்டேன். அதன் பிறகு, சரணுகதனுகவந்தடைந்தஎன்னைப்பார்த்து யோகியானமகேசுவரர், நீ ஜரையும் மரணமும் துயரமும் இல்லாமலிரப்பாய்; எனக் கோபாக நிருக்கச்சடவாய். உனக்கு ஸௌக்கியமுண்டாகக்கடவது. நீயும் இந்திரனும்சேர்ந்திசெய்யும்யாகம் நிர்த்தியாகக்கடவது' என்றுசொன்னர் அந்தப்பகவானைபிரபு இவ்வாறே அனுக்கிரஹங்கள் செய்வா ரவர்தாம் படைப்பவர் அவர்தாம் எப்போதும் சுகதுக்கங்களைப்பகுப்பவர். அந்தப்பகவானைச் செய்கையினுலும் மனத்தினுலும் வாக்கினுலும் எட்டமுடியாது அப்பா! யுத்தத்திற்சிறந்தவனே! அதனல், நீதியில் எனக்குச்சரியான பண்டிதனில்லை" என்றார்.

அப்போதும் ஞானவான்தனிற்சிறந்த கிருஷ்ணமூர்த்தி திரும்பவும்பேசலானார். "பொன்னிறமானகண்களையுடையமஹாதேவனை நான் தவத்தினுல் ஸந்தோஷிக்கச்செய்தேன். யுதிஷ்டிரரே! அதன் பிறகு, அந்தப்பகவான் அன்புகூர்ந்து என்னைப்பார்த்து, 'கிருஷ்ணு! என்அனுக்கிரகத்தினுல் எல்லாருக்கும் தனக்தைவிட மிகவிரும்பத்தக்கவரும் யுத்தங்களில்தோல்வியடையாதவருமாவீர். உமதுபராக்ரமம் அக்கிக்குநிகராயிருக்கும்' என்றுசொன்னர்; இவ்வாறு ஆயிரக்கணக்கான இன்னும்வேறுவரங்களையும் எனக்குஅளித்தார். பிறகு,

[1] ஒருசொல்விடப்பட்டது

மணிமந்தம்என்னும்மலையில் முன்னே ஒருகோடியேஆயிரத்துநூறு வருஷங்கள் என்னால் ஆராதிக்கப்பட்டார். அதன்பிறகு, அந்தப்பகவான் அனுக்கிரகம்செய்து என்னைப்பார்த்து, 'உமக்குக்ஷேமமுண்டாகிறது. உமதுமனத்திலிருக்கும்வரத்தைக்கேளும்' என்றுசொன்னார். பிறகு, நான்தலையால்வணங்கி, 'ஈசுவரரே! மஹாதேவரும்பிரபுவுமானநீர் எனது சிறந்தபக்தியினால் ஸந்தோஷமடைந்திருந்தால் எனக்கு எக்காலமும் உம்மிடத்தில் பக்தி ஸ்திரமாயிருக்கவேண்டும்' என்றுகேட்டேன். பகவானுனவர், 'அப்படியேஆகட்டும்'என்றுசொல்லி அங்கேயே அந்தர்த்தானமானார்" என்றார். ஜைகீஷவ்யர், "யுதிஷ்டிரா! முன்னே காசியில் என்னுடைய பெரிய மற்றொரு தவமுயற்சியினால் அணிமாமுதலிய எண்குணங்களோடுங்கூடிய வித்தியை எனக்குப் பகவான் அளித்தார்" என்றார். நர்மதர், "பாண்டவா! ஸரஸ்வதிநதிக்கரையில் எனதுமனோயோகமான (தியானயோகத்தினால்) ஈசுவரர் சந்தோஷமடைந்து அறுபத்துநாலுலோகங்களிலும் ஆச்சரியமான ஞானத்தை எனக்குத் தந்தார். ஒரேவிதமாக ப்ரம்மரிஷ்டர்களாயிருக்கும் ஆயிரம்புதல்வர்களையும் அவர்களுக்கும் எனக்கும் பத்துலக்ஷம் வருஷம்ஆயுளையும் கொடுத்தார்" என்றுசொன்னார். பராசரர், "வேந்தனே! முன்னே சிவன் அனுக்கிரகம்பெறுவதற்காக அவரை மனத்தில் தியானம்செய்தேன். சிறந்தவரமும் சிறந்தமகிமையுமுள்ளவனும் மிக்கபுகழ்பெற்ற மகாயோகியும் எல்லாச்சிறப்புகளுக்கும் இருப்பிடமும் ப்ரம்மரிஷ்டனும் தலையுள்ளவனுமாகிய இந்த வேதவியாஸனென்னும்புத்திரனை நான் மஹேசுவரரிடத்தில் வேண்டியிருக்கிறேன்' என்று என்மனைவிபாவத்தையறிந்து, தேவசிரேஷ்டராணசங்கரர், 'பராசர! என்னிடத்திலிவைத்தபக்தியின்பலனாக உனக்குக் கிருஷ்ணத்வைபாயனன்பிறக்கப்போகிறான். அவன்ஸாவர்ணியென்னும்மனுவின் மன்வந்தரத்தில் ஸப்தரிஷியாகவும்ஆவான். அந்தஉனதுபுத்ரன் வேதங்களைச் சொல்வன்; கௌரவர்களின் ஸந்ததியை விருத்திசெய்வன்; (பாரதமாகிய) இதிஹாஸஞ்செய்து உலகத்திற்கு நன்மைசெய்வன். உனதுபுத்ரனை அந்தமகரிஷி தேவேந்திரனுக்கு அன்பனாயிருப்பன்; மூப்பும் இறப்பும் இல்லாமலிருப்பன்' என்றுசொன்னார். யுதிஷ்டிரா! மகாயோகியும் சிறந்தசக்தியுள்ளவரும் அழிவும்மாறுதலுமில்லாதவருமாகிய அந்தப்பகவான் இவ்வாறுசொல்லி அங்கேயே மறைந்தார்" என்றுசொன்னார். மாண்டவ்யர், "அரசனே! முன்னே நான் திருடாமலிருந்தும் திருட்டென்றுநினைத்துச் சூலத்தின்மேல் ஏற்றப்பட்டேன்; அங்கிருந்துகொண்டு மஹாதேவரைத் துதித்தேன். அவர்

என்னைப்பார்த்து, 'ஓ! பிராமமண! நீ சூலத்தினின்றுதவிடபட்டு நூறுகோடிவருஷகாலம் ஜீவித்திருபபாய். சூலத்தினலுண்டாகும் நோய் இனிஉனக்குஇராது. நீ மனக்குறைகளும் நோய்களுமற்றிருப் பாய். ரிஷியே! உனதுதேகம் தர்மத்தின் [1] நான்காவதுபாத (மான ஸத்ய) தத்தினின்றுண்டானதால் நீ ஒப்பற்றவனுயிருப்பாய்; உனது ஜன்மத்தைப் பயன்படும்படி செய்துகொள்வாய்; இடையூறின்றி எல்லாப்புண்ணிய தீர்த்தஸ்நாநங்களையும் பெறுவாய். பிராம்மண! பிறகு, அழிவில்லாதன்வர்க்கத்தையும் நிச்சயமாக வற்படுத்துகிறேன்' என்றுசொன்னர். [2] மஹாராஜனே! சிரேஷ்டரும் விருஷபவாகனரும் தோலாடையுடுத்தவரும் பெரொளியுள்ளவரும் தேவசிரேஷ்டரும் பகவானுமாகியமஹேசுவரா இவ்வாறுசொலலிப் பிரமதகணங்களுடன் கூட அங்கேயே அந்தர்த்தானமானர்" என்றார். காலவர், "நான் (குருகுலவாஸமசெய்தபிறகு) விசுவாமித்திராால விடைகொடுக்கப் பெற்றுக் தரப்பனரைப்பார்க்கபோதேன். அப்போது என்தாய் என் னைப்பார்த்து, மிகுந்தபயரத்துடன் அழுதுகொண்டு, 'குழந்தாய்! குற்றமறறவனே! விசுவாமித்திரரால் விடைகொடுக்கப்பெற்றவனும் தேவர்களால்கௌரவிக்கப்பெற்றவனும் நல்வியுள்ளவனும் யௌவ னப்பிராயத்திலிருப்பவனும் புகழினுமான உன்னைஉன்தந்தைபார்க்க வில்லையே' என்றுசொன்னுள். தாய்சொன்னதைக்கேட்டபிறகு தந்தையைப்பார்ப்பதில் ஆசைபற்றவனுய்த தவம்செய்து மகாதேவ ரைப் பார்த்தேன். அவர் என்னைப்பார்த்து, 'புத்ரனே! உன்தந்தை யும் தாயும் நீயும் மாணமிலை மலிருபபீர்கள். உடனே வீட்டிற் குப்போ. உன்தகதையை வீட்டில்பார்ப்பாய்' என்று சொன்னர். அன் பனே! யுதிஷ்டிரா! பகவானுல் அனுமதிகொடுக்கப்பெற்று வீட்டிற் குச்சென்றபோது யாகம்செய்து ஆசமனம்பண்ணி ஸமித்துக்களையும் தர்ப்பங்களையும் எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்து புறப்படும [3] பூஜ்ய ரானபிதாவைக் கண்டேன். பாண்டவனே! எனது பிதா நமஸ்கரிக் கும் என்னைக்கண்டு அவற்றையெல்லாம்விடடுக் கண்ணீர்ததும்பும் கண் களுடன் தழுவி உச்சிமோந்து, 'புதரனே! விதகைகளில் தேறி இங்கேவந்த உன்னை நான்கண்டது என்பாக்கியம்' என்றுசொன்னர்" என்றார். இவ்வாறு மகாதமாவானசுவரருடைய மிக்கஆச்சர்யமான

[1] சுவர், தபஸ், சத்யம் எனத்தர்மத்திறகு நான்குபாதங்கள்.

[2] 'மஹாராஜ' என்றபாடம் கொளளப்பட்டது.

[3] 'சரணுகுரூந்' எனபது 'சரணதகுரும' என்றிருதல்வேண்டும்; 'சர ணுகுரூந்' என்றபாடமேகொண்டு, 'உயிர்த்த தானயங்களையும் எடுத்துக் கொண்டுவந்த பிதாவைக்கண்டேன்' என்பது பழையஉரை.

செய்கைகளை ரிஷிகள் சொல்லக்கேட்டுத் தர்மராஜர் வியப்புற்றார். அதன்பிறகு, ஞானவான்களிற்சிறந்தவரான கிருஷ்ணபகவான் தர்மத்திற்கிருப்பிடமான யுதிஷ்டிரருக்கு, இந்திரனுக்கு ஈசுவரர் சொன்னது போல ஒருசொல்லைச் சொல்லலானார்:—

"ஸூர்யனைப்போலவிளங்கும் உபமன்யுரிஷி என்னிடத்தில், 'பாபகாரியம்செய்கிற எத்தமனிதர்கள் தங்கள்பாவங்களினால் மதிகலங்கி ராஜஸமும் தாமஸமும் மேற்கொண்டிருக்கின்றனரோ அவர்கள் ஈசுவரரையடைவதில்லை. பரிசுத்தஞானமுள்ள பிராம்மணர்கள் ஈசுவரரையடைகின்றனர். 'பரமேசுவரரிடத்தில் பக்தியுள்ளவன் எவ்வகையாக நடந்தபோதிலும் காட்டில்வஸிக்கும்பரிசுத்தாத்மாக்களான முனிவருக்குச் சமமாவன். ருத்திரர் ஸந்தோஷமடைந்தால், பிரம்மாவாதலையும் விஷ்ணுவாதலையும் தேவருடன்சேர்ந்த இந்திரனுதலையும் மூன்றுலோகங்களுக்கும் ஈசுவரனுதலையும் கொடுப்பர். அன்புள்ளவரே! மனத்தினாலாவது சிவனைச் சரணமடையும் மனிதர்கள் எல்லாப்பாவங்களையும் நீக்கித் தேவர்களுடன்வஸிப்பர். குளம் ஆறுமுதலியவற்றின்கரைகளைப் பலமுறையிடித்தும் இவ்வுலகமனைத்தையும் தியிற்போட்டுமிருப்பவனும் ஈசுவரரைப் [1]பூஜிப்பானுயின் அவனை அப்பாவம் பற்றாது. எல்லாநற்குணங்களும்குன்றி எல்லாப்பாவங்களோடும்சேர்ந்திருந்தாலும் சிவனை மனத்தினல்தியானிப்பவன் அந்தப் பாவங்களனைத்தையும் ஒட்டிவிடுகிறான். கிருஷ்ணா! மகாதேவரைச் சரணமாகஅடைந்த புழு பூச்சி பிட்டில் மிருகங்கள் இவற்றிற்கும்கூட எங்கும் பயம்இராது. அப்படியே பூமியில் சிவபக்தியுள்ளமனிதர்கள், ஸம்ஸாரத்திற்குட்படமாட்டார்களென்பது எனது உறுதியான எண்ணம்' என்றுசொன்னார்" என்றுகூறினர். கிருஷ்ணன் இந்த உபமன்யுசொன்னதைச்சொன்னபிறகு, மறுபடியும் தர்மபுத்திரரான யுதிஷ்டிரரைப்பார்த்துச் சொல்லலானார்: "தர்மராஜரே! ஸூர்யன், சந்திரன், காற்று, அக்நி, ஆகாயம், பூமி, ஜலம், வஸுக்கள், விச்வதேவர்கள், [2]தாதா, [2]அர்யமா, சுக்கிரர், ப்ருகஸ்பதி, ருத்ரர்கள், ஸாத்யர்கள், ஜலத்திற்கு ஸ்வாமியானவருணன், பிரம்மா, இந்திரன், வாயு, பிரம்மாண்டம், ஸத்யலோகம், வேதங்கள், யஜ்ஞங்கள், தக்ஷிணைகள், வேதங்களைப் பிரவர்த்திக்கச்செய்தவர்கள், லோமலதை, யாகம் செய்பவன், ஹோமம்செய்யப்படும் நெய்முதலியவை, யஜ்ஞத்தின் ரக்ஷணம், யாகதீக்ஷைகள், நியமங்கள், [2]ஸ்வாஹாகாரம், [2]வஷட்

---

[1] 'யஜேத்' என்றபாடம்கொள்ளப்பட்டது.

[2] துவாதச ஆதித்யர்களைச்சேர்ந்தவர்கள்.
யாகத்தில் ஹவிஸ்ஸைக்கொடுக்கும் மந்திரங்கள்.

காரம், பிராம்மணர்கள், பசு, முக்கியமானதர்மம், காலசக்ரம், பலம், புகழ், இந்திரியஜயம், புத்தியுள்ளவர்களாயிருத்தல், நன்மை, தீமை, ஸப்தரிஷிகள், மனத்தினால் எல்லாவற்றையுமறியக்கூடிய உயர்ந்த புத்தி, உயர்ந்தஸ்பரிசசுகங்களாகிய சந்தனம் புஷ்பமுதலியவை, செய்கருமங்கள்கூடிவருதல், [1]ஹவிஷ்மர் [2]ஸோமபர் லேகர் [3]ஸுயாமர் [4] துஷிதர் [5] பிரம்மகாயர் [6] ஆபாஸ்வரர் [7]கந்தபர் [8]தூமபர் [9]வரசாலிருத்தர் [10]மனோஜவித்தர் [11]சுத்தர் [12] நிர்மாணரதர் [13] ஸ்பர்சாசனர் [14] தர்சபர் [15] ஆஜ்யபர் [16]சிந்த்யத்யோதர் என்னும்தேவக்கூட்டங்கள், மற்றுமுள்ள முக்கியமானதேவதைகள், கந்தர்வர்கள், கந்தர்வர்கள், பிசாசர்கள், அஸுரர்கள், யக்ஷர்கள், சாரணர்கள்; நாகர்கள், ஸ்தூலம், ஸூக்ஷ்மம், நடுத்தரமானது, மிருது, கடினம், லகுகதுக்கங்கள், லாங்கியம், யோகம், அவற்றைச்செய்பவர் அடையும்பரகதிஆகியஞாம் சொல்லிய இவையனைத்தும் சிவனிடத்திலிருந்து உண்டானவையென்றறியும். பிராணிகளைப்படைப்பவரும் யாவராலும் பிரார்த்திக்கப்படுகிறவரும் அந்தஈசுவரருடைய ஆதிஸ்ருஷ்டியாகிய இந்தப்பூமியில் பிரவேசித்துக் காப்பாற்றுகிறவருமாகியதேவர்கள் அனைவரும் அவரிடத்திலிருந்து உண்டானவர்கள். எல்லாவற்றிலும்பெரிதான அந்த ஒரு பொருளைத் தவத்தினால்த்யானம்செய்து ஆத்மாவுக்காக நான் நமஸ்கரிக்கிறேன். ஸமர்த்தரும் என்றுமழியாதவருமாகிய அந்த ஈசுவரர் என்னால் துதிக்கப்பட்டு வேண்டியவரங்களைக் கொடுக்கக்கடவர். எந்தப்புருஷன் பரிசுத்தனாயிருந்து ஐம்புலன்களையுமடக்கிக்கொண்டு தியானம்தவறாமல் ஒருமாதம் நியமமாக இந்தஸ்தோத்திரத்தைச் சொல்லுவனோ அவன் அசுவமேதபலனையடைவான். தர்மராஜரே! (இவ்வாறுதுதிக்கும்) பிராம்மணன் எல்லாவேதங்களையுமடைவான்; க்ஷத்ரியன் பூமியனைத்தையும்ஜயிப்பான்; வைச்யன் வர்த்தகத்தில் நிறமையையும் தரியலாபத்தையும் பெறுவான்; சூத்திரன் மறுமையில் நல்லகதியையும் சௌக்கியத்தையும்அடைவான். எல்லாக்குற்றங்களையும்போக்குவதும் புண்ணியத்தையும் மனச்சுத்தத்தையும் தருவதுமாகிய இந்தச்சிறந்தஸ்தோத்திரத்தை ருத்ரரிடத்தில் மனம்வைத்

---

[1] ஆவியைக்குடிப்பவர். [2] சந்திரன்அமிருதத்தைக்குடிப்பவர். [3] இந்திரியஜயம்பண்ணினவர். [4] எப்போதும் திருப்தியாயிருப்பவர். [5] பிரம்மத்தையே பாடுகிறவர். [6] மிக்கஒளியுள்ளவர். [7] மணத்தை உண்பவர். [8] புகையைஉண்பவர். [9] வாக்கைக்கட்டினவர். [10] மனத்தைக்கட்டினவர். [11] பற்றற்றவர். [12] ஸ்ருஷ்டியில் ஊக்கமுள்ளவர். [13] பரிசத்தினால்உண்பவர். [14] பார்வையினால் உண்பவர். [15] நெய்குடிப்பவர். [16] நினைத்தபொருள் உடனேவரச்செய்துநிற்கும் சக்தியுள்ளவர்.

துச்சொன்னவர்கள் புகழ்பெறுவர். பாரதரே! இவ்வாறுதிர்க்கும் மனிதன் தன்தேகத்தில் எத்தனைமயிர்க்கால்கள் இருக்கின்றனவோ அத்தனையாயிரம்வருஷங்கள் ஸ்வர்க்கத்தில் வஸிப்பான்" என்று சொன்னார்.

ஐம்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வதான்யரின் குமாரியை மணம்புரியக்கருதின அஷ்டாவக்கர் அவரிடம் ஸாயங்ஸமயத்தில் வடகோடிபோய அதிதத்தினைச் தேவதையைக்கண்டு ஸம்பாஷித்தது.)

யுதிஷ்டிரர் பீஷ்மரைப்பார்த்து, "பரதகிரேஸ்டரே! விவாஹ காலத்தில் பெண்களை [1] ஸஹதர்மமைஎன்று சொல்லுகிறார்களே! அது எப்படியென்று நினைக்கிறீர்கள்? இந்தவிவாஹம் வேதோக்தமான யாகாதிகாரியங்களுக்குக் காரணமானதர்மமா? ஸந்ததியுண்டாக்குந் தர்மமா? அல்லது, காமஸுகத்தைத்தரும்தர்மமா? முன்னிருந்தமஹரிஷிகள் இதை ஸஹதர்மமென்றுசொன்னது எதனால்? இது எனக்குப் பெரியஸந்தேகம். இது விரோதமாயிருக்கிறதென்று என் அபிப்பிராயம் இவ்வுலகத்தில் எது ஸ்ரீபுருஷர்கள்சேர்ந்து செய்யும் தர்மமோ அதற்குப்பலன் எங்கேவித்திக்கப்படுகிறது? பிதாமஹரே! இறந்துபோனவர்களுக்கு ஸஹதர்மத்தின் முடிவு ஸ்வர்க்கந்தானே? ஸ்த்ரீபுருஷர்களில் ஒருவர் முதலில் இறந்துபோனால் அந்தஒருவர் எங்கேதனித்து இருக்கிறார்? சொல்லும். பலமனிதர்கள் வெவ்வேறு கர்மபலன்களுடனேபிறந்து வெவ்வேறு கர்மங்களைச்செய்துகொண்டிருந்து அவ்வவற்றிற்குத்தகுந்தபடி நரகமோ ஸ்வர்க்கமோ மோக்ஷமோ [2] பெறுகின்றனரல்லரோ? தர்மஸூத்ரம்செய்தவர் பெண்கள்பொய்யரென்று நிச்சயித்திருக்கிறார் பிதாமஹரே! பெண்கள் பொய்யராயிருந்தால் ஸ்ரீபுருஷர்களுக்கு ஒருதர்மம்சொல்வது எப்படி? பெண்கள் பொய்யரென்றுதானே வேதங்களும் சொல்லுகின்றன. பூர்வகாலந்தொடங்கிவந்த தர்மங்களும் ஒருவர்க்கொருவர் உதவிசெய்துகாரியத்தை நடத்துவதாகக் காணப்படுகின்றன. இதை நான் சிந்திக்கும்போதெல்லாம் எனக்கு இது கடினமாகத்தோன்றுகிறது. மற

---

[1] புருஷனுடைய தர்மத்தையே தனக்குந்தர்மமாக உடையவன். ஆதலால், இருவருக்கொருதர்மம் கூடாதென்பது.

ಕ್ತಜ್ಞಾನಿಯಾನಪಿತಾಮಹರೇ! ಇದು ಎನ್ನ? ಎವ್ವಕೆಯಾನದು? ಎಪ್ಪಡಿ ಉಂಡಾಕ್ಕಪ್ಪಟ್ಟದು? ಇವಱ್ಱೈಯೆಲ್ಲಾಂ ನೀಯಂಗಿಕ್ಕ ಸಾಸ್ತಿರಪ್ಪಿರಕಾರಂ ತೆಳಿವಾಕ್ಕಚ್ಚೊಲ್ಲಕ್ಕಡವೀರ್" ಎನ್ಱುಕೇಟ್ಕ, ಪೀಷ್ಮರ್ ಸೊಲ್ಲಲಾನರ್:—

"ಪಾರತನೇ! ಇಂತವಿಷಯತ್ತಿನುಂ ಅಷ್ಟಾವಕ್ರಮುನಿವರುಕ್ಕು ವಡತಿಸೈತ್ತೇವತೈಯೋಡಿ ನಡಂತ ಸಂಪಾಷಣೈಯಾಗಿಯ ಒರು ಪುರಾತನ ಸರಿತ್ತಿರತ್ತೈಕ್ ಕೂಱುಗಿನ್ಱನರ್. ಮುನ್ನರ್, ಸಿಱಂತತವಮುಳ್ಳ ಅಷ್ಟಾವಕ್ರರ್ ವಿವಾಹಮ್ಚೆಯ್ತುಕೊಳ್ಳಕ್ಕರುತಿ ಮಹಾತ್ಮಾವಾನ ವದಾನ್ಯರೆಂಬುಮ್ರಿಷಿಯಿನ್ ಪೆಣ್ಣುಂ ಅಳಗಿಲ್ ಪೂರಿಯಿಲಿರುಕ್ಕಾಱ್ಱವರುಂ ಗುಣತ್ತಿನುಂ ಮಹಿಮೈಯಿನುಂ ಅಡಕ್ಕತ್ತಿನುಂ ಒೞುಕ್ಕತ್ತಿನುಂ ಸಿಱಂತವರುಮಾನ ಸುಪ್ರಭೈಯೆಂಬವಳೈಕ್ ಕೇಟ್ಟಾರ್. ಅೞಗಾನಕಣ್ಗಳೈಯುಡೈಯ ಅನ್ತಪುರಪ್ರಭೈ ವಸಂತಕಾಲತ್ತಿಲ್ ಪೂಕ್ಕಳ್ನಿರಂಪಿ ಅೞಗಾಯಿರುಕ್ಕುಂವನಂಪೋಲಪ್ ಪಾರ್ತ್ತವಳವಿಲ್ ಅನ್ತರಿಷಿಯಿನ್ ಮನತ್ತೈಕ್ ಕವರ್ನ್ತಾಳ್. ಅನ್ತವದಾನ್ಯರೆಂಬುಮ್ರಿಷಿ ಅಷ್ಟಾವಕ್ರರೈಪ್ಪಾರ್ತ್ತು, 'ಉಮಕ್ಕು ಎನ್ಪೆಣ್ಣೈಕ್ ಕೊಡುಕ್ಕವೇಂಡುಮಾನಾಲ್ ನಾನ್ ಸೊಲ್ವತೈಕ್ ಕೇಳುಂ. ವೇಱುಸ್ತ್ರೀಯಿಲ್ಲಾತವನುಂ ತೆರಿನ್ತವನುಂ ಊರೈವಿಟ್ಟುಪ್ ಪೋಕಾತವನುಂ ಇಣೈಮೈಯಾಯ್ಪ್ಪೇಸುಗಿಱವನುಂ ಅೞಗುಳ್ಳವನುಂ ವೀರನುಂ ವಿನಯಮುಳ್ಳವನುಂ ಸುಕತ್ತೈಯನುಪವಿಕ್ಕತ್ ತಿಱಮೈಯುಳ್ಳವನುಂ ಪರಿಸುತ್ತಮಾನಪುರುಷನ್ತಾನ್ಪೆಣ್ಣುಕ್ಕು ವಿರುಂಬುಮಾನವನ್. ಮಣವಿಯುಡನ್ ಒತ್ತು ಯಾಕಂಚೆಯ್ಗಿಱವನ್ ನಲ್ಲನಕ್ಷತ್ತಿರತ್ತಿಲ್ ಪಿಱನ್ತಪೆಣ್ಣೈ ವಿವಾಕಂಚೆಯ್ತುಕೊಳ್ಳವೇಂಡುಂ. ಅವನ್ ಇವ್ವುಲಕತ್ತಿಲ್ ವೇಲೈಕ್ಕಾರರೋಡುಂ ಪನ್ತುಕ್ಕಳೋಡುಂ ಸನ್ತೋಷಮಡೈಗಿಱನ್; ಮಱುಮೈಯಿಲುಂ ಸುಕಮಾಯಿರುಕ್ಕಿಱನ್. ನೀರ್ ಮುತಲಿಲ್ ಪುಣ್ಣಿಯಮಾನ ವಡತಿಸೈಕ್ಕುಚ್ ಚೆಲ್ಲುಂ; ಅಂಗೇ ಪಾರ್ಪ್ಪೀರ್' ಎನ್ಱುಸೊನ್ನರ್. ಅತಱ್ಕು ಅಷ್ಟಾವಕ್ರರ್, 'ಅಂಗೇ ನಾನ್ ಪಾರ್ಕ್ಕವೇಂಡಿಯತು ಇನ್ನತೆನ್ಪತೈ ನೀರ್ ಎನಕ್ಕುಚ್ ಸೊಲ್ಲವೇಂಡುಂ. ನೀರ್ ಎತೈಚ್ಚೊನ್ನಾಲುಂ ಅತೈ ನಾನ್ ಇಪ್ಪೋತು ಚೆಯ್ಯವೇಂಡುಂ' ಎನ್ಱುಕೇಟ್ಕ, ವದಾನ್ಯಮುನಿವರ್ ಸೊಲ್ಲಲಾನರ್.

'ಕುಬೇರನೈತ್ತಾಂಡಿ ವಿತ್ತರ್ಕಳಾಲುಂ ಸಾರಣರ್ಕಳಾಲುಂ ಅಡೈಯಪ್ಪಟ್ಟದುಂ, ಸಂತೋಷತ್ತಿನಾಲ್ ನರ್ತ್ತನಂಚೆಯ್ಬವರುಂ ಪಲವಕೈ ಮುಕಂಗಳುಳ್ಳವರುಂ ಉಯರ್ನ್ತಸಾರಂಗಣಿಕ್ಕವರುಮಾನ ಪಿಶಾಚರ್ಮುತಲಿಯಪಲವಕೈಚ್ಚಿಲಕಣಂಗಳಿನಾಲ್ ಅಡೈಯಪ್ಪಟ್ಟದುಂ, ಶಿವನತು ಇರುಪ್ಪಿಡಮುಮಾಗಿಯ ಇಮಯಮಲೈಯೈಕ್ಕಂಡು ಪೋಗವೇಂಡುಂ. ಅಂಗೇ ಅೞಗಾನ ಕೈತ್ತಾಳಂಗಳುಂ ವೆಂಕಲತ್ತಾಳಂಗಳುಂಪೋಟ್ಟು ಸಮತಾಳಂಗಳೋಡುಕ್ ಕೂತ್ತಾಡಿ ಸಂತೋಷಮಾಗ ಅನ್ತಕ್ಕಣಂಗಳ್ ಶಿವನೀ ಆರಾಗಿನ್ಱ

றன. அந்தமலையில்இருப்பது சிவனுக்குப்பிரியமென்றும், அதுதேவ லோகமென்றும் நாம் கேட்டிருக்கிறோம். ஈசுவரரும் அவருடைய பிரமதகணங்களும் அவ்விடத்தில் எப்போதும் இருப்பதாகச் சொல் லப்படுகின்றனர். உமாதேவி சங்காரையைவதற்காக அங்கே மிகக் கடும்தவம்செய்தாள். அதனால், அது ஈசுவரருக்கும் உமைக்கும்பிரிய மான இடமென்றுகேள்வி. அவ்விடத்தில் ருதுக்களும் காளராத்திரி யும் தேவலோகத்திலும் மானிடலோகத்திலுமுள்ள எல்லாப்பொருள் களும் தேகமெடுத்து ஈசுவரருடைய நிழக்குப்பாகத்திலும் வடக்குப் பாகத்திலுமிருந்து அவரை ஸேவிக்கின்றன. அந்த ஸ்தானத்தைத் தாண்டியும் நீர் செல்லவேண்டியதுதான். அதன்பிறகு, மேகம்போற் கறுத்ததும் மனத்தைக்கவருவதுமாகிய ஓர் அழகியகாட்டைப் பார்ப் பீர். அதில் சிறந்த மஹிமையுள்ளவளும் நிழவியும் விரததீக்ஷைசெய்ப வளுமாகிய ஒருகவப்பெண்ணைக் காண்பீர். அவளை நீர் அவசியம் காணவும் ஜாக்ரதையாகப்பூஜிக்கவும் வேண்டும். அவளைப் பார்த்துத் திரும்பிவந்தபிறகு பாணிக்ரஹணம்செய்யலாம். இதெல்லாம் உம க்கு உடன்பாடாயிருந்தால் நீர்சென்று அவ்விடம் சேரலாம்' என்றார்.

அஷ்டாவக்ரர், 'அப்படியேஆகட்டும்; செல்வேன். நீர் காந்த இடம்சொல்லுகிறீரோ அந்த இடத்தில் நிச்சயமாகச் சேருவேன். ஸத்புருஷரே! நீர் சொல்லவருமளவிருக்கக்கடவீர்' என்று சொன்னார். மஹிமைபொருந்திய அந்த அஷ்டாவக்ரர் உடனே மேன்மேலும் வட திசையைநோக்கிச் சென்றார். பிராம்மணஸ்ரேஷ்டரான அந்தஅஷ்டா வக்ரர் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் அடையப்பட்டதும் மலை களில் சிறந்ததுமாகிய இமயமலையைச்சார்ந்து பரிசுத்தமும் புண்ணி யத்தைத்தருவதுமாகிய பாஹுநதியென்னும் நதிக்குப்போனார். துய ரத்தைப்போக்குவதும் தெளிவுமான அதன் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தேவதைகளுக்குத் தர்ப்பணம்செய்து அங்கே தங்குவதற்கா கத் தர்ப்பசயனத்தில் ஸுகமாக இருந்தார். அந்தப்பிராம்மணர் அவ் விரவுகடந்து விடியற்காலத்திலெழுந்து ஸ்நானம்செய்து அக்னியை யுண்டாக்கிச் சாஸ்திரப்படி அதில்ஹோமம்செய்து ருத்ராணிகூப மென்னும்மடுவுக்குச்சென்று அம்மடுவில் (ஸ்நானம்செய்து) சிரமத் தைத்தீர்த்துக்கொண்டார்; களைப்புத்தீர்ந்தபின்பு எழுந்து கைலா ஸத்தைநோக்கிச்சென்றார்; ஒளியினால் ஜ்வலிப்பதுபோன்ற மஹாத் மாவானகுபேரனது பொன்னாலாகியவாயிலையும் மந்தாகினியென்னும் தாமரையோடையையும் பார்த்தார். அப்போது அந்தத் தாமரைக் குளக் காவலாளியாகிய மாணிபத்ரன்முதலான ராக்ஷஸர்களனைவரும்

அஷ்டாவக்ரபகவானே எதிர்கொண்டுவந்தனர். அஷ்டாவக்கர் பயங்கரமான பராக்ரமமுள்ள அத்தராக்ஷஸர்களுக்கு எதிர்மரியாதைசெய்து 'தான்வந்ததைக் குபேரனுக்குச்சீக்ரம் தெரிவியுங்கள்' என்று சொன்னர். தர்மராஜனே! அப்போது அவ்வரக்கர்கள் அஷ்டாவக்ரபகவானைப்பார்த்து, 'இதோ ராஜாவானகுபேரர் தாமாகவே உங்களிடம் வருகிறார். அவருக்கு உங்களைத்தெரியும். நீங்கள்வந்த காரியமும் தெரியும். ஒளியினால் ஜ்வலிப்பவர்போலிருக்கும் இந்த மஹானுபாவரை நீங்கள் பாருங்கள்' என்று சொன்னர்கள். உடனே குபேரன் குற்றமற்றபிராம்மணரிஷியான அஷ்டாவக்கரிடம்வந்து முறைப்படி கேஷமம்விசாரித்தபிறகு, 'பிராம்மணரே! நீர் ஸுகமாகவந்து சேர்ந்தீரா? என்னிடத்தில் என்னகாரியத்தை விரும்புகிறீர்? சொல்லும். நீர் எதைச்சொன்னாலும் செய்வேன். பிராம்மணோத்தமரே! நீர் என் வீட்டிற்குள் ஸ்வதந்திரமாகப் பிரவேசிக்கலாம். என்னால் மரியாதை செய்யப்பெற்றுக் கார்யமான பிறகு இடையூறின்றிச் செல்லலாம்' என்றுசொல்லி, பிறகு, அகப்பிராம்மணோத்தமரை அழைத்துக்கொண்டு தன்வீட்டிற்குள்சென்றான்; அர்க்யபாத்யங்களையும் கொடுத்துத் தன்னுடைய ஆஸனத்தையுங்கொடுத்தான். அவர்களிருவரும் உட்கார்ந்தபிறகு குபேரனைச்சேர்ந்தவர்களாகிய மாணிபத்ரன்முதலிய யக்ஷர்களும் கந்தர்வர்களும் கின்னரர்களும் உட்கார்ந்தனர். அவர்கள் உட்கார்ந்தபிறகு குபேரன் அஷ்டாவக்ரரைப்பார்த்து, 'உங்கள் அபிப்பிராயம் தெரிந்தபிறகு அப்ஸரஸுகள் நர்த்தனம்செய்யவேண்டும். உங்களுக்குச் சிறந்த அதிதிபூஜையையும பணிவிடையையும் நான் செய்யவேண்டும்' என்று சொன்னன். அஷ்டாவக்ரர், 'நடக்கட்டும்' என்று இன்சொல்லாற்சொன்னர். பிறகு உர்வரை, மிச்ரகேசி, ரம்பை, ஊர்வசி, அலம்புஸை, க்ருதாசி, சித்ரை, சித்ராங்கதை, ருசி, மனோஹரை, ஸுகேசி, ஸுமுகி, ஹாவினி, ப்ரபை, வித்யுதை, ப்ரசமி, தாந்தை, வித்யோதை, ரதிமுதலான அநேகசிறந்த அம்ஸரஸுகள் நர்த்தனம்செய்தனர். கந்தர்வர்கள் பலவகை வாத்யங்களை வாசித்தனர். அப்படி தேவலோகத்திய ஸங்கீதம் நடந்தபோது அத்தச்சிறந்ததவமுள்ளரிஷி ஒருவருஷம் உட்கார்ந்தார்; அதில் விருப்பம் நிரந்தார். பிறகு, ராஜாவானகுபேரன் அஷ்டாவக்ரபகவானைப்பார்த்து, 'ப்ராமமணரே! நீர் இங்கே பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஒருவருஷத்திற்குமேலாயிற்று. பிராம்மணரே! இந்த விஷயமானது மனத்தை இழுப்பது. இதற்குக் காந்தர்வமென்று பெயர். பிராம்மணரே! நீர் உம்மிஷ்டப்படியிருக்கலாம். அல்லது, நீர்எப்படிச்சொல்

லுகிறீரோ அப்படியாகலாம். அதிதியானஉம்மை நான் பூஜிக்க வேண்டும். இஃது உம்முடைய்யீடே. எல்லாவற்றிற்கும் உடனே கட்டளையிடவேண்டும்.' நாங்கள் உமது சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்கள்' என்றுசொன்னேன். பிறகு, அஷ்டாவக்ரபகவானும்ஸந்தோஷமடைந்து குபேரனைப்பார்த்து, 'தனேசுவரனே! விதிப்படி பூஜிக்கப்பெற்றேன். இனிச்செல்வேன். ஸந்தோஷமடைந்தேன். தனநிதியே! எல்லாம் உனக்கேதகும். பகவானே! உன்னுடைய அனுக்ரகத்தினாலும் மகாத்மாவான வதான்யாகரிஷியின் கட்டளையினாலும் இப்போது செல்லுகின்றேன். நீ மேன்மேலும் சிறப்பையும் செல்வத்தையும் மடைந்திருப்பாயாக' என்றுசொன்னார்.

அஷ்டாவக்ரபகவான் உடனே அங்கிருந்து புறப்பட்டு வடதிசையைநோக்கிச் சென்றார்; கைலாஸத்தில் சங்கரரிருக்குமிடத்தைக்கண்டு கௌரீபதியும் ஜிதேந்திரியருமான சரணாகதர்களிடம் கருணையுள்ளவரும் கங்கையைத்தரிப்பவரும் பூமிக்கதிபதியும் கணங்களினால் சூழப்பெற்றவரும் குற்றமற்றவருமான சங்கரரைக்கண்டு நமஸ்கரித்துக் கைலாஸம், மந்தரம், மஹேந்ரமாகிய எல்லாமலைகளிலும் ஸஞ்சரித்தார்; அந்த மஹாபர்வதங்களைத்தாண்டிப் பூமியிலிறங்கி வேடவேஷம்பூண்ட சிவனிருக்கும் உத்தமஸ்தானத்தைப் பக்தியோடு தலைவணங்கிப் பிரதக்ஷிணம்செய்தார்; உடனே ஆத்மசுத்தியடைந்தார். அவர் அந்த இடத்தைப் பிரதக்ஷிணம்செய்தபிறகு வடக்கேநோக்கிச் சென்றார்; ஸுமேதாஷத்துடன் (ஸமபூமியில்)சென்றார்; அதற்கப்பால் வேறோர் அழகியவனத்தைக் கண்டார். எல்லாருக்குக்களிலுமுள்ள மிருகங்களும் கனிகளும் பறவைகளும் நிரம்பின அழகான வனங்கள் ஆங்காங்கு அலங்காரமாயிருந்த ஒரு சிறந்த ஆச்ரமத்தை அந்தப்பகவான் கண்டார். ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டவையும் பலவகையுருவங்களுள்ளவையுமான அநேகம்பொன்மலைகளையும் ரத்னபூமியிலிருக்கும் தாமரைக்குளங்களையும் மற்றுமுள்ள மிகஅழகிய அனேக இடங்களையும் கண்டார். பரிசுத்தமனமுள்ள அமமகரிஷியின் மனம் மிக்க ஆனந்தமடைந்தது. அவ்விடத்தில் எல்லாரத்னங்களும்நிரம்பினதும் குபேரன்வீட்டைக்காட்டிலும் சிறந்து ஆச்சரியமாக விளங்குகிறதுமான ஒருசிறந்த பொன்மாளிகையைக் கண்டார். அங்கே ரத்னமயமும் பொன்மயமுமான பலவகைப்பெருங்குன்றுகளும் அழகான மாளிகைகளும் பலவகைச்சிறந்த பொருள்களும் கற்பகமலர்கள் உதிர்ந்திருக்கும் கங்கைநதியும் தம்மொளியினால் பிரகாசிக்கும் ரத்னங்களும் வஜ்ரங்களினால் அலங்கரிக்கப்பட்டபூமியும் இருந்தன. முன்வாயில்க

னில் அனேகவிதரத்தினங்கள் இழைக்கப்பட்டும்முத்துஸரங்கள்தொங் கவிடப்பட்டும் எல்லாவிடங்களிலும் சிறந்தரத்னங்களால்அலங்கரிக்கப் பட்டுப் பிரகாசித்துக்கொண்டு, மனத்தையும் கண்ணையும் கவருகின்ற பற்பல அழகியவீடுகளினுல் விளங்கும்நிலைத்ததும் ரிஷிகள்நிறைந்திருப் பதுமாகிய அந்தஅழகானஆச்ரமத்தை அங்கேகண்டார். பிறகு, அவ ருக்கு, 'திலைத்தேவனைதிருக்குவிடம் எங்கிருக்கலாம்?' என்னும் சிந்தையுண்டாயிற்று. உடனே வாயிலுக்குநேரிற்போய்நின்று, 'இங் குள்ளவர்கள் அதிதி வந்திருப்பதை அறியவேண்டும்' என்றுசொன் னர். அரசனே! உடனேஅந்தவீட்டிலிருந்து அனேகவிதமான உரு வங்களுள்ளவர்களும் எல்லாரும் மனத்தைக்கவருகின்றவர்களுமாகிய ஏழுகன்னிகைகள் சிறந்த ஆடைகளையுடுத்து வெளிப்பட்டனர். அவர் கண்டகன்னிகை ஒவ்வொருதரியும அவாமனதைதைக் கவர்ந்தாள். அவர் மனத்தைத் தடுக்கமுடியாமற்போனர். அதனுல் அவர் மனம் தளர்ந்தது. சிறந்தஞானமுள்ள அந்தப்பிராம்மணருக்கு அதன்பிறகு தைரியமுண்டாயிற்று. பிறகு, அந்தப்பெண்கள, 'பகவானனீங்கள் உள்ளேவரலாம' என்றனர். அந்தப்பிராம்மணர் அந்தப்பெண்களின் சிறந்த அழகினுலும் அந்த வீட்டினழகினுலும் மனமகிழ்ந்து வீட்டிற் குள்சென்றார்; அங்கே தூயஆஸனமுடுத்து எல்லாமணிகளையும் அணிந்துகொண்டு கட்டிலில உட்கார்ந்துகொண்டிருக்கும் ஒருதளர் ந்தகிழவியைக்கண்டார். அவா அவளை, 'உனக்கு மங்களமுண்டா கக்கடவது' என்றுசொல்ல, அவளும் அவருக்கு அவ்வாறே மறு மொழிசொன்னுள். அவள் அந்தப்பிராம்மணரை எதிர்கொண்டழை த்து உட்காரவேண்டுமென்றுசொன்னுள். அப்போது அஷ்டாவக்கர், 'இந்தப்பெண்கள் எல்லாரும் தாமிருக்கும் இடங்களுக்குச் செல்ல லாம். சிறந்தஞானமுள்ளவனும் மனத்தையடக்கினவனுமாகிய ஒரு த்திமட்டும் என்னருகிலிருக்கட்டும். மற்றவர்கள் தம்மிஷ்டப்படி செல்லட்டும்' என்றுசொன்னர். உடனே அந்தப்பெண்கள் அந்த ரிஷியைப்பிரதக்ஷிணம்செய்து அந்தவீட்டிலிருந்து வெளியிற்சென்ற னர். பிறகு, அந்தக்கிழவிமட்டும் நின்றுள். அவர் அவளால் பரி சுத்தமான தனதுபடுக்கையில் மரியாதைசெய்யப்பெற்றார். அப்போது நிர்மலமாகப் பிரகாசிக்கின்ற அந்தப்படுக்கையில் தாம் சயனிக்கும் போது அவளைப்பார்த்து, 'அம்மா! இரவு தாண்டிப்போகிறது. நீயும் தூங்கலாம்' என்றுசொன்னர். அந்தப்பிராம்மணருடன் ஸல்லாபஞ் செய்தபிறகுஅவரால்அவ்வாறுசொல்லப்பட்ட அந்தக்கிழவி மிக்கஞானி யுள்ள மற்றொருபடுக்கையில் படுத்தாள். பிறகு, அவள் குளிரைக்

காரணமாகக்காண்பித்து நடுங்குந்தேகத்துடன் தன்சயனத்திலிருந்து இறங்கி அஷ்டாவக்ரமகரிஷியின்சயனத்தில் ஏறினாள். வந்த அவளுக்கு அஷ்டாவக்ரபகவான் நல்வரவு சொன்னார். மன்னவ! அவள் அன்புடன் இரண்டுகைகளாலும் அந்தரிஷியைத் தழுவினாள். அப்போது யாதொருமனவேறுபாடுமின்றி, கட்டைபோலவும் சுவர்போலவும் இருந்தரிஷியைக்கண்டு மனததில் தன்பத்துடன் அம்முனிவரிடம் பேசலானாள்:

'பிராம்மணரே! பெண்களுக்கு ஸ்வேச்சையென்பதில்லை. அவர்களுக்குப் புருஷனேதான் ஸந்தோஷம். நான் காதலால் மயலுற்றிருக்கிறேன் உம்மிடத்தில் அன்புவைத்த என்மேல் நீர் அன்புவைக்கக்கடவீர். ப்ரம்மரிஷியே! என்னுடன் கலந்து ஸந்தோஷமாயிரும். என்னைத்தழுவிக்கொள்ளும். பிராம்மணரே! நான் உம்மிடத்தில் விருப்பத்தினால் மிக்க வருத்தமுள்ளவளாயிருக்கிறேன். தர்மத்தில் மனமுள்ளவரே! உமது தவத்திற்குச் சிறந்தபலன் இதுதான். உம்மைப்பார்த்த அளவில் எனக்கு விருபபமுண்டாயிற்று வந்தடையும் என்னை ஆதரியும். இந்த வீட்டிற்கும் இந்தத்தனத்திற்கும் இங்கே நீர் பார்க்கிற மற்றமுள்ள எல்லாவற்றிற்கும் எனக்கும் நீர்தாம் தலைவர்; ஸந்தேகமில்லை. பிராம்மணரே! நீர் விரும்பினவற்றை எல்லாம் செய்வேன். நினைத்தபலன்களையெலலாம் கொடுக்கும் இந்த அழகான வனத்தில் என்னுடன்கூடி ஸுகியும். நான் உமக்கு உட்பட்டவளாயிருப்பேன். நீரும் என்னுடன்சேர்ந்து ஸுகம்பெறுவீர். தேவலோகத்திலும மானிடலோகத்திலுமுள்ள எல்லாஸுகங்களையும் நாம் அனுபவிக்கலாம். பெண்களுக்குப் புருஷனோடு சேருவதற்கு மேலானது ஒன்றுமில்லை. எங்களுக்கு இதுதான் பெரும்பயன். மன்மதனால் வசப்பட்டபெண்கள தங்களிஷ்டப்படியிருப்பார்கள. அவர்கள் நினைக்கும்போது மிகக்கொதிபபுளளபுழுதியும் அவர்களுக்குச் சுடாது' என்றாள். அதற்கு அஷ்டாவக்கர், 'சிறந்தவளே! பிறர்பெண்டிரை நான் எவ்வகையிலும் சேரேன். பிறர்பெண்டிரைத்தொடுவது தர்மசாஸ்திரங்களால் மறுக்கப்பட்டது. பதிவிரதையான மாதினிடத்தில் சேருவதற்குப் பிரம்மஹத்திக்குச் சொன்ன பிராயச்சித்தமே சொல்லப்பட்டிருக்கிறது. பிராம்மணஸ்திரீவிஷயத்தில் இன்னுமதிகமாகப் பாவம் சொல்லப்பட்டதைக் காண்கிறோம. சிறந்தவளே! காண்டிவாகமசெய்துகொள்ள விருபபமுள்ளவன். அதுவிஷயத்தில் எனக்குப் பிரம்மசரியம் கெடும். ஆதலால, விவாகம்செய்வதற்குமுன் பிராயச்சித்தம் பெரிதாகும். அப்படிப் பிராயச்சித்தம் செய்துகொள்ளாமல்

விவாகம் செய்துகொள்பவனுக்கு வித்து சுத்தமாகாது. உண்மையில் தாயினாலும் தந்தையினாலுந்தான் புத்ரனைச் சுத்தனென்றறிய வேண்டும். நான் காமலுப்தகளையறியாதவன். தர்மத்திற்காக ஸத்தியுண்டாகவேண்டியது மட்டுந்தான். ஆகையால், என்னுடைய புத்ரஸ்தானத்தினால் நான் நல்லலோகம் போகவேண்டுமென்பது தான் என்னுடைய நிச்சயம். உத்தமியே! தர்மத்தையறி. அறிந்த பின் நிவ்ருத்தித்துவிடு' என்று சொன்னார். அந்தஸ்திரீ, 'பிராம்மணரே! வாயு அக்நி வருணன்முதலான எத்தத்தேவர்களும் மன்மதன்போலப் பெண்களுக்குப் பிரியமாயிருக்கிறதில்லை. பெண்களுக்கு ஸுகப்படுவதே இயற்கை. பெண்களுள் ஆயிரத்தில் ஒருத்தியோ லக்ஷத்தில் ஒருத்தியோ ஒருபதிவிரதை எப்போதாவது கிடைக்கலாம். பெண்கள், தந்தைதாய்களையும் குலத்தையும் உடன்பிறந்தவர்களையும் கணவனையும் மைத்துனர்களையும் புத்ரர்களையும் பாரார்; மஹாநதிகள் கரைகளை இடிப்பதுபோல லீலைகளைச்செய்து குலங்களைக்கெடுப்பார். எல்லாத்தோஷங்களையும் நினைத்துத்தான் பிரம்மதேவரே மேற்சொன்னதைக் கூறியிருக்கிறார்' என்று சொன்னாள். மனம் வேறுபடாத அந்தரிஷி அந்தமாதைப்பார்த்து, 'உன் விருப்பப்படி உன்னெண்ணம் இருக்கட்டும் நான் என்ன செய்யவேண்டுமென்று நீ சொல்லுகிறாய்?' என்று கேட்டார் அதற்கு, அந்தஸ்திரீ, 'பகவானே! இடமும் காலமும் வந்தபோது தெரிந்துகொள்வீர். மஹானுபாவரே! அதுவரையில் இங்கிரும். நீர்வந்தகாரியம் நிறைவேறும்' என்றுசொன்னாள் யுதிஷ்டிர! பிறகு, அந்தப் பிரம்மரிஷி அவளைப்பார்த்து, 'அப்படியே ஆகட்டும். உனக்கு எதுவரையில் இஷ்டமிருக்கிறதோ அதுவரையில் நான் நிச்சயமாய் இங்கு வஸிப்பேன்' என்றுசொன்னார். அஷ்டாவக்ரமகரிஷி அப்போது அந்தஸ்திரீ மூப்பினால் மிகக்கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதைக்கண்டு மிகக்கவலையுற்றார்; கொதிப்புற்றவர்போலானார். அந்தப் பிராம்மணரிஷி டர், அப்போது அவளுடைய அங்கத்தின் எந்த இடத்தைப்பார்த்தாலும் அங்கங்குள்ளவிகாரத்தினால் வெறுப்புற்றதனால் [1]அவர் பார்வை அவளிடத்தில் இனிமையாயில்லை. 'இவள் இந்தக்கிருஹதேவதையாயிருந்து சாபத்தினால் உருமாறச் செய்யப்பட்டாளோ? இவளுடைய காரணங்களை நாம் அவஸரப்பட்டு விசாரிப்பது ஸரியாகாது' என்னும் இடைவிடாத சிந்தையோடு அந்தவிஷயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவலால் மனங்கலங்கிக்கொண்டே அவருக்கு அந்த இர

[1] பார்வையிரும்பவில்லை என்றபடி.

வின் மிச்சப்பாகம் சென்றது. அப்போது அந்தஸ்த்ரீ அவரைப்பார்த்து, 'பகவானே! ஸூர்யனுடையமண்டலம் செவ்வானத்தினால் சிவந்திருப்பதைப்பாரும். உமக்கு என்னவஸ்து கொண்டுவரப்பட வேண்டும்?' என்றுகேட்டாள். அவர் அவளைப்பார்த்து, 'ஸ்நாநத்திற்குவேண்டியஜலத்தை இப்போது கொண்டுவா. பிறகு, நான் வாக்கையும் இந்த்ரியக்கிரியையும் சேர்த்துக்கொண்டு ஸந்தியாவந்தனம் செய்வேன்' என்று சொன்னார்.

ஐம்பத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வடதிசைத்தேவதை அஷ்டாவக்ரரை உபசரித்து அவர் மனத்தைப் பரிசோதித்தது.)

பிறகு, அந்தஸ்த்ரீ அந்தப்பிராம்மணரைப்பார்த்து, 'அப்படியேயாகட்டும்' என்றுசொல்லிச் சிறந்த தைலத்தையும் ஸ்நாநவஸ்த்ரத்தையும் கொண்டுவந்தாள். மஹாதமாவான அந்த அஷ்டாவக்ரமஹர்ஷியினால் அனுமதிகொடுக்கப்பெற்றபிறகு அந்தமாது அவர் அங்கங்கள் எல்லாவற்றிலும் தைலமிட்டாள். அந்தர்ஷி ஸ்நானவஸ்த்ரத்தைத் தரித்துக்கொண்டு மஞ்சனமாடுமிடத்திற்கு மெதுவாகச்சென்று புதிதும் பலநிறங்களுள்ளதுமாகிய சிறந்த ஆஸனத்திலிருந்தார். அம்முனிவர் அந்த ஆஸனத்தில் உட்கார்ந்தபிறகு இனிமையாகக்கைபடும்படி அந்தஸ்த்ரீ மெதுவாக அவருக்கு ஸ்நாநம்செய்வித்தாள்; அம்முனிவருக்குத் தேவலோகத்திய உபசாரங்களை முறைப்படி செய்தாள். மிக்கஸுகஉஷ்ணமானவெந்நீராலும் அவள்கைபட்டஸுகத்தினாலும் உண்டான நித்திரையினால் அவ்விரவுமுழுதும் கடந்துபோனதையும் அம்மகாமுனிவர் அறியாமற்போனார். பிறகு, அவர் எழுந்து மிக்க ஆச்சர்யத்துடன் கீழ்த்திசையில் ஆகாயத்தில் ஸூர்யன்உதயமாயிருக்கதைக் கண்டார். பிறகு, அவருக்கு, 'என்ன இப்படி எல்லாப்பாவங்களையும் போக்குவதான ஸந்தியாவந்தனமும் எனக்கில்லாமற்போய்விட்டது? இதென்ன பிரமையா? அல்லது, உண்மையாகவேயிருக்குமா?' என்கிற எண்ணமுண்டாயிற்று. பிறகு, அவர் ஸூர்யனைஉபஸ்தானம்செய்து, அவளைப்பார்த்து, 'நான் என்னசெய்வது?' என்று கேட்டார். அவள் அந்தர்ஷிக்கு அமிருதம்போன்ற ஸுவையுள்ள அன்னத்தைக் கொண்டுவந்தாள். அவர் அந்த உணவின்ஸுவையினால்

அதை மிகுதியாக நினைக்கவில்லை. பிறகு, மிச்சமுள்ள பகல்சென்று திரும்பவும் மாலைப்பொழுதுவந்தது. பிறகு, அந்தஸ்திரீ அஷ்டாவக்ரபகவானைப்பார்த்து 'நீங்கள் சயனிக்கலாம்' என்றுசொன்னாள். அங்கே இருவருக்கும் தனித்தனியேபோடப்பட்ட இரண்டுசிறந்த படுக்கைகளிலும் அந்தஸ்திரீயும் அந்தரிஷியும் நித்திரை செய்தனர். முன்போலவே அந்தஸ்திரீ பாதிராத்திரியில் அவர் சயனத்திற்குவந்தாள். அஷ்டாவக்ரர் அவளைப்பார்த்து, 'உத்தமியே! என்மனம் அயலார் மனைவிகளிடம் பிரவேதில்லை. பிறந்தவளே! எழுந்திரு. உனக்கு நன்மையுண்டாகட்டும். இங்கேசயனிப்பதை விட்டுவிடு' என்றுசொன்னார். அந்தப்பிராம்மணரால் மனஉறுதியுடன்தடுக்கப்பட்டஅந்தஸ்திரீ உடனே அம்முனிவரைப்பார்த்து, 'நான், ஸ்வதந்திரமாயிருப்பவள்; (ஒருவன்மனைவியல்லேன்.) உமதுதர்மத்திற்குத்தவறுதலில்லை' என்று சொன்னாள். அஷ்டாவக்ரர், 'பெண்கள் ஸ்வதந்திரமாயிருப்பதில்லை. பெண்கள் பிறருக்கு அடங்கியிருக்கவேண்டுமேயன்றித் தம்மிச்சையாயிருக்கத்தகாதென்பது பிரம்மதேவருடைய கட்டளை' என்றுசொன்னார். அந்தஸ்திரீ, 'பிராம்மணரே! புணர்ச்சியில் விருப்பம் என்னை வருத்துகின்றது. என்னுடைய பக்தியையும்பாரும். பிராம்மணரே! என்னைநீர் அங்கிகரியாவிடின் பாவத்தையடைவீர்' என்று சொன்னாள். அஷ்டாவக்ரர், 'ஐம்புலன்களுக்கும் அடிமையாகும் மனிதனை அநேக பாவங்களிழுக்கும். நான் மனஉறுதியினால் புலன்களை வெல்லுகிறவன். சிறந்தவளே! உன் சயனத்திற்குச் செல்லலாம்' என்றார். அந்தஸ்திரீ, 'பிராம்மணரே! உமக்குத் தலைவணங்கி நமஸ்காரம் செய்கிறேன். அனுக்கிரகம்செய்யக்கடவீர். குற்றமற்றவரே! தரையில் விழுந்துநமஸ்காரம்செய்யும் எனக்குத் தஞ்சமாகக்கடவீர். அயலார் மனைவிகள் விஷயத்தில் குற்றங்களாகிகமாயிருப்பதாக நீர் நினைத்தால் இப்போதே என்னை உமக்குக்கொடுக்கிறேன். பிராம்மணரே! என்னைப் பாணிக்கிரகணம் செய்துகொள்ளும். பாவமுண்டாகாது. இதை உண்மையாக உமக்குச் சொல்லுகிறேன். எனக்குச் சுவனவனில்லாமல் நானே ஸ்வதந்திரமாயிருப்பவளென்றறியும். அப்படிப்பட்டவளுக்கு எதுதர்மமோ அது எனக்கிருக்கட்டும். நான் உம்மிடத்தில் மனம் வைத்தவளாகவும் யாருக்கும் உட்படாதவளாகவும் இருக்கிறேன். என்னை நீர் அடையலாம்' என்று சொன்னாள். அஷ்டாவக்ரர், 'உத்தமியே! நீ ஸ்வதந்திரையாவதெப்படி? அதன்காரணத்தை எனக்குச்சொல். மூவுலகங்களிலும் தன்னிச்சைப்படி இருக்கக்கூடியபெண் யாருமில்லை. சிறுவயதில் தந்தையும் தருணம்வந்தபோது சுவனனும்

முதிர்ந்தவயதில் புத்திரனும் காப்பதனால் பெண் தன்னிச்சைப்படியிருப்பதில்லை. 'நிழலியாயிருப்பவளைக் கன்னிகையென்று நான் நம்பவில்லை. குற்றமற்றவளே! எனக்கு உன்மேலாசையுமில்லை' என்று சொன்னார். அந்தஸ்த்ரீ, 'பிராம்மணரே! நான் சிறுபிராயமுதலாகவே கலியாணம்பண்ணிக்கொள்ளாமல் பிரம்மசாரி விரதத்திலிருக்கிறேன். நான் கன்னிகைதானென்பதில் ஸந்தேகமில்லை. என்னை உமக்கு மனைவியாகச் செய்துகொள்ளும் என் ஆசையைக் கெடாதீர்' என்றாள். அஷ்டாவக்ரர், 'அந்த வதான்யமுனிவர் என்னைப்போலவே உன்னையும், உன்னைப்போலவே என்னையும் பரீக்ஷிப்பது இது. இது என்காரியத்திற்குக் தடையாக ஏற்பட்டதோ? அல்லது, உண்மையாகத்தானிருக்குமோ? இதிகவும் அற்புதம். நான் எதைச் செய்வது நன்மையாக இருக்குமோ?' என்று அவளிடத்தில்சொல்லிப் பிறகு, 'இவள் சிறந்த ஆபரணங்களும் உடைகளுமுள்ள கன்னிகையாகவே என்னிடம்வந்திருக்கிறாள். ஆனால், இவளுடைய இந்தச்சிறந்தரூபம் மூப்பையடைந்திருந்ததெப்படி? இப்போது திரும்பவும் இப்படிப்பட்ட கன்னிகைவடிவம் வந்திருக்கிறது. இதற்குமேலென்னகுமோ? எவ்வகையிலும் நியமம்தவறுவதில் எனக்கு இஷ்டமில்லை. நான் ஸத்யமாகவே இவளை க்ரஹிக்கவேண்டும்' என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்" என்றார்.

ஐம்பத்திரண்டாவது அத்யாயம்.

நானாதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(அஷ்டாவக்ரர் வாதிகளைத்தேவதையிடம் விடைபெற்றுவந்து வதான்யரின் புதல்வியை மணந்தது).

யுதிஷ்டிரர், "அந்தஸ்த்ரீயானவள் சிறந்தமஹிமையுள்ள அந்த ரிஷியின் சாபத்திற்குப் பயப்படாமலிருந்ததெப்படி? அந்த அஷ்டாவக்ரர் எப்படித் திரும்பிப்போனார்? அதனை எனக்கு நீர்சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்:

"அஷ்டாவக்ரர், அவளைப்பார்த்து, 'உனதுரூபத்தை என்மாற்றுகிறாய்? பொய்சொல்லலாகாது. பிராம்மணன்மேலாணைப்படிசொல்' என்றுகேட்டார். அதற்கு அந்தஸ்த்ரீ, 'பிராம்மணரே! உன்மையான சக்தியுள்ளவரே! இதனாணையை ஆகாயம்பூமிகளில் எங்கே வைத்தாலும் வையும். நான் சொல்வதையெல்லாம் வாக்குடன்

கேளும். உம்முடைய மனஉறுதியைப் பார்ப்பதற்காக நான் இந்தப் பரீக்ஷைசெய்தேன். 'உண்மையான இந்திரியஜயமுள்ளவரே! விரதத் தவறுமையினால் நீர் புண்ணியலோகங்களை ஜயித்தவராகிறீர். என்னை வடதிசைத்தேவதையென்றறிவும். பெண்கள் மனம் நிலையற்றிருப் பதை நீர் கண்டிருக்கிறீர். இழிகுலமான ஸ்த்ரீகளையும் மன்மததாபம் தண்பஞ்செய்யும. பெண்சாலை நம்பாதவனும் கள் காமம் சூதுமுத லியகுற்றங்கள் இல்லாதவனும் பெண்களிடம் அதிகப்பற்றில்லாதவ னும் வரைவிட்டுப்போகாதவனும் தெரிந்தவனும் நல்லொழுக்கமுள் ளவனுமான புருஷன் தான் மனைவியுடன்கூடஸுகம்பெறுவான். இப் போது பிரம்மதேவரும் இந்திரன்முதலானதேவர்களும் உம்மிடத்தில் திருப்தியடைந்திருக்கின்றனர். பிராம்மணசிரேஷ்டரே! (மஹிமை யுள்ளீர்) என்னகாரியம்பற்றி அந்தப்பெண்ணின் தகப்பனாரால் அனுப் பப்பட்டு இங்குவந்தீரென்னின் அந்தவிஷயத்தை உபதேசம்கேட்க அனுப்பப்பட்டீர். அதையெல்லாம் நீர்கேட்டீர். பெண்ணைவள் ஸுகத்தில் மிகப்பற்றுள்ளவள்; இன்சொல்லினும் விட்டுப்பிரியாம லிருப்பதனும் சிறந்த ஆடைமுதலியவற்றினும் அதிகமாகவிருந் காமலிருப்பதனும் ஒற்றுமையினும் காப்பாற்றப்படுகிறாள். புண் ணியதிதிகள் இல்லாதபோதும் சாஸ்திரத்தினால் விலக்கப்படாதஇரவு களிலும் ருதுகாலமில்லாவிடினும் சேரலாம் இராத்திரிகாலத்தில் அதிகநியமம்வேண்டாம் நியமத்தை முழுதும்விடவும்கூடாது. நீர் கேஷமமாக உமது இல்லம்செல்லலாம். உமக்குச் சிரமமுண்டாகாது. பிராம்மணரே! அந்தக்கண்ணிகையை நீர் அடையப்போகிறீர். அவள் புத்ரஸந்ததியுள்ளவளாவாள். நீர் என்னைச் சபதத்தோடு கேட்டீர். அதனால், உமக்குப்பெண்களின் இயற்கையைப்பற்றிய இந்தமறைமொழி நான் சொன்னேன். பிராம்மணன்மேலாணையானது இம்மூவுலகங் களிலுமுள்ள எவரும் எக்காலமும் தாண்டக்கூடாதது. நீர் செல்ல லாம். உமதுகாரியமாயிற்று. இன்னுமென்னகேட்க விரும்புகிறீர்? பிரம்மரிஷியே! அஷ்டாவக்ரரே! எல்லாவற்றையும் உள்ளபடிசொல் வேன். பிராம்மணோத்தமரே! உமக்காக வதான்யரிஷியினும் வேண் டிக்கொள்ளப்பட்டேன் அவரைக் கௌரவப்படுத்துவதற்காக உம் மிடத்தில் இந்தச்சொல்லைச் சொன்னேன்' என்றுசொன்னாள். அவள் சொல்லைக்கேட்டு அந்தப்பிராம்மணர் கைகூப்பிநின்று அவளால்விடை கொடுக்கப்பெற்றபிறகு தம்வீட்டிற்குத் திரும்பிவந்தார். தர்மராஜ னே! வீடுவந்துசேர்ந்து இம்மாற்றத்தை தம்சுற்றத்தாரை விசாரித்த பிறகு அந்தவதான்யரிஷியிடம் மரியாதையோடுசென்றார். அப்போது

அந்தப்பிராம்மணரால் கேட்கப்பட்ட அஷ்டாவக்ரர் மனம் மிகக்களித்து தாம்நேரில்கண்டகாட்சியை அந்தப் பிராம்மணருக்குச் சொல்லலானார்: 'பிரபுவே! நான் உங்களால் அனுமதிகொடுக்கப்பெற்றுக் கந்தமாதனமலைக்குப்போனேன். அதற்கும் வடக்குப்பிரதேசத்தில் ஒருஸ்திரீயைத்தேவதையைக் கண்டேன். அவள் உம்மைப்பற்றியும் சொல்லி நீர் சொன்னசொல்லையும் எனக்குத்தெரிவித்து விடைகொடுத்த பிறகு வீட்டிற்கு வந்தேன்' என்றார். உடனே அந்தப்பிராம்மணர் (அவரைப்பார்த்து, 'நல்லநக்ஷத்ரமும் திதியும் சேர்ந்திருக்கும் காலத்தில் என்பெண்ணை விவாகம்பண்ணிக்கொள்ளும். நீர் சிறந்த பாத்ரமாயிருப்பவர்' என்று சொன்னார். தர்மராஜனே! தர்மத்தில் மனம்வைத்தவரில்சிறந்தவரான அஷ்டாவக்ரர் ஆகட்டுமென்றுசொல்லி அந்தக்கன்னிகையை விவாகம்செய்துகொண்டு பிறகு மகிழ்வுற்றிருந்தார். மிகச்சிறந்த அந்தக்கன்னிகையை விவாகம்செய்துகொண்டதனாலேயே மனத்தியாம்ரீங்கி ஸந்தோஷமாகத் தம்முடையஆச்ரமத்தில் வஸித்தார்" [1] என்று கூறினர்.

ஐம்பத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தாழ்ந்தஜாதிப் பெண்களிடம் பிறந்தவர்களின் பிராம்மணத்வ க்ஷத்ரியத்வாதிகளைப்பற்றியது)

யுதிஷ்டிரர், "மகாராஜாவான பிதாமஹரே! வைசியஜாதிக்ஷத்ரஜாதிப்பெண்களிடத்தில் பிறந்த பூர்விகர்களான பிராம்மணக்ஷத்ரமகர்கள் பிரம்மரிஷிகளென்றுசொல்லப்படுகின்றனரே. இதுஎப்படி? வேறுயோனியிற்பிறந்த பிராம்மணனுக்கு முரண்படுகிறதென்று நினைக்கிறேன். இதன் உண்மையைச் சொலலக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்:

---

[1] ஒருபுருஷன் ஸ்திரீயை கல்லெழுகை தவறுமலிருக்கும்படி காப்பதற்குச் சொன்னவழியை அனுசரிததால் அந்தஸ்திரீ சரியாக நடப்பள். அப்படிப்பட்டவன் தான் கல்லகதி பெறுவதுடன் தனது மனையாட்டியையும் கல்லகதியிற சேரப்பண்ணுகிறான். புருஷனேனும் ஒத்திருப்பதைத்தவிரத் தனித்தவேறு தர்மம் பெண்ணுகுலில்லையென்பதினாலேதான் அவளை ஸஹதர்மையென்பது. கற்புள்ளபெண் ஒருவன் ஸுகத்திற்கும் தாமதத்திற்கும் இன்றியமையாததுணை. ஆசாரியன் சிஷ்யனை சேர்ந்திருதலைவதுபோலத் தன் துணையான மனைவியைச் சேர்ந்திருந்து கல்வழியில் நடத்தவது கணவன் கடமை என்னும் ஸமாதானத்தை இக்கதையில் கண்டுகொள்க.

"யுதிஷ்டிரா! இந்தவிஷயத்தில் உனக்குச் சங்கைவேண்டாம். தெரிந்துகொள். இது பிசகா, ஸரியாஎனவும் நீ சிந்திக்கவேண்டாம். அந்தரிஷிகள மனத்தை அடக்கினவர்கள். அவர்களின் அறிவுதடைப் படுவதில்லை. அவர்களுக்குப் பிரம்மதேஜஸ் அதிகம். அதனாலேதான் ரிஷிகளென்று வேதங்களால சொல்லப்படுகின்றனர். அரசர்க்கரசே! அவர்களை இகழத்தகாது. சாஸ்திரத்தை நம்புகிறவர்களுக்குச் சாஸ்திரந்தானே முக்கியம் அவர்களைப் பிராம்மணர்களென்று உலகம் ஒப்புக்கொள்ளுகிறது அதற்குக்காரணம் தவந்தான். அப்பா! நிறந்தசத்புருஷனே! தவமும் ஞானமும் நிரம்பினமகாத்மாக்களால் உண்டாக்கப்பட்ட அனுஷ்டானங்களே நமக்குப் பிரமாணங்கள். அரசர்க்கரசனே! பரந்திரேஷ்டனே! பிராம்மகூத்திரிய வைசியசூத்திரரென்னும் நான்குஜாதிப்பெண்களும் தர்மமாகப் பிராம்மணனுக்குப் பாரியையளாகலாம். பரதரிஷ்டனே! கூத்திரிய வைசிய சூத்திரஜாதிப் பெண்கள் கூத்திரியனுக்கு மனைவிகளாகலாம். பாரதரிற்சிறந்தவனே! வைசியனுக்கு வைசியஜாதிப் பெண்ணும் சூத்ரஜாதிப் பெண்ணும் மனைவிகளாகலாமென்று சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றனர். சூத்திரனுக்குச் சூத்திரஜாதிப்பெண்மட்டுந்தான் பாரியையாகச் சொல்லப்பட்டிருக்கிறாள். மேற்குலத்துப் பெண்ணும் கீழ்க்குலத்து ஆண் பிள்ளையும் சேருவதனாலேதான் ஜாதி ஸங்கரமுண்டாகிறது. அரசனே! சூத்திரப்பெண்ணுக்கு நாலுஜாதிப் புருஷர்களும் கணவர்களாகச் சொல்லப்படுகின்றனர். மேற்குலத்துப்பெண்ணுக்குமட்டும் அந்தவருணத்தில்பிறந்த ஒருவன்தான் கணவன். கூத்திரியஜாதிப்பெண்ணுக்குப் பிராம்மணகூத்திரியர்கள் இருவரும் கணவர்களாகச் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டனர். ராஜனே! மனிதரிற்சிறந்தவனே! வைசியஜாதிப்பெண்ணுக்கு வைசியன் கூத்திரியன் பிராம்மணன் இம்மூவரும் கணவர்களாமென்று விதிக்கப்பட்டனர். இவ்விதியைநினைத்துத்தான் முன்னிருந்த ரிஷிகள் மகாத்மாக்களும் பிரம்மரிஷிகளுமான புத்ரர்களை உண்டுபண்ணினர் பூர்விகரிஷிகளாகிய [1] மித்ரா வருணர் இருவராலும் வஸிஷ்டர் அகஸ்தியர் பர்ஹிஷவ்யர் இவர்கள் உண்டாக்கப்பட்டனர். கசுஷீவான், ஆர்ஷ்டிஷேணா, புருஷர், கஷர், கௌதமர் இவர்கள் [2] மமதையெனபவனின் பிள்ளையின் பிள்ளைகளென்று சொல்லப்படுகின்றனர் பகவானவதஸப்ரியர், ஸ்தூலரச்மி, அகூபனி இவர்கள் கௌதமருக்குத் தர்மபத்னியிடம்பிறந்த புதல்வர்கள். கபிஞ்ச

[1] பெண்ணில்லாமலே ஒரு பாத்திரத்தில் வீரியம்சேர்ந்து உண்டாகப்பட்டனர்.

[2] சூத்திரஜாதிப்பெண்.

லாதரென்னும் பிரம்மரிஷி சண்டாளியினிடத்தில் பிறந்தவர். [1]வைன தேயரென்பவர், வஸிஷ்டருக்குச் சூத்ரஜாதிப்பெண்ணினிடத்திற் பிறந்தவர். கௌரவனே! முன்னர் அத்ருச்யந்தியென்பவனின் தந்தையாகிய சித்ரமுகனென்னும்பெயருள்ளவைசியன் வஸிஷ்டருடையவீரியத்துக்கு ஜனித்ததனாலும் அவருடைய அனுக்ரஹம்பெற்றதனாலும் பிராம்மணனாதலையும் பிரம்மரிஷியாதலையும் பெற்றான். அந்தச்சித்ரமுகனென்னும் வைசியன் தனது அழகானபெண்ணை (அத்ருச்யந்தியை) வஸிஷ்டபுத்திரருக்கு (சக்தியென்பவருக்கு)க் கொடுத்தான். அவளுக்குப்பிறந்தவர் பாசரரென்னும்பிரம்மரிஷி. அப்படியே பராசரருக்கும் ஸத்தியவதியென்னும் செம்படவப்பெண்ணிடம் யோகமே உருக்கொண்டமகரிஷியாகிய வ்யாஸமுனிவர் பிறந்தார். தவமும் [2]யோகமுமே உருக்கொண்டவரும் ஐம்புலன்களையுமடக்கினவரும் சிறந்த புகழ்பெற்றவருமாகிய ரிசியசிருங்கமுனிவர் விபாண்டகருக்குப் பெண்மானிடமபிறந்தவர். மந்தபாலருக்குச் சார்ங்கியென்னும் பக்ஷியினிடம் ப்ரம்மத்தை உபதேசிப்பவரும் பரிசுத்தருமான நான்கு பிரம்மரிஷிகள் பிறந்தனர். அவர்களால் அக்நிபகவான் (காண்டவவனதகனத்தில்) துதிக்கப்பெற்றார். த்ரோணன், ஸ்தம்பமித்ரன், சிறந்தபுத்தியுள்ள ஸாரிஸ்ருக்வன், ஜரிதாரிஎனப்பெயர்பெற்ற நால்வரும் சூரியனுக்கொப்பானவர்கள். காலவிருக்ஷர்என்னும் மகரிஷிக்குப் பறவையினிடத்திலேயே பொன்னிறமுள்ளவரும் சிறந்தமனமையுள்ளவருமாகிய ஹிரண்யஹஸ்தரென்னும்மகரிஷிபிறந்தார். அப்பா! அரசர்க்கரசே! புலஸ்தியர் புலஹர்முதலானமகரிஷிகள் பிரம்மதேவருடைய மனத்தினால் அக்நியிலிருந்துண்டானவர்கள். பரதஸ்ரேஷ்டனே! ஸாவர்ணியனென்னும்ராஜரிஷி மண்ணினால்செய்யப்பட்டஸவர்ணையென்னும் பெண்ணினிடம் அதிதியின்புத்ரனைசூரியனுக்குப் பிறந்தவன். மூத்தகுமாரரும் மிகுமையுள்ளவருமானசாண்டில்யர் கசியபருக்கு அக்நியிற்பிறந்தவர். சரத்வானென்பவருக்கு நாணல்தண்டிலிருந்து கிருபாசாரியரும் கிருபியும் பிறந்தனர். அரசரிற் சிறந்தவனே! ரேணுவென்பவரும் பரசுராமர்தாயாகிய புகழ்பெற்ற ரேணுகையும் ஸோமபரென்னும்மகாத்மாவுக்குத் தாமரைமலரிலிருந்துண்டாயினர். புவனியில்பெயர்பெற்ற ஆர்க்ஷதரென்னும்மகரிஷி ஸோமகரென்னும்மகாத்மாவுக்கு யமுனையிற்பிறந்தவர். பாரதனே! இக்ஷ்வாகுப்போன்றதக்ஷத்தியுள்ள த்ருபதனுக்கு ஆகவரியமென்னும் அக்

[1] இது வேறுகல்பத்தில் நடந்ததாகக் கொள்ளவேண்டும்.

[2] தியானம்.

கினியிலிருந்து த்ருஷ்டத்யும்னனும் யாகவேதிகையிலிருந்து த்ரௌபதியும் பிறந்தனர். அப்படியே மகாத்மாவானவஸிஷ்டருக்குப் புஷ்பின்கர்ப்பத்தில் வியாக்ரபாதர்முதலிய க்யாதிபெற்ற பத்தொன்பது புத்ரர்கள் பிறந்தனர். மந்தர், பாதலோமர், ஜாபாலிமகரிஷி, மன்யு, உபமன்யு, ஸைதகர்ணர் இவர்களும் இன்னுமநேகம்புகழ்பெற்றவர்களும் பூமியில் கோத்ரரிஷிகளாயினர். இக்ஷ்வாகு வம்சத்திற்பிறந்த மகாத்மாவாகிய விச்வகாசனென்னும்ராஜரிஷியின் தலையைப்பிளந்து கொண்டு பாலாச்வனென்னும்புத்ரன் வெளிக்கிளம்பினன். அஸ்த்ரங்களின்வன்மைகூர்ப்பெற்ற மாந்தாதாவென்னும்ராஜரிஷி சிறந்தபுத்தியுள்ள யுவனச்வனுல் தன்கர்ப்பத்தில் வைக்கப்பட்டான். சக்ரவர்த்தியும் மிக்கபுகழ்பெற்றவனுமாகிய கௌரிகனென்னும்ராஜரிஷி ஸுபாஹுவென்னும் அரசனுக்குப் பாஹுவதையென்னும் நதியினிடம் பிறந்தவன். நரகன், ஸம்வர்த்தன், புஷ்கலன் இவர்கள் பூமியின்புத்ரர்கள். பெரியமஹிமையுள்ள கார்த்தியமஹரிஷி ஜலத்தினின்றுஉண்டானவர். இவர்களும் இன்னுமநேகர்களுமாகிய அரசர்களும் பிராம்மணர்களும் மஹாத்மாக்களாணமகரிஷிகளின் பிரபாவத்தினுல் உண்டானவர்கள். அவர்களின்தவத்தினுலும் வித்தையினுலும் மற்றுமுள்ள குணங்களினுலும் ஸாதிக்கக்கூடாதது ஒன்றுமில்லை மனிதருக்கதிபதியே! வேந்தே! யுதிஷ்டிரா! தர்மசாஸ்திரம்செய்தமனுவினுல் இந்தவிஷயத்திற்சொல்லப்பட்ட ஒருசுலோகமிருக்கிறது; அதைக்கேள்: (அதன்பொருள்) 'ரிஷிகள், நதிகள், மகாத்மாக்களானஸத்புருஷர்கள், பெண்களின்கெட்டநடை இவற்றின்காரணங்களை அறியக்கூடாது' என்பது. ஆதலால், மகரிஷிகளின்பிறப்பைப்பற்றிச் சங்கிக்கத்தகாது. அக்கினியானது எங்கும்வியாபிப்பதுபோல, மகாத்மாக்களின்மகிமையும் எங்கும்வியாபிப்பது" என்றார்.

ஐம்பத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதர்மார்க்கண்டேயருக்கு யுகதர்மமுதலியவற்றைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர் "மகாராஜரே! புருஷன் புத்ரஸந்தானத்தினுல் கரைபேற்றப்படுவானென்பது எப்படி? புத்திரனையடையாமனிருக்கும்வரையில் புருஷன் பலன்இல்லாதவனு?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்:—

"இவ்விஷயமாக முற்காலத்தில் மார்க்கண்டேயர்கேட்டதற்கு நாரதர்சொன்னதாகிய ஒருபழையஇதிஹாஸம் கூறுகின்றனர். அதை இப்போதுசொல்லுகிறேன். முன்னே கங்கை யமுனைகளின்நடுவில் போகவதியென்னும்நகரத்தின்ஸமீபத்தில் பர்வதர் நாரதர் அவிதர் தேவலர் ஆருணேயர் ரைப்யர்ஆகியஇவர்கள் வந்துசேர்ந்து உட்கார்ந் திருக்கக்கண்டு, மார்க்கண்டேயர் அவரிடம்போனர். அந்தரிஷிகள் மார்க்கண்டேயரைக்கண்டு எழுந்து அவர்முகம்நோக்கிநின்று பூஜைக் குரியஅந்தப்பிராம்மணரைப்பூஜித்து, 'நாங்கள் என்னசெய்யவேண் டும்?' என்றுகேட்டனர். அதற்கு மார்க்கண்டேயர், 'இந்தப்பெரிய வர்களின்சேர்க்கை பிரயாஸத்தினால் எனக்குக்கிடைத்திருக்கிறது. தர்மங்களையும் ஆசாரங்களையும்பற்றியநிச்சயத்தை இந்தச்சபையில் நான் பெறலாம். கிருதயுகத்தில் தர்மம் ஒழுங்காயிருந்தது; அந்த யுகம்போனபிறகு தடுமாறுகிறது. யுகக்கோறுமுள்ளமகரிஷிகளிடம் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்' என்றுகேட்டார் அந்தரிஷிகள் நாரதரைப்பார்த்து, 'ஓ! தத்வஜ்ஞானியே! இவருக்கு எங்கெங்கே ஸம்சயமிருக்கிறதோ அதையெல்லாம் நீர் சொல்லக்கடவீர். தர்மா தர்மங்களிலுள்ள லக்ஷணங்களைத்தீர்ப்பவர் நீர்தானே?' என்று சொன்னார்கள். அவ்வாறு ரிஷிகளின்கட்டளையினால் நாரதர் எல் லாத்தர்மங்களின் பலன்களையுமறிந்த மார்க்கண்டேயருக்கு அந்தரிஷி கள்யாவரும்ஒப்புக்கொள்ளத்தக்க மறுமொழிகூறலானர்: 'நீர்க்காயு ளுள்ளவரே! தவத்தினால்பிரகாசிப்பவரே! வேதவேதாங்கங்களின் உண்மைப்பொருளையறிந்தவரே! பிராம்மணரே! உமக்கு எதில் ஸந் தேகமுண்டாயிருக்கிறதோ அதை நீர் சொல்லவேண்டும். தர்மத்தை யும் உலகத்திற்குஉபகாரமானகாரியத்தையும் நீர் கேட்கவிரும்பும் மற்றஎதையும் சொல்வேன். மிகச்சிறந்ததவமுள்ளநீர் கேளும்' என்று சொன்னர். மார்க்கண்டேயர், 'இவ்வுலகத்தில் ஒவ்வொருயுகமுங் கடந்தபோதும் தர்மத்தின்அளவு உடைந்துகொண்டேவருகிறது. போலிக்கர்மங்களினால் தர்மத்தை நான் எப்படியடையலாமென்பது என்கருத்து' என்றுகேட்டார். நாரதர், 'பிராம்மணரே! முதலில் கிருதயுகத்தில் தர்மம் [1] நான்குபாதங்களோடிருந்தது. அதன்பிறகு, நாலடைவில் அதில்கொஞ்சம்கொஞ்சம்குறைந்ததனால் அதர்மம்தலைப் பட்டது. அதன்பிறகு, தர்மம்கெட்டதாகிய [2] திரேதாயுகமென்பது ஆரம்பித்தது. அந்தயுகம்கடந்தபின் [3] துவாபரமென்னும் மூன்றும்

[1] முழுதும்.
[2] திரேதாயுகமென்றபெயரினாலேயே மூன்றுபாதம்தர்மமென்பது கருத்து.
[3] இரண்டுபாதங்களிருப்பதைப்பற்றி துவாபரமென்று பெயர்வந்தது.

யுகம் வந்தது. அப்போது தர்மத்தின் இரண்டுபாதங்களை அதர்மம் அழித்துவிட்டது துவாபரம்கடந்து கலியுகம்வந்தபிறகு, உலகமடையும் தர்மமும்இருப்பதைச் சொல்லுகிறேன் கேளும்: 'நான்கிலொன்பது நாலாவதுயுகம். அதில் தர்மத்தின்ஒருபாதந்தான் நிற்பது. அந்தயுகம் ஆரம்பித்ததுமுதல் உலகத்தில் ஜனங்கள் தர்மங்களையும் ஆசாரங்களையும்விட்டுப் புத்தியும் ஆயுளும் பலமும் தனமும் குன்றிப்போகின்றனர்' என்றசொன்னர். மார்க்கண்டேயர், 'இப்படித் தர்மம்நிலைகலங்கி உலகதநில அதர்மம்தலையெடுத்தபோது நாலு வர்ணங்களின் ஹவ்யகவ்யங்களும் அழியம்மெடுமே?' என்றுகேட்டார். காரதர், 'மந்திரத்தினால்பரிசுத்தமான ஹவ்யகவ்யங்கள் எப்போதும் கெடுவதில்லை. கொடுப்பவன் சாஸ்திரப்படிகொடுத்தால அதைத் தேவர்கள் பெற்றுக்கொள்ளுகின்றனர். மனச்சுத்தியோடு ஹவ்யகவ்யங்களைக்கொடுப்பவனும் வேண்டியபலன்களையெல்லாம் பெறுவான். பலன்களைநிரம்பப்பெற்றுத் தனக்குஇஷ்டமிருக்கும்வரையில் ஸ்வர்க்கலோகத்திலும் தன்இஷ்டப்படி பூஜிக்கப்பெறுவான்' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், நாலுவர்ணங்களிலும் மந்திரமில்லாமலும் சாஸ்திரவிதியைவிட்டும் ஹவ்யகவ்யங்களைக் கொடுப்பவர்களின்கொடை எங்கேபோகிறது?' என்றுகேட்டார். காரதர் 'பிராம்மணர்கள் கொடுத்தது அஸுரர்களையும், க்ஷத்ரியர்கள்கொடுத்தது ராக்ஷஸர்களையும், வைசியர்கள்கொடுத்தது பிசாசுகளையும், சூத்ரர்கள்கொடுத்தது பூதங்களையும் சேருகின்றன' என்றுசொனனர் மார்க்கண்டேயர், 'ஆனால், நான்குவர்ணங்களுக்கும் கீழ்ஜாதியிற்பிறந்தவர்கள் நான்குவர்ணத்தாரால உபதேசிக்கப்பெற்று ஹவ்யகவ்யங்களைக்கொடுப்பாரா யின் அவர்கள்கொடுத்தது எங்கேசேருகிறது?' என்றுகேட்க, காரதர் 'நாலுவர்ணங்களுக்கும் தாழ்ந்தமனிதர் ஹவ்யகவயங்களைக்கொடுப்பாரயின் அவற்றைத் தேவர்களும் வாங்குவதில்லை. பித்ருக்களும் வாங்குவதில்லை. அவை பித்ருக்களையும் தேவர்களையும்விட்டு ராக்ஷஸர்களுக்கும் பிசாசுகளுக்கும் அவற்றைச்சேர்ந்தபிராணிகளுக்கும் ஜீவனமாகச் சொல்லப்படுகின்றன. கொடுப்பவர்கள்எல்லாரும் சாஸ்திரப்படி சிரத்தையோடுகொடுக்கும் ஹவ்யகவ்யங்களைமட்டுமே தேவர்கள் புசிக்கின்றனர்' என்றுசொன்னர்.

[1] ஒருவகைப்பிசாசு.

ஐம்பத்தைந்தாவது அத்யாயம்.

தர்மதர்மபர்வம்—(தொடர்ச்சி.)

(நாரதர் மார்க்கண்டேயருக்குக் கன்யாவிவாஹம் ஸந்ததி முதலியவற்றைப் பற்றிச் சொல்லியது.)

மார்க்கண்டேயர், 'நாரதரே! நான்குவர்ணங்களுக்குங்கீழ்ப்பட்டவர்கள்கொடுக்கும் ஹவ்யகவ்யங்களைப்பற்றிக்கேட்டேன். கன்னிகைகளுக்கு விவாஹத்தையும் புத்ரோத்பத்தியையும்பற்றி எனக்குச்சொல்லும்' என்றுகேட்டனர். நாரதர், 'பிள்ளைகளுக்குக் கன்னிகைகளைக் கொடுப்பதையும் ஸ்த்ரீபுருஷர்களசேருவதையும்பற்றி நான் க்ரமமாகவும் தெளிவாகவுஞ்சொல்லுகிறேன்; கேளும். பெண்பிறந்த உடனேயே அவளை ஸரியானவனுக்குக் கொடுக்கவேண்டும். கன்னிகை, காலத்தில்கொடுக்கப்பட்டால் பிதாவானவன் தர்மம்செய்தவனாகிறான். ருதுவானகன்னிகையை அவளுக்கு அதிகாரியாயிருப்பவன் கொடாமலிருப்பானையின் ஒவ்வொருமாதமுங்கடந்தபோதும் அவளுடைய ஒவ்வொருகர்ப்பத்தையழித்தபாபத்தை அடைகிறான். உலகலுகங்களில்லாமல் கன்னிகையைவீட்டில் அடைத்துவைக்கும் பந்துவானவன் அவளால்சபிக்கப்பட்டுக் கர்ப்பச்சேதமபண்ணின தோஷத்தை அடைகிறான். பாணிக்ரஹணத்தினால் மாத்ரம் கொடுக்கப்பட்ட கன்னிகை அந்தக்கணவன் இறந்தபோனால் இரண்டாவது கணவனுடன் விவாஹஸம்ஸ்காரம்பெறத்தக்கவளாகிறாள். அந்தக்கன்னிகை, 'புனர்ப்பூ' என்னப்படுகிறாள். அவளும் அவள்ஸந்ததிகளும் ஹவ்யகவ்யங்களைக்கொடுக்கத்தக்கவர்கள். அவள் விவாகஞ்செய்வதற்கும் ஸந்ததிகளைப்பெறுவதற்கும் மறுக்கப்படாதவள்' என்று சொன்னர். மார்க்கண்டேயர், 'ரிஷிசிரேஷ்டரே! எந்தக்கன்னிகை பிரஸவித்தவளாகவோ கர்ப்பிணியாகவோ இருக்கிறாளோ அவளுக்கு மறுபடிவிவாகஞ்செய்வது எப்படி?' என்றுகேட்டார். நாரதர், 'அந்தக்கன்னிகை அக்நியினிடத்தில் உண்மையாகநடந்தவிஷயத்தை நிச்சயமாக வாக்கினால் தெரிவிக்கவேண்டும். அதன்பிறகு, அவள்மேல் விருப்பமில்லவக்கலாம். அப்படிப்பட்டவர்கள் [1]குமாரிகளையன்றிக் [2]கன்னிகைகளாகார். கர்ப்பத்தோடிருப்பவளைப் பிரஸவித்தபிறகு ப்ரம்மஹத்திக்குரிய ப்ராயச்சித்தத்தில் மூன்றிலொருபாகமாவது நாலிலொருபாகமாவதுசெய்து பரிசுத்தையாக்கி

[1] பன்னிரண்டுப்ராயம்சென்றவள். [2] பத்துப்ராயஞ்சென்றவள்.

எடுத்துக்கொள்ளவேண்டும்' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், 'மகாமுனியே! கன்னிகைகளுக்குப்பிறந்து சுற்றத்தாரால் எப்போதும் சேர்க்கப்படாதவர் ஹவ்யகவ்யங்களை யாருக்குக்கொடுப்பார்கள்?' என்றுகேட்டார். நாரதர், 'கன்னிகையாயிருக்கும்போதே பிறந்தபுத்திரர்கள் அக்கன்னிகையின்தகப்பனுக்கு ஹவ்யகவ்யங்களைக்கொடுக்கவேண்டியவர். கர்ப்பமுள்ளவளாகப் பாணிக்ரஹணம் செய்யப்பட்டகன்னிகைக்குப்பிறந்தபுத்ரன் அந்தப்பாணிக்ரஹணம் செய்தவனுக்கே ஹவ்யகவ்யங்களைக்கொடுப்பவன். அவன் அவனுக்கு [1] ஸ்வேதாஜனென்னும்புத்ரனாகிறான்' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், 'நாரதரே! அந்தக்கன்னிகைக்குக் கர்ப்பம்உண்டுபண்ணினவன்எவனோ அவனுக்குப் புத்திரனில்உண்டாகும்பலன் எப்படிவரும்? எனக்குச்சொல்லும்' என்றுகேட்க, நாரதர், 'அப்படிப்பட்டவர்கள் தர்மங்களையும் ஆசாரங்களையும் எப்பொழுதும்கெடுப்பவர்களாக நிச்சயிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுடையவீரியமும் கெட்டுப்போகிறது. அவர்களின் [2]செய்கையும் வீணாகிவிடுகிறது' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், 'ரிஷிசிரேஷ்டரே! ஒருகன்னிகை விலைக்குவாங்கப்பட்டாலும் ஒருவனால் (விவாகமில்லாமல்) கொடுக்கப்பட்டாலும் கவர்ந்துகொண்டுவரப்பட்டாலும் அவளுடைய புத்திரனுண்டாகும்பயன் என்ன?' என்றுகேட்டார். நாரதர், 'பாணிக்ரகணம்செய்யாமல் விலைக்குவாங்கப்பட்டும் தானம்கொடுக்கப்பட்டும் பறித்துக்கொண்டுவரப்பட்டுமுள்ள கன்னிகை கௌமாரி என்றுசொல்லப்படும் மனுவியாகிறாள். அவளுக்குப் பிறக்கும்பிள்ளைகள் கணவனுக்கு ஔரஸபுத்திரர்களாகிறார்கள். புண்யகர்மங்களில் பத்நியாகவிருக்க அவள் தகுதியுள்ளவளாகச் சொல்லப்படவில்லை' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், 'ஓ! மகாமுனியே! கன்னிகைகளை மங்களகாரியங்களில்நியமிப்பதேனென்பதை உம்மிடத்தில் ஸரியாகத்தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்' என்றுகேட்டார். நாரதர், 'கன்னிகைகளிடத்தில் மங்களங்களைத்தருகிறவளும் மங்களங்களுக்குரியவளும் மங்களகாரியங்களில் பூஜிக்கத்தக்கவளுமான லக்ஷ்மியானவள் எக்காலமும் நிலைபெற்றிருக்கிறாள். நிறைந்தபலனைக்கொடுக்கும் [3]கனியிலிருக்கும் ரத்நம்போல மகாலக்ஷ்மியாகியகன்னிகை எல்லாஉலகங்களுக்கும் மங்களமாயிருக்கிறாள். இவ்வகையாக மனிதர்களுக்

---

[1] கர்ப்பத்தோடுவிவாகஞ்செய்துபிறந்தவன்.

[2] அவர்களுக்குப்புத்ரபலன் இல்லையென்பது.

[3] உற்பத்திஸ்தானம்.

குச் சிறந்தலக்ஷ்மியும் லோகமும் லக்ஷ்மோஷமும் கன்னிகைதான். அவள் தன்கற்பினாலும் ஒழுக்கத்தினாலும் மேற்குலங்களுக்கு உரை கல்லாயிருக்கிறாள். தன்னுடைவருணத்தைச்சேர்ந்த கன்னிகையைவரு வித்து விவாகம்செய்துகொள்ளும்மனிதனுக்கு ஹவ்யகவ்யங்களைக் கொடுக்கும் புத்ரிணி அவள் பெறுகிறாள். கற்புள்ளவள் குலத்தை மேன்மைப்படுத்துகிறாள். கற்புள்ளவள் வீட்டிற்குப் பெரியசிறப்பு. கற்புள்ளவள் கேரில்வாழ்தலக்ஷ்மியும் ராஜ்ஞியும் புகழும் லக்ஷ்மியுமா யிருப்பவள்' என்றுசொன்னர்.

ஐம்பத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதர் மார்க்கண்டேயருக்கு மடுவைவிவாஹமுதலிய வற்றைப்பற்றிச் சொல்லியது.)

மார்க்கண்டேயர், 'சிறந்தபுத்தியுள்ளவரே! பலவகையான கன் யாவிவாகங்களைப்பற்றிக் கேட்டேன். பெண்களின் விவாகங்களி லுள்ள தர்மாதர்மங்களைப்பற்றிக் கேட்கவிரும்புகிறேன்' என்று சொன்னர்.

நாரதர், 'மனிதர்கள் விவாகஞ்செய்து மனைவிகளையடையும்தர்ம மானவழிகள் எட்டு. அப்படிவிவாகஞ்செய்யப்பட்ட பெண்களும் அவர்களின்புத்திரர்களும் இம்மைக்கும் மறுமைக்கும் அனுகூலமாயி ருப்பவர்; ஹவ்யகவ்யங்களுக்கொடுக்கத்தகுதியுள்ளவர். அவர்களில் பாணிக்ரகணம்செய்யப்பட்ட [1]ஸாத்வியும் [2]பாணிக்ரகணம்இல்லாத கௌமாரியும் [3]ஸஹோதரனுடையபாரியையாயிருந்து தன்பாரியையா யிருப்பவளுமாகிய இவர்களுக்குப்பிறக்கும்புத்திரர்கள் ஔரஸர்கள்' என்று சொன்னர். மார்க்கண்டேயர், 'பார்யையையடைவதற்கு இம் மூன்றுவழிகள் தர்மங்கெடாதவையாக அறியத்தக்கவை. [4]ஐந்து வகையானபார்யைகளையும் அவர்களின்புதரர்களையும் சொல்லும்' என்றுகேட்டார். நாரதர், '[5]லக்ஷீகாத்ரபார்யை, [6]க்ரீதை [7]கதாகதை

[1] பதிவ்ரதை. [2] 'வாக்தானஞ்செய்தவுடன் அச்சுவரன் இறந்துபோனால், அவன்ஸஹோதரன் அந்தப்பெண்ணை விவாகம்செய்துகொள்ளலாம்' என்ற சாஸ்திரப்படி ஏற்பட்டவன்என்பதை. [3] கேட்டவுடிவிலேயே இறந்துபோகஐந்து. [4] தன்கோத்திரத்திலேயேபிறந்து பார்யையாகஎடுத்துக்கொள்ளப்பட்டவள். [5] முதலில் அயலானுக்குப்பார்யையாயிருந்து விலைகுவாங்கித் தன்பார்யை யாகச் செய்யப்பட்டவன். [6] தன்பார்யையாயிருந்தவள் பிறனிடம்போயிரு ந்து திரும்பவும் தன்னிடம்வந்தவன்.

[1] ஆச்ரமஹ்ரதை, புனர்ப்பூ இவ்வைவந்துவகைப்பாரியைகள் இருக்கின்றனர். இவர்களிடத்திலும் புருஷர்கள்சேரலாம். இவர்களுடையபுத்ரர்களும் ஹவ்யகவ்யங்களைக் கொடுக்கலாம்' என்றார்.

ஐம்பத்தேழாவது அத்யாயம்.

தாணதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(நாரதர் மார்க்கண்டேயரைக்கு சுகர் பிறந்த பெரீசை அவர்களின் ஸந்தானவிவரத்தியவற்றைப்பற்றிச் சொல்லியது)

மார்க்கண்டேயர், "ஓ! மஹரிஷியே! பாரையைகளையும் புத்ரர்களையும்பற்றி விரிவாகக்கேட்டேன் ஆச்ரமத்திலிருக்கும் பெண்களுக்குக் குற்றமில்லாமலிருப்பது எப்படி என்பதைச் சொல்லும்' என்றுகேட்டார். நாரதர், ஆச்ரமத்திலிருக்கும் மாதர்களுக்குப் பந்துக்களினஸம்பந்தம ஒழிந்துவிடுகிறது. தங்கள்சுற்றத்தாருடைய ஸம்சர்களும் கணவர்களைச்சேர்ந்தவம்சங்களும அவர்களுக்கில்லாமற் போகின்றன. அதனால, ஆச்ரமங்களிலிருக்கும்பெண்கள் பரஸ்த்ரீகளாயினும அவர்களுக்கு வியபிசாரதோஷமில்லை. தங்கள்தேகங்களுக்குத் தாங்களே அதிகாரிகள். அவர்கள் யாரிடத்தில் மனம் லைக்கிறார்களோ அவர்களை அவர்கள நேசிக்கலாம. இவ்வகையாக இந்தப்பெண்கள் புருஷர்களுக்கும அவர்களின்ஸ்நேதிகளுக்கும், தோஷத்தைச்செய்வதில்லை. அவர்கள் தர்மபத்நிகளாகவேயிருக்கின்றனர். அவர்களும் அவர்களின்புத்ரர்களும் ஹவ்யகவ்யங்களைக்கொடுக்கலாம்' என்றுசொன்னார்.

மார்க்கண்டேயர், 'முதலில், வேறுஒருவனுடையமனைவியாயிருந்து அவனிறந்துபோனபின் மற்றொருபர்த்தாவையடைகிறவள் பிள்ளையுள்ளவளாயிருந்தால எப்படியாவாள் ?' என்றுகேட்டார். நாரதர், 'பரஸ்த்ரீகள் பிள்ளையைப்பெறுமலிருந்தாலும் பெற்றிருந்தாலும் பிறரால்தொடப்பட்டவர்களென்னும் காரணத்தினாலேயே கிருஹஸ்தர்கள் அவர்களை விட்டுவிடவேண்டும். தர்மானுஷ்டானங்களில் அவர்கள் விலக்கப்பட்டவர்கள். அவர்களுடைய ஹவ்யகவ்யங்களைத் தேவதைகள் வாங்குவதில்லை. அவர்களிடத்தில புதரர்களையுண்டாக்குகிறவன் அந்தப் புதரர்களால் புதரபலனையடையான்' என்று சொன்

[1] ஆச்ரமத்திலிருந்த நாதனில்லாமையால் எடுத்துக்கொண்டுவரப்பட்டவன்.

னர். மார்க்கண்டேயர், 'ரிஷிசிரேஷ்டரே! மனத்தைஅடக்கமாட்டாமல் பிறர்மனைவிகளிடம் வீரியத்தைவிடும்மனிதனுக்குப் புத்ரனுடைய பலன் எப்படியுண்டாகும்?' என்றுகேட்டார். நாரதர், 'ஆசிரமத்திலிருக்கும் கணவனில்லாப்பிறன்மனைவியினுல் வலியக்கேட்டுக்கொள்ளப்பட்டு அவளிடத்தில் வீரியத்தை ஒருமனிதன் விடுவானுகில் அந்த வீரியம் [1]அழியாது. பிறர்மனைவிகளிடம் தேகக்கொழுப்பினுல் ஒரு மனிதன் வீரியத்தைவிடுவானுயின் அந்தவீரியம் அந்தப்பெண்ணின் கணவனைச் சேருவதுதான். வீரியத்தைவிட்டவனுக்குப் புத்ரபலனில்லை. சிசுமுதலியவர்களுக்கும். மேன்மேலும் அதர்மத்தையும் அபகீர்த்தியையும்தரத்தக்கது இதைவிடவேறுஒன்றுமில்லை. அப்பெண்கள் தம்மிடத்துப்புருஷர்களிடத்தில் சேர்ந்தவர்களாயிருந்தாலும் அவர்களே யாவரும் விடவேண்டும்' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், 'நாரதரே! சிறந்தமனுஷ்யனுள்ளவரே! பிறர்மனைவிகளிடம் பிறக்கும்புத்ரர்கள் யாருக்குரியபுதரர்களாவார்?' என்றுகேட்டார். நாரதர், 'பிறர்மனைவிகளிடம்பிறக்கும்புத்ரர்கள், குண்டன் கோளகன்என இரண்டுவகையாவார். கணவன் ஜீவித்திருக்கும்போதே பிறனுக்குப்பிறந்தவன் குண்டன்; கணவனிறந்தபின்பிறந்தவன் கோளகன். பிறர்மனைவிகளிடம்பிறந்த அந்தப்பிள்ளைகள்,மனிதர்கள்செய்யும் யாகம் சிராத்தமுதலியஎல்லாவற்றையும் இம்மையிலும் மறுமையிலும் கெடுத்துவிடுகின்றனர். இவர்கள் தங்கள்பிதாவுக்கு நரகத்திற்காக ஏற்பட்டவர்கள். அவர்களில் கோளகன் அதிகம். பரபுருஷனுக்குப்பிறந்தஅவ்விருவரும் சண்டாளருக்கொப்பானவர்கள். இகத்திலும் பரத்திலும கெடுவர்' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், 'அந்தஇகழப்பட்டபுத்ரர்கள் பித்ருக்களுக்குத் ஹவ்யகவ்யங்களைக் கொடுக்கும்போது யாருடையமனைவிக்குப்பிறக்கிறார்களோ அவனுக்குக்கொடுக்கவேண்டுமா? அல்லது, எவன் அந்தப்புத்ரர்களை உண்டாக்கினவனே அவனுக்குக் கொடுக்கவேண்டுமா?' என்றுகேட்க, நாரதர், 'அந்தஸ்த்ரீயின்கணவனும் அவளிடத்தில்கர்ப்பமுண்டுபண்ணினவனுமாகியஇவ்விருவரும் நரகம்போனவர்கள். ஏனெனில், ஒருவன் தன்மனைவியாகக் காப்பாற்றுதவன்; மற்றொருவன் பிறன்மனைவியைப் புணர்ந்தவன் [2]குண்டனும் அவன்செய்யும்சிராத்தத்தில்புசிப்பவனும் அவனையுண்டுபண்ணினவனும் பித்ருக்களாலும் தேவர்களாலும் இகழப்படுகிறவர்; தர்மகார்யங்களில் சேர்க்கப்படாதவர்.

[1] அவனதாக இராமற்போகாது

[2] இங்கே கோளகனையும்சேர்த்துக்கொள்க-

சாஸ்த்ரங்களில் அவர்கள் மறுக்கப்பட்டிருக்கின்றனர்' என்றுசொன்னார். மார்க்கண்டேயர், 'நாரதரே! அவ்வாறுநிந்திக்கப்பட்டஅந்தப் புத்ரர்கள் ஹவ்யகவ்யங்களை யாருக்குக்கொடுக்கின்றனர்? அவர்களுக்குத் தர்மமுண்டா? அதன்பலன் என்ன?' என்றுகேட்க, நாரதர், 'அவர்கள்செய்யும் ஹோமங்களையும் அவர்கள்கொடுக்கும் ஹவ்யகவ்யங்களையும் இரவில் ஸஞ்சரிக்கும் ராக்ஷஸர்களும் பேய்பிசாசுகளும் எடுத்துக்கொள்ளுகின்றனர்' என்றுசொன்னார். மார்க்கண்டேயர், 'ரிஷிசிரேஷ்டரே! ஆனால், அதனால் ஸந்தோஷமடைந்தராக்ஷஸர்முதலானவர்கள் ஹவ்யகவ்யங்கொடுப்பவருக்கு என்னபலனைக் கொடுக்கின்றனர்? அவர்கள்செய்ததர்மத்திற்குப் பலன்யாது?' என்றுகேட்க, நாரதர், 'கொடுப்பவர்கள் எந்தப்ராணிகளுக்கு எதைக்கொடுத்தாலும் அது வீண்போவதில்லை. கொடுப்பவர்கள் அதன்பலனை இம்மையிலும் மறுமையிலும் அனுபவிக்கின்றனர்' என்று சொன்னார். மார்க்கண்டேயர், 'கோளகனுக்கும் குண்டனுக்கும பின்னிட்டுண்டான ஸந்ததிகளும் ஞாதிகளும் அவர்களுக்குக்கொடுக்கும் ஹவ்யகவ்யங்கள் எப்படிஆகும்?' என்றுகேட்க, நாரதர், 'அவர்கள் தங்கள் ஆசாரத்தை அனுஷ்டித்துவந்து அவர்களுக்குக் கறைபுள்ள மனிஷிகளிடம்பிறந்தபிள்ளைகள் சிரத்தையோடு ஹவ்யகவ்யங்கொடுப்பதனால் பித்ருக்களையும் தேவர்களையும் திருப்திசெய்விக்கின்றனர். இவ்வாறு கோளகனும் குண்டனும் நாலுவர்ணங்களிலிருந்தவர்களும் பரிசுத்தர்களாகிக் கொடுக்கும் ஹவ்யகவ்யங்களை தேவர்களும் பித்ருக்களும் வாங்கிக்கொள்ளுகின்றனர்' என்றுசொன்னார்.

ஐம்பத்தெட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதர் மார்க்கண்டேயருக்கு மாதாவின் வியபிசாரப் பிராயசித்தம்முதலியவற்றைச் சொல்லியது.)

மார்க்கண்டேயர், 'பரஸ்த்ரீகளிடத்தில் பிரஜைகளை உற்பத்திசெய்யும் புருஷர்களுடையநிலைதவறுதலின்பலனைக்கேட்டேன். பெண்கள் நிலைதவறினால் உண்டாகும் தோஷத்தைத தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்' என்றுகேட்க, நாரதர், 'தன்வர்ணத்தாரிடம் சேருவது முன்காலத்தில் தோஷமில்லாமலிருந்தது. பிரம்மதேவரும் விஷ்ணுவினால் அனுமதிகொடுக்கப்பட்டு அப்படிச்செய்திருக்கிறார். பேரறி

வுள்ளவரே! பிரம்மதேவர் முதலிலேயே பெண்குறி, ஆண்குறி இரண்டையும் படைத்தார்; விஷ்ணுவின் அநுமதியினால் அவ்விரண்டிற்கும் சேர்க்கையை உண்டுபண்ணினார். பிறகு, விஷ்ணுவின் அநுக்கிரகத்தினால் பெண்குறி வரம்பெற்றது. அந்த அநுக்கிரகத்தினாலேதான் எல்லா உலகங்களையும் அது ஆளுகிறது. ஆதலால், புருஷனுக்குத்தான் குற்றமதிகம். அதில் ஸந்தேகமில்லை. பெண்கள் தங்கள்வர்ணத்தாரிடம்புணர்ந்து கர்ப்பமில்லாமலிருந்தால் அவர்களிடத்தகாது. தெரிந்தவன் அவர்களுக்குச் சாஸ்திரப்படி பிராயச்சித்தத்தையும் நாய்களைவிட்டுக்கடிப்பித்தும், இரவில் மூன்றுமுறை ஸ்நானம்செய்வித்தும், பூமியில சாம்பலில் படுக்கச்செய்தும், ஸம்போகமில்லாமல் அன்னவஸ்திரங்களைக்கொடுத்தும் செய்கிறதண்டனையையும் செய்யவேண்டும். அவர்களின் குற்றங்களுக்குத்தக்கபடி பிராயச்சித்தகாலமும் செலவுசெய்யவேண்டிய திரவியமும் அதிகப்படும். வேறுபுருஷனைச் சேருவதைப்பற்றி இந்தவியவஸ்தை முற்காலத்தில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. தீக்காயுவே! ஸ்திரீகளுக்கு வியபிசாரத்தில் தோஷமில்லை. இவ்வாறு விஷ்ணுவின் கட்டளையினால் பரிசுத்தமான பெண்குறிக்குத் தோஷமில்லை. தெரிந்தவர்கள் வேறுபுருஷர்களிடம் பேசாமலும் பிறர்மனைக்குப்போகாமலும் பெண்களைக் காப்பாற்றவேண்டும். அவர்கள் பரிசுத்தர்களாயிருந்தால்தான் செய்யுங் கர்மங்களின் பலன்களை விசேஷமாகப்பெறலாம். நன்மையை விரும்புகிறவன் அவர்களைத் திட்டவும் அடிக்கவும் கஷ்டப்படுத்தவும்கூடாது. விஷ்ணுவின் அநுக்கிரகத்தினாலேயே பெண்குறி சுத்தமுண்டாயிருக்கிறது. மாதந்தோறும் ருதுஸ்நானமும் அவர்களுடையபாவங்களைப் போக்குகிறது. சிறந்தமகிமையுள்ளவரே! உலகத்தில் பெண்கள்தாம் புருஷர்களுக்கு எப்போதும் மனஉற்சாகத்தையும் தேகபுஷ்டியையும் கொடுப்பவர். மாதர்கள், பிள்ளைகளென்னும் அணைகளினால் குலங்களை நிலைக்கச்செய்கின்றனர்' என்றுசொன்னார்.

ஐம்பத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(நாதர் விடத்தக்கபெண்களையும் விடத்தகாதபெண்களையும் மற்றும் பலவற்றையும்பற்றி மார்க்கண்டேயருக்குச் சொல்லியது.)

மார்க்கண்டேர், 'ரிஷிசிரேஷ்டரே! பெண்களுக்கிருக்கும் சிறப்பும் மஹிமையும் கேட்கப்பட்டன. அனேகம் மனிஷிகளுள்ள ஒரு வலுவடைய தர்மத்தைத் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்' என்றுகேட்

டார். நாரதர், 'அநேகபார்யைகளின் ஸம்போகத்தில் பிரியிருத்திக் கும் ஹிருஹஸ்தர்கள் ருதுகாலத்தில் அருகிலிருந்தும் எவனோயாவது விடுவராயின் அவர்கள் கர்ப்பஹத்திசெய்தவராகச் சொல்லப்படுகிறார் கள். பிராயமுதிர்ந்தவள், மலடி, தவமுள்ளவள், குழந்தையிறந்து போகிறவள், நதுவாகாதகன்னிகை, அதிக புத்ரர்களைப்பெற்றவள் இவர்களைவிடுகிறவன் பாவபயத்திலிருந்து விடுபடுவான். ஸ்யாதியோ டிருக்கும்போதும், ஸ்நாநபிலிநருக்கும்போதும், வேறுதேசம்போயி ருக்கும்போதும், புண்ணியகாலங்களிலும், ருதுகாலமாயிருந்தபோதி லும் மங்கையரைச் சேராதவனுக்குக் கர்ப்பஹத்திதோஷமில்லை' என்றுசொன்னார். மார்க்கண்டேயர், 'மகரிஷியே! ஸ்திரிகளிடத்திலும் ஏவல்தொழில்செய்யும் பெண்களிடத்திலும் பிறக்கும் புதரர்கள் யாரு டையதாயபாகத்திற்குரிய பங்குக்களாகிறார்கள?' என்று கேட்டார். நாரதர், '[1]விலைமாதர்களுக்குபபிறந்தவர், அம்மாது எவனைச்சேர்ந்த வளோ அவனுடையபுத்ரர்களாகிறார். விலைக்குவாங்கப்படுகிறவர் க்ரி த்ரிமபுத்ரர்களாகிறார். தத்துவாங்கப்படுகிறவர் தத்தபுத்ரராகிறார்' என் றுசொன்னார். மார்க்கண்டேயர், 'விலைமாதர்களிடத்தில் புருஷனு டைய பிரவ்ருத்தி நியமஸ்தையிலலாமலிருக்கிறதென்பது திண்ணம். அவள் கர்ப்பமுண்டாகிப்பெறும்புத்ரனை எவன்புத்ரனென்று சொல்லு வர்?' என்றுகேட்க, நாரதர், 'ருதுகாலத்தில் சுத்தர்களாயிருக்கும் மடந்தையரிடத்தில் சேரும்புருஷன் அறியப்படுவான். அதனக்கப்பம் அவனுடையதாகும்; அல்லது அந்தமாது எவனை நிச்சயமாகச்சொல் லுகிறளோ அவனுடையதுமாகும்' என்றுசொன்னார். மார்க்கண் டேயர், 'புருஷர்கள் [2]காமகுணலாபத்தினாலாவது பிள்ளை பெறுமலோ பெற்றோரிருக்கும் குணமுள்ளமனைவியைவிட்டுவிடுவாரா யின் அவர்களுக்குப் பிராயச்சித்தத்தைத் தெரிந்துகொள்ளவிரும்புகி றேன்' என்றுகேட்டார் நாரதர், 'தவமுதலியவற்றால் கற்புள்ளவளென் று தெரிந்திருந்தும் குற்றமற்றமனைவியையிடுகிறவன் தன் [3]வம்சத் தையும் தர்மத்தையும்விடுவதனால் அவனுக்குப்பிராயச்சித்தமேயில்லை. எந்தமனிதன் தகுதியுள்ளவளையிருந்தும் புஷ்பவதியாகி ஸந்ததியுண் டாகாதபார்யையை விட்டுவிடுகிறானோ அவன் குலமழிந்து பித்ருக்க ளுடன்கூடத் தேவர்களாலும் விடப்படுவான். பிரஜைத்து ஸந்ததி யுண்டாகிப் பிள்ளைபேரர்மார்களோடுகூடிய பார்யையை விடுகிறவ

[1] மூன்சொன்ன இருவகையாரும்.

[2] வேறு ஒருத்தியினிடத்தில் விருப்பம்.

[3] வம்சத்திற்கும் ஹிருஹஸ்தர்மத்திற்கும் மனைவி காரணமென்பது.

பிள்ளைபெண்டுகளைவிட்டவனுதலால் அவனுக்குப் பிராயச்சித்தமில்லை. இப்படி பாரியையையிடுகிற புருஷர்களுக்குப் பிராயச்சித்தமில்லாமையால் பிள்ளைபேரர்மார்களால் நிலைபெற்றிருக்கும மாதரை விடுவது யார்க்குந்தகாது' என்றுசொன்னது. மார்க்கண்டேயர், 'ரிஷிசிரேஷ்டரே! எப்படிப்பட்டமனிளிடைபவிட்டால் அந்தப்புருஷனைப் பாவங்கள் பற்றாவண்ணந்தடுக்கச் சரியாகத்தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்றுகேட்டார். நாரதர், 'மோகத்தர்மமாகிய நிவிருத்தி மார்க்கத்திலிருந்து ஒருவருக்கொருவர் விலைகொடுத்த மனைவியும் கணவனும் விட்டுப்போவதனால் அதர்மம்சொல்லப்படவில்லை. வேறு புருஷனிடம் பற்றுள்ளவளையும் ஸகதியிலாதவளையும் சூத்திரனைச் சேர்ந்தவளையும் பரபுருஷனைச்சேர்ந்தவளையும் பரிசோதித்துவிடுகிற புருஷர்களுக்குப் பாவமில்லை. பாதகம் செய்தவராயிருப்பினும் தாய் தந்தையிருவர்மட்டும் காப்பாற்றப்படவேண்டியவர்' என்று சொன்னர். மார்க்கண்டேயர், 'சிறந்த புத்தியுள்ள பரே! மனைவி வியபிசாரம் செய்ததினால் அவளைக்கைவிடுத்து விட்டுவிடுகிறபுருஷனுக்கு அது தர்மமா? அதர்மமா? எப்படியாகிறது?' என்றுகேட்டார். நாரதர், 'பொய்யாகவோ உண்மையாகவோ தோஷம்சொல்லப்பட்டபெண்ணை ஒருபுருஷன்விடுவானாயின் அவன்தனதுபாரியையைக்காப்பாற்றுமையினால் காப்பாற்றுதலிலைசெய்தவனாகின்றன். ஒருபோலை ஸந்ததிக்காகத் தன் கணவனைவிட்டுத்த நாரியைவிடுவானாயின் அவள மனநிலையற்றவளென்று நினைத்து அவளைப் பாதுகாக்கவேண்டும்; எவ்வகையிலும் விட்டுவிடலாகாது. நதிகளும் பெண்களும் ஒரே இயற்கையுள்ளவர்கள். வேறு புருஷாகளை பிரிவெதிர்ந்ததனால் இவர்களை விடலாகாது. நதிகள் பிரவாஹங்களை [1]சேகமாகக்கொண்டுபோகின்றன பெண்ணைவள் ரஜஸ்வலையாவதனால் மறுபடியும் சுத்தமாகிறாள். ஆதலால், பெண்கள் தங்கள் கணவரைவிட்டு வியபிசரித்தம்பாதிலும கெட்டுப்போவதில்லை. மாதருக்கோமருதுவாவதினால் அவர்கள் சுத்தர்களே ஆகின்றனர்' என்று சொன்னர். மார்கண்டேயர், 'பகவானே! மனிதர்களின் உடம்பிலுள்ளதீர்த்தங்கள எவை? பகவானே! அவற்றைக் கேட்கிற எனக்குச் செவ்வையாகச சொல்லக்கடவீர். எல்லாத்தெரிந்தவரே! மனிதர்களுக்கு எல்லாத் தீர்த்தங்களிலும் சிறந்த தீர்த்தம் யாது? எதில் ஸ்நானம்செய்த எந்தமனிதன எப்போதும் பரிசுத்தனாகிறான்?' என்றுகேட்டார் நாரதர், '[2]தேவதீர்த்தம் [3]ரிஷிதீர்த்தம்

[1] கைவிரல்களின்நுனி தேவதீர்த்தம்.

[2] சண்டுவிரலடியில் உள்ளங்கைக்கு வெளிப்புறம் பிராஜாபத்ய தீர்த்தமெனவும் ரிஷிதீர்த்தமெனவும் சொல்லப்படுகின்றது.

[1] பித்ருதீர்த்தம் [2] பிரம்மதீர்த்தம் உள்ளங்கைகளிலில் விஷ்ணுதீர்த்தம் என்று ஐந்துதீர்த்தங்கள் மனிதர்களின் கையிலிருப்பவையென்று சொல்லுகின்றனர். விஷ்ணுதீர்த்தம் தீர்த்தங்களில் முதன்மையான தீர்த்தமென்று சொல்லப்படுகிறது. அதில் ஆசமனம்செய்வதனால் நான்கு வர்ணங்களுக்கும குலவிருத்தியுண்டாகிறது; பித்ருகாரியங்களும் தேவகாரியங்களும் நிம்மையிலும் முழுமையிலும் பயன்படுகின்றன' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், 'நாரதரே! காமத்திற் குட்பட்ட புருஷர்களுக்குத் தடையில்லாமல் சேரத்தக்க பெண்கள் யார்? எந்தப்பெண்களுக்கு நிர்ப்பந்தமில்லை? அவர்களை எனக்குச் சொல்லும்' என்றுகேட்க, நாரதர், '[3] பாம்ஸு, வேசி, நாடகப்பெண் இடைச்சி, நெய்கிறவள், தையற்காரி, நாதர் சபரரென்னும் மிலேச்ச ஜாதிப்பெண்கள், கூத்தாடுகிறவளை இவர்கள் தடையற்றவர்கள்' என்று சொன்னர். மார்க்கண்டேயர், 'ஓ! ஷஷ்டிரேஷ்டரே! எல்லாவருணத்தாருக்கும் இந்தப்பெண்களிடம் பிறக்கும்புதரர்கள் யாரைச்சேர்ந்தவர்கள்? யாருடையதாயபாகத்திறகு உரியவர்களாகிறார்?' என்றனர். நாரதர், 'அவர்களுக்குப்பிறந்தவர்கள் அவர்களை யார்வைத்துக் கொள்ளுகிறார்களோ அவர்களுடைய புதரர்கள். எல்லாரிடத்திலும் போகும் பெண்களிடத்தில்சேர்ந்த மனிதர்களின் வீரியமானது புலப்படுவதில்லை' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், 'எல்லாமங்கையரிடத்திலும் போய்க்கொண்டு யோக்கியர்களென்று சீர்தியில்லாமல் வேதமந்திரங்களைவிட்டமனிதர்களையும் ஆயுதம்பிடித்து ஜீவிப்பவரையும் ஹவ்யகவ்யங்களில்லாததால் அவர்களுக்குக் கொடுக்கும் தானம் எப்படியாகும்?' என்றுகேட்டனர். நாரதர், 'காயத்ரீ ஜபத்தை விட்டபிராம்மணர்கள் ஹவ்யகவ்யங்களுக்குரியவரல்லர். பிரஷ்டர்களுக்கு அன்னம்போடுவது சூத்திரர்களுக்குபோடுவதுபோலேதான்' என்றுசொன்னர். மார்க்கண்டேயர். 'தர்மம்செய்யப்பிரவிருத்தித்த மனிதர்களுக்கும் மனம மயங்கிப்போகிறது. தர்மத்திற் கிடையூறு வராமலிருப்பது எவ்வகை? இதைத்தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்' என்றுகேட்க, நாரதர், 'பொருள் பெண இவ்விரண்டுமொன்று. இவை மனிதர்களுக்கு கண்மைகளில் மயக்கத்தை யுண்டுபண்ணுகின்றன. பெண்கள் ஸம்போகஸுகத்தில் விருப்பமுண்டாக்கித் தர்மங்களைக்

[1] ஆள்காட்டிவிரலுக்கும் கட்டைவிரலுக்கும் இடை பித்ருதீர்த்தம்.

[2] கைக்கட்டைவிரலின் அடியில் உள்ளங்கையின் பக்கம் பிரம்மதீர்த்தம்.

[3] இவளைப் பாம்ஸுலியென்பது; ஸ்வதந்திரமாயிருப்பவள்; 'பாம்ஸு' என்றபாடம் கொள்ளப்பட்டது.

தெடுக்கின்றனர். பொருள் சுகங்களையுண்டாக்கித் தருமங்களைக்கெடுக்கிறது. ஆதலால், தர்மத்திலேயே எண்ணமுள்ள வைதிகன் மட்டுமே ஹவ்யகவ்யங்களெல்லாவற்றிற்கும பாத்ரமானவன். யோக்கியனான வைதிகனுக்குச்செய்யும் தானம் ஜ்வலிக்கின்ற அக்கினியில்செய்த ஆஹுதிபோன்றது' என்றுசொல்லுா. மார்க்கண்டேயர், 'வேதங்களையும் வேதப்பொருள்களையும் மனத்தில அறிந்த பிராம்மணர்களின் குலத்தில பிறந்தவர்கள் வேதவித்தையைவிட்டு வர்த்தகமுதலிய லௌகிகவிருத்தியைப் பற்றுவதேன்?' என்றுகேட்க, நாரதர், 'முதலில் [1] நான்குவர்ணங்களும் மிகத்தெரிந்தவர்களான பிராம்மணர்களிடத்தில் ஒப்பிக்கப்பட்டன. எல்லாவர்ணத்தாரும் தங்கள்விருத்திகளை ஒன்றோடொன்றுகலவாமல அந்தப்பிராமணர்களைக்கொண்டு பிரித்துப்பிரித்து எடுத்துக்கொள்ளவேண்டியிருந்தது. [2] புத்ரஸந்தானத்தை விரும்பின பிராம்மணர்களால் கர்ப்பாதானமுதலான மந்திர ஸம்ஸ்காரங்கள்செய்யப்பட்டுப்பிறந்தவைதிகர்களுமுண்மையஸ்மரத்தினால் உண்டானதம தொழிலை எடுத்துக்கொண்டனர்' என்றுசொன்னர். மார்க்கண்டேயர், 'வேதமறிந்தவர்களுக்குப்பிறந்து வேதாத்யயனஸம்ஸ்காரமில்லாதவர்களும் வேதமறியாதவர்களுக்குப் பிறந்து ஸம்ஸ்காரமும் செய்யப்பெறாதவர்களும் ஆவதெப்படி?' என்றுகேட்டார். நாரதர், 'வேதாத்யயனமுள்ளவனுக்குப் பிறந்தவன் உபநயனஸம்ஸ்காரங்கள் பெறுதபோதிலும வைதிகனைக்கௌரவிப்பதற்குரியவன். பரிசுத்தமான வம்சத்திற்பிறந்தவன் நல்ல வித்வான்களுக்குச்சமமான வைதிகன்தான். அப்படியில்லாமல் வேதமோதாதவர்களின்புத்ரர்கள் வேதத்தினல் கர்ப்பாதானமுதலான ஸம்ஸ்காரங்களசெய்யப்படாதவர்கள். ஆதலால், அவர்கள் வேதமறிந்த பிராமணர்களாயிருப்பினும் வேதத்தை விட்டவர்கள்தாம. முதலில் [3]வேதக்குஷியலிலேயே ஸ்ருஷ்டிக்கப்பட்டு வேதமந்திரங்களாலேயே ஸம்ஸ்காரங்கள செய்யப்பட்டவர்களாயிருப்பதனல், வைதிகர்களுக்குப பிறந்தவர்கள் தம்குலதைத்தாங்கும்போ

[1] நான்குதொழில் :—(1) ஓதலிபாதி, வைதிகாமங்கள் செய்வீபபது, தனிணமுதலியவற்றவாங்குவது (2) அரசாள்வது (3) பயிர், பசுக்காத்தல் வாத்தகம். (4) சிற்பமுதலியவை.

[2] முதலில் நான்குதொழில்களும பிராம்மணாகளிட த்திலிருந்தன. முதலில் அந்தணரையும் பிராம்மணாகளை செய்துகொண்டுவந்தனா. பிராம்மணஸந்ததியில் பிறந்தவர்களே அந்தந்தவ்ருத்திகளுக்த தகுந்த ஸம்ஸ்காரங்களைப்பெற்று அந்தந்தவ்ருத்திகளை எடுத்திக்கொண்டனர். மற்றவர்கள் அவரிடத்தில் கற்றுக்கொண்டனரென்பது

[3] வேதங்களையறிந்த தந்தையினிடத்திலேயே.

க்கியஸ்தனாகிறார்' என்றுசொன்னார். மார்க்கண்டேயர், 'சிவபிரான் சிறந்தவரே! தாம்பூலிக்குவாங்கின ஸ்திரீகளிடத்திலும் வேலைக்காரிகளிடத்திலும் மனிதர்கள் ஸந்ததிகளையுண்டுபண்ணுகின்றனரே. அந்தப்பிள்ளைகளும் அந்தப்பிள்ளைகளும் யாரைச்சேர்ந்தவர்கள்?' என்றுகேட்டார். நாரதர், 'அணிலிலாமல தன்வேலைக்காரியிடம் புத்திரோத்பத்திசெய்யும் மனிதன் பாவமசெய்தவனாகிறான். அவன் இங்கும் நிந்திப்பட்டு இறந்தபின்னும் தன ஸந்ததியை வேல தொழிலாளியாகச் செய்கிறான். அவள் அவனுடைய பார்யைதான் அவளுக்குப் பிறந்த புத்ரர்களும் அவனுக்கு ஹவ்யகவ்யங்களைக் கொடுப்பவர்தாம். அவளுடைய உறவினரெல்லாரும அவளுறவினாலேயே வேலைக்காரராகின்றனர். எனெனில், அவளைச்சேர்ந்தவர்களெல்லாரும அவள்செய்யும் வேலைகளில் ஏவப்படுகின்றனர். நீர்கேட்டதற்கெலலாம் இவ்வாறு மறுமொழி சொன்னேன. இன்னும எதாவது ஸந்தேகமிருந்தாலும கேட்கலாம்' என்றுசொன்னார். மார்க்கண்டேயர், 'இவ்வுலகத்தில் நாரதர் எல்லாவற்றிலும நிபுணர்; உண்மையை அறிந்திருப்பவர்; பிரமமதேவாரேல எல்லா உலகங்களையும நேரில பார்த்தவர்; மிகச்சிறந்தவர்' என்றுசொன்னார். சிறந்தசுவமுனி மார்க்கண்டேய முனிவர் இவ்வாறு ரிஷிகளுடன் சம்பாஷணைசெய்து நாரதரையும்பூஜித்து அவராலும பூஜிக்கப்பட்டு ரிஷிகளிடமிடைபெற்றுக்கொண்டு தம ஆசிரமத்திற்குப்போனார். அந்தரிஷிகளும் தீர்த்தங்களுக்கு யாத்திரைசெய்யதொடங்கினர். ஆதலால, சுத்தமானகர்ப்பத்தில சுத்தமான வீரியத்திறகுபிறந்தஸம காரணங்களினாலுமசுத்தமபெற்று ஐம்புல்ன்களையுமடக்கி நியகாமங்களையும நைமித்திககர்மங்களையும செய்து ஸ்நானம்பண்ணி மனமும சுத்தமாயிருப்பதனால் ஒருவன் முழுதும சுத்தமாகிறான்." என்ற பீஷ்மர் சொன்னார்

அறுபதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி)

(தானத்தின்பயன், பாத்ரோபயோகம், முதலியன)

யுதிஷ்டிரர், "பரதகிரேஷ்டரே! தானத்திற்குப்பாத்ரமிரண்டு பிராமணர்களால் நிந்திக்கப்பட்டுமிம பிராம்மணன் ஸங்யாலியா? கிருஹஸ்தனா? யார்?" என்றுகேட்க, பீஷ்மர், "மகாராஜனே! ஸங்யாலியானாலும் கிருஹஸ்தனானாலும் தன் தர்மத்தை பரமஸ்

டிப்பவனுக்குத் தானம்செய்யவேண்டுமென்று சொல்லுகின்றனர். அவ்விருவரும் தவமுள்ளவர்கள்' என்றுகூறினர். யுதிஷ்டிரர், "பிதாமஹரே! (மற்றச்சுத்தம் இல்லாமல்) அதிக சிரத்தையினால்மாத்திரம் பரிசுத்தனாயிருக்கும் ஒருவன் ஹவ்யகவ்யங்களையும் தானத்தையும் பிராம்மணனுக்குக்கொடுத்தால் என்னகுற்றம்?" என்று கேட்டார். பீஷ்மர், "அப்பா! சிரத்தையினால் தூய்மைபெற்றமனிதன் கெட்டவனாயிருந்தாலும் எல்லாவிஷயங்களிலும் பரிசுத்தனாகிறான்; ஸந்தேஹமில்லை. சிறந்தமகிமையுள்ளவனே! உன்னைப்பற்றிச் சொல்லவேண்டுமோ?' என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "தேவகார்யங்களில் பிராம்மணனை ஒருபோதும் பரீக்ஷிக்கலாகாதென்றும், பித்ருகாரியங்களில் பிராம்மணனைப் பரீக்ஷிக்கவேண்டுமென்றும் வித்வான்கள் நினைக்கின்றனரே; அதென்ன?" என்றுகேட்க, பீஷ்மர், "பரதசிரேஷ்டனே! தேவர்களின் ஹவிஸ்ஸைப் பிராம்மணன் உண்டாக்குவதில்லை. அது தேவர்களின் சக்தியினாலேயே உண்டாகிறது. யாகம்செய்பவர்கள் தேவர்களின் அனுக்கிரகத்தினாலேதான் அவர்களை ஆராதிக்கின்றனர்; ஸந்தேகமில்லை. உலகங்களில் சிறந்த அறிவுள்ள மார்க்கண்டேயர், 'பிராம்மணர்கள் எப்போதும் பிரம்மரிஷிகள்' என்று முன்னே சொல்லியிருக்கிறார். ஆதலால் பிராம்மணர்கள் [1] தேவகார்யங்களில் தகுதியுள்ளவர்களும் பரிசுத்தர்களுமானவர்; பித்ருகார்யங்களில் அப்படியாவதில்லை" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "பழகாதவன், வித்வான், சுற்றத்தான், தவம்செய்பவன், யாகம்செய்பவன் இவர்களில் எவன் தானத்திற்குப்பாத்ரனாவான்?" என்று கேட்க, பீஷ்மர், "யாகமுதலிய கருமங்களைச்செய்பவனும் வித்வானும் மற்ற மூவர்களாகிய புதிதாகவந்தவன், சுற்றத்தவன் தவமுள்ளவன் இவர்களும், நல்லகுலத்திற்பிறந்தவரும் பூததயையும் நீயசெயல்களில் கூச்சமும் மனத்தூய்மையும் ஸத்தியவாக்குமுள்ளவர்களுமாயிருந்தால் பாத்ரர்களாவார். குந்திபுத்ரனே! இந்தவிஷயத்தில் பூமி, காசியபர், அக்நி, மார்க்கண்டேயர் இந்நான்கு மகான்களின் அபிப்பிராயங்களைச் சொல்லுகிறேன்; கேள். 'பெருங்கடலில் போடப்பட்ட மண்கட்டி எப்படி உடனே கரைத்துபோகிறதோ அப்படி எல்லாப்பாவங்களும் வேதத்தைவிடாமலிருப்பவனிடத்தில் மறைந்துபோகின்றன' என்று பூமிதேவி சொன்னாள். மன்னவ! 'ஒழுக்கமில்லாத பிராம்மணனுக்கு ஆறு அங்கங்க

[1] தேவகார்யங்களில் எஜமானனுடைய சிரத்தையே போதுமானது. பித்ருகார்யங்களில் வரும்பிராம்மணர்களும் சுத்தர்களாயிருத்தல்வேண்டும் என்பது.

ளோடுகூடிய வேதங்களனைத்தும் தத்வஞானம் புராணப்பழக்கம் நல்ல குலத்திற்பிறத்தல் இவையனைத்தும் சாதகங்களாவதில்லை' என்று காச்யபர் சொன்னார். பிரம்மத்தையறிந்தவனே! 'கற்றறிந்தவனென்று தன்னை நினைத்துக்கொண்டு தன் கல்வித்திறமையினால் பிறர்புகழை அழிப்பவன் அப்படிச்செய்வதனால் பிரம்மஹத்தியை அடைகிறான். அவனுக்குப் புண்ணியலோகங்கள் முடிந்துபோகின்றன' என்று அக்நி சொன்னான். 'ஆயிரம் அசுவமேதயாகங்களும் ஒருஸத்யமும் தராசினால் தூக்கப்படுமாயின் ஸத்யத்தின்பாதிக்குக்கூட அந்த யாகங்கள் ஈடாகுமென்று நான் நினைக்கவில்லை' என்று மார்க்கண்டேயர் சொன்னார். அளவற்றமஹிமையுள்ளவர்களான பூமி, காசியபர், அக்நி, சிரஞ்சீவியான மார்க்கண்டேயர் இந்நால்வரும் இவ்வாறுசொல்லி உடனே சென்றனர்" என்றுசொன்னார். யுதிஷ்டிரர், "இவ்வுலகத்தில் [1]போஜனநியமம்வைத்துகொண்ட பிராம்மணர்கள் பிராம்மண்ண் வேண்டுகோளுக்காக அவன் தங்களுக்குப்போட்ட அன்னத்தைப் புஜிப்பாராயின் அவர்களுக்குப் புண்ணியம் எப்படி உண்டாகும்?" என்றுகேட்டார். பீஷ்மர், "அரசர்க்கரசே! விரதம் வைத்துக்கொண்டவரும் வேதங்களில் கரைகண்டவருமான பிராம்மணர்கள் ஒரு பிராம்மணன் வேண்டுகோளுக்காகப் புஜிப்பாராயின் அவர்கள் விரதங்கெட்டவராகிறார்" என்றுசொன்னார். யுதிஷ்டிரர், "பிதாமஹரே! தர்மத்திற்கு அநேகவழிகளும் அநேக பலன்களும் இருப்பதாக அறிஞர் கூறுகின்றனர். அதை நிச்சயிக்கும் வகை யாது? அதை எனக்குச்சொல்லும்" என்று கேட்டார். பீஷ்மர், "அரசர்க்கரசே! கொல்லாமையும் ஸத்யமும் கோபமில்லாமையும் பூததயையும் ஐம்புலன்களையடக்குவதும் மனமொழிமெய்களின் ஒற்றுமையும் தர்மத்திற்கு நிச்சயமான [2]அடையாளங்கள். பிரபுவே! தாங்கள் தர்மத்தை யனுஷ்டியாமலே பிறருக்குத்தர்மத்தைச் சொல்லிக்கொண்டு பூமியெல்லாம் திரிகிறவர்கள் [2]தர்மத்தைக்கெடுப்பதில் ஊக்கமுள்ளவர்கள். அப்படிப்பட்டவர்களுக்குப் பொன்னையும் ரத்னத்தையும் பசுவையும் குதிரையையும் தானஞ்செய்பவன் நரகம் போய்ப் பத்துவருஷகாலம் மலத்தைத்தின்றுகொண்டிருப்பான். சண்டாளர்கள் சக்கிலியர்கள் ஆசையினாலுண்டானஅறிவின்மையினால்பிதற்றுகிறவர்கள் இவர்களின்தானத்தினால் செய்ததும் செய்யப்படாததுமானகர்மம் ஒன்றுதான். அரசர்க்கரசனே! இவ்வுலகத்தில் எந்த

---

[1] 'பிரம்மசாரிகள்' என்பது பழையஉரை.

[2] உபதேசிப்பவரைப்பார்த்துக் கேட்பவரும் தர்மத்தைக் கெடுப்பரென்பது கருத்து.

மூடர்கள் வைசுவதேவம்செய்த அன்னத்தைப் பிரம்மசாரியான பிராம்மணனுக்குக் கொடாமலிருக்கின்றனரோ அவர்கள் பாவலோகங்களையடைகின்றனர்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "பிதாமஹரே! சிறந்த பிரம்மசாரிவ்ரதம் யாது? தர்மத்தின் முக்கியமாயுள்ள இலக்கணம் என்ன? எல்லாவற்றிலும் சிறந்தசுத்தம் யாது? இவற்றை எனக்குச் சொல்லக்கடவீர்" என்று கேட்டார்.

பீஷ்மர், "அப்பா! மதுவையும் மாம்ஸத்தையும்விடுவதே சிறந்த பிரம்மசாரிவ்ரதம். தர்மமானது வியவஸ்தையில் நிற்கிறது. மன அடக்கந்தான் சுத்தத்திற்கு இலக்கணம்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "பிதாமஹரே! எந்தக்காலத்தில் தர்மத்தைச்செய்யவேண்டும்? எந்தக்காலத்தில் பொருளைத்தேடவேண்டும்? எந்தக்காலத்தில் ஸுகத்தையனுபவிக்கவேண்டுமென்பதை எனக்குச்சொல்வீர்" என்றுகேட்டார். பீஷ்மர், "காலையில் பொருளைப்பார்க்கவேண்டும். அதன்பிறகு தர்மத்தைச்செய்யவேண்டும். கடைசியில் இன்பத்தை அனுபவிக்கவேண்டும். இன்பத்தில் முழுகிவிடலாகாது. பிராம்மணர்களை வெகுமானிக்கவேண்டும். பெரியோர்களைப் பூஜிக்கவேண்டும். எல்லாப் பிராணிகளுக்கும் அனுகூலமும் எளியருடையும் இன்சொல்லுமாயிருக்கவேண்டும். தான் எடுத்தகாரியத்திறம்பாய்சொல்லுவதும் அரசர்களிடத்திற்கோட்சொல்லுவதும் ஆசார்யன்மனம்வருந்த நிர்ப்பந்தப்படுத்துவதும் பிரம்மஹத்திக்கு ஒப்பானவை. அரசர்களையும் பசுக்களையும் அடிக்கலாகாது. இவ்விரண்டையும் செய்பவனுக்குப் பிரம்மஹத்திக்கு ஒப்பான பாவமுண்டு. அக்நியையும் வேதங்களையும் ஒருபோதும் விடலாகாது. பிராம்மணனைத் திட்டலாகாது. அது பிரம்மஹத்திக்குச்சமம்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "பிதாமஹரே! எப்படிப்பட்ட பிராம்மணர்கள் ஸாதுக்களாவார்?எவர்களுக்குத் தானம் செய்வதில் பலனதிகம்? எவர்களுக்குப் போஜனம் போடவேண்டும்? அதை எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர், "கோபியாதவரும் தர்மத்தையும் ஸத்யத்தையும் விடாதவரும் அடங்கியிருப்பதில் ஊக்கமுள்ளவருமான பிராம்மணர்கள் தாம் ஸாதுக்கள். அவர்களுக்குத் தானம்செய்வதில் பலனதிகம். கர்வமில்லாதவரும் எல்லாவற்றையும் பொறுப்பவரும் எடுத்தகாரியத்தை விடாதவரும் புலன்களையடக்கினவரும் எல்லாப்பிராணிகளுக்கும் சிநேகிதரைப்போல நன்மைசெய்பவருமாயிருப்பவர் எவரோ அவர்களுக்குத் தானம்செய்வதில் பலனதிகம். பொருளாசையற்றவருக்கும் ஆசாரந்தவறாதவருக்கும் கல்விகற்றவருக்

கும் அகாரியங்களில் வெட்கப்படுகிறவருக்கும் பொய்பேசாதவருக்கும் தமது அனுஷ்டானங்களில் சிரத்தை யுள்ளவருக்கும் தானம்செய்வதில் பலனதிகம். காலுவேதங்களையும் அங்கங்களுடன்ஓதி [1] ஆறு கருமங்களையும்கடத்திவரும் பிராம்மணனுக்குத்தமசை தானத்திற்குப் பாத்திரரென்று ரிஷிகள்நினைக்கின்றனர். இப்படிப்பட்ட குணங்களுள்ளவர்கள் எவர்களோ அவர்களுக்குத்தானம்செய்வதில் பலனதிகம். குணங்களால் தகுதியுள்ளவனுக்குக்கொடுப்பவன் ஆயிரமடங்கு அதிகமாகத் தானபலனையடைகிறன். கல்வி கேள்வி ஒழுக்கம் அடக்கம் இவையுள்ள பிராம்மணசிரேஷ்டன் ஒருவனே இவ்வுலகத்தில் குலமுழுமையும் கரையேற்றுவன். அவன் ஒருவன் திருப்தியடைந்தால் தேவர்கள் பித்ருக்கள்ரிஷிகளாகிய ஆனைவரும் திருப்தியடைவர். பசு, குதிரை, பொருள், அன்னம் இவற்றையும் மற்றுமுள்ளஎந்தப்பொருள்களையும் அப்படிப்பட்டவனுக்குக் கொடுப்பவன் மறுமையில் துயரப்படான். உத்தமனன பிராம்மணன் ஒருவன்மட்டுமே குலமெல்லாவற்றையும் கரையேற்றுவனே. அன்பனே! இந்தஅனேகபிராம்மணர்களைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? ஆதலால், பாத்திரங்களைப்பார்த்துத் தானம் செய்யவேண்டும். சாதுக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட குணமுள்ளபிராம்மணனை ஆராய்ந்து தூரத்திலிருந்து மரியாதையாகவருவித்து எல்லாவகைகளாலும் பூஜித்தல்வேண்டும்" என்றுசொன்னர்.

அறுபத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(தேவபித்ருகார்யங்களின் காலங்களும், அவற்றில்வரிக்கத் தக்கவரும் தகாதவருமான பிராம்மணர்களும்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! தேவகார்யங்களையும் பித்ருகார்யங்களையும் சிரத்தையுடன்செய்வதற்குத் தேவர்களாலும் ரிஷிகளாலும் ஏற்படுத்தப்பட்ட காலத்தின்விசேஷத்தை நீர் சொல்லவேண்டுகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"நீராடி மங்களாசாரங்களோடு ஜாக்கிரதையாகத் தேவகாரியத்தை முற்பகலிலும் பித்ருகார்யத்தைப் பிற்பகலிலும் ஒருவன் செய்யவேண்டும். மத்தியான்னத்தில் மனிதர்களுக்கு உபசாரங்களோடு

[1] சாந்திபர்வம் 674 - ம் பக்கம் குறிப்பிற்காண்க.

அன்னமளிக்கவேண்டும். காலந்தப்பிச்செய்யும் தானத்தை ராக்ஷஸர் களின் பாகமென்று நினைக்கின்றனர். தாண்டப்பட்டதும் வாயெச்சிற் பட்டதும் முதல்நாளே செய்யப்பட்டதும் தூரஸ்திரீகளால் பார்க்கப் பட்டதும் ராக்ஷஸர்பாகங்களென்று நினைக்கின்றனர். பாரதனே! இரைந்துகொண்டும் நியமமில்லாமலும் புசிக்கப்பட்டதும் நாயினால் தீண்டப்பட்டதும் ராக்ஷஸர்பாகமென்று நினைக்கின்றனர். மயிரும் புழு வும் விழுந்ததும் தும்மல்பட்டதும் நாயினால் பார்க்கப்பட்டதும் கண் ணீரினால் கெடுக்கப்பட்டதும் கவனியாமல் போட்டுவிடப்பட்டதும் ராக்ஷஸர்பாகங்களென்று நினைக்கின்றனர். பாரதனே! வேதமோ தாதவன் ஆயுதம்பிடித்தவன் கெட்டமனமுள்ளவன் இவர்கள் புசித்த தும் ராக்ஷஸர்கள் பாகங்களென்று நினைக்கின்றனர். தேவகாரியங்களி லும் பித்ருகாரியங்களிலும் பிறர்புசித்து மிகுந்ததைப்புசிப்பதும் எல் லாருக்குமுன் புசிப்பதும் எப்போதும் ராக்ஷஸர்பாகங்களே என்று நினைக்கின்றனர். அரசனே! பிரம்மக்ஷத்ரியவைசியரென்னும் மூன்று வர்ணத்தாரும் மந்த்ரமில்லாமலும் ஆசாரமில்லாமலும் சிராத்தத்தில் பரிமாறும் அன்னத்தை ராக்ஷஸர்பாகமென்று நினைக்கின்றனர். அக் கினியில் நெய்யை ஹோமஞ்செய்யாமல் பரிமாறப்படும் அன்னமும் ஆசாரந்தவறினவர்கள் புசித்த அன்னமும் ராக்ஷஸர்பாகங்களென்று நினைக்கின்றனர். பரதஸ்ரேஷ்டனே! ராக்ஷஸர்களுக்குப் பாகங்களா கச் சேரக்கூடியவற்றைச் சொன்னேன். இனி தானத்திற்குரிய பிராம் மணனைப் பரிசோதிப்பதைப்பற்றிச் சொல்லுகிறேன்; கேள். வேந் தே! பிரஷ்டப்பிராமணர்கள் பேதையர்கள் பித்தர்களனைவரும் தேவ காரியங்களிலும் பித்ருகாரியங்களிலும் வரிக்கத்தகாதவர். வெண்குஷ்ட முள்ளவன் ஆண்மையில்லாதவன் பெருவியாதியுள்ளவன் [1] க்ஷய ரோகமுள்ளவன் காக்கைவலியுள்ளவன் கண்ணில்லாதவன் இவர்கள் சிராத்தத்தில் வரிக்கத்தகாதவர்கள். வைத்தியம் செய்பவர்கள் கோயில் பூஜகர் மேலுக்காசாரங்களை வகிப்பவர் ஸோமலதையை விற்பவர் இவர்கள் சிராத்தத்தில் வரிக்கத்தகாதவர். ராஜனே! பாடுகிறவர்கள் கூத்தாடுகிறவர்கள் வாயினால் [2] ஜாத்யம் செய்கிறவர்கள் வாத்யம்வாசிக் கிறவர்கள் கதைசொல்லுகிறவர்கள் யுத்தவீரர்கள் இவர்கள் வரிக்கத் தக்கவரல்லர். மன்னவ! சூத்திரர்களுக்குப் புரோகிதராயிருப்பவர்கள் அந்தச் சூத்ரர்களை ஓதுவிப்பவர்கள் [3] அவர்களைச் சிஷ்யர்களாகப்பெற்

---

[1] இருக்தபடியே ரக்தம சோஷித்துப்போவது

[2] 'வினையாடுபவர்' என்பது பழையவுரை.

[3] 'வ்ருஷலஸேவ்யா:' என்பதுமூலம். சூத்ரர்களுக்குச்சேஷ்டராயிருப்பவ ரென்றுகொள்ளலாம்.

நவர்கள் இவர்களும் வரிக்கத்தக்கவரல்லர். பாரதனே! வேதனத்திற்கு வேதம் ஓதுவிப்பவன் வேதனங்கொடுத்து ஓதுவோன் இவ்விரு வகைப் பிராம்மணர்களும் வேதத்தை வியாபாரஞ் செய்பவராதலின் சிராத்தத்திற்குத் தகாதவர்கள். ராஜனே! ஒருகாரியத்தில் தலைமையாக நியமிக்கப்பட்டவரும் கீழ்ஜாதிப்பெண்ணை விவாகம் செய்துகொண்ட ஏனுமான பிராம்மணர் எல்லா வித்தைகளும் தெரிந்தவராயிருப்பினும் சிராத்தத்தில் வரிக்கத்தகாதவர். அரசனே! (பார்யையில்லாமையால்) அக்கினியில்லாதவரும் பிணமெடுப்பவரும் திருடரும் பிரஷ்டருமான பிராம்மணர்களும் சிராத்தத்தில் வரிக்கத்தகாதவர்கள். பாரதனே! மூன்பு தெரியாதவர்களும் கூட்டங்களுக்குத் தலைவராயிருப்பவர்களும் [1] புத்ரிகைகளுக்கு முதலில் பிறந்த புத்ரர்களும் சிராத்தத்தில் வரிப்பதற்குரியவரல்லர். அரசனே! கடன்காரனும் வட்டியினால் ஜீவிப்பவனும் ஜந்துக்களைவிற்று ஜீவிப்பவனும் வரிக்கத்தகாதவர்கள். பரதஸ்ரேஷ்டனே! [2] பெண்ணைத்தலைமையாக உடையவரும் வேசியைவைத்திருப்பவரும் ஜபமில்லாதவருமான பிராம்மணரனைவரும் சிராத்தத்தில் வரிக்கத்தகாதவர். பரதஸ்ரேஷ்டனே! பித்ருகாரியத்திலும் தேவகாரியத்திலும் விலக்கவேண்டிய பிராம்மணனைச் சொன்னேம். திரும்பவும் கொடுப்பவனுக்கும் வாங்குபவனுக்கும் வேண்டிய சிறப்பைக்கேள். அரசனே! உழுதுபயிரிடுகிறவர்களும் நியமங்களைச்செய்பவர்களும் குணங்களுள்ளவர்களும் காயத்ரியையறிந்தவர்களும் கர்மானுஷ்டானங்கள் செய்பவர்களுமாயிருப்பவர் வரிப்பதற்குரியவர். அப்பா! யுத்தத்தில் க்ஷத்ரியதொழில் செய்பவனுயிருந்தாலும் நல்ல குலத்திற்பிறந்த பிராம்மணனை ஸ்ராத்தத்தில் வரிக்கலாம்; வர்த்தகனைமட்டும் வரிக்கவேகூடாது. வேந்தனே! திருடாமல் அதிதிகளைக் கவனித்துக்கொண்டும் அக்கினிஹோத்ரம் செய்துகொண்டும் சிராமத்தில் வஸிக்கும் பிராம்மணன் சிராத்தத்தில் வரிக்கத்தகுதியுள்ளவன். பரதஸ்ரேஷ்டனே! அரசனே! பிக்ஷையெடுத்து ஜீவித்துக்கொண்டு மூன்றுகாலங்களிலும் காயத்ரியை ஜபித்துக் கர்மானுஷ்டானங்கள் செய்துகொண்டிருப்பவன் வரிப்பதற்குரியவன். ராஜனே! வாழ்ந்து கெட்டிருப்பவனும் கெட்டுவாழ்கிறவனும் பிறரைப்பீடியாதவனும் குற்றங்கள் குறைந்திருப்பவனும் வரிப்பதற்குரியவர். பரதஸ்ரேஷ்டனே! வேந்தே! பாவமும் யுக்திவாதமுமில்லாதவனும் யோக்யமான இடத்தில் பிக்ஷையெடுத்து ஜீவிப்பவனும் வரிப்பதற்குரியவர்.

---

[1] ஆதிபர்வம். 240, 837 - பக்கத்துறிப்புக்களிற் காண்க.

[2] பெண்ணினால் ஜீவிப்பவர் என்னவுமாம்.

நியமந்தவறினவனும் சூதாடுகிறவனும் திருடுகிறவனும் ஜ்ஞாதக்களை விற்பவனும் வர்த்தகனும் பிராயசித்தம் செய்துகொண்டு லோமரணத் தைக்குடித்தாராஞல் அதன் பிறகு, வரிப்பதற்கு யோக்யராவார். ராஜனே! முதலில் கொடிய செய்கைகளினல் பொருளையிட்டியிருந்தாலும் பிறகு, எல்லா அதிதிகளையும் பூஜிப்பவனுயிருப்பானுயின் அவன் வரிப்பதற்குத் தகுதியுள்ளவனுவான். வேதத்தை விக்ரயம்செய்து லம்பாதிக்கப்பட்டதும் பெண்ணினல் ஸம்பாதிக்கப்பட்டதும் இழிவானவழியில் ஸம்பாதிக்கப்பட்டதுமாயுள்ள பொருள்கள் பித்ருக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் கொடுக்கத்தகாதவை. பாதஸ்ரேஷ்டனே! தானம் செய்யப்படும்போது உசிதத்தைச் சொல்லாமலிருக்கும் பிராம்மணனுக்குப் பசுவுக்காகப்பொய்சொல்லும் பாவமுண்டாகும். யுதிஷ்டிர! பிராம்மணன், அபரான்னகாலம், தயிர், நெய், காட்டுமாம்ஸம், அமாவாசை இவை சிராத்தத்திற்கு யோக்யமானவை. ஒருபகலில் முதல் மூன்று முகூர்த்தங்கள் பிராதக்காலமென்று சொல்லப்படுகின்றன. அக்காலத்தில் பிராம்மணர்கள் ஜபம்தியானமுதலியவற்றினல் நல்ல அனுஷ்டானங்களைச் செய்தல்வேண்டும். அதன்பிறகு, மூன்று முகூர்த்தம் ஸங்கவமென்று பெயருள்ளது. அதன் பிறகு, [1] மூன்றுமுகூர்த்தங்கள் மத்யான்னம் என்று சொல்லப்படும். பணத்தைச் சேர்ந்த லௌகிகாரியங்களை ஸங்கவகாலத்திலும் ஸ்நாநமுதலிய மாத்யான்னிகாரியங்களை மத்யான்னத்திலும் பித்ருகாரியங்களை நான்காவது அபரான்னமாகிய மூன்று முகூர்த்தங்களிலும் செய்யவேண்டும். பிறகு, மூன்று முகூர்த்தங்கள் ஸாயான்னம் என்னப்படும். தெரிந்தவர்கள் அதை இரண்டாந்தரமாகச் சொல்லுகின்றனர். ராஜனே! அபரான்னமென்று பெயருள்ள நாலாவதுகாலத்தில் எப்போதும் சிராத்தம் செய்யவேண்டும். பிராம்மணர்கள் கிழக்குமுகமாகவும் வடக்குமுகமாகவும் போஜனத்திற்கு இருக்கவேண்டும். விசுவேதேவர்கள் மட்டும் தெற்குமுகமாயிருக்க வேண்டும். பிராம்மணர்கள் நன்றுகத் திருப்தியானதைக் கேட்டுத்தெரிந்துகொண்ட பிறகு, தக்ஷிணை கொடுத்துப் பிண்டதானம் செய்யவேண்டும். பாரதனே! சிராத்தம் முடியும்போது பிராம்மணனுக்கு, '(தாதாரோவ:) உங்களுக்குக் கொடுப்பவர்கள் உண்டாகவேண்டும்' என்றும், க்ஷத்திரியனுக்கு, '(ப்ரியந்தாம் பிதர:) பித்ருக்கள் திருப்தியடையக்கடவர்' என்றும், வைசியனுக்கு, '(அக்ஷயம்) குறையாத செல்வமிருக்கக்கடவது' என்றும், சூத்திரனுக்கு, '(ஸ்வஸ்தி) க்ஷேமமுண்டாகக்கடவது' என்றும், புனித்தவர்கள் சொல்லவேண்

[1] இரண்டுநாழிகை ஒருமுகூர்த்தமென்னும் கணக்கை அனுஸரித்தது.

டும். தேவகாரியங்களில் பிராம்மணனுக்கு வேதமந்திரங்களைச்சொல்லிப் புண்யாஹவாசனம் விதிக்கப்படுகின்றது. க்ஷத்திரியனுக்கு இதுவே, 'ஓம்' என்னும் பிரணவமில்லாமல் விதிக்கப்படுகிறது. வைசியனுடைய தேவகாரியத்தில், ''(ப்ரியக்தாம் தேவதா:) தேவர்கள் திருப்தியடைக் கடவர்' என்பதைச் சொல்லவேண்டும். சிராத்தத்திற்கு முதலில்வரித்த பிராம்மணனைத்தவிர மற்றொரு பிராம்மணனிடத்தில் சிராத்தபோஜனம் செய்பவனுக்குக் கோஹத்தியில் நாலிலொருபாகமுண்டு. அவனே கீழ்ப்பட்ட ஒவ்வொரு வர்ணத்திலும் புஜிப்பதனால் ஒவ்வொருபாகம் [1] அதிகமாகிச் சூத்திரசிராத்தத்தில் புஜித்தால் கோஹத்திபாவமுழுவதும் வருகிறது. பிராம்மணனால் முதலில் வரிக்கப்பட்ட பிராம்மணன் மற்றோரிடத்தில் ஒப்புக்கொள்ளக்கூடாது. அவன் புசிக்காவிடில் பாவமுண்டாகும். சூத்திரன்வரிப்பதை மறுத்தல்வேண்டும். சூத்திரனுடைய அன்னத்தின்சுவையினால் அங்கம்புஷ்டியடைந்தபிராம்மணன் மேற்கதியையடையான். ராஜனே! ஆசாரமில்லாதவனும் நாஸ்திகனும் யாராலும் பூஜிக்கப்படாதவனும் சிராத்தத்தில் புஜிக்கலாகாது. ஒரு வர்ணத்திலுங்கூட முதலில் வரித்தவனைப் பொருளாசையினால் விட்டுப் போகலாகாது. தங்களுக்கு [2] உபகாரம்செய்கிறவர்களைத்தவிர மற்றப் பிராம்மணர்கள் பூமியிலுள்ள தேவர்களென்று சொல்லப்படுகின்றனர். பாரதனே! ஸம்ஸ்காரங்களாகிய கர்மங்களைச்செய்யும் விதியை வரிசையாகச்சொல்லுகிறேன்; கேள். யுதிஷ்டிர! ஜாதகர்மமுதலான எல்லாக் கிரியைகளும் பிரம்மக்ஷத்திரியவைசியர்களென்னும் மூன்று வர்ணங்களுக்கும் மந்திரபூர்வமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. யுதிஷ்டிர! (உபநயனத்தில்) இடையிற்கட்டும்கயிறு பிராம்மணனுக்கு முஞ்சமென்னும் புல்லினாலும் க்ஷத்ரியனுக்கு மௌர்வியென்னும் வில்நாணினாலும் வைசியனுக்குப் பல்பஜமென்னும் சணல்நாரினாலும் செய்யப்படுவது தர்மமாகும். யுதிஷ்டிர! பிராம்மணனுக்குப் பலாசதண்டமும் க்ஷத்ரியனுக்கு அரசந்தண்டமும் வைசியனுக்கு அத்திதண்டமும் தர்மங்கள். தானங்கொடுப்பதிலும் வாங்குவதிலுமுள்ள தர்மத்தையும் அதர்மத்தையும் சொல்லுகிறேன்; கேள். பிராம்மணனுக்குப் பொய்சொல்லும் பாவம் பாதகமென்று சொல்லப்பட்டிருக்கிறது. க்ஷத்திரியனுக்கு அதற்கு நான்மடங்கும் வைசியனுக்கு எண்மடங்

[1] க்ஷத்ரியனிடத்தில் அரைப்பங்கும் வைசியனிடத்தில் முக்கால்பங்கும்.

[2] உபகாரஞ்செய்தவர்களைத் தாக்ஷிண்யத்திற்கு நிமந்திரணத்திற்குச் சொல்லக்கூடாதென்பது.

கும் சொல்லப்பட்டிருக்கின்றன. [1] முதலில் பிராம்மணனால் வரிக்கப் பட்ட பிராம்மணன் வேறிடத்தில் புஜிக்கலாகாது. கீழ்வாணத்தான் பிராம்மணனால் வரிக்கப்பட்டுப் புஜிப்பானுயின் பசுஹத்திக்குச் சம மான பாவத்தையடைவான். அவன் அரசனுலும் வைசியனுலும் வரிக் கப்பட்டுப் புஜிப்பானுயின் பசுஹத்தியின் பாவத்தில் பாதிப்பாகம் அடைவான். ராஜனே! பிராம்மணர்முதலானவர்கள் செய்யும் தேவகாரி யங்களிலும் பித்ருகாரியங்களிலும் பிராம்மணன் ஸ்நானம் செய்யாமற் புஜிப்பானுயின் அவனுக்குப் பொய்சொல்லும் பாவமுண்டாகிறது. ராஜ னே! எந்தப்பிராம்மணன் சுத்தனுயிராமல் பொருளாசையினுல் புத்தி பூர்வமாகப் பிராம்மணன்முதலான வருணத்தாரின் சிராத்தங்களில் புஜிப்பனே அவனுக்குப் பசுவுக்காகப் பொய்சொன்ன பாவம் சொல்லப் படுகிறது. பாரதனே! அரசர்க்கரசே! வேறுலாபத்தையடையக்கருதிப் புஜிப்பவனுக்கும் தன்காரியத்திற்காக அழைப்பவனுக்கும் பொய் சொன்னபாவம் சொல்லப்படுகிறது. யுதிஷ்டிரா! வேதாத்யயனமும் நியமமும் நல்லொழுக்கமுமில்லாதவர் மூன்றுவர்ணத்தாராலும் மந் திரங்களோடு புசிப்பிக்கப்படுவாராயின் அவர்களுக்குப் பசுவின் பொய் யின் பாவமுண்டாகிறது" என்று சொன்னர்.

அறுபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(தேவபித்ருகாரியங்களும், தானதர்மங்களும், ஸ்வர்க்கத்துக்கும் நரகத் துக்கும் போகிறவர்களும்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பித்ருகாரியத்திலும் தேவகாரியத்தி லும் செய்யப்படும்தானம் யாருக்குச்செய்தால் அதிகபலனுள்ளதாகு மென்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"யுதிஷ்டிர! எவர்களின் மனைவிகள் அவர்கள் உண்டபிச்சத்தை யும் அவர்களுக்கிட்ட மிச்சத்தையும் உழுவர்கள் நல்லமழையையெதிர் பார்ப்பதுபோல எதிர்பார்க்கின்றனரோ அவர்களைப் புசிப்பிக்கக்கட வாய். ராஜனே! ஒழுக்கத்தைவிடாமல் தேகமிளைத்து ஜீவனமில்லா மல் சாப்பாட்டை வேண்டிவருகின்றவரெவரோ அவர்களுக்குச்செய் யும் தானம் அதிகபலனுள்ளது. ராஜனே! ஒருவனிடத்தில் அன்பு

[1] அது கொடுப்பவனுக்குள்ளபாவம். இனி வாங்குபவனுக்குள்ளபாவம்.

வைத்து அவன் வீட்டையே தம்வீடாகவும் அவனையே சகாயமாகவும் ஆதாரமாகவும் நினைத்தவர்கள் விருப்பமுள்ளவராயின் அவர்களுக்குத் தானம் கொடுப்பதில் பலனதிகம். திருடர்களாலும் பகைவர்களாலும் ஸொத்துக்கள் அபகரிக்கப்பட்டுப் பயத்தினாலும் துயரத்தினாலும் யாசிப்பவர்கள் புசிக்கவிரும்பினால் அவர்களுக்கு அன்னதானஞ்செய்வது பெருமபயனுள்ளது. பாவமில்லாத எந்தப்பிராம்மணன் ஏழுமைத் தனத்தினால் [1] கையில் ஜீவனத்தை வைத்திருப்பவனை அவனிடத்தில் பிக்ஷைக்குவரும் பிரம்மசாரிகளுக்குக்கொடுப்பதில் பலனதிகம். தேசம் பிறரால் பிடிபடும்போது தனங்களும் மனைவிகளும் கொண்டுபோகப் பட்ட எந்தப்பிராம்மணர்கள் பொருளுக்காக வருகின்றனரோ அவர்களுக்குத் தானங்கொடுப்பதில் பலனதிகம். சாஸ்திரங்களில் தேர்ச்சியுள்ள எந்தப்பிராம்மணர் விரதத்தையோ தவத்தையோ மேற்கொண்டு அதைமுடிப்பதற்காகப் பொருளை விரும்புகின்றனரோ அவர்களுக்குத் தானம் செய்வதில் பலனதிகம். [2] பாஷண்டர்களின் மதங்களையும் அவர்களின் தர்மங்களையும் முழுதும் வெறுத்தும் தேகபலமும் பொருளும் குறைந்துமிருப்பவர்களுக்குக் கொடுப்பதில் பலனதிகம். குற்றமில்லாமலிருந்தும் அரசர்களினால் எல்லாச்சொத்தும் பறித்தல் செய்யப்பட்டு அன்னத்தைப்புஜிக்க விரும்புவோர்க்குக் கொடுப்பதில் பலனதிகம். எப்போதும் தவத்திலேயேயிருக்கும் ரிஷிகளும் அவர்களிடத்தில் பிக்ஷையெடுக்கும் பிரம்மசாரிகளும் கார்யத்திற்காக எதையாவது விரும்பினாயின் அவர்களுக்கு அதைக்கொடுப்பதில் பலனதிகம். பரதபேரே! பெரும்பயனுள்ள தானத்தின்முறையைப்பற்றி நீகேட்டாயிற்று; இனி நரகத்திற்குப்போவதும் ஸ்வர்க்கத்திற்குப்போவதும் எதனால் என்பதைக்கேள். உபவாஸங்களின் பாரணைக்காகவும் குருதக்ஷிணைக்காகவும் யாகதக்ஷிணைக்காகவும் விவாகத்திற்காகவும் விற்வான்கள் கேட்டால் அவர்களுக்குக்கொடுப்பதில் பலனதிகமே. தாய்தந்தையர்களையும் பிள்ளைபெண்டுகளையும் காப்பாற்றுவதற்கும் கொடியவியாதியை நிவிருத்திசெய்வதற்கும் கேட்பவர்களுக்குக் கொடுப்பதில் பலனதிகம். ஆதரவற்ற சிறுவர்களும் பெண்களும் நல்லசாப்பாட்டை விரும்பினால் அவர்களுக்கொடுப்பவர்கள் ஸ்வர்க்கம் சேருவார்; நரகம்சேரார். யுதிஷ்டிரா! குருவின் கார்யத்தையும் அபயங்கொடுப்பதையுந்தவிர வேறுகார்யங்

---

[1] அன்றன்று ஸம்பாதித்து ஜீவிப்பவனென்பது கருத்து; 'கையில் அன்னத்தை வைத்திருப்பவன்' என்பது பழையவுரை.

[2] பௌத்தர்முதலிய வேதத்திற்குவிலக்காளவர்.

களில் பொய்சொல்லுகிறவர் நரகம்போகிறவராவர். பிறர்மனைவிகளைப் பறிப்பவரும், பிறர்மனைவிகளைத்தொடுகிறவரும், பிறர்மனைவிகளை மற்றவருக்குக்கூட்டிக்கொடுப்பவரும் நரகம்போகிறவர். பிறர்பொருள்களைத் திருடுகிறவர்களும் பிறர்பொருளையழிப்பவரும் பிறர்மேல்கோட்சொல்லுகிறவரும் நரகம்போகிறவர். பாரதனே! தண்ணீர்ப்பந்தல்களையும் ஜனங்கள்தங்கும் [1] மண்டபங்களையும் சுமைதாங்கிகளையும் வீடுகளையும் இடிக்கும் மனிதர்கள் நரகம்போகிறவர்கள். நாதனற்றசிறுபெண் கிழவி பயந்தவள் தவத்திலிருப்பவள் இந்தப்பெண்களை மோசம்செய்யும் மனிதர்கள் நரகம் அடைவார்கள். பாரதனே! ஒருவன் ஜீவனத்தைக்கெடுப்பவரும் வீட்டையிடிப்பவரும் மனையையபகரிப்பவரும் மித்ரபேதஞ் செய்பவரும் எதிர்பார்த்திருந்ததைக்கெடுப்பவரும் நரகம்போகிறவர். கோட்சொல்லுகிறவர்களும் வரம்பைக்கெடுப்பவர்களும் அயலானுடைய ஜீவனத்தைப்பிடித்துக்கொள்ளுகிறவர்களும் வேண்டினவர்கள் செய்யும் நன்றியை நினையாதவர்களும் நரகத்திற்குப்போகிறவர்கள். பாஷண்டரும் ஆசாரங்களைக்கெடுப்பவரும் சாப்பிட்டுத்தூஷிப்பவரும் நரகம்போகிறவர். மோசமாக வியாபாரம் செய்பவரும் வட்டியிலும் லாபத்திலும் மோசம்செய்பவரும் நரகம்போகிறவர். அரசர்களுக்குத் தூதர்களாயிருப்பதைத் தொழிலாகவுடையவரும் பகுத்தறிவில்லாதவரும் பிராணிஹிம்சை செய்பவருமான மனிதர்கள் நரகம்போகிறவர். வேதனமும் சாப்பாடும் குறிப்பிடப்பட்டும் விருப்பமுண்டாக்கப்பட்டும் வேலைசெய்துகொண்டிவரும் வேலைக்காரனைக்கலைத்து இழுத்துக்கொள்ளுகிறவர் நரகம்போகிறவர். தம்மனைவிகளையும் வேலைக்காரர்களையும் விருந்தினர்களையும் புசிப்பியாமல் புசிப்புவரும் அக்னிஹோத்ரம் செய்யாமலும் பித்ருக்களுக்கும் தேவதைகளுக்கும் பூஜைசெய்யாமலுமிருப்பவரும் நரகம்போகிறவர். வேதத்தைவிற்பவரும் வேதத்தைத் தூஷிப்பவரும் வேதத்தையெழுதிவைப்பவரும் நரகம்போகிறவர்கள். நாலு ஆச்ரமங்களிலுஞ்சேராமலும் வேதத்திற்குப் புறம்பாகவும் இருந்துகொண்டு விலக்கப்பட்ட தொழில்களைச்செய்து ஜீவிப்பவர் நரகம்போகின்றவர். ராஜனே! சவரிமுதலான கேசங்களையும் விஷங்களையும் பாலியும் விக்கிரயம்செய்பவர் நரகம்போகிறவர். யுதிஷ்டிர! காரியகாலங்களில் பிராம்மணர்களுக்கும் பசுக்களுக்கும் கன்னிகைகளுக்கும் இடையிற்போகிறவர்கள் நரகம்போகிறவர். யுதிஷ்டிரா! ஆயுதங்களை விற்பவரும் அம்புகளையும் விற்களையும் செய்பவரும் நரகம்போகிறவர். பாரதசிரேஷ்டனே! கற்களாலும் முள்ளுகளாலும் பள்ளங்களினாலும் வழி

[1] மதகுகளையும் என்றுமாகலாம்.

கலைத்தடுப்பவர் நரகம்போகிறவர். பரதஸ்ரேஷ்டனே ! உபாத்தியாயர் கள் வேலைக்காரர்கள் அன்புள்ளவர்கள் இம்மூவரையும் குற்றமில்லா மலேவிடுகிறவர் நரகம்போகிறவர். புதுப்பசுக்களைப்பழக்குகிறவரும் மூக்குக்குத்துகிறவரும் அவற்றைக்கட்டி ப்பிடிப்பவரும் நரகம்போகிற வர். ஆறிலொருபாகமாகியதீர்வையை அபகரித்துக்கொண்டு ரக்ஷிபாத அரசர்களும் கொடுக்கத்திறமையிருந்தும் கொடாதவர்களும் நரகம்போ கிறவர். பொறுமையும் அடக்கமுமுள்ளவர்களும் வெகுகாலம் கூடவே யிருந்தவர்களுமான புத்திமான்களைக் காரியமானபின் விட்டுவிடுகிறவர் நரகம்போகிறவர். சிறுவர்களுக்கும் கிழவர்களுக்கும் வேலைக்காரர்களுக் கும் கொடாமல் முன்னே சாப்பிடும்மனிதர்கள் நரகம்போகிறவர்கள்.

பரதஸ்ரேஷ்டனே ! இவ்வாறு நரகம்போகிறவரைப்பற்றி முத லில் சொன்னேன். இனி ஸ்வர்க்கம் போகிறவரைப்பற்றிச் சொல் வேன். பாரதனே ! தேவகாரியமுதலான எல்லாக்காரியங்களிலும் பிராம் மணனை அவமதிசெய்வது புத்ரர்கள் பசுக்கள் எல்லாவற்றையும் கெடுத்துவிடும். யுதிஷ்டிரா ! தானத்தினலும் தவத்தினலும் ஸத்தியத் தினலும் தர்மத்தையே யனுஸரிப்பவர் எவரோ அந்த மனிதர் ஸ்வர்க் கம்போகிறவர். பாரதனே ! குருபணிவிடையினலும் தவத்தினலும் வித்தையைச் சம்பாதித்தபிறகு, பிறரிடத்தில் வாங்குவதில் ஆசை யற்ற மனிதர்கள் ஸ்வர்க்கம் போகிறவர். பயம் நீங்குவதற்காகவாவது பாவநிவிருத்திக்காகவாவது உபத்திரவநிவிருத்திக்காகவாவது வறுமை யினலாவது வியாதியினலாவது அதற்குவேண்டிய அளவு தனத்தைப் பெறவிரும்புகிறவர் ஸ்வர்க்கம்போகிறவர். பொறுமையும் மன உறுதி யும் தர்மகார்யங்களில், உற்சாகமுமுள்ளவராகவும் மங்களாசாரங்களை விடாதவராகவுமிருக்கும் மனிதர் ஸ்வர்க்கம்போகிறவர். மதுமாம்ஸங் களையும் பிறர்மனைவிகளையும் மயக்கங்கொடுக்கும் மற்றச்சரக்குகளையும் விட்டிருக்கும் மனிதர்கள் ஸ்வர்க்கம்போகிறவர். பாரதனே ! ஆஸ்ரமங் களையும் வீடுகளையும் தேசங்களையும் பட்டணங்களையும் உண்டுபண்ணு கிறமனிதர்கள் ஸ்வர்க்கம்போகிறவர். வஸ்திரங்களையும் ஆபரணங்களை யும் பக்ஷணம் பானம் அன்னங்களையும் கொடுப்பவர்களும் குடும்பங் களைப் போஷிப்பவர்களுமான புருஷர்கள் ஸ்வர்க்கம்போகிறவர்கள். ஒருஹிம்ஸையும் செய்யாதவரும் எல்லாவற்றையும் பொறுப்பவரும் எல்லாருக்கும் ஆதரவாயிருப்பவருமான மனிதர்கள் ஸ்வர்க்கம்போகிற வர்கள். ஜிதேந்திரியர்களாகி மாதாபிதாக்களுக்குப் பணிவுசெய்து கொண்டும் ஸஹோதரர்களிடத்தில் அன்புவைத்துமிருக்கும் மனிதர்

கள் ஸ்வர்க்கம்போகிறார்கள். பாரதனே! பொருளும் தேக வன்மையும் இளமையுமிருந்தும் ஜிதேந்திரியர்களாயிருக்கும் ஸ்திர புத்தியுள்ள மனிதர்கள் ஸ்வர்க்கம்போகிறவர்கள். குற்றவாளிகளிடத்தும் அன்புள்ளவரும் கடுமையில்லாதவரும் நண்மையிலேயே ஆசையுள்ளவரும் எளிதில் ஸந்தோஷப்படுத்தக்கூடியவருமான புருஷர்கள் ஸ்வர்க்கம்போகிறவர்கள். ஆயிரம் பேருக்கன்னம்போடுகிறவரும் ஆயிரக்கணக்கா கொடுப்பவரும் ஆயிரம்பேரைக்காப்பாற்றுகிறவருமான மனிதர்கள் ஸ்வர்க்கம்போகிறவர்கள். பரதஸ்ரேஷ்டனே! பொன்னையும் பசுக்களையும் தேர்களையும் குதிரைகளையும் கொடுக்கும் மனிதர்கள் ஸ்வர்க்கம்போகிறவர்கள். யுதிஷ்டிரா! கலியாணத்திற்குரிய பொருள்களையும் வேலைக்காரரையும் வஸ்திரங்களையும் கொடுக்கும் மனிதர்கள் ஸ்வர்க்கம்போகிறவர்கள். விளையாடுகிறஇடங்கள் வீடுகள் தோட்டங்கள் கிணறுகள் தோப்புகள் மண்டபங்கள் தண்ணீர்ப்பந்தல்கள் மதில்கள் இவைகளைச்செய்விக்கும் மனிதர்கள் ஸ்வர்க்கம்போகிறவர்கள். பாரதனே! மனைகளையும் நிலங்களையும் வீடுகளையும் அவரவர்வேண்டினவற்றையும் கொடுக்கும் மனிதர்கள் ஸ்வர்க்கம்போகிறவர்கள். யுதிஷ்டிர! பழமுதலிய சுவையுள்ள பதார்த்தங்களையும் வித்துக்களையும் தானியங்களையும் தாங்களே புண்டுபண்ணித் தானம்செய்யும் புருஷர்கள் ஸ்வர்க்கம்போகிறவர்கள். அதிகபுத்ரர்களுடன் நூறுபிராயமிருப்பவரும் தயையுள்ளவரும் கோபத்தை ஜயித்தவருமான புருஷர்கள் எந்தக்குலத்தில் பிறந்தவர்களாயினும் ஸ்வர்க்கம் போகிறவர்கள். பாரதனே! தேவபித்ருகார்யங்களும் தானதர்மங்களும் தானத்திற்குக் காரணமான ஸுக்ருதங்களும் முன்னே பரலோகத்தில் உபயோகத்திற்காக ரிஷிகளால் சொல்லப்பட்டபடி. இப்போது சொன்னேன்" என்றார்.

அறுபத்துமூன்றாவது அத்யாயம்.

தானதர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(கோல்லாமலேவரும் ப்ரம்மஹத்தி தோஷம்.)

யுதிஷ்டிரர், "பாரதரே! அரசரே! கொல்லாமலே பிரம்மஹத்தி தோஷம் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டது எப்படி? இதனை எனக்குத் தெளிவாகச்சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"அரசர்க்கரசனே! நான் முன்னே வியாஸரைக்கேட்டுத் தெரிந்துகொண்டதை உனக்கு இப்போது சொல்வேன். அதை நீ மன

ஆக்கத்துடன் கேள். 'ஓ! முனிவரே! நீர் வஸிஷ்டருக்கு [1] நாலாம வர். இவ்வுலகத்தில் கொல்லாமலிருந்தாலும் என்னசெய்கையைச் செய்தால் பிரம்மஹத்திதோஷம் விதிக்கப்பட்டிருக்கிறது? அதன் உண்மையை எனக்குச்சொல்லும்' என்று வ்யாஸரைக்கேட்டேன். அரசனே! தர்மத்தில்மிகத்தெரிந்தவரான அந்தவ்யாஸர் இவ்வாறு என்னல்கேட்கப்பட்டவராகி ஸந்தேகத்தைநீக்கும் உயர்ந்தசொல்லைச் சொல்லலானார். 'ஜீவனத்திற்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பிராம்மணனைப் பிகூபோடுவதாக வலியஅழைத்துப் பிறகு இல்லை என்றுசொன்னவனைப் பிரம்மஹத்திசெய்தவனாக அறியவேண்டும். பாரதனே! வேதாத்யயனம்செய்து விருப்பு வெறுப்புக்களைவிட்டிருக்கும்பிராம்மணனுடைய ஜீவனத்தைஎடுத்துவிட்ட மதிகேடனைப் பிரம்மஹத்திசெய்தவனாக அறியவேண்டும். பசுமாட்டுக்கூட்டம் தாகமெடுத்துத் தண்ணீர்குடிக்கஓடும்போது அதற்குத் தடைசெய்பவனைப் பிரம்மஹத்திசெய்தவனாக அறியவேண்டும். பரம்பரையாகவந்த வேதத்தையும் ரிஷிகளால்நன்றாகச்செய்யப்பட்டுவரும்தர்மசாஸ்திரங்களையும் தெரியாதவனிடத்தில் தூஷிக்கின்றவனைப் பிரம்மஹத்திசெய்தவனாக அறியவேண்டும். மிகஅழகுள்ளபெண் பெரியவளாகியும் அவளைத் தகுந்தவனுக்குக்கொடாமலிருப்பவனைப் பிரம்மஹத்திசெய்தவனென்று அறியவேண்டும். எந்தமூடன் பாவச்செய்கையே செய்துகொண்டு உயிர்போகத்தகுந்த துயரத்தைப் பிராம்மணர்களுக்கு வீணைகஉண்டாக்குவனோ அவனைப் பிரம்மஹத்திசெய்தவனென்று அறியவேண்டும். கண்ணில்லாதவன் கொண்டி மூடன் இவர்களுடைய சொத்துக்களையெல்லாம் எடுத்துக்கொள்ளுகிறவனையும் பிரம்மஹத்திசெய்தவனென்று அறியவேண்டும். அறிவுகெட்ட [2] ஆச்ரமத்திலும் வனத்திலும் கிராமத்திலும் நகரத்திலும்தீயிடுகிறவனையும் பிரம்மஹத்திசெய்தவனென்று அறியவேண்டும்' என்றுகூறினர்" என்றார்.

அறுபத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(புண்யதீர்த்தங்களின் மஹிமை.)

யுதிஷ்டிரர், "சிறந்தஞானமுள்ளபரதசிரேஷ்டரே! தீர்த்தங்களைப்பார்ப்பதும் கேட்பதும் அவற்றிலாடுவதும் மிகுபுண்ணியம்.

[1] வஸிஷ்டபுத்திரர் சக்தி, சக்திபுத்ரர் பராசர், பராசரபுத்ரர் வ்யாஸர்.

அவற்றைத் தெளிவாகக்கேட்க விரும்புகிறேன். பரதசிரேஷ்டரே! பிரபுவே! பூமியிலுள்ளபுண்யதீர்த்தங்களை எனக்குச் சொல்லக்கடவீர். நான் அவசியம் கேட்கவேண்டியவனாயிருக்கிறேன்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"சிறந்ததீர்த்தியுள்ளவனே! அங்கிரஸென்னும்முனிவரால்சொல்லப்பட்ட தீர்த்தங்களின்தொகுதியைச் சொல்லுகிறேன்; கேள். உனக்கு நன்மையுண்டு. சிறந்தபுண்ணியத்தைப் பெறுவாய். மகரிஷியும் மனஉறுதியுள்ளவருமான அங்கிரஸென்னும்பிராம்மணர் தபோவனத்திலிருக்கையில் கடுமையானதவமுள்ள கௌதமர் அவரிடம்சென்று, 'பகவானே! தீர்த்தங்களால்உண்டாகும் தர்மத்தைப் பற்றி எனக்குத் தெளிவாகத்தெரியவில்லை. அதையெல்லாம் கேட்க விரும்புகிறேன். ஓ! மகரிஷியே! எனக்கு அதைச் சொல்லக்கடவீர். பேரறிவாளரான்முனிவரே! அந்தத்தீர்த்தங்களில்ஸ்நானம்செய்வதனால் மறுமையில் என்னபலன்உண்டாகும்? அதை உள்ளபடி சொல்லக்கடவீர்' என்றுகேட்க, அங்கிரஸ் சொல்லலானார். 'அக்ஞைகளோடுகூடியகந்திரபாகையிலும் வித்தஸ்தையிலும் ஏழுநாள் ஆகாரமில்லாமல் ஸ்நானம்செய்பவன் பாவங்கள்கழிந்து ரிஷிபோலாவான். காஸ்மீரதேசத்தில் எந்தநதிகள் பேரிரைச்சலோடு சிந்துநதியைச்சார்ந்து பெருகுகின்றனவோ அவற்றில் நல்லொழுக்கத்தோடு ஸ்நானஞ்செய்பவன் ஸ்வர்க்கமடைவான். புஷ்கரக்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தம், பிரபாஸதீர்த்தம், கைமிசாரண்யத்திலுள்ளதீர்த்தம், ஸமுத்திரதீர்த்தம் தேவிகாநதி இந்திரமார்க்கம் ஸ்வர்ணபிந்துவென்னும் தீர்த்தங்கள் இவற்றில் ஸ்நானம்செய்பவன் தேவரிருஷிகளிலிருந்துகொண்டு அப்ஸரஸுகளால்துதிக்கப்பட்டு ஸந்தோஷப்படுவான். குசேசயமென்னுங்க்ஷேத்திரத்தில் ஹிரண்யபிந்துவென்னும் தீர்த்தத்தைக்கண்டு பக்தியோடு நமஸ்காரம்செய்பவனுக்குப் பாவம்விலகித் தேவத்வம்உண்டாகும். கந்தமாதனமலையிலுள்ள இந்திரதோயையென்னும் நதியையும் குரங்கமென்னும்மலையிலுள்ள கரதோயையென்னும் நதியையும் அடைந்து மூன்றுஇரவுகள்உபவாஸமிருந்து பக்தியோடுஸ்நானம் செய்து பரிசுத்தனனமனிதன் அசுவமேதபலனை அடைவான். [1]கங்காத்வாரத்திலும் குசாவர்த்தத்திலும் வில்வகத்திலும் நீலபர்வதத்திலும் கனகலத்திலும் ஸ்நானம்செய்தவன் பாவங்களைநீக்கி ஸ்வர்க்கத்திற்குப்போவான். கோபமற்றவனும் பொய்யாதவனும் கொல்லாதவனும் பிரம்மசாரிவிரதமுள்ளவனுமாக அபாம்ஹ்ரதமென்னும்

[1] 'இவை கோதாவரிநதியைச்சேர்ந்தவை' என்பது பழையஉரை.

தீர்த்தத்தில் ஸ்நானம்செய்வதனால் அச்வமேதபலனையடைவான். எந்தவிடத்தில் கங்கை வடதிசையைநோக்கி ஓடுகிறதோ அது ஸ்வர்க்கமத்யபாதாளமென்னும் மூன்றிடங்களும் சேருமிடமாகிய ஈச்வரருடையஸ்தானம். அதில் ஒருமாதம்ஆகாரமில்லாமல் ஸ்நானம் செய்யும்மனிதன் தேவர்களைக்காண்பான். [1]ஸப்தகங்கம் [2]திரிகங்கம் [3] இந்திரமார்க்கம் இவற்றில் பித்ருதர்ப்பணம்செய்தமனிதன் திரும்ப வும்ஜனிக்கையில் பாக்கியங்களையனுபவிக்கப்பெறுவான். ஒருமாதம் ஆகாரமில்லாமல் மகாஸ்ரமத்தில் ஸ்நாநஞ்செய்து பரிசுத்தனாகி அக் கினிஹோத்ரம்செய்துகொண்டிருப்பவன் அம்மாதத்திலேயே தவ ஸித்திபெறுவான். ஸ்திரபுத்தியோடு மூன்றுதினங்கள் உபவாஸமிரு ந்து ப்ருகுதுங்கமென்னும் மலைச்சிகரத்திலுள்ள மஹாஹ்ரதமென் னும் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்வதனால் பிரம்மலோகத்தில் விளங்கிப்போகும். பலாகைவென்னுமந்தியில் கன்னியாகூபம்என்னும் துறையில் ஸ்நானம் செய்து தர்ப்பணம் செய்பவன் தேவலோகத்தில் புகழ்பெற்றுவிளங்கு வான். அஸ்வினீநக்ஷத்ரத்தில் தேவிகைவென்னுமந்தியிலும் ஸுஷ் தரிகைவென்னும் நதியின்மடுவிலும் ஸ்நானம்செய்யும்மனிதன் மறுஜன் மத்தில் அழகையும் ஒளியையுமடைவான். அங்காரகன்கிருத்திகையி லிருக்கும்போது ஒருபக்ஷம் ஆகாரமில்லாமல் மகாகங்கையில் ஸ்நா னம்செய்பவன் பாவங்களற்று ஸ்வர்க்கம்சேருவான். கிங்கிணீகாஸ்ர மம்என்னுமிடத்திலுள்ள வைமானிகதீர்த்தத்தில் ஸ்நானம்செய்பவன் அப்ஸரஸுகளிருக்கும் தேவலோகத்தில் கிணத்தபடி ஸஞ்சரித்துக் கொண்டு கொண்டாடப்படுவான். காளிகாஸ்ரமமென்னுமிடத்தை யடைந்து கோபத்தைஜயித்துப் பிரம்மசாரிவிரதத்தோடு மூன்று தினம் விபாசைநதியில் ஸ்நானதர்ப்பணம் செய்பவன் ஸம்ஸாரத்தி லிருந்துவிடுபடுவான். கிருத்திகாஸ்ரமத்தில் ஸ்நானமும் பித்ருதர்ப் பணமும்செய்து பரமசிவனையாராதிப்பவன் பாவம் நீங்கி ஸ்வர்க்கம் சேருவான். மஹாகூபமென்னுந்தீர்த்தத்தில் மூன்றுநாள் உபவாஸ மிருந்து ஸ்நானம்செய்து பரிசுத்தனாயிருப்பவன் சராசரங்களாலும் மனிதர்களாலுமுண்டாகும் பயத்தை விட்டுவிடுவான். தேவதாரு வனத்தில் ஏழுநாளிருந்து ஸ்நானம்செய்து பரிசுத்தனாகித் தர்ப்ப ணம்செய்தவன் பாவங்களைப்போக்கித் தேவதையென்று பெயர்பெறு வான். சரஸ்தம்பம், குசஸ்தம்பம், துரோணசர்மபதம் என்னுமிடங் களிலுள்ள அருங்களில் ஸ்நானம்செய்பவன் அப்ஸரஸுகளினால் உப

---

[1] கங்கை ஏழாகப்பிரியுமிடம்; [2] மூன்றாகப்பிரியுமிடம; [3] ஸ்வர்க்கத் திற்குப்போகுமிடம்.

சரிக்கப்படுவான். சித்ரகூடத்திலும் ஜனஸ்தானத்திலும் மந்தாகினீ நதியின்ஜலத்திலும் ஸ்நானம்செய்து உபவாஸமிருப்பவன் ராஜ்யலக்ஷ்மியினால் அடையப்படுவர்ன். ப்ரயாமையென்பவளுடைய ஆஸ்ரமத்திற்குப்போய் ஒருபகூதம் ஆகாரமில்லாமல் வாஸம்செய்து ஸ்நானம்செய்பவன் அந்தர்த்தானமாகும் சக்தியையடைவான். கௌசிகிநதியையடைந்து இருபத்தொருநாள் வாயுபகூஷணம்செய்து விருப்பமற்றிருக்கும் மனிதன் ஸ்வர்க்கமேறுவான். மதங்கவாபியென்னும் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்பவன் ஒருராத்ரியில் பலனடைந்து ஓர் ஆதாரத்தையும் பற்றுதவரும் நித்யருமான [1] ஈஸ்வரரையடைவான். நைமிசாரண்யத்திலுள்ள ஸ்வர்க்கதீர்த்தத்தில் ஒருமாஸம் புலன்களையடக்கி ஸ்நானம்செய்து தர்ப்பணம்செய்பவன் புருஷமேதமென்னும் யாகத்தின்பலனையடைவான். கங்காஹ்ரதம் உத்பலாவனம் என்னும் தீர்த்தங்களில் ஒருமாஸம் ஸ்நானம்செய்து தர்ப்பணம்செய்பவன் அச்வமேதத்தின் பலனையடைவான். காலஞ்சரமலையிலும் கங்கையமுனைகளின் தீர்த்தத்திலும் ஒருமாஸம் ஸ்நானதர்ப்பணம் செய்பவன் பத்து அசுவமேதயாகங்களின் பலனையடைவான். யஷ்டிஹ்ரதமென்னும் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்வது அன்னதானத்திற்குமேற்பட்டது. பரதசிரேஷ்டனே! மாசிமாஸத்துப்பூர்ணிமையில் ப்ரயாகையில் மூன்று கோடியே பதினேராயிரம் புண்யதீர்த்தங்கள் சேருகின்றன. பரதசிரேஷ்டனே! மாகமாஸமுழுதும் உறுதியானநியமத்தோடு ப்ரயாகையில் நித்யஸ்நானம்செய்பவன் பாவம்தொலைந்து ஸ்வர்க்கமடைவான். மருத்கணம் பித்ருக்களின் ஆஸ்ரமம் யமதீர்த்தம் இவற்றில் ஸ்நானம்செய்து பரிசுத்தனுமனிதன் தீர்த்தங்களுக்குச்சமானமாவன். கங்கையில் ப்ரம்மஸரஸ் என்னும் இடத்திற்குச்சென்று ஒருமாதம்ஆகாரமில்லாமல் ஸ்நானதர்ப்பணம்செய்பவன் சந்த்ரலோகத்தையடைவான். பன்னிரண்டுநாள்ஆகாரமின்றி உத்பாதகம் அஷ்டாவக்ரம்என்னும் தீர்த்தங்களில் ஸ்நானதர்ப்பணங்கள்செய்தமனிதன் நரமேதத்தின்பலனையடைவான். கயையிலுள்ள அஸ்மப்ருஷ்டத்திலும் நிரவிந்தமலையிலும் க்ரௌஞ்சபதியிலும் ஸ்நானதர்ப்பணங்கள்செய்வதனால் [2] மூன்றுவது ப்ரம்மஹத்தியும் போய்விடும். கலவிங்கமென்னும் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்பவன், எங்கும் ஜலத்தட்டின்றி அளவற்றஜலத்தையடைவான். அக்நிபுர

[1] 'அத்தகம்' என்றபதம் 'அத்தகசத்ரு' என்னும்நாமத்தின் ஏகதேசமாகக் கொள்ளப்படவேண்டும். 'ஸம்ஹாரரூபி' என்னவுமாம்.

[2] 'முதலிடத்திற்செய்வதால் ஒருப்ரம்மஹத்தியும் இரண்டாவதில் செய்வதால் இரண்டும் மூன்றுவதில்செய்வதால் மூன்றும் போம்' என்பது பழைய உரையின் கருத்து.

மென்னும் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்த மனிதன் அக்னிபகவானுடைய கன்னிகைகளின் அந்தப்புரத்தில்வஸிப்பான். கரவீரபுரத்தில் விசாலா நதியில் தேவஹ்ரதம் என்னுமதீர்த்தத்தில் ஸ்நானஆசமனீயதர்ப்பணம் செய்பவன் பிரம்மாவைப்போல விளங்குவான். இந்திரியங்களையடக்கி ஹிம்ஸைசெய்யாமல் புனராவர்த்தநந்தை மகாநந்தைஎன்னும் நதிகளில் ஸ்நானம்செய்பவன் நந்தனமென்னும் இந்திரன்தோட்டத்தில் அப்ஸரஸுகளிஞல் உபசரிக்கப்படுவான். ருத்திகாநஷத்திரத்தில் லௌஹித்யமென்னுநதியில் உர்வசிதீர்த்தத்தில் சிரத்தையோடு சாஸ்திரப்படி ஸ்நானம்செய்பவன் பௌண்டரீகயாகபலனையடைவான். பன்னிரண்டுநாள் உண்ணுமல் விபாசைநதியில் ராமஹ்ரதமென்னும் தீர்த்தத்தில் ஸ்நானதர்ப்பணங்கள்செய்தவன் பாவத்திலிருந்து விடுபடுவான். பரிசுத்தமானமனத்தோடு ஒருமாஸம் உபவாஸமிருந்து மஹாஹ்ரதத்தில் ஸ்நானம்செய்தமனிதன் ஜமதக்னி முனிவருடைய கதியையடைவான். வாக்கில்ஸத்தியத்தோடும் வணக்கத்தோடும் பிராணிஹிம்ஸை செய்யாமல் தன்னுடம்பைவருத்தி விந்தியமலையில்தவம்செய்பவன் ஒரு மாஸத்தில் பலனையடைவான். முண்டம், பிரம்மகயை, நிரிசி, தேவபர்வதம், தேவஹ்ரதம் இவற்றில் ஸ்நானம்செய்வதனால் பிரம்மாவைப் போலவிளங்குவான். குமாரபதமென்னும் க்ஷேத்திரத்தில் ஒருமாஸம் வஸிப்பதனால் பாவங்கள்நீங்குகின்றன. நர்மதைநதியிலும் சூர்ப்பாரகோதகமென்னும்தீர்த்தத்திலும் ஸ்நானம்செய்துகொண்டு ஒருபக்ஷம் உபவாஸமிருப்பவன் ராஜகுமாரனைப் பிறப்பான். ஜம்புமார்க்கமென்னும் தீர்த்தத்தில் மூன்றுமாஸங்களும் ஒருநாளும் இந்திரியங்களையடக்கி த் தவம்செய்பவன் தவஸித்தியடைவான். கோகாமுகமென்னும் தீர்த்தத்திற்கும் அந்ரலிகாஸ்ரமத்திற்கும்போய் ஸ்நானம்செய்து இலை களைப்பக்ஷித்துக்கொண்டு மரவுரியுடுப்பவன் பத்துத்தேவகன்னிகைகளையடைவான். அவன் ஒருகாலும் யமலோகம்புகான். கன்னியாஹ்ரதத்தில் வாஸம்செய்பவன் தேவலோகத்தையடைவான். ஓ! மஹாவீரனே! அமாவாசையில் நியமத்தோடு பிரபாஸதீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும்மனிதன் ஒருநாளில், தவப்பயனையடைந்து தேவனுவான். உஜ்ஜானகத்திலும் ஹர்ஷ்டிஷேணருடைய ஆச்ரமத்திலும் பிங்கையின் ஆஸ்ரமத்திலும் ஸ்நானம்செய்வதனால் எல்லாப்பாவங்களும் விலகிப் போம். ரிஷிகுல்யை என்னும்தீர்த்தத்தில் அகமர்ஷணமென்னும் மந்திரத்தை ஜபித்து ஸ்நானம்செய்துகொண்டு மூன்றுநாள் உபவாஸமாயிருக்கும்மனிதன் அஸ்வமேதபலனையடைவான். பிண்டாரகமென்

னும் தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து ஓர்இரவு அங்கேதங்கினமனிதன் விடிந்தவுடன் பரிசுத்தனுய் அக்நிஷ்டோமயாகபலனையடைவான். ரிஷி யாஸ்ரமங்களிலுல் விளங்குகின்ற பிரம்மஸரஸுக்குச்சென்று ஸ்நானம் செய்து பரிசுத்தனுனமனிதன் பௌண்டரீக யாகத்தின்பலனையடை வான். காமத்தையடக்கி மௌனமாகபர்வதத்தில் ஒரு மாஸம் ஸ்நானமும் ஸந்தியாவந்தனமும் செய்துகொண்டிருப்பவன் எல்லா யாகப்லன்களையு மடைவான். கர்ப்பஹத்திசெய்தவன், காலோதகம் நந்திகுண்டம் உத் தரமானஸம் இவற்றிற்கு நூறுயோஜனதூரத்தில் வரும்போதே பாவ மற்றவனுவான். நந்திகேசுவரருடைய விக்ரஹத்தைத் தரிசித்தபிறகு எல்லாப்பாவங்களும் விட்டுப்போம். ஸ்வர்க்கமார்க்கமென்னும் தீர்த் தத்தில் ஸ்நானம்செய்தமனிதன் பிரம்மலோகம்போவான். சங்கரருக்கு மாமனும் எல்லாரத்னங்களுக்குமிருப்பிடமும் ஸித்தர்களாலும் சார ணர்களாலுமடையப்பட்ட புண்ணியக்ஷேத்ரமுமான இமயமலை பிர ஸித்தமானது. அதைப்பார்ப்பதனலும் அதன்மேல் போவதினலும் அங்கே உபவாஸமிருப்பதனலும் மனிதன் பரிசுத்தனுவான். வேதாந் தங்களையறிந்தபிராம்மணன், 'உயிர்வாழ்க்கைநிலையற்றது' என்றறிந்து அந்த இமயமலைக்குச்சென்று அங்கு தேவர்களையும் முனிவர்களையும் பூஜித்து நமஸ்கரித்து நியமத்தோடு உபவாஸமிருந்து தேஹத்தைவிட்டு அதனலேயே தவப்பயன்பெற்றுநித்யமும் சுத்தமுமான பிரம்மலோகத் திற்குப் போவான். காமக்குரோதலோபங்களைஜயித்துத் தீர்த்தங்களுக் குப்போகிறவன் அந்தத் தீர்த்தயாத்திரையினுல் அடையாதபலன் எதுவுமில்லை. போகக்கூடாத மேடுபள்ளமான மார்க்கமுள்ள தீர்த்தங் களையும் எல்லாத்தீர்த்தங்களிலுமுள்ளபக்தியோடுமனத்தினுல் அடைய வேண்டும். இந்தத்தீர்த்தஸ்நானம் யாகத்திற்குச்சமமான புண்ணியம்; ஸ்வர்க்கத்திற்கு ஓர்பற்றஸாதனம். இது வேதங்களின்ரஹஸ்யம்; பாவங்களைப்போக்குவது. பிராம்மணர்களுக்கும் தனக்கு உபகாரம் செய்தயோக்கியனுக்கும் இதைச் சொல்லலாம்; வேண்டினவர்களுக்கும் வழிபடும்சிஷ்யனுக்கும் காதில் உபதேசிக்கவேண்டும்' என்றார். சிறந்த தவமுள்ள அங்கிரஸென்னும்முனிவர் இதைக் கௌதமருக்கு உபதே சித்தார். சிறந்தஞானமுள்ளகாச்யபரால் அங்கிரஸுக்கு உபதேசிக்கப் பட்டது. இந்ததீர்த்தமகிமை மஹரிஷிகளும் ஜபிக்கத்தக்கது; நூயவற்றுள் சிறந்தது. எப்போதும் எழுந்தவுடன் ஜபிப்பவன் பாவங் களைநீங்கி ஸ்வர்க்கமடைவான். அங்கிரஸரிஞல் சொல்லப்பட்ட இந்த ரஹஸ்யத்தைக்கேட்பவனும் உயர்குலத்தில்ஜனித்துப் பூர்வஜன்மங் களின் ஞாபகத்தோடிருப்பான்" என்றார்.

அநுபத்தைந்தாவது அத்தியாயம்.

தான தர்மபர்வம் (தொடர்ச்சி.)

(ஔருஸிக்தர் ஓர் உஞ்சவ்ருத்திப்ராம்மணருக்குக் கங்கையின் மஹிமையைக் கூறியது.)

புத்தியில்பிருகஸ்பதிக்கும் பொறுமையில் பிரம்மதேவருக்கும் பராக்ரமத்தில் இந்திரனுக்கும் உலகத்தில்பிரசாசிப்பதில்சூரியனுக்கும் சமமானவரும் மிக்க மகிமையுள்ளவரும் யுத்தத்தில் அர்ஜுனனால் அடிக்கப்பட்டவருமான பீஷ்மரை யுதிஷ்டிரர் தம் ஸஹோதரரோடும் மற்றும் அநேகரோடும்சேர்ந்து கேள்விகள்கேட்டார். சரதல்பத்தில் படித்து உத்தராயணத்தை யெதிர்பார்த்திருப்பவரும் நியமந்தவறுத வருமான பீஷ்மாசாரியரைப்பார்ப்பதற்காக மகரிஷிகள் வந்தனர். அத்ரி, வஸிஷ்டர், ப்ருகு, புலஸ்தியர், புலஹர், க்ரது, அங்கிரஸ், கௌதமர், அகஸ்தியர், மனத்தைமிகவும் அடக்கினவராகிய ஸுமதி, விசுவாமித்ரர், ஸ்தூலசிரஸ், ஸம்வர்த்தர், பிரமதி, தபர், பிருஹஸ்பதி, சுக்ராசாரியர், வ்யாஸர், சயவனர், காச்யபர், த்ருவர், துர்வாஸர், ஜமதக்நி, மார்க்கண்டேயர், காலவர், பரத்வாஜர், சைப்யர், யவக்ரீதர், த்ரிதர், ஸ்தூலாக்ஷர், சபலாக்ஷர், கண்வர், மோதாகிதி, க்ருசர், நாரதர், பர்வதர், ஸுதன்வா, ஏகதர், த்விதர், நிதமபூ, புவனர், தௌம்யர், சதானந்தர், அக்நிதவ்யர், பரசுராமர், கசர்முதலான மஹாத்மாக்களான மகரிஷிகள் பீஷ்மரைக் காணவந்தனர். வந்த அம்மஹாத்மாக்களுக்கு யுதிஷ்டிரர் ஸஹோதரர்களோடுகூட விதிசைப் பிரகாரம் அதிதிபூஜையை ஸரியாகச்செய்தார். அவர்பூஜிக்கப்பட்ட அம்மஹரிஷிகள் ஸுகமாகஉட்கார்ந்து பீஷ்மரைப்பற்றி யெல்லாருடைய காதுகளுக்கும் மனத்திற்கும் இனிமையாக அழகானகதைகளைச் சொல்லினர். பரிசுத்தாத்மாக்களாகிய அந்த ரிஷிகள்சொன்ன கதைகளைக்கேட்டுப் பீஷ்மர் மிகமகிழ்ந்தவராய்த் தம்மை ஸ்வர்க்கத்திலிருப்பவராகவே நினைத்தார். பிறகு, அம்மஹரிஷிகளனைவரும் பீஷ்மரிடத்திலும் பாண்டவர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு எல்லாரும்பார்த்திருக்கையிலேயே அந்தர்த்தானமாயினர். மிகச்சிறந்தபிரபாவமுள்ள அந்தரிஷிகள் அந்தர்த்தானமானபின்பும் பாண்டவர்களனைவரும் அவர்களைத்துதித்துப் பலமுறை நமஸ்கரித்தனர். எல்லாரும் மனமகிழ்ந்து, பகலிரவுதெரிந்தவர்கள் உதயமாகும்சூரியனை உபஸ்தானமசெய்வதுபோலக் கௌரவத்தலைவரானபீஷ்மரைப் பூஜித்தனர்.

திக்குக்களையெல்லாம் பிரகாசிக்கச்செய்யும்அம்மஹரிஷிகளின் தவவன்மையைக்கண்டு பாண்டவர்கள் மிக்க ஆச்சரியமடைந்தனர். அந்த ரிஷிகளின் சிறந்த மகிமையைநிணைத்து அந்தப்பாண்டவர்கள் பீஷ்மருடன் கூட அவர்களைப்பற்றிப் பாராட்டிப்பேசினர். அந்தப்பிரஸ்தாவத்தின் முடிவில் பாண்டுபுத்ரரும் தர்மபுத்ரருமான யுதிஷ்டிரர் பீஷ்மருடைய பாதங்களைத் தலையால்வணங்கி, "பிதாமஹரே! எந்தத்தேசங்கள், எந்தக்கிராமங்கள், எந்த ஆஸ்ரமங்கள, எந்தமலைகள், எந்தநதிகள் புண்யமான வைகளிற் சிறந்தவையென்று அறியலாம்?" என்று தர்மத்தைப்பற்றிய கேள்வியைக்கேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"யுதிஷ்டிரா! இந்தவிஷயத்தில் உஞ்சவிருத்திசெய்கிற ஒருவருக்கும் ஒருஸ்த்ரீக்கும் நடந்தஸம்வாதமாகிய ஒருபழைய இதிஹாஸம் கூறுகின்றனர். அதைச்சொல்லுகிறேன். மனிதர்களிற்சிறந்த ஒருஸ்த்ரீ தர் மலைகளால் அலங்கரிக்கப்பட்ட இந்தப்புவனியெல்லாம் பலமுறை திரிந்து உஞ்சவிருத்திசெய்யும் ஒருசிறந்த கிருஹஸ்தருடைய வீட்டையடைந்தார். அந்தரிஷி அவரால்முறைப்படி பூஜிக்கப்பட்டுப் பிரஸன்னராகி அந்தஇரவு அந்தக்கிருகத்தில் ஸுகமாகவஸித்தார். அந்த உஞ்சவிருத்திப்பிராம்மணர் காலைக்கடமைகளைச்செய்து பரிசுத்தராய்த் தம் கருடங்களையெல்லாம் முடித்துக்கொண்டிருக்கும் அந்த அதிதியான ஸ்த்ரீயிடம் போனர். அம்மஹாத்மாக்களிருவரும் சேர்ந்து சுகமாக உட்கார்ந்து வேதங்களைச்சேர்ந்த தர்மசாஸ்த்ரம் சிஷ்டாசாரமுதலியவற்றிலுள்ளபடியப்பட்ட சிறந்தவிஷயங்களைப்பேசிக்கொண்டிருந்தனர். சிறந்தபுத்தியுள்ள அந்த உஞ்சவ்ருத்திக்காரர் பேச்சின்முடிவில் அந்த ஸ்த்ரீயைநோக்கி என்னை நீஇப்போது கேட்கும்கேள்வியையே சிரத்தையுடன்கேட்டார். அவர், 'எந்ததேசங்கள் எந்தக்கிராமங்கள் எந்தஆஸ்ரமங்கள் எந்தமலைகள் எந்தநதிகள் புண்ணியமுள்ளவைகளிற் சிறந்தவையாக அறியத்தக்கவை என்பதைச் சொல்லக்கடவீர்' என்றுகேட்க, ஸ்த்ரீ சொல்லலானர்.

நதிகளிற்சிறந்ததும் பகீரதனல்கொண்டுவரப்பட்டதுமான கங்கைநதி எவற்றின்வழியாகப் பிரவகிக்கிறதோ அந்தத்தேசங்களும் அந்தக்கிராமங்களும் அந்தஆஸ்ரமங்களும் அந்தமலைகளும் புண்ணியமானவைகளிற்சிறந்தவை. ஒருமனிதன் கங்கையையடைந்து ஸம்பாதிக்கும் நற்கதியைத் தவத்தினலும் பிரம்மசாரிவ்ரதத்தினலும் யாகங்களினலும் தியாகங்களினலும் அடையமுடியாது. எந்தமனிதர்களின் தேகங்கள் கங்காஜலம்மேலேபட்டபிறகு, விடப்படுகின்றனவோ அவர்களுக்கு முக்திவருவதனல் மறுபடியும் தேகம்விடுவது சொல்லப்படவில்லை,

பிராம்மணரே! எவர்கள் எல்லாக்கர்மங்களும் கங்கையின் ஜலத்திலுல் நடத்துகின்றனரோ அம்மனிதர்கள் பூமியைவிட்டபின் மேலுலகத்திலி ருப்பர். முற்பிராயத்தில் பாவகாரியத்தைச்செய்த மனிதர்களும் பின் பிராயத்தில் கங்கையைச்சேர்ந்திருப்பாராயின் உத்தமகதியையடைவார். பாவமுள்ளவர்களும் கங்கைமூனைகளின் ஸங்கமத்தில் தேகங்களை விட்டாராயின் அதனுலேயேபரிசுத்தர்களாகி முக்திபெறுவார். பரிசுத்த மான கங்காஜலத்தில் சிரத்தையுடன் ஸ்நானம்செய்யும் மனிதர்களுக்கு உண்டாகும் பலன் அநேகயாகங்களாலுமுண்டாவதில்லை. மனிதனது எலும்பு எத்தனைவருஷம் கங்கையின்ஜலத்திலிருக்குமோ அத்தனையா யிரவருஷம் அவன் தேவலோகத்திற்பூஜிக்கப்படுவான். ஸூர்யன். உதய மாகும்போதே மிக்கஇருளை ஒழித்துக்கொண்டே பிரகாசிப்பதுபோல வே மனிதன் கங்காஜலத்தில் ஸ்நானம்செய்யும்போதே பாவத்தைஒழித் துக்கொண்டு பிரகாசிக்கிறான். பரிசுத்தமானகங்காஜலம் இல்லாததேசங் களும் திசைகளும், சந்திரனில்லாத இரவுகள்போலவும் பூவாதமரங்கள் போலவுமிருக்கின்றன. கங்கையில்லாமற்போனுல் உலகம் தர்மமும் ஞானமுமில்லாத வர்ணஸ்ரமங்கள்போலவும் ஸோமலதையில்லாதயாகம் போலவும் ஆய்விடும். சூரியனில்லாதஆகாயமும் மலைகளில்லாத பூமியும் காற்றில்லாத இடைவெளியும் எப்படியோ அப்படியே கங்கையில்லாத தேசங்களும் திசைகளும் ஆகும். ஸுதேகமில்லை. மூன்றுலகங்களிலு முள்ள எல்லாப்பிராணிகளும் புண்ணியமானகங்காஜலத்திலுல் தர்ப் பணம்செய்வதனுல் மிகுந்ததிருப்தியையடைகின்றன. மூன்றுலகங் களிலுமுள்ள தேவர்கள் ரிஷிகள்[1] ப்ரேதர் பித்ருக்கள்ஆகிய அனைவரும் கங்காஜலத்தில் தர்ப்பணம்செய்வதனுல் திருப்தியடைகின்றனர். சூரிய புடமாகக்காய்ந்த கங்காஜலத்தை ஒருவன்குடிக்நால் யமங்களை ஆகார மாகப்போட்டபசுவின் கோமயத்திலிருக்கும் யமங்களைச்சாப்பிடுவதைப் பார்க்கிலும் அது சிறந்தது. ஆயிரம்சாந்திராயணம்செய்து தேகசுத்தி செய்கிறவனும் கங்கைஜலத்தைக்குடிப்பவனும் ஒப்பாயிருப்பரோ; இரா ரோ. ஆயிரம்யுகங்கள் ஒற்றைக்காலால்நின்று தவம்செய்யும்மனிதனும் ஒருமாஸம் கங்கையில்ஸ்நானம் செய்பவனும் ஸரியாயிருப்பரோ; இரா ரோ. பதினுயிரம்யுகம் தலைகீழாகத்தொங்கித் தவஞ்செய்யும் மனிதனைப் பார்க்கிலும் கங்கையில் தன்னிஷ்டப்படியிருப்பவனும் மேலாவான்.

[1] ஸபிண்டீகரணம்வரையில் ப்ரேதர்களென்றும், பிறகு, பித்ருக்களென் றும் சொல்லப்படுவர்.

பிராம்மணோத்தமரே! கங்கையில்ஸ்நானம் செய்பவனுடைய பாவங்கள் எல்லாம் அக்னியில்போடப்பட்ட பஞ்சுபோல எரிந்துபோய்விடும். துக்கத்தினால் மனம்கெடுக்கப்பட்டு அதற்குப்பரிகாரம்தேடுகிற மனிதர்களுக்குக் கங்கைக்குச்சமமான ஆதரவு ஒன்றுமில்லை. கருடனைப்பார்ப்பதனால் ஸர்ப்பங்கள் விஷமற்றுப்போவதுபோலக் கங்கையைப்பார்ப்பதனால் மனிதர்கள் எல்லாப்பாவங்களிலிருந்தும் விடுபடுகின்றனர். இவ்வுலகத்தில் நீலியும் [1]கவசமும் ஆதரவுமற்றவர்கள் எவரோ அவர்களுக்குக் கங்கை நீலியாகவும் [2]கவசமாகவும் ஆதரவாகவும் ஸுகமாகவுமிருக்கின்றது. அநேககொடியபாவங்களினால் விழுங்கப்பட்டு நரகத்தில்விழும் அதமரானமனிதருக்கும் கங்கையைச்சேர்ந்தால் மறுமையில்அவர்களை அது கரையேற்றும். புத்திசாலிகளிற்சிறந்தவரே! இடைவிடாமற்கங்கைக்குப் போகிறவர்கள் ரிஷிகளோடும் இந்திராதிதேவர்களோடும், புண்ணியத்தில் ஸமபாகமுள்ளவர்களாகிறார்கள். பிராம்மணரே! கல்வியும் ஆசாரங்களுமில்லாமல் அயோக்யர்களான ஈனமனிதர்களும் கங்கையையடைந்த பின் யோக்கியர்களாகிறார்கள். தேவர்களுக்கு ஹவ்யமும் பித்ருக்களுக்குக்கவ்யமும் நாகர்களுக்கு அமிர்தமும் எப்படியோ அப்படியே மனிதர்களுக்குக்கங்காஜலம். இவ்வுலகத்தில்மேன்மையையிரும்புகின்ற பிராணிகள் பரிணைல்வருத்தப்பட்டகுழந்தைகள் தாயையடுப்பதுபோலக் கங்கையையடுக்கின்றன. பிரம்மலோகம் எல்லாலோகங்களுக்கும்மேற்பட்டதாகச் சொல்லப்படுவதுபோலக் கங்கை இவ்வுலகத்திலுள்ள எல்லாநதிகளிலும் சிறந்ததாகச்சொல்லப்படுகிறது. உலகங்களுக்குப்பசுவும் பிராம்மணனும் எப்படியோ, ஹோமம்செய்யப்படுவனவற்றுள் ஸோமரஸம் எப்படியோ அப்படியே பாவந்தீர்ச்செய்பவற்றுள் கங்கை. காமதேனுவானது தன்னையடுத்த தேவர் முதலியவருக்கும் முக்கியமாக நினைக்கப்படுவதுபோலவே கங்கை இவ்வுலகத்தில் தன்னையடுத்த எல்லாப்பிராணிகளுக்கும் முக்கியமாகநினைக்கப்படுகிறது. தேவர்கள், ஸத்ரங்கள்முதலிய யாகங்கள்வழியாகச் சந்திரனிடத்திலும் சூரியனிடத்திலுமுள்ள அமிருதங்களை [3]உட்கொள்வதுபோல மனிதர்கள் கங்கைநீரை உட்கொள்ளுகின்றனர். கங்கைக்கரையிலுள்ள மணலினால் பூசப்பட்டாலும் தாம் ஸ்வர்க்கத்திலிருப்பதுபோலச் சிறப்புற்றிருப்பதாக

[1] 'வர்ம' என்றபாடம் கொள்ளப்பட்டது. [2] கவசம்போலப் பலம்தருவது.

[3] அக்னீயில் செய்யும் ஆஹுதி சூரியனைச்சேருவதனாலும் சந்திரகலைகள் கிருஷ்ணபக்ஷத்தில் "சூரியனிடத்தில்சேருவதனாலும் அந்த அமிருதங்களைத் தேவர் புசிக்கிறரென்றது.

ஜனங்கள் நீணைக்கிறார்கள். கங்கைக்கரையிலுண்டான மண்ணைச்சிரசில் வஹிப்பவன் இருளைப்போக்கும் ஒளியுள்ளசூரியனுடைய சோபையை அடைகிறன். கங்கையின் அலைகள் ஸம்பந்தப்பட்டகாற்று மனிதன் மேல்படும்போதே அவன்பாவத்தை இழுத்துவிடுகிறது. விசனங்களினால் வருத்தப்பட்டு இறந்துபோகுந்தருணத்திலிருக்கும் மனிதனுக்குக் கங்கையைப்பார்ப்பதனாலுண்டான இன்பம் விசனங்களைப்போக்கிவிடுகிறது. கங்கையானது அன்னம் சக்ரவாகம் என்னும் பக்ஷிகளின் கூவுதல்களினால் கந்தர்வர்களாலும் மணல்மேடுகளினால் மலைகளாலும் வென்றது. அன்னமுதலான பலவகைப்பறவைகளால் நிரம்பச்சூழப் பெற்றதும் பசுக்கூட்டம் நெருங்கியிருப்பதுமான கங்கையைக்கண்ட பிறகு, ஸ்வர்க்கலோகமும் மறக்கப்படும். கங்கையின் மணல்மேட்டில் மனிதர்களுக்குண்டாகும் சிறந்தஇன்பமானது தேவலோகத்திலிருந்து எல்லாப்போகங்களையும் அனுபவிப்பவனுக்கும் உண்டாகாது. இவ்வுலகத்தில் வாக்கினாலும் மனத்தினாலும் காயத்தினாலும் செய்யப்பட்டபாவங்கள் மூடியிருக்கும் மனிதனும் கங்கையைக்கண்டவுடன் பரிசுத்தனுவானென்பதில் எனக்குச்சந்தேகமில்லை. கங்கையைக்கண்டாலும் ஆசமனம் செய்தாலும் ஸ்நானம்செய்தாலும் ஒருமனிதன் தன்குலத்தின் பின்னேழுதலைமுறையாரையும் முன்னேழுதலைமுறையாரையும் அவருக்கும் முன்னினவரையும் கரையேற்றுவான். கங்கையானதுகேட்கப்பட்டாலும் விரும்பப்பட்டாலும்குடிக்கப்பட்டாலும்தொடப்பட்டாலும் பார்க்கப்பட்டாலும் ஸ்நானம்செய்யப்பட்டாலும் மனிதர்களின் தாய்வம்சம் தந்தைவம்சமிரண்டையும் நிச்சயம்கரையேற்றிவிடும். கங்கைக்கரையிலிருந்துகொண்டு தவத்தையும் சிராத்தத்தையும் வேதமுதலியவற்றையோதலையும் மற்றுமுள்ள தர்மகருமங்களையுஞ்செய்யும் மனிதர்களுக்குக் கங்காத்வாரமுதலான தீர்த்தங்களுக்குமேலானதுஒன்றுமில்லை. மாலையிலும் காலையிலும்மனிதன்கங்கையைநீணைக்கவேண்டும்; ஸ்நானம்செய்யும்போதெல்லாம் வாயினற்சொல்லவேண்டும்; பித்ருக்களுக்குத்தர்ப்பணம் செய்யும்போதும் மரணகாலத்திலும் நீணைக்கவேண்டும். கங்கையானது பார்ப்பதனாலும் தொடுவதனாலும் குடிப்பதனாலும் கங்கையென்றுசொல்வதனாலும் பாவம் செய்தமனிதர்களை நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் சுத்தப்படுத்துகிறது. பிறப்பையும் உயிர்வாழ்க்கையையும் ஒதலையும் பயன்படச்செய்யக்கருதுகிறவன் கங்கைக்குச்சென்று பித்ருக்களுக்கும்தேவர்களுக்கும் தர்ப்பணஞ்செய்யவேண்டும். ஒருமனிதன் கங்கைக்குப்போய் அடையும்பலனை ஒதலினாலும் பொருளினாலும்

யாகமுதலிய கர்மங்களினலும் அடைவது முழுதும்முடியாது. புண்ணியமான ஜலமுள்ளதும் சுகத்தைத்தருவதுமான கங்கையைச் சக்தியிருந்தும் பாராதவர்கள் பிறவிக்குருடருக்கும் பிணங்களுக்கும் முடவருக்கும் சமமானவர். நடந்தது நடக்கிறது நடப்பதாகிய முக்காலங்களையும் அறிந்த மகரிஷிகளாலும் இந்த்ராதிதேவர்களாலும் கொண்டாடப்படும் கங்கையை எந்தமனிதன் அடையாமலிருப்பான்? கல்வியிற் சிறந்த வானப்பிரஸ்தர், கிருஹஸ்தர், ஸந்யாஸிகள், பிரம்மசாரிகளென்னும் நான்கு ஆச்ரமத்தாராலும் அடையப்படும் கங்கைக்கு எந்த மனிதன் போகாமலிருப்பான்? கூட்டைவிட்டு உயிர்போகும்போதும் யோக்யனென்று பெயர்பெற்ற எவன் பக்தியோடு கங்கையை மனத்தில் நிணைப்பானே அவன் மேற்கதிபெறுவான். இவ்வுலகத்தில் எந்தமனிதன் கங்கையையடைகிறானே அவனுக்குத் தேகம்விழுமளவும் பயத்தைத்தருவனவாகிய (பேய்பிசாசு பாம்பு முதலியவற்றின்) பயமும் பாவபயமும் ராஜபயமும்இல்லை. மிகப்புண்ணியமான கங்காநதி ஆகாயத்திலிருந்து பூமியில் விழும்போது மஹேசுவரர் தம்தலையால் தாங்கினர்; மேலுலகத்திலும் அதையே தலையில்வைத்துக்கொண்டிருக்கிறார். பரிசுத்தமான மூன்றுமார்க்கங்களினல் மூன்றுலகங்களும் கங்கையினல் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அதன் ஜலத்தை உபயோகிக்கும் மனிதன் க்ருதார்த்தனுவான். ஆகாயத்திலுள்ள (நக்ஷத்திரமுதலிய) தேஜஸுகளில் ஸூர்யன் எப்படியோபுருஷர்களில் தேவேந்திரன்எப்படியோ அப்படிநதிகளில் கங்கை.[1] பித்ருதேவர்களில் சந்திரன் எப்படியோ அப்படியே நதிகளில் கங்கை. தாய், தந்தை, புத்ரர், மனைவி, பொருள் இவர்களைப்பிரிகிறவனுக்கும் கங்கையைப்பிரிவதனுலுண்டாகும் துயரம் உண்டாகாது. கங்கையைப்பார்ப்பதனுலுண்டாகும் இன்பம் காடுகளினுலும் வேண்டினபோ கங்களினுலும் புத்ரஸந்தானத்தினுலும் நிரவியலாபங்களினுலும் உண்டாவதில்லை. பூர்ணசந்த்ரனைப்பார்த்து மனிதர்களின்கண் எப்படிக்குளிர்கிறதோ அப்படியே கங்கையைப்பார்த்துக் குளிர்கிறது. பக்தியோடு அன்புவைத்து மனம்செலுத்தி, 'இதுவே ஆதாரம். இதுவே பரகதி' என்றெண்ணிக் கங்கையை அனுஸரித்திருப்பவன் எவனே அவன் அந்தக்கங்கையின் அனுக்ரஹத்திற்குப் பாத்ரனுவான். பூமியிலும் ஆகாயத்திலும் மேலுலகத்திலுமுள்ள பலவகைப்பிராணிகளுக்கும் கங்கை ஸ்நானம் செய்வதற்குரியது. ஸாதுக்களுக்கு எப்போதும் செய்யத்

---

[1] ஸோமன், பித்ருமான், யமன், அங்கிரஸ்வான், அக்நி, கவ்யவாகனன் முதலான பித்ருக்களில் சந்திரன் முதலாக எண்ணப்பட்டனன்.

தக்க சிறந்தகாரியம் கங்காஸ்நானந்தான். கங்கை எல்லாஉலகங்களிலும் புண்ணியமாயிருப்பதனாலேதான் அதன்புகழ் விளங்குகிறது. தூர்மரணமாக இறந்தவரையும் ஸ்த்தியில்லாமலிறந்தவரையும் அது ஸ்வர்க்கம் சேர்த்திருக்கிறது; இவ்வுலகில் சாம்பலாகப்போன ஸகரபுத்ரர்களை ஸ்வர்க்கலோகம்சேர்த்தது. காற்றினால் எழுப்பப்பட்டவையும் மனத்தை மிகக்கவருகின்றவையும் வேகமுள்ளவையும் மிகக்கொந்தளிக்கின்றவையும் அழகிய நிறமுள்ளவையுமான கங்கையின் அலைகளினால் பரிசுத்தம் செய்யப்பட்டவர்கள் [1] சூரியனுக்குச் சமானமாகிறார்கள். பசுக்களின் வளப்பத்தினால் பாலும் நெய்யும் பயிர்முதலிய தொழில் வளப்பத்தினால் செல்வமும் நிம்பினதும் நினைத்ததையெல்லாம் அளிப்பதனால் மிகச் சிறந்த கொடையுள்ளதும் வேகமுள்ளதும் இறங்கக்கூடாத ஆழமுள்ளதுமாகிய கங்கைக்குச்சென்று தேகத்தைவிட்ட தைர்யசாலிகள் தேவரோடு சேருகிறார். புகழ்பெற்றதும் பெரிதும் எல்லாஉலகங்களிலும் பிரவேசித்திருப்பதும் இந்திராதிதேவர்களாலும் ரிஷிகளாலும் மனிதர்களாலும் அனுஸரிக்கப்பட்டதுமான கங்கை கண்ணில்லாதவருக்கும் மதியில்லாதவருக்கும் பொருளில்லாதவருக்கும் விரும்பினவற்றையெல்லாம் அளிக்கும். செல்வமும் சௌக்கியமும் நிரம்பியதும் பெரும்புண்ணியத்தைத்தருவதும் மூன்று வழிகளிற்செல்வதும் மூன்றுலகங்களையுங்காப்பதுமாகிய கங்கையைச்சேர்ந்தவர் தெய்வலோகத்தைச் சேர்ந்தவரே. கங்கையினிடம் வஸிப்பவனுக்கும் அதைப்பார்ப்பவனுக்கும் தேவர்கள் ஸ்வர்கங்களைக்கொடுக்கின்றனர். அதைத்தொடுவதனாலும் காண்பதனாலும் அனுக்ரஹமுண்டாக்கப்பட்ட தேவர்கள் அவன் விரும்பின நற்கதியையும் கொடுக்கின்றனர். இவ்விடங்களைக்கொடுக்கச் சக்தியுள்ளதும் அடித்தவர்களை [2] விசாரிப்பதும் [3] பெரிதும் வெகுதூரம் செல்வதும் கேடுமத்தையும் ஸம்பத்தையும் தருவதும் பாக்கியமுள்ளதும் மிக்க அனுக்ரஹமுள்ளதும் தேஜஸைக்கொடுப்பதும் எல்லாப் பிராணிகளுக்கும் ஆதாரமுமான கங்கையையடைந்தவர்கள் ஸ்வர்க்கமடைந்தவர்தாம். எதனுடையகீர்த்தி தேவலோகத்தையும் ஆகாயத்தையும் பூமியையும் திசைகளையும் மூலைகளையும் வியாபித்து எல்லாவற்றிற்கும் மேலாயிருக்கிறதோ அந்தமஹாநதியின் ஜலத்தையடைந்த மனிதரனைவரும் க்ருதார்த்தராவார். கங்கையென்றபெயருள்ள இந்தநதி யாவ .

[1] தேவராகிறார்.

[2] 'ப்ருச்ச்' என்பதுமூலம்; 'விஷ்ணுவின்தாய்' என்பது பழையஉரை.

[3] குணம்மிகுந்தது.

ருக்கும் ஸ்திரமானஆதாரம்; ஸுப்ரம்மண்யரையும் ஸ்வர்ணத்தையும் கர்ப்பத்தில் வைத்துக்கொண்டிருந்தபெண்; தர்மார்த்தகாமங்களென் னும்மூன்றுபுருஷார்த்தங்களையும் கொடுப்பது; தேவர்களுக்குஹவிஸா கிய நெய்யையுண்டாக்குவது; பாவத்தைப்போக்குவது. கங்கையானது ஆகாசத்திலிருந்து காலியில்இழிந்து ஜலத்தினுல் உலகங்களைவியா பித்தது. நித்யரானநாராயணரிடத்திலிருந்து முதலில் உண்டாயிற்று; அந்த நாராயணருடைய பாதத்திலிருந்து சிம்சுமாரசக்கரம் என்னும் காலசக்கரத்திலிழிந்து அங்கிருந்து துருவனிடத்திலும் அங்கிருந்து சந்திரனிடத்திலும் சந்திரனிடத்திலிருந்து சூரியனிடத்திலும் சூரிய னிடமிருந்து மேருமலையினிடத்திலும் மேருமலையுருவமெடுத்த விஷ்ணு வினிடமிருந்து சிவன்தலையிலும் அங்கிருந்து இமயமலையிலும் வந்து சேர்ந்தது; ஸத்யத்தைக்காப்பதும் பொருள்வேண்டுகிறவன் பிரார்த்திக் கத்தக்கதும் ஸ்வர்க்கத்துக்கும் பூமிக்கும் தகுந்ததாகப்பார்க்கத்தக்கது மாயிருப்பது. அரசனே! இமயமலையின் பெண்ணும் சிவன்மனைவியும் ஸ்வர்க்கத்திற்கும் பூமிக்கும்ஒப்பானதும் பூமியில் சிறந்தபாக்கியமுள்ள தும் மூன்று உலகங்களுக்கும் புண்ணியங்களைக் கொடுப்பதுமாகக் கங் கை படைக்கப்பட்டது; ஸ்வர்க்கலோகத்திற்குத்தாயும் தேனையும் நெய் யையும் பொழிவதும் நெய்போலத் தேகத்தின் ஒளியைக்கொடுப்பதும் பெரிய அலைகளினுலும் பிராம்மணர்களினுலும் விளங்குவதும் ஸ்வர்க் கத்திலிருந்து இமயமலையில் விழுந்து சிவன்தலையினுல் ஏற்றப்பெற்றது மாயிருக்கிறது. கங்கையானது சிறந்த உற்பத்திகாரணம்; ரஜோகுணத் தையொழிப்பது; இளைப்பைப்போக்குவது; படுக்கைபோல ஸுகமான னது; சீக்கிரமாக ஜலம்பெருகுவது; புகழைக்கொடுப்பது; உலகத்தைக் காப்பது; ஸ்நானம் செய்பவருக்கு நிணைத்த உருவத்தைத்தருவதும் மேலுலகத்திற்கு வழியுமாயிருப்பது. பொறுமையிலும் காப்பதிலும் தாங்குவதிலும் பூமிக்கும், பிரகாசிப்பதில் அக்நிக்கும் சூரியனுக்கும், பிராம்மணர்களுக்கு உதவிசெய்வதில் ஸுப்ரம்மண்யருக்கும் சமான மென்று கங்கை எப்போதும் பிராம்மணர்களால் நிணைக்கப்படுகிறது. ரிஷிகளால் துதிக்கப்பட்டதும் விஷ்ணுபாதத்திலுண்டானதும் பழமை யானதும் மிகப்பரிசுத்தமான ஜலமுள்ளதுமாகிய கங்கையை இவ்வுல கத்தில் முழுபக்தியோடு மனத்தினுலடைகிறவரும் பிரம்மலோகத்தை யடைகிறவரே. எல்லாக்குணங்களும் நிரம்பினகங்கை பூர்ணமானஅணுக் கிரகத்தினுல் தாயார் பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டுவருவதுபோல இவ்வுலகங்களை முன்னுக்குக் கொண்டுவருகிறது. ஆதலால், பிரம்மலோ கத்தையடைய விரும்புகிறவர்கள் எப்போதும் மனத்தையடக்கிக் கங்

கையையே பழிக்கவேண்டும். தவஸித்தியைவிரும்பின பரிசுத்தமன முள்ளவன் நமஸ்கரித்துப் பக்திசெய்யப்படுவதும் மேலேபட்டவுடன் எல்லாரையும் பரிசுத்தம்செய்வதும் பூமியைரக்ஷிப்பதாக அறியப்படுவ தும் பர்வதங்களில் ரேவதிநக்ஷத்திரம்போலப் பிரகாசிப்பதும் ஜலம் நிரம்பினதும் மீன்களினல் கண்விழித்திருப்பதுபோன்றதும் எல்லாப் பிராணிகளும் குடிக்கத்தகுந்த சிறந்த ஜலமுள்ளதும் அரசர்களையும் காப்பதும் ஸாதுக்களுக்கு ஆதார மும் அம்ருதம்போன்றதும் பிரம்ம தேவராலும் விரும்பப்படுவதுமான கங்கையை அடையவேண்டும். பகீ ரதன் உக்ரமான தவத்தினல் எல்லாத்தேவர்களையும் ஈசுவரரையும் ஆராதித்துக் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்தான். அந்தக்கங்கை யை அடிக்கடி அடைவதனல் மனிதர்களுக்கு இம்மையிலும் மறுமை யிலும் பயமில்லையென்று அறியவேண்டும். நான் புத்தியினல் நன்கு ஆராய்ந்துபார்த்துக் கங்கையின்குணங்களிற் சிறிதுதான் உமக்குச் சொன்னேன். அதன் குணங்களெல்லாவற்றையும் அறிவதற்கும் சொல் வதற்கும் எனக்குச் சிறிதும் ஸாமர்த்தியமில்லை. எவ்விதப்பிரயத்தனங் களாலும் மேருவின்கற்களையும் கடல்நீரையும் எண்ணினலும் கங்கா ஜலத்தின் குணங்களைமட்டும் அறியவும் சொல்லவுமுடியாது. ஆதலால், நான் மிகுந்த சிரத்தையோடு சொன்ன இந்தக்கங்கையின் குணங்கள் எல்லாவற்றையும் சிரத்தையோடும் பக்தியோடும் வாக்கினலும் மனத் தினலும் செய்கையினலும் எப்போதும் கொண்டாடவேண்டும். நீர் இம்மூன்று உலகங்களிலும் புகழ்பரவி யாருக்கும் கிடைக்கத்தகாத பெருந்தவஸித்தியையும் பெற்றுக் கங்கையினலேயே அளிக்கப்பெற்ற புண்ணியலோகங்களில் சக்கிரத்தில் இஷ்டப்படி ஸஞ்சரிப்பீர். சிறந்த மஹிமையுள்ள கங்கை உபத்ரவத்தையும் எனதுமனதீதையும் எக்கால மும் விடாமலிருக்கவேண்டும். அடுத்தவர்களிடம் அன்புள்ள கங்கை, இவ்வுலகத்தில் பக்தியுள்ளவனைத் தன்தர்மத்தைச் செய்வதனலுண்டா கும் சிறப்புக்களையும் ஸுகங்களையும் கூட்டிவைக்கிறது' என்றார். இவ் வாறு சிறந்தபுத்தியும் ஒளியுமுள்ள அந்தஸித்தர் அந்த உஞ்சவிருத் திப்பிராம்மணருக்கு அவர்கேள்விக்குத்தக்கபடி கங்கையின் உண்மை யான குணங்களெல்லாவற்றையும் பலவகைகளால் உபதேசித்து ஆகா யத்திலேறினர். ஸித்தருடைய உபதேசங்களினல் தெளிவுற்ற உஞ்ச வ்ருத்திப்பிராம்மணர் உடனே கங்கையை முறைப்படி உபாஸித்துப் பெறுதற்கு மிகவும் அரிதானதவப்பேறுபெற்றார். குந்திபுத்ரனே! அவ ரைப்போலவே நீயும் எப்போதும் மிகுந்தபக்தியுடன் கங்கைக்குச்செல்.

உயர்ந்த பலனையடைவாய்" என்றார். இவ்வாறு கங்கையைப்புகழ்ந்து பேசினதாகப் பீஷ்மர்சொன்ன சரித்திரத்தைக்கேட்டு, யுதிஷ்டிரரும் தம்பிமார்களுடன் மிகுந்த ஸந்தோஷமடைந்தார்.

அறுபத்தாறுவது அத்யாயம்.

தானதர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(நாரதர் பூஜிக்கத்தக்கவரை கிருஷ்ணனுக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "இம்மூன்று லோகங்களுக்கும் பூஜிக்கத்தக்க மனிதன் யார்? அதை விரிவாகச்சொல்லும். நீங்கள்சொல்வதைக்கேட்பதில் எனக்கு ஆசைதீரவில்லை" என்றுகூற, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்த விஷயத்திலும் நாரதருக்கும் கிருஷ்ணனுக்கும் நடந்த ஸம்பாஷணையாகிய ஒருபூர்வசரித்திரம் கூறுகின்றனர். நாரதர் கைகூப்பிக் கொண்டு பிரமம்மணஸ்ரேஷ்டர்களைப் பூஜிக்கக்கண்ட கிருஷ்ணன், 'பகவானே! யாரை நமஸ்கரிக்கிறீர்? பகவானே! நீர் யாரை நமஸ்கரிக்கிறீரோ அவர்களிடத்தில் நீர்கௌரவம்வைத்திருப்பீர். தர்மந்தெரிந்தவரிற் சிறந்தவரே! நாம்கேட்கக்கூடுமாயின் இதைச்சொல்லக்கடவீர்' என்று கேட்க, நாரதர் சொல்லலானார், 'பகைவர்களைக் கொல்பவரான கோவிந்தரே! நான் யாரைப்பூஜிக்கிறேனென்பதைக் கேளும். இவ்வுலகத்தில் இதைக்கேட்கத்தக்க புருஷர் உம்மைவிட வேறுயார் இருக்கிறார்? பிரபுவே! வருணனையும் வாயுவையும் ஆதித்யனையும் இந்திரனையும் அக்நியையும் சிவனையும் ஸுப்ரம்மண்யரையும் மஹாலக்ஷ்மியையும் விஷ்ணுவையும் பிரம்மாவையும் ப்ருஹஸ்பதியையும் சந்திரனையும் ஜலத்தையும் பூமியையும் ஸரஸ்வதியையும் எவர்கள் எப்போதும் நமஸ்கரிக்கிறார்களோ அவர்களை நான் நமஸ்கரிக்கிறேன். யாதவஸ்ரேஷ்டரே! தவத்தையேதனமாக உடையவரும் வேதமறிந்தவரும் எப்போதும் வேதத்தை விடாதிருப்பவருமாகிய மகானுபாவர்களை நான் எப்போதும் பூஜிக்கிறேன். பிரபுவே! உண்ணுமலேதவபூஜைசெய்து தற்புகழ்ச்சியும் ஆசையுமில்லாமல் பொறுமையுள்ளவராயிருப்பவரை நான்நமஸ்கரிக்கிறேன். யாதவரே! பொறுமையும் அடக்கமுமுடையவர்களாயும் ஜிதேந்திரியர்களாயும் யாகங்களைநன்றாகச்செய்து, ஸத்யத்தையும்தர்மத்தையும் பூமியையும் பசுக்களையும் பூஜிக்கின்றவர்களையும் நான்நமஸ்கரிக்கிறேன். யாதவரே! கிழங்குகளையும் கனிகளையும் புசித்துக்கொண்டும் ஒன்றையும்

சேர்த்துவைத்துக்கொள்ளாமல் தம்கருமங்களைச் செய்துகொண்டும் காட்டில்தவம்செய்கிறவர்களை நமஸ்கரிக்கிறேன். யாதவரே! வேலைக் காரரைக் காப்பாற்றத்திறமையுள்ளவர்களும் எப்போதும் விருந்தோம் பலிவிரதமாகக்கொண்டவர்களும் தேவதைக்கு நிவேதனம்செய்த சேஷத்தைப்புசிப்பவர்களுமாயிருப்பவரை நமஸ்கரிக்கிறேன். வேத த்தைஒதி யாராலும்வெல்லமுடியாதவர்களும் சிறந்தவாக்குள்ளவர்க ளும் ஜிதேந்திரியர்களும் யாகங்கள் செய்விப்பதிலும் ஒதுவித்தலி லுமே எப்போதும்முயற்சியுள்ளவர்களுமாயிருப்பவர்களை நான் பூஜி க்கிறேன். எப்போதும் எல்லாப்பிராணிகளிடத்தும் அன்புள்ளமனத் துடன் முதுகுசுடும்வரையில் வேதாத்யயனம்செய்துகொண்டிருப்ப வரை நான் பூஜிக்கிறேன். யாதவரே! வெறுப்பில்லாமல் குருதக்ஷிணை விடைசெய்து அவர்களனுக்ரஹம்பெறுவதிலும் ஒதுவதிலும் முயற் சியோடிருக்கும் விரதந்தவறாதவர்களை நமஸ்கரிக்கிறேன். யாதவரே! சிறந்ததவமுள்ளரிஷிகளும் சொன்னசொல்தவறாதவரும் ஹவ்யகவ் யங்களைஎப்போதும்நடத்துகிறவருமானபிராம்மணர்களை நமஸ்கரிக்கி றேன். யாதவரே! பிரஹ்மயெடுத்துக்கொண்டு ஸுகத்தையும்தனத் தையும்விட்டுக் குருவின்வீட்டிலேயேஇருந்துகொண்டு இளைத்திருப் பவரை நமஸ்கரிக்கிறேன். கேசவரே! எனதென்ற அபிமானத்தையும் பகையையும்விட்டு மனவுறுதியுடன் பிரயோஜனத்தைக்கருதாமல் வேதங்களைஒதி யாராலும்வெல்லக்கூடாதிறந்தவாக்குள்ளவர்களாகி யாருக்கும்தீங்குசெய்யாமையையே தலைமையாகக்கொண்டு பிரம்ம நிஷ்டர்களாயிருப்பவரும் ஸத்யத்தைவிரதமாகக்கொண்டவரும் ஐம் புலன்களையும் மனத்தையுஞ் ஜயித்தவருமானமனிதரை நமஸ்கரிக்கி றேன். யாதவரே! தேவதைகளையும் அதிதிகளையும்பூஜிப்பதில்ஊக்க முள்ளவர்களும் புருச்சூப்போல் அப்போதைக்கப்போது ஜீவனம் தேடுகிறவர்களுமான கிருஹஸ்தர்களை எப்போதும் நமஸ்கரிக்கிறேன். எவர்கள்செய்யுங்காரியங்களில் தர்மார்த்தகாமங்கள் மூன்றும் கெடா மல்இருக்கின்றனவோ, எவர்கள் சிஷ்டர்களுடையஆசாரங்களை விடா தவர்களோ அவர்களை எப்போதும் நான் நமஸ்கரிக்கிறேன். கேச வரே! கல்விமுற்றினஎந்தப்பிராம்மணர்கள் ஆசையில்லாமல் தர்மார் த்தகாமங்கள் மூன்றையும்நடத்திக்கொண்டு புண்ணியத்தையேசெய் பவரோ அவர்களை நமஸ்கரிக்கிறேன். நாராயணா! காலத்தைவீண் போக்காமல் தர்மார்த்தகாமங்களிலும் அவற்றின் ஸாதகங்களிலும ஆசையுள்ளவரும் சிறந்தஆசாரங்களைவிடாதவருமாயிருப்பவர்களை நமஸ்கரிக்கிறேன். மாதவரே! நீரையும் காற்றையும் அமிருதமென்

னப்படும்யாகசேஷத்தையும் புஜித்துக்கொண்டு பலவிதவிரதங்கள செய்பவரை எப்போதும் நமஸ்கரிக்கிறேன். யோனியிற்பிறவாதவ ரும் உலகத்தில்ஒன்றையும்பற்றுமல் அக்நியிலிருந்தும்பிரம்மதேவ ரிடத்திலிருந்தும்பிறந்தவர்களும் எல்லாப்பிராணிகளுக்கும் அந்தர் யாமியானபரமாத்மாவினிடம் பிறந்தவர்களுமான ரிஷிகளை நான் எப் போதும் நமஸ்கரிக்கிறேன். கிருஷ்ணை! உலகத்தையுண்டுபண்ணு கிறவர்களும் உலகத்திலும்ஜாதிகளிலும்பெரியோர்களும் உலகத்தின் இருளைப்போக்கும் சூரியர்களாயிருப்பவருமான இந்தரிஷிகளை எப் போதும் நமஸ்கரிக்கிறேன். வ்ருஷ்ணிகுலத்தவரே! ஆதலால், நீரும் பிராம்மணர்களை எப்போதும் பூஜிக்கக்கடவீர். குற்றமற்றவரே! பூஜைக்குரியசானபிராம்மணர்கள் பூஜிக்கப்பெற்றால் உமக்கு ஸுகத் தைக்கொடுப்பாரல்லரோ? இவர்கள் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்தி லும் எப்போதும் ஸுகத்தைத்தருகிறவர்களாக ஸஞ்சரிப்பவர்கள்; நீர் கொண்டாடினால் உமக்கும் ஸுகத்தைத்தருவார். எவர்கள் எல்லா அதிதிகளையும் பூஜித்துக்கொண்டு பசுக்களிடத்திலும் பிராம்மணர்க ளிடத்திலும் ஸத்யத்திலும் எப்போதும் ஊக்கம்வைத்திருக்கின்றன ரோ அவர்கள் கஷ்டங்களைத்தாண்டுகின்றனர். எப்போதும் சாந்தி யுள்ளவர்களாகவும் பொறுமையில்லாதவர்களாகவும் வேதமோது வ ரை எப்போதும் விடாதவர்களாகவுமிருப்பவர் எவரோ அவர்கள் கஷ் டங்களைத்தாண்டுகின்றனர். வேதப்ஒன்றையே ஆதாரமாகக்கொண்டு சிரத்தைபோடும் அடக்கத்தோடுப் எல்லாத்தேவர்களையும்நமஸ்கரிப் பவர்கள் கஷ்டங்களைத்தாண்டுகின்றனர் அப்படியே பிராம்மணசிரே ஷ்டர்களைநமஸ்காரம்செய்து விரதங்களைச்செய்துகொண்டு அவர்களுக் குத்தானம்செய்பவர்கள் கஷ்டங்களைத்தாண்டுகின்றனர். சிறுபிராயத் திலிருந்து எப்போதும் பிரம்மசாரிகளாகவே தவம்செய்து தவத்தி னால் பரிசுத்தம்செய்யப்பட்டமனமுள்ளவர்கள் கஷ்டங்களைத்தாண்டு கின்றனர். தேவர்களையும் அதிதிகளையும் பித்ருக்களையும் ஆராதித்தும் வேலைக்காரர்களைப்புசிப்பித்தும் மிகுந்த அன்னத்தைப்புசிப்பவர்கள் கஷ்டங்களைத்தாண்டுகின்றனர். விதிப்படி அக்நியையுண்டாக்கி நமஸ் காரம்செய்து அதைஸ்திரமாகவைத்துக்கொண்டு ஸோமபானம்செய் கிறவர்கள் கஷ்டங்களைத்தாண்டுகின்றனர். யாதவசிரேஷ்டரே! தாய் தந்தையரிடத்திலும் ஆசார்யரிடத்திலும் நீர்கடப்பதுபோல எப்போ தும்ஸரியாகநடப்பவர்கள் கஷ்டங்களைத்தாண்டுகின்றனர்' என்று சொல்லிமுடித்தார். குந்திபுத்ரனே! ஆதலால், நீயும் எப்போதும் பித்ருக்களையும் தேவர்களையும் பிராம்மணர்களையும் அதிதிகளையும் நன்றுகப்பூஜிப்பாயாயின், நீவிரும்பின நற்கதியையடைவாய்" என்றார்.

அறுபத்தேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(அடைக்கலம் புகுந்தவனைக் காப்பதைப்பற்றிய சிபிசக்ரவர்த்தீகதை.)

யுதிஷ்டிரர், "எல்லாச்சாஸ்திரங்களிலும் நிபுணரும் பேரறிவாளரும் பரதசிரேஷ்டருமானபிதாமஹரே! உம்மிடத்தில் நான் ஒரு தர்மத்தைக்கேட்கவிரும்புகிறேன். [1]நான்குவிதமானபிராணிகளுள்ளும் யாதாயினும் சரணமடைந்ததைக்காப்பாற்றுகிறவர்களுக்கு உண்மையில் என்னபலன் உண்டாகிறது?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பேரறிவும் பெரும்புகழும்பெற்றதர்மபுத்ரனே! சரணாகதியின் பெரும்பயனைப்பற்றி முன்நடந்ததிதிஹாஸத்தைச் சொல்வேன்; கேள். பார்ப்பதற்கழகியஒருபுறு பருந்தினால்துரத்தப்படுந்தருணத்தில் சிறந்தமகிமையுள்ள [2]விருஷதர்ப்பனென்னுமரசனைச் சரணமடைந்தது. பரிசுத்தமானமனமுள்ள அவ்வரசன், பயந்துநடுங்கிமடியில்வந்து விழுந்த அந்தப்புறுவைக்கண்டு தேற்றி, 'பக்ஷியே! உனக்குப் பயமில்லை. ஸுகமாயிரு. உனக்கு மிகவும் அதிகமானபயம் யாரிடத்தில்? நீ யாருக்கு என்னசெய்தாய்? என் புத்திமயங்கி மூர்ச்சித்து இவ்விடம் வந்துசேர்ந்தாய்? புதியகருநெய்தல்மலருக்கு ஒப்பானநிறத்தைத் தலைக்கு அலங்காரமாகவுடையவனே! அழகானநிறமுள்ளவனே! பார்ப்பதற்கினியவனே! மாதுளம்பூப்போலவும் அசோகம்பூப்போலவும் சிவந்தகண்களையுடையவனே! பயப்படாதே. உனக்கு அபயம்தந்தேன். உலகத்தை ரக்ஷிப்பதற்காக ஏற்பட்டஎன்னிடம்வந்து என்னைக்கொண்டாடப்பட்டஉன்னைப் பிடிக்கலாமென்று மனத்தில் நினைப்பதற்கும் எவனும் வல்லவனுகான். உனக்காக இந்தக்காசிதேசாதிபத்யத்தையும் என்உயிரையும் இப்போதே விட்டுவிடுவேன். புறுவே! உனக்குப் பயமில்லை. நீ கவலையின்றியிருக்கலாம்' என்று சொன்னான். பருந்து, 'அரசனே! இந்தப்புறு எனக்குஇரையாகக் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது. இது ஓடிப்போய் என்முயற்சியினால் பிடிக்கப்பட்டு எனக்குக்கிடைத்திருப்பதை நீகாப்பாற்றுவது தகாது. இதனுடையஇறைச்சி ரக்தம் மச்சை கொழுப்பு இவையனைத்தும் எனக்குவேண்டினவை, என்மனத்துக்குத் திருப்தியைச்செய்யும்

[1] தேவர், மக்கள், விலங்குபறவைகள், தாவரங்கள்.

[2] சிபிசக்ரவர்த்தி.

ஆகாரம் இது. நீ இதற்குமுன் கில்லாதே. மிகக்கொடிதான தண் ணீர்த் தாகம் என்னைப் பீடிக்கிறது. பசியானது என்னை எரிப்பது போலிருக்கிறது. அரசனே! பசியையாற்றிக்கொள்ள என்னால் முடி யாது. இதை விட்டுவிடு. மன்னவ! இந்தப் புருவானது என்னால் தொடரப்பட்டு என்னுடைய சிறகுகளாலும் நகங்களாலும் காயப்படுத் தப்பட்டிருக்கிறது. கொஞ்சம்மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும் இதை நீ காப்பாற்றுவது தகாது. தேரோளிகளிற்சிறந்த அரசனே! உன்தேச த்திலுள்ள மனிதர்களைக் காப்பாற்றுவதற்கு நீ அதிகாரியாயிருக்கலாம். தாகத்தினால் வருந்தப்படுகின்ற ஆகாயத்தில்பறக்கும் பறவைக்கு நீ அதிகாரியல்லை. உன் பகைவர்களுக்கும் வேலைக்காரர்களுக்கும் சுற் றத்தாருக்கும் உன்தேசத்திலுள்ள வியவகாரங்களுக்கும் உனது இந் திரியஸுகங்களுக்கும் நீ பிரபுவாயிருக்கலாம். ஆகாயத்தில் உன் பராக்ரமத்தைச் செலுத்தாதே. உன்னுடையசொத்தை அபகரிக்கிற வர்கள்விஷயத்தில் பராக்கிரமத்தை நன்றாகக் காண்பிப்பதுதான் உனக் குப் பெருமை. இந்தப்புறுவின்விஷயத்தில் தர்மத்தைச் செய்யவிரும்பு கிறாயாயின், என்னையும் நீ கவனிக்கவேண்டும்' என்று சொல்லிற்று. பருந்தினுடைய அந்தச்சொல்லைக்கேட்டு ஆச்சரியமடைந்த அந்த ராஜ ரிஷி அந்தப் பருந்தையும் அதன்சொல்லையும் ஆதரித்து அதைநயந்து மறுமொழி சொல்லலானான். 'பக்ஷியே! உன் பசியடங்குவதற்காகக் காளைமாடோ பன்றியோ மானோ எருமைக்கடாவோ இப்போது நீ அங்கீ கரிக்கலாம். சரணமடைந்தவனைக் கைவிடேன். இது என்னுடைய உறுதியான விரதம். இந்தப்பக்ஷியானது என்னுடம்பை விடாமலிருக் கிறது; பார்' என்றான். அதற்குப் பருந்து, 'மகாராஜனே! பன்றியை யும் காளையையும் வேறுபலஜாதிப்பறவையையும் நான்தின்பதில்லை. அப் படிப்பட்டஉணவுகளைத்தின்பதனால் எனக்கு என்னபயன்? எனக்குத் தேவர்கள் நெடுங்காலமாக ஏற்படுத்தியிருக்கும் உணவு இதுதான். பருந்துகள் புறாக்களைத்தின்பது எப்போதுமுள்ள நிலைமை. குற்றமற்ற சிபிசக்ரவர்த்தியே! உனக்குப் புறுவிடத்தில் அன்பிருக்குமாயின், நீ உன்மாம்ஸத்தை அந்தப்புறுவுக்குச்சரியாகத் தராசில்நிறுத்து எனக்கு இப்போதேகொடு' என்றுகேட்டது. அதற்கு, அந்தராஜசிரேஷ் டன், 'நீ இப்போது என்னைப்பார்த்து இவ்வாறுகேட்டதே எனக்குப் பெரிய அனுக்கிரகம் செய்ததாகும். நிச்சயமாக அப்படியே செய்வேன்' என்று சொல்லித் தனது மாம்ஸங்களை அரிந்து அரிந்து தராசில் வைத்து நிறுத்தான். அப்போது ரத்னாபரணங்களை அணிந்திருக்கும் அவனுடைய அந்தப்புரஸ்த்ரீகள் இதைக் கேள்விப்பட்டு மிகத்துன்ப

முற்று, 'ஆ! ஆ! ஆ! என்று கூவிக்கொண்டு வெளிப்பட்டனர். அந்தஸ்த்ரீகளும் மந்திரிகளும் வேலைக்காரர்களும் கதறுகிறசப்தத்தினால் மேகமுழக்கம்போலக் கம்பீரமான பெரியமுழக்கம் உண்டாயிற்று. அவ்வரசனுடைய ஸத்தியந்தினால் மோசமில்லாமலிருந்த ஆகாயமுழுதும் மேகங்களால் எங்குமம்மறைக்கப்பட்டது; பூமியும் நடுங்கிற்று. அவ்வரசன் விலாப்புறங்களிலிருந்தும் கைகளிலிருந்தும் துடைகளிலிருந்தும் மாமிசங்களையறுத்துக் கொஞ்சம்கொஞ்சமாகத் தராசை நிரப்பினன். ஆகிலும், அந்தப்புறாவின் நிறைக்குச் சரியாகவில்லை. அவ்வரசன் மாம்ஸம்போய் ரக்தம்பெருகி எலும்பாகநின்றபோது, தன்தேகத்தையே விடுவதற்குத் தானே அந்தத்தராசில் ஏறினன். அப்போது மூவுலகத்தாரும் இந்திரனைமுன்னிட்டுக்கொண்டு அவ்வரசனிடம் வந்தனர். அப்போது தேவர்கள் தேவதுந்துபிளென்னும் பேரிகைகளை அடித்தனர்; விருஷதர்ப்பனென்னும் அரசன்மேல் அமுதத்தைப் பொழிந்தனர்; தேவலோகத்தின்மலர்களை மிகவும் இனிமையாகப் பல முறைபெய்தனர். அந்தப் பிரபுவினிடத்தில் தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் பிரம்மாவினிடத்தில் ஆவிதுபோலவே நாற்புறங்களிலும் ஆடினர்; பாடினர். அந்தராஜரிஷி அந்தப் புண்ணியகர்மத்தினால் பொன்மாளிகைகள் நிரம்பினதும், பொன்னும்மணியும் இழைத்த தோரணங்களுடையதும், வைடூர்யக்கல்தூண்களையுடையதுமான விமானத்திலேறி அழிவில்லாத ஸ்வர்க்கத்திற்குச் சென்றனன். யுதிஷ்டிரா! நீயும் அவனைப்போலவே சரணுகதர்களுக்கு வேண்டிய வற்றையெல்லாம் செய்யக்கடவாய். பக்தியுள்ளவரையும் அன்புள்ளவரையும் அடித்தவரையும் காப்பாற்றி எல்லாப்பிராணிகளிடத்தும் தயைவைத்திருப்பவன், பரலோகத்தில் ஸுகமாகவிளங்குவான். பெரியோர்களின் ஒழுக்கத்தை அனுஷ்டிப்பதாகிய நல்லொழுக்கத்தையுடையவன் வஞ்சகமில்லாத தன்செய்கையினால் எதைத்தான்அடையமாட்டான்? பரிசுத்தமானமனமும் துணிவுமுள்ளவனும் பராக்ரமம தவறுதவனும் காந்தேசாதிபதியுமாகிய அந்தச்சிபியென்னும் ராஜரிஷி தன்செய்கையினால் மூவுலகங்களிலும் புகழ்பெற்றனன். பரதஸ்ரேஷ்டனே! மற்றவனும அவனைப்போலச் சரணுகதரக்ஷணம் செய்வனுகில் அந்தக்கதிக்கே செல்வன். ஓ! ராஜரிஷியே! உலகத்தில் விருஷதர்ப்பனுடைய இந்தச்சரித்திரத்தை நித்தியமாகச் சொல்லுகிறவரும் கேட்கிறவரும் ஆத்மசுத்தியையடைவார்" என்றார்.

அறுபத்தேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(அரசரின் முக்கியகடமை பிராம்மணரைப் பூஜிப்பதென்பது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! அரசனுக்கு எல்லாக்காரியங்களிலும் மிகப்பெருங்காரியம் யாது? எந்தக்காரியத்தைச்செய்யும் அரசன் இம்மை மறுமையாகிய இரண்டு உலகங்களையும் நன்றாக அனுபவிப்பான்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பாரதனே! ஸாகத்தைவிரும்புகிறஅரசன் பட்டாபிஷேகம் செய்யப்பட்டபிறகு செய்யவேண்டியவற்றுள் முக்கியமானவை பிராம்மணர்களைக் காப்பதும் பூஜிப்பதுமாம். பரதசிரேஷ்டனே! அரசர்க்கரசனாயிருப்பவன் அவ்வாறேதான் செய்யவேண்டும். வேதமோதினவர்களும் முதிர்ந்தவர்களுமான பிராம்மணர்களை எக்காலமும் பூஜிக்கவேண்டும். நகரத்திலும் தேசத்திலுமுள்ள கல்விமிகுந்த பிராம்மணர்களின் சொல்லையும் இனியவற்றையளிப்பதையும் நமஸ்காரம் செய்வதையும் எப்போதும் கொண்டாடவேண்டும். இதுதான் அரசன்செய்யவேண்டிய முக்கியமானகாரியம். எப்போதும் இதைக்கவனிக்கவேண்டும். தன்னையும் தன்புத்ரர்களையும் காப்பாற்றுவதுபோலவே இந்தப் பிராம்மணர்களைக் காப்பாற்றவேண்டும். அவர்களால் மிகப் பூஜிக்கப்படத்தக்கவரையும் தன்முகம் பூஜிக்கவேண்டும். பிராம்மணர்கள் ஸந்தோஷமாயிருந்தால் அந்தராஜ்யமெல்லாம் விளங்கும். அவர்களைத் தந்தைகளைப்போலப் பூஜிக்கவும் நமஸ்கரிக்கவும் வேண்டும். எல்லாப்பிராணிகளின் ஜீவனமும் [1] இந்திரனைப் பொறுத்திருப்பதுபோல உலகங்களின் ஆயிரிருத்தி பிராம்மணர்களைப் பொறுத்திருக்கிறது. தவபுத மகிமையுள்ள பிராம்மணர்கள் கோபித்தாராயின் கொடியவர்களைக் மந்திரங்களாலும் தந்திரங்களாலும் நினைத்தமாத்திரத்திலும் முழுதும் எரித்துவிடுவார்கள். அவர்கள் சக்திக்கு முடிவை நான் காணவில்லை. அவர்களால் வியாபிக்கப்படாத திசைகளையும் யான் பார்க்கவில்லை. அவர்கள் கோபித்துப் பார்க்கும்போது காட்டுத்தீயிலிருக்கும் ஜ்வாலைகள்போலிருப்பர். [2] அவர்கள் ஸாதுக்களைப் பூஜிப்பர்; துஷ்டர்களை இகழார். ஸாஹஸம்செய்பவர்களும் அவர்களுக்குப் பயப்படுவார். அவர்களின்

[1] மழை. [2] 'அவர்களுள் ஸாதுக்களைபூஜிக்கவேண்டும்; துஷ்டர்களையும் இகழலாகாது' என்றும் கொள்ளலாம்.

குணங்கள் மிகவும் அதிகமானவை. சிலர் புதர்மூடினகிணறுகள் போன்றவர். மற்றும்சிலர் மாசற்ற ஆகாயம்போன்றவர். சிலர் வன்மை செய்பவர். மற்றும்சிலர் பஞ்சுபோல மெல்லியவர். அவர்களில் மிக்க வஞ்சகரும் இருக்கின்றனர். சிலர் சிறந்ததவம் செய்பவராயுமிருக் கின்றனர். சிலர் பயிரிட்டுக்கொண்டும் பசுக்காத்துக்கொண்டும் இருக் கின்றனர். சிலர்பிக்ஷையெடுக்கின்றனர். சிலர் திருடராகவும் சிலர் பொய்யராகவும் இருக்கின்றனர். சிலர் கூத்தாடிகளும் நட்டுவருமா யிருக்கின்றனர். சிலர் வேந்தர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் எல்லாக்காரியங்களையும் செய்யும் திறமையுள்ளவர்களுமாயிருக்கின் னர். பரதஸ்ரேஷ்டனே ! பிராம்மணர்கள் பலவித நடக்கைகளிலும் பிர விருத்திப்பவர்தாம். பல தொழில்களிலும் பற்றுள்ளவர்களும் பல தொழில்களாலும் ஜீவிப்பவர்களுமாகிய அநேகப்ராம்மணர்கள் தர்மம் தெரிந்தவராயிருப்பதனால் அவர்களைப்பற்றி எப்போதும் சிலாகிக்க வேண்டும். அரசனே ! மகானுபாவர்களான இநேகப்பிராம்மணர்கள் முற் காலங்களிலும் பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் நாகர்களுக்கும் அரக்கர்களுக்கும் பூஜிப்பதற்குரியவராயிருந்தனர். பிராம்மணர்களைஜயிப்பதற்குத் தேவர்களாலும் பிதிருக்களாலும் கந்தர் வர்களாலும் ராக்ஷஸர்களாலும் அஸுரர்களாலும் பிசாசர்களாலும் இயலாது. தேவனல்லாதவனைத் தேவனாகவும் தேவனைத் தேவனல்லாத வனாகவும் செய்துவிடுவர். அவர்கள் எவனை அரசனாக்கவிரும்புகின்றன ரோ அவன் அரசனாகிவிடுவான். அவர்கள் எவனைப்பகைப்பரோ அவன் எல்லாவற்றையும் தோற்றுவிடுவான். அரசனே ! புத்தியில்லாமல் பிராம் மணர்களை நிந்திப்பவர்கள் அழிந்துவிடுவது நிச்சயம். உனக்கு உண்மை யாகச் சொல்லுகிறேன். ராஜனே ! கீர்த்தியும் அபகீர்த்தியுமே தலைமை யாக எடுத்துக்கொண்டு முறையே புகழவும்இகழவும் ஸாமர்த்தியமுள்ள பிராம்மணர்கள் தங்களைப்பகைப்பவர்மேல் எப்போதும் கோபிப்பார். ப்ராம்மணர்கள் எந்தமனிதனைப்புகழ்கின்றனரோ அவன் மிகச்சிறந்தவ னாவான். பிராம்மணர்களால் நிந்திக்கப்பட்டவன் எவனோ அவன் ஒரு கொடியில் கெட்டுப்போவான். சகர், யவனர், காம்போஜர் முதலான பல தேசத்து க்ஷத்திரியஜாதியார் பிராம்மணர்களைக்காணுமையினால் சூத்ரர் களாயினர். த்ரவிடர், கலிங்கர், புலிந்தர், உசிநரர், கோலிஸர்ப்பர், மாஹிஷகர் என்னும் பல க்ஷத்ரியஜாதியார் பிராம்மணர்களைக் காணு மலே சூத்ரராயினர். ஜயிப்பவரிற்சிறந்தவனே ! பிராம்மணர்களிடத் தில் தோற்பதே நன்மை. அவர்களை வெல்லுவது நன்மையன்று. இவ் வுலகமனைத்தையும் அழிப்பதும் ஒருபிரம்மஹத்தி செய்வதும் ஸரி

யாவதில்லை. பிரம்மஹத்தி பெரும்பாவமென்று மகரிஷிகள் சொல்லுகின்றனர். பிராம்மணர்களைப்பற்றின தூஷணையை. எவ்வகையிலும் கேட்கவுமாகாது; தலைகுனிந்து பேசாமல்உட்கார்ந்திருக்கவாவது வேண்டும்; எழுந்து செல்லவாவது வேண்டும். பிராம்மணர்களைப் பகைத்து ஸுகமாக ஜீவிக்கத் திறமையுள்ளவன் இவ்வுலகத்தில் பிறந்தவரிலும் பிறக்கப்போகிறவரிலும் யாருமில்லை. காற்றைக் கைப்பிடியால் பிடிக்கவும் சந்திரனைக் கையினால் எட்டவும் பூமியைத் தலையினால் தாங்கவும் பிராம்மணர்களை வெல்லவும் இப்புவியில் யார்க்கும் முடியாது.

அறுபத்தொன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பூமிதேவி பிராம்மணர்மஹிமையைக் கிருஷ்ணனுக்குச் சொல்லியது.)

எப்போதும் பிராப்மணர்களையே நன்றாகப் பூஜித்தல் வேண்டும். அவர்கள் சந்திரனைத் தங்களுக்கு அரசனாகப் பெற்றவர்கள்; இன்பத்தையும் துன்பத்தையும் கொடுக்கவல்லவர்கள். அரசர்கள் அன்னபானங்களையும் அலங்காரங்களையும் மற்றும் அவர்கள் விரும்புகிற எல்லாவற்றையும் அளிதத்துத் தந்தைகளைப்போலவே அவர்களை எப்போதும் நமஸ்கரிக்கவும் பூஜிக்கவும் காப்பாற்றவும் வேண்டும். அதனால், இந்திரனால் பிராணிகளுக்கு நன்மையுண்டாவதுபோலத் தேசத்திற்கு நன்மையுண்டாகும். நுண்ணறிவும் ஓதலினாலும் வேள்வியினாலுமுண்டாகும் மகிமையுடன்பொருந்தின பரிசுத்தனை பிராம்மணனும் பகைவர்களைத் துன்புறச்செய்யும் மகாரதனை அரசனும் தேசத்திலிருக்க விரும்பவேண்டும். ராஜனே! குலத்திற்சிறந்தவனும் தர்மந்தெரிந்தவனும் விரதம் தவறாதவனுமான பிராப்மணனை வீட்டில் புகுப்பிக்கவேண்டும். அதற்குமேலானது ஒன்றுமில்லை. பிராம்மணர்களுக்குக் கொடுக்கப்படும அன்னத்தைத் தேவர்கள் பெற்றுக்கொள்ளுகிறார்கள். பிராம்மணர்கள் எல்லாப்பிராணிகளுக்கும் தந்தைகள். அவர்களுக்கு மேற்பட்டது ஒன்றுமில்லை. சூரியன், சந்திரன், விஷ்ணு, சிவன், அக்நி, பிரம்மதேவர் ஆகிய யாவரும் பிராம்மணனுக்குள் பிரவேசித்து எப்போதும் அன்னத்தைப் புசிக்கின்றனர். பிராம்மணத்வேஷியான எந்தப்பாவியின் அன்னத்தைப் பிராம்மணர்கள் புசிப்பதில்லையோ அவனுடைய அன்னத்தைப் பித்ருக்களும் தேவர்களும் புஜிப்பதில்லை. அரசனே! பிராம்

மணர்கள் மனமகிழ்ந்தால் பித்ருக்களும் தேவர்களும் திருப்தியடை கின்றனரென்பதில் ஸந்தேகப்படவேண்டாம். அந்த அன்னம் யாருடைய தோ அவர்களும் இம்மையிலும் மகிழ்ந்திருக்கின்றனர்; இறந்தபின் னும் கெடுவதில்லை; சிறந்தகதியைப் பெறுகின்றனர். ஒருமனிதன் எந்த எந்த அன்னங்களினால் பிராம்மணர்களுக்குத் திருப்தியைச்செய்விக் கிறானே அவ்வவற்றினாலும் பித்ருக்களும் தேவர்களும் திருப்தியடை கின்றனர். எதனிடமிருந்து பிரஜைகள் உற்பத்தியாகின்றனவோ, எத னால் இவ்வுலகம் நிற்கிறதோ, முடிவில் எதைச்சேருகிறதோ அந்தக் காரணப்பொருளும் பிராம்மணனிலேதான் அறியப்படுகிறது. மனிதர் களிற்சிறந்த பிராம்மணன் ஸ்வர்க்கத்திற்கும் நரகத்திற்கு முள்ள வழி களையும் நடந்தது நடப்பது இவ்விரண்டையும் அறிகிறவன். மனிதர் களிற் சிறந்தவனை எந்தப்பிராம்மணன் தனது தர்மத்தையறிந்திருப் பவனே அவனை அனுஸரிப்பவர் தோல்வியடையார். அவர்கள் மறுமை யிலும்கெடார்; இம்மையிலும் தோல்வியடையார். மனத்தூய்மையுள்ள எந்தமகாத்மாக்கள் பிராம்மணன் வாக்கினிருந்துவந்த சொல்லை ஏற்றுக் கொள்ளுகின்றனரோ அவர்கள் தோல்வியடைவதில்லை. பராக்ரமத்தினு லும் வன்மையினாலும் பகைவரைபொறுத்தும் கூடாதிரியர்களுடைய பராக்ரமங்களும் தேகவலிமைகளும் பிராம்மணர்களிடத்தில் அடங்கு கின்றன. பரதஸ்ரேஷ்டனே! திருதராஷ்ட்ரகுலத்தவர்கள் தாலஜங்கரென்னும் அரசர்களையும், ஆங்கிரஸரிஷி பௌத்ரர்களையும், பரத்வாஜர் வைதஹவ்யர் ஜலர் என்னுமரசர்களையும் ஜயித்தனர். விசித்ரமான ஆயுதங்கள்பிடித்த அரசர்களையும் மான்தோல்கொடிபோட்ட இந்தப் பிராம்மணர்கள் வென்றனர். எனினும் [1] கலசங்களை ஸ்தாபித்துக் கரை சேர்க்கும் கருமத்தைச் செய்யத்தொடங்கவேண்டும். இவ்வுலகத்தில் கதையாகச்சொல்லப்படுவதும் வேதத்தினாலும் புராணத்தினாலும் அறி யப்படுவதுமாகிய சக்திகளெல்லாம் கட்டைகளுள் நெய்யிருப்பதுபோலப் பிராம்மணர்களிடம் மறைந்திருக்கிறது. பரதஸ்ரேஷ்டனே! இவ்விஷ யத்தில் கிருஷ்ணனுக்கும் பூமிதேவிக்கும் நடந்த ஸம்பாஷணையாகிய புராதனமான ஓர் இதிஹாஸமட்சொல்லுகின்றனர். அதைச் சொல்லு கிறேன்; கேள்.

கிருஷ்ணன் பூமிதேவியைபார்த்து, 'ஓ! பிறந்தவளே! எல் லாப்பிராணிகளுக்கும் தாயாகிய உன்னிடத்தில் ஒருஸந்தேகம் கேட்கி

[1] 'கும்பாந்' என்பதை, 'குந், பாந்' என்று இரண்டுபதங்களாகப் பகு த்து, 'பூமியைப் பிராம்மணனுக்குத்தானஞ்செய்து பிரகர்ஷித்துப் பரலோகத் திற்கு இதமான தர்மத்தை ஆரம்பிக்கவேண்டும்' என்பது பழையவுரை.

றேன். இல்வாழ்க்கையிலிருக்கும் மனிதன் எந்தச்செய்கையினல் தன் பாபத்தைப் போக்கிக்கொள்ளலாம்?' என்றுகேட்க, பூமிதேவி சொல்லலாளுள். பிராம்மணர்களைத்தான் பணியவேண்டும். அது தான் சிறந்தபுண்ணியம். பிராம்மணர்களைத்தொழுகிறவனுக்கு ராஜஸூய குணமனைத்தும் ஒழிந்துபோகிறது. ஐசுவரியமும் புகழும் புத்தியும் அதனலேதான் உண்டாகின்றன. மகாரதனும் பகைவரைத்துன் புறச்செய்கிறவனுமான அரசனையும் விரும்பவேண்டும். 'ஜாதியிற் சிறந்தவனும் தர்மத்தையறிந்தவனும் நியமமுள்ளவனும் பரிசுத்தனுமான பிராம்மணன்தான் பிறந்தவருக்கும் முந்தினவருக்குமும் அவருக்கும் முந்தினவருக்கும் எப்போதும் எல்லாச்செல்வங்களுக்கும் காரணமாயிருப்பவன்' என்று நாரதர் எனக்குச்சொல்லியிருக்கிறார். பிராம்மணர்கள் எவரைப் புகழ்கின்றனரோ அவனிதன் மேலாகிறன். பிராம்மணர்களால் நிந்திக்கப்பட்டமனிதன் உடனே தாழ்ந்துபோகிறன். பிராம்மணனிடம் செய்யப்பட்டஅபராதம் பெருங்கடலில் போடப்பட்ட ஈரமண்கட்டி எப்படிக்கரைகிறதோ அப்படி அபராதியை உருவில்லாமற் செய்துவிடும். சந்திரனிடத்தில் களங்கமும் கடலில் உப்புரீரும் உண்டாக்கப்பட்டிருப்பதைப்பாரும். தேவேந்திரனும்ஆயிரம்பெண்குறிகளினல் அடையாளம் செய்யப்பட்டான். அந்தஇந்திரன் பிராம்மணர்களுடைய பிரபாவத்தினலேதான் ஆயிரங்கண்ணனனன். சுருஷ்ணை! இது எப்படியிருக்கிறது? பாரும். மதுஸூதனரே! புகழையும் செல்வத்தையும் புண்ணியலோகங்களையும் விரும்புகிறமனிதன் பரிசுத்தமும் அடக்கமுமுள்ளவனுய்ப் பிராம்மணர்களின்சொல்லில் நிற்கவேண்டும்' என்றுள். கௌரவனே! கிருஷ்ணன் இவ்வாறு பூமிதேவி சொன்ன சொல்லைக்கேட்டபிறகு, 'நல்லது; நல்லது' என்று பூமிதேவியைக் கொண்டாடினர். தர்மராஜனே! இந்த உதாரணத்தைக் கேட்டபிறகு, நீயும் ஊக்கத்துடன் பிராம்மணசிரேஷ்டர்களை எப்போதும் பூஜிக்கக்கடவாய்; அதனல் நன்மையையடைவாய்.

எழுபதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பிராம்மணரின் மகிமை முதலியன.)

பிராம்மணனென்பவன் ஜன்மத்திலேயே பெரியமகிமையுள்ளவனவும் எல்லாப்பிராணிகளும் நமஸ்கரிக்கத்தக்கவனுகவும் சிறந்த

அன்னத்தை முதலில்புஜிக்கத்தக்க அதிதியாகவும் பிறக்கிறான். அப்பா! பிராம்மணர்கள் எல்லாருக்கும் அன்பர்கள்; நல்லமனமும் வாக்குமுள்ளவர்கள். பிராம்மணர்கள் கோபித்தால் எல்லாரையும் கொன்றுவிடுவார். அவர்கள் பூஜிக்கப்பெற்றால் மங்களமானசொற் களினல் ஆசீர்வதிப்பார். அப்பா! பிராம்மணர்கள் பூஜிக்கப்படாமற் போனல் கோபங்கொண்டு கொடுஞ்சொற்களினல் அவர்களைப்பகைக் கும் சுற்றமினவரையும் கொன்றுவிடுவார். பிரம்மதேவர் முதலில் பிராம்மணர்களைப்படைத்து அவர்களுக்கு இட்டகட்டளையாகிய சுலோகங்கள் பூர்வகாலந்தொடங்கிச் சொல்லப்பட்டு வருபவற்றைப் புராணந்தெரிந்தவர்கள் சொல்லுகின்றனர். அவற்றைச் சொல்லு கிறேன்.

(அவற்றின்பொருள்,) 'நீங்கள் மேற்கதிக்குப்போவதற்காக இவ்வுல கத்திற் செய்யவேண்டியகாரியம் வேறு ஒன்றுமில்லை. உங்களால் காப் பாற்றப்பட்ட ப்ராம்மண்யமே உங்களைக் காப்பாற்றும். அதனலேயே உங்களுக்குச் சிறந்தநன்மையுண்டாகும். உங்கள் கருமங்களை நீங்கள் செய்வதனலேயே உங்களுக்குப் பிராம்மணர்களுக்குரிய மகிமையுண்டா கும். எல்லாப்பிராணிகளுக்கும் உதாரணமாகவும் கட்டளையிடுகிறவர்க ளாகவும் இருப்பீர்கள். கற்றுணர்ந்தபிராம்மணன் சூத்திரனுடைய கர்மத்தைச்செய்யலாகாது. சூத்திரகர்மத்தைச் செய்பவனுக்குப் பிராம் மணமகிமை கெடும். வேதாத்யயனத்தினலேயே ஒளியையும் புத்தியை யும் சக்தியையும் எல்லாரையும்பயப்படித்தும் மேன்மையையும் அளவற் றமகிமையையும் அடைவீர்கள். ஆகவனீயமென்னும் அக்னியில் ஹோ மஞ்செய்து பெரியமகிமையையடைந்து எல்லாருக்குமுதலில் போஜ னத்திற்குரியவர்களாகவும் ஒருவரையும இம்சிக்காமையினல் ஏடைத்த பிரம்மதேஜலென்னும் லக்ஷ்மியினல் அனுக்கிரகம்பெற்றவர்களாகவும் மிகுந்த ஊக்கத்துடன் இந்திரியங்களையடக்கி வேதாத்யயனத்தை விடாதவர்களாகவுமிருந்தால் எல்லா அபீஷ்டங்களையும் அடைவீர்கள். மானிடலோகத்திலும் தெய்வலோகத்திலுமுள்ளவை யனைத்தும் உங் கள் தவத்தினலும் ஞானத்தினலும் அனுஷ்டானத்தினலும் அடையக் கூடியவைதாம். க்ஷத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் மற்றவர்களும் உங்களைவெகுமானிப்பதனல் பாபம்போய் இவ்வுலகத்தி லும்அவ்வுலகத்திலும் ஸந்தோஷத்தையடைகின்றனர். உங்களைப்பகைப் பவர்கள் உங்களால் காப்பாற்றப்படாமல் நீங்கு அடைவர். உங்கள் சக்தியினலேதான் உலகங்கள் தாங்கப்படுகின்றன. ஆதலால், மூன்று உலகங்களையும் காப்பாற்றக் கடவீர்கள்' என்பது.

குற்றமற்றவனே! இவ்வாறு பிரம்மாசொன்ன சுலோகங்களை கான் உனக்குச்சொன்னேன். சிறந்தஞானமுள்ள பிரம்மாவினால் பிராம் மணர்களின்மேல் அன்புகூர்ந்து இவை சொல்லப்பட்டவையல்லவா? தவமுள்ள பிராம்மணன்வன்மை அரசனைவிட அதிகமென்று நினைக் கிறேன். பிராம்மணர் அண்டக்கூடாதகொடியவர்; தவத்தினால் உடனே எதையும்செய்பவர். இவர்களில் ஸிம்மங்களைப் போலவும், புலிகளைப் போலவும், காட்டுப்பன்றிகளைப் போலவும், மான்களைப்போலவும், யானை களைப்போலவும் வன்மையுள்ளவர்களாயிருக்கின்றனர் சிலர். சிலர் பாம்பு கள்போலவும் முதலைகள்போலவும் பிடிப்பர். சிலர் சொல்லினால் கொல் வர். சிலர் கண்ணினால் கொல்வர். ஸர்ப்பம்போன்றவருமிருக்கின்றனர். மந்தமானவருமிருக்கின்றனர். யுதிஷ்டிர! இவ்வுலகத்தில் பிராம்மணர் களின் நடக்கைகள் பலவகை. மேகலர், த்ராவிடர், லாடர், பௌண்ட்ரர், காம்வசிரர், சௌண்டிகர், தரதர், தார்வர், சோரர், சபரர், பர்ப்பரர், கிராதர், யவனர் முதலான க்ஷத்ரிய ஜாதியர்களெல்லாரும் பிராம்மணர் களைக்காணுமல் சூத்ரராயினர். பிராம்மணர்களின் நிக்ரகத்தினால்தான் அஸுரர்கள் கடல்நீரில் கிடக்கின்றனர். பிராம்மணர்களின் அனுக்கிர கத்தினால் தேவர்கள் ஸ்வர்க்கத்தில் வஸிக்கின்றனர். ஆகாயத்தைத் தொடமுடியாது. இமயமலையை அசைக்கமுடியாது. கங்கையை அணை யினால் தடுக்கமுடியாது. இவ்வுலகத்தில் பிராம்மணர்களை வெல்லமுடி யாது. பிராம்மணர்களைப் பகைத்துக்கொண்டு பூமியை ஆளமுடியாது. பிராம்மணர்கள் மகாத்மாக்கள்; தேவர்க்குந்தேவர்கள்; கடல்சூழ்ந்த இப்பூமியை நீ ஆளவிரும்பினால் தானத்தினாலும் பணிவிடையினாலும் பிராம்மணர்களை எப்போதும் ஆராதிக்கக்கடவாய். குற்றமற்றவனே! தானம் வாங்குவதனால் பிராம்மணர்களின் உக்ரம் தணிகிறது. ராஜ னே! தானம் வாங்கக்கருதாதவர்களையும் நீ காப்பாற்ற வேண்டும்.

எழுபத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(சம்பராஸுரன் பிராம்மணமஹிமையை இந்திரனுக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரா! இந்தவிஷயத்தில் இந்திரனுக்கும் சம்பராஸுரனுக் கும் முற்காலத்தில்நடந்த ஸம்பாஷணையாகிய ஓர் இதிஹாஸத்தைச் சொல்லுகின்றனர். அதைக்கேள். இந்திரன் மாறுஉருவமாக ஜடை களைத்தரித்து மிக்கஉக்ரமான பிராம்மண வடிவத்தையெடுத்துக்

கொண்டு சம்பராஸுரனேநோக்கி, 'ஓ! சம்பரனே! நீ எவ்விதகடக்கை யினால் உன் ஜாதியாருக்கெல்லாம் மேலாயிருக்கின்றாய்? உன்னை மிகச்சிறந்தவனென்று அவர்கள் நினைப்பது எதனால்? அதனை எனக்கு உண்மையாகச் சொல்' என்று கேட்க, சம்பரன் சொல்லலானான்.

'பிராம்மணர்களின்மேல் நான் ஒருபோதும் பொறாமைப்படுவதில்லை பிராம்மணஜாதியைத்தான் நான் மதிப்பது. சாஸ்திரப்பிரஸங்கம்செய்யும் பிராமணர்களுக்கு மனம்மகிழும்படி வெகுமதி செய்துவருகிறேன். அவர்கள் சொல்லுக்குக்கட்டுப்படாதகை அலக்ஷ்யம செய்வதில்லை. ஒருபோதும் அவர்களுக்குப் பிழைசெய்யேன். அவர்களைப் பூஜித்துக்கேட்பேன். ஞானமுள்ளவர்களுடைய பாதங்களைப் பிடித்துக்கொள்வேன். அவர்கள் என்னிடத்தில் நம்பிக்கையாக எல்லாவற்றையும் சொல்லுவர்; எப்போதும் என்னை அடக்குவர். அவர்கள் தங்களைப்பற்றி ஜாக்ரதைப்படாதபோதும் நான் அவர்கள்மேல் ஜாக்ரதையாயிருப்பேன். அவர்கள் தூங்குபோதெல்லாம் நான் விழித்திருப்பேன். அவர்கள் சாஸ்திரமார்க்கத்தில் ஊக்கமுள்ளவனும் பிராமணர்களிடத்தில் அன்புள்ளவனும் பொறுமைப்படாதவனுமாகிய என்னிடத்தில் தேனீக்கள் தேனடையில் தேனைப்பொழிவதுபோல உபதேசத்தைப் பொழிவர். அவர்கள் ஸந்தோஷமடைந்து எதைச்சொன்னாலும் அதை நான் வஞ்சகமின்றி எடுத்துக்கொள்வேன். அவர்கள் எனக்குச்சொல்லும உபதேசத்தை எப்போதும் அனுகூலமென்றே நினைக்கிறேன். அவர்கள வாக்குநுனியினால் விடப்பட்ட சிறந்த ரஸங்களையுண்டு நான் க்ஷத்திரியருக்குச் சந்திரனிருப்பதுபோல என் ஜாதியாருக்கு மேலாக இருக்கிறேன். பிராமணன் முகத்தினின்று சாஸ்திரதத்தைக்கேட்டு நடப்பதுதான் பூலோகத்திலுள்ள அமிருதம். இதுதான் எலலாவற்றிலும் சிறந்தகண். என்பிதா முன்னர் தேவாஸுரயுத்தத்தைக்கண்டபோது பிராம்மணனுக்கிரகம் தான் காரணமென்று தெரிந்துகொண்டு மனதில் ஆச்சரியத்தையும் ஸந்தோஷத்தையும் அடைந்தார். மகாத்மாக்களான பிராம்மணர்களின் மகிமையைக்கண்டு, 'இவர்கள் எபபடி ஸித்திபெற்றனர்?' என்று என்பிதா சந்திரனைக்கேட்டார். அதற்குச் சந்திரன், 'பிராம்மணர்களனைவரும் தவத்தினால் சிறப்புற்றிருக்கின்றனர். அவர்கள் எப்போதும் சொல்வன்மையுள்ளவர்கள். அரசர்களுக்குக் கையில்பராக்கிரமம்; பிராம்மணர்களுக்குச சொல்லே அஸ்த்ரம. பிராமணன் ஊரை விட்டுப்போய்க் கஷ்டப்பட்டு வளித்துக்கொண்டு கோபத்தைவிட்டு

ஒழிவோடு இந்திரியங்களையடக்கி எல்லாவற்றையும் ஸமமாகப் பார்த்துக்கொண்டு ஒதவேண்டும். (ஒருவன்) தன் தக்ஷிணையின் வீட்டில் மேன்மையாயிருந்து எல்லாவேதங்களையும்ஓதி நிரம்பினஞானமுள்ளவனாயிருந்தாலும் அவனை ஸாமான்யமென்றே நினைக்கின்றனர். யுத்தம்செய்யாத அரசன், வீட்டைவிட்டுப்போகாதபிராம்மணன் இவ்விருவரையும் எலிகளைப் பாம்புதின்பதுபோலப் பூமி [1]தின்கிறது. அல்பபுத்தியுள்ளமனிதனுக்குத் தரபிமானம் கிரப்மைக் கெடுத்துவிடுகிறது. (விவாகமாகாத) கன்னிகை கர்ப்பமாவதனால் கெட்டுப்போகிறாள். பிராம்மணன் வீட்டிலேயேயிருப்பதனால் கெடுகிறான். கல்விகளைக் கற்று உலகத்தையறிந்து தவமும் அடக்கமுமுள்ள பிராம்மணர்களை இரண்டுலோகங்களிலும் ஸுகத்தையநுபவிக்கிறவர்கள் எக்காலமும் பூஜிக்கவும் நமஸ்கரிக்கவும் வேண்டும்' என்றுசொன்னான். அழகானரூபமுள்ள சந்திரனிடம் இதைக்கேட்டபிறகு, 'என்பிதாவானவர் சிறந்ததவமுள்ள பிராம்மணர்களை நான் பூஜிப்பதுபோலவே பூஜித்தார்' என்றான். அஸுரராஜாவான சம்பரனுடைய முகத்தினின்றுவந்த இந்தச் சொல்லைக்கேட்டபிறகு இந்திரன் பிராம்மணர்களைப் பூஜித்து மகேந்திரனென்னும் பதம்பெற்றான்" என்று சொல்லினர்.

எழுபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(தானம் பெறுவதற்குரியவர் யாரென்பதுமுதலியன.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! புதியனகவருகிறவன் தானத்திற்குரியவனா? நெடுநாளாகக் கூடஇருப்பவனா? அல்லது, தூரத்திலிருந்துவந்தவனா? இவர்களில் பாத்ரன் யார்?" என்றுகேட்டார்.

பீஷ்மர், "சிலரிடத்தில், 'நம்மை எவன் எதைக்கேட்டாலும் அதையெல்லாம் நமதுவேலைக்காரரைப் பிடியாமல் கொடுப்போம்' என்னும் சிறந்தவிரதம் ரகஸ்யமாகவும் முக்கியமாகவும் இருக்கிறதென்று நாம் கேட்டிருக்கிறோம். வேலைக்காரர்களைப் பிடிப்பதனால் தம்மனத்தைக் கெடுத்துக்கொள்ளுகிறார்களல்லவோ? அந்தத் தெரிந்தவர்கள் புதியவனாயிருந்தாலும் கூடவேவஸித்தவனாயிருந்தாலும் தூரத்திலிருந்து வந்தவனாயிருந்தாலும் யாசிப்பவனைப் பாத்ரனென்றே நினைக்கின்றனர்" என்று சொன்னார். யுதிஷ்டிரர், "எவனுக்குக்கொடுப்பது பின்

[1] புகழில்லாமல் போகிறது.

னிட்டுத் துன்பப்படுத்தாதோ அவனைப் பிராணிகளுக்குத் தீங்குசெய் யாமையாலும் தர்மத்தைக் செடாமையினாலும் பாத்திரனென்று நாம் ஸரியாக அறியவேண்டும். (அப்படிப்பட்டவன்யார்?)" என்று வினவி னர். பீஷ்மர், "யாகம்செய்விக்கும் ரித்விக்குகள் புரோகிதர்கள் ஆசாரியர்கள் சிஷ்யர்கள் சினேகிதர்கள் பந்துக்களனைவரும், கல்வி யுள்ளவர்களும் பொறுமையில்லாதவர்களுமாயிருந்தால் பூஜிக்கவும் பெருமைப்படுத்தவும் உரியவர்கள். இதற்கு மாறுகநடந்தால் இவர்கள் யாரும் மரியாதைக்குரியவரல்லர். ஆதலால், ஜாக்ரதையோடு மனிதர் களின் குணங்களைப் பரீக்ஷைசெய்யவேண்டும். பாரதனே! கோபி யாமை, பொய்யாமை, கொல்லாமை, அடங்கியிருத்தல், நேர்மை, கேடுநினையாமை, அபிமானமில்லாமை, அகாரியங்களில் நாணம், கஷ் டத்தைப்பொறுப்பது, ஐம்புலன்களின் அடக்கம், மன அடக்கம்ஆகிய இவை யாரிடத்தில் இயற்கையில் அமைந்தவைகளாகக் காணப்பட்டும் கெட்டசெய்கைகள் காணப்படாமலு மிருக்கின்றனவோ அவன்தான் வெகுமானத்திற்குரிய பாத்திரனாகிறன். இந்தக்குணங்களுடையவன் நெடுநாள் கூடவஸித்தவனையிருந்தாலும் தூரத்திலிருந்துவந்தவனையிரு ந்தாலும் பழகினவனையிருந்தாலும் பழகாதவனையிருந்தாலும் வெகு மானிப்பதற்குரிய பாத்ரனாகிறன். வேதங்களில் நம்பிக்கையில்லாமை யும் தர்மசாஸ்திரங்களை மீறிநடப்பதும் ஒன்றிலும் கட்டுப்படாமையும் ஆகியஇவை ஆத்மாவைக்கெடுப்பவை. எந்தப்பிராம்மணன் யுக்தி களைக்கொண்டாராய்வதும் பயனற்றதுமான தர்க்கவித்தையில் அபிமா னம்வைத்துத் தன்னையே பண்டிதனாக நினைத்துக்கொண்டு யுக்திவாதங் களைச்சொல்லி வேதங்களைநிந்தித்தும் பெரியோர்களிடத்தில் யுக்தி வாதங்களைப்பேசி அவர்களை யுக்திவாதங்களினால் ஜயித்தும் பிராம்ம ணர்களைத்தூஷித்தும் எப்போதும் அதிகமாக வாதம்பேசிக்கொண் டும் எல்லாவற்றிலும் ஸம்சயப்பட்டுக்கொண்டும் கடுஞ்சொற்சொல்லிக் கொண்டும் இருப்பவனே அப்படிப்பட்டவனை ஒன்றுந்தெரியாத சிறுவ னென்று நினைக்கவேண்டும். அப்பா! அவனை நாயாகவன்றே பெரி யோர்கள் எண்ணுகின்றனர். நாயானது குலைப்பதற்காகவும் கடிப்ப தற்காகவும் இருப்பதுபோல அற்பக்கல்வியும் குதர்க்கமுமுள்ள இழி வான பண்டிதர்கள் பேசுவதற்காகவும் எல்லாச் சாஸ்திரங்களையுமழிப் பதற்காகவும் படைக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். வேதம் தர்மசாஸ்திரம் இதிஹாஸம் புராணம் [1]ஆரண்யகம் இவற்றையறிந்த மிகத்தெரிந்தவர்களை அணுஸரிக்கவேண்டும். ஸாரந்தெரிந்தவர்களை

[1] ஆதிபர்வம் 28-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

பண்டிதர்கள். உலகநடையையும் தர்மத்தையும் தன் ஜ்க்மாவுக்கு நன்மையையும் அறியவேண்டும். இப்படி நடக்கின்றமனிதன் அநேக வருஷகாலங்கள் ஒங்குவான். தேவர்கள் ரிஷிகள் பித்ருக்கள் பிராம்மணர்கள் அதிதிகள் இவர்களின் [1]கடன்கள் ஐந்தையும் மிகப்பரிசுத்தமான கர்மத்தினால் முறையே தீர்த்துக் கர்மங்களைச்செய்யும் இல்லறத்தோன் புண்ணியங்கெடாமலிருப்பான்" என்றார்.

எழுபத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பஞ்சசூடை பெண்களின் இயற்கையை நாரதருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பரதசிரேஷ்டரே! பெண்களின் இயற்கையைக் கேட்க விரும்புகின்றேன். பெண்கள்தாமே பாவங்களுக்குவேர்? அவர்களின்மனமும் இலேசென்று சொல்லப்படுகிறதன்றே?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இதவிஷயத்தில் நாரதருக்குப் பஞ்சசூடை என்னும் வேசியுடன்நடந்த ஸம்பாஷணையாகிய ஒருபழைய இதிஹாஸம் கூறுகின்றனர். முற்காலத்தில் நாரதரென்னுந்தேவரிஷி லோகங்களெல்லாவற்றிலும் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும்போது பிரம்மலோகத்திலிருக்கும் பஞ்சசூடையென்னும் சிறந்த அப்ஸரஸைக் கண்டார். எல்லா அங்கங்களும் அழகாயுள்ள அந்த அப்ஸரஸைக்கண்ட அம்முனிவர், 'அழகிய இடையுள்ளவளே! என்மனத்தில் ஒருஸந்தேகமிருக்கிறது. அதைப்பற்றி நீ எனக்குச் சொல்லக்கடவாய்' என்றுகேட்டார். இவ்வாறு கேட்கப்பட்ட அந்தப்பஞ்சசூடை நாரதரென்னும் பிராம்மணரைப் பார்த்து, 'நீர் என்னைத் தெரிந்தவராக நினைக்கிறீர். எனக்குத் தெரிந்தவிஷயமாயிருந்தால் நான் சொல்வேன்' என்று மறுமொழி கூறினள். அதற்கு, நாரதர், 'சிறந்தவளே! தெரியாதவிஷயத்தைப் பற்றி உன்னை எவ்வகையிலும் கேட்கமாட்டேன், அழகான முகமுள்ளவளே! பெண்களின் இயற்கையைப்பற்றி உன்னிடம் கேட்க விரும்புகிறேன்' என்றுசொன்னார். அந்தத் தேவரிஷியின் இந்தச் சொல்லைக்கேட்டபிறகு, அந்தச்சிறந்த அப்ஸரஸானவள், 'ஓ! தேவ

[1] யாகத்தினால் தேவர்க்கும், ஓதலினால் ரிஷிகளென்னப்படும் வேதமுனிவர்களுக்கும், ஸந்ததியினால் பித்ருக்களுக்கும், தானதர்மங்களினால் பிராம்மணர்களுக்கும், போஜனத்தினால் அதிதிகளுக்கும் கடன்தீர்க்கவேண்டுமென்பது.

ரிஷியே! நான் பெண்ணுயிருத்தலால் பெண்களைத் தூஷிக்கமாட்டேன். பெண்கள் எவர்களென்பதும் எப்படிப்பட்ட இயற்கையுள்ளவர்களென் பதும் உமக்குத் தெரிந்தவைதாம். இவ்வகையான காரியத்தில் என்னை நீர் ஏவத்தகாது' என்று மறுமொழி சொன்னாள். அந்தத் தேவரிஷி யானவர் அவளைப்பார்த்து, 'அழகியஇடையுள்ளவளே! உண்மையைச் சொல். பொய்சொல்வதில் பாவமுண்டாகும். உண்மைசொல்லுவதில் தோஷமில்லையே?' என்றுகூறினர். அழகானகைகளுள்ள அந்த அப் ஸரஸ் இவ்வாறு நாரதர் கேட்டமையால் சொல்வதாக நிச்சயம்செய்து கொண்டாள். பெண்களிடம் எக்காலமுமுள்ள உண்மையான குற்றங் களைச் சொல்லத்தொடங்கினாள்.

'நாரதரே! நல்லகுலத்திற்பிறந்தவர்களும் [1] அழகுள்ளவர்களும் சிறந்தகணவனுள்ளவர்களுமாயிருந்தும் ஸ்திரீகள் கட்டுபாடுகளில் நிற்பதில்லை. அது ஸ்திரீகளிடத்திலுள்ள குற்றம். ஸ்திரீகளைப்பார்க் கிலும் மிகப்பாவமானபொருள் பிறிதொன்றுமில்லை. ஸ்திரீகள்தாமே பாவங்களுக்கு வேர். அது உமக்குந்தெரியுமே. பெண்கள் விருப் பம்வந்தபோது, ஐசுவரியமும் அழகுமுள்ளவர்களும் தங்களுக்குட் பட்டிருப்பவர்களுமாகக் கணவர்களைத் தெரிந்துகொள்ளும்படி. பொ றுத்துப் பரிசோதிக்கத் திறமையற்றவர். பிரபுவே! மிக்கபாவிகளான புருஷர்களையும் நாங்கள் வெட்கத்தைவிட்டு அடைகிறோம். பெண் களாகிய எங்களிடத்திலுள்ள பெரிய அதமம் இது. எவன் தம்மை வேண்டி, கிட்டப்பழகி, சிறிதுஉபசாரமும் செய்கிறானே அவனையே பெண்கள் விரும்புகின்றனர். புருஷர்கள் வேண்டாமையினாலும் சுற்றி யிருக்கும் ஜனங்களிடம்பயத்தினாலும் பெண்கள், கணவர்களுக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் கட்டிலகப்படாத வர்கள். இவர்கள் சேரக்கூடாதவன் எவனுமில்லை. இவர்களுக்குப் புருஷன் பிராயத்தைப்பற்றியும் கவனமில்லை. அழகில்லாதவனையும் அழகுள்ளவனையும் ஆண்பிள்ளையென்றே அனுபவிப்பார். பரலோக பயத்தினாலாவது அன்பினாலாவது பொருளுக்காகவாவது சுற்றத்தா ருக்காகவாவது குலத்திற்காகவாவது பெண்கள் கணவர்களிடம் கட் டுப்பட்டுநிற்பதில்லை. இளப்பெண்களும் இளமைப் பருவத்திலிருந்து கொண்டு அழகான ஆபரணங்களோடும் ஆடைகளோடுமிருக்கும் ஸ்வ தந்திரமாயுள்ள வேசிப்பெண்களைப்போலிருக்க ஆசைப்படுகின்றனர். கணவர்களால் நேசிக்கப்பட்டும் அடிக்கடி கௌரவிக்கப்பெற்றும் காப்

[1] அழகுள்ளவர்கள் குணமுள்ளவர்களாயிருப்பார்களென்பது கொள்கை.

பாற்றப்பட்டுமிருக்கிற பெண்களும் [1] கூனர், குருடர், அசடர், குள்ளர் இவர்களோடும் சேர்ந்துவிடுகின்றனர். தேவரிஷியே! மஹரிஷியே! இவ்வுலகத்தில் ஸ்திரீகள் சேர்த்தகாதவன் முடவர்களிலும் மற்ற எந்த இழிவான மனிதர்களிலும் எவனுமில்லை. பிராம்மணரே! புருஷர்களை அடைவது எவ்வகையிலும் சரிப்படாமற்போகும்போது பெண்களே ஒருவரிடம் ஒருவர் பிரவிருத்திக்கிறார்கள்; கணவர்களிடத்தில் கட்டுப்பட்டு நிற்பதில்லை. 'பெரும்பாலும் பெண்கள் கெட்டகடையுடையவர்கள்; பாவத்தில் மனமுள்ளவர்கள்; உண்மையில்லாதவர்கள்; வஞ்சகமுள்ளவர்கள்; சிறந்த ஞானிகளைப் போன்றவர்கள்' என்றறியலாம். புருஷர்கள் கிடையாமையாலும் சேர்ந்த ஜனங்களிடத்தில் அச்சத்தினாலும் அடிக்கும் சிறைக்கும் பயந்தும் பெண்கள் தங்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் நிலையற்ற ஸ்வபாவமுள்ளவர்கள். அவர்களை ஸந்தோஷப்படுத்துவது கடினம். இவ்வுலகத்தில் மிகத் தெரிந்தபுருஷனும் அவர்கள் எந்த எண்ணத்தைத் தடுத்திருக்கிறார்களோ அந்த எண்ணத்தைத் தெரிந்துகொள்வது கடினம். அக்நி விறகுகளினால் திருப்தியடைவதில்லை; கடல் நதிகளினால் நிரம்புவதில்லை; யமன் ஸர்வப்ராணிகளாலும் நிரம்புவதில்லை; பெண்களும் புருஷர்களால் நிரம்புவதில்லை. தேவரிஷியே! இதுகிடக்க, மற்றொரு ரகஸ்யமும் எல்லா ஸ்திரீகளுக்குமுள்ளது. வேறுபுருஷனைக் கண்டவுடன் பெண்களின் [2] மனம் வேறுபடுகிறது. வேண்டினவற்றையெல்லாம் கொடுப்பவனும் கௌரவமாகவும் நயமாகவும் நடத்துகிறவனும் காப்பாற்றுகிறவனுமான கணவனையும் கெட்டபெண்கள் நினைப்பதில்லை. புணர்ச்சியினாலுண்டான ஸுகத்தை விரும்புவதுபோல மிக்க விருப்பமான பொருள் நிரம்பியிருப்பதையும் அலங்காரங்களையும் பொருட்குவியலையும் மதிப்பதில்லை. எல்லாரையுமழிப்பவனும் எல்லாவற்றையும் முடிப்பவனுமாகிய யமன் பாதாளத்திலிருக்கும் வடவாமுகாக்நி கத்திருமுனை ஸர்ப்ப விஷம் அக்நி இவையெல்லாம் ஒருதட்டு; பெண்கள் ஒருதட்டு. நாரதரே! பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்து மகாபூதங்களும் உலகங்களும் ஆண்பெண்களும் எதிலிருந்து பிரம்மாவினால் படைக்கப்பட்டனரோ அந்த மூலகாரணத்திலிருந்தே பெண்களின் குற்றங்களும் படைக்கப்பட்டிருக்கின்றன' என்று சொன்னாள்" என்றார்.

---

[1] இவர்கள் அந்தப்புரங்களில் போதுபோக்காயிருப்பவர்கள்.

[2] மூலத்தில் வேறுவிதமாயிருக்கிறது.

எழுபத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பெண்களின் கேட்டஇயற்கை முதலியன.)

யுதிஷ்டிரர், "உலகத்திலுள்ள இந்தமனிதர்கள் முன்வினையினால் உண்டான மயக்கம் மேற்கொண்டவர்களாய்ப் பெண்களிடத்தில் எப்போதும் பற்றுள்ளவர்களாயிருக்கின்றனர்; பெண்களும் புருஷர்களிடத்திலேயே பற்றுள்ளவர்களாயிருக்கிறார்களென்பது உலகத்திற் கெல்லாம் பிரத்தியக்ஷமாகத் தெரிந்தவிஷயம். இவ்விஷயத்தில் பெரிய ஸந்தேகம் என்மனத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறது. கௌரவரே! புருஷர்கள் இந்த ஸ்த்ரீகளிடத்தில் பற்றுவைப்பது எப்படி? பெண்கள் புருஷர்களிடத்தில் அன்புள்ளவர்களாயுமிருக்கின்றனர்; இல்லாதவர்களாயுமிருக்கின்றனர். புருஷசிரேஷ்டரே! இவ்வகையான அந்தப் பெண்களைப் புருஷன் ரக்ஷிப்பது எப்படிமுடியுமென்பதை எனக்கு உரைப்பீராக" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்த ஸ்த்ரீகள் தங்கள் மாயைகளினால் புருஷர்களை ஏமாற்றுகின்றனர். அவர்கள்கைக்குள் அகப்பட்ட ஆண்பிள்ளை ஒருவனும் விடுபடுவதில்லை. பசுக்கள் புதியபுல்லைமேய்வதுபோல அவர்கள் புதிய புதியமனிதர்களைப் பிடிக்கின்றனர். சம்பரன், நமுசி, பலி, லவணன் இவர்களுக்குத் தெரிந்த மாயைகளனைத்தையும் பெண்கள் அறிந்திருக்கின்றனர். அவர்கள் நகைப்பவனோடு நகைப்பர்; அழுபவனோடு அழுவர்; வேண்டாதவனையும் காலம்நேரும்போது சொற்களினால் வசப்படுத்துவர். ஒருவன் ஆயிரம் நாவுள்ளவனாகவும் ஒருநூற்றாண்டு ஜீவிப்பவனாகவும் வேறுகாரியமில்லாதவனாகவுமிருந்தாலும் ஸ்த்ரீகளின்குற்றங்களை முற்றும்சொல்லமுடியாமலே மரணமடைவான். சுக்ரருக்குத் தெரிந்தநீதிசாஸ்திரமும் பிருஹஸ்பதிக்குத்தெரிந்த நீதிசாஸ்திரமும் பெண்கள் புத்திக்குமேற்படா. அவர்களைப் புருஷர்கள் ரக்ஷிப்பதெப்படி? வீரனே! அவர்கள் பொய்யை மெய்யென்பர்; மெய்யைப் பொய்யென்பர். இப்படி சாதிப்பவர்களை இந்தப்புருஷர்கள் அடக்குவது எப்படி? அநேகம் குற்றங்களுக்கிடமும் சுத்தமற்றதுமாகிய பெண்களின் தேகத்தில் புருஷர்கள் பற்றுவைத்திருப்பது ஆச்சரியம். பகைவர்களைக்கொல்லுகிறவனே! பெண்களின் புத்தியிலிருக்கும் விஷயங்களைத்தேடியெடுத்துத்தான் பிருஹஸ்பதிமுதலான பெரியோர்கள் ராஜநீதிசாஸ்திரங்களைச் செய்திருக்கவேண்டுமென்று

நினைக்கிறேன். ராஜனே! பெண்கள் புருஷர்களினால் கௌரவிக்கப் பட்டபோதிலும் அந்தப்புருஷர்களிடம் மனத்தை வேறுபடித்துகின்றனர்; நிராகரிக்கப்பட்டபோதிலும் அப்படியேதான் மனத்தை வேறு படித்துகின்றனர்" என்றார். யுதிஷ்டிரர், "சிறந்த கைகளையுடைய வரே! இந்த (ஸ்த்ரீ) ஜனங்கள் தர்மிஷ்டர்களென்று நாம் கேட்டிருக் கிறோம். வெகுமதிக்கப்பட்டாலும் அவமதிக்கப்பட்டாலும் மனம் வேறுபட்டே இருப்பவர்களை எவன்காப்பாற்றமுடியுமென்பதில் எனக் குப் பெரியஸந்தேகம். பெரும்பாக்கியமுள்ளவரே! கௌரவர்களின் வம்சத்தை விருத்திசெய்பவரே! கௌரவசிரேஷ்டரே! பெண்களைக் காப்பது எப்போதாவது செய்யமுடியுமானாலும் இதற்குமுன் யாராவி லுமசெய்திருந்தாலும் அதை எனக்கு உரைக்கக்கடவீர்" என்று கேட்டனர்.

எழுபத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(பெண்களைக்காப்பதுகுறித்தமேன்மைபற்றி உதாரணமான குருபத்நீயைக்குறித்த விபுலர்கதை.)

பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "சிறந்தகைகளையுடையவனே! கௌரவராஜனே! பெண்களைப்பற்றி நீ சொல்வது ஸரிதான். இதில் பிழையொன்றுமில்லை. இந்தவிஷயத்தில் முன்னர் விபுலர் என்னும் மகாத்மா ஸ்த்ரீரக்ஷணம்செய்ததாகிய ஒருபழைய இதிஹாஸத்தை உனக்குச்சொல்வேன். அப்பா! பரதசிரேஷ்டனேராஜனே! பிரம்ம தேவர் பெண்களை எப்படிப்படைத்தாரென்பதையும், எதற்காகப்படைத் தாரென்பதையும் உனக்குச் சொல்வேன். புத்ரனே! பெண்களைவிடக் கொடியபாவமானது வேறுஒன்றுமில்லை. ராஜனே! பெண்களே எரி யுந் தீ, அவர்கள் மாயனுடையமாயைகள்; கத்திமுனை, விஷம், ஸர்ப்பம், நமன் இவையெல்லாம் ஒருகட்டியும் பெண்கள் ஒருகட்டியுமிருப் பவர். சிறந்தகைகளையுடையவனே! இந்தஜனங்களெல்லாரும் தர்மிஷ் டர்களென்று நாமும் கேட்டிருக்கிறோம். அவர்கள் தாங்களே தேவத் தன்மையையடைந்தனர். அதனால் தேவர்களுக்குப் பயமுண்டாயிற்று. பகைவரையடக்குகிறவனே! அந்தத்தேவர்கள் உடனே பிரம்மதேவ ரிடம்சென்று தங்கள் கருத்தைத்தெரிவித்துப் பேசாமல் தலைகுனிந்து நின்றனர். பிரபுவான அந்தப்பிரம்மதேவர் அந்தத்தேவர்களின்

கருத்தையறிந்து மனிதர்களை மயக்குவதற்காகப் பேய்கள்போன்ற பெண்களைப் படைத்தார். குந்திபுத்திரனே! சிருஷ்டியின் ஆரம்பத்தில் இவ்வுலகத்திலுள்ள பெண்கள் கற்புள்ளவர்களாயிருந்தனர். பிரம்ம தேவர் படைத்தபின்தான் கற்பில்லாத பிராணிகள் உண்டாயின. அந்தப் பிரம்மதேவர் அந்தஸ்த்ரீகளுக்கு வேண்டின அளவு காமஸுகங்களைக் கொடுத்தார். சிற்றின்பத்தில் ஆசைப்பட்ட அந்தப் பெண்கள் புருஷர்களை எக்காலமும் பீடித்தனர். தேவரிஷ்டரான பிரம்மதேவர் காமத்துக்குத்தூண்போலக் கோபத்தைப் படைத்தார். எல்லாஜனங்களும் காமக்குரோதங்களுக்குட்பட்டவர்களாகி ஸ்வர்க்கம் செல்லத்தடைப்பட்டனர். பிராம்மணர்களுக்கும் குருக்களுக்கும் மஹாகுருக்களுக்கும் அரசர்முதலானோர்களுக்கும் கூஷணிகமான ஸ்த்ரீ ஸங்கமத்தை விரும்புவதனையுண்டாகும் தோஷம் இடைவிடாமலிருக்கிறது. ஆ! ஆ! மனத்தில் பெண்ணாசையைவிட்டு எப்போதும் பிரம்மசாரிவிரதத்தினால் பரிசுத்தமான மனமுள்ளவர்களுக்கும், தவத்திலும் புலன்களையடக்குவதிலும் தேவபூஜைசெய்வதிலும் தியானம் செய்வதிலும் ஊக்கமுள்ளவர்களுக்குத்தான் நிறைந்த சுத்தமுண்டாகிறது. ஸ்த்ரீகளுக்கு எந்தத்[1] தீமைகளும் இல்லையென்பது தர்மசாஸ்திரத்தின் நிச்சயம். ஸ்த்ரீகள் வீரியமில்லாதவர்கள்; சாஸ்திரமில்லாதவர்கள். ஸ்த்ரீகள் [2]பொய்யென்று சுருதி சொல்லுகிறது. படுக்கை, உட்காருதல், அலங்காரங்கள், உண்பது, குடிப்பது, அயோக்கியத்தனம், கெட்டவாக்கு, கெட்டஎண்ணம், புணர்ச்சியின்பம் இவற்றைப் பிரம்மதேவர் ஸ்த்ரீகளுக்களித்தார். புருஷர்கள் அவர்களை ரக்ஷிப்பது எவ்வகையிலும் முடியாது. அப்பா! உலகத்தைப் படைத்தவராலேயே முடியாதே. மற்றவர்களால் எது? சொல்லினாலும் அடிப்பதனாலும் கட்டுப்படுத்துவதனாலும் பலவகைகளாகப் பீடிப்பதனாலும் பெண்களை அடக்கமுடியாது. அவர்கள் எப்போதும் கட்டுப்படாதவர்கள். புருஷஶ்ரேஷ்டனே! முற்காலத்தில் விபுலனென்பவர் தம்குருபத்னியைக்கூடின விஷயத்தைப்பற்றி நான் முன்னமேகேட்டிருப்பதைச் சொல்லுகிறேன். தேவசர்மா என்று பெயர்பெற்ற பெருமைவாய்ந்தரிஷியொருவர் இருந்தார். அவருடையபார்யை ருசியென்பவள். அவள் உலகில் அழகில்நிகரற்றவள். அரசர்க்கரசே! அவளுடைய அழகினால் தேவர்களும் கந்தர்வர்களும் தானவர்களும் மயங்கினர். விருத்ரனையும் பாகனையும்கொன்றவனாகிய தேவேந்திரன் அவள்மேல் அதிகமோகங்கொண்டான். பெண்களின்நடையை அறிந்த மகாபுத்திசாலியான தேவசர்மாவானவர் கூடின

[1] ஸம்ஸ்காரமுதலியகர்மங்கள். [2] பொய சொல்லுகிறவர்கள்.

வரையில் ஸந்தோஷத்துடன் தம்முடைய பாரியையைக் காப்பாற்றினார். தேவேந்திரன் அயலாரிடம் கர்வத்தை வெளிப்படுத்தியவனென்று அறிந்த அவர் அவனுக்கு தமது ஸ்திரியை சிரார்த்தத்தில் காவல்காத்தார். அப்பா! பிறகு, ஒருகால் யாகம்பண்ணுகையில் அம்முனிவர் பார்யையைக்கூடி பாதி எச்சில்முகமென்று சொல்லப்படுகிற அந்தத்தேவமுகம் அக்நிதேவரிடம் அவ்வாகாரியத்துக்கு வழியை மனத்தில்நினைத்து ப்ருகுவம்சத்தில் பிறந்தவரும் தர்க்கு யுண்புள்ள ஸ்ரேஷ்டருமான ஸ்ரீபலரை பலமுறை, 'ப்ருகுகளிற்பிறந்தவனே! நான் யஜ்ஞம்செய்வதற்காகப் போகிறேன். இந்தவருகிலுள் இருதருகினின் மேல் ஆசைவைத்திருப்பதனால் நீ எனக்காலமுடன் உன்வல்லபையைவிட்டு இவ்விடத்தைக் காபாற்றுகடவாய். இருகிலனவிஷயத்தில் நீ எப்போதும் ஜாக்ரதையாயிருக்கவேண்டும். அவன் பலவகையாருவங்களை எடுப்பான்' என்றுசொன்னார். 'ராஜனே! ஸ்ரீமதிபலன்தன்னையுமடக்கி எப்போதும் உத்தமமான தவத்திலிருப்பவரும் அக்நிக்குமஸ்ய ஹவிஸ்ஸுக்கும் ஓப்பானஒளியுள்ளவருமான தர்மசிந்தகரும் ப்ரஹ்மமையறிந்தவருமான அந்தஸ்ரீபலர் குரு இவ்வாறு கட்டளையிட்டவுடன், 'அப்படியேயாகட்டும்' என்று மறுமொழி சொன்னார். மகாராஜனே! புறப்படுகிற்குருவைநோக்கி, 'ஓ! முனிவரே! இந்திரன் வருமபோது அவனுக்கு என்னவென்ன உபசாரங்களிருக்கும்? அவனுடம்பும் நிறமும் எப்படிப்பட்டவை? அவற்றை எனக்கு உரைத்தருளவேண்டும்' என்று திரும்பவும்கேட்டார். பாரதனே! பிறகு, எல்லாம்தெரிந்தவரான அந்தத்தேவசர்மா, அந்தமகாத்மாவானஸ்ரீபலருக்கு இந்திரனுடையமாயையைப்பற்றி உள்ளபடி சொல்லலானார். 'ப்ரமமரிஷியே! புத்ரனே! பலனையும பாகனையுமொன்றுபோலுள்ள இந்திரன் அநேகமாயைகளைச் செய்பவன்; பலவகைபல அநேக உருவங்களை அடிக்கடி காண்பிப்பான்; கிரீடத்தையும் வஜ்ராயுதத்தையும் வில்லையும் தேவ்ப்பாகையையும் காதுக்குண்டலங்களையும் தரித்திருப்பான்; உடனே விபிஷத்தைக் கெல்லாம் சண்டாளன்போலக் காணப்படுவான்; மறுபடியும் குடுமியும் சடையும் மரவுரியாடையுமுள்ளவனுமிருப்பான். மறுபடியும் பருத்தசரீரத்தோடிருப்பான்; திரும்பவும் மரவுரியுடுத்து இளைத்திருப்பான்; வெளுப்பு பசை கறுப்பு நிறங்களை அடிக்கடி மாற்றுவான்; குருடாகவும் ஸ்ரோத்ரியாகவும் இளமையாகவும் முதுமையாகவும் புத்திமானாகவும் மூடனாகவும் ஊமையாகவும் குட்டையாகவும் நெட்டையாகவும் ப்ராம்மணனாகவும் க்ஷத்ரியனாகவும் வைசிய

ஞகவும் சூத்திரஞகவும் [1]பிரதிலோமஜாதியாகவும் [2]அனுலோமஜாதியாகவும் இருப்பான்; ஓனி, காக்கை, அன்னம், குயில் உருவங்களையும் சிங்கம், புலி, யானை உருவங்களையும் அடிக்கடியெடுப்பான்; தேவர், அஸுரர், அரசர்களின் உருவங்களையும் எடுப்பான்; புஷ்டியாகவும் வாயுவினால் அங்கங்கள் முடங்கியும் விகாரமானபறவையாகவும் பசுவாகவும் குழந்தையாகவும் அனேக ரூபங்களோடிருப்பான்; ஈ, கொசு முதலியவற்றின் ரூபங்களையும் எடுப்பான். விபுலனே! அவனைக்கண்டு பிடிக்க யாராலும் முடியாது குழந்தாய்! இவ்வுலகத்தைப்படைத்த பிரம்மதேவராலும் ஆகாது. அவன் மறுபடியும் அந்தர்த்தானமாகி விடுவான். இந்திரனை ஞானக்கண்ணினால்தான் காணலாம். அவன் காற்றாகவும் மாறிவிடுவான். எப்போதும் இவ்வகையானரூபங்களை இந்திரன் காண்பிப்பான். விபுலனே! இந்த நுண்ணிடையாளை அவனிடத்திலிருந்து ஜாக்ரதையோடு காப்பாற்றவேண்டியதாக. ப்ருஹஸ்பதிஸ்ரேஷ்டனே! யாகம்நடக்கும்போதும் ஹோமத்திற்கு வைத்திருக்கும் ஹவிஸை நாய்தொடுவதுபோல இந்தருசியைக் கெட்டபுத்தியுள்ள தேவேந்திரன் தொடாமலிருக்கவேண்டும்' என்றார். பரதஸிரேஷ்டனே! அந்த மகானுபாவரான தேவசர்மமுனிவர் இவ்வாறு கட்டளையிட்டு உடனே யாசம் செய்வதற்காகப்போனார். விபுலர் குருவின் சொல்லைக் கேட்டுக் கவலையுற்றார்; மிக்கபலசாலியான தேவேந்திரனிடத்திலிருந்து பெருங்காவல்காத்தார்.

விபுலர், 'குருபத்னியைக் காக்கும்விஷயத்தில் என்னற்செய்யக் கூடியது யாது? தேவேந்திரன் மாயாவி: வெல்லமுடியாதவன்; பெருஞ்சக்தியுள்ளவன்; ஆஸ்ரமத்தையும் குடிசையையும் கதவை மூடித் தேவேந்திரன்வராமலிருக்கச் செய்யமுடியாது. ஏனெனில், அவன் பலஉருவங்களையெடுப்பவன், அவன் காற்று ரூபமாகவாவது வந்து குருபத்னியை ஆக்ரமிப்பான். ஆதலால், இப்போது நான் இந்தருசியின் தேகத்திற்குள் பிரவேசித்திருப்பேன். அவ்வாறன்றிப் பராக்கிரமங்களினால் இவளை நான்காப்பது முடியாது மஹிமைபொருந்தியதேவேந்திரன் பலஉருவங்கள் எடுப்பவனென்று கேட்டிருக்கிறேன். ஆதலால், என்யோகசக்தியினால் இவளிடம் இந்திரன் வராமல் காக்கக்கடவேன். இவளைக்காப்பாற்ற என்னுடைய அங்கங்கள் இவளுடைய அங்கங்களில் சேர்ந்திருக்கும்படி உட்புகுவேன். சிறந்த தவமுள்ளவரும் திவ்யஞானமுள்ளவருமான என்குரு தம்முடைய இந்தப்பத்நி அசுத்தப்பட்டதாகஅறிந்தால் கோபித்துச் சபிப்பார்;

[1] தாழ்ந்தவர்ணத்து ஆணுக்கும் உயர்ந்தவர்ணத்துப் பெண்ணுக்கும் பிறப்பது.
[2] உயர்ந்தவர்ணத்து ஆணுக்கும் தாழ்ந்தவர்ணத்துப் பெண்ணுக்கும் பிறப்பது.

ஸந்தேகமில்லை. மற்றப்பெண்களைப் புருஷர்கள்காப்பதுபோல இவ ளைக்காப்பது முடியாது. ஏனெனில், தேவேந்திரன் மாயாவி. ஐயோ! என்பாடு ஸந்தேகமாய்விட்டதே. குருவின்கட்டளையைத் தவறுமல் நடத்தவேண்டும். இந்தக்காரியத்தை நான் முடித்தால் ஓர் ஆச்சரி யத்தைச்செய்ததாகும். என்யோகசக்தியினல் குருபத்னியின் இந் தச்சரீரத்தில்புகுந்து காமமையிலையில் தண்ணீர்த்துளி எப்படிப் பற் றுமல் அசைவற்றிருக்கிறதோ அப்படியே இவள்சரீரத்தில் ஸமாதி யோடு பற்றுமலிருப்பேன். அவளுடைய ருதுகாலத்தியசோணித ரூபமாக வெளிப்படுவேனுயின் எனக்கு அபாதமிராது. வழிப்போக் கன் வழியில் யாருமில்லாதமண்டபத்தில் தங்குவதுபோல நான் குரு பத்னியின்சரீரத்தில் தங்குவேன். இவ்வாறு யோகத்தினல் இவள் தேகத்தில் இப்போது நான் வஸிக்கத்தான்வேண்டும்' என்று தர் மத்தையும் எல்லாவேதவிதிகளையும் தம்குருவுக்கும் தமக்குமுள்ள தவத்தையும் ஆராய்ந்து குருபத்னியைக்காப்பதற்கு மனத்தில் இந்த நிச்சயம்செய்தார். ராஜனே! அந்தவிபுலர் எவ்விதமாகச் சிறந்த முயற்சியைச் செய்தாரென்பதைக் கேள். சிறந்ததவமுள்ள அந்த விபுலர் சிலாக்கியமான அங்கமுள்ள தம்குரு பத்னியுட்கார்ந்திருக்கும் போது கூடஉட்கார்ந்து விநோதக்கதைகளினல் அவளை ஸந்தோஷப் படுத்தினர். விபுலரும் தம்கண்களின் ஒளிகளை அவள் கண்களின் ஒளிகளுடன்சேர்த்து ஆகாயத்தில் காற்றுப்புகுவதுபோல அவள் தேகத்திற்புகுந்தார். உள்ளேபிரவேசித்த அம்முனிவர் அங்கத்தோடு அங்கத்தையும் முகத்தோடு முகத்தையும் சேர்த்துப் பிரதிபிம்பம் போல அசைவற்று இருந்தார். அவ்வாறு விபுலர் குருபத்தியின் தேகத் தைநிறுத்திக்கொண்டு காப்பாற்றுவதில் முயற்சியோடிருந்தார். அவள் அவரிருந்ததையறியவில்லை. வேந்தனே! மகாத்மாவான அந்தவிபுல ருடைய குரு யாகத்தைமுடித்துக்கொண்டு வீட்டிற்குவருமளவும் விபுலர் அவளைக் காப்பாற்றினர்.

எழுபத்தாருவது அத்யாயம்.

தான தர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(விபுலர்கதைத் தொடர்ச்சி.)

பிறகு, ஒருகால் தேவேந்திரன் இது தருணமென்று நினைத்துச் சிறந்தஉருவமெடுத்துக்கொண்டு அந்த ஆசிரமத்திற்குவந்தான். ராஜ னே! விரும்பத்தக்கஒப்பற்றஉருவத்தையெடுத்துக் காட்சிக்கு மிக்க

இனியவனுஷித் தேவேந்திரன் அவ்வாசிரமத்திற்குட்புகுந்தான். அவன் அரைவற்றும கண்இமையாமலும் சித்திரத்தில் எழுதினது போலஉட்கார்ந்திருக்கும்விபுலருடைய தேகத்தைக்கண்டான்; பிறகு அழகானகடைக்கண்ணும பருத்தநிதம்பங்களும ஸ்தனங்களும் தாமரையிதழ்போல அகன்றகண்களும் நிறைமதிகொப்பான முகமும முள்ளருந்தேவியையும கண்டான. அவள் தேவேந்திரனைப்பார்த்து அவனுடையஉருவத்தினால் ஆசரியமும் விருப்பமுங்கொண்டு விரைவாகஎதிர்கொண்டழைக்கவும, 'ஐயா!' என்று கேட்கவும தொடங்கினள். ராஜனே! அவள் எழுந்திருக்கப்போகும்போது விபுலரால் அடக்கித்தப்பட்டு அசையமுடியாமல்போனள். தேவேந்திரன் அவளைப்பார்த்து மிக்க அழகான இன்சொல்லினால பேசத்தொடங்கினன். 'அழகியகைகளுளவளே! உன்னை நினைத்தினால்உண்டான மதனபாதையினால் பீடிக்கப்பட்டு உனக்காகவந்த தேவேந்திரன் என்று என்னையறி. அழகானபுருவங்களையுடையவளே! ஆதலால், என்னிடமசை. காலம் கடந்துபோகிறது' என்றான். விபுலமுனிவர் குருபத்தினியின சரீரத்திலிருந்துகொண்டே தேவேந்திரனை கண்டார்; அவன் இவ்வாறு சொன்னதையும கேட்டார். ராஜனே! நிறைந்தவளான அந்தருதேவி விபுலரால அடக்கப்பட்டு எழுந்திருக்கவும் பேசவும முடியாமற்போனள். பிரபுவே! சிறந்தமனிவையுள்ள அந்தபருகுவமசத்திலிவர் தமகுருபத்தியின்எண்ணத்தையறிந்து தம்போக சக்தியினால் அவளைப்பலவந்தமாக அடக்கினர். அவர் அவளுடைய எல்லாஇந்திரியங்களையும யோகசக்தியென்னுமகயிற்றினால் கட்டினர். ராஜனே! அவருடையயோகவன்மையினால் அறிவுமயங்கி மன்மதவிகாரமுண்டாகாமலிருக்கும் அந்தருதேவியைக்கண்டு வெட்கமுற்ற தேவேந்திரன் அவளை, 'வா; வா' வென்று திருமபவும அழைத்தான். பிறகு, அவள் அவனுக்கு மறுமொழி சொல்லக்கருதினள். விபுலர் குருபத்னியின்வாக்கை மாற்றினர். பிறகு, மதியென்ற அவள்முகத்தினின்று, 'ஓ! ஐயா! இகருவருகாரியம யாது?' என்னுந்திருத்தமானசொல் வெளிபிற்று. அவள் தன்வசமிலலாமல அந்தச் சொல்லைச்சொன்னபிறகு நாணமுற்றாள். இந்திரன் மிகபபயந்து துயரமுற்றிருந்தான். ராஜனே! அந்தஆயிரங்கண்ணையுடைய தேவேந்திரன் அவளிடத்தில அந்தவேறுபாட்டைக்கண்டு தன்னுடையதிவ்யஞானத்தினால் பார்த்தான். வேறுனகபசரீரத்திலிருந்தும கண்ணுடியில் பிரதிபிம்பம்இருப்பதுபோலக் குருபத்தியின்சரீரத்தினுள் வஸிக்கும் அம்முனிவரைக்கண்டான். பிரபுவே! உக்ரமானதவமுள்ள அம்முனி

வரைக்கண்டு இந்திரன் அஞ்சி வெட்கி நடுங்கினன். சிறந்ததவமுள்ள விபுலர் உடனே குருபத்தியைவிட்டுத் தபஸ்ரீரத்திற்புகுந்து நடுங்கின இந்திரனைப்பார்த்துப் பேசலானார். 'இந்திரியங்களையடக்காதவனே! புத்திகெட்டவனே! பாபஎண்ணமுள்ளவனே! புரந்தரனே! தேவர்களும் மனிதர்களும் உன்னை நிந்தைசெய்வார்கள். இந்திரா! கௌதமரால் பெண்குறிமுத்திரைசெலுத்தல் அடையாளம்செய்யப்பட்டு விடப்பட்டாயே. அது உனக்குப்பாதகரா? இல்லது, உன் மனத்திற்கு வரவேயில்லையா? நீ குழந்தைபுத்தியுள்ளவனென்றும் மனத்தேர்ச்சியில்லாதவனென்றும் நினையற்றவனென்றும் நானறிவேன். மூடனே! பாவியே! இவள் என்னால் காப்பாற்றப்படுகிறாள். வந்தபடியேசெல். மூடபுத்தியுள்ளவனே! என்தேஜஸினால் உன்னை இப்போது நான் எரித்துவிடமாட்டேனோ? வாஸவனே! நான் உன்னிடம் தயையுள்ளவனாயிருப்பதனால் உன்னையெரிக்க விரும்பவில்லை மிகஉக்ரரும் சிறந்த ஆசிரியருமான எனதுகுருவானவர் பாவ எண்ணமுள்ளஉன்னைக்கண்டால் கோபாக்நியால்ஜ்வலிக்கும் கண்ணினால் இப்போதே எரித்துவிடுவார். சக்ரனே! இனி நீ இப்படிச்செய்யாதே. பிராம்மணர்களை நீ பூஜிக்கவேண்டும். பிரம்மதேஜஸின் சக்தியினால் பீடிக்கப்பட்டு நின்னுடைய பங்கிரிகளுடன் அழிந்துபோகாதே. 'நான் [1]அமரன்' என்ற எண்ணங்கொண்டு பிரகிருத்திக்கிறாயன்றோ? அப்படி அவமதியாதே. தவத்தினால் ஸாதிக்கக்கூடாதது ஒன்றுமில்லை' என்றார். இந்திரன் மகாத்மாவானவிபுலர்சொன்ன அந்தச்சொல்லைக்கேட்டு வெட்கப்பட்டு யாதொருமறுமொழியும் சொல்லாமல் அங்கேயே அருகாத்தானபாயினன். அவன்போய்ச் சற்றுநேரத்திற்கெல்லாம், சிறந்ததவமுள்ள தேவர்மஹாவானவர் தாம்கினைத்தபடி யாகத்தை முடித்துக்கொண்டு தம்ஆசிரமத்திற்கு வந்தார். ராஜனே! குருவானவர் வந்தஉடனே அவருக்கு இஷ்டமானகாரியத்தைச்செய்தவிபுலர் குற்றமில்லாமல் தம்மால்காக்கப்பட்ட குருபத்தியைக் குருவுக்குஒப்புவித்தார். சாந்தமானமனமுள்ளவரும் குருபத்தியுள்ளவருமானவிபுலர் பயமில்லாமல் குருவைநமஸ்கரித்து முன்போலவே பணிவிடைசெய்தார். களைப்புத்தீர்ந்து பார்யையோடுகூட உட்கார்ந்தகுருவுக்கு விபுலர் இந்திரன்செய்த அந்தக் காரியத்தைத் தெரிவித்தார். சிறந்தமகிமையுள்ள அருந்ததிதேவசர்மா அதைக்கேட்டு விபுலருடைய நற்குணத்தினாலும் நடக்கையினாலும் தவத்தினாலும் இந்திரியஜயத்தினாலும் அவர்மேல் ஸந்தோஷமடைந்தார். ஸமர்த்த

[1] மரணமில்லாதவன்.

ரானதேவசர்மா விபுலருடைய குருபணிவிடையையும் குருபக்தியையும் தர்மத்தில் தவறுமையையும்கண்டு, 'நல்லது; நல்லது' என்று புகழ்ந்தார். தர்மாத்மாவும் பேரறிவாளருமான தேவசர்மாவானவர் தர்மத்தையே தலைமையாகக்கொண்ட சிஷ்யரைப்புகழ்ந்து வரங்கேட்கச் சொன்னார். குருபக்தியுள்ளவிபுலர் தர்மந்தவறுமலிருப்பதையே வரமாகக் குருவினிடம் பெற்றுக்கொண்டார்; குருவினால் விடைகொடுக்கப் பெற்றுச் சிறந்ததவத்தைச்செய்தார். சிறந்த தவமுள்ளதேவசர்மாவும் இந்திரனிடத்தில் பயமற்றவராகிப் பார்யையுடன்கூட ஜனமில்லாத வில் ஸஞ்சரித்தார்.

எழுபத்தேழாவது அத்யாயம்.

தாளதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(விபுலர் கதைத் தொடர்ச்சி)

விபுலர் குருசொன்னதைச்செய்தபிறகு கடுந்தவம் செய்தார். சிறந்தசக்தியுள்ள விபுலர் பிறகு, தமக்குத் தவம் நிறைவேறினதாக நினைத்தார். ராஜனே! அந்தவிபுலர் அந்தக்காரியத்தினால் புகழையும் வரத்தையும்பெற்று ஸந்தோஷமடைந்து அரசமற்றவராகி ஸ்வர்க்கத்திலும் பூமியிலும் ஸஞ்சரித்தார். கௌரவனே! மஹிமையுள்ளவிபுலர் தாம் குருவுக்குச்செய்த அந்தக் காரியத்தினாலும் பெருந்தவத்தினாலும் இரண்டு லோகங்களையும் ஜயிக்கப்பட்டதாக நினைத்தார். கௌரவனே! பிறகு, சிலகாலம் கடந்தபின் [1] ருசிதேவியை அவள்ஸகோதரி மிகுதியானதனங்களையும் தான்யங்களையும் கொடுத்து அழைத்தாள். அக்காலத்திலேயே ஒருசிறந்ததெய்வப்பெண் மிக்க அழகான உருவமெடுத்துக்கொண்டு ஆகாயத்திற்சென்றாள். பாரதனே! அவள்தேகத்திலிருந்து உயர்ந்தமணமுள்ளபுஷ்பங்கள் அந்தத் தேவசர்மாவின் ஆச்ரமத்தின் அருகில் பூமியில் விழுந்தன. அரசனே! அழகானகண்களையுடையருசிதேவி உடனே அந்தப்புஷ்பங்களை எடுத்துக்கொண்டாள். அக்காலத்தில் அவளைச் சீக்கிரமாக அழைத்துப் போகும்படி அங்கதேசத்திலிருந்து தூதன் வந்தான். குழந்தாய்! அவளுடைய மூத்தஸகோதரியான பிரபாவதியென்பவள் அங்கதேசத்தரசனை சித்ரரதனுடையமனைவி. அவளால் அழைக்கப்பட்ட பெண்ணரசியான

[1] 'ருசிதேவியின்ஸஹோதரியின் கிருஹத்தில் தனதான்யங்கள் மிகுதியுள்ளதிவாகம் வந்தது' என்பது பழையஉரை.

ருசிதேவி அந்தப்புஷ்பங்களை முடியிற்சூட்டிக்கொண்டு அங்கராஜன் வீட்டிற்குச் சென்றாள். அழகியகண்களையுடைய பெண்ணரசியான அங்கராஜன்மனைவி அந்தமலர்களைக்கண்டபோது தனக்கு அந்தப் புஷ்பம்வேண்டுமென்று தன்னுடன்பிறந்தாளைக் கேட்டாள். மிக்க அழகானமுகமுள்ள அந்தருசிதேவி கன்னகுப்தரி சொன்னதையெல்லாம் தன்கொழுநருக்குச் சொன்னாள். தேவர்மனுஷிவர் அதையெல்லாம் ஏற்றுக்கொண்டார். பாரதனே! சிறந்ததவமுள்ளதேவசர்மா உடனே விபுலரைவருவித்து, 'புஷ்பத்திற்காகச்செல்; செல்' என்று கட்டளையிட்டார். ராஜனே! பெருந்தவமுள்ளவிபுலர் குருசொன்னதைச்சங்கியாமல், 'அப்படியேஆகட்டும்' என்றுசொல்லி ஆகாயத்திலிருந்து மலர்கள் எந்தஇடத்தில் முன்னேவிழுந்தனவோ அந்த இடத்திற்குச்சென்றார். அங்கே மற்றப்புஷ்பங்களும் வாடாமலேயிருந்தன. பாரதனே! அந்தவிபுலர் தம்தவத்தினால் கிடைத்தவையும் அருமையான மணமுள்ளவையும் அழகியவையுமான அந்தத் தெய்வப்புஷ்பங்களையெடுத்தார். அவர் அந்தப்புஷ்பங்களை யெடுத்துக்கொண்டு குருவின் சொல்லை நிறைவேற்றினார்; மனங்களித்துச சண்பகமரவரிசைகள் நிரம்பின சமையகருக்கு விரைவாகச்சென்றார். அப்பா! அவர் ஜனமில்லாதவனத்தில் இரண்டுமனிதர்கள் கையினால் கையைப்பிடித்துக்கொண்டு சக்கரம்போலச்சுற்றுவதைக் கண்டார். ராஜனே! அவர்களில் ஒருவன் மற்றொருவனுடைய அடிகள் தடுமாறச்செய்து விரைவாகச்சுற்றினான்; மற்றொருவன் அப்படிச்சுற்றவில்லை. அப்போது அவ்விருவருக்கும் சண்டையுண்டாயிற்று. ராஜனே! ஒருவன், 'நீ விரைவாகச்செல்லுகிறாய்' என்றான். மற்றொருவன், 'இல்லை' என்றான். 'நீ விழுந்தாய்; நீ விழுந்தாய்' என்று அவர்கள் ஒருவரையொருவர் சொல்லினர். இவ்வாறு அவர்கள்பகைத்து மாறுபட்டபோது அவர்களுள் சபதமும்நடந்தது. அவர்கள் உடனே விபுலரைத் தூற்றிப்பிட்டு, 'அடே! நம்மிருவரில் எவன் பொய்சொல்லுகிறானோ அவனுக்குப் பரலோகத்தில் விபுலனென்னும் பிராம்மணன்கதிதான் வரும்' என்று சொல்லிக்கொண்டனர். இதைக் கேட்டு விபுலர் முகம்வாடினார். ராஜசிரேஷ்டனே! அப்போது விபுலர், 'நான் உக்கிரமானதவம்செய்திருக்கிறேன்; இந்தக்கடினமானசிரமத்தையும் அடைந்திருக்கிறேன். இவ்விரண்டு மனிதருக்கும் நான் என்ன தீங்குசெய்தேன்? எல்லாப் பிராணிகளும் வெறுக்கத்தக்கதையை இவர்கள் இப்போது எனக்குச் சொன்னது ஏன்?' என்று நினைத்துகொண்டே தலைகுனிந்து மனம் குன்றித் தம்முடையபாவத்தைப்பற்றிநினைத்தார்.

அப்போதே வேறு ஆறுபுருஷர்கள் பொருளாசையும் கோபமுமுள்ளவர்களாகிப் பொற்காய்களாலும் வெள்ளிக்காய்களாலும் சூதாடக்கண்டார். முன்னிருவர்செய்தபடத்தையே அவர்களும் செய்தனர். அவர்களும் விபுலரைக்குறிப்பிட்டே, 'அடே! நம்மில் எவன் பொருளாசைகொண்டு அக்கிரமம்செய்யநினைப்பானோ அவன் பரலோகத்தில் விபுலனுடைய கதியைத்தான் அடைவான்' என்றனர். கௌரவனே! அதைக்கேட்டும் விபுலர் தாம்பிறந்ததுமுதல் முன்செய்த தர்மத்தவறுதலைத் தம்மிடத்தில்காணவில்லை. ராஜனே! அவர் அவ்விதமான ராபத்தைக்கேட்டுத் தியின்மேல் தீமூட்டப்பட்டதுபோல மனம்கொதித்துத் தியானம் செய்தார். குழந்தாய்! பலசொற்களைக்கேட்டு ஆராயுமபோது, 'ருசிதேவியைக்காப்பாற்றினதனால் இது நேர்ந்தது' என்று அவர்மனத்தில் தோன்றிற்று. 'அங்கத்தை அங்கத்தோடும் முகத்தை முகத்தோடும் சான்சேர்த்திருந்து அந்த உண்மையைக் குருவுக்குச் சொல்லாமற்போனேன்' என்று நினைத்தார். சிறந்த பாக்கியமுள்ளவனே! கௌரவனே! இந்தஒருபிழை தம்மிடத்திலிருப்பதாக விபுலர் நினைத்தார். அது ஸரிதான்; ஸந்தேகமில்லை. குருபக்தியுள்ள அந்தவிபுலர் சம்பைநகருக்குவந்து குருவினிடம் புஷ்பங்களைபளித்து முறைப்படி குருவைப்பூஜித்தார்.

எழுபத்தேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(விபுலர்கதைத் தொடர்ச்சி.)

அரசனே! சிறந்த மஹிமையுள்ள தேவசர்மாவானவர் அந்தச்சிஷ்யர்வரக்கண்டு சொன்னசொல்லைக் கேள். 'சிஷ்யனே! அந்தப்பெருவனத்தில் இருவரைக்கண்டாயா? ஸமர்த்தர்களான அவர்களுக்கும் உன்மனத்திற்கும் ருசிதேவிக்குந்தானே உன்னைப்பற்றித்தெரியும்?' என்றுகேட்டார். விபுலர், 'பிரபுவே! பிரம்மரிஷியே! நீர் என்னைக் கேட்பது ஸரி. என்னை ஸரியாக அறிந்த அவ்விரண்டுபுருஷர்களும் மற்ற ஆறுபுருஷர்களும் யாவர்?' என்றுகேட்க, தேவசர்மா சொல்லலானார். 'பிராம்மணா! சக்கரம்போலச் சுற்றிக்கொண்டிருந்த இருவரைக் கண்டாயே; அவர்கள் பகலும்இரவும்என்றறி. அவர் உன்பாவத்தையறிபவர். பிராம்மணா! காய்களிலுள்ள உற்சாகத்துடன் சூதாடினபுருஷர்கள் ருதுக்களென்றறி. அவர்களும் உன்பாவத்தையறிந்திருப்பவர். பிராம்மணா! ஒருமனிதன் பாவத்தில் எண்ணம்வைத்துப் பாவமான

காரியத்தை மறைவாகச்செய்து, 'கர்மமே யாருக்குத்தெரிந்துகொள்ளவில்லை' என்றுநினைத்துக் கவலையற்றிருக்கலாகாது. மறைவாகப்பாவகாரியத்தைச்செய்யும்மனிதரின் ருதுக்களையும் திவாபகல்களையும் எப்போதும் பார்க்கின்றனவல்லவா? செய்தகார்யத்தைச் செய்தபடி எனக்குச்சொல்லாமலிருக்கும்படி எனக்குப் பாவத்தைச்செய்தவனுக்குவரும் லோகங்களே வரும். நீ செய்தசரமத்தைக் குருவுக்குத்தெரியாமலே களிப்பினால் நகைத்துக்கொண்டிருப்பதைக்கண்டு எனக்கு வினோதமூட்டுவதற்காகவே நீ செவியுற்றசொல்லை அவர்கள் சொன்னார்கள். புருஷனிடத்திலுள்ள பாவச்செய்கையையும் கல்லாவுடையுடைய கல்லைச்செய்கையையும் ருதுக்களும் திவாபகல்களும் காப்பாற்றுகின்றன. பிராம்மணனே! நீ வியபிசாரத்திற்காகப்பரதாரத்தைச் செய்தகாரியத்தை எனக்குச் சொல்லாமலிருந்ததாய் என்றுநினைத்து அவர்கள் எனக்கு புலவாறுதெரிவித்தனர். அதனால்தான் நீ செய்தகாரியத்தை எனக்குச் சொல்லாமலிருந்ததற்காகப் பாவம்செய்தவனுக்குவரும் லோகங்களே உனக்கும்வரும். பிராம்மணனே! கெட்டநடையுள்ளபெண்களை நிகாப்பாற்றினபடிதான் காப்பாற்றமுடியும் நீ நினைப்பொன்றும் சரியல்ல. புருஷனில் உன்னிடத்தில் அன்புள்ளவளாயிருக்கிறேன். மனத்தில்குற்றமற்றவர்களுக்குப் பாவம் வராது. உனக்கும் அப்படியேதான். பெண்ணை வேறுவிதமான நிகேகத்தினால் தழுவிக்கொள்ளப்பார்க்கிறாள். மகள் மற்றொருவித நிகேகத்தினால் தழுவிக்கொள்ளப்பார்க்கிறாள். ஆகப்பெண்ணின்சுருவத்தில் ஸந்யாஸிக்கும காமுகனுக்கும் எண்ணங்கள் வெவ்வேறு. மனத்தையடக்காமைபினால்தான் பெருமபாலும ஜனங்கள் மோசம்போகின்றனர். உலகத்தில் வாய்உமிழ்நீரை எச்சிலென்று அருவருப்பதும் பெண்வாயிலுள்ள கள்ளுக்கு ஆசைப்படுவதும நிருக்கின்றன. கட்டுப்படாத கெட்டமனமுள்ளவர்களுக்கு மந்திரமுமில்லை; ஆஷதமுமில்லை; தெய்வமுமில்லை. பெண்ணைச் சுவதுபண்ணுவதும் பொருளாசை இவைகளினால் கண்மூடப்பட்டுக் கருமமேசெய்பவர்களுக்கு அந்தப்பெரும் பலன் கிடைக்காது. உள்ளே களங்கமில்லாமல் பரிசுத்தனான நீ ருசியினுள்பிரவேசித்ததனால் கெடுக்கப்படவில்லை. பிராம்மணோத்தமனே! நீ கெட்டநடையுள்ளவன் என்றுகண்டிருப்பேனையின் உன்னைக் கோபத்தினால் சபித்திருப்பேன். எனக்கு அந்தவிஷயத்தில் ஸந்தேகமில்லை. பெண்களுக்கும் புருஷனிடத்தில் பற்றிருக்கிறது. புருஷர்களுக்கு அதுவே பூர்ணமானலாபம். நீ வேறுவிதமாக ரகூஷித்திருப்பாயாயின் என்சாபம் உனக்கு வந்திருக்கும்; எனக்குத் தெரிந்துமிருக்கும்.

அப்பா! புத்ரனே! ருசியானவள் உன்னால்காப்பாற்றப்பட்டு என்னிடத்திலும் ஒப்பிக்கப்பட்டாள். எனக்கு உன்மேல் அன்பு இருக்கிறது. நீ ஸுகமாக ஸ்வர்க்கப்செல்வாய்' என்றார்.

தேவசர்மமகரிஷி விபுலரைப்பார்த்து அன்புடன் இவ்வாறுசொல்லி மனைவியோடும் சிஷ்யனோடும் ஸ்வர்க்கத்தையடைந்து மகிழ்ந்திருந்தார். ராஜனே! இந்தச்சரித்திரத்தை முற்காலத்தில் கங்கைக் கரையில் ஒரு பேச்சு நடந்தபோது மார்க்கண்டேயமகாமுனிவர் எனக்குச்சொன்னார். குந்திபுத்ரனே! ஆதலால், உனக்குச் சொல்லுகிறேன். பெண்களை எப்போதும் பாதுகாக்கவேண்டும். கல்லதுகெட்டதுஇரண்டும் அவர்களிடத்தில் எப்போதும் காணப்படுகின்றன. அரசனே! மிக்கபுகழ்க்குரிய கற்புள்ளவர்களென்றுஎல்லாராலும ஒப்புக்கொள்ளப்பட்டு உலகத்திற்குத் தாய்கள்போலிருக்கும் மாதர்கள் காடுகளும செடிகளும் நிரமபின இப்புவனியைத் தாங்குகின்றனர். அரசனே! கற்பில்லாதவர்களும் ஒழுக்கங்கெட்டவர்களும் குலத்தைக்கெடுப்பவர்களும் பாவஞ் செய்யத்துணிந்தவர்களுமானபெண்களை உடம்பிலேபிறந்த தூர்லக்ஷணங்களினாலேயே அறியலாம். ராஜசிரேஷ்டனே! அவர்களை இவ்வகையாகக்காப்பது மகாத்மாக்களுக்குத்தான்கூடும். மற்றவகையில் பெண்களைக்காப்பது முடியாது. புருஷஸ்ரேஷ்டனே! இவர்கள் கொடியவர்கள்; அதிகசாமர்த்தியமுள்ளவர்கள. இவர்களுக்கு அன்புக்குரியவன் யாருமில்லை. புணர்ச்சியில்சேருகிறவரெல்லாம் அன்பர்களே. பரதஸ்ரேஷ்டனே! இவர்கள் பிசாசங்கள்; வசப்படுத்தமுடியாதவர்கள்; நன்றிகெட்டவர்கள். பாண்டுபுத்ரனே! இவர்களுக்கு ஒருபுருஷனிடத்திலும் அன்புண்டாவதில்லை. அரசனே! புருஷர்கள் இவர்களிடத்தில் நேசத்தையும் கோபத்தையும் செய்யத்தகாது. ராஜனே! இந்திரியஜயம்செய்யச்சக்தியில்லாதவர்கள் இல்லறதர்மத்தைவிடாமல் [1]ருதுகாலத்திலும் பர்வமுதலானகுற்றங்களைநீக்கி அனுபவிக்கவேண்டும். கௌரவபுத்ரனே! இதற்கு மாறுசெய்யும்மனிதன் கெடுவான். ராஜசிரேஷ்டனே! எல்லாவகையாலும் ஜாக்ரதையுள்ளவன் எல்லாக்கார்யங்களிலும் ஸரியாயிருப்பான். ஆனால் அந்தவிபுலர் ஒருவர்தாம் பெண்ணைப்பாதுகாத்தவர். அரசனே! பெண்களைக்காப்பாற்றும்திறமையுள்ளவன் இம்மூவுலகங்களிலும் வேறுஎவனுமில்லை" என்றார்.

---

[1] 'அருகாளை' என்பது மூலம்; 'ருதுவில்லாதகாலத்திலும் பர்வமுதலிய கெட்டகாலங்களைநீக்கிச் சம்பளமின்றிவேலைபார்ப்பவன்போலப் பிரியமில்லாமலே ரெமத்தைவகித்துத் தர்மத்தைஅனுஸரித்து அனுபவிக்கவேண்டும்' என்பது பழையஉரை.

எழுபத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி)

விவாஹமுறை முதலியன.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! எல்லாதர்மங்களுக்கும் ஸந்தேஹத்துக்கும் இல்லாழ்க்கைக்கும் பிரத்யக்ஷதேவதைகளான அதிதிகளின் பூஜைக்கும் முதற்காரணமான குலவிருத்தியை எனக்கு உரைப்பீராக. அரசரே! கன்னிகையை எப்படிப்பட்டவனுக்குக்கொடுப்பது தகுமென்பதுதான் எல்லாதர்மங்களிலும் முக்கியமாகக் கவனிக்கவேண்டியதர்மமென்று நினைக்கப்படுகிறது" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"யுதிஷ்டிரா! குணத்தையும் ஒழுக்கத்தையும் கல்வியையும் குலத்தையும் ஆசாரத்தையும் கனருகஆராய்ந்து இந்தக்குணங்களுள்ள வனுக்குத் தாம்வார்த்துக கன்னிகையைக் கொடுக்கவேண்டுமென்பது ஸாதுக்களான பிராமணர்களுக்கு எப்போதும்முள்ள [1]தர்மம். அப்படியே விவாஹமெய்தும்கால்ளத்தருதியுள்ளவனே யழைத்து அவனுக்குப் பொருளுதவியாய்ச் சென்னிகையைக்கொடுப்பது யோக்கியர்களான க்ஷத்ரியர்களுக்குள் பிரபலமையான [2]தர்மம். யுதிஷ்டிரா! தகுந்த கன்னுடையஅபிப்பிராயத்தைவிட்டுக் கன்னிகை விருமபினவனுக்கு அந்தவரனில்லாதபோதிலும் கன்னிகையைக் கொடுக்கலாம். இதைத்தர்மபரனாகாவிவாஹமென்று வேதமறிந்தவர் சொல்லுகின்றனர். ராஜனே! பிருதுகீர்த்தியான பொருளைக்கொடுத்துக் கன்னிகையின் தாய்தந்தைமுதலானவர்களைத் திருப்திசெய்வித்துக் கன்னிகையை விலைகுடுத்துவாங்கிக்கொள்வது ஆஸுரவிவாகதர்மமென்று அறிஞர் சொல்லுகின்றனர். அப்பா! கொன்றும் சிநேகமாகக் கொய்தும் பந்துக்கள் அழத்தானும் அழுதுகொண்டிருக்கும் கன்னிகையை பீட்டிலிருந்து பலாத்காரமாய்க்கொண்டுபோவது ராக்ஷஸவிவாகமென்று சொல்லப்படுகிறது. இரவிலும் மங்கியும் குடிபால்மயங்கியும் ஜாக்ரதையில்லாமலும் இருக்குமகன்னிகையை ரஹஸ்யமாகசேருவது விவாகங்களுள் மிக்கபாவமும இழிவுமானபைசாசவிவாகமென்று சொல்லப்படுகின்றது. யுதிஷ்டிர! இவ்வைவகவிவாகங்களுள்ளும் முன்மூன்றும் தர்மமானவை. பைசாசம ஆஸுரம் இரண்டும் அதர்மமானவை. அவற்றை எவ்வகையிலும செய்யலாகாது. புருஷசிரேஷ்

[1] பிராம்மவிவாகம். [2] பிராஜாபத்யவிவாகம்.

டனே! பிராம்மம் க்ஷத்ரியர்க்குரிய பிராஜாபத்யம் காந்தர்வம் இம் மூன்றும் தர்மமானவை. இவற்றைத் தனித்தனியாகவும் சேர்த்தும் செய்யலாம். இதில் ஸந்தேகமில்லை. பிராம்மணனுக்கு மூன்றுவர்ணத் துப் பெண்களும் மனைவிகளாகலாம்; க்ஷத்திரியனுக்கு இரண்டு வர் ணத்தவர்களுமாகலாம். வைசியன் தன் ஜாதியிலேயே மனைவியை அடையவேண்டும். இவர்களிடத்திலுண்டாகும் ஸந்ததி நலமைக் காகும். பிராம்மணனுக்குப் பிராம்மணஜாதிப்பெண்ணும் க்ஷத்திரிய னுக்கு க்ஷத்திரிய ஜாதிப்பெண்ணும் மிக சிறந்தவர். போகத்திற் காகச் சூத்திரஜாதிப்பெண்ணை [1]நக்நிகாவென்று சிலரும் கூடா தென்று மற்றும் சிலரும் கூறுகின்றனர். க்ஷத்திரியப்பெண்ணினிடத்தில் ஸந்ததியுண்டாவதைப் பெரியோர் அங்கீகரிப்பதில்லை. சூத்திரப் பெண்ணிடம் ஸந்ததியையுண்டாக்கும் பிராம்மணன் பிராயச்சித்தத் திற்குரியவனாக ஶாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கிறான். ஸந்ததியை விரும்புகிறவர்கள் தேகமெல்லாற்றாலின் மிக சிறிய பெண்ணை விவாகம் செய்துகொள்ளுவதில்லை. ஆயிரம்மந்திரத்தை யனுஷ்டிப்பவர் கள் அவளுக்கு உள்ளம் கூத்தாயிருக்குமென்று நினைத்து வேறு கோத்திரத்தில் பிறந்தவளாய் அதிக நிதம்பமுதலிய குற்றங்களில் லாதவளுமான மிக சிறிய பெண்ணையும் விவாகம்செய்துகொள்ளு கின்றனர். காமபோகத்திற்காக சூத்திரத்தினில் விலக்கப்பட்டவளையும் வேறுபெண்களிடமாகாதபோது சில அநாதிகளிக்கின்றனர். முப்பது பிராயமுள்ள புருஷன் [2]பெண்ணின் லக்ஷணங்கள் வெளிப்படாத பத் தப்பிராயமுள்ள பெண்ணை விவாகம்செய்துகொள்ளவேண்டும். இரு பத்தொருவயதுள்ளவன் ஏழுவயதுப் பெண்ணையும விவாகம்செய்ய லாம். பரதசிரேஷ்டனே! எவளுக்கு உடன்பிறந்தானும் தகப்பனும் இல்லையோ அவளை ஒருகாலும் மணம்புரியலாகாது. ஏனெனில், அவளுக்குப் [3]புத்திரிகா தர்மமிருக்கும் ஒருகன்னிகை ருதுவான பிறகு மூன்றுவருஷம் பார்க்கவேண்டும். காலாவதுவருஷமவந்தால் தானே கணவனைத் தேடிக்கொள்ளலாம். பரதசிரேஷ்டனே! அவ ளுடைய ஸந்ததியும் போகமும் இழிவாவதில்லை. இதற்கு மாறுக நடப் பவள் [4]குடும்பத்தார் இகழத்தக்கவளாவாள். தன் தாயாருக்கு [5]ஸபி ண்டையாகவும் தகப்பனுருக்கு [6]ஸகோத்ரையாகவும் இல்லாத

---

[1] 'நக்நிகாம்' என்பது மூலம். 'மேலாடையில்லாதவள்; பெண்ணிலக் கணங்களுண்டாகாதவள்; அல்லது, உடைதரிக்க வேண்டுமென்று தெரியாத வள்' என்பது பழைய உரை. [2] ஆதிபர்வம் 857 - ம பக்கம குறிப்பிற் காண்க. [3] 'ப்ரஜாபதேः' என்பது மூலம்; 'ப்ரம்மதேவரால் இகழத்தக்கவள்' என்றும் கொள்ளலாம். [4] இரத்தஸம்பந்தமுள்ளவள். [5] ஒருகோத்ரமுள்ளவள்.

பெண்ணை விவாகம்செய்துகொள்ளவேண்டும். அதுதான் தர்மமென்று மனு சொல்லுகிறார்" என்றார். யுதிஷ்டிரர், "பிதாமஹரே! ஒருவன் கன்னிகாசுல்கம கொடுத்திருக்கிறான்; மற்றொருவன் கொடுப்பதாகச் சொல்லுகிறான். வேறொருவன் கன்னன்மையற்றிக் கன்னிகையைத் தனக்குப் பேசுகிறான். பற்றொருவன் தனக்தைக் காண்பிக்கிறான், இன்னும்ஒருவன் பாணிக்ரகணம் செய்கிறான். அந்தப்பெண் இவர்களில் எவனுக்குப் னேவியாவள்? இந்தவிஷயத்தில் உண்மையைத்தெரிந்துகொள்ள விரும்புகிற எங்களுக்கு நீர் கண்ணாயிருக்கக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"மானிடலோகத்தில் மந்திரங்களுடன் ஸங்கல்பித்துச்செய்த எந்தஒருகருமம் கல்லதற்றிர் குரியதாகக் காணப்படுகிறதோ அதில் பொய்சொல்வது பாதகமாகும். மணவி கணவன் ரிக்ஷிக்கு ஆசார்யன் சிஷ்யன் உபாத்தியாயன் இவர்களைவருமம பொய்சொன்னல் தண்டிப்பதற்குரியவர். சிலர் [1] ஜாடியில்லையென்கிறார்கள் தனக்குஇஷ்டமில்லாமல் எதையும் [2] ஒத்துக்கொளவதை மனு ஸரியென்றுசொல்லவில்லை. பொய்யாகத் தர்மத்தைமறைப்பது அபகீர்த்தியையும் பாவத்தையும்தரும். [3] ஒருவனிடத்தில் நிலையாயிலலாமையே குற்றம். அப்படியிருந்தால் அந்தக்கன்னிகை எவனுலடையப்படலாம்? பாரதனே! எந்தக்கன்னிகையைத் தாமத்தையனுஸரித்துத் தானமாகவாவது கிரயமாகவாவது வாங்குகினறனரோ அவள்விஷயத்தில் அவருடைய பந்துக்கள் ஒப்புக்கொண்டபிறகு பாணிக்ரஹணத்தையும் ஹோமத்தையும் பிரயோகிக்கவேண்டும். அப்படியானுல்தான் அந்தமந்திரங்கள் பயன்படும். கொடுக்கப்பட்டதுபெண்விஷயத்தில் மந்திரங்கள் எவ்வகையிலும் பயன்படுவதில்லை. பந்துக்களால் நிச்சயிக்கப்பட்டபிறகு, மணவியும் கணவனும் பாணிபூர்வமாக ஸருவருக்கொருவர் செய்துகொள்ளும்வற்பாடுதான் விதிப்படிநன்று சொல்லுகின்றனர். பார்த்தாவானவன் தனதுபார்யை [4] தேவதைகளால் கொடுக்கப்பட்டவள் என்று தர்மசாஸ்திரந்நிஜல் அறிகிறான். அதைத்தவறுகிறவன் தேவவாக்கையும் மனுஷ்யவாக்கையும் பொய்யாக்கித் தள்ளிவிடுகிறான்" என்றார்.

---

[1] அதாவது, பெரியோர்களைத் தண்டிக்கத்தகாது எனகிறார்கள்.

[2] தாக்ஷிண்யத்தினுல ஒத்துக்கொள்வது.

[3] ஒருவனிடத்தில் அப்போது நிசசயமாகத் தேவதம் எதனுல்வராமலிருக்கும்?' என வுற்கொள்ளலாம்.

[4] சந்திரன் கந்தாவனிடத்திலும் கந்தர்வன அக்னியினிடத்திலும் கொடுத்தபிறகு அக்னி மனுஷ்யனுக்குக் கொடுப்பதாக மந்திரத்திறசொல்லியிருப்பதையறிக.

யுதிஷ்டிரர், "கன்னிகைக்குச் சுல்கம்வாங்கினபிறகு அம்மாபொருளின்பம் நிரம்பின சிறந்தவரன்வருவனுயின் பொய்சொல்லலாமா? கூடாதா? இருவகையிலும் குற்றம்வருவதாகிய இந்தக்காரியத்தில் எதைச்செய்தால் நல்லது செய்தவனுவான்? இதுதான் எல்லாத் தர்மங்களிலும் முக்கியமாக அறியவேண்டியதாமென்று நாங்கள் நினைக்கிறோம். உண்மையை அறியவிரும்பும் எங்களுக்கு நீர் கண்ணுகக் கடவீர். நீர் சொல்லுவதை மேன்மேலும்கேட்க ஆசையுண்டாகிறது. ஆதலால், இவைகளையெல்லாம் சொல்லக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானுர்.

"கன்யாசுல்கத்தையே நிச்சயத்திற்குக்காரணமென்று நினைத்திருக்கலாகாது. அதனல், அதில் பொய்யில்லை. யோக்யர்கள் சுல்கத்தையேவிரும்பிக் கன்னிகாதானம்செய்வது ஒருபோதுமில்லை. கன்னிகையின்பந்துக்கள் (முதுமைமுதலிய) வேறுதன்மையுள்ளவரீனச் சுல்கம்கேட்கிறார்கள். [1]பெண்ணுக்கலங்காரங்களைச்செய்து கல்யாணம் செய்துகொள்வன்றுசொல்லி அதற்குடன்பட்டவனுக்கு அவளைக்கொடுப்பது சுல்கமுமாகாது; விக்ரயமுமாகாது. கன்னிகையை வாங்கிக்கொள்ளுகிறவன் பொருள்தொடுக்கவேண்டுமென்பது நெடுநாளாயுள்ளதர்மம். 'உனக்குக் கன்னிகையைக்கொடுப்பேன்' என்று முதலில்சொன்னலும் முதலிற்சொல்லாமலிருந்தாலும் அவசியமான போதுசொன்னலும அது நிச்சயமானசொல்லாகாது. ஆதலால், பாணிக்கிரகணம் ஆகும்வரையில் ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இது தேவர்களால் கன்னிகைக்கு முன்னமே கொடுக்கப்பட்டவரமென்று நாம் கேட்டிருக்கிறோம். கன்னிகையினல் விரும்பப்படாதவனுக்குக் கன்னிகையைக் கொடுக்கலாகாதென்பது ரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், காமஸுகத்தைக் காரணமாகவுடைய ஸந்ததிக்குக் கன்னிகைதானே ஆதாரமென்று நான் நினைக்கிறேன். விவாகஞ்செய்துகொண்ட ஸ்த்ரீபுருஷர்கள் உடப் பழகினபிறகும் பலகுற்றங்களிருப்பதைக் காண்பதனல் சுல்கம் நிச்சயத்திற்குக் காரணமாக ஒருகாலுமிருந்ததில்லை. அதைப் பற்றிச் சொல்லுகிறேன்: கேள். நான் அங்கர், மகதர், காசியர், கோசலர் ஆகிய ராஜர்கள் எல்லாரையுமென்று இரண்டுகன்னிகைகளை விசித்ரவீரியனுக்குக் கொண்டுவந்தேன். அவர்களில் ஒருத்திக்குப் [2]பாணிக்கிரகணமாயிற்று; மற்றொருத்திக்குச் [3]சுல்கமாத்திரம்

---

[1] விவாஹம்செய்துகொண்டு அனுகூலமாக ஆபரணங்களை அவளுக்குக் கொடுக்கவேண்டுமென்று கன்னிகையைக்கொடுப்பது எனறும்கொள்ளாம்.

[2] அம்பாலிகை அம்பிகையிருவரும் ஒருவகைக்குணம்பற்றி ஒன்றுகச் சொல்லப்பட்டனர். [3] பீஷ்மர் ஜயித்துக்கொணர்ந்தமையால் அம்பைக்குச் சுல்கமாத்திரம் கொடுக்கப்பட்டிருந்தது.

கொடுக்கப்பட்டிருந்தது. கௌரவரும் என்பிதாவுமாகிய பாஹ்லீக ராஜர் அந்தக் கன்னிகைகளில் பாணிக்கிரகணம்செய்யப்படாதவளை அங்கேயேவிட்டுவிடலர்மென்றும் மற்றவளை விவாகம்செய்யலாமென்றும் சொன்னர். என்பிதாவின்சொல்லில் நான் ஸந்தேகப்பட்டு மற்ற வர்களையும் கேட்டேன். அந்த என்பிதாவுக்குத் தர்மமிருக்கவேண்டுமென்பதுபற்றி எனக்குவிருப்பம் மிக அதிகமாயிருந்தது. ராஜனே! அதனல், ஆசாரத்தைநடத்தவிரும்பினநான் ஆசாரத்தை ஸரியாகத் தெரிந்துகொள்ளவிரும்புகிறேனென்று பலமுறைசொன்னேன். மஹாராஜனே! நான் இந்தச்சொல்லைச்சொன்னபிறகு தர்மத்தைநடத்துகிறவரிற்சிறந்தவரான எனதுபிதாவானபாஹ்லீகர், 'உங்களுக்குக் கன்னியாசுல்கத்தினுலேயா நிச்சயம்? பாணிக்கிரகணத்தினுல் இல்லையென்றல் சுல்கம்வாங்கிக்கொண்டவன் அக்நியில்பொரிஹோமம்செய்பவனை வேறுவரைத் தேடலாமென்று தர்மசாஸ்திரம் சொல்லுகிறது. தர்மசாஸ்திரம்தெரிந்தவர்கள் வாய்ச்சொல்லை நிச்சயமாகச் சொல்லவில்லை. நிச்சயம் சுல்கத்தினுலன்றிப் பாணிக்கிரகணத்தினுலன்றென்பவர்களுக்கும் பகிரங்கமாகப் பேசுவதற்குமட்டுமாகும்; கன்னிகாதானத்தைத் தீர்மானப்படுத்துவதாகிறதில்லை. சுல்கத்தையே நிரயமாகநினைப்பவர் தர்மந்தெரிந்தவராகார். அவர்களுக்குக் கன்னிகையைக் கொடுக்கவுமாகாது. அப்படிப்பட்ட கன்னிகையை வாங்கவுமாகாது. பார்யையை விற்பதும் வாங்குவதும் எவ்வகையிலும்தகா. தாலிகளைப்போலக் கன்னிகைகளை விற்றுக்கொண்டும் வாங்கிக்கொண்டுமிருக்கும் பாபஎண்ணமுள்ள பொருளாசைக்காரர்களுக்குத்தான் சுல்கமே நிச்சயமாகும். இந்தவிஷயத்தில் ஸத்யவான் என்னுமரசனைப்பார்த்து, ஜனங்கள், 'மிகத்தெரிந்தவனே! சுல்கம் வாங்கப்பட்ட கன்னிகைக்குச் சுல்கம்கொடுத்தவனிறந்துபோனல் வேறுருவன் பாணிக்கிரகணம்செய்யலாமா? இவ்விஷயத்தில் எங்களுக்குத் தர்மஸந்தேகமிருக்கிறது. அதை நீ போக்கக்கடவாய். நீ அறிந்தவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவனல்லையோ? உண்மையைத்தெரிந்துகொள்ளவிரும்பும் எங்களுக்கு நீ கண்ணுயிருக்கக்கடவாய்' என்றுகேட்டனர். இவ்வாறு கேட்கின்ற ஜனங்கள் எல்லாரையும்பார்த்து, ஸத்யவான், 'யாருக்குஇஷ்டமோ அவனுக்குக் கன்னிகையைக் கொடுக்கலாம். அதில் ஸந்தேகப்படவேண்டியதில்லை. சுல்கம்கொடுத்தவன் ஜீவித்திருக்கையிலேயே இப்படிச்செய்கிறார்கள். இறந்தவன்விஷயத்தில் ஸந்தேகமேயில்லை. (பாணிக்கிரகணம்) செய்யப்பட்ட கன்னிகையானவள் மைத்துனனையடையவாவதுவேண்டும்; அல்லது, பாணிக்கிரகணம்செய்தவனையே யனுஸரித்

துத் தவம்செய்யவாவதுவேண்டும். ஏனெனில், அவள் பாணிக்கிர கணம்செய்தவனுக்கு உரியவளாயினள். சிலர் (வரனிறந்தஸந்தர்ப்பத் தில்) மைத்துனனேச்சேரவேண்டுமென்றே விதிக்கின்றனர்; மற்றும் சிலர் இஷ்டமிருந்தால் சேரலாமென்றுகூறுகின்றனர். இப்படிச்சொல்லு கிற இருவகைத்தர்மசாஸ்திரத்தாரும் பாணிக்கிரகணம்செய்வதற்கு முன்னர் ஸந்தர்ப்பம்நேரிடுமாயின் மேற்சொன்னநிச்சயத்தை ஒத்துக் கூறுகின்றனர். எல்லாமங்களங்களுக்கும் மந்திரங்கள் காரணம். பொய்சொல்வது பாவம். பாணிக்கிரகணமந்திரங்கள் [1] ஏழாவதடியில் தான் முடிவுபெறும். ஜலத்தோடுதானம்செய்யப்பட்டுப் பாணிக்கிர கணம் செய்யப்பெற்றபிறகுதான் அவனுக்கு அவள் மனைவியாவாள். கன்னிகாதானத்தைவிதிக்கும் தர்மசாஸ்திரஜ்ஞர்களே இதை இவ்வித மாகத்தான் நிச்சயிக்கின்றனர். பிராம்மணோத்தமன் தனக்கு அனு கூலமானவனும் வசப்பட்டவனும் சகோதரனால் அக்நிசாக்ஷியாகக் கொடுக்கப்பட்டவளுமாகியபார்யையைச் சாஸ்திரப்படி அக்நிப்பிரதக்ஷி ணஞ்செய்து விவாகம்செய்துகொள்ளவேண்டும்' என்றான்" என்றார்.

எண்பதாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(சுல்கம்வாங்கினகன்னிகை கணவனில்லாவிடில் செய்யவேண்டிய விதியும், பெண்களுக்குத் தாயபாகமுதலியவையும்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! [2] கன்னிகைக்குச் சுல்கம்வாங்கின பிறகு வரன் இல்லாவிடின் அவளுக்குச் செய்யவேண்டியதென்ன? அதனை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பிள்ளையில்லாததகப்பன் மிக்கபொருள்வாங்கிக்கொண்டு [3] அந் தப்பெண்ணையே எதிர்பார்த்திருந்தாலும் அல்லது அந்தப்பெண்ணை [4] சுல்கம்வாங்கினவளாயிருந்தாலும் சுல்கம்கொடுத்தவனால் அவள்

---

[1] விவாஹத்தில், ஸப்தபதியென்பது ஒருக்ரியை.

[2] சுல்கம் கொடுத்தவன் தேசாந்தரம் சென்றிருந்து அவனுக்குப் பயந்து வேறுயாரும் கன்னிகையை வரியாமலிருந்தால் தகப்பன் செய்யவேண்டிய தென்னவென்பது கேள்வியின் கருத்து.

[3] அந்தப்பெண்வயிற்று ஸந்ததியையே.

[4] 'சுல்கம் வாங்காமலிருந்தாலும்' என்பது வேறுபாடம்.

விலக்குவாங்கப்பட்டவளாகிறாள். அவள் கூடியவரையில் [1] நியாயமான வழியினால் அந்தத்தகப்பனுக்காக ஸந்ததியையடைய விரும்பவேண்டும். ஆதலால், அவள்விஷயத்தில் மந்திரபூர்வகமான விவாகஸம்ஸ்காரத்தை (வேறு) யாரும் செய்யலாகாது. [2] தகப்பனிடத்திலேயே அந்தக்கன்னிகையைக்கேட்க அவன்கட்டளையினால் அவள் அதை ஒத்துக்கொண்டவள். தர்மந்தெரிந்தசிலர் அந்தப்பிதாசெய்த காரியத்தை ஒப்புக்கொள்ளுகின்றனர்; மற்றும்சிலர் ஒப்புவதில்லை. சிலயோக்கியர்கள் இப்படிச்செய்யவில்லை; மற்றும்சிலர் ஒருகாலத்தில் செய்துமிருக்கின்றனர். ஸாதுக்களுடைய ஆசாரந்தான் தர்மத்தையறியும் வகைகளில் மிகச்சிறந்தது. இந்தவிஷயத்தில் விதேகதேசத்தரசரும் மகாத்மாவுமானஜனகராஜபோலுகிய ஸுக்ரதுவென்பவன் ஒருவாக்யம் சொல்லியிருக்கிறான். 'அயோக்கியர்களால் அனுஷ்டிக்கப்பட்டவழியைப்பற்றிச் சொல்வதும் கேட்பதும் ஸந்தேகப்படுவதும் எப்படிக்கூடும்? யோக்கியர்களுடையமார்க்கத்தையே இப்படிப்பட்டதென்று கண்டறியவேண்டும். ஆஸுரவிவாகத்திலுல் கன்னிகையைக் கொடுப்பதென்னும் தர்மமானது தர்மத்திற்குவிரோதந்தான். முந்தினவர்கள்செய்தகாரியத்திலும் இந்தவிஷயத்தை நாம் கேட்டிலம். மனுஷ்ய கணவன் என்னும் ஸம்பந்தமானது பெண் ஆண் இருவருக்கும் ஒன்றுதான். சேர்க்கையின்பமும் தர்மமும் இருவருக்கும் ஒன்றுதான்' என்று அவ்வரசன் சொன்னான்" என்றார். யுதிஷ்டிரர், "ஒருதந்தைக்குப் பெண்ணும் புத்ரனைப்போலாகத்தகுந்தவளா? ஆனால், அவள் தன்முன்னோருடைய ஆஸ்தியை என்னமுறையால் அடைகிறாள்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"தான் எப்படியோ அப்படியேதான் புத்ரன். பெண்ணும் பிள்ளைக்கு ஒப்பானவள்தான். ஆகையால், தானுகவே பெண்ணிருக்கும்போது வேறுஒருவன் சொத்தை எப்படியெடுத்துக்கொள்ளலாம்? தாயினுடையஸ்த்ரீதனமெல்லாம் பெண்ணின்பாகந்தான். பிள்ளையில்லாததகப்பனுடைய ஆஸ்தியைப் பெண்ணின்பிள்ளையே

---

[1] தேசாந்தரஞ்சென்ற கணவன்விஷயம்; 'மேலானவர்களை அடைவதென்னும்வழியால் அந்தக்கணவனுக்காக ஸந்ததியை அடையவிரும்பவேண்டும். அப்படிப்பிறப்பவன் பிள்ளையில்லாதபாட்டனுக்கும் சுல்கம்கொடுத்தவனுக்கும் பயன்படுவான்' என்பது பழையஉரை.

[2] 'ஒருவன் சுல்கம்கொடாமல் தகப்பனிடத்திலேயே கன்னிகையைக் கேட்க, அவன்கட்டளையினால் அவள் அதைஒத்துக்கொண்டுமிருந்தால் அவளும் சுல்கம்கொடுத்தவன்விஷயத்திற் சொன்னதர்மத்தையே அனுஷ்டிக்கவேண்டும்' என்பது பழையஉரை.

எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், அவன் தன்தந்தைக்கும் தன் தாயின்தந்தைக்கும் பிண்டங்களைக் கொடுக்கிறான். மகனுக்கும் பெண்ணின்மகனுக்கும் தர்மவிஷயத்தில் பேதமேயில்லை. [1] சில இடங்களில் பெண்ணுக்குச்சமமாகப் பிள்ளையையும் ஜனங்கள் விரும்புகின்றனர். மற்றும் சில இடங்களில் ஆண்பிள்ளைபிறந்திருந்தும் பெண்ணைச்சிறப்பிக்கின்றனர். தௌஹித்திரனால் நேரிடும்பிண்டமுதலான தர்மந்தான் அதற்குக் [2] காரணமென்றுநினைக்கிறேன். விக்கிரயம்செய்யப்பட்ட பெண்ணின்பிள்ளைகள் அவள் தந்தையைச்சேர்ந்தவர்களாகவே ஆகின்றனர். [3] ஆஸுரவிவாகத்தினால் பிறந்தபிள்ளைகள் பொருமையுள்ளவர்களும் பாபத்தையதிகமாகச்செய்பவர்களும் பிறர்சொத்தைக்கவர்கிறவர்களும் வஞ்சகம்செய்பவர்களும் தர்மத்திற்குமாறான நடக்கையுள்ளவர்களுமாகிறார்கள். இதவிஷயத்தில் தர்மமும் பூர்வசரித்ரமுந்தெரிந்தவர்கள் தர்மத்திற்கு ஆதாரமான தர்மசாஸ்திரங்களிற்சேர்க்கப்பட்டவையும் யமனால்சொல்லப்பட்டவையுமான சுலோகங்களை உரைக்கின்றனர். அவை, 'தன்பிழைப்புக்காகத் தன்புத்திரனைவிக்கிரயம்செய்து பணத்தைவிரும்புகிறவனும் சுல்கம்வாங்கிக்கொண்டு கன்னிகையைக் கொடுப்பவனும் ஆகிய மூடமனிதன் ஏழுலோகங்களுக்குமிழ்ப்பட்ட [4] காலஸூத்ரமென்னும் பெயருடைய மிகக்கொடியநரகத்தில் வர்வையையும் மூத்திரத்தையும் மலத்தையும் தின்றுகொண்டிருப்பான். ஆர்ஷவிவாகத்தில் இரண்டுபசுமாடுகள் சுல்கமென்று சிலர் சொல்லுகின்றனர். அதுவும் பிசகுதான். ராஜனே! அல்பமாயிருந்தாலும் பெரிதாயிருந்தாலும் அது அந்த அளவுள்ளவிலைதானே. சிலரால் இது நடத்தப்பட்டிருந்தபோதிலும் எக்காலத்திற்குமுரிய தர்மமாகாது. அநேகர்லோபத்தினால் பிரவிருத்திப்பதைக் காண்கிறோம். தர்மசக்தியுள்ள சிறுமியைப் பலவந்தமாக [5] அனுபவிப்பவரும் பாவம்செய்பவர்கள். அவர்கள் குருட்டிருள் என்னும் நரகத்தில் விழுந்துகிடக்கின்றனர். வேறுமனிதனையுங்கூட விக்கிரயம் செய்யலாகாது. தன்னைத்தானேவிற்பதைப்பற்றிச் சொல்லவேண்டுமா? பாவமடியாகவந்த அந்தப்பொருள்களினால் ஒரு புண்ணியமும் உண்டாவதில்லை' என்பவை.

---

[1] 'வேறுகோத்திரத்திலிருக்கும் புத்திரிகையானபெண் இரண்டுபங்கையும் ஔரஸனானபுத்திரன் மூன்றுபங்கையும் வேறிடத்தில் பிறந்த தத்தன்முதலிய புத்ரர் இரண்டுபங்கையும் புத்ரிகை மூன்றுபங்கையும் அடையவேண்டும்' என்பது பழையஉரை. [2] இங்குவேறுபாடங்கொண்டு, 'காரணமன்றென்றுநினைக்கிறேன். விக்கிரயம்செய்யப்பட்டபெண்ணின் பிள்ளைகள் தம் பிதாவைச் சேர்ந்தவர்களே ஆகின்றனர்' என்பது பழையஉரை. [3] பணம்வாங்கிப்பெண்கொடுப்பது. [4] 'காலஸம்' என்பதுமூலம். [5] பைசாசவிவாகம்.

எண்பத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பெண்களுக்குப் பொருள்கொடுத்தல் அன்போடுநடத்தல் முதலியன.)

பூர்வசரித்திரமறிந்தவர்கள் [1] வால்மீகியின்வசனத்தை உதாகரிக்கின்றனர். எந்தக்கன்னிகையின்தனத்தில் ஒன்றையும் அவள் தாய் தந்தைமுதலியசுற்றத்தார் எடுத்துக்கொள்ளவில்லையோ அவளுடைய விவாகம் விக்கிரயமாவதில்லை. அந்தத்தனமானது கன்னிகைகளுக்கு மரியாதை. அன்பின்குறிப்பாக அதைக்கொடுக்கவேண்டுவது அவசியம். வாங்கினதனங்களையெல்லாம் மிச்சமின்றிக் கன்னிகைக்குக் கொடுத்துவிடவேண்டும். விசேஷமானபங்களங்களைவிரும்புகிற தாய்தந்தையரும் சகோதரர்களும் மாமிமாமன்களும் மைத்துனர்களும் கன்னிகைகளைக் கௌரவிக்கவும் அன்புபாராட்டவும்வேண்டும். பெண் ஸந்தோஷமடையாவிட்டால் அவள் அந்தப்புருஷனை ஸந்தோஷப்படுத்தமாட்டாள். புருஷனுக்கு ஸந்தோஷமில்லாவிடின் ஸந்ததி விருத்தியாவதில்லை. அரசனே! மாதர்களைக் கௌரவிக்கவும் அன்புபாராட்டவும்வேண்டும். எந்தவீட்டில் மங்கையர் கௌரவிக்கப்படுகின்றனரோ அந்தவீட்டில் தேவர்கள் ஸந்தோஷிக்கின்றனர். எந்தவீட்டில் மங்கையர் கௌரவிக்கப்படவில்லையோ அந்தவீட்டில் எல்லாக்கிரியைகளும்வீண். எப்போது பெண்கள் கண்ணீர்விடுகின்றனரோ அப்போதே அந்தவீடு இல்லை. அரசனே! பெண்களிஞல் சபிக்கப்பட்ட வீடுகள் பேயினல்பீடிக்கப்பட்டவைபோல அழிதில்லாமலும் விளங்காமலும் விருத்தியாகாமலும் போகின்றன. மனுவானவர் தாம் ஸ்வர்க்கம்செல்லுவதற்குமுன், 'மனிதர்களே! பெண்கள் பலமில்லாதவர்கள்; எளிதில்வசப்படுத்தக்கூடியவர்கள்; நல்லமனமுள்ளவர்கள்; ஸத்யத்தை [2] ஜயிப்பவர்கள்; பொறுமையுள்ளவர்கள்; கௌரவத்தையே விரும்புகிறவர்கள்; கோபமும் அன்புமுள்ளவர்கள்; ஆதலால், கௌரவிப்பதற்குரியவர்கள். மனிதர்களே! அவர்களைக் கௌரவப்படுத்துங்கள். மடந்தையரைப்பற்றியதே தர்மம். காமபோகங்களைத்தும் பூஜைகளும் நமஸ்காரங்களும் அவர்களைப்பற்றியே உங்களுக்கு உண்டாகவேண்டும். ஸந்ததியை உண்டாக்குவதும் உண்டானதைக்காப்பதும் உலகவாழ்க்கையிலானந்தமும் பெண்களால்

---

[1] 'ப்ராசேதஸ்ய'' என்பதுமூலம்; 'தக்ஷருடைய' என்பது பழையஉரை.

[2] பொய்சொல்லுகிறவர்.

உண்டாயிருப்பதைப் பாருங்கள். அவர்களை வெகுமானித்தால் எல்லாப்பயன்களையும் பெறுவீர்கள்' என்றுசொல்லிப் பெண்களைப் புருஷர்களிடம் ஒப்பித்தார். விதேகராஜரின்பெண்ணாகியஸீதையும் இந்த விஷயத்தில் ஒருசுலோகம் சொல்லியிருக்கிறாள். அதன்பொருள், 'பெண்களுக்கு யாகமும் சிராத்தமும் உபவாஸமும் ஒன்றுமில்லை. தம் கணவனுக்குப் பணிவிடைசெய்வதுதான் தர்மம். அதனாலேதான் அவர்கள் ஸ்வர்க்கத்தை ஜயிப்பார்கள். இளமையில்தந்தையும் பருவத்திற்கணவனும் முதுமையில்புதல்வர்களும் காப்பாற்றுகின்றனர். ஆதலால், பெண்கள் ஸ்வதந்திரமாயிருக்கத்தகாது' என்பது. இவர்கள் பெண்களென்றுபெயருள்ளலக்ஷ்மிகளே. நன்மையைவிரும்புகிறவன் இவர்களை வெகுமானிக்கவேண்டும். பாரதனே! அன்புபாராட்டப்பட்டும் வேண்டினதை யளிக்கப்பட்டுமிருக்கிற பெண்ணானவள் லக்ஷ்மியேயாகிறாள்" என்றார்.

எண்பத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பலவர்ணப்பெண்களிடம் பிறந்தபுத்ரர்களுக்குப்
பொருளைப்பாகித்தல் முதலியன.)

யுதிஷ்டிரர், "சாஸ்திரங்களில்விதிக்கப்பட்டனவெல்லாந்தெரிந்தவரே! ராஜதர்மந்தெரிந்தவர்களிற்சிறந்தவரே! பிதாமஹரே! எல்லா ஸந்தேகங்களையும் முழுதும்ஒழிக்கத்தக்கவர் நீர்ஒருவரே பூமியிற் பெயர்பெற்றவர். எனக்கு ஒருஸந்தேகமிருக்கிறது. அதை எனக்குச்சொல்லும். (சொல்லத்தக்கவர்யாருமற்றுப்போன) இந்தக்கஷ்டமான ஆபத்காலத்தில் வேறுயாரை நாங்கள் கேட்போம். வேந்தரே! இந்தஸந்தேகமுண்டாயிருப்பதைப்பற்றி வேறுயாரையும் நாங்கள்கேட்கமாட்டோம். சிறந்தகைகளையுடையவரே! தர்மமார்க்கத்தை அனுஸரிக்கும்மனிதன் நான் கேட்கப்போகும் விஷயத்திற் செய்யவேண்டியது என்னவென்பதை முழுதும் நீர்உரைக்கக்கடவீர். பிதாமஹரே! பெண்ஸ்வதத்தனிருப்புகிற பிராம்மணனுக்குப் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நாலுஜாதிப்பெண்களும் மனைவிகளாக விதிக்கப்பட்டிருக்கின்றனர். கௌரவசிரேஷ்டரே! அவர்களெல்லாருக்கும் பிறந்தபிள்ளைகளுள் வரிசைப்படி பிதாவினுடைய தாயபாக முதலிவற்றிற்குரியவன் யாவன்? பிதாமஹரே! பிதாவினுடைய

தனத்தில் எவன் எவ்வளவு எடுத்துக்கொள்ளவேண்டும்? அவர் களுள் விபாகம் எப்படி விதிக்கப்பட்டிருக்கிறது? இதை நீர்சொல்ல விரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"யுதிஷ்டிர! பிராம்மணன் க்ஷத்திரியன் வைசியன்இம்மூன்று வர்ணத்தாரும் துவிஜர். பிராம்மணனுக்கு விவாகதர்மமானது இம் மூன்று வர்ணங்களில்தான் விதிக்கப்பட்டது. வீரனே! தர்மத் தவறுதலாலும் பொருளாசையினாலும் காமத்தினாலுந்தான் பிராம் மணனுக்குச் சூத்திரப்பெண் மனைவியாவாள். ஆனால், அதை ஆசா ரத்திற்கண்டதுமில்லை; தர்மசாஸ்திரத்திற் கேட்டதுமில்லை. சூத் திரப்பெண்ணைப் படுக்கையிலேறவிடுவதனால் பிராம்மணன் கீழ்க்கதிக் குப் போவான்; சாஸ்திரத்திற்சொல்லப்பட்டசிரியையினால் பிராயச் சித்தம் செய்வதற்குரியவனாகிறான். யுதிஷ்டிர! சூத்திரப்பெண்ணி னிடம் ஸந்ததிகளுண்டானால் பிராயச்சித்தம் இரட்டிக்கும். பார தனே! இனி சொத்துவிஷயமானநியமத்தை உனக்குச்சொல்லுவேன். யுதிஷ்டிர! பிராம்மணப்பெண்ணின்புத்ரன் முதலில் பிதாவின்தனத் தில் ஒருபாகியையும் லக்ஷணமுள்ள விருஷபம் ரதமுதலானமுக்ய மானபொருள்களையும் எடுத்துக்கொள்ளலாம். பிராம்மணனுடைய மிச்சச்சொத்தைப் பத்துப்பங்குகளாகப்பகுத்து அந்தப்பிதிருதனத் திலும் நாலுபங்குகளை அவனே எடுத்துக்கொள்ளவேண்டும். க்ஷத் திரியப்பெண்ணுக்குப்பிறந்தபுத்ரனும் பிராம்மணன்தான்; ஸந்தேக மில்லை. அவன் தாய்க்குள்ளசிறப்பினால் மூன்றுபாகங்களையெடுத்துக் கொள்ளத்தக்கவன். யுதிஷ்டிர! மூன்றுவதுவர்ணமான வைசியப் பெண்ணினிடம் பிராம்மணனுக்குப்பிறந்தவன் மேற்சொன்னபிராம் மணஸொத்தில் இரண்டுபாகங்களை எடுத்துக்கொள்ளவேண்டும். சூத்திரப்பெண்ணினிடம் பிராம்மணனுக்குப் பிறந்தவன் ஒருகாலும் சொத்தில் தாயபாகம்கொடுக்கத்தகாதவனென்றே சொல்லப்படுகி றான். பாரதனே! ஆயினும், பத்துப்பங்காகப் பகுக்கப்பட்டபொரு ளில் சிறிதானஒருபாகத்தையாவது சூத்திரப்பெண்ணின்மகனுக்குக் கொடுக்கவேண்டும். இதுதான் முறை. ஆனால், ஒருவர்ணத்துப்பெண் களிடத்தில் பிறந்தபிள்ளைகளுக்குப் பாகங்களைச் சமமாகச்செய்ய வேண்டும். சூத்திரப்பெண்ணுக்குப் பிறந்தபிள்ளைகள் கல்வித்தேர்ச்சி யில்லாமையால், பிராம்மணனல்லாதவரென்று நினைக்கப்படுகின்றனர். மற்றமூன்று வர்ணப்பெண்களிடத்திலும் பிராம்மணனுக்குப்பிறந்த வன் பிராம்மணனாவான். நான்குவர்ணங்கள்தாம் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. ஐந்தாவதுவர்ணம் சாஸ்திரத்தாலறியப்

படவில்லை. சூத்ரப்பெண்ணின்புத்ரன் (பிரிக்கப்பட்டபித்ருதனத்தில்) பத்தில்ஒருபங்கை எடுத்துக்கொள்ளலாம். அதுவும் தன்பிதாவினால் கொடுக்கப்பட்டதை எடுத்துக்கொள்ளலாமேயன்றிக் கொடுக்கப்படாததை எடுத்துக்கொள்ளத்தகாது. பாரதனே! பிதாவானவன் சூத்திரப் பெண்ணின்பிள்ளைக்கும் தனத்தை அவசியம் கொடுக்கவேவேண்டும். அருளேமுக்யமானதர்மமென்பதனால் அவனுக்குக்கொடுப்பது. எவளிடத்தில்உண்டாகும்ஸந்ததியும் நன்மைக்கேஆகும். பாரதனே! ஒருவன் புத்ரனுள்ளவனுயிருந்தாலும் இல்லாவிட்டாலும் சூத்திரப்பெண்ணின்பிள்ளைக்குப் பத்தில்ஒருபாகத்திற்குமேல் கொடுக்கத்தகாது. பெண்ணுக்கு நாலில்ஒருபாகம் தர்மசாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஸகோதரனில்லாதபெண் முழுச்சொத்துக்கும் உரியவளென்று சிலரும் பாதிச்சொத்துக்குரியவளென்று மற்றுஞ்சிலரும் நிஷ்கர்ஷிக்கின்றனர். பிராம்மணனுக்கு மூன்றுவருஷத்திற்குச் சாப்பாட்டுக்குவேண்டியதற்குமேல் அதிகதிரவியமிருக்குமானால் அந்தத்திரவியத்தைக்கொண்டு யாகம்செய்துவிடவேண்டும். வீணுகப் பொருளைச் சேர்க்கலாகாது. ஒருவன் மனைவிக்குத் தன்பொருளில் மூவாயிரத்துக்குமேற்பட்ட தாயபாகத்தைக் கொடுக்கவேண்டும். அவள் தன்பர்த்தாவினால் கொடுக்கப்பட்ட அந்தத்தனத்தை ஸ்வதந்திரமாக அனுபவிக்கலாம். பெண்களுக்குப் புருஷன்கொடுத்த தாயபாகமுதலிய தனத்திற்கு அவர்கள் அனுபவிப்பதே பலனென்றுசொல்லப்படுகிறது. பெண்கள் பிதாவின்சொத்தைஅபகரிப்பது எவ்வகையிலும் கூடாது. யுதிஷ்டிர! பிராம்மணப்பெண்ணுக்குத் தந்தையினால்கொடுக்கப்பட்ட திரவியத்தை அவள்பெண் எடுத்துக்கொள்ளவேண்டும். அவள் தன்தந்தைக்குப் புத்ரன்போன்றவளே. கௌரவனே! அரசனே! அவளைப் புத்ரனுக்குச்சமமென்றே தர்மசாஸ்திரம் விதிக்கிறது. பரதஸ்ரேஷ்டனே! இந்தத்தர்மம் இவ்வாறுதான் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு தர்மத்தைநிஷ்கர்ஷித்துப் பணத்தை ஒருவன் வீணுகச் சேர்க்கலாகாது' என்றார்.

யுதிஷ்டிரர், "பிராம்மணனுக்குச் சூத்திரப்பெண்ணிடம்பிறந்த பிள்ளைக்குச் சொத்துக்கொடுப்பது அவசியமில்லையென்று சொல்லப்பட்டிருந்தால் எந்தவிசேஷமுன்பினால் பத்தில் ஒருபங்காவது அவனுக்குக் கொடுக்கப்படும்? பிராம்மணனுக்குப் பிராம்மணப்பெண்ணினிடத்தில்பிறந்தவன் பிராம்மணனென்பதில் ஸந்தேகமில்லை. க்ஷத்திரியப்பெண்ணினிடத்திலும் வைசியப்பெண்ணினிடத்திலும் பிறந்தவரும் பிராம்மணர்தாமே? ராஜசிரேஷ்டரே! மூன்றுவர்ணத்திற்

பிறந்தவரும் பிராம்மணரென்று நீரே சொன்னீரன்றே? இவர்கள் ஏற்றக்குறைவாகப் பாகம்எடுத்துக்கொள்வது ஏன்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"வீரனே! உலகத்தில் மனிஷியைத் தாரம்என்ற ஒருபெயரினால் வழங்குகின்றனர். ஒரேபெயரால் சொன்னாலும் அவர்களுள் வேற்றுமை மிகஅதிகமாயிருக்கிறது. முதலில் மற்றமூன்று ஜாதிப்பெண்களை விவாகம்செய்துகொண்டு கடைசியில் பிராம்மணஜாதிப்பெண்ணை ஒருவன் விவாகம்செய்வதைவிடவும் அந்தப்பிராம்மணஜாதிப்பெண்ணை அவர்களில் மூத்தவளும் மற்றவர்களால் பூஜிக்கப்படத்தக்கவளும் மற்றவரிலும் மிகச்சிறந்தவளுமாவாள். அந்தப் பிராம்மணப்பெண்ணிருக்கும் போது புருஷனுக்கு ஸ்நானத்தையும் அலங்காரத்தையும் பல்துலக்கும் சாதனத்தையும் அப்யங்கத்தையும் ஹவ்யகவ்யங்களையும் கிருகஸ்தாஸ்ரமதர்மத்திற்குரிய மற்றவற்றையும் வேறு ஒருத்தியும் செய்யத்தகாது. யுதிஷ்டிர! பிராம்மணனுக்குப் பிராம்மணப்பெண்தான் எல்லாம் செய்யவேண்டும். அன்னம் பானம புஷ்பம ஆடைஆபரணம் இவற்றைக் கணவனுக்குப் பிராம்மணப்பெண்ணே கொடுக்கவேண்டும். அவள்தான் மிகச்சிறந்தவள். கௌரவனே! மகாராஜனே! மனுவினால் சொல்லப்பட்ட தர்மசாஸ்திரத்திலும் இதுதான் எப்போதுமுள்ள தர்மமென்று சொல்லப்படுகிறது. யுதிஷ்டிர! ஒருவன் காமத்தினால் இதற்குமாறாக நடத்துவனையின் அவன் பிராம்மணஜாதியிற்பிறந்த சண்டாளன்போலவே முன்னோரால் நிந்திக்கப்படுகிறான். அரசனே! பிராம்மணப்பெண்ணுக்கும் க்ஷத்திரியப்பெண்ணுக்கும் பிறந்தபுத்திரர்கள் ஸமமாயிருந்தபோதிலும் இரண்டுவர்ணங்களுக்குமுள்ள வேறுபாடு இவர்களுக்கும் இருக்கிறது. உலகத்தில் க்ஷத்திரியப்பெண் ஜாதியில்பிராம்மணப்பெண்ணுக்குச்சமமாகமாட்டாளன்றே? ராஜஸ்ரேஷ்டனே! ஆதலால், பிராம மணப்பெண்ணின் புத்ரன்தான் மூதன்மையும் சிறந்தவனும் ஆவான். யுதிஷ்டிர! அவன்தான் பிதாவின்தனத்தில் மிகஅதிகமாகப்பாகமெடுத்துக்கொள்ளத்தக்கவன். எப்படி க்ஷத்திரியப்பெண் ஒருகாலும் பிராம்மணப்பெண்ணுக்குச்சமமாகாளோ அப்படியே வைசியப்பெண்ணும் க்ஷத்திரியப்பெண்ணுக்குச் சமமாவது எப்பொழுதுமில்லை. யுதிஷ்டிர! ராஜனே! லக்ஷ்மி ராஜ்யம் பொக்கசம் கடல்சூழ்ந்தபுவனி இவையெல்லாம் க்ஷத்திரியர்களுக்கு ஏற்படுத்தப்பட்டவையாகக் காணப்படுகின்றன. க்ஷத்திரியன் தன்தர்மத்தினால் மிகப்பெரிய ஐசுவரியத்தை அடைகிறான். ராஜனே! தண்டத்தைவகிப்பவன் அரசன்தான். க்ஷத்திரிய

னின்றி ரகூஹணமில்லை. மகானுபாவர்களான பிராம்மணர்களோ தேவருக்குந்தேவர். அவர்களிடத்தில் அரசன் முறைப்படிபூஜித்து நடந்து கொள்ளவேண்டும். அரசனனவன் ரிஷிகளால்விதிக்கப்பட்டதும் நெடுங்காலமாயுள்ளதுமான தர்மத்தையறிந்து அதுகெடும்போது கெடாமலிருக்கும்படி க்ஷத்திரியதர்மத்தினுல் பிரஜாபரிபாலனம் செய்யவேண்டும். எல்லாவர்ணத்தாருடையதனம் தாரமுதலியவையனைத்தும் பறிப்பவர்களால் பறிக்கப்படுவனவற்றை அரசன் காப்பாற்றுகிறன். ஆதலால், க்ஷத்திரியப்பெண்ணின் புத்திரன் வைசியப்பெண்ணின் புத்திரனிடச் சிறந்தவனென்பதில் ஸந்தேகமில்லை. யுதிஷ்டிர! அவனும் பிதாவின்சொத்தில் வைசியப்பெண்ணின் புத்ரனிட அதிகமாகம் எடுத்துக்கொள்ளத்தக்கவன்" என்றார்.

யுதிஷ்டிரர், "ராஜாவானபிதாமஹரே! பிராம்மணனைப்பற்றிச் சாஸ்திரப்பிரகாரம் நீர்சொன்னீர். மற்றவர்ணங்களுக்குப் பாகவியவஸ்தை எப்படியாம்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"கௌரவனே! க்ஷத்திரியனுக்கு [1] இரண்டு ஜாதிப்பெண்கள் பாரியைகளாக விதிக்கப்பட்டிருக்கின்றனர். மூன்றுவது மனைவி சூத்திரப்பெண்ணும் இருக்கலாம். ஆனல், அதை ஆசாரத்தில்கண்டதும் தர்மசாஸ்திரத்தில் கேட்டதுமில்லை. யுதிஷ்டிர! க்ஷத்திரியர்களுக்கும் பிராம்மணர்களுக்குச் சொன்னமுறைதான். ராஜனே! க்ஷத்திரியன் சொத்தை எண்பகுதிகளாகப் பகுக்கவேண்டும். க்ஷத்திரியப்பெண்ணின்பிள்ளை அந்தப்பிதாவின் சொத்தின்பாகங்களில் நாலுபங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். பிதா யுத்தத்தில் ஸம்பாதித்தஸொத்து எதுவாயிருந்தாலும் அதை அவனே எடுத்துக்கொள்ளவேண்டும். வைசியப்பெண்ணின்மகன் மூன்றுபாகங்களையும் சூத்திரப்பெண்ணின்மகன் மிச்சமுள்ள ஒருபாகத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அந்தச் சூத்திரப்பெண்ணின் மகனும் பிதாகொடுத்ததைத்தான் பெற்றுக்கொள்ளலாம்; கொடாமல் எடுத்துக்கொள்ளத்தகாது. கௌரவனே! வைசியனுக்கு வைசியஜாதிப்பெண் ஒருத்தியே பார்யையாயிருக்கவேண்டும். சூத்திரப்பெண் இரண்டாவது மனைவியாயிருக்கலாம். ஆனல் அதை ஆசாரத்திற்கண்டதும் தர்மசாஸ்திரத்திற் கேட்டதுமில்லை. பரதஸ்ரேஷ்டனே! குந்திபுத்ரனே! வைசியப்பெண்ணினிடத்திலும் சூத்திரப்பெண்ணினிடத்திலும் சேருகிறவைசியனுக்கு அவ்விரண்டு புத்ரர்கள் விஷயத்திலும் பாகவியவஸ்தை சொல்லப்பட்டிருக்கிறது. பரதஸ்ரேஷ்

[1] க்ஷத்திரியவைசியஜாதிப்பெண்கள்.

டனே! வைசியனுடைய சொத்தை ஐந்து பாகங்களாகச்செய்யவேண்டும். ராஜனே! அவ்விரண்டுபெண்களின் பிள்ளைகளுக்கும் தாயபாகத்தைப்பற்றிச்சொல்வேன். வைசியப்பெண்ணின் மகன் பிதாவின்தனத்தில் ஐந்தில்நாலுபாகங்களை எடுத்துக் கொள்ளவேண்டும். பாரதனே! சூத்திரப்பெண்ணின் புதல்வனுக்கு ஐந்திலொருபாகந்தான் விதிக்கப்பட்டது. அவனும் தந்தைகொடுத்துத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும்; கொடாமல் எடுத்துக்கொள்ளத்தகாது. மூன்றுவர்ணத்தாருக்கும் பிறந்தசூத்திரனும் எப்போதும் பிதா தனம்கொடுப்பதற்குத்தான் உரியவன். (தானாகஎடுத்துக்கொள்ளத்தகாது.) சூத்திரனுக்குத் தன்வர்ணத்தில் பிறந்தவள்தான் மனைவியாகலாம். மற்றவர்ணத்தில்பிறந்தவள் எவ்வகையிலும் மனைவியாகத்தகாள். அவனுக்கு நாறுபுத்ரர்கள் இருந்தாலும் அவர்களுக்கு ஸொத்து ஸமபாகமாக வேண்டும். எல்லாவர்ணங்களிலுமே தனக்குச்சரியான வர்ணத்துப் பெண்ணுக்குப் பிறந்த புத்ரர்களுக்குச்சொத்தில் ஏற்றத்தாழ்வில்லாமல் ஸமபாகம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மூத்தபுத்ரனுக்குப் பொதுச்சொத்திலிருந்து ஒருபாகம் ஜ்யேஷ்டாம்சமென்று சொல்லப்படுகிறது. குந்திபுத்ரனே! தாயபாகத்தைப்பற்றிய இந்தவிதி முன்னர் பிரம்மதேவரால் சொல்லப்பட்டது. ராஜனே! ஒரேவர்ணத்தாரான பெண்களிடத்தில் பிறந்தபிள்ளைகளுக்கும் வேறுஒருவிசேஷமுண்டு. அதாவது, 'முன்னேசொன்ன விவாகங்களில் முன்முன்விவாகங்களின் கிரப்பினால் அந்த அந்தப்புத்ரர்களுக்கும் விசேஷமிருக்கிறது. ஒரு மனிஷிக்குப்பிறந்த புத்ரர்களிலும் ஜ்யேஷ்டன் அதிகபாகத்தையும் நடுவானவன் அதற்குக்குறைந்த பாகத்தையும் கடைசியவன் அதற்கும் குறைவானபாகத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டும்' என்பது. இவ்வாறு எல்லாஜாதிகளிலும் அதேவர்ணத்துப்பெண்ணுக்குப்பிறந்த புத்ரன் சிறந்தவன். மரீசியின் புத்ரரானகாசியபமகரிஷியும் இதைப்பற்றி இப்படிபே சொல்லியிருக்கிறார்" என்றார்.

எண்பத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(ஸங்கராஜாதிகளின் வரலாறு முதலியன.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! மனிதர்கள் பொருளையும் காமத்தையும் பற்றியிருப்பதனாலும் இன்னர் இன்னவர்ணமென்று நிச்சயிக்கக்கூடாமையினாலும், வர்ணத்தார்களின் தெரியாமையினாலும்

வர்ணங்கள் கலந்துபோகின்றனவே. மேற்சொன்னகாரணங்களினால் வர்ணங்கள் கலந்தவர்ணங்களிற்பிறந்தவர்களுக்குத் தர்மம்என்ன ? கர்மங்கள் எவை ? அவற்றை எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பிரஜைகளைப்படைத்த பிரமமதேவர் முதலில் யாகத்திற்காக நாலுவர்ணங்களையும் நாலுவர்ணங்களுக்குமுரியகர்மங்களையும் படைத்தார். பிராம்மணனுக்கு நாலுவர்ணத்தவரும் பாரியைகள். [1] இரண்டு வர்ணத்தவரிடத்திலுதான் பிராம்மணனுகவே பிறக்கிறான். மற்ற இரண்டு வர்ணத்தவரிடத்திலும் கிரமமாகக்குறைந்து தாயின்ஜாதியாகவே புத்ரர்கள் பிறக்கிறார்கள். பிராம்மணனுக்குச் சூத்திரப்பெண்ணினிடத்தில் பிறந்த புத்திரன் எவனென்னப்பட்ட சூத்திரனைத் [2] தாண்டினவனுக இருப்பதனால் அவனைப் பார்சவனென்று சொல்லுகின்றனர். அவன் தன் குலத்திற்கேற்றபடி மற்றமூன்றுவர்ணங்களுக்கும் பணிசெய்துகொண்டிருக்கவேண்டும்; தன் ஒழுக்கத்தை எப்போதும் விடாமலிருக்கவேண்டும்; எல்லாவித்தத்தொழில்களையும் தெரிந்துகொண்டு தன் குலத்தொழிலையே கைப்பற்றவேண்டும். மூத்தவனுயிருந்தாலும் இளையவனுயிருந்தாலும் அவன் பிராம்மணர்பணிவிடையும் தானமும் செய்துகொண்டிருக்கவேண்டும். க்ஷத்திரியன் சேரக்கூடியவர்கள் [3] மூன்று வர்ணத்துப்பெண்கள். அவர்களில் முதலிருவரிடத்தில் இவன் க்ஷத்திரியனுகவேபிறக்கிறான். மூன்றுவது வர்ணமாகிய சூத்திரப்பெண்ணினிடம் தாழ்ந்தஜாதியான உக்ரர்களென்னப்படும் சூத்திரர்கள் பிறக்கின்றனரென்பது தர்மசாஸ்திரம். வைசியனுக்கு [4] இரண்டுபாரியைகள். அவ்விருவரிடத்திலும் வைசியனுகவே பிறக்கிறான். சூத்திரனுக்குச் சூத்திரப்பெண்ணுகிய ஒருபாரியைதான். அவள் சூத்திரனையேபெறுகிறாள். இதற்கு [5] மாறுபிறப்பவன் மேல்வர்ணத்து ஸ்த்ரீகளைக்கெடுப்பவனுதலின் இழிவானவன். அவன் நாலுவர்ணங்களுக்கும் விலக்கானதும் நாலுவர்ணங்களாலும் இகழப்பட்டதுமாகிய ஜாதியை உண்டுபண்ணுகிறான். பிராம்மணஸ்த்ரீயினிடம் க்ஷத்திரியன் யாகத்திற்கும் உபநயனத்திற்கும் தகாததும் அரசர்களிடத்தில் ஸ்தோத்திரம்செய்வதே தொழிலாகவுடையதுமான ஸூதஜாதியையும், வைசியன் எல்லாராலும் ஒதுக்கப்பட்ட மௌத்கல்யமென்று

---

[1] பிரம்மக்ஷத்ரிய. [2] சூத்திரனுக்கு மேற்பட்டிருப்பதனால்.

[3] க்ஷத்ரிணி வைசிய சூத்திரப்பெண்கள்.

[4] வைசியப்பெண்ணும் சூத்திரப்பெண்ணும்.

[5] மேல்வர்ணத்துப்பெண்ணைப்புணரும் கீழ்வர்ணத்தோன்.

சொல்லப்பட்ட வைதேஹகஜாதியையும் சூத்திரன் பிசக்கொடியதும் கொலைத்தொழிலிலிருப்பதும் ஊருக்குவெளியில்வஸிப்பதுமாகியசண்டாளஜாதியையும் உத்பத்திசெய்கின்றனர். இதனால் இவர்கள் குலத்தைக்கெடுப்பவர்கள். புத்திமான்களிற்சிறந்தவனே! பிரபுவே! இப்போதுசொல்லப்பட்டவர்கள் வர்ணம்கெட்டுப்பிறந்தவர்கள். க்ஷத்திரியப்பெண்ணினிடம், வைசியனுக்கு வந்தியாக அரசர்சபைத்துதி செய்து ஜீவிக்கும்மாகதரும் சூத்திரனுக்கு மச்சங்களைக்கொல்லும் நிஷாதரென்னும்செம்படவரும் முறைதவறுதலினால் உண்டாகின்றனர். வைசியப்பெண்ணினிடம் ஸம்பந்தப்பட்டசூத்திரனுக்குத் தான் ஸம்பாதிக்கும்தனத்தினால்ஜீவிப்பவனும் பிராம்மணர்கள்தகுந்தினமுதலியவை வாங்கத்தகாதவனுமாகிய ஆயோகவனென்றுசொல்லப்பட்ட தச்சஜாதியான் பிறக்கிறான். இவர்களும் தங்கள்ஜாதிப்பெண்களிடத்தில் தங்கள்ஜாதிப்பிள்ளைகளையே உண்டாக்குகின்றனர். கீழ்ஜாதிப்பெண்களிடத்தில் தாய்ஜாதியைக்கொண்டு கீழ்ஜாதிப்பிள்ளைகளே பிறக்கின்றனர். நான்குவர்ணங்களுள்ளும் [1] இரண்டுவர்ணத்துப்பெண்களிடத்தில் தம்வர்ணத்துப்புத்திரனே பிறப்பதுபோலவே நான்குவர்ணத்திலும்சேராதவர்களுக்கும் தம்ஜாதிப்பெண்ணினிடத்திலும் அடுத்தகீழ்ஜாதிப்பெண்ணினிடத்திலும் பிறக்கும்புத்ரர்கள் தம்ஜாதிகளையாகிறார்கள். யாவரும் தம்மினமானபெண்களிடத்தில் தம்ஜாதிப்புத்ரர்களையே உண்டாக்குகின்றனர். ஒருவன்மனைவியிடத்தில் மற்றொருவன் சேருவதனால் இகழப்படும்புத்ரர்களே உண்டாகிறான். சூத்திரன் பிராம்மணப்பெண்ணினிடத்தில் நான்குஜாதிகளிலும்சேராதசண்டாளஜாதியை உண்டாக்குவதெப்படியோ அப்படியேதான் நான்குஜாதிகளுக்குப்விலக்கானவன் இன்னுமிலக்கான புத்ரனையுண்டுபண்ணுகிறான். இப்படி விலக்கானவர்களாலும் விலக்கானவர்க்கும்விலக்கானவர்களாலும் பிரதிலோமஜாதிகள் அதிகப்படுகின்றன. ஈனர்களிலும்ஈனர்கள் பிறக்கின்றனர். அதனால், வர்ணங்கள் [2]பதினைந்து. சேரத்தகாதபெண்ணை ஒருவன்சேருவதனால் ஜாதி

[1] தன்வர்ணம, அதற்கடுத்தகீழ்வர்ணம.

[2] க்ஷத்திரியனுக்கும வைசியனுக்கும் சூத்திரனுக்கும் மேற்குலத்துப் பெண்களிடம்பிறந்தவைகள் மூன்று. ஆயோகவனுக்கும் வைதேஹகனுக்கும் நிஷாதனுக்கும் சண்டாளனுக்கும் க்ஷத்திரியஜாதிப்பெண்களிடம்பிறந்தவை நான்கு. வைதேஹகனுக்கும் நிஷாதனுக்கும சண்டாளனுக்கும் மாகதஜாதிப்பெண்களிடம் பிறந்தவை மூன்று. வைதேஹகனுக்கு ஆயோகவப் பெண்ணினிடமும் நிஷாதஜாதிப்பெண்ணினிடமும் பிறந்தவை இரண்டு. சண்டாளனுக்கு நிஷாதஜாதிப்பெண்ணினிடம் பிறந்தது ஒன்று. நிஷாத

கள் கலந்துபோகின்றன. நான்குஜாதியிலும்சேராதவர்களில் மாக தர்களுக்கு ஸைரந்திரிகளிடம் அரசர்களுக்கு அலங்காரங்களும் கைகால்பிடிப்பதுமுதலான உபசாரங்களும் செய்யத்தெரிந்தவனும் அடிமையில்லாமலிருந்தும் அடிமைத்தன்மையினால் ஜீவிப்பவனுமான வன் பிறக்கிறான். ஆயோகவனுக்கு [1]க்ஷத்திரியஜாதிப்பெண்ணிடம் வலிபோட்டுஜீவிப்பவன் பிறக்கிறான். வைதேஹகனுக்கு மைரேயக னென்றுசொல்லப்பட்ட கள்விற்றுப்பிழைப்பவன் பிறக்கிறான். நிஷா தனுக்கு ஓடத்தினால் ஜீவிப்பவனும் அடிமைபுமாகிய மச்சரன் உண் டாகிறான். சண்டாளனுக்குப் பிணங்காப்பவனுகிய [2]ஸ்வபாகன் பிறக் கிறான். பாபியானமாகதஜாதிப்பெண் வைதேஹகனிடம் கொடிய வர்களும் கபடத்தினால் ஜீவிப்பவர்களுமாகிய [3]மாம்ஸன், [4]ஸ்வாது கரன், [5]கேஷவர்த்தன், [6]ஸைரிக்கன் என்று பெயர்பெற்றநால்வரைப் பெறுகிறான். நிஷாதனுக்குக் கொடியவனும் கபடத்தினால் ஜீவிப்பவ னும் கழுதைகட்டினவாகனங்களில் செல்லுகிறவனுமாகியமத்ரநாபன் பிறக்கிறான். சண்டாளனுக்குக் கழுதை குதிரை யானைகளைப்புசிப்ப வனும் பிணங்களின் ஆடையுடுப்பவனும் உடைந்தஓடுகளில்புசிப்ப வனுமாகியபுல்கஸன் பிறக்கிறான். வைதேஹகனுக்கு ஆயோகவ ஜாதிப்பெண்களிடத்தில் கூஸுத்தன், அந்திரன், ஊருக்குவெளியில் வஸிப்பவனுகிய [7]காராவரன் இம்மூன்றுஅனஜாதிகள் பிறக்கின்றன. நிஷாதஜாதிப்பெணணிடத்தில் வைதேஹகனுக்குக் [8]தோல்வேலைக் காரன் பிறக்கிறான். சண்டாளனுக்கு மூங்கில்வேலைசெய்பவனுகிய பாண்டுஸௌபாகனென்னும்ஜாதி உண்டாகிறது. நிஷாதனுக்கு

னுக்கும் சண்டாளனுக்கும் வைதேஹகஜாதிப்பெண்ணினிடம்பிறந்தவை இர ண்டு. 'ஸைரந்த்ரியினிடம, ஆயோகவனுக்கு வலிபோட்டுஜீவிப்பவனும் வைதேஹகனுக்கு மாதுகனும் நிஷாதனுக்கும் மத்ரனும் சண்டாளனுக்கு ஸ்வபாகனும், ஆயோகவியினிடம், வைதேஹகனுக்கு க்ரூரனும் நிஷாத னுக்கு மத்ரநாபனும் சண்டாளனுக்குப் புல்கஸனும், நிஷாதியினிடம், சண் டாளனுக்குப் பாண்டுஸௌபாகனும் அந்தேவஸாயியும் வைதேஹகனுக்குகூஸு த்ரனும், வைதேஹகஜாதிப்பெண்ணினிடம், சண்டாளனுக்கு ஸௌபாகனும் நிஷாதனுக்கு ஆஹிண்டிகனும், நிஷாதியினிடம் சூத்திரனுக்குக் குக்குடகனும், அம்பஷ்டையினிடம் வைதேஹகனுக்கு வேணனும் வ்ராத்யனும் பிறக்கின் றனர்' எனப்பதினேந்தாகக்கூறுவது பழையஉரை.

[1] வேறுபாடங்கொண்டு, 'ஸைரந்த்ரியினிடம்' என்பது பழையஉரை. [2] நாயைச்சமைப்பவன். [3] மாம்ஸம்விற்பவன். [4] ருசிபதார்த்தம்செய்பவன். [5] தேனெடுப்பவன். [6] வாசனைப்பொருள்செய்பவன். [7] சிறைகாப்பவன். [8] சக்கிலியன்.

வைதேஹகஜாதிப்பெண்ணிடத்தில் [1]ஆஹிண்டகனென்பவன் உண்டாகிறான். சண்டாளனுக்குச் சண்டாளத்தொழிலையே செய்பவனுகிய ஸௌபாகன் உண்டாகிறான். க்ஷத்ரியஜாதிப்பெண்ணுக்குச் சண்டாளனிடம் ஸ்மசானத்திலிருப்பவனும் ஜாதியில் சேராதவர்களாலும் சேர்க்கப்படாதவனுமாகிய [2]அந்தேவஸாயி என்பவன் பிறக்கிறான். இவ்வாறு தாய்தந்தையர்கள் வரைகடந்து நடப்பதனால் ஜாதிகள்கலந்து உண்டாகிறவர்கள் மறைவாயிருந்தாலும் வெளிப்படையாயிருந்தாலும் அவரவர்தொழில்களினால் அறியக்கூடியவர்கள். இவற்றுள் நான்குவர்ணங்களுக்குத்தாய் வர்ணதர்மங்கள் உள்ளன; மற்றவர்ணங்களுக்கில்லை. வர்ணதர்மங்கள் விட்டஜாதிகள் எண்ணில்லாதவை. யாகங்களில்லாமலும் ஸாதுக்களால் சேர்க்கப்படாமலுமிருப்பவர்கள் வர்ணங்களுக்கு வெளிப்பட்டவர்களாகி இஷ்டப்படி ஆண்பெண்கள் சேருவதனால் அவரவர்தொழிலுக்குத்தக்கபடியும் இருக்குமிடங்களுக்குத்தக்கபடியும் அநேகஇழிசனர் உண்டாகின்றனர்; நாற்சந்திகளிலும் ஸ்மசானங்களிலும் சிலமலைகளிலும் மரங்களினடிகளிலும் இருப்பு அணிகளைப் பூண்டுகொண்டும் தங்கள்தொழில்களைச் செய்துகொண்டும் வெளிப்படையாகவாசம்செய்வார்கள்; அலங்காரங்களையும் மற்றுமுள்ள கருவிகளையும்செய்து பசுக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் உதவிசெய்வார்கள்; ஸந்தேகமில்லை. ஆண்மைபிறந்தவனே! கொல்லாமை தயை பொய்யாமை பொறுமை தங்கள் சரீரத்தைவிட்டும் பிறரைக்காப்பது இவைதாம் ஜாதியிற்சேராதவர்களுக்கு நற்நடிக்குக்காரணமாகின்றன; அதில் எனக்கு ஸந்தேகமில்லை. புத்திசாலியானமனிதன் சாஸ்திரத்திலுபதேசித்தபடி ஆராய்ந்து தனக்குவிதிக்கப்பட்ட பெண்களிடத்தில் ஸந்ததிகளை உண்டாக்கவேண்டும். ஈனஜாதிகளிற்பிறந்தபுத்ரன் ஜலத்தில் நீந்தப்போகிறவனைக் கல்லமிழ்த்துவதுபோல அமிழ்த்திவிடுவான். உலகத்தில் தெரியாதவனையும் தெரிந்தவனையும் பெண்கள் காமத்துக்கும் குரோதத்திற்கும் உட்படுத்திக் கெட்டவழியில்கொண்டுபோகத் திறமையுள்ளவர்கள். புருஷர்களைக்கெடுப்பதென்பது பெண்களின் இயற்கை. தெரிந்தவர்கள் பெண்களிடத்தில் மிகப்பற்றுவைப்பதில்லை" என்றார்.

யுதிஷ்டிரர், "கலந்தஜாதியிற்பிறந்து வர்ணங்களிற் சேராதமனிதன் ஆரியனுயில்லாமலிருந்தும் ஆரியனைப்போலிருந்தால் நாம் எப்படி அவனை அறியலாம்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார். "கலந்தஜாதியில்பிறந்தவன் பலஇயற்கைகளுள்ளவனுயிருப்பான். பெரியோர்

[1] சமாசாரம்கொண்டுபோகிறவன்.

[2] எல்லைக்கோடியில் வஸிப்பவன்; இவனே பாண்டுஸௌபாகன்.

களால் அனுஷ்டிக்கப்பட்ட கர்மங்களைக்கொண்டு சுத்தஜாதியிற்பிறந்தவர்களை அறியலாம். தகுதியில்லாமையும் ஆசாரத்தவறுதலும் கொடிய செய்கையும் சாஸ்திரோக்தகர்மங்களில் மனமில்லாமையும் இவ்வுலகத்தில் கலந்தஜாதியிற்பிறந்தமனிதனைத் தெரிவிக்கின்றன. கலந்தஜாதியிற்பிறந்தவன் தகப்பன்குணங்கள் தாயின்குணங்கள் இரண்டையும் அடைந்திருப்பான். அவன் தன்னியற்கையை எவ்வகையிலும் அடக்க முடியாது ஒருவன் வடிவத்தில் எப்படியோ அப்படியேதான் குணங்களிலுமிருப்பான்; தாய்தந்தைகள் இருவரைப்போலவே பிறக்கிறான். புலியின் வீரியத்திற்குப்பிறந்தது புலியாவதுபோல மனிதன் தனது காரணத்தின் குணத்தைத்தான் அடைவான். குலமென்னும்பிரவாகமானது மறைந்துதான் ஜாதிஸங்கரமுண்டாகிறது. அந்தஜாதிஸங்கரத்தின்குணம் சிறிதோ பெரிதோ மனிதனுக்கு வந்தேசேருகிறது. ஆரியனைப்போலவே உருவமும் நடக்கையுமுள்ளவனுக்கப்படவழியிலிருப்பவனை ஸரியானவர்ணமென்றும் வேறுவர்ணமென்றும் அவனுடையகுணமே நிச்சயமாகத்தெரிவிக்கும். பலநடக்கைகளும் பலவிதத்தொழிலில் ஊக்கங்களுமுள்ள மனிதர்களுக்கு அவர்களின் ஒழுக்கத்திற்குத்தகுதியான ஜாதியானது உலகத்தில் மிகப்பொருந்துகிறது. அது மாறுவதில்லை. இவ்வுலகத்தில் அவன்தேகமானது இயற்கைக்குவிலக்காவதில்லை. உயர்ந்ததும் நடுத்தரமும் தாழ்ந்ததுமான இயற்கைகள் உண்டாகின்றன. ஸமமானகுணங்களுள்ள தேகந்தான் விருத்தியாகிறது. ஒழுக்கமில்லாதவன மேல்வர்ணமாயிருந்தாலும் அவனைப் பூஜிக்கலாகாது. தர்மந்தெரிந்து நல்லொழுக்கத்தோடிருக்கும் சூத்திரனையும் பூஜித்தல்வேண்டும். ஒருமனிதன் நல்லவையும் கெட்டவையுமான கர்மங்களினால் தன்னுடைய குணத்தையும் நடக்கையையும் குலத்தையும் தெரிவிக்கிறான். அப்படியே மறைந்துபோன தன்குலத்தையும் ஒருமனிதன் தன்செய்கைகளினால் பிரகாசப்படுத்துகிறான். கலந்தவையும் கலவாதவையுமான இந்தஎல்லாச்சாதிகளிலும் மனிதன் தான் புத்ரோத்பத்தி செய்யத்தகாதஜாதியை விலக்கவேண்டும்" என்றார்.

எண்பத்துநான்காவது அத்யாயம்.

தான தர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(பன்னிருவகைப் பிள்ளைகளைப்பற்றியவை முதலியன.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! கௌரவர்தலைவரே! வர்ணங்களைப் பற்றித் தனித்தனியாக நீர் சொல்லவேண்டும். எந்தப்பெண்ணிடத்தில் யாருக்கு என்னவிதமாகப் புத்ரர்கள் பிறக்கிறார்கள்? அவர்கள் யார்? புத்திரோத்பத்தி செய்கிறவர்களைப்பற்றிச சொல்வேறுபாடுகள்

பலவகைகளாகக் கேட்கப்படுகின்றன. அரசரே! இந்தவிஷயத்தில் தெளிவில்லாத எங்களுக்கிருக்கும் ஸந்தேகத்தை நீர் போக்கக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"முக்கியமானபுத்ரன் தானேகவோபிருப்பவனென்று தெரிந்து கொள்ளவேண்டும். மற்றப்புத்ரர்கள் பலவகையாகிறார்கள். மந்த்ரத்தினல் நிஷேகஸம்ஸ்காரம்பெற்ற தனதுமனைவியினிடத்தில் தனக்குண்டாகும்புத்ரன் முதன்மையாகவிதிக்கப்பட்ட ஔரஸபுத்ரனென்று அறியவேண்டும். அக்நியையும் ப்ரம்மதேவரையும்பூஜித்து இவள் புத்ரிகையாயிருக்கவேண்டுமென்று சொல்லியாவது நினைத்தாவது ஒருவரனுக்குக் கொடுக்கப்பட்ட பெண்ணின்வயிற்றில் பிறந்தபுத்ரன் அந்தப்பெண்ணின்பிதாவுக்குப் புத்ரிகாபுத்ரனாகிறான். இறந்துபோனவன் ஆண்மையில்லாதவன் ஜாதிதவறினவன் இவர்களின்மனைவிகளிடத்தில் அந்தப்புருஷன் அனுமதியினல் தர்மத்தை யனுஸரித்து உண்டாக்கப்பட்டபுத்ரன் க்ஷேத்ரஜனென்னப்படுகிறான். ஒருவனுக்குப் புத்ரனில்லாமற்போனகாலத்தில் ஒரேஜாதியிற்பிறந்தவனத்தப்புத்ரனைத் தாய்தந்தையர்கள் அன்புடன் தாரைவார்த்துக் கொடுக்கின்றனரோ அவன் வாங்கினவர்களுக்குத் தத்தபுத்ரனென்று அறியவேண்டும்.[1] குணமும் குற்றமுந்தெரிந்தவனும் புத்ரனுக்குரியகுணங்களுடையவனும் ஒரேஜாதியிற்பிறந்தவனுமாகிய ஒருவனைத் தனக்குப்புத்ரனென்று ஒருவன் அபிமானித்து எடுத்துக் கொள்வானாயின் அவன் அவனுக்கு க்ருத்ரிமபுத்ரனென்றறியத்தக்கவன். ஒருத்திக்கு ரஹஸ்யமாக ஒருபுத்ரன்பிறந்து இன்னவனுக்குப் பிறந்தானென்று தெரியாமலிருந்தால் அவன் எவனுடையமனைவிக்குப் பிறந்தானோ அவனுக்கே கூடஜனென்னும் புத்ரனாவான். ரதப்நக்ஷையிருவரினலுமாவது இருவரில் ஒருவரால்மட்டினுமாவது விட்டுவிடப்பட்டவனை மற்றொருவன் புத்ரனாக எடுத்துக்கொள்வானாயின் அவனுக்கு அந்தப்புத்ரன் அபவித்தபுத்ரனென்றுசொல்லப்படுகிறான். விவாகமாகாதபெண் தன்தந்தையின்வீட்டிலிருக்கும்போதே ரஹஸ்யமாகப்புத்ரனைப்பெறுவாளாயின் அந்தக் கன்னிகைக்குப் பிறந்தபுத்ரனை அவனைமணம்செய்பவனுக்குக் கானீனபுத்ரனென்று சொல்லுவார். கர்ப்பமாயிருக்கும் ஒருத்தி தெரிந்தோ தெரியாமலோ விவாகம்செய்யப்பட்டால் அந்தப்புத்ரன் அவளைவிவாகம்செய்தவனுக்கு ஸஹோடபுத்ரனென்று சொல்லப்படுகிறான். ஒருவன் தனக்குப்புத்ரன்வேண்டுமென்று ஒருபிள்ளையைத்

[1] புண்ணியபாபங்கள்.

தாய்தகப்பன்களிடமிருந்து விலக்குவாங்குவானையின் அந்தப்புத்ரன் அவனுக்கு இனமாயிருந்தாலும் இராவிட்டாலும் க்ரீதபுத்ரனென்று சொல்லப்படுகிறான். கணவனல்விடப்பட்டோ விதவையாயோ இருக்கும் ஒருத்தி தன்னிச்சையாய்த் திரும்பவும் மற்றொருவனுக்கு மனைவியாகிப் புத்ரனைப்பெறுவாளாயின் அந்தப்புத்ரன் பௌனர்ப்பவனென்று சொல்லப்படுகிறான். அவள் [1] அக்ஷதயோனியாயிருந்து மற்றொரு வனையடைந்தால் [2] அப்புதிய கணவனுக்கு அவளுக்கு விவாகஸம்ஸ்காரங்கூடும். அவள் வேறுஒருவனைச்சேர்ந்தபிறகு திரும்பவும் முன் கணவனிடமேவந்தால் அவளுக்கு அவனுடன் திரும்பவும் விவாகஸம்ஸ்காரம்கூடும். தாய்தந்தையர் இல்லாமலாவது தாய்தந்தையர்களால் குற்றமின்றிவிடப்பட்டாவது தன்னையே ஒருவனுக்குப்புத்ரனுக்கொடுப்பவன் ஸ்வயந்தத்தனென்றுசொல்லப்படுகிறான். பிராம்மணன் காமத்தினால் சூத்ரப் பெண்ணினிடம் உண்டாக்கினபுத்ரன் உயிருடனிருக்கும்பிணம்போன்றவனுதலின் பாரசவனென்றுசொல்லப்படுகிறான். தாலியினிடத்திலும் தாஸனுடையதாலியினிடத்திலும் சூத்ரனுக்குப்பிறக்கும்புத்ரன் பிதாவின்அனுமதிபெற்றானையின் ஸொந்தப்புத்ரர்களுடன் ஸமபாகம் எடுத்துக்கொள்ளலாமென்று தர்மம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. கூடத்ரஜன் முதலாகச் சொல்லப்பட்ட இப்பதினைருபுத்ரர்களையும் சாத்தமுதலானகிரியைகள் லோபியாமலிருக்கிறதற்காகப் புத்ரனுக்குப்பிரதிநிதிகளென்று தெரிந்தவர்கள் கூறுகின்றனர். ஒரு பிதாவுக்குப்பிறந்த ஸகோதரர்களில் ஒருவனுக்குப்புத்ரனிருப்பானையின் அவனுலேயே அந்தச்சகோதரர்களனைவரும் புத்ரனுள்ளவராவாரென்று மனு சொல்லியிருக்கிறார். ஒருவனைக்கணவனுக அடைந்த அநேகம்பெண்களில் ஒருத்திக்குப்புத்ரனிருந்தால் அவர்களனைவருக்கும் அவனே புத்ரனுகிறானென்றும் மனு சொல்லியிருக்கிறார். ஔரஸன், தன்பாரியையினிடத்தில் தன்அனுமதியினுல் பிறந்தவனுகிய நியுக்தஜன், அனுமதியில்லாமலே அன்னியனுக்குப் பிறந்த ப்ரஸ்ருதஜன், பதிதனுக்குத் தன்னுடுகூடவேசேர்ந்திருக்கும் மனைவியினிடத்திற்பிறந்தபுத்ரன், தத்தபுத்ரன், க்ருத்ரிமபுத்ரன், ஸஹோடன், ஆறு அபத்வம்ஸஜர்கள், கானீனர்கள், அபஸதர்கள் ஆகிய இவர்கள் புத்ரர்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றனர். பாரதனே! அவர்களைத் தெரிந்துகொள் " என்றார்.

[1] புருஷஸம்பந்தமில்லாதவன். [2] 'பௌனர்ப்பவேந' என்பது மூலம்.

யுதிஷ்டிரர், "அபத்வம்ஸஜர் அறுவர் யார்? அபஸதர் யார்? இவற்றையெல்லாம் எனக்குத் தெளிவாக நீர் உரைக்கக்கடவீர்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார். "பாரதனே! யுதிஷ்டிரனே! பிராம்மணனுக்குக் கீழ்மூன்றுவர்ணத்துப் பெண்களிடம் பிறந்தபிள்ளைகளும் க்ஷத்திரியனுக்குக் கீழ் இரண்டு வர்ணத்துப்பெண்களிடத்தில் பிறந்த பிள்ளைகளும் வைசியனுக்குக் கீழ்ஒருவர்ணத்துப் பெண்ணினிடம் பிறந்தபிள்ளையும் இரண்டுவர்ணங்கள்கலந்துஉண்டானவர்கள். இவ்வறுவர் அபத்வம்ஸஜர். அபஸதர் அறுவரையும் கேள். சூத்ரனுக்குப் பிராம்மணக்ஷத்திரியவைசியப்பெண்களிடப்பிறந்த ஸம்ஸ்காரமற்ற சண்டாளர்களாகிய அபஸதர்கள்மூவர். வைசியனுக்குப் பிராம்மணப்பெண்ணினிடத்திலும் க்ஷத்திரியப்பெண்ணினிடத்திலும்பிறந்தவர் முறையே மாகதன் வாபகனென்னும் அபஸதர்இருவர். க்ஷத்திரியனுக்குப் பிராம்மணப்பெண்ணினிடம்பிறந்த ஸூதனென்ற அபஸதன் ஒருவன். இவ்வறுவரும் அபஸதரென்னப்படுகிறார். அரசனே! இப்புத்ரர்களைப் பொய்யாகச்செய்யமுடியாது" என்றார். யுதிஷ்டிரர், "பிதாமஹரே! சிலர்மட்டும் க்ஷத்ரஜனைப் புத்ரனென்றுசொல்லுகின்றனர். வேறுசிலர் தம்வீரியத்திற்குப்பிறந்தவனையே புத்ரனென்கிறார்கள். இவ்விருவரும் ஒருவனுக்கு ஸரியானபுத்ரர்களா? அதை எனக்குச் சொல்லக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர், "தன்வீரியத்திற்குப்பிறந்தவனும் புத்ரனுவான். தன்க்ஷேத்ரத்திற்பிறந்தவனும் புத்ரனுவான். ஸஹோடன் சாஸ்திரவிதியைக்கடந்தே புத்ரனுகிறனென்பதை நீ என்னிடம் தெரிந்துகொள்வாயாக" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "தன்வீரியத்திற்குப்பிறந்தவன் தன்புத்ரனென்பதை அறிந்திருக்கிறோம். க்ஷேத்ரத்திற்பிறந்தவன் புத்ரனுவது எப்படி? சாஸ்திரவிதியைக்கடந்ததனால் உண்டான ஸஹோடனைப் புத்ரனென்றுநினைப்பதெப்படி?" என்றுகேட்டார். பீஷ்மர், "அரசனே! யுதிஷ்டிர! ஒருவன் தன்வீரியத்தினால் புத்ரனைஉண்டாக்கி ஏதோ ஒருகாரணம்பற்றி அப்புத்ரனை விட்டுவிடுவானுயின் அப்புத்ரன் விஷயத்தில் வீரியம்காரணமாவதில்லை. அந்தப்புத்ரன் அந்தப்பெண்ணின்கணவனுக்கே உரியவன். அரசனே! புத்ரனைவிரும்புகிறஒருவன் புத்ரனுக்காகவே ஒருகர்ப்பிணியை விவாகம்பண்ணிக்கொள்வானுயின் அந்தவிஷயத்தில் தனக்குப்பிறந்தவன் தான் புத்ரனென்பதில்லை. பரதசிரேஷ்டனே! ஒருவனுடையமனைவியினிடத்தில் மற்றொருவனுக்குப்பிறந்தபுத்ரன் அடையாளங்களாலேயே அறியப்படுகிறான். ஒருவனுடைய உருவத்தை மறைக்கமுடியாது. அது ப்ரத்யக்ஷமாகக்காணப்படுகிறது. சில இடங்களில் தான் எடுத்

துக்கொள்வதனாலேயே கிருத்ரிமபுத்ரனென்றுகாண்கிறோம். யுதிஷ்டிர! அவன் விஷயத்தில் பீஜமும் காரணமன்று; க்ஷேத்திரமும் காரணமன்று" என்றுசொன்னர். யுதிஷ்டிர், "பாரதரே! அபிமானித்து எடுத்துக்கொண்டதினாலேயே அறியப்படுகிறவனும் வீரியமும் க்ஷேத்திரமும் காரணமாகக்காணப்படாமலிருப்பவனுமாகிய க்ருத்ரிமபுத்ரன் எப்படிப்பட்டவன்?" என்றுகேட்டார். பீஷ்மர், "தாய்தந்தையர்களால் வழியில்போட்டுவிடப்பட்ட பிள்ளையை ஒருவன்வளர்க்க அவன்தாய் தந்தைகள் இன்னரென்று தெரியாமலுமிருக்குமாயின் அவன் வளர்ப்பவனுக்குக் கிருத்ரிமபுத்ரனாகிறன். யஜமானனில்லாதசொத்துக்கு அது யாருடைய அனுபவத்தில் இருப்பதாகக் காணப்படுகிறதோ அவன்தானே அதிகாரி? எந்தவர்ணத்தான் அந்தப்புத்ரனை வளர்க்கிறானோ அந்தவர்ணத்தானாகவே அந்தப்புத்ரனாகிறன்" என்றுசொன்னர். யுதிஷ்டிர், "பிதாமஹரே! அவனுக்கு உபநயனமுதலிய ஸம்ஸ்காரங்களை எப்படிச்செய்யவேண்டும்? அவனுக்குக் கன்னிகாதானம்செய்வதெப்படி? அதனை எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர். "வளர்ப்பவன் தன்னைப்போலவே அவனுக்கு ஸம்ஸ்காரம்செய்யவேண்டும். தாய்தந்தைகளால் விடப்பட்டவன் தன் யஜமானனுடையவர்ணத்தைச் சேர்ந்தவனேயாகிறன் தர்மந்தவறுதவனே! யுதிஷ்டிரனே! ஆதலால், போஷிப்பவனுடைய கோத்திரத்தில் பிறந்தவனுக்குச்செய்யும் ஸம்ஸ்காரத்தையே அவனுக்குச்செய்யவேண்டும். அந்தவர்ணத்துக் கன்னிகையையே அவனுக்குக்கொடுக்கவேண்டும். மாதாவின்வர்ணம நிச்சயிக்கப்பட்டிருந்தால் உபநயனஸம்ஸ்காரமசெய்வதற்கு அவள் வர்ணமும் கோத்திரமுமேயாகும். கானீனனும் ஸஹோடனும் பாவத்தினால்வந்த புத்ரர்களொன்றே அறியவேண்டும். அவர்களுக்கும் ஸரியானபுத்ரர்களுக்குப்போலவே உபநயநமுதலான ஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டுமென்பது நிச்சயம். பிராம்மணர்முதலானவர் க்ஷேத்திரஜனாயினும் அபஸதனாயினும் ஸஹோடனாயினும் அந்தப்புத்ரர்களுக்கும் தங்களுக்குரிய ஸம்ஸ்காரங்களையே செய்யவேண்டும். [1]தர்மசாஸ்திரங்களில் வர்ணங்களைப் பற்றி இந்தநிச்சயந்தான் காணப்படுகிறது. இவற்றையெல்லாம் உனக்குச்சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?" என்றுசொன்னர்.

[1] அதிகபாடமான அரை சுலோகம் விடப்பட்டது.

எண்பத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(ஸஹஸ்ரவாஸஸ்ஸென்னுந்தையும் பற்றிய கியவனர்கதை.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பார்ப்பதனலும் கூடவஸிப்பதனலும் உண்டாகும் ஸ்நேகம் எவ்வகையென்பதையும் கோக்களின் பெரிய மஹிமையையும்பற்றி எனக்கு உரைக்கக்கடவீர்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"சிறந்தபராக்கிரமமுள்ளவனே! ஆ! ஆ! நகுஷனுக்கும் ச்யவனமகரிஷிக்கும்நடந்த ஸம்பாஷணத்தைப்பற்றிய ஒருபூர்வகதையை உனக்குச்சொல்வேன். பரதசிரேஷ்டனே! முற்காலத்தில் ப்ருகுவம்சத்தவரான ச்யவனமகரிஷி நீருக்குள்வஸித்துக்கொண்டு பெருந்தவம் செய்யத்தொடங்கினர். அம்முனிவர் கர்வத்தையும் கோபத்தையும் மகிழ்ச்சியையும் துயரத்தையும்ஒழித்துப் பன்னிரண்டுவருஷகாலம் ஜலத்தில்வஸித்துக்கொண்டு தவம்செய்தார். ஜலசரங்களான பிராணிகளெல்லாவற்றிற்கும் சந்திரன்போல இனியஅம்மகரிஷி எல்லாப் பிராணிகளிடத்தும் உண்மையானபெரியநம்பிக்கையை வைத்தார்; ஸ்நானம்செய்தும் தேவதைகளைநமஸ்கரித்தும் கங்கையமுனையிரண்டும் சேருமிடத்தில் கட்டைபோல ஜலத்தில் முழுகியிருந்தார்; காற்றின் வேகம்போல மிக்கபயங்கரமும் அச்சத்தைத்தரும்ஒலியுள்ளவையுமான கங்கையமுனை நதிகளின்வேகத்தைத் தலையினல்தாங்கினர். கங்கையும் யமுனையும மற்றுமுள்ளநதிகளும் தடாகங்களும் அம்முனிவரைப் பிரதக்ஷிணம்செய்தன. அவரைத் துன்பப்படுத்தவில்லை. பரதசிரேஷ்டனே! சிறந்தஞானமுள்ள அம்மகாமுனிவர் மரம்போல நீருக்குள் படித்தார்; பிறகு, நேராக நின்றார். அவர் ஜலத்தில் வஸிக்கும்பிராணிகளுக்கெல்லாம் காட்சிக்கினியவராயிருந்தார். அப்பொழுது மீன்கள் மனங்களித்து அவரை முகர்ந்தன. அவருக்கு அந்தஜலவாஸத்திலேயே பெருங்காலம் கடந்துபோயிற்று. சிறந்தபராக்கிரமமுள்ளவனே! பிறகு, ஒருநாள் ஒருவேளையில் மீன்பிடித்து ஜீவிப்பவர்கள் வலைகளைக்கையினலெடுத்துக்கொண்டு அவ்விடத்திற்கு வந்தனர். தேகப்பயிற்சியுள்ளவர்களும் பலமும் பராக்கிரமமுமுள்ளவர்களும் தண்ணீரில்நடப்பவர்களும் வலைவலையில் தவறுதவர்களுமாகிய செம்படவர் அநேகர் அவ்விடத்தில் மீன்பிடிக்க எண்ணங்கொண்டு அங்கேவந்தனர். பரதசிரேஷ்டனே! அவர்கள் புதுக்கயிறுகளினல் பின்னப்பட்ட உறுதியானவலையைப் போட்டனர். பிறகு

மச்சங்களைத் தூக்கியிழுத்தனர். அப்போது, மச்சங்களைவிரும்பின அந்தச்செம்படவர்கள் அநேகவுபாயங்களினால கங்கையமுனைகளின் ஜலத்தை வலையினல் மூடிவிட்டனர். புதுக்கயிறுகளினற்பின்னப்பட்ட தும் அந்தஜலத்திற்குப் போதுமான அகலமும நீளமுமுள்ளதுமான அவாகளின்வலை முழுதுமபரவிறது. பிறகு, அவாகளனைவரும் ஜலத [1]விருந்து மிகப்பெரியதும வலியதுமான அந்தவலையை நன்றாக முறு கிஇழுத்தனர். அவாகள சிறிதுமபயபபடாதவாகளாகவும உற்சாக முளளவர்களாகவும ஒருவாால்ஒருவாதாங்கப்படடவாகளாகவும அங் குள்ள மரசங்களையும மற்றுமுளள ஜலஜந்துக்களையும கட்டியிழுத் தனர். மஹாராஜனே! அபபடிபே மரசங்களால சூழபபட்ட பருத வமசபுதரான சயனனையும தறசெயலாக வலையினல் இழுத்தனர். ஆற்றின்பாகிகள உடமபெல்லா ம ஓடடிககொண்டவரும [1]செமமட் டைநிறமான மீசையையும ஜடையையுதரித்தவரும தேகத்தில் கிளிஞ்சில்கள் நகங்கள்போல ஒட்டிககொண்டிருபபதனல விசித்ர மான பன்றிமுடகள பதிந்திருபபவாபோன்றவரும வலையினல் வெளியில எடுக்கபபட்டவரும வேதாங்களில கரைகண்டவருமான அந்த முனிவரைக் கண்டபோதே அந்தசெமபடவாகளனைவரும கைகூப் பித தலைவணங்கித தரையிலவிழுந்தனர். விழலதினலும பயத்தி னலும வலையையிழுந்ததனலும தரையிலவந்ததனலும மீன்கள் இற நதுபோயின. மீன்கள வதமசெய்பபட்டதைக்கண்ட அமமுனிவர் தயைமேற்கொண்டு அழகாக பெருமூசசெறிந்துகொண்டிருந்தனர். செமபடவாகள, 'மகாமுனிவரே! நாங்கள தெரியாமற்செய்த பாவத திற்கு எங்களமேல அனுகரகமசெய்யகடவீர நாங்கள உமக்கு என்னவிருபபதைச செயயகடவோம? அதை 'எங்களுக்குக் கட டளையிடும' என்று வேணடினர். இவவாறு அவாகளால் சொல்லப பட்ட மீனகளின் நடுவிலிருந்த சவயனர, 'இபபோது என்னுடைய முக்கியமான விருபபதைத நீங்கள ஊகக்கதுடன கேளுங்கள. உயிர விடுவதையோ வலையிலிருந்து விடுபடுவதையோ இமமசசங்களோடு கூடதான் நான் அனுபவிபபேன். கூடஇருந்தசினேகதினல ஜலத் தில்வசித்த மசசங்களை விட நான துணியவிலலை' என்றுசொன்னர். அவரால இவ்வாறுசொலலபபட்ட அந்தசெமபடவரனைவரும பயத்தி னல் மிகவும நடுக்கமடைந்து முகங்கருகி நகுஷனுக்கு அதைத் தெரி வித்தனர்.

[1] 'ஹரி' எனபது மூலம் ; பச்சை யெனறுகொள்ளலாம.

எண்பத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(சியவனர் கதைத் தொடர்ச்சி.)

அந்த சியவனர் அவ்வாறு இருப்பதைக்கேட்டநகுஷன், அமைச்சர்களோடும் புரோஹிதர்களோடும் அவரிருக்குமிடத்திற்கு விரைவாகச் சென்றான். அவ்வரசன் சாஸ்திரப்படி சுத்தியைச்செய்துகொண்டு மகாத்மாவானசியவனருக்குக் கைகூப்பிவணங்கித் தன்னைத் தெரிவித்துக்கொண்டான். அரசனே! அந்தஅரசனுடையபுரோஹிதர் விரதந்தவறுதலரும் தேவதைபோன்றவரும் மகாத்மாவுமானசியவனரைப் பூஜித்தார். நகுஷன், 'பகைமைபொருந்திய பிராம்மணரைத்தமே! உமக்கு எந்தவிருப்பத்தை நான் செய்யக்கடவேன்? அதை எனக்குக் கட்டளையிடும். அது செயற்கரியதாயிருந்தாலும் செய்வேன்' என்றுகேட்டான். அதற்கு, சியவனர், 'மரசங்களால் ஜீவிக்கும்செம்படவர்கள் மிக்கவருத்தப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு மரசங்கள்விற்குவிலைகளுடன் எனக்குவிலைகொடு' என்றுசொன்னர். நகுஷன், 'புரோஹிதரே! இந்தப்பகவானுக்குவிலையாக ஆயிரம்பொன் செம்படவர்களுக்குக் கொடுக்கவேண்டும்; அல்லது, இந்தசியவனமகரிஷி என்னசொல்லுகிறார்?' என்றுசொன்னான். சியவனர், 'அரசனே! தன்விலையைத் தான்சொல்லலாகாது. அதை உலகம் சிலாகிக்காது. எனக்கு ஆத்மஸ்துதியை செய்யவும் இஷ்டமில்லை. ஆதலால், ஆயிரம்பொன்னுக்குத் தகுதிபுள்ளவனல்லேனென்பதைமட்டும் நான் சொல்வேன்; அல்லது, நீ என்ன நினைக்கிறாய்? எனக்குச் சரியானவிலையைக்கொடு; உன்புத்தியினால் நிச்சயம் செய்' என்றுசொன்னர். நகுஷன் புரோஹிதரைப்பார்த்து, 'பிராம்மணரே! செம்படவர்களுக்கு நூறாயிரம்பொன்கொடும்; அது இந்தப்பகவானுக்கு விலையாகுமா? அல்லது, நீர் வேறுஎன்ன நினைக்கிறீர்?' என்றுகேட்டான். சியவனர், 'ராஜசிரேஷ்டனே! நூறாயிரம் பொன்களுக்கு நான் ஈடாகமாட்டேன். ஸரிவிலை கொடுக்கவேண்டும். மந்திரிகளுடன்கலந்து ஆலோசிக்கக்கடவாய்' என்றுசொன்னர். நகுஷன், 'புரோஹிதரே! கோடிப்பொன் விலையாகச் செம்படவர்களுக்குக்கொடும். அதுவும் விலையாகாவிடின் இன்னும் அதிகமாகவுங் கொடுக்கலாம்' என்றுசொன்னன். சியவனர், 'சிறந்தபாரத்

கிரமமுள்ள அரசனே! கோடிக்கும் அதற்குமேற்பட்டதற்கும் நான் தகுந்தவனல்லேன். எனக்குத்தகுதியானவிலையைக் கொடுக்கவேண்டும். பிராம்மணர்களுடன் ஆலோசிப்பாயாக' என்றுசொன்னர். நகுஷன் புரோகிதரைப்பார்த்து, 'பிராம்மணரே! பாதிராஜ்யத்தையாவது முழுராஜ்யத்தையுமாவது செம்படவர்களுக்குக் கொடுக்கலாம். இதுஸரியென்று நான் நினைக்கிறேன். நீர் வேறுஏதாவதுநினைக்கிறீரா?' என்றுகேட்டான். ச்யவனர், 'வேந்தனே! பாதிராஜ்யத்தையும் முழுராஜ்யத்தையும் (எனக்கு) நூற்ற விலையாக்க நான் தகுந்தவனல்லேன். ஸரியானவிலை கொடுக்கப்படவேண்டும். ரிஷிகளுடன் கூட ஆலோசிக்கக்கடவாய்' என்றுசொன்னர். மகரிஷியின் சொல் லைக்கேட்டுத் துயரத்திலுள்ளானங்குன்றினநகுஷன் மந்திரிகளோடும் புரோகிதரோடுங்கூடச் சிந்தித்தான். அப்போது, காட்டில்ஸஞ்சரிப்பவரும் கிழங்குகளையும் கனிகளையும்உண்பவரும் பசுவினவயிற் றிற்பிறந்தவருமாகிய வேறுஒருமுனிவர் நகுஷன்சமீபத்திலிருந்து கொண்டிருந்தார். அந்தப்பிராம்மணரைக்குறித்து அந்தவேந்தனவிளித்து, 'அந்தர்யவனர் உடனே திருப்தியடையும்படி நான் செய்வேன். நான் வேடிக்கையிலுங்கூடப் பொய்பேசேன். மற்றப்போது ஏது? உனக்கு நான் எதைச்சொல்வேனோ அதை நீ ஆக்ஷேபியாமற் செய்யவேண்டும்' என்றுசொன்னர். நகுஷன், 'மகரிஷியே! எல்லாந்தெரிந்தநீர் இந்தப்ருகுவம்சத்துமகரிஷிக்குத் தகுந்தவிலையைச் சொல்லக்கடவீர்; என்னையும் என்தேசத்தையும் என்குலத்தையும் காப்பாற்றுவீராக. இந்தப்பகவான் கோபித்தாராயின் மூவுலகங்களையும் அழித்துவிடுவார். தவமில்லாமல் கைவண்மையையேஆதாரமாகவுடைய என்னைருவனை அழிப்பது எவ்வளவு? அமைச்சரோடும் ரித்விக்குகளோடும் ஆழமானநீரில் மூழ்கிப்போனஎனக்கு நீர் தெப்பமாகக்கடவீர்; விலையை நிச்சயப்படுத்தும்' என்றுகேட்டான். கோவினிடத்திற்பிறந்தவரும் சிறந்ததவவன்மையுள்ளவருமாகிய அம்முனிவர் நகுஷன்சொல்லைக்கேட்டு, நகுஷனும் அவன்மந்திரிகளனைவரும் மகிழும்படி அவ்வரசனுக்குச் சொல்லலானர். 'பிராம்மணர்குலமும் கோக்குலமும் ஒன்றே இரண்டாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. ஒருகுலத்தில் மந்திரங்களும் மற்றொருகுலத்தில் நெய்முதலிய ஹோமத்திரவியங்களுமிருக்கின்றன. புருஷஶ்ரேஷ்டனை மகாராஜனே! வர்ணங்களிற்சிறந்தவரான பிராம்மணர்களுக்கும் கோக்களுக்கும் விலையில்லை. ஆதலால், கோவை விலையாகஏற்படுத்தலாம்' என்றர்.

தர்மராஜனே! நகுஷன் அம்மகரிஷியின் சொல்லைக்கேட்டபிறகு மந்திரிகளோடும் புரோகிதர்களோடும் மிக மகிழ்வுற்று ப்ருகுபுத்ரரும் உக்ரமானதவமுள்ளவருமான ச்யவனரிடத்திற்சென்று சொல்லினுலேயே அவர் ஸந்தோஷப்படும்படி, 'ஓ! பார்க்கவரே! பிரம்மரிஷியே! நீர் கோவினுல் கிரயத்துக்குவாங்கப்பட்டீர்; எழுந்திரும்; எழுந்திரும். தர்மிஷ்டரிற்சிறந்தவரே! உமக்கு இதுவிலையென்று நான்நினைக்கிறேன்' என்றுசொன்னன். ச்யவனர், 'அரசர்க்கரசே! இதோ எழுந்திருக்கிறேன். குற்றமற்றவனே! நான் உன்னுல் ஸ்ரியானவிலைக்குவாங்கப்பெற்றேன். தர்மந்தவறுதவனே! இவ்வுலகத்தில் கோக்களுக்கொப்பானதனம் ஒன்றையும் நான் பார்க்கவில்லை. வீரனுன அரசனே! கோக்களே வாயினுற் சொல்வதும் காதினுல்கேட்பதும் கண்ணுல்பார்ப்பதும் தானஞ்செய்வதும் எல்லாப்பாவங்களையும்போக்கி க்ஷேமங்களைத்தருவனவாகச் சொல்லப்படுகின்றன. கோக்கள்தாம் எப்போதும் லக்ஷ்மிக்குஆதாரமானவை. கோக்களினிடம் பாவமில்லை. மனிதர்களுக்கு எப்போதும் அன்னமும் தேவர்களுக்குச் சிறந்தஹவிஸும் கோக்களே. ஹோமமும் யாகமும் எப்போதும் கோக்களைப்பொறுத்திருக்கின்றன. யாகத்தைநடத்துகின்றவைகளும் கோக்களே. யாகத்தின்பயனும் கோக்களே. தேவலோகத்தின் அழிவில்லாத ஸ்வர்க்கஸுகமாகிய அமிருதத்தைப்பெருக்குகின்றவையும் வகிக்கின்றவையும் கோக்களே. இவை அம்ருதத்திற்கு ஆதாரமாயிருப்பதனுல்தான் எல்லாலோகங்களாலும் நமஸ்கரிக்கப்படுகின்றன. இப்பூமியில் கோக்கள் ஒளியிலும் உருவத்திலும் பாவத்தையெரிக்கின்ற அக்நியைப்போன்றவை. மனிதர்களுக்குக் கோக்களே மிகப்பெரியமகிமை. சுகத்தைக்கொடுப்பவையும் அவையே. பசுக்கூட்டம், எந்தஇடத்தில் மூச்சுவிடுகிறதோ அந்தத்தேசத்தையே விளங்கச்செய்கிறது; அந்தத்தேசத்தின்பாவத்தைப் போக்குகிறது. பசுக்கள் ஸ்வர்க்கத்திற்குப் படிகள். அவை ஸ்வர்க்கத்திலும் பூஜிக்கப்படுகின்றன. கோக்கள் நினைத்தவற்றையெல்லாம் கறக்கும்தேவதைகள். அவற்றிற்குமேல் சிறந்தது மற்றஒன்றுமில்லை. பரதசிரேஷ்டனே நகுஷனே! கோக்களிடத்திலுள்ள இந்தமகிமையை நான் உனக்குச்சொன்னேன். இஃது அவற்றின்சிறப்பில் சிறுபான்மைசொன்னது; முழுவதும்சொல்லமுடியாது' என்றுசொன்னர். செம்படவர்கள், 'முனிவரே! எங்களைப் பார்த்தும் எங்களுடன் பேசியுமிருக்கிறீர். ஸாதுக்களுக்கு எழுசொற்களில் ஸ்நேகம் உண்டாகிறது. பிரபுவே! எங்களுக்கு அனுக்ரகம்செய்யீராக. தர்மாத்மாவே! ஹவிஸுகளெல்லாவற்றையும்

அக்கினி புசிப்பது எப்படியோ அப்படியே நீரும் (எவ்வாவற்றையும் எரிக்கும்) சக்தியுள்ள புருஷவடிவமான அக்நியாயிருக்கிறீர். வித்வானே! உங்களை நாங்கள் நமஸ்கரித்துப் பிரார்த்திக்கிறோம். எங்களை அணுக்கிரகிப்பதற்காக இந்தக்கோவை எங்களிடம் நீங்கள் வாங்கிக்கொள்ளவேண்டும். காப்பாற்றத் திறமையோடு கைகடக்தஆபத்தில் காப்பாற்றுகிறவர்களுக்கு என்னபலனை அது உமக்கேதெரியும். இப்போது எங்களுக்கு நாகத்திற்கு நீர்தாம் சரணம் என்றுவேண்டினர். அதற்கு ச்யவனர், 'ஏழை ரிஷி பார்வையில்விஷமுள்ளஸர்ப்பம் இவர்களின்கண்கள், ஜ்வலிக்கும்அக்நி உலர்ந்தவிறகையெரிப்பதுபோல மனிதனை அடியோடு எரித்துவிடும். செம்படவர்களே! உங்களிடத்தில் பசுவைப் பெற்றுக்கொள்ளுகிறேன். உடனே நீங்கள் பாவத்தைவிட்டு வலையினல் எடுக்கப்பட்ட மீன்களுடன்கூட ஸ்வர்க்கத்திற்குச் செல்லுங்கள்' என்றுசொன்னர். பரிசுத்த ஆத்மாவான அம்மகரிஷியின்மகிமையினல் அவர் சொன்னவுடனே அந்தச்செம்படவர்கள் மச்சங்களுடன் ஸ்வர்க்கத்திற்குச்சென்றனர். பரதசிரேஷ்டனே! அப்போது செம்படவர்களும் ஸ்வர்க்கமேறுவதைக்கண்டு நகுஷராஜன் வியந்துநின்றன். பிறகு, கோவுக்குப்பிறந்தமுனிவரும் ப்ருகுசிரேஷ்டரான ச்யவனரும் நகுஷராஜனுக்குத் தக்க இரண்டுவரங்கள் அளிப்பதாகக் கேட்டனர். பரதசிரேஷ்டனே! அப்போது பூமியையாளுகிறஇந்திரனையொத்தவனும் மஹாவீரனுமான நகுஷமகாராஜன் ஸந்தோஷமடைந்து அணுக்கிரகமே பெரிதென்றுசொல்லித் தர்மத்தில் நிலைகுலையாமலிருப்பதையே வரமாக அவரிடம் பெற்றுக்கொண்டான். அவர்களால், 'அப்படியேஆகட்டும்' என்றுசொல்லப்பெற்று அவ்விரண்டுரிஷிகளையும் அன்புடன் பூஜித்தான். பிறகு, ச்யவனர் தவநிஷ்டையைமுடித்துக்கொண்டு தம்ஆச்ரமத்திற்குச் சென்றார். சிறந்தமஹிமையுள்ள [1]கவிஜரென்னுமமுனிவரும் தம் ஆச்ரமத்திற்குச்சென்றார். அரசனே! செம்படவர்களும் அந்த மச்சங்களும் ஸ்வர்க்கத்திற்குச்சென்றனர். நகுஷனும் வரம்பெற்றுக்கொண்டு தன்நகரத்தில் பிரவேசித்தான். அப்பா! யுதிஷ்டிரா! பார்ப்பதனலும் கூடவஸிப்பதனலும் ஸ்நேகமுண்டாவதைப்பற்றியும் பசுக்களின் மகிமையைப்பறறியும் நீ என்னைக்கேட்டதற்குத் தர்மத்தினுடைய நிச்சயத்துக்காக இந்தசரித்திரத்தை உனக்குச்சொன்னேன். வீரனே! இன்னும் என்னசொல்லவேண்டும்? உன்மனத்தில் என்ன இருக்கிறது?" என்றார்.

[1] கோவினிடம் பிறந்தவர்

எண்பத்தேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி)

(பராசராம விசுவாமித்ரா ஜனவிஷயமான சியவனர்
குசிகனிடம்வலித்த கதை.)

யுதிஷ்டிரர், "பேரறிவுள்ளவரே! கடலுக்கொப்பானவரே! மகாவீரரே! எனக்கு இன்னுமொரு மிகப்பெரியஸந்தேகமிருக்கிறது. அதைக் கேளும். கேட்டபின் எனக்கு விரித்துரைக்கக்கடவீர். பிரபுவே! தர்மிஷ்டரிற்சிறந்தவராகிய பராசராமரைக்குறித்து எனக்கு மிக்கஆச்சரியமிருக்கிறது. அதை எனக்கு உரைக்கக்கடவீர். பிரம்ம தேஜஸின்பலன் மிகச்சிறப்பினை இந்த சியவனர்முதலானவரிடத்தில் உறுதியானபராக்ரமமுள்ள இந்தப் பராசராமர் எப்படி உண்டானார்? பிரம்மரிஷிகள் வம்சத்திற்பிறந்தபராசராமர் க்ஷத்திரியச்செய்கையுள்ள வரானது எப்படி? அரசரே! ஆகலால், இவருடையவரலாற்றை முழுதும் சொல்லக்கடவீர். விசுவாமித்திரரும் க்ஷத்திரியவம்சத்திற்பிறந்து பிராம்மணரானது எப்படி? புருஷசிரேஷ்டரே! பராசராமர் விசுவாமித்திரர் இவ்விரண்டுமகாத்மாக்களின் மகிமையும் மிகப்பெரிதாகவன்றே இருந்தது? ஆ! ஆ! மிகத்தெரிந்தவரே! இந்தக்குற்றம் சியவனர்குசிகர் இவர்களின் பூர்வர்களைத்தாண்டிப் பேரர்களுக்குவந்ததேன்? இதை எனக்குத் தெளிவாக உரைக்கக்கடவீர்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பாரதனே! இந்தவிஷயத்தில் சியவனருக்கும் குசிகனுக்கும் நடந்த ஸம்பாஷணையாகிய ஒருபுராதனசரித்திரத்தைக் கூறுகின்றனர். முன்னர், தவத்தையே தனபாகவுடையவரும் ரிஷிசிரேஷ்டரும் ப்ருகுபுத்ரரும் சிறந்தஞானமுள்ளவருமான சியவனர் தம்வம்சத்தில் இந்தக்குற்றம் நேரிடப்போவதை முன்னமே அறிந்து குணதோஷங்களின் பலாபலன்களையெல்லாம் மனத்தில் நிச்சயம்செய்துகொண்டு குசிகவம்சத்தை முழுதும் பரிக்கக்கருதி அந்தக்குசிகனிடம்சென்று, 'குற்றமற்றவனே! எனக்கு உன்னுடன்கூட வஸிப்பதற்கு விருப்பமுண்டாயிருக்கிறது' என்றுசொன்னர். அதற்குக்குசிகன், 'பகவானே! இவ்வுலகத்தில் தெரிந்தவர்கள் சேர்ந்து ஒருதர்மத்தை அனுஷ்டிக்கின்றனர் அதைத்தான் கன்னிகாதானம்செய்யும்போதெல்லாம் தெரிந்தவர்கள்சொல்லுவது. தபோதனரே! தர்மமார்க்கமான அந்தக்கார்யம் வெகுநாளாக விட்டுப்போயிற்று. அதை

நான் செய்வேன். அதற்கு நீங்கள் அனுமதிகொடுக்கவேண்டும்' என்றுசொன்னான்; உடனே சியவனமஹாமுனிவருக்கு ஆசனத் தையெடுத்துக்கொண்டு மனைவியுடன் அவரிருக்குமிடத்திற்கு வந் தான். அரசன் பாத்திரத்தையெடுத்துக்கொண்டு அவருக்குப் பாத் யத்தைக் கொடுத்தான்; அம்மகாத்மாவுக்கு எல்லா உபசாரங்களையும் செய்தான். பிறகு, மகாத்மாவும் நியமத்தவறுதவனுமான அந்த அரசன் சாஸ்திரப்படி மதுபர்க்கத்தை சியவனருக்கு ஆதரத்துடன் கொடுத்தான். அந்தப்பிராம்மணருக்கு அவ்வாறு பூஜைசெய்தபிறகு மறுபடியும் அவரைப்பார்த்து, 'ஓ! பகவானே! நாங்களிருவரும் உமக்குட்பட்டவர்கள். நாங்கள் என்னசெய்யக்கடவோம்? சொல் லும். கடிந்தவமுள்ளவரே! ராஜ்யம் தனம் பசுக்கள் யாகங்கள் தானங்கள் இன்னும் என்னவேண்டுமானாலும் சொல்லும். உமக்கு எல்லாவற்றையும் கொடுக்கிறேன். இந்த அரண்மனையும் இந்தராஜ்ய மும் இந்தஸிம்மாஸனமும் உம்முடையவை. நீர் தாம் அரசர்; பூமியை ஆளும். நான் என்மனைவியுடன்கூட உமக்குப்பட்ட ஊழியன்' என்று சொன்னான். அவன் இந்தச்சொல்லைச்சொன்னபோது ப்ருகுபுத்ரரான சியவனர் மிகுந்த ஸந்தோஷமடைந்து குசிகனைப்பார்த்து, 'வேந் தே! ராஜ்யத்தையும் தனதானியங்களையும் பெண்களையும் கோக்களையும் தேசங்களையும் யாகத்தையும் நான் விரும்பவில்லை. நான் சொல் வதைக் கேட்கவேண்டும். நான் ஒருதவம்செய்ய ஆரம்பிக்கப்போகி றேன். உங்களிருவருக்கும் இஷ்டமாயிருந்தால் நீங்களிருவரும் மன வேறுபாடின்றி ஜாக்ரதைபோடு எனக்குப் பணிவிடைசெய்யவேண் டும்' என்றுகேட்டார். பாரதனே! அவர் இவ்வாறுசொன்னவுடன் அந்த அரசனும் அரசியும் களிப்படைந்து, 'அப்படியே ஆகட்டும்' என்று அந்தரிஷிக்கு மறுமொழிகூறினர். உடனே, குசிகன் மனக் களிப்புடன் அவரைத் தன் வீட்டில் சிறந்த இடத்திற்கு அழைத்துக் கொண்டுபோனான்; அழகான இடத்தை அவருக்குக் காண்பித்தான். 'தபோதனரே! பகவானுன உங்களுக்கு இது சயனம். இதில் இஷ் டப்படியிருக்கலாம். உமக்கு ஸந்தோஷத்தையுண்டுபண்ணுவதற்கு நாங்களிருவரும் முயல்வோம்' என்றுசொன்னான். இப்படி அவர் கள் மூவரும் ஸம்பாஷணைசெய்துகொண்டிருக்கையில், சூரியாஸ்த மனமாயிற்று. உடனே, ரிஷி அன்னபானங்களைக்கொண்டுவரும்படி கட்டளையிட்டார். பிறகு, குசிகராஜன் வணங்கி, 'எவ்வகையான அன்னம் உமக்குவிருப்பம்? எதை நான் கொண்டுவரலாம்?' என்று கேட்டான். பாரதனே! அப்போது, அம்முனிவர் மிக்கமகிழ்ச்சி

யுடன் அரசனைப்பார்த்து, 'உன்னுடைய செல்வத்திற்குத்தகுந்த ஆகாரத்தைக் கொடு' என்றுசொன்னர். அவ்வரசன் அவர்சொல்லைக் கொண்டாடி, 'அப்படியே ஆகட்டும்' என்றுசொன்னன்; மன்னவ! தன்னியல்புக்குத்தக்க ஆகாரத்தை அவருக்குக் கொடுத்தான். பிரபுவே! தர்மந்தெரிந்தவரான அந்தச்யவனபகவான் புசித்தபிறகு, அரசன் அரசியிருவரையும்பார்த்து, 'எனக்கு நித்திரை வருத்துகிறது. நான் படுக்கவிரும்புகிறேன்' என்றுசொன்னர். பகவானுகிய அந்தரிஷிசிரேஷ்டர் உடனே படுக்கையறைக்குட் சென்று படுத்தார். அரசன் தன்மனைவியுடன் நின்றுகொண்டிருந்தான். அந்தச்யவனர், 'நான்தூங்கும்பொழுது எழுப்பக்கூடாது; நீங்களிருவரும் இரவில் கண்விழித்துக்கொண்டு என்கால்களைப் பிடிக்கவேண்டும்' என்றுசொன்னர். தர்மந்தெரிந்ததபிகன் ஆக்ஷேபியாமல், 'அப்படியே ஆகட்டும்' என்றுசொன்னன். அவர்களிருவரும் இரவுகழிந்தபோதும் அவரை எழுப்பாமலிருந்தனர். மகாராஜனே! அப்போது, அந்தஸ்த்ரீபுருஷர்களிருவரும் அம்மகரிஷிகட்டளையிட்டபடி ஜாக்கிரதையாக அவருக்குப் பணிவிடைசெய்துகொண்டிருந்தனர். அந்தமஹிமைபொருந்திய பிராம்மணர் அவ்வாறு அரசனுக்குக்கட்டளையிட்டுப் பிறகு, ஒருபக்கமாக இருபத்தொருநாள் தூங்கினர். கௌரவனே! சயவனரை ஸந்தோஷப்படுத்துவதில் ஊக்கமுள்ள அவ்வரசன் மனைவியுடன் ஆகாரமில்லாமல் ஸந்தோஷமாக அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான். அந்தச்யவனமுனிவர் தாமேஎழுந்தார். அந்தச்சிறந்ததவமுள்ளவர் ஒன்றுஞ்சொல்லாமலே கிருகத்தினின்று வெளியிற்சென்றர். அவ்வரசன் அரசியிருவரும் பசியினலும் களைப்பினலும் வருந்தினவர்களாகவே அம்முனிவரைப் பின்சென்றனர். அம்முனிசிரேஷ்டர் அவ்விருவரையும் பார்க்கவேயில்லை. அஹர்க்காரசே! அந்தப்ருகுகுலசிரேஷ்டர் அரசன் அரசியிருவரும் பார்த்திருக்கும் போதே அந்தர்த்தானமாயினர். பிறகு, அரசன் கரையில் விழுந்தான். பிறகு, சற்றுநேரத்திற்கெல்லாம் மூர்ச்சைதெளிந்து அரசன் மறுபடியும் தன் தேவியுடன் அம்மகரிஷியைத் தேட ஆரம்பித்தான்" என்றர்.

எண்பத்தேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(சியவனர் குசிகனிடம்வஸிஷ்டகதைத் தொடர்ச்சி.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! அந்தப்பிராம்மணர் அந்தர்த்தான மானபோது அவ்வரசனும் சிறந்தபாக்கியவதியான அவன்மனைவியும் என்னசெய்தனர்? அதனை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"அவ்வரசன் அந்தரிஷியைக்காணுமல் மனைவியுடன்கூடக் கலைத்து வெட்கி மதியழிந்துத் திரும்பினன். அவ்வரசன் நகரத்தினுள் பிரவேசித்தபின் அந்தப்பிராம்மணருடைய செய்கையையே நினைத்து ஒன்றும்பேசாமலிருந்தான்; ஒய்ந்தமனத்தோடு அரண்மனைக்குள் பிரவேசித்தான்; அந்தர்யவனர் அதேபடிக்கையில் படுத்திருக்கக்கண்டான். அந்தரிஷியைக்கண்டு அந்தப்புதுடையைநினைத்து அரசன் அரசியிருவரும் திகைத்துநின்றனர். அவரைக்கண்டவுடன் அவ்விருவரும் கலைப்புத்தீர்ந்தவராயினர். உடனே, இருவரும் அவரிருக்குமிடம்சென்று நடுநடுக்கத்தினின்று அவர் காலைப்பிடித்தனர். சிறந்தசக்தியுள்ள அம்மகாமுனிவர் மறுபடியும் அவ்வளவுகாலம் படுத்திருக்கமாட்டாமற்படுத்துத் தூங்கி விழித்துக் கொண்டார். அவரிடத்தில் பாபமுள்ள அவ்விருவரும் சிறிதும் மனவேறுபாட்டைபடையவில்லை. பாதனே! அரசனே! கண்விழித்துக் கொண்ட அம்முனிவர் அரசன் அரசியிருவரையும்பார்த்து, 'நான் ஸ்நானம்செய்யப்போகிறேன். எனக்கு எண்ணெயிட வேண்டும்' என்றுசொன்னர். பசியிலும் களைப்பிலும் ஒய்ந்துபோன அவ்விருவரும், 'ஆகட்டும்' என்றுசொல்லி, ஏதபாகமென்னும் விலை பெற்றதைலத்தோடி அவரிடம் வந்தனர். ஸுகமாகஉட்கார்ந்திருக்கும்முனிவருக்கு அவர்கள் மெல்லமாக அந்தத்தைலத்தைத் தேய்த்தனர். மிகச்சிறந்ததவமுள்ளபார்க்கவர் போதுமென்றுசொல்லவில்லை; அவர்கள்மனம்வெறுக்காமலிருப்பதைக் கண்டபோது அங்கிருந்து எழுந்து ஸ்நானசாலையுள் விரைவாகப் பிரவேசித்தார். அங்கே அரசனுக்குரிய ஸ்நானக்கருவிகள் வைக்கப்பட்டேயிருந்தன. அவற்றையெல்லாம் அங்கீகரியாமல் அரசன் பார்த்திருக்கும்போதே அம்முனிவர் திரும்பவும் அங்கேயே அந்தர்த்தானமாயினர். பரதசிரேஷ்டனே! அப்போதும் அந்த அரசன் அரசியிருவரும் வெறுப்பையடைய

வேயில்லை. கௌரவனே! பிறகு, அந்தஸமர்த்தரான ச்யவனபகவான் ஸ்நானம்செய்தவராக ஸிமமாஸனத்திலிருந்து குசிகனுக்கும் அவன்மனைவிக்கும காணப்பட்டார். குசிகராஜன் தன்பாரியையுடன் முகமலர்ச்சியுறறு மனக்கலக்கமின்றி வணங்கி அன்னமளித்தமாயிருக்கிறதென்று அம்முனிவருக்குத் தெரிவித்தான். முனிவர், 'கொண்டுவரலாம்' என்று அவ்வரணுக்குச் சொன்னார். அவ்வரசன் மனைவியுடன் கூட அவ்வன்னத்தைக் கொண்டுவந்தான். பலவகைமாம்ஸபாகங்களையும் பற்பலகறிகாய்களையும் பாகுகளையும் மாப்பண்டங்களையும் இனியபாகங்களையும் [1]ரஸாலையையும் அப்பங்களையும் அறுசுவைகளோடுகூடிய பலவகைமோதகங்களையும் பலவகைச்சுவைகளையும் ரிஷிகளாபுசிக்கும் காட்டு ஆகாரங்களையும் அரசர்கள் புசிக்கும் மற்றும்பலஉணவுகளையும பலவகைக்கனிகளையும் இலந்தைப்பழத்தையும் புன்கம்பழத்தையும் [2]காச்மரியமும், [3]பல்லாதகமும், கனிகளும், பிருகஸ்தர்கள் உண்ணத்தக்கவையும் வானப்ரஸ்தர்கள் உண்ணத்தக்கவையுமான எல்லாவகைஆகாரங்களையும் ரிஷியின் சாபத்திற்குப்பயந்து வேகதன் வருவித்தான். அவையெல்லாம் சயவனமகரிஷியின்முன்னிலையில் வைக்கப்பட்டன. பிறகு, அந்தச்யவனமுனிவர் அவையுண்டதையும் பிடிக்கையையும் ஆஸனத்தையும் போஜனபாத்திரங்களையுமேசேர்த்துச் சிறந்தவஸ்திரங்களினால், மூடி-எல்லாவற்றையும் பரித்துவிட்டார். மிகச்சிறந்த ஜ்யோதியுள்ள அவ்வரசன் அரசியிருவரும் அதற்குங்கோபிக்கவில்லை. அவர்கள் பார்த்திருக்கையிலேயே மறுபடியும் அவர் அந்தர்த்தானமாயினர். அந்தராஜரிஷி மனைவியுடன் முன்போலவே அவ்விரவெல்லாம் முகமலர்ச்சியோடு மௌனமாகஇருந்தான்; கோபத்திற்குட்படவில்லை. அந்தஅரசனுடையஅரண்மனையில் பலவகையான அன்னங்கள எக்காலமும் சமைக்கப்பட்டிருந்தன; சிறந்தபக்ஷிக்கைகளும் ஜலம்நிரம்பினஸ்நானகுடங்களும் பலவகைஉடைகளும எக்காலமும ஸித்தப்படுத்தப்பட்டிருந்தன. அதனால், ராஜனைருக்குக் குறைபாடுபார்க்கமுடியாமற்போயிற்று. அந்தப்பிரபாரிஷியான்வர் பதறாடியும் குசிகராஜனைப்பார்த்து, 'மன்னனத்தேரிலேற்றி உன்பாரியையும் நீயும் நான் சொல்லுமிடத்திற்கு விரைவாக இழுத்துக்கொண்டுபோங்கள்' என்று சொன்னார்; அரசன் ஒன்றுஞ்சிந்தியாமல் தபோதனரைப்பார்த்து,

---

[1] புளிப்புத்தயிர், கறகண்டு, நெய, தேன், மிளகு, சுகு, பச்சைக்கர்ப்பூரம் இவற்றைச்சேர்த்துச்செய்யும் ஒருபாகு; பீமசேனன்செய்து யுதிஷ்டிரனுக்கு அமுதுசெய்ததாகப் பாகசாஸ்திரத்தில சொல்லப்பட்டிருக்கிறது.

[2] பெருங்குமிழம்பழம். [3] சேங்கொட்டை.

'அப்படியே ஆகட்டும்' என்றுசொல்லி, 'பகவானே! வேடிக்கைத் தேரிருக்கலாமா? சண்டைத்தேரிருக்கலாமா?' என்றுகேட்டான். வேந்தனால் ஸந்தோஷத்துடன் இவ்வாறுகேட்கப்பட்ட அந்தச்யவன முனிவர் ஸந்தோஷமடைந்து பகைவர்களைவெல்லுபவனாகிய மன்னனைப்பார்த்து, 'வில், கொடி, சக்திகள், பொன்தடிகள், கதைகள், கத்திகள், அனேகம்சிறந்தஅம்புகள் இவற்றோடுகூடச் சலங்கைகள் ஒலிப்பதும் தோரணங்கள்கட்டப்பட்டதுமாகிய யுத்தத்திற்குரிய தென்று நீதிஜ்ஞத்தேரை உடனேகொண்டுவா' என்றுசொன்னார். உடனே, அவ்வரசன், 'அப்படியே' என்றுசொல்லிச் சிறந்ததேரை அலங்கரித்து துகத்தடியின்இடப்பக்கத்தில் மஹாவியையமித்து வலப்பக்கத்தில் தானிருந்துகொண்டு மூன்றுகழிகள்சேர்ந்ததும் முனையில் வஜ்ராகிருவைக்கப்பட்ட துமாகிய சாட்டையை அந்தத்தேரில் வைத்தான். அரசன் இவற்றையெல்லாம் அவ்வாறுகொடுத்து, 'பகவானே! ப்ருகுபுத்ரரே! ரதம் எங்கேபோகவேண்டும்? சொல்லக்கடவீர். பிரம்மரிஷியே! நீர்சொல்லுமிடத்திற்கு உமதுதேர்போகும்' என்றுசொன்னன். அரசனால்இவ்வாறுசொல்லப்பட்ட ச்யவனபகவான் அவனைப்பார்த்து, 'இங்கிருந்து அடியடியாக மெல்லச்செல்லவேண்டும். எனக்குச்சிரமமுண்டாகாமலிருக்கும்படி என்னிஷ்டம்போல நீங்களிருவரும் போகவேண்டுமம்; மிகவும் ஸுகமாக ரதத்தை இழுக்கவேண்டும். ஜனங்கள்எல்லாரும் பார்க்கக்கடவர். வழிப்போக்கர்யாரையும் விலக்கலாகாது. அவர்களுக்குத் தனத்தை நான் கொடுப்பேன். வழியில் எந்தப்பிராம்மணர்கள் வேண்டினவற்றை என்னிடம்கேட்டாலும் அவர்களுக்குத் தனங்கள் ரத்தினங்கள் எல்லாவற்றையும் மிச்சமின்றி நான் கொடுக்கவேண்டும். ஓ அரசே! இவற்றையெல்லாம் ஆலோசியாமல்செய்' என்றுசொன்னார். அவரது அந்தச்சொல்லைக்கேட்டு, மன்னவன் வேலைக்காரர்களைப்பார்த்து, 'ரிஷி எதைச்சொன்னாலும் அதையெல்லாம் தடையில்லாமல் கொடுக்கவேண்டும்' என்றுகட்டளையிட்டான். பிறகு, அநேகரத்தனங்களும் ஸ்த்ரீகளும் தேர்க்குதிரைகளும் சால்வைகளும் பொன்நாணயமும் கட்டிப்பொன்னும் மலைகள்போன்ற சிறந்தயானைகளும் வேந்தனுடையமந்திரிகளனைவரும் அந்தரிஷியைப் பின்சென்றனர். அந்தநகரமனைத்தும் துக்கத்துடன், 'ஆ! ஆ!' என்று கூக்குரலிட்டது. அரசன் அரசியிருவரும் சாட்டையின் கூரானமுனையினால் முதுகிலும் கன்னத்திலும் வேகமாகக்குத்தப்பட்டும் மனவேறுபாடின்றி. அவரை இழுத்தனர். ஐம்பதுதினங்கள் ஆகாமில்லாமல் பீடிக்கப்பட்டு உடம்பு

நடிக்கமுற்ற அவ்விருவரும் மனஉறுதியினால் அந்தப்பெரியதேரைக் கஷ்டப்பட்டு இழுத்தனர். மஹாராஜனே! அநேகந்தரம் அதிகமாகக் குத்தப்பட்டு ரத்தம்பெருகிக்கொண்டிருக்கும்அரசன் அரசியிருவரும் பூத்தபலாசமரங்கள்போலக் காணப்பட்டனர். அவ்விருவரையும்கண்டு துயரத்தினால் மிகக்கலங்கின பட்டணத்துஜனங்கள் அவர்சாபத்திற் குப்பயந்து அவரை ஒன்றுஞ்சொல்லாமலிருந்தனர். ஜனங்களெல் லாரும் இரண்டு இரண்டுபேராகச்சேர்ந்து, 'தவத்தின்வன்மையைப் பாருங்கள். நாம் கோபித்திருந்தும் இம்முனிசிரேஷ்டரைக் கண் ணெடுத்துப்பார்க்கவுமுடியாமல் இருக்கிறோம். பரிசுத்த ஆத்மாவும் பகவானுமான இந்தமகரிஷியின்மகிமை ஆச்சரியமானது. அரசர் அவர் மனைவி இவ்விருவருடைய உறுதியும் எப்படிப்பட்டது! பாருங் கள்! சிரமப்பட்டிருந்தும் கஷ்டப்பட்டு இந்தரதத்தை இழுக்கின்ற னரே! இவர்களிடத்தில் யாதொருவேறுபாட்டையும் ச்யவனமுனி வரே காணவில்லையே!' என்று பேசிக்கொண்டனர். அந்த ப்ருகு சிரேஷ்டராகிய ச்யவனர் அவர்கள் அவ்வாறு மனவேறுபாடில்லாமலிருப் பதைக்கண்டு குபேரன்போலத் திரவியத்தையளித்தார். வேந்தன் அதி லும் மனமகிழ்ந்து அவர்கட்டளைப்படி செய்தான். பிறகு, அந்தப்பக வானான முனிசிரேஷ்டர் அவ்வரசனிடத்தில் அன்புகூர்ந்து அந்தச் சிறந்த தேரிலிருந்து இறங்கி அவ்வரசன் அரசி இருவரையும் விடுவித் தார். பரதனே! ச்யவனர் அவர்களிருவரையும்விடுவித்தபிறகு அழ கும் கம்பீரமும் அனுக்கிரகமுமுள்ளவாக்கினால், 'உங்களிருவருக்கும் சிறந்த வரந்தருவேன். அதைக்கேளுங்கள்' என்று முறையாகப்பேசி னார். பரதசிரேஷ்டனே! முனிசிரேஷ்டர் சாட்டைக்கோலினால்குத்தப் பட்ட மிருதுசரீரமுள்ள அரசன் அரசிஇருவரையும் அமிருதத்திற் கொப்பான தம்கரங்களினால் அன்புடன் தடவிக்கொடுத்தார். அப் போது, அவ்வரசன், 'பார்க்கவரே! எங்களிருவருக்கும் இப்போது சிரமமில்லை. நீர் நினைத்தஅளவில் உமதுமகிமையினால் களைப்புத்தீர்ந் தவர்களானோம்' என்றுசொன்னன். பிறகு, ச்யவனபகவான் மகிழ் ந்து அவர் இருவரையும்பார்த்து, 'ராஜனே! நான் வரங்கொடுப்பதாக முதலிற்சொன்னது பொய்யாகாது. இந்தப் புண்ணியமானகங்கைக் கரை அழகானபிரதேசம். சிலகாலம் இங்கே தவம்செய்துகொண்டு வஸிப்பேன். புத்ரனே! நீ உன்நகரத்திற்குச் செல்லலாம்; சிரமத்தைத் தீர்த்துக்கொண்டு மறுபடியும் வரலாம். ராஜனே! நீ உன்பாரி யையுடன் நாலைந்தினம் என்னை இவ்விடத்திற்பார்ப்பாய். நீ

கோபிக்கத்தகாது. உனக்கு நன்மைவந்திருக்கிறது. உன்மனத்தி
திருக்கும் விருப்பமெல்லாம் உனக்குநிறைவேறும்' என்றுசொன்னர்.
அவரால் இவ்வாறுசொல்லப்பட்டகுசிகன் மன்மகிழ்ந்து அம்முனி
சிரேஷ்டரைப்பார்த்து, 'மகானுபாவரே! பகவானே! எனக்குக் கோப
மில்லை. நாங்களிருவரும் உம்மால் பரிசுத்தர்களாக்கப்பட்டோம்;
யௌவனப்பிராயமும் அழகியதேகமும்பலமுமுள்ளவர்களாய்விட்டோம்;
எனக்கும் என்மனைவிக்கும் நீர்சாட்டையினல் உண்டாக்கினபுண்கள்
உடம்பிற்காணப்படவில்லை. நானும் மனைவியும் ஸுகமாயிருக்கிறோம்.
எனது இந்தமனைவி அப்ஸரஸ்போன்றஅழகும் சிறந்த ஒளியுமுள்ள
வளாயிருப்பதைப் பார்க்கிறேன். இதற்குமுன் இவள் இப்படிக்காணப்
படவில்லை. மகரிஷியே! இவையெல்லாம் உமது அனுக்கிரகத்தினல்
உண்டானவை. உண்மையானமகிமையுள்ளபகவானே! உம்மிடத்தில்
இது புதுமையன்று' என்னும் உண்மையானசொல்லைச் சொன்னன்.
குசிகனல் இவ்வாறு சொல்லப்பட்ட சியவனர் அவனைப்பார்த்து,
ராஜனே! நாளைத்தினம் நீ உன்பாரியையுடன் இங்குவா' என்றுசொன்
னர். அவர் இவ்வாறுசொல்லி விடைகொடுக்க, ராஜரிஷி அவரைநமஸ்
கரித்து அழகானதேகத்துடன் தேவேந்திரன்போல நகரத்திற்குச்சென்
றான். பிறகு, மந்திரிகளும் புரோகிதர்களும் சேனைத்தலைவர்களும்
எல்லாக்குடிகளும் விலைமாதர்களுடன் அரசனுக்கு எதிர்கொண்டுவந்
தனர். அவர்களால்சூழப்பட்டகுசிகராஜன் சிறந்தஒளியினல்பிரகாசித்
துக்கொண்டு வந்திகளினல் துதிக்கப்பட்டு மகிழ்ந்து நகரத்தில் பிரவே
சித்தான். சிறந்த மகிமையுள்ள அவ்வரசன் நகரப்பிரவேசம் செய்தபிறகு
காலைக்கடன்களை நிறைவேற்றிப் புசித்து மனைவியுடன்கூட இரவைப்
போக்கினன். பிராம்மணச்ரேஷ்டரால் கொடுக்கப்பட்ட ஒளியோடு
கூடிய அழகிய தேகங்களை அடைந்த அவர்களிருவரும் சயனத்தை
யடைந்து புதிதாகயௌவனம்வந்து தேவர்களைப்போல மூப்பில்லாம
விருப்பவர்களாக ஒருவரையொருவர் கண்டு உல்லாஸமாயிருந்தனர்.
ப்ருகுவம்சத்தின் கீர்த்தியைப்பெருகசெய்பவராகிய சியவனமுனிவர்
தம்ஸங்கல்பத்தினல் அவ்வனத்தை இந்திரனுடையநகரத்தில் இல்லாத
தும் அநேகரத்தினங்களினல் அலங்கரிக்கப்பட்டதும் செல்வம்நிரம்
பினதும் அழகியதுமாகச்செய்தார்.

எண்பத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி)

(சீயவனர் குசிகனிடம்வஸித்தகதைத் தொடர்ச்சி.)

சிறந்த மனமுள்ள அந்த அரசன் பிறகு இரவுமுடியும்போது எழுந்து காலைக்கடமைகளை முடித்துக்கொண்டு மனைவியுடன் அவ்வனத்தைநோக்கிச் சென்றான். குசிகராஜன் அவ்விடத்தில் முழுமையும் பொன்னுயிருப்பதும் ஆயிரம்ரத்தினத்தூண்கள் நிரம்பினதும் மாயாநிர்மாணம்போன்றதுமாகிய ஓர் அரண்மனையையும் அதில் தேவலோகத்திலுள்ள பொருள்களையும் கண்டான். பாரதனே! அவ்வரசன் வெள்ளிச்சிகரங்களுள்ள மலைகளையும் புஷ்பங்கள் நிரம்பினதாமரைக்குளங்களையும் பலவகைச்சித்ரசாலைகளையும் தோரணங்களையும் பசும் புல்நிரம்பின பூமியையும் பொன்மேடைகளையும் பூத்திருக்கும் ஓட்டுமாமரங்களையும் சிறந்ததாழைகளையும் [1] உத்தாலகங்களையும் அசோகங்களையும் குருக்கத்திமரங்களையும் முல்லைக்கொடிகளையும் சண்பகமரங்களையும் திலகமரங்களையும உயர்ந்தபலாமரங்களையும் மகிழமரங்களையும் புஷ்பித்த கொன்றைமரங்களையும் கறுத்தநாககேஸரமரங்களையும் ஆங்காங்குவைக்கப்பட்டிருக்கும் பொற்கொடிகளையும் கண்டான். பாரதனே! அவன் எந்தக்காலத்திலும் புஷ்பித்திருக்கும் அழகானதாமரைக்குளங்களையும் கருநெய்தல்குளங்களையும தேவவிமானங்களுக்கும் மலைகளுக்கும் ஒப்பானமாளிகைகளையும் சிலவிடங்களில் தண்ணீரையும் சிலவிடங்களில் வெந்நீரையும் பலவகை ஆஸனங்களையும் சிறந்தபடுக்கைகளையும் சிறந்தபெண்கள் பரப்பப்பட்ட ரத்தினமயமும் பொன்மயமுமான கட்டில்களையும் ஆங்காங்குசெய்துவைக்கப்பட்டிருந்த அளவற்ற பக்ஷணங்களையும் போஜனங்களையும் பாஷைகளைப்பேசும் கிளிகளையும் நாகணவாய்ப்புட்களையும் எங்கும் ஒலித்துக்கொண்டிருக்கும் அழகான சிறந்த வண்டுகளையும் குயில்களையும் மரங்குத்திக்குருவிகளையும் நாரைகளையும் காட்டுக்கோழிகளையும் மயில்களையும் கோழிகளையும் குருட்டுக்காக்கைகளையும் [2] ஜீவஜீவங்களையும் சகோரங்களையும் வானரங்களையும் அன்னப்பறவைகளையும் ஸாரஸங்களையும் சக்கரவாகங்களையும் கண்டான்; ராஜனே! சிலவிடங்களில் அப்ஸரஸ் கந்தர்வர்களின் கூட்டங்களையும் தங்கள்காதலிகளினால் தழுவிக்கொள்ளப்பட்ட மற்றும்சிலபுருஷர்

[1] குறும்பலா. [2] மயில்போன்ற சிறகுள்ள பறவைகள்.

யும் அங்கு கண்டான். அந்த அரசன் அடிக்கடி அவர்களைக்காணுமலும் திரும்பவும் கண்டுகொண்டுமிருந்தான். அப்படியே அங்கே அழகான ஸங்கீதநாதத்தையும் வேதாத்யயனகோஷத்தையும் அன்னங்கள் இனிமையாகக் கூவுவதையும் அவன்செவியுற்றான். அந்தமிக்க ஆச்சரியத்தைக்கண்ட அரசன், 'இது கனவா! மனத்தின்மயக்கமா? அல்லது, உண்மைதானா? சிறந்தஸ்வர்க்கலோகத்திற்குத் தேகத்தோடே வந்திருக்கிறேன். ஆ! ஆ! இது புண்ணியமான உத்தரகுருக்ஷேத்திரமா? அல்லது, அமராவதிநகரமா? என்ன இந்தப்பெரிய ஆச்சர்யத்தைக் காண்கிறேன்!' என்று மனத்தில் நினைத்தான். இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கையிலேயே ரத்தினத்தூண்கள் நிரம்பின அந்தப்பொன் மயமானமாளிகையில் விலைபெற்ற உயர்ந்தபடுக்கையில் படுத்திருக்கும் ப்ருகுசிரேஷ்டரான ச்யவனமுனிவரைக் கண்டான். அரசன் பாரியையுடன் மகிழ்ந்து அவரிடம் சென்றான். அப்போது ச்யவனரும் அந்தப் படுக்கையும் திரும்பவும் காணப்படவில்லை. பிறகு, அவன் அவ்வனத்தின்மற்றோரிடத்தில் திரும்பவும் அப்பெருந்தவமுனிவர் தர்ப்பாஸனத்தில் உட்கார்ந்து ஜபம்செய்துகொண்டிருக்கக்கண்டான். அந்தப்பிராம்மணர் இவ்வாறு தம்யோகசக்தியினால் மன்னவரைப் பிரமிக்கச்செய்தார். ஒருநொடியில் அவ்வனம் அந்த அப்ஸரஸுகளின் கூட்டங்கள் கந்தர்வர்கள் மரங்கள் இவையனைத்தும் மறைந்துபோயின. ராஜனே! கங்கையின்கரை மறுபடியும் முன்போலவே நிச்சயமாகவும் தர்ப்பைகளும் புற்றுக்களும் மிகுந்ததாகவும் ஆயிற்று. பிறகு, அந்தக்குசிக ராஜனும் அவன்மனைவியும் அந்தப்பெரிய புதுமையைக்கண்டு அந்தச் செய்கையினால் மிக்கவியப்பை அடைந்தனர். பிறகு, குசிகன் ஸந்தோஷமடைந்து மனைவியைப்பார்த்து, 'சிறந்தவளே! எங்கும் கிடைக்காத அருமையான விஷயங்களை ச்யவனமுனிவருடைய அனுக்கிரகத்தினால் கண்டோமே. தவவன்மையைவிட வேறுவன்மை என்ன இருக்கிறது? பார். எண்ணங்களுக்கு எட்டாதவற்றையும் தவத்தினால் பெறலாம். மூவுலகங்களையும் ஆளும்பதவியைப்பார்க்கிலும் தவந்தான் சிறந்தது. இந்ததபோதனர் நன்றாகத் தவம்செய்திருப்பதனால் விளையாடுகிறார். மகாத்மாவான ச்யவனரென்னும் பிரம்மரிஷியின் மகிமை ஆச்சர்யமானது. இவர் நினைத்தமாத்திரத்தில் தவவன்மையால் வேறுலோகங்களையும் படைப்பார். பிராம்மணர்கள்தாம் புண்ணியமானவாக்கும் ஞானமும் கிரியையுமுள்ளவர்களாகப் பிறப்பார்,

ச்யவனரைத்தவிர வேறெவன் இங்கே இவ்வாறுசெய்யமாட்டுவன்? இவ்வுலகத்தில் மனிதர்களுக்கு ராஜ்யங்கிடைப்பது எளிது; பிராம்மணத்தன்மைகிடைப்பது அரிது. பிராம்மண்யத்தின் மகிமையினாலன்றோ நம்முடைய தேர்க்குதிரைகள்போல நாமிருவரும் தேரில்பூட்டப்பட்டோம்?' என்றுசொன்னன். அவன் இவ்வாறு நினைத்துக்கொண்டிருப்பது ச்யவனருக்குத்தெரிந்தது. அவர் அரசனைநோக்கி, 'சீக்கிரம்வா' என்றுசொன்னர். இவ்வாறுசொல்லப்பட்ட அந்த அரசன் பார்யையுடன்கூட மகரிஷியினிடம்சென்று வந்தனத்திற்குரிய அம்மகரிஷியைத் தலைவணங்கி வந்தனம்செய்தான். சிறந்தஞானமுள்ளவரும் புருஷச்ரேஷ்டருமான அம்முனிவர் அரசனுக்கு ஆசிர்வாதம்செய்து இன்சொற்சொல்லி அவனை, 'உட்கார்' என்றுசொன்னர். பாரதனே! அரசனே! அப்போது, ச்யவனமுனிவர் உண்மையான மனத்தோடு நயமான சொல்லினால் வேந்தன்'சந்தோஷப்படும்படி. பேசலானர். 'வேந்தனே! நீ ஐந்துகர்மேந்திரியங்களையும் ஐந்துஞானேந்திரியங்களையும் ஆறுவதானமனத்தையும் இயல்பாகவே நன்றாக அடக்கியிருக்கிறாய். அதனாலேதான் இப்போது ஆபத்திலிருந்து விடுபட்டாய். புத்ரனே! பேசுகிறவரிற்சிறந்தவனே! நான் உன்னால் செவ்வையாக ஆராதிக்கப்பெற்றேன். உன்னிடத்தில் மிகச்சிறிய ஒருகுற்றங்கூடக் காணப்படவில்லை. அரசனே! எனக்குவிடைகொடு. நான் வந்தபடியேபோவேன். அரசர்க்கரசே! உன்னிடத்தில் அன்புள்ளவனாயிருக்கிறேன். வரத்தையும் பெற்றுக்கொள்' என்றுசொன்னர். குசிகன், 'ப்ருகுவம்சஸ்ரேஷ்டரே! நான் அக்நியினிடத்திலிருப்பதுபோலப் பகவானை உங்களிடத்திலிருந்தேன். நான்வரிக்கப்படாமலிருப்பதே எனக்கு அதிகம். குற்றமற்றவரே! ப்ருகுபுத்ரரே! என்னுடைய நடக்கைகளினால் நீர்திருப்தியடைந்து என்குலத்தைக்காப்பாற்றினீரே. இதுதான் நான்பெற்ற முக்கியமானவரம். பிராம்மணரே! இதுதான் எனக்கு உம்முடைய அனுக்ரகம். நான் ஜீவித்திருந்ததற்கும் ராஜ்யத்திற்கும் என்தவத்திற்கும் இதுதான்பலன். ப்ருகுசிரேஷ்டரான பிராம்மணரே! என்னிடத்தில் நீர் அன்புவைத்திருந்தால் எனக்கு இருக்கும் ஒருஸந்தேகத்தைத் தெளிவிக்கக்கடவீர்' என்றுகேட்டான்.

தொண்ணூற்றுவது அத்யாயம்.

தானதர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(சிவயனர் குசிகனிடம்வஸிந்த கதைத் தொடர்ச்சி.)

சயவனர், 'மனிதரிற்சிறந்தவனே! என்னிடத்தில் வரத்தையும் பெற்றுக்கொள். உன்மனத்திலிருக்கும் ஸந்தேகத்தையும் சொல். உனக்கு எல்லாவற்றையும் நிறைவேற்றுவேன்' என்றுசொன்னர்.

குசிகன், 'பகவானே! பார்க்கவரே! என்னிடத்தில் உமக்கு அன்பிருந்தால் இப்போது நான்கேட்பதைச் சொல்லும். என்நிருகத்தில் நீர் ஸ்நேஹித்ததற்குக்காரணத்தைக் கேட்கவிரும்புகிறேன். முனிச்ரேஷ்டரே! பிராம்மணரே! இருபத்தொருநாள் ஒருபக்கமாகப்படுத்ததும் ஒன்றும்பேசாமல் வெளியிற்போனதும் காரணமின்றி அந்தர்த்தானமானதும் மறுபடியும் காணப்பட்டதும் திருமபவும் இருபத்தொருநாள் படுத்ததும் தைலகதேய்த்துக்கொண்டு போய்விட்டதும் என்வீட்டிலுள்ள பலவிதபோஜனங்களையும் வருவித்துத் தீயிலெரித்ததும் உடனே தேரேறிச்சென்றதும தனங்களைதானம்செய்ததும் காட்டையும் அநேகம் பொன்மாளிகைகளையும ரத்னங்களும் பலழங்களுமிழைத்த கால்களோடுகூடிய கட்டில்களையும் காண்பித்ததும மறுபடியும் அந்தர்த்தானமானதும் எதற்காகவென்றுகேட்க விரும்புகிறேன். மகரிஷியே! ப்ருகுச்ரேஷ்டரே! இவற்றைநினைத்து மிகவும் மயங்குகிறேன், இவையெல்லாவற்றையும்பற்றி ஒருநிச்சயமும் எனக்குஉண்டாகவில்லை. தபோதனரே! இவற்றையெல்லாம உண்மையாகக்கேட்க் விரும்புகிறேன்' என்று கேட்க, சயவனர் சொல்லலானர்.

'நான்செய்தவை எப்படிப்பட்டவை; என்னகாரணத்தினால் வந்தவை என்பவற்றையெல்லாம் கேள். அரசனே! நீ இவ்வாறுகேட்டபின் நான்சொல்லாமலிருக்கமுடியாது. ராஜனே! முன்னம் தேவர்களின்கூட்டத்தில் பிரம்மாபேசினதை நான் கேட்டிருந்தேன். அதைநான் சொல்லுகிறேன்; கேள். பிராம்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் பகைநேர்ந்து இவ்விருகுலங்களுக்கும் கலப்புநேரிடப்போகிறதாம். ராஜனே! உன்னுடையபோன் பிரம்மதேஜஸ்ஸும் பராக்ரமமுமுள்ளவனாக உண்டாகப்போகிறனும். இதைக்கேட்டபின் என்குலத்தைக்காப்பதற்காகக் குசிகவம்சத்தையழிக்கக்கருதி உன்குலத்தையெரிக்க எண்ணங்கொண்டு

உன்னிடம் நான்வந்தேன்; ராஜனே! அப்போதுதான், 'உன்பட்டணத்தில்வந்து ஒருவிரதம் ஆரம்பிக்கப்போகிறேன். எனக்கு ஏவல்செய்ய வேண்டும்' என்று உனக்குக்கட்டளையிட்டேன். உன்கிருகத்தில் ஒருதவறும் நான் கண்டுபிடிக்கவில்லை. ராஜரிஷியே! அதனால் நீ ஜீவிக்கிறாய். இல்லாவிடில் நீ இராய். ராஜனே! இந்த நிச்சயத்தைச்செய்துகொண்டுதான் யாராவதுஒருவன் என்னை எழுப்புவானேவென்று இருபத்தொருநாள் தூங்கினேன். ராஜஸ்ரேஷ்டனே! கன்றுகத்தூங்கின என்னை நீயாவது உன்மனைவியாவது எழுப்பாமலிருந்தபோதே மனத்தில் நான் உன்மேலன்புவைத்தேன். ராஜனே! பிரபுவே! என்னை, 'நீர் எங்கேபோகிறீர்?' என்று கேட்பாயாயின் உன்னைச்சபிக்கலாமென்றுதான் எழுந்து வெளியிற்போனேன். அதற்காகவே மறுபடியும்மறைந்தேன். அரசனே! பசியினாலாவது சிரமத்தினாலாவது நீங்களிருவரும் என்னைவெறுப்பீர்களென்று என்யோகசக்தியைக்கொண்டு உன்வீட்டில் திரும்பவும் இருபத்தொருநாள் தூங்கினேன். இந்தநிச்சயத்தைச்செய்துதான் உங்களைப் பசியினால் வருத்தினேன். ராஜனே! உன்மனத்தில் மிகச்சிறியகோபங்கூட உண்டாகவில்லை. மனிதரிற்சிறந்தவனே! அதனாலேதான் உன்பாரியையினிடத்திலும் உன்னிடத்திலும் அனுக்கிரகம்வைத்தேன். போஜனத்தைக் கொண்டுவரச்சொல்லி நான்கொளுத்தினதும் நீ பகைத்துக்கோபிப்பாயென்றுதான். அதையும் நீ பொறுத்தாய். ராஜனே! அதன்பிறகு, நான் தேரிலேறிக்கொண்டு 'உன் பாரியையுடன் இழு' என்று கட்டளையிட்டேன். ராஜனே' அதையும் நீ அப்படியே தடையில்லாமற்செய்தாய். அதனாலேயும் உன்னிடத்தில் அன்புள்ளவனானேன். நான்தனத்தைச்செலவழித்தபோதும் கோபம் உன்னைமாற்றவில்லை. வேந்தனே! மனிதருக்கதிபதியே! அதனால் உன்னிடத்தில் அன்புவைத்துத்தான் உனக்கும் உன்பாரியைக்குமாக மறுபடியும் இந்தவனத்தைச் செய்தேனென்றறி. ராஜனே! அந்தவனத்தில் தேவலோகத்திலுள்ள நல்லகாட்சிகளை நீகண்டாயே. அந்த ஸ்வர்க்கக்காட்சியை உன் ஸந்தோஷத்திற்காகத்தான் நான் உண்டாக்கினேனென்றறிந்துகொள். பூமிக்கு ஈசுவரனை அரசனே! நீயும் உன்பாரியையும் இந்தத் தேகத்தோடேயே சற்றுநேரம் ஸ்வர்க்கவாஸத்தை அனுபவித்தீர்கள். ராஜனே! என்தவத்தையும் தர்மத்தையும் திருஷ்டாந்தப்படுத்துவதற்காகச்செய்தேன். ராஜனே! உனக்கு அதில் ஆசையுண்டாகவில்லை. அதையும் நான் தெரிந்துகொண்டேன். பூமிக்குநாதனே! நீராஜாவாயிருப்பதை

யும் தேவேந்திரனுவதையும் அனுதரவுசெய்து பிராம்மணனுவதையும் தவத்தையும் விரும்புகிறயன்றே? அப்பா! இப்படியே நீவிரும்புகிற பிராம்மண்யம் உண்மையில் கிடைக்கத்தகாதது. பிராம்மண்யமிருந்தாலும் ரிஷியாவதும் ரிஷியாயிருந்தாலும் தவச்சிறப்புடைமையும் பெறக்கூடாதவை. குசிகவம்சத்தில் கௌசிகன் என்னும் பிராம்மணன் பிறக்கப்போகிறன். அப்போது இந்த உன்விருப்பம் நிறைவேறும். ராஜஸ்ரேஷ்டனே! உன்னுடைய மூன்றுவது தலைமுறைவரும்போது உன் வம்சம் ப்ருகுவம்சத்தாருடைய தவமகிமையினுலேயே பிராம்மணத்வத்தை அடையப்போகிறது. உன்னுடையபேன் சிறந்ததவமுள்ளவனும் அக்நிபோன்ற தேஜஸுள்ளவனுமாகிய பிராம்மணனுகப் பிறக்கப்போகிறன். [1] அவன் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் மூவுலகங்களுக்கும் பயத்தையுண்டாக்கப்போகிறன். இதுஉண்மை. உனக்குச் சொல்லுகிறேன். ராஜரிஷியே! உன்மனத்திற்குவேண்டின வரத்தைப் பெற்றுக்கொள். நான் தீர்த்தயாத்திரைக்குச் செல்லப்போகிறேன். இனிக் காலங்கடந்துபோம்' என்றார்.

குசிகன், 'மகரிஷியே! நீர் அன்புவைத்திருப்பதுதான் இப்போது எனக்குவரம். குற்றமற்றவரே! அப்படி ஆகட்டும். என்பேன் நீர் சொல்லுகிறபடியாகவேண்டும். பகவானே! என்குலத்திற்குப் பிராம்மண்யம் உண்டாகவேண்டும். இதுதான் எனக்குவரம். பகவானே! ப்ருகுபுத்ரரே! என்குலத்திற்குப்பிராம்மணத்வம் எப்படிவரும்? எவன் என்னுடைய குலத்தில் பிறக்கப்போகிறன்? உம்மால் பிராம்மணனென்று நினைக்கப்படுகிறவன் எவனென்பதை மறுபடியும் நீர்விரிவாகச் சொல்லவிரும்புகிறேன்' என்றுகேட்டான்.

தொண்ணூற்றேராவது அத்யாயம்.

தான தர்மபர்வம் (தொடர்ச்சி.)

(சீவயனர் குசிகனிடம்வஸித்தகதைத் தொடர்ச்சி.)

சீவனர், 'புருஷஸ்ரேஷ்டனே! ராஜனே! நான் எதுபற்றி உன்னியழித்துவிடுவதற்கு வந்தேனே அதை நான் உனக்கு அவசியம் சொல்லவேண்டும். அரசனே! ப்ருகுவம்சத்துப்பிராம்மணர்களால்

[1] பொருத்தமின்மையால் அதிகபாடமான ஒருவரி விடப்பட்டது.

க்ஷத்திரியர்கள் யாகம்செய்விக்கப்படவேண்டியவர்களென்பது நிச்சயம். ராஜனே! தெய்வத்தினுலுண்டானகாரணத்தினல் அவர்கள் ஒருவரோடொருவர் விரோதப்பட்டுப்போகின்றனர். அப்போது க்ஷத்திரியர்கள் தெய்வக்கொடுமையினல் தூண்டப்பட்டு ப்ருகுக்களெல்லாரையும் கர்ப்பத்திலிருக்கும் சிசுமுதலாகச் சேதித்துக் கொல்லப்போகின்றனர். அதன்பிறகு, வம்சத்தைப்பெருகச்செய்வதனும் பிரகாசிக்கும் சூரியனுக்குஒப்பான ஒளியுள்ளவனும் பெரியமகிமையுள்ளவனுமான ஒளர்வனென்பவன் எங்கள்குலத்தில் பிறக்கப்போகிறன். அவன் மூன்றுலோகங்களுமழியும்படி தன்கோபத்தினல் ஓர் அக்நியைஉண்டாக்கப்போகிறன். அந்த அக்நி மலைகளும்காடுகளுமுள்ள பூமியை முழுதும் நீறுசெய்யப்போகிறது. சிலகாலங்கடந்தபின் அம்முனிசிரேஷ்டனே அவ்வக்நியைக் கடலில் வடவையின்வாயில் போட்டு ஆற்றிவிடப்போகிறன். குற்றமற்றமகாராஜனே! அந்த ஒளர்வனுடையபுத்திரனும் ப்ருகுவம்சத்தவனுமான ரிசீகனிடத்தில் தெய்விகமானகாரணத்தினல் க்ஷத்திரியர்கள் ஒழிந்தது போவதற்காகத் தனுர்வேதமுழுதும் தானேவே சேரில்வந்து சேரப்போகிறது. அந்த ரிசீகன் அந்தத்தனுர்வேதத்தைப் பெற்றுக்கொண்டவுடன் தவத்தினல் தூய்மையடைந்தமனமுள்ள மகானுபாவனுகிய ஜமதக்நியென்னும் தன்புத்ரனிடம் சேர்ப்பிக்கப்போகிறன். ப்ருகுசிரேஷ்டனுகிய அந்தஜமதக்நி அந்தத்தனுர்வேதத்தை வைத்துக்கொள்வான். தர்மாத்மாவே! பரதகண்டத்துக்குத்தலைவனே! அந்தஜமதக்நி உன் வம்சத்தைவிருத்திசெய்வதற்காக உன்குலத்திற்பிறந்தகன்னிகையை விவாகம் செய்துகொள்ளுவான். க்ஷத்திரியர்களைக் கொல்லுகிற கொடியபுத்ரனுண்டாக வேண்டுமென்று முதல்தேவதையானகாராயணரை உபாஸனைசெய்து அவர் வரத்தினல் ஔர்வியபுத்ரனை அடைவான். சிறந்ததவமுள்ள அந்தஜமதக்நி காதியின்பெண்ணனை னது பேர்த்திபை மனைவியாக அடைந்து க்ஷத்திரியத்தொழிலைசெய்யும் பிராம்மணனுகியபுத்ரனை உண்டாக்கப்போகிறன். சிறந்தபராக்ரமமுள்ளவனே! அவன் உன்னுடையகுலத்தில் பெருந்தவமுள்ளவனும் மிக்கதர்மிஷ்டனும் புத்தியில்பிருகஸ்பதியைப்போன்றவனுமான பிராம்மணச்செய்கையுள்ளக்ஷத்திரியனுமான [1]விசுவாமித்திரனைக் கொடுக்கப்போகிறன். அப்படிமாறுவதற்கு இரண்டுமாதர்சன் காரணமா

[1] இது ரிசீகர்செய்ததாக முன் 24 - ம் பக்கமுதலும் சாந்திபர்வம் 156-ம் பக்கமுதலுமுள்ளகதைகளிற்சொல்லப்பட்டிருக்கிறது.

வார். இது பிரம்மாவின் கட்டளையாதலின் தவறுது. உன்னிடத்தி லிருந்து மூன்றுவதுபுருஷனுக்குப் பிராம்மணத்வம் வாய்போகிறது. பரிசுத்தாத்மாக்களானப்ருகுக்களுக்கு நீ சம்பந்தியாகப்போகிறாய்' என்றுசொன்னார். பரதசிரேஷ்டனே! தர்மாத்மாவான குசிகராஜன் மகரத்மாவான சியவனமுனிவர்சொன்னவுதத்தைக்கேட்டு, ஸந்தோஷமடைந்து, 'அப்படியேயாகக்கடவது' என்றுசொன்னன். சிறந்தமஹிமையுள்ளசியவனர் வரங்கேட்கும்படி அந்தமன்னனே மறுபடியும்ஏவினர். அந்தஅரசன் அவரைப்பார்த்து, 'மகரிஷியே! அப்படியேயாகட்டும். என்னுடைய அபீஷ்டங்களை உம்மிடத்தில் பெற்றுக்கொள்வேன். என் குலம் பிரம்மகுலமாகக்கடவது. அந்தக்குலத்திற்குத் தர்மத்திலேயே மனமிருக்கக்கடவது' என்றுகேட்டான். இவ்வாறுகேட்கப்பட்ட சியவனமுனிவர், 'அப்படியேயாம்' என்றுமறுமொழிசொல்லி வேக்தனுக்குவிடைகொடுத்து அப்போதே தீர்த்தயாத்திரைக்குச் சென்றார். ராஜனே! ப்ருகுக்களுக்கும் குசிகர்களுக்கும் ஸம்பந்தம்நேர்ந்ததற்குக் காரணமெல்லாவற்றையும் உனக்கு இப்போது சொன்னேன். அரசனே! சியவனமகரிஷி முதலிற்சொன்னபடியே பரசுராமர்ஜனனமும் விஸ்வாமித்திராஜனனமும் நடந்தன" என்றுகூறினர்.

தொண்ணூற்றிரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(தவம் தானமுதலியவற்றின் சிறப்பு.)

யுதிஷ்டிரர், "இப்போது இதைக்கேட்டபிறகு அந்தச்சிறப் புற்றராஜரிஷிகள் இல்லாமற்போன இந்தப்பூமியைப்பற்றி அடிக்கடிநினைத்து மதிமயங்குகிறேன்: பாரதரே! பிதாமஹரே! அநேக ராஜ்யங்களையடைந்தும் பூமியைஜயித்தும் கோடிக்கணக்கானபுருஷர்களைக்கொன்றதனால் மனக்கொதிப்புக்கொண்டிருக்கிறேன். கணவர்களையும் பிள்ளைகளையும் அம்மான்களையும் உடன்பிறந்தார்களையும் இழந்த அந்தச்சிறந்தபெண்களுக்கு இப்போது என்னதிலைமையிருக்குமோ? நாங்கள் அந்தக்கௌரவர்களையும் உறவினரையும் நண்பர்களையும்கொன்றதனால் நரகத்தில் தலைகீழாக விழப்போகிறோமென்பதில் ஸந்தேகமில்லை. பாரதரே! என்சரீரத்தை உக்கிரமானதவத்திற் சேர்ப்பிக்கக்கருதுகிறேன். மனிதர்க்கதிபதியே! எனக்கு அதை

நீர் தெளிவாக உபதேசிக்கவிரும்புகிறேன்" என்றுகேட்டார். பிறந்த மனமுள்ள பீஷ்மர் யுதிஷ்டிரருடைய அந்தச்சொல்லைக் கேட்டபின் தம்புத்தியில் நன்றாக ஆராய்ந்து அவரைநோக்கிச் சொல்லலானார்.

"பாரதனே! ராஜனே! இறந்தபின் எவனுக்கு எந்தக்கதி கிடைக் கிறதென்பதைப்பற்றி ஓர் ஆச்சர்யமான ரகஸ்யத்தைச் சொல்லப்போகி றேன்; கேள். பிரபுவே! ஸ்வர்க்கங்கிடைப்பதும் தவத்தினாலே. புகழ் பெறுவதும் தவத்தினாலே. ஆயுள் அதிகப்படிவதும் ஸுகங்களை அனு பவிப்பதும் தவத்தினாலே. பரதசிரேஷ்டனே! உலகத்திலுள்ள ஞானங் களும் ஆத்மஞானமும் நோயில்லாமையும் அழகும் செல்வமும் எல் லாரும் விரும்பும்படியிருத்தலும் தவத்தினற் கிடைப்பவைதாம். தவத்தினால் தனத்தையடையலாம். மௌனமானது ஞானத்தைக் கொடுக்கிறது. தானத்தினால் எல்லாப்போகங்களும் [1] பிரம்மசர்ய வ்ரதத்தினால் நீண்டகாலம் ஜீவித்திருப்பதும் உண்டாகின்றன. கொல் லாமைக்குப பலன் அழகு. யாகதீக்ஷைக்குப் பலன் நல்லகுலத்திற் பிறப்பது. கனிகளையும் கிழங்குகளையும் புசிப்பதனால் ராஜ்யம் வரு கிறது. இலைகளை உண்பதனால் ஸ்வர்க்கம் வரும். ஜலத்தைமட்டும் உட் கொண்டிருப்பவன் மேலுலகத்தையடைவான். தானம் செய்பவனுக்குப் பொருட்செல்வம் அதிகப்படுகிறது. குருவுக்குப் பணிவிடை செய்வத னால் கல்வியுண்டாகிறது. நித்யஸ்ராத்தம் செய்வதினால் ஸந்ததிவிருத்தி யாகிறது. [2] சாகவ்ரதத்தினால் கோக்கள் விருத்தியாகின்றன. புற் களைப் புசிப்பதனால் ஸ்வர்க்கமுண்டாகிறதென்று சொல்லுகின்றனர். மூன்றுகாலங்களிலும் ஸ்நானம்செய்வதனால் மங்கையரையும் வாயு பக்ஷணம் செய்வதனால் யாகபலனையும் அடையலாம். நித்யஸ்நானம் செய்து இரண்டு ஸந்திகளிலும் ஜபஞ்செய்யும் பிராம்மணன் நெடுங் காலம் ஜீவித்திருப்பான். ராஜனே! உபவாஸமிருந்து மந்திரஜபம் செய்பவனுக்கு ஸ்வர்க்கத்தின்மேல் வாஸமுண்டாகும். தரையில் படுப்பதென்னும் விரதம்செய்பவர்களுக்கு வீடுகளும் கட்டில்களு முண்டாகும். மரவுரிகளையுடுப்பதனால் ஆடைகளும் ஆபரணங்களும் கிடைக்கும். யோகத்தில் ஊக்கம்வைத்த தபோதனருக்குப் படுக்கை களும் ஆஸனங்களும் வாஹனங்களும் வரும். அக்நிப்ரவேசம் செய்பவன் பிரம்மலோகத்தில் பூஜிக்கப்படுவது திண்ணம். ருசிபதார்த் தங்களைக் குறைப்பதனால் இவ்வுலகத்தில் யாவரும் விரும்பத்தக்க வனுவான். மாம்ஸத்தை விடுவதனால் ஸந்ததி தீர்க்காயுளுள்ள

---

[1] இந்திரிய ஜயத்தினால். [2] கறிசாப்பிடாமை நியமம்.

தாகும். [1]உதவாஸமென்னும் தவம்செய்பவன் அரசனுவான். ராஜனே! பொய்சொல்லாதவன் தேவர்களுடன் மகிழ்ந்திருப்பான். தானத்தினால் புகழும் கொல்லாமையினால் ஆரோக்கியமும், பிராம்மணர்களுக்குப் பணிவிடைசெய்வதனால் ஏராளமான ராஜ்பமும் உயர்ந்த பிராம்மண ஜன்மமும் உண்டாகின்றன. தண்ணீர்கொடுப்பதனால் அழியாத புக ழுண்டாகிறது. அன்னங்கொடுப்பதனால் வேண்டினபோகங்கள் திருப்தி யாக உண்டாகின்றன. எல்லாப்பிராணிகளிடத்தும் இன்சொற்சொல்லு கிறவனுகி எல்லாததுபரங்களும் விட்டுநீங்குகின்றன. தேவதாரா தனம் செய்வதனால் ராஜ்பமும் தேவதாரூபமும் உண்டாகின்றன. விளக்குவெளிச்சங் கொடுப்பதனால் கண்கூர்மையும் புத்திக்கூர்மையும் உள்ளவனுவான். கண்ணுக்கினிபவற்றையளிப்பதனால் ஞாபகசக்தியை யும் புத்திக்கூர்மையையும் அடையலாம். சந்தனதானத்தையும் புஷ்பங் களையும் கொடுப்பதனால் எங்கும் வியாபிக்குங் கீர்த்தியுண்டாகிறது. தலைமயிரையும் மீசை தாடியையும் வளர்ப்பவருக்குச் சிறந்த ஸுகதி யுண்டாகிறது. ராஜனே! பன்னிரண்டுவருஷம் உபவாஸமும் தீக்ஷை யும் ஸ்நானமும்செய்துகொண்டிருப்பதனால் வீரர்களுடைய ஸ்தா னத்தைப் பார்க்கிலும் மேன்மையையடையலாம். புருஷசிரேஷ்டனே! பிராம்மணனுக்குத் தகுந்தபெண்ணைக் கன்னிகாதானம் செய்வதனால் வேலைக்காரிகளையும் வேலைக்காரர்களையும் ஆபரணங்களையும் நிலங்க ளையும் வீடுகளையும் அடையலாம். பரதனே! யாகங்களாலும் உப வாஸங்களாலும் ஸ்வர்க்கம் செல்லலாம். கனிகளையும் மலர்களையும் தானம்செய்யுமனிதன் சிறந்தஞானத்தையடைவான். பொன்கட்டின கொம்புகளினால் பிரகாசிக்கும ஆயிரம் கோக்களைக் கொடுப்பதனால் மனிதன் இறந்தபின சிறந்த தேவலோகத்தையடைவானென்பதாக ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் தேவர்கள் சொல்லுகின்றனர். கொம்பு தனி யில் பொன்கட்டுகட்டின [2]கபிலப பசுவைக் கன்றோடும் கறக்கும் வெண்கலப பாத்திரத்தோடும் ஒருவன் தானம்செய்வானுயின் அதுவே அநேகம் சிறப்புகள் நிரம்பின காமதேனுவாக அந்தத் தானம் செய்த மனிதனை அடையும். ஒருவன் கோதானம்செய்வதனால் அந்தக் கோவின்தேகத்தில் எவ்வளவு ரோமங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு பலன்களையும அடைந்து தன் புத்ரர்களையும் பௌத்ரர்களையும் குல மனைத்தையுமே ஏழாவது தலைமுறைவரையில் மறுமையிலும் கரை யேற்றிவிடுகிறன். பொன்னினால் அலங்கரிக்கப்பட்ட கொம்புள்ள பசு

[1] ஜலத்தில் வஸிப்பது. [2] பின் 127-ம் அத்யாயம் பார்க்க.

வைத் தக்ஷிணையோடும் கறக்கிற வெண்கலப்பாத்ரத்தோடும் விலை பெற்ற மேற்போர்வையோடும் பிராம்மணனுக்குக் கொடுப்பவனுக்கும் [1]நிலதேனுவைக் கொடுப்பவனுக்கும் வஸுக்களின் லோகங்கள் எளிதில் கிடைக்கின்றன. நன் னிஷ்களினால் கட்டப்பட்டுக் கொடிய இருளானநரகத்தில் விழும்மனிதனைக் கோதானமானது நடுக்கடலில் அணுகூலமான காற்றுச்சேர்ந்த கப்பல்போல மறுமையில் கரையேற்றுகிறது. சாஸ்திரப்பிரகாரமாகப் பிராம்மணனுக்குத் தகுதியுள்ள கன்னிகையைக் கொடுப்பவனும் பூமிதானமும் அன்னதானமும் செய்பவனும் இந்திரலோகத்தையடைவார் வேண்டிவைவையெல்லாம் நிரம்பின கிருகத்தை வேதம் ஓதுனும் ஒழுக்கமும் குணங்களுமாக நிரம்பின பிராம்மணனுக்குக் கொடுப்பவனுக்கு உத்தரகுருதேசத்திலுள்ள லோகங்கள் கிடைக்கின்றன. வண்டி மாடுகளையும் பசுக்களையும் தானம்செய்வதனால் மனிதன் வஸுக்களின் லோகங்களையடைவான். பொன் நாணயங் கொடுப்பது ஸ்வர்க்கத்திற்குக் காரணமென்றும் கட்டிப்பொன்கொடுப்பது அதற்குமேற்பட்டதென்றும் சொல்லுகின்றனர். குடைகொடுப்பதனால் மிகச் சிறந்த வீடும் பாதரக்ஷைகொடுப்பதனால் வாகனமும் வஸ்திரதானத்தினால் நல்லஆயுளும் பலனுகளுண்டாகின்றன. வாஸனைகளைக் கொடுப்பதனால் மனிதன் வாஸனையாகவேயிருப்பான். பூத்தும் காய்த்துமிருக்கும் மரத்தைப் பிராம்மணனுக்குத் தானம்செய்பவன் தனதான்யங்களும் பலரத்தினங்களும் நிரம்பின அழகானவீடு தேடாமலே கிடைக்கப்பெறுவான். நெய்யுள்ள பக்ஷணங்களையும் அன்னங்களையும் பானங்களையும் கொடுப்பவன் நெய்யுள்ள பதார்த்தங்களெல்லாவற்றையும் நிரம்பப்பெறுவான். வீட்டையும் வஸ்திரத்தையும் கொடுப்பவன் அவற்றையே மறுஜன்மத்தில் அடைவானென்பதில் ஸந்தேகமில்லை. அரசே! எந்தமனிதன் வாஸனையுள்ள புஷ்பங்களையும் தூபங்களையும் சந்தனங்களையும் ஸ்நானங்களையும் மாலைகளையும் பிராம்மணர்களுக்குக் கொடுக்கிறானே அவன் இவ்வுலகத்தில் ரோகமில்லாமல் அழகுள்ளவனுயிருப்பான். ராஜனே! தான்யங்கள் நிரம்பினதும் சிறந்த படுக்கைகளுள்ளதுமாகிய கிருகத்தைப் பிராம்மணனுக்குத் தானம் செய்யும் புருஷன் புண்ணிய ஸ்தானத்திலிருப்பதும் அழகானதும் ரத்தினங்கள் மிகுதியாக நிரம்பினதுமாகிய சிறந்த மாளிகையையடைவான். சிறந்த வாஸனையும் அழகானஷிரிப்பும் தலையணையுமுள்ள படுக்கையைப் பிராம்மணனுக்குக்

கொடுக்கும்மனிதன் அழகும் ஜனக்கட்டுமுள்ளவளும் மனத்திற்கினி யவளுமான மனைவியைத் தேடாமல் வரப்பெறுகிறான்.[1] வீரசயனம் செய்யும் மனிதன் பிரம்மாவுக்குக்குறையாதவனுபுமிருப்பான். வீரசயனத்திற்கு மேற்பட்டதில்லையென்று மகரிஷிகள் கூறுகின்றனர்" என்றார். அவருடைய அந்தசொல்லைக்கேட்டு மனமகிழ்ந்த யுதிஷ்டிரர் வீரமார்க்கத்திலேயே விருப்பமுற்றவராகிக் காட்டில் ஆஸ்ரமத்தில் வஸிப்பதைக் கருதவில்லை. புருஷஸ்ரேஷ்டரான ஜனமேஜயரே! பிரபுவான தர்மராஜர் உடனே பாண்டவர்களைபபார்த்து, "நமது பிதாமஹர் சொன்னசொல்லை நீங்கள் அன்போடு எடுத்துக்கொள்ளவேண்டும்" என்றுசொன்னர். உடனே பாண்டவாகளனைவரும புகழ்பெற்ற திரௌபதியும யுதிஷ்டிரர் சொன்னதை, 'சரி' என்று கொண்டாடினர்.

தொண்ணூற்றுமூன்றுவது அத்யாயம்.

தான தர்மபர்வம் (தொடர்ச்சி.)

(தோடமம்வைத்தல் துலாம்வை டஃ முதலியவற்றினபயன்.)

யுதிஷ்டிரர், "கௌரவஸ்ரேஷ்டரே! பாரதஸ்ரேஷ்டரே! தோட்டங்களையும தடாகங்களையும் செய்விப்பதில் உண்டாகும்பலனை இப்போது உம்மிடத்தில் கேட்கவிரும்புகிறேன்" என்றுசொல்ல, பீஷ்மர் சொல்லலானர்.

"இவ்வுலகத்தில் காண்பதற்கு அழகாகவும் கேட்டியாகவும பல வகைக் காளிக்கற்களால் வினங்கிக்கொண்டு அநேகநிறங்களுள்ளதாகவும் எல்லாவகைப்பிராணிகளுமுள்ளதாகவுமிருக்கும பூமி சிறந்ததென்று சொல்லப்படுகிறது. அந்தப் பூமியிலுள்ள பலவகை நிலங்களையும் குளங்கள் உண்டாக்குவதையும ஜலத்திலுள்ள பிராணிகளெல்லாவற்றையும்பற்றி உனக்கு முறையேசொல்வேன். தடாகங்கள் உண்டாக்கப்படுவதிலுள்ள குணங்களையும் சொல்வேன். தடாகங்கள் உண்டுபண்ணுகிறவன் மூவுலகங்களிலும் யாவரும் பூஜிக்கத்தக்கவனுகிறான். தடாகங்களிருக்குமிடம சிங்கேதன் வீடுபோன்றது; சூரியனுக்குப் பிரியமானது; தேவர்களுக்கு விருத்தியைச்செய்வது; புகழுக்குச் சிறந்தகாரணம். தடாகம்செய்வதினாலுண்டாகும் புண்ணியம் தர்மார்

[1] 38-ம் பக்கம் குறிப்பிக்கண்.

த்தகாமங்களென்னும் மூன்றுபுருஷார்த்தங்களின் பலனையும்தருவ தென்று அறிஞர் கூறுகின்றனர். ஒரு தேசத்தில் தடாகமுள்ள ஓர் இடத்தான் [1]நால்வகைப்பிராணிகளுக்கும் நிறந்த ஆதாரமென்று காண லாம். தடாகங்களெல்லாம் தேசத்திற்குச் சிறந்த அழகைக் கொடுக் கின்றன. தேவர் மனிதர் கந்தர்வர் பித்ருக்கள் நாகர் அரக்கர் தாவ ரப்பொருள்கள் ஆகியவெல்லாரும் தடாகத்தையே அடுத்திருக்கின்ற னர். ஆதலால், தடாகத்திற்குச் சொல்லப்பட்டுள்ள மேன்மைகளை யும் ரிஷிகளால் அதற்குச்சொல்லப்பட்டபலன்களையும உனக்குஉரைப் பேன். எவனுடையதடாகத்தில் மழைக்காலத்தில்மட்டும் ஜலமிருக் கிறதோ அவனுக்கு அக்நிஹோத்ரத்தின் பலனுண்டென்று அறி ஞர் கூறுகின்றனர். எவனுடையதடாகத்தில் சரத்காலத்திலும்ஜலம் நிற்கிறதோ அவன் ஆயிரமகோதானத்தின் சிறந்தபலனை மறுமையில் அடைவான். எவன்தடாகத்தில் ஹேமந்தகாலத்தில தண்ணீர் நிற் கிறதோ அவன் மிகுதியாகப்பொன்தக்ஷிணைகளையுடைய யாகத்தின் பலனை அடைவான். எவன்தடாகத்தில் சிசிரருதுகாலத்தில் ஜல மிருக்கிறதோ அவனுக்கு அக்நிஷ்டோமயாகத்தின்பலனுண்டென்று அறிஞர் கூறுகின்றனர். எவனுடையதடாகம் நன்றாகச்செய்யப்பட்டு வஸந்தகாலத்திலும் ஜலம்மிகுதியாயிருக்கிறதோ அவன் அதிராத்ர யாகத்தின்பலனை அனுபவிப்பான். எவன்தடாகத்தில் க்ரீஷ்மகாலத் திலும் தண்ணீர்நிற்கிறதோ அவனுக்கு அசுவமேதயாகத்தின் பல னுண்டென்று அறிஞர் நினைக்கின்றனர். எவன் வெட்டுவித்ததடா கத்தில் பசுக்களும் யோக்கியர்களான மனிதர்களும் எப்போதும் தண்ணீர்குடிக்கின்றனரோ அவன் தன்குலந்தையெல்லாம கரை யேற்றுவான். எவன் தடாகத்தில் தாகமெடுத்ததடாக்களும் மான்க ளும் பறவைகளும், மனிதர்களும ஜலத்தைக்குடிக்கின்றனரோ அவன் அசுவமேதயாகத்தின்பலனை அடைவான். ஒருவன் தடாகத்தில் ஜனங்கள் தண்ணீர்குடிப்பதும் ஸ்நானமசெய்வதும் கரைப்பாதுகாவல் மான இவையெல்லாம அவனுக்கு மறுமையில் அழிவில்லாதஸுகத் திற்குக் காரணங்களாகின்றன. அப்பா! பரலோகத்தில் தண்ணீர் கிடைப்பது மிகஅரிது. குடிதண்ணீர் கொடுப்பதினால் அழியாத திருப்தியுண்டாகிறது. எள்ளைக் கொடுங்கள். தண்ணீர் கொடுங் கள். தீபங்கொடுங்கள். தவறுதீர்கள். உங்கள் உறவினரோடுகூட மறுமையில் ஸந்தோஷமடைவீர்கள். இந்தஸந்தோஷம் கிடைப்பது

[1] ஸபாபர்வம் 198-ம பக்கம் குறிப்பிற்காண்க.

மிக்கடினம், புருஷசிரேஷ்டனே! தண்ணீர்கொடுப்பது எல்லாத் தானங்களிலும்பெரிது; எல்லாத்தானங்களிலும் சிறந்தது; ஆகலால், தண்ணீர்கொடுக்கவேண்டும். இவ்வாறு தடாகத்தின் சிறந்த பலனைச் சொன்னேன். இனி மரங்கள்வைப்பதைப்பற்றிச் சொல்வேன். தாவரப்பொருள்களில் மரங்கள் புதர்கள் [1]கொடிகள் [2]செடிகள் மேற்பட்டையே வன்மையாகவுடைய மூங்கில்முதலியவைகள் புற்பூண்டுவகைகள் என ஆறுவகைகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை விருக்ஷஜாதிகள். இவற்றைநடுவதினாலுண்டான குணங்களைச் சொல்வேன் மானிடலோகத்திற்புகழும் இறந்தபின் புண்ணியபலனும் அநுத்தியபண்டாகின்றன. அவன் பிதருலோகத்தில் பித்ருக்களாலும் கொண்டாடப்படுவான். தேவலோகத்திற்குப்போன பிறகும் அவன்பேர் அழிவதில்லை, பாரதனே! மரம்வைக்கிறவன் இறந்தகாலத்தினும் எதிர்காலத்தினும் தன்பித்ருவம்சத்தைக் கரையேற்றுவான். ஆதலால் மரங்களை நாட்டவேண்டும். அம்மரங்கள் அவனுக்குப் புத்திரர்களாகின்றன. இதில் ஸந்தேகமில்லை. அவன் பரலோகம் போகும்போது ஸ்வர்க்கத்தையும் மற்ற அழிவில்லாத லோகங்களையும் அடைவான். அப்பா! பூமியில்முளைத்த மரங்கள் மலர்களினால தேவர்களையும் கனிகளினால் பித்ருக்களையும் நிழலினால் அதிதிகளையும் பூஜிக்கின்றன. இன்னார் நாகர் ராக்ஷஸர் தேவர் கந்தர்வர் மனிதர் முனிவர் இவர்களனைவரும் மரங்களையடுக்கின்றனர். இங்கு, மரங்கள் பூத்தும் காய்த்தும் மனிதர்களைத் திருப்திசெய்விக்கின்றன. மரங்களைக்கொடுப்பவனை அம்மரங்கள் புத்ரர்கள்போல மறுமையில் நரகத்தைத் தாண்டச்செய்கின்றன. ஆதலால் நன்மையை விரும்புகிறவன் குளக்கரையில் நல்லவிருக்ஷங்களை எப்போதும் வளர்க்கவேண்டும். பிள்ளைகளைப்போல அவற்றைக் காப்பாற்றவும்வேண்டும். செய்கையில் அவை புத்ரர்களாகவே நினைக்கப்படுகின்றன. குளம்வெட்டுகிறவனும் மரம்வைக்கிறவனும் யாகம்செய்பவனுமாகிய பிராம்மணனும் ஸத்தியாதவருமற்றவர்களும் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகின்றனர். ஆதலால், தடாகத்தை வெட்டுவிக்கவேண்டும்; தோட்டங்களை வளர்க்கவேண்டும்; பலயாகங்களைச்செய்யவேண்டும்; எப்போதும் ஸத்தியமேபேசவேண்டும்" என்றார்.

[1] மரத்தின்மேற்படர்வது. [2] கீழே படர்வதென்றுங்கொள்ளலாம்.

தொண்ணூற்றுநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பிராம்மணர்களைப் பூஜித்தல் முதலியவற்றின் சிறப்பு.)

யுதிஷ்டிரர், "ஓ! கௌரவரிஷ்டரே! யாகவேதிகைக்கு [1]வெளிப்பட்ட தானங்களைப்பற்றிச் சொல்லுகின்றனரே. அவற்றுள் எந்தத் தானம் சிறந்ததென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பிரபுவே! எனக்கு அதைத் தெரிந்துகொள்ள மிக்கவிருப்பமிருக்கிறது. எந்தத்தானம் கொடுத்தால் கொடுப்பவனுக்குத்தொடருமோ அதை எனக்குச்சொல்லும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"எல்லாப்பிராணிகளுக்கும் அபயம்கொடுப்பதும் ஆபத்திற்காப்பாற்றுவதும் ஆவலுடன் பிள்ளைபெண்சாதிகளைக் காப்பதற்காக யாசிப்பவனுக்கு வேண்டினதையளிப்பதும் சிறந்த தானங்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன. பரதரிஷ்டனே! அப்படிப்பட்ட கொடைகொடுத்தல் கொடுப்பவனை விடாபல்தொடரும். பொன் பசுக்கள் பூமி இவற்றின்தானங்கள் எல்லாப்பாவத்திலிருந்தும் கரையேற்றுகின்ற பரிசுத்தமானதானங்கள். புருஷரிஷ்டனே! இவற்றை யோக்கியர்களுக்கு எக்காலமும் கொடு. தானங்கள் மனிதனைப் பாவத்தினின்றுவிடுவிக்குமென்பதில் ஸந்தேகமில்லை. உலகத்திலும் தன்வீட்டிலுமுள்ள என்ன என்னபொருள்கள் தனக்கு மிக விருப்பத்தக்கவையோ அவை அழியாமலிருக்கவேண்டுமென்ற விருப்பமுள்ளவன் அவற்றைக் குணமுள்ளவனுக்குக் கொடுக்கவேண்டும். பிரியமானபொருளைக் கொடுப்பவனும் பிரியமான காரியத்தைச்செய்பவனும் எப்பொழுதும் பிரியமானவற்றையேயடைவர். அவர் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் எல்லாருக்கும் பிரியமாயிருப்பர். யுதிஷ்டிர! ஆசாரவற்றவனைகளும் பொருளில்லாதவனுகவும்வந்து யாசிப்பவனுக்கு அகங்காரத்தினால் தன்னாற்கூடியவரையில் உபகாரம்செய்யாதவன்தான் கொடியவன். பகைவனுயினும் மெலிந்து ராஜகதியாகவந்தடைந்தவனைத் துயரத்தில் ஆதரிக்கிறவன் எவனே அவன்தான் புருஷசிரேஷ்டன். கல்விகள்கற்று ஜீவனமில்லாமல் மனங்குன்றி இளைத்துப்போயிருப்பவனுக்குப் பரிகரிப்பவன் எவனே அவனுக்கொப்பானபுருஷன் எவனுமில்லை. குந்திபுத்ரனே! அனுஷ்டானநியமங்களிற் கட்டுப்பட்டவர்களும் பெண்டுபிள்ளைகளினால் பீடிக்கப்பட்டவர்களும் யாசி

---

[1] யாகதக்ஷிணையைச்சேராததானங்கள்.

யாதவர்களுமான ஸாதுக்களே எவ்வகையிலாவது உபசரித்து அழைக்க வேண்டும். பாரதனே! தகுதியுள்ளவர்களும் எப்போதும் ஸத்வ குணத்தையேயுடையவர்களும் கிடைத்ததைக்கொண்டு ஜீவித்துத் தேவர்களிடத்திலும் மனிதர்களிடத்திலும் ஒன்றையும் வேண்டாமலிருப்பவர்களும் ஸர்ப்பங்களுக்கொப்பானவர்களுமான பிராம்மணர்களிடத்தினின்றும் உன்னைக் காத்துக்கொள். அவர்களைத் தக்கவர்களால் கண்டறிந்து அவர்களுக்கு ஸுகங்களையளித்து அவர்களைக் காப்பாற்று. கௌரவனே! எல்லாப்பிராணிகளுக்கும் சௌக்கியத்தைத் தரத்தக்க பீடிகளைக்கட்டி அவற்றை வேலைக்காரர்களோடும் வேண்டினபண்டங்களோடும் எப்போதும் பிரார்த்தித்துக் கொடு. தர்மிஷ்டர்களும் புண்ணியவான்களும் [1]வித்யாஸ்நானத்தையும் [2]வ்ரதஸ்நானத்தையும்செய்து தர்மத்தைப்பற்றியே ஜீவிப்பவர்களும் தர்வேதம் ஓதலையும் தவத்தையும் வெளிப்படுத்தாதவர்களும் யெமந்தவறுதவர்களுமான அந்தப் பிராம்மணர்கள் தானத்தைப்பெற்றுக்கொள்வாராயின் சிரத்தையினால் பரிசுத்தமானதைப்பெறுவது கடமையென்றுநினைத்துத்தான் பெற்றுக்கொள்வர். பரிசுத்தர்களும் அடக்கமுள்ளவர்களும் தம்மனைவிகளை விடாதவர்களுமான அவர்கள் விஷயத்தில் நீசெய்வது உனக்கே பரலோகத்தில் மங்களமாகிறது. மனத்தூய்மையோடு வித்வான்களுக்குக்கொடுக்கும் தானமானது பிராம்மணன் காலமாலியரண்டுவேளையும் முறைப்படிசெய்த அக்னிஹோத்திரம்போலாகிறது. அப்பா! சிரத்தையினால் பரிசுத்தமும் தகுதியுள்ளதுமாகிய நீசெய்யும் இந்தத்தானமென்னும் யாகம் எல்லாயாகங்களிலும்சிறந்தது. இது எப்போதும் நடக்கட்டும். யுதிஷ்டிர! தகுந்தவர்களுக்குக்கொடுப்பது மஹாதானங்களுக்குச் சமமானது. அவர்களைப் பூஜித்துக்கொடுப்பவன் கடன்தீர்ந்தவனாகிறான். கோபியாமலும் திரும்புக்குமாசைப்படாமலும் இன்சொல்லையேபேசிக்கொண்டு மிருக்கிறவர்தாம் நமக்கு மிகப்பூஜிக்கத்தக்கவர். எவர்கள் நம்மைக் கொண்டாடாமலும் யாசிக்கப்புகாமலுமிருக்கின்றனரோ அவர்களைப் புத்திரர்களைப்போலக் காப்பாற்றவேண்டும். அவர்களை வணங்கவேண்டும். அப்படிச்செய்வதால் பயமில்லை. ரித்விக்குகள் புரோஹிதர்கள் ஆசாரியர்கள் ஸாதுக்கள் தர்மந்தவறுதவர்கள் இவர்களிடத்தில் க்ஷத்திரியதர்மத்தினாலுண்டான பராக்கிரமம் அடங்கிப்போம். யுதிஷ்டிர! 'நான் ஈச்வரன்; பலவான்; ராஜன்' என்று அகங்காரப்பட்டு உடைகளிலும் உணவிலும் அந்தணர்களை விலக்காதே. குற்றமற்றவனே!

---

[1] அவற்றைப்பூர்த்திசெய்வது. [2] குருப

க்ஷத்திரியதர்மத்தை யனுஷ்டிக்கும் நீ உன்சிறப்புக்காகவும் லோகக் காகவுமிருக்கும் திரவியமெதுவோ அதனால் வேதியர்களைப் பூஜிக்க வேண்டும். பிராம்மணர்கள் ஏறக்குறைய நடந்தாலும் அவர்களை நீ வணங்கவேண்டும். அவர்கள் உன்னிடத்தில் உன்புத்ரர்கள்போல ஸுகமாகவும் உற்சாகமாகவும் விளையாடட்டும். கௌரவஸ்ரேஷ்டனே! அழியாத அனுக்ரஹமுள்ளவர்களும் எல்லாருக்கும் அன்பர்களும் கொஞ்சத்தில் திருப்தியடைகிறவர்களுமான பிராம்மணர்களுக்கு ஜீவ னத்தைக்கொடுப்பதற்கு உன்னைவிட வேறுதகுதியுள்ளவன் யாவன்? 'இவ்வுலகத்தில் மாதர்களுக்கு நிலையான தர்மமும் கதியும் கணவன் தான்; வேறில்லை' என்பதுபோல நமக்குப் பிராம்மணர்கள். அப்பா! நம்மால்பூஜிக்கப்படாத பிராம்மணர்கள் க்ஷத்திரியனிடத்தில் எப்போது மிருக்கும் கொடுஞ்செய்கையைக்கண்டு நம்மை விட்டுவிடுவாராயின் வேதமும் புகழும் பரலோகமும் யாகமும் அற்றுப்போன நமக்கு உயிர் வாழ்க்கையினாலாகும்பலன் யாது? இவையெல்லாம் நமக்குப் பிராம்ம ணர்களால் வருவனவல்லவா? இந்தவிஷயத்தில் பழமையான தர்மத்தை உனக்கு உரைப்பேன், ராஜனே! முற்காலத்தில் அரசன் பிராம்மணர் களுக்கும் வைசியன் அரசர்களுக்கும் சூத்திரன் வைசியர்களுக்கும் பணிவிடைசெய்தனரென்று கேள்வி. சூத்திரன் பிராம்மணனிடத்தில் ஜ்வலிக்கும் அக்கினியிடத்திற்போலத் தூரத்திலிருந்து உபசாரங்கள் செய்யவேண்டும். வைசியனும் க்ஷத்திரியனுந்தாம் தொட்டுப்பணிவிடை செய்யலாம். இளகியமனமுள்ளவர்களும் ஒழுக்கந்தவறாதவர்களும் ஸத்யத்தையும் தர்மத்தையும் காப்பவர்களும் கோபித்தால் ஸர்ப்பங்கள் போன்றவர்களுமான அந்தப்பிராம்மணர்களுக்கு நீங்கள் உபசாரம் செய்யுங்கள். பராக்ரமத்தினாலும் லோகயினாலும் பிறரைவருத்தும் க்ஷத்திரியர்களில் பிந்தினவர்கள் முந்தினவர்கள் அவர்களுக்கும் முந் தினவர்கள் எல்லாருடைய பராக்ரமங்களும் தவங்களும் பிராம்மணர் களிடத்திலேயே மழுங்கிப்போயின. அப்பா! ராஜனே! எனக்கு என் தந்தையினிடத்திலும் பாட்டனரிடத்திலும் உன்னிடத்திலும் என் தேகத்திலும் உயிரிலும் அவ்வளவு அதிகஅன்பில்லை. எனக்கு உன்னை விட அதிகஅன்பன் இப்புவனியில் எவனுமில்லை. பரதசிரேஷ்டனே! பிராம்மணர்கள்மட்டும் எனக்குஉன்னைவிட மிகஅன்பர்கள். பாண்டுபுத் ரனே! நான்சொல்வது உண்மையாயிருந்தால் இந்தஸத்யத்தினாலேயே சுத்தமுஇருக்கும் லோகங்களுக்கு நான்போகக்கடவேன்; பிராம்மணர் களால் பூஜிக்கப்பட்டவையும் பரிசுத்தமுமான ஸாதுக்களின் உலகங்

கூடீயும் பார்ப்பேன். அப்பா! உடனேயாஞலும் காலம்பொறுத்தாஞலும் அவ்வுலகங்களுக்குத்தான் யான் போகவேண்டும். பரதஸ்ரேஷ்டனே! வேந்தே! இப்படிப்பட்டலோகங்கள் இருப்பதையறிந்துதான் பிராம்மணர்கள்விஷயத்தில் நான் செய்ததைப்பற்றி வருத்தப்படாமலிருக்கிறேன்" என்றார்.

தொண்ணூற்றைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி)

(யார் தானம்பெறுவதற்குரியவரென்பது முதலியன.)

யுதிஷ்டிரர், "ஆசாரமும் கல்வியும் குலமும் ஸமமாகச்சிறந்திருக்குமிருவரில் ஒருவன் யாசியாதவனும் மற்றொருவன் யாசிக்கிறவனுமாயிருந்தால் எவனுக்குக்கொடுப்பது சிறந்தது?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"குந்திபுத்ரனே! யாசிப்பவனுக்குக்கொடுப்பதைவிட யாசியாதவனுக்குக்கொடுக்கும் தானம் சிறந்ததென்று சொல்லுகின்றனர். மனவுறுதியில்லாமல் யாசிப்பவனைப்பார்க்கிலும் மனவுறுதியுள்ளவன் மிகத்தகுதியுள்ளவன் தானே? கூடத்திரியனுக்கு ரக்ஷிப்பதுதான் தணிவு. பிராம்மணனுக்கு யாசியாமலிருப்பதுதான் தணிவு. தணிவும் திருப்தியுமுள்ள வித்வானைபிராம்மணன் தேவர்களையும் ஸந்தோஷப்படுத்துவான். பாரதனே! யாசிப்பதும் மிகுதியாகவாங்குவதும் அசக்தனுக்குரியவையென்று சொல்லுகின்றனர். மனிதர்கள் யாசிக்கும்போதெல்லாம் கொள்ளைக்காரர்கள்போல நடுங்கச்செய்கின்றனர். யாசிப்பவன் இறப்பவனே. கொடாதவன் அவன்பின் இறப்பவன். யுதிஷ்டிரா! கொடுப்பவன் பெற்றுக்கொள்பவனையும் தன்னையும் பிழைப்பிக்கிறான். கேட்பவனுக்குக்கொடுப்பதனால் தயையென்னும் பெரியதர்மம் வருகிறது. யாசியாமல் வருத்தப்படுகிறவர்களுக்கு எல்லாமுயற்சிகளாலும் வருந்திக்கொடுக்கவேண்டும். உன்னுடையதேசத்தில் அப்படிப்பட்ட பிராம்மணத்தமரிருப்பாராயின் நீறுபூத்தநெருப்போன்ற அவர்களை நீ ஜாக்ரதையாகத் தெரிந்துகொள்ளவேண்டும். கௌரவனே! தவத்தினால் பிரகாசிப்பவரும் பூஜைக்குரியவர்களுமான அப்படிப்பட்டவர்கள் பூஜிக்கப்படாவிடின் புவனிமுழுமையுங்கூட எரித்துவிடுவர். சாஸ்திரஞானமும் ஆத்மஞானமும் தவமும் யோகமுமுள்ளவர்கள் பூஜைக்குரியவர்களன்

ரோ? வீரனே! அப்படிப்பட்ட பிராம்மணர்களுக்குப் பூஜையைச் செலுத்துவாயாக. அவர்களுக்குப் பலவகைப்பொருள்களைக்கொடுத்து அவர்களைச் சந்தோஷப்படுத்தவேண்டும். காலமாலைகளில் நன்முகச் செய்யப்பட்ட அக்நிஹோத்ரத்திற்கு என்னபலனுண்டாகுமோ அந்தப் பலன் வித்தையும் வேதமும் தவமும் நிரம்பின பிராம்மணனுக்குக் கொடுப்பதனால் உண்டாகுமென்று சொல்லுகின்றனர். கௌரவனே! வித்யாஸ்நானமும் பிரம்மசாரிவ்ரதஸ்நானமும் செய்தவரும் பிறரையடுத்து ஜீவியாதவரும் ஓதலையும் தவத்தையும் வெளிப்படுத்தாதவரும் நியமங்கள் தவறுதலாகளுமான பிராம்மணர்களுக்கு அழகானவீடுகளைக் கட்டுவித்துப் பண்டங்களோடும் வேலைக்காரர்களோடும் இன்னமும் அவர்கள் விருப்பினவைகளோடும் அவர்களைப் பிரார்த்தித்துக்கொடுப்பாயாக. யுதிஷ்டிர! தர்மத்தெரிந்தவர்களும் நுட்பமான அறிவுள்ளவர்களுமான அந்தப்பிராம்மணர்கள், நீ சிரத்தையோடு கொடுப்பதைக் கடமையென்று நினைத்துத்தான் பெற்றுக்கொள்வார்கள். உழவர்கள் மேகத்தையெதிர்பார்ப்பதுபோல அவர்களை மனிஷிகள் எதிர்பார்க்கின்றனரோ அப்படிப்பட்ட பிராம்மணர்கள் உன்னிடத்தில் புகித்துமிகுந்ததைக் கையிலெடுத்துக்கொண்டு தகுதிணைகளோடு கிருகங்களுக்குச் சென்றார்களா? அப்பா! நியமமுள்ளவர்களும் ஜிதேந்திரியர்களுமான பிராம்மணர்கள் உன்னுடைய அன்னங்களைப்புசிப்பதனால் மூன்றக்கினிகளையும் திருப்திசெய்விப்பார். அது [1]ப்ராதஸ்ஸவனம். அப்பா! பசுக்களையும் பொன்களையும் ஆடைகளையும் கொடுப்பதனாலேயே உனக்கு மாத்யாந்நஸவனமும் நடக்கவேண்டும். அதனால், உன்னிடத்தில் இந்திரன் திருப்திய டைவான். யுதிஷ்டிர! தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் நீகொடுப்பதுதான் விஸ்வர்களென்னும் தேவர்களைத் திருப்திசெய்விக்கும் மூன்றாவதுஸவனம். கொல்லாமையும் எல்லாவற்றையும் எல்லாப்பிராணிகளுக்கும் பகுத்துக்கொடுப்பதும் இந்திரியங்களையடக்குவதும் பற்றில்லாமையும் மனஉறுதியும் ஸத்தியமும் உனக்கு [2]அவபிருதங்களாகின்றன. அப்பா! சிரத்தையினால் சுத்தமுள்ளதும் தகுதிணைகளுள்ளதுமெல்லாயாகங்களிலும் சிறந்ததுமான இந்ஞானமென்னும் யாகம் உன்னால் செய்யப்பட்டு இடைவிடாமல் நடந்துவரக்கடவது" என்றார்.

[1] காலஹோமம்.

[2] ஆதிபர்வம் 809 - ம்பக்கம் குறிப்பிற்காண்க.

தொண்ணூற்றுரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(அரசன் செய்யத்தக்க தானம் யாகமுதலியன.)

யுதிஷ்டிரர், "பாரதரே! தானம் யாகஞ்செய்கை இவைகளுள் மறுமையிற்பெரும்பயனைத்தருவது யாது? எதன்பயன் சிறந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது? எந்தக்காலத்தில் எப்படிப்பட்டவர்களுக்கு எவ்வகையாகக் கொடுக்கவேண்டும்? இதைச் சரியாகத்தெரிந்துகொள்ள விரும்புகிறேன். வித்வானே! தெரிந்துகொள்ள விரும்பமுள்ள எனக்குத் தானதர்மங்களை உரைக்கக்கடவீர். ஐயா! பிதாமஹரே! யாகவேதி கையில் சிரத்தையுடன் தக்ஷிணைகொடுப்பதிலும் தயையினால் தானம் செய்வதிலும் எது அதிகபலனுள்ளது? அதை எனக்குச் சொல்லக்கட வீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"அப்பா! க்ஷத்திரியனுக்குக் கொடியசெய்கை எப்போதுமிருக் கிறது. தானமின்றி யாகத்தினசுத்தமானபலன் இவனுக்கிராது. யாகம் செய்விக்கும் ஸாதுக்களான பிராம்மணோத்தமர்கள் பாபிகளான அரசர் களிடத்தில் ஒன்றும்வாங்கார்; ஸ்நேஹத்தோடு கொடுப்பவர்களிடத் தில்தான் வாங்குவார். தக்ஷிணைகள் வாங்குவதற்குரியயோக்கியர்கள் கோபத்தினால் தனத்தைத்[1] பெற்றுக்கொள்ளாமல் போவாராயின், அந் தக்காரணம்பற்றியே அரசன் சிரப்பினதக்ஷிணைகளுள்ள யாகங்களைச் செய்யவேண்டும். அவர்கள் வாங்குவாராயின், அரசன் மிகுந்தசிரத்தை யோடு தினந்தோறும் தானஞ்செய்யவேண்டும். தானத்தான் பாவத்தைப் போக்குபவற்றுள் மிகச்சிறந்தது. அன்புள்ளவர்களும் ஸாதுக்களும் வேதமறிந்தவர்களும் அடக்கம் ஒழுக்கம் தவம் இவைதவறாதவர்களு மான பிராம்மணர்களைத் தனங்களினால் திருப்திசெய்விப்பதுதான் ஹிம்ஸையில்லாததாகப். உன்னுடைய எந்தக்காரியத்தை அவர்கள் செய்விக்கவில்லையோ அந்தக்காரியம் நீ செய்ததாகாது. ஸாதுக்களுக் குச் சுவையுள்ள அன்னங்களும் சிரம்பின தக்ஷிணைகளும் கொடு த்து யாகங்களைச்செய் தானம் செய்வதினால் யாகம் தானம் இரண்டும் செய்தவனாக உன்னை நினைத்துக்கொள். இடைவிடா மல் யாகம்செய்பவரைப் பூஜிக்கக்கடவாய். அதனால் உனக்கும் அந் தப்பலனில் பாகமுண்டாகும். வித்வான்களுக்குக் கொடுப்பதனாலும் அவர்களைப்பூஜிப்பதனாலும் உனக்கு அவர்கள் புண்யத்தில் பாக

[1] யாகத்தினால் பாபம்தீர்ந்தால் வாங்குவார்களென்பது.

முண்டு. யாகம்செய்பவர்களுக்கும் வித்வான்களுக்கும் கொடுக்குந் தானமானது கொடுப்பவனுக்கு மேலுலகத்தைக் கொடுப்பிக்கும். ஞானத்தைக்கொடுக்கும் ஆசார்யர்களுக்குத் தானம்செய்யவேண்டும். அதனால் ஞானதானத்தின்பலனில் ஒருபாகமுளவனுவான். ஸந்ததிகளுள்ளவரும் பெருங்குடும்பத்தைக்காப்பவருமான பிராம்மணர்களைக் காப்பாற்றக்கடவாய். அதனால் அந்தக்குடும்பியைப்போலப் பூஜிப்பவனுக்கும் ஸந்ததிகள் உண்டாகும். ஸாதுக்கள் பெரியோர்களின் தர்மங்களெல்லாவற்றையும் விருத்திசெய்கிறவர். அதிகஅனுஷ்டானமுள்ள அம்மனிதர்கள் எல்லாஸொத்துக்களாலும் காப்பாற்றுவதற்குரியவர். யுதிஷ்டிர! செல்வம்நிரம்பப்பெற்றும் பிராம்மணர்களுக்குப் பசுக்கள் எருதுகள் அன்னம் குடை வஸ்திரங்கள் பாதரக்ஷைகள் ஆஸனமிவற்றைக் கொடு. பாரதனே! செல்வமுள்ளவர்கள் யாகம்செய்பவர்களுக்கு நெய் அன்னம் குதிரைவண்டிகள் வீடுகள் படுக்கைகள் இவைகளையெல்லாம் கொடுக்கவேண்டும். பாரதனே! இவை புண்ணியத்தையடைவதற்கு எளியஉபாயங்கள். ஜீவனமில்லாமல்கஷ்டப்படுகிறவரும் பிறரைவெறுக்காதவருமான பிராம்மணரைக்கண்டறிந்து ரகஸ்யமாகவோ வெளிப்படையாகவோ ஜீவனத்தைக்கொடுத்து அவர்களைக் காப்பாற்று. அது ராஜஸூயஅஸ்வமேதயாகங்களைப்பார்க்கிலும் கூடத்திரியர்களுக்கு மிகச்சிறந்தது. இப்படிச்செய்வதனால் நீ பாவங்களால் விடுபட்டுப் பரிசுத்தனாகி ஸ்வர்க்கத்தையடைவாய். பொக்கசத்தைச்சேர்த்துத் தேசராஷ்ட்ரத்தைக்காப்பாற்றுவாயாயின் பிராம்மணத்வத்தையும் தனங்களையும் மறுஜன்மத்தில் அடைவாய். பாரதனே! உன்ஜீவனத்தையும் பிறர்ஜீவனத்தையும் காப்பாற்று. உன் வேலைக்காரர்களையும் குடிகளையும் பிள்ளைகளைப்போல ரக்ஷிக்கக்கடவாய். பாரதனே! பிராம்மணர்களின்யோகக்ஷேமங்களிரண்டும் எப்போதும் உன்னைப்பொறுத்தவையாயிருக்கவேண்டும. உன் உயிர்வாழ்க்கையே அவர்களுக்காக இருக்கக்கடவது. அவர்களை நீ காப்பாற்றுமலிருக்கலாகாது. பிராம்மணனுக்குத் திரவியம் அதிகமாகச் சேர்வதுதான் பெருந்தீங்கு எப்போதும ஐசுவரியத்தோடுபழகுவது கர்வத்தையுண்டாக்கி அறிவைக்கெடுத்துவிடும. பிராம்மணர்களுக்கு அறிவுகெட்டால் தர்மம்அழிந்துபோவதுதிண்ணம் தர்மம்அழிந்தால் பிராணிகளேயில்லாமற்போம். ஸந்தேகமில்லை. அரசன், 'யாகத்திற்காக அந்தத்தேசத்திலிருந்து தனத்தைக்கொண்டு வாருங்கள்' என்றுசொல்லி, அதிகாரிகளிடத்தில் ஒருதேசத்தை ஒப்புக்கொடுக்கிறான். அவனுடையஅந்தக்கொடியகட்டளையைப்பெற்

றுக்கொண்டஜனங்கள் பயந்து கொடுத்தபொருளைக்கொண்டு அரசன் யாகஞ்செய்வனையின், அந்தயாகத்தை ஸாதுக்கள் புகழமாட்டார்கள். நன்றாகச்செல்வம்தழைத்திருப்பவர்கள் பீடிக்கப்படாமல் அன்போடு கொடுக்குந்திரவியம் ஸ்வல்பமாயிருந்தாலும் அதைக்கொண்டு யாகம் செய்யலாம்; அதிகாரத்தினால் வாங்கப்பட்டதைக்கொண்டு செய்யலாகாது. சாஸ்திரப்படி சேர்த்துவைக்கப்பட்டதிரவியம் எப்போது மிகஅதிகப்படுமோ அப்போது அரசன் தகுதிஇணகள்மிகுதியாகவுடைய மகாயாகங்களைச் செய்யவேண்டும். முதியோர்கள், சிறுவர்கள், கண்ணில்லாதவர்கள், அசக்தர்கள் ஆகியஇவர்களின்தனத்தை அரசன் ரகூஷிக்கவேண்டும். வேந்தன் [1]பூமியிலிருக்கும்தனங்களை வெட்டிபெடுக்கலாகாது. பிரஜைகள் அழும்படி அவர்கள்தனத்தை வாங்கலாகாது. ஏழைகளின்தனம்அபகரிக்கப்பட்டால் அது ராஜ்யத்தையும் ராஜ்யலக்ஷ்மியையும் கெடுத்துவிடும். ஸாதுக்களுக்குச் சிறந்தபோகங்களைக் கொடுக்கவேண்டும்; பசியின்பயத்தைப் போக்கவேண்டும்; அவர்களின்குழந்தைகள் ருசியுள்ளஉணவை எதிர்பார்த்து அதைக் கிரமமாகஉண்ணப்பெறாவிடின் மன்னனுக்கு அதைவிடப் பெரும்பாவம் என்னவிருக்கிறது? அப்படிப்பட்டவித்வானை பிராம்மணன் உன்தேசத்தில் முன்சொன்னபடி பசியினால்வருந்துவானையின், சுசுறத்தியென்னும்பெரும்பாவத்தைச் செய்தவன்போல அதன்பயனை அடைவாய். எவனுடையதேசத்தில் பிராம்மணனுகட்டும் மற்றமனிதனுகட்டும் கஷ்டப்படுகிறானே அந்தஅரசனுடைய பிழைப்பு இழிவானபிழைப்பென்பது சிபிசக்கரவர்த்திசொன்னவாக்கியம். எந்த மன்னனின்தேசத்தில் ஸ்நாதகன் பசியினால்வருந்துகிறானே அவனுடையராஜ்யமும் அவன் ராஜவம்சமும் விருத்தியடைவதில்லை. எந்தஅரசனுடைய தேசத்திலிருந்து கணவர்களும் பிள்ளைகளும் கதறும்போது தாமுர்க்கதறிக்கொண்டிருக்கும் மாதர்கள் பலவந்தமாகக்கொண்டுபோகப்படுகின்றனரோ அவ்வரசன் இறந்தவன்தான்; ஜீவிப்பவனல்லன். ரகூஷியாதவனும் பணத்தை வாங்கிக்கொள்ளுகிறவனும் தேசத்தையழிப்பவனும் ஒழுங்காகஉடத்தாதவனும் தயையற்றவனுமாகிய அரசனென்றுபெயருள்ளகலிபுருஷனை ஜனங்களே முயன்றுகொல்வார்கள். 'நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்' என்றுசொல்லிக் காப்பாற்றுமலிருக்கும்அரசனை நோய்பிடித்தவெறிநாயைப்போல ஜனங்கள் சேர்ந்து கொல்லவேண்டும். பாரதனே!

[1] 'பொருளைச் சொந்தஉபயோகத்திற்காகத் தனவசப்படுத்திக்கொள்ளலாகாது' என்பது பழையவுரை.

வேந்தனுக் காப்பாற்றப்படாத ஜனங்கள் என்னபாவம்செய்தாலும் அந் தப்பாவத்தில் காலில்லாதபாகத்தை அரசன் அடைகிறான்; சிலர் அந் தப்பாவமெல்லாவற்றையும் அடைகிறானென்றும், சிலர் அதிற்பாதியை அடைகிறானென்றும் சொல்லுகின்றனர்; மனுவின் சாஸ்திரத்தைக் கேட்ட நமக்குமட்டும் காலில்லாதபாகம் என்னும் மதந்தான் நிச்சயம். பாரதனே! அரசனால் நன்றாகக்காப்பாற்றப்பட்ட ஜனங்கள் செய்யும் புண்ணியகர்மத்திலும் காலில்லாதபாகத்தையே அவன் அடைகிறான். யுதிஷ்டிர! மேகத்தையனுசரித்து எல்லாப்பிராணிகளும் ஜீவிப்பது போலவும் பெரியவிருக்ஷத்தை அடுத்துப்பக்ஷிகள் ஜீவிப்பதுபோலவும் நீ ஜீவிப்பதையனுஸரித்துக் குடிகளெல்லாம ஜீவிக்கக்கடவன. வீரனே! ராக்ஷஸர்கள் குபேரனையும் தேவர்கள் இந்திரனையும் அடுத்து ஜீவிப்பது போல உறவினரும் சினேகிதர்களும் உன்னையடுத்து ஜீவிக்கக்கடவர்" என்றார்.

தொண்ணூற்றேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பூமிதானத்தின் சிறப்பும், ப்ருஹஸ்பதி இந்திரனுக்குத் தானங்களைப் பற்றிச் சொல்லியதும்.)

யுதிஷ்டிரர், "வேதவிதிகள், 'இதைக் கொடுக்கவேண்டும்; இதைக் கொடுக்கவேண்டும்' என்றிருப்பதனால் அரசர்கள் கொடுக்கவேண்டிய வை அநேகமிருக்கின்றன. அவை எல்லாவற்றிலுஞ் சிறந்ததான கொடுக்கத்தக்கபொருள் யாது?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்ல லானார்.

"பூமிதானமானது எல்லாத்தானங்களிலும் மேற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பூமியானது அசைவற்றது; அழிவற்றது; உயர்ந்த போகங்களைக் கொடுப்பது. வஸ்திரங்களையும் ரத்தினங்களையும் பசுக் களையும் நெல்யவைமுதலிய தானியங்களையும் பூமி தருகிறது. எல்லாப் பிராணிகளிலும் பூமிதானம்செய்பவன்தான் நெடுங்காலம் மேன்மை யடைவான். இவ்வுலகத்தில் பூமிதானமசெய்பவன் பூமியின்ஆயுள் எவ் வளவுகாலமோ அவ்வளவுகாலம் விளங்கிக்கொண்டிருப்பான். யுதிஷ் டிர! இவ்வுலகத்தில் பூமிதானத்திற்கு மேற்பட்டதொன்றுமில்லை. எல் லாரும் பூமியில் கொஞ்சபாகமாவது தானம் செய்திருக்கின்றனரென்று நாம் கேட்டிருக்கிறோம். பூமியைக்கொடுத்த ஜனங்கள்தாம் பூமியை

அநுபவிக்கின்றனர். மனிதர்கள் இம்மையிலும் மறுமையிலும் தம் வினையையே பற்றியிருக்கின்றனர். பூமியென்னும்மகாதேவி தன்னைக் கொடுப்பவனைத் தனக்குகந்தனை கணவனைக்செய்துகொள்ளுகிறாள். ராஜஸ்ரேஷ்டனே! அழிவில்லாத இந்தப்பூமியைத் தக்ஷிணையாகக் கொடுப்பவன் மறுபடியும் மானிடஜன்மமெடுத்துப் பூமிக்கரசனாவான். இவன்கொடுக்கிறபடிதான் இவனுக்குப் பின்னால் அனுபவமுண்டாகிற தென்பது தர்மசாஸ்திரங்களின் துணிபு. 'யுத்தத்தில் தேகத்தையாவது விடவேண்டும்; பூமியையாவது தானம்செய்யவேண்டும்'என்பதைத்தான் க்ஷத்திரியஜாதியிற் பிறந்தோர்களுக்குச் சிறந்த ஆசீர்வாதமாகக்கூறுகின்றனர். தானம்செய்யப்பட்ட பூமியானது பாவச்செய்கையுள்ளவனுகவும் பிரம்மஹத்திசெய்தவனுகவும் பொய்யனுகவுமிருந்தாலும் தானம்செய்பவனைப் பரிசுத்தனுகசெய்யுமென்று நாம் கேட்டிருக்கிறோம். அதுதான் பாவத்தைப்போக்குவது. அதுதான் பாவத்திலிருந்து மனிதனைவிடுவிப்பது. பாவஞ்செய்த ராஜர்களிடத்திலும் பூமியைமட்டும் ஸாதுக்கள் வாங்கிக்கொள்ளுவார்; வேறுஒன்றையும் விரும்பார். ஏனெனில், பூமியானது பரிசுத்தமானது. இந்தப்பூமிதேவிக்குப் [1] பிரியதத்தையென்னும் பெயர் ரகஸ்யமும் அழியாததுமாயிருக்கிறது. ஏனெனில், அதைக் [2] கொடுப்பதும் வாங்குவதும் மிகவும் பிரியமானவை. இந்தப்பூமியை விதிவானுக்குத் தானம்செய்யும் அரசன் பூமியில் இப்போதுஇருப்பதைவிட அதிகஸுகமான ராஜ்பாதிபத்தியத்தை அடைவான். அவன் மறுஜன்மத்திலும் அரசனுகவேயிருப்பானென்பதில் ஸந்தேகமில்லை. ஆதலால், அரசன் பூமியையடைந்தவுடனே அதைப் பிராம்மணனுக்குத் தானம்செய்யவேண்டும். அரசனல்லாதவன் பூமியை [3] ஆளுவது ஏவ்வகையிலுமுடியாது. பூமியை வஸ்திரத்தினுலும் மூடமுடியாது; வேறுவிதமாக மறைத்துக்கொண்டு [4] போகவுமாகாது. பூமியைவிரும்புகிறமற்றவர்களும் இப்படி (தானம்) செய்யவேண்டுமென்பதில் ஸந்தேகமில்லை. யோக்கியனுடைய பூமியை எவன் எடுத்துக்கொள்ளுகிறானே அவன் பூமியை அடைவதேயில்லை. யோக்கியர்களுக்குப் பூமியைக்கொடுப்

[1] பிரியமாகக்கொடுக்கப்படுவது.

[2] கொடுப்பதனுல் பாவம் விலகுகிறது; வாங்குவதனும்பாவமில்லை.

[3] தானம்செய்வதனுல் அரசனுக்குப் பூமியில்லாமற்போகாது என்பது.

[4] வாங்கினவனுக்குப் பலனும் அரசனுக்கு ஆளுகையும் வியவஸ்தையாயிருக்கும் என்பது.

பவன் சிறந்த பூமியைப் பெறுகிறான் தர்மசிந்தையுள்ளவன் இருக்கும் போதும் இறந்தபின்னும் பெரும்புகழையடைகிறான். ஒருவனுக்கு ஆகாரத்தைக்கொடுக்கும் பூமியைக்கொடுப்பதனால் அறுபதினாயிர வருஷகாலம் மேலுலகத்திலிருப்பான். அவ்வளவு பூமியை யபகரிப் பவனுக்கு அதற்கிரண்டுமடங்கு அதிககாலம் நரகமுண்டு. அரசனே! உபகாரம்செய்த எந்த அரசனுடைய பூமியைப் பிராம்மணர்கள் எப் போதும் சிலாகிக்கின்றனரோ அவ்வரசனது பூமியைப் பகைவர் [1]சிலாகிப்பதில்லை ஜீவனமில்லாமல் சஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மனி தனும் ஏதாவது பாவம் செய்வனாயின், பசுவின்தோலளவு பூமியைத் தானம்செய்த மாத்திரத்தினால் சுத்தனாகிவிடுவான். வர்ணதர்மங்கள் கெட்டும் கொடியசெய்கை செய்துகொண்டுமிருக்கும் அரசர்களுக்கும் பூமிதானம எல்லாவற்றிலும சிறந்தபுண்ணியமென்று சொல்லத்தக் கது. அசுவமேதயாகம்செய்வதற்கும் யோக்கியனுக்குப் பூமிதானம் செய்வதற்குமுள்ள வித்யாஸஞ்சிறிதென்று பூர்விகர்கள் எப்போதும் நினைத்திருக்கின்றனர். வித்வான்கள் எந்தப்புண்ணியத்தைச்செய்தும் பயந்துகொண்டிருப்பதுண்டு. எல்லாவற்றிலும்சிறந்த இந்தப்பூமி தானம ஒன்றுமட்டும் (பாவ) பயமற்றது. பூமிதானஞ்செய்யும் சிறந்த புத்திமான் பொன்வெள்ளி வஸ்திரம ரத்தினம் முத்துக்கள் தனங்கள் இவற்றையெல்லாம் கொடுத்தவனாகிறான். தவம் யாகம் வேதாத்யயனம் கல்லொழுக்கம் ஆசையின்மை சொல்தவறாமை பெரியோர்களையும் தேவர்களையும் பூஜிப்பது இவையெல்லாம் பூமிதானம்செய்பவனிடத் திலிருக்கும். தலைவனுடையகுணமையில் ஊக்கத்துடன் யுத்தத்திலடி பட்டுத் தேகத்தைவிட்டவரும் பிரம்மலோகம்போன வித்தர்களும் பூமிதானம் செய்தவனுக்கு மேலாகார். தாயானவள் தன்குழந்தை யைப் பால்கொடுத்து வளர்ப்பதுபோலப் பூமியானது தானம்செய்த வனைத் தனது எல்லாஸாரங்களாலும் எப்போதும் அணுக்கிரகிக்கிறது. பூமிதானம் செய்பவனுக்கு யமன் அடிமையாகிறான். மிகக்கொடிய யமதண்டனையும் நெருப்பின் மிகக்கொடியதாபமும் பயங்கரமான வரு ணபாசங்களும் பூமிதானம்செய்பவனை அணுகா. மனத்தில் அடக்கத் துடன் பூமியைத்தானம் செய்கிறவன் பிதருலோகத்திலுள்ள பித்ருக் களையும் தேவலோகத்திலுள்ள தேவதைகளையும் திருப்திசெய்விக் கிறான். ஆகாரமில்லாமல் துயரப்பட்டு இளைத்து இருக்குந்தருணத்தி லிருப்பவனுக்கு ஜீவனத்திற்கு ஆதாரமான பூமியைத்தானம் செய்யும் மனிதன் ஸத்திரயாகஞ்செய்தவனாகிறான். சிறந்த பாக்யமுள்ளவனே!

[1] பகைவருக்குக் கிடைப்பதில்லை.

பசு அன்புடன் பால்சுரந்துகொண்டு கன்றைத்தேடி ஓடுவதுபோலப் பூமிதானம்செய்தவனைப் பூமி தேடிக்காப்பாற்றுகிறது. கலப்பையிஞலுழப்பட்டதும் விதைவிதைக்கப்பட்டதும் தான்யம் விளைந்ததுமாயுள்ள பூமியையும் ஜலாதாரமுள்ள வீட்டையும் கொடுப்பவன் வேண்டினவற்றைக் கொடுத்தவனுகிறன். நல்லொழுக்கமுள்ளவனும் அக்நிஹோத்திரஞ்செய்பவனும் பரிசுத்தமான தவமுள்ளவனுமான பிராம்மணனுக்குப் பூமிதானம்செய்தமனிதன் யமன்இல்லம் போவதில்லை. சந்திரனுக்கு நாள்தோறும் வளர்ச்சியுண்டாவதுபோலப் பூமிதானத்தினுலுண்டானபலன் ஒவ்வொரு பிறப்பிலும் அதிகப்படுகிறது. இந்த விஷயத்தில் பூர்வஜன்மத்தைத் தெரிந்தவர்கள் பூமிதேவியினுற் சொல்லப்பட்ட சுலோகங்களைச் சொல்லுகின்றனர். இவற்றைக் கேட்டுத்தான் பரசுராமர் காஸ்யபருக்குப் பூமிதானம்செய்தார். அவற்றின் பொருள், 'என்னையே வாங்குங்கள்; என்னையே கொடுங்கள்; என்னைக்கொடுத்தபின் என்னையே அடைவீர்கள். இத்தத்தானமானது இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் மேன்மேலும் விருத்தியாகும். வேதத்திற்குச்சமமான இத்தச்சொல்லை எந்தப்பிராம்மணன் சிராத்தத்தில் ஹோமம்செய்யும்போது நினைக்கிறனே அவன் பிரம்ம பதத்தையடைவான். பூமிதானமானது பேய்பிசாசுகளாலும் சாபத்தினுலுண்டானகேடுகளுக்குப் பரிகாரமான பெரும்பிராயச்சித்தம். இப்படிப்பட்ட பூதானத்தைச்செய்தவனும் வேதவாக்கியமாகிய இத்தச்சொல்லையறிகிறவனும் தம்குலத்தில் முன்பதின்மரையும் பின்பதின்மரையும் பரிசுத்தமாகச்செய்வர். பூமியானது எல்லாப்பிராணிகளுக்கும் காரணமாகவும் அழிவில்லாததாகவும் நினைக்கப்படுகிறது' என்பது. அரசனுக்குப் பட்டாபிஷேகம் செய்தவுடன் இந்ததவேதத்தைக் கேட்பிக்கவேண்டும். அவன் இதைக்கேட்டு ஸாதுக்களுக்குப் பூமிதானம் செய்யவேண்டும். ஸாதுக்களின் பூமியை எடுத்துக் கொள்ளலாகாது. இந்த உபதேசமெல்லாம் பிராம்மணர்களுக்கும் அரசர்களுக்குமே உரியது; ஸந்தேகமில்லை. தர்மங்களில் தேர்ச்சியுள்ள அரசன் செல்வத்திற்கு முதற்காரணம். எவர்களுக்கு அரசன் தர்மந் தெரியாதவனுகவும் நாஸ்திகனுகவுமிருக்கிறனே அவர்கள் ஸுகமாகத்தூங்குவதும் ஸுகமாகக்கண்விழிப்பதுமில்லை. அவ்வரசனுடைய கெட்டசெய்கைகளினுல் மனிதர்கள் எப்போதும் நடுக்கமுற்றவராவார். மேன்மேலும்லாபமும் உள்ளவற்றைக்காப்பதுமாகிய யோகக்ஷேமங்களிரண்டும் அவனுடைய தேசத்தில் மிகுதியாகஇரா. எவர்களுக்கு அரசன் தெரிந்தவனுகவும் தர்மத்தை நடத்துகிறவனுகவுமிரு

க்கிறானே அவர்கள் மிக்க சுகமாகப்பிறந்துச் சுகமாகவளர்ந்திருப்பார். அவ்வரசனுடைய நற்செய்கைகளினால் ராஜ்யத்திலுள்ள ஜனங்கள் ஸுகமடைந்து நல்லமன்முயினும் தம்தம் தொழில்களினாலும் யோக க்ஷேமங்களின் அபிவிருத்தியைப் பெறுவார். பூமிதானம் செய்பவன் எவனோ அவனே மேற்குலத்தோன்; அவனே ஆண்பிள்ளை; அவனே பந்து; அவனே புண்ணியஞ்செய்தவன்; அவனே வள்ளல்; அவனே பராக்ரமமுள்ளவன். வேதங்களைதெரிந்த பிராமணனுக்குச் செழித்த பூமியைத் தானம்செய்பவர் பூமிக்குச் சூரியர்போல ஒளியினால் பிரகாசிப்பார். பூமியில் விதைக்கப்பட்ட பயிர்கள் முளைக்கிறதுபோலப் பூமிதானம்செய்வதனால் மனிதனுடைய வீரர்ப்பங்கள் பயன்படுகின்றன. ஆதித்யன், வருணன், விஷ்ணு, பிரம்மா, சந்திரன், அக்நி, சூலத்தைக்கையிலேந்திய சிவபெருமான் இவர்களும் பூமிதானம் செய்தவனை அதற்கிசைக்கின்றனர். மனிதர்கள் பூமியிற்பிறக்கின்றனர்; பூமியில் முடிவையும் பெறுகின்றனர். இந்[1]நான்குவித உலகமும் பூமியின் குணங்களைக்கொண்டே உண்டாகின்றன. பூமிக்கதிபதியே! உலகத்திற்குத் தாயும் தகதையும் பூமியே. அரசனே! இதற்கு நிகரானபொருள் ஒன்றுமில்லை. யுதிஷ்டிர! இந்தவிஷயத்திலும் ப்ருஹஸ்பதிக்குப இந்திரனுக்கும் நடந்த சம்பாஷணையாகிய ஒருபழைய இதிஹாஸத்தைக் கூறுகின்றனர். இந்திரன் தகுதினைகள் மிகுதியாகவுடைய நூறுமஹாயாகங்களைச் செய்தபிறகு சாஸ்த்ரந்தெரிந்தவரில் சிறந்தவரான பிருகஸ்பதியைநோக்கிக் கேட்கலானான்.

'பகவானே! எந்தத் தானத்தினால் மனிதன் ஸ்வர்க்கத்தையடைந்து ஸுகமாக விளங்குவான்? அழிவில்லாததும் அபகரிக்கக் கூடாததுமான தானம் எது? சொல்லுகிறவரில் சிறந்தவரே! அதைச் சொல்லும்' என்று கேட்டான். தேவருக்குப புரோஹிதரும் மிக்க மஹிமையுள்ளவருமான பிருகஸ்பதி தேவேந்திரனால் இவ்வாறு கேட்கப்பட்டவுடன், அவனுக்கு மறுமொழி கூறலானார். 'விருத்ரனைக் கொன்றவனே! பொன்னைக்கொடுப்பதும் பசுவைக்கொடுப்பதும் பூமியைக் கொடுப்பதும் வித்தையைக் கொடுப்பதும் கன்னிகையைக் கொடுப்பதும் பாவத்திற்குச்சிறந்த பரிகாரங்கள். சிறந்த அறிவுள்ளவன் இவற்றைக்கொடுப்பதனால் எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிறான். தேவேந்திரனே! பிரபுவே! பூமிதானத்தைவிடச் சிறந்தது மற்றொன்றில்லையென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். நானும் அப்படியே நினைக்கிறேன். பிராம்மணனுக்காகவும் பசுவுக்காகவும் தேசபீடைக்காகவும்

[1] ஆதிபர்வம் 57-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

அரசனுக்கும் குலமகளிர்களுக்கும் அவமானம்வராமற்செய்வதற்காக வும் உயிர்விட்டவர் பூமிதானம் செய்தவருக்குச் சமமாவர். தேவ சிரேஷ்டனே! யுத்தத்தில் உற்சாகமுள்ளவர்களாக யுத்தத்திலடிபட்டு ஷீரஸ்வர்க்கம்போன சூரர்களனைவரும் பூமிதானம செய்தவனுக்கு மே லாகமர்ட்டார். வேந்தனுடைய நன்மையில் ஊக்கட்வைத்து யுத்தத்தி லடிபட்டுத் தேகத்தைவிட்டவர்களும் பிரம்மலோகத்திலிருக்கும் யோகி களும் பூமிதானம்செய்தவனுக்கு மேலாவதில்லை. பூமிதானமசெய்யும் மனிதன் பூமியில் மடிந்திருக்கும் தன்முன்னோடஸ்தர்கள் ஐவரும் அவ ருக்குமுன் அழுவருமாகப் பதினைருவரைக் காப்பாற்றுகிறவனாகிறான். இந்திரனே! ரத்தினங்கள் நிரம்பின பூமியை யாவன்கொடுக்கிறானோ அவன் எல்லாப்பாவங்களாலும் விடுபட்டு ஸ்வர்க்கலோகத்தில் கொண் டாடப்படுவான். அரசனே! வேண்டப்படும் சிறப்புகளெல்லாம் நிரம் பின செழித்த பூமியைக்கொடுப்பவன் அரசர்க்குமரசனாவான். அது தான் எல்லாவற்றிலும சிறந்ததானம். வாஸவனே! வேண்டினவை யெல்லாம் நிரம்பின பூமியைக் கொடுக்கிறவனை அதிலுள்ள எல்லாப் பிராணிகளும் தம் தம்மைக்கொடுப்பதாக நினைக்கின்றன. ஸஹஸ் ராக்ஷனே! நினைத்தவற்றையெல்லாம் கறப்பதும் விரும்பத்தக்ககுணங் களெல்லாமுள்ளதுமான பசுவைத் தானம்செய்யும் மனிதன் ஸ்வர்க் கத்தைச்சேருவான். தேவருக்கதிபதியே! தேனுறகளும் நெய்யாறு களும் பாலாறுகளும் தயிராறுகளும் பூமிதானமசெய்பவனைத் தேவ லோகத்தில் திருப்திசெய்விக்கின்றன. அரசன் பூமிதானம் செய்வதி னால் எல்லாப்பாவங்களிலிருந்தும் விடுபடுவான். மற்றத்தானங்கள் பூமிதானமபோற் சிறப்புள்ளவையல்ல. கடல்சூழ்ந்த புவனியைத் தன் ஆயுதத்தினால் ஜயித்துக்கொடுப்பவனை ஜனங்கள் 'பூமியுள்ளவரையி லும் புகழுவர். புரந்தரனே! செல்வமும் சுவையும் நிரம்பின புண்ணிய மான பூமியைக்கொடுப்பவனுக்குப் பூமிதானத்தின் சிறப்பினாற் கிடை த்த புண்ணியலோகங்கள் அழிவதில்லை. சக்கரனே! இவ்வுலகில் எப் போதும் அழியாத ஐசுவரியத்தையும் சௌக்கியத்தையும் விரும்பும் அரசன் யோக்கியனுக்குச் சாஸ்திர்ப்படி பூமிதானத்தைச் செய்ய வேண்டும். பாவம்செய்த மனிதனும் பிராம்மணனுக்குப் பூமிதானம் செய்தபிறகு அந்தப்பாவத்தை, பாம்பு பழையசட்டை ப விடுவது போல விட்டுவிடுகிறான். சக்கரனே!. பூமியைக்கொடுக்கும்மனிதன், கடல்கள் நதிகள் மலைகள் காடுகள் இவற்றையெல்லாம் கொடுத்தவ னாகிறான். பூமியைக்கொடுப்பவன் தடாகங்களையும் கிணறுகளையும் நதிகளையும் ஏரிகளையும் அன்பையும் எல்லாச்சுவைகளையும் கொடுத்

தவனுகிறான். பூமியைக்கொடுப்பவன் சக்தியுள்ள ஔஷதிகளையும் பூக்களும் பழங்களுமுள்ளமரங்களையும் காடுகளையும் கற்களையும் மலைகளையும் கொடுத்தவனுகிறான். நிரம்பினதக்ஷிணைகளோடு அக்நிஷ்டோம முதலிய யாகங்களைச்செய்தவனும் பூமிதானத்தினுலடையும் பலனை அடைவதில்லை. பூமிதானம்செய்பவன் தன்குலத்தில் பதின்மரைக் காப்பாற்றுகிறான்; பூமியையபகரிப்பவன் பதின்மரைக் கொல்லுகிறான். தன்முன்னோர்கொடுக்கப்பட்ட பூமியை அபகரிப்பவன் நரகத்திற்குப்போவான். வரக்குத்தத்தம்செய்துகொடாதவனும் கொடுத்ததிரும்ப எடுத்துக்கொள்ளுகிறவனும் யமன்கட்டளையினுல் வருணபாசங்களால்கட்டப்பட்டுத் தலைகீழாய்ப்பார். எப்போதும் அக்நிஹோத்ரத்தையும் பஹுயாகங்களையும்செய்பவனும் அதிதிகளிடத்தில் அன்புள்ளவனும் கையில்பொருளில்லாதவனுமாகிய பிராம்மணரிஷ்டனைக்காப்பாற்றுகிறவர்கள் யமனையணுகார். புரந்தரனே! அரசன் பிராம்மணர்களிடத்தில் கடன்தீர்ந்தவனுக இருக்கவேண்டும். மற்ற வர்ணங்களிலும் எளியவர்களையும் பலங்குறைந்தவர்களையும் காப்பாற்றவேண்டும். தேவருக்கதிபதியே! தேவர்களிற்சிறந்தவனே! கஷ்டஜீவியானபிராம்மணனுக்குப் பிறரால்கொடுக்கப்பட்டபூமியை ஒருகாலும் அபகரிக்கலாகாது. எழைகளான பிராம்மணர்களின்பூமியை அபகரித்ததால் அவர்கள் துயரப்படுவதால்விழும்கண்ணீர் குலத்தின்மூன்றுதலைமுறைகளை அழித்துவிடும். ஸஹஸ்ராக்ஷனே! ராஜ்யத்தவறின அரசனைத் திரும்பவும் நிலைநிறுத்துகிறவனுக்கு ஸ்வர்க்கத்தில் கொண்டாடப்படும்ஸ்தானம் உண்டாகிறது. கிரமமாகவிற்கப்பட்டு வாங்கினவனுல் நன்றுகச்செவ்வைப்படுத்தி அநுபவிக்கப்பட்டபூமியை [1] அரசன் அவனுக்கு நிலைக்கச்செய்யவேண்டும். கரும்பு, யவம், கோதுமை இவைவிருத்தியாயிருப்பதும் பசுக்களும் குதிரைகளும்நிரம்பினதுமான பூமியைக்கொடுப்பவன் எல்லாப்பாவங்களிலிருந்தும் விடுபட்டு ஸ்வர்க்கலோகத்தில் கொண்டாடப்படுவான். உள்ளேபுதையலுள்ளதும் உயர்ந்தபொருள்களெல்லாமுள்ளதுமான பூமியைக்கொடுப்பவன் அழிவில்லாத லோகங்களையடைவான். அவனுக்கு அது பூமிஸத்திரமென்னப்படுகிறது. பூமியைக்கொடுப்பவன் எல்லாப்பாவங்களையும் உதறி ராஜஸகுணமற்றவனுகி ஸாதுக்களால் அங்கீகரிக்கப்பட்டு உலகத்தில் சான்றோர்களால் கொண்டாடப்படுகிறான். சக்கரனே! ஜலத்தில்விழுந்த எண்ணெய்த்துளி எப்படிப் பரவுகிறதோ அப்படியே பூமிதானத்தின்பலன் பயிருக்குப்பயிர் அபிவிருத்தியாகிறது.

[1] 'ந்ருபஃ' என்று பாடம் கொள்ளப்பட்டது.

இந்திரனே! யுத்தத்தில் பிரகாசிக்கும்சூரர்களாகிய எந்த அரசர்கள் போர்த்தலியில் முன்னேக்கிச்சென்று வதம்செய்யப்படுகின்றனரோ அவர்கள் பிரம்மலோகமடைவார்கள். தேவேந்திரனே! அப்படியே பூமிதானம்செய்பவனையும் தேவலோகத்தில் தேவலோகத்துப்பூமாலை யணிந்தபெண்கள் ஆடியும் பாடியும் உபசரிக்கின்றனர். இவ்வுலகத்தில் பிராம்மணனுக்குச் சாஸ்திரப்பிரகாரம் செம்மையாகப் பூமிதானம் செய்பவன் தேவலோகத்தில் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் பூஜிக்கப்பெற்று ஸுகமடைந்து மகிழ்ந்திருப்பான். தேவேந்திரனே! பூமிதானம்செய்பவனைப் பிரம்மலோகத்திலும் சிறந்தபுஷ்பமாலைகளை யணிந்த நூறு அப்ஸரஸுகள் உபசரிப்பர். பூமிதானம்செய்யும் மனிதனிடத்தில் எப்போதும் புண்ணியங்கள்சேரும். ஜயசங்கம், ஸீம்மாஸனம், ஒற்றைக்குடை, சிறந்தகுதிரைகள், சிறந்ததேர்கள், புஷ்பங்கள், பொன்குவியல்கள் இவைபூமிதானத்தினாலுண்டாகின்றன. புரந்தரனே! தடைப்படாதகட்டளையும், 'ஜய' என்னும்சப்தங்களும், பொருள்களும், ஸ்வர்க்கமும், பொன்மலர்பூக்கும்கொடிகளும் பொன்மயமான தர்ப்பைகளும் புற்களும்நிரம்பின இடங்களும், பூமிதான புண்ணியத்தின்பயன்கள். பூமியைக்கொடுக்கும்மனிதன் [1] அம்ருதத்தை யுண்டாக்கும் பூமியை அடைவான். பூமிதானத்திற்கொப்பானதானமில்லை. தாய்க்கு ஒப்பானகுருவில்லை. ஸத்தியத்தைப்போன்றதர்மமில்லை. தானத்திற்கு நிகரானபுதையலில்லை' என்றார். பிருகஸ்பதியினிடம் இதைக்கேட்டவுடன் இந்திரன் தனங்களும் ரத்தினங்களும்நிரம்பின இந்தப்பூமியை அவருக்கு அளித்தான். இந்தப் பூமிதானத்தின்சிறப்பைச் சிராத்தகாலத்தில் பிராம்மணர்களுக்கேட்பித்தால் அந்தச் சிராத்தத்தில் ராக்ஷஸர்களுக்கும் அஸுரர்களுக்கும் பங்கில்லை; பித்ருக்களுக்குக்கொடுத்த சிராத்தம் அழியாமலிருக்கும்; ஸந்தேகமில்லை. ஆதலால், வித்வானனவன் சிராத்தங்களில் புசிக்கும் பிராம்மணர்களுக்கு இதைக் கேட்பித்தல்வேண்டும். குற்றமற்றவனே! பரதசிரேஷ்டனே! இப்படி எல்லாதானங்களிலும் சிறந்ததானத்தை உனக்கு நான் உரைத்தேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?" என்றார்.

[1] சுகத்தைத்தரும்.

தொண்ணூற்றேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி)

(நாரதர் அன்னதானத்தின்சிறப்பைப் பீஷ்மருக்கு உரைத்தது.)

யுதிஷ்டிரர், "பரதசிரேஷ்டரே! இவ்வுலகத்தில் தானம்செய்யக் கருதின அரசன் குணங்களிற்சிறந்த பிராம்மணர்களுக்குக் கொடுக்கத் தக்க தானங்கள் எவை? அந்தப் பிராம்மணர்கள் எதனால் உடனே திருப்தியடைவார்கள்? அவர்கள் திருப்தியடைந்தால் எதைக்கொடுப்பார்கள்? சிறந்தகைகளையுடையவரே! புண்ணியத்தினுண்டான பெரும்பயனைப்பற்றி எனக்குச் சொல்லக்கடவீர், வேந்தரே! இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலுள்ள பண்டுவது எந்தத்தானம்? இதை உம்மிடத்தில் கேட்கவிரும்புகிறேன். எனக்கு விரிவாகச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"தெய்வஞானமுள்ளநாரதரிடம் இதேவிஷயத்தைப்பற்றி முன்னே நான்கேட்டபோது அவர் எனக்குச்சொன்ன மறுமொழியை நான் உனக்குச் சொல்லுகிறேன்; கேள். நாரதர், 'தேவர்களும் ரிஷிகளும் அன்னதானத்தையே சிலாகிக்கின்றனர். உலகவாழ்க்கையும் யாகங்களுமாகிய எல்லாம அன்னத்தைப்பொறுத்தவை. அன்னதானத்திற்கு ஒப்பானதானம் முன்னுமில்லை; பின்னுமில்லை. அதனாலேதான் மனிதர்கள் அன்னதானமசெய்வதை முக்கியமாகக்கருதுகிறார்கள். உலகத்தில பலத்தைக்கொடுப்பது அன்னம். அன்னத்திலேதான் உயிர் இருக்கிறது. பிரபுவே! இவ்வுலகமனைத்தும் அன்னத்தினால் தாங்கப்படுகிறது. இவ்வுலகத்தில் கிருகஸ்தர்களும பிரம்மசாரிகளும ஸந்யாஸிகளும வானபிரஸ்தர்களும அன்னத்தினால்தான் இருக்கின்றனர். அன்னத்தினால் உயிர்உண்டாகிறதென்பது பிரத்யக்ஷம்; அதில் ஸந்தேகமில்லை. தன்னுடைய அபிவிருத்தியைக்கருதுகிறவன பெருங்குடும்பத்தோடு கஷ்டப்படும் மகாத்மாவான பிராம்மணனுக்குப். பிரமசாரிக்கும் ஸந்யாஸிக்கும் அன்னம் கொடுக்கவேண்டும். அன்னத்தை வேண்டும்விதவானை பிராமமணனுக்கு அன்னமபோடுகிறவன் தனது மறுமைக்கு உபயோகமான சிறந்த புதையலைப் புதைத்துவைக்கிறான். செல்வப்பெருக்கைவிரும்பும் கிருகஸ்தன், வழிநடையினால்களைத்துத் தன்வீட்டிற்குவந்த பிராயமுதிர்ந்தயோக்கியனைப் பூஜிக்கவேண்டும். அரசனே! மேல்நோக்கியிருக்கும் கோபத்தையும துவேஷத்தையும விட்டு யாவருக்கும் ஸுலபனுயிருந்து அன்னம்போடுகிறவன் தேவ

லோகத்திலும் இவ்வுலகத்திலுமுள்ள இன்பங்களைப் பெறுவான். வந்தவனை ஒருபோதும் அவமதிக்கவும் நிராகரிக்கவும்கூடாது. அன்னதானமானது சண்டாளனுக்கும் நாய்க்கும் கொடுக்கப்பட்டாலும் கெடாது. வழி நடந்துவருந்தியிருக்கும் முன்காணுதமனிதனுக்கு கோவாமல் அன்னம்போடுகிறவன் பெரியதர்மப்பயனை அடைவான். அரசனே! எந்தமனிதன் பித்ருக்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் பிராம்மணர்களையும் விருந்துகளையும் அன்னத்தினால திருப்திசெய்விக்கிறானோ அவனுடைய புண்ணியத்தின் பயன் பெரிது. மிக்கபாவமான கருமத்தைச்செய்தும் பசித்தவனுக்கு, அதிலும், முக்யமாகப்பிராம்மணனுக்கும் அன்னங்கொடுப்பவன் பாவத்தினால் அறிவுகெட்டிரான். பிராம்மணர்களுக்குச் செய்யும் அன்னதானம் அழியாது; சூத்திரர்களுக்குச்செய்தது பெரும்பயனைத்தரும். அன்னதானம் சூத்திரனுக்குச்செய்யப்பட்டாலும் பிராம்மணர்களுக்குச் செய்யப்பட்டாலும் விசேஷந்தான். பிராம்மணன் அன்னங்கேட்கும்போது அவனுடையகோத்ரத்தையும் ஆசாரத்தையும் ஓதலையும் ஊரையும் கேட்கலாகாது. விசாரியாமல் அன்னத்தைக் கொடுக்கவேவேண்டும். ராஜனே! அன்னம்போடுகிறவனுக்கு விருஷங்கள் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் அன்னத்தையும் வேண்டினபலன்களெல்லாவற்றையும் கொடுக்குமென்பதில் ஸந்தேகமில்லை. பித்ருக்கள், 'நமதுபிள்ளையாவது பேரனாவது அன்னதானம் செய்வானா?' என்று உழவர்கள் நல்லமழையை எதிர்பார்ப்பது போல எதிர்பார்க்கின்றனர். பிராம்மணனென்பவன் பெரியபொருள். அவன், 'தேஹி' என்று காணகேட்கும்போது விருப்பத்தோடாயினும் வெறுப்போடாயினுமகொடுப்பவன் புண்ணியத்தையடைவான். எல்லாப்பிராணிகளுக்கும் பிராம்மணன் முதலில் திருப்தியாகப்புசிக்கத்தக்க அதிதியாகிறன். யாசிக்கின்ற பிராமணர்கள் எப்போதும் எந்தவீட்டிற்குச்சென்று மரியாதைபெற்றுத் திரும்பிப்போகின்றனரோ அந்தவீடு மிகப்பெருகுகின்றது. பாரதனே! இவ்வுலகத்தில் மனிதன் அன்னம்போடுவதனால் இறந்தபின் சிறந்தபாக்கியம்பெற்ற குலத்தில்பிறப்பதையும் மேலானஸ்திதியையும் அடைவான். நன்றுகத் தேவதாராதனம்செய்து சிறந்த அன்னத்தைப்போடுகிறவன் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்பட்டு வஸிப்பான். அன்னந்தான் மனிதர்களுக்கு உயிர். எல்லாம் அன்னத்தைப்பற்றியிருக்கின்றன. ராஜனே! அன்னங்கொடுப்பவன் பசுக்களும் புத்ரர்களும் தனங்களும் போகங்களும் பலமும் அழகுமுள்ளவனாகிறன். அன்னங்கொடுப்பவன் உயிர்

கொடுப்பவனென்றும் எல்லாங்கொடுப்பவனென்றும் உலகத்தில் சொல்லப்படுகிறான். விருந்தாகவந்தபிராம்மணனுக்குக் கிரமப்படி அன்னம் போடுவதனால் அன்னதானம் செய்பவனுக்கு ஸுகமுண்டாகிறது. அவன் தேவர்களாலும் பூஜிக்கப்படுகிறான். பிராம்மணன் பெரியதெய்வம். அவன் நல்லநிலம்போன்றவன். அவனிடத்தில்விதைக்கப்படும் எந்தப்புண்ணியவித்துக்கும் பலன்பெரிது. புஜிப்பவனுக்கும் கொடுப்பவனுக்கும் திருப்தியுண்டாவது பிரத்யக்ஷமாயிருக்கிறது. மற்ற எல்லாத்தானங்களின்பலன்களும் கண்ணுக்குத்தெரியாதவை. பாரதனே! ஸந்ததியுண்டாவதும் அன்னத்தினாலேதான். இன்பமும் அன்னத்தினாலேதான். அறம்பொருளிரண்டும் அன்னத்தினாலேயே. பிணி தீர்வதும் அன்னத்தினாலேயென்றறி. முன்கல்பத்தில் பிரம்மதேவர் அன்னந்தை அமிர்தமென்று சொன்னார். பூலோகமும் தேவலோகமும் ஆகாயமும் அன்னந்தான். எல்லாம் அன்னத்திலிருக்கின்றன. அன்னம் ஒழிந்தால் தேஹத்திலுள்ள ஐந்துபூதங்களும் பிரிந்துபோகின்றன. மிக்கபலசாலியின்பலமும் அன்னமில்லாமையால் கெடுகிறது. ராஜனே! அப்படியே அன்னமில்லாமையால் உறவினர்கள் ஒருவரையொருவர் கொண்டாடுவதும் விவாகமும் யாகமும் இல்லாமற்போகின்றன. வேதமும் அப்போது நஷ்டமாகிவிடுகிறது. மூன்றுலோகங்களிலுமுள்ள ஜங்கமமும் ஸ்தாவரமுமாகிய அஹிம்சையும் அன்னத்தினாலிருக்கின்றன. ஆதலால், அறிஞர்கள் தர்மத்திற்காக அன்னதானம்செய்யவேண்டும். ராஜனே! அன்னதானம்செய்யும் மனிதனுக்குப் பலமும் உற்சாகமும் ஜயமும் மூன்றுலகங்களிலும்புகழும் எப்போதும் அபிவிருத்தியாகின்றன. பாரதனே! உயிருக்கெல்லாம் அதிகாரியானகாற்று மேலே மேகங்களிற்சேருகிறது. அந்த மேகங்களிலுள்ள ஜலத்தை இந்திரன் வர்ஷிக்கிறான். சூரியன் தன்கிரணங்களினால் பூமியிலுள்ள ஜலத்தை இழுக்கிறான். அந்தஜலத்தைச் சூரியனிடத்திலிருந்து வாயுபகவான் மழையாகப்பொழிகிறான். பாரதனே! அந்த நீர் மேகத்தினிடமிருந்து எப்போது பூமியில்விழுகிறதோ அப்போது பூமிதேவி கொழுமையுள்ள வளாகிறாள். அதன்பிறகு பயிர்கள் வளர்கின்றன. அதனால் உலகம் ஜீவிக்கிறது. அதன்பிறகு, மாம்ஸம் கொழுப்பு எலும்பு பிந்து இவைகள் உண்டாகின்றன. ராஜனே! அந்தப்பிந்துவிலிருந்து பிராணிகளுண்டாகின்றன. அக்நியும் சந்திரனுந்தாம் அந்தப்பிந்துவை உண்டாக்குவதும் போஷிப்பதும். இப்படிச் சூரியனும் வாயுவும் பிந்துவும் அன்னத்தைச்சேர்ந்த ஒரு கூட்டமாக நிர்ணக்கப்படுகின்றனர். இவர்கள்

னலேயே பிராணிகள் உண்டாகின்றன. பரதசிரேஷ்டனே! தன்னிடம் வந்து யாசிப்பவனுக்கு அன்னதானம்செய்பவன் பிராணிகளுக்கு உயிரையும் சக்தியையும் கொடுப்பவனாகிறான்" என்றார்.

ராஜனே! அன்னதானத்தைப்பற்றி நாரதர் இவ்வாறு சொல்ல நான்கேட்டேன். ஆதலால், நீயும் கோபத்தையும் மனஸ்தாபத்தையும் விட்டு அன்னத்தை எப்போதும் கொடு. ராஜனே! பிரபுவே! நீயும் தக்கபிராம்மணர்களுக்குச் சாஸ்திரப்பிரகாரம் ஸரியான அன்னத்தைப் போட்டால் ஸ்வர்க்கத்தையடைவாய். ராஜனே! அன்னம் போடுகிற வர்களுக்குள்ள உலகங்களைச் சொல்லுகிறேன்; கேள். அம்மஹாத்மாக்களுக்கு ஸ்வர்க்கத்தில் பலவகைவடிவங்களாகக் கட்டப்பட்டவையும், அநேகந்தூண்களுள்ளவையும், சந்திரமண்டலம்போல வெண்மையான வையும் இளஞ்சூரியன்போன்றநிறமுள்ளவையும், சலங்கைகளின் மாலை கள்கட்டப்பட்டவையும், அநேகநூறுமாடிகளுள்ளவையும், மீன்முதலிய ஜலஜந்துக்களுள்ளதடாகங்களை நடுவிலுடையவையும், சூரியன்போன்ற வைடூரியக்கற்களினாலும் வெள்ளியினாலும் பொன்னினாலும் செய்யப் பட்டவையும், நிற்பவையும், நடப்பவையுமான வீடுகள் பிரகாசிக்கின் றன. வேண்டினபலன்களெல்லாவற்றையும்கொடுக்கும் விருக்ஷங்களும், வாவிகளும், வீதிகளும், ஸபைகளும், நிணறுகளும், குளங்களும், அழ கானசப்தமுள்ளவையும் ரத்தினரகள் பூட்டப்பட்டவையுமான ஆயிரக் கணக்கானதேர்களும், குன்றுகளாகக்குவிந்திருக்கும் பக்ஷணங்களும், போஜனங்களும், ஆடைகளும், ஆபரணங்களும் அந்தக்கிருகங்களி லிருக்கின்றன. பால்ஆறுகள் ஓடுகின்றன. அன்னபர்வதங்கள் இருக் கின்றன. மாளிகைகள் வெண்மேகங்கள்போலிருக்கின்றன. படுக்கை கள் பொன்னிறம் பிரகாசிக்கின்றன. அவையெல்லாம் அன்னதானம் செய்பவருக்குக்கிடைக்கின்றன. ஆதலால், நீயும் அன்னதானம் செய்துகொண்டிரு. அன்னதானமாகிய புண்ணியத்தைச்செய்தமஹாத் மாக்களுக்கு இப்படிப்பட்ட உலகங்களிருக்கின்றன. ஆதலால், பூமி யில் மானிடர்கள் முயற்சியோடு அன்னதானம் செய்யவேண்டும்" என்றார்.

தொண்ணூற்றேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(நக்ஷத்ரங்களில் தானஞ்செய்யுமுறையும்பலனும்.)

யுதிஷ்டிரர், "அன்னதானம் செய்யவேண்டுமென்பதைப்பற்றி நீர்சொன்னதைக் கேட்டேன். இப்போது நக்ஷத்திரங்கள் சேருங் காலங்களில் (செய்யும்) தானங்களின் விதியைப்பற்றி எனக்குச்சொல் லக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்தவிஷயத்திலும் தேவரிக்கும் நாரதமகரிஷிக்கும்நடந்த ஸம்பாஷணமாகிய இந்தப்புராதனமான இதிஹாஸத்தைக் கூறுகின்ற னர். தர்மமறிந்தவளாகியதேவரி நிவ்யஞானமுள்ள நாரதர் துவார கைக்குவந்தபோது, நீ கேட்டதேவ்வியையே கேட்டாள். ராஜனே! அவள்கேட்டதற்குத் தேவரிஷியான நாரதர் எல்லாவற்றையும் சாஸ் திரப்பிரகாரம்சொன்னதைச் சொல்லுகிறேன்; கேள். நாரதர், 'சிறந்த பாக்கியமுள்ளவளே! [1]கிருத்திகாநக்ஷத்ரத்தில் நெய்யுடன்சேர்ந்த பாயஸான்னத்தினால் ஸாதுக்களான பிராம்மணர்களுக்கு ஸந்தர்ப்ப ணம்செய்பவன் எல்லாவற்றிலும் மேலான உலகங்களை அடைவான். ரோஹிணீ நக்ஷத்ரத்தில் மிருதியானபான்மாம்ஸங்களோடும் நெய் யன்னத்தோடும் பாலன்னத்தையும் குடிக்கப்பாலையும் தன்கடன்தீர்த் துக்கொள்வதற்காகப் பிராம்மணனுக்குக் கொடுக்கவேண்டும். மிருக சீரிஷநக்ஷத்ரத்தில் கன்றுடன் கூடக் கறக்கிறபசுவைக்கொடுக்கிற வர்கள் மனித உலகத்திலிருந்து எல்லாவற்றிலும் சிறந்தஸ்வர்க்க லோகத்தை அடைவர். திருவாதிரை நக்ஷத்ரத்தில் உபவாஸ மிருந்து எள்ளுடன்சேர்ந்த க்ருஸரையென்னும் அன்னத்தைக்கொடுக் கும்மனிதன் நரகங்களையும் கத்திமுனையுள்ளமலைகளையும் தாண்டு வான். சிறந்ததாகிய புநர்வஸுநக்ஷத்ரத்தில் பக்ஷ்யங்களையும் அன் னங்களையும் கொடுப்பவன் புகழ்பெற்றவனும் அழகுள்ளவனுமாகி மிகுதி யான அன்னமுள்ளவனுமாகி நல்லகுலத்திற்பிறப்பான். புஷ்யநக்ஷத் திரத்தில் நாணயமாகவாவது கட்டியாகவாவதிருக்கும் பொன்னைக் கொடுப்பவன் ஒளியில்லாத உலகங்களில் சந்திரன்போலப் பிரகாசிப் பான். ஆயில்ய நக்ஷத்ரத்தில் வெள்ளியையாவது விருஷபத்தையா வதுகொடுப்பவன் ஸர்ப்பபயத்தைவிட்டுத் தன்ஸந்ததிகளுக்குத் தலை

---

[1] பாரதகாலத்தில், கிருத்திகை முதல்நக்ஷத்ரமாக இருந்ததென்பது விளங்குகின்றது.

வணியிருப்பான். மகரகூடத்திரத்தில் எள்ளுநிம்பினமடக்குகளைக் கொடுக்கும்மனிதன் இவ்வுலகத்தில் புத்ரர்களையும் பசுக்களையும் நிரம்பப்பெற்று மறுமையிலும் ஸுகப்படுவான். பூரகூடத்திரம்சேர்ந்தகாலத்தில் உபவாஸமிருந்து கற்கண்டுசேர்ந்த பக்ஷணங்களைப் பிராம்மணர்களுக்குக்கொடுப்பவன் அழகையடைவான். உத்தரகூடத்திரத்தில் நெய்பாலுடன்கூடின குறுவையன்னத்தைச் சாஸ்திரப்படி தானம்செய்பவன் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுவான். உத்தரகூடத்திரத்தில் மனிதர்கள் என்ன என்ன தானங்கள்செய்தாலும் அவையெல்லாம் பெருங்பயனுள்ளவையும் அழியாதவையுமாகுமென்பது திண்ணம். ஹஸ்தகூடத்திரத்தில் உபவாஸமிருந்து நாலுயானைகள் பூட்டினரதத்தைத் தானம்செய்பவன் புண்ணியலோகங்கள் நிரம்பின உயர்ந்தலோகங்களை அடைவான். சித்திரைகூடத்திரத்தில் விருஷபத்தையும் கல்லவாஸனைத்திரவியங்களையும் [1]அன்புடன் தானம்செய்கிறவர் அப்ஸரஸ்ஸுகளின் லோகத்தில் ஸஞ்சரித்துக்கொண்டு நந்தனவனத்தில் விளையாடுவர். ஸ்வாதிகூடத்திரத்தில் தனக்கு மிக்கபிரியமானதனத்தைக் கொடுப்பவன் சிறந்த உலகங்களையும் இவ்வுலகத்தில் பெரும்புகழையும் அடைவான். விசாககூடத்திரத்தில் விருஷபத்தையும் பால்கொடுக்கும்பசுவையும் தான்யமும்வஸ்திரமும் நிரம்பின தகத்தடியோடுகூடின வண்டியையும் கொடுப்பவன் பித்ருக்களையும் தேவர்களையும் ஸந்தோஷிக்கச்செய்வதுடன் மறுமையில் அளவற்ற ஸுகத்தை அனுபவிப்பான்; நரகங்களையடையான்; ஸ்வர்க்கலோகத்தையடைவான். சொன்னபடி பிராம்மணர்களுக்குத் தானம்செய்பவன் தான்விரும்பும்ஜீவனத்தை அடைவான்; நரகமுதலான கஷ்டங்களை அடையானென்பதும் திண்ணம். அனுஷகூடத்திரத்தில் உபவாஸமிருந்து உத்தரியத்தையும் சிறந்த அன்னத்தையும் கொடுக்கும் மனிதன் அநேகயுகங்கள்வரையிலும் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்பெறுவான். கேட்டைகூடத்திரத்தில் [2]காலசாகத்தையும் [3]மூலகமென்னும்கிழங்கையும் பிராம்மணர்களுக்குக்கொடுப்பதனால் மனிதன் வேண்டினசெல்வத்தையும் விரும்பின புண்ணிய லோகத்தையும் அடைவான். மூலகூடத்திரத்தில் நியமத்துடன் பிராம்மணர்களுக்கு [4]மூலபலமென்னும் கனியைக்கொடுப்பவன் பித்ருக்களைச்சந்தோஷப்படுத்தி விரும்பினலோகத்தையும் அடைவான். பூராடகூடத்திரத்

[1] 'பாரத' என்பது, 'பாவத:' என்றிருத்தல்வேண்டும். தேவஜிக்குச் சொல்லுமிடத்தில், 'பாரத' என்பது பொருந்தாது.

[2] கருவேப்பிலை. [3] முள்ளங்கி. [4] பலாப்பழம்.

தில் உபவாஸமிருந்து குலமும் ஒழுக்கமுமுள்ளவனும் வேதத்திற் கரைகண்டவனுமாகிய பிராம்மணனுக்குத் தயிர்ப் பாத்திரங்களைக் கொடுப்பவன் மறுஜன்மத்தில் கோக்களும் தனங்களும் மிகுதியாக நிரம்பினகுலத்தில் பிறப்பான். உத்தராடநக்ஷத்திரத்தில் நெய்யும் தேனும் கற்கண்டும் மிகுதியாகச்சேர்த்து ஜலத்திற்பாகம்பண்ணின மாவைக்கொடுப்பவன் விரும்பினவற்றையெல்லாம் அடைவான். உத்தராடத்தில் அபிஜித்தென்னுமத்தியான்னவேளையில் அனுஷ்டானத் தோடிருந்து ஞானவான்களுக்குத் தேன்நெய்யுடன் சேர்ந்தபாலைக் கொடுப்பவன் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுவான். சிரவணநக்ஷத் திரத்தில் கம்பளத்தையும் போர்வைவஸ்திரத்தையும் கொடுப்பவன் வெள்ளைவிமானமேறித் தடையில்லாமல் ஸ்வர்க்கலோகத்திற்குச் செல்வான். அவிட்டநக்ஷத்திரத்தில் நியமத்துடன் மாடுகள்கட்டின வண்டியைக்கொடுப்பவன் உடனே சிறந்தவஸ்திரங்களையும் தனத்தை யும் மறுஜன்மத்தில் ராஜ்யத்தையும் அடைவான். சதயநக்ஷத்திரத் தில் அகில்சந்தனமுதலிய வாஸனைத்திரவியங்களைக்கொடுப்பவன் பர லோகத்தில் அப்ஸரஸ்ஸுகளின் கூட்டங்களையும் என்றுமழியாத வாஸனைகளையும் அடைவான். பூரட்டாதிநக்ஷத்திரம் சேர்ந்தகாலத் தில் மொச்சைக்கொட்டையைத்தானம்செய்பவன் எல்லாப்பக்ஷணங் களையும் பழங்களையுமடைந்து மறுமையிலும் ஸுகமுள்ளவனாவான். உத்தரட்டாதிநக்ஷத்திரம்சேர்ந்ததினத்தில் செம்மறியாட்டுமாமிசத் தைக்கொடுப்பவன் பித்ருக்களுக்குத்திருப்திசெய்வித்து மறுமையி லும் ஆளவற்றஸுகம்பெறுவான். ரேவதிநக்ஷத்திரத்தில் கறக்கிற கற்று வெண்கலப்பாத்திரத்துடன் பசுமாட்டை எவன்தானம்செய் கிறானோ அவனுக்கு அந்தப்பசுமாடு மறுமையில் வேண்டினவற்றை யெல்லாம் எடுத்துக்கொண்டு வருகிறது. அசுவினிநக்ஷத்திரத்தில் குதிரைகள்கட்டினரதத்தைக் கொடுக்கும் புருஷசிரேஷ்டன் பராக் கிரமசாலியாகி யானைகளும் குதிரைகளும் தேர்களும் நிரம்பப்பெற்ற குலத்தில் பிறக்கிறான். பரணியில் பிராம்மணர்களுக்கு எள்பசுவைத் தானஞ்செய்பும்மனிதன் மறுஜன்மத்தில் மிகஅதிகமானபசுக்களை யும் புகழையும் அடைகிறான்' என்பது. இவ்வாறு நக்ஷத்திரங்கள் சேர்ந்தகாலத்தில் தானத்தின்முறை ஒருவாறு நாரதரால் தேவகிக்கு உரைக்கப்பட்டது. அந்தத்தேவகி இதைத் தன்மருமக்களுக்குச் சொன்னாள்.

நூறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(ஜலம், பொன், நெய்முதலியவற்றின் தானத்தைப்பற்றியது.)

'பொன்னைக்கொடுப்பவர்கள் வேண்டினவற்றையெல்லாம்கொடுப்பவர்கள்' என்று பிரம்மாவின்புத்ரரான அத்ரிபகவான் சொன்னர். 'பொன்னானது பாவத்தைப் போக்குகிறது ; சுத்தமானது; ஆயுளைக் கொடுப்பது ; பித்ருக்களுக்கு அழியாததிருப்தியைக்கொடுப்பது' என்று ஹரிச்சந்திரமஹாராஜனால் சொல்லப்பட்டது. 'தண்ணீர் கொடுப்பது தானங்களிற்சிறந்ததானம்' என்று மனு சொன்னர். ஆதலால், ஏரிகளையும் வாவிகளையும் குளங்களையும் வெட்டுவிக்க வேண்டும். இவ்வுலகத்தில் குடிக்கத்தக்கஜலமுள்ளதும் எப்போதும்வற்றாததுமாகியஏரி மனிதனுடையசெய்கையினாலுண்டான பாவங்களெல்லாவற்றையும் அழித்துவிடும். எவனால்வெட்டப்பட்ட குளத்தில் பசுக்களும் பிராம்மணர்களும் ஸத்புருஷர்களும் எப்போதும் தண்ணீர்குடிக்கின்றனரோ அவன் தன்குலத்தையெல்லாம் கரையேற்றுகிறன். எவனுடையஜலம் கோடைக்காலத்திலும் வற்றாமலிருக்கிறதோ அவன் கொடியதான்பமொன்றையும் ஒருகாலத்தும் அடைவதில்லை. நெய்யினால் பிருஹஸ்பதிபகவானுக்கும் பூஷா பகன் என்னும் சூரியமூர்த்திகளுக்கும் அசுவினிதேவர்களுக்கும் அக்கிக்கும் ஸந்தோஷமுண்டாகிறது. நெய்யானது சிறந்தஔஷதம்; யாகங்களுக்கு மிகமுக்யமானது; சுவைகளிற்சிறந்தது. கனிகளினும் இது சிறந்தது. ஆதலால், பலனையும் புகழையும் ஆரோக்யத்தையும் விரும்பும்மனிதன் பரிசுத்தமாகவும் உண்மையாகவும் பிராம்மணர்களுக்கு எப்போதும் நெய்யைத் தானம்செய்யவேண்டும். எவன் ஐப்பசிமாதத்தில் பிராம்மணர்களுக்கு நெய்கொடுக்கிறனோ அவனுக்கு அசுவினிதேவர்கள் அவ்புகூர்ந்து அழகைக்கொடுக்கின்றனர். நெய்யுடன்சேர்ந்தபாயஸாந்நத்தைப் பிராம்மணர்களுக்கு எவன்கொடுக்கிறனோ அவனுடையவீட்டை ராக்ஷஸர்கள் ஒருகாலும் பீடிக்கமாட்டார்கள். கரகங்களென்னும் ஜலபாத்ரங்களைக்கொடுப்பவன் தாகத்தினாலிறவான் ; விரும்பினவைதரம்பினவனுவான ; விசனப்படான். பிராம்மணர்கள் முன்னிலையில் எப்போதும் மிகுந்தசிரத்தையுடன் வணக்கமாயிருக்கும் புருஷன் தானபலனில் ஆறிலொருபாகத்தை அடைவான். அரசர்க்கரசே ! எந்தமனிதன் ஒழுக்கமுள்ளபிராம்ம

ணர்களுக்குச் சமைப்பதற்காகவும் குளிர்காய்வதற்காகவும் விறகுகளை எப்போதும் கொடுக்கிறவனை அவனது பிள்ளைகளும் எல்லாக் காரியங்களும் கூடிவரும். அவன் பகைவர்களைத் தாழ்த்தித் தான் மேம்பாடடைவான்; தேகத்தில் கல்வி ஒளியுள்ளவனாவான். ஐசுவரியமும் அவனிடத்தில் எப்போதும் அழியாமலிருக்கும். பங்காளிகள் அவனை விட்டுப்போகார். அவன் போரிலும் வெற்றி பெறுவான். குளம் வெட்டிக் கொடுப்பவன் புத்திரர்களாயும் பெண்களாயும் அவன் வாழ்வான். கண்ணோய் அவனுக்குவராது. அவன் யாகபலனையும் அடைவான். வெய்யிற்காலத்திலும் மழைக்காலத்திலும் குடைகொடுப்பவனுக்கு மனத்தில் ஒரு வருத்தமும் ஒருகாலத்திலும் உண்டாகாது. அவன் கடினமான ஆபத்திலிருந்து உடனே விடுபடுவான். ராஜனே! 'வண்டி கொடுப்பது எல்லாத் தானங்களிலும் சிறந்தது' என்று மகானுபாவர்களும் முக்காலங்களையும் அறிந்தவர்களான சாண்டில்யாதிகள் சொன்னார்" என்றார்.

நூற்றேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பாதுகைகள், எள், பூமி, பசு, அன்னம் இவைகளின் தானபலன் முதலியன.)

யுதிஷ்டிரர், "பிதாமகரே! வெப்பத்திலிருந்து கொடுப்புற்ற பிராமணனுக்குப் பாதரக்ஷைகளைக் கொடுப்பவனுக்கு என்னபலன் உண்டாகிறது? அதை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர், 'யுதிஷ்டிர! பிராம்மணர்களுக்குப் பக்தியுடன் பாதரக்ஷைகளைக் கொடுப்பவன் பகைவர்களை எல்லாம் நசுக்கி எல்லாக்கஷ்டங்களையும் தாண்டிவிடுவான். அவன் சத்ருக்களுக்கு மேலேயிருப்பான். ராஜனே! குருகுலத்ரேனே! கோவேறுகழுதைகள் கட்டினதும் வெள்ளியினாலும் பொன்னினாலும் அலங்கரிக்கப்பட்டதுமாகிய வெள்ளோரதம் அவனுக்கு வருகிறது. பாதரக்ஷைகொடுப்பது குதிரைக்குட்டிகள் கட்டின வண்டியைக் கொடுத்ததுபோலாகிறது" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "கௌரவரே! திலதானம், பூமிதானம், கோதானம், அன்னதானம் இவற்றிற்குப் பலனைச் சொன்னீர். அதை மறுபடியும்சொல்லக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"குருகுலபுத்ரனே! கௌரவகிரேஷ்டனே! திலதானத்தின் பலனை நான் சொல்லுகிறேன்; கேள். கேட்டபிறகு, சாஸ்திரப்

படி. தானம்செய். எள்ளை, பித்ருக்களுக்கு முதல் ஆகாரமாகப் பிரம்ம தேவரால் படைக்கப்பட்டது. ஆதலால், எள்ளைத்தானம்செய்வதனால் பித்ருதேவர்களின்வர்க்கம் ஸந்தோஷமடைகிறது. மாசிமாதத்தில் பிராம்மணர்களுக்கு எள்ளைத்தானம்செய்பவன் ஜந்துக்களெல்லாம் நிரம்பியுள்ள நரகத்தைக் காணன். எள்ளைக்கொண்டு பித்ருயாகம் செய்பவன் ஸத்ரயாகங்களெல்லாஞ் செய்தவனாகிறன். சிரத்தையில்லாமல் எள்ளைக்கொண்டு சிராத்தம்செய்வது ஒருகாலும்நகாது. கச்யபமகரிஷியின் அங்கத்திலிருந்து எள்ளுண்டானது. பிரபுவே! அதனால், தான விஷயத்தில், எள்ளு தேவத்தன்மையை அடைந்திருக்கிறது. எள்ளானது தேகபுஷ்டியையும் ஆயுகையுங்கொடுப்பது; பாவத்தைப் போக்குவது. ஆதலால், எள்ளுந்தானம் எல்லாத்தானங்களிலும் சிறந்தது. சிறந்தஞானியான ஆபஸ்தம்பரும் சங்கரும் விகிதரும் கௌதம மகரிஷியும் திலதானத்தினல் மேலுலகமடைந்தனர். பிராம்மணர்களெல்லாரும் இந்திரியங்களை ஜயித்தவர்களாகி எள்ளை ஹோமஞ்செய்து கொண்டிருக்கின்றனர். எள்ளு பசுவின்நெய்க்குச் சமமானது; ஸந்ததி விருத்திக்கும் காரணமானது. ஆகலால், எல்லாத்தானங்களிலும் திலதானம்சிறந்தது. இவ்வுலகத்தில் எல்லாத்தானங்களுள்ளும் திலதானம் அழிவில்லாததென்று சொல்லப்படுகிறது. முற்காலத்தில் நெய் இல்லாமற்போனபோது வீரனை குசிகனென்னும் ராஜரிஷி மூன்றக்கினிகளிலும் எள்ளைஹோமம்செய்து உத்தமகதியை அடைந்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. குருசிரேஷ்டனே! அதனல், திலதானமானது மிகச் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. எந்தமுறைப்படி திலதானஞ்செய்வது சிலாக்கியமென்பதைப்பற்றித் தேவர்கள் யாகஞ்செய்யத்தொடங்கின விஷயத்தை இனிச்சொல்வேன்; கேள். பூமிக்கதிபதியே! மகாராஜனே! தேவர்கள் பூமியில் ஒருயாகத்தில் யாகஞ்செய்யக்கருதி ஸ்வயம்புவான பிரம்மதேவருடைய ஸபையில் அவரைச்சந்தித்து, 'நாங்கள் யாகம் செய்யவேண்டும்' என்று புண்ணியகூத்திரத்தைக் கேட்டனர். 'பகவானே! பூமிக்கும் ஸ்வர்க்கத்திற்கும் எல்லாவற்றிற்கும் நீரே பிரபு. மஹானுபாவரே! உமது அனுமதியின்மேல் நாங்கள் யாகம்செய்யக்கடவோம். உம்மால் அனுமதிகொடுக்கப்படாதபூமியில் யாகம் பயன்பெறுது. தாவரமும் ஜங்கமமுமாகிய உலகமனைத்துக்கும் நீரே பிரபு. ஆதலால், நீர் அனுமதிகொடுக்க வேண்டும்' என்றனர். பிரம்மதேவர், 'தேவசிரேஷ்டர்களே! கச்யபர்புத்ரர்களே! பூமியில் நீங்கள்யாகம்செய்வதற்குரியஇடத்தை உங்

களுக்குக் கொடுப்பேன்' என்றுசொன்னர். தேவர்கள், 'பகவானே! எங்கள்இஷ்டம் நிறைவேறிற்று. இந்தத்தேசத்தை எப்போதும் ரிஷிகள் அடுத்திருக்கின்றனர். இங்கே நிரம்பினதக்ஷிணைகளோடு யாகஞ்செய்வோம்' என்றுசொன்னர்கள். அப்போது அகஸ்தியர், கண்வர், ப்ருகு, அத்ரி, வ்ருஷாகபி, அஸிதர், தேவலர்ஆகிய இந்த ரிஷிகள் தேவர்களின் யாகத்திற்கு வந்தனர். மஹாத்மாக்களான தேவர்கள் பிறகு தவறுதலில்லாமல் யாகம்செய்தனர். அப்படியே தேவசிரேஷ்டர்கள் சரியானகாலத்தில் யாகத்தை முடித்தனர். அந்தத்தேவர்கள் மலைகளிற்சிறந்த இமயமலையில் யாகஞ்செய்து அம்மலையில் ஆறிலொருபாகத்தை அந்தயாகத்தில் பூமிதானமாகச்செய்தனர். பிறரால் அனுபவிக்கப்படாத பூமியில் சாணளவாவது கொடுப்பவன் ஆபத்தில் அகப்படமாட்டான்; நரகங்களையடையான். குளிர் காற்று வெய்யில் இவைகளைத்தாங்குவதும் நன்றாகச்செவ்வைப்படுத்தப்பட்டதுபாகிய யாகபூமியைத்தானம்செய்பவன் புண்ணியமுடிந்து ஸ்வர்க்கலோகத்திலிருந்து அசைக்கப்படுவதில்லை. அரசனே! அந்தஅறிவுள்ளவன் இந்திரனுடன் மகிழ்ந்து வஸிப்பான். கிருகதானம் செய்கிறவனும் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்படுவான். வேதமோதுவிப்பவர்களின் குலத்திற்பிறந்தவனும் வேதமோதினவனும் புலன்களையடக்கினவனுமாயிருப்பவன் ஸந்தோஷமாகவஸிக்கும்படி வீட்டைக் கொடுத்தவன் சிறந்தலோகத்தையடைவான்.. பரதசிரேஷ்டனே! அப்படியே பசுக்களுக்காகக் குளிரையும் மழையையும் தாங்கத்தக்க உறுதியான கொட்டில் செய்யப்படுவது ஒருகுலத்தில் ஏழுதலைமுறை வரையில் கரையேற்றிவிடும். பயிர்செய்யத்தக்க பூமிதானம் செய்பவன் உலகத்தில் மேலானஐசுவரியத்தை அடைவான். ரத்னங்களுள்ள பூமியைக்கொடுப்பவன் தன்குலத்தின் ஸந்ததியைப் பெருகச்செய்வான். களர்நிலத்தையும் எரிந்துபோனபூமியையும் சுடலையினால்சூழப்பட்ட பூமியையும் பாவிகளிருக்கும்பூமியையும் எவ்வகையினும் தானம்செய்யலாகாது. அயலானுடைய பூமியில் பித்ருக்களுக்குச் சிராத்தம்செய்தாலும் அந்தப்பூமியைச் சிராத்தத்தில் தானஞ்செய்தாலும் அந்தச்சிராத்தகருமம் கெடும். ஆதலால், தெரிந்தவன் கொஞ்சம்பூமியையாவது விலைக்குவாங்கி அதைத் தானம்செய்யவேண்டும். பித்ருக்களுக்கும் (தான்வாங்கின) அதில் பிண்டதானம்செய்வதுதான் அசூயையாகும். காடுகள் மலைகள் நதிகள் புண்ணியதீர்த்தங்கள் இவைகளெல்லாம் யாருக்கும் சொந்தமல்லாதவையென்று சொல்லுகின்றனர். அவற்றில் எவனுக்கும் உரி

மையில்லை. அரசனே! இவ்வாறு பூமிதானத்தின் பலனைப்பற்றிச் சொன்னேன். குற்றமற்றவனே! இதற்குமேல் கோதானத்தைப் பற்றி உனக்குச் சொல்லுவேன். பசுக்கள் எல்லாவிஷயங்களிலும் பார்க்கிலும் மேற்பட்டவைபாதலின், பகவானான சிவபெருமான் அவற் றுடன்கூடத் தவம்செய்தார். பரதனே! தவஸித்திபெற்றபிரம்மரிஷி களைவேண்டும் சிறந்ததபோதனமாகிய பிரம்மலோகத்தில் சந்திரனுடன்கூட இந்தப்பசுக்கள் வஸிக்கின்றன. பரதனே! அவை பாலினாலும் நெய்யினாலும் தயிரினாலும் கோமயத்தினாலும் தோலினாலும் எலும்பு களினாலும் கொம்புகளினாலும் வால்களினாலும் உபகாரம்செய்கின் றன. அவற்றிற்குத் துஸ்பரியும் வெய்யிலுமில்லை. அவை எப்போதும் வேலைசெய்கின்றன. அவற்றிற்கு மரணபீதியால் கஷ்டமுண்டாவதில்லை. ஆதலால், பிராம்மணாதரனுடன் கூடவே உயர்ந்ததபோதனத்தை அடைகின் றன. ஆதலால், நாணிகள் பசுக்களையும் பிராம்மணாகளையும் ஒன்று கப் பேசுகின்றனர். பாஜனே! மஹாதேவனென்னுமரசனுடைய யாகத் தில் ஆக்கள்தான் யாகபசுக்களாகச் செய்யப்பட்டன. அந்தப்பசுத் தோல்களினின்றும் ரம்மண்வதியென்னுமந்தி பிரவஹித்தது. அவை யாகபசுவாதலினால் விதிவிதிக்கப்பட்டதான தானதர்மத்திற்குரியவையாக விதிக்கப்பட்டன. பாஜனே! அப்படிப்பட்ட தேகத்தினால் பிராம்மண சிரேஷ்டர்களுக்குத் தானம்செய்பவன் நஷ்டமான நிலைமையிலிருந் தாலும் சடினமான ஆபத்துகளைக் தாண்டிவிடுவான். ராஜனே! ஆபி ரம்பசுக்களைத்தானமாகச்செய்பவன இறந்தபின்பு சுகமடைவான்; எல்லா விடங்களிலும் ஜயத்தையும் பெறுவான். ஆக்களின்பால் அமுத மென்று தேவேந்திரன் சொன்னான். ஆதலால், பசுவைத்தானம்செய் தவன் அமுதமளிப்பவனாகிறான். அக்நிஹோத்ரங்களில் ஹோமஞ்செய்வ தற்கு ஆவின்நெய்தான் குற்றமற்றதென்று வேதமறிந்தவர் நினைக் கின்றனர். ஆதலால், ஆவைக்கொடுத்தவன் ஹோமஸாதனத்தைக் கொடுத்தவனாகிறான். விருஷோத்ஸர்ஜனமும் உருக்கொண்டுவந்தஸ்வர்க்கம். ஆதலால், பசுக்களுக்குத்தலைவனாகிய விருஷபத்தைக் குணமுள்ள பிராம்மணனுக்குக்கொடுப்பவன் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்படுகிறான். பரதசிரேஷ்டனே! பசுக்கள் பிராணிகளின் உயிரென்று சொல்லப்படு கின்றன. ஆதலால், பசுவைக்கொடுப்பவன் உயிரைக்கொடுப்பவனா கிறான். பசுக்கள் பிராணிகளுக்காப்பவையென்று வேதமறிந்தவர் நினைக்கின்றனர். ஆதலால், பசுவைக்கொடுப்பவன் ரக்ஷணத்தைக் கொடுப்பவனாகிறான். பரதசிரேஷ்டனே! கொல்வதற்குப் பசுவைக் கொடுக்கலாகாது. அப்படியே உழவனுக்கும் நாஸ்திகனுக்கும் பசு

விஞ்ஜீவிப்பவனுக்கும் யாகத்திற்குமுக்கியமான ஆவின்பால்நெய் முதலியவற்றைவிற்பவனுக்கும் கோதானம் செய்யலாகாது. அது யாகத்திற்கு முக்கியமானது. மேற்சொன்னபாவச்செய்கையுள்ள வர்களுக்குக் கோவைக்கொடுப்பவரும் முடிவில்லாத நரகத்திற்கா ளாவானென்று மகரிஷிகள் கூறுகின்றனர். பிரேதத்தும் கன்று போனதும் மலடும் கோபுளாதும் அங்கஹீனமுள்ளதும் சக்தியற் றதுமான கோவைப் பிராம்மணனுக்குத் தானம்செய்யலாகாது. பதி ஞாயிரம்கோக்களைச் சரியாகத் தானம்செய்பவனிடத்தில் இந்திரனுடன் மகிழ்ந்திருப்பான்; மூன்றுதலைக்கும் மூன்றுகண்ணுக்குமான அழகில்லாத உலகங்களை அடைவான். பரதனே! கோதானத்தையும் நிலதானத்தையும் பூதானத்தையும்பற்றி இவ்வாறு உனக்கு உரைத்தேன். அன்னதானத்தைப்பற்றியும் கேள் குருபுத்திரனே! அன்னதானம் முதன்மையென்று பிராம்மணர்கள் கூறுகின்றனர். அன்னதானத்தில் தான் ரந்திதேவனென்னும் அரசன் ஸ்வர்க்கம்போனான். பூமியைக் காப்பவனே! மஹிதருக்குபதியே! பரிபூரணமான வருஷங்களுக்கு அன்னம்போடுகிறவன் எவனோ அவன் மேலானபிரம்மலோகத்திற் குச் செல்வான். பரதனே! பிரபுவே! மனிதர்கள் அன்னதானம் செய்வதால் மேன்மையடைவதுபோல, மற்ற வஸ்துதானங்கள் முதலிய மற்றெவற்றாலுந் தானஞ்செய்வதாலும் அடைவதில்லை. அன்னந்தான் பூதங்களுக்குமானவாழ்வு. அன்னமே சிறந்தகலசத்தியென்று நினைக்கப்படுகிறது. உயிருடன் ஒளியுடன் பராக்கிரமமும் தேஜஸ்ஸும் அன்னத்திலடங்கியிருக்கின்றன. மநுஷ்யர்கள் எப்போதும் மன ஊக்கத்துடன் சேட்டையுடன் அன்னமளிப்பதாலேயே அவன் நரகங் களையடைவதில்லையென்று பராசரர் சொல்லியிருக்கிறார். தேவர்க ளுக்கும் ராஜரிஷிகளுக்கும் பரமபூஜைசெய்வதற்கு அன்னத்தை நிவேதனம்செய்யவேண்டும். ராஜனே! எந்தஆகாரத்தை மனிதர்கள் புசிக் கின்றனரோ அதுதான் அவர்களின்தேவதைகளின் ஆகாரம். வளர் பிறையில் நிலவில்அன்னம்போடுகிறவன்எவனோ அவன் மறுமையில் நரகங்களைத்தாண்டி முடிவில்லாதசுகம் பெறுகிறான். பரதகுலேஷ் டனே! எவன் தான் புசியாமல் விருந்துக்குச் சிரத்தையுடன் அன்னம் போடுவானோ அவன் பிரமஞானிகள் அடையும்உலகங்களை அடை வான். அன்னதானஞ்செய்யும்புருஷன் மிகக்கடினமான ஆபத்தை யடைந்தாலும் அதைத் தாண்டிவிடுவான்; பாவத்தையும் தாண்டு வான்; முந்தியதலைமுறையையும் குறைத்துக்கொள்வான். இவ்வாறு அன்னதானம் நிலதானம் பூதானம் கோதானம் இவற்றின்பயன்கள் உரைக்கப்பட்டன" என்றார்.

நூற்றிரண்டாவது அத்யாயம்.

தானதர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(தண்ணீர்கொடுப்பதன்பலன் முதலியன.)

யுதிஷ்டிரர், "ஐயா! பாரதரே! தானங்களின்பலன்களை நீர் சொல்லக் கேட்டேன். இப்போது, அன்னதானம் விசேஷமாகச் சிலாகிக்கப்பட்டது. பிதாமஹரே! தண்ணீர்கொடுப்பதற்குப் பெரும் பலன் இருப்பதேனென்பதை விரிவாகக்கேட்க விரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பரதசிரேஷ்டனே! ஸந்தோஷம். உனக்குச சரியாகச்சொல் லுவேன். தவறுதபராக்ரமமுள்ளவனே! இப்போது நான்சொல்வ தைக் கேள். குற்றமற்றவனே! பலன்பெறத்தகுந்த அன்னபானங் களின்தானமுதலான எல்லாத்தானங்களைப்பற்றியும் சொல்வேன். இவ்விரண்டுதானங்களுக்கு மேற்பட்டதானம் ஒன்றுமில்லையென்பது என்நிச்சயம். அப்பா! பிராணிகளெல்லாம் அன்னத்தினாலே உண் டாகின்றன. ஆதலால், உலகத்தில் அன்னதானமொன்றுதான் எல் லாத்தானங்களிலுமிறந்ததென்று சொல்லப்படுகிறது. எப்போதும் பிராணிகளுக்கு வன்மையும் உற்சாகமும் ஆகாரத்தினால் விருத்தியா கின்றன. அதனால், அன்னதானம் மிகச்சிறந்ததென்று பிரம்மதேவர் சொல்லியிருக்கிறார். குந்திபுத்ரனே! இது இப்படித்தான்; மாறு காது. 'அன்னங்கொடுத்தமனிதன் பிராணதானம்செய்தவனாகிறான். இவ்வுலகத்தில் பிராணதானத்திற்குமேற்பட்டது ஒன்றுமில்லை' என்று தேவர்கள்செய்த ஸத்யாகமென்னும்பாஹ்யாகத்தில் ஸாவி த்ரிதேவியின்சிறந்தவாக்கியம கேட்கப்படுகிறது. சிறந்தகைகளை யுடையவனே! முன்னர், சிபிசக்ரவர்த்தி புறாவுக்குஉயிரைக்கொடு த்து என்னபலனையடைந்தானென்பதைப்பற்றி லோமசமுனிவர்சொ ன்னவாக்கியத்தையும் நீ கேட்டிருக்கிறாயன்றே? அரசனே! பிராம் மணனுக்கு அன்னதானம்செய்பவன் எந்தக்கதியையடைவனோ அத ற்குமேற்பட்டகதியைப் பிராணதானம்செய்பவன் அடைவனென்று நாம் கேட்டிருக்கிறோம். கௌரவசிரேஷ்டனே! அன்னமும் ஜலத் தினாலுண்டாகிறது. ஜலமின்றியுண்டாவது ஒன்றுமில்லை. நவக்கிர கங்களுக்கும்அதிபதியும் மகிமைபொருந்தினவனுமானசந்திரன் ஜல த்தினாலுண்டானவன். ஜலமே அமிர்தம். அமிர்தமே ஜலம். மனி தர்க்கதிபதியே! மஹாராஜனே! எவற்றினால் பிராணிகளுக்கு உயிர்

உண்டாகிறதோ அந்தச்செடிகளும் கொடிகளும் ஜலத்திலுண்டாகின்றன. தேவர்களுக்கு அமிர்தமும் நாகர்களுக்குஸுதையும் பித்ருக்களுக்குஸ்வதையும் பசுக்களுக்குப்புற்பூண்டுகளும் ஆகாரங்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன. மனிதர்களுக்கு அன்னந்தான் பிராணனென்று அறிஞர்கள் கூறுகின்றனர். புருஷசிரேஷ்டனே! இவையெல்லாம் ஜலத்திலுண்டாகின்றன. ஆதலால், தண்ணீர் கொடுப்பதற்கு மேற்பட்டதானம் எதுவுமில்லை. தன்னுடையநன்மையைவிரும்புகிற மனிதன் எப்போதும் தண்ணீர்கொடுக்கவேண்டும். ஜலதானமானது இவ்வுலகத்தில் பொருளையும் புகழையும் ஆயுளையும் கொடுப்பதென்று சொல்லப்படுகிறது. குந்திபுத்ரனே! தண்ணீர் கொடுப்பவன் எப்போதும் பசுக்களுக்கு மேற்பட்டிருப்பான். தண்ணீர்கொடுப்பவன் இவ்வுலகத்தில் தான்வேண்டினவையெல்லாவற்றையும் அழியாதபுகழையும் அடைந்து இறந்தபின்னும் பாவங்களினின்றும் விடுபட்டு அளவற்றஆனந்தத்தை அடைவான். புருஷசிரேஷ்டனே! சிறந்தபராக்கிரமமுள்ளவனே! தண்ணீர்கொடுப்பவன் ஸ்வர்க்கத்திற்குப்போய் அழிவில்லாத லோகங்களையும் அடைவான்' என்று மனுகூறினார்" என்றார்.

நூற்றுமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(எள்முதலியவற்றின்தானத்தைப்பற்றி யயாதியும் ஒருபிராம்மணனுக்குநடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "திலம், தீபம், அன்னம், வஸ்திரம்இவற்றின் தானங்கள் எப்படிப்பட்டவையென்பதைப்பற்றி மறுபடியும் எனக்குச் சொல்லக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"யுதிஷ்டிர! இந்தவிஷயத்திலும் ஒருபிராம்மணனுக்கும் யமனுக்கும்நடந்த ஸம்பாஷணையாகிய ஒருபழைய இதிஹாஸம் கூறுகின்றனர். ராஜனே! கங்கையமுனை இவற்றின்நடுவில் யமுனைஉற்பத்தியாகும் களிந்தமலையின்கீழேயுள்ள மத்தியதேசமென்னுந்தேசத்தில் பார்ணசாலியென்றுபெயர்பெற்ற அழகானபெரிய பிராம்மணகிராமம் ஒன்றிருந்தது. அந்தக்கிராமத்தில் வித்வான்களானபிராம்மணர்கள் அதிகமாகவஸித்தனர். அப்போது யமன் கறுத்தவஸ்திரமுடுத்தவனும் சிவந்தகண்களும் நெறித்தஉரோமங்களும் காக்கைபோன்ற

கணுக்கால்களும் கண்மூக்குகளுமுள்ளவனுமான ஒருகிங்கரனைப்பார்த்து, 'நீ பிராம்மணிகாமத்திற்குப் போ; போய் அவ்விடத்திலிருந்து சாந்தியுள்ளவனும் வித்வானும் வெளிப்படையாகவுதவிப்பவனும் அகஸ்தியகோத்ரத்தானுமாகிய சர்மியென்றுபெயருள்ள அந்தப்பிராம்மணனை அழைத்துவா; அவன்பாசத்தில் அவன்கோத்திரமாகவேயிருக்கும் மற்றொரு பிராம்மணனை அழைத்துவராதே; அவனும் இவனைப்போன்றகுணமுள்ளவன்தான்; கல்வியிலும் குலத்திலும் இவனுக்கொப்பாயுள்ளவன்தான்; புத்ரலாபத்திலும் ஒழுக்கத்திலும இருதபஸ்தியிலிக்கிற சர்மனென்பவன் அறிவீர், நான் குறிப்பிட்டவனையே அழைத்துவா அவனைக்கு நான் பூஜைசெய்ய வேண்டும்' என்றுசொன்னேன். அதற்குவேலைக்காரன் சென்று யமனுடையகட்டளையை பிரகாசம்செய்தான்; எனக்கு வேண்டாமென்று யமன்சொல்லுதலை அவனைப்பிடித்துக்கொண்டுவந்தான். சிறந்த சக்தியுள்ளயமன் பழந்தினாலும் அவனுக்கு பூஜைபண்ணி 'இவனைக் கொண்டுபோ; அந்தப்பிராம்மணனை கொண்டுவா' என்று தூதனை ஏவினான். யமன் இவ்வாறுசொன்னபோது ஒருபுறத்தில் வைராக்கியமுள்ள அந்தப்பிராம்மணன் தர்மராஜனைப்பார்த்து, 'தர்மராஜரே! என்னுடைய குழலில்பிரகாசமுள்ளகாலம்முழுதும் இங்கேயே வசிப்பேன்' என்றுசொன்னான். யமன், 'காலவரையை நான் இங்கே எவ்வளவரையிலும் அறியப்பட்டேன். எவன் தர்மத்தைச் செய்கிறானோ அவனைமட்டும் நான் அறிவேன். சிறந்தபாக்கியமுள்ள பிராம்மணனே! நீ இப்பொழுது உன் இருப்பிடத்திற்குச்சென்று ஆசாரத்தவருகவனே! உனக்கு நான் என்னசெய்யவேண்டுமென்பதெல்லாம இஷ்டப்படி பெற்வையாச்சொல்' என்றுசொன்னான் பிராம்மணன், 'பரிசுத்தமானதானத்தான் மிகச்சிறந்தபுண்ணியமாகும். அதை எனக்குச்சொல். மிகச்சிறந்தவனே! முவுலகங்களிலுமுள்ள யாவருக்கும நீதானே உபதேசிப்பவன?' என்றுகேட்டான். யமன், 'பரம்மரிஷியே! தானகுணத்தைப்பற்றியபரந்தவிதியைச சரியாகசொல்லுகிறேன்; கேள். இவ்வுலகத்தில் நிலைத்தானம மிகச்சிறந்தது; அழிவிலாததுபுண்ணியம். பிராம்மணர்களுக்குச சாஸ்திரத்திற்சொன்னமுறையோடு நிலதானம்செய், வைகாசிமாதம் பௌர்ணமி

மாஸியில் பிராம்மணர்களுக்குத் திலதானம் செய்யவேண்டும். திருதத்தில் எல்லாவிதமான நன்மையையும் வேண்டுகிறவர்கள் எப்போதும் எள்ளை உண்பிக்கவேண்டும்; (எண்ணெயை) உடம்பில் தடவிக்கொள்ள வேண்டும்; அப்படியே ஜலத்தையும் எப்போதும் கொடுக்கவேண்டும்; ஆசமனமும் செய்யவேண்டுமென்பது நிசசயம்; ஓடைகளையும் குளங்களையும் கிணறுகளையும் வெட்டுவிக்கவேண்டும். பிராம்மணோத்தமனே! இவ்வுலகத்தில் ஜலம் மிகஅரிது. நீ ஜலத்தை எப்போதும கொடுக்க வேண்டும். இது எல்லாவற்றிலும் சிறந்தபுண்ணியம். பிராம்மணோத்தமனே! நித்தியமாகத் தண்ணீர்கொடுப்பதற்காகத் தண்ணீர்ப்பந்தல் களைச் செய்விக்கவேண்டும. உண்டவர்களுக்குத் தண்ணீர்கொடுப்பது முக்கியமானகாரியம். தண்ணீர்வேண்டுகிறவனைக்கண்டவுடன் அன் போடு விரைந்துகொடுப்பது முக்கியம். வஸ்திரதானம் செய்பவன் அதன் நூலளவுவருஷகாலமும் தீபதானம் செய்பவன் அது எரியும் நிமிஷங்களளவு வருஷகாலமும கோதானம செய்பவன் அவற்றின் ரோமங்களினளவு வருஷகாலமும் தண்ணீர்கொடுப்பவன் அந்தத்தண் ணீர்த்துளிகளளவு வருஷகாலமும ஸ்வர்க்கலோகத்தை அனுபவிப் பான். ஆதலால், இந்தத்தானங்களை நீ நடத்தக்கடவாய்' என்று சொன் னேன். யமன் இவ்வாறுசொன்னபிறகு அந்தபமதூதனால் அந்தப்பிராம் மணன் தன்வீட்டிற்குக்கொணர்ந்துவிடப்பட்டு யமன் சொன்னவற்றை யெல்லாம் செய்தான். யமதூதனும் அவனைக்கொணர்ந்துவிட்டவுடன் அந்தச்சாம்பியென்பவனை எடுத்துக்கொண்டுசென்று தர்மராஜனிடம் ஒப் பித்தான். சிறந்தமகிமையுள்ள தர்மராஜன் தாமதமெதிர்ந்த அந்தப்பிராம் மணனைப்பூஜித்து அவனுடும்சமபாஷணைசெய்து வந்தபடியே அவனை அனுபபினான். அவனுக்கும்முன்சொன்னஉபதேசத்தையெல்லாம்யமன சொன்னான். அந்தப்பிராம்மணனும் யமலோகமபோய்த் திரும்பிவந்த பிறகு யமன் சொன்னதையெல்லாம் செய்தான். பித்ருக்களுக்குப்பிரிய முண்டாக்குவதற்குத் தீபதானத்தை முக்கியமாக யமன் சிலாகித்தான். ஆதலால், நித்யம் தீபங்கொடுப்பவன் பித்ருக்களைக் கரையேற்றுவான். பரதஸ்ரேஷ்டனே! பிரபுவே! ஆதலால், தேவர்களுக்கும பித்ருக்களுக் கும் தனக்கும் கண்ணுக்கினியவையான தீபங்களை எப்போதும் அளி க்கவேண்டும். ராஜனே! ரத்நதானமும் மிகச்சிறந்த புண்ணியமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றை விலைக்குவாங்கித் தானம்செய் யும் பிராம்மணனுக்கு அவை பயத்தைப்போக்குகின்றவை. பிராம்ம ணன் அயலானிடம் ரத்நத்தைத் தக்ஷிணையாகப்பெற்றுக்கொண்டு

அதைப் பிராம்மணர்களுக்குக் கொடுப்பதனால், கொடுத்தவன் வாங்கினவன் இருவருக்கும் அதுவே அழியாதபுண்ணியமாகும். 'நல்ல நிலைமையிலிருப்பவன் அப்படித் தானம்செய்பவனுக்கு ரத்தினத்தைத் தக்ஷிணையாகக்கொடுப்பானானால், அது அவ்விருவருக்கும் அழியாத புண்ணியமென்று தர்மமறிந்த மனு சொல்லுகிறார். வஸ்திரங்களைக் கொடுப்பதனால் ஒருமனிதன் தன்மனைவியை நீங்காதவனும் சிறந்த ஆடையாபரணங்களையுடையவனுமாவானென்று கேட்டிருக்கிறோம். புருஷஶ்ரேஷ்டனே! வேதத்தைப்பிரமாணமாகக்கொண்டு கோதானம் ஸுவர்ணதானம் திலதானம் இவற்றைப்பற்றிப் பலவகையாகச்சொன்னேன். விவாகங்களைச்செய்துகொண்டு புத்ரர்களை உற்பத்திபண்ணவேண்டும். கௌரவனே! புத்ரலாபமானது எல்லாலாபங்களிலும் சிறந்தது" என்றார்.

நூற்றுநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(கோதானம், பூதானம், பசுக்களையும் பிராம்மணர்களையும் காத்தல் முதலியன.)

யுதிஷ்டிரர், "கௌரவஶ்ரேஷ்டரே! மிகத்தெரிந்தவரே! தானங்களின் சிறந்த விதியைப்பற்றியும் முக்கியமாகப் பூமிதானத்தைப்பற்றியும் திரும்பவும் சொல்லக்கடவீர். கூஷ்மாண்டியன் யாகம்செய்விக்கும் பிராம்மணனுக்குச் சாஸ்திரப்படி பூமியைக்கொடுப்பான்; அந்தப்பிராம்மணன் பெற்றுக்கொள்வான். மற்றொருவன் கொடுக்கத்தகாதே? தானபலனை விரும்புகிற எல்லாவருணத்தாரும் கொடுக்கக்கூடியதும் வேதத்தில் விதிக்கப்பட்டதுமாயுள்ள தானத்தை எனக்கு உரைக்கக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார். "இவ்வுலகத்தில் பசு பூமி கல்வி இம்மூன்றும், 'கோ' என்ற ஒரே பெயருள்ளவையும் ஒரேபயனுள்ளவையும் வேண்டினபலன்களையெல்லாம் கொடுக்கத்தக்கவையும் தானத்திற்குரியவையுமான பொருள்கள். தர்மத்தையும் பிரம்மத்தையும் தெரிவிப்பதான ஸாஸ்வதியைச் சிஷ்யனுக்கு உபதேசிப்பவன் பூதானம் கோதானங்களுக்குச் சமமானபலனை அடைவான். கோக்களையும் அப்படியே சிலாக்கியமாகச் சொல்லுகின்றனர். தானத்திற்குரியது அதற்கு மேற்பட்டது ஒன்றுமில்லை. யுதிஷ்டிர! கோக்களிடத்தில் உடனே

பலன். அவற்றிற்குவிலை ஸ்வல்பம்.[1] பசுக்கள் எல்லாருக்கும் தாய்கள்; எல்லாஸௌக்கியங்களையும் கொடுப்பவை. அபிவிருத்தியாகக்கருதுகிறவன் எப்போதும் கோக்களைப் பிரதக்ஷிணம் செய்யவேண்டும்; அவற்றைக் காலாலுதைக்கலாகாது; அவைகளினிடையில் செல்லலாகாது. அவை மங்களங்களுக்கெல்லாம் இருப்பிடமான தேவதைகள். ஆதலால், கோக்களை எப்போதும் பூஜித்தல்வேண்டும். வேலைகளைச்செய்யும் விருஷபங்களைச் சாட்டையினாலோட்டுவது முதலியவேலையே கடவுளால் விதிக்கப்பட்டது அது குற்றமன்று. மற்றவிஷயங்கள் அதற்குப்பின்னிட்டவை. கடக்கும்போதும் படித்திருக்கும்போதும் தெரிந்தவன் பசுக்களைப்பயமுறுத்தலாகாது. தாகித்துநோக்கும் ஆக்கள் மனிதனைச் சுற்றத்துடன் கொன்றுவிடும். பித்ருக்களின் ஸ்தானங்களும் தேவாலயங்களும் எவற்றின் கோமயத்தினால் எப்போதும் சுத்திசெய்யப்படுகின்றனவோ அவற்றிற்கு மேலானபரிசுத்தம் என்ன இருக்கிறது? ஒருவன்[2] தான் ஆகாரம் செய்வதற்குமுன் அயலார்பசுவுக்கு ஒருபிடிபுல்லை ஒரு வருஷங்கொடுத்தால் அவனுக்கு அது எல்லாவிருப்பங்களையும்தரும் விரதமாகும். அவன் புத்ரர்களையும் புகழையும் பொருளையும் ராஜ்யத்தையும் அடைவான். அசுபத்தையும் கெட்ட கனவையும் அது ஒழித்துவிடும்" என்றார்.

யுதிஷ்டிரர், "என்னலக்ஷணங்களுள்ள பசுக்களைத் தானம்செய்யவேண்டும்? எவற்றைச் செய்யாமல்விடவேண்டும்? எப்படிப்பட்டவனுக்குக்கொடுக்கவேண்டும்? எப்படிப்பட்டவனுக்குக்கொடுக்கத்தகாது?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார். "கெட்ட ஒழுக்கமுள்ளவனுக்கும் பாவம்செய்பவனுக்கும் பொருளாசைக்காரனுக்கும் பொய்சொல்லுகிறவனுக்கும் தேவகாரியங்கள் பித்ருகாரியங்களைவிட்டவனுக்கும் எவ்வகையிலும் கோதானஞ்செய்யலாகாது. யாசிப்பவனும் அதிகப்பிள்ளைகளையுடையவனும் அக்நிஹோத்ரம் செய்பவனுமாகிய வேதமோதின பிராம்மணனுக்குப் பத்துப்பசுக்களைத் தானம்செய்வதனால், தானம் செய்பவன் மிகச்சிறந்தலோகங்களை அடைவான். பசுக்களின் பால்நெய் முதலியவற்றை ஹோமம்செய்பவனும் அவற்றையே போஜனம் செய்விப்பவனும் அவற்றைத் தானம்செய்பவனும் இந்தக்காரியங்களில்

---

[1] 'யஜ்ஞம்கிருஷிமுதலிய வேலைகளிலிருக்கும் விருஷபங்களை ஒட்டுவது தேவர்களால் விதிக்கப்பட்டது. அவைகளிரண்டிலும் யாகத்திற்காகத் தான்டுவது சிரேயஸைச்செய்யும். வைதிகமான எதற்கும்பிறகு லௌகிகவ்யவஸாயம் நிற்கத்தக்கதாகும்' என்பது பழையவுரை.

[2] 'அதன் மோர் முதலியவற்றை அடையாமல்' என்பது பழையஉரை.

ஏவப்பட்டவனும் எல்லாப்புண்ணிய பலன்களையும் அடைவார். தவம் செய்பவனுக்குக்கொடுப்பவனும் அவனுக்கு உதவியாயிருப்பவனும் அவன் தவப்பயனனைத்திலும் பாகத்தையடைவார். மனிதனுக்குத் தன்னை உற்பத்திபண்ணினவன் பயத்தில் காப்பாற்றினவன் [1] ஜீவனத் தையுண்டுபண்ணினவன் இம்மூவரும் தந்தைகள். குருவுக்குப்பணி விடைசெய்வது பாவத்தைப்போக்குகின்றது. கோபமானது பெரும் புகழைஅழிக்கிறது. புத்ரனில்லாமையை [2]மூன்று புத்ர்கள் நிவிருத்தி செய்கின்றனர். பத்துப்பசுக்கள் வறுமையைப்போக்குகின்றன. வேதாந் தத்தில் நிச்சயமுள்ளவனும் கல்விகேள்விகளிற்மிகுந்தவனும் சிறந்த அறிவினால் திருப்தியடைந்தவனும புலன்களையடக்கினவனும் ஒழுக்கந் தவறுதவனும் மனத்தை ஜயித்தவனும் சாஸ்திரத்திற்கட்டுப்பட்ட வனும் எல்லாருக்கும் எப்போதும் இன்சொற்சொல்லுகிறவனும் பசிக் குப்பயந்து தகாதகாரியம் செய்யாதவனும் தயையுள்ளவனும் ஒழிவுள் ளவனும் விருந்துகளிலிரும்புகிறவனும பிள்ளைகள்பெண்டிருள்ள வனும் ஒரேகுணமுள்ளவனுமான பிராம்மணனுக்கு ஜீவனத்தைக் கொடுக்கவேண்டும. நல்லதகுதியுள்ளவனுக்குக் கோதானம்செய்வதனால் எவ்வளவு குணங்களிருக்கின்றனவோ அவ்வளவுகுற்றங்கள் பிராம் மணன் பொருளையபகரிப்பதனால் உண்டாகின்றன. பிராம்மணன் பொருளைபபகரித்தால் எல்லாவகையிலும குற்றமுண்டு. பிராம்மணர் களின் மனைவிகளையும் தூரத்தில்விடவேண்டும். பிராம்மணன் மனைவி யும் பொருளும் அபகரிக்கப்பட்டபோது, சக்தியினால் காப்பாற்றினவர் களுக்கும் அதற்காக உயிர்விட்டவர்களுக்கும் நமஸ்காரஞ்செய்கிறேன். அவர்கள் துன்புறுத்தப்படும்போது, காப்பாற்றாதவரைச் சூரியன் புத்ரனான யமன் எக்காலமும் தண்டித்துக்கொண்டும் பயமுறுத்திக் கொண்டும் நரகத்திலிருந்துவிடுவதில்லை. அப்படியே கோக்களைக்காப் பதிலும் பிடிப்பதிலும் நன்மையும் தீமையும் முறையே வருகின்றன. பிராம்மணர்களின் கோக்களையும் மனைவிகளையும் ரக்ஷிப்பதில் விசேஷ புண்ணியம் உண்டாகிறது.

[1] தானமுசெய்தவன்.

[2] மூன்றுபத்ர்களுக்குக்குறைந்தால் இல்லாமைக்குச் சமானம்.

நூற்றைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி)

(பிராம்மணர் பொருளைக் கவர்வதாகா தென்பதற்கு உதாரணமான நிருகன்கதை.)

கௌரவசிரேஷ்டனே! பிராம்மணன்சொத்தை அபகரிப்பதென்னும் இந்தவிஷயம்பற்றியே நிருகனென்னும்அரசன் மிகப்பெருங்கஷ்டத்தை அடைந்தானென்று பெரியோர்கள் கூறுகின்றனர். குந்திபுத்ரனே! முன்னர், துவாரகைநகர் ஏற்படும்போது புற்களாலும் பூண்டுகளாலும்மூடப்பட்ட ஒருபெருங்கிணறு காணப்பட்டதென்று கேள்வி. அந்தக்கிணற்றிலிருந்து ஜலமெடுப்பதற்காக முயற்சிசெய்தவர்கள் அந்தஜலம் முழுதும் மூடப்பட்டிருந்ததனால் மிகவருத்தமுற்றனர். அவர்கள் பருத்தஉடலுள்ள ஓர்ஓணான் அந்தக்கிணற்றிலிருந்ததைக் கண்டனர். அவர்கள் மலைக்கொப்பான அந்தஓணானை ஆயிரக்கணக்கான வண்டிகளாலும் தோல்வார்களாலும் கட்டியிழுக்கமுயற்சிசெய்தும் எடுக்கமுடியாமல் வாஸுதேவரிடம்சென்று அவரிடம், 'ஒருபெரியஓணான் கிணற்றின்துவாரத்தை மூடிக்கொண்டிருக்கிறது. அதைஎடுக்கத்தக்கவன் யாருமில்லை' என்றுதெரிவித்தனர். அந்த நிருகராஜன் கிருஷ்ணனால் தூக்கப்பட்டு என்னவேண்டுமென்று விசாரிக்கப்பட்டபோது, 'நான் ஆயிரம்யாகங்கள்செய்த பழமையானவன்' என்று தன்னை அவருக்குத் தெரிவித்தான். அவ்வாறுசொல்லும் அவ்வரசனைப்பார்த்துக் கண்ணபிரான், 'ராஜனே! நீ புண்ணியகருமம் செய்திருக்கிறையேயன்றிப் பாவம்செய்யவில்லையே? நீ இப்படிப்பட்ட கெட்டகதியையடைந்தது ஏன்? இப்படிப்பட்டநிலைமைக்கு என்னகாரணம்? அதைச்சொல். ராஜனே! நூறும் ஆயிரமும் மறுபடியும் நூறும் எண்ணூறும் பத்துலக்ஷமுமான கோக்களை முன்னே பிராம்மணர்களுக்கு நீதானம்பண்ணினையென்று கேட்டிருக்கிறோம். அந்த உன்புண்ணியம் எங்கேபோயிற்று?' என்று கேட்டார். அப்போது நிருகன் கிருஷ்ணனைப்பார்த்துச்சொன்னதாவது; 'அக்நிஹோத்ரம்தவறுத பிராம்மணனுடைய ஒருபசு அவன் வீட்டைவிட்டுப்போயிருந்தபோது என்பசுக்களின்கூட்டத்தில் தவறிவந்தது. என்னுடையபசுமேய்ப்பவர்கள் ஆயிரம்பசுக்களில் அதையும் சேர்த்து எண்ணினார்கள். மறுமைப்பயனைவிரும்பி அதைநான் பிராம்மணனுக்குத் தானம்செய்தேன். அந்தப்பசு எவனுக்குச்சொந்

தமோ அந்தப்பிராம்மணன் அதைத்தேடிக்கொண்டுபோகையில் அய லான்வீட்டில் அந்தப்பசுவிருக்கக்கண்டு, 'இதுவனது' என்றுசொன் ஞன். அவ்விரண்டுபிராம்மணர்களும் மிக்ககோபத்தோடு விவாதப் பட்டுக்கொண்டு என்னிடம்வந்தனர். அவர்கள் என்னைப்பார்த்து, 'நீ கொடுத்தவன்' என்றும்,'நீகவர்ந்தவன்' என்றும்கூறினர். என்னிடத்தில் தானம்வாங்கின பிராம்மணனைப் பதினாயிரம்பசுக்களைப் பிரதியாக வாங்கிக்கொண்டு அந்தப்பசுவை மாற்றிவிடும்படிவேண்டினேன். அவன் என்னைப்பார்த்து, 'இந்தப்பசு ஸரியானகாலத்திலும் இடத்திலும் கிடைத்தது ; பிருதியாகக் கறக்கிறது ; அடங்கினதும் மிக்கஅன் புள்ளதுமாயிருக்கிறது ; இனியபாலைக் கொடுக்கிறது; பாக்கியத்தைத் தருகிறது ; என்வீட்டில் முலைப்பாலில்லாமல் இளைத்துப் போன என்பிள்ளையை நித்யமும் காப்பாற்றுகிறது. அதை நான் கொடுக்க முடியாது' என்றுசொல்லிச்சென்றான். பிறகு, அந்த மற்றொருபிராம் மணனை அந்தப்பசுவுக்குப்பிரதியாக லக்ஷம்பசுக்களைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டினேன். மதுஸூதனரே! அந்தப் பிராம்மணன், 'அரசர்களிடத்தில் நான் வாங்குவதில்லை. எனக்குப் பொருளீட்டத் திறமையிருக்கிறது. உடனே அந்தஎன்பசுவையே கொடுக்கவேண்டும்' என்றுசொன்னான். பொன்னையும் குதிரைகளையும் வெள்ளித்தேர்களை யும் நான்கொடுத்தும் அந்தப்பிராம்மணசிரேஷ்டன் பெற்றுக்கொள்ளா மலே சென்றான். அந்தக்காலத்திலேயே நான் காலம்சென்று பித்ரு லோகம்போய்த் தர்மராஜனையடைந்து சந்தித்தேன். அப்போது, யமன் என்னைப்பூஜித்து, 'அரசனே! உன்னுடைய புண்ணியகர்மத்திற்கு வரை தெரியவில்லை. நீ செய்தபாவம் ஒன்றிருக்கிறது. அது தெரியாமற்செய் தது. அந்தப்பாவத்தைப் பின்னனுபவிக்கிறாயா? முன்னனு பவிக்கிறாயா? உன்னிஷ்டம்என்ன?' என்றான். நான், 'ரகஸ்யத்தில்' என்று சொன்னேன். அந்த உன்பிரதிஜ்ஞை பொய்யாயிற்று. பிராம்மணன் சொத்தை எடுத்துக்கொண்டாய். இந்த இருவகைத்தவறுதல்கள் உனக்கிருக்கின்றன' என்றுசொன்னான். பிரபுவே ! நான் தர்மராஜனைப் பார்த்து, 'முதலில்பாவத்தையும் பிறகு புண்ணியத்தையும் அனுபவிப்பேன்' என்றுசொல்லிக்கொண்டே இவ்வுருவத்தோடு பூமியில் விழுந்தேன். நான் பூமியில் விழும்போதே, 'வஸு தேவபுத்ரானஜநார்த்தனர் உன்னைத் தூக்கிவிடப்போகிறார். ஆயி ரம் வருஷமுடிந்து பாவம் ஒழிந்தபின் புண்ணியகர்மத்தினாற் சம் பாதிக்கப்பட்ட அழிவில்லாதலோகங்களை அடைவாய்' என்று யமன் இரைந்துசொன்னதை நான்கேட்டேன் ; நான் தலைகீழாகக் கிளைத்

றில் விழுந்திருப்பதையும் கண்டேன். திர்யக்ஜாதியிற்போயும் பழைய ஞாபகம் என்னை விடவில்லை. இப்போது உம்மால் கரையேற்றப்பட்டேன். தவவன்மையைத்தவிர வேறுவன்மை என்னவிருக்கிறது? கிருஷ்ணா! நான் இப்போதே ஸ்வர்க்கத்திற்குச்செல்லுட்படி எனக்கு விடைகொடுக்கக்கடவீர்' என்பது. பகைவரைஜயித்தவனை அவன், கிருஷ்ணனால் அனுமதிகொடுக்கப்பெற்று அந்தஜநார்த்தனரை நமஸ்கரித்துத் தேவவிமானத்திலேறி ஸ்வர்க்கத்திற்குச்சென்றான். பரத சிரேஷ்டனே! கௌரவனே! அந்த நருகன் அவ்வாறு ஸ்வர்க்கம் சென்றபிறகு வாஸுதேவர் பின்வரும் சுலோகத்தைச் சொன்னார்.

(அதன்பொருள்,) 'அறிவுள்ளபனிதன் பிராம்மணன் சொத்தை எடுக்கலாகாது. எடுக்கப்பட்ட பிராம்மணசொத்து, பிராம்மணன்பசு நருகனைக் கெடுத்ததுபோலக் கெடுத்துவிடும்' என்பது. குந்திபுத்ரனே! ஸாதுக்களுடன் ஸாதுக்களுக்குண்டாகும்சேர்க்கை வீணவதில்லை. நருகன் ஸாதுவைச்சேர்ந்ததனால் துக்கத்திலிருந்து விடுபட்டதைப் பார். யுதிஷ்டிர! கோதானமும் பலனுள்ளது. அப்படியே கோவையபகரிப்பதும் நிங்கைசெய்வது. ஆகலால், கோவை அபகரியாமலிருக்கவேண்டும்'' என்றார்.

நூற்றுருவது அத்யாயம்.

தானதர்மபர்வ (தொடர்ச்சி.)

(யமன் நாசிகேதருக்குக் கோதானமஹிமையைப்பற்றிச் சிறப்பைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், ''குற்றமற்றவரே! மகாவீரரே! கோதானம் செய்வதனால் உண்டாகும பலப்பிராபதியைப்பற்றி எனக்கு விரிவாக உரைக்கக்கடவீர். எனக்கு அதில் திருப்தி உண்டாகவில்லை. சொல்லவேண்டும்'' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

''இந்த விஷயத்திலும் ஔதத்தாலகி என்னும் ரிஷி நாசிகேதரிஷி இவ்விருவருக்கும நடந்த ஸமபாஷணமாகிய ஒருபழைய இதிகாஸத்தைக் கூறுகின்றனர். ஔதத்தாலகி என்னும் ரிஷி விரததீக்ஷைசெய்துகொண்டு உடனே தமபுத்ரராகிய நாசிகேதரைப்பார்த்து, 'நீ எனக்குப் பணிவிடைசெய்' என்று சொன்னார். அந்தத்தீக்ஷைமுடிந்தபின் அம்மகரிஷியானவர் தம்புதல்வரைப்பார்த்து, 'நான் ஸ்நானத்திலும் வேதாத்தியயனத்திலும் கவனமுள்ளவனாயிருந்ததினால் ஸமித்துக்களாயும் தர்ப்பங்களாயும் புஷ்பங்களாயும் ஜலம்நிரம்பின பாத்திரத்தை

யும் மறந்தேன். நீ ஆற்றங்கரையிலிருந்து அவற்றையெடுத்துக்கொண்டு இங்கேவா' என்றுசொன்னர். அந்த நாசிகேதமுனிவரும் அவ்விடம் சென்று அவையெல்லாம் ஆற்றின்வேகத்தினால் அடித்துக்கொண்டு போகப்பட்டுக் காணமற்போனதினால் தம்தந்தையினிடம்வந்து, 'அவற்றைக் காணேன்' என்றுசொன்னர். அப்போது, பசியும் தாகமும் கோபமும் மேற்கொண்ட ஔதஸ்தாலகிமுனிவர் கோபமிகுந்து, 'யமனைப் பார்' என்று தம்புத்திரரைச் சபித்தார். தந்தையினால் சொல்லென்னும்இடியினால் அவ்வாறு அடிக்கப்பட்ட நாசிகேதர் கைகூப்பி, 'அருள் புரியவேண்டும்' என்று சொல்லும்போதே உயிரிழந்து தரையில் விழுந்தார். தந்தையானவர் நாசிகேதர் விழுந்ததைக்கண்டு துயரமே லிட்டு, 'நான் என்னசெய்துவிட்டேன்?' என்றுசொல்லித் தரையில் விழுந்தார். அவர் துக்கமதிகமாகித் தம்புத்திரரைப்பற்றி அழுது கொண்டேயிருக்க அப்பகலின் மிச்சமும் அக்கொடிய இரவும் கடந்து போயின. கௌரவசிரேஷ்டனே! தந்தையின் கண்ணீர்விழுந்ததினால் தர்ப்பப்படுக்கையில்படித்திருந்த நாசிகேதர் மழையினால்நனைந்த பயிர் போலச் செழித்தார். தேவலோகத்துச் சந்தனங்களையணிந்து தூக் கம்தெளிந்தெழுந்தவர்போல மறுபடியும் உயிர்வந்த தமதுசிறந்தபுதல் வரைக்கண்டு அம்முனிவர், 'மைந்தனே! உனது நற்கருமத்தினால் நல்ல லோகங்கள் ஜயிக்கப்பட்டனவா? நல்லகாலமாகத் திரும்பிவந்தாய். உன் தேகம் மானிடதேகமாயில்லை' என்று கேட்டார். எல்லாவற்றையும் கண்ணால்கண்ட நாசிகேதர் மகாத்மாவான பிதாவினால் கேட்கப்பட்ட போது எழுந்து அநேக மகரிஷிகளின் நடுவில் தந்தைக்குத் தெரிவிக் கத்தொடங்கினர். 'உமதுகட்டளையைச்செய்வதற்காக உடனே சென் றேன். விசாலமானதும் அழகான ஒளியுள்ளதும் ஒருயோசனை நீளமுள்ள பொன்மாடிகள் ஆயிரக்கணக்காக நிரம்பினதுமான யம ஸபையைக்கண்டேன். நான்வருவதைக்கண்டவுடன் யமன் என்னைஎதிர் கொண்டழைத்து வீட்டைஒப்பித்து ஆஸனம்தந்தான். உமக்காக அர்க் கியம்முதலிய பூஜைகளாலும் என்னை அவன் பூஜித்தான். யமஸபை யிலுள்ளவர்களால்சூழப்பட்டும் பூஜிக்கப்பட்டுமிருந்தான் அந்தயமனை நோக்கி, 'தர்மராஜனே! நான் உன்தேசத்திற்கு வந்திருக்கிறேன். நான் எந்தலோகங்களுக்குத் தகுந்தவனோ அவற்றை எனக்கு விதா யகஞ்செய்' என்று மெதுவாகக்கேட்டேன். யமன் எனக்கு 'ஓ! சாந்தனே! நீ இறந்துபோகவில்லை. சிறந்ததவமுள்ளவரும் விளங்கு கின்ற அக்கினிக்கொப்பான ஒளியுள்ளவருமான உன்தந்தை, 'யமனைப் பார்' என்று உனக்குச் சொன்னர். பிராம்மணனே! அதைப் பொய்

போக்குவது முடியாது. அன்பனே! நீ என்னைப் பார்க்காய். திரும்பிச்சென்று உனதுதேகத்தைஉண்டுபண்ணினதந்தையார் அழுகிறார். அன்புள்ள விருந்தினனுக்கியலுளக்கு மனத்திற்குவேண்டிய எதைக் கொடுப்பேன்? இஷ்டமானவற்றைக் கேள்' என்றுசொன்னான். அவனால் இவ்வாறுகேட்கப்பட்டதான், 'திரும்பிப்போகக்கூடாததாகிய உன்தேசத்திற்கு வந்திருக்கிறேன். நான் உன்னிடம் வரம்பெறத்தகுந்தவனாயிருந்தால் வேண்டினவையெல்லாம்பிரமனை புண்ணிய லோகங்களைக் காணவிரும்புகிறேன்' என்று அவனுக்கு மறுமொழி சொன்னேன். பிராம்மணோத்தமரே! அந்தயமன் கல்லதிறமுள்ளதும் சிறந்தஒளியுள்ளதும் குதிரைகள்பூட்டினதுமான ரதத்தில் என்னையேற்றித் தன்னுடையலோகங்களையும் எல்லாப்புண்ணியலோகங்களையும் காண்பித்தான். அவ்வுலகங்களில் பலவருஷங்களும் நிறங்களுமுள்ளவையும் எல்லாத்திக்குகளையும்பொருந்தினவையும் சந்திரபண்டலம்போலப் பிரகாசிப்பவையும் சலங்கைகளின் மாலைகள்கட்டப்பட்டவையும் அநேகநூற்றுக்கணக்கான மேல்கட்டிங்களுள்ளவையும் உள்ளே வாசிகளுமாகோட்டங்களும் அடங்கினவையும் வைடூரியக்தகளினால் சூரியன்போலவினது பவையும் வெள்ளிபொன்மயமானவையும் இளஞ்சூரியனிறமுள்ளவையும் திவ்யவையும் கடப்பவையுமாகத் தேஜோமயமான மற்றதாக்களின்னீதிதேவர்கள் கண்டேன். அக்கவிடுகளில் மலைகளாகக்குவிந்தது பக்ஷணங்களும் போஜனங்களும் வஸ்திரங்களும் பதிக்கைகளும் வேண்டினகனிகளெல்லாம் நிறைந்த மரங்களும் இருக்கக்கண்டேன். நதிகளும் வீதிகளும் வனங்களும் வாவிகளும் குளங்களும் குதிரைகள்பூட்டப்பட்டு ஒலித்துப ரதங்களும் ஆயிரக்கணக்காக எங்குப இருக்கக்கண்டேன். பலவிருகுமநதிகளையும் அவையுண்டாகும்பலிகளையும் நெய்யையும் தெளிந்தநதண்ணீரையும் யமனுக்குவிருப்பமான அநேகஇடங்களையும் முன்பாராத பற்றுமில வற்றையும் கண்டேன். எல்லாவற்றையுங்கண்டபிறகு, நான், எல்லாருக்குந்தேவதையும் ஸமர்த்தனுமான தர்மராஜனைப்பார்த்து, 'என்னும்வற்றுமல்லதிகின்ற இந்தபாலாறுகளும் நெய்யாறுகளும் யார் புகிப்பதற்காக இருக்கின்றன?' என்றுகேட்டேன்.

அதற்கு, யமன், 'எந்தஸாதுக்களு பகலின்பால்நெய்முதலிய ஸாரங்களைப் பிறருக்குத தானஞசெய்பவரோ அவர்கள்புகிப்பதற்குரியவை இவையென்று நீயறி. கோதானமேசெய்பவருக்குத் துயரமற்றவர்கள் நிரமபினவையும அழியாதவையுமான வேறு லோகங்களுள்ளன. பசுக்களைக்கொடுப்பதுமாத்திரமே சிலாக்கியமானது.

பெற்றுக்கொள்பவனும் காலமும் ஆவின்சிறப்பும் கொடுக்கும்முறை யும்வேண்டும். இவற்றைஅறிந்து தானம்செய்யவேண்டும். அக் கினியைப்போலும் ஆதித்தனைப்போலுமிருக்கின்ற பிராம்மணர்களி லும் பசுக்களிலுமுள்ளவேற்றுமை அறிதற்கரிது. வேதமோதினவ னும் மிகச்சிறந்ததவமுள்ளவனும் விடாமல்யாகஞ்செய்பவனுமான பிராம்மணன் கோதானத்திற்குப் பாத்திரனுவான். பசுக்களிடம் பொறுமையுள்ளவனும், பசுக்களைக்காப்பவனும் நன்றிமறவாதவனும் ஜீவனத்திற்குக் கஷ்டப்படுகிறவனுமாகஇருக்கும் அப்படிப்பட்டபிரா ம்மணனைப் பாத்ரனென்று கூறுகின்றனர். பஞ்சத்தில் விடப்பட்டுக் காப்பாற்றப்பெறுவதற்காக வந்துசேர்ந்தவையும் வீட்டில்பிறந்தவை யும் சரியானவிலைக்குவாங்கப்பட்டவையும் கல்வியினால்அடையப்பட் டவையும் [1]உயிரைக்கொடுத்துவாங்கப்பட்டவையுமாக இவ்வகைக ளால்கிடைத்த சிறந்தபசுக்களைத் தகுதியானகளுடன் தாரைவார்த்துக் கொடுப்பது சிறந்தது. மூன்றிரவுகள் தண்ணீரைமாத்திரம்உட் கொண்டு உபவாஸமாகத்தரையில்படுத்திருந்து கிரம்பத்தினிபோடப் பட்டபசுக்களை, திருப்தியாகப்புசிப்பிக்கப்பட்ட பிராம்மணர்களுக் குத் தானம்செய்யவேண்டும் கன்றுகள்மேல்அன்புள்ளவையும் ஸந் ததிவிருத்தியுள்ளவையுமானபசுக்களை உபசரித்துத் தானமசெய்த பிறகு மூன்றுதினங்கள் ஆவின்பால்முதலியவற்றையே ஆகாரமாகக் கொண்டிருக்கவேண்டும். நல்லஅடக்கமுள்ளதும் அதிகமாகக்கறப் பதும் புஷ்டியானகன்றுள்ளதும் ஒடாததுமானபசுவைத்தானம்செய் வதனால் அதன்ரோமங்கள் எவ்வளவிருக்கின்றனவோ அவ்வளவுபேரு ஷங்கள் சுவர்க்கலோகத்தை அனுபவிப்பான். அப்படியே பழகின தும் நுகத்தடியைத்தாங்கும்வலிமையுள்ளதும் இளமையானதும் வீட் டிற்குஆதாரவாயிருப்பதும் மனவுறுதியுள்ளதுமான பெரியஎருதைப் பிராம்மணர்களுக்குக் கொடுப்பவன் ஆவைக்கொடுப்பவனுக்குஉரிய உலகங்களை அனுபவிப்பான். (வண்டியிழுப்பதற்குக்) கிழவனுக்காக வும் நோயாளிக்காகவும் பஞ்சத்திற்காகவும் பெரியகாரியத்திற்காக வும் உழுவதற்காகவும் ஹோமத்திற்குரியபசுவின்ஸந்ததியைவிருத்தி செய்வதற்காகவும் குருவுக்காகவும் யாகம்நிறைவேறுவதற்காகவும் ரிஷபதானம்செய்தால், அது சிறந்தஇடத்திலும் காலத்திலும் செய்த தாகும்' என்றுசொன்னான்.

யமனுடைய அந்தச்சொல்லைக்கேட்டு, நான் திரும்பவும் அவ னைப்பார்த்து, 'கோவில்லாதவன் கோதானம்செய்பவருடையலோகங்

[1] போரில்வென்றுகொண்டுவரப்பட்டவையும்.

களை அடைவது எப்படி?' என்றுகேட்டேன். அதன்பிறகு, சிறந்த அறிவுள்ளயமன் கோதானத்தையும் அதனாலுண்டாகும் நற்கதியையும் அதைப்போன்றவேறுதானத்தையும் சொன்னான். 'கோவில்லாவிடின் கோதானத்திற்குப் பிரதிநிதியான வேறுதானத்தினால் கோதானம்செய்தவர்போலாகலாம். கோக்கள்கிடைக்காதபோது உறுதியான நியமத்தோடு கோவுக்குப்பிரதியாக நெய்யைத்தானம்செய்பவனுக்குத்தான் இந்தநெய்யாறுகள் அன்புள்ளதாய்கள்போலப் பெருகுகின்றன. நெய்யுங்கிடையாதபோது விரதம்வழுவாது பசுவுக்குப்பிரதியாக எள்ளைத்தானம்செய்பவன் பசுவினுலேயேரகத்திலிருந்து கரையேற்றப்பட்டுப் பாலாற்றில் மகிழ்வான். எள்ளுங்கிடையாதபோது விரதத்திலுறுதியோடு பசுவுக்குப்பிரதியாக ஜலத்தைத்தானம்செய்பவன் விரும்பினவற்றையெல்லாம் பெருக்கும் இந்தக்குளிர்ந்தநதியை அனுபவிப்பான்' என்றுசொல்லி, தர்மராஜன் இவற்றையெல்லாம் எனக்கு அங்கே காண்பித்தான். நியமந்தவறுதவரே! நான் அவற்றைக்கண்டு மிகமகிழ்வுற்றேன். உமக்கு மற்றொரு சந்தோஷமாசாரத்தையும் நான் தெரிவிக்கிறேன். பொருள்செலவுதுறவாயுள்ள இந்தப்பெரியயாகம் எனக்குக் கிடைத்தது. பிதாவே! அந்தயாகம் என்னுலுண்டாக்கப்பட்டு வேதவிதிகளோடு நடந்தேறப்போகிறது. உம்முடைய இந்தச்சாபமும் எனக்கு நன்மைக்கேகிடைத்தது. அதினுலன்றே நான் யமனைக் கண்டேன்? மகாத்மாவே! தானத்தின்பலனை அங்கேகண்டபிறகு ஐயமில்லாமல் தானதர்மத்தையேசெய்வேன். எப்போதும் தர்மத்தையே நியமமாகக்கொண்ட தர்மராஜன் என்னிடம் அனுக்கிரகம்வைத்து நான்மேல் சொல்லப்போவதையும் பலமுறை எனக்குச் சொன்னான். அதாவது, நான் கோதானத்தையே விசேஷமாகச்செய்வது. அது பரிசுத்தமான பொருள். ஆனதால், தர்மங்களை அவமதியாதே. ஸரியான இடத்திலும் காலத்திலும் வந்தயோக்கியனுக்குக் கொடுக்கவேண்டும். நித்தியமாகவே கோதானம்செய்யவேண்டும். இதுவிஷயத்தில் உனக்குச் சந்தேகம் ஒன்றும்வேண்டாம். முற்காலத்திலும் மனத்தில் ஒழிவுள்ளவர்கள் தானமார்க்கத்திலிருந்துகொண்டு எப்போதும் கோதானமேசெய்தனர். அவர்கள் உக்கிரமானதவங்களை நம்பியிருந்தும் இயன்ற அளவு தானத்தைச்செய்துகொண்டேயிருந்தனர். புண்ணியத்தையே இயற்கையாகவுடையவர்கள் மனத்தூய்மையோடும் சிரத்தையோடும் கோபத்தைவிட்டு இயன்றவரையில் காலத்தில் கோதானம் செய்து வேறுலோகஞ்சென்று சுவர்க்கத்தில் தங்கள் புண்ணியங்களி

னால் பிரகாசிக்கின்றனர். நியாயமாகக்கிடைத்ததைப் பிராம்மணர் களுக்குக்கொடுப்பதுதான் தானம். ஸாயங்காலத்தில் யோக்கியனிடத் தில் தானத்தைச்சேர்ப்பிக்கவேண்டும். ஓர் அவஸ்டமியைக் குறித்து அதிமுதல் பத்துநாள் பசுவின் நெய்தயிர்களாவது கோமயத்தை யாவது பாலாவது உண்ணவேண்டும். நிஷ்டதானம்செய்வதனால் தேவபக்தியுள்ளவனுவான் இரண்டு ஷபங்களைக்கொடுத்தால் வேதங்க ளெல்லாம்ஓதியபயம். நிஷபங்கள் கட்டின வண்டியைக்கொடுத்தால் புண் ணிய நீர்த்தலன் உண்டாகும். கபிலாபசுவைத் தானம்செய்தால் பாவம் நீங்கிப்போம். நியாயமாகக்கிடைத்த கபிலாபசுவொன்றைக் கொடுத்தாலும் பாவத்திலிருந்துவிடுவான். பசுக்களின்பால்முத லிய ஸாரங்களைத்தவிரபட்டது ஒன்றுமில்லை. கோதானம் மிகச்சிறந்த தென்றுசொல்லுகின்றனர். பாலிலிருந்தும் பசுக்கள் ஜனங்களைக் கரையேற்றுகின்றன. உலகத்தில் அன்னத்தையும்பெண்ணுகின்ற வையும் பசுக்களே. இதையறிந்தும் பசுக்களின்மேல் அன்புவைக்காத பாவஎண்ணமுள்ளவன் நரகம்போகிறவனே. ஆயிரம், நூறு, பத்து, ஐந்துபசுக்களாவது ஒருபசுவைபாவது கல்ல குணமுடன் யோக்கிய னான பிராம்மணனுக்குத் தானம்செய்தவர்களுக்கு அந்தப்பசுவே பர லோகத்தில் புண்ணிய நிர்த்தமுள்ள நதியாகிறது. பூமியில் பசுக்கள் தேடிவந்து உலகங்களை வளர்ப்பதனாலும் காப்பாற்றுவதனாலும் சூரிய கிரணங்களுக்கொப்பானவை. இவ்விதம்பற்றிப்பூமிக்கோவென்னும்பெயர் ஒன்று. அது கூவையாயிருப்பதும் சுகந்தத்தைத்தருவதும் ஒன்று. ஆத லால், பசுவைக்கொடுப்பவன் நரியன்போல் விளங்குவான். எந்தச் சிஷ்யனை குருவைக்கொண்டுவந்து ப்ரயத்தனம்செய்தும்படி பிரார்த்திக் கிறானோ அவனும சுவர்க்கமேபோவது திண்ணம். சாஸ்திரமறிந்தவர் களுக்கு இதுதான் மிகப்பெரிய தர்மம். இந்தத்தலைமையான சாஸ்திரத தில் மற்றசாஸ்திரங்கள் அடங்கியிருக்கின்றன. நியாயமாகக்கிடைத் ததைப் பிராம்மணர்களுக்குக்கொடுப்பதுதான் இதுதானதானம். பரிசோ தித்து யோக்கியனுக்குதானம்செய்து அதை அவனிடத்தில் சேர்ப் பிக்கக்கடவாய். தேவர்களும அசுரர்களும் நாமும் புண்ணியத்தை செய்து நிர்த்திபெறும் உன்னையே எதிர்பார்க்கிறோம்' என்பது. ப்ரம்ம ரிஷியே! இவ்வாறு சொல்லக்கேட்டதான் தர்மாத்மாவான தர்மராஜனைத் தலைவணங்கி வந்தனஞ்செய்து அவனால் விடைகொடுக்கப்பெற்றுத் திரும்பவும் உமது பாதங்களினிடம் வந்துசேர்ந்தேன்' என்முன்'' என்றுகூறினன்.

நூற்றேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(இந்திரன் கோதானத்தைப்பற்றிப் பிரம்மதேவனுக்குச்சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிரபுவே! கோதானத்தைப்பற்றியும் கோக்களின் மஹிமையைப்பற்றியும் காசிகேதரிஷிக்கு யமன்சொன்னதை எடுத்துரைத்தீர். சிறந்தபுத்தியுள்ள பிதாமஹரே! மஹாத்மாவானகருகன் அறியாமற்செய்த ஒருபிழைக்காகப் பெருந்துயரத்தை அனுபவித்ததையும் துவாரகைநகரியை ரிஷிகள்சபிக்கும்போது அவன் எடுக்கப்பட்டதையும் அவன்ராமனோடானத்திற்குக் கிருஷ்ணன் காரணமாயிருந்ததையும்பற்றி நீர்சொன்னதைத் தெரிந்துகொண்டேன். பிரபுவே! ஆனால், கோதானம்செய்கிறவர்கள் வசிக்கின்ற கோலோகத்தைப்பற்றி எனக்குச் சந்தேகமிருக்கிறது. அதைச் சரியாகக் கேட்கவிரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்திரன் ப்ரஹஸ்பதியினிடம் இதேவிஷயத்தைப்பற்றிக் கேட்டதாகிய ஒருபழைய இதிஹாசத்தைக் கூறுகின்றனர். இந்திரன், 'குற்றமற்றவரே! பகவானே! பிரபுவே! குருவரே! கோலோகத்திலிருப்பவர்கள் தங்கள் ஒளியினால் மற்றலோகத்திலிருப்பவர்களின் ஒளியையும் மறைத்திருப்பதாகக் காண்கிறேன். இதில் எனக்குச் சந்தேகமிருக்கிறது. இதைப சொல்லுங்கள். கோதானம்செய்பவர்கள் வஸிக்குமகாலோகங்கள் எப்படிப்பட்டவை? என்னபலனுள்ளவை? அங்குள்ள உயர்ந்தகுணங்யாது? மனிதர்கள்தூயரம்விட்டு அங்கேசெல்லும்வகை யாது? கொடுப்பவன் கொடையின்பலனை எவ்வளவுகாலம் அனுபவிப்பான்? தானம் பெறுதல் சிறிதும் ஆவதெப்படி? பலலோகக்களைக் கொடுப்பதும் சிலலோகக்களைக்கொடுப்பதும் எப்படியாம்? கோதானம் செய்யாமலும் கோதானம் செய்தலாலாவது எதனால்? மிகுதியாகக்கொடுப்பவன் கொஞ்சம் கொடுப்பவனுக்கு ஸமமாகவும் கொஞ்சங்கொடுப்பவன் மிகுதியாகக் கொடுப்பவனுக்குச் ஸமமாகவும் ஆவதெப்படி? கோதானத்திற்கு எப்படிப்பட்டதக்ஷிணை சிறந்ததாகும்? பகவானே! இவற்றையெலலாம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனக்கு இதன் உண்மையைச் சொல்லக்கடவீர்' என்று கேட்டனன்.

நூற்றெட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி)

(பிரம்மதேவர் கோதானத்தின் சிறப்பை இந்திரனுக்குச் சொல்லியது.)

பிரம்மதேவர் சொல்லலானார். 'இந்திரனே! கோதானமுதலிய வற்றைச்செய்பவரைப்பற்றி நீகேட்டகேள்வியைக்கேட்பவன் உன் னைத்தவிர வேறுயாருமே இவ்வுலகத்திலில்லை. இந்திரனே! நீபாராத உலகங்கள் பலஉள்ளன. அவற்றை நான் பார்க்கிறேன். கற்புள்ள பெண்களும் சிறந்த அனுஷ்டானங்களோடு கல்லதவமுள்ளரிஷிகளும் சிறந்தஞானமுள்ள பிராமணர்களும் தேகத்தோடு அவ்வுலகங்களுக் குப் போகின்றனர். நல்லதவமுள்ளவர்கள் இவ்வுலகத்திலும் சரீரப் பற்றைவிட்ட பரிசுத்தமானமனத்தினால் அவ்வுலகங்களைக் கனவு போலக் காணுகின்றனர். ஆயிரங்கண்ணனே! அவ்வுலகங்கள் எப் படிப்பட்ட குணமுள்ளவையென்பதைக் கேள். அங்கே காலமும் மூப்பும் உஷ்ணமும் விபாபிப்பதில்லை. எந்தக்கெடுதலும் அங்கில்லை; பிணியும் களைப்பும் இல்லை. வாஸவனே! அங்குள்ளவர்கள் மனத்தில் என்ன என்ன விருப்பினாலும் அவற்றையெல்லாம் அவர்களுக்குக் கோக்கள் அளிக்கின்றனவென்பதை நான் கண்ணால் காண்கிறேன். அங்குள்ளவர் நினைத்தவற்றைப்பெற்றும் நினைத்தபடி ரஞ்சரித்தும் நினைத்தவற்றையெல்லாம நினைத்தபடி அனுபவித்துக்கொண்டிருக் கின்றனர். அவ்வுலகங்களில் வாவிகளும் நடாகங்களும் நதிகளும் பற்பலதோட்டங்களும் வீடுகளும் மலைகளும் எல்லாப்பிராணிகளுக் கும் இனியபொருள்களைநினைத்தமுள்ளாதாகளைக் காணப்படுகின்றன. அந்த உலகங்கள் இவ்வகையானவையென்றறி. அவற்றைப்போன்ற உலகமில்லை. சக்கரனே! எல்லாவற்றையும்பொறுத்தற்குக் கோபத்தை யும் அகங்காரத்தையும்விட்டு அன்புள்ளவர்களாகிக் குருகுலவாஸம் செய்யும் புருஷசிரேஷ்டர்கள் அவ்வுலகமபோகின்றனர். ஒன்றையும் பகூயாதவனும் மனத்தூய்மையோடும தர்மத்தில் எப்போதும ஊக் கத்தோடுமிருப்பவனும் தாய்தந்தையருக்கும் பிராம்மணர்களுக்கும் ஆசாரியர்களுக்கும் பணிவிடைசெய்பவனும் சத்தியந்தவறுதவனும் குற்றங்களில்லாதவனும் பசுக்களிடத்தும் பிராம்மணர்களிடத்தும் கோபமில்லாதவனும் தன்கடமையைவிடாமலிருப்பவனும் வாழ்நா ளுள்ளவரையில் நல்லொழுக்கத்தையும் தானத்தையும் விடாமலிருப்ப வனும் பிழைபொறுப்பவனும் சொல்லடக்கமும் ஐம்புலன்களினடக்

கமுமுள்ளவனும் தேவதாபக்தியுள்ளவனும் அதிதிகளெல்லாரையும் ஆதரிப்பவனும் தயையுள்ளவனுமாகிய குணமுள்ளமனிதன் ஆதியும் அந்தமுமில்லாத அத்தக் கோலோகத்திற்குச் செல்வான். பிறர்மனை வியைவிரும்புகிறவனும் குருஹத்திசெய்பவனும் பொய்பேசுகிறவனும் எப்போதும் பிறரைத்தூஷிப்பவனும் பிராம்மணரைப்பகைப்பவனும் மற்றுமிவ்வகைக்குற்றங்களுள்ள துராத்மாவும் அந்தக்கோலகத்தைக் காண்பதேயில்லை. பிறர்தனத்துக்குத்துரோகமசெய்பவன், வஞ்சகன், நன்றிகெட்டவன், [1] கள்வன், பொய்யன், தர்மத்தைப் பகைப்பவன், பிரம்மஹத்திசெய்பவன் இவர்கள் புண்ணியம்செய்தவர் களிருக்குமிடமாகிய கோலகத்தை மனத்தினுல் சிந்திக்கவுமுடியாது. தேவேந்திரனே! இவற்றையெல்லாம் உனக்குத் தெளிவாகச் சொன்னேன். இந்திரனே! கோதானம்செய்துகொண்டிருப்பவர்கள் அடைபும்பலனைக் கேள். தாயபாகமுதலியவழிகளாற்கிடைத்த தனங்களைக் நியமாகக்கொடுத்துப் பசுக்களைவாங்கித் தானம்செய்பவன் தன்புண்ணியத்தினுல் சம்பாதிக்கப்பட்ட அழியாத உலகங்களைப் பொருள்கொடுத்து விலைக்குவாங்கினவற்றைப்போல அனுபவிப்பான். இந்திரனே! சூதாட்டத்தில்வென்று அடைந்தபொருளை விலையாகக் கொடுத்துப் பசுக்களைவாங்கித் தானம்செய்பவன் பதினையிரம்தேவ வருஷங்கள் அந்தத்தானத்தின்பலனை அனுபவிப்பான். பங்குபிரித்துக்கொள்வதுமுதலிய நியாயவழிகளால் கிடைத்தபசுக்களைத் தானம் செய்தால் அவை தானம்செய்தவருக்கு என்றும் அழியாமல் விருத்தியாகும். சசியின்கணவனே! நியமனத்துடன் கோக்களைத்தானம் வாங்கி அவன் அவற்றைத் தானம்செய்வானுயின், அவனுக்கும் அழிவில்லாத உலகங்கள் நிச்சயமென்றறி. பிறந்ததுமுதல் சத்தியமே பேசியும் இம்புலன்களையும் அடக்கியும் பெரியோர்களையும்பிராம்மணர்களையும் ஆதரித்தும் பொறுத்திருப்பவனுக்கும் கோக்களுக்கும் கதியொன்றே. சசியின்கணவனே! பிராம்மணனைப்பார்த்துச் சொல்லத்தகாதசொல்லை ஒருகாலும சொல்லலாகாது. மனத்தினுலும் கோக்களுக்குத் தீங்குநினைக்கலாகாது. இந்திரனே! இப்படிச் சத்தியத்தையும் தர்மத்தையும்விடாமல் [2] கோக்களுக்கு உபசாரம்செய்துகொண்டு அவற்றின்மேல்தயையோடிருப்பவனுக்கு உள்ளபலனைக்

[1] 'சக்தியுள்ளவனுயிருந்தும் வறுமையைச்சொல்லுகிறவன்' என்பது பழையவுரை.

[2] 'பசுக்கள்போலச் சேர்ந்துவைத்துக் கொள்ளாமலிருந்துகொண்டு' என்பது பழையவுரை.

கேள். அவனுக்கு ஒருபசுவானது ஆயிரம்பசுக்களுக்குச்சமமாகிறது. இந்தக்குணங்களோடுகூடின க்ஷத்திரியனுக்குரிய பலனைக்கேள். அவனுக்கு ஒருபசு எழுநூற்றைம்பது பசுக்களுக்கு ஒப்பாகுமென்பது நிச்சயம். இந்தக்குணங்கள் வைசியனுக்கிருக்குமாயின், அவனுக்கு ஒருபசு ஐந்நூறுபசுக்களுக்கு ஒப்பாகும். இக்குணங்கள் பொருந்தின சூத்திரனுக்கு ஒருபசு ஆயிரத்தில் நாலில் ஒருபங்காகிய இருநூற்றைம்பது பசுக்களுக்குச்சமமாகச் சொல்லப்படுகிறது. சத்தியத்தைவிடாமலும், குருபணிவிடைசெய்துகொண்டும், மனஊக்கமும் பொறுமையும் தெய்வபக்தியும் அடக்கமும் தூய்மையும் அறிவும் தர்மமுள்ளவனுகி, நானென்றுபேராமல் மேற்சொன்னதை ஊக்கத்துடன் அனுஷ்டிப்பவன் மேற்சொன்னமுறைப்படி நல்லபிராம்மணனுக்குக் கறக்கிறபசுவைத்தானம்செய்வதனால் பெரும்பயனைப் பெறுவான். நித்தியம் ஒருகாலம்போஜனம்செய்துகொண்டும் சத்தியத்தைவிடாமலும் குருசுசுரூஷைசெய்துகொண்டும் தானம்செய்பவேண்டும். இந்திரனே! வேதாத்தியயனம்செய்துகொண்டும் கோக்களிடம் பக்தியோடும் நித்தியம் கோதானம் செய்பவனும் தானம் செய்தபின் சந்தோஷமாயிருப்பவனும் பிறந்ததுமுதல் கோக்களுக்கு நமஸ்காரம்செய்பவனும் அடையும்பலனைச் சொல்லுகிறேன்; கேள். இதன்பலன் ராஜஸூயயாகம்செய்வதினால் உண்டாகும்பலனுக்கும் பொன்னைமிகுதியாகக்கொடுப்பதினால் உண்டாகும்பலனுக்கும் நிகரென்றும் மேற்பட்டதென்றும் ஸாதுக்கள் ஸித்தர்கள் ரிஷிகளானவரும் சொல்லுகின்றனர். ஒன்றும்சாப்பிடாமல் தன் ஆகாரத்தில் முதல்பாகத்தை எடுத்துத் தினந்தோறும் பசுக்களுக்குக்கொடுப்பதாகிய கோவிரதம் ஒருவருஷம் எடுத்துக்கொண்டு ரத்தியம்தவறாமல் கோபத்தையும் ஆசையையும்விட்டு நல்லொழுக்கத்தோடிருப்பவன் ஆயிரம் கோதானங்களின்புண்ணியத்தை அடைவான். பசுக்களின்மேலன்புவைத்துக் கோவிரதம் எடுத்திருப்பவன் ஒருவேளைபாகாரம் சாப்பிட்டுக்கொண்டு அதன்முதல்பாகத்தைக் கோக்களுக்குப் பத்துவருஷம்கொடுத்தால் அது அளவற்றபுண்ணியமாகும். இந்திரனே! விலைக்குவாங்கினபசுவை ஏகபோஜனத்தோடிருந்து தானம்செய்பவன் அதின்ரோமங்களெவ்வளவிருக்கின்றனவோ அவ்வளவு நூறு பசுக்களின்தானபலனை நீண்டகாலம் அனுபவிப்பான். இது பிராம்மணனுக்குரியபலன். க்ஷத்திரியனுக்குரியபலனைக் கேள். க்ஷத்திரியனுக்கு ஐந்துவருஷகாலமும் வைசியனுக்கு அதிற்பாதிவருஷகாலமும் சூத்திரனுக்கு வைசியனிலும்பாதிக்காலமும் ஒருவேளை

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHAN LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

போஜனத்தோடு மேற்சொன்ன சோவ்ரதம்செய்வதனால் அச்வமேதபலன் உண்டாவதாகச் சொல்லப்படுகிறது. கன்னிவிற்றுப் பசுக்களிலாவது தானம்செய்பவன் உலகத்தில் பசுக்கள் காணப்படுமிடமெல்லாம் தான பலனை அனுபவிப்பான். சிறந்தபாக்கியமுள்ளவனே! பசுவினுடைய ஒவ்வொருரோமத்திலும் அழிவில்லாத உலகங்களிருப்பதாகச் சொல்லப்படுகின்றன. கௌரவனே! யுத்தங்களில்வென்றுசரம்பாதித்தபசுக்களைத் தானம்செய்தால் அவை தன்னிடம்புகுவதற்கு ஏற்பானவை; அழியாதவையென்றறி. பசுக்களில்லாதபோது விரதம்தவறாமல் எள்ளையே பசுவுக்குப் பிரதியாகத் தானம்செய்பவன் பசுவினுலேயே நரகத்திலிருந்து கரையேற்றப்படுவனென்பர் பாலாற்றில் மகிழ்ந்திருப்பான். இந்தத்தோக்களைத் தானம்செய்வதுமாத்திரமே சிலாக்கியமன்று. வாங்கிக்கொள்பவனும் காலமும் பசுவின் சிறப்பும் நியமமும் வேண்டுமே காலத்தையறிவதும் அதனிக்கும் ஆதித்தனுக்கும் உள்ளவித்தியாஸமபோன்ற பிராமணர்பசுக்களுக்குள்ள வித்யாஸத்தையறிவதும் கடினம். வேதாத்தியயனம் சாஸ்திரஞானமும் சுத்தமானபிறப்பும் மனஒழிவுமுள்ளவனும் யாகஞ்செய்பவனும் பாவத்திற்கு அஞ்சுகிறவனும் விவான அறிவுள்ளவனும் பசுக்களிடம் பொறுமையுள்ளவனும் அதிகக்கோபமில்லாதவனும் அதிக்ஷவரைக்காப்பவனும் பொருளில்லாதவனுமாயிருப்பவன் தானத்திற்கு நல்லபாத்திரனென்று கூறுகின்றனர். அகாரதிலலாமல்லிகவருக்ஷத்திலுள்ள தேரும்தியடைவதற்காகவும் ஹோமத்திற்காகவும் பிரஜாதனஸ்திரீகாரத்திற்குருக்ஷணைக்காகவும் குழந்தைவளர்ப்புதலுக்காகவும் சிராத்த இடத்திலும் காலத்திலும் கோதானஞ்செய்யவேண்டும். வீட்டில்ல ஸ்ரீடானவையும் சரியான ஸ்ரோத்திரற்குவாங்கப்பட்டவையும் கல்வியினுல்கிடைத்தவையும் பராக்ரமத்தினுல் உபிரைக்கொடுத்து (சிரமப்பட்டு) வாங்கப்பட்டவையும் ஸ்திரீதனமாகக்கிடைத்தவையும் காபாபற்றுமுடியாமல் பிறரால்விடப்பட்டுக் காப்பாற்றப்படுவதற்கு வருதலையுடைய இந்நல்வழியில்வந்த சிறந்தபசுக்கள் தானத்திற்குச் சிறந்தவைகள். பலமும் நல்லொழுக்கமும் இளம்பிராயமும் நல்லவாலினையுமுள்ளபசுக்களெல்லாம் சிறந்தவை. கங்கை எப்படி நதிகளிற்சிறந்ததோ அப்படி பசுக்களில் கபிலை சிறந்தது. மூன்றிராத்திரிகள் ஜலபானம்செய்து உபவாஸமாகத்தரையில் படுத்திருந்து நியமத்தினிபோடப்பட்ட பசுக்களை, திருப்தியாகப் போஜனம்செய்விக்கப்பட்ட பிராமணர்களுக்குத் தானம்செய்யவேண்டும். பால்குடித்துப்பருத்தகன்றுகளுடனே கன்றுகளும்பசுக்களைத் தானம்செய்த பிறகு மூன்றுதினங்கள் பால்தயிர்முதலிய கோவின்சாரங்

களையே ஆகாரமாகக் கொள்ளவேண்டும். நல்லொழுக்கமுள்ளதும் நன்றாகக்கறப்படுவதும் நல்லகன்றுள்ளதும் ஒடாததுமான பசுவைத் தானம்செய்வதினால் அந்தப்பசுவின்ரோமங்களெவ்வளவோ அவ்வளவு வருஷங்கள் மேலுலகத்தில் வஸிக்கலாம். அப்படியே நுகத்தடியை வஹிப்பதும் கலப்பையையிழுப்பதும் இளம்பிராயமும் தேகவன்மையு முள்ளதும் பழகினதும் பெரியஉற்சாகமுள்ளதுமாகிய எருதைப் பிராம்மணனுக்குத் தானமசெய்பவன் பத்துக்கோதானம்செய்வதினால் அடையும் உலகங்களை அடைகிறன். கௌரிகனே! பிராம்மணர்களையும் பசுக்களையும் கஷ்டத்தில்காப்பாற்றுகிறவன் க்ஷேமமாக எல்லாக் கஷ்டங்களிலிருந்தும் விடுபடுவான். அவன்புண்ணியபலனைக் கேள். அசுவமேதயாகத்திற்குச்சமமாக அழியாதபலன் உண்டாகும். இந்திரனே! அவன் இறக்குங்காலத்தில் எந்தநிலைமையை விரும்புவனை அந்தநிலைமையையும் அனேகவிதமான சிறந்த உலகங்களையும் மற்றும் அவன் கருதினவையனைத்தையும் இந்த ஒருபுண்ணியகருமத்தினாலே அடைவான்; கோக்களினால்விடைகொடுக்கப்பெற்று எல்லா உலகங்களிலும் பூஜிக்கப்பெறுவான். இந்திரனே! முன்சொன்ன முறைப்படி புல்லையும் கோமயத்தையும் இலையையும் புசித்துக்கொண்டு ஆசையைவிட்டு நியமத்துடன் பரிசுத்தனாகிக் காடுகளில்பசுவைப்பின் தொடர்கிறவன் ஒன்றையும்விரும்பாமல் சந்தோஷமாக என்னுலகத்திலும் தனக்கிஷ்டமான எவ்வுலகங்களிலும் வஸிக்கலாம்' என்றார்.

நூற்றுஎன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(பிரம்மதேவர் சொல்லத் தொடர்ச்சி.)

இந்திரன், 'புத்திபூர்வகமாகக் கோவைத்திருடிப் பொருளைக் காகவிற்பவனுக்கு என்னகதிஎன்பதை அறியவிரும்புகிறேன்' என்று கேட்க, பிரம்மா சொல்லலானார். 'தாம்சாப்பிடுதற்காகவும் விற்பதற்காகவும் பிராம்மணனுக்குத்தானம்செய்வதற்காகவும் கோவைத்திருடுகிறவர்கள் அடையும்பலனைக் கேள். மாமிசத்தைவிற்பதற்காகக் கோவைக்கொன்றாலும் அஞ்சாமல் அதைத்தின்றாலும் தின்னக்கருதிக்கொல்லுகிறவனை அநுசரித்திருந்தாலும் கொல்லுகிறவன் சாப்பிடுகிறவன் அதைஒப்புக்கொண்டிருப்பவன் இம்மூவரும் அந்தப் பசுவி

னுடம்பில் எத்தனைரோமங்களிருக்கின்றனவோ அத்தனைவருஷங்கள் நரகத்தில் மூழ்குவார்கள். பிராம்மணர்களின் யாகத்தைக்கெடுப்பதில் எப்படிப்பட்டபாவங்கள் உளளனவோ அப்படிப்பட்டபாவங்கள் கோனவிற்பதிலும் திருடுவதிலும் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. பசுவைத்திருடிப் பிராம்மணனுக்குத் தானம்செய்தால் தானத்தின்பலன் எவ்வளவோ அவ்வளவுநரகமும்உண்டாகும். சிறந்த சக்தியுள்ளவனே! கோதானத்திற்குப் பொன்னைத் தக்ஷிணையாகச் சொல்லுகின்றனர். தக்ஷிணைக்குப பொன்னேசிறந்ததெனறு நிச்சயமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. கோதானம்செய்பவன் முன்னேழு பின்னேழுதலைமுறைகளைக் கரையேற்றுகிறான். ஸுவர்ணம் தக்ஷிணைகொடுத்தால் அதற்கிரண்டுமடங்குபலன் கூறப்படுகிறது. இந்திரனே! பொன்னே சிறந்ததானம். பொன்னே சிறந்ததக்ஷிணை. பொன்னே பரிசுத்தஜலிலும் சிறந்தபரிசுத்தமென்று சொல்லப்படுகிறது. இந்திரனே! உயர்ந்ததங்கமானது குலத்தையேபரிசுத்தமாக்குகிறதென்று சொலலுகின்றனர். சிறந்த மகிமையுள்ளவனே! தக்ஷிணையைப்பற்றித் தொகுத்துக்கூறினேன்' என்றுசொன்னார். பரதசிரேஷ்டனே! இது பிரம்மாவினால் இந்திரனுக்குக் கூறப்பட்டது; இந்திரன் தசரதருக்குச் சொன்னான்; தசரதர் தமது புத்திரரான ராமபிரானுக்குச் சொன்னார்; இராமபிரானும், சிறந்தபுகழ்பெற்றவரும் தம் அன்புள்ளசகோதரருமான லக்ஷ்மணருக்குச் சொன்னார்; ராஜனே! இவ்வுபரிமாள் காட்டில்வஸிக்குமபோது ரிஷிகளுக்குச் சொன்னார். இப்படித் தொன்றுதொட்டுவந்த இந்தஅருமையான விஷயத்தை உறுதியானதவமுள்ளரிஷிகளும் தர்மிஷ்டரான அரசர்களும் உள்ளத்தில் வைத்தனர். யுதிஷ்டிர! இது என் உபாத்தியாயரால் எனக்கு உரைக்கப்பட்டது. இந்தப் பிராம்மணர்களுடையகூட்டத்திலும் யாககாலத்திலும கோதானம்செய்யுமபோதும் இரண்டுபேர் சேரும்போதும் சொல்லுகிறபிராம்மணருக்கு எப்போதும் தேவர்களோடுகூட இருபத்தற்குரிய அழிவில்லாத உலகங்கள் உண்டாகும். தேவர்க்குந்தேவரும் மகிமைபொருந்தியவருமான பிரம்மதேவர் இதைச்சொன்னார்" என்றார்.

நூற்றைப்பத்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(தவம், நியமம், ஓதல், அடக்கம், வேதத்தைமறவாமை, ஒதுவித்தல், வைதிகமாயிருப்பது, கர்மங்களுமங்களில் சுறாமையிருப்பது முதலியவற்றின் பயன்.)

யுதிஷ்டிரர், "பிரபுவே! பிதாமஹரே! நீர் தர்மங்களைப்பற்றிச் சொன்னதினால் எனக்கு நம்பிக்கையுண்டாயிற்று. ஆனால், ஒரு சந்தேகம் கேட்கிறேன். அதை எனக்குச்சொல்லக்கடவீர். சிறந்தமகிமையுள்ளவரே! விரதங்களுக்கு என்னபலன் சொல்லப்பட்டிருக்கிறது? அது எப்படிப்பட்டது? தவங்களின்பலன் யாது? கல்லுதலின் பயன் யாது? அடக்கத்தின்பலன் யாது? வேதங்களைமறவாமலிருப்பதின் பயன் என்ன? ஓதுவித்தலின்பயன் யாது? பிதாமஹரே! இவ்வுலகத்தில் தானமவாங்குவதினால் என்னபலன்? தானம்கொடுப்பவனுக்குக் காணக்கூடியதும் சாஸ்திரத்தினால் தெரிந்துகொள்ளக்கூடியதுமான பயன் என்ன? தம் கர்மங்களைவிடாமலிருக்கும் சூத்திரர்களுக்கு என்னபலன்? சத்தியம்சொல்வதில்பலன் யாது? பிரமசாரிவிரதத்திற்குச்சொல்லப்பட்டபலன் என்ன? தந்தைக்கும் தாய்க்கும் ஆசாரியனுக்கும் பெரியோர்க்கும் பணிவிடைசெய்வதில் என்னபலன்? ஏழைகளிஷயத்தில் தயைசெய்வதினால் என்னபயன்? தர்மந்தெரிந்த பிதாமஹரே! இவற்றையெல்லாம் முழுதும் உள்ளபடி அறியவிருபபுகிறேன். எனக்கு விளக்க ஆவலிருக்கிறது" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"ஒரு விரதத்தைச சாஸ்திரத்திற்சொன்னபடி செவ்வையாக ஆரம்பித்து அதைவிட்டுவிடாமல் குறித்தபடிமுடிப்பவனுக்கு அழியாத லோகங்களுள்ளன. ராஜனே! தவங்களின்பயன் இங்கே பிரத்தியக்ஷமாகக்காணப்படுகிறது. தவங்களுக்கும் யாகங்களுக்கும்பலன்தான் இப்போது உனக்குக்கிடைத்திருப்பது. நல்ல ஓதலின் பயனும் இம்மையிலும் மறுமையிலும் காணப்படுகிறது. அவன் இவ்வுலகத்தில் எப்போதும் பொருளுள்ளவனாகிறான்; பிரம்மலோகத்திலும் மகிழ்ந்திருக்கிறான். ராஜனே! அடக்கத்தின்பலனையும் என்னிடம்விரிவாகக்கேள். அடங்கினவர் எங்கும் இன்பமடைவர். புலன்களையடக்கினவர் எப்போதும் சுவர்க்கத்திலிருப்பர். புலன்களையடக்கினவர் விரும்பிய இடஞ்செல்வர். புலன்களையடக்கினவர் எல்லாப்பிறவிகளையும் அடக்

கினவரானவர். அடங்கினவர் விரும்பினவற்றையடைவரென்பதில் ஸந்தேகமில்லை. பாண்டவனே! அடங்கினவருக்கு எல்லாவிடங்களிலும் நினைத்தவையெல்லாம் கைகூடும். தவத்தினாலும் பராக்கிரமத்தினாலும் தானங்களாலும் பலவகையாகங்களாலும் ஸ்வர்க்கத்தில் மகிழ்ந்திருப்பது எப்படியோ அப்படியே அடக்கமும்பொறுமையுமுள்ளவர்கள் மகிழ்ந்திருப்பர். தானத்தினுஞ்சிறந்தது அடக்கம். தாதாவாவன் பிராம்மணனுக்கு ஏதாவது ஒன்றைக்கொடுக்கும்போது கோபிப்பான்; அடக்கமுள்ளவன் கோபியான். ஆகையால், அடக்கம் தானத்தினும்சிறந்தது. கோபியாயல்கொடுப்பவனுக்கு அழியாத உலகங்களுள்ளன. கோபம் தானத்தைத் கெடுக்கிறதன்றே? ஆதலால், கொடுப்பதினும்சிறந்தது அடக்கம். மஹாராஜனே! ஆகாயத்தில் ரிஷிகளிருக்குமிடங்கள் கண்ணுக்குப்புலப்படாமல் பதினுபிரக்கணக்காக இருக்கின்றன. எல்லா உலகங்களிலுமுள்ளதேவர்கள் அவற்றிற்குப்போகின்றனர். ராஜனே! அந்தப்பெரியஸ்தானத்தையிரும்புகிற மஹரிஷிகள் அடக்கத்தினாலேதான் அவ்வுலகங்களுக்குப் போகின்றனர். ஆதலால், தானத்தினும்பெரிது அடக்கம். விந்யாதானத்திற்கு மேலானதானமில்லை. வேதவித்தைகளின்பலன்பெரிது. கஷ்டப்பட்டுழுதுவிப்பவன் அழியில்லாதபலனை அடைவான். ராஜனே! சாஸ்திரப்பிரகாரம் அக்நியில்ஹோமம்செய்தவனும வேதங்களோதித் தர்மந்தெரிந்தவர்களுக்கு அவ்வுலகைக்கொடுப்பவனும் பிரம்மலோகத்தில்கொண்டாடப்படுவார். குருபணிவிடையைச் சிரத்தையோடுசெய்யும் சிஷ்யனும் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்படுவான். அத்தியயனத்தினும் யாகத்தினும் தானத்தினும் ஊக்கமுள்ளவனும் யுத்தத்தில்காப்பவனுமாகியகூத்திரியனும் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்பெறுவான். வைசியன் தன்தர்மத்தைவிடாமல் தானம்செய்வதனால் பெரும்பயன்பெறுவான். தன்தர்மத்தைவிடாதசூத்திரன் மற்றவர்களுக்குப் பணிவிடை செய்வதனால் ஸ்வர்க்கத்தையடைவன். சூரர்கள் பலவகையாகச்சொல்லப்பட்டிருக்கின்றனர். அவர்களின்காரியங்களை என்னிடம்கேள். (விடாமல்சாதிப்பவரான) சூரர்களைச்சேர்ந்தவர்களுக்கும் சூரனுக்குள்ளபலனே கூறப்பட்டுள்ளது. மனிதர்களிலர் யாகத்தில்சூரர்; சிலர் அடக்கத்தில்சூரர்; சிலர் ஸத்தியத்தில்சூரர்; அப்படியே சிலர் யுத்தத்தில்சூராகச் சொல்லப்பட்டிருக்கின்றனர்; சிலர் தானத்தில் சூரர்; மற்றுஞ்சிலர் புத்தியிற்சூரர்; இனனும்சிலர் பொறுமையிற் சூரர்; ஸாங்கியசாஸ்திரத்தில்சூரர் சிலர்; யோகத்தில்சூரர் இன்னுமும்சிலர்; சிலர் வானப்பிரஸ்தாசிரமத்திலும் சிலர் கிருஹஸ்தாசிரமத்

யும் சிலர் ஸ்வாஸ்தியத்திலும் சூரர்; சிலர் சாந்தகுணத்தோடு உள்ளும்புறமும் ஒத்துநடப்பதில்சூரர்; இன்னும் அநேகர் தந்தம்விரதங்களில் சூரர்களாயிருக்கின்றனர்; சிலர் வேதமோதுவதில்சூரர்; சிலர் ஓதுவிப்பதில்சூரர்; சிலர் குருபணிவிடையிலும் சிலர்பித்ருசுசுரூஷையிலும் சிலர்மாத்ருசுசுரூஷையிலும்சூரர்; பற்பலசிலர் பிக்ஷுயெடுப்பதாகிய பிரம்மசரியஆசிரமத்தில்சூரர்; வீட்டிலும் காட்டிலும் அக்நிதிபூஜைசெய்வதில் சூரர் சிலர். இவரனைவரும் தம்கருமங்களின்வன்மையினல்ஜயிக்கப்பட்ட சிறந்தஉலகங்களை அடைகின்றனர். எல்லா வேதங்களையும்மறவாமலிருப்பதும் எல்லாத்தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்வதும் எப்போதும் ஸத்தியமேபேசுவதும் ஸரியாயிருக்கும்; அல்லது, [1]இல்லாமலுமிருக்கும். ஆயிரம்அசுவமேதங்களையும் ஸத்யத்தையும் தராசில்தூக்கினல் ஆயிரம் அசுவமேதங்களைப்பார்க்கிலும் ஸத்தியமே அதிகப்படும். ஸத்யத்தினல் ஸூர்யன் பிரகாசிக்கிறன். ஸத்தியத்தினல் அக்னி எரிகிறது. ஸத்தியத்தினல் காற்று வீசுகிறது. எல்லாம் ஸத்தியத்தில் நிற்கின்றன. ஸத்தியத்தினல் தேவர்களும் பித்ருக்களும் பிராம்மணர்களும் திருப்தியடைகின்றனர். ஸத்தியமே சிறந்ததர்மமென்று சொல்லுகின்றனர். ஆதலால், ஸத்தியத்தை விடலாகாது. ரிஷிகள் ஸத்தியத்திலேயே லக்கமுள்ளவர்கள். ரிஷிகள் ஸத்தியத்தையே ரக்தியாகவுடையவர்கள். ரிஷிகள் ஸத்தியமே சபதமாகக்கொண்டவர்கள். ஆதலால், ஸத்தியம் சிறந்தது. பரதசிரேஷ்டனே! ஸத்தியமுள்ளவர்கள் ஸத்தியலோகத்தில் மகிழ்ந்திருக்கின்றனர். அடக்கத்தையும் சத்தியத்தின்பலனையும்பற்றி உனக்கு நான் முழுதும்சொன்னேன். மனமடக்கமுள்ளவன் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்படுவதுநிச்சயம். ராஜனே! பிரம்மசரியத்தின் குணத்தையும் நீ கேள். அரசனே! பிறந்ததுமுதல் இறக்குமவரையில் பிரம்மசாரியாக இவ்வுகத்திலிருப்பவன்எவனோ அவனுக்குக் கிடைக்கத்தகாதது ஒன்றுமில்லையென்றறி. எப்போதும் சுத்தியத்தில்லோக்கமும்அடக்கமுமுள்ளவரும் ஜிதேந்திரியருமான அநேகங்கோடிரிஷிகள் பிரம்மலோகத்திலிருக்கின்றனர். ராஜனே! நன்கு அனுஷ்டிக்கப்பட்டபிரம்மசாரிவிரதம் எல்லாப்பாவங்களையும் எரித்துவிடும். பிராம்மணனுக்கு இன்னல்விரோஷம். பிராம்மணன் அக்நியென்றுசொல்லப்படுகிறன். தவமுள்ளபிராம்மணர்களிடத்தில் இது பிரத்யக்ஷமாயிருக்கிறது. (வாலகில்யர்களான) பிரம்மசாரிகளின் கோபத்திற்கு இந்திரனும் பயப்படுகிறனன்றே. அந்தப்பிரம்மசரியவிர

[1] ஸத்யம் அதிகமாயிருக்குமென்பது.

தத்தின்பலன் இவ்வுலகத்தில் ரிஷிகளிடம் காணப்படுகிறது. தாய் தந்தையரைப்பூஜிப்பவனுடைய புண்ணியத்தையும் என்னிடம்கேள். அரசனே! தந்தை தாய் மூத்தோன் ஆசாரியன் இவர்களை ஒருகாலும் வெறுக்காமல் பணிவிடைசெய்பவனுக்கு ஸ்வர்க்கலோகத்தில் சிறந்தஸ்தானம் பயனென்றறி. குருக்ஷேத்ரத்தைச்செய்யும்அடக்கமுள்ளவன் நரகத்தைக்காணான்'' என்றார்.

நூற்றுப்பதினேராவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (கோதானபர்வம்.)

(ப்ருஹஸ்பதி மாந்தாதாவுக்குத கோதானத்தின்முறை சிறப்பு முதலியவற்றை உபதேசித்தது.)

யுதிஷ்டிரர், "அரசரே! கோதானத்தின் சிறந்தவிதியைப்பற்றித் தெளிவாகக்கேட்கவிரும்புகிறேன். எதுதான்சிறந்தபல லோகங்களை ஒருவன் அடைவான்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பூமிக்குபதியே! கோதானத்திற்கு மேற்பட்டதொன்றுமில்லை. நியாயமாகக்கிடைத்தகோவானது தானம்செய்யப்பட்டால் உடனே குலத்தைக் கரையேற்றும். ராஜனே! ஸாதுக்களுக்காக முதலில் உண்டாக்கப்பட்டவிதிதான் உலகத்திலுள்ளஜனங்களெல்லாருக்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகலால், ஆதிகாலம்தொடங்கி நடந்துவந்திருக்கும்கோதானத்தின்முறையை முதலில் என்னிடம் கேள். முன்னர், பசுக்களைகாட்டிலுக்குள்ளிருக்கும்போது கோதானத்தில்சங்கல்பத்துடன் மாந்தாதா என்னும அரசன் கேட்டகேள்விக்குப் ப்ருஹஸ்பதி மறுமொழிகூறினார். அதாவது, 'ப்ராம்மணர்களைவரித்துப் பூஜித்துச் சாஸ்த்ரம்விதித்தகாலத்தில்உபவாஸமிருந்து நியமத்தவறாமல் தானம்செய்வதற்குச் சிலப்புப்பசுவை ஓட்டவேண்டும். 'அங்கங்கள் ரமபினவளே! அபிவிருத்தியடைகிறவளே!' என்று அந்தப்பசுவை விளிக்கவேண்டும. பசுக்களின்கூடவிற்சென்று, 'ஆவே என்தாய்; ரிஷபம் என்தந்தை: ஆகாயம் நானிருக்கும்கர்ப்பம்; பூமி எனக்குஆதாரம்' என்னும்மந்த்ரத்தைச்சொல்லி இவ்வகையானபக்தியுடன் இரவெல்லாம்பசுக்களிடத்திலேயேவஸித்துப் பிறகு கோதானம்செய்வதைப்பற்றியவாக்கை சொல்லவேண்டும். அவன் ஓரிரவு பசுக்களுடன்வேற்றுமையில்லாதசிநேகத்தையும் அவற்றைப்

போலப் பூமியில்படிப்பதுமுதலிய விரதத்தையும்செய்து மன ஒற்று மையை அடைவதனால் உடனே பாவத்திலிருந்துவிடுபடுவான். ஸமர் யோதயகாலத்தில் விருஷபத்தையும் கன்றையும் அவிழ்த்துவிட்டபிறகு அதைத் தானம்செய்யவேண்டும். அதனால், ஸ்வர்க்கத்தையடைய லாம். உனக்கு அர்த்தவாதங்களென்னும் ஸ்தோத்திரங்களையும் ஆசீர் வாதமென்னும் பிரார்த்தனைகளையும் சொல்வேன். பலமுள்ளவையும் யாகத்தில் உறுதியானபுத்தியைத்தருகின்றவையும் அமிருதத்தைஉள் ளேவைத்திருப்பவையும் உலகத்திற்காதாரமானவையும் ஆசுவரியத் தின்மூலபோன்றவையும் எப்போதும் பாலிப்பெருக்குகின்றவையுமா கப் பிரம்மாவினால்படைக்கப்பட்ட பசுக்களைச்சேர்ந்த எல்லாம அர்த்த வாதங்கள். 'சூரியனுக்கும்சந்திரனுக்கும் சொந்தமான ஆக்கள் என் பாவத்தைப்போக்கி என்னை ஸ்வர்க்கம்போகச்செய்யக்கடவன. என் தேகத்தைத் தாய்போலக் காப்பாற்றக்கடவன. மற்றும நான்சொல்லாத எல்லா நன்மைகளும் எனக்கு உண்டாகக்கடவன' என்பவை ஆசீர் வாதங்கள். 'பசுக்களே! நீங்கள் ஸ்ரஸ்வதிகள்; நன்மைக்காகவே ஏற்பட்டவர்கள். நீங்கள் அனுக்ரஹம்வைத்து, நான் பிணிகளையும் வினைகளையும் தேகத்தையும் விடும்போது, எனக்கு எல்லாப்புண்ணிய பலன்களும் ரம்மினைஸுகமான கதியை நீண்டகாலம் அளிக்கக்கட வீர்கள். நீங்களோ நான் என்றுமெண்ணம் இப்போதுதான் உண்டா யிற்று உங்களைக்கொடுப்பதினால் நான் என்னையேகொடுத்தவனாகி றேன். மனத்திலிருந்துபுறப்பட்டு [1]மனத்திலேயே வந்துசேர்ந்தீர் கள். அழகானஉருவமும் சிறந்த [2]கறவையுமுள்ளவர்களாகி நீங்கள் என்னை விருத்திசெய்யக்கடவீர்கள்' என்னும் முன்னேசொல்லப் பட்ட இந்தவாக்கியத்தின் முன்பாகத்தைச் சாஸ்திரப்பிரகாரம் கோதா னம்செய்பவன் தானம்செய்யுமுன் சொல்லவேண்டும். மிச்சமுள்ள பாகத்தைக்கோதானத்தின் முறையைஅறிந்துவாங்குகிற பிராம்மணன் பிறகு சொல்லவேண்டும். சரியானநியமத்துடன் அர்க்கியங்கொடுத்த பின் 'கோதானம்செய்யப்போகிறேன்' என்றுசொல்லவேண்டும். 'இந்தப்பசு விஷ்ணுவினுடையது. நீ இதை ஓட்டிக் காப்பாற்ற வேண்டும்' என்று கட்டளையிடவேண்டும். அந்தப்பசுவின்பெய ரைச் சொல்லவேண்டும். அந்தக் கொடுக்கப்பட்டபசு வாங்குகிறவன் வீட்டுக்குப்போகும்போது ஒவ்வோர் அடிக்கும் ஆறு எட்டு இரு

[1] 'மனப்பூர்வகமாய்க் கொடுக்கப்பட்டு மனப்பூர்வகமாக வாங்கப்பட் டீர்கள்'

[2] 'தோஹாः' என்றபாடம் சொல்லப்பட்டது

ப முப்பதுஆயிரமாகத் தானபலன் முறையே அதிகப்படிவதை அறியவேண்டும். கொடுப்பவன் எல்லாப்பலன்களையும் எட்டாவது அடியில் அடைவான். கோதானம்செய்பவன் நல்லொழுக்கமுள்ளவன் யுத்தத்தில் பயமற்றவன் பூஜ்யர்களைப்பூஜிப்பவன் கேட்பவர் வேண்டின திரவியங்களைக் கொடுப்பவன் காலையில் எழுந்திருப்பவன் பாரதமறிந்தவன் இவர்கள் துயரப்படார். அவர்களுக்குப் பெயர்பெற்ற விஷ்ணு லோகமும் ருத்திரலோகமும் வரும். கோதானம்செய்ததின் மூன்றிரவுகள் ஆவின்பால்முதலியவற்றையே புசிப்பதாகியும் கோவ்ரதமிருக்க வேண்டும். மற்றொருராத்திரி பசுக்களுடன் வஸிக்கவேண்டும். விரதத்திற்காக நியமித்த அஷ்டமிமுதல் மூன்றிரவுகள் ஆவின்தயிர் நெய் முதலியவற்றையாகிலும் கோமயத்தையாகிலும் கோமூத்ரத்தையாகிலும் உண்டிருக்கவேண்டும். விருஷபதானம் செய்தால் தேவவிரதமுள்ளவனுவான். இரட்டை எருதுகளைத் தானம்செய்பவனுக்கு வேதங்களெல்லாம்வரும். கோதானத்தின் புறமையறிந்து கோதானத்தையே யாகமாகநினைத்து செய்பவன் சிறந்தலோகங்களை அடைவான் வேண்டினபடி கறக்குங்கோவைத் தானஞ்செய்பவன் பூமியிலுள்ள எல்லாப்போகங்களையும் ஒன்றுசேர்த்துக்கொடுப்பவனாகிறான். அந்தப்பசுக்கள் தேவர்களுக்கும் பிதிருக்களுக்கும் உரியஹவிஸை நித்தியமாகப் பெருக்குகின்றவையாகும். விருஷபதானஞ்செய்வது கோதானத்திலும் சிறந்தது. மானுஷக்கனல்லாதவனுக்கும் பிரம்மசர்யவிரதம் பூர்ணவனுக்கும் பிரதிக்ரையில்லாதவனுக்கும் கோணல்புத்தியுள்ளவனுக்கும் இதைச்சொல்லலாகாது. இந்தத் தர்மம் எல்லாஉலகங்களுக்கும் ரஹஸ்யம். இந்தத் தர்மத்தைக் கண்டபேரிடத்தில் சொல்லலாகாது. லோகத்தில், சிரத்தையுள்ள மனிதர்களுமிருக்கின்றனர்; ஈனர்களான மனிதர்களென்னும் ராக்ஷஸர்களுமிருக்கின்றனர். நாஸ்திகத்தன்மையை அடைந்திருக்கும் புண்ணியமற்றவர்களுக்கு இதைக்கொடுப்பது ராஸ்திரஸம்மதமன்று' என்பது. ராஜனே! பிருஹஸ்பதிசொன்ன இந்தச்சொல்லைக்கேட்டு புண்ணியம்செய்யத் தொடங்கிக் கோதானங்களைச்செய்து நல்லலோகங்களையடைந்த அரசர்களைச் சொல்லுகிறேன்; கேள். உசீனன், [1] விஷ்வகசுவன், நிருகன், பகீரதன், யுவனசுவன்புத்திரனை பெயர்பெற்ற மாந்தாதா, முசுகுந்தன், பூரித்யும்னன், ரைவதன், சோமகன், புரூரவன், பாரதர்களெல்லாருக்கும் வம்சமுதல்வனான பரதசக்ரவர்த்தி, தசரதபுத்திரரும் வீரருமான ராமர் இவர்களும் புகழ்பெற்ற மற்றுமுள்ள அநேக அரசர்களும்

[1] வேறுபாடம்.

கேட்கப்படுகின்றனர். பெருஞ்செய்கையுள்ளவனும் சாஸ்திரமறிந்த வனுமான திலீபராஜன் கோதானங்கள்செய்ததினாலேயே ஸ்வர்க்கத்தை அடைந்தான். மாந்தாதா, யாகதானங்கள் தவம் ராஜதர்மங்கள் கோதானங்கள் இவற்றைவிடாமலேயிருந்தான். குந்திபுத்திரனே! ஆதலால், நீயும் என்னால் உபதேசிக்கப்பட்ட இந்தப்ருஹஸ்பதிவாக்கியத்தை மறவாதே. கௌரவர்களுடைய ராஜ்யத்தையடைந்திருக்கும் நீ சிறந்த பசுக்களைப் பிராம்மணசிரேஷ்டருக்கு அன்புடன்கொடு" என்றார். இவ்வாறு கோதானத்தைப்பற்றிப் பீஷ்மரால் உபதேசிக்கப்பெற்ற தர்ம புத்ரரும் அவர்சொன்னதைபெல்லாம் அப்படியே சாஸ்திரப்படிசெய் தார். அந்த அரசர் பிருதஸ்பதியினால் மாந்தாதாவுக்கு உபதேசிக்கப் பட்ட தர்மத்தை நன்குஅறிந்து நிஜவில்வைத்தார். ஜனமேஜயராஜரே! ராஜரிசிரேஷ்டரான அந்தத்தர்மராஜர் கோதானம்செய்யும்போதெல்லாம் யவையரிசிகொய்களைக் கோமயத்துடன்சேர்த்து உட்கொண்டு மனத்தை யடக்கி ஜடையைத்தரித்து விருஷபம்போலத் தரையில்படித்திருந்தார். அந்த மன்னர் பசுக்களிடத்தில் எப்போதும் மனத்தில்பக்தியுள்ளவ ராகவும் பசுக்களையே எப்போதும் துதித்துக்கொண்டிருந்தார். அவர் சிறந்தகுதிரைகளிலேறிப் போகும்போதெல்லாம் தமது ஸ்தானத்தில் கோவையே வைத்தார்.

நூற்றுப்பன்னிரண்டாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(கோதானத்தின்சிறப்பும், கபிலைப்பசுக்களின் வரலாறுமுதலியனவும்)

பிறகு, சிறந்தபுத்தியுள்ள யுதிஷ்டிராஜர் சூரரான பீஷ்மரைப் பார்த்து வணக்கத்துடன், "பாரதரே! வீரரே! கோதானத்தின் குணங்களை மறுபடியும் எனக்குத் தெளிவாகச்சொல்லும். இப்படிப் பட்ட அமிருதத்தைக்கேட்பதில் எனக்குச் சலிப்பில்லை" என்றுதிரும் பவும் விநயமாகச்சொல்லும்படிகேட்டார். தர்மராஜரால் இவ்வாறு கேட்கப்பட்டபீஷ்மர், அப்போது கோதானத்திற்குச் சிறப்பாயுள்ள குணங்களை அவருக்குத் தெளிவாகச்சொல்லலானார். "கன்றுள்ள தும் குணமுள்ளதும் இளம்பிராயமாயிருப்பதுமான பசுவை வஸ்திரத் துடன் பிராம்மணனுக்குக்கொடுப்பதனால் எல்லாப்பாவங்களும் விலகி விடும். [1] அஸுர்யங்களென்னும் லோகங்கள் பெயர்பெற்றிருக்கின்

[1] அஸுரருக்குரியவை; அல்லது, இருண்சூழ்ந்த நரகங்கள்.

றன. கோதானம்செய்பவன் அவ்வுலகங்களுக்குப்போகான். தண்ணீர் குடிப்பதும் புல்தின்பதும் [1] கடந்துபோய்ப் பால்வற்றிக் கர்ப்பமுண்டாகுந்திறமையற்று மூப்பும் நோயும்கொண்டு தளர்ந்து தண்ணீரில்லாதகிணறுபோன்ற பசுவைத் தானம்செய்து வாங்குகிறபிராம்மணனைக் கஷ்டப்படுத்துகிறவன் இருளான உலகத்தில் பிரவேசிப்பான். கோபமும் துஷ்டத்தனமும் நோயுமுள்ள பசுக்களையும் பலம்குறைந்த பசுக்களையும் விலைகொடாதபசுக்களையும் தானம்செய்யலாகாது. பிராம்மணனுக்கு வீண்கஷ்டங்களைக்கொடுப்பவன் எவனோ அவனுக்குச் சக்தியும்பயனுமில்லாத உலகங்களைவரும். வலிமையும்அடக்கமும் கர்ப்பமுண்டாகும்சக்தியும் தேகத்தில் நல்லமணமுமுள்ள பசுக்களை யாவரும் விலைகொடுக்கின்றனர். நதிகளில் கங்கை எப்படிச்சிறந்ததோ அப்படி பசுக்களில் கபிலைபசு சிறந்தது" என்றார்.

யுதிஷ்டிரர், "பொதுவாகப் பசுக்களைக்கொடுப்பது ஸமமாயிருக்க, கபிலையைக்கொடுப்பதைமட்டும் பெரியோர்சிலாகிப்பது எதனால்? [2] சிறந்தபிரபாவமுள்ளவரே! கபிலையின்சிறப்பைக் கேட்கவிரும்புகிறேன். நான் கேட்கத்தகுதியுள்ளவன். நீர் சொல்லத்திறமையுள்ளவர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார். "கபிலைகள் உண்டானதையும் அவை கபிலைநிறமாகச் செய்யப்பட்டதையும்பற்றிப் பெரியோர்கள்சொல்லக் கேட்டிருக்கிறேன். அதை முழுதும் உனக்குச்சொல்வேன். ஆதிகாலத்தில், தக்ஷரானவர் பிரம்மதேவரால் பிரஜைகளைப் படைக்கும்படி கட்டளையிடப்பட்டார். அவர் ஜனங்களின் இதத்தைக் கருதி அவர்களுக்கு ஜீவனத்தை முதலிற்செய்யத்தவறிப்போனார். பிரபுவே! தேவர்கள் அமிருதத்தைப்பற்றி ஜீவிப்பதுபோல, ஜனங்கள் அன்னத்தைப்பற்றி ஜீவிக்கின்றனர். தாவரப்பொருள்களினும் ஜங்கமங்கள் சிறந்தவை. ஜங்கமங்களில் மனிதர்கள் சிறந்தவர்கள். மனிதர்களில் ப்ராம்மணர்சிறந்தவர். ஏனெனில், யாகங்கள் அவர்களிடந்தாம் நிலைபெற்றிருக்கின்றன. யாகங்களினால் சந்திரன் போஷிக்கப்படுகிறான். அந்தச்சந்திரன் பசுக்களிடத்திலிருக்கிறான். பசுக்களால் தேவர்களும் சந்தோஷமடைகின்றனர். ஜனங்களின் ஜீவனமும் பசுக்களிடத்திலேயிருக்கிறது. அதனால், தக்ஷர்முதலியவர்களினால் பிரஜைகள் சிருஷ்டிசெய்யப்பட்டபோது அந்தப்பிரஜைகள் பசியினால் வருந்தி மனத்தில் நிச்சயம்செய்துகொண்டு பிரஜைகளுக்கெல்லாம் ஈசுவரரான பிரம்மதேவரிடம் ஓடினர். பிராணிகள் பிறந்தவுடன் ஆகாரத்தை

[1] குடிக்கவும் தின்னவும் சக்தியில்லாமலென்பது.

[2] 'மஹாப்ரபாவ' என்றபாடம் கொள்ளப்பட்டது.

விரும்பிக் கதறினர்; பனித்தலைகளாகி ஆகாரங்கொடுப்பவரைத் தந்தை தாய்களைப்போலத் தேடிப்போயினர். பிரம்மதேவர் தாம் பிரஜைகளைப்படைத்ததின்பயன் இவ்வகை செய்யவேண்டுமென மனத்தில் நினைத்துப் புஷ்டியைத்தருவதாகிய அமிர்தத்தை உடனே குடித்தார். பிரம்மதேவர் திருப்தியானமைக்குறிப்பிக்கும்போது அந்தரணத்திலிருந்து [1] ஸுரபியென்பது உண்டாயிற்று. பிரம்மாவின்வாயிலிருந்து பிறந்த அந்தகன்மணம் உலகங்களுக்குத்தாயும் இன்சுவையுள்ள ஆகாரத்தைத்தருவதுமாகிய சுரபியென்னும்பெயருள்ள பெண்ணைய காமதேனுவைப் படைத்தது. அந்தக்காமதேனு முகத்திலிருந்து உண்டானதாகச் சொல்லப்படுகிறது. அந்தக்காமதேனுவானது பொன்போலப்பசுமைநிறமுள்ளவையும ஜனங்களுக்கு ஜீவனத்தைக்கொடுப்பவையும் உலகத்திற்குத்தாய்போன்றவையுமான பசுக்களைப் படைத்தது. அமிருதத்திற்பிறந்தவையும் நான்குபக்கங்களிலும் அமிர்தத்தைப் பெருக்குகின்றவையுமான அந்தப்பசுக்களின் அமிருதத்திலிருந்து நதிகளின் அலைகளிலிருந்து உண்டாவதுபோல நுரையுண்டாயிற்று. கன்றுகளின்வாய்வழிபேசோர்ந்த அந்தநுரை பூமியிலிருக்கும்சிவபெருமானதுரிதத்தில் விழுந்தது. அப்போது, அந்தப்பிரபுவானவர் கோபித்து நெற்றிக்கண்ணினால் கபிலப்பசுக்களை எரிப்பவர்போலப் பார்த்தார். ராஜசரீருத்திரருடைய அக்கண்ணெளியானது அக்கபிலப்பசுக்களைச் சூரியன்மேகங்களைச் செய்வதுபோலப் பலநிறங்களாகச் செய்தது. அந்த இடத்திலிருந்துபோய்ச் சந்திரனைச்சேர்ந்திருந்தபசுக்கள்மட்டும் நிறம்மாறுதல் பிறந்ததடி தம்நிறமாயிருந்தன. உடனே கோபித்தசிவனைப்பார்த்துப் பிரம்மதேவர், 'நீர் அமிர்தத்தினால் அபிஷேகஞ்செய்யப்பட்டிருக்கிறீர்; பசுக்களுக்கு எச்சிலில்லை. எப்படி சந்திரன் அமிர்தத்தையெடுத்துப் பொழிகின்றனோ அப்படியே அமிர்தத்தில்பிறந்த இந்தப்பசுக்கள் பாலைப்பெருக்குகின்றன. காற்றுக்கும் நெருப்புக்கும பொன்னுக்கும் கடலுக்கும் குற்றமில்லை. [2] அமிருதத்தினால்குடிக்கப்பட்ட அம்ருதத்துக்கும் எச்சிலில்லை. கன்றுகளினால் பாலுக்கு எச்சிலில்லை. இந்தப்பசுக்கள் நெய்யினாலும் பாலினாலும் இவ்வுலகங்களைக் காப்பாற்றப்போகின்றன. இவற்றின் அமுதமாகிய சிறந்தசெல்வத்தை யாவரும் விரும்புவார்' என்றுசொன்னார். பாரதனே ! உலகங்களைப்படைத்த பிரம்மதேவர் அந்தருத்திரருக்கு விருஷபத்தைக்கொடுத்து அதனால் அவர்மனத்தை

[1] நன்மணம்.

[2] அமிருதத்திலுண்டானகன்று பாலுக்குடித்ததோஷமது

மகிழ்வித்தார். அப்போது மஹாதேவரும் மகிழ்ந்து அந்தவிருஷ பத்தைக் கொடியாகவும் வாகனமாகவும் செய்துகொண்டார். அதனால், அவர் இடபக்கொடியரானார். அதன்பிறகு, மகாதேவர் தேவர்களால் பசுபதியாகச் செய்யப்பட்டார். அந்தவிருஷபக்கொடியர் கோக்களின்நடுவில் ஈசுவரராகச் செலலப்பட்டார். இப்படி நிறம் மாறுதலிறந்தசக்தியுள்ள கபிலைகளெல்லாம் தானத்திற்குமுதன்மை யானவையென்று சொல்லப்படுகின்றன. உலகத்திற்குமுதவையும் உலகம் ஜீவிப்பதற்காக உண்டானவையும் ருத்திரரால்விருத்திபடைந்த வையும் சந்திரனுடைய அமிருதத்திலிருந்து உண்டானவையும் அன் புள்ளவையும் புண்ணியத்தையும் சுகத்தையும் உயிரையும் தருகின்ற வையுமான கோக்களைத் தானமெசெய்பவன் விரும்பினவற்றை யெல்லாம் கொடுத்தவனுவான். மங்களங்களை விருமபிப் பரிசுத்தனுகவிருந்து கோக்களின் சிருஷ்டியைப்பற்றிய இந்தஉயர்ந்தசரித்திரத்தை நித்ய மாகப்படிக்குமனிதன் கலிகாலத்துப் பாவங்களிலுல் விடப்படுவான்; அன்புள்ள புத்திரர்களையும் பொருள்களையும் பசுக்களையும் எப்போதும் அடைவான். ராஜனே! ஹவ்யகவ்யங்கள், பரிகரித்தல், பாபவிருத்தி செய்யுங்கர்மங்களை, வாகனங்கள், வாஸனை, கிழவர்கள் குழந்தைகளின் திருப்தி இவை கோதானத்தினுல் உண்டாகுமகுணங்கள். இவற்றை யெல்லாம் கோதானம்செய்பவன் எப்போதும் அடைந்திருப்பான்" என் றார். குந்திபுத்திரனான தர்மராஜர் பீஷ்மர் சொன்னசொல்லைக் கேட்ட பிறகு, சகோதரர்களுடன் பிராம்மணைத்தர்களுக்குப் பொன்னிற மானரிஷபங்களையும் பசுக்களையும் தானம்செய்யத்தொடங்கினர். புண் ணியலோகங்களை வசப்படுத்தவும் சிறந்தகீர்த்தியைப்பெறவும் பாகங் களைச்செய்து தருமிஷ்டர்களுக்காகவும் பீஷ்மர் சொன்னபடியே அங் குள்ள பிராம்மணர்களுக்கு அநேகமாயிரங்களும் அநேகநூறுகளுமாகக் கோக்களைத் தானஞ்செய்தார்.

நூறாவதின்மூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(வஸிஷ்டர் ஸௌதாஸனுக்குப் பசுக்களின் சிறப்பைக் கூறியது.)

ஜனமேஜயராஜரே! பீஷ்மர் அரசரான தர்மபுத்திரருக்கு இவ் வாறுசொல்லித் திரும்பவும் நிதர்சனத்துடன் பின்வருமாறு சொல்ல லானர்.

"(நான்பெரியோரிடமிருந்துகேட்ட) இதிகாலத்தில் இக்ஷ்வாகு வம்சத்திற்பிறந்தவனும் பேசுவதிற்சிறந்தவனுமான ஸௌதாஸனென்னுமரசன் எல்லாலோகங்களிலும்ஸஞ்சரிப்பவரும் தவசித்திபெற்றவரும் வேதங்களுக்குப்பொக்கரமும் ஆதிகாலத்துரிஷிசிரேஷ்டரும் புரோகிதருமானவஸிஷ்டரை நமஸ்காரம்செய்து, 'குற்றமற்ற பகவானே! மூன்றுலோகங்களிலும் பரிசுத்தமென்று எதுசொல்லப்படுகிறது? மனிதன் எதை எப்போதும்உரைப்பதனால் சிறந்தபுண்ணியத்தையடைவான்?" என்றுகேட்டான். வனங்சின அவ்வரசனுக்கு வஸிஷ்டர் பரிசுத்தமாகிய நோக்கங்களுக்கு அப்போது நமஸ்காரம்செய்து கோக்களின் ரகஸ்யஞானத்தைப்பற்றிய இனியசொல்லைச் சொல்லலானார். 'பசுக்கள் இனியமணமுள்ளவை; குங்கிலியம்போல மணப்பவை. பசுக்கள்தாம் பிராணிகளுக்கு ஆதாரம். பசுக்கள் மங்களங்களுக்குப் பெரியகாரணம். சென்றதும் வருவதும் பசுக்களே. பசுக்கள்தாம் அழியாத காப்பு. பசுக்கள் லக்ஷ்மிக்குரியவர். பசுக்களுக்குக்கொடித்தது அழிவதில்லை பசுக்கள் சிறந்தஅன்னம்; தேவர்களுக்குச் சிறந்தஹவிஸ் தேஹமழம் யாகமும் தோக்களிடத்திலேயே எப்பொழுதுமஇருக்கின்றன. யாகத்தின்பயனும் பசுக்கள், யாகம்நிறைவேறுவதும் பசுக்களால். [1] வருவதும் நடந்ததும் பசுக்களே. [2]யாகங்கள் கோக்களிடத்தில் முடிவுபெறுகின்றன. சிறந்த பாக்கியமுள்ளவனே! புருஷரிஷபனே! ஒவ்வொருநாளும் ஹோமகாலங்களாகிய காலைமாலைகளிலும் ரிஷிகளுக்கு ஹோமத்திரவியத்தைப் பசுக்களே கொடுக்கின்றன. பிரபுவே! தோதானம் செய்பவர் எல்லாதுயரங்களையும் தாம்செய்ததீவினைகளையும் பாவங்களையும் தாண்டுகின்றனர். பதுபசுக்களுள்ளவன் ஒருபசுவையும் நூறுபசுக்களுள்ளவன் பதுபசுக்களையும் ஆயிரம்பசுக்களுள்ளவன் நூறுபசுக்களையும் தானம்செய்யவேண்டும். அவர்களெல்லாருக்கும மேலானவன்தான். நூறுபசுக்களிருந்து அக்நிஹோத்ரம் செய்யாதவன் ஆயிரம்பசுக்களிருந்தும்யாகம்செய்யாதவன் செல்வமிருந்துலோபியாயிருப்பவன் இம்மூவரும் பூஜைக்குரியரல்லர். நல்லொழுக்கமுள்ளகபிலையை வஸந்தம்போர்த்துக் கன்றோடும் கறக்கும் வெண்கலப்பாத்திரத்தோடும் தானஞ்செய்பவர் இம்மைமறுமைஇரண்டுலகங்களையும் வசப்படுத்துகின்றனர். வீரனே! இளம்பிராயமுள்ளதும் இந்திரியசக்தியுள்ளதும் பசுக்கூட்டங்களுக்கதிபதியும் பெருங்

[1] முறையே காரியமும் காரணமும்.

[2] தோதானத்தினால யாகஞ்செய்தபலன உண்டாகுமென்பது.

கொம்புகளுடையதும் அலங்கரிக்கப்பட்டதுமான சிறந்த ரிஷபத்தை நூறுபசுக்களுடன் வேதமோதினபிராம்மணனுக்குத் தானம் செய்பவர் ஒவ்வொருபிறப்பிலும் ஐசுவரியத்தையடைவார். பசுக்களின்பேர்சொல்லாமல் தூங்கலாகாது. பசுக்களை நினைத்துக்கொண்டே எழுந்திருக்கவேண்டும். மாலையிலும் காலையிலும் பசுக்களை நமஸ்கரிக்கவேண்டும். அதனால் செல்வம்பெறுவான். பசுக்களின்மூத்திரத்தையும் கோமயத்தையும்கண்டு எவ்வகையிலும் அருவருக்கலாகாது. அவற்றின்மாமிசத்தை உண்ணலாகாது. அப்படியிருப்பதனால், பசுக்களின்மிகுதியை அடைவான். தினந்தோறும் பசுக்களின் பெயர்சொல்ல வேண்டும். பசுக்களை அவமதிக்கலாகாது. கெட்டகனவுகண்டபிறகு, கோவின்பெயரை மனிதன் சொல்லவேண்டும். எப்போதும் கோமயத்தைக்கொண்டு ஸ்நானம்செய்யவேண்டும். கோவின்எருமுட்டையின் மேல் படுக்கவேண்டும். அவற்றில்உமிழ்வதையும் ஜலமலங்களைவிடுவதையும் அவற்றைஒதுக்குவதையும் விட்டுவிடவேண்டும். நீக்கப்பட்டபசுத்தோலில் மேற்குமுகமாக உட்கார்ந்துகொண்டு மௌனமாக நெய்புடன் தரையிலுண்பவன் பசுக்கள் நிறைந்திருத்தலை எப்போதும் அடைவான். நெய்யினால் அக்நியில் ஹோமம்செய்யவேண்டும். நெய்யினால் [1]ஸ்விஷ்டிவாசனங்களைச் செய்விக்கவேண்டும். நெய்யைத்தானம் செய்யவும் நெய்யைச்சாப்பிடவும்வேண்டும். அதனால், எப்போதும்பசுக்களின் பெருக்கத்தையடைவான். எல்லாபாதினங்களுடனும் கலந்த எள்ளைப் பசுவுக்கு ப்ரதியாகக் கோமதியென்னும் மந்திரத்தினால் மந்திரித்துத் தானம்செய்பவன் செய்ததைப்பற்றியும் செய்யாததைப்பற்றியும் விசனப்படமாட்டான். [2]"பொன்கொம்புகளுள்ளவையும் பால்பொழிகின்றவையும் நன்மணமுள்ளவையும் காமதேனுவின்சந்ததிகளுமாகிய பசுக்கள்,நதிகள் கடலினிடம்சேருவதுபோல, என்னிடம் சேரக்கடவன. நான் எப்போதும் பசுக்களைப் பார்க்கக்கடவேன். என்னை எப்போதும் பசுக்கள் பார்க்கக்கடவன. பசுக்கள் நம்மைச்சார்ந்தவை. நாம் பசுக்களைச்சார்ந்தவர். பசுக்கள் எங்கேயிருக்கின்றனவோ அங்கே நாம் இருக்கிறோம்' என்னும் இதை ஸ்ருதிகளிலும் மஹாபாரதங்களிலும் இரவும்பகலும் சொல்லுமமனிதன் பாபங்களினின்றும் விடுபடுவான்.

---

[1] ஆதிபர்வம் 727 - ம் பக்கம் குறிப்பிற்காண்க

[2] கோ மஹிமந்திரம்.

நூற்றுப்பதினொன்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி)

(வஸிஷ்டரிடம் தேவதைகள்.)

வீரனே! வெகுமானத்தைக்கொடுப்பவனே! முதலில் பசுக்கள் படைக்கப்பட்டபோது, 'இவ்வுலகத்தில் நாம சிறந்திருக்கக்கடவோம். சுகஜீவிகளெல்லாவற்றிலும் நாம் உத்தமசுகஜீவிகளாகக்கடவோம். பாவங்களில் பற்றில்லாமலிருக்கக்கடவோம். நம்முடைய சாணத்தைக்கொண்டு ஸ்நாநமசெய்வதனால் ஜனங்கள் எப்போதும் பரிசுத்தராகக்கடவர். தேவர்களும மணிதர்களும் ஜங்கமங்களும் தாவரங்களுமாகிய பிராணிகளெல்லாம் நமதுசாணத்திலேயே சுத்தியைச்செய்துகொள்ளக்கடவன. நம்மைத்தானம்செய்பவர் நமதுஉலகங்களை அடையக்கடவர்' என்று தூரதிருஷ்டியிலிருவருஷகாலம் செய்வதற்கு மிக அரியதவம்செய்தன. ஸ்வதந்திரனும் வரங்கொடுக்கச்சக்தியுள்ளவருமான பிரம்மதேவர் தவமுடிந்தபோது அந்தப்பசுக்களுக்கு, 'அப்படியேயாகட்டும். நீங்கள் உலகங்களைக் [1]காப்பாற்றுங்கள்' என்று வரமளித்தார் மஹாராஜனே! சென்றனவும வருவனவுமாகிய சிறந்த உலகங்களுக்குத் தாய்களும் ஆதாரவுமாகிய பசுக்கள் தவமுடிவில் கருதினதுகைகூடி எழுந்தன. ஆதலால், பசுக்கள் சிறந்தமஹிமையுள்ளவைகளென்றும் பரிசுத்தமுள்ளவைகளென்றும் சொல்லப்படுகின்றன. அதனாலேயே அவை எல்லாப்பிராணிகட்கும் மேலேயிருந்தன. ஒத்தகன்றுள்ளதும பிக்க பாலுள்ளதும நல்லொழுக்கமுள்ளதுமான வெள்ளைப்பசுவை வஸ்திரம்போர்த்துத் தானம்செய்பவன் இந்திரலோகத்தில் பூஜிக்கப்பெறுவான். ஒத்தகன்றுள்ளதும பிரம்பப்பாலுள்ளதும நல்லொழுக்கமுள்ளதுமான கறுப்புப்பசுவை வஸ்திரம்போர்த்துத் தானம்செய்பவன் அக்கினிலோகத்தில் பூஜிக்கப்பெறுவான். ஒத்தகன்றுள்ளதும பிரம்பப்பாலுள்ளதும நல்லொழுக்கமுள்ளதுமான புகைநிறப்பசுவை வஸ்திரம்போர்த்துத் தானம்செய்பவன் யமனுலகில் பூஜிக்கப்பெறுவன். கன்றுள்ளதும தண்ணீர்நுரைநிறமுள்ளதுமான பசுவை வஸ்திரம்போர்த்துக் கறக்க வெண்கலப்பாத்திரத்துடன் தானம்செய்பவன் வருணலோகத்தையடைவான். கன்றுள்ளதும காற்றிற்பறக்கும் தூசிநிறமுள்ளதுமான பசுவை வஸ்திரம்போர்த்துக் கறக்க வெண்கலப்பாத்திரத்தோடு தானம்

[1] கரையேறுங்கள்.

செய்பவன் வாயுலோகத்தில் பூஜிக்கப்படுவான். கன்றுள்ளதும் பொன்னிறமானதும் சிவந்த கண்களையுடையதுமான பசுவை வஸ்திரம்போர்த்துக் கறக்க வெண்கலப்பாத்திரத்துடன் தானம்செய்பவன் குபேரலோகத்தையடைவான். வைக்கோல்போன்ற மங்கினநிறமுள்ளதும் கன்றுள்ளதுமான பசுவை வஸ்திரம்போர்த்துக் கறக்கவேண்கலப்பாத்திரத்தோடு தானம்செய்பவன் பிதிருலோகத்தில் பூஜிக்கப்பெறுவான். கன்றுள்ளதும் அலைதாடியுள்ள கழுத்துள்ளதுமான பருத்தபசுவை அலங்காரம்செய்து தானம்செய்பவன் விசுவேதேவர்களுடைய துயரமில்லாத சிறந்தலோகத்தை அடைவான். ஒத்தகன்றுள்ளதும் மிக்கபாலுள்ளதும் நல்லொழுக்கமுள்ளதுமான பசுமை நிறப்பசுவை வஸ்திரம்போர்த்துத் தானம்செய்பவன் வஸுலோகத்தை அடைவான். கன்றுள்ளதும் வெள்ளைக்கம்பளி நிறமுள்ளதுமான பசுவை வஸ்திரம்போர்த்துக் கறக்கவெண்கலப்பாத்திரத்தோடு தானம்செய்பவன் ஸாத்யர்களின் லோகத்தையடைவான். ராஜனே![1] பருத்தகொண்டையுள்ள விருஷபந்தை எல்லாரத்தினங்களாலும் அலங்கரித்துத் தானம்செய்பவன் ஸப்தமருத்துக்களின் லோகங்களை அடைவான். சிறந்தகன்றுள்ள கறுப்புப்பசுவை எல்லாரத்தினங்களோடும் தானம்செய்யும்மனிதன் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் இருக்கும் உலகங்களை அடைவான். அலைதாடியுள்ள கழுத்துள்ள ரிஷபத்தை எல்லாரத்தினங்களாலும் அலங்கரித்துத் தானம்செய்பவன் துயரத்தைவிட்டுப் பிரம்மலோகத்தை யடைவான். அரசனே! கோதானத்தைச் செய்துகொண்டிருப்பவன் சூரியன் ஓளியாகப்பிரகாசிக்கின்ற விமானத்திலேறி ஆகாயத்தில் மேகங்களைப் பிளந்துகொண்டு செல்வான். கோதானம்செய்துகொண்டிருக்கும் புருஷசிரேஷ்டனே, அழகான அலங்காரங்களுள்ளவர்களும் அழகியதிதம்பங்களுள்ளவர்களுமான ஆயிரம் அப்ஸரஸுகள் ஸந்தோஷப்படுத்துவார்கள். வல்லகி என்னும் வீணைகளின் நாதங்களாலும் சிறந்தபெண்களின் காற்சிலம்பின் ஒலிகளாலும் ஸகைப்புக்களாலும் அவன் தூங்கி எழுந்திருப்பான். பசுவின்ரோமங்கள் எவ்வளவு இருக்கின்றனவோ அவ்வளவு வருஷங்கள் அவன் தேவலோகத்தில் பூஜிக்கப்படுவான்; ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்தபிறகும் மானிடவுலகத்தில் பெரியகுலத்தில்பிறந்து துன்பமில்லாமலிருப்பான்.

[1] 'வைராடப்ருஷ்டம்' என்பது மூலம்.

நூற்றுப்பதினேந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(வஸிஷ்டர்சொல் தொடர்ச்சி.)

தெய்வையும் பாலையும் கொடுப்பவையும் நெய்புண்டாக இடமானவையும் நெய்யென்றுசொல்லப்பட்ட அமிருதத்திலிருந்து உண்டானவையும் சுழல்களையுடைய நெய்யாறுகளுமான அந்தப்பசுக்கள் எப்போதும் என்வீட்டில் இருக்கக்கடவன. என்மார்பிலும் காபியிலும் மற்ற எல்லாஅங்கங்களிலும் நெய்யே எப்போதும் இருக்கிறது. எப்போதும் எனக்கு முன்னும் பசுக்களே; பின்னும் பசுக்களே; என்னைச்சுற்றிலும் பசுக்களே. பசுக்களின்நடுவில் நான் வஸிக்கிறேன்' என்னும் மந்திரத்தை மனிதன் தினந்தோறும் காலைமாலைகளில் ஆசமனம்செய்து ஜபிக்கவேண்டும். ஒருதினத்தில் செய்யும்பாவத்திலிருந்து அவன் விடுபடுவான். ஆயிரம்கோதானம்செய்பவர், பொன்மாளிகைகளும் வற்றுதசெல்வங்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் எங்கிருக்கின்றனரோ அந்த உலகங்களுக்குப் போவர். ஆயிரம்கோதானம்செய்பவர் வெண்ணெயே சேறாகவும் பாலேநீராகவும் தயிரே பாசியாகவும்நிரம்பின நதிகள் எவ்வுலகங்களில் ஓடுகின்றனவோ அவ்வுலகங்களுக்குப்போவர். நூறுயிரம்கோதானம் சாஸ்திரப்படிசெய்பவன் மிகுந்தஸம்பத்தையடைந்து தேகம்விட்டபின் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்பெறுவான். தாய்தந்தையர் இரண்டு குலங்களிலும் பத்துத்தலைமுறை பித்ருக்களைப் புண்ணியலோகத்தில் சேர்ப்பான். அந்த மனிதன் குலத்தையே பரிசுத்தம்செய்வான். பசுஅளவாக எள்ளிலுற்செய்த பசுவைக்கொடுப்பவன் யமலோகத்திலும் தண்ணீர்நிரம்பின தடாகங்களை அடைவான்; அவ்விடத்து யமயாதனையொன்றையும் அடையான். பரிசுத்தங்களிற் சிறந்தவையும் உலகத்துக்கு ஆதாரமும் தேவர்களுக்குத் தாய்களும் அறிவுக்கெட்டாத மகிமையுள்ளவையுமான பசுக்களுக்குச் சந்தனம்பூசிப் பிரதக்ஷிணஞ்செய்து காலத்தைப்பார்த்து யோக்கியனுக்குத் தானம்செய்யவேண்டும். கன்றுள்ளதும் பெருங்கொம்புகளுள்ளதும் கறக்க வெண்கலப் பாத்திரமுள்ளதுமான கபிலைப்பசுவை மேலேவஸ்திரம்போர்த்துத் தானம்செய்யும்மனிதன் புகுதற்கரிதான யமஸபையில் அச்சமில்லாமற்புகுவான். 'அழகானஉருவமுள்ளவையும் பல உருவங்களுள்ளவையும் உலகமெல்லாம் தாமாயிருப்பவையும் தாய்களுமான பசுக்கள் என்னிடம் வந்து

சேரக்கடவன்' என்பதை நித்யகாலமும் சொல்லவேண்டும். இதைக் காட்டிலும் சிறந்த புண்ணியமான தானமும் இதன்பலனுக்கு மேற் பட்ட சிறந்த பலனும் பசுவிலும் சிறந்த பிராணியும் எவ்வுலகங்களிலு மிருப்பதில்லை. சர்மத்திலுஞ்சரி ரோமத்திலுஞ்சரி கொம்பிலுஞ்சரி வாலிலுஞ்சரி பாலிலுஞ்சரி நெய்யிலுஞ்சரி பசுக்கள் சேர்ந்து யாகத்தை நடத்துகின்றன. அவற்றினும் மேலானது என்ன இருக்கிறது? தாவ ரங்களும் ஜங்கமங்களுமாகிய இவ்வுலகமனைத்தும் எவற்றினல் சூழப் பட்டிருக்கிறதோ நடந்தவற்றிற்கும் வருபவற்றிற்கும் தாய்களான அந் தப் பசுக்களைத் தலையினல் வந்தனஞ்செய்கிறேன். அரசனே! பசுக்க ளின் குணங்களின்தொகுதியை ஏகதேசம் உனக்கு நான் சொன் னேன். இவ்வுலகத்தில் கோதானத்திற்குமேலானதானமில்லை. கோக் களைவிட வேறுசிறந்த தஞ்சமுமில்லை' என்றார். மகாத்மாவான ஸௌதாஸனென்னும்அரசன் வஸிஷ்டமகரிஷியின் சிறந்தசொல்லைக் கேட்டு அதுசிறந்ததென்றுநினைத்துப் பிறகு, மனமகிழ்ச்சியுடன் பிரா ம்மணர்களுக்குக் கோதானங்களை மிதுநியாகக்கொடுத்துச் சிறந்த லோகங்களையும் அடைந்தான்" என்றார்.

நூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(வியாஸர் கோக்களின் சிறப்பைச் சுருக்கிச்சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பரிசுத்தங்களிலும் பரிசுத்தமும் உலகத்தில் மிகச்சிறந்ததும் சிறந்தபுண்யமுமாயிருப்பது எது? அதனை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பசுக்கள்தாம் சிறந்த பலனைத்தருகின்றவை; புண்ணியமான வை. அவை மனிதர்களைக் கரையேற்றுகின்றன. நெய்யினுலும் பாலி னுலும் இந்தப்பிரஜைகளைக் காப்பாற்றுகின்றன. பரதசிரேஷ்டனே! பசுக்களினும்சிறந்த புண்ணியமானபொருள் ஒன்றுமில்லை. இவை புண்ணியத்தைத் தருகின்றவை; பரிசுத்தப்படுத்துகின்றவை. மூவுல கங்களிலும் எல்லாவற்றிலும் சிறந்தவை. தேவர்களுக்குமேலும் பசுக் கள்தாம் இருக்கின்றன. ஞானமுள்ளவர்கள் கோதானஞ்செய்துதான் குலத்தைக்கரையேற்றித் தாமும் ஸ்வர்க்கத்திற்குப் போகின்றனர். யுவனுசுவன்புத்ரனுகிய மாந்தாதாவும் யயாதியும் நஹுஷனும் ஆயி

ரக்கணக்கும் நூற்றுக்கணக்குமான கோதானம்செய்ததான் தேவர்களுக்குங்கிடைக்காத மேலானஉலகத்தை அடைந்தனர். குற்றமற்றவனே! இவ்விஷயத்தில் முன்னம்நடந்த சரித்திரத்தையும் உனக்குச் சொல்வேன். சிறந்தஞானமுள்ளசுகமகரிஷி பரிசுத்தராகி நித்தியானுஷ்டானங்களைமுடிந்துக்கொண்டு மன அடக்கத்துடன் ரிஷிகளிற் சிறந்தவரும் உலகத்திலுள்ள பெருமைசிறுமைகளைக் கண்டறிந்தவரும் தம்தந்தையுமான வ்யாஸரை நமஸ்கரித்துக் கேட்கத்தொடங்கினர். 'மகரிஷியே! ப்ரபுவே! எது எல்லாயாகங்களிலும் சிறந்தயாகமாக அறியப்படுகிறது? அறிஞர்கள் எதைச்செய்து சிறந்தகிலைமையைப் பெறுகின்றனர். தேவர்களும் எந்தப்புண்ணியகர்மத்தினால் ஸ்வர்க்க ஸுகத்தை அனுபவிக்கின்றனர்? யாகம்பூர்த்தியாவது எதனால்? யாகத்துக்கு ஆதாரம் யாது? தானங்களிற்சிறந்தது எது? ஸத்ரயாகங்களுள்சிறந்தது எது? சுத்தங்களிலும் சுத்தம் எது? இவற்றைச் சொல்லக்கடவீர்' என்றார். பரதசிரேஷ்டனே! தர்மந்தெரிந்தவர்களிற்சிறந்தவரான வ்யாஸர், இந்தச்சொல்லைக்கேட்டுத் தம்புத்திரருக்கு எல்லாவற்றையும் தெளிவாகச்சொல்லலானார். 'கோக்கள் பிராணிகளுக்கு ஆதாரம். கோக்களே சிறந்தஞ்சும். கோக்கள் புண்ணியமானவை; சுத்தமானவை. கோதானமே பாவங்களைப்போக்குவது. ஆதிகாலத்தில் பசுக்கள் கொம்பில்லாமலிருந்தனவென்றுகேட்டிருக்கிறோம். அவைகள் கொம்பைவேண்டி, அழிவில்லாத பிரபுவான பிரம்மதேவரை உபாஸனைசெய்தனவாம். அங்ஙனம், ஸத்ரயாகம்செய்துகொண்டிருந்த அந்தப்பசுக்களைக்கண்டு பிரபுவானபிரம்மதேவர் அவைகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே வரத்தைக் கொடுத்தார். அவற்றுள் எவற்றிற்கு எப்படிவிருப்பமோ அப்படி கொம்புகளுண்டாயின. புத்ரனே! பிரம்மாவினிடம் வரம்பெற்ற அந்தப்பலசிறமுள்ள பசுக்கள் சிறந்தகொம்புகளோடும் ஹவ்யகவ்யங்களையும் மங்களங்களையும் பரிசுத்தத்தையும் சிறந்தபுண்ணியத்தையும் பாக்கியத்தையும் கொடுப்பவையாகவும் சிறந்தஉருவமும் லக்ஷணங்களுமுள்ளபொருந்தியவையாகவும் விளங்கின. பசுக்கள் சிறந்ததேவசக்தியுள்ளவை. கோதானம் சிலாக்கியம். எந்தஸாதுக்கள் கோபமில்லாமல் கோதானம்செய்கின்றனரோ அவர்கள்தாம் புண்ணியம்செய்தவர்களாகவும் எல்லாத்தானமும் செய்தவர்களாகவும் சொல்லப்பட்டிருக்கின்றனர்; குற்றமற்றவனே! பிராம்மணோத்தமனே! (அவர்கள்) எங்கே மரங்கள் உயர்ந்த மலர்களையும் கனிகளையும் அடைந்திருக்கின்றனவோ, கனிகள் தேன்மயமானவையும் மலர்கள் சிறந்தகன்மணமுள்ளவையும் தேவர்க

ளுக்கு உரியவையுமாயிருக்கின்றனவோ அந்தப்புண்ணியமான கோலோகத்தையும் அடைவர். அங்கே பூமியெல்லாம் ரத்னமயமானது; முழுதும்பொன்மணல்களுள்ளவையும் எல்லாருதுக்களிலும் தொடுவதற்கு இனிமையானவையும் சேறில்லாதவையும் அழுக்கில்லாதவையும் இளம்சூரியனைப்போலப் பிரகாசிக்குப்பொன்மயமும் ரத்னமயமுமான சந்தாமரைமலர்வனங்களால் அழகியவையுமான தடாகங்கள் விளங்குகின்றன. அங்குள்ளநதிகள் மிக்கஅழகுபெற்ற ரத்னஇதழ்களும் பொன்மயமாகப் பிரகாசிக்கும் கேஸரங்களுமுள்ள கருநெய்தல்களும் தாமரைமலர்களும்நிரம்பின மடுக்களிலுலும் பூத்தஅலரிக்காடுகளிலுலும் ஸகஸ்ராவர்த்தமென்னும் மரங்களிலுலும் புஷ்பித்தகற்பகவிருக்ஷங்களிலுலும் உயர்ந்தஒளியுள்ளவையும் குற்றமற்றவையுமான முத்துக்களாலும் ரத்னங்களாலும் கரைகளில் அலங்கரிக்கப்பட்டவையும் பொன்மயமும் உன்னதமுமான மணற்குன்றுகளுள்ளவையுமாக விளங்குகின்றன. எல்லாரத்னங்களும்சேர்ந்து பலநிறங்களாயிருப்பவைசிலவும் பொன்மயமாக அக்னியைப்போலப்பிரகாசிப்பவையுமற்றும் சிலவுமாயிருக்கும் உயர்ந்தமரங்களுள்ளவையும் ரத்னமயமும் உன்னதமுமாகிய அழகியகொடுமுடிகளோடுகூடியவையுமான பொன்மலைகளும் முத்துமலைகளும் ரத்னமலைகளும் அங்கேயிருக்கின்றன. [1]அங்குள்ளமரங்கள் எக்காலமும் பூக்களும்கனிகளுமுள்ளவையாகவும் பக்ஷிகள்நிரம்பினவையாகவும் இருக்கின்றன. அவற்றின்புஷ்பங்களின்மணமும் கனிகளின்சுவையும் மிகச்சிறந்தவை புண்ணியகருமம்செய்தவர்கள் அங்கே எக்காலமும் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். புண்ணியம்செய்து புகழ்பெற்றவர்கள் விரும்பினவற்றையெல்லாம் நிரம்பப்பெற்று விசனமும்கோபமுமற்றவர்களாகி விசித்திரமும் அழகுள்ளவையுமான விமானங்களில் ஏறித் திரிந்துகொண்டு மகிழ்கின்றனர். சிறந்தஅப்ஸரஸ்ஸுகள் கூட்டங்களாக அவர்களுடன் விளையாடுகின்றனர். கோதானம்செய்பவன் இப்படிப்பட்ட உலகங்களை அடைவான். ஓ! பிராம்மணனே! 'எவற்றிற்கு ஸூர்யன் ராஜாவோ, பலத்திற்குப் பலசாலியானவாயுவும் ஐசுவரியத்திற்குவருணனும் அதிபதிகளோ காலத்தைத்தாங்குகின்றவையும் அழகானஉருவமுள்ளவையும் பல நிறங்களுள்ளவையும் உலகத்திற்குக் காரணமாயிருக்கும் தாய்களும் பிரம்மதேவருடைய அநுக்கிரகம்பெற்றவைகளுமான அந்தக் கோக்கள் என்னைக்காக்கக்கடவன' என்பதைத் தினந்தோறும் நிய

[1]இக்கு, பீஷ்மர் யுதிஷ்டிரரை விளித்தனவாயுள்ள விளிகள் விடப்பட்டன.

மத்துடன் ஜபம்செய்யவேண்டும். பசுக்களை உபசரித்துக் கூடவே பின்செல்லுகிறவனுக்கு அவை ஸந்தோஷமடைந்து பெறுதற்குமிக்க அரியனவாகிய வரங்களையும் அளிக்கும். மனத்தாலும் பசுக்களுக்குத் தீங்கைநினைக்கலாகாது. அவைகள் தாமே ஸுகத்தைத் தருகின்றவை. அவற்றை எப்பொழுதும் பூஜிக்கவும் நமஸ்கரிக்கவும்வேண்டும். அடக்கத்துடன் எப்போதும் பசுக்களிடம் அன்புவைத்திருப்பவன் பலனடைவான். உஷ்ணமான மூத்திரத்தை மூன்றுதினங்களும் கறந்தவுடன் உஷ்ணமானபாலை மூன்றுதினங்களும் குடிக்கவேண்டும். உஷ்ணமானபாலைக் குடித்தபிறகு மூன்றுதினங்கள் உஷ்ணமானநெய்யைக் குடிக்கவேண்டும். மூன்றுதினங்கள் உஷ்ணமான நெய்யைக் குடித்துப் பிறகு மூன்றுதினங்கள் வாயுபக்ஷணம் செய்துகொண்டிருக்கவேண்டும். இந்தப் பரிசுத்தத்தினாலேதான் தேவர்கள் உத்தமமான உலகங்களை அனுபவிக்கின்றனர். பரிசுத்தங்களிலும் பரிசுத்தமான அந்தநெய்யைச் சிரசில்வகிக்கவேண்டும். நெய்யை அக்னியில் ஹோமம்செய்யவேண்டும். பசுவின்நெய்யினால் [1] ஸ்வஸ்திவாசனம் செய்யவேண்டும். பசுவின்நெய்யை உட்கொள்ளவேண்டும். பசுவின்நெய்யைக் கொடுக்கவேண்டும். அதனால் செல்வத்தையடைவான். [2] கோமயங்களிலிருந்து யவங்களென்னும் அரிசியைஅரித்து எடுத்து அவற்றைப்பாகம்செய்து ஒருமாதம் ஆஹாரம்செய்வதனால் பிரம்மஹத்திக்குச்சமமான பாவங்களனைத்தும் விலகும். அஸுரர்களை ஜயிப்பதற்காகத் தேவர்கள் செய்துகொண்ட சுத்தம் இதுதான். அந்தத்தேவர்கள் தேவராஜ்யத்தையும் மிகுந்தபலத்தையும் அடைந்தனர். கோக்கள் சுத்தமானவை. கோக்கள் புண்ணியமானவை; பாவங்களைப்போக்குபவற்றுளெல்லாம் சிறந்தவை. அவற்றைப் பிராம்மணர்களுக்குத் தானமசெய்வதனால் மனிதன் ஸ்வர்க்கம்அடைவான். பரிசுத்தனாகப் பசுக்களின் நடுவிலிருந்து கோமதியென்னும் மந்திரத்தை மனத்தில்ஜபித்துப் பரிசுத்தமான ஜலத்தினால் ஆசமனம்செய்வதனால் பாவங்கள்போய்ப் பரிசுத்தனாவான். வித்யைகளையும் பிரம்மசாரிவிரதத்தையும் முடித்து ஸ்நானம்செய்து (யாகமுதலிய) ஸத்கருமங்களைச்செய்யும் பிராம்மணர்கள் யாகத்துக்கொப்பான கோமதியென்னும் மந்திரத்தை அக்னிகளின்நடுவிலும் கோக்களின் நடுவிலும் பிராம்மணர்நடுவிலும் தம்சிஷ்யர்களுக்கு உபதேசிக்கவேண்

---

[1] நெய்யைத் தக்ஷிணையாகக்கொடுக்கவேண்டுமென்பது.

[2] பசுக்களுக்கு யவங்களை ஆகாரமாகக்கொடுத்து அவற்றின் சாணத்திலிருந்து அவற்றை எடுக்கவேண்டுமென்பது

டும். மூன்றுநாள் உபவாஸமிருந்து கோமதியென்னும்மந்திரத்தை அடைபவர் புத்திரனைவிரும்பினால் புத்திரனையும் தனத்தைவிரும்பினால் தனத்தையும் நல்லகணவனைவிரும்பியபெண் நல்லகணவனையும் மற்றுமுள்ளஎல்லாவிருப்பங்களையும் அடைவர். பூஜிக்கப்படுவதனால் ஸந்தோஷம் அடைந்தகோக்கள் விரும்பியவற்றையெல்லாம் கொடுக்குமென்பதில் ஸந்தேகமில்லை. இந்தக்கோக்கள் இவ்வாறு சிறந்தமஹிமையுள்ளவை; யாகத்துக்குரியவை; விரும்பினவற்றைஎல்லாம் கொடுக்கின்றவை; விருத்தியாகின்றவை; இவற்றிற்குமேல் ஒன்றுமில்லைஎன்று அறி'என்றார். மஹாத்மாவானபிதாவினால் இவ்வாறு சொல்லப்பெற்ற சிறந்தமஹிமையுள்ள சுகர் நித்தியமாகக் கோக்களைப் பூஜித்தார். ஆதலால், நீயும் பூஜிக்கக்கடவாய்" என்றார்.

நூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(கோலோகமும் எல்லாவற்றிற்கும்மேலிருப்பதன் காரணமுதலியன.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பகவானானபிரமமதேவர் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் மற்றப்பிராணிகளுக்கும் ஈஸ்வரர்; எல்லாவற்றையும் படைத்தவர்; பூமியிலும் முனிவர்களால் துதிக்கப்படுகிறார். அவருக்குமேல் இந்தக்கோலோகம் நிலைபெற்றிருப்பது எப்படி? எனக்கு இது பெரியஸந்தேகமாயிருக்கிறது. இதனை எனக்கு உரைக்கக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"கௌரவஸ்ரேஷ்டனே! உன்னுடையபானமும் வாக்கும் பக்தியும் முழுதும் ஒன்றிலேயே இருக்கின்றன. ஆதலால், எல்லாவற்றிலும்சிறந்தகோவின்சிறப்பை முழுதும் என்னிடம் கேள். அது புண்ணியத்தையும் புகழையும் ஆயுளையும் மங்களத்தையும் தருமவற்றுள் சிறந்தது. கோக்களிடம்பற்றுள்ளவருடையகீர்த்தி கோலோகத்தில் பரவும். பாரதனே! மஹாத்துமாக்களான மஹரிஷிகளிருக்கும் இடங்களிலும் எல்லாலோகங்களுக்கும் தேவர்களுக்கும் உத்பத்திஸ்தானங்களிலும் தேவபூஜைக்காகவும் அமிருதத்துக்காகவும் யாகங்களுக்குக்காகவும் ஸுரபியென்னும்பசு இருப்பதாகப் புராணங்களில் கேட்கிறோம். பிரம்மதேவர், ஆதிகாலத்தில் மனஉறுதியோடு உக்கிரமான தவஞ்செய்து அமிருதத்தின்உருவமாகி நினைத்தஉருவமெடுக்கும் அந்தச்சுரபியென்னும்கோவை உண்டுபண்ணினார்; திரும்பவும் மூட்டப்

பட்ட அக்னிபோல ஜ்வலிக்கின்ற தேகமுள்ள புருஷனையும் தம் சக்தியி னலும் தவத்தினலும் படைத்தார். அப்போது அந்தப் புருஷன், விரும்பத்தக்க உருவமுள்ள அந்த ஸுரபியென்னும் கோவைப் பார்த் தான்; பார்த்தவுடன், காமத்தினல் மயங்கித் துயரமடைந்தான். உலகங் களைப் படைத்தவராகிய பிரம்மதேவர் அவன் காமத்தினல் வருந்து கிறதையறிந்து, 'நீ துயரப்படாதே' என்றுசொன்னர். அதனல், அந்த மகிமைபெற்ற புருஷன் [1] மார்த்தாண்டனென்று பெயர்பெற்றான். அவன் அதிகமாகத் துயரப்பட்டதை அறிந்து, பிரம்மதேவர் அவ னுக்கு அந்தப் பெயரிட்டார். அந்த ப்ரம்மதேவர் மஹாத்மாவான அந்த மார்த்தாண்டனென்னும் ஸூர்யனுக்குத் தவமும் மகிமையும் உருக்கொண்ட வனும் மிக்க அழகும் மங்களமுமுள்ளவளுமான ஸுரபி யென்னும் கன்றினையைக் கொடுத்தார். 'நீயும் என்னல் உண்டானாய் இந்தச் சுரபியும் என்னலுண்டானது. நீங்களிருவரும் மணம் செய்து கொண்டீர்கள். ஆதலால், ஸந்ததியுண்டாகும். உங்கள் ஸந்ததி புண் ணியமுள்ளதும் மிகப பரிசுத்தமுள்ளதுமாயிருக்கும். சேரத்தகாதவ ளைச் சேருவதனல் உனக்கு ஒருகாலும் குற்றமுண்டாகாது. உன் ஸந்ததியிடமுண்டாகுமபால் சிறந்த ஹோமத்திரவியமாகும். உன் ஸந்ததி காரணமாகத்தான் யாகங்களிலும் நெய் தேவர்களுக்குப் பாக மாக விதிக்கப்படும். ஓ! ரோகிணியே! உன் ஸந்ததிகளுக்குப் பணி விடைசெய்துகொண்டிருபபவர்கள் அந்தப் புண்ணியத்தினலேயே கோலோகம் சேருவர். இது ரிஷபமென்னும் பெயருள்ள மிகப் பரிசுத்த மான மந்திரம். உலகத்திலுள்ள பிராம்மணர்கள், இதை எப்போதறிந் தாலும் ஜாதிஸங்கரதோஷத்திலிருந்து விடுபடுவர். மந்திரங்கள் பிராம் மணங்களென்னும் வேதபாகங்களினல் பரிசுத்தமாகவையும் ஹவ்ய கவ்யங்களை முன்னிட்டவையுமான தேவகார்யங்களும் பித்ருகார்யங் களும் இந்த உன் ஸந்ததியினலேயே நடக்கும். ரோகிணியே! இந்தப் புண்ணியத்தினல் உன்னுடைய ஸந்ததிகள் என்னுலகத்துக்கு மேலும் யாதொரு தீங்குமின்றியிருக்கும். உனக்கும் உன் ஸந்ததிகளுக்கும் க்ஷேமமுண்டாகட்டும. உன் வம்சத்தில்பிறந்த பிள்ளைகள் நூகத் தடிகளைப் பொறுத்து உலகத்தைக் காப்பாற்றக்கடவன. நீ எந்த எந்த லோகங்களை நினைத்தாலும் அவற்றிற்கெல்லாம் செல்லலாம். தேவக் கூட்டங்களெல்லாம் உன்னுடைய ஸ்தனங்களில் உண்டாகும் உத்தம மான அம்ருதத்தைக்குடித்து உன் புத்திரர்களாகும்' என்றார்.

[1] அண்டமென்னும் கோளத்துக்குதிபதியே! ஆர்த்தஜ (துயரப்படுகிற வனை) மா (ஆனதே, என்பது பொருள்.

இவ்வாறு எல்லாவுலகங்களுக்கும் ஈசுவரரான பிரம்மதேவர் சொன்ன வரங்களெல்லாவற்றையும்பெற்று மிகுந்த ஸந்தோஷமடைந்து பிரம்மாவினால் விடைகொடுக்கப்பட்ட ஸுரபி உலகத்தைக்காப்பதற்காகத் தன்ஸந்ததிகளை மிகுதியாகஉண்டுபண்ணித் தன்உலகத்தில் பிரவேசித்தது. பாரதனே! பிரம்மாவே இவ்வாறு வரமளித்ததனால் எல்லாவற்றிற்கும்மேல் கோலோகம் இருக்கிறது. முதலிலிருந்து உனக்கு எல்லாவற்றையும் சொன்னேன்" என்றார்.

நூற்றுப்பதினேட்டாவது அத்யாயம்

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(ஸுரபியின் ஸந்ததிகள்முதலியன)

யுதிஷ்டிரர், "முற்காலத்தில் ஸுர்யனுக்கும் ஸுரபிக்கும் முதலில்பிறந்த ஸந்ததிகள் எவை? இதை எனக்கு விரிவாகச்சொல்லும். என்மனம் பசுக்கள்மேல் விருப்பமுற்றிருக்கிறது" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ராஜனே! உலகத்திற்குத் தாய்களாயிருக்கும் கோக்களின் சிறந்தபேர்களை விரிவாகக்கேள். மங்களத்தைத்தருகின்ற கோக்களினால் மூவுலகங்களும் வியாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆதிகாலத்தில் ஸுரபியிடமிருந்துஉண்டான ஸந்ததிகளை நான் சொல்லுகிறேன். நீ அவற்றைக்கேள்; அதனால், பெரும்புகழை அடைவாய். உக்ரமான தவம் செய்யத்தொடங்கின ஸுரபி தவம்செய்து விளங்குகின்ற ஒளியுள்ள பதினொருபுத்திரர்களைப் பெற்றது. அவர்கள் ருத்திரர்களென்று வேதத்தில் துதிக்கப்படுகின்றனர். அஜைகபாத், அஹிர்ப்புத்னியன், பிக்பகழ்பெற்ற நிர்ரியம்பகன், விருஷாகபி, சம்பு, கபாலி, ரைவதன், ஹரன், பகுரூபன், சக்தியுள்ளவனும உக்ரனுமாகிய உக்ரசன் அந்தஉக்ரனுடைய புத்திரனும் மிக்க புகழும்ஒளியுமுள்ளவனுமான விசுவரூபன்என்னும் இப்பதினொருருத்திரர்களை உனக்குப் பெயர்களோடு சொன்னேன். இவர்கள் மகாத்மாக்கள்; பெரியயோகிகள்; மஹிமையுள்ளவர்கள்; மிக்கபலசாலிகள்; தேவர்களிலும் பிரம்மஜ்ஞானிகளிலும் மிகச்சிறந்த ஜன்மமுள்ளவர்கள். இவர்களே உலகத்தில் பிராம்மணர்களுக்கு முதற்காரணமாகச் சொல்லப்படுகின்றனர். இந்தப்பதினொருருத்திரர்களும் மூன்றுலோகங்களுக்கும் ஈசுவரர்களென்று சொல்லப்படுகின்றனர். இம்மஹாத்மாக்கள் நூற்றுவர் சத

ருத்திரர்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றனர். ஸுரபியானவள் பிறகு பூமிதேவியென்னும் முதற்கன்னிகையைப் பெற்றாள். அந்தப் பூமிதேவி வேண்டினவற்றையெல்லாங் கறக்கும்பசுவாயிருந்து பிராணிகளைக் காப்பாற்றுகிறாள். ராஜனே! கோப்ராம்மணனென்னும் ஒரு பிள்ளையையும் ஸுரபிபெற்றதாகச் சொல்லப்படுகிறது. அதனால், ஸுரபியே கோக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் தாயாகச்சொல்லப் படுகிறாள். வரங்கொடுப்பவரும் நூறுருத்ரர்களின் உத்பத்திக்கும் காரணமாயிருப்பவருமான பதினொருருத்திரர்களை முதலில் உண்டு பண்ணி, பிறகு எல்லாவற்றிற்கும் ஈசுவரனும் சுவகாஹங்களிற் சிறந்தவனும் உலகங்களாற் கொண்டாடப்பெற்றவனும் அம்ருதமும் யாகங்களுக்கும் ஓஷதிகளுக்கும் சுவைகளுக்கும் தேவர்களுக்கும் உயிருக்கும் முக்கியமான ஆதாரமாயுள்ளவனுமான சந்திரனென்னும் ராஜனைப் பெற்றாள். பிறகு, யோகமார்க்கத்தில் நிலைபெற்றிருக்கும் ஸ்ரீதேவி (செல்வம்) மேதை (புத்தி) கீர்த்தி ஸரஸ்வதிதேவியென்னும் நாலு பெண்களைப் பெற்றாள். நிஜத்தஉருவங்களெடுக்கும் அந்தச்சுரபி இந்த ஸந்ததிகளைப்பெற்றபின் சிறந்தமங்களகரமான கோக்களென்னும் தாய்களைப்பெற்றாள் புண்யை, மாயை, மதுச்யோதை, சிவை, சிக்ஷை, [1] ஸரித்வரை, ஹிரண்யவர்ணை, ஸுபகை, கவ்யை, ப்ருச்நி, குதாவதி, அங்காவதி, க்ருதவதி, ததிக்ரீவயோவதி, அமோகை, ஸுரஸை, ஸத்யை, ரேவதி, மாருதி, ரஸை, அஜை, ஸிகதை, சுத்த தூமை, அதாரிணி, ஜீவை, ப்ராணவதி, தன்யை, சுத்தை, தேனு, தனுவஹை, இந்திரை, ருத்தி, சாந்தி, சாந்தபாபை, ஸரித்வரை இந்த [2] நாற்பத்தொருபெண்களும் தேவலோகத்திற் பூஜிக்கப்பெற்ற பாக்யசாலிகள். மறுபடியும் ஸுரபிக்குச் சந்திரகிரணத்துக்கும் தாமரைக்கிழங்குக்கும் ஒப்பானநிறமுள்ளதும் கழுத்தில் ரத்நம்போல ஒளியுள்ளதும் மாலைபோன்ற கழுத்துச்சதையுள்ளதும் உயர்ந்த கொண்டையுள்ளதும் சிறந்தஒளியுள்ளதுமான தக்ஷனென்றபெயர் பெற்ற அழகானரிஷபம் பிறந்தது. ஸுரபியின் ஸம்மதத்தின்மேல் அது மகேசுவரருக்குக் கொடியாகக் கொடுக்கப்பட்டது. நிஜத்த ரூபமெடுப்பவையும் உயர்ந்தவையுமான பசுக்கள் ஆதித்யர்களுக்கும் வஸுக்களுக்கும் விசுவேதேவர்களுக்கும் சிறந்த புண்ணியமுண்டா

[1] இரட்டித்து வந்திருக்கிறது.

[2] மூப்பத்தினான்குபெயர்கள்தாம் மூலத்திலுள்ளன; முன்வரும் ஸ்ரீதேவி முதலியநான்கையும்சேர்த்தும், 'ததிக்ரீவயோவதி' என்பதை, 'ததிவதி, க்ரீவதி, பயோவதி என மூன்றுகப்பிரித்தும், 'ஸரித் வரை' இரண்டையும் தனித்தனிகொண்டும் நாற்பத்தொன்றுகவும் கொள்ளலாம்.

கும்படி வரங்களை அளித்தன. அதன்பிறகு, ஸுரபி திரும்பவும் தவஞ் செய்து பசுக்களைப்பெற்றது. யுதிஷ்டிர! அந்தப்பசுக்கள் இந்திரன் முதலான திக்பாலகர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஸுஷ்டுதை, கபிலை, புகழ்பெற்ற ரோஹிணி, தேவர்கள் விரும்பத்தக்கதுபமூள்ள காமதேனு ஆகிய மேலேசொல்லப்பட்ட இந்தான் தபசுக்களும் நிரம்பக் கறந்து உலகங்களால் துதிக்கப்படுகின்றன. முற்காலத்தில் தேவர்களும் அவற்றிற்குக் கன்றுகளாகப்பிறந்து உத்தமமான அம்ருதத்தைக் குடித்தனர். ஸுரபியானது தேவர்க்கரசனும் மஹாத்மாவுமான இந்திரனுக்கு ஸுஷ்டுதையையும் யமனுக்குக் கபிலையையும் வருணனுக்கு ரோஹிணியையும் அரசனை குபேரனுக்கு ஸர்வகாமதுகை யென்னும் காமதேனுவையும் கொடுத்தது. சிறந்த ரிஷிபோன்றவனே! இவ்வாறு பெயர்பெற்ற இந்தஸுரபியின் ஸந்ததிகள் உலகங்களால் பூஜிக்கப்பெற்றவை. இவற்றின் ஸந்ததிகளால் பூமிநிரப்பப்பட்டிருக் கிறது. இவ்வுலகத்திலுள்ள சிறந்தவையெல்லாம பசுக்களிலுள் உண் டானவை. ஸுரபியின இந்தஸந்ததியை வரிசையாகப் பேரிட்டுச் சொன்னேன். அரசர்க்கரசே! இன்னும் நான் உனக்கு என்னசொல்ல வேண்டும்? சொல்'' என்றார்.

நூற்றுபபத்தொன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(தேவர்கள் கோகளிடத்தில் வஸிப்பதழதலியன.)

யுதிஷ்டிரர்,"பிதாமஹரே! அப்போது, ஸுரபிதேவிக்கு, கீர்த்தி லக்ஷ்மி ஸரஸ்வதி மேதைஎன்னும் சிறந்ததேவப்பெண்கள் நால வர் பிறந்ததாகக்கேட்டேன். இவர்கள் கோக்களைவிட்டுப் பிரிந்திருப பவர்களா? அல்லது, அவைகளிற் சேர்ந்திருப்பவர்களா? எந்தத் தேவர்கள் கோக்களை அடுத்திருப்பவர்களென்பதை எனக்குச்சொல் லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"எந்தத்தேவதையைப் பசுக்கள் ஆசிரயிக்கின்றனவோ அந்தத் தேவதைக்குத்தான் தேவதையென்றுபெயரென்றும், தேவதையைப் பற்றியதுதான் தெய்வம அதாவது அதிருஷ்டமென்றும் பிராம்மணர் கள் அறிகின்றனர். முற்காலத்தில் தேவர்களெல்லாருமு பிறந்தபோது தேவேந்திரன் அம்ருதத்துக்காக ஸுரபியினிடஞ்சென்று, 'தேவியே! சுவைமிக்கதும் நன்மையைத் தருவதுமான அமிருதத்தை நீ அனுக்ர

கத்தினால் எனக்கு அளிக்கவேண்டும். அதனால், எனக்கு அமரத்வம் (இறவாமை) வரவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன்' என்று கேட்டான். அதற்கு ஸுரபி, 'தேவராஜனே! கன்றாகி என்னுடைய பாலைக் குடி. அதனால், அமரத்வத்தையும் இந்திரபதத்தையும் பெறுவாய். விருத்திரனுக்குப் பகைவனே! போரில் உனக்குப் பகைவரால் துன்பமுண்டாகாது. சக்ரனே! பிரபுவே! உனக்குப் பலமுண்டாவதற்காக என்பாலைக் குடிக்கக்கடவாய்' என்று சொல்லிற்று. பிறகு, தேவேந்திரன் அந்தச்சுரபியின் முலையைக்குடித்து அமரத்வத்தையும் நல்லஉருவத்தையும் சிறந்தபலத்தையும் அடைந்தான். அமிருதத்தைக்குடித்து உத்ஸாகமடைந்த புரந்தரன் ஸுரபியினிடம்வந்து, 'உனக்கு ஸுகமுண்டாகக்கடவது. நான் உனது புத்ரன். உனக்கு என்னசெய்யக்கடவேன்? சொல்' என்று கேட்டான். ஸுரபி, 'புத்ரனே! எல்லாம் நீ செய்தானது. ஸ்வர்க்கத்திற்குச் செல். தேவர்களனைவரையும் காப்பாற்று. தேவர்களின் பகைவர்களைக் கொல். நீ ஸுகத்தையிருப்பினால் கோக்களையும் பிராம்மணர்களையும் அவமதிக்கலாகாது. கோக்களும் பிராம்மணர்களும் விடும் பெருமூச்சு தேவர்களையும் வற்றச்செய்யும். கோக்களிடத்திலும் பிராம்மணர்களிடத்திலும் அன்புடன் அவர்களுக்கு, 'ஸ்வஸ்தி (க்ஷேமம்)' என்கிற சப்தத்தை நித்யமாகச் சொல்லுகிறவன் பூமியிலும் ஆகாயத்திலும் ஸ்வர்க்கத்திலுமே வெற்றிபெற்றிருப்பான். உனக்கு இன்னும் என்னகாரியமிருந்தாலும் அதைச் சுருக்கமாக என்னிடம் சொல். நான் அதையெல்லாம் உனக்குச் செய்வேன். இதை உண்மையாக உனக்குச்சொல்லுகிறேன்' என்று சொல்லிற்று. இந்திரன், 'ஓ' தேவியே! நான் இந்ததேவக்கூட்டங்களோடு பசுக்கூட்டங்களிடத்தில் நித்யமாக வஸிக்கவிரும்புகிறேனென்பதை உன்னிடம் சொல்லுகிறேன். எனக்கு அனுக்ரகம் செய்யக்கடவாய்' என்று சொன்னான். ஸுரபி, 'கௌசிகனே! கோக்களின்சரீரங்கள் இதோ பிரத்யக்ஷமாகவே காணப்படுகின்றன. எந்ததேவதை எந்தவிடத்தில் வஸிக்கவிரும்புகிறானோ அவன் அந்தவிடத்தில் வஸிக்கலாம். பசுக்களின் தேகமெல்லாம் மிகப்பரிசுத்தமும் பூஜைக்குரியதுமானது. சக்ரனே! உனக்கு எப்படி இஷ்டமோ அப்படிச்செய்யலாம். உனக்கு ஸுகமுண்டாகும்' என்று சொல்லிற்று. அந்தஸுரபியின் அந்தச் சொல்லைக்கேட்டுத் தேவேந்திரன் எல்லாத் தேவக்கூட்டங்களோடும் ஸுரபியின் ஸந்ததிகளை அடைந்தான். அவற்றின் கொம்பிலும் முகத்திலும் நாவிலும் தேவேந்திரன் இருந்தான்; எல்லாத்துவாரங்களி

னும் வாயு இருந்தான்; கால்களில் ஸப்தமருத்துக்கள் இருந்தனர். கொண்டையில் ஸர்வவ்யாபியானருத்ரனும் வயிற்றில் அக்நியும் மூலிகளில் சிறந்தஸரஸ்வதியும் கோமயத்தில் உலகத்தினால் விரும்பப்படும் லக்ஷ்மியும் மூத்ரத்தில் கீர்த்தியும் கங்கையும் பாலில் அழியாத மேதையும் இருந்தனர்; வாயில் ஸந்திரபகவானும் ஹ்ருதயத்தில் பகவானான யமனும் வாலில் தர்மதேவதையும் உடம்புமயிர்களில் யாக முதலியகிரியைகளும் கண்களில் ஸூர்யனும் மூட்டுக்களில் லீத்தர்களும் அசைவில் காரியஸித்தியும் தவமும் சக்தியும் இருந்தனர். இவ்வாறு தேவக்கூட்டத்தாரெல்லோரும் பசுக்களின் தேகபாகங்களில் நியமமாக இருந்தனர். ஆதலால், கோக்கள் பெரியதேவதைகளாகப் பிராம்மணர்களால் மந்த்ரிக்கப்படுகின்றன. உலகத்திற்கு ஈசுவரர்களான தேவர்கள் சேர்ந்து கோக்களிடத்தில் வஸிக்கின்றனர். கோக்கள் விரும்பியவற்றையெல்லாம பிரமமதேவர் முழுதும்செய்வர். தர்மராஜனே! நீயும் சிறந்தபக்தியுடன் கோக்களைப் பூஜிக்கக்கடவாய். உலகத்தில் சிறந்தபுண்யமும் சுத்தப்படுத்தும் மஹாமந்த்ரவ்யமும் பசுக்களே. ஸ்வர்க்கத்திலிருந்து மேதேஹள்ளிப் பக்ஷிக்கப்பட்ட ப்ருகுவம்சத்துரிஷி பசுக்களின் நுரையை உட்கொண்டு திரும்பவும் உயிரை அடைந்து பிறகு கோலோகத்தை அடைந்தார்" என்றார்.

நூற்றிருபதாவது அத்யாயம்.

தர்மதர்மபர்வம் (தொடர்ச்சி)

(ஸுமித்ரர் பேனரென்னும்பெயர் பெற்றது.)

யுதிஷ்டிரர்; "பேனபர்என்கிற பேருள்ளவர் யார்? அவர் முன்னே எப்படி பக்ஷிக்கப்பட்டார்? இறந்தவர் எவ்வாறு பிழைப்பிக்கப்பட்டார்? அவர் கோலோகத்தைச் சார்ந்ததெப்படி? மானிடலோகத்திலுள்ள வ்யவஸ்தைகளுக்கு அது விரோதம். தெய்வபலமின்றி மனிதர்களுக்கு இதுகிடைப்பது மிகஅரிது. இந்தவிஷயத்தில் எனக்குப் பெரியஸம்சயம் இருக்கிறது. அதை எனக்கு உரைக்கக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பாரதனே! ப்ருகுவம்சத்தில் ஸுமித்ரரென்பவரைக் கேள்விப்படுகிறோம். அவர் எல்லாவேதங்களையும் நிரம்பஜ்ஞதி வானப்ரஸ்தாசிரமத்திலிருந்து பெருந்தவஞ்செய்துகொண்டு எப்போதும் தம் அனுஷ்டானந்தவறுமலிருந்தார். அவர் வித்தையிலும் அனுஷ்டா

னங்களிலும் உண்மையை அறிந்தவர்; தர்மசாஸ்திரங்கள் அர்த்தசாஸ்திரங்களெல்லாவற்றிலும் தேர்ந்தவர்; மூன்றுகாலங்களிலும் தவறுமல் ஸ்நானம்செய்பவர்; மூன்றுஸந்திகளையும் தவறுமல்உபாஸனைசெய்பவர்; பொறுமையுடன் நித்யமாக அக்நிஹோத்ரத்தையும் ஜபஹோமங்களையும்செய்து பித்ருக்களையும் தேவர்களையும் விருந்தினர்களையும் நியமத்துடன் பூஜித்துக்கொண்டும் உயிர் நிற்பதற்குமட்டும் ஏதேனும் கொஞ்சம் ஆகாரம் செய்துகொண்டும் இருந்தார். திரிசிகரமென்னும்மலை ஒன்றிருக்கிறது. ருத்ரரால் உண்டாக்கப்பட்டதும் குலஜை என்று புராணங்களில் சொல்லப்பட்டதுமான ஒருநதி அந்தமலையிலிருந்து பெருகுகிறது. மேடுபள்ளமில்லாதபிரதேசமும் பலவகைப் புஷ்பங்கள் நிரம்பினதும் காட்டிலுள்ள ஓஷதிகளும் மரங்களுமுள்ளதும் பலவகைப்பறவைகளாலும் மிருகங்களாலும் சூழப்பட்டதும் ஈக்களும் கொசுகுகளும் காக்கைகளும் கழுகுகளும் அண்டாததும் கறுத்த தர்ப்பங்களும் புற்களும் நிறுதியாகவுடையதும் நிக்க அழகியதும் பிரகாசமான ஒளியுள்ளதும் எல்லாவற்றிலும் உயர்ந்தும ஏற்றத்தாழ்வில்லாமலும் கறுத்தமிருக்கும் யாகத்திற்கு உரியமரங்களினால் மூடப்பட்டதுமான அவ்வாற்றின்கரையில் பிருகுவம்சத்துரிஷிகளின் பரிசுத்தமான ஆசிரமம் முன்னம் இருந்தது. சிறந்த தவமுள்ள ஸுமித்ரரென்னும் பிருகுவம்சத்துரிஷி முன்னேகளாகிய பிருகுக்கள் அனுஷ்டித்துவந்த நல்லநடையோடு அந்த ஆசிரமத்தில் வளர்த்தார். பரிசுத்தமான தவமுள்ள ஆங்கிரஸரென்னும் ஒருரிஷி கார்காலத்தின் இரண்டாவது மாதமாகிய புரட்டாசிபாதத்தின் பர்வத்தில் பரிசுத்தமான நியமத்துடன் சர்க்கரியென்னும் சிறந்தபசுவை அவருக்குத் தானஞ்செய்தார். தர்மத்தையே இயற்கையாகவுடைய அந்தஸுமித்ரர் அந்தப் பசுவைப்பெற்றுக்கொண்டு ஊக்கத்தோடும் சிறந்தபக்தியோடும் தம் பெற்றதாயைப்போல அதைக் கவனித்தார். நீண்டத ரூபமெடுப்பதாகிய அந்தச்சிவப்புப்பசு அவரால்வளர்க்கப்பட்டு மிக்கவலிமையுள்ளதாகவும் காட்சிக்கினியதாகவும் வளர்ந்தது; பக்கரோமங்கள் வெளிப்படாததும் மிக்கஅழகுள்ளதுமாயிருந்தது. முதுகின் இருபுறங்களும் நடுவும் கறுத்ததும், தேன்போலச் சிவப்புநிறமுள்ளதும், நுண்ணிய ரோமங்களினால் அழகாகவும் பருத்தும் உயர்ந்துமிருக்கும் உருவமும் மெல்லியதோலும் கறுத்தவாலும் வெளுத்தமுகமும் முலைகள் ஏற்றக்குறைவில்லாமல் வட்டமாயிருக்கும மடியுமுள்ளதும், பின்உயர்ந்து முன் தாழ்ந்ததும், முலைகள்போல நெறித்தகாதுகளும் அழகானகண்களும் மீண்டநாவும் குட்டைக்கொம்புகளும் சந்தில்லாத பற்களும்

கழுத்தில் சதைபருத்துத்தொங்கும் அலகாடியுமுள்ளதும், அன்புள்ளதும், மங்களகரமும், எப்போதும் அடக்கமுள்ளதும், மழமழப்புள்ளதும், நிரம்பின பெருங்குரலுள்ளதும், பிரம்மாவினாலுண்டாக்கப்பட்ட சிறந்த கோலக்ஷணங்களெல்லாம் பொருந்தினதுமாயிருக்கின்ற அந்தப் பசு அழகினாலும் ஒளியினாலும் இளமைப்பருவத்திலிருக்கின்ற பெண்போல விளங்கிற்று. வலிமையுள்ளதும் காட்சிக்கினியதுமான அப்பசு ஒருவிருஷபத்தோடுபுணர்ந்து உருவத்தில் தமக்குச்சமமாயிருக்கும் ஆண்பெண் இரண்டுகன்றுகளை ஈன்றது. யுதிஷ்டிரரே! அப்பிருகுவம்சத்து முனிவர் இரண்டுகன்றுகளுடனும் அந்தப்பசுவை வளர்த்தார். அவ்விரண்டு கன்றுகளும் புணர்ந்ததனால் ஆயிரம்மாடுகள் உண்டாயின. அரசர்க்கரசனே! அந்தப்பசுக்களும் விருஷபங்களும் ஒன்றோடொன்றுசேர்ந்ததனால் அநேகமாயிரம்மாடுகள் உண்டாயின. அவற்றிற்குக் கணக்கில்லை. அவருடைய ஆசிரமமும் அந்தக்காடுமுழுமையும் அந்தக்கோக்களினால், ஆகாயம் மேகங்களினால் நிரப்பப்படுவதுபோல நிரப்பப்பட்டன. [1]குலத்திற்குத் தலைவனே! அந்தமாட்டுமந்தைகளில் சில தாமரைமலர் நிறமானவை; சில பலாசம்பூ நிறமானவை; சில பொன்னிறமானவை; சில சந்திரகிரணம்போன்றவை; சில வெள்ளிநிறமானவை; சில சிவந்தவை; சில நீலநிறமும் சிவப்புநிறமும் பழுப்புநிறமுமாகலந்தவை; சில கறுத்தவை; சில கபிலவர்ணமுள்ளவை. அவை இப்படிப் பலநிறங்களால் விசித்ரமாயிருந்தன. அந்தஸுமித்ரர் பசுக்களுக்குப் பலமுண்டாக்குவதிலேயே ஊக்கமுள்ளவராகிக் கன்றுகளிடமுள்ள பூர்வாக்ரையினால் பாலை உபயோகிப்பதில்லை. அவ்வாறு பசுக்களின் நன்மையையேபார்த்து அவற்றிற்குப் பணிவிடைசெய்துகொண்டு கன்றுகள் ஊட்டியுமிழ்ந்ததை ஆகாரமாகக்கொண்டே அவருக்கு நீண்டகாலம்சென்றது. அவர் பசிதாகங்களால் கலைத்திருந்தாலும், பசுக்களுக்குப் பால் அதிகமாயிருந்ததனால் கன்றுகள் எப்போதும் குடித்து உமிழ்ந்த மிகுதியான நுரையையே குடித்துக்கொண்டிருந்தார். யுதிஷ்டிர! அதனால், அந்தஸுமித்ரருக்குப் பேனபர் (நுரையைக்குடிப்பவர்) என்று பெயர்உண்டாயிற்று.

[1] 'குலபூத' என்பது மூலம்.

நூற்றிருபத்தோராவது அத்யாயம்.

தானதர்ம பர்வம் (தொடர்ச்சி.)

(உலகத்துக்கு உதவாமல் வளருவது தீங்கென்றறிந்த ஸுமித்ரர்பசுக்கள் அவரைக் கொல்லநீச்சயித்தது.)

நினைத்த உருவமெடுக்கும் (கோலோகத்துப்) பசுக்கள் அழகான லக்ஷணங்களபொருந்திய பெண்ணுருவமெடுத்து மகிழ்ந்து பாடிக்கொண்டு ஒருமடுவில் விளையாடின. அந்தஸுமித்ரருடைய பசுக்கள் ஆச்சரியத்தினால் கண்கள்மலர்ந்து மானிடச்சொல்லாக, 'நீங்கள் யார்?' என்று அந்தஸ்த்ரீகளைக் கேட்டன. அதற்கு, அந்தப்பெண்கள், 'நாங்கள் எல்லாநல்லினைகளின் சிறந்தபயன்களையும் பெற்றபசுக்கள். நாங்களெல்லாரும் பெண்ணுருவமெடுத்து நினைத்தபடி ஸஞ்சரிக்கிறோம்' என்றுசொல்லினர். ஸுமித்ரர் பசுக்கள், 'கோக்களுக்குக் கோக்களே சிறந்ததெய்வம். கோக்களுக்குக் கோக்களே முக்கியமானதஞ்சம். உங்களுக்கு இந்தப் புண்ணியப்பயன்வந்தது எவ்வகை? அதை எங்களுக்குச் சொல்லுங்கள்' என்றுகேட்டன. அதற்கு, அந்தப்பெண்கள், 'எங்களுடைய ஹவ்யகவ்யங்களாகிய பால் நெய்முதலான ஹவிஸ்ஸுகளினால் தேவர்களும் பிதிருக்களும் அக்நியும் பிராம்மணர்களும் திருப்திசெய்விக்கப்பட்டனர். அப்படியே எங்கள் ஸந்ததிகளினால் (உழவுத்தொழில்) எப்போதும் விருத்திசெய்யப்பட்டுவருகிறது. ஆயிரக்கணக்கான ரிஷபங்கள் வண்டிகளிலும் பூட்டப்படுகின்றன. இந்த ரம்பின புண்யங்களினால் நாங்களும் எங்கள் ஸந்ததிகளும் மிகவும் விருப்பத்தக்கதாகிய கோலோகத்தை அடைந்தோம். பசுக்களே! நீங்களெல்லாரும் உங்கள் கன்றுகளோடும் ரிஷபங்களோடும் (இம்முனிவரிடத்திலேயிருந்து உலகத்திற்கு யாதொரு உதவியும் செய்யாமையால்) கீழேபோகிறவர்களென்றே நாங்கள் ஞானக்கண்களினால் பார்க்கிறோம்' என்றுகூறினர். ரிஷியின் பசுக்கள், 'அப்படியாயின், கோக்களுக்குக் கோக்களே மேலானதெய்வமும் மேலானதஞ்சமும். உங்களை நீங்கள்தாமே கரையேற்றவேண்டும்? நாங்கள் உங்களை அடைக்கலம்புகுகிறோம். நாங்கள் என்ன செய்யவேண்டும்? எப்படி நடக்கவேண்டும்? எப்படிக் கோலோகத்தை அடைவோம்? எவ்வகையாக இகழப்படாமலிருப்போம்?' என்று கேட்டன. அதற்கு, அந்தப்பெண்கள், 'ரந்திதேவனுடைய ஆயிரம்வருஷகாலத்து ஸத்ரயாகம் நடந்துவருகிறது. அந்தயாகத்தில்

அவ்வரசனுக்குப் பசுக்களாகி உடனே செல்லுங்கள். அவனுக்குப் பசுக்களாக உபயோகப்பட்டு யாகத்திலே பரிசுத்தஞ் செய்யப்பட்டுப் புண்ணியம் துணையாகக்கொண்டு சிறந்தகோலோகத்தை அடைவீர்கள்' என்று சொன்னார்கள். அந்தப்பெண்களின் அந்தச்சொல்லைக் கேட்ட அந்தப்பசுக்கள் மனத்தில் உற்சாகங்கொண்டு அந்தயாகத்திற்குப்போக நிச்சயித்து மிக்க ஆவலுற்றன. 'அந்த அரசனுடைய யாகம் அப்படி தர்மமாக நடக்கிறது. இந்தஸ்மிக்ர் யாகப்பசுக்களாக உபயோகப்படும்படி நம்மைக்கொடார். ஸ்மித்திராரால் அனுப்பப்படாமல் நம்மால் எவ்வகையிலும் போகமுடியாது' என்று அந்தப் பசுக்கள் பேசிக்கொண்டன. அப்போது, அவற்றில் ஒன்று, 'இந்த ஸ்மித்ர் கொல்லப்படவேண்டும். இதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுங்கள். வேறுவிதமாக நாம் கோலோகத்தை அடையமுடியாது. நாமெல்லாரும் ஒற்றுமையாக இந்தநிச்சயத்தைச் செய்யவேண்டும்' என்றுகூறிற்று. அந்தப்பசுக்கூட்டங்களில் அந்த ஸ்மித்ர்செய்த உபசாரத்தை நினைத்திருந்த ஒருபசுவாவது அவரைக் கொடுமையாகவினால் பார்க்கமாட்டாமற்போயிற்று அப்போது, தாமரைமலர்நிறமுள்ளவையும் சூரியகிரணத்திற்கொப்பான ஒளியுள்ளவையும் செம்பருத்திப் பூப்போலச் சிவந்தகண்களுள்ளவையும் தசையில்லாமல் உறுதியான முகங்களுள்ளவையும் மேககர்ஜனைபோன்றசப்தமுள்ளவையும் ஒளியினுஞ் சிவந்தவையுமான கபிலைப்பசுக்கள் எல்லாப்பசுக்களின் முன்னிலையிலும், 'நாங்கள் நன்றியைத்தூரத்தள்ளி அந்தஸ்மித்ரைக் கொன்றுவிடுவோம்; ஐந்தேகமில்லை. எங்களுக்கு நீங்கள் என்ன மேன்மையைச் செய்வீர்கள்?' என்றுகேட்டன. அதற்கு, பற்றப் பசுக்கள், 'கபிலைப்பசுக்களே! நீங்கள் எல்லாநிறப்பசுக்களிலும முன்னைபாவீர்கள். ஒருகபிலையைக் கொடுப்பவன் நூறுகோதானத்தின் பலனைபெறுவான்' என்றுசொல்லின. பசுக்களின் இந்தச்சொல்லைக் கேட்டுக் கபிலைகளெல்லாம் மனமகிழ்ந்து ப்ருகுவம்சத்தவரான ஸ்மித்ரைக்கொல்வதற்கு நிச்சயம் செய்தன.

நூற்றிருபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி)

(கோமாதாக்கள் ஸ்மித்ரரைக் கோலோகத்துக்குக் கொண்டுபோனதும் ஸ்மித்ர்பசுக்கள் அவருடலை நசுக்கியதும்.)

பார்ப்பதற்கழகுள்ளவர்களும் நினைத்தபடி சஞ்சரிப்பவர்களுமாகிய பசுத்தாய்களென்னும் கோலோகதேவதைகள் அந்த ஸ்மித்ரர்

செய்தநன்றியைநினைத்து அவரிடம்வந்து அந்த ரிஷியைப்புகழ்ந்து, 'ஓ! மகரிஷியே! நாங்கள் கோலோகத்திலிருந்து வந்திருக்கிறோம்; ரிஷபங்களுக்கும் பசுக்களுக்கும் தாய்மார். உமக்குத் தெரியுமா? மிகவும் லந்தோஷமடைந்திருக்கிறோம். நீர் வேண்டுகிற வரத்தைக் கேளும். நீர் பசுக்கள்விஷயத்தில் உயர்ந்த நல்லஎண்ணத்தை எக்கால மும் செய்திருக்கிறீர்' என்றுகேட்டனர். ஸுமித்ரர், 'சிறந்தவர்களான கோமாதாக்கள் மனத்தில் மிக்கஅன்புடன் எனக்கு வரமளிக்கவந்து நிற்பதனால் நான் அனுக்கிரகிக்கப்பெற்றேன்; ஆனந்த மடைந்தேன். எனக்கு இப்போதிருப்பதுபோலவே எப்போதும் கோக்களிடத்திலேயே பக்தி இருக்கவேண்டும். கோஹத்திசெய்பவரும் ப்ரம்மஹத்திவேஷிகளு மானமனிதர்கள் கெடக்கடவர்' என்றுகேட்டார். அதற்குக் கோமாதாக் கள், 'ஓ! ரிஷிசிரேஷ்டரே! நீர்கேட்டது அப்படியே ஆகும். உமக்கு நன்மையையும் எங்களுக்குப் பிரியத்தையும் சொல்லுகிறீர். ரிஷிசிரே ஷ்டரே! எங்களுடன் கோலோகத்திற்குப்போகலாம்; வாரும்' என்று சொன்னார்கள். ஸுமித்ரர், 'நீங்கள் விரும்பின இடத்திற்குச் செல் லுங்கள். என் அன்புள்ளவையும் ஆதரவற்றவையுமான இந்தப்பசுக் களை விட்டுப்போக நான் கருதேன்' என்றுசொன்னர். அவருடைய சொல்லையும் கபிலைகளின் மிகநன்கொடிய சொல்லையும்கேட்ட அந்தக் கோ மாதாக்கள் அந்தப் பார்க்கவரிஷியைத்தூக்கி ஆகாசத்தில் கொண்டு போயினர். அவர்கள் தங்கள் யோகசக்தியினால் ஸுமித்ரரின் தேக த்தை அங்கேயேவைத்து ஆத்மாவைப்பிரித்து எடுத்துக்கொண்டுபோ யினர். பிறகு, அவர்கள் கபிலைகளின் எண்ணத்தையும் அதற்காகத் தாங்கள் கோலோகத்திற்கு அவரைக்கொண்டுபோனதையும் அவருக்கு உரைத்தனர். அதன்பிறகு, கபிலைகள் அவ்விடத்தில் அவருடைய தேகத்தைக்கண்டு பிரதிஜ்ஞைதவறாமல் கொர்புகளாலும் குளம்புகளா லும் அதைநசுக்கின; ராஜசிரேஷ்டனே! அந்தப் பார்க்கவதேகத்தைப் பலதுண்டுகளாகச்செய்து மற்றப்பசுக்களிடம்சென்று நடந்ததையெல் லாம் தெரிவித்தன. அதன்பிறகு, பூமியில்சஞ்சரிக்கும்பசுக்கள் கோமாதாக்களினால், 'பிரம்மஹத்திசெய்த உங்களுக்கு உடனே முகம் அசுத்தமாகக்கடவது' என்றுசபிக்கப்பட்டன. ராஜனே! கோமாதாக் களும் இவ்வாறு நன்றிமறவாதவர். அவர்களால் ரிஷியும் கோலோ கத்தை அடைந்தார். பசுக்களும் விடுவிக்கப்பட்டன.

நூற்றிருபத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(ரந்திதேவன் ஸத்ரயாகத்துக்குக் கோக்களைச்சென்று உபயோகப்படுத்தியது முதலியன.)

அந்தப்பசுக்கள் சிறந்தஞானமுள்ள ரந்திதேவன் யாகத்திற்குச் சென்று மகரிஷிகளின் முன்னிலையில் தங்களைத் தெரிவித்துக்கொண்டன. அப்போது ரந்திதேவனென்னுமரசன் பரிசுத்தஞானப் பக்தியோடு கைகூப்பி அந்தப்பசுக்களுக்கு நமஸ்காரஞ்செய்து, 'வந்தகாரியம் என்ன?' என்றுகேட்டான். அந்தப்பசுக்கள், 'ஆசார்க்காசனே! உன்னுடைய இந்த ஸத்ரயாகத்தில் எங்களை உபயோகிக்கும்படி வேண்டுகிறோம். நாங்கள் யாகபசுக்களாகும்படி அனுக்கிரகிக்கக்கடவாய்' என்றுகூறின. ரந்திதேவன், 'பசுக்களைக்கொல்வதற்கு நான் சக்தனல்லேன். நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் உங்களைக்கொன்று நான் என்னைக்கரையேற்றுவதெப்படி? கோக்களே! உங்களைப் பசுக்களாக உபயோகப்படுத்தி உங்களையும் ஸ்வர்க்கத்திற்சேர்த்துத் தவத்தினால் தன்னையும் கரையேற்றத்தக்கவன் எவனை அவனிடம் செல்லுங்கள்' என்றுசொன்னன். கோக்கள், 'அரசனே! தர்மாத்மாவும் தவமுள்ளவனுமாகிய நீதான் எங்களைக் கரையேற்றத் திறமையுள்ளவனென்று கேள்விப்பட்டோம். அதனாலேதான் வலிய வந்தோம்' என்றுகூறின. ரந்திதேவன், 'இவ்வாறு என் ஸத்ரயாகத்தில்பசுவாவது உங்களுக்குவிருப்பமாயிருந்தால் நான் ஓர் உடன்பாடு செய்துகொண்டு உங்களை அக்நியில் ஹோமஞ்செய்வேன். உங்களில் ஏதாவது ஒருபசு ஒருகால் யாகத்தில் உபயோகப்பட இஷ்டமில்லாமலிருந்தால் அப்போதே கோஸத்ரயாகம் பிறகு நடவாமல் முடிந்துவிடவேண்டுமென்றுசொன்னன். கோக்கள், 'மகாராஜனே! நீ எங்களுக்குச்சொல்லுகிறபடியே நடக்கட்டும். எப்பொழுது பசுக்கள் இஷ்டப்படவில்லையோ அப்பொழுதே ஸத்ரயாகம் முடிந்துபோகலாம்' என்றுசொல்லின. அதன்பிறகு, புத்திசாலியான ரந்திதேவனுடைய கோஸத்ரயாகம் நடந்துவருகையில் பலிகொடுப்பவர்களால் நாள்தோறும் அநேகமாயிரம்பசுக்கள் உபயோகிக்கப்பட்டன. வேந்தனே! இப்படி அநேகவருஷங்கள் கடந்தன. கொல்லப்பட்ட பசுக்களுக்குக் கணக்கில்லை. கௌரவசிரேஷ்டனே! ஆயிரக்கணக்கான பசுத்தோல்களின் குவியல்கள் மலைகள்போலவும் மேகங்கள்போலவும் வெகுவாகக் குவிந்தன.

அந்தக்கொழுப்பின் ஜலம்பெருகி ஒரு மஹாநதி உண்டாயிற்று. இப் பொழுதும் அது பூமியில் சர்மண்வதியென்று பெயர்பெற்ற சிறந்தநதி யாயிருக்கிறது. பிறகு, ஒருகால், ஒருபசு துயரத்துடன் தன்கன்றை யழைத்து, 'குழந்தாய்! வா; முலை குடி; பின்பு பசியினால் கஷ்டப் படாதே. நான்கொல்லப்பட்டால் நிச்சயமாக நீ மனங்குன்றி வருத்தப் படுவாய். இந்தச்சண்டாளர்கள் ஆயுதங்களோடு என்னைக் கொல்ல வருகிறார்கள்' என்றது. மகாராஜனே! மானிடச்சொல்லாக அந்தப் பசுவினால் சொல்லப்பட்டவாக்கைக்கேட்டு ரந்திதேவன் உடனே அதை நிறுத்தினான். ராஜசிரேஷ்டனே! உடனே அவன் அந்தக்கோஸத் தத்தை முடித்தான். அந்தயாகத்தில் விடுபட்டு ஓட்டப்பட்ட மற்றப் பசுக்கள் தம்தம் இடம்சேர்ந்தன. அந்தமஹாத்மாவான ரந்திதேவனு டையயாகத்தில் பிராம்மணர்களால் புரோக்ஷிக்கப்பட்டுக்கொல்லப்பட்ட பசுக்கள் கோலோகத்தைச் சேர்ந்தன. ராஜரிஷியாகிய ரந்திதேவனும் ராஜரிப்படி யாகத்தைச்செய்து அதனால் தேவேந்திரனுடையசிநேகத் தையும் நிலையான ஸ்வர்க்கலோகத்தையும் அடைந்தான். பேனபரென் னும் ஸுமித்ராரிஷி மேலுலகமாகிய கோலோகத்தில் அனேகவருஷ காலம் மகிழ்ந்திருந்தார். மிகமானபசுக்கள் காட்டில் திரிந்தன பேனப ருடைய இந்தச் சரித்திரத்தையும் கிருஷ்ணத்வைபாயனரால் சொல் லப்பட்டதும் புண்யமும் பரிசுத்தமுமான பசுக்களின் மகிமையை யும் உனக்குச்சொன்னேன். பரதசிரேஷ்டனே! பகவானான நாராயண ரும் பெருமைபுகழ் பசுக்களிடத்தில் விருப்பதைக்கண்டுதான் அவற் றிற்குப் பணிவிடையையும் சிறந்தபக்தியையும் செய்தார். அரசர்க் கரசே! பாரதனே! ஆதலால், நீயும் பசுக்களைப் பூஜிக்கக்கடவாய். கௌரவசிரேஷ்டனே! பிராம்மணர்களுக்கு எப்போதும் கோதா னம் செய்வாயாக" என்றார்.

நூற்றிருபத்துநான்காவது அத்யாயம்.

தான தர்ம பர்வம் (தொடர்ச்சி)

(பசுக்களின் சிறப்பைப்பற்றி வ்யாஸருக்கும் சுகருக்கும் ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! மகானுபாவரே! உலகத்திலுள்ள பரிசுத்தங்களுக்கும் பரிசுத்தமும் பூஜிக்கப்பெற்றவற்றுள் பிகச்சிறந் ததுமான பெரியஸ்ரேஷ்டம்எதுவோ அதை எனக்குச்சொல்லும" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்தவிஷயத்திலும் பிதாவும் புத்ரருமாகிய வ்யாஸருக்கும் சுக ருக்கும் நடந்தலம்பாஷணமாகிய ஒருபழைய இதிஹாஸம் கூறுகின்ற னர். தானதர்மங்களில் ஆசையுள்ளவரும் மோக்ஷதர்மத்தை அடைந் திருப்பவருமான சுகரானவர், ஸ்நானஞ்செய்து ஜபமுதலான கடமை களைமுடித்துக்கொண்டு சிறந்தநியமத்துடன் ரிஷிகளிற்சிறந்தவரும் பரிசுத்தாத்மாவும் வழுவில்லாதவரும் பரம்பரையாகவந்த ஆசாரங் களின் விசேஷங்களையறிந்தவருமான எல்லாச்சாஸ்திரங்களின் விஷயங்களி லும் தேர்ந்தவரும் யாருக்குந்தெரியாத உண்மையைக்கண்டவரும் தம் தந்தையுமான வ்யாஸரைத் தலைவணங்கிப் பின்வரும் கேள்வியைக் கேட்கலானார். 'ரிஷியே! அநேகவிதமான வெவ்வேறுதானங்களைப் பற்றிப் பலமுறை சொல்லுகிறீர். பெரும்பயனையும் கீர்த்தியையும் புண்ணியத்தையும்தருவதாகிய பரிசுத்தமான தானம் எது? மனிதன் துயரங்களைக்கடப்பதும் நல்லலோகங்களையடைவதும் எதனால்? இவ் வுலகத்திலும் அவ்வுலகத்திலும் பெருமையையடைவது எதனால்? யாகத்தைநடத்துகிறவர் யார்? யாகம் எவர்களிடத்தில் பயன்படுகி றது? யாகமென்பது யாது? யாகத்தைச்சிறப்பிப்பது எது? யாகங் களிற்சிறந்தயாகம் எது? இதை நீர் எனக்கு உரைக்கக்கடவீர்' என் றார். தெரிந்துகொள்ளவிருப்பத்துடன் வணங்கிநிற்கும் சுகருக்கு, தவத்துக்கிருப்பிடமாகிய வ்யாஸமுனிவர் கோக்களின் சிறப்பைச் சொல்லலானார். 'இவ்வுலகத்திலுள்ள தனத்தையும் புகழையும் ஆயுளை யும்கொடுப்பதும் கேட்பதற்கினியதும் சுத்தங்களிலும்சுத்தமும் மங் களங்களிலும் மங்களமும பாவங்களெல்லாவற்றையும் போக்குவதும் யாதோ அதை நான் தொகுத்துச்சொல்லுகிறேன்; கேள். புண்ணிய மான காட்சியுள்ள கோக்கள் இவ்வுலகத்திலுள்ள அசையும்பொருள் அசையாப்பொருள்களையெல்லாம் ஆக்ரமித்துக்கொண்டு கோலோ கத்திலிருக்கின்றன. அவை எல்லாப்பிராணிகளுக்கும் எல்லாஉலகத் துக்கும் தாய்கள். ருத்ரர்களுக்கும் ஸாத்யர்களுக்கும் அவைகளே தாய்கள். பிரம்மதேவருடைய ஸந்ததியில் முதலிற்பிறந்தவையான கோக்கள் ருத்ரர்களுக்குத் தாய்களாகவும் ஆதித்யர்களுக்கு ஸகோ தரிகளாகவும் வஸுக்களுக்குப் பெண்களாகவும் சொல்லப்படுகின் றன. பசுக்களுக்குத்தலைவன் சூரியன்; ஏழுமருத்துக்கள் வாலைச் சேர்ந்தவர்; அரசனாகியவருணன் ஐசுவரியம். விசுவர்களென்னும் தேவர்கள் பசுக்களை நடத்துகிறவர்கள். இவ்வாறு தேவர்களால் பூஜிக் கப்பட்ட தாய்களாகிய பசுக்களை அறியும்பிராம்மணன் பிரம்மலோகத் தையும் கோலோகத்தையும் திண்ணமாகஅடைவான். உலகங்களுள்

சிறந்ததும் உயர்ந்ததியுமான கோலோகத்தைவிரும்புகிறவன் செய்கையினலும் எண்ணத்தினலும் சொல்லினலும் கோக்களை அவமதிக்கலாகாது. பிரம்மாவினல் உண்டாக்கப்பட்ட இந்தப்பரிசுத்தமான அறிவை அடைந்திருப்பவன் கோக்களைக் காலினல்உதைக்கவும் தடியினல் அடிக்கவும் கையினல்குத்தவுமாகாது. கோமாதாக்களின் வம்சத்தைச்சேர்ந்தவையாகிய பசுக்களின்நடுவிலும் கொட்டிலிலும் மணி தன் தெரிந்து மலமூத்ரங்களை விடலாகாது. கோக்கள் பரிசுத்தமானவை; சந்தனம்போலக் குளிர்ந்ததேகமுள்ளவை; சந்திரகிரணம் போன்ற நிறமுள்ளவை; சாந்தமும் அழகுமானவை; குங்கிலியவாஸனையுள்ளவை. நதிகள் கடலில் பிரவேசிப்பதுபோல எல்லாத்தேவர்களும் பசுக்களிடத்தில் பிரவேசித்திருக்கின்றனர். தேவலோகமும் ஆகாயமும் கோக்களின் அனுக்ரகத்தையே அனுபவிக்கின்றன. அக்நியில் தயிரை ஹோமம்செய்தும் தயிர்கொடுத்து ஸ்வஸ்திவாசனம்செய்வித்தும் தயிரைத்தானஞ்செய்தும் தயிரைச்சாப்பிட்டுக்கொண்டுமிருப்பவன் கோக்களின் அனுக்ரகத்தைப்பெறுவான். அக்நியில்நெய்யை ஹோமஞ்செய்தும் நெய்யினல் ஸ்வஸ்திவாசனம்செய்வித்தும் நெய்யைத்தடவிக்கொண்டும் நெய்யைக் குடித்துக்கொண்டுமிருப்பவன் கோக்களின் அனுக்ரகம்பெறுவான். கோக்கள் ஜீவனுக்காதாரமானவை. கோக்கள் தானத்திற்குச்சிறந்தவை. புண்ணியங்களைக்காப்பவையும் நல்லபலனைக்கொடுப்பவையுமான அந்தக்கோக்கள் பற்றுள்ள என்மேல் அனுக்ரகம்செய்யக்கடவன. எந்தப்பரிசுத்தத்தினல் தேவர்கள் இவ்வுலகத்தைவிட்டு ஸ்வர்க்கலோகம்சேர்ந்தனரோ பரிசுத்தங்களிலும் பரிசுத்தமான அந்தக்கோக்கள் என்தலைமேலிருக்கின்றன. [1]வினையாட்டுக்கும் மனமகிழ்ச்சிக்கும் ஸ்த்ரீபோகத்துக்கும் உரியனவாக மூவுலகங்களிலுமிருக்கும் வீணைகளும் மிருதங்கங்களும் பணவங்களும் பசுக்களின் அங்கங்களில் இருக்கின்றன. பசுக்கள்காணப்படாத இடத்தில் தேவர்களும் இரார்; அக்னிஹோத்ரங்களும் யாகங்களும்நடவா. பசுக்களின்பாலும் தயிரும் நெய்யும் சுவைகளுள் உயர்ந்தசுவைகள். கோக்கள் அம்ருதத்திலிருந்து உண்டானவை. அம்ருதத்தினல்தான் மூவுலகங்களும் ஜீவித்திருக்கின்றன. 'ஒருமாதம் நிரம்பினகன்றுள்ளதும் விரும்பத்தக்க குணங்களுள்ளதுமாகிய பசு மிகவும பரிசுத்தமானது; கர்மங்களுக்குத் தலைமையானது. அதுவே ஸாஸ்வதி. இந்தப்பிராணிகளனைத்தும் அதனிடம் [2]கோக்

[1] பசுக்களினல் செல்வம்பெற்றவர்களுக்கே இவையெல்லாம் அமையுமென்பது. [2] அதனல் ஜீவிக்கின்றன என்பது.

கப்பட்டிருக்கின்றன. அந்தப்பசுவே புண்யங்களுக்குமுதல்; எல்லாப்பிராணிகளின் நன்மைக்குமாயிருப்பது. தாங்குகின்றவையும் பாவத்தைப்போக்குகின்றவையும் புண்ணியத்தைத் தருகின்றவையும் பிராணிகளை உற்பத்திசெய்கின்றவையும் விருத்திசெய்கின்றவையுமான கோக்கள் இம்மையிலும் மறுமையிலும் என்னைக் காக்கக்கடவன்' என்னும் கோமந்திரத்தைச்சொல்லிப் பிராம்மணர்கள் யாகத்திற்குத் தகுதியானபசுவைக் கன்றுடன் யாகத்தின் ஹவிஸ்ஸைக் கொடுப்பதற்கு அழைக்கின்றனர். இதுதான் அங்கங்களோடும் உபாங்கங்களோடும் கூடிய அழியாத யாகம். வேதங்களும் உபநிஷத்துக்களும் பசுக்களின் வடிவங்களாயிருக்கின்றன. குழந்தாய்! கோக்களைப்பற்றிய இந்தச் சிறந்தவிஷயத்தை நான் சொன்னேன். இதைப் பிராம்மணர் ஸபையி லெல்லாம் எப்போதும் நியமத்துடன் சொல்லவேண்டும். இதைக் கேட்பவனும் நான்சொன்ன சிறந்தலோகங்களை அடைவான். மன மகிழ்ந்து கேட்பிப்பவனும் அவ்வுலகங்களை அடைவான். பிராம்ம ணன் இந்தப்பரிசுத்தமான கோமதியென்னும் மந்திரத்தைச்சொல் லித் தினந்தோறும் பரிசுத்தமான ஒவ்வொருபசுவைத் தானஞ்செய் தால் அதன்பலனை முழுதும் அடைவான். பசுவில்லாவிடின் எல்லா வற்றையும் பரிசுத்தஞ்செய்யும் சிறந்தவள்ளைப் பசுவுக்குப்பிரதியாகக் கோமதிமந்திரபூர்வகமாகத் தானஞ்செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் சிரத்தையோடு கோமதிவிரதத்தை விடாமல்படித்து ஆசா ரந்தவறாமலிருப்பவன் எல்லாப்பாவங்களினுமிருந்தும் விடுபடுவான். கோமதியைஜபித்து நெய்யை உடம்பில் தடவிக்கொண்டும் உட்கொண் டும் பசுவின்சாணியைத்தெய்த்து ஸ்நானம்செய்துமிருப்பவன் எல் லாப்பாவங்களினுமிருந்தும் விடுபடுவான். கோமதியை மனத்தினால் ஜபிக்கவாவதுவேண்டும். தினம் அதை ஜபிப்பது கடமை. கோம தியைப்படியாமல் நாளை வீணுகாதத்திரம் செய்யலாகாது. கோம தியை ஜபித்துத்தான் தேவர்கள் தேவத்தன்மையை அடைந்தனர். கோமதியினாலேதான் ரிஷிகள் ரிஷித்தன்மையையும் மற்றுமுள்ள எல்லாமேன்மைகளையும் அடைந்தனர். கோமதியைப் படித்தால் சிறையிலிருப்பவன் சிறையிலிருந்து விடுபடுவான்; கஷ்டத்திலகப்பட் டவன் கஷ்டத்திலிருந்துவிடுபடுவான். அவன் சுற்றத்தாருடன் சேர்ந் திருப்பான். [1]இது முழுதும்பரிசுத்தமானது. இது சிறந்ததவம். கேட்பவர்களுக்கும் இதுவே எப்போதும் சுத்தஞ்செய்வது. புத் ரனைவிரும்புகிறவர்களும் தனத்தைவிரும்புகிறவர்களுமான மனிதர்கள்

[1] ஒருசொல் விடப்பட்டது.

விரும்பினதை அடைவார். வழிநடையில் கோமதியைப்படிப்பவன் திருடர்களிடத்தினின்றும் பகைவர்களிடத்தினின்றும் விடுபடுவான். கோமதியைப் படிப்பவன் பகைகளைத் தொடர்ந்துவரும் யுத்தங்களில் கொல்லவந்தவர்களையும் உடனே ஜயித்துவிடுவான்' என்றார்.

நூற்றிருபத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(வியாஸருக்கும் சுகருக்கும் ஸம்பாஷணைத் தொடர்ச்சி.)

சுகர், 'பிதாவே! க்ஷத்திரியர்களும் சூத்திரர்களும் மந்திரம் தவறினபிராம்மணர்களும் கபிலைப்பசுவை அடைகின்றனரே. அது எப்படி?' என்றுகேட்க, வ்யாஸர் சொல்லலானார்.

'க்ஷத்ரியர்களும் சூத்ரர்களும் மந்திரமில்லாத பிராம்மணர்களும் கபிலையை அடித்திருப்பதன் நிச்சயத்தைச் சொல்வேன். உலகத்தில் பசுக்களுள் கபிலைகள் உத்தமமானவையென்று நிணைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தானஞ்செய்பவனும் முறைப்படி உபசரிப்பவனும் ஸ்வர்க்கத்தை அடைவார். தடியினுலாவது காலினுலாவது கபிலைப்பசுவைத் தொடுகிறவன் தொட்டமாத்திரத்திலேயே நரகத்திற்கு ஆளாவான். கபிலையை மந்திரத்தோடேயே பிடிக்கவேண்டும்; மந்திரத்தோடேயே விடவேண்டும்; மந்திரமில்லாமல் பிடிப்பவன் புழுவாகப்பிறப்பான். தேகத்தின் மர்மஸ்தானங்களில் அடிபட்ட பசு நோயினல் ஓடமாட்டாமல் எத்தனை அடிகள் நடக்குமோ அத்தனை உலகங்களில், (அதை அடித்தவன்) இருமியாகப்பிறப்பான். பசுவின்ரத்தம் எத்தனை துளிகள் பூமியில்விழுந்தனவோ அத்தனை ஆயிரம்வருஷங்கள் (அதைவிழச்செய்தவன்) நரகத்திலிருக்கவேண்டும். கபிலையை மந்திரத்தினுலேயே பிடிக்கவும் விடவும்வேண்டும். ஸமர்த்தனே! மந்திரமில்லாமல்பிடிக்கப்பட்டால் அது இருளில் அமிழ்த்திவிடும். [1]புத்திமயங்கிக் கபிலையைக்கொண்டு ஜீவிக்கிறமனிதர்கள் அநேகமாயிரம்வருஷங்கள் நரகத்தில்விழுந்திருப்பர். எந்தப்பிராம்மணர்கள் மந்திரத்துடன் கபிலையைப்பிடிக்கின்றனரோ அவர்கள் இவ்வுலகத்திலும் சந்தோஷமடைவர்; பின்னும் குற்றமற்றஉலகங்களை அடைவர். கபிலைப்பசுவை விதிப்படி உபயோகிக்காதவர்களைச் சூத்ரர்களென்றறி' என்றார்.

---

[1]ஒருசொல் விடப்பட்டது.

நூற்றிருபத்தாருவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வ்யாஸருக்கும் சுகருக்கும் ஸம்பாஷணைத்தொடர்ச்சி.)

சுகர், 'ரிஷிஸ்ரேஷ்டரே! அநேகநிறங்களுள்ளபசுக்களில் கபிலைகள்மட்டும் எல்லாவற்றிலும் சிறப்பைஅடைந்ததேன்?' என்று கேட்க, வ்யாஸர் சொல்லலானார்.

'புத்ரனே! கபிலைகள் பசுக்களில்சிறந்தவையானதையும் கபிலவர்ணமானதையும் மனிதர்கள்பூஜிக்கத்தக்கவையானதையும் கேள். முன்னர் அக்நிபகவான் தேவர்களைவிட்டுவிலகிப்போனதென்று நாம் கேட்டிருக்கிறோம். அவன் கோக்களிடம்சென்று, 'சரணுகதர்களைக் காப்பவர்களே! உங்களைச்சரணமடைந்தஎன்னைத் தேவர்களுக்குத் தெரியாமல் மறையுங்கள்' என்றுகேட்டுக்கொண்டான். அதற்கு, அந்தப்பசுக்கள் சேர்ந்து, 'ஓ! அக்நியே! உன்வரவு நல்வரவு. இங்கே எங்களால்மறைக்கப்பட்டநீ தேவர்களால் காணப்படாய்' என்று சொல்லின. பிறகு, தேவர்கள் அக்நியைக் கண்டுபிடிப்பதற்காகத் திரிந்தனர்; கோக்களிடத்தில் அக்நி மறைந்திருப்பதையறிந்து உடனே அவற்றினிடம்சென்று, 'பசுக்களே! உங்களிடத்தில் அக்நி இருக்கிறானே; ஹோமங்களைவகிப்பவனுகியஅக்நியை வெளிப்படுத்துங்கள். உலகங்களை நீங்கள் கெடுக்கலாகாது' என்றுகேட்டுக்கொண்டனர். பசுக்கள், 'அப்படியே ஆகட்டும்' என்றுஒப்புக்கொண்டு அக்நியைக்காண்பித்தன. அந்தத்தேவர்கள் அக்நியைப்பெற்றுச் சந்தோஷமடைந்து உடனே அக்நியைப்பார்த்து, 'நீ கோக்களுக்கு அனுக்ரகம்செய்யக்கடவாய்' என்று ஏவினர். எந்தப்பசுக்களின் தேகங்களில் அக்நிஇருந்ததோ அந்தப்பசுக்கள் கபிலநிறத்தையும் எல்லாப்பசுக்களிலும் மேன்மையையும் அடைந்தன. அவற்றினுல்உலகத்திற்குச்சிறந்தபலனையும் அக்நிபகவான் அளித்தான். ஆதலால், எல்லாநிறங்களிலும்சிறந்த கபிலநிறமுள்ளகோவை, ஆசையில்லாதவனும் நியமமுள்ளவனும் அக்நிஹோத்ரம்தவருதவனும் வேதமோதினவனுமானபிராம்மணனுக்குக் கொடு. கோவானது சிஷ்டனுக்குக் கொடுக்கப்பட்டால் அதன்தேகத்தில் எத்தனைரோமங்கள் இருக்கின்றனவோ அத்தனையுகங்கள் கொடுப்பவர்களையும் வாங்குகிறவர்களையும் பரிசுத்தமாகச்செய்கிறது' என்றார்.

நாற்பத்தேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வ்யாஸருக்கும் சுகருக்கும் ஸம்பாஷணைத்தொடர்ச்சி.)

சுகர், 'எந்தஎந்தஇடங்களில் கபிலநிறமிருப்பதனால் கபிலை யென்றறியலாம்? முன்னர் அதற்கு ரிஷிகளால் காணப்பட்ட லக்ஷணங்கள் எவை?' என்றுகேட்க, வ்யாஸர் சொல்லலானார்.

'குழந்தாய்! [1]கோக்களுள் கபிலையைஅறியும்வகையைக் கேள். கண்கள், கொம்புகள், குளம்புகள், விருஷணம், காதுகள், மூக்கு இவ்வாறிடங்களிலும் கபிலநிறமுள்ளவை அறுவகைக்கபிலைகளென்று சொல்லப்படுகின்றன. மேற்சொன்னலக்ஷணங்களில் ஒன்றுகாணப் பட்டாலும் அதைக் கபிலையென்றறியவேண்டுமென்று அறிஞர் சொல்லுகின்றனர். கண்ணில்கபிலநிறமுள்ளது அக்நியைச்சேர்ந்த தென்றும் குளம்பில்கபிலநிறமுள்ளது ருத்ரரைச்சேர்ந்ததென்றும் கழுத்தில்கபிலநிறமுள்ளது விஷ்ணுவைச்சேர்ந்ததென்றும் மூக்கில் கபிலநிறமுள்ளது சூரியனைச்சேர்ந்ததென்றும் காதில்கபிலநிறமுள் ளது வஸுக்களைச்சேர்ந்ததென்றும் விருஷணங்களில்கபிலநிறமுள் ளது காயத்ரியைச் சேர்ந்ததென்றும் அவற்றின்காரணங்களுக்குத் தக்கபடி அறுவகைஉத்பத்திகள் சொல்லப்படுகின்றன. கோக்களும் பிராம்மணர்களும் காயத்ரியும் ஸத்யமும் வஸந்தகாலமும்பொன்னும் ஒருகாரணத்திலிருந்து உண்டானவை. கண் கபிலநிறமுள்ளகோவை [2]வண்டியிற்கட்டினாலும் கறந்தாலும் ஒருவன் பாவஞ்செய்தவனாவான். அவன் நரகத்தில் நீண்டகாலமிருப்பான்; நரகத்திலிருந்து விடுபட்டபின் விலங்காகப்பிறப்பான்; மானிடப்பிறப்பை அடையும் போதும் பிறவிக்குருடனாகப்பிறப்பான்; கொம்புகள் கபிலநிறமா யுள்ளகோவை வண்டியிற்கட்டினாலும் கறந்தாலும் பலமுறை பிற க்கையிலும் விலங்குஜாதியிலேயே பிறப்பான்; குளம்புகளிற்கபில நிறமுள்ளகோவை வண்டியிற்கட்டினாலும் கறந்தாலும் அந்தஇழி வானமனிதன் ஏழையாய் முடிவில்லாதஇருளில்முழுகுவான். வாலில் கபிலநிறமுள்ளகோவை வண்டியிற்கட்டினாலும் கறந்தாலும் எப்போ தும் தங்கஇடமற்றவனாயிருந்து புழுவாய்ப்பிறப்பான். காதிற்கபில

1 பசு காளைஇரண்டுக்கும் பொதுப்பெயர்.

2 கூலிக்காக வண்டியிற் கட்டுவதும் விற்பதற்காகக்கறப்பதும் பாவமென்று முழுதும் அறிக.

நிறமுள்ளகோவை அறிந்தும் அதைக்கொண்டுபிழைக்கும் இழிவான மனிதன், ஆயிரக்கணக்கானபிறப்புக்களால் சுத்தமடைந்தபின் மானிடப்பிறப்பையடைந்தாலும், சண்டாளன்முதலான பாவஜாதிகளிற் பிறப்பான். மதிகெட்டு மூக்கிற்கபிலநிறமுள்ளகோவைக்கொண்டு பிழைப்பவன் அநேகமாயிரம்வருஷங்கள் விலங்காகப்பிறப்பான்; மானிடஜன்மமெடுத்தபின்னும் நோய்பிடித்தும் பித்துப்பிடித்தும் சக்தியற்றுமிருப்பான். கபிலைகள் தேன்போலவும் நெய்போலவும் நன்மணமுள்ளவையென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. அவற்றைக்கொண்டுஜீவிப்பவன் திர்யக்ஜாதியிற்பிறப்பான்; தாவரமாகவும்பிறந்தபின் மானிடஜன்மமடைவனுயின் இழிந்தவர்ணத்திலும் இழிந்தகுலத்திலும் பிறந்தும் அற்பஆயுளுள்ளவனுயிருப்பான். எந்தப்பாபிகள் கபிலம்ாட்டைக் கோபித்து வண்டியிழுக்கச்செய்கின்றனரோ அவர்கள் மகாப்பிரளயம்வரையில் நரகங்களில் கிடப்பார்' என்று சொன்னர்" என்ருர்.

நூற்றிருபத்தெட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்ரீதேவிக்கும் பசுக்களுக்கும் ஸம்வாதமும், ஸ்ரீதேவி கோழத்தர கோமயங்களில் வஸித்ததும்.)

யுதிஷ்டிரர், "பசுக்களின்சாணத்தில் லக்ஷ்மிஇருக்கிருளென்று கேள்விப்பட்டிருக்கிறேன். இதில் எனக்குப் பெரியஸந்தேகம். இதைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"பரதஸ்ரேஷ்டனே! அரசனே! இந்தவிஷயத்திலும் கோக்களுடன் திருமகளுக்குநடந்தஸம்வாதமாகிய இந்தப் பழையஇதிஹாஸத்தைக் கூறுகின்றனர். ஸ்ரீ தேவியானவள் அழகானவடிவமெடுத்துக்கொண்டு இவ்வுலகத்தில் பசுக்களினிடையில் புகுந்தாள். அவளுடைய அழகின்சிறப்பைக்கண்டு அந்தப்பசுக்கள் வியப்படைந்து, 'ஓ! தேவியே! உன் அழகுக்குநிகர் பூமியிலில்லை. நீ யார்? எங்கிருந்து வருகிறுய்? இறந்தபாக்யமுள்ளவளே! உன்னுடையஅழகின்சிறப்பிஞல் நாங்கள் ஆச்சரியமடைந்தோம். நீ யார்? எங்கே செல்லப்போகிறுயென்று நாங்கள் உன்னைத்தெரிந்துகொள்ளவிரும்புகிறோம்

பொன்னிறமானவளே! இவற்றையெல்லாம் எங்களுக்கு உண்மையாகச் சொல்லக்கடவாய்' என்றுகேட்டன. அதற்கு, ஸ்ரீதேவி, 'உங்களுக்கு ஸுகமுண்டாகட்டும். நான் உலகத்திலுல் விரும்பப்படும் ஸ்ரீ யென்றுபேர்பெற்றவள். அஸுரர்கள் என்னுல் விடப்பட்டுத்தான் அநேகவருஷகாலம் கெட்டுப்போயினர். என்னுல்அடையப்பட்டுத்தான் தேவர்கள் நெடுங்காலமாகச் சந்தோஷப்படுகின்றனர். இந்திரன், சூரியன், சந்திரன், விஷ்ணு, ஜலம், அக்நி, ரிஷிகள், தேவர்கள்எல்லாரும் என்னுல் அனுக்கிரகிக்கப்பட்டுத்தான் விளங்குகின்றனர். கோக்களே! எவர்களிடம் நான்பிரவேசிப்பதில்லையோ அவர்கள் மூழுதும் கெடுகின்றனர். தர்மார்த்தகாமங்களென்னும் மூன்றுபுருஷார்த்தங்களும் என்னுல் அனுக்கிரகிக்கப்பட்டுத்தான் ஸுகத்தைத்தருகின்றன. கோக்களே! இப்படிப்பட்ட சிறப்புள்ளவளென்றும் ஸுகத்தைத்தருகிறவளென்றும் என்னைஅறியுங்கள். உங்களெல்லாரிடத்திலும் எக்காலமும் வஸிக்கவிரும்புகிறேன். குற்றமற்றவர்களே! உங்களை நானே வந்துவேண்டுகிறேன். திருவுள்ளவர்களாகக்கடவீர்கள்' என்று சொன்னுள். பசுக்கள், 'நீ நிலையற்றவள்; சஞ்சலமுள்ளவள்; அநேகருக்குப்பொதுவாயிருப்பவள்.உன்னை நாங்கள் விரும்பவில்லை. உனக்கு எங்கேஇஷ்டமோ அங்கே ஸுகமாகப் போகலாம். நாங்களெல்லாரும் நல்லதேகமுள்ளவர்களாயிருக்கிறோம். இப்போது எங்களுக்கு உன்னுல் ஆகவேண்டியதென்ன? உன்னுல் ஆகவேண்டியபிரயோஜனம் எங்களுக்கு ஒன்றுமில்லை. உன் இஷ்டப்படி செல்லலாம்' என்றுகூறின. ஸ்ரீதேவி, 'பசுக்களே! நீங்கள் இப்போது என்னை அங்கீகரியாமலிருப்பது உங்களுக்குத் தகுதியா? கிடைக்கஅரியவளானஎன்னை ஏன் அங்கீகரியாமலிருக்கிறீர்கள்? நல்லதவமுள்ளவர்களே! தாமாகவந்தவர்களுக்கு அவமதிப்புண்டாவதுநிச்சயமென்று உலகத்திற்பரவும் இப்பழமொழி உண்மையானது. தேவரும் அஸுரரும் கந்தர்வரும் பிசாசரும் நாகரும் மனிதரும் அரக்கரும் பெரியகடுந்தவஞ்செய்து என்னை ஆராதிக்கின்றனர். கோக்களே! இப்போது என்னை அங்கீகரிப்பதுதான் உங்களுக்குத்தகுதி. ஓ! சாந்தமானவர்களே! சராசரங்களடங்கிய மூவுலகங்களிலும் நான் அவமதிப்பதற்குரியவளல்லேன்' என்றுசொன்னுள். கோக்கள், 'தேவியே! நாங்கள் உன்னை அவமதிப்பதுமில்லை; தூஷிப்பதுமில்லை. நீ நிலையற்றவள்; மனவுறுதியில்லாதவள். அதனுல், உன்னை விட்டுவிடுகிறோம். பலசொல்லி என்ன? நீ விரும்பினஇடத்திற்குச் செல்லலாம். குற்றமற்றவளே!

நாங்களெல்லாரும் சிறந்ததேகமுள்ளவர்களாயிருக்கிறோம். எங்களுக்கு உன்னுல்என்ன?' என்றுகூறின. ஸ்ரீதேவி, 'நான் உங்களால் அவமதிக்கப்பட்டேனென்பது காரணமாக உலகத்திலுள்ள எல்லாமனிதர்களாலும் அவமதிக்கப்படுவேன். என்மீது தயைசெய்ய வேண்டும். நீங்கள் மகானுபாவைகள்; காப்பாற்றவல்லவர்கள். உங்களிடம் சரணுகதியாகவந்தடைந்த குற்றமற்றஎன்னைஎன்றும்காப்பாற்றுங்கள். நீங்கள் கௌரவிப்பதை விரும்புகிறேன். நீங்கள் எப்போதும் சுபமானவர்கள். உங்கள் அங்கங்களுள் மிக்கஇழிவான ஒரிடத்திலாவது நான் வஸிக்கவிரும்புகிறேன்., குற்றமற்றவர்களே! உங்களுடைய அங்கங்களில் ஒன்றும் இகழப்பட்டதாகக் காணப்படவில்லை. நீங்கள் புண்ணியமானவர்கள்; அழகானவர்கள்; பரிசுத்தமானவர்கள். உங்கள்பின்பாகத்தை எனக்குக் கொடுங்கள். உங்கள் தேகத்தில் எந்தஇடத்தில் நான் இருக்கலாமோ அதை நீங்களே எனக்கு உரைக்கக்கடவீர்' என்றுசொன்னுள். வேண்டே! மேன்மை பெற்றவையும்ஏழைகளுக்கிரங்குகின்றவையுமானகோக்கள் ஸ்ரீதேவியினுல் இவ்வாறு சொல்லப்பட்டபோது எல்லாம்சேர்ந்து மரியாதையுடன் அவளைப்பார்த்து, 'புகழுடையவளே! உன்னுடையவேண்டுகோளை நாங்கள் அவசியம் நிறைவேற்றவேண்டியவர்கள். சிறந்தவளே! எங்கள் கோமயத்திலும் மூத்திரத்திலும் நீ இருக்கலாம். அவை பரிசுத்தமானவை' என்றுசொல்லின. ஸ்ரீதேவி, 'நல்லவேளையாய் நீங்கள் என்னிடம்அன்புவைத்து அனுக்ரகம்செய்தீர்கள். ஸுகத்தைக் கொடுப்பவர்களே! அப்படியே ஆகட்டும். உங்களுக்கு ஸுகமுண்டாகக்கடவது. உங்களால் பூஜிக்கப்பெற்றேன்' என்று சொன்னுள். பாரதனே! திருமகள் கோக்களுடன் இவ்வகையாக உடன்பாடுசெய்துகொண்டு அவை பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவ்விடத்திலேயே மறைந்தாள். புத்ரனே! கோமயத்தின்மகிமையைப்பற்றி இவ்விதமாக உனக்கு உரைத்தேன். கோக்களின் மகிமையைப்பற்றித் திரும்பவும் சொல்லுகிறேன்; கேள்.

நூற்றிருபத்தொன்பதாவது அத்தியாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பிரம்மதேவர், கோலோகம் தேவலோகத்துக்கு மேலிருப்பதன் காரணத்தை இந்திரனுக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிர ! கோதானஞ்செய்துகொண்டும் ஹோமஞ்செய்து மிகுந்ததைப்புசித்துக்கொண்டுமிருப்பவர் எவரோ அவர் ஸத்ரயாக முதலிய யாகங்களைத் தினந்தோறும் செய்தவராகிறார். இவ்வுலகத்தில் தயிரும் நெய்யுமின்றி யாகம் நடப்பதில்லை. ஆதலால், கோக்களாலேதான் யாகம் நிறைவேறுவது காணப்படுகிறது. கோதானம் எல்லாத்தானங்களிலும் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. கோக்கள் மிகச்சிறந்தவை; பரிசுத்தமானவை ; பிறரைப் பரிசுத்தஞ்செய்பவற்றுள் சிறந்தவை. நன்மைக்காகவும் பாபநிவிருத்திக்காகவும் அவற்றையே பூஜிக்கவேண்டும். அவற்றின்பால் தயிர் நெய்களும் எல்லாப்பாவங்களையும் போக்குகின்றவை. கோக்கள் இம்மையிலும் மறுமைபிலும் சிறந்தசக்தியாகச் சொல்லப்படுகின்றன. பரதஸ்ரேஷ்டனே ! கோக்களுக்குமேலானபரிசுத்தம் ஒன்றுமில்லை. யுதிஷ்டிர! இந்தவிஷயத்தில் பிரம்மதேவருக்கும் இந்திரனுக்கும் நடந்த ஸம்பாஷணையாகிய ஒருபழையசரித்திரம் கூறுகின்றனர். அஸுரர்கள் வெல்லப்பட்டபிறகு,இந்திரன்மூன்றுலகங்களுக்கும்அரசனானன். எல்லாப்பிரஜைகளும் ஸத்யத்தையும் தர்மத்தையும்கைப்பற்றி மகிழ்ந்திருந்தன. குந்திபுத்ரனே ! அப்போது ஒருகால், ரிஷிகள், கந்தர்வர், கின்னரர், நாகர், அரக்கர், தேவர், அஸுரர், கருடர், (கஸ்யபர் முதலிய) ஸ்ருஷ்டிகர்த்தர்கள் ஆகியஇவர்கள் பிரம்மதேவரை அடுத்திருந்தனர். நாரதரும், பர்வதரும், விசுவாஸு ஹாஹா ஹூஹூ என்னும் கந்தர்வர்களும் தேவலோகத்துக்குரியதானங்களைப்பாடி அந்தப்பிரபுவை ஆராதித்தனர். அவ்விடத்தில் அப்போது காற்று தெய்வலோகத்து மலர்களை அடித்துவந்தது. ஆறுருதுக்களும் நல்ல வாஸனையுள்ளபுஷ்பங்களைத் தனித்தனியே கொண்டுவந்தன. எல்லாப்பிராணிகளும்சேர்ந்திருப்பதும் தேவவாத்தியங்கள் முழங்குவதும் தெய்வப்பெண்களின் நாட்டியங்கள் நிரம்பியிருப்பதுமாகியஅந்தத்தேவஸபையில் இந்திரன் தேவர்க்கதிபதியாகிய பிரம்மதேவரை வணங்கி அபிவாதனஞ்செய்து, 'பகவானே! பிதாமஹரே! கோலே

கமானது லோகங்களுக்கெல்லாம் தலைவர்களாகிய தேவர்களுக்கு மேலிருப்பதேன்? இதனைத் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். ஈசுவரரே! கோக்கள் தேவர்களுக்குமேல் ரஜோகுணமில்லாமல் ஸுகமாகவஹிக்கும்படி என்னதவம் செய்தன? என்னபிரம்மசர்யவிரதம் செய்தன?' என்றுவினவினன்.

பிறகு, பிரம்மதேவர் பலாஸுரனைவதஞ்செய்தவனாகிய அந்த இந்திரனைப்பார்த்து, 'பலனைக்கொன்றவனே! பிரபுவே! நீ கோக்களை எப்பொழுதும் மதியாமலேஇருக்கிறாய். அதனால், அவற்றின் மகிமையை நீ அறியவில்லை. தேவஸ்ரேஷ்டனே! கோக்களின்சிறந்த சக்தியையும் மகிமையையும்கேள். வாஸவனே! கோக்கள் யாகத்தின்உறுப்புக்களென்றும் யாகமேயென்றும் சொல்லப்படுகின்றன. அவையின்றி யாகம் எவ்வகையிலும் நடவாது. அவை பாலினாலும் நெய்யினாலும் ஜனங்களைக் காப்பாற்றுகின்றன. அவற்றின்பிள்ளைகளும் பயிர்செய்வதற்கு உதவிசெய்கின்றன.பலவகைத்தானியங்களையும் விதைகளையும் உண்டுபண்ணுகின்றன.அவற்றினால் எல்லாயாகங்களும் ஹவ்யகவ்யங்களும் நடந்துவருகின்றன. தேவேந்திரனே! அந்தப்பசுக்களும் அவற்றின்பால்தயிர்நெய்யும் புண்ணியமானவை. பசுக்கள் எல்லாப்போகங்களையும் கொடுக்கின்றன. பசியினாலும் தாகத்தினாலும் பீடிக்கப்பட்டஜனங்களையும் தவத்தினால்வருந்தின ரிஷிகளையும் அவை காப்பாற்றுகின்றன. வாஸவனே! பசுக்கள் ஜனங்களைத் தொழில்களிலும் நற்கருமங்களிலும் ஒழுங்காகப் பிரவிருத்திக்கச்செய்கின்றன. அதனால், அவை எப்போதும் நமக்குமேலிருக்கின்றன. இந்திரனே! நாராயணரைச்செய்தவனே! தேவர்களுக்குமேல் கோக்கள்வஹிப்பதற்கு இந்தக்காரணம் உனக்குச்சொன்னேன். வாஸவனே! பசுக்கள் வரம்பெற்றவை; வரமளிப்பவை. அவை புண்ணியகருமங்களுக்குரியவை ; பாவத்தைப் போக்குகின்றவை; மங்களகரமானலக்ஷணங்கள்பொருந்தியவை.பலாஸுரனைஸம்ஹரித்ததேவேந்திரனே! பசுக்கள் எதற்காகப் பூமிக்குப்போயினவென்பதைப்பற்றியும் சொல்லுகிறேன்; முழுதும்கேள். அப்பா! தேவஸ்ரேஷ்டனே! முந்தியதேவயுகத்தில் மிக்கபலசாலிகளான அஸுரராஜர்கள் மூவுலகங்களையும் ஆண்டுகொண்டிருக்கையில், புத்ரனைக்குறித்து ஒற்றைக்காலால் இடைவிடாமல்நின்று செயற்கரியதபஸ்தவஞ்செய்துகொண்டிருந்த அதிதிதேவியின்கர்ப்பத்தில்விஷ்ணுபிரவேசித்திருக்கையில், அந்தமஹாதேவி பெருந்தவஞ்செய்வதைக்கண்டு தக்ஷர்மகளும் தர்மத்

தையே தலைமையாகக்கொண்டவளுமான ஸுரபிதேவி உற்சாகத்துடன் கடந்தவஞ்செய்தாள். அவள் பெருந்தவஞ்செய்துகொண்டு தேவர்களாலும் கந்தர்வர்களாலும் அடையப்பட்ட அழகிய கைலைமலைச்சிகரத்தில்பதினாயிரம்வருஷம்ஒற்றைக்காலால்நின்றாள்.புரந்தரனே! அவளுடையதவத்தினால்பீடிக்கப்பட்டதேவர்களும் ரிஷிகளும் நாகர்களும் என்னுடன் அங்கேசென்று அந்தச்சிறந்தவளைப் பணிந்தனர். அப்போது அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த ஸுரபிதேவியைப் பார்த்து, நான், 'ஓ! குற்றமற்றதேவியே! நீ எதற்காகக் கடந்தவஞ் செய்கிறாய்? மஹாநுபாவையே! சிறந்தவளே! இந்தஉன்தவத்தினால் உன்மேல் சந்தோஷமடைந்து உனக்குவரங்கொடுக்கவந்திருக்கிறேன். வரம்கேள்' என்றுசொன்னேன். அதற்கு, ஸுரபி, 'உலகங்களைப்படைத்தவரே! பகவானே! எனக்கு இப்போது வரம்வேண்டாம். குற்றமற்றவரே! நீர் என்மேல் இப்போது அன்புகூர்ந்திருப்பதே எனக்கு வரம்' என்றுசொன்னாள். தேவர்க்கதிபதியே! சசிவின்கணவனே! இவ்வாறுசொல்லும் அந்தச்சுரபிதேவிக்கு நான் சொன்னமறுமொழியைக் கேள். 'தேவியே! ஒன்றையும்விரும்பாமல் நீசெய்தபரிசுத்தமானதவத்தினால் நான் உன்மேல் அனுக்கிரகம் வைத்திருக்கிறேன். ஆதலால், இறவாமையென்னும்வரத்தை உனக்குக் கொடுக்கிறேன். மூன்றுலோகங்களுக்கும்மேலே நீ இருப்பாய். அந்தக்கோலோகமானது என்அனுக்கிரகத்தினால் பிரக்கியாதியாயிருக்கும். மஹாநுபாவையே! மனிதர்களில்உனக்குப்பணிவிடைசெய்தசிறந்தஜனங்களும் உன்னைத்தஞ்சமடைந்தவர்களும் அந்தக்கோலோகத்தில் வஸிப்பர். சிறந்ததேவியே! தேவர்க்கும் மனிதர்க்கும்உரியஸுகங்களும் சொர்க்கஸுகமும் நீ மனத்தில்நினைத்தமாத்திரத்தில் உனக்கு அமைந்துவிடும்' என்றுசொன்னேன். ஆயிரங்கண்ணனே! அந்த ஸுரபியின்உலகங்கள் போகங்களெல்லாம்உள்ளவை. வாஸவனே! இறப்பும் மூப்பும் அங்கே வருவதில்லை; வெப்பமில்லை; சோர்வில்லை; எவ்விதமானகெடுதலும் அங்கில்லை. வாஸவனே! சிறந்தகாடுகளும் சிறந்தவீடுகளும் நினைத்தபடிசெல்லும் அழகியவிமானங்களும் அங்குள்ளன.தாமரைமலர்போன்றகண்ணுள்ளவனே! பிரம்மசாரிவிரதத்தினாலும்உபவாஸத்தினாலும்பொய்யாமையினாலும் புலன்களையடக்குவதினாலும் பலவிததானங்களாலும் புண்ணியங்களாலும் தீர்த்தயாத்திரைகளாலும் சிறந்ததவத்தினாலும் நித்தியகர்மங்களைநன்முகச்செய்வதினாலும் அந்தக்கோலோகத்தை அடையலாம். இந்திரனே! நீ

கேட்டதற்கு முழுதும்சொன்னேன். அஸுரர்களையழிப்பவனே! நீ கோக்களை அவமதிக்கலாகாது' என்று சொன்னார். யுதிஷ்டிரா! இதைக்கேட்டபிறகு,தேவேந்திரன் எக்காலமும் கோக்களைப்பூஜித்து அவற்றின்மேல் கௌரவத்தையும்வைத்தான். பெருங்கீர்த்தியுள்ளவனே! பாவத்தைப்போக்குவதும் சிறந்தபரிசுத்தமும் உத்தமமுமான கோமாஹாத்மியத்தை உனக்குச்சொன்னேன். புருஷஸ்ரேஷ்டனே! எல்லாப்பாவங்களையும் விடுவிக்கும்உபாயம் உரைக்கப்பட்டது.ஹவ்ய கவ்யங்களிலும் யாகங்களிலும் சிராத்தங்களிலும் எப்போதும் பக்தியுடன் இதைப் பிராமணர்களுக்குச்சொல்லுகிறவனுக்கு எவ்வா இஷ்டவஸித்தியும் அழியாதபித்ருதிருப்தியும் உண்டாகின்றன. கோக்களின்மேல்பக்தியுள்ள மனிதன் விரும்பினவற்றையெல்லாம் அடைவான். கோக்களின்மேல் பக்தியுள்ளபெண்களும் ஸுகங்களை அடைவர். புத்திரனைவிரும்புகிறவன் புத்திரனையும் பெண்ணைவிரும்புகிறவன் பெண்ணையும் தனத்தைவிரும்புகிறவன் தனத்தையும் தர்மத்தை விரும்புகிறவன் தர்மத்தையும் வித்தையைவிரும்புகிறவன் வித்தையையும் ஸுகத்தைவிரும்புகிறவன் ஸுகத்தையும்அடைவர். பரதனே! கோக்களிடம்பக்தியுள்ளவனுக்குக் கிடைக்காதது ஒன்றுமில்லை" என்றார்.

நூற்றைமுப்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பொன்னின் வரலாறு முதலியன.)

யுதிஷ்டரர், "கோதானமானது இவ்வுலகில் மிகச்சிறந்ததென்றும் தர்மத்தைக்கருதும் அரசர்களுக்கு முக்கியமானதென்றும் பிதாமஹரானநீங்கள் சொன்னீர்கள். ராஜ்யபாரம்செய்வது எப்போதும் கஷ்டம். நான்கு ஆஸ்ரமங்களையும் அறிவது கடினம்; சாரர்களைக் கொண்டறிவதும் முடியாது. மனத்தேர்ச்சியில்லாதவர்கள் அதை வகிக்கமுடியாது. பெரும்பாலும் அரசர்களுக்கு நல்லகதியில்லை. பூமியைத்தானம்செய்பவர்கள் நிச்சயமாகச் சுத்தராவார்கள். கௌரவஸ்ரேஷ்டரே! எல்லாத்தர்மங்களையும் நீர் எனக்கு உரைத்தீர். அப்படியே ந்ருகன்செய்தகோதானத்தைப்பற்றியும் நாசிகேதரென்னும் ரிஷி முன்னமே கோதானத்தைப்பற்றிச்சொல்லியதையும் நீர் சொன்னீர்.. எல்லாக்கர்மங்களுக்கும் எல்லாயாகங்களுக்கும் பூமி, பசு,

பொன்இவை தக்ஷிணைகளென்று வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொன் தக்ஷிணையென்னும்சுருதியே முக்கியமாயிருக்கிறது. பிதாமஹரே! இதைப்பற்றிச் சரியாகக் கேட்க விரும்புகிறேன். பொன்என்பது எது? அது எக்காலத்தில் எப்படிஉண்டானது? எவ்வுருவமானது? அதன்தேவதையென்ன? பலனென்ன? எதனால் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது? அதிஞர் ஸுவர்ணதானத்தைச் சிலாகிப்பது ஏன்? யாகங்களில் தக்ஷிணைக்குப் பொன்சிறந்ததாயிருப்பது எதனால்? பூமியையும் பசுக்களையும்காட்டிலும் பொன்னானது சிறந்தபரிசுத்தமாகவும் தக்ஷிணைக்குமுக்கியமாகவுமிருப்பது ஏன்? பிதாமஹரே! அதைச்சொல்லும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார். "அரசனே! பொன்னுண்டான வகையை, நான்அறிந்துகொண்டபடி அனேககாரணங்களுடன் விரிவாகச்சொல்லுகிறேன். கவனித்துக்கேள். சிறந்தபராக்ரமமுள்ளவரும் என்தந்தையுமாகிய சந்தனுமரணமடைந்தபோது அவருக்குச் சிராத்தம்கொடுப்பதற்காக நான் கங்கையின்உற்பத்தியிடத்திற்குப் போனேன். புத்திரனே! அங்கேபோய் என்பிதாவின்சிராத்தகாரியத்தைச் செய்யத்தொடங்கினேன். அப்போது, என்தாயாகியகங்கையும் அதற்கு உதவிசெய்தாள். அங்கேவந்த அநேகதவரிஷிபெற்றரிஷிகளை உட்காரவைத்துத் தர்ப்பணமுதலியகர்மங்களை நான் தொடங்கினேன். முதலிற்செய்யும் அந்தக்கருமத்தைச் சாஸ்திரப்பிரகாரம் ஊக்கத்துடன்முடித்து விதிப்படி ஸரியாகப் பிண்டதானம் செய்யத்தொடங்கினேன். ராஜனே! அப்போது அழகானதோள்வளையையும் தொங்குகின்றஅணிகளையுமுடையஒருகை அந்தப்பரப்பினதர்ப்பங்களைஒதுக்கிக்கொண்டு இளம்பிற்று. பரதஸ்ரேஷ்டனே! அந்தக்கையைப்பார்த்து என்பிதாவே நேரேவாங்கிக்கொள்ளுகிறரென்று சற்றுநேரம்மிக்கஆச்சரியமுற்றேன். பிரபுவே! அதன்பிறகு, நான் சாஸ்திரத்தைஆராயும்போது, எனக்குத் திரும்பவும் வேறு எண்ணமுண்டாயிற்று. 'பிதாவின்கையில் பிண்டதானம் செய்ய வேண்டுமென்னும்விதி வேதங்களிலில்லை. மனிதன் கொடுக்கும்பிண்டத்தைப் பிதிருக்கள்நேரேவாங்குவது எங்குமில்லை. தர்ப்பங்களில் பிண்டம்கொடுக்கவேண்டுமென்பதுதான் விதிக்கப்பட்டுள்ளது' என்கிறபுத்தி எனக்கு உண்டாயிற்று. பரதஸ்ரேஷ்டனே! அதன்பிறகு, நான் பிதாவினது அந்தக்கையைக்கண்டதைக்கவனியாமல் சாஸ்திரத்தையேநம்பிப் பிண்டவிதியின்ரகஸ்யத்தைநினைத்து அந்தப்பிண்டங்களையெல்லாம் தர்ப்பங்களில்வைத்தேன். ராஜனே! சாஸ்திரத்தை

அனுஸரித்துத்தான் அப்படிச்செய்தேனென்றறி. வேந்தனே! அதன் பிறகு, என்தந்தையின்அந்தக்கை மறைந்தது. பிறகு, கனவில் பித்ருக்கள் எனக்குத்தோன்றினர். அவர்கள் அன்புடன் என்னைப்பார்த்துச் சொன்னார்கள். 'பரதஸ்ரேஷ்டனே! நீ தர்மகாரியத்தில் மயங்காமலிருக்கிறயே. இந்தஉன்நல்லறிவினால் நாங்கள் திருப்தியடைந்தோம். ராஜனே! நீ இப்போது சாஸ்திரத்தையே பிரமாணமாகச் செய்ததனால் உன்னுடையஆத்மாவும் தர்மமும் சாஸ்திரமும் வேதங்களும் பித்ருக்களும் ரிஷிகளும் பிரம்மதேவரும் ஆசாரியர்களும் தக்ஷர்முதலான பிரஜாபதிகளும் [1] நம்பும்படி செய்யப்பட்டனர்; அசைக்கப்படாமல் நிலைபெற்றனர். பரதஸ்ரேஷ்டனே! நீ இப்போது நல்லகாரியம்செய்தாய். ஆனால், பூமிக்கும்பசுக்களுக்கும்பிரதியாகப் பொன்னைக் கொடுக்கவேண்டும். இப்படிச்செய்தால் நாமும் நம் முடையமுன்னோர்களனைவரும் தர்மமும் பரிசுத்தர்களாகச் செய்யப்பட்டவராவோம். அந்தப்பொன் தானே சிறந்தபரிசுத்தம். பொன்னைக்கொடுப்பவர்கள் தம்குலத்தில் முன்பதின்மர் பின்பதின்மர்களைக் கரையேற்றுகின்றனர்' என்பதுஎனக்கு என்பித்ருக்கள்சொல்லியது. ராஜனே! மனிதர்க்கதிபதியே! பரதஸ்ரேஷ்டனே! அதன்பிறகு, நான் கண்விழித்துக்கொண்டு ஆச்சரியமடைந்து பொன்னைக்கொடுப்பதில் எண்ணம்வைத்தேன். வேந்தனே! பிரபுவே! தனத்தையும் ஆயுளையும்கொடுப்பதாகிய பரசுராமரின்பூர்வசரித்திரத்தையும் கேள். முன்னே, பரசுராமர் கடுமையானகோபங்கொண்டு இருபத்தொரு முறை பூமியில் க்ஷத்திரியர்களில்லாமற்செய்தார். மகாராஜனே! மலர் போன்றகண்களையுடையவீரரானபரசுராமர் பூமியைமுழுதும்வென்ற பிறகு,பிராம்மணர்களாலும் க்ஷத்திரியர்களாலும் பூஜிக்கப்பெற்றதும் எல்லாவிருப்பங்களையும்கொடுப்பதும் எல்லாப்பிராணிகளையும் பரிசுத்தம்செய்வதும் பராக்கிரமத்தையும் புகழையும் விருத்திசெய்வதுமாகிய அசுவமேதயாகத்தைச் செய்தார். செய்தஅந்தயாகத்தினால் பாவம் விலகின அந்தவீரரானபரசுராமர் தம்ஆத்மா பாவம்போய் லேசாயிருப்பதை உணரவில்லை. பாரதனே! அந்தமகாத்மாவானவர் அந்தச்சிறந்தயாகத்தை நிரம்பினதக்ஷிணைகளோடுசெய்தபிறகும் வெறுப்புள்ளவராகி, சாஸ்திரங்களில்தேர்ந்த ரிஷிகளையும் தேவர்களையும்பார்த்து, 'மகானுபாவர்களே! கொடியகாரியம்செய்யும்மனிதர்களுக்குப் பாவத்தைப்போக்குபவற்றுள் சிறந்ததெதுவோ அதைச் சொல்லுங்

1 இல்லாவிடின், பிதாவின்கையின்றிப் பிண்டத்தைக்கொடாமல் ஜனங்கள் நம்பிக்கையற்றுப் போவர் என்பது.

கள்' என்றுகேட்டார். இவ்வாறுசொல்லப்பட்டபின், வேதங்களும் சாஸ்திரங்களும்தெரிந்தஅம்மஹரிஷிகள், 'ஓ! ராமரே! வேதம்பிரமாண மென்றறிந்து பிராம்மணர்களைப் பூஜிக்கவேண்டும். பாவம்விலகுவ தைப்பற்றிப் பிரம்மரிஷிகளின் கூட்டங்களிடம் திரும்பவும் கேட்க வேண்டும். மிக்கஅறிஞரானஅவர்கள் எதைச்சொல்லுவார்களோ அதைச் செய்யக்கடவீர்' என்று சொன்னார்கள். பிறகு, சிறந்த மகிமையுள்ளபரசுராமர் தேவரிஷிகளாகிய வஸிஷ்டரையும் அகஸ்தி யரையும் காசியபரையும்நோக்கி, 'சாதுக்களிற்சிறந்ததபோதனர்க ளாகிய பிராம்மணோத்தமர்களே! நான் எப்படிப் பரிசுத்தனாவேன்? என்னகருமம்செய்வதனால், அல்லது என்னதானம்செய்வதனால் என் பாவம்போமென்கிறஎண்ணம் எனக்குஉண்டாயிருக்கிறது. எனக்கு அனுக்கிரகம்செய்யும்விருப்பம் உங்களுக்குஇருக்குமாயின், என்னைச் சுத்தப்படுத்துவது எதுஎன்பதைச் சொல்லுங்கள்' என்றுகேட்டார். அதற்கு ரிஷிகள், 'ப்ருகுவம்சபுத்திரரே! இவ்வுலகத்தில் பாவம் செய்தமனிதன் கோக்களையும் பூமியையும் தனத்தையும்கொடுப்பத னால் பரிசுத்தனாகிறானென்று கேள்விப்பட்டிருக்கிறோம். பிரம்ம ரிஷியே! எல்லாவற்றிலும்சிறந்தபாவனமாகிய மற்றொருதானத்தை யும் கேளும். தேவர்க்குரியதும் மிக்கஆச்சரியமான உருவமுள்ள தும் அக்னியில்பிறந்ததுமாகிய ஸுவர்ணமென்றுபெயர்பெற்ற பொ ருள் முற்காலத்தில் தன்சக்தியினால் உலகங்களையெரித்துக்கிளம்பின தென்றுகேட்டிருக்கிறோம். அதைக்கொடுப்பவன் பயன்பெறுவன்' என்றுகூறினர். பிறகு, மகிமைபொருந்தினவரும் தவஉறுதியுள்ள வருமானவஸிஷ்டர் அவரைப்பார்த்து, 'ராமா! அனலுக்கொப்பான ஒளியுள்ளபொன்னைது எப்படியுண்டானதென்பதைக் கேளும். அது தீர்க்கஜீவனத்தபலனைக் கொடுக்கும். அது இவ்வுலகத்தில் தானத் திற்கு முக்கியமாகச்சொல்லப்படுகிறது. சிறந்தகைகளையுடையவரே! ஸுவர்ணமென்பது யாது, அது எங்கிருந்துவந்தது, குணங்களில் மிகச்சிறந்ததான்து எவ்வகையென்பவற்றையெல்லாம் சொல்லுகி றேன்; கேளும். உண்மையையாராயுங்கால், அக்னியும் சந்திரனும் சேர்ந்ததுதான் பொன்என்றறியும். செம்மறியாடு அக்னி; வெள் ளாடு வருணன்; குதிரை சூரியன்; யானைகள் மான்கள் ஸர்ப்பங்கள் எருமைகள் ஆகியஇவை அஸுரர்கள்; ப்ருகுபுத்திரரே! கோழிக ளும் பன்றிகளும் ராக்ஷஸர்கள்; யஜ்ஞமும் கோக்களும் பாலும் சந்திரனும் பூமியென்று தர்மசாஸ்திரம் கூறுகின்றது. உலகத்தை யெல்லாம்கடைந்து ஓர் ஒளிக்கட்டியானபொன்உண்டாயிற்று. பிரம்ம

ரிஷியே! அந்தப்பொன்னைனது இவையெல்லாவற்றிலும் மிகச்சிறந்த இரத்தினம். இந்தக்காரணம்பற்றித்தான் தேவர்களும் கந்தர்வர்களும் நாகர்களும் அரக்கர்களும் மனிதர்களும் பிசாசர்களும் கிரீடங்கள் தோள்வளைகள்முதலியபலஅணிகலங்களாக அந்தப்பொன்னையேஅவ் சியமாக அணிந்துகொள்ளுகின்றனர். ப்ருகுஸ்ரேஷ்டரே! பொன் னுற்செய்யப்பட்ட அவ்வாபரணங்களாலேதான் அவர்கள் விளங்கு கின்றனர். அரசரே! ஆதலால், பொன்னைனது பூமி கோக்கள் இரத் தினங்கள் ஆகியஎல்லாப்பாவனங்களிலும் சிறந்தபாவனமாகச்சொல் லப்படுகிறதென்றறியும். பிரபுவே! பூமியையும் கோக்களையும் மற்ற வற்றையும் கொடுப்பதிலும் பொன்னைக்கொடுப்பது மிகச்சிறந்தது. தேவதைக்கொப்பான , ஒளியுள்ளவரே! அழியாதபுண்யகரமான அதைப் பிராம்மணேத்தமர்களுக்குக்கொடும். இந்தச்சொர்ணதா னம் எல்லாவற்றிலும் சிறந்தபாவனம். பொன்தான் எல்லாத்தக்ஷிணை களிலும்விதிக்கப்படுகிறது. பொன்னைக்கொடுத்தவர் எல்லாம்கொடுத் தவராகிறார். பொன்னைக்கொடுத்தவர் தேவர்களைக்கொடுத்தவருமா கிறார். அக்னிதான் எல்லாத்தேவர்களுமாக இருப்பது. பொன் அக்னியின் உருவம். ஆதலால், பொன்னைக்கொடுப்பவன் எல்லாத் தேவர்களையுங்கொடுப்பவனாகிறான். புருஷஸ்ரேஷ்டனே! அதற்கு மேற்பட்டதொன்றையும் (பெரியோர்கள்) அறிவதில்லை. பிரம்மரி ஷியே! ஆயுதம்பிடித்தவரிற்சிறந்தவரே! பொன்னின்மகிமையைப் பற்றி நான் திரும்பவும் சொல்லுகிறேன்; கேளும். பிருகுபுத்திரரே! முன்னே பிரஜைகளைப்படைத்தவராகிய ஸ்வாயம்புவமனு, புராண் கதைசொல்லும்போது நான்கேட்டது இது. பிருகுகுலஸ்ரேஷ் டரே! சூலாயுதம்பிடித்தவரும் மஹாத்மாவுமான சிவபகவான்சிறந்த தாகிய இமயமலையில் உமாதேவியைமணம்புரிந்து அம்மஹாத்மா வான பகவானும் தேவியும்சேர்ந்தபோது தேவர்களனைவரும்பயந்து ருத்ரரிடம்வந்தனர். ப்ருகுஸ்ரேஷ்டரே! அவர்களனைவரும், மகா தேவரும்வரமளிப்பவளாகியஉமாதேவியும்வீற்றிருக்கையில் சிவனைத் தலைவணங்கி நமஸ்கரித்து, 'ஓ! குற்றமற்றதேவரே! உமக்கு உமா தேவியுடன் சேர்க்கையுண்டாயிற்று. தவத்திலும் மகிமையிலும் இவளும் மிகச்சிறந்தவள்; நீரும் மிகச்சிறந்தவர். தேவரே! உம் மூடையவீரியம் வீணாகாது. இந்தஉமாதேவியின் வீரியமும் அப் படியே. தேவரே! பிரபுவே! உங்களிருவருக்கும் பிறக்கும்சந்ததி மிக்கவலிமையுள்ளதாயிருக்கும். அது மூவுலகங்களிலும் ஒன்றை யும் மீறச்செய்யாதென்பது நிச்சயம். பெரியகண்களையுடையவரே!

உலகங்களுக்கு ஈசுவரரே ! நீர் மூன்றுலகங்களுக்கும் நன்மையைக் கருதி வணங்கினஇத்தத்தேவர்களுக்கு வரம்தாரும். பிரபுவே ! சந்ததிக்குரிய உமதுசிறந்தவீரியத்தை அடக்கும். மூவுலகங்களிலும் முக்கியமாகவுள்ளநீங்களிருவரும் உலகத்தை வருத்துவீர்கள். உங்களிருவருக்கும் பிறக்கும்சந்ததி தேவர்களைநிச்சயமாக மறைத்துவிடும். பிரபுவே ! பூமிதேவியும் ஸ்வர்க்கமும் ஆகாயமும் ஒன்றுசேர்ந்தாலும் உமதுவீரியத்தைத் தாங்கமுடியாதென்று நினைக்கிறேம் ; இந்தஉலகமெல்லாம் உமதுவீரியத்தின்மகிமையினால் எரிக்கப்படும். பிரபுவே ! பகவானே ! ஆதலால், எங்கள்மேல் அனுக்கிரகம்வைக்கக்கடவீர். தேவர்களிற்சிறந்தவரே ! உமக்கு இந்தஉமாதேவியினிடம் புத்திரன்பிறவாமலிருக்கவேண்டும். ஜ்வலிக்கின்ற சிறந்தவீரியத்தை மனவன்மையினால் அடக்கக்கடவீர்' என்றுவேண்டினர். பிரம்மரிஷியே ! அவர்கள் இவ்வாறுசொல்லும்போது இடபக்கொடியுள்ளபகவான், 'அப்படியேயாகட்டும்' என்று தேவர்களுக்கு மறுமொழிகூறித் தம்முடையவீரியத்தை மேலேக்கச்செய்தார். அந்தவிருஷபவாகனராகிய சிவபெருமான் அதுமுதலாகஊர்த்வரேதஸ் ஆனார். சந்ததிக்குக்கெடுதியைச் செய்ததனால் உமாதேவி கோபித்துத் தேவர்களைநோக்கி, 'தேவர்களே ! சந்ததியைவிரும்பின என்கணவரைமறுத்ததனால் நீங்களனைவரும் சந்ததியில்லாமற்போகக்கடவீர். தேவர்களே ! என்சந்ததிக்கு நீங்கள் இப்போது இடையூறு செய்ததனால் உங்களெல்லாருக்கும் சந்ததியில்லாமற்போகக்கடவது' என்று பெண்தன்மையினால் கடுஞ்சொல்லைச் சொன்னாள். ப்ருகுஸ்ரேஷ்டரே! அவள் சபித்தகாலத்தில் அந்தத்தேவர்களில் அக்னிமட்டும் இருக்கவில்லை. உமாதேவியின் அந்தச்சாபத்தினால் தேவர்கள் சந்ததியில்லாமற்போயினர். ருத்திரரானவர் ஒப்பற்றவீரியத்தை அடக்கினார். அப்போது, அந்தவீரியத்தில் சிறிதுசிந்திப் பூமியில் விழுந்தது. அப்போது ஆச்சரியமான அந்தவீரியம் கிளம்பி அக்னியில் சேர்ந்தது. ஒளியில்ஒளிசேர்ந்து ஒன்றுகிவிட்டது. அதேகாலத்தில் தாரகன்என்னும் ஓர் அஸுரன் இருந்தான். அவனால் இந்திராதிதேவர்கள் மிகத்துன்பமடைந்தனர். தாரகாஸுரனுடைய பராக்ரமத்தினால் ஆதித்தியர்கள் ருத்ரர்கள் வஸுக்கள் மருத்துக்கள் அஸ்வினிதேவர்கள் ஸாத்தியர்களனைவரும் பயந்தனர். தேவர்களின்வீடுகளும் வாகனங்களும் நகரங்களும் ரிஷிகளின் ஆஸ்ரமங்களும் அஸுரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டன. அந்தத்தேவர்களும் முனிவர்களும் மனஞ்சோர்ந்து அழியாதவரும் ஈசுவரருமாகிய பிரம்ம தேவரைச் சரணமடைந்தனர்.

நாற்றமுப்பத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பொன்னின் வரலாறும், ஸுப்ரம்மண்யரின் ஜனனமும்.)

தேவர்கள், 'பிரபுவே! தாரகனென்னும்அஸுரன் உம்மால்வர மளிக்கப்பெற்றுத் தேவர்களையும் ரிஷிகளையும் துன்பப்படுத்துகிறான். அவனுக்கு வதத்தை விதிக்கவேண்டும், பிதாமஹரே! எங்களுக்கு அவனிடத்தில் பயமுண்டாயிருக்கிறது. தேவரே! எங்களைக் காப் பாற்றும். எங்களுக்கு வேறுகதியில்லை' என்றுசொல்லினர்.

பிரம்மதேவர், 'நான் எல்லாப்பிராணிகளுக்கும் சமமாயிருப் பவன். இவன்விஷயத்தில் கொல்வதான பாவம்செய்ய நான் விரும்ப வில்லை. தேவக்கூட்டங்களையும் ரிஷிக்கூட்டங்களையும்பீடிப்பவனுகிய தாரகனை உடனே கொல்லுங்கள். தேவஸ்ரேஷ்டர்களே! வேதங்க ளும் தர்மங்களும் அழியாமலிருக்கவேண்டும். இந்த விஷயத்தில் முன்னமே பரிகாரம் ஏற்படுத்தியிருக்கிறேன். உங்களுக்கு மனத் துயரம் நீங்கட்டும்' என்றுகூறினர். தேவர்கள், 'பகவானுகியஉங்க ளால் வரங்கொடுக்கப்பெற்று வன்மையினுல்கர்வமடைந்த அவ்வஸு ரன் தேவர்களால் கொல்லமுடியாதவனுயிருக்கிறான். அவன் எப்படி ஒழிவன்? பிதாமஹரே! அவன், 'தேவராலும் அஸுராலும் அரக்கராலும் கொல்லப்படாமலிருக்கக்கடவேன்' என்கிறவரத்தை உம்மிடத்திற்பெற்றுக்கொண்டான். உலகத்திற்கதிபதியே! முன் னம் பார்வதிக்குச்சந்ததிவிச்சேதம்செய்யப்பட்டபோது, அவளால் தேவர்களனைவரும், 'உங்களுக்குச் சந்ததியுண்டாகாமற்போகக் கட வது' என்று சபிக்கப்பட்டனர்' என்றுசொல்ல, பிரம்மதேவர் 'தேவஸ்ரேஷ்டர்களே! பார்வதி சாபம்கொடுத்தகாலத்தில் அங்கே அக்கினியிருக்கவில்லை. ஆதலால், அவள் அஸுரர்களுவதம்செய்யத் தகுந்தபுத்திரனை உண்டாக்குவான். அந்தப்புத்திரன் தேவர் தான வர் அரக்கர் மனிதர் கந்தருவர் நாகர் பறவைகள்எல்லாரையுமிஞ்சி, பிரயோகிப்பதுவீண்போகாத சக்தியாயுதத்தினுல் உங்களுக்குப்பய முண்டாவதற்குக்காரணமான அந்தத்தாரகாஸுரனையும்மற்றுமுள்ள அஸுரர்களையும் கொல்லப்போகிறான். நெடுநாளாயிருந்தவிருப்பமல் லவோ காமமென்று சொல்லப்படுகிறது? அதனுல்சிதறிஅக்னியில் விழுந்திருக்கிற ருத்ரருடையவீரியமானது இரண்டாவது அக்னியைப் போல்ப் பெரும்பொருளாயிற்று. அஸுரர்களுவதஞ்செய்வதற்காக

அக்னியானவன் அந்தப்பிராணியைக் கங்கையினிடம் உண்டாக்கப் போகிறான். அந்தஅக்னியானவன் சாபகாலத்தில் இல்லாமையினால் அந்தச்சாபத்தை அடையவில்லை. தேவர்களே! ஆதலால், உங்கள் பயத்தைப்போக்குவதற்காக அக்னியின் புத்திரன் பிறக்கப்போகிறான். அக்னியைத்தேடி அப்படிச்செய்யும்படி இப்போதே கட்டளையிடுங்கள். குற்றமற்றவர்களே! தாரகனைக்கொல்வதற்கு உபாயத்தை நான்சொன்னேன். மகிமையுள்ளவர்களின்சாபங்கள்மகிமையுள்ளவரிடத்தில்செல்லமாட்டா. சக்திகளும் அதிகசக்தியைஎதிர்த்தால் குறைவடைகின்றன. நினைப்பதனாலுண்டாகும்விருப்பமாகிய [1] காமமானது எல்லாவற்றிலும் முதன்மையானது. அது வரமளிக்கத்திறமையுள்ளவர்களும் யாவராலும் கொல்லப்படக்கூடாதவர்களுமானரிஷிகளையும் கொல்லும். உலகங்களையெல்லாமாளுகிறவனும் சொல்லுக்கெட்டாதவனும்எங்குமிருப்பவனும் எல்லாவற்றையுமுண்டுபண்ணுகிறவனும் எல்லாப்பிராணிகளின் ஹ்ருதயங்களிலுமிருப்பவனும் பிரபுவுமானமன்மதன் ருத்திரருக்குமூன்றினவன். ஒளிகளின் சேர்க்கையான அவ்வக்னிபகவானைச் சீக்கிரம்தேடுங்கள். அந்தத் தேவன் உங்கள் மனத்திலுள்ளஎண்ணத்தை நிறைவேற்றுவன்' என்றுசொன்னார். மஹாத்மாவான பிரம்மாவின் அந்தச்சொல்லைக் கேட்டதேவர்கள் தங்கள்எண்ணம்கூடிவந்ததென்றுநினைத்து அக்னியைத்தேடிக்கொண்டு சென்றனர். பிறகு, ரிஷிகளனைவரும் தேவர்களுடன்கூட அக்னியைக்காணக்கருதி அக்னியினிடத்திலேயே மனத்தைச்செலுத்தி மூவுலகங்களிலும் தேடினர். ப்ரகுஸ்ரேஷ்டரே! சிறந்ததவமுள்ளவரும் பெருமைபொருந்தினவரும் உலகங்களிற்பெயர்பெற்றவருமான ஸித்தர்களனைவரும் உலகங்களெல்லாந்திரிந்தனர். காணமல்போனஅக்னி தன்தேகமாகியஜலத்தில்மறைந்திருப்பதை அறியவில்லை. பிரபுவானபரசுராமரே? பிறகு, மனத்தில் அச்சத்துடன் அக்னியைக்காண்பதில்ஆவலுள்ள தேவர்களைநோக்கி அக்னியின்வெப்பத்தினால் தாபமுண்டாச்சுப்பட்ட ஜலத்திலிருக்கும் ஒருதவளை மனஞ்சோர்ந்து பாதாளத்தினடியிலிருந்துகிளம்பித் தேவர்களைப்பார்த்துச் சொல்லத்தொடங்கிற்று. 'தேவர்களே! பாதாளத்தினடியில் அக்னி வஸிக்கிறான். அக்னியினாலுண்டானகொதிப்பினாலேதான் நான் இங்கேவந்தேன். தேவர்களே! அக்னிபகவான் தன் ஒளிகளை ஜலத்திற்சேர்த்து அந்தஜலத்தில் தூங்குகிறான். அவனால்

1 'லக்கல்பாபிருஹி : காம :' என்பதுமூலம், 'நினைத்தபடி பிரகாசிக்கும்' என்பது பழையஉரை.

நாங்கள் தாபமுண்டாக்கப்பட்டோம். தேவர்களே! உங்களுக்கு அக்னியாற்பிரயோஜனமும் அந்தஅக்னியைக்காணவிருப்பமுமிருக்குமாயின் நீங்கள் அவ்விடத்தில் அக்னியையடையுங்கள்; போகலாம். தேவர்களே! நாங்கள் அக்னியின்பயத்தினால் ஓடப்போகிறோம்' என்றுசொல்லி மண்டூகம் விரைவாக ஜலத்தில்அமிழ்ந்தது. மண்டூகம் கோள்சொன்னதை அக்னிபகவானறிந்து அதைப்பார்த்து, 'நீ சுவைகளையறியாமற்போவாய்' என்றுசபித்தான். பிரபுவான அக்னி அம்மண்டூகத்திற்குச்சாபமளித்தபிறகு, தான்வஹிப்பதற்காக விரைவாக வேறிடம்சென்றான்; தன்னைக் காண்பிக்கவில்லை. ப்ருகுஸ்ரேஷ்டரே! மஹாவீரரே! தேவர்கள் தவளைகளுக்கு அனுக்கிரகம் செய்ததை முழுதும்சொல்லுகிறேன்; கேளும். 'அக்னியின்சாபத்தினால் சுவையறியாமல் நாவற்றுப்போனபோதிலும் நீங்கள் அநேகவிதமானவாக்குகளை உச்சரிப்பீர்கள். நீங்கள் தவளைகளுக்குள்ளிருந்துகொண்டு ஆகாரமில்லாமலும் பிரஜ்ஞையில்லாமலும்உயிரில்லாமலும் உலர்ந்துபோயுமிருந்தாலும் பூமியே உங்களைக் காப்பாற்றும். இருள்மூடினஇரவிலும் நீங்கள் ஸஞ்சரிப்பீர்கள்' என்று தேவர்கள் அந்தத் தவளைகளுக்கு வரமளித்து மறுபடியும் அக்னிக்காக இப்புவனியெல்லாம்திரிந்தனர்; அக்னியை அடையவில்லை. ப்ருகுவம்சஶ்ரேஷ்டரே! பிறகு, ஐராவதத்திற்கொப்பானஒருயானை அந்தத்தேவர்களைக்கண்டு, 'அரசமரத்தில் அக்னியிருக்கிறது' என்றுசொல்லிற்று.ப்ருகுஶ்ரேஷ்டரே! கோபமேற்கொண்டஅக்னி யானைகளெல்லாவற்றையும், 'உங்களுக்கு நாவானது தலைகீழாகமாறிப்போகும்' என்றுசபித்தான். யானையினால்காண்பிக்கப்பட்டஅக்னி இவ்வாறுசபித்து அரசமரத்திலிருந்துபுறப்பட்டு வன்னிமரத்தினுள் தூங்குவதற்காகப் பிரவேசித்தான். ஸமர்த்தரே! யானைகளுக்குத் தேவர்கள்செய்தஅனுக்கிரகத்தைக் கேளும். ப்ருகுவம்சஶ்ரேஷ்டரே! தவறுதசக்தியுள்ளதேவர்கள் அன்புகூர்ந்து, 'யானைகளே! மாறிப்போனநாவினாலும் எல்லாஆகாரங்களையும் உண்பீர்கள். எழுத்துக்களில் தெளிவில்லாமலே உரத்தகுரலால் வாக்கைச் சொல்லுவீர்கள்' என்றுசொன்னார்கள். பிறகு, திரும்பவும் தேவர்கள் அக்னியைத் தொடர்ந்தனர். பிராம்மணரே! அரசைவிட்டுக்கிளம்பி வன்னிமரத்திற்புகுந்தஅக்னி கிளியினால் வெளிப்படுத்தப்பட்டான். தேவர்கள் அங்கும்போயினர். அக்னியானவன் கிளியை, 'வாக்கில்லாமற்போவாய்' என்றுசபித்தான். அப்போது கிளியின்நாவையும் அக்னியானவன் புரட்டிவிட்டான். தேவர்கள் அக்னியைக்கண்டபிறகு கிளியைப்பார்த்துக்

கருணையுடன், 'நீ கிளியாயிருந்தும் அடியோடே வாக்கில்லாமற் போகமாட்டாய். நாப்புரண்டிருந்தபோதிலும் உன்பேச்சு வளர்ந்த குழந்தையின்பேச்சைப்போலத் தெளிவில்லாமலே அழகாகவும் ஆச்சரியமாகவும் இருக்கும்' என்றுகூறினர். அவர்கள், கிளிக்கு இவ்வாறுசொல்லி வன்னிமரத்துள் அக்னியைக்கண்டபிறகுஅந்தவன்னி மரத்தையே எல்லாக்கிரியைகளுக்கும் போக்கியமானஅக்னிஸ்தான மாகச் செய்தனர். அப்போதுமுதல் அக்னியானது வன்னிமரத்திற் குள் காணப்படுகிறது. மனிதர்களும் அக்னியையுண்டாக்குவதற்கு அம்மரத்தையே கருவியாகஅறிந்தனர். பார்க்கவரே! பாதாளத்தி லுள்ள எந்தஜலங்கள் அக்னியினால் தொடப்பட்டனவோ உள்ளிருந்த அக்னியினால் கொதிப்பிக்கப்பட்டஅவை மஹாயருவிகளால் உஷ்ணத்தைவிட்டுவிடுகின்றன. பிறகு, அக்னியானவன் தேவர்களைக் கண்டு துயரமடைந்து, 'நீங்கள்வந்தகாரியம் என்ன?' என்று கேட்டான். அத்தத்தேவர்கள்ரிஷிகளனைவரும் அந்தஅக்னியைப்பார்த்து, 'நாங்கள் ஒருகாரியத்தில் உன்னை ஏவப்போகிறோம். அதை நீ செய்யக் கடவாய். அதைச்செய்வதனால் உனக்கும் மிகப்பெரியநன்மை யுண்டாம்' என்றுகூறினர். அதைக்கேட்டஅக்னி, 'தேவர்களே! உங்களுக்கு ஆகவேண்டியகாரியத்தைச் சொல்லுங்கள். அதை நான் செய்வேன். உங்கள்கட்டளைக்கு நான் உட்பட்டவன்தான். இந்த விஷயத்தில் உங்களுக்கு ஐயம்வேண்டாம்' என்றுசொன்னன். தேவர்கள், 'அன்பனே! தாரகனென்னும்அஸுரன் பிரம்மாகொடுத்த வரத்தினால் கர்வங்கொண்டு பராக்கிரமத்தினால் எங்களைப் பீடிக்கிறான். அவனைக்கொல்லுமுபாயம் செய்யப்படவேண்டும். சிறந்த பாக்கியம்பெற்றஅக்னியே! இந்தத்தேவகணங்களையும் கசியபர்முதலான ஸ்ருஷ்டிகர்த்தர்களையும் ரிஷிகளையும் காப்பாற்றக்கடவாய். அக்னிபகவானே! சக்திபொருந்தினவனும் எங்களுக்குஅந்தஅஸுர பயத்தைப்போக்கத்தக்க வீரனுமானபுத்திரனை உண்டாக்கக்கடவாய். வீரனே! பிரபுவே! உமாதேவியினால்சபிக்கப்பட்டஎங்களுக்குஉன்னை விட வேறுகதியில்லை. ஆதலால், எங்களை ரக்ஷிப்பாயாக' என்றுகேட்டுக்கொண்டனர். அவர்கள் இவ்வாறுசொன்னபின், யாவராலும் வெல்லமுடியாத அக்னிபகவான் 'அவ்வாறேஆகட்டும்' என்று சொல்லி உடனே பாகீரதியென்னும்கங்கையினிடம்சென்றான். அவளுடன்சேர்ந்து அவளுக்குக் கர்ப்பத்தை உண்டுபண்ணினான். அந்தக்கர்ப்பமானது காட்டில்தீப்போல வளர்ந்தது. கங்காதேவி அந்த அக்னிபகவானுடைய வீர்யத்தினாலே மயக்கமுற்றுக் கொடிய நோ

பத்தையடைந்தாள். அவள் அதைத் தாங்கமாட்டாமற்போனாள். மஹிமைபொருந்தியகர்ப்பத்தைக் கங்கையினிடம் அக்னிபகவான் வைத்திருந்தபோது ஓரஸுரன் பயங்கரமாக இரைச்சல்போட்டான். திடீரென்று காதில்விழுந்த அத்தப்பேரிரைச்சலினால் அந்தக்கங்கை வெருண்டு கண்கள்புரண்டு கண்ணீர்ததும்பி மூர்ச்சித்தவளாய்க் கர்ப்பத்தையும் தன்தேகத்தையும் தாங்கமுடியாமல்போனாள். பிராம்மணரே ! கர்ப்பத்தின் வன்மையினால் அசைக்கப்பட்ட கங்காதேவி உடம்பெல்லாம் தாபமுற்று நடுங்கி அக்னியைப்பார்த்து, 'பகவானே ! உன்னுடைய இந்தத்தேஜஸைத்தாங்க என்னால்முடியவில்லை. இதனால் நான் மயக்கமுண்டாக்கப்பட்டேன். எனக்கு முன்போலத் தேகம் சுகமாயில்லை. பகவானே ! தழுதழுத்திருக்கிறேன். குற்றமற்றவனே ! என்மனமே போய்விட்டது. விளங்குபவர்களிற்சிறந்தவனே ! இந்தக் கர்ப்பத்தைத்தாங்க எனக்கு முடியவில்லை. கஷ்டத்தினால் நான் இந்தக்கர்ப்பத்தை விடப்போகிறேன் ; ஸ்வதந்த்ரத்தினால் எவ்வகையிலும் விடுவதில்லை. அக்னிபகவானே ! எனக்கு வெப்பத்தின் சம்பந்தம் இருந்ததில்லை. பேரொளியுள்ளவனே! மிகச்சிறியஸம்பந்தமும் எனக்கு ஆபத்தையுண்டுபண்ணும். ஹுதாசனனே ! இவ்வுலகத்தில் குணமுள்ளவையும் குணமில்லாதவையும் முக்கியமாயுள்ள புண்ணியபாபங்களுமாகிய எல்லாம் உன்னையேசார்ந்தவையென்று நான் நினைக்கிறேன்' என்றுசொன்னாள். பிறகு, அவளைப்பார்த்து, அக்னி, 'என்தேஜஸோடுகூடியதும் மிகச்சிறந்ததும் பெரும்பலனைத்தருவதுமாகிய கர்ப்பத்தை வைத்துக்கொள் ; வைத்துக்கொள். பூமியையெல்லாம்வஹிப்பதற்கும் காப்பதற்கும் நீ திறமையுள்ளவள். உனக்கு அசாத்யம் ஒன்றுமில்லை. மற்றொருவர் இதை வஹிக்கமுடியாது' என்றுசொன்னான். பார்க்கவரே ! [1]அக்னியினால் இவ்வாறுசொல்லப்பட்ட கங்காதேவி அங்கேயே அந்தர்த்தானமானாள். சிறந்தகாந்தியுள்ளஅக்னியும் தேவர்களின்காரியத்தைச்செய்த பிறகு தனக்குஇஷ்டமான இடத்திற்குச்சென்றான். நதிகளிற்சிறந்த அந்தக்கங்காதேவி அக்னியினாலும் தேவர்களாலும் தடுக்கப்பட்டிருந்தும் அந்தக்கர்ப்பத்தை மலைகளிற்சிறந்த மேருமலையில் விட்டுவிட்டாள். அவள் தாங்கத்திறமையுள்ளவளாயிருந்தும் ருத்ரரது வீர்யத்தினால் கலக்கப்பட்டவளாய்த் தன்சக்தியினால் அந்தக்கர்ப்பத்தை வஹிக்கமுடியாமற்போனாள். விளங்குகின்ற அக்னிக்குச்சமமான அந்

1 இங்கே அதிகபாடம் ஒன்றரைஸ்லோகம் பின்னர் இந்தஅத்தியாயத்தில் வருவதனால் விடப்பட்டது.

தக்கர்ப்பத்தைக் கஷ்டத்திலுல் விட்டிவிட்டாள். ப்ருகுஸ்ரேஷ்டரே! பிறகு, அக்னியானவன் நதிகளிற்சிறந்த கங்காதேவியைக்கண்டு, 'தேவியே! உன்னுடைய கர்ப்பம் ஸுகமாகவளருகிறதா? அது என்னகுணமுள்ளது? எவ்வகைகிறமுள்ளதாகக் காணப்படுகிறது? என்ன சக்தியுள்ளது? இவற்றையெல்லாம் எனக்குச்சொல்' என்று கேட்டான். அதற்குக் கங்கை, 'குற்றமற்றவனே! அந்தக்கர்ப்பமானது உன்னைப்போல ஒளியும் ரூபமுமுள்ளதாயிருக்கிறது. நல்லநிறமுள்ளதாய் மாசற்றுவிளங்கிப் பர்வதத்தையே பிரகாசமாகச்செய்கிறது. பிரகாசிப்பவரிற் சிறந்தவனே! அதன்மணம் தாமரைகளும் நெய்தல்களுமுள்ள மடுக்களின் மணம்போலும் கடப்பமலர்களின் மணம்போலும் சுவிர்ச்சியாயிருக்கிறது. அந்தக்கர்ப்பத்தின் ஒளியுடன்சேர்ந்து பூமியிலும் பர்வதங்களிலுமுள்ள எந்தப்பொருளும் சூரியனொளிசேர்ந்ததுபோலப் பொன்மயமாக எங்கும் காணப்பட்டது. அந்தவீரியமானது மலைகளிலும் நதிகளிலும் அருவிகளிலும் பாய்ந்தது; சராசரங்களடங்கிய மூவுலகங்களையும் ஒளியினால் விளங்கச்செய்தது. அக்னியே! இப்படிப்பட்ட அந்தப்பகவானை உன் புத்திரனும் ரூபத்தில் சூரியன்போலவும் அக்னிபோலவும் அழகில் இரண்டாவதுசந்திரன்போலவும் இருப்பான்' என்றுசொன்னாள். பார்க்கவரே! அந்தக்கங்காதேவியானவள் இவ்வாறுசொல்லி அங்கே அந்தர்த்தானமானாள். சிறந்தமகிமையுள்ள அக்னியும் தேவர்களின் காரியத்தைச்செய்து உடனே தன்னிஷ்டமானதேசத்திற்குச் சென்றான். இந்தச்செய்கையினாலேற்பட்ட சிறப்பைப்பற்றித்தான் உலகத்தில் ரிஷிகளும் தேவர்களும் அக்னிக்கு ஹிரண்மீரேதஸ்என்னும் பெயரைக் கூறுகின்றனர். அப்போதுதான் பூமிதேவியும் வஸுமதி (=தனமுள்ளவள்) என்று பெயர்பெற்றனள். கங்கைக்கும் அக்னிக்கும் முண்டான சிறந்தமகிமையுள்ள அந்தக்கர்ப்பமானது தேவலோகத்திய ஞாணற்காட்டையடைந்து ஆச்சரியமான காட்சியாக வளர்ந்தது. இளஞ்சூரியனுக்குஒப்பான ஒளியுள்ள அந்தக்குழந்தையைக் கிருத்திகாதேவதைகள்கண்டு அன்புகூர்ந்து மூலைப்பாற்சுரப்புக்களினால் வளர்த்தனர். சிறந்தஒளியுள்ள அந்தக்குழந்தை அதனால் கார்த்திகேயன்எனப் பெயர்பெற்றது; ரேதஸ்சிந்தினதனால் ஸ்கந்தன்என்றும் குகையிலிருந்ததனால் குகன்என்றும் பெயர்பெற்றது. பொன்னானது இவ்வாறு அக்னியின்பிள்ளையாகப் பிறந்தது. பொன்னிலும் ஜாம்பூநதமென்னும்தங்கம் மிகச்சிறந்தது. அது தேவர்களுக்கும் ஆபரணம். அதுமுதலாகத்தான் பொன்னானது ஜாதரூபம்என்று

சொல்லப்படுகிறது. அது இரத்தினங்களிலும் சிறந்தஇரத்தினம்; ஆபரணங்களிலும் சிறந்தஆபரணம்; பரிசுத்தங்களுக்கும் பரிசுத்தம்; மங்களங்களுக்கும் மங்களம். ஆதலால், பொன்என்பது அக்னிபகவானும் பிரஜைகளுக்குநாதனுகிய சிவபெருமானுமாகஇருப்பது. பிராம்மணத்தமரே! பரிசுத்தங்களிலெல்லாம் பரிசுத்தம் கனகமே. தங்கமானதுஅக்னியும் [1]ஸோமனுமாகஇருப்பதென்றுசொல்லப்படுகிறது.

நூற்றுமுப்பத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ருத்ரர்செய்தயாகத்தில் ப்ருகுழதலியோர் உண்டானதும், ஸ்வர்ணதானத்தின் சிறப்புழதலியவையும்.)

பரசுராமரே! மேலும், பரமாத்மாவும் படைப்பவருமானபிரம்ம தேவருடைய பிரம்மஜ்ஞானரூபமான நடக்கையைப்பற்றி முன் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அன்பரே! பிரபுவே! மகாதேவராகிய சிவனுர்,வருணன்தேகத்தை யெடுத்துக்கொண்டு வருணனுடையஜசுவரியத்தை அனுபவித்துக்கொண்டிருக்கையில் முனிவர்களனைவரும் அக்னிமுதலான தேவர்களும் உருக்கொண்ட யாகாங்கங்களனைத்தும் வஷட்காரமும் ஆயிரக்கணக்கானஸாமவேதங்களும் யஜுர்வேதங்களும் பதங்களாலும்கிரமங்களாலுமலங்கரிக்கப்பட்ட ரிக்வேதங்களும் லக்ஷணங்களும் ஸ்வரங்களும் ஸ்தோபங்களும் நிருக்தங்களும் ஸ்வரங்களின்வகைகளும் வேதங்களுக்குத்தலைமையான ஓங்காரமும் நிக்கிரகமும் பிரக்கிரகமும் உபநிஷத்துக்களும் ஸாவித்திரியென்னும்வித்தையும் வந்தனர். பூதபவிஷ்யத்வர்த்தமானங்களையும் பகவானுனசிவனுர் தரித்துக்கொண்டிருந்தார். அப்போது அந்தப்பிரபுவானவர் தம்மைத்தாமே ஹோமம்செய்துகொண்டார். சிவனுர் அதேகவிதமாக யாகத்தைச் சோபிக்கச்செய்தார். ஸ்வர்க்கலோகமும் அதற்குமேலுலகமும் பூமியும் இடைவெளியும் பூமிக்கதிபதியும் அந்தச்சிவனுரே. எல்லாவித்தைகளுக்கும் ஈசுவரரானசிவனுரே சூரியன். பெருமைபொருந்தியவரும் எல்லாப்பூதங்களுக்குமதிபதியும் தேவருமாகிய அந்தச்சிவபெருமானே பிரம்மா. சிவனுர்,ருத்திரன் வருணன் அக்னி பிரஜாபதிஎன்று சொல்லப்படுகிறார். ப்ருகுவம்சஸ்ரேஷ்டரே! மஹா

---

1 இனிமையினுல் சந்திரன்என்றார்; உமையுடன்கூடிய சிவபெருமான் என்னுமாம்.

த்மாவும் வருணரூபியுமான அந்தப்பசுபதியினுடைய யாகத்தில் தவம் யாகதேவதைகள் விரதத்தினுல்பிரகாசிக்கும்தீக்ஷாதேவி திக் தேவதைகள் திக்பாலகர்கள் தேவபத்னிகள் தேவகன்னிகைகள் தேவமாதாக்கள் எல்லாரும் சேர்ந்து அன்புடன் வந்தனர். அந்தப் பெண்களைக்கண்டபோது பிரம்மதேவரின்ரேதஸ் பூமியில் விழுந்தது. அந்தரேதஸ் பெருகி நனைந்தமண்ணைச் சூரியன் பூமியிலிருந்து இரு கரங்களினுலெடுத்து அந்தஅக்னியிலேயே போட்டான். அவ்வாறு நடந்துகொண்டிருக்கும் ஸத்ரயாகத்தில் ஜ்வலிக்கின்றஅக்னியில் பிர ம்மா ஹோமம்செய்யும்போது அவருடையரேதஸ் வெளிப்பட்டது. ப்ருகுபுத்திரரே! அவர் அந்தரேதஸைத் தெரிந்தவுடன் ஹோமக் காண்டியாலேந்தி நெய்யைப்போல மந்திரத்துடன் ஹோமஞ்செய் தார். சிறந்தமஹிமையுள்ள அந்தப்பிரம்மதேவர் அந்தஹோமம் செய்தரேதவினுல் பலவகைப்பிராணிகளைப் படைத்தார்.அவருடைய அந்தரேதவினுள்ள (ரஜோகுணமாகிய) ஒளியிலிருந்து ஒளியோடி கூடிய அறிவுள்ள ஜங்கமமும் தமோகுணத்திலிருந்து தமோகுணம் நிரம்பின அறிவில்லாதஸ்தாவரமும் உண்டாயின. ஸத்வகுணமானது இவ்விருவகைப்பொருள்களிலும் சேர்ந்திருந்தது. தேஜஸ்என்னப் பட்ட ரஜோகுணத்தின்தன்மையாகிய தொழிலும் தமோகுணத்தின் காரியமாகிய அசைவற்றிருத்தலும் ஸத்வகுணத்தின்காரியமான உய ர்ந்தஒளியும் எல்லாப்பொருள்களிலுமிருந்தன. பரசுராமரே! அந்த அக்னியில் ரேதஸ் ஹோமம்செய்யப்பட்டபோது அந்தஅக்னியிலிரு ந்து தம்தம்காரணங்களினுல்வந்த குணங்களுள்ளவர்களும் சிறந்த தேகங்களுள்ளவர்களுமான மூன்றுபுருஷர்கள் உண்டாயினர். பர் ஜனமென்னப்பட்ட எரிச்சலிலிருந்து ப்ருகுஎன்பவரும் அங்காரம் என்னப்பட்ட தணலிலிருந்து அங்கிரஸ்என்பவரும் தணலின்ஒளியி லிருந்து கவியென்னும் மற்றொருவரும் உண்டாயினர். ப்ருகு ஜ்வா லைகளோடுகூடவே பிறந்தார். அதனுல், ப்ருகுஎன்றுசொல்லப்பட் டார். மரீசிஎன்னப்பட்ட அக்னியின் கிரணங்களிலிருந்து மரீசி யென்பவர் உண்டானார். மரீசிக்குக் கசியபர் உண்டானார். அன் பரே! தணலிலிருந்து அங்கிரஸும் தர்ப்பைக்கூட்டத்திலிருந்து வாலகில்யர்களும் உண்டாயினர். பிரபுவே! அந்தத் தர்ப்பைக்குவி யலிலிருந்த ஒருவரை 'அத்ர, அத்ர' (இங்கே, இங்கே, உண்டானர்.) என்று எல்லாரும்சொன்னதினுல் அவருக்கு அத்ரியென்று பெயர் வந்தது. பிறகு, சாம்பல்தள்ளினபோது பிரம்மரிஷிகளின்கூட்டங் களினுல் வெகுமதிக்கப்பெற்றவரும் தவம் கல்வி இவற்றின் சிறப்புக்

கோயடையக்கருதினவருமானவைகானஸர்களென்னும்ரிஷிகள்உண்டாயினர். அழகிற்பெயர்பெற்ற அசுவினிதேவர்கள் பிரம்மதேவருடையகண்ணீரிலிருந்து உண்டாயினர். பிரஜைகளைப்படைப்பவர்களாகிய மற்றவர்கள் அவருடையதுவாரங்களிலிருந்தும் பிறந்தனர். அவர் மயிர்க்காலிலிருந்து ரிஷிகளும் வேர்வையிலிருந்து வேதமும் பலத்திலிருந்து மனமும் உண்டாயினர். இந்தக்காரணத்தினாலே தான்கல்வியிலுள்ளரிஷிகள் வேதத்தின்உண்மையையறிந்து அக்னியே எல்லாத்தேவர்களுமென்று கூறுகின்றனர். அங்குள்ளகட்டைகளும் அவற்றின்தலைங்களும் முறையே மாதங்களும் பக்ஷங்களுமாகப் பெயர்பெற்றிருக்கின்றன. வருணனுடையதான ஆறினதியே (கரி) இரவுபகல்களும் முகூர்த்தங்களுமாயிற்று. அக்னியின்சிவந்தநிறத்தை ருத்திரருடையதென்று சொல்லுகின்றனர். அதிலிருந்து கனகமுண்டாயிற்று. அந்தக்கனகமானது மைத்திரம் (சிநேகத்தைத்தருவது) என்றறியத்தக்கது. புகையிலிருந்து வஸுக்களுண்டாயினர். அந்த அக்கினியின்ஜ்வாலைகள்தாம் ருத்திரர்களும் பேரொளியுள்ள ஆதித்தர்களும். ஆகாயத்தில் தந்துமிடத்தில்பிரகாசிக்கும் நக்ஷத்திரங்கள் தாம் தணல்கள். உலகத்திற்குநாதனும் அக்னிதான். அக்னிதான் பரப்பிரம்மம். அதுவே நித்யம். அதையே எல்லாஅபீஷ்டங்களையும்தருவதென்று சொல்லுகின்றனர். அதனிடத்திலேதான் ஹோமம்செய்கின்றனர். பிறகு, வருணரூபியும் வாயுரூபியுமானபரமசிவன், 'தேவர்களே! இந்தச்சிறந்தயாகம் என்னுடையது. இந்தயாகத்திற்கு நானே யஜமானன். முதற்பிறந்தமூவரும் என்பிள்ளைகள்; சந்தேகமில்லைஎன்றறியுங்கள். ஏனெனில், அதுயான்செய்தயாகத்தின்பலன்தானே' என்றுசொன்னர். அக்கினி, 'அவர்கள் என்னுடைய அங்கத்திலிருந்து பிறந்தவர்களும் என்னுடையசேர்க்கையினால் உண்டாக்கப்பட்டவர்களுமாகிறார்கள். அந்தரேதஸானதுஎன்னிடத்திலே ஹோமம்செய்யப்பட்டது. ஆதலால், அவர்கள் என்புத்திரர்கள் தாம்' என்றுசொன்னன். பிறகு, உலகங்களுக்குமூத்தவரும் உலகங்களைப்படைத்தவருமாகிய பிரம்மதேவர், 'அவர்கள் என்பிள்ளைகள்தாம். ஹோமம்செய்யப்பட்டரேதஸ் என்னுடையதுதானே. மந்திரத்தைச்சொன்னவனும் நான். ரேதஸை ஹோமம்செய்தவனும் நான். ரேதஸை உற்பத்திக்குக் காரணமாகநினைத்தால் வித்துவனதோ அவனுடையதுதான் பலன்' என்றுசொன்னர். பிறகு, தேவக்கூட்டத்தாரெல்லாரும் பிரம்மதேவரிடம்சென்று கைகூப்பித்தலைவணங்கி வந்தனம்செய்து, 'பகவானே! நாங்களனைவரும் உலகத்

திலுள்ள சராசரங்களனைத்தும் உம்முடையசந்ததிகள்தாமே. ஆதலால், ஒளியிலுல்பிரகாசிக்கும்அக்னியும் யாகத்தைநடத்தும்வருணரூபியானசிவபெருமானும் வேண்டினபலனைப் பெறட்டும்' என்று சொன்னார்கள். ஜலஜந்துக்களுக்கதிபதியான வருணன் சூரியனைப் போன்றஒளியுள்ள முதற்பிள்ளையானப்ருகுவைப் பிரம்மாகொடுக்கப் பெற்றுக்கொண்டான். எல்லாவற்றிற்கும்அதிபதியும் தத்வஞானியுமான பிரம்மதேவர் அங்கிரஸை அக்னிக்குப் புத்திரராகச்செய்தார். கவியைத் தம்புத்திரராக எடுத்துக்கொண்டார். அப்போது சந்ததிகளையுற்பத்திசெய்கிறவராகிய ப்ருகுவானவர் [1]வாருணிஎன்றும்பெருமைபொருந்திய அங்கிரஸ் [2]ஆக்னேயர்என்றும் சிறந்தபகழுள்ளகவி [3] பிராம்மாஎன்றும் புகழ்பெற்றனர். ப்ருகுவம்சம் அங்கிரஸ்வம்சம் இரண்டும்தாம் பிரஜாவிருத்திக்கு இவ்வுலகத்தில் காரணமாயிருந்தன. இம்மூன்றுபிராம்மணத்தமர்களும் பிரஜைகளைப்படைப்பவராகிறார். இவ்வுலகமனைத்தும் இவர்கள் சந்ததியென்றறியும். ப்ருகுவுக்கு ஏழுபுத்திரர் உண்டாயினர். எல்லாரும் குணங்களில் அவருக்கொப்பானவர். அவர்கள் ச்யவனர், வஜ்ரசீர்ஷர், சுசி, ஔர்வர், சுக்ரர், வரேண்யர், பிரபுவானஸவனர் எனஏழுவர். நீர் பிறந்தவம்சத்தைச்சேர்ந்த பார்க்கவரானவரும் வருணபுத்திரர்கள். அங்கிரஸின்புத்திரர்கள் எண்மர். அவர்கள் வருணன்புத்திரர்களாயிருந்தும் [4] வருணன்புத்திரரல்லாதவர். பிருஹஸ்பதி, உசத்தியர், வயஸ்யர், சாந்தி, கோரர், விரூபர், ஸம்வர்த்தர், ஸுதன்வாஎன எண்மர். இவ்வெண்மரும் அக்னியின்புத்திரர்கள். எல்லாரும் ஞானத்தில் நிலைபெற்றவர்கள்; குற்றமற்றவர்கள்; கவியின்குமாரர்கள் எண்மர், பிரம்மாவின்வம்சத்தவர்களாகவும் வருணபுத்திரர்களாகவும் சொல்லப்படுகின்றனர். அவர்கள் காரணத்தின் சிறப்புக்கள்பொருந்தினவர்கள்; பிரம்மஞானிகள்; புண்ணியமுள்ளவர்கள். கவி, காவ்யர், விஷ்ணு, புத்தியிற்சிறந்த உசநஸ், ப்ருகு, வருணன், காசியபர், தர்மந்தெரிந்தஅக்னி என்னும் இவ்வெண்மர் கவிபுத்திரர்கள். இவர்களால் உலகமெல்லாம் வியாபிக்கப்பட்டது. இவர்கள் இந்தப்பிரஜைகளையுண்டுபண்ணினதினால் பிரஜாபதிகளாகிறார்கள். பிருகு வம்சஸ்ரேஷ்டரே! இவ்வாறு ப்ருகு, அங்கிரஸ், கவிஇவர்களின்வம்சங்களிற்பிறந்த புத்திரர்களால் உலகம் வியாபிக்கப்பட்டிருக்கிறது. ஐயா!

---

1 வருணபுத்திரர். 2 அக்னிபின்புத்திரர். 3 பிரம்மாவின்புத்திரர்.

4 வருணன் யாகத்தில் யஜமானனுதலின் வருணபுத்ரரென்பது. அக்னியால்எடுத்துக்கொள்ளப்பட்டவர்.

பிராம்மணரே! வருணரூபியும் பிரபுவுமானாசுவர், கவியையும் ப்ருகுவையும் முதலில் எடுத்துக்கொண்டார். ஆதலால், அவ்விருவரும் வாருணர்களென்று சொல்லப்பெற்றனர். ஜ்வாலையோடுகூடின அக்னி பகவான் அவரிடமிருந்து அங்கிரஸை வாங்கிக்கொண்டதினால் ஆங்கிரஸர்களனைவரும் அக்னியின்வம்சத்தைச் சேர்ந்தவரென்றறிய வேண்டும். அந்தக்காலத்தில் தேவர்கள் பிரம்மதேவரைப்பார்த்து, 'இவர்கள் உலகங்களுக்கு ஈசுவரர்களாயிருந்து தங்கள்சந்ததிகளினால் எங்களைக்கரையேற்றுவர். இவர்களெல்லாரும் பிரஜைகளைப் படைப்பவர்; மிகச்சிறந்ததவமுள்ளவர்; உமதுஅனுக்கிரகத்தினால் இவ்வுலகத்தை நீண்டகாலம் நிலைநிறுத்துபவர்; வம்சங்களை விருத்திசெய்து உம்முடைய தேஜஸ்ஸ்பரவச்செய்கிறவர். இந்தப்பிரஜாபதியின்வம்சத்திலுள்ள மகரிஷிகள்எல்லாரும் வேதங்களையறிந்து ஸ்ரியைகளைச்செய்து சாந்தகுணமுள்ளவர்களாகித் தேவர்களின்பக்கத்திலிருக்கக்கடவர். பிரபுவே! பூமியில் முடிவில்லாதபிரம்மமும்சத்தியமும் சிறந்ததவமும் நீர்தாம். இவர்களும் நாங்களெல்லாரும் உம்முடையபுத்திரர்களே. பிதாமஹரே! தேவர்களுக்கும் பிராம்மணர்களுக்கும் நீரன்றே தந்தை? மரீசியின்புத்திரரான காசியபர்முதலாக ப்ருகுவைச்சேர்ந்தவர்களனைவரும் உமதுபுத்திரர்கள்தாமென்று கண்டறிந்து உம்மைப் பொறுத்துக்கொள்ளும்படி. வேண்டுகிறோம். பிதாமஹரே! இவர்கள் தங்களைப்போன்ற சந்ததிகளையுண்டுபண்ணியுகத்தின்ஆரம்பத்திலும் முடிவிலும் தம்மை நிலைநிறுத்தப்போகின்றனர்[1]' என்று பிரார்த்தித்தனர். உலகத்திற்குமுதலான பிரம்மதேவர் தேவர்களால் இவ்வாறுவேண்டப்பட்டுச் சந்தோஷமடைந்தவராய், 'அப்படியேயாகட்டும்' என்றுசொன்னார். அந்தத்தேவர்களும் வந்தவாறே சென்றனர். உலகம்படைக்கும்காலத்தில் தேவஸ்ரேஷ்டரும் மஹாத்மாவுமானசங்கர் வருணரூபமெடுத்துச் செய்தயாகத்தில்இவ்வாறுகடந்தது. அக்நிதான் பரமன், பசுபதி, சர்வன், ருத்ரன், பிரஜாபதிஎன்னப்படுகிறவன். இந்தப்பொன்னானது அக்நியின்பிள்ளை என்பது நிச்சயம். ஜமதக்நியின்புத்ரரே! பிரமாணத்தையறிந்தவன் வேதத்திலுள்ளவழியைக்கண்டு அக்நியில்லாதகாலத்தில் அதற்குப்பிரதியாகத் தங்கத்தை வைக்கிறான்; தர்ப்பைப்புல்லின்மேல் வைத்த அக்நியிலும் பொன்னிலும் ஹோமம்செய்கிறான். புற்றின் வாயிலும் ஆட்டின்வலக்காதிலும் வண்டிச்சக்கரம் ஓடினவழியிலும் புண்ணிய தீர்த்தத்திலும் பிராம்மணன் கையிலும் ஹோமம்செய்

1 எல்லாரையும் அவர் தம்புத்திரர்களாக நினைக்கவேண்டுமென்று கருத்து.

தால் அக்னிபகவான் அதைத் தனக்குச் சந்தோஷத்தையுண்டாக்கும் சிறப்பாக நினைக்கிறான். அதனாலேதான் தேவர்களெல்லாருக்கும் அக்னியே தலைவனென்றுகேள்விப்பட்டிருக்கிறோம். பிரம்மாவினிட மிருந்து அக்னிஉண்டாயிற்று. அக்னியினிடமிருந்து தங்கமுண் டாயிற்று. ஆதலால், எவர்கள் தர்மத்தைநிர்ந்து பொன்னைக்கொடுக் கின்றனரோ அவர்கள் எல்லாத்தேவரையும் கொடுக்கின்றனரென்று யாம் கேட்டிருக்கிறோம். பார்க்கவரே! ஸ்வர்ணதானஞ்செய்பவன் பெருந்தவத்தினால் அடையும்கதியை அடைவான்; மேலுலகத்தில் குபேரனுகப் பட்டாபிஷேகம் செய்யப்பெறுவான். சூரியோதயம் வந்தபோது சாஸ்திரவிதியையனுசரித்து மந்திரபூர்வகமாக ஸ்வர்ண தானம்செய்பவன் கெட்டகனவின்பலனைப் போக்கிவிடுகிறான். சூரி யோதயமானவுடன் ஸ்வர்ணதானஞ்செய்பவனுக்குப் பாவம் ஓடிப் போம். மத்தியான்னத்தில் ஸ்வர்ணதானம்செய்பவனிடம் பாவம் அணுகாது. சாயங்காலத்தில் நியமத்துடன் ஸ்வர்ணதானம்செய்ப வன் பிரம்மலோகத்தையும் வாயுலோகத்தையும் அக்னிலோகத்தை யும் சந்திரலோகத்தையும் பெறுவான்; இந்திரலோகமுதலியலோகங் களிலும் சிறந்தஐசுவரியத்தையடைவான்; இவ்வுலகத்திலும் பாபங்க ளொழிந்து புகழ்பெற்று மகிழ்ந்திருப்பான்; பிறகு, மேலுலகங்களி லும் எப்போதும் ஒப்பற்றுச் சிறந்திருப்பான்; தடையின்றிவிரும் பினபடி சஞ்சரித்துக்கொண்டுமிருப்பான்; அவ்வுலகங்களிலிருந்து மீழுவமாட்டான்; பெரும்புகழையடைவான்; அழிவில்லாதபொன் னைக் கொடுப்பதினால் சிறந்தலோகங்களையடைவான். சூரியோதய காலத்தில் ஒருவிரதத்தைக்குறித்து அக்னியைமூட்டி ஸ்வர்ணதானஞ் செய்பவன் விரும்பினவற்றையெல்லாம் அடைவான். ஸுவர்ணத்தை அக்நியென்றே சொல்லுகின்றனர். அதைத்தானம்செய்வது ஸுகத் தைத்தருவது. அது விரும்பினநற்குணங்களை உண்டுபண்ணுவது; மேன்மேலும் நற்குணங்களிற் பிரவ்ருத்திக்கச்செய்கிறதென்றுசொல் லப்படுகிறது. குற்றமற்றவரே! ஸமர்த்தரே! ப்ருகுபுத்திரரே! பொன்னும் சுப்பிரமணியரும்உண்டான இந்தவரலாறு உமக்குச் சொன்னேன். அதைத் தெரிந்துகொள்ளும். ப்ருகுஸ்ரேஷ்டரே! பிரா ம்மணரே! பிறகு, ஸுப்ரம்மண்யர் வெகுகாலம்வளர்ந்தபின் இந்தி ராதிதேவர்களால் சேனைபதியாயிருக்கும்படி வேண்டப்பட்டார். பிரா ம்மணரே! உலகங்களின் நன்மையைச்செய்வதற்காகத் தேவேந்திர னுடையஆஜ்ஞையினால் தாரகாஸுரனையும் மற்றுமுள்ள அஸுரர்க ளையும் கொன்றார். ஸமர்த்தரே! ஸுவர்ணதானத்தின் சிறப்புக்களை

நான் உமக்குச் சொன்னேன். கொடுப்பவரிற்சிறந்தவரே! ஆதலால், பிராம்மணருக்குப்பொன்னைக்கொடும்' என்றார். பராக்கிரமசாலியான பரசுராமர், இவ்வாறுவஸிஸ்டர்சொல்லக்கேட்டு, பிராம்மணர்களுக்கு ஸுவர்ணதானம்செய்து பாவத்திலிருந்து விடுபட்டார். யுதிஷ்டிர ராஜனே! ஸ்வர்ணத்தின் உற்பத்தியையும் அதன்தானத்தின் பலனையும் உனக்கு முழுதும்சொன்னேன். ஆதலால், நீயும் பிராம்மணர்களுக்கு மிகுதியாகக் கனகங்கொடு. ராஜனே! கனகங்கொடுப்பதினால் பாபத்திலிருந்து விடுபடுவாய்" என்றார்.

நூற்றுமுப்பத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தாரகன்வதம்.)

யுதிஷ்டிரர், "முறைப்படி ஸ்வர்ணதானஞ்செய்வதில் என்ன குணங்கள் வேதத்தில்சொல்லப்பட்டனவோ அவை பிதாமஹரான உங்களால் விரிவாகஉரைக்கப்பட்டன; பொன்னுண்டானகாரணமும் உரைக்கப்பட்டது. அந்தத்தாரகன் எப்படிமரணமடைந்தான்? அதை எனக்குச் சொல்லும். ராஜரே! அவன் தேவர்களால் கொல்லப்படக் கூடாதவனென்று சொன்னீர். அவனுக்கு மரணம் எப்படிநேர்ந்தது? அதை விரிவாகச்சொல்லும். குருவம்சஸ்ரேஷ்டரே! தாரகனுடையவதத்தைப்பற்றி முழுதும்கேட்க விரும்புகிறேன். அதில் எனக்கு அதிகவிருப்பம் இருக்கிறது" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"அரசர்க்கரசே! அவ்வாறு கங்கை கர்ப்பத்தை விட்டுவிட்டதனால் கார்யம்கெட்டதேவர்களும் ரிஷிகளும் கிருத்திகாக்களைத்தவிர தேவதைகளை அந்தக்கர்ப்பத்தைத் தரிக்கும்படி கேட்டுக்கொண்டனர். அக்நியினுடையவீர்யமாகிய அந்தக்கர்ப்பத்தைத் தங்கள் சக்தியினால் தாங்குவதற்குத் தேவஸ்த்ரீகளில் யாரும் திறமையுள்ளவர்களல்லர்; கிருத்திகைகள்மட்டும்தாம் திறமையுள்ளவர்கள். அக்நியானவன் தன்சிறந்தவீரியத்தைத் தமதுமுழுச்சக்தியுடன் கர்ப்பமாகத்தரித்ததனால் கிருத்திகைகள் அறுவரிடத்திலும் அன்புள்ளவனானான். அந்தஆறுகிருத்திகைகளும் அக்நியின்கர்ப்பத்தைத் தாங்கினர். மன்னவ! அக்நியின்வீரியம்முழுதும் ஆறுவழிகளில் விடப்பட்டது. பிறகு, அந்தக்கிருத்திகைகள் உள்ளேவளருகின்ற மகாத்

மாவான குழந்தையின்ஒளியினால் அங்கமெல்லாம் வியாபிக்கப்பட்டு எங்கும்ஸுகமடையாமற்போயினர். வேந்தே! பிறகு,அங்கமெல்லாம் ஒளிசூழ்ந்த அந்தக்கிருத்திகைகளனைவரும் ப்ரஸவகாலம்வந்தபோது ஒரேகாலத்தில் அந்தக்கர்ப்பத்தைப் பிரஸவித்தனர். ஆறிடங்களி லுமிருந்தஅந்தக்கர்ப்பமானது பிரஸவித்தவுடன் ஒன்றுகச்சேர்ந்தது. அதைக் கிருத்திகாதேவிகளிடமிருந்து பூமிதேவி வாங்கிக்கொண் டாள். தேவதேவமூள்ளதும் அக்கிக்குஒப்பானஒளியுடன் பிரகாசிப் பதும் காட்சிக்கினியதுமானஅந்தக்கர்ப்பம் தெய்வலோகத்திய ஞாணற் காட்டைச்சார்ந்து வளர்ந்தது. சூரியனுக்கொப்பான ஒளியுள்ள அந் தக்குழந்தையைக் கிருத்திகாதேவிகள்பார்த்து அன்புள்ளவர்களாய் அன்பினாலுண்டான மூலைப்பாற்பெருக்குகளினால் வளர்த்தனர். அத னால், அந்தக்குழந்தை சராசரங்களடங்கிய மூவுலகங்களிலும் கார்த்தி கேயன்என்று பெயர்பெற்றது; ரேதஸ்ஸிதறினதனால் ஸ்கந்தனென் றும் குகையிலிருந்ததனால் குகனென்றும் பெயர்பெற்றது. பிறகு, மூப்பத்துமூன்று தேவர்கள் திசைகள் திக்பாலகர்கள் [1] ருத்திரன் தாதா விஷ்ணு யமன் பூஷன் அரியமன் பகன் அம்சன் மித்திரன் ஸாத்தியர்கள் இந்திரன் வஸுக்கள் அசுவினிதேவர்கள் ஜலம் காற்று ஆகாயம் சந்திரன் நக்ஷத்திரங்கள் கிரகங்கள் சூரியன் வேறுள்ளமற் றத்தேவக்கூட்டங்கள் ஆகியஎல்லாரும் அக்கிகுமாரனை ஆச்சர்ய முள்ளகுழந்தையைக் காணவந்தனர். ரிஷிகள் துதித்தனர். கந்தர்வர் கள் பாடினர். ஆறுமுகங்களும் பன்னிரண்டுகண்களும் பன்னிரண்டு கைகளும் பருத்ததோள்களுமுள்ளவனும் பிராமணர்களிடம் அன் புள்ளவனும் அக்கியையும் சூரியனையும்போன்றஒளியுள்ளவனுமாக ஞாணற்புதரில்படுத்திருக்கும் குழந்தையைக்கண்டு தேவர்களும் முனி வர்களும் மிகுந்தசந்தோஷமடைந்து தாரகாஸுரன் அழிந்தா னென்றே நினைத்தனர். பிறகு, தேவர்களனைவரும் அந்தக்குழந் தைக்கு வேண்டினவற்றைக் கொண்டுவந்துகொடுத்தனர்; அவன் விளையாடும்போது விளையாட்டுக்கருவிகளையும் பற்பலபறவைகளையும் கொடுத்தனர். கருடன் தனதுபிள்ளையும் பலநிறமானசிறகுள்ளது மாகியமயிலை அவனுக்களித்தான். ராக்ஷஸர்கள், பன்றி எருமைக் கடாஇரண்டையும் அவனுக்குக் கொடுத்தனர். அருணன் தானே அக்கியைப்போலப்பிரகாசிக்கும் கோழியைக் கொடுத்தான். சந்தி ரன் ஆட்டைக் கொடுத்தான். சூரியன் அழகானஒளியைத் தந்தான். கோக்களுக்குத்தாயாகியகாமதேனு அநேகமாயிரம்கோக்களை அளித்

[1] சூரியனுடைய உப-பிரிவுகள்.

தது. அக்னியானவன் குணமுள்ளசெம்மறியாட்டையும் பூமிதேவியானவள் மிருதியாகியமலர்களையும் கனிகளையும் கொடுத்தார்கள். ஸுதன்வாஎன்னும்அஸுரன் வண்டியையும் அழகான [1]அச்சுள்ள தேரையும் அளித்தான். வருணன் வாருணங்களென்னும் சிறந்ததேவயானைகளைக் கொடுத்தான். தேவேந்திரன் சிறந்தயானைகளையும் கோரப்பற்களையுடையசிங்கங்கள் புலிகள்முதலான அனேகங்கொடிய மிருகங்களையும் பலவகை ஆயுதங்களையும் கொடுத்தான். ராக்ஷஸக் கூட்டத்தாரும் அஸுரக்கூட்டத்தாரும் ஸமர்த்தனான அந்தக்குமாரனை அனுஸரித்தனர். தாரகாஸுரன் வளர்கின்ற அந்தக்குழந்தையைக்கொல்வதற்கு உபாயத்தைத்தேடினான். அனேகஉபாயங்களைச் செய்தும் அவன் அந்தப்பிரபுவைக் கொல்லமாட்டாமற்போனான். தேவர்கள் குகையிலிருக்கும் அக்குமாரரைச் சேனைத்தலைவராகச் செய்து பூஜித்துத் தாரகாஸுரனால்செய்யப்பட்ட அந்தஉபத்திரவத்தை அவருக்குத் தெரிவித்தனர். சிறந்தபராக்கிரமமுள்ளவராக வளர்ந்து தேவர்க்குச்சேனாதிபதியும் பிரபுவுமான அந்தக்குகர் வீண் போகாத சக்திஆயுதத்தினால் தாரகாஸுரனைக் கொன்றார். அந்தக்குமாரரால் விளையாட்டாகவே அந்தத்தாரகாஸுரன் கொல்லப்பட்டபிறகு, திரும்பவும் தேவேந்திரன் தேவர்க்குசேனாபதியாக ராஜ்யபட்டாபிஷேகம்செய்யப்பட்டான். சிறந்தபராக்கிரமமுள்ளவரும் ஈசுவரரும் தேவர்களைக்காப்பவரும் சங்கரருக்குப்பிரியத்தைச்செய்பவருமான அந்தஸ்கந்தர் பின்னிட்டும் சேனாபதியாகவே விளங்கினார். பொன்மயமாகியதேகமுள்ளவரும் அக்னியின்புத்திரரும் பகவானுமானஅக்குமாரர் எக்காலமும் தேவர்க்குச்சேனாதிபதியாகவேயிருந்தார். ஆதலால், பொன்னைத சுப்பிரமணியருக்கு உடன்பிறந்தது; அக்னியினுடையமுதல்தேஜஸென்று நினைக்கப்பட்டது; மங்களத்தைத்தருவதும் அழியாததுமான உயர்ந்தரத்தினம். கௌரவனே! இவ்விதமாக ராமருக்கு வஸிஷ்டர் முன்னே சொன்னார். அரசனே! ஆதலால், பொன்னைக்கொடுக்க முயற்சிசெய். ராமர் ஸ்வர்ணதானம் செய்துதான் எல்லாப்பாவங்களாலும்விடுபட்டவராகி மேலுலகத்தில் மனிதர் பெறுவதற்கரிய சிறந்தபதம்பெற்றார்" என்றார்.

1 'கூபரம்' என்பது மூலம்; மூக்கணைஎன்றும் கொள்ளலாம்.

நாற்றுமூப்பத்துநான்காவது அத்யாயம்.

தா ன த் ர் ம ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(ஒவ்வொருதிதியிலும் சிராத்தஞ்செய்வதனீ பலன்முதலியன.)

யுதிஷ்டிரர், "தர்மாத்மாவே ! வேந்தரே! நாலுவருணங்களின் தர்மங்களையும் சொன்னதுபோலவே சிராத்தத்தின்விதிமுழுமையையும்பற்றி எனக்கு நீர் உரைக்கக்கடவீர்" என்றுகேட்டார். யுதிஷ்டிரர் இவ்வாறுகேட்டபிறகு, சந்தனுபுத்திரரானபீஷ்மர், சிராத்தவிதியை முழுதும் வருமாறு சொல்லத்தொடங்கினர்.

"ராஜனே ! சிராத்தகர்மத்தைப்பற்றியசிறந்தவிதியை ஊக்கத்துடன்கேள். வீரனே ! பிதிருயாகமானது தன்த்தையும் புகழையும் புத்திரர்களையும் கொடுப்பது. தேவர் அஸுரர் மனிதர் கந்தர்வர் நாகர் அரக்கர் பிசாசர் கின்னரர்ஆகியஇவர்களும் பிதிருக்களை எப்போதும் பூஜிக்கவேண்டியவர்கள்; முதலில் பிதிருக்களைப் பூஜித்து அதன்பின்னேதான் தேவர்களைப் பூஜிக்கின்றனர். ஆதலால், மனிதன் முழுமூயற்சியோடு எப்போதும் பிதிருக்களைப் பூஜிக்கவேண்டும். மஹாராஜனே ! பிதிருக்களுக்குச்சிராத்தம் (அன்வாஹார்யம்) தொடர்ச்சியாகச்செய்யத்தக்கதென்று சொல்லப்படுகிறது. ஆதலால், சிராத்தமானது விசேஷமாகவிதிக்கப்பட்டிருப்பதனால் முதலாவதாக ஏற்படுத்தப்பட்டது. எல்லாத்திதிகளிலும் சிராத்தம்செய்வதனால் பிதிருக்கள்திருப்தியடைகின்றனர். பிண்டங்கள்கொடுத்துச்செய்யப்படும் சிராத்தத்தை [1]மாதந்தோறும் செய்யவேண்டும். கிருகஸ்தனனபிராம்மணன் அமாவாஸ்யையில் பிதிருயாகத்தைச் செய்யவேண்டும். மாதந்தோறும் பிண்டதானத்தோடு செய்யும்தர்சஸ்ராத்தத்தைத்தான் அன்வாஹார்யமென்று வித்வான்கள் நினைக்கின்றனர். பரிசுத்தனால்க் கைகூப்பிக்கொண்டு சிரத்தையுடன் மாமிசத்தினால் அந்தச்சிராத்தத்தைச் செய்யவேண்டும். ஒவ்வொருதிதியிலும் பகலில்சிராத்தம்செய்வதின் குணங்களெல்லாவற்றையும் உனக்குச்சொல்வேன். குற்றமற்றவனே! எந்தத்தினங்களில் சிராத்தங்களைச்செய்வதினால்என்னபலன்கள்கிடைக்குமோஅவற்றையெல்லாம் உள்ளபடிசொல்வேன். அதைஎன்னிடம் தெரிந்துகொள். பிரதமையில் பிதிருக்களைப்பூஜிப்பதனால் அழகானபிள்ளைகளைப்பெறு

[1] அமாவாஸ்யைதோறும்.

மானஸ்திரீகளைத் தன்கிருஹத்தில் அடைவான். துவிதியையில் பிதிருசிராத்தம்செய்வதனால் வீட்டில் பெண்கள் பிறப்பார்கள் : திருதியையிற்செய்வதனால் குதிரைகளும் சதுர்த்தியிற்செய்வதனால் எருமை ஆடுமுதலிய நான்குகால்களுள்ளவைகளும் மிகுதியாகஉண்டாகும். ராஜனே! பஞ்சமியிற்சிராத்தம்செய்பவர்களுக்கு அநேகபுத்திரர்களுண்டாவர்; ஷஷ்டியிற்செய்யும்மனிதர் ஒளிபெறுவர். ராஜனே! ஸப்தமியிற்சிராத்தம்செய்பவனுக்குப் பயிரின்பலன்விருத்தியாகும்; அஷ்டமியிற்செய்பவன் வர்த்தகத்தில் லாபத்தையடைவான். நவமியிற்சிராத்தம்செய்பவனுக்குக் குதிரைகோவேறுகழுதைமுதலிய ஒற்றைக்குளம்புள்ளபிராணிகள் மிகுதியாகஉண்டாகும். தசமியில்சிராத்தம்செய்பவனுக்கு ஆக்கள் மிகுதியாகும். ராஜனே! ஏகாதசியில்சிராத்தம்செய்பவன் வஸ்திரங்கள் பாத்திரங்கள்முதலியவற்றை அடைவான். அவன்வீட்டில் ஒதலும் யாகமும் நிரம்பப்பெற்றபுத்திரர்கள் பிறப்பர். துவாதசியில்சிராத்தம்செய்பவனுக்கு அதிகதனங்களும் வெள்ளியும் அழகானபொன்னும் எப்போதும்காணப்படும். திரயோதசியில் சிராத்தம்செய்பவன் இனத்தாரிற்சிறந்தவனாவான். சதுர்த்தசியில்சிராத்தம்செய்யும்மனிதனுக்கு யுத்தங்கள் நேரிடும். அவன்வீட்டில் புருஷர்கள் இளமைப்பருவத்தில் நிச்சயமாக இறப்பார். அமாவாசையில்சிராத்தம்செய்பவன் விரும்பினவற்றையெல்லாம்அடைவான். கிருஷ்ணபக்ஷத்தில் சதுர்த்தசியைத்தவிர மற்றத்தசமிமுதலானதிதிகள்சிராத்தத்திற்குச்சிறந்தவை; மற்றவை அவ்வளவுசிறந்தவையல்ல. சிராத்தத்திற்குக் கிருஷ்ணபக்ஷமானது சுக்லபக்ஷத்தைவிட எப்படிவிசேஷமோ அப்படியே முற்பகலைவிடப் பிற்பகல் விசேஷம்" என்றார்.

நூற்றுமுப்பத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(சிராத்தத்தில்கொடுக்கத்தக்கபொருள்களும் அவ்வவற்றின்பலன்களும்.)

யுதிஷ்டிரர், "அரசரே! பிதிருக்களுக்கு எதைக்கொடுத்தால் அக்ஷயமாகும்? எதற்குப் பலன்கள்அதிகம்? ஒன்றுஅனந்தமாவது எது?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"யுதிஷ்டிர! சிராத்தத்தை யறிந்தவர்கள் சிராத்தத்தின்முறையில் எந்தஹவிஸ்களை விரும்பினபலனைத் தருகின்றவையென்றுநினைக்கின்றனரோ அவற்றையும் அவற்றின்பலன்களையும் என்னிடம்

கேள். ராஜனே! எள், நெல், யவம், உளுந்து, ஜலம், கிழங்கு, கனிகள் இவற்றைக்கொடுத்துச்செய்யப்படும் சிராத்தத்தினால் பிதிருக்கள் ஒருமாதம்திருப்தியடைகின்றனர். எள்ளுமிகுதியாயுள்ளசிராத்தத்தை அக்ஷயமென்று மனு சொல்லியிருக்கிறார். போஜனபதார்த்தங்கள்எல்லாவற்றினும் எள்ளே முதன்மையாக நினைக்கப்படுகிறது. பிதிருகணங்களுக்கு மத்ஸ்யத்தினால் இரண்டுமாதம்வரையில் திருப்தி உண்டாகும். ராஜனே! செம்மறிஆட்டின்மாமிசத்தினால் மூன்று மாதங்களும் முயல்மாமிசத்தினால் நான்குமாதங்களும் வெள்ளாட்டு மாமிசத்தினால் ஐந்துமாதங்களும் பிதிருக்கள் திருப்தியடைவர். பிரபுவே! பன்றிமாமிசத்தினால் ஆறுமாதங்களும், [1]சகுலமாம்ஸத்தினால் ஏழுமாஸங்களும் புள்ளிமான்மாம்ஸத்தினால் எட்டுமாதங்களும் கறுப்புமான்மாம்ஸத்தினால் ஒன்பதுமாதங்களும் [2]கவயமிருகத்தின்மாம்ஸத்தினால் பத்துமாஸங்களும் எருமைமாம்ஸத்தினால் பதினொரு மாதங்களும் பிதிருக்களுக்குத் திருப்தியுண்டாகும். கோமாம்ஸத்தோடு சிராத்தம்செய்தால் 'ஒருவருஷம் திருப்தியுண்டாகுமென்று சொல்லப்படுகிறது. நெய்யுடன் சேர்ந்தபாயஸமானது கோமாமிசத்தைப்போன்றது. விருஷபத்தின் மாம்ஸத்தினால் பன்னிரண்டு வருஷம் பிதிருதிருப்தியுண்டாகும். இறந்துபோனதிதியில் காண்டாமிருகத்தின் மாம்சத்தைக்கொடுப்பது ஒன்று அனந்தமாகிறது. அறைக்கீரையும் [3]பொன்வெள்ளிமுதலியவையும் ஆடும் அனந்தமாவனவென்று சொல்லப்படுகின்றன. யுதிஷ்டிர! இந்தவிஷயத்தில் பிதிருக்களால்சொல்லப்பட்ட ஸ்லோகங்களைக் கூறுகின்றனர். அவற்றை ஸனத்குமாரபகவான் முன்னே எனக்குச் சொன்னார். அவற்றின் பொருள், 'தக்ஷிணையனத்தில் மகநக்ஷத்ரம்கூடினதிரயோதசியில் நெய்யுடன்சேர்ந்தபாயஸத்தைச் சால்வைமுதலிய கம்பளத்தோடும் பொன்வெள்ளிமுதலிய தக்ஷிணையோடும் நியமம்தவறாமல் [4]கஜச்சாயையில் அதன்காதுக்காற்றாலே விசிறப்பட்டவையாகக்கொடுத்துச் சிராத்தம்செய்பவன் நமதுகுலத்திற்பிறப்பனோ? ஒருவன் அநேகபுத்திரர்களை விரும்பவேண்டும். ஏனெனில், உலகங்களில் பெயர்பெற்றதும் சிராத்தத்தை அக்ஷயமாகச்செய்வதுமாகிய அக்ஷயவடமென்

1 ஒருவகைமத்ஸ்யம் 2 பசுவைப்போன்றஒருவகைமான்.

3 'காஞ்சனமென்னும் மரத்தின்பூமுதலியன' என்பது பழையவுரை,

4 'மாகாளபக்ஷம் த்ரயோதசியில், ஸ்வர்க்கவீதியில், ஸாவதம்திரும்புகிறது; அது சிறந்தபுண்யகாலம். அதனால் அது கஜச்சாயைஎனப்படும்' என்பது ஐதிஹ்யம்.

னும் ஆலமரமிருக்கும்கையைக்கு ஒருவனுவதுபோவனே' என்பது பிதிருதினத்தில் ஜலம் கிழங்கு கனி மாம்ஸம் அன்னம்இவற்றில் எதையாவது தேனுடன்சேர்த்துக் கொடுத்தால் அதுஅனந்தமாகும்.

நூற்றுமுப்பத்தாருவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(யமன், நக்ஷத்திரங்களில்செய்யும் சிராத்தங்களின் பலன்களைச் சகபிந்துவுக்குச் சொல்லியது.)

பலனைக்கருதி ஒவ்வொருநக்ஷத்திரத்திலும் செய்யக்கூடியவை யாகச் சகபிந்துவுக்கு யமன்சொன்னசிராத்தங்களை நான் உனக்குச் சொல்லுகிறேன்; கேள். எந்தமனிதன் கிருத்திகாநக்ஷத்திரம்கூடிய தினத்தில் விடாமல்சிராத்தம்செய்வனோ அவன் துயரம்நீங்கித் தன் ஸந்ததிகளுடன் அக்கினிஹோவைத்துக்கொண்டு யாகம்செய்வான். சந்ததியைவிரும்புகிறவன் ரோகிணீநக்ஷத்திரத்திலும்பராக்கிரமத்தைக் கருதுகிறவன் மிருகசீரிஷத்திலும் (பித்ரு) யாகம்செய்யக்கடவன். திருவாதிரையில்சிராத்தம்செய்யும்மனிதன் கொடும்செய்கையுள்ளவனுவன். புனர்பூசத்தில்சிராத்தம்செய்யும்மனிதன் பயிர்ப்பலனையடைவான். தேகபுஷ்டியைக்கருதுகிறமனிதன் பூசத்தில் சிராத்தம்செய்யக்கடவன். ஆயில்யத்தில்சிராத்தம்செய்யும்மனிதன் தைரியசாலிகளான புத்திரர்களைப் பெறுவன்; மகநக்ஷத்திரத்தில்சிராத்தம்கொடுப்பவன் இனத்தாரிற்சிறந்தவனுவன். பூரநக்ஷத்திரத்தில் சிராத்தம்கொடுப்பவன் யார்க்கும்இனியவனுவன்; உத்தரத்தில்கொடுப்பவன் சந்ததியையடைவன்; ஹஸ்தநக்ஷத்திரத்தில் கினைத்தபலனையடைவன். சித்திராநக்ஷத்திரத்தில் சிராத்தம்கொடுப்பவன் அழகுள்ளபுத்திரர்களைப் பெறுவன். சுவாதிநக்ஷத்திரத்தில் பிதிருக்களைஆராதிப்பவன் வர்த்தகத்தொழிலையடைவான். புத்திரனைக்கருதும்மனிதன் விசாகநக்ஷத்திரத்தில்சிராத்தம்செய்வதனால் புத்திரர்களை வெகுவாகப்பெறுவான். அனுஷத்தில்சிராத்தம்செய்பவன் ராஜ்யமென்னும்சக்கரத்தை நடத்துவான். குருவம்சஶ்ரேஷ்டனே! புலன்களையடக்கிக் கேட்டையில் சிராத்தம்செய்யும்மனிதன் செல்வம்பெற்றுத் தலைமையையடைவன்; மூலத்தில் ஆரோக்கியத்தையும் பூராடத்தில் சிறந்தபுகழையும்அடைவன்; உத்தராடத்தில் துயரமற்றுப் பூமியில்சஞ்சரிப்பன். அபிஜித் என்னும்நக்ஷத்ரகாலத்தில் சிராத்தம்செய்பவன் சிறந்தகல்வியை

அடைவன். திருமணத்தில் சிராத்தம் செயபவன் இறந்தபின் நற பெறுவன். அவிட்டத்தில் நியமத்துடன் சிராத்தம்செய்யும்மனிதன் ராஜ்யம்பெறுவன். சதயநக்ஷத்திரத்தில்சிராத்தம்செய்பவன் வைத்தியத்தில் தேர்ச்சிபெறுவன். பூரட்டாதியில்சிராத்தம்செய்பவன் வெள்ளாடுகளையும் செம்மறியாடுகளையும் மிகுதியாயடைவன். உத்திரட்டாதியில்சிராத்தம்செய்பவன் ஆயிரக்கணக்காகப்பசுக்களையடைவன். ரேவதியில்சிராத்தம்செய்பவன் வஸ்திரங்கள்முதலான பொருள்களை மிகுதியாக அடைவன். அசுவினிநக்ஷத்திரத்தில் குதிரைகளையும் பரணியில் தீர்க்காயுளையும் அடைவன். சசபிந்துவென்னும்அரசன் இந்தச்சிராத்தவிதியைக்கேட்டு அப்படியேசெய்தான். அவன் பூமியை எளிதில்வென்று ஆண்டான்" என்றார்.

நூற்றுமுப்பத்தேழாவது அத்தியாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(சிராத்தத்தில் நிமந்திரணத்துக்குத் தகாதவர்களும் தக்கவர்களும்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! கௌரவஸ்ரேஷ்டரே! எப்படிப்பட்டபிராம்மணர்களுக்குச் சிராத்தம் கொடுக்கவேண்டுமென்பதை எனக்கு உரைக்கக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"தானத்தின்முறையையறிந்தக்ஷத்திரியன் தேவகாரியங்களில் பிராம்மணர்களைப் பரீக்ஷிக்கலாகாது. பிதிருகாரியங்களில்மட்டும் பரீக்ஷிப்பதுநியாயமென்று சொல்லுகின்றனர். தேவகாரியங்களில் தேவர்கள் இங்குவந்து தங்கள்தெய்விகசக்தியினால் அவற்றைப் பரிசுத்தமாக்குகின்றனர். ஆதலால், மனிதன் தேவர்களையுத்தேசித்து எல்லாருக்கும் தானம்செய்யலாம். மஹாராஜனே! தெரிந்தவன் சிராத்தத்தில்மாத்திரம் பிராம்மணர்களைக் குலம் ஒழுக்கம் பிராயம் உருவம் கல்வி முன்னோர்களின்இருப்பிடம் இவற்றைப்பற்றிப் பரிசோதிக்கவேண்டும். அவர்களில் சிலர் தாமிருக்கும் பந்தியையே கெடுப்பவர்; மற்றும்சிலர் பந்தியைப் பரிசுத்தப்படுத்துகிறவர். அரசனே! பந்தியிற்சேரத்தகாதவரைச் சொல்வேன்; அவர்களைக் கேள். சூதாடுகிறவனும் கர்ப்பத்தைக்கொன்றவனும் க்ஷயரோகியும் பசுக்களைமேய்ப்பவனும் [1]லக்ஷணங்களில்லாதவனும் ஊர்ப்பொதுவுக்குழவல்தொழில்செய்பவனும் வட்டிக்குப்பணம்கொடுப்பவனும் பாடகனும் எல்லா

1 'வேதாத்யயனமுதலியன இல்லாதவன்' என்பது பழையவுரை.

வற்றையும்விற்பவனும் வீட்டில்தீவைத்தவனும் விஷமிட்டவனும்[1] சமைத்தபாத்திரத்தில்புசிப்பவனும்ஸோமமென்னும்கொடியைவிற்பவனும் ஸாமுத்ரிகாலக்ஷணம்சொல்லுகிறவனும் அரசனுடைய வேலைக்காரனும் எண்ணெய்விற்பவனும் ஜாலவித்தைசெய்பவனும் தகப்பனுடன் [2]பங்குபிரித்துக்கொள்பவனும் வேறுபுருஷனைவைத்திருக்கும்மனைவியுள்ளவனும் தீட்டுள்ளவனும் திருடனும் கைத்தொழில்செய்துபிழைப்பவனும் வேறுவேஷம்போடுகிறவனும் கோள்சொல்லுகிறவனும் சினேகிதனுக்குத்தீங்குசெய்கிறவனும் பிறர்மனைவியோடுசேருகிறவனும் ஸம்ஸ்காரமில்லாதகீழ்ஜாதிகளுக்குக்கற்பிப்பவனும் ஆயுதம்பிடித்துஜீவிப்பவனும் நாய்களோடுசஞ்சரிப்பவனும் நாய்க்கடிபட்டவனும் [3]பரிவித்தியும் தோல்நோகமூள்ளவனும் குருவின்மனைவியைச்சேர்ந்தவனும் [4]நாடகமாடுகிறவனும் கோவில்பூஜகனும் சோதிடத்தால்பிழைப்பவனும் பந்தியில்சேரத்தகாதவர். யுதிஷ்டிர! பந்தியில்சேரத்தகாத இப்படிப்பட்ட பிராம்மணர்களால் புசிக்கப்பட்டஅன்னமானது ராக்ஷஸர்களைச்சேருமென்றுவேதமறிந்தவர்கள் சொல்லுகின்றனர். ப்ராத்தத்தில்புசித்தபின் வேதமோதினாலும் சூத்ரப்பெண்ணினிடம்சேர்ந்தாலும் அவனுடையபிதிருக்கள் அவன்விஷ்டையில் ஒருமாதம்வஸிப்பர். ஸோமத்தைவிற்றவனுக்குத்தானஞ்செய்தால் விஷ்டையிலும் வைத்தியனுக்குத்தானஞ்செய்தால் சீயிலும் இரத்தத்திலும் பிதிருக்கள் இருப்பார். கோவில்பூஜகனுக்குச்செய்யும்தானம பயனற்றது. வட்டிவாங்குகிறவனுக்குக் கொடுத்தால் ஸந்ததியுண்டாகாது. வர்த்தகனுக்குக்கொடுக்குந்தானம் இம்மையிலும் மறுமையிலும் பயன்படாது. இரண்டாவது விவாகம்செய்துகொண்டவளுக்குப்பிறந்தபிராம்மணனிடம்கொடுத்த ஹவ்யம் சாம்பலில்செய்யப்பட்டஹோமம்போலேதான். தர்மத்தை விட்டவர்களுக்கும் ஒழுக்கம்கெட்டவர்களுக்கும்கொடுக்கும் ஹவ்ய கவ்யங்கள் மறுமையில் பயன்படா. தெரிந்திருந்தும் அப்படிப்பட்டவர்களுக்குத்தானஞ்செய்யும் புத்திகெட்டவனுடைய பித்ருக்கள் பரலோகத்தில் விஷ்டையைப்புசிப்பரென்பது நிஜம். இந்தஅதமப் பிராம்மணர்களையும் சூத்திரர்களுக்குஉபதேசஞ்செய்யும்மதிகெட்ட

---

1 'குண்டாசி' என்பது மூலம்.

2 இங்கு 'விவதமாசி' என்னும்பாடம் பொருத்தமானது; அதற்கு, 'தகப்பனுடன்கலகப்படுகிறவன்' என்பது பொருள்.

3 சாந்திபர்வம் 111 - ம் பக்கம்குறிப்பிற்காண்க.

4 'விறகுவெட்டிப்பிழைப்பவன்' என்பது பழையஉரை.

வரையும் பங்கிக்குத்தகாதவரென்றறியவேண்டும். வேந்தனே! (போஜனத்திற்காக) உட்கார்ந்திருக்கும் பங்தியில்சேர்ந்த ஒற்றைக்கண் பொட்டையன் (தன்பக்கங்களிலுள்ள) அறுபதுபேர்களையும், ஆண்மையில்லாதவன் நூற்றுவரையும், வெண்குஷ்டமுள்ளவன் தன்பார்வைசெல்லுகிறவரையிலுமுள்ளவர்களையும் கெடித்துவிடுவர். தலைப்பாகையோடுபுசிப்பதும் பாதரக்ஷையோடுபுசிப்பதும் தெற்குமுகமாகப்புசிப்பதும் எல்லாம் அஸுரரைச்சேருமென்றறி. கோபத்தோடும் சிரத்தையில்லாமலும் கொடுக்கப்பட்டதெல்லாவற்றையும் அஸுரராஜாவான பலியின்பாகமாகப் பிரம்மதேவர் விதித்திருக்கிறார். நாய்களும் பங்தியைக்கெடிப்பவரும் எவ்வகையிலும் பார்க்கலாகாது. ஆதலால், மறைவுள்ளஇடத்தில் எள்ளை முழுதும்இறைத்துச் சிராத்தம்செய்தல்வேண்டும். எள்ளில்லாதசிராத்தத்திலும் கோபக்காரன்செய்தசிராத்தத்திலுமுள்ளஹவிஸை ராக்ஷஸர்களும் பிசாசர்களும் அபகரிக்கின்றனர். பங்திக்குத்தகாதவன், பங்தியில் புசிப்பவர் எவ்வளவுபேரைப் பார்க்கிறானே அவ்வளவுபேர் புசிப்பதனலுண்டாகும்பலனையும் அந்தஅன்னம்போடும்மூடனுக்கு இல்லாமற்செய்துவிடுவான். பரதர்ரேஷ்டனே! (தாங்களிருக்கும்) பங்தியையே சுத்தமாக்கத்தக்கவர்களை அறிந்துகொள்ளவேண்டும். அவர்களை லக்ஷணங்களுடன்சொல்லுகிறேன். அந்தப்பிராம்மணரைப்பரிசோதிப்பாயாக. வித்தைகளிலும் வேதங்களிலும் பிரம்மசாரிவிரதத்திலும் முடிவுபெற்று ஸ்நானஞ்செய்தவரும் பெரியோரொழுக்கங்களை அனுஸரிப்பவருமானபிராம்மணர்களனைவரும்எல்லாரையும்பரிசுத்தமாகச் செய்பவரென்றறியவேண்டும். பங்திக்குரியவர்களைச் சொல்வேன். அவர்கள் பங்தியையேபரிசுத்தப்படுத்துகிறவர்களென்றறியவேண்டும். 1 திரிணாசிகேதன் 2பஞ்சாக்நியுடையவன் 3திரிஸுபர்ணன் ஆறு வேதாங்கங்களையுமறிந்தவன் பிரம்மஜ்ஞானஉபதேசம்செய்யும்பரம்பரையில்பிறந்தவன் ஸாமகன் ஜ்யேஷ்டஸாமமென்னும்ஸாமத்தைக்கானம்பண்ணுகிறவன் தாய்தந்தையருக்கடங்கினவன் பத்துத்தலைமுறையாக வேதமோதிவந்தவன் தன்தர்மபத்னியினிடம் ருதுகாலத்தில் சேருகிறவன் வேதத்தையும் சாஸ்திரத்தையும் பிரம்மசாரிவிரதத்தையும்

1 நாசிகேதமென்ற அக்னியில மூன்று காலம் அக்னிஹோத்திரம் செய்பவன் என்பர் சிலர்; வேதத்தில் நாசிகேதமென்றபெயருள்ள மூன்று அத்யாயங்களை அத்யயனம்செய்தவன் என்பர் வேறுசிலர்.

2 கார்ஹபத்தியம் ஆஹவனீயம் தக்ஷிணம் ஸப்யம் ஆவஸத்யம் என்னும் ஐந்து அக்னிகளையுடைய அக்னிஹோத்ரி.

3 ரிக்வேதத்தில் ஸுபர்ணமென்னும்மூன்று மந்திரம் தெரிந்தவன்.

முடித்துஸ்நானஞ்செய்தபிராம்மணன் அதர்வசிரஸென்னும் அதர்வ ணவேதத்தின் உபநிஷத்தைப்பிரம்மசாரிவிரதத்தோடுஅத்தியயனஞ் செய்தவன் ஐம்புலன்களையுமடக்கினவன் ஸத்தியமேசொல்லுகிறவன் தர்மம்செய்பவன் தன்கர்மங்களில் சிரத்தையுள்ளவன் ஆகியஇவர்கள் பந்தியைப் பரிசுத்தப்படுத்துகிறவர்கள். புண்ணிய தீர்த்தங்களுக்குச் சிரமப்பட்டுச்சென்று ஸ்நானஞ்செய்பவரையும் யாகங்களை மந்திரங்க ளுடன்முடித்து அவபிருதஸ்நானம்செய்பவரையும் கோபியாமலும் ஆசைப்படாமலும் பொறுத்தும் மனத்தையும் புலன்களையும்அடக்கி யும் எல்லாப்பிராணிகளிடத்தும்அன்புவைத்துமிருப்பவரையும் சிராத் தங்களில் வரிக்கவேண்டும். அவர்களுக்குக்கொடுத்ததானம் அழியா தது. அவர்கள்தாம் பந்தியைப் பரிசுத்தப்படுத்துகிறவர்கள். மோக்ஷ தர்மந்தெரிந்தஸங்யாஸிகள் தவஞ்செய்யும்யோகிகள் பாஞ்சராத்ரம் தெரிந்த ஸ்ரேஷ்டர்களானபாகவதர்கள் சிறந்தகுலமுள்ளவரும் வேத த்திற்சொன்ன ஆசாரங்களை அனுஷ்டிப்பவருமான வைகாநஸர்கள் பிராம்மணோத்தமர்களுக்கு இதிஹாஸங்களை நியமத்தோடு சொல்லு கிறவர்கள் பாஷ்யம்தெரிந்தவர்கள் வியாகரணத்தில்கல்லபரிசயமுள்ள வர்கள் புராணங்களையும் தர்மசாஸ்த்ரங்களையும்ஓதி அவற்றின்படி ஸரியாக அனுஷ்டானம்செய்பவர்கள் குருகுலவாஸஞ்செய்தவர்கள் ஸத்தியம்பேசுகிறவர்கள் எல்லாவேதங்களிலும் எல்லா உபதேசங்களி லும் ஆயிரவர்களில் முதன்மையாயிருப்பவர்கள் ஆகிய இந்தமகாஜ ாபாவர்களும் பந்திபாவனரென்றறியவேண்டும். இவர்கள் பந்தியில் எவ்வளவுதூரம் நோக்குகின்றனரோ அவ்வளவுவரையிலும் பரிசுத்த மாகச் செய்கின்றனர்; இப்படிப் பந்தியைப்பரிசுத்தப்படுத்துவதனால் பந்திபாவனரென்று சொல்லப்படுகின்றனர். குருபரம்பரையாகவந்த பிரம்மஜ்ஞானத்தை ஆஸ்திபாகப்பெற்றவன்ஒருவனும் இரண்டரைக் குரோசங்கள் வரையிலும் சுத்தமாக்குவனென்று பிரம்மஜ்ஞானிகள் நினைக்கின்றனர். ரித்விக்காகவும் உபாத்தியாயனாகவுமிராதஅவன் ரித்விக்குக்களின் அனுமதியினால் முதலாஸனத்தையடைவானாயின் அந்தப்பந்தியின்பாவத்தையே போக்கிவிடுவான். ராஜனே! வேதம் தெரிந்து பந்தியைக்கெடுக்கும் குற்றங்களொன்றுமில்லாதவனாகவும் வழுவில்லாதவனாகவுமிருந்தால் அவனும் பந்திபாவனன்தான். ஆத லால், முழுமுயற்சியோடு பிராம்மணர்களைப்பரிசோதித்துத் தர்மங் களைவிடாதவரும் மனத்தையடக்கினவரும் மேற்குலத்தோரும் கல்வி கேள்விமிகுந்தவருமான பிராம்மணர்களைச்சிராத்தத்தில்வரிக்கவேண் டும். சினேகிதர்களை முக்கியமாகக்கொண்டு செய்யப்படுஞ்சிராத்தம்க

ளும் ஹோமங்களும் பிதிருக்களையும் தேவர்களையும் திருப்திசெய் விக்கமாட்டா. அப்படிச்செய்பவன் ஸ்வர்க்கம்போகான். எவன் சிராத்தங்களைக்கொண்டு சினேகங்களைச்செய்கிறானே அவன் தேவ யானமென்னப்பட்ட அர்ச்சிராதிமார்க்கத்திலுல்போவதில்லை. சிராத் தத்திலுல் சினேகம்சம்பாதிப்பவன் பிடிப்பற்றஅரசம்பழம்போல ஸ்வர்க்கலோகத்திலிருந்து கீழேவிழுவான். ஆதலால், சிராத்தம்செய் பவன் சினேகிதனைத் தேடலாகாது. மித்திரர்களைச்சேர்ப்பதற்காகப் பொருள்களைக் கொடுக்கலாம். எவனை மித்திரனுகவும் சத்துருவாக வும் நினைக்கலில்லையோ அந்தமத்தியஸ்தனைத் தேவகாரியத்திலும் பிதிருகாரியத்திலும் புசிப்பிக்கவேண்டும். களர்மண்ணில்விதைத்த விதை மூளையாமலும் விதைத்தவன் அதன்பலனையடையாமலும் போவதுபோலவே தகுதியற்றவர்கள் புசிக்கும்சிராத்தம் இம்மை யிலும் மறுமையிலும் பயன்படாது. ஒதுதலில்லாதபிராம்மணன் செத்தைகளிலிருக்கும்நெருப்புப்போல அவிந்துபோகிறான். சிராத் தத்தை அவனுக்குக் கொடுக்கலாகாது. சாம்பலில் ஹோமஞ்செய்வ தில்லையே. பதிலுக்குப்பதிலாகச் சிராத்தத்தில் புசிப்பிப்பது பிசா சர்களைச்சேரும் தக்ஷிணையாகிறது. அது தேவர்களையுஞ்சேராது; பித்ருக்களையுஞ்சேராது. அது புண்ணியம்குன்றிக் கன்றிறந்தபசு கொட்டிலில்தடுமாறுவதுபோல இங்கேயே தடுமாறுகிறது. அவிந்த நெருப்பில் நெய்யைஹோமம்செய்தால் அது எப்படி தேவர்களையும் பிதிருக்களையும் சேருவதில்லையோ அப்படியே பாடகனுக்கும் நட் டுவனுக்கும் பொய்சொல்லுகிறவனுக்கும் கொடுக்கும் தக்ஷிணை. பொய்யனுக்குக் கொடுக்கப்படும்தக்ஷிணை கொடுப்பவனைக் காப்பாற் றாது; அவனுக்கு இரண்டுலோகங்களையும்கெடுக்கும். கெடுப்பதும் இகழப்படுவதுமாகிய அந்தத்தக்ஷிணை தான்விழும்போதே கொடுப்ப வரின்பித்ருக்களையும் தேவலோகத்திலிருந்து தள்ளிவிடும். யுதிஷ் டிர! எல்லாத்தர்மங்களையும் நிச்சயமாகத்தெரிந்து ரிஷிகளின் ஆசா ரப்படி எப்போதும் அனுஷ்டிப்பவர்களையே தேவர்கள் பிராம்மணர்க ளென்றுநினைக்கின்றனர். பாரதனே! வேதமோதுவதையும் ஞானத் தையும் தவத்தையும் கர்மத்தையும் நியமமாகஉடையவர்களே ரிஷிக ளென்றறியத்தக்கவர். பாரதனே! சிராத்தங்களை ஞானநிஷ்டையுள் ளவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அவர்களில் எத்தமனிதர்கள் பிராம்மணர்களுக்கு ஹிதத்தைச்செய்யாமல் வீண்பேச்சுக்களில் அவர்களை இகழ்ந்தும்பேசுகின்றனரோ அவர்களைச் சிராத்தத்தில் புசிப்பித்தல் கூடாது. ராஜனே ! இகழப்பட்டபிராம்மணர்கள் அந்த

இகழ்ந்தவன்குலத்தில் மூன்றுதலைமுறைகளைக் கெடுத்துவிடுவார்க ளென்று வைகானஸர்களென்னும் ரிஷிகளின்சொல் கேட்கப்படு கிறது. ராஜனே! வேதங்களில்கரைகண்டபிராம்மணர்களைத் தூர த்திலேயேகண்டறியவேண்டும். அவர்கள் நண்பராயினும் பகைவ ராயினும் சிராத்தத்தை அவர்களுக்கே கொடுக்கவேண்டும். பார தனே! மந்திரங்கள்தெரியாத லட்சம்பிராம்மணர்களை ஒருமனிதன் புசிப்பித்தால் பயனென்ன? மந்திரம்தெரிந்தவொருவன் திருப்தியடை தால் அவன் அவரெல்லாரிலும் மிக்கதகுதியுள்ளவனுவான்"என்றார்.

நூற்றுமுப்பத்தேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(சிராத்தமண்டானவராலாறும் சிராத்தத்தில் விடவேண்டியவையும்.)

யுதிஷ்டிரர், "சிராத்தமானது எந்தக்காலத்தில் யாரால் உண் டாக்கப்பட்டது? அது எவ்வகையானது? பிருகுவும், அங்கிரஸும் இருந்தகாலத்தில் எந்தரிஷியினுலுண்டாக்கப்பட்டது? 1 சிராத்தங் களில் விடத்தக்கவை யாவை? எந்தக்கிழங்குகளையும் காய்களையும் விடவேண்டும்? தானியஜாதிகளில் விடத்தக்கவை எவை? பிதா மஹரே! அவற்றை எனக்குச்சொல்லும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"ராஜனே! சிராத்தம் எந்தக்காலத்திலுண்டானது, எவ்வித மானது, யாராலுண்டாக்கப்பட்டதென்பதை என்னிடம்கேள்.கௌர வனே! பிரம்மாவின் புத்ரரும் சிறந்தமஹிமையுள்ளவருமான அத்ரி மகரிஷியிருந்தார். மகாராஜனே! அவர்குலத்தில் தத்தாத்ரேய ரென்பவர் இருந்தார். தத்தாத்ரேயருக்குத் தவத்தையேதனமாக வுடைய நிமியென்னும்புத்ரர் உண்டானார். நிமிக்கு ஸ்ரீமானென்று பெயர்பெற்றசிறப்புள்ளபுத்ரர் பிறந்தார். அவர் செயற்கரியதவஞ் செய்து ஆயிரம்வருஷம் நிரம்பினபின் காலகதிக்குட்பட்டு மரண மடைந்தார். நிமியென்பவர் சாஸ்த்ரங்களிற்சொல்லப்பட்டகர்மங் களினல் சுத்தம்செய்துகொண்டபிறகு, புத்ரசோகத்தையே நினை ந்து தாங்கக்கூடாத மனக்கொந்தளிப்பை அடைந்தார். சிறந்தஅறி வுள்ள அந்நிமி சதுர்த்தசிதிதியில் தம்வீட்டுக்கார்யங்களை முடித்துக்

1 கூறியதைக்கூறுதலால், இங்கே அதிகபாடமான அரைப்லோகம் விடப்பட்டது.

கொண்டபிறகு அதேதுயரத்தைநினைந்து இரவின்பின்பாகத்தில் கண்விழித்துக்கொண்டார். விசனத்தினால் கலங்கின மனத்துடன் விழித்துக்கொண்ட அவருடைய புத்தியானது இதரவிஷயங்களில் மனம் செல்லாமையினால் விசாலமாகச்சென்றது. பிறகு, ஊக்கத்துடன் சிராத்தம்செய்யும்வகையைப்பற்றிச் சிந்தித்தார். மிகச் சிறந்தஞானமுள்ள தபோதனராகியநிமி அந்தக்குமாரரால் புசிக்கப் பட்டவையும் அவரால் வேண்டுமென்று சொல்லப்பட்டவையும் மனத்தில் விரும்பப்பட்டவையுமான கிழங்குகள் கனிகள் மற் றெல்லாவற்றையும் தம்மனத்தில் நிச்சயம்செய்துகொண்டு அமா வாஸ்யைதினத்தில் சிறந்தபிராம்மணர்களைவருவித்து அவர்களுக்குத் தெற்குமுகமான ஆஸனங்கள் எல்லாவற்றையும் தாமேபோட்டார்; பிறகு, ஏழுபிராம்மணர்களை ஒரேகாலத்தில் போஜனத்திற்கு உட் காரவைத்தார். ஸமர்த்தரானநிமி உப்பில்லாமல் சாமையரிசி அன் னத்தை உணவாகக்கொடுத்தார். அப்போது அன்னத்தைப்புஜிக் கும் பிராம்மணர்களுடைய ஆஸனங்களிலும் பாதங்களிலும் தர்ப் பங்கள் தெற்குநுனியாக வைக்கப்பட்டன. அவர் பரிசுத்தராகிச் சிரத்தையோடு தெற்குநுனியாகப் போடப்பட்டதர்ப்பங்களில் பெய ரையும்கோத்திரத்தையும் சொல்லி ஸ்ரீமானுக்குப் பிண்டப்பிரதானம் செய்தார். ரிஷிஸ்ரேஷ்டரான அந்தநிமியானவர்தாம் தர்மக்கேட்டைச் செய்ததனால் பின்னர் பெருவருத்தத்தினால்பீடிக்கப்பட்டு, 'இதற்கு முன் ரிஷிகள்செய்யாத இந்தக்கார்யத்தை நான் ஏன்செய்தேன்? பிராம்மணர்கள் சாபத்தினால் என்னை எரித்துவிடாமலிருப்பாரா?' என்றுவிசாரமடைந்தார்; பிறகு, பகவானைஅத்திரிமுனிவர் தம்வம் சத்திற்குத்தலைவரென்றுநினைத்து அவரை ஊக்கத்துடன் தியானம் செய்தார். அவ்வாறு அவர்தியானம்செய்தமாத்திரத்தில் அத்திரிமகா முனிவர் வந்தார். குற்றமில்லாதஅத்திரிமுனிவர், புத்திரசோகத்தி னால்பீடிக்கப்பட்டநிமியைக்கண்டு இன்சொற்களினால் அவரை மிக வும்தேற்றினார். 'தபோதனனானநிமியே! உன்னால்செய்யப்பட்டஇந் தப்பிதிருயாகமானது எனக்குஸம்மதம். இந்தத்தர்மம் முற்காலத் தில் பிரம்மதேவராலேயே கண்டறியப்பட்டது. அப்படி. பிரம்மாவி னால் ஏற்படுத்தப்பட்டஅந்தத்தர்மந்தான் உன்னால் இப்போது செய் யப்பட்டது. பிரம்மாவைத்தவிர வேறுயார் சிராத்தத்தில்விதியை ஏற்படுத்தலாம்? புத்திரனே! இப்போது சிராத்தத்திற்குரியஉத்தம மானவிதியை உனக்கு உரைப்பேன். புத்திரனே! பிரம்மதேவரால் ஏற்படுத்தப்பட்ட அந்தவகையை என்னிடம்தெரிந்துகொண்டுசெய்.

ரிஷியே! ஆதிகாலத்தில் பிரம்மதேவர் தாமாகவே மந்திரத்தோடு அக்கினிகளுக்கு ஓரிடம்உண்டாக்கி அங்கே பித்ருக்களுடன்கூடவே யிருக்கும் அக்நி, ஸோமன், வருணன், விஶ்வேதேவர்கள்இவர்களுக்கு ஹவிர்ப்பாகங்களே நியமமாக ஏற்படுத்தினர். சிராத்தத்தில் பூமிதேவியைஉலகத்தைத்தாங்குகிறவளென்றும் [1]வைஷ்ணவியென்றும் [2]காசியபியென்றும் [3]அக்ஷயையென்றும் துதிக்கவேண்டும்; ஜலங்கொண்டுவருகையில் வருணபகவானைத் துதிக்கவேண்டும். குற்றமற்றவனே! பிறகு, அக்நியையும் ஸோமனையும் ஆராதிக்கவேண்டும். ஸௌர்யகிரணத்தையுண்பவராகப் பிரம்மாவினால் படைக்கப்பட்ட மகானுபாவர்களான பித்ருதேவதைகளுக்கும் ஹவிர்ப்பாகத்தைக் கொடுக்கவேண்டும். அவர்கள் சிராத்தத்தில் பூஜிக்கப்பெற்றுத்தான் பாவத்திலிருந்துவிடுபடுகின்றனர். பித்ருதேவர்களின் வம்சங்கள் ஏழாகப் பிரம்மதேவரால் முன்னமே காணப்பட்டன. அக்நிமுதலானவிஶ்வேதேவர்கள் முன்னமே கூறப்பட்டனர். ஹவிர்ப்பாகத்திற்குரிய அம்மஹாத்மாக்களின் நாமங்களைச் சொல்லுவேன். ஸஹன், [4]க்ருது, விபாப்மன், புண்ணியக்ருத், பாவனன், க்ராம்யன், க்ஷேம்யன், ஸமூஹன், நிவ்யஸாது, விவஸ்வான், வீர்யவான், ஶ்ரீமான், கீர்த்திமான், க்ருதாத்மன், ஜிதாத்மன், மூனிவீர்யன், தீப்தரோமன், பயங்கரன், அனுகர்மன், ப்ரதீதன், ப்ரதாதா, அம்சுமான், சைலாபன், பரமக்ரோதி, தீரோஷ்ணி, பூபதி, ஸ்ரஜன், வஜ்ரீ, வரி, வித்யுத்வர்ச்சஸ், [5] ஸோமவர்ச்சஸ், ஸுர்யஶ்ரீ, ஸோமபன், ஸுர்யஸாவித்ரன், தத்தாத்மன், புண்டரீயகன், உஷ்ணீஷபன், கபோதன், விஶ்வாயு, தீப்தி, சமூஹரன், ஸுரேசன், வ்யோமாரி, சங்கரன், பவன், ஈசன், கர்த்தா, க்ருதி, தக்ஷன், புவனன், திவ்யகர்மக்ருத், கணிதன், பஞ்சவீர்யன், ஆதித்யன், ரஶ்மிவான், ஸப்தக்ருத், ஸோமவர்ச்சஸ், விஶ்வக்ருத், கவி, அனுகோப்தா, ஸுகோப்தா, நப்தா, ராஜ்வரன்என்பவர்கள் காலத்தின்கடையை நடத்துகிறவர்களும் எக்காலமுமுள்ளவர்களும் மஹானுபாவர்களுமாகிய விஶ்வேதேவர்களென்று சொல்லப்படுகின்றனர். கேழ்வரகு [6]புலகம்இவை சிராத்தத்துக்குத் தகாததான்யங்கள். பெருங்காயப்பால்சேர்ந்தகறிகள், கிழங்கில் வெங்காயம் உள்ளி, முருங்கைகஞ்சாமுதலியவை, பூசணிவகைகள், சுரைக்காய், கரியுப்பு, ஊர்ப்பன்றிமாம்ஸம், (மந்திரத்திலும்)

1 விஷ்ணுவின்மனைவி.

2 கசியபருக்குப்பரசராமரால்விக்கப்பட்டவள்.

3 அழியாதவள்.

4,5 இவை இரண்டுமுறைவருகின்றன.

6 ஒருவகைத்தான்யம்.

புரோக்ஷிக்கப்படாதமாம்ஸம், கறுப்பாட்டுமாம்ஸம், ஜீரகம், சீதபாகி யென்னுங்கறி, மூலை முதலானவை, [1]ச்ருங்காடகம் இவைசிராத்தத் திலீ விடப்படவேண்டியவை. உப்புவகைகளல்லாவற்றையும் நாவற் பழத்தையும் சிராத்தத்தில் விடவேண்டும். சிராத்தத்தில் தும்மலையும் அழுகைகண்ணையும்விடவேண்டும். ஸுதர்சனமென்னுங்கறி தேவகார் யங்களிலும் பிதிருகார்யங்களிலும் இகழப்பட்டது. பிதிருக்களும் தேவர்களும் அந்தஅன்னத்தைக் கிரகிப்பதில்லை. சிராத்ததானம் நேர்ந்தபோது சண்டாளனையும் சக்கிலியனையும் ஒதுக்கவேண்டும். காஷாயமுடித்தனவன் குஷ்டரோகமுள்ளவன் பதிதன் பிரம்மஹத்தி செய்தவன் கலப்புஜாதியிற்பிறந்த பிராம்மணன் பதிதனோடுசேர்ந் தவன் இவர்களைச் சிராத்தம்கொடுக்கும்காலத்தில் தெரிந்தவர்கள் விடவேண்டும்' என்றார். பகவானை அத்ரிமகரிஷி தம்பம்சத்திற் பிறந்த அந்தரிஷிக்கு முற்காலத்தில் இவ்வாறுசொல்லி மேலுலக மாகிய பிரம்மஸபைக்குச் சென்றார்.

நூற்றுமுப்பத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ரிஷிகள்முதலியோர் சிரார்த்தம்செய்ததும், தேவர்களும் பித்ருக்களும் அஜீர்ணமடைய அதிதி துணைசெய்ததும், வேறாமந்தோடு சிராத்தஞ்செய்யவேண்டுமென்பதும்.)

அவ்வாறு சிராத்தக்கிரியை தொடக்கப்பட்டபிறகு, எல்லாமஹ ரிஷிகளும் சாஸ்திரங்களிற்சொல்லியமுறைப்படி பிதிருயாகங்களைச் செய்தனர். தர்மங்களைநியமமாகச்செய்யும்ரிஷிகள் சிராத்தஞ்செய்த பிறகு நியமந்தவறுமல் புண்யதீர்த்தங்களிலை தர்ப்பணமும்செய் தனர். பாரதனே! நாலுவர்ணங்களாலும்கொடுக்கப்படும் சிராத்தங் களிலை திருப்திசெய்விக்கப்பட்டபிதிருக்களும் தேவர்களும் [2] அந்த அன்னத்தை ஜரிப்பித்துக்கொள்ளமாட்டாமற்போயினர். அந்தத் தேவர்களும் பிதிருக்களும் அஜீர்ணத்திலை வருத்தப்பட்டனர். அன்னம் அதிகமாகி அஜீர்ணத்திலைத்துயரமுற்றபிதிருக்கள் ஸோம னிடம்சென்று, 'சிராத்தபோஜனத்திலை கஷ்டப்படுகிறோம். எங் களுக்கு நன்மையைச்செய்யவேண்டும்' என்றுகேட்டனர். அவர்

---

[1] ஒருகறி. [2] 'தங்காங்கம்'என்று பாடம்கொள்ளப்பட்டது.

களுக்கு ஸோமன், 'தேவர்களே! உங்களுக்குப் பரிகாரம்வேண்டு மாயின் பிரம்மதேவரிடம் செல்லுங்கள். அவர் உங்களுக்குப் பரி காரம்செய்வர்' என்று மறுமொழிகூறினன். பாரதனே! சந்திரன் சொல்லினால் அந்தத்தேவர்கள் பிதிருக்களுடன்சேர்ந்து மேருமலைச் சிகரத்திலுட்கார்ந்திருக்கும்பிரம்மதேவரை அடைந்து, 'பகவானே! நாங்கள் சிராத்தபோஜனத்தினால் மிகவருத்தப்படுகிறோம். தேவரே! எங்கள்மேல் அனுக்கிரகஞ்செய்து எங்களுக்குப் பரிகாரஞ்செய்யக் கடவீர்' என்றுகேட்டனர். இவ்வாறு அவர்கள் சொல்லக்கேட்ட பிரம்மதேவர், 'என்பக்கத்திலிருக்கும் இந்தஅக்நி உங்களுக்குப் பரி காரமுண்டுபண்ணுவன்' என்றுசொன்னர். அப்போது அக்நி, 'சிரா த்தம்நேரிடும்போது அதை நாம் சேர்ந்தே புஜிப்போம். என்னுடன் சேர்வதனால் நீங்கள் அன்னத்தை ஜரிப்பித்துக்கொள்வீர்கள். ஸந் தேகமில்லை' என்றுசொன்னன். அதைக்கேட்டபிறகு அந்தப்பிதி ருக்கள் துயரமற்றவரானர். ராஜனே! இந்தக்காரணம்பற்றித்தான் அக்நிக்கு முதல்பாகம் கொடுக்கப்படுகிறது. புருஷஶ்ரேஷ்டனே! அக்நியைமுன்னிட்டுச் சிராத்தம்நடக்குமாயின் பிரம்மராக்ஷஸர்கள் அந்தச்சிராத்தத்தைக் கெடுக்கமாட்டார். அக்நிபகவானிருக்கும்போது ராக்ஷஸர்கள் ஒங்குவதில்லை. முதலில் பிதாவுக்கும் பிறகு பிதாமஹ னுக்கும் அதன்பிறகு பிரபிதாமஹனுக்கும் பிண்டப்பிரதானம் செய் யவேண்டும். இதுதான் சிராத்தத்தின்முறையென்றுசொல்லப்படு கிறது. சிராத்தத்தில் ஒவ்வொருபிண்டத்திற்கும் காயத்ரியை நிய மத்துடன் சொல்லவேண்டும். (ஸோமாயபித்ருமதே) 'பிதிர்க்களு க்கு அதிகாரியான ஸோமனுக்கு' என்றும் சொல்லவேண்டும். ராஜ ஸ்வலையும் காதறுந்தவளும் வேறுவம்சத்தில் பிறந்தவளுமான ஸ்திரீ களைச் சிராத்தத்தில் சேர்க்கத்தகாது. ஜலத்தைத்தாண்டும்போதும் பிதிரர்களின்பேர்சொல்லவேண்டும். நதிக்குச்செல்லும்போது பித்ரு தர்ப்பணங்கள் செய்யவேண்டும். தன்வம்சத்தைச்சேர்ந்தபிதிருக்களு க்கு ஜலதர்ப்பணம்செய்து, பிறகு [1] தன்னினத்தாருக்கும் சுற்றத்தா ருக்கும் தர்ப்பணஜலம் விடவேண்டும். சித்ரவர்ணமான இரண்டு எருதுகள் கட்டினவண்டியினால் ஜலத்தைத்தாண்டும்போதும் ஓட மேறித்தாண்டும்போதும் ஜலதர்ப்பணத்தைப் பிதிருக்கள் விரும்பு கின்றனர். அதுதெரிந்தவர்கள் ஓடத்திலிருக்கும்போதெல்லாம் சிரத்தையுடன் ஜலதர்ப்பணம்செய்கின்றனர். கிருஷ்ணபக்ஷமென் னும்பாதிமாஸத்தின்முடிவாகிய (அமாவாஸையில்) சிராத்தங்களைச்

[1] மாத்ருவம்சத்தாருக்கும் காருண்யபித்ருக்களுக்கும்.

செய்யவேண்டும். பித்ருபக்தியினால் தேகபுஷ்டியும் ஆயுளும் சூரத்தனமும் செல்வமும் உண்டாகின்றன. குருவம்சஸ்ரேஷ்டனே! பிரம்மதேவர், புலஸ்தியர், வஸிஷ்டர், புலஹர், அங்கிரஸ், க்ரது, கசியப மகரிஷிஇவர்கள் மகாயோகேசுவரர்களென்று சொல்லப்பட்டவர்கள். ராஜனே! இவர்கள்தாம் பிதிருக்கள். சிராத்தத்தைப்பற்றினசிறந்த விதி இதுதான். சிராத்தம்செய்து [2]பிண்டங்களைச்சேர்ப்பதனால் இறந்தவர்கள் பிரேதத்தன்மையிலிருந்து விடப்படுகின்றனர். புருஷஸ்ரேஷ்டனே! முன்னோர்களால்சொல்லப்பட்டசிராத்தமுண்டான வரலாறு சாஸ்திரப்பிரகாரம் இவ்வாறு உரைக்கப்பட்டது. இதற்கு மேல்உனக்கு நான் என்னசொல்லவேண்டும்?" என்றார்.

நூற்றுநாற்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உபவாஸாதலியவற்றின்லக்ஷணங்கள்சிராத்தலியன.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! நியமமுள்ளப்ராம்மணர்கள் ஒருப்ராம்மணன் வேண்டுகோளுக்காகச் சிராத்தபோஜனத்தைப் புஜித்தால் அது எப்படியாம்?" என்றுவினவ, பீஷ்மர் சொல்லலானார்.

"ப்ராம்மணர்விருப்பத்திற்காகப் புஜிப்பவர்கள் வேதோக்தமிய மம்தவறினவர்களாகி வேதோக்தமான சிராத்தாதிகர்மங்களில் புஜித்தால் விரதங்களைக் கெடுத்தவராகிறார்கள்" என்றார். யுதிஷ்டிரர், "சிலர் உபவாஸத்தையே தவமென்றுகூறுகின்றனரே? இதுவே தவமாகுமா? அல்லது, தவம்வேறுண்டா?" என்றுகேட்டார். பீஷ்மர், "ஒருமாஸம் உபவாஸமிருப்பதையும் ஒருபக்ஷமுபவாஸமிருப்பதையும் மாதத்திற்கொருமுறையும் பக்ஷத்திற்கொருமுறையும் போஜனமில்லாமலிருப்பதையும் தவமென்று ஜனங்கள் நினைக்கின்றனர். [3] தேகத்தின் செய்கையைக்கெடுப்பவன் தவமுள்ளவனுமாகான்; தர்மந்தெரிந்தவனுமாகான். தானம்மிகுதியாகச்செய்வதும் உத்தமமான தவமென்றுவிதிக்கப்படுகிறது. தர்மத்தில் விருப்பமுள்ளகுடும்பியாகியப்ராம்மணன் எப்போதும்உபவாஹியும் பிரம்மசாரியும் சுசியுமாக இருக்கவேண்டும்; எப்போதும் தேவர்களைப் பூஜிக்கவேண்டும்; மனிதன் எப்போதும் தூங்காமலிருக்கவேண்டும்; எப்போதும் அம்ருதத்

---

1 இவர்கள்தாம் பிதிருவம்சத்தின் ஏழுவர்.

2 ஸபிண்டீகரணம் செய்வதனால்.

3 'ஆத்மதந்த்ரே' என்பது மூலம்; 'சரீரத்தின்உருவத்தை அல்லது குடும்பரூபத்தைக்கெடுப்பவன்' என்பது பழையஉரை.

தையுண்டுகொண்டும் பரிசுத்தமானகாயத்ரியைஜபித்துக்கொண்டுமிருக்கவேண்டும். எப்போதும் ஸத்தியமேபேசவேண்டும்; நியமமுள்ளவனுயிருத்தல்வேண்டும்; எப்போதும் பிச்சத்தையுண்ணவேண்டும்; விருந்தினர்களிடத்தில் அன்போடிருக்கவேண்டும்; எப்போதும்அம்ருதத்தையேபுசித்துப் பரிசுத்தனுகஇருக்கவேண்டும்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "ராஜரே! எப்போதும் உபவாஸியும் பிரம்மசாரியும் பிச்சத்தையுண்ணுகிறவனும் விருந்தினர்களைவிரும்புகிறவனுமாவது எப்படி?" என்றுகேட்டார். பீஷ்மர், "காலைப்போஜனத்திற்கும் இராத்திரிபோஜனத்திற்கும்இடையில் ஒன்றும்புஜிக்காதவனெவனே அவன் நித்யோபவாஸியாகிறன். ருதுகாலத்தில் தன்பார்யையினிடம் சேருகிறவன் பிரம்மசாரியாகிறன். கொடுப்பதேஇயற்கையாகவுள்ள மனிதன் எப்போதும்உண்மைபேசுகிறவனுகிறன். (யாகமுதலிய அவசியமின்றி) வீணுகமாரிசத்தைத்தின்னுதவன் மாரிசம்விட்டவனுகிறன். தானம்கொடுப்பவன் பரிசுத்தமுள்ளவனுகிறன். பகலில்தூங்காதவன் தூக்கத்தைவிட்டவனுகிறன். யுதிஷ்டிர! வேலைக்காரர்களும் விருந்தினர்களும்புசித்தபிறகே தான்புசிக்கும்மனிதன் அம்ருதத்தையேபுசிப்பவனென்றறி. ப்ரம்மணர்கள்புகியாமலிருக்கத் தானுண்ணுதமனிதன் அந்தஉண்ணுமையிலுலேயே ஸ்வர்க்கத்தை ஜயித்தவனுகிறன். தேவர்களும் பித்ருக்களும் அடித்தவரும் புசித்தமிச்சத்தைப்புசிப்பவனே மிச்சத்தையுண்பவனென்று சொல்லுகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்குப் பிரம்மலோகத்தில் முடிவிலாதஇடங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. அரசனே! அப்ஸரஸுகளும் கந்தர்வர்களும் அவனிடம் வருகின்றனர். தேவர்களுடனும் விருந்தினர்களுடனும் பிதிருக்களுடனும்புசிப்பவர் பிள்ளைகளோடும் பேரன்மாரோடும் மகிழ்ந்திருப்பர். அவர்களுக்கு உத்தமமானகதியுண்டாகிறது" என்றுசொன்னர்.

நூற்றுநாற்பத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தானம்யாரிடத்தில்வாங்கலாம் யாரிடத்தில்வாங்கத்தகாதென்பதை அறிவிப்பதானவ்ருஷாதர்ப்பிக்கும் ஸப்தரிஷிகளுக்கும் ஸம்வாதம்.)

யுதிஷ்டிரர், 'பிதாமஹரே! ப்ராம்மணர்களுக்குப் பலவகைத் தானங்களைக் கொடுக்கின்றனரே; கொடுக்கிறவனுக்கும் வாங்குகிறவனுக்கும் இருக்கவேண்டியகுணங்கள் என்ன?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"ப்ராம்மணன் யோக்யனிடத்திலும்வாங்குகிறான்; அயோக்யனிடத்திலும்வாங்குகிறான். குணமுள்ளவனிடத்தில்வாங்கினால்சிறிது பாவமுண்டாகும். குணமில்லாதவனிடத்தில்வாங்குகிறவன் முழுகிப்போவான். பாரதனே! இந்தவிஷயத்தில் விருஷாதர்ப்பியென்னும் அரசனுக்கும் ஸப்தரிஷிகளுக்கும்நடந்த ஸம்பாஷணையாகிய பழைய இதிஹாஸத்தைக் கூறுகின்றனர். கச்யபர், அத்ரி, வஸிஷ்டர், பரத்வாஜர், கௌதமர், விச்வாமித்திரர், ஜமதக்னி இவ்வேழுரிஷிகளும் பதிவ்ரதையான அருந்ததியும் இருந்தனர். அவர்களெல்லாருக்கும் கண்டையென்பவள் வேலைக்காரியாயிருந்தாள். பசுஸகனென்னும்சூத்திரன் அந்தவேலைக்காரிக்குக் கணவனாயிருந்தான். முற்காலத்தில் அவர்களனைவரும் யோகாப்யாஸத்தினால் அழியாதபிரம்மலோகத்தை அடையக்கருதித் தவம்செய்துகொண்டு இப்பூமியெல்லாம் திரிந்தனர். கௌரவனே! அப்போது மழையின்மை பெரிதாயிருந்தது. அந்தக்காலத்தில் இவ்வுலகம் பசித்து, பிழைப்பதுஅரிதாயிற்று. முற்காலத்தில்நடந்த ஒரு யாகத்தில் யஜமானனும் சிபியின்புத்திரனுமாகிய விருஷாதர்ப்பியென்னும்அரசனால் தனக்குயாகம்செய்வித்த ரித்விக்குகளுக்குத் தன்புத்திரனை அனிலனென்பவன் தக்ஷிணைக்குப்பிரதியாகக் கொடுக்கப்பட்டான். மழைபெய்யாதகாலம்வந்தபோது ஆயுள்குறைவாயுள்ள அந்தராஜகுமாரன் மரணமடைந்தான். பசியினால் வருந்தின அந்தரிஷிஸ்ரேஷ்டர்கள் தாங்கள்யாகம்செய்வித்த அரசனுடைய அந்தக்குமாரன் உயிரிழந்ததைக்கண்டு அவனைச்சுற்றிக்கொண்டுநின்றனர். பாரதனே! உனவற்றுப்போன இம்மானிடலோகத்தில் பசியினால்வருத்தப்பட்டஅவர்கள் தேகத்தைக்காப்பாற்றக்கருதி அந்தராஜகுமாரனை ஒருபாத்திரத்தில் சமைத்தனர். ரிஷிகள் உணவுக்காகக் கஷ்டமானநிலைமையையடைந்தனர். சிபியின்புத்திரனை விருஷாதர்ப்பியென்னுமரசன் திரிந்துகொண்டிருக்கையில் வழியில் சமைத்துக்கொண்டுகஷ்டப்படும் அம்முனிவர்களைக் கண்டான். விருஷாதர்ப்பி, 'தபோதனர்களே! தானம்வாங்குவது கஷ்டத்தைத் தாண்டுவிக்கும். வாங்குகிறவர்களுக்குக் குறைவில்லையே! என்னிடத்திலிருக்கும்தனத்தைக் கேளுங்கள். ப்ராம்மணர்களுக்கு யாசித்துவாங்குவதே சிறந்தவிருத்தியாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. தபோதனர்களே! ஆதலால், நீங்கள் கேளுங்கள். உங்களுக்குத் திரவியம்கொடுக்கிறேன். யாசிக்கும் ப்ராமணனிடத்தில் எனக்கு அன்புஉண்டே. நான் உங்களுக்கு ஆயிரம்கோவேறு கழுதைகளையும் ஒவ்வொன்றும்ஒவ்வொரு ரிஷபமுள்ளவையும் கன்

நீன்றவையுமான பதினாயிரம்பசுக்களையும் கொடுப்பேன்; மேலும்வேக மாக விரைந்துசெல்லும்வெள்ளைக்குதிரைகள் பத்துக்கோடி கொடுப்பேன்; குடும்பத்தைத்தாங்குகிறவையும் வண்டியிழுப்பவையும் முழுதும்வெண்ணிறமுள்ளவையுமானளருதுகள் பதினாயிரம்கொடுப் பேன்; கல்லவிருஷபங்களைச்சேர்ந்தவையும் பருத்தவையும் அடக்க முள்ளவையுமான தலைபிற்றுப்பசுக்களையும் சிறந்தகிராமங்களையும் கெல்யவமுதலிய அறுசுவைப்பண்டங்களையும் இரத்தினங்களையும் கொடுப்பேன். இன்னும்கிடைத்தற்கரியவை என்னகொடுக்கலாம்? புசிக்கத்தகாத இந்தவிஷயத்தில் இப்படிஆசைப்படாதீர்கள். உங்களுக் குப் பசிதீருவதற்காக நான் என்னகொடுக்கக்கடவேன்?' என்றுகேட் டான். ரிஷிகள், 'ராஜனே! அரசர்களிடத்தில்வாங்குவது தேன் போல இனிப்பாயிருக்கும்; (முடிவில்) விஷத்தைக்கொப்பாகும். அதை அறிந்திருந்தும் நீ ஏன் எங்களுக்கு ஆசைகாட்டுகிறாய்? ஒருசெக்கான் பத்துக்கசாப்புக்காரர்களுக்குச் சமானமானவன். ஒரு கள்ளுக்கடைக் காரன் பத்துச்செக்காரர்களுக்குச்சமானன். ஒருவேசி பத்துக் கள் ளுக்கடைக்காரருக்குச்சமானம். ஓர்அரசன் பத்துவேசிகளுக்குச்சமா னம். பதினாயிரம்கசாப்புக்கடைகளை நடத்தும்கசாப்புக்காரனும் அர சனுஞ்சரி. அரசனிடத்தில்வாங்குவது கொடிது. [1] க்ஷத்திரியர்கள் ப்ராம்மணர்களைத்தேவதையைப்போல ஆசரியித்திருக்கின்றனர். தவ த்தினால்பாவமற்றப்ராம்மணன் தான்சங்தோஷமடைவதனால் தேவர் களைஸந்தோஷப்படுத்துகிறான். ஒருகால் இவ்வுலகத்தில் ப்ராம்மண னுக்குத் தவம் சீக்கிரத்தில் உண்டாகிறது. அரசனுடையபொருள் கிடைத்தால் அது காட்டில்நீப்போல அந்தத்தவத்தைஎரித்துவிடும். அரசனே! உனக்கும் உன்தானத்திற்கும் எப்போதும் க்ஷேமம்உண் டாகட்டும். உன்னிடம்யாசிப்பவருக்கு நீ எல்லாவற்றையும் கொடுக் கலாம்' என்றுசொல்லி அவர்கள் வேறிடத்திற்குச் சென்றனர். அம்மஹர்ஷிக்களுக்கு அந்தமாமிசமானது அப்போது சமையாமலே யிருந்தது. அவரனைவரும் அதைவிட்டு ஆகாரத்தைக்கருதி வனம் போயினர். அதன்பிறகு, அரசனால்கட்டளையிடப்பட்ட அவன்மந்திரி மார் காட்டிற்குப்போய் அத்திப்பழங்களைப்பறித்து அவர்களுக்குக் கொடுக்கப்போயினர். அம்முனிவர்கள் பழங்களைக்கண்டு வாங்கப் போயினர். அப்போது, அம்மந்திரிகளின்வேலைக்காரர்கள் உள்ளே பொன்வைத்த சிலஅத்திப்பழங்களைச்சொணர்ந்து அவற்றை அவர்க ளுக்குக் கொடுக்கப்போயினர். அத்ரியானவர் அவை பருவாயிருப் பவைஎன்றறிந்து, 'அவை வாங்கத்தகாதவை' என்றுகூறலானார்.

1 'க்ஷத்ரம்' என்று பாடம்கொள்ளப்பட்டது.

' நாங்கள் அறிவில்லாதவரல்லோம்; மானிடபுத்தியுள்ளவருமல் லோம்; இவை பொன்னுள்ளவையென்றறிவோம். நாங்கள் விழித் துக்கொண்டோம்; ஏமாறவில்லை. இவ்வுலகத்தில் இது லாபமா யிருந்து மறுமையில் கொடும்பயனைத்தரும். இம்மையிலும்மறுமை யிலும் ஸுகத்தைவிரும்புகிறவன் இதை வாங்கவேகூடாது' என்று சொன்னர். வஸிஷ்டர், ' நூறுபொன்னும் ஆயிரம்பொன்னும்என் னும்கணக்குள்ள அதிகச்செல்வத்தைவாங்குகிறவன் மிகத்தாழ்வான கதியை அடைவான்' என்றுசொன்னர். கஸ்யபர், 'பூமியிலுள்ள நெற்களும் யவங்களும் பொன்னும் பசுக்களும் பெண்களும்ஆகிய இவையெல்லாம் சேர்ந்தும் ஒருவனுக்குப்போதா. ஆதலால், தெரிந் தவன் ஒழிவையடையவேண்டும்' என்றுசொன்னர். பரத்வாஜர், 'மான்குட்டி வளரும்போதே கொம்பும் வளருகிறது. புருஷனுடைய ஆசையும் அப்படியேதான். அதற்கு அளவில்லை' என்றுசொன்னர். கௌதமர்,'ஆசையைநிரம்பச்செய்யும்பொருள் உலகத்திலில்லை. மனி தன் ஸமுத்திரம்போன்றவன்; ஒருகாலும் நிரம்பப்படான்' என்று கூறினர். விஸ்வாமித்திரர், 'ஓர் இஷ்டத்தை விரும்புகிறவனுக்கு அந்தஇஷ்டம் நிறைவேறும்போதே மற்றொருபொருள்விருப்பம் அவ னிடத்தில் அம்புபோலத் தைக்கிறது' என்றுகூறினர். அத்ரி, 'விரும் பினவற்றை அனுபவிப்பதனால் விருப்பம்தணிவது ஒருகாலுமில்லை. நெய்யினால் அக்நிபோல விருப்பம் மேன்மேலும் அதிகப்படுகிறது' என்றுசொன்னர். ஜமதக்நி, 'வாங்குவதில் மனத்தைக்கட்டுவது தான் தவத்தை நிலையாகத் தாங்குகிறது. ஆசைப்படுகிற ப்ராம்மண னுக்கு அந்தத்தவமென்னுந்தனம் ஒழுகிப்போம்' என்று உரைத் தார். அருந்ததி, 'தர்மத்திற்காகத் திரவியங்களைச்சம்பாதிப்பதைச் சிலர் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவ்வுலகத்தில் பொருளீட்டுவதைப் பார்க்கிலும் தவமீட்டுவதே சிறந்தது' என்றுகூறினள். கண்டை யென்பவள்,'இந்தஎன்தலைவர்களாகியரிஷிகள் மிகுபலமுள்ளகொடிய பயங்கரத்தைக்கண்டு பலங்குறைந்தவர் பயப்படுவதுபோல இந்தத் தனத்திற்கு அஞ்சுகின்றனர். இதன்பிறகு, நானும் பயப்படுகிறேன்' என்றுசொன்னள். பசுஸகன், 'தர்மத்திற்குமேற்பட்டதும் தர்மம் போன்றதும் இல்லையென்று ப்ராம்மணர்கள் அறிந்திருக்கின்றனர். ஆதலால், நானும் வணக்கத்துடன் உண்மையாகவும் செம்மையாக வும் கற்றறிந்தவரைப் பணியக்கடவேன்' என்றுசொன்னன். நியமந் தவறுதவர்களாகிய அந்தரிஷிகளனைவரும், 'இந்தமனிதர்கள் யாரைச் சேர்ந்தவர்களோ, இந்தமோசமானகனிகளை எவன் நமக்குக்கொடுத்

கிறதே அந்தஅரசனுக்கும் அவன்தானத்திற்கும் ஸுகமுண்டாகட்டும்' என்றுசொல்லி, உள்ளே பொன்னுள்ள அந்தக்கணிகளை எறிந்துவிட்டு வேறிடம்சென்றார்கள். பிறகு, அம்மந்திரிகளனைவரும் அரசனிடம்சென்று, 'வேந்தே! இதில் மோசமிருப்பதாகநினைத்து அந்தக்கணிகளையெறிந்து அம்முனிவர்கள் வேறிடத்திற்கே செல்கின்றனர். அது உமக்குத் தெரிந்திருக்கட்டும்' என்றுசொன்னார்கள். தன்வேலைக்காரர்களால் இவ்வாறு தெரிவிக்கப்பட்ட அந்த வ்ருஷாதர்ப்பி கோபித்து அந்தரிஷிகளனைவருக்கும் விரோதம்செய்வதற்குத் தன்வீடுசென்றான். அவன் வீடுசென்று கடுமையான விரதத்தையெடுத்துக்கொண்டு சொன்னசொல்லப்பட்டமந்திரங்களோடு ஆகவனீயமென்னும் அக்கினியில் ஒவ்வொன்றாக ஆகுதியைச்செய்தான். அந்த அக்நியிலிருந்து உலகங்களுக்குப் பயத்தைச்செய்யும் ஒருபேய் எழுந்தது. வ்ருஷாதர்ப்பியானவன் அதற்கு யாதுதானியென்று பெயரிட்டான். காளராத்திரிபோன்ற அப்பேயானது கரங்குவித்து வ்ருஷாதர்ப்பிராஜனிடம்வந்து, 'நான் என்னசெய்யக்கடவேன்' என்றுகேட்டது. வ்ருஷாதர்ப்பி, 'ஏழரிஷிகள் அருந்ததி அவர்கள்வேலைக்காரி வேலைக்காரியின்கணவன் ஆகியஇவர்களிடம் செல். அவர்கள்பேர்களை மனத்தில்வைத்துக்கொள். அவர்களின் பேர்களைத் தெரிந்துகொண்டு அவர்களெல்லாரையும் அழித்துவிடு. அவர்கள் அழிந்துபோனபின் உன்னிஷ்டப்பிரகாரம் நீ நினைத்தவிடம் செல்' என்றுசொன்னான். அந்தப்பேய், 'அப்படியேயாகட்டும்' என்று அவனுக்கு வாக்குத்தத்தம்செய்து அரக்கிஉருவத்தோடு அம்மஹரிஷிகளைஸஞ்சரிக்கும் வனத்திற்குச் சென்றது.

நூற்றுநாற்பத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஸப்தரிஷிகள்முதலியோருக்கும் யாதுதானிக்கும் ஸம்வாதமுதலியவையும், அந்தரிஷிகள் ஆசையை ஒழித்து ஸ்வர்க்கஞ் சென்றதும்.)

ராஜனே! அப்போது, அத்ரிமுதலியமஹரிஷிகள் கிழங்குகளையும் கனிகளையும் பகுத்துக்கொண்டு அவ்வனத்தில் திரிந்தனர்; அதன்பிறகு, தோள்களும் கைகளும் கால்களும் முகமும் வயிறும் மிகப்பருத்துத் தடித்ததேகமுள்ளவனும் பற்றுக்களைவிட்டுச் செல்லு

கிறவனும் சனஸ்ஸகனென்னும் பெயருள்ளவனுமான ஸந்யாஸியைக் கண்டனர். அருந்ததியானவள் எல்லா அங்கங்களும்தடித்து அழகாயிருக்கும் அந்தத்துறவியைக்கண்டு, 'நீங்கள் இப்படியாவதில்லையே?' என்று ரிஷிகளைக்கேட்டாள். வசிஷ்டர், 'நமக்கிருப்பதுபோல இவனுக்கு அக்நிஹோத்ரம் ஹோமம்செய்யப்படாமலிருக்கவில்லையே? காலையிலும் மாலையிலும் ஹோமம்செய்யவேண்டாமே? ஆதலால், சனஸ்ஸகன் பருத்திருக்கிறான்' என்றுசொன்னர். அத்ரி, 'நம்மைப்போலப் பசியினால் இவனுக்குச் சக்திகுறைந்துபோகவில்லை; கஷ்டப்பட்டு ஒதினது நஷ்டப்பட்டுப் போகவுமில்லை. அதனால், சனஸ்ஸகன் பருத்திருக்கிறான்' என்றுகூறினர். விஸ்வாமித்ரர், 'நம்மைப்போல இவனுக்கு எப்போதும் சாஸ்திரப்பயிற்சியினாலுண்டான கொதிப்பில்லை. இவன் சோம்பேறி; மூர்க்கன்; பசிதீர்ப்பதே முக்கியமாயிருப்பவன். அதனால், சனஸ்ஸகன் பருத்திருக்கிறான்' என்றுகூறினர். ஜமதக்னி, 'இவன் நம்மைப்போல வருஷத்திற்கு வேண்டியபோஜனத்தையும் விறகையும்பற்றி மனத்திற்சிந்திக்கவேண்டியதில்லை. அதனால், இவன் பருத்திருக்கிறான்' என்றுசொன்னர். கஸ்யபர், 'நம்மைப்போல இவனை நாலுஸகோதரர்கள், 'கொடுகொடு' என்றுகேட்கவில்லை. அதனால், சனஸ்ஸகன் பருத்திருக்கிறான்' என்றுசொன்னர். பரத்வாஜர், 'அறிவில்லாதஇந்த ஈனப்பிராம்மணனுக்கு நமக்கிருப்பதுபோலப் பார்யையை உலகம் தூஷிப்பதனால் உண்டான துயரமில்லை. அதனால், சனஸ்ஸகன் பருத்திருக்கிறான்' என்றுசொன்னர். கௌதமர், 'நமக்குப்போலஇவனுக்கு ஒவ்வொன்றும் மூன்றுவருஷத்திற்கு வைத்துக்கொள்ளவேண்டிய மூன்றிடத்தில்தைத்திருக்கும் மூன்றேமான்தோலுடைகள் இல்லை. அதனால், சனஸ்ஸகன் பருத்திருக்கிறான்' என்றுசொன்னர். பிறகு, அந்தச்சனஸ்ஸகனென்னும்ஸந்யாஸி அம்மஹரிஷிகளைக்கண்டுமுறைப்படி அபிவாதனம்செய்து கைகளினால் (அவர்களுடைய பாதங்களைத்) தொட்டான். பசியைத்தீர்க்கக்கருதின அந்தரிஷிகள் அவன் செய்தபணிவிடையை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொண்டு அவனுடன்கூடவே வனத்திற்சென்றனர். ஒருகாரியத்தில் நிச்சயமுள்ள அவர்கள் கிழங்குகளைப்பிடுங்கிக்கொண்டும் கனிகளைப்பறித்துக்கொண்டும் காடுகளில்திரிந்தனர். அவ்வாறுதிரிந்துகொண்டிருந்த அவர்கள் ஒருகால் நெருங்கினமரங்களால் மறைக்கப்பட்டதும் நிரம்பியும் தெளிந்துமிருக்கும் பரிசுத்தமானஜலமுள்ளதும் உதயகாலத்து ஸூர்யமண்டலம்போலப் பிரகாசிக்கும் தாமரைமலர்களால் விளங்கு

வதும் வைடூரியக்கற்போன்றநிறமுள்ள தாமரைஇலைகளால் மூடப் பட்டதும் சிறந்ததண்ணீரை அடித்திருக்கும் பலவகைப்பறவைக ளோடுகூடியதும் ஒருதுறையுள்ளதும் அதைச்சேர்ந்த அழகான சிறுதுறைகளுள்ளதும் சேறில்லாததும் யாராலும்உபயோகிக்கப் படக்கூடாததுமான ஓர் அழகிய தாமரைக்குளத்தைக் கண்டனர். விருஷாதர்ப்பி அனுப்பின யாதுதானியென்னும்பெயருள்ள கோர ரூபியானபேய் அந்தக்குளத்தைக் காவல்காத்தது. சுனஸ்ஸகனோடு கூடிய அம்மஹரிஷிகளனைவரும் பேயினற்காக்கப்பட்ட அக்குளத்தி னிடம் தாமரைக்கிழங்குக்காகச் சென்றனர். அப்போது, அந்த மஹரிஷிகள் அந்தக்குளக்கரையில் பார்ப்பதற்குவிகாரரூபமான அந்த யாதுதானியென்னும்பேய் இருப்பதைக்கண்டு, 'நீ இந்தக்குளக் கரையைச்சார்ந்து தனித்துநிற்கிறாய். நீ யார்? யாருக்காக நிற்கிறாய்? உனக்கு என்னபிரயோஜனம்? நீ என்னசெய்யக்கருதுகிறாய்? சொல்' என்று அதைக்கேட்டனர். அதற்கு, யாதுதானி, 'தபோதனர் களே! நான் யாராயிருந்தாலென்ன? என்னை எவ்விதமாகவும் கேள்வி கேட்கவேண்டாம். நீங்களெல்லாரும் என்னை இந்தக்குளத்திற்குக் காவற்காரியென்று அறியுங்கள்' என்றுசொன்னாள். ரிஷிகள், 'நாங்களெல்லோரும் பசியினால் வருத்தப்படுகிறோம். எங்களுக்கு வேறு ஒன்றுமில்லை. உன்னுடைய ஸம்மதத்தின்மேல் நாங்களெல் லோரும் தாமரைக்கிழங்குகளை எடுத்துக்கொள்ளலாமா?' என்று கேட்டனர். யாதுதானியானவள், 'ஓர்உடன்படிக்கையோடு நீங்கள் இங்கிருந்து தாமரைக்கிழங்குகளை இஷ்டப்படி எடுத்துக்கொள்ள லாம்; ஒவ்வொருவராகப் பேரை எனக்குச்சொல்லிவிட்டுப் பிறகு தாமதமின்றி எடுத்துக்கொள்ளலாம்' என்று மறுமொழிசொன்னாள்.

பசியினால் தேகம்வாடின அத்ரியானவர் அந்தயாதுதானியை ரிஷிகளைக்கொல்லக்கருதினபேய் என்றறிந்து அவளைநோக்கி, 'சிறந் தவளே! நான் அத்ரி. நான் மூன்றுவிசை அத்யயனம்செய்யாத ராத்ரியில்லையென்பதனால் [1](அராத்ரிஎன்னும்) பெயர் எனக்கு அத்ரி என்றுயிற்று. இப்போது என்பேரைஅறி' என்றுசொன்னார். அதைக் கேட்டயாதுதானி, 'சிறந்தமகிமையுள்ளவரே! உம்மால் உமதுஇந்தப் பெயர் ஸரியாக உரைக்கப்பட்டது. ஆனால், எனக்கு இதை நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை. போம். குளத்திலிறங்கும்' என்று சொன்னாள். வஸிஷ்டர், 'நான் வரிஷ்டன் (எல்லாரிலும் சிறந்த

[1] த்ரி=மூன்றுமுறை (அத்யயனமில்லாத) ரா=ராத்ரி, அ=இல்லை. என்றுபொருக்கவேண்டும்.

வன்); சிறந்த [1]கிருகத்தில் வஸிப்பவன். மிகச்சிறந்தவனுயிருப்பதனு லும் ஸப்தரிஷிமண்டலத்தில்வஸிப்பதனுலும் எனக்கு [2]வஸிஷ்டன் என்கிறபெயரென்றறி' என்றுசொன்னர். யாதுதானி, 'உம்முடைய பெயரை நீர் பகுத்துச் சொன்னீர். இந்தஎழுத்துக்கள் கஷ்டப்பட்டு உச்சரிக்கப்படுகின்றன. இதை நினைவில்வைக்கமுடியாது. போம். குளத்திலிறங்கும்' என்றுசொன்னள். கஸ்யபர், 'நான் [3]குலந்தோறு மிருப்பவன்; பூமியில் மழைபொழிவதனுல் [4]குவமன்; காசம் என் லும் நாணற்பூவைப்போல வெளுத்திருப்பதனுல் காஸ்யன். இதனுல், கஸ்யபன்என்று பெயர்பெற்றவன். இந்தஎன்பெயரை நினைவில் வைத்துக்கொள்' என்றுசொன்னர். யாதுதானி, 'சிறந்தமகிமை யுள்ளவரே! நீர் இந்தஉம்முடையகாமத்தை என்னிடத்தில் ஸரியாக உரைத்தீர். ஆனுல், இதை நினைவில்வைத்துக்கொள்ளமுடியாது. போம். குளத்திலிறங்கும்' என்றுசொன்னள். பரத்வாஜர், 'சிறந்த வளே! நான் பிள்ளைகளைப் [5]பரிக்கிறேன்; வேலைக்காரர்களைப் பரிக்கி றேன்; தேவர்களையும் பிராம்மணர்களையும் பரிக்கிறேன்; பார்யை யைப் பரிக்கிறேன். ஒருவியாஜம்பற்றி இவர்களையெல்லாம் பரித்த தால் பரத்வாஜனேன்' என்றுசொன்னர். யாதுதானியானவள், 'உமதுபேரைப் பகுத்துரைத்தீர். இந்தஎழுத்துக்கள் கஷ்டப்பட்டு உச்சரிக்கப்படுகின்றன. இதை நினைவில்வைத்துக்கொள்ளமுடியாது. போம். குளத்திலிறங்கும்' என்றுசொன்னள். கௌதமர், 'யாது தானியென்னும் பிசாசியே! நான் கோவென்றுசொல்லப்பட்ட வாக்கையடக்கினதனுலும் எல்லாவற்றையும் ஸமமாகப்பார்க்கும்படி கோவென்றுசொல்லப்பட்ட நேத்திரத்தையடக்கினதனுலும் தமம் (இருள்) என்னும்புகைஇல்லாமையாலும் என்னை அடக்குகிறவர்கள் யாரும் இல்லாததனுலும் என்னைக் கோதமன்என்றுஅறி' என்று சொன்னர். யாதுதானி, 'மஹரிஷியே! என்னிடத்தில் உமது இந் தப்பெயர் உள்ளபடிஉரைக்கப்பட்டது. இதை நினைவில்வைக்கமுடி யாது. போம். குளத்திலிறங்கும்' என்றுசொன்னள். விஸ்வாமித் ரர், 'யாதுதானியே! எல்லாத்தேவர்களும் எனக்குமித்திரர்கள். [6]கோக்களெல்லாவற்றிற்கும் நான் மித்ரன். இதனுல், விஸ்வாமித்ரன்

1 சப்தரிஷிமண்டலத்தில்.

2 வரிஷ்டர்என்பதில 'ர', 'ஸ்' ஆகமாறியது; வஸ்என்னும் பகுதியினுலும் கிடைத்தது.

3 அக்நிரூபி.

4 ஆதித்யரூபி; கு=பூமியில், வமன்=மழையைப்பொழிகிறவன்.

5 போஷிக்கிறேன்.

6 பசுஸம்ரக்ஷணம்செய்பவன் என்பது.

என்று எனக்குக் கியாதிவந்திருக்கிறதென்றறி' என்றுசொன்னாள். யாதுதானி, 'இந்தஉமதுபேரைப் பகுத்துரைத்தீர். அக்ஷரங்கள் கஷ்டமாக உச்சரிக்கப்பட்டன. இதை நினைவில்வைக்கமுடியாது. போம். குளத்திலிறங்கும்' என்றுசொன்னாள். [1]ஜமதக்னி, 'நிறைந்தவளே! எல்லாரிடத்திலும் அன்பாகியும் ஹவிஸ்களைப்பக்ஷித்துக் கொண்டுமிருக்கும் அக்நியைப்பூஜிப்பதனாலும் ஞானத்தினால் அக்நிபோலப்பிரகாசிப்பதனாலும் இந்திரியங்களைஜயிப்பதனாலும் சிஷ்யர்களுக்கு ஞானத்தைஉண்டுபண்ணுவதனாலும் ஜமதக்னிஎன்று பெயர்பெற்றவனுக என்னையறி' என்றுசொன்னார். யாதுதானி, 'மஹரிஷியே! உம்முடையஇந்தப்பெயர் ஸரியாக என்னிடத்தில் உரைக்கப்பட்டது. இதை நினைவில்வைக்கமுடியாது. போம். குளத்திலிறங்கும்' என்றுசொன்னாள். [2] அருந்ததி, 'நான் எனதுபர்த்தாவின் மனத்தைஅனுஸரித்தவளாகி, எல்லாவற்றையும்தாங்குவதும் போஷிப்பதும் நிரவியமுள்ளதுமாகிய பூமியில் என்பர்த்தாவைஅடுத்தவளாயிருக்கிறேன். அதனால், என்னை அருந்ததிஎன்றறி' என்றுசொன்னாள். யாதுதானி, 'உன்னுடைய இந்தப்பெயரைப் பகுத்துரைத்தாய். எழுத்துக்கள் கஷ்டமாக உச்சரிக்கப்பட்டன. இதை நினைவில் வைத்துக்கொள்ளமுடியாது. செல். குளத்திலிறங்கு' என்றுசொன்னாள். கண்டை, 'அக்நியில்பிறந்தவளே! 'கண்ட' என்னும் பகுதி முகத்தின்ஒருபாகமாகிய கன்னத்தைச்சொல்வதென்று கூறுகின்றனர். அந்தக்கன்னம் உயர்ந்திருப்பதனால் நான் கண்டையென்னப்படுகிறேனென்றறி' என்றுகூறினாள். யாதுதானி, 'உன்னுடைய. இந்தப்பெயரைப் பகுத்துரைத்தாய். எழுத்துக்கள் கஷ்டமாக உச்சரிக்கப்பட்டன. இதை நினைவில்வைக்கமுடியாது. போ. குளத்திலிறங்கு' என்றுசொன்னாள். [3]பசுஸகன், 'அக்நியிற்பிறந்தவளே!

---

1 'ஜ=ஜனிப்பது ; ஜமத்=பகரிப்பது ; இவ்விரண்டும் அக்நியைச்சேருவன. யஜ=யாகஞ்செய்வது ; ஜ்ஞே=அறிவது ; ஜிஜ்ஞாஹி=இந்திரியங்களை ஜயிப்பது ; ஜிஜ்ஞாயிஷி=சிஷ்யர்களின் ஞானத்தையுண்டாக்குவது. அக்நி போலஎன்பது உவமையினால் ஏற்பட்டபொருள். ' (ஜாஜமத்=) தேவர்களும், (யஜ=) அக்நியும் ஆவிர்ப்பவிக்கும்இவ்வுலகத்தில்உண்டாயிருக்கிறேன் ; அதனால், ஜமதக்நிஎன்று ப்ரவித்திபெற்றிருக்கிறேன் என்றுஎன்னை அறி' என்பது பழையவுரை.

2 'அநுருந்ததி (அநுஸரிப்பவள்) என்பது நுகரங்கெட்டு அருந்ததியென்றாயிற்று' என்பது பழையவுரை. அருந்ததி=பர்த்தாவின் விருப்பத்தைத் தடாதவள்என்பதனால் அநுஸரிப்பவள் என்றுமாம்.

3 'பசுவுக்குத்துணையானவன்; அதாவது, வாய்க்குக்கிடைத்ததைமட்டும் புசிப்பவன்.

நான் பசுக்களைக்கண்டால் ஸந்தோஷமடைவேன்; எப்போதும் அவற்றிற்குச் சினேகிதனுகவுமிருப்பேன். அந்தக்குணம்பற்றிப் பசுஸகுனனென்றறி' என்று கூறினன். யாதுதானி,'இந்தஉன்பேரைப் பகுத்துரைத்தாய். எழுத்துக்கள் கடினமாக உச்சரிக்கப்பட்டன. இதை நினைவில்வைக்கமுடியாது. போ. குளத்திலிறங்கு' என்று சொன்னுள். சுனஸ்ஸகன், 'யாதுதானியே! இவர்கள்சொன்னது போல நான் என்பேரைப் பகுத்துச்சொல்லமுடியாது. நான் எப் போதும் [1]நாய்களுக்குத்துணையானவர்களுக்குத் துணையாயிருப்பவ னென்றறி' என்றுசொன்னன். யாதுதானி, 'ப்ராம்மண! உன்னு டைய உச்சரிப்புத்தெளிவாயில்லாமையினுல் உன்பேச்சில் நீசொன்ன பெயர் நன்முகத்தெரியவில்லை. ஆதலால், இப்போது உன்பேரை ஒருதரம்சொல்' என்றுகேட்டாள். சுனஸ்ஸகன், 'நான்ஒருதரம் சொன்னபேரை நீதெரிந்துகொள்ளாமையினுல் என்திரிதண்டத்தி னுல் அடிக்கப்பட்டவளாய் உடனே சாம்பலாகக்கடவாய்' என்று சொல்லி, பிரம்மதண்டம்போன்ற தன்திரிதண்டத்தினுல் அவள் தலையிலடித்தவுடனே அந்தப்பிசாசி தரையில்விழுந்து நீறுயினுள். அந்தச்சுனஸ்ஸகன் மிகுந்தபலமுள்ளஅந்தயாதுதானியைக்கொன்று திரிதண்டத்தைத் தரையினூன்றிப் புல்தரையில் உட்கார்ந்தான். பிறகு, அந்தரிஷிகளனைவரும் வேண்டிய அளவுதாமரைமலர்களையும் தாமரைக்கிழங்குகளையும் எடுத்துக்கொண்டு ஸந்தோஷத்துடன்கரை யேறினர். அதிகசிரமமுள்ளஅம்முனிவர்கள் தாமரைக்கிழங்குகளைக் குவியல்குவியலாகக் குளக்கரையில் வைத்துவிட்டு ஜலதர்ப்பணம் செய்தனர். பிறகு, அந்தப்புருஷஸ்ரேஷ்டர்களனைவரும் ஜலத்தி லிருந்து கரையேறினபோது அந்தத்தாமரைக்கிழங்குகளைக் காண வில்லை. அவர்கள் பசியினுல்வருந்தி, 'ஆகாரத்தைவிரும்புகிற நம் முடைய தாமரைக்கிழங்குகள் எந்தக்கொடிய [2]பாவியினுல்கொண்டு போகப்பட்டனவோ' என்றுசொன்னர்கள். சத்துருக்களையழிப்ப வனே! அந்தப்பிராம்மணேந்தமர்கள் ஒருவரையொருவர் ஸந்தேகப் பட்டுக்கேட்டனர். அவர்களெல்லாரும், 'சபதம்செய்வோம்' என்று கூறினர். பசியினுல்பீடிக்கப்பட்டும் மிகக்கோத்துமிருந்த அவர் களனைவரும், 'அப்படியேயாகட்டும்' என்றுசொல்லி, ஒன்முகச் சேர்ந்து சபதம்செய்யத்தொடங்கினர்.

1 'சுனஸ்ஸகஸகாயம்' என்பதுமூலம்; 'தர்மத்துக்குத்துணைவர்க ளான ரிஷிகளுக்குத்தோழன்' என்பது பழையவுரை.

2 'பாபகர்மண்' என்று பாடம்கொள்ளப்பட்டது.

அத்ரி, 'தாமரைக்கிழங்கைத்திருடினவன் பசுவைக்காலாலுதைத்தவனும் ஸ்திரியினேப்பார்த்து மூத்திரம்விட்டவனும் ஒதலுக்குவில க்கானதினங்களில் வேதம் ஒதினவனுமாகக்கடவன்' என்றுசொன் னர். வஸிஷ்டர், 'கிழங்கைத்திருடினவன் இவ்வுலகத்தில் வேதம் ஒதத்தகாதகாளில் ஒதினவனும் நாய்களே இழுத்துக்கொண்டுபோகிற வனும் ஸங்யாஸியாயிருந்தும் காமத்திலிருப்பவனும் சரணகதிசெய்த மித்திரனேக்கொன்றவனும் தன்பெண்ணேயடித்துஜீவிப்பவனும் லோ பியினிடத்தில் பணத்தைவிரும்புகிறவனும் ஆவான்' என்றுசொன் னர். கஸ்யபர், 'தாமரைக்கிழங்கைத்திருடினவன்எவனே அவன் பிராம்மணர்களிடம் அன்புள்ளதேவதையும் ஈஸ்வரரும் தேவருக்குந் தேவரும் உலகத்திற்குஆசார்யரும் பிரகிருதியினிடத்தில் தம்சக்தி யைக் கர்ப்பமாகவைத்தவரும் சாஸ்திரங்களிலுல்லங்கனமைதீமைகளே விதிப்பவரும் அவற்றின்பலன்களேச்சேர்ப்பவரும் உலகத்திற்குத்தந் தையுமான விஷ்ணுவைவிட்டு மற்றொருவரை அடைகிறவனும் எல் லாரிடத்திலும் எல்லாவற்றையும்பேசுகிறவனும் அடைக்கலம்வைத்த பொருளே எடுத்துக்கொள்கிறவனும் பொய்ச்சாக்ஷிசொல்லுகிறவனும் வீணுகமாம்ஸத்தைத்தின்னுகிறவனும் பயனற்றதானம்செய்பவனும் பகலில் ஸ்த்ரீயைப்புணர்கிறவனும் ஆவான்' என்றுசொன்னர். பரத் வாஜர், 'தாமரைக்கிழங்கைஎடுத்தவன் கொடியவனும் தர்மத்தை விட்டவனும் பெண்களுக்கும் தன்குலத்தோருக்கும் பசுக்களுகும தீங்குசெய்கிறவனும் பிராம்மணனேவாதத்தால்ஜயித்தவனும் உபாத்தி யாயரைக் கீழேஉட்காரவைத்து ரிக்வேதம் யஜுர்வேதமுதலிய வற்றை ஒதினவனும் செத்தைநெருப்பில் ஹோமம்செய்தவனும் ஆவான்' என்றுகூறினர். ஜமதக்னி, 'தாமரைக்கிழங்கையெடுத்த வன் ஜலத்தில் மலவிஸர்ஜனம்செய்தவனும் பசுவையடித்துக்கொன் றவனும் துரோகம்செய்தவனும் ருதுகாலமில்லாதபோது ஸ்த்ரீயைப் புணர்ந்தவனும் எல்லாரும்பகைக்கத்தக்கவனும் மனவியைக்கொண்டு ஜீவிப்பவனும் தன்உறவினன் தூரதேசத்தில்இருக்கப்பெற்றவனும் பகையுள்ளவனும் தனக்குவிருந்துகொடுத்தவனேப் பதிலாக விருந் துக்கழைப்பவனும் ஆவான்' என்றுசொன்னர். கௌதமர், 'தாம ரைக்கிழங்கையெடுத்தவன் ஒதினவேதங்களேயும் மூன்றக்கினிகளேயும் விட்டுவிட்டவனும் ஸோமத்தைவிற்றவனும் ஆகக்கடவன். அவன், ஒருகிணற்றுஜலத்தையேயும்பின கிராமத்திலிருந்து சூத்திரப்பெண் ணேவைத்திருக்கும் பிராம்மணனுக்கு எந்தலோகமோ அந்தலோக த்தையடைவான்' என்றுசொன்னர். விஸ்வாமித்ரர், 'தாமரைக்

கிழங்கையெடுத்தவன் தான்உயிரோடிருக்கும் தன்தாய்தந்தையரையும் வேலைக்காரரையும் மற்றவர்காப்பாற்றும்படி விட்டவனுக்கடவன்; அதிகப்புத்திரர்களோடு ஏழையும் அசத்தனும் வேதத்தை வஞ்சகமாகக்கிரகித்தவனும் வீணைகங்காரமுள்ளவனும் உழுகிறவனும் எல்லாரையும்பகைப்பவனும் அரசனிடம்சம்பளம்வாங்கின புரோகிதனுயிருக்கவிருப்பமுள்ளவனும் யாகம்செய்யத்தகாதவனுக்கு யாகம் செய்விப்பவனும் ஆகக்கடவன்' என்றுகூறினர். அருந்ததி, 'தாமரைக்கிழங்கையெடுத்தவள் மாமியாரைஎக்காலமும்அவமதிப்பவளும் கணவனைவெறுப்பவளும் இனியவற்றைத் தனித்து உண்பவளுமாகக் கடவள். தாமரைக்கிழங்கையெடுத்தவள் [1]சுற்றத்தாரின் வீடுகளின் நடுவிலிருந்துகொண்டும் பொழுதுபோனபிறகு மாவைக்கரைத்துக் [2] குடிப்பவளாகக்கடவள்; புருஷன் அனுபவிக்கத்தகாதவளும் சக்தியற்றபிள்ளையைப்பெற்றவளும் ஆவள்' என்றுசொன்னாள். கண்டை, 'எவள் தாமரைக்கிழங்கையெடுத்தவளோஅவள் எப்போதும் பொய் பேசுகிறவளும் பந்துக்களைவிரோதிப்பவளும் பணம்வாங்கிக்கொண்டு கன்னிகாதானம்செய்தவளும் தானே சமைத்துச்சாப்பிடுகிறவளும் அடிமைத்தனத்திலேயே வாழ்நாளைக்கழிப்பவளும் தகாதசெய்கையினால் இறப்பவளும்ஆவாள்' என்றுகூறினள். பசுபகன், 'தாமரைக்கிழங்கை எவன்எடுத்தவனை அவன் ஸந்ததியில்லாதவனும் பொருளில்லாதவனும் தேவதானமஸ்காரமில்லாதவனும் அடிமையுமாகவே பிறப்பான்' என்றுசொன்னான். சனஸ்பகன், 'எவன் தாமரைக்கிழங்கைத்திருடினவனை அவன் யாகத்தில் ரித்விக்குக்களில் ஒருவனாகிய [3]அத்வர்யுஎன்பவனுக்கும் பிரம்மசாரிவிரதத்தைநன்றுகறைவேற்றி ஸாமவேதம்ஓதினவனுக்கும் அதர்வணவேதத்தைஓதி விரதஸ்நானம்செய்தவனுக்கும் பெண்ணைக்கொடுத்தவனுவான்' என்று சொன்னான். ரிஷிகள், அவனைப்பார்த்து, 'சனஸ்பகனே! நீ செய்த சபதம் ப்ராம்மணர்களுக்கு இஷ்டமானது. ஆதலால், எங்களெல்லாருடைய தாமரைக்கிழங்குகளையும் திருடினது நீதான்' என்று சொன்னார்கள். சனஸ்பகன், 'குற்றமற்றவர்களே! வைக்கப்பட்ட ஆகாரத்தைப்பாராமல் அனுஷ்டானம்செய்தநீங்கள்சொன்னது உண்மை. இது பொய்யன்று. தாமரைக்கிழங்குகளையெடுத்தவன் நானே. என்னால்ஒளித்துவைக்கப்பட்டஇந்தத்தாமரைக்கிழங்குகளைப் பாருங்

1 சுற்றத்தார் அழைக்கக்கூடாத நிலைமையில் இருப்பவள்என்பது.

2 ஒருவருடையஆதரவுமில்லாமல்உனவுக்குக்கஷ்டப்படக்கடவள்என்பது

3 இவன் யஜுர்வேதி.

கள். மஹிமைபொருந்தியஉங்களைப் பரீக்ஷிப்பதற்காக நான் இப்படி செய்தது. உங்களெல்லாரையும்காப்பாற்ற நான் வந்தேன். தபோதனர்களே! வ்ருஷாதர்ப்பியினால் அனுப்பப்பட்டு உங்களைக் கொல்லக்கருதின இந்த யாதுதானியென்னும் மிகக்கொடியபிசாசு என்னால் கொல்லப்பட்டது. ப்ராம்மணர்களே! அக்னியில்பிறந்த இந்தக் கொடியபாவியானவள் உங்களைக்கொல்லுவளென்றுதான் நான் வந்தேன். என்னை இந்திரனென்று அறியுங்கள். ஆசையைவிட்டதனால் விரும்பினவையெல்லாம்கிரம்பின அழியாதலோகங்கள் உங்களுக்குக் கிடைத்தன. ப்ராம்மணர்களே! இங்கிருந்து உடனே கிளம்புங்கள். அந்தலோகங்களையடையுங்கள்' என்றுசொன்னான். பிறகு, மகரிஷிகளெல்லாரும் ஸந்தோஷமடைந்து, 'அப்படியேயாகட்டும்' என்று இந்திரனுக்குச்சொல்லி இந்திரனோடுகூடவே சுவர்க்கத்திற்குச்சென்றனர். இவ்வாறு இம்மஹாத்மாக்கள் மிகப்பசியுள்ளவராயிருந்தும் சிறந்தமனமுள்ள அரசன்முதலியோரால் பலவழிகளால்விரும்பினவற்றையெல்லாம்அளிக்கப்பட்டும் அவற்றில்ஆசைவைக்கவில்லை. அதனால், சுவர்க்கத்தையடைந்தனர். ஆதலால்,மனிதன் எந்தநிலைமைகளிலும் ஆசையைவிடவேண்டும். ராஜனே! இதுவே முக்கியமான தர்மமாதலால், ஆசையை எவனும் விடவேண்டும். இந்தநல்லசரித்திரத்தைச் சபைகளில்சொல்லும்மனிதன் பொருளையடைவான்; துயர் அடையான். பிதிருக்களும் ரிஷிகளும் தேவாகளும் அவனிடம் திருப்தியடைவர். அந்தமனிதன் மறுஜன்மத்திலும் புகழையும் அறம் பொருளையும் பெற்றவனுவான்.

நூற்றுநாற்பத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ரிஷிகள் இந்திரனுடன் தீர்த்தயாத்திரைக்குச்சென்றதும், தாமரைமலர்களவுடோனதற்காக யாவரும் சபதஞ்செய்ததுமுதலியவையும்.)

பரதஸ்ரேஷ்டனே! மகாராஜனே! முற்காலத்தில் ரிஷிகள் தீர்த்தயாத்திரைசெய்யும்போது தாமரைப்புஷ்பம் களவுசெய்யப்பட்டதற்காக ராஜரிஷிகளும் பிரம்மரிஷிகளும் சபதம்செய்ததைப் பற்றிய ஒருபழையஇதிஹாஸம் கூறுகின்றனர். அதனை இப்போது கேள். முற்காலத்தில் பிரபாஸதீர்த்தத்தில் ரிஷிகளெல்லாரும் சேர்ந்து, 'நாம் புண்ணியதீர்த்தங்களோடுகூடியபூமிமுழுமையிலும்

ஸஞ்சரிப்போம். அதுதான் நமக்குவேண்டுவது. எல்லாரும்போ வோம்' என்று ஆலோசனைசெய்தனர். ராஜனே! சுக்ரர், அங்கிரஸ், வித்வானான கவி, அகஸ்தியர், நாரதர், பர்வதர், ப்ருகு, வஸிஷ்டர், கஸ்யபர், கௌதமர், விஸ்வாமித்ரர், ஜமதக்கி, காலவர், அஷ்டகர், பரத்வாஜர், அருந்ததி, வாலகில்யர்கள்இந்தரிஷிகளும் சிபி, திலீ பன், நஹுஷன், அம்பரீஷன், யயாதி. துஷ்துமாரன், பூரு இந்த அரசர்களும்,சிறந்தமகிமையுள்ளவனும் வ்ருத்ராஸுரனைக்கொன்றவ னுமாகிய இந்திரனைமுன்னிட்டுக்கொண்டு எல்லாத்தீர்த்தங்களிலும் திரிந்து மாசிமாஸம் பூர்ணிமையில் பரிசுத்தமான தீர்த்தமுள்ள கௌசிகிநதிக்குச் சென்றனர். எல்லாத்தீர்த்தங்களிலும் பாவங் களைப்போக்கியஅவர்கள் மிகப்புண்ணியமானபிரம்மஸரஸென்னும்தீர்த் தத்திற்குச் சென்றனர். ராஜனே! அக்னிக்கொப்பான அந்தப்பிராம் மணர்கள் அந்தபிரம்மதீர்த்தத்தில் ஸ்நானம்செய்துதாமரைமலரைப் புசித்தபிறகு, அங்கே சிலர் தாமரைக்கிழங்குகளையும் மற்றும்சிலர் தாமரைத்தண்டுகளையும் தோண்டியெடுத்தனர். பிறகு, அவர்கள் தாமரைப்புஷ்பம் அபகரிக்கப்பட்டதைக் கண்டனர். அது குளத்தி லிருந்து அகஸ்தியரால் பறிக்கப்பட்டது. அந்தரிஷிஸ்ரேஷ்டர்க ளெல்லாரையும்பார்த்து அகஸ்தியர் சொல்லானர். 'என்னுடைய அழகானதாமரைமலரையெடுத்தது யார்? உங்களைச் சந்தேகிக்கி றேன். என்தாமரைப்புஷ்பத்தைக் கொடுங்கள். நீங்கள் பத்மத்தை எடுக்கத்தகாது. காலமானது தர்மத்தின்சக்தியைக் கெடுத்துவிடு கிறதென்று கேள்விப்படுகிறேன். தர்மத்திற்கு அந்தக்கெடுதி இதோ நேர்ந்திருக்கிறது. இவ்வுலகத்தில் தர்மம்இல்லாமற்போவ தற்குமுன்னமே நாம் நீடிழிகாலமிருப்பதற்குத் தேவலோகம் செல் வோம். இனி, பிராம்மணர்கள் கிராமத்துகுடியில் உரத்தஸ்வரங்க ளோடு சூத்திரர்களுக்கு வேதங்களைச்சொல்லிவைப்பர். அரசன் தர்மமில்லாதவியவகாரங்களைப்பார்ப்பான். நான் பரலோகத்திற்குப் போகிறேன். இனி, அரசன் பெரியவர்களைச் சிறியவர்களாகநினைப் பான். அவனை எல்லாரும் அனுஸரிப்பார். இவ்வுலகத்தில் தர்மம் தலையெடுத்திராமற்போவதற்குமுன்னமே நான் சாசுவதமானபரலோ கத்திற்குப் போகிறேன். இனி, பலவீனர்களானமனிதர்கள் அதிக வன்மையுள்ள அயலாலல்பக்ஷிக்கப்படுவதைப் பார்ப்பேன். ஆதலால், அழியாதபரலோகத்திற்குப் போவேன். மானிடலோகத்தில் இப் படிப்பட்டதைப்பார்க்க எனக்கு விருப்பமில்லை' என்றார். துயரமுற்ற ரிஷிகள் அம்மகரிஷியைப்பார்த்து, 'ஓ! மகரிஷியே! உம்மூடைய

தாமரைமலரை நாங்கள் திருடவில்லை. நீர் பொய்யாகப்பழியேற்ற லாகாது. நாங்கள் கொடியசபதங்கள்கூறுவோம்' என்றுசொன்னர் கள். அரசனே! இந்தத்தர்மத்தைப்பார்த்து, சபதம்செய்ய நிச்சய முள்ள அந்தஅரசர்களும் ரிஷிகளும் பிள்ளைகளோடும் பேரர்களோ டும்கூட வரிசையாகச் சபதம்செய்தனர்.

ப்ருகு, 'தாமரைமலரையெடித்தவன் வைதவனைப்பதிலுக்கு வைதவனும் அடித்தவனைப்பதிலுக்கடித்தவனும் [1] முதுகுமாமிசத் தைத்தின்பவனுமாவான்' என்றுசொன்னர். வஸிஷ்டர், 'உமது தாமரைமலரையெடித்தவன் உலகத்தில் வேதமோதாதவனும் நாயை இழுப்பவனும் நகரத்திற்பிச்சையெடுப்பவனுமாவான்' என்றுசொன் னர். கஸ்யபர், 'உமது தாமரைமலரையெடித்தவன் எங்கும் எல்லா வற்றையும் விற்பவனும் அடைக்கலம் வைத்தபொருளில் ஆசைப் படுகிறவனும் பொய்ச்சாக்ஷிசொல்லுகிறவனும் ஆவான்' என்று கூறினர். கௌதமர், 'உமதுதாமரைமலரையெடித்தவன் தனக்கு நிகரில்லாத கோணல்புத்தியுள்ளவனெடு அகங்காரத்தினல்விரோதப் பட்டுத் தன்னைக்கஷ்டப்படுத்திக்கொண்டு ஜீவிப்பான்' என்றுகூறி னர். அங்கிரஸ், 'உமதுதாமரைமலரையெடித்தவன் அசுத்தனுகவும் வஞ்சகத்தினல்வேதமோதினவனுகவும் நாயைஇழுப்பவனுகவும் பிரம் மஹத்திசெய்தவனுகவும்பிறரைமோசம்செய்தவனுகவும் இருப்பான்' என்றுசொன்னர். துந்துமாரராஜன், 'உமதுதாமரைமலரைத் திரு டினவன் சினேகிதர்செய்தநன்றியைமறந்தவனும் சூத்திரப்பெண்ணி னிடத்தில் ஸந்ததியை உண்டுபண்ணினவனும் சிறந்தபோஜனத் தைத் தனியாகஉண்பவனும் ஆவான்' என்றுசொன்னன். புரூர வன், 'உமதுதாமரைமலரையெடித்தவன் வைத்தியம்செய்துகொண் டும் மனைவியினுலும் மாமனுராலும் ஜீவனம்செய்துகொண்டுமிருப் பான்' என்றுகூறினன். திலீபன், 'உமதுபதுமத்தையெடித்தவன் கிராமத்தில் கிணற்றில்ஸ்நானம்செய்துகொண்டு சூத்திரப்பெண்ணுக் குக்கணவனுனை பிராம்மணனுக்குரியலோகங்களைஅடைவான்' என்று சொன்னன். சுக்ரர், 'உமதுகமலத்தையெடித்தவன் வீணுகை மாம் ஸத்தையுண்பவனும் பகலில்புணர்கிறவனும் அரசனுக்குவல்தொ ழில்செய்கிறவனும் ஆவான்' என்றுசொன்னர். ஜமதக்னி, 'உமது கமலத்தையெடித்தவன், ஒதாதநாட்களில் ஒதினவனும் சிராத்தத்தில் சிநேகிதனைப் புசிப்பித்தவனும் சூத்திரன்செய்யும்சிராத்தத்தில் புசித்

[1] 'குதிரை, விருஷபம், ஒட்டகமுதலிய முதுகில்சுமக்கும் ம்ருகங்களின் இறைச்சி' என்பது பழையவுரை.

தவனுமாவான்' என்றுசொன்னார். சிபி, 'உமதுகமலத்தைஅபகரித்தவன் அக்நிஹோத்ரமில்லாமல்இறப்பவனும் யாகத்துக்குஇடையூறுசெய்தவனும் ரிஷிகளைப்பகைத்தவனுமாவான்' என்றுசொன்னான். யயாதி, 'உமதுநளினத்தையெடுத்தவன் நியமமுள்ளபார்யையினிடத்தில் ருதுவில்லாதகாலத்தில்சேர்ந்தவனும் வேதங்களைவிட்டவனுமாவான்' என்றுசொன்னான். நகுஷன், 'உமதுபங்கஜத்தை எடுத்தவன் ஒருவீட்டிலேயேயிருக்கும் [1] விருந்தினனும் தீங்குசெய்துகொண்டு புலன்களையடக்காதவனும் சம்பளத்திற்குவித்தையைக்கொடுப்பவனும் ஆவான்' என்றுசொன்னான். அம்பரீஷன், 'உமதுதாமரைமலரையெடுத்தவன் பெண்களிடத்திலும் சுற்றத்தாரிடத்திலும் பசுக்களிடத்திலும் தயையற்றவனும் தர்மத்தைவிட்டவனும் பிரம்மஹத்திசெய்தவனுமாவான்' என்றுசொன்னான். நாரதர், 'உமதுபத்மத்தையெடுத்தவன் வீட்டில்வித்வானும் வெளியில்வேதத்தையும் அதன்பதங்களையும் ஸ்வரந்தவருகச்சொல்லுகிறவனும் பெரியோரைஅவமதிப்பவனுமாவான்' என்றுசொன்னார். நாபாகனென்னுமரசன், 'உமதுகமலத்தையெடுத்தவன் எப்போதும் பொய்சொல்லுகிறவனும் ஸாதுக்களைப்பகைப்பவனும் பணம்வாங்கிக்கொண்டு கன்னிகையைக் கொடுப்பவனுமாவான்' என்றுசொன்னான். கவி, 'உமதுகமலத்தையெடுத்தவன் காலால்பசுவை உதைத்தவனும் சூரியனுக்கெதிரில் மூத்திரம்விட்டவனும் சரணகதனைக்கைவிட்டவனுமாவான்' என்றுசொன்னார். விஸ்வாமித்திரர், 'உமதுதாமரைமலரை எடுத்தவன் மழைக்காலமெல்லாம் அடிமையாகவேலைசெய்துகொண்டு அரசனுக்குப்புரோகிதனும் யாகம்செய்யத் தகுதியில்லாதவனுக்கு யாகம்செய்விப்பவனுமாவான்' என்றுசொன்னார். பர்வதர், 'உமது பத்மத்தையெடுத்தவன் கிராமத்தில்மணியகாரனும் கழுதைவாகனமேறிப்போகிறவனும் பிழைப்புக்காக நாய்களைக்கட்டியிழுப்பவனுமாவான்' என்றுசொன்னார். பரத்வாஜர், 'உமதுபத்மத்தையெடுத்தவனுக்குக் கொலைசெய்கிறவனிடத்திலும் பொய்யனிடத்திலுமுள்ள எல்லாப்பாவங்களும் சேர்ந்திருக்கட்டும்' என்றுசொன்னார். அஷ்டகன், 'உமது கமலத்தையெடுத்தவன் புத்தித்தேர்ச்சியில்லாமல் மனம்போனபடிநடந்தும் பாவத்தைச்செய்தும் அநியாயமாகப் பூமியையாளும் அரசனுவான்' என்றுசொன்னான். காலவர், 'உமதுபத்

1 'ஸ்யாவலி' என்பது பழையவுரை.

2 'உழவர்களுக்கு விரோதமாகவும் வியாபாரிகளுக்கு அனுகூலமாகவும் மழைபெய்யாமலிருக்கச்செய்வன்' என்பது பழையவுரையின் கருத்து.

மத்தையெடித்தவன் பாபிஷ்டர்களைவிட அதிகமாக அவமதிக்கத்தக்கவனும் தன்னைச்சேர்ந்தவர்களுக்குத் தீங்குசெய்பவனும் தானங் கொடித்ததைச் சொல்லுகிறவனுமாவான்' என்றுசொன்னர். அருந்ததி, 'உமதுகமலத்தையெடித்தவள் மாபியாரைத்தூஷித்தவளும் கணவனைவெறுத்தவளும் சுவையுள்ளதைத் தான்மட்டும் புசிப்பவளுமாவாள்' என்றுசொன்னள். வாலகில்யர்கள், 'உமது தாமரைப்புஷ்பத்தைஎடித்தவன் கிராமத்தின்வழியில் ஆகாரத்திற்காக ஒற்றைக் காலால்நிற்பான்; தர்மந்தெரிந்தும் தர்மத்தைவிட்டவனுவான்' என்று சொன்னர்கள். [1]பசுஸகன், 'உமது தாமரைமலரையெடித்தவன்அக்நிஹோத்ரத்தைக்கவனியாமல் ஸுகமாகத்தூங்கும் பிராம்மணனும் இந்திரியங்களையடக்காத ஸந்யாஸியுமாவான்' என்றுசொன்னன். [2] ஸுரபி (காமதேனு), 'உமதுபதுமத்தையெடித்தவள் மயிர்க்கயிற்றினல்அணையப்பட்டும் வேறுகன்றைக்கொண்டும் வெண்கலப்பாத்திரத்தில் கறக்கப்படும்பசுவாகட்டும்' என்றுசொல்லிற்று. அரசனே! கௌரவஸ்ரேஷ்டனே! அவர்கள் இப்படிப் பலவகைகளான அனேக சபதங்கள்கூறினதனல், ஆயிரங்கண்ணனனதேவேந்திரன் சந்தோஷமடைந்து,கோபிக்கும்இயற்கையுள்ளவரும் கோபமுண்டவரும்பிராம்மணஸ்ரேஷ்டருமான அந்தஅகஸ்தியமஹரிஷியைக்கண்டு, தானே அவரிடம்வந்து பிரம்மரிஷிகள், தேவரிஷிகள், ராஜரிஷிகள் இவர்களின் நடுவில் தன்னிச்சயத்தைப்பற்றிச் சொன்னதைச் சொல்லுகிறேன்; கேள். இந்திரன், 'உமதுதாமரைப்புஷ்பத்தையெடித்தவன் யஜுர் வேதத்தையும் ஸாமவேதத்தையும் அதர்வணவேதத்தையும் ஓதிப் பிரம்மசாரிவிரதத்தைமுடித்துஸ்நானம்செய்தபிராம்மணனுக்குக்கன்னிகாதானம் செய்தவனுவான். உமதுபதுமத்தையெடித்தவன் எல்லா வேதங்களையும்ஓதி நல்லொழுக்கத்தோடி தர்மத்தையனுஷ்டித்துப் பிரம்மலோகம் செல்லக்கடவன்' என்றுசொன்னன். அகஸ்தியர், 'பலாஸுரனைக்கொன்றவனே! நீ ஆசீர்வாதத்தைச் சபதமாகச்சொன்னய்; எனக்குத் தாமரைமலரைக்கொடு; இதுதான் சாசுவதமான தர்மம்' என்றுசொன்னர். இந்திரன், 'பகவானே! இப்போது நான் ஆசையினல் தாமரைமலரையெடுக்கவில்லை; தர்மங்களைக்கேட்கும் விருப்பத்தினல் எடித்தேன். நீர் கோபிக்கலாகாது. தர்மசாஸ்திரத்தின்ஸாரமும் தர்மத்திற்குஅணையும் குற்றமற்றதும் என்றும்அழியாததும்நீண்டஸுகத்தைத்தருவதுமாகிய இந்தரிஷிவாக்கியத்தைக் கேட்டேன். வித்வானே! பிராம்மணோத்தமரே! அந்தப்பத்மம்

1, 2. பசுஸகனும் ஸுரபியும் வந்ததாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இது. வாங்கிக்கொள்ளும். பகவானே! குற்றமற்றவரே! என்னுடையஅபராதத்தைப் பொறுக்கக்கடவீர்' என்றுசொன்னன். மிக்க கோபக்காரரும் சிறந்ததவமும் ஞானமுமுள்ளவருமான அகஸ்திய முனிவர் தேவேந்திரனால் இவ்வாறுசொல்லப்பட்ட பிறகு, கோபம் தணிந்து தாமரைமலரை வாங்கிக்கொண்டார். மறுபடியும் அம்மக ரிஷிகள் தீர்த்தயாத்திரைசெய்து புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம் செய்தனர். புண்ணியகாலந்தோறும் நியமத்துடன் இந்தச்சரித்திரத்தைப்படிப்பவன் மூர்க்கனைபிள்ளையைப்பெறுன்; புகழற்றிரான். ஓர்ஆபத்தும் அவனை அணுகாது. அவன் துயரமும் மூப்பும் ஆசையும் அற்று நற்குணங்கள் பொருந்தியிருந்து இறந்தபின் ஸ்வர்க்கமடைவான். ராஜனே! ரிஷிகளாற்காப்பாற்றப்பட்ட இவ்வுபதேசத்தை ஓதுகிறவன் அழிவில்லாதபிரம்மலோகத்தையுமடைவான்" என்றார்.

நூற்றுநாற்பத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(குடைபாதரக்ஷைகளின் தானத்திற்குக்காரணமான ஸூர்ய ஜமதக்நிக்கும் ஸம்வாதம்.)

யுதிஷ்டிரர், "பரதஸ்ரேஷ்டரே! சிராத்தகாரியங்களில் குடையும் பாதரக்ஷைகளும்கொடுக்கப்படுகின்றனவே. இது யாரால் ஆரம்பிக்கப்பட்டது? எப்படியுண்டானது? எதற்காகக்கொடுப்பது? சிராத்தகாரியத்தில் மாத்திரமன்று, விரதங்களிலும் இன்னும் அனேகங்காரியங்களிலும் புண்ணியத்தைஉத்தேசித்துக் கொடுக்கப்படுகின்றன. [1]அரசரே! இதை விரிவாகவும் தெளிவாகவும் கேட்க விரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"ராஜனே! குடைபாதுகைகளைப்பற்றிய விவரத்தை ஊக்கத்துடன் கேள். ராஜனே! உலகத்தில் இது எவ்வகையாகப்பரவியதென்றும் எப்படிஉண்டானதென்றும் எப்படி அழியாதபுண்ணியமானதென்றும் இவற்றையெல்லாம்பற்றிமுழுதும்சொல்வேன். மனிதர்க்கதிபதியே! பூர்வகாலத்தில் ஜமதக்னிக்கும் மகாத்மாவான சூரியனுக்கும்நடந்த ஸம்வாதமாகிய இந்தஇதிகாசத்தைக் கேள். பிரபுவே! ப்ருகுவம்சத்தவரான அந்தஜமதக்னிபகவான் தாமே வில்

[1] 'ராஜன்' என்னும் பாடம் கொள்ளப்பட்டது.

வைத்துக்கொண்டு விளையாடினர்; அம்புகளை வில்லில் தொடுத்துத் தொடுத்து விடுத்தார். தர்மந்தவறுதவனே! அவரால்விடுக்கப்பட்ட ஜ்வலிக்கின்றகாந்தியுள்ள அம்புகளையெல்லாம் அவர்பார்யையான ரேணுகாதேவி அடிக்கடி எடுத்துக்கொணர்ந்து அவருக்குக் கொடுத்தாள். அவர் அப்போது அந்தநாண்அம்புகளின்சப்தத்தினால் மகிழ்ந்து அம்புகளை எறிந்துகொண்டேயிருந்தார். அவளும் அவற்றை எடுத்துக்கொண்டுவந்துகொடுத்தாள். ராஜனே! [1]ஆனிமாஸத்தில் சூரியனுச்சியிலிருக்கும் நடுப்பகலில் அந்தப்பிராம்மணர் அம்புகளை யெறிந்து ரேணுகையைநோக்கி, 'விசாலமான கண்களையுடையவளே! போ; வில்லிலிருந்துபோன இந்தஅம்புகளைக் கொண்டுவா. அழகானபுருவங்களையுடையவளே! இவற்றை மறுபடியும் பிரயோகிப்பேன்' என்றுசொன்னர். அந்தப்பெண்ணரசி போகும்போது அவளுக்குத் தலையும்காலும்சுட்டதனால் நடுவழியில் நிழலுக்காக மரத்தடியில் நின்றாள். கறுத்தகண்களையுடைய அந்தப்பெண்ணரசி சற்றுநேரம்நின்று பர்த்தாவின்சாபத்திற்குப்பயந்து மறுபடியும் அம்புகளையெடுத்துவரப்போனாள். புகழ்பெற்றவளாகிய அந்தரேணுகை அம்புகளையெடுத்துத் திரும்பிவரும்போது உடம்பெல்லாம்வேர்த்துக் காலால்நடக்கமுடியாதவளாய்க் கணவருக்குப்பயந்து நடுங்கிக் கொண்டு அவரிடம்வந்தாள். அப்போது, அந்தரிஷி கோபமுற்றவராய் அழகானமுகமுள்ள அவளைநோக்கி, 'ரேணுகையே! நீ ஏன் வெகுநேரம்கழித்துவந்தாய்?' என்று பலமுறை கேட்டார். ரேணுகை, 'தபோதனரே! என்தலையும் கால்களும் கொதித்துப்போயின. ஸூர்யனுடையவெப்பத்தினால் தடுக்கப்பட்டநான் மரத்துநிழலை அடைந்தேன். பிராம்மணரே! இந்தக்காரணத்தினால் நான் இதைத் தாமதமாகச்செய்தேன். தபோதனரே! பிரபுவே! இதைக்கேட்டு நீர் என்மேல் கோபியாமல்இருக்கக்கடவீர்' என்று மறுமொழிகூறினாள். ஜமதக்னி, 'ரேணுகையே! ஜ்வலிக்கின்றகிரணங்களால் உனக்குக்கஷ்டத்தைக்கொடுக்கும் இந்தச்சூரியனை அஸ்திரமென்னும் அக்நிசக்தியோடுகூடிய என்பாணங்களினால் இப்போதே தள்ளிவிடுவேன்' என்றுசொல்லிச் சிறந்தவில்லைவளைத்து அநேகஅம்புகளை எடுத்துச் சூரியனைநோக்கி அவன்போகும்திக்கில் நின்றார். குந்திபுத்திரனே! அடிப்பதற்குஆயத்தமாய்நிற்கும் அவரைநோக்கிச் சூரி

1 கேட்டைநக்ஷத்திரமும் மூலநக்ஷத்திரமும் பௌர்ணமையில்கூடுவதனால் ஆனிமாதம் ஜ்யேஷ்டாமூலமென்பது; 'ஜ்யேஷ்டாமூலே' என்பது மூலம்; 'வைகாசி' என்பது பழையஉரை.

யன் அந்தணவடிவாக அவரெதிரேவந்து, 'ஐயா! உமக்குச் சூரியன் என்னதீங்குசெய்கிறான்? ஆகாயத்திலிருந்து தன்கிரணங்களினால் ஆங்காங்குள்ளஸாரத்தையிழுத்து அதை மழைக்காலத்தில் ஜலமாகப்பொழிகிறவன் சூரியன். பிராம்மணரே! மனிதர்களுக்குச் சுகத்தைச்செய்யும்அன்னமானது அதனாலுண்டாகிறது. அன்னமே உயிரென்று வேதங்களிலும் சொல்லப்படுகிறதன்றோ? அந்தணரே! (சூரியன்) தன்கிரணங்களுடன்கூட மேகங்களில்மறைந்து இவ்வேழு தீவுகளையும் மழையினால் நனைக்கிறான். ஸமர்த்தரே! ஓஷதிகள் கொடிகள் இவற்றின்புஷ்பங்களிலிருந்தும் இலைகளிலிருந்தும்உண்டாகும் உணவுகளனைத்தும் மழையினாலுண்டாக்கப்பட்டிருக்கின்றன. பார்க்கவரே! ஜாதகர்மம், சௌளம், உபநயனம், [1]கோதான விரதம், விவாகம், யாகச்சிறப்புக்கள், தர்மங்கள், தானங்கள், திரவியத்தினால்உண்டாகும்ஜனச்சேர்க்கைகள் இவையெல்லாம் அன்னத்தைப்பற்றி நடக்கின்றனவென்பது உமக்குத் தெரியுமன்றோ? மனத்திற்கினியவை எவையோ அவை எவ்வளவுகருவிகளினால் முடிக்கத்தக்கவையோ அவையெல்லாம் அன்னத்தினாலுண்டாகின்றவையென்று உமக்குத்தெரிந்ததையே சொல்லுகிறேன். பிராம்மணரே! நான்சொன்னதெல்லாம் உமக்குத்தெரியுமே. ப்ரம்மரிஷியே! உம்மைவேண்டுகிறேன். சூரியனை ஏன்அடிக்கிறீர்?' என்று கேட்டான்" என்றார்.

நூற்றுநாற்பத்தைந்தாவது அத்யாயம்.

தா ன த ர் ம ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(ஸூர்யனுக்கும் ஜமதக்னிக்கும் ஸம்வாதத் தொடர்ச்சி.)

யுதிஷ்டிரர், "சூரியன் இவ்வாறுவேண்டும்போது சிறந்தமகிமையுள்ள ஜமதக்னிமுனிவர் என்னசெய்யநிச்சயித்தார்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"கௌரவனே! சூரியன் அவ்வாறுகேட்டும் அக்நிக்கொப்பான மகிமையுள்ள ஜமதக்னிமுனிவர் கோபந்தீராமலேயிருந்தார். அரசனே! பிராம்மணரூபியானசூரியன், அதன்பிறகு கைகூப்பி அவரை நமஸ்கரித்து, 'ஓ! பிரம்மரிஷியே! எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும்ஸூர்யன் அசையும்இலக்கன்றோ? எப்போதும் அசைந்துஓடிக்

1 விவாகத்துக்குமுன் செய்துகொள்ளும் ஒருசெளரவிசேஷம்.

கொண்டிருக்கும்சூரியனே நீர் அடிப்பது எப்படி?' என்று இன்சொல் லிறைகேட்டான். ஜமதக்னி, 'நீ நிற்பதையும் ஓடுவதையும் ஞானக் கண்ணினால் நான்அறிவேன். இப்போது நான் அவசியம் உனக்கு வினயத்தை உண்டுபண்ணவேண்டும். திவாகரனே! நடப்பகலில் அரைநிமிஷம் நீ நிற்கிறாய். சூரியனே! அப்போது உன்னைப் பிளப் பேன். எனக்கு இதில் சந்தேகமில்லை' என்றுசொன்னார். சூரி யன், 'வில்லாளிகளிற்சிறந்தவரே! பிரம்மரிஷியே! நீர் என்னைப் பிள ப்பதில் ஸந்தேகமில்லை. பகவானே! அபகாரம்செய்தானை இப் போது சரணுகதிசெய்திருக்கிறேனென்றறியும்' என்றுசொன்னான். அதன்பிறகு, ஜமதக்னிபகவான் நகைத்துக்கொண்டு அவனைப்பார் த்து, 'ஸூர்யனே! நீ சரணுகதிசெய்ததனால் பயப்படவேண்டிய தில்லை. பிராம்மணர்களிடத்திலுள்ள மனநேர்மையையும் பூமியின் கண்ணுள்ள அசையாமையையும் சந்திரனதுகுளிர்ச்சியையும் கடலி னதுஆழத்தையும் அக்நியின்ஜ்வாலையையும் மேருமலையின்ஒளியை யும் குபேரனதுசெல்வத்தையும்தாண்டுபவன் எவனோ அவன்தான் சரணுகதனை அடிப்பான். சரணுகதனைஅடிப்பவன் குருவின்படிக்கை யைச்சேருகிறவனும் பிரம்மஹத்திசெய்தவனும்கள்ளைக்குடித்தவனு மாவான். அன்பனே! இந்தப்பிழைக்கு ஸமாதானத்தை நீயே சிந் திக்கக்கடவாய். உன்கிரணங்களினால் சுடப்பட்டவழியானது எப் படி ஸுகமாகச்செல்லக்கூடியதாகும்?' என்றுசொன்னார். அந்தஜம தக்னி இவ்வாறுசொல்லிப் பேசாமலிருந்தவுடன், சூரியன் அவருக் குக் குடையையும் பாதரக்ஷைகளையும் கொடுத்து, 'மஹரிஷியே! என் கிரணங்களைத்தடுத்துத் தலையைக்காப்பாற்றுவதாகிய குடையையும் கால்களைக்காப்பாற்றுபவையாகிய தோல்பாதரக்ஷைகளையும் வாங்கிக் கொள்ளும். இதுமுதலாக இவ்வுலகத்தில் எல்லாவிரதங்களிலும் இவை சிறந்தவையாகவும் அழியாதசிறந்தபயனுள்ளவையாகவும் நடக்கும்' என்றுசொன்னான். பாரதனே! இப்படி குடையும் பாத ரக்ஷையும் சூரியனால்உண்டாக்கப்பட்டவை. இத்தத்தானம் புண்ணிய மென்று மூவுலகங்களிலும்பிரஸித்திபெற்றது. ஆதலால், நீயும் பிராம் மணர்களுக்குக் குடையையும் பாதரக்ஷைகளையும் கொடுப்பது உத்த மம். உனக்கு மிகப்பெரியபுண்ணியமுண்டாகுமென்பதில் எனக்கு ஸந்தேகமில்லை. பரதஸ்ரேஷ்டனே! நாறுகம்பிகளுள்ள வெள்ளைக் குடையைப் பிராம்மணனுக்கு அளிப்பவன் மறுஜன்மத்தில் ஸுக மாகவிளங்குவான். பரதஸ்ரேஷ்டனே! அவன் பிராம்மணர்களாலும் அப்ஸரஸுகளாலும் தேவர்களாலும் எப்போதும் கொண்டாடப்

பட்டி இந்திரலோகத்தில் வஸிப்பான். சிறந்தகைகளையுடையவனே! பிரம்மசரியவிரதத்தை உறுதியுடன்முடித்த ஸ்நாதகனைபிராம்மண னுக்கு எண்ணெய்போட்டு நயமானபாதரக்ஷைகளைக்கொடுப்பவன் தேவர்களாலும் கொண்டாடப்பட்டலோகங்களை அடைவான். பாரத னே! அவன் இறந்தபிறகு, கோலோகத்தில் ஆனந்தமுற்றிருப்பான். பரதஸ்ரேஷ்டனே! குடைபாதரக்ஷைகளைக் கொடுப்பதின்பலனைப் பற்றி இப்போது உனக்கு முழுதும் நான் சொன்னேன்" என்றார்.

நூற்றுநாற்பத்தாறுவது அத்யாயம்.

தானதர்மப்ர்வம். (தொடர்ச்சி.)

(பாசரரின்உபதேசம் ; சூத்ரதர்மம் - சௌசாதலியவை.)

யுதிஷ்டிரர், "பரதஸ்ரேஷ்டரே! இவ்வுலகத்தில் சூத்திரர் களுக்கு எப்போதும் சுசுரூஷையே விதிக்கப்பட்டுள்ளது. எத்தனை விதமானசுசுரூஷைகள்கூறப்பட்டுள்ளன? அவை என்னகாரணங்கள் பற்றியவை? சுசுரூஷையினால் அடையும் உலகங்கள் எவை? பரதஸ் ரேஷ்டரே! சூத்திரர்களின் தர்மத்தின்இலக்கணம் கூறுவீராக" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்தவிஷயத்தில் பிரம்மஜ்ஞானியான பராசரர் சூத்திரர்களை அனுக்கிரகிப்பதற்காகச்சொன்னதாகியஒருபழையஇதிஹாஸத்தைக் கூறுகின்றனர். பிராயமுதிர்ந்தவரான பராசரர் நான்குவர்ணங்களை யும் அனுக்கிரகிப்பதற்காகச் சௌசமும் ஆசாரமும்அடங்கினதும் குற்றமற்றதும் பரிசுத்தமுமான தர்மத்தைச் சொல்லியிருக்கிறார். சாஸ்திரார்த்தம்தெரிந்தவராகிய அவர் தர்மத்தைஉபதேசிப்பதும் பயன்பெறுவதுமாகிய சாஸ்திரமுழுமையையும் கிரமமாகவும் சரியாக வும் சிஷ்யர்களுக்குக் கற்பித்தார். 'சூத்திரன் அகாரியங்களில் லஜ்ஜை யோடு இந்திரியங்களையடக்கிப் பரிசுத்தனும் சஞ்சலமில்லாதவனும் தேகத்தளர்ச்சியும் புத்தித்தளர்ச்சியுமில்லாதவனும் அடங்கி மறு மொழிசொல்லுகிறவனும் ஆசையும்கொடுமையுமில்லாதவனும் உள் ளும்புறமும்ஒத்திருப்பவனும் பிரம்மஜ்ஞானியும் நல்லொழுக்கத்தி லேயே ஊக்கமுள்ளவனும் எல்லாப்பிராணிகளின் நன்மையையுமே கருதுகிறவனுமாயிருக்கவேண்டும்; காமம் குரோதம் லோபம் மானம் மயக்கம் மதம்ஆகிய தன்தேகத்தில் எப்போதுமுள்ளபகைவர்களை ஜயிக்கவேண்டும். சாஸ்திரத்தினால் மன்வுறுதியைச்செய்துகொண்டு

அகங்காரத்தைவிட்டுத் தன்திறமைக்கும் தேகவலிமைக்கும்தக்கபடி மூன்றுவருணத்தாருக்கும் அவரவர் அனுமதியின்மேல் தொண்டு செய்துகொண்டிருக்கவேண்டும்; அறிவுள்ளவனும் மனத்தையும் மற்றஇந்திரியங்களையும் அடக்கினவனும் பணிவுள்ளவனுமாகிச் செய்கை, மனம், வாக்கு, பார்வை இந்நான்கையும் அடக்கியிருக்க வேண்டும்; மூன்றுவர்ணத்தாரின் சேஷத்தினால் ஆகாரஞ்செய்து கொண்டு ராக்ஷஸர்களையும் யக்ஷர்களையும் பகைக்கவேண்டும்; வண்டு மதுவைச்சேர்ப்பதுபோல மூன்றுவர்ணத்தாரிடமிருந்தும் தர்மத் தைச் சேர்க்கவேண்டும். சூத்திரன் வேதத்திற்காணப்பட்டகருமத் தோடு தவம்செய்வனையின் அவனுக்கு இம்மையில்துயரமும்மறுமை யில் கெட்டகதியும் உண்டாகும். சூத்திரனிடத்திலிருக்கும்தவம் பாவத்திறகும் அபகீர்த்திக்கும் காரணமாம். நியாயந்தப்பித் தவம் செய்ததின்பலனை மிலேச்சர்களில்பிறந்து அனுபவிப்பான். மாறுக டக்கும் சூத்திரன் புண்ணியத்துக்குரியவனல்லன். வழிதப்பி ப்ரவ் ருத்திப்பவர்கள் நாலுவர்ணங்களுக்கும் விலக்கானஜாதிகளில் தேக த்தையுமெடுப்பது கண்ணுக்கு நேராகக்காணப்படுகிறது. அத னாலேதான், சகர், சீனர், காம்போஜர், [1]பாரதர், சபரர், பப்லவர், துஷாரர், யவனர், தார்வர், தரதர், உஜ்ஜிஹானர், வேணர், கங்க ணர், சிங்களர், மத்ரகர், இஷ்விக்ஷுகர், புளிந்தர், கஹ்வர், ஆந்திரர், நீரகர், கந்திகர், த்ரமிடர், பர்ப்பரர், சூசுகர், கிராதர், பார்வதேயர், கோலர், சோளர், காஷகர், ஆரூகர், தோஹர்முதலானமிலேச்ச ஜாதியர்கள் வேஷமும் ஆசாரமும் மாறுபட்டுக் குரூரபுத்தியுள்ள வராகக் காணப்படுகின்றனர். அவர்கள் வழிதப்பித தர்மம்செய்து தான் வேறுஜாதியைச்சார்ந்தனர். வழிதப்பிச்செய்த தவத்திற்கு இது தெரிந்தபயன். நற்கருமமாயினும் தீக்கருமமாயினும் செய்யப் பட்டது அழிவதில்லை. இவர்கள் தர்மத்திற்குஆசைப்பட்டு வீண் கஷ்டமடைந்து இவ்வுலகத்திலும் தமக்கேலாதகாரியமாகிய தவத்தி னால் ஈட்டப்பட்டபொருளைப்பெற்றுப் பாஷண்டர்களைப் பூஜிப்பார். வேந்தனே! இவ்வாறு, நான்குவர்ணங்களுக்கும் நான்குஆஶ்ரமங் களுக்கும் மாறுகடக்கும்மதியினர் மிலேச்சர்களாகிறார். அந்தண ருக்கு ஓதுவதே தனம். அரசர்களுக்குச்சக்தியே தனம். வைசிய ருக்கு வர்த்தகமும் பயிர்த்தொழிலும் தனம். சூத்திரர்க்குப் பணி விடைதான் தனம். அந்தத்தர்மங்கெடுவதால் நரகத்திற்காளாகின்ற னர். அதன்பிறகு, இவர்கள் தயையும் தர்மமுமில்லாதமிலேச்சர்

1 இவர் ஒருவகைச்சாதியார்.

சளாகப் பிறக்கின்றனர். அதன்பிறகு, நரகமும் பின்னிட்டு விலங் குப்பிறவியும் அவர்களுக்கு நிச்சயமானவையே. வர்ணங்களுக்கும் ஆஶ்ரமங்களுக்கும் முன்னமே ஏற்படுத்தப்பட்ட நல்வழியைப்பிடித் துத் தப்புவழிகளெல்லாவற்றையும்விட்டுத் தமக்கு விதிக்கப்பட்ட தர்மத்தைக்கைப்பற்றி எல்லாப்பிராணிகளின்மேலும் தயைவைத் துக் கோபத்தைவென்று சிரத்தையுடன் சாஸ்திரத்திலுல் அறியப் பட்டமுறைப்படி தேவர்களையும் பிராம்மணர்களையும் பூஜிப்பவர் எவரோ அவருக்குள்ளசாஸ்திரவிதியை இருக்கிறபடி வரிசையாகச் சொல்வேன். (சிஷ்யனை) கிரகிக்கும் முறையையும் அவன் பணி விடைசெய்யும்வகையினத்தையும் அவனுக்கு உபநயனம்செய்வதை யும் பலவகைமந்திரங்களையும் சிஷ்யனுக்குச்செய்யும்பரீக்ஷையையும் முக்கியமாய்ச் சௌசத்தையும் சௌசத்திற்குரிய எல்லாப்பொருள் களையும் சாஸ்திரப்படி முதலிலிருந்து தெளிவாகவும் நிச்சயமாக வும் சொல்வேன். மற்றாசௌசமுதலிய அனேசசௌசங்கள் உண் மைப்பொருளையறிந்த ரிஷிகளால் காணப்பட்டிருக்கின்றன. அவர் களுள் சூத்திரன் ஸங்யாஸிகளுக்கு நான்சொல்வதும் மற்றுமாயுள்ள பணிவிடைகளைச் செய்யக்கடவன். நல்லபுத்தித்தேர்ச்சியுள்ளவரும் தர்மமொன்றையேபற்றினவரும் செம்மையானசாஸ்திரஞானம்நிரம் பினவரும் எல்லாருக்கும் நன்மையையே விரும்புகிறவருமான ஸங்யா ஸிகள்செலலும்வழியில் பரிசுத்தமாகச்செய்யப்பட்டதும் மனத்திற் கினிய பூண்டுகள் முளைத்ததும் ஜனங்களில்லாததும் மறைவுள்ள தும ான இடத்தைக்கண்டறிந்து மனத்தையும்இந்திரியங்களையும்அடக் கிக்கொண்டு ஜலமுள்ளபாத்திரத்தையும் பரிசோதித்தெடுக்கப் பட்டமண்ணையும் அதில்வைத்துவிட்டுப் பூமியைஉற்றுப்பார்த்துப் பேசாமல் அவ்விடத்தில்மூத்ரம்விடுதற்குஉட்காரவேண்டும்;(வைக் கோல் முதலியவறறால்) மூடப்பட்டபூமியின்மேல் தலையைமூடிக் கொண்டு பகலில் வடக்குமுகமாகவும் இரவில் தெற்குமுகமாகவும் இருக்கவேண்டும்; சௌசம்முடிவதற்குமுன் கொஞ்சமும் பேசக் கூடாது. சௌசத்தைமுடித்து ஆசமனம்செய்து போகும்போது பேசலாம்; சௌசத்திற்காகஉட்கார்ந்தபோது மண்ணுடன் பாத் திரத்தை முன்வைத்துக்கொண்டு கூடத்தையெடித்து விலாவிற்கும் தொடைக்கும்இடையில் வைத்துக்கொள்ளவேண்டும்; கலந்துபோகா மல் மெதுவாகக் கவனிப்புடனும் மனஉறுதியோடும் சௌசத்தைச் செய்யவேண்டும். சாஸ்திரவிதியைமுன்னிட்டுப் பரிசுத்தமானஜலத் தைக் கையினலெடுத்துக்கொண்டு ஜலத்துளிகள் தெறியாமலும்

தொடையிற்படாமலும் அபானத்தில் கிரமமாக மூன்றுமண்போட வேண்டும். அப்படியே இரண்டுகைகளுக்கும் மூன்றுமண்போட்ட பிறகுதான் ப்ராம்மணன் கையினால் கையைத்தொடலாம். அபானத்தில் ஒன்பதுமண்போடவேண்டுமென்பது சிலபெரியோரின்கட்சி. மண் போடப்படுமானால் அந்தஇடத்தை உடனே சுத்தமாகச் செய்யும். ஆதலால், உள்ளங்கைகளில் அடிக்கடி மண்போடவேண்டும். பின்னிட்டுப் பிருஷ்டங்களைக் கையினால் தொடாமலிருக்கும்படியும் உடையில் ஈரம்பட்டுக்கசங்காமலிருக்கும்படியும் அபானத்தைச் சுத்தமாக்குவதற்கு ஊக்கத்துடன் பலமுறை கவனித்துத் துடைக்கவேண்டும். பிறகு, இடத்தைவிட்டெழுந்து ஒவ்வொரு காலுக்கும் சௌசம் செய்யவேண்டும். இடமுழங்கையிலும் இடமுன்கையிலும் இட்உள்ளங்கையிலும் புறங்கையிலும் மும்மூன்று மண்களாக மொத்தம் பன்னிரண்டுமண்கள் போடவேண்டும். அப்படியே [1]இரண்டுகைகளின் உட்புறங்களிலும் காலுமண்போடவேண்டும். பிறகு, இரண்டுகைகளுக்கும் தனித்தனியே எவ்வேழுமண்கள்போடவேண்டும். அதன்பிறகு, வேறுமிருத்தைஎடுத்து இரண்டுகைகளுக்கும் மற்றொருசுத்தம்செய்யவேண்டும். இரண்டுகைகளுக்கும் இவ்வாறு இம்மகாசௌசம் விதிக்கப்படுகிறது. இதற்கு மாறுகச் செய்யலாகாது. இந்தச்சாஸ்திரவிதி சாசுவதமாயுள்ளது. அதன்பிறகு, மூத்திரசௌசம் சொல்லப்படுகிறது. இதற்குமாறுகச்செய்பவன் பிராயச்சித்தத்திற்குரியவனுகிறான். வஸ்திரத்தில் மலம்பட்டவனுக்கு இந்தச்சௌசம் இரட்டிப்பாகச் சொல்லப்படுகிறது. கால்களையும் தொடைகளையும் கைகளையும் ஸந்தேகம்வராமல் சுத்தம்செய்யவேண்டும். ஜாக்ரதையாகச்செய்யாதவனுக்குச் சந்தேகமுண்டாகும். அவன் எந்தஎந்தவகைகளினால் சந்தேகம் நிவிருத்தியாகுமோ அந்தஅந்தவகைகளைச் செய்யவேண்டும். மழைக்காலத்தில் சேறுள்ளதும் நெருக்கமுள்ளதுமானவீட்டிலிருக்கிறவன் கைகளுக்குமூன்று கால்களுக்குஆறு அபானத்திற்குமூன்றுமண்கள் போடலாம். மூத்திரசௌசத்திலும் கால்களுக்கும் கைகளுக்கும் சௌசம் முன்போலச் செய்யவேண்டும். மூத்திரசௌசத்தில் முதலிற்கைகளையும் பிறகுகால்களையும் சோதிக்கவேண்டும். நைஷ்டிக பிரம்மசாரிக்கு மூத்திரசௌசத்தில் மகாசௌசம் விதிக்கப்படுகிறது. மிருத்தோடு உப்பும் உழமண்ணும்போட்டு எப்போதும் ஆடையைச் சுத்தம்செய்யவேண்டும். மலம்படிவதையும் அதன்

1 இரண்டுகைகளையும் சேர்த்து காலுமுறை தேய்க்கவேண்டும்.

நாற்றத்தையும் நிவ்ருத்திசெய்யும்படி சாஸ்திரம் சொல்லுகிறது. இருகைகளாலும் மிருத்தை மூன்றுதரம் எடித்துப்போட்டு ஸ்நான வஸ்திரத்தைச்சுத்தம்செய்து ஜாக்ரதையுடன் அதை அலசியெடுக்க வேண்டும். ஆபத்தில் நாலு, மூன்று, இரண்டு, அல்லது ஒருமண் போடலாம். காலத்தையும் இடத்தையும் அனுசரித்துத்தான் சௌசம் பெருகுவதும் குறுகுவதும். எக்காலத்திலும் சோம்பாம லும் பக்கம்பாராமலும் அவஸரப்படாமலும் மேற்சொன்னவிதிப்படி கைகால்களைக்கழுவி ஊக்கத்துடன் சௌசம் செய்யவேண்டும். கால் அலம்புவதற்குமுன்னமே கையை மணிக்கட்டிலிருந்தும் கீழும் மேலும் அலம்பினபிறகுதான் கைபடலாம். மனத்திற்கினியவை யாகவும் ஓசையில்லாமலுமிருக்கிறஜலங்களை மூன்றுமுறை ஓசை யில்லாமல் ஆசமனம்செய்யவேண்டும். தெரிந்தவன் இரண்டுவிசை வாயைத்துடைத்துக் கண்மூக்குமுதலானதுவாரங்களைத் தொட வேண்டும். முதல்ஆசமனத்திலுல் ரிக்வேதத்தையும் இரண்டாவது ஆசமனத்திலுல் யஜுர்வேதத்தையும் மூன்றுவது ஆசமனத்திலுல் ஸாமவேதத்தையும் மனிதன் திருப்திசெய்விக்கிறான். முதல்தரம் வாயைத்துடைப்பதலுல் அதர்வணவேதமும் இரண்டாவதுதரம் துடைப்பதலுல் இதிஹாஸபுராணதர்மசாஸ்திரங்களும் தேவதைக ளும் திருப்தியடைகின்றனர்.கையைக் கண்ணில்வைப்பதலுல் சூரிய னையும் மூக்கில்வைப்பதலுல் வாயுவையும் காதில்வைப்பதலுல் திசை களையும் சிரசில்முடிப்பதலுல் பிரம்மதேவரையும் திருப்தியடைவிக் கிறான். ஜலத்தைத் தலைமேல் புரோக்ஷிப்பதலுல் ஆகாயமும் காலில் புரோக்ஷிப்பதிலுல் விஷ்ணுவும் திருப்தியடைகின்றனர். முழங்கால் களுக்குள்கைவைத்துக்கொண்டு கிழக்குமுகமாயாவது வடக்குமுக மாயாவது ஆசமனம்செய்யவேண்டும். போஜனமுதலியயெல்லாவற் றிலும் நித்யமாயுள்ளவிதி இதுதான். சோற்றுப்பருக்கை பல்லிடுக் கில்ஒட்டியிருந்தால் அதனைத்துப்பித் திரும்பவும் ஆசமனம்செய்ய வேண்டும்; சுத்தத்திற்காகப் புரோக்ஷணமும் சொல்லப்பட்டுள்ளது. இந்தச்சௌசவிதியைச் சொன்னேன். சூத்ரன் வீட்டைவிட்டு வெளியில்போகும்போதும் இந்தவிதிதான் சாஸ்திரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. தனக்கு நன்மையைவிரும்புகிறவனும் புகழை விரும்புகிறவனுமான சூத்ரன் எப்போதும்சௌசத்தைவிடாமலும் மனஊக்கத்தோடும் ஸந்யாஸிகளிடம் இருக்கவேண்டும்.

நூற்றிருபத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பாசசரின் உபதேசத் தொடர்ச்சி; சூத்ரன் ஸந்யாஸிகளுக்குப் பணிசெய்யுமுறைமுதலியவை.)

அரசர்களுக்கு விடாமுயற்சியே யாகமென்றும் வைசியர்களுக்குப் பொருளீட்டுவதில் உற்சாகமே யாகமென்றும் சூத்ரர்களுக்குப் பணிவிடையே யாகமென்றும் அந்தணர்களுக்கு ஜபமே யாகமென்றும் கூறப்பட்டுள்ளன. சூத்திரர் பணிவிடையினால் ஜீவிப்பவர். வைசியர் கடையினால் ஜீவிப்பவர். அரசர்கள் பகைவரையடக்குவதனால் ஜீவிப்பவர்கள். பிராம்மணர் வேதம்ஓதலினால் ஜீவிப்பவர். பிராம்மணன் தவத்தினாலும் அரசன் காப்பதுமுதலியவற்றினாலும் வைசியன் விருத்தோம்புவதனாலும் சூத்ரன் பணிவிடையினாலும் புகழ்பெறுகின்றனர். சூத்ரன் மனத்தைக்கட்டி மூன்றுவருணத்தாருக்கும் நித்தியமாகப் பணிவிடைசெய்யவேண்டும்; ஸந்யாஸிகளுக்கு மிகுதியாகச் செய்யவேண்டும். தர்மார்த்தகாமங்களை அனுஷ்டிக்கத் திறமையில்லாதவர்கள் தம்சக்திக்கும் புத்திக்கும் தர்மத்திற்கும் கேள்விக்கும்ஏற்றபடி ஸந்யாஸிகளைப் பணியவேண்டும். ஸந்யாஸிகளின்ஆஸ்ரமத்தில் பணிவிடையை நன்றாகச் செய்யவேண்டும். நான்குஆஸ்ரமங்களிலும் ஸந்யாஸாஸ்ரமம் முதன்மையானதென்று சான்றோர் சாஸ்திரங்களினால் நிச்சயித்துக்கூறுகின்றனர். பெரியோர் வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும்சொன்னவிதிப்படி எதை உபதேசிக்கின்றனரோ அதையே ஒதும்சக்தியில்லாதவன் அங்கீகரிக்கவேண்டும். அதுவே தர்மமென்பதுநிச்சயம். இதற்கு மாறுகச்செய்யும்மனிதன் நன்மையையடையான். ஆதலால், சூத்திரன் தன்நன்மைக்காக எப்போதும் துறவிகளுக்குப் பணிவிடை செய்யவேண்டும். எந்தநன்மையை இந்தஜன்மத்தில் செய்கிறானோ அதன்பலனை இறந்தபின் அனுபவிக்கிறான். எதைச் செய்யவேண்டுமென்றுநினைக்கிறானோ அந்தக்கார்யத்தை வெறுப்பின்றிச் செய்யவேண்டும்;வெறுத்துச்செய்யும்கார்யத்தின்பலனை அடைவதுகடினம். இன்சொற்சொல்லுகிறவனாகவும் கோபத்தைஜயித்தவனாகவும் சோம்பலையும்பகையையும் விட்டவனாகவும் பொறுமையும்நல்லொழுக்கமும்நிரம்பினவனாகவும் சத்தியத்தையும்தர்மத்தையும் விடாதவனாகவும் ஆபத்திலிருப்பவன்போலக் கவலையுடன் ஸந்யாஸிகளின்ஆஸ்ரமத்

மத்தில் பணிவிடைசெய்யவேண்டும். 'இதுதான் என்னுடைய முக்கியமானதர்மம். இதனால், கடக்கக்கூடாதபயங்கரமான இந்த ஸம்ஸாரக்கடலைத் தாண்டுவேன். ஸந்தேகமில்லை. தேகத்தைவிட்ட பிறகு, பயமின்றிச் சிறந்தகதியையடைவேன். எனக்கு இதற்கு மேலானதர்மம் ஒன்றுமில்லை. இதுவே என்றும் அழியாததர்மம்' என்றுமனத்தில்நினைத்து உறுதியானஎண்ணத்துடன் மனச்சோர்வில்லாமல் பணிவிடையென்னும்சிறந்ததர்மத்தை எக்காலத்திலும் சூத்திரன் செய்யவேண்டும். இவ்வுலகத்தில் ஐம்புலன்களையும் மனத்தையும்அடக்கிக் காரியாகாரியங்களையறிந்து சுசுரூஷையை விடாமற்செய்துகொண்டும் மிச்சத்தைப்புசித்துக்கொண்டும் இருக்கவேண்டும். எல்லாக்காரியங்களிலும் செய்யவேண்டினவற்றை முடிந்தனவாகவே காண்பிக்கவேண்டும். ஸந்யாஸிக்குஅன்பளிக்கும்படி காரியத்தை முடிக்கவேண்டும். ஸந்யாஸிக்குத்தகாதகாரியத்தைச் செய்யலாகாது. ஸந்யாஸாச்ரமத்திற்கு விரோதமாயிராததும் தர்மம்ஒன்றுமட்டுமேயுள்ளதுமான காரியத்தைத் தன்நன்மையைக்கருதுகிறவன் சங்கிக்காமல் எப்போதும் செய்யவேண்டும். மனத்தினாலும் செய்கையினாலும் சொல்லினாலும் எப்போதும் ஸந்யாஸிகளை ஸந்தோஷப்படித்தவேண்டும். நித்யமாக அவர்களையனுஸரித்து அவர்கள்நிற்கும்போதுநிற்கவும் செல்லும்போதுபின்செல்லவும் உட்காரும்போதுஉட்காரவும்வேண்டும். தனதுநற்செய்கையினால் அன்பு பெற்றபிறகு, ஏவப்படாமலே அவர்கள்பாதங்களை எப்போதும் பிடிக்கவும் உடம்புதேய்ப்பதுமுதலியவற்றைச்செய்யவும்வேண்டும். ஒவ்வொருநாளும் ஸூர்யோதயமாவதற்குமுன் தன்கடமைகளைச் செய்து அதன்பிறகு விதிப்படிஸ்நானம்செய்து ஜலபாத்திரத்தை வைத்துவிட்டு ஸந்யாஸிகளின்இருப்பிடம்சென்று முறைப்படி வந்தனம்செய்து ஐம்புலன்களையுமடக்கிக்கொண்டு அங்குள்ளபிராம்மணர்முதலானபெரியோரை நமஸ்காரம்செய்தபிறகு ஆசார்யர்முதலானகிருகஸ்தர்களுக்கு வந்தனம்செய்யவேண்டும். பணிவிடையாகியதமதுதர்மத்தைச்செய்பவர்களை வணங்கி ஸுகப்பிரஸ்னம்செய்யவேண்டும். தன்செய்கையைச்செய்து தனக்குமுன் தேர்ந்திருப்பவனுக்கு நமஸ்காரம்செய்யவேண்டும்; மற்றவர்களுக்கு ஒருபோதும்செய்யலாகாது.ஒவ்வொருநாளும் அவர்களுக்குச் சொல்லாமலேயெழுந்து ஆசாரந்தவறாமல்சென்று ஆச்ரமம்விளக்குவதையும் மெழுகுவதையும்செய்து முறைப்படி புஷ்பங்களையெடித்துப் பூஜைக்குக் கொடுக்கவேண்டும். உடனே, ஆச்ரமத்திலிருந்துவெளியிற்போய் ஆச்ரமத்தி

லிருப்பவர்களுடைய வேதாத்யயனத்திற்குத் தடையில்லாமலிருக்கும்படி மற்றக்கர்மங்களைச் செய்யவேண்டும். அத்தியயனத்திற் கிடையூறுசெய்பவன் பாவத்தையடைவான். அவர்கள் ஸந்தோஷமடையும்படி தன்மனத்தை ஊக்கத்துடன் செலுத்தவேண்டும். 'நான் மூன்றுவர்ணங்களுக்கும் பரிசாரகனாகத் தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறேன். தற்செயலாகக்கிடைத்ததைக்கொண்டு ஜீவிப்பவரும் பற்றற்றவரும் ஞானமொன்றையேபார்ப்பவரும் ஆஸ்ரமங்களில் பெரியோர்களுமான ஸந்யாஸிகள்விஷயத்தில் கேட்கவேண்டுமா? நான் மனத்தையடக்கி அவர்களுக்கு விசேஷமாகப் பணிவிடைசெய்யவேண்டும். அவர்களின் அனுக்கிரகத்தினாலும்தவத்தினாலும் நான் வேண்டும் சிறந்தகதியையடைவேன்' என்றுமனத்தில்நிச்சயம்செய்துகொண்டு தனக்குஏற்பட்டவிதிப்படி ஸந்யாஸிக்குப் பணிவிடை செய்வதனால் அவன் உயர்ந்தகதியையடைவான்.

நூற்றுநாற்பத்தேட்டாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(பராசரரின்உபதேசத்தொடர்ச்சி ; சூத்ரன் ஸந்யாஸிகளுக்குப் பணிவிடை செய்யுமுறைமுதலியவை - தொடர்ச்சி.)

சூத்ரன் தான்வேண்டினகதியைப் பணிவிடையினால் அடைவதுபோலத் தானம் உபவாஸமுதலியவற்றினால் அடைவதில்லை. மனிதன் எவ்விதமானஜலத்தினால் சுத்திசெய்கிறானோ அந்தஜலத்தின்மகிமையினால் அதைப்போன்றசுத்தமும் உண்டாகிறது. அம்மாதிரியாகவே சூத்ரன் எப்படிப்பட்டமனிதனைப் பணிகிறானோ அவன்சேர்க்கையினால் அப்படிப்பட்டவனாகச் சீக்கிரத்திலாகிறான். சந்தேகமில்லை. ஆதலால், மனத்தையடக்கிக்கொண்டு ஜலம்கொண்டுவருவது ஸ்நானம்செய்விப்பது உடம்புதேய்ப்பதுமுதலியசுஸ்ரூஷைகளை ஸந்யாஸிகளுக்கு ஜாக்ரதையாகச்செய்யவேண்டும்.வழிநடந்துகஷ்டப்பட்டபோதும் நோயுண்டானபோதும் ஸகாயம்பாருமில்லாதபோதும் ஜாக்ரதையோடு அவர்களுக்கு நித்தியமாகச்சுஸ்ரூஷைசெய்யவேண்டும். தர்ப்பங்களையும் கிருஷ்ணஜினங்களையும் பிக்ஷைப்பாத்திரத்தையும் பரிசோதிக்கவேண்டும். அவர்கள்விருப்பத்தை அனுஸரித்து எல்லாக்காரியங்களையும் முடிக்கவேண்டும். பிராயச்சித்தம்வேண்டாமலிருக்கும்படி எல்லாவற்றையும் நடத்தவேண்டும். நோய்கொண்ட ஸந்யாஸிகளுக்கு வஸ்திரத்தையலம்புவது

ஔஷதம்கொண்டுவருவதுமுதலான எல்லாஅவசியகாரியங்களையும் செய்யவேண்டும். தன்வேலைக்குச் சுகத்திற்காக மற்றொருவன் செய்துவைத்த அரைத்த அரைப்பையும் ஸ்நானப்பொடியையும் காஷாயத்தையும்மற்றக்கருவிகளையும் கொண்டுவரலாகாது. பிக்ஷைக்குப்போகவேண்டும். சிறந்தஞானமுள்ள வைத்தியர்களிடம் போகவேண்டும். பிறகு, மருந்துவாங்குவதற்குப் பொருள்சம்பாதிக்கவேண்டும். எவன் மனத்திலன்புவைத்துக்கொடுப்பானோ அவனிடத்தில் மருந்துவாங்கவேண்டும்; சிரத்தையின்றிக் கொடுக்கப்பட்ட ஔஷதங்களை ஸந்யாஸிகள் உட்கொள்ளலாகாது. சிரத்தையுடன் கொடுக்கப்பட்டதும் சிரத்தையுடன் வாங்கப்பட்டதுமானமருந்தை உட்கொள்வதினால் புண்ணியமுமுண்டாகும்; வியாதியும் விலகும். யதிகளுக்கு அவனுடையசரீரம்விழுமளவும் இவ்வாறுகவே சாஸ்திரப்படிபணிவிடைசெய்யவேண்டும். இவ்விதமானதர்மத்தைவிட்டு அவர்களுக்குப் பணிவிடைசெய்யலாகாது. சீதோஷ்ணம் ஸுகதுக்கமுதலியஇரட்டைகள் இயற்கையினால் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கின்றன. எல்லாப்பொருள்களும் இயற்கையாகவேயிருக்கின்றன; இல்லாமலும் போகின்றன. மூக்குணங்களாலாகிய பொருள்கள் கடலின்அலைகளைப்போன்றவையென்றறியத்தக்கவை. உண்மையைஆராய்ந்துஅறியவல்லபுத்திக்கூர்மையுள்ளவன் இவ்வாறு நடப்பானானால் அவனிடத்தில் தாமரையிலையில் தண்ணீரொட்டாதது போலப் பாவம் ஒட்டாமலிருக்கும்.

நாற்றுநாற்பத்தொன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பராசரரின்உபதேசத்தொடர்ச்சி; மற்றும்பலதர்மஉதலியவை.)

இவ்வாறு சோம்பாமல் ஸந்யாஸிகள்ஸந்தோஷமடையும்படி எல்லாப்பணிவிடைகளாலும் உபசரிக்கமுயலவேண்டும். ஸந்யாஸியினிடத்தில் அபசாரப்படலாகாது. அவனை அவமதிக்கலாகாது; மறுத்துச்சொல்லலாகாது. கோபித்தால் நல்லவார்த்தை சொல்லவேண்டும். நல்லதையே பேசவேண்டும். கோபித்தஸந்யாஸியிடம் ஒன்றும்பேசாமல் மௌனமாக ஸந்தோஷத்துடன் காரியத்தைச் செய்யவேண்டும். ஸந்யாஸிக்காகப் பிறர்சொத்துக்களை வாங்கலாகாது. கேளாமல் ஒன்றையும் எடுத்துக்கொள்ளலாகாது. கிடைத்தாலும் கிடைக்காமலிருந்தாலும் ஜீவித்துக்கொண்டு ஸந்தோஷமாக

இருக்கவேண்டும். கோபிக்கிறவனிடத்திலும் கல்வியைப்பற்றிப் பகைசெய்கிறவனிடத்திலும் யாசிக்கலாகாது. தாவரங்களும் ஜங்கமங்களுமாகிய எல்லாப்பிராணிகளிடத்தும் தயைசெய்யவேண்டும். தன்னிடத்திற்போல அயலாரிடத்திலும் ஸமத்ருஷ்டியை வைக்கவேண்டும். எல்லாப்பிராணிகளும் தானுகவும் தான் மற்றெல்லாப் பிராணிகளுடாகவும் பார்த்துத்நிரிபவன் பிரம்மப்பிராப்திக்கு உரியவனுவான். ஹிம்ஸையுள்ளதானுலும் ஹிம்ஸையிலலாததானுலும் தனக்காக ஒன்றையும் செய்துகொள்ளலாகாது. எந்தக்கார்யத்தில் மற்றொருவன் நியதமாயிருப்பானே அந்தக்கார்யத்தில் இடையூறு செய்யலாகாது. இவ்வாறு பிறரையடித்திருப்பவன் குற்றங்களிலிருந்து விடுபடுவான். புத்திக்குறைவானவன் தன்னிடத்திலுள்ள குற்றத்தில் தானே ஸம்பந்தப்படுகிறான். கர்ப்பப்பையிற்பிறந்தவை, முட்டைகளிற்பிறந்தவை, பூமியிலிருந்துமுளைத்தவை, வெப்பத்திலுண்டானவைஆகிய இந்நான்குபிராணிகளும் கொல்லப்படக்கூடாதவையென்றே அறிஞரால் கூறப்பட்டுள்ளன. தெரிந்தவர்களுக்கு மனத்தெளிவிற்காகத்தான் பிராயச்சித்தம் விதிக்கப்படுகிறது. ஹிம்ஸையும் மற்றக்குற்றமும் எப்படிச்செய்யப்பட்டனவோ அதற்குத் தக்கபடியே பாவத்தையுண்டாக்கும். குருவின்உபதேசப்படி அவர் கட்டளையைநடத்தும் சிஷ்யனுக்கு மற்ற என்னதீங்குசெய்தாலும் அது அப்படியே பாவத்தையுண்டாக்கும். லோபமும் அதனுலுண்டாகும்ஹிம்ஸையும் நன்மைஉண்டாக்குவதில்லை. இந்தச்சாஸ்திரஞானம் உலகத்திற்குக்காரணமானபிரம்மதேவரால உண்டாக்கப்பட்டது. புத்திசாலியானசூத்திரன் இதை இவ்வாறறிந்தாலும் காரியம் செய்தவர்களின்பலனையடைவான். பணிவிடைசெய்பவன்அடைவது சொல்லவும்வேண்டுமோ? சூத்திரன்எவனும் பதிதனுவதும்இல்லை. அவன் பிராயச்சித்தமுதலியஸம்ஸ்காரங்களுக்கு உரியவனுமலலன். அவனுக்கு ஒருதர்மத்தில் விதியும் மற்றொருதர்மததில் நிஷேதமுமில்லை. எல்லாவருணங்களுக்கும்நன்மைசெய்வதற்காக மனுவினுல் தர்மம் கூறப்பட்டது. வேலைசெய்யும்சூத்திரனுக்குப் பெண்சம்பந்தமான அபவாதம் வந்திருக்குமாயின் அவனுக்கு ஒருவருஷம் மேற்கூரைமறைவில்லாதஇடத்திற்படுப்பது பிராயச்சித்தமாக விதிக்கப்பட்டிருக்கிறது. அதனுல், அவனுக்குப் பாவம் தீர்ந்துவிடும். அதன்பிறகு, திரும்பவும் வேலைக்குவரலாம். தன்வர்ணத்துப்பெண் விஷயத்தில் இது பிராயச்சித்தம். தாழ்ந்தஜாதிப்பெண்விஷயத்தில் பாதிபோதும். வைசியப்பெண்விஷயத்தில் மூன்றுவருஷங்களும்

க்ஷத்திரியப்பெண்விஷயத்தில் ஆறுவருஷங்களும் பிராம்மணப்பெண் ணுடன்சேர்ந்தால் பன்னிரண்டுவருஷங்களும் இந்தப்பிராயச்சித்தம் விதிக்கப்பட்டது. செத்தைநெருப்பில் அவனேஎரித்தால் அந்த நிமிஷத்திலேயே சுத்தனாகிவிடுவான்; குறியைச்சேதிப்பதனாலும் உடனே சுத்தியடைவான். எலும்பில்லாத பிராணியையுயிர்போக்கி னால் ஒருநாளுபவாஸமிருந்து பன்னிரண்டு பிராணயாமங்கள்செய்து மூன்றுதரம்ஜலத்தில் ஸ்நானம்செய்தபிறகு அந்தப்பாவத்திலிருந்து விடுபடுவான். எலும்புள்ளபிராணிவிஷயத்தில் இந்தப்பிராயச்சித்தம் இரட்டிக்கப்படுகிறது. இந்தப்பிராயச்சித்தத்தினாலேயே மரமுதலிய தாவரங்களுக்குத் தேகத்தினாலும் கால்களாலும் கைகளாலும் செய்யப்படும்தீங்கிலிருந்தும் விடப்படுவான். குற்றம்செய்தவனை அழிப்பவனுக்கும் எல்லாவர்ணங்களிலும்சேர்ந்திருப்பவனுக்கும் இந் தப்பிராயச்சித்தத்தையே எண்மடங்காக அறியவேண்டும். தேகத் தினற்செய்தபாவத்திற்கு நாலுபாகமும் வாக்கினற்செய்ததற்கு இரண்டுபாகமும் மனத்தினற்செய்ததற்கு ஒருபாகமும் பிராயச்சித் தம் கூறப்பட்டது. ஆதலால், இவற்றையெல்லாமறிந்து பாவத்தைச் செய்யலாகாது. எல்லாப்பிராணிகளின்நன்மைக்காகவும் நற்காரியங் களையே செய்யவேண்டும். இவ்வாறு, மனவுறுதியோடு சிறந்தஸாதுக் களிடம் அவர்களையே கதியாகநினைத்து அவர்களின் அனுஷ்டானங் களையநுஸரித்து அவர்களிடம்அன்புவைத்துஅவர்களைவிடாமல்பணி விடைசெய்யவேண்டும். மரணத்திற்கும்உயிர்வாழ்க்கைக்கும்ஆசைப் படாமல் வேலைக்காரன் வேதனத்தை எதிர்பார்ப்பதுபோலக் காலத் தையே எதிர்பார்த்திருக்கவேண்டும். அடக்கமும் மனஒடுக்கமு முள்ளவனாக இப்படிநடப்பவன் புண்ணியபாவங்களின்நிவருத்தியை விரைவில் அடைவான்.

நாற்றைம்பதாவது அத்யாயம்.

தா ன த ர் ம ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(பராசரரின்உபதேசத்தொடர்ச்சி ; மரணத்தையுன்னரே அறியும் குறிகளும், ஸுத்தான்வாவரமேற்பிறப்படைவது முதலியவையும்.)

பணிவிடையில் ஊக்கமுடையவன் தர்மித்தங்களையும் மூன்றுவருஷங்களிலும் இரண்டுவருஷங்களிலும் ஒருவருஷத்திலும் ஆறுமாதத்திலும் ஒருமாதத்திலும் ஏழுதினங்களிலும்உண்டாகும் அவற்றின்பிரயோஜனங்களெல்லாவற்றையும்அவற்றின் அடையாளங்

களையும் கண்டறியவேண்டும். பொன்மயமானபுருஷன் தெற்குநோக்கித் தனக்குவடபுறத்தில் நிற்கக்கண்டால் மூன்றுவருஷங்களில் மரணம்வரும். பரிசுத்தமானமண்டலத்தோடுகூடிய ஆதித்யன் கிரணங்களில்லாமலிருக்கக் காண்பவனுக்கு இரண்டுவருஷங்களில் மரணத்தைச் சொல்லவேண்டும். துவாரங்களுள்ளதாகத் தன்னிழலே நிலவில்லாதும் தெரிந்தவன் ஒருவருஷத்தில் மரணத்தையறிந்துகொள்ளவேண்டும். புத்திசாலியானவன் தன்னிழலைத் தலையற்றதாகக்காணும்போது ஆறுமாதங்களில் தன்மரணத்தையறியவேண்டும். காதுகளைத் தன்கைகளிலால்பொத்திக்கொண்டு சத்தத்தைக்கேளாமலிருந்தால் தெரிந்தவன் ஒருமாதத்தில் தன்மரணத்தையறியவேண்டும். மனிதன் தேவாலயத்திலிருக்கும்பொழுது பிணநாற்றத்தையாவது மற்றஎந்தத்துர்க்கந்தத்தையாவது உணர்ந்தால் ஏழுதினங்களில் இறப்பான். காதும்மூக்கும்தளர்வதும் பற்களிலும்பார்வையிலும் ஒளிமழுங்கிப்போவதும் மனத்தில் முன்பின்தெரியாமல்போவதும் உடனே மரணத்தையறிவிக்கும். இப்படிப்பட்ட இந்தத்துர்நிமித்தங்களில்ஏதேனும் ஒன்றைக்காண்பானுயின் அந்தத்துர்நிமித்தத்திற்குக் குறிப்பிட்டகாலம்வரையில் எதிர்பார்க்கவேண்டாம். குறித்தகாலம் ஸமீபமாயிருக்கும்போது பரிசுத்தமான மணற்குன்றுக்குச்சென்று லோகநாதரான பகவானைநினைத்து அவ்விடத்தில் உயிரைவிடவேண்டும். அவன், உடனே, வேறுதேகமெடுத்துக் கந்தர்வலோகத்தை அடைவான். அவ்விடத்தில் மிகப்பெரியமகிமையுடன் இருநூறு கோடிவருஷங்கள் வஸிப்பான். சித்ரஸேனன்முதலான கந்தர்வர்களால் பூஜிக்கப்பெற்று அவர்களுடன்கூட நீலக்கல்நிறமும் வைடூரியக்கல்நிறமுமுள்ள விமானத்திலால் ஆகாயத்தைப்பிரகாசிக்கச்செய்துகொண்டு மனத்தில் ஊக்கமுள்ளவனுப் அப்ஸரஸுகளின்கூட்டங்களுடன் விரும்பினஸுகங்களையனுபவித்து ஸஞ்சரித்துக்கொண்டு ஆங்காங்கு பூஜிக்கப்படுவான்; தேவதைக்கொப்பானதேகத்தையடைந்து தேவக்கூட்டங்களோடுகூடவே எப்போதும் மகிழ்ந்திருப்பான். களங்கமற்றஒளியோடுகூடியஅவன் புண்ணியம்குறைந்தபோது ஒருகொடியில் விழுந்தவுடன் கோதனங்களும் திரவியமும் மிகுதியான வைசியனுடையகுலத்தில்ஜனித்து அங்கும் தேவபூஜையிலால்பரிசுத்தனுகி [1]ஜாகதமென்னும்சந்தஸுள்ளமந்திரத்திலால உபநயனம்செய்யப்பெற்றுப் பட்டுடுத்து இருபிறப்பாளனுகி வேதங்களையும் அவற்றின்அர்த்தங்களையும்ஓதிக் குருசுஸ்ரூஷைசெய்து கோபத்

1 ஓரடி பன்னிரண்டு அக்ஷரங்களுள்ளமந்திரம்.

தை வென்றவனும் சிறந்ததவமுள்ளவனுமான பிரம்மசாரியாகிறான். வேதம் ஓதினபின் சாஸ்திரப்படி குருதக்ஷிணைகொடுத்து மனைவியை மணந்து உத்தமமானகிருகஸ்தாஸ்ரமதர்மத்தை அனுஷ்டிக்கிறான். தானங்களையும் மிகுதியானதக்ஷிணைகளோடுகூடின யாகங்களையும் செய்வான். சாஸ்திரப்பிரகாரம் அக்நிஹோத்ரத்தையும் ஹோமங்களையும்செய்துகொண்டும் மெல்ல நடந்துகொண்டும் புலன்களை யடக்கியும் தினந்தோறும் தர்மத்தைச்சேர்ப்பான். காலம்முடிந்த போது அவன் மரணமடைந்து யாகபாத்திரங்களைத்தலையணையாக வைத்து அக்நிஹோத்ராக்னியினால் தகனஸம்ஸ்காரம் செய்யப்பெற் றுத் தேகத்தைவிட்டு ஸப்தமருத்துக்களோடு சேர்வான். மருத் துக்களுடன்சேர்ந்து அவர்களுக்குச் சமமானமகிமையுள்ளவனாகிச் சிறந்தஒளிபெற்றுத் தூயஆடையுடுத்துச் செம்பொன்களாயணிந்து கந்தர்வர்கள் அப்ஸரஸுகளின்கூட்டங்களுடன் இளம்சூரியனுக் கொப்பானநிறமுள்ளதாகவிளங்கும்விமானத்தினால் அவ்வுலகங்களில் ஸுகமாக ஸஞ்சரிப்பான். விரும்பினஸுகங்களையடைந்துகொண்டு கந்தர்வலோகத்திலிருந்ததற்கு இரண்டத்தனைகாலம் அவ்வுலகத்தில் வஸிப்பான். அந்தக்காலமானபின், அவ்விடத்திலிருந்துவிழுந்து பூலோகத்திற்குத் திரும்பிவருவான். திவ்யஸுகங்களைவிட்டுவந்த அவன் தனக்கின்பமானவிஷயங்களில் திருப்தியடையாமையினால் யானைகளும் குதிரைகளும் தேர்களும்நிரம்பின ராஜவம்சத்திற்பிறப் பான். ராஜலக்ஷ்மியையடைந்து [1]குபேரனைப்போல ஐசுவரியமுற் றிருப்பான். அந்தராஜகுலத்திற்குரிய ஜாதகர்மமுதலாகச் சௌள உபநயனஸம்ஸ்காரங்களையும் விதிப்படிசெய்யப்பெற்று [2]த்ரைஷ்டுப மென்னும்சந்தஸுள்ளமந்திரத்தினால இருபிறப்பாளனாகச் செய்யப் படுவான். எல்லாவேதங்களையும் முக்கியமாகத் தனுர்வேதத்தையும் ஓதிக் குருவினிடம்அனுமதிபெற்றுத் திரும்பிவந்தபிறகு தன்தந்தை யினால் இளவரசுபட்டாபிஷேகம் செய்யபபெறுவான். பிறகு, விவா கம்செய்துகொண்டு தர்மத்துடன் ராஜ்யத்தையடைந்து ஐசுவரிய முள்ளவனாகி ஆறிலொருபாகம்வரிவாங்கிக்கொண்டு குடிகளைச் செம் மையாகப் பரிபாலனம்செய்வான்.வீலிலேபெற்றதக்ஷிணைகளுள்ள அநேக யாகங்களை நன்முகச்செய்து இந்திரனுக்கொப்பான கீர்த்தியையும் ஐசுவரியத்தையும் அடைந்துபூமியையெல்லாம் ராஜ்யமாகஆளுவான்.

---

1 'தர்மபதி' என்பது, 'தநபதி' என்று பாடம்கொள்ளப்பட்டது. உள்ளபாடத்தின்படி, 'தர்மதேவதைபோல' என்றுகொள்ளவேண்டும்.

2 ஓர்அடி பதினோர்அக்ஷரங்களுள்ளமந்திரம்.

எக்காலமும் தன்தர்மத்தைவிடாமல் புத்திரர்களையும் பௌத்திரர்களையும் நிரம்பப்பெற்றபின் காலத்தின்வசத்திலகப்பட்டு யுத்தத்தில் உயிரைவிடுவான். அப்போது, தேவராஜனுடையஇருப்பிடமாகிய இந்திரலோகத்தையடைந்து தேவலோகத்தாராலும் புண்ணியங்களைச் செய்து தேவத்தன்மைபெற்றராஜரிஷிகளாலும் பூஜிக்கப்பெற்றுத் தேவேந்திரன்போலவே ஸுகமாக ஸஞ்சரிப்பான். தேவலோகத்திலுள்ளவர்திகளிலுல் துதிக்கப்பெற்றுப் பலவகைவாத்தியங்களோடு காலமறிவிக்கப்படுவான். சிறந்தபொன்னிலுல்பிரகாசிப்பதும் சிறந்த அப்ஸரஸுகள்நிரம்பினதும் தேவர்களாலும்கந்தர்வர்களாலும் அனுஸரிக்கப்பட்டதுமான விமானத்திலேறி இந்திராணியுடன்இந்திரன் ஸஞ்சரிப்பதுபோலவே ஸுகமாக ஸஞ்சரிப்பான். அவன் அவ்வுலகத்தில் அறுபதுகோடிவருஷகாலம் பெரும்செல்வத்துடன் எல்லாலோகங்களுக்கும் போய்வந்துகொண்டும் எல்லாரையும் ஸந்தோஷிக்கச்செய்துகொண்டும் மகிழ்ந்திருப்பான். [1] அதன்பிறகு, புண்ணியம் குறைந்ததலுல் அங்கிருந்து பூமியில்விடப்பட்டு வேதங்களிலும் வேதாங்கங்களிலும் கரைகண்டபிராம்மணகுலத்தில் ஜனிப்பான்.

நூற்றைம்பத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பாசாரரின்உபதேசத்தொடர்ச்சி; பிராம்மணப்பிறப்பையடைந்தவன் ஸ்வர்க்கமோக்ஷங்களுக்குத்தப்போவது முதலியன.)

பிறகு, சாஸ்திரப்படி ஸம்ஸ்காரங்கள்செய்யப்பெற்று வேதத்திற்குரியவனுகிறான். அவனுக்கு ப்ராம்மணர்களால் தங்களுக்குரியபடி சௌளமும் உபநயனமும் செய்யப்படுகின்றன. அவன் எட்டாவதுபிராயத்தில் நியமத்தோடு உபநயனத்தாலும் பிரம்மசாரி விரதத்திலுலும் சாஸ்திரோக்தமான கிரியைகளாலும் ப்ராம்மணனுகச் செய்யப்படுகிறான். அவன் [2]காயத்ரமென்னும் சந்தஸுள்ளமந்திரத்திலுல் உபநயன ஸம்ஸ்காரம்செய்யப்பெற்று வ்ரதமனுஷ்டித்துப் பரிசுத்தாத்மாவாகி நியமம்தவறுமல் வேதாத்யயனம்செய்து புத்திக்கூர்மையிலுல் வேதங்களையும் வேதாங்கங்களையும் சீக்கிரத்தில் கிரகிக்கிறான். அந்தத்தர்மாத்மாவானவன் ஸமாவர்த்தனமென்னும்பிரம்ம

[1] ஒருசொல்லிடப்பட்டது. [2] ஓரடி ஆறு அக்ஷரங்களுள்ளமந்திரம்.

சாரிவிரதத்தைமுடித்து விவாகம்செய்துகொண்டு யாகம்செய்வித்தலை யும் ஒதுவித்தலையும் செய்து நல்லகர்மங்களிலிருந்து அக்நிஹோத்தி ரத்தையும் தேவதைகள் அதிதிகளின்பூஜையையும் நித்யமும்செய்து கொண்டு பலவகையாகங்களையும் ஜபயஜ்ஞங்களையும் செய்வான். நியாயமாகக்கிடைக்கும் தனத்தைக்கருதி நல்லொழுக்கமுள்ளவனு கத் தவமேதனமாகக்கொண்டு எல்லாப்பிராணிகளுக்கும் அனுகூல னுகவும் எல்லாச்சாஸ்திரங்களிலும் ஸமர்த்தனுகவும் தன்மனைவியி னிடம்மனத்திருப்தியடைந்து ருதுகாலத்தில்மட்டும் சேருகிறவனுக வும் ஜிதேந்திரியனுகவும் பிறரைத்தூஷிக்காதவனுகவும் எப்போதும் ஸத்யத்தையே நோன்பாகக்கொண்டவனுகவும் இருப்பான். அவன் பிராயமுதிர்ந்தபின் மரணமடைந்து சாஸ்திரப்படி அக்நிஹோத்ராக்நி யினல் ஸரியாக ஸம்ஸ்காரம்செய்யப்பெற்றவனுய்த் தேகத்தைவிட்ட பின் சந்திரலோகத்தையடைவான். சந்தேகமில்லை. அங்கே ஸோம ப்ரபர், அக்நிஷ்வாத்தர், பாஸ்வரர், பர்ஹிஷதர், ஆங்கிரஸர், விஸ்வே தேவர் என்னும் தேவர்களாலும் பிரம்மரிஷிகளாலும் ஒப்பற்ற தேவரிஷிகளாலும் அப்ஸரஸுகளின் கூட்டங்களாலும் ஸாத்யர்களா லும் ஸித்தர்களாலும் எப்போதும் பூஜிக்கப்பெற்று ஸந்தோஷமா யிருக்கிறன். ஸூர்யனைப்போன்றதும் மனேவேகமுள்ளதும் தேவர் களும் கந்தர்வர்களும்கிரம்பியிருப்பதும் பொன்மயமுமான தேவவிமா னத்திலேறுகிறன். விமானத்திலிருக்குமவனை அழகியஉருவமுள்ள வர்களும் மனத்திற்குஇனியவர்களும் பசும்பொன்னணிந்தவர்களு மான சந்திரகன்னிகைகள் மகிழ்ச்சியுடன் மகிழ்விக்கின்றனர்.அவன் அவ்வுலகத்தில் தேவர்களோடும் ரிஷிகளோடும் சந்தோஷமடைந்து ஒளிவிளங்குகின்றவனுகி, எல்லாலோகங்களிலும் மனேவேகமாகத் திரிந்துகொண்டு மகிழ்ந்திருக்கிறன். உயர்ந்தஸ்தானத்திலிருப்ப வரும் அளவற்றபெருமையுள்ளவரும் உலகங்களை ஆக்குகிறவரும் அழிக்கிறவருமான பிரம்மதேவர்இருக்கும் காமதுகிளன்னும்ஸபைக் கும் நித்யமாகப்போய் எல்லாலோகங்களுக்கும் ஈச்வரரும் ரிஷியு மாகியபிரம்மதேவரை நமஸ்கரித்துவருகிறன். உலகத்தில் சிருஷ்டி பிரளயமுதலியமாறுதல்களெல்லாம் உண்டாகின்றஇடமாகிய அந்தப் பிரம்மலோகத்தில் அந்தப்பிராம்மணேத்தமன் இரண்டாயிரம்கோடி வருஷகாலம் வஸிக்கிறன். அந்தக்காலமானபிறகு, அவ்விடத்திலிரு ந்து திரும்புகிறன். பிறகு, ஜாதிகர்மங்களெல்லாவற்றையும் சிருஷ் டியில்ஜனனமரணங்களையும்கண்டு இவையெல்லாம்அந்தியமென்றறி ந்து எங்கேபோனுல் திரும்புவதில்லையோ, எங்கேபோனுல் இறப்பும்

பிறப்பும்இல்லையோ நித்யமும் மாறுதலும் துயரமற்றதும் எப்போதும் புனர்ஜன்மமும் பயமுமற்றதுமான அந்த மேற்பதத்தைஅடைய விரும்புகிறான். 'பலமுறைபிறந்து கர்ப்பவாஸகஷ்டங்களும் ரோகங்களும் பலவகைத் தேககஷ்டங்களும் சீதோஷ்ணம் ஸுகதுக்கமுதலிய இரட்டைகள்பலவும் பொறுமையினாலும் பகையினாலும்செய்யப்பட்ட துன்பங்கள்பலவும் அந்தஅந்த ஜன்மங்களிலும் அனுபவிக்கப்பட்டன. ஒரிடத்திலும் மாறுதலில்லையில்லை' என்று நிச்சயம்செய்து வீடென்னும்சிறையிலிருந்துவிடுபட்டுப் பார்யையென்னும்விலங்கையும் ஸந்ததியின்உற்பத்தியையும்அறுத்து யதிதர்மத்தையடைந்து குருபணிவிடையைவிடாமலிருந்து சீக்கிரத்தில் மோக்ஷத்தையடைவான். அந்தப்ராம்மணன், யோகசாஸ்திரம் ஸாங்கியசாஸ்திரம் இவற்றின் உண்மைப்பொருளையறிந்து விதிப்படிநடந்து குருவினுல்விடைகொடுக்கப்பெற்றுப் புண்ணியதீர்த்தங்களுக்குச்சென்று நதிகளின் மணல்களிலும் குடியில்லாதவீடுகளிலும் காட்டுமரங்களிலும் குகைகளிலும் தேவாலயத்தோட்டங்களிலும் தங்கிக் காடுகளில் நித்யமாகத் திரிந்து ஒரிரவு இரண்டுஇரவுகளுக்குமேல் எங்கும்தங்கமாட்டான். ஸந்யாஸிப்ராம்மணன் உதிர்ந்தசருகுகளைப்புசித்துக்கொண்டாவது காட்டிலேயே திரிவான்; தன்ஸுகத்திற்காக ஒன்றும்செய்யான்; யாத்திரைமட்டும் தொடர்ச்சியாகச்செய்வான்; நியாயப்படி கிடைத்ததைஉண்பான்; தன்விருப்பத்தின்படி ஒன்றையும்புசியான்; சுகத்தடியளவுதூரம் கண்பார்வையுள்ளவனுயிருப்பான்; ஒருகுரோசத்திற்குமேல் வழிநடவான்; அவனுக்கு மானமும் அவமானமும் ஒன்றே; ஓட்டாஞ்சில்லிக்கும் கல்லுக்கும் பொன்னுக்கும் வேற்றுமையில்லை. எல்லாப்பிராணிகளுக்கும் அபயத்தைச்செய்வான்; அபயத்தைத் (தன்கடமைக்காகக் கொடுப்பவன்போல) தக்ஷிணையாகக் கொடுப்பான்; ஸுகதுக்கங்களற்றவன்; நமஸ்காரத்தைவேண்டாதவன்; ஸுகத்திற்குஸாதனங்களைச் சேர்க்காதவன்; 'நான், எனது' என்னும் எண்ணமில்லாதவன்; எந்தப்பிராணிகளையும் அடித்திராதவன்; ஸாராஸாரவிவேகமுள்ளவன்; ஸத்யத்தை எப்போதும் கைவிடாதவன்; மேலுலகத்திலும் கீழுலகத்திலும் இவ்வுலகத்திலும் ஒன்றையும் விரும்பாதவன். இவ்வாறு சாஸ்திரப்படி யதிதர்மத்தில் ஸந்தோஷமாயிருந்து காலம்சென்றபிறகு, பழுத்தபழத்தைப்போலத் தன்தேகத்தைவிட்டுவிட்டு நித்தியமும் குற்றமற்றதும் ஆதியந்தமில்லாததும் குணங்களாலழகியதும் உயிரில்லாததும் சொல்லுக்கெட்டாததும் வித்தில்லாததும் இந்திரியங்களில்லாததும் வியாபித்திருப்

பதும் வெல்லவும் அழிக்கவும் உடைக்கவும் கூடாததும் அறிவுக்கெட்டாததும் நிர்க்குணமானதும் பிரகிருதிக்காதாரமானதும் விகாரங்கள் ஒன்றுமில்லாததும் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமுமாகிய மூக்காலங்களுக்கும் அதிபதியும் எவற்றாலும் அறியப்படாததும் புருஷனுமாகியபரப்பிரம்மத்தைத் தன்னிலமாக அடைந்துமுடிவற்றவனுவான்.

நூற்றைம்பத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பராசரரின் உபதேசத்தொடர்ச்சி ; மோக்ஷந்திற்கு உரியதர்மங்கள் முதலியன.)

இவ்வாறு, பாவங்களையெரித்து உலகத்திலிருக்கும் அந்தஸ்தாவியானவன் பக்ஷி கூட்டைவிடுவதுபோலத் தேகத்தைவிட்டு மோக்ஷத்தையடைவான். சூத்திரன் இந்தஸன்மார்க்கத்தைப் படிப்பதனுலேயே தான் நல்லகதியையடைவான். இடத்திலிருந்துஇடம் போய்(மேலும்மேலும்நிலைமையுயர்ந்து) முடிவில்பரப்பிரம்மத்தினது அழிவில்லாதஸ்தானத்தையடைவான். சோர்வில்லாமல்மண்வெட்டியினுல்வெட்டுகிறவன் கட்டாந்தரையிலும் ஜலத்தையடைவதுபோல அவன் தன்தர்மத்தினுல் விரும்பின ஸ்தானத்தையடைகிறான். அந்தக்கதியானது ஆதியும்அந்தமுமில்லாததென்று யாவராலும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், சூத்திரர்கள் தெரிந்தவர்களான ரிஷிகள் சொன்னபடி வெறுப்பின்றிச் சிரத்தையுடன்கூடியவரையில் நினந்தோறும் நடக்கவேண்டும். ஒருவன் நலலதோ கெட்டதோ எதைச் செய்கிறானே அதைத்தான் அனுபவிக்கிறான். தான்செய்யாதகருமம் அனுபவிக்கப்படுவதுமிலலை ; செய்தது பலனில்லாமல் கெடுவதுமில்லை.ஆதலால்,நல்லநடக்கையுள்ளவன் அதன்நல்லபலனையேஅடைகிறான். கெட்டசெய்கையுள்ளவன் அதன்படி கெட்டபலனையடைகிறான். தன்னுடையநன்மையைவிரும்புகிறவன் நற்செய்கைகளையே எடுத்துக்கொள்ளவேண்டும். யதிகளுக்குப் பணிவிடைசெய்வதைத் தவிர வேறெவற்றினுலும் சூத்திரர்கள் மேன்மையை அடையமுடியாதென்னும்நிச்சயம் பெரியோர்களால் அறிவிக்கப்படுகின்றது. ஆதலால், சாஸ்திரங்களையறிந்து மிக்க ஜிதேந்திரியனுயிருத்தல்வேண்டும். சாஸ்திரஞானத்தினுலேதான் துயரமற்றபதத்தைப் பெறலாம். அந்தப் பதம்தான் சிறந்ததென்றறியப்பட்டது. அதைத்தான் ஸாதுக்கள் தேடுகின்றனர். இடைவிடாத்துயரத்தைவிட்டு நித்தியத்வம்

பெறுவது அங்கேதான். ஸ்திரீகளும் வைசியர்களும் சூத்திரர்களும் இன்னும் கீழ்ப்பிறப்புள்ளவர்களும் இந்தத்தர்மத்தைக் கைப்பற்றித் தான் மேற்கதியை அடையவேண்டும். வித்வானைபிராம்மணனும் மிகுதியானகேள்வியுள்ள க்ஷத்திரியனும்அடைவது சொல்லவேண்டுமோ? பாவம்தீராதவனுக்கு ஞானமுண்டாவதில்லை. செய்யவேண்டியகடமைகளை முடித்தானபிறகுதான் ஞானமென்னும்லாபம் கிடைக்கும். சாஸ்திரஞானத்தையும் ஆத்மவிவேகத்தையும் அடைந்தபிறகும் வெறுக்காமல் முன்போலவும் அதற்கதிகமாகவும் பக்தியுடன் குருக்களிடத்தில் வஸிக்கவேண்டும். அவ்வாறின்றி, குருக்களை அலக்ஷியமாகநினைத்தாலும் அவர்களிடத்தில் அவ்வாறுநடந்தாலும் அவனுக்கற்றது பயனற்றதாகும்; ஞானமும் அஜ்ஞானமாகிவிடும். அவன்நரகத்திற்குக்காரணமான கெட்டவழியை அடைவான்.ஸந்தேகமில்லை. அவனதுபுண்ணியம் அழியும்; அறிவு மாறுபடும். முதலில் பாக்கியத்தைக்காணுதமனிதன் பாக்கியத்தைக்கண்டவுடன் கர்வத்தினால் அவிவேகத்தையடைவதுபோல அவன் தத்வஜ்ஞானத்தையறிந்தும் கர்வத்தினால் விவேகக்குறைவைஅடைகிறான். ஆதலால், ஞானத்தைப்பற்றிக் கர்வப்படலாகாது. அடக்கமன்றே அறிவின்பயன்? அடங்குவதற்காக எப்போதும் முயலவேண்டும். எப்போதும் அடக்கமும் இந்திரியஜயமும் பொறுமையுமுடையவனாகி வெறுப்பில்லாமல் குருஶுஶ்ரூஷையை விடாமல்நடத்தவேண்டும். மனவடக்கியினால் [1] குறியையும் வயிற்றையும் காப்பாற்றவேண்டும். [2]கண்ணினால் கைகளையும் கால்களையும் காப்பாற்றவேண்டும். விஷயங்களை மனத்தினால் ஒழிக்கவேண்டும். மனத்தை விவேகத்தில் வைக்கவேண்டும். பிறகு, மறைவும் பரிசுத்தமுமானஇடத்திற்குச்சென்று தன்கண்ணால் ஆசனத்தைப்பார்த்து அதைக்கிரகித்துக்கொண்டு விதிப்படி அனுஷ்டானங்களைச்செய்து அதில்ஒருநிலையாக உட்காரவேண்டும். அப்போது, ஞானயோகத்திலிருந்து தன்மனத்திலிருக்கும்பகவானைக்காணவேண்டும். புகையில்லாத அனலைப்போலும் ஆகாயத்தில் கிரணங்கள் நிரம்பினசூரியனைப்போலும் மின்னலைப்போலும் ஜ்வலிக்கும்உருவத்தோடு உள்ளத்திலிருக்கும் நித்தியரும் குற்றமற்றவருமான ஈஶ்வரரைப் பார்க்கவேண்டும். யோகமில்லாதவன் தன்தேகத்தினுள்ளிருக்கும் மஹேஶ்வரரைக்காணமுடியாது. யோகமுள்ளவன் தன்அறிவினால் ஹ்ருதயகமலத்தில் மனத்தைவைத்து ஈஶ்வரரைப் பார்க்கிறான்.இவ்

[1] காமத்திலும் போஜனத்திலும் நியமம்வேண்டும்.

[2] சுத்தமாகத் தெரிந்தபிறகே கைகால் வைக்கவேண்டும்.

வாறு மனத்தைநிறுத்தமுடியாமற்போனால் சாஸ்திரவிசாரணையினாலும் கர்மயோகத்தினாலும் ஈஸ்வரரை ஆராதிக்கவேண்டும். ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, பூதங்கள் ஐந்து, மனம் சேர்ந்து பதினாறு. தன்மாத்திரைகள் ஐந்து, மகத்து அகங்காரம் இரண்டு, எட்டாவது அவ்யக்தமென்னும் மூலப்ரக்ருதி இவ்வெட்டும் ப்ரக்ருதியென்று பெயருள்ளவை. இவ்வுலகத்திலிருப்பவன் இப்படி தத்வங்களில்புத்தியைச்செலுத்தி எட்டுப்பிரக்ருதிகளையும் பதினாறு விகாரங்களையும் அறியவேண்டும். இதனால், தேகம்விட்டபின் ஸம்ஸாரத்தைத் தாண்டினவனாவான். இல்லாவிடில்இல்லை. தத்வஞானத்தில் எண்ணமுள்ளவன் மனஒழிவுடன்தன்னைச்சுத்தம்செய்துகொள்வதற்கும் நன்மையையடைவதற்கும் இந்தத்தத்வங்களின் நிச்சயத்தை ஒவ்வொருநாளும் மனத்தில் அடிக்கடி நினைக்கவேண்டும். தத்வஜ்ஞானியானவன் இப்படி நினைப்பதனாலேயே முக்திபெறுவான். மேற்சொன்னதத்வவிஷயங்களைத் தெளிவாயறிந்தவன் தேகஸம்பந்தமில்லாத பரிசுத்தாத்மாவாவான். தெரிந்தசூத்ரன் ஸ்யாவிகளின் ஆஸ்ரமத்தைச்சார்ந்து பணிவிடையில் ஊக்கமுள்ளவனாயிருந்தால் அந்தஸாதுக்களின் சேர்க்கையினாலேயே மோக்ஷத்தையடைவான்; மற்றப்படியில்லை. ஸாதுக்களினருகிலேயே இருக்கவேண்டும். அறிவு மிகுந்தவர்களை அடிக்கவேண்டும். கருநிறமுள்ளபறவையும் மேருவைச்சார்ந்ததனால் பொன்னிறமாவதுபோலச் சேர்க்கையினால் பெரியோர்களின் குணத்தையடைவான்' என்றார். உண்மையறிந்தவரும் நியானநிஷ்டருமான பராசரமகாமுனிவர் தம்யோகமகிமையினால் ராக்ஷஸர்களுக்குமுள்ள விதியையும் பணிவிடையென்னும் ஒழுக்கத்தின்பயனையும் இவ்வாறுசொல்லித் தம் ஆஸ்ரமத்திற்குச் சென்றார்" என்றார்.

நாற்பத்துமூன்றாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(தேவர்களும் நமஸ்கரிக்கத்தக்கவர்களைப்பற்றி மாதலிக்கும் இந்திரனுக்கும் நடந்த சம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "மிகச்சிறந்தவரே! மகானுபாவர்களான தேவர்களும் இவ்வுலகத்திலுள்ள எந்தமகாத்மாக்களுக்கு நமஸ்காரம்செய்கின்றனர்? அந்த ரிஷிகளெல்லாரையும்பற்றிக்கேட்க விரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"யுதிஷ்டிர! பூர்வகதைகள் தெரிந்தவர்களும் சிறந்த ஞான முள்ளவர்களுமானபிராம்மணர்கள் இந்தவிஷயத்தில் ஓர் இதிஹாஸம் சொல்லுகின்றனர். அதைச் சொல்லுகிறேன்; கேள். விருத்ராஸுரனைக்கொன்று திரும்பும்போது தேவர்களால் பூஜிக்கப்பட்டும் மஹரிஷிகளால் துதிக்கப்பட்டும் சிறந்தஜயலக்ஷ்மியோடுகூடி ஹரிகளென்னும் பசுமைநிறமுள்ள குதிரைகள்கட்டினரதத்திலேறிவந்த தேவேந்திரனைநோக்கி அவன்ஸாரதியானமாதலி கைகூப்பிக்கொண்டு, 'பகவானே! நமஸ்காரத்திற்குரியவரனைவராலும் பூஜிக்கப்பட்டநீர் உலகத்தில் எவர்களைநமஸ்கரிக்கிறீர்? அவர்களை எனக்குச்சொல்லும்' என்றுகேட்டான். தேவருக்கரசரும் இந்திராணியின்கணவருமான இந்திரன் மாதலியின்அந்தச்சொல்லைக்கேட்டுத் தன்னைவிஞ்சும்ஸாரதிக்கு மறுமொழிகூறலானான். 'மாதலியே! தர்மார்த்தகாமங்கள் மூன்றையும்ஆராய்ந்து எவர்களுடையபுத்தி அதர்மத்தில் ஒருபோதும் இறங்காமலிருக்கிறதோ அவர்களை நமஸ்கரிக்கிறேன். மாதலியே! எவர்கள் அழகும்குணங்களும்நிரம்பிப் பெண்களின் மனத்தைக் கவர்கின்றவராயிருந்தும் காமஸுகங்களை விரும்பாமலிருக்கின்றனரோ அவர்களை நமஸ்கரிக்கிறேன். மாதலியே! தங்களுக்குரிய ஸுகங்களில் திருப்தியடைந்தவர்களும் சொல்லுக்குறைமையும் இன்சொல்லுமுடையவர்களும் பூஜைக்குரிமையிருந்தும் பூஜையைவிரும்பாதவருமாயிருப்பவரை நமஸ்கரிக்கிறேன். பொருளும் கல்வியும் ஐஸ்வரியமும் எவர்களின்புத்தியை மாற்றுவதில்லையோ, மாறினபுத்தியையும் எவர்கள் அடக்குகின்றனரோ அவர்களை நான் எப்போதும் பூஜிக்கிறேன். மாதலியே! அன்புள்ளமனைவியுடன்சேர்ந்து அக்நிஹோத்திரம்செய்பவர்களும்பசுக்கள்நிரம்பினகுடும்பமுள்ளவர்களும் பரிசுத்தர்களுமானவர்களை நான் நமஸ்கரிக்கிறேன். ஆத்மாவையறியாதவன் பெருந்தவத்தினால் மிகுதியானசெல்வம் கிடைத்தபோது அதைவிடமுடியாதவனுகிறான். மாதலியே! எவர்களுடைய பொருளும் இன்பமும் தர்மங்காரணமாகவே விருத்தியடைந்திருக்கின்றனவோ அறம்பொருளிரண்டையும்விடாதஅவர்களை நமஸ்கரிக்கிறேன். தர்மவழியாகப் பொருளையும் இன்பத்தையும் அடையும் பிராம்மணர்களுக்கும் பசுக்களுக்கும் பதிவ்ரதைகளானஸ்திரீகளுக்கும் நான் நமஸ்காரம்செய்கிறேன். மாதலியே! முற்பிராயத்தில் மானிடலோகத்திய ஸுகங்களையனுபவித்துப் பின்னர் தவத்தினால் ஸ்வர்க்கத்திற்கு வருகிறவர் எவ்ரோ அவரை நான் எப்போதும் பூஜிக்கிறேன். ஸுகத்தையடையாமலும் ஸுகத்திற்பற்றில்லாமலும் தர்மத்தைவிடாம

லும் இந்திரியங்களையடக்கியும் எல்லாவற்றையும்விட்டு மலைகள்போ லசையாமலிருப்பவரை மனத்தினுல் பூஜிக்கிறேன். மாதலியே! மெய் யறிவினுல்தெளிந்த கல்வியறிவுள்ளவரும் தொன்றுதொட்டுவந்த தர் மத்தைக்கருதுகிறவரும்பிறரால்சிலாகிக்கப்பட்டஆசாரமுள்ளவருமா யிருப்பவர் எவரோ அவரை நான் நமஸ்கரிக்கிறேன்' என்றான்" என்றார்.

நூற்றைம்பத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஹஸ்ததர்மத்தைப்பற்றிக் கருஷ்ணன் பூமிதேவிக்கும் நடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "ராஜரே! பரதஸ்ரேஷ்டரே! கிருஹஸ்தாஸ்ரமதர்ம மனைத்தையும் சொல்லும். இவ்வுலகத்தில் மனிதன் எதைச்செய்து அபிவ்ருத்தியைடைவான்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"ராஜனே! பாரதனே! வாஸுதேவருக்கும் பூமிதேவிக்கும் முன்நடந்தஒருஸம்பாஷணையை இந்தவிஷயத்தில் உனக்கு உதாகரிப் பேன். பரதஸ்ரேஷ்டனே! மகிமைபொருந்திய வாஸுதேவர் பூமி தேவியைத்துதித்து இப்போது நீஎன்னைக்கேட்கும்விஷயத்தைப்பற் றியே கேட்டார். வாஸுதேவர், 'ஓ! பூமிதேவியே! கிருஹஸ்த தர்மத்திலிருக்கும் நானும் என்போன்றவரும் அவசியம் செய்யத் தக்கது என்ன? எதைச்செய்தால் ஸுகமுண்டாகும்?' என்றார். அதற்குப் பூமிதேவி சொல்லலானாள். 'மாதவரே! ரிஷிகளையும் பித்ருக்களையும் தேவர்களையும் மனிதர்களையும் பூஜிக்கவும் கொண் டாடவும்வேண்டும். அதன்வகையைச் சொல்லுகிறேன்; கேளும். விருப்பத்துடன் நித்யயாகம்செய்வதினுல் தேவர்களையும் நித்யமாக விருந்தளிப்பதினுல் மனிதர்களையும் நித்தியமாகத் தர்ப்பணம்செய் வதனுல் பித்ருக்களையும் மனிதர்கள் ஆராதிக்கவேண்டும். சுற்ற, மற்றவரே! அப்படியே பிரம்மசரியவிரதத்தினுல் ரிஷிகள் ஸந்தோஷ மடைகின்றனர். தினந்தோறும்அக்நியப்பூஜிக்கவேண்டும். சாப் பிடுவதற்குமுன்னமே பூதபலியையும் தேவதாபூஜையையும் செய்ய வேண்டும். மதுஸூதனரே! இதுதான் எனக்குவிருப்பம். ஒவ் வொருநாளும் அன்னமுதலியவற்றினுலும் தர்ப்பணஜலத்தினுலும் பால்கிழங்குகனிகளாலும் சிராத்தம்செய்து பித்ருக்களைத் திருப்தி

செய்யவேண்டும். பாகம்செய்த அன்னத்திலிருந்து அக்நியில் வைசுவதேவமென்னும்ஹோமத்தை முறைப்படி செய்யவேண்டும். [1]ஆக்நேஷோமம் [2]வைசுவதேவம் [3]தான்வந்தர்யம் அதன்பிறகு பிரம்மதேவருக்கு ஹோமம்என்று தனித்தனியே விதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தமுறைப்படியே அன்னபலியையும்போடவேண்டும். மாதவரே! தெற்கில்யமனுக்கும் மேற்கில்வருணனுக்கும்வடக்கில்சந்திரனுக்கும் நடுவீட்டில் பிரம்மதேவருக்கும் வடகிழக்கில் தன்வந்தரிக்கும் கிழக்கில்இந்திரனுக்கும் வீட்டின்வாயிலில்மனிதர்களுக்கும் என்றுசொல்லிப் பலிபோடச்சொல்லுகின்றனர். மருத்துக்களுக்கும் தேவர்களுக்கும் பலியை வீட்டின்உட்புறத்தில் போடவேண்டும். விஸ்வேதேவர்களுக்குப் பலியை ஆகாயத்தில் போடவேண்டும். இரவில் ஸஞ்சரிக்கும் பேய்பிசாசமுதலியவற்றிற்குப் பலியை இரவில் போடவேண்டும். இவ்வாறு பலியை நன்முகப்போட்டபிறகு, ப்ராம்மணனுக்குப் பிக்ஷையிடவேண்டும். ப்ராம்மணன் கிடைக்காதபோது முதல் அன்னத்தையெடுத்து அக்நியில் போடவேண்டும். பித்ருக்களுக்குச் சிராத்தம்செய்ய ஆரம்பிக்குமனிதன் சிராத்தமுடிந்தபிறகு, பித்ருக்களுக்குத் தர்ப்பணம்செய்து அதன்பிறகு பலிகார்யத்தை முறைப்படி செய்யவேண்டும். அதன்பிறகு, வைஸ்வதேவத்தைச் செய்து பிறகு ப்ராம்மணபோஜனம் செய்விக்கவேண்டும். பிறகு, மிச்சமுள்ளஅன்னத்தினால் அதிதிகளையும் புரிப்பிக்கவேண்டும். மகாராஜனே! அர்க்கியத்தைமுன்னிட்டு மனிதர்களைத் திருப்தியடைவிக்கவேண்டும். நிச்சயமில்லாமல்வருவதனால் [4]அதிதியென்றுசொல்லப்படுகிறான். ஆசார்யனுக்கும் தந்தைக்கும் அன்புள்ள சிநேகிதனுக்கும் விருந்தினனுக்கும், 'என்வீட்டில் (புரிக்கத்தக்கது) இன்னது இருக்கிறது' என்று எப்போதும் தெரிவிக்கவேண்டும். அவர்கள் என்னசொல்வார்களோ அதைச் செய்விக்கவேண்டுமென்பதுதான் தர்மமாகச்சொல்லப்படுகிறது. கிருஷ்ணா! கிருகஸ்தனானமனிதன் எப்போதும் சேஷத்தைப்புசிப்பவனாகவேயிருக்கவேண்டும். ராஜபுரோகிதன், ஸ்நாதகன், ஆசார்யன், மாமன், இவர்கள் ஒருவருஷத்திற்குமேலிருந்தாலும் அவர்களுக்கு மதுபர்க்கம்கொடுத்துஉபசரிக்கவேண்டும். நாய்களுக்கும் சண்டாளர்களுக்கும் பக்ஷிகளுக்கும்

---

1 அக்நிக்கும் சந்திரனுக்குமாகச் செய்யப்பட்டஹோமம்.

2 விசுவேதேவர்களுக்குச் செய்யப்பட்டஹோமம்.

3 தன்வந்தரிக்குச்செய்யும்ஹோமம்.

4 அ=அநித்யம், திதி=ஸ்திதி.

தரையில்அன்னம்போடவேண்டும். இதுவும் வைஶ்வதேவம் என்பது. இது காலையும் மாலையும் விதிக்கப்படுகிறது. இந்தக்கிருகஸ்த தர்மங்களை வெறுக்காமல்செய்பவன் இவ்வுலகிலும் மேலானசெல்வம் பெற்று, இறந்தபின் மறுஉலகத்திலும் கொண்டாடப்படுவான்' என்றுள். இவ்வாறு பூமிதேவிசொன்னதைக்கேட்டுச் சிறந்தமகிமையுள்ள வாஸுதேவர் எப்போதும் அப்படியே செய்தார். நீயும் அப்படியே எப்போதும் செய். ராஜனே! இந்தக்கிருஹஸ்ததர்மத்தை நீ நடத்தினால் இவ்வுலகத்தில் புகழ்பெற்றுத் தேகம்விட்டபின் ஸ்வர்க்கம்பெறுவாய்" என்றார்.

நூற்றைம்பத்தைந்தாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(புஷ்பம் தூபம் நீபமுதலியவற்றின் தானத்தைப்பற்றிச் சுகீர்ர் பலிசக்ரவர்த்திக்குச்சொல்லியதை ஸ்வாயம்புவமனு ஸுவர்ணருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பரதஶ்ரேஷ்டரே! தீபதானமென்னப்படுவது எவ்வகைத்து? அது எப்படியுண்டானது? அதன்பலன் என்ன? அதை எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பாரதனே! இந்தவிஷயத்திலும்பிரஜைகளைப்படைத்தவராகிய ஸ்வாயம்புவமனுவுக்கும் ஸுவர்ணருக்கும்நடந்த ஸம்பாஷணையாகிய ஒருபுராதனசரித்திரத்தைக் கூறுகின்றனர். பாரதனே! ஸுவர்ணரென்றுபெயர்பெற்ற ஒருரிஷி இருந்தார். அவர்தேகநிறம் பொன்னிறமாயிருந்ததனால் அவருக்கு ஸுவர்ணரென்றுபெயர்வந்தது. குலமும்ஒழுக்கமும்குணங்களுமுள்ளவரும் கல்விநிறைந்தவருமான அந்தரிஷி தம்குணங்களினால்கல்லகுலத்தில் பிறந்தவரனேகரை மிஞ்சியிருந்தார். ஒருகால் அந்தப்ராம்மணர் ஸ்வாயம்புவமனுவைக்கண்டு அருகிற்சென்றார். அவரிருவரும் அங்கே ஒருவரைஒருவர் குசலப்பிரஶ்னம்செய்துகொண்டனர். உறுதியானஎண்ணமுள்ள அவ்விருவரும் தேவரிஷிகளால் எப்போதும்அடையப்பட்ட பொன்மலையான மேருவில்சேர்ந்து உட்கார்ந்தனர். அவர்கள் அங்கே முன்னோர்களும் மகாத்மாக்களுமானபிரம்மரிஷிகள், தேவர்கள், அஸுரர்களின் பல வகையான கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தனர். அப்போது, ஸுவர்ணர் ஸ்வாயம்புவமனுவை நோக்கி, எல்லாப்பிராணிகளின் நன்

மைக்குமாக என்கேள்விக்கு நீர் மறுமொழிகூறவேண்டும். புஷ்பம் சந்தனம் தூபமுதலியவற்றினால் தேவர்கள் பூஜிக்கப்படுகின்றனர். இது என்ன? இது எப்படியுண்டானது? இதன்பலனென்ன? எனக்குச் சொல்லும்' என்றுகேட்க, ஸ்வாயம்புவமனு சொல்லலானார். 'இந்தவிஷயத்திலும் சுக்ராசாரியர் பலி இவ்விரண்டு மகாத்மாக்களின் சம்பாஷணையாகிய ஒரு பூர்வசரித்திரத்தைக் கூறுகின்றனர். விரோசனன்மகனுபலி மூன்றுலோகங்களையும் ஆண்டுகொண்டிருக்கையில் ப்ருகுகுலத்திலவரானசுக்ரர் அவனிடம் விரைவாகவந்தார். மிகுதியான தக்ஷிணைகொடுப்பவனான அந்தஅஸுரராஜன் அந்தச்சுக்ராசாரியரை அர்க்கியமுதலியவற்றினால் சாஸ்திரப்படிபூஜித்து, அவர் உட்கார்ந்தபிறகு ஆஸனத்தில் உட்கார்ந்தான். புஷ்பம் தூபம் தீபம் இவைகளைக் கொடுப்பதின்பலனைப்பற்றி நீர்கேட்ட பிரஸ்தாவம் அங்கே நடந்தது. அப்போது, அஸுரச்ரேஷ்டனுபலி கவிராஜரானசுக்ரரைப்பார்த்து, 'பிரம்மஜ்ஞானிகளிற்சிறந்த பிராம்மணச்ரேஷ்டரே! புஷ்பதூபதீபங்களைக்கொடுப்பதின்பலன் என்ன? அதை நீர் சொல்லக்கடவீர்' என்னும் சிறந்தகேள்வியைக்கேட்க, சுக்ரர் சொல்லலானார். 'எல்லாவற்றிற்கும்ஆத்மாவும் ஈச்வரருமானவிஷ்ணு அக்நியையும் சந்திரனையும் முதலில்படைத்தபோது முதலில் தவமுண்டாயிற்று. அதன்பிறகு தர்மமுண்டாயிற்று. அந்தக்காலத்தில் சந்திரனுடையதேகமானது பூமியில் அமிருதமும் விஷமுமாயுள்ள கொடிகளும் செடிகளும் மற்றுமுள்ள புல்பூண்டுகளுமாகப் பலவகையாக உண்டாயிற்று. அமிருதமானது தன்மணத்தினாலேயே மனத்திற்கின்பத்தையும் திருப்தியையும்உடனேகொடுக்கிறது. கொடியவிஷம் தன்மணத்தினாலேயே மனத்தை முழுதும் வாட்டுகிறது. அம்ருதம் பெரியமங்களமென்றும் விஷம்பெரிய அமங்களமென்றும் அறியும். ஓஷதிகளனைத்தும் அமிருதம். [1]அக்நியின்ஒளியே விஷம். அமிருதம் மனத்தையும் களிக்கச்செய்கிறது; அழகையும் கொடுக்கிறது. ஆதலால், புண்ணியம்செய்யும்மனிதர்கள் புஷ்பங்களை [2]ஸுமனஸுகள்என்றுசொல்லுகின்றனர். எந்தமனிதன் பரிசுத்தனுகி ஸுமனஸுகளென்னும்புஷ்பங்களைத் தேவர்களுக்குக்கொடுக்கிறானோ அவன்விஷயத்தில் தேவர்களும் நல்லமனமுள்ளவராகிறார். அதனால், தேவர்களும் [3]ஸுமனஸுகளென்றுசொல்லப்படுகின்றனர்.

1 விஷமூலிகைகள் அக்நியைச் சார்ந்தவை என்பது.

2 மனத்தைநன்றாகச் செய்கின்றவை.

3 தேவர்களின் நல்லமனத்திற்குக் காரணமானவை.

1 பிரபுவே ! அஸுரராஜனே ! மங்களத்திற்காக எந்தஎந்தத்தேவதை யையுத்தேசித்துப் புஷ்பங்கள் போடப்படுகின்றனவோ அந்தஅந்தத் தேவதை அதனுலேயே இவனுக்குப் பிரஸன்னமாகிறது. அந்தஓஷதிகள் உக்கிரமுள்ளவை, சாந்தமானவை, ஒளியுள்ளவையென்று வெவ்வேருக அறியத்தக்கவை. அவை பலவகைச்சக்தியும் பலவகை உருவமுமுள்ளவை. யாகத்திற்கானவையும் யாகத்திற்காகாதவையுமானவிருக்ஷங்களையும், அஸுரர்களுக்குவேண்டினபுஷ்பங்களையும், தேவர்களுக்குவேண்டினபுஷ்பங்களையும், ராக்ஷஸர்களுக்கும் நாகர்களுக்கும் யக்ஷர்களுக்கும் மனிதர்களுக்கும் பித்ருக்களுக்கும்பிரியமானவற்றையும் விரிசையாகச் சொல்லுகிறேன்; கேள். காடுகளிலுள்ளவை, கிராமங்களிலுள்ளவை, உழுதுவிதைக்கப்பட்டவை, மலைகளிலுண்டானவை, முள்ளில்லாதவை, முள்ளுள்ளவை, மணமும்நிறமும்சுவையுமுள்ளவைஆகிய அநேகம் ஓஷதிகளிருக்கின்றன. புஷ்பங்களில் இனியதும் இன்னுததுமாகிய இருவகைமணங்கள் அறியப்படுகின்றன. இனியமணமுள்ளபுஷ்பங்கள் தேவர்களுக்குப்பிரியமானவைஎன்றறி. பிரபுவே ! முள்ளில்லாதமரங்களின் வெண்ணிறமானபுஷ்பங்கள் தேவர்களுக்கு எப்போதும் பிரியமானவை. தாமரைமலர், துளஸி, ஜாதிபுஷ்பம், ஜலம்இவை எல்லாருக்கும் சிலாக்கியமானவை. தெரிந்தவன் தாமரைமுதலானஜலத்திலுண்டாகும்மலர்களைக் கந்தர்வர்களுக்கும் நாகர்களுக்கும் யக்ஷர்களுக்கும் கொடுக்கவேண்டும்.சிவந்தபுஷ்பங்களுள்ளவையும் காரமாயிருப்பவையும் முள்ளுள்ளவையுமானஓஷதிகள் பகைவர்களைக்கொல்லும்யாகத்திற்குஉரியவையாக அதர்வணவேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. கொடியசக்தியுள்ளவையும் தொடக்கூடாதவையும் முள்ளுள்ளவையும் சிவப்புநிறமும் கறுப்புநிறமுமுள்ளவையுமான ஓஷதிகளைப் பூதங்களுக்குக் கொடுக்கவேண்டும். பிரபுவே ! புத்திக்கும்மனத்திற்கும்ஸுகத்தை உண்டுபண்ணுகின்றவையும் கசங்கினலும் நன்மணம்வீசுகின்றவையும் அழகியநிறமுள்ளவையுமானமலர்கள் மனிதர்க்குரியவையென்று சொல்லப்படுகின்றன. சுடலையிலும் தேவாலயத்திலுமுண்டான புஷ்பங்களை விவாகமுதலானமங்களகாரியங்களிலும் ஸ்திரீபுருஷர்களுடைய ரஹஸ்யங்களிலும் சேர்ப்பிக்கக்கூடாது. மலைச்சரிவுகளிலுண்டான இனியபுஷ்பங்களை ஜலத்திலுல்புரோக்ஷணம்செய்து தியானம் செய்து சாந்தர்களாயிருந்து சாஸ்திரப்பிரகாரம் தேவர்களுக்குச் சாத்தவேண்டும். தேவர்கள் வாஸனையிலுல் திருப்தியடைகின்றனர்.

1 'ப்ரபோ' என்றுபாடம்கொள்ளப்பட்டது.

யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் பார்ப்பதிலும் திருப்தியடைகின்றனர். நாகர்கள் சூட்டிக்கொள்வதிலும் திருப்தியடைகின்றனர். மனிதர்கள் இம்மூன்றிலும் திருப்தியடைகின்றனர். புஷ்பமானது தேவர்களை உடனே திருப்திசெய்விக்கிறது. திருப்தியடைந்ததேவர்கள் மனிதர்களை விருத்திசெய்கின்றனர். (அப்போது) மனிதர்கள்வேண்டும்விருப்பங்கள் நினைத்தவுடன் கிடைக்கின்றன. எப்போதும் பூஜிக்கப்பட்டதேவர்கள் மனிதர்களுக்கு ஸௌகத்தையும் கௌரவத்தையும் உண்டுபண்ணுகின்றனர். அவர்கள் பூஜிக்கப்பட்டால் இவனையும் பூஜிக்கின்றனர். அவர்கள் அவமதிக்கவும் விடவும்பட்டால் அந்த இழிவானமனிதர்களை எரித்துவிடுவார். இதற்குமேல் தூபங்கொடுத்தலென்னும் செய்கையின்பலனைச் சொல்வேன். நல்லதூபங்களும் கெட்டதூபங்களும் பலவகையாயிருப்பதை என்னிடம் தெரிந்துகொள். பிசின்களும் கட்டைகளும் செய்யப்பட்டவைகளுமாக மூன்றுவகைத் தூபங்களுண்டு. இனியமணமும் இன்னதமணமும் இருக்கின்றன. அவற்றை விரிவாகச்சொல்லுகிறேன்; கேள். [1]ஸல்லகிமரந்தவிர மற்றமரப்பிசின்கள் தேவர்களுக்கு இனியவை. அவையெல்லாவற்றிலும் குங்கிலியம் சிறந்ததென்பது நிச்சயம். வைரமுள்ளகட்டைகளில் அகில் சிறந்தது. யக்ஷர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் நாகர்களுக்கும் அஸுரர்களுக்கும் ஸல்லகிமரத்தின் பிசின்முதலியவைகளும் அவற்றைப்போன்றவையும் விருப்பந்தான். ஸர்ஜமரத்தின்சாறு முதலியவற்றின் வாஸனையிலும் பூமியிலுள்ள கட்டைகளின் வாஸனைகளிலும் கற்கண்டிலும் சாராயத்திலும் மனிதர்களுக்குத் திருப்தியுண்டாகிறது. அவை தேவர்களுக்கும் தானவர்களுக்கும் பூதங்களுக்கும் உடனே திருப்தியுண்டாக்குவனவாகச் சொல்லப்படுகின்றன. மற்றுமுள்ளவிஜ்ஞேதமானபொருள்கள் மனிதர்களுக்கு வேண்டினலையென்று சொல்லப்படுகின்றன. புஷ்பதானம் செய்வதின்பலன்களும் காரணங்களும் என்னசொன்னேனோ அவற்றையே தூபங்களிலும் அறிந்துகொள்ளவேண்டும். தூபங்கள் அதிகஸந்தோஷத்தைச் செய்கின்றவை. இனி, தீபதானத்தின்சிறந்த பலனையும் எந்தக்காலத்தில் எவன் எப்படிப்பட்டதீபங்களை எவ்வகையாகக் கொடுக்கவேண்டுமென்பதையும் சொல்வேன். ஜ்வாலையானது சக்தியும் வெளிச்சமுமுள்ளதாக மேல்நோக்கி வியாபிக்கிறது. ஆதலால், தீபதானமானது மனிதர்களுக்கும் சக்தியையும் உற்சாகத்தையும் ஒங்கச்செய்கிறது. தக்ஷிணாயனம் மிக இருண்டிருப்பது; நரகம்

[1] ஒருவகைமரம்; அது யானைக்கு விருப்பமானது.

போன்றது. ஆதலால், அப்பொழுது, [1] உத்தராயணமான தீபதானம் சிலாகிக்கப்படுகிறது. ஏனெனில், தீபம் மேல்நோக்கிவியாபிப்பது; இருளுக்குப் பரிகாரம். ஆதலால், அதில்தீபங்கொடுப்பவன் மேல் கதியைக் கொடுப்பவனுகிறனென்பது நிச்சயம். தேவர்கள் சக்தியும் ஒளியுமுள்ளவர்களாகி எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்கிறவர். ராக்ஷஸர் இருள்மூடினவர். ஆதலால், தீபங்கொடுக்கப்படவேண்டும். வெளிச்சங்கொடுப்பதினுல மனிதன் கல்ல கண்டார் வையுள்ளவனும் தேகத்தில ஒளியுள்ளவனுமாவான். வெளிச்சத்தைக்கொடுத்தபின் (ஒருஜந்துவையும்) பீடிக்கலாகாது. வெளிச்சத்தைத் திருடவும் அவிக்கவுமாகாது. தீபத்தைகொடுப்பவன் குருடனும் இருளானநரகலோகத்தையடைகிறவனும் தேகத்தில் கல்லகிறமில்லாதவனுமாவான். தீபங்கொடுப்பவன் ஸ்வர்க்கலோகத்தில் தீபமாலைகளின்நடுவில் விளங்குவான். நெய்யினல்விளக்கேற்றுவது முதல் பக்ஷம்;ஓஷதிகளின்ஸாரமாகியஎண்ணெய்முதலியவற்றால்ஏற்றுவது இரண்டாவதுபக்ஷம். நன்மையைவிரும்புகிறவன் தேகத்தின்கொழுப்பு ரசம்பு எலும்புகளின்எண்ணெய்களால் தீபத்தைவைக்கலாகாது. தனக்கு மேன்மையைவிரும்புகிறவன் கோயிலிலும் ஸபாமண்டபத்திலும் மலையிலும் உயர்ந்தமரத்திலும் நாற்சந்தியிலும் தீபங்களை நித்தியமாக வைக்கவேண்டும். தீபம்வைக்கும்மனிதன் குலத்திற்கே பிரகாசமாகவும் பரிசுத்தாத்மாவாகவும் பெயர்பெற்றவனுகவும்இருந்து தேஜோலோகத்தையடைவான். இனி, தேவர்களுக்கும் யக்ஷர்களுக்கும் நாகர்களுக்கும் மனிதர்களுக்கும் பூதங்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் பலிபோடுவதென்னும்கர்மத்தின்குணங்களையும் பலனையும் சொல்வேன். எவர்கள் உண்பதற்குமுன், பிராம்மணர்களும் தேவர்களும் விருந்தினர்களும் குழந்தைகளும் உண்ணவில்லையோ அவர்களை யாகங்களும் மங்களங்களுமில்லாத ராக்ஷஸர்களேயென்றறி. ஆதலால், முதற்பாகத்தைத் தேவர்களுக்குப் பூஜையோடு கொடுக்கவேண்டும். பிறகு, தலைவணங்கிநமஸ்கரித்துச் சோம்பாமல் பலிபோடவேண்டும். நித்தியமாகப் பலியைவாங்கிக்கொள்ளும்தேவர்கள் வீடுகளை அனுக்கிரகிக்கின்றனர். வெளியிலிருந்துவருகிறவர்களும் இவ்விடத்தில் கொடுப்பதினுல் ஜீவிப்பவர்களுமாகிய யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் நாகர்களும் தேவர்களும் பித்ருக்களும் திருப்தி

[1] உத்தராயணத்தின் இயற்கையான மேலேக்கிசெல்வதும் தமஸை (தமோகுணத்தை, இருளை) ப்போக்குவதும் விளக்குக்குமிருப்பதால் விளக்கை உத்தராயணமென்பது.

யடைந்து அவனுக்கு ஆயுளையும் புகழையும் தனங்களையும்கொடுத்து ஸந்தோஷப்படுத்துகின்றனர். தயிரும்பாலும் நிரம்பினவையும்பரிசுத்தமானவையும் நல்லமணமுள்ளவையும் பார்ப்பதற்கழகியவையுமான அன்னபலிகளைப் புஷ்பங்களுடன் தேவர்களுக்கு அர்ப்பணம்செய்ய வேண்டும்.மாம்ஸமும்ரக்தமும்நிரம்பினவையும் கள்சாராயங்களோடு கூடினவையும்நெற்பொரிகளாலும் அவல்களாலும் அலங்கரிக்கப்பட்டவையுமானபலிகளை யக்ஷர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் கொடுக்கவேண்டும். தாமரைகருநெய்தல்களோடுசேர்ந்தபலிகள் நாகர்களுக்குஎப்போதும் இஷ்டமானவை. வெல்லம்நிரம்பினஎள்பலிகளைப் பூதங்களுக்குக் கொடுக்கவேண்டும். முதற்பாகத்தைப்பலிகொடுப்பவன் முதன்மையான ஸுகமுள்ளவனும் பலபராக்கிரமங்களுள்ளவனுமாவான். ஆதலால், தேவர்களுக்கு முதல்பாகத்தைப் பூஜையோடு கொடுக்கவேண்டும். ஐஸ்வரியத்தைவிரும்புகிறவன் ஒவ்வொருநாளும் வீட்டைவிளங்கச்செய்யும் கிருஹதேவதைகளுக்கு முதற்பாகத்தைக் கொடுத்துப் பூஜிக்கவேண்டும்' என்றார். இவ்வாறு பிருகுவம்சத்தவரான சுக்ராசாரியர் அஸுரராஜாவான பலிக்குச்சொன்னார். அதை ஸ்வாயம்புவமனு ஸுவர்ணருக்குச் சொன்னார்; ஸுவர்ணர் நாரதருக்குச் சொன்னார். சிறந்தகீர்த்தியுள்ளவனே! நாரதர் இந்தக்குணங்களை எனக்குச் சொன்னார். புத்ரனே! நீயும் இதையறிந்து உலகத்தில் இதைஎல்லாம் அனுஷ்டிக்கக்கடவாய்" என்றார்.

நூற்றுமுப்பத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(புஷ்பதூபதீபாதலியவற்றின் தானபலனைப்பற்றிய நகுஷன்கதை.)

யுதிஷ்டிரர், "பரதஸ்ரேஷ்டரே! புஷ்பங்களையும் தூபங்களையும்கொடுப்பதற்கும் பலிபோடுவதற்குமுள்ளபலனைக் கேட்டேன். இன்னும் அதைப்பற்றிச் சொல்லக்கடவீர். தூபத்தைக்கொடுப்பதிலும் தீபத்தைக்கொடுப்பதிலும் பலன்யாது? ஸுருகஸ்தர்கள் பலிகளைப் போடுவது எதற்காக?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இவ்விஷயத்தில் நகுஷனுக்கும் அகஸ்தியருக்கும் ப்ருகுவுக்கும்நடந்த ஸம்பாஷணமாகிய ஒருபழையசரித்திரத்தைக் கூறுகின்றனர். மகாராஜனே! மிக்கபெருந்தவமுள்ள நகுஷனென்னும்ராஜ

ரிஷி இவ்வுலகத்திற்செய்தபுண்ணியகர்மத்தினால் இந்திரபதத்தை அடைந்தான். ராஜனே! அந்தஸ்வர்க்கத்தில் வஹிக்கும்போதும் நகுஷன் மானிடலோகத்திற்கும் தேவலோகத்திற்குமுரிய பல விதகிரியைகளை நியமத்துடன் அனுஷ்டித்துக்கொண்டேயிருந்தான். ராஜனே! அம்மகாத்மாவுக்குத் தேவலோகத்திலும் மானிடலோகத்திலுமுள்ள புராதனமானகர்மங்களெல்லாம் சாஸ்திரப்படி நடந்து கொண்டிருந்தன. அக்நிஹோத்திரங்களும் ஸமித்துக்களும் தர்ப்பைகளும் புஷ்பங்களும், பசுபலிகளும் [1]லாஜபலிகளும் தூபதீபங்களும் இவையனைத்தும் அம்மகாத்மாவானவேந்தனுடையகிருகத்தில் நடந்துவந்தன. அவன் ஸ்வர்க்கத்திலும் ஜபயாகங்களையும் தியானயாகங்களையும் செய்துகொண்டிருந்தான். வீரனே! அவன் தேவேந்திரனுயிருந்தும் முன்போலவே தேவர்களெல்லாரையும் வரிசைப்படி சாஸ்திரோக்தமாய்ப் பூஜித்தான்; அதன்பிறகு, 'நான் இந்திரன்' என்றுநினைத்து அகங்காரத்தையடைந்தான். அவ்வரசனுடைய கிரியைகளனைத்தும் குறைந்துபோயின. அவன் வரம்பெற்றதினால் கர்வங்கொண்டு ஸப்தரிஷிகளைத் தனக்கு வாகனங்களாகச் செய்துகொண்டான்; கிரியைகளைவிட்டதினால் பலவீனமடைந்தான். அகங்காரம்மேற்கொண்டு, தவத்தையேதனமாகவுடையரிஷிஸ்ரேஷ்டர்களை வாகனமாகச்செய்தே அவனுக்கு மிகப்பெரியகாலங்கடந்தது. அதன்பிறகு, (அவன்)ரிஷிகளெல்லாரையும் முறையாகத் தேரிழுக்கச்செய்யத்தொடங்கினன். பாரதனே! அகஸ்தியருடையமுறையும்வந்தது. அப்போது, பிரம்மஜ்ஞானிகளிற்சிறந்தவரும் பெரியமகிமையுள்ளவருமான ப்ருகு ஆஸ்ரமத்திலிருக்கும் அகஸ்தியரிடம்வந்து, 'மகாமுனிவரே! தேவேந்திரனுயிருக்கும் கெடுநினைவுள்ள இந்தநகுஷன் செய்யும்அவமரியாதையை நாம் எதற்காகப்பொறுக்கவேண்டும்?' என்று கேட்டார். அகஸ்தியர், 'மகாமுனிவரே! அவனை நான் எப்படிச் சபிக்கமுடியும்? வரன்கொடுப்பவராகியபிரம்மதேவரால் அவனுக்கு வரன்கொடுக்கப்பட்டிருக்கிறது. அது உமக்குந்தெரியுமே. அவன் ஸ்வர்க்கத்திற்குப்போகும்போதே பிரம்மதேவரைப்பார்த்து, 'என் பார்வையில்அகப்படுகிறவன் எவனோ அவன் எனக்கு அடங்கிப்போகக்கடவன்' என்னும்வரத்தைக் கேட்டான். அதனாலேதான், என்னாலும்உம்மாலும் மற்றஎந்தரிஷிஸ்ரேஷ்டராலும் அவன் எரிக்கப்படவுமில்லை; கீழேதள்ளப்படவுமில்லை. ஸமர்த்தரே! முன்னர், மஹாத்மாவான பிரம்மதேவரால் அவனுக்குக் குடிப்பதற்கு அமிருதமும்

1 பொரி.

கொடுக்கப்பட்டது. அதனாலேயும் நம்மால் அவன் அழிக்கப்படுவ தில்லை. பிரம்மதேவர் ஜனங்கள் துயரப்படுவதற்குக்காரணமான வரத்தை அளித்தார். அதனால், அந்தஇழிவானமனிதன் பிராம் மணர்விஷயத்தில் பாபகாரியங்களைச் செய்கிறான். பேசுகிறவரிற் சிறந்தவரே! அவன்விஷயத்தில் காலத்திற்குத்தகுந்தது எதுவோ அதைச்சொல்லும். நீர் எப்படிச்சொல்வீரோ அப்படிதான்செய்வே னென்பது நிண்ணம்' என்றுசொன்னர். ப்ருகு, "கர்வத்தினால் மதிகெட்டவனும் வலிமையுள்ளவனுமாகிய நகுஷன்விஷயத்தில் பரி காரம்செய்வதற்காகப் பிரம்மதேவருடையகட்டளையினால் நான் உம் மிடம் வந்திருக்கிறேன். மிக்கெட்டபுத்தியுள்ள அந்தத்தேவராஜ னைநகுஷன் இன்றைத்தினம் உம்மைத் தேரிற்பூட்டுவானே. ஒழுக் கந்தப்பின அவனை இன்றைத்தினமே என்சக்தியினால் இந்திரனாக மற்செய்வேன். இன்றைத்தினம் நீர்பார்த்திருக்கையிலேயே பாபச் செய்கையும் மிக்கெட்டபுத்தியுமுள்ள இந்தநகுஷனை இந்திர னுடைய இடத்தினின்றுவிலக்கிப் பழையஇந்திரனை இந்திரனாகில் பெறச்செய்வேன். புத்திகுறைந்த இந்தஇழிவானதேவேந்திரன்இன் றைத்தினம் விதியினால் மதிகெட்டுத் தான்அழிவதற்காக உம்மைக் காலால் உதைப்பான். உதைப்பதனால் நான் மிகக்கோபமுற்றுப் பிராம்மணருக்குத் துரோகம்செய்யும்பாவியும் தர்மவரைகடந்தவனு மாகிய அவனைக் கோபத்துடன், 'பாம்பாகக்கடவாய்' என்றுசபிப் பேன். மஹரிஷியே! அதன்பிறகு, ஐசுவரியத்தினாலும் பலத்தினா லும் ஒன்றும்தெரியாமல் மிகமதிகெட்டு இந்தப்பாவம்செய்த நகு ஷனை நீர்பார்க்கையிலேயே, 'சீ' என்னும்சொல்லால் உற்சாகத்தைக் கெடுத்துப் பூமியில் தள்ளிவிடுவேன். ரிஷியே! உமக்கு எப்படி இஷ்டமோ அப்படிச் செய்வேன்' என்றுசொன்னர். மித்ராவருணர் களின்புத்ரரும் குற்றமற்றவருமான அகஸ்தியர்,ப்ருகுஇவ்வாறுசொல் லக்கேட்டுத் துயரம்நீங்கி மிக்களந்தோஷமுடையவரானர்" என்றார்.

நூற்றைம்பத்தேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(நகுஷன்கதைத் தொடர்ச்சி.)

யுதிஷ்டிரர், "அந்தநகுஷன் எப்படி தேவேந்திரபதத்தை அடைந்தான்? எப்படி பூமியில் தள்ளப்பட்டான்? எப்படிஅழிந்தான்? அவற்றைநீர் சொல்லக்கடவீர்" என்றுகேட்க,பீஷ்மர் சொல்லலானர்.

"ப்ருகுவும் அகஸ்தியரும் இவ்வாறுபேசிக்கொண்டிருக்கும் போது, அம்மஹாத்மாவானநகுஷனுக்குத் தேவலோகத்திலும் மானிடலோகத்திலுமுள்ள எல்லாநற்கருமங்களும் நடந்துவந்தன. அவனுக்குத் தேவலோகத்திலும் மானிடலோகத்திலும் பெரியோர்களின்ஆசாரங்களினுலுண்டாக்கப்பட்ட தீபமுதலிய வீட்டுக்கருவிகளின் தானங்களும் பலிமுதலியகர்மங்களும் உற்சவங்களனைத்தும் தனித்தனியே நடந்தன. அரசர்க்கரசே ! அவை கிருகஸ்தனுடைய அபிவிருத்திக்குக் காரணமானவை. தூபங்கொடுப்பதினுலும் தீபங் கொடுப்பதினுலும் நமஸ்காரம்செய்வதினுலும் சமைத்தஅன்னத்தின் முதற்பாகத்தையெடுத்துக்கொடுப்பதினுலும் வீட்டிலுள்ள இடங்களில் பலிகள்போடுவதினுலும் தேவர்கள் ஸந்தோஷமடைகின்றனர். பலிபோடும்போது கிருகஸ்தனுக்கு எவ்வளவு சந்தோஷமுண்டாகிறதோ அதற்குநூறுமடங்கு அதிகமானஸந்தோஷம் தேவர்களுக்கும் உண்டாகிறது. அதனுலேதான், பெரியோர்கள் தங்கள்மேன்மைக்காக நமஸ்காரங்களுடன் தூபதீபங்களைக் கொடுக்கின்றனர். பகுத்தறிவுள்ளவன் நமஸ்காரங்களோடுசெய்யும்ஸ்நானம் ஜலதர்ப்பணமுதலியகர்மங்களினுல் தேவர்கள் திருப்தியடைகின்றனர். சாஸ்திரப்படிபூஜிப்பதனுல் மகானுபாவர்களானபித்ருக்களும் தபோதனர்களானரிஷிகளும் வீட்டிலுள்ளதேவர்களனைவரும் ஸந்தோஷமடைகின்றனரென்னும் எண்ணத்தைஉறுதியாகவைத்துக்கொண்டு அந்த நகுஷராஜன் பெரியதேவேந்திரபதத்தையடைந்தும் இதைச் செய்தான். அது ஆச்சரியம். சிலகாலத்திற்குப்பிறகு, பாக்கியக்கேடுகெருங்கினபோது இவற்றையெல்லாம்மறியாமல் சாஸ்திரப்படி அனுஷ்டியாமல் போனன். தேவேந்திரனுயிருந்தநகுஷன் பராக்கிரமத்தினுடையகர்வத்தினுல் அனுஷ்டானத்தினின்றும் தவறிப்போனன். தூபதீபங்கள்முதலியகர்மங்களைச் சரிவரச்செய்யவில்லை. அப்போது, இவனுடைய யாகபூமி ராக்ஷஸர்களால் பீடிக்கப்பட்டது. அதன் பிறகு, மகாபலசாலியானநகுஷன் நகைத்துக்கொண்டே ரிஷிஸ்ரேஷ்டரான அகஸ்தியரைத் தன்தேரிழுப்பதற்காக ஸரஸ்வதிநதிக்கரையிலிருந்து விரைவாக அழைத்தான். அப்போது, பெருமைவாய்ந்த ப்ருகு, அகஸ்தியரைப்பார்த்து, 'கண்களைமூடும். தேவேந்திரனைத் தள்ளுவதற்காக உம்முடையஜடையில் பிரவேசிக்கப்போகிறேன்' என்றுசொன்னர். அகஸ்தியரும் கண்களை மூடினர். மிகப்பெரிய மகிமையுள்ளவரும் நினைத்ததுதவறுதவருமாகிய அந்தப்ருகு நகுஷனைத்தள்ளுவதற்காக அகஸ்தியருடையஜடையைக்கண்டு அதிற்புகுந்

தார். பிறகு, தேவராஜாவானநகுஷன் தனக்குவாகனமாக அகஸ்தியரிஷி வரப்பெற்றான். ராஜனே! அகஸ்தியர் அந்தத்தேவேந்திரனைப்பார்த்து, 'தேவேந்திரனே! என்னைச் சீக்கிரம் தேரிற்பூட்டு. உன்னை எந்தத்தேசத்திற்கு இழுத்துக்கொண்டுபோகவேண்டும்? நீ எங்குகொண்டுபோகச்சொல்லுகிறாயோ அங்கு உன்னைக் கொண்டு போவேன்' என்றார். அவரால் இவ்வாறுசொல்லப்பட்டநகுஷன் அம்முனிவரைத் தேரில்பூட்டினான். அவருடைய ஜடைக்குள்ளிருந்த ப்ருகு மிக்கசந்தோஷமடைந்தார். வரதானத்தின்மஹிமையையறிந்த அந்தப்ருகு பெருமையுள்ள நகுஷன்பார்வைக்கு அகப்படவில்லை. அகஸ்தியர் நகுஷனால் அப்போது தேரில்பூட்டப்பட்டிருந்தும் கோபிக்கவில்லை. பாரதனே! தேவராஜனானகுஷன், 'வேதமும் தர்மசாஸ்திரமும் பிரமாணமா? அல்லவா?' என்று சொல்லிக்கொண்டே ஒற்றைக்காலால் அகஸ்தியரைக் குத்தினான். அந்தத்தர்மாத்மாவானஅகஸ்தியர் அதற்கும் கோபிக்கவில்லை. அதன்பிறகு, அந்தத் தேவராஜன் கோபித்து இடக்காலினால் அகஸ்தியருடையதலையில் உதைத்தான். அவரைத்தலையில்உதைத்தபோது ஜடைக்குள்ளிருந்த அந்தப்ருகு மிக்ககோபமுற்றுப் பாபபுத்தியுள்ளநகுஷனைநோக்கி, 'மிகக்கெட்டபுத்தியுள்ளவனே! நீ இந்தமஹரிஷியைக் கோபத்துடன் காலால் தலையில் உதைத்தகாரணத்தினால் உடனே ஸர்ப்பமாகிப் பூமியில் போகக்கடவாய்' என்று சபித்தார். பரதஸ்ரேஷ்டனே! அந்தப்ருகு மஹரிஷி அவன்கண்ணுக்குப்படாமலிருந்து சபித்ததனால் அந்தநகுஷன் உடனே ஸர்ப்பமாகித் தரையில்விழுந்தான். தர்மராஜனே! அந்தநகுஷன் ப்ருகுவைப் பார்த்திருப்பானாயின் அவனுடையசக்தியினால் ப்ருகுவுக்கு அவனைத் தள்ளமுடியாமற்போயிருக்கும். மஹாராஜனே! ஆனால், அவன் பூமியில்விழுந்திருந்தும், பலவகைத்தானங்களும் தவங்களும் விரதங்களும் செய்திருந்ததனால் முன்னினைவு தவறாமலிருந்தான்; 'எனக்கு இந்தச்சாபத்திற்கு முடிவு இருக்கவேண்டும்' என்று ப்ருகுவை வேண்டினான். மஹாராஜனே! பிறகு, அகஸ்தியர் கிருபைகூர்ந்து சாபத்தின்முடிவைப்பற்றி அந்தப்ருகுவினிடம் வேண்டினார். ப்ருகுவும் தயையுடன் சாபத்திற்கு முடிவைக்கொடுத்தார்; 'குருவம்சத்தின்தலைவனுகிய யுதிஷ்டிரனென்னும் அரசன் உண்டாகப்போகிறான். அவன் உன்னைச் சாபத்தினின்று விடுவிப்பான்' என்றுசொல்லி அந்தர்த்தானமானார். சிறந்தமஹிமையுள்ளஅகஸ்தியரும் இந்திரனுடைய கார்யத்தைச்செய்தபிறகு பிராம்மணர்களால் பூஜிக்கப்பெற்றுத் தமதுஆஸ்ரமத்திற்குச் சென்றார். ராஜனே! நகு

ஷன்தான் உன்னுமேல அந்தச் சாபத்திலிருந்து கரையேற்றப்பட்டானே. ராஜனே! நீ பார்த்திருக்கையில் அவன் பிரம்மலோகத்திற்குச்சென்றானன்றே? அந்தப்ருகுநகுஷனைப் பூமியில்தள்ளினவுடன், பிரம்மலோகத்திற்குச்சென்றுபிரம்மாவினிடம் தெரிவித்தார். பிறகு, பிரம்மதேவர் இந்திரனைவருவித்துத் தேவர்களைநோக்கி, 'தேவர்களே! நான் வரங்கொடுத்ததனால் நகுஷன் உங்களுக்கு அரசனாயிருந்தான் ஆனால்அவர் கோபித்ததனால் அவன் கள்ளப்பட்டுப் பூமியில் விழுந்தான். அரசனில்லாமல் ஜனமானது இருப்பது சரியும் முடியாது. ஆதலால், இந்த இந்திரனை நியமிப்பதும் தேவராஜனாக அபிஷேகம் செய்யுங்கள்' என்றுசொன்னார். ராஜனே! நீ நிபுத்திரனே! இவ்வாறுசொல்லும்பிரம்மதேவருக்கு, 'அப்படியேயாகட்டும்'என்று ஸந்தோஷமாகத் தேவர்கள் மறுமொழிகூறினர். ராஜஸ்ரேஷ்டனே! அந்தஇந்திரன் பகவானைபிரம்மதேவரால்தேவராஜனாக அபிஷேகம் செய்யப்பெற்று முன்போல விளங்கினான். நகுஷனுடைய அக்கிரமத்தினால் இது இவ்வாறு முன்னே நடந்தது. அந்தநகுஷன் பழைய நற்கருமங்களினாலேதான் மறுபடியும் மேன்மைபெற்றான். ஆதலால், கிருஹஸ்தர்கள் மாலைக்காலங்களில் தீபங்கொடுக்கவேண்டும். தீபங் கொடுப்பவன் இறந்தபின் திவ்யஜ்ஞானத்தையடைவான். தீபங் கொடுப்பவர்கள் பூர்ணசந்திரன்போல விளங்கிக்கொண்டிருப்பார்கள். தீபங்கள் எவ்வளவு கண்ணிமைக்கொட்டுக்கள் ஜ்வலிக்கின்றனவோ அவ்வளவுவருஷகாலம் தீபங்கொடுத்தமனிதன் அழகும் பலமுமுள்ளவனாயிருப்பான். இதைக்கேட்பவனும் படிப்பவனுமானபிராம்மணனுக்குத்தமன் பிரம்மலோகத்தையடைவானென்பதில்ஸந்தேகமில்லை" என்றார்.

நூற்றைம்பத்தேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பிராம்மணன்பொருளைக் கவர்வதன் தோஷத்தைப்பற்றி க்ஷத்ரபந்துவுக்கும் ஒருசண்டாளனுக்கும் ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "பரதஸ்ரேஷ்டரே! பிராம்மணசொத்துக்களை அபகரிக்கிறவரும் கொடியவைசெய்கிறவருமான புத்திகெட்டமனிதர் என்னஜன்மத்தை அடைவார்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்ல

"பாரதனே! பிராம்மணர்களின் பொருளைப் பலவந்தமாக எடுத்துக்கொள்வது பாவங்களுள் பெரும்பாவம். அந்தச்சண்டாளர்கள் வம்சத்துடன் இம்மையிலும் மறுமையிலும் அழிந்துபோவார். இந்த விஷயமாக க்ஷத்ரபந்துவென்னும் அரசனுக்கும் ஒருசண்டாளனுக்கும்நடந்தஸம்பாஷணையாகிய புராதனசரித்திரத்தைக்கூறுகின்றனர். அவ்வரசன், 'ஓ! சண்டாளனே! மிகப்பெரியவனாயிருக்கிறாய். சிறுவனைப்போல நடக்கிறாய். நாய்களுதைகளின் தூளிகளைப்பூசிக் கொள்ளுகிற நீ ஏன் பசுக்களுக்குப் பயப்படுகிறாய்? சண்டாளனுக்கு இகழப்பட்டசெய்கை ஸாதுக்களால்விதிக்கப்படுகிறது. கோதூளியினால் கெடுக்கப்பட்டஅங்கத்தை ஜலத்தினால் கழுவுகிறாய். ஏன்?' என்றுகேட்க, சண்டாளன் சொல்லலானான். 'ராஜனே! முற்காலத்தில் ஒருபிராம்மணனுடையபசுக்கள் போகையில் அவற்றின் [1]தூளி படுவதனால் ஸோமமென்னும் கொடியைக் கெடுத்துவிட்டது. அந்த ஸோமத்தின்ரஸத்தைப் பிராம்மணர்கள் குடித்தனர். அரசனுடைய் வேலைக்காரர்களின் தூளியினாலும் அந்தஸோமம் கெடுக்கப்பட்டது. யாகத்தில் அந்தஸோமத்தைக்குடித்ததனால்பிராம்மணர்களனைவரும் உடனே நரகம்புகுந்தனர். அந்தப்பிராம்மணஸொத்தைப் புசித்ததனால் யாகதீக்ஷைசெய்துகொண்டஅவ்வரசனும் ரித்விக்குக்களெல்லாரோடும் விரைவில் நரகம்சேர்ந்தான். அவ்விடத்தில் பால்நெய் தயிர்களைக்குடித்த பிராம்மணர்களும் அரசர்களும் மற்றுமுள்ள மனிதரனைவரும் நரகம்சேர்ந்தனர். அந்தப்பசுக்கள் பாலினால் புத்திரர்களையும் பேரர்களையும் போக்கி அவர்களையும் கெடுத்தன. ராஜனே! நான் ஜிதேந்திரியனான பிரம்மசாரியாகி நல்லொழுக்கத்தோடு அந்தப்பசுக்களையும் அந்தத்தம்பதிகளையும் பார்த்துக்கொண்டு அங்கேயிருந்தேன். ராஜனே! என்னுடையபிக்ஷையானது அந்தப்பசுக்களின் தூளியினால் கெடுக்கப்பட்டிருந்தது. ராஜனே! அந்தப்பிக்ஷையைச்சாப்பிட்டு அதனால் நான் சண்டாளனானேன். பிராம்மணஸொத்தையெடுத்துக்கொண்டஅவ்வரசன் தாழ்ந்தகதியை அடைந்தான். ஆதலால், ஒருகாலமும் பிராம்மணன்ஸொத்தானதை யும் எடுக்கலாகாது; பார்க்கலாகாது; பிறர்எடுப்பதை ஒப்புக் கொள்ளலாகாது. அதைஎடுப்பதற்காக ஓர்உபாயமும் செய்யலாகாது. பிராம்மணன்பொருளாகிய பசுக்களின் தூளியினால்கெடுக்கப் பட்ட பிக்ஷையைப்புசித்து நான் எப்படியானேன்! பார்! ஆதலால், நன்மைகத்தெரிந்தமனிதன் ஸோமலதையை விற்கக்கூடாது. எனை

1 "'ரஜஸ்' என்பது மூலம்; 'பாலின்தூளி' என்பது பழையஉரை.

னில், அது பிராம்மணர்களுக்குப் பொதுவாயுள்ள சிறந்ததனம். இவ் வுலகத்தில் புத்திமான்கள் ஸோமம்விற்பதை நிந்திக்கின்றனர். ஐயா! ஸோமத்தைவிலைக்குவாங்குகிறவர் விற்கிறவரனைவரும் யமனை யடைந்து ரௌரவநரகத்திற்குப் போகின்றனர். கோதூளியிலுல் கெடுக்கப்பட்டஸோமத்தை யாககாரியத்தை முன்னிட்டு விற்பவன் வட்டியிலுல்ஜீவிக்கும்பிராம்மணனுகப்பிறந்து விரைவில் கெடுவான். மூன்றுவருஷகாலம் விஷ்டையைத்தின்றுகொண்டு நரகத்திலிருப் பான். பிரம்மஸொத்தையெடுத்தவன் நரகங்களையும் துயரங்களையும் அனுபவித்து மலத்திலுள்ள கிருமியாகப்பிறந்து நாய்விஷ்டையைத் தின்பான். நாயுடன்திரிவதையும் அதிககர்வத்தையும் ஸ்நேகிதன் மனைவியிடம்தவறுதலையும் தர்மதேவதை தராசில்நிறுத்தான். அதிக கர்வம் நிறை அதிகமாயிருந்தது. அதிககர்வத்திலுல் நான் சக்தி யற்று ஓய்ந்து நிறம்மாறி வெளுத்து இளைத்துப்போனதையும் பாவ ஜன்மத்தையடைந்திருப்பதையும் பார். ஐயா! பிரபுவே! நான் முன்ஜன்மத்தில் சாஸ்திரஜ்ஞானத்திலும் ஆத்மஜ்ஞானத்திலும் கரைகண்டவனுகச் செல்வம்நிரம்பினபெருங்குலத்தில் பிறந்தேன். அப்போது, இந்தக்குற்றங்களையறிந்திருந்தும் கர்வத்திலுல் எப் போதும் ஆவேசங்கொண்டு பிராணிகளின் முதுகுமாம்சத்தைத் தின் றேன். நான் வனத்தில் தூரத்திற்செல்லும்போதே வனத்திலுள்ள வர்களெல்லாருக்கும் என்னைத் தெரியும். தனத்திலுல்கர்வமடைந்து, யோக்கியர்களான பிராம்மணர்களை அவமதிக்கக்கருதி இந்நிலைமையை அடைந்தேன். காலத்தின்மாறுதலைப் பார். பசுக்களின்தூளிபட்ட வுடன், ஆடையின்தலைப்புத்தீப்பற்றியெரிந்தவன்போலும் குளவி களால் கொட்டப்பட்டவன்போலும் மிக்கவேகமாக நான்ஓடுவதைப் பார். பிராம்மணஜாதியில் புத்திமான்களானகிருஹஸ்தர்கள்வேதாத்ய யனங்களாலும் பலவகைத்தானங்களாலும் பெரும்பாவத்தைப் போக் கிக்கொள்ளுகின்றனர். ராஜனே! பாவம்செய்தபிராம்மணனும் எல் லாப்பற்றுக்களையும்விட்டு ஸந்யாஸாச்ரமத்திலிருந்தால்அவனை வேத ங்களே கரையேற்றுகின்றன. க்ஷத்திரியஸ்ரேஷ்டனே! நானோ பாப ஜாதியிற்பிறந்தேன்; எப்படிவிடுபடுவேனென்னும் நிச்சயத்தை அடையவில்லை. ராஜனே! ஏதோ முன்செய்தநல்வினையால் எனக்குப் பூர்வஜன்மத்தின்நினைவு இருக்கிறது. அதனுலேதான் பாபத்தி னின்றுவிடுபடக் கருதுகிறேன். சிறந்தஸாதுவே! . இந்தச்சண்டாள ஜன்மத்தினின்றும் எப்படி விடுபடுவேனென்று உன்னையடைந்து கேட்கிறேன். எனக்கு இந்தச்சந்தேகத்தை நீ தெரிவிப்பாயாக'

என்றான். அதற்கு அரசன், 'சண்டாளனே! நீ எதனால் இந்தஜன்மம் விடலாமென்பதைத் தெரிந்துகொள். பிராம்மணப்பிரயோஜனத்திற்காக உயிரைவிட்டால் நீ நற்கதிபெறலாம். யுத்தமென்னும் அக்நியில் பிராம்மணனுக்காகஉயிரைவிட்டுக் கழுகுநரிமுதலிய மாம்ஸந்தின்னும்ஜந்துக்களுக்குத் தேகத்தைக்கொடுத்தபின் உனக்கு விடுதலுண்டாகும். வேறுவகையில் நீ விடுபடத்தகாதவன்' என்று சொன்னான். வீரனே! அப்போது, அந்தக்ஷத்ரபந்துவினால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்தச்சண்டாளன் பிராம்மணன்பொருளைக் காப்பதற்காகப் போர்த்தலையில் உயிரைவிட்டு நற்கதியை அடைந்தான். புத்திரனே! பரதஸ்ரேஷ்டனே! சிறந்தகைகளையுடையவனே! ஆதலால், நீயும் உனக்கு நிலையானகதியை விரும்பினால் பிராம்மணர் பொருளைக் காப்பாற்றவேண்டும்'' என்றார்.

நூற்றைம்பத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(புண்யலோகங்கள் பலவென்பதைப்பற்றிக் கௌதமருக்கும் இந்திரனுக்கும் ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! புண்ணியம்செய்தவர்களுக்கு ஸ்வர்க்கலோகமென்னும்மேலுலகம் ஒன்றா? அல்லது, பலவா? எல்லாவற்றையும் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"குந்திபுத்திரனே! மனிதர்கள் தம்தம்கர்மங்களின்படி வெவ்வேறு உலகங்களை அடைகின்றனர். புண்ணியம்செய்தவர்கள் புண்ணியலோகங்களையும் பாவம்செய்தவர்கள் பாபலோகங்களையும் அடைகிறார்கள். அப்பா! இந்தவிஷயமாகக் கௌதமரென்னும்முனிவருக்கும் இந்திரனுக்கும் நடந்தஸம்பாஷணைமாகிய ஒருபுராதனசரித்ரத்தைக் கூறுகின்றனர். இனியவரும் மனத்தையும் ஐம்புலன்களையும் அடக்கித் தவம்செய்துகொண்டிருந்தவரும் சாந்தருமான கௌதமரென்னும்ஒருபிராம்மணர், பெரியவனத்தில் தாயில்லாமல்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒருயானைக்கன்றைக்கண்டு அருள்கூர்ந்து அதை வளர்த்தார். அது நெடுநாளானபின் மிக்கவலிமையுள்ளதும் பெரியதுமாயிற்று. மிக்கஉயரமும்பருமனுமுள்ளதும் எல்லாத்துவாரங்களிலும் மதஜலம் பெருகுவதும் கௌதமரையடைந்ததுமான அந்தயானை

யைத் தேவேந்திரன் திருதராஷ்டிரனென்னும் அரசன்வடிவமாக வந்து கொண்டுபோனன். பெருந்தவமுள்ளவரும் எடுத்தவிரதத்தை விடாதவருமானகௌதமர் அந்தயானையைக் கொண்டுபோவதைக் கண்டு திருதராஷ்டிரனென்னும்அரசனைநோக்கி, 'ஓ! திருதராஷ்டிரனே! நன்றிகெட்டவனே! நான்கஷ்டப்பட்டுவளர்த்த என்புத்திரனை இந்தயானையைக் கொண்டுபோகாதே. யோக்கியர்களின் ஸ்நேகம் [1]ஸப்தபதம்என்றுசொல்லுகின்றனர். அரசனே! இந்தயானைக்காக மித்திரத்துரோகம் உன்னையண்டவேண்டாம். ராஜனே! விறகுகளையும் ஜலத்தையும்கொடுப்பதும் யாருமில்லாதபோது என் ஆஸ்ரமத்திற்குக்காவலாயிருப்பதும் ஆசாரியனை என்னிடத்தில்சிக்ஷை பெற்றதும் குருபணிவிடையைச்சரியாகநடத்துவதும் சிறந்ததும் அடங்கினதும் நன்றியறிந்ததும் எப்போதும் என்னல்விரும்பப்படுவதுமான யானையை நான்கதறும்படி நீகொண்டுபோகலாகாது' என்று சொன்னர்.

அதற்குத் திருதராஷ்டிரன், 'ஓ! மகரிஷியே! உமக்கு ஆயிரம் பசுக்களையும் ஐந்நூறுபொன்னுணயங்களையும் இன்னும்அநேகவிதப் பொருள்களையும் கொடுப்பேன். பிராம்மணருக்கு யானையாலாக வேண்டியதென்ன?' என்றுகேட்டான். கௌதமர், 'ராஜனே! மனிதர்க்கதிபதியே! பசுக்களும் காசுமாலைகளணிந்ததாவிகளும் பல வகைரத்தினங்களும் மற்றும்பலவகைப் பொருள்களும் உனக்கேயிருக்கட்டும். பிராம்மணனுக்குத் தனத்தினலாவதென்ன?' என்று சொன்னர். திருதராஷ்டிரன், 'பிராம்மணரே! பிராம்மணர்களுக்கு யானைகளால் ஆகவேண்டியதொன்றுமில்லை. யானைக்கூட்டங்கள் அரசர்களுக்கேஉரியவை. எனது வாகனமாகிய சிறந்தயானையைக் கொண்டுபோவதனல் எனக்குப் பாவமில்லை. கௌதமரே! இதில் ஆசைவைக்காதீர்' என்றுசொன்னன். கௌதமர், 'புண்ணியம் செய்தவன்இறந்தபின் ஸந்தோஷப்படுகிறஇடமும் பாவம்செய்தவன் இறந்தபின் துயரப்படுகிற இடமுமாகிய மஹாத்மாவானயமனுடைய வீட்டில் நான் உன்னிடமிருந்து யானையைத் திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'சிரத்தையில்லாமல் கிரியைகளைவிட்டு நாஸ்திகர்களாய்ப் பாவத்தில் மனம்செலுத்தி விஷயங்களில் பிரவிருத்திப்பவர்தாம் யமபாதைகளை அனுபவிப்பார். திருதராஷ்டிரனே அங்கேசெல்லான்' என்றுசொன்னன். கௌதமர்,

---

[1] ஏழுசொற்கள்பேசுவதனல் உண்டாவது; ஏழடிசேர்ந்துநடப்பதனல் என்றும் கொள்ளலாம்.

'எங்கே ஜனங்கள் ஸத்தியமேசொல்வதன்றிப் பொய்சொல்வதில்லையோ, பலமில்லாதவர்களைப் பலசாலிகளானயமதூதர் கொல்லுகிற இடமாகிய ஸம்யமினிஎன்னும் அந்த யமபட்டணமிருக்கிறது. அதில் நான் யானையை உன்னிடம் திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'மகரிஷியே! மூத்தஸகோதரியையும் தந்தையையும் தாயையும் ஆசாரியர்களையும் அவமதித்துவப்பவர் எவரோ அவர்களுக்குத்தான் அந்தலோகம். திருதராஷ்டிரனே அங்கே போகிறவனல்லன்' என்றுசொன்னன். கௌதமர், 'மிகுந்தபாக்கியமுள்ளதும் கந்தர்வர்களாலும் யக்ஷர்களாலும் அப்ஸரஸ்களாலும் அடையப்பட்டதும் ஸுகத்திற்குரியவர்மட்டும் பிரவேசிக்கத்தக்கதுமான மந்தாகினிஎன்னும் குபேரநகரமிருக்கிறது. அங்கே உன்னிடம் யானையைத் திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'அதிதிபூஜையை விரதமாகக்கொண்டவரும் சிறந்த தவமுள்ளவரும் பிராம்மணர்களுக்குக் கிருகதானம்செய்தவரும் தம்மைச்சார்ந்தவர்களுக்கு அன்னம்போட்டு மிச்சத்தைஉண்பவருமாகியஜனங்கள் எவர்களோ அவர்கள் மந்தாகினிநகரத்திற்குஅலங்காரமாயன்றே இருக்கின்றனர்?' என்றுசொன்னன். கௌதமர், 'மேருமலைமேல் நன்றுகப்புஷ்பித்ததும் கின்னரப்பெண்களின் ஸங்கீதம்எப்போதுமிருப்பதும் ஸுதர்சனமென்னும் பெரியகாவல் மரமிருப்பதுமாகிய ஓர் அழகானவனம் விளங்குகிறதே, அவ்விடத்தில் உன்னிடம் நான் யானையைத் திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டின், 'மகரிஷியே! சாந்தரும் ஸத்யத்தை இயற்கையாக வுடையவரும் கல்விகேள்விமிகுந்தவரும் எல்லாப்பிராணிகளுக்கும்இனியவரும் இதிஹாஸபுராணங்களைப்படிப்பவரும் சுவையுள்ளவற்றைப் பிராம்மணர்களிடத்தில் [1]ஹோமம்செய்பவருமாகியபிராம்மணர்களுக்கு அந்தலோகம். திருதராஷ்டிரனேஅங்கே செல்லான். இன்னும் உமக்குத்தெரிந்தஇடம் எதுஇருக்கிறதோ அதைச்சொல்லும். நான்இதோ விரைவாகவன்றே செல்லுகிறேன்?' என்றுசொன்னன். கௌதமர், 'நிரம்பப்புஷ்பங்களுடையதும் கின்னரஅரசர்களால்அடையப்பட்டதும்நாரதரால்விரும்பப்படுவதுமாகிய கந்தர்வர்களும் அப்ஸரஸ்களும்இருக்குமிடமுமாகிய நந்தனவனமிருக்கிறதே, அங்கே நான் உன்னிடம் யானையைத் திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'ஓ! மகரிஷியே! ஆட்டத்திலும் பாட்டிலும்தேர்ச்சியுள்ளஎந்தஜனங்கள் தேவர்களைப்போல எப்போ

1 போஜனமளிப்பவர்.

தும் ஸுகத்தைக்கருதித் திரிகின்றனரோ அவர்களுக்கு அந்தலோகம். திருதராஷ்டிரனேஅங்கேபோகிறவனல்லன்'என்றுசொன்னன். கௌதமர், 'ராஜனே! எங்கே அக்நியிலும் ஜலத்திலும் மலையிலும் பிறந்தபிராம்மணர்கள் தேவர்களுடன் மகிழ்ந்துவஸிக்கின்றனரோ, எங்கேஇந்திரன்வேண்டினவற்றையெல்லாம் பொழிகிறானோ, எங்கே பெண்கள்விருப்பப்படி ஸஞ்சரித்துக்கொண்டிருக்கின்றனரோ, எங்கே பெண்களுக்கும் ஆண்களுக்கும் பொறுமையில்லையோ அந்தஉத்தரகுருதேசங்கள் அழகாகவிளங்குகின்றன. அங்கே நான்உன்னிடம் யானையைத்திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர்.திருதராஷ்டிரன், 'மகரிஷியே! எல்லாப்பிராணிகளிடத்திலும்பற்றில்லாதவரும் மாமிசம் தின்னாதவரும் தண்டிப்பதைவிட்டவரும் ஸ்தாவரங்களையும் ஜங்கமங்களையும் துன்பம்செய்யாமல்ஸஞ்சரிப்பவரும் எல்லாப்பிராணிகளையும்தாமாகநினைப்பவரும் எதையும்விரும்பாதவரும் மமகாரமில்லாதவரும் பெண்ணாசையற்றவரும் லாபஅஷ்டங்களையும் இகழ்ச்சிபுகழ்ச்சிகளையும் ஸமமாகநினைப்பவரும் எவரோஅவர்களுக்கு அந்தலோகம். திருதராஷ்டிரனேவெனில், அங்கேபோகிறவனல்லன்' என்றுசொன்னன். கௌதமர், 'மகாத்மாவும் அரசனுமாகிய சந்திரனுடைய லோகத்தில் நிக்கநினியமணமுள்ளவையும் ஆசையும்துயாமுமற்றவையுமான அநேகஅழியாதலோகங்கள் விளங்குகின்றன. அங்கே நான் உன்னிடம் யானையைத் திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'மகரிஷியே! எவர்கள் தானமே இயற்கையாயுள்ளவரும் ஒருகாலமும்வாங்காதவரும் பிறர்பொருளையெடுக்காதவருமானவர்களோ, எவர்களுக்குத் தகுந்தபாத்திரத்தில்கொடுக்கத்தகாதது ஒன்றுமில்லையோ, எவர்கள் எல்லா அதிதிகளையும்பூஜித்துநல்லஸந்ததியுடையவர்களோ, எவர்கள் சக்தியுள்ளவர்களாயிருந்தும் பிறருக்கு எதிர்பேசாமல்பொறுத்திருப்பவர்களோ, எவர்கள் எப்போதும்நல்லொழுக்கத்தோடிருப்பவர்களோ அவர்களுக்கு அந்தலோகம். திருதராஷ்டிரனேவெனில் அங்கேசெல்லான்' என்றுசொன்னன். கௌதமர்,'அதற்கும்மேல் ராஜஸகுணமும் தாமஸகுணமும்துயரமும் மற்றவையும் மகாத்மாவான சூரியபகவானுடைய ஸ்தானங்களுமாகிய அழியாதலோகங்கள் விளங்குகின்றன. அங்கே நான் உன்னிடமிருந்து யானையைத்திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'மகரிஷியே! விடாமல்வேதாத்யயனமும் குருபணிவிடையும் செய்பவர்களும் சிறந்தவரும் நியமமுமுள்ளவர்களும் ஸத்தியர்தவறுதவர்களும் ஆசாரியர்களுக்குமாறுகப் பேசாதவர்களும் ஆசாரி

யர்களின்காரியங்களில் ஏவப்படாமலே நித்தியம்முயற்சியுள்ளவர்களும் பரிசுத்தர்களும் ஸத்தியத்திலிருப்பவர்களும் வாக்கைக்கட்டினவர்களும் வேதந்தெரிந்தவர்களும் பிரம்மஞானிகளுமான மகாத்மாக்களுக்கு அந்தலோகம் நிணைக்கப்படுகிறது. திருதராஷ்டிரனே வெனின் அங்கேசெல்லான்' என்றுசொன்னன். கௌதமர், 'அதற்குமேல் மகாத்மாவானவருணராஜனுடையஸ்தானத்தில் நல்லவாஸனையுள்ளவையும் ஆசையும்விசனமுமற்றவையுமானநிலைபெற்றலோகங்கள் விளங்குகின்றன. நான் உன்னிடமிருந்து அங்கே யானையைத் திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'மூன்று வருஷம் நிரத்தையுடன் சாஸ்திரப்படி சாதுர்மாஸ்யயாகங்களையும் ஆயிரம்இஷ்டிகளையும் நித்தியாக்நிஹோத்திரங்களையும்செய்துகொண்டும் தம்மனைவிகளோடு சாஸ்திரங்களில்சொல்லப்பட்ட மார்க்கத்திலிருந்து தர்மங்களைச்செய்துகொண்டும் தர்மத்திலேயே மனத்துடன் தர்மமார்க்கத்தை நிலைநிறுத்திக்கொண்டுமிருக்கும் மகாத்மாக்களான பிராம்மணர்களுக்கு அந்தலோகம். திருதராஷ்டிரனே வெனின் அங்கேசெல்லான்' என்றுசொன்னன். கௌதமர், 'ராஜனே! இந்திரனுடைய லோகங்கள் ஆசையும் துயரமுமற்றவையும் மனிதர்களால்விரும்பப்பட்டும் நிடைக்காதவையுமாயிருக்கின்றன. பெருஞ்சக்தியுள்ள அந்தஇந்திரனுடையநிருகத்தில் நான் இந்தயானையைத் திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'நூறுவருஷம்ஜீவித்திருப்பவனும் சூரனும் வேதாத்யயனம்செய்துகொண்டிருப்பவனும் தவருமல்யாகஞ்செய்பவனுமாகிய இவரனைவரும் இந்திரலோகத்திற்குச் செல்வர். திருதராஷ்டிரனேவெனின் அங்கேசெல்லான்' என்றுசொன்னன். கௌதமர், 'ஸ்வர்க்கத்திற்கும்மேலேஎல்லாம்நிரம்பினவையும் துயரமற்றவையும்எல்லாஉலகங்களிலும் பயமற்றவர்களானஞானிகள் சேரத்தக்கவையுமான பிராஜாபத்தியங்களென்னும் பெரியலோகங்கள் இருக்கின்றன. அங்கே நான் உன்னிடம் யானையைத் திரும்பப்பெறுவேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'ராஜஸூயயாகத்தில் பட்டாபிஷேகஞ்செய்துகொண்டவரும் தர்மத்தில் மனம்வைத்து ஜனங்களைக்காப்பவரும் அஸ்வமேதயாகம்செய்து அவப்ருதஸ்நானம்செய்தவருமானஅரசர்களுக்கு அவ்வுலகங்கள் உரியவை. திருதராஷ்டிரன் அங்கேபோகான்' என்றுசொன்னன். கௌதமர், 'அவற்றிற்குமேல், மிக்கநல்லமணமுள்ளவையும் ஆசையும்விசனமும்அற்றவையும்அழியாதவையுமானஉலகங்கள் எதில் விளங்குகின்றனவோ அடைதற்கரியதும்

வெல்லமுடியாததுமான அந்தக்கோலாகலத்தில் நான் யாஜனை மீட்டுக்கொள்வேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'ஆயிரமுள்ளவன் நாறுபசுக்களையும் நாறுள்ளவன் பத்துப்பசுக்களையும் பத்துள்ளவனும் ஐந்துள்ளவனும் ஒவ்வொருபசுவையும் தன்சக்திக்குத்தக்கபடி தானம்செய்யும்மஹாத்மாவும் பிரம்மசாரிவ்ரதத்தோடேயே ஆயுளைக்கழித்து வேதவாக்கைக்காப்பாற்றும்பிராம்மணர்களும் சிரத்தையுடன்தீர்த்தயாத்திரைசெய்கிறவனும் விமானங்களேறி அவ்வுலகங்களில் மகிழ்ந்திருக்கின்றனர். பிரபாஸதீர்த்தம், மானஸஸரோவரம், புஷ்கரதீர்த்தம், மகாஸரஸ், புண்யமானகோமிசதீர்த்தம், பாஹுதை, கரதோயை, கயை,ஹயசிரஸ், விபாசை, ஸ்தூலபாலுகை, தூஷ்ணீங்கங்கை, சனேர்க்கங்கை, மஹாஹ்ரதம், கோமதி, கௌசிகி, பம்பை, லரஸ்வதி, த்ரஷத்வதி, யமுனைஎன்னும்தீர்த்தங்களுக்கு உறுதியான நியமத்துடன் யாத்திரைசெய்யும்மஹாத்மாக்கள் எவரோ அவர்கள் தேவதேகங்களையெடுத்துத் தேவலோகத்தியமாலிகளையணிந்து உயர்ந்தசந்தனம்பூசிக்கொண்டு ஸுகமாக அந்தலோகத்திற்குப் போகின்றனர். திருதராஷ்டிரன் அங்கேசெல்லான்' என்றுசொன்னன். கௌதமர், 'குளிர்பயமும் உஷ்ணபயமும் பசிதாகங்களும் களைப்பும் ஸுகதுக்கங்களும் நண்பனும் பகைவனும் சுற்றத்தாரும் மற்றவரும் மூப்பும் மரணமும் புண்ணியபாபங்களும் ரஜோகுணமும் சிறிதுமில்லாமல் அறிவும் ஸத்வகுணமும்நிரம்பிச்செழித்த பரிசுத்தமான பிரம்மலோகத்தில் யாஜனையை மீட்டுக்கொள்வேன்' என்றுசொன்னர். திருதராஷ்டிரன், 'மகரிஷியே! பற்றுக்களெல்லாம்விட்டவரும் சுத்தமனமுள்ளவரும் நியமந்தவறுதவரும் பரமாத்மாவினிடம்பக்திநிலை பெற்றவரும் ஸாத்விகருமானயோகிகள் ஸ்வர்க்கத்தையடைந்து அங்கிருந்து புண்ணியமான பிரம்மலோகத்தை அடைகின்றனர். திருதராஷ்டிரனே நீர் அங்கேகானமுடியாது' என்றுசொன்னன். கௌதமர், 'ரதந்தரம் ப்ருஹத் என்னும்ஸாமங்கள் எங்கே பாடப்படுகின்றனவோ, எங்கே யாகவேதிகை பரிசுத்தர்களானஜனங்களினால் சூழப்பெற்றிருக்கிறதோ, எங்கே ஸோமபானம்செய்தவன் இந்திரன், சூரியன், சந்திரன்முதலானதேவர்களோடுஸஞ்சரிக்கிறானோ அங்கே நான் உன்னிடம் யாஜனையை மீட்டுக்கொள்வேன். எல்லாஉலகங்களையும்தாண்டிப்போகும்உன்னைவிருத்திராஸுரனைக்கொன்றதேவேந்திரனென்று நான் அறிகிறேன். நான் மனத்தினுடையஆவலினால்உன்னிடத்தில் ஏதாவதுசொற்குற்றம் செய்யாமலிருக்கிறேனே?' என்றுசொன்னர். இந்திரன், 'நான் இந்திரன்; யாஜனையைப்பற்றினபேச்

சில பிரஜைகள் உலகங்களுக்குப்போகும்மார்க்கத்தையெல்லாம் கடந்து வந்தேன். ஆதலால், வணங்கினஎனக்கு நீர் கட்டளையிடும். நீர் சொன்னவற்றையெல்லாம் செய்வேன்' என்றுசொன்னன். கௌதமர், 'தேவேந்திரனே! எனக்குப்பிள்ளையும் குட்டியாயிருந்து அறுபதுவருஷமானதும் எனக்குஅன்புள்ளதும் நான்காட்டில்வஸிக்கையில் எனக்குத்துணையாயிருந்ததுமாகிய இந்தவெள்ளையானையையே எனக்குக்கொடி' என்றுகேட்டார். இந்திரன், 'பிராம்மணரேத்தமரே! இந்தயானை உமதுபுத்திரன்தான்; உம்மைப்பார்த்து மோக்கின்றது; துதிக்கையினால் உமதுபாதங்களை மோக்கின்றது. என்னுடைய நன்மையை நினையும். உமக்கு நமஸ்காரம்' என்றுசொன்னன். கௌதமர், 'தேவேந்திரனே! எக்காலமும் உனக்கு க்ஷேமத்தையேநினைக்கிறேன். எப்போதும் உனக்குப் பூஜையைச்செய்கிறேன். சக்ரனே! எனக்கும் நீ க்ஷேமத்தைக்கொடி. உன்னால்கொடுக்கப்பட்டயானையை வாங்கிக்கொள்ளுகிறேன்' என்றுசொன்னர். இந்திரன், 'நிறைந்த ஞானமுள்ளவர்களும் ஸத்தியமுள்ளவர்களுமான எந்தமஹாத்மாக்களின் உள்ளங்களில் வேதங்கள் புதையல்களாக வைக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்களில் ஒருமஹாத்மாவான உம்மால் நான் அறியப்பட்டேன். ஆதலால், இப்போது நான் உம்மிடத்தில் அன்புள்ளவனாகிறேன். ஆ! ஆ! ப்ராம்மணரே! உமதுபுத்திரனையானையுடன் சீக்கிரம்வாரும். சீக்கிரமாகவும் விளம்பமாகவும் சிறந்தலோகங்களை அடையத்தக்கவர் நீர்தாம்' என்றுசொன்னன். இந்திரன், புத்திரனாகியயானையுடன் கௌதமரை முன்னிட்டுக்கொண்டு, யாரும்போகமுடியாத ஸ்வர்க்கத்தில் ஸாதுக்களுடன் ஏறினன். ஜிதேந்திரியனாகி இந்தச்சரித்திரத்தை நித்தியமாகக்கேட்பவனும் படிப்பவனும் கௌதமரென்னும் ப்ராம்மணர்போலவே ப்ரம்மலோகத்தையடைவர்" என்றார்.

நூற்றைம்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உபவாஸத்தின்சிறப்பையும் ப்ராம்மணவாக்கின் சிறப்பையும்பற்றி, ப்ரம்மதேவருக்கும் பகீரதனுக்கும் ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "பலவகைத்தானங்களையும் சாந்தியையும் ஸத்தியத்தையும் அஹிம்ஸையையும் தன்மனைவியோடு திருப்தியாயிருப்பதையும் தானங்களின்பலன்களையும்பற்றி நீர் சொன்னீர். தவத்தின்

வன்மையைவிடவேறுஎந்தவன்மை பிதாமஹருக்குத்தெரிந்தது? தவத்திற்குமேலாக எதை நீர் நினைக்கிறீர்? அதை எங்களுக்கு உரைக்கக் கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"யுதிஷ்டிரனே! தவமுள்ளவரையில்தான் உலகமிருக்கும். குந்திபுத்திரனே! உபவாஸத்திற்குமேற்பட்டதவம் இல்லைஎன்பது என் கருத்து. இந்தவிஷயத்தில் பகீரதனுக்கும் மகாத்மாவானபிரம்மதேவருக்கும்நடந்த ஸம்பாஷணையாகிய ஒருபழைய சரித்திரத்தைக் கூறுகின்றனர். அதைச் சொல்லுகிறேன். பாரதனே! அந்தப்பகீரதன் தேவலோகத்தையும் கோலோகத்தையும் ரிஷிலோகத்தையும் கடந்து சென்றுனென்று கேள்வி. ராஜனே! பிரம்மதேவர் அந்தப்பகீரதனைக்கண்டு, 'பகீரதா! அடையமுடியாதஇந்தஉலகத்திற்கு நீவந்தது எப்படி? பகீரதனே! தவம்செய்யாமல் தேவர்களும் மனிதர்களும் கந்தர்வர்களும் இங்கே வருவதில்லையே? நீ எப்படிவந்தாய்?' என்று கேட்டார். பகீரதன், 'ஓ! வித்வானே! ப்ராம்மணபூஜையை எப்போதும் விரதமாகக்கொண்டு நூறுயிரம்ப்ராம்மணர்களுக்கும் தேவர்களுக்கும் கலங்காமல் அன்னமளித்தேன். அதற்காக நான் இங்கே வரவில்லை. ஏகராத்ரமென்னும் யாகங்கள்பத்தையும் பஞ்சராத்ரமென்னும்யாகங்கள்பத்தையும் ஏகாதசராத்ரயாகங்கள்பதிஞென்றையும் ஜோதிஷ்டோமம்நூற்றையும் நான் செய்தேன். அவற்றிற்காகவும் நான் இங்கேவரவில்லை. நூறுவருஷகாலம் தவம்செய்துகொண்டு கங்கைக்கரையில் நித்தியமாக வாஸம்செய்தேன். அங்கே, ஆயிரம் கோவேறுகழுதைகளையும் கன்னிகைகளையும் தானம்செய்தேன். அதனலும் இங்கேவரவில்லை. புஷ்கரக்ஷேத்திரத்தில் நூறுயிரம்குதிரைகளையும் இரண்டிலக்ஷம்கோக்களையும் நூற்றுக்கணக்கும்ஆயிரக்கணக்குமான ப்ராம்மணர்களுக்குக் கொடுத்தேன். பொன்மயமானசந்திரனென்னும்ஆபரணத்தைச்சிரஸில்தரித்த ஆயிரம்சிறந்தகன்னிகைகளையும் சிறந்தபொன்னுபரணங்கள்பூண்டஅறுபதினுயிரம்கன்னிகைகளையும் கொடுத்தேன்.அதனலும் வரவில்லை. லோகநாதரே! கோஸஹஸ்ரமென்னும்யாகங்களில் ஒவ்வொருவருக்கும்பத்துப்பத்துப்பசுக்களாகஒத்தகன்றுள்ளவையும் நிரம்பப்பாலுள்ளவையுமான நூறுகோடிபசுக்களைக் கறக்கிறபொன்பாத்திரங்கள் வெண்கலப்பாத்திரங்களுடன் தானம்செய்தேன். அதனலும் வரவில்லை. பிரம்மாவே! அப்தோர்யாமயாகங்களில் நியமத்துடன் ஒவ்வொருவருக்குப் பத்துப்பத்துப் பசுக்கள்விகிதமாக மிகுதியாகப்பால்கறப்பவையும் செங்நிறமுள்ளவையுமான தலையீற்றுப்பசுக்கள் அநேகம்நூறுகளையும் நூறுயிரங்களையும்

அதற்குப்பத்துமடங்கு (அதாவது பத்துலக்ஷங்களையும்) கொடித்தேன். அதனாலும் நான் இங்கேவரவில்லை. பாஹ்லியென்னும்தேசத்திற்பிறந்தவையும் பொன்மாலைகளணிந்தவையுமான பதினாயிரம் வெள்ளைக்குதிரைகளைக் கொடித்தேன். அதனாலும் வரவில்லை. பிரம்மாவே! ஒவ்வொருயாகத்திலும் தினந்தோறும் பத்துக்கோடிகளும் எட்டுக்கோடிகளுமாகப் பொன்களைக் கொடித்தேன். அதற்காகவும் நான் வரவில்லை. பிரம்மாவே! பொன்மாலைகளணிந்தவையும் காதுகறுத்தவையும் பச்சைநிறமுள்ளவையுமான குதிரைகள் பதினேழு கோடிகளைக் கொடித்தேன். கலப்பைக்கால்போன்றதந்தங்களுள்ளவையும் பெரியதேகங்களுள்ளவையும் பத்மகங்களென்னும்வெள்ளைப் பொட்டுக்களுள்ளவையுமான பதினேழாயிரம்யானைகளைப் பொன்மாலைகள்பூட்டிக் கொடித்தேன். தேவஸ்ரேஷ்டரே! உயர்ந்தபொன்னாபரணங்களினால் அலங்கரிக்கப்பட்டவையும் முழுதும்பொன்னால் செய்யப்பட்டவையும் அலங்கரிக்கப்பட்ட குதிரைகள்பூட்டப்பட்டவையுமான பதினேழாயிரந்தேர்களைக் கொடித்தேன். தக்ஷிணைகளைச் சேர்ந்தவைகளாக வேதங்களிற்சொல்லப்பட்டவை இன்னும்என்னவுண்டோ அவற்றையெல்லாம் பத்துவாஜபேயயாகங்களிற்கொடித்தேன். பிரம்மதேவரே! யாகத்தினாலும் பராக்கிரமத்தினாலும் இந்திரனுக்குச்சமமானமகிமையுள்ளவர்களும் கழுத்துக்களிற்பொன்மாலைஅணிந்தவர்களுமாகிய ராஜகுமாரர்கள்ஆயிரவரை யுத்தத்தில்ஜயித்து நிரம்பினதிரவியங்களோடு எட்டுராஜஸூயயாகங்களைச்செய்து அவற்றில் அவ்வரசர்களைத் [1]தக்ஷிணைகளாகக்கொடித்தேன். அதனாலும் நான்வரவில்லை. லோகநாதரே! கங்கையின்பிரவாகம் எதுவரையில்இருக்கிறதோ அதுவரையிலுள்ளதேசம் நான்கொடித்ததக்ஷிணைகளினால் மறைந்திருந்தது. அதற்காகவும் நான்வரவில்லை. ஒவ்வொன்றும்நூறுபொன்களால்அலங்கரிக்கப்பட்டகுதிரைகள்இரண்டாயிரத்தையும் சிறந்தகிராமங்கள் நூற்றையும் ஒவ்வொருநிதியிலும் நான் கொடித்தேன். பிதாமஹரே! நான் தேகத்தையொடுக்கி ஆகாரத்தைவிட்டு மனத்தையும்வாக்கையுமடக்கி நீண்டகாலம் இமயமலையில் கங்கைக்காகத் தவம்செய்தேன். அரசனாகியநான் மகாதேவரான சங்கரரைத் தலையினால்வணங்கிப் பூஜித்தேன். அதற்காகவும் வரவில்லை. தேவரே! சமியென்றுசொல்லப்படும்வன்னிமரங்களைக்கொண்டுவந்து அவற்றினின்றுண்டான அக்நியினால் தேவர்களைக்குறித்து நூற்றுக்

1 ப்ராம்மணர்களுக்குத் தங்கள்தங்கள் கிரயத்தைக்கொடித்து அவரவர் தேசங்களுக்குத் திரும்பிச்செல்லும்படி செய்வது.

கணக்கும் பதினாயிரக்கணக்குமான திரயோதசாஹமும் துவாதசாஹமும் பௌண்டரீகம்என்னும்யாகங்களைச் செய்தேன். அவற்றின்பலனுக் காகவும் வரவில்லை. ப்ராம்மணர்களுக்குப் பெருங்கொண்டைகளுள் ளவையும் ஒவ்வொருகொம்பும் பொன்னாலணியப்பட்டவையுமான எண்ணாயிரம்வெள்ளரிஷபங்களையும்அவைகளுக்குப்பத்திகளும் கழுத் திற்பொன்மாலையணிந்தவைகளுமானபசுக்களையும் கொடுத்தேன். பொற்குவியல்களையும் ரத்தினக்குவியல்களையும் ரத்தினக்குன்றுகளை யும் தனங்களும்தானியங்களும்நிரம்பினநூற்றுக்கணக்கும் ஆயிரக் கணக்குமானகிராமங்களையும் தலையிற்றுப்பசுக்கள்பதினாயிரத்தையும் அநேகயாகங்களில் ஒயாமல் ப்ராம்மணர்களுக்குக் கொடுத்தேன். அதனாலும் வரவில்லை.தேவரே! பிரம்மாவே! [1]ஏகாதசாஹம் [2]த்விர் த்வாதசாஹம் அஸ்வமேதயாகங்களையும் ஒவ்வொருவருக்குப்பதினா நான்கோதானங்களோடும் நிரம்பினதக்ஷிணைகளோடும் செய்தேன்.அவ ற்றின்பலனுக்காகவும் வரவில்லை. இரத்தினங்களினால்அலங்கரிக்கப் பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொருபொன்மாலைகழுத்தில்அணிந்த பொ ன்மாமரங்களுள்ளதும் ஒருயோஜனைநீளமும் அவ்வளவுஅகலமுமுள் ளதுமானவனத்தை ப்ராம்மணர்களுக்குத் தானம்செய்தேன். அதன் பலனுக்காகவும் நான்வரவில்லை. முப்பதுவருஷகாலம் கோபத்தை விட்டு யாவராலும்செயற்கரியதான தபோயாகமென்னும்யாகத்தை விடாமல் அனுஷ்டித்தேன். ஒவ்வொருநாளும் நானூம்என்னாறு மாகப் பால்நிரம்பினசிவப்புப்பசுக்களையும் அவ்வளவுவிருஷபங்களை யும் ப்ராம்மணர்களுக்குக் கொடுத்தேன். லோகநாதரே ! தேவஸ்ரே ஷ்டரே ! அதன்பலனுக்காகவும் நான்இங்கேவரவில்லை. யாகம்செய் வதற்குவன்னிமரம் தேடிக்கொண்டு பூமியெல்லாம்மூன்றுதரம்திரிந் தேன் பிரம்மாவே ! தினந்தோறும் முப்பதுஅக்னிகளில் ஹோமம் செய்தேன். எட்டுஸ்ருவமேதயாகங்களும் ஏழுநரமேதயாகங்களும் ஆயிரத்துப்பதினெட்டு விஸ்வஜித்யாகங்களும்செய்தேன்.தேவஸ்ரே ஷ்டரே ! அவற்றின்பலனுக்காகவும் நான் இங்கேவரவில்லை. ஸரயு நதியிலும் பாஹுதாநதியிலும் கங்கையிலும் நைமிசாரண்யத்திலும் பத்துலக்ஷம்பசுக்களைத் தானம்செய்தேன். அதனாலும் வரவில்லை. பிதாமஹரே ! ஒருரஹஸ்யம் இந்திரனால் குகைக்குள் மறைத்துவை க்கப்பட்டிருக்கிறது. அதை இவ்வுலகத்தில் பரசுராமர் தவத்தினால் அறிந்தார். சுக்ரருடையபலத்தினால் பிரகாசிக்கின்ற அந்த [3]ரஹஸ்யத்

---

1 பதினொருதினத்தில் செய்வது. 2 இருபத்துநான்குதினத்தில்செய்வது.
3 உபவாஸத்தை.

தை நான் அனுஷ்டித்தேன். நான்யுத்தம்செய்ததும் மற்றக்கர்மங் கள்செய்ததும் ப்ராம்மணர்களுக்காகவே. அந்தக்காரியத்தை நான் ஸாதித்தபிறகு அதனால் ப்ராம்மணர்கள் என்மேல் ஸந்தோஷமடைந் தனர். அவ்வாறு ப்ராம்மணர்களை நித்தியமாகப்பூஜித்ததனாலும்நான் வாஸில்லை. இன்னும் ஆயிரம்ரிஷிகள் அங்கேவந்துசேர்ந்தனர். பிர புவே! அவர்களால், 'நீ பிரம்மலோகம்செல்' என்றுசொல்லப்பட் டேன். பிரபுவே! ஆயிரம்ப்ராம்மணர்கள் அனுக்கிரஹத்துடன்சொ ன்னதனால் இவ்வுலகத்திற்கு வந்தேன். இவ்விஷயத்தில் உமக்குச் சந்தேகமும்வேண்டாம். எல்லாம் பிரம்மதேவரால்விதிக்கப்பட்டபடி தான் நடக்கிறது. ஆகிலும், கேட்டபோது நான் நடந்ததைச் சொல்ல வேண்டும். உபவாஸத்தைவிட வேறுதவம் இருப்பதாக நான் நினை க்கவில்லை. தேவஸ்ரேஷ்டரே! உமக்குநமஸ்காரம். தயைசெய்யும்' என்றுசொன்னேன். இவ்வாறுசொன்ன பூஜைக்குரிய பகீரதராஜனைப் பிரம்மதேவர் சாஸ்திரோக்தமானபூஜையினால் பூஜித்தார். ஆதலால், உபவாஸமிருந்து ப்ராம்மணர்களை எப்போதும் பூஜிப்பாயாக. ப்ராம் மணர்களின்சொல்லினால் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் எல் லாம் கூடிவரும். வஸ்திரங்களினாலும் அன்னங்களினாலும் கோக் களினாலும் சிறந்தகிருகங்களினாலும் நன்றாகக்காப்பாற்றுதலாலும் ப்ராம்மணர்களை ஸந்தோஷப்படித்தவேவேண்டும். இதுதான் பெரிய ரஹஸ்யம். லோபத்தைவிட்டு இதைச்செய்" என்றார்.

நாற்றுறுபத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஆயுள்விருத்திமுதலிய நன்மைகளுக்குக் காரணமான ஆசாரங்கள்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! ஒருமனிதன் நூறுவருஷகாலம் ஆயுளுள்ளவனென்றும் நூறுவருஷகாலம் சக்தியுள்ளவனென்றும் வேதம் கூறுகிறது. மனிதர்கள் சிறுவராயிருக்கையிலும் இறந்து போவது ஏன்? மனிதன் தீர்க்காயுளுள்ளவனாயிருப்பதும் அற்பஆயு ளுள்ளவனாயிருப்பதும் எதனால்? எதனால் கீர்த்தியையடைகிறான்? எதனால் ஐசுவரியத்தையடைகிறான்? தவத்தினாலா? ப்ரம்மசாரிவிர தத்தினாலா? ஜபத்தினாலா? ஹோமத்தினாலா? ஜன்மத்தினாலா? ஆசாரத்தினாலா? மற்றெவற்றினாலாவதா? பிதாமஹரே! அதனை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"நீ 'மனிதன் எதனால் குறைந்தஆயுளுள்ளவனாகிறான்? எதனால் நீண்டஆயுளுள்ளவனாகிறான்? எதனால் கீர்த்தியையடைகிறான்? எதனால் ஐசுவரியத்தையடைகிறான்? எவ்விதமாகநடக்கும்மனிதன் நன்மையையடைவான்?'என்றுகேட்கும்விஷயத்தில் மறுமொழிகூறுவேன். மனிதன் நல்லொழுக்கத்தாலேதான் ஆயுளையடைகிறான். ஆசாரத்தினாலேதான் ஐசுவரியத்தையடைகிறான். ஆசாரத்தினாலேதான் இருந்தும் இறந்தும் கீர்த்தியையடைகிறான். ஆசாரங்கெட்ட மனிதன் இவ்வுலகத்தில் நீண்டஆயுளை அடைவதில்லை. மனிதர்கள் அவனிடத்தில் பயப்படுகிறார்கள்; அவனை அவமதிக்கிறார்கள். ஆதலால், இவ்வுலகத்தில் தனக்குமேன்மையைவிரும்புகிறவன் ஆசாரத்தைச்செய்யவேண்டும். பாவஜன்மமெடுத்தவனுக்கும் ஆசாரம் அபகீர்த்தியைப் போக்கும். ஆசாரத்தினாலறியப்படுவது தர்மம். நல்லொழுக்கத்தையடையாளமாகவுடையவர்கள் ஸாதுக்கள். ஸாதுக்களின் நடக்கைதான் ஆசாரத்திற்கு அடையாளம். தர்மத்தைவிடாமல்தனக்குரியகர்மங்களைச்செய்யும் மனிதன் பார்க்கப்படாதவனாயிருந்தாலும் கேட்டவுடன் அவன்மேல் ஜனங்கள் அன்புவைக்கின்றனர். நாஸ்திகர்களும் கர்மங்களைச்செய்யாதவர்களும் குருக்களையும் சாஸ்திரங்களையும்மிஞ்சிநடப்பவர்களும் தர்மந்தெரியாதவர்களும் கெட்டஒழுக்கமுள்ளவர்களும் ஆயுள்குறைந்துபோகின்றனர். ஒழுக்கமில்லாதவர்களும் வரைகடந்தவர்களும் ஜாதிதப்பிப்புணர்ச்சிசெய்கிறவர்களுமானமனிதர்கள் இவ்வுலகத்தில் ஆயுள்குறைந்துநரகம்போகிறவராகிறார்கள். ஆசாரத்தைவெறுமல் சிரத்தையோடுசெய்துகொண்டிருக்கும்மனிதன் மற்றெல்லாநற்குணங்களுமில்லாதவனாயினும் நூறுவருஷம் ஜீவித்திருப்பான். கோபத்தையும் பிராணிஹிம்ஸையையும் பொறுமையையும் கபடத்தையும்விட்டு ஸத்தியவாதியாயிருப்பவன் நூறுவருஷங்கள் ஜீவிப்பான். ஒடுகளையுடைப்பவனும் துரும்பைக்கிள்ளுகிறவனும் நகத்தைக்கடிப்பவனும் எப்போதும்அசுத்தனாயிருப்பவனும் சஞ்சலமுள்ளவனும் இவ்வுலகத்தில் தீர்க்காயுளையடையார். 1 பிராம்மமுகூர்த்தத்தில்விழித்துக்கொண்டு அறத்தையும்பொருளையும்பற்றி ஆராய்ந்துபார்க்கவேண்டும். எழுந்துகைகூப்பிக்கொண்டு காலஸந்தியைப் பூஜிக்கவேண்டும். இவ்வாறு, மௌனத்துடன் மாலஸந்தியையும் பூஜிக்கவேண்டும். உதயகாலத்திலும் அஸ்தமனகாலத்திலும் ஆகாசத்தின் உச்சியிலிருக்கும்போதும் கிரகணம்பிடித்தபோதும் ஜலத்தின்பிரதிபிம்பத்திலும் ஒருகாலும் சூரியனைப் பார்க்க

1 விடியமூன்றேமுக்கால் நாழிகையளவில்.

லாகாது. ஸந்தியாகாலம்தவறுதிருந்ததனால் ரிஷிகள் தீர்க்காயுளை அடைந்தனர். கையில் தர்ப்பத்தைப்போட்டுக்கொண்டு மௌனத்துடன் பரிசுத்தனாகி மனத்தில்அதையேதியானித்து ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும். ஆதலால், தினந்தோறும் காலைச்சந்தியிலும் மாலைச்சந்தியிலும் மௌனத்தோடிருக்கவேண்டும். தர்மத்தைச் செய்யுமரசன் காலைச்சந்தியையும் மாலைச்சந்தியையும் பூஜிக்காமலிருக்கும்பிராம்மணரைனவரையும் சூத்திரனுக்குரியவேலைகளைச் செய்விக்கவேண்டும். எந்தவர்ணத்தாரும் ஒருகாலும் பிறன்மனைவியைச் சேரலாகாது. அதைப்போல ஆயுளைக்கெடுப்பது உலகத்தில் ஒன்றுமில்லை. இவ்வுலகத்தில் பிறர்மனைவியைச்சேருவதுபோல ஆயுளைக் குறைப்பது மற்றெதுவுமில்லை. ஸ்திரீகளின்உடம்புகளில் எத்தனை மயிர்க்கால்கள்படைக்கப்பட்டிருக்கின்றனவோஅத்தனைஆயிரவருஷகாலம் அவன் நரகத்தில்கிடப்பான். சூரியபூஜையையும் அலங்காரத்தையும் ஸ்நானத்தையும் மையிடுவதையும் பல்துலக்குவதையும்தேவதாபூஜையையும் மூற்பகலிலேயே செய்யவேண்டும். விஷ்டையையும் மூத்திரத்தையும் பார்க்கவும் மிதிக்கவுமாகாது. அதிகாலையிலேயும் நன்றாக அஸ்தமித்தபின்னும் நடுப்பகலிலும் அறியாதவர்களோடும் சூத்திரர்களோடும் சேர்ந்தும் தனித்தும் செல்லலாகாது. பிராம்மணனுக்கும் பசுவுக்கும் அரசனுக்கும் கிழவனுக்கும் சுமையினால் வருந்துகிறவனுக்கும் கர்ப்பினிக்கும் சக்திகுறைந்தவனுக்கும் வழி விடவேண்டும். பிரஸித்திபெற்றமரங்களையும் நாற்சந்திகளையும் மங்களத்திரவியங்களையும் பூஜிக்கத்தக்கவரையும் முதிர்ந்தவரையும் பிராம்மணரையும் பிரதக்ஷிணம்செய்யவேண்டும். நடுப்பகலிலும் இரவில்நடுநிசியிலும் இரண்டுசந்திகளிலும் நாற்சந்தியிலுமிருக்கலாகாது. பிறர்உபயோகித்த பாதரக்ஷைகளையும் ஆடையையும் உபயோகிக்கலாகாது. எக்காலமும் ஜிதேந்திரியனாயிருக்கவேண்டும். ஒருகாலை மற்றொருகாலால் மிதிக்கலாகாது. அமையிலும் பூர்ணிமையிலும் சதுர்த்தசியிலும் ஜன்மதினத்திலும் அஷ்டமியிலும் துவாதசியிலும் எப்போதும் பிரம்மசாரியாயிருக்கவேண்டும். (யாகமுதலியவைசெய்யாமல்) வீணாக மாம்ஸத்தை உண்ணலாகாது. முதுகு மாம்ஸத்தைப் புசிக்கலாகாது. நிட்டிவதையும் தூஷிப்பதையும் கோட்சொல்லுவதையும் விடவேண்டும். புண்ணிற் கோலிடுவது போல ஒருவர்நோகும்படி பேசலாகாது. கடுஞ்சொற்சொல்லலாகாது. தாழ்ந்தவனிடத்தில் [1]உயர்ந்ததைப் பெறலாகாது. எந்தச்

1 ஞானத்தை.

சொல்லினால் அயலான் வருத்தப்படுவானேல் பாபலோகத்தைத்தருவதான அந்தக்கொடியசொல்லைச் சொல்லலாகாது. வாயினின்றும் அதிவாதங்கள் அம்புகளாகவெளிப்படுகின்றன. அவற்றினாலடிக்கப்பட்டவன் அல்லும்பகலும் அழுகிறான். அவை அயலானுடைய உயிர்ஸ்தானங்களிலேயே விழுகின்றன. தெரிந்தவன் அவற்றை அயலார்மேல் பிரயோகிக்கலாகாது. தீயினுற்சுட்டபுண் ஆறும். கோடாவியினால்வெட்டப்பட்டவனம் தளிர்க்கும். வாக்கினால் அருவருப்பானகெட்டசொல்லைச் சொன்னதனாலுண்டான சொற்புண்ணானது ஆறுகிறதேயில்லை.கர்ணிகளென்னும்பாணங்களையும் நாளீகங்களையும் நாராசபாணங்களையும் தேகத்தினின்று எடுத்துவிடுகின்றனர். சொல்லம்பானது எடுப்பதற்குமுடியாதது. ஏனெனில், அது மனத்திற் குள்தைத்திருப்பது. அங்கங்கள்ஏற்றக்குறைவுகளாயிருப்பவரையும் கல்வியில்லாதவரையும்பிராயமுதிர்ந்தவரையும்அழகும்தனமுமில்லாதவரையும் ஸத்தியம்தவறினவரையும் தூஷிக்கலாகாது. நாஸ்திகத்தனத்தையும் வேதத்தைநிந்திப்பதையும் அயலாரைத்திட்டுவதையும் இழிவாகப்பேசுவதையும் பகையையும் இறுமாப்பையும் அகங்காரத்தையும் கொடுமையையும் விடவேண்டும். புத்திரன் சிஷ்யன்இவர்களேதவிர மற்றவரைப்பார்த்துத் தடியையோங்கலாகாது. கோபத்தினால் அவர்களை அடிக்கவுமாகாது. அடிப்பதானது நிருத்துவதற்காகவிதிக்கப்பட்டது. பிராம்மணர்களைத் தூஷிக்கலாகாது. க்ஷத்திரியர்களைக் காட்டலாகாது. பக்ஷத்தின்திதியைச் சொல்லலாகாது. இப்படியிருந்தால் ஆயுள்குறையாது. அமாவாஸைதவிரமற்றஒவ்வொருநாளும் பல்துலக்கவேண்டும். தினந்தோறும் வேதத்தையும் இதிஹாஸபுராணங்களையும் படிக்கவேண்டும் ; தானம்செய்யவேண்டும். ஒவ்வொருநாளும் ஸந்தியாகாலத்தில் நியமத்துடன் காயத்ரீஜபம்செய்யவேண்டும். ஜலமலவிஸர்ஜனம்செய்தபிறகும். வீதியைமிதித்தபிறகும் வேதாத்யயனத்திற்கும் போஜனத்திற்கும்மூன்றும் கால்அலம்பவேண்டும். பிறரால்பார்க்கப்படாததும்ஜலத்தினுல்அலம்பப்பட்டதும் வாக்கினால்புகழப்பட்டதுமாகிய இம்மூன்றுபரிசுத்தங்களையும் பிராம்மணர்களுக்குத் தேவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். யவை அரிசிச்சோறு க்ருஸரம் மாம்ஸம் முறுக்குபாயஸம் இவற்றைத் தேவதைக்காகவே செய்யவேண்டும் ; தனக்காகச் செய்யலாகாது. நித்தியமும் அக்நிஹோத்ரம் செய்யவேண்டும் ; பிக்ஷைபோடவேண்டும். பல்துலக்கும்போதும் ஸந்தியாவந்தனத்திலும் மலவிஸர்ஜனகாலத்திலும் மௌனமாயிருக்கவேண்டும். சூரியோதயமான

பின் படித்திருக்கலாகாது.அப்படியிருந்தால் பிராயச்சித்தத்திற்கு உரியவனுவான். தூங்கியெழுந்தவுடன்தாய்தந்தையரை முதலிலும் பிறகு ஆசாரியனையும் வேறுபெரியோரையும் வந்தனம்செய்யவேண்டும். அதனால், தீர்க்காயுளை அடைவான். சாஸ்திரத்திற்குவிலக்கான பற்கொம்புகளை எப்போதும் விட்டுவிடவேண்டும். சாஸ்திரத்தில்விதிக்கப்பட்டவற்றை உபயோகிக்கவேண்டும். அவற்றையும் அமாவாஸை முதலியகாலங்களில் விடவேண்டும். எப்போதும் ஜாக்ரதையுடன் வடக்குமுகமாகவே சௌசம்செய்யவேண்டும். விருக்ஷதேவதையைப்பூஜைசெய்யாமல் தந்தாவனம் செய்யலாகாது. ஆசார்யர் முதிர்ந்தவர் தர்மிஷ்டர் கற்றறிந்தவர் இவர்களைத்தவிர மற்றவர்களிடம் தேவபூஜையைச்செய்யாமல் ஒருகாலும் போகலாகாது. புத்திமான்களிற்சிறந்தவர்கள் அழுக்கடைந்தகண்ணுடியைப் பார்க்கலாகாது. தனக்குத்தெரியாதஸ்திரீயையும் கர்ப்பிணியையும் ஒருகாலும் சேரலாகாது. தெரிந்தவன் மனைவியாக விவாகம்செய்துகொள்வதற்குமுன் புனர்ச்சிசெய்யலாகாது. இதற்குமாறுயின் [1]அவகீர்ணியாவான். அப்போது, அவன் பிராயச்சித்தம்செய்துகொள்ளவேண்டும். பிறர்மனைவிகளை நோக்கலாகாது. ஏகாந்தத்தில் அவர்களுடன் ஓர் ஆஸனத்திலிருக்கலாகாது. ஐம்புலன்களையும் எப்போதும் அடக்கவேண்டும். கனவிலும் மனம் சுத்தமாயிருக்கவேண்டும். தெரிந்தவன் வடக்கும் மேற்கும் தலைவைத்துப்படுக்கலாகாது; கிழக்கும் தெற்கும் தலைவைத்துப் படுக்கலாம். உடைந்ததும் தள்ர்ந்ததுமான படுக்கையில் படுக்கலாகாது. மறைவானவிடத்திலும் ஜனங்களுள்ளவிடத்திலும் குறிக்காகவும் ஒருகாலும் படுக்கலாகாது. காரியத்திற்காகவாவது உடன்படிக்கையிலாவது நாஸ்திகர்களுடன் சேர்ந்து போகலாகாது. மனிதன் ஆஸனத்தைக் காலால்இழுத்துக்கொண்டு உட்காரலாகாது. வஸ்திரமில்லாமல் ஒருகாலமும் ஸ்நானம்செய்யலாகாது. ராத்திரியில் ஸ்நானம்செய்யலாகாது. மிகத்தெரிந்தவன் ஸ்நானம்செய்தபிறகு உடம்பைத் தேய்க்கலாகாது. ஆபத்தில்ராத்ரியில் ஸ்நானம்செய்யநேர்ந்தால் அக்நியையாவது பிராம்மணனையாவது அருகில்வைத்துக்கொண்டு ஸ்நானம்செய்யவேண்டும். ஸ்நானம்செய்யாமல் சந்தனம்பூசிக்கொள்ளவும் சுத்தவஸ்திரத்தை உடுக்கவும் கூடாது. மனிதன் எப்போதும் ஸ்நானம்செய்துதான் வஸ்திரங்களை உடுக்கவேண்டும். பூமாலைகளைத் தொங்கவிடவும் வெளிப்படச்சூட்டிக்கொள்ளவுங்கூடாது. தாரஸ்திரீயுடன் ஒருகாலும் ஸம்பாஷணை

[1] ப்ரம்மசாரிவிரதம் தவறினவன்.

செய்யலாகாது. வயலிலும் வழியினருகிலும் மலவிஸர்ஜனம் செய்ய லாகாது. ஜலத்திலும் தேவாலயத்திலும் பசுக்கூட்டத்திலும் நாற் சந்தியிலும் பயிர்களிலும் ஜனங்கள் தங்குமிடத்திலும் ஒருபோதும் மலமூத்திரவிஸர்ஜனங்களைச் செய்யலாகாது. போஜனத்திற்கும் தும்மலுக்கும் வழிநடைக்கும் மலமூத்திரவிஸர்ஜனத்திற்கும் பிறகு சாஸ்திரப்பிரகாரம் இரண்டுமுறை ஆசமனம்செய்யவேண்டும்.மார்பி னுள்படும்படி ஜலத்தை ஆசமனம்செய்யவேண்டும். அன்னம்புசிப்ப தற்குமுன்னும் பின்னும் மும்மூன்றுமுறை ஜலத்தை ஆசமனம் செய்யவேண்டும். இரண்டுதரம் வாயைத்துடைக்கவேண்டும். எப் போதும் மௌனத்தோடு கிழக்குமுகமாக அன்னத்தைத்தூஷிக்கா மல் சாப்பிடவேண்டும். மனப்பூர்வமாய்ச் சிறிது எறியவேண்டும். புசித்தபிறகு [1]அக்நியைத் தொடவேண்டும். கிழக்குமுகமாகப்புசிப் பது ஆயுளையும் தெற்குமுகமாகப்புசிப்பது புகழையும்மேற்குமுக மாகப்புசிப்பது தனத்தையும் வடக்குமுகமாகப்புசிப்பது நல்வினைப் பயனையும் கொடுக்கும். அக்நிஹோத்ரம்செய்தபின் கோபத்தைவிட் டுச் சிறுவர்களை முதலில்புஜிப்பித்து அலங்காரம்செய்துகொண்டு உய ர்ந்த ஆஸனத்தில்உட்கார்ந்து நெய்விட்டதிஞல்பரிசுத்தமான அன்னத் தைப்போட்டு விழுங்கவேண்டும். பிறகு, அக்நியைத்தொட்டு, ஜல த்தினல் எல்லாஇந்திரியங்களையும் எல்லாஅவயவங்களையும் நாபியை யும் உள்ளங்கைகளையும் துடைக்கவேண்டும். உமி, மயிர், சாம்பல், மண்டையோடுகள் இவற்றை ஒருகாலும் மிதிக்கலாகாது. அயலான் ஸ்நானம்பண்ணினஜலத்தைத் தூரத்தில்விடவேண்டும்.பாவம்போல தற்குரியஹோமங்களைச் செய்யவேண்டும். சூரியனைப்பற்றியமந்தி ரங்களைச் சொல்லவேண்டும். உட்கார்ந்தே சாப்பிடவேண்டும்; ஒரு போதும் நடந்துகொண்டு சாப்பிடலாகாது. நின்றுகொண்டு மூத்தி ரத்தைவிடக்கூடாது; சாம்பலிலுப்பசுக்கூட்டத்திலுப்விடக்கூடாது. ரகாலுடன் புசிக்கவேண்டும்; ரகாலுடன்படுக்கலாகாது. ரக் காலுடன் புசிப்பவன் நூறுவருஷம் ஜீவித்திருப்பான். அக்னி பசு பிராம்மணன்இம்மூன்றுதேஜஸுகளையும் அசுத்தஞ்யிருந்து ஒரு போதும் தொடக்கூடாது. அப்படியிருந்தால் ஆயுள்குறையாது. சூரி யன் சந்திரன் நக்ஷத்திரங்கள்ஆகியமூன்றுவகைஒளிகளைச் சுத்தஞ யிராமல் பார்க்கவேகூடாது. கிழவன்வரும்போது சிறுவனுடைய உயிர் மேல்நோக்கிச் செல்லுகிறது. எதிர்கொண்டெழுந்திருப்பத ஞலும் அபிவாதனம்செய்வதஞலும் அவன் அந்தஉயிரைத் திரும்ப

[1] தலைக்குட்டில் கையைக் காய்ச்சிக்கொள்ளவேண்டும் என்பது.

வும் பெறுகிறான். விருத்தர்களை அபிவாதனம் செய்யவேண்டும். தானே அவர்களுக்கு ஆஸனம்போடவேண்டும். கைகூப்பிக் காத்திருக்கவேண்டும். போகும்போது பின்செல்லவேண்டும். உடைந்தஆசனத்தில் உட்காரலாகாது. உடைந்த வெண்கலப்பாத்திரத்தைத் தள்ளிவிடவேண்டும். ஒற்றைவஸ்திரத்துடன் புசிக்கலாகாது. வஸ்திரமில்லாமல் ஸ்நானம்செய்யத்தகாது. வஸ்திரமில்லாமலும் சுத்தமில்லாமலும் படுக்கவும் தூங்கவும்கூடாது. அசுத்தனுகத் தலையைத்தொடலாகாது. இந்திரியங்களெல்லாம் அதிலிருப்பவை. மயிரைப்பிடிப்பது தலையிலடிப்பது இவற்றை விட்டுவிடவேண்டும். இரண்டு கைகளையும் சேர்த்துக்கொண்டு தன்தலையைச் சொறியலாகாது. அடிக்கடி தலைக்குஸ்நானம்செய்யலாகாது. அப்படியிருந்தால் ஆயுள் குறையாது. தலைக்குஸ்நானம்செய்தபிறகு அங்கத்தில் எவ்விடத்திலும் எண்ணெய்படக்கூடாது. ஸாரமெல்லாம்போனஎள்பிண்ணாக்கைப்புசிக்கலாகாது. அசுத்தனுயிருப்பவன் ஒருபோதும் ஓதுவிக்கவும் ஓதவும்ஆகாது. காற்றடிக்கும்போதும் துர்நாற்றமிருக்கும்போதும் மனத்திலும் வேதத்தைநினைக்கலாகாது. பூர்வவிருத்தாந்தம்தெரிந்தவர்கள்இந்தவிஷயத்தில்யமனுற்சொல்லப்பட்டஸ்லோகங்களைச் சொல்லுகின்றனர்;(அவற்றின்பொருள்,) 'எவன் அசுத்தனுக ஓதுகிறானோ, எவன் அசுத்தனுக வேதாத்யயனம்செய்கிறானோ, அவர்களுடையஆயுளை (முறையே) அறுக்கிறேன்; புத்தியைஎடுத்துவிடுகிறேன். எந்தப்பிராம்மணன் அறிவின்மையினுல்ஒதாதநாளில் அத்யயனம்செய்கிறானோ அவனுக்கு வேதமும் போய்விடும்; ஆயுளும் குறைந்துபோகும்' என்பது. ஆதலால், ஜாக்கிரதையோடு ஒதாதநாளில் ஒருநாளும் ஓதவேண்டாம். சூரியனுக்கும் அக்நிக்கும் கோவுக்கும் பிராம்மணனுக்கும் எதிராகவும்வழியிலும் மூத்திரம்விடுகிறவர்கள் ஆயுள்குறைந்தவராகிறார். மலமூத்திர விஸர்ஜனங்களைப் பகலில்வடக்குமுகமாகவும் இரவில்தெற்குமுகமாகவும் செய்யவேண்டும். அப்படிச்செய்வதால் ஆயுள்கெடாது. தீர்க்காயுளோடுஜீவிக்கவிரும்புகிறவன் இளைத்திருக்கும்பிராம்மணன் க்ஷத்திரியன் ஸர்ப்பம் இம்மூவரையும் அவமானம்செய்யலாகாது. இம்மூவரும் ஸர்ப்பங்களே. ஸர்ப்பமானது கோபித்துக் கண்ணினுல் எவ்வளவுவரையில் பார்க்கிறதோ அவ்வளவுவரையில் எரித்துவிடும். க்ஷத்திரியன் கோபித்தால் தன்பராக்கிரமம் எதுவரையில்செல்லுமோ அதுவரையில் எரித்துவிடுவான். பிராம்மணன் நினைப்பதனுலும் பார்ப்பதனுலும் குலத்தையே அழித்துவிடுவான். ஆதலால், தெரிந்தவன் இம்

மூவரிடத்திலும் ஜாக்ரதையோடு பழகவேண்டும். யுதிஷ்டிர! ஆசாரியரிடத்தில் விரோதம்பாராட்டுவது எப்போதும்தகாது. கோபித்த குருவை நல்லவார்த்தைசொல்லித் தெளிவிக்கவேண்டும். குரு பிசகாகநடந்தாலும் அவரிடத்தில் ஸரியாகநடக்கவேண்டும். குருவை நிந்திப்பது மனிதர்களின்ஆயுளை எரித்துவிடுமென்பது நிச்சயம். நன்மையைவிரும்புகிறவன் மலமூத்திரங்களையும் எச்சில்களையும்விடுவதையும் காலம்புவதையும் தன்னிருப்பிடத்திற்குத்தூரத்தில் செய்யவேண்டும். ராஜனே! தெரிந்தவர்கள் சிவப்புமாலைகளை அணியலாகாது. தாமரைகருநெய்தல்களைத்தவிர மற்றவற்றில் வெள்ளைமாலைகளையே தரிக்கவேண்டும். தலையில் சிவப்புப் புஷ்பத்தையும் காட்டுப் புஷ்பங்களையும் சூட்டிக்கொள்ளலாம். சண்பகப்பூமாலைக்கு ஒருகாலும் தோஷமில்லை. ராஜனே! ஒவ்வொருநாளும் ஸ்நானம்செய்தபிறகு புதியசந்தனத்தைப் பூசிக்கொள்ளவேண்டும். புத்தியுள்ள மனிதன் மேல்கீழ்வஸ்திரங்களை மாற்றலாகாது. வேறுஒருவன் உடுத்ததையும் மிகக்கெட்டுப்போனதையும் உடுக்கக்கூடாது. ராஜனே! படுக்கையில்வேறுவஸ்திரமும் வீதியில்போகும்போது வேறுவஸ்திரமும் தேவதாபூஜையில் வேறுவஸ்திரமும் இருக்கவேண்டும். புத்தியுள்ளவன் தினை, சந்தனம், வில்வக்காய், [1]தகரம், கேஸரம், இவற்றைத் தனித்தனியே [2]பூசிக்கொள்ளவேண்டும். ஸ்நானம்செய்து பரிசுத்தனாய் அலங்காரங்களைச்செய்துகொண்டு உபவாஸமிருக்கவேண்டும். லீலை உபவாஸமிருக்கலாகாது. பிறர்தனத்தைஅபகரிக்கக்கூடாது. அமாவாஸைமுதலிய புண்ணிய காலங்களெல்லாவற்றிலும் பிரம்மசாரிவிரதத்தோடேயே இருக்கவேண்டும். ராஜனே! மற்றொருவனோடு ஒரேகாலத்தில் ஒருபாத்திரத்தில் அன்னத்தைப் புசிக்கலாகாது. உண்டுமிகுந்ததையும் அலக்ஷியமாகப்போட்டதையும் முகரப்பட்டதையும் உண்ணக்கூடாது. ஸாரமெடுத்தவற்றை உண்ணலாகாது. பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்குக்கொடாமல் உண்ணலாகாது. புத்திசாலியானவன் உட்காராமலும் சுத்தமில்லாமலும் பெரியோர்முன்னிலையிலும் கூடப்புஜிக்கத்தகாதவர்களிடத்திலும் பின்னேவைத்துக்கொண்டும் பக்ஷணங்களைத் தின்னக்கூடாது. கோழி மத்தைவிரும்புகிறமனிதன் அரசு, ஆல், சணல், அத்தி இவற்றைத்தின்னலாகாது. ஆடு பசு மயில்இவற்றின்மாம்ஸங்களையும் உலர்ந்தமாம்ஸத்தையும்பழையமாம்ஸத்தையும்விட்டுவிடவேண்டும். தெரிந்தவன்கையில்வைத்து உப்புபெச்சாப்பிடலாகாது; இரவிலும் ஆகாது. தயிர்,

[1] ஒருவாஸனைப்பொருள். [2] ஸ்நானத்திற்குமுன்.

கரைத்தமா, தேன் இவற்றை இரவில் ஒருநாளும் குடிக்கலாகாது. நியமமுள்ளவன் காலைமாலைகளில் புசிக்கவேண்டும். இடையில் புசிக்கக்கூடாது. சிறுவனுடு புசிக்கக்கூடாது.பிறருடையசிராத்தசேஷத்தைப் புசிக்கக்கூடாது. மௌனத்தோடிருக்கவேண்டும். ஒற்றைவஸ்திரத்தோடும் படித்துக்கொண்டும் ஒருபோதும் புசிக்கக்கூடாது. தரையில் ஒருபோதும் புசிக்கலாகாது. சுத்தமில்லாமலும் ஓசையுண்டாகும்படியும் உண்ணலாகாது. ராஜனே ! புத்திசாலியானமனிதன் அதிதிகளுக்குத் தீர்த்தத்தைமுன்னிட்டு அன்னங்கொடுத்துப் பிறகு வேறுநினைவில்லாமல் புசிக்கவேண்டும். ராஜனே ! ஒருபந்தியில் மற்றவரைப்போலவே தானும் அன்னத்தைப் புசிக்கவேண்டும். வேண்டினவர்களுக்கு அன்னம்போடாமல்புசிப்பவன் ஆலகாலவிஷத்தைப் புசித்தவனுவான். தீர்த்தம், பாயஸம், மா, தயிர், நெய், தேன் இவற்றைத்தவிர மற்றவற்றில் சேஷத்தை யாருக்கும் கொடுக்கலாகாது. புருஷஸ்ரேஷ்டனே ! சாப்பிடும்போது ஸங்தேகப்படக்கூடாது. நன்மையைவிரும்புகிறவன் போஜனத்திற்குப்பின் தயிரைக் குடிக்கக்கூடாது. ஆசமனம்செய்து கையினுல்ஜலத்தைப்பெருகவிட்டு வலக்காற்கட்டைவிரலை நனைக்கவேண்டும். ஆசாரத்தில்தேர்ந்தமனிதன் நியமத்துடன் கையைத்தலையில்வைத்து அக்கியைத்தொடுவதனுல் இனத்தாரிற்சிறந்தவனுகிறன். (கண்மூக்குமுதலிய) இந்திரியஸ்தானங்களையும் ஈபியையும் உள்ளங்கைகளையும் ஜலத்தினுல்தொட்டு வெளியிற்புறப்படவேண்டும். ஈரக்கையுடன் போகலாகாது. உள்ளங்கையில் கட்டைவிரலின் அடியைப்பிராம்மதீர்த்தமென்றுசொல்லுகின்றனர். சுண்டுவிரலின்வெளிப்புறத்தைத் தேவதீர்த்தமென்றுசொல்வது. பாரதனே ! கட்டைவிரலுக்கும் ஆள்காட்டிவிரலுக்கும்நடுவிலுள்ளசந்தினுல் ஜலத்தைவிட்டுச் சாஸ்திரப்பிரகாரம் பித்ருகாரியங்களைச் செய்யவேண்டும். அயலார்மேல் பழிசொல்லலாகாது. இன்னததை ஒருகாலும் சொல்லலாகாது. நன்மையைவிரும்புகிறபுருஷன் சிறிதும் கோபத்தை உண்டாக்கலாகாது. பதிதர்களுடன்பேசுவதை விரும்பலாகாது. அவர்களைப்பார்ப்பதையும் விட்டுவிடவேண்டும். அவர்களுடன் சேரலாகாது. அப்படியிருந்தால் தீர்க்காயுளை அடைவான். பகலில் பெண்கலவிசெய்யலாகாது. கன்னிகையையும் வேசியையும் ருதுஸ்நானம்செய்யாதமனைவியையும்சேரலாகாது.அதனுல் நீண்டஆயுளை அடைவான். அந்தஅந்தக்காரியங்களைச்செய்யும்போது [1]அவ்வவற்றிற்குரியதீர்த்தங்களினுல் அந்தஅந்தக்காரியங்

1 உள்ளங்கையிலுள்ள இடங்கள்.

களோடத்தி மூன்றுதரம் ஜலத்தை ஆசமனம்செய்து இருமுறை வாயைத்துடைத்தபிறகு மனிதன் சுத்தனுவான். மனிதன் இந்திரியங்களை ஒருமுறைஜலத்தினுல்தொட்டு மூன்றுமுறை ப்ரோக்ஷித்துக் கொண்டு பித்ருகாரியங்களையும் தேவகாரியங்களையும் வேதத்திற் சொன்னவிதிப்படி செய்யவேண்டும். கௌரவனே! ப்ராம்மணனுக்காகவற்பட்டசௌசத்தையும் நான் சொல்லுகிறேன்; கேள். அதிகமாகவும் பிறருக்குப்பிரதிகூலமாகவும்பேசினலும் அதிகபோஜனம் செய்தாலும் எல்லாவற்றிற்கும்சுத்தத்திற்காகப் ப்ராம்மதீர்த்தத்தினுல் ஆசமனம்செய்யவேண்டும். காறியுமிழ்ந்தாலும் தும்மினலும் ஆசமனம்செய்வதனுல் சுத்தனுவான். காறியுமிழ்தல், புணர்ச்சி, தும்மல், கண்துடைத்தல், தூரஸ்திரீயையும் வஸ்திரமில்லாதவனையும் பார்த்தல்இவற்றிற்கு ஆசமனம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆசமனம்செய்யும்போதெல்லாம் பிரணவத்தினுல்காதைத்தொட்டு உடனே சூரியனைப் பார்க்கவேண்டும். வயதுமுதிர்ந்தவன், சுற்றத்தவன், சினேகிதன், கணவனில்லாதஸகோதரி, ஆசாரியர், உயர்குலத்தோன், பண்டிதன் இவர்கள் ஏழையாயிருந்தால் தன்னல்கூடியவரையில் இவர்களைக் காப்பாற்றவேண்டும். இவர்களை வீட்டில் வைத்துக்கொள்ளவேண்டும். அது தனத்தையும் ஆயுளையும்கொடுக்கும். வீட்டில் [1]புருக்களையும் கிளிகளையும் நாணத்தான்குருவிகளையும் வைத்துக்கொள்ளவேண்டும். தேவதாவிக்கிரகங்கள், கண்ணுடி, சந்தனம், பூக்கொடிகள், கல்லுஜலம், பொன், வெள்ளிஇவை வீட்டிற்குமங்களமானவை. வீட்டில் இவைஇருப்பது [2]வெளவால்களிருப்பதுபோலக் கெடுதலில்லாதது. கருடன்கள் கழுகுகள் [3]புருக்கள் தேன்வண்டுகள் இவை வீடுகளில்உட்கார்ந்தால் அப்போது வீடுகளுக்குச் சாந்திசெய்யவேண்டும். பெரியோர்களின்சாபமும் மஹாத்மாக்களிடத்திற்பதும் அமங்களத்திற்கிடமானவை. மஹாத்மாக்களிடமுள்ள அதிக ரஹஸ்யங்களை ஒருபோதும் சொல்லலாகாது. அரசர்க்கரசே! யுதிஷ்டிரனே! தாழ்ந்தஜாதிஸ்திரீகளையும் ராஜபத்தினியையும் தனக்குச்சினேகமானஸ்திரீகளையும் வித்வான்கள், சிறுவர்கள், கிழவர்கள், வேலைக்காரர்கள், பந்துக்கள், ப்ராம்மணர்கள், அடைக்கலமாகவந்தவன், [4] சினேகிதர்கள், இவர்களின்ஸ்திரீகளையும் சேராமலிருக்கவேண்டும். அதனுல், நீண்டஆயுளை அடைவான். நன்மையைக்கருதுகிற புத்திசாலியானவன் ப்ராம்மணனுலும் சிற்பியினுலும்கட்டப்பட்டவீட்டில்

---

1 'பாராவதம்' என்பதுமூலம். 3 'கபோதம்' என்பதுமூலம். . .
2 கரப்புஎனினுமாம்' 4 உறவினர்கள்என்றும்கொள்ளலாம்.

எப்போதும்வஸிக்கவேண்டும். ராஜனே! புத்திசாலியானவன் ஸந்தினயயில் தூங்கவும் கல்விகற்கவும் புஸிக்கவுமாகாது. அதனால் நீண்டஆயுளையடைவான். க்ஷேமத்தைக்கருதுகிறவன் இரவில் பித்ருகாரியங்களையும் தேகாலங்காரங்களையும் ஸ்நானத்தையும் செய்யலாகாது. பாரதனே! ராத்ரிபோஜனத்தில் மாவையும் மற்றவெண்மையானவற்றையும் ஜலபானத்தையும் விட்டுவிடவேண்டும். இரவில் நிரம்பச் சாப்பிடலாகாது ; ஸஞ்சரிக்கலாகாது. போஜனம்செய்தவுடன் புணர்ச்சிசெய்யலாகாது; ஓடலாகாது; அதிகசுகைப்புஉண்டாக்கத்தக்க காரியத்தைச் செய்யலாகாது. போஜனம்செய்தபிறகு பல்தூத்தலாகாது; வேலைசெய்யலாகாது. சிறந்தகுலத்திற்பிறந்தவளும் நல்ல லக்ஷணங்கள் பொருந்தினவளும் நல்லநக்ஷத்ரத்திற்பிறந்தவளும் பிராயத்திற்சிறியவளுமான கன்னிகையை விவாகம் செய்துகொள்ளவேண்டும். பாரதனே! ஸந்ததியையுண்டாக்கிக் குலத்தைநிலைநிறுத்திக் குலதர்மங்கள்விருத்தியானபின் புத்ரர்களைப் பிரித்துவைக்கவேண்டும். கன்னிகையைப்பெற்றால் உயர்குலத்திற்பிறந்தபுத்திசாலிக்குக் கொடுக்கவேண்டும். பாரதனே ! புத்ரர்களுக்கு நல்லகுலத்துப்பெண்ணை விவாகம்செய்யவேண்டும். வேலைக்காரர்களைச் சம்பாதிக்கவேண்டும். தலைமூழ்கித்தான் தேவகாரியத்தையும் பித்ருகாரியத்தையும் செய்யவேண்டும். பாரதனே ! தன்னுடையஜன்மதிதியிலும் அஷ்டமியிலும் சதுர்த்தசியிலும் அமாவாஸை முதலிய புண்ணியகாலங்களிலும் ஜன்மநக்ஷத்ரத்திலும் பூரட்டாதிஉத்ரட்டாதிகளிலும் கிருத்திகாநக்ஷத்ரத்திலும் தன்ஜன்மநக்ஷத்ரத்திற்குஐந்தாவதுநக்ஷத்ரத்திலும் மற்றக்கொடியநக்ஷத்திரங்களிலும் எண்ணெய்தேய்த்துக்கொள்ளலாகாது. சோதிடசாஸ்திரத்தில்மறுக்கப்பட்ட காட்களெல்லாவற்றையும் விடவேண்டும். அரசர்க்கரசே ! க்ஷேளரத்தை ஜாக்ரதையுடன் கிழக்குமுகமாவாவது வடக்குமுகமாவாவதுஇருந்து செய்வித்துக்கொள்ளவேண்டும். அதனால் தீர்க்காயுளையடைவான். தன்மனைவி கர்ப்பமாகவிருக்கும்போது ஸமுத்திரஸ்நானத்தையும் க்ஷேளரத்தையும் சிராத்தபோஜனத்தையும்செய்பவன் புத்ராயுடையபலனை அடையான். ஸாதுக்கள், ஆசாரியர்கள், பிராயத்திற்பெரியோர், முக்கியமாகக் குலப்பெண்கள் இவர்கள் தன்னைச்சேர்ந்தவராயிருந்தாலும் பிறரைச்சேர்ந்தவராயிருந்தாலும் அவர்களின்குற்றத்தை எடுத்துப்பேசலாகாது. பாதஸ்ரேஷ்டனே ! பிறர்குற்றம்பேசுவது பாவத்திற்குக்காரணமென்று சொல்லப்படுகிறது. ராஜனே ! அங்கஹீனமுள்ளஸ்திரீயையும் ஒரேகோத்ரத்திற்பிறந்த

பெண்ணையும் தாயின்குலத்திற்பிறந்தபெண்ணையும் ஏற்றத்தாழ்வான அவயவமுள்ளபெண்ணையும் விவாகம்செய்யலாகாது. வயதிற்பெரிய வளையும் துறவியையும் கற்புள்ளவளையும் தாழ்ந்தஜாதி உயர்ந்த ஜாதிப்பெண்களையும் விடவேண்டும். குலந்தெரியாதவளையும் தாழ் குலத்தாளையும்தெரிந்தவன் சேரலாகாது.செம்மட்டைநிறமும்குஷ்ட ரோகமுமுள்ளபெண்ணை நீ விவாகம்செய்யாதே. ராஜனே ! காக்கை வலிப்பும் வெண்குஷ்டமும் க்ஷயரோகமுமுள்ளகுலத்திற்பிறந்தவளை யும் இழிவானவளையும் விட்டுவிடவேண்டும். தேகத்தில்அதிகரோம ங்களுள்ளவளும் அதிகப்பருமனவளும் தாய்தந்தையர்களிடத்தி லேயேயிருப்பவளும் ஞானமற்றவளும் [1]ஸகோதரர்களிடத்திலேயே திருப்தியாயிருப்பவளும் சிவந்தகூந்தலுள்ளவளுமான கன்னிகைகளை விட்டுவிடவேண்டும். அழகுள்ளவளும் அதிர்ஷ்டத்துக்குரியலக்ஷ ணங்கள்பொருந்தியவளும் மனத்திற்குங்கண்ணுக்கும் இனியவளு மானபெண்ணை நீ விவாகம்செய்யக்கடவாய். யுதிஷ்டிர! நன்மை யைக்கருதுகிறவன் தனக்குஉயர்ந்தகுலத்திலும் தனக்குச்சரியான குலத்திலும் விவாகம்செய்துகொள்ளவேண்டும். இழிகுலத்தாளை யும் ஆசாரம்கெட்டவளையும் வாங்கலாகாது. விவாகம்செய்தபிறகு அக்நிகளையுண்டாக்கிக்கொண்டு வேதங்களில்சொல்லப்பட்டவையும் பிராம்மணர்களால் சொல்லப்பட்டவையுமான கிரியைகளெல்லாவற் றையும் ஊக்கத்துடன் செய்யவேண்டும்.ஸ்திரீகளின்மேல் பொறுமை யிருக்கலாகாது. மனைவியை நன்றாகக் காப்பாற்றவேண்டும். பொறு மையானது ஆயுளைக் கெடுத்துவிடும். ஆதலால், அதை விடவேண் டும். பகலில்தூங்குவதும் சூரியோதயத்திற்குப் பின்தூங்குவதும் காலையிலும் ராத்திரியிலும்சுத்தமில்லாமலிருப்பதும் ஆயுளைக்கெடுக் கும். பாரதனே! பிறர்மனைசேருவதும் நாவிதன்தீட்டும் அதிகபோ ஜனமும் ஆயுளைக்கெடுக்கும். இவற்றைச் செய்யாமலிருக்க முயல வேண்டும். ஸந்திகளில் போஜனத்தையும் ஸ்நானத்தையும் மலவிஸர் ஜனத்தையும் செய்யலாகாது. அப்போது ஒருவேலையும் செய்யா மல் அடங்கியிருக்கவேண்டும். ராஜனே ! ஸ்நானம்செய்தபிறகு ப்ரா ம்மணர்களைப் பூஜிக்கவேண்டும். ஸ்நானம்செய்து தேவதாநமஸ்கா ரத்தையும் குருக்களுக்கு அபிவாதனத்தையும் செய்யவேண்டும். அழைக்கப்படாமல் யாகத்திற்குப் போகலாகாது ; பார்ப்பதற்குமாத் திரம் போகலாம். பாரதனே ! பூஜைசெய்யாதவிடத்திற்குப்போவது

1 'ப்ராத்ருஜாம்துஷ்டாம்' என்பது மூலம் ; 'ப்ராதாவின் மகளையும் அதிகஸந்தோஷமுள்ளவளையும்' என்றும் கொள்ளலாம்.

ஆயுளைக்குறைக்கும். தனித்துப் பிரயாணம்போகலாகாது. இரவி லும் தனித்துப் போகலாகாது. பிராணபாயமில்லாதபோது அழை க்காமல் அயலாருடையஅன்னத்தைப் புசிக்கலாகாது. ஏகோத்திஷ்ட சிராத்தத்திலும் முக்கியமாக முதல்தினம்செய்யும் நக்நசிராத்தத்தி லும் புசிக்கலாகாது. ஸபிண்டீகரணத்திலும் மாஸிகங்களிலும்புசிப் பதை விடவேண்டும். மாலைச்சந்திவேளைவருவதற்குமுன்னமே வீட் டிலிருக்கவேண்டும். தாய்தந்தைஆசாரியர்களின்கட்டளையைச் செய்ய வேண்டும். புருஷஸ்ரேஷ்டனே! அது நல்லதா தீயதாவென்று விசாரிக்கக்கூடாது. க்ஷத்திரியன் முக்கியமாய் வில்வித்தையைப் பயிலவேண்டும். ராஜனே! தனுர்வேதத்திலும் வேதத்திலும் யானை யேறுவதிலும் குதிரையேறுவதிலும் தேரோட்டுவதிலும் பயிற்சி செய்யவேண்டும். அரசர்க்கரசே! முயற்சியோடிரு. முயற்சியுள்ளவன் ஸுகமாக விருத்தியாவான். பகைவராலும் வேலைக்காரராலும் சுற் றத்தாராலும் வசப்படுத்தப்படாமல் பிரஜைகளைக்காப்பதில்ஊக்கத் தோடிருப்பவன் எப்போதும் கஷ்டத்தையடையான். பாரதனே! ராஜனே! தர்க்கம் வியாகரணம் ஸங்கீதம் மற்றுமுள்ளகலைகள் இவற் றை நீ தெரிந்துகொள்ளவேண்டும். புராணங்கள் இதிஹாஸங்கள் கதைகள் மஹாத்மாக்களின்சரித்திரங்கள்இவற்றை நீ நித்தியமும் கேட்கவேண்டும். பூஜிக்கத்தக்கவரைப் பூஜிக்கவேண்டும். இகழத் தக்கவரை இகழவேண்டும். கோக்களுக்காகவும் பிராம்மணர்களுக் காகவும் உயிரைவிட்டும்யுத்தம்செய்யவேண்டும். பெண்களிடத்தில் வசப்படலாகாது. கவனிக்கவேண்டும். தன்சக்திக்குத்தக்கபடி தானம்செய்யவிரும்பவேண்டும்.ப்ராம்மணர்களை அவமதிக்கலாகாது. ஏழைத்தனம் பிராம்மணர்களால் வேண்டப்படுவது. பதிதர்களுடன் பேசலாகாது. தூரஸ்திரீயை அழைக்கலாகாது. தூரமாயிருக்கும் மனைவியையும் கிட்டநெருங்கவும் அழைக்கவும்கூடாது. தெரிந்த வன் நாலாம்நாள்ஸ்நானம்செய்தபிறகு இரவில்சேரலாம். ஐந்தாவது நாள்சேர்ந்தால் பெண்பிறக்கும். ஆறுவதுநாள்சேர்ந்தால் ஆண்பிறக் கும். பதினாறுவதுநாள்வரையில் புத்ரோத்பத்திக்கு முக்கியமான ருதுகாலமென்று சொல்லப்படுகிறது. தெரிந்தவன் இந்தமுறைப் படி மனைவியைச் சேரவேண்டும். தன் குலத்தோர் சுற்றத்தார் ஸ்நே கிதர் எல்லாரையும் கௌரவிக்கவேண்டும். தன்சக்தியளவு பல்வித தக்ஷிணைகளோடு யாகங்களைச் செய்யவேண்டும். ராஜனே! அதற்கு மேல் வனத்திலிருக்கவேண்டும். ஆயுளுக்குக் காரணமானவற்றை உனக்குக் குறிப்பாகச் சுருங்கச்சொன்னேன். யுதிஷ்டிர! மறற

வற்றை மூன்றுவேதங்களும்தெரிந்தபெரியோர்களிடம் தெரிந்து கொள்ளவேண்டும். ஐசுவரியத்தையுண்டாக்குவதும் ஆசாரம். கீர்த்தியைப்பெருகச்செய்வதும் ஆசாரம். ஆசாரத்தினால் ஆயுள் அதிகப்படுகிறது. ஆசாரம் குற்றங்களைப் போக்குகிறது. உபதேசங்களெல்லாவற்றுள்ளும் ஆசாரமே சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆசாரத்தினாலுண்டாவது தர்மம். தர்மத்தினால் ஆயுள்வளருகிறது. புகழையும் ஆயுளையும் ஸ்வர்க்கத்தையும் மங்களத்தையும்கொடுப்பதாகிய இத்தப்பெரியவிஷயம் எல்லாவர்ணத்தாரையும்பற்றிப் பிரம்மாவினால் தயையுடன்சொல்லப்பட்டது. ராஜனே! இதை நித்யமாகக் கேட்டுக்கொண்டும் சொல்லிக்கொண்டுமிருப்பவன் நல்லஆசாரத்தைச்செய்து சிறந்தலோகத்தையடைவான்" என்றார்.

நூற்றுபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஸகோதரர்கள் ஒருவரிடம்ஒருவர் நடந்துகொள்ளுமுறைமுதலியன.)

யுதிஷ்டிரர், "பரதஸ்ரேஷ்டரே! மூத்தஸகோதரன் இளையவர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டுவதும் இளையவர்கள் மூத்தவனிடத்தில் நடந்துகொள்ளவேண்டுவதும் எப்படி என்பதை எனக்குச்சொல்லும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"அப்பா! பாரதனே! நீ பெரியவனன்றே? ஆதலால், பெரியவன்போல நடந்துகொள். குருவினுடையமிகச்சிறந்தஒழுக்கந்தான் சிஷ்யனுக்குஒழுக்கம். பாரதனே! புத்தித்தேர்ச்சியில்லாத குருவினிடத்தில் சிஷ்யன்இருக்கமுடியாது. குருவுக்குத்தகுந்தபடிதான் சிஷ்யனுடையஒழுக்கமிருப்பது. தெரிந்தவன் குருடனுயிருக்கவேண்டுங்காலத்தில் குருடனுகவும் மூடனுயிருக்கவேண்டுங்காலத்தில் மூடனுகவும் இருக்கவேண்டும். [1]தவறுதல்நேரிடுமானால் அதுதீர்ந்தும்படி அவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும். ஏனெனில், சிறப்பினுற்பொருமையுற்றமனவேறுபாடுள்ளவர்கள் டைவர்கள்போலவே கண்மூன்னே அவர்களைக்கலைத்துவிடுவர். அவர்கள் கலைப்பதினால் கலையாமல் உறுதியாயிருக்கவேண்டும். குந்திபுத்திரனே! ஐசுவரியத்தினால்

1 ஆசார்யர்களிடத்தில் தவறுநேருமானால் பிரஸ்தாவம்நேரும்போது அதிகுற்றமாகாதபடி பரிகாரத்துடன் சொல்லவேண்டுமென்றும் சொள்ளலாம்

பொறுமையுள்ளபகைவர்கள் கலேப்பதற்கே எண்ணமுள்ளவர்கள். குலத்தைச்சிறப்பிப்பவனும் கெடுப்பவனும் ஜ்யேஷ்டன்தான். இவ்வுலகத்தில் பெரும்பாலும் மூத்தவன் கெட்டவழக்கத்தினால் எல்லாவற்றையும் கெடுக்கிறான். இளையவர்களுக்குத்தீங்குசெய்யும் மூத்த ஸகோதரன் ஜ்யேஷ்டனாகான். அவனுக்குப் பாகமில்லே. அரசர்கள் அவனேஅடக்கவேண்டும். மோசம்செய்யும்மனிதன் பாபலோகங்களுக்குப்போவது நிண்ணம். அவன் தகப்பனுக்குப்புத்திரனாகப் பிறந்தது பயனில்லாமையால் வீணென்றுசொல்லப்படுகிறது. பாவியானமனிதன்குலத்திற்பிறப்பது தாய்தந்தைகளுக்கு அனர்த்தத்திற்காகத்தான். அவன் கீர்த்தியைமறைத்து அபகீர்த்தியையே உண்டுபண்ணுகிறான். ஒழுக்கங்கெட்ட ஸகோதரரனேவருமே தாயபாகத்திற்குரியவராகார். நல்லொழுக்கமில்லாத ஜ்யேஷ்டனுமே பாகத்திற்குத்தகாதவன். கனிஷ்டனுக்குச் சொல்லவேண்டுமா? ஜ்யேஷ்டன் கனிஷ்டர்களுக்குக்கொடாமல் தான் தனக்குவரும்படியைச் செய்துகொள்ளலாகாது. தகப்பனுடையசொத்துத் தம்பிக்குமுண்டு. வழிநடப்பவனுக்குக் கால் [1]ஓய்ந்துபோவதுதான் பலன். தனக்குக்கிடைத்ததைத் தானடையவேண்டும். இஷ்டப்படாவிட்டால் அதைக் கொடுக்கவேண்டாம். அவிபக்தஸகோதரர்கள் சேர்ந்துமுயற்சிசெய்தால் பாகம்கொடுக்கவேண்டும். பிதாவானவன் புத்திரர்களுக்குவற்றக்குறைவாகப் பாகம் ஒருகாலும் கொடுக்கலாகாது. ஜ்யேஷ்டனும் கெட்டவர்களாயிருந்தாலும் நல்லவர்களாயிருந்தாலும் இளையவர்களே அவமதிக்கலாகாது. பெரியோர்கள் பிழை பொறுக்கவேண்டும். அவர்களால் பொறுக்கவுமுடியும். பெண்ணுயிருந்தாலும் பிராயத்திற்சிறியவனுயிருந்தாலும் அவர்களிடத்தில் நல்லொழுக்கத்தைக் கண்டால் அதை எடுத்துக்கொள்ளவேண்டும். தர்மமாகக்கிடைத்த பொருள்தான் சிலாக்கியமென்றுசொல்லுகின்றனர். அதைவிதிப்பவர் [2]மூவர்என்று அறியப்பட்டிருக்கின்றனர். கௌரவத்தில் ஓர் [3]உபாத்தியாயர் பத்து [4]ஆசாரியர்களுக்கு மேற்பட்டவர். பத்து உபாத்தியாயர்களுக்குமேற்பட்டவன் தந்தை. பத்துத்தந்தைகளுக்கும் அல்லது பூமிமுழுதுக்குமே மேற்பட்டவள் தாய். தாய்க்குச் சமமான குருவில்லே. தாய் எல்லாரிலும் சிறந்தவளாயிருப்பதனுலே

1 ஜ்யேஷ்டன் வரும்படிஸம்பாதிப்பது பொதுவுக்காகவேயன்றி அவனுக்குமட்டுமென்று என்பது.

2 மாதா, பிதா, உபாத்தியாயர்.

3 தந்திப்பவர். 4 மந்திரோபதேசம்செய்பவர்

தான் அவளைக் குருவென்றுநினைக்கின்றனர். பாரதனே! தந்தை யிறந்தபின் ஜ்யேஷ்டஸகோதரன் தந்தைக்குச்சமமானவன். இளைய வர்களுக்கு ஜீவனத்தைக்கற்பிப்பவனும் அவர்களைக்காப்பாற்றவேண் டியவனும்அவன்தானே? கனிஷ்டர்களனைவரும் அவனைநமஸ்கரித்து அவன்மனத்திற்கு ஒத்துஇருக்கவேண்டும். பிதாவைப்போல் அவனை அடிக்கவேண்டும். பாரதனே! தந்தைதாய்இருவரும் தேகத்தை உண்டுபண்ணுகின்றனர். [1]ஆசாரியனால்உண்டாக்கப்பட்ட ஜன்மமா னது உண்மையானது. அதற்கு மூப்புஇறப்புக்கள் இல்லை. பரத ஸ்ரேஷ்டனே! ஜ்யேஷ்டசகோதரி மாதாவுக்குச் சமமானவள். ஜ்யே ஷ்டசகோதரன்மனைவியும் அவன்குழந்தையாயிருக்கையில் அவளி டம் ஸ்தன்யபானம்செய்திருப்பானுயின் தாயைப்போலவேயாவாள்" என்றார்.

நூற்றுபத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உபவாஸத்தின் பலன்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! எல்லாவருணத்தாருக்கும் மிலேச் சர்களுக்கும் உபவாஸத்தில் எண்ணமிருக்கிறது. அதற்குக்காரணம் எங்களுக்குத் தெரியவில்லை. பிராம்மணர்களாலும் க்ஷத்திரியர்களா லும் நியமங்கள் செய்யப்படவேண்டியவையென்று நமக்குக்கேள்வி. பிதாமஹரே! அவர்களுக்கு உபவாஸத்தில் என்னபுண்ணியமிருக்கி றது? ராஜரே! எல்லாருக்குமுள்ளநியமங்களையும் உபவாஸங்களையும் பற்றிச் சொல்லக்கடவீர். ஐயா! உபவாஸம்செய்பவன்என்னகதியை அடைவான்? உபவாஸம் சிறந்தபுண்ணியமும் சிறந்தபரிசுத்தமுமாயி ருக்கிறதே. புருஷஸ்ரேஷ்டரே! இங்கே உபவாஸமிருப்பதனல் மனிதன் என்னபயனையடைகிறான்? எப்படி பாபத்தினின்றுவிடுபடு கிறான்? பரதஸ்ரேஷ்டரே! தர்மத்தையும் ஸ்வர்க்கத்தையும் மற்று முள்ளபுண்ணியலோகங்களையும் எப்படியடைகிறான்? ராஜரே! உப வாஸமிருந்தபின் என்னசெய்யவேண்டும்? எந்தத்தர்மத்தினல் நல மானவிஷயஸுகங்களை அடையலாம்? எனச்சுச்சொல்லும்" என்று கேட்டார். இவ்வாறுகேட்கும் தர்மந்தெரிந்தவரும் குந்திபுத்திரரு

1 இங்கு 'ஆசார்யன்' என்பது உபாத்தியாயருக்கும் மந்திரோபதேசம் செய்தவருக்கும் பொது.

மான யுதிஷ்டிரரைப்பார்த்து, தர்மத்தின்நுட்பம்அறிந்தவரும் சந்தனுவின்புத்திரருமானபீஷ்மர் பின்வருமாறு சொல்லலானார்.

"மஹாராஜனே! இந்தவிஷயம் முற்காலத்திலேயே நான்கேள்விப்பட்டதுதான். பரதஸ்ரேஷ்டனே! பிரம்மாவின்புத்திரரும் தவத்தையே தனமாகவுடையவருமாகிய அங்கிரஸென்னுமுனிவரிடத்தில் உபவாஸம்செய்வதிலுள்ள சிறந்தகுணங்களைப்பற்றி நீ என்னைக் கேட்டபடியே நான்கேட்டேன். பரதஸ்ரேஷ்டனே! அக்னியில் பிறந்தவரும் சிறந்தமகிமையுள்ளவருமானஅந்தரிஷி என்னால் இந்தக் கேள்விகேட்கப்பட்டபோது உபவாஸம்செய்வது புண்ணியமென்பதைப்பற்றிச் சொன்னார். அதைச் சொல்லுகிறேன். கௌரவரை விருத்திபண்ணுகிறவனே! புருஷஸ்ரேஷ்டனே! பிராம்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் மூன்றுதினங்கள் உபவாஸம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று இரண்டு மூன்றுதினங்களும் உபவாஸம் சொல்லப்பட்டிருக்கிறது. வைசியர்களும் சூத்திரர்களும் அறியாமையினால் மூன்றுதினம் அல்லதுஇரண்டுதினம்உபவாஸம்செய்வராயின் அவ்வுபவாஸங்களுக்குப் பலனில்லை. [1]நாலாவதுகாலத்தில் புசிப்பதை விடுவதுதான் வைசியனுக்கும்சூத்திரனுக்கும் விதிக்கப்பட்டிருப்பது. அவர்களுக்கு மூன்றுதினஉபவாஸம் தர்மந்தெரிந்த வைதிகர்களால் விதிக்கப்படவில்லை. பாரதனே! பஞ்சமியிலும் ஷஷ்டியிலும் பௌர்ணமியிலும் மனத்தையும்இந்திரியங்களையுமடக்கி ஒருவேளைபோஜனத்தோடு உபவாஸமிருப்பவன் பொறுமையும் அழகும் தேகத்தில் நல்லமணமுமுள்ளவனாகப் பிறப்பான். பஞ்சமி ஷஷ்டி இரண்டுதினங்களும் உபவாஸமிருந்து வீட்டில் பிராம்மணர்களைப்புசிப்பித்துத் தேவர்களைப்பூஜிக்கும் புத்திசாலியானவன் ஸந்ததியில்லாதவனாகவும் ஏழையாகவும் ஒருகாலுமிரான். கௌரவனே! கிருஷ்ணபக்ஷத்தில் அஷ்டமியிலும் சதுர்த்தசியிலும் [2]உபவாஸமிருப்பதனால்வியாதியற்றவனாகவும் சூரனாகவும் பிறப்பான். மார்கழிமாதத்தை ஒருவேளைபோஜனத்தோடுபோக்கித் தன்சக்தியளவு பிராம்மணர்களைப்புசிப்பிப்பவன் வியாதிகளாலும் பாவங்களாலும் விடப்பட்டு எல்லாநன்மைகளும் நிரம்பினவனாகிக் கிருஷிசெய்து எல்லாப்பயிர்களும்செழித்துத் தனதானியங்கள் மிகுதியாகப்பெற்றவனாவான். குந்திபுத்திரனே!

---

1 பிராத, ஸங்கவ, மத்தியான்ன, அபராஹ்ண என்னும் நாலுகாலங்களையும் தள்ளி ஸாயங்காலத்தில் அதாவது, இருபத்தைந்துநாழிகைக்குமேல், புஜிப்பது.

2 ஒருவேளை போஜனத்தை உபவாஸமென்றுகொள்க.

ஞைதமாஸத்தை ஒருவேளைபோஜனத்துடன் போக்குகிறவன் சிறந்த பாக்கியமும் அழகும் புகழுமுள்ளவனைப் பிறப்பான். பித்ருபக்தியுடன் மாசிமாதத்தை ஒருவேளைபோஜனத்துடன் கடத்துகிறவன் செல்வம்நிரம்பினவீட்டிற் பிறந்து சுற்றத்தார்களெல்லாரும் விரும்பும்தகுதியை அடைவான். பங்குனிமாஸத்தை ஒருவேளை உணவோடு கடத்துகிறவன் பாக்கியமும் அழகும் புகழுமுள்ளவனைப் பிறப்பான்; ஸ்திரீகள்விரும்பத்தக்கவனுவான். அவர்கள் அவனுக்குவசப்படுவார்கள். சித்திரைமாஸத்தை நியமத்துடன் ஒருவேளைபோஜனத்தினல் கடத்துகிறவன் பொன்னும்மணியும் முத்தும்நிரம்பின பெரியகுலத்திற் பிறக்கிறான். இந்திரியங்களைஜயித்து ஒருவேளைபோஜனத்தினல் வைகாசிமாதத்தைக்கடத்தும் ஆணைகட்டும் பெண்ணைகட்டும் தம்குலத்தோரில்சிறந்தவராவார். ஆனிமாதத்தை ஒருவேளைபோஜனத்தோடுகடத்தும்புருஷனும் ஸ்திரீயும் ஒப்பற்ற சிறந்தஐசுவரியத்தையடைவார். சோம்பலில்லாமல் ஆடிமாதத்தில் ஒருவேளைபோஜனத்தோடிருப்பவன் தானியங்களையும் தனங்களையும் புத்திரர்களையும் மிகுதியாக அடைந்தவனுவான். ஆவணிமாதத்தை நியமத்துடன் ஒருவேளைபோஜனத்தினுற் போக்குகிறவன் அழகும்செல்வமுமுள்ளவனுய் எக்காலமும் ஸுகமாயிருப்பான்; அநேகமனைவிகளும் புத்திரர்களும் மிகுதியானதனங்களுமுள்ளவனுவான். புரட்டாசிமாதம்ஒருவேளைஆகாரத்துடனிருக்கும்மனிதன் பசுக்கள்நிரம்பின அழியாதசெல்வத்தை அடைவான். ஐப்பசிமாதத்தை ஒருவேளைபோஜனத்தினுற் கழிப்பவன் சிறந்தபுத்தியுள்ளவனும் வாகனங்கள்நிரம்பினவனும் அனேக புத்திரர்களுள்ளவனுமாவான். கார்த்திகைமாஸமெல்லாம் ஏகபோஜனம்செய்யும்மனிதன் சூரனும் அநேகமனைவியுள்ளவனும் புகழுள்ளவனுமாவான். புருஷஸ்ரேஷ்டனே! இவ்வாறு உபவாஸமிருக்கும் மாஸங்களைப்பற்றிச் சொன்னேன். ராஜனே! தினங்களின்நியமங்களைப்பற்றியும் சொல்லுகிறேன்; கேள். பாரதனே! ஒவ்வொருபக்ஷமும் ஆனபிறகு அன்னத்தைப்புசிப்பவன் பசுக்களும் புத்திரர்களும்நிரம்பித் தீர்க்காயுளுள்ளவனுவான். ஒவ்வொருமாஸத்திலும் மும்மூன்றுதினங்களாகப் பன்னிரண்டுவருஷம் உபவாஸமிருப்பவன் அதிரியில்லாமலும் மனத்துய்ரமில்லாமலும் ஒருகூட்டத்தலைவனுயிருப்பான். பரதஸ்ரேஷ்டனே! முன்சொன்னநியமங்களெல்லாம் பன்னிரண்டுவருஷகாலம் செய்யவேண்டியவை. இந்தநியமங்களின் முறையைச்சொன்னேன். அரசனே! காலையிலும்மாலையிலும் போஜனம்செய்து இடையில் ஜலபானமும்செய்யாமலும் எப்போதும்அஹி

ம்ஸையை நியமமாகவைத்துக்கொண்டும் அக்நிஷ்டோமத்திரம்செய்து கொண்டுமிருப்பவன் ஆறுவருஷங்களிற் பயன்பெறுவானென்பதில் லஸ்தேகமில்லை. அவன் அக்நிஷ்டோமயாகத்தின் பலனை அடைவான். அந்தப்புண்ணியசாலியான மனிதன் பாவமற்றவனாகி ஆயிரக்கணக் கானஸ்திரீகள் நிரம்பினதும் ஆடல்பாடல்கள்முழங்குவதுமான அப் ஸரஸுகளின்லோகத்தில் உல்லாஸமாயிருப்பான்; சிறந்தபொன்னின் ஒளியினால்விளங்கும் விமானத்தில்ஏறி ஆயிரம்வருஷத்திற்குக்குறை யாமல் பிரம்மலோகத்தில் பூஜிக்கப்படுவான். அதுவானபின், இவ் வுலகத்திற்குவந்து சிறந்தமகிமையையும் அடைவான். ஒருவருஷம் முழுதும் தினத்திற்கு ஒருவேளைபோஜனத்துடனிருக்கும் மனிதன் அதிராத்ரமென்னும் யாகத்தின் பலனை அடைவான். அவன்மூப்பதினா யிரம்வருஷகாலம் ஸ்வர்க்கலோகத்திற் கொண்டாடப்படுவான். அது வானபின், இல்வுலகத்திற்குவந்து சிறந்தமகிமையை அடைவான். ஒருவருஷகாலம்முழுதும் நாலாவதுநாள்போஜனம்செய்துகொண்டு அஹிம்ஸையையும் ஸத்தியத்தையும்விடாமற் புலன்களையடக்கியிருப் பவன் வாஜபேயயாகத்தின்பலனை அடைவான்; மூப்பதினாயிரம்வருஷ காலம் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுவான். குந்திபுத்திரனே! ஆறுவதுநாள்புசித்துக்கொண்டு ஒருவருஷம்போக்கினமனிதன் அஸ் வமேதயாகத்தின்பலனை அடைவான். அவன் சக்கரவாகங்கள் கட் டினவிமானத்தில் ஏறிச்செல்வான்; நாற்பதினாயிரம்வருஷங்கள் ஸ்வ ர்க்கத்தில் மகிழ்ந்திருப்பான். ராஜனே! ஒருவருஷம் எட்டாவது நாள் போஜனத்தோடு ஜீவித்திருக்கும்மனிதன் கவாமயனயாகத் தின் பலனை அடைவான். ஹம்ஸபக்ஷிகளும் ஸாரஸபக்ஷிகளும் கட் டினவிமானத்தில் ஏறிச்செல்வான். அவன் ஐம்பதினாயிரம் வருஷ காலம் ஸ்வர்க்கத்தில் மகிழ்ந்திருப்பான். வேந்தனே! ஒவ்வொரு பக்ஷமானபின் புசித்துக்கொண்டு ஒருவருஷமிருப்பவனுக்கு ஆறு மாஸத்திய உபவாஸத்தின் பலனுண்டென்று பகவானான அங்கிரஸ் சொன்னார். அவன் அறுபதினாயிரவருஷகாலம் ஸ்வர்க்கலோகத் தில் வஸிப்பான். ராஜனே! அவன் தூங்கிப் பலவகைஇனியவை யும் தூரக்கேட்பவையுமான வீணை [1]வல்லகி வேணுவென்னும் வாத் தியங்களின்முழக்கங்களினால் எழுப்பப்படுவான். அப்பா! அரசனே! மாஸத்திற்கொருதரம் ஜலபானம்செய்துகொண்டு ஒருவருஷமிருப் பவன் விச்வஜித்தென்னும் யாகத்தின் பலனை அடைவான். அவன் சிங்கங்களும் புலிகளும்கட்டின விமானத்திலேறிச்செல்வான்; எழு

1 வீணையின்ஒருவகை.

பதினாயிரம்வருஷங்கள் ஸ்வர்க்கத்தில் மகிழ்ந்திருப்பான். புருஷ ஸ்ரேஷ்டனே! ஒருமாஸத்திற்குமேல் உபவாஸம் விதிக்கப்படவில்லை. குந்திபுத்திரனே! தர்மம்தெரிந்தவர்கள் உபவாஸத்தின்விதியை இவ்வாறு சொல்லுகின்றனர். வியாதியும்கோபமும்இல்லாமல் உப வாஸம்செய்பவன் ஒவ்வோர்உபவாஸத்திலும் யாகபலனையடைவது திண்ணம். அவன் ஹம்ஸங்கள் கட்டினவிமானத்திலேறி ஸ்வர்க்கத் திற்குச்செல்வான். பிரபுவே! நூறுயிரம்வருஷகாலம் அவன் ஸ்வர்க் கத்தில் மகிழ்ந்திருப்பான். நாறுஅப்ஸாஸுகளும் தேவகன்னிகை களும் அந்தமனிதனை மகிழ்விப்பர். பிரபுவே! கோபத்திருந்தும் வியாதியோடிருந்தும் உபவாஸம்செய்பவன் நூறுயிரம்வருஷங்கள் ஸ்வர்க்கத்தில் மகிழ்ந்திருப்பான்; தூங்கினபோது மேகலைகள்சிலம்பு களின்ஒலிகளினால் எழுப்பப்படுவான்; ஆயிரம்ஹம்ஸங்கள்கட்டின விமானத்திலேறிச் செல்வான். பரதஸ்ரேஷ்டனே! சென்றபின் நூற் றுக்கணக்கானஸ்திரீகளின்கூட்டத்தில்விளையாடிக்கொண்டிருப்பான். உபவாஸமானது சக்தியில்லாதவனுக்குச் சக்திகொடுப்பதாகவும் புண் பட்டவனுக்குப் புண்ணாற்றுவதாகவும் நோயுள்ளவனுக்கு மருந்து களின்வகைகளாகவும் கோபித்தவனுக்குக் கோபத்தைத்தெளிவிப்ப தாகவும் வறுமையினால்கஷ்டப்படுகிறவனுக்குத் திரவியங்களைக்கொடு ப்பதாகவும் காணப்பட்டிருக்கிறது. ஆசை, செல்வங்களினால் ஸுக மாக வளர்ந்தவர்களுக்கு இது பிடிக்காது. ஆதலால், அந்தஉபவாஸ மிருக்கும்புருஷன் நோயற்றவனாகவும் நினைத்தது கைகூடிவந்தவனா கவும் பாபம்நீங்கினவனாகவும், தேகம்விட்டபின் பரிசுத்தனாகி அலங்கா ரங்கள்செய்துகொண்டு நினைத்தபடிசெல்வதும் அனேகஸ்திரீகள்நிரம் பினதும் பொன்னிறமாகவிளங்குவதுமான விமானத்திலேறி இனி மையாகச்சஞ்சரித்துக்கொண்டுஉபவாஸத்தின்பலனை அனுபவிப்பான். அப்படிப்பட்டமனிதன் இளம்சூரியன்போலவும் சந்திரன்போலவும் பிரகாசிப்பதும், வைடூரியங்களும் முத்துக்களும் இழைக்கப்பட்ட தும், வீணைகளும் முரசுகளும் உயர்ந்தமணிகளும்ஒலிப்பதும், கொடி களும் விளக்குக்களும்பிரகாசிப்பதும், ஆயிரம்ஸ்திரீகளுடனிருப்பது மானவிமானத்தில் ஸுகமாகவிளங்குகிறான். பாண்டவனே! அவன் தேகத்திலுள்ளமயிர்க்கால்கள் எத்தனையோ அத்தனையாயிரம்வருஷங் கள் அவன் ஸ்வர்க்கத்தில் மகிழ்ந்திருப்பான். வேதத்திற்குமேலான சாஸ்திரமில்லை. தாய்க்குச்சமமானகுருவில்லை. தர்மத்திற்குமேலான லாபமில்லை. உபவாஸத்திற்குமேலான தவமில்லை. பிராம்மணர்களைவிட வேறுசுத்தம் இங்கும்இல்லை; ஸ்வர்க்கத்திலும்இல்லை. ஆதலால், உப

வாஸத்திற்குலுப்பானதவமும் கர்மமுமில்லை. சாஸ்திரப்படி உபவாஸ மிருந்துதான், தேவர்கள் ஸ்வர்க்கத்தையடைந்தனர். ரிஷிகளும் உபவாஸங்களாலேதான் சிறந்த தவஸித்தியை அடைந்தனர். சிறந்த ஞானியானவிஸ்வாமித்திரர் அநேகமாயிரம்தேவவருஷங்கள் ஒருவே ளைபோஜனத்தோடு பொறுத்திருந்தார். அதனால், அவருக்குப் பிராம் மணத்துவம்வந்தது. ச்யவனர், ஜமதக்னி, வஸிஷ்டர், கௌதமர், ப்ருகு இந்தமஹரிஷிகளனைவரும் உபவாஸத்தைப்பொறுத்தினாலே தான் தேவலோகத்தையடைந்தனர். இந்தவிஷயம் மூதலில் அங்கிர ஸினால் மஹரிஷிகளுக்கு உபதேசிக்கப்பட்டது. இதை நித்யமாகஉப தேசிப்பவன் துன்பத்தையடையான். குந்திபுத்திரனே! அங்கிர ஸென்னும்மஹரிஷியினால் ஒழுங்காகமுதலில்தெரிவிக்கப்பட்டதாகிய இந்தஉபவாஸவிதியை எப்போதும் படித்துக்கொண்டும் கேட்டுக் கொண்டுமிருக்கும்மனிதனுக்குப் பாவமிராது. அவன் எல்லாத்துய ரங்களாலும் விடப்படுவான். அவனுடையமனம் குற்றங்களால் ஆக் ரமிக்கப்படாது. அவன் விலங்குஜாதியில்பிறந்தவற்றின் பாஷையை யும் அறிவான். அந்த உத்தமமானமனிதன் அழிவில்லாதபுகழை அடைவான்" என்றார்.

நூற்றுபத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(யாகஞ்செய்யஅசக்தர் உபவாஸங்களாலேயே யாகபலனை அடைவரென்பது.)

யுதிஷ்டிரர், "மஹாத்மாவும் பிதாமஹருமானஉம்மால் சாஸ்திரப் பிரகாரம் செய்யவேண்டியயாகங்களும் அவற்றின்சிறப்புக்களும் இம் மையிலும்மறுமையிலும்அவற்றிற்குள்ளபயன்களும் முழுதும்சொல் லப்பட்டன. பிதாமஹரே! அந்தயாகங்கள் ஏழைகள்செய்யமுடியா தவை. யாகங்களுக்குஅனேகபருவிகளும் அநேகதிரவியஉதவிகளும் மிகுதியாகவேண்டும். பிதாமஹரே! அரசர்களாவது ராஜகுமாரர்க ளாவது அவற்றைச் செய்யக்கூடும். பொருளில்லாதவரும் குணமில் லாதவரும் மனிதருதவியில்லாமல் தனித்திருப்பவரும் அவற்றைச் செய்யமுடியாது. பிதாமஹரே! ஏழைகளும் பொருள்குறைந்தவரும் சிறப்பில்லாதவரும் ஜனச்சேர்க்கையின்றித் தனித்திருப்பவரும் எட்

போதும்செய்யக்கூடியதும் இந்தயாகங்களுக்குச் சரியானபயனுள்ள தும் எதுவோ அதை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"யுதிஷ்டிரனே! இந்தஉபவாஸத்தினுடையபலன்தான் யாகபல னுக்குச்சமமானதென்று அங்கிரஸென்னும்முனிவர் சொல்லியிருக் கிறார். அந்தஉபவாஸமுறையைச் சொல்லுகிறேன்; கேள். காலையி லும்மாலையிலும் புசித்து இடையில்ஜலபானமும்செய்யாமலும் பிரா ணிகளை ஹிம்ஸிக்காமலும் நித்தியமும் அக்நிஹோத்திரம்செய்து கொண்டுமிருப்பவன் ஆறுவருஷங்களில்பலனை அடைவானென்பதில் ஸந்தேகமில்லை.அந்தமனிதன் உயர்ந்தபொன்னிறமானவிமானத்தை அடைவான். ஆடல்பாடல்கள்முழங்குவதும் அக்நிக்கொப்பானதும் தேவஸ்திரீகளிருக்குமிடமுமாகிய பிராம்மலோகத்தில் பத்துக்கோடி வருஷங்கள் வஸிப்பான். மூன்றுவருஷகாலங்கள் நித்யமும் ஏக போஜனம்செய்துகொண்டு தன்தர்மபத்தினியிடத்திலேயே நிய மத்தோடிருப்பவன் அக்நிஷ்டோமயாகத்தின் பலனை அடைவான். மிகுந்தபொருள்தக்ஷிணைகளோடுகூடியயாகத்தை இந்திரனுக்குப்பிரி யமாகச்செய்கிறவன்போலவே ஸத்தியமும்தானமுமுள்ளவனும் பிரா ம்மணர்களிடத்தில்அன்புள்ளவனும் பொறுமைப்படாதவனும் சிர மத்தைப்பொறுப்பவனும் ஐம்புலன்களையுமடக்கினவனும் கோபத் தைஜயித்தவனுமாயிருப்பவன் உயர்ந்தகதியை அடைவான். அவன் வெண்மேகம்போன்றதும்ஹம்ஸங்கள்கட்டப்பட்டதுமானவிமானத் தில் அப்ஸரஸ்ஸுகளுடன்கூட இருநூறுகோடிவருஷங்கள் இருப் பான். இரண்டாவதுஇரண்டாவதுநாள் ஒருவேளைபோஜனம்செய்து கொண்டும் நித்தியம்அக்நிஹோத்திரம் செய்துகொண்டும் விடியற் காலத்தில் கண்விழித்துக்கொண்டும் பன்னிரண்டுவருஷகாலமிருப்ப வன் அக்நிஷ்டோமயாகத்தின் பலனை அடைவான். அந்தமனிதன் ஹம்ஸங்களும் ஸாரஸபக்ஷிகளும் கட்டினவிமானத்தை அடைவான்; சிறந்தஸ்திரீகளால்சூழப்பெற்று இந்திரலோகத்தில்வஸிப்பான். மூன் றுவதுமூன்றுவதுநாள் ஏகபோஜனம்செய்துகொண்டும் நித்தியமாக அக்நிஹோத்திரம் செய்துகொண்டும் காலையில்எழுந்துகொண்டும் பன்னிரண்டுமாதங்களிருப்பவன் அதிராத்திரமென்னும் யாகத்தின் பலனை அடைவான். அந்தமனிதன் மயில்களும்ஹம்ஸங்களும்கட் டினவிமானத்தை அடைவான். ஸப்தரிஷிகளின்லோகத்தில் அப்ஸர ஸ்ஸுகளுடன்கூட எப்போதும் வஸிப்பான். மூப்பதுகோடிவருஷங் களுக்குப்பின்புதான் அவன் அதைவிட்டுத் திரும்புவானென்று அறி

கின்றனர். நாலாவதுநாள் ஏகபோஜனம்செய்து எப்போதும் அக்நி ஹோத்திரம்செய்துகொண்டு பன்னிரண்டுமாதங்களிருப்பவன் வாஜபேயயாகத்தின் சிறந்தபலனை அடைவான்; இந்திரகன்னிகைகள் கொண்டுவரும்விமானத்தை அடைவான். ஹாகரத்துக்குஅக்கரையிலுள்ள இந்திரலோகத்தில்வஸித்துக்கொண்டு தேவராஜனானஇந்திரனுடையவிளையாட்டுக்களை எந்தக்காலங்களிலும் பார்த்துக்கொண்டிருப்பான். ஐந்தாவதுதினத்தில் ஏகபோஜனம்செய்துகொண்டும் எப்போதும் அக்நிஹோத்திரம்செய்துகொண்டும் ஆசையற்றவனும் ஸத்தியம்தவறுதவனும் பிராம்மணர்களிடத்தில் அன்புள்ளவனும் ஹிம்ஸைசெய்யாதவனும் பொறுமையில்லாதவனும் பாவம்செய்யாதவனுமாகப் பன்னிரண்டுமாதங்களிருப்பவன் த்வாதசாஹமென்னும் யாகத்தின் பலனை அடைவான். பொன்மயமானதும் ஹம்ஸங்கள்கட்டினதுமாகிய திவ்யவிமானத்தையும் அனேகம் ஸூர்யர்கள்போலப் பிரகாசிக்கும் வெண்மையானகிருகத்தையும் அடைவான். ஐயாயிரத்து நூறுகோடிவருஷங்கள் அவ்வுலகத்தில் அவன் ஸுகமாகவஸிப்பான். ஆறுவதுநாள் ஏகபோஜனம்செய்துகொண்டும் நித்தியம்அக்னிஹோத்திரம்செய்துகொண்டும் மூன்றுகாலமும் ஸ்நானம் செய்துகொண்டும் பிரம்மசாரிவிரதமாகவும் பொறுமையில்லாமலும் பன்னிரண்டுமாதங்களிருப்பவன் கவாமயனமென்னும்யாகத்தின் சிறந்தபலனை அடைவான். ஹம்ஸங்களும்மயில்களும்கட்டினதும்பொன்னிறுற்செய்யப்பட்டு அக்நியின்ஜ்வாலைபோலப்பிரகாசிப்பதுமான சிறந்தவாகனத்தை அடைவான்; அப்ஸரஸுகளின்மடிகளிற்படுத்துச் சிலம்புகள்மேகலைகளின்ஒலிகளினால் எழுப்பப்படுவான். ஆயிரத்தறுநூற்றெண்பதுகோடியே ஐந்துலக்ஷம்வருஷங்களும் நூறுகரடியின் தேகத்திலுள்ளரோமங்கள் எவ்வளவோ அவ்வளவுவருஷகாலமும் பிரம்மலோகத்தில் பூஜிக்கப்படுவான். ஏழாவதுநாள் ஏகபோஜனம் செய்துகொண்டும் நித்யம்அக்நிஹோத்ரம்செய்துகொண்டும் மௌனவிரதத்தையும் பிரம்மசாரிவிரதத்தையும் அனுஷ்டித்துக்கொண்டும் புஷ்பசந்தனங்களையும் மதுமாம்ஸங்களையும்விட்டும் பன்னிரண்டுவருஷகாலமிருக்கும்மனிதன் ஸப்தமருத்துக்களின் லோகத்திற்கும் இந்திரலோகத்திற்கும் போவான். ஆங்காங்கு நினைத்தவையெல்லாம் பெற்றுத் தேவகன்னிகைகளால் அழைத்துக்கொண்டுபோகப்படுகிறான். மிகுதியானபொன்தகடுகளோடுகூடிய யாகத்தின்பலனை அம்மனிதன்அடைகிறான்;எண்ணிறந்தவருஷகாலம்அவ்வுலகங்களில் மகிழ்ந்திருக்கிறான். எட்டாவதுநாள் புசித்துக்கொண்டும் நித்தியம்

தேவதாபூஜையும் அக்நிஹோத்திரமும்செய்துகொண்டும் ஒருவரு ஷம் பொறுமையோடிருக்கிறமனிதன் பௌண்டரீகயாகத்தின் சிற ந்தபலனை அடைவான்;தாமரைமலர்நிறமுள்ளவிமானத்தில்ஏறுவான். தேகத்திற்பளபளப்புள்ளவர்களும்இளமையினுலும் அழகினுலும்விள ங்குகிறவர்களும் சிலர் பொன்போலப்பசுமைநிறமும் வேறுசிலர் கறு த்தநிறமுமுள்ளவர்களுமான அநேகம்பெண்களையடைவது நிச்சயம். ஒன்பதாவதுநாள் புசித்துக்கொண்டும் அக்நிஹோத்திரம்செய்து கொண்டும் ஒருவருஷத்தில் பன்னிரண்டுமாதங்களுமிருப்பவன் ஆயி ரம்அஸ்வமேதயாகங்களின் சிறந்தபலனை அடைவான். அந்தமனிதன் வெண்டாமரைமலர்போலப் பிரகாசிக்கும் விமானத்தைஅடைவான். மத்தியான்னசூரியனைப்போலவும் ஜ்வலிக்கின்றஅக்நியைப்போலவும் பிரகாசிக்கின்றவரும் தெய்வலோகப்பூமாலைகளையணிந்தவருமாகிய ருத்திரகன்னிகைகளிலை நித்தியமானமேலுலகத்திற்கு அழைத்துக் கொண்டுபோகப்படுவான் ; நூறுயிரங்கோடியே பதினெண்ணுயிரம் வருஷங்களும் ஒருகல்பமும் அவ்வுலகங்களில் மகிழ்ந்திருப்பான். வருஷம்பன்னிரண்டுமாதங்களும் ஒவ்வொருபத்தாவதுநாளும் புசித் துக்கொண்டும் அக்நிஹோத்திரத்தை நித்தியமாக விடாமற்செய்து கொண்டுமிருப்பவன் எல்லாப்பிராணிகளின் மனங்களையும் கவருவ தாகிய பிரம்மகன்னிகைகளிருக்கும் உலகத்தில் ஆயிரம் அஸ்வமே தங்களின்சிறந்தபலனை அனுபவிப்பான். கருநெய்தல்நிறமும் செந் தாமரைநிறமுமுள்ள அழகுள்ள கன்னிகைகள் அம்மனிதனை எப் போதும் உல்லாஸப்படுத்துவார்கள். (அவன்) ஆகாயத்தில் சுழல்போ லச்சுற்றுவதும் கடலலைகள்போலவிளங்குவதுமான மண்டலாவர்த்த மென்னும் உத்தமமான விமானத்தை வாகனமாகஅடைவான் ; பல வகை ரத்தினங்களின் மாலைகள் ஒளிப்பதும் சங்கநாதங்கள் முழங்கு வதும் ஸ்படிகமயமும்சிறந்தவைரமயமுமாகிய தூண்களும் மேடை களுமுள்ளதும் ஹம்ஸங்களும் ஸாரஸங்களும் வாகனங்களாகக் கட் டப்பட்டதுமான பெரியவிமானத்திலேறுவான். பதினேராவது நாள்வந்தபோது அன்னத்தைப்புசித்தும் எப்போதும் அக்நிஹோத் திரம்செய்தும் வாக்கினுலும் மனத்தினுலும் பிறர்மனைவியைவிரும்பா மலும் தாய்தந்தையர்களுக்காகக்கூடப் பொய்சொல்லாமலும் பன் னிரண்டுமாதங்களிருப்பவன் விமானத்திலிருக்கும் சிறந்தசக்தியுள்ள மஹாதேவரை அடைவான்;ஆயிரம்அஸ்வமேதங்களின்சிறந்தபலனை அனுபவிப்பான் ; பிரம்மாவினுடைய விமானமும் வந்திருப்பதைக் காண்பான். பொன்னிறமுள்ளவர்களும் அழகுள்ளவர்களுமான

கன்னிகைகள், தேவலோகத்தில் மனத்தைக்கவர்வதாகிய ருத்திரர் களின்லோகத்திற்கு அவனே அழைத்துக்கொண்டுபோவார்கள். (அவன்) ஆயிரம்லக்ஷங்கோடிவருஷங்களும் எண்ணிறந்தவருஷங்க களும்பிரளயகாலத்திலும் அங்கேவஸிப்பான்; தேவர்களாலும் அஸு ரர்களாலும்பூஜிக்கப்பட்ட சங்காரைத் தினந்தோறும் நமஸ்கரிப்பான். ஒவ்வொருநாளும் அவர் அவனுக்குத் தரிசனங்கொடுப்பார். பன்னி ரண்டாவதுநாள் வந்தபிறகு அன்னத்தைப்புஜித்து நியமத்துடன் அக்நிஹோத்ரம்செய்து பன்னிரண்டுமாதகாலங்களிருப்பவன் ஸர் வமேதமென்னும் யாகத்தின் பலனை அடைவான். பன்னிரண்டு சூரி யர்களிலுலும் அவனுக்கு விமானம் செய்யப்படுகிறது. ராஜனே! மிக்கவிலேயுள்ளமணிகளாலும் முத்துக்களாலும் பவழங்களாலும் விளங்குவதும், சூரியனுடையஒளியினால் நாலுபக்கமும் சூழப்பெற்ற தும், யானைகள்போகும் வீதிகள்நிரம்பினதும், மயில்களும் சக்கர வாகங்களும் கூவுவதினால்விளங்குவதும், உயர்ந்தமேல்மாடிகளுள்ள தும், ஆண்பெண்களாற் சூழப்பெற்றதுமான ஸ்தானம்பிரம்மலோக தில் எப்போதும் அவனுக்கு நிலையாகவிருக்கும். தர்மத்தெரிந்த மகானுபாவரான அங்கிரஸ்மஹரிஷி இவ்வாறு சொன்னர். பதின் மூன்றுவதுநாள் வந்தபிறகு போஜனம்செய்துகொண்டு பன்னிரண்டு மாஸங்களிருப்பவன் தேவஸத்ரமென்னும் யாகத்தின்பலனை அடை வான். அந்தமனிதன் பொன் ரத்தினக்குவியல்களும் தேவலோகத் திய ஆபரணங்களும் அலங்காரமாகவிளங்குவதும், தேவகன்னிகை கள் நிரம்பினதும், தேவவாத்தியங்கள்முழங்குவதும்,பரிசுத்தமணம் வீசுவதுமான ரக்தபத்மோதயமென்னும் விமானத்தை அடைவான்; அவ்விடத்தில் இரண்டு [1]சங்குகள், இரண்டுபதாகைகள், நூறுயிரம் [2] பத்மம், அவ்வளவு [3]ஸமுத்ரம்என்னும் எண்களுள்ள பிரளயங் களும் கல்பங்களும் வஸிப்பான்; கந்தர்வர்களின் கீதமுழக்கம் பேரி வாத்தியங்கள் பணவவாத்தியங்கள் இவற்றின்முழக்கங்களுடன் அங் குள்ள தேவகன்னிகைகளினால் துதிக்கப்பட்டு உல்லாஸம்செய்விக்கப் படுகிறான். பதினாலாவதுநாள் நிரம்பும்போது அன்னத்தைப்புஜித் துக்கொண்டு பன்னிரண்டுமாஸங்களிருப்பவன் மஹாமேதயாகத்தின் பலனை அடைவான். உவமையற்றஅழகும் இளமையுமுள்ள தேவகன் னிகைகள் பளபளவென்று பிரகாசிக்கும் பொன்னாலாகியதோள்வளை களைத்தரித்து அலங்காரங்கள்செய்துகொண்டுவிமானங்களில்ஏறிஅவ னிடம் வருவார்கள். அவன் அந்தஅந்த இடங்களிலும் ஹம்ஸங்களின்

[1] பத்துலக்ஷம்கோடி. [2] நூறுகோடி. [3] நூறுலக்ஷம்கோடி.

இனியகூவுதல்களாலும் சிலம்புகள்மேகலைகளின் ஒலிகளாலும் எழுப்பப்படுவான். கங்கையின்மணல்நிரம்பினதும்தேவகன்னிகைகள்இருக்கும்இடமுமாகியஅவ்வுலகத்தில் அதிகவருஷங்கள் வஸிப்பான். ஒருபக்ஷம்நிரம்பும்போது ஒருவேளைபுசித்து இந்திரியங்களைஜயித்து நித்தியம்அக்நிஹோத்திரம்செய்துகொண்டு பன்னிரண்டுமாஸங்களிருப்பவன் ஆயிரம்ராஜஸூயயாகங்களின் சிறந்தபலனை அடைவான்; ஹம்ஸங்களும்மயில்களும்கட்டினதிவ்யவிமானங்களில் ஏறுவான். அநேகரத்தினங்களாற்செய்யப்பட்ட வட்டங்களினால் விசித்திரமானதும் பொன்னால்மூடப்பட்டதும் சிறந்தஆபரணங்களினால்விளங்கும் உயர்ந்தபெண்களினால்அலங்கரிக்கப்பட்டதும் ஒற்றைத்தூணும்நாலுவாயில்களும் ஏழுமாடிகளுமுள்ளதும் மிக்கமங்களகரமும் அநேகமாயிரம் கொடிகள்கட்டினதும் பாட்டுமுழக்கமுள்ளதும்தேவலோகத்திய சிறப்புக்களெல்லாம்சேர்ந்ததுமாகிய தேவவிமானத்தில் ஏறுவான். ரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் பவழங்களினாலும் அலங்கரிக்கப்பட்டதும் மின்னல்போல ஒளியுள்ளதுமான அவ்வுலகத்தில், யானைகளையும் காண்டாமிருகங்களையும் வாகனங்களாகவுறி ஆயிரம்யுகங்கள் வஸிப்பான். பதினாறுவதுநாள் வந்தபோது போஜனம்செய்துகொண்டு பன்னிரண்டுமாஸங்களிருப்பவன் ஸோமயாகத்தின்பலனை அடைவான்; சந்திரகன்னிகைகள் இருக்கும்இடங்களில் நித்தியமும் வஸிப்பான்; இனியசந்தனமுதலியவற்றைப்பூசிக்கொண்டு நினைத்தபடி ஸஞ்சரிப்பான்; விமானத்திலிருந்து காட்சிக்கினியவர்களும் இனியசொல்லுள்ளவர்களுமான பெண்களினால் பூஜிக்கப்பெற்றுக் காமஸுகங்களினால் உபசரிக்கப்பெறுகிறான். ஆயிரத்துப்பதினொன்று கோடி மஹாகல்பங்கள் அங்கேயே பலனை அநுபவிப்பான். பதினேழாவதுநாள்வந்தபோது அன்னத்தைப்புசித்து நித்தியம் அக்நிஹோத்திரங்களைச்செய்துகொண்டு பன்னிரண்டுமாஸங்களுமிருப்பவன் வருணன், இந்திரன், ருத்திரர்கள் இவர்களின்லோகங்களையும் அடைந்து காற்றுப்படிக்கையிற்படித்துப் பிரம்மலோகத்திற்கும்செல்வான். அங்கே தேவகன்னிகைகளினால் ஆஸனங்கொடுத்து உபசரிக்கப்படுவான். அவன் தேவரிஷியாயிருந்து பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் இம்மூன்றுலோகங்களிலுமுள்ள எல்லாப்பொருள்களையும் பிரத்யக்ஷமாகப் பார்ப்பான். அங்கே அழகும்இன்சொல்லுமுள்ளவர்களாகிய தேவர்க்கும் மேலானதேவரான பிரம்மதேவரின் கன்னிகைகள் முப்பத்திருவர் நன்றாக அலங்காரம்செய்துகொண்டு அவனை மகிழ்விப்பார்கள். ராஜனே! ஆகாயத்தில் சந்திரனும் சூரிய

ஹும் எந்தக்காலம்வரை ஸஞ்சரிக்கின்றனரோ அந்தக்காலம்வரையில் அந்தச்சிறந்தமனவுறுதியுள்ளவன் அமிருதத்திற்கொப்பானசுவைக ளேயுண்டு ஸஞ்சரிப்பான். பதினெட்டாவதுநாள்ஏகபோஜனம்செய்து கொண்டு பன்னிரண்டுமாஸங்களுமிருப்பவன் ஏழுலோகங்களையும் பார்ப்பான். அவன் தேவகன்னிகைகளால்ஏறப்பட்டவையும் நன்றாக அலங்கரிக்கப்பட்டுப்பிரகாசிப்பவையும்மங்களகோஷங்களுள்ளவையு மான ரதங்களால் பின்செல்லப்படுவான்; புலிகளும்வில்லும்மங்களமும்கட் டப்பட்டதும் மேகமுழக்கம்போன்றசப்தமுள்ளதும் சிறந்ததுமான திவ்யவிமானத்திலேறி ரிகஸுகமாயிருப்பான்; அங்கே அநேகமாயி ரம்கல்பகாலம்கன்னிகைகளுடன்மகிழ்ந்திருப்பான்; அமிருதத்தையும் அமிருதத்தைப்போலஉயர்ந்தசுவையுள்ள ஆகாரத்தையும் உண்பான். பத்தொன்பதாவதுநாள் ஏகபோஜனம்செய்துகொண்டு பன்னிரண்டு மாஸங்களிருப்பவன் ஏழு லகங்களையும் பார்ப்பான்; அப்ஸரஸுக ளின்கூட்டங்கள்காத்திருப்பதும் கந்தர்வர்கள்பாடுவதும் சூரியனைப் போலஜ்வலிப்பதுமான உயர்ந்தஸ்தானத்தையும் விமானத்தையும் அடைவான்; அவ்விடத்தில் ஒளியுள்ளவனாகித் தேவலோகத்திய ஆடைகளைஉடுத்துச் சிறந்ததேவப்பெண்களுடன் அநேகவருஷகா லங்கள் துயரம்விட்டு மகிழ்ந்திருப்பான். இருபதாவதுநாள்ஏகபோஜ னம்செய்துகொண்டுஸத்யத்தையும்விரதத்தையும்விடாமல்ஐம்புலன் களையுமடக்கி மாம்ஸமுண்ணுமல் எல்லாப்பிராணிகளுக்கும்நன்மை யைக்கருதிப் பன்னிரண்டுமாஸங்களிருப்பவன் பெரியவையும் அழ கியவையுமான சூரியலோகங்களை அடைவான். கந்தர்வர்களும் அப் ஸரஸுகளும் தேவலோகத்தியபுஷ்பங்களையும் சந்தனங்களையும் எடுத்துக்கொண்டு அழகியபொன்விமானங்களுடன் அவனைப் பின் தொடர்வார்கள். இருபத்தோராவதுநாளில்ஏகபோஜனம்செய்து நித் தியம்அக்நிஹோத்ரத்துடன் பன்னிரண்டுமாதங்களிருப்பவன் உயர் ந்தசுக்ரலோகத்திற்கும் இந்த்ரலோகத்திற்கும், அசுவினிதேவர்கள் மருத்துக்களின்லோகங்களுக்கும் போவான்; எப்போதும் இன்பங் களையேயனுபவித்துக்கொண்டு துன்பங்களையறியாமல் சிறந்தவிமா னத்திலேறிச் சிறந்தஸ்த்ரீகளால் அனுஸரிக்கப்பெற்றுத் தேவ னைப்போலப் பிரபுவாக விளையாடுவான். இருபத்திரண்டாவதுநாள் வந்தபோது ஏகபோஜனம்செய்து நித்தியம் அக்நிஹோத்ரம்செய்து கொண்டு ஹிம்ஸை பொய் பொறுமைகளைவிட்டுப் பன்னிரண்டு மாஸகாலமிருக்கும் புத்திசாலியானவன் சூரியனுக்கொப்பானஒளி யுடன் அஷ்டவஸுக்களின்லோகங்களை அடைவான். சிறந்தவிமா

னத்தையடைந்து அமுதமுண்டு சிறந்தஆபரணங்களையணிந்து நினைத்தபடிஸஞ்சரித்துத் தேவகன்னிகைகளுடன் விளையாடுவான். இருபத்துமூன்றுவதுநாள் மிதமாகவுகபோஜனம்செய்து இந்திரியங்களைஜயித்துப் பன்னிரண்டுமாதங்களிருப்பவன் வாயுலோகத்திற்கும் சுக்ரலோகத்திற்கும் ருத்ரலோகத்திற்கும் செல்வான்; நினைத்தபடி செல்லவும்: நினைத்தபடிசெய்யவும்நிறமையுற்றும் அப்ஸரஸுகளின் கூட்டங்களிலைல்பூஜிக்கப்பெற்றும் சிறந்தவிமானத்தில்ஏறித் தேவர்களின்ஆபரணங்களையணிந்துகொண்டுதேவகன்னிகைகளுடன் அநேக யுககாலம்வரையில் மகிழ்ந்திருப்பான். இருபத்துநான்காவதுநாளில் போஜனம்செய்து [1]நித்யாக்நிஹோத்ரத்துடன் பன்னிரண்டுமாதங்களிருப்பவன் ஆதித்யர்களின்லோகத்தில் நீண்டகாலம் மகிழ்ந்திருப்பான்; தேவலோகத்தியஆடைகளையுடுத்துச் சிறந்தமாலைகளையும்சந்தனப்பூச்சுக்களையும்அணிந்து ஹம்ஸங்கள்கட்டினதும் மனத்தைக்கவருவதுமான சிறந்த பொன்விமானத்தில்ஏறி ஆயிரவரும் பதினாயிரவருமானதேவகன்னிகைகளுடன் மகிழ்ந்திருப்பான். இருபத்தைந்தாவதுநாளில்ஏகபோஜனம்செய்து பன்னிரண்டுமாஸங்களிருப்பவன் எல்லாவாகனங்களிலும்ஏறுவான்; சிங்கங்களும்புலிகளும்கட்டப்பட்டவையும் மேகங்கள்போலஒலிப்பவையும் தேவகன்னிகைகளினால் ஏறப்பட்டவையும் ஜயகோஷங்களுள்ளவையும் தூயஒளியுள்ளவையுமான பொன்ரதங்களினால் பின்செல்லப்படுவான்; மனத்தைமிகக்கவருவதாகிய சிறந்ததேவகிருகத்தையடைந்து அதில் அநேகமாயிரம் கல்பங்கள் நூற்றுக்கணக்கானஸ்திரீகளுடன் அமிருதம்போன்றஉயர்ந்தசுவையுள்ளஆகாரத்தைப் புசித்துக்கொண்டிருப்பான். இருபத்தாறுவதுநாள் விலக்கவேண்டியவற்றைவிலக்கி நியமத்துடன் ஏகபோஜனம்செய்து புலன்களையடக்கிப் பற்றற்றவனாகி அக்நிஹோத்ரம்செய்துகொண்டுபன்னிரண்டுமாதங்களிருக்கும் மகானுபாவன்அப்ஸரஸுகளின்கூட்டங்களினால்கொண்டாடப்பெற்று ஸப்தமருத்துக்கள் அஷ்டவஸுக்களின்லோகங்களையடைவான்; படிகத்தினாற்செய்யப்பட்டவையும்எல்லாரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டவையுமான திவ்யவிமானங்களில்ஏறிக் கந்தர்வர்களாலும் அப்ஸரஸுகளாலும்பூஜிக்கப்பெற்று இரண்டாயிரம் [1]அர்ப்புதம்தேவவருஷங்கள் தேவனைப்போன்றஒளியுடன் மகிழ்ந்திருப்பான். இருபத்தேழாவதுநாளில்ஏகபோஜனத்துடன் நித்தியாக்நிஹோத்ரமும்செய்து பன்னிரண்டுமாஸங்களிருப்பவன் மிகுதியானபலனைப்பெற்றுத் தேவலோ

[1] பத்துக்கோடி.

கத்தில் பூஜிக்கப்படுவான்; அவ்வுலகத்தில்வஹிக்கும்போது அமிருதத்தையுண்டு பசியில்லாமல் மகிழ்ந்திருப்பான். தேவசரீரத்தையடைந்து விமானத்திலேறித் தேவரிஷிகளும்ராஜரிஷிகளும் இருக்கும்லோகங்களை அடைவான்; மனத்திற்கினியவர்களானபெண்களுடன் செருக்குடன்விளையாடிக்கொண்டு வஹிப்பான்; மூவாயிரம்யுகங்களும் மூவாயிரம்கல்பங்களும் ஸுகமாகவஹிப்பான். மனத்தையும்இந்திரியங்களையும்அடக்கி இருபத்தெட்டாவதுநாள் ஏகபோஜனத்தோடு பன்னிரண்டுமாதங்களிருப்பவன் தேவரிஷிகளடையும் பெரும்பயனை அடைவான்; ஸுகங்களையடைந்து ஒளியிலுல்சூரியன் போலப் பிரகாசமாகவிளங்குவான். மென்மையுள்ளவர்களும்அழகிய ஒளியுள்ளவர்களும் பருத்தஸ்தனங்களும் தொடைகளும்நிதம்பங்களுமுள்ளவர்களும்சிறந்தஆபரணங்களினுல் அலங்கரிக்கப்பட்டவர்களும் மனத்திற்கினியவர்களுமானஸ்திரீகள் சூரியனேப்போலப் பிரகாசிப்பதும் வேண்டினவையெல்லாம் நிரம்பினதுமானதேவவிமானத்தில் நூற்றுக்கணக்கும் பதினாயிரக்கணக்குமான கல்பங்கள்வரையிலும் அவனே மகிழ்விப்பார். இருபத்தொன்பதாவதுநாள் ஏகபோஜனம் செய்துஸத்தியத்தையும்விரதத்தையும்விடாமல்பன்னிரண்டுமாஸங்களிருப்பவனுக்குத் தேவர்களாலும் ராஜரிஷிகளாலும் பூஜிக்கப்பெற்று விளங்கும் உயர்ந்தலோகங்கள் கிடைக்கின்றன. சூரியனேப்போலவும் சந்திரனேப்போலவும்விளங்குவதும் பொன்மயமானதும் எல்லாரத்தினங்களும் நிரம்பினதும் அப்ஸரஸுகள் கூட்டங்களாகச் சேர்ந்திருப்பதும் கந்தர்வர்கள்பாடுவதுமான திவ்யவிமானத்தை அடைவான். அங்கே அவனைச் சிறந்தஆபரணங்களினுல் அலங்கரிக்கப்பட்டவரும் மனத்திற்கினியவரும் சொற்சுவையுள்ளவருமான சிறந்தமங்கையர் மிக்கசுவத்துடன் மகிழ்விப்பர். (அவன்)எல்லாஸுகங்களும் பொருந்தி அக்னியைப்போன்ற ஒளியுள்ள சிறந்ததேகத்தினுல் தேவதைபோலவிளங்கிக்கொண்டு வஸுக்கள் மருத்துக்கள் ஸாத்யர்கள் அசுவினிதேவர்கள் ருத்திரர்கள்இவர்களின்லோகங்களுக்கும் பிரம்மலோகத்திற்கும் போவான். மாஸம்முடியும்போது நியமத்துடன் ஏகபோஜனம்செய்துகொண்டு பன்னிரண்டுமாஸங்கள் இருப்பவன் பிரம்மலோகத்தை அடைவான். அமிருதத்தையுண்டு அழகுள்ளவனும் எல்லாருடைய மனத்திற்கும்இனியவனும் ஒளியும் அழகுமுள்ளதேகத்தோடு சூரியன்போல விளங்குவான்; தேவலோகத்துள்ளமாலைகளையும்ஆடைகளையும்சந்தனங்களையும் அணிந்து விரும்பினஸுகங்களையனுபவித்துத் துக்கங்களையறியாமல் விமானத்

திலிருந்துகொண்டு இயற்கையொளியுள்ளபெண்களிலுல் கொண்டாடப்படுவான்; அழகியபலஉருவங்களும் பலநிறங்களும் பலஇனிய சொற்களுமுள்ளவர்களும் பலவகைக்காமஸுகம் தருகிறவர்களுமான ருத்திரகன்னிகைகளாலும் தேவகன்னிகைகளாலும் நிஷிகன்னிகைகளாலும் எக்காலமும் கொண்டாடப்படுவான். பின்னே சந்திரனைப் போலவும் வடபுறத்தில்மேகம்போலவும்பிரகாசிப்பதும் தென்புறத்தில் சிவந்தநிறமுள்ளதும் அடிவாரத்தில் கறுத்தஉருவமுள்ளதும் மேலே பலநிறங்களுள்ளதும் ஆகாயத்திற்கும்சூரியனுக்கும் வைடூரியக்கல்லுக்கும் ஒப்புள்ளதுமான தேவவிமானத்திற்கொண்டாடப்பட்டுத் தனியாயில்லாமல் வஹிப்பான்.ஜம்புத்தீவில் எத்தனைஆயிரம்வருஷங்கள் மேகம்பொழிகிறதோ அத்தனையாயிரம்வருஷம் அந்தப்புத்திசாலிக்குப்பிரம்மலோகத்தில்வாஸம்சொல்லப்பட்டிருக்கிறது.(அவன்) மழைக்காலத்தில் மேகம்பொழியும்போது ஆகாயத்தினின்றுவிழும் துளிகள் எவ்வளவோ அவ்வளவுஆயிரம்வருஷகாலம் தேவதையைப் போலப் பிரகாசித்துக்கொண்டிருப்பான். ஒருமாஸஉபவாஸத்தைப் பத்துவருஷங்கள் அனுஷ்டிப்பவன் மகரிஷியாகித் தேகத்தோடேயே ஸ்வர்க்கத்தையடைவான். இந்திரியங்களையும் கோபத்தையும்காமத்தையும் வயிற்றையும்கட்டி அக்நிஹோத்திரத்தையும் ஸந்தியாவந்தனத்தையும் நியமத்துடன்செய்து தியானம்செய்து மேற்சொன்ன அநேகநியமங்களோடு போஜனம்செய்துகொண்டு 1ஆகாயத்தில்வஹிப்பவனுக்குச் சூரியனுக்கிருப்பதுபோலக் கிரணங்களுண்டாகின்றன. ராஜனே! அப்படிப்பட்டமனிதன் தேகத்தோடேயே ஸ்வர்க்கத்திற்குச்சென்று, தேவதைபோலவே தன்புண்ணியப்பயனுகிய ஸ்வர்க்கஸுகத்தை இஷ்டப்படியனுபவிப்பான். பரதஸ்ரேஷ்டனே! உபவாஸங்களுடையபலனுகக்கிடைக்கும் உத்தமமானயாகவிதியை உனக்குவரிசையாகச்சொன்னேன். குந்திபுத்திரனே! ழைகளானமனிதர்களும் யாகபலனையடையும்வகை இது. பரதஸ்ரேஷ்டனே! தேவர்களையும் பிராம்மணர்களையும் சிரத்தையுடன் பூஜித்துஇந்தஉபவாஸங்களைச்செய்தால் முக்தியையும் அடையலாம். பாரதனே! நியமமுள்ளவரும் தவறுதவரும் ஆசாரமுள்ளவரும் மோசமும் துரோகமுமில்லாதவரும் கலங்காதவரும் பிறராற்கலக்கக்கூடாதவருமான புத்திதேர்ச்சியுள்ள மகாத்துமாக்கள்செய்யும் உபவாஸத்தைப்பற்றிய இந்த ஒழுங்கை உனக்கு விரிவாகச்சொன்னேன். இதில் உனக்குச் சந்தேகம்வேண்டாம்" என்றார்.

1 மேற்கூரையில்லாத திறந்தவிடத்தில்.

நூற்றுஐம்பத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(மஹாதேவருக்கும் ஸநத்குமாரருக்கும் தத்வங்களைப்பற்றி நடந்தஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "தானதர்மங்களைப்பற்றினகதைகள் ரிஷிகள் கிருஷ்ணன்இவர்கள்முன்னிலையில் பிதாமஹரானஉம்மால் சொல்லப் பட்டன. அவற்றை நான் கேட்டேன். திரும்பவும் அந்தஆத்ம வித்தையைப்பற்றியே ஆசையுண்டாயிருக்கிறது. அரசர்க்கரசரே! அந்தவிஷயங்களைச் சொல்லும். உம்மைவிட வேறுயார் சொல்லக் கூடும்? இந்தயாதவபுத்திரரானவாஸுதேவர் அதற்கு அனுமதி கொடுக்கவேண்டும். பாரதரே! இவரையறிந்தால் அறியத்தக்கதெல் லாம் அறியப்பட்டதாகுமே. பிதாமஹரே! அவசியம்கேட்கவேண் டிய ராஜதர்மங்களைப் பின்னல் கேட்போம். ரிஷிகளுக்குள்ளஆவலை இப்போது தீர்க்கக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"மகாராஜனே! இதற்குமேல் சாங்கியசாஸ்திரம் யோகசாஸ்தி ரம்இவ்விரண்டிலுமஅறியப்பட்ட ஆத்மாவின்ஸ்வரூபத்தைச் சரி யாகக்கண்டநிந்தவர்களான இரண்டுஆசாரியர்களின்சம்பாஷணையை உதாகரிப்போம். அதெப்படியென்றால், ஆயிரம்யோஜனை தூரமுள்ள வட்டமான ஒருபெரியசிறந்தவிமானத்தின் இளஞ்சூரியனைப்போலப் பிரகாசிக்கும்பெரியதட்டில் ஆஸனம்போட்டுக்கொண்டு ஆனந்தரூபி யும் ஸம்ஸாரத்தில் திரும்பிவராமற்செய்கிறவரும் ஜனனமரணங்கள் இல்லாதவரும் அரூபியும் உபதேசத்தால் அறியப்பட்டவருமான பக வானைத் தியானித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பவரான கட்டைவிர லின்கணுஅளவான ஸநத்குமாரபகவானென்னும்ஆசாரியரைப் பக வானும் ஆசாரியருமானருத்திரர் அணுகினர். ஸநத்குமாரர் அவ ரைப்பார்த்து, 'மகேஸ்வரரே! பிரம்மாவின்புத்திரரே! உமக்கு நல் வரவு. இதோ ஆஸனம். பகவானேநீங்கள் உட்காரலாம்' என்று சொன்னர். அவர்இவ்வாறுசொன்னபின், அளவற்றஸ்வரூபமுள்ளபக வானுமியருத்திரர் உட்கார்ந்து அவரைப்பார்த்து, 'பகவானே நீர் தியானத்தைத் தொடர்ச்சியாகச் செய்துகொண்டிருக்கிறீரா?' என்றுகேட்க, ஸநத்குமாரபகவானும், 'ஆம்' என்றுசொன்னர். அவ்வாறுசொன்னபின், பகவானேசங்கரர் அப்போது மூவுலகங் களிலுமுள்ள மேல்கீழ்ப்பொருள்களெல்லாவற்றையும்அறிந்த அம்

மஹரிஷியைப்பார்த்துக் கேட்கலானார். 'தியானத்திலுற் காணத் தக்கது எது? நீர் எதைப் பார்க்கிறீர்? தத்வஜ்ஞானிகளானயதிகள் எதைத் தியானஞ்செய்து துயரப்படாமலிருக்கின்றனர்? யதிகளிற் சிறந்தவரே! யோகத்திலும் சாங்கியத்திலும் சுத்தமானபுருஷ னென்றுசொல்லப்பட்டவரும் பிராணிகளுக்கெல்லாம் ஈஸ்வரருமான அந்தப்பரமாத்மாவைப்பற்றிச்சொல்லும். அத்யாத்மம் அதிபூதம் அதிதெய்வம்என்பவை யாவை? பகவானே! அந்தப்புருஷரைச் சேர் ந்தபிரக்ருதிக்கு நாம் அறியத்தக்க காலஎல்லை யாது? காலத்திற்குட் பட்டபிரபஞ்சத்திற்கன்றே காலவரை மகரிஷிகளால் கூறப்பட்டிள் ளது? யதிகளிற்சிறந்தவரே! சாஸ்திரத்திற்சொன்னவழியைஅனு ஸரித்து ஸரியாகச் சொல்லக்கடவீர். மூப்பும்அழிவுமில்லாத [1]ப்ர புத்தனென்னும் சுத்த [2]புருஷனையும் [3]புத்யமானன் [4]அப்ரபுத்தனை ன்றபுருஷர்களையும் வித்தை அவித்தைகளையும் சொல்லக்கடவீர். மோக்ஷத்தை தயறிந்தவரிற்சிறந்தவரே! யதிஸ்ரேஷ்டரே! மூன்றுவித மோக்ஷங்களையும் சாங்கியர்கள்சொல்லும்தத்வங்களின்எண்ணையும் யோகிகள்செய்யும்ஸரியான தியானத்தையும் ஒன்றுகப்பார்ப்பதையும் பலவாகப்பார்ப்பதையும் துர்நிமித்தங்களையும் மரணங்களையும் பிரா ணிகளின்தேகங்களைச்சார்ந்திருக்கும் எல்லாத்தேவதைகளையும் அடி யிலிருந்துகடைசிவரையில் முழுதும் தெளிவாகச்சொல்லும். ரிஷி ஸ்ரேஷ்டரே! நீர்தாமே பிரம்மஜ்ஞானிகள்எல்லாரிலும் சிறந்தவர்; குற்றமற்றவர்; மேலானகதியையடைந்த [5]மூவருக்குப்பின் தோன்றி மவர்; பிரக்ருதியையறிந்ததனால் ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபட்ட டவர். நாமோவெனின் அழிவில்லாதஆனந்தமாகிய மேன்மார்க் கத்தைவிட்டு எப்போதும் அழிவதாகியகாரியப்ரபஞ்சமார்க்கத்தை ஆஸ்ரயித்திருக்கிறோம். குறைந்தமார்க்கமான (அணிமாதி) எண் குணங்கள்பொருந்தின ஐசுவரியத்தில்மூழ்கி இந்தப்பெருமையை எடுத்துக்கொண்டு ஸுகமாகத்திரிகிறோம். இது முழுதும் ஸுக மாகாது. இது பின்னிட்டுக்குறையும். மிகச்சிறந்தவரே! இது ரூபமுள்ளது. இது வேறு. இது இப்படித்தான். ரூபமுள்ளதற்கு அடிக்கடிஅழிதல் சாஸ்திரத்தில்உபதேசிக்கப்படுகிறது. பற்றற்றவர் களுக்குத் தேகத்தைத்தவிர வேறு ஒருமிருத்யுவில்லை. மகரிஷியே! ஆத்மஜ்ஞானமில்லாதவர்களுக்கு மானிடலோகத்திலும் ஸ்வர்க்கத்தி

1 அறிந்தவன். 2 ஆத்மா.
3 அறிய ஆரம்பிக்கிறவன். 4 அறியாதவன்.
5 1. ஸநகர். 2. ஸநந்தனர். 3. ஸநத்ஸுஜாதர். 4. ஸநத்குமாரர்.

லும் நரகத்திலும் ஸம்ஸாரத்தின்குற்றங்கள் அளவற்றவைகளாக உண்டாகின்றன. அவ்வுலகங்களில் மனிதர்கள் இன்பதுன்பங்களி ஞற்சுற்றப்பட்டு ஆழ்கின்றனர். இன்பதுன்பங்களற்றதுதான் அழி யாதபதமென்று சொல்லுகின்றனர். அதை நீர் சாஸ்திரஜ்ஞானத் தினல் ஸரியாகச்சொல்லக் கேட்க விரும்புகிறேன்' என்ருர்.

ஸநத்குமாரர் சொல்லலானர். 'பிராணிகளுக்குள்ளஞானத்தைப் பற்றி நீர் கேட்டீரன்ருே? அதில் சிலஞானிகள் இருபத்துநான்கு தத்வங்களே என்று கூறுகின்றனர். மற்றும்சிலர் இருபத்துமூன்று தத்வங்கள்என்று சொல்லுகின்றனர். நாம் வேதத்தை ஆதாரமாகக் கொண்டு எல்லாச்சாஸ்திரங்களிலும் எல்லாவற்றிற்கும் ஆதார மென்றுசொல்லப்பட்டது இருபத்தைந்தாவதுதத்வமென்று நிச்ச யிக்கிறேரும். பிருகதாரியே! அழிவற்றஆத்மா தேகம்ஆகியஇரண் டும் ஒன்ருேடொன்றுசேர்ந்தும் பிரிந்தும்இருப்பவை. ஐயா! தேக முள்ளவரிற்சிறந்தவரே! ஆதிபுருஷனபகவான் பொன் [1]மயமான தேகத்திற்பிரவேசித்துக் காரியமானவிகாரத்தையும் ஆத்மாவை யும்சேர்த்துப் படைத்தார். அவ்யக்தமென்னப்பட்டமூலப்ரகிருதி யிலிருந்து மகத்தென்னும்ஒருதத்வம்தான் உண்டாகிறது. அது அகங்காரத்தினல் வ்யாபித்து உலகங்களேயுண்டாக்குகிறது. சூல பாணியே! மூலப்ரகிருதியைத் தவிர மற்றவையெல்லாம் அகங்கார முள்ளவையென்றறியும். அகங்காரத்திலிருந்து காலக்கிரமத்தில் பஞ்சபூதஸ்ருஷ்டியென்னும் மூன்ருவதுஸ்ருஷ்டிஉண்டாவதை அறி யும். அகங்காரத்திலுண்டானஐந்துபூதங்களின் விகாரங்களாகிய பிர பஞ்சங்களே நால்வது ஸ்ருஷ்டியென்றறியும். தேவஸ்ரேஷ்டரே! ஐந்துபூதங்களும் அவற்றின்குணங்களாகிய சப்தஸ்பரிசரூபரஸகந் தங்களும் அகங்காரத்திலிருந்து ஒரேகாலத்தில் உண்டானவை யென்று ஞானிகள் கூறுகின்றனர். இருபத்தைந்தாவது தத்வமாகிய ஈச்வரன் இருபத்துநான்கு தத்வங்களேயும் மேலிருந்து நடத்து கிறன். இவ்வாறு ப்ரகிருதியிலுண்டாகும் [2]நால்வகைஸ்ருஷ்டி களே இப்போது சொன்னேன். தேவஸ்ரேஷ்டரே! அகங்காரத்தி லிருந்து அநேகங்கள் ஒரேகாலத்திற் பிறந்தன. ஐந்துபூதங்களிலு முள்ளபலவகைக்குணங்களும் அகங்காரத்திலிருந்து உண்டானவை. அந்தஇந்தியனை ஆத்மா எல்லாஇந்திரியங்களாலும் ஒரேகாலத்தில் விஷயங்களே அறிகிறன். சிறந்தபுத்தியுள்ளவரே! பிராணனும்

1 பிரகிருதி.

2 1 மகத்து 2 அகங்காரம் 3 ஐந்துபூதங்கள் 4 அவற்றின்குணங்கள்.

பிராணிகளும் ஸந்தோஷமும் ஜயமும் விகாரத்தினுலுண்டாகும் ஸ்ருஷ்டிகளென்று சொல்வேன். அவற்றையும் கேளும். தேவருக்கும் ஈஸ்வரரே! நான் சாஸ்திரஞானத்தினுல் இவ்விருபத்து நான்கு தத்வங்களையும் [1]இருபத்தைந்தாவது தத்வத்துடன் உமக்கு விரித்துரைத்தேன். அனுக்ரகம் (ஒன்றுக்கொன்று உதவிசெய்வது) ஐந்தாவதுஸ்ருஷ்டி. [2]இவ்வைந்தும் ப்ரகிருதியின் ஸ்ருஷ்டிகள் நான் குடன்சேர்ந்து ஒன்பதுவகையாகின்றன. இந்திரனிடத்திலும் நான் பிரகாசித்துக்கொண்டிருக்கிறேன். என் ஆத்மாவிலும் மற்றவை பிரகாசிக்கின்றன. திரிபுரஸம்ஹாரம் செய்தவரே! மூவுலகங்களிலு முள்ளதேகங்களனைத்திலும் பிரகாசித்துக்கொண்டிருப்பது ஒன்றென்று அறியும். பிரம்மபுத்திரரே! இதற்குமாறுகப்பார்ப்பவர் பாராதவரே. இந்தப்ரகிருதியிற்சேர்ந்தவை இருபத்தைந்தாவது தத்வத்தை ஆஸ்ரயித்திருக்கின்றன. இந்தக்காரணம்பற்றித்தான் தெரிந்தவர்கள் இருபத்தைந்தாவதையே தத்வமென்றுசொல்லுகின்றனர். இவையெல்லாம் விகாரப்படுகின்றவை. இவற்றிற்கு மேற்பட்டதுதான் தத்வம் (மாறுதது) என்றுசொல்லுகின்றனர். தேவஸ்ரேஷ்டரே! அறியவேண்டியதை அறியாததினுல் எவனும் தத்வங்களிற் சேராமற்போவான். தேவஸ்ரேஷ்டரே! பிரபுவே! அறிகிறவன் எல்லாவற்றிற்கும் மேலானபுத்தினுகிய ஈசுவரனையறிந்து, 'இவன் வேறு; நான் [3]அல்லேன்' என்றுநினைப்பதனுல் பிரபுத்தனுவான்.

நூற்றுபத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(மஹாதேவருக்கும் ஸநத்குமாரருக்கும்நடந்த ஸம்பாஷணைத் தொடர்ச்சி; அத்யாத்மாதலியவற்றைப்பற்றியது.)

'பிரம்மஞானிகளிற்சிறந்தவரே! தத்வங்களென்று எண்ணும் ஒன்பதுஸ்ருஷ்டிகளின்வகைகளும் என்னுல் வரிசையாகச்சொல்லப்பட்டவற்றை நீர் கேட்டீரன்றே? இனி உமக்கு அத்யாத்மம் அதிபூதம் அதிதெய்வங்களைப்பற்றிச் சொல்வேன். யோகிகளும் வேதப்

---

1 பூதங்கள்ஐந்து, குணங்கள்ஐந்து, கர்மேந்திரியங்கள்ஐந்து, ஞானேந்திரியங்கள்ஐந்து, மனஸ், மஹத், அஹங்காரம், ஆத்மா, ஈஸ்வரன் ஆகஇருபத்தைந்து.

2 பிராணன், பிராணி, ஸந்தோஷம், ஜயம், அனுக்ரகம்.

3 ஜீவாத்மாவல்லேன்.

அறிந்தவர்களும் சிறந்ததவமுள்ளவர்களும் பூஜிக்கத்தக்கவர்களுமான இந்தக்ருஹஸ்தர்கள் இந்தப்பரமாத்மாவின்உண்மையை முயன்று அறிவதில்லை. அது நான்சொன்னபடி தத்வஜ்ஞானத்தினால் அடையத்தக்கது. தேவர்ஷிச்ரேஷ்டர்களிலும் சிறந்தவரே! பற்றுக்கோடுமில்லாத யதிச்ரேஷ்டர்களின் செய்கையோடுகூடிய நான், மேலானவருக்கும் மேலானதும் அமிருதமும் உண்மைப்பொருளும் எல்லாப்பிராணிகளிடத்தும் இயற்கையாயிருப்பதும் தனக்கு ஈச்வரனில்லாததும் எல்லாவற்றிற்கும்தான் ஈச்வரனுமான இந்தப்பரமாத்மாவை உமக்குச்சொல்லுகிறேன். எல்லாவற்றிற்கும்மேலானதும் வேறானதும் யாருக்கும்தெரியாததுமானஇந்தப்பரப்ரம்மத்தை அடைந்தவன்தான் உமதுஸம்ஸாரவலையைவிட்டுப்பரிசுத்தனாகிறான். இரத்தினங்கள் நிரம்பின இப்பூமியைக்கொடுத்தாலும் கொடுக்கலாம். பரீக்ஷைசெய்யப்படாதசிஷ்யனுக்கு இந்தரஹஸ்யத்தைக் கொடுக்கலாகாது. சிரத்தையில்லாதவனுக்கும் மற்றொன்றில்ஊக்கமுள்ளவனுக்கும் ஞானமில்லாதவனுக்கும் கர்வப்படுகிறவனுக்கும் இதைக் கொடுக்கலாகாது. வேதாத்தியயனம்செய்பவனும் குணங்களுள்ளவனும் ஜிதேந்திரியனுமாயிருப்பவனுக்கு இதைக் கொடுக்கலாம். விருஷபத்வஜரே! வரிசையாகஉண்டாகியும் அதற்குமாறுகலயித்துமிருக்கும் இந்தப்பொருள்களின்தொகுதியையும் அத்யாத்மம் அதிபூதம் அதிதெய்வங்களையும் சொல்லுவேன். [1]சூரியனுடையகிரணங்களைப்போலவே இதைச்சொல்லுகின்றனர். பிராம்மாவினுடையஒரு நாள்முடிந்தபோது உலகம் கடலில்மூழ்கிவிடும். பூமிஜலத்திலும் ஜலம்அக்நியிலும். அக்நிவாயுவிலும் வாயுஆகாயத்திலும் ஆகாயம் மனத்திலும் மனம்அஹங்காரத்திலும் அஹங்காரம் மஹத்திலும் லயமாகின்றன. அந்தமஹான் அவ்யக்தமாகிறதென்று சொல்லுகின்றனர். அதுதான் ஒன்றுதலென்றும் சொல்லுகின்றனர். மஹாதேவரே! அவ்யக்தமென்னப்படும்பிரகிருதி பிரம்மத்தினிடத்தில் லயமாகிறதென்றறியும். இப்படி அடிக்கடி இந்தப்பகவானுடையவிளையாட்டிருக்கிறதென்று தத்வஜ்ஞானிகளான ஜனங்கள் கூறுகின்றனர். யோகசாஸ்திரத்திலும் சாங்கியசாஸ்திரத்திலுமுள்ள தத்வங்களையுணர்ந்து ஆத்மத்தியானம்செய்யும் மகாத்மாக்களினால் அத்யாத்மம் அதிபூதம் அதிதெய்வதம்இவை ஸரியாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. மஹாதேவரே! இவ்வளவுவிஷயங்களும் மகாத்மாக்களினால் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. ப்ரம்மம் ஆத்யாத்மம்; புருஷனென்னப்படும்

[1] பரவுவதும் சுருங்குவதும்.

ஜீவன் அதிதெய்வதம்;எல்லாப்பிராணிகளையும்ஸ்ருஷ்டிப்பதும் ரக்ஷிப்பதும் (அதிபூதமென்னப்படும்) செய்கையென்றும்அறியவேண்டும். பிராணன் அத்யாத்மம்; யாகம் அதிதெய்வதம்; யாகஹவிஸை ரதம் போலக்கொண்டுபோகும் அக்நியும் தனக்குப்பலனைக்கருதுவதும் செய்கை (அதிபூதம்). மனம் அத்யாத்மம்; சந்திரன் அதிதெய்வதம்; இந்திரியவிருத்திகள் சொற்கள்இவை கர்மங்கள் (அதிபூதங்கள்).. செவி அத்யாத்மம்; ஆகாசம் அதிதேவதம்; எல்லாவிஷயங்களையும்சொல்லுவதற்காகஉண்டானசப்தம் கர்மமென்னப்படுகிறது (அதிபூதம்). த்வகிந்திரியம் அத்யாத்மம்; வாயு அதிதெய்வதம்; மேலேபடுபவற்றையறிவதுஅனைத்தும் அதன்கர்மங்கள் (அதிபூதம்). சக்ஷுரிந்திரியம் அத்யாத்மம்; சூரியன் அதிதெய்வதம்; எல்லாநிறங்களையும்உருவங்களையும்அறிவது கர்மம்என்னப்படுகிறது (அதிபூதம்). நா அத்யாத்மம்; ஜலம் அதிதெய்வதம்; [1]. யதிஸ்ரேஷ்டரே! பாயுஎன்னும்கர்மேந்திரியம் அத்யாத்மம்; ஜலமலவிஸர்ஜனமென்னும்செய்கை அதிபூதம்; [2]மித்திரன் அதிதேவதம். தேவருக்குந்தேவரான பிரகபாணியே! உபஸ்தமென்னும்கர்மேந்திரியத்தை அத்யாத்மம் என்றும் சொல்லுகின்றனர்; புனர்ச்சி அதிபூதம்; பிரம்மா அதிதேவதை. த்ரிசூலத்தையடையாளமாகவுடையவரே! பாதங்கள் அத்யாத்மமென்றும் நடப்பது அதிபூதமென்றும் விஷ்ணுஅதிதேவதம் என்றும் ஞானிகள் கூறுகின்றனர். பிரகிபே! வாக்கு அத்யாத்மம் என்றும் பேசுவது அதிபூதமென்றும் அக்நி அதிதேவதமென்றும் தத்வஜ்ஞானிகள் கூறுகின்றனர். தேவஸ்ரேஷ்டரே! பிராணிகளின் அத்யாத்மம் அதிபூதம் அதிதெய்வங்களென்னுமிப்பற்றவிஷயத்தைப்பற்றி இவ்வாறு உமக்குச் செம்மையாகக் கூறினேன். புழு, பூச்சி, சண்டாளன், நாய், யானை, கிளி, கொசுகு, ஈ, பிராம்மணன், பசு, அரசன் எல்லாரிடத்திலும் இவற்றைச் சமமாகப்பார்க்கவேண்டும்; வித்தியாஸம் நினைக்கலாகாது. இதற்குமாறுகப்பார்ப்பவர்களின்பார்வை ஸரியன்று. 'ஓம்' என்னுமிவ்வெழுத்தின்பொருளும் சேதனத்திற்கும் அசேதனத்திற்கும்மேற்பட்டவரும் ஆதிமத்தியாந்தங்களற்றவரும் இருப்புக்குண்டுபோலச் சலியாமல் நிற்பவருமான எந்தப்படகவானைத் தேவர்களும் தானவர்களும் கந்தர்வர்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கின்னரர்களும் யார் எங்கிருப்பவர் என்றறியவில்லையோ அந்தயோகத்திற்கு ஈஸ்வரரும் பத்மத்தைநாபியிலுடைய

---

1 சுவையறிவதுஅதிபூதம்என்பது கண்டுகொள்க.

2 பன்னிரண்டுசூரியர்களில்ஒருவன்.

வரும் ஸர்வவியாபியும் எல்லாவற்றையும் ஜயிப்பவரும் உலகத்தைக் காப்பவரும் முதலுமுடிவுமற்றவரும் ஆனந்தரூபியும் தேவருக்குந் தேவரும் என்றுமிருப்பவரும் அளவுக்கும்அறிவுக்குமெட்டாதவரும் பாவங்களைப்போக்குகிறவரும் ஸர்வசக்தருமான நாராயணரைப் பரிசுத்தனுகிப் பக்தியுடன் கைகூப்பி நமஸ்காரம்செய்து பூஜிக்கவேண்டும். ஆதியும்அந்தமுமில்லாத பரப்ரம்மத்தைத் தேவர்களும் முனிவர்களும் அறியவில்லை. எல்லாவற்றையுங்காப்பவரும் பாவங்களைப் போக்குகிறவரும் ஆறுகுணங்கள்பொருந்தினவருமான நாராயணர் ஒருவர்தாம் அறிவர். ரிஷிகளும் ஸித்தர்களும் நாகர்களும் தேவர்களும் தேவரிஷிகளும் நாராயணரையே துயரத்திற்குமருந்தாக அவரிடத்தில் தெரிந்துகொண்டனர். அந்தநாராயணர் துயரங்களை ஜயித்தவர். இந்தப்பிரஜைகள் அவரிடத்திலிருப்பவை. வலையில் பறவைகள் அகப்பட்டிருப்பதுபோல இவ்வுலகங்கள் அவரிடத்திலகப்பட்டுப் பிரகாசிக்கின்றன. ஸாங்கியர்கள் தங்கள்ஞானத்ருஷ்டியினல்ஐந்துஇந்த்ரியங்களும் மனமும் புத்தியும் ஸப்தரிஷிகள் என்று கூறுகின்றனர். காதுகளுக்குத்திசைகளும் மனத்திற்குச்சந்த்ரனும் தேவதைகளென்று சொல்லுகின்றனர். இந்த்ரியங்கள்ஐந்து, மனம் ஆறு, புத்திஏழு இவை ஆத்மாவினிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனல், அவை சரீரத்தைச்சேர்ந்தவையேயன்றி ஆத்மாவைச் சேர்ந்தவையல்ல. அதற்குக்காரணங்களான அவையனைத்தும் செய்யப்படும்செய்கைகள்ஏழிலும் அறியப்படும்விஷயங்கள்ஏழிலும் சேர்ந்து ஆத்மாவுக்குத் தத்தம்காரியங்களைச் செய்யத்தொடங்குகின்றன. கர்மேந்த்ரியங்களைச் செய்கைகளிலும் ஞானேந்த்ரியங்களைவிஷயங்களிலும் மனத்தைநிலைப்பதிலும் புத்தியைஆராய்வதிலும் பிரவ்ருத்திக்கச்செய்வது ஆத்மாவே. விஷயங்களில்வியாபிப்பவையாகிய அவைகளே ஸ்தூலரூபங்கெட்டு ஸூக்ஷ்மங்களாகிப் பிராணிகள்தூங்கும்போது தேவலோகத்திற்கொப்பான ஸுஷும்நாநாடியிற்சேர்ந்திருக்கும் ஆத்மாவையும் இறந்தபின்வேறுதேகத்திற்குப்போகும்ஆத்மாவையும் மோக்ஷத்திற்குப்போகும்ஆத்மாவையும் அனுஸரித்துப்போகின்றன. மோக்ஷமடையும்போது தனக்குஆதாரமான அந்தாஸ்வரமைமட்டும் யாரும் உரிவதில்லை. இவ்வாறுஎல்லாத்தத்வங்களும் ஆத்மாவில்பிரவேசித்தபோது விழித்துக்கொண்டிருக்கிறவன் யாரென்பதைப்பற்றிச் சொல்லுகிறேன். நல்லநித்திரையாகத் தூங்கும்போதும் விழித்துக்கொண்டிருக்கும்போதும் கனவுகாணும்போதும் தேவர்களையும் பிரகாசிக்கச்செய்யும் பகவானன ஈஸ்வரரும் ஜீவனும்

புத்தியும் தேகத்தில் விழித்துக்கொண்டிருக்கின்றனர். தூங்கும் போதும் கனவின்காட்சிகளைக்காண்பவர் அவரே. ஜனங்கள் அறிவில்லாதிருக்கும்போதும் ஈஸ்வரரொருவரே அறிவுள்ளவராகிறார். அவர்தாம் 1பிராஜ்ஞர். தேகத்திலிருக்கும் அவருக்குஇரண்டாவது, தைஜஸனென்னப்பட்ட தேகத்திலுள்ளஅக்நி. அது தூங்குகிறவனுக்கு ஆத்மாவைப்போலிருக்கிறது. அவனறியாதவனுயிருந்தாலும் தூக்கம்விழித்துக்கொள்ளாதவனுயிருந்தாலும் அவனதுஅன்னத்தை அதுஜீரணம்செய்கிறது; தேகத்தின்முடிவுவரையில் நிற்கிறது. இது ஆத்மாவைப்பற்றி நான் தெரிந்துகொண்டது.

நூற்றுபத்தேழாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(மஹாதேவருக்கும் ஸநத்குமாரருக்கும்நடந்த ஸம்பாஷணைத் தொடர்ச்சி ; யோகத்தைப்பற்றியது.)

சங்கரரே ! ஐயா! ஸ்ருஷ்டிப்ரளயங்களையும் அத்யாத்மம், அதிபூதம், அதிதெய்வங்களையும்பற்றி உமக்கு முதலிலிருந்து சொன்னேன்.பிராணிகளின்தேகங்களிலிருக்கும்தேவதைகளெல்லாவற்றையும்பற்றி நீர்கேட்டதைச் சொல்வேன். சங்கரரே ! பகைவரையழிப்பவரே! வாக்கில்அக்நியும் நாவில்சந்திரனும் பிராணனில்வாயுவும் ரூபத்தில்சூர்யத்திரமும் நாவில்ஜலமும் நாபியில்மஹாஸமுத்திரமும் நகங்களிலும் ரோமங்களிலும் வ்ருக்ஷங்களும் வனங்களும் ஓஷதிகளும் கைகால்முதலியஅங்கங்களில் ஸ்தம்பமருத்துக்களும் பூட்டுக்களில் வருஷங்களும் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும்இடமாகிய ஹ்ருதயத்தில்ஆகாசமும்கண்டத்திலிருக்கும்உதானமென்னும்வாயுவில்மின்னலும் தேகநரம்புகளில்வியாபித்திருக்கும்வ்யானவாயுவில்மேகமும்இரண்டுஸ்தனங்களில்ஆகாயமும் பலத்தில்இந்திரனும் மனத்தில்சாதனரும் அபானத்தில்ருத்திரரும் வ்யானத்தில்கந்தர்வர்களும்அப்ஸரஸுகளும் ஸத்யத்தில்மித்ரனும் புத்தியில்வருணனும் நேத்திரத்தில்சூர்யனும் உடலில்பூமியும் பாதங்களில்விஷ்ணுவும் ஆஸனத்தில் மித்ரனும் குறியில்பிரம்மதேவரும் தலையில்திசைகளும் புத்தியில்பிரம்மாவும் தேவர்களாகவிருக்கின்றனர். 2புத்யமானனென்பவன்ஆத்மாவினிடம் மனம்செலுத்தியிருப்பவன். அவனுக்குச் சங்கரர் அதிஷ்டானதேவ

1 ஆத்மா. 2 மோக்ஷத்தைவிரும்பும் ஜீவாத்மா.

தை. அந்தப்புத்யமானனிடமிருந்து [1]அபுத்தன் உண்டானானென்பது நிச்சயம். சங்கரரே! வேதங்களில்சொல்லப்படும் [2]புத்தன் இவ்விரு வரையும்விட வேருனவன். தேகத்தில் அங்கங்களிலிருக்கும்வேறு வேறுதேவர்கள் அவனையேஆஸ்ரயித்திருக்கின்றனர். எவன் நித்திய மாகத் தியானத்திலிருந்துகொண்டி ஆத்மாவென்னும் அக்நியில் மற் றெல்லாவற்றையும் ஹோமம்செய்துமேற்சொன்னபடிஎல்லாவற்றை யும் தேவதைகளாகப்பார்க்கிருனே அந்தஆத்மயாஜியானவன் இவ்வா று பார்ப்பதனல் யோகியாகிருன். கிரியைகளாகியயாகங்களைச்செய் பவரெல்லாரினும் அந்தஆத்மயாகம்செய்பவன் சிறந்தவனுகிருன். மஹாதேவரே! [3]இவ்வுலகமனைத்தையும் நித்தியமாகத் தன் [4]வாயில் ஹோமம்செய்பவன்எவனே அவன்தான் ஆத்மஜ்ஞானியென்று ஆத்ம ஜ்ஞானமுள்ளமஹாத்மாக்கள் சொல்லுகின்றனர். ஆத்மயாகஞ்செய்ப வன் சிறந்தஎல்லாத்தேவதைகளுக்கும்மேலானதைக்கருதிஅதனையே தியானித்து அதனிடம்சேரவேண்டும். திரிபுரஸம்ஹாரம்செய்தசங் கரரே! தேகத்திலிருக்கும்ஆத்மா (தேவதையைச்) சேரும்படியாகத் தேகத்திலுள்ள தனித்தனி இடங்களைச்சொல்வேன். பாதங்களைவிஷ் ணுவுக்குஅர்ப்பணம்செய்வதனல் விஷ்ணுஸ்தானத்தையும் ஆஸனத் தை மித்ரனுக்குஅர்ப்பணம்செய்வதனல் மித்ரஸ்தானத்தையும்உபஸ் தத்தைப்ரம்மாவுக்குஅர்ப்பணம்செய்வதனல் பிரம்மஸ்தானத்தையும் நாபியை வருணனுக்குஅர்ப்பணம்செய்வதனல் வருணனுடையஸ்தா னத்தையும் ஸ்தனங்களைஆகாயத்திற்கு அர்ப்பணம்செய்வதனல் ஆகா யத்தின்ஸ்தானத்தையும் கைகளை இந்திரனுக்குஅர்ப்பணம்செய்வத னல் இந்திரனுடையஸ்தானத்தையும் காதுகளைத் திசைகளுக்குஅர்ப் பணம்செய்வதனல் திக்குத்தேவதைஸ்தானத்தையும் கண்ணைச் சூரி யனுக்குஅர்ப்பணம்செய்வதனல் ஸூர்யஸ்தானத்தையும் புத்தி யைப்பிரம்மாவுக்கு அர்ப்பணம்செய்வதனல் பிரம்மாவின் ஸ்தானத் தையும் மனிதன் அடைவான். எவன்தியானம்செய்து சுவாஸத்தைச் சிரஸிற்குள்நிறுத்துவானேஅவன்எல்லாவகைப்பொருள்களின்ஞான த்தையும் தன்புத்தியினலேயே [5]அடைவானென்பதில் ஸந்தேக மில்லை. அவ்யக்தமென்னப்பட்ட ப்ரக்ருதிக்குமேற்பட்டதும் பரி

---

1 ஸம்ஸாரி. 2 பரமாத்மா.

3 'எல்லாம் பிரம்மம்; தானேஎல்லாம்' என்றுநினைக்கிருனே

4 தான்ஆகாரம் செய்வதை ஆத்மாவென்னும்அக்நியில் எல்லாப்பற்றுக் களையும் ஹோமம்செய்பவன் என்பதாக நினைப்பது.

5 எல்லாஇந்திரியங்களாலும் அறியவேண்டியவற்றையெல்லாம் புத்திக் குள்ளேயே தெரிந்துகொள்வான் என்பது.

சுத்தமும் அறிவுக்குஎட்டாததும் விகாரங்களற்றதுமாக எதைச் சொல்லுகின்றனரோ அந்தநித்தியமானபரம்பொருளே அந்தஞானி யானவன் அடைகிறான். அவன் புத்யமானனுலும் அப்ரபுத்தனுலும் புத்தனென்றுசொல்லப்படுகிறான். அபுத்தனும் புத்யமானனே எப் போதும் எதிர்பார்க்கிறான். [1]விகாரபுருஷன்தான் புத்யமான னென்று சொல்லப்படுகிறான். அந்தப்புத்தன்தான் இருபத்தைந்தாவது தத்வ மென்று சொல்லப்படுகிறான்; அதில்ஸந்தேசமில்லை. அவனே ப்ர கிருதியிலிருப்பதனுல் தஸ்துவென்றும் சொல்லப்படுகிறான். மஹா தேவரே! ஆத்மா பெரிது. பெரிதுதான் இந்தத்தேகத்தில் தலைமை யாயிருப்பது. தலைமையாயிருப்பதனுல் அதை அதிஷ்டாதாஎன்று சாஸ்திரமறிந்தவர்கள் கூறுகின்றனர். தேவரே! இவன் அபுத்தனு யிருக்கையில் அஜ்ஞானமென்னும்வலையில் அகப்படுகிறான். அப் போது, அவ்யக்தமென்னப்பட்டப்ரக்ருதியைப்போலவே ஆத்மாவு மிருப்பதாகத் தெரிந்தவர்கள் கூறுகின்றனர். அப்போது அந்த அநாதியானஅஜ்ஞானத்தால், 'தேகமே நான்' என்று மாறுட்டமாகக் கிரகிக்கிறான். இவன், 'நான் ஆத்மத்யானம்செய்து பிரகாசிக்க வேண்டும்' என்று நினைத்தாலுயின் புத்தனுகாமல் ஜலத்தில்மீன்செல் வதுபோல ப்ரக்ருதியில் [2]நடவான். மூவுலகங்களுக்கும் ஈஸ்வரரே! தேவதைகளெல்லாவற்றையும்பற்றி உமக்குச் சொன்னேன். யோகம் செய்யுமுறையையும் நீர் வரிசையாக என்னிடம் தெரிந்துகொள் ளும். குடியிருப்பில்லாதவீடுகளிலும் காடுகளிலும் கடற்கரையிலும் குகைகளிலும் சுவாஸத்தையடக்கி [3]மூன்றுதண்டங்களையும் பெற்று [4] இரண்டைவிட்டிருக்கவேண்டும். சாஸ்திரப்பிரகாரம் [5]ஸ்வஸ்திகா ஸனத்தோடு கிழக்குமுகமாயாவது வடக்குமுகமாயாவது மேற்குமுக மாயாவது தெற்குமுகமாயாவது அசையாமல்உட்கார்ந்து வலையாமல் உடம்பை நிமிர்த்துக்கொண்டு குருஉபதேசித்தப்படி ஸ்வயம்பிரகாச மான அந்தப்பிரம்மத்தைமனத்தில்தரித்துக்கொள்ளவேண்டும். இல குவானஆகாரம்செய்து காலமத்தியான்னமாலைமூன்றுகாலங்களையும் மலமூத்திரங்கள்விடுகிறகாலத்தையும் ஆகாரம்செய்யும்காலத்தையும் தவிர மற்றக்காலமெல்லாம் புலன்களையும்மனத்தையும்அடக்கி மிக்க

---

1 வெளித்தோற்றம் அற்றுப்போகாதவன்.

2 'பிரபுத்தனுவதற்கே முயலுவான்' என்பது.

3 மனோமயம், வாக்மயம், காயமயம்.

4 ஸ்தோஷ்ணம், லாபாலாபமுதலியவை. [கொண்டுஉட்காருவது.

5 இரண்டுகால்களையும் இரண்டு தொடைகளிலும் மாற்றிப் போட்டுக்

ஊக்கத்துடன் மனத்தில் தியானம்செய்யவேண்டும். புத்திமான்கள் நிற்சிறந்தவரே! மனத்தினுலேயே ஐம்புலன்களையும் அவ்வவற்றின் விஷயங்களிலிருந்து திருப்பவேண்டும். பதைபதைத்துப் பலவழிகளால்ஓடும்மனத்தை உறுதியினுல்பிடித்து ஸங்கல்பங்களெல்லாவற்றையும் நிறுத்தினபிறகு யோகத்தில் நிலைபெறுவான்: பிறகு, ஒரே ஊக்கத்தோடு எல்லாவற்றிலும்மிக்கரஹஸ்யமானபரம்பொருளை அறிவான். காற்றில்லாதவிடத்திலிருக்கும்தீபமானது எப்படி குறுக்கே அசையாமல் நேராகவே நன்குபிரகாசிக்கின்றதோ அப்படியேஉமது மனமும் பிரமைநீங்கி நன்குபிரகாசிக்கும். தேவஸ்ரேஷ்டரே! ஏற்ருதயத்திற்குள்ளிருப்பவனையே நோக்கிச்செல்லும்போது மனமானது கல்லைப்போல அசைவற்றிருக்கும். ஜனமில்லாதவிடம் ஜனமுள்ளவிடம் இரைச்சலில்லாதவிடம் இரைச்சலுள்ளவிடம் எங்கேவஸித்தாலும் எவன்சலியாமலிருப்பானே அவன்தான் யோகத்தில்தேர்ந்த யோகி. இந்தயோகத்தின்முறை நாம்கேட்டது. அதன்பிறகு, மேகத்தில்மின்னல்போலத் தன்னுத்மாவின்கண் பிரகாசிப்பதும் ஆதாரமில்லாததும் அகாதமான [1]இருளிலிருப்பதும் [2]இருளற்றிருப்பதும் [3]அறிவில்லாததும் எல்லாவற்றையுமறிவதும் வேருென்றிலைன்றித்தன் ஒளியினுல்பிரகாசிப்பதும் கைக்கட்டைவிரல்ரேகையளவுள்ளதும் மூக்குப்பயனும் குற்றமற்றதும் அநந்தமும் சுதந்திரமும் துயரமற்றதும் பெரும்பொருளான அந்தவுருபிரம்மத்தைப் பார்ப்பான். ஒளிகளுக்கொளியும் எல்லாவற்றிற்கும்மேலானவரும் வியாபியும் மிகச் சுத்தரும் அணுக்களிலும் சிறியஅணுவும் உலகத்திற்கும்பெரியவரும் ஈஸ்வரருக்கும் மேலான ஈஸ்வரரும் நித்தியரும் அந்தர்யாமியும் ரக்ஷிக்க ஸமர்த்தரும் ஜலத்தில் வஸிப்பவருமான நாராயணரை அறியாமல் உலகங்கள் ஸம்ஸாரக்கடலில் அமிழ்கின்றன. ஐயா!யதிகள் அவரைக் கண்டு தாபத்ரயம்நீங்கினவர்களாகி ஜனனமரணபயமில்லாமல் ஸம்ஸாரக்கடலைக்கடந்து துயரமற்றிருக்கின்றனர். அணிமா, லகிமா, மகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசித்வம், வசித்வம், நினைத்தவிடத்திலிருந்து அசையாமலிருப்பதாகிய கரிமாஇவ்வெட்டுக்குணங்களுடன் கூடியயோகம் யோகிகளுக்குப் பெரிதாகநினைக்கப்படுகிறது. அந்த யோகிகள் தனக்குமேல்ஆத்மாவில்லாததும் அறிவிற்கெட்டாததும் நித்யமும் ஸ்வயம்பிரகாசமுமான பரமாத்மாவையறிந்து அந்தயோகத்

1 யோகஞ்செய்யாமலிருப்பவருக்குத் தெரியாமலிருப்பதும்.

2 யோகிகளுக்குப்பிரகாசிப்பதும்.

3 ஜடமாகவும் ஜீவனுகவுமிருப்பது.

திஞல் நினைத்தசரீரங்களில் பிரவேசிக்கின்றனர். அவர்கள், அஸுரர் தேவர் மனிதர்களின்பலத்திலும் அதிகபலமுள்ளவராகிறார். நீர் கேட்பதாகிய ஆதியந்தமில்லாத தத்வமிது. எக்காலமுமுள்ள இந்த யோகமென்னும்தர்மத்தை நாம் நித்தியமாகஅனுஷ்டிக்கிறோம். தேவஸ்ரேஷ்டரே ! யோகதர்மத்திற்குப்பெரியதர்மமில்லை. தர்மங்களுள், திரும்பிப்பிறவாமலிருக்கும்படி சுத்தப்படுத்துகிறதர்மம் இதுதான். சிலபுத்திசாலிகள் வேறு பரதத்வங்களிருப்பதாகச் சொல்லுகின்றனர். பிரத்யக்ஷத்தையே முதன்மையாகப்பற்றினசிலர் வேறு பரதத்வம் இல்லையென்று சொல்லுகின்றனர். [1]வெளித்தோற்றத்திலிருக்கும்புருஷன் விகாரப்படுகிறானென்று நானே சொன்னேன். மஹேஸ்வரரே! எந்தயோகிகள் ஞானத்திஞல் அந்தஜீவாத்மாவையே பார்க்கின்றனரோ அவர்கள்அந்தஜீவாத்மாவையே ஈஸ்வரரென்று சொல்லுகின்றனர். மற்றும்சிலர் நித்தியமானஞானமே பரப்பிரம்மமாக நினைக்கப்படுகிறதென்று சொல்லுகின்றனர். சாங்கியர்கள் எல்லாவற்றையும் விட்டுச் சுத்தஞானத்தையே பற்றுகின்றனர். யோகிகள் ஆத்மாவையும்தியானித்து அதற்குவேறுனபரமாத்மாவிலும்புத்திவைக்கின்றனர். இதுவரையில் உத்தமமானயோகசாஸ்திரநிச்சயத்தை உமக்குச் சொன்னேன். தத்வங்களின்எண்களை அறிவதாகிய சாங்கிய ஞானத்தைப்பற்றி இனிச்சொல்வேன்.

நூற்றறுபத்தேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(மஹாதேவருக்கும் ஸநத்குமாரருக்கும் ஸம்பாஷணைத்தொடர்ச்சி ; இருபத்தாறு தத்வங்களைப்பற்றியது.)

தேவஸ்ரேஷ்டரே ! 'இந்திரியங்களுக்குமேற்பட்டது மனம். அதற்குமேற்பட்டது அகங்காரம். அகங்காரத்திற்கு மேற்பட்டது புத்தி. புத்திக்குமேற்பட்டது மகத்து. மகத்திற்குமேற்பட்டது மூலப்பிரக்ருதி. மூலப்பிரக்ருதிக்குமேற்பட்டவன் புருஷன்' என்னும்இவ்வளவுதான் சாங்கியர்களின் கொள்கை. தேவஸ்ரேஷ்டரே ! மூலப்பிரக்ருதி, மகத்தென்றுசொல்லப்படும் புத்தி, அகங்காரம், ஐந்துமகாபூதங்கள், மனம், ஐந்துகுணங்கள், பத்துஇந்திரியங்கள் இந்தஇருபத்துநான்குதத்வங்களும் அறிகிறவனும் மஹாத்மாவுமான

[1] ஜீவாத்மா.

சேதனனென்னப்படும் சிறந்தஆத்மாவுடன்சேர்த்து அறியப்படுகின்றன. பிரக்ருதி புருஷன் இரண்டிற்குமுள்ளசேர்க்கையை அநாதியென்று சொல்லுகின்றனர். இவை [1]ஒன்றுவதும் பலவாவதும் ஸ்ருஷ்டி பிரளயமென்னும் இரண்டுநிலைமைகளைப் பற்றித்தான். த்ரிகுலம்தரித்தவரே! இந்தப்பிரக்ருதியைத் தமஸென்றுபெயருள்ளதாகச் சொல்லுகின்றனர். ஜீவர்கள் அவ்யக்தமென்னும் பிரக்ருதியைப் பிளந்துகொண்டுதான் அடிக்கடி கிளம்புகின்றனர். பிரபுவே! இந்தமகாஜன ஜீவாத்மா குணங்களென்னப்படும் ஜடங்களுக்கு முதன்மையாயிருப்பவன். அவனது ஸ்வரூபம் வெளிப்படாமல் குணங்களென்னும் பிரக்ருதியில் சேர்ந்திருப்பதனால் அவனைக் குணமென்றும் சொல்லுகின்றனர். மூன்குணங்கள்சேர்ந்த ஸ்தூல்மான தேகமானது இந்தஜீவாத்மாவினால்வஹிக்கப்பெற்றுத்தான் விஷயங்களை அறிகிறது. ப்ரக்ருதியைச்சேர்ந்தஅசேதனம் மற்றஒன்றையும் அறிவதில்லை. விகாரமற்றவனும் பரிசுத்தனும் துயரமற்றவனுமான ஆத்மா வேறுபிரமாணங்களினால் அறியக்கூடாமையினால், 'நான்' என்றே அறியப்படுகிறான். [2]நிர்க்குணனென்பவன் குற்றமற்றஉயர்ந்த ஸ்வபாவமுள்ளவனும் புத்யமானன் அப்ரபுத்தன் இவ்விருவரையும் அறிகிறவனும் ஸுகதுக்கங்களுடையவனுமாவான். அந்தநிர்க்குணன் புத்யமானனையும் அப்ரபுத்தனையும்விட வேறுதான்; விருப்பும்வெறுப்புமில்லாதவன்; பரிசுத்தன்; அவ்விருவரோடுஞ்சேராதவன். இப்படி மாறுமலிருக்கும்புத்தனைப் புத்யமானன் அறியான். புத்தியினால்பகுத்தறியுந் தன்மையில்லாததனால் அவனே [3]அசேதனனாகிறான். அவன், 'நான் தான், என்னைவிடவேறுஇல்லை' என்றுநினைக்கிறான். 'அசேதனனாயிருந்தநான் யாரால்சேதனனாகிறேனோ அவன் என்னைவிடவேறு ஒருவனிருக்கிறான்' என்று அவன் நினைப்பதில்லை. [4]புத்யமானனும் ஆத்மாவையறியாமையினால், 'நான்தான். என்னைவிடவேறு இல்லை; நான் [5]ப்ரபுத்தனுக்குட்பட்டவனல்லேன்' என்றே நினைக்கிறான். இவன் பிரக்ருதியிலிருந்துகொண்டு அதன்குணங்களையே எப்போதும் தானாகநினைக்கிறான். அதன்பின் ப்ரக்ருதி ஆத்மாவினால் ஆளப்படுகிறதென்னும்உண்மையையறிந்த பெரியோர்களால் உபதேசிக்கப்

1 பிரளயத்தில்ஒன்று ; ஸ்ருஷ்டியில்பல.

2 பிரக்ருதிஸம்பந்தமற்றவன்.

3 அபுத்தன். 4 புத்யமானன் = அகங்காரம்.

5. ப்ரபுத்தன் = ஈச்வரனைப்போன்றவன்.

பெறுகிறான். அதன்பின் அகங்காரமென்னும் புத்யமானனிடம்சேர்ந்து அந்தப்பெரியோர்சொல்லைஅங்கீகரிக்கிறான். அந்தப்புத்யமானன் சரீரத்திற்பிரவேசித்து அறிவுகெட்டு ஆத்மாவையிழந்துஉலகத்திற்கு ஸாரதியாகமுன்நின்றுகொண்டுஇரண்டாவதான அகங்காரத்தைஸ்ருஷ்டிபண்ணுகிறான். எல்லாச்செய்கைகளுமடங்கிய [1]மூன்றுஅகங்காரங்களாலேதான் மூன்றுவதுஸ்ருஷ்டி உண்டானது. [2]பஞ்சபூதங்களையுமுண்டாக்கினதுஅகங்காரமே. [3]மனத்தையும்படைத்ததுஅகங்காரமே. அந்தமனம் இந்திரியங்களைநோக்கிப் பிரவர்த்தித்தது. சூலத்தைஅடையாளமாகவுடையவரே! அதனால், புத்தியுள்ளஆத்மாவானவன் பஞ்சபூதங்களிலுமுள்ள சப்தாதிவிஷயங்கள் ஐந்தையும் பஞ்சேந்திரியங்களுடன்கூடி அடிக்கடி விரும்பத்தகுந்தபட்டான். புத்திமான்களிற்சிறந்தவரே! மனம் ஆத்மாவைஅறியாது. ஆத்மாவும் அகங்காரத்தை அறியான். அகங்காரமும் புத்தியை அறியாது. மகாஜபாவரே! இவ்வாறே கியாயம்பேசுகிறமற்றவர்களும் இவற்றுள்ளொன்றையும் அறியார். அகங்காரத்துடன்சேர்ந்து எப்போதும் இந்திரியங்களிடத்திலேயேநோக்காகவிருக்கும் ஜ்ஞானகாரணாத்மாவானவன் மகாபுருஷனென்றுசொல்லப்படுகிறான். அவன் உலகமனைத்தையும் விரித்துத் திரும்பவும் ஒருமித்துச் சுருக்குகிறான். அறிவுள்ளதாயிருப்பதால்உலகமனைத்தும் புலப்படாததாத்மாவிலுள்ளதில் [4]பிரளயமுழுதும்படித்திருக்கிறது. இரவுமுடிந்தபின்கண்விழிக்கும்போது திருப்தியும் ஆத்மாவாகவிளங்குகிறது. அப்படியே சூஷ்மசரீரத்திற்கு ஆதாரங்கள் பலவுள்ளன. அந்தஆத்மா அவ்யக்தமென்னப்படும் ஒருளாதிய அஜ்ஞானத்துடன் சேர்ந்திருக்கிறான். அவன் 'மனம்' முதலில் ஒருசிறந்தவன் இருக்கிறான்' என்றுநினைப்பானையின் அடிக்கடி தன்னை ஆக்கவும் அழிக்கவும்செய்யான். மஹாதேவரே! இவ்வாறு புத்தியுள்ளவன் ஸூக்ஷ்மமானப்ரக்ருதியைச் சேர்ந்தவிஷயதையும் இருபத்தைந்தாவதுமஹாபுருஷனென்னும்விகாரமற்றஆத்மாவையும் அறியவேண்டும். இவ்வுலகத்தைமட்டும்புத்தியிலறிந்து படைப்பவனையறியாமலிருப்பவன் எவனோ அவன் அஜ்ஞானமாகவும் இருளாகவுமிருக்கும் பிரகிருதிக்குவசப்பட்டு அதன்குணங்களோத் தானுமொரு ஆத்மாவினிடம் வந்திருவான். புத்யமானன் அபுத்தனையும் புத்தன் அவ்விருவரையும் அறிகின்றனர். இருபத்தாறுவதுதத்வமாகியபரமான் பற்றற்றவரும் பரிசுத்தரும் தமக்குமுழுதலில்லாதவரும், உருவமில்லாதவ

1 ஸாத்விகராஜஸதாமஸங்கள். 2 தாமஸாஹங்காரம்.
3 ஸாத்விகாஹங்காரம். 4 பிரளயம். 5 ஸ்ருஷ்டி.

ரும் அழிவும்குற்றங்களுமற்றவரும் சுத்தபுத்தரும் துயரமற்றவருமாயிருக்கிறார். சிலஞானிகள் மூலப்ரகிருதிமுதல் காரியங்களீறுகவுள்ள இவ்வுலகமட்டுமே தத்வமென்று சொல்லுகின்றனர். மற்றும்சில ஞானிகள் இவ்வுலகங்களனைத்தையும் ஆத்மாவொன்றைமட்டுமே தத்வமென்றுசொல்லுகின்றனர். சிறந்தபுத்தியுள்ளவரே! மற்றும்சிலஅறிஞர்கள் மேற்கூறும்தத்வமில்லையென்று சொல்லுகின்றனர். சிலமகாத்மாக்கள் பரமாத்மாவைத் தத்வங்களென்றுபெயர்மட்டுமுள்ளவராகச் சொல்லுகின்றனர். மற்றும்சிலர் வேதத்தில்தத்வமென்று சொல்லியிருப்பதனால் பரமாத்மா தத்வம்தானென்று கூறுகின்றனர். மகேஸ்வரரே! ஸத்வகுணத்தைப்பற்றியிருப்பதனால் ஸத்வகுணமுள்ளவனென்று சிலர் சொல்லுகின்றனர். சிறந்தகைகளையுடையவரே! இந்த விகாரரஹிதமாவாகிய புத்யமானனென்பவன் இவ்வாறு அவ்யக்தனென்னப்பட்டபுத்தனாகிறான். தேகமெடுக்கும்போது இவனுக்குச் சேதனத்வம் அசேதனத்வம் ஆகிய இரண்டுகுணங்களும் வித்தையும் நிரகம் (பற்றுதல்) என்று பெயருள்ள அவித்தையும் உண்டாகின்றன. சங்கரரே! இவ்வாறு சாஸ்த்ரபுத்தியுடன் தத்வங்களையறிகின்றபோகர்களும் ஸாங்க்யர்களும் உறுதியாயிருக்கும்பிரகிருதிசம்பந்தத்தை 1 விட்டுவிடுகின்றனர். சாஸ்த்ரத்தின்உண்மையை இவ்வாறு நுட்பமாகக்கண்டறிந்து பேசுகிறவர்களின்புத்தியானது நீரில்எண்ணெய்த்துளிபோல எங்கும்பரவுகிறது. எல்லாவித்தைகளையும் ஆராய்ந்தறிவதுதான் அறிவென்று சொல்லப்படுகின்றது. அதனாலேதான் யதிஸ்ரேஷ்டர்கள் வித்தையையும் அவித்தையையும் அறிகின்றனர். அவற்றில் மூன்றுவேதங்களும் பரவித்தையென்றுசொல்லப்படுகின்றன. நான்காவது ஆன்வீக்ஷகி (ஆத்மஜ்ஞானம்) என்றுசொல்லப்படுகிறது. அந்தஆன்வீக்ஷகியை அறிந்தவன் தன்மனத்திற்பக்ஷபாதமில்லாமல் புத்தியினால் எல்லாவற்றையும் சரியாகஅறிவான். பகுத்தறிவில்லாததும் வெறுத்தியரமுள்ளதுமான அவித்தையென்றுபெயருள்ள அவ்யக்தந்தான் அப்ரபுத்தமென்று சொல்லப்படுகிறது. இவற்றையெல்லாம்அறிவதனாலேதான் புத்தனாகிறான். புத்திக்குஇலக்கணம் வேறு என்னஇருக்கிறது? இதைஅறியாதவர்கள் எவரோ அவர்கள் அந்தப்ரபுத்தனுடைய வசத்தில் அகப்பட்டுக்கொண்டு அறிவில்லாதஅவ்யக்தத்திலிருந்து திரும்பித்திரும்பிப் பிறப்பார்; அஜ்ஞானத்தின் வசத்திலகப்பட்டுக்கொண்டு அந்தஅவ்யக்தத்தையும் தம்மையும் ஸமமாகநினைப்பார். அவர்களிடம்பற்றுள்ளமற்றவர்களும் இந்தப்பலனு

1 முக்திபெறுகின்றனர்.

க்குத்தான் பாகஸ்தர்கள். யோகாப்யாஸத்திஞல் பரமார்த்தத்தைக் கண்டவர்கள் இவ்வாறு ஆத்மஸ்வரூபத்தையறிந்து துயரப்படாமலிருக்கின்றனர். பகைவரையடக்குகிறவரோ! அஜ்ஞானத்திஞலுண்டான ஸம்ஸாரமென்னும் கட்டிலிருந்துவிடுபட்டு எல்லாப்பிராணிகளும் அடிக்கடிமுழுகும்தமஸென்றுபெயருள்ள ஆழமும் பயங்கரமுமான அஜ்ஞானக்கடலைக்கடந்து ஸ்வதந்த்ரமும் சுத்தமும் பிரகாசமுமானஆத்மஸ்வரூபத்தை அடைவார். இவ்வாறு வித்தையையும்அவித்தையையும் பிறருக்குநாம் கொடுக்கவும் பிறரிடம்நாம்வாங்கவும்தக்கதாகிய [1]ஸாங்க்யமும் யோகமும் ஒன்றுவதும் பலவாவதும் அழிவதும் அழியாததும் உதாகரணங்களுடன் நான் உனக்கு உரைத்தேன். தேவஸ்ரேஷ்டரே! [2]மூன்றுவகைமோக்ஷங்களையும் உமக்குச் சொல்வேன். தேவருக்குஞ்சிறந்தவரே! புத்யமானஞலும் பிரபுத்தஞலும் அபுத்தமென்னும்பிரகிருதியினுடையஸ்ருஷ்டியைத் திரும்பவும் நீர் கேளும். இதற்குமுன் சோட்டும் பார்த்துபிரார்தவை எவையோ அவற்றையும் உமக்குச்சொல்வேன். மனஉறுதியோடு கவனித்துக்கேளும்.

நூற்றறுபத்தோன்பதாவது அத்யாயம்.

தா ன தர் ம பர் வ ம். (நாடர்ச்சி.)

(மஹாதேவருக்கும் ஸநத்குமாரருக்கும் நடந்த ஸம்பாஷணைத் தொடர்ச்சி; அரிஷ்டம் பதினெட்டு மோக்ஷாதிகளியன.)

ஐயா! அரிஷ்டங்களென்னப்பட்டதுர்நிமித்தங்களை விரிவாகச் சொல்வேன். அவற்றை நீர் கேளும். தனக்குவடதிசையின்கடலில் மின்னல்போன்றதேகமுள்ளபுருஷன் தெற்குமுகமாயிருப்பதை ஒரு மனிதன் காண்பானுயின் அவன் மூன்றுவருஷங்களில்தனக்குத் தேகவியோகம்நேரிடுவதை அறியலாம். சங்கரரே! இது துர்நிமித்தத்தின்பலனென்று புத்திமான்கள் சொல்லுகின்றனர். மூட்டமில்லாத சூரியமண்டலம் கிரணங்களில்லாமலிருக்கக்காண்பவனுக்கு ஆறுமாதங்களில் தேகவியோகம்நேரிடுமென்று அறியலாம். நிலவில் தன்னிழலைத் துவாரமுள்ளதாகவும் காலில்லாமலிருப்பதாகவும் பார்ப்பவனுக்கு ஒருவருஷத்தில் தேகவியோகம்நேரிடுமென்று அறியலாம்.

---

1 'ஸாங்க்யாஸாங்க்யம்' என்று பாடம்கொள்ளப்பட்டது.

2 விகாரபுருஷன் ஸத்து அஸத்து ஸதஸத்துமென்றிலும் இராமலிருப்பது முதல்மோக்ஷம். விகாரங்களிலிருந்துவிலகுவது இரண்டாவது மோக்ஷம். புத்தனுடன்சேருவது மூன்றுவதுமோக்ஷம்.

தன்கண்கருவிழியில் தலையில்லாதபிரதிபிம்பத்தைக் காண்பானுயின் ஆறுமாதங்களில் தேகவியோகம் நேரிடுமென்றறியலாம். இருகரங் களிஞலும் காதுகளைப் பொத்திக்கொண்டபின் சப்தங்களைக்கேளா மலிருப்பானுயின் ஒருமாதத்தில் தேகவியோகம்நேரிடுமென்று அறிய லாம். நல்லமணம்தெளிவாகவரும்போது ஊசல்நாற்றத்தைநுகர்வனு யின் அவன் [1]தேவதாகிருகத்திலிருந்தபோதிலும் ஏழுநாளில் இற ந்துபோவான். மஹேஸ்வரரே ! மகாமுனிவரே ! மனிதன் நீண்ட காலம் ஜீவிக்கவிரும்புவானுயின் எல்லாயோகாங்கங்களோடும் மனத் தைத் தியானத்தில்நிறுத்தி ஸமாதியிலிருக்கவேண்டும். அதனல், இவ்வுலகத்தில் மரணத்தை ஜயிக்கலாம். வேறுவகையில்லை. வெகு காலம் ஜீவிக்கவிரும்பாவிட்டால் பிரக்ருதியிலிருந்து நீங்கினவனும் நிரம்பினவனும் குற்றமற்றவனுமான ஆத்மாவைத் தியானித்துக் கொண்டு தானே தன்தேகத்தை விடலாம். அவன் அப்போது பரிசுத்தனுயிருந்து மாறுதலில்லாதவனும் ப்ரக்ருதிக்குமேற்பட்ட வனும் தேகத்துடன்சேர்ந்திருப்பவனுமாகிய ஆத்மாவைத்தியானம் செய்து தேகவியோகத்தை அடையவேண்டும். இப்படி விழித்துக் கொண்டிருக்கும்போதே உண்டாகும்துர்நிமித்தங்களை நான் உமக் குத் தெளிவாகச்சொன்னேன். தேவஸ்ரேஷ்டரே ! எல்லாயோகா ங்கங்களோடுங்கூடிய தியானத்தினல் மரணத்தை ஜயிக்கலாம். திரும்பவும், ஒருமைபன்மைகள் நித்தியாநித்தியங்கள் இந்தான்கை யும் பகுத்துச்சொல்லுகிறேன்; கேளும். சிறந்தமகிமையுள்ளவரே! மூலப்பிரக்ருதிமுதலிய இருப்பத்துநான்குதத்வங்கள் எல்லாவற்றை யும் விகாரபுருஷனென்னும் அகங்காரத்தோடுசேர்ந்தவையென்றும் சொல்லுகின்றனர். இதுதான் ஏகத்வமென்னும்வித்தாந்தம். இரு பத்தைந்துபிரிவுகள்தாம் பலவென்று சொல்லப்படுகின்றன. மூப்பு இறப்பில்லாததுதான் முக்தியென்றுசொல்லப்படுகிறது. விகாரங்க ளற்றபுருஷனுகியஆத்மாதான் தத்வமென்று உபதேசிக்கப்படுகிறன். அவனே இருபத்தைந்தாவது தத்வமாகும்போது விகாரபுருஷனுகச் சொல்லப்படுகிறன். சங்கரரே ! இவன் விகாரமற்றவனுனல் தத்வங் களிற்சேரான். விகாரமிருக்கும்போதுதான் தத்வமென்றுசொல்லப் படுகிறன். இவன் விகாரத்தைவிட்டுப்பிரிந்து புலப்படாமலிருக் கையையடைந்தானுயின் அப்போது தத்வங்களிற்சேராதவனும் ஸத் வகுணமுள்ளவனும் [2]அகுணனுமாவான். ஏனெனில், விகாரங்களே

1 'தேவதாபிரார்த்தனை செய்தானும்.

2 முக்குணங்களற்றவன்.

யும் குணங்களையும்விட்டதலையும் பிரக்ருத்திக்குவேறாயிருப்பதலையும் சுத்தனாகிறான். அப்போது ஸ்ருஷ்டியைவிட்டு முக்திபெற்று நானாத்வமென்னும்வேறுபாட்டை அடைகிறான். அந்தஞானமுள்ளவன் வழுப்பட்டாலும் எழுந்திருப்பான்; மாறுதலின்றியிருப்பான்; முன்போல ஏருகிலிழுத்தில் தளர்விழாமல் அழியாமலிருப்பான். சூலபாணியே! நிர்க்குணமானஆத்மா குணங்கள்சேர்ந்த மூலப் பிரக்ருத்தியிலிருந்துவெளிப்படுதலையும் ஏகமாவதையும் அநேகமாவதையும் 1அக்ஷரமாவதையும் 2க்ஷரமாவதையும் துர்நிமித்தங்களையும் உமக்குச் சொன்னேன். பவரே! மஹாதேவரே! எதையறிந்து ஸாங்யாவஸிகள் குற்றமற்றதைலயுக்தையடைந்தனரோ சாங்க்யர்களும் யோகர்களும் தம்மினைகள் எரிக்கப்பட்டுத் துயரமற்று தேகத்தையும் முச்குணங்களையும்யுக்தையுமிட்டுப்பாபமற்றசாய்ஸம்ஸாரக் கடலிலிருந்து விடுபட்டனரோ அந்தமோக்ஷத்தின் இலக்கணம் மிச்சமாயிருக்கிறது. அதையும் உமக்குச் சொல்லுகிறேன். ப்ரக்ருதியானது தன்குணங்களைப் புருஷனிடத்தில் வியாபிக்கச்செய்வதிலும் அதனைவிராஜிப்பதிலும் முக்கியமாயிருப்பது; ஞானமில்லாதது. இவ்வளவுகாரியங்களுக்கும் அதுதான் காரணம். சேதனமென்றுசொல்லப்பட்டகர்த்தாவிலும் அசேதனமானபிரகிருதியிலும் வேறான அந்தப்புருஷன் தனதுபயனையறிவிலல் ஜடங்களையும் பிராணிகளையும் படிக்கடி உண்டுபண்ணுகிறான். பவன், 'நான்' என்னும்பேதத்தோடி மனத்தினுல்மனத்தையறிகிறானே அவன் ஸத்தென்னப்படும் சுத்தாத்மாவைமோகான்; அஸத்தென்னப்படும் ஜடமுமாகான்; இருதன்மையோடி ஸதஸத்துமாகான். அவன் ப்ரக்ருத்தியைவிட வேறானவன்; பரிசுத்தன்; வேறுதன்மையுள்ளவன்; ப்ரக்ருத்தியை கடத்தாமலும் தடாமலும் பார்த்திருப்பவன். அவன்தான் விகாரபுருஷனென்றுசொல்லப்படுகிறான். இந்தப்ரக்ருத்தியானது விகாரபுருஷனுடன் சேர்ந்துதான் முக்குணங்களிலுலான உலசத்தைப்படைத்துக்கொண்டும் அதற்குமார்முத்தன்னிடத்திலிழுத்துக்கொண்டுமிருப்பது. மச்சமானது ஜலத்தில் தன்பார்வையிலுலேயே அநேகமச்சங்களையுண்டாக்குவதுபோல அந்தவிகார புருஷன் ப்ரக்ருத்தியைத் தான்பார்ப்பதலுலேயே அநேகதேகங்களை உண்டாக்குகிறான். நேகத்தையும் அதன்நாசத்தையும்அறிவதலுலே தான் அவன் கேஷித்ரஜ்ஞனென்றுசொல்லப்படுகிறான். தத்வஜ்ஞான முள்ளவர்கள் இந்தப்ரக்ருத்திபுருஷர்களின் சேர்க்கை அநாதியென்று

1 அழியாதது. 2 அழிவது.

சொல்லுகின்றனர். இப்படி ப்ரக்ருதியிற்சேருவதனால் இந்தவிகார புருஷன் அஸத்தென்றும் ஸத்தென்றும் நினைக்கப்படுகிறான். விகாரங்களிற்சேர்ந்தவனே விகாரமென்றே நமக்குச் சொல்லுகின்றனர். எப்போது இவன் விகாரங்களையெல்லாம் ப்ரக்ருதியைச்சேர்ந்தவையென்று நினைக்கிறானோ அப்போது (விகாரமடைந்திருந்தவன்) விகாரங்களிலிருந்து வேறுபட்டவனாவான். அந்தப் புண்யமானன் ப்ரக்ருதியினின்றும் விகாரங்களினின்றும் எப்போது வேறுபட்டவனாவானோ அப்போது குற்றமற்றதும் மிகுபரிசுத்தமும் எப்போதும் ஞானமுள்ளதும் ப்ரக்ருதியிற்சோதனையும் நிரம்பினதும் எப்போதும் மாறுதலில்லாததும் பிறப்புஇறப்பில்லாமலிருப்பதுமான பரமாத்மாவைச்சேர்ந்து அந்தப் பரிசுத்தத்தினால் பிரகாசித்துக்கொண்டு அசேதனமும் ஸ்தூலரூபமுமான அப்ரபுத்தன்நிலைமையிலிருந்து மோக்ஷத்தை அடைகிறான். அத்திப்பழத்தையுடைத்தபின் அதிலிருந்து கொசுகு வெளிப்படிவதுபோல மூலப்ரக்ருதிபவிவிதனால் இருபத்தைந்தாவதுதத்வமாகிய விகாரபுருஷன், 'எனது' என்னும்பற்றை விடுகிறான். அப்போது அந்தஇருபத்தைந்தாவது புருஷன் தாமரையிலையில் தண்ணீர்த்துளி எப்படி ஒட்டாமலிருக்குமோ அப்படிப் ப்ரக்ருதியில் ஒட்டாமலிருப்பான். ஆகாசம்போல எல்லாவற்றிலும்சேர்ந்து ஒன்றிலும்பற்றில்லாத இருபத்தைந்தாவதுபுருஷன் புத்தனென்று இருபத்தாறுவதுதத்வமாகிய [1]புத்தனுக்குச் சமமாகிறான். குற்றமற்றவரே! ப்ரக்ருதிபரிசேர்ந்ததத்வஜ்ஞானம் எனக்குமுன்பிறந்தபிரம்மபுத்ரர்களால் எனக்கு உண்டாயிற்று. பிறந்தகைகளையுடையவரே! ஸ்ருஷ்டியின்ஆதியில் மூப்புஇறப்பற்றதும் மாறுதலுமான பரப்பிரம்மத்தின் புத்ரர்கள் தமோகுணத்தினால் மூடப்பட்டனர். ஸநகர், ஸநத்நனர், ஸநாதனர் இம்மூவரும் அழியாததும் அழிவைப்போக்குவதுமானநிறந்தர்மத்தை அறிந்தனர். அனிலிருந்து பிரிவுபடாததும் அழியாததும் நேரானதென்னும் பெயருள்ளதுமான மூலப்ரக்ருதியிலிருந்துகொண்டு மஹிமைபொருந்தியஆத்மாவானவன் நாராயணரையே பரதத்வமாகப் பற்றியிருக்கிறான். உடன்பிறந்தவர்களாயிவர்களுக்கு உத்தமமானஞானம் பிறப்பிலேயேஉண்டாயிற்று. நாங்கள் நேகத்துடன் உலகங்களில் ஸஞ்சரிக்கிறோம். பிரகபாணியே! இதற்குமுன் ஆங்காங்கு பலமுறை நாங்கள் பிறந்திருக்கிறோம். சீதோஷ்ணமுதலிய இரட்டைகளிலுல் வெறுப்புற்றவனக்கு உயர்ந்தஞானமுண்டாயிற்று. முதல்ஆசாரியராகிய கபிலரென்னும் முனிஸ்ரேஷ்டரிடத்திலிருந்து தத்வங்களில்

நிச்சயஞானமுள்ள யோகஸாங்கியங்கள் முழுதும் எனக்குக் கிடைத்தன. அவராற்போதிக்கப்பட்டஅநேகசிஷ்யர்கள் தத்வஜ்ஞானிகளாயினர். நானும்அதைத் தெரிந்துகொண்டு அநேகசிஷ்யர்களுக்கு உபதேசித்தேன். ஜனனமரணங்களைப்போக்குவதும் உண்மையும் அகாதியுமான இத்தஜ்ஞானம் யாருக்குத்தெரியவேண்டும். இதையறிந்தபின் தத்வஜ்ஞானிகள் இந்திரியங்களுக்குட்படாமலும் துயரப்படாமலுமிருப்பர். பிரகாசிப்பவரே! மஹானுபாவரே! அப்படிப்பட்டவர்கள் காரணக்குற்றங்களற்றவரும் பற்றற்றவரும் அக்ஷரமெனப்பட்ட அகங்காரமற்றவரும் யாருக்கும் வசப்படாதவரும் ஈச்வரனுக்குச்சமமாக எங்கும்நிறைந்தவரும் எக்காலமும் மாறுபடாதிருப்பவரும் தமஸுக்கெட்டாதவரும் யாருக்குந்தீங்குசெய்யாதவரும் யாராலும் தீங்குசெய்யப்படாமல் எப்போதும் ஸத்வகுணத்திலிருப்பவருமாக நினைக்கப்படுகின்றனர். அவர்கள் விடுபட்டவர்; ப்ரக்ருதியிலிருந்து தனித்திருப்பவர்; அஜ்ஞானமும் பயமுமற்றவர். அவர்களுக்குத் தேகமுமில்லை; துயரமுமில்லை. ஹிரண்யகர்பர், த்ரிசிரஸ், பிரஹ்லாதர், பாஸ்கரர், வஸு, விஸ்வாவஸு, பஞ்சசிகர், கார்க்யர், அவந்தி தேசத்தாராகியஆஸுரி, கௌதமர், வ்ருதர், காத்யாயனர், ஹமுசி, ஹரி, தமனர்இவர்களும் இன்னும்அனேகரும் இத்தத்தத்வத்தையே உபதேசிக்கப்பெற்றனர். சிலர் முக்திபெற்றனர். சிலர் இருக்கின்றனர். மற்றும்சிலர் தம்இஷ்டப்படி இறந்தனர். மூன்றுவிதமான பந்தங்களையும் மூன்றுவிதமான மோக்ஷங்களையும்அஜ்ஞானத்தையும் ஆசையையும் ப்ரக்ருதிபுருஷஸம்யோகத்தையும்அவர்கள் உபதேசிக்கப்பெற்றனர். அவர்களுக்குச்சொன்னபந்தனத்தையும் மோக்ஷத்தையும் என்னிடம் கேளும். சுற்றிலும் எவ்வளவுபொருள்களோடு ஸம்பந்தம் உண்டாகிறதோ அவ்வளவினாலும் பந்தனம் செய்யப்படுகிறது. எல்லாப்பற்றுக்களையும்விடுவதனாலேதான் மோக்ஷமுண்டாகிறதென்றுநமக்குக்கேள்வி. எல்லாப்பற்றுக்களிலிருந்தும் விடுபட்டவன் நிர்மலஞானகேவலாத்மாவாகிறான்' என்றார். ஸநத்குமாரபகவான் மகாத்மாவானஈச்வரருக்கு இவ்வாறுசொல்லி ஆகாசமார்க்கமாகச் சென்றார்" என்றுசொல்லினர்.

நூற்றெழுபதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(எது எது தீர்த்தமென்பதும் சுத்தமென்பதும்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே ! எல்லாத்தீர்த்தங்களிலும் சிறந்த தீர்த்தம்எதுஎன்பதையும் எதனால் சிறந்தசுத்தமுண்டாகிறதென்பதையும் எனக்கு விரித்து உரைக்கக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார் :

"புத்திசாலிக்கு எல்லாத்தீர்த்தங்களும் சிறந்தவைதாம். ஆகிலும், எது ஸரியானதீர்த்தம், எது ஸரியானசுத்தமென்பதைப்பற்றி ஊக்கத்துடன் என்னிடம் கேள். ஸத்யமென்னும்துறையும் தைரியமென்னும்மடுவுமாகவுள்ள ஆழமும் பரிசுத்தமும் தெளிவுமான மனமென்னும்தீர்த்தத்தில் அழியாதஸத்வகுணத்தைப்பிடித்துக்கொண்டு ஸ்நானம்செய்யவேண்டும். தவம், ஞானம், விஷயம், ஸத்யம், மனவாக்குக்காயங்களின்ஒற்றுமை, கொல்லாமை, எல்லாப்பிராணிகளிடத்திலும்அன்பு, ஐம்புலன்களையுமடக்குவது,மனவடக்கம்இவைமேற்சொன்னதீர்த்தங்களினால் ஏற்படும்சுத்தங்கள். 'நான், எனது' என்னும் எண்ணத்தையும்சீதோஷ்ணம்ஸுகதுக்கங்கள்முதலியஇரட்டைகளையும் விருப்புவெறுப்புக்களாகிய அபிமானங்களையும்விட்டயோகிகள் தீர்த்தங்கள்போலிருப்பவர். அவர்கள் சிறந்ததீர்த்தமென்று சொல்லப்படுகின்றனர். நாராயணரிடத்திலாவது ருத்ரரிடத்திலாவது பக்தி செய்வது சிறந்ததீர்த்தமாகினைக்கப்படுகிறது. நீ எல்லாவற்றையும் பகுத்தறிவதுதான் உன்சுத்தத்திற்குலக்கணம். எவர்கள் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் ஸத்வகுணத்தையும் மனத்திலேயே ஒதுக்கினரோ அவர்களுக்குச் சுத்தமானஒழுக்கமும் தமக்கு நல்வழியைத்தேடுவதுந்தாம் தீர்த்தம். எல்லாவற்றையும்விடக்கருதுகிறவரும் எல்லாந்தெரிந்தவரும்எல்லாவற்றையும்ஸமமாகப்பார்ப்பவரும் எவரோ அவர்தாம் முன்சொன்னசுத்தங்களில்உலக்குமுள்ளவரும் அந்தத்தீர்த்தங்களினால் சுத்தருமாகிறார். ஜலத்தினால்உடம்புகனைந்தவன்ஸ்நானம்செய்தவனென்றுசொல்லப்படுவதில்லை. இந்திரியஜயத்தினால்சுத்தமானவன் எவனோ அவன்தான் ஸ்நானம்செய்தவன். அவன் உள்ளும் புறமும் பரிசுத்தமானவன். கிடைக்காதவிஷயங்களில்ஆசையும்கிடைத்தவிஷயங்களில்எனதென்னும்பற்றும்இல்லாமலும் பிறகு விருப்பமுண்டாகாமலும் இருப்பவர்எவரோ அவருடையசுத்தந்தான் சிறந்தசுத்தம். இவ்வுலகத்தில்சிறந்தஞானமும் ஒன்றையும்கருதாமை

யும் மனத்தூய்மையுந்தாம் சரீரத்திற்கே சிறந்தசுத்தம். ஒழுக்கத் தின்சுத்தமே பெருஞ்சுத்தம். தீர்த்தஸ்நானத்தினுலுண்டாகும்சுத் தம் அதற்குப்பிற்பட்டது. ஞானத்தினுலுண்டாகும்சுத்தம் எதுவோ அதுஎல்லாவற்றிற்கும்மேலானதாகவினைக்கப்பட்டிருக்கிறது. பிரம்ம ஜ்ஞானமென்னும்ஜலம்நிரம்பின மனத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்த வர் எவரோ அவர்தாம் ஆத்மாவைக்கண்டஞானிகள். மேற்சொன்ன சுத்தங்களே நித்தியமாகவைத்துக்கொண்டி அவற்றில்லூக்கத்துடன் குணங்களேயே அடைந்திருக்கும்மனிதன் என்றும்சுத்தனே. பாரத னே! தேகத்தினுள்ள இந்தத்தீர்த்தங்களே உனக்குச்சொன்னேன். பூமியினுள்ளபுண்ணியதீர்த்தங்கள் எவையோ அவற்றையும்கேள். ஒருசரீரத்தின்மேல் மேற்சொன்ன அநேகபுண்ணியமான இடங்கள் படைக்கப்பட்டிருப்பதுபோலவே பூமியிலும் புண்ணியமாயுள்ள இட ங்களும் ஜலங்களும் படைக்கப்பட்டிருக்கின்றன. தீர்த்தங்களின்பேர் சொல்வதனுலும் அவற்றில்ஸ்நானம்செய்வதனுலும் பித்ருதர்ப்பணம் செய்வதனுலும் பாவங்களைப் போக்கவேண்டும். தீர்த்தங்களினுல் சுத்திபெற்றவர் எளிதாக மேலுலகம்போவார். பெரியோர்கள் அங்கே கரித்திருப்பதனுலும் பூமியின்மகிமையினுலும் ஜலத்தின்பிரபாவத்தி னுலும் அந்தத்தீர்த்தங்கள் புண்ணியங்களுக்குச் சிறந்தவிடங்களா கின்றன. மனத்தின்புண்ணியதீர்த்தங்கள் சில. பூமியின்புண்ணிய தீர்த்தங்கள் மற்றவை. இவ்விருவகைத்தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்பவன் விரைவில் பலனையடைவான். செய்கையில்லாப்பலனும் பலனில்லாதசெய்கையும் இவ்வுலகத்தில் ஒருகார்யத்தையும் நிறை வேற்றுவதில்லை. இரண்டும்சேர்ந்ததான் ஸாதகமாகும். இப்படித் தேகசுத்தத்தோடும் தீர்த்தசுத்தத்தோடும்கூடியிருப்பவன் சுத்தனு கப் பலனையடைவான். இரண்டுவகையாலும் ஏற்படுஞ்சுத்தந்தான் உத்தமசுத்தமாம்" என்ருர்.

நூற்றெழுபத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பன்னிரண்டுமாதங்களிலும் பன்னிரண்டுநாமங்களினல் விஷ்ணுவை ஆராதிப்பதன் பலன்.)

யுதிஷ்டிரர், "உலகத்தில் எல்லாஉபவாஸங்களிலும் எது சிறந் ததோ, எது மிகப்பெரியபலனைத் தருகிறதோ, எது ஸந்தேகமில் லாததோ அதை நீர் எனக்குச் சொல்லக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்:

"அரசனே! மனிதன் எதைச்செய்வதனால் ஸந்தேகமில்லாமல் ஸுகம்பெறுவானோ அதைப்பற்றி மகாவிஷ்ணு தாமாகவே சொல்லியிருப்பதைச் சொல்லுகிறேன்; கேள். மார்கழிமாஸம்துவாதசியில் இரவிலும்பகலிலும் கேசவநாமத்தைச்சொல்லிஆராதிப்பவன் அஸ்வமேதபலனை அடைவான். அவனதுபாவம் கெடும். தைமாதத்தில் (துவாதசியில்) நாராயணனென்றுசொல்லிப் பூஜிப்பவன் வாஜபேயயாகபலனை அடைவான்; சிறந்ததவஸித்தியும் பெறுவான். மாசிமாஸம் (துவாதசியில்) இரவிலும்பகலிலும் மாதவநாமத்தைச்சொல்லிப்பூஜிப்பவன் ராஜஸூயயாகபலனை அடைவான்; குலத்தையும் கரையேற்றுவான். பங்குனிமாஸத்தில் (துவாதசியில்) கோவிந்தாவென்றுசொல்லிப்பூஜிப்பவன் அதிராத்ரயாகபலனை அடைவான்; சந்திரலோகத்தையுமடைவான். சித்திரைமாதம்துவாதசியில்இரவிலும் பகலிலும் விஷ்ணுவென்றுதியானிப்பவன் பௌண்டரீகயாகபலனை அடைந்து தேவலோகத்திற்குப்போவான். வைகாசிமாதம்துவாதசியில் மதுஸூதனநாமத்தைச்சொல்லிப்பூஜிப்பவன் அக்னிஷ்டோமயாகபலனையடைந்து சந்திரலோகத்திற்குப்போவான். ஆனிமாஸம் துவாதசியில் இரவிலும்பகலிலும் த்ரிவிக்ரமநாமத்தைச்சொல்லிப் பூஜிப்பவன் கோமேதமென்னும்யாகத்தின்பலனையடைந்து அப்ஸரஸுகளுடன் மகிழ்ந்திருப்பான். ஆடிமாஸம்துவாதசியில் வாமனனென்றுசொல்லிப்பூஜிப்பவன் நரமேதயாகபலனையும் பெரும்புண்ணியத்தையும் அடைவான். ஆவணிமாஸம்துவாதசியில் இரவிலும்பகலிலும் ஸ்ரீதரநாமத்தைச்சொல்லிப்பூஜிப்பவன் பஞ்சமகாயஜ்ஞங்களின்பலனையடைந்து தேவவிமானமேறி மகிழ்ந்திருப்பான். புரட்டாசிமாஸம் (துவாதசியில்)ஹ்ருஷீகேசனென்றுசொல்லிப்பூஜிப்பவன் ஸௌத்ராமணியென்னும்யாகபலனையடைந்து ஆத்மசுத்தியுள்ளவனாவான். ஐப்பசிமாஸம்துவாதசியில் பத்மநாபனென்று பூஜிப்பவன் ஆயிரம் கோதானங்களினாலுண்டாகும் புண்ணியபலனை அடைவான். இதில் ஸந்தேகமில்லை. கார்த்திகைமாஸம்துவாதசியில் தாமோதரனென்றுசொல்லிப் பூஜிக்கவேண்டும். அவர் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் கோமேதயாகத்தின்பலனை அடைவரென்பதில் ஸந்தேகமில்லை. இவ்வாறு வருஷம்முழுதும் தாமரைக்கண்ணரை ஆராதிப்பவன் பூர்வஜன்மஞானத்தையும் மிகுதியானபொன்னையும் அடைவான். ஒவ்வொருநாளும் ஒரேபக்தியோடு விஷ்ணுவை ஆராதித்து அந்தஆராதனையின்முடிவில் பிராம்மணர்களைப் பூஜிப்பிக்கவேண்டும். அல்லது, நெய்யைத் தானம்செய்யவேண்டும். இதற்குமேற்பட்ட உபவாஸமில்லைஎன்பது நிச்சயம். ஆதியில் பகவானுமகாவிஷ்ணு இதைத் தாமாகவே சொன்னார்" என்றார்.

நாற்றெழுபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(அழகு செல்வமுதலியவற்றைப் பெறுதற்காகச் செய்யத்தக்கவை.)

கௌரவர்களுக்குப்பிதாமஹரும் பிராயமுதிர்ந்தவருமானபீஷ்மர் சரதல்பத்திற்படுத்திருக்கும்போது, சிறந்தபுத்திசாலியான யுதிஷ்டிரர் அருகில்வந்து, "தேகத்தில்அழகும் செல்வங்களும் பிரியமும் உண்டாவதெப்படி? தர்மார்த்தகாமங்களென்னும்மூன்றுபுருஷார்த்தங்களையுமடைந்து ஸுகம்பெற்றிருப்பது எதனால?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார் :—

"அரசர்க்கரசே! மார்கழிமாஸத்தில்சந்திரன்மூலநக்ஷத்திரத்துடன் கூடினதினத்தில் சந்திரனுக்கு மூலநக்ஷத்திரத்தைப்பாதங்களாகவும் ரோஹிணியைக் கணைக்கால்களாகவும் அச்வினியைமுழங்காலாகவும் பூராடஉத்தராடங்களைத்தொடைகளாகவும் பூரம்உத்தரங்களை மறைவானஸ்தானமாகவும் கிருத்திகையைஇடுப்பாகவும் பூரட்டாதிஉத்தரட்டாதிகளை காபியாகவும் ரேவதியை [1]வயிறுகவும் அவிட்டத்தைமுதுகாகவும் அனுஷத்தைமார்பாகவும் விசாகநக்ஷத்திரத்தைக்கைகளாகவும் ஹஸ்தத்தைதுணிக்கைகளாகவும் புனர்வஸுவைவிரல்களாகவும் ஆயில்யத்தைநகங்களாகவும் மேட்டைடையைக்கழுத்தாகவும் சிரவணத்தைக்காதுகளாகவும் புஷ்யத்தைவாயாகவும் ஸ்வாதியைப்பல்லும்உதடுமாகவும் சதயத்தைச்சிரிப்பாகவும் மகத்தைமூக்காகவும் மிருகசீர்ஷத்தைக்கண்களாகவும் சித்ராநக்ஷத்திரத்தைநெற்றியாகவும் பரணியைத்தலையாகவும் திருவாதிரையைக்கேசங்களாகவும் தியானம்செய்யவேண்டும். தியானம்முடிந்தபின் வேதங்களில் கரைகண்டபிராம்மணனுக்குநெய்யத்தானம்செய்யவேண்டும். அதனால்,செல்வமும்அழகுமுள்ளவனும் ஞானமுள்ளவனும் பூர்ணிமைச் சந்திரனைப்போல பிரம்பின அங்கமுள்ளவனுமாவான்" என்றார்.

நாற்றெழுபத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரருக்கும்பிருகஸ்பதிக்கும்நடந்தஸம்பாஷணை; கர்மங்களுக்கேற்றபடி ஸ்வர்க்கநரகங்களும் பிறப்பும் வதுமென்பதைப்பற்றியது.)

யுதிஷ்டிரர், "மகாப்பிராஜ்ஞரும் எல்லாச்சாஸ்திரங்களிலும் ஸமர்த்தருமானபிதாமஹரே! மனிதர்களுக்குஸம்ஸாரத்திலுள்ளஉத்

[1] 'குஹ்யமண்டலம்' என்று பாடங்கொள்ளப்பட்டது.

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRA
TIRUVANMIYUR, MADRAS-4

தமமானஉடக்கையைக் கேட்கவிரும்புகிறேன். அரசர்க்கரசரே! பூமியில் மனிதர்கள் என்னஒழுக்கத்தோடுஇருந்தால் உத்தமமானஸ்வர்க்கத்தை அடைவார்கள்? ராஜரே! எப்படியிருந்தால் நரகத்தையடைவார்கள்? ஜனங்கள் உயிர்போனதேகத்தைக் கட்டைக்கும் ஓட்டுக்கும் ஸமமாக இவ்வுலகதிற்போட்டுவிட்டு வேறுஉலகம்போகின்றனரே; அவர்களின்பின் தொடர்ந்துசெல்லுகிறவன் எவன்?" என்றுகேட்க, பீஷ்மர், "உயர்ந்தபுத்தியுள்ள ப்ருஹஸ்பதிபகவான் தூரத்தில்வருகிறார். மிக்கமகானுபாவரானஇவரிடத்தில் இந்தப்பழமையானரகஸ்யத்தைக்கேள். இப்போது நீகேட்டவிஷயம் மற்றெவனும் சொல்லக்கூடியதன்று. ப்ருகஸ்பதிக்குச்சமமாகப்பேசுகிறவர் மற்றொருவர் எங்குமில்லையன்றே" என்றுசொன்னர். அந்தத்தர்மராஜரும் பீஷ்மரும் இவ்வாறுபேசிக்கொண்டிருக்கையில், தெளிந்தஉருவமுள்ள ப்ருகஸ்பதிபகவான் வந்தார். பிறகு, தர்மராஜர் திருதராஷ்டிரனை முன்னிட்டு எதிர்கொண்டழைத்து அவருக்கு ஒப்பற்றபூஜையைச் செய்தார். அந்தச்சபையோர்அனைவரும் அவரைப் பூஜித்தனர். அதன்பிறகு, ராஜாவானதர்மபுத்திரர் ப்ருகஸ்பதிபகவானை முறைப்படியணுகி அந்தப்பிரஸ்னத்தைத் தெளிவாகக்கேட்கலானர்: "பகவானே! எல்லாத்தர்மங்களும் தெரிந்தவரே! எல்லாச்சாஸ்திரங்களிலும் தேர்ந்தவரே! மனிதனுக்குத்துணை யார்? தந்தையா? தாயா? பிள்ளையா? ஆசாரியரா? தாயாதிகளா? சுற்றத்தாரா? சிநேகிதரா? மனிதர்கள் உயிர்போனதேகத்தைக் கட்டையைப்போலவும் ஓட்டாஞ்சில்லியைப்போலவும் விட்டுவிட்டு வேறுலோகத்திற்குச் செல்லுகின்றனரே? அவரைப் பின்செல்லுகிறவன் எவன்?" என்று கேட்க, ப்ருகஸ்பதி சொல்லலானர்:

"ராஜனே! மனிதன் ஒருவனுகவே பிறக்கிறான்; ஒருவனுகவே இறக்கிறான்; ஒருவனுகவே நரகங்களைத் தாண்டுகிறான்; ஒருவனுகவே நரகத்திற்குப்போகிறான். தந்தை, தாய், ஸஹோதரன், புத்திரன், ஆசாரியன், தாயாதிகள், சுற்றத்தார், சிநேகிதர்கள் யாரும் துணையாவதில்லை. மனிதர்கள் தேகத்தைச் சிலகாலம் உபயோகப்படுத்தி உயிர்போனபின் கட்டை ஓட்டாஞ்சில்லிகளைப்போல எறிந்துவிட்டு வேறுமுகமாகப்போகின்றனர். தர்மம்ஒன்றே பின்தொடருகிறது. ராஜனே! ஆதலால், எப்போதும் துணைக்காகத் தர்மத்தையே பற்றவேண்டும். மனிதன் தர்மத்துடன்கூடத்தான் சிறந்த ஸ்வர்க்கலோகத்துக்குப்போவான்; அதர்மத்தோடுகூடத்தான் நரகத்திற்குப் போகிறான். ஆதலால், தெரிந்தவன் நியாயமாகக்கிடைத்த

பொருள்களிலும் தர்மத்தையே செய்யவேண்டும். மனிதர்களுக்குப் பரலோகத்திற்குரியதுணை தர்மம்ஒன்றே. மிகுந்தகேள்வியில்லாத வனும் ஆசையிலும்மதிகெட்டவனுமானமனிதன் ஆசையினாலும்அஜ் ஞானத்தினாலும் இரக்கத்தினாலும் பயத்தினாலும் பிறருக்காகப்பாவங் களைச் செய்கிறான். தர்மார்த்தகாமங்கள்மூன்றே உயிர்வாழ்க்கையின் பலன்கள். அதர்மத்தைவிட்டு இம்மூன்றையும் ஸம்பாதிக்கவேண் டும்" என்றார்.

யுதிஷ்டிரர், "பகவானேநீங்கள் தர்மமுள்ளதும் மிக்கஇதமு மாகச் சொன்னசொல்லைக் கேட்டேன். ஆகிலும், சரீரத்தினுடைய உண்மையைப்பற்றித்தெரிந்துகொள்ள எனக்கு எண்ணமுண்டாகி றது. மனிதர்களின்சரீரம் உயிர்விட்டபோது அதின்ஸூக்ஷுமமான ஆத்மாமறைந்து நன்பார்வைக்குஅகப்படாமற்போகின்றதே ; தர்மம் அதைத்தொடருவது எப்படி ?" என்றுகேட்டார். ப்ருகஸ்பதி, "[1]பிருதிவி, வாயு, ஆகாயம், அப்பு, தேயு, புத்தி, ஆத்மாஇவை சேர்ந்து எக்காலமும் தர்மத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன. இவ்வுலகத்தில் எல்லாப்பிராணிகளுக்கும் இரவும்பகலும் சாக்ஷியாக இருக்கும் அந்தஜீவனே மேற்சொன்னபிருதிவிமுதலியவற்றுடன் கூடத் தர்மம் பின்தொடருகிறது. சிறந்தபுத்தியுள்ளவனே ! தோல், எலும்பு, மாம்ஸம், சுக்லசோணிதங்கள்இவை உயிர்விட்டதேகத்தை விட்டுவிடுகின்றன. அதன்பிறகு, அந்தஜீவன் தர்மத்துடன்சேர்ந்து [2]இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் ஸுகமாகவிளங்குகிறது. இன் னும் உனக்கு என்னசொல்லக்கடவேன்?" என்றுசொன்னார். யுதிஷ் டிரர், "தர்மம் எப்படிப் பின்தொடருகிறதென்பதைப் பகவானேநீங் கள் தெரிவித்தீர்கள். சுக்லமானது எப்படி உற்பத்தியாகிறதென் பதை அறிந்துகொள்ளவிரும்புகிறேன்" என்றுகேட்டார். பிருகஸ் பதி, "வேந்தனே ! பிருதிவி, வாயு, ஆகாசம், அப்பு, தேஜஸ், மனம் என்னும்தேகத்திலுள்ளதேவதைகள் ஆகாரத்தை உட்கொள்ளுகின் றனர். அரசர்க்கரசே ! பரிசுத்தமனமுள்ளவனே ! அவ்வைந்துபூத ங்களும் மனமும் நிருப்தியடைந்தபிறகு, அந்த அன்னமானது ரேத ஸாக மாறுகிறது. ராஜனே ! பிறகு, பெண்ணும்ஆணும்சேருவதனல் கர்ப்பமுண்டாகிறது. இதையெல்லாம் உனக்குச் சொன்னேன். இன் னும் என்னகேட்கவிரும்புகிறாய் ?" என்றுசொன்னார். யுதிஷ்டிரர், "கர்ப்பம்எப்படிஉண்டாவதென்பதைப்பற்றிப் பகவானேநீங்கள்எனக்குச் சொன்னீர்கள். பிறப்பில்லாதஜீவன் கர்ப்பத்தைச்சேருவது

[1] அந்தத்தேவதைகள். [2] மறுஜன்மத்தில்.

எப்படி? அதைச் சொல்லவேண்டும்" என்றுகேட்டார். பிருகஸ்பதி, "ஜீவன் சேர்ந்தமாத்திரத்தில் அவ்வைந்துபூதங்களினால் ஆக்கிரமிக்கப்படுகிறான்; அவ்வைந்துபூதங்களினால்விடப்பட்டுத்தான் திரும்பவும் வேறுலோகத்திற்குச் செல்லுகிறான். அந்தஜீவனே ஐந்துபூதங்களுடன் சேர்ந்தவனாகிறான். அதனால், அவனுடையகர்வினையையும் தீவினையையும் ஐந்துபூதங்களின்தேவதைகள் பார்க்கின்றனர். இன்னும்என்னகேட்கக்கருதுகிறாய்?" என்றுசொன்னார். யுதிஷ்டிரர், "பகவானே! தோல், எலும்பு, மாம்ஸம்இவற்றையும்விட்டு ஐந்துபூதங்களாலும்விடுபட்டஅந்தஜீவன் எங்கிருந்து முழுதும் ஸுகதுக்கங்களை அனுபவிப்பான்?" என்றுகேட்க, பிருகஸ்பதி சொல்லலானார்: "[1]போகவர்யம், [2]கர்மவர்யம், [3] யாதனாவர்யம் ஆகிய இம்மூன்றுவகைத்தேகங்களையடைந்து ஜீவன் தன்வினைப்பயனை அனுபவிக்கிறான். ஜீவன் தன்கர்மங்களுடன்சேர்ந்து ரேதஸாகமாறி ஸ்திரீகளின் ருதுவில்சேர்ந்து பிரஸவகாலத்தில்தேகத்தையடைகிறான். ஜீவன் யமதூதர்கள்செய்யும்துன்பத்தையும் அவர்கள் அடிப்பதையும் கடினமானபிறப்பிறப்புக்களின்தொடர்ச்சியையும் துயரத்தையும் அடைகிறான். ராஜனே! தர்மத்தின்பலனையடைந்தஅந்தஜீவன் இவ்வுலகத்தில்பிறந்ததுமுதல் ஸுகத்தையே அனுபவிக்கிறான். அவன் ஜனித்ததுமுதல் கூடியமட்டில் தர்மத்தையேசெய்திருப்பானையின் பிறகு அவன் மனிதனாகப்பிறந்து ஸுகத்தையேயடைவான்; தர்மத்திற்கு இடையில் அதர்மமும்செய்திருப்பானையின் அந்தஜீவன் ஸுகத்திற்குப்பிறகு துக்கத்தையும் அனுபவிப்பான்; அதர்மத்துடன் சேர்ந்து யமலோகத்திற்குப்போய்ப் பெருந்துன்பத்தையடைந்து பிறகு திர்யக்ஜாதியில் பிறக்கிறான். ஜீவன் எந்தஎந்தக்கர்மத்தினால் இவ்வுலகில் எந்தஎந்தப்பிறப்பில் அஜ்ஞானத்தோடுபிறக்கிறானோ அவற்றை வேதத்திலும் இதிஹாஸத்திலும் தர்மசாஸ்திரத்திலும் சொல்லியிருக்கிறபடி சொல்லுகிறேன்; கேள். மானிடர்கள் கொடியதாகிய யமலோகத்தை அடைகின்றனர். ராஜனே! இவ்வுலகத்தில் திர்யக்ஜாதியைத்தவிர வேறுதேகங்கள் புண்ணியமுள்ளவையும் ஞானமுள்ளவையும் தேவர்களுக்குச் சமமானவையுமாயிருக்கின்றன. குணங்களில் பிரம்மலோகம்போலச்சிறந்தயமலோகத்தில் உறுதியானகர்மங்களினாற்கட்டப்பட்டஜீவன் துக்கங்களை அனுபவிக்கிறான். புருஷன் எந்தஎந்தக்கர்மங்களை மனத்தோடுசெய்வதினாற் கொடியதும் பயங்கரமுமான கதியையடைகிறானோஅவற்றை இனி உனக்குச் சொல்லு

[1] ஸ்வர்க்கசரீரம். [2] பூமியிலுள்ளசரீரம். [3] நரகத்திலுள்ளசரீரம்.

வேன். ப்ராம்மணன் நாலுவேதங்களையும்ஒதியும் அறிவில்லாமல் பதிதனிடத்தில்திரவியம்வாங்குவதனால் கழுதைப்பிறப்பில் பிறக்கிறான பாரதனே ! அவன் பதினேந்துவருஷம் கழுதையாகப் பிழைத்திருக்கிறான் கழுதையாயிருந்துமரித்தபின் காளைமாடாகி ஏழுவருஷம்இருக்கிறான். காளைப்பிறப்புஇறந்தபின் பிரம்மரக்ஷஸாகப் பிறக்கிறான். பிரம்மரக்ஷஸாகமூன்றுமாஸங்களிருந்து பிறகு ப்ராம்மணஜாதிப்பிறக்கிறான். பாரதனே ! பதிதனுக்குயாகம்செய்விப்பதனால் புழுவாகப்பிறக்கிறான். அந்தஜன்மத்தில் பதினேந்துவருஷமிருக்கிறான் ; புழுஜன்மம்நீங்கியவுடன் கழுதையாகப்பிறக்கிறான். ஐந்துவருஷம் கழுதை, ஐந்துவருஷம் பன்றி, ஐந்துவருஷம் கோழி, ஐந்துவருஷம் நரி, ஒருவருஷம் நாய் இப்படியிருந்து பிறகு மனிதஜாதிப் பிறக்கிறான். சிஷ்யன் விவேகமில்லாமல் உபாத்யாயர்மனைவியிடம் தவறுசெய்வானையின் அந்தஜீவன் இவ்வுலகத்தில் மூன்றுஜன்மங்களை அடைவான். ஸந்தேகமில்லை. அரசர்க்கரசே ! முதலில்ஒநாயாகவும் பிறகு புலியாகவும் அதன்பிறகு கழுதையாகவும் பிறந்து இறந்தபின் கஷ்டப்படும்ப்ராம்மணஜாதிப் பிறப்பான். சிஷ்யன் குருவின்மனைவியிடத்தில் மனத்தினுற்பாபத்தைச்சிந்தித்தாலும் மனத்தினுற்செய்த அந்தப்பாபத்தினால் கொடியஜன்மங்களையடைவான்; நாயாகப்பிறந்து மூன்றுவருஷங்களிருப்பான் ; அந்தப்பிறப்புநீங்கியபின் புழுவாகப் பிறப்பான்; ஒருவருஷம் புழுவாகவிருந்து அதுநீங்கியபின் ப்ராம்மணஜாதியிற்பிறப்பான். குருவானவன் புத்திரனைப்போலிருக்கும் சிஷ்யனைக் காரணமின்றித் தான்நினைத்தபடி அடிப்பானையின் அவனும் குரூரமிருகமாகப் பிறப்பான். ராஜனே! தன்னுடைய தாய்களை அனுதரவுசெய்யும்புத்திரனும் இறந்தால் அந்தஜீவன் மூதலில் கழுதையாகப்பிறப்பான். கழுதையாகப் பத்துவருஷமிருந்து அதன்பின் ஒருவருஷம் மூதலியாகவிருந்து அதன்பின் மனிதஜாதிப்பிறப்பான். எந்தப்பிள்ளையின்மேல் தாய்தந்தையரிருவரும் கோபிக்கிறார்களோ அவனும் பெரியோருடையவெறுப்பினால் இறந்தபின் கழுதையாகப்பிறக்கிறான். பத்துமாதம் கழுதையாகவும் பதினேழுமாதம் நாயாகவும் ஏழுமாதம் பூனையாகவுமிருந்து பிறகு மனிதஜாதிப்பிறப்பான். ராஜனே! தாய்தந்தையரைத்திட்டுவதனால் நாகணவாய்ப்புள்ளாகப்பிறக்கிறான் ; அவர்களையடித்தால் ஆமையாகப்பிறக்கிறான் ; ஆமையாகப்பத்துவருஷமும் முள்ளம்பன்றியாசமூன்றுவருஷமும் பாம்பாகஆறுமாதமுமிருந்து அதன்பின் மனிதஜாதிப்பிறக்கிறான். ராஜனுடையஅன்னத்தைப்புஜித்து அவனுக்கு ஆகாதகாரியங்களைச்செய்யும்மூடன்

இறந்து குரங்காகப்பிறக்கிறான். குரங்காகப்பத்துவருஷமும் பன்றியாகஐந்துவருஷமும் நாயாகஆறுமாதமுமிருந்து பிறகு மனிதனாகப் பிறக்கிறான். அடைக்கலம்வைத்தபொருளையபகரித்தமனிதன் யமலோகத்திற்குப்போய் நாறுவகையான துன்பங்களையனுபவித்துப் புழுவாகப்பிறக்கிறான். பாரதனே! அந்தப்புழுஜன்மத்தில் பதினேந்து வருஷமிருந்து பாவத்தையொழித்துப் பிறகு மானிடனாகப்பிறக்கிறான். அப்போது பொருமைக்காரனும் இகழத்தக்கவனுமான சண்டாளனாகப்பிறந்து துயரப்படுகிறான். நம்பிக்கைத்துரோகம் செய்த கெடுமதியுள்ளமனிதன் மீனாகப்பிறக்கிறான். பாரதனே! எட்டுமாதம் மீனாகவிருந்து பிறகு மானாகப்பிறக்கிறான். மானாகாலுமாதமிருந்து அதன்பின் ஆடாகப்பிறக்கிறான். ஒருவருஷம்ஆடாயிருந்து கொல்லப்பட்டுப் பசுவாகப்பிறக்கிறான். அதன்பிறகு, அந்தஜீவன் மனிதனாகஜனிக்கிறான். மகாராஜனே! நெல், யவம், எள், உழுந்து, கொள்ளு, கடுகு, கடலை, கலாயம், பச்சைப்பயறு, கோதுமை, அதஸி (காயா) இந்தத்தானியங்களை ஆசையினாலபகரிக்கும் அறிவும்வெட்கமுமில்லாதமனிதன் பெருச்சாளியாகப்பிறக்கிறான். வேந்தனே! அந்தஜன்மம் இறந்துபோனபின் அவன் பன்றியாகப்பிறக்கிறான். ராஜனே! பன்றியாகப்பிறந்தவுடன் பிணியினால் இறந்துபோகிறான். ராஜனே! அந்தவுடன் அந்தப்பாவத்தினால் மறுபடியும் நாயாகப்பிறக்கிறான். ஐந்துவருஷம்நாயாகவிருந்து அதன்பிறகு மனிதனாகப்பிறக்கிறான். பிறாமணனையைத்தீண்டுவதனால் செங்காய் நாய் நரி கழுகு பாம்பு பருந்து கொக்குக்களாகப்பிறக்கிறான். ராஜனே! எந்தப்பாவச்சிந்தையுள்ளவன், புத்திமயங்கி ஸகோதரன்மனைவியைச்சேர்கிறானோ அவன் ஒருவருஷம் குயில்ஜன்மத்திலிருக்கிறான். ஸ்நேகிதன் ஆசாரியன் அரசன் இவர்களின்மனைவிகளைக் காமத்தினால்ஆக்ரமிப்பவன் இறந்து பன்றியாகப்பிறக்கிறான்; ஐந்துவருஷம் பன்றியும் பத்துவருஷம் முள்ளம்பன்றியும் ஐந்துவருஷம் நீனையும் பத்துவருஷம் கோழியும் மூன்றுமாதம்வறும்பும் ஒருமாதம்குரங்குமாக ஜன்மங்களையடைந்து பிறகு புழுவாகப்பிறக்கிறான். அந்தப்புழுஜன்மத்தில் பதினைந்து மாதங்களிருந்து பாவத்தை ஒழித்துக்கொண்டு திரும்பவும் மனிதனாகப்பிறக்கிறான். பிரபுவே! ஸ்வாகம், யாகம், தானம்இவைகடக்கும்போது அவற்றிற்குஇடையூறுசெய்யும்மூடன் இறந்து புழுவாகப்பிறக்கிறான். பாரதனே! பதினேந்துவருஷம் புழுவாயிருந்துபாவத்தையொழித்துப் பிறகு மனிதனாகப்பிறக்கிறான். ராஜனே! மூதலில்ஒருவனுக்குக்கன்னிகாதானம்செய்து மறுபடியும் அந்தக்கன்னி

கையை மற்றொருவனுக்குக்கொடுக்கநினைக்கும்மனிதனும் இறந்தபின் புழுவாகப் பிறக்கிறான். யுதிஷ்டிரனே! அந்தஜன்மத்தில் பதின் மூன்றுவருஷங்களிருந்து பாவத்தையொழித்துக்கொண்டு பிறகு மனி தனாகப்பிறக்கிறான். தெய்வகாரியத்தையும் பித்ருகாரியத்தையும்செய் யாமலும் பிறருக்கு அன்னமிடாமலும் உண்பவன் இறந்து காக்கை யாகப்பிறக்கிறான். நாறுவருஷம் காக்கையாகவிருந்து பிறகு கோழி யாகப்பிறக்கிறான். அதன்பிறகு, ஒருமாதம் கொடியபிருகமாயிருந்து அதினின்றும் மனிதனாகப் பிறக்கிறான். தந்தைக்குச் சமானமாகிய மூத்தஸகோதரனை அவமதிப்பவன் இறந்தபின் [1]க்ரௌஞ்சமென்னும் பிராணியாகப் பிறக்கிறான்; க்ரௌஞ்சமென்னும்பிராணியாக ஒருவரு ஷமிருந்து [2]சீரகமென்னும்பிராணியாகப் பிறக்கிறான்; அதிலிருந்து மரணமடைந்தபின் மானிடதேகமெடுக்கிறான். சூத்திரன் ப்ராம்ம ணப்பெண்ணைச்சேருவதனால் புழுவாகப்பிறக்கிறான். அதுஇறந்தபின் திரும்பவும் பன்றியாகப்பிறக்கிறான். ராஜனே! பன்றியாகப்பிறந்த வுடன் பிணியினால்இறக்கிறான். ராஜனே! அந்தமூடன் அந்தக்கரு மத்தினால் திரும்பவும் நாயாகப்பிறக்கிறான். நாயாகப்பிறந்தபின் கர் மம்முடித்துத் திரும்பவும் அவன் மானிடஜன்மமெடுக்கிறான். அந் தப்பிராம்மணப்பெண்ணினிடம் கர்ப்பத்தையுண்டாக்கினால் இறந்து பெருச்சாளியாகப்பிறக்கிறான். பாரதனே! ராஜனே! நன்றிமறந்த வன் இறந்து யமலோகம்போய்க் கோபமுள்ள யமதூதர்களால் கடி மையாகஅடிக்கப்படுகிறான்; தடி, உலக்கை, சூலம், கொடியதீக் குடம், கத்திகளை இலைகளாகவுடையகாடு, கொதிக்கும்மணல், இருப்பு முள்ளிலவமர முதலான அநேககொடியதுன்பங்களை யமலோகத்தி லடைந்து அங்கே கொல்லப்படுகிறான். பரதஸ்ரேஷ்டனே! நன்றி மறந்தவன் யமலோகத்தில் கொடியயமதூதர்களால் கொல்லப்பட்டுத் திரும்பவும் உலகத்திற்குவந்துபுழுப்பிறப்பிற்பிறக்கிறான்; பாரதனே! பதினேந்துவருஷம் புழுவாயிருக்கிறான். அதன்பிறகு, வேறுகர்ப் பத்திற்புகுந்து சிசுவாயிருக்கையிலேயே மரிக்கிறான். அதன்பிறகு, அநேகநூறுகர்ப்பங்களில் அந்தஜீவன் பிறக்கிறான். அநேகம் ஜனன மரணங்களையடைந்தபின் விலங்குஜாதியிற் பிறக்கிறான். பிறகு, எண் ணிறந்தவருஷங்கள்துயரப்பட்டு மறுஜன்மத்தில் ஆமையாகப்பிறக் கிறான். தயிர்திருடுகிறவன் கொக்காகவும் நீர்க்காக்கையாகவும் பிற க்கிறான். பச்சைமச்சங்களைத்திருடுகிறமதிகெட்டவன் தேனீயாகப் பிறக்கிறான். காயையும் கிழங்கையும் பக்ஷணத்தையும்திருடுகிறவன்

[1] அன்றில். [2] சுவர்க்கோழி.

எறும்பாகப்பிறக்கிறான். மொச்சைக்கொட்டையைத் திருடுகிறவன் [1] ஹலகோலகமென்னும்ஜந்துவாகப் பிறக்கிறான். பாடஸம்திருடினவன் [2]தித்திரியாகப்பிறக்கிறான். மாப்பண்டத்தைத்திருடுகிறவன் கும்போலூகமென்னும்மூலக்கோட்டானாகப் பிறக்கிறான். இரும்புதிருடினமதிகெட்டமனிதன் காக்கையாகப்பிறக்கிறான். வெண்கலந்திருடினமதிகெட்டமனிதன் ஹாரீதமென்னும்பச்சைக்குருவியாகப் பிறக்கிறான். வெள்ளிப்பாத்திரம்திருடினவன் புறுவாகப்பிறக்கிறான். பொற்பாத்திரம்திருடினவன் புழுவாகப்பிறக்கிறான். மகமல்திருடினவன் க்ருகலமென்னும்ஜந்துவாகப் பிறக்கிறான். நார்மடியைத்திருடினவன் [3]வர்த்திகைஎன்னும்பக்ஷியாகப் பிறக்கிறான். நூல்வஸ்திரத்தைத்திருடுகிறவன் கிளியாகப்பிறக்கிறான். வெண்பட்டைத்திருடுகிறமனிதன் இறந்து ஹம்ஸமாகப்பிறக்கிறான். நூலைத்திருடுகிறமனிதன் இறந்து அன்றிலாகப்பிறக்கிறான். பாரதனே! சால்வை, பூச்சிப்பட்டு இவற்றைத்திருடுகிறவன் முயலாகப்பிறக்கிறான். வண்ணங்களைத்திருடுகிறமனிதன் இறந்து மயிலாகப்பிறக்கிறான். சிவப்புவஸ்திரங்களைத்திருடினவன் சகோரபக்ஷியாகப்பிறக்கிறான். ராஜனே! குங்குமம் சந்தனமுதலியவாஸனைத் திரவியங்களை ஆசைபற்றித் திருடுகிறமனிதன் மூஞ்சூறுகப்பிறக்கிறான். பதினேந்துவருஷம் அந்த ஜன்மத்திலிருந்து பாவத்தைக்கழித்துப் பிறகு மனிதனாகப்பிறக்கிறான். பாலைத்திருடுவதனால் நாரையாகப்பிறக்கிறான். ராஜனே! மதிகெட்டு எண்ணெயைத்திருடும்மனிதன் இறந்து [4]தைலபாயியென்னும்ஜந்துவாகப் பிறக்கிறான். ஆயுதமில்லாதமனிதனைப் பணத்திற்காகவாவது விரோதத்தினாலாவது ஆயுதத்தினாற்கொல்லும் அதமனானமனிதன் இறந்து கழுதையாகப்பிறக்கிறான். இரண்டுவருஷம் கழுதையாயிருந்து பிறகு ஆயுதத்தினாற் கொல்லப்படுகிறான். இறந்தபின் எப்போதும்பயமுள்ள மானாகப் பிறக்கிறான். ஒருவருஷமானபின் அந்தமான் ஆயுதத்தினால் கொல்லப்படுகிறது. மானிறந்து மீனாகிறது. மீன் நாலாவதுமாதத்தில் வலையினாற்பிடிக்கப்படுகிறது. பிறகு, சிறுத்தையாகப்பிறக்கிறது. பத்துவருஷம் சிறுத்தையாயிருந்து ஐந்துவருஷம் புலியாயிருந்து காலக்கிரமத்தையனுஸரித்து மரணமடைந்து பாவத்தையொழித்தபின் மானிடஜன்மமெடுக்கிறான். மஹாராஜனே! பெண்கொலைசெய்யும்மதிகெட்டவன் யமலோகம்சேர்ந்து இருபத்

---

1 'வால்நீண்டு கோளவடிவமானசரீரமுள்ளஒருபுழு' என்பது பழைய உரை. 2 ஊர்க்குருவி. 3 விச்சுளி.

4 வெளவால், அல்லது கரப்பு.

தொருநரகங்களையும் பலதுன்பங்களையும்அனுபவித்து அதன்பிறகு புழுவாகப்பிறக்கிறான். இருபதுவருஷம் புழுவாகவிருந்து மானிடனாகப்பிறக்கிறான். அன்னத்தைத்திருடுகிறமனிதன் ஈயாகப்பிறக்கிறான். ஈக்கூட்டங்களிற்சேர்ந்து அனேகமாதங்களிருந்து அதில் பாபத்தைக்கழித்து மானிடஜன்மமெடுக்கிறான். பக்ஷியம்திருடுகிறமனிதன் வலேக்காரனாகப்பிறக்கிறான். கறிகாய்களைத்திருடுகிறவன் சிரபாசமென்னும்பிராணியாகப்பிறக்கிறான். தான்யம்திருடுகிறமனிதன் உடம்பெல்லாம்ரோமங்களுள்ளமனிதனாகப் பிறக்கிறான். ராஜனே! பிண்ணாக்குச்சேர்ந்தஆகாரத்தைத்திருடுகிறகூலிவேலேக்காரன் கொடியதும் எப்போதும்மனிதர்களைக்கடிக்கிறதும் பாபியுமானஎலியாகப் பிறக்கிறான். நெய்திருடுகிறபுத்திகெட்டவன் [1]காகமத்குவாகப் பிறக்கிறான். மச்சத்தையும்மாம்ஸத்தையும்திருடுகிறமதிகெட்டவன் காக்கையாகப் பிறக்கிறான். உப்பைத்திருடுகிறவன் சிரிகாகமென்னும் ஒருவகைக்காக்கையாகப் பிறக்கிறான். அப்பா! நம்பிக்கையினால் அடைக்கலமாகவைத்ததை எந்தமனிதன் மறைக்கிறானோ அந்தமனிதன் ஆயுள்குன்றி மீனாகப்பிறக்கிறான்.மீனாயிருந்து இறந்தபின் மானிடனாகப்பிறக்கிறான் ; மானிடஜன்மத்தையடைந்து ஆயுள்குறைந்தவனாகிறான். பாரதனே! மனிதர்கள் பாவங்களைச்செய்து விலங்குஜாதியிற் பிறக்கின்றனர் ; தம்வாழ்நாள்முடிவுவரையில் ஒருதர்மத்தையும் அறிவதில்லே. எந்தமனிதர்கள் எப்போதும் பாவங்களைச்செய்து விரதங்களினால் அவற்றைப்போக்குகின்றனரோ அவர்களும் ஸுகதுக்கங்கள் கலந்து வருந்துகிறவர்தாம். ஆசையோடும் அறிவின்மையோடும்கூடிப் பாபங்களைச்செய்யும்மனிதர்கள் ஆண்மையில்லாமலாவது மிலேச்சர்களாகவாவது ஜனிக்கிறார்களென்பதில்ஸந்தேகமில்லே. எந்தமனிதர்கள் பிறந்ததுமுதல் பாவங்களைவிட்டுவிடுகின்றனரோ அவர்கள்தாம் நோயற்று அழகும் தனமுமுள்ளவராகிறார். பெண்களும் பாபத்தைச்செய்தால் மூன்சொன்னவரிசையாகவே பலனையடைவார்கள். அவர்கள் மூன்சொன்னஜந்துக்களுக்கே மனைவிகளாயிருப்பார்கள். அயலார் சொத்தை அபகரிப்பதிலுள்ள தோஷங்களெல்லாவற்றையும் சொன்னேன். குற்றமற்றவனே! இது நான் உனக்குக்கொஞ்சமாகச்சொன்னது.பாரதனே! மற்றொருசமயம்வார்த்தைசொல்லும்போது நீ இன்னும் கேட்டுக்கொள்ளலாம். மஹாராஜனே! முன்னர் தேவரிஷிகளின்சபையில் பிரம்மதேவர் என்னால்விளைவப்பட்டுச் சொல்லும்போது நான் இதைக் கேட்டேன். நான் உனக்கு இதனை

[1] கொம்புள்ளஒருநீர்ப்பறவை.

யெல்லாம் உள்ளபடி சொன்னேன். மஹாராஜனே! இதைக்கேட்ட நீ எப்போதும் தர்மத்தில்மனம்செலுத்து'' என்றார்.

நூற்றெழுபத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்ரருக்கும் ப்ரஹஸ்பதிக்கும் நடந்தஸம்பாஷணைத்தொடர்ச்சி ; பாவத்தைப்போக்க உபாயமும் அன்னதானத்தின்சிறப்பும்.)

யுதிஷ்டிரர், "குற்றமற்றபிராம்மணரே ! பாபத்தின்முடிவை நீர் எனக்குச்சொன்னீர். பேசுகிறவரிற்சிறந்தவரே! தர்மத்தின் கதியைக் கேட்கவிரும்புகிறேன். பாபகாரியங்களைச்செய்தவர்களும் நல்லகதியையடைவது எப்படி? இவ்வுலகத்தில் என்னகருமம்செய்வ தனல் சிறந்தகதியையடையலாம்?" என்றுகேட்க, ப்ருகஸ்பதி சொல்லலானார்.

"மூர்க்கியதீவினையின்வசத்தில் அகப்பட்டுக்கொண்டு மனம்கெட் டுப் பாபங்களைச்செய்பவன் நரகம்புகுவான். எவன் தெரியாமல்பாவ த்தைச்செய்து ஸரியானமனத்துடன் அதைப்பற்றி வருத்தப்படுகிறா னேஅவன் பாவப்பயனை அடையமாட்டான். அவன்மனம்எவ்வளவுக் கெவ்வளவு பாபகாரியத்தைஇகழ்கிறதோஅவ்வளவுக்கவ்வளவு அவன் தேகம் அந்தப்பாபத்தினால் விடப்படுகிறது. ராஜனே! தர்மத்தை உப தேசிக்கும் ப்ராம்மணர்களிடம் தன்பாபத்தைச்சொல்வானேனல் அந் தப்பாபத்தினலுண்டானஇந்தனையிலிருந்து சீக்கிரத்தில்விடுபடுவான். மனிதன் பரிசுத்தமானமனத்துடன் நன்றுகஎத்தனைக்கெத்தனை தன் பாபத்தைச்சொல்லுகிறானே அத்தனைக்கத்தனை தளர்ந்துபோன பழையசட்டையிலிருந்து பாம்புவிடுபடுவதுபோலப் பாவத்தினின்று விடுபடுவான். திருத்தமானமனமுள்ளவனைப் ப்ராம்மணனுக்குப் பலதானங்களைச்சிரத்தையுடன்செய்வதனல்நல்லகதியையடைவான். யுதிஷ்டிர ! மனிதன் கெட்டகாரியங்கள் செய்தாலும் எவற்றைக் கொடுப்பதனல் புண்ணியமடைவானோ அந்தத்தானங்களைச் சொல் வேன். எல்லாத்தானங்களிலும் அன்னதானம் மிகச்சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. புண்ணியத்தைவிரும்புகிறவன்ஸரியானஉள்ளத் துடன் முதலில் அன்னதானம்செய்யவேண்டும்.அன்னம் மனிதர்க்கு உயிர். அதினின்றுந்தான் மனிதனுண்டாகிறான். உலகம் அன்னத்

தைப்பற்றியே இருக்கிறது. ஆதலால், அன்னம் சிலாகிக்கப்படுகிறது. தேவர்களும் ரிஷிகளும் பித்ருக்களும் மனிதர்களும் அன்னத்தையே புகழ்கின்றனர். அன்னதானம் செய்வதனாலேதான் மனிதன் ஸ்வர்க்கம் அடைகிறான். தனக்கு நியாயமாகக்கிடைத்த உயர்ந்தஆகாரத்தை வேதாத்தியயனம்செய்தபிராம்மணர்களுக்கு உள்ளமகிழ்ந்து அளிக்க வேண்டும். மனமகிழ்ச்சியோடு எவன்கொடுக்கும் அன்னத்தை ஆயிரம்பிராம்மணர்கள் புஜிக்கின்றனரோஅவனுக்கு விலங்குஜன்மம் வராது. அரசனே! பதினாயிரம்பிராம்மணர்களைப்புஜிப்பித்தும் எப்போதும் தியானத்தில்ஊக்கம்வைத்துமிருக்கும்மனிதன் பாபத்தினின்றுவிடுபடுவான். பிதிக்ஷையெடுத்து அன்னத்தைஸம்பாதித்தும் பிராம்மணர்களுக்குக் கொடுக்கவேண்டும். பொன்னைக்கொடுப்பதனால் மிகுதியானபாவங்களும்போம். ஜீவனத்திற்குஉபயோகமான பூமியைத்தானம்செய்பவன் பாபத்தினால்விடுபடுவான். பிராம்மணன் வேதங்களைமுழுவதும் ஒதுவதனாலும் பாவங்களினால்விடப்படுவான். காயத்ரியைலக்ஷம்தரம்ஜபிப்பதனாலும்,ஆயிரம்கோக்களுக்குஆகாரம் நிரம்பக்கொடுப்பதனாலும்,பரிசுத்தர்களானபிராம்மணர்களுக்கு வேதத்தின்உண்மையானபொருளைப் போதிப்பதனாலும், ஸங்யாஸமுதலியவற்றினாலும் பிராம்மணன் பாவங்களினால் விடப்படுவான்.இவற்றுள், எல்லாவிருந்துகளையும் ஆதரிப்பது சிறந்தது. ஆதலால், தானம் சிறந்ததாகச் சொல்லப்பட்டது. தர்மாத்மாவான பாண்டவனே! யாரையும் பீடிக்காமலும் பிராம்மணன் சொத்துக்களை நியாயமாகக் காப்பாற்றியும் தன்பராக்கிரமத்தினால்கிடைத்த அன்னத்தை வேதமறிந்தபெரியோர்களான பிராம்மணர்களுக்கு ஆசாரத்தோடும் பக்தியோடும் கொடுக்கும்க்ஷத்திரியன் அதனாலேயே பாவத்தை விலக்கிவிடுகிறான். தான் பயிர்செய்துசம்பாதித்ததில் ஆறில்ஒருபாகத்தை அரசனுக்குத் தீர்வைசெலுத்தி மிச்சமாயுள்ளதைப் பிராம்மணர்களுக்குக்கொடுக்கும் வைசியன் பாவங்களினின்றும் விடுபடுவான். உயிர்ச்சந்தேகத்தில் அகப்பட்டும் தேகம்கஷ்டப்பட்டும் சம்பாதித்த அன்னத்தைப் பிராம்மணர்களுக்குக்கொடுக்கும் சூத்திரன் பாவத்திலிருந்துவிடுபடுவான். பிறரைப்பீடியாமல் தன்மார்பின் பலத்தினால் அன்னத்தைத்தேடிப்பிராம்மணர்களுக்குக்கொடுப்பவன் நரகங்களைப் பாரான். நியாயமாகக்கிடைத்தஅன்னத்தை வேதமோதினபெரியோரான பிராம்மணர்களுக்கு மனமகிழ்ச்சியுடன் கொடுப்பதனாலே தான் மனிதன் பாவத்தினின்றும்விடுபடுவான். உலகத்தில் அன்னம்தான் பலத்தைத்தருவது. அதைக்கொடுப்பதனால் மனிதன் பல

மூள்ளவனுவான் ; பெரியோர்களின்வழியைத்தழுவுவதினால் எல்லாப் பாவங்களாலும் விடப்படுவான். தர்மத்தைத்தலைமையாகக்கொண்ட பிராம்மணர்கள் சூத்திரனுடைய அன்னத்தைப் புஜிக்கலாகாது. ஆபத்தில்மட்டும் தம்வேலைக்காரர்கள் சுயமாகக்கொண்டுவந்து கொடுத்ததைப் புஜிக்கலாம். தானம்செய்தவர்கள் உண்டாக்கினவழியிலேதான் புத்திசாலிகள் நடக்கின்றனர். அவர்கள் பிராணனைக் கொடுப்பவர்கள். அழியாததர்மம் அவர்களாலுண்டானது. மனிதன் நியாயமாகச்சம்பாதித்த எவ்விதமான அன்னத்தையும் எப்போதும் தகுதியுள்ளவர்களிடத்திற்சேர்ப்பிக்கவேண்டும். அன்னந்தான் முக்கியமானமார்க்கம். மனிதன் அன்னதானம் செய்வதனால் பிறருடையகொடுமையை அடையான். ஆதலால், அநியாயமில்லாமல் கிடைத்தஅன்னத்தைத் தானம்செய்யவேண்டும். கிருகஸ்தன் எப்போதும் ப்ராம்மணனைமுன்னிட்டே அன்னத்தைப் புஜிக்கமுயலவேண்டும். சோறும்தண்ணீரும்கொடாமல் ஒவ்வொருநாளையும் வீண்போக்கலாகாது. ராஜனே ! நியாயம்தெரிந்தமனிதன் வேதம்தர்மசாஸ்திரம்இதிஹாஸம்தெரிந்தவர்கள் ஆயிரவரைப்புஜிப்பித்தால் கொடியநரகத்திற்கும் போகான் ; ஸம்ஸாரதுக்கங்களையும் அடையான் ; பரலோகத்திலும் வேண்டின போகங்களையெல்லாம்பெற்று ஸுகம் பெறுவான். இவ்வாறு துயரமற்று ஸுகமுள்ளவனுக விளங்குவான். பிறகு அழகும்புகழும்பொருளுமுள்ளவனுகப்பிறப்பான். பாரதனே! அன்னதானத்தின்இந்தப்பெரும்பயனை உனக்கு முழுதும்சொன்னேன். மற்றத்தர்மங்களுக்கும்தானங்களுக்கும்இது வேர்'' என்றார்.

நூற்றெழுபத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்திரருக்கும் பிருகஸ்பதிக்கும் நடந்த ஸம்பாஷணைத் தொடர்ச்சி; அஹிம்ஸையைப்பற்றியது.)

யுதிஷ்டிரர், "கொல்லாமை, வேதத்திற்சொல்லியகருமங்கள், தியானம், இந்திரியங்களையடக்குவது, [1]தவம், குருபணிவிடைஇவற்றுள் எது புருஷனுக்குநல்லது ?" என்றுகேட்க, பிருகஸ்பதிசொல்லானர்: "பரதஸ்ரேஷ்டனே ! நீ சொல்லுகிறஆறும் தனித்தனியே தர்மத்திற்குஏப்போதும்வழிகளே. ஆகிலும், எல்லாவற்றிலும்சிறந்த

---

[1] விரதங்கள்.

தாகிய மனிதனுடையநல்வழியை நான்சொல்வேன்; கேள். வித்வான் அடக்கத்துடன் கொல்லாமையைப்பற்றிய தர்மத்தைச்செய்யவேண்டும். மனிதன் எல்லாப்பிராணிகள்விஷயத்திலும் [1]த்ரிதண்டத்தைவைத்துக்கொண்டு காமக்குரோதங்களையடக்கிப் பரிசுத்தனாக இருப்பதனால் நன்மையையடைவான். தன்னைஹிம்ஸியாமலிருக்கும் பிராணிகளைத் தடியினாலடித்துத் தன்ஸுகத்தைக்கருதுபவன் மறுமையில் ஸுகம்பெறான். எந்தமனிதன் மற்றப்பிராணிகளைத் தன்னைப்போலநினைத்துத் தண்டிப்பதையும் கோபத்தையும் விட்டிருக்கிறானோ அவன் மறுமையில் ஸுகத்தோடுவிளங்குவான். எல்லாப் பிராணிகளையும்தாங்காப்பாற்ப்பவன் போகும்வழியில் கால்வைக்கஇடமில்லாமல் இடத்தைவேண்டும்போது தேவர்களும் வழியில்நிற்கத் துணியார். தனக்கு எதுவிரோதமோ அதைப்பிறருக்குச் செய்யலாகாது. இதுதான் தர்மத்தின்சுருக்கம். இதற்குமாறானது ஆசையினாலுண்டாகிறது; பிறரைப்பற்றிப்பேசுவதிலும் தானத்திலும் இன்பத்திலும் துன்பத்திலும் விருப்பிலும் வெறுப்பிலும் மனிதன் தன்னைஉவமையாகக்கொண்டு பிறர்விஷயத்தில்நிச்சயம்தெரிந்துகொள்ளவேண்டும். ஒருவன் மற்றவர்களிடத்தில் எப்படிநடக்கிறானோ அப்படித்தான் மற்றவர்கள் அவன் விஷயத்தில் நடப்பார். இவ்வுலகம் தனக்கொத்ததைத்தான் செய்கிறது. தர்மத்தைச் செவ்வையாகச் சொன்னேன்" என்றார். சிறந்தபுத்தியுள்ளபிருஹஸ்பதி அந்தத்தர்மராஜாவான யுதிஷ்டிரருக்கு இவ்வாறுசொல்லி நாங்கள்பார்த்திருக்கையிலேயே ஆகாயத்திலேறினார்.

நூற்றெழுபத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஹிம்ஸை மாம்ஸபோஜனமுதலியன ஆகாவென்பது.)

ஜனமேஜயமகாராஜரே! பிறகு, பேசுகிறவரிற் சிறந்தவரான தர்மராஜர் சரதல்பத்திற்படுத்திருக்கும்பீஷ்மரைப்பார்த்து, "சிறந்தபுத்தியுள்ளவரே! ரிஷிகளும் பிராம்மணர்களும் தேவர்களும் வேதத்தைப்பிரமாணமாகஅறிந்து கொல்லாமைஎன்னும்தர்மத்தைச் சிலாகிக்கின்றனர். ராஜஸ்ரேஷ்டரே! செய்கையாலும் வாக்கினாலும் மனத்தினாலும் பிறவுயிர்க்குத்துன்பம்செய்யும்மனிதன் துக்கத்தினின்றுவிடுபடானே" என்று மறுபடியும்கேட்க, பீஷ்மர் சொல்லலானார்:

---

[1] மனோவாக்குக்காயங்களையடக்குவது.

"பகைவரைநாசம்செய்பவனே! அஹிம்ஸை [1]நாலுவகைகளென்று வேதம்தெரிந்தவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றுதவறினாலும் அது அஹிம்ஸையாவதில்லை. ராஜனே! எப்படிநாலுகால்களுள்ளதுஒன்றும் மூன்றுகால்களால்நில்லாதோ அப்படியே அஹிம்ஸையும் மூன்றுவகைகளால்நில்லாதென்றுசொல்லப்படுகிறது. யானையடியில் காலால்நடக்கும் மற்றவற்றின்அடிகள் இருந்தால் அவையெல்லாம் எப்படியானையடிக்குட்பட்டுப்போகின்றனவோ அப்படியே உலகத்திலுள்ளஎல்லாத்தர்மங்களும் அஹிம்ஸையில்அடங்கிப்போகின்றனவென்று முற்காலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. செய்வதனாலும் சொல்வதனாலும் நினைப்பதனாலும் மனிதனைப் பாவம் பற்றுகிறது. முதலில்மனத்தினாலும் பிறகுவாக்கினாலும் அதன்பின்செய்கையினாலும்வரும் ஹிம்ஸையை விடவேண்டும்; ஹிம்ஸையைச் செய்யலாகாது. அந்தஹிம்ஸையும் நாலுவகை. தேகத்திலும் மனத்திலும் வாக்கிலும் [2]இது குற்றமாகச்சொல்லப்படுகிறது. மாம்ஸம் தின்னுதவன்எவனோ அவன் இம்மூன்றுகுற்றங்களாலும் விடப்பட்டவனாகிறான். மனம் வாக்கு ருசிபார்க்கும் நா [3]இம்மூன்றிலும் மூன்று காரணங்களினால் இந்தக்குற்றங்கள் நிற்கின்றனவென்று வேதமோதினவர்கள் சொல்லுகின்றனர். அதனாலேதான், தவத்திலிருக்கும்ஞானிகள் மாம்ஸம்தின்பதில்லை. ராஜனே! மாம்ஸபக்ஷணத்திலுள்ள தோஷங்களைச்சொல்லுகிறேன்; கேள். தன்புத்ரனுடையமாம்ஸம் போன்றதாகவேதெரிந்தும் ஆசையினால் அறிவுகெட்டு மாம்ஸத்தைத் தின்னும்மனிதன் அதமனாகனினைக்கப்படுகின்றான். தாய்தந்தையர்கள் புணர்வதனால் புத்ரனானவன் தன்வசமில்லாமற்பிறப்பதுபோல ஹிம்ஸையைச்செய்பவன் தன்ஸ்வாதீனமில்லாமலே பாபஜன்மமெடுப்பது மிகவும்நிச்சயம். நாவில் எப்போது உணர்ச்சிதெரிகிறதோ அப்போது மனத்தில் ஆசையுண்டாகிறதென்பது சாஸ்திரங்களின்நிச்சயம். உருசிகாண்பதனாலன்றோ ஆசையுண்டாகிறது? பாகம்செய்யப்பட்டபொருள்கள் நன்றாகச்சமைந்தும் சமையாமலும் உப்பிருந்தும் இல்லாமலுமிருப்பதற்குத்தக்கபடி மனம் அவற்றில் பிரவிருத்திக்கிறது. மாம்ஸம்தின்னும்புத்திகெட்டமனிதர்கள் பேரிகைகள் மிருதங்கங்கள் இவற்றின்ஒலிகளையும் தந்திகளின்நிரம்பினஸ்வரங்களையும் எப்படியனுபவிப்பர்? அயலாருடையதனங்களையும் தானியங்களையும்

1 நிலையாமை, சொல்லாமை, உண்ணாமை, கொல்லாமை.

2. நாவினால் ருசிபார்ப்பதையும் என்று சேர்த்துக்கொள்க.

3 இங்கு செய்கையாகிய கொல்வதையும் சேர்த்துக்கொள்க.

கெடுப்பவரும் (இல்லாததைத்)துதிப்பவரும் மாம்ஸத்தைச்சிலாகிப்பவரும் எக்காலத்திலும் ஸ்வர்க்கத்தினின்று வெளிப்படுத்தப்படுகின்றவர். மாமிசத்தின்சுவையில் ஆசைமேற்கொண்டவர்கள், அதன்உபயோகத்தைவேண்டித் தாங்கள்நினையாமலும் தங்களுக்குயாரும் சொல்லாமலும் தாங்கள் இதற்குமுன் அனுபவியாமலுமிருக்கும் மாமிசத்தைச் சிலாகிக்கின்றனர்.மாமிசத்தைச்சிலாகிப்பதுமட்டுமே ஹிம்ஸைக்குச்சமமான பாபமுள்ளது. நீரூவதும் மலமாவதும் புழுவாவதும் எதற்கு நிச்சயமானமுடிவுகளோ அத்தத்தேகத்தை மற்றவற்றை ஹிம்ஸித்துக் காப்பாற்றுவதை வித்வான் எப்படிச்செய்யலாம்? பல நல்லமனிதர்கள் தம்மாமிசங்களினால் பிறர்மாமிசங்களைக்காப்பாற்றி உயிர்விட்டு ஸ்வர்க்கம்சென்றனர். மஹாராஜனே! இவ்வாறு நாலு காரணங்களால் அஹிம்ஸை சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாத்தர்மங்களாலும் அனுஜ்ஞிக்கப்பட்ட அந்தஅஹிம்ஸையை உனக்குச் சொன்னேன்" என்றார்.

நூற்றெழுபத்தேழாவது அத்யாயம்.

தா ன த ர் ம ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(கொல்லாமையை வற்புறுத்தியதும், மாம்ஸத்தைவிட்ட பூர்விகஅரசர்களும்.)

யுதிஷ்டிரர், "அஹிம்ஸை முதன்மையானதர்மமென்று பல முறை நீர் சொன்னீர். சிராத்தங்களில் பித்ருக்களுக்கு மாம்ஸம் இஷ்டமென்று நீரே சொல்லியிருக்கிறீர். பலவகை மாம்ஸங்களினால் சிராத்தம்செய்வதைப்பற்றி முன்னே நீர் சொன்னீர். கொல்லாமல் மாம்ஸம்வது? இவ்வாறு இது முரண்படுகிறது. மாம்ஸத்தைவிடுவதாகியதர்மத்தில் எங்களுக்கு ஸம்சயமுண்டாயிருக்கிறது. மாம்ஸம் தின்பவனுக்கு என்னகுற்றமுண்டாகும்? தின்னதவனுக்கு என்ன குணமுண்டாகும்? கொன்றுதின்பவனுக்கும் அயலார்கொடுத்ததைத் தின்பவனுக்கும் பிறருக்காகக்கொல்லுகிறவனுக்கும் விலைக்குவாங்கித் தின்பவனுக்கும் குற்றங்கள்என்ன? குற்றமற்றவரே! இவற்றைத் தெளிவாக நீர்சொல்லவிரும்புகிறேன். தெரிந்துகொண்டு இந்தஅழியாததர்மத்தை நிச்சயத்துடன் செய்யவிரும்புகிறேன். மனிதன் எதனால் தீர்க்காயுளை அடைவான்? எப்படி பலமுள்ளவனாவான்? அங்கஹீனமில்லாதவனும் லக்ஷணங்கள்பொருந்தினவனுமாவதுஎப்படி?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்:

"கௌரவனே!' ராஜனே! மாம்ஸம்தின்னுமையிலுண்டாகும் தர்மத்தையும் அதைப்பற்றினசிறந்தமுறையையும்உள்ளபடிசொல்லுகிறேன்; கேள். லக்ஷணங்களையும் அங்கப்பிழையில்லாமையையும் ஆயுளையும் புத்தியையும் தைரியத்தையும் பலத்தையும் ஞாபகசக்தியையும் அடையக்கருதும் புத்திசாலிகளானமனிதர்கள் ஹிம்ஸையை விட்டுவிடவேண்டும். கௌரவனே! இந்தவிஷயத்தில் ரிஷிகளுக்குள் அநேகந்தரம் சம்பாஷணம்நேர்ந்தது. யுதிஷ்டிர! அவர்களுடைய கொள்கைஎதுவோ அதைக்கேள். ஒவ்வொருமாதத்திலும் விரதங்கள் தவறுமல் அசுவமேதயாகம்செய்வதும் மதுமாம்ஸங்களை விடுவதும் ஸரி. ராஜனே! சிறந்தஞானிகளாகியஸப்தரிஷிகளும் வாலகில்யர்களும் சூரியகிரணங்களைக்குடிப்பவராகிய மரீசிபரென்பவரும் மாம்ஸபக்ஷணம்செய்யாமையைச் சிலாகிக்கின்றனர். 'மாம்ஸந்தின்னுமலும் ஒன்றைபுங்கொல்லாமலும் பிறரால்கொல்விக்காமலுமிருப்பவன் எல்லாப்பிராணிகளுக்கும் அன்பன்'என்று ஸ்வாயம்புவமனு சொன்னர். மாம்ஸத்தைவிடுகிறவன் எல்லாப்பிராணிகளுக்கும்வெல்லமுடியாதவனும் எல்லாப்பிராணிகளும்நம்பத்தக்கவனும் ஸாதுக்கள்எப்போதும் கௌரவிக்கத்தக்கவனுமாவான். 'எவன் தன்மாம்ஸத்தைப் பிறர் மாம்ஸத்தினால் வளர்க்கநினைக்கிறானே அவன் நம்பத்தகாதவன்; அவன் கெடுவான்' என்று நாரதர் சொன்னர். 'மதுவையும்மாம்ஸத்தையும்விடுகிறதினாலேயே தானங்களும் யாகங்களும் தவங்களும் செய்தவனாகிறான்' என்று பிருஹஸ்பதி சொன்னர். நூறுவருஷகாலம் ஒருமாஸங்கூடவிடாமல் அசுவமேதயாகம்செய்வதும் மாம்ஸத்தைத் தின்னுமலிருப்பதும் ஸமமென்று என்அபிப்பிராயம். கள்ளையும் மாம்ஸத்தையும்விடுவதனால் எப்போதும் யாகம்செய்பவனும் எப்போதும்தானம்செய்பவனும்எப்போதும்தவம்செய்பவனுமாகிறான். பாரதனே! மாம்ஸம்பக்ஷித்துக்கொண்டிருந்துபிறகாவதுவிடுவது என்ன பலனைச்செய்யுமோ அதை எல்லாவேதங்களும் எல்லாயாகங்களும் செய்யா. ஒருகாரணம்பற்றிப்பக்ஷித்தபோதிலும் பிறகு கடுந்தவம் செய்யவேண்டும். சுவையறிந்தவன் மாம்ஸத்தைவிடுவது கடினம். எல்லாப்பிராணிகளுக்கும் அபயங்கொடுப்பதாகிய இந்தவிரதத்தை ஆசரியிப்பது எல்லாவற்றிலும்சிறந்தது. எந்தவித்வான் எல்லாப்பிராணிகளுக்கும் அபயத்தைத் தக்ஷிணையாகக்கொடுக்கிறானே அவன் உலகத்திற்கே உயிர்கொடுத்தவனாகிறானென்பதில் ஸந்தேகமில்லை. தெரிந்தவர்கள் இதைத்தான் முதன்மையானதர்மமென்று சிலாகிக்கின்றனர். உயிர் தனக்குஎப்படிப்பிரியமோ அப்படித்தான் எல்லாப்

பிராணிகளுக்கும் பிரியம். புத்தியும்பரிசுத்தமன்மூமுள்ளவர்கள் தம் மைப்போல எல்லாவற்றையும் அறியவேண்டும்; எறியப்பட்டகழி யினல் புல்லசையும்போதும் அதற்குப் பயமிருக்கிறது. கொல்லப்படு கையில் விரைவாகப் பிழைக்கக்கருதும் பிராணிகளுக்குச் சொல்ல வேண்டுமா? ஒருதீங்குஞ்செய்யாதபிராணிகளுக்கு வியாதியில்லாமலே மாம்ஸந் தின்னும் பாவிகளால் மரணபயமிருக்கிறதென்றெண்ணும் போதுதுக்கம் அதிகமாகிறது. ஆதலால், மாம்ஸம்விடுவது தர்மத்திற் குக் காரணம். கொல்லாமைதான் சிறந்ததர்மம். கொல்லாமையே சிற ந்ததவம். கொல்லாமையே சிறந்தஸத்தியம். அதிலிருந்துதான் தர்மம் உண்டாகிறது. புல்லிலிருந்தாவது கட்டையிலிருந்தாவது கல்லிலிருந்தாவது மாம்ஸமுண்டாவதில்லையே? ஜந்துவைக்கொல்ல அதினின்று மாம்ஸம்வருகிறது. ஆதலால், அதைப்பக்ஷிப்பது பாவந் தான். ஹவ்யத்தையும் கவ்யத்தையும்அமிருதத்தையும்புசித்து உண் மையையும் மனத்தூய்மையையும்விரும்பிஎல்லாப்பிராணிகளுக்கும் ஆதரவாகஇருப்பதனலேதான் தேவர்கள்,ராக்ஷஸராஜர்களின்பயத்தி னின்று விடுபட்டனர். ராஜனே! மாம்ஸபக்ஷணம்செய்யாதவனுக் குப் பயங்கரமானகாடுகளிலும் ஏறமுடியாதமலைகளிலும் இரவிலும் பகலிலும் ஸந்திகளிலும் நாற்சந்திகளிலும் ஸபைகளிலும் ஆயுதங் கள்ஓங்கினபோதும் துஷ்டமிருகங்களாலும் ஸர்ப்பங்களாலும்வரும் கெடுதிகளிலும் பயமில்லை. உலகத்தில் எல்லாப்பிராணிகளையும் காப் பவனும் எல்லாப்பிராணிகளாலும்நம்பத்தக்கவனும் யாருக்கும்பயத் தைச்செய்யாதவனுமாயிருப்பவன்ஒருகாலும் பயப்படுவதில்லை. பக்ஷி க்கிறவன்இல்லாவிடின் கொல்லுகிறவன்இரான். கொல்லும்மனிதன் சாப்பிடுகிறவனுக்காகத்தான் அதைக் கொல்லுகிறான். அதுபக்ஷிக்கத் தகாததென்றுநினைத்தால் ஹிம்ஸை ஒழிந்துபோம். சாப்பிடுகிறவ னடியாகத்தான் மிருகமுதலியவற்றைக் கொல்லுதல் நடந்துவரு கிறது. சிறந்தபராக்கிரமமுள்ளவனே! ஹிம்ஸிக்கிறவர்களுக்குஆயுள் குறைந்துபோவதனல் தனதுநன்மையைக்கருதுகிறவன் மாம்ஸத் தை விடவேண்டும். பிராணிகளைக்கொல்பவரும் அவற்றிற்குப்பயங் கரமான கொடியவர்கள் துஷ்டமிருகங்கள்போலவே ஆபத்தில் தங்களைக் காப்பவரில்லாமற்போவர். ஆசையினலேயோ அறிவில் லாமையினலேயோ பலபராக்கிரமம் உண்டாவதற்காகவோ பாபிக ளின்சேர்க்கையினலேயோ மனிதருக்கு அதர்மத்தில் ஆசையுண் டாகிறது. தன்மாம்ஸத்தைப் பிறமாம்ஸத்தினல் வளர்க்கக்கருதுகிற வன் ஒவ்வொருபிறப்பிலும் பயந்துநடுங்குந்தேசத்திலிருப்பான். நிய

மமுள்ளரிஷிஸ்ரேஷ்டர்கள், 'மாம்ஸபக்ஷணம் செய்யாமலிருப்பது தனத்தையும் புகழையும் ஆயுளையும் ஸ்வர்க்கத்தையும் கொடுக்கும்; மிக்கக்ஷமகரம்' என்றுசொல்லுகின்றனர். குந்திபுத்திரனே! முன்னர் மார்க்கண்டேயர் மாம்ஸபக்ஷணத்திலுள்ளதோஷங்களைச் சொல்லும்போது நான்கேட்டிருந்ததைச் சொல்லுகிறேன். உயிருக்காசைப் படும்பிராணிகளின் மாம்ஸங்களைத் தின்னும்பாவியானவன் பிராணிகளைக் கொல்லுகிறவன்போலவேஆவான். விலைக்குவாங்குகிறவன் தனத்தினால் கொல்லுகிறான்; சாப்பிடுகிறவன்உண்பதனால்கொல்லுகிறான்; கொல்லுகிறவன் கட்டியடித்துக் கொல்லுகிறான். கொல்லுவது இப்படி மூன்றுவகையாயிருக்கிறது. சாப்பிடாதமனிதனும் அதைலப்புக் கொள்வதனால் உள்ளங்கெட்டுப்போகிறான். கொல்லுகிறவனைஒத்திருப்பவனையும் பாபம்பற்றுகிறது. பிராணிகளிடத்தில் தயைவைத்து மாம்ஸத்தைத்தின்னாமலிருப்பவன் எல்லாப்பிராணிகளுக்கும்வெல்லக்கூடாதவனாகவும் தீர்க்காயுளுள்ளவனாகவும் ஒருகாலும்நோயில்லாதவனாகவும் இருப்பான். ஸ்வர்ணதானங்கள் கோதானங்கள் பூதானங்கள்எல்லாவற்றிலும்மாம்ஸபக்ஷணம்செய்யாமை சிறந்ததர்மமென்று நமக்குக்கேள்வி. யாகத்தில் புரோக்ஷணம் செய்யப்படாத மாம்ஸத்தைச் சாஸ்திரவிதியைவிட்டு வீணாகத் தின்னலாகாது. பக்ஷிக்கும் மனிதன் நரகம்போவானென்பதில் ஸந்தேகமில்லை. யாகத்தில் ப்ரோக்ஷிக்கப்பட்டமாம்ஸமும் பிராம்மணன்விருப்பத்திற்காகச்செய்தமாம்ஸமும் குறைவானபாவமுள்ளவையென்று அறியவேண்டும். இதற்குமாறாகஇருந்தால் பாவம்விடாது. சாப்பிடுகிறவனுக்காக ஜந்துக்களைக் கொல்லுகிறமனிதன்இழிவானவன். அவ்விருவரில்பெரும்பாபஞ்செய்தவன் கொன்றவனேயன்றித் தின்றவனல்லன். அறிவில்லாதகீழ்மனிதன் மாம்ஸத்தில்ஆசைப்பட்டுச் சிராத்தங்களுக்கும் யாகங்களுக்குமாக வேதங்களிற்சொன்னவிதிகளினால் ஜந்துக்களைக்கொல்வானுயின் அம்மனிதன் நரகம்சேருகிறவன்தான். மாம்ஸத்தைத்தின்றுகொண்டிருந்து பிறகு விட்டுவிட்டவனுக்கும் மிகச்சிறந்தபுண்ணியமுண்டு. அவன்அந்தப்பாவத்தினின்றுவிலகினானன்றே? ஜந்துவைக்கொண்வருகிறவன் அதைலப்புக்கொள்ளுகிறவன் கொல்லுகிறவன் வாங்குகிறவன் விற்கிறவன் சமைப்பவன் புசிப்பவன்இவரனைவரும்கொன்வர்களே. சாஸ்திரங்களினால் ஏற்படுத்தப்பட்டதும் வேதங்களில் நிச்சயிக்கப்பட்டதும் ரிஷிகளால்அனுஷ்டிக்கப்பட்டதுமாகிய மற்றொருபழமையான நியாயத்தைச் சொல்லப்போகிறேன். ராஜஸ்ரேஷ்டனே!பலனைவிரும்புகிறவர்கள் அனுஸரிப்பதாகிய ப்ரவிருத்தியென்று

பெயருள்ளஉலகவாழ்க்கைக்குரியதர்மத்தில் சொல்லப்பட்டது மோக்ஷத்திற்குக்காரணமாகாது. 'யாகம்செய்யப்பட்டு மந்திரங்களோடு ப்ரோக்ஷித்துநூனைக்கப்பட்டுப் பரிசுத்தமாயுள்ளஹவிஸை வேதத்திற் சொன்னவிதியைக்கொண்டு பித்ருசிராத்தங்களில்பக்ஷிப்பது ப்ரவ்ருத்திதர்மமுள்ளவனுக்குஉரியது; மற்றவனுக்கில்லை' என்று மனுசொன்னர். பரதஸ்ரேஷ்டனே! ராஜனே! மனிதன் ராக்ஷஸன்போல (யாக முதலியவைசெய்யாமல்) முதலில்மாம்ஸம்தின்பது ஸ்வர்க்கத்தையும் கீர்த்தியையும் கெடுப்பது; சாஸ்திரவிதிக்கு விலக்கானது. அதைப் பக்ஷிக்கலாகாது. தான் முழுதும் துக்கமில்லாமலிருக்கவிரும்புகிற மனிதன் பிராணிகளின்மாம்ஸங்களெல்லாவற்றையும் விட்டுவிடவேண்டும். முந்தியகல்பத்தில் மனிதர்கள் அன்னத்தையே பசுவாகவைத்துக்கொண்டிருந்ததாகக் கேட்கிறோமன்றோ? புண்ணியலோகத்தை முக்கியமாகப்பற்றினவித்வான்கள் அந்தப்பசுவினால் யாகம்செய்தனர். பிரபுவே! முன்னர், சேதிதேசாதிபதியான உபரிசரவஸு என்னுமரசன், ரிஷிகளால் ஸ்தேகங்கேட்கப்பட்டபோது மாம்ஸம் பக்ஷிக்கக்கூடாததாயிருந்தும் அதைப் பக்ஷிக்கலாமென்றுசொன்னன்; அதனால், ஆகாசத்தினின்று பூமியையடைந்தான். அவன் திரும்பவும் அதையேசொன்னதனால் பாதாளத்திற்புகுந்தான். மஹாத்மாவான அகஸ்தியர் ஜனங்களின்ஹிதத்தைக்கருதிக் காட்டிலுள்ளமிருகங்களை ரிஷிகளைக்கொண்டு எல்லாத்தேவதைகளையும்உத்தேசித்து ப்ரோக்ஷணம் செய்து கொல்லாமல் விட்டுவிட்டார். இப்படிச்செய்தால் பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் உரியகிரியைகள் கெடா. தர்மத்தோடேயே மாம்ஸத்தினால்திருப்திசெய்விக்கப்பட்டுப் பித்ருக்களும் ஸந்தோஷமடைகின்றனர். அரசர்க்கரசே! மாம்ஸத்தைத்தின்னாமலிருப்பதிலுள்ள குணங்களைப்பற்றிப் பின்னும் சொல்லுகிறேன்; கேள். மனிதருக்கதிபதியே! மாம்ஸந்தின்னாமலிருப்பதில் எல்லாருக்கும் ஸுகமுண்டு. நூறுவருஷங்கள்மிகக்கொடியதவம்செய்வதும் மாம்ஸத்தைவிடுவதும் ஸரியென்பது என்கருத்து. ராஜனே! முக்கியமாக நிலாவுடன்கூடிய வளர்பிறையில் எல்லாமாம்ஸங்களையும் விடவேண்டும்; அதில் புண்ணியமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மழைக்காலத்திய நாலுமாதங்களிலும் மாம்ஸத்தைவிடுகிறவன் அழகு, ஆயுள், புகழ், வலிமைஎன்னும் நான்குநன்மைகளை அடைவான். ஒருமாஸமாவது மாம்ஸங்களையே முழுதும்பக்ஷியாமலிருப்பவன் எல்லாத்துயரங்களையும்தாண்டி கோவில்லாமல் ஸுகமாகவாழ்வான். ஒவ்வொரு பக்ஷமாகவாவது ஒவ்வொருமாஸமாகவாவது மாம்ஸங்களைவிட்டு

ஹிம்ஸையையொழித்தவர்களுக்குப் பிரம்மலோகம்சொல்லப்படுகிறது. பிரபுவே ! பார்த்தனே! எல்லாப்பிராணிகளுக்கும்தாமாகநினைத்திருந்தவர்களும் புருஷார்த்தங்களின் உயர்வுதாழ்வுகளையறிந்தவர்களுமாகிய நாபாகன், அம்பரீஷன், மஹாத்மாவானகயன், ஆயு, அநரண்யன், நிலீபன், ரகு, அஜன், கார்த்தவீரியார்ஜுனன், அநிருத்தன், நஹுஷன், யயாதி, நிருகன், விஷ்வகசுவன், சசபிந்து, யுவநாசுவன், உசீநரன்புத்திரனானசிபி, முசுகுந்தன், மாந்தாதா, ஹரிச்சந்திரன்இவ்வரசர்கள் சுக்லபக்ஷத்தில் மாம்ஸத்தை விட்டிருந்தனர். ஸத்தியம் சொல்லுங்கள். பொய்சொல்லவேண்டாம். ஸத்தியந்தான் அழியாததர்மம். ஸத்தியத்திலேதான் ஹரிச்சந்திரன், சந்திரன்போல மேலுலகத்தில் ஸஞ்சரிக்கிறான். அரசர்க்கரசே ! ப்ரயோகசித்ரன், ஸோமகன், விருகன், ரைவதன், ரந்திதேவன், வஸு, ஸ்ருஞ்சயன், க்ருபன், பரதசக்ரவர்த்தி, துஷ்யந்தன், கருசன், ராமர், அலர்க்கன், நளன், விசகாஸ்வன், நிமி, ஞானமுள்ளஜனகர், புரூரவன், ப்ருது, வீரஸேனன், இக்ஷ்வாகு, சம்பு, ப்ரவேதன், ஸகரன், அஜன், துர்து, ஸுபாஹு, ஹரியசுவன், க்ஷுபன், பரதன் இவர்களாலும் இன்னும் அநேகஅரசர்களாலும் முற்காலத்தில் சரத்காலம் சுக்லபக்ஷத்தில் மாம்ஸம் பக்ஷிக்கப்படாமலிருந்தது. அதனால், அவர்கள் ஸ்வர்க்கம் அடைந்தனர். அவர்கள் சிறப்புள்ளவர்களாகப்பிரகாசித்துக்கொண்டு கந்தர்வர்களால்ஸேவிக்கப்பட்டு ஆயிரம்ஸ்திரீகளுடன்கூடப் பிரம்மலோகத்திலிருக்கின்றனர். கொல்லாமைதான் தர்மத்திற்குலக்கணம். ஆதலால், இந்தஉத்தமமானதர்மத்தை அனுஷ்டித்த அந்தமஹாத்மாக்கள் ஸ்வர்க்கத்தின்மேல்வலிக்கின்றனர். பிறந்ததுமுதல் நித்தியமாகக் கள்ளையும் மாம்ஸத்தையும் சாராயத்தையும்விட்டிருக்கிற தர்மிஷ்டர்களைவரும் ரிஷிகளாகநினைக்கப்படுகின்றனர். மாம்ஸம்தின்னுமையென்னும் இந்ததர்மத்தைச் செய்கிறவனும் பிறருக்குச்சொல்லுகிறவனும் மிக்கதுராசாரமுள்ளவராயிருந்தாலும் அவர் ஒருகாலும் நரகம்போகார். பரிசுத்தமும் ரிஷிகளால்கொண்டாடப்பட்டதுமாகிய மாம்ஸபக்ஷணம்செய்யாதவிதியை அடிக்கடிபடிப்பவனும்கேட்பவனும் எல்லாப்பாவங்களாலும்விடுபட்டு எல்லாவிருப்பங்களும்நிறைவேறிக் குலத்தோரிற் சிறந்தவராகிறார். ஸந்தேகமில்லை. ஹிம்ஸைசெய்யாமலும் தானம்செய்துகொண்டும் மதுமாம்ஸங்களைவிட்டுமிருப்பவன். ஆபத்துவந்தால் ஆபத்திலிருந்து விடுபடுவான் ; கட்டுப்பட்டிருந்தால் கட்டிலிருந்து விடுபடுவான் ; ரோகியாயிருந்தால் ரோகத்தினின்று விடுபடுவான்; துக்கமுள்ளவனுமிருந்தால்

துக்கத்தினின்றும் விடுபடுவான்; விலங்குஜாதியிற்பிறவான், அவன் அழகுள்ளவனுவான். குருஸ்ரேஷ்டனே ! செல்வத்தையும் பெரும் புகழையும் அடைவான். ராஜனே ! மாம்ஸம்விடுவதைப்பற்றி உனக்குச் சொன்னேன். பிரவ்ருத்திதர்மத்திற்கும் நிவ்ருத்திதர்மத்திற்கும் இந்தவிதி ரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கிறது" என்றார்.

நூற்றெழுபத்தேட்டாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(மாம்ஸம்தின்பதும் கொல்வதும் தகாவென்று வற்புறுத்தியது.)

யுதிஷ்டிரர்; "பிதாமஹரே ! உலகத்திலுள்ள இந்தமனிதர்கள் பலவகைஉணவுகளையும் பலவகைப்பணியாரங்களையும் பலவகைக்கறி காய்களையும்விட்டு மஹாராக்ஷஸர்கள்போல மாம்ஸங்களில் மிக்க ஆசையுள்ளவர்களாயிருக்கின்றனர்; மாம்ஸத்தைவிரும்புவதுபோலச் சுவையுள்ளகனிகளையும் விரும்புவதில்லை. அதனால், இந்தவிஷயத்தில் என்புத்தி மயங்குகிறது. சுவையில் மாம்ஸத்திற்குமேற்பட்டது ஒன்றுமில்லை என்றுநான்நினைக்கிறேன். பிரபுவே ! புருஷஸ்ரேஷ்டரே ! ஆதலால், மாம்ஸம்தின்னுமையிலுள்ளகுணங்களையும் மாம்ஸம்தின்பதிலுள்ளதோஷங்களையும் கேட்கவிரும்புகிறேன். தர்மந்தெரிந்தவரே! எல்லாஜந்துக்களும் தர்மமாகப்பக்ஷிக்கக்கூடியது எது? பக்ஷிக்கக்கூடாதது எது ? இவற்றையெல்லாம் எனக்குத் தெளிவாகச்சொல்லும். மாம்ஸம் எப்படிப்பட்டது ? அதைவிடுவதில்என்ன குணங்கள் ? அதைத்தின்பதில் என்னதோஷங்கள்?" இவற்றை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார் :

"சிறந்தக்கைகளையுடையவனே ! பாரதனே ! நீசொல்வதெல்லாம் சரி. பூமியில் சுவைக்கு மாம்ஸத்திலும்மேலானது ஒன்றுமில்லை. புண்பட்டவர்களுக்கும் இளைத்தவர்களுக்கும் ஜ்வரத்திலகொதிப்புற்றவர்களுக்கும் சிற்றின்பத்தில்மனம்வைத்தவர்களுக்கும் வழிநடையினல் கஷ்டப்பட்டவர்களுக்கும் மாம்ஸத்திற்குமேற்பட்டது ஒன்றுமில்லை. அது உடனே உயிரைச் செழிப்பிக்கிறது. சிறந்த தேகபுஷ்டியையும் செய்கிறது. மாம்ஸபக்ஷணத்தில் கெடுப்பதே தோஷமாகும். தானமே எப்போதும்சரி. மனிதன் பொருளாசையை விட்டுப் பசித்தபிராம்மணர்களுக்கும் மற்றெல்லாருக்கும் சிரத்தையோடு ஜீவனத்தைக்கொடுப்பதனல் பரிசுத்தனுகிறன். ஏழைகளுக்கு

ப்பதில்லை. 'கொடாமையினுடையகேடு இது. நீ இப்படியாகாதே' என்று தங்கள்தேகங்களினல்காண்பித்துக் கற்பிக்கின்றனர். தானத்தினல் எவன் சுத்தனுயிருப்பானே அவன் மறுபடி மாம்ஸத்தைப் பக்ஷிக்கலாகாது. வீரனே! மாம்ஸத்தினும் சிறந்தஉணவு ஒன்றுமில்லை. கௌரவரைச்சிறப்பிக்கிறவனே! அதைவிடுவதில் மனிதர்களுக்கு அநேகங் குணங்களுண்டு. நான் அவற்றைச் சொல்லுகிறேன்; கேள். தன்மாம்ஸத்தைப் பிறமாம்ஸத்தினல்வளர்க்கவிரும்புகிறவனிலும் இழிவானவனும் கொடியவனுமில்லை. உயிரைவிடஅதிகப்பிரியமானது உலகத்தில் ஒன்றுமில்லையன்றே? ஆதலால், மனிதன் தன்னிடத்திற்போலவேபிறனிடத்திலும்தயைவைக்கவேண்டும். அப்பா! ரேதவிலிருந்து மாம்ஸம்உண்டாவதென்பதில் ஸந்தேகமில்லை. அது மலத்துடன்சேர்ந்தது. அதைப்பக்ஷிப்பதில் தோஷம்அதிகந்தானே. கொல்லாமையே தர்மத்திற்கு இலக்கணமென்று வேதந்தெரிந்தவர்கள் நினைக்கின்றனர். ஆத்மஜ்ஞானமுள்ளமனிதன் ஹிம்ஸையில்லாத கர்மத்தையே செய்யவேண்டும். சிராத்தங்களிலும் யாகங்களிலும் புரோக்ஷிக்கப்பட்டமாம்ஸம் ஹவிஸென்றுசொல்லப்படுகிறது. வேதத்திற்சொன்னவிதிபற்றி அதைப்புசிப்பதனல் குற்றமில்லை. பசுக்கள் யாகத்திற்காகப் படைக்கப்பட்டனவென்னும் வேதவாக்கியத்தைக் கேட்கிறோம். இதற்குமாறுகூடப்பவர்களுக்கு ராக்ஷஸருக்குரியவிதிதான் சொல்லப்படுகிறது. க்ஷத்திரியருக்குரிய சாஸ்திரவிதியையும் சொல்லுகிறேன்; கேள். தன்பராக்கிரமத்தினல் ஸம்பாதித்த மாம்ஸத்தைப்புஜிப்பவனுக்குக் குற்றமில்லை. ராஜனே! முன்னர் காட்டிலுள்ள மிருகங்களெல்லாவற்றையும் எல்லாத்தேவதைகளுக்கும் நைவேத்யமாக அகஸ்தியர் மந்திரித்து ப்ரோக்ஷித்துவிட்டார். அதனல், வேட்டை சிலாகிக்கப்படுகிறது. மேலும், மற்றப்பிராணிகளைக் காப்பதற்காக ஹிம்ஸிக்கிறமிருகங்களைக் கொல்லலாம். தன்தேகத்தைவிடாமல் [1]வேட்டையென்பதுஇல்லை. அரசனே! மிருகத்திற்குச் சமமாகநின்றும் மிருகத்தைக்கொல்லுவனே கொல்லமாட்டானே. பாரதனே! அதனலேதான், ராஜரிஷிகளெல்லாரும் வேட்டைக்குப் போகின்றனர். அவர்களுக்குப் பாவம்பற்றாது. பூமியில் இது பாவமும்ஆகாது. கௌரவரைச்சிறப்பிக்கிறவனே! எல்லாப்பிராணிகளிடத்திலும் தயைவைப்பதற்குச்சமமானதர்மம் இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும்ஒன்றுமில்லை. தயையுள்ளமனிதனுக்கு இவ்வுலகத்தில் ஒருகாலும் பயமில்லை. இவ்வுலகங்களும் மற்றவுலகங்களும் தயையுள்

1 வேட்டையும் யுத்தம்போன்றது என்பதால் ஹிம்ஸையாகாது என்பது.

ளவர்களானரிஷிகளுடையவையே. எவன் தயையைமுதன்மையாகக் கருதி எல்லாப்பிராணிகளுக்கும் அபயமளிக்கிறானே அவனுக்கு அந்தப் பிராணிகள் அபயங்கொடுக்கின்றனவென்று கேட்டிருக்கிறோம். மேடுபள்ளங்களிலும் ஸமபூமியிலும் அவன் புண்பட்டாலும் தடைப்பட்டாலும் விழுந்தாலும் தண்ணீரில்நனைந்தாலும் அடிபட்டாலும் எல்லாப்பிராணிகளும் காப்பாற்றும். துஷ்டமிருகங்களும் பிசாசங்களும் ராக்ஷஸர்களும்அவனைக்கொல்வதில்லை.பிறரைப்பயத்தினின்று விடுவிப்பவன் பயம்வரும்போது விடுபடுவான். உயிர்கொடுப்பதற்கு மேலானதானம் இருந்ததுமில்லை; இருந்தப்போவதுமில்லை. இவ்வுலகத்தில் தன்னைவிடஅதிகப்பிரியமானது ஒன்றுமில்லைஎன்பது நிச்சயம். பாரதனே! மரணமென்பது எல்லாப்பிராணிகளுக்கும் கஷ்டமானது. பிராணிகளுக்குமரணம் வரும்போது உடனே நடுக்கமுண்டாகிறதன்றோ? பிராணிகள், பிணி பிறப்பு மூப்புத்துன்பங்களுடன் ஸம்ஸாரக்கடலில் நித்தியமாகஉழலுகின்றன. ஆகிலும், மரணத்திற்குப் பயப்படுகின்றன. கர்ப்பத்திலிருக்கும்போது மூத்திரம் வியர்வை மலம்இவற்றின் தாங்கக்கூடாதமிகக்கொடியவையான உப்பு, புளிப்பு, கைப்பு என்னும் ரஸங்களிலில் வேகின்றன. பிறந்த பிறகும் நினைத்ததுதவறியும் விருப்பங்கள்கெடுக்கப்பட்டும் பலமுறை அடிக்கப்பட்டும் தேகத்தில்ஆசைவைத்து ஸ்வாதீனம்தப்பினவைகளாகக் காணப்படுகின்றன. கும்பீபாகமென்னும்நரகத்திலும் வேகவைக்கப்படுகின்றன. சில, பலஜன்மங்களெயெடுத்தும் பலவந்தமாகக் கொல்லப்பட்டும் அடிக்கடி பயமுறுத்தப்பட்டுமிருக்கின்றன. பூமியெல்லாம்திரிந்தாலும் தன்னைவிட அதிகப்பிரியமானதுஒன்றுமில்லை. ஆதலால், எல்லாப்பிராணிகளிடத்திலும் தயையுள்ளவன்தான் நல்லமனமுள்ளவனாவான். ராஜனே! வாழ்நாள்முழுவதும் மாம்ஸங்கள் எல்லாவற்றையும் பக்ஷியாமல்விட்டவன் எல்லாருடைய விசுவாசத்தையும் சிறந்தமேன்மையையும் அடைவானென்பதில் ஸந்தேகமில்லை. உயிருக்குஆரைப்படும்பிராணிகளின் மாம்ஸங்களைத்தின்பவர் அந்தப் பிராணிகளாலேயே தின்னப்படுவரென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. பாரதனே! 'மாம்=என்னை' என்றும், 'ஸ:=அவன்' என்றும்பொருளுள்ள இரண்டுபதங்கள்சேர்ந்து, 'மாம்ஸ:' என்றாயிருப்பது, 'என்னை அவன் பக்ஷிப்பதனால்அவனை நான்பக்ஷிப்பேன்' என்று பிராணிகளின் கருத்தைக் குறிப்பிடுவதாகத் தெரிந்துகொள். ராஜனே! கொல்லுகிறவன் கொல்லப்படுவதுநிச்சயம். கட்டுகிறவன்அப்படியே கட்டப்படுவான். திட்டுகிறவன் [1] திட்டப்படுவான். பகைப்

[1] 'க்ருச்யதே' என்று பாடம் கொள்ளப்பட்டது.

பவன் பகைக்கப்படுவான். [1]எவன் எந்தஎந்தத்தேகத்துக்கு, எந்த எந்தக்காரியத்தைச்செய்கிறானே அவன் அந்தஅந்தத் தேகத்தோடேயே அவ்வவற்றின்பலனே அனுபவிப்பான்.கொல்லாமையேசிறந்த தர்மம். கொல்லாமையே சிறந்தஇந்திரியஜயம். கொல்லாமையே சிறந்த தானம். கொல்லாமையே சிறந்தயாகம். கொல்லாமையே சிறந்த பயன். கொல்லாமையே சிறந்தசினேகிதன். கொல்லாமையே சிறந்த ஸுகம். யாகங்களெல்லாவற்றிலும்தக்ஷிணைகொடுப்பதும் தீர்த்தங்களெல்லாவற்றிலும்ஸ்நானம்செய்வதும் எல்லாத்தானங்களும் கொல்லாமைக்கீடாகாதவை. ஹிம்ஸியாதவனுக்கு அழியாததவமுண்டாகிறது. ஹிம்ஸியாதவன் எப்போதும் ஜயிக்கிறான். ஹிம்ஸியாதவன் எல்லாப்பிராணிகளுக்கும் தாயும்தந்தையும்போலாகிறான். கௌரவஸ்ரேஷ்டனே! அஹிம்ஸைக்கு இந்தப்பலனும் இதற்குமேற்பட்ட பலனுமிருக்கின்றன.அநேகநூற்றாண்டுகளாலும் அதன்குணங்களைச் சொல்வது முடியாது" என்றார்.

நூற்றெழுபத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(எந்தப்பிராணியும் உயிரைவிடத் துணியாதென்பதைப்பற்றி வ்யாஸருக்கும் ஒருபுழுவுக்கும்நடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பெரும்போரில் இறக்கமனமில்லாதவரும் மனமுள்ளவரும் கொல்லப்பட்டனரே; அவர்கள் என்னகதியை அடைந்தனர்? அதை எனக்குச்சொல்லும். பெரியயுத்தத்தில்உயிரைவிடுவதும் மனிதர்களுக்குத் துயரந்தான். தர்மந்தெரிந்தவரே! உயிரைவிடுவது மிக்கஅஸாத்தியமென்று எனக்குத்தெரியும். செல்வமிருந்தாலும் இல்லாமலிருந்தாலும் ஸுகமிருந்தாலும் இல்லாமலிருந்தாலும் இந்தஸம்ஸாரத்திற்பிறந்து பிராணிகள் ஆசையோடிருப்பது எப்படி? அதன்காரணத்தை எனக்குச்சொல்லும். நீர் எல்லாந்தெரிந்தவரென்று நான் நினைக்கிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்:

"வேந்தனே! செல்வமிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஸுகமிருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்தஸம்ஸாரத்தில் ஜனித்தபிராணி

[1] மிருகத்தைக்கொன்றவன் மிருகமாகப்பிறந்து கொல்லப்படுவான் என்பது.

களெல்லாம் எந்த எண்ணத்தினால் ஆசைவைத்திருக்கின்றனவென்ப தற்குக்காரணத்தை என்னிடம்கேள். யுதிஷ்டிர! நீகேட்டஇந்தக் கேள்வி நன்றாயிருக்கிறது. ராஜனே! யுதிஷ்டிரனே! வ்யாஸருக் கும் ஒருபுழுவுக்கும்நடந்த ஸம்பாஷணமாகிய இந்தப்பூர்வசரித்தி ரத்தை உனக்கு உதாகரிப்பேன். பிரம்மரிஷ்டரான கிருஷ்ணத்வை பாயனரிஷி முன்னர் ஸஞ்சரிக்கும்போது வண்டிப்பாதையில் விரை வாகஓடும் ஒருபுழுவைக் கண்டார். எல்லாப்பிராணிகளின்நடையை யும் சப்தத்தையும்அறிந்த அந்தஸர்வஜ்ஞர் விரைவாகப்போகும்புழு வைக்கண்டு, 'புழுவே! நீ பயந்தவன்போலிருக்கிறாய்; வேகமுள்ள வனைவும் காணப்படுகிறாய். உன்னிருப்பிடம் எங்கே? உனக்குயாரி டத்தில் பயமுண்டாயிருக்கிறது? சொல்' என்றுகேட்டார். அதற்கு அந்தப்புழு, 'சிறந்தபுத்தியுள்ளவரே! பெரியவண்டிக்கூட்டத்தின் ஓசையைக்கேட்டு எனக்குப் பயமுண்டாயிற்று. இந்தஓசை கொடி தன்றோ? சப்தம் கேட்கிறது. அது என்னைக் கொன்றுவிடுமென்று அதற்கு விலகிப்போகிறேன். பிரபுவே! மிகவும்அதிகமானசுமையை இழுத்துக்கொண்டு சாட்டைபினால்ஓட்டப்பட்டுப் பெருமூச்சுவிடும் விருஷபங்களின்சப்தத்தையும் ஸமீபத்தில் கேட்கிறேன். அவைகளை ஓட்டும்மனிதர்களுடைய பலவகைக்குரல்களும் கேட்கப்படுகின் றன. புழுப்பிறப்பாகிய எம்மைப்போன்றவன் அதைத் தாங்கமுடி யாது. ஆதலால், இந்தமிகக்கொடியபயத்தினின்று விலகிப்போகி றேன். பிராணிகளுக்கு மரணம் கஷ்டமன்றே. உயிர்வாழ்க்கை மிகஅரிது. ஆதலால், பயந்து இந்தஆபத்தில் அகப்படாமலிருக்கும் படி ஓடுகிறேன்' என்றுசொல்லிற்று. அதுஇவ்வாறுசொல்ல, அந்த ரிஷி அந்தப்புழுவைப்பார்த்து, 'புழுவே! உனக்கு ஸுகமேது? விலங்குஜாதியிலிருக்கும் உனக்கு மரணமே ஸுகமென்று நினைக்கி றேன். புழுவே! சப்தம் ஸ்பரிசம் ரஸம் கந்தம்இவற்றையும் அள வற்ற அனேகஸுகங்களையும் நீ அறியாய். உனக்கு மரணமே நலம்' என்றுசொன்னர். புழு, 'ஜீவனனது எல்லாத்தேகங்களிலும் பற் றுள்ளதாயிருக்கிறது. மிக்கஅறிவுள்ளவரே! இந்தத் தேகத்திலும் எனக்குஸுகமிருப்பதை நான் உணருகிறேன்; ஆதலால், பிழைத் திருக்கவிரும்புகிறேன். இந்தஜன்மத்திலும் தேகத்திற்குத்தக்கபடி ஸுகத்திற்குவேண்டியவிஷயமெல்லாம்உண்டாக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கும் விலங்குஜாதிகளுக்கும் ஸுகத்திற்குரியவிஷயங் கள் வேறுவேறுகப் பிரிந்திருக்கின்றன. பிரபுவே! நான் மானிட ஜாதியில் மிகுந்ததனமுள்ள சூத்திரனாகப்பிறந்து பிராம்மணரைப்

பகைத்தும் கொடியவனுகவும் லோபியாகவும் [1]வட்டியினல்ஜீவிப்பவனுகவும் இருந்தேன்; குளிர்ந்தசொல்லுடனும் புத்தித்தேர்ச்சியில்லாமலும் எல்லாக்காரியங்களையும்வெறுத்தும் தனத்தை ஏகாந்தமாகவைத்துக்காப்பாற்றியும் எப்போதும் அயலார்சொத்தை எடுத்துக்கொள்வதிலேயே ஊக்கம்வைத்தும் இருந்தேன். கொடியவனுனநான் புசிக்கையில் சுவையுள்ளவற்றை எனக்கேமேவண்டிப் பொருமையினல் வேலைக்காரர்களையும் விருந்தினர்களையும்விட்டுப் புசித்தேன். தேவதைகளுக்காகவும் பித்ருக்களுக்காகவும் சிரத்தையோடுஒருகாரியமும் நான் செய்ததில்லை; அன்னங்கேட்டவருக்கு அன்னங்கொடுத்ததில்லை; கொடுத்தஅன்னத்தையும் பிடுங்கிக்கொண்டேன்; இராக்காலத்தில் பயந்து ரகஸ்யமாக என்வீட்டிற்குவந்து சரணுகதிசெய்தவர்களையும் நிஷ்காரணமாகஅபயங்கொடாமல் தள்ளிவிட்டேன். மனிதர்களுடையதனதானியங்கள் அன்புள்ளமனைவி வாகனம் அழகானவஸ்திரம் செல்வம்இவற்றைக்கண்டு வீணில் பொருமைப்பட்டேன்; அயலானுடைய ஸுகத்தைக்கண்டால் ஸஹிக்கமாட்டேன்; பிறர் நன்மைபெறக் கருதேன்; மற்றவர்களுக்குத் தர்மார்த்தகாமங்கள் மூன்றையும்கெடித்து என்ஸுகத்தையே அனுஸரித்தேன்; தயையில்லாதவனுக்குள்ளகுணங்களையே வெளியிடும்காரியங்களை முன்ஜன்மத்தில் நான் செய்தேன்; அதைநினைத்து அன்புள்ளபுத்திரனை இழந்தவன்போல வருத்தப்படுகிறேன். நான்செய்தகல்வினைகளுக்குப்பயனை நான் காணவில்லை; கிழவியானதாயைப் பூஜித்தேன்; ஒரு பிராம்மணனையும்பூஜித்தேன். பிராம்மணரே! ஒருதரம், கல்லகுலமும் குணங்களுமுள்ள ஓர் அதிதி தற்செயலாய் வீட்டிற்குவந்து என்னல் பூஜிக்கப்பட்டான். அதனல், பூர்வஜன்மஞாபகம் என்னைவிடாமலிருக்கிறது. அந்தநற்கருமங்களால்தான் நான் ஸுகத்தில்விருப்பம்வைத்திருக்கிறேன். தபோதனரே! அந்த நல்லகர்மத்தின்பலனை உம்மிடத்தில் கேட்கவிரும்புகிறேன்' என்று சொல்லிற்று.

நூற்றெண்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வ்யாஸருக்கும் ஒருபூனைக்கும் நடந்த ஸம்பாஷணைத்தொடர்ச்சி.)

வ்யாஸர், 'பூனையே! நீ திர்யக்ஜாதியிலிருந்தும் நல்லகர்மத்தினல் பூர்வஜன்மஞானம்தவருமலிருக்கிறாய். நீ தவருமலிருப்பது என்

1 'ம்ருத்யு' என்று பாடம் கொள்ளப்பட்டது.

காரியம்தான். நான் என்தவவன்மையினால் பார்ப்பதனாலேயே உன்னைக் காப்பாற்றுகிறேன். தவவன்மைக்குமேலானவன்மை வேறு ஒன்றுமில்லை. புழுவே! நீசெய்தபாவங்களினால் நீபுழுவாகவிருப்பது எனக்குத் தெரியும். உனக்குஇஷ்டமிருந்தால் மனுஷ்யஜன்மத்தில் சிறந்ததர்மபலனை அடையலாம். கர்மபூமியில்செய்தகர்மத்தின்பலனைத்தான் தேவர்களாகவும் விலங்குகளாகவுமிருந்து அனுபவிப்பது. மனிதர்களிலும் வேண்டின பலன்களையும் குணங்களையும்பெற்றுவாக்கு, புத்தி, கை, கால் செவ்வையாயிருப்பவரும் வித்வான்களுமான பாக்கியசாலிகள் இருக்கின்றனர். பொருளுக்காக ஜீவித்திருக்கும் புத்திகெட்ட மனிதனுக்கு என்னவரும்? புழுவே! தேவதை, பிராம்மணன், அக்னி, சந்திரன், சூரியன், இவர்களைப்பூஜிக்கிறவனும்புண்ணியகதைகளைச்சொல்லுகிறவனுமானமனிதனாக நீ வரலாம். அந்தஜன்மத்தில் மற்றப்பிராணிகளை உனக்குஅடிமையாக நீ அனுபவிக்கலாம். உனக்குவிருப்பமிருந்தால் வரிசையாசப் பிராம்மணத்தன்மையையும் கொடுப்பேன்' என்றுசொன்னார். அந்தப்புழுவானது 'அப்படியேயாகட்டும்' என்றுசொல்லி நின்றது; முள்ளம்பன்றி உம்பு காட்டுப்பன்றி மான் பறவை சண்டாளன் சூத்திரன் வைசியன் க்ஷத்திரியன்என்னும் பிறப்புக்களிற்பிறந்து அந்தஎல்லாப்பிறப்புக்களிலும் அந்தரிஷியைக் காணப்போயிற்று; ஸத்தியவாக்கையுடைய அந்தரிஷி இவ்வாறுசொன்னதை நினைத்துச் சிரமேல்கைகுவித்து அவர்பாதங்களைப் பிடித்துக்கொண்டது; அப்போது அந்தரிஷியைப் பார்த்து, 'நான் புழுவாகவிருந்து ராஜபுத்திரனானேனே, இது நான் விரும்பின ஒப்பற்றநிலைமை. இது பத்துத்தடவைகளால் எனக்குக் கிடைத்தது. மிக்கபலமுள்ளவையும் பொன்மாலைபூண்டவையுமான யானைகள் என்னைத் தூக்குகின்றன. தேர்களில் காம்போஜதேசத்துப் போர்க்குதிரைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. ஒட்டகங்களும் கோவேறுகழுதைகளும் கட்டினவாகனங்களும் எனக்குப் போகின்றன. பந்துக்களுடனும் மந்திரிகளுடனுங்கூட மாம்ஸபோஜனத்தைப் புஜிக்கிறேன். மஹானுபாவரே! ஸ்வர்க்கத்திற்கொப்பான வீடுகளில் விலைபெற்றஸுகமானபடுக்கைகளில் மிகக்கொண்டாடப்பட்டுத்தூங்குகிறேன். பின்ராத்திரிகளிலெல்லாம் ஸூதர்களும் மாகதர்களும் வந்திகளும் இன்சொற்களினால் தேவேந்திரனைத்தேவர்கள் துதிப்பதுபோல என்னைத் துதிக்கின்றனர். இழிவானபுழுஜன்மமெடுத்திருந்தஎனக்குப் பூர்வஜன்மஞாபகமிருந்தது, ஸத்தியவாக்கும் அளவற்றமஹிமையுமுள்ளஉமதுஅனுக்கிரகத்தினாலேதான். ஐயா! நான்

முன்செய்தபாவத்திற்கு அழிவிருக்கிறதே. மஹாப்பிராஜ்ஞரே! உமக்கு நமஸ்காரம். நான் என்னசெய்யக்கடவேன்? எனக்குக் கட்டளையிடும். உமதுதவவன்மையினல்கொடுக்கப்பட்டன்றே இது எனக்குக்கிடைத்தது?' என்றுசொல்லிற்று. வ்யாஸர், 'ராஜனே! இப்போது நீ உன்வாக்குக்களினல் இஷ்டப்படி என்னைப் பூஜித்தாய். அருவருக்கத்தக்க புழுஜன்மத்தையடைந்தஞாபகம் இப்போது உனக்கிருக்கிறதே. பணத்தையேமுக்கியமாகக்கொண்டவனும் கொடியவனும் பிறர்சொத்தையபகரிப்பவனுமாகிய சூத்திரனயிருந்தஉனக்கு அப்போது இந்த என்தரிசனம் கிடைத்தது. அதுதான் நீமுன்செய்த புண்ணியம். திர்யக்ஜாதியிற் பிறந்திருந்தபோதும் என்னை நீ பூஜித்ததனலும் புண்ணியமுண்டாயிருக்கிறது. நீ கோவுக்காகவும் ப்ராம்மணர்களுக்காகவும் போர்க்களத்தில் உன்னுயிரைவிட்டு இந்தராஜபுத்ரஜன்மத்திலிருந்து ப்ராம்மணஜன்மமடைவாய்' என்றுசொன்னர். பிறகு, அந்தராஜபுத்ரன் ஸுகமடைந்து தக்ஷிணைகள்நிரம்பக் கொடுத்து யாகம்செய்தான்; பிறகு, ஸ்வர்க்கத்தில் அழிவில்லாத பேரின்பம்பெற்று விளங்கினன். திர்யக்ஜாதியிலிருந்து சூத்திரனகிருன். சூத்திரன் வைசியனகிருன். வைசியன் க்ஷத்திரியனகிருன். சிறந்த ஒழுக்கமுள்ளக்ஷத்திரியன் ப்ராம்மணனகிருன். நல்லொழுக்கமுள்ள ப்ராம்மணன் புண்ணியத்தினல் ஸ்வர்க்கத்தையடைகிருன்.

நூற்றெண்பத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வ்யாஸருக்கும் ஒருபுழுவுக்கும்நடந்த ஸம்பாஷணைத் தொடர்ச்சி.)

அரசனே! புழுஜன்மத்தைவிட்டு க்ஷத்திரியத்தன்மையை அடைந்தஅந்தவீரன் பூர்வஜன்மத்தை நினைத்துக்கொண்டே பெருந்தவம்செய்தான். தர்மத்தையும்அர்த்தத்தையும் அறிந்தவனகிய அவ்வரசனுடைய அந்தப் பெருந்தவத்தைக்கண்டு உடனே ப்ராம்மணஸ்ரேஷ்டரானகிருஷ்ணத்வைபாயனர் அவனிடம்வந்து, 'புழுவே! க்ஷத்திரிய தர்மம் தேவர்களுடைய தர்மமென்று நினைத்து க்ஷத்திரியனுடைய தர்மத்தினலேயே பிரஜைகளைக் காப்பாற்றக்கடவாய். அதனல், ப்ராம்மணத்தன்மையை அடைவாய். பரிசுத்த மனமுள்ளவனுய்க் குணகுற்றங்களையறிந்து குணமுள்ளவர்களுக்கு வேண்டினவற்றைக் கொடுத்துக் குற்றங்களை நிவர்த்திசெய்து எல்லாப்பிரஜைகளையும் நன்கு காப்பாற்று. அடக்கமுள்ளவனும் உன்தர்மத்தையனுஷ்டிப்

பதில் ஊக்கமும் மனத்திருப்தியுமுள்ளவனுமாயிரு. அதனால், க்ஷத்திரியதேகத்தைவிட்டபின் ப்ராம்மணஜன்மத்தையடைவாய்' என்று சொன்னர். யுதிஷ்டிர ! அந்தஅரசனும் அம்மஹரிஷியின்சொல்லைக் கேட்டுக் காட்டிலிருந்துவந்து திரும்பவும் தர்மமாகப் பிரஜாபரிபாலனம் செய்தான். அரசரிற்சிறந்தவனே! அந்தப்புழுவாயிருந்தஅரசன் பிரஜைகளைக்காப்பாற்றினபுண்ணியத்தினால் விரைவில்இறந்து ப்ராம்மணஜன்மத்தையடைந்தான். பிறகு, சிறந்தபுகழும் சிறந்தஞானமுமுள்ள வ்யாஸர் அப்போது அந்தப்ராம்மணனைப்பார்ப்பதற்கு மறுபடியும்வந்து, 'ஓ ! ஓ ! ப்ராம்மணஸ்ரேஷ்ட ! மகிமையுள்ளவனே ! நீ எவ்வகையிலும்துயரப்படவேண்டாம். தர்மந்தெரிந்தவனே ! அவனவன் தர்மத்திற்கும் ஆசாரத்திற்குந்தக்கபடி, புண்ணியஞ்செய்தவன் நல்லஜன்மங்களிலும் பாபம்செய்தவன் கெட்டஜன்மங்களிலும் பிறக்கிறார். புழுவே ! ஆதலால், மரணத்திற்குப்பயந்து எவ்வகையிலும் துயரப்படாதே. தர்மமென்னும்லாபத்திற்குமேற்பட்டது ஒன்றுமில்லை. தர்மந்தான் உத்தமம். அதனைச்செய்' என்றுசொன்னர். அந்தப்புழு, 'பகவானே ! உம்முடைய உதவியினால் ஸுகத்திலிருந்து மேலானஸுகத்தையடைந்தேன். எனக்குத்தர்மத்தினால் இப்போது புண்ணியங்கிடைத்துப் பாவம்ஒழிந்தது'என்றுசொல்லிற்று.ராஜனே! வ்யாஸபகவான் சொல்லினால் புழுவானது பெறுதற்கரிய ப்ராம்மணதேகத்தையடைந்தது; (க்ஷத்திரியனாயிருந்தபோது) பூமியில் நூற்றுக்கணக்கான யாகங்களின் யூபஸ்தம்பத்தினால் அடையாளம் செய்தது; பிறகு, ப்ரம்மஜ்ஞானிகளிற்சிறந்ததாகிப் ப்ரம்மலோகத்தையடைந்தது.குந்திபுத்ரனே! வ்யாஸர் சொல்லினால்புழுவானது பாவத்தைப்போக்கிப்புண்ணியபலன்களையும் நித்தியமான பரப்ரம்மத்தையும்அடைந்தது.புத்திரனே! புண்ணியக்ஷேத்ரமான குருக்ஷேத்ரத்தில்யுத்தத்தில்கொல்லப்பட்ட அந்தக்ஷத்ரியஸ்ரேஷ்டர்கள் புண்ணியகதியையே அடைந்திருக்கின்றனர். ஆதலால், நீ துயரப்படாதே" என்றார்.

நூற்றெண்பத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஞானம் தவம் தானம்இவற்றின் சிறப்பைப்பற்றி மைத்ரேயருக்கும் வ்யாஸருக்கும்நடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "ஸாதுக்களிற் சிறந்தபிதாமஹரே ! ஞானம் தவம் தானம்இவற்றுள் எது சிறந்தது ? உம்மைக் கேட்கிறேன் ; அதனை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

" இந்தவிஷயத்திலும் மைத்ரேயருக்கும் வ்யாஸருக்கும்நடந்த ஸம்வாதமாகிய ஒருபழையஇதிகாசத்தைக்கூறுகின்றனர். ராஜனே ! வ்யாஸர் யாருக்குந்தெரியாமல் ஸஞ்சரித்துக்கொண்டு காஶியில் [1]ஒரு வீட்டில் ஸ்வதந்திராதிகாரியான மைத்ரேயரிடம்சென்றார். ரிஷிஶ்ரேஷ்டரான மைத்ரேயர், வ்யாஸர் மாறுவேஷத்துடன் வந்திருப்பதை அறிந்து பூஜித்து உயர்ந்தபோஜனத்தைப் புஜிப்பித்தார்; சிறந்தமனமுள்ள வ்யாஸர் சுவைமுதலியகுணங்களுள்ளதும் வேண்டினவையெல்லாம்நிரம்பினதுமான அந்தஉயர்ந்தஅன்னத்தைப்புஜித்துத்திருப்தியடைந்து எழுந்திருக்கையில் நகைத்தார். வ்யாஸர்நகைப்பதை மைத்ரேயர்கண்டு அவரை நோக்கி, 'தர்மாத்மாவே ! நீர் நகைத்ததற்குக் காரணம் சொல்லும். சிறந்ததவமும் தைரியமுமுள்ளஉமக்கு மனச்சஞ்சலம் எதனால் வந்தது? வித்வானே! உம்மைநமஸ்கரித்து அபிவாதனம் செய்து இதை உம்மிடத்தில் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். இப்போது, உமக்குத் தவபாக்கியமும் எனக்குச் சுகபாக்யமுமிருக்கின்றன. ஐயா ! மஹாநுபாவரே ! தவச்செல்வத்திற்கும் ஸுகத்தைத் தரும்பொருட்செல்வத்திற்கும் தனித்தனிச்செய்கைகளிருக்கின்றன. தனித்தனிநடக்கைகளாகிய இவ்விரண்டிற்குமுள்ளவித்தியாஸம் சிறிதென்று நான் நினைக்கிறேன். தவச்செல்வம் எல்லாநன்மைகளையும் சேர்ப்பதனால் சிறந்ததென்றும்நினைக்கிறேன்' என்றுகேட்டார். வ்யாஸர், 'பொருளை மிகுதியாகச்செலவழித்ததனாலும் மிகுதியாக இன்சொற்சொன்னதனாலும் எனக்கு நகையுண்டாயிற்று. வேதவாக்கியம் பொய்யாமா ? வேதம் என்பொய்சொல்லும்? பிறருக்குத்துரோகம் செய்யக்கூடாதென்றும் கொடுக்கவேண்டுமென்றும் ஸத்தியம் சொல்லவேண்டுமென்றும் மூன்றுசொற்களாலே மனிதன்மேன்மையைப்பற்றிச் சொல்லுகின்றனர். இப்படி வேதத்திற்சொன்னதையே ரிஷிகள் முன்னமே அனுஷ்டித்திருக்கின்றனர். இப்போது நான் செய்வதும் முன்னமேகேட்டதும்இதுதான். தாகித்தவனுக்கு வெறுப்பில்லாதமனத்துடன் தண்ணீர்கொடுப்பது சிறியகொடையாயினும் பெரும்பலனைத் தருவதாகிறது. தேவர்கள் உம்மால் ஆராதிக்கப்பட்டனர். அதனாலேதான், என்னுடையதரிசனத்தை உமக்குக்கொடுத்து அனுக்கிரகித்தனர். பிரபுவே ! மஹாயாகங்களைச் செய்தவர்போலச் சிறந்தலோகங்களை ஜயித்தீர். இந்தப் பரிசுத்தமான தானத்தினாலும்

1 'ஸ்வைரிணஶ்ருலே' என்னும் பாடம் கொள்ளப்பட்டது. 'ஸ்வைரிணீகுலே' என்னும் பாடத்துக்கு, 'ஸ்வதந்திரமான ரிஷிக்கூட்டமிருக்கும் வீட்டில்' என்பது உரை.

தவத்திலும் மகிழ்ந்தேன். புண்ணியம்செய்பவனுடையமண்டூ த்திலேயே வீசுகிறது. புண்ணியத்தைப்பார்த்ததலும் எனக்கு ஸந்தோஷமுண்டானது. உம்முடையகல்லவாஸனை வீசுகிறது, அது உம்முடையகர்மானுஷ்டானத்திலுண்டானதென்று நினைக்கிறேன். ஐயா! சந்தனப்பூச்சிலுண்டாகும் வாஸனைபோன்றதுதான் ஸத் கர்மத்திலுல் ஸம்பாதிக்கப்பட்டவாஸனையும். ப்ராம்மணரே! தானந் தான் எல்லாப்புண்ணியங்களிலும் மேலான புண்ணியம். மற்றப்புண் ணியங்கள் இல்லாவிடினும் தானமே சிறந்ததாகும். வேதத்திற்சொ ன்னஎந்தஉயர்ந்தகர்மங்களை ரிஷிகள் சிலாகிக்கின்றனரோ அவற்று லெல்லாம் தானம் மிகச்சிறந்ததென்பதில் எனக்குஐயமில்லை. தானம் செய்தவர்களால்உண்டாக்கப்பட்டவழியில்தான் புத்திமான்கள் நடக் கின்றனர். அவர்கள் உயிரைக்கொடுப்பவர்களன்றே? அவர்களிடத் திலேதானே தர்மம் வேரூன்றியிருக்கிறது. நன்றாக வேதாத்யயனம் செய்வதும் இந்திரியங்களையடக்கித்தவம்செய்வதும் எல்லாவற்றை யும்விட்டு ஸந்யாஸம்செய்துகொள்வதும்போலவே தானமும் சிறந் தது. ஐயா! நீர் ஸுகத்திலிருந்தே மேலானநன்மையை அடையப் போகிறீரன்றே? புத்திசாலியானமனிதன் ஸௌக்கியத்திலிருந்தே அதிகஸௌக்கியலாபத்தை அடையலாம். இது நாம் கண்காட்சியா கப் பார்க்கக்கூடியவிஷயம்; ஸந்தேகமில்லை. பாக்கியமுள்ளவர்கள் பொருளையடைகின்றனர். அதனால், தானத்தையும் யாகத்தையும் அதன்பின் ஸுகத்தையும் அடைகின்றனர். சிறந்தபுத்தியுள்ளவரே! ஸுகத்திற்குப்பின்துக்கமும் துக்கத்திற்குப்பின்ஸுகமும் இயற்கை யாகவே நிச்சயமாகக் காணப்படுகின்றன. இவ்வுலகில் மனிதனுக் குப் புண்ணியமென்று பாவமென்று புண்ணியமும்பாவமுமல்லாதது வேறுஒன்று என [1]மூன்றுவகையான ஒழுக்கங்களைப் புத்திமான்கள் சொல்லுகின்றனர். [2]பிறருடையநல்லொழுக்கத்தை யாரும் நினைப்ப தில்லை. அவருடையபாவத்தைமட்டும் நினைக்கிறார்கள். அவனவனுக் குரிய கர்மத்திலுல்நடப்பது புண்ணியமுமன்று; பாவமுமன்று. யாக த்தையும் தானத்தையும் தவத்தையும்செய்யும்மனிதர்கள் புண்ணிய கர்மம் செய்பவர். பிராணிகளுக்குத் தீங்குசெய்யுஜனங்கள் பாவம் செய்பவர். பிறர்திரவியத்தைஅபகரிப்பவரும் துயரப்பட்டுக் கெடுகின் றனர். இவ்விருவகையில் சேராதகர்மங்கள் புண்ணியமும் பாவமும்

1 'த்ரிவிதானி' என்ற பாடம் கொள்ளப்பட்டது.

2 மேலேசொல்லும் இலக்கணங்களாலேயே புண்ணியபாவங்கள்தெரிந்து கொள்ளவேண்டும்.

அல்ல. லோபியாயிரா'தவன் எப்போதும் இனத்தாருடன் புழிக்கிருன். யாசிப்பவருக்குக் கொடும். அதிர்ஷ்டங்கெடுவதனல் திரவியங்கள் அழிகின்றனவேயன்றி அனுபவிப்பதனல் அழிவதில்லே. விளையாடும்; விருத்தியடையும்; உற்சாகமாயிரும்; கொடும்; கொடுப்பதில் ஆசை யோடிரும் ; ஞானிகளும் யோகிகளும் உமக்குமேலாகார் ' என்று சொன்னர்.

நூற்றெண்பத்துமூன்ருவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(மைத்ரேயருக்கும் வ்யாஸருக்கும் நடந்த ஸம்பாஷணைத்தொடர்ச்சி.)

பூர்வபுண்ணியத்தினல் மிக்கஐசுவரியமுள்ளகுலத்தில் பிறந்த வரும் சிறந்தபுத்தியும் நிரம்பினகேள்வியுமுள்ளவருமான மைத் ரேயர், வ்யாஸர்இவ்வாறுசொல்லக்கேட்டு, ' மிகத்தெரிந்தவரே ! நீர் என்ன சொல்லுகிறீரோ அதுஅப்படியேதான். ஸந்தேகமில்லே. பிரபுவே ! நான் உமதுஅனுமதியின்மேல் ஒன்றுபேசவேண்டும் ' என்றுசொன்னர்.

வ்யாஸர், 'சிறந்தபுத்தியுள்ள மைத்ரேயரே! நீர் எதைஎதைஎவ் வளவுஎவ்வளவு எப்படிஎப்படிச் சொல்லநினைக்கிறீரோ அதையதை யெல்லாம் அப்படிஅப்படியே சொல்லும். நீர் சொல்வதைக் கேட்க விரும்புகிறேன் ' என்றுசொன்னர்.

மைத்ரேயர், 'உமதுசொல் சொற்குற்றம்பொருட்குற்றமில்லாத தும் உண்மையுள்ளதுமாயிருக்கிறது. நீர் கல்வியினலும் தவத்தி னலும் பரிசுத்தபுத்தியுள்ளவரென்பதில் ஸந்தேகமில்லையே. நீர் பரி சுத்தாத்மாவாயிருப்பதனல் நீர்வந்தது எனக்கு மிகப்பெரியலாபம். மறுபடியும் என்புத்தியினல் நான் மிகநிரம்பினதவமுள்ளவனுக எண்ணி நினைக்கிறேன். மேலும்,உம்மைக்கண்டமாத்திரத்தினலேயே எனக்குப் பெருநன்மையுண்டாயிற்று. என்னறிவினலும் பூர்வபுண் ணியத்தின் இயற்கையினலும் உம்முடையஇந்தஅனுக்கிரகம் கிடை த்ததென்றுநினைக்கிறேன். தவம் கல்வி ஜன்மம்இவை பிராம்மணத் தன்மைக்குக் காரணங்கள். இம்மூன்றுகுணங்களுஞ்சேர்ந்து பிரம்ம சாரிவிரதல்நானம்செய்தவன் பிராம்மணனகிருன். அந்தப் பிராம்ம ணன்திருப்தியடைந்தால் பித்ருக்களும் தேவர்களும் திருப்தியடை கின்றனர். கல்வியுள்ளவர்களுக்குப் பிராம்மணனைத்தவிரச் சிறந்த

வர் யாருமில்லை. க்ஷத்திரியனும் வைசியனும் பிராம்மணனில்லாவிட்டால் உபநயனமுதலிய ஸம்ஸ்காரங்களில்லாமல் கெட்டுப்போகின்றனர். சூத்திரனும் நான்குஆஸ்ரமத்தாருக்கும் தகுந்தபடி பணிவிடை செய்யாமல் கெட்டுப்போகிறான். நான்கு வர்ணங்களும் புண்ணிய பாவங்களும் உண்மையும் பொய்யும் இல்லாமற்போனால் உலகமே குருட்டிருளாய்விடும். ஒன்றும் புலப்படாது. நன்றாகச்செவ்வைப் படித்தப்பட்டநிலத்தில் எப்படிமனிதன் பலனையடைகிறானே அப்படியே கல்வியுள்ளவனுக்குத்தானம்செய்பவன் தானபலனையடைகிறான். கல்வியும் ஒழுக்கமுமுள்ளபிராம்மணன் தானத்தைப்பெற்றுக் கொள்ளக்கிடைக்காமற்போனால் பணக்காரருடையபணம் வீணாகிவிடும். இப்படியே ஞானமில்லாதவன் அன்னத்தைக் கெடுக்கிறான். அந்தஅன்னமும் ஞானமில்லாதவனைக் கெடுக்கிறது. தெரியாதவன் எந்தஅன்னத்தைப்புஜித்துக் கெடுகிறானோ அந்தஅன்னம் மற்றொருவனுக்கிய அன்னம்போடுகிறவனையும் கெடுக்கிறது. வித்வான் அன்னத்தைப்புஜித்தால் அவன் மறுபடியும் அதைவிருத்திசெய்யுந்திறமையுள்ளவனென்றுசொல்லுகின்றனர். அவனும் அந்தஅன்னத்தினால் விருத்தியாகிறான். ஆதலால், இந்தவேறுபாடு நுட்பமானது. அன்னத்தைத் தான்உபயோகிக்காமல் பிராம்மணனுக்குக் கொடுக்கவேண்டும்; நிச்சயம். வித்வானவன் இறந்துபோனபித்ருக்களையும் தேவர்களையும் எப்போதும் கரையேற்றுவான். கொடுக்கிறவனுக்கு என்னபுண்ணியமிருக்கிறதோ அந்தப்புண்ணியமே வாங்குகிறவனுக்குமிருக்கிறது.[1] ஒருசக்கரத்துடன் வண்டியோடாதென்று ரிஷிகள் நினைக்கின்றனர். கல்வியும் ஒழுக்கமுமுள்ளபிராம்மணர் எங்கேயிருக்கின்றனரோ அங்கே தானத்தின்நல்லபயனை இம்மையிலும்மறுமையிலும் அடையலாம். பரிசுத்தமானபிறப்புள்ளவர்களும் எப்போதும்தவத்தில் பிக்ஷுக்களுள்ளவர்களும் தானமும் அத்யயனமுமுள்ளவர்களுந்தாம் எப்போதும் பூஜிப்பதற்குமிகஉரியவர்கள். தேவயானமென்னும் ஸ்வர்க்கமார்க்கம் அந்த ஸாதுக்களால் செய்யப்பட்டது; அதுமாறுவதில்லை. அவர்கள்தாம் எக்காலமும் யாகங்களை நடத்தி ஸ்வர்க்கத்திற்கு அழைத்துக்கொண்டுபோகிறவர்'என்றுசொன்னார்.

---

1 வாங்குகிறவன் கொடுக்கிறவன்.

நூற்றெண்பத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(மைத்ரேயருக்கும் வ்யாஸருக்கும்நடந்த ஸம்பாஷணைத்தொடர்ச்சி.)

மைத்ரேயர் இவ்வாறுசொல்லக் கேட்ட வ்யாஸபகவான், அவரைப்பார்த்துத் திரும்பவும் சொல்லலானார். 'நீர் இதனையறிந்திருப்பதும் உமதுஎண்ணம்இவ்வகையாயிருப்பதும் பாக்கியமே. இவ்வுலகம் குணங்களேயே அதிகமாகப்புகழ்கிறது. அழகினாலும் இளமையினாலும் செல்வத்தினாலும் கல்வியினாலும்உண்டாகும்கர்வங்கள் நல்லகாலமாக உம்மை மூடிக்கொள்ளவில்லை. இது உமக்குத் தேவர்களின் அனுக்கிரகம். ஆதலால், தானம்அதிககுணங்களுள்ளதென்பதைப்பற்றி உமக்குச்சொல்வேன். அதனைக்கேளும். இவ்வுலகத்திலுள்ளதர்மசாஸ்திரங்கள் அனுஷ்டானங்கள்அனைத்தும் வேதத்தைமுன்னிட்டுநாளடைவில் வந்திருக்கின்றன. நான் தானத்தைச் சிலாகிக்கிறேன். நீர் தவத்தையும் ஞானத்தையும் சிலாகிக்கிறீர். தவமானது வேதத்தைச் சுத்தப்படுத்துகிறது. தவம் ஸ்வர்க்கத்திற்குச் சாதனமாயிருக்கிறது. தவத்தினாலும் வித்தையினாலும் பெரும்பயனையடைகிறோனென்றும் நாம் கேட்டிருக்கிறோம். எவ்வகையான வேறுபாவம் இருந்தாலும் அதையெல்லாம் தவத்தினாலேயே போக்கிவிடலாம். வேதங்களில்கரைகண்டபிராம்மணன் என்னஎன்னபலனைக்கருதித் தவம்செய்கிறானே அவற்றையெல்லாம்அடைகிறான்.(பிறரால்)எட்டமுடியாததும் வெல்லமுடியாததும் (தவத்தாலன்றிப்) பெறமுடியாததும்தாண்டமுடியாததுமாகியஎல்லாவற்றையும் தவத்தினால் அடையலாம். தவம் எல்லாவற்றிலும் வலிது. கட்டுடியனும் பொன்னைத்திருடுகிறவனும் சிசுஹத்திசெய்கிறவனும் ஆசார்யன்மனைவியைச்சேருகிறவனும் தவத்தினால் எல்லாப்பாவங்களையும் தாண்டிப் பாவத்திலிருந்து விடுபடுகின்றனர். [1]எல்லாவற்றையும் அறிந்தவன் கண்ணுள்ளவன். தவமுள்ளவனை எப்படியிருந்தாலும் கண்ணுள்ளவனென்றே சொல்லுகின்றனர். அவர்களை எப்போதும் நமஸ்கரிக்கவேண்டும். கல்விச்செல்வமுள்ளவர் தவமுள்ளவர்அனைவரும் பூஜிக்கத்தக்கவர். தானங்கொடுப்பவர் இறந்தபின்ஸுகத்தையும் இவ்வுலகவாழ்க்கையில் செல்வத்தையும் அடைகின்றனர். பாக்கியசாலிகள் அன்னதானம்செய்வதனால் இந்திலோகத்தையும் பிரம்மலோகத்தை

1 வேறுபாடம்.

யும் அதற்கும்மேலான லோகத்தையும் அந்தலோகங்களிலுள்ள ஸுகங்களையும் அடைகின்றனர். இவர்களால் பூஜிக்கப்பெற்றவர்கள் இவர்களைப் பூஜிக்கின்றனர். இவர்களால் கௌரவிக்கப்பட்டவர்கள் இவர்களைக் கௌரவிக்கின்றனர். கொடுப்பவன் எங்கெங்கேபோனாலும் அங்கங்கே புகழப்படுகிறான். இவன் ஒருகர்மத்தைச்செய்தாலும் செய்யாவிட்டாலும் [1]அவ்வவற்றின்பலன்களை அடைகிறான்; மேலே போனாலும் கீழேயிருந்தாலும் தனக்குரியலோகங்களிலேயே ஸஞ்சரிப்பான். மைத்ரேயரே! நீர் ஒருகால் எந்தஅன்னங்களையும் பானங்களையும் கொடுப்பீரோ அவற்றைத் திரும்பவும் அடைவீர். நீர் புத்திசாலி; நல்லகுலத்திற்பிறந்தவர்; கல்வியும்தயையுமுள்ளவர்; இளம்பிராயமான மனைவியையுடையவர்; தவமுள்ளவர்; தானத்திலேயே ஊக்கத்தோடிரும்; கணவன் தன்மனைவியினிடம்மகிழ்ந்திருப்பதும் அம்மனைவியும்தன்கணவனிடம்மகிழ்ந்திருப்பதுந்தாம் கிருகஸ்தர்களுக்கு முதன்மையானசிலாக்கியமென்று அறியும். இவ்வாறு நடக்கும்வீட்டில் எல்லாக்கல்யாணங்களும் நடக்கும். மஹாநுபாவரே! தண்ணீரால் தேகத்திலிருக்கும் அழுக்கைச்சுத்தப்படுத்துவதுபோலவும் தீபத்தால் இருளைப்போக்குவதுபோலவும் தானத்தினாலும் தவத்தினாலும் விஷ்ணுவின்ஆராதனத்தினாலும் ப்ராம்மணன் பலக்கடலைக் கடந்துவிடுவான். தம்கருமங்களினால் ஸத்வகுணம் துலக்கமுற்றவரும் தவங்களினால் தூயமனமுள்ளவரும் வித்தையினால்அஜ்ஞானந்தீர்ந்தவருமானமனிதர்களைக்கரையேற்றுவதற்கு விஷ்ணுஇருப்பதாக நினைக்கப்படுகிறார். எக்காலமும் அவரிடத்தில் பக்திவைத்து அவருக்குஆராதனம்செய்து அவரை நமஸ்காரம்செய்யும். அஷ்டாக்ஷரமந்த்ரத்தைக்கைப்பற்றிஅவரிடம்பக்திவைத்தவர் கெடுவதில்லை. பிரணவத்தைத்தியானித்து உண்மைப்பொருளில் பக்திவைத்தவர் இவ்வுலகத்திலிருக்கின்றனர். அவர்களால்எல்லாப்பாவத்தையும்போக்கி ஆத்மாவைப் பரிசுத்தமாகச்செய்துகொள்ளக்கடவீர். மைத்ரேயரே! நன்மையையடையக்கடவீர். நல்லது. நான் வீட்டிற்குப் போகிறேன். நான் சொன்னதை மனத்தில் வைக்கவேண்டும். அதனால், நன்மையுண்டாகும்' என்றார். பிறகு, மைத்ரேயர் அவருக்குப் பிரதக்ஷிணநமஸ்காரங்களைச்செய்து கரங்குவித்துப் 'பகவானுங்களுக்கு க்ஷேமமாக இடம்சேரக்கடவீர்கள்' என்றுசொன்னார்" என்றார்.

[1] தானம்வாங்குபவரின் புண்ணியபலன்களை அடைகிறான்.

நாற்றெண்பத்தைத்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்த்ரீதர்மத்தைப்பற்றிய ஸுமனா சாண்டிலிகளின் ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "தர்மம்தெரிந்தவரெல்லாரிலும் சிறந்தவரே! பிதாமஹரே! பெண்களின்நல்லொழுக்கத்தைப்பற்றி உம்மிடம் கேட்கவிரும்புகிறேன். அதனை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"தேவலோகத்தில், கேகயராஜன் மகளாகிய ஸுமனையென்பவள் எல்லாப் பொருள்களும் அவற்றின் இயற்கைக் குணங்களும் தெரிந்தவளும் சிறந்த மனமுள்ளவளுமாகிய சாண்டிலி என்பவளைப் பார்த்து, 'சிறந்தவளே! என்னவழுக்கத்தினாலும் என்னசெய்கையினாலும் நீ எல்லாப்பாவங்களையும் போக்கித் தேவலோகத்திற்குவந்தாய். நீ உன்தேகஒளியினால் அக்நிஜ்வாலைபோல ஜ்வலித்துக்கொண்டும் இனிமையினால் சந்திரனது புதல்விபோலப் பிரகாசித்துக்கொண்டும் ஸ்வர்க்கத்திற்கு வந்திருக்கிறாய். தூயஆடைகளையுடுத்துக் களைப்பின்றி விமானத்திலேறிக்கொண்டு ஆயிரமடங்கு அதிகமான பிரபாவத்தோடு சிறந்தவளாக விளங்குகிறாய். அல்பமான தவம் தானம் விரதம்இவைகளினால் நீ இவ்வுலகம்வந்தவளல்லை. நீ எனக்கு உண்மையைச் சொல்லக்கடவாய்' என்றுகேட்டாள். ஸுமனைஇவ்வாறுகேட்க, சாண்டிலி அழகிய நகைமுகமுள்ளவளாகி, ஸுமனையைப்பார்த்து மதுரமாயும் சாந்தமாயும் பின்வரும்சொல்லைச் சொல்லலானாள். 'நான், காஷாயவஸ்திரங்களையுடுத்தும் மாவுரிகளைப் போர்த்தும் மொட்டையடித்துக்கொண்டும் சடைவளர்த்துக்கொண்டும் தேவதத்தன்மையடையவில்லை. நான் என்கணவருக்குவேண்டாத சொற்கள், கடிஞ்சொற்கள் இவற்றையெல்லாம் ஒருகாலும்பேசாமல் ஜாக்ரதையாயிருந்தேன்; தேவர்களையும் பித்ருக்களையும் பிராம்மணர்களையும் பூஜிப்பதில் தவறுதலின்றியும் எப்போதும் ஊக்கத்தோடு மாமியார் மாமனர்களுக்கடங்கியும் இருப்பவள்; கோட்சொல்லப் போகேன். அந்தஅண்ணம் என்மனத்திலுமிராது. நிற்கத்தகாத இடங்களில் நிற்கிறதில்லை. வெகுநேரம் பேசுவதில்லை. பிசகானசிரிப்பையும் கணவருக்குஇன்னதுசெய்கையையும் தெரிந்தும் தெரியாமலும் எவ்வகையாகவும் செய்யேன். காரியத்திற்காக வெளியிற்போன கணவர் வீட்டிற்குவந்தபோது பக்தியோடு ஆஸனம்கொடுத்துப் பூஜிப்பேன். எந்தஅன்னம் அவர்சாப்பிட்டுப்பார்க்கவில்லையோ, எந்த

ஆகாரத்தையும் பக்ஷணத்தையும்லேகியத்தையும்அவர்விரும்புவதில் லேயோ, அவற்றையெல்லாம் நான்விட்டுவிடுவேன். குடும்பத்திற்காகக் கணவராற் கொண்டுவரப்பட்டனவெல்லாம் செய்யத்தக்கவைகளே. நான் உடனே அவற்றையெல்லாம் செய்விப்பதும் செய்வதும் வழக் கம். தினந்தோறும் த்ரேதாக்கினிகளே ஊக்கத்துடன்காப்பாற்றி வீட் டைச் சுத்தமாகச்செய்வித்துப் பிள்ளைகளைவளர்த்துப் பெண்களைநன் னடையில் பழக்கிவருவேன். என்விருப்பங்களைவிட்டும் கர்ப்பத்தைக் காப்பதில் ஜாக்ரதையோடிருப்பேன். குழந்தைகளைத்திட்டுவதையும் துன்பப்படுத்துவதையும் அவர்மேல் கோபிப்பதையும் எப்போதும் விட்டிருப்பேன். என்வீட்டில் தான்யங்களைநைந்திரா. சோற்றுப்பரு க்கைஇறைந்திராது. வீட்டில் பசுக்களைப் புல்லாலும் தண்ணீராலும் என்தேகத்தின்இரத்தத்தைப்போலஅபிமானம்வைத்துப்பார்ப்பேன். எழுந்து சுத்தம்செய்துகொண்டு பிராம்மணர்களுக்குப் பிட்சைபோடு வேன். என்கணவர் ஏதோஒருகாரியத்தைப்பற்றி ஊரைவிட்டுப்போ வாராயின் அப்போது அநேகமங்களாசாரங்களையும் தவத்தையும் செய்துகொண்டிருப்பேன். கணவர் தேசாந்தரம்போனபோது மை யிடுவதையும் கோரோசனையையும் ஸ்நானம் செய்வதையும் புஷ்பசந் தனங்களையும் அலங்காரத்தையும் விரும்புவதில்லே. ஸுகமாகத்தூங் கினகணவரை அவஸரமானகாரியங்களுக்காகவும் ஒருகாலும் எழுப் பினதில்லே. அதனாலேதான், என்மனத்துக்குத்திருப்தியுண்டாகிறது. ஸுகமாகத்தூங்கும்கணவரை எழுப்பேன்.நோயுற்றகணவரைக் காப் பாற்றுவேன். குடும்பகார்யத்தைப்பற்றியும் ஒருகாலும் கணவரைக் கஷ்டப்படுத்தமாட்டேன். ரகஸ்யத்தை ஒருகாலும், வெளியிடேன். வீட்டைச் செத்தைகுப்பையின்றிச் சுத்தமாகவைத்திருப்பேன். இந் தத் தர்மமார்க்கத்தைச் சிரத்தையுடன் காப்பாற்றும் பெண்ணானவள் ஸ்திரீகளுள் அருந்ததிபோலவே ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படு வாள்' என்றாள். சிறந்ததவமும் சிறந்தபாக்கியமுமுள்ள அந்தச் சாண்டிலிதேவி இந்தப் பதிவ்ரதாதர்மத்தை ஸுமனைக்குச் சொல்லி அப்போதே அந்தர்த்தானமாஞள். பாண்டவனே ! இந்தச்சரித்தி ரத்தைப் புண்ணியகாலந்தோறும்படிப்பவன் தேவலோகத்தையடை ந்து நந்தனவனத்தில் ஸுகமாகவஸிப்பான்" என்றார்.

நூற்றெண்பத்தாருவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதர் விஷ்ணுஆராதனம் முக்கியமென்பதைப் புண்டரீகருக்கு உபதேசித்தது.)

யுதிஷ்டிரர், "மகாத்மாக்களால் அறியப்படுவதும் அநுஷ்டிக்கப்படுவதுமாகிய சிறந்தகர்மம்என்ன? எல்லாச்சாஸ்திரங்களின்ஸார த்தையும்எடுத்து அநுக்கிரகத்தினால் எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"ராஜனே! ஸம்ஸாரத்தைவிடுவிப்பதாகிய இந்தப்பரமரகஸ்யத் தைக் கேள். நீ இதைக்கேட்டு நன்றுகஅறியவேண்டும். முற்காலத் தில் புண்டரீகரென்னும்பிராம்மணர் புண்ணியதீர்த்தக்கரையில்ஜபம் செய்துகொண்டிருக்கும்போது யோகத்திலிருப்பவராகிய நாரதமுனி வரைக்கண்டு, 'எது சிறந்தது?' என்றுகேட்டார். அவருக்கு நாரதர், மகாத்மாவானபிரம்மதேவர் சொன்னதைச் சொல்லலானார். 'ஐயா! மிகச்சிறந்ததான ஞானயோகத்தைப்பற்றிச் சொற்சுருக்கமும்பொ ருள்விரிவுமுள்ளதும் வேதங்கள் தர்மசாஸ்திரங்கள் இவற்றின் அர்த் தங்களுக்குஒத்ததுமாகச் சொல்லுகிறேன். ஊக்கத்துடன் கேளும். ப்ரக்ருதிக்குமேற்பட்டபுருஷனென்பவன் இருபத்தைந்தாவதுதத்வ மென்று சொல்லப்பட்டிருக்கிறானன்றே? அவனேத்தான் எல்லாப் பிராணிகளுக்கும் ஆத்மாவாகிய நரன்என்றுசொல்வது.நரனிடத்தில் உண்டானமற்ற (இருபத்துநான்கு) தத்வங்களையும் நாரங்களென்று நினைக்கின்றனர். அவற்றை அயனமென்னும் இருக்குமிடமாகக் கொ ண்டிருப்பதனால் அவருக்கு நாராயணரென்று பெயர்வந்தது. ஸ்ரு ஷ்டிகாலத்தில் உலகமனைத்தும் நாராயணரிடத்திலிருந்தே உண்டா கிறது; பிரளயகாலத்தில் திரும்பவும்அவரிடத்திலேயே லயிக்கிறது. நாராயணர்தாம் பரப்பிரம்மம். அவரே பரதத்வம். பரத்துக்கும்பரம் அவரே. அவருக்குமேல்ஒன்றுமில்லை.வாஸுதேவரென்றும் விஷ்ணு வென்றும் ஆத்மாவென்றும் அவரையே நினைக்கின்றனர். அவர் ஒரு வரே பலபெயர்களினால்எல்லாச்சாஸ்திரங்களிலும்சொல்லப்படுகிறார். எல்லாச்சாஸ்திரங்களையும்கடைந்தும்பலமுறைஆராய்ந்தும்நாராயண ரை எப்போதும் தியானம்செய்யவேண்டுமென்பதுஒன்றுதான் நன்கு நிச்சயிக்கப்பட்டது. ஆதலால், நீர் சாஸ்திரங்களில் விரிவாகச்சொல் லப்பட்ட காடுகள்போன்றவைஎல்லாவற்றையும்விட்டு வேறுசிந்தை

மின்றி, ஜனனமில்லாதவரும் எங்குமிருப்பவருமான நாராயணரைத் தியானம்செய்யும்.சோம்பாமல்ஒருமுகூர்த்தமாயினும் நாராயணரைத் தியானம்செய்பவன் அவருடைய பதத்தை அடைகிறான். அவரையே எப்போதும்நினைத்திருப்பவன் அடையக்கேட்கவேண்டுமோ? 'நமோ நாராயணய' என்னும் அஞ்தியானமந்திரத்தை எவன் அறிகிறானே அவன் மரணகாலத்தில் அதைஜபிப்பதினால் அந்தவிஷ்ணுவின்பரம பதத்தை அடைகிறான். தன்நன்மையைக்கருதுகிறமனிதன் கேட்பது சிந்திப்பது பாடுவது துதிப்பது பூஜிப்பதுமுதலியகர்மங்களினால் அந்தப்பரப்பிரம்மத்தை எப்போதும் ஆராதிக்கவேண்டும்.நாராயணரைநம்மிளவனிடத்தில் பாவம் பற்றாது. அவர் உதயமான சூரியன்போல எல்லாஉலகத்தையும் பரிசுத்தமாகச்செய்கிறார். பிரம்மசாரி கிருகஸ்தன் வானப்பிரஸ்தன் ஸந்யாஸிஇந்தான்குஆஸ்ரமிகளும் விஷ்ணுவுக்குஆராதனம்செய்யாமல் பரகதியை அடைவதில்லை. அவரிடத்தில் பக்தியானது அனேகமாயிரம்ஜன்மங்களெடுத்தும் பெறுதற்கரிது. கல்லதவமுள்ளவரே! ஆதலால், பக்தர்களிடத்தில்கிருபையுள்ள அந்தப்பகவானை ஆராதிக்கக்கடவீர்' என்றார். நாரதர், இவ்வாறுசொல்ல, அந்தப்பிராம்மணர் ஹரியை ஆராதித்தார். தாமரைக்கண்ணரும் சங்கசக்ரகதைகளையேந்தினவரும் கிரீடத்தையும்குண்டலங்களையும் தரிப்பவரும் ஸ்ரீவத்ஸமும் கௌஸ்துபமும் மார்பில்விளங்குபவரும் தேவஸ்ரேஷ்டர்களுக்கும் ஈஸ்வரருமான அந்தப்பகவானைக்கனவிலும் பரபரப்புடன் நமஸ்கரித்தார். பிறகு, வெகுகாலமான பின் வேதபுருஷர்களாலும் தேவகந்தர்வகின்னர்களாலும்துதிக்கப்பெற்ற அந்தவிஷ்ணு பிரத்யக்ஷமானார். ஐம்புலன்களுக்கும் எட்டாதவரும் யோகிகளுக்குஆதாரமுமாகிய அந்தப்பகவானைவிஷ்ணுஎல்லாராலும் பூஜிக்கப்பெற்றவராய் அந்தப்புண்டரீகருடன்கூடவேதமது லோகத்திற்குச் சென்றார். அரசர்க்கரசே! ஆதலால், நீயும் அவரிடத்திலேயே பக்திசெய்து அவனரையே தஞ்சமாகக்கொண்டி ஆராதித்துத் தியானித்தபடி அந்தப்புருஷோத்தமரை அடையலாம்.ஜரையும் மரணமுமில்லாதவரும் ஒப்பற்றவரும் தியானிக்கத்தக்கவரும் ஆதியும்அந்தமுமில்லாதவரும்ஸகுணரும் அகுணருமாயிருப்பவரும் முதல்வரும் மிகப்பெரியவரும் மிக்கதுண்ணியவரும் உவமையற்றவரும் தாம்எல்லாவற்றிற்கும்உவமையாயிருப்பவரும் யோகிகளின் ஞானமட்டும்எட்டத்தக்கவரும் மூவுலகங்களுக்கும் ஆசாரியரும் ஈஸ்வரருமாயிருக்கும் விஷ்ணுவைச் சரணம் அடை" என்றார்.

நாற்றெண்பத்தேழாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(இன்சொல்லின்சிறப்பைப்பற்றி ஒராக்ஷஸனுக்கும் ஒருபிராம்மணனுக்கும்நடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "பரதஸ்ரேஷ்டரே! ஸாமதானங்கள்இரண்டனுள் எது மிகச்சிறந்ததென்று நீர்நினைப்பது? இவ்விரண்டனுள் மேலானதை எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"புருஷஸ்ரேஷ்டனே! ராஜனே! ஒருவன் இன்சொல்லினால் மகிழ்விக்கப்படுகிறான். மற்றொருவன் கொடையினால் திருப்திசெய்விக்கப்படுகிறான். மனிதர்களின் இயற்கையையறிந்து ஸாமதானங்களிரண்டில் ஒன்றைத் தழுவவேண்டும். இன்சொல்லின்குணங்களை முதலில் கேள். கொடியபிராணிகளையும் இன்சொல்லினால் வசப்படுத்தலாம். இந்தவிஷயத்தில் காட்டில் ஒருபிராம்மணன் ஒரு ராக்ஷஸனால் பீடிக்கப்பட்டு விடப்பட்டானென்னும் பழையஇதிஹாஸம் கூறுகின்றனர். அதைச் சொல்லுகிறேன். சிறந்தபுத்தியுள்ளஒருபிராம்மணன் மனிதரில்லாதஒருகானகத்தில் பக்ஷிக்கத் தொடங்கினஅரக்கனால் பீடிக்கப்பட்டுக் கஷ்டத்தையடைந்தான். சிறந்தபுத்தியும் நிரம்பினகல்வியுமுள்ள அந்தப்பிராம்மணன் மிக்க பயங்கரமான அந்தராக்ஷஸனைக்கண்டு அச்சப்படாமலும் விசனப்படாமலும் அவனுக்கு இனியசொல்லையே சொன்னான். ராக்ஷஸன் அவன்சொல்லுக்காக அவனைக்கொண்டாடி அவனைநோக்கி, 'நான் எதனால் வளருத்தும் இளைத்துமிருக்கிறேன்? இந்தக்கேள்விக்கு மறுமொழிசொல். விடுவாய்' என்றுகேட்டான். அந்தப்பிராம்மணன், அவனைப்பார்த்துச் சற்றுநேரம் ஆலோசித்துப் பயப்படாமலும் அவஸரப்படாமலும் கேள்விக்கு மறுமொழிகூறலானான்: 'நீ வேறுதேசத்திலும் வேறுஜனங்களிடத்திலும் இருந்துகொண்டு உன் அன்பரைவிட்டு ஒப்பற்றபோகங்களை அனுபவிக்கிறாய்; அதனால், வளருத்துமிளைத்துமிருக்கிறாய். ராக்ஷஸனே! உன்னால் செம்மையாக ஆதரிக்கப்பட்ட ஸ்நேஹிதர்களும்உன்பிழையினால்உன்னை விட்டிருக்கவேண்டும்; அதனால், வளருத்தும் இளைத்துமிருக்கிறாய். ஜீவனமில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தும் ஜீவனத்திற்குரிய உபாயங்களையெல்லாம்வெறுத்துப் பெரியலாபங்களை நீ எண்ணமிட்டுக்கொண்டிருக்கவேண்டும்; அதனால், வளருத்தும் இளைத்துமிருக்கிறாய். [1]தன

[1] வேறுபாடம்.

மும் அதிகாரமும் மிகுதியாகவுள்ளவர்களும் குணங்களில் உனக்கு மிகத்தாழ்ந்தவர்களுமான மனிதர்கள் கர்வத்தினால்உன்னை அவமதிக்க வேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். நீ சிறந்த ஞானிகளால்கற்பிக்கப்பட்ட புத்தியும் நல்லகுணங்களுமுள்ளவனாக இருந்தும் குணமில்லாதமற்றவர்கள்வெகுமானிக்கப்படுவதைப்பார்த் திருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். யோக் யனே! நீ உன்னுடையநற்குணத்தினால் உன்னைக்கஷ்டப்படுத்திக் கொண்டு செய்தநன்றியைப்பெற்றவனுவன் உன்னை ஏமாற்றினதாக நினைக்கிறான்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். காமக்குரோ தங்களினால் புத்திமறைக்கப்பட்டுத் தப்புவழிகளில்கஷ்டப்படும்ஜனங் களைப்பற்றி நீ சிந்திக்கிறாயென்று நினைக்கிறேன்; அதனால், வெளுத்து மிளைத்துமிருக்கிறாய். கெட்டநடக்கையுள்ளநீ தெரிந்தவர்களால் 1 கௌரவிக்கப்படாமலும் அவர்களால்இகழப்பட்டும் வெட்கமும் கோபமுமுற்றிருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக் கிறாய். நண்பனைப்போலத்தோற்றும்ஒருபகைவன் யோக்கியன்போல நடந்து உன்னை ஏமாற்றிப்போயிருக்கவேண்டும்; அதனால்,வெளுத்து மிளைத்துமிருக்கிறாய். நீ ஒருகாலத்தில்சொன்னஉயர்ந்தசொல் தெரிந் தவர்கள்ஸபையில் சோபிக்காமலிருக்கவேண்டும்; அதனால்,வெளுத்து மிளைத்துமிருக்கிறாய். இதற்குமுன் பார்க்கப்பட்டும் கேட்கப்பட்டும் இருக்கும் உன்மனத்திற்கினிய மனிதர்கள் கோபித்திருக்க அவர்க ளைச் சமாதானம்செய்யமுடியாமலிருக்கவேண்டும்; அதனால், வெளுத் துமிளைத்துமிருக்கிறாய். ஒருவன் தனக்குவேண்டினஒருகாரியத்திற் காக உன்னைஸம்பந்தப்படுத்தி எக்காலமும் உன்னை யாசித்துக்கொ ண்டிருக்கவேண்டும்; அதனால், நீ வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். யாரோ காணுதவிடத்தில் உன்மேல்பொய்ப்பழியைச்சொல்லி அதைக் கேட்டவர்களால் நிச்சயமாக நீ மதிக்கப்படாமலிருக்கவேண்டும்; அத னால், நீ வெளுத்துமிளைத்துமிருக்கிறாய்.நல்லகுணங்களைவிரும்பி அன் புடன் ஜனங்களைப்பூஜிக்கும்உன்னை வஞ்சகனென்று நிச்சயமாக அவர்கள் நினைக்கவேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கி றாய். உனக்குள்ளிருக்கும்எண்ணத்தை ஸமயம்வந்தபோது வெட்கத் தினால் தளர்ந்து வெளியிடமாட்டாமலிருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். உலகத்தில் பலஎண்ணங்களும் பல

1 வேறுபாடத்தில், 'புத்தியினால்கொண்டாடப்பட்டநீ புத்தியில்லாத அயோக்கியர்களினால் வஞ்சிக்கப்பட்டு வெட்கப்பட்டிருக்கவேண்டும்' என் பதுபொருள்.

விருப்பங்களுமுள்ளமனிதர்களெல்லாரையும் உன்குணங்களினால் நீ வசப்படித்தவிரும்பவேண்டும்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். எதிர்த்துப் பிடிவாதமாகநிற்கும்கெட்டவர்களிடத்தில் நற்குணங்களைப்பேசுகிற உன்னுடையகுணங்கள் பிரகாசியாமலிருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். தர்மமும் ஒழுக்கமும் கல்வியுமில்லாத நீ ஆசைபற்றி மேலானநிலைமையைக் கருதவேண்டும்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். தவத்தில்ஊக்கம்வைத்துக் காட்டிற்குப்போகவிரும்புகிறஉன்னை உறவினர் தடுக்கின்றனரென்று நினைக்கிறேன்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். மனைவியின்மேல் மிக்கஅன்புள்ள உன்னுடைய அண்டை வீட்டுக்காரன் மிகுந்தபொருளும் இளமைப்பருவமும் மிக்கஅழகும் காமமுமுள்ளவஞ்யிருக்கவேண்டும்;அதனால்,வெளுத்துமினேத்துமிருக்கிறாய். பிள்ளை அடங்காமல் கெட்டவனுகவும் மாப்பிள்ளைவீட்டைத் துடைப்பவனுகவும் மனைவிமூரண்படுகிறவளுமாகவும் இருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். ஸகோதரர்கள் முழுதும் ஒற்றுமையில்லாதவர்களாகவாவது தந்தை தாய் தமயன் ஆசாரியன் இவர்கள் பசியினால்வருந்தி இறந்தாவதிருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். முன்னர், பிராம்மணனையோ பசுவையோகொன்றாவது பிரம்மஸொத்தையும் தேவஸொத்தையும் உபயோககாலத்தில் எடுத்துக்கொண்டாவது இருக்கவேண்டும்; அதனால், வெளுத்தும் இனேத்துமிருக்கிறாய். பிராயமுதிர்ந்தபோது பிறரால் மனைவியபகரிக்கப்பட்டவனுகவாவது உலகத்தில் மனிதரால் பகைக்கப்பட்டவனுகவாவது ஞானமில்லாமலேபிராயமுதிர்ந்தவனுகவாவது நீ இருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். முதுமைக்காகப் பொருனேத்தேடிவைக்க அந்தப் பொருள் பிறரால் எடுத்துக்கொள்ளப்பட்டதாகவாவது ஜீவனத்திற்காகத்துஷ்டர்களை எதிர்பார்த்ததாகவாவது இருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். ஐயா! செல்வமிருந்தகாலத்தில் கெட்டஸ்நேகிதர்களால் உனதுதர்மம் கெடுக்கப்பட்டு அவர்களை விடவும் எண்ணமில்லாமலிருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். வித்தையில்லாதவனும் பயமுள்ளவனும் [1]பொருள்குறைந்தவனுமானநீ கல்வியினாலும் பராக்ரமத்தினாலும் கொடையினாலுமுண்டாகும்புகழை எக்காலமும் பிரார்த்திக்கிறாய்; அதனால், வெளுத்துமினேத்துமிருக்கிறாய். வெகுநாளாக எதிர்பார்த்திருந்த ஒரு

1 'அல்பார்த்த:' என்றபாடம் கொள்ளப்பட்டது.

பிரயோஜனம் பிறரால் அபகரிக்கப்பட்டு உனக்குக் கிடைக்காமலிருக்க வேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். மனமார உன்னிடத்தில் ஒருதோஷத்தையும் நீ அறியாமலிருக்கும்போது நிஷ்காரணமாகப் பழிசுமத்தப்பட்டிருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். கஷ்டப்படும் ஸ்நேகிதர்களுக்கு கஷ்டத்தினால் உண்டான துயரத்தை, உன்னிடம் போதுமானபொருளும் குணமுமில்லாமையினால் நீ போக்கமாட்டாமலிருக்கவேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். கிருகஸ்தர்களும் வானப்பிரஸ்தர்களும் வீட்டில்பற்றில்லாத ஸந்யாஸிகளும் [1]ஸாதுக்களாயிருப்பதைப் பார்க்கிறாய்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். நீசொல்வது தர்மார்த்தகாமங்கள் மூன்றும்பொருந்தியிருந்தும் தேசத்தில் பயன்படாமல் விடப்படுகிறது; அதனால்,வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். புத்திசாலியானநீ ஜீவித்திருக்கவேண்டியதற்காக மூடர்களால் கொடுக்கப்பட்ட பொருள்களைவாங்கி ஜீவிக்கவேண்டும்; அதனால்,வெளுத்துமிளைத்தும் இருக்கிறாய். தனக்குவேண்டியவர்களைத்தடுத்து ஒருவரோடு ஒருவர் சண்டைபோடுகிறவர்களுக்கு நீ நன்மைசெய்யக் கருதவேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய். பாவிகள் ஓங்குவதையும் நல்லவர்கள் கஷ்டப்படுவதையும்பார்த்து [2]அதிர்ஷ்டத்தை நீ நிந்திக்கவேண்டும்; அதனால், வெளுத்துமிளைத்துமிருக்கிறாய்' என்றான். அந்தப்பிராம்மணனால் இவ்வாறுகௌரவிக்கப்பெற்றராக்ஷஸன் அவனுக்குஏராளமரியாதைசெய்து அவனைத் தனக்குத் துணையாகச்செய்து கொண்டு பிறகு மரியாதையோடு அனுப்பினான்" என்றார்.

நூற்றெண்பத்தெட்டாவது அத்யாயம்.

தர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தேவதூதனுக்கும் இந்திரனுக்கும் ரிஷிகளுக்கும் பிதுருக்களுக்கும் பிரஹஸ்பதிக்கும் சிராத்தத்தைப்பற்றிநடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே ! நன்மையைக்கருதுகிறவழைகர் மங்கள்பலிக்கும் பூமியும் கிடைக்கமிகஅரிதுமான மானிடஜன்மத்தையடைந்து செய்யத்தக்கதென்ன? தானங்களில் உத்தமமான

---

[1] ஸாதுவாயில்லாதவனுக்கு ஸாதுக்களைப் பார்த்தால்வருத்தம் என்பது கருத்து.

[2] 'தைவம்' என்று பாடம்கொள்ளப்பட்டது.

தானம் எது ? எவ்வெவற்றை எப்படியெப்படி கொடுக்கவேண்டும் ? கங்காபுத்ரரே! வெகுமானிக்கத்தக்கவரும் பூஜிக்கத்தக்கவரும் யார் ? இந்த ரகஸ்யத்தைச் சொல்லக்கடவீர்" என்றுகேட்டார். புகழ்பெற்ற தர்மராஜரால் இவ்வாறு கேட்கப்பட்ட பீஷ்மர், தர்மங்களின் பரம ரகஸ்யத்தை அவ்வரசருக்குச் சொல்லலானார்.

"பாரதனே ! ராஜனே ! தர்மரகஸ்யங்களை முன்னர் வ்யாஸபகவான் எனக்குச்சொன்னபடி சொல்லுகிறேன். ஊக்கத்துடன் கேள். அரசனே ! இது தேவரகஸ்யம். சிறந்தகாரியமுள்ள யமன் நியமத்தோடும் ஊக்கத்தோடும் பெருந்தவம்செய்து பலனையடைந்தான். இதனால், தேவர்களும் பித்ருக்களும் ரிஷிகளும் ப்ரமதகணங்களும் ஸ்ரீதேவியும் சித்ரகுப்தனும் திக்குயானைகளும் திருப்தியடைகின்றனர். இதுதான், ஸூக்ஷ்மமும் பெரும்பலனுள்ளதுமாகிய ரிஷி தர்மமென்றுசொல்லப்படுகிறது. மகாதானங்களின்பலன்களும் எல்லாயோகங்களின் பலன்களும் இதனாலுண்டாகின்றன. குற்றமற்றவனே ! இதை இவ்வாறுஅறிகிறவனும் அறிந்துசெய்கிறவனும் பாவமுள்ளவராயிருந்தாலும் இல்லாதவராயிருந்தாலும் அதனாலுண்டாகும் சிறப்புக்களையடைவார். ஒருசெக்கு பத்துக்கசாப்புக்கடைகளுக்குச்சரி; ஒருசாராயக்கடை பத்துச்செக்குகளுக்குச்சரி ; ஒருவேசித்தொழில் பத்துச்சாராயக்கடைகளுக்குச்சரி ; ஓர் அரசன் பத்து வேசிகளுக்குச்சரி. இவர்களனைவரும் ஒருபங்கு; அரசன் [1]இவர்களெல்லாரிலும் அதிகமென்றுசொல்லப்படுகிறான். தர்மார்த்தகாமங்கள் மூன்றையும்தெரிவிக்கும்சாஸ்திரங்கள் பரிசுத்தமானவை ; புண்ணியத்தைத்தெரிவிப்பவை. அவற்றிலும் தர்மசாஸ்திரம் மிகப்புண்ணியம். ஸூக்ஷ்மத்தைத்தெரிவிக்கும்சாஸ்திரம் மிகப்பெரிது. தர்ம முள்ள சாஸ்திரங்கள் தேவர்களாலேயே செய்யப்பட்டவை. அவை கேட்கவேண்டியவை. அவற்றில் சிராத்தத்திற்குரிய பித்ருக்களின்ரகஸ்யங்களும் எல்லாத்தேவர்களின்ரகஸ்யங்களும் முழுதும்சொல்லப்படுகின்றன ; ஸூக்ஷ்மவிஷயங்களுள்ளதும் பெரும்பயனைத்தருவதுமாகிய ரிஷிதர்மமும் மஹாயாகங்களின்பலன்களும் எல்லாத்தானங்களின் பலன்களும் சொல்லப்படுகின்றன. அவற்றை எப்போதும் படிக்கிறவரும் அவற்றைமறவாமலிருக்கிறவரும் கேட்டுப் பிறருக்குப் பலனைச்சொல்லுகிறவரும் ஸாக்ஷாத்நாராயணரே. அதிதிகளைப்பூஜிக்கும் மனிதன் கோதானபலனையும் தீர்த்தஸ்நானபலனையும் யாகபலனையும் அடைவான். சிரத்தையுடனும் மனச்சுத்தத்துடனும்கேட்கிற அந்தச்

[1] இவர்களிடம் ஒன்றும் வாங்கக்கூடாதென்பது.

சிரத்தையுள்ள ஸாதுக்கள் உலகங்களேயே ஜயித்தவராகிறார்; துன்பத்திலிருந்து விடுபடுகிறார். பாவம் அவர்களைப் பற்றுவதில்லை. இறந்தபின், அவர்கள் மேலுலகம்போய் அழியாதலைமகத்தையடைவார். ஒருகால், தேவதூதன் தற்செயலாய்வந்து அந்தர்த்தானமாயிருந்து இந்திரனைப்பார்த்துப் பேசினான். 'யாவரும் விரும்பத்தக்க குணங்கள் பொருந்தினவரும் வைத்தியர்களிற் சிறந்தவருமான அஸ்வினிதேவர்களின்கட்டளையினால் ரிஷிகளும் பித்ருக்களும் தேவர்களும் சேர்ந்த ஸபைக்கு நான் வந்திருக்கிறேன். சிராத்தத்தில் கொடுப்பவனுக்கும் புஜிப்பவனுக்கும் ஸ்திரீசம்பந்தத்தை நிஷேதித்திருப்பது எதனால்? மூன்றுபிண்டங்களைத் தனித்தனியே பகுத்துவைப்பது எதற்காக? முதற்பிண்டம் யாருக்குக்கொடுக்கவற்பட்டது? நடுவிலிருப்பது யாரைச்சேருகிறது? கடைசியிலிருப்பது யாருடையது? இதை அறிந்துகொள்ளவிரும்புகிறேன்' என்றான். அந்தத்தூதன் சிரத்தையுடன்சொன்ன தர்மப்பிரஸ்னத்தைக்கேட்டு, இந்திரன்மூன்னின்ற தேவர்கள் பித்ருக்களனைவரும் அந்தத்தூதனைக் கொண்டாடினர். பித்ருக்கள், 'ஆகாயத்திற் சஞ்சரிப்பவரிற்சிறந்தவனே! உனக்கு நல்வரவும் மங்களமும் உண்டாகக்கடவன. கேள். ரகஸ்யமானவிஷயங்களடங்கின சிறந்தபிரஸ்னம் உன்னால கேட்கப்பட்டது. சிராத்தத்தைக்கொடுத்தும் புஜித்தும் எந்தமனிதன் ஸ்திரீயைச் சேருகிறானே அவனுடைய பித்ருக்கள் அந்தமாஸமுழுதும் அந்தரேதஸில் படுத்திருக்கின்றனர். பிண்டங்களின்பிரிவைப்பற்றி வரிசையாகச் சொல்லுவாம். அடியிலிருக்கும்பிண்டமானது ஜலத்திலபிரவேசித்துக் கர்த்தாவைப் பரிசுத்தமாகச்செய்யும். நடுப்பிண்டத்தைக் கர்த்தாவின்பத்நி ஒருத்திமட்டுமே புஜிக்கலாம். அவளறின் மூன்றாவது பிண்டத்தை அக்நியில போடவேண்டும் [1]இந்தச்சிராத்தவிதியைத் தர்மங்கெடாமலிருக்கும்படி சொன்னோம். அவனுடையபித்ருக்கள் எப்போதும் மனமகிழ்ந்து திருப்தியாயிருப்பார். அவனுக்கு ஸந்ததி விருத்தியாகிறது. அவனுக்கு அழியாதபுண்ணியம் வருகிறது' என்றுசொன்னார்கள். தேவதூதன், 'பித்ருக்களுக்குக் கொடுக்கும் மூன்று பிண்டங்களும் தனித்தனியாகப் பிரிந்துபோவதைப்பற்றிஉங்களால் வரிசையாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டது. எடுக்கப்படும்முதற்பிண்டம் ஜலத்தில்போடப்பட்டு யாரைச்சேருகிறது? எந்தத்தேவதைக்குத் திருப்தியையுண்டாக்குகிறது? எப்படிப் பித்ருக்களைக் களையேற்றுகிறது? அப்போது நடுப்பிண்டத்தைப் பற்றி

[1] ஜலத்தில் போடவேண்டுமென்பது.

யானவள் அனுமதிகொடுக்கப்பெற்றுப் புஜிப்பது எதற்காக? அவன் பித்ருக்கள், ஹோமம்செய்யப்பட்டதைத்தானே புஜிக்கிறார்கள். இவற்றுள், அக்நியைச்சேரும்கடைசிப்பிண்டத்தின்கதி என்ன? அது யாரைச்சேருகிறது? இப்படி இம்மூன்றுபிண்டங்களின்முடிவையும் பலனையும்செய்கையையும்முறையையும் எது யாரைச்சேருமென்பதையும் நான் கேட்கவிரும்புகிறேன்' என்றுசொன்னான். பித்ருக்கள், 'ஆகாயத்தில்ஸஞ்சரிப்பவனே! உன்னால்கேட்கப்பட்டஇந்தக்கேள்வி மிகப்பெரிது. ஆச்சர்யமான ரகஸ்யத்தை நீ கேட்டாய். தேவர்களும் ரிஷிகளும் இதைத்தான் சிலாகிக்கின்றனர். நீண்டகாலம் ஜீவிப்பவரும் சிறந்தமஹாத்மாவுமாகிய மார்க்கண்டேயரைத்தவிர மற்றத் தேவர்களும் ரிஷிகளும் பித்ருகாரியத்தின்நிச்சயத்தை அறியார். அந்தப்பிராம்மணர் பித்ருபக்தியுள்ளவராய் வரம்பெற்றுப் பெரும்புகழ்ள்ளவரானர்' என்றார்கள். சிராத்தவிதியின்நிச்சயத்தையும்மூன்றுபிண்டங்களின்முடிவையும்பற்றிப் பகவானிடம் கேட்டறிந்த மார்க்கண்டேயர் தேவதூதனால்வினவப்பட்டுச் சொல்லலானர்.

'சிறந்தபுத்தியுள்ளவனே! மூன்றுபிண்டங்களின் முடிவையும் ஊக்கத்துடன் என்னிடம் கேள். ஜலத்தில் போகும்பிண்டம் சந்திரனை ஸந்தோஷப்படுத்துகிறது. சந்திரன் தேவர்களையும் பித்ருக்களையும் திருப்தியடைவிக்கிறான். ப்ராம்மணர்களால் அனுமதிகொடுக்கப்பெற்றபத்நி நடுப்பிண்டத்தைப் புஜிப்பதனால் பித்ருக்கள் புத்ரனை விரும்புகிற கர்த்தாவுக்குப் புத்ரனைக்கொடுக்கின்றனர். அக்நியில் போடப்படும் பிண்டத்தைப்பற்றியும் என்னிடம்தெரிந்துகொள். அதனால், பித்ருக்கள், திருப்தியடைகின்றனர்; திருப்தியடைந்து விரும்பினவற்றைக் கொடுக்கின்றனர். இப்படி மூன்றுபிண்டங்களின்முடிவையும்பற்றி உனக்குப்பூர்ணமாகச்சொன்னேன். சிராத்தஞ்செய்விப்பவனும் சிராத்தம்செய்பவன்போலச் சிராத்தவிரதத்தைஅனுஸரிக்கவேண்டும். அதாவது, அந்தத்தினத்தில் ஸ்த்ரீஸம்பந்தத்தைவிடவேண்டுமென்று நினைக்கின்றனர். தேவதூதரிற்சிறந்தவனே! சிராத்தத்தில் புஜிப்பவனும் எப்போதும் பரிசுத்தனாகவே புஜிக்கவேண்டும். நான் எவற்றைக் குற்றங்களாக உனக்குச்சொன்னேனோ அவை அப்படியேதாம்; மாறுகா. ஆதலால், ப்ராம்மணன் ஸ்நானம்செய்து பரிசுத்தனாகிப் பொறுமையோடு சிராத்தத்தில் புஜிக்கவேண்டும். கொடுப்பவனும் அப்படியே கொடுக்கவேண்டும். அதனால், ஸந்ததி விருத்தியாகும்' என்றுசொன்னர். அங்கே வித்யுத்ப்ரபனென்னும் சிறந்ததவமுள்ளரிஷி இருந்தார். அவருடையஒளி சூரியன்ஒளிக்குச் சமமாகப்

பிரகாசித்தது. அவரும் இந்தத்தர்மஸூக்ஷுமங்களைக்கேட்டு இந்திரனைப்பார்த்து, 'மனிதர்கள் அறிவுகெட்டவர்களாகி விலங்குஜாதிகளில் பிறந்த புழுக்கள் எறும்புகள் ஸர்ப்பங்கள் ஆகிகள் மான்கள் பக்ஷிகள். முதலான ஜந்துக்களைக் கொல்லுகின்றனர்; மிகஅதிகமான பாவத்தை அடைந்திருக்கின்றனர். அவர்களுக்கு என்னபரிகாரம்?' என்றுகேட்டார். பிறகு, தேவக்கூட்டத்தாரனைவரும் தவமே தனமாகப்பெற்ற ரிஷிகளும் மஹானுபாவர்களானபித்ருக்களும் அம்முனிவரைச் சிலாகித்தனர். இந்திரன், 'குருக்ஷேத்திரம் கயை கங்கை பிரபாஸதீர்த்தம் புஷ்கரக்ஷேத்திரம்இவற்றை மனத்திலுல்தியானித்துப் பிறகு ஜலத்தில் ஸ்நானம்செய்யவேண்டும். அப்படிச்செய்தால் மனிதன் ராகுவினுல் சந்திரன்விடப்படுவதுபோலப் பாவத்திலுல்விடப்படுவான். பசுக்களின்பின்புறத்தையும் வாலையும்தொட்டு நமஸ்கரிப்பவன் மூன்றுநாள் ஸ்நானமும் உபவாஸமும்செய்தவனுகிறான்'என்று சொன்னன். அதன்பிறகு,வித்யுத்பிரபர் இந்திரனைப்பார்த்து, 'ஓ! இந்திரனே! மிக்கஸூக்ஷுமமான தர்மம் சொல்லப்போகிறேன். அதைக்கேள். (மனிதன்), ஆலம்விழுதின்கஷாயத்தால்உடம்பைத்தேய்த்துத் தினமாலைப்பூசி ஸ்நானம்செய்தபிறகு அறுபதாங்குறுவையன்னத்தைப் பாலுடன்புஜித்தால், எல்லாப்பாவங்களாலும் விடப்படுவான். ரிஷிகளால் சிந்திக்கப்பட்டமற்றொருமுக்கியமானரகஸ்யத்தையும் கேட்கவேண்டும். தேவேந்திரனே! இந்திராணியின்சணவனே! சிவலோகத்தில் சிவனுடன்பிருஹஸ்பதிபேசிக்கொண்டிருக்கையில்இதை நான் கேட்டேன். மலைமேலேறிச் சிறந்ததவத்துடன் ஆகாரத்தை விட்டு ஒற்றைக்காலால்நின்று கைகளை உயரவெடித்துக் கரங்களைக் குவித்துக்கொண்டு சூரியனைப் பார்த்திருக்கவேண்டும். அதனால், உபவாஸங்களின் பலனையடையலாம். சூரியகிரணங்களால் தாபமூண்டாக்கப்பட்டவன் எல்லாப்பாவங்களையும் விட்டுவிடுவான். வெய்யிற்காலத்திலாவது பனிக்காலத்திலாவது இப்படிச்செய்தால் பாவம் போம். பாவம்விட்டபிறகு அழியாதஒளியுண்டாகும். ஒளியினுல் சூரியனைப்போலவும் சந்திரனைப்போலவும் விளங்குவான்' என்று சொன்னர். தேவர்களுக்கு அரசனுகிய இந்திரன் தேவக்கூட்டத்தின்நடுவில் பிருகஸ்பதியைப்பார்த்து, 'பகவானே! மனிதர்களுக்குச் சுகத்தைச்செய்வதாகிய தர்மரகஸ்யத்தையும் தோஷங்களையும் அவற்றின்தூட்டங்களையும் முழுதும் சொல்லக்கடவீர்' என்னும் சிறந்த இன்சொல்லைச் சொன்னன். பிருகஸ்பதி, 'இந்திரனே! சூரியனுக்கு எதிரே மூத்திரம்விடுகிறவர்களுக்கும் காற்றைப்பகைப்பவருக்கும்

ஜ்வலிக்கின்ற அக்நியில் ஸமித்துக்களைப்போடாதவருக்கும் இளங் கன்றுள்ளபசுவைப் பாலுக்காகக் கறப்பவருக்குமுள்ள தோஷங்களைச் சொல்வேன். அவற்றைக் கேள். வாஸவனே! சூரியன் காற்று அக்நி பசுக்கள் ஆகியஇவர்கள் உலகங்களுக்குத்தாய்களாகப் பிரம்மதேவ ரால் படைக்கப்பட்டவர். இந்தத்தேவதைகள் மனிதர்களை மேலுல கங்களுக்குக்கொண்டுபோகத் திறமையுள்ளவர்கள். ஒவ்வொன் றிலுமுள்ளதர்மத்தின் நிச்சயத்தை நீங்கள் எல்லாரும் கேட்கவேண் டும். சூரியனுக்கு எதிராக மூத்திரம்விடுகிறவர்கள் புருஷர்களா யினும் ஸ்திரீகளாயினும் எண்பத்தாறுவருஷம் கெட்டஒழுக்கமுள்ள வர்களாகவும் குலத்தைக்கெடுப்பவர்களாகவுமிருப்பர். இந்திரனே! காற்றைப்பகைப்பவனுக்கும் ஸந்ததி கர்ப்பத்திலேயே கரைந்துபோ கும். ஜ்வலிக்கின்ற அக்நியில் ஸமித்துக்களைப்போடாதவர் செய்யும் அக்நிகார்யங்களில் அவர்கள் ஹோமஞ்செய்யும்ஹவிஸை அக்நிபக வான் புஜிப்பதில்லை. [1]இளங்கன்றுள்ளபசுவின்பாலை எவர்கள் குடிக்கின்றனரோ அவர்களின் வம்சங்களை விருத்திசெய்வதற்குப் பால்குடிக்கும்குழந்தைகள் ஒன்றும் உண்டாவதில்லை. இருக்கிற ஸந்ததிகளும் அழிந்துபோகும். குலவிருத்தியும் குறைந்துபோகும். குலத்தில்பெரியோர்களானபிராம்மணர்களிஞல் இது இவ்வாறு முன் னமே கண்டறியப்பட்டது. ஆதலால், நன்மையைக் கருதுகிறமனி தன் விடவேண்டியவற்றை விடவேண்டும்; செய்யவேண்டியவற்றை எப்போதும் செய்யவேண்டும். இதை ஸத்தியமாக உனக்குச் சொல் லுகிறேன்' என்றுசொன்னர். அதன்பிறகு, மகாநுபாவர்களான தேவர்கள் மருத்துக்கள் ரிஷிகள்அனைவரும் அங்குள்ளபித்ருக்களைப் பார்த்து, 'ஐயா! அற்பமானமனமுள்ளமனிதர்களிடத்தில் பித்ருக் கள் திருப்தியடைவது எதஞல்? சிராத்தங்களில் செய்யும்தானம் எப் படி அக்ஷயமாகும்? எந்தக்கர்மம் செய்வதஞல் மனிதர்கள் கடன்தீர்ந் தவராவார்? இதையெல்லாம் கேட்கவிரும்புகிறோம். எங்களுக்கு மிக்கஆவலிருக்கிறது' என்றுகேட்டனர். பித்ருக்கள், 'ஓ! மஹாநு பாவர்களே! நீங்கள் ஸந்தேகங்கேட்டது நியாயந்தான். நல்லகர்மம் செய்யும் மனிதர்கள்விஷயத்தில் நாங்கள்எப்படித்திருப்தியடைகிறோ மென்பதைக் கேளுங்கள். கறப்புக்காளையைவிடுவதஞலும் அமா வாஸையில் எள்ளும்ஜலமும் விட்டுத் தர்ப்பணம்செய்வதஞலும் மழைக்காலத்தில் தீபம்வைப்பதஞலும் பித்ருக்களின்கடன் தீர்ந்தவஞ வான். உண்மையோடுசெய்யப்படும்இந்தத்தானமானது பெரும்பயன்

[1] ஒருமாதக்கன்று.

உள்ளது; அக்ஷயம், எங்களுடையஸந்தோஷந்தான்அக்ஷயமென்று சொல்லப்படுகிறது. எந்தமனிதர்கள் சிரத்தையுடன் ஸந்ததியுண்டு பண்ணுகின்றனரோ அவர்கள் பித்ருக்களைக் கஷ்டமானநரகத்தினின்று கரையேற்றுவார்' என்றுசொன்னார்கள். சிறந்த மஹிமையுள்ள வ்ருத்தகார்க்கியரென்னும்முனிவர், பித்ருக்களின் சொல்லைக்கேட்டு மயிர்பொடித்தவராய் அவர்களைநோக்கி, 'தவமே தனமாகவுடையவர்களே! கறுத்தகாளையை விடுவதனாலும் மழைக்காலத்தில் தீபமேற்றுவதனாலும் எள்ளும்ஜலமும்விட்டு அமாவாஸையில் தர்ப்பணம்செய்வதனாலும் என்னபயன்கள் உண்டாகும்?' என்றுகேட்டார். அதற்கு, பித்ருக்கள், 'கறுத்தகாளையின்வால் தண்ணீரையெடுத்திறைக்குமாயின் அந்தஜலத்தினால் பித்ருக்கள் அறுபதினாயிரம் வருஷங்கள் திருப்தியடைவிக்கப்பட்டவராவார். அந்தக்காளைமாடானது கரையை இடித்துஎடுத்தமண்ணைக் கொம்பில்வைத்திருக்குமாயின் அதனால் பித்ருக்கள் சந்த்ரலோகத்திற்குப் போவது நிச்சயம். மழைக்காலத்தில்விளக்குவைக்கும்மனிதன் சந்த்ரனைப்போல விளங்குவான். தீபங்கொடுப்பவனுக்கு இருண்டநிறமேயிராது. தபோதனரே! அத்திக்கட்டையினால்செய்த பாத்திரத்தையெடுத்துக்கொண்டு தேனுடன் சேர்ந்தஎள்ளுஜலத்தை அமாவாஸையில்விடுகின்றமனிதர்கள் சிராத்தத்தை ஸாங்கமாகவும் ஸரியாகவும் செய்தவர்களாகிறார்கள். அவருடையஸந்ததியார்கள் எப்போதும் மனமகிழ்ச்சியும் செல்வமுமுள்ளவர்களாயிருப்பார்கள். பிண்டங்கொடுப்பவனுக்கு ஸந்ததி மேன்மேலும் வ்ருத்தியாவதுதான் பலன். இவற்றைச் சிரத்தையுடன் செய்பவன் பித்ருக்களின்கடன்தீர்ந்தவனாவான். இவ்வாறு சிராத்தத்தினுடைய காலமும் வகையும் அதன்விதியும் அதற்குரியவனும் அதன்பயனும் உள்ளபடிசொல்லப்பட்டன.

நாற்றொண்பத்தொன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(விஷ்ணுமுதலானதேவர்களும் பலதேவர்முதலான ரிஷிகளும் கோக்களும் சொல்லியதர்மங்கள்.)

'உமக்கு எதனால் அன்புண்டாகும்? நீர் திருப்தியடைவது எப்படி?' என்றுதேவேந்த்ரனால்கேட்கப்பட்ட ஈச்வரரான மகாவிஷ்ணு சொல்லலானார். 'ப்ராம்மணர்களைநிந்திப்பது எனக்குப் பெரும்பகை

செய்வதாகும். எப்போதும் பிராம்மணர்கள் பூஜிக்கப்படுவதனால் நான் பூஜிக்கப்படுவேனென்பது நிச்சயம். தினந்தோறும் போஜனத்திற்குப்பிறகுபிராம்மணஸ்ரேஷ்டர்களையும் [1]என்னுடையபாதங்களையும் வந்தனம்செய்து என் சக்ராயுதத்திற்குப் பூஜைசெய்பவரான மனிதர்விஷயத்தில் நான் அனுக்கிரகம்வைக்கிறேன். [2]குள்ளஞானபிராம்மணனையும் தண்ணீரினின்றுகரையேறினபன்றியையும் பார்த்துப் பூமியிலிருந்து எடுத்தமண்ணைச் சிரஸில்வைத்துக்கொள்ளுகிறவர்களுக்கு ஓர் அமங்களமும் பாவமும் உண்டாகா. அரசமரத்தையும் கோரோசனையையும் பசுவையும் எக்காலமும்பூஜிக்கிறமனிதனால் தேவர்களும் மனிதர்களும் அஸுரர்களுமடங்கியஉலகமே பூஜிக்கப்பட்டதாகிறது. உண்மையில் நானே அந்தஅந்த ரூபத்தோடி அவர்களின் பூஜையைப் பெற்றுக்கொள்ளுகிறேன். உலகங்களுள்ளவரையிலும்நிற்கத்தக்க என்பூஜை இதுதான்; வேறில்லை. மிக்கபுத்திக்குறைவுள்ளமனிதர்கள் எனக்கு வேறுபூஜைகளை வீணுகச்செய்கிறார்கள். அவற்றை நான் பெற்றுக்கொள்வதில்லை. அவை எனக்குச் சந்தோஷத்தை உண்டுபண்ணுவனவாகா' என்றார். இந்திரன், 'சக்கரத்தையும் உமதுபாதங்களையும் பன்றியையும்குள்ளப்பிராம்மணனையும் பூமியிலிருந்துஎடுக்கப்பட்டமண்ணையும் நீர் ஏன்சிலாகிக்கிறீர்? எல்லாவற்றையும் ஆக்குகிறவரும் அழிக்கிறவரும் நீரே. மனிதர் முதலியஎல்லாப்பிராணிகளுக்கும்சாஸ்வதமானகாரணம்நீரே'என்று கேட்டான். அதன்பிறகு, விஷ்ணுவானவர் நகைத்துக்கொண்டு பின் வருமாறு சொல்லலானார். 'என்னால் சக்கரத்தினால் அஸுரர்கள் கொல்லப்பட்டனர்; கால்களினால் பூமி ஆக்கிரமிக்கப்பட்டது; வராகரூபத்தையெடுத்து ஹிரண்யாக்ஷன் கொல்லப்பட்டான்; வாமனரூபமெடுத்து அஸுரராஜனானபலி வெல்லப்பட்டான். ஆதலால், இந்த வகைகளால் என்னைப்பூஜிக்கும்மஹாத்மாக்களான மனிதர்கள்விஷயத்தில் நான் அனுக்கிரகம்செய்கிறேன். அவர்களுக்குத்தாழ்வில்லை. மேலும், பிரம்மசாரியானபிராம்மணன்வரக்கண்டு அந்தப்பிராம்மணனென்னும் அக்நியில் ஹோமம்செய்தபிறகு சாப்பிடும்போஜனம் அம்ருதமாகிறது. சூரியனுக்குஎதிராகநின்று காலைச்சந்தியாவந்தனம்

1 'ஆத்மந:' என்பது மூலம். 'தன்காலை' என்பது பழையவுரை. வைதியாகாலத்தில், தன் காலையேவணங்குதல் சிஷ்டாசாரமாயிருந்தது என்றும் அதனால் விளங்குகிறது.

2 வாமனவதாரத்தில் பூமியையளந்ததினாலும் வராகாவதாரத்தில் பூமியைக்கடலினின்றுஎடுத்ததினாலும் அத்தக்குறிப்பைச் செய்யவேண்டுமென்பது.

செய்வதனால் எல்லாத்தீர்த்தங்களிலும் ஸ்நானம்செய்தவனாகிறான். எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிறான். தபோதனர்களே ! ஸத்தேகம்கேட்கிற உங்களுக்கு இந்த ரகஸ்யமெல்லாவற்றையும் சொன்னேன். இன்னும் நான் என்னசொல்லக்கடவேன்?' என்றுகேட்டார். பலதேவரென்னும் ரிஷி, 'மனிதர்களுக்கு ஸுகத்தைத்தரும் ஒருபரம ரகஸ்யம் கேளுங்கள். இதையறியாதமூடர்கள்தாம் பூதங்களினால் பீடிக்கப்பட்டுக் கஷ்டப்படுகிறார்கள். எந்தமனிதன் காலையில்எழுந்து பசு, நெய், தயிர், கடுகு, தினை இவற்றைத்தொடுகிறானோ அவன் பாவத்தினின்றுவிடுபடுகிறான். தவத்தைத்தனமாகவுடையவர்கள் அசுத்தத்தையும் அவற்றின்வழியாகவரும் முன்னும்பின்னுமுள்ளஎல்லாப் பூதங்களையும் விலக்கிவிடுகின்றனர்' என்றுசொன்னார். தேவர்கள், 'ஜலம்நிரம்பின ஆத்திமரப்பாத்திரத்தையெடுத்துக்கொண்டு வடக்கு முகமாகவிருந்து ஸங்கல்பத்துடன் எந்தஉபவாஸம் ஆரம்பித்தாலும் அவனிடத்தில் தேவதைகள் திருப்தியடைவார்; நினைத்தபலன் கைகூடும். அல்பபுத்தியுள்ளமனிதர்கள்தாம் வேறுகர்மங்களை வீணாகச் செய்கின்றனர். உபவாஸத்திற்கும் பலிகொடுப்பதற்கும் தாம்ரபாத்திரம் சிறந்தது. பலியையும் பிண்டியையும் அர்க்கியத்தையும் பித்ருக்களுக்குஎள்ளையுந்தண்ணீரையும் தாம்ரபாத்திரத்தினால்கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் பலன் குறைந்துபோம். இதனால், தேவர்கள் திருப்தியடைவார். இந்த ரகஸ்யத்தைச் சொன்னோம்' என்று கூறினர். தர்மதேவதை, 'அரசனிடத்தில்உத்யோகம்செய்பவன், காலந்தெரிவிப்பவன், பரிசாரகன், ஆமேய்ப்பவன், வர்த்தகன், சிற்பவேலைசெய்பவன், பாடகன், ஸ்நேகிதனேமோசம்செய்தவன், வேதம் ஓதாதவன், சூத்திரப்பெண்ணை மனைவியாக வைத்துக்கொண்டிருப்பவன் இந்தப்பிராம்மணர்களுக்குத் தேவகாரியத்திலும் பித்ருகாரியத்திலும் எவ்வகையிலும் ஒன்றும்கொடுக்கலாகாது. அவர்களுக்கு அன்னம்கொடுப்பவர்கள் கெட்டுப்போவார். அந்தஅன்னம் பித்ருக்களைத் திருப்திசெய்விக்காது. விருந்தினன் எவன்வீட்டிலிருந்து நிராசையாகத் திரும்பிப்போகிறானோ அவன்வீட்டில் அதிதியை அழையாமையினாலே பித்ருக்களும் தேவர்களும் த்ரேதாக்நிகளும் நிராசையாய்த் திரும்பிப்போகின்றனர். அதிதியைப்பூஜியாதவனுக்கும் ஸ்த்ரீஹத்தி கோஹத்தி ப்ரம்மஹத்திசெய்தவருக்கும் நன்றி கெட்டவருக்கும் ஆசான்மனைவியைச்சேர்ந்தவருக்கும் பாவம்ஸரி' என்றுசொன்னான். அக்நி, 'மிகக்கெட்டபுத்தியுள்ள எந்தமனிதன் பசுக்களையும் மஹாநுபாவனானபிராம்மணனையும் த்வஜிக்கின்ற

அக்நியையும் காலைத்தூக்கித்தொடுவனே அவனுக்குப் பாவங்களைச் சொல்லப்போகிறேன். அவற்றையுக்கத்துடன் கேளுங்கள். அவனது கெட்டபெயர் ஸ்வர்க்கத்தைச்சேரும். பித்ருக்கள் அவனுக்குப் பயப்படுவார். தேவர்களுக்கும் அவனால் மிகுந்தமனத்துயரம் செய்யப்பட்டதாகும். சிறந்தமஹிமையுள்ள அக்நிபகவான் அவன் ஹவிஸை வாங்குவதில்லை. நூறுஜன்மங்கள்வரையிலும் அவன் நரகத்தில் வேகவைக்கப்படுவான். அவனுக்குப் பிராயச்சித்தத்தையும் ஒருகாலும் யாரும் ஒப்பமாட்டார்கள். ஆதலால், சிரத்தையுள்ளவனும் தனதுநன்மையைக்கருதுகிறவனுமானமனிதன் பசுக்களையும் சிறந்தமஹிமையுள்ளபிராம்மணனையும் ஜ்வலிக்கின்ற அக்நியையும் ஒருகாலும் காலால் தொடலாகாது. மூவரிடத்திலும் பாதம்படச் செய்கிறவனுக்கு இந்தப்பாவங்கள் என்னால் உரைக்கப்பட்டன' என்றுசொன்னான். விஶ்வாமித்ரர், 'தர்மத்தைப்பற்றின மிக்க நுட்பமான ரஹஸ்யத்தைக் கேளுங்கள். புரட்டாசிமாஸத்தில் கிருஷ்ணபக்ஷத்தில் மகாநக்ஷத்திரத்தில் மத்யான்னகாலத்தில் கிழக்கிலிருக்கும் [1]கஜச்சாயையில் தெற்குமுகமாகவிருந்து பித்ருக்களுக்குப் பாயஸான்னத்தைப் பிண்டமாகக்கொடுத்தால் அந்தத்தானத்தின்பலன் எப்படிப்பட்டதென்பதைக் கேளுங்கள். அவன் பதின்மூன்று வருஷகாலம் சிறந்தசிராத்தம்செய்ததாகும்' என்றனர். பசுக்கள், 'எங்களைப் பார்த்து, 'எல்லாம் நிரம்பினவளே! புஷ்டியான அங்கங்களுள்ளவளே! எங்கும்பயமில்லாதவளே! க்ஷேமமாயிருப்பவளே! [2] எண்போல் விருத்தியாகிறவளே! நீமுன்பு பிரம்மலோகத்திலும் வஜ்ராயுதத்தைத் தரிக்கும் இந்திரனுடையயாகத்திலும் விஷ்ணுவினுடைய ஸ்தானத்திலும் சூரியனுடையமார்க்கத்திலும் கன்றுடன்நின்றாய். தேவர்களனைவரும் நாரதருடன்கூட உனக்கு 'ஸர்வஸஹை (=எல்லாவற்றையும் பொறுப்பவள்)என்று பெயரிட்டிருக்கின்றனர்'என்னும் இந்தமந்திரத்தைச் சொல்லி வந்தனம்செய்பவன் பாபகர்மத்தினால் விடப்படுவான். கோக்களினாலுண்டானபலன்களாக இந்திரலோகத்


1 மஹாளயபக்ஷத்தில் மகாநக்ஷத்ரத்துடன்கூடிய த்ரயோதசியும், அதே பக்ஷத்தில் ஹஸ்தாநக்ஷத்ரம்சேர்ந்த அமாவாஸையும், சந்த்ரசூர்யக்ரஹண புண்யகாலமும், அமாவாஸை அபரான்னகாலத்தில் நீழல் கிழக்கே திரும்பியிருக்கும் காலமும், அமாவாஸையில் தன்னிழல் இரண்டடங்கு கிழக்கே திரும்பியிருக்கும் காலமும் ' கஜச்சாயை ' என்பர். இதன்விவரத்தை மனுமுதலியஸ்மிருதிகளிலும் வைத்யநாததீக்ஷிதியமுதலிய நிபந்தனக்ரந்தங்களிலும் சப்தகல்பத்ருமத்திலும் பரக்கக் காணலாம். இத்தப்பர்வம், 480-ம் பக்கம்குறிப்பிலும்

2 ஸ்தனியினால் ஒவ்வொன்றாக அதிகமாவது. [காண்க.

தையும் சந்திரனுடையஒளியையும் அடைவான். தேவர்களால்ஜபிக்கப்படுவதாகியஇம்மந்திரத்தைப் புண்ணியகாலங்களில் கொட்டிலின் நடுவில்சொல்லுகிறவனுக்குப் பாவமும் அச்சமும் துயரமும் இருப்பதில்லை. அவன் இந்திரலோகத்தையடைவான்' என்றுகூறின. பிறகு, மகாஜபாவர்களும் எல்லாஉலகங்களிலும் பெயர்பெற்றவர்களுமாகிய வஸிஷ்டர்முதலியஸப்தரிஷிகள் தாமரைமலரில்பிறந்தவராகியபிரம்மதேவரைப் பிரதக்ஷிணம்செய்து எல்லாரும் கைகூப்பிநின்றனர். அவர்களுள்சிறந்த பிரம்மஜ்ஞானியானவஸிஷ்டர்(பிரம்மதேவரைநோக்கி), 'பொருளில்லாதவழைகளும் நல்லஒழுக்கமுள்ளவர்களுமானமனிதர்கள் என்னகர்மம்செய்வதனால் யாகத்தின்பலனையடைவார்கள் ?' என்று எல்லாப்பிராணிகளுக்கும் முக்கியமாகப்பிராம்மணக்ஷத்திரியர்களுக்கும் அனுகூலமான கேள்வியை எல்லாரிஷிகளுக்குமாகக் கேட்டார். பிரம்மதேவர் அவர்களின் அந்தச்சொல்லைக்கேட்டு, 'மஹாஜபாவர்களே ! யாருக்கும்தெரியாததும் மனிதர்களுக்கு மிகநன்மையையும் மங்களத்தையும்தருவதும் நுட்பமுமானகேள்வி உங்களால்கேட்கப்பட்டது. தபோதனர்களே ! மனிதன் எதனால் ஸந்தேகமில்லாமல் யாகபலனெல்லாவற்றையும் அடையலாமென்பதைச் சொல்வேன்; கேளுங்கள். தைமாஸம்சுக்லபக்ஷத்தில் ரோஹிணிநக்ஷத்திரம்சேர்ந்ததினத்தில் சிரத்தையோடுஸ்நானம்செய்து சுத்தனும் மனஉறுதியுள்ளவனுமாகி மேலேமூடாதவிடத்தில் ஒற்றைவஸ்திரத்துடன் சயனம்செய்யவேண்டும். சந்திரனுடையகிரணங்களைக் குடிப்பதனால் மகாயாகத்தின்பலனையடைவான். பிராம்மணர்களே ! யாருக்குந்தெரியாதஉண்மையானவிஷயங்களைத் தெரிந்தவர்கள் என்னைக்கேட்டதாகிய இந்தப்பரமரகஸ்யத்தை நான் உங்களுக்குச் சொன்னேன்' என்றுசொன்னர்.

நாற்றத்தொண்ணூறுவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)



(சூரியன்முதலியோர் சொல்லியதர்மங்கள்.)

விபாவஸு (=சூரியன்), 'பூர்ணிமையில் சந்திரன் உதயமாகும்போது அவனுக்கெதிரில்நின்று இருகரங்கள்நிரம்பிய ஜலத்தையும் நெய்கலந்தஅன்னத்தையும் பூஜையாகக்கொடுக்கவேண்டும். அதனால், திரேதாக்நிகளில்ஹோமம்செய்ததும் அக்நிசயநம்செய்ததுமாகும். அமாவாஸையில் மரத்தைவெட்டுகிறவன் புத்தியில்லாதவன்;

ஓர்இலையை உதிர்த்தாலும் அவனைப் பிரம்மஹத்தியணுகும். அமாவாஸையில் பற்கொம்பைக்கடிக்கும்புத்திகெட்டவன் சந்திரனையே பீடித்தவனுகிறான். அவனுக்குப் பித்ருக்களும் நடுங்குவர். தேவர்களும் புண்ணியகாலங்களில் அவன்கொடுக்கும்ஹவிஸை வாங்கார். பித்ருக்களும் அவன்மேல் கோபிப்பதனல் அவன்ஸந்ததி கெடும்' என்றுசொன்னன். ஸ்ரீதேவி, 'அழுக்கடைந்துகெட்டுப்போன எந்த வீட்டில் பாத்திரங்கள் கண்டஇடங்களில்போஷ்பட்டும் பாண்டங்களும் ஆஸனங்களும் உடைக்கப்பட்டும் பெண்கள் அடிக்கப்பட்டும் இருக்கின்றனரோ அழுக்கடைந்துகெட்டுப்போன அந்தவீட்டிலிருந்து சுபகாலங்களிலும் சிராத்தகாலங்களிலும் தேவர்களும் பித்ருக்களும் நிராசையாய்த் திரும்பிப்போவார்கள்' என்றுசொன்னள். அங்கிரஸ், 'ஒருவருஷம் நிரம்பும்வரையில் ஸுவர்ச்சலையென்னும் கொடியின்வேரைக்கையில்வைத்துக்கொண்டுகாஞ்சகமரத்தின்மேல் தீபம்வைப்பவனுக்கு ஸந்ததி விருத்தியாகும்' என்றுசொன்னர். கார்க்யர், 'நாள்தோறும் அதிதிஸத்காரம்செய்யவேண்டும்; வீட்டில் தீபம் வைக்கவேண்டும்; பகல்நித்திரையை விடவேண்டும்; மாம்ஸங்களைத் தின்னலாகாது. கோவையும் ப்ராம்மணனையும் துன்பம்செய்யலாகாது. புண்ணியக்ஷேத்திரங்களின்நாமங்களைச் சொல்லவேண்டும். இது நூட்பமும் பெரும்பலனைத்தருவதுமான சிறந்ததர்மம். அநேக நூற்றுக்கணக்காக யாகங்களைச்செய்தாலும் அவற்றில்ஹோமம் செய்யப்படும்நெய் அழிந்துபோகிறது. ஸ்ரத்தையுடன்செய்யப்பட்ட தர்மங்கள்மட்டும் அழிவதில்லை. யாருக்குந்தெரியாததும் முக்கியமுமான மற்றொருஸூக்ஷ்மவிஷயத்தையும்கேளுங்கள். சிராத்தத்திலும் தேவகார்யத்திலும் பர்வங்களிலும் மற்றப்புண்யகாலத்திலும் ரஜஸ்வலையானஸ்திரீ, வெண்குஷ்டமுள்ளவள், புத்திரனில்லாதவள் இவர்கள்கண்ணால்பார்த்தஅன்னத்தைத் தேவர்கள்புஜிப்பதில்லை; பித்ருக்கள் பதின்மூன்றுவருஷகாலம் திருப்தியடையாமலிருக்கின்றனர். வெண்மைவஸ்திரமுடுத்துப் பரிசுத்தனுகவிருந்து ப்ராம்மணர்களைக் கொண்டு ஸ்வஸ்திவாசனம்செய்விப்பதனலும் பாரதத்தைப்படிப்பிப்பதனலும் அந்தஹவிஸானது அக்ஷயமாகும்' என்று சொன்னர். தௌம்யர், 'உடைந்தபாத்திரம், உடைந்தகட்டில், கோழி, நாய், வீட்டிற்குள்முளைத்தமரம் இவையெல்லாம் தீயவை. உடைந்தபாத்திரத்தினல் கலகமும் உடைந்தகட்டிலினல் தனநாசமும் உண்டாகுமென்று சொல்லுகின்றனர். கோழியும்நாயுமிருந்தால் தேவர்கள் ஹவிஸைப் புஜிக்கமாட்டார்கள். மரத்தினடியில் பூச்சிகளிருப்பது

நிச்சயம். ஆதலால், வீட்டில்மரத்தைநடலாகாது' என்றுசொன்னர். ஜமதக்னி, 'எவனுக்கு உள்ளம் பரிசுத்தமாயில்லையோ அவன் அஸ்வமேதயாகம்செய்தாலும் நூறுவாஜபேயயாகம்செய்தாலும் பெரிய ஸத்ரயாகத்தைச்செய்தாலும் தலைகீழாய்த்தொங்கித் தவம்செய்தாலும் சமமாகம்போவது நிண்ணம். யாகமும் ஸத்தியமும் மனத்தூய்மையும் ஸரியானவை. சுத்தமனத்துடன் ஒருபடிமாவை ப்ராம்மணனுக்குக்கொடுத்தவன் பிரம்மலோகத்தை அடைந்திருக்கிறான். அதுவே போதுமான உதாரணம்' என்றசொன்னர்.

நாற்றத்தொண்ணூற்றேராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வாயு சொல்லிய தர்மங்கள்.)

வாயு, 'மனிதர்களுக்கு ஸுகத்தைத்தரும் ஒரு விரதத்தைச் சொல்வேன். ஸூக்ஷ்மமானகுற்றங்களையும் சொல்வேன். ஊக்கத்துடன் கேளுங்கள். அக்நிஹோத்ரத்தையும் பரமான்னபோஜனத்தையும் செய்யவும் தீபம்வைக்கவும் பித்ருக்களுக்கு எள்ளும்ஜலமும்தர்ப்பணம்செய்யவும்வேண்டும். இந்தவிதிப்படி மனிதன் ஸ்ரத்தையோடும் பக்தியோடும் மழைக்காலத்தியநான்குமாஸங்கள் எள்ளும்ஜலமும்விட்டுத் தன்சக்திக்குத்தக்கபடி வேகத்திற்கரைகண்ட ப்ராம்மணனைப்புஜிப்பித்தால் நூறுயாகங்களின்பூர்ணபலனை அடையலாம். மற்றும்ஒருரகஸ்யமான தோஷத்தையும் தெரிந்துகொள்ளுங்கள். சூத்ரனும் அறிவில்லாதஸ்த்ரீகளும் அக்நிக்கு ஹவிஸைக் கொண்டுவந்தால் யஜமானன் அதைத் தர்மமென்றே நினைக்கிறான்; அவனைப் பாவம் விடுவதில்லை. தேவதாக்நிகள் அவன்மேல் கோபிக்கின்றன. அவன் சூத்ரயோனியிற்பிறப்பான். முக்கியமாகப் பித்ருக்களும் தேவர்களும் திருப்தியாவதில்லை. அதற்குப் பிராயச்சித்தத்தையும் சொல்லுகிறேன்; கேளுங்கள். மனிதன் அதைச்செய்தபிறகு துயரமின்றி நல்லஸுகம்பெறலாம். மூன்றுதினங்கள் ஆகாரத்தைவிட்டு நியமத்துடன் பசுவின்மூத்ரம்சாணம்பால்நெய்களைக் கொண்டே அக்நிஹோத்ரம்செய்யவேண்டும். அதன்பிறகு, ஒரு வருஷம்நிறைந்தபின் தேவர்கள் ஹவிஸை வாங்குவர். சிராத்தகாலம் வந்தபோது அவனுடையபித்ருக்களும் ஸந்தோஷமாக இருப்பார். இவ்வாறு ஸூக்ஷ்மமானதர்மத்தையும் அதர்மத்தையும் சொன்னேன். இது ஸ்வர்க்கத்தைவிரும்பும் மனிதர்களுக்கு இறந்தபின் ஸ்வர்க்க ஸுகத்தைத்தருவது' என்றுசொன்னான்.

நூற்றுத்தொண்ணூற்றிரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(லோமசர் சொல்லிய தர்மங்கள்.)

லோமசர், 'மணம்செய்து கொள்ளாமல் பிறர்மனைவிகளிடம்பற்று வைத்திருப்பவர் ஸ்ராத்தம்செய்யும்போது அவர்களின்பித்ருக்கள் ஆசையற்றுப்போகின்றனர். பிறர்மனைவியைப்பற்றுகிறவனும் மலடியை அணுஸரிப்பவனும் ப்ராம்மணன்பொருளையெடுப்பவனும் ஸமமானபாவிகளாகிறார். அவர்கள் பித்ருக்களால் பேசவும் தகாதவர்களாகிறார்கள். இதில் ஸந்தேகமில்லை. அவர்கள்கொடுக்கும்ஹவிஸைத் தேவர்களும் பித்ருக்களும் எடுத்துக்கொள்வதில்லை. ஆதலால், பிறர் மனைவியையும் மலடியையும் விடவேண்டும். தன்னன்மையைக்கருதுகிறவன் ப்ராம்மணன்பொருளை எடுக்கலாகாது. யாருக்குந்தெரியாத மற்றொருமுக்கியமான தர்மரஹஸ்யத்தைப்பற்றியுங்கேளுங்கள். எப்போதும் பெரியோர்சொல்லியதை ஊக்கத்துடன் செய்யவேண்டும். மாதந்தோறும் துவாதசியிலும் பூர்ணிமையிலும் நெய்யையும் அக்ஷதைகளையும் ப்ராம்மணர்களுக்குக் கொடுக்கவேண்டும். அதன்பலனைக் கேளுங்கள். அதனால் சந்த்ரன் விருத்தியாகிறான்; கடல் பொங்குகிறது. அவனுக்கு அப்ரமேதயாகத்தின் நாலில்லருபங்குபலனை இந்த்ரன் கொடுக்கிறான். இந்தத்தானதினால் மனிதன் ஒளியும் சக்தியுமுள்ளவனாவான். பகவானானசந்த்ரன் அனுக்ரஹம்வைத்து அவன்விரும்பும்பலன்களைக் கொடுப்பான். இந்தக்கலியுகத்திலிருக்கும்மனிதர்களுக்கும் ஸுகத்தையும் பெரும்பலனையும்தருவதானமற்றொருமுக்கியமான தர்மஸூக்ஷ்மத்தையும் கேளுங்கள். காலையில் எழுந்து ஸ்நானம்செய்து வெள்ளைவஸ்த்ரம்தரித்துப் பக்தியுடன் ப்ராம்மணர்களுக்கு ஏள்பாத்த்ரத்தையும் தீபத்தையும் க்ருஸரத்தையும் பித்ருக்களுக்குத் தேனுடன் எள்ளையும்தண்ணீரையும் கொடுக்கிறமனிதனுக்குள்ளபலனைக் கேளுங்கள். திலபாத்த்ரத்தைக்கொடுப்பதின்பலனைப் பகவானை இந்த்ரன்சொல்லியிருக்கிறான். கோதானமும் சாஸ்வதமானபூதானமும்செய்வதும் நிரம்பினதக்ஷிணைகளோடு அக்நிஷ்டோமயாகம்செய்வதும் திலபாத்த்ரம்கொடுப்பதும் ஸமமென்று தேவர்கள் நினைக்கின்றனர். சிராத்தத்தில் எப்போதும் எள்ளும்ஜலமுமே அக்ஷயமென்று பித்ருக்கள் நினைக்கின்றனர். தீபத்தையும் க்ருஸரத்தையும்கொடுப்பதனால் அவனதுபித்ருக்கள் திருப்தி

அடைகின்றனர். இவ்வாறு ஸ்வர்க்கத்திலும் பித்ருலோகத்திலும் பித்ருக்களாலும் தேவர்களாலும்கொண்டாடப்பட்டதும் ஆதிகாலந் தொடங்கி ரிஷிகளால்கண்டறியப்பட்டதுமான இந்தத்தர்மம் என்னாற்சொல்லப்பட்டது' என்றுசொன்னர்.

நூற்றுத்தொண்ணூற்றுமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(அருந்ததியும் ஸூர்யனும் யமனும்சொல்லிய தர்மங்கள்.)

அதன்பிறகு, ரிஷிகள் தேவர்கள் பித்ருக்கள் அனைவரும் சேர்ந்து மனத்தையடக்கி மஹாத்மாவானவஸிஷ்டருக்குச்சமமானமஹிமையுள்ளவரும் தவத்திலும் பெரியவருமான அருந்ததியைப்பார்த்து, 'அம்மா! நாங்கள் தர்மஸூக்ஷ்மங்களை உன்னிடத்தில் கேட்கவிரும்புகிறோம். உனக்கு எது ரிக்கஸூக்ஷ்மமாகத்தோன்றுகிறதோ அதனைச் சொல்லக்கடவாய்' என்றுகேட்டனர். அருந்ததி, 'உங்களை நினைப்பதனாலேதான் எனக்குத் தவத்தின்சிறப்புக் கிடைத்திருக்கிறது. உங்கள் அனுக்கிரகத்தினால் அழியாததர்மங்களைஸூக்ஷ்மங்களோடும் முக்கியாம்சங்களோடும் சேர்த்துச்சொல்வேன். அவற்றை எல்லாம் கேளுங்கள். ஸ்ரத்தையுள்ளவனுக்கும் பரிசுத்தமானமனமுள்ளவனுக்குந்தான் தர்மங்களைச் சொல்லலாம். ஸ்ரத்தையில்லாதவன் அகங்காரமுள்ளவன் பிரம்மஹத்தியைச்செய்தவன் ஆசாரியன்மனைவியைச்சேர்ந்தவன் இந்தநால்வரும் சம்பாஷணைக்குத்தகாதவர். இவர்களிடத்தில் தர்மத்தை வெளியிடலாகாது. தினத்திற்கொரு கபிலையாகப் பன்னிரண்டிவருஷகாலம் தானம்செய்கிறவனும் மாதந்தோறும் வாஜபேயாகம்விடாமற்செய்கிறவனும் ஆஸ்வயுஜமாஸத்தில் புஷ்கரக்ஷேத்ரத்தில் லக்ஷம்கோதானம்செய்கிறவனும், மேலையும்புண்ணிய பலன்கள் ஓர் அநித்தியத்தைத்திருப்திசெய்விப்பவனுடைய புண்ணியபலனுக்கு ஒப்பாகாதவை. மனிதர்களுக்கு ஸுகத்தைத்தருவதும் ஸ்ரத்தையோடு செய்யத்தக்கதும் பெரும்பலனைத்தருவதுமாகிய மற்றொரு ஸூக்ஷ்மமானதர்மத்தையும் கேளுங்கள். காலையில்வழுந்து ஆசாரம்செய்யாமல் நதீப்பங்களையும்ஜலத்தையும் எடுத்துக்கொண்டு பசுக்களின்நடுவில்போய்த் தர்ப்பங்களின்மேல் ஜலத்தை அவற்றின் கொம்புகளில்தெளித்து அந்தக்கொம்பின்ஜலத்தைத் தலையில் வாங்கிக்கொள்ளவேண்டும். அந்தப்புண்ணியத்தின்பலனைக் கேளுங்கள்.

மூன்றுலோகங்களிலுமுள்ள ஸித்தர்களாலும் சாரணர்களாலும் மஹரிஷி களாலும் அடையப்பட்டபுண்ணியதீர்த்தங்களென்று பெயர்பெற் றவை எவ்வளவோ அவ்வளவிலும்ஸ்நானம்செய்வதும் பசுக்களின் கொம்பின்ஜலம்தலையில்படிவதும் ஒப்பு' என்றுசொன்னாள். தேவர் களும் பித்ருக்களும் அதை, 'சரி, சரி' என்றுசொன்னார்கள். அந்த அருந்ததி எல்லாப்பிராணிகளாலும் மிக்களங்தோஷத்துடன் பூஜிக் கப்பட்டாள். பிரம்மதேவர், 'ஓ! மகாநுபாவையே! ஆ! ஆ! ஸூக்ஷ்மமானதர்மம் உன்னாலுரைக்கப்பட்டது. பாக்கியம்பெற்ற வளே! உனக்குவரன்கொடுக்கிறேன். உன்தவம் எப்போதும்விருத் தியாய்க்கொண்டிருக்கக்கடவது' என்றுசொன்னார். யமன், 'உங் களிடத்தில் நான்கேட்ட இந்த உயர்ந்த பேச்சு அழகாயிருக்கிறது. எனக்குப்பிரியமுள்ளதும் சித்ரகுப்தனால்சொல்லப்பட்டதுமான ஒரு விஷயத்தைச் சொல்லுகிறேன்; கேளுங்கள். தர்மத்தைப்பற்றின ஸூக்ஷ்மம்மஹரிஷிகளும்தன்னன்மையைச்சருதுகிறஸ்ரத்தையுள்ள மனிதனும் கேட்கக்கூடியது. செய்யப்பட்ட புண்ணியபாவங்கள் ஒன்றும்அழிகிறதில்லை. அமாவாஸை பூர்ணிமைக்காலங்களில் அவை எல்லாம் சூரியனிடத்தில்சேருகின்றன. மனிதன் இறந்து வேறு லோகம்போனபிறகு புண்ணியமேஉருவமாயிருக்கும் சூரியன் அவற் றையெல்லாம் திருப்பிக்கொடுக்கிறான். அவை அவ்வுலகத்தில் அனு பவிக்கப்படுகின்றன. சித்ரகுப்தன்சொன்ன ஒரு சிறந்ததர்மத்தைச் சொல்லப்போகிறேன்: குடிக்கத்தண்ணீரையும் தீபத்தையும் எப் போதும் கொடுக்கவேண்டும். பாதுகைகளையும் குடையையும் கபிலையையும் அந்தஅந்தக் காலங்களில் கொடுக்கவேண்டும். புஷ்கர க்ஷேத்ரத்தில் வேதங்களில்கரைகண்ட ப்ராம்மணனுக்குக் கபிலை கொடுக்கத்தக்கது. அக்நிஹோத்ரத்தை முழுஜாக்ரதையுடன் காப் பாற்றிவரவேண்டும். சித்ரகுப்தனால் சொல்லப்பட்ட மற்றொரு தர் மத்தையும் சொல்லுகிறேன். சிறந்தஸாதுக்களே! இதின்பலனை நீங்கள் தனியாகக்கேட்கவேண்டும். எல்லாப்பிராணிகளும் காலக் கிரமத்தில் மரணமடைவது நிச்சயம்; அப்போது, பசிதாகங்களினால் பீடிக்கப்பட்டுக் கஷ்டத்தையடைந்து கொளுத்தப்பட்டும் வேகவைக் கப்பட்டுமிருக்கின்றன; அங்கிருந்து ஒடிப்போவதற்கில்லை; பயங்கர மானகுருட்டிருளிலகப்பட்டு அறிவில்லாமற்போகின்றன. அவ்விடத் தில் துக்கங்களைத்தாண்டுவதற்குரியதும் சிறியசெலவும் பெரியலாபமு முள்ளதும் இறந்தபின் இன்பத்தையுண்டாக்கத்தக்கதுமான தர்மத் தைச் சொல்லுவேன்,குடிதண்ணீர்கொடுப்பதின்சிறப்புக்கள் அரியவை.

அவை ப்ரேதலோகத்தில் மிகச்சிறந்தவை. ஜலம் கொடுப்பவர்களுக்கு அவ்வுலகத்தில் [1]புண்யோதகைவன்னும்நதி உண்டாக்கப்படுகிறது. அதன்ஜலம் வற்றாமலும் குளிர்ச்சியாகவும் அமிருதத்திற் கொப்பாகவுமிருக்கிறது. குடிதண்ணீர்கொடுப்பவன் அந்நதியில் ஜலத்தைக்குடிப்பான். தீபங்கொடுப்பதனாலுண்டாகும் சிறப்பைப் பற்றியும்விரிவாகச்சொல்லுகிறேன்; கேளுங்கள். தீபங்கொடுப்பவன் அவ்வுலகத்தில் இருளேப்பார்ப்பதில்லையென்பது திண்ணம். சந்திரனும் சூரியனும் அக்நியும் அவனுக்கு ஒளியைக்கொடுக்கின்றனர். தேவதைகள் அவனுக்கு எல்லாத்திசைகளையும் தலங்கச்செய்கின்றனர். அம்மனிதன் ப்ரேதலோகத்திலிருந்துகொண்டு சூரியன்போலப் பிரகாசிப்பான். ஆதலால், தீபத்தையும் குடிதண்ணீரையும் முக்கியமாகக் கொடுக்கவேண்டும். வேதங்களில்கரைகண்டப்ராம்மணனுக்குப்புஷ்கரகேஷத்திரத்தில் கபிலையைக்கொடுப்பதின் விசேஷபலனைக் கேளுங்கள். ஒருகபிலையைக்கொடுத்தவன் விருஷபங்களுடன் நூறு பசுக்களைக்கொடுத்தபலனை நீண்டகாலம் அடைவான். அவனிடத்திலுள்ள ப்ரம்மஹத்திக்குச்சமமான பாவமெல்லாவற்றையும் ஒரு கபிலை நீக்கிவிடும். அது நூறுகோதானங்களுக்குச்சமம். ஆதலால், ஆனிமாஸம் சுக்லபக்ஷத்தில் புஷ்கரகேஷத்திரத்தில் கபிலையைத் தானஞ்செய்யவேண்டும். தகுதியுள்ள ப்ராம்மணோத்தமனுக்குப் பாதுகைகளைக்கொடுப்பவர் ஸங்கடத்தையும் துயரத்தையும் முள்தைப்பதையும்அடையார். குடைகொடுப்பவன் பரலோகத்தில் சுகமான நிழலைஅடைவான். கொடுத்ததானத்திற்கு ஒருகாலும் அழிவில்லையே' என்றுசொன்னான். சிறந்தஒளியுள்ளசூரியன் சித்ரகுப்தனுடைய அபிப்ராயத்தைக்கேட்டபிறகு மயிர்பொடித்து,தேவர்கள் பித்ருக்கள் அனைவரையும்பார்த்து, 'மஹாத்மாவான சித்ரகுப்தன் சொன்னதர்மரஹஸ்யத்தைக் கேட்டீர்களன்றே? மஹாத்மாக்களான ப்ராம்மணர்களுக்கு இந்தத்தானங்களைச் சிரத்தையுடன் கொடுக்கும் மனிதர்களுக்குப்பயமில்லை. இனிச்சொல்லப்படும் ஐந்துபேர்தாம் தர்மத்தைக்கெடுப்பவர்கள். அவர்களுக்கு இந்தஜன்மத்தில் பரிகாரமில்லை. ஆசாரங்கெட்ட அந்தஇழிவானமனிதர்களைச் சம்பாஷணம்செய்யாமல் விட்டுவிடவேண்டும். ப்ரம்மஹத்திசெய்தவன் கோஹத்திசெய்தவன் பிறர்மனைவிகளிடம்சேருகிறவன் ஸ்ரீத்தையில்லாதவன் ஸ்திரீயைக்கொண்டுபிழைப்பவன் இவ்வைந்துபாவிகளும் ப்ரதேலோகத்தையடைந்து நரகத்தில் சீழையும் ரத்தத்தையும் புசித்துக்

[1] பரிசுத்தமான ஜலமுள்ளது.

கொண்டு மீன்கள்போல வேகவைக்கப்படுவர். இவ்வைவரும் பித்ருக்களாலும் தேவர்களாலும் ஸ்நாதகப்ராம்மணர்களாலும் தபோதனர்களாலும் ஸம்பாஷணம் செய்யத்தகாதவர்' என்றுசொன்னன்.

நூற்றுத்தொண்ணூற்றுநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பிரமதர்கள், தம்மால் மனிதருக்குப் பீடைவருங்காரணத்தையும் அதைத்தடுக்கும் உபாயத்தையும் கூறியது.)

பிறகு, மஹாநுபாவர்களானதேவர்கள் பித்ருக்கள் ரிஷிகள் அனைவரும் பிரமதர்களைப்பார்த்து, 'நீங்கள் மஹாநுபாவர்கள்; ராத்ரியில் கண்ணுக்குப்புலப்படும்படி ஸஞ்சரிப்பவர்கள். எச்சிலும், தீட்டுமுள்ள அற்பமனிதர்களை நீங்கள் எப்படிப் பீடிக்கிறீர்கள்? நீங்கள் மனிதர்களைப்பீடியாமலிருப்பதற்குச் சொல்லப்பட்டபரிகாரங்கள் எவை? ராக்ஷஸர்களையொழிக்கும்கர்மங்கள் எவை? எவற்றினால் நீங்கள் வீடுகளில் காணப்படாமல்போவீர்கள்? பூதங்களே! இவற்றையெல்லாம் உங்களிடம் கேட்கவிரும்புகிறோம்' என்று விண்ணப்பித்தார்கள்.

ப்ரமதர்கள், 'புணர்ச்சியினாலும், மேல்கீழ்அவயவங்களில் ஸம்பந்தப்படும்வஸ்திரங்களைமுதலியவற்றைக் கீழ்மேலாக மாற்றுவதனாலும் மனிதர் எச்சிலாகிறார். அறிவில்லாமல் மாம்ஸத்தைப்புஜிப்பவனும் மரத்தடியில்படுப்பவனும் சாப்பிடத்தக்கவைகளைத் தலையில்வைத்துக் கொள்பவனும் கால்வைக்குமிடத்தில் தலைவைத்துப்படுப்பவனும் ஜலத்தில்மலமூத்ரங்களைவிடுகிறவனும் கோழையை உமிழ்கிறவனும் ஆகியமனிதர்கள் அனைவரும் இந்தக்காரியங்களாலேயே எச்சிலானவர்களாம். நாங்கள் நுழையத்தக்க அநேகசந்துகளுள்ளவர்களும் ஆகிறார்கள். இந்தமனிதர்கள் எங்களால் பக்ஷிக்கவும் கொல்லவும் படுவார்; இதில் ஸந்தேகமில்லை. இவ்வகையானகுணமும் நடக்கையுமுள்ளமனிதர்களை நாங்கள் ஹிம்ஸிப்போம். நாங்கள்ஹிம்ஸிக்கமுடியாமலிருக்கும்பரிகாரங்களையும் கேளுங்கள். கோரோசனையை உடம்பில்பூசிக்கொண்டவரும் வசம்பைக் கையில்வைத்திருப்பவரும் நெய்யோடுசேர்ந்த அக்ஷதையை ஸ்ரத்தையுடன் தலையில்வைத்திருப்பவரும் மாம்ஸம்தின்னாதவருமானமனிதர்களைத் துன்பஞ்செய்ய எங்களால் முடியாது. எவன்வீட்டில் எந்தநாளும் இரவும் பகலும்

அக்னி ஜ்வலிக்கிறதோ, புலியின்தோலும் பற்களும் மலையாமையும் நெய்ப்புகையும் பூனையும் கறுப்புஅல்லதுசிவப்புஆடும்எவர்வீடுகளில் இருக்கின்றனவோ அந்தவீடுகளை எல்லாலோகங்களிலும்இஷ்டப்படி ஸஞ்சரிக்கும் எம்போன்ற மிகக்கொடியபூதங்களும் ஆக்கிரமிக்கமுடியாது. [1] ஆதலால், இவைகள் வீடுகளில் ராக்ஷஸர்களைப்போக்குகின்றவை. உங்களுக்குப் பெரியஸந்தேகமிருந்த இந்த விஷயத்தையெல்லாம் சொன்னேம்' என்றுகூறினர்.

நூற்றுத்தொண்ணூற்றைந்தாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(தீக்ஷயாஜனகள் நாகபலிஅவஸ்யமென்று ரேணுகனென்னும் யாஜகக்குச் சொல்லியது.)

பிறகு, தாமரைமலரிலிருந்து பிறந்தவரும் தாமரைமலர்கிற முள்ளவருமான பிரம்மதேவர் தேவர்களையும் தேவேந்திரனையும் நோக்கி, 'இந்த ரேணுகனென்னும்யானை பாதாளத்தில் ஸஞ்சரிப்பது; சிறந்தபலமும் ஒளியும் தைரியமும் பராக்கிரமமுமுள்ளது. சிறந்தமகிமையும்சக்தியுமுள்ள கஜஸ்ரேஷ்டங்களாகிய திக்கஜங்கள் அனைத்தும் மலைகளும்செடிகளும்காடுகளும் அடங்கிய பூமியனைத்தையும் தாங்குகின்றன. இந்தரேணுகன் உங்களால் அனுமதிகொடுக்கப்பெற்று அந்தமஹாகஜங்களிடம்சென்றுஅவைகளிடத்தில் தர்மரகஸ்யங்களைக் கேட்கட்டும்' என்று சொன்னர். பிரம்மதேவர்சொன்னதைக்கேட்டு, அந்தத்தேவர்கள் ப்ரத்தியுடன் திக்கஜங்களிருக்குமிடத்திற்கு ரேணுகனை அனுப்பினர்கள். ரேணுகன் அந்தயானைகளிடம்சென்று, 'திக்கபலசாலிகளே! தேவர்களாலும் பித்ருக்களாலும் நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். ஸூக்ஷ்மமான தர்மங்களை உங்களிடம் தெளிவாகக் கேட்கவிரும்புகிறேன். மஹானுபாவர்களான நீங்கள் நினைக்கும் உண்மையைச் சொல்லுங்கள்' என்றுகேட்டது. திக்கஜங்கள், 'கார்த்திகைமாஸம் ஆயில்யநக்ஷத்திரம்சேர்ந்த கிருஷ்ணபக்ஷஅஷ்டமி புண்ணியமானது. அந்த நக்ஷத்திரம்சேர்ந்த தினத்தில், 'மிகச்சிறந்தபலமுள்ளவர்களும் எக்காலும் அழியாதவர்களுமான பலதேவன்முதலானநாகர்களும் அவர்களின் குலங்களில் பிறந்தநாகஸ்ரேஷ்டர்களும்எனக்குப்பலமும்ஊக்கமும்வருத்தியடை

[1] ஒருசொல் விடப்பட்டது.

யும்படி நான்கொடுக்குமபலியைப் [1]பெற்றுக்கொள்ளக்கடவர்.லக்ஷ்மீ பதியானநாராயணர்பூமியையெடுக்கும்போது அவருக்குஇருந்தபலம் எனக்குஉண்டாகவேண்டும்' என்னும்இந்தமந்திரத்தை ஜபித்துப் புற்றில் பலியைப் போடவேண்டும். கஜராஜனே! அந்தப்பலியைப் புஷ்பங்களோடும் சந்தனங்களோடும் சுறுப்புவஸ்திரத்தோடும் ஸூர்யன்அஸ்தமனமாகும்போது புற்றில் போடவேண்டும். கீழிருந்து பூமியைத்தரித்துப் பாரத்தினால்பீடிக்கப்பட்ட நாங்களனைவரும் இப்படிச்செய்வதனால் ஸந்தோஷமடைந்து அந்தச்சிரமத்தை அறியாமல் இருப்போம். பாரத்தினால்பீடிக்கப்பட்ட நாங்களனைவரும் வேறுஎன்றையும்விரும்பாமல் இதையே கருதுகிறோம். பிராம்மணனும் க்ஷத்திரியனும் வைச்யனும் சூத்திரனும் உபவாஸத்துடன் ஒருவருஷம் இவ்வாறு தானம்செய்வதனால் மிகுதியானபலன்களை அடைவார். புற்றில் பலிவைப்பதற்குப் பலன்கள் அதிகமென்பது எங்கள் அபிப்ராயம். மூவுலகங்களிலும் சிறந்தசக்தியுள்ள [2]நாகங்களெல்லாவற்றிற்கும் உண்மையில் தாழுவருஷங்கள் அதிதிபூஜை செய்ததுபோலாகும்' என்றுகூறின. திக்கஜங்கள்சொன்னதை ரேணுகனிடம்கேட்டித் தேவர்களும் பித்ருக்களும் மஹானுபாவர்களான ரிஷிகளும் ரேணுகனைக் கொண்டாடினர்.

நாற்றத்தொண்ணூற்றுரூவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(மஹேச்வரீ கோதானத்தின் சிறப்பைச் சொல்லியது.)

மஹேச்வரர், 'உங்களால் ஸாரம்சத்தையெடுத்து நன்றாகத் தர்மம் சொல்லப்பட்டது. நீங்களெல்லாரும் மற்றொருதர்மஸூக்ஷ்மத்தை என்னிடம் கேளுங்கள். யாருடையபுத்தி தர்மத்திலேயே பற்றியிருக்கிறதோ, எவர்களுக்குத் தர்மம்செய்வதில் ச்ரத்தையிருக்கிறதோ அவர்களுக்குத்தான் பெரும்பலனைத்தரும் இந்தத் தர்ம ஸூக்ஷ்மத்தை உபதேசிக்கலாம். எவன் தினத்திற்கொருபசுவாக ஒருமாதம் வெறுப்பில்லாமல் தானம்செய்து ஒருவேளைபுசித்துக் கொண்டிருக்கிறானோ அவனுக்குள்ளபலனைக் கேட்கவேண்டும். இந்

---

1 'ப்ரதீச்சந்து' என்று பாடங்கொள்ளப்பட்டது.

2 திக்கஜங்களும், ஆதிசேஷனும் பூமியைத்தாங்குவதனாலும் நாகம்என்னும்பெயர் ஸர்ப்பத்திற்கும் யானைக்கும் பொதுவாயிருத்தலாலும் இவ்வாறு சொல்லப்பட்டது.

தப்பசுக்கள் சிறந்த மகிமையுள்ளவைகள்; பரிசுத்தங்களிற்சிறந்தவை யென்று சொல்லப்படுகின்றன. தேவர் அஸுரர் மனிதர்களோடு கூடிய மூன்றுலோகங்களையும் இவை காப்பாற்றுகின்றன. அவற்றினிடம் சிறந்தபுண்ணியமிருக்கிறது. அவற்றிற்கு உபசாரம்செய்வதனல் பெரும்பலனுண்டு. தினந்தோறும் கோதானம்செய்பவன் தினந்தோறும் தர்மத்தையடைகிருன். முன்னே க்ருதயுகத்தில் பதுமத்தில்பிறந்தவரான பிரம்மதேவர் என்னைவேண்டினதின்மேல் என்னல் அந்தப்பசுக்கள் அனுக்கிரகிக்கப்பட்டன. அதனல்தான், கொட்டிலிலிருக்கும்விருஷபம் (கொடியாக) எனக்குமேலிருக்கிறது. நான் பசுக்களோடுவஸிப்பதனல் மகிழ்கிறேன். ஆதலால், அவற்றை எப்போதும் பூஜிக்கவேண்டும். அவை அளவற்றபெருமையுள்ளவை; வரன்கொடுக்கத்திறமையுள்ளவை. உபசரித்தால் வரமளிக்கும்அந்தப் பசுக்களே எல்லாக்கர்மங்களின்பலன்களையும் மனிதனுக்குக் கொடுக்கும். தினந்தோறும் கோதானம்செய்பவனுக்குப் பூர்ணபலனுண்டு' என்றுசொன்னர்.

நூற்றுத்தொண்ணூற்றேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஸுப்ரம்மண்யர் தர்மஸ்ரீ சொல்லியதும் விஷ்ணு எல்லாத் தர்மங்களையும் புகழ்ந்ததும்.)

ஸ்கந்தர், 'நான்நினைக்குந்தர்மமும் ஒன்றிருக்கிறது. அதனை ஊக்கத்துடன் கேளுங்கள். கறுத்த காளையின்கொம்புகளிலிருந்து மண்ணையெடுத்து அதனல் மூன்றுதினம் ஸ்நானம்செய்தால் உண்டாகும்பலனைக் கேளுங்கள். பாவங்களையெல்லாம்போக்கிவிடும். மேலுலகத்தில் முதன்மையாகச்செய்யும். எதுவரையில் மனிதன் பிறவியில் பிறக்கிருனே அதுவரையிலும் சுகமுகவேயிருப்பான். யாருக்குந் தெரியாத மற்றொரு முக்கியரகஸ்யத்தைச்சொல்லுகிறேன்; கேளுங்கள். அத்திமரப்பாத்திரத்தில் தேன்கலந்துசமைத்தசோற்றையெடுத்துக்கொண்டு பூர்ணிமையில் சந்திரன்உதயமாகும்போது பலியைப் போடவேண்டும். அந்தத்தர்மத்தின்பலன் அழியாதது. அதனை ஸ்ரத்தையுடன் தெரிந்துகொள்ளுங்கள். ஸாத்தியர்கள் ருத்திரர்கள் ஆதித்தியர்கள் விஸ்வேதேவர்கள் அஸ்வினிதேவர்கள் ஸப்தமருத்துக்கள் அஷ்டவஸுக்கள் இவர்கள் அந்த அன்னபலியைப் பெற்றுக்

கொள்ளுகின்றனர். அதனால், சந்திரனும் வளர்ச்சியடைகிறான்; பெருங்கடலும் பெருக்கமடைகிறது. எல்லாருக்கும்ஸுகத்தைத்தருவதாகிய இந்தஸூக்ஷ்மமான தர்மத்தை நான் சொன்னேன்' என்று சொன்னார். விஷ்ணுவானவர், 'மஹாத்மாக்களான தேவர்களும் ரிஷிகளும்சொன்ன தர்மஸூக்ஷ்மங்கள்எல்லாவற்றையும் ஸ்ரத்தையோடும் பக்தியோடும் தினந்தோறும்படிப்பவனுக்கும் வெறுப்பின்றிக்கேட்பவனுக்கும் ஒருகாரியத்திலும் இடையூறு வருவதில்லை; பயமுண்டாவதில்லை. மங்களத்தையும் புண்ணியத்தையும் தருவனவாகச்சொல்லப்பட்ட ஸூக்ஷ்மமான இந்தத்தர்மங்களைச்செய்தவருக்குள்ளபலன் ஜிதேந்திரியனுயிருந்து படிப்பவனுக்குமுண்டு. அவன் பாவம் தலையெடாது. அவனிடத்தில் பாவம்அணுகாது. தான் படித்தாலும் பிறருக்குச்சொன்னலும்கேட்டாலும் தர்மத்தின்பலனையடையலாம். தேவர்களும் பித்ருக்களும் அவனுடைய ஹவ்யகவ்யங்களை நீண்டகாலம் புஜிப்பர். புண்ணியகாலங்களில் நியமத்துடன் பிராம்மணஸ்ரேஷ்டர்களைக் கேட்பிக்கும்மனிதன் ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் எப்போதும் அன்பனும் ஐஸ்வரியமுள்ளவனும் தர்மங்களில் அழியாதஸ்ரத்தையுள்ளவனுமாவான். மஹாபாதகம்தவிர மற்றப்பாவங்களைச்செய்தவனும் இந்தஸூக்ஷ்ம தர்மங்களைக்கேட்பதனால் எல்லாப்பாவங்களாலும் விடப்படுவான்' என்று சொன்னார். அரசனே! எல்லாத்தேவர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டதும் தேவர்களின்ரகஸ்யமுமான இந்தத்தர்மத்தை வ்யாஸர் எனக்குச் சொன்னார். நான் உனக்குச் சொன்னேன். ரத்னங்கள்நிரம்பின பூமியும் இந்தத்தர்மஜ்ஞானமும் தமக்குஉயர்வில்லாதவை. ஆதலால், தர்மந்தெரிந்தவன் இதனையே கேட்கவேண்டும். ஸ்ரத்தையில்லாதவனுக்கும் நாஸ்திகனுக்கும் தர்மம்செய்யாதவனுக்கும் தயையில்லாதவனுக்கும் யுக்திவாதத்தால் கெட்டவனுக்கும் குருவைப்பகைப்பவனுக்கும் (பொறுமை அடக்கமுதலிய) ஆத்மகுணமில்லாதவனுக்கும் இதனைச் சொல்லலாகாது'' என்றார்.

நூற்றுத்தொண்ணூற்றேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(யாரிடத்தில்புஜிக்கலாம், யாரிடத்தில் புஜிக்கலாகாதென்பது.)

யுதிஷ்டிரர், ''பாரதரே! பிராம்மணன் யாரிடத்தில் போஜனம் செய்யலாம்? க்ஷத்ரியன் யாரிடத்தில் போஜனம் செய்யலாம்?

1 வைஸ்யன் யாரிடத்தில்புஜிக்கலாம்? சூத்திரனுக்குஎப்படி?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"ப்ராம்மணன், ப்ராம்மணர்களிடத்திலும் க்ஷத்திரியர்களிடத்திலும் வைஸ்யர்களிடத்திலும் போஜனம்செய்யலாம், சூத்திரர்கள் விலக்காகிறார்கள். க்ஷத்திரியனும், பிரம்மக்ஷத்திரியவைஸ்யர்களிடம் போஜனம்செய்யலாம். சூத்திரர்கள் எல்லாவற்றையும் பக்ஷிப்பவரும் வேதத்திற்சொல்லியகருமங்கள் இல்லாதவருமாயிருப்பதனால் விடவேண்டியவர்கள். வைஸ்யர்கள் நித்தியாக்நிஹோத்திரமும் சாதுர்மாஸ்யவிரதமும் செய்துகொண்டு பரிசுத்தர்களாயிருந்தால் அவர்களிடத்தில் ப்ராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் புஜிக்கலாம். சூத்திரர்களிடத்தில்புஜிப்பவன், பூமியின்மலத்தையேபுஜிப்பவனாகிறான். அதேக சூத்திரர்களிடத்தில்புஜிப்பவன் பூமியின்மலத்தையும்அதிலுள்ளமனிதர்கள் ஜந்துக்களின் ஜலமலங்களையும் புஜித்தவனாவான். சூத்திரனிடத்தில் போஜனம்செய்யும்ப்ராம்மணர்கள் பூமியின்மலத்தைப் புஜிப்பவர்களே. 2 சூத்திரனிடம்ஸேவிக்கும் ப்ராம்மணனும் க்ஷத்திரியனும் வைஸ்யனும் (ஸந்தியாவந்தனமுதலிய) கர்மங்களை நன்றாகச் செய்துவந்தாலும் நரகத்தில் வேகவைக்கப்படுகிறார்கள்.வேதமோதலை விடாமலிருக்கும்ப்ராம்மணர்கள் மனிதர்களுக்கு மங்களகரமான கிரியைகளைச்செய்வதற்கும், க்ஷத்திரியர்கள் பாதுகாப்பதற்கும், வைஸ்யர்கள் செல்வத்தைப்பெருக்குவதற்குமிருப்பதாகச் சொல்லுகின்றனர். வைஸ்யன் எந்தக்காரியத்தைச் செய்கிறானே அதைப்பெற்றுத்தான் உலகம் ஜீவிக்கிறது. பயிர்செய்தல் பசுக்காத்தல் வர்த்தகம் இவை வைசியதர்மத்தில் இகழப்படாதவை. தன்கர்மத்தைவிட்டுச் சூத்திரன்தொழிலைச்செய்கிறவனைச் சூத்திரனாகவே நினைக்கவேண்டும். அவனிடத்தில் ஒருகாலும் போஜனம்செய்யலாகாது. வைத்தியன் ஆயுதத்தினால்ஜீவிப்பவன் ஊருக்குத்திகாரி புரோகிதன் ஜோதிஷன் வேதம் ஓதிப்பயன்படாதவன் இவரனைவரும் சூத்திரனுக்கொப்பானவர். சூத்திரகர்மத்திலிருப்பவராகிய இவர்களிடத்தில் வெட்கமில்லாமல் போஜனம்செய்பவன் புஜிக்கத்தகாதஅன்னத்தைப் புஜித்ததனால் பெரியபாவத்தையடைகிறான். கர்மங்களையனுஷ்டியாமலும் தர்மம்

1 'வைஸ்யன் போஜனம்செய்விக்கத் தக்கவர்கள் யார்?' என்பதும், 'சூத்ரன் போஜனம்செய்விக்கத்தக்கவர்கள் யார்?' என்பதும் பழையவுரை.

2 'ப்ராம்மணனும் க்ஷத்ரியனும் வைஸ்யனும் கர்மங்களைவிட்டாலும் அவர்களைவிடாமல் நிஷேதமாகச்செய்தும் சூத்ரஸேவைசெய்தாலும் நரகத்தில் வேகவைக்கப்படுகிறார்கள்' என்றும் கொள்ளலாம்.

இல்லாமலுமிருப்பவன் குலத்தையும் ஸாமர்த்தியத்தையும் மகிமை யையும்விட்டு நாய்போன்றவிலங்குஜாதியாகப் பிறக்கிறான். வைத்தி யனதுஅன்னத்தைப்புஜித்தால் அது மலத்திற்குச்சமமானது. வியபி சாரியின் அன்னம் மூத்திரம்போன்றது. சிற்பிகளின்அன்னம் ரத்தம் போன்றது. ஸாதுவாகநினைக்கப்பட்டவன், வித்தையாடுகிறவனன் னத்தைப்புஜிப்பானையின் அது சூத்திரனன்னம்போலாகும். அதை யோக்கியன் விடவேண்டும். பழிசொல்லப்பட்டவனுடைய அன்னத் தைப்புஜித்தால் அது ரத்தமதிவைப்போலிருப்பதென்று சொல்லுகின் றனர். கோட்சொல்லுகிறவன்அன்னம்புஜிப்பது பிரம்மஹத்திக்குச் சமமென்று நினைக்கின்றனர். ஆதரவில்லாமலும் அவமதிப்பாகவும் போடப்படும்அன்னத்தை ஒருகாலும்புஜிக்கலாகாது. அதைப்புஜிக் கும்பிராம்மணன் வியாதியையும் குலநாசத்தையும் விரைவில் அடை வான். ஊரதிகாரியின் அன்னத்தைச்சாப்பிடுகிறவன் சண்டாளனுக் குச் சேவகனுவான். கோஹத்திபிரம்மஹத்திசெய்தவன் கட்குடி யன் குருபத்தினியைச்சேர்பவன் இவர்களின் அன்னத்தைப்புஜித்த பிராம்மணன் ராக்ஷஸகுலத்தில் பிறப்பான். அடைக்கலம்வைத்த பொருளையெடுத்துக்கொண்டவனிடத்திலும் நன்றிகொன்றவனிடத் திலும் பெண்ணைக்கொண்டுபிழைப்பவனிடத்திலும் போஜனம்செய்ப வன் இமயத்துக்கும்விந்தியத்துக்கும்நடுவிலுள்ளதேசத்தார் சேர்த் துக்கொள்ளாத மிலேச்சர்களிருக்குமிடத்தில் பிறப்பான். குந்திபுத் ரனே! 'யாரிடத்தில்போஜனம்செய்யக்கூடாது, யாரிடத்தில் செய்ய லாம்' என்பதைப்பற்றிச் சாஸ்திரப்படி உனக்குச்சொன்னேன். இப் போது என்னிடத்தில் இன்னும் என்னகேட்க விரும்புகிறாய்?" என்றார்.

நூற்றுத்தொண்ணூற்றொன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தானம்வாங்குவதற்கும்போஜனம்செய்வதற்குமுள்ளபிராயச்சித்தங்கள்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! யாரிடத்தில் போஜனம்செய்யலா மென்பதையும் யாரிடத்தில் போஜனம்செய்யக்கூடாதென்பதையும் நீர் முழுதும்சொன்னீர். இந்தக்கேள்வியில் எனக்கு மற்றொரு ஸந் தேகமிருக்கிறது. நீர் அதனைச் சொல்லக்கடவீர். முக்கியமாய்ப் பிராம்

மணர்கள் யாகங்களிலும் ஸ்ராத்தங்களிலும் தானம்வாங்குவதற்கும் பலவகைப் போஜனங்கள்செய்வதற்கும்உரியபிராயச்சித்தங்களை என க்குச் சொல்லும்'' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

''ராஜனே! ஆ! ஆ! மகாத்மாக்களானபிராம்மணர்கள் தானம் வாங்கினாலும் போஜனம்செய்தாலும் எதைச்செய்தால் பாவத்தி னின்று விடுபடுவரோ அதை உனக்குச் சொல்வேன். யுதிஷ்டிர! ஆஜ்யதானம்வாங்கினால் காயத்ரியைஜபித்து அக்நியில் ஸமித்தைப் போடவேண்டும். எள்தானம்வாங்கினாலும் இதுதான் பிராயச்சித்தம். மது மாம்ஸம் உப்புஇவற்றைவாங்கினால் சூரியோதயம்வரையில் நிற்ப தனால் பிராம்மணன் சுத்தனாவான். பொன்தானம்வாங்கின பிராம்ம ணன் எல்லோரும்அறியும்படி இருப்புப்பாத்திரத்தைக்கையில் வைத் துக்கொண்டு முழுவேதத்தையும்ஜபிப்பதினால் பாவத்திலிருந்துவிடு படுவான். மனிதரிற்சிறந்தவனே! தனம் வஸ்த்ரம் பெண்இவர்க ளைத்தானம்வாங்குவதும் பொன்னைவாங்குவதும் ஒன்றுதான். அன் னம் பாயஸம் வெல்லம் சர்க்கரை கரும்பு எண்ணெய் பரிசுத்தவஸ்து இவற்றைத்தானம்வாங்கினால் சுத்தமாவதற்கு மூன்றுவேளைகளும் ஜலத்தில் ஸ்நானம்செய்யவேண்டும். நெல், பூ, கனி, ஜலம், மாப் பண்டம், யவம், தயிர், பால்இவற்றைவாங்கினால் காயத்ரியை நூறு முறை ஜபிக்கவேண்டும். பிரேதகாரியத்தில் பாதரக்ஷைகுடைகளை வாங்கினால் நியமத்துடன் நூறுகாயத்ரி ஜபம்செய்வதனால் அந்தப் பாவத்தினால்விடப்படுவான்.பூதானம்வாங்கினாலும் [1]நவக்ரஹதானம் வாங்கினாலும் பிரஸவத்தீட்டுள்ளஇடத்தில் தானம்வாங்கினாலும் மூன்றுதினங்கள் உபவாஸமிருப்பதனால் பாவத்திலிருந்துவிடுபடு வான். கிருஷ்ணபக்ஷத்தில் பித்ருஸ்ராத்தத்தில் அன்னத்தைப் புஜிக் கும்பிராம்மணன் ஒர்இரவும்பகலும் உபவாஸமிருப்பதனால் சுத்தனா வான். அன்றைத்தினம் ஸந்தியாவந்தனமும் செய்யலாகாது; [2]ஜபம் செய்யலாகாது. புஜித்தஅந்த [3]அன்னத்தை வேறு அன்னத்தோடு சேர்க்கலாகாது. அப்படியிருந்தால் பிராம்மணன் பரிசுத்தனாவான். இதற்காகத்தான், பித்ருக்களுக்கு அபரான்னகாலத்தில் ஸ்ராத்தம் விதிக்கப்படுகிறது. முன்னமே வரிக்கப்பட்டபிராம்மணர்கள் மேற் சொன்ன வர்ணத்தாரிடத்தில் புஜிக்கலாம். மூன்றுநாள் சாவுதீட்டில் மூன்றுவதுநாள் அன்னத்தைப்புஜிக்கும் பிராம்மணன் பன்னிரண்டு

1 'நிறைச்சாலையிலிருந்தவனிடத்திலும்' என்பது பன்மையுரை.

2 மனத்தினால்தவிர வாக்கினால் ஜபம்கூடாது என்பது.

3 அது முழுதும்ஜீர்ணமாகும்வரையில் புஜிக்கலாகாது என்பது.

நாள் மூன்றுவேளையும் ஸ்நானம்செய்வதனால் சுத்தனுவான். பன்னிரண்டாவதுநாள் கடந்தபிறகு விசேஷமான சுத்தம்செய்துகொண்டு ப்ராம்மணர்களுக்கு அன்னம்போடுவதனால் அந்தப்பாவம் விலகும். பத்துநாளேச்சாவுதீட்டில் பத்துநாள்சென்றபிறகு பிராயச்சித்தங்களுக்காகத் தானங்கள்செய்விக்கவேண்டும்.ஸாவித்ரம் ரைவதம்என்னும் இஷ்டிகளையும் கூஷ்மாண்டஹோமத்தையும் அகமர்ஷணஜபத்தையும் செய்யவேண்டும். மூன்றுநாள் சாவுதீட்டுக் கழிந்ததினத்தில் ஸ்ராத்தபோஜனம்செய்யும்பிராம்மணன்ஏழுநாள்மூன்றுவேளைகளும் ஸ்நானம்செய்வதனால் பரிசுத்தனுவான்; சிறந்த தவவித்தியையடைவான்; ஆபத்தையடையான். சூத்திரர்களுடன் ஒருபந்தியில்சேர்ந்து சாப்பிடும்பிராம்மணனுக்குச் சாஸ்திரப்படி பாவமூண்டாகிறது. அவனுக்கு முன்சொன்னபிராயச்சித்தங்தான் பரிகாரமாகிறது. பிராம்மணன் வைஶ்யர்களுடன் ஒருபந்தியில் புஜித்தால் மேற்சொன்ன பிராயச்சித்தம் மூன்றுநாள்செய்வதனால் அந்தப்பாவத்தினின்றும் விடுபடுவான். க்ஷத்திரியர்களுடன் ஒருபந்தியில் சாப்பிடும்பிராம்மணன் [1] வஸ்திரங்களுடன் ஸ்நானம்செய்வதனால் அந்தப்பாவத்தினின்று விடுபடுவான். தகாதவர்களுடன்புஜிப்பது சூத்திரனுக்குக் குலத்தையும் வைஶ்யனுக்குப்பசுக்களையும் பந்துக்களையும் க்ஷத்திரியனுக்கு ஐஶ்வரியத்தையும் பிராம்மணனுக்கு ப்ரம்மதேஜஸையும் அழிக்கும். அதற்குப்பிராயச்சித்தமாக ஸாவித்ரம் ரைவதம்என்னும்இஷ்டிகள் கூஷ்மாண்டஹோமம் அகமர்ஷணஜபம்ஆகிய சாந்திகளைச்செய்வதனால் அந்தப்பாவத்தினின்று விடுபடுவான். ஒருவர் ஒருவருடைய ரிச்சிலுஉண்பதும் அப்படியே. கோரோசனை, அறுகம்புல், மஞ்சள், சந்தனமுதலிய மங்களகரமான பூச்சுத்திரவியங்கள் இவற்றில் ஒருவர் ரிச்சத்தை மற்றொருவர் உபயோகிக்கலாம். இதில் சந்தேகமில்லை" என்றார்.

இருநூறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தவத்தினாலும் தானத்தினாலும் தர்மத்தினாலும் மேலுலகம்பெற்றவர்கள்.)

யுதிஷ்டிரர், "பாரதரே! பிதாமஹரே! தானம்செய்துகொண்டும் தவம்செய்துகொண்டுமிருக்கவேண்டுமென்றும்சொன்னீர். [2]பூமி

---

[1] எல்லாவஸ்திரங்களோடுங்கூடத்து ஸ்நானம்செய்வது.

[2] 'தானம்தவம்இவைகளில்எதுசிறந்தது?' என்பதுபழையஉரை.

யில் இவை எப்படிப்பட்டவை என்பதைச்சொல்லி இந்த என்மனத் துயரத்தைதெழிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"தவத்தினால்ஆத்மசுத்திபெற்ற எந்தத்தர்மிஷ்டர்களும் தான ங்களையும்புண்ணியங்களையும் விடாமற்செய்தஎந்த அரசர்களும் புண் ணியலோகங்களை நிச்சயமாக அடைந்தனரோ அவர்களைச் சொல்லு கிறேன்; கேள். அரசனே ! எல்லாராலும் பூஜிக்கப்பெற்ற ஆத்ரேய னென்பவர் சிஷ்யர்களுக்கு நிர்க்குணப்ரம்மத்தை உபதேசித்து எல்லா வற்றிலும்சிறந்தஉலகங்களை அடைந்தார். உசீனரன்மைந்தனான சிபி சக்ரவர்த்தி தன்அன்புள்ளபுத்திரனுடையஉபிரை ப்ராம்மணனுக்கு உபகாரமாகக்கொடுத்து இவ்வுலகத்திலிருந்து ஸ்வர்க்கலோகத்திற் குச் சென்றான். ப்ரதர்த்தனனென்னும்காசிராஜன் ப்ராம்மணனுக் குத் தன்புத்திரனைக்கொடுத்து இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் ஒப்பற்றபுகழை அடைந்திருக்கிறான். ஸங்கிருதியின்புத்திரனான ரந்தி தேவன் மகாத்மாவானவஸிஷ்டருக்குச்சாஸ்திரப்பிரகாரம்அர்க்கியத் தைக்கொடுத்துச் சிறந்தலோகங்களை அடைந்தான். தேவாவ்ருதன் என்னுமரசன் நூறுகம்பிகளுள்ளதும் பொன்மயமும் அழகியதுமான சிறந்தகுடையை யாகத்தில் பிராம்மணனுக்குக்கொடுத்து ஸ்வர்க்கம் போனான். மகிமைபொருந்திய அம்பரீஷன் அளவற்றமகிமையுள்ள பிராம்மணனுக்கு ராஜ்யத்தையெல்லாம்கொடுத்துத் தேவலோகத்தை அடைந்தான். சூரியகுமாரனான கர்ணன் தன்னுடைய திவ்யகுண்ட லத்தையும், ஜனமேஜயன் வாகனத்தையும்பசுக்களையும்,பிராம்மணர் களுக்குக்கொடுத்து உயர்ந்தலோகங்களை அடைந்தனர். வ்ருஷாதர்ப்பி யென்னும்ராஜரிஷி பலவகைரத்தினங்களையும் அழகானவீடுகளையும் பிராம்மணர்களுக்குக் கொடுத்து ஸ்வர்க்கம்போனான். விதர்ப்ப தேசத்தரசனானபி ராஜ்யத்தையும் கன்னிகையையும் மஹாத்மா வான அகஸ்தியருக்குக்கொடுத்துப் புத்திரர்களோடும் பந்துக்களோ டும் பசுக்களோடும் ஸ்வர்க்கம்போனான். பெரும்புகழ்பெற்ற பரசு ராமர் பிராம்மணருக்குப் பூமிதானம்செய்து மனத்திற்குமெட்டாத அழிவில்லாதஉலகங்களை அடைந்தார். மேகத்திற்கதிபதியான இந் திரன் மழைபெய்யாமலிருந்தபோது, வஸிஷ்டர் எல்லாப்பிராணிகளை யும் பிழைப்பித்தார்; அதனால், அழிவில்லாத ஸ்தானத்தை அடைந் தார். தசரதபுத்திரரானராமர் அநேகயாகங்களில் திரவியங்களையளி த்து உலகத்தில் பெரும்புகழ்பெற்றுஅழிவில்லாதஉலகங்களை அடைந் தார். கக்ஷஸேனனென்னும்ராஜரிஷி மஹாத்மாவானவஸிஷ்டருக்கு

அவர்கொடித்தபொருளைச் சரியாகவுப்பித்ததனால் மிகப்பெரியபுகழ் பெற்றான். கர்தமனுடையபேரனும் அவிக்ஷித்தின்புதல்வனுமாகிய மருத்தன் அங்கிரஸ்முனிவருக்குக் கன்யாதானம்செய்து ஸ்வர்க்கம் சென்றான். பாஞ்சாலதேசத்தரசனும் தர்மிஷ்டனிற்சிறந்தவனுமாகிய பிரம்மதத்தனென்னுமரசன் சங்கநிதியைக்கொடித்துச்சிறந்தகதியை அடைந்தான். மித்ரஸஹனென்னுமரசன் அன்புள்ளமனைவியானமதயந்தியை மஹாத்மாவான வஸிஷ்டருக்குக்கொடித்து ஸ்வர்க்கமடைந்தான். மனுவின்புத்திரனை ஸுத்யும்னன் மஹாத்மாவான லிகிதருக்குத் தர்மமாகத் தண்டத்தைச்செய்ததனால் உயர்ந்தலோகங்களை அடைந்தான். பெரும்புகழ்பெற்ற ஸஹஸ்ரசித்யனென்னும் ராஜரிஷி பிரியமானஉயிரைப் ப்ராம்மணனுக்காகவிட்டுச் சிறந்தலோகங்களை அடைந்தான். சதத்யும்னனென்னுமரசன் வேண்டினவையெல்லாம் நிரம்பினபொன்மாளிகையைமௌத்கல்யருக்குக்கொடித்து ஸ்வர்க்கம் போனான். முன்னே, ஸுமன்யுவென்பவன் மலைகள்போன்றஅன்னங்கள்பக்ஷிணங்களின்குவியல்களைச்சாண்டில்யருக்குக்கொடித்துமேலுலகமடைந்தான். த்யுதிமானென்றுபெயர்பெற்றவனும் சிறந்தபராக்ரமமுள்ளவனுமான சால்வதேசத்தரசன் ரிசீகருக்கு ராஜ்யத்தைக் கொடித்துச் சிறந்தலோகங்களை அடைந்தான். மதிராஸ்வனென்னும் ராஜரிஷி ஸுமத்யமையென்னும் கன்னிகையை ஹிரண்யஹஸ்தருக்குக்கொடித்துத் தேவர்கள்வஸிக்கும் லோகங்களுக்குப் போனான். ப்ரபுவானரோமபாதனென்னும்ராஜரிஷி சாந்தையென்னும்பெண்ணை ரிசியசிருங்கருக்குக்கொடித்து விரும்பினபலன்களையெல்லாம் மிகுதியாகப்பெற்றான். பகீரதனென்னும்ராஜரிஷி ஹம்ஸியென்னும் புகழ் பெற்றகன்னிகையைக் கௌத்ஸருக்குக்கொடித்து அதனால் அழிவில்லாதலோகங்களை அடைந்தான். பகீரதனென்னுமரசன் லக்ஷும்பசக்களைக் கன்றுகளோடு கோகலருக்குக்கொடித்துச் சிறந்தலோகங்களை அடைந்தான். யுதிஷ்டிர! இவர்களும் மற்றுமநேகர்களும் தானத்தினாலும் தவத்தினாலும் ஸ்வர்க்கத்திற்குப்போயும் அடிக்கடி திரும்பிவந்துகொண்டுமிருக்கின்றனர். எந்தக்கிருகஸ்தர்கள் தானத்தினாலும் தவத்தினாலும் லோகத்தைஜயித்தனரோ அவர்களின்கீர்த்தி பூமியுள்ளவரையில் நிலைபெற்றிருக்கும். யுதிஷ்டிர! பெரியோர்களின் இந்தச்சரித்திரத்தை நான் சொன்னேன். தானத்தினாலும் யாகத்தினாலும் ஸந்ததியையுண்டுபண்ணினதினாலும் இவர்கள் ஸ்வர்க்கத்தை அடைந்தனர். கௌரவர்களுக்குத்தலைவனே! தானங்கொடித்தபிறகும் எப்போதும் தானத்தையும் யாகத்தையும் செய்விப்பதற்கும்

தர்மத்தைவிருத்திசெய்வதற்கும் உனக்கு எண்ணமிருக்கவேண்டும். ராஜஸ்ரேஷ்டனே! உனக்கு இன்னும் எந்தவிஷயத்தில் ஸந்தேக மூண்டாகுமோ அதனை நாளைக்காலையில் சொல்லுவேன். ஸந்தியா காலம் வந்துவிட்டது''என்றார்.

இருநூற்றோராவது அத்யாயம்.

தா ன த ர் ம ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(ஐந்துவகைத் தானங்கள்.)

யுதிஷ்டிரர், ''ஐயா! வ்ரதமும் பராக்கிரமமும் தவறுதவரே! சிறந்ததானத்தினாலும் தவத்தினாலும் ஸ்வர்க்கத்தையடைந்த அரசர்க ளைப்பற்றி உம்மிடம் கேட்டுக்கொண்டேன். தர்மிஷ்டர்களிற்சிறந்த வரே! இந்தத்தர்மங்களைமட்டும் கேட்கவிரும்புகிறேன். கொடுக்க வேண்டியதானங்கள் எத்தனைவகை? அவற்றினால்கிடைக்கும் பலன் கள் யாவை? தர்மத்தோடுசேர்ந்ததானம் யாருக்கு எப்படிக்கொடுக்க வேண்டுமென்று நினைக்கப்படுகிறது? எந்தக்காரணங்களினால் எத் தனைவகைத் தானமுண்டு? தெளிவாகக் கேட்க விரும்புகிறேன்'' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

''பாரதனே! குந்திபுத்ரனே! குற்றமற்றவனே! எல்லாவர்ணங் களும் தானம்கொடுப்பது எப்படியென்பதைப்பற்றித் தெளிவாகச் சொல்லுகிறேன்; கேள். பாரதனே! தர்மம் அர்த்தம் பயம் காமம் தயைஇவ்வைந்து காரணங்கள்பற்றித் தானமும் ஐந்துவகையென்று அறியவேண்டும். 'இங்கும் [1]புகழையடையலாம்; மறுமையிலும் சிறந்தஸுகம்பெறலாம்' என்றுநினைத்துப் பொருமையைவிட்டுப் பிராம்மணர்களுக்குத் தானம்கொடுக்கவேண்டும். யாசிப்பவர்கள், [2]'இவன் நமக்குக் கொடுக்கிறான்; கொடுப்பான்; அல்லது, கொடுத் தான்' என்று சொல்வதைக்கேட்டுக்கொண்டே பின்னும் கேட்பவர் களுக்கு எல்லாவற்றையும் கொடுக்கவேண்டும். யாசிப்பவனுக்கு எல்லாவற்றையும் கொடுக்கலாம். [3]'நான் இவனைச்சேர்ந்தவனல்லேன். இவன் என்னைச்சேர்ந்தவனல்லன். ஆனால், இவன் அவமானிக்கப் பட்டால் தீங்குசெய்வான்' என்று பயத்தினாலேயே தெரிந்தவன் மூடனுக்கும் அவசியம் கொடுக்கவேண்டும். [4]'இவன் எனக்குவேண்

1 இது தர்மதானம். 2 இது அர்த்ததானம்.
3 இது பயதானம். 4 இது காமதானம்.

டினவன்; நான் இவனுக்கு வேண்டினவன்' என்றுபார்த்துப் புத்தி சாலியானவன் ஸ்நேகிதனுக்கு ஸந்தோஷமாகவும் வெறுப்பில்லா மலும் கொடுக்கவேண்டும். [1]' இவன்ஏழை; யாசிக்கிறான்; சிறிது கொடுத்தாலும் திருப்தியடைவான்' என்று தயையினால் ஏழைக் குக் கொடுக்கவேண்டும். இப்படி ஐந்துவகைத்தானங்கள் புண்ணி யத்தையும் புகழையும்விருத்திசெய்பவை. இயன்றவரையில் கொடுக்க வேண்டுமென்று பிரம்மதேவர் சொல்லியிருக்கிறார்" என்றார்.

இருநூற்றிரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மபுத்ரர் திரும்பவும் பீஷ்மரிடம் தர்மங்கேட்டாரென்று வைசம்பாயனர் ஜனமேஜயருக்குச் சொல்லியது.)

சிறந்தசொற்களினால் உபதேசித்துவந்த பீஷ்மரிடம் சிறந்த புத்தியுள்ளயுதிஷ்டிரர் இன்னும்உபதேசங்கேட்கவிரும்பி அன்புடன் பேசலானார்" என்று வைசம்பாயனர்சொல்ல, ஜனமேஜயர், "பிரம்ம ரிஷியே! மரணகாலத்திற்குட்பட்டிருந்த பீஷ்மரிடத்தில் என்பிதா மஹாரான தர்மராஜர் ஸபையிலுள்ள எல்லாருக்கும்வேண்டினதும் இம்மைமறுமை இரண்டிலுலகங்களுக்கும் உபயோகமும் சிறந்தபுரு ஷார்த்தத்தைத்தருவதுமான என்னவிஷயத்தை அப்போது கேட் டார்? சிறந்தஜ்ஞானமுள்ளவரே! அதனை எனக்குச்சொல்லும். எனக் குக் கேட்கவிருப்பமிருக்கிறது" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லலானார். "மஹாராஜரே! அந்தக்காலத்தில் குந்திபுத்திரரும் அரசருமான யுதிஷ்டிரர்கேட்ட தர்மஸங்கிரஹத்தைத் திரும்பவும் கேளும். அஜாதசத்துருவானவர், சரதல்பத்திலிருக்கும்பீஷ்மரைப் பார்த்து எல்லாஅரசர்களுமிருக்கையில் மனத்தில்அன்போடு திரும் பவும் பேசலானார். "சிறந்தஜ்ஞானமுள்ளவரே! பிதாமஹரே! எல் லாச்சாஸ்திரங்களும் தெரிந்தவரே! எனக்குத் தெரியவேண்டிய விஷ யம் இருப்பதால் நான் பேசுகிறேன். என்சொல்லைக் கேட்கவேண் டும். எல்லாப்பிராணிகளின் தாரதம்யங்களையும்அறிந்தவரும் எல் லாப்பிராணிகளிடத்திலும் தயையுள்ளவரும் மிகுதியானகேள்விகளி னால் ஸந்தோஷமடைந்தவருமான நீர்தாம் நமதுகுலத்திற்சிறந்தவர். உம்மைப்போன்றஞானமுள்ளவர் இவ்வுலகத்தில் இப்போது கிடைப்

1 இது காருண்யதானம்.

பது அரிது. பிரபுவே! நீர் பெரியவராயிருப்பதனால் நாங்கள் பாக்கியம்பெற்றோம். நமக்குக் குலத்தோரும் சுற்றத்தவரும் கிடைக்காமலிருக்கும்காலம் இப்போதே வந்துவிட்டது. புருஷஶ்ரேஷ்டரே! உம்மைவிடவேறுயாரும் உபதேசிப்பவரில்லை. பாரதரே! ஆதலால் தர்மார்த்தங்களடங்கியதும் பின்னுக்குநன்மைபயப்பதும் புதிதும் சிறந்ததுமானசொல்லைக் கேட்கவிரும்புகிறேன். ஸ்ரீமானான இந்த நாராயணர் எல்லாஅரசர்களினெதிரிலும் கௌரவத்தோடும் ஸ்நேகத்தோடும் உம்மிடம் காத்திருக்கிறார். குற்றமற்றவரே! கௌரவரே! என்னையும் என்ஸகோதரர்களையும் அனுக்கிரகிக்க விருப்பம் உமக்கிருக்குமானால் இந்தக்கிருஷ்ணனுக்கும் எங்களுக்கும் அரசர்களுக்கும், முன்னிலையில் கேட்பவருக்கு மிக்கஇதமான ஒருபழையஇதிஹாஸத்தை நான்விரும்புவதற்காக என்மேலுள்ள அன்பினால் சொல்லக்கடவீர்" என்றார். அவருடையசொல்லைக்கேட்டு அன்பினால் நெகிழ்ச்சியுற்ற பீஷ்மர் அவரைக் கண்ணினால்குடிப்பவர்போலப் பார்த்து, "ராஜனே! முன்நடந்ததும் ஆதிகாலந்தொடங்கிவந்ததுமாகிய ஓர் இதிஹாஸத்தைக்கேள்" என்றுசொன்னார். பீஷ்மர் இவ்வளவுவரையிலும் சொல்லி வாஸுதேவரைத் தலைவணங்கி நமஸ்கரித்தபின், திரும்பவும் தர்மராஜரைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

இருநூற்றுமூன்றுவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன் முகத்திலுண்டான அக்நிமலையைஎரித்ததும், கிருஷ்ணன் அம்மலையைச் செழிக்கச்செய்ததும், அதன்காரணத்தை ரிஷிகளுக்குச் சொல்லியதும்.)

"லக்ஷ்மிக்கிருப்பிடமானவரும் சிறந்தகைகளுள்ளவருமான இந்தநாராயணராகிய கிருஷ்ணபகவான் முன்னர்ப் புத்திரனுக்காக வ்ரதம்செய்யக்கருதிப் பன்னிரண்டுவருஷம் தீக்ஷைஎடுத்துக்கொண்டார். வ்ரததீக்ஷைபெற்றுக்கொண்டவரான கேசவரைப்பார்ப்பதற்காக மஹரிஷிகள் வந்தனர். அரசர்க்கரசே! நாரதர், பர்வதர், வ்யாஸர், தேவலர், காஶ்யபர், ஹஸ்திகாஶ்யபர், ஜமதக்நி, தௌம்யர், வால்மீகி இம்மஹாத்மாக்களும் ஸத்தியத்தையே முக்கியமான வ்ரதமாகக்கொண்ட இன்னும்அநேகதவஸித்திபெற்றவரானவரும் பிரம்ம

ஜ்ஞானிகளான குற்றமற்றசிஷ்யர்களால் பின்செல்லப்பெற்றுத் தம் மேல்அன்புள்ள கிருஷ்ணனே ஸேவித்தனர். வாஸுதேவரும் தம்மிடம்வந்த அவர்களை அன்புடன் அழைத்து மனமகிழ்ந்து அவர்களைக் கௌரவிப்பதற்காக அவர்களுக்குத் தேவதாபூஜைக்குச்சமமான அதிதிஸத்காரத்தை க்ஷத்திரியகுலத்திற்குத் தகுதியாகச் செய்தார். குற்றமற்றவனே! அப்போது, அவர் செய்த பூஜையிஞல் ஸந்தோஷமும் அன்புமுள்ளரிஷிகள் ஆஸனங்களில் உட்கார்ந்த பிறகு, ஒருவருக்கொருவர் அழகியசிறந்தஸம்பாஷணைகள் நடந்தன. ஸர்வவியாபியான நாராயணருடையஅனுக்கிரகத்திஞலேயே அந்தஸம்பாஷணைகளைச் சொல்வேன். அப்போது, அவரே விரதம்எடுத்துக் கொண்டதில் ரிஷிகள் ஆச்சர்யமடைந்தனர். அதனைப்பற்றித்தான் மஹாத்மாவும் வ்ருஷபக்கொடியுடையவருமான பரமசிவனுடைய மகிமை வெளிப்பட்டது. அப்போது, உமாதேவியானவள் மஹாதேவரிடம் ஸந்தேகங்களைக் கேட்டாள். அவர் அவளுக்குச் சந்தோஷமுண்டாக்குவதற்காக அவற்றையெல்லாம் சொன்னர். அப்பா! உமைக்கும் பரமசிவனுக்கும்நடந்த அழகான ஸம்பாஷணையைக் கேள். அப்பா! வர்ணஸ்ரமதர்மங்களும் ரிஷிதர்மங்கள் அனைத்தும் பூர்ணமானராஜதர்மங்களும் சிறந்தவையான கிருஹஸ்த தர்மங்களும் புண்ணியபாபகர்மங்களின்முடிவுகளும் பலன்களும் பல வகைத்தேவரகஸ்யங்களும் தானதர்மங்களைப்பற்றினவிதிகளும்அந்த ஸம்பாஷணத்தில் சொல்லப்பட்டன. யமநியமங்களின்முறையும் யமலோகத்தின்வகையும் ஸ்வர்க்கலோகம் ப்ராணமோக்ஷம் இவற்றின் வழிகளும் தீர்த்தயாத்திரைமுழுதும் மோக்ஷதர்மத்தின்முறையும் ஸாங்கியயோகங்களும் அந்த ஸம்பாஷணத்தில் சொல்லப்பட்டன. தேவியானவள் தானுகவே ஸ்திரீதர்மத்தை ஈஸ்வரருக்குச் சொன்னுள். அப்பா! உமாதேவி ஸந்தேகங்கள்கேட்டஅந்தஸந்தர்ப்பத்தில் இதுமுதலானநல்லவிஷயங்களெல்லாம் ஏற்பட்டன. பொருளையும் புகழையும் ஆயுளையும் புண்ணியத்தையும் மனேதேகங்களின்வன்மையையும்பயக்கும் மிக்கஅனுகூலமான இந்தச்சிறந்தகதையை நான் சொல்லுகிறேன்; கேள். விருத்தியாகவிரும்புகிறவன் மிக்கமங்களமும் பரிசுத்தமுமானஇந்தஇதிஹாஸத்தைத் தினந்தோறும் காலை மாலைகளில் நன்ருகக் கேட்கவேண்டும். அப்போது வ்ரதம்செய்துவருந்தினகிருஷ்ணபகவானுடைய முகத்திலிருந்து காண்பதற்கு ஆச்சரியமான அக்நி புறப்பட்டது. ரிஷிகளனைவரும் பார்த்திருக்கும்போதே, பிரபுவின்முகத்தினின்றுவெளிப்பட்ட அந்தப்பெரியஅக்நி

யினால் மான்கள், பக்ஷிகளின்கூட்டங்கள் நிரம்பினதும் துஷ்டமிருகங்களால் பயங்கரமும் மரங்களும் புதர்களும் கொடிகளும் அடர்ந்ததுமான சிறந்தமலை எரிக்கவும் அழிக்கவும்பட்டுப் பார்க்கப்பரிதாபகரமாயிற்று. திரும்பவும் குளிர்ந்தமனமுள்ளகிருஷ்ணனால் பார்க்கப்பட்டவுடன், அம்மலை விரைவில் மரங்களும் காடுகளும் பூத்தும் மனங்களித்திருக்கும்சித்தசாரணர்களின்கூட்டங்களினால்விளங்கியும் மதயானைகளும் பலவகைப்பக்ஷிகளும் பொருந்தியுமிருந்தது. அது எல்லாருக்கும் மிக்கஅற்புதமும் சிந்தைக்கெட்டாததுமாயிருந்தது. அதனைக்கண்டு ரிஷிக்கூட்டத்தாரனைவரும் ஆச்சரியத்திற்குமிகவும் வசப்பட்டு மயிர்பொடித்துப் பயத்தினால் கண்கள்கலங்கி நல்லதோ கெட்டதோ ஒன்றும்பேசாமலிருந்தனர். பிறகு, தாமரைக்கண்ணரும் பகவானுமாகியநாராயணர், ரிஷிக்கூட்டம் ஆச்சரியப்பட்டபோது அவர்களைநோக்கி, 'இந்தரிஷிக்கூட்டத்தில் மிக்கஅதிகமானஆச்சர்யம் எதற்காகஉண்டாயிற்று ? என்னால் பூஜிக்கப்பட்டவர்களும் எல்லாந் தெரிந்தவர்களுமாகியரிஷிகள் என்னுடைய இந்தச்சங்கேதத்திற்குச் சரியானநிச்சயத்தைச்சொல்லவேண்டும்'என்றுமதுரமாகக்கேட்டார். கிருஷ்ணனுடைய சொல்லைக்கேட்டரிஷிகள் அவரைத்துதிக்கத்தொடங்கினர். 'நீரே உலகங்களைப் படைப்பவர். நீரே அவற்றை அழிப்பவர். குளிர்ச்சியும் நீரே. வெப்பமும் நீரே. ஸத்யமும் நீரே. யாகமும் நீரே. நீர்தாம் ஆதி. நீர்தாம் அந்தம். உம்மைவிடவேறு ஒன்றும் இல்லை. புருஷோத்தமரே ! ஜங்கமஸ்தாவரங்களனைத்தும் நீர்தாம். ஸ்வாமி!இவ்வுலகமென்னும்சக்கரம் முழுவதும் உம்மைஆதாரமாகப் பற்றிச்சுழல்கிறது. உமதுமுகத்தினின்று அக்கினிஉண்டானதைப்பற்றி நீர்தாம் சொல்லத்தகும். மதுஸூதனரே ! இதுதான் எங்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று, புருஷோத்தமரே! இதைச்சொன்னால் நாங்கள் பயந்தீர்ந்தவர்களாவோம். உமக்குஇஷ்டமிருந்தால் சொல்லலாம். நாங்கள் கட்டளையிடுவது ஏது?' என்றுசொல்லினர். ஸ்ரீபகவான், 'ரிஷிஸ்ரேஷ்டர்களே ! உலகத்தின்நன்மைக்காக நீங்கள் எக்காலமும்தவஞ்செய்துவருகிறீர்கள்.ஆதலால்,உலகங்களின்நன்மையாகிய ரகஸ்யத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன்; கேட்கவேண்டும். உலகங்களுக்கு வேண்டாதவனும் உலகங்களையழிப்பவனும் மாயையிலும்அஸ்த்ரங்களிலும்ஸமர்த்தனும் பலத்தினால்கொழுத்தவனுமாகியசம்பரனென்னும் ஓர்அஸுரன்இப்போதிருந்தான். உலகங்களின் நன்மையைக்கருதி அவன் என்னால் கட்டப்பட்டான். என்னுடைய புத்திரனால் அவனுக்கு வதம்நேரிடுவதைக் கண்டேன். அதனால்,

வ்ரதங்கள்செய்து எனக்குச்சமமான புத்திரனேயுண்டாக்கவேண்டுமென்று புத்திரனேச்சிருஷ்டிப்பதற்காகவே வனம்வந்தேன். இவ்வாறு வ்ரதம்செய்யும்என்னுடைய தவத்தின்உக்கிரத்தினால் என்தேகத்திலிருக்கும்ஸாரமாகியஉஷ்ணமானதுஅக்னியாகிவெளிப்பட்டது. அது வெளிப்பட்டவுடன், ஒருநொடியில் பிரம்மதேவரைப் பார்க்கப்போயிற்று. அனங்கனென்னப்படும் மன்மதன் பிரம்மதேவரால் எனக்குப் புத்திரனாகச் செய்யப்பட்டான். அவன் அவரால் அனுப்பப்பட்டுத் திரும்பவும் என்னிடத்திற்கே வந்தான். இவ்வாறு, என்விஷ்ணுசக்தியானது என்முகத்திலிருந்து வெளிப்பட்டது. அந்தஅக்நியினால் எதிரிலிருக்கும் இம்மலை அழிக்கப்பட்டது. அந்தமலை எரிந்துபோனதைக்கண்டு குளிர்ந்தஎண்ணத்துடன் நான்பார்த்தவுடன், அம்மலை திரும்பவும் முன்போலாயிற்று. இந்த ரஹஸ்யத்தைச் சரியாகவும் சுருக்கமாகவும் உங்களுக்குச்சொன்னேன். ரிஷிகளே! அதனாலேதான், உங்களுக்குத் துயரமும் வியப்புமுண்டாயின' என்றுசொன்னார். இவ்வாறு ரிஷிகளுக்குச்சொன்னபிறகு, மறுபடியும் அவர்களைப்பார்த்துக் கேட்கத்தொடங்கினர்.

இருநூற்றுநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(நல்லவிஷயத்தைச் சொல்லும்படி கிருஷ்ணன் கேட்டதும், நாரதர் உமாமஹேச்வர ஸம்வாதத்தைச் சொல்லத் தொடங்கியதும்.)

'உங்களைப்பார்த்ததனால் எனக்கு ஸந்தோஷம் அதிகமாயிற்று. நீங்களனைவரும் தவஸித்திபெற்றவர்கள்; திவ்யஜ்ஞானமுள்ளவர்கள்; எல்லாஉலகங்களுக்கும் போகத்தக்கவர்கள்; சாஸ்த்ரஜ்ஞானத்தாலும் ஆத்மஜ்ஞானத்தாலும் பரிசுத்தராயிருப்பவர்கள்; உலகங்களின்உற்பத்தியையும் முடிவையும் அறிந்தவர்கள்; பாவங்களை உதறினவர்கள். ஆதலால், உலகங்களில்ஆச்சரியமானது ஏதாவதுஎன்று உங்களால் காணவாவது கேட்கவாவதுபட்டிருந்தால் அதனைஎனக்கு நீங்கள்சொல்லவேண்டும். தவத்தினால்பரிசுத்தமான மனமுள்ளநீங்கள் எதைச்சொன்னாலும் அது அமிருதம்போலிருக்கும். சொல்லமுதத்தைக் கேட்பதில் எனக்கு ஆவலிருக்கிறது. விருப்பும் வெறுப்புமற்றவர்களும் எப்போதும் ஸத்தியமேபேசுகிறவர்களுமான

ஸாதுக்களின்சொல் நம்பத்தக்கதாயும் செவிக்கினியதாயுமிருக்கும். ஆதலால், உங்களுடையசேர்க்கை எனக்குப் பயன்படட்டும். அதனை நீங்கள் வீணுக்கலாகாது. ஆதலால், உங்களுடையதரிசனம் எனக்கு ஸபலமாகவேண்டும். பெரியோர்களின்முகத்தினின்றுவெளிப்பட்ட அந்தவிஷயத்தை நான் என்புத்தியையும்கலந்து மனிதர்களுடைய புத்தி விருத்தியடையும்படி ஸபைகளில் சொல்லுவேன். நான்சொன்னதையும் மற்றவர்கள் பெருகச்செய்வர்; சிலர் கொண்டாடுவர். மற்றும்சிலபெரியோர் என்னிடத்திலுள்ள வாத்ஸல்யத்தினால் என்னைச் சிலாகிப்பர்' என்றுசொன்னார். ஜனார்த்தனர் இவ்வாறு தாம்கேட்க வேண்டுமென்று சொல்லும்போது, மஹரிஷிகள் அவரைப்பார்த்து வரிசையாகக் கரங்களைக்குவித்து வாக்கினால் பின்வருமாறு சொல்லலானார்கள். 'வரங்கொடுப்பவரே! நீர் உமதுவாக்கினால் எங்களை இவ்வாறு சொல்வது தகாது. நாங்கள்எல்லாரும் உமதுகட்டளையை எதிர்பார்த்திருப்பவர்கள். எங்கள்தவமெல்லாம் உம்மால்நடப்பது. கேசவரே! எங்களை நீர் இப்படிப்பூஜிப்பதும் நியாயமன்று. உம்மை விட வேறுஒருவனையும் நாங்கள் அறியவில்லை. ஆகாயத்திலும் பூமியிலும் எவ்வுலகத்திலும் உமதல்லாததுஒன்றையும் நாங்கள் காணவில்லை. எல்லாம் உம்மால்வியாபிக்கப்பட்டது. தேவரே! உம்மிடத்தில்சொல்வதற்கு ஒன்றும்எங்களுக்குத்தெரியாது' என்றனர். இவ்வாறுசொல்லப்பட்டகேசவர், புன்னகையுடன் அவர்களைப்பார்த்து, 'ரிஷிஸ்ரேஷ்டர்களே! நான் இப்போது மானிடஜன்மத்திலிருப்பவன். சிறந்ததவமுள்ளவர்களே! ஆதலால், மானிடரைப்போலவே எனக்குச் சக்தியிருப்பதாக அறியுங்கள். உங்களால்சொல்லப்படுவது எனக்குப் புதிதுபோலவேயிருக்கும்' என்றுசொன்னார். மஹாத்மாவான அவர் இவ்வாறுசொல்ல, ரிஷிகளனைவரும் அவருடைய ஆஜ்ஞைக்குள்பட்டனர். பிறகு, புத்திமான்களான ரிஷிக்கூட்டத்தாரனைவரும் திவ்யஜ்ஞானமுள்ள நாரதரைத்தாம் கேசவர்கேள்விக்கு மறுமொழிகூறத் திறமையுள்ளவரென்று புத்தியில் நிச்சயித்தனர். 'இந்தநாரதரிஷி உக்ரமானதவமுள்ளவர்; வாஸுதேவருக்கு மிக்க அன்பர்; பழையசரித்திரங்கள் தெரிந்தவர்; சிறந்தவாக்குள்ளவர்' என்னும் இக்காரணங்கள்பற்றி நாரதரையே நிச்சயித்தனர். எல்லாரும் அவரையே அதற்குத்தக்கவராகவுற்படுத்தி அவரைப்பார்த்து, 'நீர் தீர்த்தயாத்திரைக்காக ஸஞ்சரிக்கும்போது ஹிமயமலையில் ஓர்ஆச்சர்யம் கண்டீரன்றே? அது கேட்பவர்களுக்கு மிகப்பிரியமாயிருக்கும். ஆதலால், எல்லாருடையவிருப்பத்திற்காகவும் அதனை ஆதிதொடங்கி

ஒன்றும்விடாமல் எல்லாவற்றையும் இந்தக்கிருஷ்ணனுடையஸந்தோஷத்திற்காகச் சொல்லக்கடவீர்' என்று சொன்னார்கள். எல்லாரிஷிகளாலும் அவ்வாறு தூண்டப்பட்டநாரதர், அப்போது எல்லாலோகங்களுக்கும் நன்மைசெய்யும் விஷ்ணுவானவாஸுதேவரைத் தலைவணங்கி அவரைப்பார்த்துப் பேசத்தொடங்கினர். அப்போது, நாராயணருக்குநண்பரும் பேசுகிறவரிற்சிறந்தவருமான நாரதர் பரமேசுவரருக்குப் பார்வதியுடன் நடந்த ஸம்பாஷணத்தைச் சொல்லலானர்.

இருநூற்றைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பார்வதி பரமேஸ்வரருடைய கண்களைப்பொத்தியதனால் அவருக்குழன்றுவது கண்உண்டானதும், அதனால் இமயமலை எரிக்கப்பட்டுத் திரும்பவும் சிருஷ்டிக்கப்பட்டதும், உமாமஹேஸ்வர ஸம்வாதத்தில் ஈசுவரர் அம்மலையெரிக்கப்பட்ட காரணங் கூறியதும்.)

நாரதர், 'பகவானே! நான் தீர்த்தயாத்திரைக்காக எப்போதும்போல ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும்போது ஆச்சரியமாக விளங்குவதும், பலவகைவிருக்ஷங்களுள்ளதும், பலவகைப்பக்ஷிக்கூட்டங்களால் சூழப்பட்டதும், பலவகையானரத்தினக்குவியல்கள்நிரம்பினதும், பலவகைப்பொருள்களுள்ளதும், உயர்ந்தசந்தனமரங்களுள்ளதும்,உயர்ந்தபூபங்களின்வாஸனையுள்ளதும், உயர்ந்தமலர்கள்இறைக்கப்பட்டதும், உயர்ந்தமணங்கமழ்வதும், ஸித்தசாரணர்களின் கூட்டங்களினாலும் அனேகபூதங்களின் கூட்டங்களினாலும் சிறந்த அப்ஸரஸுகளாலும் நாகர்களாலும் கந்தர்வர்களாலும் நெருங்கினதும், மிருதங்கங்களும் முரசங்களும் சங்கங்களும் வீணைகளும்ஒலிப்பதும், ஸிம்மங்கள் புலிகள் பாம்புகள் மான்கள் பூனைகள் கழுதைகள் ஒட்டகங்கள் சிறுத்தைகள் யானைகள் கோட்டான்கள் பருந்துகள் காக்கைகள் கழுகுகள் இவற்றின்முகங்களோடும் பயங்கரமான பற்பல உருவங்களோடும் விகாரரூபங்களோடுமிருக்கும்சிவ்கணங்களைச்சேர்ந்த பூதங்கள் எங்கும் மிகவும் கூவிக்கொண்டும் கூத்தாடிக்கொண்டுமிருப்பதும், அனேகநூறுரிஷிகளால் அடையப்பட்டுப் பார்க்கமுடியாமல் பயங்கரமாயிருப்பதுமான இமயமலையிலுள்ள தேவவனத்தைக் கண்டேன். அந்தவனத்தில் அப்ஸரஸுகள் கூத்தாடுவதும், தேவ

மழைக்காலத்தின் ஆரம்பத்தில் மேகக்கூட்டங்களின் முழக்கமுள்ளதும், அனேகமயில்கள் சப்திப்பதும், யானைக்கூட்டங்கள்நிரம்பினதும், வஸந்தகாலத்தின் ஆரம்பத்தில்வண்டுகள்பாடுவதும், [1] கிரௌஞ்சம் குரரம் ஸாரஸம் சகோரம் குயில்கள் இவை மதத்துடன்சப்தித்துக்கொண்டு நிரம்பியிருப்பதும், உயர்ந்தஇடமாகவும் மிக்கபயங்கரமாகவும் பிரகாசிப்பதுமான சிவ ஸபையைக் கண்டேன். அது தர்மதேவதைக்கும் தர்மமுள்ள ஜனங்களுக்கும்மட்டும் பார்க்கக்கூடியது. ஜிதேந்திரியர்களான ஸித்தர்களும்சூரியகிரணங்களில்ஸஞ்சரிக்கும் விஸ்வேதேவர்களும் ஆங்காங்கு வந்திருந்தனர். தேவர்கள் நாகர்கள் திக்குப்பாலர்கள் அக்நிகள் தேவலோகத்தியபுஷ்பங்கள்நிரம்பினவாயுக்கள் இவர்எல்லாரும் பூமாரிகளை இறைத்துஇறைத்துக்கொண்டு ஆச்சரியரூபத்தோடு அங்கே வருகின்றனர். பத்துத்திசைகளையும் பிரகாசிக்கச்செய்யும் ஜோதிலதைகள் அங்கே ஜ்வலிக்கின்றன. தேவர்களுக்குப்பிரியமான தேவலோகத்தியபக்ஷிகள் ஸந்தோஷத்துடன் நாலுபக்கத்திலும் ஆடிக்கொண்டு கூவுகின்றன. சிறந்தஒளியுள்ளவரும் ரத்நாபரணங்களை அணிந்தவரும் சிவந்தநிறமுள்ளமீசைதாடிகளும்ஜடையுமுள்ளவரும் பயங்காரரும் தேவவிரோதிகளுக்கும் தம்மிடத்தில் பக்தியில்லாதவருக்கும் பயத்தைச்செய்பவரும் பக்தியுள்ளவருக்குப்பயத்தைப்போக்குபவருமானசங்கர் புலித்தோலாடையுடுத்து யானைத்தோலை மேலே போர்த்துக்கொண்டு பாம்பை யஜ்ஞோபவீதமாகஅணிந்து கிங்கரர்களும் தேவர்களும் கந்தர்வர்களும் துதிக்கவும் ரிஷிகளும் அப்ஸரஸுகளும்நாலுபுறமும்சூழவும் பொன்தாதுக்களினல் அலங்கரிக்கப்பட்ட அம்மலைச்சிகரத்தில் கட்டிலில்உட்காருவதுபோலஉட்கார்ந்து விளங்கினர். அங்கே பிரபுவானசங்கரரிருக்குமிடம், தேவர்களும் தானவர்களும்நிரம்பினதும் எல்லாஒளிகளும்சேர்ந்ததும் திக்பாலகர்கள்எல்லாரும்காத்திருப்பதும் மஹாநாகங்கள்நிரம்பி எல்லாருக்கும் மயிர்பொடிக்கச்செய்யும்பயங்கரமானரூபமுள்ளதும் சொல்லுக்கெட்டாததும் வெல்லமுடியாததுமாயிருக்கிறது. அந்தச் சிறந்தசிகரத்தில் உட்கார்ந்திருக்கும் பூதபதியானசிவபெருமானை ரிஷிகளும் பூதக்கூட்டங்களும் தலைவணங்கி நமஸ்கரித்து மிகப்பரிசுத்தமானவாக்குகளினல் மனத்தைக்கவரும்படி துதித்தனர்; உடனே, பாவங்களிலிருந்து விடுபட்டுத் துயரமற்றவராயினர். வாலகில்யரிஷிகளும்

1 'லோஹிதாக்கதபூஷண:' என்பது வேறுபாடம்; 'சிவந்தோள்வீசுகை யணிந்தவர்' என்பது அதன் பொருள்.

பிரம்மரிஷிகளும் கர்ப்பத்திலிருந்துபிறந்தவரும் பிறவாதவருமான தவஸித்திபெற்றமஹரிஷிகளும் அவ்விடத்தில்தேவர்ரேஷ்டர்களுக் கும்ஈஸ்வரரான அந்தப்பகவானைப் பணிகின்றனர். அந்தநிமிஷத்தில் சிறந்தஉமாதேவியானவள் சிவனுருக்குச்சமமாகஆடையுடுத்து அவர் செய்யும்விரதத்தையேசெய்துகொண்டும் பெண்பூதங்களினால்சூழப் பட்டும் எல்லாப்புண்ணியதீர்த்தங்களின் ஜலங்களும் நிரப்பப்பட்ட பொற்கலசத்தை எடுத்துக்கொண்டும் உயர்ந்தவாஸனையணிந்து கொண்டும் பூமாரிபொழிந்துகொண்டும் எல்லாச்சிறந்தரதிகளாலும் பின்செல்லப்பட்டும் பகவான்பக்கத்தையடைவதற்காக அழகானபுன் னகையுடன் வந்தாள். அந்தப்பார்வதி தேவருக்குந்தேவரான சிவ பெருமானருகில்வந்து அவர்மனத்திற்கு மகிழ்ச்சியையுண்டாக்கக் கருதி அவர்ஸமீபத்தில் பின்புறத்தில்நின்று தன்னுடன்வந்தகூட்டங் களைப்பார்த்து ஸகைத்துக்கொண்டு ஸந்தோஷத்துடன் அழகான கைகளினால் அவரதுகண்களைப் பொத்தினாள். உமாதேவியினால் ஈசுவரருடையகண் மறைக்கப்பட்டபோது உலகத்திற்கு மோகமுண் டாயிற்று. பூதங்களுக்குநாதராகிய பரமேஸ்வரர் கண்மூடினபோது, உலகத்தில் சந்திரசூரியர்களும் நக்ஷத்திரங்களும் மறைந்தும் வேதா த்யயனமும் யாகமுமில்லாமலும் இருள்மூடியும் விசனமும் பயமும் நடிக்கமும் உண்டாகிவிட்டன. அப்படி உலகத்தில் இருள்மூடிப் பரபரப்பும் உயிர்ழிவும்உண்டானபோது ரிஷிகளுக்கும் ஜனங்களுக் கும் ஹாஹாகாரமுண்டாயிற்று. அப்போது அவருடையநெற்றியில் நீண்டதும் பன்னிரண்டுசூரியர்களைப்போலப் பிரகாசிப்பதும் ஒளியி னால்உலகங்களைப்பிரகாசிக்கச்செய்வதுமானமூன்றுவதுகண் உண்டா யிற்று. பிரளயகாலாக்கிக்குச்சமமான அந்தநேத்திராக்கியினால், முன் னின்றஇமயமலை முழுதும் எரிக்கப்பட்டது. மிருகங்களும்பக்ஷிகளும் நிரம்பினதும் வித்தியாதரர்களும் கந்தர்வர்களும்வசிப்பதும் சிறந்த ஔஷதிகள்நிரம்பினதுமான அம்மலை எரிக்கப்படும்போது பார்வதி ஆச்சர்யத்தினால் கண்மலர்ந்தவளானாள். உலகமனைத்தும் ஆச்சரி யத்தையடைந்தது. தேவர்கள் தானவர்கள் ராக்ஷஸர்கள் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே நேத்திரத்திலுண்டான அந்தஅக் னியினால் சிறந்தமலை எரிக்கப்பட்டேபோயிற்று. அந்தமலை அழிந்து போனதைக்கண்டு பார்வதி துயரமுற்றுத் தன்பிதாவைவெகுமானிக் கக்கருதிப் பிரபுவின்பாதங்களில் பூமியில்விழுந்தாள். தேவரேஷ் டர்களுக்கும் ஈஸ்வரரானசங்கரர் தேவிக்குண்டானமிக்கதுயரத்தைப் பார்த்து, அவளுக்குப் பிரியமுண்டாக்குவதற்காக அம்மலையைத்

திரும்பவும் நோக்கினர். குளிர்ந்தமனத்துடன் பகவான்பார்த்தநிமி ஷத்தில் இமயமலை திரும்பவும் முன்போலாகிவிட்டது. பக்ஷிகள் ஸந் தோஷமாகவும் புஷ்டியாகவும், மரங்களும் காடுகளும் பூத்தும், ஸித் தர்களும் சாரணர்களும் ஸந்தோஷமடைந்துமிருந்தனர். தன்தந்தை முன்போலானதைக் கண்டபிறகு, பார்வதி மிக்கஸந்தோஷமடைந் தாள். ஸந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்த பார்வதிதேவி, எல்லா லோகங்களுக்கும் எல்லாஜனங்களுக்கும் இதத்திற்காக, பிஞகியும் தேவதேவருமான மஹேஸ்வரரிடம் ஸந்தேகம்கேட்கக்கருதிப் பிர யோஜனமுள்ள பின்வரும்சொல்லைச் சொல்லலானாள்.

'பகவானே! தேவஸ்ரேஷ்டர்களுக்கும் ஈசுவரரே! சூலாயுதத் தைக்கையிற்பிடித்தவரே! சிறந்தசக்தியுள்ளவரே! அந்தநேத்திரா க்கினிவெளிப்பட்டதனால் எனக்கு மிக்க ஆச்சர்யமுண்டாயிற்று. தேவஸ்ரேஷ்டர்களுக்கும்ஈசுவரரே! இந்தநெற்றியில் சூரியனுக்கும் அக்நிக்கும்மேலாக விளங்கும் பெரிதான மூன்றுவதுநேத்திரம் எதற் காகப் பிரகாசிக்கிறது? பெரிதானநேத்திராக்நியினால் எனதுபிதா வான இந்தஇமயமலை எரிக்கப்பட்டது; திரும்பவும் நீர் பார்த்தவுடன் ஸ்வபாவமாகிவிட்டது. பகவானே! இந்தஸந்தேகம் என்மனத்தில் உண்டாயிருக்கிறது. தேவருக்குந்தேவரே! உமக்கு நமஸ்காரம். அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றாள். அந்தத்தேவி இவ் வாறுசொல்ல, சங்கரர் அன்புகூர்ந்து அவளைப்பார்த்து, 'தேவியே! தர்மந்தெரிந்தவளே! இன்சொற்சொல்லுகிறவளே! அன்புள்ளவளே! நீ ஸந்தேகப்பட்டது ஸரி. உன்னைத்தவிர வேறு [1]யாரால் என்னைக் கேட்கமுடியும்? வெளிப்படையாயிருந்தாலும் ரகஸ்யமாயிருந்தாலும் உன்விருப்பத்திற்காக நான்சொல்லுகிறேன். பெண்ணரசியே! அதை யெல்லாம் இந்தச்சபையில் தெளிவாகக்கேள். அன்புள்ளவளே! நான் எல்லா உலகங்களுக்கும்மூதல்வன் என்றறி. மூன்றுலோகங் களும் விஷ்ணுவுக்கு எப்படியோ அப்படியே எனக்கும் உள்பட்ட வை. சிறந்த பெண்ணே! விஷ்ணு படைப்பவர்; நான் காப்பவன் என்றறி. நல்லதாகட்டும் கெட்டதாகட்டும் என்னை எப்போது தொடுகின்றனவோ அப்போது இவ்வுலகமனைத்தும் அப்படிஅப்படி யே(நல்லதாகவும்கெட்டதாகவும்) ஆகிவிடும். குற்றமற்றதேவி! உறுதி யானதவமுள்ளவளே! நீ சிறுமியாதலால் இந்தரகஸ்யந்தெரியாமல் வினையாட்டுக்கு என்கண்களை மூடினாய். அதனால், சந்திரசூரியர்கள் இல்லாமல் உலகம் பயத்தினால்கலங்கிப்போயிற்று. அன்புள்ளபார்

1 'கோசித்' என்று பாடங்கொள்ளப்பட்டது.

வதியே! உலகத்தில் சூரியனில்லாமல் இருள்மூடினபோது உலகத்தைரக்ஷிப்பதற்கு மூன்றுவதுகண்ணை நான் உண்டுபண்ணினேன். அன்புள்ளவளே! நீ ஸந்தேகப்பட்ட விஷயத்தைச் சொன்னேன். ஸந்தேகமில்லாமலிரு' என்றுசொன்னர்.

இருநூற்றிருபத்து அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி; ஈசுவரநக்த, நான்கு முகமும் கரியகண்டமும் பிநாகமென்னும்வில்லும் விருஷபவாகனமும்நிருப்பதன் காரணங்களும், ரிஷிகள் ஈசுவரனைத்துதித்ததும்.)

தேவஸ்ரேஷ்டரானசங்கரருடைய ஸமயந்தெரிந்த உமாதேவியானவள், தனக்குப்பிரியமும்உலகத்திற்குநன்மையுமானவிஷயத்தை மறுபடியும்கேட்கக்கருதி மஹாதேவனைப்பார்த்து, 'பகவானே! தேவாஸ்ரேஷ்டர்களுக்கும் ஈசுவரரே! எல்லாத்தேவர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரே! பகவானுனதீர் எந்தக்காரணத்தினால் நான்முகரானீர்? பகவானே! உமது ஐந்திரமென்னும் கீழ்த்திசைமுகம் பார்ப்பதற்கு ஆச்சரியமாயிருப்பதேன்? பகவானே! வடக்கிலும் மேற்கிலுமுள்ளமுகங்கள் பார்ப்பதற்கு அழகாயிருப்பதேன்? தெற்கிலுள்ளமுகம் மேலேஜடைகளால் வியாபிக்கப்பட்டுப் பயங்கரமாயிருப்பதேன்? மஹானுபாவரே! தோற்றுவதற்குக்காரணத்தைக் கேட்கவிரும்புகிறேன். ஈசுவரரே! இந்தஸந்தேஹத்தை எனக்குச்சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். ஈசுவரர், 'பெண்ணரசியே! நீதெரிந்துகொள்ளவிரும்புகிறதை உனக்குச் சொல்வேன். முற்காலத்தில் மிகக்கொடியவரும் உலகத்தைமிகவும்நடுங்கச்செய்கிறவரும் பலத்தினால் கர்வமடைந்தவரும் ஆயுதங்களினால் கொல்லப்படாதவரும் ஆயுதவன்மையுள்ளவரும் ஒருவர்மேல்ஒருவர் அன்புள்ளவருமான ஸுந்தோபஸுந்தர்களென்னும் இரண்டு அஸுரர்கள் இருந்தனர். அவர்களையழிப்பதற்காக விசுவகர்மாவினால் எல்லாவற்றிலிருந்தும் எள்ளளவுஎள்ளளவாக உயர்ந்தஅம்சங்களையெடுத்துப் படைக்கப்பட்டவளும் உலகங்களினால்கொண்டாடப்பட்டவளுமாகிய திலோத்தமைஎன்றஅப்ஸரஸ்உண்டானாள். பூமியில்நிகரற்றஅழகுள்ளஅவள் தேவர்களின்காரியங்களைச் செய்வதற்குமுன் சிரிப்பும் விளையாட்டு

மூள்ளவளாய் நான் தவம்செய்துகொண்டிருக்கும்போது வந்தாள். அன்புள்ளவளே! என்னை அவள்ப்ரதக்ஷிணம்செய்யும்போது, 'அவள் என்னால் வெகுமானிக்கப்பட்டுத் தேவகாரியத்தைச் செய்வள்' என்றுநினைத்து அவளைப்பார்க்கக்கருதி நாலுமுகங்களோடிருந்தேன். கிழக்கிலுள்ளஐந்திரமென்னும் என்முகமானது எப்போதும் தவம்செய்துகொண்டிருக்கும். பயங்கரமும் சிறந்ததுமாகிய எனது தென்திசைமுகம் பிரஜைகளைஸம்ஹாரஞ்செய்யும். அன்புள்ளவளே! எனதுமேற்றிசைமுகம் எப்போதும் உலகங்களின்காரியத்தைப் பார்க்கும்; வடதிசைமுகம் எப்போதும் ஆச்சரியகரமாக வேதங்களை ஓதிக்கொண்டிருக்கும். இந்தவிஷயங்கள் எல்லாவற்றையும் உனக்குச்சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றுசொன்னார். உமை, 'பகவானே! சூலத்தைக்கையில்தரிப்பவரே! வரமளிப்பவரே! உமதுகழுத்தில் மயில்போன்றகருநிறம்விளங்குவதேன்? இதனைக் கேட்கவிரும்புகிறேன்' என்றனள். மஹேஸ்வரர், 'தேவியே! இதனைஉனக்குச் சொல்வேன்; ஊக்கத்துடன் கேள். [1] முன்னொருயுகத்தில் பலசாலிகளான தேவாஸுரர்கள் அமுதத்திற்காக வெகுகாலம்வருந்திக் கடலைக்கடைந்தனர். வாஸுகியென்னும் நாகராஜனைக் கயிறுகப்போட்டுப் பெருங்கடலைக்கடையும்போது எல்லாஉலகங்களையும் அழிக்கும்விஷம் அந்தக்கடலில் உண்டாயிற்று. தேவர்களனைவரும் அதைக்கண்டவுடன் மனங்குன்றிப்போயினர். தேவியே! லோகங்களின் நன்மைக்காக அந்தவிஷம் என்னால் விழுங்கப்பட்டது. சிறந்தவளே! அதனாலேதான், மயில்போன்ற நீலநிறம் என்கழுத்தில் உண்டாக்கப்பட்டது. அப்போதுமுதல்தான், நான் நீலகண்டனென்று சொல்லப்படுகிறேன். இதனை முழுதும் உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றுசொன்னார். உமை, 'நீலகண்டரே! எல்லாஉலகங்களுக்கும் ஸுகத்தைச் செய்கிறவரே! உமக்கு நமஸ்காரம். தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! அனேகம் ஆயுதங்களிருக்க நீர் பினாகத்தை வைத்துக்கொள்ளக்கருதியது ஏன்? அதனை எனக்குச்சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'அழகானபுன்னகையுள்ளவளே! இந்தஆயுதத்தின்வரலாற்றை உனக்குச்சொல்லுவேன். அதில் தர்மம்இருக்கிறது. நீ கேள். மஹாதேவியே! முன்னொருயுகத்தில் கண்வனென்

---

1 'இந்திரன் சிவனதுபெருமையையும்பி வஜ்ராயுதத்தைச் சிவன் மேல்ப்ரயோகிக்க அது கழுத்தில உரைத்ததனால் நீலகண்டரானார்' எனபது வேறுபாடம்.

ரும்ஒருமஹரிஷி இருந்தார். அவர் அற்புதமான தவம்செய்யத் தொடங்கினர். அன்புள்ளவளே! அவர் அவ்வாறு கடுந்தவம்செய் யும்போது அவர்தலையில் நாளடைவில் புற்று உண்டாயிற்று. புற்று இருந்ததனால் அவர்தலையில் மூங்கில் முளைத்தது. அவற்றையெல் லாம் அவர்தாங்கிக்கொண்டு முன்போலவே தவம்செய்துகொண் டிருந்தார். தவத்தினால்பூஜிக்கப்பட்டப்ரம்மதேவர் அவருக்கு வரங் கொடுக்கப்போனார். பெண்ணரசியே! அவர் அவருக்கு வரமளித்த பிறகு, அந்தமூங்கிலைப்பார்த்து அதனால் உலகத்திற்கு உபயோகம் செய்வதைக்குறித்து ஆலோசித்தார். ஆலோசித்தபிறகு அந்தமூங் கிலையெடுத்து வில்லாகச்செய்வித்தார். உலகங்களைப்படைத்தவராகிய ப்ரம்மதேவர் அப்போது விஷ்ணுவிடத்திலும் என்னிடத்திலும்ஸாம ர்த்தியமிருப்பதையறிந்து விஷ்ணுவுக்கும் எனக்குமாகஇரண்டுவிற்க ளைத் தந்தார். பினாகமென்பது என்னில். சார்ங்கமென்பது விஷ்ணு வின்னில். மிகுதியுள்ளமூங்கிலினால் காண்டீவமென்னும் மூன் றுவதுவில் உண்டாயிற்று. அதைச் சந்திரனுக்குக்கொடுத்து ப்ர ம்மா திரும்பத் தம்முலகம்சென்றார். குற்றமற்றவளே! இந்த ஆயு தத்தின்வரலாற்றை முழுதும் உனக்குச்சொன்னேன்' என்றுசொன் னார். உமை, 'பகவானே! தேவருக்குத்தேவரே! ஈசுவரரே! பினாகத் தில் மிக்கவிருப்பமுள்ளவரே! பூதங்களுக்கதிபதியே! வேறு வாக னங்கள் அநேகமிருக்கையில் அந்தவிருஷபம் உமக்கு வாகனமானது ஏன்? தேவரே! இது எனக்குச் சந்தேகம். இதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மகாதேவர், 'எனக்கு விருஷ பம் வாகனமானவகையை உனக்குச் சொல்வேன். வெளுத்தபுன் னகையுள்ளவளே! முன்ஸ்ருஷ்டியின்ஆரம்பத்தில் பசுக்கள் வெள்ளை நிறமாகவிருந்தன. அந்தப்பசுக்கள் பலமும் தேகக்கட்டுமுள்ளவை களாய்க் கொழுத்துத் திரிந்தன. அழகியமுகமுள்ளவளே! நான் அந்தக்காலத்தில் இமயமலையில் உலகநன்மைக்காக ஒற்றைக்காலால் நின்று கையைத்தூக்கிக்கொண்டு தவம்செய்தேன். தேவியே! அப் போது, கொழுப்புமிகுந்தபசுக்கள் கூட்டமாக என்பக்கத்தில் சுற்றி லும்வந்து நானிருந்தவிடத்தை இடித்தன. அவைகள்செய்தபிழை யினால் எனக்கு மனகலக்கமுண்டாயிற்று. ஆதலால், அப்போது கோபமுள்ளமனத்தினால் பசுக்கள் எரிக்கப்பட்டன. பசுக்களுக்கு அந்தக்கொடியவிசனம்வந்தபோது, இந்தவிருஷபம் என்னிடத்தில் வேண்டிக்கொண்டு கோபத்தையடக்கிற்று. அப்போதுமுதல்தான், பசுக்கள் அடக்கமுள்ளவையும் பலநிறங்களுள்ளவையுமாயின.

தேவியே! இந்த விருஷபமட்டும் முதலிலிருந்தபடி வெண்ணிறமாயிருக்கிறது; அப்போதுமுதல்தான், எனக்குவாகனமாகவும் கொடியாகவும் ஏற்படுத்தப்பட்டது. அதனாலேதான், தேவர்களும் லோக்களும் என்னைப்பசுபதியாகச் செய்தனர். தேவியே! அப்போது, நான் கோபம்தெளிந்து பசுபதியுமானேன்' என்றுகூறினர்.

இருநூற்றேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வர ஸம்வாதம் தொடர்ச்சி; ஈசுவரர் மயானத்தில் வஸிப்பது, உருவம் உக்ரமாயிருப்பது, சிரத்தில் பிறை தரிப்பது இவற்றின் காரணங்கள்.)

உமை, 'பகவானே! ஸர்வப்பிராணிகளுக்கும்ஈசுவரரே! சூலத்தைக்கையில்தரிப்பவரே! விருஷபக்கொடியுள்ளவரே! விசித்திரமும் மங்களகரமுமான அழகியவீடுகளில் மற்றப்பிராணிகளிருக்கையில் மயிர்களாலும் எலும்புகளாலும் அருவருக்கத்தக்கதும் [1]நூற்றுக்கணக்கான மண்டையோடுகள்நிரம்பினதும் நரிகளும் கழுகுகளும் சேர்ந்திருப்பதும் பிணப்புகைபினல்மூடப்பட்டதும் சிதைகளின் அக்கினிகளால்விகாரமானதும் கொடியதும் பயங்கரமானதும் போகத்தகாததுமான மயானத்தில் நீர் ஸந்தோஷமாயிருப்பது ஏன்? பார்க்கவும்வழங்காத இப்படிப்பட்ட சவங்கள்போடுமிடத்தில் நீர் எப்படி விளையாடுகிறீர்? தேவரே! எனக்குஇந்தச்சந்தேகமிருக்கிறது. அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மகாதேவர், 'தேவி! ஆ! ஆ! உனக்குச் சொல்வேன். ஊக்கத்துடன் கேள். சுத்தமான புன்னகையுடையதேவியே! சிறந்தவளே! முன்னர் நான் இருப்பதற்காகச் சுத்தமானவிடத்தைத்தேடி வெகுகாலம்கடந்தும் மிகப்பரிசுத்தமானஇடம் கிடைக்கவில்லை. எனக்கு இந்தஎண்ணமுண்டாயிருந்தகாலத்தில், மிக்கபயங்கரமானகலக்கமுள்ள ப்ரம்மதேவர் என்னெதிரில் வந்துநின்றார். அப்போது, கொடியதும் உலகங்களுக்குப்பயத்தைத்தருவதுமாகிய பூதசிருஷ்டி எங்கும் உண்டாயிற்று. பலகிறங்களும் பலவடிவங்களும் கொடியகோரப்பற்களும் பிசாசங்கள் ராக்ஷஸர்களின்முகங்களுமுள்ளவையும் அடிப்பவையும் பிராணிகளின்உயிரை எடுப்பவையுமானபூதங்கள் பிராணிகளை அதிகமாகக்கொன்று இங்கும்

1 பின்னும்வருவதால் ஒருசொல்விடப்பட்டது.

அங்கும் திரிந்தன. இவ்வாறு பிராணிகள்போனதனால் உலகம்அழி யும்போது,பிதாமஹர் அதற்குப்பரிகாரம் செய்வதற்காக என்னை அவ ற்றைஅடக்கச்சக்தியுள்ளவனென்று நினைத்து அந்தவேலையில் நிய மித்தார். அன்புள்ளவளே! நானும் பிராணிகளின் நன்மைக்காக அதை ஏற்றுக்கொண்டேன். தேவியே! பிறகு, அந்தப்பூதங்களி னிடமுண்டான பயத்திலிருந்து பிராணிகளைக் காப்பாற்றினேன். குற்றமற்றவளே! இந்தமயானத்தைவிடப் பரிசுத்தம் ஒன்றுமில்லை. மனிதர்களின்ஸஞ்சாரமில்லாமையால் மயானம்மிகப்பரிசுத்தமென்று நினைக்கப்பட்டது. சிருஷ்டிக்கப்பட்ட அந்தப்பூதங்களை நான் மயா னத்தில் நிறுத்தினேன். அன்புள்ளவளே! அங்கிருந்துகொண்டு எல்லாப்பிராணிகளின்பயத்தையும் போக்குகிறேன். எனக்குப் பூதங் களைவிட்டிருக்கப் பிரியமில்லை. ஆதலால், என்மனம் மயானத்திலிரு ப்பதில் விருப்பமுற்றிருக்கிறது. பரிசுத்தத்தைவிரும்பும்பிராம்மணர் கள் மயானத்தை எப்போதும் பரிசுத்தமென்று சொல்லுகின்றனர். தவம்செய்கிறவர்களாலும் மோக்ஷத்தைக்கருதுகிறவர்களாலும் மயா னம் எப்போதும் அடையப்படுகிறது. அன்புள்ளவளே! அது [1]வீரர் களுடையஸ்தானமாயிருப்பதாலும் அதனை எனக்கு இடமாகச் செய் துகொண்டேன். (அதற்கு) அனேகங்கபாலங்கள்நிரம்பிப் பயங்கரமா யிருப்பதே அழகாயிருக்கிறது. உச்சிப்போதிலும் காலைமாலைகளிலும் ருத்திரரைத்தேவதையாகவுடைய (திருவாதிரை) நக்ஷத்திரத்திலும் தீர்க்காயுளைவிரும்புகிறவர் அசுத்தத்துடன் அங்கேபோகக்கூடா தென்பது நிச்சயம். பூதங்களினாலுண்டான பயத்தைப்போக்குவ தற்கு என்னைத்தவிர மற்றொருவனால் முடியாது. நான் அங்கிருந்து கொண்டு ஒவ்வொருநாளும் ஜனங்களையெல்லாம் காப்பாற்றுகிறேன். என்கட்டளையினால் இங்குள்ளபூதங்களின்கூட்டங்கள் யாரையும்கொ ல்லுவதில்லை. உலகங்களின்நன்மைக்காக அந்தப்பூதங்களை நான் மயா னத்தில் ஸந்தோஷப்படுத்திக்கொண்டிருக்கிறேன். இதனை முழுதும் உனக்குச் சொன்னேன். இன்னும் என்ன கேட்கவிரும்புகிறாய்?" என்றுசொன்னார்.

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! முக்கண் ணரே! வ்ருஷபத்வஜரே! உமதுஉருவம் செம்மட்டைநிறமும் விகார மும்பயங்கரமும்சாம்பற்பூசப்பட்டதும்விகாரமானகண்களும்கூரான கோரப்பற்களுமுள்ளதும் ஜடைவியாபித்ததும் புலியின்வயிற்றுத் தோலையுடுத்ததும் செம்மட்டைநிறமான மீசையடர்ந்ததும் கோப

1 தாக்ஷாயணிகளுள் ஒருவகையார்.

மூள்ளதும் [1]சூலம் பட்டிசமென்னும் ஆயுதங்களோடுகூடி உக்கிரமூ மாயிருக்கிறது. இப்படிப்பட்டஉருவம் எதற்கு? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'அதனை உனக்குச் சொல்வேன். அதனை நீ ஊக்கத்துடன் கேள். அன்புள்ளவளே! உலகத்தில் சூளிர்ச்சி வெப்பம்என இரண்டுதன்மைகளுள்ளன. அவற்றினால் பற்றப்பட்டஇவ்வுலகமனைத்தும் [2] ஸௌம்யமும் [3]ஆக்நேயமுமாகிறது. ஸௌம்யரூபம் விஷ்ணுவினிடத்திலும் ஆக்நேயரூபம் என்னிடத்திலும் எப்போதும் நிலையாயிருக்கின்றன. இந்தத்தேகத்தினால் நான் எப்போதும் எல்லாஉலகங்களையும் தாங்குகிறேன். தேவியே! உக்கிரமானவடிவமும்விரூபமானகண்களும் சூலபட்டிசங்களென்னும் ஆயுதங்களுமுள்ள ஆக்நேயமென்னும் எனதுரூபம் உலகத்தின்நன்மைக்காக ஏற்பட்டது. அழகியமுகமுள்ளவளே! இந்த உருவத்தைவிட்டு நான் மாறுவேனையின் எல்லாஉலகங்களுக்கும் தடுமாற்றம் உண்டாகிவிடும். ஆதலால், உலகத்தின் நன்மையைவிரும்பி நான் இந்தரூபத்தைத் தரித்திருக்கிறேன். தேவியே! இதனை உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்று சொன்னார். உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! சூலத்தைக்கையில்தரிப்பவரே! விருஷபக்கொடியுடையவரே! உமது தலையில் சந்திரனதுபிறை விளங்குகிறதே, அது எதற்காக? தேவரே! அதனை நான் கேட்கவிரும்புகிறேன். சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'சிறந்தவளே! அதன்காரணத்தை நான் உனக்குச் சொல்வேன்; கேள். தேவியே! வெளுத்தபுன்னகையுள்ளவளே! முன் ஒருகாரணத்தினால் தக்ஷயாகத்தைக்கெடுப்பதற்காக நான் பூதங்களால்சூழப்பட்டுக் கோபமுற்றிருந்தேன். அந்தச் சிறந்தயாகத்தில் ஹவிர்ப்பாகங்காரணமாகவந்தபோரில் யாகத்தில் பாகம்வாங்கிக்கொண்டதேவர்கள் என்னால் அடித்துத் துரத்தப்பட்டனர். தேவியே! குற்றமில்லாமலிருந்தும் கோபமுற்றஎன்னால் அங்கே மிகவும் பீடிக்கப்பட்டும் கால்கட்டைவிரலால்உதைக்கப்பட்டு மிருந்தசந்திரன் அவ்வளவு தீங்குசெய்யப்பட்டும் என்னைப்பார்த்து நல்வார்த்தையாகவே வேண்டிக்கொண்டான். அன்புள்ளவளே! பின்னிட்டு அதனை நான் நினைக்கும்போது வருத்தமுண்டாயிற்று. அப்போதுமுதல் நான் சந்திரனைத் தலையில் வைத்துக்கொண்டிருக்கிறேன். இப்படிச்செய்வதனாலேதான் என்பாவம்தீருமென்பதுஎன்

---

[1] இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

[2] சந்திரன்போன்றது. [3] அக்னிபோன்றது.

எண்ணம். அதனால், அப்போது முதல் என்தலையில் சந்திரன் எப் பொழுதும் காணப்படுகிறான்' என்றுசொன்னர். தேவஸ்ரேஷ்ட ரான சங்கரர் இவ்வாறுசொல்லும்போது, மகரிஷிகள் ஆச்சரிய மடைந்து அஞ்சலிவரிசைகளுடன் சிறந்தவாக்குக்களினால் ஈசுவர ரைத் துதிக்கத்தொடங்கினர். 'சங்கரரே! நமஸ்காரம். எல்லாவற் றிற்கும் ஈசுவரரே! உலகமனைத்திற்கும் தந்தையே! நமஸ்காரம். தேவருக்கும் முதல்தேவராயிருப்பவருக்கு நமஸ்காரம். சந்திர கலையைத்தரிப்பவரே! நமஸ்காரம். மிகக்கொடியதற்கும் கொடிய வரே! நமஸ்காரம். சங்கரரே! ருத்திரரூபியானஉமக்கு நமஸ்காரம். மிக்கசாந்தமுள்ளவருக்கும்சாந்தமானவரே! நமஸ்காரம். சந்திரனைக் காப்பவரே! நமஸ்காரம். உமாதேவியோடுகூடிய தேவருக்கு நமஸ்காரம். நான்முக்கரே! உமக்கு நமஸ்காரம். பூதபதியே! சம் புவே! கங்காதரரே! நமஸ்காரம். மூத்தலைச்சூலத்தைக்கையில் தரிப்பவருக்கு நமஸ்காரம். நாகாபரணருக்கு நமஸ்காரம். விரூபா க்ஷருக்கு நமஸ்காரம். தக்ஷயாகத்தைஎரித்தவரே! நமஸ்காரம். அநேககண்களுடையவருக்கு நமஸ்காரம். உலகத்தைரக்ஷிப்பவரே! நமஸ்காரம். ஈசுவரருடையமகிமையும் ஆச்சர்யம். ஈசுவரருடைய கிருபையும் ஆச்சர்யம். இப்படி தர்மத்தைமுதன்மையாகக்கொண் டிருப்பதும் தேவருக்குந்தேவரான ஈசுவரருக்கே தகும்' என்றனர். இவ்வாறு ரிஷிகள்துதிக்கும்போது காலம்தெரிந்தஉமாதேவியான வள் ரிஷிகளின்சந்தோஷத்திற்காகச் சம்புவைப்பார்த்துஉலகத்திற்கு மிக்க அனுகூலமான சொல்லைச் சொல்லலானாள். 'பகவானே! தேவ ஸ்ரேஷ்டர்களுக்கும்ஈஸ்வரரே! எல்லாஉலகங்களாலும் நமஸ்கரிக்கப் பட்டவரே! இந்தரிஷிக்கூட்டங்களுக்கும் எனக்கும் விருப்பத்தைச் செய்வதற்காக வர்ணாஸ்ரமங்களுக்கு ஏற்படுத்தப்பட்டதர்மங்களை முழுதும் சொல்லக்கடவீர். தேவஸ்ரேஷ்டரே! திருப்தியுண்டாக வில்லை. உமதுசொல்லை இன்னும் கேட்கவிரும்புகிறேன். பிரபுவே! தேவருக்கும்ஈசுவரரே! 'இவள் ஒற்றுமையாகத்தர்மத்தைச்செய்ப வள்' என்றும், 'பக்தியுள்ளவள்' என்றும் இவளைத்து உலகங்களின் இதத்திற்காகச் சொல்லக்கடவீர். சங்கரரே! எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லவேண்டுகின்றேன்' என்றுகேட்டனள்.

இருநூற்றெட்டாவது அத்யாயம்.

தா ன த ர் ம ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஶ்வர ஸம்வாதம் தொடர்ச்சி; வர்ணஶ்ரமதர்மங்கள்.)

மஹேஶ்வரர், 'தேவியே! ஆ! ஆ! உன்மனத்திற்குவிருப்ப மானதைச் சொல்வேன். வர்ணஶ்ரமங்களைச்சேர்ந்ததர்மங்கள் எல்லா வற்றையும் முழுதும் கேள். பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்என்று வர்ணங்கள் நான்குவகை. உலகத்தைநடத்தக்கரு தினபிரம்மதேவரால் முதலில் பிராம்மணர்கள் படைக்கப்பட்ட னர். அவர்களுக்குரியகர்மங்களும் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டன. இவ்வுலகமெல்லாம் ஒரேவர்ணமாயிருக்குமாயின் அழிந்துபோம். தேவியே! அதனால், நாலுவர்ணங்களும் சேர்ந்துபடைக்கப்பட்டன. பிராம்மணர்கள் முகத்திலிருந்து உண்டாக்கப்பட்டனர். அதனால், அவர்கள் சொல்திறமையுள்ளவர்கள். க்ஷத்திரியர்கள் கைகளிலிரு ந்து படைக்கப்பட்டனர்.அதனால்,அவர்கள் கைவன்மையுள்ளவர்கள். வைசியர்கள் தொடையிலிருந்து உண்டாயினர். அதனால், அவர்கள் [1] வார்த்தையினால் ஜீவிப்பவர்கள். சூத்திரர்கள் பாதங்களிலிருந்து உண்டாக்கப்பட்டனர். அதனால், அவர்கள் ஊழியஞ்செய்பவர்கள். தேவியே! நான்குவர்ணங்களின் தர்மங்களையும் தொழில்களையும் ஊக் கத்துடன் கேள். ப்ராம்மணர்கள் உலகங்களைக்காப்பதற்காக படைக் கப்பட்டவர். அதனால், அவர்கள் பூமிதேவர்களென்று சொல்லப்பட் டனர். தம்நன்மையைக்கருதுகிறயாரும் ப்ராம்மணர்களை அவமதிக்க லாகாது. தேவியே! தானத்தையும் தவத்தையும் எப்போதும் நடத்து கிறவர்களாகிய பிராம்மணர்கள் இஹமற்போவாராயின் [2]இரண்டு லோகங்களும் நிலையில்லாமற்போமென்பதுதான் சுருக்கம். உலகங்க ளுள்பிராம்மணஜன்மமட்டும்பெறுதற்கரிதென்றுநினைக்கப்படுகிறது. பிராம்மணன், கல்வியில்லாதவனாயிருந்தாலும் பொருளில்லாதவனாயி ருந்தாலும்எப்போதும்பூஜிப்பதற்குரியவன்.காமத்தினாலும் லோபத்தி னாலும் மதிகெட்டுப்பிராம்மணர்களை அவமதித்தும் இகழ்ந்தும்கோப மூட்டியும் அடித்தும் பொருளைப்பறித்தும் இழிதொழில்களைச்செய் வித்தும்இருக்கும்இழிந்தவனும் மூடனுமானமனிதன் என்னையே அவ மதிப்பவனும் இகழ்கிறவனும் கோபமூட்டுகிறவனும் அடிப்பவனும்

[1] பயிர், பசுக்காத்தல், வர்த்தகம். [2] இம்மையும்மறுமையும்.

என்பொருளேப்பறிப்பவனும் புத்தியில்லாமல் என்னையே [1]இழிதொழிலில் ஏவுகிறவனுமாகிறான். வேதமோதுவதும் யாகம்செய்வதும் கொடுப்பதும் பிராம்மணனுக்குத் தர்மங்களென்றும் ஓதுவிப்பதும் யாகம்செய்விப்பதும்தானம்வாங்குவதும் பிராம்மணனுக்கு [2]விருத்திகளென்றும் ஏற்பட்டிருக்கின்றன. பொய்யாமை அடக்கம் தவம் தூய்மைஎன்னும்இவை அவனுக்கு இயற்கையாயுள்ளதன்மைகள். அறுசுவைப்பதார்த்தங்களேயும் தானியங்களேயும்விற்பதும் கஷ்டமில்லாதபோதுசூத்திரனுடையஅன்னத்தைப்புசிப்பதும் சூத்திரப்பெண்ணே அடைவதும்பிராம்மணனுக்குமறுக்கப்பட்டன.எப்போதும்தவம் செய்வதே பிராம்மணனுடைய தர்மமென்பதில் ஸந்தேகமில்லே. பிரம்மதேவர் பிராம்மணனேத் தர்மத்திற்காகவே தமதுதவவன்மையிலுல் முதலில்உண்டாக்கினர். உபநயனமும்எப்போதும்ஜலத்தைவைத்துக் கொள்வதும் சாஸ்திரத்தைக்கோ ட்பதும் வேதமோதுவதற்காகப்ரம்மசாரிவ்ரதமிருப்பதும் அவனுடையதர்மங்கள் ; அக்நிகார்யமும் நித்யமாக யஜ்ஞோபவீதம்தரிப்பதும் முக்கியமானதர்மங்கள். சூத்திரான்னத்தைவிடுவதும் நன்மார்க்கத்தைப்பிடிப்பதும் நித்யஉபவாஸமிருப்பதும் இந்திரியங்களேஜயிப்பதும் பிராம்மணனுடைய முக்கிய தர்மங்கள். [3]பகைவரைவாட்டுபவனே ! வீட்டிலிருந்து இல்லறத்தை நடத்துகிறவனுக்கு வீட்டைவிளக்கிவைப்பதும் மெழுகிவைப்பதும் அதிதிகளிடம் அன்புவைப்பதும் மூன்றக்நிகளேயும்வைத்திருப்பதும் சாஸ்திரவிதிப்படி [4]இஷ்டிகளேயும் பசுபந்தங்களேயும்செய்வதும் முக்கியமானதர்மங்கள். மனைவியும் கணவனும் ஒத்தொழுகுவதுதான் இல்லறத்தோரின்கடமை.இவ்வாறு கிருஹஸ்தாச்ரமத்திலிருந்து தர்மத்தைக்காப்பது பிராம்மணனுடையகடமை. தேவியே ! க்ஷத்திரியனுக்குஉரியதர்மம் உன்னுல்கேட்கப்பட்டதே, அதனேயும் உனக்குச் சொல்வேன்; தேவியே ! ஊக்கத்துடன் கேள். தேவியே ! பிராம்மணனுக்குப்பிறகு பிராம்மணனேரக்ஷிப்பதற்காக க்ஷத்திரியர்கள்ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். உலகத்தில் க்ஷத்திரியரில்லாமற்போவாராயின் உலகமே கீழ்மேலாகிவிடும். க்ஷத்திரியர்கள்காப்பதனுல்தான் உலகம் நிலேபெற்றிருக்கிறது. அந்தக்ஷத்திரியனுக்கும் அத்யயனம் தானம் யாகம்இவை தர்மங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

1 'நிந்திதே' என்று பாடங்கொள்ளப்பட்டது.

2 'கர்மாணி' என்று பாடம்கொள்ளப்பட்டது.

3 'பரந்தபே' என்று பாடம்கொள்ளப்பட்டது.

4 இரண்டும் ஒரியாகங்கள்.

அசக்தர்களைக்காப்பதும் துஷ்டர்களைத்தண்டிப்பதும் சிஷ்டர்களைப் போஷிப்பதும் ஆறுகர்மங்களைச்செய்துஜீவிப்பதும் அவனுடையகர் மங்கள். உற்சாகமும்ஆயுதம்பிடித்துஜீவிப்பதும்வேலைக்காரரைக்காப் பாற்றுவதும் எடுத்தகாரியத்தில் வீண்போகாமையும் நல்லகுணமுள் ளவனுயிருப்பதும் பட்டணத்துஜனங்களுக்குநன்மைசெய்வதும்அவ னுக்கு இயற்கையாயுள்ளதர்மங்கள். எப்போதும் வியவகாரங்களைத் தவருமல்பார்ப்பவனும் [1]ஆறுகுணங்களில் ஊக்கமுள்ளவனும் ஏழை களுக்குத்திரவியங்கொடுப்பவனுமாகிய அரசன்சிறந்தபுண்ணியத்தை அடைவான். இவ்வாறு முன்னோர்களால் செய்கையின்முறையை அனுஸரித்துத் தர்மம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தேவியே! வைசி யர்களும் அப்படியே உலகவாழ்க்கைக்கு உபயோகமாக ஏற்படுத்தப் பட்டிருக்கின்றனர். மற்றவருணத்தார்கள் அவர்களைப்பற்றியே ஜீவிக் கின்றனர். ஏனெனில், அவர்கள் பிரத்தியக்ஷமாகப் பலன்களைக்கொடு ப்பவர். ஆதலால், வைசியர்கள் இராவிடின் மற்றவர்களுமிரார். அவர் களுக்கும் அத்யயனம் தானம் யாகம்இவைகள் தர்மங்களாக விதிக் கப்பட்டிருக்கின்றன. எப்போதும் பசுக்களைக்காப்பதும் பயிரிடுவ தும் வைசியனுடையதொழில்கள். இருபிறப்பாளராகிய இம்மூன்று வர்ணத்தாரும் அக்நிஹோத்ரம்செய்யவேண்டியவர்கள். வர்த்த கம் ஸன்மார்க்கத்திலிருப்பது அதிதிகளையாதரிப்பது பிராம்மணர் களை நல்வரவுவிசாரிப்பது ஆகியஇவை வைசியர்களுக்கு இயற்கையா யுள்ளதர்மங்கள். வைசியதர்மத்திலிருந்து வர்த்தகத்தை நடத்தும் வைசியர்கள் எள்ளையும் வாசனைப்பொருள்களையும் சுவைகளையும் எவ்வகையிலும் விற்கலாகாது. எல்லாவிருந்துகளையும் ஆதரிப்பதும் இரவிலும் பகலிலும் இயன்றவரையில் தர்மார்த்தகாமங்கள் மூன்றை யும்நடத்துவதும் அவர்களின்தர்மங்கள். தேவியே! அவர்கள் இவ் வாறு உலகவாழ்க்கைக்காகவேபிரம்மதேவரால் படைக்கப்பட்டனர். அப்படியே சூத்திரர்கள் எல்லாருடையதர்மங்களுக்கும் ஸ்காயமாகப் படைக்கப்பட்டனர். சூத்திரர்களில்லாவிடில் வேலைசெய்கிறவனே யில்லை. மூன்றுமூன்றுவர்ணத்தாரும் சூத்திரர்களைக்கொண்டே தம் கர்மங்களெல்லாவற்றையும் நடத்துகிறவர்களாகச் சொல்லப்படுகின் றனர். பிராம்மணன்முதலானவர்ணங்களுக்குப்பணிசெய்வது வர் த்தகம் கைத்தொழில் சிற்பம் நடனம் இவை சூத்திரதர்மங்க ளென்று சொல்லப்படுகின்றன. நீங்குசெய்யாதவனும் சிறந்தஒழு க்கமுள்ளவனும் தேவப்பிராம்மணர்களை வந்தனம்செய்பவனுமாகிய

[1] ஸபாபர்வம் 14-ம் பக்கம் 15-ம் குறிப்பிற்காண்க.

சூத்திரன் தன்தர்மத்திலேயே விரும்பினபுண்ணியபலன்களையடைவான். இதைப்போன்றவேறுதர்மங்களும் சூத்திர [1]தர்மங்களாகச் சொல்லப்படுகின்றன. அழகானமுகமுள்ளவளே! உலகத்தில் சூத்திரர்களும் இவ்வகையாகக் கர்மங்களுக்குரியவர்களாகவே படைக்கப்பட்டனர். தர்மத்தையனுஷ்டிப்பவளே! இந்நான்குவர்ணங்களுக்கும் மறுமையிலும் வர்ணதர்மத்திற்குரியகல்லோகங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன; அப்படியே ஸரியாக அனுபலிக்கப்பட்டுவருகின்றன. இந்தவர்ணங்களின்தர்மங்களையும் அவர்களின்தொழில்களையும் கேட்கவிரும்பினஉனக்குச் சொன்னேன். இன்னும் எதனைக் கேட்கவிரும்புகிறாய்?' என்றுசொன்னார். உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! வ்ருஷபத்வஜரே! பிரபுவே! உமக்குநமஸ்காரம். ஆச்ரமங்களின்தர்மங்களை நான்கேட்கவிரும்புகிறேன்' என்றுசொன்னாள். மகேசுவரர், 'தேவியே! வேதந்தெரிந்தவர்களால் ஆச்ரமங்களுக்குவிதிக்கப்பட்டதர்மங்களைச் சொல்லுகிறேன்; ஊக்கத்துடன் கேள். நான்கு ஆச்ரமங்களுள் கிருகஸ்தாச்ரமத்தின் தர்மத்தைநடத்தும்கிருஹஸ்தன் மேலானவன். [2]ஐந்துயஜ்ஞங்களைச்செய்வது ஸ்நானசௌசம்செய்வது தன்மனைவியோடிருப்தியாயிருக்கை சோம்பாமை ருதுகாலத்தில்புணர்வது தானம் யாகம் தவம் தேசம்விட்டுப்போகாமை வேதாத்யயனம் அக்நிஹோத்திரம் அதிதிகளிடம் கண்ணோட்டம் கூடியவரையில்வேண்டினவர்களைப்புசிப்பித்தல்மனத்திலும் சொல்லிலும் செய்கையிலும்எல்லாரையும்ஆதரிப்பது இவை அவனுக்கு இருக்கவேண்டியவை. இவைபோன்றமற்றநற்கருமங்களையும் ஜீவனித்திற்குக்கஷ்டமில்லாதகிருஹஸ்தன் செய்யக்கடவன். இவ்வாறுநடக்கும்கிருஹஸ்தனுக்குப் புண்ணியலோகங்கள் உண்டென்பதில் ஸந்தேகமில்லை. அவ்வாறே, வானப்ரஸ்தனுக்கும் அழியாததர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மனவுறுதியோடு நிச்சயம்செய்துகொண்டு வீட்டிலிருப்பதைவிட்டுக் காட்டிலுள்ள சிறந்தகல்லபதார்த்தங்களைக்கொண்டேஜீவிக்கவேண்டுமென்பதுஅவனுடையகடமை. தரையில்படுப்பதும் சடைதரித்தலும் தோல்மரவுரி ஆடையுடுப்பதும் தேவதைகளுக்கும்அதிதிகளுக்கும் ஸத்காரம்செய்வதும் பெருந்தன்பங்களையும்வெறுமலிருப்பதும் அக்நிஹோத்திரமும் மூன்றுகாலஸ்நானமும் அவனுக்குக் கடமைகளாக விதிக்கப்பட்டிருக்கின்றன. புலன்களையடக்குவதும் பொறுமையும் சுத்தமும்

1 'தாஸதர்ம:' என்று பாடம் கொள்ளப்பட்டது.

2 ஆதிபர்வம் 559-ம் பக்கம் குறிப்பிக்காண்க.

அவனுக்கு இயற்கையாயுள்ளதர்மங்கள். இப்படியிருந்துஉயிர்நீங்கினால் அவன் தேவலோகத்தில் கொண்டாடப்படுவான். தேவியே! யதிகளின்தர்மங்களும் அப்படியே. யதியானவன் வீட்டைவிட்டு எங்கேயாவது இருக்கவேண்டும். பொருளில்லாமையும் மூயலாமையும் எல்லாச்சுத்தங்களும் கள்ளமில்லாமையும் எங்கும்பிக்ஷையெடுப்பதும் எந்தத்தேசத்திற்கும்போவதும் எப்போதும் தியானத்தைவிடாமலிருப்பதும் (யோகத்திலில்) தேகத்தைச் சுத்தமாகவைத்துக்கொள்வதும் பொறுமையும் தயையும் தத்வஜ்ஞானத்தில்புத்திசெல்வதும் ஸந்யாஸிக்குவிதிக்கப்பட்ட தர்மங்களாகும். தேவியே! [1]ப்ரம்மசாரியாயிருப்பவனும் அவனுடைய இரண்டாவதுஜன்மமாகியஉபநயனமுதல் பிக்ஷையெடுத்து ஐம்புலன்களையும்மடக்கித் தன்குருவுக்குப் பணிவிடைசெய்யவேண்டும். எப்போதும் எல்லாவிடங்களிலும் குருபூஜையைச் செய்யவேண்டும். பிக்ஷையெடுப்பது அக்நிசுச்ரூஷைசெய்வது எப்போதும்ஸ்நானம்செய்வது வேதமோதுவது இவை அவனுக்கு இயற்கையாயுள்ளதர்மங்கள். அவன்செய்கை பிராணனுள்ளவரையிலும் குருபணிவிடைதானென்பது நிச்சயம். குருவில்லாதபோது அவர்புத்திரனிடத்தில் குருவினிடத்தில்நடப்பதுபோல நடக்கவேண்டும். இப்படியிருந்தால் அந்தப்பிரம்மசாரியானபிராம்மணனும் பரிசுத்தமானஉலகங்களையடைவான். தேவியே! ஆச்ரமத்திலிருப்பவர்களின் தர்மத்தையும் உனக்குஇப்போதுசொன்னேன். உலகத்தில் நான்குஆச்ரமங்கள்தாம் நியாயமாக ஏற்பட்டிருக்கின்றன. அவற்றை உனக்குச் சுருக்கமாகச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றுசொன்னார்.

இருநூற்றுஎன்பதாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வர ஸம்வாதம் தொடர்ச்சி; ரிஷிதர்மங்கள்.)

உமை, 'பகவானே! தேவருக்குத்தேவரே! ஈச்வரரே! திரிபுரமழித்தபிரபுவே! சங்கரரே! இந்தரிஷிக்கூட்டம், 'தவம் தவம்' என்று தவமீட்டுவதையே தலைமையாகக்கொண்டு இடைவிடாமல் தவம்செய்வதினாலேயே வருத்தப்படுகின்றன. அந்தத்தர்மத்தின்

[1] இது ஸைந்திகப்ரம்மசாரியைப்பற்றியது.

இலக்கணம்யாது? அதன்வரலாறு எப்படிப்பட்டது?' அதனை நான் கேட்கவிரும்புகிறேன். வரங்கொடுப்பவரே! அதனை எனக்குஉரைக் கக்கடவீர்' என்றுசொன்னள். பார்வதி இவ்வாறுசொல்லும்போது ரிஷிகளனைவரும் மனமகிழ்ந்து அதில் ஊக்கத்துடன், 'நல்லது! நல் லது!' என்றுசொன்னார்கள். ரிஷிதர்மங்களைக்கேட்கும் பார்வதியை ரிஷிகள் கொண்டாடினர். 'தேவியே! உன்னனுக்கிரகத்தினல் நாங் கள் எங்களுக்கு முக்கியமான இதத்தைக் கேட்கப்போகிறோம். உனதுபாதங்களின்கீழ் அடித்த நாங்களனைவரும் பாக்கியம்பெற்றோம்' என்று எல்லாரும் தேவியை வாக்கினல் துதித்தனர். மகேசுவரர், 'சிறந்தமகிமையுள்ளவளே! நல்லமனமுள்ளவளே! நீ கேட்கக்கருது வது நியாயம். ஆ! ஆ! சுத்தமானபுன்னகையுள்ளவளே! ரிஷிதர் மத்தை உனக்குச்சொல்வேன். வானப்ரஸ்தாஸ்ரமத்தையடைந்த மனிதர்களால் பலவகைத்தர்மங்கள் செய்யப்படுகின்றன. ரிஷிதர் மம் பலவகைகளும் பலகிளைகளுமுள்ளது; அழியாதது. எல்லா ஸுகங்களையும் அடைவதற்காகத்தான் ரிஷிகளால் பெரும்பாலும் தவம் செய்யப்படுகிறது. தேவியே! அவ்வாறுஅனுஷ்டிக்கும்ரிஷி களின் தர்மத்தின் முறையைக் கேள். முதலில் கிருகஸ்தாஸ்ரமத்தி லிருந்து நன்மக்களைப்பெறுவதனல் பித்ருக்களின்கடனைத்தீர்த்து மனைவியின்உபயோகத்தைமுடித்தபிறகு ஒருகாரணம்பற்றி வீட்டை விடவேண்டும். உறுதியுடன் மனத்தையடக்கி உத்ஸாஹத்தைமுதன் மையாகக்கொண்டு மனைவியுடன்கூடவோ தனித்தோ வனவாஸத்திற் குப் போகவேண்டும். நதிகளும்காடுகளுமுள்ளவையும் அஜ்ஞானத் தைத்தீர்ப்பவையும் பெரும்பாலும்புண்ணியதீர்த்தங்களும் தேவால யங்களுமுள்ளவையுமான சிறந்தபுண்ணியப் பிரதேசங்களுக்குச் சென்றுசாஸ்திரமுறைதெரிந்துகொண்டு சாஸ்திரப்பிரகாரம் தீக்ஷை செய்துகொள்ளவேண்டும். தீக்ஷைசெய்துகொண்டபிறகு, மனம் சலியாமல் அனுஷ்டானம்செய்யவேண்டும். காலையில்எழுந்திருப்ப தும் சரீரசுத்திசெய்துகொள்வதும் எல்லாத்தேவர்களையும் நமஸ் கரிப்பதும் தேகத்தில் (கோமயம்) பூசிக்கொள்வதும் தவறுதலில் லாமையும் பாவங்களைவிடுவதும் காலமாலைகளில் சாஸ்திரப்படி ஸரி யானகாலத்தில் ஸ்நானசௌசங்களும் அக்நிஹோத்திரமும் செய்ய வேண்டும். சடையையும் மரவுரியையும் தரித்தல்வேண்டும். ஸமித் துக்களுக்கும் புஷ்பங்களுக்குமாக எப்போதும் வனத்தில் திரிவதும் சரத்காலத்தில் வல்லெற்களை ஸம்பாதிப்பதும் காய்களையும்கிழங் குகளையும்சேர்ப்பதும் ஆஸ்ரமத்தை எப்போதும் சுத்தமாகவைத்திருப்

பதும் அவனுக்குத்தர்மமென்றுசொல்லப்படுகின்றன. அதிதிகளிடத்தில்அன்பும் எப்போதும் அவர்களைத்தேடுவதும் பாத்தியத்தையும் ஆஸனத்தையும்கொடுத்துப் பூஜித்து அவர்களை ஆகாரத்திற்கழைப்பதும் காட்டிலுள்ளபதார்த்தங்களைச்சமைப்பதும் அந்தஅந்தக்காலங்களில் பித்ருக்களையும் தேவர்களையும்பூஜித்து, அதன்பிறகு, விருந்தோம்பலும் வானப்ரஸ்தனுக்குரிய பழமையானதர்மம். தர்மகோஷ்டியில் சிஷ்டர்களுடன் தர்மத்தையும் அர்த்தத்தையும்பற்றிப் பேசுவதும் வந்தவருக்கு இருப்பிடங்கள்கொடுப்பதும் தரையிலாவதுகல்லின்மேலாவது படுப்பதும் வ்ரதோபவாஸங்களைச்செய்வதும் புலன்களை அடக்குவதும் பொறுமையும் பகலிலுமிரவிலும்தக்கபடிசுத்தம் செய்துகொள்வதும் தர்மத்தைச்சிந்திப்பதும் வனத்திலுள்ளவர்களுக்குப் பொதுவாயுள்ளதர்மங்களாகப் பூர்வகாலத்தில் கண்டறியப்பட்டன. இனியபுன்னகையுள்ளவளே! இவ்வாறு முயன்றுகொண்டிருப்பவனுக்குப் பிராணவியோகம்நேர்ந்தால் ஸ்வர்க்கலோகத்தை வசப்படித்துவான். குற்றமற்றவளே! அங்கே தேவஸ்திரீகளுடன் சேர்ந்து அவனுக்குள்ளஸுகானுபவங்கள் தெரிந்தவையே. அவன் ஸ்வர்க்கத்திலிருந்துவிழும்போது மனிதர்களிற்சிறந்தவனாகப் பிறப்பான். தேவியே! இவ்வாறு வானப்ரஸ்தர்கள்எல்லாருடைய தர்மங்களையும் முழுதும் உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றுகேட்டனர். உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! ரிஷிகளுடைய சிறந்தநடக்கையையும் அவர்களின்விசேஷதர்மங்களையும் கேட்கவிரும்புகிறேன். எனக்கு அதில் உற்சாகமிருக்கிறது' என்றுகேட்டனள். மஹேசுவரர், 'தேவியே! நான் அதனை உனக்குச் சொல்வேன்; ஊக்கத்துடன் கேள். வனத்தில் எப்போதும் வஸிப்பவரும் வனத்தில்விருப்பமுள்ளவருமான வானப்பிரஸ்தர்களான மகரிஷிகள் வனத்தை ஆசாரியனைப்போல அடுத்துவஸிக்கவேண்டுமென்பதுநிச்சயம். [1]வீரசயனத்தையும் [2]வீரஸ்தானத்தையும் எடுத்துக்கொண்டும் விரதங்களையும்உபவாஸங்களையும் மிகுதியாகக்கொண்டும் க்ரீஷ்மகாலத்தில் பஞ்சாக்நிமத்தியில் தவம்செய்துகொண்டும் தினந்தோறும் பஞ்சமஹாயஜ்ஞங்களைச்செய்துகொண்டும் தர்சபூர்ணமாஸங்களென்னும்இஷ்டிகளைச்செய்துகொண்டும் பனிக்காலத்தில் தவளைகள்போல ஜலத்தில்படித்தும் பாசிக்கொடிகளின் கொழுந்துகளைப்புசித்தும் மரவுரியுடையுடுத்தும் மான்தோல்போர்த்தும் சாதுர்மாஸ்யம்செய்தும் தேவதாபூஜைகளை

[1] அசையின்றி உறுதியுடன்படுப்பது. [2] அசையின்றி உறுதியுடன்நிற்பது.

யும்தர்மங்களையும்செய்தும் வனத்திலிருந்துகொண்டும் இவ்வாறு சிலர் மிகப்பெருந்தவம் செய்கின்றனர். இவ்வாறு கல்லகர்மம்செய்பவன் பிறகு ஸ்வர்க்கத்திற்குப் போகிறான். அங்கும் வெகுநீண்டகாலம் ஸுகமாகவிளையாடிக்கொண்டிருந்து பிறகு மானிடலோகத்திலும் தானபோகங்களுள்ளவனுகப் பிறக்கிறான். வெளுத்தபுன்னகையுள்ளவளே! சிறந்ததவமுள்ளஇவர்களைப்பற்றி உனக்குச் சொன்னேன்' என்றுசொன்னர். உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! அவர்களுள் மனைவிகளோடிருப்பவர் எவரோ அவர்களின் அனுஷ்டானம்எப்படிப்பட்டது? அதனைஎனக்குச்சொல்லவேண்டும்' என்றுகேட்டனள். மஹேசுவரர்,'தேவியே! சிலர் விந்தியமலைச்சாரிவுகளிலும் சிலர் நைமிசாரண்யத்திலும் சிலர் புஷ்கரக்ஷேத்திரத்திலும் மற்றும்சிலர் நதிக்கரைகளிலும் வனங்களிலும்இருந்து ஏகபத்நீவ்ரதமுள்ளவர்களாகிப்பெருந்தவம்செய்கின்றனர். அவர்களனைவரும் சாஸ்திரத்திற்சொன்னபடி சிறந்ததவம்செய்கின்றவர்தாம். கொல்லாமலும் தீங்குசெய்யாமலும் எல்லாப்பிராணிகள்மேலும் அன்போடும் மனத்தையும் ஐம்புலன்களையும் கோபத்தையும்அடக்கி எல்லாஅதிதிகளுக்கும்விருந்துசெய்துகொண்டு எல்லாப்பிராணிகளையும்தம்மைப்போல நினைத்து ருதுகாலங்களில்தம்மனைவிகளைச்சேர்ந்து அவர்களுடன் உயர்ந்ததவம்செய்கின்றனர். அவர்கள் பிள்ளைகளோடும் மனைவிகளோடும் கவலையின்றி ஸுகமாகவலிக்கின்றனர். அவர்களுக்கு, இரண்டாவதுஆஸ்ரமிகளான கிருகஸ்தர்களுக்குப்போலவே தம்சக்திக்குத் தக்கபடி வேண்டியபொருள்களையும் வீட்டிற்குரியகருவிகளையும் தேடிவைத்துண்டு. தம்குடும்பத்தைக்காப்பதற்காகவும் அக்நிஹோத்திரத்திற்காகவும் பசுக்கள் உழவு இவையெல்லாம் விதிக்கப்படுகின்றன. தேவியே! பத்தினியோடிருக்கும்வானப்பிரஸ்தர்கள் இவ்வாறுசெய்யவேண்டும். அப்படிஉறுதியாகத்தவம்செய்கிறவர்கள் தம்மனைவிகளுடன் புண்ணியலோகங்களையடைவர். எந்தப்பத்தினிகள் கலங்காமல் கணவர்களுடன் ஒற்றுமையாய்ச் சிறந்ததவம்செய்கின்றனரோ அவர்கள் ஸ்வர்க்கம்போவதுதிண்ணம். தேவியே! இதனை உனக்குச் சொன்னேன். இன்னும் என்ன கேட்கவிரும்புகிறாய்?' என்றுகேட்டனர்.

இருநூற்றுப்பத்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி; வானப்ரஸ்ததர்மாதிகளியன.)

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! பிரபுவே! ஆதந்தரூபியே! வரமளிப்பவரே! வானப்பிரஸ்தர்களின்தர்மத்தின்பயனை உமதுஅனுக்கிரகத்தினால் நான் கேட்கவிரும்புகிறேன்' என்றுகேட்டாள். மகேசுவரர், 'அன்புள்ளவளே! வானப்பிரஸ்தர்கள் அடையும்பலன்கள் எல்லாவற்றையும் கேள். கிரீஷ்மகாலத்தில் சாஸ்திரத்திற்சொன்னகருமங்களைச் செய்துகொண்டு பன்னிரண்டு வருஷகாலம் பஞ்சாக்கினிமத்தியில் தவம்செய்பவன் ருத்திரலோகத்திற்பிறப்பான். வருஷாகாலத்தில் பன்னிரண்டுவருஷகாலம் உபவாஸவிரதத்தைத் தவறுமற்செய்யும்மனிதன் சந்திரலோகத்தில் பிறப்பான். பன்னிரண்டுவருஷகாலம் கட்டைபோல மௌனமாயிருக்கும்மனிதன் மருத்துக்களின்லோகத்திற்குப்போய் அங்குள்ளபோகங்களையடைவான். பன்னிரண்டுவருஷகாலம் தர்ப்பைகளும் சிறுகற்களுமுள்ளதரையில்படுத்துத் தவஞ்செய்யும்மனிதன் யக்ஷலோகத்தில்பிறந்து பதினாயிரம்வருஷம் போகங்களையனுபவிப்பான். ஆணிகள்தைத்த பலகையின்மேல் [1]வீராஸனம்போட்டுக்கொண்டு பன்னிரண்டுவருஷம்தவம்செய்யும்மனிதன் கந்தர்வலோகத்தில் பிறப்பான். பன்னிரண்டுவருஷகாலம் கைகளைத்தூக்கிக்கொண்டு வீரஸ்தானமாகநிற்கும்மனிதன் தேவலோகத்தில்பிறந்து தேவஸுகங்களையனுபவிப்பான். ஐம்புலன்களையுமடக்கிக் கைகளைத்தூக்கிக்கொண்டு ஒருகால்கட்டைவிரலால்நிற்பவன் பதினாயிரம்வருஷம் இந்திரலோகத்தில் மேன்மையாகவிருப்பான். பன்னிரண்டுவருஷகாலம் ஆகாரநியமம்செய்யும்முனி அநேகமாயிரம்வருஷகாலம் நாகலோகத்திலிருப்பான். தேவியே! இவ்வாறு உறுதியானதவமுள்ள வானப்பிரஸ்தர்கள் தமதுகர்மங்களுக்குத்தக்கபடி அந்தஅந்தஉலகங்களில் அந்தஅந்தப்போகங்களை அனுபவித்துக்கொண்டிருப்பார். தேவியே! அங்கிருந்துவிழுந்தபிறகு, மானிடலோகங்களில் மேற்குலங்களிலேயேபிறந்து தனதானியங்களையும் போகங்களையும் பெற்றிருப்பர். தேவி! இதனையும் உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றுகேட்டனர். உமை, 'கௌர

[1] ஆதிபர்வம் 226ஆ பக்கம் குறிப்பிற்காண்க.

வத்தைக்கொடுப்பவரே! மகேஶ்வரரே! இவர்களில் மேலாயிருப்பவர் களின் தர்மத்தைக் கேட்கவிரும்புகிறேன். மிகக்கிருபைகூர்ந்து அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மகேசுவரர், 'பெண் ணரசியே! மேலானவர்களின்தர்மத்தை நீ ஊக்கத்துடன் கேள். சுத்த மானபுன்னகையுள்ளவளே! விரதங்களாலும் உபவாஸங்களாலும் தீர்த்தஸ்நானங்களாலும் சுத்தமானதேகமுள்ளவரும் மனஉறுதி யும்பொறுமையுமுள்ளவரும் ஸத்தியத்தையும்நியமங்களையும் விடாத வரும் பக்ஷோபவாஸம், மாஸோபவாஸம், மழை, குளிர், வெய்யில் இவற்றிஞல்பீடிக்கப்பட்டவருமாகிச் சிறந்ததவம்செய்யும்தர்மந்தெரி ந்தவர்கள் காலம்வந்தபோது இந்திரலோகத்தையடைவார். அங்கே அவர் தேவலோகத்தியபுஷ்பசந்தனங்களையணிந்துகொண்டும் திவ்யா பரணங்களையணிந்துகொண்டும் போகங்களையனுபவித்துக்கொண்டும் சிறந்தவிமானங்களிலேறித் தேவஸ்திரீகளோடு விரும்பினபடி ஸஞ் சரிப்பார். தேவியே! இதனையும் உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கக்கருதுகிறாய்?' என்றுசொன்னர். உமை, 'பிரபுவே! அவர்களில் வண்டிஇழுத்துத்திரிபவர்களின்தர்மத்தைக் கேட்கவிரு ம்புகிறேன்' என்றுகேட்டனள். மகேசுவரர், 'சிறந்தவளே! ஆ! ஆ! வண்டிஇழுத்துத்திரிபவர்களின் தர்மத்தைப்பற்றி உனக்குச் சொல்வேன்; கேள். பிறருக்குத்தானம்செய்வதற்காக எக்காலமும் வண்டிகளின் நுகத்தடிகளையிழுத்துக்கொண்டு அந்த அந்தக்காலங்க ளில் வண்டிகளில் பிக்ஷைகேட்பர். தவத்தைஸம்பாதிப்பதில் ஊக்க முள்ளவர்களாகவும் தவத்திஞல்பாவங்கள்தீர்ந்தவர்களாகவும் காமக் குரோதங்களைவிட்டு மனஉறுதியுடன் எல்லாத்திசைகளிலும் திரி வர். சிறந்தவளே! அவர்களும் மரணகாலத்திற்குப்பின் ஸ்வர்க்கம் போவார்; அவ்விடத்திலுள்ளபோகங்களால் மகிழ்ந்து ஸுகமாகத் திரிவர். தேவியே! இதனையும் உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றுசொன்னர். உமை, 'பிரபுவே! வைகானஸர்களின்தர்மத்தைக் கேட்கவிரும்புகிறேன்' என்றுகேட் டனள். மகேசுவர், 'அழகியகண்களையுடையவளே! உக்கிரமான தவமுள்ளவர்களும் தம்மகிமையிஞலேபிரகாசிப்பவர்களும் ஸத்திய மும்நியமும்தவருதவர்களும் சிறந்தஞானமுள்ளவர்களுமாகிய அந்த வானப்பிரஸ்தர்களே வைகானஸர்என்னப்படுகிறார். அவர்களின்தவம் குற்றமற்றது. அவர்களில் சிலர் [1]அச்மகுட்டர்; மற்றும்சிலர் [2] தந்

1 கல்லினுல் தான்யத்தைத்தேய்த்து உமிபோக்கியெடுத்துப் புசிப்பவர்.

2 பல்லினுல்கடித்து உமியைஉமிழ்ந்து தானியத்தைத்தின்பவர்.

தோலுகலர்; சிலர் உதிர்ந்தஇலைகளைப் புசிப்பவர்; சிலர் சிற்சிலவாகக் கிடைத்ததை உண்பவர்; சிலர் (உதிர்ந்ததைப்பொறுக்கித்தின்னும்) கபோதங்களைப்போலஜீவிப்பவர்; சிலர்(புல்மேய்ந்துகொண்டு) பசுக்களைப்போலத் திரிபவர்; சிலர் தண்ணீர்நுரையைக் குடிப்பவர்; சிலர் மான்களோடுமான்களாகத் திரிபவர்; மற்றும்சிலர் ஜலத்தையும் காற்றையும்பக்ஷிப்பவரும் ஆகாரமில்லாதவருமாயிருப்பவர்;சிலர் உத்தமமாகியவிஷ்ணுபாதபூஜையைநன்றாகச்செய்பவர்; உக்கிரமான தவம்செய்து வியாதியும்மரணமுமில்லாதவர்களாய்த் தாம் நினைத்தபடி ரூபனையும் எக்காலமும் பயமுறுத்துகின்றனர். அப்படி இருக்குமவர்களுக்கு இந்திரலோகத்தில் அளவற்றபோகங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. குற்றமற்றவளே! அவர்கள் சிறந்த அப்ஸரஸுகளுடன்சேர்ந்து தேவர்களுக்குரியபோகங்களையடைந்து நீண்டகாலம் தேவர்களுக்குச்சமமாகஇருக்கின்றனர். தேவியே! இதனையும் உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்று சொன்னார். உமை, 'பகவானே! வாலகில்லியர்களென்னும் தபோதனரைப்பற்றிக் கேட்கவிரும்புகிறேன்' என்றுசொன்னாள். மகேசுவரர், 'தேவி! அப்படியேயாகட்டும். வாலகில்லியர்களின்தர்மானுஷ்டானத்தைக் கேள். அழகானநிதம்பமுடையவளே! அந்தத் தபோதனர்கள் மான்தோலாடையுடுத்துச் சீதோஷ்ணமுதலியஇரண்டினையொழித்துக் கட்டைவிரல்அளவான சரீரங்களோடு அந்தச்சரீரங்களிலேயே எல்லாஉறுப்புக்களும்பொருந்தியிருக்கின்றனர். தர்மம் தெரிந்தவர்களும் ஸத்தியவாதிகளுமான அவர்கள்,உதயமாகும்ஸூர்யனைப் பலவகைஸ்தோத்திரங்களினால் எப்போதும் துதித்துக்கொண்டும் சூரியனுடையகிரணங்களோடுகூடவே எல்லாத்திசைகளையும் பிரகாசிக்கச்செய்துகொண்டும் எப்போதும் சஞ்சரிக்கிறார்கள். உலகத்தைக்காப்பதாகிய குற்றமற்றஸத்தியமானது அவர்களிடத்திலேயே நிலைபெற்றிருக்கிறது. தேவியே! அவர்களின்தவவன்மையினாலே தான் இவ்வுலகம் தாங்கப்படுகிறது. தெளிவானபுன்னகையுள்ளவளே! சிறந்தமகிமையுள்ளவளே! அம்மகாத்மாக்களின்தவத்தினாலும் ஸத்தியத்தினாலும் பொறுமையினாலும் பிராணிகள்நிலைபெற்றிருப்பதாக அறிகின்றனர். மகான்கள் ஜனங்களுக்காகவும் உலகங்களுக்காகவும் தவம்செய்கின்றனர். தவத்தினால் எல்லாம் கிடைக்கின்றன. தவம் பயன்படுகிறது. இவ்வுலகத்தில் பெறத்தகாதவையானதையும் தவத்தினால் பெறத்தகும். ஐந்துபூதங்களாலாகும் உலகசிருஷ்டியை ஒங்கச்செய்வதும் தவமே. இவ்வுலகமனைத்தும்

தவமேன்மையினால் படைக்கப்பட்டது. அன்புள்ளவளே! அதனாலே தான் இந்தரிஷிக்கூட்டம் தர்மத்தையேதேடிக்கொண்டு தவம்தவ மென்று தவம்செய்வதற்கே எப்போதும் முயற்சிசெய்வது. தவத் தினாலே தேவத்தன்மையையும் சிவத்தன்மையையும் அடையலாம். அன்புள்ளவளே! நீ கேட்டதற்காகவும் ரிஷிகளின்விருப்பத்திற்காக வும் ஜனங்களின்நன்மைக்காகவும் இவற்றையெல்லாம் சொன்னேன். நீ கேட்டாயன்றே?' என்றுசொன்னார். இவ்வாறுசொல்லும்வ ரைரை ரிஷிகளும் துதித்து அப்போதுமுதல் இன்னும் மேலான தவம்செய்யத்தொடங்கினர்.

இருநூற்றுப்பதினேராவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வர ஸம்வாதம் தொடர்ச்சி ; கிருஹஸ்ததர்மம் மோக்ஷதர்மம்முதலியன.)

உமை, 'பகவானே! தர்மார்த்தகாமங்களாகிய மூன்றுபுரு ஷார்த்தங்களுக்கும்காரணமும் நன்மையைத்தருவதுமான மிகச்சிற ந்ததர்மம் உம்மால் சொல்லப்பட்டது. எல்லாப்புருஷார்த்தங்களுக் கும்உரியதர்மம் எதுவோ அதனை எனக்குச் சொல்லும்' என்றுகேட் டாள். மஹேசுவரர், 'உலகம்படைத்தபிரம்மதேவரால், உலகத்தி லுள்ளவர்களுக்கு நன்மையைச்செய்வதற்காக உலகங்களைக்கரையேற் றத்திறமையுள்ளவர்களும் பூமிக்குத்தேவர்களுமாகிய அந்தணர்கள் மனிதர்களுள் படைக்கப்பட்டனர். நல்லபலனைக்கொடுக்கும்தர்மம் அவரிடத்திலிருப்பதை முதலில் சொல்லுவேன். எல்லாருடைய பயத்தையும்நிவிருத்திக்கச்செய்வதும் நன்மையைத்தருவதுமானசிற ந்ததர்மம் பிராம்மணர்களிடத்திலுள்ளது. பிரம்மதேவர் உலகங்க ளுக்கு முதலில் தர்மங்களைத்தான் படைத்தார். பூமியிலுள்ளநல்ல பிராம்மணர்களால் எப்போதும்சொல்லப்படும் அந்தத்தர்மங்களை என்னிடம் தெரிந்துகொள். தன்மனைவியினிடம்திருப்தியடைந்திரு ப்பதும் நித்தியம்ஜபம்செய்வதும் எல்லா அதிதிகளையும்ஆதரிப்பதும் தர்மார்த்தகாமங்கள்மூன்றையும் கூடியவரையில் இரவிலும்பகலிலும் செய்வதும் தர்மங்கள். தர்மத்தில்ஊக்கமுள்ளவருத்தரன் எப்போதும் பணிசெய்வதை விடாமலிருக்கவேண்டும். மூன்றுவேதங்களையும் அறிந்தவனும் பிராயமுதிர்ந்தவனும் அத்தியயனத்தினால்ஜீவிக்காத

வனுமாகியபிராம்மணனுக்குத் தர்மார்த்தகாமங்களென்ற மூன்று புருஷார்த்தங்களையும்கடந்ததும் அழியாததுமான மோக்ஷதர்மமிருக்கிறது. உத்தமியே! சிறந்தபுண்ணியத்தைத்தருகின்றவையும் எல்லாவற்றிலும்சிறந்தவையுமான ஆறுகர்மங்கள் பிரம்மதேவரால்முதலில் படைக்கப்பட்டனவாகச் சொல்லப்படுகின்றன. அவற்றையெல்லாம் கேள்; யாகம்செய்வது செய்விப்பது பாத்திரமறிந்துகொடுப்பது வாங்குவது ஓதுவது ஓதுவிப்பது இவ்வாறுகர்மங்களையும் மனப்பூர்வகமாகச்செய்பவன் புண்ணியத்தையடைவான். நித்தியம் வேதமோதுவதும் நித்தியம் யாகம்செய்வதும் நிலைபெற்றதர்மங்கள். பிராம்மணர்களுக்கு, யாகம் தானம் அத்யயனம் இம்மூன்றுகர்மங்களுள். தானம் இன்றியமையாததென்று சொல்லுகின்றனர். இந்தச் சிறந்ததர்மந்தான் ஸாதுக்களிடத்தில் ரகஸ்யமாயிருக்கிறது. கர்ப்பத்திலேயே பரிசுத்தமுள்ளவர்களுக்குத்தான் தர்மத்தின்நியமம் பெரிது. பஞ்சமஹாயஜ்ஞங்களினால் பரிசுத்தமானமனமுள்ளவனும் மனைவியினிடத்தில் ருதுகாலத்தவறாதவனும் பொறுமையில்லாதவனும் இந்திரியங்களைஜயித்தவனும் பிராம்மணர்களைப்பூஜிப்பவனும் வீட்டை நன்றாகமெழுகிப்பெருக்கிவைத்திருப்பவனும் [1]கர்வமில்லாதவனும் வஞ்சியாதவனும் இன்சொற்சொல்லுகிறவனும் விருந்தினர்களையும் தன்னிடம்வந்தவர்களையும் ஆதரிப்பவனும் மீதியன்னத்தால் போஜனம்செய்பவனுமாயிருந்து முறைப்படி பாத்தியத்தையும் அர்க்கியத்தையும் ஆஸனத்தையும் சயனத்தையும் தீபத்தையும் கிருஹத்தையும்கொடுப்பவன்தான் தர்மம்செய்பவன்.காலையில்எழுந்து பிறகு போஜனத்திற்காகவழைத்து விருந்துசெய்து பின்செல்லுகிறவனுக்கு அழியாததர்மம் உண்டு. உலகவாழ்க்கைக்குரிய பிரவ்ருத்திஎன்னும்தர்மம் கிருஹஸ்தர்களுக்கு விதிக்கப்படுகிறது. அறம்பொருளின்பங்களுள் எது எவ்வகையென்பதை உனக்குச் சொல்வேன். நன்மையைக்கருதுகிறவன் தனத்தின்ஒருபாகத்தைத் தர்மத்திற்காகவும் மற்றொருபாகத்தை ஸுகத்திற்காகவும் வைத்து மூன்றுவதுபாகத்தை விருத்திசெய்யவேண்டும். ஒழிவாகியநிவிருத்திஎன்னும்தர்மம் பரிசுத்தமானது; மோக்ஷத்திற்குரியதாக விதிக்கப்படுகிறது. அதன்நிலைமையைச் சொல்லுகிறேன். அதனை ஊக்கத்துடன் கேள். நிவிருத்திமார்க்கத்திற்கு எல்லாப்பிராணிகளிடத்திலும் எப்போதும் தயைசெய்வது முதன்மையானதர்மம். பெண்ணரசியே! பசியினாலும் தாகத்தினாலும் வருந்திக் களைத்துவந்த விருந்தினனைப் பூஜிப்

1 வேறுபாடம்.

பவருக்கும் அப்பெரும்பயன் உளது. தர்மத்தைக்கருதுகிறவர் கள் யோக்கியனென்னும்காரணம்பற்றியே யாருக்கும் தானம்செய்ய வேண்டும். தருதியுள்ளவன்வருவனுயின் அவன் கடைத்தேறச்செய் வான். புசிக்கஆசையோடுவந்து போஜனகாலத்தில்சேர்ந்தஅதிதியை எவன்பூஜிப்பனே அவனுக்கு அங்கே வ்யாஸரே வந்தவராவார். மன த்திலன்புடன் தன்சக்தியளவு அவனைப் பூஜிக்கவேண்டும். தர்மம் மனமடியாகத்தான் உண்டாகும். தர்மமடியாகத்தான் புகழ் உண்டா கும். தேவியே! ஆதலால், உள்ளத்திலன்போடு எவ்வகையிலாவது தானம்செய்யவேண்டும். மனம்கனிந்துசெய்யும்தானந்தான் எல்லா வற்றிலும்சிறந்தது; பூமியில் தண்ணீரின்சிறுதுளிகள் விழுவதலால் வயல்களும் குளங்களும் ஏரிகளும் ஆறுகளும் ஜலம்நிரம்பினவையா கக் காணப்படுகின்றன. மிகச்சிறந்தவளே! இது எண்ணத்திற்கும் எட்டாதது. அப்படியே சிற்சிலவாகச்செய்யப்படும் ஒவ்வொரு தான மும் பெருகும். வேலைக்காரர்களுக்குஉபத்ரவம்செய்தாவது தானம் செய்வது விசேஷந்தான். பிள்ளைபெண்டுகளும் தனதானியங்களும் இறந்தவரைப் பின்தொடருகிறதில்லை. புகழ்பெற்றவளே! தனம் கிடைத்தபிறகு அதைக்கொடுப்பதும் அநுபவிப்பதுந்தாம் நலம். கொடுப்பதினாலேதான் சிறந்தபாக்கியம்பெற்ற அரசர்களாகிறார்கள். பூமியில் தானத்திற்குச்சரி ஒன்றுமில்லை; தானத்தைப்போன்ற புதையலில்லை. ஸத்தியத்திற்குஞ்சின புண்ணியமில்லை. பொய்க்கு மிஞ்சினபாவமில்லை. தேவியே! ஆஸ்ரமத்தில் சிழங்குகளையும் கனி களையும் புசித்துக்கொண்டு ஜடையும் மாவுரியும்தரித்துக் கோடைக் காலத்தில் பஞ்சாக்கினிமத்தியிலிருந்து சூரியனைநோக்கியும் பனிக் காலத்தில்தலைபோல ஜலத்தில்படித்தும் சிரத்தையுடன் நன்றுகத் தவம்செய்துகொண்டு வானப்பிரஸ்தாச்ரமத்திலிருப்பவர்களும் கிரு கஸ்தாசிரமத்திலிருப்பவர்களின் பதிஞறில் ஒருபாகத்திற்கும் ஈடா கார்' என்றுசொன்னர். உமை,'பிரபுவே! கிருகஸ்தாசிரமத்தின்அநு ஷ்டானம் யாது? விரதங்களும் நியமங்களும்எவை? கிருகஸ்தன்எப் போதும் தேவதாபூஜைசெய்யும்வகை யாது? அவன் எந்தத்திதி களில் எந்தப்புண்ணியகாலங்களில் எவ்வெவற்றை விடவேண்டும்? இவற்றையெல்லாம் நீர்சொல்லக்கேட்கவிரும்புகிறேன்' என்றுகேட் டாள். மஹேசுவரர், 'பெண்ணரசியே! கிருகஸ்தாசிரமத்தின் கார ணத்தையும் பிரயோஜனத்தையும் அதில் எப்போதும் தர்மம் கூறு பாதங்களோடுகூலப்பெற்றிருப்பதாகிய சிறப்பையும் தயிரில் வெண் ணெய்எடுப்பதுபோல் ஸாரத்தையெடுத்து உனக்குச் சொல்வேன்,

தர்மம்செய்கிறவளே ! கேள். தம்பதிகளுக்கு அலங்காரம்செய்து அவர்களுக்குக் கிருகதானம் செய்யும்மனிதன் பாரியாஸுகத்தையடைவான். அதில் ஸந்தேகமில்லை. ஸ்திரீகளாயினும் புருஷர்களாயினும் தம்பதிபூஜைசெய்பவர்கள் மனத்தில் விரும்பினபலன்களையெல்லாம் அடைவாரென்பது நிண்ணம். இல்லறத்திலிருந்து தந்தையையும் தாயையும்உபசரித்து அக்நிஹோத்திரம்செய்துகொண்டிருக்கும்பிராம்மணர்கள்விஷயத்திலும் கணவனுக்குப்பணிவிடைசெய்யும் பெண்ணிடத்திலும் இந்திரன்முதலியதேவர்களும் பித்ருலோகத்திலிருக்கும்பித்ருக்களும் ஸந்தோஷப்படுகின்றனர்; அப்படிச்செய்பவர்களும் தம்தர்மத்திஞல் ஸந்தோஷமடைகின்றனர்' என்றுசொன்னர். உமை, 'தாய்தந்தையில்லாத கிருகஸ்தர்களுக்கும் கணவனில்லாத பெண்களுக்கும் உரியதர்மம் யாது ? அதனை நீரே எனக்குச் சொல்லும்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'தேவதைகளைப்பூஜிப்பதும் விருந்தாளியாதரிப்பதும் ஆசாரியரையும்பெரியோரையும்நமஸ்கரிப்பதும்எல்லாப்பிராணிகளுக்கும்துன்பம்செய்யாமையும்பொருளாசையில்லாமையும்சொல்தவருமையும்பிரம்மசாரிவிரதமும் சாணமடைந்தவரை ரக்ஷிப்பதும் சுத்தமும் முதலில்பேசுவதும் நன்றிமறவாமையும் கோட்சொல்லாமையும் தர்மத்தை எப்போதும் விடாமையும் தினத்திற்குஇருமுறைஸ்நானமும்பித்ருக்களையும்தேவர்களையும்பூஜிப்பதும் தினந்தோறும்கோதானம்செய்வதும் அதிதிகளுக்குஸமபாகம் கொடுப்பதும் அவர்களின்தர்மங்கள். தீபத்தையும் கிருகத்தையும் பாத்யத்தையும் ஆஸனத்தையும் கொடுக்கவேண்டும். ஐந்து, ஆறு, எட்டு, பன்னிரண்டு, பதிஞன்கு, அல்லது பதினைந்துதினங்களுக்கொருமுறை பிரம்மசாரிவிரதமிருக்கவேண்டும். அந்தத்தினங்களில் க்ஷௌரம் தலையில் எண்ணெய்தேய்த்துக்கொள்வது மைதிட்டிக்கொள்வது பல்துலக்குவதுஇவற்றைச் செய்யலாகாது. அப்படியிருப்பவர்களிடத்தில் லக்ஷ்மி நிலைபெற்றிருக்கிறாள். விரதங்களையும் உபவாஸங்களையும்விடாமலிருப்பதும் தவம்செய்வதும்இயன்றவரையில் தானம்செய்வதும் வேலைக்காரரைப்போஷிப்பதும் ஏழைகள்மேல் தயைசெய்வதும்பிறர்மனைவியைவிரும்பாமையும்தன்மனைவியினிடத்தில்பற்றுடையிருப்பதும் தர்மங்கள். தம்பதிகள்இருவர்களின் சரீரங்களும் பிரம்மதேவரால் முதலில் ஒன்றுகப் படைக்கப்பட்டன. ஆதலால், தன்மனைவியினிடத்தில்அன்போடிருப்பவன் பிரம்மசாரியாகச் சொல்லப்படுகிறான். குணமும்ஒழுக்கமும்திருந்தியும் புலன்களையடக்கியும் உள்ளும்புறமும்ஒத்தும் எல்லாப்பிராணிகளின் நன்மையையும்

கருதியும் அதிதிகளின்மேல்அன்புவைத்தும்பொறுத்தும் தர்மமாகப் பொருளீட்டியும் இல்லறத்திலிருப்பவனுக்கு மற்றஆசிரமங்களில் ஆவதென்ன? எல்லாப்பிராணிகளும் தாயையடித்து ஜீவிப்பது போலவே எல்லாஆசிரமங்களும் கிருகஸ்தாச்ரமத்தையடித்துஜீவிக் கின்றன. அரசர்கள், [1]பாஷண்டர்கள், கூத்தாடிகள், பாம்பாட்டிகள், டம்பர்கள், கள்ளர்கள், அரசனுடையஸேவகர்கள், வித்தையாடிகள், பிராணிகளைவளர்ப்பவர்கள், வைத்தியர்கள், நெடுவழிநடந்தவர்கள், நோயுற்றுப்பத்தியமுண்பவர்கள்ஆகியஇவர்களனைவரும் மற்றும்பல ரும் கிருகஸ்தனைத் தேடுகின்றனர். தேவியே! பூனைகள், எலி கள், நாய்கள், பன்றிகள், கிளிகள், புறுக்கள், நத்தைபாம்புமுதலிய ஊர்வன, மற்றும்காட்டிலிருப்பவைகள், மிருகங்கள்,பக்ஷிகளின்கூட் டங்கள்ஆகியஉலகத்திலுள்ளபலவகைச்சராசரங்களும்நூற்றுக்கணக் காகவும் ஆயிரக்கணக்காகவும் வீட்டிலும் நிலத்திலும் வனங்களிலு மிருந்துகொண்டு கிருகஸ்தனால் செய்யப்படும்காரியத்தின் பலனை அனுபவிக்கின்றன. அவற்றிற்கு உபயோகமானதைப்பற்றித் தர்மம் என்றேநினைத்துத் துயரப்படாமலிருக்கும்புத்திமானுக்குரியபலனைக் கேள். தேவியே! எல்லாயாகங்களையும்அறிந்தவனுக்கு அசுவமேத யாகத்தினால்உண்டாகும் பலன்எதுவோ அந்தப்பலனை அவன் பன் னிரண்டாவதுவருஷத்தில் அடைவான். ஆசையென்னும் பாசத்தை விடுவதே எல்லாவற்றிலும் சிறந்ததர்மமென்றறி. எப்போதும் மரத் தடியிலும் குடியில்லாதவீட்டிலுமிருந்துகொண்டு ஆற்றுமணலில் படுத்தும் ஆற்றங்கரையோடுசென்றும் எல்லாப்பற்றுக்களையும் ஸ்நே கங்களையும்விட்டுத் தன்புத்தியை மனத்தினால் ஆத்மாவினிடத்தில் சேர்த்து மோக்ஷதர்மத்தினால் எல்லாவற்றையும் ஆத்துமாவாக நினைத்துஆகாரத்தைவிட்டு நித்தியம் பரிசுத்தனாகித் தியானம்செய்து கொண்டிருப்பவனுடையதர்மம் அழியாது. அவன் ஒன்றிலும் பற் றுடு மகிழ்ந்திரான்; ஒருகிராமத்திலும் நிலையாகநில்லான்; யோகம் செய்துகொண்டே திரிவான்; ஒருமனற்குன்றிலும் நின்று யோகம் செய்யான். இதுதான் வேதத்தில்சொல்லப்பட்டதும் பெரியோர் களின் அனுஷ்டானத்திலிருப்பதுமாகிய மோக்ஷதர்மம்' என்று சொன்னர்.

1 நாஸ்திகர்கள்.

இருநூற்றுப்பன்னிரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி; அரசன்ஏற்பட்டதும், தண்டம்முதலிய கொடியசெய்கைகளாலும் அவனுக்குப் பாவம் வராமையும்.)

உமை, 'ஐயா! தேவருக்குந்தேவரே! முக்கண்ணரே! விருஷபக்கொடியையுடையவரே! பகவானே! மஹேசுவரரே! உமது அனுக்கிரகத்தினால் நான் எல்லாவற்றையும் கேட்டேன். உமது அந்தச்சிறந்தசொல்லை நான் தெரிந்துகொண்டேன். இப்போது ஒரு ஸந்தேகமிருக்கிறது. மனிதர்களில் எல்லாரையும்போலஉயிரும்தசையும்உடலுமுள்ளஒருவன், 'இவன் அரசன்' என்றுநினைக்கப்படுகிறான். எந்தவினைப்பயனால் அவன் எல்லாருக்குந்தலைவனுயிருக்கத் தகுதியுள்ளவனுகிறான்? அவன் மனிதர்களைத் தண்டித்தும் பயமுறுத்தியும் கொன்றுமிருந்தாலும் புண்ணியகருமத்தினாலடையும்லோகங்களை மறுமையிலடைவது எப்படி? கௌரவத்தைக்கொடுப்பவரே! ஆதலால், வேந்தனுடையஒழுக்கத்தை நான் கேட்கவிரும்புகிறேன்' என்றுகேட்க, மஹேசுவரர் சொல்லலானார்.

'அழகியமுகமுள்ளவளே! அந்தராஜதர்மத்தை நான் உனக்குச் சொல்லுவேன். உலகத்திலுள்ளநல்லொழுக்கம்தீயொழுக்கமெல்லாம் வேந்தனுக்குஉட்பட்டவை. தேவியே! ராஜ்யமானது பெருந்தவப்பயனென்று நினைக்கப்படுகிறது. தவத்தினாலும்தானத்தினாலும் கிடைப்பதாகியராஜ்யமானது சிறந்ததபமென்று சொல்லப்படுகிறது. ஆதலால், எங்கிருக்கும்மனிதர்களும் எப்போதும் அரசனுக்குஅடங்கியிருக்கின்றனர். சிறந்தபாக்கியமுள்ள பெண்ணரசியே! நீ கேட்கவிரும்புவது நியாயம். அன்புள்ளவளே! ஆதலால், உலகத்திற்குஇதமான ராஜசரித்திரத்தைச் சொல்லுகிறேன்; கேள். முற்காலத்தில் அரசனில்லாமலிருந்தபோது ஜனங்களுக்குப் பெருங்கலக்கமுண்டாயிற்று. பிரம்மதேவர் அந்தக்கலக்கத்தைக்கண்டு மனுவை ராஜ்யத்தில்வைத்தார். மன்னர்களின்நல்லொழுக்கங்களும் தீயவொழுக்கங்களும் அப்போதுமுதலாகத்தான் காணப்படுகின்றன. பெண்ணரசியே! அரசன் எவ்வகையினால் மறுமையில் ஸ்வர்க்கத்தையும் இம்மையில் வீரத்தன்மையையும் புகழையுமடைவனோ, எதுஅவனுக்கும்உலகத்திற்கும் நன்மையோ அந்தவொழுக்கத்தைக்கேள். தகப்பனாலாவதுவம்சபரம்பரையினாலாவதுவந்தும் தானேஉண்டாக்கிக்கொண்டுமிருக்கும்

ராஜ்யத்தை அடைந்தபிறகு, ராஜதர்மத்தைச் சரிவரநடத்தி ஆள வேண்டும். முதலில் தன்னிடத்தில் குணங்களைப் பொருத்திக் கொள்ளவேண்டும். அதன்பிறகு, தன் வேலைக்காரர்களுக்கும்கடைசியில்பிரஜைகளுக்கும் குணங்களைப்பொருந்தச்செய்யவேண்டும். இதுதான் அடக்குமுறை. அழகானகண்களையுடையவளே! இவ்வுலகத்தில் ஜனங்கள் அரசனைஉதாரணமாகக்கொண்டு அவனைப்போலிருக்கவேண்டுமென்றுஎண்ணித்தான் தாங்கள் குணமுள்ளவர்களாயிருப்பது. தானடங்குவதற்குமுன்னமேயே பிரஜைகளையடக்கும் அரசனுனவன் தன்குற்றந்தெரியாமையினால் பரிஹஸிக்கப்படுதற்கு உரியவனுவான். கல்விகள்கற்பதினாலும் பெரியோரைச்சேருவதனாலும் தன்னைப் பதப்படுத்திக்கொள்ளவேண்டும். அறம்பொருளின்டினையும்தருவதுதான் கல்வி. அதைக்கற்றவர்கள்தாம் பெரியோரென்னப்படுகின்றனர். தேவியே! இதற்குமேல் இந்திரியங்களை அடக்குவது முக்கியமாகச்சொல்லப்படுகிறது. அடக்காமல்போனால் மிகப்பெரியபிழையுண்டாகும். அது அரசனைக் கெடுத்துவிடும். அறிவினாலும் அடக்கத்தினாலும் கூடியவரையில் ஐம்புலன்களையும் வசப்படுத்திக்கொண்டு அவற்றின் [1]விஷயங்களைந்தினையும் வற்றச்செய்து [2] ஆறையும்ஒழித்துச் சாஸ்திரத்தைக்கண்ணைக்கொண்டு உபாயங்களைக்கைப்பற்றி உத்தியோகஸ்தர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஒழுக்கமும்கல்வியும்குலமுமுள்ளவர்களும் பரிதானத்தைப்பற்றிப்பரிசோதித்து அதிலகப்படாதவர்களும் எல்லாராலும் அனுசரிக்கப்பட்டவர்களும் ஜிதேந்திரியர்களுமானமந்திரிகளை அவர்கள் சக்திக்கும் தகுதிக்கும் ஒத்தவேலைகளில் நியமிக்கவேண்டும். சிறந்த புத்தியுள்ளமந்திரிகள், பலஜனங்களினால்விரும்பப்பட்டதேசம், பகைவரால்வெல்லமுடியாதசிறந்தகோட்டை, கஷ்டத்தில்தாங்கத்தக்க பொக்கசம், அன்புள்ளசேனை, இன்சொல்மாறுதமந்திராலோசனை, தன்னைச் சேர்ந்தவர்களை ஆதரம்வைத்தெரிந்தஅரசன் ஆகியஇவ்வேழும் [3]பிரக்ருதிகளென்னப்படுகின்றன. இவையெல்லாம் பிரஜைகளைரக்ஷிப்பதற்காக உண்டாக்கப்பட்டவை. அரசன் மேற்சொன்னமற்றஉதவிகளோடு உலகநன்மையைச் செய்யவேண்டும். அரசன் தன்னைக்காப்பாற்றிக்கொள்வதும், பிரஜைகளைக் காப்பாற்றுவதற்காகவே என்று நினைக்கப்படுகிறது. ஆதலால், எப்போதும் வழுவின்றித் தன்

1 சப்தஸ்பர்சரூபரஸகந்தங்கள்.

2 காமக்குரோதலோபமோகமதமாத்ஸர்யங்கள்.

3 ராஜ்யாங்கங்கள்.

னைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். உணவு, உடை, ஸ்நானம், வெளியில்புறப்படுவது, ஸ்திரீகளின்புணர்ச்சி இவையெல்லாவற்றிலும் ஜாக்ரதையோடு எப்போதும் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும். தமர், பிறர், ஆயுதம், விஷம், புத்திரர்கள், மனைவிகள், இவர்களெல்லாரிடத்தும் ஊக்கத்துடன் எப்போதும் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும். பிரஜைகளைக்காப்பதற்காக அவர்களுக்கு நன்மையைச் செய்யவேண்டும். பிரஜைகளின்காரியந்தான் வேந்தனுடையகாரியம். பிரஜைகளின்ஸுகந்தான் அவன்ஸுகம். பிரஜைகளின்விருப்பந்தான் அவன்விருப்பம். பிரஜைகளின்நன்மைதான் அவன்நன்மை. அவனுடையசொத்தெல்லாம் பிரஜைகளுக்காகவுற்பத்திப்படுகிறதேயன்றித் அவனுக்காகவன்று. ஜனங்களைரக்ஷிக்கும் விஷயத்தில் விருப்புவெறுப்புக்களையொழித்துஇருதிறத்தாரின்வாதங்களையும் உள்ளபடிகேட்டு உண்மைகண்டுபிடிக்கும்வரையில் அந்த விஷயத்தைப்பற்றித் தன்புத்தியினாலும், சாஸ்திரம்தெரிந்தவர்களும் மனிதர்களில்சிறந்தவர்களுமான அநேகம்பெரியோர்களுடன் சேர்ந்தும் நன்றாகஆராய்ந்துபார்க்கவேண்டும். குற்றவாளியையும் குற்றத்தையும் இடத்தையும் காலத்தையும் நியாயத்தையும் அநியாயத்தையும் நன்றாகஅறிந்தபிறகு,சாஸ்திரப்பிரகாரம் மனிதருக்குத்தண்டனையைவிதிக்கவேண்டும்.இவ்வாறுபக்ஷபாதமில்லாமல்செய்கிறவன்புண்ணியத்தையடைவான். அரசன் தன்தேசத்திலுள்ளநல்லொழுக்கத்தையும் தீயொழுக்கத்தையும் பிரத்தியக்ஷத்தினாலும் நம்பக்கூடியவர்களின்சொல்லினாலும் அனுமானத்தினாலும் எப்போதும் அறிந்துகொண்டிருக்கவேண்டும்; சாரர்களைக்கொண்டும் செய்கைகடப்பதைக்கொண்டும் அதனையறிந்து விசாரிக்கவேண்டும் ; தனக்குத்தீங்கானகாரியத்தை உடனே பரிகரிக்கவும் தனக்குஅனுகூலமானதை நடத்தவும்வேண்டும். தேவியே ! இகழத்தக்கவர்களை இகழவேண்டும். பூஜிக்கத்தக்கவரைப் பூஜிக்கவேண்டும்; தண்டிக்கத்தக்கவரைத் தண்டிக்கவேண்டும் ; அவ்விஷயத்தில் சங்கிக்கலாகாது ; எப்போதும் [1] ஐந்தைக்கவனித்துப் புத்தியுள்ளமனிதர்களுடன் மந்திராலோசனை செய்யவேண்டும் ; குலம் ஒழுக்கம் கல்வி இம்மூன்றுமுள்ளவர்களோடேயோ எப்போதும் ஆலோசிக்கவேண்டும். • தலைவரானமந்திரிக

1 1. காரியங்களையாரம்பிக்கும்வழி. 2. மனிதர்களையும் பொருளையும் சேகரிப்பது. 3. அதற்குஇடத்தையும்காலத்தையும் ஏற்படுத்துவது. 4. இடையூறுகளை நிவர்த்திசெய்வது. 5. முடிப்பது. இவை மந்திரத்திற்கு ஐந்து அங்கங்கள் என்று ராஜநீதிசாஸ்திரத்திற்சொல்லப்படுகின்றன.

ஞுடன் மந்திராலோசனையில் தன்னிஷ்டப்படி மனம்செலுத்தலாகாது. அரசனவன் தேசத்தின்இதத்தைக்கருதி ஸத்தியத்தையும் தர்மங்களையும் நடத்துவிக்கவேண்டும்; அகழ்முதலியவற்றைப் பற்றியும் மனிதர்களைப்பற்றியும் எப்போதும் எல்லாமுயற்சிகளையும் தானேசெய்யவேண்டும்; தேசத்திற்குஅபிவிருத்திசெய்பவர்களாகிய வேலைக்காரர்களை ஜாக்கிரதையாகச் சேர்க்கவேண்டும்; தேசத்திற்குக்கெடுதலைச்செய்கிறவர்கள் வேண்டாதவர்கள் அனைவரையும் விலக்கிவிடவேண்டும்; தன்னைச்சேர்ந்தவேலைக்காரர்களைப்பற்றி ஒவ்வொருநாளும் தானேகவனிக்கவேண்டும்; முகமலர்ச்சியோடும் அன்போடும் கொடைகொடுத்து நன்றுகக் காரியங்களைச் செய்யவேண்டும். தர்மமில்லாததும் கொடியதும் கடுமையுமானசொல்லைச்சொல்லலாகாது; தகுதியுள்ளவர்களிடத்தில் நம்பிக்கைவைக்காமல் ஒருசொல்லையும் சொல்லலாகாது; ஒவ்வொருமனிதனிடத்திலுமுள்ளகுணங்களையும் குற்றங்களையும் நன்றுகஅறியவேண்டும்; மனஉறுதியினால் தன்குறிப்புக்களைமறைத்துவைக்கவேண்டும்; அற்பர்களோடுஸ்நேகம் செய்யலாகாது. அயலார்களுடையகுறிப்புக்களையறிந்து உலகத்திற் பழகவேண்டும். தம்மவராலும் பகைவராலும் ஒருவருக்கொருவராலும் மனிதர்களல்லாதபாம்புமுதலியபிராணிகளாலும் பயமில்லாமலிருக்கும்படி ஜனங்களை அரசன் காப்பாற்றவேண்டும். பொருளாசைப்படுகிறவரும் கொடியவரும் கொள்ளையடிப்பவருமானமனிதர்கள் எங்கிருந்தாலும் அவர்களை அரசன் பிடித்துத்தண்டிக்கவேண்டும்; ராஜகுமாரர்களுக்குப் பிறந்ததுமுதல் கல்லொழுக்கங்களைக் கற்பிக்கவேண்டும். அவர்களுள் ஆத்மகுணங்கள்நிரம்பினவனை இளவரசாகச்செய்யவேண்டும். ஜனங்களுக்குப்பயமும் ராஜ்யத்தின்வழுவும் இல்லாமலிருக்கும்படி எப்போதும் ஆலோசித்து அந்தக்காரியத்தைச் செய்யவேண்டும். சிறந்தவனே! ஒருநிமிஷமும் ராஜ்யத்தில் அரசனில்லாமலிருக்கலாகாதே; ஆதலால், தனக்குப்பின் தொடர்ச்சிக்காக இளவரசு எப்போதும் விதிக்கப்படுகிறது. உயர்குலத்தோர் கற்றவர்கள் வேதமோதினவர்கள் தவமுள்ளவர்கள் மற்றத் தொழிலாளிகள் இவர்களுக்கு மேன்மையைச் செய்யவேண்டும். தனக்காகவும் ராஜ்யத்தைநடத்துவதற்காகவும் பொக்கசத்திற்காகவும் துர்க்கங்களிலிருந்தும் தேசத்திலிருந்தும் ஸமுத்திரத்திலிருந்தும் வர்த்தகர்களிடத்திலிருந்தும் நாதனில்லாத சொத்திலிருந்தும் திரவியத்தைச் சேர்க்கவேண்டும். மாற்றரசர்களின்தனங்களிலுலும் தனது தனங்களிலுலும் உத்தியோகஸ்தர்களையும் வாகனங்களையும் படைச்

சேவகர்களையும் போஷிக்கவேண்டும். எப்போதும் ஆதரவுடனிருந்து நியமத்துடன் எல்லாவற்றையும் கவனிக்கவேண்டும். நீதிசாஸ்திரத்தையறிந்து தேசகாலங்களுக்குத்தக்கபடி தர்மத்திற்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் தனக்கும் ஆபத்காலத்திற்குமாக நான்குவகைகளாகப் பொக்கசத்தைப் பகுக்கவேண்டும். தன்தேசத்தில் திக்கற்றவர்களையும் நோயாளிகளையும் கிழவர்களையும் அரசன் போஷிக்கவேண்டும். ஸந்தியையும் விக்கிரகத்தையும் அவற்றைச்சேர்ந்த [1]மற்றவற்றையும் நன்முகஆராய்ந்துநிச்சயித்தபின் நடத்தவேண்டும். எப்போதும் எல்லாருக்கும் அன்புள்ளவனுயிருந்து தேசத்தை நடத்தவேண்டும். கல்லகாரியங்களையும் தான்ஒருவனுகநிச்சயித்துச் செய்யலாகாது. தம்மவராலும் பிறராலும்கேடிடும் துன்பங்களை நன்முகஆராய்ந்து பிறரோடுகியாயமாயிருப்பதைப் பகையினுலும் லோபத்தினுலும் விடலாகாது. காப்பாற்றப்படுவதே ஜனங்களின்தர்மம். காப்பாற்றுவதே அரசன்தர்மம். ஆதலால், கெட்ட அரசர்களால்பீடிக்கப்பட்ட எல்லாத்தேசத்துப்பிரஜைகளையும் காப்பாற்றவேண்டும். யுத்தயாத்திரைக்குப்போகும்போது பின்தேசத்தைக் கவனிக்காமலிருந்தால் அதன்கலக்கம் பெரிதாகவிளையும். அதனல், ஆபத்துக்கள்உண்டாகுமென்பதைச் சாஸ்திரத்தினுல் ஆராய்ந்து பார்க்கவேண்டும். உபாயத்தினுலாவது பொருள்செலவழிப்பதனுலாவது சேனைக்கு ஆபத்துவராமல் காப்பாற்றவேண்டும். உயிர்களைக்காப்பாற்றுவதற்காகச் சண்டையைப் பெரும்பாலும் விட்டுவிடவேண்டும். தகுந்த காரணம்பற்றியே யுத்தம்செய்யவேண்டும். தன்நன்மைக்காகவும் பிறரைக்கெடுப்பதற்காகவும் யுத்தம்செய்யலாகாது. அப்படிப்பட்டவன் தர்மயுத்தத்தில்உயிரைவிடுவதும் தர்மமென்று நினைக்கப்படுகிறது. அதிகபலமுள்ளவனல்லாதிர்க்கப்பட்டஅரசன் பிரஜைகளின்நன்மைக்காகவே மந்திரிமுதலியவர்களை ஒற்றுமைப்படுத்திக்கொண்டு ஆபத்திற்குப் பரிஹாரத்தைச் செய்யவேண்டும். வேறுராஜ்யத்தைச்சேர்ந்தவர்களும் தாமேஜீவனத்தைத்தேடுகிறவர்களும் ஆபத்தினுல் மற்றவரை அடைக்கலம்பற்றினவர்களுமான அரசர்களிடத்தில் தன்ஜனங்களைச் சேர்க்கலாகாது. தேவியே! நல்லொழுக்கம்தீயொழுக்கமிரண்டும் இருதிறத்தாருக்கும்ஸாதகமாயிருக்கையில் நல்லொழுக்கத்தைத் தானே எடுத்துக்கொண்டு தீயொழுக்கத்தைப் பிறரிடம் சேர்ப்பிக்கவேண்டும். தேவியே! இவ்வாறு பாவம்பற்றுமலிருக்கும்வகையைக் குறிப்பாகச்சொன்னேன். இந்தராஜதர்மம் உனக்குத் தொகுத்துச்

1 யாஜ்ஞஸேனத்வைதீபாவஸமாப்தரயம்.

சொல்லப்பட்டது. இவ்வாறு நடந்து ஜனங்களைத்தண்டித்தும் பயமுறுத்தியும்வருமரசன் தாமரையிலையில் தண்ணீர்ஒட்டாமலிருப்பதுபோலப் பாவமண்டாமலிருப்பான். இவ்வாறுநடக்குமரசன் இறந்தபிறகு ஸ்வர்க்கலோகத்தில் தேவர்களுடன் மகிழ்ந்திருப்பான். அரசனுடையஒழுக்கம் நீதியுள்ளதென்றும் செல்வத்தைப்பற்றியதென்றும் இருவகை. அழகானகண்களையுடையவளே! நீதியுள்ளஒழுக்கத்தை உனக்கு இவ்வாறுசொன்னேன். நீதியையனுஸரித்தராஜ்ய[1]மென்பது புத்தியையும் சாஸ்திரத்தையும் அனுஸரித்திருக்கும். அதனால், தர்மத்தையும் ஸன்மார்க்கத்தையும்சேர்ந்ததும் புகழையும் ஸ்வர்க்கத்தையும்தருவதுமாகும். செல்வத்தையனுஸரித்த ராஜ்யமென்பது தாறுமாறுகக்காணப்படுகிறது. அதற்குச் சாஸ்திரமில்லை. அது ஸாதுக்களுக்குக் கோபத்தையுண்டுபண்ணும்; பாவத்தையும் அபகீர்த்தியையும் கெட்டமுடிவையும்தருமென்பது நிச்சயம். அரசர்கள் தம்மிஷ்டப்படி எல்லாவற்றையும்செய்வர். அதில் வேலைக்காரர்கள் அதிர்ஷ்டவசத்தினால்கிடைப்பதேயன்றி மேன்மையினால் கிடைப்பதில்லை. எந்தராஜ்யத்தில்குற்றவாளிகள் தண்டிக்கப்படாமலும் தாழ்ந்தவர்கள் கௌரவிக்கப்பட்டும் யோக்கியர்கள் கெடுக்கப்பட்டுமிருக்கின்றனரோ அது செல்வத்தையனுஸரித்தராஜ்யமாகும். நன்மை தீமைகளை மாறுகப்பார்ப்பவனும் அஸுரன்போலத் தன்ஸுகத்தைப் பார்ப்பவனுமான அரசனிருக்கும் ராஜ்யம் பாக்கியத்தையனுஸரிப்பதாகும். அழகானகண்களையுடையதேவியே! பாக்கியத்தையனுஸரித்தராஜ்யத்தில் அரசர்கள் தாறுமாறுகநடந்து இவ்வுலகத்தில் அபகீர்த்தியையும் அனர்த்தத்தையும் அடைந்து பரலோகத்திலும் மிகக் கொடியதும் தாண்டக்கூடாததுமான இருளையடைந்து பிரளயகாலம் வரையில் நரகத்திலிருப்பரென்பது நிச்சயம். தேவியே! பாவிகளுக்கும் காலங்கடந்துபோவதனால் பாவத்தினின்று விடுதலஉண்டு. பாவம்செய்யுமரசர்களுக்குமட்டும் விடுதல இல்லையேயில்லை. சிறந்த பாக்கியமுள்ளவளே! அரசர்களின்நல்லொழுக்கம் கெட்டஒழுக்கம் எல்லாவற்றையும்சேர்த்து உனக்குச் சொன்னேன். இன்னும் என்ன கேட்கவிரும்புகிறாய்?' என்றார்.

1 'நாம' என்று பாடம்கொள்ளப்பட்டது.

இருநூற்றுப்பதின்மூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வர ஸம்வாதம் தொடர்ச்சி; கொல்லாமையின் சிறப்பு.)

உமை, 'தேவர்க்குந்தேவரே! மஹாதேவரே! எல்லாத்தேவராலும் நமஸ்கரிக்கப்பட்டவரே! தர்மங்களின்ஸூக்ஷ்மங்கள் எவையென்பதை நான் கேட்கவிரும்புகிறேன்' என்றுசொன்னாள். மகேசுவரர், 'தேவியே! மனிதர்களுக்குஸுகத்தைத்தருவதாகிய தர்மஸூக்ஷ்மத்தைக் கேள். புண்ணியத்தைவிரும்புகிறவர்கள், பெண்ணியற்கையில்லாதவர்களிடத்திலும் மலடிகளிடத்திலும் தாழ்ந்த ஜாதிஸ்திரீகளிடத்திலும் நிலத்திலும் ரேதஸை விடலாகாது. அன்புள்ளவளே! மேற்சொன்னவற்றில் போடப்பட்ட வித்தானது முளைப்பதில்லையன்றே? தர்மத்தைவேண்டுகிறவன் கண்டவிடங்களில் விதையைப்போடலாகாது. வித்துஅழிவதனால் மனிதனைப் பிரம்மஹத்தி பற்றுகிறது. கொல்லாமைதான் முதன்மையான தர்மம். கொல்லாமையே முதன்மையான ஸுகம். தர்மசாஸ்திரங்கள் எல்லாவற்றிலுமுள்ளவிஷயம்கொல்லாமையே. பெண்ணரசியே! தேவதைகளையும் அதிதிகளையும்பூஜிப்பதும் எப்போதும் தர்மத்தைவிடாமலிருப்பதும் வேதமோதலும் யாகமும் தவமும் தானமும் இந்திரியங்களையடக்குவதும் ஆசாரியருக்கும்தாய்தந்தையருக்கும் பணிவிடைசெய்வதும் புண்ணியதீர்த்தங்களுக்குப்போவதும் கொல்லாமையினது பதினறில்லொருபாகத்திற்கும் ஈடாகாதவை. மிக்கஉயர்ந்த தான இந்தச்சிறந்தரகஸ்யத்தை உனக்குச்சொன்னேன்' என்று சொன்னர். உமை, 'தேவஸ்ரேஷ்டரே! ஹிம்ஸையில் பாவமிருக்குமாயின் பிராம்மணர்கள் பெரியயாகங்களிலும் சிறியஇஷ்டிகளிலும் பசுக்களை ஏன்கொல்லுகின்றனர்? பகவானே! சத்துருக்களைக் கொல்லுகிறவரே! அதிகமாக இம்ஸைசெய்யும்அரசர்கள் யாருக்கும் கிடைக்காதஸ்வர்க்கத்திற்கு [1]உடனேபோவதெப்படி? எவனுடைய வீட்டில் பிராம்மணர்களுக்குமாம்ஸம்போடுவதற்காகத் தினந்தோறும் இருபத்தோராயிரம்பசுக்கள் கொல்லப்பட்டனவோ அந்த ரந்திதேவனென்னுமரசன் மாம்ஸத்தோடிஅன்னம்போட்டதனால்ஸ்வர்க்கமடைந்தானே. அதெப்படி? எனக்குக் கேட்கமிக்கவிருப்பமிருக்கிறது. அரசர்கள் வேட்டைக்காக வெளியில்போய் மிருகங்களைக்

கொல்லுகின்றனரே. ,அவர்கள் தர்மத்தைக்கேட்கவில்லையா? அல்லது, கேட்டதை நம்பவில்லையா! எல்லாந்தெரிந்தவரே! விருஷபத்வஜரே! இவற்றையெல்லாம் தெளிவாகவும் விரிவாகவும்கேட்கவிரும்புகிறேன். அதனை இப்போது நீர் எனக்குச் சொல்லும்' என்று கேட்டாள். மகேசுவரர், 'தேவியே! நீகேட்டது சிலாகிக்கத்தக்கது. கொல்லாதவன் இவ்வுலகத்தில் ஒருவனுமில்லை. அந்தக் கொலைக்கு அநேகவிதகாரணங்களுண்டு. அவற்றைக் கேள். இவ்வுலகத்தில் கொல்லாதவன் ஒருவனும்காணப்படவில்லை. தேவியே! நடப்பவன் பூமியிலுள்ளவையும் மிகச்சிறியவையும் நடுத்தரமானவையுமாயுள்ள அநேகஉயிர்களைக் காலதளிலும் மிதிக்கிறான்; உட்காரும்போதும் படுக்கும்போதும் படுக்கையிலும் ஆஸனத்திலுமுள்ள அநேகஜீவன்களைத் தெரிந்தும் தெரியாமலும் கொல்லுகிறான். மனிதர்களின்தலைகளிலும் வஸ்திரங்களிலும் மேல்வஸ்திரங்களிலுண்டாகும் ஜீவன்களையும் ஈக்களையும் கொசுக்களையும் அவர்கள் எப்போதும் கொல்லுகின்றனர். ஜீவன்கள் எப்போதும் ஜலத்திலும் ஆகாயத்திலும் இருக்கின்றன. பூமியில் பிராணிகள் நிறைந்திருக்கின்றன. இப்படி பிராணிகள்நிரம்பினஉலகத்தில் கொல்லாதவனாயிருப்பவன் யாவன்? பெண்ணரசியே! மேல்வஸ்திரத்திலும் ஜலத்திலும் நிலத்திலுமுண்டானபெரியவையும் நடுத்தரமானவையும் மிகச்சிறியவையும் காணக்கூடியவையும் காணக்கூடாதவையுமாயிருக்கும்பலவகைப்பிராணிகளினால்இவ்வாகாசம் பூமியனைத்தும்நிரப்பப்பட்டிருக்கின்றன. அந்தப்பிராணிகளையும் ஒன்றை மற்றொன்று கொல்லுகிறது. பலம்மிருந்தமச்சங்களும் பக்ஷிகளும் பலம்குறைந்தவையான தம்மினங்களைப் புசிக்கின்றன. புருமுதலியபறவைகள் ஊர்வனவற்றைஉண்டு ஜீவிக்கின்றன.பூமியிலும் ஆகாயத்திலுமுள்ள இன்னுமனேகம் புலால்தின்னும்பிராணிகள் மாம்ஸத்தைவிரும்பிப் பிறமாம் சங்களினால் வளர்கின்றன. அவையும் வேறுபிராணிகளால் பக்ஷிக்கப்படுகின்றன. நூற்றுக்கணக்கும் ஆயிரக்கணக்குமானபிராணிகள் பிராணிகளாலேயே ஜீவிக்கின்றன. அழகுள்ளவளே! பிராணிகள் மற்றொன்றைப்பீடியாமல் பிழைப்பதில்லை. புலால்தின்னுகின்றவையும் அதனாலேயேஜீவிப்பவையுமான அநேகம்பிராணிகள் பெரிய உடலுள்ள. கழுதைஎருமைமுதலான பிராணிகளின்மாம்ஸத்தினாலும் பாலினாலும் ரத்தத்தினாலும் வயிறுநிரப்புகின்றன. ஒருமனிதன் அன்னமுதலியவற்றைப்புசிப்பதனால் தானியங்களென்று பெயருள்ள அநேகமாயிரம்உயிர்களை எப்போதும் உண்ணுகிறான். அவன்

மாமிசம் தானியம் கிழங்குகள்உண்பதையும். விட்டுவிடவேண்டும். மூன்றுதினங்களும் ஐந்துதினங்களும் ஏழுதினங்களும் தானியங்க ளேப்பக்ஷியாமல் உபவாஸமிருப்பவன் கொல்லாதவன்என்றுசொல் லப்படுகிறான். எவ்வளவுக்கெவ்வளவு பிராணிகளேப் புசியாமலிருக்கி றானே அவ்வளவுக்கவ்வளவு புண்ணியத்தைஅடைகிறான். அழகிய இடையுள்ளவளே! ஆகாரத்தைவிடுவதனால் தேகம் வாடுகிறது.வாடு வதனால்தேகமும்இந்திரியங்களும், அரசர்களுக்குச் சேவகர்கள்போல வசப்பட்டிருக்கின்றன. பொறிகளேக்கட்டுகிறவன்தான் ஸுகமுள்ள வன். அவனே தெரிந்தவன். மனிதன் பொறிகளேயடக்குவதனாலும் கொடுப்பதனாலும் மனஒழிவினாலும் மனத்தில்கருதினவற்றையெல் லாம் அடைகிறான். இவ்வாறு உபவாஸந்தான் கொல்லாமைக்குக்கார ணமென்று சொல்லப்படுகிறது. தேவியே ! புசிப்பவன் பூமியில்நடப் பவன்இவர்களனேவரும்ஹிம்ஸைசெய்கிறவர்களென்பது தர்மசாஸ்தி ரங்களில் காணப்படுகிறது. தேவியே! தர்மத்தைச்செய்பவளே!ஹிம் ஸைசெய்யாதமனிதனேஉண்மையாகஅறியும்வகையை உனக்குச் சொ ல்லுகிறேன்; கேள். கனிகளேயும் கிழங்குகளேயும் இலைகளேயும் சாம் பலேயும் பக்ஷித்துக்கொண்டு சித்திரம்போல அசைவற்றிருப்பவன் தான் ஹிம்ஸைசெய்யாதவனென்று நான் நினேக்கிறேன். அவைகளும் புகையினால் தீ மூடப்படுவதுபோல ஹிம்ஸையினால் மூடப்பட்டிருக் கின்றன. ஆதலால், எவன் ஆஹாரமில்லாதவனே அவனே கொல் லாதவனென்று நான் நினேக்கிறேன். எல்லாவற்றையும்விட்டுப் பரி சுத்தனுகவும் நியமமுள்ளவனுகவும் தீக்ஷைசெய்துகொண்டு தன்னேச் சுற்றிக் கோடுகிழித்து ஸங்கல்பம்செய்துகொண்டு உயிருள்ளவரையி லும் உண்ணுமல் எடுத்தவிரதந்தவருமல் காலத்தையெதிர்பார்த்துத் தியானமும் தவமும் செய்துகொண்டிருக்கிறவனே ஹிம்ஸியாதவ னென்று நான் நினேக்கிறேன். வேறுவிதத்தில் கொல்லாதமனி தன்இருப்பதை நான் பார்க்கவில்லே. தேவியே! இதைப்பற்றிச் சிந் திக்கவேண்டியவை மிகுதியாயிருக்கின்றன. கொல்லாதவன் எவனு மில்லே. சிறந்தமகிமையுள்ளவளே ! எவ்வெவற்றில்கொலேபெரியதா யிருக்குமோ அவ்வவற்றையும் மதுமாம்ஸங்களேயும் ஒழிப்பதனால் கொல்லுதல் மிகக்குறைவாகும். ஒழிவே பெரியதர்மம். ஒழிவே பேரின்பம். மனத்தில்ஒழிவுள்ளவர்களுக்குப் புண்ணியம் பெரிய குவியலாகும். தர்மங்களும் அதர்மங்களும் மனத்தைமுன்னிட்டே வருகின்றவை. ஸந்தேகமில்லே. மனிதன் ஸம்ஸாரத்திற்கட்டுப்படு வதும் மூக்திபெறுவதும் மனத்தினுலேதான். மனத்தைக்கட்டினால்

ஸ்வர்க்கமும் விட்டால் நரகமும் நிச்சயம். கொலையாளி ஆயுதத்தை எடுத்தபின், 'அநேகம்பிராணிகளில் ஆயுள்முடிந்துஇறந்ததைத் தான் நான்கொல்லுகிறேன்' என்று மனத்தில்நினைத்துக்கொல்வாளையின் அந்தக்கொலையாளியைப் பாவம் பற்றுவதில்லை. தேவியே! அந்தப்பிராணிகள் முன்னமே விதியினால் கொல்லப்பட்டவை. அந்தக் கொலையாளி காரணமாகிறான். விதிதான் வலியது. முன்வினையை விடவொண்ணாத பிராணிகள் முன்செய்த தம்வினையினால்மூடப்பட்டு விலங்குஜாதிகளாகவும் ஊர்வனவாகவும் பற்பலபிறப்புக்களில் பிறக்கின்றன. பிராணிகள் பலவகைகளாக வேறுபட்டஉடல்களோடு பலவகைகளான சக்தியும் ஸாமர்த்தியமுமுள்ளவையாகவும் பலஉணவுகளுள்ளவையாகவும் பூமியில் பலவிடங்களில் பிறக்கின்றன. பிறக்கும் பிராணிக்கு முன்கர்மங்களுக்கேற்றபடி இறப்பும் ஸுகதுக்கங்களும் முதலிலேயே பிறக்கின்றன. மனிதர்கள் எந்தக்காலத்தில் எந்தவிடத்தில்எந்தக்காரணத்தினால்மரணமடைகிறார்களோ அவற்றைத்தாண்டமுடியாது. அது மூந்தியகருமத்தின் கட்டளை. விதியானது ஜாக்ரதையில்லாதபிராணிகளை ஜாக்ரதையோடு கவனிக்கிறது. அதற்குயாரும் நண்பனுமில்லை; பகைவனுமில்லை: அலக்ஷியமாகவிடத்தக்கவனுமில்லை. யமன் எல்லாப்பிராணிகளிடத்திலும் பக்ஷபாதமின்றிக் காலத்தை எதிர்பார்க்கிறான்; ஆயுளானவுடன், எல்லாப்பிராணிகளின் உயிரையும் இழுத்துவிடுகிறான். எவன் எப்படியிறக்கவேண்டுமென்றுவிதியிருக்கிறதோ அதற்குமாறாகஅவன்இறப்பதில்லை. அறிவினாலாவது பராக்கிரமத்தினாலாவது மந்திரத்தினாலாவது ஔஷதத்தினாலாவது விதியின்நிச்சயமானவழியை ஏமாற்றக்கூடியவன் இவ்வுலகத்திலிருந்தவன் இருக்கப்போகிறவன் இருவகையாரிலும்இல்லை. தேவியே! பிராணிகளுக்கு ஹிம்ஸைசெய்வதைப்பற்றியநியாயத்தை உனக்குச் சொன்னேன்.

இருநூற்றுப்பதினைந்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வர ஸம்வாதம் தொடர்ச்சி; விதியின்வன்மை போரிலிறந்தவரின் கதிமுதலியன.)

ஓ! தேவியே! மரணகாலம் வந்தபோது எந்தப்பிராணிகளும் விதியைக் கடக்கமுடியாதென்பதற்குக் காரணத்தைக் கேள். அழகிய முகமுள்ளவளே! பெரியவையும் சிறியவையும் நடித்தரமான

வையுமாகிய பலபுழுக்களும் விட்டிற்பூச்சிகளும் ஆயுளழியும்போது தாங்களேஓடிவந்து எரிகின்றவிளக்குக்களில் விழுகின்றன. வனங்களிலிருக்கும் மான்கூட்டங்கள் அநேகங்களுள் எதற்குக்காலம் வந்ததோ அதுதான் வலையிலகப்படுகிறது. தேவியே! கொல்லுமிடத்திற்குக்கொண்டுபோவதற்காகப் பிடிக்கப்பட்டவற்றுள் ஆயுள் குறைந்தது எதுவோ அதுதான் கொல்லப்படுகிறது. அது அந்தத் தினம் தவறுமல் கொலையாளியின்கையில் அகப்படுகிறது. விரிவான ஆகாயத்தில் விரைவாகச் செல்லும் பக்ஷிக்கூட்டங்கள் ஓடத்திறமையுள்ளவையாயிருந்தும் ஆயுளில்லாமையினால் பிடிக்கப்படுகின்றன. ஜலத்தில் ஸஞ்சரிக்கும்மீன்களும் மற்றும் பலவகைஜந்துக்களும் விதிக்ககப்பட்டுத் தாங்களே வலையிலேறுகின்றன. சிறந்தவளே! ஊர்வனவாகியபிராணிகள் ஆயுள்ஒழிவதனாலேதான் மதிகெட்டு ஈட்டிமுனையில் தாங்களேஏறி இறக்கின்றன. உழுகிறஉழவருக்குக் கொல்லுவதில் எண்ணமில்லை; ஆகிலும் அவர்களின்கலப்பைமுனை முதலியவற்றினால் எண்ணிறந்தபிராணிகள் கொல்லப்படுகின்றன. மனிதன் தன்துணிக்காலினால் என்னஹிம்ஸையைச் செய்கிறானோ அந்தஹிம்ஸையைத் துஷ்டயானையும் அநேகஜன்மங்களிலும் செய்யமாட்டாது. எவைஇறக்கவேண்டுமோ அவைதாம் இறக்கின்றன. உழவர் அவற்றைக் கொல்வதில்லை. அவர்களுக்கு, 'உழுவோம்' என்றஎண்ணமேயன்றிக் கொல்லஎண்ணமில்லை. ஆதலால், அனேகமாயிரம்பிராணிகளைக்கொன்றாலும் அந்தப்பாவம் அவர்களைப்பற்றாது. பிராணியானது முதலில்விதியினால்கொல்லப்பட்டு அதன்பிறகுதான் மரணமடைகிறது. ஆதலால், விதியைக்கடப்பதற்கு எந்தப்பிராணிகளாலும் ஆகாது; ஆயுள்முடிந்தபின் ஒருநிமிஷமும் பிழைத்திருப்பதும்முடியாது. பிழைத்திருக்கவேண்டியகாலத்தில் இறப்பது நடந்ததுமில்லை; நடக்கப்போவதுமில்லை. வினைப்பயன் நன்றோ தீதோ அதைக்கடப்பது ஸாத்தியமன்று. இறக்கத்தக்கவைதாம் இறக்கும். விடுபடத்தக்கவைதாம் விடுபடும். அழகுள்ளவளே! விதியிலகப்பட்டபசுக்கள் ரந்திதேவனுடைய யாகத்திற்குத் தாங்களேவந்து கொல்லப்பட்டன. கொல்லப்பட்ட பசுக்களின் ரத்தத்தினாலுண்டான சர்மண்வதிஎன்னும்பெயர்பெற்றநதி குளம்புகொம்புஎலும்புகளினால் இறங்கக்கூடாமலிருந்தது. சிறந்தவளே! ரத்தமானது அந்தநதியில்விழுந்தபிறகு தெளிவும் நல்லமணமும் நல்லநிறமும் நல்லசுவையுமுள்ளதும் நற்கருமங்களுக்குரியதுமாகிய புண்ணிய தீர்த்தமாகிவிட்டது. அழகுள்ளவளே! அந்தமன்னனுடைய ஸத்ர

யாகத்தில் பிராம்மணர்களும் தேவர்களும் திக்பாலகர்களும் மும்மூர்த்திகளும் கேரில்வந்து அந்தாநதியில்ஸ்நானம்செய்து ஜபமுதலிய நித்யகர்மங்களை அனுஷ்டித்தனர். முன்னோர்களால் கண்டறியப்பட்டவிதிப்படி மந்திரத்துடன் பருத்துக்கொடுக்கப்பட்ட அந்த மாம்ஸத்தை அவர்கள் சாஸ்திரமுறைப்படி பெற்றுக்கொண்டனர். நூற்றுக்கணக்கும் ஆயிரக்கணக்குமாகப் பிராம்மணர்கள் தினந்தோறும் மாம்ஸத்துடன்கூடின அன்னத்தைப் புசித்துக்கொண்டிருக்கையிலேயே சூரியாஸ்தமயமாயிற்று. அந்தஅரசனது சிறந்த யாகத்தில் விதிப்படி கிரமமாகமந்திரங்களைச்சொல்லிக் கொல்லப்பட்டபசுக்களும் அந்த ரந்திதேவராஜனும் ஸ்வர்க்கம்சென்றனர். இடைவிடாமல்யாகம்செய்ததனாலேயே அவ்வரசன்நல்லபயனையடைந்தான். போகங்களையும் ஆடையாபரணாலங்காரங்களையும் கொடுத்தும் தம்முடன்போஜனம்செய்வித்தும் பலஉபசரணைகளைச் செய்துமிருக்கும் அரசர்களுக்கு யுத்தத்திலுதவிசெய்யும் தருணம்நேர்ந்தபோது துணையாக அழைக்கப்பட்டமனிதன் ஆயுதமெடுக்கவேண்டும். இரண்டு ஸேனைகளும் வ்யூகங்களாகவகுக்கப்பட்டு யானைகள் குதிரைகள் ரதங்கள் காலாட்படைகள் நிரம்பியும், சாமரங்களும் குடைகளும் கொடிகளும் தோற்கேடகங்களும் பலநிறங்களாகப் பிரகாசித்துக்கொண்டுமிருக்க, சக்திகள் தோமரங்கள் ஈட்டிகள் கத்திகள் சூலங்கள் உலக்கைகள் சம்மட்டிகள் வில்லுகள் முசுண்டிகள் பிண்டிபாலங்கள் கதைகள் சக்கரங்கள் ப்ராஸிங்கள் கர்ப்படங்கள் முதலான பலஆயுதங்களைக் கையிலெடுத்துக்கொண்டு விருஷபங்களோடுவிருஷபங்கள்எதிர்ப்பதுபோல இருபுறத்துப்போர்வீரர்களும் கர்ஜித்து யுத்தம்செய்யும்போது, சங்குபேரிகைமுதலான பலவாத்தியங்களின்முழக்கங்களாலும் குதிரைகளின்கனைப்பினாலும் யானைகளின்கர்ஜனையினாலும் மனிதர்களின் வீரவாதங்களாலும் தேர்ச்சதங்கைகளின் ஒலிகளாலும் மழைக்காலங்களில் ஆகாயத்தில் மேகங்கள்முழங்குவதுபோல நாலு திசைகளும் மூலைகளும் வேறுசத்தங்கேட்கப்படாமல் நிரப்பப்படுகின்றன. தேர்ச்சக்கரங்களின்வட்டைகளாலும் குதிரைக்குளம்புகளினாலும் எழுப்பப்பட்டசெந்தூள்கள் கபிலைப்பசுக்கள்போல ஆகாயமெங்கும்மூட இருஸேனைகளிலுமுள்ளவீரர்களும் ஆயுதங்கள்போடத்தலைப்பட்டபொழுது, அந்த அடிகளினாலுண்டானரத்தம் அவர்களுக்குச் செஞ்சந்தனம்போலிருக்கும். போர்த்தலையில் அங்கங்களிலிருந்து ரத்தம்பெருகும்போது அவர்கள் பலாசமலர்களும் அசோகமலர்களும் குவியல்களாகக் குவிந்துகிடப்பதுபோலிருப்பர். சூரர்

கள் யுத்தத்தில் உற்சாகத்தோடு கைகளால் ஆயுதங்களேஓங்கி ஒரு வரையொருவர் அழைத்துக்கொண்டு எதிர்த்துச்செல்வர். கடும் போரில் சூரர்கள் கொன்றும் கொல்லப்பட்டுமிருக்கையில், அரசனு டையஇஷ்டத்திற்குவிரோதமாகத திரிக்குப்புறங்காட்டி அடிபடாமல் திரும்பிச்செல்லும்இழிவானமனிதர்கள் தம்மரசனுடையபாவமெல் லாவற்றையும்அடைவர். அவர்களுக்குள்ளபுண்ணியம் எதுவோ அது அவ்வரசனேச்சேரும். கொல்லாமை முதன்மையானதர்மமென்றறி ந்து யுத்தங்களில் தம்மால்கூடியவரையில் போர்செய்யாதபடைச் சேவகர்கள், அரசனுடையஅன்னத்தைக்கவர்ந்தவராதலின் கொடிய நரகத்தைஅடைவார். படைச்சேவகனுடையகடமையையறிந்து உயி ராசையைவிட்டு ஆயுதத்தைஓங்கிக்கொண்டு விட்டிற்பூச்சிபோலப் பயமற்றவனாகித் தீக்குழப்பானபோரில்புகுகிறவன் இறந்தபின் ஸ்வர் க்கமடைவான். தேவியே! தயையுள்ளமனிதனும் பூதாவேசங்கொண் டவன்போலப் பிறரையடித்து மகிழ்வான். அவன் உத்ஸாகத்தைத் தலைமையாகக்கொண்டவனன்றே ? அவன் பிறருடையஅடிகளினால் துன்பப்படுத்தப்பட்டும் சோர்வையடையான். மிகக்கொடிதான போர்க்களத்தில் மான்கூட்டங்களேச் சிங்கம் துன்புறுத்துவதுபோ லப் பகைவர்படைகளேத் துன்புறுத்தி நடுப்பகலில் சூரியன்போலக் காணமுடியாதவனாகத் தயையைவிட்டு ஆயுதமெடுத்துயுத்தம்செய்து தன்னரசனேப் போரில்காப்பாற்றுகிறவன் பரிசுத்தாத்மாவாகி யுத்த மென்னும்மகாயாகம்செய்பவனாகிறான். அவனுக்குத் தோற்கேடகம் மான்தோலென்றும் வில் [1]கையில்பிடிக்கும்தண்டமென்றும் ரதம் யாகவேதிகையென்றும் கொடி யூபஸ்தம்பமென்றும் குதிரைக்கடி வாளங்கள் தர்ப்பைகளென்றும் ஜயத்திலுத்ஸாஹம் கர்வம் கோபம் இம்மூன்றும் மூன்றக்நிகளென்றும் நினேக்கப்படுகின்றன. அவனுக் குச் சந்தோஷமே ஸ்ருவமென்னும்ஹோமபாத்திரம். ஸாரதி புரோ கிதன்; ஆயுதங்கள் ஸ்ருக்குவென்னும்பாத்திரமுதலிய யாகக்கருவிக ளேனத்துமாகின்றன ; அம்புகள் ஸமித்துக்களாகநினேக்கப்படுகின் றன. புகழ்பெற்றஅந்தவீரனது தேகத்திலுண்டாகும்வேர்வையே தேன். மனிதர்களின்தலைகளே [2]புரோடாசம். ரக்தமே நெய்யாகுதி. தூணிகளே ஹவிஸ்வைக்கும்பாத்திரம். தேகத்தின் நிணங்களே நெய்த்தாரைகள். மாம்ஸம்தின்னும்பிராணிகளே அந்தயாகத்திற்குப் பிராம்மணர்கள். அப்படிப்பட்டமனிதர்களும் யானைகளும் குதிரை

1 'தண்டகாஷ்டம்' என்று பாடங்கொள்ளப்பட்டது.

2 சாந்திபர்வம் 39 - ம் பக்கம் குறிப்பிற்காண்க.

களுமே அவற்றிற்குப் பக்ஷணங்களும் அன்னபானங்களும். யாகத்தில் பிராம்மணர்கள்புகிப்பதுபோலவே அவைவிரும்பினவற்றையெல்லாம் நிரம்பப்புஜிக்கின்றன. அடிபட்டவீரர்களின்அலங்காரங்களாகிய ஆடையாபரணங்களும் பொன்னும் தங்கமும் அந்தயாகத்திற்குத் தக்ஷிணைகள். தேவியே! அந்தயுத்தத்தில் எதிர்நோக்கிச்சென்று யானையின்மேலிருந்தபடிகொல்லப்பட்டமனிதன் பிரம்மலோகத்தை அடைவான். தேரின்நடுவிலாவது குதிரைமேலாவதுஇருந்து யுத்தத்தில்கொல்லப்படுகிறவன் இந்திரலோகத்தில் பூஜிக்கப்படுவான். கொல்லப்பட்டவர்கள் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்படுகின்றனர். கொன்றவன் இங்கேயே பூஜிக்கப்படுகிறான். கொல்லப்பட்டவன்கொன்றவனிருவரும் ஸுகப்படுகிறார்கள். ஆதலால், போர்க்களத்திற்குப் போனபின் அஞ்சாமல்போர்செய்யவேண்டும். பயத்தைவிட்டு ஆயுதமெடுத்து யுத்தத்தில்அடிப்பவன் எவனோ அவன் தர்மிஷ்டரிற்சிறந்தவன். அநேகமாயிரம்நதிகள் ஸமுத்திரத்தில்விழுவதுபோல ராஜதர்மத்தோடுகூட எல்லாத்தர்மங்களும் ஆசாரமும் ஒழுக்கமும் அவனிடத்தில் பிரவேசிக்கின்றன. தொன்றுதொட்டுவருவதுமான வேதங்களிற்சொல்லப்பட்டதர்மங்களையும், பாஷண்டமதங்களிற்சொல்லப்பட்டதர்மங்களையும், மாணிடருச்சரியலௌகிகதர்மங்களையும், தேசங்களுக்கும் ஜாதிகளுக்கும் குலங்களுக்கும் மலை கிராமம் நகரமுதலியவற்றிற்குமுரிய பற்பலதர்மங்களையும் காப்பாற்றவேண்டும். தர்மத்தைக்கெடுத்தால் அது கெடுக்கும்; காப்பாற்றினால் காப்பாற்றும். ஆதலால், அரசன் முக்கியமாகத் தர்மத்தைக் கெடுக்கலாகாது. எந்தத் தேசத்தில் அரசன் குடிகளைத் தர்மமாகக் காப்பாற்றுகிறானோ, பிராம்மணர்கள் ஆறுகருமங்களையும் செய்கின்றனரோ, பித்ருக்களும் தேவர்களும் பூஜிக்கப்படுகின்றனரோ அந்தத்தேசத்தில் மழையின்மையும் பிணிகளும் பீடைகளுமிருப்பதில்லை. அரசன் தன்தர்மத்தைவிடாமலிருந்தால் ஜனங்களெல்லோரும் தர்மத்தையேசெய்வர். தேவியே! ஆசாரத்தைவிடாதவனும் பகைவரின்சமயமறிபவனும் ஜாக்ரதையும்பராக்கிரமமுமுள்ளவனுமாகியஅரசனை எப்போதும் விரும்பவேண்டும். அழகியஇடையுள்ளவளே! பூமியில் சூத்திரர்கள்அநேகர் அரசர்களை மிகக்கெடுத்திருக்கின்றனர். ஆதலால், தெரிந்தஅரசன் அஜாக்ரதையாயிருக்கக்கூடாது. அவர்களிடத்திலும் விடப்பட்டசிநேகிதர்களிடத்திலும் மனிதர்களிடத்திலும் யானைகளிடத்திலும் ஸ்நானபானங்களிலும் ஒருபோதும் நம்பிக்கைவைக்கலாகாது. தேசத்தின்நன்மைக்காகவும் பசுக்களுக்காகவும் பிராம்மணர்களுக்காகவும்

சிறைபிடிப்பதற்காகவும் ஸ்நேகிதர்களுக்காகவும் விடக்கூடாதஉயிரை யும் விடுகிறவன்எவனே அவன் அரசனுக்கு அன்பனுவான்; தன் குலத்தையும் சிறப்பிப்பான். சிறந்தநிதம்பங்களையுடையதேவியே! நீனைத்தவற்றையெல்லாம் கறக்கும்காமதேனுவும் சராச்சரங்களைத்தாங் குவதுமாகிய கடல்சூழ்ந்தபுவனியை மலைகளும் காடுகளும்உள்பட மிருந்ததனத்தோடு பிராம்மணர்களுக்குக்கொடுப்பவனும்,யுத்தத்தில் உயிரைவிடுகிறவனுக்குச் சரியாகான். உயிர்விடுகிறவன் சிறந்தவன். செல்வமுள்ளவன் நியமத்துடன் ஆயிரம்யாகங்கள்செய்தாலும்அதில் என்னஆச்சரியம்? உயிரைவிடுவது செய்தற்குமிகஅரியது. ஆத லால், பிராணயாகமானது எல்லாயாகங்களிலும்சிறந்தது. இவ்வாறு யுத்தமென்னும்யாகத்தைப்பற்றி உனக்கு உள்ளபடி சொன்னேன்.

இருநூற்றுப்பதினேந்தாவது அத்யாயம்.

தா ன த ர் ம ப ர் வ ம் (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி; ராஜதர்மமுதலியன.)

தர்மம்செய்பவளே! வேட்டையைப்பற்றிச் சொல்வேன்; கேள். மிருகங்களைக்கொல்வதனால் அரசனைப் பாவம்பற்றுது. எல்லாமிரு கங்களும் இந்தப்பூமியில் மனிதர்களில்லாமலிருக்கக் கருதுகின்றன; பயிர்களைத் தின்றுவிடுகின்றன. அவற்றை அரசன் தண்டிக்கவேண் டும். துஷ்டர்களைச்சிக்ஷிப்பதும் சிஷ்டர்களைரக்ஷிப்பதும் காரியங் களை உண்மையோடுசெய்வதும் அரசனுடையதர்மங்கள். அவற்றை அவன் விடாமற்செய்யவேண்டும். அரசனால் அடிக்கப்பட்டமிரு கங்கள் தாமும் ஸ்வர்க்கம்போகின்றன. அரசனில்லாத ராஜ்யம் மேய்ப்பவனில்லாதபசுக்களைப்போலேதான். ஆதலால், தேவர் கந்தர் வர் நாகர் அரக்கர் இவர்களின்அம்சங்கள், அயோக்கியர்களைச் சிக்ஷித் தும் யோக்கியர்களைரக்ஷித்தும் தேசங்களிலுள்ளபிரஜைகளைப்பாது காப்பதற்குத்தான் அரசனுகவற்படித்தப்பட்டிருக்கின்றன. அவ்வர சர்கள் எப்படிநடந்து புகழ்பெற்றிருந்தால் தேசமும் தர்மமும் பொருளும் புகழும் பேரும் விருத்தியடையுமோ அந்தநடக்கையை வரிசையாகச்சொல்வேன்; கேள். தர்மிஷ்டர்களிற் [1]சிறந்தவளே! உத்தமர்களானமன்னர்கள் ஸபையையும் தண்ணீர்ப்பந்தலையும் தடா கத்தையும் தேவாலயத்தையும் பிராம்மணஅக்கிரஹாரங்களையும் முத

1 'வரே' என்று பாடங்கொள்ளப்பட்டது.

வில்உண்டாக்கவேண்டும். இது அவர்களின்தர்மம். பிராம்மணர்களை அவமதிக்கலாகாது. பிராம்மணர்கள் நீறுபூத்ததணல்கள்போலிருந்து கோபம்வந்தபோது குலத்தையே அழித்துவிடுவர். ஊதப்பட்டநெருப்பானது விறகுமுழுமையும் எரித்துவிடுவதுபோல பிராம்மணர்கள் கோபமென்னும்நெருப்பினால் இப்பூமியைஎரித்துவிடுவார்கள். பிராம்மணர்கள் கோபித்தால் அரசர் ராஜ்யத்தையனுபவிப்பதில்லை. வாதாபி நகுஷன்முதலானோர் அறியாமையினால் பிராம்மணர்களைஅவமதித்து அவர்களின் கோபத்தினால் எரிக்கப்பட்டுச் சுற்றத்தாருடனும் சினேகிதருடனும் அழிந்தனர். இந்திரனுடைய தேகமும் பெண்குறிகள்நிரம்பினதாகச் செய்யப்பட்டது. பிறகு, தேவக்கூட்டத்தாரெல்லாரும் இந்திரனுக்காகக் கௌதமமுனிவரை நமஸ்கரித்துத் துதித்துக் காலில்விழுந்து கோபத்தைத் தெளிவித்தனர். அழகியநிதம்பங்களையுடையவளே! அம்மகாத்மாவான கௌதமமகரிஷி அனுக்கிரகம்வைத்ததனால், ஆயிரம் பெண்குறிகளினால் அடையாளம்பண்ணப்பட்ட அவ்விந்திரன்தேகமானது ஒருநொடியில் ஆயிரம்நேத்திரங்கள்நிரம்பினதாகச் செய்யப்பட்டது. கௌதமர் ஆட்டின்விருஷணங்களையறுத்து மந்த்ரித்தவுடன் அவைஇந்திரனிடத்தில் ஒட்டிக்கொண்டு அவன் வ்ருஷணங்களாயின. இப்படி ப்ராம்மணர்கள்கோபித்தபோது தேவர்க்கதிபதியான இந்திரனும் அரசாளமுடியாமற்போனன். பூமியிலுள்ளமனிதரைப்பற்றிச்சொல்லவேண்டுமோ? கோபித்தபிராம்மணன் உலர்ந்த விறகைத் தீ எரிப்பதுபோலஎரித்துவிடுவான்;உலகமெல்லாவற்றையும்நீருக்கித்திரும்பவும் வேறுலகம்படைப்பான். அவன் தேவரல்லாதவரைத் தேவராகவும் தேவரைத்தேவரல்லாதவராகவும் செய்வான். பிராம்மணர்களுக்குக் கோபமே ஆயுதம். ஆதலால், அவர்களுக்குக் கோபத்தையுண்டாக்கலாகாது. பெருங்குற்றங்களிலும் பிராம்மணன்தண்டிக்கப்படத்தகாதவன். குற்றமற்றவளே! பிராம்மணர்கள்மேல் ஆயுதங்களைப் போடுவதும் அவர்களுயிரைப்போக்குவதும் மூவுலகங்களிலும் காணப்படுவதில்லை. அவர்களின்கோபங்களும் அதிகமாகவும் உக்கிரமாகவும் இருக்கும்; அனுக்கிரகங்களும் மிகச்சிறந்தவையாயிருக்கும். ஆதலால், கோபத்தையுண்டாக்கக்கூடாது. பிராம்மணரை எக்காலமும் பூஜிக்கவேண்டும். பிராம்மணர்கள்கோபித்தபிறகு ராஜ்யத்தையாளும் அரசன் இவ்வுலகத்தில் இப்போது காணப்படவுமில்லை; முன்னிருந்ததுமில்லை; இனி இருக்கப்போகிறதுமில்லை. பிராம்மணர்களைப் பரிஹஸிக்கவும் நிந்திக்கவும்கூடாது. (அரசன்) கோபகாலத்தில்

கோபிக்கவேண்டும்; அனுக்கிரஹகாலத்தில் அனுக்கிரஹிக்கவேண்டும். அரசர்கள் தம்வேலைக்காரர்களிடத்தில் பரிகாசம் செய்யலாகாது; அதனால் லேசாகிவிடுவர்; அவர்களின்கட்டளைகள் நடவா. வேலைக்காரரைப்பரிகாசம்செய்வதனால் அரசன்அவமதிக்கப்படுவான். அவர்கள் யாசிக்கத்தகாதவற்றையும் யாசிப்பார்; சொல்லத்தகாதவற்றையும் சொல்லுவர். வேண்டியவற்றைக் கேட்பதற்குமுன்னமேகொடுத்தாலும் அவர்கள் திருப்தியடையார். ஆதலால், அரசன் வேலைக்காரர்களிடத்தில் பரிகாசத்தை விட்டுவிடவேண்டும். தன்னைநம்பாதவனை நம்பலாகாது. நம்பினவனையும் அதிகமாகநம்பலாகாது. எந்த உபாயங்களினாலும் தன்குலத்தோரிடத்தில் நம்பிக்கைவைக்காமலிருப்பது முக்கியம். நம்புவதனாலுண்டானபயமானது மரத்தை இடி அழிப்பதுபோல அழிக்கும். அரசன் அஜாக்கிரதையினாலும் பொருளாசைமேற்கொண்டிருப்பதனாலும் கொல்லப்படுவான். ஆதலால், அஜாக்ரதையையும் ஆசையையும் விடவேண்டும். யாரையும்நம்பலாகாது. பயப்பட்டவர்களைப் பயமில்லாமல்காத்தும் ஏழைகளை அநுக்கிரஹித்தும் காரியாகாரியங்களின்வகைகளை அறிந்தும் தேசநன்மையில் எப்போதும் ஊக்கம்வைத்தும் சொன்னசொல்தவறுமலும் பிரஜைகளைக்காப்பதே காரியமாகவும் பேராசையில்லாமலும் நியாயத்தையேபேசி ராஜ்யத்தைஆண்டுகொண்டு ஆறிலொருபாகம் தீர்வை வாங்கவேண்டும். செய்யத்தக்கவைசெய்யத்தகாதவைகளின் வேறுபாடுகளையறிந்து எல்லாவற்றையும் சாஸ்திரத்தினால் பார்க்கவேண்டும். தன்தேசத்தில் தயைசெய்யவேண்டும். செய்யத்தகாதவற்றில் பிரவர்த்திக்கலாகாது. தன்னைப்புகழ்பவராயினும் தன்னைஇகழ்பவராயினும் வேண்டாதவராயினும் குற்றமில்லாதவரை நண்பரைப்போலப் பார்க்கவேண்டும். துஷ்டர்களையும் குற்றத்திற்குத்தக்கபடி தண்டனைசெய்து திருத்தவேண்டும். அரசன் தண்டிப்பதில் ஜாக்ரதையாயுள்ளதேசத்தில்தான் தர்மம் நடக்கும். அரசன் பொறுமையாயுள்ளதேசத்தில் தர்மம் நடவாது. துஷ்டர்களைச் சிக்ஷிப்பதும் சிஷ்டர்களைரக்ஷிப்பதும் தர்மங்கள். கொல்லத்தக்கவர்களைக் கொல்லவும் கொல்லத்தகாதவர்களைரக்ஷிக்கவும் வேண்டும். பிராம்மணர்களையும் பசுக்களையும் தூதர்களையும் தன்தந்தையையும் கல்விகற்பித்தவரையும் முன்னுதவிசெய்தவரையும் பெண்களையும் அதிதிகளைஎல்லாம்ஆதரிக்கும்மனிதனையும் கொல்லலாகாது. பிராம்மணர்களுக்குப் பூமி பசு பொன் சமைத்தசோறு எள் நெய்இவற்றை நித்தியமாகத்தானம்செய்வதனால் அரசன் பாவங்களினின்று விடுபடு

வான். எந்த அரசன் தேசநன்மையில்ஊக்கத்துடன் மேற்சொன்ன படி எப்போதும்நடக்கிறானே அவனுக்குத் தேசமும் பொருளும் புண்ணியமும் புகழும் பெயரும் சிறப்புற்றிருக்கும். அவ்வரசன் பாவத்தையும் நஷ்டத்தையுமடையான்.ஆறிலொருபாகம் தீர்வையை அனுபவிக்குமரசன், தன்படையினலும் பிறர்படையினலும் தர்மத்தி னலும் பராக்கிரமத்தினலும் பிரஜைகளைரக்ஷிக்காமலும் பகைவரின் தேசங்களைப் பீடிப்பதில்முயற்சியில்லாமலுமிருப்பானுயின், அந்தத் திறமையற்ற அரசனுடையதேசம் பகைவரின்படையினல் கெடுக்கப் படும். தன்தேசத்தைக்கெடுப்பதனல் எதிரிசேனைக்குஉண்டாகும் பாவங்களனைத்தையும் ராஜ்யம்அழிந்த அரசன் அடைவான்.தன்னைக் கொல்லவந்தவன் தந்தையுருவனைத்தவிர மற்ற அம்மான், மருமகன், ப்ராதா, மாமனர், ஆசாரியன்முதல் யாராயிருந்தாலும் அவனைக் கொல்லலாம். பெண்ணரசியே! தன்தேசத்தைக்காப்பதற்காக யுத் தம்செய்து போர்க்களத்தில் எதிரிசேனையினல் கொல்லப்பட்ட வனுக்கு என்னகதி யென்பதைக்கேள். யுத்தத்தில்கொல்லப்பட்ட அரசன் விமானமேறி அப்ஸரஸுகளின் கூட்டங்களினல்சூழப்பட்டு இங்கிருந்து இந்திரலோகம்போவான். அழகுள்ளவளே! அவன் அங்கங்களில் எத்தனை மயிர்க்கால்களிருக்கின்றனவோ அத்தனையா யிரம்வருஷங்கள் அவன் இந்திரலோகத்தில் கொண்டாடப்படுவான். அவன் எப்போது மானிட லோகத்திற்குத் திரும்பிவருவானே அப் போது பராக்கிரமமுள்ளவனுகி அரசனுகவோ அரசனைப்போன்ற வனுகவோ பிறப்பான். ஆதலால், முயன்று தன்தேசத்தைக் காப் பாற்றவேண்டும். வியவகாரங்களைப்பார்ப்பதும் சாரர்களைவிடுவதும் சொல்தவருமலிருப்பதும் சோர்வின்மையும் உற்சாகமும் காரியங் களில்கடுமையில்லாமையும் வேலைக்காரர்களையும் வாகனங்களையும் காப்பாற்றுவதும் போர்ச்சேவகர்கள் அவர்களின்வேலையைச்செய்த போது அது வீண்போகாமலிருக்கும்படி அவர்களுக்குப்பரிசளிப் பதும் அரசர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மையைப் பயக்கின்றவை.

இருநூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸ்ம்வாதம்தொடர்ச்சி; அறம்போநுள்ளின்பமுதலியன.)

புகழ்பெற்றவளே! சிறியஇஷ்டிகளிலும் யாகங்களிலும் மந்தி ரங்களைச்சொல்லி யூப்ஸ்தம்பங்களில்கட்டிச் சாஸ்திரப்படி தர்மஜிக்

தையோடு கொல்லப்படுகின்றபசுக்கள் மந்திரத்தினாலும் ஹோமத்தினாலும் பரிசுத்தமடைந்து ஸ்வர்க்கம்போகின்றன. சிறந்தமுகமுள்ளவளே! யாகங்களில் அவற்றின்மாமிசமாகியஹவிர்ப்பாகங்களினால் த்ரேதாக்நிகளும் தேவர்களும் திக்பாலகர்களும் மும்மூர்த்திகளும் திருப்திசெய்விக்கப்படுகின்றனர். தேவியே! அவர்கள் திருப்தியடைந்தபோது அந்தயாகத்திற்கு எந்தப்பலனை அந்தப்பலன் யஜமானனைச்சேருகிறது. ஸந்தேகமில்லை. தேவியே! அந்தயஜமானன், பத்னி புத்திரர்கள் தந்தை ஸகோதரர்களுடன் ஸ்வர்க்கத்துக்குச்செல்வான். அந்தயாகத்தில் தீக்ஷைசெய்துகொண்டவரனைவரும் ஸ்வர்க்கம்போவர். இதையெல்லாம் உனக்குச்சொன்னேன். இன்னும் என்ன கேட்கவிரும்புகிறாய்?' என்றுசொன்னார். உமை, 'பகவானே! எல்லாப்பிராணிகளுக்கும் ஈசுவரரே! சூலத்தைக் கையில்பிடித்தவரே! பரொளியுள்ளவரே! கிருகஸ்தர்களெல்லாருடைய ஒழுக்கத்தையும் நான் கேட்கவிரும்புகிறேன். பிரபுவே! தர்மார்த்தகாமங்களென்னும்மூன்றுபுருஷார்த்தங்களுக்குமுரிய அவர்களுடையஒழுக்கம் எப்படிப்பட்டது? அவர்கள்பிழைப்புக்கு எவ்வகையானபொருளீட்டம் கூறப்பட்டுள்ளது? அவர்களெல்லாரும் எப்படிநடப்பதனால் உத்தமகதியைப் பெறுவர். கௌரவத்தைக்கொடுப்பவரே! இவற்றையெல்லாம் சுருக்கமாகச் சொல்லக்கடவீர்' என்றுகேட்க, மகேசுவரர் சொல்லலானார். 'சிறந்தமஹிமையுள்ளபெண்ணரசியே! நீ கேட்கக்கருதினது நியாயந்தான். இவ்வுலகத்திலுள்ளநல்லொழுக்கம் பெரும்பாலும் கிருஹஸ்தர்களுக்குரியதாகச் சொல்லப்படுகிறது. அவர்களைக் காப்பதற்காகவே அரசர்கள் பூமியில் பட்டாபிஷேகம்செய்யப்படுகின்றனர். இப்போது மனிதர்கள்எல்லாருக்கும் பொதுவாயுள்ள தொழிலைச் சொல்லுகிறேன்; கேள். அன்புள்ளவளே! கல்வி, [1]வார்த்தை, பணிவிடை, சிற்பம், நாட்டியம்என்னுமிவை மனிதர்களுக்கு ஜீவனத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மனிதர்கள் ஜனித்ததின்பயனை முக்கியமாக அவர்களின்ஒழுக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனை என்னிடம் ஊக்கத்துடன்கேள். மானிடஜன்மமே தொழிலுக்குஇடம். மற்றப்பிராணிகள் இன்பதுன்பங்கள்மாத்திரமுள்ளவை. ஆதலால், எல்லாப்பிராணிகளுக்கும் மனிதரைப்பற்றியே ஜீவனம் விதிக்கப்படுகிறது. எல்லாமனிதர்களுக்கும் முதலில் கல்விப்பயிற்சிதான் விதிக்கப்படுகிறது. தேவியே! காரியாகாரியங்களையறிவது கல்வியினாலன்றி மற்றொன்றினாலில்லை. கல்வியினால்

[1] 700 - ம் பக்கம் 1 - ஆம் குறிப்பிற்காண்க.

அறிவு விரிவாகிறது. அறிவினால் உண்மை புலப்படுகிறது. உண்மை யறிந்தவன் பரிசுத்தமனமுள்ளவனாகி எல்லாப் புருஷார்த்தங்களையும் அடையத்தக்கவனாகிறான். கல்விகற்றவன் உலகத்தில் சிறந்தஜீவனம் செய்யமுடியும். ஆதலால், முதலில் தன்னைக் கல்வியினால் தகுதியுள் ளவனாகச் [1]செய்துகொண்டும் இந்திரியங்களையும் கோபத்தையுமடக் கியும் தன்ஆத்மாவைச் சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். ஆத்மா வைச்சுத்தப்படுத்திக்கொண்டபிறகு, அவன் பெரியோர்களும்பூஜிப்ப தற்குரியவனாவான். மனம் குலத்தில்தொடர்ச்சியாகவரும் ஒழுக்கத் தையே முதலில் பற்றுமென்பதனால் நல்லகுலத்தில் பிறப்பதற்காகத் தானதர்மங்கள் ஆதிகாலத்தில் ஏற்படுத்தப்பட்டன. ஒருவன் வித் தையினாலேயே தன்ஜீவனத்தைக்கருதுவனாயின் குருவுக்குப்பணி விடைசெய்தல்முதலியகுணங்கள்பொருந்தி நல்லகுருவினிடம் ராஜ வித்தையையாயினும் உலகுடைக்குரியவித்தையையாயினும்கற்கவே ண்டும். அந்தவித்தையைப்புஸ்தகம்படிப்பதனாலும் விஷயங்களைப்பயி ல்வதனாலும் முயற்சிசெய்து உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். தேவியே ! இவ்வாறின்றி வேறுவகையால் மனிதன் கல்விப்பயனை அடையான். கல்வியினால் நியாயமாகப் பயன்பெறவிரும்பவேண்டும். அதில் அதர்மத்தை விடவேண்டும். வார்த்தையினால் ஜீவனத்தைக் கருதினால் முறைப்படி ஜலம்நிரம்பினநிலத்தில் அதற்குத்தக்கபயி ரைச் செய்யவேண்டும் ; அல்லது, தேசத்திற்கும்காலத்திற்கும்தக்க படி விலையையும் உபயோகத்தையும் பிரயாஸத்தையும் லாபநஷ்டங் களையும் நன்றாக ஆராய்ந்து வர்த்தகம்செய்யவேண்டும்; அல்லது,பசுக் களால் ஜீவிக்கலாம். பத்துப்பசுக்களுக்குக்குறையாமல் காப்பாற்ற வேண்டும். அனேகவகைகளானபலபசுக்கள் அவனுக்கு உபயோகமா யிருக்கும். ஊழியம்செய்து ஜீவிக்கக்கருதும் புத்திசாலியானமனிதன் தன்னையடக்கிக்கொண்டு ஏவுகிறவர்களுக்கு உபயோகமாகஇருக்க வேண்டும். புத்தியினாலேயோ செய்கையினாலேயோ கற்பிப்பதினா லேயோ ஒருவனையடக்கவேண்டும். வழியோடுஅடித்துப் பிறகு அந்த வேலையைச்செய்யவேண்டும். அந்தயஜமானன் ஏன்னஎன்னவகை களினால் ஸந்தோஷப்படுவானோ அந்தஅந்தவகைகளினால் அவனைச்சந் தோஷப்படுத்தவேண்டும். ஊழியனுக்குரியகுணங்கள் பொருந்தின வனாகித் தானடித்தமனிதனைத் தனக்கு அன்பனாகச் செய்துகொள்ள வேண்டும். அவனுக்குஇன்னாததைச் செய்யலாகாது. இதுதான் ஊழி யத்தின்சுருக்கம். அவனைவிட்டுப்பிரிவதற்குமுன் வேறுஆதாரவைத்

1 'க்ருத்வா' என்று பாடங்கொள்ளப்பட்டது.

தேடலாகாது. சிற்பமும் நாட்டியமும் பெரும்பாலும் தாழ்ந்தஜாதி களுக்குரியவை. அவற்றிலும் திறமைக்குத்தக்கபடி நியாயமாகக் கூலிவாங்கவேண்டும். எல்லாத்தொழில்களிலும் தான் உண்மையாக நடந்து வேதனம்பெறவேண்டும். உண்மையின்றிவாங்கும் வேதன மானது பாவத்திற்குக் காரணமாகும். எந்தக்காரியங்களேயும் ஆரம் பிப்பதற்குமுன் தன்சக்தியையும், உபாயங்களேயும், இடம் காலம் கரு விகள் பிரயாஸம் செலவு லாபம்இவற்றையும், தர்மத்தையும் மூன் னிட்டு யுக்தியைக்கொண்டு ஆராய்ந்துபார்க்கவேண்டும். மேற் சொன்னவிஷயங்களேஆராய்ந்து தெய்வானுகூலத்தையும் கண்டறி ந்து அதன்பிறகு தனக்கு எதில் நன்மையுண்டாகுமோ அதனைச் செய்யத் தொடங்கவேண்டும். ஒருதொழிலே எடுத்துக்கொண்ட பிறகு தெய்வத்தாலும் மனிதர்களாலும்நேரிடும் இடையூறுகள் வரா மல் மறுபடி வேறுஎண்ணங்கொள்ளாமல் அந்தத்தொழிலே எப்போ தும் காப்பாற்றவேண்டும். கிடைத்தபொருளே அழிக்காமல் காப் பாற்றியும் விருத்திசெய்தும் அநுபவிக்கவேண்டும். ஆராய்ந்துபாரா மல் சாப்பிடுகிறவனுக்கு மலிபோன்றதும் அழிந்துபோகும். புத்தி சாலியானவன் தொழில்களிலுல் தனத்தையடைந்து அதைத்தர்மத் திற்குஒருபாகம் பொருளுக்குஒருபாகம் ஸுகத்திற்குஒருபாகம் கஷ் டங்களேப்பரிகரிப்பதற்குஒருபாகமாக நான்குபாகங்களாகப் பகுக்க வேண்டும். சிறந்தவளே! அந்நான்குபாகங்களுக்கும் உபயோகத் தைக் கேள். யாகம், அன்னதானம், ஏழைகளுக்குஉதவிசெய் வது, தேவர்களேயும் பிராம்மணர்களேயும் பித்ருக்களேயும்பூஜிப்பது, மூலதனத்தைப்பெருக்குவது, அனுஷ்டானங்களே விடாமலிருக்கும் தர்மிஷ்டர்களுடன் சேர்ந்திருப்பதுமுதலான காரியங்களில் தர்மத் திற்காகஇருக்கும்தனத்தைச் செலவிடவேண்டும். லாபத்தைப்பாரா மலே தர்மகாரியங்களுக்குத் தனத்தைக் கொடுக்கவேண்டும். பொரு ளுக்காக ஏற்பட்டதனத்தை ஐசுவரியமும் உயர்ந்தகீர்த்தியும் அரச னுடையஸ்நேஹமும் கிடைப்பதற்காகவும் வார்த்தையைச் செய்வதற் காகவும் உதவியானவர்களேயும் சினேகிதர்களேயும்ஸம்பாதிப்பதற்கா கவும் புத்திரர்களுடைய [1]உபநயனத்துக்காகவும் விவாகத்துக்காகவும் ஜீவனத்துக்காகவும் தனத்தைமிகுதியாகப்பெறுவதற்காகவும்நஷ்டத் தைநிவிருத்திசெய்வதற்காகவும் மற்றுமுள்ள இவ்வகைக்காரியங்

1 'ஆவாஹேசவிவாஹே' என்பது மூலம். வரன்வீட்டில் பெண்ணைக் கொண்டுவந்து கொடுப்பது ஆவாஹமென்றும், வரன் பெண்ணின்வீட்டுக் குப்போய்ப் பெண்ணைவாங்கிக்கொள்வது விவாஹமென்றும் கூறுவது காம ஸூத்ரவ்யாக்யானம் ஜயமங்களே.

களுக்காகவும் செலவிடவேண்டும். பலனைக் காரணங்களால்கண்டறிந்தபிறகு பொருளைச் செலவழிக்கவேண்டும். கஷ்டத்தைநிவிருத்திசெய்வதும் லாபத்தை [1]உண்டாக்குவதும் பொருளே. பொருளில்லாதமனிதர்கள் பலமுயற்சிகள்செய்தும் பொருளையடையார். ஆதலால், பொருளை ரக்ஷிக்கவேண்டும். சாஸ்திரப்படி தானம்செய்யவேண்டும். ஸுகத்திற்காகஏற்பட்டதனத்தைத் தேகபோஷணையின் பொருட்டு உணவைச் [2]சிறப்பித்துக்கொள்வதற்காகவும் ஆட்டம் பாட்டுக்களை அனுபவிப்பதற்காகவும் விநோதயாத்திரைக்காகவும் விளையாட்டுக்காகவும் மனத்திற்கினியவர்களோடு சேருவதற்காகவும் ஸந்தோஷத்தினால்பரிசளிப்பதற்காகவும் மற்றும்இப்படிப்பட்ட காரியங்களுக்காகவும் செலவிடவேண்டும். தர்மார்த்தகாமங்கள் மூன்றிலும் முள்ள குணகுற்றங்களை ஆராய்ந்து பொருளைச் செலவிடவேண்டும். சுத்தமான புன்னகையுள்ளவளே ! நாலாவதுபாகத்தை ஆபத்காலத்திற்காகப் பத்திரப்படுத்திவைக்கவேண்டும். சிறந்தவளே ! ராஜ்யம் தவறுவதனால் உண்டாகும் கெடுதலைப்போக்குவதற்காகவும் பஞ்சஜிவ்ருத்திக்காகவும் தீராதவியாதியைத் தீர்ப்பதற்காகவும் கிழத்தனத்தில் உதவுவதற்காகவும் பகைவரைமறுப்பதற்காகவும் தண்டனைகளால் நேரிடும் கஷ்டங்களை நீக்குவதற்காகவும் அன்னியதேசம்போவதற்காகவும் மற்றுமுள்ள ஆபத்துக்களினின்றும் தப்புவித்துக்கொள்வதற்காகவும் தனதுபொருளைக் கையில்வைத்துக்கொள்ளவேண்டும். கஷ்டங்களினின்றும் தப்புவித்துக்கொள்வது உலகத்தில் பொருளுள்ளவர்களுக்குத்தான் எளிது. எவனுக்குச் சிறிதும் பொருளில்லையோ அவனுக்கு இம்மைமறுமையிரண்டுமில்லை. ஆகாரத்தினால் இந்திரியங்கள்எப்படியோ அப்படியே எல்லாம் பொருளினால் நடக்கின்றன. ஆதலால், பொருளில் ஒருபாகத்தைக் காப்பாற்றிவைக்கவேண்டும். இல்லாவிடின் அழிந்துபோம். தேவியே ! உலகங்களில் மனிதர்கள் ஜீவிக்கும்வகைஇது. இவ்வகையான ஒழுக்கமுள்ளஜனங்களுக்குத் தனமும் ஆயுளும் ஸ்வர்க்கமும் சிறந்தபுகழும் பெயரும் உண்டாகத் தக்க மற்றொருஒழுக்கத்தையும் கேள். எல்லாராலும் தர்மார்த்தகாமங்கள் மூன்றும் தம்ஸ்வாதீனத்தினால் பகுத்துநடத்தப்படவேண்டும். அவ்வாறு நடத்துபவர் இரண்டு லோகங்களிலும் நன்மைபெறுவர். காலையில்எழுந்திருப்பது, தேகத்தைச் சுத்தப்படுத்துவது, தெய்வப்பிராம்மணபக்தி, ஆசாரியர்களைப்பணிவது, பிராம்மணர்களை

1 'பலத்யுத' என்று பாடங்கொள்ளப்பட்டது.

2 'ஸ்ரீசேஷணே' என்று பாடங்கொள்ளப்பட்டது.

வந்தனம்செய்வது, பெரியோர்களை எதிர்கொண்டழைப்பது, கோயி லுக்கும்பிடுவது, அதிதிகளைஎதிர்கொண்டழைத்து மரியாதையோடு விருந்துசெய்வது, பெரியோர்களின்உபதேசப்படி நடப்பது, இதத் தையும் ஸன்மார்க்கத்தையும்கேட்பது, வேலைக்காரரைக்காப்பாற்று வது, இன்சொல் கொடை இவற்றால் வசப்படித்துவது, நியாயமாக வேலையைச்செய்வது, அநியாயத்தையும் விரோதத்தையும்விடுவது, தன்மனைவியினிடம் ஸரியாகநடப்பது, அவளதுகுற்றங்களைத்தடுப் பது, பிள்ளைகளைக்கற்பிப்பது, அவரவர்களை அவரவர்களுக்குத்தக்க வேலைகளில் அமர்த்துவது, தகாதகாரியங்களைவிடுவித்து நல்லகாரி யங்களைச்செய்விப்பது, குலத்திற்குரியதர்மங்களைச் சரியாகக் காப் பது, தன்முயற்சியினால் தன்குலத்தை எல்லாவகைகளாலும்சிறப்பிப் பதுமுதலிய இந்தக்குணங்கள்எல்லாம் மனிதர்களின்ஒழுக்கமென் பது நிண்ணம். நன்மைக்காகவும் ஞானத்திற்காகவும் எப்போதும் பெரியோரை அடித்திருக்கவேண்டும். பிறருக்காக ஏற்பட்டபொரு ளைக் கேளாமல்எடுப்பது எவ்வகையிலுங்கூடாது. பிறரை யாசிக்க லாகாது. மனவுறுதியுடன் தன்கைவன்மையையே ஆதரவாகப்பற்ற வேண்டும். ஆகாரத்திலும் ஆசாரத்திலும் தன்தேகத்தை எப்போ தும் காப்பாற்றவேண்டும். மனத்திற்கினியதும் தேகத்திற்கனுகூல மானதும் எளிதில்ஜரிப்பதுமாகிய நல்ல ஆகாரத்தை அளவோடு உண்ணவேண்டும். பரிசுத்தமாயிருந்து தேவதைகளுக்கும் அதிதி களுக்கும் செய்யவேண்டிய பூஜைகளெல்லாவற்றையும் விதிப்படிசெ ய்து மிகுந்ததையுண்ணவேண்டும். கடுமையாகப் பேசலாகாது. கிரு கஸ்தாசிரமத்திலிருப்பவன், எல்லாருக்கும் வலிப்பதற்குஇடத்தை யும் குடிக்கத்தண்ணீரையும் பிக்ஷையையும் பூதபலியையும் எப்போ தும் கொடுக்கவேண்டும். பசுக்களைக்காப்பாற்றவேண்டும். கார ணம்பற்றியே வெளியில் புறப்படவேண்டும். நடுப்பகலிலும் நடு இரவிலும் போக நினைக்கக்கூடாது. சப்தாதிவிஷயங்களில் இறங்க லாகாது. தன்சக்திக்குத்தக்கபடி காரியங்களைச் செய்யவேண்டும். கிருகஸ்தர்கள் வரவிற்குத்தக்கபடி செலவோடிருப்பதுதான் உலகத் தில் சிலாகிக்கப்படுகிறது. அபகீர்த்தியைக்கொடுப்பதும் லாபத்தைக் கெடுப்பதும் பிறரைத்துயரப்படுத்துவதுமாகிய செய்கையைப் பயத் தினாலாவது லோபத்தினாலாவது ஒருகாலும் செய்யலாகாது. முதலி லேயே குணகுற்றங்களை ஆராய்ந்து நல்லதுகெட்டது இன்னதுஇன் னதென்பதைத் தெரிந்துகொண்டபிறகு அந்தக்காரியத்தைச் செய் யவேண்டும். தனதுபுண்ணியபாபங்களில் தன்மனத்தையே எப் போதும் சாக்ஷியாகக்கொள்ளவேண்டும். நினைவிலும் சொல்லிலும் செய்கையிலும் பாவத்தைக் கருதலாகாது' என்றார்.

இருநூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஶ்வர ஸம்வாதம்தொடர்ச்சி; வர்ணஶ்ரமதர்மங்கள் இன்னவையென்பதும் முன்னிஜப்பயன் மறுஜன்மத்தில் வருமென்பதும்.)

உமை, 'பகவானே! பகதேவதையின்நேத்திரத்தையழித்தவரே! காலனைச்சங்கரித்தவரே! சங்கரரே! மகேசுவரரே! இவ்வுலகத்தில் நான்குவர்ணங்களும் இயற்கையாகவே ஏற்பட்டனவா? அல்லது, செய்கையினால் வர்ணங்கள் உண்டாகின்றனவா? இந்தச்சந்தேகத்தைக் கேட்கிறேன். அதனை எனக்குத் தீர்க்கக்கடவீர்' என்று கேட்க, மகேசுவரர் சொல்லலானார்.

'பிராம்மணவர்ணம் முதலான நாலுவர்ணங்களும் இயற்கையாகவே இருக்கின்றன. ஒருஜன்மத்தில் மற்றொருஜாதியை அடையமுடியாது. கர்மங்களினால் மறுஜன்மத்தில்வேறுவர்ணமுண்டாகிறது. ஆதலால்,மனிதர்களுக்குவினைப்பயனாலுண்டாகும்வர்ணங்கள்எல்லாவற்றையும்பற்றிச் சொல்லுவேன். மனிதன் பிராம்மணனாகப்பிறந்தபின் தன்ஜாதியைக் காப்பாற்றிக்கொண்டு பிராம்மணனுக்கு வேதங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களை உறுதியாகச் செய்யவேண்டும். உயர்குலத்திற் பிறந்தவன் ஸத்தியம்நேர்மைகளுடன் யாகம் தானமுதலியவற்றையும் ஜாதிக்குரியதர்மங்களையும் விடாமலிருக்கவேண்டும். பெண்ணரசியே! இப்படிநடந்துகொண்டிருப்பவன் காலம்சென்றால் பிறகு, ஸ்வர்க்கஸுகங்களையனுபவிப்பதற்காக ஸ்வர்க்கலோகம்போவான். ஸ்வர்க்கஸுகம்கழிந்தபின் மானிடலோகத்தில் முன்போலவே பிராம்மணனாகப்பிறப்பான். மனிதன் இவ்வாறு செய்கையினாலேயே திரும்பவும் தன்ஜாதியை அடைகிறான். மற்றொருவன் பிராம்மணஜாதியில் பிறந்து அஜ்ஞானமென்னும்இருள்மூடி அந்தஜாதியை அலக்ஷியம்செய்து ஜாதிக்குரியகர்மங்களைவிட்டு மாறுநடந்துகொண்டு சூத்திரனுடையகர்மங்களில் ஆசைவைத்து ஸ்நானசௌசங்களையும் மங்களங்களையும்விட்டுச் சூத்திரர்களுடன்கூடிச் சூத்திரன்போலவே உலகத்தில் திரிகிறான். அவன் காலஞ்சென்றபின் யமலோகத்தில் மிகவும்தண்டிக்கப்பட்டு மனிதலோகத்தில்பிறக்கும்போது சூத்திரனாகவே பிறக்கிறான். தேவியே! பிராம்மணனும் தன் (கெட்ட) கர்மத்தினால் சூத்திரனாகவேஆவான். அப்படியே சூத்திரனாகிய மற்றொருவன் சூத்திரன்செய்கைகளைவிட்டுச் சொல்லுண்மை மன

உண்மைகளோடு தானதர்மங்களைச்செய்துகொண்டும் மந்திரங்களையும்பிராம்மணர்களையும் பூஜித்தும் மனத்தில்பிராம்மணர்மேல்அன்புவைத்தும் மற்றுமுள்ளநன்னடக்கைகளோடுமிருந்து மரணமடைவானுயின் ஸ்வர்க்கலோகம்செல்வான். அதுகழிந்தபோது மானிடலோகத்தில் வேதாத்யயனம்பொருந்தின சிறந்தபிராம்மணகுலத்தில் பிறப்பான். உலகத்தில் எப்பொழுதும் சூத்திரன் பிராம்மணத்தன்மையை அடைவது, இவ்வாறுதான். ஜாதிதர்மத்தைவிடாதக்ஷத்திரியர்களுக்கும் வைசியர்களுக்கும் முறை இப்படியே. மனிதர்கள் உயர்குலத்திலும் இழிகுலத்திலும்பிறப்பது தம்வினைகளாலேயே. மேற்சொல்லியபடி இறந்தபிறகுதான் மனிதர்களுக்கு ஜாதிமாறுபாடுஉண்டாகும்.உலகத்திலுள்ளவ்யவஸ்தை தவறுதாகையினால் இதை மாற்றமுடியாது. ஆதலால், கஷ்டப்பட்டுஉயர்குலத்தையடைந்த புத்திசாலியானமனிதன் அதிலிருந்துதவறுமலிருக்கும்படி எல்லாவகைகளாலும் அதனைக் காப்பாற்றவேண்டும். தேவியே! இந்தவிஷயம் உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கக் கருதுகிறாய்?' என்றார்.

உமை, 'எந்தமனிதன் தன் அதிகாரத்திற்குத்தக்கபடி சிறந்ததானாலும் தாழ்ந்ததானாலும் தன்கர்மத்தைப் பிறந்ததுமுதல் பரிசுத்தனாகச் செய்வதனால் பிறந்ததின்பயனை அடைவான்?'என்றுகேட்டாள். மகேசுவரர், 'மனவுண்மையோடு தன்கருமத்தைச்செய்கிறவனைப் பாவம் பற்றுவதில்லை. அப்படியேசெய்பவனுக்குத் தன்மனமே அதனை நல்லதாகச்செய்யும்; மற்றவர்களுக்கு அதனையே கெட்டதாகச் செய்யும். மோசக்காரர்களிடத்தில் மோசக்காரன்போலவும் யோக்கியர்களிடத்தில் யோக்கியன்போலவும் நடக்கவேண்டும். கஷ்டங்களில் சோர்வில்லாமலிருக்கவேண்டும். எல்லாக்காரியங்களையும் முதலில் ஸமாதானமாகவே செய்யத்தொடங்கவேண்டும். கொடியவர்களான பகைவர்களுடன் போர்செய்யவேண்டும். நஷ்டத்தையும் பாவத்தையும் துயரத்தையும்தானடையாமலிருக்கும்படி தன்மனம்ஸந்தோஷப்படும்காரியத்தைச் செய்யவேண்டும். இதுதான் கிருகஸ்தாசிரமத்திலிருக்கும்மனிதர்களின் ஒழுக்கத்தின்சுருக்கம். இந்தவொழுக்கத்தைக்கைப்பற்றிக்கொண்டு ஆகாரத்தைக்குறைத்திருந்தால் துயரமின்றிச் சிறந்தகதியையடையலாம். கிருகஸ்தாசிரமத்திலிருப்பவரெல்லாருக்கும் இதுதான் அழியாத ஜன்மபலன். இல்லறத்திலிருப்பவர்கள் எப்பொழுதும் இப்படியேநடக்கவேண்டுமென்பது தணிபு. இதையெல்லாம் நான் சொன்னேன். இன்னும் என்ன

கேட்கவிரும்புகிறாய் ?' என்றுசொன்னார். உமை, 'தேவருக்கும் அஸுரருக்கும்அதிபதியே ! தேவரே ! வரமளிப்பவரே ! ஸந்தோஷத்தை விருத்திபண்ணுகிறவரே ! மனிதர்களிலேயே சிலர் செல்வமுள்ளவர்களாகவும் துயரமும்பகையுமற்றவர்களாகவும்பலவகையான ஸுகங்களையனுபவிப்பவர்களாகவும் காணப்படுகின்றனர்; மற்றும் சிலர் ஏழைகளாகவும் துயரமுள்ளவர்களாகவும் ஸுகமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். ஏன் மனிதர்களில் எல்லாரும் ஸமமாகச் செய்யப்படவில்லை? மகாதேவரே! இதைக்கேட்பதில் எனக்கு மிக்க ஆவலிருக்கிறது' என்றுகேட்க, மஹேசுவரர் சொல்லலானார்: 'சிறந்த பாக்கியமுள்ள பெண்ணரசியே ! நீகேட்கக்கருதினது நியாயம். மனிதர்களின்நன்மைக்காக அந்தவிஷயம்எல்லாவற்றையும் நான்சொல்லுகிறேன்; விடாமல் கேள். முற்காலத்தில் பிரம்மதேவர் படைக்கஆரம்பித்தபோது பிரஜைகளை ஸமமாகவேபடைத்தார். ஏனெனில்,பிரம்மதேவருக்கு யாரிடத்திலும் விருப்புவெறுப்புக்கள் ஒருகாலும் இல்லையன்றே ? அப்போது அவரிடத்திலிருந்து தேவர்கள்மனிதர்களாக வரும் வேற்றுமையில்லாமலே பிறந்தனர். இப்படி அந்தயுகம்நடக்கும்போது காலத்தின்வித்தியாஸத்தினால் அவர்களிற்சிலர் புத்திமயங்கி வேறுபாடடைந்தனர். பெண்ணரசியே ! ஸமமாகவேயிருந்த அவர்கள் அப்போது குறைவதைக்கண்டு பிராம்மணர்கள் அதன் காரணங்களைத் தெரிந்துகொள்வதற்காகப் பிரம்மதேவரிடம்சென்று, 'தேவருக்கதிபதியே ! நீர் இப்படிப்பட்டபக்ஷபாதம் செய்தல் தகாது; தேவரே ! எல்லாரும் உமக்குஸமமான புத்திரர்களாயிருக்க எங்களுள் கலகம் ஏன்உண்டாகவேண்டும் ?' என்றுகேட்டனர். அவர்களால் இவ்வாறு குற்றம்கூறப்பட்டபிரம்மதேவர், 'ஓ ! பிரஜைகளே ! நீங்கள் என்மேல் குற்றம்சொல்லவேண்டாம். உங்கள் கர்மத்தை நினையுங்கள். உங்களுக்கு நல்லதும் தீயதும் உங்களாலேயே தொடுக்கப்பட்டு வருகின்றன. எவன் எவ்விதமான கருமத்தைச் செய்கிறானோ அவன் அவ்விதமானபலனை அனுபவிக்கிறான். தானே தன்வினைப்பயனை அனுபவிக்கவேண்டும். மற்றொருவன் அதைஅனுபவிக்கத்தகாது' என்றுசொன்னார். காலத்திற்குக் கர்த்தாவாகிய அந்தப்பிரம்மதேவரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்ட பிராம்மணர்கள் திரும்பி வந்து நல்லகர்மங்களையே செய்தனர். அவர்கள் இவ்வாறு உண்மையைத்தெரிந்துகொண்டு தானதர்மங்களையேமுதன்மையாகக் கொண்டு சாஸ்திரப்பிரகாரம் நற்கர்மங்களைச்செய்து காலம்சென்றபின் மறுஜன்மத்தில் தாங்கள்செய்த தானங்களின் பலன்களையனுப

வித்துக்கொண்டு ஸுகமாகவிருக்கிறார்கள். ஆதலால், மனிதன் தன் வினையைத் தானே அனுபவிக்கிறான். அழகானகண்களையுடைய வளே! லோபிகளும் தயையற்றவரும் மிகுதியாகத்தம்முன்மையையே கருதுகிறவருமான மற்றும்சிலர் தர்மத்தில் விருப்பமில்லாமலிருக் கின்றனர். சிறந்தவளே! அப்படிப்பட்டவர்கள் இறந்தபின் மறுஜன் மத்தில் ஏழைகளும் துன்பம்அதிகப்பட்டவர்களுமே ஆகிறார்களென் பது திண்ணம்' என்றுசொன்னார்.

உமை, 'மனிதர்களிலேயே சிலர் தனதானியங்களுள்ளவர்களா கவும் ஸுகத்திற்குரியவை எல்லாம் கிறைந்தவர்களாகவுமிருந்தும் ஸுகப்படாதவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களனுபவிக்காம லிருப்பதுஏன்?அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள்.

மகேசுவரர், 'சிலர் பிறரால்தூண்டப்பட்டவர்களாய்த் தர்மத் தைச்செய்வதேயன்றித் தம்விருப்பத்திலால் செய்வதில்லை ; தமக்குச் சிரத்தையில்லாமல்செய்து விசனப்படுகிறார்கள். சிறந்தவளே ! அப் படிப்பட்டவர்கள் மரணமடைந்தபின் மறுபிறப்பில் அந்தப்புண்ணிய பலன்களைப்பெற்றும் அனுபவிப்பது ஒருகாலுமில்லை. தனத்துக்குக் காவற்காரர்போல அதைக்காப்பாற்றிக்கொண்டும் விருத்திசெய்து கொண்டுமிருக்கின்றனர்' என்றுசொன்னார். உமை, 'மகேசுவரரே! சிலமனிதர்கள் தனமில்லாமலிருந்தும் ஸுகப்படுகிறவர்களாகக் காணப்படுகின்றனர். அதைப்பற்றியும் எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள்.

மகேசுவரர், 'எவர்கள் தர்மத்தில்விருப்பமும் தயையுமுள்ளவர் களாகிக் கஷ்டப்பட்டவர்களைக் காப்பாற்றுகிறதற்காகத் தமதுவறு மையிலும் பிறருக்கு உதவிசெய்கின்றனரோ அவர்கள் பிறருடைய தனத்தையும் கெட்டுப்போனதிரவியத்தையும் பிறரால் அபகரிக்கப் பட்டபொருளையும் மறுபடியும் பெறுவர். பொருளில்லாமலிருந்தும் எப்போதும் தானம்செய்ய விருப்பமுள்ளமனிதர்கள் மரணமடைந்த பின் மறுஜன்மத்தில் தனமில்லாமலிருந்தும் ஸுகமுள்ளவர்களாகி ரூர்கள். தர்மத்தையும் தானத்தையும்பற்றியஉபதேசத்தைச் செய்ய வேண்டுமென்பது நிச்சயம். ஆதலால், இதனையும் உனக்குச் சொன் னேன். தேவியே ! இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்று சொன்னார்.

இருநூற்றுப்பதினேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி ; முன்னிணைப்பயன் மறுஜன்மத்தில்வருமென்பது தொடர்ச்சி.)

உமை, 'ஓ! பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! முக்கண்ணரே! விருஷபத்வஜரே! பிரபுவே! ஸ்வாமீ! மூன்றுவித மானமனிதர்கள் எப்போதும் காணப்படுகின்றனர். சிலர் உட்கார்ந்துகொண்டே உயர்ந்தஅதிகாரத்தையும் செல்வத்தையும் அடைந்து அனுபவிக்கின்றனர். சிலர் முயற்சிசெய்து பாக்கியங்களை அனுபவிக்கின்றனர். மற்றவர்கள் முயற்சிசெய்தும் ஒன்றும் அடையாமலிருக்கின்றனர். அஃது எந்தவினையின்பயன்? எனக்குச்சொல்லக் கடவீர்' என்றுகேட்க, மஹேஸ்வரர் சொல்லலானார்:—

'சிறந்தமகிமையுள்ளபெண்ணரசியே! தேவியே! நீகேட்கவிரும்புவதுநியாயம். தேவியே! உலகத்தில் எந்தமனிதர்கள் தானத்தையும் தர்மத்தையுமே முக்கியமாகநினைத்துத் தூரத்திலிருந்து ஊகத்திலேயே யோக்யர்களை அறிந்து முறைப்படி தாமேதேடிக்கொண்டுசென்று தமதுஇங்கிதங்களாலும் அவர்களுக்குத்தெரியாமலிருக்கும்படி அவர்களை ஸந்தோஷப்படுத்தித் தானமுதலியவற்றைவாங்கும்படி செய்கின்றனரோ அப்படிப்பட்டஅந்தமேன்மக்கள் முயற்சியில்லாமலே அதன்பலன்களைமறுஜன்மத்தில்அடைகின்றனர். தமது புண்ணியத்தையனுபவிப்பவர்களாகிய அவர்கள் உட்கார்ந்தபடியே ஸுகங்களையனுபவிக்கின்றனர். மற்றுஞ்சிலர் யாசிப்பவர்களுக்கே தானங்களைக்கொடுக்கின்றனர். தேவியே! யாசிப்பவர்கள் எந்த எந்தக்காலங்களில்யாசிக்கின்றனரோ அந்தஅந்தக்காலங்களில் தானங் கொடுப்பதனால் அந்தமனிதர்கள் அப்போதப்போது மறுபிறப்பில் சிரமப்பட்டுமுயற்சிசெய்து அந்தப்பலன்களைப் பெறுகின்றனர். மனிதர்கள் லோபத்தினால் எண்ணம்கெட்டவர்களாகி, யாசிப்பவர்களுக்கும் எவ்வகையிலும் ஒன்றும்கொடாமல் கோபிக்கின்றனரே, அம்மனிதர்கள் மறுஜன்மத்தில் பலவகைகளாக முயற்சிசெய்து தேடினாலும் ஒன்றையும் பெறுவதில்லை. சிறந்தவளே! விதைவிதையாமல் மரமே முளைப்பதில்லை. அப்படித்தான் எல்லாம் தானத்தின்பலனென்றுநினைக்கின்றனர். மனிதன் எதை எதைக் கொடுக்கிறானோ அதை அதைமட்டுமே அடைகிறான். தேவியே! இதனை உனக்குச்

சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றார். உமை, 'பகவானே! பகதேவதையின் நேத்திரத்தையழித்தவரே! சிலர் முதிர்ந்தபிராயத்தில் தளர்ச்சியடைந்தபின் அனுபவிக்கத்தகாத காலத்தில் ஐசுவரியத்தையும் போகபாக்கியங்களையும் தனங்களையும் எவ்வகையிலாவது அடைகின்றனர். அஃது எந்தவினைப்பயன்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'ஆ! ஆ! உனக்குச்சொல்வேன். அதனை நீ ஊக்கத்துடன்கேள். சிலர் செல்வம்பெற்றிருந்தும் தர்மகாரியத்தை வெகுநாள்வரையில் மறந்து உயிர்முடிவுக்காலம்வந்து பிணிகளால்பீடிக்கப்படும்போது தானங்களைக்கொடுக்கவும் தர்மங்களைச்செய்யவும் தொடங்குகின்றனர். சிறந்தவளே! சிறந்தலக்ஷணமுள்ளவளே! அவர்கள் மறுஜன்மத்தில் கஷ்டப்படுகிறவர்களாகப்பிறந்து இளமைப்பருவம்கடந்து கிழத்தனம்வந்தபிறகு முன்செய்த தானங்களின்பலன்களை அடைகின்றனர். தேவியே! இப்படி அவர்கர்மத்தின்பலன் காலம்கடந்துவருகின்றது' என்றுசொன்னார். உமை, 'மஹாதேவரே! சிலர் போகபாக்கியம் பெற்றிருந்தும் வியாதிகளால் பீடிக்கப்பட்டு அவற்றையனுபவிக்கத் திறமையற்றவர்களாயிருக்கின்றனரே, அதற்கு என்னகாரணம்?' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'சிறந்தலக்ஷணங்கள் பொருந்தினவளே! சிறந்தவளே! எவர்கள் வியாதியினால்பீடிக்கப்பட்டுப் பிழைப்பதில்எண்ணம்விட்டபிறகு தானங்களைச்செய்ய ஆரம்பிக்கின்றனரோ அவர்கள் மறுஜன்மத்தில் அந்தப்பலன்களையடைந்தும் நோய்பிடித்தவர்களாகி அவற்றை அனுபவிக்கமாட்டாமல் போகின்றனர்' என்றுசொன்னார். உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! மனிதர்களிலேயே சிலர் அழகுள்ளவர்களும் லக்ஷணமான அவயவங்களுள்ளவர்களும் பார்ப்பதற்கினியவர்களுமாகக் காணப்படுகின்றனரே, அது எந்தக்கர்மத்தின்பலன்? எனக்குச்சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'தேவியே! ஆ! ஆ! உனக்குச்சொல்வேன். அதனை நீ ஊக்கத்துடன்கேள். எந்தமனிதர்கள் முன்ஜன்மத்தில் இயற்கையாகவே வெட்கமுள்ளவர்களாகவும் இனிமையாகப்பேசுகிறவர்களாகவும் சக்தியிருந்தும் இயற்கையில் எப்போதும் நயமுள்ளவர்களாகவும் இருந்து பிராணிகளிடத்தில் எப்போதும்தயையுடன் மாம்ஸபோஜனத்தைவிட்டுத் தர்மத்திற்காக அலங்காரங்களையும் வஸ்திரங்களையும் தானம்செய்துகொண்டும் பூமியைச் சுத்தமாகவைத்துக்கொண்டும் காலத்தில் அக்நிஹோத்திரம் செய்துகொண்டுமிருக்கின்றனரோஅப்படிப்பட்டநன்னடக்கையுள்ள

மனிதர்கள் மறுஜன்மத்தில் ஆசைப்படத்தக்க அழகுள்ளவர்களாகப் பிறக்கிறாரென்பதில் ஸந்தேகமில்லை' என்றுசொன்னர். உமை, 'மனிதர்களிலேயே சிலர் விகாரரூபமுள்ளவர்களாகக் காணப்படுவது எந்தவினையின்பயன்? அதனைஎனக்குச்சொல்லக்கடவீர்' என்று கேட்டாள். மஹேஸ்வரர், 'சிறந்தவளே! அந்தக்காரணத்தையும் உனக்குச் சொல்வேன்; கேள். மனிதர்கள் முன்ஜன்மத்தில் நல்ல ரூபமுள்ளவர்களாயிருந்ததனால் கர்வமும் தாம் மேல்என்கிற எண்ணமுமுள்ளவர்களாய் வஞ்சப்புகழ்ச்சி முதலியவற்றினால் அழகில்லாதவர்களை மிகநகைத்தும் பிறருக்குமனவருத்தத்தைத்தந்தும் மாமிசத்தைப்புசித்தும் பொருமை அஞ்சாரமுதலிய நடக்கைகளோடிருந்தும் யமலோகத்தில் நன்றாகத்தண்டிக்கப்பட்டபிறகு வெகுகஷ்டத்தினால் மானிடஜன்மத்தையடையும்போது அந்தஜன்மத்தில் அவர்கள் அழகில்லாமல் விகாரரூபமுள்ளவர்களாகப் பிறக்கிறார்களென்பதில் ஸந்தேகமில்லை' என்றுசொன்னர். உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈஸ்வரரே! சிலர் அழகும் ஐசுவரியமுமில்லாமலிருந்தாலும் மனத்தைக்கவருந்தன்மையுள்ளவர்களாகவும் பெண்களால் நேசிக்கப்படுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர். அது என்ன கருமத்தின்பயன்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்க, மஹேஸ்வரர், தேவியே! சிறந்தவளே! எந்த மனிதர்கள் முந்தியஜன்மத்தில் இனியஸ்வபாவமுள்ளவர்களாகவும் இன்சொல்சொல்லுகிறவர்களாகவும் தம்மனைவிகளிடத்திலேயே திருப்தியுள்ளவர்களாகவும் அநேகமனைவிகளுள் பக்ஷபாதமின்றி இன்னுதபாரியைகளிடத்திலும் தாக்ஷிண்யத்தோடிருப்பவர்களாகவும் ஸ்திரீகளிடத்தில் குணங்களோடுசேர்ந்த குற்றங்களைவெறுக்காமலும் மனிதர்களுக்கு வேண்டினபோது அன்னபானங்களையும் சுவையுள்ளஉணவுகளையும்கொடுப்பவர்களாகவும் தம்மனைவியைவிட்டு வேறுமனைசெல்லாமல் மனவுறுதியுள்ளவர்களாகவும் சிறந்தநடக்கையோடிருக்கின்றனரோ அவர்கள் மறுஜன்மத்தில் மிக்கஅழகுள்ளமனிதர்களாகவே பிறப்பது திண்ணம். தேவியே! அவர்கள் பொருளில்லாதவராயினும் பெண்களால் நேசிக்கப்படுகிறவராகிறார்' என்றுசொன்னர். உமை, 'செல்வமும் போகபாக்கியங்களும் பொருந்தியிருந்தும் சிலர் இன்னுதவர்களாகக் காணப்படுகின்றனரே, அது எந்தக்கர்மத்தின் பயன்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! அதனை நான் உனக்குச் சொல்வேன். ஊக்கத்துடன் முழுதும்கேள். எந்தமனிதர்கள் முன்ஜன்மத்தில் தம்மனைவிகளிடம் விருப்பமில்லா

மல் வெட்கத்தையும் பயத்தையும்விட்டு நினைத்தபடிநடந்துகொண்டும் சொல்லினலும் எண்ணத்தினலும் செய்கையினலும் பிறருக்கு இன்னுதைச்செய்துகொண்டும் யாரையும்காப்பாற்றுமலும் மகிழ்வியாமலும் பெண்களின்மனத்தில் கோபமுண்டாக்கிக்கொண்டும் மற்றும் இவ்வகையானநடக்கைகளுடன்கூடியிருக்கின்றனரோ அவர்கள் மறுபிறப்பில் அழகில்லாதவர்களும் பெண்களின்மனம்வெறுக்கத்தக்கவர்களுமான மனிதர்களாகவே பிறக்கின்றனர். அவர்களுக்குத் தமதுமனைவிகளிடங்கூடப் புணர்ச்சியின்ஸுகம் எவ்வளவுமில்லை' என்றுசொன்னர்.

இருநூற்றுப்பத்தொன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; முன்வினைப்பயன் மறுஜன்மத்தில்வருமென்பது தொடர்ச்சி.)

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈஸ்வரரே! மானிடர்களிலேயே கல்வியும் ஆத்மஜ்ஞானமும் புத்திக்கூர்மையும் பேசுந்திறமையுமுள்ளசிலர் ஒழுங்காகமுயற்சிசெய்தும் தரித்திரர்களாகக் காணப்படுகின்றனரே, அது எந்தக்கர்மத்தின்பயன்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'சிறந்தவளே! அந்தக்காரணத்தையும் உனக்குச் சொல்வேன்; கேள். தேவியே! மங்களங்கள்பொருந்தினவளே! எந்தமனிதர்கள் பூர்வஜன்மத்தில் கல்வியுள்ளவர்களாகவிருந்தும் யாருக்கும்ஆதரவாயிராமலும் அன்னமுதலியவற்றைக்கொடாமலும் தம்காரியத்தைமட்டுமே அதிகமாகப் பாராட்டிக்கொண்டிருந்தனரோ அவர்கள் மறுஜன்மத்தில் அறிவும்புத்திக்கூர்மையுமுள்ளவர்களாயிருந்தும் வறியராகவேயிருக்கின்றனர். விதையாதது முளையாதன்றே?' என்றுசொன்னர். உமை, 'மிக்கசெல்வமுள்ளமனிதர்களும், உலகத்தில் கல்வியும் பகுத்தறிவும் புத்திக்கூர்மையும் மனஉறுதியுமில்லாத வீணர்களானமூர்க்கர்களாகக் காணப்படுகின்றனரே, அது எந்தவினைப்பயன்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'தேவியே! சிறந்தவளே! முன்ஜன்மத்தில் சிறிதும் கல்வியில்லாதவர்களாயிருந்தும், ஏழைகளுக்கு உதவிசெய்வதற்காகத் தானங்களைச்செய்கின்றவரும் பகுத்தறிவில்லாமலிருந்தும் யாருக்கும் தானங்களைக் கொடுப்

பவருமானமனிதர்கள். மறுஜன்மத்தில் அந்தப்பலனை அப்படியே அடைகின்றனர். மனிதன் கற்றிருந்தாலும் கற்காமலிருந்தாலும் தானத்தின்பலனை அடையவேயடைகிறான். தானமானது கல்வியறிவை எதிர்பார்ப்பதில்லை. எவ்வகையாலும் பலனைக் கொடுத்தேதவிடும்' என்று சொன்னார். உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! மனிதர்களிலேயே சிலர் புத்திக்கூர்மையுள்ளவர்களாகவும் கேட்டதுமறவாதவர்களாகவும் எழுத்துக்களைத் தெளிவாக உச்சரிப்பவராகவுமிருக்கின்றனரே, அது எந்தக்கர்மத்தின்பயன்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்று கேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! சிறந்தவளே! முன்ஜன்மத்தில் ஞானத்திற்காகக் குருவுக்கு நன்முகப்பணிவிடைகள்செய்து அந்தக்குருவினிடமிருந்து முறைப்படி வித்தையைப்பெற்றுக்கொண்டு பிறருக்கும் அம்முறை தவறுமலே அதனைக்கற்பித்துக்கொண்டும் ஞானத்தினால் கர்வப்படாமலும் மனத்திலும் வாக்கிலும் அடக்கமுள்ளவர்களாகவும் முயற்சி செய்து உலகத்தில் கலைகளை நிலைபெறச்செய்கின்றவர்கள் மரணமடைந்து மறுஜன்மத்தில் புத்திக்கூர்மையும் கேட்டதுமறவாமையும் தெளிவானவாக்குமுள்ளவராகிறார்' என்றுசொன்னார்.

உமை, 'தேவரே! மற்றும் சிலமனிதர்கள் பலவகைகளால் முயற்சிசெய்தும் கேள்வியும் கல்வியும் புத்திக்கூர்மையுமில்லாதவர்களாகக் காணப்படுகின்றனரே, அது எந்தக் கர்மத்தின்பயன்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'தேவியே! சிறந்தவளே! எந்தமனிதர்கள் பூர்வஜன்மத்தில் கல்வியினால் கர்வமடைந்தும் தற்புகழ்ச்சிசெய்துகொண்டும் ஞானத்தையடைந்ததனால் தாமென்ற அகங்காரங்கொண்டும் மதிகெட்டவர்களாகி எப்போதும் பிறரைவிடத் தங்களுக்கு வித்தை அதிகமென்றுசொல்லிக்கொண்டும் பிறரைத்தூஷித்துக்கொண்டும் பிறர்மேல் பொறுமைப்பட்டுக்கொண்டும் இருக்கின்றனரோ அப்படிப்பட்டவர்கள் அநேகஜன்மங்களுக்குப்பின் ஒருமானிடதேகத்தையெடுத்து இடைவிடாமல்முயற்சிசெய்தும் புத்தியில்லாமலும் கல்வியில்லாமலும் இருக்கின்றனர்' என்று சொன்னார். உமை, 'பகவானே! சிலமனிதர்கள் எல்லாநற்குணங்களும்பொருந்திக் குணமுள்ளபிள்ளைபெண்டிர்களோடும் வேலைக்காரிகள் வேலைக்காரர்களோடும் ஆடையாபரணங்கள்முதலியவற்றோடும் சிறந்தபுத்தியோடும் வீடு செல்வம்அதிகாரங்களோடும்விளங்கி அழகு ஆரோக்கியம் பலம் தனதானியங்கள் மாடமாளிகைகள் தேர்கள் குதிரைகள்முதலான மனத்திற்கினிய பலவகைப் போகங்களெல்லாம் நிர

ம்பி வியாதிமுதலியபாதைகளின்றிச் சுற்றத்தாருடன்கூட இடையூறின்றித் தினந்தோறும் மகிழ்ந்திருக்கின்றனரே, அது எந்தக்கர்மத்தின்பயன்? சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! சிறந்தவளே! அதையும் முழுதும்உனக்குச் சொல்வேன். ஊக்கத்துடன் கேள். எந்தமனிதர்கள், முன்ஜன்மத்தில் செல்வமிருந்தாலும் இல்லாவிட்டாலும் கல்வியும் நல்லொழுக்கமும் பொருந்தினவர்களாகவும் தானத்திலும் கல்வியிலும் விருப்பமுள்ளவர்களாகவும் எப்போதும் பிறருடையஇங்கிதத்தையறிந்தே கொடுக்கவேண்டுமென்ற நிச்சயமுள்ளவர்களாகவும் ஸத்தியத்தையும் பொறுமையையும்விடாதவர்களாகவும் பொருளாசை பெண்ணாசையில்லாதவர்களாகவும் பாத்திரமறிந்து கொடுப்பவர்களாகவும் விரதநியமங்களைச் செய்துகொண்டிருப்பவர்களாகவும் பிறர் துயரத்தைத் தம்துயரம்போல நினைத்து விலக்குகிறவர்களாகவும் இனியஒழுக்கமும் சிறந்த ஆசாரமுமுள்ளவர்களாகவும் தேவர்களையும் பிராம்மணர்களையும் பூஜிப்பவர்களாகவும் மற்றுமிவ்வகையான குணங்களுள்ளவர்களாகவுமிருக்கின்றனரோ அவர்கள் மறுஜன்மத்தில் தேவலோகத்திலும் பூலோகத்திலும் தம்புண்ணியத்தையனுபவிப்பவர்களாகப் பிறக்கின்றனர். எப்படிப்பட்ட நன்மைகள்பொருந்தினவர்களாகச் சொல்லப்பட்டனரோ அப்படிப்பட்டகல்யாணகுணங்களுள்ளவர்களாகவே எல்லாரும் மானிடலோகத்தில் பிறக்கின்றனர். அழகு, பொருள், தைரியம், ஆயுள், ஸுகம், அதிகாரம், தேகபலம், கல்விஆகியஎல்லாநலங்களும் தானத்தினாலன்றி வேறுவகையாலுண்டாவதில்லை. அழகியமுகமுள்ளவளே! எல்லாம் தவத்தினாலும் தானத்தினாலுமுண்டாகின்றவையென்று அறி' என்றுசொன்னார். உமை, 'மனிதர்களுக்குள்ளேயே சிலர் வறியர்களாகவும் மிகத்துயரமுள்ளவர்களாகவும் கொடுப்பதும் அனுபவிப்பதும்அற்றவர்களாகவும் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம்என்கிற மூன்று பயங்களுள்ளவர்களாகவும் பிணியினாலும்பசியினாலும்வருந்துகிறவர்களாகவும் கெட்டமனிஷிகளால்அவமதிக்கப்படுகிறவர்களாகவும் எப்போதும் இடையூற்றையேபார்ப்பவர்களாகவும் காணப்படுகின்றனரே, அது எந்தக் கர்மத்தின்பயன்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'தேவியே! சிறந்தவளே! எந்தமனிதர்கள் முன்ஜன்மத்தில்அஸுரஸ்வபாவமுள்ளவர்களாய்க் கோபமும்பொருளாசையுங்கொண்டு அன்னமிடாமலும் ஆசாரமில்லாமலும் நாஸ்திகர்களும் சூதர்களும் மூர்க்கர்களும் தம்மயத்தையே பாராட்டிப் பிறரைத்தன்புறுத்துகிறவரும்

பிராணிகளிடத்தில் பெரும்பாலும்தயையற்றவரும் மற்றும்இவ்வகை ஒழுக்கமுள்ளவர்களுமாக இருக்கின்றனரோ அவர்கள் கடைசியாகப் பின்னொருஜன்மத்தில் மானிடராகப்பிறந்தபோது தாம் முன்செய்த தவறுதலினால் எல்லாவகைத்துன்பங்களாலும் பீடிக்கப்பட்டவராகி ரூர். முன்னே எவ்வகையாகஇருந்தனரென்றுசொல்லப்பட்டனரோ அவ்வகையாகவே பின்னும் பிறக்கின்றனர். தாம்செய்த நல்வினையும் தீவினையும் முறையே ஸுகம்துக்கம்என்னும்பலன்களைஉண்டாக்கு கின்றன. தேவியே! இதனையும் உனக்குச் சொன்னேன். இன்னும் என்ன கேட்கவிரும்புகிறாய்?' என்றுகேட்டார்.

இருநூற்றிருபதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வர ஸம்வாதம் தொடர்ச்சி ; முன்னைப்பயன் மறுஜன்மத்தில் வருமென்பது தொடர்ச்சி.)

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈச்வரரே! என் னுடையஅன்பைவிருத்திசெய்கிறவரே! பிறவிக்குருடரும் பிறந்தபின் கண்போனவரும் (உலகத்தில்) காணப்படுகின்றனரே, அதுஎன்னகரு மப்பயன்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'சிறந்தவளே! அன்புள்ளவளே! ஆ! ஆ! உனக்குஅந் தக் காரணத்தைச் சொல்வேன்; கேள். எந்தமனிதர்கள் முன்ஜன்மத் தில் காமத்தினால் பிறர்வீடுகளில்அலைந்துகொண்டும் பிறர்மனைவிகளைக் கெட்ட (எண்ணத்துடன்) கண்ணால்பார்த்துக்கொண்டும் கோபமும் ஆசையும் மேற்கொண்டவர்களாகி மனிதர்கள் கண்ணைக்கெடுத்தும் பொருள்களின்இலக்கணங்கள்தெரிந்தும் அவற்றைப் பிறருக்கு மாறு கத் தெரிவித்தும்மற்றும்இவ்வகைநடக்கைகளோடுமிருக்கின்றனரோ அவர்கள் இறந்தபின் யமதண்டனையினால்தண்டிக்கப்பட்டு வெகுகா லம் நரகத்திலிருந்து மானிடஜன்மத்தையடையும்போது பிறவிக்குரு டர்களும் பிறந்தபின் கண்கெட்டவர்களும் நேத்ரரோகமுள்ளவர்க ளுமாக ஆகின்றனர். அதில் சந்தேகமில்லை' என்றுசொன்னார்.உமை, 'சிலமனிதர்கள் பிறந்ததுமுதலாகவும் மற்றும்சிலர் பிறந்தபின்ஏதோ காரணம்பற்றியும், பல கழுத்து கன்னம் இவற்றிலுள்ளநோய்களாகிய முகரோகங்களினால் எப்போதும் அதிகமாகப் பீடிக்கப்பட்டவராகக் காணப்படுகின்றனரே, அது எந்தக்கருமப்பயன்? எனக்குச் சொல்

லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! ஆ! ஆ! உனக்குச் சொல்வேன். ஊக்கத்துடன்கேள். தேவியே! நாவினால் மிக்ககடுஞ்சொல்லையும் பெரியோர்கள்மேலும் பிறர்மேலும்பொய்யையும் கொடும்பழியையும்சொல்லுகிற கெட்டபேச்சுக்காரரும் கோபத்தினல்பிறர்நாவைக்கெடுக்கிறவரும் தம்காரியத்திற்காகப் பொய்யை மிகுதியாகச்சொல்லுகிறவருமான மனிதர்களுக்கு நாவில் பிணிகள் உண்டாகின்றன. கெடுதலைக்கேட்பவரும் பிறர்செவிகளைக்கெடுப்பவரும் பின்பிறப்பில் பலவகைக்காதுநோய்களை அடைகின்றனர். பல்நோய் தலைநோய் காதுநோய் துயரப்படுத்தும்மற்றுமுள்ளநோய்கள் அனைத்தும் வினைப்பயன்' என்றுசொன்னர். உமை, 'தேவரே! மனிதர்களிலேயே சிலர் மார்புநோய் பக்கசூலை வயிற்றுநோய் மற்றுமுள்ளகொடிய சூலைநோய்கள்இவற்றினல் பீடிக்கப்பட்டுத் துன்பப்படுகின்றனரே, அது என்னவினைப்பயன்? எனக்கு உரைக்கக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! சிறந்தவளே! எந்தமனிதர்கள் முன்ஜன்மத்தில் காமக்குரோதங்கள்மேற்கொண்டவர்களாகவும் பிறரைஎதிர்பாராமல் தாமேஆகாரங்களைப்புசித்தும் நம்பினவர்களுக்குஉண்ணத்தகாதஉணவுகளையும்பக்ஷணங்களையும் விஷத்தையும்கொடுத்தும் ஆசாரங்களையும் மங்களங்களையும்விட்டும்மற்றுமிவ்வகைநடக்கைகளோடுமிருந்தனரோ அவர்கள் மறுஜன்மங்களில் எப்போதாவது மானிடஜன்மத்தையடைந்தபோது அந்தஅந்தப்பலபிணிகளினல் பாதிக்கப்பட்டுத் துன்பப்படுகின்றனர். தேவியே! அவர்கள் இப்போது இப்படியாவதற்குக் காரணத்தை முன்னமே செய்துகொண்டனர்' என்றுசொன்னர். உமை, 'தேவரே!, மனிதர்கள் கல்லடைப்பு மதுமேகமுதலான ஆண்குறியைச்சேர்ந்தவியாதிகளினல் எந்தக்காலமும் உபத்திரவிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். அது எந்தக்கருமப்பயன்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'தேவியே! சிறந்தவளே! அன்புள்ளவளே! எந்தமனிதர்கள் முன்ஜன்மத்தில் காமத்தினல் பிறர்மனைவிகளைக் கைப்பற்றியும் திர்யக்ஜாதிகளிலும்புணர்ச்சிசெய்யப் பிரார்த்தித்தும் மணமில்லாதபெண்களையும் விதவைகளையும் பலவந்தமாகச்சேர்ந்தும் அழகினல்கர்வப்பட்டும் துர்த்தர்களாகவிருந்தனரோ அவர்கள் மரணமடைந்து பின்னொருஜன்மத்தில் மானிடதேகத்தையடைவாராயின் அப்போது ஆண்குறியிலுள்ள கொடியவியாதியினல் பாதிக்கப்படுவார்' என்றுசொன்னர். உமை, 'பகவானே! சிலமனிதர்கள் உலர்ந்து இளைத்தவராகக் காணப்படுகின்றனர். அது

என்னகருமப்பயன்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள், மஹேஸ்வரர், 'தேவியே! சிறந்தவளே! எந்தமனிதர்கள் பூர்வ ஜன்மத்தில் மாமிசத்தில் மிக்கஆவலுள்ளவர்களும் தமக்குமட்டும் சுவையுள்ளவற்றைவிரும்பி அயலார்புசிப்பதைக்கெடுப்பவரும் அயலார்ஸுகங்களில்பொறுமையும்துயரமும்மற்றும் இவ்வகைஒழுக்கமுமுள்ளவருமாக இருந்தனரோ அந்தமனிதர்கள் பின்ஜன்மத்தில் தேகசோஷவ்யாதியுள்ளவர்களாய் நரம்புக்கோவையாகவிருந்து தீவினைப்பயனையனுபவிப்பவராகிறார். இது திண்ணம்' என்றுசொன்னர். உமை, 'பகவானே! சிலமனிதர்கள் தொண்டைநோயுள்ளவர்களாகக் கஷ்டப்படுகின்றனரே, அது எந்தக்கருமப்பயன்? சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'தேவியே! சிறந்தவளே! எந்தமனிதர்கள் முன்ஜன்மத்தில் மதிகெட்டு அடிப்பது கொல்வது கட்டுவதுஆகிய வீண்தண்டனைகளினால் பிறருடைய உருவையழித்தும்விருப்பத்தைக்கெடுத்தும் உபத்திரவமானஆகாரத்தைக்கொடுத்தும் பகையினாலும்பொருளாசையினாலும் மனம்கெட்டு வைத்தியம்செய்தும் பிராணிகளைக்கொல்வதில்தயையற்றும் மலங்களைப்போட்டு மனத்தைக்கெடுத்தும் மற்றும்இவ்வகைகடைகளோடும் இருந்தனரோ அவர்கள் பின்னொருஜன்மத்தில் மானிடதேகம் எடுப்பாராயின் அதில் பலவகைத்தொண்டைநோய்களினால் மூடப்பட்டுக் கஷ்டத்தையடைகின்றனர். சிலர், புண் குஷ்டம் வெண்குஷ்டம் தோலைச்சேர்ந்தபடைமுதலியவற்றினால் பலவகையாகக் கஷ்டமடைகின்றனர். தேவியே! எவன் எப்படிச்செய்திருக்கிறானோ அப்படியே அவன் பலன் அடைகிறான்' என்றுசொன்னர். உமை, 'பகவானே! சிலமனிதர்கள் அங்கஹீனர்களாகவும் மூடவர்களாகவும்இருப்பது என்னகருமப்பயன்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! முன்ஜன்மத்தில் ஆசையினாலும் அஜ்ஞானத்தினாலும் மூடப்பட்டுப் பிராணிகளைத்துன்பஞ்செய்வதற்காக ஆயுதங்களினால் அவற்றின்அங்கங்களை அறுத்தும் அவற்றின்செய்கைகளைத்தடுத்தும் அவற்றின்விருப்பங்களைக்கெடுத்தும் மற்றும்இவ்வகைச்செய்கைகளைச் செய்துமிருக்கும் மனிதர்கள் இறந்து மறுஜன்மத்தில் இயற்கையாகவாவது பிறந்தபின் ஒருகாரணத்தினாலாவது அங்கஹீனர்களாகவும் மூடவர்களாகவும் ஆகிறார்; ஐயமில்லை' என்றுசொன்னர். உமை, 'பகவானே! சிலமனிதர்கள் புண்களாலும் [1]பிளவைகளாலும்உபத்திரவிக்கப்பட்டவர்களா


1 'பிடகை:' என்று பாடம்கொள்ளப்பட்டது.

கக்காணப்படுகின்றனரே, அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்று கேட்டனள். மஹேஸ்வரர், 'தேவியே! சிறந்தவளே! பூர்வஜன்மத்தில் கைக்குத்துக்களினால் கடுமையாகக்குத்தியும் சூலங்களினால் எறிந்தும்கிழித்தும்பிளந்தும்மனிதர்களின்தேகப்பூட்டுகளைஉடைத்தும் மற்றுமிவ்வகைச்செய்கைகளைச்செய்துமிருந்த கொடியபாவிகள் பிந்தியஜன்மத்தில் புண்களாலும் பிளவைகளாலும் பீடிக்கப்பட்டு மிகத்துன்பப்படுகின்றனர்' என்றுசொன்னர். உமை, 'பகவானே! தேவரே! சிலமனிதர்கள் காலில் எப்போதும் நோயுள்ளவர்களாகக்காணப்படுகின்றனரே, அதுஎந்தவினைப்பயன்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டனள். மஹேஸ்வரர், 'தேவியே! சிறந்தவளே! எந்தமனிதர்கள் பூர்வஜன்மத்தில் கோபமும் லோபமும் மேற்கொண்டு தேவதையிருக்கும்இடத்தைக் கால்களால் உதைத்துத் தள்ளியும் முழங்கால்களாலும் குதிகால்களாலும் பிராணிகளுக்கு ஹிம்ஸையைச்செய்தும் மற்றும்இவ்வகைகடையுள்ளவர்களாகவுமிருந்தனரோ அவர்கள் மறுஜன்மத்தில் கால்வெடிப்புமுதலியபலவகைப் பாதரோகங்களினால் பாதிக்கப்படுகின்றனர்' என்று சொன்னர். உமை, 'பகவானே! பூமியில் அனேகமனிதர்கள் தனவான்களாயிருந்தாலும் ஏழைகளாயிருந்தாலும் வாதரோகங்களும் பித்தரோகங்களும் வாதபித்தசிலேஷ்மங்கள்சேர்ந்த பலவகைஸந்நிபாதரோகங்களும் தனித்தனியாகவும் ஒன்றுசேர்ந்தும் பீடிப்பதனால்மிகத்துயரப்படுகின்றனரே,அதுஎந்தவினையின்பயன்? அதனைஎனக்குச்சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'சிறந்தவளே! அன்புள்ளவளே! அந்தக்காரணத்தை உனக்குச் சொல்வேன்; கேள். எந்தமனிதர்கள் பூர்வஜன்மத்தில் அஸுரத்தன்மையையடைந்து யாருக்கும் உட்படாமல் கோபித்துக்கொண்டும் குருவைப்பகைத்தும் எண்ணத்தினாலும் சொல்லினாலும் செய்கையினாலும் பிறருக்குத்துன்பத்தை உண்டுபண்ணியும் பிராணிகளிடத்தில் தயையில்லாமல் எப்போதும் வெட்டியும் அடித்தும் குத்தியும் மற்றும்இப்படிப்பட்டசெய்கைகள் செய்துமிருந்தனரோ அவர்கள் பின்னொருபிறப்பில் மானிடதேகத்தையடைவாராயின் அப்போது பலகொடியநோய்களினால் பீடிக்கப்படுவார். சிலர் வாயுவினாலும் சிலர்காசத்தினாலும் மற்றும்சிலர் ஜ்வரம் அதிசாரம் தாகம்இவற்றினாலும் பலவகைக்கால்புற்றுக்களாலும் கபத்தினாலும் காலிலுள்ளபலவகைரோகங்களினாலும் புண், குஷ்டம், பகந்தரம்என்னும்வியாதிகளினாலும் பீடிக்கப்படுகின்றனர். செல்வ

முள்ளவராயிருந்தாலும், ஏழைகளாயிருந்தாலும் வியாதிகளால் வருத்தப்பட்டவராகவே காணப்படுகின்றனர். இப்படி தாம்செய்தகர்மத்தைத்தான் அந்தஅந்தஜன்மங்களில் அனுபவிக்கின்றனர். செய்த கர்மத்தின்பலனைத்தடுப்பதற்கு யாராலும்இயலாது. தேவியே! இதனையும் உனக்குச்சொன்னேன். இன்னும் என்ன கேட்கக்கருதுகிறாய்?' என்றுவிஞவினர்.

இருநூற்றிருபத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)



(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி ; முன்னினைப்பயன் மறுஜன்மத்தில்வருமென்பது தொடர்ச்சி.)

உமை, 'பகவானே! தேவருக்குக்தேவரே! ஈச்வரரே! பூதங்களைக்காப்பவரே! உமக்குநமஸ்காரம். தேவரே! மனிதர்களில் சிலர் சிறியஉறுப்புள்ளவர்களாகவும் கோணலுறுப்புள்ளவர்களாகவும் ஒற்றைக்கை கொண்டிகளாகவும் கூனர்களாகவும் குள்ளர்களாகவும் காணப்படுகின்றனரே, அது என்னகருமத்தின்பயன்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டனள். மஹேச்வரர், 'தேவியே! சிறந்தவளே! முன்ஜன்மத்தில் பொருளாசையினால் மதிகெட்டு விற்றல்வாங்கல்களுக்காகத் தானியங்களின் அளவுகளையும் நெய்யளவுகளையும் மாறுபாடுசெய்தும் விலையை வித்தியாஸப்படுத்தியுமிருந்த மனிதர்களும், கோபத்தினால் பிறருக்கு அங்கஹீனம்செய்தவர்களும்,மாம்ஸம்புசித்தமூர்க்கர்களும், விஷயங்களை ஸரியாகத் தெரிவியாதவர்களும்,மற்றும்இவ்வகையானகடையுள்ளமனிதர்களும்,பின்ஜன்மத்தில் உறுப்புக்கள்குறைந்தவர்களும் குறளர்கூனர்களுமாகின்றனர்' என்று சொன்னார். உமை, 'பகவானே! மனிதர்களிற்சிலர் பித்துப்பிடித்தவரும் பேய்பிடித்தவருமாக இங்குமங்கும் காணப்படுகின்றனர். அது என்னகர்மத்தின்பயன்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்று கேட்டாள். மஹேச்வரர், 'தேவியே! சிறந்தவளே! பூர்வஜன்மத்தில் கர்வமும் நான்என்கிறஅகங்காரமும் படைத்துப் பிறரைப் பலவிதமாகப்பேசியும் மிகநகைத்துமிருந்தமனிதர்களும் பொருளாசைபற்றி மயக்கத்தைத்தரும்இன்பப்பொருள்களினால் பிறரைமயக்கினவரும் கிழவர்களையும் மேலோர்களையும் வீணுகப்பரிகாசம்செய்தமூர்க்கர்களும் சாஸ்திரங்கள்கற்றுணர்ந்து சதுரர்களாகவிருந்தும் எப்

போதும்பொய்சொல்லிவந்தவரும் மற்றும்இவ்வகைநடையுள்ளவர்க ளும் பின்ஜன்மத்தில் பித்தரும் பேயருமாகிரூசென்பதில் ஸந்தேக மில்லை' என்றுசொன்னர். உமை, 'பகவானே ! சிலமனிதர்கள் பிள் ளையில்லாமல் மிகத்துயரப்படுகின்றனர் ; பலவகைகளில்முயற்சிசெய் தும் ஸந்ததிகளையடைவதேயில்லை. அது எந்தக்கர்மத்தினலென் பதை எனக்குச்சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே ! சிறந்தவளே ! பூர்வஜன்மத்தில் எந்தப்பிராணிகளிடத்தி லும் தயையில்லாமலும் சிசுஹத்திசெய்துகொண்டும் மிருகங்களை யும்பக்ஷிகளையும்புசித்துக்கொண்டும் பெரியோரைப் பகைத்தும் பிறர் பிள்ளைகள்மேல் பொறுமைகொண்டும் சாஸ்திரத்திற் சொல்லியபடி அஷ்டகைமுதலான சிராத்தங்களினல் பித்ருக்களைப்பூஜியாமலும் மற்றும் இவ்வகை நடைகளோடுமிருந்தமனிதர்கள் பின்ஜன்மங்களில் வெகுகாலங்கழித்து மானிடப்பிறப்பையடைந்தபோது ஸந்ததியில் லாமலும் புத்ரசோகத்தோடுமிருப்பாரென்பதில் ஸந்தேகமில்லை' என்றுசொன்னர். உமை, 'பகவானே ! சிலமனிதர்கள் பயமுள்ள விடங்களில்வலிந்துக்கொண்டும் எப்போதும்பயமும் துயரமுமுள்ள வர்களாகவும் ஏழைகளாகவும் தவஞ்செய்துகொண்டும் மிகக் கஷ்டப் படுகின்றனர். அது எந்தக்கர்மத்தினல் ? அதனை எனக்குச்சொல்லக் கடவீர்' என்றுகேட்டனள். மஹேஸ்வரர், 'தேவியே ! பூர்வஜன்மத் தில் எப்போதும் பிறரைவைதுகொண்டும் பயமுறுத்திக்கொண்டும் பலதீங்குகள்செய்துகொண்டுமிருந்தவரும் ஏழைகளுக்குத் தாம்நினை த்தபடி வட்டிக்குக்கடன்கொடுத்து வட்டியைக்கேட்பதற்காக எப் போதும் போய்க்கொண்டிருந்தவருமான மனிதர்களைக்கண்டு கடன் வாங்கினவர்கள் தங்கள்பொருளைப்பற்றி நடுங்கினர். ஏழைகளிடத் தில் தமக்குவேண்டியஅதிகவட்டி கேட்கலாகாது. சிலர் நாய்களைக் கொண்டுவேட்டையாடிக் காட்டிலுள்ளமிருகங்களை வெருட்டுகின்ற னர். அப்படியே சிலர் பலவகைகளால் பிராணிஹிம்ஸைகளைச் செய் கின்றனர். சிலர்வீடுகளில் நாய்கள் மனிதர்களை வீணுகப் பயப்படு த்துகின்றன. அன்புள்ளவளே ! இப்படிப்பட்டநடையுள்ளவர்கள் மரணமடைந்தபின் யமதண்டனையினல் பீடிக்கப்பட்டு வெகுகாலம் நரகத்திற்கிடந்து பின் மானிடஜன்மத்தையடையும்போது அவர்கள் அநேககஷ்டங்களும் அநேகஹிம்ஸைகளும்நிரம்பின கெட்டதேசத் திற்பிறந்து எதற்கும்பயந்து துயரப்படுகின்றனர்' என்றுசொன்னர். உமை, 'பகவானே ! சிலமனிதர்கள் செல்வமும் கல்வியுமுள்ளவர்க ளாகவிருந்தும் மிலேச்சராஜ்யங்களில் அவர்களின் அதிகாரத்திற்குட்

பட்டிருக்கின்றனர். அது என்னகர்மத்தினால்? எனக்குச் சொல்லக் கடவீர்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'தேவியே! மனிதர்கள் பூமியில் தனதானியங்கள்நிரம்பப்பெற்றுச் சிரத்தையில்லாமையினால் முறைதப்பித் தானஞ்செய்கின்றனர். சிறந்தவளே! ஸ்நானசுத்தங் களையும் மங்களாசாரங்களையும்விட்டுத் தகுதியற்றவருக்குத் தானஞ் செய்பவரும் பெருமைக்காகவும்பிறரை அவமதிப்பதற்காகவும்தானம் செய்பவரும் மற்றுமிவ்வகை நடையுள்ளவர்களுமானமூர்க்கர்கள், காடுகளடர்ந்து போவதற்குமுடியாமல் மிலேச்சர்கள்நிரம்பின பற்பல கெட்டதேசங்களிற்பிறந்து மிலேச்சராஜ்யத்தில் சார்ந்திருக்கின்ற னர்' என்றுசொன்னார். உமை, 'பகவானே! பகதேவதையின்நேத் திரத்தையழித்தவரே! பூமியிலுள்ளமனிதர்களில் சிலர் சக்தியற்ற வர்களாகவும் ஆண்மையில்லாதவர்களாகவும் பயன்படாதவர்களாக வும் இழிதொழிலில்ஆசையுள்ளவர்களாகவும் கீழ்மக்களோடுசினேக முள்ளவர்களாகவும் இழிந்தவராகவும் காணப்படுகின்றனர். அது என்னகர்மத்தினால்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட் டாள். மஹேச்வரர், 'சிறந்தவளே! எனக்கன்புள்ளவளே! அந்தக் காரணத்தை உனக்குச்சொல்வேன்; கேள். முன்ஜன்மத்தில் கொடுந் தொழில்களைவிரும்பிப் பசுக்களின்விதையையடித்து ஜீவித்துக்கொ ண்டும் கோபத்தினால் மனிதர்களுக்குஆண்மையைக்கெடுத்துச் சந் தோஷப்பட்டுக்கொண்டும் ஸ்திரீகளிடத்தில் முறைதப்பி இஷ்டப்படி தூர்த்தர்களாகத்திரிந்தும் பகைத்தும் கோட்சொல்லியும் பிறருடைய ஸ்திரீஸுகங்களுக்கு இடையூறுசெய்தும் மற்றுமிவ்வகைநடையோ டிருந்தும்வந்த மனிதர்கள் மரணமடைந்தபின் யமனால்தண்டிக்கப் பட்டு வெகுகாலம் நரகத்தில்கிடந்து பிறகு ஒருஜன்மத்தில் மானிட தேகத்தையடைவராயின் அவர்கள் திறமையற்றவர்களும் அலிகளும் உதவியற்றவர்களும் இழிதொழில்செய்பவர்களும் வெட்கங்கெட்ட வர்களும் சுறுசுறுப்பில்லாதவர்களும் ஆகின்றனர்; தம்செய்கை யினால் பிறர்துயரத்தைவிலக்கி அவர்களை நன்றுகப்பார்ப்பாராயின் அந்தப்பாவத்திலிருந்து விடுபடுவார். அவர்கள் பின்ஜன்மத்திலும் தவறுவராயின் நரகத்திலேயே விழுவார். தேவியே! புருஷர்களுக்கு உண்டாவதுபோலவே பெண்களுக்கும் எல்லாம் தம்கருமங்களினால் உண்டாகின்றன. தேவியே! இதனை உனக்குச் சொன்னேன். இன் னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றுவினவினார்.

இருநூற்றிருபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி ; முன்வினைப்பயன் மறுஜன்மத்தில்வருமென்பது தொடர்ச்சி.)

உமை, 'பகவானே! தேவருக்குக்தேவரே! ஈச்வரரே! சூலத்தைக்கையில்பிடித்தவரே! விருஷபத்வஜரே! பெண்களில்சிலர் விலைமாதர்களாகி இழிந்தொழிலிலிருப்பவர்களாகக் காணப்படுகின்றனரே; அது என்னகருமத்தினலென்பதை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'தேவியே! எந்தமானிடப்பெண்கள் காமவிருப்பத்தினல் மதிகெட்டுக் கணவர்களுக்குஅடங்காமலும் கணவர்களுக்குஇன்னுதுசெய்தும் ஆசாரத்தையும் வெட்கத்தையும் மறந்தும் நினைத்தபடிநடப்பவராகவும் இன்னும்இதுபோன்ற நடையுள்ளவராகவும் இருந்தனரோ அவர்கள் யமலோகத்தில் மிக்கதண்டனைகள்அடைந்து ஒருகால் மானிடப்பிறப்பைப்பெறுவராயின் பலபுருஷர்களுக்குப்பொதுவாயுள்ள விலைமாதர்களாவார். புருஷர்களைத்தேடிப்போதலென்னும் தொழில் பெண்களுக்கு மிக்க கஷ்டமென்று நினைக்கப்படுகிறது. தேவியே! அதுமுதல் அவர்கள் விழுந்தேபோகின்றனர். ஸந்தேகமில்லை. அவர்கள் அந்த நடைக்காக மனத்தில் துயரப்படுவாராயின் நன்மைபெறுவார்' என்றுசொன்னர். உமை, 'பகவானே! தேவருக்குக்தேவரே! ஈச்வரரே! உலகத்தில் மானிடச்சிறுமிகள் எல்லாமங்களகாரியங்களுக்கும் முழுதும்விலக்கான விதவைகளாகக் காணப்படுகின்றனரே, அது என்ன கர்மத்தினல்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'தேவியே! எந்தமானிடப்பெண்கள் பூர்வஜன்மத்தில் விவேகமில்லாமல் தம்கணவர்களின் குடும்பங்களைவீணேகெடித்தும் சிறிதும்தயையில்லாமல் கணவர்களுக்கு விஷத்தாலும் தீயாலும் தீங்குசெய்தும் அவர்களைப்பகைத்து வேறுபுருஷர்களைச் சேர்ந்துமிருக்கின்றனரோ அப்படிப்பட்டநடையுள்ளவர்கள் யமலோகத்தில் மிக்கதண்டனைஅடைந்து வெகுகாலம்நரகத்தில் கிடந்து தற்செயலாய் மானிடஜன்மத்தையடைந்தால் அதில் போகங்களில்லாதவிதவைகளாகின்றனர்' என்றுசொன்னர்.

உமை, 'பகவானே! உலகத்தில் பெண்கள் புருஷரும் சுற்றத்தாருமிருக்கப் [1]பாஷண்டமதத்தைச்சார்ந்து துறவிகளாகக் காணப்

1 நாஸ்திகமதமுதலியவை.

படுகின்றனரே, அது என்னதீவினையினால்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'பூர்வஜன்மத்தில் பொருளாசையும் அவிவேகமும்கொண்டு மனங்கெட்டுப் பிறர்பொருளில் ஆசைவைத்து அவற்றைத்திருடுகிறவரும் பொருமைப்பட்டு மாற்றாரைக்கெடுப்பவரும் பிறர்மேன்மைபொறுதவரும் எப்போதும்கோபிப்பவரும் சுற்றத்தாருக்குப்பயன்படாதவருமாகவிருந்த பெண்கள் மறுஜன்மத்தில் நல்லொழுக்கத்தைவிட்டுப் பாஷண்டமதத்தைச் சார்ந்து துறவிகளாகின்றனர். ஸந்தேகமில்லை' என்றுசொன்னர். உமை, 'பகவானே! சிலமனிதர்கள் கைத்தொழிலேஜீவனமாகக்கொண்டு இழிவானவேலைகளைச்செய்பவராகக் காணப்படுகின்றனரே, அது எந்தவினைக்கேட்டினாலென்பதை எனக்குச்சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'அன்புமிக்கதேவியே! எந்த மனிதர்கள் பூர்வஜன்மத்தில் வணக்கமில்லாமலும் தம்மையேபுகழ்ந்துகொண்டும் கர்வமும் கோபமுமுள்ளவர்களாகவும் தங்கலமே பெரிதாய்க்கொண்டவர்களாகவும் இருந்துவந்தனரோ அவர்கள் பின்ஜன்மத்தில் கைத்தொழில்களிகளாகவும் ஆடுகிறவர் பாடுகிறவர்களாகவும் நாவிதர்களாகவும் வந்திகளாகவும் அரசர்களுக்குக் காலம்தெரிவிப்பவர்களாகவும் இப்படி பலவிதமானகீழ்த்தொழில்செய்து ஜீவிக்கின்றனர். மூன்றினஜன்மத்தில் பிறரை அவமதித்ததின்பலனாக அவர்கள் பிறரிடம் வேதனம்வாங்கிக்கொண்டு அவர்களுக்கு அலங்காரங்களைச்செய்து ஜீவிக்கின்றனர்' என்றுசொன்னர்.

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈஸ்வரரே! மனிதர்களிலேயேசிலர் அடிமைகளாகி எப்போதும் எல்லாவேலைகளையும் செய்துகொண்டும் அடி பயமுறுத்தல்முதலான எல்லாஉபத்திரவங்களையும்ஸஹித்துக்கொண்டுமிருப்பவர்களாகக்காணப்படுகின்றனரே, அது எந்தத்தீவினையினால்? எனக்குச்சொல்லக்கடவீர்' என்று கேட்டாள். மஹேஸ்வரர், 'சிறந்தவளே! அதன்காரணத்தை உனக்குச்சொல்வேன்; கேள். தேவியே! எந்தமனிதர்கள் பூர்வஜன்மத்தில்பிறர்பொருளைப்பறித்தும், வட்டிக்குவாங்கினகடனும் பயிரிடுவதற்கிடைத்ததும் நிக்ஷேபமாகவும்அடைக்கலமாகவும்கொடுக்கப்பட்டதும் தவறிமறந்துவிடப்பட்டதுமான பிறர்தனத்தை அபகரித்தும், பிறரையடித்தும், கட்டியும், துயரப்படுத்தியும், அடிமையாகச்செய்தும் வந்தனரோ அவர்கள் மரணமடைந்தபின் யமதண்டனைகளையடைந்து தற்செய்லாகமானிடப்பிறப்பையடைந்தபோது பிறந்தது முதல் எல்லாவகையாலும் அடிமைகளாவார். அவர்கள் யாருடைய

தனங்களை அபகரித்தனரோ அவர்களுக்கு வேலைகளைத் தம்பயம் தீரும்வரை செய்கிறார்களென்பது திண்ணம். தனங்களையபகரித்த மற்றும்சிலர் பசுக்களாகப் பிறக்கின்றனர். அவர்கள் முன்ஜன்மத் தில்செய்ததவறுதலிஞல்உண்டானபாவம் அப்படித்தான் கழியும். இதைத்தவிர வேறுவகையில் கருமத்தை [1] விடுவிக்கத் தேவர்களா லும் அஸுரர்களாலுங்கூட முடியாது. பொருளைப் பறிகொடுத்தவரை எல்லாவகைகளாலும் திருப்திசெய்விப்பதுதான் பாவத்தைவிடுவிக் கும்வகை; வேறுவகையால் விடுவிக்கக்கருதுகிறவன் பின்ஜன்மத்தி லும்அப்படியேயாவான். வினையைவிடுவிக்கக்கருதுகிறவன் எல்லாக் கஷ்டங்களையும்பொறுத்து வேலைகளையெல்லாம் முறைப்படிசெய்து தன்யஜமானனுடைய மகிழ்ச்சியைக் கருதவேண்டும். யஜமானஞல் அன்புடன் விடைகொடுக்கப்பெற்றவன் தன்பாவத்திலிருந்து விடு பட்டவனுகிறான். அப்படிப்பட்டகுணமுள்ளவேலைக்காரர்களை யஜ மானனும் எப்போதும் ஸந்தோஷப்படுத்தவேண்டும். அவனவன் தகுதிப்படி வேலையைச்செய்விக்கவேண்டும். [2]காரணம்பற்றியே தண் டிக்கவேண்டும். கிழவர்களையும் சிறுவர்களையும் இளைத்தவர்களையும் காப்பாற்றுகிறவன் புண்ணியமடைவான். தேவியே! இதனை உனக் குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்று கேட்டார்.

இருநூற்றிருபத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வர ஸம்வாதம் தொடர்ச்சி; முன்வினைப்பயன் மறுஜன்மத்தில்வருமென்பது தொடர்ச்சி.)

உமை, 'பகவானே! தேவரே! மனிதர்களைப்போலவே காணப்படும்சிலமனிதர்கள், தீண்டுவதற்கும் தகாதவர்களாகவும் இழிதொழில்களில்விருப்பத்துடன் எல்லாருடையமலங்களையும் எடுப் பவர்களாகவும் ஏழைகளாகவும் மிகுதியாகச்சிரமப்படுகிறவர்களாக வும் விகாரரூபமும்கெட்டஎண்ணமுள்ளவர்களாகவும் சண்டாளர் கள்போலக் காணப்படுகின்றனரே, அது என்னதீவினையினுல்? எனக் குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே!

---

[1] 'மோக்தும்' என்று பாடங்கொள்ளப்பட்டது.

[2] 'தண்டம்காரணதஃ' என்று பாடங்கொள்ளப்பட்டது.

அதனை உனக்குச் சொல்வேன்; ஊக்கத்துடன்கேள். பூர்வஜன்மத்தில் அதிகஅகங்காரமும் தற்புகழ்ச்சியும் தடித்தனமும் கொழுப்பு முள்ளவர்களாகிப் பெரியோர்களையும்வணங்காமலும் பாமரராகியும் அதிகஅகங்காரத்தினால் தம்தர்மத்துக்குரியகாரியத்தைச் செய்யாமலும் பிறரைப் பலவந்தமாகக்கட்டளையிட்டுத் தமக்குவணங்கும்படி செய்தும் செல்வத்தினால் பிறரை எப்போதும் அவமதித்தும் குடித்தும் எல்லாவற்றையும்பகுத்தும்கொடியவராகவும்கடுஞ்சொல்சொல்லுகிறவராகவும் இன்னும் இவ்வகைதழுக்கத்தோடும் இருந்தமூர்க்கர்கள் யமதண்டனையினால்தண்டிக்கப்பட்டபிறகு தற்செயலாக மானிடப்பிறப்புவரும்போது இழிதொழிலில்விருப்பமுள்ளவர்களும் எல்லாருடையமலங்களையுமெடுப்பவரும்பிறரைவணங்குகிறவரும் விகாரரூபமுள்ளவரும் தீண்டுவதற்கும்தகாதவருமான சண்டாளர்களென்னும் பாவப்பிறப்பில் பிறக்கின்றனர். அவர்கள் வண்ணான்முதலானவர்களாகப் பிறந்து இழிதொழிலினால் ஜீவிக்கின்றனர்; முன்ஜன்மத்தில் மிக்ககர்வமென்னும்குற்றத்தினால் தாம்செய்ததன்பலனை அனுபவிக்கின்றனர்.அப்படித்தாழ்ந்தநிலைமையிலிருக்கும்அந்தச்சண்டாளர்களையும் விவேகமுள்ளவன் இகழவும் கோபிக்கவும் ஆகாது. அவர்கள் தம்வினைப்பயனை அனுபவிக்கின்றனர். சண்டாளர்களும், அந்தஜன்மத்தைப்பற்றித் துயரப்படுவதனால் பரிசுத்தமடைவார்கள்' என்றுசொன்னார். உமை, 'பகவானே! சிலமனிதர்கள் பலவகையான ஆசைகளென்னும் வலைகளினால் கட்டப்பட்டும் உள்ளேபோகாமல் தடுக்கப்பட்டும் பிறர்வாயிலில் நிற்கின்றனர். முயற்சிசெய்தும் பிரபுவைப்பார்ப்பதற்கும் தம்கருத்தைத்தெரிவிப்பதற்கும் சமயம்பெறுவதில்லை. அது எந்தக்கர்மதோஷத்தினால்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'தேவியே! சிறந்தவளே! முன்ஜன்மத்தில் ஐச்வர்யத்தையும் அதிகாரத்தையும்பெற்று அவற்றினால்மதிகெட்டுப் பிறரோடுசம்பாஷணைசெய்யாமலும் அவர்களையுள்ளேவிடாமலும் பொருளாசைபெண்ணாசை முதலியவற்றினால் மூடப்பட்டும் தமதுநிலைமையினால் எதையும்மதிக்காமல் தம்காரியத்தையே தலைமையாகக்கொண்டும் எல்லாப்போகங்களுமிருந்தும் பிறருக்குச் சிறிதும் பயன்படாமலும் திறமையிருந்தும் பிறருக்கு அனுக்ரஹம்செய்யாமலும் தயையில்லாமலும் புண்ணியலோகம்போவதற்கு வழிதேடாமலுமிருந்தவர்கள் பின்னொருபிறப்பில்மானிடதேகம்பெறுவாராயின் ஏழைகளாதலும் கெட்டநிலைமையுள்ளவர்களாகவும் எந்தக்கார்யங்களிலும் தடையுள்ளவர்களாகவும் தமதுபிரயோஜனத்தைத்

தெரிவிப்பதற்காக அரசர்களிடத்திலும் அவர்களைப்போன்றவர்களிடத்திலும் ஓடியும் தடுக்கப்பட்டு வாயிலில் நிற்கின்றனர். தமது காரியத்தைத் தெரிவிக்கவும் பிரபுவைப்பார்க்கவும் உள்ளேபுகவும் (சமயம்) கிடைக்காமல் ஆசையோடு வெளியில்நிற்கின்றனர்' என்று சொன்னர்.

உமை, 'பகவானே! அனேகமனிதர்களில் சிலர் அரசனும் கள்வனும் ஜலமுதலியவற்றினும் எல்லாப்பொருள்களும் அபகரிப்பட்டவர்களாகவும் மூலதனங்கள் தவறிப்போனவர்களாகவும் காணப்படுகின்றனரே, அது எந்தக்கர்ம தோஷத்தினால்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! எவர்கள் பூர்வஜன்மத்தில் அஸுரத்தன்மையை யடைந்து பகையினும் ஆசையினும்பிறருடையஜீவனத்தைக்கெடுத்தும் அப்படியே பிறரை [1]வைதும் கோட்சொல்லியும் களவினும் மற்றவகையினும் பிறர்பொருளை அபகரித்தும் தயையும் பச்சாத்தாபமுமில்லாமல் பிறர்ஜீவனத்தைக்கெடுத்துமிருக்கிறார்களோ கொடியவரும் நாஸ்திகரும் பொய்சொல்லுகிறவரும் பிறர்பொருளை அபலாபம்செய்பவருமான அப்படிப்பட்டநடையுள்ளவர்கள் நெடுநாள்நரகத்திலிருந்து யமனுல்தண்டிக்கப்பட்டுத் துன்பப்பட்டபிறகு மானிடஜன்மத்தையடைவராயின் அந்தஜன்மத்தில் திடீரென்று பொருள்நஷ்டத்தையடைவது நிண்ணம். காரணம்பற்றியோ நிஷ்காரணமாகவோ கஷ்டத்தையும் தாழ்வையும் திரவியநஷ்டத்தையும் எல்லாராலும் உபத்திரவத்தையும் அடைவது நிச்சயம்' என்றுசொன்னர். உமை, 'பகவானே! சிலமனிதர்கள் திடீரென்று பந்துக்களைவிட்டுப் பிரிதலையும் காரணம்பற்றியோ நிஷ்காரணமாகவோ பந்துக்களின்மரணத்தையும் ஆயுதத்தினாலேயோ மற்றெவ்வகையினாலேயோ தம் உயிர்ச்சேதத்தையும் அடைவது எந்தவினைக்கேட்டினால்? எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! அன்புள்ளவளே! எந்தமனிதர்கள் பூர்வஜன்மத்தில் பெரும்பாலும் அஸுரத்தன்மையோடு கொடுஞ்செய்கையில் விருப்பமும் பொய்யுமுள்ளவராகவும் மூர்க்கர்களாகவும் பிராணிகளை மிக்கவிருப்பத்துடன் தயையில்லாமல் கொல்லுகிறவர்களாகவும் நம்பினவரைக் கெடுக்கிறவராகவும் தூக்கத்தைக்கெடுப்பவராகவும் பெரும்பாலும் பொய்சொல்லுகிறவராகவும் நாஸ்திகராகவும் புலால்தின்பவராகவுமிருந்தனரோ அப்படிப்பட்டவர்கள் இறந்து யமதண்டனை

[1] 'உத்க்ரோசந்' என்று பாடங்கொள்ளப்பட்டது.

யைஅடைந்து வெகுகாலம் நரகத்திலிருந்தபிறகு விலங்காகப்பிற ந்து அதில் துயரங்களையனுபவித்துத் தீர்ந்தபின் மானிடஜன்மம் பெறுவராயின் அதில் எவ்வகையிலாவது கொலையையும்கட்டுப்படு தலையும்அடைவது நிச்சயம். செல்வமுள்ளவர்களும் ஏழைகளும் தம் வினைப்பயனை அனுபவிக்கின்றனர். தூங்கியும் மயங்கியும் நம்பியு மிருக்கும்போது தாம்செய்ததின்பலனை அப்படியே அடைகின்றனர். தம்முயிர்ச்சேதத்தையும் சுற்றத்தாரைவிட்டுத்திடீரென்றுபிரிவதை யும் பிள்ளைபெண்டிர் அழிவதையும் ஆயுதத்தினாலோ மற்றெதினாலோ கொலையையும் அடைவார்' என்றுசொன்னார். உமை, 'பகவனே! மானிடலோகத்திலேயே சிலமனிதர்கள் ராஜநீதிசாஸ்திரத்தில்தேர்ந் தவர்களினால் தண்டிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு எங்கும் பய மிருக்கிறது. அது என்னகருமதோஷத்தினால்? எனக்குச் சொல் லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! சிலமனி தர்கள் பூர்வஜன்மத்தில் பிராணிகளிடத்தில்தயையில்லாமல் மனிதர் களையோ மற்றஉயிர்களையோ கஷ்டப்படும்படி அடித்துக்கொல்லு கின்றனர். சிலஅரசர்கள் கொடியசெய்கையுள்ளவர்களும், கொடிய தண்டனையிலும்கொல்வதிலும்விருப்பமுள்ளவர்களும்,கோபத்தினால் மதிகெட்டு அஸுரத்தன்மையுள்ளவர்களாகிப் பிறரைப்பீடிப்பவர்க ளும், கர்வப்படுபவர்களும், மாம்ஸம்புசிப்பவர்களும், நாஸ்திகர்களும், யாருக்கும் வேண்டாதவர்களுமாயிருந்து தண்டிக்கத்தகாதவர்களை யும் தண்டிக்கின்றனர். அன்புள்ளவளே! சிலர் பெண்களையும் புரு ஷர்களையும் ஆசாரியர்களையும் கொல்லுகின்றவராகவுமிருக்கின்றனர். அன்புள்ளவளே!' இப்படிப்பட்டநடையுள்ளவர்கள் மரணமடை ந்தபிறகு வெகுகாலம்நரகத்தில்கிடந்து யமனால் தண்டிக்கப்படு கின்றனர். ஜனங்கள் முன்ஜன்மத்தில்செய்தகருமத்தை இந்தஜன் மத்தில் அனுபவிக்கின்றனர். இந்தஜன்மத்தில் செய்யப்படும்கரு மம் மறுஜன்மத்தில் பலனைத்தரும். தேவியே! மனிதர்களில்தான் இந்தமுறை காணப்படுகிறது. தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் இந்த வரையறையில்லை. அவர்களோ மரணமில்லாமையாலும் தவத்தின் வலிமையாலும் ஒருசரீரத்திலேயே கர்மபலனை அனுபவிக்கின்றனர். ஸாதாரணமனிதர்களுக்கு அப்படிஆகாது. ஏனெனில், கர்மபலன் அவர்களுக்கு இறந்தபின் தெரியாமல் நேரிடும்' என்றுசொன்னார். உமை, 'இவ்வுலகத்தில் மனிதர்கள் அரசர்களால், 'இவன் கொலை செய்தவன்; இவன் திருடினவன்' என்று அவரவர்செய்தகுற்றத் தைக்குறித்து அந்தஜன்மத்திலேயே தண்டிக்கப்படுவது எப்படி?

புத்திரனைவிரும்புகிறவன் புத்திரகாமேஷ்டிசெய்து அம்தஜனமத்தில புத்திரர்களை அடைகிறான். ஆதலால், மானிடலோகத்தில்செய்த கருமங்களின்பலனை அதேதேகத்தில் அனுபவிப்பதைக்காண்கிறோம். அதனை நீர் நினைக்கவில்லை. இது என்னஸந்தேகத்திற்கிடமாயிருக்கிறது. அதனை நீர் விளக்கக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! நீ ஸந்தேகப்பட்டது ஸரி. அதனை நீ ஊக்கத்துடன்கேள். இப்புவியில் வினையும் வினைப்பயனும் ஒருகாலத்திலிருப்பனவாக நினைக்கப்படவில்லை. தேவியே! 'இவன் கொன்றவன்; இவன் திருடினவன்' என்று அரசர்களால் மனிதர்கள் தண்டிக்கப்படுவதாக நீ சொன்னயே, அதுவும் அவர்களின் முன்வினைப்பயன்தான். தேவியே! அவர்களால் (அப்போதுசெய்யப்பட்ட) செய்கையும் தண்டிப்பதற்குக் காரணமாகிறது. குற்றத்தை நிமித்தமாகக்கொண்டுதானே அரசன் பிரஜைகளைத்தண்டிக்கவேண்டும். மற்றவர்களைப்பயமுறுத்தி இவ்வுலகத்தை நிலைபெறச்செய்வதற்காக அந்தஅந்தக்குற்றத்தைக் குறிப்பித்து அரசர்கள்தண்டித்தல் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத்தண்டனையானது தண்டிக்கப்படுகிறவனுடைய முன்வினைப்பயனென்பது திண்ணம்என்று முதலிலேயே நான் சொன்னேன். அந்த விஷயத்தில் உனக்கு ஸந்தேகம்வேண்டாம்' என்றுசொன்னர். உமை, 'பகவானே! பூமியில் அரசர்களால்தண்டிக்கப்பட்டமனிதர்களுக்கு அந்தத்தண்டனையினால் பாவம்போகுமா? போகாதா? இது எனக்கு ஸந்தேகம். இதை நீர் தீர்க்கக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! நீ ஸந்தேகப்பட்டது ஸரி. அதனை நீ ஊக்கத்துடன்கேள். பூமியில் குற்றம்சாட்டப்பட்டு அரசர்களால்தண்டிக்கப்பட்டவர்கள் யமலோகத்தில் யமனால் தண்டிக்கப்படுவதில்லை. தவறுதலாகத் தண்டிக்கப்படாவிட்டாலும் ஸரியானதண்டனைசெய்யப்படாவிட்டாலும் அவர்களை யமன் தண்டித்தேவிடுவான். அவர்கள்செய்ததும் செய்யாததும் அவனுக்குத்தெரியும். இவ்வுலகத்தில் எந்தமனிதனும் கருமம்செய்தபிறகு யமனைத் தாண்டமுடியாது. சிறந்தவளே! அரசனும்யமனும்தண்டனையைமட்டும்செய்கின்றனர். யமன் அரசன்இருவராலும் தண்டிக்கப்பட்டாலும் தண்டிக்கப்படாவிட்டாலும் பிறகு மானிடஜன்மத்திலும் நரகத்திலும் முறையே வினைப்பயனையனுபவிப்பான். செய்தகருமத்தின்பலனை அறுத்தவன் மூவுலகங்களிலுமில்லை. அன்புள்ளவளே! எல்லாவற்றையும் உனக்குச் சொன்னேன். ஸந்தேகமற்றிரு' என்றுசொன்னர். உமை, 'பூமியில் மனிதர்கள் நித்தியமாகப் பாவத்தைச்செய்து அதைத்தொ

லப்பதற்காகத் திரும்பவும் பிராயச்சித்தங்களைச் செய்கின்றனரே, அது ஏன்? அஸ்வமேதயாகம் எல்லாப்பாவங்களையும் போக்குவதென்றுசொல்லுகின்றனர்.பாவத்தைப்போக்குவதற்கு மற்றுமுள்ளபிராயச்சித்தங்களையும் செய்கின்றனர். ஆதலால், எனக்குஅதில் ஸந்தேகம்இருக்கிறது. அதனை நீர் தீர்க்கக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! நீ ஸந்தேகித்தது ஸரி; அதனை நீ ஊக்கத்துடன் கேள். முன்னோரானஞானிகளுக்கும் இது பெரியஸந்தேகம்தான். கெட்டவர்களும் நல்லவர்களும் செய்யவேண்டுமென்று நினைத்தும் அவ்வாறின்றித் தற்செயலாகவும் தவறுதலாகவும் இருவகைகளாகப் பாவத்தைச்செய்கின்றனர். பலனைக்கருதியும் பிடிவாதமாகவும்செய்யப்படும்கருமம் எவ்வகையிலும் அழிவதில்லை.தெரிந்துசெய்தகருமம் ஆயிரக்கணக்கானஅஸ்வமேதயாகங்களாலும்நூற்றுக்கணக்கானபிராயச்சித்தங்களாலும் தீருவதில்லை. அவ்வாறின்றித் தவறுதலால் தற்செயலாகச் செய்யப்பட்டபாவம் பிராயச்சித்தங்களாலும் அஸ்வமேதயாகத்தினாலும்உண்டாகுட்புண்ணியத்தினால் அழியும். உலகநடைக்காகவும் பாபகாரியத்திற்குப் பிராயச்சித்தமுதலியவை விதிக்கப்படுகின்றனவென்றறி. அன்புள்ளவளே! ஸந்தேகமற்றிரு. தேவியே! இதனை உனக்குச் சொன்னேன். இன்னும் என்ன கேட்கவிரும்புகிறாய்?' என்றுவினவினர். உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈஸ்வரரே! மானிடலோகத்தில் மனிதர்களும் மற்றப்பிராணிகளும் காரணத்தோடும் காரணமின்றியும் இறந்துபோகின்றனர். அது எந்தக்கர்மத்தின்முடிவினாலென்பதை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள், மஹேஸ்வரர், 'தேவியே! மனிதர்கள் பூர்வஜன்மத்தில் பிராணிகளிடத்தில் இரக்கமில்லாமல் காரணம்பற்றியும் நிஷ்காரணமாகவும் அவற்றைக்கொன்றிருக்கின்றனர்.அவர்கள் தாம் எப்படிச்செய்தாரோ அப்படியே அதன்பலனை அடைகின்றனர். விஷங்கொடுத்தவர் விஷத்தினாலும் ஆயுதத்தினாலடித்தவர் ஆயுதத்தினாலும் உலகத்தில் மற்றெந்தக்காரணத்தினால் மனிதர்கள் மனிதர்களைக்கொல்லுகின்றனரோ அந்தக்காரணத்தினாலும் மறுஜன்மத்தில் தம்முயிர்ச்சேதத்தை அடைகின்றனர். தேவியே! அதில் ஸந்தேகமில்லை.அன்புள்ளவளே! இந்தக்கர்மத்தினாலுண்டாகும் பயன் எல்லாவற்றையும் உனக்குச் சொன்னேன். திரும்பவும் ஒருகாலும் தவறுத ஸரியான பிரமாணத்தைக்கொண்டு அதனையே உனக்குச் சுருக்கமாகச் சொல்வேன். அதனைக் கேள். தேவியே! எந்தமனிதர்கள் முன்ஜன்மத்தில் எந்தக்காலத்தில் எந்தக்காரணத்தினால் எந்தஹிம்ஸையையோ

தீவினையையோ எப்படிச்செய்தனரோ அந்தமனிதர்கள் பின்ஜன்மத்தில் அந்தக்காலத்தில் அந்தக்காரணத்தினால் அந்தஅந்த வினைப்பயன்களை அப்படியே ஸந்தேகமில்லாமல் அடைகின்றனர். உலகத்தில் இதுதான் அவரவர்விதியைப்பற்றிய ஸத்தியமென்றறி. கருமத்தைச் செய்து அதைஅனுபவியாதமனிதன் ஸ்வர்க்கத்திலுமில்லை; பூமியிலுமில்லை. தன்வினையையனுபவியாமலிருப்பதற்குத் தேவர், அஸுரர், மனிதர்எவராலும் முடியாது. உலகமானது ஆதிகாலந்தொடங்கிக் கருமத்தில் கோக்கப்பட்டிருக்கிறது. கர்மபலனைப்பற்றி இதனைக் குறிப்பாகச்சொன்னேன். பலவகைக்கர்மங்களின் தொகுதியில் உனக்கு என்னால் சொல்லப்படாதவை எவையோ அவற்றையெல்லாம் நீ புத்தியினால் ஊகித்துத் தெரிந்துகொள்ளலாம். நீகேட்கவிரும்பினதற்காகச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றுகேட்டார்.

இருநூற்றிருபத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி; முன்வினைப்பயன் மறுஜன்மத்திலில்லாதுமென்பது தொடர்ச்சி.)

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈச்வரரே! திக்பாலகர்களால் நமஸ்கரிக்கப்பெற்றவரே! மஹாதேவரே! உமது அனுக்கிரகத்தினால் கர்மங்களின்முடிவைக்கேட்டுத் தெரிந்துகொண்டேன். நீர்சொன்னவையெல்லாம் உண்மையாகவும் அமிருதத்திற் கொப்பாகவுமிருக்கின்றன. நன்மை தீமையனைத்தும் கர்மத்தால்தொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று தெரிந்துகொண்டேன். பசுவின்கன்று தாயையும் ஜலம் பள்ளத்தையும் சேர்வதுபோலச் செய்வினை செய்தவினை எப்போதும் தொடர்ந்துசெல்லும். இவ்வுலகத்தில்செய்த கர்மம் நல்லதோ தீயதோ அழியாதென்பது நிச்சயம். அதனையும் நான் ஒப்புக்கொண்டேன். மஹாதேவரே! வரமளிப்பவரே! அன்பைப்பெருகச்செய்பவரே! இன்னமும் கர்மங்களின் முடிவைப்பற்றியிருக்கும் ஸந்தேகங்களை விடுவிக்கக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'தேவியே! கரியகண்களையுடையவளே! சிறந்தலக்ஷணங்கள்பொருந்தினவளே! உனக்கு என்னகேட்கவேண்டுமோ அவை எல்லாம் மிக்கரகஸ்யமாயிருந்தாலும் நீ அச்சப்படாமல் என்

னைக் கேட்கலாம்' என்றுசொன்னர். உமை, 'விருஷபத்வஜரே ! உலகத்தில் கர்மங்களுக்கு இவ்விதமானவியவஸ்தைஇருக்கும்போது புண்ணியபாவங்களைச் செய்தமனிதன் தான்செய்தபுண்ணியகர்மங் களின் பலனை அனுபவிப்பது எப்போது? இம்மையிலா? மறுமை யிலா? தேவரே ! அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட் டாள். மஹேஸ்வரர், 'தேவியே ! நீ ஸந்தேகப்பட்டது ஸரி. அது மனிதர்களுக்கு மிக்கரகஸ்யமானது. அழகியமுகமுள்ளதேவியே ! அந்தரகஸ்யத்தை உன்விருப்பத்திற்காகச் சொல்வேன். ஜனங்கள் முன்ஜன்மத்தில்செய்தகர்மத்தை இந்தஜன்மத்தில் அனுபவிக்கின் றனர். இந்தஜன்மத்தில் செய்தது மறுஜன்மத்தில் பலிக்கும். தேவியே ! இந்தநியமம் மனிதர்களிடத்தில்மட்டும் காணப்படும். தேவருக்கும் அஸுரருக்கும் மரணமில்லாமையிலுலும் தவவன்மை யிலுலும் கர்மங்களின்பலன் ஒருசரீரத்திலேயே அனுபவிக்கப்படும். தேவியே ! மனிதர்களுக்கு அப்படியில்லை. இதுதான் வித்தியாஸ மாக நினைக்கப்படுகிறது' என்றார்.

இருநூற்றிருபத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; புன்விளைப்பயன் மறுஜன்மத்தில்வருமென்பது தொடர்ச்சி.)

உமை, 'பகவானே ! பகதேவதையின் நேத்திரத்தையழித்த வரே ! மனிதர்களின் செய்கைகளனைத்தும் தம்வினைப்பயன்என்னும் உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொண்டேன். உலகத்தில்நன்மை தீமைகளனைத்தும் நவக்கிரகங்களால்செய்யப்பட்டவைஎன்று நினை த்து அந்தக்கிரகங்களையும் நக்ஷத்திரங்களையுமே பெரும்பாலும் பூஜிக் கின்றனர். தேவரே ! இது எனக்கு ஸந்தேகம். இதனை நீர் தீர்க்கக் கடவீர்' என்றுகேட்டாள்.

மஹேஸ்வரர், 'தேவியே ! நீ ஸந்தேகப்பட்டது ஸரி. உண்மை யின்நிச்சயத்தைக் கேள். சிறந்தமகிமையுள்ளவளே ! நக்ஷத்திரங் களும் கிரஹங்களும் மனிதர்களின்நன்மைதீமைகளை அறிவிப்பவை. அவை தாமே காரியங்களைச்செய்பவையல்ல. மனிதர்களின்நன்மைக் காகஅவர்கள்நல்லவைகளாகவும் கெட்டவைகளாகவும் செய்தவற்றை யும் இனிச்செய்வனவற்றையும் கிரகங்களின்ஸஞ்சாரம் தெரிவிக் கிறது. அவற்றுள் நல்லகர்மம் சுபக்ரகங்களாலேயே தெரிவிக்கப்

படுகிறது தீவினையின்பலன் பாபக்ரகங்களிலுல் தெரிவிக்கப்படு கிறது. ஆதலால்தான் கிரகங்கெடுதலாயிருக்கும்போது ஜனங்கள் கெடுதலேச்செய்கிறார்கள். கிரகங்கள்ஸரியாயிருக்கும்போது தாமே ஸரிசெய்வதாகநினைத்து நல்லகாரியங்களேச் செய்கின்றனர். வெறும் கிரஹநக்ஷத்திரங்கள் நன்மைதீமைகளேச் செய்வதில்லே. எல்லாவினை களும் தம்மாற்செய்யப்பட்டவை. கிரஹங்கள்என்பது உலகச்சொல். கிரஹங்கள் வேறு; செய்பவன் வேறு. செய்கிறவன் தன்செய்கை யின்பலனே அனுபவிக்கிறான். சிறந்தவளே! இவற்றைஎல்லாம் உனக் குச் சொன்னேன். ஸந்தேகமற்றிரு' என்றுசொன்னர். உமை, 'பக வானே! நல்லவையும் தீயவையுமான பலவகைக்கருமங்களேச்செய்த மனிதன் மறுபிறப்பில் அவ்விருவகைவினையுள்ஏதன்பலனேமுன்னே அனுபவிக்கிறான்? தேவரே! எனக்கு இந்தஸந்தேகமிருக்கிறது. இதனே நீர் விலக்கக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! நீ ஸந்தேகப்பட்டது ஸரி. அதனேஉனக்குத் தெளிவா கச்சொல்வேன். முதலில்அனுபவிக்கப்படுவதுதீவினேஎன்று சிலரும் நல்வினேஎன்றுவேறுசிலரும் கூறுகின்றனர். அவ்விருசொற்களும் பிழை. அதனே உனக்குத் தெளிவாகச்சொல்வேன். முன்வினேகள் மானிடஜன்மத்தில் ஒன்றிலேயே அனுபவிக்கப்படுகின்றன. இரு வினேகளும் எந்தமுறையாகச்செய்யப்பட்டனவோ அந்தமுறைப்படி அவ்வவற்றிற்குத் தக்கபலன்கள் அனுபவிக்கப்படுகின்றன. பூமியில் மனிதர்கள் செல்வம், வறுமை, இன்பம், துன்பம், [1]பயமின்மை, பயம் இவையெல்லாவற்றையும் வரிசையாயனுபவிக்கிறவர்களாகக் காணப் படுகின்றனர். செல்வமுள்ளவர்களும்துயரப்படுகின்றனர். வறியரும் ஸுகத்தை அனுபவிக்கின்றனர். ஆதலால், ஒருஜன்மத்திலேயே எல்லாவற்றையும் அனுபவிப்பதாகக்காணப்படுவது உலகமறிந்தவிஷ யம். அன்புள்ளவளே! நரகத்திலும் ஸ்வர்க்கத்திலும் அவ்வாறில்லே. நரகத்தில் எப்போதும் துன்பமே. ஸ்வர்க்கத்தில் எப்போதும் இன் பமே. புண்ணியபாபங்களின்மிகுதிகள் அவ்வுலகங்களில் அனுபவிக் கப்படுகின்றன. இடைவிடாதஸுகம் ஸ்வர்க்கத்திலும் அப்படிப் பட்டதுக்கம் நரகத்திலுமிருக்கும். சிறந்தவளே! மிகப்பெரியவினே களே முதலில் அவ்வுலகங்களில்அனுபவித்து அற்பமாயுள்ளமிச்சத் தைப் பின்ஜன்மத்தில் அனுபவிக்கின்றனர். இவற்றையெல்லாம் உனக்குச் சொன்னேன். இன்னும் என்ன கேட்கவிரும்புகிறாய்?' என்றுகேட்டார்.

---

1 'அபயம்' என்றுபாடங்கொள்ளப்பட்டது.

உமை, 'பகவானே! உலகத்தில் பிராணிகள் பிறந்துபிறந்து நில்லாமலிறந்துபோவது எந்தக்காரணத்தினால்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'அந்தஉண்மையை உன்க்குச் சொல்வேன்; நீ ஊக்கத்துடன்கேள். கர்மம் தொலைவதனால் தேகத்தை ஆத்மாவிடுமென்பதைக் கேள். தேகமும் ஆத்மாவும்சேர்ந்திருப்பதுபிராணியென்றுசொல்லப்படுகிறது. அவற்றுள் ஆத்மா நித்யமென்றும் தேகம் அநித்யமென்றும் சொல்லப்படுகின்றன. இவ்வாறுஆத்மாவுடன்சேர்ந்த தேகமானது நாளடைவில் தளர்ந்து வேலைக்குஉதவாததாகி விழுந்துபோகிறது. அப்போது அதனை ஆத்மா விட்டுவிடுகிறது. நித்யமானஆத்மா அநித்யமானதேகத்தைவிடுவதை உலகத்தோர் மரணமென்று அறிகின்றனர். தேவர், மனிதர், அஸுரர்யாரும் காலத்தைக்கடக்கமாட்டார். உயிரில்லாதபொருள்ஒன்றும் ஆகாயத்தில் எப்படி சிறிதும் நிற்பதில்லையோ அப்படியே இந்தக்காலம் ஒருநிமிஷமும் நில்லாமல் ஓடுகிறது. அந்த ஆத்மா புதியஉடம்பில்புகுந்து திரும்பவும் பிறக்கிறது. இப்படி உலகநடை ஆதிதொடங்கி எப்போதும் நடந்துகொண்டிருக்கிறது' என்றுசொன்னர். உமை, 'பகவானே! பிராணிகள் இளமையிலேயே மரணமடைவதையும் வெகுகாலம்இருந்து நிகழுதிர்ச்சியடைந்து ஜீவித்திருப்பதையும் காண்கிறோம். மஹேச்வரரே! காலத்தினால் மரணமென்பதே நிச்சயமாயில்லை. ஆதலால், பிராணிகள்ஜீவிப்பதற்குக் காரணத்தைபற்றியஎன்னுத்தேகத்தைத்தெளிவியும்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'தேவியே! அந்தக்காரணத்தைக் கேள். நான்சொன்னது ஒரேநிச்சயந்தான். காலமானது தேகத்தளர்ச்சியைமட்டும் செய்கிறதேயன்றி தேகம் விழுந்துபோகச்செய்வதில்லை. கர்மம்முடிந்தால் தேகம் தானாகவே விழுகிறது. முந்தியகர்மத்தின் அளவின்படிதான் இருப்பதும் இறப்பதும். முன்செய்தகருமம் எதுவரையிலிருக்கிறதோ அதுவரையில் மனிதன் ஜீவிக்கிறான். அந்தக்கருமம்போகுங்காலத்தில் சிறுவரும் இறந்துபோகின்றனர். அந்தக்கர்மத்தின்அளவின்படிதான் முதிர்ந்தவரும் வெகுகாலம்ஜீவித்திருப்பது. தேவியே! இதனை உனக்குச் சொன்னேன். அன்புள்ளவளே! ஐயமற்றிரு' என்றுசொன்னர். உமை, 'பகவானே! மனிதர்கள் தீர்க்காயுளாயிருப்பதும் அற்பாயுளாயிருப்பதும் எந்தநடையினால்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'எந்தநடையுள்ளமனிதர்கள் தீர்க்கஜீவர்களாயிருக்கிறார்கள் என்பது

மனிதர்க்கு மிக்கநன்மையும் ரகஸ்யமுமானது. அவற்றை எல்லாம் நன்றுகக்கேள். கொல்லாமை பொய்யாமை வெகுளாமை பொறுமை உண்மை குருக்களைஎப்போதும்பணிவது பெரியோரைப்பூஜிப்பது சுத்தமாயிருப்பது செய்யத்தகாதவற்றைவிடுவது எப்போதும்பத்தியமானஆகாரத்தைஉட்கொள்வது இவைமுதலியநல்லொழுக்கங்கள் தாம் மனிதர்கள் வெகுகாலம்ஜீவிப்பதற்குரியவை. தவத்தினாலும் இந்திரியஜயத்தினாலும் ரஸாயனமென்னும் ஔஷதத்தைஉட்கொள்வதனாலும் மனிதர்கள் மிகுந்தகளிப்பும் சிறந்த பலமுமுள்ளவர்களாக வெகுகாலம்ஜீவித்திருக்கின்றனர். தர்மம் செய்தவர்கள் ஸ்வர்க்கத்திலும் மாணிடலோகத்திலும் நீண்டகாலமிருக்கின்றனர். மற்றவர்கள் பெரும்பாலும் பாவம்செய்தும் பொய்சொல்லியும் ஹிம்ஸையில்விருப்பமும் பெரியோரிடத்தில்பகையுமுள்ளவர்களும் நற்கருமங்களையும் சுத்தத்தையும்விட்டவர்களும் நாஸ்திகர்களும் கொடியசெய்கைசெய்பவர்களும் மாம்ஸபக்ஷணத்தையும்மதுபானத்தையும்விடாதவர்களுமாயிருக்கின்றனர். பாவங்களைச்செய்தும் ஆசார்யர்களைப்பகைத்தும் கோபமும்கலகமுமே காரியமாகவிருக்கும் இப்படிப்பட்ட அயோக்கியர்கள் நரகத்தில் வெகுகாலம்இருப்பார். அதன்பிறகு, அந்தஅற்ப மனிதர்கள் திர்யக்ஜாதிகளிலேயேமூழுதும்இருந்து பிறகு ஆயுள் குறைந்தமனிதர்களாகப் பிறக்கின்றனர். போகத்தகாதவிடத்திற்குப் போவதனாலும் தேகத்துக்குவிரோதமான ஆகாரத்தைப்புசிப்பதனாலும் மனிதர்களுக்கு ஆயுள் குறைந்துபோகும். அவை ஆயுளைக் குறைப்பவையன்றோ ? மேற்சொன்னபலகாரணங்களினால் ஆயுள் குறைந்துபோகிறது. இல்லாவிடின் வெகுகாலம் ஜீவித்திருப்பர். இதைஎல்லாம் உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்க விரும்புகிறாய் ?' என்றுவினவினர்.

இருநூற்றிருபத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி ; முன்வினைப்பயன் மறுஜன்மத்தில் வருமென்பது தொடர்ச்சி.)

உமை, 'தேவதேவரே ! மஹாதேவரே ! பகவானே ! இதனை நான் கேட்டேன். ஆத்மாவுக்கு ஸ்திரீயென்றும் புருஷனென்றும் ஜாதிகளின் வேறுபாடுவந்ததைப்பற்றிச் சொல்லும். பெண்உயிரும் ஆண்உயிரும் ஒன்றா ? வெவ்வேறா ? தேவரே ! இந்தச்சந்தேகம்


V. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR. MADRAS-41.

எனக்கு இருக்கிறது. அதனை நீர் தீர்க்கக்கடவீர்' என்றுகேட்டனள். மஹேஸ்வரர், 'அதனை நான் உனக்குச்சொல்வேன்; ஊக்கத்துடன் முழுதும்கேள். அழகானகண்களையுடையவளே! உயிருக்குப் பெண் ஆண்என்னும்வேறுபாடு இல்லை. ஆத்மா எப்போதும் விகாரமற்றது. அது பெண்ணுமன்று; ஆணுமன்று. அந்தஅந்தக்கருமங்களுக்குத் தக்கபடி பலஜன்மங்களில் பிறக்கிறது. கர்மம்செய்வதனால் புருஷனும் ஸ்திரீயாகவும் ஸ்திரீயும் புருஷனாகவும் பிறக்கிறார். புருஷன் பெண்ணின் செய்கையைச்செய்து அந்தக்கர்மத்தினால் பெண்ணாவான்' என்றுசொன்னர். உமை, 'பகவானே! எல்லாஉலகங்களுக்கும்ஈசுவரரே! ஆத்மா கர்மங்களைச்செய்யாவிட்டால் தேகத்தில் கர்மங்களைச்செய்வது வேறுயார்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்று கேட்டாள். மஹேஸ்வரர், 'பெண்ணரசியே! கர்மம் செய்பவனைக் கேள். ஆத்மா கர்மங்களைச்செய்வதில்லை. அது ப்ரக்ருதியின்குணங்களோடுசேர்ந்து எப்போதும் கர்மங்களைச்செய்கிறது. உலகத்திலுள்ளபிராணிகளின் தேகமானது கபவாதபித்தங்கள்என்னும் மூன்றுதாதுக்களினால் நிரம்பியிருப்பதுபோலவே மூக்குணங்களாலும் நிரம்பியிருக்கிறது. ஸத்வம், ரஜஸ், தமஸ்என்னும் இக்குணங்கள்தாம் தேகமாயிருப்பவை. அவற்றுள், ஸத்வகுணமானது எப்போதும் பிரகாசரூபமென்று சொல்லப்படுகிறது. ரஜோகுணம் துக்கரூபமாகவிருப்பது. தமோகுணம் அறிவின்மையாகவிருப்பது. இம்மூக்குணங்களினாலேதான் உலகத்தில் செய்கைகள் நடக்கின்றன. பொய்யாமை பூததயை பரிசுத்தம் நன்மையில்விருப்பம் பொறுமை அடக்கம் இவையும் மற்றும்இவ்வகையான செய்கைகளும் ஸத்வகுணத்தினாலுண்டானவைஎன்று சொல்லப்படுகின்றன. வேலைத்திறமை சோம்பாமை பொருளாசை விதியைநம்பாமை மனைவியின்மேல்பற்று இனிமை எப்போதும் ஐசுவர்யத்தில்ஆசை முதலியபலசெய்கைகள் ரஜோகுணத்தினாலுண்டாகின்றவை. பொய் கடுமை பிடிவாதம் அதிகப்பகை ஹிம்ஸை நிலையில்லாமை நாஸ்திகத்தனம் தூக்கம் சோம்பல் பயமுதலானபாவச்செய்கைகள் தமஸினால் உண்டாகின்றவை. ஆகையால், நல்லவையும் கெட்டவையுமாகிய கருமங்களெல்லாம் குணங்களாலானவை. ஆதலால், ஆத்மா ஆசையற்றவன், ஒன்றும்செய்யாதவன், விகாரமற்றவன்என்றறி. ஸத்வகுணமுள்ளமனிதர் புண்யலோகங்களிலும் ரஜோகுணமுள்ளவர் மானிடலோகத்திலும், தமோகுணமுள்ளவர் திர்யக்ஜாதிகளிலும் நரகத்திலும் இருப்பர்' என்றுசொன்னர். உமை, 'இந்தத்தேகம்

விழுந்தாலும் ஆயுதத்தினல்கொல்லப்பட்டாலும் ஆத்மாவானது தானே இதைவிட்டுப்போவது எதனல்? அதனே எனக்குச் சொல்லக் கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'சிறந்தவளே! அந்தக் காரணத்தை உனக்குச் சொல்லுவேன்; கேள். நுட்பமான புத்தியுள் ளவர்களும் இதனே நிச்சயிக்கப்போய் மயங்குகின்றனர். ஜன்மமெடு த்தபிராணிகளுக்குக் கர்மம்முடியும்போது எந்தக்காரணம்பற்றியா வது தேகத்துக்கு உபாதிநேரிடும். அதனல், அந்தச்சரீரம்அழியும் போது ஆத்மாவானது கர்மத்தைஅனுஸரித்து அதைவிட்டுப்போ கிறது. தேகம்அழியும்போதுள்ளநோய்களினலும் ஆத்மா அசைவ தில்லே. கருமத்தின்பலனுள்ளவரையிலும் ஆத்மா இருக்கும். அது முடிந்தவுடன் ஆத்மா போய்விடும். ஆதிகாலந்தொடங்கி இவ்வுல கத்தில் ஆத்மாவின்கதி இவ்வாறுகநிச்சயிக்கப்பட்டிருக்கிறது. தேவி யே! இதனே உனக்குச் சொன்னேன். இன்னும் என்ன கேட்கவிரு ம்புகிறாய்?' என்றுகேட்டார்.

இருநூற்றிருபத்தேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)



(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; துன்புறுத்தியும் நல்லபலனே யடைவதும், நால்வகைப்பிராணிகளும், இயற்கையறிவும், கல்வி யறிவும், இறந்தபின்பிழைப்பதும், கனவுகாண்பதும்.)

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே!, ஈஸ்வரரே! மனி தன் தான்செய்தகருமத்திற்குத்தக்கபடி நல்லபலனேயும் கெட்டபல னேயும் அடைகிறனென்பதுநிச்சயம். அயலாருக்குஇன்னுததுசெய் பவன் நன்மையையடையும்வகை யாது? அது ஒருஜன்மத்திலேயே உண்டாகுமா? அதனேஎனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'சிறந்த மஹிமையுள்ளவளே! மனிதர்களுடையஎண் ணத்தின்வலிமையால் அதுவுமிருக்கும். பிறர்நன்மைக்காக அவருக் குத் துன்பத்தைஉண்டுபண்ணுகிறவன் ஸுகம்பெறுவான். அரசன் ஜனங்களேதண்டித்தும் பயமுறுத்தியும் புண்ணியத்தையடைவான். வழிதப்பிநடக்கும்சிஷ்யர்களே ஆசார்யனும் தன்வேலேக்காரரை யஜ மானனும் பயமுறுத்துவதனலும் தண்டிப்பதனலும் புண்ணியபல னேயடைவர். சிகித்ஸைசெய்பவன் துன்பத்தையுண்டாக்குவதனல் நன்மையையே அடைவான். யாகத்திற்காகப் பசுஹிம்ஸைசெய்பவ

னைப் பாவம்தொடராது; இவ்வாறு நல்லஎண்ணத்துடன் உபத்திர வத்தைச்செய்யும் மற்றவர்களும் ஸ்வர்க்கத்தையடைவர். அயோக் கியனைஒருவன்கொல்லப்பட்டதனால் அநேகர் ஸுகப்படுவாராயின் அவனைக்கொல்வதில் தர்மமிருக்கிறதேயன்றிப் பாவமுண்டு? ஹிம்ஸை இல்லைஎன்றுநினைத்துப் பரிசுத்தமானயாகாரியத்தில் கௌரவத்தி னால் பசுவைக்கொல்லுகிறவனுக்குத் தர்மம்பெரிதென்ற எண்ணம் உண்மையாகவும் பரிசுத்தமாகவுமிருப்பதனால் அந்தஹிம்ஸையைச் செய்ததனால் பாவபலம் வருவதில்லை' என்றுசொன்னார்.

உமை, 'இவ்வுலகத்திலுள்ள நான்குவகைஜந்துக்களின் அறிவு எவ்வகையாகநினைக்கப்படுகிறது? உண்டாக்கப்படுவதா? இயற்கையா லமைந்ததா? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேச்வரர், 'உலகமானது தாவரம், ஜங்கமமென்று இருவகைப் பொருள்களுள்ளதாகக் கூறப்படுகிறது. அவற்றிலுள்ள பிராணிக ளுக்கு நாலுவகை உற்பத்திகள் உண்டு. அவற்றை வரிசையாகச் சொல்லுவேன்: அவற்றுள் கொடிகள் செடிகள் புற்பூண்டுகள் இவை [1]உத்பிஜ்ஜங்கள் என்றுசொல்லப்படுகின்றன. கொசு பேன்முதலான ஜாதிகள்எல்லாம் [2]ஸ்வேதஜங்கள். துவாரமே காதாகவுடைய பறவை முதலானபிராணிகள் [3]அண்டஜங்களாக நினைக்கப்படுகின்றன. பசுக் களையும் காட்டுமிருகங்களையும் மனிதர்களையும் [4]ஜராயுஜங்கள்என்றறி. ஆத்மாவானது இந்தநான்குஜாதிகளிலும் சேர்ந்திருக்கிறது. உத் பிஜ்ஜங்களில் ஸ்பரிசமென்னும் ஓர் அறிவுடன் ஆத்மா இருக்கிறது; ஸ்வேதஜங்களில் ஸ்பர்சம் பார்வைஎன்னுமிரண்டறிவுகளோடு [5]இருக் கிறது. அண்டஜங்களும் ஜராயுஜங்களும் ஐந்துஅறிவுகளோடு ஜீவிக் கின்றன. அன்புள்ளவளே! நிலமும்ஜலமும்சேர்வதனால் உத்பிஜ்ஜங் கள் உண்டாகின்றன. அன்புள்ளவளே! சீதமும்உஷ்ணமும் சேர்வ தனால் ஸ்வேதஜங்கள் உண்டாகின்றன. வீர்யம்ஸ்ரீத்தில்சேர்வதனால் அண்டஜங்கள் உண்டாகின்றன. சுக்லசோணிதங்கள் சேர்வதனால் ஜராயுஜங்கள் உண்டாகின்றன. ஜராயுஜங்கள் எல்லாவற்றிலும் மானிடதேகம் உத்தமம். தேவியே! இதன்பிறகு இருளுண்டாவதை ஊக்கத்துடன்கேள். இரவிலுண்டாவதுஎன்றும் தேகத்திலுண்டா வதுஎன்றும் இருவகைஇருள் உலகத்தில்உண்டு. இரவிலுண்டாகும் இருள் ஒளிகளால் அழிந்துபோகிறது. தேகத்திலுண்டான இருள் மட்டும் உலகத்திலுள்ளஒளிகள்எல்லாம்சேர்ந்தாலும் போகாது. உல

1, 2, 3, 4, ஆதிபர்வம் 57 - பக்கம் குறிப்பிற்காண்க.

5 'சரீரி' என்று பாடங்கொள்ளப்பட்டது.

கங்களைப்படைத்தவராகிய பிரம்மதேவர் அந்தத்தேகஇருளைப்போக்க வகைதெரியாமல் பெருந்தவம்செய்தார். அவர் தவம்செய்யும்போது வேதங்களும் வேதாங்கங்களும் உபநிஷத்துக்களும் உண்டாயின. உலகங்களின்நன்மையைக்கருதினபிரம்மதேவர் அவற்றைப்பெற்றபிறகு மகிழ்ந்தார். தேகத்திலுண்டாகும்கொடியஇருள் அவற்றிலேயே ஒழிக்கப்பட்டது. 'இதுசெய்யத்தக்கது; இதுசெய்யத்தகாதது; இது சொல்லத்தக்கது; இது சொல்லத்தகாதது' என்று நல்லொழுக்கத்தைத்தெரிவிக்கும் சாஸ்திரம் உலகத்திலிராமல்போமாயின், மனிதர்களும் பசுக்களுடன் வேற்றுமையில்லாமலே நடப்பார். யாகமுதலியவற்றைஆரம்பம்செய்வதும் சாஸ்திரத்திலல்தான் விதிக்கப்படுகின்றது. யாகம் பயன்படுவதனாலேதான் தேவலோகம் விருத்தியடைகிறது. பிறகு, தேவர்கள் மனிதர்கள்மேல் அன்புள்ளவராகிறார். இவ்வாறு, பூமியும் ஆகாயமும் ஒன்றாலொன்று நித்தியம் அபிவிருத்தியாகின்றன. ஆதலால், உலகங்களைத்தாங்குவது சாஸ்திரமென்று அறி. பிராணிகளுக்கு ஞானத்தைவிடச்சிறந்தது மூன்றுலகங்களிலுமில்லை. ஜன்மத்தில்பிறந்தஞானம் முதன்மையானது. கற்பிக்கப்படும்ஞானம் இரண்டாவதாக நினைக்கப்படுகிறது. இரண்டும் எங்கே நிரம்பியிருக்கின்றனவோ அங்கேதான் நன்மையுண்டாகும். சாஸ்திரமெல்லாம் கற்றபின் தான் ஒருவன் பயன்பெற்றவனாகிறான். அவன் தேவதைபோல மனிதர்களுள் மேன்மேலும் பிரகாசிக்கிறான். புத்தியிலுண்டாகும் அந்தச் சாஸ்திரஞானமானது காமம், குரோதம், பயம், கர்வம், விபரீதஞானம் இவற்றை மேகங்களைக் காற்று ஒதுக்குவதுபோல விரைவாக ஒதுக்கிவிடுகிறது. ஞானவான்கள்செய்யும்சிறியதர்மமும் பெரிதாம். ஞானமில்லாதவர்கள்செய்யும் பெரியதர்மமும் பயன்படாமற்போம். ஞானமுள்ளவன் பொருள்களின் உயர்வுதாழ்வுகளையும் உண்மையையும் அறிந்தவனாவான். அழகியகண்களையுடையவளே! இவ்வாறு சாஸ்திரஞானத்தின்பலன் எல்லாவற்றையும் உனக்குச் சொன்னேன்' என்றுசொன்னார். உமை, 'பகவானே! சிலமனிதர்களுக்குப் பூர்வஜன்மத்தின்நினைவு இருக்கிறது; முன்ஜன்மத்தில்நடந்ததை அவர்கள் அறிகிறவர்களாகப் பிறப்பதுஎப்படி? ஐயா! தேவரே! மனிதர்களுக்குள்ள இந்தவிஷயத்தை எனக்குத் தெளிவாகச்சொல்லும்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'அந்தஉண்மையை உனக்குச்சொல்வேன்; ஊக்கத்துடன்கேள். எந்தமனிதர்கள் திடீரென்று இறந்து உடனே திரும்பவும்ஜனிக்கின்றனரோ அவர்களுக்கு மூன்றியஜன்மத்தின்நினைவு சிறிதுகாலமிருக்கும். ஆதலால், அந்தஞானத்துடன்

உலகத்தில்பிறந்து [1]ஜாதிஸ்மராகிறார். அவர்கள் வளரவளர அவ் வறிவு கனவுபோல் மறைந்துபோகிறது. அறிவானது கல்வியில்லாத வர்களுக்குப் பரலோகம்உண்டென்கிறநம்பிக்கைக்குக் காரணமா கிறது' என்றுசொன்னார். உமை, 'பகவானே! சிலமனிதர்கள் இறந்தபிறகும் அதேதேகத்தில்திரும்பிவருகிறதைக்காண்கிறோமே; அதுஎன்ன?' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'சிறந்தவளே! அதன்காரணத்தை உனக்குச் சொல்லுவேன்; கேள். பிராணிகள்மிகு தியாயிருப்பதனால் அவர்கள் யமதூதர்களினால்கொல்லப்பட்டு உயிர் பிரியும்போது அவர்களுக்கும் அனேகருக்கும் பேர்கள்ஒன்றுயிருப் பதனால் பகுத்தறிவின்றி மாறுட்டமாக மற்றொருவனைக் கொண்டு போகின்றனர். யமன்ஒருவன்மட்டும் அவரவர்புண்ணியபாவங்கள் எல்லாவற்றையும் மாறுபடாமல் அறிந்திருப்பவன். ஆதலால், அவர் கள் ஸம்யமனிஎன்னும் யமபட்டணத்திற்குப்போனபிறகு யமனால் விடப்பட்டுத் தமதுமிச்சமுள்ளகர்மத்தைஅநுபவிப்பதற்கு மறுபடி யும் வருகின்றனர். தமதுகர்மம்முடியாவிடின் மனிதர் திரும்பிவரத் தானேவேண்டும்' என்றுசொன்னார். உமை, 'பகவானே! மனி தர்கள் தூங்கினவுடன் கனவுகாண்கின்றனர். அது இயற்கையா? வேறுகாரணமா? அதை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட் டாள். மஹேஸ்வரர், 'தூங்கினவர்களின் மனத்தின்செய்கை கன வென்றுசொல்லப்படுகிறது. சஞ்சரிப்பதாகியமனம் நடந்ததையும் வருவதையும் அறிகிறது. ஆதலால், மனிதர்களுக்குக் கனவுகாண் பது வருவதற்குக்குறிப்பாகவுமிருக்கும். தேவியே! இதனை உனக் குச்சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்று வினவினார்.

இருநூற்றிருபத்தெட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம்தொடர்ச்சி; தெய்வம், முயற்சி, ஆத்மாகர்ப்பத்தில்பிரவேசிப்பதுமுதலியன.)

உமை, 'பகவானே! எல்லாப்பிராணிகளுக்கும் ஈசுவரரே! உல கத்தில் தொழில்செய்யும் வழியில் எல்லாம் தெய்வத்தாலேயே நடக்கி ன்றனவென்று சிலர் நிச்சயிக்கின்றனர். மற்றவர்கள் முயற்சியைநோரா

---

[1] பூர்வஜன்ம ஜ்ஞானமுள்ளவர்.

கக் காண்பதனால் முயற்சியினாலேதான் எல்லாம்நடப்பவையென்றுநிச் சயிக்கின்றனர். இவ்விரண்டுகொள்கைகளின் வேறுபாட்டினால் என் மனம் ஸந்தேகப்படுகிறது. மஹாதேவரே! உண்மையைச் சொல் லும். எனக்குக் கேட்கவிருப்பமிருக்கிறது' என்றுகேட்டாள்.

மஹேஸ்வரர், 'அந்தஉண்மையை உனக்குச் சொல்லுவேன். நீ ஊக்கத்துடன்கேள். தேவியே! உலகத்தில் நல்லசெய்கையையும் கெட்டசெய்கையையும் மனிதர் செய்கிறார். மனிதர்களிலேயே அந்தக்கருமங்கள் இருவகையாகக் காணப்படுகின்றன. அதனைக் கேள். அவ்விருவகைகளில் முன்செய்யப்பட்டதொன்று; இப்போது செய்யப்படுவது மற்றொன்று. நமது காட்சிக்குப்புலப்படாதகர்மம் எதுவோ அதுதான் தெய்வமென்று சொல்லப்படுகிறது. தன்கருவி களினால் [1]பிரத்யக்ஷமாகச்செய்யப்படும்கர்மம் மானுஷமென்றுசொல் லப்படுகிறது. மானுஷமென்பது செய்கைமட்டுமே. தெய்வத்தினா லேதான் பலன் நிறைவேறுகிறது. இவ்வாறு மனிதர்களிடமிருக் கும் அவ்விருவகைக்கருமங்களும் முயற்சியென்றேஅறி. உலகத்தி லுள்ளதெய்வச்செயல் மனுஷ்யச்செயல் என்பவற்றைப்பற்றிச்சொல் வேன். பயிர்த்தொழிலில் உழுவது விதைப்பது நாற்றுநடுவது அறுப் பதுமுதலியசெய்கைகள்முயற்சியென்றுசொல்லப்படுகின்றன. இவை தெய்வத்தினால் பலியாதிருத்தலுமுண்டு. முயற்சியின்பிழையுமுண்டு. நல்லமுயற்சியினால் புகழ்ச்சியும் கெட்டமுயற்சியினால் இகழ்ச்சியும் உண்டாகும். தேவியே! உலகநடை ஆதிதொடங்கி இவ்வாறுநடக் கிறது' என்றுசொன்னார்.

உமை, 'பகவானே! எல்லாஉலகங்களுக்கும் ஈசுவரரே! தேவர் களாலும் அஸுரர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரே! ஆத்மாவானது எப்போதும் கர்மத்தின்அடியாகக் கர்ப்பத்தில்பிரவேசிப்பது எப்படி? மஹாதேவரே! அதைஎனக்குச்சொல்லும். அதுதான் மிக்கரகஸ்ய மாகநினைக்கப்படுகிறது' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'பெண்ணர சியே! அன்புள்ளவளே! அதனை முழுதும்கேள். அதுரகஸ்யங்கள் எல்லாவற்றிலும் மேலானது. தேவரகஸ்யத்தைக்காட்டிலும் ஆத்ம ரகஸ்யம் பெரிதென்று நினைக்கப்படுகிறது. தேவாஸுரர்கூடஆத்மா போவதையும் வருவதையும்அறியார். ஆத்மா நுட்பமாயிருப்பத னாலும் எங்கும்பொருந்தியிராமையினாலும் அதனை ஜனங்கள்காண முடியாதன்றோ? மாயைகளுள் ஆத்மமாயையே பெரியமாயையென் றும் எப்போதும் நினைக்கப்படுகிறது. ஆத்மமாயையினாலேதான்

1 'விஹிதம்' என்று பாடங்கொள்ளப்பட்டது.

அந்த [1]ஆத்மா நால்வகைஜாதிகளையும் சேருவது. புணர்ச்சி, சுக்லம், சோணிதம், தெய்வம்இந்நான்கும் அதற்குக்காரணங்கள். சிறக்தவளே! சுக்லசோணிதங்களின்சேர்க்கை எப்போது நேரிடுகிறதோ அப்போது ஆத்மா கர்ப்பத்தில் பிரவேசிக்கிறது. இது அண்டஜங்களுக்கும் ஜராயுஜங்களுக்கும்தான். இப்படி சுக்லசோணிதம்சேரும் போது ஆத்மா கர்ப்பரூபமாகிறது. சுக்லசோணிதம்இரண்டும் தோய்ந்து கட்டியானஉருவமாகிறது; அதன்பிறகு மூட்டமுள்ள மாமிசக்கட்டியாகிறது. அங்கங்களின்பிரிவு உண்டானபோது அதன் கர்மம் காலக்கிரமத்தினால் அதைச் சேர்கிறது. இவ்வாறு கர்ப்பம் விருத்தியாக ஆக அதனுடன்கூடவே கர்மத்துடன்சேர்ந்த ஆத்மா விருத்தியாகிறது. அழகானஒளியுள்ளவளே! நீ என்னைக்கேட்கும் ஆத்மகதி இவ்வாறென்றறி. பயிரை நடுவது அறுப்பதுமுதலான காரியங்கள் முயற்சியென்றுநினைக்கப்படுகின்றன. காலத்தில் மழை பெய்வது வேர்பிடிப்பது முளைப்பது கதிர்பிடிப்பதுமுதலியவை யெல்லாம் தெய்வமென்று நினைக்கப்படுகின்றன. ஐந்துபூதங்களுடையநிலையும் க்ரஹங்கள்முதலியவை ஆகாயத்தில்ஸஞ்சரிப்பதும் மற்றும்இவ்வகையாக மனிதர்புத்திக்கெட்டாதவையும் கருவிகளினால் செய்யப்படாதவையுமான நல்லவைதீயவையனைத்திற்கும் தெய்வமே காரணம். மனிதன் செய்யக்கூடியதெல்லாம் முயற்சிஎன்று நினைக்கப்படுகிறது. இவற்றில் ஒன்றினால்மட்டும் காரியம் நிறைவேறுவதில்லை. அன்புள்ளவளே! முயற்சி தெய்வம்இரண்டும்சேர்ந்திருப்பவை. செய்கைகளில் அவ்விரண்டும் சீதோஷ்ணங்கள்போலச் சேர்ந்திருக்கின்றன. தெரிந்தவன் அவ்விரண்டனுள் முயற்சியை முதலில் தொடங்கவேண்டும். ஒருவன் தன்முயற்சியினால் (ஒருகாரியத்தைச்) செய்யாமல் கீர்த்தியடையான். நிலத்தைத்தோண்டுவதனால் தண்ணீரையும் அரணியைக்கடைவதனால் அக்நியையும் அடைவது போலத் தெய்வத்தின்பலன் முயற்சியைப் பொறுத்திருக்கிறது. முயற்சிசெய்யாதமனிதன் தெய்வத்தின்பலனை அடைவதில்லை. ஆதலால், எல்லாக்காரியங்களும் தெய்வத்தினாலும் முயற்சியினாலும் செய்யப்படுகின்றவை. அஸுரர்களும் ராக்ஷஸர்களும் உலகத்தை அழிக்கநினைக்கின்றனர். மாமிசத்தையே பக்ஷிக்கும் அந்தப்பாவிகள் தெய்வத்தைப் பார்க்கிறதில்லை. தெய்வகாரியங்களெல்லாம் மறைக்கப்பட்டிருக்கின்றன. தேவர்களின்மாயை யாருக்குத்தெரியாதன்றே? தேவியே! அந்தமுக்கியமானரகஸ்யத்தை நான் உனக்குச் சொல்

1 மற்றவர்அறியக்கூடாத ஆத்மாவின்செய்கை.

வேன். ஆதிகாலத்தில் மனிதர்களனைவரும் நல்வினைதீவினைகளைச் செய்து இவ்வுலகம்அவ்வுலகம் இரண்டின்நடைகளையும் அறிந்தே பலன்களை அனுபவித்தனர். வேறுதேசத்திற்குப்போனமனிதர்கள் தாம் முன்தேசத்தில் செய்தசெய்கையை எப்படியறிவார்களோ அப் படியே இறந்தபின்னும் முன்தேகத்தில்செய்தகருமத்தை அறிந் திருந்தனர். உலகம் இவ்வாறுஇருந்தபோது எல்லாரும் தர்மத் தையே விரும்பியிருந்தனர். அப்போது வெகுசீக்கிரத்தில் ஸ்வர்க்கம் நிரப்பப்பட்டுப்போயிற்று. தேவர்களுக்கு நெருக்கத்தைக்கண்ட பிரம்மதேவர், 'மனிதர்கள் ஸ்வர்க்கத்தில் பிரவேசித்துக்கொண்டே யிருக்கின்றனரே; இவர்கள் எப்படிஸஞ்சரிப்பர்?' என்றுநினைத் தார். இவ்வாறுநினைத்தவுடன், மனிதர்களை மயங்கச்செய்தார். அது முதல் அம்மனிதர்கள் முன்வினையையறிவதில்லை. அதேகாலத்தில் மனிதர்களிடத்தில் காமக்குரோதங்களையும் சேர்த்தார். அவற்றினால் கெடுக்கப்பட்டமனிதர்கள் ஸ்வர்க்கலோகத்திற்குப் போகவில்லை; முன்செய்தவினைதெரியாமையினால் காமக்குரோதங்களால் உபத்திர விக்கப்பட்டு முன்வினை இல்லைஎன்றுநினைத்து மேன்மேலும் பாவங் களைச் செய்தனர்; தம்லாபத்திற்காகத் தர்மகாரியங்களையும் பரலோ கத்தின்பயத்தையும் மறந்து செய்யத்தகாதபெரும்பாவங்களையும் செய்தனர். அன்புள்ளவளே! உலகம் இவ்வாறானபோது மனிதர் களுக்கும் தேவர்களுக்கும் அழிவுண்டாக்கத்தக்க அஜ்ஞானமுண் டாயிற்று. பாவங்களையேசெய்யும்பிராணிகளினால் நரகங்கள் நிரப்பப் பட்டுப்போயின. உலகத்தைப்படைத்த பிரம்மதேவர் அவர்களைப் பார்த்து உலகங்களின்நன்மைக்காக அந்தவிஷயத்தைப்பற்றித் திரும் பவும்நினைத்தார். 'உலகத்தில் பாவபுண்ணியங்கள் ஸமமாயிருப்பது எப்படி?' என்று அவர் தவத்தினாலும் ஞானத்தினாலும் பலமுறை ஆராய்ந்து பரலோகம் அறிவுக்கெட்டுவதாகவும் கண்ணுக்கெட்டாத தாகவும் செய்தார்' என்று சொன்னார்.

உமை, 'பகவானே! ஒருவன் இறந்ததும் பிறந்ததாக நினைக்கப் படுகிறான். அப்படியே பிறப்பதைக் காண்கிறோம். அங்கே ஆத்மா எப்படியிருக்கும்? பகவானே! கர்ப்பம்ஆரம்பிக்கும்போதே ஆத்மா சேருகிறதா? தேவரே! இது எனக்குச் சந்தேகம். இதை நீர் தீர்க் கக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'அந்தஉண்மையை உனக்குச்சொல்வேன்; ஊக்கத்துடன்கேள். வேறு ஓர்ஆத்மா கர்ப் பத்திற்சேர அங்கேயே இறந்துபோகிறான். உடனே [1] மற்றொரு ஆத்மா அந்தச்சரீரத்தில்பிரவேசிக்கப் பூமியில் பிறக்கிறான். எல்

1 'புநர்ஜ்யஃ' என்று பாடங்கொள்ளப்பட்டது.

லாருக்குமே உண்மைதெரியாது. தெய்வத்தினால் அது உண்டா கும். சிறந்தவளே! பெற்றவளின் ஆறுதலுக்காகவும் பிராணிகளுக் குத் தெரியாமலிருப்பதற்காகவும் அவ்விரண்டுஆத்மாக்களும் ஸம மான கருமம்செய்திருப்பதனாலும் அவ்வாறு நடப்பதென்றுஅறி. சிலர் நரகத்தையநுபவித்தபிறகு ஜன்மத்தைவிரும்பிப் [1]போகிறா ரன்றே? பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் [2]ஸாம்யாமிகைஎன் னும்மாயை இருக்கிறது. தேவியே! இதையும், உனக்குச் சொன் னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றுசொன்னார். உமை, 'பகவானே! எல்லாலோகங்களுக்கும்ஈசுவரரே! உலகங்களால் பிரார்த்திக்கப்படுகிறவரே! விருஷபக்கொடியுடையவரே! 'கருமங் களேஅனுபவிக்கும்ஆத்மா என்பதில்லை. இறந்துபோனபிராணி பிற ப்பதில்லை. செடிக்குக்காயுண்டாவதுபோல எல்லாம் இயற்கையினா லுண்டாகின்றன. கடலில் அலைகள் எப்படிஎழும்புகின்றனவோ அப் படித்தான் உலகத்தில் உருவங்கள் உண்டாகின்றன. ஆதலால், தவம் தானமுதலியகருமங்களும் பயனற்றவையாகக் காணப்படுகின்றன. ஆதலால், மறுபிறப்பு இல்லை' என்றுசிலர் நிச்சயிக்கின்றனர். மற்றும் சிலர் பாராதவைகளைச்சொல்வதைக்கேட்டும் தாம்கண்ணால்பார்க்கமு டியாமலிருப்பதையறிந்தும், 'இவையெல்லாம் இல்லை; இல்லை' என்று ஸந்தேகத்திலிருக்கின்றனர். இந்தக்கொள்கைவேறுபாடுகளில் எது உண்மையோ அதை எனக்குச் சொல்லக்கடவீர். நீங்கள்சொல்வதெல் லாம் உலகத்தில் உண்மையானவை' என்றுகேட்டாள். உமாதேவி யானவள் இந்தக்கேள்வியைக்கேட்கும்போது அந்தச்சபை மறு மொழிகேட்க ஆவல்கொண்டு ஏகமனமாயிருந்தது. மஹேஸ்வரர், 'சிறந்தமகிமையுள்ளவளே! நாஸ்திகர்கள் எதுசொல்லுகிறார்களோ அது உலகத்திலில்லை. இதுதான் சாபத்தினால்கெட்டுச் சாஸ்திரங் களைப்பகைப்பவரின் மதம். நான் உனக்கு முன்னமேசொன்னபடி சாஸ்திரங்களிற்சொன்னவிஷயங்கள்எல்லாம் கண்ணால் காணப்பட்ட வையே. அந்தக்காலந்தொடங்கி, கற்றவர்கள் சாஸ்திரத்தைக்கொ ண்டு உறுதிஎன்னும்சிறந்தநத்தியினால் மனிதர்களின்விருப்பங்கள் என்னும்தாள்களை வெட்டிக் கர்மங்களின்பலனைக்காண்பதற்கு ஸ்வ ர்க்கத்திற்குப் போய்க்கொண்டிதானிருக்கின்றனர். ஆதலால், உல கத்தில் சிரத்தையின்பலன் பரலோகத்தில் மிகப்பெரிதாகும். தம்

1 அவர்களும் தற்செயலாய் அந்தக்கர்ப்பத்தில் சேர்வதுண்டு என்பது.

2 அந்தமாயைதான் இறந்தவன்சரீரத்தின்ஆத்மாவை மற்றொருசரீரத்தில் பிரவேசிக்கச்செய்வது.

நன்மையைக்கருதுகிறவர்களுக்குப் புத்தியும் சிரத்தையும் அடக்கமும் காரணங்கள். ஆதலால், ஸ்வர்க்கம்போகிறமனிதர்கள் சிலர் தாம். மற்றவர்களுக்கு இம்மூன்றுகாரணங்களும்சேராமையினால் அவர்கள் நாஸ்திகளண்ணங்கொண்டனர். சாஸ்திரத்தைப்பகைப்பவர்களும் தாம்பிடித்ததைவிடாதவர்களுமாகிய மூர்க்கர்களானநாஸ்திகர்கள் அனுஷ்டானமில்லாமலும் அவர்களின்அன்னம் யாராலும் புஜிக்கப்படாமலும் தாழ்ந்தகதிக்குப் போகின்றனர். மறுஜன்மம் இருக்கிறது, இல்லைஎன்னும்விஷயத்தில் விரிவான அறிவுள்ளவரும் மயங்குகின்றனர்; எவ்வளவு யுக்திவாதங்கள் நாள்தோறும்செய்தாலும் அதனை யறிவதில்லை. இது பிரம்மாவினால்உண்டாக்கப்பட்டமாயை; அதனை அறியத் தேவராலும் அஸுரராலும் முடியாது. உலகத்தில் ஸ்வல்பபுத்தியுள்ளமனிதர்கள் அறியுமிடத்தால்அறிவதுவது? தேவியே! உள்ளத்தில்ஊன்றின சிரத்தையினால்மட்டுமே சாஸ்திரத்திற் சொல்லியிருப்பதெல்லாம் உள்ளதுஎன்றே நினைக்கவேண்டும். அதனால் நன்மைபெறலாம். தேவியே! மற்றத் தேவரகஸ்யங்களிலும் யுக்தி பயன்படாது. அந்தவிஷயங்களில் தன்னிதத்தைக்கருதுகிறவன் காதுகண்களில்லாதவன்போல நடந்துகொள்ளவேண்டும். தேவியே! ரிஷிகளுக்கும்தெரியாத இந்தஉலகநன்மையை உனக்குச் சொன்னேன்' என்றுசொன்னர்.

இருநூற்றிருபத்தொன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி ; பிராணிகள் யமலோகம்போவதுமுதலியன.)

உமை, 'பகவானே! எல்லாஉலகங்களுக்கும்ஈசுவரரே! திரிபுரமழித்தவரே! சங்கரரே! யமதண்டனைகள் எப்படிப்பட்டவை? யமதூதர்கள் எப்படிப்பட்டவர்? இறந்தபிராணிகள் யமலோகத்திற்குப் போவதெப்படி? யமனுடையகிருகம் எப்படிப்பட்டது? அவன் பிரஜைகளைத்தண்டிக்கும்வகை யாது? மஹாதேவரே! பிரபுவே! இவற்றையெல்லாம் யான்கேட்கக் கருதுகிறேன்' என்றுகேட்டாள்.

மஹேஸ்வரர், 'சிறந்தவளே! தேவியே! உன்மனத்திற்குப் பிரியமானவற்றையெல்லாம் சொல்லுகிறேன்; கேள். 'சிறந்தவளே! தென்திசையில் யமனுடையகிருகம் பெரிதாயிருக்கிறது. அது விசித்திர

மாகவும் அழகாகவும் அனேகம்பொருள்கள் அமைந்ததாகவும் பித்ரு தேவதைகளாலும் [1]பிரேதர்களின்கூட்டங்களாலும் யமதூதர்களாலும் கர்மங்களில் அகப்பட்ட பலபிராணிக்கூட்டங்களாலும் நிரம்பியிருக்கிறது. உலகத்தின்நன்மையில்ஊக்கமுள்ளயமன் தண்டித்துக்கொண்டு எப்போதும் அங்கே இருக்கிறான். அவன் தன் உள்ளத்தினால் பிராணிகளின்நல்வினைதீவினைகளை எப்போதும் அறிகிறான். அங்கிருந்துகொண்டு எல்லாவிடங்களிலுமுள்ளபிராணிக்கூட்டங்களையும் நினைத்தவுடன் ஸம்ஹரித்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய மாயாரூபங்களானபாசங்கள் தேவாஸுரர்களாலும் அறியப்படுவதில்லை. அவனுடையபெரியசரித்திரத்தை வேறுமனிதன்எவன் [2]அறிவான்? இவ்வாறுவலிக்கும் யமனிடத்திற்குக் கர்மமுடிந்தபிராணிகளைக் காரணம்பற்றிக்கிளம்புகிறவரானதூதர்கள் (வியாதிமுதலிய) ஏதோ ஒருகாரணத்தினால் பிடித்துக்கொண்டுபோகின்றனர். உலகத்தில் பிராணிகள் தாம்செய்யும்கர்மத்தினால் உத்தமமாகவும் அதமமாகவும் மத்தியமமாகவுமிருக்கின்றன. அவைகளைத் தகுதியின்படி எடுத்து யமனிடம் கொண்டுபோகின்றனர். தர்மிஷ்டர்களை உத்தமர்கள் என்றறி. அவர்கள் தேவர்கள்போல ஸ்வர்க்கத்திலிருப்பவர்கள். கர்மத்தினால் மூவுலகங்களிலும் ஜனிப்பவர்கள் மத்தியமர்கள்என்று நினைக்கப்படுகின்றனர். திர்யக்ஜாதியில்பிறப்பவரும் நரகம்போகிறவரும் மனிதர்களில் அதமர்கள். இறப்பவர்எல்லாருக்கும் மூன்று வகைமார்க்கங்கள் அறியப்பட்டிருக்கின்றன. அவை, ரமணீயம் நிராபாதம் துர்த்தர்சம்என்னும்பெயருள்ளவை.அவற்றுள் ரமணீயமென்னும்மார்க்கமானது கொடிகளும்கொடிமரங்களும்நிரம்பி விளக்கி ஜலம்தெளித்துப் பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டும் தூபங்கள் போடப்பட்டும் போகிறவர்களின்மனத்தைக்கவர்கிறதாகவும் போகிறவர்களுக்கு இனிமையான காற்றுள்ளதாகவும் இருக்கும்; நிராபாதமென்னும்மார்க்கமானது ஒளியோடு நன்றுகச்செய்யப்பட்டிருக்கும். மூன்றுவதாகிய துர்த்தர்சம்என்னும் மார்க்கம் துர்க்கந்தமுள்ளதாகவும் இருள்மூடியதாகவும் கற்களும்நாய்ப்பற்களும்மிகநிரம்பிக் கரடுமுரடாகவும் பூச்சிபுழுக்கள் நிறைந்ததாகவும் போகிறவருக்கு நடக்கமிகக்கஷ்டமாகவுமிருக்கும். வெளுத்தபுன்னகையுள்ளவளே! உத்தம மத்தியமஅதமர்களை மரணகாலத்தில் எப்போதும் யமதூதர்கள் இம்மூன்றுவழிகளாலே அழைத்துக்கொண்டுபோவது. அதை

1 ஒருவகைப் பேய்.

2 'வேதாஸ்ய' என்ற பாடங்கொள்ளப்பட்டது.

என்னிடம் கேள். உத்தமர்கள் இறந்துபோகுங்காலத்தில் அவர்களை யமதூதர்கள் சிறந்தஉடுப்புஉடுத்துவந்து ஸுகமாக எடுத்துக்கொண்டு ரமணீயமென்னும்மார்க்கத்தினுல் போவர்' என்றுசொன்னுர்.

உமை, 'பகவானே! தேகம்விட்டதும் ஒன்றிலும்பற்றுதலும் காட்சிக்கு அகப்படாததுமாகிய ஆத்மாவைஎடுத்து யமனருகில் கொண்டுபோவது எப்படி?' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'பெண்ணரசியே! அதையெல்லாம் கேள். அன்புள்ளவளே! கர்மவசியம் போகவசியம் துக்கவசியம்என்று மூன்றுவகைக்காரணதேகங்கள் உண்டு. கர்மவசியம்என்பது மானிடதேகம். இரண்டாவது போகவசியமென்பது தேவலோகத்திலுள்ளதேகம். மூன்றுவது மாயையினுல் உண்டாக்கப்பட்ட [1]யாதனுவசியம்என்னும்தேகம். யாதனுவசியம் என்னும்தேகம் யமலோகத்தில்தவிர மற்றெங்கும்காணப்படுவதில்லை. பெண்ணரசியே! யமதூதர்கள், இறந்துபோனபிராணிகளின் ஆத்மாக்களுக்கு யாதனுவசியம்என்னும் தேகங்களைச்சேர்த்து மாயையினுல் அவர்களை யமலோகத்திற்குக் கொண்டுபோகின்றனர்; மத்தியமர்களைப் போர்ச்சேவகன்வேஷத்துடன் இரண்டாவதாகியநிராபாதம்என்னும் மார்க்கத்தினுல் கொண்டுபோகின்றனர். அதமர்களைச் சண்டாள வேஷத்துடன் பிடித்துப் பயமுறுத்தியடித்துப்பாசங்களினுல்கட்டி இழுத்துத் துர்த்தர்சம்என்னும்வழியினுல கொண்டுபோகின்றனர். மூன்றுவகைமனிதர்களை இம்மூன்றுவகைகளாக எடுத்து யமலோகத்திற்குக் கொண்டுபோகின்றனர். சிறந்தமகிமையுள்ளவளே! அங்கே ஸபையில் மந்திரிகளோடு தர்மாஸனத்தில் உட்கார்ந்து தன் ஒளியினுல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் யமதர்மராஜனுக்கு யமதூதர்கள் அவர்களைத்தெரிவித்துக் காண்பிக்கின்றனர். யமன் சிலரைப்பூஜித்தும் சிலரைத்தண்டித்தும் சிலருடையகல்வினைதீவினைகளைக்கேட்டும் அநேகமாயிரவரால்துதிக்கப்பட்டும் எப்போதும் அங்கேஇருக்கிறுன். அங்கேபோனவர்களில் உத்தமர்களை யமன் முறைப்படிபூஜித்து அழைத்து நல்வரவையும்க்ஷேமத்தையும் விசாரித்து அவர்களின்கர்மத்தை எடுத்துரைத்து அதற்குத்தக்கலோகத்தைக் கட்டளையிடுகிறுன். இவ்வாறு யமனுல்விடைகொடுக்கப்பெற்றபின் அவர்கள் ஸ்வர்க்கத்திற்குப் போகின்றனர். நடுத்தரமானவர்களின் கர்மங்களை யமன் ஸரிவரக்கேட்டு, 'இவர்கள் மானிடர்களிலேயே பிறக்கட்டும்' என்று அவர்களுக்குக் கட்டளையிடுகிறுன். பாசங்களினுல்கட்டப்பட்டுப்போன அதமர்களை யமன் பார்ப்பதேயில்லை.

[1] இதுதான் துக்கவசியமென்பது.

சண்டாளரைப்போலக் கொடியவராகக்காணப்படும் யமதூதர்கள் யமதர்மராஜனுடைய கட்டளையினால் அவர்களைத் துன்பப்படுத்துகின்றனர். அவர்களை வெட்டியும் குத்தியும் இங்குமங்கும்இழுத்தும் வைதும் ஒருவரோடொருவரை மோதியும் குழிகளில் குப்புறத்தள்ளுகின்றனர். அன்புள்ளவளே ! ஸம்யாமினிகளென்னும்பாறைகள் அவர்களின்தலைகளில் விழுகின்றன. இரும்புமுகமுள்ளவையும் மிகக்கொடியவையுமான கழுகுக்கூட்டங்கள் அவர்களைப் பக்ஷிக்கின்றன. அவர்களில் சிலரைக் கொடியஅஸிபத்ரவனத்தில் நடத்துகின்றனர். அங்கே கூரானபற்களுடன் நாய்கள் சிலரைக் கடிக்கின்றன. அங்கே மூத்திரமும்மூத்தரமும் பிரவாகமாகப்போவதும் அருவருக்கத்தக்கதும் முதலைகள்நிரம்பினதும் இறங்கமுடியாததுமாகிய வைதரணியென்னும்நதி இருக்கிறது. யமதூதர்கள் அவர்களை அதில்முழுக்காட்டித் தாகத்திற்குத் தண்ணீர்குடிப்பிக்கின்றனர். அவர்களில் சிலரை முள்ளிலவமரங்களில் ஏற்றுகின்றனர். அங்கே சிலர் செக்குயந்திரங்களில் எள்ளைப்போல அரைக்கப்படுகின்றனர். பாவம்செய்தவர்கள் தணல்களில்எரிக்கப்பட்டும் குடங்களுள்மூடி வேகவைக்கப்பட்டும் மணல்களில் வறுக்கப்பட்டுமிருக்கின்றனர். பாவம்செய்தவர்கள் வாள்முதலியஆயுதங்களினால் மரங்கள்போலறுக்கப்பட்டும் துண்டுதுண்டாகவெட்டப்பட்டும் சூலங்களாலும் சிறிய ஊசிகளாலும் குத்தப்பட்டுமிருக்கின்றனர். யமதூதர்கள் தண்டிக்கும்போது, 'நீ இன்னபாவம்செய்தாய். அதற்கு இது தண்டனை' என்றுசொல்லிக் கோஷிக்கின்றனர். அந்தப்பிராணிகள் இவ்வாறு 1 யாதனாவசியங்களென்னும் சரீரங்களினால் துன்பத்தையடைந்து அந்தத்துன்பத்தைத் தங்கள்பாவத்தினால் வந்ததுஎன்றுநினைத்து ஸகிக்கின்றனர். கதறியும் அழுதும் எவ்வகையிலும் அவர்கள் விடப்படுவதில்லை; தாங்கள்செய்தபாவத்தைநினைத்து அங்கே மிகப்பரிதபிக்கின்றனர். பாவம்செய்தவர்கள் இப்படிப்பட்டபலதண்டனைகளை அனுபவிக்கின்றனர். நரகங்களிற் பலமுறை துன்பங்களினால் பீடிக்கப்படுகின்றனர். சிலர் அங்கே துன்பங்களையனுபவித்துப் பாவத்தினின்று விடுபடுகின்றனர். அந்த யாதனைகள் மனிதர்களின்பாவத்தைப் போக்குகின்றவையாக நினைக்கப்படுகின்றன. மிகுதியாகக் காய்ச்சப்பட்ட உலோஹம்போல மனிதர்கள் அழுக்கற்றவராவார்' என்றுசொன்னர்.

1 'யாதநாவசை:' என்றுபாடங்கொள்ளப்பட்டது.

இருநூற்றுமூப்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி ; ஐந்துவகை நாகங்கள்முதலியன.)

உமை, 'பகவானே! மஹேச்வரரே! அந்தநரகங்களில் அவர்கள் தண்டிக்கப்படுவது எப்படி? அந்தக்கொடியநரகங்கள் எத்தனை? அவை எப்படிப்பட்டவை?' என்றுகேட்க, மஹேச்வரர் சொல்லலானர்.

'பெண்ணரசியே! அவற்றையெல்லாம் கேள். அந்தநரகங்கள் ஐந்தாகச்சொல்லப்படுகின்றன. அவை பாவம்செய்தவர்களுக்காகப் பூமியின்கீழ்ப் படைக்கப்பட்டவை; கொடியவை. அவற்றுள் முதலாவது ரௌரவமென்னும்நரகம். அது நூறுயோஜனைநீளமும் அகலமுமுள்ளது; இருள்மூடியது; பாவிகளைப்பீடிப்பது; மிகத்துர்க்கந்தமுள்ளது; கொடியது; பயங்கரமானபுழுக்கள்நிரம்பினது; மிக்கபயங்கரமானது; சொல்லக்கூடாதது; எல்லாவிடங்களிலும் பிரதிகூலமாயிருப்பது. பாவிகள் புழுபூச்சிகளிஞல்கடிக்கப்பட்டு விஷ்டையின் துர்க்கந்தத்தைஅடைந்து வெகுகாலம் அங்கே கிற்கின்றனர். அங்கே படுப்பதுமில்லை; உட்காருவதுமில்லை; அந்தஉலகத்திலிருக்கும் காலமெல்லாம் இப்படி நடுங்கிக்கொண்டே இருக்கின்றனர். அந்தநரகத்தில் யமதூதர்களின்பாதைகளிஞல்உண்டாகும்துன்பம் இதற்குப்பதின்மடங்குஅதிகமாக நினைக்கப்படுகிறது. அழகானகண்களையுடையவளே! அங்குள்ள துயரம் அளவற்றதாக நினைக்கப்படுகிறது. கதறிக்கொண்டும் அழுதுகொண்டும் அங்கே துன்பங்களை அனுபவிக்கின்றனர். துயரத்தைவிடுவித்துக்கொள்வதற்காக ஓடுகின்றனர். அதைக் கவனிப்பவன் யாருமில்லை. துக்கத்திற்குவிடுதலும் துக்கத்தைஅறிபவனும் அங்கே கிடைப்பதில்லை. அன்புள்ளவளே! மஹாரௌரவம் என்கிறபெயருள்ளது இரண்டாவதுநரகம். அது அளவிலும் துன்பத்திலும் முன்சொன்னரௌரவத்தைக்காட்டிலும் இரண்டுமடங்கு அதிகமென்றறி. அவற்றுள் மூன்றுவதுநரகம் கண்டகாவனம் என்னும்பெயருள்ளது. அது துக்கத்திலும் அளவிலும் முன்னிரண்டு நரகங்களுக்கும் இரண்டுமடங்கு அதிகம். மஹாபாதகங்கள்செய்த கொடியவர்கள் அந்தநரகத்திற்போவார். அன்புள்ளவளே! அக்நிகுண்டம்என்றுசொல்லப்படுவது நான்காவதுநரகம். இது அந்தக் கண்டகாவனத்திற்கும் இரட்டித்தது; அதைப்போலவே ஸ்ரீகமில்

லாதது. அமானுஷம்என்னும் (ஐந்தாவது) நரகம் அக்நிகுண்டத்தைப்பார்க்கிலும் மிகப்பெருந்துன்பமுள்ளது. பாவம்செய்தவர்கள் அந்த அந்தநரகங்களிலேயே துக்கங்களையனுபவிக்கின்றனர். அந்த அமானுஷநரகத்திலுள்ள துக்கம் சொல்லமுடியாதது; ஸஹிக்கமுடியாததாக இடைவிடாமலிருக்கும். ஐந்துஇந்திரியங்களும் [1]பாதைப்படுவதனால் அது பஞ்சகஷ்டம்என்றும்சொல்லப்படுகிறது. பாவம் செய்தவர்கள் பலவிடங்களில் கஷ்டப்படுகின்றனர். மனிதர்கள் தாங்கமுடியாத துன்பத்தைப் பஞ்சபூதங்களாலும் அனுபவிக்கின்றனர். மிகக்கொடியசெய்கையை வெகுகாலம்செய்ததனால் பஞ்சபூதங்களும் அந்தத்துயரத்தையடைகின்றன. பஞ்சகஷ்டத்திற்குச் சமமான துக்கம் வேறில்லை. அன்புள்ளவளே! பஞ்சகஷ்டம்தான் துக்கத்திற்கு இடமென்று சொல்லுகின்றனர். துக்கத்திற்குரியபிராணிகள் இவ்வாறு இந்தநரகங்களில் நிற்கின்றன. அன்புள்ளவளே! அவிசிமுதலியவேறுநரகங்களும் உள்ளன. அங்கே சிலர் துக்கப்பட்டு துன்பம்தாங்கமாட்டாமல் கதறிஅழுகின்றனர். சிலர் வாந்திசெய்துகொண்டு புரளுகின்றனர். சிலர் தாங்காமல் ஓடுகின்றனர். நோய் தாங்காமல் தாகமெடுத்துஓடும் பாவம்செய்தபிராணிகளை யமதூதர்கள் சூலத்தைக்கையிலேந்தி நாலுபக்கங்களிலும் தடுக்கின்றனர். முன்செய்தகர்மம் உள்ளவரையில்எவ்வகையிலும் விடப்படுவதில்லை. பிரியமுள்ளவளே! க்ருமிகளால்பக்ஷிக்கப்பட்டு நோய்தாங்காமலும் தாகமெடுத்தும் தாங்கள்தவறிச்செய்தபாவத்தைநினைத்துத் துயரப்பட்டுக்கொண்டு பாவம்ஒழியும்வரையிலும் அங்கேஇருக்கின்றனர். இவ்வாறு நரகத்தையனுபவித்துப் பாவம்கழிந்தபின் விடப்படுகின்றனர்' என்றார்.

உமை, 'பகவானே! அவர் நரகங்களில் எவ்வளவுகாலமிருக்கின்றனர்?' என்றுகேட்டாள். மஹேச்வரர், '[2]நாறுயிரம்வருஷமுதல பிரளயகாலம்வரையில் மனிதர்கள் (அவரவர்செய்கைகளுக்குத் தக்கபடி) நரகத்தில் இருப்பார்என்பது நிச்சயம்' என்றுசொன்னார். உமை, 'பகவானே! பிரபுவே! அந்தநரகங்களுள் எவர்கள் [3]எதிலிருக்கின்றனர் என்பதைச் சொல்லும்' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'மனிதர்களைக்கொன்றவரும் நன்றிகெட்டவரும் பொய் சொல்லுகிறவரும் ரௌரவநரகத்தில் நாறுயிரம்வருஷகாலம் இருப்

1 'பஞ்சேந்த்ரியைர்ப்ரஸம்பாதாத்' என்ற பாடங்கொள்ளப்பட்டது.

2 'சதம்' என்று பாடங்கொள்ளப்பட்டது.

3 'குத்ர' என்று பாடங்கொள்ளப்பட்டது.

பர். [1]அப்படிப்பட்டமனிதர்கள் இரண்டாவதுநரகத்தில் இரண்டுத் தினைகாலம்வரையில் பீடிக்கப்படுவார். மஹாபாதகங்களைச் செய்த வர்கள் மூன்றுவதுநரகத்தில் தூக்கப்படுவார். இதுவரையில்தான் மனிதர்கள் தாங்குவது. மற்றவை வேறுபிராணிகளுக்குக்காணப் படுகின்றன. யக்ஷர், வித்தியாதரர், நாகர், கின்னரர், கந்தர்வர், பூதங்கள் இவர்களில் அதிகபாவம்செய்தவர்கள் நாலாவதுநரகத்தில் பீடிக்கப்படுகின்றனர். அப்படிப்பட்டவர்கள்தாம் அந்தநரகத்திற் குரியவர்களாக நினைக்கப்படுகின்றனர்; பஞ்சகஷ்டத்திலுள்ளது போல மிகக்கொடிய துயரத்தைச்சகித்துக்கொண்டு பிரளயம்வரையி லும் நாலாவதுநரகத்தில் பீடிக்கப்படுகின்றனர். மனிதர்களின்துய ரங்கள் இந்தநீண்டகாலத்துத்துயரத்திற்குக் குறைந்தவைஎன்றறி. அவர்கள் இவ்வாறு நரகங்களையனுபவித்து அங்கே பாவங்களைத்தொ லைத்து நரகங்களிலிருந்துவிடுபட்டபிறகு சிலர் க்ருமிகளாகவும் சிலர் உத்பிஜ்ஜங்களாகவும் பிறக்கின்றனர். சிறந்தவளே! அவற்றிலிரு ந்து பாவங்கள்கழிந்தபின் திரும்பவும் மிருகஜாதிகளிலும் பக்ஷி ஜாதிகளிலும் பிறக்கின்றனர். மிருகபக்ஷிஜன்மங்களில் பாவத்தை யனுபவித்தபிறகு மானிடஜன்மத்தையடைகின்றனர்'என்றார்.உமை, 'பாவம்செய்தவர்கள் பலஜாதிகளில்பிறப்பது எதனால்?' என்று, கேட்க, மஹேசுவரர் சொல்லலானார். 'சிறந்தவளே! நீகேட்கவிரும்பு கிறதை நான் உனக்குச் சொல்வேன். ஆத்மாவானது எப்போ தும் கர்மங்களில் அகப்பட்டதாகிப் பலஜாதிகளில் பிறக்கிறது.எவன் எப்போதும் மாமிசத்தைவிரும்புகிறானோ அவன் காக்கைகளாகவும் கழுகுகளாகவும் பிறக்கிறான். எப்போதும் விடாமல் சுராபானம் செய்யும்மனிதன் பன்றிஜன்மத்தையடைவது நிச்சயம். பக்ஷிக் கத் தகாதவற்றைப் பக்ஷிக்கும்மனிதன் காக்கைஜாதியில் பிறக்கிறான். கோபத்தினால் தற்கொலைசெய்யும்மனிதன் பிரேதஜாதியிற்சேருகி றான். கோட்சொல்லுவதனாலும் தூஷிப்பதனாலும் கோழிஜன்மத் தையடைவான். நாஸ்திகனாயிருக்கும்மூர்க்கன் மிருகஜன்மத்தை யடைவான். கொல்வதனால் ஸந்தோஷமடையும்மனிதன் பூச்சிபுழு வாகப் பிறக்கிறான். எப்போதும் அதிககர்வமுள்ளமனிதன் இறந்து கழுதையாகப்பிறக்கிறான். புண்யத்தகாதவைப் புணருவதனாலும் பிறர்மனைசேர்வதனாலும் பெருச்சாளிஜன்மத்தையடைகிறான். அதில் ஸந்தேகமில்லை. நன்றிகெட்டவனும் ஸ்நேகிதனைக்கொன்றவனும் கரியாகவும் ஓநாயாகவும் ஜனிக்கின்றனர். நன்றிகெட்டவனும் புத்

[1] அந்தப்பாவத்தையே இன்னும் விகுதியாகச்செய்தவர் என்று கருத்து.

திரனைக்கொன்றவனும், தாவரமாகப்பிறக்கின்றனர். இவைமுதலிய தீயகர்மங்களைச் செய்தமனிதர்கள் நரகம்போனபிறகு தாம்செய்த கர்மம்பற்றியே அந்தப்பலவகைஜன்மங்களை எடுக்கின்றனர். இவ் வகைஜன்மங்களிலேயே பாவம்செய்தபிராணிகளை நிச்சயிக்கலாம். பலஜன்மங்களுக்குப்பின் அவர்கள் மானிடஜன்மத்தையடைவார். லோஹங்கள் பலமுறை தீயிற்சுடப்படுவதால் சுத்தப்படுவதுபோல ஆத்மா பலபலதுன்பங்களிலால் பீடிக்கப்பட்டபின் அதன்வன்மையி லால் சுத்தப்படுகிறது. ஆதலால், ஜன்மங்களில் மானிடஜன்மம் கிடைப்பது மிகஅரிதுஎன்றறி' என்றுசொன்னார்.

இருநூற்றுமுப்பத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி ; மனோவாக்காயங்களிலு லுண்டாகும்பாவம் மதுபானாதிதலியன.)

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! சூல பாணியே! விருஷபத்வஜரே! வரமளிப்பவரே! உமது அனுக்கிரகத் திலால் பரமரகஸ்யத்தைக் கேட்டேன். பிரஜைகளின் நன்மைக்காகத் திரும்பவும் ஒன்று கேட்கவிரும்புகிறேன். அவரவர்களின் சுபாசுப கர்மங்களைப்பற்றிச் சுருக்கமாகச் சொன்னீர். அந்தச்சுபாசுபங் களின் முடிவைப்பற்றி எனக்கு விரிவாகச் சொல்லும். தேவரே! அசுபகர்மம் எப்படிப்பட்டது? அது பிராணிகளைக்கீழேதள்ளுவதும் சுபகர்மம் மேலுலகத்தைக்கொடுப்பதுமெப்படி? தேவஸ்ரேஷ்டரே! இதை எனக்குச்சொல்லும். நான் கேட்கவிரும்புகிறேன்' என்று கேட்டாள்.

மஹேசுவரர், 'சிறந்தவளே! அவற்றையெல்லாம் உனக்குச் சொல்வேன் ; கேள். கர்மங்கள் புண்ணியமென்றும் பாவமென்றும் இருவகையாகும். அவற்றுள், பாபகர்மமென்பது மனோவாக்குக் காயங்களிலால் உண்டாகி மூன்றுவகையாகிறது. மனத்திலுண் டாகும் கர்மம் தெரியாமலும் தெரிந்தும் உண்டாகிறது. அதன் பிறகு, சொல்லென்னும்கர்மம் உண்டாகிறது. அன்புள்ளவளே! அதன் பிறகு, அவ்வவற்றைச்செய்வதற்குரிய தேகவியாபாரமுண்டாகிறது. கொல்லக்கருதுவது, பொருமை, பிறர்பொருளில்ஆசை, கல்லமனிதர் களுக்கும் கெட்டமனிதர்களுக்கும் ஜீவனத்தைக்கெடுப்பது, தர்ம

காரியத்தில் சிரத்தையில்லாமை, பாவகாரியத்தில் உத்ஸாகம் இவை முதலியஅசுபகர்மங்கள் மானஸபாபங்கள்என்று சொல்லப்படுகின்றன. பொய், கடுஞ்சொல், யாருக்கும்அடங்காமல் உத்தண்டமாய்ப் பேசுவது, மனம்நோகப்பேசுவது, நிந்திப்பது, உண்மைபேசாமை ஆகிய இவை வாக்கினாலுண்டாகும்பாவங்கள். சோரத்தகாதவளிடம் சேருவது, பிறர்மனைபுகுவது, அடிப்பதனாலும் கட்டுவதனாலும் கஷ்டப்படுத்துவதனாலும் பிறஉயிர்களைப் பீடிப்பது, களவு, பிறர் பொருளை அபகரிப்பது, அதனையழிப்பது, புஜிக்கத்தகாதவற்றைப் புஜிப்பது, (வேட்டைமுதலிய) வ்யஸனங்களில்பற்றுதல், கர்வத்தினாலும் அலக்ஷியத்தினாலும் பிடிவாதத்தினாலும் பிறரை நோகச்செய்வது, செய்யத்தகாதவற்றைச்செய்வது, அசுத்தமாயிருப்பது, குடிப்பது, கெட்டஒழுக்கம், துஷ்டர்களின்சேர்க்கை, பிறர்செய்யும்பாவங்களுக்கு உதவியாயிருப்பது, புண்ணியத்துக்கும் புகழுக்குமாகாதகாரியங்களில் பிரவேசிப்பதுமுதலிய கெட்டசெய்கைகள் சாரீரபாவங்கள் என்று சொல்லப்படுகின்றன. மானஸ பாபத்தைப்பார்க்கிலும் வாக்குப்பாவம் அதிகமென்றும் வாக்குப் பாபத்தைப்பார்க்கிலும் சாரீர பாபம் அதிகமென்றும் நினைக்கப்படுகின்றன. இம்மூன்றுவகைப் பாவகர்மங்களும் மனிதனைத் தள்ளிவிடும். பிறருக்குத்தீங்குசெய்வது அதிகபாவமென்று நினைக்கப்படுகிறது. அப்படி மூவகைப் பாவங்களையும்செய்வது செய்பவனை மிகக்கொடியநரகத்திற்சேர்ப்பிக்கும். பாவம் கர்மவசத்தால் அறியாமலோ அவசியம்செய்யநினைத்து ஒருவியாஜத்தைச்சொல்லியோ எவ்விதமாகச்செய்யப்பட்டாலும் செய்தவனை அடையவேஅடையும். பாவத்தை அவசியம்வெளியிடுவதனால் அதற்குக்காரணமானசெய்கை பயனற்றுப்போம்'என்று சொல்லும்போது, உமை, 'பகவானே ! பாவகார்யத்தைஎவ்வகையிற் செய்தால் குற்றம்பற்றுவதில்லை?' என்று கேட்டதற்குத் திரும்பவும் மஹேஸ்வரர் சொல்லலானார்: 'குற்றம்செய்யாதவருமனிதன் தன்னுயிரைக்காத்துக்கொள்வதற்காக முதலில் தன்னை அடித்தவனும் அடிக்க ஆயுதத்தையோங்கினவனுமான பகைவனைத் திருப்பியடித்துக்கொன்றால் அவனைப் பாவம் பற்றாது. ஒருமனிதன், திருடனிடத்தில் அதிகமாகப்பயந்து அவனைத்தடுப்பதற்காக அவனையடித்துக்கொல்லுவதனால் அவனுக்குப் பாவம்இல்லை. கிராமத்திற்காகவும் யஜமானனுடையஅன்னத்தைச்சாப்பிட்டதற்காகவும் துயரப்படுகிறவர்களைக் காப்பதற்காகவும் அடிப்பதையும் கட்டுவதையும்கஷ்டப்படுத்துவதையும்செய்கிறவன் பாவத்திலிருந்துவிடுபடுவான். பஞ்சத்தில் தான்

ஜீவிப்பதற்காக யாருக்கும்தெரியாமல் தனிமையாகவிருந்துகொண்டு அகாரியத்தைச்செய்தாலும் அபக்ஷியத்தைப்பக்ஷித்தாலும் அவனைப் பாவமணுகாது. இந்தச்செய்கை கிருகஸ்தர்களுக்கே பெரும்பாலும் உபதேசிக்கப்படுகிறது. இடத்தையும் காலத்தையும் அனுஸரித்துப் புத்தியிலுலாராய்ந்து அந்தப்பிரயோஜனத்திற்குத் தக்கபடி பேசத் தகாததைப்பேசினாலும் செய்யத்தகாததைச்செய்தாலும் அவனைப் பாவம் சிறிதுபற்றும் ; பற்றுமலும்போகும். தேவியே ! இது இவ்வா றென்று தெரிந்துகொள். இதில் ஸந்தேகமில்லை' என்றுசொன்னர்.

உமை, 'பகவானே ! மஹேச்வரரே ! பானத்தின்குற்றங்களை யும் குடிப்பதற்கும் குடியாமலிருப்பதற்கும் காரணத்தையும் கேட்க விரும்புகிறேன். அதைஎனக்குச் சொல்லும்' என்றுகேட்க, மஹே சுவரர் சொல்லலானர் : 'தெளிந்தபுன்னகையுள்ளவளே ! ஆ ! ஆ ! பானத்தின்உற்பத்தியை உனக்குச் சொல்வேன். அன்புள்ளவளே ! ஆதிகாலத்தில் எல்லாமனிதர்களும் கல்லபுத்தியுள்ளவர்களாகவும் நியாயத்தைஅனுஸரிப்பவர்களாகவும் பரிசுத்தர்களாகவும் நல்லொழு க்கமுள்ளவர்களாகவும் உயர்ந்த மனமுள்ளவர்களாகவும் இருந்தனர். உலகம் இவ்வாறிருந்தபோது ஒருவனுக்கு ஏவல்தொழில்செய்பவன் மற்றொருவனில்லை. ஏவத்தக்கவனில்லாமையினல் மனிதர்கள் வேலை களைத் தொடங்குவதே இல்லாமற்போயிற்று. தேவியே ! வேலைகெட் டுப்போவதினல் இரண்டுலோகங்களும்கெடுவதைக்கண்ட பிரபுவான பிரம்மதேவர், ' உலகத்தில் யாககாரியம் எப்படிநடக்கும் ?' என்று நினைத்துத் தேவர்களைப்பார்த்து, 'மனிதர்களுக்கு மயக்கத்தையுண்டு பண்ணுங்கள்' என்று கட்டளையிட்டார். அன்புள்ளவளே ! தேவர் கள் தமோகுணத்தின்ஸாரத்தை எடுத்துப் புத்தியைக்கெடுப்பதும் பாவத்தையுண்டாக்குவதுமாகிய பானத்தை மனிதர்களிடம் சேர்ப்பி த்தனர். அதுமுதல் அந்தப்பானத்தினல் பூமியிலுள்ள மனிதர்கள் செய்யத்தக்கது செய்யத்தகாதது சொல்லத்தக்கது சொல்லத்தகா தது குணம் குற்றம்இவை ஒன்றும்அறியாமல் மயங்கினர். சிறந்த வளே ! பானத்தைச் சிலர் குடித்து நகைக்கின்றனர். மற்றும்சிலர் அதிகமாகப் பிதற்றுகின்றனர். சிலர் உற்சாகமாகக் கூத்தாடுகின்ற னர். சிலர் கல்லபாட்டுக்களையும் கெட்டபாட்டுக்களையும் பாடுகின்ற னர். சிலர் சண்டையை விரும்புகின்றனர். சிலர் கலகத்தைவிரும்பி ஒருவரையொருவர் அடிக்கின்றனர் ; சிலவிடங்களில் வேகமாகஓடித் தடுக்கிவிழுகின்றனர். சிறந்தவளே ! கண்டவிடங்களில் தகாதபேச் சுக்களை அதிகமாகப்பேசுகின்றனர். ஆடையில்லாமல் அங்கங்களை

விரித்துக்கொண்டி நினைவுதப்பிக் கிடக்கின்றனர். பெருமயக்கத்தைத் தரும் கள்ளைக்குடித்துப் பாவத்தையடைந்த மனிதர்கள் இப்படிப் புத்திமயங்கி அநேகவிதமானசெய்கைகளைச் செய்கின்றனர். கள் குடித்தலானது தைரியத்தையும் வெட்கத்தையும் புத்தியையும் அழித்துவிடும். அதனால் மனிதர்கள் நாணமும் கூச்சமும் அற்றவராகின்றனர். குடிப்பவர்கள், அறிவும் தைரியமும் உற்சாகமும்குன்றினவர்களாகவும் அழுக்குள்ளவர்களாகவும் குடிக்கக்குடிக்கக் குடிவிருப்பமுள்ளவராகவும்ஆகின்றனர். அந்தக்கீழ்மனிதர்கள் குடியையேவிரும்பியும் அதைப்பற்றியே பேசியும் குடிக்கும்காலத்தை எதிர்பார்த்தும் குடிப்பதற்காகவே வேலைகளுக்குஅடங்கியும்இருக்கின்றனர். குடிப்பவர்கள்குடியைவிரும்பி அந்தஆசையினால்விவேகமும்தைரியமும்குன்றியதனாலும் குடிக்கக்கொடுப்பவர்களுக்கு வேலைக்காரர்களாக உடனேஆயினர். அக்காலந்தொடங்கி உலகத்தில் பானத்திலாசைப்பட்ட ஏழைகளான [1] குடியரைக்கொண்டி புத்திமான்கள் தம்காரியங்களைச் செய்விக்கின்றனர். குடியர்கள், தொழிலாளிகளும் அடிமைகளும் கூலிவேலைக்காரர்களும் ஆகிக் கயிற்றில்கட்டப்பட்ட பசுக்கள்போல எல்லாவேலைகளையும் செய்பவராயினர். குடிப்பவன் கள்ளைக்குடித்தவுடன் விவேகம்கெடுவதனால் காரியாகாரியங்களையறியாமல் தான் நினைத்தபடி செய்வதனாலும் தெரிந்தவர்களுக்கடங்காமையினாலும் பாவத்தையேபற்றுகிறான். கள்குடிப்பவன் ஸ்நேகத்தைக்கெடுப்பவனும் உலகத்தில் அவமதிக்கப்பட்டவனுமாவான். அவன் எப்போதும் அசுத்தனாகவும் எல்லாவற்றையும்பக்ஷிப்பவனாகவும் இருப்பான்; குலத்தோராலும் வித்வான்களாலும் விடப்பட்டு எப்போதும் கலகத்திலேயே எண்ணங்கொண்டி துர்ப்பாஷையையும் கடிஞ்சொல்லையும் எல்லாரிடத்திலும் சொல்லுகிறான். குடிமயக்கமுள்ளவன் பெரியோரை வரைதப்பிப்பேசுவான்; பிறர்மனைவிகளை ஆக்கிரமிப்பான்; குடியரோடு ஸ்நேகம்செய்வான்; யாரிடத்திலும் இதம்கேளான். சிறந்தவளே! குடியர்களிடத்தில் இப்படி பலகுற்றங்களுள்ளன. அவர்கள் நரகத்திற்கே போவார். அதற்கு ஸந்தேகமில்லை. ஆதலால், தம்இதத்தைக் கருதினஸாதுக்களால் பானம் விடப்பட்டிருக்கிறது. ஸாதுக்கள் நல்லொழுக்கத்திற்காகப் பானத்தை நீக்காமற் போவராயின் இவ்வுலகமனைத்தும் வரம்புகடந்தும் தொழிலற்றும் போய்விடும். ஆதலால்,விவேகத்தைக்காப்பாற்றுவதற்காகவே ஸாதுக்கள் பானத்தை விலக்கினர். அன்புள்ளவளே! இவ்வாறு மூன்று வகைப்பாவங்களையும் உனக்கு முழுதும் சொன்னேன்.

1 'பாகபை' என்று பாடங்கொள்ளப்பட்டது.

இருநூற்றுமுபபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி; முன்றுவகைப் புண்ணியங்கள் ஆசாகந்தங்கள் முதலியன.)

தெளிந்தபுன்னகையுள்ளவளே! இனி புண்ணியத்தின்முறையையும் கேள். தேவியே! புண்ணியமும் மூன்றுவகையென்று சுருக்கமாகச்சொல்லப்படுகிறது. ஔபபரமிகம், நிருபத்ரவம், ஸோபகரணம் என்று மூன்றுவகை ஸுக்ருதம் இருப்பதாகஅறிகின்றனர். அன்புள்ளவளே! பாபகர்மங்களைச்செய்யாமலொழிவது ஔபபரமிகம். மனோவாக்குக்காயங்களினாலுண்டானபாவங்களை நீ என்னிடம் கேட்டிருக்கிறாயே; அவற்றைவிடுவதனால் கன்மையுண்டாகிறது. இம்மூன்றுகுற்றங்களையும்பாவங்களென்றுணர்ந்துழுழிப்பவன் எவனோ அவன் பாவங்களை முழுதும்விடுவதனாலேயே எல்லாகன்மைகளையும் அடைகிறான். பாவங்களையெல்லாம் ஒருமிக்கவாவது தனித்தனியாகவாவது முதலில் விடவேண்டும். அதனால் புண்ணியத்தையடையலாம். பாவங்களைவிடுவதுதானே அஸாத்தியம். பாவங்களைமுழுதும் விடுவதனால் மனிதன் ரிஷியாகிறான். செய்யவேண்டியகாரியத்தைச் செய்யாமலே புண்ணியம் எளிதாகக்கிடைப்பதைப் பார். பாவழிவைப்பெற்றஆத்மாவுக்குப் பெரியஸுக்ருதம் கிடைக்கிறது. ஆ! ஆ! புத்திக்குறைவானமனிதர்கள் தங்களுக்குவசமான இந்தவழியையறியாமல் கவலையற்றுக் கொடியவர்களாகவிருந்து நரகத்தில் வதைக்கப்படுகின்றனர். பாவத்தைவிட்டமாத்திரத்தினாலன்றோ உயர்பதம் பெறுவது? தேவியே! மனத்தில்கள்ளமின்றித் தர்மத்தைக்கருதிப் பாவத்திற்கஞ்சுவதனால்மாத்திரமே பாவங்கள் விலகிப் பரிசுத்தனவான். தேவியே! இந்த ஔபரமிகம்என்னும்ஸுக்ருதத்தை உனக்குச் சொன்னேன். சான்றோரிடம்சென்று சாஸ்திரங்களைக்கேட்பதனாலும் ஐம்புலன்களையுமடக்குவதனாலும் உள்ளத்தில்திருப்தியாயிருப்பதனாலும் மனஉறுதியினாலும் பாவங்களைவிலக்கமுடியும். அன்புள்ளவளே! இதுதான் தோஷஸம்யமனம் என்னப்படும்கிருபத்ரவதர்மமென்று சொல்லுகின்றனர். அன்புள்ளவளே! இந்தத்தோஷஸம்யமனமென்னுந்தர்மத்திற்குமேற்பட்ட நல்லதர்மம்ஒன்றுமில்லை.

1 'லபதே' என்று பாடங்கொள்ளப்பட்டது.

அந்தயமதர்மத்திஞலேதான் யதிகள் உத்தமகதியையடைவது. ஐசுவர்யமுள்ளபிரபுக்களுக்கும் ஏழைகளுக்கும் தோஷங்களைவிடுவது தானதர்மங்களைக்காட்டிலும் பெரும்பலனுள்ளது. மஹாதேவியே! தவமும் தானமும் ஸ்வல்பதோஷங்களைத்தான் பரிஹரிக்கும். இப்படிப்பட்டநிருபத்ரவம்என்னும்புண்ணியத்தையும் சொன்னேன். இனி நிருபஸாதனம்என்னும்புண்ணியத்தையும் சொல்வேன். உலகமெல்லாம் ஸுகமாயிருக்கும்படிநினைப்பதும், ஸத்தியமும், சுத்தமும், மனத்தூய்மையும் விரதங்களிலும் உபவாஸங்களிலும்ஸந்தோஷமும் காமக்குரோதங்களைவிடுவதும், மனத்தையும் இந்திரியங்களையும் அடக்குவதும், மற்றுமுள்ளநற்கருமங்களும் [1]நியமத்தைச்சேர்ந்தவை. பெண்ணரசியே! அவற்றின்பிரிவுகளையும் சொல்வேன்; கேள். ஸத்யமானது ஸ்வர்க்கத்திற்குப்படிபோலவும் துன்பக்கடலுக்குக் கப்பல்போலவும் இருக்கிறது. ஸத்யத்திற்குமேலான தானமுமில்லை. ஸத்தியத்திற்குமேலான தவமுமில்லை. கேட்டதையும் கண்டதையும் செய்ததையும் உள்ளபடி மாற்றுமல்பேசுவதுதான் ஸத்யம். வஞ்சகத்தோடுசேர்ந்தஉண்மையும் பொய்தான். உயிர்வதாழுவகளையநிந்தவன் ஸத்யத்தையே பேசவேண்டும். ஸத்யத்திஞல் தீர்க்காயுளுள்ளவனும் ஸந்ததியின்தொடர்ச்சியைக்காப்பவனும் உலகின்வரம்பை நிலைநிறுத்துகிறவனுமாவான்' என்றார். உமை, 'மனிதன் விரதத்தை எப்படிநடத்திஞல் புண்ணியம்அடைவான்?' என்றுகேட்க, மஹேசுவரர், 'மனத்திஞலும் வாக்கிஞலும் செய்கையிஞலும் உண்டாகும் மூன்றுவகையானபாவங்களையும் முன்சொன்னேனே; அவற்றைஉறுதியுடன்விடுவது தபோவிரதம்என்னப்படும். நியமமில்லாமல் விடத்தக்கதையும் செய்யத்தக்கதையும் வீணுகச்செய்பவன் பலனையடையான். ஆதலால், [2]தர்மத்தை வீணுகச்செய்யலாகாது. மனிதன் சாஸ்திரப்பிரகாரம் தீர்த்தஸ்நானம்செய்து தேகத்தைப்பரிசுத்தமாகச்செய்துகொண்டு பஞ்சபூதங்களையும் சூரியசந்திரர்களையும்காலை மாலைஇரண்டுஸந்திகளையும் தர்மதேவதையையும் யமனையும் பித்ருக்

1 ஸோபகரணம்என்றும் நிருபஸாதனம்என்றும் நியமமுள்ளதர்மமென்றும்சொல்லப்படுகின்றன. ஸோபகரணம்=குற்றங்களையொழித்தபின் முயற்சியால்செய்யப்படுவது. நிருபஸாதனம்=தானதர்மங்கள்போலப் பொருள் முதலிய உதவிவேண்டாதது. நியமம்=ஒழுங்குபடுத்துவது ஔபரமிகம்=பாவங்களைவிடுவதற்கு முயல்வது. நிருபத்ரவம்=பாவங்களை விட்டநிலைமை. இதைத்தான் தோஷவர்ஜனம்என்றும் தோஷஸம்யமனம் என்றும் யமம் என்றும்சொன்னது. வர்ஜனம்=விடுவது. ஸம்யமனம், யமம்=அடக்குவது.

2 'தந்நதர்மம்' என்றுபாடங்கொள்ளப்பட்டது.

களையும் (நமஸ்கரித்து) தானே நன்னை அவர்களிடம் ஒப்பித்து விரதம்செய்யவேண்டும். மரணம்வரையிலும் விரதம்செய்யலாம். அல்லது, ஒருகாலம்வரையிற் செய்துமுடிக்கலாம். காய்கறிமுதலியவற்றிலும் பூகனிமுதலியவற்றிலும் விரதம்வைத்துக்கொள்ளலாம். பிரம்ம சரியவிரதத்தையும் உபவாஸவிரதத்தையும் செய்யலாம். இதத்தை விரும்புகிறவன் இப்படி இன்னும் அனேககாரியங்களிலும் விரதம் வைத்துக்கொள்ளவேண்டும். தெரிந்தவர்கள் அந்தவிரதத்திற்குக் கெடுதல்வராமலிருக்கும்படி காப்பாற்றவேண்டும். அழகானகண் களையுடையவளே ! விரதங்கெட்டால் பெரியபாவமென்றறி. மருந்துண்பதற்காகவும் அறியாமையினலும் பெரியோர்கட்டளையினலும் சுற்றத்தாருக்குஉதவிசெய்வதற்காகவும் விரதங்கெடுவது குற்றமாகாது. மனிதன் விரதம்முடிக்குங்காலத்தில் நேவர்களையும் பிராம்மணர்களையும் சாஸ்திரப்பிரகாரம் பூஜிக்கவேண்டும். அதனல் வித்தியடைவான்' என்றுசொன்னர்.


உமை, 'ஆசாரத்தின்முறை எது? அதை எனக்குச்சொல்லக் கடவீர்' என்றுகேட்க, மகேசுவரர் சொல்லலானர்: 'புறச்சுத்தமென்றும், அகச்சுத்தமென்றும் இருவகைச்சுத்தங்கள் சொல்லப்படுகின்றன. மனத்திலிருக்கும்தர்மசிந்தைதான் அகச்சுத்தமென்று சொல்லப்படுகிறது. எப்போதும் சுத்தமானஆகாரம்செய்வதும் தேகத்தையலம்புவதும் ஆசமனம்முதலியவற்றினலுண்டாகும் சுத்தமும் புறச்சுத்தங்களாகும். பரிசுத்தமான பூமியிலிருக்கும் மண்ணினலும் கோமயகோமூத்திரங்களினலும் நல்லமனமுள்ளவையும்தேக புஷ்டியைத்தருகின்றவையுமான மற்றப்பொருள்களினலும் தேகத்தை அடிக்கடிதேய்த்து ஜலத்தினல் அலம்பவேண்டும். கலங்காமலும் பரவியும் விடாமற்பெருகுவதானஜலத்திலேயே பெரும்பாலும்ஸ்நானம்செய்யவேண்டும்; அல்லாதஜலத்தை விடவேண்டும். துரையும் அழுக்குமில்லாதஜலத்தை மும்மூன்றுமுறை ஆசமனம்செய்வது சிறந்தது. ஜலமலவிஸர்ஜனங்களில் அதிக மருத்தினலும் ஜலத்தினலும் சுத்தமுண்டாகும். ஜலத்தினலேதான் சுத்தியுண்டாகிறது. சுத்தம் செய்யப்பட்டதைத்தான் தொடலாம். பூமிக்குக் கோமயத்தினலும் லோஹங்களுக்குச் சாம்பலாலும் சுத்தி சொல்லப்பட்டிருக்கிறது. செதுக்குவதனலும் இழைப்பதனலும் மரப்பாத்திரங்களுக்குச் சுத்தி, மட்பாத்திரங்களுக்குச் சுடுவதுதான் சுத்தி. மனிதர்களுக்குக் கிருச்சிரம்என்னும்விரதம்செய்வதுதான் சுத்தம். தேவியே! மற்றெல்லாவற்றிற்கும் வெயிலினலும் ஜலத்தினலும் சுத்தமுண்டா

கும். பிராம்மணர்களுடையவாக்கினலும் எப்போதும் சுத்தியுண்டாகும். வாக்கினல்சிலாகிக்கப்பட்டதும் கண்ணுக்குத்தெரியாமல் ஜலத்தினலலம்பப்பட்டதுபோலாகிறது. வேறு சுத்தி அகப்படாதபோது இந்தச்சுத்தி விதிக்கப்படுகிறது' என்றுசொன்னர்.

உமை, 'தேவருக்குந்தேவரே! மஹேஸ்வரரே! ஆகாரசுத்தி எப்படி?' என்று கேட்க, மகேசுவரர் சொல்லானர்: 'மாம்ஸம் மது ஊசினது பழையது இவையல்லாததும், காரம் புளிப்பு உப்பு இவைகள் அதிகமாகஇல்லாததும், பூச்சி மயிர்அழுக்குஇல்லாததும், மூடப்பட்டதும்,பார்வைக்குப் பரிசுத்தமானதும், நல்லமணமுள்ளதுமான ஆகாரத்தைத் தேவதைகளுக்கும் பிராம்மணர்களுக்கும்கொடுத்தபின்பே புஜிக்கவேண்டும். அதுதான் [1]சுத்தமென்றும் இல்லாவிட்டால் அசுத்தமென்றும் அறியவேண்டும். கிராமங்களிலுள்ளவற்றைவிடக் காடுகளிலுள்ளவற்றினல் செய்யப்படும் ஆகாரத்தைச்சமைப்பது சிறந்ததென்றறி. அதிகமாகஸம்பாதித்தபொருளில் சிறிதுதானம்செய்வதனல் அது சுத்தமாகிவிடும். யாகசேஷமும் ஹோமசேஷமும் பித்ருசேஷமும் தோஷமில்லாதவை. தேவியே! இதை உனக்குச் சொன்னேன். இன்னும் என்னகேட்கவிரும்புகிறாய்?' என்றார்.

இருநூற்றமுப்பத்துமூன்றுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)



(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; புலாலுண்பதன்பாவமும் விடுவதன்புண்யமும், குருபூஜை தீர்த்தஸ்நானமுதலியவற்றின் பலனும்.)

உமை, 'பிரபுவே! மகாதேவரே! சிலர் புலால்உண்கின்றனர்; மற்றும்சிலர் விட்டுவிடுகின்றனர். அதை உண்ணக்கூடுமா? கூடாதா? என்னும்நிச்சயத்தை எனக்கு நீர் சொல்லக்கடவீர்' என்றுகேட்க, மகேசுவரர் சொல்லலானர்:

'மாம்ஸம்பக்ஷிப்பதிலுள்ள குற்றத்தையும் பக்ஷிக்காமலிருப்பதிலுள்ளகுணத்தையும் சொல்வேன். அவற்றை ஸரியாகத்தெரிந்துகொள். அக்நிஹோத்திரமும் தானமும் வேதாத்யயனமும் தக்ஷிணைகள்நிரம்பினயாகங்களும் மாம்ஸத்தைப்பக்ஷிக்காமலிருப்பதினுடையபதினறில் ஒன்றுக்கும் ஈடாகாதவை. சுவையைவிரும்பித் தனக்காக

1 'சுபமித்யேவ' என்று பாடங்கொள்ளப்பட்டது.

வேறுஉயிரைக்கொல்லுகிறவன் பாம்புகழுகுநரிகளுக்கும் ராக்ஷஸர் களுக்கும் ஸமமானவன். தினமும் வீணாக மாம்ஸத்தைத்தின்பவன் நீசனாவான். தானேமாம்ஸத்தைக்கொண்டுவந்து பக்ஷிப்பதைவிட வேறுபெருங்கஷ்டமில்லை. பிறமாம்ஸத்தினால் தன்மாமிசத்தைவளர்க் கக்கருதுகிறவன் பிறக்கும்பிறப்புக்களிலெல்லாம் பயந்துகொண்டிருக் கும் நீலமையை அடைவான். தன்மாமிசத்தைஅறுப்பது தனக்கு எப்படி துன்பத்தைஉண்டாக்குமோ அப்படியே பிறமாம்ஸத்தைப் பற்றியும் புத்திசாலி உணரவேண்டும். வாழ்நாள்முழுதும் எந்தமாம் ஸங்களையும் பக்ஷிக்காமல்விட்டிருப்பவன் ஸ்வர்க்கத்தில் பெரிய நிலைமையைப் பெறுவானென்பதில் ஸந்தேகமில்லை. நூறுவருஷ மளவும் சிறந்ததவம்செய்வதும் மாம்ஸத்தைவிடுவதும் ஸரியாயிருக் கும்; அல்லது [1]ஸரியாகவுமிராது. உலகத்தில் உயிரைக்காட்டிலும் மிக்கஇனியது ஒன்றுமில்லை. ஆதலால், தன்னிடத்திற்போலவே பிறஉயிர்களிடத்திலும் இரக்கம்வைக்கவேண்டும். பெண்ணரசியே! எவன் மாம்ஸத்தின்சுவையையறிந்தும் பின்பு அதை விட்டுவிடு கிறானோ அவனுக்கு அதுசெய்யும்நன்மையை யாகங்களும் செய்யா வென்றும் தேவர்களும்செய்யாரென்றும் ரிஷிகள் மாம்ஸபக்ஷணம் விடுவதின்குணங்களைப்பற்றிக் கூறுகின்றனர். தேவியே! மாம்ஸத் தைவிடுவதனால் மனிதர்களுக்கு நன்மைகள் மிகுதியாயுண்டு. மாம் ஸத்தைமுழுதும் விடுவதற்கு எவ்வகையிலும் முடியாமற்போமாயின் ஏதாவது ஒருமாதத்தில் மாம்ஸத்தைவிடுவது புண்ணியம். அதுவும் முடியாமற்போனால் மறுமையில் ஸுகத்தை விரும்புகிறவன் கார்த்தி கைமாதம் சுக்லபக்ஷத்திலும் ஜன்மநக்ஷத்திரத்திலும் புண்ணியதிதி களிலும் அமாவாஸை பூர்ணிமைகளிலும் இரவுகளிலும்மட்டுமாவது மாமிசத்தை விடவேண்டும். சக்தியில்லாதமனிதன் அதுகாரணமாக மாம்ஸம்புசிக்கவிரும்பினால் அதன்முறையைக் கேள். அம்முறைப் படி பக்ஷிப்பவன் பாவத்தையடையான். பெண்ணரசியே! நன்மை யைக்கருதுகிறவன், கொல்லுகிறஇடத்தில் உயிர்போனவைகளைக் கிர மமாக விலக்குவாங்கிப்பிராம்மணர்களான அதிதிகளைப்பூஜித்தமிகுதி யைப் புசிக்கவேண்டும். வியாதிவந்தபோது சிகித்ஸைக்காக மாம்ஸம் தின்பவனைப் பாவம்பற்றாது. பித்ருசேஷமான மாம்ஸத்தையுண்பவ னும் பாவத்தையடையான்' என்றார்.

உமை, 'தேவரே! தர்மம்அனுஷ்டிப்பவர்களால் குருபூஜை எவ் வகையாகச் செய்யப்படுகிறது?' என்றுகேட்க, மகேசுவரர் சொல்ல

1 மாம்ஸத்தைவிடுவது மேலானதென்பது.

லானுர்: 'சிறந்தவளே! குருபூஜையை உனக்கு முறைப்படி சொல் வேன். நன்றியறிவுள்ளவர்களுக்குத்தான் சிறந்ததர்மம் உளதென்பது வேதவிதி. ஆதலால், தம்தம்குருக்களைப் பூஜிக்கவேண்டும். ஏனெனில், அவர்கள் மூந்தி உபகாரம் செய்தவர்கள். உபாத்தியாயர் தந்தை தாய்இம்மூவரும் குருக்களிற்சிறந்தகுருக்களாக உலகங்களில் பூஜிக் கப்படுகிறவர்கள். அவர்களை விசேஷமாகப் பூஜிக்கவேண்டும். தந் தையின்மூத்தஸகோதரர்கள் இளையஸகோதரர்கள்தந்தையின்தந்தை இவரனைவரும் தந்தைபோலப் பூஜிக்கத்தக்கவர். தாயாருடைய மூத்தஸகோதரி தாயாருடைய இளையஸகோதரி தாயாருக்குத் தாயார் பால்கொடுத்தவள் இவர்கள் தாய்மார்களாக நினைக்கப்படுகின் றனர். உபாத்தியாயரின் புத்திரன் உபாத்தியாயருக்கு உபாத்தியாயர் ரித்விக் குரு பிதா இவர்களும் குருக்களென்று சொல்லப்படுகின்ற னர். மூத்தஸகோதரன் அரசன் மாதுலன் மனைவியின்தந்தை பயத் தில்காப்பாற்றினவன் போஷித்தவன்இவர்களும் குருக்களாகச்சொல் லப்படுகின்றனர். கற்புள்ளவளே! இவ்வாறு குருக்கள் எல்லாரை யும் சேர்த்துச் சொன்னேன். அவர்களையனுஸரிப்பதையும் பூஜிப் பதையும் என்னிடம்தெரிந்துகொள். நன்மையைக்கருதுகிறவன் தாய்தந்தைகளையும் உபாத்தியாயரையும் பூஜிக்கவேண்டும்; எவ்விதத் திலும் அவமதிக்கலாகாது. எவனால் தந்தை திருப்திசெய்விக்கப் படுகிறானே அவனால் பிரம்மதேவரே திருப்திசெய்விக்கப்படுகிறார். எவனால் தாய் திருப்திசெய்விக்கப்படுகிறாளோ அவனால் தேவமாதாக் கள் திருப்திசெய்விக்கப்பட்டவராகிறார். எவனால் உபாத்தியாயர் ஆராதிக்கப்படுகிறாரோ அவனால் பிரம்மதேவரே பூஜிக்கப்பட்டவராகி றார். அவர்கள் அதிருப்தியாயிருந்தால் மனிதன் நரகம்அடைவான். குருக்களின்மேல் நீண்டபகையை எவ்வகையிலும் செய்யலாகாது. மனிதன் தன்குருக்களின்மேல்விரோதத்தை மனத்திலும் நினைக்க லாகாது. அவர்களுக்கின்னதுசொல்லைச் சொல்லலாகாது. அவர்கள் வேண்டாததைச் செய்யலாகாது. அவர்களிருக்கும்போது அவ மானஞ்செய்யும்எண்ணத்துடன் யாரிடத்திலும் விவாதமாகப் பேச லாகாது. இவன் என்னஎன்ன செய்யவேண்டுமென்று அவர்கள் நினைக்கின்றனரோ அவற்றையெல்லாம் பணிந்துசெய்யவேண்டும். பெரியோர்கட்டளை வேதவிதிக்குச்சமமென்று நினைக்கப்படுகிறது. குருக்களுடன் விவாதத்தையும் கலகத்தையும் பரிஹாஸத்தையும் காமக்குரோதங்களோடுபேசுவதையும் செய்யலாகாது. எவன் அகங் காரப்படாமல் சோம்பலைவிட்டுக்குருக்களிட்ட கட்டளையைச் செய்கி

முனே அவனைவிடச் சிறந்தபுண்ணியசாலி எந்தமனிதர்களிலுமில்லே. குருக்கள்மேல் பொறுமைப்படவும் அவர்களைத்தூஷிக்கவும் ஆகாது. அவர்களின்விருப்பத்தையும் நன்மையையும்நாடி எப்போதும் அவர்களுக்குப் பணிவிடைசெய்யவேண்டும். குருபூஜையைவிடாமற்செய்வது எந்தநன்மையைச்செய்யுமோ அந்தநன்மையை யாகமும் தான் புரிந்தபெருந்தவமும் செய்யா. குருவைவழிபடாவிட்டால் எந்த ஆஸ்ரமதர்மமுமில்லே. ஆதலால், கோபத்தையடக்கிச் சிரமத்தைப்பொறுத்துக் குருபணிவிடைசெய்யவேண்டும். தெரிந்தவன் தன்பொருளையும் தன்தேகத்தையும் குருவிற்காக விடுவான். பொருளாசையினலாவது கர்வத்தினலாவது குருவுடன் விவாதம்செய்யலாகாது. குருக்களினல்விடப்பட்டவனுக்குப் பிரம்மசாரிவிரதமும் கொல்லாமையும் பலவகைத்தானங்களும் வீண். மனத்தினலும் செய்கையினலும் உபாத்தியாயருக்கும் தந்தைக்கும் தாய்க்கும் தீங்குசெய்பவர்களின்பாபம் சிசுஹத்தியிலும் கொடியது. அவர்களைவிட வேறு பாபம்செய்தவன் உலகத்திலில்லே' என்றார்.

உமை, 'உபவாஸத்தின்விதியைப்பற்றி எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்க, மஹேஸ்வரர், 'தேகத்திலுள்ள அழுக்குக்களைப் போக்குவதற்காகவும் இந்திரியங்களைஉலர்த்துவதற்காகவும் ஒரு வேளைபுசிப்பதையும் உபவாஸமிருப்பதையும் விரதங்களாக மனிதர்கள் வைத்துக்கொண்டிருக்கின்றனர். அப்படி ஆகாரத்தைக்குறைப்பதனல் பெரியபுண்ணியத்தை அடைகின்றனர். தனக்காகப் பலருடையஜீவனத்துக்குத்தடைசெய்யாமலும்பிராணிஹிம்ஸைசெய்யாமலும் ஜீவித்திருப்பவன்தான் பாக்கியசாலியென்று நினைக்கப்படுகிறன். ஆதலால், தன்னுகாரத்தைக்குறைப்பதனல் மனிதன் புண்ணியத்தையடைவான். அந்தஉபவாஸத்தைக் கிருகஸ்தர்கள் தம்மாலியன்றவுரையில் செய்யவேண்டுமென்பது நிச்சயம். உபவாஸத்தினல் தேகம்வருந்தினபோது அதற்குத்தீங்குவராமலிருப்பதற்காகப் பிராம்மணர்களிடம்கேட்டுக்கொண்டு பாலேயும் தண்ணீரையும் உட்கொள்ளுகின்றவன்விரதம்கெட்டவனுகான்' என்றுசொன்னர். உமை, 'தேவரே! தெரிந்தவன் பிரம்மசாரிவிரதத்தைக் காப்பாற்றுவதெப்படி?' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'தேவியே! அதனே நான் உனக்குச் சொல்லேன்; ஊக்கத்துடன் கேள். பிரம்மசாரிவிரதமே மிகுந்த சுத்தம். பிரம்மசாரிவிரதமே பெருந்தவம். பிரம்மசாரிவிரதத்தினலேதான் பரம்பதம் கிடைக்கிறது. விஷயங்களே நினேப்பது, பார்ப்பது, பேசுவது, தொடுவது, அனுபவிப்பது இவ்வைந்துவகைகளி

லும் விரதத்தைக் காப்பாற்றவேண்டும். உறுதியாக எடுத்துக்கொள் ளப்பட்டும்குற்றமின்றிக்காப்பாற்றப்பட்டுமிருக்கிறபிரம்மசாரிவிரதம் பிரம்மசாரிகளுக்கு எப்போதுமிருப்பதாக விதிக்கப்படுகிறது. அது வே கிருகஸ்தர்களுக்குக் காலத்தைக்காரணமாகக்குறிப்பிட்டு விதிக் கப்படுகிறது. கிருகஸ்தன் ஜன்மநக்ஷத்திரங்கள்சேர்ந்ததினங்களிலும் பர்வங்களாகிய புண்ணியகாலங்களிலும் தேவபூஜைகளிலும் தர்ம காரியங்களிலும் ப்ரம்மசாரி விரதத்தைச் செய்யவேண்டும். தன்மனை வியைவிட்டு ஒருகாலும் வேறுமாதரிடம் செல்லாமலிருப்பவன்பிரம் மசாரிவிரதத்தின்பலனை அடைவான். பரிசுத்தமும் ஆயுளும் ஆரோக் கியமும் பிரம்மசாரிகளுக்குத்தான் கிடைக்கும்' என்றுசொன்னார்.

உமை, 'தேவரே! தர்மத்தைவிரும்புகிறவர்கள் தீர்த்தயாத் திரையை விரதமாகச் செய்கின்றனர். உலகத்திலுள்ளதீர்த்தங்கள் எவை? அவற்றை எனக்குச்சொல்லக்கடவீர்' என்றுகேட்க, மகே ஸ்வரர் சொல்லலானார். 'அன்புள்ளவளே! ஆ! ஆ! ஆத்மசுத்திக் காகவும் தேகசுத்திக்காகவும் பிரம்மதேவரால் முன்னம் ஏற்படுத்தப் பட்ட தீர்த்தஸ்நானத்தின்முறையையும் உனக்குச்சொல்வேன். உல கத்தில் மகாநதிகள் எத்தனையிருக்கின்றனவோ அத்தனையும் தீர்த் தங்களென்று சொல்லப்படுகின்றன. அவற்றுள் கீழ்த்திசைநோக்கி ஓடுகின்றவை மிகச்சிறந்தவை. அந்நதிகள் ஒன்றோடொன்றுஸங்கம மாகும்இடமும் ஸமுத்திரத்தோடு ஸங்கமமாகுமிடமும் மிகச்சிறந் தவை. தேவியே! அவற்றின்இருகரைகளிலுமுள்ள அனேகமரங்கள் ரிஷிகளாலும் தேவர்களாலும் அடையப்பட்டிருக்கின்றன. ஆதலால், அவை மிகச்சிறந்ததீர்த்தங்களாகநினைக்கப்படுகின்றன. ஸமுத்திரம் பாவத்தைப்போக்குவதும் மிக்கபரிசுத்தமும் மங்களகரமுமான மகா தீர்த்தம். அதன்கரையிலுள்ளதீர்த்தங்களும் மகான்களால் ஸ்நானம் செய்யப்பட்டவை. அன்புள்ளவளே! மகரிஷிகளால் அடையப்பட்ட மலையருவிகளும் கிணறுகுளங்களும் அம்மகரிஷிகளின் மகிமையி னாலேயே தீர்த்தங்களென்றறியப்பட்டவை. அதுமுதல் உலக நன்மைக்காக அவை தீர்த்தங்களாயின. தேவியே! தீர்த்தங்கள் இப்படிப்பட்டவை. அவற்றில் ஸ்நானம்செய்யும்முறையைக்கேள். பிறந்ததுமுதல்அதிகநியமமுள்ளவனுக்கு சிரத்தையுடன் தீர்த்தங்க ளுக்குச்சென்று நியமத்துடன் மூன்றுஉபவாஸங்களாவது ஓர்உப வாஸமாவதுஇருக்கவேண்டும். புண்ணியமாஸத்திலும் விரதகாலத்தி லும் பூர்ணிமையிலும் வெளியிலேயே ஸ்நானம்செய்து சுத்தனுகிப் பிறகு என்னிடம்பக்தியோடு விதிப்படி அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்

செய்யவேண்டும். மூன்றுமுறை ஸ்நானம்செய்து ஜலக்கரையில் ப்ராம்மணர்களுக்குத் தக்ஷிணைகொடுத்துத் தேவாலயத்தில்பூஜைசெய்தபிறகு திரும்பிச்செல்லவேண்டும். அன்புள்ளவளே! இதுதான் எல்லாருக்கும் ஒவ்வொருதீர்த்தத்திலும் செய்யவேண்டியமுறையாகும். அருகிலுள்ளதீர்த்தத்தில்ஸ்நானம்செய்வதைப்பார்க்கிலும் தூரத்திலுள்ளதீர்த்தத்தில்ஸ்நானம்செய்வது மிகச்சிறந்தது. ஜன்மசத்தருயிருப்பவனுக்குத் தீர்த்தஸ்நானம் கல்மஷமையதருதும். தீர்த்தத்தில்ஸ்நானம்செய்வது தவத்திற்கும் பாவம்பிரிவதற்கும் மனச்சுத்தத்திற்குமுரியது. புண்ணியதீர்த்தங்களில் இவ்வாறுசெய்யப்படும் ஸ்நானம் சிறந்ததாகும். விரதகதைகளும் புனிதத்தலங்களின் வரலாற்றையும் உனக்குச்சொன்னேன். புலன்களைவென்றவளே! இதன்பலனை மறுமையில் மனிதன் அடைவான் என்றார்.

இருநூற்றுமுப்பத்தொன்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வர ஸம்வாதம் (தொடர்ச்சி; தானமுறைமுதலியன.)

உமை, 'உலகத்திலுள்ளபொருள் எல்லாருக்கும்பொதுவாக இருப்பதுதானே? அப்படி எல்லாருக்குமிபொதுவாயுள்ள திரவியத்தைத் தானம்செய்து மனிதன் புண்ணியத்தையடைவது எப்படி? இப்படிப் பொதுவாயுள்ளதிரவியம் எப்படி ஒருவனுக்குச்சொந்தமாகும்?' என்றுகேட்க, மஹேச்வரர் சொல்லலானார்.

'உலகத்தில் பஞ்சபூதங்களாலாகியபொருள்கள் யாவருக்கும் பொதுத்தான். ஆகிலும், அவற்றையுமனிதன் கொடுத்துப்புண்ணியமடையும் 1வகையைக் கேள். கொடுப்பவன், வாங்குபவன், கொடுக்கப்படும்பொருள், கொடுக்குமவகை, நேரம், காலம் இவ்வாறுகுணங்கள்சேர்ந்தது தானமென்றுசொல்லப்படுகிறது. இவ்வாறுசும்தனித்தனியேயுள்ளசிறப்புக்களை நான்சொல்லுகிறேன்; தெரிந்துகொள். முதலிலிருந்து மூவகைக்குற்றங்களின்செய்கைகளும் பரிசுத்தமாகவும் ஸத்தியமேபேசிக்கொண்டும்இருப்பவனும் மோஹமுமில்லாமலும் பொறுமையுமில்லாதவனும்சித்தசுத்தியும்கம்பிக்கையுமுள்ளவனுமான தாதா இலக்கியனாகிறான். பரிசுத்தனும் புலன்களையும்மோகபத்தையும்அடக்கினவனும் வைழக்குலத்திற்பிறந்தவனும் கல்வியும்ஒழுக்

1 'யதைவ' என்று பாடங்கொள்ளப்பட்டது.

கழுமுள்ளவனும் பெரியகுடும்பமுள்ளவனும், பஞ்சமஹாயஜ்ஞங்கள் தவறுதவனும் அங்கஹீனமில்லாதவனுமாயிருப்பது வாங்குகிறவனுக்குரியதர்மமென்றறி. அப்படிப்பட்டவன்தான் சிறந்தபாத்திரனாகிறன். பித்ருகாரியத்திலும் தேவகாரியத்திலும் அக்நிஹோத்ரகாலத்திலும் அவனுக்குத்தானம்செய்வதில் பலனதிகம். உலகத்தில் எவன்எவன் எது எதற்குத் தகுதியுள்ளவனாயிருக்கிறானோ அவன் அவன் அது அதற்குப் பாத்திரனாகிறன். ஆபத்திலிருப்பவனுடைய ஆபத்தைவிடுவித்துக்காப்பாற்றுவதனால் அவனைப் [1] பாத்திரன் என்பர். பசித்தவன் அன்னத்திற்குப்பாத்திரன். தாகித்தவன் ஜலத்திற்குப்பாத்திரன். இவ்வாறு ஒவ்வொருமனிதனுக்கும் அநேகர் பாத்திரர்களாகச் சொல்லப்படுகின்றனர். அன்புள்ளவளே ! விடன், சோரன், நபும்ஸகன், கொல்பவன், ஆசாரத்தைக்கெடுப்பவன் இவர்களும் உலகத்திற்குக்கெடுதல்செய்யும்மற்றவர்களும்முற்றிலும்விடத்தக்கவர்கள். தேவியே! பிறரைப்பீடித்தும் திருடியும் தயையில்லாதவனிடத்தில்வாங்கியும் சூதாடியும் செய்யத்தகாதவற்றைச் செய்தும் பொருளாசையினால்அனேகருக்குத்தீங்குசெய்தும் மனிதர்கள்சம்பாதிக்கும்தனம் மிகவும்இழிவானது. பெண்ணரசியே ! அப்படிப்பட்டதனத்தினால்செய்யப்படும்தர்மம் வீணென்றறி. ஆதலால், புண்ணியத்தைவிரும்புகிறவன் நியாயமாகக்கிடைத்தபொருளையே தானம்செய்யவேண்டும். எதுஎது எப்போதும் தனக்குஇனியதோ அதைஅதைத்தான் தானம்செய்யவேண்டுமென்பது துணிபு. இனி தானம்செய்யும்முறையைத் தெரிந்துகொள். அது கொடுப்பவருக்குப் பெரிய நன்மை. தகுதியுள்ளவன் தூரத்திலிருக்கையிலேயே அவனிடம் சென்று அவனைவேண்டி அவன்ஸந்தோஷமடையும்படி தானம் செய்யவேண்டும். இதுதான் தானம்செய்வதின்சிறந்தமுறை. கேட்டபின்கொடுப்பது இரண்டாந்தரம். அன்புள்ளவளே ! பாத்திரம் என்பதைமுதலில்அறிந்துஅவனையழைத்து அவனுக்குப்பொருளைக்காண்பித்து ஸ்நானசமனங்களைச்செய்து சிரத்தையுடன் கொடுக்கவேண்டும். யாசிப்பவர்களை அன்புடன் மரியாதைசெய்வது முக்கியம். ஸரியானஇடத்திலும் காலத்திலும் மரியாதையோடழைத்துத் தானம் செய்யவேண்டும். மேன்மையைவிரும்புகிறவன் மற்றத்தகுதியிலலாதவர்களுக்குக்கூடத் தானம்செய்யவேண்டும். தாதாவானவன் பாத்திரர்களைமட்டும் நன்றுகப்பரிசோதித்தே மனஉண்மையுடன் தானம் செய்யவேண்டும். தன்சக்திக்குமேற்பட்டதானம் முதன்மையானது.

1 'பா' என்னும் பகுதிக்குக் காப்பாற்றுவது என்பது பொருள்.

தன்சக்திக்குட்பட்டது இரண்டாவது. தன்சக்திக்குமிகக்குறைவாயுள்ளமூன்றுவகுதானம் மிகஇழிவானது. முதலில் வாக்கினால் எப்படிச்சொல்லப்பட்டதோ அப்படியே தானம்செய்யவேண்டும். புண்ணியகேஷ்த்திரங்களிலும் புண்ணியகாலங்களிலும் செய்யப்படும் தானம் கேஷ்த்திரத்தின்மகிமையாலும் காலத்தின்மகிமையாலும் மிகச்சிறந்ததாகிறதென்றறி' என்றார்.

உமை, 'மிகப்புண்ணியமான தேசமும் காலமும் எவை? எனக்குச் சொல்லும்' என்றுகேட்க, மஹேஸ்வரர் சொல்லலானார்: 'தேவர்களாலும் ரிஷிகளாலும் அடையப்பட்டதும் யாவராலும் புழங்கப்பட்டதுமாகிய அந்தக்குருகேஷ்த்திரத்தின்பாகங்களிலுள்ள சிறந்தமலையும் புண்ணியதீர்த்தங்களும் சிலாந்தியமானஇடங்கள். வாங்குகிறவனுக்கு எங்கேவாங்குவது இஷ்டமோ அங்கேசெய்யும்தானத்திற்குப் பலனதிகம். சாத்காலம், வஸந்தகாலம், புண்ணியமான மாஸம், பக்ஷங்களில் சுக்லபக்ஷம், புண்ணியதிதிகளில் பூர்ணிமை, சிராத்தமும் தேவகார்யமும் செய்யக்கூடிய புண்ணியதினம், சந்திரசூரிய க்ரஹணம் ஆகியஇவை மிகச்சிறந்த புண்ணியகாலங்களென்றறி. சிறந்தவளே! வாங்குகிறவன்மனத்திற்கு இனிமையான காலம் மிகச்சிறந்தது. இவ்வாறு மேற்குறித்தகாலங்களில் செய்யப்படும் தானம் பெரிதாகும். கொடுப்பவன், கொடுக்கப்படும்பொருள், வாங்குகிறவன், கொடுக்கும்வகை, இடம், காலம் இவ்வாறும் தானத்தின் சிறப்புக்களென்றும் சுத்திகளென்றும் சொல்லப்படுகின்றன. இவையெல்லாம் சேர்ந்திருக்கும்தானம் பெரிதாகும். இந்த ஆறு குணங்களும் சேர்ந்ததானம் ஸ்வல்பமாயிருந்தாலும் அனந்தமாகிப் பாபங்களைப்போக்கிக் கொடுப்பவனை ஸ்வர்க்கத்தில்சேர்க்கும். இந்தக் குணங்களில்லாததானம் மிகப்பெரியதாயிருந்தாலும் பலன்கொடுக்குந்தருணத்தில் ஸ்வல்ப பலமாயாவது பலனில்லாமலாவது போய்விடும்' என்றார். உமை, 'இந்தஆறு குணங்களுடன் சேர்ந்து கொடுக்கப்படும் பெருந்தானமும் பலன்பாமல்போவதாயிருக்குமாஸால்அந்தப் பெரியதானத்தை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டாள். மஹேஸ்வரர், 'மஹாநுபாவையே! மனிதர்களின்எண்ணங்கெடுவதினால் அதுவுமுண்டு. சாஸ்திரப்பிரகாரம் தர்மத்தைச்செய்து பின் அதற்காகத் தன்பப்பட்டாலும் தான்செய்ததை வீணாகச் சபையில் புகழ்ந்துபேசினாலும் மறுஜன்மத்தில்அதன்பலன்வரவேண்டுமென்று மனத்தில்விருப்பங்கொண்டாலும் எப்போதும் பலனைவிரும்பியே

1 'சாபலதாம்' என்ற பாடங்கொள்ளப்பட்டது.

தர்மங்களைச்செய்தாலும் அந்தத்தர்மமும் தானமும் பரலோகத்தில் பலனற்றவையாம். புண்ணியத்தைக் கருதுகிற தாதாக்கள் இந்தக் குற்றங்களை விடவேண்டும். இதுதான் நெடுங்காலமாகப் பெரியோர்களால் எக்காலத்திலும் அனுஷ்டிக்கப்படும் ஒழுக்கமென்றும் மற்றவர்களை அனுக்கிரகிப்பதற்குக் கிருகஸ்தர்களின்கடமையென்றும்எப்போதும் மனத்தில்உறுதிகொண்டு தெரிந்தவர் தானம்செய்யவேண்டும். இப்படி இடைவிடாமல்செய்யப்படும்புண்யம்தான் பெரிதாகும். எல்லாருக்கும் பொதுவாயுள்ள திரவியத்தை இவ்வாறு கொடுப்பதனால் பலன் அதிகம்' என்றுசொன்னர்.

இருநூற்றுமுப்பத்தைந்தாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; ஜோன், பசு, பூமி, கன்னிகை, வித்தை இவற்றின்தான முதலியன.)

உமை, 'பகவானே! மனிதர்கள் தர்மத்திற்காகக்கொடுக்கத் தக்கவை எவை? அவற்றை நான் கேட்கவிரும்புகிறேன். அவற்றை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்க, மஹேஸ்வரர் சொல்லலானர்:

'அன்புள்ளவளே! தர்மகாரியங்கள் நித்தியமாகச் செய்யத்தக்கவையும் காரணம்பற்றிச் செய்யத்தக்கவையும் உண்டு. அன்னம், இடம், தீபம், தண்ணீர், பசுக்களுக்குப்புல், விறகு; எண்ணெய், சந்தனமுதலியவாஸனைகள், மருந்து, எள், உப்புமுதலியதிரவியங்களைக் கொடுப்பது நித்தியமானதர்மகாரியமென்று சொல்லப்படுகிறது. எந்தக்காலத்திலும் கொடுக்கப்படுவதினால் அது நித்தியமென்று சொல்லப்படுகிறது; எல்லாவர்ணங்களுக்கும்பொதுவானதானத்தைச் சொல்லுகிறேன்; உலக்கத்துடன்கேள். மனிதர்களுக்கு அன்னமே பிராணன். அன்னங்கொடுப்பவன் பிராணனைக்கொடுப்பவனாவான். ஆதலால், மனிதர்கள் முக்கியமாக அன்னதானம்செய்யக் கருதுகின்றனர். வித்வானைபிராம்மணனுக்குச் சுவையுள்ள அன்னத்தை எவன் கொடுக்கிறானோ அவன் பரலோகத்திற்குரிய அளவற்றசிறந்தபுதையலைப் புதைத்துவைக்கிறான். வழிநடந்து களைத்து வீடுவந்த விருந்தினனை முயற்சியோடு பூஜிக்கவேண்டும். அதுவே வரமளிக்கும்யாகமாம். பாவத்தைச்செய்தாலும் பசித்தவருக்கும் முக்கியமாகப் பிராம்

மணருக்கும் அன்னமிடுகிறவன் தன்பாவத்தைப் போக்கினவனாகி ருன். எவனதுபிள்ளை அல்லதுபேரன் வேதமோதினபிராம்மணனைப் புஜிப்பிக்கிறானோ அவனுடையபித்ருக்கள், கல்லமழையினால் உழவர் மகிழ்வதுபோல மகிழ்கின்றனர். சூத்திரர்களாயிருந்தாலும் சண் டாளர்களாயிருந்தாலும் அவர்களுக்கு அன்னதானம் மறுக்கப்படுவ தில்லை. ஆதலால், கோபத்தைவிட்டு முழுமுயற்சியோடு அன்ன தானம்செய்யவேண்டும். மனிஷியைவருத்தியாவது அதிதிகளை எப் போதும் காப்பாற்றவேண்டும். மானிடஜன்மமே அதிதிகளுக்காக அன்றோ உண்டாக்கப்பட்டிருக்கிறது?

குற்றமற்றவளே! அன்னதானத்தினால்வரும் உலகங்களையும் சொல்வேன். அன்னதானம்செய்யும் மஹாத்மாக்களுக்குத் தேவலோ கத்தில் அநேக நூற்றுக்கணக்கான மேல்மாளிகைகளும் உள்ளே தடா கங்களும் வனங்களுமுள்ளவையும், ஒளியுள்ள வைடூரியக்கற்களும் பொன்வெள்ளியும் கிரம்பினவையும், பலவகை ரத்தினமயமானவை யும், பலஉருவங்களாகக்கட்டப்பட்டவையும், பொற்சலங்கைகளின் மாலைகள் கட்டியவையும், சந்திரமண்டலம்போல வெளுத்தவையும், உதயகாலசூரியனைப்போலச் சிவந்தவையும், நினைத்தபக்ஷணங்களும் போஜனங்களும் ஆஸனங்களும் சயனங்களும்கிரம்பினவையும், கிற்ப வையும், நடப்பவையுமான கிருகங்கள் பிரகாசிக்கின்றன. அங்கே நினைத்தபழங்களையெல்லாம் தரும் மரங்களும் அநேகஜடைவாவிகளும் கிணறுகளும் ஆயிரக்கணக்கான குளங்களும் வீடுகளிலிருக்கின்றன. பிராணதானம்செய்பவருக்கு ஸ்வர்க்கத்தில் பிணி துன்பங்களற்றவை யும் அழியாதவையும் ஆச்சரியப்படத்தக்கவையுமான அனேக கிரு கங்களிருக்கின்றன. இவ்வுலகத்தில் அன்னத்தையும் ஜலத்தையும் கொடுப்பவர்கள் சூரியன், சந்திரன், பிரஜைகளுக்கெல்லாம் அதிபதி யான பிரஜாபதிதேவர் இவர்களின்லோகங்களுக்கு எப்போதும் போகி ன்றனர். அவர்கள் அவ்வுலகங்களில் வெகுகாலம் அப்ஸரஸுக ளின்கூட்டங்களுடன் விளையாடி அதன்பிறகு மானிடலோகத்தில் எல்லாச்சிறப்புக்களும் பொருந்தினவர்களாகப் பிறக்கின்றனர். அன்னதானம்செய்யும்மனிதர்கள் தேகபலமும் தேக்கக்கட்டுமுள்ளவர் களாகவும் நோயற்று நீண்டகாலம் ஜீவித்திருப்பவர்களாகவும் சிறந்த புத்தியுள்ளவர்களாகவும் மேற்குலத்தோராகவும் பிறக்கின்றனர். ஆதலால், நன்மையைவிரும்புகிறவன் எந்தக்காலத்திலும் எவ்விடத் திலும் யாவருக்கும் இடைவிடாமல் அன்னதானம்செய்வது முக்கி யம். ஸ்வர்ணதானம் மிகச்சிறந்தது; ஸ்வர்க்கத்தையும் க்ஷேமத்

தையும் தருவது. ஆதலால், அதனைமுழுதும் ஸரியாக உனக்குச் சொல்வேன். பாவம்செய்தகொடியவனையும் ஸ்வர்ணதானம் துலக்கி விடும். 'வேதமோதினபிராம்மணருக்கு நல்லமனத்தோடு பொன் னைக்கொடுப்பவர் எவரோ அவர் எல்லாத்தேவதைகளையும் திருப்தி செய்வித்தவராகிறார்' என்று வேதம்சொல்லுகிறது. அக்நிதான் எல் லாத்தேவர்களுமாயிருப்பது. ஸுவர்ணமும் அக்நியென்றுசொல்லப் படுகிறது. ஆதலால், ஸ்வர்ணத்தைக்கொடுப்பதனால் எல்லாத்தேவர் களும் திருப்தியடைந்தவராவார். அக்நியில்லாதபோது அதற்குப் பிரதி தங்கத்தை வைக்கின்றனர். ஆதலால், ஸ்வர்ணம்கொடுப்பவர் விரும்பினவற்றையெல்லாம் அடைவர். ஸ்வர்ணதானம்செய்பவர் சூரியன்அக்நிஇவர்களின் அநேகம்சிறந்தலோகங்களை அடைவரென் பது நிண்ணம். ஆபரணமாகச்செய்யப்பட்டபொன் வெறும்பொன் னைக்காட்டிலும் விசேஷம். புண்ணியகாலத்தில் பொன்னால்செய் யப்பட்டஅணிகளினால் பிராம்மணனை அலங்காரம்செய்வித்துப் புஜிப் பிக்கவேண்டும்.பொன்னாற்செய்யப்பட்ட சிறந்தஆபரணமாகியமுதன் மையானதானத்தைக்கொடுப்பவன் மறுஜன்மத்தில் தேகஒளியையும் தேகவலிமையையும் புத்தியையும் கீர்த்தியையும்அடைவது நிச்சயம். ஆதலால், பூமியில் மனிதர்கள் தங்களால்இயன்றவரையில் ஸ்வர்ண தானம்செய்யவேண்டும். இதற்குமேற்பட்டது உலகத்தில் ஒன்று மில்லை. இதனால் பாவத்திலிருந்து விடுபடுவார். குற்றமற்றவளே ! இதற்குமேல் கோதானத்தைச் சொல்வேன். அன்புள்ளவளே ! கோதானத்திற்குமேற்பட்டதானம் உலகத்தில்இல்லை. பிரம்மதேவர் உலகங்களைப்படைக்கக் கருதினபோதே எல்லாப்பிராணிகளின் ஜீவ னத்திற்காகவும் கோக்களை முதலில் படைத்தார். அதனால் அவை தாய்களென்றுசொல்லப்படுகின்றன. உலகங்களுக்கு மூத்தவையும் உலகங்களின்ஜீவனத்திற்காகஉண்டானவையும் சந்திரனுடைய அமு தப்பெருக்குக்களானவையும் சாந்தமானவையும் பரிசுத்தமானவை யும்உயிரைக்கொடுப்பவையும் நினைத்தவற்றையளிப்பவையுமான அத் தப்பசுக்கள் என்அதீனமாயிருப்பவை. ஆதலால், புண்ணியத்தைக் காதுகிறமனிதர்கள் அவற்றைப் பூஜிக்கவேண்டும். வெருளாததும் நல்லஅடக்கமுள்ளதும் நல்லகன்றுள்ளதும் நிரம்பப்பாலுள்ளதுமான பசுவைத் தானம்செய்பவன் அதன்தேகத்தில் எத்தனைரோமங்க ளிருக்கின்றனவோ அத்தனைவருஷங்கள் ஸ்வர்க்கலோகங்களை அனுப விப்பான். பொன்னலங்கரிக்கப்பட்டகொம்புகளினையுடைய கபி லைப்பசுவை வஸ்திரத்தோடும் கறக்கவெண்கலப்பாத்திரத்தோடும்

தானம்செய்பவன் தன்புத்திரபௌத்திரர்களையும் தன்குலத்தின்முன் ஏழு தலைமுறைகளையும் பரலோகத்தில் சுகப்படுத்துகிறான். வீட்டில்பிறந்தவையும் கிரயத்திற்குவாங்கப்பட்டவையும் பக்தயமாகக் கிடைத்தவையும் பராக்கிரமத்தினால் [1]புறங்கொடுத்து வாங்கப்பட்டவையும் பஞ்சகாலங்களில்விடப்பட்டுக் காப்பாற்றுவதற்காகவந்துசேர்ந்தவையுமான பசுக்களையும் மற்றும் இவ்வகைமார்க்கங்களால் கிடைத்தபசுக்களையும் தானம்செய்யவேண்டும். இழிந்தவனும் வெகுபுத்திரர்களுள்ளவனும் அபிசாரயாகம் செய்பவனுமாகிய வேதமோதினபிராம்மணனுக்கு நோயில்லாத பசுவைத் தானம் செய்பவன் சிறந்தலோகங்களையடைவான். கயையற்றவனுக்கும் கன்றிகெட்டவனுக்கும் பொருளாசையுள்ளவனுக்கும் பொய்சொல்லுகிறவனுக்கும் யாகத்தையும் பரஸ்திரீயையும் விட்டவனுக்கும் எவ்வகையிலும் கோதானம் செய்யலாகாது. கல்லகன்றுள்ளதும் அடங்கினதுமாகிய கறவைப்பசுவை வஸ்திரம்போர்த்துப் பிராம்மணனுக்குத் தானம்செய்பவன் சந்த்ரலோகத்தில் பூஜிக்கப்படுவான். கல்லகன்றுள்ளதும் அடங்கினதும் நிரப்பட்டபாலுள்ளதுமான கறுத்தபசுவை வஸ்திரம்போர்த்துத் தானம்செய்பவன் வருணலோகத்தையடைவான். பொன்னிறமுள்ளதும் கன்றுள்ளதுமானபசுவை வஸ்திரம்போர்த்துக் கறக்க வெண்கலப்பாத்திரத்துடன் தானம்செய்பவன் சூர்யலோகத்தற்குப்போவான். காற்றிலெழும்பும் நுரைபிறழுள்ளதும் கன்றுள்ளதுமானபசுவை வஸ்திரம்போர்த்துக் கறக்க வெண்கலப்பாத்திரத்துடன் தானம்செய்பவன் வாயுலோகத்தில் பூஜிக்கப்படுவான். ஸரியானகன்றுள்ளதும் அடங்கினதும் நிரம்பப்பாலுள்ளதுமான வெள்ளைப்பசுவை வஸ்திரம்போர்த்துத் தானம்செய்வதனால் அக்நிலோகத்தில் பூஜிக்கப்படுவான். இளம்பிராயத்திலிருப்பதும் பலமுள்ளதும் நீண்டகொம்புகளுள்ளதும் மந்தைக்குத்தலைமையுமான கறுத்தவிருஷபத்தை நாறுபசுக்களுடன் அலங்காரம்செய்து மகாத்மாக்களும் வேதமோதினவர்களுமான பிராம்மணஸ்ரேஷ்டர்களுக்குக்கொடுப்பவர்கள் பலஜன்மங்களில் பிறக்கும்போதும் ஐசுவரியத்துடன் பிறப்பார். கோமயத்தையும் கோமூத்ரத்தையும் ஒருகாலும் அருவருக்கலாகாது. கோக்களின் மாமிசத்தை உண்ணலாகாது. கோக்களிடத்தில் எப்போதும் பக்தியோடிருக்கவேண்டும். ஆசமனம்செய்வதற்குமுன்னமே பரிசுத்தஜலமிருந்து பிறர்பசுவுக்கு ஒருபிடி புல் கொடுக்கவேண்டும். இப்

1 யுத்தத்தில் ஜயிக்கப்பட்டவையும்.


படி ஒருவருஷம்செய்வது விரும்பினவற்றையெல்லாம் கொடுக்கும் விரதம். ஒவ்வொருநாளும் காலைமாலை இரண்டுவேளைகளிலும் பசுக்களுக்கு மங்களத்தைச் சொல்லவேண்டும். அவற்றிற்குத்தீங்கை எண்ணலாகாதென்று தர்மம்தெரிந்தவர்கள் நினைக்கின்றனர். பசுக்களே சிறந்தசுத்தம். உலகங்கள் பசுக்களிடம் இருக்கின்றன. பசுக்கள் உலகத்திற்குத் தாய்கள். அவற்றை எவ்வகையாலும் அவமதிக்காமலிருக்கவேண்டும். அதனாலேதான் கோதானம் சிறந்ததென்று சொல்லப்படுகிறது. கோக்களிடத்தில்பக்தியும் அவற்றைப்பூஜிப்பதும் மனிதனுக்குத் தீர்க்காயுளைக்கொடுக்கும். இனிப் பெரும்பலனைத் தருவதாகிய பூமிதானத்தைப்பற்றிச் சொல்லுவேன். பூமிதானத்திற்குச்சமமானதானம் உலகத்தில் இல்லையென்பது நிச்சயம். வீடுகளோடேயாவது நிலங்களோடேயாவது சேர்ந்தபாகமாகிய பூமியைக் கொடுக்கவேண்டும். எளிதில் பலனைக்கொடுக்கக்கூடியதும் விவாதமில்லாததுமானநிலத்தைக்குடியிருக்கஇடத்தையும்அமைத்துவாங்குகிறவனுக்கு வஸ்திரத்தினாலும் புஷ்பத்தினாலும் சந்தனத்தினாலும் அலங்காரம்செய்து அவனுக்கும் அவன்வேலைக்காரருக்கும் அவன் சுற்றத்தாருக்கும் நல்லபோஜனமளித்து, 'வாங்கிக்கொள்' என்று மூன்றுமுறைசொல்லிப் புண்ணியகாலத்தில் தாரைவார்த்துத் தக்ஷிணையோடு கொடுக்கவேண்டும். வெறுப்பில்லாமல் சிரத்தையோடு இவ்வாறு பூமிதானம்செய்தால அந்தப்பூமிஉள்ளவரையிலும் அந்ததானத்தின்பயன்இருக்குமென்று நினைக்கின்றனர் பூமிதானம்செய்தவன் ஸ்வர்க்கத்திலேறி நீண்டவருஷகாலம் மகிழ்ந்திருப்பான். அசைவும்அழிவுமில்லாதபூமி விரும்பினவற்றையெல்லாம் கறக்கக்கருதுகிறது. ஜீவனத்திற்காகக் கஷ்டப்படும்மனிதன் ஏதாவது பாவம்செய்தால் பசுவின்காதளவாகிலும் பூமியைத்தானம்செய்தால் அந்தப் பாவத்தினின்று விடுபடுவான். மஹானுபாவையே! பொன், வெள்ளி, வஸ்திரம், ரத்தினங்கள், முத்துக்கள், தனங்கள் இவையனைத்தும் பூமிதானத்திலடங்கினவை. தம் எஜமானனது நன்மையில் உலக்கத்துடன் யுத்தத்திலடிபட்டுத் தேகம்விட்டுப் பிரம்மலோகத்திற்குப் போகத்தக்கவர்களும் பூமிதானம்செய்தவனுக்கு மேலாகார். எல்லாவித்துக்களும்பலிப்பதும் கிணறுகளும் வீடுகளுமுள்ளதும் கலப்பையினாலுழப்பட்டதுமான பூமியைத் தானம்செய்யவேண்டும். அது வேண்டினவற்றையெல்லாம்கொடுப்பதாகும். பயிர்கள்உண்டானபூமியைப் பிராம்மணர்களுக்கு எவன்கொடுப்பனோ அவன் எல்லாப் பாவங்களாலும் விடப்பட்டவனாகி இந்திரலோகத்திற்குப் போ

வான். தாய் தன்பாலினுல் புத்திரனை எப்படிவளர்ப்பளோ அப் படியே பூமி எல்லாப்பலன்களினுலும் கொடுப்பவளை அபிவிருத்தி செய்யும். நல்லொழுக்கமும் பரிசுத்தமான ஆசாரமுமுள்ளவனும் அக்நிஹோத்திரம்செய்பவனுமான பிராம்மணனுக்குத் தம்பூரியைத் தானம்செய்பவர் யமலோகத்திற்குப் போகார். சந்திரன் ஒவ்வொரு நாளும் விருத்தியாவதை எப்படி காணப்படுகிறதோ அப்படியே பூமி தானத்தின் புண்ணியம் ஒவ்வொருபிரியும் அபிவிருத்தியாகும். பூமியில்விதைக்கப்பட்டவிதைகள் எப்படி முளைகளின்றனவோ அப் படியே பூமிதானத்தின் பிறப்பிலல் கினைத்தபயன்கள் உண்டாகின் றன. பித்ருலோகத்திலிருக்கும்பிதருக்களும் பிதாமஹலோகத்திலிருக் கும்பிதாமஹர்களும் பூமிதானம்செய்பவனை எல்லாப் பிரகாசங்களாலும் திருப்திசெய்விக்கின்றனர். மனிதன் பூமிதானம் செய்வதனல் தீர்க் காயுளையும் அழகானதேகத்தையும் குறைவில்லாத சிறந்த ஸுகவரியத் தையும் மறுஜன்மத்தில்அடைவான். பூமிதானத்தால் உத்தமபலன் கள் எல்லாவற்றையும் நான் சொன்னேனல்ல. பூமியில்லாத உத்தம் தர் மத்தை மனிதர்கள் சிரத்தையோடு கிரஹிப்பார்களாகவேண்டும். இத ற்குமேல் கன்னிகாதானத்தைப்பற்றிச் சொல்லவேண்டும். மஹாபாக்கியமே! பரிசுத்தமானவிரதமும் ஸுலக்ஷணமுள்ளவனும் குலமும் ஆயுசும்பொ ருந்தினவருமாகிய தன்கன்னிகையை அல்லது பிறர்கன்னிகையை அவளிடத்தில் மிக்கவிருப்பமுள்ள தர்மவானுக்குக்கொடுக்கும் விஷ யத்தை முதலில் தானேநிச்சயித்துப்பிறகு பந்துக்களோடு நிச்சயம் செய்து அவனுக்குச் சாஸ்திரப்படி கொடுக்கவேண்டும்; பிடுகட்டி வைத்து எல்லாஅணிகளும் பூட்டப்பட்ட அந்தக் கன்னிகையை வேலைக்காரிகள் வேலைக்காரர்கள் சிறப்புக்கள் வீட்டுப்பிராணிகள் பசுக்கள் தானியங்கள் எல்லாவற்றோடும் அவளுக்குத்தக்கவனும் அவளை விரும்புகிறவனுமான அந்தவரனுக்கு அக்நியின் முன்னிலை யில் கொடுத்து விதிப்படி விவாகம் செய்விக்கவேண்டும். அவர் களுக்குரிய ஜீவனத்தையுண்டுபண்ணி அவர்களிருவரையும் நல்ல வீட்டில் வைக்கவேண்டும். இப்படிக் கன்னிகாதானம் செய்தால் அந் தத்தானத்தின் மஹிமையினல் இறந்தபின் ஸ்வர்க்கலோகத்தில்கொண் டாடப்பட்டு ஸுகமாயிருப்பான். திரும்பி ஜனித்தபிறகும் செல்வத் தையும் சந்ததிவிருத்தியையுமடைவான். பீஷ்மரே! அதுபோலவே யோக்கியனுக்கு வித்யாதானம்செய்யும் மனிதன் மறுஜன்மத்தில் புத்திவிருத்தியையும் தைரியத்தையும் ஞாபகசக்தியையும் அடை வான். தகுதியுள்ளசிஷ்யனுக்கு வித்யாதானம்செய்பவன் அந்தத்

தானத்தின்பலனை அளவில்லாமலனுபவிப்பான். அழகான முகமுள்ளவளே! பொருளுதவிசெய்து தரித்திரர்களுக்கு வித்தையைக்கொடுப்பிப்பதும் தான்கொடுத்ததற்குச் சமமாகுமென்றறி. கௌரவமுள்ளவளே! தேவியே! இந்த மாதானங்களை உன்விருப்பத்திற்காக உனக்குச் சொன்னேன். இன்னம் என்னகேட்க விரும்புகிறாய்?' என்றார்.

இருநூற்றுமூப்பத்தாருவது அத்யாயம்.

தா ன தர் ம பர் வ ம். (தொடர்ச்சி.)



(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி ; திலதானமுதலிய பலதானங்களின்சிறப்பு.)

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈஸ்வரரே! எள்முதலியவற்றைத் தானம்செய்வதெப்படி? அந்த அந்தத்தானங்களுக்கும் கர்மங்களுக்கும் பலன்களைச் சொல்லும்' என்றுகேட்க, மஹேஸ்வரர் சொல்லலானார். 'தேவியே! எள்தானம் செய்வதன்முறையை நான் சொல்லுகிறேன்; ஊக்கத்துடன்கேள். செல்வமுள்ளவரும் இல்லாதவரும் முக்கியமாகத் திலதானம்செய்யவேண்டும். திலம் பரிசுத்தமானது; பாவத்தைப்போக்குவது; மிக்கபுண்ணியத்தைத் தருவதென்று சொல்லப்படுகிறது. சுத்தமானவள்ளை நியாயமார்க்கத்திலுல் இயன்றவரை சம்பாதித்து ரத்தினங்களுடன் மலைபோலக் குவிக்கவேண்டும். பெரியகுவியலாயினும் சிறிய குவியலாயினும் பொன், வெள்ளி, ரத்தினம், முத்து, பவழம் ஆகிய பலதிரவியங்களோடும் கொடிச்சீலைகளோடும் சீர்திருத்தப்பட்ட பூமியில்வைத்து அலங்காரம்செய்து இயன்றவரையில் ஆபரணம் வஸ்திரம் சயனம் ஆஸனங்களுடன்கூட முக்கியமாகக் கார்த்திகைமாதம் பூர்ணிமையில் தகுதியுள்ள அநேகம் பிரம்மணர்களைக் கிரமப்படி பூஜிப்பித்துத் தானும் உபவாஸமும் பிரம்மசாரிவிரதமும்செய்து அந்த எள்ளுக்குவியலைப் பிரதக்ஷிணம்செய்து தக்ஷிணையுடன் தானம்செய்யவேண்டும். அபிவிருத்தியைவிரும்புகிறவன் அதை ஒருவருக்காவது பலருக்காவது கொடுக்கலாம். தேவியே! அந்தத்தானத்திற்கு அக்நிஷ்டோமயாகத்திற்குச் சமமான பலனுண்டு. கோதானம்செய்ய விரும்புகிறமனிதனும் பூமியில் எள்ளைமட்டும் பசுவின் உருவமாகச் செய்து தகுதியுள்ளவனுக்கு வஸ்திரத்தோடும் ரத்தினங்களோடும் கொடுக்கவேண்டும். அதனால, கோதானத்தின் பலனுண்டு. எள்நிரம்

பினமடக்குக்களைப் பொன்றெடும் சண்பகப்பூவோடும் பிராம்மண னுக்குத் தானம்செய்யும்மனிதன் புண்ணியபலனையடைவான். ஹித தத்தைக்கருதுகிறமனிதன் இவ்வாறு தினதானம்செய்யவேண்டும். தேவி யே! இன்னும் பலவகைத்தானங்களின்பலன்களை ஊக்கத்துடன் கேள். மனிதன் அன்னதானம்செய்வதனால் தேகவன்மையையும் ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அடைவான். தண்ணீர்கொடுக்கும் மனிதன் எல்லாரும் விரும்பத்தக்கநிலைமையையும் ஸாரங்களைப்பறியும் திறமையையும் அடைவான். வஸ்திரதானம்செய்வதனால் தேகத்தில் அழகையும் ஆபரணங்களையும் அடைவான். தீபதானம்செய்யும் மனிதன் புத்தியில்தெளிவையும் தேகத்தில் நல்லஒளியையும் அடை வான். குடைதானம்செய்பவன் அரசனல்வரும் தீங்கினின்றும் நீங்கு தலைப் பலனாக அடைவான். வேலைக்காரிகளையும் வேலைக்காரர்களையும் கொடுப்பதனால் மனிதன் செய்யும்கருமங்களில் பலன்களைப்பெற்று மறுஜன்மத்தில் குணமுள்ள அனேகவேலைக்காரிகளையும் வேலைக்காரர் களையும் அடைவான். தகுதியுள்ளவனுக்கு ரதங்களையும் குதிரைகளை யும் தானம்செய்யும்மனிதன் கால்நோயும்சோர்வுமில்லாமல் காற்றுப் போன்றவேகத்தையும் விசித்திரமும் பழகுமுள்ள ரதங்களையும் குதி ரைகளையுமடைவான். வீட்டைவிரும்பும்தகுதியுள்ளவனுக்கு மழைக் காலத்திலும் இரவிலும் வீட்டில்இடங்கொடுப்பவன் சிறந்ததுணை களையடைவான். அணைகட்டுதல், கிணறுகுளம்வெட்டுதல் இவற்றைச் செய்யும்மனிதன் தீர்க்காயுளையும் அழகையும் மறுமையில் சிறந்தகதி யையும் பெறுவான். மரங்கள்வைத்து நிழல் பூ கனிகளைக்கொடுக்கும் மனிதன் அந்தப்புண்ணியத்தினால் மறுஜன்மத்தில் யாவராலும் எதிர் கொண்டு அழைக்கப்படுவான். நதிகளில் ஜலம்எடுப்பவர்களுக்குப் படிகட்டுகிறவன் அந்தப்புண்ணியத்தினால் பின்ஜன்மத்தில் வியஸனங் களிலிருந்து விடுபடுவான். வழிகளையுண்டாக்கும்மனிதன் எப்போ தும் ஸந்தோஷமுள்ளவனாயிருப்பான். தீர்த்தத்தை உண்டாக்குகிறவன் எப்போதும் உடம்பில் நோய்முதலியகுற்றங்களில்லாமலிருப்பான். கிருபையோடு எக்காலமும் ஔஷதம்கொடுப்பதனால் முழுதும் நோயற்றவனும் தீர்க்காயுளுள்ளவனும் ஆவான். நாதனில்லாதவரை யும் அசக்தரையும் குருடரையும் முடவரையும்போஷிப்பவன் அந்தப் புண்ணியத்தினால் பின்ஜன்மத்தில் கஷ்டப்படாமலிருப்பான். சிறந்த வேதபாடசாலைகளையும் யதிகளுக்கு மடங்களையும் கட்டுகிறமனிதன் பின்ஜன்மத்தில் எக்காலமும் பலவிதஉயர்ந்தமாளிகைகளில் வஸிப் பதையும் யக்ஷனைப்போல அழகையும் சிறந்தபலவகைப் பக்ஷணங்

களையும் போஜனங்களையுமடைந்திருப்பான். அழகானமாட்டுக்கொட்டிலைக் கட்டுவிக்கும்மனிதன் பின்ஜன்மத்தில் உயர்ந்தஜாதியையும் நோயில்லாவாழ்வையும் அடைவான். இப்படித் தானம்செய்பவன் இன்னும் பலவகைப் பொருள்களையும் அதன்பலனாக அடைவான்' என்றார்.

உமை, '[1]தேவருக்கும் ஈஸ்வரரே! புண்ணியமும் தானமும் எப்படி எவ்வளவுசெய்வதனால் பயன்பெறலாம்? அதை எனக்குச் சொல்லும். எனக்கு அதில்விருப்பமிருக்கிறது' என்றுகேட்டாள். மகேஸ்வரர், 'தானத்திற்கும் கர்மத்திற்கும் பின்ஜன்மத்திலுள்ளபலனைக் கேள். தானத்திற்கு மூன்சொன்ன [2]ஆறுகுணங்களிருக்கவேண்டும். மனிதர்கள் தகுந்தவனுக்குத் தம்செல்வத்திற்குத்தக்கபடி சாஸ்திரப் பிரகாரம் தானம்செய்யவேண்டும். புத்தி ஆயுள் ஆரோக்கியம் தேகபலம் செல்வம் கல்வி அழகு இவ்வேழுகுணங்களோடுகூடிய மானிடஜன்மம்வருவது நிச்சயம். பலனேவிரும்பி, 'இதற்காகக் கொடுத்தேன்; இதற்காகக் கொடுக்கவேண்டும்' என்றுசெய்யும்தானம் அற்பப்பலன்களைமட்டுமே கொடுக்கும். அதற்குமேல் ஒருபலனும் கிடைக்காது. தேவியே! உத்தமனுக்குக்கொடுக்கும்தானம் அழியாது. [3]நடுத்தரமானவனுக்குக்கொடுப்பது நடுத்தரமான பலனைக் கொடுக்கும். அதமனுக்குக்கொடுப்பது பலனற்றதாகும்' என்று சொன்னார்.

இருநூற்றுமுப்பத்தேழாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; வைதிகம்லௌகிக மென்றும் இருவகையாகங்கள்முதலியன.)

உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! லௌகிகம் வைதிகம்என இரண்டுயாகங்கள் சிறந்தவையாகச் சொல்லப்படுகின்றன. அவற்றை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்க, மஹேஸ்வரர் சொல்லலானார்.

'தேவதைகளுக்குச்செய்யும் பூஜைகள்எல்லாம் யாகங்களிலேயே சேர்க்கப்பட்டிருக்கின்றன. யாகங்கள் வேதங்களில் சொல்

---

1 'வததேவேச' என்று பாடங்கொள்ளப்பட்டது.

2 கொடுப்பவன், கொடுக்கப்படும்பொருள், வாங்குபவன், கொடுக்கும் வகை, இடம், காலம்.

3 'மத்யம்' என்று பாடங்கொள்ளப்பட்டது.


லப்பட்டிருக்கின்றன. வேதங்கள் பிராம்மணர்களிடம் இருக்கின்றன. தேவியே! ஆகாயத்திலும்பூமியிலுமுள்ள சிறந்தபொருள்களனைத்தும் உலகங்களின்நன்மையைக்கருதி யாகத்திற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றனவென்றறி. இதைஅறிந்து தன்மனைவியுடன் இடைவிடாமல் யாகம்செய்யும்பிராம்மணன் ஞானமும் கர்மமும் சேர்ந்திருப்பதனால் மறுமையில் நல்லலோகங்களையடைவான். தேவியே! அத்தவேதமானது பிராம்மணர்களிடத்திலேயே ஒப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், சாஸ்திரங்களில்விதிக்கப்பட்ட முறையினால் பிராம்மணர்கள்செய்யும்யாகங்களனைத்தும் தேவர்களைத் திருப்திசெய்விக்கும். பெரும்பாலும் பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் யாகத்திற்கேஉரியவர்களென்று நினைக்கப்படுகின்றனர். யஜமானர்களும் ரித்விக்குக்களும்மிகப்பரிசுத்தர்களாகவிருந்து பரிசுத்தமானதிரவியங்களாலும் கருவிகளாலும் வேதங்களில்விதிக்கப்பட்ட அக்நிஷ்டோமமுதலானயாகங்களைச் செய்யவேண்டுமென்பது நிச்சயம். அப்படியாகங்களைச்செய்தால், தேவர்களுக்குத் திருப்தியுண்டாகும். எல்லாத்தேவர்களும் திருப்தியடைவதனால் யாகம்செய்தவன் யாகபலனை அடைவான். யாகங்களினால் திருப்திசெய்விக்கப்பட்டதேவர்கள் உலகங்களை அபிவிருத்திசெய்கின்றனர். தேவியே! இரண்டுலோகங்களின்சிறப்புக்களும் யாகத்தினால் காணப்படுகின்றன. ஆதலால், யாகம்செய்பவன் ஸ்வர்க்கத்திற்குச்சென்று தேவர்களுடன் மகிழ்ந்திருப்பான். தேவியே! யாகத்திற்குச்சமமான தானமில்லை. யாகத்திற்குச்சமமானபுதையலில்லை. எல்லாத்தர்மங்களின் சுருக்கமும் யாகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதுதான் வைதிகயாகம் என்னும்பூஜை. மற்றொன்றாகிய லௌகிகயாகத்தையும் கேள். தேவபூஜையைஉத்தேசித்து உலகத்தின்உற்சவங்கள் செய்யப்படுகின்றன. தேவியே! தேவாலயத்தைஅலங்கரித்துப் பரிசுத்தனாயிருந்து யாகங்களையும் நிவேதனங்களையும் முறைப்படிசெய்து உற்சவம்செய்வதனால் தேவர்களைத் திருப்திசெய்விப்பவன் புண்ணியத்தையடைவான். தேவியே! பூமியில் எந்தமனிதர்கள், சந்தனம் பலவகைப்புஷ்பங்கள் பாயஸம் தூபதீபம் பக்தியுள்ளமனிதர்களால்செய்யப்படும் அனேகஸ்தோத்திரங்கள் ந்ருத்தகீதவாத்தியங்கள்முதலிய கண்ணுக்கினியசெய்கைகளையும் தேவதாராதனத்திற்காகச் செய்கின்றனரோ அவர்கள் பக்தியுடன் செய்யும்பூஜையினால் தேவலோகத்திலுள்ளதேவர்கள் ஸந்தோஷமடைகின்றனர். பரிசுத்தர்களும் ஸாதுக்களிடத்தில் அன்புள்ளவர்களும் பிரம்மசரியத்தைவிடாதவர்களுமாக மனிதர்க்கு

உதவிசெய்வதனாலும் யாகபலன் கிடைக்கும். தேவியே ! பக்தியுள்ளவர்கள் ஜிதேந்திரியர்களாய்த் தேகத்தைச் சுத்தமாகவைத்துக் கொண்டு பரிசுத்தமானகேஷத்திரத்தில் சந்தனபுஷ்பங்களைச் சாத்துவதனாலும் ஸ்தோத்திரம்செய்வதனாலுமே பூஜிக்கப்பட்டதேவர்கள் ஸந்தோஷமடைகின்றனர். தேவியே ! தேவர்களைச் சந்தோஷிக்கச் செய்துதான் புண்ணியத்தையடையவேண்டும்' என்றார்.

உமை, 'ஸ்வர்க்கத்திலிருக்கும்தேவர்கள், பூமியில் மனிதர்கள் சாஸ்திரப்படி செய்யும்செய்கையை எப்படி அறிவார் ? அதனை எனக்குச்சொல்லும்' என்றுகேட்டாள். மஹேசுவரர், ' அன்புள்ளவளே ! தேவர்கள் எப்படிஅறிகிறரென்பதை உனக்குச்சொல்வேன். பிராணிகளின்சரீரங்களுள் ஆத்மாவிருக்கிறது. அழகானகண்களையுடையவளே ! அந்தஆத்மாவே சிறந்ததேவதையென்றறி. மனம் அசைவற்றிருப்பதனால் ஆத்மா நன்மைதீமைகளனைத்தையும் அறிகிறது. ஆத்மாதான்தேவர்கள். ஆதலால், மனப்பற்றுடன்செய்யப்படுகிறதைத் தேவர்கள் அறியலாம். ஸாதுக்களானமனிதர்களுக்குமனம் சலியாமலிருப்பதனால் நன்மையுண்டாகிறது. அதனாலேதான் பிராம்மணர்கள் தேவர்களைப்பூஜிப்பது. சிறந்தவளே ! சுத்தமானதேகத்தோடும் விரதத்தோடும் மனஒக்கத்தோடும் உறுதியானபக்தியோடும் சலிக்காமல் யாகங்கள்முதலானதர்மகார்யங்களையும் குருபூஜையையும் செய்யவேண்டுமென்பது நிச்சயம். நன்மையைக்கருதுகிறவன் இப்படிச்செய்வதனால் இம்மையிலும்மறுமையிலும் ஸந்தோஷமடைவான். அன்புள்ளவளே ! மனவேறுபாட்டுடன் செய்யப்படும் கருமம் பயன்படாது. தேவியே ! கெட்டகாரியம்மட்டும் மனமில்லாமல்செய்தாலும் பலிப்பது திண்ணம்' என்றுசொன்னார்.

இருநூற்றுமுப்பத்தெட்டாவது அத்யாயம்

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)



(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; ஸ்ராத்தவிதியைப்பற்றியது.)

உமை, ' தேவரே! பித்ருயாகம்செய்வதுஎப்படி? அதைஎனக்குச் சொல்லக்கடவீர். பித்ருக்கள் எல்லாஸம்பத்தையும் கொடுப்பவரும் யாவரும் பூஜிக்கத்தக்கவருமாயிருப்பவரன்றே ?' என்று கேட்க, மஹேசுவரர் சொல்லலானார்.

'பித்ருயாகத்தையும் அதற்குரியதேசகாலங்களையும் அதைச் செய்யும்வகையையும் அந்தச்செய்கையின்பலாபலன்களையும் உள்ள படிசொல்வேன்; ஊக்கத்துடன்கேள். உலகங்களில் பித்ருக்கள் யாவரும் பூஜிப்பதற்குரியவர். அவர் தேவருக்குந்தேவர்; பரிசுத்த ராகப் பிரகாசிப்பவர்; புண்ணியவான்கள். அவர் தென்றிசையைச் சார்ந்திருக்கின்றனர். அழகானகண்களையுடையவளே! பூமியிலுள்ள எல்லாப்பிராணிகளும் மழையைஎதிர்பார்த்திருப்பதுபோலப்படியோஅப் படியே பித்ருக்கள் உலகத்தில் நடக்கும் சிராத்தத்தை எதிர்பார்த் திருக்கின்றனர். குருக்ஷேத்திரமும் கயையும் கங்கையும் ஸரஸ்வதி யும் பிரபாஸமும் புஷ்கரமும் சிராத்தத்திற்குரிய இடங்கள். அவற் றில்செய்யும்சிராத்தம் பெரும்பயனுள்ளது. புண்ணியக்ஷேத்திரங் களும் புண்ணியநதிகளும் ஜனங்களில்லாத வனங்களும் ஆற்றுமணல் களும் சிராத்தத்திற்குச் சிறந்தஇடங்கள். மாசிபுரட்டாசிமாதங்கள் சிராத்தம்செய்யச்சிறந்தகாலம். இரண்டுபக்ஷங்களுள்சுக்லபக்ஷத்தை விடக் கிருஷ்ணபக்ஷம் சிறந்தது. அமாவாஸை, திரயோதசி, நவமி, பிரதமைஇத்தத்திதிகளில்சிராத்தம்செய்வதஞல் பித்ருக்கள் திருப்தி யடைகின்றனர். தெரிந்தவன் முற்பகலிலும் வளர்பிறையிலும் இர விலும் ஜன்மநக்ஷத்திரங்களிலும் இரட்டித்ததிதிகளிலும் சிராத்தம் செய்யலாகாது. சிராத்தத்திற்கு ஏந்தச்சிறந்தகாலத்தை உனக்குச் சொன்னேன். எந்தக்காலத்தில் யோக்கியனானபிராம்மணன் கிடைக்கிறானோ அதுவும் காலமென்று நினைக்கப்படுகிறது. பங்திக்குத் தகாதபிராம்மணர்களை விடவேண்டும். பங்தியைப்பரிசுத்தப்படுத்தும் பிராம்மணர்களைத் தேடவேண்டும். சிராத்தங்களில் பாபிஷ்டர்களைப் புசிப்பித்தவன் நரகம்போவான். சிறந்தவளே! ஒழுக்கம், கல்வி, குலம், குணமுதலியவையுள்ளவரும் மனைவியோடிருப்பவரும் வேதாத்யய னம்செய்திருப்பவருமான ஒற்றைப்படையானகணக்குள்ள பிராம்ம ணர்கள் சிராத்தத்திற்குரியவரென்றறி. தெரிந்தவன் அந்தப்பிராம் மணர்களை முதல்நாளேயாவது அன்றுகாலையிலாவது வரிக்கவேண் டும். அதன்பிறகு, சாஸ்திரப்படி சிராத்தஞ்செய்ய ஆரம்பிக்கவேண் டும். தௌகித்ரனும் குதபகாலமென்னும்நடுப்பகலும் எள்ளும் சிரா த்தத்தைப்புனிதம்செய்யும். சுத்தம் கோபமின்மை அவஸரப்படா மைஇம்மூன்றும் சிராத்தத்திற்கு வேண்டியவையென்று சொல்லு கின்றனர். குதபகாலம், [1]கட்கபாத்ரம், குசம், தர்ப்பம், எள், தேன், காலசாகம், [2] கஜச்சாயைஇவை சிராத்த காரியங்களுக்குப்

[1] மரப்பாத்ரம். [2] 663-ம்பக்கம் குறிப்பிற்காண்

பரிசுத்தமானவை. சிராத்தபூமியில் எல்லாப்புறங்களிலும் பலகிற முள்ளதிலங்களே இறைக்கவேண்டும். சிறந்தவளே! பித்ருயாகத் தின்குற்றங்கள் திலத்தினால் விலகும். கறுப்புசிவப்புவஸ்திரங்களுடுத்தவனையும் நிறம்குன்றினவனையும் புண்காயாதவனையும் அங்கங் குறைந்தவனையும் அசுத்தனையும் சிராத்தத்தில் விலக்கவேண்டும். கோழிகளையும் பன்றிகளையும் ஆடையில்லாதவனையும் நபும்ஸகனையும் தூரஸ்திரீயையும் இரும்பு, தகரம், ஈயப்பாத்திரங்களையும் சிராத்தம்செய்யும்போதுவிட்டுவிடவேண்டும். மாம்ஸங்களினாலும் பச்சைப் பயறு, உளுந்து, யவைஆகியதானியங்களினாலும் பித்ருக்கள் திருப்தியடைகின்றனர். மூயல்புள்ளிமான்மாம்ஸங்களினால் ஆறுமாஸம் திருப்திசொல்லப்படுகிறது. பசுவின்நெய்யினாலும், பாயஸத்தினாலும் ஒரு வருஷம் திருப்திசொல்லப்படுகிறது. காளமாட்டின்மாம்ஸத்தினால் பன்னிரண்டுவருஷம் திருப்தியுண்டாகிறது. சிராத்தத்தில் கொடுக்கப்படும் காண்டாமிருகத்தின்மாம்ஸம் அனந்தமானபலனைக் கொடுக்கும். வள்ளோடுசேர்ந்தபாயஸமும் தேனும் காண்டாமிருகத்தின் மாம்ஸத்திற்குச் சமமானவை. பெருமுள்ளுள்ளமச்சங்களும் முழுச் சிவப்பான ஆடும் காலசாகமும் சிராத்தத்தைஅனந்தமாக்குவனவாகச் சொல்லப்படுகின்றன. பக்ஷணத்தோடும் மாம்ஸத்தோடும் நெய்பால் வெண்ணெய்சேர்ந்த ஆகாரத்தை ஹித்தப்படுத்தவேண்டும். அவ்வித மானஆகாரத்தை ஹித்தப்படுத்தினபின் பிராம்மணர்களைப் பூஜிக்க வேண்டும். வபனம்செய்துகொண்டு ஸ்நானஞ்செய்த பிராம்மணர் களை வரிசையாக ஆஸனங்களில்உட்காரவைத்து நல்ல சந்தனங்களாலும் புஷ்பங்களாலும் ஆபரணங்களாலும் மாலைகளாலும் அவர் களை அலங்காரம்செய்யவேண்டும். அலங்காரம்செய்தபிறகு உட்கார்ந்திருக்கும் அவர்களிடத்தில் பிண்டதானம்செய்வதைத் தெரிவிக்கவேண்டும். அதன்பிறகு, ஒருபிடிதர்ப்பங்களைத் தெற்குநுனியாகப்பரப்பி அவற்றின்சமீபத்தில் அக்நியைமூட்டி, 'ஸ்வதா' என்று சொல்லி, ஹோமம்செய்யவேண்டும். அக்நிஹோமர்களின் ஸமீபத்தில் பித்ருக்களுக்கு ஹோமம்செய்யவேண்டும். அதன்பிறகு, தெற்கு முகமாயிருந்து பித்ருக்களின்நாமதேயத்தைச்சொல்லி மூன்றுபிண்டங்களைப்ரசீனவீதத்தோடு கட்டைவிரலினால் தர்ப்பங்களில்வைக்க வேண்டும். இம்முறையாகப்பிண்டதானம்செய்வது பித்ருக்களுக்கு அக்ஷயதிருப்தியைச்செய்யும். அதன்பிறகு, நியமத்தோடும் சுத்தத் தோடும் பிராம்மணர்களைத் தன்சக்திக்குத்தக்கபடியும் அவர்கள் திருப்தியடையும்படியும் தக்ஷிணைகளாலும் போஜன பதார்த்தங்களாலும்

திருப்திசெய்விக்கவேண்டும். அந்தச்சிராத்தம்செய்யப்படுமிடத்தில் வெளிப்படையாகவும் ரகஸ்யமாகவும் யாரோடும் பேசலாகாது. வாக்கையும் தேகத்தையும் அடக்கிக்கொண்டு சிராத்தம்செய்ய ஆரம்பிக்கவேண்டும். 'சிராத்தமுடிந்தபின் அந்தப்பிண்டங்களைப் பிராம்மணனுவது அக்னியாவது ஆடாவது பசுவாவது சாப்பிடவேண்டும்; ஜலத்திலாவது போடவேண்டும். புத்திரனெவ்ரும்புகிறவன் நடுப் பிண்டத்தை மனைவியைப்புசிக்கச்செய்யவேண்டும். 'பித்ருக்களே! தாமரைமாலையையணிந்தகுமாரனைக் கர்ப்பத்தில் வையுங்கள்' என்று ஜபித்து, திருப்தியடைந்தபிராம்மணர்களை எழுந்திருக்கச்செய்து, மிச்சமுள்ள அன்னத்தை அவர்களுக்குத்தெரியித்து, அவர்களது மதியின்மேல், பந்துக்களோடும் வேலைக்காரர்களோடும் புசிக்கவேண்டும். நெடுங்காலமாயுள்ள இந்தப் பித்ருயாகத்தை உனக்குச் சுருக்கமாகச்சொன்னேன். இப்படிச்செய்வதனால் பித்ருக்களும் திருப்தியடைவர்; கர்த்தாவும் பலனையடைவான். தினந்தோறுமாகிலும் மாஸந்தோறுமாகிலும் வருஷத்திற்குரியமுறையாகிலும் இரண்டு முறையாகிலும் தன்சக்திக்குத்தக்கபடி சிராத்தம்செய்யவேண்டும். இந்தப்பித்ருயாகத்தினால் மனிதன் தீர்க்காயுளும் ஆரோக்கியமுமுள்ள வனும் பிள்ளைகளும் வேலைக்காரர்களும் தனதானியங்களும் நிரம்பினவனுமாவான். சிராத்தம்செய்பவன் அப்ஸரஸுகளின் கூட்டங்கள்பாடுவதும் ஆசையும்குற்றமுமில்லாததும் பலவிதஸுகங்களுள்ளதுமாகிய ஸ்வர்க்கத்தை மறுமையிலடைவான். செல்வத்தைவிரும்பிச் சிராத்தங்களைச்செவ்வையாகச்செய்யும்பண்டிதர்களுக்கு எப்போதும் ஸந்ததியையும் செல்வத்தையும் பித்ருக்கள் அளிப்பார்கள். 'சிராத்தம் பொருளையும் புகழையும் ஆயுளையும் ஸ்வர்க்கத்தையும் கொடுக்கும்; பலகவர்களைக் கெடுக்கும்; குலத்தைப் பெருக்கும்' என்று தெரிந்தவர்கள் சொல்லுகின்றனர்' என்றார்.

உடனே, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! பூமியிலிறந்தமனிதர்கள் உடனே தந்தம்கருமங்களுக்குத்தக்கபடி பல ஜாதிகளில் பிறக்கின்றனரே; அந்தப்பித்ருக்கள் தேவர்கள்போல அந்தலோகத்தில் க்ஷேமமாயிருப்பதெப்படி? பித்ருக்களுக்கு இடமெது? பிண்டங்களை அவர்கள் எப்படிச்சாப்பிடுகிறார்கள்? அன்னம் போடுவதனால் இறந்தவருக்குத் திருப்தியுண்டாவதெப்படி? இது எனக்கு ஸந்தேகமாயிருக்கிறது. பகவானே! சொல்லக்கடவீர்' என்று கேட்டாள். உமாதேவி இந்தவிரோதத்தை விளவும்போது அந்தச் சபையினைத்தும் அந்தமுக்கியமான இதத்தைக்கேட்க மிக்க ஆவலோடிருந்தது. அப்போது மஹேசுவரர் சொல்லலானார்:

'தேவியே! நீ ஸங்கேதித்தது ஸரி. சிறந்தவளே! உண்மையைக் கேள். இது ரகஸ்யங்களிலெல்லாம் மிக்கரகஸ்யம்; ஹிதங்களிலெல்லாம் சிறந்தஹிதம். அன்புள்ளதேவியே! ஆகாயத்தில் தேவக்கூட்டத்தார்கள் எப்படியிருக்கின்றனரோ அப்படியே பித்ருக்கூட்டத்தார்களுமிருக்கின்றனர். சிறந்தவளே! பித்ருக்கூட்டத்தாரனைவர்களும் தென்திசையிலிருக்கின்றனர். இறந்துபோனவரைப்பற்றி மனிதர்கள் இவ்வுலகத்தில்செய்யும்பூஜையினால் அந்தப்பித்ருக்கள் திருப்தியடைகின்றனர். இறந்துபோனவரைப் பித்ருக்களென்றுசொல்வதில்லை. யாககாரியங்களினால் வடதிசையில் தேவர்கள் எப்படி திருப்தியடைகின்றனரோ அப்படியே பித்ருயாகங்களினால் தென்திசையிலும் பித்ருக்கள் திருப்தியடைகின்றனர். ஹவ்யம் கவ்யமென்று இரு வகைக்கருமங்கள் செய்யப்படுகின்றன. அவற்றுள், ஹவ்யகாரியங்கள் தேவர்களையும் கவ்யகாரியங்கள் பித்ருக்களையும் திருப்திசெய்கின்றன. ஹவ்யகாரியங்கள் மங்களத்ரவியங்களினால் உபவீதத்தோடு செய்யப்படுகின்றன. கவ்யகாரியங்கள் அமங்களத்ரவியங்களினால் பிராசீனவீதத்தோடு செய்யப்படுகின்றன. தேவாஸுரகந்தர்வர்களும் பித்ருக்களைப் பூஜிக்கின்றனர். சிராத்தங்களினால் திருப்திசெய்விக்கப்பட்ட பித்ருக்கள் சிராத்தம்செய்பவர்களைச் சிறப்பிக்கின்றனர். ஒருவன் முதலில் பித்ருபூஜைசெய்யாமல் ஒருகிரியையை நன்றுகச்செய்தாலும் அதன்பலனை ராக்ஷஸர்களும் பிசாசர்களும் புஜிப்பார்கள். ஆதலால், பூமியில் மனிதர்கள் ஹவ்யகவ்யங்கள் என்னும்கிரியைகளைச் செய்யவேண்டும். மானிடதேகம் கர்மங்களுக்கிடம். அது மற்றஉலகங்களில் இல்லை. கவ்யத்தினால் ஸந்ததியும் ஹவ்யத்தினால் பலவகைஸம்பத்துமுண்டாகின்றன. தேவியே! இந்தப்பழமையானதேவரகஸ்யத்தை உனக்குச் சொன்னேன்' என்றார்.

இருநூற்றுமுப்பத்தொன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; தானபலன் தர்மஸ்தலத்தில் தர்மம்செய்யும் வகைமுதலியன.)

உமை, 'பிரபுவே! இவ்வாறுசெய்யப்பட்டதர்மத்தின் அளவையும் அதன்பலனின் அளவையும் நான் கேட்கவிரும்புகிறேன். அதனை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்டனள்.

மஹேசுவரர், 'தேவியே! பெண்ணரசியே! தானத்தின் அளவின்நிச்சயத்தைச் சொல்லுகிறேன்; கேள். உலகத்தில் மனிதன் தனக்குமுக்கியமாயுள்ளதிரவியத்தைக் கொடுப்பது உத்தமதானமென்று சொல்லப்படுகிறது. சிறந்தவளே! பூமியில் ஸர்வதானமென்றுசொல்லப்படுவது அதுதான். ஒருகோடிதனமுள்ளவனுக்கு அந்தக்கோடியே தனம். ஏழைக்கு ஒருபடிதானியம் முக்கியமானதனம். ஒருபடிதானியமே ஆஸ்திபாகவுடையவன் அதைக் கொடுப்பதனால் பெரும்பலனையடைவான். கோடிதனமுள்ளவன்அந்தக்கோடியைக் கொடுப்பதனால் பெரும்பலனையடைவான். அவ்விரண்டுதானங்களும் பெரியதானங்களே. பலன் இரண்டிற்கும் ஸமமாகத்தான் சொல்லப்படுகிறது. கர்மார்த்தகாமங்களுக்காகத் தன்னுலனுபவிக்கப்படும்பொருள்களில் தன்சக்திக்குக் குறைவாகக்கொடுப்பது மத்தியமதானமென்றுசொல்லப்படுகிறது. தனக்குள்ளதிரவியத்தில் மிகக்குறைவாகச்செய்யப்படும்தானம் அதமமென்று சொல்லப்படுகிறது. தேவியே! தானபலன்கள் [1]ஆனந்த்யம், மகத்து, ஸமம், ஹீனம், பாதகம் என்று ஐந்துவகைகளாகப்பகுக்கப்பட்டிருப்பதைக் கேள். தேவியே! அவற்றின் டிபிரிவைச் சொல்வேன். ஊக்கத்துடன் கேள். கொடுக்கமனம்வராத பொருளையும் யோக்கியனுக்கு அளிக்கும்தானம் ஆனந்த்யமென்று சொல்லப்படுகிறது. [2]ஆறுகுணங்கள்பொருந்தினதானம் மகத்தென்று சொல்லப்படுகிறது. வாங்குகிறவன் யோக்கியதைக்குத்தக்கபடி பிரத்தையுடன்செய்யப்படும் தானம் ஸமமென்று சொல்லப்படுகிறது. ஆறுகுணங்களில் சில குறைந்திருக்கும் தானம் ஹீனமென்று சொல்லப்படுகிறது. ஆறுகுணங்களுமில்லாவிடில் பாதகதானமென்று சொல்லப்படுகிறது. ஆனந்த்யமென்னும்தானத்திற்கு நீண்டகாலம்தேவலோகத்தில் பலன்சொல்லுகின்றனர், மகத்தென்னும்தானத்திலல் வெகுகாலம் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுவான். ஸமமென்னும் தானம் மானிடலோகத்திய போகங்களைத் தரும் சிறந்தவளே! செய்கையில்குறைவான ஹீனமென்னும்தானம் பயனற்றதாம்; அல்லது, மிலேச்சதேசங்களில் ஜனிப்பது அதின்பலனுகுமென்றுசொல்லுகின்றனர். ஒருவன் கெட்டதானம்செய்தால் இறந்த பின் நரகத்தையும் அதன்பின் திர்யக் ஜன்மத்தையும் அடைவான்' என்றுசொன்னர். உமை, 'பாதகமான தானத்திற்கும் கல்லபலன்கிடைப்பது எப்படி?' என்றுகேட்டாள். மஹேசுவரர், 'மனஉண்மையோடும் தயையோடும் செய்யப்படும்

[1] அளவற்ற பயனுள்ளது. [2] 808-ம்பக்கம் குறிப்பைப்பார்க்க.

தானம் சுத்தமாகிறது. எந்தத்தானங்களையும் அன்புடன்கொடுப்ப தனால் பலனையடையலாம். அழகானகண்களையுடையவளே ! இது தான் எல்லாத்தானங்களுக்கும் ஸாரமென்றறி. ஸாதுக்களால்செய் யப்படும் மற்றத்தர்மகாரியங்களையும் கேள். தோட்டங்கள், தேவா லயங்கள், தீர்த்தங்களில்துறைகள், கிணறுகள், மாட்டுக்கொட்டில் கள், தடாகங்கள், ஸபைகள், வேலைக்கூடங்கள், பாஷண்டர்கள் தங்கும்மடங்கள், தண்ணீர்ப்பந்தல், பசுக்களுக்குப்புல், பிணியாளி களுக்குச்சிகித்ஸை, அநாதைகளைக்காப்பது, திக்கற்றபிணங்களை ஸம்ஸ்காரம்செய்வது, க்ஷேத்திரங்களையும் வழிகளையும் சீர்படுத்து வது, தன்னால் இயன்ற அளவு எல்லாரையும் துன்பங்களிலிருந்துகாப் பது ஆகியஇவையெல்லாம் தர்மகாரியங்களென்று தொகுத்துச் சொல்லப்படுகின்றன. சிறந்தவளே ! மனிதன் இவற்றை இயன்ற வரை சிரத்தையோடுசெய்யவேண்டும் ; மறுமையில் புண்ணியத்தை அடைவானென்பதில் ஸந்தேகமில்லை. அப்படிப்பட்டமனிதன் அழ கையும் எல்லாரும்விரும்பும் தன்மையையும் ஆரோக்கியத்தையும் தேகபலத்தையும் சௌக்கியத்தையும் அடைவான். ஸ்வர்க்கத்திலும் மானிடலோகத்திலும் அந்தஅந்தப்போகங்களும் நிரம்பப்பெற்றிருப் பான்' என்று சொன்னர்.

உமை, 'பகவானே ! உலகங்களைக்காப்பவரே ! ஈசவரரே ! பெரி யோர்களால்ஆராய்ந்து அறியப்பட்டதர்மத்தின்வகைகளைத்தானென் பதை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்க, மஹேசவரர்சொல் லலானர். 'தேவியே ! தர்மங்கள் ஒன்றோடொன்றுமாறுபடுவதனால் பலவாறும். முக்கியமானதை எடுத்துச்சொல்லுகிறேன் ; கேள். உல கத்தில் பலவகைத்தர்மங்கள் அநேகவேதவாக்கியங்களில் சொல்லப் பட்டிருக்கின்றன. தர்மசாஸ்திரத்தில்சொன்னதர்மங்களும் சிஷ்டா சாரங்களும் பலவாகக் காணப்படுகின்றன. சிறந்தவளே ! தேசதர்மங் கள் ஜாதிதர்மங்கள் குலதர்மங்கள் கூட்டங்களின்தர்மங்கள் இவை யும் காணப்படுகின்றன. தேகஸௌக்கியக்குறைவினாலும் காலக்கெடு தலினாலும் ஆபத்தர்மமும் காணப்படுகிறது. உலகத்திலிருப்பவர் இந் தக்காரணங்களினால் தர்மத்தைப் பலவகைகளாகச் செய்கின்றனர். அந்தஅந்தக் காரணங்களிலும் தர்மபலனிருப்பதாகநினைக்கப்படுகின் றது. அந்தஅந்தக்காரணங்கள்நேரும்போது அந்தஅந்தத் தர்மங்க ளைச்செய்வதனால் மனிதன் பலனையடைவான்.காரணங்கள்நேராமலே செய்பவன் அதற்குத்தகாதவன். உரியவனல்லாதவன் செய்ததனால் புண்ணியத்தையடைவான். தர்மம்பலவகையாயிருப்பது இப்படி.

இவற்றைச் செய்யும்மனிதன் பலனையடைவான். தர்மங்களுள்,வேதத்திலும் தர்மசாஸ்திரத்திலும் சொல்லப்பட்டதர்மம் எல்லாருக்கும் பொதுவென்று சொல்லப்படுகிறது. தேவியே! இதை உனக்குச்சொன்னேன். இன்னம் என்ன கேட்கவிரும்புகிறாய்?' என்றுவினவினார்.

இருநூற்றுநாற்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி; பல புண்ணிய உலகங்களைப்பற்றியது.)

உமை, 'பகவானே! எல்லாப்பிராணிகளுக்கும்ஈசுவரரே! திரிபுரம்அழித்தவரே! வரமளிப்பவரே! சங்கரரே! பாவம்செய்தவர்கள் யமலோகத்தில்படும்துன்பத்தைக்கேட்டேன். தேவரே! புண்ணியம் செய்யும்மனிதர்களைப்பற்றிக் கேட்கவிரும்புகிறேன். மஹேசுவரரே! புண்ணியம்செய்தமனிதர்களுக்கு எப்படிப்பட்டலோகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன; அவர்கள் அந்தஉலகங்களில் போகங்களை அனுபவிப்பதுஎப்படி? தேவசிரேஷ்டரே! இதை எனக்குச் சொல்லும். எனக்குக் கேட்கவிருப்பமிருக்கிறது' என்றுகேட்க, மஹேசுவரர் சொல்லலானார்.

'எல்லாமங்களங்களும்பொருந்தினவளே! சிறந்தவளே! நீ விரும்புகிறவற்றையெல்லாம் சொல்லுகிறேன்; கேள். நற்கர்மங்களின் பயன்களாயுள்ளபுண்ணியஉலகங்கள் பலஉள்ளன. பொன்மயமான மேருமலையைச்சுற்றி எல்லாத்திக்குகளிலும் பத்ராசுவம் கேதுமாலம் உத்தரகுருக்ஷேத்திரம் ஜம்புவனமுதலிய தேசங்கள் ஸ்வர்க்கங்களென்று சொல்லப்படுகின்றன. அவற்றில் கர்மங்கள்செய்வதில்லை. அந்தத்தேசங்களில்பிறந்தபின் ஸ்வதந்தரர்களாய் எல்லா உலகங்களிலும் காணப்படுவார்கள். ஒவ்வொன்றும் ஆயிரம்யோஜனைதூரம் அளவுள்ளது. அந்தஉலகங்களில் எக்காலமும் பூக்களும் பழங்களுமுள்ள மரங்கள் எல்லாவிடங்களிலும் இருக்கின்றன. அவையெல்லாம் வஸ்திரங்களும் ஆபரணங்களும் காய்த்துத்தொங்கிக்கொண்டும் பொன்னிறமாகவும் இருக்கின்றன. அவற்றில் பலவளம்போலும் நிறமுள்ளவையும் ஆச்சர்யமானவையும் மனத்தைக்கவர்கின்றவையுமான வண்டுகளும் பறவைகளும் கூவிக்கொண்டு அவற்றைச் சிறப்பிக்கின்றன. தடாகங்கள் தாமரைவனங்களினால் மூடப்பட்டு அழகாயிருக்கின்றன. சிறந்தவாஸனையினால் லோகத்தைத்தரும்காற்று அவ்

விடத்தில் எப்போதும் வீசுகிறது. அங்குள்ளவர்களெல்லாரும் வாடாதமாலைகளைத்தரித்துத் தூயஆடைகளையுடுத்திருக்கின்றனர். தேவியே ! இப்படிச்சுகத்தைத்தரும் தேவபோகங்கள் பலவகைகளா யிருக்கின்றன. புண்ணியம்செய்த ஸ்திரீகள் புருஷர்கள் அனைவரும் அங்கே ஒருவர்மேலொருவர் ஆசையும்அன்புமுள்ளவர்களாகி மகிழ்ந் திருக்கின்றனர். அங்குள்ளஸ்திரீபுருஷர்களெல்லாரும் அழகுள்ள வர்களும் சிறந்தமகிமையுள்ளவர்களும் அழகானகுண்டலங்களையணி ந்தவர்களும் காட்சிக்கினியவர்களுமாயிருக்கின்றனர். அங்குள்ள சிறுமிகள் அனேகவிதமானரஸபாவங்களுள்ளவர்களாகவும் எப்போ தும்இளமைப்பருவத்திலிருப்பவர்களாகவும் நினைத்தஉருவம்எடுப்ப வர்களாகவும் மென்மையுள்ளவர்களாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக் கின்றனர். அந்தஸ்திரீகள் ஸ்வர்க்கலோகத்தில்எப்படியோ அப் படியே அனுபவிப்பவர்களின்மனத்திற்கொத்தவர்களாகவும் இனிய வர்களாகவும் அலங்காரம்செய்யப்பட்டவர்களாகவும் படைக்கப்பட் டிருக்கின்றனர். அந்தத்தேசங்களில் இப்படிப்பட்டஸ்திரீகளும் புரு ஷர்களும், ஐம்புலன்களும்ஸுகமாகவும் தேகங்கள்போகத்திற்குரிய அலங்காரங்களோடும் உத்ஸாகமாயிருக்கின்றனர். அன்புள்ளவளே ! அன்பு மகிழ்ச்சிமுதலியகுணங்கள் அவர்களிடத்தில் மிகுதியாயிருக் கின்றன ; கோபமுதலியகுற்றங்களில்லை. சிறந்தவளே ! அங்கே பசி யும் தாகமும் உடம்பின்வாட்டமும் இல்லை. அந்தத்தேசம் எங்கும் அழகாகவும் எல்லாருதுக்களின்புஷ்பங்களுமுள்ளதாகவுமிருக்கிறது. (புண்ணியம்செய்தவர்கள்) புண்ணியபலன் எதுவரையிலிருக்கிறதோ அதுவரையில் அங்கே எல்லாரோடும்சேர்ந்தவர்களாகக் காணப்படு கின்றனர் ; ஸ்வர்க்கவாஸிகள் எக்காலமும் போகங்களோடு மகிழ்ந் திருக்கின்றனர். அன்புள்ளவளே! அவ்விடங்களிற்பிறந்து புண்ணிய முள்ளவரையில் போகங்களையனுபவித்துப் புண்ணியம்க்ஷீணித்தவுடன் அந்தத்தேகம்நீங்கிவிடுகின்றனர். அந்த ஸ்வர்க்கலோகத்திலிருந்து விழுந்து திரும்பவும் மானிடஜன்மத்தில்பிறக்கின்றனர். அவர்கள் மூன் றியபுண்ணியத்தின்மிச்சத்தினால் சிறந்தவர்களாக ஜனிக்கின்றனர். பெண்ணரசியே! நீ கேட்ட தற்குஇந்தஸ்வர்க்கதியைச்சொன்னேன். அன்புள்ளவளே ! இதற்குமேல் எட்டுப்புண்ணியலோகங்களைச் சொல்லுகிறேன் ; கேள். அவை ஒன்றுக்கொன்றுமேலானவையும் போகங்களும் ஸுகமுமுள்ளவையுமாயிருப்பவை.. வித்தியாதரலோ கம், கிம்புருஷலோகம், யக்ஷலோகம், கந்தர்வலோகம், கின்னரலோ கம் அப்ஸரஸுகளின்லோகம், தானவலோகம், தேவலோகம் இவை

வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. புண்ணியகருமம்செய்த மனிதர்கள் அவ்வுலகங்களில் உண்டாகின்றனர். அவ்வுலகங்களும் ஸ்வர்க்கலோகத்திற்கொப்பாகச் சொல்லப்படுகின்றன. புண்ணியம் செய்தவரெல்லாரும் அவ்வுலகங்களில் ஸ்வர்க்கத்திற்போலவே அழகும் விவேகமும் பலமும் தீர்க்காயுளுமுள்ளவர்களாகப் போகங்களை யனுபவித்து மகிழ்ந்திருக்கின்றனர். அவர்கள் மானிடர்போலவே எல்லாக்கிரியைகளையும் செய்வதைக் காண்கிறோம். மனிதருக்குமேற் பட்டஜ்ஞானவரியம் அவ்வுலகங்களில் நினைத்தவுடன்உண்டாகிறது. மூப்பும் பிறப்புஇறப்புக்களும் அவ்விடங்களில் காணப்படுகின்றன. அங்கே குணங்களுமுண்டு; குற்றங்களுமுண்டு. பெண்ணரசியே! தவச்சிறப்பினால் அவரவர்புண்ணியங்களுக்குத்தக்கபடி ஆகாசஸஞ்சாரமும் அந்தர்த்தானமும் தேகவன்மையும் மனவுறுதியும் நீண்டகாலம்ஜீவித்திருப்பதும் உண்டாகின்றன. அவர்களுக்குத் தேவலோகஸஞ்சாரமும் விதிக்கப்பட்டிருக்கிறது. தேவலோகம் அப்படிப்பட்டதன்று. தேவர்கள் அவர்களுக்குமேற்பட்டவர்களாக நினைக்கப்படுகின்றனர். தேவலோகத்தில் சொல்லுக்கெட்டாதஸுகமும் இறவாமையும் விமானங்களிலேஸஞ்சரிப்பதும் எப்போதும் அப்ஸரஸுகள்பணிசெய்வதும்உள்ளன. இப்படிப்பட்டஇன்னமனேகம்செய்கைகள் தேவர்களுக்கு விசேஷமாயிருக்கின்றன. தேவியே! சிறந்தவளே! தேவலோகத்திலுள்ளநடையெல்லாம் உனக்கு நேரிலேயே தெரியுமே. ஆதலால், உனக்குத்தெரிந்ததை நான் அதிகமாக விவரித்துச்சொல்லவில்லை. அந்தஉத்தமமான இடங்களெல்லாம் புண்ணியங்களாலேயே அடையப்படுகின்றன' என்றார்.

இருநூற்றைநாற்பத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி; நரகத்துக்குரியவர்களையும் ஸ்வர்க்கத்துக்குரியவர்களையும் அறியும்வகை.)

உமை, 'மனிதர்கள் ஜீவித்திருக்கும்போதே, 'இந்தஜீவன் நல்லகதிக்குரியவன்' என்றும், 'இவன் அப்படியல்லன்; துன்பத்திற்குரியவன்' என்றும் அவரவர்கதிகளையறியக்கூடுமா, கூடாதாவென்பதை நான் கேட்கவிரும்புகிறேன். அதை எனக்குச் சொல்லக்கடவீர்' என்றுகேட்க, மகேசுவரர் சொல்லலானார்.

'உயிர்வாழ்க்கையிருக்கும்வகையைப்பற்றி உனக்குச் சொல்வேன். உலகத்தில்மனிதர்கள்தேவத்தன்மையர், அஸுரத்தன்மையர் என்றுஇரண்டுவகையினராயிருக்கின்றனர். மனத்திலுலும் வாக்கிலுலும் செய்கையிலுலும் நீங்குசெய்துகொண்டிருப்பவரெவரோ அவர்களே அஸுரத்தன்மையர்என்றறி. அந்தமனிதர்கள் நரகத்திலிருப்பவர். துன்பம்செய்பவரும் கள்வரும் வஞ்சகரும் பிறர்மனைவியைத் தொடுகிறவரும் இழிதொழிலில்விருப்பமுள்ளவரும் சுத்தத்தையும் மங்களத்தையும்விட்டவரும் ஆசாரத்தைப் பகைப்பவரும் பாவங்களைச் செய்பவரும் உலகலழுக்கத்தைக் கெடுப்பவரும் மற்றும் இவ்வகைநடக்கையுள்ளவர்களாக ஜீவிப்பவர்களும் நரகலோகத்திற்கு உரியவர். மற்றும் இப்படி உலகங்களுக்குப் பயத்தைத்தரும்மிருகங்களும் ஸர்ப்பங்களும் கொடியமுள்மரங்களும் அஸுரத்தன்மையுள்ளவையென்றறி. தேவியே ! தேவத்தன்மையரானமற்றவர்களையும் ஊக்கத்துடன் கேள். மனத்திலுலும் வாக்கிலுலும் செய்கையிலுலும் எப்போதும் நன்மையையே செய்துகொண்டிருப்பவர் எவரோ அப்படிப்பட்டவர்களைத் தேவர்களென்றறி. அம்மனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர். சுத்தமும் ஸத்தியமுமுள்ளவர்களாகிப் பிறர்பொருளைஎடாமலும் எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸமபுத்தியோடிருக்கும் விவேகிகளானமனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர். பயத்திலாவது ஜீவனத்திற்காகவாவது பொய்சொல்லாமல் எப்போதும் ஸத்தியமேபேசிக்கொண்டிருக்கும்மனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர். தர்மத்தையும் ஆசாரத்தையும்விடாமல் பரிசுத்தர்களாகவும் இன்சொல்லுள்ளவர்களாகவும் செய்யத்தகாதவற்றை மனத்திலுலும் கருதாதவர்களாகவுமிருக்கும் மனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர்கள்.பிறர்துன்பப்படுவதைத் தம்துயரத்தைப்போல நினைப்பவரும் ஏழைகளாயிருந்தும் யாசிப்பவர்களுக்கு அன்புடன் எதையாவதுலுன்றைக் கொடுப்பவருமானமனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர்கள். ஆஸ்திகரும் மங்களங்களைவிடாதவரும் எப்போதும் பெரியோரைஅடுப்பவரும் புண்ணியகருமங்களை விடாமற் செய்பவருமானமனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர்கள். எப்போதும் விரதங்களையும் தானதர்மங்களையும்விடாதவரும் கள்ளமும் குரூரமுமில்லாதவருமான மனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர். குருபணிவிடைசெய்துகொண்டும் தேவர்களையும்பிராம்மணர்களையும் பூஜைசெய்துகொண்டும் நன்றிமறவாமலும் கல்விகற்றுக்கொண்டிருக்கும்மனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர்கள்.ஐம்புலன்களை

யுமடக்கிக் கோபம், தற்புகழ்ச்சி, கர்வம், பொருளாசை, பகை இவற்றைவிட்டவர்களான மனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர்கள். 'நான், எனது' என்பதைவிட்டுத் தம் பந்துக்களிடத்தில் அன்பையும் ஏழைகளிடத்தில் தயையையும் விடாமலிருக்கும்மனிதர்கள் ஸ்வர்க்கம்போவதற்குரியவர். இம்மையிலுள்ள ஒழுக்கத்தாலேயே மறுமையின்பயன் ஊகிக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்களாக இவ்வுலகத்தில்ஜீவிக்கும்மனிதர்கள் ஸ்வர்க்கம்போகத்தக்கவர். அழகான முகமுள்ளவளே ! பிரஜைகளுக்கு நன்மையைச்செய்யும் பசுக்களும் விருக்ஷங்களும் மற்றும்உலகத்திலுள்ள நல்லவையனைத்தும் தேவபக்ஷத்தைச்சேர்ந்தவையென்றறி. உலகத்திலுள்ளசராசரங்களனைத்தும் நன்மைதீமையுள்ளவைகளாகவே இருக்கின்றன. அன்புள்ளவளே ! நல்லவற்றைத் தேவபக்ஷமென்றும் தீயவற்றைஅஸுரபக்ஷமென்றும் சொல்லுகின்றனர்' என்றார்.

இருநூற்றுநாற்பத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம் (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; பலவகை மரணங்களைப்பற்றியது.)

உமை, 'பகவானே ! மரணகாலம்வந்தபோது எவ்வகையால் உயிர்விட்டமனிதர்கள் மறுமையில் இதம்பெறுவர்?' என்றுகேட்க மகேசுவரர் சொல்லலானார்.

'தேவியே ! ஆ ! ஆ ! உனக்குச் சொல்வேன். ஊக்கத்துடன் கேள். உலகத்தில் இயற்கை முயற்சிஇருவகைகளாலும் மரணம் உண்டாகிறது. அவ்விரண்டனுள்ளும் ஸ்வபாவமரணம் அபாயமில்லாதது. முயற்சியினுலுண்டாகும்மரணம் உபாயங்களினுல்செய்யவேண்டும். தேவியே ! சிறந்தவளே ! இவ்விரண்டும்உண்டாகும்வகையைக் கேள். முயற்சியினுலுண்டாகும்மரணம் தேகத்தில் சக்தியுள்ளவனுக்கும் இல்லாதவனுக்கும் இரண்டுவகைகளாகச் சொல்லப்படுகிறது. முயற்சியினுலுண்டாகும் மரணம்என்பது இறந்துபோகவெண்ணத்தினுல் உயிரைவிடுவதுதான். தேகவலிமைதப்பினவனுக்கு மூப்பும் பிணியும் காரணங்கள். இறக்கவெண்ணமுள்ளவர்கள் உயிரைவிடுவதற்கு மகாப்பிரஸ்தானம்போவது ப்ராயோபவேசங்கிடப்பது நீரில்விழுவது அக்நிப்பிரவேசம்செய்வதுஆகிய இந்நான்குவகைகள் கூறப்பட்டுள்

ளன.சிறந்தவளே! இவற்றின்வகையைவரிசையாகச்சொல்லுகிறேன்; கேள். சாஸ்திரப்படி தன்தர்மங்களைச்செய்து கிருகஸ்தாசிரமத்தை வெகுகாலம்நடத்தி (தேவமனுஷ்யபித்ருரிஷி) கடன்களைத்தீர்த்துப் பிராயமுதிர்ந்தும் நோயடைந்துமிருக்கும்போது தன்அசக்தியைத் தெரிவித்துப் பந்துக்களெல்லாரையும்கேட்டுக்கொண்டு தன்குடும்ப போஷணங்கள் எல்லாவற்றையும்விட்டுத் தன்புண்ணியத்திற்காகத் தானங்களைச்செய்து ,எல்லாரிடத்தும்இன்சொல்லாகப்பேசிச் செலவு பெற்றுக்கொண்டு புதுவஸ்திரம்தரித்து அதைத் தர்ப்பக்கயிற்றினால் கட்டிக்கொண்டு ஆசமனம்செய்து ஸங்கல்பத்தோடு நிச்சயம்செய்து உலகநடையையெல்லாம்விட்டுத் தனக்கிஷ்டமான தர்மத்தைச்செய்ய வேண்டும். மகாப்ரஸ்தானத்தில்விருப்பமிருந்தால் உயிர்விடும்வரையிலும் ஆகாரமில்லாமலிருந்துகொண்டுவடதிசையைநோக்கிச்செல்ல வேண்டும். நடையற்றுப்போகும்போது மனவுறுதியுடன்படுத்தும் உயிர்விடவேண்டும். இப்படிச்செய்தால் பரிசுத்தமானபுண்ணிய லோகங்களை அடையலாம். மனிதன் பிராயோபவேசம்செய்யக்கருதினாலும் முன்சொன்னமுறைப்படியே ஆகாரமில்லாமல் சிறந்தபுண்ணியக்ஷேத்திரத்தில் படுக்கவேண்டும். [1]உயிருள்ளவரையிலும் பரிசுத்தஞயிருந்து தன்சக்தியளவு தானத்தையும் புண்ணியத்தையும் செய்து உயிரைவிடவேண்டும். இது எக்காலமுமுள்ளதர்மம். இப்படித்தேகத்தைவிட்டபிறகு ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுவான். சிறந்தவளே! அக்நிப்பிரவேசத்தில்விருப்பமிருந்தாலும்முன்சொன்னவிதிப்படியே புண்ணியக்ஷேத்திரத்திலாவது நதிக்கரைகளிலாவது கட்டைகளிஞல்சிதையைச்செய்து பரிசுத்தஞகிச் சங்கல்பம்செய்து கொண்டு தேவதைகளுக்குநமஸ்காரம்செய்து அக்னியைப்பிரதக்ஷிணம்செய்து அதில் முழுகவேண்டும். அவ்வாறு விதிப்படிசெய்பவனும் புண்ணியலோகங்களையடைவான். சிறந்தவளே! ,நீரில்விழுநினைத்தாலும் அதேமுறையாய்மிகப்புண்ணியமானதென்றுபிரஸித்திபெற்றதீர்த்தத்தில் தர்மத்தைநினைத்து அமிழவேண்டும். அப்படிச் செய்பவனும்பற்றில்லாமையிஞல்சிறந்தபுண்ணியலோகங்களை அடைவான். இனித் தேகவன்மையுள்ளவன் உயிர்விடும்வகையை ஸரியாகச் சொல்லுகிறேன் ; கேள். பிரஜாபரிபாலனம்செய்யும்க்ஷத்திரியசிரேஷ்டன் தன்ராஜ்யத்தைக்காப்பாற்றுகிறதற்காகவும் படைச்சேவகர்அரசனுடையஅன்னத்தின்கடமைக்காகவும் பிரம்மசாரிகள் குருவுக்காகவும் எல்லாரும் கோக்களுக்காகவும் பிராம்மணர்களுக்காகவும் உயிரை

1 'ஆப்ராணம்' என்று பாடம்கொள்ளப்பட்டது.

விடுவது சாஸ்திரத்தில் விதிக்கப்படுகிறது. தன்ராஜ்யத்தைக்காப்பதற்காகவும் கெட்டஜனங்களினுல்உபத்திரவிக்கப்பட்டஜனங்களைவிடுவிப்பதற்காகவும் விதிப்படி யுத்தஸந்நாகம்செய்துகொண்டு மனவுறுதியுடன் யுத்தத்தில்சென்று பின்வாங்காமல் உயிரைவிடவேண்டும். இவ்வாறுஇறந்தஅரசன் அப்போதே ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுவான். அப்படிப்பட்டநல்லகதி வேறில்லை. க்ஷத்திரியனுக்கு அது சிறந்தது. படைச்சேவகன் யஜமானனுடைய அன்னம்உண்டதற்காக அவனுடையகாரியம்நேர்ந்தபோது தன்னுயிரைக்கவனியாமல் அவனுக்கு உதவிசெய்து அவனுக்காகஉயிரைவிடுவனுயின் அவனும் புண்ணியலோகங்களை அடைவான்; அந்தலோகத்தில்தேவக்கூட்டங்களினுல் விரும்பப்படுவான். அதற்குச் சந்தேகமில்லை. அப்படியே கோக்களுக்காகவும் பிராம்மணர்களுக்காகவும் அசக்தர்களுக்காகவும் உயிரைவிடுகிறவனும் அந்தத்தியாகுணம்பொருந்தியிருந்ததனுல் புண்ணியலோகத்தையடைவான். இவ்வாறு, உயிரைவிடுதற்குள்ளநல்வழிகளை உனக்குச் சொன்னேன். காமத்தினுலாவது கோபத்தினுலாவது பயத்தினுலாவது தேகத்தை ஒருவன் விடுவானுயின் அவன் தற்கொலைசெய்துகொண்ட காரணத்தினுல் மூடிவில்லாதநரகத்தை அடைவான். ஸ்வபாவமரணம்என்பது தன்இச்சையினுலுண்டாகாததுதான். இறந்துபோனவர்களுக்குச் சாஸ்திரப்படி செய்யவேண்டியகாரியத்தையும் சொல்லுகிறேன்; கேள். அந்தமரணத்திலும் தேகத்தைப் பாராமல் போட்டுவிடுவதைப்பார்க்கிலும் புத்திபூர்வமாகப்போடுவது விசேஷம். மனிதன் இறந்துபோகுந்தருணத்தில் தேகத்தைப் பூமியில் படுக்கவைக்கவேண்டும். உயிர்விட்டவுடன் அந்தத்தேகத்தை வஸ்திரத்தினுல் மூடவேண்டும். பெண்ணரசியே! பிரேததேகத்தைப் பூமாலைகளினுலும் சந்தனத்தினுலும் பொன்னினுலும் அலங்கரித்து மயானத்தின்தென்புறத்தில் சிதையின்அக்நியில் எரிக்கவேண்டும். உயிரில்லாததேகத்தைப் பூமியில் புதைக்கவும்செய்யலாம். இறந்துபோகக்கருதுகிறவர்களுக்குப் பகலும் சுக்லபக்ஷமும் உத்தராயணமும் சிறந்தவை; மற்றவை இழிவானவை. ஜலதர்ப்பணமும் அஷ்டகையென்னும்சிராத்தமும் அநேகரால்செய்யப்படுமானுல் இறந்துபோனவர்களுக்குப் பரலோகத்தில் புஷ்டியையும் புண்ணியத்தையும் தருவனவாம். மனிதர்களுக்குஇதமானசொல்லாக இவற்றையெல்லாம்உனக்குச்சொன்னேன்'என்றார்.

இருநூற்றுஎழுபத்துமூன்றுவது அத்தியாயம்.

தா ன தர் ம பர் வ ம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம்தொடர்ச்சி; மோக்ஷதர்மத்தைப்பற்றியது.)

உமை, 'தேவதேவரே! காலஸம்ஹாரம்செய்தவரே! சங்கரரே! உமக்கு நமஸ்காரம். உலகத்திலுள்ள அநேகதர்மங்களை உமதுஅனுக்கிரகத்தினால் யான் கேட்டேன். எல்லாத்தர்மங்களிலும்சிறந்ததும் ஆதியும் அந்தமுமில்லாததும் அழியாதபலனுள்ளதுமாகிய தர்மத்தையெல்லாம் கேட்கவிரும்புகிறேன். இதில்என்மனம்மயங்குகிறது. சிலபிராம்மணர்கள் மோக்ஷத்தையும் சிலர் யாகத்தின்பலனையும் சிலர் வானப்பிரஸ்தாஸ்ரமத்தையும் சிலர் கிருகஸ்தாசிரமத்தையும் சிலர் ராஜதர்மத்தையும் சிலர் வேதாத்யயனத்தையும் சிலர்பிரம்மசர்யாசிரமத்தையும் சிலர் மௌனமாகியஸந்யாஸாசிரமத்தையும் புகழ்கின்றனர். சிலர் தாய்தந்தையருக்குப்பணிவிடைசெய்து ஸ்வர்க்கம்போயினர். மற்றும்சிலர் கொல்லாமையினாலும் ஸத்தியத்தினாலும் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப்படுகின்றனர். சிலர் யுத்தத்தில்எதிர்த்துச்சென்று அடிக்கப்பட்டு ஸ்வர்க்கம்போயினர். சிலர் உஞ்சவருத்தியுள்ளவர்களாயிருந்து தவசித்திபெற்று ஸ்வர்க்கமார்க்கத்தையடைந்தனர். மற்றும்சிலர் மனவுண்மையோடு பெரியோரைப்பூஜித்துக் கள்ளமில்லாதசுத்தாத்மாக்களாயிருந்து ஸ்வர்க்கத்தில் நிலைபெற்றனர். இவ்வாறு உலகத்தில் தர்மத்திற்கு அநேகம்வழிகள் மிக்கரகஸ்யமாயிருப்பதனால் என்மனம் காற்றினால் மேகங்கலங்குவதுபோலக் கலங்குகிறது. தேவசிரேஷ்டரே! இப்படிப்பட்டஸந்தேகத்திற்கு இடமான விஷயத்தில் ஸந்தேகத்தையறுப்பதும் நிச்சயஞானத்தை அளிப்பதுமானசொல்லைச் சொல்லக்கடவீர்' என்று கேட்டாள். பினாகமென்னும்வில்லைத்தரிப்பவராகியமஹாதேவர், தமதுதேவியாகியஉமை இவ்வாறுகேட்க, ஆத்மஞானத்தைப்பற்றியதும் நுட்பமும் இனிமையுமானசொல்லைச் சொல்லலானார்.

'மஹாநுபாவையே! நீ நிச்சயத்தைக்கேட்கவிரும்புவது நியாயந்தான். அன்புள்ளவளே! நீ என்னை இப்போதுகேட்பதுதான் சிறந்தவிஷயம். ஸ்வர்க்கலோகபலனுக்குக்காரணமாகியதர்மம் எல்லாச்சாஸ்திரங்களிலும் விதிக்கப்பட்டிருக்கிறது. அநேகவழிகளுள்ள தர்மத்தினுடையஎந்தச்செய்கையும் இவ்வுலகத்தில் வீண்போவதில்லை. தெளிந்தபுன்னகையுள்ளவளே! யார்யாருக்கு எந்தஎந்த

விஷயத்தில் உறுதியிருக்கிறதோ அதைஅதைமட்டுந்தான் தர்ம மென்று அவர்அவர்நினைப்பது. வேறுஒன்றையும் நினைப்பதில்லை. தேவியே! மிகச்சிறந்ததான மோக்ஷோபாயத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்; கேள். இதுதான் எல்லாத்தர்மங்களுக்கும் மேற் பட்டதும் அழியாதபலனுள்ளதுமான நல்லதர்மம். தேவியே! மோக்ஷத்திற்குமேலானது ஒன்றுமில்லை. மோக்ஷந்தான் சிறந்ததது. அழியாதசிறந்தஸுகமென்றும் பிறவியில்லாததென்றும் அதை அறி கின்றனர். தேவியே! அதில் மூப்புஇறப்புக்களும் துயரமும் சோர் வும் இல்லை. தேவியே! அது சிந்தைக்கெட்டாதபேரின்பம். அதற்கு மேல் ஒன்றுமில்லை. மோக்ஷஞானந்தான் எல்லா ஞானங்களிலும் உத்தமமானஞானமென்று வித்வான்கள் அறிகின்றனர். ரிஷிகளும் தேவர்களும் அதைப் பரமபதமென்று சொல்லுகின்றனர். அழியாத தும் குறையாததும் அலைக்கவும்வெல்லவும்கூடாததும் என்றும்ஸுக மாகவேயிருப்பதும் தேவசிரேஷ்டர்களாலும் ஆசைப்படத்தக்கது மான அந்தப் பரமபதத்தை ஞானிகள் அடைகின்றனர். இந்தஸம்ஸார மானது துக்கத்தையே ஆதியாகவும் துக்கத்தையே அந்தமாகவும் உடையதென்று சொல்லப்படுகிறது; துயரம் பிணி மூப்பு இறப்புஎன் னும் குற்றங்கள் உள்ளது. ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்கள்முதலி யவை எப்படி திரும்பித்திரும்பிச் சுற்றுகின்றனவோ அப்படியேதான் பிராணிகளும். சிறந்தலக்ஷணங்களுள்ளவளே! இந்தஸம்ஸாரத்தை விடுவதற்கு உபாயம் சொல்லுகிறேன்; கேள். பிரம்மாமுதல் தாவரம் ஈறுகவுள்ள அனைத்தும் ஸம்ஸாரமென்றுசொல்லப்படுகின்றன. ஸம் ஸாரத்தில் எல்லாப்பிராணிகளும் திரும்பித்திரும்பிப்பிறந்து இறந்து கொண்டிருக்கின்றன. அந்த ஸம்ஸாரசக்ரத்திலிருந்து விடுபடுவது ஞானத்தினாலென்றறியப்படுகிறது. ஆத்மாவின்உண்மையையறிவது தான் ஞானமென்றுசொல்லப்படுகிறது. ஞானியாயிருப்பவன் ஞானத் தைக்கிரகிக்கும்உபாயத்தையும் சாஸ்திரப்பிரகாரமான அவனுடைய ஆசாரத்தையும் சொல்வேன். அதை நீ ஊக்கத்துடன்கேள். பிராம் மணனும் க்ஷத்திரியனும் முதலில் கிருகஸ்தாசிரமத்திலிருந்து எல் லாக்கடன்களையும்நிவருத்திசெய்துகொண்டு அதன்பிறகு அந்தஆசிர மத்தை விடவேண்டும். கிருகஸ்தாசிரமத்தைவிட்டபிறகு மனவுறுதி யோடு வனத்திற்குப் போகவேண்டும். வனத்தில் ஒருகுருவைத் தேடிச்சாஸ்திரப்பிரகாரம்தீக்ஷையைச்செய்துகொண்டு அதன்பிறகு, வானப்பிரஸ்தாசிரமத்தின்ஒழுக்கத்தைக் கிரமப்படிகாப்பாற்றவேண் டும். குற்றமில்லாதவனாயிருந்து அந்தஉபாத்தியாயரிடத்தில்மோக்ஷத்

திற்குரிய ஞானத்தையும் பெறவேண்டும். அந்தமோக்ஷஞானம் ஸ்மிருதிகளில் ஸாங்கியமென்றும் யோகமென்றும் இரண்டுவிதமாகச் சொல்லப்படுகிறது. இருபத்தைந்துதத்வங்களை ஆராய்வது ஸாங்கிய மென்று சொல்லப்படுகிறது. ஸித்திகள்பெற்றுத்தேவனீதக்குச்சமமா யிருப்பது யோகசாஸ்திரத்தின்ஸித்தாந்தம். சிஷ்யனுயிருந்து அவ் விரண்டனுள் ஏதாவதுஒருஞானத்தைக் கேட்கவேண்டும். காலம் பாராமலும் காஷாயமுடுக்காமலும் ஒருவருஷம் குருகுலவாஸம் செய் யாமலும் சிரத்தையுடன் குருவின்அன்பைப் பெறுமலும் ஸாங்கியத் தையும் யோகத்தையும் தெரிந்துகொள்ளலாகாது. விருப்புவெறுப் புக்களைவிட்டுச் சீதோஷ்ணம் ஸுகதுக்கமுதலியவற்றைத் தாங்க வேண்டும். அவன்தான் ரிஷி. பசிதாகங்களிஞல்கலங்காமல் பழகின விஷயங்களிலிருந்து நிவருத்திக்கவேண்டும். எண்ணத்திலுள்ள உறுதியானபற்றுக்களைவிடவேண்டும். எப்போதும் தியானமே காரிய மாக இருக்கவேண்டும். குடம் பானபாத்திரம் உறி குடை தடி பாத ரக்ஷை வஸ்திரம்இவற்றில் தனது என்னும்பற்றை வைக்கலாகாது. குருவுக்குமுன்னெழுந்து பின் படுக்கவேண்டும். அவருக்குத்தெரிவி யாமல் அவசியமானகாரியத்திற்கும் செல்லலாகாது. பகலில் இரண்டு ஸந்திகளிலும் [1]ஸ்நானசாடியோடு இருமுறை ஸ்நானம்செய்யவேண் டும். அவனுக்கு ஒருவேளைபோஜனந்தான் யதிகளால் பூர்வகாலத் தில் விதிக்கப்பட்டிருக்கிறது. எல்லாரிடத்திலும்பிக்ஷைஎடுக்கவேண் டும். இரவில் இடைவிடாமல் தியானம்செய்யவேண்டும். அந்த அந்த ஸமயங்கள்நேர்ந்தபோதும் ஒருகாலும் குருவுக்குத் தான் தெரிவிக் கப்படக்கூடாது. பிரம்மசாரிவிரதமும் காட்டில் வாஸமும் ஸ்நான சுத்தமும் இந்திரியநிக்ரஹமும் ஸர்வபூததயையும் அவனுக்கு நிலை யானதர்மங்கள். அல்பாகாரம்செய்து இந்திரியங்களையடக்கி எல்லாப் பாவகாரியங்களையும்விட்டவன் ஆத்மத்தியானம்செய்து பாவங்களைப் போக்கும்நிறந்தஞானத்தை அடைவான். செய்கையினலும் மனத் தினலும் வாக்கினலும் எந்தப்பிராணிகளிடத்திலும் கெட்டஎண் ணத்தை எப்போது செய்யாமலிருக்கிறனோஅப்போதே பிரம்மத்தை அடைகிறன். கடுமையும் அகங்காரமும்பகையுமற்றவனுகி இரண்டை விட்டிருப்பவன் துயரமும் பயமும் உபத்திரவமுமில்லாத உயர்பத த்தை அடைவான். இகழ்ச்சியிலும் புகழ்ச்சியிலும் வேறுபாடில்லா மலும் ஒட்டாஞ்சில்லியையும் கல்லையும் பொன்னையும் ஒன்றுகனைத் தும் பகைவனிடத்தும் மித்திரனிடத்தும் வேறுபாடில்லாதமௌனி

1 ஸ்நானத்திற்குரிய வஸ்திரம்.

யானவன் முக்திபெறுவான். இப்படிப்பட்டஆசாரங்களோடு ஆத் மாவையே தியானம்செய்துகொண்டிருப்பவன் அந்தஞானத்தைப் பழகுவதனாலேயே பரகதியையடைவான்.

இருநூற்றுஎழுபத்துநான்காவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி; பைராக்கியத்தைப்பற்றியது.)

தின்பம் நோய் மூப்பு இழைப்பிறவி இந்தஸம்ஸாரசக்ரத்தில் மனம்வெறுக்காதவனுக்கு முக்தி வருவதில்லை. ஆதலால், ஸம்ஸா ரத்தில்வெறுப்பையுண்டாக்குவதும்மனத்தைநிலைநிறுத்துவதுமாகிய ஞானத்தை உனக்குச் சொல்வேன். அந்தஞானம் அடியாகத்தானே அரிதுமென்னப்படும்மூர்க்கி வருவது. மூடனிடத்தில்நாள்தோறும் துன்பத்திற்குஇடங்கள் ஆயிரங்களும் பயத்திற்குஇடங்கள் நூறுக ளும் பிரவேசிக்கின்றன. பண்டிதனிடத்தில் அவை பிரவேசிப்ப தில்லை. பொருள்நஷ்டம்வந்தபோதும் மனைவி மக்கள் தந்தைமுதலிய வர்கள்இறந்தபோதும், 'ஐயோ! கஷ்டம்!' என்றுநினைத்துத் துயர மடைகிறான். கடந்துபோனவற்றின்நிறப்புக்களைப்பற்றி நினைக்கலா காது. அவற்றைநினையாதவனுக்குத் துயரப்பற்று அழிந்துபோகி றது. அற்பபுத்தியுள்ளமனிதர்கள், வேண்டாதது வருவதனாலும் வேண்டினதுபோவதினாலும் மனத்துயரங்களை அடைகின்றனர். இறந் தவனையும் கெட்டுப்போனபொருளையும்பற்றிச் சிந்திப்பவன், கடந்து போனதனால் துயரத்தையே அடைவான். ஆனால், அந்தநினைவு இவனைவிட்டுப் போவதில்லை. இந்தமானிடப்பிறப்பில் கர்ப்பத்தி லிருக்கும்காலந்தொடங்கி மானிடஇயற்கையுண்டாயிருக்கிறது. துன் பங்களும் இன்பங்களும் பலவகைகளாக அடிக்கடி வருகின்றன. அவ்வின்பதுன்பங்களுள் ஒன்றும்இவனைஉட்படுத்தாமலிருக்கவேண் டும். இன்பத்தைஅடைந்து மகிழாமலும் துன்பத்தைஅடைந்து பரி தபியாமலுமிருக்கவேண்டும். எந்தப்பொருளில். அன்பு உண்டா கிறதோ அதில் குற்றங்களை ஆராய்ந்துகொண்டிருக்கவேண்டும். துன் பம்கலந்திருப்பதைப் பார்க்கவேண்டும். அதனால், சீக்கிரத்தில் வைரா க்கியம்பெறலாம். பெருங்கடலில் ஒருகட்டையும் மற்றொருகட்டை யும்சேர்வதும் 'சேர்ந்தபின் பிரிவதும் எப்படியோ அப்படித்தான் சுற்றங்கள்சேருவது.' காணுமலிருந்துவந்து திரும்பியும் காணுமற்

போனவர்களானமனிதர்கள்விஷயத்தில் ஸ்நேகம்செய்தல் தகாது. அவர்களைவிட்டுப்பிரிவது நிச்சயமன்றே? பிள்ளை பெண்டிர் தேகம் ஆஸ்தி அதிகாரம் க்ஷேமம்என்னுமிவை குடும்பங்கள். தெரிந்தவன் அவற்றில் மயங்கலாகாது. தேவலோகத்தில்தேவேந்திரனுக்கும் இன்பமே முழுதும்இருப்பதில்லை. அங்கும் மிகப்பெருந்துயரமிருக்கிறது. அவனும் நித்தியஸுகத்தையடைவதில்லை. இன்பத்திற்கு அடுத்தது துன்பம். துன்பத்திற்குஅடுத்தது இன்பம். தனங்கள்எல்லாவற்றிற்கும் அழிவுதான் முடிவு. மேன்மைகளுக்குத் தாழ்வு முடிவு. சேர்க்கைக்குப் பிரிவு முடிவு. உயிர்வாழ்வுக்கு மரணம் முடிவு. உயர்வதையும் விழுவதையும் தானே கண்டறிந்து எல்லாம் அநித்தியமென்றும் அஸுகமென்றும் நிச்சயிக்கவேண்டும். பொருள்களைஈட்டுவதிலும் துன்பம்; ஈட்டினவற்றைக்காப்பதிலும் துன்பம்; அழிந்துபோவதிலும் துன்பம்; செலவாவதிலும் துன்பம். சீ! பொருள் துன்பத்திற்கு இடம். பொருளுள்ளமனிதனை ஐந்துபகைவர் எப்போதும் பீடிக்கின்றனர். அவராவர்:—அரசன் கள்வன் தாயாதி பூதம் செலவு. அர்த்தந்தான் அநர்த்தத்திற்குக் காரணமென்று தெரிந்துகொள். பொருளில்லாதவனை அநர்த்தங்கள் பீடிப்பதில்லை. பொருள்கிடைப்பது பெருந்துயரம். பொருளில்லாமை பெரியஸுகம். பொருள்களுக்குக்கெடுதல்கள்நேரிடும்போது துன்பமுண்டாவது நிச்சயம். பொருள்கிடைத்ததனால் ஆசைபூர்த்தியாவதைக் காணவில்லை. அந்த ஆசை ஆதாரங்கிடைத்ததனால் விறகிற்பற்றின தீப்போல அதிகப்படுகிறது. நான்குகடல்களையும்மேகலையாகஅணிந்திருக்கும்பூமிமுழுமையையும் ஜயித்தபிறகும் திரும்பவும் அக்கடல்களின்அக்கரையை ஜயிக்கக்கருதுவதும் நிச்சயம். இவ்வுலகப்பற்றுப் போதும். பற்றுத்தானே குற்றமுள்ளது. தேவியே! புற்றுச்சேர்க்கும்கறையான் பற்றுதலினாலேயே கொல்லப்படுகிறது. ஒருவன் புவனிமுழுமையையும் ஒற்றைக்குடையின்கீழ் ஆளுகிறான். அவ்வரசனும் ஒருதேசத்திலேதான் வஸிக்கவேண்டும்; அந்தத்தேசத்திலும் ஒருநகரத்திலேதான் இருக்கலாம்; நகரத்திலும் ஒருவீடுதான் அவனிருக்குமிடம்; அந்தவீட்டிலும் ஓர் அறையில்தான் அவன்வஸிப்பது. அந்தஅறையிலும் இரவில் ஒருபடுக்கையில்தான் படுக்கவேண்டும். அந்தப்படுக்கையும் இவனுக்குப்பாதியும் இவன்மனைவிக்குப்பாதியுமாகப் பகுக்கப்படுகின்றது. ஆதலால், இவ்வளவுபெரியபற்றுதலிலும் இவன் அனுபவிப்பது மிகக்கொஞ்சம். சிறுவன் அறிவில்லாமல், 'எல்லாம் எனதுபலத்தினால்தான்' என்றுநினைக்கிறான். மேற்சொன்னபடி எல்

லாவற்றையும்உபயோகிக்கும்போது இவனுக்குண்டாகும் பிரயோஜனம் மிகக்கொஞ்சம். எல்லாமனிதர்களின்தேகயாத்திரையும் ஒருபடியளவுஅரிசியிஞலேமட்டும் நடக்கும். அதற்குமேல் அதிகமானலாபமெல்லாம் துன்பத்திற்கும் கஷ்டத்திற்கும்தான். ஆசைக்கீடானதுன்பமுமில்லை; விடுவதைப்போலின்பமுமில்லை. விருப்பங்களையெல்லாம்விட்டபிறகுதான் பிரம்மப்ராப்திக்குரியவனுகிறன். கல்லறிவில்லாதவர்களால்விடமுடியாததும்,தேகந்தளர்ந்தாலும்தளராததும்,உயிருள்ளவரையிலும்இருக்கும் ரோகமுமாகிய ஆசையைவிடுகிறவனுக்கே ஸுகம். விருப்பம், விரும்பினவற்றை அநுபவிப்பதினுல் ஒருகாலும்தணிவதில்லை; நெய்யினுல் அக்நி அதிகமாவதுபோல இன்னும் அதிகரிக்கும். தெரிந்தவன் விரும்பினவை கிடைக்காமையினுலேயே துயரத்தை விட்டுவிடுகிறன். பற்றுதலென்னும்அரணியில்உண்டாகிமுயற்சியென்னும்விறகையடைந்து உக்ரமாகஜ்வலிக்கும்காமமென்னும்அக்நியானது அறிவுத்தேர்ச்சியில்லாதமனிதனைச் சப்தாதிவிஷயங்களினுல் மயக்கி எரித்துவிடுகிறது. பூமியிலுள்ளநெல் யவம் பொன் பசுக்கள் பெண்கள்எவ்வளவோ அவ்வளவும் ஒருவனுக்கும் நிரம்பப்போதாதென்றுகண்டறிகிறவன் மயங்குவதில்லை. உலகத்திலுள்ள காமஸுகங்களும் தேவலோகங்களிலுள்ளபெரியஸுகமும் ஆசையற்றிருக்கும்ஸுகத்தின் பதினுறில் ஒருபாகத்திற்கும் ஈடாகாதவை. அறிவுள்ளவன் ஐம்புலன்களையும் சப்தாதிவிஷயங்களில் விடலாகாது; ஐம்புலன்களையும் ஆறுவதாகியமனத்தையும்கட்டி எப்போதும்ஆத்மாவினிடம்வைக்கவேண்டும். புலன்களை விஷயங்களில்செலுத்துவதனுல் கெடுதலேயடைவது நிண்ணம். அவற்றையேகட்டினுல் அதனுலேயே பலனைப்பெறலாம். இவ்வாறு இந்திரியங்களையும் ஆத்மாவினிடம் சேர்த்துக் கட்டுப்படுத்தும்திறமையுள்ள புத்திசாலி பாவங்களையும் துன்பங்களையுமடையான். தெரிந்தவன் எப்போதும் ஜாக்ரதையோடி இந்திரியங்களைப் பாதுகாக்கவேண்டும். அவை காக்கப்படாவிடின் விரைவில் மனிதன் நரகமடைவானன்றே? [1]மோகமென்னும்எருவினுல் உண்டாவதும் அஜ்ஞானமென்னும்வேருன்றினதும் [2]முயற்சியென்னும்தண்ணீர்விடப்பட்டதும் க்ரோதம்லோபம் என்னும்பெருங்கிளைகளுள்ளதும் முன்ஜன்மத்துப்பாவத்தை வயிரமாக உடையதும் உழைப்புஎன்னும்சிறுகிளைகளுள்ளதும் கொடிய துயரமென்னும்புஷ்பங்களும் பயமென்னும்தளிர்களும் பலவகைஎண்ணங்

---

1 குற்றம்தெரியாமை.

2 'விவித்ஸா' என்பதுமூலம்; அடையவேண்டுமென்னும் விருப்பம்

களென்னும்இலேகளுமுள்ளதும் அஜாக்ரதையினல்வளர்க்கப்பட்ட தும் ஆசைகளென்னும்பெருங்கொடிகளினல்எங்கும்சுற்றப்பட்டது மாகிய காமமென்னும்விசித்திரமானமரம் அறிவின் திருத்தமில்லா தவனுடைய மனமென்னும்நிலத்தில் வளருகிறது. தத்வஜ்ஞானியினிடத் தில் அம்மரம் முளைப்பதேயில்லே. முளைத்தாலும் உடனே வெட்டப் படுகிறது. கஷ்டமானஉபாயங்களினல்தேடப்பட்டவையும் நிலேயற் றவையும் குணமற்றவையும் துன்பத்தையேஅடியாகவும்முடிவாகவு முடையவையுமான காமஸுகங்களென்னும்பிரயோஜனங்களில் என் னஇன்பமிருக்கிறது? இந்திரியங்கள்கெட்டு ஆயுள்முடிந்து நமனெதி ரில்நிற்கும்போது இந்தஅஸுகத்தில் என்னஸுகமிருக்கிறது? பாரு ங்கள்! தேகத்திலும்மனத்திலுமுள்ளவியாதிகளினல் எக்காலமும் பீடிக்கப்பட்டுத் தன்காரியங்கள் முடியாமலேஇருக்கும்மனிதனுக்கு மரணம்வரும்போது என்னஸுகமிருக்கிறது? அந்தப்பொருளேயே சேர்த்துக்கொண்டும் காமஸுகங்களில் விருப்பம் தீராமலுமிருக்கும் மனிதனேக் காட்டில் புலி ஆட்டைத்தூக்குவதுபோல நமன் தூக்கிக் கொண்டுபோகிறன். பிறப்பு இறப்பு மூப்புத் துன்பங்களினல் எப் போதும் உபத்திரவிக்கப்பட்டு ஸம்ஸாரத்தில்வேகவைக்கப்பட்டிருக் தும் ஜனங்கள் பாவத்திற்கு அஞ்சுவதில்லே' என்றார்.

உமை, 'பகவானே! மனிதர்கள் எந்தஉபாயத்தினல் மூப்பை யும் மரணத்தையும் நிவிருத்திசெய்துகொள்ளலாம்? அது இருக்கு மாயின் சீக்கிரம் எனக்குச்சொல்லும். தவத்தினலேயா? யாகமுத லியபெருங்கர்மங்களாலேயா? கல்வினலேயா? அல்லது, ரஸாயன மென்னும் ஔஷதத்தினலேயா? எதனல் மூப்பு இறப்புக்களேத் தாண் டுவது?' என்றுகேட்க, மஹேசுவரர் சொல்லலானர். 'சிறந்தமஹிமை யுள்ளவளே! பெண்ணரசியே! ஜராமரணங்களேப்போக்கும்உபாயம் மோக்ஷத்தைத்தவிர வேறு ஒன்றும் எவ்வுலகங்களிலுமில்லே என்று அறி. மனிதர்கள் முக்தியடைந்தாலன்றித் தனத்தினலும் ராஜ்யத் தினலும் உக்ரமானதவத்தினலும் மரணத்தைத் தாண்டுவதில்லே. மோக்ஷமடைந்தாலன்றி அசுவமேதயாகங்கள்ஆயிரமும் வாஜபேய யாகங்கள்நூறும் மூப்புஇறப்புக்களேத் தாண்டுவிப்பதில்லே. ஆருகை யினலும் தனதானியங்களாலும் வித்தியாலாபத்தாலும் தவத்தினலும் ரஸாயனமென்னும்ஔஷதத்தினலும் ஜராமரணங்களே யாரும் தாண்டுவதில்லே. தானமும் யாகமும் தவமும் நல்லொழுக்கமுமுள் ளவரும் ரஸாயனம்தெரிந்தவரும் வேதாத்தியயனம்செய்துகொண் டிருப்பவரும் ஜராமரணங்களேக் கடந்துபோவதில்லே. தேவர், தான

வர், கந்தர்வர், கின்னரர், நாகர், அரக்கர்யாவரையும் காலம் தன்வசப் படுத்திக்கொள்ளுகிறது. காலத்துக்குவசப்படாதவனில்லை. சென்ற பகலிரவுகளும் மாதங்களும் திரும்பிவருவதில்லை; நதிகளின்பிர வாகங்கள்போலத் திரும்பாமலே ஓடுகின்றன. அந்தக்காலம் மாறுத உறுதியானதியானத்தை இடைவிடாமல் செய்துகொண்டிருக்கிறது. அழிவில்லாதஇந்தச்சூரியன் இடைவிடாதபகலிரவுகளில் மனிதர்க ளின்ஆயுளை எடுத்துக்கொண்டும் எல்லாப்பிராணிகளின் உயிரையும் போக்கிக்கொண்டும் அடிக்கடி அஸ்தமனமும் உதயமுமாகிறான். ஒருராத்திகடந்துபோனலும் ஆயுள் மிகக்கொஞ்சமாகிவிடுகிறது. ஆழமில்லாதஜலத்தில் மச்சம்போலிருக்கும் அவனுக்கு என்னஇள மையிருக்கிறது? சரீரத்திற்கு மாணம் நிச்சயம்; மாற்றமுடியாதது. எவனும் ஒருக்ஷணம்இருந்தாலும் திரும்பவும் காலத்துக்குவசப்படு கிறான். எல்லாப்பிராணிகளும் இறவாமலும் தளராமலுமிருக்குமா யின் பிராணிகளுக்கு அநிஷ்டமும் துன்பமும் ஒருபோதும் உண் டாவதில்லை. ஜாக்ரதையில்லாதபிராணிகளிடத்தில் காலம் ஜாக்ரதை யோடுஇருக்கிறது. மரணம்நேர்ந்தபோது ஜாக்ரதையுள்ளகாலத்தி லிருந்து விடுபடுவதில்லை. நாளைச்செய்யத்தக்கதை இன்றைக்கேசெய் யவேண்டும். பிற்பகலில்செய்யத்தக்கதை முற்பகலிலேயே செய்ய வேண்டும். எந்தக்காலத்தில் நிவன்எமனுல்பார்க்கப்படவில்லைஎன்று யாருக்குத் தெரியும்? 'மழைக்காலத்தில் இதைச் செய்வேன். கிரீ ஷ்மகாலத்தில் இதைச் செய்வேன். வஸந்தகாலத்தில் இதைச்செய் வேன்' என்றுநினைக்கிறவன் சிறுவன். அவன் இடையூற்றை அறிவ தில்லை. கிடைக்காதபொருள்களைப்பற்றி, 'இது எனக்கு வேண்டும்; இது எனக்குவேண்டும்' என்னும்எண்ணங்கொண்டிருக்கையிலேயே மனிதர்கள் மரணத்தினிடம் கொண்டுபோகப்படுகின்றனர். நாள் தோறும் ஜரைவந்து காலபாசத்தினுல்கட்டப்பட்டு நாள்தோறும் தூக்கமார்க்கத்தில்மயங்கும்போது பிராணிகளுக்குத் தர்மத்தில்சிர த்தை எதற்கு? இளமையிலேயே தர்மத்தைச் செய்யவேண்டும். உயிர்வாழ்க்கை நிச்சயமில்லை. பழுத்தபழங்களுக்குப்போல விழுத லின்பயம் மனிதருக்கு எப்போதுமுள்ளது. தனமும் தாரமும் புத்திரனும் போகங்களும் மனிதருக்குப் பிரியமாயிருந்தாலும் அவற் றினல் என்னபயன்? ஒருநாள் எல்லாவற்றையும்விட்டு நமனுக்கு அகப்படவேண்டுமே. பிறப்பவரையும் இறப்பவரையும் பார்த்தும் மனிதனுக்குத் துன்பமுண்டாகாமற்போமாயின் அவன் கட்டைக் கும் ஓட்டுக்கும் ஸமமானவன்தானே. அழிவதும் நிச்சயமில்லாதது

மான உயிருக்குப் பந்துக்களாலும் சிநேகிதர்களாலும் உடைமைகளாலும் என்னபயன்? ஒருகொடியில் இவற்றையெல்லாம் விட்டுப்போகிறானே. போனபின் திரும்பிவருவதில்லையே' என்றுஎல்லாப்பொருள்களும் அநித்தியமாயிருப்பதை எப்போதும் சிந்திப்பவனுக்கு முக்திக்குமுதலாகிய வைராக்கியம் விரைவில் உண்டாகும். அந்தவைராக்கியத்தினால் அவனுக்குத் திரும்பவும் விவேகமுண்டாகிறது. சிறந்தவளே! அந்தவைராக்கியத்தினால் மனிதர் முடிவானஒழிவைப்பெறுகின்றனர். வைராக்கியந்தான் முக்தியின்சிறந்தரகஸ்யமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. தேவியே ! வைராக்கியமுண்டாவதைப்பற்றி இந்தச்சொல்லை உனக்குச் சொன்னேன். மோக்ஷத்தைக்கருதுகிறவர் இவ்வாறு ஆராய்ந்து ஆராய்ந்துதான் ஸம்ஸாரத்திலிருந்து விடப்படுகின்றனர்.

இருநூற்றுஐம்பத்தைந்தாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி ; ஸாங்கியத்தின் கொள்கை.)

தெளிந்தபுன்னகையுள்ளவளே ! ஸாங்கியமென்னும் ஞானத்தைப்பற்றி உனக்குச் சரியாகச்சொல்வேன். அதை அறிந்தமனிதன் திரும்பவும் ஸம்ஸாரத்தில் புகமாட்டான். ஸ்யாஸத்தையறிந்தவர்களாகிய அந்தஸாங்கியர்கள் ஞானத்தினாலேயே முக்திபெறுகின்றனர். சரீரத்தைச்சேர்ந்ததாகிய கொடுந்தவம் வீணென்று ஸாங்கியர் கூறுகின்றனர். இருபத்தைந்து தத்வங்களையறிவதே ஞானமென்பது அவர்கொள்கை. அவ்யக்தமென்பது மூலப்பிரகிருதி. அவ்யக்தத்திலிருந்து மஹத்து உண்டாகிறது. மஹத்திலிருந்து அஹங்காரமுண்டாகிறது. அந்தஅஹங்காரத்திலிருந்துசப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம்என்னும் ஐந்து தன்மாத்திரைகளும் [1]பதினோர் இந்திரியங்களும் உண்டாகின்றன. அந்த ஐந்துதன்மாத்திரைகளிலிருந்து ஐந்து பூதங்கள் உண்டாகின்றன. அவற்றினால் சரீரமுண்டாகிறது. இவ்வாறு சரீரத்தைச்சேர்ந்தவை இருபத்துநான்கு தத்வங்களென்று சொல்லப்படுகின்றன. இந்தஎண்ணில் புருஷனென்னும் ஆத்மாவை இருபத்தைந்தாவது தத்வமென்று சொல்லுகின்றனர். ஸத்வம் ரஜஸ் தமஸ்என்னும் குணங்கள் பிரக்ருதியிலிருப்பவை. ப்ரக்ருதியானது

1 ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, மனம் ஒன்று.

தன்னுடைய குணங்களினால் உலகமனைத்தையும் படைக்கிறது. விருப்புவெறுப்புக்கள் இன்பதுன்பங்கள் தேகம் புத்தி தைரியம் இவை ப்ரகிருதியின் காரியங்களென்றே ஞானிகள் அறியவேண்டும். எல்லாவற்றின் இலக்கணங்களையும் பிரிவுகளையும் முதலிலிருந்து தெளிவாக விரித்துச் சொல்வேன்; கேள். நித்தியமும் பிரிவில்லாததும் ஸூக்ஷ்மமும் பிறகு, பரவத்தக்கதும் தொழிலில்லாததும் காரணமில்லாததும் இந்திரியங்கள் ஒன்றுக்கும் புலப்படாததுமாயிருக்குமென்பதுதான் அவ்யக்தத்தின் இலக்கணம். அவ்யக்தம் ப்ரகிருதி மூலம் ப்ரதானம் யோனி [1]அவ்யயம்என்னும்பலசொற்கள் அவ்யக்தத்தையே சொல்பவை. அது சூக்ஷ்மமாயிருப்பதனால் சுட்டிக்காட்டமுடியாதது. அது ஸத்தென்றுசொல்லப்படுகிறது. உலகமெல்லாம் அதனாலுண்டானது. சிருஷ்டிக்கு அதுதான் மூலமென்று நினைக்கப்படுகிறது. ஸத்வமுதலியவை ப்ரகிருதியிலுண்டாகும்குணங்கள். நான் அவற்றைச் சொல்லுகிறேன். ஸுகம் ஸந்தோஷம் புத்தித்தெளிவு இம்மூன்றும் ஸத்வகுணத்தின்காரியங்கள். விருப்புவெறுப்புக்கள் இன்பதுன்பங்கள் கர்வம் இவை ரஜோகுணத்தின்காரியங்கள். தெளிவில்லாமை, பயம், மயக்கம், சோம்பல்இவை தமோகுணத்தின்காரியங்கள். ஸத்வகுணம் தலையெடுத்திருக்கும்போது சிரத்தையும் உற்சாகமும் பகுத்தறிவும் மயக்கமின்மையும் தயையும் தைரியமும் உண்டாகின்றன. அது இல்லாதபோது இவையும் இல்லாமற்போகின்றன. ரஜோகுணம் தலையெடுத்தபோது காமக்குரோதங்கள் மனத்துயரம் பொருளாசை மயக்கம் பொய் இவைஎல்லாம் அதிகப்படுகின்றன. தமோகுணம் தலையெடுத்தபோது மனச்சோர்வு சந்தேகம் அறியாமை சோம்பல் தூக்கம் பயம்இவை காரணம்பற்றியும் காரணமில்லாமலும் உண்டாகின்றன. இவ்வாறு இம்மூக்குணங்களில் ஒவ்வொன்று தலையெடுக்கும்போது அவ்வவற்றின்காரியங்கள் மிகுதியாகஉண்டாகின்றன, மற்றொன்று தலையெடுக்கும்போது இவை அதனால்மறைக்கப்பட்டுக் குறைந்துபோகின்றன. இப்படி நித்தியமாக நடக்கிறது. அவற்றுள் தேகத்திலும் மனத்திலும் ஸந்தோஷத்தோடுஉண்டாகும்செய்கைகளெல்லாம் ஸத்வகுணத்தின் செய்கைகளென்று அறியவேண்டும். ஏப்போது மனக்கலக்கத்தையும் கொதிப்பையும் உண்டாக்கும் செய்கையிருக்கிறதோ அப்போது ரஜோகுணமிருக்கிறதென்றே நினைக்கவேண்டும். எப்போது ஒன்றுந்தெரியாமலும் ஊக்கமும்விவேகமுமில்லாமலும் தூயரமுண்டாய்க்கொண்டிருக்கிறதோ அப்போது

[1] அழிவில்லாதது.

தமோகுணம்தலேஎடுத்திருக்கிறதென்று நினைக்கவேண்டும். சுருங்கச் சொன்னால், தர்மம் ஸத்வகுணத்தையும் அர்த்தம் ரஜோகுணத்தையும் காமம் தமோகுணத்தையும் சேர்ந்தவை. த்ரிவர்க்கமென்னப்படும் தர்மார்த்தகாமங்கள் முறையே இம்முக்குணங்களேயும் சேர்ந்தவை. பிரம்மாமுதலான தேவர்களின்ஸ்ருஷ்டி ஸாத்விகஸ்ருஷ்டி என்று சொல்லப்படுகிறது. மனிதர்சிருஷ்டி ராஜஸசிருஷ்டியென்றும் திர்யக்ஜாதிசிருஷ்டி தாமஸசிருஷ்டியென்றும் சொல்லப்படுகின்றன. ஸத்வகுணமுள்ளவர் மேலேபோகின்றனர். ராஜஸர்கள் நடுவிலிருக்கின்றனர். தாழ்ந்தகுணமும் செய்கையுமுள்ளதாமஸர்கள் கீழே போகின்றனர். தேவர், மனிதர், விலங்குகள், மற்றச்சராசரங்கள் அனேவரும் ஆதிமுதல்இம்முக்குணங்களினால்நிரம்பியிருக்கின்றனர். இனிமேல் மகத்துமுதலானதத்வங்களே லக்ஷணங்களுடன் சொல்லுவேன். அறிவும் விவேகமும் மகத்தின்இலக்கணங்கள். மகத்து புத்தி மதி பிரஜ்ஞையென்னும் இவை மகத்தின்பெயர்களென்று அறிகின்றனர். அகங்காரமென்பது நான்எனனும்எண்ணமென்று அதன்இலக்கணத்தினாலேயே சுருக்கமாக அறியத்தக்கது. அகங்காரத்தினாலேதான் பல பிராணிசிருஷ்டி உண்டாகிறது. அகங்காரம்விடுவதுதான் முக்திக்குக் காரணமாகிறது. ஆகாயம் வாயு அக்நி ஜலம் பூமிஇவ்வைந்தும் மகாபூதங்கள். அவற்றிற்கு உற்பத்தியும் லயமும் அகங்காரத்திலேயே. சப்தம் செவி துவாரங்கள் இம்மூன்றும் ஆகாசத்தினாலுண்டானவை. பிராணிகளுக்கு ஸ்பரிசமும் அசைவும் காற்றின்குணங்களாக நினைக்கப்படுகின்றன. நிறம் உஷ்ணம் கண்கள் ஒளிஇந்நான்கும் தேஜஸின்குணங்கள். சுவை சினேகம் (நெய்ப்பு) நாகுளிர்ச்சிஇவை ஜலத்தின்குணங்கள். மணம் மூக்கு தேகம்இம்மூன்றும் பூமியின்குணங்கள்.' தேவியே! இப்படி எல்லாக்குணங்களும் பஞ்சபூதங்களேச்சேர்ந்தவையாகச் சொல்லப்படுகின்றன. பின்பின்பூதங்கள் முன்முன்பூதங்களின்குணங்களே அடைகின்றன. அதனால், இவ்வுலகத்தில் பூதசிருஷ்டிகள் அநேககுணங்களுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. ஜலத்தில்மணத்தைக்கண்டு சிலஅறிவில்லாதவர் ஜலத்திற்கும் மணமென்னுங்குணமிருப்பதாகச் சொல்லுவர். தாமரைமலர்போன்ற கண்களேயுடையவளே! தெரிந்தவர் அப்படி நினைப்பதில்லே. ஜலத்திற்குக் கந்தமில்லே. அது பூமியின் குணம்தான். பூமியில்கந்தமும் ஜலத்தில் ஸ்நேகமும் கண்ணில் ஒளியும் இருக்கின்றன. காற்று, பிராணவாயுவிலும் அபானவாயுவிலும் சேர்ந்திருக்கிறது. பிராணிகளின்தேகத்திலுள்ள துவாரங்களில் ஆகாயமிருக்

கிறது. மயிர் எலும்பு நகம் பல் தோல் கை கால் தலை முதுகு வயிறு இடுப்பு கழுத்து இவைகளெல்லாம் பூமியாகச்சொல்லப்படுகின்றன. இந்த தேகத்தில் [1]தாதுக்களையும் [2]தோஷங்களையும் மலங்களையும் சேர்ந்த தலையெல்லாம் பூதங்களைச்சேர்ந்தவையென்றறி. தேகங்களில் தலை மையாயிருப்பது பூமிதான். செவி தொக்கு நேத்திரம் நா நாசி இவை ஞானேந்திரியங்கள். வாக்கு கை கால் குறி ஆஸனம் இவை கர் மேந்திரியங்கள். பஞ்சபூதங்களிலிருந்துஉண்டாகும் சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்கள் ஐந்தும் ஞானேந்திரியங்களுக்கு விஷயங்களென்றறிய வேண்டும். சொல் தொழில் நடை இன்பம் விதிதல் இவ்வைந்தும் கர் மேந்திரியங்களுக்கு விஷயங்களென்றறி. அவையும் பஞ்சபூதங்களால் உண்டாகின்றவை. மனம் எல்லா இந்திரியங்களுக்கும்தலைமையென்று சொல்லப்படுகிறது. நினைப்பதுதான் அதன் இலக்கணம். அந்தமனம் இந்திரியமென்றுசொல்லப்படுகிறது. ஆத்மா மனத்துடன்சேர்ந்து மேற்சொன்னபூதங்களை நடத்துகிறது. மனத்தைக் கட்டவும் விட வும் ஸ்வதந்திரமுள்ளவன் ஆத்மாதான். இந்திரியங்களும் அவற்றின் விஷயங்களும் இயற்கையும் அறிவும் தைரியமும் பஞ்சபூதங்களின் காரியங்களும் பூதங்களல்லாதஅகங்காரத்தின்காரியங்களும் எல்லாம் சேர்ந்தது சரீரமென்றுசொல்லப்படுகிறது. சரீரத்தைவிட வேறாக இருக்கும்ஆத்மா சரீரத்தைச்சார்ந்திருக்கிறான். ஆத்மாவுக்கும் சரீ ரத்திற்கும்உள்ள வேறுபாட்டை நிஷ்டான் அறிவான். ரஸம், ஸ்பரி சம், கந்தம், ரூபம், சப்தம்இவையற்றதும் சரீரஇந்திரியங்களல்லாதது மாகியஆத்மாவைச் சரீரத்தில் காணமுயலவேண்டும். எல்லாத்தேகங் களிலுமிருந்தேபுலப்படாமலும்அவைநிறக்கும் இறவாமலுமிருக்கும் ஆத்மாவை வேறாகப்பார்ப்பவன் எவனோ அவன்தான் பற்றைவிட் டவனாவான். அந்தச்சிறந்தஆத்மாவைக் கண்ணினாலும் மற்றஇந்திரி யங்களினாலும் அறியமுடியாது; தெளிவானமனத்தினால்மட்டுமே காணலாம். சிறந்தசக்தியுள்ளஅவ்வாத்மாவானவன் சராசரங்களாகிய பலபூதங்களிலும் பலசெய்கையுள்ளவனாக இருக்கிறான். அந்தஆத்மா வுக்கு உயரம் குட்டை பருமைஎன்பதொன்றுமில்லை. இந்திரியங்களி னால்எப்படியோ அப்படித்தான் புத்தியினாலும். ஆத்மாவைக்காண் பது ஒருபோதும் முடியாது. அந்தஆத்மா எல்லாவற்றையும்வசப் படுத்திக்கொண்டு ஒன்பதுவாயில்களையுடைய தேகமென்னும்நகரத் தையடைந்து அதிலடங்கியிருக்கிறான். எல்லாஉலகங்களினுமுள்ள ஸ்தாவரங்களுக்கும் ஜங்கமங்களுக்கும் ஆத்மாவே ஈசுவரன். ஆத்மா

1, 2 சாந்திபர்வம் 629-ம் பக்கத்துள்ள 2, 3-ம் குறிப்புக்களிற்காண்க.

அணுவினும்அணு, மகத்தினும் மகத்என்பர். ஆத்மா பலவகையான எல்லாப்பொருள்களிலும்வியாபித்து அழியாமலிருக்கிறான். ஞானியானவன் இந்திரியங்களையடக்கி எப்போதும் மனத்தில்ஆத்மாவைத் தனியாகவும் தேகத்தைத் தனியாகவும் ஆராய்ந்துபார்க்கவேண்டும். செய்கையில்லாதவனும் பற்றில்லாதவனும் நித்தியனும் ஒருகாரியங்களிலும் சேராதவனுமாகிய புருஷனென்னப்படும்ஆத்மா பிரக்ருதியிலிருந்துகொண்டிருப்பதனால் அதன்குணங்களை அனுபவிக்கிறான். கார்யம், காரணம், கர்த்தாஎன்னும்பிரிவுகள் பிரக்ருதியினாலுண்டான வையாகச் சொல்லப்படுகின்றன. புருஷனென்னப்படும் ஆத்மா சுகதுக்கங்களை அனுபவிப்பவனாகச் சொல்லப்படுகிறான். அந்தஆத்மாவை வெல்லவும் நீனைக்கவும்முடியாது. அவன் நித்யன்; புலப்படாதவன். ஆத்மா ஒளியுருவமாகத் தேகத்திலிருக்கிறானென்று சிலர் சொல்லுகின்றனர். சிலர், 'தேகத்திலுள்ளஉஷ்ணமும் வாயுவும் அறிவும் ஜீவனென்னப்படுவன' என்று புத்தியினால் ஊகித்துநிச்சயிக்கின்றனர். மற்றும்சிலர், ஆத்மாஎல்லாஉலகங்களையும்வியாபித்திருப்பதாகச் சொல்லுகின்றனர். சிலர் இந்தத்தேகத்திலேயே ஆத்மா எள்ளில்எண்ணெய்போலஇருப்பதென்று சொல்லுகின்றனர்.மற்றும் சிலமூடர்களானநாஸ்திகர்கள், கண்ணுக்குப்புலப்படும் இலக்கணங்களில்லாமையினால் ஆத்மாஇல்லையென்று நிச்சயிக்கின்றனர். அந்த அறிவீனர் நரகம்போகிறவர். இப்படி அநேகர் ஈசுவரனை விசாரியாமலிருக்கின்றனர்' என்றார். உமை, 'பகவானே! பிரம்மதேவர் படைத்தஉலகத்தில் அழியாததும் குறையாததும் குற்றமில்லாததுமாகியஆத்மா எல்லாப்பொருள்களிலும் இருக்கிறதென்பதற்குக் காரணத்தையறிவது மிகக்கடினம்' என்றுசொன்னாள். மஹேஸ்வரர், 'ரிஷிகளாலும் தேவர்களாலும்கூட ஆத்மா காணப்படுவதில்லையென்பது திண்ணம். ஆனால், அந்தச் சிறந்தஆத்மாவைக்கண்டபிறகு ஸம்ஸாரத்தில் திரும்புவதில்லை. ஆதலால், ஆத்மாவைக்காண்பதினாலே தான் பரகதியடையலாம். தேவியே! என்றும் அழியாததும் கபிலர் முதலானஆசார்யர்களாலும் மற்றுமுள்ள மஹரிஷிகளாலும் அனுஷ்டிக்கப்பட்டதுமான இந்தஸாங்கியதர்மத்தை உனக்குச்சொன்னேன்.

இருநூற்றுநாற்பத்தாறுவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி; யோகத்தின்முறை.)

ஸாங்கியஞானத்தில் பிரவ்ருத்தித்தவர்களைப்பற்றிச் சரியாகச் சொன்னேன். இனி, யோகதர்மத்தை முழுதும் உனக்குச் சொல்வேன்; கேள். அந்தயோகம் பிரம்மரிஷிஸம்மதம் தேவரிஷிஸம்மதம்என இருவகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்திரங்களினால் விதிக்கப்பட்டஆசாரம் இரண்டிற்கும் பொது. அந்தயோகம் எண்குணங்களோடுகூடியஐசுவரியம் லபித்திப்பதற்காக விதிக்கப்படுகிறது. யோகதர்மத்தைப் பற்றினவர்கள் தேவர்களோடு மிக்கஉற்றுமையை அடைவார். எல்லாயோகங்களுக்கும் ஞானமே மூலமென்றறி. யோகங்களெல்லாவற்றையும் விரதங்களினாலும் உபவாஸங்களினாலும் இந்திரியஜயங்களினாலும் விருத்திசெய்யவேண்டும். சிறந்தஞானமுள்ளவளே! புத்தி, மனம், இந்திரியங்கள்எல்லாம் ஒருங்குசேர்ந்து ஆத்மாவையறிவதுதான் யோகிகளுடையஞானம். பிராம்மணர்களையும் அக்நியையும் தேவாலயங்களையும் பூஜிக்கவேண்டும். எல்லாப்பிராணிகளையும் ஆதரித்து அவற்றிற்குத் தீங்குநினையாமலிருக்கவேண்டும். தானம் அத்யயனம் சிரத்தை வ்ரதங்கள் ஆசாரங்கள் ஸத்தியம் பரிசுத்தமானஆகாரம் தூய்மை இந்திரியங்களையடக்குவது இவற்றினால் மஹிமை அதிகப்படுகிறது. பாவமும் விலக்கப்படுகிறது. பாவம்விலகினதால் மஹிமையடைந்தவன் ஆகாரத்தையடக்கி இந்திரியங்களையடக்கி வீண்காலம்போக்காமல் பரிசுத்தனும் அடக்கமுள்ளவனுமானபிறகு யோகாப்பியாசம் செய்யவேண்டும். மீன்பிடிப்பவன் மாம்ஸத்தைவைத்துக்கொள்வதுபோலத் தெரிந்தவன் முதலில் மனத்தை வசப்படுத்திக்கொள்ளவேண்டும்.ஜனங்களில்லாததும் நாற்புறமும்மூடப்பட்டதும் பரிசுத்தமுள்ளதுமானதனிஇடத்தில் மிருதுவான தர்ப்பங்களைப்பரப்பி ஆஸனம் போட்டுக்கொள்ளவேண்டும். அந்தஆஸனத்திலுட்கார்ந்து உடம்புமுகழுத்தும்ஒழுங்காகவும் மனம் எங்கும்செல்லாமலும் அங்கங்களையசையாமலும் ஆகாயத்தையும் திசைகளையும்பாராமலும் தன்மூக்கின்நுனியையேபார்த்துக்கொண்டு ஸுகமாகவிருக்கவேண்டும். தேவியே! மனத்தைநிறுத்துவதுதான் யோகத்தினுடைய ரஹஸ்யம். ஆதலால், முழுமுயற்சிகளாலும் மனத்தை எப்போதும் அசைவில்லாமலிருக்கச்செய்யவேண்டும். அதன்

பிறகு, மெய், காது, நா, மூக்கு, கண்இவ்வைந்துஇந்திரியங்களையும் விஷயங்களிலிருந்துஇழுத்து மனத்தில்சேர்த்து நிறுத்தவேண்டும். எல்லாஎண்ணங்களையும்போக்கி ஆத்மாவினிடம் மனத்தை வைக்க வேண்டும். ஐம்புலன்களும் மனமும் ஆத்மாவினிடத்தில் எப்போது நிற்கின்றனவோ அப்போது பிராணபானங்களிரண்டும்ஒருமிக்க இவனுக்கு வசப்பட்டிருக்கின்றன. பிராணன்வசப்பட்டால் யோகத்தின் ஸித்தி நிலையாயுண்டாகும். சரீரத்திலுள்ளவற்றையெல்லாம் தெளிவாகப் பகுத்துப்பார்க்கவேண்டும். தேகத்திலுள் பிராணவாயுசெல்வதையும் ஆராய்ந்துபார்க்கவேண்டும். பிறகு, தலையையும் [1]அக்னியையும் தேகத்தையும் காப்பாற்றவேண்டும். உயிரும் சுவாஸமும் தலையிலிருந்துகொண்டிதான் நடக்கின்றன. எல்லாப்பிராணிகளுள்ளும்இருப்பவனும்நிலையானவனுமாகிய புருஷனென்னப்படும்ஜீவாத்மாமனம் புத்தி அகங்காரம் பஞ்சபூதங்கள் சப்தாதிவிஷயங்கள் இவற்றைக் கவனிக்கிறான். அபானவாயுவானது [2]வஸ்தி மூலம் குதம் ஜாடராக்கி இவற்றைச்சார்ந்து மலமூத்திரங்களைத் தள்ளிக்கொண்டி எப்போதும் ஸஞ்சரிக்கிறது. ஆதலால், தேகங்களிலுள்ளசெய்கைகள் அபானவாயுசேர்ந்து உண்டாகின்றவை. உதானமானது ரத்த முதலியதாதுக்களெல்லாவற்றையும் எழுப்பிக்கொண்டி மேல்நோக்கிச் செல்லுகிறது. அதனால்,தேகதத்வம்தெரிந்தஜனங்கள் அதைஉதானம் என்றறிகின்றனர். மனிதர்களின் தேகங்களிலுள்ள பூட்டுக்கள்தோறும் இருந்துஎல்லாச்செய்கைகளையும்நடத்தும்வாயு வியானமென்று சொல்லப்படுகிறது. ரத்தமுதலானவழுதாதுக்களிலும் ஜாடராக்கியிலுமிருந்து உஷ்ணத்தைஎழுப்பித் தேகமெங்கும் பரவச்செய்வது ஸமானம். அதுவே, மரணகாலத்தில் எல்லாச்செய்கைகளையும் நிறுத்திவிடுகிறது. மேற்சொன்னபிராணன்முதலிய ஐந்துவாயுக்களும் ஒன்றுசேர்வதனால்உண்டாகும்உஷ்ணத்தை அக்கியென்றறியவேண்டும். அதுதான் பிராணிகளுக்கு ஆகாரத்தை ஜரிக்கச்செய்கிறது. வியானனும் உதானனும் பிராணபானவாயுக்களினிடையில் இருக்கின்றன. ஜாடராக்கி ஸமானனுடசேர்ந்துதான் சுன்னுகஜீர்ணம் செய்கிறது. தேகத்தின்நடுவில் நாபியிருக்கிறது. நாபியில் அக்கி இருக்கிறது. பிராணன்முதலானவாயுக்கள் அக்கியில் சேர்ந்திருக்கின்றன. பிராணனிடத்தில் ஆத்மாஇருக்கிறது. நாபிக்குகீழே [3] பக்வாசயமிருக்கிறது. நாபிக்குமேல் [4]ஆமாசயமிருக்கிறது. தேக

---

1 ஜாடராக்கி. 2 மலாசயம்.

3 4 சாந்திபர்வம் 629-ம் பக்கம் 5, 6-ஆம் குறிப்புக்களிற்காண்க.

த்தின்பஞ்சப்பிராணன்களும் நாபியின் நடுவிலிருக்கின்றன. பிராணன்முதலானவாயுக்கள் எல்லாம் குறுக்கும் மேலும் கீழுமாக ஸஞ்சரிக்கின்றன.பிராணவாயுக்களாலும் அக்னியிலுமும் தூண்டப்பட்ட பத்துரகம்புகள் உணவுகளின்ஸாரங்களைத் தேகத்தில் ஓடச்செய்கின்றன. யோகிகளின்இந்தமார்க்கம் இவ்வைந்துபிராணன்களில் நிற்கிறது. சிரமத்தைப்பொறுத்து நிலைத்த ஆஸனம்போட்டு ஆத்மாவைத் தலையில் வைக்கவேண்டும். [1]ஆத்மாவைத் தலையில்வைத்தபின் இருபுருவங்களின்இடையில் மனத்தைநிறுத்தி அதன்பிறகு பிராணனையும் ஆத்மாவையும் தியானிக்கவேண்டும். அபானனைப் பிராணனிலும் பிராணனை அபானனிலும்சேர்க்கவேண்டும். பிராணன் அபானன் இரண்டினுடையபோக்குக்களையும்நிறுத்திப் பிராணயாமம் செய்யவேண்டும். யோகியானவன் ஆகாரத்தைக்குறைத்து ஏகாந்தமானஇடத்தில் மௌனமாக மூச்சுவிடாமல் தேகத்திலுள்ள பஞ்சப் பிராணன்களையும் இவ்வாறு ஒன்றிலொன்றைச் சேர்க்கவேண்டும். தியானம்கலைந்தாலும் சோர்வில்லாமல் திரும்பவும்திரும்பவும் தியானம்செய்யவேண்டும். இவ்வாறே சோம்பாமல் நிற்கும்போதும் நடக்கும்போதும் தூங்கும்போதும் யோகம்செய்யவேண்டும். இவ்வாறு மனத்தைச்செலுத்தி யோகம்செய்யும்யோகிக்குச் சீக்கிரத்தில் மனம் தெளியும். அது தெளிந்தால் ஆத்மாவைக் காணலாம். புகையில்லாமல் எரியும் அக்னிபோலவும் நிரம்பினகிரணங்களோடு பிரகாசிக்கும் ஆதித்தன்போலவும் ஆகாயத்தில் மின்னல்போலவும் பரிசுத்தமாகப் பிரகாசிக்கும்புருஷனென்னும்ஆத்மாவைக் காணலாம். அந்தஆத்மாவின் ஒளியைக்கண்டபின் எண்குணங்களோடுகூடிய ஐசுவரியத்தைப் பெற்றுத்தேவர்களும் ஆசைப்படத்தக்க சிறந்தஸ்தானத்தை அடைவான். யோகத்திற்கு இப்பத்துக்குற்றங்களையும் சொல்லுகின்றனர். பெண்ணரசியே! இந்தத்தோஷங்களினால் யோகிகளுக்கு யோகவிக்னம் உண்டாகுமென்று ஞானிகள் நினைக்கின்றனர்.காமம்,குரோதம், பயம், தூக்கம், சிநேகம், அதிகபோஜனம், ஊக்கமில்லாமை, பிணி, சோம்பல், பொருளாசைஇவைபத்தும் குற்றங்கள். தெய்வத்தினாலுண்டாக்கப்பட்ட இப்பத்துக்குற்றங்களினால் யோகிகளுக்குத்தடை உண்டாகும். ஆதலால், முதலில் இவற்றைப்போக்கிப் பிறகு மனத்தை யோகத்தில் செலுத்தவேண்டும். யோகத்திற்கு இவ்வெண்குணங்களையும் கணக்கிடுகின்றனர். இவ்வெண்குணங்களினால் [2]சிறந்த

1 பிராணயாமத்தினால் பிராணவாயுவைத் தலையில்சேர்ப்பதுதான் ஆத்மாவைத் தலையில்வைப்பது. 2 'திவ்யம்' என்று பாடங்கொள்ளப்பட்டது.

ஐசுவர்யம் அடையப்படும். அணிமா, மஹிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசித்வம், வசித்வம், தான்நினைத்தபடி கனமாகவோஇலேசாகவோ ஆதலாகிய கரிமா லகிமா இவ்வெண்குணங்களையும் பிரயாஸத்தினலடைந்து யோகிசிரேஷ்டர்கள் எல்லாஉலகங்களுக்கும்அதிகாரிகளாகித் தேவர்களுக்கும்மேற்படுகிறார்கள். மிகுதியாகப்புசிப்பவனுக்கும் சிறிதும்புசியாதவனுக்கும் அதிகமாகத்தூங்குகிறவனுக்கும் சிறிதும்தூங்காதவனுக்கும் யோகம் வருவதில்லை. உணவும் ஸஞ்சாரமும் வேலைசெய்வதும் தூங்குவதும் விழிப்பதும் அளவாகஉள்ளவனுக்குத் துக்கங்களைப்போக்குவதாகியயோகம் நிலைபெறும். இந்தச்செய்கையினலேதான் ஸாயுஜ்யமென்னும்தேவத்தன்மை உண்டாகிறது. தேவஸாயுஜ்யத்தை அடைந்தபிறகும் பக்தியோடி ஆத்மத்யானம் செய்யவேண்டும். தேவியே! வேறொன்றிலும்மனம்செல்லாமல் எப்போதும் ஆத்மாவினிடம்மனம்வைத்தவன் பெருமுயற்சியினலெவ்வெகு காலத்திற்குப்பின் தேவஸாயுஜ்யத்தை அடையலாம். தன்சக்தியளவு அன்னங்களாலும் அர்ச்சனைகளாலும் ஹோமங்களாலும் நமஸ்காரங்களாலும் நித்தியமாகத் தியானம்செய்வதனலும் அர்ச்சிக்கப்பட்ட தேவர்கள் தமதுலோகத்தைக் [1]கொடுக்கின்றனர். ஸாயுஜ்யங்களுள் என்சாயுஜ்யமும் விஷ்ணுசாயுஜ்யமும் சிறந்தவை. அழகானகண்களையுடையவளே! என்னையடைந்தவரும் விஷ்ணுவையடைந்தவரும் ஸம்ஸாரத்தில் திரும்புவதில்லை. தேவியே! இந்தஅநாதியானயோகதர்மத்தை உனக்குச் சொன்னேன். உன்னைத்தவிர வேறு ஒருவரால் இந்தயோகதர்மத்தைக் கேட்கமுடியாது' என்றார்.

இருநூற்றுநாற்பத்தேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம்தொடர்ச்சி; பாசுபதயோகமுறை.)

உமை, 'முக்கண்ணரே! தேவஸ்ரேஷ்டரே! த்ரியம்பகரே! தேவர்க்கதிபதியே! திரிபுரஸம்ஹாரியே! மன்மதன்அங்கத்தை அழித்தவரே! கங்காதரரே! தக்ஷயாகத்தைக்கெடித்தவரே! சூலபாணியே! பகைவர்களையழிப்பவரே! உலகங்களைக்காப்பவரே! ஈசுவரரே! தேவர்களுக்கும்வரமளிப்பவரே! உமக்கு நமஸ்காரம். சாங்கியத்தையும்யோகத்தையும்சேர்ந்த சிறந்ததாகிய ஆத்மஜ்ஞானமானதுபலகலைகளுள்ளது; எல்லைஇல்லாதது; ஊகிக்கவும் அறிவும் கூடாதது.

---

[1] 'திசந்தி' என்று பாடங்கொள்ளப்பட்டது.

நான்வினவினதற்காக நீர் எனக்குத்தெரியும்படி சொன்னீர்.பிரபுவே! இப்பொழுது உம்முடைய ஸாயுஜ்யத்தைக் கேட்கவிரும்புகிறேன். மேலானவிடத்திலிருப்பவராகிய உம்மை இந்தப்பக்தர்கள் பணிவது எவ்வகை? பக்தர்களின் ஆசாரம் எப்படிப்பட்டது? நீர் எதனால் திருப்தி அடைவீர்? உம்மால் நேரில்சொல்லப்படுவது எனக்கு மிக்கஸந்தோஷகரமாயிருக்கிறது' என்றுகேட்க, மஹேசுவரர் சொல்லலானார்:

'ஆ! ஆ! என்ஸாயுஜ்யம் ஆச்சர்யமானது.. அதனை உனக்குச் சொல்வேன்.என்னைத்தியானம்செய்யும் சிறந்தயோகிகள் என்ஸாயுஜ்யமடைவதனால் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருவதில்லை; நான் புலப்படாதவன். மோக்ஷத்தைக்கருதினமுன்னோர்களும் என்னைச் சிந்திக்கமுடியவில்லை. சாங்கியமும் யோகமும் சராசரமனைத்தும் என்னால் படைக்கப்பட்டன. நான் பூஜிக்கத்தக்கவன். நான் ஈசுவரன். நான் அழிவில்லாதவன். நான் ஆதியில்லாதவன். நான் அனுக்கிரகம் செய்து பக்தர்களுக்குத் தேவத்தன்மையையும் கொடுக்கிறேன். தேவக்கூட்டங்களும் ,தவத்தையே தனமாகவுடைய முனிவர்களும் என்னை அறிவதில்லை. தேவியே! உன்விருப்பத்திற்காக என்ஐசுவர்யத்தை உனக்குச் சொல்லுகிறேன். சிறந்தவளே! தேவியே! நான் என்னிடத்தில் பக்தியுள்ளவர்களும் பாவமற்றவர்களும் பரிசுத்தர்களுமானநான்குஆசிரமத்தாராகியநான்குபிரம்மரிஷிகளை அழைத்துஅவர்களுக்குப் பாசுபதமென்னும்சிறந்தயோகத்தை உரைத்தேன். அவற்றையெல்லாம் அவர்கள் எனதுதென்முகத்திலிருந்து கிரகித்துக் கொண்டனர். அவர்கள் தாம்கேட்டபிறகு அதை மூவுலகங்களிலும் நிலைநிறுத்தினர். இப்போதும் நீகேட்பதனால் சொல்லுவேன். ஊக்கத்துடன் கேள். நான் பசுபதியென்றுபெயருள்ளவன். என்னிடம் பக்திவைத்து உடம்பெல்லாம்நீறணிந்திருக்கும்மனிதர்களேவரும் பாசுபதர்கள்என்றறியத்தக்கவர். பெண்ணரசியே! என்னிடம்பக்தியுள்ளவருக்கு ரக்ஷைக்காகவும் மங்களத்திற்காகவும் சுத்தத்திற்காகவும் அடையாளத்திற்காகவும் ஆதிகாலத்தில் பஸ்மத்தைக் கொடுத்தேன். அந்தப்பஸ்மத்தை அங்கமெல்லாமணிந்துகொண்டு ஜடையுள்ளவர்களாகவும் முண்டிதர்களாகவும் பலவகைக் குடுமிகளுள்ளவர்களாகவும் விகாரரூபிகளாகவும் சிவந்தநிறமுள்ளவர்களாகவும் திகம்பரர்களாகவும் பலஉருவங்களுடன் பிக்ஷையெடுத்துக்கொண்டு ஒன்றையும்விரும்பாமலும் பொருள்சேர்க்காமலும் மண்பாத்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு என்னிடத்தில்பக்தியுடன் புத்தியைச்செலுத்தி உலகமெல்லாம்திரிந்துகொண்டு எனக்குச் சந்

தோஷத்தை மிகவிருத்திசெய்கின்றனர். அவர்கள் சிறந்ததும் அரியதும் ஸூக்ஷ்மமுமாகிய பாசுபதமென்னும் என்யோகசாஸ்திரத்தை ஆராய்ந்துகொண்டு உலகங்களிலெல்லாம் ஸஞ்சரிக்கின்றனர். இவ்வாறு எப்போதும் என்னைத்தியானம்செய்துகொண்டும் தவம்செய்துகொண்டுமிருக்கும் என்பக்தர்கள் என்னைச்சீக்கிரமாகஅடையும்உபாயத்தை நானே தேடுகிறேன். மூன்றுஉலகங்களிலும் சிவலிங்கத்தை நான் ஸ்தாபித்திருக்கிறேன். அதை நமஸ்காரம்செய்வதனாலேயே எல்லாப்பாவங்களும் விட்டுப்போம். தேவதாபூஜையும் தானமும் அத்யயனமும் நிரம்பினதக்ஷிணைகளோடுகூடினயாகங்களும் சிவலிங்க நமஸ்காரத்தின்பதினாறிலொருபாகத்திற்கும் ஈடாகாதவை. அன்புள்ளவளே! சிவலிங்கத்தைப்பூஜிப்பதனால் நான் சந்தோஷமடைகிறேன். சிவலிங்கத்தைப்பூஜிக்கும்முறையையும் நான் சொல்லுகிறேன்; கேள். ஆவின்பாலினாலும் வெண்ணெயினாலும் என்லிங்கத்தை அர்ச்சிப்பவனுக்கு அசுவமேதயாகம்செய்தபலனுண்டாகும். நெய்யினால்என்லிங்கத்தைப்பூஜிக்கும்மனிதன் அக்நிஹோத்ரம்செய்த பிராம்மணன்அடையும்பலனை அடைவான். என்லிங்கத்திற்குச் சுத்தஜலத்தினால்அபிஷேகம்செய்யும்மனிதனும் புண்ணியத்தையும் என்அனுக்கிரகத்தையுமடைவான். என்ஸமீபத்தில் நெய்யினாலும் குங்கிலியத்தினாலும் நன்றாகத்தூபம்போடுகிறவனுக்குக் கோஸவமென்னும்யாகத்தின்பலனுண்டாகும். வெறுங்குங்கிலியக்கட்டியினால் தூபம்போடுகிறவனுக்கும் ஸ்வர்ணதானத்தின்பலனுண்டாகும். பலவகைப்புஷ்பங்களினால் என்லிங்கத்தைஅர்ச்சிப்பவன் ஆயிரம்கோதானங்களின் பலனை அடைவான். தேசாந்தரம்போய்ச்சிவலிங்கத்தைப்பூசிப்பவனைவிட மேலாகஎன்பிரியத்தைச்செய்தவன் மனிதர்களிலில்லை. இப்படிப் பலவகைத்திரவியங்களினால் சிவலிங்கத்தைப் பூஜிக்கவேண்டும். அப்படிப்பூஜிப்பவன் எனக்குச்சமமாவான்; திரும்பவும் மனிதரில் பிறவான். பக்தியோடு பூஜைகளாலும் நமஸ்காரங்களாலும் நைவேத்தியங்களாலும் ஸ்தோத்திரங்களாலும் சோம்பாமல் சிவலிங்கங்களில் என்னை நித்தியமாகப் பூஜிக்கவேண்டும். பலாசஇலைகளும் வில்வதளங்களும் [1] கொன்றைப்பூமாலையும் எருக்கம்பூவும் பரிசுத்தமானவை; எனக்கு மிகப்பிரியமானவை. தேவியே! பக்தர்கள் என்னிடம் அன்புவைத்துக்கொடுக்கும் கனி, காய், மலர், ஜலம்அனைத்தும் எனக்கு ப்ரீதியையுண்டாக்கும். நான் ஸந்தோஷமடைந்தால், உலகங்களில் கிடைக்காதது ஒன்றுமில்லை. அதனாலேதான், அந்தப்

1 'ராஜவ்ருக்ஷம்' என்பது மூலம்

பக்தர்கள் எப்போதும் என்னையே பூஜிக்கின்றனர். என்பக்தர்கள் கெடார். என்பக்தர்கள் பாவமற்றவர். என்பக்தர்கள் எல்லாலோகங்களிலும் மிக்கபூஜைக்குரியவர். என்னைப்பகைப்பவரும் என்பக்தரைப் பகைப்பவருமானமனிதர்கள் நூற்றுக்கணக்கான யாகங்களைச் செய்தாலும் கொடியநரகத்திற்குப் போவார். இந்தப்பாசுபதமென்னும்சிறந்தயோகத்தை முழுதும்உனக்குச் சொன்னேன். தேவியே! என்னிடத்தில்பக்தியுள்ளமனிதர்கள் இதைத் தினந்தோறும் கேட்கவேண்டும். இந்தஎன்தர்மசித்தாந்தத்தைக்கேட்பவனும்படிப்பவனுமாகிய உத்தமமனிதன் ஸ்வர்க்கத்தையும் கீர்த்தியையும் தனதானியங்களையும் அடைவான்' என்றார்.

இருநூற்றுநாற்பத்தேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வர்ஸம்வாதம் தொடர்ச்சி: உமை ஸ்த்ரீ தர்மம் சொல்லத் தொடங்கியது.)

ஸ்வயம்பிரபுவானமகாதேவர் இவ்வாறு சொல்லித் தமக்கொத்தவளும் அன்புள்ளவளும் பக்கத்திலிருப்பவளும் மனைவியுமானஉமாதேவியினிடம் தாம் தர்மம்கேட்கும் விருப்பத்துடன் பேசலானார்.

'தபோவனத்தில் வஸிக்கும்ரிஷிகளுடைய தர்மங்களின் தாரதம்மியங்களையறிந்தவளே ! தீக்ஷையையும் அடக்கத்தையும் அடைந்து எப்போதும்தவம்செய்பவளே! பெண்ணரசியே! நான் உன்னை ஒன்றுவிஞ்ஞகிறேன். நான் விரும்பிவிஞ்ஞவுவதற்குமறுமொழிகூறக்கடவாய். பிரம்மாவின்பத்தினியானஸாவித்திரி; இந்திரன்பத்தினியானஇந்திராணி, விஷ்ணுவின் அன்புள்ளபத்தினியாகியலக்ஷ்மி, யமனுடையபார்யையாகிய க்ருதி, மார்க்கண்டேயருடைய பத்னியாகிய தூமோர்ணை, குபேரனுடைய பார்யையான ருத்தி, வருணனுடைய பிரியபார்யையான கௌரி, சூரியனுடையபார்யையானஸுவர்ச்சலை, சந்திரன்பார்யையானரோஹிணி, அக்னியின்பார்யையான குற்றமற்ற ஸ்வாஹாதேவி, கசியபர்பத்னியான அதிதி, வஸிஷ்டர் பத்னியான அருந்ததி இவர்களும் இன்னும் உலங்களில்பதிவ்ரதைகளென்று பெயர்பெற்றஸ்த்ரீகள் அனைவரும் உன்னுடன்கூடிவஸித்திருப்பதாகக் கேள்வி. (அவர்கள்) ஒத்துஇடந்தும் ஒத்துப்பேசியும் உன்னைப் பூஜிக்கின்றனர். தர்மந்தெரிந்தவளே ! உலகத்திலுள்பூஜிக்கப்பட்டவளே ! அதனால்தான்

உன்னைக் கேட்கிறேன். ஸ்திரீதர்மத்தை நீசொல்லிக்கேட்க விரும் புகிறேன். நீ என்னுடன்சேர்ந்துதர்மத்தைச் செய்கிறவள்; உலகத் தைத் தாங்குகிறவள். இந்தஸ்திரீக்கூட்டம் உன் அனுக்கிரகத்தினால் தனக்குஇதமான சிறந்தஸ்திரீதர்மத்தைக்கேட்பதற்கு உன்னை விடா மல் அனுஸரிக்கிறது.உன்னால்சொல்லப்படுவது மிகச்சிறந்ததாகவன் றே இருக்கும்? அன்புள்ளவளே! ஸ்திரீகளுக்கு ஸ்திரீகள்தாமே கதி. எப்போதும் பசு பசுக்களிடத்திலேயே சேரும். மனிதன் மனிதரல்லாதவரிடத்தில் ஸந்தோஷமடையான். தேவியே! உலகத் தில் இந்தஇயல்பு ஆதிகாலமுதல் நடக்கிறது. பெண்ணினால்சொல் லப்படுவது எதுவாயினும் அது பெண்களுள் கொண்டாடப்படும். குற்றமற்றவளே! புருஷன்சொல்வது ஸ்திரீகளிடத்தில் அப்படி மதி ப்பையடையாது. ஸ்திரீகளுக்கு அழியாததர்மம் உனக்குத்தெரிந்த விஷயந்தானே. ஆதலால், உன்னைக்கேட்கிறேன். நான் விரும்பிக் கேட்பதை நீ சொல்லக்கடவாய்' என்றார். சிறந்தவளானஉமாதேவி மஹாதேவரால் இவ்வாறுகேட்கப்பட்டபோது, அச்சமும்நாணமும் அடைந்து அந்தஸபையில் ஒன்றும்பேசாமலிருந்தாள். அப்போது, ஈசுவரர் பலமுறை என்னவென்று தேவியைக் கேட்டார். உமை, 'பகவானே! தேவருக்குந்தேவரே! ஈசுவரரே! தேவராலும்அஸுர ராலும் நமஸ்கரிக்கப்பட்டவரே! உம்மிடத்தில் நான் ஸ்திரீதர்மத் தைச்சொல்வது எப்படி?' என்றுசொன்னாள். மஹேசுவரர், 'எனக்கு அன்புள்ளவளே! என்கட்டளையினால் நீ அவசியம் சொல்லவேண் டும்' என்றுசொன்னார். உமை, 'மஹாதேவரே! இந்தநதிகள் உமது ஸ்நானத்திற்காக எல்லாப்புண்ணியதீர்த்தங்களோடும்சேர்ந்து உமது ஸமீபத்தைவிடாமல் இருக்கின்றன. இந்தநதிதேவதைகளோடுகூட ஆலோசித்து நீர் விரும்பினதைச்சொல்வேன். முக்கியமானவர்கள் இருக்கும்போது அவர்களைவிட்டுப்பேசுவது தகாது. இந்தச்சிறந்த நதிகள் என்னால்வெகுமானிக்கப்பட்டவரும் ஆகவேண்டும்' என்று சொன்னாள். அம்மஹாதேவி இவ்வாறுநிச்சயித்து நதிதேவதைகளை அழைத்தாள். விபாசை, விதஸ்தையை, சந்திரபாகை, ஸரஸ்வதி, சதத்ரு, தேவிகை, ஹிந்து, கௌதமி, கௌசிகி, யமுனை, நர்மதை, காவேரி, தேவநதியும் ஸ்வர்க்கமத்தியபாதாளங்களென்னு மூன்று உலகங்களிலும்ஸஞ்சரித்து நன்மையைச்செய்பவளும் எல்லாப்புண்ய தீர்த்தங்களையும் வகிப்பவளும் எல்லாப்பாவங்களையும் போக்குப வளுமான கங்கையாகிய இந்நதிதேவதைகளை அழைத்து அவர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானாள்.

'சிறந்தவர்களும் எல்லாப்பாவங்களையும்ஒழிப்பவர்களும் அறிவும்விவேகமுமுள்ளவர்களுமான புண்ணியருதிகளே! என்சொல்லைக் கேளுங்கள். பகவான் ஸ்திரீதர்மத்தைப்பற்றி என்னே ப்ரஸ்னம்செய்திருக்கிறார். அது என்னாருத்தியினால் சொல்லமுடியாதது. அதனால், உங்களையழைத்தேன். சிறந்தவர்களே! உங்களோடுசேர்ந்து ஆலோசித்துத்தான் சொல்லவேண்டுமென்கிறேன். தேவருக்குந் தேவரான ஈசுவருக்குச் சிறந்ததான ஸ்திரீதர்மத்தை எப்படிச்சொல்லலாம்?' என்றாள். அந்தத்தேவியினால் இவ்வாறுகேட்கப்பட்டமஹாருதிகள் நடுங்கினர். அவர்களில் மிகச்சிறந்தவளானகங்கை பின்வருமாறுசொல்லலானாள். 'குற்றமற்றவளே! உன்னுடையஇந்தச்சொல்லினால் நாங்கள் அனுக்கிரகிக்கப்பட்டுப் பாக்கியம்பெற்றோம். தேவர்களாலும் அஸுரர்களாலும் கொண்டாடப்படுகிற நீ ருதிகளை ஆதரிக்கிறாயன்றோ? சிறந்தவளே! இப்படி இன்சொல்லினால்மகிழ்விப்பது உனக்கேதகும். எவர்கள் தெரியாதவர்களோ அவர்கள் தம்மைத்தாமே புகழ்ந்துகொண்டு ஸபைகளில் தாமாகவே தாங்கள்சொல்லமுடியாதவிஷயத்தையும் நினைத்தபடி சொல்லுவார். திறமையிருந்தும், 'நான்' என்று பேசாதவன்கிடைப்பது மிகஅரிதுஎன்றுநினைக்கின்றனர். தேவியே! நீ இந்தப்ரஸ்னத்திற்கு முழுதும் மறுமொழிசொல்லத்திறமையுள்ளவளாயிருந்தும்பெண்ணையிருப்பதனால் சொல்லக்கருதாமலிருக்கிறாய்; எங்களையும் கௌரவிக்கிறாய். தேவியே! நீ தானே மஹாதேவி; கூட்டியும் தள்ளியும் ஆலோசிக்கத்திறமையுள்ளவள். தேவியே! நீ திவ்யஜ்ஞானமுள்ளவள்; திவ்யஜ்ஞானமென்னும்விறகினால் ஜ்வலிப்பவள். பெண்களின் நல்லொழுக்கத்தையும் தீயவொழுக்கத்தையும் நீ தான் சொல்லத்தக்கவள். உன்முகத்திலிருந்து வெளிப்படும் இவ்வமுதத்தைக்கேட்பதற்கு நாங்கள் வேண்டுகிறோம். தேவியே! உத்தமமானஸ்திரீதர்மத்தைச்சொல்லி ஈசுவருடையவிருப்பத்தைநிறைவேற்று' என்றாள். உலகமெல்லாம் பூஜிப்பதற்குரியகங்கையினால் இவ்வாறு வேண்டப்பட்டபிறகு, தேவசுந்தரியானஉமாதேவி ஸ்திரீதர்மத்தை முழுதும் சொல்லலானாள்: 'பகவானே! தேவருக்குந் தேவரே! ஈசரே! தேவசிரேஷ்டரே! மஹேசுவரரே! உமதுவிருப்பத்திற்காக நீர்கேட்டக்கருதின ஸ்திரீதர்மத்தை உமது அனுக்கிரகத்தினால் சரிவரச்சொல்வேன்' என்றாள்.

இருநூற்றுநாற்பத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேஸ்வரஸம்வாதம் தொடர்ச்சி ; ஸ்த்ரீதர்மம் ; விவாகத்தையும் பதிவ்ரதாதர்மத்தையும் பற்றியது.)

இவ்வாறு, ஈசுவரருடைய கட்டளையினல் உமாதேவி ஸ்திரீதர்மம்சொல்லத்தொடங்கும்போது, ரிஷிகள் கந்தர்வர்கள் யக்ஷர்களுடையஸ்திரீகளும் அப்ஸரஸுகளும் நாககன்னிகைகளும் பூதகன்னிகைகளும் நதீதேவதைகளும் வந்துசேர்ந்தனர். எல்லாரும் சிறந்த வாக்கைக் கேட்கக்கருதி நாற்புறத்திலும்நின்றனர். பெண்கள்மேல் எப்போதும் அன்புள்ளவளும் அவர்களால் பூஜிக்கப்பட்டவளுமான உமாதேவியானவள் ஸந்தோஷம்அடைந்து பெண்களின் நன்மைக்காகவும் சிவனுடையவிருப்பத்தைச் செய்வதற்காகவும் ஸ்திரீகளின் தர்மத்தைப்பற்றிச் சொல்லத்தொடங்கினள்:

'பகவானே! எல்லாப்பிராணிகளுக்கும்ஈசுவரரே! என்சொல் லைக்கேட்கவேண்டும். ருதுகாலம்வரையிலும் சிறந்ததேகசுத்தமுள்ளவள் கன்னியென்றுசொல்லப்படுகிறாள். தந்தை தாய் ஸஹோதரன் அம்மான் தந்தையின்ஸஹோதரன் இவ்வைவரும் அந்தக்கன்னிகையைத் தானம்செய்கிறதற்கு அதிகாரிகள். அந்தப்பெண்களுக்குத் தர்மகாரியத்தைநடத்துவதற்காகச் செய்யப்படும்விவாகங்கள் ஐந்துவகை. ஒருவரொருவரை ஆசைப்படுவதனல் [1] இஷ்டப்படி கன்னிகையே தன்னை ரகஸ்யத்தில்கொடுப்பதும் விவாகந்தான். மேற்சொன்னவிவாகங்களில் எதனலாவது ஒருகன்னிகை யாருக்குக் கொடுக்கப்படுகிறாளோ அவனுக்கே மனைவியாவாள். ஆதலால், கொடுப்பவர்கள் நன்றுகஆராய்ந்துபார்த்தே கொடுக்கவேண்டும். வேறுவிதமாகக் கொடுக்கலாகாது. மேல்வர்ணத்தாருக்கு மந்திரங்களோடு பாணிக்கிரகணம் நடக்கவேண்டும். சூத்திரர்களில் ஸ்திரீபுருஷர்கள் சேருவதே விவாகமென்று சொல்லுகின்றனர். ஒருகன்னிகை தன்னைமனைவியாகவிரும்புகிறவனுக்குத் தன்சுற்றத்தாரால்எப்போது கொடுக்கப்பட்டவளாகிறாளோ அதுமுதல் அந்தப்பெண் பத்துத்தினங்கள்வரையில் வெட்கத்தோடிருப்பாள். பிறகு, அவள் மனத்தி

---

1 இது காந்தர்வம். இது ஆறுவது. ராக்ஷஸமும் பைசாசமும் தானமில்லாமையினல் சேர்க்கப்படவில்லை. பிராம்மம் ஆர்ஷம் பிராஜாபத்தியம் தெய்வம் ஆஸுரம் இவ்வைந்தும் கூறப்பட்டதாகக் கொள்க.

ஞலும் செய்கையினலும் வாக்கினலும் கணவனுக்கு அனுகூலமா கவே நடக்கவேண்டும். சிறந்தபெண் இவ்வாறு அந்தக்கணவனிடத் தில் பதிவ்ரதாதர்மத்தை நடத்தவேண்டும். விவாகமான துமுதல் அந்தப்பெண் கணவனுக்கு இன்னதுசெய்யலாகாது. தர்மார்த்த காமங்களுள் எதுஎதைக் கணவன்விரும்பினலும் அதுஅதிலும் அவ னுக்குப்பிரியமாயிருந்து அவனே உபசரிக்கவேண்டும். இதுதான் பெண்களுக்கு எக்காலமுமுள்ள பதிவ்ரதாதர்மம். கணவன் நன் னடையுள்ளவனுகவோ கெட்டநடையுள்ளவனுகவோ எப்படிஇரு க்கிறனே அப்படியே அவளும் எப்போதும் இருக்கவேண்டும். இதுதான் ஒழுக்கத்தின்சுருக்கம். எப்போதும் கணவனைக்கவனிக் கும்கற்புள்ளவள் தெய்வத்தன்மையுள்ளவள். அவளுக்குக் கணவன் தெய்வமாகவேஇருப்பதாக அறியப்படுவான். தேவரே ! இதற்கு உதாரணமாக ஒருபழைய சரித்திரத்தைக்கேட்டிருக்கிறேன். உமது அனுக்கிரகத்தினல் அதைச் சுருக்கமாகச்சொல்லுகிறேன். தேவரே ! கேளும். ஒருபிராம்மணனுக்கு இரண்டுமனைவிகள் இருந்தனர். அவர் களில் ஒருத்தி தேவர்களிடத்தில்பக்தியோடி தர்மத்தைச் செய்யக் கருதுகிறவள். அவள் கணவனை அவமதித்துத் தேவதைகளிடத்தில் பக்திவைத்து ஊக்கத்துடன் தேவதாவிக்கிரஹங்களைப்பூஜித்துப் பெரியதர்மத்தைச் செய்தாள். சிறந்தவளானமற்றொருத்தி கணவ னைப்பற்றியேதர்மம்செய்யநினைத்து அவனையேதெய்வமாகக்கொண்டு அவன்விருப்பத்தைச் செய்தாள். மஹாதேவரே ! இப்படிநடந்து கொண்டிருக்கையில் அவ்விருவருக்கும் ஒருகாலத்தில் மரணம் நேர் ந்தபோது அவ்விருவரும் பரலோகத்தின்வழியில் சென்றனர். அவர்க ளுள் ஒருத்தியானதெய்வப்பற்றுள்ளவள்நிற்க, பதிவ்ரதை புண்ணிய லோகம்சென்றுள். தெய்வபக்தியுள்ளவள் நின்றுகொண்டு மிக்கதுய ரத்தோடு அழுதாள். திக்பாலகளுகியயமன் அவளைப்பார்த்து, 'குற்ற மற்றவளே ! நீ விசனப்படாதே. உனக்கு உலகங்களில்லை. நீ உன் தர்மத்தைச்செய்யாமலிருந்ததனல் உனக்கு அந்தப்புண்ணியஉலகங் கள் இடையா. பெண்ணுக்குக் கணவனே தெய்வமாக எல்லாத்தேவ தைகளாலும் விதிக்கப்பட்டிருக்கிறன். சிறந்தவளே ! நீ அவனை அவமதித்தபின் புண்ணியலோகங்களுக்குப்போவது எப்படி ? பெண் ணரசியே ! நீ மதிகெட்டு உன்தெய்வத்தை அறியாமற்போனுய். கணவனுள்ளபெண் கணவனுக்குள்ளதர்மத்தையே செய்யவேண்டும். ஆதலால், நீ திரும்பிச்செல். கணவனுக்கு அனுகூலத்தைச்செய். அதன்மேல், பதிவ்ரதைகள்போகும்லோகங்களுக்குப் போவாய். இல்

லாவிடில் உத்தமமான பதிஉலகத்திற்குப் போகமுடியாது' என்னும் பூரணமானசொல்லைச் சொன்னன். யமன் இவ்வாறுசொன்னபின், அவள் மறுபடியும்திரும்பிச்சென்று கணவனையடித்து அவன்விருப் பத்தையே முக்கியமாகச்செய்துகொண்டிருந்தாள். மஹாதேவரே! இப்படிஇருப்பதனால் பெண்ணுக்குக் கணவனே தெய்வம். ஆதலால், அவள் கணவனையேமுக்கியமாகநினைத்து அவனுக்குப் பணிவிடை செய்யவேண்டும்.

இருநூற்றைம்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(உமாமஹேச்வரஸம்வாதம் தொடர்ச்சி ; ஸ்த்ரீதர்மம் ; பெண்களின் பலஇயற்கைகளைப்பற்றியது.)

கணவனுள்ளபெண் பகல்இரவுகளில்நடத்தும் சிறந்தஒழுக்கத் தைச்சொல்லுகிறேன் ; கேட்கவேண்டும். அவள் கணவனுக்குமுன் எழுந்து காலைக்காரியங்களைச் செய்யவேண்டும். அதன் பிறகு, கணவனுடையகருத்தையறிந்து அவனை எழுப்பவேண்டும். காலைக் காரியங்களைத் தானே முறைப்படிசெய்யவேண்டும். 'ஆகாரம் எப் படிச்செய்யலாம்?' என்று புருஷனைக்கேட்டு அவனுக்கு எப்படி பிரியமாயிருக்குமோ அப்படியே எல்லாவற்றையும் செய்யவேண்டும். தன்கணவன் எப்படியோ அப்படியே மனைவியும் குருபக்தி செய்ய வேண்டும். அவன்தேகபுஷ்டிக்குத்தக்கபடியும் அவன்மனவிருப்பம் நிறைவேறும்படியும் உபசரிக்கவேண்டும். கணவன்வெளியில்போன பிறகு, தன்காரியங்களை ஜாக்கிரதையோடு கவனிக்கவேண்டும். கண வன்வரக்கண்டு, உடனே அன்புடன் பாத்தியத்தையும் ஆஸனத்தை யும் சயனத்தையும்கொடுத்து மனத்திற்கினிமையாகப்பேசி உடம் பின்சிரமம்தீரும்படி சிறந்தஉபசாரத்தைச் செய்யவேண்டும். அதிதி கள்வரும்போதெல்லாம் ஸந்தோஷத்தோடு இருக்கவேண்டும்; எப் போதும் செய்கையிலும் வாக்கிலும் அதிதிகளைச் சந்தோஷிக் கச்செய்யவேண்டும். மங்களங்களையும் வீட்டின்சுத்தத்தையும் தான் செய்தும் செய்வித்தும் வீட்டிலுள்ளபண்டங்களெல்லாவற்றையும் எந்தக்காலமும் கவனிக்கவேண்டும். பெண்ணானவள் பர்த்தாவின் தர்மகாரியம்நேர்ந்தபோது தானும் அவனைப்போலவே தர்மத்தில் ஊக்கத்துடனிருக்கவேண்டும். தன்விஷயமானகாரியம்நேர்ந்தபோது

சோம்பலேவிட்டு அவன்உதவிக்காகமுழுமுயற்சியையும்செய்யவேண்டும். கற்புள்ளபெண் கணவனுடைய தர்மார்த்தங்களிரண்டிலும் எப்பொழுதும் தானே பாரத்தைதலகிப்பலளாயிருக்கவேண்டும். கலஹிக்காலத்தில் கணவனுள்ளக்குறிப்பையறிந்து அதற்குத்தக்கபடி அலங்காரங்களேச்செய்துகொண்டு புன்னகையோடு முகமலர்ச்சியுள்ளவளாய் இன்சொற்களினால் கணவனே மகிழ்விக்கவேண்டும். மாற்றார்விஷயமாகக் கணவனுக்குவிரோதமாகக் கடுஞ்சொற்களேச் சொல்லலாகாது. கணவன் எவள்மேல் காதலோடு இருக்கிறானே அவளுக்கு இனியதுசெய்துகொண்டிருக்கவேண்டும். ஊக்கத்தோடு மனப்பூர்வமாய்க் கணவனேத் திருப்திசெய்விக்கவேண்டும். கணவனுக்குப்பிறகு மற்றவர்கள்போஜனத்தைக் கவனித்துப்பார்க்கவேண்டும். வேலைக்காரிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் ரிஷபங்களுக்கும் சண்டாளர்களுக்கும் நாய்களுக்கும் நிற்கற்றவர்களுக்கும் அசக்தர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் அன்னத்தையும் பிக்ஷையையும் ஆதரவுடன் கொடித்துத் தன்கணவனுடைய தர்மத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். கணவன் கோபித்தாலும் பொருளில்லாதவனாயிருந்தாலும் அசக்தனாயிருந்தாலும் அவனே உபசரிக்கவேண்டும். அவன் எப்படிச்செய்தால் ஸந்தோஷமடைந்து கவலையற்றிருப்பானே அப்படிச் செய்யவேண்டும். குடும்பகாரியத்தின் ஆலோசனேக்காகவும் வியவகாரத்திற்காகவும் தனம் சேர்ப்பதற்காகவும் புருஷனுல் அழைக்கப்படும்போது அவனுக்கு உதவிக்காக இணைமையும் அனுகூலமுமாகப் பேசவேண்டும். அவனுடைய தர்மார்த்தங்களேக்கருதி அவனுக்கு அப்ரியமாயிருந்தாலும் ஹிதத்தைச் சொல்லவேண்டும். பிறரிடத்தில் ரகஸ்யமான விஷயங்களேச் சொல்வதையும் கலகத்தையும் விடவேண்டும். வெளியிற்பார்ப்பது, கவனிப்பின்மை, (நியாயமானகாரியங்களில்) வெட்கப்படுவது, கோட்சொல்லுவது, மிகுதியாகப்புஜிப்பது, பகலில்தூங்குவதுமுதலியவற்றைவிடவேண்டும். கற்புள்ளவள் பிள்ளேகளோடுங்கூட ஏகாந்தத்தில் உட்காரலாகாது. எது எதைக் கணவன் வைத்துவைக்கும்படி கொடுக்கிறானே அதுஅதைஅடைக் கலம்வைத்ததைப்போலக் காப்பாற்றவேண்டும். மறிந்துபோனபொருளேயும் தன்சக்தத்தினுல் திருப்பிக்கொடுக்கவேண்டும்; கணவனுல் கொடுக்கப்பட்டது எதுவாகிலும் அதைப்பெற்று மகிழவேண்டும். அதிகமாகக்கட்டளேயிடுவதையும் அதிகப்பொருமையையும் தூரத்தில் விடவேண்டும். பார்யையானவள் எப்போதும் கணவனேக் குழந்தையைப்போலவும் கிழவனேப்போலவும் அனுஸரித்திருக்கவேண்

டும். பிரபுவே! எப்போதும் இந்தவ்ரதம்தான் மனைவி செய்யவேண்டும். தேவரே! இந்தப் பதிவ்ரதாதர்மத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். எவளுக்குக் கணவனைக்காட்டிலும் தன்னுடையபோகத்திலும் ஐசுவரியத்திலும் சௌக்கியத்திலும் தனத்திலும் அதிக விருப்பமில்லையோ அவள்தான் பெண்களுள் பதிவ்ரதை. பெண்களுக்குக் கணவனே தெய்வம்; கணவனே சுற்றம்; கணவனே தஞ்சம். பெண்களுக்குக் கணவனைப் போன்றகதி மற்றொன்றை ஞானியில்லை. பிரபுவே! ஜன்மங்களுள் ஸ்திரீஜன்மம் சிறந்ததென்றுயான்நினைப்பது. புருஷன் (தவமுதலிய) பெரிய காயக்லேசத்தினால் அடையும் பலன்கள்எல்லாவற்றையும் பெண் பதிசுசுரூஷையினால் எளிதில் அடைகிறாள். கணவனுள்ள பெண்ணுக்குக் கணவனுக்கு அனுகூலம்செய்வதினாலேயே எல்லா ஸுகமுமுண்டாகிறது. பெண்ணுக்கு இவ்வகையாகத் தர்மம் பூர்ணமாகிவிடுகிறது. தேவரீர் பாருங்கள். பாவத்தினால் மதிகெட்ட கெட்டபெண்கள் இதை விட்டு மாறிப்போகின்றனர். பெண்ணுக்குத் தவமும் தானமும் கணவனுக்கு உட்பட்டிருப்பதுதான். அழகு குலம் புகழ் ஒளிஇவையெல்லாம் கணவனைப்பற்றியவை. இப்படிப்பட்டகியமமும் ஆசாரமுமுள்ள பெண்கள் தம் ஒழுக்கத்தினாலேயே சிறந்தவர்களாகிறார்கள். நல்ல செய்கைசெய்தவள் தன்கணவனுடன் கூடவே புண்ணியலோகங்களுக்குச் செல்வாள். கணவன் கிழவனோ குரூபியோ அருவருக்கத்தக்கவனோ பொருளுள்ளவனோ இல்லாதவனோ எப்படியிருந்தாலும் அவனே பெண்களுக்குச்சிறந்தஆபரணம். செல்வமும்அழகுமுள்ளவனையிருந்தாலும் இல்லாதவனையிருந்தாலும் கணவனை உபசரிப்பவள்தான் கற்புள்ளவள். அவளே பத்திகளிற்சிறந்தவள். தரித்திரனும் குரூபியும் அறிவில்லாதவனும் குஷ்டரோகியுமான கணவனையும்உபசரிக்கும் பெண் அழிவில்லாதபுண்ணியலோகங்களை அடைவாள். இப்படி நடந்துகொண்டிருப்பவள் கணவன்முதலிலிறப்பானையின் அவனுடன் தானும் மரணமடையவாவ தாவேண்டும்; திரும்பவும்தவஞ்செய்யவாவதுவேண்டும். இவ்வாறுசான்சொன்னேன். பெண்கள்பலவகையாகக் கூறப்படுகின்றனர். தேவர் தானவர் கந்தர்வர் மனிதர் என்று அனேகவகுப்புக்களாகப் பெண்களிருக்கின்றனர். அவர்கள்எல்லாரும் நல்லொழுக்கமும் சிறந்த ஆசாரமுமுள்ளவர்களுமாகலாம். மஹாபாவரே! ஸ்திரீகளுக்கு எதுநல்லதர்மமென்பதைச்சொல்வேன். அவர்கள் அஸுரர்களாகவும் பிசாசர்களாகவும் அரக்கர்களாகவும் இருக்கின்றனர். அவர்களின் ஒழுக்கம்எல்லாவற்றையும் உலகத்திற்காகச்

சொல்லுகிறேன்; கேட்கவேண்டும். எண்ணத்தில்கெடுதலுள்ளவர்களாகிவிருப்புவெறுப்புக்கள்மேற்கொண்டபெண்களும்நியாயமாகவோ அநியாயமாகவோ கணவர்களுக்கு உபசாரங்களைச் செய்யவே செய்கின்றனர். தம் தர்மத்தில் சிரத்தையில்லாமல் எவ்வகையிலாவது கணவர்களைத் தூஷிக்கின்றனர். எப்போதும் விஷயங்களில் ஆசை அதிகப்பட்டுக் கணவனுக்குவிரோதமாகப் பேசுகின்றனர். அப்படியே பொருள்களையழிக்கின்றனர். ஹிதத்தை யார்சொன்னாலும் ஏற்றுக் கொள்வதில்லை. தங்கள்புத்தியைக்கொண்டு எவ்வகையாலாவது ஜீவிக்கின்றனர். சிலகாலம் குணமுள்ளவர்கள்போலவும் பதிவ்ரதா தர்மத்திலிருப்பவர்போலவுமிருந்து திரும்பவும் கெட்டவழக்கத்தையடைந்து பாவிகளாகிறார்கள். வரம்பில்அடங்காமலும் நியமமில்லாமல் பல உடைகளைத்தரித்தும் திருப்தியில்லாமல் பொருளாசைகொண்டு அதிகப்பொறுமையும் கோபமுமுள்ளவர்களாகி வேண்டினவர்களைப்பகைத்தும் காமஸுகங்களையே முதன்மையாகவிரும்பியும் பெரும்பாலும் பொய்சொல்லிக்கொண்டும் பெரியோர்களை எதிர்த்தும் மற்றுமிவ்வகைகுடைகளோடுமிருக்கும் பெண்கள் அஸுரத்தன்மையுள்ளவர்கள்.மற்றும்சிலர் எப்போதும் தீங்குகளையே செய்துகொண்டும் கலகத்தையே விரும்பிக்கொண்டும் கொடியவரும் கொடுஞ்சொற் சொல்லுகிறவரும்.அருவருப்பும்வெட்சமும் அற்றவரும்அன்பில்லாதவரும் கணவர்கள்மேலும் புத்ரர்கள்மேலும் சுற்றத்தார்மேலும்கோபிப்பவரும் பயங்கரரும் மாம்ஸத்தை விரும்புகிறவருமாயிருந்துகொண்டும் எக்காலமும் சிரித்துக்கொண்டாவது அழுதுகொண்டாவது இருக்கின்றனர். 'எப்படியாயினும் புருஷர்களைவிட்டுக் கெட்டவழியாக வியபிசாரமேசெய்கின்றனர். தேவரே! சுற்றத்தாராற்பயமுறுத்தப்பட்டுத்தான் வீட்டுக்காரியங்களைச் செய்வது. அதனாலேயே தம் காரியங்களை விட்டுவிடுவதுமுண்டு. அப்படியே தற்கொலை என்னும் கொடுமையைச் செய்துகொள்வர். ஸந்தேகமில்லை. தயையும் அன்பு மில்லாதவர்களாகிக் குடும்பகாரியத்தைக் கெடுப்பர். தர்மத்திற்கும் தனத்திற்கும் விலக்கான கொடுஞ்செய்ஃகைகளை எப்போதும் செய்வர். அனர்த்தகாரியங்களில் தேர்ச்சியுள்ளவரும் உயிர்களில் தயையற்றவரும் பாவிகளும் மற்றுமிவ்வகையொழுக்கமுள்ளவருமானபெண்கள் பிசாசத்தன்மையுள்ளவர்.மற்றும்சிலஅறிவில்லாதவர்கள்வெட்கங்கெட்டு அழுதுகொண்டும்ஆசாரமில்லாமலும் உடம்பில் அழுக்கைப்பூசிக்கொண்டும் மதுமாம்ஸங்களில் மிக்க ஆசைகொண்டும் பொய்சொல்லிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் புலம்பிக்கொண்டுமிருக்கின்றனர்

ஸமாதானப்படித்தமுடியாத பெருங்கோபக்காரிகளும் இடைவிடாமல் தூங்குவதேகாரியமாகவிருப்பவரும் தாமஸகுணமிகுந்தவரும் அறிவு கெட்டவரும் சுருசுருப்பற்றவரும் பெருவயிறுள்ளவருமாகிப்பிறரால் செய்யப்பட்ட பலவகை உணவுகளே மிகுந்த அவசரத்துடனுண்பர். அவர்கள் மிக்கமன்மததாபம்கொண்டு, குணமும் அழகும் இளமைப் பருவமுமுள்ளவனும் அன்புள்ளவனுமான சிறந்த கணவனைவிட்டு மற்றொருவனையேயே எவ்வகையாலாவது சேர்வர். அவர்கள்வெட்க மில்லாதவர்கள்; தர்மத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள்; யாரிடத்தி லும் பகையுள்ளவர்கள். இப்படிப்பட்டநடையுள்ளபெண்கள் ராக்ஷஸ த்தன்மையர்கள். இப்படிப்பட்டவர்களெல்லாருக்கும் பரலோகத்தில் பேரின்பம்இல்லை. நரகத்திலிருந்துவிடுபட்டபின்னரும் அவர்களுக்கு மானிடப்பிறப்பு கிடைப்பதரிது. அப்படிப்பிறந்தாலும் தங்கள் பாவத்திற்குத்தகுந்த தாங்கக்கூடாத அதிகத்துயரத்தை அனுபவிப் பார்; ஏழைகளும் பலவகைக் கஷ்டப்படுகிறவர்களும் குரூபிகளும் பிறரால் இகழப்பட்டவர்களும் விதவைகளும் பாக்கியமற்றவர்களும் மற்றும்இவ்வகைத்துன்பமுள்ளவர்களுமாவார். வியபிசாரஞ்செய்ப வள் தன் கணவனுக்கும் தன் குலத்திற்கும் தன் பாவத்தைச்சேர்த் துத் தானும் நூறுயிரம்வருஷம் நரகத்திலிருப்பாள். இந்தக்கெடுதியை அறிந்து திரும்பவும் கணவனையே அடைந்து தனக்குநன்மையுண்டா க்கருதுவளாயின் அதனால்புண்ணியத்தையடைந்து மிகச்சிறந்தவை யான பதிவ்ரதைக்குரிய சிறந்தலோகங்களை அடைவாள். முதலில் கெட்டநினைவுடன் கணவனைஅபமதித்தும் அவனுக்கு எப்போதும் விரோதமாகவே நடந்தும்வந்தவர்கள் அவன்மரணகாலத்தில் காமத்தி னாலாவது கோபத்தினாலாவது பயத்தினாலாவது லோபத்தினாலாவது அனுமரணம்செய்வார்களாயின், பரிஹாஸத்துக்குரியவராவார். முதலி லிருந்து கெட்டவர்களான ஸ்த்ரீகள் அனுமரணம்செய்வது வீண். முதலிலிருந்து கணவனிடத்தில் அன்புவைத்தகற்புள்ளவள் கணவ னுடன் அனுமரணம்செய்தால் பரிசுத்தியுடன் மேலுலகம்செல்வாள். இவ்வாறு இறந்துபோனவள்போகும் உலகங்களை நான் கண்ணிஞற் காண்கிறேன். பதிவ்ரதைகள்செல்லும்அவ்வுலகங்கள் தேவக்கூட்டங் களும் ஆசைப்படத்தக்கவை. அல்லது, கணவனிறந்தபின் பதிவ்ரதை கள் விதவாதர்மத்தையடைந்து நாள்தோறும் பேசாமல் [1]பௌமஸ்நா னத்தையும் ஜலத்தில்உத்தமமான [2]அஞ்சலிஸ்நானத்தையும்செய்ய

---

[1] உடம்புமுழுதும் மண்ணைப்பூசிக்கொள்வது.

[2] இருகைகளாலும் ஜலத்தைத் தலையில் இறைத்துக்கொள்வது.

வேண்டும்; அதன்பிறகு, தன்கணவனைப்பற்றியவ்ரதத்தையும் நியமத்தையும் செய்யவேண்டும். இப்படிச்செய்வதனால் அந்தப் பெண் எல்லாவற்றிலுஞ்சிறந்ததான பதிலோகமென்னும் புண்ணியலோகத்தை அடைவாள். சொல்லிமுடியாத அழகுள்ளதும் தேவருக்கும் மனிதருக்கும்கிடைக்காததுமான அந்தஉலகத்தைப் பதிவ்ரதையாயிருப்பவள்மட்டுமே அடைவாள். தேவரே! இவ்வாறுஎல்லாவற்றிலும்சிறந்தஸ்திரீதர்மத்தை உமக்குச் சொன்னேன். தேவஸ்ரேஷ்டரே! நான் உங்களுடையவிருப்பத்தைச் செய்யக்கருதி ஆசைகொண்டு உமதுமுன்னிலையில்சொன்னதற்காகத் தேவரீர் க்ஷமிக்கவேண்டும்' என்றாள்.

இவ்வாறுபேசி நாணிநின்ற உமாதேவிக்கு ஸந்தோஷமுண்டாகும்படி மஹாதேவர் வாக்கினால் சிலாகித்தார். ரிஷிகளும் தேவர்களும் கந்தர்வர்களும். ஆயிரக்கணக்கானமாதர்களும் உமாதேவியைத் தலைவணங்கித் துதித்தனர்.மற்றும்சிலர் ஸந்தோஷத்துடன் தேவருக்குத்தேவானாசுவரக்கொண்டாடினர். சிரத்தையும்நல்லமனமுமுள்ளமற்றும்சிலர் இந்தஉமாமஹேசுவரஸம்வாதத்தை நினைத்துக்கொண்டிருந்தனர். பிறகு, தேவதேவரேஷ்டருக்கும் ஈசுவரரான சங்கரர் உமாதேவியைநோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். 'சிறந்தவளே! என்சொல்லைக்கேள். நம்மிருவருடைய இந்தஸம்வாதம்புண்ணியத்தைத்தருவதாகவும் பாவத்தைப்போக்குவதாகவும் பிரஸித்தமாகவுமிருக்கும். அதற்குச் சந்தேகமில்லை. அன்புள்ளவளே! எந்தவித்வான் பரிசுத்தனுயிருந்து சிரத்தையுள்ளமனிதருக்கு நம்முடைய இந்தஸம்வாதத்தைச் சொல்லுவனோ அவன் அவர்களுடன்கூடவே எளிதில்ஸ்வர்க்கம்போவான். நம்முடைய இந்தச்சிறந்தஸம்வாதத்தை நித்தியமாகக்கேட்பவன் கீர்த்தியையும் ஆயுளையும் ஆரோக்கியத்தையும் பாகதியையும் அடைவான்' என்றார்.

இருநூற்றைம்பத்தோராவது அத்தியாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பரமேசுவரர் ரிஷிகளுக்கு விஷ்ணுவின் பெருமையைச் சொல்லியது.)

ரிஷிகள், 'பிராகம்தரித்தவரே! பகவதவதையின்நேத்ரத்தை அழித்தவரே! எல்லாஉலகங்களாலும் நமஸ்கரிக்கப்பெற்றவரே! சங்கரரே! விஷ்ணுவின்மஹிமையைக்கேட்கவிரும்புகிறோம்' என்றுகேட்க, ஈசுவரர் சொல்லலானார்:- 'ஹரியானவர் பிரம்மாவுக்குமேற்பட்டநித்

தியபுருஷர்; கிருஷ்ணர்; பொன்போலவும் மேகமில்லாத ஆகாயத்தில் உதித்தசூரியன்போலவும் பிரகாசிப்பவர்; பத்துக்கைகளுள்ளவர்; பெருஞ்சக்தியுள்ளவர்; அஸுரர்களையழிப்பவர்; ஸ்ரீவத்ஸமென்னும் மச்சத்தை அடையாளமாகவுடையவர்; ஹ்ருஷீகேசர்; எல்லாத்தேவர்களாலும்பூஜிக்கப்பெற்றவர். பிரம்மதேவர்அவருடையநாபியில்உண்டானவர். நான் அவர்நெற்றியில்உண்டானவன். அவரதுதலைமயிர்களினின்றும்கிரகங்கக்ஷத்திரங்களும் தேகத்தின்ரோமங்களிலிருந்துதேவாஸுரர்களுமுண்டாயினர். ரிஷிகளும் அழியாதஉலகங்களும் அவர்தேகத்திலிருந்துண்டாயினர். பிரம்மதேவருக்கும் மற்றஎல்லாத்தேவர்களுக்கும் அவரே இருப்பிடம். அவரே இவ்வுலகமனைத்தையும்படைத்தவர்; மூவுலகங்களுக்கும் ஈசுவரர். ஜங்கமஸ்தாவரங்களாகிய எல்லாப்பொருள்களையும் ஸம்ஹரிப்பவர் அவரே. அவரே தேவர்களிற் சிறந்தவர்; தேவர்களுக்குநாதர்; பகைவரைவருத்திகிறவர்; ஸர்வஜ்ஞர்; எல்லாவற்றிலும் சேர்ந்திருப்பவர்; எங்கும் வியாபித்திருப்பவர்; எங்கும் முகமுள்ளவர்; பரமாத்மா; பிரகாசிக்கும் கேசங்களையுடையவர். எல்லாவற்றிற்கும் மேற்பட்டவர்; மஹேசுவரர். மூவுலகங்களிலும், அவருக்குமேற்பட்டபொருள் ஒன்றுமில்லை. அவர் எக்காலமுமிருப்பவர்; மதுவென்னும் அஸுரனைக் கொன்றவர். கோவிந்தரென்றுபெயர்பெற்றவர். கௌரவத்தைக் கொடுப்பவராகிய அவர் தேவர்களின்காரியத்திற்காக மானிடதேகமெடுத்துப்பிறந்து யுத்தத்தில் அரசர்களெல்லாரையும்வதம்செய்விக்கப்போகிறார். தலைவராகிய த்ரிவிக்கிரமர்இல்லாமல் உலகத்திலுள்ள தேவக்கூட்டங்கள் காரியங்களைச்செய்யத்திறமையற்றவை. அவர் எல்லாப்பிராணிகளுக்கும்நாதர். எல்லாத்தேவர்களாலும் நமஸ்கரிக்கப்பெற்றவர். தேவர்களுக்கு நாதரும் தேவகார்யத்தைச்செய்பவரும் எப்போதும் பிரம்மரிஷிக்குச்சரணமாயிருப்பவரும் பரப்ரம்மமுமாகிய அவருடையதேகத்திலுள்பிரம்மதேவர் ஸுகமாகவலிக்கிறார். சிவனும் அவர்தேகத்தில் ஸுகமாயிருந்து மகிழ்ந்திருக்கிறார். எல்லாத்தேவர்களும் அவருடையதேகத்தில் ஸுகமாயிருக்கின்றனர். தாமரைக்கண்ணராகிய அத்தப்பகவான் லக்ஷ்மியை மார்பில்வைத்துக்கொண்டு அவளைவிட்டுப் பிரியாமலேயிருக்கிறார். அவர் சார்ங்கமென்னும்வில்லையும் சக்ராயுதத்தையும் கத்தியையும் தரிப்பவர். கருடக்கொடியுள்ளவர். எல்லாவற்றிலும் சிறந்தசீலம், அடக்கம், மனஒழிவு, பராக்கிரமம், வன்மை, வடிவழகு, கடாக்ஷம், உயரம், பருமன், தைரியம், மனவுண்மை, தயை, ஒளி, சக்தியாகிய இவைஎல்லாம் பொருந்தினவர்; ஆச்சரியக்காட்சியுள்ள

திவ்யாஸ்திரங்கள் எல்லாவற்றினாலும் பிரகாசிப்பவர்; யோகமாயையுள்ளவர்; ஆயிரங்கண்களையுடையவர்: அபாயமில்லாதவர்; பெரிய மனமுள்ளவர்; வீரர்; அன்புள்ளஜனங்களைப் பாராட்டுகிறவர்; குலத்தோரையும் சுற்றத்தோரையும் விரும்புகிறவர்; பொறுமையுள்ளவர்; அகங்காரமில்லாதவர்; பிராம்மணப்பிரியர்; பிராம்மணர்களுக்கு ஈசுவரர்; பயந்தவருக்குப் பயத்தைப்போக்குகிறவர்; அன்புள்ளவருக்கு ஆனந்தத்தை விருத்திசெய்கிறவர்; எல்லாப் பிராணிகளுக்கும் தஞ்சமாயிருப்பவர்; துயரப்பட்டவரைக் காப்பதில்ஊக்கமுள்ளவர்; கல்வியுள்ளவர்; வேண்டத்தக்கவையெல்லாம் நிரம்பினவர்; எல்லாப் பிராணிகளாலும் நமஸ்கரிக்கப்பட்டவர்; தம்மையடுத்தபகைவருக்கும் வரமளிப்பவர்; தர்மத்தைநிரந்தவர்; நீதிதெரிந்தவர்; நீதிகுறையாமல் நடத்துகிறவர்; வேதத்தையுபதேசிப்பவர்; ஜிதேந்திரியர்; கோவிந்தர். அவர் அந்தச்சிறந்தஞானமுள்ளதேவர்களின் நன்மைக்காகப் பிரம்மாவினுடைய சிறந்தமார்க்கமாகிய மானிடலோகத்தில் மஹாத்மாவானமனுவின்தர்மத்திலுல் பரிசுத்தமானவம்சத்தில் அவதரிக்கப் போகிறார். மனுவின்புத்திரன் அங்கன் என்பவன். அவனுக்குப்பின் அந்தர்த்தாமன். அந்தர்த்தாமனுக்குப்பின் பிரஜைகளைச்சிருஷ்டிப் பவனும் குற்றமற்றவனுமான ஹவிர்த்தாமன். ஹவிர்த்தாமனுக்கு ப்ராசீனபர்ஹி என்னும் சிறந்தபுத்ரன் உண்டாவான். அவனுக்கு ப்ரசேதஸ்முதலான பத்துப்புத்திரர்கள் உண்டாவர். ப்ரசேதஸுக்குத் தக்ஷப்ராஜாபதிஎன்னும் புத்திரனுண்டாவன். தக்ஷன்மகளாகிய அதிதியின்புத்திரன் ஆதித்தன். ஆதித்தன் புத்திரன் வைவஸ்வதமனு. மனுவின்வம்சத்தில்பிறந்த இளை ஸுத்யும்னனுவாள். புதனுக்குப் புரூரவன்; அவனுக்கு ஆயு பிறக்கப்போகிறான். ஆயுவுக்கு நஹுஷன்; நஹுஷன்புத்திரன் யயாதி. யயாதிக்குப்புத்திரன் சிறந்த பராக்கிரமசாலியான யது; அவன்புத்திரன் க்ரோஷ்டா; க்ரோஷ்டாவுக்கு வ்ருஜினீவானென்னும்சிறந்தபுத்திரன் உண்டாவான். வ்ருஜினீவானின்புத்திரன் தோல்வியடையாதஉஷங்கு; உஷங்குவின்புத்திரர்கள் சூரனும் சித்ரரதனும்; சூரன்என்பவன் அவர்களில் இளையவன்; பராக்கிரமத்தில்பிரஸித்திபெற்றவர்களும்சரித்திரங்களாலும்குணங்களாலும் விளங்குகிறவர்களும் சாஸ்திரப்படியாகம்செய்பவர்களும் மிகப்பரிசுத்தர்களுமான அவ்வரசர்களுடைய பிராம்மணர்களால் கொண்டாடப்பட்டவம்சத்தில்க்ஷத்திரியஸ்ரேஷ்டனும்சிறந்தபராக்கிரமமும் பெரும்புகழுமுள்ளவனும் கௌரவத்தைக்கொடுப்பவனுமாகியஅந்தச்சூரன், தன்வம்சத்தைப் பெருகச்செய்பவனும் வஸுதேவ

னென்று கியாதிபெற்றவனுமாகிய ஆனகதுந்துபிஎன்னும் புத்திரனை உண்டாக்கப்போகிறான். அந்த வஸுதேவனுக்குச் சதுர்ப்புஜராகிய வாஸுதேவர் புத்திரராகப் பிறக்கப்போகிறார்.கொடையாளியும்பிராம் மணரைப்பூஜிப்பவரும் பிராம்மணர்களால் விரும்பப்படுகிறவரும் பரப்பிரம்மமுமாகிய அந்தக்கிருஷ்ணன் மலைகளினிடையிலிருக்கும். ஜராஸந்தனென்னும்அரசனை ஜயித்து அவனால்சிறையில்வைக்கப் பட்டஅரசர்களை விடுவிப்பார். அந்தவீரர் எல்லாஅரசர்களாலும் ரத்தி னங்களினால் நிரப்பப்படுவார்.தமதுபராக்கிரமத்தினால் யாராலும்வெல் லப்படாமல் பூமியில்இருப்பார். மிகுந்தசக்தியுள்ளவரும் எல்லா அரச ருக்கும்அரசரும் நீதிதெரிந்தவருமாகிய அந்தப்பிரபு சூரஸேனதேசத் தில்பிறந்து துவாரகையில் வஸித்துக்கொண்டு பூமிதேவியைஜயித்து நீண்டகாலம் பரிபாலனம்செய்வார். நீங்கள் நித்யரான அவரையடை ந்து சொல்மாலைகளாலும் சிறந்தபூசனைகளாலும் பிரம்மாவைப்போல அவரைச் சாஸ்திரப்பிரகாரம் பூஜியுங்கள். என்னையும் உலகத்திற்குத் தந்தையானபிரம்மதேவரையும் காணவிரும்புகிறவன் பராக்கிரமசா லியான கிருஷ்ணபகவானைப் பார்க்கவேண்டும். தபோதனர்களே ! அவர்காணப்பட்டால் நானும் தேவஸ்ரேஷ்டரான பிரம்மதேவரும் காணப்பட்டவராவோமென்பதில் எனக்கு ஸந்தேகமில்லை. இதை அறியுங்கள். அந்தத்தாமரைக்கண்ணர் எவன்மேலன்புள்ளவராவரோ அவன்மேல் பிரம்மாமுதலிய தேவர்கள் அனைவரும் அன்புள்ளவரா வார். மானிடலோகத்தில் எவன் கிருஷ்ணனை அடைவனோ அவ னுக்குக் கீர்த்தியும் ஜயமும் ஸ்வர்க்கமுமுண்டாகும். அவர் நேரில் தர்மத்தை உபதேசிப்பவராகவும் அனுஷ்டிப்பவராகவும் இருப்பார். தர்மமுள்ளவர்கள் எப்போதும் முயற்சியோடு அந்தத்தேவசிரேஷ் டரை நமஸ்கரிக்கவேண்டும். அந்தப்பிரபு பூஜிக்கப்பட்டாலே சிறந்த தர்மம்உண்டாகுமன்றோ? சிறந்தசக்தியுள்ளவரும் புருஷஸ்ரேஷ்டரு மான அந்தப்பகவான் ஜனங்களுக்கு நன்மையைச் செய்யக்கருதித் தர்மத்தைவெளியிடுவதற்காகவே கோடிக்கணக்கான ரிஷிகளைப்படை த்தார். அந்தப் பிரபுவினால் படைக்கப்பட்ட ஸநத்குமாரர்முதலிய அந்தரிஷிகள் கந்தமாதனமலையில் தவம்செய்துகொண்டிருக்கின்ற னர். பிராமணோத்தமர்களே ! ஆதலால், சிறந்த வாக்குள்ளவரும் தர்மந்தெரிந்தவருமான அவரை நமஸ்கரித்தல்வேண்டும். ஹரி என் றும் நாராயணர் என்றும் சொல்லப்பட்டபகவான் மேலுலகத்தில் சிற ந்தவரன்றோ ? பிராம்மணோத்தமர்களே ! அந்தப்பகவான் தம்மை நமஸ்கரித்தவரைத் தாம்நமஸ்கரிப்பர்; கௌரவித்தவரைக் கௌரவிப்

பர்; கொண்டாடினவரைக் கொண்டாடுவர்; பூஜித்தவரைப் பூஜிப்பர்; தம்மைக்காண்பவரைத் தினந்தோறும்காண்பர்; அடித்தவரை அடிப்பர்; பணிவிடைசெய்பவருக்குப் பணிவிடைசெய்வர். குற்றமற்றவரும் முதல்தேவரும் சிறந்தவருமான அந்தவிஷ்ணுவுக்குப் பெரியோர்களால் எப்போதும் அனுஷ்டிக்கப்படுவதுதான் முக்கியமானவ்ரதம். நித்தியரான அவர் உலகத்தில் எப்போதும் தேவர்களாலும் பூஜிக்கப்படுகிறார். அவரை வழிபடுவோர் தக்கபடி அபயம்பெறுகிறார். பிராம்மணர்கள் எப்போதும் மனோவாக்குக்காயங்களினால் அவரையே நமஸ்கரித்தல்வேண்டும்; முயற்சியோடு அருகிற்சென்று தேவகீபுத்திரரைக் காணவேண்டும். ரிஷிஸ்ரேஷ்டர்களே! இந்த வழியை உங்களுக்கு நான் சொன்னேன். அந்தக்கிருஷ்ணபகவானைக்கண்டால் தேவஸ்ரேஷ்டர்களெல்லாரையும் கண்டதாகும். மஹாவராகரூபியும் எல்லாலோகங்களுக்குங்கர்த்தாவும் எல்லாவற்றிற்கும் காரணமான அந்தப்பகவானை நானும் நாள்தோறும் நமஸ்கரிக்கிறேன். அவரைக்கண்டால் [1]மூவுலகங்களையும்கண்டதாகுமென்பதில் ஸந்தேகமில்லை. தேவர்களாகிய நாங்களனைவரும் அவர்தேகத்தில் வஸிக்கிறோம். பூமியைத்தாங்கும் ஆதிசேஷர் வெண்மலைச்சிகரம்போன்ற ஒளியுள்ளவரும் ஹலாயுதரென்றும் பலராமரென்றும் கியாதிபெற்றவருமாகிய அவரது மூத்தஸஹோதராராகப் பிறக்கப்போகிறார். அந்தப் பலராமருடையதேரில் மூன்றுதலைகளோடுகூடிய சிறந்தபொற்பனைமரம் கொடிமரமாயிருக்கும். சிறந்த கைகளையுடையவரும் எல்லா உலகங்களுக்கும் ஈசுவரருமாகிய அந்தப்பலராமருடையசிரம் பெரிய உடல்களுள்ள மஹாத்மாக்களான நாகர்களால் சூழப்பட்டிருக்கும். ஆயுதங்களும் அஸ்த்ரங்களும் தினேத்தமாத்ரத்தில் அவரிடம்வந்து சேரும். அழிவில்லாதபகவானுடைய அந்தஸ்ரீயே அனந்தரென்றும் சொல்லப்படுகிறார். அவர் தேவர்களால், 'பிரபுவே! உமதுரூபத்தைக் காண்பியும்' என்றுவேண்டப்பட்டார். கசியபர்புத்திரரும் பல சாலியுமாகியகருடர் பரமாத்மாவான அந்தப்பகவானுடையமகிமையினால் அவருடையஎல்லையைக் காணமுடியாமற்போனார். அந்தஆதிசேஷர் மிகுந்தஸந்தோஷத்துடன் ஸஞ்சரிப்பார். அவர் தம்முடலினால் பூமியைத்தழுவிக்கொண்டு பூமிக்குள் வஸிக்கிறார். அவரே பகவானுவிஷ்ணு. அவரே அனந்தர். அவரே பூமியைத்தாங்குகிறவர். அந்தராமரே கிருஷ்ணன். கிருஷ்ணனே ராமர். ஆச்சரியபராக்கிரமமுள்ளவர்களும் திவ்யரூபிகளும் சக்கரத்தையும்கலப்பையையும்

[1] மும்மூர்த்திகளையும் என்றும் கொள்ளலாம்.

ஏத்துகிறவர்களுமாகிய அவ்விரண்டு புருஷசிரேஷ்டர்களையும் கண்டு கொண்டாடவேண்டும். தபோதனர்களே! நீங்கள் யாதவசிரேஷ்டரானகண்ணனை முயற்சியோடுபூஜிக்கவேண்டும். நான்சொன்ன இந்த விஷயம் உங்களுக்குச் சிறந்தஅனுக்கிரகம்' என்றார்.

இருநூற்றைம்பத்திரண்டாவது அத்தியாயம்.

நாராயணதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன்மகிமையும், அர்ஜுனனும் கிருஷ்ணனும் நரநாராயணரென்பதும்.)

பிறகு, ஆகாயத்தில் மின்னலோடுகூடியமேகங்களின் பெரு முழக்கமுண்டாயிற்று. ஆகாயம் அடர்ந்தமேகங்களினால் மறைக்கப் பட்டுக் கறுத்திருந்தது. மழைக்காலத்தில்போலவே மேகம் தெளி வானஜலத்தை வர்ஷித்தது. பயங்கரமான இருளும் உண்டாயிற்று. திசைகள் பிரகாசிக்கவில்லை. அப்போது அழகியதும் புண்ணியமும் நித்தியமுமான அந்த இமயமலையில் ரிஷிகள் சிவனையும் பூதகணங் களையும் காணவில்லை. அடுத்தநிமிஷத்தில் ஆகாயத்தில் மேகங்கள் இல்லாமற்போயின. பிறகு, சிலபிராம்மணர்கள் வந்தபடியே திரும்பித் தீர்த்தயாத்திரைக்குச் சென்றனர். சிக்கைக்கெட்டாத அந்தஆச்சரி யத்தைக்கண்டு அந்தரிஷிகள்ஆச்சரியமடைந்தனர். உமதுகதையைப் பற்றிச் சங்கரருக்கும் உமைக்கும்ஸம்வாதம்நடந்தது. புருஷஸ்ரேஷ் டரே! மலையின்மேல் மஹாத்மாவானஈசுவரரால்சுவரைப்பற்றி நாங் கள் உபதேசிக்கப்பெற்றோமோ அப்படிப்பட்டீர் பரப்ரம்மமாயிருப் பவர்; நித்தியர்; கிருஷ்ணர்! இப்போது உமதுமகிமையினால் உண்டாக் கப்பட்ட இந்த இரண்டாவது புதுமையையும்கண்டு ஆச்சர்யமடைந் தோம். முன்னாபகமும் எங்களுக்குவந்தது. பிரபுவே! சிறந்த கைகளையுடையவரே! ஜனார்த்தனரே! ஜடாதாரியானஈசுவரரால்தேவ ருக்கும்தேவரானஉமதுமகிமைஇவ்வாறுசொல்லப்பட்டது' என்றார். ரிஷிகளால் இவ்வாறுசொல்லப்பட்ட தேவகிபுத்திரரான வாஸுதே வர் அந்தரிஷிகளெல்லாரையும் பூஜித்தார். பிறகு, அந்தரிஷிகள் மகிழ் ந்து திரும்பவும் அவரைப்பார்த்து, 'மதுஸூதனரே! அடிக்கடி எங்களுக்குக் காட்சிகொடும். பிரபுவே! உமதுதர்சனத்திலுள்ள ஸுகம் எங்களுக்கு ஸ்வர்க்கத்திலுமில்லை. சிறந்தகைகளையுடைய வரே! பகவானுனஈசுவரர்சொன்னது உண்மைதான். பகைவர்

களை அழிப்பவரே! இந்தரகஸ்யமெல்லாவற்றையும் உமக்குச்சொன்னேம். எல்லாவிஷயங்களின்உண்மைகளையும் அறிந்திருப்பவர் நீரன்றே? உம்மைநாங்கள்கேட்டதற்கு எங்களைநீர்கேட்பதனால்உமது விருப்பத்திற்காக நாங்கள் இந்தரகஸ்யத்தைச் சொன்னேம். பிரபுவே! ஜனனகாரணமும் அதற்கும்காரணமும் உமக்குத்தெரியாத தொன்றும் மூவுலகங்களிலுமில்லை. எங்களுக்கு அதிகசஞ்சலத்தினால் ரகஸ்யத்தைக் காப்பாற்றத்திறமைஇல்லை. பிரபுவே! அதனால், நீரிருக்கையில் அற்பத்தனமாகப் பிதற்றுகிறோம். இவ்வுலகத்தில் நீர்அறியாதஆச்சர்யம் ஒன்றுமில்லை. தேவரே! தேவலோகத்திலும் பூலோகத்திலுமுள்ளவையனைத்தும் உமக்குத்தெரிந்தவையே. கிருஷ்ணா! யாம்செல்வோம். அபிவிருத்தியையும்க்ஷேமத்தையும்அடையக்கடவீர். ஐயா! உமக்குச்சரியாகவாவது மேற்பட்டாவது சிறந்த பிரபாவமுள்ளவனும் ஸந்தோஷத்தையும் புகழையும் உண்டுபண்ணுகிறவனும் பிரபுவுமானபுத்திரன் உண்டாவன்' என்றனர். அம்மகரிஷிகள் அப்போது தேவசிரேஷ்டரும் புருஷோத்தமருமான வாஸுதேவரை நமஸ்கரித்து ப்ரதக்ஷிணம்செய்து சென்றனர். லக்ஷ்மியும் சிறந்தஒளியுமுள்ளவரான அப்படிப்பட்டஇந்தநாராயணர் அந்தவ்ரதத்தைச் சரியாகச்செய்து திரும்பவும் துவாரகைக்குவந்தார். பிரபுவானதர்மராஜனே! பத்தாவதுமாஸம் நிரம்பினபின் அவருக்கு ருக்மிணியினிடம்மிக்கஆச்சரியமானசூரனும் வம்சத்தைவிருத்திபண்ணுகிறவனும் மனத்திற்கினியவனுமானபுத்திரன் பிறந்தான். ராஜனே! அவன் எல்லாப்பிராணிகளின்உள்ளங்களிலுமிருக்கும்மன்மதன். எப்போதும் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் மனத்தில்ஸஞ்சரித்துக்கொண்டிருப்பவன். புருஷோத்தமரும் முகில்வண்ணரும் சதுர்ப்புஜருமான அந்தக்கிருஷ்ணபகவான் அன்பினால் பாண்டவர்களான உங்களைச்சார்ந்தார். நீங்களும் அவரையடித்திருக்கிறீர்கள். திரிவிக்ரமரானவிஷ்ணுவாகிய இந்தக்கிருஷ்ணபகவான்எங்கிருக்கிறாரோ அங்கே கீர்த்தியும் லக்ஷ்மியும் மகிழ்ச்சியும் முக்திக்குஉபாயமுமிருக்கின்றன. இந்திரன்முகலான முப்பத்துமூன்றுதேவர்களும் இவர்தாம். அதில் ஸந்தேகமில்லை. இந்தமதுஸூதனர் ஆதிதேவர்; பெரியதேவதை; எல்லாப்பிராணிகளுக்கும் ஆதாரம்; ஆதியும் அந்தமுமில்லாதவர்; அறிவுக்கெட்டாதவர்; மஹாத்மா. இந்தப்பெரிய மஹிமையுள்ளவர் தேவர்களின்காரியத்தைஸாதிப்பதற்காக அவதரித்திருக்கிறார். இந்தமாதவர் சிறிதும்ஸாதிக்கமுடியாத ஸூக்ஷ்மகாரியங்களையும்சொல்லவும் செய்யவும்சக்தர். குந்திபுத்ரனே! உனக்கு இந்த

ஜயமனைத்தும் ஒப்பற்றபுகழும் இந்தப்புவனிமுழுமையும் நாராயணையடித்ததனாலேதான். நாராயணரை ஆதரவாகப்பெற்ற உனக்குச் சிந்தைக்கெட்டாதஇவரே காப்பவராயிருக்கிறார். அதனால், நீ அத்வர்யுவாயிருந்து பிரளயகாலத்துஅக்நிக்கொப்பான கிருஷ்ணனென்னும் பெரியமஹாமபாத்திரத்திலல் யுத்தமென்னும் அக்நியில் அரசர்களை ஹோமம்செய்தாய். கோபத்தினால் கிருஷ்ணனோடும் அர்ஜுனனோடும் விரோதம்செய்த அறிவில்லாத துர்யோதனனும் அவன்புத்திரர்களும் ஸகோதரர்களும் பந்துக்களும் இரக்கப்படத்தக்கவர்கள். பெருந்தேகங்களும் பிரகுந்தவன்மையுமுள்ள திதியின்புத்திரர்களும் தனுவின்புத்திரர்களுமாகிய அஸுரஸ்ரேஷ்டர்கள் காட்டுத்தீயில் விட்டிற்பூச்சிகள் அழிவதுபோலச் சக்ராயுதமென்னும் அக்நியில் மாய்ந்துபோயினர். புருஷஸ்ரேஷ்டனே ! தைரியம் பராக்கிரமம்தேகவன்மைமுதலியவைகுறைந்தமனிதர்கள் போரில்இவரை எதிர்க்கமுடியாதன்றே ? ராஜனே ! ஜயிப்பவனும் யோகியும் பிரளயகாலாக்நிபோன்றவனுமாகிய ஸவ்யஸாசியானவன் போர்த்தலையில் நின்று துர்யோதனன்சேனையனைத்தையும் பராக்கிரமத்தினால்ஒழித்தான். பூர்வகாலத்தில் இமயமலையின்மேல் விருஷபத்வஜர் ரிஷிகளுக்குச்சொன்னதை நான் சொல்லுகிறேன்; கேள். பிரபுவே! புஷ்டியும் ஒளியும் புகழும் பராக்கிரமமும் மகிமையும் வணக்கமும் அவதாரமும் அவருக்கிருப்பதைக்காட்டிலும் மூன்றுமடங்குஅதிகம்கிருஷ்ணனிடத்தில இருக்கின்றன. எது எப்படி நடக்கவேண்டுமோ அதை மாறுகச்செய்வதற்கு யாரால்முடியும் ? இன்னமுங்கேள். பகவானானவாஸுதேவர் எங்கிருக்கிறாரோ அங்கே எல்லாவற்றிற்கும் மேலானசிறப்புண்டாகும். இந்தவிஷயத்தில் நாங்கள் சிறிய புத்தியுள்ளவர்கள் ; பிறருக்கு வசப்பட்டிருப்பவர்கள் ; மிகவும் அசக்தர்கள் ; நீங்காதமரணமார்க்கத்தைப் புத்திபூர்வமாக அடைந்திருக்கிறோம். நீ உண்மையையே முக்கியமாகக்கொண்டவன். முதலில் பிரதிஜ்ஞைசெய்து அந்தப் பிரதிஜ்ஞையைக்காப்பதிலேயே ஊக்கமுள்ளவனுயிருப்பதனால் ராஜ்யத்தையும் விரும்பாமலிருக்கிறாய். ராஜனே! பகைவரைஜயிப்பவனே ! இவ்வுலகத்தில் நீ உன்மரணத்தைச் சிறந்ததாக நினைக்கிறாய். வாக்குத்தத்தம்செய்ததை விடமாட்டாய். இந்தஜனங்கள்அனைவரும் காலத்தினால் போர்த்தலையில் கொல்லப்பட்டனர். நாமும் காலத்தினால் கொல்லப்படுகிறோம். காலமே முதன்மையான ஈசுவரன். காலந்தெரிந்தவன். காலத்தினால்தீண்டப்பட்டதைப்பற்றித் துயரப்படத்தகாது. காலபுருஷன் ரத்தம்போலச்

சிவந்தகண்களும் கருநிறமும் தண்டாயுதமுமுள்ளவன்: அழியாதவன். குந்திபுத்திரனே! ஆதலால், தாயாதிகளைப்பற்றித் துயரப்படவேண்டாம். குருவம்சத்தவரைமகிழ்விப்பவனே! நீ எப்போதும் துயரப்படாமலிரு. இந்தக்ருஷ்ணனுடையமகிமையை நான்சொல்லக்கேட்டாயன்றே? யோக்கியர்களுக்கு அதுதான் முழுதும்போதுமானஉதாரணம், மஹாராஜனே! வியாஸருடையசொல்லையும் சிறந்தஞானியானநாரதருடையசொல்லையும்கேட்டு நீயே கிருஷ்ணனுடைய சிறந்ததகுதியை அறிந்துகொள். பாரதனே! ரிஷிக்கூட்டங்களின் மிகச்சிறந்தமகிமையையும் உமாமஹேஸ்வர ஸம்வாதத்தையும் உனக்குச் சொன்னேன். இந்தமஹாபுருஷருடைய அவதாரத்தை நினைப்பவனும் கேட்பவனும்சொல்லுபவனுமானவன் சிறந்தநன்மையைப்பெறுவான். அவன் நினைத்தவிருப்பங்கள்எல்லாம் அவனுக்குக்கூடிவரும். அம்மனிதன் இறந்தும் ஸ்வர்க்கமடைவான். அதில் ஸந்தேகமில்லை. நன்மையைக்கருதுகிறவன் ஜனார்த்தனரைச் சரணமடைந்துசெய்வதுதான் உசிதம். அரசனே! இந்தஜனார்த்தனர்தாம் அழிவில்லாதவரென்று பிராம்மணர்களால் துதிக்கப்படுகிறார். கௌரவராஜனே! மஹேசுவர்முகத்திலிருந்துவந்தவையும் நம்மாலுரைக்கப்பட்டவையுமாகிய தர்மச்சிறப்புக்களை நீ இரவும்பகலும் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அப்படியேநடந்துகொண்டு ஸரியாகத் தண்டத்தைச் செலுத்திப் பிரஜைகளை நன்முறைக்காப்பதனால் உனக்கு ஸ்வர்க்கலோகமுண்டாகும். ராஜனே! எப்போதும் தர்மத்தினாலேயே ப்ரஜைகளைக் காப்பாற்றவேண்டும். தண்டம் ஸரியாக வியாபித்திருப்பதுதான் ஸரியானதர்மமென்று சொல்லப்படுகிறது. வேந்தனே! ரிஷிகளின்முன்னிலையில் சங்கரருக்கும் உமைக்கும்நடந்த தர்மஸம்பாஷணையை உனக்குச்சொன்னேன். தனதுமேன்மைமையைக்கருதுகிறவன் இதைக்கேட்டபின்னும் கேட்பதற்குமுன்னும் பரிசுத்தமானமனத்தோடு சங்கரரைப் பூஜிக்கவேண்டும். இதுதான் அந்தக்குற்றமற்ற மஹாத்மாவானநாரதருடைய தேவபூஜையைப்பற்றிய உபதேசம். பாண்டுபுத்திரனே! நீ அதை அப்படியேசெய். பிரபுவே! குந்திபுத்திரனே! இமையமலையில் கிருஷ்ணன், சிவன் இவர்களின் இயற்கையாலமைந்த இந்தச்சரித்திரம் மிக்க ஆச்சரியமும் புண்ணியமுமாயிருப்பது. நித்தியராகிய இந்தவாஸுதேவர் அர்ஜுனனுடன் நரநாராயணர்களாகப் பதினாயிரவருஷகாலம் பதரிகாசிரமத்தில் பெருந்தவம்செய்தார். ராஜனே! [1]ஆறுகுணங்கள்நிரம்பினவர்களும் தாம

[1] ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீர்யம், தேஜஸ்.

ரைக்கண்ணர்களுமாகிய இந்தக்ருஷ்ணர்ஜுனர்களே நாரதராலும் வ்யாஸராலும் நான் தெரிந்துகொண்டேன். சிறந்தகைகளையுடைய க்ருஷ்ணன் சிறுபிராயத்திலேயே தம்குலத்தோரைக்காப்பாற்றுவ தென்னும்பிரயோஜனத்திற்காகப் பெரிதான கம்ஸவதத்தைச்செய் தார். குந்திபுத்திரனே! யுதிஷ்டிரனே! அழியாதவரும் புராண புருஷருமான இந்தக்கிருஷ்ணனுடையசெய்கைகளே நான் அளவிட முடியாது. அப்பா! புருஷசிரேஷ்டரானஇந்தஜனார்த்தனர் உனக்கு அன்பராயிருப்பதஞ்ல் எல்லாவற்றிற்கும்மேலானபெருநன்மைஉனக் குண்டாவது திண்ணம். மதிகெட்டதுர்யோதனன்இறந்தும் உலகத் தில் அவனைப்பற்றித் துயரப்படுகிறேன். யானைகுதிரைகளோடு பூமி யனைத்தும் அவனுலழிந்தது. துர்யோதனன் கர்ணன் சகுனி துச் சாஸனன்இந்தநான்குபேருடையகுற்றத்தினுல் கௌரவர்கள் மடிந் தார்" என்றார். புருஷசிரேஷ்டரானபீஷ்மர் அம்மஹாத்மாக்களின்நடு வில் இவ்வாறுசொல்லும்போது தர்மராஜர் பேசாமலிருந்தார். திருத ராஷ்டிரன்முதலியஅரசர்கள் அதைக்கேட்டு ஆச்சரியமடைந்தனர். எல்லாரும் கிருஷ்ணனே மனத்தினுல் பூஜித்துக் கைகூப்பினர். அப் போது, நாரதர்முதலான ரிஷிகளனைவரும் பீஷ்மர்சொல்லைஅங்கீகரித் துக் கொண்டாடி மகிழ்ந்தனர். தர்மராஜர் தம்ஸோதரர்கள் அனைவ ரோடும் மிக்கஆச்சரியமும் புண்ணியமுமானஇந்தப்பீஷ்மர்உபதேசம் எல்லாவற்றையும் கேட்டார். சிறந்த புத்தியுள்ள தர்மராஜர், அதிக ஸமர்த்தரான பீஷ்மர் களைப்பாறினபிறகு திரும்பவும் விஞவத் தொடங்கினர்.

இருநூற்றைம்பத்துமூன்றுவது அத்தியாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(ஒருபிராம்மணப்பெண்ணுக்கும் யமனுக்கும் நடந்த ஸம்வாதம்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பாபகர்மங்கள் எல்லாவற்றையும் சிறந்தஞானத்தையும்பற்றி மிகுந்தகிருபையோடு சொன்னீர். அந்த ஞானத்தைத் திரும்பவும் எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ் மர் சொல்லலானார்.

"நாராயணரை இடைவிடாமல் தியானம்செய்வதும் அவருக்கு அர்ச்சனைசெய்வதும்ஆராதனம் செய்வதும் ஸ்தோத்திரம்செய்வதும் அவர் கதைகளைக்கேட்பதும் அவற்றையறிந்தவர்களைக் காப்பாற்றுவ

தும் அவர்களுக்குப்பணிசெய்வதில்விருப்பமும் அவர்களின் உபதேசத்தைநடத்துவதும் பரகதியைஅடைவதற்குச் சிறந்த உபாயங்களென்று சொல்லப்படுகின்றன. ஸாமானியமான மனிதனும் அவரைத்தியானம்செய்வதனாலும் ஜபம்செய்வதனாலும் விரைவில்முக்திபெறுவான். ஜபமானது [1]வைதிகம் [2]தாந்த்ரிகம் [3]பௌராணிகம் [4]ஸ்மார்த்தம் என நான்குவகைகளாக வித்வான்களால் சொல்லப்பட்டிருக்கிறது. வித்வான்களுக்குப் பணிவிடைசெய்வதனாலும் வித்வான்களைக் காப்பாற்றுவதனாலும் ஞானமுண்டாகிறது. ஞானிகளுக்குஅஸாத்யம் ஒன்றுமில்லை. ஆதலால், பிராம்மணர்களை நீ ரக்ஷிக்கவேண்டும். முற்காலத்தில் வனத்தில் பக்ஷுக்களால்விடுபட்டுத் தனித்திருந்தஒருபதிவிரதை ஒரு வித்வானை ரக்ஷித்ததின்பலனைப்பற்றி யமனால் சிலாகிக்கப்பட்டாள். ' முன் வைசியஜாதிப்பெண்ணையிருந்த நீ ஒரு பிராம்மணனுடைய மரணத்திற்குக்காரணமாயிருந்து அவன்மனைவிக்கும் தந்தைக்கும் விசனத்தைக்கொடுத்தாய். இப்போது பிராம்மணப்பெண்ணாகப்பிறந்தது உனக்குப்பெரியலாபம் ' என்றுசொல்லி யமனால் புகழப்பட்டஅவள், 'இவ்வளவு பாவமுள்ள நான் பிராம்மணகுலத்தில் நல்ல பிறப்புப்பிறந்தது எதனால் ? இனி நான் அடையும்புண்ணியம் என்ன ? அதையும் எனக்குச்சொல்' என்றுகேட்டாள். யமன், 'வேறு ஒரு ஜன்மத்தில் அடிகளினால்பீடிக்கப்பட்ட ஒருவித்வானைத் திருடனென்னும்வ்ருத்தேகத்தைப்போக்கி விடுவித்ததனால் நல்லஜன்மமடைந்தாய் ' என்று சொன்னான். அவள், இவ்வாறுசொல்லக்கேட்டு, அஷ்டாக்ஷரத்தின் தியானம் ஜபமுதலிய நன்மார்க்கங்களை உபதேசித்து யமனால்அனுக்ரஹிக்கப்பட்டவளாகிப் புண்ணியலோகங்களில் வாஸமடைந்தாள். ராஜனே ! ஆதலால், எப்போதும் வித்வான்களைரக்ஷிப்பதிலேயே ஊக்கத்தோடிரு. அவர்களைரக்ஷிப்பதனால் உடனே எல்லாப்பாவங்களிலிருந்தும் விடுபடலாம் " என்றார்.

1 வேதத்திற் சொல்லப்பட்டது.
2 வைகாநஸபாஞ்சராத்ராகமங்களில் சொல்லப்பட்டது.
3 புராணங்களில் சொல்லப்பட்டது.
4 தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டது.

ஸ்ரீ மஹாபாரதம்.

இருநூற்றைம்பத்துநான்காவது அத்தியாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்.)

[ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்த, 'பகவத்குண தர்ப்பணம்' என்னும் ஸஹஸ்ரநாமபாஷ்யத்தை அநுஸரித்து எழுதிய குறிப்புரை. கருத்து வேறு படுமிடங்களில், ஸ்ரீமத், சங்கரபகவத்பாதர் பாஷ்யத்திலுள்ள கருத்தும் எழுதப்படும்.

ப. பா = பட்டர் பாஷ்யம்.

ச. பா = சங்கர பாஷ்யம்.

உலகத்தில் அறிவுள்ளவரனைவரும் பிரமாணங்களினால் விஷயங்களைக்கண்டறிந்தபிறகு, புஷ்பம் சந்தனம் பொன் மணிமுதலிய அனுகூலமானவிஷயங்களை எடுத்துக்கொள்வதும் கத்திமுள்முதலிய பிரதிகூலவிஷயங்களைத் தள்ளுவதும் அனுகூலம்பிரதிகூலமிரண்டுமில்லாத கட்டை கல் மண்முதலியவற்றை உதாஸீனமாகவிடுவதும் அனுபவத்தில் காணப்படுகின்றன. அப்படி அறியப்படும் விஷயங்களில் பொருள்இன்பமாகிய இரண்டு புருஷார்த்தங்களும் பிரத்யக்ஷமுதலிய பிரமாணங்களினால் அறியப்படுகின்றவையாயினும் மிக்க அல்பமும் பின்புதீங்கைவிளைவிப்பனவும் அருவருக்கத்தக்கனவும் விரைவில்அழிந்துபோவனவும் துன்பங்கலந்தனவும் கஷ்டஸாத்யங்களுமாயிருப்பதுமுதலிய எண்ணிறந்த குற்றமுள்ளனவாயிருப்பதனால் விடத்தக்கவை. சாஸ்த்ரத்தினால்மட்டும் அறியத்தக்கவை தர்மமும் பரமபுருஷார்த்தமான மோக்ஷமுமே. முற்கூறிய பொருளின்பமென்னும் இரண்டு புருஷார்த்தங்களுக்கும் மாறுகவும் அளவற்றமங்களங்கள்சேர்ந்தவையாகவுமிருத்தலின் சாஸ்த்ரமும் மேற்சொன்ன சாஸ்த்ரார்த்தங்களாகிய தர்மமும் பரதத்வமும் கிரஹிக்கத்தக்கவற்றுள் மிகச்சிறந்தவை. இதைப்பற்றி இதிஹாஸமறிந்தவர்களும் புராணமறிந்தவர்களும், 'ஸத்யம்; ஸத்யம்; திரும்பவும் ஸத்யம். கைதூக்கி உத்கோஷிக்கிறேன். வேதசாஸ்த்ரத்துக்குமேலான சாஸ்த்ரமுமில்லை; கேசவருக்குமேலான தெய்வமுமில்லை' என்று ஒற்றுமையாகச் சொல்லுகின்றனர். பதினான்குவித்யாஸ்தானங்களாகப் பகுக்கப்பட்ட சாஸ்திரங்களில் தலைமையாயுள்ள வேதத்தைப்பற்றி, 'இதிஹாஸத்தினாலும் புராணத்தினாலும் வேதத்தைத் தெளிந்துகொள்ளவேண்டும்; வேதமானது குறைந்தகல்விகேள்வியுள்ளவனைக்கண்டு, 'இவன்

என்னை மோசஞ்செய்துவிடுவான்' என்றுபயப்படுகிறது' என்று சொல்லியிருப்பதனால் இதிஹாஸபுராணங்களின் உதவியைக்கொண்டு வேதார்த்தத்தைத் தெளிந்துகொள்ளவேண்டும். அவ்விரண்டனுள் மேற்சொன்னவசனத்தில் இதிஹாஸத்தைமுன்னும் புராணத்தைப் பின்னும்சொல்லியிருத்தலால் புராணங்களைவிட இதிஹாஸங்கள் சிறந்தபிரமாணங்களென்பது சாஸ்திரங்களின் கருத்து.

மஹாபாரதமானது, ஸ்ரீமத்ராமாயணம்போலவே தத்வ ஜ்ஞானத்திற்கு இன்றியமையாதஆகாரம். இது, பெரியோர்களால் மிக்கவிசேஷப்பிரமாணமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதனால் அர்த்தங் களில்மாறுபாடின்றி அழகானசொல்லாலமைக்கிருப்பதென்று நிச் சயிக்கப்பட்டிருக்கிறது. இது இதிஹாஸமாயிருப்பதனாலும் பிரபல மான பிரமாணமாகிறது. 'வ்யாஸபகவான் கமதபுத்தியென்னும் மத்தை வேதமென்னும் கடலில்செலுத்திக் கடைந்து உலகங்களின் நன்மைக்காக மஹாபாரதமென்னும் சந்த்ரனை எடுத்தார்' என்று வாயுபுராணத்திலும் சைவபுராணத்திலும் கூறப்பட்டிருப்பதனாலும், 'மனிதன் கடினமானசாஸ்த்ரங்களைக்கண்டு, உக்ரமானமருந்தைக்கண் டதுபோலப் பயப்படுகிறான். ஆதலால், எல்லாச்சாஸ்த்ரங்களின்ஸார மாகிய இம்மஹாபாரதம் காவ்யரூபமாகச் செய்யப்பட்டது' என்று பவிஷ்யத்புராணத்திலும், 'மஹாபாரதமென்னுஞ்சந்த்ரனால் உலகத் திற்கு வெளிச்சம்கொடுத்தவராகிய த்வைபாயனரென்னும் புத்ரராக ஸாக்ஷாத்விஷ்ணுவே பராசரருக்குப் பிறந்தார்' என்று மத்ஸ்யபுரா ணத்திலும், 'மைத்ரேய! க்ருஷ்ணத்வைபாயனரென்னப்படும் வ்யா ஸரைப் பிரபுவான்நாராயணரென்றே அறி. பூமியில்வேறுஎவன்மஹா பாரதம் செய்பவனுவான்?' என்று விஷ்ணுபுராணத்திலும், 'கெட்ட தர்மங்களாகிய மரங்களைக்களைவதும் வேதமென்னுமலையினின்றும் இறங்கியதுமாகிய வ்யாஸர்வாக்கென்னும்ஜலப்ரவாஹத்தினால் பூமி யின்னது பாவமாகிய தூசியில்லாததாகச் செய்யப்பட்டது' என்று மார்க்கண்டேயபுராணத்திலும் சொல்லப்பட்டிருப்பதனாலும், 'நாலு வேதங்களையும் வேதாங்கங்களையும் உபநிஷத்துக்களையும் அறிந்தும் இம்மஹாபாரதத்தை அறியாதபிராமணன் அறிவுத்தேற்றமுள்ளவ னுகான்' என்று மஹாபாரதத்திலும் சொல்லப்படுதலாலும் மற்று முள்ள ஆயிரத்துக்குமேற்பட்டபிரமாணங்களினால்சிலாகிக்கப்படுவத னாலும் எல்லா அங்கங்களோடுங்கூடிய சுருதிஸ்மிருதிஇதிஹாஸபுரா ணங்கள்முதலிய எல்லாப்பிரமாணங்களுக்கும் ஒத்திருப்பதனாலும், 'இதிலுள்ளதுதான் மற்றெல்லாவற்றிலுமுள்ளது. இதில் இல்லா

தது எதிலுமில்லை' என்றுசொல்லியிருப்பதனால் லௌகிகங்களும் வைதிகங்களுமான எல்லாவிஷயங்களையும் ஐயந்திரிபின்றித்தெரிவிக்கப்பிரவ்ருத்தித்திருப்பதனாலும் ஒருவிஷயத்திலும் பக்ஷபாதமில்லாமையாலும் புராணங்களைக்காட்டிலும் இது சிறந்த் பிரமாண மென்று அநேகஅறிஞர் தீர்மானித்திருக்கின்றனர்.

அதிலும், ஸஹஸ்ரநாமாத்யாயமானது, மஹாபாரதத்தில் ஸாரமாயிருப்பதனாலும் ரிஷிகளினால் ஓதப்பட்டிருப்பதனாலும் வேதாசார்யரால் ஒருங்கு தொகுத்துச் செய்யப்பட்டிருத்தலாலும் பீஷ்மர் தமது சிறந்தமதமாகச் சொல்லியிருப்பதனாலும் ஆன்றோர் எல்லாவற்றிலும் விசேஷமாக எடுத்துக்கொண்டிருப்பதனாலும் கீதைமுதலிய வேதாந்த சாஸ்த்ரங்களோடு பொருளொற்றுமை இருப்பதனாலும் நிக்கஅனுகூலமாக எடுத்துக்கொள்ளவேண்டிய விஷயமென்று நினைக்கப்படுகிறது. இம்மஹாபாரதத்திற்குஉள்ளம்போன்றதாகிய சாந்திபர்வத்தில் தானதர்மங்கள்முதலிய எல்லாச்சாஸ்திரங்களின்பொருளையும் ஸாரமாகஎடுத்து முடிக்குமிடத்தில் இந்தஸஹஸ்ரநாமாத்யாயம் எல்லாவற்றினுடையஸாராம்சங்களின்ஸங்க்ரஹமுமாகவன்றோ நிச்சயிக்கப்பட்டிருப்பது? இப்படி இதுபிரமாணமாயிருப்பதற்குச் சிறந்தகாரணமிருப்பதனாலும் தத்வார்த்தத்தில் இதன் தாத்பர்யத்தைஅறிவதற்கு லக்ஷணங்களாயுள்ளஉபக்ரமஉபஸம்ஹாரமுதலியஆறுவகைத்தாத்பர்யலிங்கங்களும் நிரம்பியிருப்பதனாலும், 'பிரமாணமாஅன்று' என்றும், 'இந்தவிஷயத்திற்காக இதுவந்ததா தோத்திரமுதலிய வேறுவிஷயத்துக்காகவந்ததா' என்றும் சங்கிப்பதற்குச் சிறிதும்இடமில்லை. எல்லாவற்றிலும் சிறந்த விஷயத்தைத்தெரிவிப்பதனால் இம்மையில் எல்லாவிதநன்மைகளுக்கும் மோக்ஷத்துக்கும் இதுவே சிறந்தஉபாயமாக எடுத்துக்கொள்ளத்தக்கது. வேதார்த்தங்களெல்லாவற்றையும் நேராகக்கண்டறிந்த ஸனகர் ஸனத்குமாரர் நாரதர்முதலான மஹரிஷிகளினால் இவ்வாயிரநாமங்களும் சொற்பொருள்களின் தத்வங்களையறிந்து கீர்த்தனம்செய்யப்பட்டவையே. இந்தநாமங்கள் வேதவ்யாஸபகவானால் ஸ்தோத்ரரூபமாகத் தொடுத்துக்கூறப்பட்டு ஸம்ப்ரதாயவரிசையில் நமக்குக்கிடைத்திருக்கின்றன.

வேதவ்யாஸபகவான் வேதாசார்யராக அவதரித்தபகவானுதலின், அவரதுஞானம்சக்திமுதலியகல்யாணகுணங்கள், எல்லாவற்றிலும்சிறந்தவை. மயக்கம் பிறழ்மயங்கச்செய்வது ஊக்கமின்மை சொற்சோர்வுஆகியகுற்றங்கள் ஒன்றும் அவரிடத்தில்இருக்கக்கூடி

மென்றுநினைப்பதற்கே இடமில்லாமையால், அவர்சொல்வதெல்லாம் பிரமாணமே. கலிகாலத்தில் சக்திகுறைந்தமனிதர்களின்மேல் அனுக்ரகம்வைத்து வேதங்களைவகுத்து வேதங்களின் முக்கியவிஷயங்களாகிய தத்வஜ்ஞானம் அனுஷ்டானம் இவ்விரண்டிலும் ஐயந்திரிபுஅறியாமைகளைப்பரிகரிப்பதற்காகப் பஞ்சமவேதமாகிய மஹாபாரதத்தை அவர் இயற்றினர். மேலும், அவர், க்ஷத்ரியஜாதியிற்பிறந்த விசுவாமித்ரரைத் தம்மிலுஞ்சொல்லிலுஞ்ப்ராம்மணராகச்செய்த வஸிஷ்டபகவானுடையப்ரபௌத்ரர்; வஸிஷ்டரும் புலஸ்த்யரும் வரமளித்ததனால்பரதேவதையின்நிஜஸ்வரூபத்தைஅறிந்துபுராணஸம்ஹிதைசெய்வதுமுதலிய மகிமைகளையடைந்தவரென்று லிங்கபுராணமுதலியவற்றில் சிறப்பித்துக்கூறப்பட்ட பராசரருடையபுதல்வர்; மற்றவர்களுக்கில்லாத தவம்த்யானங்களின்சிறப்புக்களினுஞ் மற்றெல்லாப்பரமரிஷிஸபைகளாலும் பூஜிக்கப்பெற்றவர். மேற்கூறியஸனகர்முதலான மகரிஷிகளினுஞ் ஒதப்பட்ட பகவந்நாமங்களையே ஸ்தோத்ரரூபமாக இவர் தொகுத்துக்கூறியிருப்பதனாலும் இந்தஸஹஸ்ரநாமாத்யாயம் அனுகூலமாக எடுத்துக்கொள்பவற்றுள் மிகச்சிறந்தது.

பீஷ்மாசார்யரும் மிகநம்பத்தக்கவர். வேதவ்யாஸபகவானே தர்மபுத்ரரைநோக்கி, 'சிறந்தபராக்ரமசாலியான அரசனே! தர்மங்களெல்லாவற்றையும் உனக்குக்கேட்கவிருப்பமிருந்தால் கௌரவர்களுக்குப்பிதாமஹரும் பெரியவருமான பீஷ்மரிடம்செல். ஸர்வஜ்ஞரும் எல்லாவற்றிலும்உண்மைதெரிந்தவருமாகிய அந்தக்கங்காபுத்ரர் ஸூக்ஷ்மவிஷயங்களெல்லாவற்றிலும் உன்மனத்திலுள்ள ஸந்தேகங்களை அறுத்துவிடுவார். அவர் இந்த்ராதிதேவர்களைநேராகக்கண்டவர்' என்றும், 'அவருடையஸபையில் பரிசுத்தர்களானபிரம்மரிஷிகள் எக்காலமும் ஸப்யர்களாயிருந்தனர். அறியவேண்டியவிஷயங்களில் அவருக்குத்தெரியாதது ஒன்றுமில்லை. தர்மந்தெரிந்தவரும் நுட்பமானதத்வார்த்தத்தை உணர்ந்தவருமாகியஅவர், உனக்குத் தர்மங்களைச்சொல்வர்' என்றும் சொல்லியிருக்கிறார். கிருஷ்ணபகவானும், 'பீஷ்மர் சரதல்பத்தில்படுத்து அக்நிஆறுவதுபோலிருக்கிறார். புருஷசிரேஷ்டரான அவர் இப்போது என்னை த்யானம்செய்கிறார். ஆதலால், என்மனம் அவரிடம்சென்றது. சிறந்தசக்தியுள்ளவரும் புத்தியுள்ளவருமான அவர் திவ்யாஸ்த்ரங்களையும் நான்குவேதங்களையும் வேதாந்தங்களையும் தம்மனத்தில்வைத்திருக்கிறார். நான் என்மனத்தினுள் அவரைச்சேர்ந்திருக்கிறேன். பரதசிரேஷ்டரே! தர்மானுஷ்டானஞ்செய்பவரிற்சிறந்தவரான பீஷ்மர் முக்காலமும் அறிந்த

வர். அதனால்,என்மனம் அவரிடம்சென்றது. குருவம்சத்தவருக்குத் தலைவராகிய அந்தப்பீஷ்மர் அஸ்தமனமாகிவிட்டால் ஞானங்கள்குறைந்துபோம். ஆதலால், நான் உம்மைத்தூண்டுகிறேன்' என்றும், 'ஓ! பீஷ்மரே! அறியவேண்டுமென்றுகேட்கும்தர்மராஜருக்கு நீர் என்ன சொல்லப்போகிறீரோ அவையெல்லாம் வேதவாக்யங்கள்போலப் பூமியில்நிலைநிற்கப்போகின்றன' என்றும்,'ஓ! பரதசிரேஷ்டரே! (பீஷ்மரே!) பூதபவிஷ்யத்வர்த்தமானங்களெல்லாம் அறிவில்முதிர்ந்தவராகியஉமக்கு உள்ளங்கையில்வைக்கப்பட்டவைபோலிருக்கின்றன. புருஷர்களிற்சிறந்தவரே! நானும் நோகவும் உம்மைஅறிந்திருக்கிறேன். நீர்தவத்தினால்சராசரங்களடங்கியிருக்கின்றஉலகங்களையும்படைக்கத் திறமையுள்ளவர்' என்றும், 'உமக்குக் களைப்புமில்லை; மூர்ச்சையுமில்லை' என்றுதொடங்கி, 'பீஷ்மரே! உமதுமனம் எப்போதும் ஸத்வகுணத்திலேயேநிலைபெற்று ரஜோகுணதமோகுணங்கள் அணுகாது மேகங்களால்விடுபட்டசந்திரன்போலிருக்கும்' என்றும்சொல்லுகிறார். நாரதபகவானும், 'நான்குவர்ணங்களுக்குமுள்ளபலவகைத் தர்மங்களையும் இவர் முழுதும் அறிந்திருப்பவர். ஆதலால், உள்ளத்தின்கணுள்ளஸம்சயங்களை விரைவில் விலகுங்கள்' என்றுதொடங்கி விரிவாகச்சொல்லிப் பரதத்வத்தையும் பாதத்வஞானத்தையும் தர்மானுஷ்டானத்தையும் வெளியிடும்படிவரமளித்தார்.பீஷ்மர், மாதாபிதாக்களுக்குப் பணிவிடைசெய்து அவர்கள் மனமகிழ்ந்துஅளித்த வரத்தையும்பெற்றிருக்கிறார். அவர் தாமேயும், 'ஓ! கோவிந்தரே! உமது அனுக்ரகத்தினால் எனக்குத் தாபம்,மயக்கம், மனச்சோர்வு, ஓய்வு, வாட்டம், நோய்கள்எல்லாம் உடனேபோய்விட்டன. அச்சுதரே! பூதபவிஷ்யத்வர்த்தமானங்களையும் அவற்றிற்குமேற்பட்டபரம்பொருளையும் உள்ளங்கையில்வைக்கப்பட்டனபோலப் பார்க்கிறேன். அச்சுதரே! வேதங்களில் சொல்லப்பட்டபிரகிருத்திதர்மங்களும் வேதாந்தங்களில்மட்டுமுள்ள விஷயங்களும் நீர்வரமளித்ததனால் முழுதும் என்கண்ணெதிரில் இருக்கின்றன' என்றும், 'ஜனார்த்தனரே! உம்மை இடைவிடாது தியானம்செய்ததனால் பூரித்து இளமைப்பருவத்திலிருப்பவன்போலாகினேன்.உமதுஅனுக்ரகத்தினால் தர்மங்களைச்சொல்வதற்குச் சக்தியுள்ளவனாயிருக்கிறேன்' என்றும் கூறியிருக்கிறார்.

இப்படித் தத்துவஞானதத்தை வரியாகப்பெற்றபீஷ்மர், 'இதுதான் எல்லாததர்மங்களிலும் மிகச்சிறந்ததர்மமென்று நான் நினைப்பது' என்றுதொடங்கி இந்தஸஹஸ்ரநாமஸங்கீர்த்தனம் தமதுமிகவும்சிறந்தமதமாகச் சொல்வதனால் இவ்வத்தியாயம் அனுகூலமாக

எடுத்துக்கொள்பவற்றுள் மிக்கஸாரமானது. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ர நாமம் எல்லாராலும் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும், ஸபாபர்வத்தில், 'பகவான் ஆயிரம் நாமங்களுடையவர்' என்றும், விஷ்ணுதர்மத்தில் கஜேந்திரமோக்ஷப்ரகரணத்தில், 'ஆயிரம்மங்கள கரமான நாமங்களையுடையவரும் ஆதிதேவரும் ஜனனமில்லாதவரு மான பிரபுவை' என்றும் ஆயிரம்நாமங்களைப்பற்றிச் சிறப்புக்கூறப் பட்டிருக்கின்றது. இத்தஸஹஸ்ரநாமஸ்தோத்திரத்திலேயும், ஸ்ரம் பத்திலும் முடிவில் பலன்சொல்வதிலும் இதன்குணங்கள் விரிவாக வெளியிடப்படுகின்றன. வைத்யசாஸ்திரமுதலியவற்றிலும் ஸஹஸ்ர நாமத்தின்விசேஷம் சொல்லப்படுகிறது. அவற்றுள் வைத்திய சாஸ்த்ரமாகிய சரகஸம்ஹிதையில், 'ஆயிரம்தலைகளையுடையவரும் சராசரங்களுக்குஸ்வாமியும்ஸர்வவ்யாபியுமான விஷ்ணுவை ஸஹஸ்ர நாமம்சொல்லித் துதிப்பதலால எல்லாஜ்வரங்களையும் போக்கிக் கொள்ளலாம்' என்றுசொலலப்படுகிறது. அவ்வாறே, நவீனமான ஒருவைத்யநூலும் மேகரோகத்துக்குப் பிராயச்சித்தம் சொல்லுகை யில், 'புருஷஸூக்தத்தை ஜபிக்கவேண்டும்' என்றுசொல்லி, 'அது போலவே பாரதத்திற்சொல்லப்பட்ட பகவானுடைய ஸஹஸ்ரநாமத் தையும் ஜபிக்கவேண்டும்' என்றுகூறுகிறது. க்ஷயரோகத்திற்குச் சிகித்ஸைசொல்லுதிலும், 'பகவானுடையஸஹஸ்ரநாமத்தைக் கீர்த் தனம்செய்யவேண்டும்' என்றும் ஒருவகைஜ்வரத்திற்குச் சிகித்ஸை யில், 'ஹோமத்தை முன்போலவேசெய்து பகவானுடையஸஹஸ்ர நாமத்தை ஜபிக்கவேண்டும்' என்றும்சொல்லுகிறது. கிரஹசாந்தி சொல்லுமிடத்திலும், 'வாயுஸூக்தமும் விஷ்ணுஸஹஸ்ரநாமமும் சொல்லவேண்டும்' என்றுசொலலப்பட்டிருக்கிறது. மற்றும்அநேக விடங்களில் இப்படிச்சொல்லியிருப்பதைக் காணலாம். லௌகிகர் களானக்ஷிகளிலும், பட்டபாணகளி ப்ரஸவக்ருஹத்தைவர்ணிக்கும் போது, நாராயணரது ஸஹஸ்ரநாமத்தை இடைவிடாமல்படிக்கிறார் கள்' என்றுசொல்லுகிறார். இப்போதும் உலகத்தில் அவ்விதமாக அநேகம்வியாதிகளுக்கும் பாவங்களுக்கும் பரிகாரமாக ஸஹஸ்ரநாம பாராயணம்செய்வதைக் காண்கின்றோம். விஷம், பிசாசம், வியாதி, கிரஹம், தீயகனவு, அபசகுனமுதலான அமங்களங்களுக்குச் சாந்தி செய்வதற்கும் மஹாபாதகமுதலான பாதகங்களுக்குப் பிராயச்சித் தத்திற்கும் இம்மையிலும் மறுமையிலும் மேன்மைகள் கிடைப் பதற்கும், ஸம்ஸாரமென்னும் விலங்கைவிடுவிப்பதற்கும் ஸம்ஸார விலங்கைவிட்டுப் பரமபதத்தை அடைவதற்கும் தற்காலத்தில்பகவத்

குணங்களென்னும் அமுதைஉண்டு ஸுகம்பெறுவதற்கும் குழந்தைகள், ஊமைகள், பித்தர், பெண்கள், நாஸ்திகர்கள் முதலியோர்களும் மிக்கபிரத்தை பக்தி விசுவாசங்களுடன் அனுஷ்டிப்பதைக் காண்கிறோம். இப்படிஅங்கீகரிப்பது வேதங்களுக்குமில்லை. மூர்க்கர்கள் வேதங்களை எடுத்துக்கொள்வதில்லை. அந்தஅந்தக் குலம் கோத்திரமுதலியவற்றிற்கு அந்தஅந்தச்சாகைகளென்று பிரிக்கப்பட்டிருப்பதால், ஒருசாகையையும் யாவரும் கிரஹிப்பதில்லை. பாரதத்துள் ஹித்தாந்தங்களாகஏற்பட்டிருக்கும் பகவத்கீதை நாராயணீயம் யானஸந்திபர்வம் அக்ரபூஜை உத்தமதர்மானுசாஸனமுதலான அநேகஇடங்களிலுள்ளகருத்தை இது சுருக்கிச்சொல்வதனால் அவற்றிற்கு பொருளொற்றுமை இருக்கிறது. இவ்விதகாரணங்களினால் விவேகத்தோடு காரியங்களை அனுஷ்டிப்பவர்களுக்கு எல்லாவற்றிலும் சிறந்த விஷயமாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. எல்லா வித்தைகளுக்கும் ஆசார்யர்களும் பிரம்மஸாக்ஷாத்காரம் பெற்றவர்களுமான வ்யாஸர் தேவசிரவஸ் தேவஸ்தானர் நாரதர் வாத்ஸ்யர் அஸிதர் ஸுமந்து முதலான தேவரிஷிகளாலும் பிரம்மரிஷிகளாலும் சொல்லப்பட்டது. ஸர்வேசுவரரும் கீதையென்னும்உபநிஷத்துக்குஆசார்யரும் முன்னோரான குருக்களுக்கும் குருவும் தாமரைக்கண்ணருமாகிய ஸாக்ஷாத்பகவானே கேட்பவரோடுகூடஉட்கார்ந்து பீஷ்மரிடம்கேட்டு அங்கீகரிக்கப்பெற்றதாகிய இந்த ஸஹஸ்ரநாமாத்யாயத்துக்குப் பகவத்குணங்களின் தத்வஜ்ஞானம்உண்டாவதற்காக வ்யாக்யானம்எழுதப்படுகிறது. முன்னமேபலமுறைபரதத்வத்தைச்சொல்லுகிறபலஇடங்களில்விசேஷார்த்தங்களின் நிச்சயத்தைக்கேட்டுத் திருப்தியானதாக நினைத்துக் கொண்டிருப்பதனால் வினவாமலிருக்கும் ஜனமேஜயருக்கு அவரிடமுள்ளபேரன்பினால் மற்றொருமிக்கரஹஸ்யத்தைத் தெரிவிப்பதற்காக வைசம்பாயனர் தாமாகவே இதைச்சொல்லத் தொடங்குகிறார்.]

தர்மபுத்ரர் தானதர்மம் மோக்ஷதர்மமுதலிய தர்மங்களையும் தவம் தீர்த்தயாத்ரைமுதலிய பரிசுத்தம்செய்வனவற்றையும் அவற்றின்பலன்கள், அங்கங்கள், செய்யும்வகை, செய்யத்தக்க அதிகாரி முதலிய எல்லாவற்றையும் கேட்டபிறகு, திரும்பவும் பீஷ்மரை நோக்கி, "சாஸ்த்ரங்களில்சொல்லப்பட்ட ஒப்புயர்வற்றகடவுள்யார்? குற்றமற்றுத் தன்னிலும்உயர்ந்ததில்லாத மங்களஸ்வபாவமாயிருப்பதனால் எல்லாவற்றிற்கும்மேலானபரமபுருஷார்த்தமென்றுநீர்நினைப்பது யாது? மனிதர்கள் யாரைத்துதித்தும், யாரை ஆராதித்தும், ஐசுவரியம் முக்திஎன்னும் இருவகை நன்மைகளைப்பெறுவர்? எல்லாத்

தர்மங்களிலும் சிறந்ததாக நீர் நினைத்திருக்கும்தர்மம் யாது? மனிதன் எதைஜபம்செய்வதனால் ஜன்மமென்னப்படும் ஜராமரணம்கர்ப்பவாஸமுதலிய துன்பங்களிலிருந்தும், அவற்றின்காரணங்களாகிய அவித்தை பூர்வகர்மம் அதனாலுண்டானவாஸனை அதைப்பற்றிய விருப்பம் அதனடியாகவரும் ப்ரக்ருதிஸம்பந்தம் ஆகிய ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் விடுபடுவான்?'' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

'' ஜகமென்னப்படும் ஜங்கமஸ்தாவரங்களனைத்துக்கும் ஸ்வாமியும் தேவர்க்கும்தேவதையும் எவ்வகையிலும்அளவிடக்கூடாதபெருமையுள்ளவரும் தம்மையும் அளிக்கும்பரமோதாரகுணமுள்ளஉத்தமபுருஷருமான நாராயணரை ஆயிரம்நாமங்களினால் எக்காலமும் முயன்றுதுதிசெய்தும், தாமரைக்கண்ணரும் இடைவிடாமல் அநுபவித்தாலும் குணங்களுக்கு முடிவில்லாதவருமாகிய அவரையே எக்காலமும் அடிமைபூண்டி தனக்கு ஸ்வாமியென்னும்ப்ரேமையோடி பக்தியோகத்தினால் உபாஸனைசெய்தும், மனத்தில் இடைவிடாமல் அம்ருததாரைபோல ஸுகமாயிருப்பதும் ஸம்ஸாரத்தினாலுண்டான ஆத்யாத்மிகமுதலிய மூன்றுவகைத்துன்பங்களையும் அடியோடறுப்பதுமான பகவத்குணத்யானத்தைச்செய்தும், துதித்தும், நமஸ்கரித்தும் பக்திமேற்கொண்டி, 'தேகம் இந்திரியங்கள் மனம் வாக்கு ஆத்மா ஆகியஎன்னுடையவை அனைத்தும் உம்முடையவைதாம். அங்கீகரிக்கக்கடவீர்' என்று அகங்காரமமகாரங்களையொழித்துப்பகவானுடைய பாதாரவிந்தங்களில் ஆத்மஸமர்ப்பணம்செய்தும், அவரையே புஷ்பமுதலியஉபசாரங்களினால் பூஜித்துமிருப்பவன் எல்லாத்துயரங்களையும்கடந்தவனாவான். ஆதியும் அந்தமும் இல்லாதவரும் எங்கும்வியாபித்திருப்பவரும் எல்லாலோகங்களுக்கும் முதற்கடவுளும் எல்லாலோகங்களையும் ப்ரத்யக்ஷமாகப்பார்ப்பவரும் வேதங்களினால்உரைக்கப்படுகிறவரும் எல்லாத்தர்மங்களையும் அறிந்தவரும் தம்மைத்துதிப்பவருக்குப்புகழ்ப்பெருகச்செய்பவரும் உலகங்களுக்கு ஸ்வாமியும் சிறந்தபொருளும் எல்லாப்பிராணிகளின்இருப்புக்கும் காரணமும் அநுக்ரஹிப்பவருமான பகவானே எப்பொழுதும் துதிப்பதனாலே மாத்ரமும் பக்தியோகம்முழுவதும் பூர்த்தியாகாவிடினும் ஸம்ஸாரதுக்கங்களெல்லாவற்றையும் கடந்தவனாவான். தாமரைக்கண்ணரை மனிதன் பக்தியுடன் ஸ்தோத்திரங்களினால் எக்காலமும்ஆராதிப்பது

எல்லாத்தர்மங்களிலும் மிகச்சிறந்ததர்மமென்று நான் நினைத்திருக்கிறேன். எவர் தாம் ப்ரகாசிப்பதலும் மற்றவற்றையெல்லாம்ப்ரகாசிக்கச்செய்வதலும் சிறந்தபேரொளியாயிருப்பவரோ, எவர் தேவர்களையும் ஆதவகளை எல்லாவற்றிலும் சிறந்தபெருந்தவமோ, எவர் அளவற்றகல்யாணகுணங்களாலும் எங்கும் வ்யாபித்திருப்பதனாலும் தமதுசக்தியினால் சும்மைச்சேர்ந்தவரைப் பெருகச்செய்வதனாலும் எல்லாவற்றிலும்சிறந்தபரப்ரம்மமாகிறாரோ, எவர்பரிசுத்தம்செய்வனவற்றுளெல்லாம் சிறந்தபரிசுத்தம்செய்பவரோ, எவர் மங்களத்ரவியங்களுளெல்லாம் சிறந்தமங்களத்ரவியமோ, எவர் எல்லாவற்றிற்கும் முடிவானபரமபுருஷார்த்தமோ, எவர்தேவர்க்கும்தேவதையோ, எவர் எல்லாப்பொருள்களுக்கும் எக்காலமும் அழியாததந்தையோ, எல்லாப்பொருள்களும்யுகங்களின்முதல்ஆரம்பமாகியஸ்ருஷ்டிகாலத்தில் எவரிடத்திலிருந்துஉண்டாகின்றனவோ, திரும்பவும் ப்ரளயகாலத்தில் எவரிடத்தில் லயமாகின்றனவோ உலகங்களுக்கு ஸ்வாமியும் உலகங்களைநடத்துகிறவருமாகிய அப்படிப்பட்ட விஷ்ணுவின் ஆயிரநாமங்களும், பாவங்களையும் அவற்றினால் வரும்பயத்தையும் வேரோடுகளைகின்றவை. அரசனே ! அவற்றை என்னிடம்கேள். மஹாத்மாவானபகவானுக்கு எந்தநாமங்கள் குணங்களாலும் செய்கைகளாலும் வந்தனவாகப் பிரவித்திபெற்றவையோ, ரிஷிகளால்ஈன்முகக் கீர்த்தனம்செய்யப்பட்டவையோ அவற்றை ஆத்மோஜ்ஜீவனத்திற்காக உனக்குச் சொல்வேன்.

வேதவ்யாஸர், ஸஹஸ்ரநாமத்தைக் கண்டறிந்த ரிஷி. அடியொன்றுக்கு எட்டு உயிரெழுத்துக்கள் அடங்கிய அனுஷ்டுப் என்னும் சந்தவில் இந்த ஸஹஸ்ரநாமரிருக்கிறது. இதற்குப் பகவானை விஷ்ணு, தேவதை. ' அம்ருதாம்சூத்பவ: ' என்பது இம்மந்திரத்துக்குப் பீஜம் (=ஆதாரம்.) ' தேவகீநந்தந: ' என்பது சக்தி. ' த்ரிஸாமா ' என்பது ஹ்ருதயம். ஸர்வதோஷ நிவாரணம் என்னும் ப்ரயோஜனத்தில் இம்மந்திரத்துக்கு உபயோகம். ஆயுதத்திற்கு எஃகுமுதலிய காரணம் பீஜமென்றும் மூனைசக்தியென்றும் அதன் நடு ஹ்ருதயம் என்றும் சொல்வதும் அதைச் சத்ருவதம் முதலிய கார்யங்களில் உபயோகிப்பதும் எப்படியோ அப்படியே மந்த்ரங்கள் எல்லாவற்றிற்கும் சொல்வதுவழக்கம்.புரம் வ்யூஹம் விபவம் என்னும் அவதாரங்களினால் ஏற்பட்ட நாமங்களில், புரஸ்வரூப நாமங்கள் முதலில் சொல்லப்படுகின்றன.

[1] விஸ்வம், (2) [2]விஷ்ணு, வஷட்காரர், பூதபவ்யபவத்ப்ரபு, பூதக்ருத், பூதப்ருத், பாவர், (8) பூதாத்மா, பூதபாவகர், (10) பூதாத்மா, பரமாத்மா, முக்தாநாம்பரமாகதி, அவ்யயர், (14) புருஷர், (15) ஸாக்ஷீ, க்ஷேத்ரஜ்ஞர், (17) [3]அக்ஷரர், யோகர், யோகவிதாம் நேதா, ப்ரதாநபுருஷேஸ்வரர், நாரஸிம்மவபு, (22) ஸ்ரீமாந், (23) கேசவர், புருஷோத்தமர், ஸர்வர், சர்வர், (27) சிவர், ஸ்தாணு, பூதாதி, நிதிரவ்யயர், ஸம்பவர், (32) பாவகர், பர்த்தா, ப்ரபவர், (35) ப்ரபு, (36) ஈஸ்வரர், ஸ்வயம்பு, சம்பு, (39) ஆதித்யர், (40) புஷ்கராக்ஷர், மஹாஸ்வநர், அநாதிநிதநர், (43) தாதா, (44) விதாதா, தாதுருத்தமர், அப்ரமேயர், ஹ்ருஷீகேசர், (48) பத்மநாபர், அமரப்ரபு, விஸ்வகர்மா, மநு, த்வஷ்டா, (53) ஸ்தவிஷ்டர், ஸ்தவிரர், (55) த்ருவர், அக்ராஹ்யர், சாஸ்வதர், (58) க்ருஷ்ணர், லோஹிதாக்ஷர், ப்ரதர்த்தநர், ப்ரபூதர், த்ரிககுத்தாமா (அல்லது த்ரிககுப்தாமா), பவித்ரம், மங்களம்பரம், ஈசாநர், (66) ப்ராணதர், (67) ப்ராணர், ஜ்யேஷ்டர், ஸ்ரேஷ்டர், (70) ப்ரஜாபதி, (71) ஹிரண்யகர்ப்பர், பூகர்ப்பர், (73) மாதவர், மதுஸூதநர், (75) ஈஸ்வரர், (76) விக்ரமீ, தந்வீ, மேதாவீ, விக்ரமர், க்ரமர், அநுத்தமர், துராதர்ஷர், (83) க்ருதஜ்ஞர், க்ருதி, ஆத்மவாந், ஸுரேசர், சரணர், சர்ம, விஸ்வரேதஸ், ப்ரஜாபவர், அஹஸ், (92) ஸவம்த்ஸர், வ்யாளர், ப்ரத்யயர், ஸர்வதர்சநர், (96) அஜர், ஸர்வேஸ்வரர், (98) விதாதர், விதாதி, [4]ஸர்வாதி, (101) அச்யுதர், வ்ருஷாகபி, (103) அமேயாத்மா, ஸர்வயோகவிநிஸ்ருதர், (105) வஸு, (106) வஸுமநஸ், (107) ஸத்யர், ஸமாத்மா, ஸம்மிதர், ஸமர், (111) அமோகர், புண்டரீகாக்ஷர், வ்ருஷகர்மா, வ்ருஷாக்ருதி, ருத்ரர், பஹுசிரஸ், பப்ரு, (118) விஸ்வயோநி, சுசிஸ்ரவஸ், அம்ருதர், சாஸ்வதஸ்தாணு, வராரோஹர், [5]மஹாதபஸ், ஸர்வகர், ஸர்வவித், (126) பாது, விஷ்வக்ஸேநர்,

---

1 இந்த நாமத்தினால் பூர்ணரென்று ஏற்படுகிறது; அளவற்ற பெரு விபூதிகளையுடையவராயிருப்பது முதலில் சொல்லவேண்டுமாதலின், இந்த நாமம் முதலிற்கூறப்பட்டது. (ப - பா)

2 முதலில் விபவாவதாரத்தில் அநுப்ரவேசித்திருப்பதைக் கூறுகிறது. (ப - பா)

3 இக்நாமத்தின் கடைசியில், 'ஏவச' என்பதில், 'ஏவ' என்பதனால் ஜீவனுக்கும் பரம்மத்துக்கும் வாஸ்தவத்தில் பேதமில்லாமையும், 'ச' என்பதனால் வ்யவஹாரத்தில் பேதமிருப்பதும் குறிப்பிக்கப்பட்டன. (ச - பா)

4 முதல்சதகம் முற்றிற்று.

5 இதுவரையிலும் பரஸ்வரூபம் பெரும்பாலும் குறிப்பிக்கப்பட்டது. இனி வ்யூஹம் கூறப்படுகிறது. அத்தவ்யூஹம் வாஸுதேவன் ஸங்கர்ஷணன்

ஜகார்த்தகர், [1]வேதர், (130) வேதவித், அவ்யங்கர், வேதாங்கர், (133) வேதவித், கவி, [2]லோகாத்யக்ஷர், ஸுராத்யக்ஷர், தர்மாத்யக்ஷர், க்ருதாக்ருதர், (139) சதுராத்மா, (140) சதுர்வ்யூஹர், சதுர்த்தம்ஷ்ட்ரர், சதுர்ப்புஜர், ப்ராஜிஷ்ணு, போஜநம், (145) போக்தா, (146) ஸஹிஷ்ணு, [3]ஜகதாதிஜர், (148) அநகர், விஜயர், ஜேதா, (151) விஸ்வயோநி, புநர்வஸு, உபேந்த்ரர், வாமநர், ப்ராம்சு, (156) அமோகர், (157) சுசி, ஊர்ஜிதர், அதீந்த்ரர், ஸங்க்ரஹர், ஸர்க்கர், த்ருதாத்மா, (163) நியமர், (164) யமர், வேத்யர், வைத்யர், ஸதாயோகீ, (168) வீரஹா, (169) மாதவர், மது, [4]அதீந்த்ரியர், மஹாமாயர், மஹோத்ஸாஹர், மஹாபலர், மஹாபுத்தி, மஹாவீர்யர், மஹாசக்தி, மஹாத்யுதி, (179) அநிர்த்தேஸ்யவபு, (180) ஸ்ரீமாந், (181) அமேயாத்மா, [5]மஹாத்ரித்ருத், மஹேஷ்வாஸர், மஹீபர்த்தா, (185) ஸ்ரீநிவாஸர், (186) ஸதாம்கதி, (187) அநிருத்தர், [6]ஸுராநந்தர், (189) கோவிந்தர், கோவிதாம்பதி, மரீசி, தமநர், ஹம்ஸர், (194) ஸுபர்ணர், [7]புஜகோத்தமர், ஹிரண்யநாபர், ஸுதபஸ், (198) பத்மநாபர், (199) ப்ரஜாபதி, [8], [9]அம்ருத்யு, (201) ஸர்வத்ருக், (202) வ்யாபிமர், ஸந்தாதா, ஸந்திமாந், ஸ்திரர், (206) அஜர், துர்மர்ஷணர்,

ப்ரத்யும்நன் அநிருத்தன் எனநான்குவகை. அவற்றுள், வாஸுதேவன் பரரூபத்தில்சேர்ந்ததாதலின் தனித்துச் சொல்லவேண்டியதில்லை. ஆதலால், இதற்குமேல் ஸங்கர்ஷணவ்யூஹம் சொல்லப்படுகிறது. (ப - பா.)

1 இனி ஸங்கர்ஷணவ்யூஹம் உலகங்களுக்குச் சாஸ்த்ரங்களைக்கொடுப்பதென்பது சொல்லப்படுகிறது. (ப - பா)

2 இதுமுதல் மூன்றுநாமங்கள் ஸர்வஜ்ஞரென்பதை விவரிப்பவை. (ப - பா)

3 இதுவரை, வ்யூஹங்கள் கூறப்பட்டன. இனி விபவாவதாரங்களில் மும்மூர்த்திகளில் ஒன்றுகிய விஷ்ணுஅவதாரம் கூறப்படுகிறது. (ப - பா)

4 இனி பரம், வ்யூஹம், விபவம் என்னும் மூன்றுவகை அவதாரங்களுக்கும் முக்கியமான ஆறுகுணங்களைச் சொல்வதன்பொருட்டுப் பரமாத்மஸ்வரூபம் தெளிவிக்கப்படுகிறது. (ப - பா)

5 இனி குணங்களுக்குத்தக்க செய்கைகள் கூறப்படுகின்றன. (ப - பா)

6 இனி அநேகஅவதாரங்களுக்கு வேராயுள்ள இந்த அநிருத்தாவதாரத்திலிருந்துவரும் ஹம்ஸாவதாரம் கூறப்படுகிறது. (ப - பா)

7 முன், 'பத்மநாபர், அமரப்ரபு' என்னுமிடத்தில் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களென்னும் வ்யூஹாவதாரங்களில் கடையான அநிருத்தரென்னும் பத்மநாபாவதாரம் கூறியது. இனி, விபவாவதாரங்களில் முதன்மையான விஷ்ணுவென்னும் பத்மநாபாவதாரம் சொல்லப்படுகிறது. (ப - பா)

8 இனி ஹரஹிம்மர்வதாரம் சொல்லப்படுகிறது. (ப - பா)

9 இரண்டாவதுசதகம் முற்றிற்று.

சாஸ்தா, விஸ்ருதாத்மா, ஸுராரிஹா, [1]குரூர்க்குருதமர், தாம, (213) ஸத்யர், ஸத்யபராக்ரமர், நிமிஷர், அநிமிஷர், ஸ்ரக்வீ, (218) வாசஸ்பதி, உதாரதீ, அக்ரணீ, க்ராமணீ, (222) ஸ்ரீமாந், ந்யாயர், நேதா, ஸமீரணர், ஸஹஸ்ரமூர்த்தா, விஸ்வாத்மா, ஸஹஸ்ராக்ஷர், ஸஹஸ்ரபாத், ஆவர்த்தநர், (231) நிவ்ருத்தாத்மா, ஸம்வ்ருதர், ஸம்ப்ரமர்த்தநர், அஹஸ்ஸம்வர்த்தகர், வஹ்நி, (236) அநிலர், தரணீதரர், ஸுப்ரஸாதர், ப்ரஸந்நாத்மா, விஸ்வஸ்ருக், விஸ்வபுக்விபு, ஸத்கர்த்தா, ஸத்க்ருதர், ஸாது, ஜஹ்நு, நாராயணர், நர, அஸங்க்யேயர், அப்ரமேயாத்மா, விசிஷ்டர், சிஷ்டக்ருத், (252) சுசி, விக்தார்த்தர், விக்தஸங்கல்பர், விக்திதர், விக்திஸாதநர், வ்ருஷாஹீ, வ்ருஷபர், (259) விஷ்ணு, வ்ருஷபர்வா, வ்ருஷோதரர், வர்த்தநர், வர்த்தமாநர், விவிக்தர், ஸ்ருதிஸாகரர், ஸுபுஜர், (267) துர்த்தரர், வாக்மீ, மஹேந்த்ரர், வஸுதர், (271) வஸு, [2]நைகரூபர், ப்ருஹத்ரூபர், சிபிவிஷ்டர், ப்ரகாசநர், ஓஜஸ்தேஜோத்யுதிதரர், ப்ரகாசாத்மா, ப்ரதாபநர், (279) ருத்தர், ஸ்பஷ்டாக்ஷரர், மந்த்ர, சந்த்ராம்ஸு, பாஸ்கரத்யுதி, அம்ருதாம்ஸூத்பவர், (285) பாது, சதபிந்து, ஸுரேஸ்வரர், ஔஷதம், ஜகதஸ்ஸேது, ஸத்யதர்மபராக்ரமர், பூதபவ்யபவந்நாதர், (292) பவநர், (293) பாவநர், (294) அநலர், காமஹா, காமக்ருத், (297) காந்தர், காமர், காமப்ரதர், (300) [3]ப்ரபு, [4]யுகாதிக்ருத், யுகாவர்த்தர், நைகமாயர், மஹாசநர், அத்ருச்யர், வ்யக்தரூபர், ஸஹஸ்ரஜித், அநந்தஜித், இஷ்டோவிசிஷ்டர், சிஷ்டேஷ்டர், சிகண்டீ, நஹுஷர், வ்ருஷர், [5]க்ரோதஹா, க்ரோதந்ருத், (316) கர்த்தா, விஸ்வபாஹு, (318) மஹீதரர், (319) அச்யுதர், ப்ரதிதர், (321) ப்ராணர், (322) [6]ப்ராணதர், வாஸவாநுஜர், அபாம்நிதி, அதிஷ்டாநர், அப்ரமத்தர், ப்ரதிஷ்டிதர், ஸ்கந்தர், ஸ்கந்ததரர், துர்யர், வரதர், (332) வாயுவாஹநர், (333) [7]வாஸுதேவர், ப்ருஹத்பாநு, (335) ஆதிதேவர், புரந்தரர், (337) அசோகர், தாரணர், (339) [8]தாரர், (340)

---

1 இனி மத்ஸ்யாவதாரம் கூறப்படுகிறது. (ப - பா)

2 இனி, மேற்சொன்ன மஹிமைக்குத் தகுதியாக விசுவரூபம் கூறப்படுகிறது. (ப - பா)

3 மூன்றுவதுசதகம் முற்றிற்று.

4 இனி அளவில்லாத ஆச்சரியத்தைச் சொல்லுவதற்காக, ஆலிலைமேல் பள்ளிக்கொண்ட அவதாரம் சொல்லப்படுகிறது. (ப - பா)

5 இனி ப்ரசுராமாவதாரத்தைக் குறிப்பிடும் நாமங்கள். (ப - பா)

6 இனி கூர்மாவதாரத்தைக் குறிப்பிடும் நாமங்கள். (ப - பா)

7 இனி பன்னிரண்டுநாமங்கள் பரஸ்வரூபத்தைக்குறிக்கின்றவை. (ப - பா)

8 இவ்வேழுநாமங்களினால் வினோயாடும்தன்மை கூறப்பட்டது. (ப - பா)

சூரர். (341) சௌரி, ஜனேச்வரர், அநுகூலர், சதாவர்த்தர், [1]பத்மீ, பத்மநிபேக்ஷணர், (347) பத்மநாபர், அரவிந்தாக்ஷர், பத்மகர்ப்பர், சரீரப்ருத், [2]மஹர்த்தி,(352) ருத்தர், வ்ருத்தாத்மா, மஹாக்ஷர், கருடத்வஜர், அதுலர், சரபர், (358) பீமர், ஸமயஜ்ஞர், (360) [3]ஹவிஸ், (361) ஹரி, [4]ஸர்வலக்ஷணலக்ஷண்யர், லக்ஷ்மீவாந், ஸமிதிஞ்சயர், விக்ஷரர், ரோஹிதர், (367) மார்க்கர், ஹேது, தாமோதரர், ஸஹர், (371) மஹீதரர், மஹாபாகர், வேகவாந், அமிதாசநர், (375) உத்பவர், க்ஷோபணர், தேவர், ஸ்ரீகர்ப்பர், பரமேச்வரர், கரணம், காரணர், (382) கர்த்தா, விகர்த்தா, (384) கஹநர், குஹர், [5]வ்யவஸாயர், வ்யவஸ்தாநர், ஸம்ஸ்தாநர், ஸ்தாநதர், (390) த்ருவர், [6]பரர்த்தி, பரமஸ்பஷ்டர், துஷ்டர், புஷ்டர், சுபேக்ஷணர், ராமர், விராமர், விரதர், (399) மார்க்கர், நேயர், [7]நயர், அநயர், (402) வீரர், சக்திமதாம்ச்ரேஷ்டர், தர்மம், தர்மவிதுத்தமர், வைகுண்டர், (407) புருஷர், (408) ப்ராணர், (409) ப்ராணதர், ப்ரணமர், ப்ருது, (412) ஹிரண்யகர்ப்பர், சத்ருக்நர், வ்யாப்தர், வாயு, அதோக்ஷஜர், ருது, ஸுதர்சநர், காலர், பரமேஷ்டீ, [8]பரிக்ரஹர், [9]உக்ரர், (423) ஸம்வத்ஸரர், (424) தக்ஷர், விச்ராமர், விச்வதக்ஷிணர், விஸ்தாரர், ஸ்தாவரஸ்தாணு, (429) ப்ரமாணர், பீஜமவ்யயம், அர்த்தர், அநர்த்தர், மஹாகோசர், மஹாபோகர், மஹாதநர், (436) அநிர்விண்ணர், (437) ஸ்தவிஷ்டர், பூதார்மயூபர், மஹாமகர், நக்ஷத்ரநேமி, நக்ஷத்ரீ, க்ஷமர்,

---

1 இதுவரை வாஸுதேவஸ்வரூபத்தின் குணங்கள் விவரிக்கப்பட்டன. இனி, அதன் திவ்யமங்களவிக்ரஹத்தின் குணங்கள் கூறப்படுகின்றன. (ப-பா)

2 இனி பகவானுடைய விபூதிகளின்சிறப்பு விவரிக்கப்படுகிறது. (ப-பா)

3 'ஹவிர்ஹரி' என ஒன்றாகக்கொண்டு, 'இஷ்டர்' எனவும், 'விசிஷ்டர்' எனவும் இரண்டாகக் கொள்வதுமுண்டு. (ப - பா)

4 இனி லக்ஷ்மீபதிமூர்த்தி சொல்லப்படுகிறது. (ப - பா)

5 இனி கோளகங்களுக்கு ஆதாரமான த்ருவமூர்த்தி சொல்லப்படுகிறது. (ப - பா)

6 இனி ம்ருதஸஞ்சீவனமான ராமசரிதம் கூறப்படுகிறது. (ப - பா)

7 நான்காவதுசதகம் முற்றிற்று ; இந்தச்சதகத்தில் ஒருநாமம் அதிகப்படுகிறது.

8 எல்லாவற்றிலும் சிறந்தபெருமையையுடையவர் மிக்க எளியவரோடும் வேறுபாடின்றிக் கலந்திருப்பதாகிய ஸௌசீல்யமென்னும் குணதிசயம் இவ்வவதாரத்தில் தலையெடுத்திருப்பதென்று குறிப்பிக்கப்பட்டது. (ப - பா)

9 இனி, தமது நற்குணங்களுக்கு வசப்படாத துஷ்டர்களை வசப்படுத்துவதாகிய ஸம்ஹாரஅதிகாரத்தை வகித்துப் பாதாளத்தில் சயனித்திருக்கும் கல்கி அவதாரம் கூறப்படுகிறது. (ப - பா)

(444) க்ஷாமர், ஸமீஹநர், (446) யஜ்ஞர், இஜ்யர், மஹேஜ்யர், [1]க்ரது, ஸத்ரம், (451) [2]ஸதாம்கதி, ஸர்வதர்சீ, (453) நிவ்ருத்தாத்மா, (454) ஸர்வஜ்ஞர், ஜ்ஞாநமுத்தமம், (456) ஸுவ்ரதர், ஸுமுகர், ஸுக்ஷிமர், ஸுகோஷ்டர், (460) ஸுகதர், ஸுஹ்ருத், மஹேஹரர், ஜிதக்ரோதர், வீரபாஹு, விதாரணர், ஸ்வாபநர், ஸ்வவசர், வ்யாபீ, நைகாத்மா, நைககர்மக்ருத், வத்ஸரர், வத்ஸலர், வத்ஸீ, ரத்நகர்ப்பர், தநேஸ்வரர், தர்மகுப், தர்மக்ருத், தர்மீ, ஸத், அஸத், க்ஷரம், (482) அக்ஷரர், அவிஜ்ஞாதா, ஸஹஸ்ராம்சு, (485) விதாதா, க்ருதலக்ஷணர், கபஸ்திநேமி, ஸத்வஸ்தர், (489) ஸிம்மர், பூதமஹேஸ்வரர், (491) ஆதிதேவர், மஹாதேவர், தேவேசர், தேவப்ருத், குரு, உத்தரர், (497) கோபதி, கோப்தா, ஜ்ஞாநகம்யர், [3]புராதநர், சரீரபூதப்ருத், (502) போக்தா, கபீந்த்ரர், பூரிதக்ஷிணர், ஸோமபர், அம்ருதபர், ஸோமர், புருஜித், புருஸத்தமர், விஸயர், ஜயர், ஸத்யஸந்தர், தாசார்ஹர், ஸாத்வதாம்பதி, ஜீவர், விஸயிதா, (517) ஸாக்ஷீ, முகுந்தர், (519) அமிதவிக்ரமர், அம்போநிதி, அநந்தாத்மா, மஹோததிசயர், அந்தகர், (524) அஜர், மஹார்ஹர், ஸ்வாபாவ்யர், ஜிதாமித்ரர், ப்ரமோதநர், [4]ஆநந்தர், நந்தநர், நந்தர், ஸத்யதர்மா, த்ரிவிக்ரமர், மஹர்ஷி, கபிலாசார்யர், (536) க்ருதஜ்ஞர், மேதிநீபதி, த்ரிபதர், த்ரிதசாத்யக்ஷர், மஹாஸ்ருங்கர், க்ருதாந்தக்ருத், மஹாவராஹர், (543) கோவிந்தர், ஸுஷேணர், கநகாங்கதீ, குஹ்யர், கபீரர், (548) கஹநர், குப்தர், சக்ரகதாதரர், வேதஸ், ஸ்வாங்கர், அஜிதர், (554) க்ருஷ்ணர், த்ருடர், ஸங்கர்ஷணர், (557) அச்யுதர், வருணர், வாருணர், வ்ருக்ஷர், (561) புஷ்கராக்ஷர், மஹாமநஸ், பகவாந், பகஹா, நந்தீ, வநமாலீ, ஹலாயுதர், (568) ஆதித்யர், [5]ஜ்யோதிராதித்யர், (570) ஸஹிஷ்ணு, கதிஸத்தமர், ஸுதந்வா, கண்டபரசு, தாருணர், [6] த்ரவிணப்ரதர், திவிஸ்ப்ருக், (577) ஸர்வத்ருக், வ்யாஸர், (579)

---

1 இதற்குமுன் தேவயஜ்ஞும் பித்ருயஜ்ஞும் பூதயஜ்ஞும் மநுஷ்ய யஜ்ஞும் ப்ரம்மயஜ்ஞும் என்னும் ஐந்துமஹாயஜ்ஞங்களும் ஔபாஸநமுதலிய பாகயஜ்ஞங்களும் அக்நிஹோத்ரமுதலிய ஹவிர்யஜ்ஞங்களும், 'யஜ்ஞ' என்கிறபெயரினால் சொல்லப்பட்டன. (ப - பா)

2 ப்ரவ்ருத்திதர்மத்திலிருப்பவர்களாலும் ஆராதிக்கப்படுகிறவர் என்பது இதுவரை கூறப்பட்டது. இனி, நிவ்ருத்திதர்மத்திலிருப்பவர்களுக்கும் அவரே கதி என்பது கூறப்படுகிறது. (ப - பா)

3 ஐந்தாவதுசதகம் முற்றிற்று.

4 இனி கபிலமூர்த்தியைச் சொல்லுவது. (ப - பா)

5 இனி நாராயணாவதாரம் சொல்லப்படுகிறது. (ப - பா)

6 இனி வ்யாஸாவதாரம் சொல்லப்படுகிறது. (ப - பா)

வாசஸ்பதி, அயோநிஜர், த்ரிஸாமா, ஸாமகர், ஸாம, நிர்வாணம், பேஷஜம், பிஷக், ஸந்யாஸக்ருத், சமர், சாந்தர், நிஷ்டா, சாந்தி, பராயணர், (593) சுபாங்கர், சாந்திதர், (595) ஸ்ரஷ்டா, (596) குமுதர், குவலேசயர், கோஹிதர், (599) கோபதி, (600) [1]கோப்தா, வ்ருஷபாக்ஷர், வ்ருஷப்ரியர், அநிவர்த்தீ, (604) நிவ்ருத்தாத்மா, ஸம்க்ஷேப்தா, க்ஷேமக்ருத், (607) சிவர், ஸ்ரீவத்ஸவக்ஷஸ், ஸ்ரீவாஸர், ஸ்ரீபதி, ஸ்ரீமதாம்வர், ஸ்ரீதர், ஸ்ரீசர், (614) ஸ்ரீநிவாஸர், ஸ்ரீநிதி, ஸ்ரீவிபாவநர், ஸ்ரீதரர், ஸ்ரீகர், ஸ்ரேயஸ்ஸ்ரீமாந், லோகத்ராத்ரயாஸ்ரயர், ஸ்வக்ஷர், ஸ்வங்கர், சதாநந்தர், நந்தி, ஜ்யோதிர்க்கணேஸ்வரர், விஜிதாத்மா, விதேயாத்மா, ஸத்கீர்த்தி, சிந்நஸம்சயர், உதீர்ணர், ஸர்வதஸ்சக்ஷு, அநீசர், சாஸ்வதஸ்திரர், பூசயர், பூஷணர், பூதி, (637) அசோகர் (அல்லது விசோகர்,) சோகநாசநர், அர்ச்சிஷ்மாந், அர்ச்சிதர், கும்பர், விசுத்தாத்மா, விசோதநர், (644) [2]அநிருத்தர், அப்ரதிரதர், ப்ரத்யும்நர், (647) அமிதவிக்ரமர், காலநேமிநிஹா, (649) சௌரி, (650) சூர், சூரஜநேஸ்வரர், த்ரிலோகாத்மா, த்ரிலோகேசர், (654) கேசவர், கேசிஹா, (656) ஹரி, காமதேவர், காமபாலர், காமீ, (660) [3]காந்தர், (661) க்ருதாகமர், (662) அநிர்த்தேஸ்யவபு, (663) விஷ்ணு, (664) வீரர், அநந்தர், தநஞ்சயர், ப்ரம்மண்யர், ப்ரம்மக்ருத்ப்ரம்மா, ப்ரம்ம, ப்ரம்மவிவர்த்தநர், ப்ரம்மவித், ப்ராம்மணர், ப்ரம்மீ, ப்ரம்மஜ்ஞர், ப்ராம்மணப்ரியர், மஹாக்ரமர், (677) மஹாகர்மா, மஹாதேஜஸ், மஹோரகர், மஹாக்ரது, மஹாயஜ்வா, மஹாயஜ்ஞர், மஹாஹவிஸ், [4]ஸ்தவ்யர், ஸ்தவப்ரியர், ஸ்தோத்ரம், ஸ்துதர், ஸ்தோதா, ரணப்ரியர், பூர்ணர், பூரயிதா, (692) புண்யர், புண்யகீர்த்தி, அநாமயர், மநோஜவர், தீர்த்தகரர், [5]வஸுரேதஸ், (698) வஸுப்ரதர், (699) வஸுப்ரதர், (700) [6]வாஸுதேவர், (701) வஸு, (702) வஸுமநஸ், (703) ஹவிஸ், ஸத்கதி, ஸத்க்ருதி, ஸத்தா, ஸத்பூதி, ஸத்பராயணர், சூரஸேநர், யதுஸ்ரேஷ்ட

---

1 ஆறுவது சதகம் முற்றிற்று.

2 இனி சிலகேஷத்திரங்களில் முன்சொன்ன வ்யூஹாவதாரங்களிலும் விபவாவதாரங்களிலும் சிலஇருப்பதைக் கூறுவது. (ப - பா)

3 இப்படியே இனிமேலும் நாமங்களின் அர்த்தங்களைகொண்டு அந்த அந்த கேஷத்ரங்களை ஊகித்துக்கொள்க. இனி, சக்தீசரென்னும் அவதாரம் கூறப்படுகிறது. (ப - பா)

4 மனத்தினலும் காயத்தினலும் ஆராதிக்கப்படுவது சொல்லியாயிற்று ; இனி வாக்கினல் ஆராதிக்கப்படுவது கூறப்படுகிறது. (ப - பா)

5 இனி க்ருஷ்ணவதாரம் சொல்லப்படுகிறது. (ப - பா)

6 ஏழாவதுசதகம் முற்றிற்று.

டர், ஸங்கிவாஸர், ஸுயாமுகர், பூதாவாஸர், (714) வாஸுதேவர், ஸர்வாஸுநிலயர், (716) அசலர், தர்ப்பஹா, தர்ப்பதர், அக்ருப்தர், (720) துர்த்தரர், (721) அபராஜிதர், விச்வமூர்த்தி, மஹாமூர்த்தி, தீப்தமூர்த்தி, அமூர்த்திமான், அநேகமூர்த்தி, அவ்யக்தர், சதமூர்த்தி, சதாநநர், ஏகர், நைகர், ஸ, வ, க, ஸ்மி, பத், தத், பதமநுத்தமம், லோகபந்து, லோகநாதர், (741) மாதவர், பக்தவத்ஸலர், ஸுவர்ணவர்ணர், ஹேமாங்கர், வராங்கர், சந்தநாங்கதி, (747) வீரஹா, விஷமர், சூந்யர், க்ருதாகிஸ், அசலர், சலர், அமாநீ, மாநதர், மாந்யர், லோகஸ்வாமீ, க்ரிலோகக்ருத், ஸுமேதஸ், மேதஜர், தந்யர், ஸத்யமேதஸ், தராதரர், தேஜோவ்ருஷர், த்யுதிதரர், ஸர்வசஸ்த்ரப்ருதாம்வரர், ப்ரக்ரஹர், நிக்ரஹர், வ்யக்தர், நைகஸ்ருங்கர், கதாக்ரஜர், சதுர்மூர்த்தி, சதுர்ப்பாஹு, (773) சதுர்வ்யூஹர், சதுர்க்கதி, (775) சதுராத்மா, சதுர்ப்பாவர், சதுர்வேதவித், ஏகபாத், ஸமாவர்த்தர், (780) நிவ்ருத்தாத்மா, துர்ஜயர், துரதிக்ரமர், துர்லபர், துர்கமர், துர்க்கர், துராவாஸர், [1]துராரிஹா, (788) சுபாங்கர், லோகஸாரங்கர், ஸுதந்து, தந்துவர்த்தநர், இந்த்ரகர்மா, (793) மஹாகர்மா, க்ருதகர்மா, (795) க்ருதாகமர், (796) உத்பவர், ஸுந்தரர், ஸுந்தர், ரத்நநாபர், [2]ஸுலோசநர், அர்க்கர், வாஜஸநி, ச்ருங்கீ, ஜயந்தர், ஸர்வவிஜ்ஜயீ, ஸுவர்ணபிந்து, (807) அக்ஷோப்யர், ஸர்வவாகீச்வரேச்வரர், மஹாஹ்ரதர், மஹாகர்த்தர், [3]மஹாபூதர், மஹாநிதி, (813) குமுதர், குந்தரர். குந்தர், பர்ஜந்யர், (817) பவநர், (818) அநிலர், அமிதாசர், அம்ருதவபு, (821) ஸர்வஜ்ஞர், ஸர்வதோமுகர், ஸுலபர், (824) ஸுவ்ரதர், (825) ஸித்தர், [4]சத்ருஜிச்சத்ருதாபநர், ந்யக்ரோதோதும்பரர், [5]அஸ்வத்தர், சாணூராந்த்ரநிஷூதநர், ஸஹஸ்ரார்ச்சிஸ், ஸப்தஜிஹ்வர், ஸப்ததிதஸ்,

---

1 அணுகவொண்ணுமலிருக்கும்தன்மை அவர்திருவடி பற்றுதிருக்கும் பரிவிகள்விஷயமென்று விலக்குவதற்காக இனி புத்தாவதாரம் கூறப்படுகிறது. (ப - பா)

2 எட்டாவதுசதகம் முற்றிற்று.

3 இதுவரை தம்கட்டளையைக்கடந்த அஸுரர்களை நிக்ரஹிக்கும் தன்மை கூறப்பட்டது. இனி, தமதுவிதியை அநுஸரிக்கும் தேவத்தன்மைபெற்ற சான்றோர்களை அநுக்ரஹிக்கும்தன்மை கூறப்படுகிறது. (ப - பா)

4 இதுவரை நேராகஉள்ளஅவதாரங்கள் தெரிவிக்கப்பட்டன. இனி, தமது அநுப்ரவேசத்தினால் சிறப்புற்றவர்கள்முகமாக லோகரக்ஷணம்செய்ததுகூறப்படுகிறது. (ப - பா)

5 இனி தமது அங்கத்தினராகிய தேவர்களைக்கொண்டு உலகத்தை நடத்துவதைக்கூறுவது; இதுதான் ப்ராதுர்ப்பாவாந்தரமென்னப்படும் அவதாரம். (ப - பா)

ஸப்தவாஹநர், அமூர்த்தி, (835) அநகர், அசிந்த்யர், பயக்ருத், பய நாசநர், [1]அணு, ப்ருஹத், க்ருசர், ஸ்தூலர், குணப்ருத், நிர்க்குணர், மஹாந், அத்ருதர், ஸ்வத்ருதர், ஸ்வாஸ்யர், ப்ராக்வம்சர், வம்சவர்த் தநர், பாரப்ருத், கதிதர், யோகீ, யோகீசர், ஸர்வகாமதர், ஆஸ்ரமர், ஸ்ரமணர், (858) க்ஷாமர், (859) ஸுபர்ணர், (860) வாயுவாஹநர், தநுர்த்தரர், சதுர்வேதர், தண்டர், தமயிதா, அதமர், (866) அபரா ஜிதர், ஸர்வஸஹர், நியந்தா, (869) நியமர், (870) யமர், [2]ஸத்வவாந், ஸாத்விகர், (873) ஸத்யர், ஸத்யதர்மபராயணர், அபிப்ராயர், ப்ரியார் ஹர், அர்ஹர், ப்ரியக்ருத், ப்ரீதிவர்த்தநர், விஹாயஸகதி, ஜ்யோதி, ஸுருசி, ஹுதபுக்விபு, ரவி, விரோசநர், ஸூர்யர், (887) ஸவிதா, ரவிலோசநர், அநந்தஹுதபுக்போக்தா, (890) ஸுகதர், நைகதர், அக்ரஜர், (893) அநிர்விண்ணர், ஸதாமர்ஷீ, லோகாதிஷ்டாநர், அத் புதர், ஸநாத், ஸநாதநதமர், கபிலர், [3]கபிரவ்யயர், ஸ்வஸ்திதர், ஸ்வஸ்தி க்ருத், ஸ்வஸ்தி, ஸ்வஸ்திபுக், ஸ்வஸ்திதக்ஷிணர், அரௌத்ரர், குண்டலீ, (908) சக்ரீ, (909) விக்ரமீ, ஊர்ஜிதசாஸநர், சப்தாதி கர், சப்தஸஹர், சிசிரர், சர்வரீகரர், அக்ரூரர், பேசலர், (917) தக்ஷர், தக்ஷிணர், க்ஷமிணாம்வரர், வித்வத்தமர், வீதபயர், புண்யஸ்ர வணகீர்த்தநர், உத்தாரணர், துஷ்க்ருதிஹா, (925) புண்யர், துஸ் வப்நநாசநர், (927) வீரஹா, ரக்ஷணர், ஸந்தர், ஜீவநர், பர்யவஸ்திதர், அநந்தரூபர், அநந்தஸ்ரீ, ஜிதமந்யு, பயாபஹர், சதுரஸ்ரர், கபிராத்மா, விதிசர், வ்யாதிசர், திசர், அநாதி, பூர்ப்புவர், லக்ஷ்மீ, ஸுவீரர், ருசிராங்கதர், [4]ஜநர், ஜநஜந்மாதி, (948) பீமர், பீமபராக்ரமர், ஆதார நிலயர், (951) தாதா, புஷ்பஹாஸர், ப்ரஜாகரர், ஊர்த்வகர், ஸத்பதா சாரர், (956) ப்ராணதர், ப்ரணவர், பணர், (959) ப்ரமாணர், ப்ராண நிலயர், ப்ராணத்ருத், ப்ராணஜீவநர், தத்வம், தத்வவித், ஏகாத்மா, ஜந்மம்ருத்யுஜராதிகர், பூர்ப்புவஸ்வஸ்தரு, (968) தாரர் (969) ஸவிதா, ப்ரபிதாமஹர், (971) யஜ்ஞர், யஜ்ஞபதி, யஜ்வா, யஜ்ஞாங் கர், யஜ்ஞவாஹநர், யஜ்ஞப்ருத், யஜ்ஞக்ருத், யஜ்ஞீ, யஜ்ஞபுக்,

---

1 இனி அணிமாமுதலிய அஷ்டைசுவரியங்கள் கூறப்படுகின்றன. (ப-பா)

2 இதுவரையில் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் கடத்துவது கூறப்பட்டது. இனி, ஒளியும் ஸுகமும் எளிமையும் உள்ளதாதலின் மோக்ஷத்துக்குக்காரணமான ஸத்வகுணத்துக்கு அவர் நேரே தலைமையாயிருப் பது கூறப்படுகிறது. (ப - பா)

3 ஒன்பதாவது சதகம் முற்றிற்று

4 இனி பகவானுடைய செய்கைகளெல்லாவற்றிற்கும் ப்ரயோஜனம் கூறப்படுகிறது. (ப - பா)

யஜ்ஞஸாதகர், யஜ்ஞாங்தக்ருத், யஜ்ஞகுஹ்யர், அங்கம், அங்கர்தர் [1], ஆத்மயோநி, ஸ்வயஞ்சாதர், வைகாநர், ஸாமகாயகர், தேவகீநந்தநர், (990) ஸ்ரஷ்டா, க்ஷிதீசர், பாபநாசநர், [2]சங்கப்ருத், நந்தகீ, (995) சக்ரீ, சார்ங்கதந்வா, கதாதரர், ரதாங்கபாணி, (999) அக்ஷோப்யர், [3]ஸர்வப்ரஹரணாயுதர்.

இப்படி எல்லாக்குற்றங்களும் ஒழிந்ததும் காரணமும் எண்ணும்எல்லையும்கடந்து எல்லாவற்றிலும் உயர்ந்தமங்களமூமான திவ்யாத்மஸ்வரூபம், திவ்யமங்களவிக்ரஹம், திருக்கல்யாண குணங்கள், மஹிமை,செய்கைகள்,எங்கும்தடைப்படாதாஸ்வரத்தன்மை,யாவரும் கலந்துபழகக்கூடியஎளிமை, ஆபத்திற்குதவும்தன்மை,வேண்டினவர் வேண்டினவற்றையெல்லாம் அளிக்கும் கல்பகவிருக்ஷமாயிருக்கும் ஔதார்யம் இவையெல்லாம்பொருந்தினவரும் சரணுகதர்களுக்கு ஒரேஉயிர்த்தோழரும் ஸ்ரீபதியுமான பகவான் புருஷோத்தமரை ஆஸ்ரயித்தவர்களுக்கு எல்லாச்செல்வச்சேர்க்கைகளும்நீங்காமல்வளருமென்பது இவ்வாயிரநாமங்களினாலும் தெரிவிக்கப்பட்டது. (ப-பா)

---

1 'இங்கு 'ஏவ' என்பது ஜகத்தெல்லாம் போக்த்ருரூபமாகவும் போக்ய ரூபமாகவும் இருக்குமென்று தெரிவிப்பதற்காக; 'ச' என்பது, உலகத்தி லுள்ள சொற்களனைத்தும்சேர்ந்து பரமாத்மாவைச்சொல்லுமென்பதற்காக' என்பது (ச - பா)

2 இனி, தமது பரமேசுவரத்தன்மைக்கு அதிகுறிகளான திவ்யாயுதங்கள் கூறப்படுகின்றன. (ப - பா)

3 பத்தாவது சதகம் முற்றிற்று.

ஸர்வப்ரஹரணாயுத: என்பதை இருமுறைசொல்லி, 'ஓம்நம:' என்று முடிக்கவேண்டும். இரண்டுமுறைசொல்வது நிரந்தமுடிவைத் தெரிவிக்கிறது. 'ஓம்' என்பது மங்களக்குறிப்பு. 'நம:' என்பது பணிவைக்காட்டுவது. 'ஓம்' என்பது, 'அத' என்பதுஇவ்விரண்டும் ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் பிரம்மதேவரின்கழுத்தைப்பிளந்துகொண்டு வெளிப்பட்டன. ஆதலால், இவ்விரண்டுசொற்களும் மங்களகரமானவை. எதில் முதலில் விஷ்ணு நமஸ்காரம் செய்யப்படுகிறதோ, அதுதான் நல்லலக்கணம்; அதுதான் நல்ல சுகந்தரம்; அதுதான் சுபதினம்; அதுதான் கிரியைக்குச்சுத்தம். இங்கு, முதலில்என்று சொன்னது முடிவில்நமஸ்காரம்செய்வதையும் சேர்த்துக் கொள்ளும் கருத்துள்ளது. நமஸ்காரம்செய்வதற்கு முன்னமே அதன்பலன் வந்துவிடுமென்று தெரிவிப்பதற்காக முடிவிலும்நமஸ்கரிப்பது சிஷ்டாசாரம். திருஷ்ணனுக்குச்செய்த ஒருநமஸ்காரமும் பத்து அசுவமேதயாகங்கள்செய்து அவபிருத ஸ்நானம் செய்ததற்குச் சமானம். பத்து அசுவமேதயாகங்கள்செய்த வனும் திரும்பிஜனிப்பான். திருஷ்ணனைநமஸ்கரிப்பது திரும்பி ஜனிக்க வொட்டாது. காயம்பூதிறமுள்ளவரும் [illegible]தாம்பழம்தரித்தவரும் ஸ்வரூப ஸ்வபாவங்கள் மாறுமலிருப்பவருமான கோவிந்தரை நமஸ்கரிப்பவர்களுக்குப் பயமில்லை. மூன்றுலோகங்களுக்கும் அதிபதியும் ஒப்பற்றமஹிமையுள்ளவரும் ஸர்வசக்தரும் ஸர்வேசுவருமானபகவானைச் சிறிது தலைவணங்கினாலும், மனிதனுக்குப் பல்லஜன்மங்களிலும் ப்ரளயங்களிலும் யுகங்களிலும் உண்டான பாவங்களனைத்தும் உடனே ஒழிந்துவிடும். (ச - பா)

பஞ்சபூதங்களின்சேர்க்கையாகிய வைஜயந்தியென்னப்படும் வன மாலையை அணிந்தவரும் கதை, சார்ங்கம், சங்கம், சக்ரம், நந்தகமென் னும்கத்தி இவ்வாயுதங்களைத்தரிப்பவரும் ஸர்வவியாபியும் எல்லாவற் றையும்தமக்குள்வைத்துக்கொண்டும், எல்லாவற்றுள்ளும்தாம்அந்தர் யாமியாகப்பிரவேசித்துமிருப்பவருமாகிய ஸ்ரீமந்நாராணர் காப்பாற் றக்கடவர். நாமகீர்த்தனம்செய்யத்தகுந்தவரும் மஹிமைபொருந்தின வருமானகேசவரது திவ்யநாமங்கள் ஆயிரமும் ஒன்றும்விடாமல் கூறப்பட்டன.

இந்த ஸஹஸ்ரநாமத்தை நித்தியமாகக்கேட்பவனும், [1]கீர்த்தனம் செய்பவனுமாகிய மனிதன் இம்மையிலும் [2] மறுமையிலும்யாதொரு கெடுதலையும் அடையான்; ப்ராம்மணன் வேதாந்தஜ்ஞானம்பெற்றவ னாவான்; க்ஷத்ரியன் வெற்றிபெறுவான்; வைசியன் செல்வம் நிரம்பினவனாவான்; சூத்ரன் ஸுகம்பெறுவான்; தர்மத்தைவிரும்பு கிறவன் தர்மத்தையடைவான்; பொருளைவிரும்புகிறவன் பொருளை அடைவான்; போகங்களைவிரும்புகிறவன் போகங்களையடைவான்; ஸந்ததிகளைவிரும்புகிறவன் ஸந்ததிகளையடைவான். எவன் நித்யமும் தூங்கியெழுந்தபிறகு ஸ்நானமுதலியனசெய்து பரிசுத்தனாகிப் பக்தி யுடன் பகவானிடத்தில் மனத்தைச்செலுத்தி வாஸுதேவருடைய இவ்வாயிரம்நாமங்களையும் நன்றாகக்கீர்த்தனம்செய்வானோ அவன் பெரும்புகழையும் மனிதர்களில் முதன்மையாகவிருத்தலையும் அழி யாத செல்வத்தையும் எல்லாவற்றிலும் உயர்ந்தநிரேயஸாகியமோக்ஷ த்தையும் பெறுவான். ஒரிடத்திலும் அவனுக்குப் பயம் இல்லை. அவன் சக்தியையும் உத்ஸாஹத்தையும் அடைவான்; நோயற்ற வனும் சிறந்தஒளியும் வன்மையும் அழகும் குணங்களும் பொருந் தினவனுமாவான். பிணியில்லாதிருந்துகிறவன் பிணிநீங்கினவனா வான். சிறையில்அடைபட்டவன் சிறையிலிருந்துவிடுபடுவான். பய ந்தவன் பயத்திலிருந்துநீங்குவான். ஆபத்தையடைந்தவன் ஆபத்தி னின்றும்விடுபடுவான். பக்தியுடன் இவ்வாயிரம்நாமங்களினாலும் புரு ஷோத்தமானபகவானைத் தினந்தோறும் துதிக்கும்மனிதன் கஷ்டங்

---

1 ஆரம்பத்தில், 'எதைஜபித்து மனிதன்முக்திபெறுவான்?' என்று தர்ம ராஜர்கேட்டதனாலும் இங்கு, 'கீர்த்தனம்செய்பவன்' என்பதினாலும், மூன்று வகை ஜபங்கள் குறிப்பிக்கப்படுகின்றன. அவையாவன:—எடுத்துச் சொல் வதும் பிறருக்குக்கேளாமல் ஏகாந்தமாகச்சொல்வதும் மனத்திற்குள்ளேயே சொல்லிக்கொள்வதுமாம். (ச - பா)

2 பரலோகம் சென்ற பிறகும் நீங்குவருவது, யயாதி நஹுஷன்முத லானவர்களால்பிரவர்த்திக்கப்பட்டதாதலின் அந்தத்தீங்கும்நேரிடாதென்பது குறிப்பு. (ச - பா)

கீனை உடனேத்தாண்டிவிடுகிறான். வாஸுதேவரையடித்து அவரையே முடிவானபலனென்று உறுதியாகநம்புகிறமனிதன் எல்லாப்பாவங்களும்நீங்கிப் பரிசுத்தமான ஆத்மாவையுடையவனுகிச் சாஸ்வதமான ப்ரம்மத்தைச் சேருவான். வாஸுதேவரிடத்தில் பக்தியுள்ளவர்களுச்கு எவ்விடத்திலும் தீங்குவருவதில்லை; பிறப்பு இறப்பு மூப்புப் பிணிகளின்பயமும் உண்டாவதில்லை. சிரத்தையோடும் பக்தியோடும் கூட இந்தஸஹஸ்ரநாமஸ்தோத்ரத்தையுதும்மனிதன் ஆத்மஸுகத்தையும் பொறுமையையும் செல்வத்தையும் தைர்யத்தையும் ஞாபக சக்தியையும் புகழையும் அடைவான். புண்யம்செய்து புருஷோத்தமரிடத்தில் பக்தியை அடைந்தவர்களுக்குக் கோபம் இல்லை; பகை இல்லை; பொருளாசையில்லை; கெட்டஎண்ணமில்லை; சந்திரன் ஸூர்யன் நக்ஷத்திரங்களோடுகூடிய மேலுலகமும் இடைவெளியாகிய ஆகாயமும் திசைகளும் பூமியும் கடலும் மஹாத்மாவானவாஸுதேவரது சக்தியினுல் தாங்கப்பட்டிருக்கின்றன. தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், நாகர்கள், ராக்ஷஸர்கள், மற்றுமுள்ள சராசரங்கள் ஆகியஇவ்வுலகமனைத்தும் கிருஷ்ணனுடைய வசத்தில் அடங்கியிருக்கிறது. இந்திரியங்கள், மனம், புத்தி, ஸத்வகுணம், சக்தி, வன்மை, தைரியம், தேகம், ஆத்மா இவையனைத்தும் வாஸுதேவருடைய சரீரங்களென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. சாஸ்திரங்களெல்லாவற்றிற்கும் ஆசாரமே முதலாகநிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆசாரத்திலிருந்துஉண்டானது தர்மம். தர்மத்தினுல் ஆராதிக்கப்படுகிறவரும் அதன்பலனைத்தருகிறவரும் துணையுமாயிருப்பவர் அச்சுதர். ரிஷிகளும் பித்ருக்களும் தேவர்களும் பஞ்சமஹாபூதங்களும் அவற்றின்கார்யங்களாகியபோகபோக்யங்களும் ஜங்கமஸ்தாவரங்களாகிய இத்தஜகமனைத்தும் நாராயணரிடமிருந்து உண்டானவை. கர்மயோகம் பக்தியோகம் இவற்றின் அறிவும் ஸாங்க்யமென்னப்படும் ஜ்ஞானயோகமும்தர்க்கமும்வ்யாகரணமுதலானவித்தைகளும் சில்பங்களும் அனுஷ்டிக்கத்தக்க வர்ணாச்ரமதர்மங்களும் வேதங்களும் ஸ்மிருதி இதிஹாஸம் புராணமென்னும் சாஸ்திரங்களுமாகிய இத்தஜ்ஞானமனைத்தும் ஜனார்த்தனரிடமிருந்து உண்டானவை. பெரும்பொருளாகிய ஒருவிஷ்ணுஅநேகங்களாகப்பிரிந்திருக்கும் தனித்தனிபூதங்களையும் மூன்று உலகங்களென்னப்படும் பத்தரும் முக்தரும் நித்யருமான மூன்றுவகைச்சேதனர்களையும் வியாபித்து எல்லாப்பிராணிகளுக்கும் அந்தர்யாமியாகி அவற்றின் குற்றங்கள்பற்றுதவராகி எல்லாவற்றையும்காப்பாற்றிஅனுபவிக்கிறார்.ஸ்ரேய

ஸென்னப்படும்முக்தியையும் மற்றஸுகங்களையும் அடையவிரும்பும் மனிதன் வேதவ்யாஸபகவானால் உரைக்கப்பட்ட பகவானவிஷ்ணுவின் இந்தஸ்தோத்திரத்தைப் படிக்கக்கடவன். உலகங்களுக்குஈஸ்வரரும் ஜனனமில்லாதவரும் எல்லாவற்றிற்கும்மேலாக ஆனந்தஸ்வரூபமாகப்பிரகாசிப்பவரும் உலகங்களின் உத்பத்திக்கும் லயத்துக்கும் காரணமுமாகியதாமரைக்கண்ணரை உபாஸிப்பவர் எவரோ அவர் தோல்வியடையார். 'ஈதேயாந்திபராபவம்' என்று இரண்டாம்தரம் சொல்வதனால், இந்தஆணையிட்டு உறுதியாகச் சொன்னதாயிற்று. (ப - பா.)

ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாம அகாராதியும் பொருளும்.

அக்ரணீ = பக்தர்களை மேற்பதமாகியமுக்திக்குக் கொண்டுபோகிறவர்.

அக்ரஜர் = * [1]முக்தர்கள் அனுபவித்துமகிழும்படி பர்யங்கவித்தையில்சொன்னதுபோல் எல்லாஐஸ்வரியங்களும் நிரம்பி மிக்கஸுகமாக எதிரில் பிரகாசிப்பவர்.

அக்ராஹ்யர் = [2] உலகத்திலுள்ள மண்பொன்முதலிய காரணங்கள் வேலைசெய்பவரால் கையாளப்படுவதுபோல மற்றொருவரால் கையாளப்படாதவர்; தாமேஉபாதானகாரணமும்அதைக்கையாளும் கர்த்தாவுமாயிருப்பவரென்பது.

அக்ரூரர் = [3]யாஜனயைக்காப்பதற்கு ஆயுதங்களைக் கையில்எடுத்தும் முதலையையும் உடனே கொல்லமனமில்லாமல் பொறுத்திருந்தவர்.

அச்யுதர் (101) = [4] தம்மை அடைந்தவர்களைவிட்டு நீங்காதவர்; 'அடைந்தவர்களுக்குத் தவறுதல்வராமலிருக்கும்படிசெய்பவர்' என்பது நிருக்தி.

அச்யுதர் (319) = [5] பிரம்மாதிதேவர்களைப்போல் அவதரிப்பவராயினும் அவர்களைப்போலன்றித் தம்நிலைதவறுமலிருப்பவர்.

அச்யுதர் (557) = [6] வ்யூஹாவதாரத்திலும் தமது ஸ்தானத்திலிருந்துவழுவாதவர்.

---

* இவ்வகராதியில்வரும் குறிப்புக்கள் சங்கரபாஷ்யம்.

1 எல்லாவற்றிற்கும் முன்னேயிருப்பவர்.

2 கர்மேந்திரியங்களினால் அறியக்கூடாதவர்.

3 கோபமில்லாமையினால் கொடுமையில்லாதவர்.

4 தம்ஸ்வரூபத்துக்குள்ளமகிமை முக்காலங்களிலும் நீங்காமலிருப்பவர்.

5 விகாரங்களற்றவர்.

6 'ஸங்கர்ஷணர்' பார்க்க.

அசலர்= [1]துர்யோதனன்முதலான துராத்மாக்களாலும் அசைக்க ஒண்ணுதவர்.

அசிந்த்யர்= [2]முக்தர்களே உவமையாகக்கொண்டும் நிரூபிக்கக் கூடாதவர்.

அசோகர் (337)= [3]துன்பத்தைப் போக்குகிறவர்; இதனால், மயக்கம் பசிமுதலிய ஆத்யாத்மிகபயங்களைப் போக்குவதும் உபலக்ஷணமாகக்கொள்ளப்படும்.

அசோகர் (அல்லது விசோகர்) (637)= [4]சோர்தனற்றவன் எவனையும் காப்பாற்றுதலிடாமையினால் அவன்விஷயமாகப்பின்னே துயரப்படாதவர்.

அணு=மிகநுண்ணியவர்.

அத்புதர்= [5]முக்தர்களெல்லாராலும் எக்காலமும் எல்லாவகைகளாலும் அனுபவிக்கப்பட்டிருந்தும் காணுதுகண்டதுபோல ஆச்சரியப்படத்தக்கவராயிருப்பவர்.

அத்ருதர்= [6]விபுத்வரூபமாயிருக்கும்மேன்மையினால் ஒன்றிலும் கட்டுப்படாதவர்; அவர்நினைத்தது எப்போதும் தடையின்றி நடப்பதனால் ஸமாதியின் தேர்ச்சியை அடையாதவைதிகபுத்ரர்கள்ஸம்ஸாரத்தில் மீண்டுவராமலிருக்கும்படி பரமபதத்தை அடைந்தது அவர் ஸங்கல்பத்தினாலன்றே? பரமபதம்சேர்ந்தவரை அதைவிட்டு ஸம்ஸாரத்தில் இழியச்செய்யவும் சேதனாசேதனங்களின்ஸ்வரூபங்களே மாற்றவும்சக்தியிருந்தும் அவற்றை அப்படிச்செய்யாமலிருப்பதும் அவருடைய ஸ்வதந்த்ரஸங்கல்பத்தினாலேதான் என்பது.

அத்ருப்தர்= [7]எல்லாவற்றிலும்சிறந்த தமதுசக்தியினால் சிறி

---

1 ஸ்வரூபமும் சக்தியும் ஞானமுதலியகுணங்களும் எப்போதும்மாறாமலிருப்பவர்.

2 எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாதலின் பிரமாணங்களெல்லாவற்றிற்கும்எட்டாதவர்; அல்லது, பிரபஞ்சத்துக்கு விலக்ஷணமாயிருப்பதினால் இத்தகையரென்று நிர்ணக்கவொண்ணாதவர்.

3 பசி, தாகம், விசனம், மயக்கம், மூப்பு, மரணம் என்கிற ஆறுசூற்றங்களுமற்றவர்.

4 'விசோகர்' ஆனந்தரூபியாதலின் சோகமில்லாதவர்.

5 தம்மைக்கேட்பதும் அடைவதும் தெரிந்துகொள்வதும் அரியனவாகையால் அத்புதமாயிருப்பவர்; அல்லது, உருவத்தினாலும் சக்தியினாலும் செய்கையினாலும் அத்புதமாயிருப்பவர்.

6 எல்லாவற்றிற்கும் ஆதாரமான பூமிமுதலியவற்றையும் தாங்குவதனால் ஒன்றாலும் தாங்கப்படாமலிருப்பவர்.

7 'த்ருப்தர்' ஆத்மாநந்தத்தை அனுபவிப்பதனால் எப்பொழுதும் மகிழ்ந்திருப்பவர்.

னும் கர்வமடையாதவர்; அல்லது, 'த்ருப்தர்' ஈந்தமோகபராலும் யசோதையினாலும் கொண்டாடப்பட்டு மகிழ்ந்திருப்பவர்.

அத்ருப்யர்= [1]நினைக்கவும் எட்டாத செய்கையுள்ளவர்.

அதமர்= [2]தாம் யாராலும் அடக்கப்படாதவர்.

அதிஷ்டாநர்= [3]கடல்கடையும்போது மந்தரமலை நிலைநிற்கும் படிதாங்கினவர்.

அதீந்த்ரர்=இந்திரனுக்குஇளையவராயினும் ஈசுவரத்தன்மையாலும் அதற்குரியசரித்ரங்களாலும் இந்திரனுக்குமேற்பட்டவர்.

அதீந்த்ரியர்=புலன்களுக்கெட்டாதவர்.

அதுலர்=ஒப்பற்றவர்.

அதோக்ஷஜர்= [4]யாவரும் அனுபவித்து உபயோகித்துக்கொண்டாலும் அமுதக்கடல்போல ஒருகாலும் வற்றிக் கீழேபோகாமலிருப்பவர்; அல்லது, கீழுலகிலும் தம்மகிமை சிறிதும்குன்றாமல் அவதரித்திருப்பவர்.

அந்தகர்= [5]பிரளயகாலத்தில் எல்லாவற்றையும் அழிப்பவர்.

அந்தம்= [6]பகவானே அனுபவிக்கும் சக்தியைப் பகவானால்அளிக்கப்பெற்றவர்களால் அனுபவிக்கப்படும் அமுதாயிருப்பவர்

அந்தாதர்= [7]தம்மையனுபவிப்பவர்களைத் தாமும்போக்கியமாக அனுபவிப்பவர்.

அநகர் (148)= [8]ப்ரபஞ்சத்தில் அவதரித்தும் குற்றங்கள் சிறிதும் அணுகாதவர்.

அநகர் (835)= [9]கர்மவசர்களான ஜீவாத்மாக்களைக்காட்டிலும் விலக்ஷணமானவர்.

---

1 புலப்படாதவர்.

2 'தமர்' தண்டத்தினாலுண்டாகும் அடக்கமாகவுமிருப்பவர்.

3 உலகங்களுக்கு ஆதிகாரணம்.

4 அந்தரிக்ஷமாகிய மேலுலகத்துக்கும் பூமியாகிய கீழுலகத்துக்கும்இடையில் விராட்ரூபத்தைஎடுத்து வியாபித்திருப்பவர்; அல்லது, வெளிஉலகத்தைவிட்டு உள்நோக்கமுள்ள இந்திரியங்களுக்குமுன் பிரத்யக்ஷமாக ஆவிர்ப்பவிப்பவரென்னவுமாம்.

5 பிராணிகளுக்கு முடிவைச்செய்பவர்.

6எல்லாராலும் அனுபவிக்கப்படுகிறவர்; அல்லது, பிராணிகளை ஸம்ஹரிப்பவர்.

7 எல்லாஜகத்தையும் ஸம்ஹாரகாலத்தில் உண்பவர்.

8 குற்றமில்லாதவர்.

9 துக்கமில்லாதவர்; அல்லது பாவமில்லாதவர்.

அநந்தர்= [1]தேசவரையும் காலவரையும் ஸ்வரூபஅளவும் குணங்களுக்குக்கணக்கும் முடிவுபெறுதவர்.

அநந்தரூபர்= [2]அந்த அந்தப்பக்தர்களைக் காப்பதற்கு அப்போதைக்கப்போது எண்ணிறந்தரூபங்களை எடுத்திருப்பவர்.

அநந்தஸ்ரீ= [3]அடித்தவர்களுக்குத் தம்மையடையும் வரையிலுள்ள அளவற்றசெல்வங்களை வைத்திருப்பவர்.

அநந்தஜித்= [4]தமதுமகிமையின்முடிவை யாருங்காணக்கூடாமலிருப்பவர்.

அநந்தஹுதபுக்போக்தா= [5]அளவற்றமகிமையுள்ள இந்திரனையும் ப்ரம்மாவையும் வைத்திருப்பவர்; அர்ச்சிராதிமார்க்கத்தில் பதினோராவதுபடி இந்திரனும் பன்னிரண்டாவதுபடி ப்ரம்மாவும் கூறப்படுகின்றனர்; யாகங்களில்ஹோமம்செய்வதைப் புகிப்பதனால் இந்திரனை ஹுதபுக் என்றும் ப்ராஜைகளைக்காப்பதனால் ப்ரம்மாவைப் போக்தாவென்றும் சொல்லியது.

அநந்தாத்மா= [6]கூர்மாவதார மூர்த்தியின்மேல் உலகங்களுக்கு ஆதாரமான ஸ்தம்பம்போலநிற்கும் ஆதிசேஷருக்கு ஆத்மாவாகநிற்பவர்.

அநயர்=தாம் யாராலும் நடத்தப்படாதவர்; விரோதிகளால் நடத்தமுடியாதவர்; யுத்தத்தில் வெல்லமுடியாதவரென்பது; அல்லது, உலகங்களுக்குத் தம்மைவிட நன்மையைத்தரும்வகை வேறில்லாமலிருக்கும்படி சிறந்தநன்மையைச் செய்பவர்.

அநர்த்தர்= [7]அற்பபலன்களைவிரும்புகிற பாக்கியக்குறையுள்ளவர்களால் வேண்டப்படாதவர்.

---

1 குணங்களால் அளவுபெறுதவர் எங்ஙனமாம்.

2 ஆதிசேஷருபி; அல்லது, எல்லாப்ரபஞ்சரூபமாகவுமிருப்பவர்.

3 அளவற்ற மஹாசக்தியுடையவர்.

4 எல்லாப்பிராணிகளையும் ரக்ஷிப்பவர்.

5 மூன்றுநாமம். அநந்தர்=தேசத்தினாலும் காலத்தினாலும் ஸ்வரூபத்தினாலும் அளவுபடாமையினால் அல்லது ஆதிசேஷருபியாதலால் அநந்தராகிறார். ஹுதபுக்=ஹோமஞ்செய்ததைப் புகிப்பவர். போக்தா=ப்ரகிருதியை அனுபவிப்பவர்; அல்லது, உலகங்களைக்காப்பவர்.

6 தேசவரையும் காலவரையுமற்று எல்லாப்பொருள்களாகவுமிருக்கும் ஸ்வரூபமுடையவர்.

7 விரும்பினவையெல்லாம் நிரம்பியிருப்பவராதலின் தாம்விரும்பத்தக்க பயன் ஒன்றுமில்லாதவர்.

அநலர் (294)= [1]பலவகைகளால் அனுக்கிரஹித்தும் அடியவர் களுககு அதுபோதாதென்று நினைப்பவர்; இந்தச் சக்தியின் ஒரு சிறிது இருப்பதுபற்றித்தான் அக்னிக்கு அநலன் என்றுபெயர் வந் தது; அக்னியும் எரிவதற்கு எவ்வளவுபோட்டாலும் போதுமென்ப தில்லாமல் மேன்மேலும் விறகுமுதலியவற்றை எதிர்பார்க்கிறது; அப்படியே பகவானும் எவ்வளவுகாப்பாற்றியும் இன்னும்காப்பாற்று வதற்கு எதிர்பார்த்தேயிருப்பவரென்பது.

அநலர்(716)= [2]ஆஸ்ரிதர்களுக்குஎல்லாஏவல்களையும்செய்தும் போதுமென்று நினையாமல், 'நான் இவர்களுக்கு ஒன்றும்செய்யவில் லையே' என்று ஆதாமையை மேற்கொண்டவர்; அல்லது, தம்பக்தர் கள்விஷயத்தில் பிறர்செய்யும் பிழையைப்பொறுக்கமுடியாதவர்.

அநாதி= [3]பிரம்மாதிதேவர்களாலும் ஸ்வாமியாக அறியப்படா தவர்; பக்திசெய்த திர்யக்ஜாதிகளுக்கும் வசப்படுகிறவர்; பிரம்மாதி தேவர்களுக்கு அல்பபலன்களைமட்டும் அளிப்பது அவர்கள் மஹா பலத்தை விரும்பாமையினால்தானென்பது.

அநாதிநிதநர்= [4]எக்காலமும் யௌவனப்பருவமாகவேயிருப் பதனால் பிறப்புமூப்புமுதலிய மாறுதலில்லாமல் நித்தியமான திவ்ய மங்கள விக்ரஹமுடையவர்.

அநாமயர்= [5]ஸம்ஸாரமென்னும் பெரும்பிணிக்குப் பகையா யிருப்பவர்.

அநிமிஷர்= [6]ஸாதுக்களைக் கண்மூடாதகவனித்துக்கடாக்ஷிப் பவர்; இமைகொட்டாதவரென்பதனால் மத்ஸ்யாவதாரம்குறிப்பிடப் படுகிறது.

அநிர்த்தேஸ்யவபு (179)= [7]ஐஸ்வர்யம் பலம் ஞானம் வீர்யம் சக்தி தேஜஸ்என்னும் ஆறுகுணங்களும் அளவற்றகடல்கள்போல

1 அனமென்னப்படும் பிராணனை அலங்கரிக்கும் ஜீவாத்மாவாயிருப்ப வர்; அல்லது, உயிர்களைக்கிரகிப்பவர்; அல்லது, நலமென்னப்படும் மணமில் லாதவர்; அல்லது, போதுமென்பதில்லாதவர்; அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டாதவர்; அல்லது, உலகங்களைஜீவிக்கச்செய்பவர்.

2 சக்திக்கு முடிவில்லாதவர்.

3 தமக்குக்காரணமில்லாதவர்.

4 ஆதியும் அந்தமுமில்லாதவர்.

5 கர்மங்களினால் உண்டான மனநோய்களாலும் வெளிநோய்களாலும் பீடிக்கப்படாதவர்.

6 எப்போதும் விழித்துக்கொண்டிருப்பவர்; அல்லது, மத்ஸ்யாவதாரம் செய்தவர்.

7 பிறரால் அறியமுடியாகமையால் இது இவ்வித்மென்று சுட்டிக்காட்ட முடியாதஸ்வரூபமுடையவர்.

நிரம்பியிருப்பதனால் திவ்யமங்களவிக்ரஹத்துக்கு உவமை சொல்லக்கூடாதவர்.

அநிர்த்தேயவபு (662)= [1] அந்த அந்தயுகங்களின் குணங்களை அபிவிருத்தி செய்யத்தக்க உருவங்கள் பலவாதலின் இவ்வித மென்று நிரூபிக்கக்கூடாத திவ்யமங்கள விக்ரஹங்களையுடையவர்.

அநிர்விண்ணர் (436)= [2] இருஷ்டிமூலான செய்கைகளையும், அவரவர் வேண்டினபலன்களைக் கொடுப்பதையும், அடிக்கடி வேண்டினவற்றைக் கொடுத்து ஸம்ஸாரவிஷயங்களில் பிரதிபத்தியை உத்தமமையணுகாமல் பயனற்றுப்போகிறவர்களைத் திரும்பவும் வசப்படுத்தப் பெருமுயற்சியையும் செய்வதில் சிறிதும் சோர்வில்லாதவர்.

அநிர்விண்ணர் (893)= [3] அடித்தவனைப் பெரியஊக்கத்துடன் ஸம்ஸாரமென்னும் படுகுழியிலிருந்து கரையேற்றித் தம்மிடம் சேர்த்தபிறகு அவனைப்பற்றிய கவலையில்லாமலிருப்பவர்.

அநிருத்தர் (187)= [4] அளவிறந்தபிராணிவர்க்கங்களைக் காப்பாற்றுவதில் தடையொன்றுமில்லாத திவ்ய சேஷ்டிதங்களையுடையவர்.

அநிருத்தர் (644)= [5] 'ஜகத்ப்ரபுவான அநிருத்தபகவான் ஜகார்த்தரென்னும் பெயரோடு பூமியில் வாஸுதேவனென்னும்கேஷத்திரத்தில் நித்தியாவிர்ப்பாவமாக இருக்கிறார்' என்று சொல்லப்பட்ட அநிருத்தவ்யூகத்தின் அவதாரமான ஜகார்த்தராயிருப்பவர்.

அகிலர் (236)= [6] யாவரும் உஜ்ஜீவிக்கும்படி செய்பவர்; பகவானுடைய சக்திலேசத்தாலன்றே காற்றும் அகிலம் என்னப்படுவது?

அகிலர் (818)= [7] பக்தர்களை அணுக்கிரஹிப்பதில் தம்மைத் தாண்டுகிறவர் வேண்டாதவர்.

---

1 ப்ரதிருதிக்கு அதீதமாதலின் இன்னது இப்படிப்பட்டது என்று நிரூபிக்கப்படாத ரூபமுள்ளவர்.

2 விரும்பினவையெல்லாம்கைகூடியிருப்பதனால் வெறுப்பில்லாதவர்.

3 விரும்பினவையெல்லாம் நிரம்பியிருப்பதையும் ஒன்றும் குறைக்காமலிருக்கக்காரணமில்லாமையாலும் கவலையற்றிருப்பவர்.

4 அவதாரங்களிலும் யாராலும் தடுக்கப்படாதவர்.

5 நான்குவ்யூகங்களில் ஒருவராகிய அநிருத்தர்; அல்லது, பகைவர்களால் ஒருகாலும் தடுக்கப்படாதவர்.

6 அனுகியாயிருப்பவர்; அல்லது, பிராணரூபமாக அன்னங்களைப் புசிப்பவர்: அல்லது, ஒன்றையும் ஆதாரமாகப் பற்றாதவர்.

7 தம்மையாஞ்ஞாபிக்கிறவர் யாருமில்லாதவர்; அல்லது, எப்போதும் தூங்காமல் ப்ரகாசிக்கும் ஞானஸ்வரூபி; அல்லது, பக்தர்கள் அடைவதற்கு அரியராயில்லாமல் சுலபராயிருப்பவர்.

அநிவர்த்தீ= [1]ப்ரவிருத்திதர்மத்திலிருப்பவர்களைப்புகை, இரவு, க்ருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனமாகிய தூமாதிமார்க்கத்திலுல் பித்ரு லோகம் சேர்த்துத் திரும்பவும் இவ்வுலகில் பிறப்பிப்பதலுல் ஸம்ஸாரத்தைவிட்டு நிவிர்த்திக்கச் செய்யாதவர்.

அநீசர்= [2]ஸ்நானம், அலங்காரம், கோஷ்டிமுதலிய எல்லாக் காரியங்களிலும் பக்தர்களுக்குப் பராதீனமாயிருப்பதலுல் ஸ்வதந்திரமில்லாதவர்.

அதுலர்= [3]இயற்கையான மகிமையிருப்பதலுல் அதைப்பற்றிய வியப்பும் கர்வமும் அகங்காரமுமில்லாமையால் உலகத்துக்கெல்லாம் மேலோடும் ஐஸ்வர்யப்பெருவெள்ளம் வரம்புமீறாது கரையினுள் அடங்கியிருக்கும்படி செய்பவர்; தமது பரத்வத்தைப் பாராட்டாமல் ஆஸ்ரிதர்களனைவருக்கும் அடைய எளியவராயிருப்பவர் என்பது; அல்லது, பக்தர்களுக்கு நன்மைசெய்பவர்.

அநுத்தமர்=தமக்கு மேற்பட்டவர் யாருமில்லாதவர்.

அநேகமூர்த்தி= [4]க்ருஷ்ணவதாரத்திலும், தாம் வாஸுதேவமூர்த்தியாகவும் ஸங்கர்ஷணமூர்த்தி பலராமராகவும் பிரத்யும்னனும் அநிருத்தனும் புத்திர பௌத்திரர்களாகவும் நான்குவ்யூகங்களாகப் பிரிந்திருந்தமையால் பலதேகங்களுடையவர்; அல்லது, பதினாயிரத்துநூறு ஸ்திரீகளின்கடிவில் பதினாயிரத்துநூறு திருமேனி கொண்டு விளங்கியதுமாம்.

அப்ரதிரதர்=ஜராத்தனென்னும்பெயருக்குத்தக்கபடிவிரோதிகளைப் பீடிப்பதில் தடுப்பவர் யாருமில்லாதவர்.

அப்ரமத்தர்= [5]ஆஸ்ரிதர்களைக் காப்பதில் ஊக்கம் தவறாமல் இருப்பவர்.

அப்ரமேயர்= [6]பிரம்மாமுதலியவர்களுக்கும் தம் இந்திரியங்களால் அறியக்கூடாதவர்.

அப்ரமேயாத்மா= [7]எண்ணிறந்தவையாதலின் அளவிடப்படாத பொருள்கள் ஒவ்வொன்றிலும் உள்ளும்புறமும் வியாபித்திருப்பவர்;

---

1 தேவாஸுரயுத்தமுதலியவற்றில் புறங்காட்டித் திரும்பிப்போகாதவர்; அல்லது, தர்மத்திலிருந்து விலகாதவர்.

2 தமக்குமேல் ஈசுவரனில்லாதவர்.

3 ஆத்மாவாதலால் யாவருக்கும் அனுகூலமாயிருப்பவர்.

4 அவதாரங்களில் ஸ்வேச்சையாகப் பலதேகங்களெடுத்திருப்பவர்.

5 கர்மங்களுக்குத்தக்கபலன்களளிப்பதில் தவறுதவர்.

6 பிரமாணங்களுக்கும் எட்டாதவர்.

7 அறிவிற்கெட்டாத ஸ்வரூபமுள்ளவர்.

அபராஜிதர் (721)= [1]பஞ்சபாண்டவர்கள் அதிகஸஹாயமில்லாதவர்களாயிருந்தும் துர்யோதனதியர்நூற்றுவராலும் வெல்லப்படாமலிருக்கும்படி செய்தவர்.

அபராஜிதர்(866)= [2]எங்குமுள்ள எல்லாவற்றையும் கடந்தும் தமது கட்டளை எக்காலத்திலும் எவ்விடத்திலும் எதனாலும் தடைப்படாமலிருப்பவர்.

அபாம்நிதி= [3]கடல் கடையப்படும்போது அதற்காதாரமாகத் தாங்கினவர்.

அபிப்ராயர்= [4]ஸாத்விகதர்மத்தையநுஷ்டித்து நிர்மலராயிருக்கும் அடியார்களினால் வேறுபலனைவிரும்பாதுதாமேபரமோத்தேச்யமாக நினைக்கப்படுகிறவர்.

அம்போநிதி= [5]எல்லாஉலகங்களையும் தாங்கும் பீடம்போன்ற கூர்மரூபியாகக் கடலில் தம்மாலேயே தாம்வைக்கப்படுகிறவர்.

அம்ருத்யு= [6]ம்ருத்யுவைத்தடுப்பவர்; ஸர்வஸம்ஹாரமூர்த்தி; ம்ருத்யுவுக்கு ம்ருத்யுவாயிருப்பவர்.

அம்ருதபா= [7]அம்ருதரூபமான ஹவிஸ்ஸைக்குடிப்பவர்; அல்லது, தம்முடைய அநுஷ்டானத்தை அநுஷ்டித்து நடப்பவர்களுக்குப் பரமபதத்தில் தம்மைஅநுபவிப்பதாகிய அம்ருதமென்கிற பரமானந்தத்தைக் காப்பாற்றுகிறவர்.

அம்ருதர்= [8]மூக்கினையை அளித்து மூப்பு இறப்புக்களை ஒழிப்பவர்; அல்லது, எக்காலமும் ஸேவித்தாலும் போதுமென்று தோன்

---

1 காமக்குரோதமுதலிய உட்பகைகளாலும் அஸுரர்முதலிய வெளிப்பகைகளாலும் வெல்லப்படாதவர்.

2 பகைவர்களால்வெல்லப்படாதவர்.

3 கடலாயிருப்பவர்.

4 புருஷார்த்தங்களை விரும்புகிறவர்களால் பிரார்த்திக்கப்படுகிறவர்; அல்லது, ஸம்ஹாரகாலத்தில் ஜகமனைத்தும் தம்மிடம்வந்தடையும்படி இருக்கத்தக்கவர்.

5 மூன்று லோகங்களென்று வேதங்களில்சொல்லப்படும் தேவர் மனுஷ்யர் பித்ருக்கள் அஸுரர்இவர்களைத்தாங்குகிறவர்; அல்லது கடலாயிருப்பவர்.

6 அழிவும்அதற்குக்காரணமும்இல்லாதவர்.

7 ஆத்மானந்தமென்னும் அம்ருதரஸத்தைக்குடிப்பவர்; அல்லது, கடல் கடைந்துஉண்டானஅமுதம் அஸுரர்களால் அபகரிக்கப்பட்டதை மீட்டு தேவர்களையும் குடிப்பித்துத் தாமும் குடிப்பவர்.

8 அழிவில்லாதவர்.

ருமல் மேன்மேலும் விருப்பத்தைவிளைவித்து அமுதம்போலச் சுவை யுள்ளவராயிருப்பவர்.

அம்ருதவபு== [1]தமதுதிவ்யமங்களவிக்ரஹமும்அமுதம்போலப் போக்யமாயிருப்பவர்.

அம்ருதாசர்== [2]பக்தர்களுக்குத் தமது குணங்களென்னும் அமுதைஊட்டுகிறவர்.

அம்ருதாம்சூத்பவர் == [3]எல்லாத்தாபங்களையும்போக்கிப் புஷ் டியை உண்டாக்குவ்தும்இறந்தவரைப் பிழைப்பிப்பதுமாகியஅமுதம் நிறைந்த கிரணங்களோகூடிய சந்திரனும் தமதுமனத்திலிருந்து உண்டானதுபற்றி இந்தக்குணச்சிறப்புக்களை அடைந்தானென்னும் படி யிருப்பவர்.

அமரப்ரபு==பிரம்மாதி தேவர்களுக்கும் ஸ்ருஷ்டிமுதலான அதிகாரங்களைக்கொடுத்து நடத்துகிறவர்.

அமாநீ== [4]பக்தர்கள்விஷயத்தில் தம்உயிர்வை நினையாதவர்; ஆதலால்ன்றோ பாண்டவதூதராகச்சென்றது?

அமிதவிக்ரமர் (519)== [5]அளவிடப்படாத சக்தியையுடையவர்; பக்தர்கள் தியானத்திலும் ஆராதனத்திலும் நினைக்கத்தக்கபிரகிருதி முதலானதத்வங்களெல்லாவற்றையும் தாங்குவதான ஆதாரசக்தியை உடையவனென்பது.

அமிதவிக்ரமர் (647)== [6]திரிவிக்ரமாவதாரத்தில் மூவுலங்களி லும் தமது திருவடிப்பதிப்பு அடங்காமலிருந்தவர்; யமுனைதீரத்தில் த்ரிவிக்ரமாவதாரம் இருக்கிறது.

அமிதாசநர்== [7]இடையர்கள் இந்திரனுக்காகச்செய்த அளவற்ற அன்னராசியைத் தாம் உண்டவர்.

---

1 அழியாததேகமுள்ளவர்.

2 ஆத்மாநந்தமென்னும் அமுதைஉண்பவர்; அல்லது, தேவர்களுக்கு அமுதம்கொடுத்தபிறகு தாமும்அதைஉண்டவர்; அல்லது, பலனழியாதவிரு ப்பமுள்ளவர்.

3 திருப்பாற்கடல் கடைந்தபோது சந்திரன் உண்டாவதற்குக்காரண மானவர்.

4 ஆத்மாவல்லாதவற்றை ஆத்மாவாக நினையாதவர்.

5 த்ரிவிக்ரமாவதாரத்தில் அளவிடக்கூடாத மூன்று அடிவைப்புக்களை யுடையவர்; அல்லது, அளவற்ற பராக்ரமமுடையவர்.

6 யாராலும் பீடிக்கப்படாத பராக்ரமமுள்ளவர்; அல்லது, அளவற்ற மஹிமையுள்ளவர்.

7 ஸம்ஹாரகாலத்தில் அளவற்றஉலகங்களை உண்டவர்.

அமூர்த்தி= [1]பஞ்சபூதமயமான ரூபத்தைவிட வேறு சரீர முடையவர்; அப்ராகிருத திவ்யமங்கள விக்ரஹமுடையவரென்பது.

அமூர்த்திமான்= [2]உருவமில்லாத மூலப்பிரகிருதி ஜீவாத்மா முதலியவற்றிற்கும் ஸ்வாமியாயிருப்பவர்.

அமேயாத்மா (103)= [3]ஆஸ்ரிதர்களுக்கு அநுக்ரஹம் செய்யு முறை இவ்வளவென்று வரையறுக்கக்கூடாத ஸ்வபாவமுடையவர்.

அமேயாத்மா (181)= [4]பலவகைக்குணங்கள்நிரம்பிஅகாதமான கடல்போலிருப்பதனால் அளவிடக்கூடாத தன்மையுள்ளவர்.

அமோகர். (111)= [5]தமது ஸம்பந்தம் வீண்போகாதவர்.

அமோகர் (156)= [6]தம்மை அடித்தவர்யாரும் வீண்போகாம லிருக்கச்செய்பவர்; பலிசக்கரவர்த்தி இந்திரன் இருவருக்கும் வித்தி யாசமின்றி சிறந்தஅனுக்ரகத்தைசெய்தவரென்பது.

அயோநிஜர்= [7]கர்ப்பத்தில் பிறவாதவர்; ஸாரஸ்வதரென்னும் அவதாரத்தில் பகவானுடைய வாக்கினின்றும் பிறந்ததனால் கர்ப்பத் தில் பிறவாதவர்.

அர்க்கர்= [8]இவர் மகாத்மாவென்றும் மிக்கதர்மிஷ்டரென்றும் ஸஸுரர்களால் துதிக்கப்பெற்றவர்.

அர்ச்சிதர்= [9]எக்காலங்களிலும் எல்லாப் புண்யக்ஷேத்திரங்க ளிலுமுள்ளகோவில்களிலும் வீடுகளிலும் பக்தர்கள் கண்ணுற்கண்டு பூஜிப்பதற்கெளிய அர்ச்சாவதாரமெடுத்திருப்பவர்; இந்த அர்ச்சாவ தாரம் டூரஸ்வரூபம்போல எட்டாததுமன்று; உபேந்திராவதாரம் மனுஷ்யாவதாரமுதலியவற்றைப்போல ஒரிடத்திலும் ஒருகாலத்திலு மாத்திரமிருப்பதுமன்று; எப்போதும் எல்லா க்ஷேத்திரங்களிலும் யாவராலும் பிரத்யக்ஷமாகக் காணக்கூடியது.

1 கண்ணரூபம்இல்லாதவர்; அல்லது, தேஹமில்லாதவர்.

2 விஜ உடம்பிலில்லாதவர்.

3 அளவிடக்கூடாதஸ்வரூபமுள்ளவர்.

4 யாராலும் அறியக்கூடாத ஞானமுள்ளவர்.

5 பூஜிப்பவருக்கும் துதிப்பவருக்கும் த்யானிப்பவருக்கும் எல்லாப்பலன் களையும் அளிப்பவர்; அல்லது, தமது ஸங்கல்பம்மாறுதவர்.

6 தமதுகருசெய்கையும் வீண்போகாமலிருப்பவர்.

7 ‘ (579) வாசஸ்பதி’ பார்க்க.

8 பிரம்மாதிதேவர்களால் துதிக்கப்பெற்றவர்.

9 எல்லாலோகங்களாலும் பூஜிக்கப்பட்டு பிரம்மாதிதேவர்களாலும் பூஜிக்ப்பெற்றவர்.

அர்ச்சிஷ்மான்= [1]பக்தர்களுக்கு மறைந்திருக்கும் தமதுபிரபாவத்தை அறியும்படி அவர்களுடைய அகக்கண்களையும் புறக்கண்களையும் திறக்கும் திறமையுள்ள அப்ராகிருதமான தேரொளியுடையவர்.

அர்த்தர்= [2]நன்றாகஅறிந்து உறுதியாகப்பக்திசெய்யும் உயர்ந்த அதிகாரிக்குத் தாமே பயனாயிருப்பவர்.

அர்ஹர்= [3]வேறொன்றிலும் விருப்பமில்லாத பக்தர்களுக்குத் தாம் ஒருவரே தகுதியாயிருப்பவர்.

அரவிந்தாக்ஷர்=தாமரைமலர்போன்ற அழகிய திருக்கண்களையுடையவர்.

அரௌத்ஸர்= [4]எல்லாவற்றிற்கும்மேலான ஐஸ்வர்யம் இருக்கையிலும் கல்யாணகுணங்களின்குளிர்ச்சியினால் கடிமைதணிக்கப்பட்டு ஸௌம்யமாயிருப்பவர்.

அவ்யக்தர்= [5]மனுஷ்யாவதாரத்தில் மறைந்திருப்பதனால் தம் மகிமை யாருக்கும்வெளிப்படாமலிருப்பவர்.

அவ்யங்கர்= [6]சிக்ஷை வ்யாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யௌதிஷம் கல்பம்என்னும் ஆறுவேதாங்கங்களும் தம்மிடத்தில் குறைவின்றி நிரம்பியிருப்பவர்.

அவ்யயர்= [7]யாரும்தம்மைவிட்டு விலகாமலிருப்பவர் ; முக்தர்கள் அவரைப்பிரிவதில்லை என்பது.

அவிஜ்ஞாதா= [8]ஆப்தரிதர்களுடையகுற்றங்களை அறியாதவர்.

அஜர் (96)=9 தம்மைப்பற்றினவர்கள் தம்மை அடைவதற்கு இடையூறானவற்றை எல்லாம் விலக்குகிறவர்.

அஜர் (206)=[10]மற்றவர்களைப்போல ஜனியாதவர் ; தானில் பிறந்தவர் என்பது குறிப்பு.

---

1 சூரியன்முதலானவர்களுக்கும் ஒளியைக்கொடுக்கும் சிறந்த ஒளியுள்ளவர்.

2 ஸுகஸ்வரூபியாதலின் யாவராலும் விரும்பப்படுகிறவர்.

3 பூஜிக்கப்படுகிறவர்.

4 வீண் காமம் குரோதம் என்னும் மூன்று கொடுஞ்செய்கையும் இல்லாதவர்.

5 இவர் இப்படிப்பட்டவரென்று யாராலும் அறியக்கூடாதவர்.

6 ஞானமுதலியகுணங்கள் நிரம்பியிருப்பவர் ; அல்லது, புலப்படாதவர்.

7 நாசமற்றவர் ; அல்லது, விகாரமற்றவர்.

8 பரப்ரம்மமாகியபகவான் ஞானஸ்வரூபியாதலின் ஞானமுள்ளவரல்லர்.

9 ஜனனமில்லாதவர்.

10 எல்லாவற்றையும் வியாபித்திருப்பவர் ; அல்லது, மடத்துகிறவர்.

அஜர் (524) = [1]ப்ரகிருதி, மஹத், அஹங்காரம், ஐந்துபூதங்கள், ஐந்து தன்மாத்ரைகள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்துகர்மேந்திரியங்கள், மனம், புருஷனென்னப்படும் ஜீவாத்மாஆகிய இவ்விருபத்தைந்து தத்வங்களின்முடிவில் இருபத்தாறுவது தத்வமாகஎண்ணப்படுகிறவரும் ப்ரணவத்துக்கு முதலாகிய அகாரத்தின்பொருளுமான ஸ்ரீமந்நாராயணரூபியாயிருப்பவர்.

அஜிதர் = [2]ஜனனமரணமுதலானப்ரகிருதிதர்மங்களினால் வெல்லப்படாதஅஜிதைஎன்னும் ஸ்ரீவைகுண்டநாதருக்குஅந்தரங்கர்.

அஸ்வத்தர் = [3]இன்றைக்கிருப்பது நாளைக்கிராதுஎன்னும்படி அநித்தியமானபதங்கள்பெற்ற இந்த்ரன் சூரியன்முதலானவர்களுள் அணுப்பிரவேசித்து எல்லாவற்றையும்நடத்துகிறவர்; (அஸ்வ: + ஸ்த: என்றுபகுக்க;) 'மேல் வேரும் கீழ் கிளைகளுமுள்ள அநாதியான அஸ்வத்தமென்று சுருதியில்சொல்லியபடி கீழுள்ள உலகங்களுக்கெல்லாம் காரணமாக மேலேவிளங்கும் அரசமரம்போலிருப்பவர்' என்பது நிருக்தி.

அஸங்க்யேயர் = [4]எண்ணிறந்த சேதநாசேதனங்களாகிய விபூதிகளையுடையவர்.

அஸத் = [5]துஷ்டர்களுக்கு நீடிழிகாலம் முடிவில்லாதஸம்ஸாரதுக்கத்தைக்கொடுப்பவர்.

அஹஸ் = [6]தம்மைப்பற்றினவன் கெட்டு இழிவான கதிக்குப் போகாமல் செய்பவர்; அல்லது, அநாதியான அவித்தையென்னும் நித்திரையிலிருந்து தம்ஸ்வரூபத்தை அறிவித்துக் கண்விழிக்கச் செய்வதனால் பகல்போன்றவர்.

அஹஸ்ஸம்வர்த்தகர் = [7]பகல்முதலிய பிரிவுகளோடுகூடியகால சக்ரத்தை உருட்டுகிறவர்.

அக்ஷர் (17) = [8]அநுபவிக்க அநுபவிக்கக் கரைகடந்த கல்

---

1 அகாரப்பொருளாகிய விஷ்ணுவினிடத்திற்பிறந்த மன்மதனுயிருப்பவர்.

2 அவதாரங்களில் யாராலும் ஜயிக்கப்படாதவர்.

3 நாளைக்குநில்லாத அநித்யவஸ்துவாகவுமிருப்பவர்; அல்லது, அரசமரம்போலிருப்பவர்.

4 நாமரூபங்கள்முதலிய பேதங்களாற்றிருப்பவர்.

5 பெயர்வடிவுமுதலிய அவித்தையோடுகூடிய ப்ரம்மம்.

6 பகல்போலப் ப்ரகாசமாயிருப்பவர்.

7 பகலே உண்டாக்கும் ஸூர்யரூபி.

8 அழியாமலிருப்பவர்; அல்லது, கர்மபலனை அநுபவிப்பவர்; ஜீவனும் ப்ரம்மமும் ஒன்றுதலின் ஜீவனது கர்மபலன் ப்ரம்மமே அநுபவிப்பதென்பது.

யாணகுணங்கள் மேன்மேலும் புலப்படுவதனால் அனுபவஸுகம் முடிவுபெறுமல் விருத்தியாகும்படி இருப்பவர்.

அக்ஷரர் (482)=எந்தக்காலத்திலும் எந்தத்தேசத்திலும் குணங்களும் ஸ்வரூபமும் குறையாதவர்.

அக்ஷோப்யர் (807)= [1]ஆழ்ந்தகருத்துள்ளவராதலின்யாராலும் மாற்றமுடியாதவர்.

அக்ஷோப்யர் (999)= [2]சரணுகதர்களுக்கு அபயம் கொடுப்பதென்கிற உறுதியான விரதத்திலிருந்து எந்தக்காரணத்தினலும் அசைக்கமுடியாதவர்; அல்லது, தமதுமகிமையினல் யாராலும்வெல்லக்கூடாதவர்.

ஆத்மயோநி= [3]பாலுடன் சர்க்கரையைச் சேர்ப்பதுபோலத் தம்மை அனுபவிப்பவனைத் தம்மிடம் சேர்ப்பிப்பவர்.

ஆத்மவான்= [4]ஸுகிருதத்தைச்செய்யும் ஆத்மாக்களின் ஸ்வரூபம் செய்கையுதலியவை எல்லாம் தம்மதீனமாகஇருப்பதனல் ஆத்மாக்கள் தம்முடைய சொத்துக்களாக இருப்பவர்.

ஆதாரநிலயர்= [5]தர்மிஷ்டர்களாதலால் உலகங்களைத் தாங்குகிறவர்களாகிய ப்ரஹ்லாதர் விபீஷணர் பாண்டவர்முதலான ஸாதுக்களுககு ஆதாரமாயிருப்பவர்.

ஆதித்யர் (39)= [6]சூரியமண்டலத்திலிருப்பவர்.

ஆதித்யர் (568)= [7]தம்மைச் சொல்லுவதாகிய அகார எழுத்தினல் அடையத்தக்கவர்; ஆத் இத்ய: என்று பிரிக்க; அகரம் ஸங்கர்ஷணமந்திரத்துக்குப் பீஜம்; அல்லது, 'ஆதித்யஃ' ஒருபதம்; முன் ஜன்மத்தில் அதிதியாயிருந்ததேவகியின் புத்ரர்.

---

1 காமக்குரோதமுதலியவற்றினலும் சப்தாதிவிஷயங்களினலும் அஸுரர்களினலும் கலக்கக்கூடாதவர்.

2 சக்ராயுதமிருப்பதனலேயே எதிரிகள் யாராலும் கலக்கக்கூடாதவர்

3 தாமே ஜகத்துக்கெல்லாம் உபாதானகாரணமாயிருப்பவர்.

4 தமக்கு வேறு ஆதாரமின்றித் தம்மகிமையை ஆதாரமாகக்கொண்டிருப்பவர்.

5 எல்லாவற்றையும் தாங்குவனவாகிய பஞ்சபூதங்களுக்கும் ஆதாரமாயிருப்பவர்.

6 ஸூர்யமண்டலத்திலிருக்கும் பொன்மயமானபுருஷர்; அல்லது, பன்னிரண்டுஆதித்யர்களில் ஒருவரானவிஷ்ணு; அல்லது, அதிதிஎன்னப்படும் பூமிதேவிக்குஅதிபதி; அல்லது, சூரியன் ஒருவனே அநேக ஜலபாத்திரங்களில்பிரதிபலிப்பதுபோலப் பரமாத்மா ஒருவரே அநேக சரீரங்களில் தோற்றுவதனல் ஸூர்யன்போன்றவர்.

7 அதிதியிடத்தில் வர்மனராக அவதரித்தவர்.

ஆதிதேவர் (335)=உலகத்துக்கு முதற்காரணமாயிருந்து உலகம்படைப்பதுமுதலிய விளையாட்டுக்களினால் மகிழ்ந்திருப்பவர்; இதனால், லீலாவிபூதியாகிய பிரகிருதியை நடத்துவது தெரிவிக்கப்படுகிறது.

ஆதிதேவர் (491)= [1]பிரம்மாதிதேவருக்கும் மூன்றினவரும் பிரகாசிப்பவருமானவர்.

ஆநந்தர்= [2]வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத பேரானந்தமுடையவர்.

ஆவர்த்தநர்=ஸம்ஸாரத்தை ஏற்றத்தைப்போலக் கீழும்மேலுமாகத் திருப்புகிறவர்.

ஆஸ்ரமர்= [3]ஸ்ரமத்தைப் போக்குகிறவர்; புண்யலோகங்களிலிருந்து மீண்டு ஸம்ஸாரத்தில்வந்தவரைப் பிரம்மஞானம் நிரம்பிய வைஷ்ணவகுலங்களில் பிறப்பித்து அவர்கள் அதுவரையில் அலைந்ததனால் உண்டான ஸ்ரமத்தைஆற்றுகிறவர் என்பது.

இந்த்ரகர்மா= [4]சரணாகதர்களான இந்திராதி தேவர்களுக்காக அஸுரர்களை வஞ்சிப்பதுமுதலிய காரியங்களைச் செய்தவர்.

இஜ்யர்= [5]காம்யபலனைக் கருதுகிறவர்களால் இந்திராதிதேவதாரூபியாக ஆராதிக்கப்படுகிறவர்; தேவர்களுக்கு அந்தர்யாமியாதலால் தேவபூஜைகளனைத்தும் அவரையே சேருகின்றன.

இஷ்டோவிசிஷ்டர்= [6]பிரளயகாலத்தில் தம்உதரத்தினுல்வகிக்கப்பட்டயாவரும் வித்தியாஸமின்றித் தாய்போல விரும்பும்படி இருப்பவர்.

ஈசாநர்=சராசரங்கள் எல்லாவற்றையும் நடத்துகிறவர்; ஸம்ஸாரிகளுக்கும் முக்தர்களுக்கும் பரிசுத்தஸ்வரூபமிருந்தாலும் அது

---

1 எல்லாப்பிராணிகளையும் தாம்தரிசிப்பவரும் அவற்றிற்குத் தேவதையுமானவர்.

2 ஆனந்தஸ்வரூபமானவர்.

3 ஸம்ஸாரமென்னும் வனத்தில் திரிபவர்களுக்கு ஆச்ரமம்போல இளைப்பாறுமிடமாயிருப்பவர்.

4 இந்திரனைப்போன்ற செய்கையுள்ளவர்: உலகங்களுக்கு ஈசுவரராயிருப்பவரென்பது.

5 யஜ்ஞபலன்களைக் கொடுப்பவராதலின் யஜ்ஞங்களினால் ஆராதிக்கப்படுகிறவர்.

6 இரண்டு ரூபம்; இஷ்டர்=ஆனந்தரூபியாயிருப்பதனால் எல்லாராலும் விரும்பப்படுகிறவர்; அல்லது, யாகங்களினால் பூஜிக்கப்படுகிறவர். விசிஷ்டர்=அந்தர்யாமியாயிருப்பதினாலும் தம் உயிர்வினாலும் எல்லாவற்றிலுஞ்சிறந்தவர்.

முறையே மறைந்தும் மறைவிலிருந்து வெளிப்பட்டும் இருப்பது போலன்றி எல்லாவற்றையும் நடத்தும் ஸர்வசக்தி எக்காலமும் குறையாமலிருப்பவர் என்பது.

ஈஸ்வரர் (36)= [1]சுத்தஸ்வரூபத்தில் பார்க்கிலும் [2]அவதாரங்களில் ஈஸ்வரத்தன்மை மிக்கவிசேஷமாகப் பயன்படும்படி இருப்பவர்.

ஈஸ்வரர் (75) = [2]அளவில்லாத நித்யவிபூதியிலும் தாம் நினைத்தது தடைப்படாமலிருக்கும்படி ஸத்யஸங்கல்பர்னவர்.

உக்ரர்= [3]தர்மவிரோதிகள்விஷயத்தில் கொடியவராயிருப்பவர்.

உத்தரர்= [4]அஸுரர்களால் உண்டான ஆபத்தினின்றும் ப்ரம்மாதிதேவர்களைக் கரையேற்றுபவர்; அல்லது, தேவகார்யத்துக்காக யோகநித்திரையை விட்டெழுந்து முயலுகின்றவர்.

உத்தாரணர்= [5]யானையையும் முதலையையும் குளத்திலிருந்து கரையேற்றினவர்.

உத்பவர் (375)= [6]கயிற்றினால் கட்டப்பட்ட அவருடைய உருவத்தைத் தியானிப்பவர்களுக்கு ஸம்ஸாரபந்தத்தை ஒடச்செய்பவர்.

உத்பவர் (796)= [7]மோக்ஷத்தை உபதேசிப்பதாக வெளியில் காண்பிப்பதினால் ஸம்ஸாரத்தைக் கடந்தவர்போலிருப்பவர்.

உதாரதீ= [8]யாவராலும் ஆஸ்ரயிக்கப்படத்தக்க சிறந்தஞான முள்ளவர்; ஸர்வஜ்ஞர்.

உதீர்ணர்= [9]வெளிக்கண்ணாலும் காணப்படும்படி வெளிப்படையாக அவதரிப்பவர்; அவதாரங்களினால் தம் ஸ்வரூபத்தை ஸ்பஷ்டமாக வெளிப்படுத்துகிறவரென்பது.

---

1 இயற்கையான ஐசுவரியமுள்ளவர்.

2 ஸர்வசக்தியுள்ளவர்.

3 சூரியன்முதலானவர்களும் அச்சத்துடன் தம்தம்வேலைகளைநடத்தும்படி கண்டிப்பாக ஆஜ்ஞையைச்செய்பவர்.

4 ஸம்ஸாரக்கடலிலிருந்து கரையேற்றுபவர்: அல்லது, எல்லாவற்றிலும் சிறந்தவர்.

5 ஸம்ஸாரக்கடலிலிருந்து கரையேற்றுகிறவர்.

6 ப்ரபஞ்சமுண்டானதற்குக்காரணமானவர்; அல்லது, ஸம்ஸாரப்பற்றுஇல்லாதவர்.

7 உத்க்ருஷ்டமான அவதாரங்களைச் செய்தவர்; அல்லது, ஜனனமில்லாதவர்.

8 'வாசஸ்பதி' பார்க்க.

9 எல்லாப் பிராணிகளுக்கும் மேலானவர்.

உபேந்த்ரர்= [1]தூவாதசாதித்யர்களில் இந்த்ரனுக்கு இளையவராக அவதரித்த பன்னிரண்டாவது ஆதித்யராகிய உபேந்த்ரராயிருப்பவர்.

ஊர்த்வகர்= [2]எல்லாவற்றிலும் உயர்ந்தவர்.

ஊர்ஜிதசாஸனர்= [3]ப்ரம்மா இந்த்ரன்முதலிய தேவர்களாலும் தாண்டமுடியாத உறுதியானகட்டளையையுடையவர்.

ஊர்ஜிதர்=விரோதிகளைக் கொல்வது கட்டுவதுமுதலிய செய்கைகளில் சிறந்தவன்மையுள்ளவர்; நமுசிமுதலான பகைவர்களை அடக்கினவரென்பது குறிப்பு.

ஏகபாத்= [4]ஒருபாகத்திலில் அவதரித்திருப்பவர்; முழுரூபத்தின்பெருமை எண்ணவும் ஒண்ணுதென்பது.

ஏகர்= [5]மகிமையில் தமக்கொப்பாக எண்ணக்கூடியவர் மற்றொருவருமில்லாமையினால் ஒருமையாயிருப்பவர்; எவ்வகையிலும் ஒப்பில்லாதபகவானை யாருடனும்சேர்த்து எண்ணக்கூடாமையால் ஒருவரென்று சொல்வது.

ஏகாத்மா= [6]சேதனசேதன வர்க்கங்களனைத்துக்கும் ஒருவரே சேஷியும் ஸ்வாமியும் ஆளுகிறவரும் ஆதரிப்பவருமாயிருப்பவர்.

ஓஜஸ்தேஜோத்யுதிதரர்= [7]பலத்தையும் பிறரைவெல்லும் திறமையாகிய பராக்ரமத்தையும் அல்லதுகீர்த்தியையும் ஒளியையுமுடையவர்.

ஔஷதம்= [8]ஸம்ஸாரமென்னும் கொடிய விஷத்தைநிவருத்திசெய்யும் மருந்தாயிருப்பவர்.

க்ரது= [9]அக்னிஷ்டோமமுதலிய ஸோமபானமுள்ள யாகங்கள் எழுவகைகளாலும் ஆராதிக்கப்படுகிறவர்.

---

1 *இந்திரனுக்கு மேற்பட்டவரென்னவுமாம்.

2 எல்லாவற்றிற்கும்மேலிருப்பவர்.

3 உறுதியான வேதம்ஸ்மிருதிஎன்னும் கட்டளையையுடையவர்.

4 உலகமனைத்தும் அவரது ஒருபாகத்தில் அடங்கியிருப்பது.

5 பேதமில்லாதவர்; ஒருவரே ஸத்யமாயிருப்பவரென்பது.

6 ஒரே ஆத்மா; வியாபித்திருப்பவர்.

7 'ஓஜஸ்=பலமுள்ளவர்களின் பலமாயிருப்பவர். தேஜஸ்=பராக்ரமமுள்ளவர்களின் பராக்ரமமாயிருப்பவர். த்யுதிதரர்=அறிவென்னும் ஒளியுள்ளவர்' என்று மூன்றாகவும் கொள்ளலாம்.

8 ஸம்ஸாரரோகத்துக்கு மருந்தாயிருப்பவர்.

9 யூபஸ்தம்பம் நாட்டிச் செய்யப்படும் யாகங்களாயிருப்பவர்.

க்ரமர்= [1]அளவற்ற நித்யைஸ்வர்யத்தினால் எல்லாவற்றையும் வியாபித்து அபிவிருத்தி அடைந்திருப்பவர்.

க்ராமணீ= [2]பரமபதத்தில் நித்யஸூரிகளின் கூட்டத்திற்கு அதிபதியாயிருப்பவர்.

க்ருசர்= [3]பஞ்சினும் காற்றினும் மிக்கலேசாயிருப்பவர்; இதனால், எங்கும் தடையின்றிச் செல்லும்படியான லகிமாவென்னும் ஐஸ்வர்யம் சொல்லப்பட்டது.

க்ருதகர்மா= [4]அஸுரர்கள் மோசம்போவதற்காகவே அவர்களின் நாஸ்திகாசாரங்களைத் தாமும் அனுஷ்டித்தவர்.

க்ருதலக்ஷணர்= [5]தாம்அனுக்ரஹிக்கத்தக்கவர்களுக்குத்தாமே அடையாளம் செய்திருப்பவர்.

க்ருதஜ்ஞர் (83)=[6] பூஜைமுதலிய சிறிய உபசாரத்தையும் தமக்கு உபகாரமாக நினைத்து அதை என்றும் மறவாதவர்; பகவானுக்கு அடிமைபூண்டிருப்பதே ஜீவாத்மாக்களின் இயற்கை என்பதை மறந்து அவித்தையினால் ஸ்வதந்த்ரதை ஏற்றிக்கொண்டு நடக்கும் ஸம்ஸாரிகள் புண்ணியவசத்தினால் தற்செயலாக ஏதாவது ஓர் உபசாரம் தமக்குச் செய்தாலும் அதைப்பேருதவியாக மறவாமல் நினைத்துக்கொண்டு அவர்களைக் காப்பாற்றுகிறவர்.

க்ருதஜ்ஞர் (536)=[7] ஸகரபுத்ரர்கள் அபராதம் செய்திருந்தும் அவர்களின் ஸந்ததியான அம்சுமான் தம்மைவணங்கின நல்வினையை மட்டுமே அறிந்தவர்.

க்ருதாக்ருதர்= [8]போகம் ஐஸ்வர்யமுதலிய அநித்யபலன்களைத் தரும் ப்ரவ்ருத்திதர்மமாகவும் நித்திய பலனை மோக்ஷத்தைத்தரும் நிவ்ருத்தி தர்மமாகவும் இருப்பவர்.

---

1 வியாபித்தவர்; அல்லது, ஸ்ருஷ்டியில் உலகம் வியாபிப்பதற்குக் காரணமானவர்.

2 பிராணிகளின் கூட்டத்தை நடத்துகிறவர்.

3 உருவமில்லாதவர்.

4 கார்யங்களெல்லாம் முடிந்தவர்; ஆகவேண்டியது ஒன்றுமில்லாதவரென்பது; அல்லது, தர்மமென்னும் கர்மத்தைச் செய்தவர்.

5 நித்யஜ்ஞானரூபியாக இலக்கணம் கூறப்பட்டவர்; அல்லது, சாஸ்திரங்களைச் செய்தவர்; அல்லது, எல்லாப்பொருள்களுக்கும் தனித்தனியே இலக்கணங்களைச் செய்தவர்; அல்லது, தம்மார்பில் ஸ்ரீவத்ஸமென்னும் அடையாளத்தையுடையவர்.

6 பிராணிகளின் புண்யபாவங்களாகிய செய்கைகளை அறிகிறவர்; அல்லது, பத்ரம் புஷ்பமுதலிய அல்பங்களையளிப்பவருக்கும் மோக்ஷத்தையளிப்பதனால் நன்றியறிபவர்.

7 காரியமான பிரபஞ்சமாகவும் ஆத்மாவாகவுமிருப்பவர்.

8 கார்யமாகவும் காரணமாகவுமிருப்பவர்.

க்ருதாகமர் (661)= 1சாஸ்திரங்களை உண்டுபண்ணினவர்.

க்ருதாகமர் (795)= 2நாஸ்திக அனுஷ்டானத்தை ஸ்திரப்படுத்துவதற்காகப் புத்தாகமம் ஜைனாகமமுதலிய சமயநூல்களைச் செய்தவர்.

க்ருதாசிஸ்= 3தம்திருக்கல்யாணகுணங்களினால உலகங்களைச் செழிப்பிப்பதில் ஆசையுள்ளவர்; அல்லது, இடைச்சேரியிலுள்ள நெய் வெண்ணெய்முதலியவற்றை விரும்பினவர்.

க்ருதாந்தக்ருத்= 4யமனைப்போன்ற ஹிரண்யாக்ஷனென்னும் மஹாஸுரனை அறுத்தவர்; அல்லது, வராஹஸம்ஹிதையிலும் வராஹ புராணத்திலும் தமது ஹித்தாந்தத்தை வெளிப்படுத்தினவர்.

க்ருதி= 5ஸம்ஸாரிகளுக்குத் தம்மைப்பூஜிக்க எண்ணமுண்டாவதற்குக் காரணமாகிய ஸுக்ருதத்தையும் அவர்மேல் அனுக்ரகம் வைத்துத் தாமேகொடுப்பவர்.

க்ருஷ்ணர்(58)= 6ஸ்ருஷ்டிமுதலிய லீலைகளின்ரஸத்திலுல்லஸிப்போதும் மகிழ்ந்திருப்பவர்.

க்ருஷ்ணர் (554) = 7கார்முகில்போலக் கறுத்தநிறமுள்ளவர்; வராஹாவதாரமுதலியவற்றில் இந்தநிறம் விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது.

க்ரோதக்ருத்= 8காஸ்யபபிரார்த்தனைக்குமுன் க்ஷத்திரியர்கள் மேல் கோபஞ்செய்தவர்.

க்ரோதஹா= 9கோபத்தைஒழித்தவர்; க்ஷத்திரியர்களைஏழேழு முறைவதஞ்செய்தபிறகு அந்தக்கோபத்தைக் காரியபர்வேண்டினமாத்திரத்தில் ஒழித்தவர் என்பது குறிப்பு.

---

1 சுருதிஸ்மிருதிமுதலான சாஸ்திரங்களை வெளியிட்டவர்.

2 வேதத்தை உண்டுபண்ணினவர்.

3 விருப்பங்களற்றவர்.

4 தம்மால் செய்யப்பட்ட உலகத்துக்கு ஸம்ஹாரத்தைச் செய்பவர்; அல்லது, யமனை ஜயிப்பவர்.

5 முயற்சியாயிருப்பவர்; அல்லது, செய்கையாயிருப்பவர்; அல்லது, ஸம்ஹாரம் செய்வதனால் ஹிம்ஸையாயிருப்பவர்; அல்லது, எல்லாம் தாமாயிருப்பதனால் எல்லாச் செய்கைகளுக்கும் ஆதாரமானவர்.

6 ஸச்சிதானந்த ரூபமாயிருப்பவர்; அல்லது, கருமைநிறமுள்ளவர்.

7 வ்யாஸ ரூபியானவர்.

8 துஷ்டர்கள்மேல் கோபஞ்செய்தவர்; அல்லது, 'க்ரோதக்ருத் கர்த்தா' என ஒன்றாகவும் கொள்ளலாம்; கோபிக்கும் அஸுரர்முதலியவர்களைச் சேதிப்பவர்.

9 ஸாதுக்களுக்குக் கோபத்தைப் போக்குகிறவர்.

க = [1]எல்லாரிடங்களிலும் பிரகாசிப்பவர் ; அழுக்கானவற்றில் வஸித்தாலும் பிரகாசிப்பவர்.

கண்டபரசு = [2]ருத்ரருடைய யுத்தத்தைக் கண்டித்த கோடாலி என்னும் ஆயுதத்தை உடையவர்.

கதாக்ரஜர் = [3]கதனென்னும்யாதவனுக்கு முன்பிறந்தவர் ; கத னென்பவன் வஸுதேவர்மனைவிகளில் ஒருத்தியாகிய ஸுதாமை என்பவளின் புத்ரன் ; கிருஷ்ணனுக்கு இளையவன்.

கதாதரர் = [4]ப்ரளயகாலாக்னிபோல நான்குபக்கமும் பொரிகளை விசிறிச் சத்ருஸம்ஹாரம்செய்து உலகத்தை ஸந்தோஷப்படுத்துவ தால் கௌமோதகியென்று பெயர்பெற்ற சிறந்தகதையைத்தரிப்பவர்.

கதிதர் = [5]சொல்லப்பட்டவையும் சொல்லப்படப் போகின்ற வையுமான குணங்கள் நிரம்பிஇருப்பவராக எல்லாச் சாஸ்திரங்களி லும் சொல்லப்பட்டவர்.

கதிஸத்தமர் = [6]சிறந்ததர்மமார்க்கத்தை உபதேசித்தவராதலின் தர்மமார்க்கோபதேச விஷயத்தில் மிகவும் ஆப்தர்.

கநகாங்கதீ = அப்ராகிருதமாகத் தோள்வளைகள்முதலிய திவ்ய பூஷணங்களை எப்போதும் அணிந்திருப்பவர் ; இங்கு, 'கனக' என் பதற்கு அப்ராகிருததிவ்யம் என்பதுபொருள்.

கபஸ்திநேமி = [7]கிரணங்களால் பிரகாசிக்கும் ஆயிரம் முளை களோடுகூடிய சக்கரத்தை உடையவர்.

கபிரவ்யயர் = [8]அவ்யய : கபி = மாறுதல் ஒன்றுமில்லாதவராக ஸுகத்தைக் காப்பாற்றுகிறவர் ; அல்லது, மாறுதல் ஒன்றுமில்லாத நித்யஸுகத்தை அனுபவிப்பவர்.

---

1 ஸுகமென்றுபொருள்படுவதான, 'க' என்னும் சொல்லால் துதிக்கப் படுகிறவர்.

2 பரசுராமாவதாரத்தில் சத்ருக்களைக் கண்டிக்கும் கோடாலி என்னும் ஆயுதமுடையவர் ; அல்லது, சிவரூபி ; அல்லது, அகண்டபரசு = யாராலும் கண்டிக்கப்படாத பராசுவையுடையவர்.

3 மந்திரத்தினால் முன்னே ஆவிர்ப்பவிக்கிறவர் ; அல்லது, கதன்என்பவ னுக்குத்தமையனர்.

4 புத்திதத்வரூபமாகிய கௌமோதகியென்னும் கதையைத்தரிப்பவர்.

5 வேதங்களால் ஒருவரே பரதத்வமென்று கூறப்பட்டவர்.

6 எல்லாருக்கும் கதியாகவும் மிகஉயர்ந்தவராகவுமிருப்பவர்.

7 வட்டமாயிருக்கும் கிரணங்களின் நடுவில் ஸூர்யரூபமாயிருப்பவர்.

8 இரண்டுநாமம். கபி = சூரியகிரணங்களினால் ஜலத்தை இழுப்பவர் ; அல்லது, வராகாவதாரமெடுத்தவர். அவ்யயர் = பிரளயகாலத்தில் உலகமெல் லாம் அடங்குமிடமாயிருப்பவர்.

கபிலர்= [1]சுற்றிலும் மின்னிக்கொண்டிருக்கும் மின்னலின் நடுவில் விளங்கும் கருண்டமேகம்போலப் பசந்தஒளியாகிய நித்யவிபூதியின் நடுவில் விளங்குகிறவர்.

கபிலாசார்யர்= [2]கபிலரென்னும் ஆசார்யராயிருப்பவர்; புகையில்லாத தணல் நிறமுள்ளவராதலின் கபிலர் என்றும், ஸாங்கியசாஸ்திரத்தினால் தத்வஞானத்தைப் பரவச்செய்ததுபற்றி ஆசார்யரென்றும் சொல்லப்படுகிறார்.

கபீந்த்ரர்= [3]ராமாவதாரத்தில் தமது மஹிமைக்கு ஒவ்வாத மானிடவடிவத்தை விளையாட்டாக எடுத்துக்கொண்டு அநுக்ரஹம் மிக வேற்றுமையான வானரரூபத்தை எடுத்துக்கொண்ட தமதுதாஸர்களான தேவர்களுக்கு இந்த்ரராயிருந்தவர்.

கபீரர்= [4]அகாதமாயிருப்பவர்; யாருக்கும்புலப்படாத ஈச்வரமகிமை உபநிஷத்தினால்மட்டும் வெளிப்படும்படி இருப்பவர்; அநாதியாகிய அஜ்ஞானத்தினால் கலங்கியிருக்கும் ஸம்ஸாரியும் தேற்றாங்கொட்டையால் தேற்றப்பட்ட தண்ணீர்போலத் தெளிந்துபோகிறானென்றால் இயற்கையாகவே எப்போதும் பிரகாசிக்கும்பகவான் பிரகாசிப்பதைப்பற்றிச் சொல்லவேண்டுமோ என்பது கருத்து.

கபீராத்மா= [5]ப்ரம்மாதிதேவர்களும் ஆழங்கண்டறியக் கூடாத ஸ்வரூபமுள்ளவர்.

கர்த்தா (316)= [6]தம் கோபத்திற்குக் காரணமான கார்த்தவீர்யார்ஜுனனைத் துணித்தவர்.

கர்த்தா (382)= [7]ஜீவர்களுக்குச் செய்கைகளை உண்டுபண்ணுவதில் தாமே சுதந்திரமாகநிற்பவர்; பலத்தை அநுபவிப்பதற்குரிய அதிகாரியான ஜீவன் தன்னுடைய இன்பதுன்பங்களைத் தான் எப்படிகவனிப்பனோ அப்படியும் அதற்குமேலாகவும் ஜீவனது அந்த அந்த நிலைமைகளையும் பகவான் கவனிப்பவர் என்பது.

---

1 கபிலநிறமுள்ள வடவைத்தீயாகக் கடலிலிருப்பவர்.

2 'மஹர்ஷி' பார்க்க.

3 வராகரூபியும் எல்லாருக்கும் ஈசுவரருமாயிருப்பவர்; அல்லது, வானரர்களுக்கு ஈசுவரராகிய ராமர்.

4 ஞானம் ஐசுவரியம் பலமுதலிய அளவற்ற குணங்களினால் அகாதமாயிருப்பவர்.

5 தமது ஸ்வரூபமும் சித்தமும் யாராலும் காணக்கூடாதவர்.

6 உலகத்தைப் படைத்தவர்; 'க்ரோதக்ருத்' பார்க்க.

7 ஸ்வதந்த்ரர்.

கரணம் = [1]அடியார்கள் தம்மையடைவதற்குத் தாமே சிறந்த கருவியாயிருப்பவர் ; அறிவுக்குக் கருவிகளான ஞானேந்திரியங்களும் செய்கைக்குக் கருவிகளான கர்மேந்திரியங்களும் பகவானுடைய சக்தியின் ஒருதிவலே சேர்ந்தலால் கரணங்களென்னப்படுகின்றன.

கருடத்வஜர் = கருடனைக் கொடியாகவுடையவர் ; இது ஸர்வேஸ்வரருக்கே சிறப்பாயுள்ள இலக்கணம்.

கவி = எல்லாவற்றையும் பார்ப்பவர் ; ஸர்வஜ்ஞர்என்பது.

கஹநர் (384) = [2]ஜீவர்களுடைய ஸுகதுக்கங்களைத் தம்முடையவையாக நினைப்பதாகிய மஹாகுணத்தில் கரைகடந்தவர்.

கஹநர் (548) = [3]இழிவதற்கரியவர் ; உட்பொருள்கள் வெளியே காணப்படும்படி தெளிவாயிருப்பினும் கருங்கடல் இழிவதற்கு அரிதாயிருப்பதுபோல உபநிஷத்தினால் குணங்கள் அறியப்பட்டாலும் அளவற்றிருப்பதனால் கிரஹிக்கக்கூடாமலிருப்பவர் என்பது.

காந்தர் (297) = தமது வடிவழகு மென்மைமுதலிய குணங்களினால் யாவராலும் விரும்பப்படுகிறவர்.

காந்தர் (660) = [4]யாவராலும் விரும்பத்தக்கவர் ; அதனாலல்லவோ காமதேவரென்னும் இவர், அப்ஸரஸினால் பூஜிக்கப்படுவது ?

காமக்ருத் = [5]அவரவர்விருப்பப்படியே போகமோக்ஷமுதலிய பலன்களைக் கொடுப்பவர் ; 'தமது திருவடித்தாமரைகளில் ஞானிகளுக்கு விருப்பத்தைத் தாமேசெய்கிறவர்' என்பது நிருக்தி.

காமதேவர் = [6]விரும்பினவற்றையெல்லாம் அளிப்பவர் ; 'எல்லாருக்கும் வேண்டினவற்றையெல்லாம் கொடுக்கும்பகவான் காமதேவர் என்னும் பேரோடு இமயமலையைச்சார்ந்து அப்ஸரஸினால் பூஜிக்கப்பட்டிருக்கிறார்' என்று கூறப்பட்டுளது.

காமப்ரதர் = விரும்பினவற்றையெல்லாம் கொடுப்பவர் ; தம்மை விரும்பினவர்களுக்குத் தம்மையும் மற்றச்சிறியபலன்களைவிரும்பினவர்களுக்கு அவற்றையும் அவரவர்விருப்பப்படி அளிப்பவர்என்பது.

---

1 உலகத்தின் உற்பத்திக்குக் கருவியாயிருப்பவர்.

2 தம்முடைய ஸ்வரூபமும் சக்தியும் செய்கைகளும் அறியக்கூடாமலிருப்பவர்.

3 இழியமுடியாதவர் ; அல்லது, எல்லாவற்றிற்கும் தாம் சாக்ஷியாக இருப்பதனால் அறியக்கூடாதவர்.

4 அழகான தேகமுள்ளவர் ; அல்லது, பிரம்மாவுக்கும் முடிவைச் செய்கிறவர்.

5 காமனெனப்படும் பிரத்யும்னனை உண்டுபண்ணினபிதா.

6 எல்லாராலும் விரும்பப்பட்ட ஈசுவரர்.

காமபாலர்= [1]தாம்கொடித்தபலன்களைக் காப்பாற்றுகிறவரான காமதேவர்என்னும் அர்ச்சாவிக்ரகம்.

காமர்= [2]ஸௌலப்யம் ஔதார்யம் தயைமுதலிய ஆத்மகுணங்கள்பற்றியும் யாவராலும் விரும்பப்படுகிறவர்; இந்தக்குணங்களில் சிறிதுபெற்றதினாலேதான் மன்மதனுக்கு உலகத்தை மயங்கச்செய்யும் தன்மையிருப்பது.

காமஹா= [3]தம்குணங்களில் இழிந்தவர்களுக்கு மற்றெல்லா விஷயங்களிலும் விருப்பத்தைக்கெடுப்பவர்.

காமீ= [4]குறைவின்றிக்கொடுக்கச் சிறந்தபலன்களெல்லாம் தம்மிடத்தில் நிரம்பியிருப்பவர்.

காரணர்= [5]இந்திரியங்களாகியகருவிகளால் ஜீவன்களுக்கு அவ்வவற்றின்செய்கைகளை உண்டுபண்ணுகிறவர்; இந்திரியங்களுக்கும் அதிஷ்டானதேவதைஎன்பது.

காலநேமிஹா= [6]காலசக்ரத்தின் நேமியாகிய அளித்தை என்னப்படும் கலிகல்மஷத்தைத் தம்மிடம் சேர்ந்தமாத்திரத்தில் அழிப்பவர்; இதற்காகவே பலக்ஷேத்ரங்களில் அவதரித்திருப்பவரென்பது.

காலர்= [7]குணவிசேஷங்களினால் சராசரங்களனைத்தையும் தம்மிடத்தில் சேர்ப்பித்துக்கொள்ளுகிறவர்.

கிம்= [8]தந்தம் மனோரதங்களை அடைவதற்குவிரும்பியாவரும் ஒருகாரணமுமின்றித் தெரிந்துகொள்ள விரும்பப்படியிருப்பவர்.

குண்டலீ= [9]தம்திருமேனிக்குத்தகுதியான குண்டலமுதலிய திவ்யபூஷணங்களை எக்காலமும் அணிந்திருப்பவர்.

---

1 விரும்பினவர்களின் விருப்பங்களைக் காப்பாற்றுகிறவர்.

2 மிக்கஅழகானவர்; புருஷார்த்தங்களை விரும்புகிறவர்களால விரும்பப்படுகிறவர்.

3 மோக்ஷத்தைக் கருதும் பக்தர்களுக்கு ஸம்ஸாரப்பற்றுக்களைப் போக்குகிறவர்; அல்லது, விரோதிகளின் எண்ணங்களைக்கெடுப்பவர்

4 விரும்பினவையெல்லாம் நிரம்பினவர்.

5 மூலகாரணமும் நிமித்தகாரணமுமாயிருப்பவர்.

6 காலநேமியென்னும் அஸுரனைக்கொன்றவர்.

7 எல்லாவற்றையும் எண்ணுகிறவர்; ஸ்ருஷ்டியிலுள்ள எல்லாப்பொருள்களின் கணக்குக்களையும் அறிந்திருப்பவர் என்பது.

8 விசாரிக்கப்படும் பிரம்மமாயிருப்பவர்.

9 ஆதிசேஷரூபியானவர்; அல்லது, ஸூர்யன்போலப் பிரகாசிக்கும் குண்டலங்களையுடையவர்; அல்லது, ஸாங்க்யம்,யோகம்ஆகிய இரண்டு மகரகுண்டலங்களையுடையவர்.

குணப்ருத்= [1]தம்ஸங்கல்பத்தினல் எல்லாநிலைமைகளிலுமிருக்கும் எல்லாப்பொருள்களையும் தமதுகுணம்போலத் தம்மிடத்தில் வைத்துத் தாங்குகிறவர்; எல்லாம் உட்பட்டிருப்பதாகிய ஈசித்வமென்னும் ஐஸ்வர்யம் சொல்லப்பட்டது.

குந்தர்= [2]ஞானம்வைராக்யமுதலிய முற்படிகள்ஏறினவர்களுக்குப் பரபக்தி பரஜ்ஞானம் பரமபக்திகளாகிய மேற்படிகளைக் கொடுப்பவர்; அல்லது, அழிக்கப்பட்டபாவம் திரும்பிஅணுகாமலிருக்கும்படி விலக்குகிறவர்.

குந்தரர்= [3]குருக்கத்திமலர்போலச் சுத்தமாயிருப்பவர்; அல்லது, குந்தம்என்னப்படுவதாகிய பரதத்வஞானத்தைக் கொடுப்வர்; அல்லது, 'கும்' என்னப்படும்பாவத்தைப் போக்குபவர்.

குப்தர்=[4] பகவானுடையமகிமையைஅறிந்தபூர்வாசார்யர்களால் ரக்ஷிக்கப்பட்டவர்; அவர்களின் ஸம்ப்ரதாயமின்றி மற்றெவ்வகையிலும் அறியக்கூடாதவர் என்பது.

கும்பர்=[5] அவரவர்கண்ணுல்கண்டு பழகினஉருவங்களுக்கொப்பான வடிவழகுமுதலியவற்றினல் பக்தர்களால் விரும்பப்படுகிறவர்; அல்லது, கு என்னப்படும்பூமியாகிய க்ஷேத்ரங்கள் ஆலயங்கள்முதலியவற்றில் தியானத்திற்கும் ஆராதனத்திற்கும் விஷயமாகும்படி பிரகாசிப்பவர்; அல்லது, ஜனனமரணமாத்திரங்களினல் ஸ்வல்பமம் பந்தமுள்ள பூமியில் யமபடர்முதலிய பயங்களைப்போக்கும் மகாப்பிரபாவத்தோடு பிரகாசிப்பவர்.

குமுதர் (596)= [6]பிரம்மாமுதலிய எல்லாப்பிராணிகளுக்கும் உரிய சப்தஸ்பர்சமுதலான போகங்களுக்குஇடமாதாலால் கு (பூமி) என்னப்படும் ப்ரகிருதிமண்டலத்திலுள்ள சேதனர்களுக்குப் போகங்களையளித்து மகிழ்ந்திருப்பவர்.

---

1 ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களுக்குக் காரணமாகிய ஸத்வராஜஸ்தமோ குணங்களைவகிப்பவர்.

2 குந்தமலர்போல அழகான அங்கமுடையவர்; ஸ்படிகம்போலத் தெளிவாயிருப்பவர் என்பது; அல்லது, பரசுராமாவதாரத்தில் பூமியைக் கசியபருக்கு யாகதக்ஷிணையாகக் கொடுத்தவர்; அல்லது, பூமியில் க்ஷத்ரியர்களில்லாமல் கண்டிதவர்.

3 குருக்கத்திமலர்போலச் சுத்தமானதர்மபலன்களை அளிப்பவர்; அல்லது, குந்தமலர்போன்ற தர்மபலன்களை அங்கீகரிப்பவர்; அல்லது, ஹிரண்யாக்ஷனைக் கொல்லுவதற்காக வராகரூபமெடுத்துப் பூமியைப்பெயர்த்தவர்.

4 வாக்குக்கும் மனத்திற்கும்எட்டாமல் மறைந்திருப்பவர்.

5 குடும்போல எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பவர்.

6 பூமில் மகிழ்ந்திருப்பவர்.

குமுதர்(813)= [1]பூமிஎன்னப்படும்ப்ரக்ருதிமண்டலத்திலேயே மகாத்மாக்களுடன் சேர்ந்து மகிழ்ந்திருப்பவர்; அல்லது, முக்தியின் பூமியாகிய பரமபதத்தைக்கொடுப்பவர்; (கு=பூமி, மு=முக்தி.)

குரு= [2]வேதங்களிலுல் அவரவர் அதிகாரங்களே உபதேசித்த தனுல் அவர்களுக்கு ஆசார்யர்.

குருர்க்குருதமர்= [3]எல்லாவித்தைகளேயும் பிரம்மாமுத்லானவருக்கும் உபதேசித்ததனுல் ஆசார்யர்களுக்கும் பரமாசார்யர்.

குவலேசயர்= [4]ஸம்ஸாரமுள்ளகாள்வரையிலும், 'கு' என்னப்படும் ப்ரகிருதிமண்டலத்தில் பிறந்தும் இறந்தும் இழிவாகச்சுழன்றுகொண்டும் தம்தேகங்களுக்கும் இந்திரியங்களுக்கும் தாமே அதிகாரிகளென்று நினேத்துக்கொண்டுமிருக்கும் சேதனர்களே அப்படியே நடத்திக்கொண்டு அந்தர்யாமியாயிருப்பவர்.

குஹ்யர்= [5]பரமோபநிஷத்திலுல்மட்டும் அறியத்தக்கதும் வெளிப்படையாகப் புலப்படாததுமான திவ்யமங்களவிக்ரஹத்தோடு கூடினவர்.

குஹர்= [6] ஜீவர்களின் இன்பதுன்பங்களேத் தாமடைந்து மாறுவதுமுதலியவகைகளால் உலகமனேத்தையும் ரக்ஷிப்பவர்.

கேசவர் = [7]கறுத்துச்சுருண்டு சேர்ந்து இணங்கியிருக்கும் அழகிய கூந்தலுடையவர்.

கேசவர் (654)= [8]'கிலேசங்களேப் போக்குபவராகியகேசவர்'இந்தப் பூலோகத்தில் மதுரைஎன்னும் பெயருள்ள மகாக்ஷேத்ரத்தி

---

1 பூபாரத்தைஒழித்துப் பூமியை மகிழ்விப்பவர்.

2 'தேவப்ருத்' பார்க்க.

3 இரண்டுநாமம். குரு=எல்லாக்கல்விகளேயும் கற்பிப்பவர்; அல்லது, எல்லாருக்கும் தந்தை. குருதமர்=ப்ரம்மாமுதலானவர்களுக்கும் ப்ரம்ம ஜ்ஞானத்தின் ஸம்ப்ரதாயத்தைப் ப்ரவ்ருத்திப்பித்தவர்.

4 பூமியைச்சுற்றி இருக்கும் கடலில் சயனித்திருப்பவர்; அல்லது, குவலயமென்னப்படும் இலந்தைப்பழத்தின்உடலில் இருக்கும் தக்ஷகனுகஇருப்பவர்; தக்ஷகனும் அவருடையபரிவாரமென்பது; அல்லது, பூமியில்உகரும் ஸர்ப்பஜாதியாகிய ஆதிசேஷன்வயிற்றின்மேல் சயனித்திருப்பவர்.

5 ரஹஸ்யமான உபநிஷத்திலுல்மட்டும் அறியக்கூடியவர்; அல்லது, குகைஎன்னப்படும் ஹிருதயாகாசத்தில் வைக்கப்பட்டவர்.

6 மாயையினுல் எல்லாவற்றையும் மறைப்பவர்.

7 அழகியகூந்தலுடையவர்; அல்லது, க, அ, ஈச என்னப்படும் ப்ரம்ம விஷ்ணுமகேசுவரர்களாகிய மும்மூர்த்திகளேயுடையவர்; அல்லது, க, ஈச என்னும் ப்ரம்மருத்திரர்களேத் தம்வசத்தில் வைத்திருப்பவர்: அல்லது, கேசி என்னும் அஸுரனே வதஞ்செய்தவர்.

8 சூரியன்முதலானவர்களிடத்திலுள்ள கிரணங்களுக்குரியவர்; அல்லது, க, அ, ஈச'என்னப்படும் ப்ரம்ம விஷ்ணு சிவசக்திகள் மூன்றுக்கும் இருப்

லும் காசியிலும் இரண்டுரூபமாயிருக்கிறார்' என்று சொல்லப்பட்ட அர்ச்சாவதாரமாகிய கேசவர்.

கேசிஹா=கேசியென்னும் அஸுரனைக் கொன்றவர்.

கோப்தா (498)= [1]எல்லாவித்தைகளையும் காப்பாற்றுகிறவர்.

கோப்தா (600)= [2]இம்மையிலுள்ள கர்மபலன்களினின்றையும் ரக்ஷித்தவர்.

கோபதி (497)= [3]வேதங்களும் தேசபாஷைகளுமாகிய வாக்குக்கள் எல்லாவற்றையும் நடத்துகிறவர்.

கோபதி (599)= [4]போகபூமியான ஸ்வர்க்கத்திற்கும் ஸ்வாமி.

கோவிதாம்பதி= [5]வேதங்களையறிந்தஞானிகளால் ஞானமென்னும் யஜ்ஞத்தினால் ஆராதிக்கப்படடு அவர்களைக்காப்பாற்றுகிறவர்.

கோவிந்தர் (189)= [6]தேவர்கள் செய்யும் துதிகளாகிய வாக்குக்களைப் பெறுகிறவர்.

கோவிந்தர் (543) = [7]பூமியைத் திரும்பவும் அடைந்தவர்.

கோஹிதர்= [8]ஸம்ஸாரமென்னும்வித்துவினையும்இடமாதலால் கோ (பூமி) என்னப்படும் ப்ரகிருதிக்குப் பலவிதப் படைப்புக்களினால் வரையறையை உண்டுபண்ணுகிறவர்.

சக்திமதாம்ஸ்ரேஷ்டர்= [9]சிறந்த சக்தியையுடைய தேவர்கள் முதலானவர்களுக்கும் மிகச்சிறந்தவர்.

சக்ரகதாதரர்= [10]சக்ரம் கதைமுதலிய திவ்யாயுதங்களை உடையவர்; ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், நிக்ரஹம், அனுக்ரஹம்ஆகிய

பிடமானர்; அலலது, ப்ரம்மாவும் சிவனும் தமதுபாகத்திலிருந்து உண்டாகச்செய்தவர்.

1 உலகங்களைக்காப்பவர்.

2 உலகத்தைரக்ஷிப்பவர்; அல்லது, மாயையிலுள்ள தம்முடையஸ்வரூபத்தை மறைப்பவர்.

3 திருஷ்ணுவதாரத்தில் பசுக்களை மேய்த்தவர்; அல்லது, பூமிதேவியின் கணவர்.

4 பூமிக்குப்பதி.

5 வேதவாக்கை அறிந்தவர்களுக்கு ஸ்வாமியாயிருப்பவர்.

6 நஷ்டமாக மறைந்துபோன பூமியை எடுத்தவர்.

7 கோக்களென்னப்படும் வேதாந்தவாக்குக்களினால் அறியப்படுகிறவர்.

8 திருஷ்ணுவதாரத்தில் கோவர்த்தனமேந்திக் கோக்களைக்காத்தவர். அல்லது, பாரத்தை ஒழித்துப் பூமிக்கு அனுகூலம்செய்தவர்.

9 சக்தியுள்ளப்ரம்மாதிதேவர்களுக்கும் மிகுந்தசக்தியுள்ளவர்.

10 மனஸ்தத்துவமாகிய சக்கரத்தையும் புத்திதத்துவமாகிய கதையையும் லோகரக்ஷணத்திற்காகத்தரிப்பவர்.

ஐந்துசக்திகளே உருக்கொண்டவையான சங்கம், சக்கரம், கதை, சார்ங்கம், நந்தகமென்னும் ஐந்து திவ்யாயுதங்களையும் திவ்யபூஷணங்களைப்போலவே எப்போதும் தரித்துக்கொண்டிருப்பவர் என்பது; அல்லது, பரமேஷ்டி, புருஷன், விஸ்வன், நிவ்ருத்தி, சர்வன் என்று ஐந்துவிதமாகப் பகுக்கப்பட்ட பரமாத்ம சக்திகளின் வடிவங்களாகிய பஞ்சாயுதங்களைத்தரிப்பவர்.

சக்ரீ (908) = [1]ஸுதர்சனமென்னும் சக்கரமுதலிய திவ்யாயுதங்களை எப்போதும் தரிப்பவர்.

சக்ரீ (995) [2]தம்மை ஆஸ்ரயித்ததேவர்களுக்கு விரோதிகளான ராக்ஷஸர்களையும் அஸுரர்களையும் கொன்று அவர்களின் ரத்தத்தில் நனைந்திருக்கும் ஜ்வாலைகளோடுகூடினதுமான ஸுதர்சனமென்னும் சக்கரத்தை வகிப்பவர்.

சங்கப்ருத் = [3]பாஞ்சஜன்யமென்னும்சங்கைத் தம்திருப்பவள இதழின் அம்ருதத்தினால் போஷிப்பவர்; அஸாதாரணமான சின்னமான திவ்யசங்கம் உடையவர்என்பது.

சசபிந்து = [4]கெட்டவழி போகிறவர்களை அழிப்பவர்.

சத்ருக்நர் = [5]விஷயங்களில் பிரவருத்திப்பதனால் ராவணன் போலவே பகைகளாயுள்ள இந்திரியங்களை வ்வேகமென்னும் அம்பினால் அடக்குகிறவர்.

சத்ருஜித்சத்ருதாபநர் = [6]தமது திவ்யசக்தியினால் பூரிக்கப்பட்டுச் சத்ருக்களைஜயித்தவர்களாகிய ககுத்ஸ்தர் புருகுதஸர்முதலியோர்களைக்கொண்டு பகைவரை வருத்துகிறவர்.

சதமூர்த்தி = [7]அர்ஜுனனுக்கு விஸ்வரூபதர்சனம் தந்தருளியபடி எண்ணிலாஉருவங்களையுடையவர்.

---

1 அரக்கரணத்தவருபமான ஸுதர்சனமென்னும் சக்கரத்தை எல்லா உலகங்களையும்காப்பதற்காகத் தரித்திருப்பவர்.

2 மனத்தத்துவமாகிய ஸுதர்சனமென்னப்படும் சக்கரத்தையுடையவர்; அல்லது, ஸம்ஸாரசக்ரமானது தமது ஆஜ்ஞையினால் சுழலும்படி செய்பவர்.

3 தாமஸாகங்காரமாகிய பாஞ்சஜன்யமென்னும்சங்கத்தை வகிப்பவர்.

4 முயல்போன்ற கலங்கத்தையுடைய சந்த்ரன்; அதாவது, சந்த்ரன்போல எல்லாவற்றையும் போஷிப்பவர்; ஆனந்தமகட்டல்.

5 தேவர்களுக்குச் சத்ருக்களான அஸுரர்களைக் கொல்லுகிறவர்.

6 இரண்டுநாமம். சத்ருஜித் = தேவசத்ருக்களான அஸுரர்களை ஜயிப்பவர். சத்ருதாபநர் = அவர்களைத்துன்புறச்செய்கிறவர்.

7. ஞானரூபியாயிருக்கும் மாயையினால் பலஉருவங்களாகத் தோற்றுகிறவர்.

சதாநந்தர்= [1]தாமும் பிராட்டியும் ஒருவர்மேல் ஒருவர் வைத்திருக்கும் ப்ரேமரஸாதிசயத்தினால் பேராநந்தம் கரைகடந்து மேன்மேலும் பெருகிக்கொண்டிருப்பவர்.

சதாநகர்= [2]அர்ஜுனனுக்கு விஸ்வரூபம் காட்டினபோது அநேகமுகங்களுடையவர்.

சதாவர்த்தர்= [3]அநேகம் சுழல்களையுடையவர்; தமது அளவற்ற ஐஸ்வர்யப்பெருக்கு குறைவுபடாது மேன்மேலும் அதிகரிக்க அதை ஸௌலப்யமானது அடக்குவதுபற்றி உள்ளேயே பலசுழல்களிட்டுக்கொண்டிருப்பது என்பது; நதிவேகத்தை அடக்கினாற்போலத் தமதுஐஸ்வர்யம் அடக்க அடக்கச் சுழல்கள் சுழித்து மேன்மேலும் விருத்தியாகும்படி இருப்பவர்.

சதுர்க்கதி= [4]உபாஸிப்பவர்கள்செய்யும் பக்தியின் தாரதம்யத்தை அனுஸரித்து இந்திரபதம், ப்ரம்மபதம், கைவல்யம், மோக்ஷம் ஆகிய நான்குவகைக்கதிகளைக் கொடுப்பவர்.

சதுர்த்தம்ஷ்ட்ரர்= [5]வ்யூகங்களுக்கு ஆதாரமான பரவாஸுதேவரூபத்தில் நான்குகோரப்பற்களையுடையவர்; இது மகாபுருஷலக்ஷணம்.

சதுர்ப்பாவர்= [6]வாஸுதேவர் ஸங்கர்ஷணர் ப்ரத்யும்னர் அநிருத்தர் என்னும் நான்குவ்யூகங்களிலும் உலகத்துக்குப் ப்ரயோஜனமாயுள்ள நான்கு செய்கைகளை வெளிப்படுத்துகிறவர்; ஜாக்ரத்ஸ்வப்ன ஸுஷுப்தி துரியம்என ஒவ்வொன்றும் நன்நான்காகப்பகுக்கப்படுவதனால் பதினாறுவற்படும் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ன அநிருத்தமூர்த்திகளில் உலகம்படைப்பது சாஸ்திரம்கொடுப்பதுமுதலிய நான்குப்ரயோஜனங்களை வெளிப்படுத்துகிறவர்என்பது.

---

1 ஒரேஆனந்தம் பலகாரணங்கள்பற்றிப் பலவகைகளாகப் பிரிந்திருப்பதனால் அனேகஆனந்தங்களுடையவர்.

2 பலஉருவங்கள் இருப்பதனாலேயே பலமுகங்களையுடையவர்.

3 தர்மத்தைரக்ஷிப்பதற்காக அநேக அவதாரங்களையெடுப்பவர்; அல்லது, தேகத்திலுள்ள நாடிநாடிகளிலும் ப்ராணரூபியாகி ஸஞ்சரிப்பவர்.

4 நான்கு வர்ணங்களுக்கும் நான்கு ஆச்ரமங்களுக்கும் தஞ்சமாயிருப்பவர்.

5 நான்கு கோரப்பற்களையுடையவர்; இது நரஸிம்மாவதாரம்; அல்லது ஞானம், யோகம், க்ரியை, சரியைஆகிய நான்கு கொம்புகளையுடையவர்.

6 தர்மார்த்தகாமமோக்ஷங்களென்னும் நான்கு புருஷார்த்தங்களுக்கும் காரணமாயிருப்பவர்.

சதுர்ப்பாஹு = [1]வ்யூகங்களுக்குக் காரணமான பரஸ்வரூபமாகிய வாஸுதேவராக நான்குகைகளோடு தேவகிகர்ப்பத்திலிருந்து அவதரித்தவர்.

சதுர்ப்புஜர் = நான்குகைகளையுடையவர்; இதுவும் பரமான வாஸுதேவமூர்த்தியின் லக்ஷணம்.

சதுர்மூர்த்தி = [2]கிருஷ்ணனுடைய விபவாவதாரத்திலும் அதற்குக்காரணமான வ்யூகங்களிலிருப்பதுபோலவே ஸங்கர்ஷண வாஸுதேவ பிரத்யும்ன அநிருத்த மூர்த்திகளாக யதுவம்சத்தில் அவதரித்திருப்பவர்.

சதுர்வ்யூஹர் (140) = [3]மூன் 123-வதாயிய, 'மஹாதபஸ்' என்னும் நாமத்துக்குமுன் சொல்லப்பட்ட பிரயோஜனங்களுக்காக ஆறு குணம் ஸமமாகச்சேர்ந்தும் இரண்டு இரண்டு குணங்கள் அந்த அந்தக் கார்யத்துக்குத்தக்கபடி தலையெடுத்துமிருக்கும் நான்குவகையடையாளங்களினால் வேறுபாடுள்ள அங்கங்களும் நிறமும் ஆபரணங்களும் ஆயுதங்களும் வாகனங்களும் த்வஜமுதலியவைகளும் பொருந்தி ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்தி துரியம்என்னும் நான்குநிலைமைகளைப் பகுத்து அடைந்திருப்பவையான முன் சொல்லிய திவ்யமங்கள மூர்த்திகளினால் தாமே தம்மை நான்காகவகுத்துக்கொண்டிருப்பவர்; அநிருத்தர் ஜாக்ரதவஸ்தை, ப்ரத்யும்நர் ஸ்வப்நாவஸ்தை, ஸங்கர்ஷணர் ஸுஷுப்த்யவஸ்தை, வாஸுதேவர் துரியாவஸ்தை.

சதுர்வ்யூஹர் (773) = [4]வ்யூகங்களிலிருப்பதுபோலவே விபவாவதாரத்திலும் நான்குபிரிவுகளிலும் ஞானம் சக்தி பலம் ஐஸ்வர்யம் வீர்யம் தேஜஸ் இந்தஆறுகுணங்களும் வாஸுதேவரூபத்தில் ஸமமாக நிரம்பியும் மற்றமூன்றிலும் இரண்டிரண்டு தலையெடுத்துமிருப்பவர்.

சதுர்வேதவித் = [5]நான்குவேதங்களையும் அறிந்தவர்களுக்கும் வ்யூஹாவதாரங்களிலும் விபவாவதாரங்களிலும் வெளிப்படுத்தப்

---

1 நான்குகைகளையுடையவர்.

2 விராட்ஸ்வரூபம், ஸூத்ராத்மா, அவ்யாக்ருதம் (அவித்தை,) தூரியம் என நான்கு உருவங்களோடு இருப்பவர்; அல்லது, வெண்மை, செம்மை, பசுமை, கருமை ஆகிய நான்குநிறமுள்ள மூர்த்திகளோடிருப்பவர்.

3 வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தரென்னும் நான்குவ்யூகங்களையுடையவர்.

4 சரீரபுருஷன் சந்தபுருஷன் வேதபுருஷன் மஹாபுருஷன்என்ற ஐதரேயோபநிஷத்தில்சொல்லப்பட்ட நான்குபிரிவுகளையுடையவர்.

5 நான்குவேதங்களின் பொருளையும் அறிந்தவர்.

பட்ட தம்முடையமகிமையென்னும்பெருங்கடலில் ஒருதுளிஅளவே தெரியும்படி இருப்பவர்.

சதுரஸ்ரர்= [1]மூலமேயென்று கதறின யானைக்காக ஆடையும் ஆபரணங்களும் பூமாலைகளும் தளரும்படி சென்றும்முதலையின்மேல் கோபித்தும் கார்யங்களைப் பழுதில்லாமல் செய்தவர்; ஆஸ்ரிதருக் காகப் பரபுரப்பது உசிதந்தான் என்பது.

சதுராத்மா (139)= [2]வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரதயும்ன அனி ருத்தர்களென்னும் நான்கு மூர்த்திகளையுடையவர்.

சதுராத்மா (775) = [3]அவ்வவ்வதிகாரிகளின் தாரதம்யத்துக்கு ஏற்றபடி ஜாக்ரத ஸ்வப்ன ஸுஷுப்தி துர்யம்என்னும் நான்கு நிலைமைகளிலும் நான்கு உருவங்களாகி ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்ம மாகவும் பிரகாசிப்பவர்.

சந்த்ராம்சு= [4]தியானிப்பவர்களுக்குக் களைப்பைத் தீர்த்துச் செழிப்பையுண்டாக்குவதனால் சந்திரன்போன்றஒளியுள்ளவர்.

சந்தநாங்கதீ= ஆநந்தத்தைக்கொடுக்கும் தோள்வளைகள் முத லிய திவ்யாபரணங்களையும் மிகுதியாக அணிந்திருப்பவர்.

சப்தஸஹர்= [5]தெளிவாக உச்சரிக்கமாட்டாத திர்யக்ஜாதிக ளின்துக்கசப்தத்தையும் பெரியபாரம்போலப் பொறுப்பவர்; கஜேந்த் ராழ்வான் முதலையின்வாயிலகப்பட்டு மூலமேயென்று கதறினதை வருத்தத்தோடு கேட்டவரென்பது.

சப்தாதிகர்= [6]சொல்லுக்கு எட்டாதவர்; ஆதிசேஷனுடைய அநேகநாக்களாலும் வேதங்களின் அநேகசாகைகளாலும் ஸரஸ்வதி யிலுலும் அவர்மகிமையைச் சொல்லமுடியாதென்பது.

---

1 மனிதர்களுக்கு அவரவர் கர்மங்களுக்குத்தக்கபடி ஸரியானபலன்களைக் கொடுப்பவர்.

2 ப்ரம்மா, தக்ஷர்முதலான ஸ்ருஷ்டி கர்த்தர்கள், காலம், ப்ராணிகள் ஆகிய இந்தநான்குவகை ஸ்ருஷ்டிக் கருவிகளையும் விஷ்ணு, மநுமுதலான வர்கள், காலம், ப்ராணிகள் ஆகிய நான்குவகை ரக்ஷணைக்கருவிகளையும் ருத் ரன், காலம், யமன்முதலானவர்கள், ப்ராணிகள் ஆகிய நான்குவகைஸம்ஹாரக் கருவிகளையுமுடையவர்.

3 காமக்ரோதமுதலியவை இல்லாமையினால் தேர்ந்த மனமுள்ளவர்; அல்லது மனம், புத்தி, அகங்காரம், சித்தம் இந்நான்கு உருவங்களாகி இருப் பவர்.

4 ஸம்ஸார தாபத்தினால்வருந்தினவருக்குச் சந்திரகிரணம்போலமகிழ்ச்சி யைத்தருகிறவர்.

5 எல்லாவேதங்களாலும்கோஷிக்கப்படுவதனால் எல்லாச்சப்தங்களையும் தாங்குகிறவர்.

6 சப்தத்தினால்சொல்வதற்குரியஜாதிமுதலியவைஇல்லாமையால் சப்தத் தைக்கடந்தவர்.

சம்பு== [1]யாவரும் அச்சமின்றி ஒன்றுகூடிக்கலந்து பழகக்கூடிய ஸௌலப்யம்வடிவழகுமுதலான குணங்களை வெளிப்படுத்திப்பேரின்பத்தைவிளைவிப்பவர்.

சமர்== [2]காமம், குரோதம், பயமுதலியவற்றை அடக்குவதற்கு உபாயத்தை உபதேசிப்பவர்.

சர்ம==ஸுகரூபமாயிருப்பவர்; தாமே பலஸுகவடிவாயிருப்பவர்என்பது.

சர்வர்== [3]தம்சரீரங்களாயுள்ள ப்ராணிகளின்கீழ்க்குகளைச் சிதறஅடிப்பவர்.

சர்வரீகரர்== [4]பகைவர்களைப்பிளக்கும் சங்கம், சக்ரம், கதை, சார்ங்கம், நந்தகமென்னும்பஞ்சாயுதங்களையும் த்ரைலோக்யரக்ஷணத்திற்காகக் கையில்எடுத்துக்கொண்டவர்.

சரணர்==தம்மையடைவதற்குத் தாமே உபாயமாகவிருப்பவர்; துயரப்படுகிறவர்களின் துயரத்தைப் போக்குகிறவர் என்பது.

சரபர்== [5]வரம்பு மீறினவர்களை அழிப்பவர்.

சரீரபூருத்== [6]உபாஸகனுடையஹ்ருதயகமலத்திலிருந்து தமக்குச்சரீரமான அந்தஉபாஸகனைப்போலிப்பவர்; அவருடையகல்யாணகுணங்களைத்யானிப்பதே பக்தர்களுக்கு அபிவ்ருத்தியென்பது.

சரீரபூதப்ருத்== [7]தமதுசரீரமாயிருக்கும் பிரகிருதிமஹதஹங்காரமுதலிய தத்துவங்களெல்லாவற்றையும் வஹிப்பவர்.

சலர்== [8]தம்மையடுத்த பாண்டவர்முதலியோரின் காரியத்திற்காகத் தமதுசொல்லையும் ஏற்பாட்டையும் விட்டுவிலகுகிறவர்; பீஷ்மருக்காக ஆயுதமெடுத்தது குறிப்பிடப்படுகிறது.

---

1 பக்தர்களுக்கு ஸுகத்தையுண்டாக்குகிறவர்.

2 ஸங்ஸாரிகளுக்குச் சாந்தியை ஞானத்திற்குக்காரணமென்று சொல்லுகிறவர்; அல்லது, எல்லாப்ராணிகளையும் அடக்குகிறவர்.

3 ஸம்ஹாரகாலத்தில் எல்லாப்ரஜைகளையும் ஸம்ஹரிப்பவர்.

4 ஸம்ஸாரத்திலிருப்பவருக்கு ராத்ரியாகிய ஆத்மஸ்வரூபத்தைத் தெரிவிப்பவர்; அல்லது, ஞானிகளுக்கு ராத்ரியாகிய ஸம்ஸாரத்தையுண்டுபண்ணுகிறவர்.

5 சரீரங்களில் ஆத்மாவாகவிளங்குகிறவர்.

6 அன்னரூபமாகவாவது ப்ராணரூபமாகவாவது ப்ராணிகளின்தேகத்தைக் காப்பாற்றுகிறவர்; அல்லது, தம்மாயையினால் அநேகசரீரங்களையெடுப்பவர்.

7 சரீரத்துக்குக் காரணமான பஞ்சபூதங்களைப் ப்ராணரூபியாகித்தாங்குகிறவர்.

8 காற்றுமுதலிய உருவங்களினால் சலிப்பவர்.

சாணூராந்த்ரநிஷூதகர்=தேவர்களுக்கும் உல்கங்களுக்கும் விரோதியான சாணூரன் என்னப்படும் ஆந்த்ரனுகிய மல்லனை ஸம்ஹாரம்செய்தவர்.

சாந்தர்= [1]பொங்குவதற்குக் காரணமானமகிமைக்கடல்பெருகியிருந்தும் அலையில்லாக்கடல்போல அடங்கியிருப்பவர்.

சாந்தி= [2]ஸமாதியின்கடைசிநிலைமையில்எல்லாத்தொழில்களையும் மறந்து தம்மையே அனுபவித்துக்கொண்டிருக்கச்செய்பவர்.

சாந்திதர்= [3]பக்தியோகம் தலைக்கட்டினவர்களுக்கு ஸம்ஸாரதுக்கத்தைத் தலையெடுக்கவிடாமல் வேர்களோந்து தமது ஸாயுஜ்யமாகிய சாந்தியைக் கொடுப்பவர்.

சார்ங்கதன்வா= [4]சார்ங்கமென்னும் வில்லையுடையவர்; நாண் ஓசையினுலும்சரமாரிபொழிவதனுலும் பகைவர்களென்னும்பெயரையே ஒழிப்பதாகிய தமக்கொத்த சார்ங்கம் என்னும் வில்லை ஏந்தியவர்.

சாஸ்வதர்= [5]உலகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரவியாபாரங்கள் ஒன்றன்பின் மற்றொன்றுக ப்ரவாகம்போல எக்காலமும் தொடர்ச்சியாகவிருப்பதனல் ஓய்வில்லாதவர்.

சாஸ்வதஸ்தாணு= [6]தேவலோகத்திய அம்ருதம்போலன்றி என்றும் அழிவில்லாமலும் பக்தர்களிடமிருந்து யாரும் அபகரித்துக்கொண்டுபோகாமலுமிருக்கும்படி நிலையாயிருப்பவர்.

சாஸ்வதஸ்திரர்= [7]பலவிதங்களான அர்ச்சாவதாரரூபங்களை எடுத்துப் பக்தர்கள் எக்காலமும் ஸேவிக்கும்படியிருப்பதனல் எக்காலமும் நீங்காமலிருப்பவர்.

சாஸ்தா= [8]எல்லாருக்கும் விரோதிகளான ஹிரண்யன்முதலானவர்களை நன்றுகச்சிக்ஷித்தவர்.

சிகண்டி= [9]யாராலும் வெல்லக்கூடாத அளவற்ற ஐஸ்வரியமாகிய சிறந்தமகிமையே சிறந்தசிரோபூஷணமாகஇருப்பவர்.

---

1 விஷயஸுகங்களில் பற்றில்லாதவர்.

2 அவித்யாநிவ்ருத்தியாயிருப்பவர்.

3 ராகத்வேஷமுதலியவற்றின் விடுதலைக்கொடுப்பவர்.

4 இந்திரியங்களுக்குக் காரணமாகிய ஸாத்விகாகங்காரத்தின் வடிவமான சார்ங்கமென்னும் வில்லையுடையவர்.

5 எல்லாக்காலமுமிருப்பவர்.

6 எப்பொழுதும் நிலைபெற்றிருப்பவர்.

7 எல்லாக்காலமும் மாறுமலிருப்பவர்.

8 வேதமுதலியவற்றினுல் யாவரையும்கட்டளையிட்டு நடத்துகிறவர்.

9 மயில்தோகையை ஆபரணமாக அணிந்தகோபாலர்.

சிகிரர்= [1]கஜேந்திரனது அழுகுரல்கேட்டவுடன் மிக்கவிரை வாகச்சென்றவர்.

சிக்ஷகம்சயர்= [2]அடியார்க்கெளியராதல்பற்றிய புகழினாலேயே, 'இவரை அறியக்கூடுமா, கூடாதா, வசப்படுவாரா, படாரா, எளியரா, அரியரா' என்பவைமுதலிய ஸந்தேகங்களையறுப்பவர்.

சிபிவிஷ்டர்= [3]கிரணங்களுள்பிரவேசித்து வியாபித்திருப்பவர்; அல்லது, கிரணங்களால் வியாபிக்கப்பட்டிருப்பவர்; அல்லது, சூரிய கிரணங்கள்போன்ற நிறமுள்ளரோமங்களினால் வியாபிக்கப்பட்டிருப் பவர்.

சிவர் (27)= [4]ப்ராணிகளுக்கு நன்மைகளைச்செய்பவர்.

சிவர் (607)= [5]போகத்தைவிரும்புகிறவரும் மோக்ஷத்தை விரும்புகிறவருமான யாவருக்கும் அவரவர் அதிகாரத்துக்குரிய நன் மைகளைச் செய்பவர்.

சிஷ்டக்ருத்= [6]தமது ஸம்பந்தம்பெற்றபொருள்களைத் தம் மிடம் சேரத்தக்க கல்யாணகுணங்களுள்ளவைகளாகச் செய்பவர்.

சிஷ்டேஷ்டர்= [7]மார்க்கண்டேயர்முதலிய சான்றோர்களால் பரமபுருஷார்த்தமென்று விரும்பப்படுகிறவர்.

சுசி (157)= [8]பரிசுத்தர்; தாம்செய்யும் பேருதவிகளுக்கு எவ் விதக்கைம்மாறுகளையும் எதிர்பாராதவரென்பது.

சுசி (252)= [9]ஸ்வயம் சுத்தமானவர்; பிறரால் பிரகாசம்உண்டு பண்ணவேண்டாதவர்.

சுசிஸ்ரவஸ்= [10]பக்தர்களால் சொல்லப்படும் இன்சொற்களைக் கேட்பவர்.

---

1 தாபத்ரயத்தினால் வருந்தினவர்களுக்குக் குளிர்ந்தஇடமாயிருப்பவர்.

2 எல்லாவற்றையும் உள்ளங்கைநெல்லிக்கனிபோல எப்போதும் பிரத் யக்ஷமாகப் பார்ப்பவராதலின் ஸந்தேகமற்றவர்.

3 சிபிகளென்னப்படும் யாகசாலைகளிடத்தில் யாகரூபியாக வஸிப்பவர்.

4 முக்குணங்கள் இல்லாமையால் பரிசுத்தர்; அல்லது, 'அவரே பிரம்மா, அவரே சிவன்' என்று வேதத்தில்அபேதம்சொல்லுவதனால் சிவன்முதலிய காமங்களினாலும் விஷ்ணுவையே துதிப்பது.

5 நினைத்தமாத்திரத்தில் பாவத்தைப்போக்குகிறவர்.

6 எல்லாவற்றையும் ஆஜ்ஞாபிப்பவர்; அல்லது, சிஷ்டர்களைரக்ஷிப்பவர்.

7 ஞானிகளுக்குப் பிரியமானவர்; அல்லது, அவர்களிடத்தில் அன்புள் ளவர்.

8 தம்மைத்யானிப்பவரையும் துதிப்பவரையும் ஆராதிப்பவரையும் சுத் தப்படுத்துகிறவர்.

9 குற்றமில்லாதவர்.

10 பாவங்களைப்போக்கும் பரிசுத்தமான திவ்யகாமங்களையுடையவர்.

சுபாங்கர் (593)= [1]யமம், நியமம், ஆஸனம், ப்ராணயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, த்யானம், ஸமாதியென்னும் சிறந்தயோகாங்கங்கள் எட்டினையும் நிறைவேற்றுகிறவர்.

சுபாங்கர் (788)= [2]இவர் மிகநம்பத்தக்கவர்' என்று அஸுரர்கள் ஏமாறும்படி அவர்களில் ஒருவராகச் சேர்ந்து, மாயையினால் அவர்கள்மயங்கும்படி அழியஉருவமெடுத்தவர்.

சுபேக்ஷணர்= [3]பரத்வஸௌலப்யங்களின் மேன்மைக்கு அறிகுறிகளாகக் குளிர்ந்தும் பரந்தும் நீண்டுமிருக்கும் திருக்கண்களையுடையவர்; அல்லது, தாம்கடாக்ஷிப்பதே யாவருக்கும் மங்களகரமாயிருப்பவர்; அல்லது, தம்மைத் தரிசிப்பது எல்லாருக்கும் மங்களகரமாயிருப்பவர்.

சூர்யர்= [4]மனுஷ்யாவதாரத்திலும் குற்றங்களெல்லாம் நீங்கினவர்.

சூரர் (340)= [5]ஜயிப்பதில் ஸாமர்த்தியமுள்ளவர்; இதனால் ஜயம் கூறப்பட்டது.

சூரர் (650)= [6]சித்திரகூடபர்வதத்தில் சூரரான ராமாவதாரமாயிருப்பவர்.

சூரஜனேச்வரர்= [7]ஸுக்ரீவன் ஆஞ்சனேயர்முதலியசூரர்களான ஜனங்களுக்கும் ஈச்வரராயிருப்பவர்.

சூரஸேனர்= [8]யாதவர்கள் பாண்டவர்கள்முதலான சூரர்களைப் பூபாரம் ஒழிப்பதாகிய தாம் அவதரித்த காரியத்துக்குத் துணையான ஸேனையாகக் கொண்டிருப்பவர்,

சோகநாசனர்= [9]நாதனற்றவர்களுக்குத் தமதுஸம்பந்தமில்லாமையினால் உண்டாகும் விசனத்தை ஒழிப்பவர்.

---

1 ஸுந்தரரூபமுள்ளவர்.

2 அழகானஅங்கங்களையுடையவர்.

3 முக்தியைவேண்டுகிறவர்களுக்கு முக்தியையும் போகங்களை வேண்டுகிறவர்களுக்குப் போகங்களையும் அளிப்பதும், ஜீவிகளின் பாவங்களை ஒழிப்பதும், எல்லாஸுக்தேகங்களையும் விலக்குவதும், மனத்தின் அஜ்ஞானக்காட்டை அறுப்பதும், எல்லாக்கருமங்களையும் அவித்தையையும் போக்குவதுமான மங்களகடாக்ஷமுள்ளவர்.

4 நிர்க்குணரூபம்போலால் இல்லாததுபோலிருப்பவர்.

5 பராக்ரமமுடையவர்.

6 சௌரி=சூரகுலத்தில்பிறந்த கிருஷ்ணன்; அல்லது, ப்ரஸித்தமான பராக்ரமமுள்ளவர்.

7 சூரர்களான இந்த்ரன்முதலியோருக்கும் ஈச்வரர்.

8 ஆஞ்சனேயர்முதலான சூரர்களைச் சேனையாகவுடையவர்.

9 நிஜத்தமாத்திரத்தில் பக்தர்களின் சோகத்தைப் போக்குகிறவர்.

சௌரி (341)= [1]சூரரென்னப்படும் வஸுதேவருடைய புத்ரர். பக்தர்களைத் தாமே தேடிச்செல்பவரென்பது குறிப்பிக்கப்படுகிறது.

சௌரி (649)= [2]வஸுதேவபுத்ரர்; உத்பலாவதகமென்னும் திருக்கண்ணபுர க்ஷேத்ரத்தில் சௌரி என்னும் திருநாமத்துடன் கிருஷ்ணரைக் கொழுந்தருளியிருப்பவர்.

த்யுதிதரர்— [3]க்ருஷ்ணவதாரத்தில் பிளமைப்பருவத்திலும் இந்த்ரனைத்தோற்கச்செய்யும் ஆமாஜ்ஞை தெய்யசக்தியையுடையவர்.

த்ராவிணப்ரதர்— [4]சாஸ்த்ரங்களும் சாஸ்த்ரார்த்தங்களுமாகிய தனங்களை நிரம்பக்கொடுப்பவர்.

த்ரிககுத்தாமா(அல்லதுத்ரிககுப்தாமா) [5]இவ்வுலகமனைத்தும் அணுமாத்ரமாகத் தோன்றும்படி இதற்குமூன்றுபங்கு விரிவுள்ள த்ரிபாத்விபூதியென்னப்படும் பரமபதத்தை இடமாக உடையவர்; 'அந்தநித்யவிபூதியின் பதினாயிரத்தின் ஒருபாகத்தின்பதினாயிரத்து ஓரம்சத்தினது பாகங்களில் ஒன்றுக்குள் இவ்வுலகசக்ரம் அடங்கியிருக்கிறது' என்றும், 'பரமபதத்திற்கும் இவ்வுலகத்திற்கும் மேருவுக்கும் அணுவுக்குமுள்ளவாசி' என்றும்சொல்லியிருப்பதனால் மூன்று மடங்கு அதிகமென்று சுருதி சொல்லியிருப்பது எண்ணைக் குறிப்பதன்று; ஏற்றக்குறைவுகளைமட்டும் தெரிவிப்பதென்று கொள்ள வேண்டும்; அல்லது, மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்ட ஞானம், சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறுகுணங்களுக்கும் இடமாயிருப்பவர்; இவ்வாறுகுணங்களிலும் இரண்டிரண்டு ஒவ்வொருகூறாக வகுக்கப்பட்டுள்ளது; இதுபற்றியே, 'த்ரியுகர், மூன்று இரட்டையுள்ளவர்' என்று நாருநாமம்; அல்லது, மூன்று கொண்டைகளோடுகூடிய வராகாவதாரத்தையெடுத்த ஒளியுருவமாயிருப்பவர்.

த்ரிதசாத்யக்ஷர்= [6]ப்ரளயகாலத்திய ஆபத்தில் வராகரூபியாகிப் ப்ரம்மாதிதேவர்களைக் காப்பாற்றின ப்ரபு.

த்ரிபதர்= [7]போக்யம் (அனுபவிக்கத்தக்கது) ஆகிய அசேதனம் போக்தா (அனுபவிப்பவன்) ஆகிய ஜீவாத்மா, நியந்தா (எல்லாவற்

---

1 சூரகுலத்தில் பிறந்தவர்.

2 வீரர்=எல்லாப்பகைவர்களையும் வென்றுவிளங்குபவர்.

3 தேகஒளியைத் தரிப்பவர்; அல்லது, கர்த்தியை வகிப்பவர்.

4 பக்தர்களுக்கு விரும்பினவற்றைக் கொடுப்பவர்.

5 மேல் கீழ் நடுவாகிய மூவுலகங்களுக்கும் இருப்பிடம்.

6 ஜாக்ரத்ஸ்வப்னஸுஷுப்திகள் என்னும் மூன்று அவஸ்தைகளையும் நடத்துகிறவர்.

7 த்ரிவிக்ரமாவதாரத்தில் மூன்றடிகளால் உலகங்களை அளந்தவர்.

றையும் நியமிப்பவன்) ஆகிய ஈஸ்வரன் என்னும் இம்மூன்று தத்வங்களையும் அறிவிப்பவர் ; அல்லது, பிரணவத்திலுள்ள அகாரஉகாரமகாரங்களாகிய மூன்றுபதங்களாலும் சொல்லப்படுகிறவர் ; அல்லது, மூன்றுகொண்டைகளுள்ள வராஹரூபமெடுத்தவர்.

த்ரிலோகத்ருத்=மூன்று உலகங்களையும் தாங்குகிறவர் ; உலகங்களுக்கு 'ஆதாரமாயிருந்து அவற்றைவளர்த்துக் காப்பவராதலின் அவருக்கு இவ்வெளிமை உரித்தென்பது.

த்ரிலோகாத்மா= [1]பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக மூவுலகங்களுக்கும் இடைவிடாமற்செல்லுகிறவர் ; மகததேசத்தில் மகாபோதத்திலிருக்கும் லோகநாதன் என்னும் மூர்த்தி.

த்ரிலோகேசர்= [2]மூன்றுலோகங்களுக்கும் ஈஸ்வரர் ; ப்ராக்ஜோதிஷகரத்திலிருக்கும் விஸ்வேஸ்வரரென்னும் அர்ச்சாவதாரம் கூறப்படுகிறது.

த்ரிவிக்ரமர்= [3]தம்மிறந்தமகிமையினால் மூன்றுவேதங்களையும் வ்யாபித்திருப்பவர் ; மூன்றுவேதங்களாலும் கோஷிக்கப்பட்ட மகிமையுள்ளவரென்பது.

த்ரிஸாமா= [4]தம்மைச்சொல்லுகிறபிருஹத், ரதந்தரம், வாமதேவ்யமென மூன்றுகவகுக்கப்பட்ட ஸாமவேதங்களினால் கானம் செய்யப்படுகிறவர்.

த்ருடர்= [5]நித்யமான திவ்யமங்களவிக்ரஹத்திலிருந்து உபாஸிப்பவர்களை அனுக்ரஹிப்பதற்காக வ்யூஹாவதாரத்தில் கொஞ்சம் ஸ்தூலரூபியாக வ்ருத்தியடைந்திருப்பவர்.

த்ருதாத்மா= [6]எளிதில்தம்மைத்தருவதனால் ஆத்மாக்களை உய்விப்பவர்.

த்ருவர் (55)= [7]பலவகைஉலகங்களாகமாறியும் தமதுஸ்வரூபம் கெடாமல் ஒரேநிலையாயிருப்பவர்.

த்ருவர் (390)= [8]த்ருவனை அழியாமலிருக்கச்செய்தவர் ; ஸர்வவ்யாபகமானசக்தி த்ருவனதுசிறப்பு.

---

1 மூன்றுலகங்களுக்கும் அந்தர்யாமி ; அல்லது, மூன்று உலகங்களும் தம்மைவிட வேறில்லாதவர்.

2 மூவுலகங்களையும் தம்தம்கருமங்களில் ப்ரவ்ருத்திக்கச் செய்பவர்.

3 மூன்றடிகளால் மூன்றுலகங்களையும் வியாபித்தவர்.

4 தேவவ்ரதங்கள்என்றுபெயருள்ள மூன்றுஸாமங்களினால் துதிக்கப்படுகிறவர்.

5 ஸ்வரூபத்தின்சக்தியினால் இயற்கைமாறுதலில்லாதவர்.

6 ஜனனமுதலானவிகாரமின்றி ஒரேவிதமானஸ்வரூபத்தையுடையவர்.

7 'ஸ்தவிர' பார்க்க.

8 அழியாதவர்.

த்வஷ்டா:= [1]தேவர்மணிதர்முதலிய விசித்ரமானபலநாமரூபங்க ளுள்ளவையாக உலகங்களைவகுப்பவர்.

தண்டர்= [2]க்ஷேமங்களைச்செய்யும் நல்லஅரசர்களைக்கொண்டு தண்டஞ்செலுத்தித் துஷ்டர்களை அடக்குகிறவர்.

தத்= [3]அன்பர்களுக்கு ஞானபக்திகளை மிகுதிப்படுத்துகிறவர்.

தத்வம்= [4]தயிர்பால்களில் வெண்ணெய்போலச் சேதநாசேதனங்களாகியபிரபஞ்சத்தில் வியாபித்திருக்கும்ஸாராம்சமாயிருப்பவர்.

தத்வவித்= [5]தமதுஉண்மையைஅறிந்திருப்பவர்.

தந்துவர்த்தனர்= [6]பாவப்பற்றுக்களென்னும் சிறுநூல்களிஞல் ஸம்ஸாரமென்னும்கயிற்றைப் பெருகச்செய்கிறவர்.

தர்யர்= [7]பக்தப்பிரார்த்தனைக்காகத் தாம் அவதரிப்பதைத் தமக்கு ஒரு தனலாபமாக நினைப்பவர்.

தர்வீ= [8]தமக்கோர்உயர்வின்றி எல்லாவற்றிலும் சிறந்த சக்திக்குத்தக்கதான சார்ங்கமென்னப்படும் வில்லை எக்காலமும் வைத்திருப்பவர்; இங்கு வில்லைச்சொன்னதஞல் மற்றத்திவ்யாயுதங்களெல்லாவற்றையும் உபலக்ஷணமாகக்கொள்ளவேண்டும்.

தநஞ்சயர்= [9]தனத்தைஜயிப்பவர்; பொன்ரத்னமுதலியதனங்களையும்வெறுத்துச் சம்பாதிப்பதற்கும் காப்பாற்றுவதற்கும் அனுபவிப்பதற்கும் மிகவிரும்பக்தக்கவராயிருப்பவர்.

தநுர்த்தரர்= [10]தம்மைஉபாஸிப்பவர்களுக்குஉண்டாகும் இடையூறுகளைஒழிப்பதற்காக எப்போதும் தாமே வில்லெடுத்திருப்பவர்.

தநுர்வேதர்= [11]தேவேந்திரன் அரசர்முதலானவர்களும் வில்வித்தைமுதலியவித்தைகளைத் தம்மிடத்தில்உபதேசம்பெற்றுக்கொள்ளும்படி எல்லாச்சாஸ்திரங்களையும் ப்ரவர்த்திப்பித்தவர்.

---

1 ஸம்ஹாரகாலத்தில் எல்லாவற்றையும் அழிப்பவர்.

2 தாமே தண்டமாக இருப்பவர்.

3 எல்லாவற்றையும்படைக்கும்ப்ரம்மம்.

4 பரமார்த்தவஸ்துவாயிருப்பவர்; மாயையல்லாதவரென்பது.

5 தம்ஸ்வரூபத்தைஅறிந்திருப்பவர்.

6 பிரபஞ்சத்தை விரித்திசெய்பவர்.

7 எல்லாப்பிரயோஜனங்களையும் பெற்றிருப்பவர்.

8 வில்லாளியாயிருப்பவர்.

9 அர்ஜுனனுமாயிருப்பவர்.

10ராமாவதாரத்தில் வில்லெடுத்திருப்பவர்.

11அந்த ராமபிரானே தனுர்வேதத்தை அறிந்திருப்பவர்.

தநேஸ்வரர்= [1]அவரவர்விரும்பினஐஸ்வரியங்களை உடனே அளிப்பவர்.

தமநர்= [2]கங்கைபோன்ற தேகஜலியிஞல் ஸம்ஸாரதாபத்தைச் சமனம்செய்பவர்.

தமபிதா= [3]தாமே நேராகவும் ராவணநிகளான துஷ்டர்களை அடக்கிக்கொண்டிருப்பவர்.

தர்ப்பதர்= [4]பகைவர்களை அடக்கினது, வெல்லமுடியாத துவாரகாபட்டணத்தைச்செய்தது, சங்கநிதி பத்மநிதி பாரிஜாதம் தேவஸபைகளைக் கொண்டுவந்ததுமுதலியவற்றால் காப்பாற்றப்பட்டுக் கவலையில்லாமற்செய்யப்பட்டயாதவர்களுக்கு மதுபானமுதலியவற்றிஞல் மதத்தைக்கொடுத்தவராகவுமிருப்பவர்.

தர்ப்பஹா= [5]கர்வத்தைப்போக்குகிறவர்; கோவர்த்தனத்தை யெடுத்தது பாரிஜாதத்தைக்கவர்ந்தது வாணசரஞ்டைய ஆயிரம் தோள்களைத் துணித்ததுமுதலிய காலத்திலும் தேவர்களின்கர்வத்தை மட்டும் போக்கினவர்; ஆஸ்ரிதர்களைக் கொல்லாதவர் என்பது.

தர்மக்ருத்= [6]நிஷ்காரணமான அனுக்ரஹத்தினால் தர்மத்தை ப்ரவர்த்திப்பித்து எல்லாரையும் தர்மிஷ்டர்களாகச்செய்பவர்.

தர்மகுப்= [7]தம்மாலளிக்கப்பட்ட அர்த்தகாமங்கள் கெட்டவிஷயங்களில்செல்லாமலிருக்கும்படிசெய்து அவற்றினால் தர்மத்தையே ரக்ஷிப்பவர்.

தர்மயூபர்= [8]தர்மத்தைத்தலைமையாக வைத்திருப்பவர்,

தர்மர்= [9]ஐஸ்வரியத்தையும் மோக்ஷத்தையும் கொடுத்து ஜீவர்களெல்லாரையும் தாமே நேரில்தாங்குகிறவர்.

---

1 தனங்களுக்கு ஈசுவரர்.

2 தம்தம்கடமைகளில்தவறுகிற ஜனங்களை யமன்முதலிய ரூபங்களினால் தாமே தண்டிக்கும்தன்மையுள்ளவர்.

3 வைவஸ்வதமநுமுதலிய அரசர்களாயிருந்து பிரஜைகளை அடக்குகிறவர்;

4 தர்மமார்க்கத்திலிருக்கிறவர்களுக்குக் கர்வத்தைக் கொடுக்கிறவர்.

5 தர்மவிரோதிகளின் கர்வத்தைப் போக்குகிறவர்.

6 தமக்குத் தர்மாதர்மங்களில்லாமற்போயினும் தர்மத்தைநிலைபெறுத்துவதற்காகத் தாமே தர்மத்தைஅனுஷ்டிப்பவர்.

7 தர்மங்களைஸ்தாபிப்பவர்.

8 யூபஸ்தம்பத்தில்பசுக்கள்போலத் தர்மங்கள் அவரிடத்தில்கட்டப்பட்டின்றன; அவருடையஆராதனங்களாயிருக்கின்றனஎன்பது.

9 எல்லாப்பொருள்களுக்கும் ஆதாரமாயிருப்பவர்; அல்லது, எல்லாத் தர்மங்களாலும் ஆராதிக்கப்படுகிறவர்.

தர்மவிதுத்தமர்= [1]தர்மத்தைதிர்ந்தவர்களான வஸிஷ்டர் வாமதேவர் மார்க்கண்டேயர்முதலானவர்களுக்கும் மிகச்சிறந்தவர்.

தர்மாத்யக்ஷர்=தர்மத்துக்கு ஸாதனமாக வேதங்களில் விதிக்கப்பட்ட நிமித்யகளே ப்ரத்யக்ஷமாகஅறிபவர்.

தர்மீ= [2]தாம் எல்லாரையும்காப்பாற்றுவதற்குத் தர்மத்தையே பொதுவானகருவியாக வைத்திருப்பவர்.

தரணீதரர்= [3]உலகத்தைத்தாங்குவனவாகியஎல்லாவற்றையும் தாங்குகிறவர்.

தராதரர்= [4]கோவர்த்தனகிரியை எடுத்தவர்.

தக்ஷர் (424)= [5]தஸ்யுக்களென்னப்படும் கொள்ளைக்காரர்களாகிய மிலேச்சர்களே விரைவில் வதஞ்செய்தவர்.

தக்ஷர் (917)= [6]கஜேந்த்ரனைக்காப்பதற்காக விரைவாக வந்திருந்தவர்.

தக்ஷிணர்= [7]இன்சொற்களினால் கஜேந்த்ரனைத்தேற்றி அன்பு பாராட்டினவர்.

தாசார்ஹர்=தானத்திற்குரியவர்; பக்தர்கள் ஆத்மஸமர்ப்பணம் செய்வதற்குரியவர்; அல்லது, பக்தர்களுக்குத் தமது ரூபத்தையேதரத்தக்கவர்; அல்லது, தாசார்க்களென்னும் யாதவர்களின் வம்சத்தில் கண்ணனாகஅவதரித்தவர்.

தாதா (43)= [8]எல்லாஅசேதனங்களின்தொகுதியும் எல்லாவற்றிற்கும் "விளைநிலமுமாகிய மூலப்ரக்ருதியின்கண் சேதனர்களின் தொகுதியாகிய ப்ரம்மதேவரென்னப்படும் கர்ப்பத்தை வைப்பவர்.

---

1 வேதங்களும் தர்மசாஸ்திரங்களும் அவரதுகட்டளையாயிருப்பதனால் தர்மத்தைதிர்ந்தவர்களில் சிறந்தவர்.

2 தர்மங்களைத்தாங்குகிறவர்.

3 ஆதிசேஷன் திக்கஜங்கள்முதலிய உருவங்களாலும் வராஹாவதாரம் செய்தும் பூமியைத்தாங்குகிறவர்.

4 ஆதிசேஷன்முதலிய தமதுஅம்சங்களினால் பூமியைத்தாங்குகிறவர்.

5 பலஉலகவழிவங்களாகவிருத்தியடைந்திருப்பவர்; அல்லது, எல்லாக் காரியங்களையும் விரைவில் செய்பவர்.

6 எல்லாவற்றிலும் அதிகமானசக்தியும் விரைவாகசெய்யும்திறமையும் எல்லாவற்றையும் நடத்தும் ஸாமர்த்தியமுமுள்ளவர்.

7 முன்காமத்தில்சொல்லியதே பொருள்; நாமம் வேறுதலால் கூறியது கூறலாகாது; அல்லது, எங்கும்செல்லுகிறவரென்றும், பகைவரைஅழிப்பவரென்றும் கொள்ளலாம்.

8 ஆதிசேஷன்முதலிய ரூபங்களினால் உலகங்களைத் தாங்குகிறவர்.

தாதா (951)= [1]தாமேதர்மத்தை உபதேசித்தும் அனுஷ்டித்தும் உலகத்தைத் தாங்குகிறவர்.

தாதருத்தமர்= [2]உலகம்படைத்தப்ரம்மதேவரினும்மிகச்சிறந்தவர்.

தாம= [3]சராசரங்களனைத்தையும் தாங்குகிறவர்; ப்ரளயகாலத்தில் அழிந்துபோன சராசரங்களின் வித்துக்களுக்கு ஆதாரமான கப்பலைத் தாங்கி நடத்தினவர்.

தாமோதரர்= [4]தாமங்களென்னப்படும் உலகங்களைத் தம்வயிற்றில் வைத்திருப்பவர்; அல்லது, தேவர்களுக்கு ஸுகத்தைக்கொடுப்பவர்; தமம் என்பது ஸுகம், அதுவேதாமம், அதைஉதரர்=வெளிப்படுத்துகிறவர் என்பது; அல்லது, யசோதையினுல் வயிற்றில் கயிற்றினுல் உரலோடு கட்டப்பட்டவர்; திருமகளும் தேடி விரும்பத்தக்க பெருமையிருக்கையிலும் பக்தர்களிடமுள்ள அன்பினுல் யசோதையினுல் கயிறுகொண்டு கட்டப்பட்டு அசைவற்றுநின்ற எளிமை மிகப்பெரிதென்பது.

தாரணர்= [5]பயங்களைத் தாண்டுவிப்பவர்; ஆதிபௌதிகங்களென்னப்படும் பகைவர், கள்வர், பிணிகள்முதலிய பயங்களை நிவ்ருத்திசெய்பவரென்பது குறிப்பு.

தாரர் (339)=கர்ப்பவாஸம் ஜனனமரணங்கள் மூப்புமுதலிய ஸம்ஸாரக்கடலிலுள்ள மகாபயங்களினின்றும் கரையேற்றுகிறவர்.

தாரர் (968)= [6]ஸம்ஸாரத்தைத் தாண்டுவிப்பவர்.

தாருணர்= [7]புறப்பகைகளையும் அகப்பகைகளையும் பிளப்பவர்.

திசர்= [8]ப்ரம்மாதிதேவர்களை அவரவர்கார்யங்களில் கட்டளையிடுகிறவர்.

---

1 அதாதா=தம்மைத்தவிர வேறு ஆதாரம் இல்லாதவர்; அல்லது, தாதா=ஸம்ஹாரகாலத்தில் எல்லாப்ரஜைகளையும் விழுங்கிவிடுகிறவர்.

2 பூமி முதலியவற்றைக்காட்டிலும் உத்தமமானதாது(=கார்ணம்;) அல்லது, ப்ரம்மதேவருக்கும் உயர்ந்தவர்;அல்லது, 'தாது=கார்யகாரணங்களாகிய ப்ரபஞ்சங்களைத்தரிப்பவர்; உத்தமர்= எல்லாரிலும் உயர்ந்தவர்' என்று இரண்டு நாமங்களுமாம்.

3 ஒளியாயிருப்பவர்: அல்லது, விரும்பினவற்றிற்கெல்லாம் இருப்பிடமாயிருப்பவர்.

4 இந்த்ரியஜயத்தினுல் அடையப்படும்உயர்ந்த கதியாயிருப்பவர்; இங்கு, 'தம' என்பது, 'தாம' என்றும், 'உதார' என்பது, 'உதர' என்றும்

5 ஸம்ஸாரக்கடலைத் தாண்டுவிப்பவர்.

6 ப்ரணவரூபி.

7 கல்வழியைக்கெடுப்பவருக்குப் பயங்கரர்.

8 வேதரூபியாக ஸல்லாக்கர்மங்களுக்கும் பலன்களைக்காட்டுபவர்.

திவிஸ்ப்ருக்= [1]தமதுபரவித்தையினால்(ப்ரம்மஜ்ஞானத்தினால்) பரமபதத்திலிருக்கும் ரஹஸ்யமான ஸ்வரூபத்தைத் தொடுகிறவர்; எல்லாவற்றையும் அறிகிறவர்.

தீப்தமூர்த்தி= [2]ஒவ்வொரு குணத்தினால் மிகவிளங்கும் பொருள்களனைத்தும் அவருடைய அம்சம்பெற்றவையாதலின் குணங்களில் சிறந்த பொருள்களைச் சரீரமாகவுடையவர்.

தீர்த்தகரர்= [3]தம்மைப்போலவே நினைப்பதுநாமத்தைஉச்சரிப்பதுமுதலியவை செய்தமாத்திரத்திலும் எல்லாப்பாவங்களையும் போக்குவனவாகிய கங்கை புஷ்கரமுதலான புண்ணியதீர்த்தங்களை உண்டுபண்ணினவர்; அல்லது, சுருதி ஸ்ம்ருதிமுதலிய ஸத்ஸம்ப்ரதாயங்களை ப்ரவர்த்திக்கச் செய்பவர்; அல்லது, கடல்போல இறங்கமுடியாத ஆழமானதம்மிடத்தில் பக்தர்கள் இழியும்வண்ணம் படிகளை உண்டுபண்ணினவர்.

துர்க்கமர்= [4]மத்யான்னஸூர்யன்போலக் கண்ணாலும் காணமுடியாதஒளியுள்ளவரைக் கிட்டச்சேர்ந்து அடைவது மிகஅரிதாதலின், அடைவதற்குஅரியவராயிருப்பவர்.

துர்க்கர்= [5]அவித்தைமுதலான மறைவுகள் கோட்டைபோல மூடிக்கொண்டிருப்பதனால் ப்ரவேசிக்கக்கூடாமலிருப்பவர்.

துர்த்தரர் (267)= [6]சிறந்தகைவன்மையினால் ப்ரளயகாலஸமுத்திரம்போல்வேகமுள்ளவராயிருப்பதனால், பிறருடையசக்திகள்மணற்கரைகள்போலத் தடுக்கமாட்டாமல் உடைந்துபோகும்படி இருப்பவர்.

---

1 திவஸ்ப்ருக்=ஆகாசத்தைத் தொடுகிறவர்.

2 ஞானமயமாகப் பிரகாசிக்கும் ஸ்வரூபர்; அல்லது, தம்மிச்சையால் ஒளியுருக்கொண்டிருப்பவர்.

3 பதினான்கு வித்தைகளையும் வேதத்துக்கு விலக்கான வித்தைகளையும் உண்டாக்கி வெளியிட்டவர்; மதுகைடபர்களைக் கொன்று ஹயக்ரீவமூர்த்தியாகி ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் ப்ரம்மதேவருக்கு வேதங்களையுபதேசித்து அஸுரரை வஞ்சிப்பதற்காக வேதத்திற்குப் புறம்பாயுள்ள மோகனித்தைகளையும் உபதேசித்தவரென்பது.

4 அறியக்கூடாதவர்.

5 பல இடையூறுகளிருப்பதனால் அடைவதற்குக் கடினமாயிருப்பவர்.

6 எல்லாவற்றையும் தாங்கித் தாம் வேறொருவரால் தாங்கப்படக் கூடாமலிருப்பவர்; அல்லது, மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் மனத்தில் த்யானம் செய்யும்போது நிறுத்துவதற்கரியவராயிருப்பவர்.

துர்த்தரர் (720)= [1]குழந்தைவிளையாட்டுக்களிலும் மதயானை போலத் தாய்தந்தையரால் பிடிக்கமுடியாதவர்; அல்லது, துஷ்டர்களால் பிடிக்கமுடியாதவர்.

துர்மர்ஷணர்=பகைவரால் தாங்கமுடியாதவர்.

துர்யர்= [2]உலகங்களைவகிப்பவர்.

துர்லபர்= [3]ஐம்புலன்களை வெல்லாதவருக்குக் கிடைக்க அரியவர்.

துர்ஜயர்= [4]தேவர்களும் மனிதர்களும் தம்மாமர்த்யத்தினால் வசப்படுத்தவும் கண்டுபிடிக்கவும் கூடாதவர்.

துரதிக்ரமர்= [5]அவர்பாதங்களையன்றி வேறு கதியில்லாமையினால் யாருக்கும் தாண்டிப்போகக்கூடாதவர்.

துராதர்ஷர்= [6]கடல்போல மிகஆழ்ந்திருப்பதனால் கலக்க முடியாதவர்.

துராரிஹா= [7]புத்தாவதாரத்தில், கெட்டவழியில் செல்லுகிறவர்களை வேதமார்க்கத்தை விடுவிப்பதுமுதலிய பல உபாயங்களினால் கெடுத்தவர்.

துராவாஸர்= [8]அவித்தைமுதலியவற்றின் மறைவினால் அவருடைய பரமபதத்தில் வஸிப்பது கிடைக்க அரிதாகஇருப்பவர்; அல்லது, துராவாஸர்=அவர்இருப்பிடம் யாவருக்கும் எட்டாததாக இருப்பவர்.

துஷ்க்ருதிஹா= [9]ப்ரம்மஜ்ஞானியான கஜேந்த்ரனுக்குத்தீங்கு செய்த பாவியானமுதலையைக் கரையேறினபின் கொன்றவர்.

---

1 நிர்க்குணராகையால் த்யானமுதலியவற்றினால் மனத்தில் நிறுத்தமுடியாதவராயினும் எண்ணிறந்த ஜன்மங்களில் விடாமல் பாவனைசெய்து அவரருள்பெற்ற சிலரால்மட்டும் மிக்கசிரமத்தினால் மனத்தில் நிறுத்தக்கூடியவர்.

2 ஸர்வப்ராணிகளின் உத்பத்திமுதலிய பாரங்களையும் வகிப்பவர்.

3 கிடைக்க அரிதான பக்தியைப் பெற்றவர்களுக்கல்லது மற்றவர்களுக்கு எட்டாதவர்.

4 வெல்லமுடியாதவர்.

5 ஸூர்யன்முதலானவர்களும் தம்கட்டளையைத் தாண்டமுடியாதபடி இருப்பவர்.

6 அஸுரர்முதலியவர்களாலும் வெல்லமுடியாதவர்.

7 கெட்டவழியிற்செல்லுகிற அஸுரர்முதலானவர்களை அழித்தவர்.

8 யோகிகளால் யோகத்தில் மிக்க சிரமத்தோடு மனத்தில்தரிக்கப்படுகிறவர்.

9 பாவங்களைப் போக்குகிறவர்: அல்லது, பாவிகளைக் கொல்லுகிறவர்.

துஷ்டர்= [1]மூக்தர்கள்மட்டும்' அறிவதற்குரியதானபரத்வத்தைக் காட்டிலும் மனிதர்முதலிய யாவருக்கும் தெரியக்கூடிய தசரதபுத்ரராக இருப்பதும் ராஜ்யபரிபாலனாதிகாரமும் கிடைத்ததில் அதிக ஸந்தோஷமடைந்திருப்பவர்.

துஸ்வப்நநாசநர் = [2]கஜேந்த்ரமோக்ஷத்தைக் கேட்பவர்களுக்குக் கெட்டகனவைப் போக்குகிறவர்.

தேவகீநந்தநர் = தேவகியின் புதல்வர். பரஸ்வரூபத்திலேமட்டுமன்றிக் கிருஷ்ணாவதாரத்திலேயே இவ்வளவு பெருமைகள்பொருந்தியிருப்பலரென்று சுட்டிக்காட்டுவது.

தேவப்ருத்= [3]தேவர்களைக்காப்பாற்றுகிறவர்; அல்லது, வஹிப்பவர்.

தேவர்= [4]புலிமுதலிய ப்ராணிகளைக் கயிற்றிலால்கட்டி விளையாடுவதுபோல ஜீவர்களை மாயையென்னுங்கயிற்றிலால் கட்டி விளையாடுகிறவர்.

தேவேசர்= [5]தேவர்களுக்கு நாதர்; ப்ரம்மாதிதேவர்களை அவரவருக்குத்தக்க அதிகாரங்களில் நியமிப்பவர் என்பது.

தேஜோவ்ருஷர்= [6]அன்பரைக்காப்பாற்றுவதில்தமதுசக்தியை வர்ஷிப்பவர்; மிகுதியாக உபயோகப்படுத்துகிறவர்.

ந்யக்ரோதோதும்பர= [7]கீழேநின்றுலகங்களைக்கூப்புகிறவர்களால் தங்களைநோக்கி அனுக்ரஹிக்கும்படி தடுத்துநிறுத்தப்படுகிற

---

1 பேரானந்தவடிவமாயிருப்பவர்.

2 கெடுதலுக்கு அறிகுறியான கெட்டகனவுகளைத் தம்மைத்தியானிப்பதனாலும் துதிப்பதனாலும் போற்சொல்லுவதினாலும் பூஜிப்பதனாலும் பயன்படாமற்செய்பவர்.

3 தேவப்ருத்குரு=தேவர்களைக் காப்பாற்றும் இந்த்ரனையும் நியமிப்பவர்; அல்லது, தேவப்ருத்=தேவர்களைப் பரிபாலிப்பவர்; குரு=எல்லாவித்தைகளையும் உபதேசிப்பவர்.

4 ஸ்ருஷ்டிமுதலிய வியாபாரங்களிலால் விளையாடுகிறவர்; அல்லது, தேவர்முதலானவர்களையும் ஜயித்து மேலாயிருப்பவர்; அல்லது, எல்லாப் ப்ராணிகளுக்கும் ஆத்மாவாக நடப்பவர்; அல்லது, ஸ்வயம் ப்ரகாசமாயிருப்பவர்; அல்லது, துதிக்கப்படுகிறவர்; அல்லது, விளம்பப்படுகிறவர்; அல்லது, எங்கும் செல்லுகிறவர்.

5 தேவசிரேஷ்டர்.

6 ஸூர்யரூபியாகி ஒளியைப் பொழிகிறவர்; அல்லது, ஸூர்ய ரூபியாகி ஜலத்தை வர்ஷிப்பவர்.

7 இரண்டுகாமம். ந்யக்ரோதர்=மேலே வேரும் கீழேகிளையுமாக வளருகிறவர்; ப்ரபஞ்சத்திற்கெல்லாம் மேலிருப்பவரென்பது; அல்லது, தமது மாயையினால் எல்லாப்ப்ராணிகளையும்கீழ்ப்படுத்தி மறைப்பவர்; உதும்பரர்=ஆகாயத்திற்குமேற்பட்டவர்; காரணபொருளென்பது; அல்லது, அன்னமுதலியவற்றினால் எல்லாவற்றையும் போஷிப்பவர்; இங்கு ஸந்தி ஆர்ஷம்.

வரும் எல்லாக்குணங்களினுலும் உயர்ந்ததானபரமபதத்தையும் திரு மகள்முதலானவிபூதிகளையும் அடைந்தவருமாயிருப்பவர்; இங்கு, 'அம்பரர்' என்பதின், அ, உ என்று மாறியிருக்கிறது; மிகஉயர்ந்த வர்கள் ஸேவைசெய்யும்படி இருந்தும் மிகக்கீழ்ப்பட்டவர்களும் அணுகக்கூடியவரென்பது.

ந்யாயர்= [1]தம்பக்தர்களுக்குத் தவறுதல் வராமலிருக்கும்படி எதுயுக்தமோ அதைச்செய்பவர்.

நந்தகீ= [2]பகவானும், 'என்னை இதுமகிழ்விக்கவேண்டும்'என்று ப்ரார்த்திக்கும் தகுதியிலுல் நந்தகமென்று பெயர்பெற்ற கட்கத்தை ஆயுதமாக எக்காலமும் வகிப்பவர்.

நந்தகர்=தம்முடைய ப்ரம்மானந்தத்தை மோக்ஷத்தில் அளித்து நிரப்புகிறவர்.

நந்தர்= [3]அனுபவத்திற்குரிய பொருள்களும் .அவற்றிற்குரிய கருவிகளும் அனுபவங்களும் அனுபவிப்பவர்களும் எப்போதும் தம்மிடத்தில் நிரம்பியிருப்பவர்.

நந்தி= [4]எல்லாவிடங்களிலும் எல்லாக்காலங்களிலும் எல்லா வகைகளாலும் லக்ஷ்மி நிறைந்திருப்பவர்.

நந்தீ= [5]வ்யூகாவதாரத்தில ஸங்கர்ஷணராயிருந்த தாமேவிபவா வதாரத்தில் பலராமராக அவதரித்து நந்தகோபனைத் தந்தையாக அடைந்திருப்பவர்.

நயர்= [6]தம்மிடம் அன்புவைத்த ரிஷிகளைக் கர்ப்பத்தில் வைத் துக் காப்பதுபோல எப்போதும் காப்பாற்றுகிறவர்.

நரர்= [7]சேதனங்களும் அசேதனங்களுமாகிய தம்மைச்சேர்ந்த விபூதிகள் அழியாமலிருக்கப்பெற்றவர்.

நஹுஷர்=தமதுமாயையினுல் ஜீவர்களைக்கட்டுகிறவர்

நக்ஷத்ரநேமி= [8]நக்ஷத்ரங்களென்னப்படும் கோளசக்ரத்தை நடத்துகிறவர்.

---

1 ப்ரமாணங்களுக்கெல்லாம் உதவியான தர்க்கமாயிருப்பவர்.

2 வித்யாரூபமாகிய நந்தகமென்னும் கட்கத்தைவகிப்பவர்.

3 வேண்டியவையெலலாம் நிரம்பினவர்; அல்லது, அநந்தர்=விஷய ஸுகங்களைக்கடந்தவர்.

4 பரமாநந்தவடிவமாயிருப்பவர்.

5 ஆநந்தீ=ஸுகரூபியாயிருப்பவர்: அல்லது, எல்லாச்செல்வங்களும் நிரம்பியிருப்பவர்.

6 எல்லாவற்றையும்நடத்துகிறவர்.

7 எல்லாவற்றையும்நடத்துகிறவர்.

8 சிம்சுமாரசக்ரமென்னப்படும்நக்ஷத்ரமண்டலத்தைச் சக்ரத்தின் நடு வில் குடம்போலிருந்து நடத்துகிறவர்.

க்ஷத்ரீ = [1]க்ஷத்ரங்களுக்கு ஆதாரமானவர்; அல்லது, க்ஷத்ர மண்டலத்தைத் தாங்குகிறவர்.

காரஹிம்மவபு = [2]காரஹிம்மாவதாரம் செய்தவர்; பக்தனுடைய பயத்தைப்போக்குவதற்காக அவன்வேண்டினகாரணத்தில் நிலையாக ஹிம்மரூபத்தைத்தரித்தவரென்பது.

காராயணர் = [3]கர்மகளென்னப்படும் அழியாதசித்தியல்புக்களாகிய ஆத்மாக்களின்கூட்டத்துக்கு அயனம் நீங்காதவர்; அல்லது, அந்தர்யாமியாய் அவற்றுள் இருப்பவர்.

கிக்ரஹர் = [4]அர்ஜுனன்பராக்ரமத்தைக் காட்டிப்பராமமேல் தாம் ஸாரத்தியம்செய்யும் விதாதத்தினுலேயே காரிகளை அடக்குகிறவர்.

கிதிரவ்யயர் = [5]அவ்யயபோகியும் பலவகைகளாலும் அனுபவிக்கப்பட்டபோதிலும் சிறிதும் குறையாத பொற்புதையல்போன்றவர்; ஆபத்துக்குதவும்பொருளைப்போல வைத்துக் காக்கத்தக்கவரென்பது.

கிமிஷர் = [6]ஸாதுக்களுக்குவிரோதிகளிடத்தில் கடாக்ஷத்தைச் செலுத்தாதவர்.

கியந்தா = [7]பலதேவதைகளிடம் பக்தியைவைத்திருக்கும் பலரை அவரவர்விருப்பப்படி தாமே கட்டுகிறவர்.

கியமர் (163) = [8]அடித்தவர்களைப்பலகைக்கும் பலமுறையில் அஸுரர்களை அடக்குகிறவர்.

---

1 க்ஷத்திரங்களுக்காரணமாகிய சரீரமுடையவர்.

2 மனிதஸிம்மங்களும் ஸிம்மம்போல் கணக்குறும் ஒரு தேசத்தில் பொருந்தி அவதரித்தவர்.

3 கரம்என்னப்படும் ஆத்மாவினிடத்து உண்டானதால் காரங்களென்னப்படும் ஆகாயமுதலியகார்யவர்க்கங்களில் காரணரூபமாகியாபித்திருப்பதனால் அவற்றைத் தமக்கு இருப்பிடமாகவுடையவர்; அல்லது, கரர்களென்னப்படும்ஜீவர்களுக்குப் பிரளயகாலத்தில் ஆதாரமாயிருப்பவர்; அல்லது, காரமென்னப்படும்தலமாகிய ப்ரளயோதகத்தில் சயனித்திருப்பவர்.

4 எல்லாவற்றையும் தம்வசமாக அடக்கிவைத்திருப்பவர்.

5 அழியாதநிதி; ப்ரளயகாலத்தில் எல்லாம் அவரிடம் வைக்கப்படுவதனால் நிதியென்பது.

6 யோகநித்திரையினால் கண்களை மூடியிருப்பவர்.

7 எல்லாரையும் தந்தம்காரியங்களில் நிற்கச்செய்பவர்.

8 ப்ரம்மாதிதேவர்களையும் தக்கம் அதிகாரங்களில் நியமிப்பவர்.

நியமர்(869)= [1]அந்த அந்தப் பூஜைகளுக்குப்பலன்களாக உயர் குலம், ஆயுள், போகங்கள்முதலியவற்றை அந்த அந்தத் தேவதாரூபி யாகிக் கொடுப்பவர்.

நிர்க்குணர்= [2]ப்ராக்ருதகுணங்கள்ஒன்றும் தம்மிடம்பற்றாமலி ருப்பவர்; இங்கு ஒன்றுக்கும் உட்படாமலிருக்கும் வசித்வம் என் னும் ஐஸ்வர்யம் கூறப்பட்டது.

நிர்வாணம்= [3]பாவம்விலக்கப்பட்டவர்களுக்குப் பரமகதிக்குக் காரணமாதலால் முக்திஸ்வரூபமாயிருப்பவர்.

நிவ்ருத்தாத்மா (231)= [4]ப்ரக்ருதிக்கு மூன்றுமடங்கதிகமான நித்யவிபூதியில் இருப்பதாகிய தமதுஸ்வரூபம் கால்பாகமாகியப்ர க்ருதிமண்டலத்தைக் கடந்ததாயிருப்பவர்.

நிவ்ருத்தாத்மா (453)= [5]நிவ்ருத்திதர்மத்தை உபதேசிப்பதற்கா கவும்சிறந்தவைராக்கியத்தைத் தம்அனுஷ்டானத்திலல்வெளிப்படுத் துவதற்காகவும் நாராயணதாரங்களையெடுத்துச் சப்தாதி விஷ யங்களை மனத்திலல் துறந்திருந்தவர்.

நிவ்ருத்தாத்மா(604)= [6]நிவ்ருத்திதர்மத்திலிருக்கும் சேதனர் களுக்கும் ஈஸ்வராயிருப்பவர்.

நிவ்ருத்தாத்மா (780)= [7]தயையிலல் உலகத்தோடு சேர்ந்திருந் தாலும் இயற்கையில் ஒன்றிலும்சேராத தனித்த மனமுள்ளவர்.

நிஷ்டா= [8]ஸமாதிகலியாத மனமுள்ளவர்கள் மனத்திற்கினிய பிடிப்பாகிய தம்திவ்யமங்களவிக்ரஹத்தில் நிலைபெற்று நிற்கும்படி இருப்பவர்.

நேதா= [9]பக்தர்கள்இட்ட வேலையைச் செய்பவர் ; தாம் மத்ஸ் யமாகக் கடலில்மூழ்கி மகாத்மாக்களான பக்தர்களைக் கரையேற்றி னவரென்பது.

---

1 அநியமர்=தம்மைஅடக்குகிறவர் யாருமில்லாதவர்; அல்லது, நியமர்= யோகத்திற்கு அங்கமாகிய நியமமாயிருப்பவர்: அதாவது, அதனல் அடை யப்படுகிறவர்.

2 குணங்களில்லாதவர்.

3 ஒருதுக்கமுமில்லாதபரமானந்தமாகிய ப்ரம்மமாயிருப்பவர்.

4 ஸம்ஸாரப்பற்றில்லாத ஸ்வரூபமுடையவர்.

5 விமுக்தாத்மா=இயற்கையாகவே எல்லாப்பற்றுக்களும்விட்ட ஆத்மா வாயிருப்பவர்.

6 விஷயங்களில் மனம் ப்ரவ்ருத்தியாமலிருப்பவர்.

7 அநிவ்ருத்தாத்மா=எங்கும் நிறைந்திருப்பவராதலின் அவரது ஸ்வரூ பம் ஓரிடத்திலும் இல்லாமற்போவதில்லை; அல்லது, நிவ்ருத்தாத்மா=பற்றுக் களிலிருந்து நீங்கினமனமுள்ளவர்.

8 ப்ரளயத்தில் எல்லாப்பொருள்களும் முடிவுபெறும் இடமானவர்.

9 உலகங்களை கடத்துகிறவர்.

நேயர்=[1]தம்மிடம் அன்புவைத்திரிஷிகள்முதலானவர்கள் தம்மைக்கட்டளையிட்டு நடத்தும்படி அவர்களுக்கு அடங்கியிருப்பவர்.

கைககர்மக்ருத்=[2]கடைவது மலையைத்தாங்குவது பகைவரை அழிப்பது அமுதம்அளிப்பது முதலிய பலசெய்கைகளைச் செய்பவர்.

கைகதர்=[3]எண்ணிறக்க பூமாலைமை ஆடைமுதலியப்ரம்மாலங்காரங்களைக் கொடுக்கும் அப்ஸரஸுகள் முக்தனை எதிர்கொண்டழைக்கும்படிசெய்பவர்.

கைகமாயர்=[4]பலவகை ஆச்சரியங்களையுடையவர்; சிறுகுழந்தையாயிருந்து அளவற்ற உலகங்களை விழுங்கியும் ஒரேதண்ணீரில் பிடிப்பில்லாத ஆலிலையில் படுத்தும் வளர்ந்தாகமெட்டாத மற்றும் பல ஆச்சர்யங்களைச் செய்துகொண்டிருப்பவர் என்பது.

கைகர்=[5]தமது லீலைகளினால் அனந்தமாயிருப்பவர்.

கைகரூபர்=உபாயங்களைச் செய்யும் பலவகைஜனங்களின் அறிவுக்குப்புலப்படும்படி பலவகை ரூபங்களை எடுப்பவர்; 'விஸ்வரூபமாகப் பற்பலரூபங்களை எடுப்பவர்' என்பது திருத்தி.

கைகரூருங்கர்=[6]பகைவனை வெல்லுவதற்குப்பலவகைஉபாயங்களை எடுப்பவர்; புத்தியினால் உபாயம் சொல்லுவது, ஸாரதியாயிருப்பது, ஆயுதமெடுப்பதில்லையென்று உறுதிசெய்வது ஸமயம் நேர்ந்தபோது ஆயுதமெடுப்பதுமுதலிய பாவங்கள் குறிப்பிடப்படுகின்றன.

கைகாத்மா=[7]கடல்கடையும் காலத்தில் தேவர்கள்பக்கத்தில் விஷ்ணுமூர்த்தியாகவும், மந்தரக்கைத்தாங்குவதற்குக் கூர்மாவதாரமாகவும், இன்னும் அக்காலத்துத்தக்கபடி மோஹினிமுதலியரூபங்களாகவும் பலஉருவங்களெடுத்தவர்.

ப்ரக்ரஹர்=[8] தாம் ஸாரதியாயிருந்து தேரைஎளியான அர்ஜுன

---

1 பரமாத்மாவால் நடத்தப்படும் ஜீவாத்மாவாயிருப்பவர்.

2 ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரமுதலிய பலசெய்கைகளைச் செய்கிறவர்.

3 கைகர்=தர்மத்தைராஜபுத்ரர்க்காக அர்த்தஅவதாரங்கள் எடுப்பவர்.

4 பலமாயைகளைத்தரிப்பவர்.

5 மாயையினால் பலஉருவமாயிருப்பவர்.

6 அநேகம் கொம்புகளையுடையவர்; தர்மார்த்தகாமமோக்ஷமென்னும் நான்குபுருஷார்த்தங்களும் கொம்புகளைப்போன்றவையென்பது: அல்லது, நான்குவேதங்களையும் கொம்புகளாகவுடையவர்.

7 ஸ்ருஷ்டிமுதலியவற்றிற்குக் காரணமான பலசக்திகளுள்ளவராதலின் பலஉருவங்களாயிருப்பவர்.

8 பக்தர்கள்அர்ப்பணம்செய்யும் பத்ரபுஷ்பமுதலியவற்றையும் அங்கீகரிப்பவர்; அல்லது, விஷயங்களென்னும்காடுதனில்ஓடும் இந்திரியங்களென்னும்குதிரைகளைக் கடிவாளம்பிடித்துஇழுப்பதுபோல இழுப்பவர்.

னைக் கடிவாளம்பிடித்திழுப்பதுபோல இழுத்துப்பிடித்தவர்; தம் சொற்படிகேட்கும்படி நடத்தினவர்என்பது.

ப்ரகாசர்= [1]தமது திவ்யரூபத்தைக் காணக்கருதும் அர்ஜுனன்முதலானபக்தர்களுக்குப் புலப்படுத்துகிறவர்.

ப்ரகாசாத்மா= [2]மூடர்களுக்கும் வெளிப்படையாகத்தெரியும் சிறந்தப்ரபாவமுடையவர்.

ப்ரணமர்= [3]தமதுகுணங்களினால் சராசரங்களனைத்தும் தம்மிடம் வணங்கும்படியிருப்பவர்; 'ப்ரணவர் என்னும்பாடத்தில், மிகவும் புகழப்படுகிறவர் என்றுபொருள்' என்பது, நிர்வசனம்.

ப்ரணவர்= [4]தமக்கும் ஆத்மாக்களுக்குமுள்ள நித்யஸம்பந்தத்தைப் ப்ரணவத்தினால்அறிவித்து அவர்களைத் தமதுசரணாரவிந்தங்களில் வணங்கச்செய்பவர்.

ப்ரத்யயர்= [5]தம்மைஅடைந்தவர்களுக்குத் தம்மிடத்தில் நம்பிக்கைவரும்படிசெய்கிறவர்.

ப்ரத்யும்நர்= [6]சிறந்தஆத்மப்ரகாசமுள்ளவர்.

ப்ரதர்த்தர்=ப்ரளயகாலத்தில் எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பவர்.

ப்ரதாநபுருஷேச்வரர்=ஜீவர்களைப்பந்தப்படுத்தும் ப்ரக்ருதியையும் அதில் பத்தப்பட்ட ஜீவர்களையும் எல்லாவகைகளாலும் நடத்துகிறவர்.

ப்ரதாபர்= [7]எல்லாவற்றையும் ப்ரமிக்கும்படிசெய்பவர்; அல்லது, பகைவருக்குத் தன்பம்உண்டுபண்ணுகிறவர்.

ப்ரதிதர்=புகழ்பெற்றவர்.

ப்ரதிஷ்டிதர்=தமக்கு வேறுஆதாரம்வேண்டாதபடிதம்மகிமையையேஆதாரமாகக் கொண்டிருப்பவர்.

ப்ரபவர்= [8]அவதாரங்களிலும் தம்மை நினைத்தமாத்திரத்தில்

---

1 எல்லாவற்றையும்ப்ரகாசிக்கச்செய்பவர்.

2 ஞானரூபமானஸ்வரூபமுடையவர்.

3 ப்ரணவர்= 'ஓம்' என்று முழங்குகிறவர்; அல்லது, தேவர்களாலும் வணக்கப்படுகிறவர்.

4 ஓங்காரமாகியப்ரணவரூபியாகவிருப்பவர்.

5 அறிவுவடிவானப்ரம்மம்.

6 சிறந்ததனமுள்ளவர்; அல்லது, ப்ரத்யும்னரென்னும்வ்யூகமாயிருப்பவர்.

7 ஸூர்யன்முதலியபரிவாரங்களினால் உஷ்ணத்தை உண்டுபண்ணுகிறவர்.

8 எல்லாம் உண்டாவதற்குக் காரணமாயிருப்பவர்; அல்லது, உயர்ந்தஜன்மமுள்ளவர்.

ஸம்ஸாரவிலங்குகளைத்தையும் வேர்க்களைவதும் குற்றங்கள்சிறிதும் பற்றுதலுமான சிறந்தஜ்ஞானமுடையவர்.

ப்ரபிதாமஹர்=பிதாமஹரென்னும்பிரம்மதேவருக்கும்தந்தை.

ப்ரபு (35) = [1]மானிடர்முதலியவர்களைப்போல அவதரித்தும் தேவர்களுக்கும் கிடைக்க அரியனவான போகமோக்ஷமுதலியபலன்களை அளிக்கவல்லவர்.

ப்ரபு (300)= [2]ஸௌலப்யம் ஔதார்யமுதலிய குணங்களின் சிறப்பினால் எல்லாருடைய மனங்களையும் கவரும் சக்தியுள்ளவர்.

ப்ரபூதர்= [3]எல்லாம் நிரம்பினவர்; அழியாதலையும் அளவற்றவையுமான போகஸாதனங்கள் நிரம்பின பரமபதத்திலிருப்பவரென்பது.

ப்ரம்ம=ஸ்ருஷ்டியிலுள்ளசேதனர்கள் எல்லாரையும் ஒப்புயர்வற்றதமதுதிருக்கல்யாணகுணங்களினால் மேன்மேலும் அபிவருத்திசெய்து தமதுஸ்வரூபமும் குணங்களும் விபவங்களும் இன்னும் அபிவிர்த்தியாகநிரம்பியிருப்பதும் ஸ்வதந்த்ரமும் வேதாந்தங்களில் அறியப்படுவதுமாகிய பரப்ரம்மமாயிருப்பவர்.

ப்ரம்மக்ருத்பரம்மா= [4]ப்ரக்ருதியினால்உண்டாகும் மஹத் அஹங்காரமுதலான அளவற்றவிஸ்தாரமுள்ள உலகங்களைப்படைப்பவராகிய ப்ரம்மதேவரும் எல்லாவிதங்களாலும் தம்மால்நியமிக்கப்பட்டு நடக்கும்படிசெய்பவர்.

ப்ரம்மண்யர் = [5]எல்லாவற்றையும்அநுபவிக்கும் போக்தாவாதலால் பெரிதென்றுசொல்லப்படும் சேதனங்களுக்கும் போகத்திற்குரிய அளவற்றஸாதனங்களைத்தருவதனால் போக்யத்திற்பெரிதான ப்ரக்ருதிக்கும் இருப்புஸ்தானமுதலானஎல்லாநிலைமைகளுக்கும்காரணமாதலின் அனுகூலராயிருப்பவர்.

ப்ரம்மவித்= [6]மூடிவில்லாதவேதங்களின்மூடிவை அறிந்திருப்பவர்.

ப்ரம்மவிவர்த்தநர்= தவமுதலியதர்மத்தை விருத்திசெய்கிறவர்.

---

1 எல்லாச்செய்கைகளிலும் மிகஸாமார்த்தியமுள்ளவர்.

2 உயர்ந்திருப்பவர்.

3 ஞானம் ஐசுவரியமுதலிய குணங்கள் நிரம்பினவர்.

4 இரண்டுநாமம்; ப்ரம்மக்ருத்=தவமுதலியவற்றை உண்டுபண்ணுகிறவர். பிரம்மா=ப்ரம்மதேவராகிஉலகத்தைப்படைப்பவர்.

5 தவம், வேதம், ஸத்யம், ஞானம்இவற்றிற்கு அனுகூலமானவர்; அல்லது, இவற்றைஅறிப்வர்.

6 வேதத்தையும் வேதார்த்தத்தையும் ஸரியாகஅறிந்திருப்பவர்; அல்லது, ஸரியாகஅடைந்திருப்பவர்.

ப்ரம்மஜ்ஞர்= [1]வேதங்களையும் வேதார்த்தங்களையும் ஸாக்ஷாத் காரமாகஅறிபவர்.

ப்ரம்மீ= [2]ப்ரம்மம் என்னப்படும் ப்ரமாண ப்ரமேயங்களனைத் தையுமுடையவர்.

ப்ரமாணர் (429)= [3]கிருதயுகத்திலுள்ளவர்களுக்கு கன்மை தீமைகளைப்பகுத்துஅறிவிப்பவர்.

ப்ரமாணர் (959)= [4]வேதங்களின் ரஹஸ்யமாகிய தத்வார்த்தங் களை ஐயந்திரிபின்றி அறிவிப்பவர்.

ப்ரமோதர்= [5]தம்மைச்சேர்ந்தவர்கள் தம்மைத்தியானிக்கத் தொடங்கும்போதே அவர்களை மகிழ்விப்பவர்; அல்லது, தம்மை த்யானிக்கும் பக்தர்கள்விஷயத்தில் தாம் மகிழ்கிறவர்.

ப்ரஜாகர்= [6]பயிரிடுகிறவன் பயிர்காப்பதுபோலப் பக்தர்களை இரவும்பகலும் தூங்காமற்காப்பவர்.

ப்ரஜாபதி (70)= [7]பக்தர்களிலும் முக்தர்களிலும் சிறந்தவர்க ளாகவிளங்கும் நித்யஸூரிகளைக் காப்பாற்றுகிறவர்.

ப்ரஜாபதி (199)=தமது நாபீகமலத்தில் பிறந்த பிரம்மதேவர் முதலான ப்ரஜைகளுக்கு ஸ்வாமி.

ப்ரஜாபவர்= [8]எல்லாப்ரஜைகளும் அவர் கொடுத்தஸாதனங்க ளைக்கொண்டே அவரைச்சேரும்படி அவர்களுக்குஇடமாயிருப்பவர்.

ப்ரஸங்நாத்மா= [9]வேண்டினவையெல்லாம்தேடாமலேபொருந் தியிருப்பதனால் விருப்பு வெறுப்புமுதலிய கலக்கங்களின்றி எப்போ தும் தெளிந்தமனமுள்ளவர்.

---

1 வேதங்களைத் தம்உருவமாகஅறிந்தவர்.

2 ப்ரம்மமென்றுசொல்லப்பட்டதெல்லாம் தமக்குட்பட்டதாகக்கொண் டிருப்பவர்.

3 ஞானரூபியாயிருப்பவர்; அல்லது, ப்ரத்யக்ஷமுதலான ப்ரமாணங்களா யிருப்பவர்.

4 ஞானரூபியாகவிருப்பவர்.

5 ஆத்மாவாகிய அம்ருதரஸத்தை அனுபவிப்பதனால் எப்போதும்மகிழ்ந் திருப்பவர்; அல்லது, தம்மைத்யானிப்பவருக்குத் தியானித்தமாத்திரத்தி லேயே ஸந்தோஷத்தைத்தண்டுபண்ணுகிறவர்.

6 எப்போதும் விழித்துக்கொண்டிருப்பவர்.

7 எல்லாஜனங்களுக்கும் அதிபதி.

8 ப்ரஜைகளின் உத்பத்திக்குக் காரணமானவர்.

9 ரஜோகுணம் தமோகுணங்களினால் கலங்காதமனமுள்ளவர்; அல்லது, அனுக்ரஹிக்கும் தன்மையுள்ளவர்.

ப்ராக்வம்சர் — [1]ஆதிகாலந்தொடங்கி முக்தர்களாயிருக்கும் நித்யஸூரிகளுக்கும் வம்சம்போல நித்யாதாரமாயிருப்பவர்; நித்யமாயுள்ளவைகளும் பகவானுடைய நித்யஸங்கல்பத்தினாலேதான் அவ்வாறிருப்பதென்பது.

ப்ராணத்ருத் — [2]ஜீவாத்மாக்களைத் தாய்போலத் தாங்குகிறவர்; அல்லது, போஷிப்பவர்.

ப்ராணதர் (66)— [3]எக்காலமும் தரிசித்தும் ஆனந்தமனுபவத்துடன் நித்யகைங்கர்யம் செய்வதற்குரிய சக்தியை நித்யஸூரிகளுக்கு அளிப்பவர்.

ப்ராணத்ர் (322)— [4]தேவர்களுக்கு அமுதம் கடைவதற்குரிய தேகபலத்தைக் கொடுப்பவர்.

ப்ராணதர் (409)— [5]உயிரைக்கொடுப்பவர்.

ப்ராணதர் (956) [6]சேதநாசேதநவிஷயங்களென்னும் விஷயங்கள் தீண்டி மயக்கத்தினால் தம்மைமறந்து ஆத்மாகாரம் அடைந்தவர்களுக்கு ஆத்மாவுய்வதாகிய உயிரைக்கொடுப்பவர்.

ப்ராணநிலயர் — [7]கூட்டில் பறவைகள் அடைவதுபோல எல்லா ஆத்மாக்களும் தம்மிடம்அடங்கும்படியிருப்பவர்.

ப்ராணர் (67) — [8]முக்தியடைந்தவர்களுக்கு உயிராயிருப்பவர்.

ப்ராணர் (321)— [9]எல்லாஜீவர்களுக்கும் உயிராயிருப்பவர்.

ப்ராணர் (408) — [10]எல்லாவற்றையும் உய்விப்பவர்.

ப்ராணஜீவநர்— [11]உணவுபோலஆத்மாக்களைப்பிழைப்பிப்பவர்.

---

1 இதரவம்சங்களைப்போலப் பிரிக்கப்பட்டதாகாமல் தம்மிச்சையான பிரபஞ்சமுறைப்பட்டதாகவுமுடையவர்; பிரபஞ்சஸ்ருஷ்டி உதாரணமென்பது.

2 ப்ராணம்=ப்ராணிகளின் உயிரை அல்லது மனஸை போஷிப்போலிருப்பவர்.

3 உயிர்களை நடத்துகிறவர்; அல்லது, உயிர்களைப் பாதுகாப்பவர்; அல்லது, உயிரென்னப்படும் ஜீவாத்மாக்களை நடத்துகிறவர்.

4 தேவர்களுக்குப் பலத்தைக்கொடுப்பவரும் அஸுரர்களுக்குப்பலத்தைக் கெடுப்பவரும்.

5 ப்ரளயகாலத்தில் உயிர்களையழிப்பவர்; அல்லது, ஸ்ருஷ்டிகாலத்தில் எல்லாப்பிராணிகளுக்கும் அந்தர்யாமியாகி உயிரைக்கொடுப்பவர்.

6 கர்ப்பத்தில்இருந்துபோல் தரிசித்துமுதலானவைகளைத் திரும்பவும் பிழைப்பிப்பவர்.

7 இந்திரியங்களுக்கும் பிராணம் அபானமுதலான வாயுக்களுக்கு ஆதாரமான ஜீவாத்மாக்களுக்கும் இருப்பிடமானவர்.

8 ஜீவாத்மரூபி; அல்லது, பரமாத்மா; அல்லது, உயிராயிருப்பவர்.

9 வாயுரூபியானஸூத்ராத்மாவாக ஜனங்களைப் பிழைப்பிக்கிறவர்.

10 ஜீவரூபியாயிருப்பவர்; அல்லது, பராணவாயுரூபமாயிருப்பவர்.

11 ப்ராணவாயுரூபியாக ப்ராணிகளைஜீவிக்கச்செய்பவர்.

ப்ராம்சு = த்ரிவிக்ரமாவதாரமெடுத்து உலகங்களையெல்லாம்வ்யாபித்தவர்.

ப்ராம்மணப்ரியர் = [1]வேதத்திற்கு அதிகாரிகளானப்ராம்மணர்களைத் தமக்கு அன்பர்களாக உடையவர்.

ப்ராம்மணர் = [2]வேதார்த்தத்தைஉலகத்தில்நிலைபெறுத்துவதற்காகத் தாமே அத்ரிமஹரிஷியின்கோத்ரத்தில் தத்தாத்ரேயரென்னும் ப்ராம்மணத்திருமேனியாகஅவதரித்தவர்; அல்லது, வேதத்தை உலகத்திற்குக்கொடுக்கிறவர்.

ப்ராஜிஷ்ணு = [3]பரரூபத்தையேபகிர்ந்துகொண்டு உபாஸிப்பவர்களுக்குப்புலப்படும் தன்மையுள்ளவர்.

ப்ரியக்ருத் = [4] ப்ரயோஜனந்தரங்களைக்கருதிப் பக்திசெய்கிறவர்களையும் அவர்விருப்பங்களை நிறைவேற்றித் தம்மையேவிரும்பும்படி செய்கிறவர்.

ப்ரியார்ஹர் = [5]அனன்யபக்தியாக வந்தடையும் ஞானியாகிய அன்பனை அனுக்ரஹிப்பதற்குரியவர்.

ப்ரீதிவர்த்தனர் = பக்தர்களுக்குக் காலக்கிரமத்தில் தமதுகுணங்களை மேன்மேலும் வெளிப்படுத்துவதனால் அவர்களின்பக்தியையதிகப்படுத்துகிறவர்.

ப்ருது = [6]பெரும்புகழ்பெற்றவர்.

ப்ருஹத் = மிகப்பெரிதான பரமபதமென்னும்பெருவெளியையும் உள்ளங்கையிலடக்குவதுபோலத் தமது ஏகதேசத்தில் அடக்கிக்கொண்டு வ்யாபித்திருக்கும் மஹிமையென்னும் ஐஸ்வர்யமுள்ளவர்.

ப்ருஹத்பானு = [7] விஸ்தாரமாக எப்போதும் ப்ரகாசிக்கும் கிரணங்களையுடையவர்; இதனால் நித்யவிபூதியான பரமபதத்தில் எப்போதும் அதிகப்ரகாசமுள்ள ஸ்வரூபம் குறிப்பிக்கப்படுகிறது.

---

1 ப்ராம்மணாகளுக்குப் ப்ரியமானவர்.

2 ப்ரம்மரூபியாகி உலகமனைத்துக்கும் வேதங்களை ப்ரவசனம்செய்தவராதலின் வேதத்துக்கு ஸம்பந்தப்பட்டவர்.

3 ஒளிவடிவமானவர்.

4 பக்தர்களுக்கு விருப்பத்தைச்செய்கிறவர்.

5 மனிதர் தம்தம் இஷ்டபதார்த்தங்களை ஸமர்ப்பணம் செய்வதற்குரியவர்.

6 ப்ரபஞ்சரூபமாகத் தாமே விரிந்திருப்பவர்.

7 சந்திரன் ஸூர்யன்முதலியவர்களுக்கு மிகுதியான கிரணங்களைக்கொடுத்து அவற்றினால் உலகத்தைப் ப்ரகாசிக்கச்செய்கிறவர்.

ப்ருகத்ரூபர்= [1]தாமெடுக்கும் ரூபங்களில் ஒவ்வொன்றும் எல்லாத்திசைகளையும் மேலுலகத்தையும் இடைவெளியையும் வியாபிக்கும்படி பெரியவராயிருப்பவர்.

பக்தவத்ஸலர்=தம்மை ஸ்வாமியாகவும் பந்துவாகவும்உணர்ந்து பக்திபண்ணுகிறவர்கள்விஷயத்தில் விசேஷ அன்புள்ளவர்; பக்தர்கள் கிடைத்த பரபரப்பில் மற்றெல்லா விஷயங்களையும் முறந்திருப்பவரென்பது.

பகவாந்= [2]குற்றங்களனைத்தையும் ஒழித்த ஸகல்யாண குணங்களே நிரம்பினஸ்வரூபமாதலின் மிகவும் பூஜிக்கத்தக்கவர்.

பகஹா — [3]நிரம்பின ஐஸ்வர்யம், வீர்யம், கீர்த்தி, லக்ஷ்மி, ஞானம், வைராக்யம் இவ்வாறு குணங்களையும் அடைந்திருப்பவர்.

பணர்= [4]தாம் ஸ்வாமியாகவும் அடியார்கள் தமக்குத்தாஸர்களாகவுமிருக்கும் ஸம்பந்தத்தைச் சிலசமயங்களில் தாம் பக்தர்களுக்கு அடிமையாயிருந்து மாற்றுவதனால் நியமிக்கப்பட்டவர்.

பத்மகர்ப்பர்=தமக்குத் தகுதியாகச் சிறந்த மணமுள்ளதும் கோமளமுமான பத்மாஸனத்திலுள் திருப்பவர்; அல்லது, யோகஸாதனை செய்பவர்களால் ஹ்ருதயகமலங்களில் நிறுத்தப்படுகிறவர்; ஆதாரசக்திமுதலியபீடகர்ப்பத்தில் அஷ்டதளபத்மத்திலுள் பகவானிருப்பதுசொல்லப்படுகிறது.

பத்மநாபர் (48)— [5]ப்ரம்மதேவருக்கும்பிறப்பிடமான காலரூபமான கமலத்தை நாபியிலுடையவர்.

பத்மநாபர் (198) — [6]எட்டுதளங்களோடுகூடிய கமலத்தைநாபியிலுடையவர்.

பத்மநாபர் (347)— [7]பதுமம்போன்றநாபியையுடையவர்.

---

1 பூமியைத்தாங்கும்பொழுது ஆதிசேஷரூபமாகவும் தரிக்கிறவர்.

2 பூர்ணமான ஐசுவரியம், தர்மம், கீர்த்தி, லக்ஷ்மி, வைராக்யம், மோக்ஷம் ஆகிய ஆறுகுணங்களும் பொருந்தினவர்; அல்லது, ப்ராணிகளுக்கு உண்டாவதையும் அழிவதையும் வருவதையும் போவதையும் ஞானத்தையும் அஜ்ஞானத்தையும் அறிபவர்.

3 ஸம்ஹாரகாலத்தில் ஜகத்காரியமுதலான குணங்களை அழிப்பவர்.

4 புண்யகர்மங்களைப் பெருமுதலாகொண்டு அவற்றின் பலன்களைத்தருவதாகிய கிரயவிக்ரய வியாபாரஞ்செய்பவர்; அல்லது, படைத்தவற்றிற்கெல்லாம் பேரிடுகிறவர்.

5 உலகத்துக்கெல்லாம்காரணமாகிய கமலத்தை நாபியிலவைத்திருப்பவர்.

6 பத்மம்போன்றவட்டமானநாபியுள்ளவர்; அல்லது, ஹ்ருதயகமலத்தின் மத்தியில் பிரகாசிப்பவர்.

7 பதுமமலரின் கர்ணிகையாகிய உட்காயிலிருப்பவர்; அல்லது, பதினான்கு உலகங்களாகிய பதுமத்தைத் தமது நாபியிலுடையவர்.

பத்மநிபேக்ஷணர் = [1]பத்மமலர்போல மலர்ந்து அழகியதும் ஸ்ரமத்தைப்போக்குவதுமான கடாக்ஷமுடையவர்.

பத்மீ = கையில் லீலாபத்மத்தை எப்போதும் தரித்திருப்பவர்.

பதமநுத்தமம் = அதற்குமேல் ஒன்றுமில்லாதபரம்ப்ராப்யமானவர்.

பப்ரு = ஆதிசேஷரூபத்திலும் உலகங்களைத்தாங்குகிறவர்.

பயக்ருத் = தமதுசாஸ்திரத்தைக் கடந்தவருக்குப் பயத்தை உண்டுபண்ணுகிறவர்.

பயநாசநர் = [3]தமதுசாஸ்திரத்தை அனுஷ்டிப்பவருக்குப் பயத்தைஒழிப்பவர்.

பயாபஹர் = [4]கஜேந்திரனுக்குப்பகையான முதலைக்கும் நற்கதி கொடுத்ததாகிய சரித்திரத்திலும் நம்போன்றவர்களுக்கும் இயற்கையாயுள்ள அன்பிலும் நாதனில்லையென்கிறபயத்தைப் போக்கத்தக்கவர்.

பர்த்தா = [5]தம்மைத்தாங்குகாப்பாற்றும் இயற்கையுள்ளவர்.

பர்யவஸ்திதர் = [6]அன்பிலும் கஜேந்திரனைச்சுற்றிநின்றவர்.

பாஜ்ஞ்யர் = [7]தம்முடையஸ்வரூபத்தைத்தெரிவித்து ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம்என்கிற மூன்று தாபங்களையும் போக்கும் மேகமாயிருப்பவர்.

பரமஸ்பஷ்டர் = [8]யாவரும் தமதுமகிமையை வெளிப்படையாகக் கண்ணுல்காணும்படி அவதரித்திருப்பவர்.

பரமாத்மா = [9]தமக்குஒர்ஆத்மாஇல்லாத ஆத்மாவாயிருப்பவர்; ஸர்வேஸ்வரர்; தமக்கும்தாமே ஈஸ்வரரென்பது.

---

1 பதுமமலர்க்கொப்பான திருக்கண்களையுடையவர்.

2 கெட்டவழியிலிருப்பவருக்குப் பயத்தைஉண்டுபண்ணுகிறவர்; அல்லது, பக்தர்களுக்குப் பயத்தை அறுப்பவர்.

3 வர்ணாச்ரமதர்மங்களை அனுஷ்டிப்பவருக்குப் பயத்தைஒழிப்பவர்.

4 ஸம்ஸாரபயத்தை நிவர்த்திசெய்பவர்.

5 ப்ரபஞ்சத்துக்குஆதாரமாகத் தாங்குகிறவர்.

6 எங்கும்வியாபித்திருப்பவர்.

7 மூன்றுதாபங்களையும் போக்குவதனாலும் விரும்பினவற்றைப் பொழிவதனாலும் மேகமாயிருப்பவர்.

8 பரமர் = சிறந்தஅழகுள்ளவர்; அல்லது, எல்லாவற்றிலும்சிறந்தவர்; ஸ்பஷ்டர் = ஞானரூபியாதலின் வேறுப்ரமாணங்களாலன்றித் தம்மாலேயே தாம் ப்ரகாசிப்பவர்.

9 காரணகார்யங்களைவிட விலக்ஷணமும் நித்யமும் பரிசுத்தமும் ஞானமுள்ளதும் ஒன்றிலும்பற்றுதலுமான ஸ்வபாவமுள்ளவர்.

பரமேஷ்வரர் = [1]பெரியபிராட்டியாரே ஸ்வயம்வரம்செய்யும் படி யிருப்பதனால் கமதுபரமேஷ்வராசக்தி பயன்பட்டிருப்பவர்.

பரமேஷ்டீ = [2]ராக்ஷஸர்களோடுவேட்டையாடியும்உலகத்தைப்பரி பாலித்தும் இவ்வுலகத்தில்லீலையாடினபின் திரும்பவும் தம் உயர்ந்த ஸ்தானமாகியபரமபதத்தில்இருப்பவர்.

பரார்த்தி = [3]தமது ஸர்வேஷ்வரகன்மைக்கும் மேற்பட்டதான திருக்கல்யாணகுணங்களின் பரிபூர்த்தியையுடையவர்; தமது ஸௌ லப்யத்தினால் பரத்வமும்மறையும்படியிருப்பவர்; அகஸ்மாத்தாக இந் திரன்சந்திரன்முதலானதாழ்ந்தவர்களோடும் ராமாயணத்தில் ராமபிரா னுக்கு உபமானமாகக்கூறுவது?

பராயணர் = [4]ஸமாதியில் இழிந்திருப்பவருக்குமோக்ஷத்திற்கு நேர்ஸாதனமாகியபரமபக்தியையும் தாமே அளிப்பவர்.

பரிக்ரஹர் = [5]ராமாவதாரத்தில் தம்மைச்சேர்ந்தநகரத்துஜனங் களையும் தேசத்துஜனங்களையும் அவர்களின் சுற்றத்தாரையும் அவர் களின்இஷ்டதேவதைகளையும் தோட்டங்களிலுள்ளமரம்புல்முதலிய வற்றையும் பரமபதம்சேரும்படி அங்கீகரித்தவர்.

பவநர் (202) = எல்லாக்காலங்களிலும் எல்லாஇடங்களிலும் இயற்கையாகச்செல்லுகிறவர்; இவருடைய சக்திலேசம்பற்றித்தான் காற்றும் ஸதாகதிஎன்னப்படுவது.

பவநர் (817) = [6]தாமேபக்தர்களிடம்செல்லுகிறவர்.

பவித்ரம் = [7]ஞானமுதலிய ஆறு குணங்களையும் மஹிமைகளை யும் படிகளாகக்கொண்டு பரமாத்மஸ்வரூபத்தில் இறங்கிக்குற்றங்கள் எல்லாவற்றினும் நீங்கிப் பரிசுத்தமாகியஸ்வரூபம்

பஹுசிரஸ் = [8]அநேகம்தலைகளுடைய ஆதிசேஷராயிருப்பவர்.

---

1 எல்லாவற்றிற்கும் மேலானஈசுவரர்.

2 தம்முடைநத்தசக்தியையே ஆதாரமாகக்கொண்டு நடப்பவர்; அல்லது, ஸ்மருதயாகாசத்தில் வஸிப்பவர்.

3 சிறந்த ஐசுவரியமுடையவர்.

4 மறுபடியும்ஸம்ஸாரத்தில்திரும்பாமலிருக்கும்உயர்ந்தஸ்தானமாயிருப்ப வர்; பராயணம் = அபபடிப்பட்ட உயர்ந்தஸ்தானத்தை உடையவர் என்பது.

5 சரணுகதர்களால் எல்லாவகைகளாலும் பற்றப்படுகிறவர்; அல்லது, ஸர்வவ்யாபியாதலால் எங்கும்அறியப்படுகிறவர்; அல்லது, பக்தர்களால் ஸமர்ப பிக்கப்படும்பத்ரபுஷ்பங்கள் முதலியவற்றையும் அங்கீகரிக்கிறவர்.

6 பவநர் = தம்மைநினைத்தவர்களைசுத்தப்படுத்துகிறவர்.

7 பரிசுத்தப்படுத்துவது; அல்லது, இடிபோன்ற மகாபயத்தினின்றும் காப்பாற்றுவது.

8 ஆயிரம்தலைகளையுடைய விராட்புருஷராயிருப்பவர்.

பாது (126)= [1]எல்லாவற்றையும் படைத்தும் தாம் விகாரமில்லாமல் விளங்குகிறவர் ; இது வீர்யம். வீர்யமாவது ஒரு விகாரமும் தன்னிடத்தில் சேராமலிருக்கும் ஸாமர்த்தியம்.

பாது (235)=ஸூர்யனும் தமது ஒளியின் ஏகதேசம்பெற்றுப் பிரகாசிக்கிறான் என்னும்படி மிகுதியாகப் பிரகாசிப்பவர்.

பாபநாசநர்= [2]தயிர்வெண்ணெய்களோத் திருடினதுராஸக்ரீடை செய்ததுமுதலிய கதாம்ருதத்தினால் கேட்பவருடைய பாவங்களையும் போக்கிவிடுகிறவர் ; அவதாரகாலத்திலும் தம் பக்தர்களுக்கு வெளிப்படுகைவர்களையும் காம்க்ரோதாதிகளான உட்பகைவர்களையும் அழிப்பவர் என்னவுமாம்.

பாரப்ருத்= [3]ஆத்மாக்களுக்கு ஸம்ஸார விலங்கை அறுத்து அவர்கள் ஸ்வரூபம்விளங்கித் தம்மைச் சேருவதிலுள்ளபொறுப்பை வகிப்பவர்.

பாவநர்(32)= [4]அவதாரங்களில் துன்பங்களைப்போக்கி இன்பங்களையளித்து உய்விப்பவர்.

பாவநர்(293)= [5]உலகத்தைப் பரிசுத்தம்செய்யும் கங்கை முதலியவற்றிற்கும் அந்தச் சக்தி தம்ஸம்பந்தத்தினால் உண்டாகும்படியிருப்பவர்.

பாவர்= [6]எல்லாப்பொருள்களையும் மயிலுக்குத்தோகைபோலத் தமக்கு அணியாகக் கொண்டிருப்பவர்.

பாஸ்கரத்யுதி= [7]ஸூர்யனைக்கண்ட இருள்போலப் பகைவர் பறந்தோடத்தக்க மஹிமையுள்ளவர்.

பிஷக்= [8]ரோகத்திற்குக் காரணத்தையும் பரிகாரத்தையும் நன்குணர்ந்த வைத்தியராயிருப்பவர்.

---

1 'ஸர்வவித்' பார்க்க.

2 பூஜிப்பதனாலும் த்யானம்செய்வதனாலும் நாமத்தைச் சொல்வதனாலும் பாவங்களையொழிப்பவர்.

3 ஆதிசேஷன்முதலிய உருவங்களினால் லோகபாரத்தைத் தாங்குகிறவர்.

4 எல்லாருக்கும் எல்லாப்பலன்களையும் அளிப்பவர்.

5 காற்றையும் வீசும்படி செய்பவர்.

6 ப்ரபஞ்சரூபமாயிருப்பவர் ; அலலது, தனித்திருப்பவர் ; அலலது, எல்லாவற்றிற்கும் இருப்பாயிருப்பவர்.

7 ஸூர்யன்ஒளியைப்போன்ற ஒளியையுடையவர்.

8 ஸம்ஸாரரோகத்தை விடுவிக்கும் பரவித்தையைப் பகவத்கீதையில் உபதேசித்தவர்.

பீமபராக்ரமர்:— [1]உலகங்களுக்குத் தீங்குசெய்யும் ஹிரண்யாக்ஷன் ஹிரண்யகசிபுமுதலாகிய அஸுரப்ரக்ருதிகளுக்கு அச்சத்தைத் தரும் பயங்கரமான பராக்ரமத்தையுடையவர்; துஷ்டர்களை நிக்ரஹிப்பது அவர்களுக்கும் அனுக்ரஹமேதான்; பித்தளை வில்லுக்கு முதலியவற்றால் கட்டுவது அவனுக்கும் அவனால் பீடிக்கப்படும் மற்றவருக்கும் நன்மையாகிறதன்றோ?

பீமர் (358):— [2]ஆஜ்ஞையைக் கடந்தவர்களுக்குப் பயத்தைக் கொடுப்பவர்; வாயுமுதலான தேவர்களும் அவரிடம் பயந்துதான் தம்தம் தொழில்களை வழுவில்லாமல் நடத்துகிறார்கள்.

பீமர் (948):— [3]தம்முடைய மஹாப்ரபாவத்தை விரும்பாதவர்களுக்குக் கர்ப்பவாஸம்நரகமுதலியதுன்பங்களையும் கொடுத்துப் பயமுறுத்துகிறவர்.

பீஜமவ்யயம்:— [4]அவ்யயம்பீஜம் மழையில்லாதபஞ்சம்போன்ற கலிகாலம்முடியும்போதெல்லாம் யுகும்பத்துக்கும்பத் தர்மத்தைமுளைக்கச்செய்வதனால் அழியாதவிதையாயிருப்பவர்.

புண்டரீகாக்ஷர் [5] புண்டரீகமென்னப்படும்பரமபதத்தில் நித்யவாஸிகளாயிருப்பவருக்குக் கண்போன்றவர்.

புண்யகீர்த்தி:— [6]தமதுநாமஸங்கீர்த்தனமே பாவங்களை எல்லாம் முழுதும்விலக்கும்படியிருப்பவர்.

புண்யர் (692) : பாவிகளும் மங்களங்களுக்குரியராகும்படி அவர்களின் பாவங்களைப் போக்குகிறவர்.

புண்யர் (925) [7]கதிஜ்ஞத்வலக்ஷணம் என்னும் புண்ணியசரித்திரத்தினால் நம்மைப்போன்றவர்களின்பாவங்களையும் போக்குகிறவர்.

---

1 அஸுரர்முதலியவர்களுக்குப் பயுத்தைத்தரும் பராக்ரமமுள்ளவராக அவதரித்திருப்பவர்.

2 எல்லாம் தம்மிடத்தில் பயபடும்படியிருப்பவர்; அல்லது, அப்மர்= ஸாதுக்கள் பயப்படாமலிருக்கச் செய்பவர்.

3 உலகமெல்லாம் தம்மிடத்தில் பயந்து நடக்கும்படி செய்பவர்.

4 ஸ்ருஷ்டியில் வித்யாலயமின்றி முன்போலவே காரியங்களையுண்டாக்கும் காரணமாயிருப்பவர்.

5 ஹிருதயகமலத்தையடைந்திருப்பவர்; அல்லது, தாமரைபோன்ற கண்களையுடையவர்.

6 பாவத்தைப்போக்கும் புகழுள்ளவர்.

7 இதிஹாஸபுராணமுதலியவதனால கேட்கிறவர்களுக்குப் புண்யதத்தைச்செய்கிறவர்; அலலது, சுருதிஸ்மருதிகளால எல்லாருக்கும் புண்ணியத்தையே சொல்லுகிறவர்.

புண்யஸ்ரவணகீர்த்தநர்= [1]கஜேந்த்ரமோக்ஷத்தைக் கேட்பதனாலும் உரைப்பதனாலும் எல்லாப்பாவங்களும் நீங்கும்படி செய்பவர்.

புநர்வஸு= [2] ப்ரம்மாதிதேவர்களிடத்திலும் அந்தர்யாமியாக வஸிப்பவர்.

புரந்தரர்=அஸுரர்களின்பட்டணங்களைப்பிளப்பவர்; அஸுரர் பிசாசுமுதலியவற்றை நிக்ரஹிப்பதனால் ஆதிதைவிகபயத்தைப் போக்குகிறார் என்பது குறிப்பு.

புராதநர்= [3]மூன்றியகல்பங்களிலும் இப்படியே வித்தைகளை வெளிப்படுத்தினவர்.

புருஜித்=அநேகரைஜயித்தவர்.

புருஷர் (14)= [4]முக்தியாகக்கொடுப்பவர்; முக்தர்களுக்குத் தம் ஸ்வரூபகுணவிபவங்களில் ஈடுபாடென்னும் பேரானந்தத்தை அளிப்பவர்.

புருஷர் (407)= [5]உலகமெல்லாவற்றிற்கும் தலைவரும் பாவங்களையெல்லாம் எரிப்பவருமாயிருப்பவர்; அல்லது, காப்பாற்றுகிறவர்; 'விரும்பங்களை நிரப்புகிறவர்; அல்லது, எல்லாருக்கும் முன் செல்லுகிறவர்' என்பது நிர்வசனம்.

புருஷோத்தமர்= [6]புருஷர்களென்னப்படும்பத்தர், முக்தர், நித்யரென்ற மூவகைச்சேதனர்களையும் பார்க்கிலும் மிகச்சிறந்தவர்.

புருஸத்தமர்= [7]தமது குணங்களென்னும் அமுதக்கடலைக் குடிக்கவிரும்பும் கருடன்முதலான அநேகரிடத்தில் ஸ்திரமாகவும் தெளிவாகவுமிருப்பவர்.

புஜகோத்தமர்= [8]ஆதிசேஷனுக்கும் மேற்பட்ட சேஷியாகிய ஸ்வாமி; அரவணையில் பள்ளிகொண்டிருப்பவர் என்பது.

---

1 அவரைக்கேட்பதும் உரைப்பதும் புண்யத்துக்குக்காரணம்.

2 சரீரங்களில் ஜீவாத்மாவாக மாறிமாறி வஸிப்பவர்.

3 காலவரையில்லாமையால் முந்தியும் இருப்பவர்.

4 புருமென்னப்படும் சரீரத்திலிருப்பவர்; அல்லது, எல்லாவற்றிற்கும் முன்னமே இருந்தவர்; அல்லது, உயர்ந்தபொருள்களிலிருப்பவர்; அல்லது, அநேகபலன்களைக்கொடுப்பவர்; அல்லது, ப்ரளயகாலத்தில் அநேகலோகங்களை ஸம்ஹரிப்பவர்; அல்லது எல்லாவற்றிலும் நிரம்பியிருப்பவர்.

5 தேகங்களில் ஆத்மாவாகப் பிரவேசித்திருப்பவர்.

6 புருஷர்களுள்சிறந்தவர்; அல்லது, புருஷர்களைக்காட்டிலும் சிறந்தவர்.

7 விசுவரூபியும் மிக்க உத்கருஷ்டருமாயிருப்பவர்.

8 ஸர்ப்பங்களுள் உத்தமர் ஆதிசேஷரூபி என்பது.

புஷ்கராக்ஷர் (40) -- தாமரைக்கண்ணர்; 'அவருடைய கண்கள் மலர்ந்த தாமரைமலருக்கு ஒப்பானவை' என்று சுருதியில் சொல்லிய ஸர்வேஸ்வரர் சிறப்பிலக்கணம் இதனால் குறிப்பிக்கப்பட்டது.

புஷ்கராக்ஷர் (561) [1]கருணைபொழிந்து ஆஸ்ரிதர்களைப்போஷிக்கும் திருக்கண்களையுடையவர்.

புஷ்டர் = [2]சிறந்த திருக்கலியாணகுணங்கள் நிரம்பியிருப்பவர்.

புஷ்பஹாஸர் [3]தம்முடைய ஸ்வரூபத்தை அனுபவிக்கும் திறமை உண்டானவர்களுக்கு ஸாயங்காலத்தில் புஷ்பம் மலர்வது போலத் தாமேமலர்ந்து மிகப்பேரொளியாகப் பிரகாசிப்பவர்.

பூ [4]திருவகக்ஷத்திரத்தில்சேர்ந்து புகோள கமோளங்களை தையும் தாங்குகிறவர்.

பூகர்ப்பர் = [5]பூமிதேவியென்னும் பத்னியைக் கர்ப்பத்தில் வைப்பதுபோல வைத்துக்காப்பவர்.

பூசயர் = [6]பக்தர்கள் ஆர்ஜாவிய தனங்களில் வழுக்குருளும்படி பிரார்த்திப்பதை வற்றுக்கொண்டு அவர்களால காண்பிக்கப்பட ஸ்வயம்வ்யக்தம், வித்தம், மானஷமுதலான நவ்யாலயப்ரபந்தசங்களில் அவர்களை அனுக்ரஹிப்பதற்காக ஸந்நிதானமாயிருப்பவர்.

பூதக்ருத் — [7] எல்லாப்பொருள்களையும் தம்மிச்சையினால் படைப்பவர்.

பூதப்ருத் — [8]எல்லாஉலகங்களையும் தாங்குபவர்.

---

1 பூர்ணமாக வ்யாபித்திருப்பவர்; அல்லது, [illegible] பிரகாசித்திருப்பவர்.

2 எப்போதும் பூர்ணமானவர்.

3 புஷ்பம் மலர்வதுபோல ரஜஸ் ஸாத்வீகாலத்தில் தாமமலர்கிறவர்,

4 அபூ=ஜனனமில்லாதவர்; அல்லது, பூ=இருப்பாயிருப்பவர்; அல்லது, பூமிநாயி.

5 பூமியைத் தம்கர்ப்பத்தில் வைத்திருப்பவர்.

6 ராமாவதாரத்தில் ஸேதுபந்தனத்திற்காக கடற்கரையில் தர்ப்பசயனத்தில் [illegible]வர்.

7 விஷ்ணுவே, ரஜோகுணத்தை எடுத்துக்கொண்டு ப்ரம்மரூபியாக எல்லாவற்றையும் படைக்கிறார்; அல்லது, தமோகுணத்தைக்கொண்டு ருத்ரரூபியாக எல்லாவற்றையும் அழிக்கிறார்.

8 ஸத்வகுணத்தைக் கைக்கொண்டு விஷ்ணுரூபியாக எல்லாவற்றையும் காப்பாற்றுகிறவர்; அல்லது, போஷிப்பவர்.

பூதபவ்யபவத்ப்ரபு=சென்றவை நிகழ்கின்றவை வருபவை எல்லாவற்றிற்கும் ஸ்வாமி (=சேஷி)யாயிருப்பவர்.

பூதபவ்யபவந்நாதர்= [1]இறந்தது எதிர்வது நிகழ்கிறது ஆகிய மூக்காலங்களிலுமுள்ளவற்றிற்கும் ஈஸ்வரர்.

பூதபாவநர்= [2]தாங்குவதனலும் போஷிப்பதனலும் போகங்களைக்கொடுப்பதனலும் எல்லாப்பொருள்களையும் வருத்திசெய்பவர்.

பூதமஹேஸ்வரர்= [3]எல்லாப் பிராணிகளையும் நடத்தும்ப்ரம்மாயமன் முதலானவர்களையும் நியமிப்பவர்.

பூதாத்மா (8)—எல்லாப்பொருள்களுக்கும் அந்தர்யாமி.

பூதாத்மா (10)—பரிசுத்தஸ்வபாவமுள்ளவர்; சரீரங்களாயுள்ள சேதநாசேதனங்களின் குற்றங்களொன்றும் பற்றாதவரென்பது.

பூதாதி= [4]எல்லாப்பிராணிகளாலும் இவரே பரமபுருஷார்த்தமென்று ஆவலோடி அடையப்படுகிறவர்.

பூதாவாஸர்=எல்லாப்பிராணிகளுக்கும் தங்குமிடமாயிருப்பவர். தம்முடைய பரத்துவத்தைமறைத்துக் கிருஷ்ணவதாரத்தின் ஸௌலப்யத்தை மேற்கொண்டு எல்லாப்பிராணிகளும் எளிதில் ஆஸ்ரயிக்கும்படி இருந்தவர் என்பது.

பூதி= [5]வெளிஉபாயங்களாகிய செல்வங்களும் உள்உபாயமான தருடபக்திமுதலானவையும் இல்லாதவர்களுக்கும் அவற்றையெலாம் நிரப்பும் ஸம்பத்தாயிருப்பவர்.

பூர்ணர்= [6]விரும்பினவையெல்லாம் குறைபடாது நிரம்பியிருப்பவர்; அதனலேதான் அதிகப்பொருட்செலவினலும் தேகஸ்ரமத்தினலும்செய்யப்படும் ஆராதனங்கள் இல்லாமலும் ஸ்தோத்திரத்தினல் மட்டுமே வசப்படுகிறவர்.

பூர்ப்புவர்= [7]பகவத்தாஸனென்கிற ஞானத்தினலே ஆத்மாகடைதேறின பக்தனுக்குத் தாமே இடமாயிருப்பவர்.

---

1 முக்காலங்களிலுமுள்ளவர்களாலும் யாசிக்கப்படுகிறவர்; அவருக்குத் தாபத்தையுண்டுபண்ணுகிறவர்; அவர்களை ஆசீர்வதிப்பவர்.

2 பொருள்களை உண்டாக்குகிறவர்; அல்லது, வருத்திசெய்கிறவர்.

3 ப்ராணிகளுக்குப் பெரியஈசுவரர்; அல்லது, ஸத்யமான முதல்ஈசுவரர்.

4 எல்லாப்பொருள்களுக்கும் முதலாகாரணமாயிருப்பவர்.

5 இருப்பு; அல்லது, ஐசுவரியமாயிருப்பவர்; அல்லது, எலலாஐசுவரியங்களுக்கும் காரணமானவர்.

6 எல்லாப்பலன்களும் எல்லாச்சக்திகளும் நிரம்பியிருப்பவர்.

7 எலலாவற்றிற்கும் ஆதாரமான பூமிக்கும் ஆதாரமானவர்; 'லக்ஷ்மி' பார்க்க.

பூர்ப்புவஸ்வஸ்தரு = [1]பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் ஆகிய மூவுலகங்களிலுமுள்ள ப்ராணிகள், பறவைகள் பழுக்தமரத்தை அடுப்பதுபோலத் தம்மை அடுக்து ஜீவிக்கும்படியிருப்பவர்.

பூரயிதா = [2]தம்மைத்துதிப்பவர்களின் விருப்பங்களையெல்லாம் நிரப்பும் தன்மையுள்ளவர்; விருப்பங்களை நிரப்புவதற்காகவே ஸ்தோத்ரமுதலியவற்றை அங்கீகரிப்பவர் என்பது.

பூரிதக்ஷிணர் - உலகத்தில் ஆசாரத்தை வெளிப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட அச்வமேதமுதலிய யாகங்களில் நிரம்பத்தக்ஷிணைகளையளித்தவர்.

பூஷணர் = [3]யாவருக்கும் அனுகூலமான ஸௌலப்யகுணத்தினால் ஸ்ரீபதியான தம்மை அலங்கரிப்பவர்.

பேசலர் [4]கஜேந்த்ரனைக் காப்பாற்றுவதில் உண்டான வேகத்தில் மாலைகளும் ஆடைஆபரணங்களும் கலைந்திருப்பதே ஓர் அழகாகத்தோன்றினவர்.

பேஷலும் சிந்தனைக்கு அனுகூலமான ஸம்ஸாரரோகத்திற்குச் சிறந்த ஔஷதமாயிருப்பவர்.

போக்தா (145) [5]பக்தர்களால் நிவேதனம்செய்யப்படும் ப்ராபணமுதலிய சுவையுள்ள பதார்த்தங்களை அம்ருதத்தைப்போல அங்கீகரித்து உண்பவர்; நெய் பால் தேன் சர்க்கரைகளோடு கோதுமையைச் சேர்த்துப் பாகம்செய்யப்பட்ட பாயஸம் ப்ராபணமென்னப்படுவது.

போக்தா (502) - [6]நையகிரஸ்ரூபமாக ஹவ்யகவ்யங்களெல்லாவற்றையும் புசிப்பவர்.

போஜநம் = [7]பக்தர்களால் அனவுபோல ஸுகமாக அனுபவிக்கப்படுகிறவர்.

---

1 பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகமாகிய மூவுலகங்களும், 'பூ: புவ: ஸுவ:' என்கிற வேதஸாரங்களாகிய மூன்றுவ்யாஹருதிகளாக இருக்கின்றன; அவற்றினால செய்யப்படும் ஹோமமுதலியவற்றினால் உலகம் கடக்கும்படி செய்பவர்; அல்லது, மேற்சொல்லிய மூவுலகங்களாகிய ஸம்ஸாரவ்ருக்ஷமாயிருப்பவர்; அல்லது, விருக்ஷம்போல மூவுலகங்களையும் வ்யாபித்திருப்பவர்.

2 பக்தர்களுக்கு எல்லாச்செல்வங்களையும் நிரப்புகிறவர்.

பல அவதாரங்களினால் பூமியை அலங்கரிப்பவர்.

4 செய்கையிலும் மனத்திலும் வாக்கிலும் வடிவத்திலும் அழகாயிருப்பவர்.

5 அந்தப்புரக்ருதியை அனுபவிக்கும் புருஷராகவுமிருப்பவர்.

6 காப்பாற்றுகிறவர்; அல்லது, தமது ஸ்வரூபமான ஆனந்தத்தை அனுபவிப்பவர்.

7 அனுபவிக்கப்படுவதாகிய மாயையென்னும் ப்ரக்ருதிவடிவமாயிருப்பவர்.

மங்களம்பரம் = [1]சிறந்தமங்களம்; தீக்குணங்கள் அணுகாத கல்யாண குணங்கள் சிறப்புற்ற ஸ்வரூபம்.

மது = ஞானிகளான பக்தர்களுக்கு இன்சுவையாயிருப்பவர்.

மதுஸூதநர் = மதுவென்னும் அஸுரனை ஸம்ஹரித்தவர்; அல்லது, நித்யஸூரிகளின் மதுக்கள் (=புலன்கள்) தம்மிடத்தில் இடையூறில்லாமல் சேர்ந்திருக்கும்படி ஆகர்ஷிப்பவர்.

மந்த்ரர் = [2]மனனம் செய்பவர்களைக் காப்பாற்றுகிறவர்.

மநு = [3]ஸங்கல்பிப்பவர்; தமது ஸங்கல்பலேசமாத்ரத்தினால் எல்லாவற்றையும் படைப்பவர் என்பது.

மநோஜவர் = [4]மனோவேகமாகக் காரியங்களைச்செய்பவர்.

மநோஹரர் = [5]இயற்கையான அன்பினால் பக்தர்களின் மனங்களைக் கவர்கிறவர்; 'மோகினி ரூபத்தினால் அஸுரர்களின் மனங்களை இழுத்தவர்' என்பது நிர்வசனம்.

மரீசி = [6]பிறவிக்குருடர்கள்போன்ற மூடர்களான பிராணிகளுக்கும் மாசற்ற தமது திவ்யரூபத்தை வெளிப்படுத்துகிறவர்.

மஹர்த்தி = பெரும் செல்வமுடையவர்; பக்தர்களின் யோக க்ஷேமங்களெல்லாவற்றையும் குறைவின்றி நடத்துவதற்குரிய அளவற்ற செல்வமுடையவர்.

மஹர்ஷி = [7]வேதங்களனைத்தையும் நேராகக் கண்டறிந்த கபில மூர்த்தி.

மஹாக்ரது = [8]ஆகம சாஸ்த்ரங்களினால் விதிக்கப்பட்டஎல்லாச் செய்கைகளும் பகவானுக்கு அர்ப்பணம் செய்யப்படுவதனாலேயே

---

1 த்யானித்தவர்களுக்கு எல்லாநன்மைகளையும் மிகப்பயப்பது; அல்லது, தானே மங்களரூபமாயுள்ளது; பரப்ரம்மம்.

2 வேதமந்த்ரரூபமாயிருப்பவர்; அல்லது, மந்திரங்களினால் தெரிவிக்கப்படுகிறவர்.

3 எல்லாவற்றையும் நினைப்பவர்; அல்லது, மந்த்ரரூபி; அல்லது, மநு என்னும் ஸ்ருஷ்டிகர்த்தரூபி.

4 எங்கும்வியாபித்திருப்பதனால் மனத்தின் வேகத்துக்கொப்பான வேகமுள்ளவர்.

5 மேல்வரையற்ற ஆனந்த ரூபியாதலின் யாவருக்கும் இனியவர்.

6 ஒளியுள்ளவர்களுக்கும் ஒளியாயிருப்பவர்.

7 'மஹர்ஷி: கபிலாசார்ய:' ஒருநாமம். வேதத்தை முழுதும் பார்த்தவராதலின் கபிலர் மஹரிஷியாவர்; வேதத்தில் ஒரு பாகம் பார்த்தவரும் ரிஷியேயாவர்; ஸாங்க்யமென்னும் பரிசுத்தமானஞானத்தை உபதேசித்தவராதலின், கபிலர் ஆசார்யரென்று சொல்லப்படுகிறார்.

8 சிறந்த அசுவமேதயாகமாயிருப்பவர்.

இனியசுவையுள்ளவைகளாகச் செய்யப்படுவதனால் ஆராதனத்திற்கு எளியவர்.

மஹாக்ரமர் = [1]மிக்கஆழமான ஸம்ஸாரமென்னும் பாதாளத்தில் அமிழ்ந்துகிடக்கும் சேதனர்கள் சிற்சிலவாகச்செய்யும்நற்கர்மங்களினால் வரிசைக்ரமமாகத் தம்மிடம்ஏறும்படியாகவேண்டப்படிவரிசைகளை வைத்திருப்பவர்.

மஹாகர்த்தர் = [2]புத்தாவதாரத்தில் தாம்செய்தாஸ்திகவாதங்களினால் ஆத்மாகெட்டுப்போனவர்களை ரௌரவாதிநரகங்களென்னும்குழிகளில் விழும்படிசெய்பவர்.

மஹாகர்மா (677) = [3]பூச்சிபுழுக்களாகப் பிறந்து அறிவிலும் உருவத்திலும் மிகச்சிறியவையான பிராணிகளையும் அவற்றின்கர்மக்ரமத்தில் மனுஷ்யதேகமளித்துத் தமதுபெரியஐஸ்வர்யத்தைஅநுபவிக்க ஆவலோடு முயலும்படிசெய்வதாகிய சிறந்த செய்கையையுடையவர்.

மஹாகர்மா (793) = [4]சிறந்தகாரியமுடையவர்.

மஹாகோசர் = [5]வேண்டுகிறவர்களுக்கெல்லாம் எக்காலமும் எல்லாவகைகளாலும் தானம்செய்தாலும் அழியாதவையான மஹாபத்மம், பத்மம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என்கிறஒன்பதுநிதிகளும் ரத்நாகரமாகிய கடலும் ரத்நங்கள் விளையுமிடமாகிய ரோகணமலையும் மற்றும் இவ்வகையானபொருள்களனைத்தும் தமதுபொக்கசசாலைகளாக இருக்கப்பெற்றவர்.

மஹாசக்தி = தமதுசரீரத்தின் ஏகதேசமாகிய ப்ரக்ருதியின்பரிணாமத்தினால் உலகங்களையெல்லாம் படைக்கும் பெருந்திறமையுள்ளவர்; சிலந்தியானது தன்சரீரத்தின்எச்சிலினால் நூலையுண்டாக்கி அதற்குத் தானே கர்த்தாவாயிருப்பதுபோல ப்ரக்ருதியின்பரிணாமங்களாகியஉலகங்களை நினைத்தமாத்ரத்தில் படைப்பதனால் நிமித்தகாரணமென்னப்படும் கர்த்தாவாகவும் உபாதானகாரணமென்னப்படும் மூலகாரணமாகவுமிருப்பவரென்பது; இது சக்தியென்னும் குணம்.

---

1 பெரியகாலடிகளை உடையவர்.

2 அவித்தையென்னும் படுகுழி வைத்திருப்பவர்; அல்லது, சிறந்த தேராளி; மஹாபாரத முதலியவற்றில் சொல்லியபடி மஹாரதர் என்பது.

3 சிறந்த ஸ்ருஷ்டி முதலான கர்மங்களை உடையவர்.

4 ஆகாயமுதலான மஹாபூதங்களைப் படைத்தவர்.

5 அன்னமயம், ப்ராணமயம், மனோமயம், விஜ்ஞானமயம், ஆனந்தமயமென்னும் ஐந்து கோசங்களினுள்ளிருப்பவர்.

மஹாசஸர் = பெரும்தீனியுள்ளவர்; ஸம்ஹாரகாலத்தில் உலக மனைத்தையும் விழுங்கினவர்.

மஹாத்யுதி= [1]பெரியஒளியுள்ளவர்; உள்ளும்புறமுமுள்ள இருளனைத்தையும் நீனைத்தமாத்திரத்தினுல் ஒதுக்கிவிடும் ப்ரகாசமுள்ளவரென்பது; ஸூர்யன்முதலியவற்றின்ஒளி இதன் ஒருதுளி; இது தேஜஸென்னும் குணம்.

மஹாத்ரித்ருத்= [2]திருப்பாற்கடல்கடைந்தபோது மந்தரமென்னும் பெரியமலையைத் தாங்கினவர்.

மஹாதநர் = [3]மிக்கவழைகளுக்கும் எண்ணமல் கொடுக்கத்தக்க அளவற்ற பொருள்களை வைத்திருப்பவர்.

மஹாதபஸ்= [4]சிறந்தஞானமுள்ளவர்; ஆறுகுணங்களில், ஞானம், பலம்என்னும் இரண்டுகுணங்கள் ஸங்கர்ஷணன் கூறுனவை. அவற்றில் ஞானமாவது :—ஜனனமரணங்களாகிய ஸம்ஸாரமார்க்கத்தில் அனுதிகாலமாக நடந்துகொண்டு வருந்தும் ஜீவராசிகளுக்கு ஸ்ரமபரிகாரம்செய்வதற்காக அந்தஅந்தக் கார்யகாரணங்களை அறிந்து கார்யவர்க்கங்களைத் தம்தம் காரணங்களில் அடக்குவதற்குரிய ஸர்வஜ்ஞத்வம்.

மஹாதேவர் = [5]ப்ரம்மாமுதலிய தேவர்களைப் பந்துமுதலிய விளையாட்டுக்கருவிகளைப்போல வைத்து விளையாடுகிறவர்.

மஹாதேஜஸ் = [6]தமோகுணத்தில் அகப்பட்டுப் பிறந்திறந்து கொண்டிருக்கும் சேதனங்களுக்கும் அனுதியாயுள்ள அஜ்ஞானம் என்னும் இருளைஒழிக்கும் பேரொளியுள்ளவர்.

மஹாந்= [7]எல்லாவற்றிலும் மிகச்சிறந்தவர்; இங்கு, நீரில்போல நிலத்திலும் முழுகுவது கிளம்புவதுமுதலிய நீனைத்தவெல்லாம் தடைப்படாமலிருப்பதாகிய ப்ராகாம்யம்என்னும் ஐஸ்வர்யம் கூறப்

---

1 ஸ்வயம்பிரகாசம்.

2 கோவர்த்தனத்தை எடுத்தவர் என்னவுமாம்.

3 போகத்திற்கு ஸாதனமாகிய தனங்களை மிகுதியாகவுடையவர்.

4 ஸ்ருஷ்டியைப்பற்றிய சிறந்த ஞானமுள்ளவர்; அல்லது, சிறந்த ஐசுவரியமுள்ளவர்; அல்லது, சிறந்த பராக்ரமமுள்ளவர்.

5 தமது சிறந்த ஆத்மஜ்ஞானத்தினுல் எல்லாவற்றையும்விட்டு 'யோகி சுவராயிருத்தலால் கொண்டாடப்படுகிறவர்.

6 ஸூர்யன் முதலானவர்களுக்கும் ஒளியைக்கொடுக்கும் சிறந்த ஒளியுள்ளவர்.

7 சப்தாதிகுணங்களில்லாமையாலும் மிகவும் ஸூக்ஷ்மராயிருப்பதனுலும் நித்யத்வம் சுத்தத்வம், ஸர்வகதத்வம்என்னும் தமது மூன்றுதர்மங்களிலும் பிரதிபந்தகமில்லாதவர்.

பட்டது; நிழல்போல உட்புருந்து பிறர்மனத்தைத் தம்வசப்படுத்திக் கொள்வதும், இடைவீடாது தம்மை த்யானிக்கும்படி அவர்மனத்தை நடத்துவதும், ஆத்மா தேகத்திலிருக்கும்போதும் கிளம்பிப் போனபோதும் அத்தேகத்துள் பிரவேசித்திருப்பதும், யாகங்கள் செய்வது குளப்வெட்டுவதுமுதலிய தர்மகாரியங்களை நடத்துவதுமாகிய நான்குவகையான காமாவஸாயித்வம் என்னப்படுவதும் இதுதான்.

மஹாநிதி= [1]மகாத்மாக்களை நிதிகண்டதுபோல அன்புடன் ஆதரிப்பவர்.

மஹாபலர்= [2]வேறுஉதவியை எதிர்பாராமல் எல்லாவற்றையும் நடத்தும் சிறந்த மகிமையுள்ளவர்; தமது மகிமையைத்தவிர வேறு ஆதாரமில்லாமல் எல்லாவற்றையும் தமதுதேகத்தைப்போலத் தாமே தரித்திருப்பவரென்பது; நீர் காற்று மலை பூமிமுதலியவற்றிலுள்ள தாங்கும் சக்தி, பகவானுடைய சக்தியென்னும்கடலில் ஒரு சிறு திவலையாகத் தோற்றும்படியிருப்பவர்; இது பலமென்னும் குணம்.

மஹாபாகர்= [3]ஆயர்பாடிப்பெண்களும் நீளாதேவியென்னப்படும் நப்பின்னைப்பிராட்டியும் திவ்யகன்னிகைகள் பதினாறுபிரவரும் ருக்மிணி ஸத்யபாமை ஜாம்பவதிமுதலிய பெண்ணரசிகளும் வலிய வரிக்கத்தக்க வடிவழகையுடையவர்.

மஹாபுத்தி= [4]எக்காலமும் எவ்விடங்களிலுமுள்ள எல்லாப் பொருள்களையும் ஐயந்திரிபற அறிவதாகிய பேரறிவுள்ளவர்; ஸர்வஜ்ஞரென்பது; இது ஞானமென்னும் குணம்.

மஹாபூதர்= [5]சான்றோர்களைத் தமராகக்கொண்டவர்.

மஹாபோகர்= [6]திரவியங்களிலுலாகிய சிறந்தபோகங்களனைத்தையும் தருகிறவர்.

மஹாமகர் = [7]தர்மம் அவருக்குச்சரீரமாதலின் யாவராலும் பூஜிக்கத்தக்க யாகத்தைத் தமக்கு அவயவமாகவுடையவர்.

---

1 எல்லாப்பொருள்களும் தம்மிடத்தில்தங்கும்படியான பெரிய ஆதாரம்.

2 பலசாலிகளுக்கும் மிகுந்த பலசாலி.

3 சிறந்தபோஜனங்களாகிய பாகங்களையுண்பவர்; அல்லது, அவதாரங்களில் சிறந்தபோகங்களை அனுபவிப்பவர்.

4 ஞானிகளெல்லாரிலும் சிறந்த ஞானமுள்ளவர்.

5 காலவரையின்றி எக்காலமும் வ்யாபித்திருப்பவர்.

6 சிறந்த ஸுகரூபமாயிருப்பவர்.

7 தமக்கு அர்ப்பணம்செய்வதனால் யாகங்கள்முதலிய கர்மங்களைச் சிறப்பிப்பவர்.

மஹாமஹஸ் = [1]ஆஸ்ரித்கள்விஷயத்தில் பெரியம்னமுள்ளவர்; அவர்களுக்கு எவ்வளவுகொடித்தாலும் கொடித்ததுபோதாது என்று தாம்நினைக்கும் உதாரகுணமுள்ளதும் அவர்கள்செய்யும் அபராதங்களிஞல் கலங்காமலிருக்கும்படி அகாதமுமான திருவுள்ளமுடையவர்.

மஹாமாயர் = [2]தம்மைச் சரணமடையாத ஜனங்களனைவருக்கும் ஸ்வரூபம்தெரியவொட்டாமல்திரைபோலமறைப்பதாகியமாயையென்னப்படும் ஸங்கல்பத்தையுடையவர்.

மஹாமூர்த்தி = [3]விஸ்வரூபம்காண்பித்தபோது அநேகம் பிரம்மாண்டங்கள் அடங்கிய உலகமனைத்தும் ஒருமூலையில்அடங்கிக்கிடக்கும்படி பெரியஉருவமுள்ளவர்.

மஹாயஜ்ஞர்= [4]தம்மை ஆராதிப்பது எல்லா ஆராதனங்களிலும் மேற்பட்டதாகச் செய்பவர்.

மஹாயஜ்வா = [5]மற்றத்தேவர்களைப் பூஜிப்பவரைப்பார்க்கிலும் தம்மைஆராதிப்பவர்கள் சிறந்தவர்களாகும்படிசெய்பவர்.

மஹார்ஹர்= [6]ஒருவன், ப்ரணவத்தைஉச்சரித்துத் தன்ஆத்மாவைப் பரமாத்மாவிடம் ஒப்பிப்பதாகிய பூஜைக்கு உரியவர்.

மஹாவராஹர் = பூமியையெடித்ததனல் ஒப்புயர்வற்ற வராஹரூபியாயிருப்பவர்.

மஹாவீர்யர்= [7]விகாரப்படுவதற்குக்காரணங்களிருப்பினும் தமதியற்கை விகாரப்படாமலிருப்பவர்; இது வீர்யம் என்னும் குணம்; யோகீச்வரர்களிடத்திலுள்ள கலங்காமை என்னும் இந்திரியஜயம் இந்தக்குணத்தின் ஓர் அணுவாக நினைக்கப்படுகிறது.

---

1 ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களை நினைத்தமாத்திரத்தில் செய்யத்தக்க பெரிய மனமுடையவர்.

2 மாயைசெய்பவர்களுக்கும் அம்மாயையையுண்டாக்குவதனல் யாராலும் தாண்டமுடியாதபெரியமாயையையுடையவர்; (மாயை=மயக்கும்சக்தி.)

3 ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்டிருக்கும் பெரிய உருவமுடையவர்.

4 சிறந்த ஜபயஜ்ஞமாயிருப்பவர்; அல்லது சிறந்த ஜபயஜ்ஞத்தையுடையவர்.

5 உலகங்களுக்குயாகமுறையை அறிவிப்பதற்காகச் சாஸ்த்ரப்படியஜ்ஞம் செய்வதனல் யாகம்செய்பவரில்சிறந்தவர்; அல்லது, சிறந்தயாகம் செய்பவரனைவரும் தம்மவராயிருப்பவர்.

6 பூஜைக்கு உரியவர்.

7 உலகத்தை உண்டாக்குவதாகிய அவித்தையென்னும் பெரும்காரணத்தையுடையவர்.

மஹாஸ்ருங்கர் = [1]பூமண்டலமெல்லாம் மூனையில் ஒட்டிக்கொண்டிருக்கும்படி பெரியகோரப்பல்லையுடையவர்.

மஹாஸ்வநர் = [2]சிறந்தநாமமுள்ளவர்; அல்லது, வேதங்களுக்கும் அவற்றின்ஸாரமாகியகாயத்ரிக்கும் பொருளாயிருப்பவர்.

மஹாஹ்ரதர் = [3]பாவம்செய்தவர்கள் தலையெடாமல் அமிழ்ந்துபோவதும் புண்ணியம் செய்தவர்கள் அடிக்கடி ஆழ்ந்தும் போதுமென்று தோன்றுமலிருப்பதுமான பெருமடுவாயிருப்பவர்.

மஹாஹவிஸ் = [4]ஸாத்விகர்களிஞல் உபநிஷத்தில் சொல்லப்பட்ட ஞானயஜ்ஞத்திஞல் மனம் புத்தி இந்திரிய முதலியவற்றை ஹவிஸ்களாக ஸமர்ப்பணம் செய்யப்பெறுகிறவர்; அல்லது, ஆத்மா என்னும் சிறந்த ஹவிஸை அங்கீகரிப்பவர்.

மஹாக்ஷர் = [5]யாவராலும் பூஜிக்கப்படும் வேதமூர்த்தியான கருடனே வாஹனமாகவுடையவர்.

மஹீதரர் (318) = [6]பூபாரமாயுள்ள துஷ்டர்களை ஒழித்துப் பூமியைத்தாங்குகிறவர்.

மஹீதரர் (371) = [7]பூபாரத்தைப்போக்கிப் பூமியை நிலை நிறுத்துகிறவர்.

மஹீபர்த்தா = [8]ஆதிகூர்மரூபியாகப் பூமியை எப்போதும் எளிதாகத் தாங்கிக்கொண்டிருப்பவர்.

மஹேந்த்ரர் = [9]யாவராலும் கொண்டாடப்படும் பரமேஸ்வரத் தன்மையையுடையவர்.

---

1 ப்ரளயஸமுத்திரத்தில் ஓடமாகியபூமியைக்கட்டி இழுத்தாடின சிறந்த கொம்புள்ளவர்.

2 தமது மூச்சாகச்சொல்லப்படும் வேதத்தையே சிறந்தசப்தமாகவுடையவர்.

3 யோகிகள்மூழ்கி இளைப்பாறி ஸுகமாகத்தங்கியிருக்கும்ஆனந்தமென்னும் ஏம்நிரம்பின் மடுவாயிருப்பவர்.

4 பெரியஹவிஸ்ஸாயிருப்பவர்; உலகமெல்லாம் ப்ரம்மஸ்வரூபமாதலின் ப்ரளயகாலத்தில் அவரிடத்தில் ஹோமம் செய்யப்பட்ட உலகமென்னும் பெரியஹவிஸாக அவரேயிருப்பவரென்பது; அல்லது, உலகமென்னும் பெரிய ஹவிஸையுடையவர்.

5 பெரிய கண்களையுடையவர்; அல்லது, சிறந்த புலன்களையுடையவர்

6 பூமியைத் தாங்குகிறவர்; அல்லது, பூஜையைப் பெறுகிறவர்.

7 மஹிகளாயிருந்து பூமியைத்தாங்குகிறவர்.

8 வராஹாவதாரமெடுத்துக் கடலில் முழுகின பூமியைத் தூக்கி எடுத்தவர்.

9 ஈசுவரருக்கும் ஈசுவரர்.

மஹேஜ்யர்= [1]பலன்களை விரும்பாதவர்கள் இந்திராதிதேவர் களையன்றித் தம்மை நேராக ஆராதிப்பதையே சிறந்த ஆராதனமாக அங்கீகரிப்பவர்.

மஹேஷ்வாஸர்=கடலில் அணைகட்டுவது ராவணவதமுதலான கார்யங்களில் பார்ப்பவர்மனத்தைக் கவரும்படி சிறந்த பாணப்ர யோகம் செய்பவர்.

மஹோத்ஸாஹர்= [2]எல்லாவற்றையும் படைப்பதாகிய ஈஸ்வர சக்தி மிகப்பெரிதாக்விருப்பவர்; ஸாங்க்யர்கள் சொல்லும் ஈஸ்வரன் போல ஒன்றும் செய்யாமல் தொழிலற்றிருப்பவரல்லர்; தாம் எல்லாம் செய்யவல்லவராயிலும் அவரவர் தகுதிப்படி பலன்களைப் பகுத்துக் கொடுப்பவரென்பது; இது ஐஸ்வர்யமென்னும் குணம்.

மஹோததிசயர்= [3]ப்ரளயகாலத்தில் பெருங் கடலில் ஆதி சேஷனாகிய அரவணையின்மேல் படுத்திருப்பவர்.

மஹோரகர்= [4]தாம் மிகப் பெரியவராயிருந்தும் மிக்க அற்பர் களுக்கும் அந்தர்யாமியாக ஹ்ருதயத்துள் பிரவேசித்திருப்பவர்.

மாதவர் (73)= [5]ஸ்ரீதேவியின் கணவர்; திருமகள் தம்மைவிட்டு என்றும் அகலாமல் இருப்பவர்; ஞானம், சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறு குணங்களும் சேர்ந்து உருவெடுத் திருப்பவரும், பகவானுடைய எல்லாச் சக்திகளுக்கும் தலைமையாக உலகங்களை நடத்தும் பராசக்தியும், பகவானுடைய மற்றச் சக்தி களை நடத்திக்கொண்டு சராசரங்கள் அடங்கிய உலகமனைத்தையும் வ்யாபித்திருப்பதனால் அனந்தையென்று சொல்லப்படுகிறவளும், தயா மூர்த்தியுமான திருமகளுக்கும் ஸ்வாமியென்பது.

மாதவர் (169)='மா' என்னப்படும் பரமாத்மஜ்ஞானத்தைக் கொடுப்பவர்; அல்லது, மௌனம் தியானம் யோகம் இம்மூன்றும் பொருந்தினவர்.

---

1 தம்மைக்குறித்துச் செய்யும் யாகமே மோக்ஷபலனைத் தருவதாதலின் அது மற்றத் தேவர்களைக்குறித்துச் செய்யும் யாகங்களைக் காட்டிலும் சிறந்த தாம்படி இருப்பவர்.

2 உலகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார விஷயத்தில் எப்போதும் முயற்சியோடிருப்பவர்.

3 எல்லாவற்றையும் ஸம்ஹாரம் செய்தபிறகு ப்ரளயஸமுத்திரத்தில் படுத் திருப்பவர்.

4 மஹாஸர்ப்பமாயிருப்பவர்.

5 மதுவித்தையினால் உபாஸிக்கப்பட்டவர்; அல்லது, மௌனம் த்யா னம் யோகம் இம்மூன்றும் பொருந்தினவர்.

மாதவர் (741) = லக்ஷ்மிக்குநாயகர்; உலகங்களுக்கு லக்ஷ்மி தாயும் தாம் தந்தையுமாயிருப்பவர்; அல்லது, மதுவென்னும் யாதவனுடையகுலத்தில் அவதரித்தவர்; அல்லது, மௌனம், த்யானம் யோகம் இம்மூன்றுமுள்ளவர்.

மான்யர் = [1]தமதுபக்தர்களுக்குக்கீழ்ப்படிந்திருக்கும்படியே பெருமையாகநினைத்துத் தம்மாலே பூஜிக்கப்படுகிறவர்.

மாநதர் = [2]தம்மைச் சேர்ந்தவர்களுக்குக் கௌரவத்தைக்கொடுப்பவர்; அர்ஜுனனைத்தேராளியாகச்செய்து தாம்ஸாரதியாகஇருந்ததும், கம்ஸவதம்செய்தபின் உக்ரஸேனனை ராஜாவாக அபிஷேகம் செய்து தாம்கீழ்ப்பட்டிருந்ததும், யுதிஷ்டிரரைஸ்நாதகமாகஇருத்தித் தாம்கீழ்ப்படிந்திருந்ததும், மற்றும் இவ்விதமான அநேகலௌலப்யவியாபாரங்களும் இவ்விடத்தில் குறிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

மார்க்கர் (367) = [3]பக்தர்களினால் தேடப்படுகிறவர்.

மார்க்கர் (399) = [4]பரத்வாஜர்முதலான முனிவர்களால் தேடப்படுகிறவர்; 'விரதர்' பார்க்க.

முக்தாநாம்பரமாகதி = [5]ஸர்வசேஷியானதாமே முக்திபெற்றவர்கள் முடிவாகச்சேரும் இடமாயிருப்பவர்; அடைந்தவர் தம்மைவிட்டுவிலகாமலிருக்கச்செய்பவர்.

முகுந்தர் = [6]பாஞ்சராத்திரர்களினால் ஒரேகெய்வம்கொழுதுபிரார்த்திக்கப்பெற்றவராக அவர்களுக்கு முக்தியைக்கொடுப்பவர்.

மேதஜர் = [7]தேவகியானவள் பூர்வஜன்மத்தில் புத்ரனேவேண்டிநோற்றநோன்பென்னும் யாகத்தின்பலனாக அவதரித்தவர்.

மேதாவீ = [8]காலவரையும்தேசவரையுமற்றதாகிய மஹிமைக்கு உதவியாக இயற்கையால் அமைந்த ஸர்வஜ்ஞத்வமுடையவர்.

---

1 ஸர்வேசுவரராதலின் எல்லாராலும் பூஜிக்கத்தக்கவர்.

2 தம்முடையமாயையினால் எல்லாருக்கும் ஆத்மாவல்லாதவற்றை ஆத்மாவாகநினைக்கும் அபிமானத்தைக்கொடுப்பவர்; அல்லது, பக்தியில்லாதவரின் கர்வத்தைக் கண்டிப்பவர்; அல்லது, தத்வஜ்ஞானிகளுக்கு ஆத்மாஅல்லாதவற்றைஆத்மாவாக அபிமானிக்கும்மயக்கத்தைப் போக்குகிறவர்.

3 மோக்ஷத்தைவிரும்புகிறவர்களால் தேடப்படுகிறவர்; அல்லது, ப்ரம்மானந்தத்தை அடைவதற்குத் தாமே உபாயமாயிருப்பவர்.

4 முக்திக்குவழியாயிருப்பவர்.

5 முக்தர்களுக்கு உத்க்ருஷ்டமான கதி; அவரைவிட வேறுதேவதையை அடையவேண்டுவதுமில்லை; ஸம்ஸாரத்தில் திரும்புவதுமில்லை.

6 முக்தியைக்கொடுப்பவர்.

7 யுகத்தில் உண்டாகிறவர்.

8 அநேக கிரந்தங்களை அறியும் திறமையுள்ளவர்.

மேதிநீபதி = பூமிக்கு நாதர்.

யத் = [1]ஆஸ்ரிதர்களை ரக்ஷிப்பதற்கு எப்போதும் முயற்சிசெய்கிறவர்; அல்லது, அவர்களை ரக்ஷிப்பதற்காகத் தம்மை அவர்களிடம் சேர்ப்பிக்கிறவர்.

யதுஸ்ரேஷ்டர் = முழுகிப்போன யதுவம்சத்தை உயரத்தூக்கினதனால் யதுக்களில் சிறந்தவர்.

யமர் (164) = எல்லாவற்றையும் நடத்துகிறவர்.

யமர் (870) = [2]விரும்பினவரன்களையளிக்கும் தேவர்களையும் நடத்துகிறவர்.

யஜ்ஞக்ருத் = [3]உலகங்களின் நன்மைக்காக ஆதிகாலத்தில் யஜ்ஞத்தைச் சிருஷ்டித்தவர்.

யஜ்ஞகுஹ்யர் = [4]யாகத்தின் ரஹஸ்யமாயிருப்பவர்; விருப்பமற்றவராயிருந்தும் விருப்பமுள்ளவர்போல யாகங்களில் கொடிக்கும் புரோடாசமுதலிய ஹவிஸ்களையுண்டி தாம் திருப்தியடைந்து யாகம்செய்தவரைப் பலன்களினால் திருப்திசெய்விக்கிறரென்பது சாஸ்திரஸூக்ஷ்மங்களை அறிந்தவர்க்கல்லது மற்றவர்களுக்குப் புலப்படாமையால் யாகத்தின் ரஹஸ்யமாயிருப்பவர் என்பது.

யஜ்ஞப்ருத் = [5]யஜ்ஞம்குறைவுபட்டாலும், தம்மைத்யானிப்பதனாலும் பூர்ணாஹுதியினாலும் அதை நிரம்பச்செய்பவர்.

யஜ்ஞபதி = [6]தம் ஆராதனத்திற்குப் பலனை அளிப்பவர்.

யஜ்ஞபுக் = யஜ்ஞங்களையனுபவிப்பவர்; அல்லது, காப்பவர்.

யஜ்ஞர் (446) = [7]யாகரூபியாயிருப்பவர்; யாகங்களால் ஆராதிக்கப்பட்டவரும் யாகங்களின் பலன்களை அளிப்பவருமாயிருப்பவர்.

---

1 பிரஸித்தமாயிருப்பதைச் சொல்லும் யத் என்னும் சொல்லால் சொல்லப்படுகிறவர்.

2 அயமர் = மரணமில்லாதவர்; அல்லது, யமர் = யோகத்திற்கு அங்கமாகிய யமமாக இருப்பவர்; அதாவது, அதனால் அடையப்படுகிறவர் எனினுமாம்.

3 ப்ரளயகாலத்தில் யஜ்ஞத்தை ஸம்ஹரிப்பவர்.

4 யஜ்ஞங்களுள் ரஹஸ்யமாகிய ஞானயஜ்ஞமாகவிருப்பவர்; அல்லது, பலனைக்கருதாது செய்யப்படும் யாகமாகவிருப்பவர்.

5 யஜ்ஞத்தைக் காப்பாற்றுகிறவர்.

6 யஜ்ஞங்களைக் காப்பவர்; அல்லது, யஜ்ஞங்களுக்கு ஈசுவரர்.

7 யஜ்ஞஸ்வரூபி; அல்லது, யஜ்ஞத்தினால் எல்லாத்தேவர்களையும் ஸ்ருஷ்டிப்பவர்.

யஜ்ஞர் (971) = தம்மை ஆராதிப்பதற்குப் போதுமான புண்ய ஸம்பத்தில்லாமல் தமத்ராதனத்தை விரும்புகிறவர்களுக்குத் தாமே யஜயஜ்ஞரூபமாயிருப்பவர்.

யஜ்ஞவாஹநர் = யஜ்ஞம்செய்பவர்களுக்குச் சக்தியையும் சிரத்தையையும் அதிகாரத்தையும் கொடுத்து யாகத்தை நடத்துகிறவர்.

யஜ்ஞஸாதநர்=யஜ்ஞங்களே ஞானத்தின் வழியாகத் தம்மை அடைவதற்கு உபாயங்களாகும்படி செய்பவர்.

யஜ்ஞாங்கர்= [1]சக்தியுள்ளவர்கள் செய்யும் மற்றயாகங்கள்தமது யாகத்திற்கு அங்கமாகக் கீழ்ப்பட்டிருக்கும்படி செய்பவர்.

யஜ்ஞாந்தக்ருத் = [2]யாகத்தின் பலனாகிய தத்வஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிறவர்.

யஜ்ஞீ = எல்லாயஜ்ஞங்களுக்கும் சேஷி; எல்லாயஜ்ஞங்களாலும் ஆராதிக்கப்படுகிறவர் என்பது.

யஜ்வா = அசக்தர்களுக்குத் தாமே யஜமானரூபியாக யாகம் செய்பவர்.

யுகாதிக்ருத் = [3]ப்ரளயமானபோது யுகங்களுக்கு ஆதியான ஸ்ருஷ்டியைச்செய்பவர்; அதாவது, ப்ரளயமானதினால் யாதொரு கெடுதலுமில்லாமலிருக்கும்படி திரும்பவும் உலகத்தை நடத்தினவர் என்பது.

யுகாவர்த்தர் = [4]நான்குயுகங்களையும் அவ்வவற்றின் தர்மவரைகளோடு அடிக்கடி திரும்பச்செய்கிறவர்.

யோகர் = [5]ஸாயுஜ்யமாகிய முக்திக்கு உபாயமாகவும் தாமே இருப்பவர்.

யோகவிதாம்நேதா = [6]பக்தியோகத்தை அவலம்பித்தவர்களைப் பலன் பெறும்படி நடத்துகிறவர்; வேறுஉபாயமாகிய பக்தியோகத்தை அவலம்பித்தவர்களுக்கும் பூர்த்தி செய்கிறவர்.

---

1 யாகங்களே அங்கங்களாகவுடைய வராஹரூபர்த்தி.

2 யஜ்ஞபலனை உண்டுபண்ணுகிறவர்; அல்லது தம்மைப்பற்றிய மந்த்ரத்தைச் சொல்வதனாலும் பூர்ணாஹுதி செய்வதனாலும் யஜ்ஞத்தை நிறைவேற்றுகிறவர்.

3 யுகமுதலிய காலப்பிரிவுகளைச் செய்பவர்; அல்லது, யுகங்களின் ஆரம்பத்தைச்செய்பவர்.

4 காலரூபியாக யுகங்களைத் திருப்புகிறவர்.

5 யோகத்தினாலடையத்தக்கவர்.

6 யோகிகளான ஞானிகளின் யோகக்ஷேமங்களை வஹித்து நடத்துகிறவர்.

யோகீ = [1]கூடாதனவற்றையும் கூட்டுவதாகிய சிறந்தப்பாவம் எப்போதும் பொருந்தியிருப்பவர்.

யோகீசர்= [2]ஸம்ஸாரிகளுக்கும்இயற்கையில் த்யானம்அமைந்த ஸநகர்முதலான யோகிகளுக்கும் யோகத்தை நிறைவேற்றுகிறவர்.

ரணப்ரியர் = [3]தம்அன்பர்களுக்குச்சங்தோஷமுண்டாவதற்காக யுத்தமுதலிய வியாபாரங்களைச்செய்கிறவர்.

ரத்நகர்ப்பர் = [4]சரணகதர்களில் செல்வம் வேண்டுகிறவர்களுக்குக்கொடுக்கத்தக்க ரத்நங்களென்னப்படும் சிறந்த தனங்களை மிகுதியாகத் தம்மிடம்வைத்திருப்பவர்.

ரத்நநாபர்= [5]புத்தாவதாரத்தில்புலமையையடிப்பதற்காக வயிற்றைத்தடவுவதனால் ரத்னம்போல அழகாகப்பிரகாசிக்கும் நாபியை உடையவர்.

ரதாங்கபாணி=சக்ராயுதத்தை எப்போதும் கையில் வைத்திருப்பவர்; சக்ரீயென்பதனால் சக்ராயுதமுடையவர்என்பது கூறப்பட்டது; ரதாங்கபாணி என்பதனால் துஷ்டர்களைப்போக்கவும் சிஷ்டர்களைக்காக்கவும் எப்போதும் மற்றஆயுதங்கள்இருந்தும் சக்ராயுதம் மட்டும் பிரயோகத்திற்குச் சித்தமாகக் கையிலெடுத்து ஒங்கப்பட்டிருக்கிறதென்றுகூறப்பட்டது.

ரவி = [6]ஸூர்யன் மேலேறிப் பிரகாசிப்பதனால் சிலாக்கியமாகச் சொல்லப்படும் உத்தராயணமாக இருப்பவர்; உத்தராயணம் அர்ச்சிராதிமார்க்கத்தில் நான்காம்படி.

ரவிலோசநர் = [7]ஸூர்யனால் சந்திரனையும் மின்னலையும் வருணனையும் பிரகாசிக்கச்செய்பவர்; ஸூர்யகிரணங்கள் பிரவேசிப்பதனாலேதான் சந்திரன்முதலானவர்கள் ப்ரகாசிப்பது; இதனால் அர்ச்சிராதிமார்க்கத்தில் எட்டாவது ஒன்பதாவது பத்தாவதுபடிகளாகிய சந்திரன், மின்னல், வருணன் இவைகள் கூறப்பட்டன.

---

1 யோகமென்னப்படும் தத்துவஞானத்தினாலேயே அடையப்படுகிறவர்; அல்லது, தம் ஆத்மஸ்வரூபத்தை எப்போதும் பார்த்துக்கொண்டிருப்பவர்.

2 மற்றயோகிகள்போல இடையூறுகளினால் தடைப்படாமையினால் யோகிகளுளெல்லாம் சிறந்தவர்.

3 லோகரக்ஷணத்திற்காகப் பஞ்சாயுதங்களைத்தரிப்பதனால் யுத்தத்தில் விருப்பமுள்ளவர்.

4 ரத்நங்களைஉள்ளேவைத்திருக்கும்கடலாயிருப்பவர்.

5 அழகியநாபியுள்ளவர்.

6 ஸூர்யனாகஇருப்பவர்.

7 ஸூர்யனைக்கண்ணாகஉடையவர்.

ரக்ஷணர் = [1]தொட்டும் தழுவியும் நல்வார்த்தைசொல்லியும் கஜேந்த்ரனைக் காப்பாற்றினவர்.

ராமர் = [2]குணங்களாலும் வடிவழகினாலும்இழுக்கப்பட்டு யாவரும் தம்மிடம்மகிழும்படியிருப்பவர்.

ருசிராங்கதர் = [3]மிக்க அழகான தமதுதிவ்யமங்களவிக்ரஹத்தைப் பக்தர்கள் கண்கொளித்தனுபவிக்கும்படி கொடுப்பவர்.

ருத்தர் (279) = [4]பர்வகாலங்களில்கரைபுரளும்கடல்போல எப்போதும் நிரம்பியேயிருப்பவர்.

ருத்தர் (352) = [5]பக்தர்களின் அபிவ்ருத்தியினாலேயே தாமும் அபிவ்ருத்தியடைந்திருப்பவர்.

ருத்ரர் = [6]திவ்யரூபத்தினாலும்பலவகைகளான திவ்யசேஷ்டிதங்களாலும் பக்தர்கள் நெஞ்சுருகி ஆனந்தக்கண்ணீர்விடும்படிசெய்பவர்.

ருது = [7]எப்போதும் புதியவைபோலமேன்மேலும்மனமகிழ்ச்சியைத்தரும் திருக்கல்யாணகுணங்களின்வரிசைகள் ஒன்றுக்குமேலொன்று விசேஷமாக வ்ருத்தியாகும்படி பக்தர்களின்உள்ளங்களில் சென்றுகொண்டிருப்பவர்.

ரோஹிதர் = [8]தாமரைமலரின்உட்புறம்போலச் சிவந்தநிறமுள்ளவர்.

லக்ஷ்மீ = [9]தம்மைச்சேர்ந்தவர்களுக்கு எல்லாவித ஸம்பத்துக்களாகவும் தாமேயிருப்பவர்.

லக்ஷ்மீவான் = [10]திருமகள் எப்போதும்தம்மைவிட்டுப்பிரியாமல் சேர்ந்திருக்கப்பெற்றவர்.

---

1 ஸத்வகுணத்தைக்கொண்டு மூவுலகங்களையும் காப்பவர்.

2 யோகிகள் நித்தியானந்த நயினானதம்மிடத்தில் மகிழும்படியிருப்பவர்; அல்லது, தம்மிச்சையினால் தசரதபுத்ரராகஅவதரித்து அழகானசரித்தை வஹித்தவர்.

3 அழகானதோள்வளைகளையுடையவர்.

4 தர்மம், ஞானம், வைராக்யமுதலியகுணங்களால் நிரம்பியிருப்பவர்.

5 ப்ரபஞ்சரூபமாக வ்ருத்தியடைகிறவர்.

6 ஸம்ஹாரகாலத்தில் ப்ரஜைகளை அழும்படிசெய்பவர்; அல்லது, துன்பத்தைக்கொடுப்பவர்; அல்லது, துன்பத்துக்குக்காரணத்தையுண்டுபண்ணுகிறவர்.

7 ருதுவென்னும்காலரூபியானவர்.

8 ரோஹிதமென்னும்சிவப்புமத்ஸ்யமாக அவதரித்தவர்.

9 உலகங்களுக்குச் சோபையாகவிருப்பவர்; அல்லது, 'பூ:, புவ:, லக்ஷ்மீ:' என்றுமூன்றுநாமங்கள்; பூலோகமாகவும் புவர்லோகமாகவும் லக்ஷ்மியென்னப்படும்ப்ரம்மவித்தையாகவும்இருப்பவர்; அல்லது, 'பூர்ப்புவோலக்ஷ்மீ:' ஒருநாமமாகக்கொண்டு பூமிக்கும் ஆகாசத்துக்கும் சோபையாயிருப்பவர் எனினுமாம்.

10. திருமார்பில் எப்போதும் லக்ஷ்மிவஸிக்கப்பெற்றவர்.

லோகத்ரயாஸ்ரயர் = பிராட்டியும் தாமுமாகத் தாய்தந்தைகள் போல எல்லாஉலகங்களுக்கும்ஆதரவாயிருப்பவர்.

லோகநாதர் = [1]உலகங்களுக்கு ஸ்வாமியாயிருப்பவர்; இந்த இயற்கையானஸம்பந்தத்தினால் தாமே விசேஷபந்துவாயிருப்பவர் என்பது.

லோகபந்து = [2]வேறுபாடின்றி அனுக்ரஹிப்பதனால் உலகத்தார் எல்லோருக்கும் விடமுடியாத உறவாயிருப்பவர்.

லோகஸ்வாமீ = உலகங்களுக்கெல்லாம்அதிபதி.

லோகஸாரங்கர் = [3]உலகத்தோர்புகழத்தக்கதாக யுக்திகளுக்கு ஒற்றுமையான போகமோக்ஷங்கள் இரண்டுமார்க்கங்களையும்அறிந்து உபதேசித்திருப்பவர்என்பது; இதுதான் புத்தாவதாரத்தில் அஸுரர்களைவஞ்சித்தஉபாயம்.

லோகாத்யக்ஷர் = [4]தர்மத்திற்குத்தகுதியுள்ளஜனிதர்களைப் ப்ரத்யக்ஷமாகஅறிபவர்.

லோகாதிஷ்டாநர் = [5]மேலுலகங்களுக்கு ஆதாரமாயிருப்பவர்.

லோஹிதாக்ஷர் = ஆனந்தத்திற்குஅறிகுறியாகத் தாமரைமலர் போலச்சிவந்தகண்களையுடையவர்.

வ்யக்தரூபர் = [6]தெளிவாகப்புலப்படும் திவ்யமங்களவிக்ரஹமுடையவர்; மார்க்கண்டேயர்முதலானவர்களுக்குத் தமதுதிவ்யமங்களவிக்ரஹத்தைத் தாமே புலப்படுத்தினவரென்பது.

வ்யக்தர்= [7]எதிரிகளை அடக்குவதற்காகஅர்ஜுனன்யுத்தம்செய்யும்வரையில் தாம்பொருமல் பரபரப்படைந்தவர்; பீஷ்மரைத்தடுப்ப

---

1 உலகங்களால் யாசிக்கப்படுகிறவர்; அல்லது, உலகங்களைப்ரகாசப்படுத்துகிறவர்; அல்லது, உலகங்களை ஆசீர்வதிக்கிறவர்; அல்லது, உலகங்களுக்கு ஈசுவரர்.

2 உலகமெல்லாம் தம்மிடத்தில் கட்டப்பட்டிருக்கும்படி ஆதாரமாயிருப்பவர்; அல்லது, உலகங்களைஉற்பத்திபண்ணினதனால் பந்துவாயிருப்பவர்; அல்லது, சுருதிஸ்மிருதிகளால் உலகங்களுக்கு ஹிதாஹிதங்களை உபதேசிப்பதனால் உலகங்களுக்குச் சுற்றமாயிருப்பவர்.

3 உலகங்களிலுள்ளஸாராம்சங்களைக் கிரஹிப்பவர்; அல்லது, உலகத்தில் ஸாரமானப்ரணவோபாஸனையினால் அடையத்தக்கவர்.

4 உலகங்களைப் ப்ரத்யக்ஷமாகக்காண்பவர்; உலகங்களுக்குத்தலைமையானபிரபு.

5 மூன்றுலோகங்களுக்கும் ஆதாரமானவர்.

6 ஸ்தூலப்ரபஞ்சமாகப்புலப்படும்உருவமுள்ளவர்; அல்லது, ஸ்வயம்ப்ரகாசர்; அல்லது, யோகிகளுக்குப்புலப்படும் ரூபமுள்ளவர்.

7 அழிவில்லாதவர்; அல்லது, பக்தர்கள்வேண்டியவற்றைக்கொடுப்பதில் பரபரப்புள்ளவர்.

தற்குத் தாம் ரத்தத்தைவிட்டு எழுந்து சக்ரமெடுத்துப்போனது குறிப்பிட்டப்படுகிறது.

வ்யவஸ்தாகர் = [1]கலிமுகூர்த்தமுதலியகாலப்பிரிவுகள் வ்யவஸ்தையாக ஏற்படுவதற்குக் காரணமாயிருப்பவர்.

வ்யவஸாயர் = [2]ஸூர்யசந்த்ரநக்ஷத்ரங்களாகியகோளசக்ரம் தம்மிடத்தில்கட்டப்பட்டிருப்பவர்; நக்ஷத்ரங்களுக்குஆதாரமான ஆகாயத்தைச் சரீரமாகவுடையவர்என்பது.

வ்யாதிசர் = [3]அவரவர்விரும்பும்பலபலன்களையும் அளிப்பவர்.

வ்யாப்தர் = [4]தியானிப்பவர்களிடத்தில் இனியவன், முதிர்ந்தவன், யஜமானன், வேலைக்காரன், பகைவன், நண்பன்முதலியவேற்றுமைகளின்றி ஒரேவிதமான அன்பினால் வியாபித்திருப்பவர்.

வ்யாபீ = [5]தேவர்கள், அஸுரர்கள், மந்தரமலை, வாஸுகிமுதலியவர்களுக்குக் கடைவதில் சக்தியை வ்ருத்திசெய்வதற்காக அவர்களெல்லாரிடத்திலும் தாம்வியாபித்திருப்பவர்.

வ்யாளர் = [6]விசேஷமாக அபயப்ரதானம் செய்து அவர்களை அங்கீகரித்துத் தமக்குட்படுத்துகிறவர்.

வ்யாஸர் = [7]வேதங்களை வகுத்தவர்.

வ்ருத்தாத்மா = [8]மகிமைகளெல்லாம் உள்ளங்கையில் அடங்கினற்போலத் தோற்றும்படி பெரிதான ஸ்வரூபமுடையவர்.

வ்ருஷகர்மா = நம்போன்றவர்களுக்கும் பெரும் பேற்றை அளிப்பதனால் தர்மரூபமாகவிருக்கும் செய்கையையுடையவர்; அல்லது, தாபத்ரயத்தையாற்றும் தன்மையான குளிர்ந்த செய்கையை உடையவர்.

---

1 எல்லாவரையறைகளுக்கும் ஆதாரமானவர்; அல்லது, திக்பாலகர்களின்அதிகாரங்களையும் ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜ்ஜமென்னும் நான்குபடைப்புக்களையும் வர்ணாச்ரமங்களையும் அவற்றின்தர்மங்களையும் வகைவகையாக ஸ்தாபிப்பவர்.

2 ஞானஸ்வரூபி.

3 இந்த்ராதிதேவர்களையும் பலவித அதிகாரங்களில் ஆஜ்ஞாபிப்பவர்.

4 காரணமான்தாழ் கார்யங்களெல்லாவற்றிலும் வ்யாபித்திருப்பவர்.

5 எல்லாக்காரியங்களிலும் வியாபித்திருப்பவர்; அல்லது, ஆகாயம் போல எங்கும் நிறைந்திருப்பவர்.

6 மஹாஸர்ப்பம்போல யாராலும்பிடிக்கமுடியாதவர்; அதாவது, யாருக்கும்வசப்படாத ஸ்வதந்த்ரர் என்பது.

7 'ஸ்வத்ருக்' பார்க்க.

8 அனுதியாயிருப்பதனால் முதிர்ந்தவர்.

வ்ருஷப்ரியர்=ப்ரவ்ருத்திதர்மம் நிவ்ருத்திதர்ம்ம் இரண்டிலும் அன்புவைத்திருப்பவர்; அவர்விரும்புவதஞ்லே இவ்விருவகைக்கர்மங்களும் தர்மமாயின; அவரதுவிருப்பத்தைத் தெரிவிப்பதுதான் வேதவிதிகளின் கருத்து.

வ்ருஷபர்= [1]ஸம்ஸாரமென்னும்தீயிலுல் சுடப்பட்டு வந்தடைந்தவர்களே அமுதம் பொழிவதுபோலக் கடாக்ஷத்தை வர்ஷித்துச் செழிக்கச்செய்பவர்.

வ்ருஷப்ர்வா =தம்மிடம்வறிவருவதற்கு வர்ணஸ்ரமதர்மங்களேயே படிகளாக வைத்திருப்பவர்.

வ்ருஷபாக்ஷர் = [2]வேண்டின பலன்களே வர்ஷிப்பதாகிய தர்மத்தையே ஸம்ஸாரசக்ரத்திற்கு ஆதாரமான அச்சாக வைத்திருப்பவர்; தர்மத்தின் வழியாகக் கர்மபலன்களே ரக்ஷிப்பவர் என்பது.

வ்ருஷர்=[3]கடலினிடையே அலைத்துவருத்தியமார்க்கண்டேயரை அமுதம்போன்ற தேகஸ்பரியினுலும் இன்சொல்லினுலும் நனைப்பவர்.

வ்ருஷாக்ருதி= [4]தர்மமே உருவமாக உடையவர்; அல்லது, ஜனங்களின் தாபங்களேயெல்லாம் சமனம்செய்து அம்ருதம் பொழிவதுபோலக் குளிர்ந்திருக்கும் திவ்யரூபமுள்ளவர்.

வ்ருஷாகபி =தர்மமேஉருக்கொண்டதான சிறந்த வராகாவதாரமெடுத்தவர்.

வ்ருஷாஹீ = [5]அவரை முதலில் அடையும்தினமே எல்லாமங்களங்களுக்கும்வித்துகவதுபோல ஆரம்பதினமாயிருப்பதனுல் தர்மரூபமாயிருப்பது.

வ்ருஷோதரர்= [6]தர்மத்தையே வயிறுகஉடையவர்; ஆராதிப்பவர்கள் தமக்குக்கிடைத்த ஹவிஸ்முதலியவற்றினுலும் எளிதாக நிரப்பக்கூடியதாயிருப்பதனுல், அல்லது, துன்பமுற்றவர்களேனவரையும் தம்வயிற்றில் வைத்துக் காப்பதனுல் தர்மமயமான வயிற்றையுடையவர்.

---

1 பக்தர்களுக்கு விரும்பினவற்றையெல்லாம் வர்ஷிப்பவர்.

2 விரும்பினவற்றையெல்லாம் வர்ஷிக்கும் நேத்ரங்களேயுடையவர்; அல்லது, தர்மத்தையே கண்ணுகவுடையவர்.

3 அபீஷ்டங்களே வர்ஷிக்கும் தர்மமாயிருப்பவர்.

4 தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகவே அவதாரஉருவம் எடுப்பவர்.

5 பகல்போல்பிரகாசிக்கும்புண்யமானயஜ்ஞங்களேயுடையவர்.

6 அவருடையவயிறு ஜனங்களேவர்ஷிப்பது; அதாவது, ஸ்ருஷ்டிசெய்வது.

வ்ருக்ஷர்= [1]நிழலுள்ளமரம்போல ஆச்ரிதர்கள் வந்தடைந்து எல்லாப்பலன்களையும் அநுபவிக்கும்படியிருப்பவர்; மேலும், அவர்களால் செய்யப்படும் நிர்ப்பந்தங்களையும் ஸஹிப்பவர்.

வ= [2]எல்லாம் கம்பிடக்தில் வஸிக்கும்படியிருப்பவர்; தாமும் எல்லாவற்றிலும்ஆத்மாவாகவஸிப்பவர், 'ஸவ [3] என்று ஒருநாமமாகவும்கொள்ளலாம்' என்பது நிர்வசனம்.

வத்ஸர்= [3]புருஷார்த்தங்களை அவரவர் அதிகாரங்களுக்குத் தக்கபடி பகுத்து ஏற்பாடுசெய்வதற்காகக் கர்மாத்மாவென்னும் ரூபத்துடன் எல்லாரிடத்திலும் அந்தர்யாமியாக வஸிப்பவர்.

வத்ஸலர்= [4]பசுக்கள் புதியனவாகஈன்ற கன்றுகளிடத்தில் அன்புவைத்துப் பால்சுரந்துகொண்டு அவற்றைத்தேடித்திரிவதுபோலச் சரணாகதர்களைப் போன்புடன் தேடுகிறவர்.

வத்ஸீ= [5]எப்பொழுதும் தம்மால் போஷிக்கப்படத்தக்கஆத்மவர்க்கங்கள் தம்மிடம் பிரகாசியாயிருப்பவர்.

வகமாலீ=தம்மால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பஞ்சபூதங்களிலும் அவற்றின் தன்மாத்ரைகளிலுமுள்ள சிறந்தபரிமளங்களின் அபிமானிதேவதையாகிய வைஜயந்திஎன்னப்படும் வனமாலையை எக்காலமும் அணிந்திருப்பவர்.

வம்சவர்த்தகர்= [6]வம்சம்என்னப்படும் நித்யஸம்ஸாரிவர்க்கத்தை விருத்திசெய்பவர்; அதாவது, அவர்களுக்குக் கைங்கர்யரஸத்தை மேன்மேலும் பெருகச்செய்பவரென்பது.

வார்த்தகர்= [7]ஆராதிப்பவர்களைத் தாய்போல வயிற்றில்வைத்து வளர்ப்பவர்.

வார்த்தமாகர்= [8]ஆராதிப்பவர்களை விருத்திசெய்வதனாலேயே தாமும் விருத்தியாகிறவர்; அல்லது, இப்படி எல்லாருக்கும் எல்லாவற்றையும்அளித்தும் தமதுநிறைவுகுறையாதவர்.

---

1 விருக்ஷம்போல அசையாமலிருப்பவர்.

2 'ஸ' பார்க்க.

3 எல்லாவற்றிற்கும் தாமே இருப்பிடமானவர்.

4 பக்தர்களிட்த்தில் அன்புள்ளவர்.

5 திருஷ்ணவதாரத்தில் கன்றுகளைமேய்ப்பவர்; அல்லது, உலகத்திற்குத் தந்தையாதலின் எல்லா ப்ரஜைகளையும் தம்குழந்தைகளாக நினைக்கும் தன்மையுள்ளவர்.

6 வம்சம்என்னப்படும் ப்ரபஞ்சத்தைப் பெருகச்செய்பவர்; அல்லது, ஸம்ஹரிப்பவர்.

7 எல்லாவற்றையும் விருத்திசெய்பவர்.

8 ப்ரபஞ்சரூபமாகவ்விருத்தியடைகிறவர்.

வரதர்= [1]தேவர்களுக்கும் லோகபாரங்களை வகிக்கும்ஸாமர்த்ய மாகியவரங்களை அளிப்பவர்.

வராங்கர்= [2]சிறந்ததிவ்யமங்களவிக்ரகமுடையவர்; தேவகியின் பிரீதிக்காக உபநிஷத்தில்கூறப்பட்ட திவ்யமங்களவிக்ரஹலக்ஷணங் கள் மறையாமலே அவதரித்தவர்என்பது.

வராரோஹர்=[3]மீண்டுகிழுலகம்போவ தில்லாமையால் மேலேறி அவரையடைவது எல்லாவற்றிலும்சிறந்ததாம்படியிருப்பவர்.

வருணர்= [4]எல்லாவற்றையும் மறைத்துக்கொண்டிருப்பவர்.

வஷட்காரர்= [5]ஆகாசமுதலியவற்றைப்போலன்றித் தாம்வியா பித்திருப்பவற்றையெல்லாம் தாம்நினைத்தபடிநடப்பனவாகத் தம் வசப்படித்துகிறவர்.

வஸு(105)= [6]தம்மையடைந்தவர்களிடத்தில்மிக்கஅன்புடன் தாமே வஸிப்பவர்.

வஸு (271)= [7]பெரியோர்களுக்குத் தாமே தனமாயிருப்பவர்; அவர்கள் மற்றப்பொருளைப் பொருளாகநினைப்பதில்லையென்பது.

வஸு (701)= [8]திருப்பாற்கடலில்வஸிப்பவர்.

வஸுதர்=தடுக்கமுடியாத பெரிய ஐஸ்வர்யமிருக்கையிலும் பொருளைவிரும்பும் சிறியோருக்குப்பொருளையும் அளிப்பவர்.

வஸுப்ரதர் (698)= [9]சிறந்த நிதியாகியதம்மைத் தேவகிக்கும் வஸுதேவருக்கும் புத்ரராகக் கொடுத்தவர்.

1 வரங்களையளிப்பவர் ; அல்லது, யஜமானரூபியாகக் கோவென்னும் தக்ஷிணையையளிப்பவர்.

2 சிறந்த அவயவங்களைஉடையவர்.

3 எல்லாவற்றிலும் சிறந்த ஸ்ரீ வைகுண்டத்திற்குரியவர்.

4 ஸாயங்காலத்தில் அஸ்தமயமாகும்ஸூர்யன் தன்கிரணங்களை மறைப் பதனால் வருணனுகிறான் ; அந்தஸூர்யனுயிருப்பவர்.

5 யாகங்களில்செய்யப்படும் ஹோமங்களுக்கு உத்தேச்யமாயிருப்பவர்; அல்லது, யாகரூபி ; அல்லது, தேவர்களைஸந்தோஷப்படுத்தும் மந்திரரூபி; அல்லது, மந்திரதேவதாரூபி.

6 எல்லாப்பிராணிகளும் தம்மிடத்தும் தாம்அவற்றினிடத்தும்இருப்பவர்; அல்லது, அக்னிஸ்வரூபி.

7 தனமாயிருப்பவர் ; அல்லது, மாயையினால் தம்ஸ்வரூபத்தை மறைப்ப வர் ; அல்லது, ஸூர்யரூபியாக ஆகாசத்தில் வஸிப்பவர்.

8 எல்லாம் தம்மிடத்தில் வஸிக்கப்பெற்றவர் ; அல்லது, தாம் எல்லாவற் றிலும் வஸிப்பவர் ; அல்லது, மாயையினால் ஸ்வரூபத்தைமறைப்பவர்.

9 தனத்தை மிகுதியாகக் கொடுத்தவர்.

வஸுப்ர்தர் (699) = [1]உலகத்திற்குத் தந்தையாகிய தமக்கும் தாய்தந்தைகளாகும்படி பெருமகிமையை அந்தத் தேவகிவஸுதேவர்களுக்கு அளித்தவர்.

வஸுமநஸ் (106)= [2]ஆஸ்ரிதர்களை நிதியைப்போல மனத்தில் கருதுகிறவர்.

வஸுமநஸ் (702) = [3]லக்ஷ்மி பிறந்தவிடமாகிய க்ஷீராப்தியில் வாஸம்செய்தும் வஸுதேவரிடத்தில் மனம்வைத்தவர்.

வஸுரேதஸ் = [4]தம்மூடைய திவ்யதேஜஸையே அவதாரத்திற்குக் காரணமாகவுடையவர்.

வஹ்நி = [5]பரமபதம் ஆகாசமுதலிய தேசரூபியாக நித்யஸூரிகள் முக்தர்கள் ஸம்ஸாரிகளாகிய எல்லாரையும் தாங்குகிறவர்.

வாக்மீ=வேதரூபமான சிறந்தவாக்கையுடையவர்; ராமகிருஷ்ணாதி அவதாரங்களில் கேட்கக்கேட்க அமுதம்போல இனியவாக்குகளை உரைப்பவர் என்னவுமாம்.

வாசஸ்பதி (218) = [6]மத்ஸ்யபுராணத்திலுல் வேதார்த்தத்தை வெளியிட்டதலுல் வாக்கென்னப்படும் சொல்லுக்கு அதிபதி.

வாசஸ்பதி (579) = [7]ஐந்தாவது வேதமான மகாபாரதம் என்னும் ஸரஸ்வதிக்கு ஸ்வாமியானவர்; மஹாபாரதத்தை இயற்றினவர் என்பது.

வாமந் = [8]இந்திரனை ரக்ஷிப்பதற்காகப் பலிசக்ரவர்த்தியின் யாகத்தில் வாமனவதாரமெடுத்துச்சென்றவர்.

வாயு =[9] தம்மை த்யானிப்பவர்களிருக்குமிடந்தேடி ஆங்காங்கு செல்லுகிறவர்; சபரி, பரத்வாஜர், குகன் முதலானவர்களைத் தேடிச் சென்றார் என்பது குறிப்பு.

வாயுவாஹந் (332) =[10]உலகத்துக்குப்பிராணனனகாற்றையும் நடத்துகிறவர்.

---

1 பக்தர்களுக்கு மோக்ஷமென்னும் பலனைக்கொடுப்பவர்; அல்லது, அஸுரர்களின் தனத்தை மிகவும் கண்டிப்பவர்.

2 சிறந்தமனமுள்ளவர்.

3 எல்லாரிடத்திலும் வலிக்கும்மனமுள்ளவர்.

4 ஸ்வர்ணம்போலிய வீர்யத்தையுடையவர்.

5 ஹோமங்களைத் தேவர்களுக்குக்கொண்டுபோகும் அக்னியாயிருப்பவர்.

6 'வாசஸ்பதிருதாராதீ' ஒருநாமம்; வித்தைக்கதிபதியான ஸர்வஜ்ஞர்.

7 'வாசஸ்பதிரயோனிஜர்' ஒருநாமம்; வித்தைக்கதிபதியும் கர்ப்பத்திற் பிறவாதவரும்.

8 வாமனவதாரம்செய்தவர்; அல்லது, எல்லாராலும் பஜிக்கத்தக்கவர்.

9 நல்லமனத்தைபுண்டாக்குகிறவர்.

10 ஸப்தமருத்துக்களையும் கடத்துகிறவர்.

வாயுவாஹநர் (860) = [1]தம்மைத்தியானிப்பவர் எவ்வளவு பல மானகாரணங்களினால் கீழேவிழுந்தாலும் ஒப்பற்றவேகமுள்ள கருடனேக்கொண்டு அவர்களைத்தூக்கிவிடுகிறவர்; பரமபாகவதனுகியவஸுராஜன் மஹரிஷிசாபத்தினால் கீழேவிழுந்தபோது அவனைக் கருடனால் மறுபடியும்மேலேற்றி உபரிசரவஸுவாகச்செய்தது இதற்கு உதாஹரணம்.

வாருணர் = [2]தம்மை ஸ்வாமியாகவரிக்கும் பக்தர்களிடத்தில் இருப்பவர்.

வாஜஸநி = [3]காஸ்திகவ்யாதம்செய்து இம்மைக்குரியஅன்னமுதலியவற்றையே பௌத்தர்கள்அடையும்படிசெய்தவர்; காலேதோறும் தத்யோதனகபளங்களைச்சாப்பிடவேண்டுமென்பது க்ஷபணகர்களின் வ்ரதம்.

வாஸவாநுஜர் = [4]அமுதத்தில் விருப்பமுள்ள இந்திரனுக்கு அதைஅளிப்பதற்காகப் பின்பிறந்தவர்.

வாஸுதேவர் (333) =உலகங்களைத் தாயின்கர்ப்பத்தில்போலத் தமக்குள்வைத்தும், பறவைகள்சிறகுகளினால்குஞ்சுகளை அணைப்பதுபோலத் தீங்குகள்வராமல் மூடிக்காப்பாற்றியும், அவற்றினிடம் தாம் அந்தர்யாமியாகவஸித்துமிருப்பதனால் வாஸுவென்றும், இந்தரக்ஷணத்தைவிளையாட்டாகவைத்திருப்பதனாலும் எல்லாவற்றையும் அடக்கிமேலாயிருப்பதனாலும் எப்போதும் விளங்குவதனாலும் யாவராலும் துதிக்கப்பெறுவதனாலும் பக்தர்களிடத்தில் விசேஷித்துச்செல்லுவதனாலும் தேவர்என்றும் சொல்லப்படுகிறார்; அதனால், பரஸ்வரூபியான பகவான் வாஸுதேவராகிறார்.

வாஸுதேவர் (700) =வஸுதேவர் புத்ரர்.

வாஸுதேவர்(714)= [5]துவாதசாக்ஷரமந்த்ரத்தை உபதேசித்த வாஸுதேவ வியூகமாயிருப்பவர்.

விக்ரமர் = [6]வேதமூர்த்தியானகருடனே வாகனமாகக்கொண்டு ஸஞ்சரிப்பவர்.

---

1 காற்றும் அவரிடம் அச்சத்தோடு நடக்கும்படி நியமிப்பவர்.

2 வருணபுத்ரரானவஸிஷ்டர்; அல்லது, அகஸ்தியராயிருப்பவர்.

3 வாஜஸநர் = அன்னம்வேண்டியவர்களுக்கு அன்னத்தைக்கொடுப்பவர்.

4 அதிதியினிடம் கசியபருக்கு இந்த்ரன்தம்பியாகப் பிறந்தவர்.

5 மாயையினால் உலகத்தைமறைக்கும்தேவர்.

6 உலகமளந்தவரென்னவுமாம்.

விக்ரமீ (76)=பராக்ரமமுள்ளவர்; தாம்நிணைத்ததைத் தடையின்றிமுடிக்கும்இயற்கையுள்ளவர்.

விக்ரமீ (909) = [1]தமதுபெருமைக்குத்தகுந்ததிவ்யசேஷ்டிதங்களையுடையவர்.

விகர்த்தா= [2]தமக்காக இன்பதுன்பங்களில்லாமலிருந்தும் பிறர் இன்பதுன்பங்களை அனுபவிப்பதனால் தாம் இன்பதுன்பங்களையடைந்தமாதிரியாகிறவர்; இந்தமாறுதல் பிறரிடத்திலுள்ள அன்புபற்றியதாதலின் ஈஸ்வரருக்குக் குற்றமாகாது.

விசிஷ்டர்= [3]எல்லாவற்றையும்பார்க்கிலும் விலக்ஷணமாயிருப்பவர்.

விசுத்தாத்மா= [4]அவரவர் புண்ணியங்களுக்குத் தக்கபடி தம்மைத்தந்து தம்ஸ்வரூபத்தை மிச்சப்படுத்திக்கொள்ளாதவர்; தமது ஸ்வரூபத்தையெல்லாம் பக்தர்களுக்கே ஒப்புவித்திருப்பவர்.

விசோதநர்= [5]தமது திவ்யக்ஷேத்திரங்களில் தேகம்விட்டவர்கள் தம்மையடைவதற்கு உரியவராம்படி அவர்களைத் துலக்குகிறவர்.

வித்வத்தமர்= [6]மிகத்தெரிந்தவர்; கஜேந்திரன்துன்பத்தை விலக்கத் தெரிந்தவரென்பது.

விதாதா (44)= [7]பிரம்மதேவராகிய கர்ப்பத்தை முதிரவைத்து உத்பத்தி செய்பவர்.

விதாதா (485) = [8]பக்தனுடையகுற்றங்களைப்பகவான்பொறுக்கும்போது, பாவங்களுக்குப் பலன்களைத்தரத்தக்க யமனும் ஹவனஞ்செய்யப்படும் யாதனைகளும் அந்தப்பக்தனை யாதொன்றும் செய்யாமலிருக்கும்படி தாமேகடத்துகிறவர்.

விதாரணர்= [9]தமது திவ்யாயுதங்களினால் ராகுமுதலானவர்களைச் சேதித்தவர்.

1 சிறந்தசடையுள்ளவர்; அல்லது, சிறந்தபராக்ரமமுள்ளவர்.

2 விசித்ரமான உலகங்களைப்படைத்தவர்.

3 எல்லாவற்றிற்கும் மேலானவர்.

4 முக்குணங்களையும் கடந்த பரிசுத்த ஸ்வரூபமுள்ளவர்.

5 தம்மை நினைத்தமாத்திரத்தில் பாவங்களைப்போக்குகிறவர்.

6 ஸர்வஜ்ஞர்.

7 கர்மங்களையும் அவற்றின் பலன்களையும் செய்பவர்; அல்லது, ஆதிசேஷன்முதலானவர்களையும் விசேஷமாகத் தரிப்பவர்.

8 ஆதிசேஷன் திக்கஜங்கள்முதலியவர்களைப் பூமியைத்தாங்கும்படி செய்கிறவர்.

9 அதர்மிஷ்டர்களைப் பிளக்கிறவர்.

விதிசர்= [1]தடுத்திக்கவருப்வர்கள் வணங்கித் தழுதழுத்து மெய்ம் மறந்துசெய்யும் ஸ்தோத்திரங்களுக்கும்எட்டாத ஸ்வரூபம், திவ்யமங் களவிக்ரகம், குணச்சிறப்புக்கள், மகிமைமுதலியவற்றையுடையவர்.

விதேயாத்மா= [2]தமது பக்தர்கள், 'இங்குவா, இங்குநில், இங்கு உட்கார், இதைஉண்' என்று கட்டளையிடுவதற்குரிய ஸ்வரூபமுள் ளவர்.

விநயர்= [3]மாரீசன்முதலானவர்களையும் தமதுபராக்ரமத்தினால் தண்டித்துஅடக்கின்வர்.

விநயிதா= [4]பாகவதர்களை ராஜகுமாரர்களைப்போல் அரவணைத் துக்காப்பவர்.

விரதர்= [5]ராஜ்யமுதலியவற்றில் ஆசையில்லாமல் ஒழிந்திருப் பவர்; 'விராஜர்' என்னும் பாடத்தில், விரஜோமார்க்கர் ஒருநாமம்; அடித்தவர்களுக்குக் குற்றமில்லாத வழியைக் காட்டுகிறவர்.

விராமர்= [6]வரங்களையளிக்கும் ப்ரம்மாதி தேவர்களும் அவர் களாலளிக்கப்படும் வரங்களும் வரங்கள்பெற்ற ராவணாதிகளும் தம் மிடத்தில் வியாபிக்காமல் போகும்படியிருப்பவர்.

விரோசநர்= [7]உத்தராயணம், தக்ஷிணாயனம் என்னும்இரண்டு மார்க்கங்களினால் ரதம்சென்று ஸூர்யன்பிரகாசிப்பதாகிய ஸம்வத் ஸரமாயிருப்பவர்; இது அர்ச்சிராதிமார்க்கத்தில் ஐந்தாம்படி.

விவிக்தர்= [8]எல்லாஉலகங்களுக்கும் விலக்ஷணமாகத் தமக்கே சிறப்பாயுள்ள சரித்திரங்களையுடையவர்.

விஜயர்= [9]ப்ரம்மருத்ரர்களாகிய மற்ற இரண்டுமூர்த்திகளும்

---

1 அவரவர் அதிகாரங்களுக்குத்தக்கபடிபலன்களை விசேஷமாகஅளிப்பவர்.

2 அவிதேயாத்மா=யாருக்கும் உட்படாத ஸ்வரூபமுள்ளவர்.

3 துஷ்டர்களைத் தண்டிப்பவர்.

4 விநயிதாஸாக்ஷீ=பிரஜைகள் அடக்கமுள்ளவராயிருப்பதை ப்ரத்யக்ஷ. மாகக்காண்பவர்; அல்லது, விநயிதா=எல்லாவற்றையும் நடத்துகிறவர்; அஸா க்ஷீ=தம்மைவிட வேறுபொருளைப் பாராதவர்.

5 விரஜர்=தம்மையடுத்தவர்களுக்கு விஷயப்பற்றாகிய ரஜோகுணத்தை விலக்குகிறவர்.

6 எல்லாப்பிராணிகளுக்கும் முடிவைத்தருகிறவர்.

7 பலவிதமாகப்பிரகாசிப்பவர்; ஸூர்யன், அல்லது அக்நியாயிருப்பவர்.

8 பிரபஞ்சரூபமாயிருந்தும் ஒன்றிலும்சேராமல் தனித்துநிற்பவர்.

9 ஞானம், வைராக்யம், ஐசுவர்யமுதலியகுணங்களினால் எல்லாவற்றை யும் ஜயிப்பவர்.

ஸ்ருஷ்டி ஸம்ஹாரமுதலிய தம்தம்கார்யங்களில் ஜயம்பெறும்படி செய்பவர்.

விஜிதாத்மா= [1]மகாலக்ஷ்மியும்விரும்பத்தக்கசிறப்பினால்தடையில்லாமல்ஒங்கிவளரும்திருவுள்ளமும் திருவடிப்பணிந்தவர்கள் விஷயத்தில் தாழ்ந்து இணங்கும்படியிருப்பவர்.

விஸ்ராமர்= [2]பாவங்களும் அவற்றின்பயன்களும் மிதமிஞ்சிவருத்துவதனால் கலைத்துப்போன ஜனங்களுக்கு இளைப்பாறுமிடம்; அவர்கள் பகவானை அடைந்தவுடன் அவர்களின்பாவங்களும்துன்பங்களும் விலகிப்போகின்றன என்பது.

விஸ்ருதாத்மா= [3]யாவராலும்வியந்துகேட்கத்தக்கசரஸிம்மாவதார திவ்யசரித்திரமுடையவர்.

விஸ்வகர்மா= [4]ப்ரம்மாவைப் படைப்பதற்கு முன்னும்பின்னுமுள்ள உலகவ்யாபாரங்கள்எல்லாம் தமதுசெய்கைகளாகவே இருப்பவர்.

விஸ்வதக்ஷிணர்= [5]நன்றுசெய்தவர்களுக்கும் தீதுசெய்தவர்களுக்கும்வேற்றுமையின்றி விரைவில்நன்மையையளிப்பவர்; அபராதப்பட்டவர்கள்விஷயத்திலேயும் மிக்க பொறுமையுள்ளவரென்பது; அல்லது, அசுவமேதயாகத்தில் பூமியினைத்தையும் ப்ராம்மணர்களுக்குத் தக்ஷிணையாகக்கொடுத்தவர்.

விஸ்வபாஹு= விரோதிகளைக் களைவதனால் உலகத்துக்கு க்ஷேமகரமான கரங்களையுடையவர்.

விஸ்வபுக்விபு= [6]உலகங்களைவ்யாபித்துக்காப்பவர்.

1 மனத்தை அடக்கினவர்.

2 பசி, தாகம், விசனம், மயக்கம், மூப்பு, இறப்பு ஆகிய ஷடூர்மிகளென்னப்படும் அறுவகைகளான ஸம்ஸாரக்கடலின் அலைகளினாலும் அவித்தைமுதலியமகாக்லேசங்களினாலும் மதமுதலியஉபக்லேசங்களினாலும் பீடிக்கப்பட்டு இளைப்பாறவிரும்புகிறவர்களுக்கு மோக்ஷமென்னும்இளைப்பாறுதலைக் கொடுப்பவர்.

3 வேதத்தில் விசேஷமாகஉரைக்கப்பட்ட ஸத்யம்ஞானமுதலிய இலக்கணங்கள்பொருந்தின ஸ்வரூபமுடையவர்.

4, விசித்ரஸ்ருஷ்டிசக்தியில் விசுவகர்மாஎன்னும் தேவசில்பியைப்போன்றவர்என்னவுமாம்.

5 எல்லாவத்தையும்காட்டிலும் மிகுந்தசக்தியுள்ளவர்; அல்லது, எல்லாக்காரியங்களிலும் மிகுந்தஸாமர்த்தியமுள்ளவர்.

6 விஸ்வபுக், விபு, இரண்டுநாமங்கள். விஸ்வபுக்=உலகத்தை ஸம்ஹாரகாலத்தில், புஜிப்பவர்; அலலது, காப்பவர்; விபு=ஹிரண்யகர்ப்பர்முதலிய பலஉருவங்களாயிருப்பவர்.

விஸ்வம்= [1]எல்லாவற்றிலும்ப்ரவேசித்து எங்கும்நிரம்பியிருப்பவர்; இயற்கையாகவே மங்களரூபமாயுள்ளவையும் தமதுசிறப்புக்கு மேல்வரைஅற்றவையுமான திவ்யாத்மஸ்வரூபம், திவ்யமங்களவிக்ரஹம், கல்யாணகுணங்கள், மஹிமைஇவை பரிபூர்ணமாகநிரம்பியிருப்பவர்.

விஸ்வமூர்த்தி=உலகமெல்லாம் தம்உடம்பாகவுடையவர்; எல்லாம் தமதுசரீரமாயிருத்தலின் தம்சரீரம் தமக்கு அனிஷ்டம்செய்யப்புகாமைபற்றிப் பலவான்களும் தூர்ப்பலர்களே ஜயிக்கக்கூடாமல் போவரென்பது.

விஸ்வயோநி (118)= [2]அடைந்தவர்கள்எல்லாரையும் தம்மூடன் ஒன்றுகக்கூட்டிக்கொள்ளுகிறவர்.

விஸ்வயோநி(151)= [3]பிரம்மருத்ராதிகளைக்கொண்டு நடத்தப்படும்உலகமனைத்துக்கும் காரணமாயிருப்பவர்.

விஸ்வதேஹ:=உலகத்துக்கெல்லாம்முதல்காரணமாயிருப்பவர்; தம்மையறிவதற்குரியஞானேந்திரியங்களையும், தமதுகைங்கர்யத்துக்குரியகர்மேந்திரியங்கள்முதலானவற்றையும் ஜனங்களுக்கு உண்டாக்குகிறவர் என்பது.

விஸ்வஸ்ருக்= [4]குணத்தையும் குற்றத்தையும்பாராமல் உயிர்கள் உய்வதையேகருதி உலகத்தைப்படைப்பவர்.

விஸ்வாத்மா= [5]தம்முடையஞானசக்திகளினால் உலகமெல்லாவற்றையும் வியாபித்திருப்பவர்.

விஷ்ணு (2)=தமது விபூதிகளாயுள்ள சேதனசேதனங்களில் அந்தர்யாமியாய்ப் பிரவேசித்திருப்பவர்; இதனால் அந்தர்யாமியென்பது கூறப்பட்டது.

விஷ்ணு (259)= [6]கடாக்ஷத்தினாலும் மற்றும்பலஉதவிகள்செய்தும் தமதுஉயிர்வையும் அடியார்களின்தாழ்வையும்பாராமல் என்றும் அவர்களைவிட்டுப்பிரியாமல்இருப்பவர்.

விஷ்ணு (663)=ஸ்வரூபத்தினாலும் நடத்துவதுமுதலியசக்தியினாலும் எல்லாவற்றையும் வியாபித்திருப்பவர்; அல்லது, மூவுலகங்களையும்அளந்தவர்.

---

1 உலகமனைத்தும் தாமாயிருப்பவர்.

2 எல்லாவற்றிற்கும் காரணம்.

3 உலகத்தைத் தமக்குஆதாரமாகவுடையவர்; அல்லது உலகரூபியும் காரணரூபியுமாயிருப்பவர்.

4 விஸ்வத்ருக்=உலகத்திற்குப்பிரபு.

5 எல்லாவற்றிற்கும் ஆத்மாவாயிருப்பவர்.

6 த்ரிவிக்ரமாவதாரத்தில் அடிகளால் உலகங்களைவ்யாபித்தவர்.

விஷ்வக்ஸேநர் = [1]எங்குமுள்ள ஜனங்கள் தம்மை ரக்ஷகராகக் கொண்டு ஜீவிக்கும்படி செய்பவர்; இது ரக்ஷிப்பது தொழிலாகவுடைய அனிருத்தவ்யூகம்; சக்தி தேஜஸ்என்னும் இரண்டுகுணங்கள் அனிருத்தவ்யூகத்திற்குச் சிறப்பாக வகுக்கப்பட்டிருக்கின்றன; அவற்றுள், எதையும்காப்பாற்றும் ஸாமர்த்யம் சக்தியெனப்படுவது; அதை இந்த நாமம்குறிப்பிக்கிறது.

விஷமர் = [2]ஸாதுக்களுக்குக்ஷேமத்தையும் துஷ்டர்களுக்குப் பயத்தையும்தருவதனால் அவரவர்குணங்களோப்பற்றி வேற்றுமையுள்ளவர்.

விஸ்தாரர் = [3]கலியுகமென்னும்விரோதியையொழித்து க்ருதயுகத்தையுண்டாக்குவதனால் வேதத்தினல்விதிக்கப்படும்முறைகளை வெளிப்படுத்துகின்றவர்.

விஹாயஸகதி = [4]பக்தியினுடைய முடிவானநிலைமையில் ஏறப் பெற்றவர்கள் பரமபதம்செல்வதற்கும் தாமே உபாயமாயிருப்பவர்.

விக்ஷுரர் = [5]ஆஸ்ரிதர்களிடத்தில் நீங்காத அன்புடையவர்.

வீதபயர் = [6]தாம்வந்தபரபரப்பைக்கண்டதனாலேயே கஜேந்திரனுக்குப் பயம்போகும்படி செய்தவர்.

வீரபாஹு = [7]கடகங்கள் தோள்வளைகள்முதலிய திருவாபரணங்களினால் அலங்கரிக்கப்பட்டுத் திருப்பாற்கடல்கடையும்காலத்தில், 'நான், நான்' என்று ஒன்றன்பின் ஒன்றுகப்பலருத்திக்கும் ஆயிரம்தோள்களையுடையவர்.

வீரர் (402) = [8]ராக்ஷஸர்களைப் பயத்தினால் நடுங்கும்படிசெய்பவர்.

1 அஸுரஸேநை இவரைக்கண்டமாத்திரத்தில் பலதிசைகளிலும்சிதறியோடும்படி தம்யுத்தமுயற்சியினால் செய்பவர்.

2 தமக்கொப்பில்லாதவர்.

3 உலகங்களனைத்தும் தம்மை ஆதாரமாகக்கொண்டு விரிவாகும்படியிருப்பவர்.

4 ஆகாயத்திலிருப்பவர்; அதனாலேதான் ஆகாயம் விஷ்ணுபதம்என்னப்படுவது; ஸுர்யன்என்னவுமாம்.

5 ரோசமில்லாதவர்.

6 ஸம்ஸாரபயம்அற்றவர்.

7 தேவசத்ருக்களையழித்து வேதமர்யாதையைநிலைநிறுத்தும்பராக்ரமமுள்ளகைகளையுடையவர்.

8 பராக்ரமமுள்ளவர்.

வீரர் (664)= [1]நல்லோரைத் துன்பப்படுத்தும் துஷ்டர்களை அழிப்பவர்.

வீரஹா (168)= [2]யுக்திவாதங்களிலுல் பரமாத்மஞானத்தைக் கெடுக்கும் தர்க்கசூரர்களை ஒழிப்பவர்.

வீரஹா (747)= [3]சிறுகுழந்தைப்பருவத்திலும் பூதனை, சகடாஸுரன், இருமருதங்கள்முதலிய வஞ்சகர்களான அஸுரவீரர்களை வேரோடுகளைந்தவர்

வீரஹா (927)= [4]கஜேந்திரனுக்கு விரோதியான மிருத்யுவைத் தடுத்தவர்.

வேகவாந்= [5]மானிடக்குழந்தையாக விளையாடும் பருவத்திலும் தமது பரமேஸ்வர சக்தியின் வேகம் குறையாதவர்.

வேத்யர்= [6]தம்அவதாரங்களிலுல் புலங்களுக்கெட்டாத மகிமையை வெளிப்படுத்தி யாவரும் அறிவதற்கெளியவராயிருப்பவர்.

வேதர்= [7]தம்மால் தேகங்களையும் இந்த்ரியங்களையும் அடைந்திருக்கும் மனிதர்முதலானவர்கள் சாஸ்திரங்களைத் தம்மிடமேஅடையும்படி கொடுப்பவர்; இந்தக்காரணம்பற்றித்தான் ஸங்கர்ஷணருக்கு அப்யுபாயம் (=பரகதியை யடைவதற்குக்கருவி,) ஆகமஃ (=சாஸ்த்ரம் வருமிடம்,) பந்தாஃ (=வழி,) நேதா (=நடத்துகிறவர்,) ப்ராம்மணர், ஆசார்யர் என்று நாமங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

வேதவித் (130)=ஐயந்திரிபின்றி வேதார்த்தங்களை அறிபவர்.

வேதவித் (133)= [8]வேதங்களிலுல் அறியப்படும் தர்மத்தை அனுஷ்டிக்கும்படி செய்து அதைத் தமக்கு ஆராதனமாகப் பெற்றுக்கொள்ளுகிறவர்; இவர் ப்ரத்யும்னர் என்னும் வ்யூகம்; இந்த வ்யூகத்துக்கு, தர்மம், ப்ரத்யோதயிதா (=விளங்கச் செய்பவர்,) ப்ரவர்த்தயிதா (=நடத்துகிறவர்) என்று நாமங்களுண்டு.

---

1. கதி, படைப்பு, காந்தி, இருப்பிடம், போஜனம் இவற்றையுடையவர்.

2 தர்மத்தைச்காப்பதற்காக அஸுரவீரர்களை ஒழிப்பவர்.

3 ஹிரண்யகசிபுமுதலானசத்ருவீரர்களையும் காமக்ரோதாதிகளையும் ஒழிப்பவர்.

4 பலவிதமான ஸம்ஸாரகதிகளைக் கெடுத்து முக்திகொடுப்பவர்.

5 'அசையாமலே மனத்திற்கும் கடிவவேகமுள்ள ஒருபொருள்' என்கிற சொற்படி மிகுந்த வேகமுள்ளவர்.

6 மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் அறியத்தக்கவர்.

7 வேதரூபி; அல்லது, எல்லாவத்தையும் தெரிவிப்பவர்.

8 வேதங்களை விசாரிப்பவர்.

வேதஸ்' = [1]அளவற்றமங்களமான பலவகைப் பெரியவிபவங்களைப் பக்தர்களுக்கு எக்காலமும் செய்பவர்.

வேதாங்கர் = வேதத்தைத் தமது சரீரமாகவுடையவர்; சரீரத்தினால் ஆத்மா அறியப்படுவதுபோல வேதத்தினால் அறியப்படுகிறவர்; அல்லது, வேதம் அவருடைய ஆஜ்ஞைபாகவிருப்பதனால் அதைக் கருவியாக உடையவரென்பது.

வைகாநர் = [2]அவதரித்தபின்ஆஸ்ரிதர்களுக்கு ஸம்ஸாரதுக்கத்தைக் கல்லியெடுப்பவர்.

வைகுண்டர் = [3]பக்தர்கள் தம்மையடைவதற்கு இடையூறுகளெல்லாவற்றையும் விலக்கி அவர்களை எளிதில் தம்மிடம் சேர்த்துக் கொள்பவர்.

வைத்யர் = [4]தம்மை த்யானிப்பவர்களுக்கு ஸம்ஸாரத்தை நிவ்ருத்திசெய்யும்வகையை அறிந்தவர்.

ஜ்ஞாநகம்யர் = [5]ஸமாதிநிஷ்டையென்னும் பரவித்தையாகிய ஞானத்தினால் அறியுந்தக்கவர்.

ஜ்ஞாநமுத்தமம் = ஒருநாமம்; (உத்தமம்ஜ்ஞானம் =) எல்லாவற்றிலும்சிறந்தவைஷ்ணவதர்மத்தை யாவரும் தெரிந்துகொள்ளக்காரணமாயிருப்பவர்; பாஞ்சராத்ரமுதலியபகவச்சாஸ்திரங்களைப் பிரவ்ருத்திப்பித்தவர் என்பது.

ஜ்யேஷ்டர் = [6]எப்போதும் எல்லாவகைகளாகவும்மோக்ஷத்தில் அநுபவிப்பவர்களுக்கும் கைகாணக்கூடாத பெரியஐஸ்வர்யமுள்ளவராதலின் எல்லாவற்றினும் மிகஸ்லாக்கியமானவர்; அல்லது, எல்லாவற்றிற்கும்ஆதியாயிருப்பதனால் மிகவும்முதிர்ந்தவர்.

ஜ்யோதிர்க்கணேஸ்வரர் = [7]திவ்யதம்பதிகளாகிய தம்இருவருக்கும்அநுகூலர்களும் ஒளிஉருவமாகவிளங்குகிறவர்களுமானஆதிசேஷன் விஷ்வக்ஸேநர்முதலான நித்யஸூரிகளின்கூட்டங்கள் எப்போதும்திருவடிப்பணிந்து கைங்கர்யம்செய்யப்பெற்றவர்; எப்போதும்

---

1 ஸ்ருஷ்டிப்பவர்.

2 ஹிரண்யாக்ஷனைக்கொல்ல வராஹமூர்த்தியாகிப் பாதாளத்தைத்தோண்டினவர்.

3 ஸ்ருஷ்டிகாலத்தில் பஞ்சபூதங்களும் தனிவழி செல்வதைத்தடுத்து அவற்றை ஒன்றுசேர்த்து ஸ்ருஷ்டியில் உபயோகப்படுத்துகிறவர்.

4 எல்லாவித்தைகளையும் அறிந்தவர்..

5 ஞானத்தினாலேயே அடையத்தக்கவர்.

6 நித்யமும்அளவுபடாததும் எல்லாப்பலன்களையும்! ஸாதிப்பதுமாகிய சிதசிஜ்ஞானமாயிருப்பவர்.

7 ஸூர்யன்முதலியதேஜஸுகள் எல்லாவற்றிற்கும் தலைவராயிருப்பவர்.

பிரகாசிப்பதஞல் வேதத்தில் 'மரீசி (=கிரணம்) என்றுகூறப்படும் நித்யஸூரிகளே இங்கே ஜ்யோதிஸ்என்றுசொல்லுகிறது.

ஜ்யோதிராதித்யர் = [1]அப்ராக்ருதமான ஆச்சரியதேஜோமயமாகியஸூர்யன்; ஆகாயத்திலிருக்கும் ஸூர்யன் இருள்அடைந்துபோகும்படியாகத்தோன்றும் பேரொளியுள்ளவர்என்பது.

ஜ்யோதிஸ்= [2]பக்தர்கள் பரமபதம்ஏறுவதற்குஅர்ச்சிராதிமார்க்கத்தில் முதற்படியான ஒளியாயிருப்பவர்.

ஜகதஸ்ஸேது = [3]உலகத்தில் நல்லவை தீயவைகளைப் பிரிக்கும் அணையாயிருப்பவர்; புண்யபாபபலன்களை மாறுமல் கொடுப்பவரென்பது.

ஜகதாதிஜர் = [4]உலகங்களுக்கு முதல்பொருள்களாகிய மும்மூர்த்திகளுள் ஒருவராக அவதரித்தவர்.

ஜன்மம்ருத்யுஜராதிகர் = பிறப்புஇறப்பு மூப்புக்களைக்கடந்தவர்; சேதனசேதனங்கள் இரண்டினும் விலக்ஷணர்என்பது.

ஜகர்= [5]பக்தராகாதவர்களும் பகவத்ஸ்வரூபத்தைஅனுபவிப்பதற்குரிய கரணகளேபரங்களோடு ஜனிக்கும்படிசெய்பவர்.

ஜகஜ்ஜ்யேஷ்டி = [6]ஜனங்களின் ஜன்மத்துக்குத் தாமேபலனுயிருப்பவர்.

ஜகார்த்தகர் = [7]தமது ரக்ஷணத்திற்குவிரோதம்செய்யும்சத்ருஜனங்களை உதவிதேடாமல்அழிப்பவர்; இங்கு தேஜஸ் குறிப்பிக்கப்படுகிறது; தனக்கு ஓர்உதவியையத்தேடாது கார்யத்தைமுடிக்கும் திறமை தேஜஸ்என்னப்படுவது.

ஜகேஸ்வரர்= [8]ஜனித்தவர்கள் எல்லாரையும்வியாபிக்கும் ஐஸ்வர்யமென்னும்மஹாப்பிரவாஹத்திலுல் விளங்குகிறவர்.

ஜயர்= [9]ஆஸ்ரிதர்களால்வெல்லப்படும்படியிருப்பவர்.

---

1 ஸூர்யமண்டலத்தில் ப்ரகாசிப்பவர்; அல்லது, ஸூர்யனைப்ரகாசிப்பவர்.

2 ஸ்வயமாகவே பிரகாசிப்பவர்.

3 உலகத்தைக்கரையேற்றுபவர்; அல்லது, வர்ணாச்ரமதர்மங்கள் கலவாமலிருக்கும்படி தாங்குகிறவர்.

4 உலகம்உண்டாவதற்குமுன் ஹிரண்யகர்ப்பருபியாக ஜனித்தவர்.

5 ப்ராணிகளைப்படைப்பவர்.

6 ஜனங்களின் உத்பத்திக்குக்காரணமானவர்.

7 துர்ஜனர்களைப்பீடிப்பவர்; அல்லது, அவர்களைநரகங்களுக்குப்போகச் செய்பவர்; அல்லது, ஸாதுஜனங்களிலுல் ஐசுவர்யத்தையும் மோக்ஷத்தையும் வேண்டப்படுகிறவர்.

8 ஜனங்களுக்குஈசுவரர்.

9 எல்லாப்பிராணிகளையும்ஜயிப்பவர்.

ஜயத்தர்= [1]புத்தாவதாரத்தில்ஞ்ஞானமேஆத்மாவென்றும்பிரபஞ்சம்பொய்என்றும் வீண்வாதம்செய்து ஆஸ்திகர்களைஜயித்தவர்.

ஜஹ்நு= [2]பக்தரல்லாதவருக்குத் தம்மகிமையை மறைப்பவர்.

ஜிதக்ரோதர்= [3]ஆஸ்ரிதர்களுக்குக் காமக்ரோதமுதலியவற்றைப்போக்குகிறவர்; 'மோகினிரூபத்தைக்கண்டு வியக்தஅஸுரர்கள் மனம்தளர்ந்து தேவர்களின்மேல் கோபியாமலிருக்கும்படி அவர்களின்கோபத்தையடக்கினவர்' என்பது நிர்வசனம்.

ஜிதமந்யு = கோபத்தைவென்றவர்; ஈர்ஷ்யைகஞ்ஞைகஜேந்திரனுக்குவிரோதியானஜலஜந்துவின்மேல். கோபம்வைக்காமல் அதற்கும் நற்கதிகொடுத்தவர்என்பது.

ஜிதாமித்ரர் = [4]தாம் எல்லோருக்கும்அமைந்நல்வாரியாயிருக்கும்ரஹஸ்யத்தைக்கண்டறிவதற்கு சத்ரோதிகளான அகங்காரமமகாரங்கள் காமக்ரோதங்கள்முதலியபகைகளை ஜயித்தவர்.

ஜீவநர் = [5]தம்கையினால் கொலையுண்டதனால் முதலையையும் கந்தர்வனுக்கிப் பிழைக்கச்செய்தவர்.

ஜீவர் = [6]பாகவதர்கள் தமக்கு ஆராதனம் செய்வதனால உஜ்ஜீவிக்கச் செய்கிறவர்.

ஜேதா = [7]பிரம்மருத்ராதிகளையும் தம் அபேக்ஷாயத்தில் நிற்கும்படி செய்பவர்.

ஸ்ரமணர் = [8]கர்மபலன்களையனுபவித்தும் திரும்பவும்ஜனித்தும் முன்வாஸனைமிச்சமின்றி ஸாதுபாதவர்கள் மிச்சமுள்ளபோகாபாஸத்தை அந்தஜன்மத்தில் எளிதாகஅப்யஹி்க்கும்படி செய்பவர்.

ஸ்ரீகர்ப்பர்= [9]பாகங்களிலும் விளையாட்டுக்களிலும் அகலாமலிருக்கும்திருமகளைக் கர்ப்பத்தைப்போல் காப்பாற்றுகிறவர்.

---

1 பகைவராகளையஜயிப்பவர்; அலலதுஸ்ரீ ஜயத்துக்குச்காரணமானவர்.

2 ஸம்ஹாரகாலத்தில எலலாஉயிரையும் மறைப்பவர்; அலலது, பக்தி செய்யாதஅஜ்ஞானிகளைப பரமபதம்சேரப்பிரதவர்.

3 கோபத்தையடக்கினவர்; ராக்ஷஸர்களாகக்கொல்வது வேதம்ரக்ஷியாதையைக்காப்பதற்கன்றிக் கோபத்தினாலன்றென்பது கருத்து.

4 உட்பகைகளாகிய காமக்ரோதங்கள்முதலியவற்றையும் வெளிப்பகைவர்களாகிய ராவணன்முதலானவர்களையும் ஜயித்தவர்.

5 ப்ராணரூபியாகப் பிரஜைகளை ஜீவிக்கசெய்பவர்.

6 ஜீவாத்மரூபியாக எல்லாஉயிர்களையும் தாங்குகிறவர்.

7 ஜயிக்கும்தன்மையுள்ளவர்.

8 அவிவேகிகளைவருத்துகிறவர்.

9 தமதுசெல்வமாகியஉலகமனைத்தையும் வயிற்றுக்குள்வைத்திருப்பவர்.

ஸ்ரீகரர் = [1]பரஸ்வரூபத்திற்போலவே வியூகவிபவாவதாரங்கள் முதலியவற்றிலும் தமக்குஸ்தபடி லக்ஷ்மியை அவதரிக்கச்செய்கிறவர்.

ஸ்ரீசர் = பிராட்டிக்கும் பெருமைவந்ததற்குக் காரணமாயிருப்பவர்; திருவுக்கும்திருவென்பது; அல்லது, எல்லாநீலைமைகளிலும் பிராட்டியைத் தமக்குஸ்வரியாக வைத்திருப்பவர்.

ஸ்ரீதர் = [2]எப்போதும் புதிதாகத்தோன்றும் நிஷ்காரணமான ப்ரேமரஸமானசிறப்பைத் திருமகளுக்கு அளிப்பவர்; இவரைச்சார்ந்ததனால் அவளுக்கு, 'ஸ்ரீ' என்று பெயர்வந்திருப்பதனால் அந்தத் திருமகளுக்கும் பிராணதாரமாயிருப்பவர்என்பது.

ஸ்ரீதரர் = [3]மணிக்குழலிபோலவும் மலருக்குமணம்போலவும் மதிக்குநிலவுபோலவும் அமுதத்துக்குச்சுவைபோலவும் இயற்கையாகவுள்ளஸம்பந்தத்தினால் எப்போதும் லக்ஷ்மியைச்சேர்ந்திருப்பவர்.

ஸ்ரீநிதி = [4]ரத்தினத்துக்குப்பெட்டிபோலப் பிராட்டிதங்குமிடமாயிருப்பவர்.

ஸ்ரீநிவாஸர் (185) = திருப்பாற்கடல்கடைந்தபோதுஅவதரித்த பெரியபிராட்டியாரைத் தமது திருமார்பில்வைத்து இன்சொற்கூறிச் சிறப்பித்தவர்.

ஸ்ரீநிவாஸர் (614) = [5]நந்தனவனத்திலுள்ளகொடிக்குக் கற்பகவிருக்ஷம்போலப் பிராட்டிக்கு என்றும் சேர்ந்திருக்கும்கொழுகொம்பாக இருப்பவர்.

ஸ்ரீபதி = [6]ஸ்ரீதேவி தனக்குத் தகுந்த கணவரென்று நித்யமும் ஸ்வயம்வரம்செய்யும் புருஷராயிருப்பவர்.

ஸ்ரீமதாம்வரர் = [7]ஐஸ்வர்ய லக்ஷ்மிபொருந்தின பிரம்மாதி தே

---

1 தம்மை த்யானித்தும் துதித்தும் ஆராதித்தும்வரும் பக்தர்களுக்கு எல்லாஐசுவர்யங்களையும் உண்டுபண்ணுகிறவர்.

2 பக்தர்களுக்கு ஐசுவர்யத்தைக் கொடுப்பவர்.

3 உலகமாதாவான லக்ஷ்மியை மார்பில்வஹிப்பவர்.

4 எல்லாச்சக்திகளும் வைக்கப்படும் இடமாயிருப்பவர்.

5 ஐசுவர்யமுள்ளவர்களிடத்தில் நித்யமாக வஸிப்பவர்.

6 அமுதம் கடைந்தகாலத்தில் தேவாஸுரர்கள் எல்லாரையும்விட்டு லக்ஷ்மியினால் ஸ்வயம்வரம்செய்யப்பட்டபதி; அல்லது, 'ஸ்ரீ' என்னப்படும் பராசக்திக்குப்பதி.

7 ரிக், யஜுஸ், ஸாமம் என்னப்படும் செல்வம்பொருந்தின பிரம்மாதி தேவர்க்கும் தலைமைபானவர்.

வர்கள் எல்லாரிலும் சிறந்தவர்; மகாலக்ஷ்மியின் பூர்ணகடாக்ஷம் பெற்றவர் பகவான்; அவர்கடாக்ஷலேசம்பெற்றவர்கள் மற்றத்தேவர்கள் என்பது.

ஸ்ரீமாந் (22)= [1]அழகும் ஒளியும் பொருந்தி மனத்தைக்கவரும் திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவர்; மனிதனும் ஸிம்மமும் சேராச்சேர்க்கையாகவிருப்பினும் அவை ஒருசரீரத்தில் பொருந்தியிருக்கும் அழகிலுல் ஸேவிப்பவருக்கு மனமகிழ்ச்சியை உண்டாக்கி உலகத்தைக் காப்பவரென்பது.

ஸ்ரீமாந் (180)= [2]எப்பொழுதும் நம்மிருமனிக்குத் தகுந்த திவ்யாபரணங்களின் சிறப்புள்ளவர்.

ஸ்ரீமாந் (222)= [3]தாமரைக்கண்ணென்றுசொல்லப்பட்டசிறப் பிலக்கணத்திலுல் மத்ஸ்யாவதாரத்திலும் நமது பரமேஸ்வரமகிமை வெளிப்படையாகத் தோற்றும்படியிருப்பவர்.

ஸ்ரீவத்ஸவக்ஷஸ்= தம்மால் நியமிக்கப்படும் உலகம் அனைத்தையும்காட்டிலும் வைலக்ஷண்யத்தைத் தோற்றுவிப்பதாகிய திருமகள் கணவரென்னும் சிறப்புக்குக்குறியான ஸ்ரீவத்ஸமென்னும் அடையாளத்தைத் திருமார்பிலுடையவர்.

ஸ்ரீவாஸர்= [4]திருமகள் எக்காலமும் யதேச்சையாக விளையாடுவதற்குரிய கற்பகவனமாயிருப்பவர்; காலபுருஷனுக்கே கற்பகமரமாயிருக்கிறதென்று கருத்து.

ஸ்ரீபதிர்= [5]பிராட்டியினுலேயே தமக்குப் புகழும் மஹிமையும் உண்டாக்கப்பட்டிருப்பவர்.

ஸ்ருங்கீ= [6]அஹிம்ஸையென்னும்விரதத்தை யென்றுவிப்பதற்காகக் கொம்புபோல மயில்தோகையைக் கையிலவைத்திருப்பவர்.

ஸ்ருதிஸாகரர்= குணங்களைஉரைக்கும்ஸ்ருதிகளுக்கு ஸ்ருதிகளுக்குக்கடல்போல முடிவுபெறும்இடமாயிருப்பவர்.

ஸ்ரேயஸ்ஸ்ரீமாந்= [7]எல்லாப்புருஷார்த்தங்களுக்காகவும் எல்லா

---

1 திருமார்பில் திருமகள் நித்யமாகப்பொருந்தியிருக்கப்பெற்றவர்.

2 நிரம்பின ஐசுவர்யமுள்ளவர்.

3 சிறந்த ஒளியுள்ளவர்.

4 மார்பில் லக்ஷ்மி அகலாமல் வஹித்திருக்கப்பெற்றவர்.

5 எல்லாப்பிராணிகளுக்கும் பலவித ஐசுவர்யங்களையளிப்பவர்.

6 ப்ரளயக்கடலில் கொம்புள்ள மத்ஸ்யரூபம்எடுத்தவர்.

7 இரண்டுநாமம். ஸ்ரேயஸ்= நித்யஸுகமான பிரம்மாநந்தரூபமாயிருப்பவர். ஸ்ரீமாந்= எல்லாச்சிறப்புக்களும் தம்மிடத்திலேயே பொருந்தியிருக்கப்பெற்றவர்.

ராலும் ஆஸ்ரயிக்கப்படத்தக்கபிராட்டியானவள் தம்மிடத்தில் எப்போதும் சேர்ந்திருப்பவர்.

ஸ்ரேஷ்டர்= [1]நித்யஸூரிகள் இடைவிடாமல் அனுபவித்துக் களித்துச்செய்யும் ஸ்தோத்திரங்களினால் மிகவும் ஆராதிக்கப்பெறுகிறவர்.

ஸ்கந்ததரர்= [2]அஸுரர்களைச் சோஷிக்கச்செய்யும் தேவஸேநாபதியான குமாரக்கடவுளையும் தாங்குகிறவர்; அவரும் இவருக்குப்பரிவாரம்என்பது.

ஸ்கந்தா= [3]அஸுரர்முதலானவர்களை வத்றச்செய்பவர்.

ஸ்தவ்யர்= [4]ஸ்தோத்திரத்துக்குரியவர்; எந்தக்குணங்களையிட்டி எப்படிப்புகழ்ந்தாலும் அவை பொய்யாகாமல் பொருந்தியிருப்பவர்.

ஸ்தவப்ரியர்=யாராலும் எந்தப்பாஷையாலும் எவ்வகையாலும் சொற்பொருட்பிழைஇருந்தாலும்செய்யப்படும் ஸ்தோத்திரங்களைக் குணங்களைச்சொல்வதாகஎண்ணி அன்புடன்அங்கீகரிப்பவர்.

ஸ்தவிரர்= [5]எக்காலமும் நிலையாயிருப்பவர்; பால்முதலியனதயிர்முதலியனவாகப்பரிணமமாவதற்குக் காலவரையை எதிர்பார்ப்பதுபோலன்றி ஜகத்ஸ்ருஷ்டியை நினைத்தபோதெல்லாம்செய்யும் ஸ்வதந்த்ரமுள்ளவர்; ஆனால், காலத்தைப்ரதிக்ஷிப்பது அவருக்கொருலீலைமட்டும்என்பது.

ஸ்தவிஷ்டர்(53)=மிகஸ்தூலமாயிருப்பவர்;ஸூக்ஷ்மமானமூலப்ரக்ருதிஅடங்கினரூபத்திலிருந்து தமது ஸங்கல்பத்தினால் தேவர், மனிதர், ப்ருக்ஷங்கள் ஸ்தாவரங்கள்ஆகியபலதேஹங்களும் அவற்றிலுள்ளபுலன்களும் அவற்றிற்குப்புலப்படும்சப்தாதிவிஷயங்களும் இவையடங்கினபதினான்குலகங்களும் இவையெல்லாம்உள்ளடங்கியப்ரம்மாண்டமும் அதையும் மூடிக்கொண்டிருக்கும்விரிவானப்ரக்ருதிமண்டலமுமாகப் பலவிரிவுகளை அடைந்திருப்பவர்.

---

1 எல்லாவற்றிலும் மேற்பட்டவர்.

2 தர்மமார்க்கத்தைத் தாங்குகிறவர்.

3 தாம் அமுதமாகப்பெருகுகிறவர்; அல்லது, வாயுரூபியாக எல்லாவற்றையும்உலர்த்துபவர்.

4 எல்லாராலும் துதிக்கப்பெறுகிறவர்; தாம் யாரையும் துதியாதவர் என்பது.

5 'ஸ்தவிஷ்டோத்ருவர்' ஒருநாமம். பழமையாகஅல்லது கிழவராகஇலைபெற்றிருப்பவர்.

ஸ்தவிஷ்டர் (437)= [1]நக்ஷத்ரமண்டலமாகிய சிம்சுமாரசக்ர ரூபியாக மிக்க விரிவாயிருப்பர்.

ஸ்தாணு = ஸ்திரமானவர்; அழியாக பலன்களைத்தரும் அனைக்ரஹமுள்ளவர்; அல்லது, தாம்செய்க அனுக்ரஹத்தில் திருப்தியடையாமல் மேன்மேலும் அனுக்ரஹிப்பவர்.

ஸ்தாகதர் = [2]கீழ்ப்பட்டவனை த்ருவனென்னும் ராஜகுமாரனுக்கு அழியாததான த்ருவபதம் என்னும்உயர்பதத்தை அளித்தவர்.

ஸ்தாவரஸ்தாணு = [3]கல்பாந்தகாலத்தில் கர்மம் நிலைநிறுத்தப்பட்டபிறகு ஒழிவாயிருப்பவர்.

ஸ்திரர்= [4]தாம் பக்தர்களிடத்தில்வைக்க அன்பு அவர்கள் செய்யும் அபசாரங்களாலும் விலக்கலுண்ணுகபடியிருப்பவர்.

ஸ்துதர்= [5]ஆதிசேஷன், வேதபுருஷன், அனந்தகருடவிஷ்வக்ஸேனர்முதலிய கணக்கில்லாதநித்யஸூரிகளாலும் ப்ரம்மாதிதேவர்களாலும் நம்போன்றமனிதர்களாலும் எப்போதும் அவரவர் இஷ்டம் நிறைவேறுவதற்காக ஒரேரீதியாகத் துதிக்கப்பெற்றவர்.

ஸ்தூலர் = பேருத்திருப்பவர்; ஒரிடத்திலிருந்தே எல்லாப் பொருள்களையும்தொடத்தக்கவர்; நிலம்முதலியிருந்தே சந்த்ரனைத் தொடும்சக்தியாகிய ப்ராப்திஎன்னும் ஐஸ்வர்யம் சொல்லப்பட்டது.

ஸ்தோத்ரம் = அவரைத்துதிக்கப்பெறுவதும் அவர் அநுக்ரஹத்தினாலேயேஉண்டாவதனால் அவரே ஸ்தோத்ரமாகவுமிருப்பவர்.

ஸ்தோதா= [7]தம்மைத்துதிப்பவரைத் தாம் துதிக்கும்சுன்மையுள்ளவர்:

ஸ்பஷ்டாக்ஷரர்= [8]தமதுமகிமையைத் தெளிவாக வெளிப்படுத்தும்வேதாக்ஷரங்களை வெளிப்படுத்தினவர்.

---

1 விராட்ரூபியாக மிகவிரிவாயிருப்பவர்.

2 த்ருவன்முதலானவர்களுக்கும் அவரவர் கர்மங்களுக்கேற்ற அதிகாரங்களைக் கொடுப்பவர்.

3 தாம்நிலைபெற்றவராகவும் பூமிமுதலியவை தம்மிடத்தில் நிற்கும்படியாகவுமிருப்பவர்.

4 விகாரமற்றவர்.

5 'ஸ்துதி' என்னும்பாடத்தில் துதிக்கும்செய்கையும் தாமேயாயிருப்பவர்.

6 எல்லாமாகவும் தாமிருப்பதனால் பெரியஉருவமுள்ளவர்.

7 துதிப்பவரும் அவரே.

8 உதாத்தஸ்வரமுள்ளஓங்காரமென்னும்அக்ஷரத்தினால் வெளியிடப்படும் மகிமையையுடையவர்.

ஸ்ரக்வீ = திர்யகவதாரங்களிலும் பஞ்சபூதஸூக்ஷ்மங்கள்சேர்ந்ததான வைஜயந்தியென்னும்வனமாலையை எக்காலமும் அணிந்திருப்பவர்.

ஸ்ரஷ்டா (595) = [1]முக்தியையிரும்புகிறவர்களை ஸம்ஸாரத்திலிருந்துவிடுவித்து உலகவாழ்க்கையில்விருப்பமுள்ளவர்களை அவரவர்கள் வெகுகாலமாகச் சேர்த்திருக்கும் பலவகைப்புண்யபாபங்களாகியகர்மங்களுக்குத்தக்கபடி சரீரமுதலானஸாதனங்களுடன் கூட்டிப்படைப்பவர்.

ஸ்ரஷ்டா (990) = உலகங்களைப்படைப்பவர்; பரவாஸுதேவஸ்வரூபரும் இவரேஎன்பது.

ஸ்வங்கர் = [2]பிராட்டியும்அடிக்கடிஆசைப்படத்தகுந்த திவ்யமங்களவிக்ரஹமுள்ளவர்.

ஸ்வத்ருதர் = [3]தம்மாலேயே தாம் தாங்கப்படுகிறவர்; இந்தமகிமை இயற்கையாகஅமைந்ததாயிருப்பவர்: யோகிகளுக்கு மந்த்ரம், ஔஷதி, தவம், த்யானம்இவற்றினல்ஏற்படும்ஐசுவர்யங்கள்போலன்றி இயற்கையினல் அமைந்திருப்பதென்பது.

ஸ்வயஞ்சாதர் = [4]ஒருவருடையப்ரார்த்தனையை எதிர்பாராமல் தாமே அவதரிப்பவர்.

ஸ்வயம்பூ = [5]கர்மங்களடியாகவரும் ஜன்மங்கள்போலன்றித் தமது மகிழ்ச்சியேகாரணமாகக்கொண்டு தமக்கேசிறப்பாயுள்ளசுத்தஸத்வமயமானதேகத்தைத் தேவமனிதரூபங்களாயமைத்துக்கொண்டு தாமே தம்மிச்சையாக அவதரிப்பவர்.

ஸ்வவசர் = [6]தம்மால்மயக்கப்பட்ட அஸுரர்கள் தூங்கினபோது தம்அடியார்களாயுள்ளதேவர்களுடன் தம்மிஷ்டப்படிமகிழ்ந்திருப்பவர்.

ஸ்வஸ்தி = தாமே மஹாமங்களமூர்த்தி.

1 ஆதிகாலத்தில் எல்லாவற்றையும்படைத்தவர்.

2 அழகியஅங்கங்களையுடையவர்.

3 தம்மாலேயேதரிக்கப்படுகிறவர்; தம்மகிமையே தமக்குஆதாரமாயிருப்பவர்என்பது.

4 தமக்குத் தாமே கர்த்தாவாகஜனித்தவர்; நிமித்தகாரணமும் தாமேஎன்பது.

5 தாமேஉண்டானவர்; அல்லது, எல்லாவற்றிற்கும்மேலேஇருப்பவர்; அல்லது, ஸ்வதந்த்ரர்.

6 ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்குக்காரணமாயிருப்பதனல் ஸ்வதந்த்ரமாயிருப்பவர்.

ஸ்வஸ்திக்ருத் = [1]தம்மைக் குணங்களோடுகூட அநுபவிக்கும் படியாக முக்தர்களுக்கு ஆசீர்வாதம்செய்பவர்.

ஸ்வஸ்திதர் = [2]மஹாமங்களத்தைக் கொடுப்பவர்.

ஸ்வஸ்திதக்ஷிணர் = [3]தமக்குக் கைங்கர்யம் செய்யத்தகுதியான திவ்யசரீரம் சக்திமுதலிய அநேகம்கண்மைகளையும் தம்மைத்தருவதாகிய தீர்க்கஸத்ரயாகத்தில் நம் அடியார்களாகிய ரித்விக்குக்களுக்குத் தக்ஷிணையாக அளிப்பவர்.

ஸ்வஸ்திபுக் — [4]எல்லாமங்களங்களையும் அழியாமலிருக்கும்படி காப்பாற்றுகிறவர்.

ஸ்வக்ஷர் = [5]திருமகள்வடிவழகென்னும் அமுதக்கடலில் கரைகண்ட திருக்கண்கள்முதலான திவ்யேந்திரியங்களையுடையவர்.

ஸ்வாங்கர் = [6]தமதுஸாலோஸ்வரத்தன்மைக்குச்சிறப்பிலக்கணங்களான சத்ரசாமரமுதலான ராஜ்யாங்கங்களையுடையவர்.

ஸ்வாபகர் = [7]மோஹினி அவதாரத்தில் அழிக்கப்படாமல் மிகுந்தவர்களையும் அழகியபுன்சிரிப்பு ஒளியினாலே புருவங்களசைத்தல் முதலிய விளையாட்டுக்களினால் தூங்கவைப்பவர்; அவர்கள் தங்களை மறந்துபோகும்படிசெய்பவர்என்பது.

ஸ்வாபாவ்யர் — [8]தமதுபொருள்களாகிய ஆத்மாக்களினால் ப்ரணவத்தைச்சொல்லி ஸ்வாமியாகவந்தடைந்து தியானிப்பதற்குரியவர்; 'ஆத்மாக்களினால் ஸ்வபாவமாக அமைந்தஸ்வாமியாகநினைக்கப்படுகிறவர்' என்பது நிர்வசனம்.

ஸ்வாஸ்யர் = [9]சிறந்தஇருப்பையுடையவர்; முக்தியடைந்த

---

1 மங்களத்தைச்செய்பவர்

2 பக்தர்களுக்கு மங்களத்தைக்கொடுப்பவர்.

3 மங்கள நமமாகவ்நத்தி அடைபவர்; அல்லது, மங்களத்தைக்கொடுக்கத்திறமையுள்ளவர்; அல்லது, மங்களத்தை விரைந்துகொடுக்கும் தன்மையுள்ளவர்.

4 மங்களத்தைஅநுபவிப்பவர்; அல்லது, மங்களத்தைக்காப்பாற்றுகிறவர்.

5 தாமரைமலருக்கொப்பான அழகியகண்களையுடையவர்.

6 காரியங்களையும் காரணங்களையும் அவ்வவற்றின் அவயவங்களையும் படைப்பவர்.

7 ப்ராணிகளை மாயையினால் ஆத்மஜ்ஞானமின்றித் தூங்கச்செய்கிறவர்.

8 நித்யஸ்வரூபராதலின் எப்போதும் ஒரேஸ்வபாவத்தோடேஇருப்பவர்.

9 தாமரைமலர்போல அழகியமுகமுள்ளவர்; அல்லது, வேதம்வெளிப்பட்ட சிறந்தமுகமுள்ளவர்.

ஆத்மாக்களின்நிலைமை அதற்குமுன் அவித்தையினால் மூடப்பட்டுக் கெட்டிருந்தது ; அவ்வாறன்றிப் பரமாத்மாவின் ஐஸ்வர்யமாகிய நிலைமை எக்காலமும் பரிசுத்தமாகச்சிறந்திருப்பது.

ஸ= [1]கிருஷ்ணவதாரத்தில்சிறுவர்முதல்யாவருக்கும் தம்மைப் பற்றிய நிச்சயஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிறவர்.

ஸங்க்ரஹர்= [2]பக்தர்களால் எளிதில்அடையப்படுகிறவர்.

ஸங்கர்ஷணர்= [3]சேதனசேதனங்களைத் தம்மிடத்தில் ஒன்று சேரும்படி ஆகர்ஷிப்பவர்.

ஸத்= [4]ஒருகாலும் உற்பத்திநாசங்களின்றி நித்யமாயிருப்பதனாலும் திருக்கல்யாணகுணங்கள்பொருந்தியிருப்பதனாலும் ஸத் என்னும்தர்மத்திற்கு ஆதாரமாயிருப்பதனாலும் ஸத் என்றுசொல்லப்படுகிறவர்.

ஸத்க்ருதர்= [5]ஸாதுக்களால்பூஜிக்கப்படுகிறவர் ; சபரிமுதலானவர்கள் ப்ரத்தையோடுகொடுத்தசிறியபொருள்களையும்தம்மகிமைக்குத்தகுதியானவற்றைப்போல அங்கீகரித்து ஸந்தோஷமடைகிறவர் என்பது.

ஸத்க்ருதி= [6]தயிர்வெண்ணெய்திருடினது, உரலில்கட்டுப்பட்டது, நடந்தது, ராஸக்ரீடைசெய்தமுதலிய குழந்தைவிளையாட்டுச் செய்கைகளும் ஸம்ஸாரவிலங்குகள்எல்லாவற்றையும்தரிப்பவைகளாகச் சிறந்திருப்பவர்.

ஸத்கதி= [7]அவதரிக்கும்போதே அஸுரர்களால்விளையும்ஆபத்துக்களைஒழித்து ஸாதுக்களைக்காப்பாற்றுகிறவர்.

ஸத்கர்த்தா=ஸத்புருஷர்களைப்பூஜிப்பவர்.

ஸத்கீர்த்தி=லௌலப்யமிருப்பதனாலேயே யதார்த்தமானபுகழ் பெற்றவர் ; எந்தக்குணம்சொன்னாலும் அவரிடத்தில் பொருந்தும் ; அவரிடத்திலுள்ளகுணங்கள் எவ்வளவோ அவ்வளவும் அதற்குமேம

---

1 ஸுவர்=ஸோமயாகருபியாயிருப்பவர்.

2 ப்ரளயகாலத்தில் எல்லாவற்றையும்ஸம்ஹரிப்பவர்.

3 ஸங்கர்ஷணஶப்தார் ஒருநாமம் ; ஸங்கர்ஷணர்=ஸம்ஹார காலத்தில் ப்ரஜைகளைச் சேர்த்துஇழுப்பவர் ; அச்யுதர்=தம்ஸ்வரூபத்தைவிட்டுத் தவறாதவர்.

4 சுத்தப்ரம்மம்.

5 யாவராலும்பூஜிக்கப்படும் ப்ரம்மதேவர்முதலானவர்களாலும் பூஜிக்கப்பெறுகிறவர்.

6 சிறந்தஸ்ருஷ்டிமுதலானசெய்கைகளையுடையவர்.

7 ப்ரம்மஜ்ஞானிகளால்அறியப்படுகிறவர் ; அல்லது, உயர்ந்தஞானமுள்ளவர்.

லும் யாராலும்சொல்லமுடியாததால் அவருடையகீர்த்தியெல்லாம் யதார்த்தமென்பது.

ஸத்தா = [1]தாமே ஸாதுக்களுக்குஇருப்பாயிருப்பவர்.

ஸத்பதாசாரர் = [2]தமக்கடிமைசெய்வதாகிய நன்மார்க்கத்தில் பிரஹ்லாதன்முதலானபக்தர்களே ப்ரவ்ருத்திக்கச்செய்பவர்.

ஸத்பராயணம் = [3]பாண்டவர்முதலியஸாதுக்கள் முடிவாகச் சேரும் இடமாயிருப்பவர்; 'ஸதபராயணர்' என்னும் பாடத்தில் ஸாதுக்களையே தமக்கு முக்கியஆதாரமாக வைத்திருப்பவர்.

ஸத்பூதி = [4]ஸாதுக்களுக்குப் புத்ரன், மித்ரன், பக்து, தாதன், ஸாரதிமுதலிய எல்லாவகைஉதவிகளாகவும் தாமேஇருப்பவர்.

ஸத்யதர்மபராக்ரமர் = தர்மங்களென்னப்படும் தமதுகல்யாண குணங்களும் பராக்ரமங்களென்னப்படும் திவ்யசேஷ்டிதங்களும் வீண்போகாமல் உலகத்தை உய்விக்கும்படியிருப்பவர்.

ஸத்யதர்மபராயணர் = [5]ஒருகாரணமுமின்றி சாஸ்திரவிதி யென்றுமாத்திரம் வாத்விகர்களான அதிகாரிகளிஞல்செய்யப்படும் உத்தமமானநிவ்ருத்திதர்மத்தை மிகப்பிரியமாகஅங்கீகரிப்பவர்.

ஸத்யதர்மா = [6]ஆரம்பமுதல் தம்மைஅடையும்வரையிலும் தம் தர்மமாகிய சரணாகதரக்ஷணத்தைப் பொறுப்பாகநடத்துகிறவர்.

ஸத்யபராக்ரமர் = [7]மனுமுதலானஸாதுக்கள்விஷயத்தில் தம் முடையசக்தியை வஞ்சனையில்லாமல் உபயோகித்தவர்.

ஸத்யமேதஸ் = [8]ஆயர்கள் வஸுதேவர்முதலியோர்களும் தாமும் "ஸஜாதியர்களே"என்னும்எண்ணம் வெளிக்குக்காட்டுதல்மாத்திரமின்றித் தம்முள்ளத்திலும் உண்மையாகஇருக்கும்தன்மையுள்ளவர்.

---

1 பேதமில்லாதஜ்ஞானஸ்வரூபமாயிருப்பவர்.

2 ஸாதுக்களின்மார்க்கங்களாகியஸதாசாரங்களைத் தாமும் அனுஷ்டிப்பவர்.

3 தத்வஜ்ஞானிகளுக்குச் சிறந்தகதியாயிருப்பவர்.

4 ஸத்தாயிருக்கும் பரமாத்மாவாயிருந்தே பலபொருள்களாகத்தோற்று கிறவர்.

5 ஸத்யவாக்யத்தையும் சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட தர்மத்தையும் முக்கியமாகவுடையவர்.

6 யதார்த்தமானஞானமுதலியகுணங்களையுடையவர்; அல்லது, எல்லா வற்றையும் ஸரியாகஅறிபவர்.

7 உண்மையானசக்தியுள்ளவர்.

8 யதார்த்தஞானமுள்ளவர்.

ஸத்யர் (107) = [1]தம்மையடித்தஸத்புருஷர்களின் அபீஷ்டங்களை ஸாதிப்பவர்.

ஸத்யர் (213) = [2]ஜலப்ரளயகாலத்தில் தம்மை ஆச்ரயித்த மனு முதலான ஸத்புருஷர்களுக்கு உபகாரம்செய்தவர்.

ஸத்யர் (873) = [3]ஸாத்விகசாஸ்திரங்களினுல்சொல்லப்படுவதனுல் உண்மையானமகிமையுள்ளவர்; அல்லது, ஸத்யத்துக்கு ஆதாரமாயிருப்பவர்.

ஸத்யஸந்தர்= [4]சொன்னசொல்தவறுதவர்.

ஸத்ரம்= [5]பலயஜமானர்களால் நீண்டகாலம்செய்யப்படும்ஸத்ரயாகத்தினுல் எப்போதும்ஆராதிக்கப்பட்டிருப்பதனுல் ஸத்ரரூபியாயிருப்பவர்.

ஸத்வவாந்= [6]மோக்ஷத்திற்குக்காரணமாகிய சுத்தஸத்வத்தை அடைந்திருப்பவர்.

ஸத்வஸ்தர்= [7]பக்தர்ஹ்ருதயத்திலிருப்பவர்; சரணுகதர்களின் உள்ளத்திலிருந்து யமதண்டனைவராமலிருக்கச்செய்பவர்என்பது.

ஸதாம்கதி (186)= [8]தமதுலீலையாட்டுவியர்பாரங்களாலும் பக்தர்களுக்கு இனியதையேசெய்பவர்.

ஸதாம்கதி (451)= [9]வைராக்யமடைந்து ஜீதேந்திரியர்களான ஸாதுக்கள்சேருமிடமாயிருப்பவர்.

ஸதாமர்ஷீ= [10]எக்காலமும் தமக்கு முக்தன்பிரதிஉபகாரமாகச்

---

1 மாறுதரூபமுள்ளவர்; அல்லது, சேதனுசேதனரூபமாயிருப்பவர்; அல்லது, ஸத்தென்னப்படும் ப்ரா[illegible]னுகவும் த்யஸ்தனப்படும்அன்னமாகவும் யம் என்னப்படும் ஆதித்தனுகவுமிருப்பவர்; அல்லது, ஸாதுக்களுக்கு உதவி செய்பவர்.

2 ஸத்தியவசனமென்னும்தர்மரூபி.

3 ஸத்துக்களுக்குஉபகாரம்செய்பவர்.

4

5 ஸத்ரயாகமாயிருப்பவர்; அல்லது, ஸாதுக்களைக்காப்பாற்றுகிறவர்.

6 பராக்ரமமுள்ளவர்.

7 எல்லாவற்றையும்பிரகாசிக்கச்செய்யும் ஸத்வகுணத்தை முக்யமாகக் கொண்டிருப்பவர்; அல்லது, எல்லாப்பிராணிகளிடத்திலுமிருப்பவர்.

8 வைதிகர்களானஸாதுக்களுக்குப் புருஷார்த்தங்கிடைக்கக் காரணமாயிருப்பவர்.

9 மோக்ஷத்தைவிரும்புகிறவர்களுக்கு ஒரேஆதாரமானவர்.

10 நல்லகாரியம்செய்து தமக்குஅனுகூலமாகவருகிறவர்களின் குற்றங்களைப் பொறுப்பவர்.

செய்யும்கைங்கரியங்களைப் பொறுத்துக்கொண்டும் நிறைவேற்றிக் கொண்டுமிருப்பவர்.

ஸதாயோகீ= [1]பக்தர்களுக்கு ஸம்ஸாரநிவருத்தி செய்யும்விஷயத்தில் எப்போதும் ஊக்கமுள்ளவர்.

ஸந்தர்= [2]ஆஸ்ரிதர்கள்எல்லோரையும் பரிரக்ஷிசெய்பவர்; அல்லது, தம்மையடுத்தவர்களுக்குத் தாம் உளராயிருப்பவர்; அல்லது, ஆஸ்ரிதர்களுக்கு இஷ்டங்களைக்கொடுப்பவர்.

ஸந்தாதா= [3]பிரஹ்லாதன்முதலான பக்தர்களைத் தம்மிடம் சேர்த்துக்கொள்பவர்.

ஸந்திமாந்= [4]பக்தர்களுக்குத் தம்முடைய ரக்ஷகத்வத்தை எக்காலமும் நீங்காமலிருக்கச் செய்பவர்.

ஸந்நிவாஸர்= [5]மானிட நடக்கைகளிலிருந்தும் பாபகர்முதலிய ஸாதுக்கள் வந்து இளைப்பாறுமிடமாயிருப்பவர்.

ஸந்யாஸகிருத்= [6]ஸாத்விகஸந்யாஸமாகியபற்றுவிடுதலைமுன்னிட்டுச் செய்யப்படும் பகவதாராதனரூபமான நற்கர்மங்களைச் செய்விப்பதனால் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் அறுப்பவர்; இதுதான் அவர் சிகித்ஸைசெய்யும் முறை; தன் விஷயமானபொறுப்பை ஸ்வாமியிடம் ஒப்புவிப்பதுதான ஸந்யாஸம்; அதுதான் ஸம்ஸாரத்துக்குச் சிகித்ஸை.

ஸமாத்= [7]முக்தரால் பங்கிட்டுக்கொண்டு அநுபவிக்கப்படுகிறவர்.

ஸமாதமதமர்= [8]எக்காலமும் இருப்பவராயிருப்பவர்விவாருகாலமும் அப்போது புதிதாகக் கிடைத்தவர்போல ஆவல்கொண்டு அநுப

ஸப்தவாஹநர்= [9]காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், ப

1 எப்போதும் ஸ்வரூபம்ப்ரகாசிக்கும்தன்மையுள்ளவர்.

2 கல்லொழுக்கமுள்ளஸாதுக்களின்உருவமாக வித்தையையும் விநயத்தையும் விருத்திசெய்துகொண்டிருப்பவர்.

3 பிராணிகளுக்கு விரோதப்பயன்களைச் சேர்ப்பிப்பவர்.

4 விரோதப்பயன்களையநுபவிப்பவரும் தாமாயிருப்பவர்.

5 வித்வான்களுக்கு ஆதாரமாயிருப்பவர்.

6 தான்காவதான ஸந்யாஸாச்ரமத்தை உண்டுபண்ணினவர்.

7 அநுதியானகாலரூபியாயிருப்பவர்.

8 பழமையாயிருக்கும் ப்ரம்மாதிதேவர்களுக்கும் பழமையாயிருப்பவர்.

9 ஏழுகுதிரைகளையுடைய ஸூர்யனுயிருப்பவர்; அல்லது, ஸப்தமென்னும் ஒருதேர்க்குதிரையைப்யுடைய ஸூர்யனுயிருப்பவர்.

பங்க்தீ, த்ரிஷ்டுப், ஜகதீஎன்னும் ஏழுசந்தஸுகளோடுகூடிய வேத மந்த்ரங்களுக்கு அதிஷ்டான தேவதைகளாகிய ஸூர்யனது தேர்க் குதிரைகள் ஏழையும் தமக்கு வாகனங்களாகவுடையவர்; ஸூர்ய மண்டலத்திலிருப்பவர் என்பது; அல்லது, ஸப்தவாயுஸ்கந்தங்களையும் நடத்துகிறவர்; அல்லது, தாங்குகிறவர்.

ஸப்தஜிஹ்வர்=காளி, கராளி, மனோஜவை, ஸுலோஹிதை, ஸுதூம்ரவர்ணை, ஸ்புலிங்கினி, விஸ்வரூபிஎன்று ஏழுஜ்வாலைகளான ஏழுநாக்களையுடைய அக்னிபகவானுமிருப்பவர்; அல்லது, ஹிரண்யை, கனகை, ரக்தை, கிருஷ்ணை, ஸுப்ரபை, அதிரக்தை, பஹுரூபை என்னும் ஏழுஜ்வாலைகளாகிய ஏழுநாக்களையுடைய அக்னிரூபி; ஏழுநாவுள்ள அக்னியை முகமாகக்கொண்டு எல்லாத்தேவதைகளைக் குறித்தும் ஹோமம் செய்யப்படும் ஹவிஸுகளைத் தாமே புசிப்பவர் என்பது.

ஸப்தைதஸ்= [1]ஔபாஸநம், வைஸ்வதேவம், ஸ்தாலீபாகம், அஷ்டகை, மாஸஸ்ராத்தம், ஈசானபலி, ஸப்தபலியென்னும் ஏழு பாகயஜ்ஞங்களையும் அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாசம், பிண்ட பித்ருயஜ்ஞம், பசுபந்தம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், ஸௌத்ரா மணிஎன்னும் ஏழுஹவிர்யஜ்ஞங்களையும் அக்னிஷ்டோமம், அத்யக் னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசம், வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம்என்னும்ஏழுஸோமஸம்ஸ்தைஎன்னும்யாகங்களையும் பிரகாசிக்கச்செய்வனவாகிய கிரியைகள் எல்லாவற்றையும் அடைகிற வர்; அல்லது, அரசு, அத்தி, பலாசு, வன்னி, விகங்கதம், அசனிஹ தம், புஷ்கரபர்ணம்என்னும் ஏழுவிதமானஸமித்துக்களால் செய்யப் படும்யாகங்களை அடைகிறவர்.

ஸம்ப்ரமார்த்தகர்= [2]தம்மைஉபாஸனைசெய்வதனால்அந்தப்ரகிருதிஎன்னும்இருளை முழுதும்அழிப்பவர்.

ஸம்பவர்= [3]பொற்புதையல்போலத்தம்மை மறைத்துவைத்துக் கொண்டிருந்தும் நேராகஅனுபவிக்க ஆவல்கொண்டு பிரார்த்திப்பவர் களுக்குத் தம்மைவெளிப்படுத்துவதற்காகக் காலதேசங்கள்தோறும் பலஅவதாரங்களைச்செய்பவர்.

1 ஏழுஜ்வாலைகளையுடைய அக்னிரூபியாயிருப்பவர்.

2 ருத்ரன் யமன்முதலிய தமதுபரிவாரங்களினால் உலகங்களை அழிப்பவர்.

3 துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலனங்களுக்காக ஸ்வேச்சையாய் அவதாரம் செய்பவர்.

ஸம்மிதர்= [1]தம்மை ஆஸ்ரிதர்களுக்கு அடங்கியிருப்பவராகவும் நினைக்கும்படி உட்பட்டிருப்பவர்.

ஸம்வ்ருதர்= [2]தமஸ்ஸன்னப்ரதிம்ப்ரக்ருதியினால் அறிவுமழுங்கினவர்களுக்குப் பிரகாசியாமல்மறைந்திருப்பவர்.

ஸம்வத்ஸரர் (92)= [3]பகவத்ஸ்வரூபத்தின் அறிவுண்டானபோதே அடியார்களைக் கைதூக்கி மேன்மைப்படுத்துவதற்காக அவர்களிடத்தில் சேர்ந்துவஸிப்பவர்.

ஸம்வத்ஸரர் (423)= [4]ஸம்ஹாரத்துக்குரியக்ருஷிக்ரமத்துடன் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு பாதாளலோகத்தில் ஆதிசேஷன் மேலிருப்பவர்.

ஸம்ஸ்தாநர்= [5]எல்லாம் தம்மிடத்தில் முடிவுபெறும்படியிருப்பவர்.

ஸம்க்ஷேப்தா= [6]பிரவ்ருத்திநிவ்ருத்திமார்க்கத்திலிருப்பவர்களை இயற்கையாயுள்ள அறிவும் மகிமையும் குறுகும்படிசெய்யும் தன்மையுள்ளவர்.

ஸமயஜ்ஞர்= [7]அக்னிவாயுமுதலானதேவர்களுக்குத் தாம்கொடுத்த அதிகாரங்களின்வ்யவஸ்தையை அறிந்திருப்பவர்; ப்ரளயத்திற்குப்பின் மறுஸ்ருஷ்டியிலும் முன்போலவே அவ்வவ்வதிகாரங்களை அந்தஅந்தத்தேவர்களுக்குத் தவறாமல் அறிந்துகொடுப்பவர்; அல்லது, பக்தர்களுக்குத் தம்மைத்தருவதற்குக் காலம் அறிபவர்; அல்லது, அவர்களுக்கு அபயங்கொடுப்பதாகியவ்ரதத்தை மறவாதவர்.

ஸமர்= [8]பழகினவன் பழகாதவன் ஆவலதிகமாயுள்ளவன் ஆவல் [9]குறைந்தவனென்னும் வித்யாஸமுதலியவற்றைப்பாராமல் ஒரே விதமானகௌரவம் வைப்பவர்.

---

1 அளவிடப்படாதவராயிருந்தும் அளவிடப்பட்ட பொருள்களுடன் சேர்த்து அளவுள்ளவராகநினைக்கப்படுகிறவர்; அல்லது, அஸம்மிதர்=அளவிடப்படாதவர்.

2 அவித்தையினால்மறைக்கப்பட்டவர்.

3 ஸம்வத்ஸரமாகியகாலரூபி.

4 எல்லாப்பொருள்களும் தம்மிடத்தில்வஸிக்கும்படி செய்பவர்.

5 நிறந்தஸ்தானமுடையவர்.

6 விஸ்தாரமானலோகத்தைப் ப்ரளயகாலத்தில் சிறிதாகக் குறுக்குகிறவர்.

7 ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகாலங்களையறிபவர்; அல்லது, நித்யகர்மானுஷ்டானத்துக்குரிய ஆறுகாலங்களை, அல்லது, ஆறுவித்தாக்கங்களை அறிந்தவர்; அல்லது, தம்முடையஆராதனமானயாகம் யாவருக்கும் ஸமமாயிருக்கும்படிசெய்பவர்.

8 எக்காலங்களிலும் விகாரமற்றிருப்பவர்; அல்லது, லக்ஷ்மிபோடிருப்பவர்.

ஸமாத்மா = [1]ஆஸ்ரிதர்களின் ஏற்றத்தாழ்வுகளைப்பாராது எல்லாரையும் ஸமமாக மனத்தில் நினைப்பவர்.

ஸமாவர்த்தர் = [2]வ்யூகாவதாரங்களாகவும் விபவாவதாரங்களாகவும் இவ்வுலகத்தில் பலமுறை திரும்பிவந்துகொண்டிருப்பவர்.

ஸாதிஞ்சயர் = [3]ஜீவர்கள் தமக்குத் தாஸர்களாயிருப்பதை விட்டு ஸ்வதந்தரர்களாகநினைத்து விவாதப்படுவதாகிய கலகத்தை ஜயிப்பவர்; ஜீவாத்மாக்களுக்குத் தமதுமகிமையைத்தெரிவித்து அவர்கள், 'நாம் பகவானுக்கு அடிமையேயன்றி ஸ்வதந்தர்களல்லோம்' என்றறிந்து பந்திசெய்து உஜ்ஜீவிக்கச்செய்பவரென்பது.

ஸமீரணர் = [4]பக்தர்கள்விரும்பத்தக்க திவ்யதேஹத்தை உடையவர்.

ஸமீஹநர் = [5]ஸ்ருஷ்டிகாலத்தில் எல்லாரையும் தம்தம் அதிகாரங்களில் ஒய்விலலாமல் பிரவிருத்திக்கச்செய்பவர்.

ஸர்க்கர் = [6]த்ரிவிக்ரமாவதாரஞ்செய்து யாவரும் தம்திருவடித்தாமரைகளை எளிதில்பற்றும்படி தம்மையளிப்பவர்.

ஸர்வகர் = [7]அழிக்கப்பட்டவற்றையெல்லாம் தாம் அடைந்து பொறுப்பவர்; இதனால், பலம்சொன்னும்இரண்டாவதுகுணம் குறிப்பிக்கப்பட்டது; பலமாவது:—ஸம்ஹரிக்கப்பட்டவற்றையெல்லாம் தம்மிடத்தில்வைத்துத் தாங்குவதற்குரியவன்மை; இது ஞானத்துக்கு முக்கியமான அங்கம்.

ஸர்வகாமதர் = [8]யோகத்தில்தவறினவர்களுக்கும் அணிமாமுதலானஐச்வர்யங்களை அவர்களின் யோகத்திற்கு இடையூறுரூபலன்களாகக் கொடுப்பவர்.

ஸர்வசஸ்த்ரப்ருதாம்வர = நரகாஸுரன், ஜராஸந்தன்முதலானவர்களுடன் செய்தபோர்களில் பலவகைஅஸ்திரங்களைவிளையாட்டாக

---

1 விருப்புவெறுப்புமுதலியவற்றினால் மாறுதலமனமுள்ளவர்; அல்லது, எல்லாப்பிராணிகளிடத்திலும் ஒரே ஆத்மாவாகவிருப்பவர்.

2 ஸம்ஸாரசக்ரத்தைச் சுழற்றுகிறவர்.

3 யுத்தங்களில் ஜயிப்பவர்.

4 வாயுரூபியாக எல்லாவற்றையும் அசையும்படி செய்பவர்.

5 ஸ்ருஷ்டிமுதலானகாரியங்களைச் செய்வதற்காக நன்றாகப் பிரவர்த்திப்பவர்.

6 ஸ்ருஷ்டிக்கப்பட்டபிரபஞ்சரூபி; அல்லது, ஸ்ருஷ்டிகர்த்தா.

7 எங்கும்செல்லுகிறவர்: காரணமாதலால் கார்யங்களெல்லாவற்றையும் வியாபித்திருப்பவர்என்பது.

8 எல்லாப்பலன்களையும்கொடுப்பவர்.

விடக்கண்டு அவர்கள்மயங்கும்படிசெய்ததனால் அஸ்த்ரம்பிடித்தவ செல்லாரிலும் சிறந்தவர்.

ஸர்வத்ருக் (201)= [1]நண்பர்களையும் பகைவர்களையும் இரண்டு மல்லாதமத்யஸ்தர்களையும் அவரவருக்குத்தக்கபடி நடத்துவதன் பொருட்டு எல்லாவற்றையும் நன்குபார்த்தறிபவர்; அவர், எங்கும் முகமுள்ளவர்என்பது.

ஸர்வத்ருக் (577)= [2]மஹிமைகளனைத்தையும் கண்டறிகிறவர்.

ஸர்வதர்சநர்= [3]அவர்கள்நம்பும்படி தமதுமஹிமையனைத்தையும் காலக்ரமத்தில் புலப்படுத்துகிறவர்.

ஸர்வதர்சீ= [4]ப்ரவ்ருத்திதர்மங்களும் நிவ்ருத்தி தர்மங்களுமாகிய அனைத்தையும் பிரத்யக்ஷமாகப்பார்க்கும் தன்மையுள்ளவர்.

ஸர்வதஸ்சக்ஷு= [5]எல்லாவிடங்களிலுமுள்ள எல்லாருடைய கண்களுக்கும் புலப்படுகிறவர்; பிரத்யக்ஷமாகஅவதரித்தபின் ஸம்சயத்திற்கு இடமில்லைஎன்பது.

ஸர்வதோமுகர்= [6]எங்கும்வழியுள்ளவர்; பக்தர்களுக்கு இன்னவழியினாலேதான் அடையலாம், வேறுவழியால்கூடாதென்கிற நிர்ப்பந்தத்தைப்போக்கி, எந்தவழியையாகிலும் வியாஜமாகக்கொண்டு எளிதிலடையக்கூடியவர்; எதிர்ப்பக்கம்சேர்ந்தவிபீஷணர்முதலானவர்களையும் சரணமென்றுசொன்னஅளவில் அங்கீகரித்துக்காத்தது இதற்குஉதாரணம்.

---

1 ப்ராணிகளின்புண்யபாவங்களெல்லாவற்றையும் இயற்கையான அறிவினால் எப்போதும் பார்ப்பவர்.

2 'ஸர்வத்ருக்வ்யாஸர்' ஒருநாமம்; எல்லாவற்றையுமறிந்தவரும் வேதங்கள் புராணங்கள் முதலானவைகளை விஸ்தரித்தவருமான ப்ரம்மாவாயிருப்பவர்; வேதங்களைருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம்என நான்காகவும், அவற்றில் ருக்வேதத்தை இருபத்தொருசாகைகளாகவும், யஜுர்வேதத்தை நூற்றொருசாகைகளாகவும், ஸாமவேதத்தை ஆயிரம்சாகைகளாகவும், அதர்வணவேதத்தை ஒன்பதுசாகைகளாகவும் பிரித்தும் மற்றுமுள்ளபுராணங்களையும் தனித்தனியே பிரித்தும் செய்தவரான ப்ரம்மாவாயிருப்பவர்.

3 எல்லாவற்றையும் கண்களாகவுடையவர்.

4 எல்லாப்பிராணிகளின் நல்வினைகள் தீவினைகளனைத்தையும் இயற்கையாகஅறிகிறவர்.

5 தம்பேர்நிலைஞல் எல்லாவற்றையும் பார்ப்பவர்.

6 எங்கும்கண்களும் தலைகளும் முகங்களுமுள்ளஸ்வரூபமென்றுசொல்லுகிறபடி எங்கும் முகங்களையுடையவர்.

ஸர்வப்ரஹரணயுதர் = [1]தம்மைபடித்தவர்களுக்கு எல்லா அநிஷ்டங்களையும் வேரோடுகளையத்தக்கவையும், அளவற்றசக்தியுள்ளவையும், தமக்குத்தக்கஅணிகலங்களென்று நினைக்கத் தக்கவையுமான எண்ணிறந்த பலதிவ்யாயுதங்களையும் தரித்திருப்பவர்.

ஸர்வயோகவிநிஸ்ருதர் = [2]சாஸ்திரங்களால்அறியப்பட்டவையும் அவரவர்புத்தியினால் ஏற்படுத்தப்பட்டவையுமான உபாயங்கள்எல்லாவற்றினாலும் வேதரஹஸ்யங்களை அறிந்துகிரஹிப்பதுபோலவே எளிதில் கிரஹிக்கவும்அடையவும் கூடியவர்.

ஸர்வர் = [3]தமதுசரீரங்களாயுள்ள சராசரங்களனைத்தையும் ஆத்மாவாக வ்யாபித்து அவற்றையெல்லாம் தாமாகவேநினைத்து நடத்துகிறவர்.

ஸர்வலக்ஷணலக்ஷண்யர் = [4]மஹாபுருஷலக்ஷணங்களெல்லாவற்றினாலும் ஸ்ரீபதியென்றுஅறியத்தக்கவர் ; 'திருமார்பில் திருமகள் திருவடிப் பதிப்புக்களாகிய அடையாளங்களினால் பரதத்வமென்று அறியக்கூடியவர்' என்பது நிருக்தி.

ஸர்வவாக்பதிவரேச்வரர் = [5]பேசும்திறமையுள்ளவர்கள் எல்லாருக்கும் மேலானவர் ; வாதம்செய்வதிலும் பேசுவதிலும் கரைகண்டவர்என்பது.

ஸர்வவித் = [6]ஸம்ஹரிக்கப்பட்டவற்றையெல்லாம் திரும்பவும் படைத்துக் கார்யங்களானபிரபஞ்சங்களனைத்தையும் அடைகிறவர். இங்கு ப்ரத்யும்னன்என்னும்வியூகம் குறிப்பிக்கப்படுகிறது ; ஐச்வர்

---

1 எல்லாவிதமான ஆயுதங்களையுமுடையவர் ; ஆயுதங்களாகநினைக்கப்படாதகமுதலியவையும் அவருக்கு கரஹிம்மாவதாரத்தில் ஆயுதங்களாயின என்பது ப்ரஸித்தம்; இது, ஸத்யஸங்கல்பராதலின் ஸர்வேச்வரர்என்பதைக் குறிப்பித்தது.

2 எல்லாப் பற்றுக்களினின்றும் வெளிப்பட்டிருப்பவர் ; அல்லது, பல சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட யோகத்தினின்றும் விலகினவர்.

3 எல்லாவற்றின் தோற்றவொடுக்கங்களுக்கும் காரணமாயிருப்பதனாலும் எல்லாவற்றையும்அறிவதனாலும் எல்லாமாயிருப்பவர்.

4 எல்லாப்பிரமாணங்களினாலும் அறியப்படுகிறவர் ; அவரொருவரே உண்மைப்பொருள்என்பது.

5 பிரம்மாதிதேவர்களுக்கும் ஈச்வரர்.

6 ஸர்வவித்பாநு' ஒருநாமம் ; ஸர்வவித் = எல்லாவிடங்களிலுமுள்ள எல்லாவற்றையும் அறிபவர் ; அல்லது, எல்லாம் தம்மிடத்தில்பொருந்தியிருப்பவர்; பாநு = ப்ரகாசிப்பவர் ; எல்லாவிடங்களிலுமுள்ள எல்லாவற்றையும் அறிந்து விளக்குபவர் ; அல்லது, எல்லாம்தம்மிடத்தில்பொருந்தி ப்ரகாசிப்பவர் என்பது இரண்டுக்கும் சேர்ந்தபொருள்.

யம், வீர்யம்என்னும் இரண்டுகுணங்கள் பிரத்யும்னவ்யூகத்தின் கூறுகளாக வகுக்கப்படுகின்றன ; அவற்றில், ஐஸ்வர்யமென்பது விசித்ரமானஉலகங்களையுண்டுபண்ணும்திறமைவெளிப்படுவது; அதை இந்த நாமம் தெரிவிக்கிறது.

ஸர்வவிஜ்ஜயீ = [1]எல்லாம்தெரிந்தவர்களையும் ஜயிக்கும் திறமை உடையவர்.

ஸர்வஜ்ஞர் (451) = [2]தாமே எல்லாமாகவும் அறிந்திருப்பவர் ; தம்மை ஸர்வாந்தர்யாமியாக அறிந்திருப்பவர்.

ஸர்வஜ்ஞர் (821) = [3]பக்தர்களின்சக்தியையும் அசக்தியையும் அவர்களால் ஸாதிக்கக்கூடியதையும் கூடாததையுமெல்லாம் உணர்கிறவர்.

ஸர்வஸஹர் = [4]தேவர்களெல்லாரையும் குறைந்த அதிகாரிகள் ஆராதிக்கஉரியரா'கும்படி அவர்களைத் தாமேதாங்குகிறவர் ; அவர்களுக்குச் சக்தியைக் கொடுத்திருப்பவர் என்பது.

ஸர்வாதி = [5]உயிர்வும் தாழ்வுமாயுள்ள எல்லாப் புருஷார்த்தங்களுக்கும் தாமேகாரணமாயிருப்பவர்.

ஸர்வாஸ்ரயர் = [6]எல்லாருடைய உயிர்களுக்கும் இருப்பிடமானவர்.

ஸர்வேஸ்வரர் = [7]சரணாகதி செய்தவரனைவருக்கும் காலதாமதத்தையும் அதனால் வரும் மனச்சோர்வையும் விலக்குவதற்காகத் தாமே அவர்களிடம் விரைவாகச் சென்றடைபவர்.

ஸவிதா (887) = [8]ஸூர்யனால் மழையையும் அதனால் பயிர்முதலானவற்றையும் உண்டாக்குகிறவர் ; இந்த நாமத்தினால் அர்ச்சிராதி மார்க்கத்தில் ஏழாம்படியான ஸூர்யன் சொல்லப்படுகிறான்.

ஸவிதா (969) = எல்லாவற்றையும் தாமே உண்டாக்குகிறவர்.

---

1 எல்லாம்தெரிந்தவரும் காமம் குரோதமுதலிய உட்பகையையும் ஹிரண்யாக்ஷன்முதலியவெளிப்பகையையும்ஜயிப்பவருமானவர்.

2 எல்லாமாகவும் ஞானமுள்ளவராகவுமிருப்பவர்.

3 எல்லாம்தெரிந்தவர்.

4 எல்லாக்காரியங்களிலும்ஸமர்த்தர் ; அல்லது, எல்லாப்பகைவர்களையும் தாங்கத்திறமையுள்ளவர் ; அல்லது, பூமிமுதலியஉருவங்களினால் எல்லாவற்றையும்தாங்குகிறவர்.

5 எல்லாப்பிராணிகளுக்கும் ஆதிகாரணம்.

6 ப்ராணன்களும் தம்மிடம் லயமடையும் ஜீவாத்மாவாயிருப்பவர்.

7 எல்லாருக்கும்ஈஸ்வரர் ; ஈஸ்வரருக்கும்ஈஸ்வரர் என்பது.

8 உலகங்களையெல்லாம் உண்டாக்குகிறவர்.

ஸஹஸ்ர்ஷ== [1]லக்ஷமீபதியாயிருந்தும் அவதாரத்தில்எளிமையைக் காட்டிக் கட்டுவது பயமுறுத்துவது முதலிய தண்டனைகளையும் ஸஹிப்பவர்.

ஸஹஸ்ரபாத் == [2]ஆயிரம் 'கால்களையுடையவர்.' இங்கும் பின்னும் ஆயிரமென்பது அளவற்றவை என்பதைத் தெரிவிப்பது; செய்கைக்குக் கருவிகளாயுள்ள கால்முதலிய உறுப்புக்கள் அளவற்றவையாகப்பொருந்தியிருப்பவர்; கால் என்பதனால் மற்றக் கர்மேந்திரியங்களும் உபலக்ஷணமாகக் கொள்ளப்படவேண்டும்.

ஸஹஸ்ரமூர்த்தா==ஆயிரம் தலைகளையுடையவர். இதற்கும்,பின், 'ஸஹஸ்ராக்ஷர்' என்பதற்கும் ஞானத்துக்குக்கருவிகளான தலை,கண் முதலிய உறுப்புக்கள் அளவற்றவையாகப் பொருந்தியிருப்பவர் என்பது கருத்து; தலையையும் கண்ணையும் கூறியதனால் மற்றஞானேந்திரியங்களும் உபலக்ஷணமாகக் கொள்ளப்படவேண்டும்.

ஸஹஸ்ரஜித்== [3]ஆயிரம்யுகங்களாக எண்ணப்படும் ப்ரளயகாலத்தை யோகநித்ரையிலிருந்தே ஜயிப்பவர்.

ஸஹஸ்ராம்சு== [4]அளவற்றஞானங்களாகியகிரணங்களையுடையவர்; 'அவிஜ்ஞாதா' என்பதில் ஆஸ்ரிதர்குற்றங்களையறியாதவரென்பதற்கு அவர்களின் குற்றங்களைக் குற்றமாக எடுத்துக்கொள்ளாதவரென்று கருத்தாதலின் விரோதமில்லை.

ஸஹஸ்ரார்ச்சிஸ் ==[5] எண்ணிறந்த கிரணங்களையுடையவர்; உலகத்திலுள்ள பொருள்களைப் பரிணமம் செய்வதும் உலர்த்துவதும் உஷ்ணத்தையும் ஒளியையும்உண்டுபண்ணுவதும் இயற்கையாயுள்ள அவருடைய அநேக கிரணங்களே ஸூர்யன்முதலியவற்றில் அவரால் வைக்கப்பட்டவை என்பது.

ஸஹஸ்ராக்ஷர் == [6]ஆயிரம் கண்களையுடையவர்.

ஸஹஸ்ரஜித் (146) == [7]அறிந்தும் அறியாமலும்மனமொழிமெய்களினால் தம்மிடத்திலும் தம்மடியாரிடத்திலும் செய்யும் அபசாரங்கள் எல்லாவற்றையும் பொறுக்கும் தன்மையுள்ளவர்.

---

1 எல்லாவற்றையும்வெல்லுகிறவர்; அல்லது, பொறுப்பவர்.

2 ஆயிரம்பாதங்களையுடையவர்; விராட்ஸ்வரூபமென்பது.

3 ஆயிரக்கணக்கானஅஸுரர்களை ஜயிப்பவர்.

4 ஸூர்யன்முதலியவற்றிலுள்ள கிரணங்கள் தம்முடையவையாதலின் அளவற்றகிரணங்களையுடையவர்.

5 அளவற்றகிரணங்களையுடையவர்.

6 ஆயிரம் இந்திரியங்களையுடையவர்என்னவுமாம்.

7 ஹிரண்யாக்ஷன்முதலானவிரோதிகளையடக்குகிறவர்.

ஸஹிஷ்ணு (570) = [1]நரநாராயணவதாரத்தில் நடந்த யுத்தத்தில் சிவன்செய்த அபராதத்தைப் பொறுத்தவர்.

ஸாத்வதாம்பதி = ஸத்வமென்னப்படும் பரப்ரம்மத்தை அறிந்தவர்களும் ஸாத்விகர்களுமாகிய பெரியோர்கள் அனுஷ்டிக்கத்தக்க கர்மங்களைச்சொல்லும் பாஞ்சராத்ர சாஸ்திரத்தை ப்ரவர்த்திப்பித்து ஸாத்வதர்களென்னும் பாகவதர்களைக் காப்பாற்றுகிறவர்.

ஸாத்விகர் = [2]தர்மம், ஞானம், வைராக்யம், ஐச்வர்யம் ஆகிய ஸத்வகுணத்தின் பலன்களை அளிக்கத்தக்கவர்.

ஸாது = [3]தூதுபோவது தேரோட்டுவதுமுதலாக அடியவர்கள் விரும்பினவற்றையெல்லாம் செய்து முடிப்பவர்.

ஸாம = [4]தம்மைப்பாடுகிறவர்களின் பாவத்தைஒழிப்பவர்.

ஸாமகர் = ப்ரம்மானுபவானந்தத்தினால் அந்த ஸாமங்களைத் தாமும் பாடுகிறவர்.

ஸாமகாயநர் = [5]ஸம்ஸாரம் தொலைந்து முக்தியடைந்தவர்கள் தம்மையடைவதாகிய மதுபானத்தினால் களிப்புற்று, 'ஹாவு, ஹாவு, ஹாவு' என்று ஸாமகானம் செய்யும்படியிருப்பவர்.

ஸாக்ஷீ (13) = [6]தம்மால் மகிழ்விக்கப்பட்டமுக்தர்களைத் தாமும் பார்த்து மகிழ்ந்திருப்பவர்.

ஸாக்ஷீ (517) = [7]பாகவதர்களின் ஒழுக்கங்களைப் பிரத்யக்ஷமாகக் காண்பவர்.

ஸித்தர் (98) = [8]உபாயங்களைக்கொண்டுதேடவேண்டாது புதைத்துவைத்தபொருள்போல முன்னமேஏற்பட்டிருப்பவர்.

ஸித்தர் (825) = [9]தமதுஉண்மையையறிந்தவர்களுக்குமுயன்று ஸம்பாதிக்கவேண்டாமல் தாமாகவே ஏற்பட்டிருக்கும்ரக்ஷகர்; அவர் ரக்ஷகராயிருப்பது இயற்கையாகஅமைந்ததேயன்றிக் காரணம்பற்றியதன்று என்பது.

ஸித்தஸங்கல்பர் = நினைத்தவையெல்லாம் நினைத்தமாத்திரத்தில் அமைந்திருக்கும் ஸத்யஸங்கல்பர்.

---

1 சீதோஷ்ணமுதலியவற்றைப் பொறுப்பவர்.
2 ஸத்வகுணத்தைப் பிரதானமாகவுடையவர்.
3 நியாயமாகநடப்பவர்; அலலது, எல்லாக்காரியங்களையும் ஸாதிப்பவர்.
4 ஸாமவேதமாயிருப்பவர்.
5 ஸாமங்களைக் கானம்பண்ணுகிறவர்.
6 எல்லாவற்றையும் பார்ப்பவர்.
7 'ஸாக்ஷிதா' பார்க்க.
8 'ஸித்தர்; நித்யர்.
9 தமக்குக்காரணமின்றித் தாமாகவே எப்போதும்இருப்பவர்.

ஸித்தார்த்தர்=வேண்டினவை யெல்லாம் தமக்குத் தாமே அமைந்திருக்கும் ஸத்யகாமர்.

ஸித்தி= [1]உபாயங்களினால் தேடப்படும்பலனுகவுமிருப்பவர்.

ஸித்திதர்= [2]அணிமாமுதலியஎட்டுஸித்திகளையும் யோகிகளுக்குக்கொடுப்பவர்.

ஸித்திஸாதகர்= [3]அவரைஉபாஸிப்பதும் பலன்போலச் சுகமாகத்தோற்றும்படியிருப்பவர்.

ஸிம்மர் (202)= [4]மஹாநரஸிம்மரூபி ; பகைவர்களை ஹிம்ஸிப்பவர்.

ஸிம்மர் (489)= [5]பக்தர்களின்உள்ளத்தில் பகவான்இருப்பதை அறியாமல் அந்தப்பக்தர்களையும் மற்றவர்களையும் யமன்முதலானவர்கள் துன்பப்படுத்துவராயின் அவர்களை ஹிம்ஸிக்குந் தன்மையுள்ளவர்.

ஸுகதர் (460)= [6]ஸதாசாரங்களையும் த்யானநிஷ்டையையும் தாம் அனுஷ்டித்துக்காண்பித்து, அப்படி அனுஷ்டிப்பவர்களுக்குப் பரமஸுகமாகியபலனையளிப்பவர்; 'அம்ருதம்கொடுப்பதுமுதலியவற்றினால் தேவர்களுக்குஸுகத்தைக் கொடுப்பவர்' என்பது நிர்வசனம்.

ஸுகதர் (890)= [7]அமானவனென்னும் திவ்யபுருஷன்தொடுவதனால் ஸம்ஸாரமும் ஸம்ஸாரவாஸனைகளும் பற்றற ஒழிந்துபோன பிறகு தம்மைஅடைவதாகியஸுகத்தைக் கொடுப்பவர் ; இந்த அமானவன் அர்ச்சிராதிமார்க்கத்தில் அடுத்த பதின்மூன்றுவதுபடி.

ஸுகோஷர்= [8]அழகியஉபநிஷத்முதலிய வேதாத்யயனங்களினால் கோஷிக்கப்படுகிறவர்; 'கடல்கடைந்தஆச்சரியசரித்திரம் தேவர்

---

1 ஞானரூபி ; அல்லது, எல்லாவற்றிலும்சிறந்த பலனுயிருப்பவர்.

2 அவரவர்தகுதிப்படி பலன்களைக் கொடுப்பவர்.

3 ஸித்திகளென்னப்படும்கிரியைகளையெல்லாம் ஸாதிப்பவர்.

4 நினைத்தவளவில் பாவங்களெல்லாவற்றையும் போக்குபவர்.

5 பராக்ரமத்தினால் ஸிம்மம்போலிருப்பவர் ; நரஸிம்மாவதாரம்செய்தவர்என்னவுமாம்.

6 ஸாதுக்களுக்கு ஸுகத்தைக்கொடுப்பவர் ; அல்லது, அஸாதுக்களின் ஸுகத்தைக் கெடுப்பவர்.

7 பக்தர்களுக்கு மோக்ஷஸுகத்தைக்கொடுப்பவர் ; அல்லது, ஸுகதர்= துக்கத்தைக்கண்டிப்பவர்.

8 வேதங்களை ப்ரம்மதேவருக்கு உபதேசித்ததினால் சிறந்தவேதாத்யன கோஷத்தைச்செய்பவர் : அல்லது, மேகமுழக்கம்போலக் கம்பீரமான குரலையுடையவர்.

அஸுரர்முதலியவரால் உத்தேசிக்கப்பட்டிருப்பவர்' என்பது நிர்வசனம்.

ஸுதந்து = [1]சாந்தவேஷமுதலியவற்றை ஏறிட்டுக்காண்பிப்பதாகிய அஸுரர்களுக்கவரும்வலையை யாராலும் தாண்டமுடியாமல் உறுதியாயிருக்கும்படி வைத்திருப்பவர்.

ஸுதன்வா = [2]அமிருதத்தைப்பற்றி உண்டான தேவாஸுரயுத்தத்தை முடித்ததனால் சிறந்ததானவில்லுடையவர்.

ஸுதபஸ் = [3]திவ்யஞான வடிவமாயிருப்பவர்.

ஸுதர்சநர் = [4]குணங்களின்பெருமையையறியாதவரும் கண்டமாத்திரத்தில் நன்மைபெறும்படி அழகானதிவ்யமங்களவிக்ரகத்தை உடையவர்.

ஸுந்தர் = [5]வடிவழகினால் அஸுரர்களுடையமனங்களை நன்முகமெதுப்படித்துகிறவர்; அன்பு உண்டார்குகிறவரென்பது.

ஸுந்தரர் = அஸுரர்களின்கண்களைக்கவரும் அழகிய உருவமுள்ளவர்.

ஸுப்ரஸாதர் = [6]தம்மைஅடித்தவர்கள்விஷயத்தில் சிறந்தஅனுக்ரகம்செய்பவர்.'

ஸுபர்ணர் (194) = [7]அழகியஇறகுகளையுடையவர்; அல்லது, ஸம்ஸாரக்கடலினின்றும் கரைசேர்ப்பவர்.

ஸுபர்ணர் (859) = [8]யோகப்ரஷ்டர்களாகித் திரும்பவும் ஸமாதியை அனுஷ்டிப்பவர்களுக்கு அந்தச்சமாதியைப்பயன்படுத்தி அவர்களை ஸம்ஸாரக்கடலின்கரையில்சேர்ப்பவர்.

ஸுபுஜர் = [9]சரணுகதிசெய்பவர்களின் பாரத்தை வகிக்கும்திறமையுள்ள சிறந்தகைகளையுடையவர்.

---

1 விஸ்தாரமானப்ரபஞ்சத்தை வைத்திருப்பவர்.

2 இந்திரியரூபமானசார்ங்கமென்னும்சிறந்தவில்லையுடையவர்.

3 பதரிகாச்ரமத்தில் நாராயணரிஷிகளாகித் சிறந்த தவம்செய்தவர்.

4 அவரையறிவது முக்தியைத்தருவதாயிருப்பது; அல்லது, அவரது திருக்கண்கள் தாமரையிதழ்கள்போல நீண்டு அழகாயிருப்பவை; அல்லது, ஸுந்தரரூபமுள்ளவர்; அல்லது, பக்தர்கள் எளிதாகக்காணக்கூடியவர்.

5 ஈரமுள்ளவர்; தயையுள்ளவரென்பது.

6 அபகாரம்செய்த சிசுபாலன் முதலியவர்களுக்கும் மோக்ஷமளிக்கும் சிறந்த அனுக்ரஹமுள்ளவர்.

7 பேரறிவும்பேரின்பமுமாகிய இரண்டு அழகியசிறகுகளையுடையவர் அல்லது, கருடரூபி.

8 வேதங்களென்னும் இலைகளோடுகூடியவர்; ஸம்ஸாரரூபியாயிருப்பவரென்பது.

9 உலகத்தைக் காப்பதில் சிறந்தபுஜங்களையுடையவர்.

ஸுமுகர்= [1]ஜபமுதலியவை செய்வதிலும் அந்தவருத்தஉணர்ச்சியிலுல் உண்டாகும்மாறுதல் சிறிதுமில்லாமல் மலர்ந்துமனத்தைக் கவருகின்ற திருமுகமண்டலத்தையுடையவர்; 'அமுதம்கொண்டுவந்தகாலத்தில் அந்தஉத்ஸாஹம்நிரம்பினதனுல் அழகியமுகமுள்ளவர்' என்பது நிவர்சனம்.

ஸுமேதஸ்= [2]தம்மை ஆராதிப்பவர்கள்விஷயத்தில் க்ஷேமத்தைத்தரும் நல்லஎண்ணமுள்ளவர்.

ஸுயாமுநர்= [3]தாம் யமுனையிற்செய்த ஜலக்ரீடை, பூக்கொய்தல், ராஸக்ரீடைமுதலிய செய்கைகளெல்லாம் மனத்திற்கினியவையாகவும் பாவங்களைப்போக்கிப் பரகதியைத் தருகின்றவையாகவும் இருப்பவர்.

ஸுராத்யக்ஷர்= [4]தர்மத்திலுல் ஆராதிக்கப்படும் தேவர்களையும் பிரத்யக்ஷமாக அறிபவர்.

ஸுராகந்தர்=ஆபத்தில் உதவிசெய்வதனுல் தேவர்களைச்செழிக்கச்செய்பவர்.

ஸுராரிஹா= [5]தேவர்களுக்கு விரோதியான ஹிரண்யன்மார்பைப்பிளந்து அவனைக்கொன்றவர்.

ஸுருசி= [6]ஸூர்யோதயத்திலுல் பிரகாசிப்பதாகியசிறந்தபகலை நடத்துகிறவர்; அர்ச்சிராதிமார்க்கத்தில் பகல் இரண்டாம்படி.

ஸுரேசர்= [7]ப்ரம்மாதிதேவர்களையும் அவரவர் அதிகாரங்களில் நியமிப்பவர்.

---

1 அழகியமுகமுள்ளவர்; ராமாவதாரத்தில் பட்டாபிஷேகத்தை விலக்கிக் காட்டுக்குப்போகச்சொல்லுகையிலும் முகமலர்ச்சிமாறுதவர்; அல்லது, எல்லாவித்தைகளையும் உபதேசிக்கும் திருமுகமண்டலமுள்ளவர்.

2 சிறந்தபுத்தியுள்ளவர்.

3 சுபமானவர்களும் யமுனையின்ஸமீபத்தில்வஸிப்பவர்களுமான தேவகி, வஸுதேவர், நந்தகோபர்; யசோதை, பலபத்ரர், ஸுபத்ரைமுதலானவர்களால் சூழப்பெற்றவர்; அல்லது, திருவஷ்ணவதாரத்தில் யமுனைக்கரையில் வந்திருந்த மங்களத்தைத்தருபவரான ப்ரம்மாமுதலியோரால் சூழப்பெற்றவர்.

4 லோகபாலகர்கள்முதலான தேவர்களுக்குப் பிரத்யக்ஷமாயிருப்பவர்; அவர்கள் தம்மிடத்திலிருந்து அதிகாரங்களைவிடத்தும்போது அதற்குவிரோதிகளாயுள்ள அஸுரர்முதலாகிய சத்துருக்களைத் தடுக்க நினைக்கும்போது அவர்களுக்குப் பிரத்யக்ஷமாக ஆவிர்ப்பவிப்பவரென்பது.

5 அஸுரர்களைஸம்ஹரிப்பவர்.

6 சிறந்தஒளியுள்ளவர்; அல்லது, சிறந்தஸங்கல்பமுள்ளவர்.

7 தேவர்களுக்குஈச்வரர்; அல்லது, நன்மையைக் கொடுப்பவர்களுக்கெல்லாம் தலைவர்.

ஸுரேஸ்வரர் = [1]தேவர்களென்னப்படும் நன்மார்க்கத்திலிருப்பவர்களை மேற்கதிக்குப்போகும்படி நடத்துகிறவர்.

ஸுலபர் = [2]விலேயில்லாத உயர்ந்தபொருளாயிருந்தும் செலவின்றி எளிதில் அடையக்கூடியவர்.

ஸுலோசநர் = [3]அழகியகண்களையுடையவர்.

ஸுவ்ரதர் (456) = [4]தமக்கு ஒருகருமமும் வேண்டாமாயினும் தம்மைப்பார்த்து மற்றவர்கள்கர்மஞ்செய்து பலன்பெறுவதற்காகத் தாம் கர்மத்தை விடாமல் அநுஷ்டிப்பவர்; அவருடையதர்மாநுஷ்டானவிரதமானது எல்லாருடையநன்மைக்கும் காரணமாயிருப்பது.

ஸுவ்ரதர் (824) = [5]எவ்வகையாலும் அடைந்தவர்களைக் கைவிடாமல் காப்பாற்றுவதென்கிற உறுதியானவிரதமுடையவர்.

ஸுவர்ணபிந்து = [6]புத்தாவதாரத்தில், ஸர்வசக்தியுள்ளவராதலின் ஸர்வஜ்ஞர்களையும் ஜயிக்கும் நிறமையினால் எழுத்துச்சொல் சுத்தமுள்ள உறுதியானபேச்சினால் ஆஸ்திகவாசகத்தைக்கண்டிப்பவர்.

ஸுவர்ணவர்ணர் = மாற்றேறின தங்கம்போலக் குற்றமின்றி விளங்கும் திவ்யரூபமுள்ளவர்.

ஸுவீரர் = [7]பாண்டவர்முதலானபக்தர்களுக்கு அபாயத்தைப் பரிகரிக்கும் சிறந்த சக்தியுள்ளவர்.

ஸுஷேணர் = [8]ஸம்ஸாரிகளையும் முக்திபெற்றவர்களையும்நித்ய ஸூரிகளையும் வசப்படுத்துவதற்குச் சேனைபோலச்சிறந்தகருவியான பஞ்சோபநிஷந்மயமான திருமேனியையுடையவர்.

ஸுஹ்ருத் = [9]உபகாரம்செய்யாதவன் விஷயத்திலும், 'இவனுக்கு நான் என்னசெய்யக்கடவேன்?' என்று நன்மையையேகருதும் சிறந்தமனமுள்ளவர்.

---

1 தேவர்களுக்குஈச்வரர்; அல்லது, நன்மையைக் கொடுப்பவர்களுக்குத் தலைவர்.

2 பத்ரம் புஷ்பமுதலியவற்றைப் பக்தியுடன் ஸமர்ப்பணம் செய்தமாத்திரத்தில் எளிதாகஅடையக்கூடியவர்.

3 சிறந்தஞானமுள்ளவர்.

4 சிறந்தஆஸ்ரிதரக்ஷணவிரதத்தையுடையவர்.

5 சிறந்தபோஜனநியமமுள்ளவர்; அல்லது, போஜனத்திலிருந்துநிவ்ருத்தித்தவர்.

6 பொன்னுக்குஒப்பான அவயவங்களையுடையவர்; அல்லது, ஸ்ரீலஅக்ஷரமும் பிந்துவென்னும் அநுஸ்வாரமும்கூடிய மந்த்ரமாகிய பிரணவமாயிருப்பவர்.

7 பலவகைஸ்லோகங்களைக் கொடுப்பவர்; அல்லது, பலவகையாகச் சொல்லப்பட்டவர்.

8 தம்கணங்களாகிய சிறந்தஸேனையையுடையவர்.

9 கைம்மாறுவேண்டாமல் உதவிசெய்யும் சிறந்தமனமுள்ளவர்.

ஸூர்யர்= [1]வாயுஸஞ்சரிப்பதற்குஇடமாகிய [2]வாயுலோகம்; இது அர்ச்சிராதிமார்க்கத்தில் ஆரும்படி.

ஸூஷ்மர்= [2]பலன்களே விரும்பாமல் ஸ்வயம்ரஸமாகச் செய்யப்படும் தியானத்திலல்மட்டும் புலப்படக்கூடிய மிக்கநுண்ணிய தான ஸ்வரூபமுடையவர்; 'அமுதம்கொண்டுவந்தகாலத்தில் தமது உட்கருத்து அஸுரர்களுக்குவெளிப்படாதவர்' என்பது நிர்வசனம்.

ஸோமபர்= [3]தாம்செய்த யாகங்களில் ஸோமரஸத்தைப்பானம் செய்தவர்.

ஸோமர்= [4]தாமே அம்ருதமாயிருப்பவர்.

ஹ்ருஷீகேசர்= [5]ஐம்புலன்களையும் நடத்துகிறவர்; அல்லது, ஸந்தோஷமும் ஸௌக்யமும் ஐஸ்வர்யமும் பொருந்தினவர்.

ஹம்ஸர்=[6] ஹம்ஸாவதாரம்செய்தவர்; பற்றுக்களே அறுப்பவர்; அல்லது, அழகாகநடப்பவர்; அல்லது, அழகானபுன்சிரிப்புள்ளவர்.

ஹரி (316)= [7]பக்தர்களுக்குவரும் இடையூறுகளைப் போக்குகிறவர்.

ஹரி (656)= [8]ஸர்வேஸ்வரரும் பகவானுமானஹரி; கோவர்த்தனமலையில் ஆலயத்தில் பூஜிக்கப்படுகிறவர்.

ஹலாயுதர்= [9]கலப்பையை ஆயுதமாகவுடையவர்; பஞ்சபூதங்களென்னும் பயிர்களை அபிவிர்த்திசெய்யும் உழவராகையால் கலப்பை என்னும் ஆயுதத்தைக் கருவியாக வைத்திருப்பவர்.

---

1 எல்லாவற்றையும்உண்டாக்குகிறவர்; அல்லது, ஐஸ்வர்யத்தைக்கொடுப்பவர்.

2 ஸ்தூலமாவதற்குக் காரணமான சப்தமுதலியவை யில்லாமையால் ஸூக்ஷ்மர்.

3 எல்லாயாகங்களிலும் அந்தஅந்தத்தேவதாரூபியாக ஆராதிக்கப்பட்டு ஸோமரஸத்தைப் பானம்செய்பவர்; அல்லது, தாம்செய்தயாகங்களில் யஜமானரூபியாக ஸோமரஸத்தைப்பானம்செய்தவர்.

4 சந்திரரூபியாக ஓஷதிகளைவளரச்செய்பவர்; அல்லது, உமையேற்று கூடியசிவரூபியாகவும் தாமேயிருப்பவர்.

5 ஆத்மாவாக இந்திரியங்களை வசப்படுத்துகிறவர்; அல்லது, ஸூர்யரூபமாகவும் சந்திரரூபமாகவும் உலகத்தைமகிழ்விக்கும்கிரணங்களையுடையவர்.

6 'அஹம்ஸ:' 'நானேஅவன்' என்று ஒன்றுகத்தியானிப்பவர்களுக்கு ஸம்ஸாரபந்தத்தை ஒழிப்பவர்; அல்லது, எல்லாத்தேசங்களிலும் ஆத்மாவாகச்செல்லுகிறவர்.

7 'ஹவிஸ்' பார்க்க.

8 ஸம்ஸாரத்தை மூலத்தோடு அழிப்பவர்.

9 பலராமரூபியாயிருப்பவர்.

ஹவிஸ்(360)=[1] பக்தர்களுக்குத் தம்மைத்தாமேகொடுப்பவர்; அல்லது, பக்தர்களால் எடுத்துக்கொள்ளப்படுகிறவர்; பக்திசெய்த மாத்திரத்தினால் அவர்கள் ஸ்வதந்த்ரமாக எடுத்துக்கொள்ளும்படி உட்படுகிறவர்; அல்லது, 'ஹவிர்ஹரி' ஒருநாமம், யாகங்களில்கொடுக்கப்பட்ட ஹவிர்ப்பாகத்தைப் பெறுகிறவர்.

ஹவிஸ்(703)=[2] தேவகீவஸு-தேவர்களின்ஸமீபத்தில்வஸிக்கவிருப்பமுள்ளவராயிருந்தும், அவர்கள் அதிப்ரேமையினால் பகவானுடைய மஹிமையையறிந்து கம்ஸனுக்குத்தீங்குவருமென்று அஞ்சினதன்மேல் தம்மைஒளித்துக்கொள்வதற்காக யசோதைநந்தகோபர்களினால் வளர்ப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர்.

ஹிரண்யகர்ப்பர்(71)=[3] குற்றமற்றசுத்தஸத்வமயமாகிய பொன்னுலகில்வஸிப்பவர்; அல்லது, நன்மையைத்தருவதனால்ஹிதமாகவும் ஆனந்தத்தைத்தருவதனால் ரமணீயமாகவும் இருப்பதுபற்றி ஹிரண்யம்என்னப்படும்பரமபதத்துள் நித்யமாகவஸிப்பவர்.

ஹிரண்யகர்ப்பர்(412)=[4] தமக்குஅநுகூலமாயும் இனியவையாயுமிருக்கும் தியானிப்பவர்மனங்களுக்கு நல்ல ஆதாரமாயிருப்பவர்; தியானத்திற்குஇனியதும் தியானபலனைத்தருவதுமாக இருப்பதனால் தியானிப்பவர்கள் ஹ்ருதயங்களினால் அமுதுண்பதுபோல அநுபவிக்கப்படுகிறவர்; அல்லது, பொற்புதையலபோன்றவர்.

ஹிரண்யநாபர்=அழகான நாபியுள்ளவர்; தமதுஸங்கல்பத்தினாலுண்டாக்கப்பட்ட அண்டதளங்களோடுகூடியநாபீகமலத்தில் பொன்மயமான மேரு தாமரைக்காயாகவிளங்கும்படியிருப்பவர்.

ஹரதபுவிபு=[5] அமிர்தமாகப்பரிணமிக்கும் ஹோமத்ரவியங்களைப்புஸிப்பவனுக்கிசந்த்ரன்வளர்வதாகியவளர்பிறை; சுக்லபக்ஷம் அர்ச்சிராதிமார்க்கத்தில் மூன்றும்படி.

---

1 'ஹவிர்ஹரி' ஒநாமம்; ஹோமஞ்செய்யப்படுகிறவராதலால், 'ஹவிஸ்' என்றும் நிஷ்டைமாத்ரத்தில் பாவத்தையும் அத்யாநத்தையும் ஸம்ஸாரத்தையும்போக்குவதனாலாவது பச்சைநிறமாயிருப்பதனாலாவது, 'ஹரி' என்றும் சொல்லப்படுகிறவர்.

2 ஹவிஸாயிருப்பவர்.

3 பொன்மயமான ப்ரம்மாண்டத்துள் ப்ரம்மரூபமாக வஸித்தவர்.

4 ப்ரம்மாவின் உத்பத்திக்குக்காரணமாகிய பொன் அண்டத்தைத் தம்முள் வைத்திருப்பவர்.

5 இரண்டுநாழம். ஹரதபுக்=எல்லாத் தேவதைகளைப்பற்றியும் செய்யப்படும் ஹோமங்களைப்புஸிப்பவர்; அல்லது, காப்பாற்றுகிறவர். விபு=எங்கும் நிரம்பியிருப்பவர்; அல்லது, எல்லாஉலகங்களுக்கும் பிரபு.

ஹேது=[1] பக்தர்களுக்குப் பலம்ஸித்திக்கக் காரணமாயிருப்பவர்.

ஹேமாங்கர்=[2] பொன்மயமான அங்கமுள்ளவர்; பொன்னிறம் சுத்தஸத்வமயமான திவ்யமங்களவிக்ரஹத்தைச் சார்ந்திருப்பது என்பது.

க்ஷமர்=[3] எல்லா உலகங்களின் பாரங்களையும்எளிதில்வஹிப்பவர்; ப்ரவஹமென்னும்வாயுரூபிஎன்பது.

க்ஷமிணாம்வர்=[4] பொறுமையுள்ளவரிற் சிறந்தவர்; கஜேந்திரனேக்கண்டபிறகு தம்மனத்தைப் பதைக்காமல் நிறுத்திக்கொண்டவர் என்பது.

க்ஷரம்=[5] துஷ்டர்களுக்கு அநித்யமாகிய துக்கமாயிருப்பதனால் அவரிடத்தில் நில்லாமல் செல்பவர்.

க்ஷாமர்(444)=[6] அவாந்தரப்ரளயத்தில் மற்றக்ஷேத்திரங்கள் அழிந்தபோது நாலுக்ஷேத்திரங்களோடுமட்டும் த்ருவனுக்கு அருகிலிருப்பதினால் இவ்வாறு திருப்பவர்.

க்ஷாமர்(858)=[7] யோகப்பிரஷ்டர்களும் தம்மை த்யானம்செய்யத்தொடங்கின அளவில் அவர் ஸம்ஸாரமென்னும் அகழைத்தாண்டத்திறமையுள்ளவராகும்படி செய்பவர்.

க்ஷிதீசர்=[8] பூமிக்கு ஈச்வரர்; எல்லாவற்றிற்கும் ஈச்வரராயினும் பூமியின் துயரத்தை நீக்குவதற்கு அவதரித்ததனால் பூமிக்கு ஈச்வரரென்று சிறப்பாகக் கூறினது.

க்ஷேத்ரஜ்ஞர்=[9] முக்தர்கள் தம்மை அனுபவிப்பதற்குரிய இடமாகிய நித்யவிபூதியை அறிந்திருப்பவர்; முக்தர்கள் அடையும் இடத்தை க்ஷேத்ரம் என்று சொல்வது.

---

1 எல்லாவற்றிற்கும் மூலகாரணமாயும் நிமித்தகாரணமாயுமிருப்பவர்.

2 பீதோஷ்ணமுதலியவற்றைப்பொறுப்பவர்.

3 எல்லாக்காரியங்களிலும்திறமையுள்ளவர்; அல்லது,பொறுமையுள்ளவர்.

4 எல்லாவற்றையும் பொறுக்கும் யோகிகளையும் பூமிமுதலியவற்றையும் பொறுப்பதினால் பொறுப்பவரிற்சிறந்தவர்; அல்லது, சக்தியுள்ளவர்களுக்கெல்லாம் சிறந்தவர்.

5 அழிவுதான விகாரரூபியாயிருப்பவர்.

6 பிரளயகாலத்தில் காரியங்களனைத்தும் அழிந்தபோது தாம்மட்டும் தனித்திருப்பவர்.

7 பிரஜைகளை ஸம்ஹாரகாலத்தில் அழிப்பவர்.

8 பூமிக்கு அரசர்; இது ராமாவதாரக் குறிப்பு.

9 க்ஷேத்ரங்களென்னப்படும் சரீரங்களை அறிந்திருப்பவர்.

க்ஷேமக்ருத்=[1]நிவ்ருத்திதர்மத்திலிருப்பவர்களுக்கு அறிவும் மகிமையும் சுருங்காமல் விரிவாகும்படி மோக்ஷமென்னும் க்ஷேமத்தைச் செய்பவர்.

க்ஷேபணர்=கட்டுப்படுவதற்குரிய ஜீவராசிகளையும் அவற்றைக் கட்டுவதாகிய பிராகிருதியையும் பிரளயத்திற்குப் பின் ஸ்ருஷ்டிகாலத்தில் கலக்குகிறவர்; உற்பத்தியாகும்படி செய்பவர்.

இருநூற்றைம்பத்தைந்தாவது அத்யாயம்.

தர்மதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தேவர்கள் முதலானவர்களின் நாமங்கள்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! சிறந்தபுத்தியுள்ளவரே! நிபுணரே! எந்தமந்திரத்தை நித்யமாகஜபிப்பவனுக்குச் சிறந்தபுண்ய பலனுண்டாகும்? புறப்படும்போதும் ஓரிடத்தில்பிரவேசிக்கும்போதும் காரியமாரம்பிக்கும்போதும் தேவதாபூஜையிலும் சிராத்த காலத்திலும் எதைஜபிப்பது அந்தக்காரியத்துக்கு ஸாதனமாயிருக்கும்? தோஷசாந்தியையும் ஸுகவ்ருத்தியையும் கொடுப்பதும் ரக்ஷையாயிருப்பதும் பகைவர்களையொழிப்பதும் பயத்தைப்போக்குவதுமான வேதத்திற்குச்சமமானமந்திரத்தை நீர் சொல்லக்கடவீர்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"அரசனே! காயத்ரியினுண்டாக்கப்பட்டதும் உடனேபாவத்தைப்போக்குவதுமான ஒருதிவ்யமந்திரம் வ்யாஸரால் சொல்லப்பட்டிருக்கிறது. அதை மனவூக்கத்துடன் கேள். குற்றமற்றவனே! அந்தமந்திரத்தின் முறையெல்லாவற்றையும் நான் சொல்லுகிறேன்; கேள். பரண்டவச்ரேஷ்டனே! அந்தக்கேட்டதனாலேயே மனிதன் எல்லாப்பாவங்களாலும் விடப்படுவான். தர்மந்தெரிந்தவனே! இரவிலும்பகலிலும் இதைஜபிப்பவனிடத்தில் பாவங்கள் பற்றுவதில்லை. ராஜனே! அதை உனக்குச் சொல்வேன்; மனவூக்கத்துடன் கேள். ராஜபுத்திரனே! அதைக்கேட்கும்மனிதன் தீர்க்காயுளுள்ளவனுவான்; நினைத்தது நன்முகக்கைகூடி இம்மையிலும்மறுமையிலும் மகிழ்ந்திருப்பான். ராஜனே! முற்காலத்தில் எப்போதும் க்ஷத்ரியதர்மத்தைஅனுஷ்டிப்பவரும் ஸத்யத்தையும்தவத்தையும்முதன்மையாகக்கொண்டவருமானசிறந்தராஜரிஷிகளிலொல் அது இடைவிடாமல்

[1] தம்மில் அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு மோக்ஷத்தைஉண்டுபண்ணுகிறவர்.

அனுஷ்டிக்கப்பட்டது. பரதசிரேஷ்டனே! அரசர்கள் நியமத்தோடு தினந்தோறும் இதைஉறுதியாகஜபிப்பதனால் சிறந்தஐஸ்வர்யத்தை அடைவார். அந்தமந்திரமாவது, 'சிறந்ததவமுள்ளவஷிஷ்டருக்கு நமஸ்காரம். வேதங்களுக்குநிதியானபராசரரை நமஸ்கரிக்கிறேன். நாகராஜனானஆதிசேஷனுக்கு நமஸ்காரம். இவ்வுலகத்தில் அழிவில்லாதவித்தபுருஷர்களுக்கு நமஸ்காரம். ரிஷிகளுக்கு நமஸ்காரம். சிறந்தவர்க்குஞ் சிறந்தவரும் வரமளிப்பவருக்கும் வரமளிப்பவரும் தேவர்க்குந்தேவருமானபகவானே நமஸ்கரிக்கிறேன். ஆயிரம்தலைகளுள்ளவரும் ஆயிரநாமங்களுள்ளவரும் மங்களமூர்த்தியுமான ஜனார்த்தனருக்கு நமஸ்காரம். அஜைகபாத், அஹிர்ப்புத்நியர், தோல்வியடையாத பிநாகி, ருதர், பித்ருரூபர், திரியம்பகர், மஹேஸ்வரர், விருஷாகபி, சம்பு, ஹவனர், ஈஸ்வரர்ஆகியஇந்தஏகாதசருத்ரர்கள் மூன்று உலகங்களுக்கும் ஈஸ்வரரென்று பிரவித்திபெற்றவர். சதருத்திரத்தில் இம்மகாத்மாக்கள் நூற்றுவரென்று சொல்லப்படுகின்றனர். அம்சன், பகன், மித்ரன், ஜலத்திற்கதிபதியானவருணன், தாதா, அர்யமா, ஜயந்தன், பாஸ்கரன், த்வஷ்டா, பூஷா; இந்திரன், விஷ்ணு ஆகியஇந்தப்பன்னிரண்டுஆதித்யர்கள் காஸ்யபரின்புத்திரர்களென்று சொல்லப்படுகிறார்கள். தரன், த்ருவன், ஸோமன், ஸாவித்ரன், அநிலன்,அநலன், பிரத்யூஷன்,ப்ரபாஸன்ஆகியஇவர்கள் அஷ்டவஸுக்களென்று சொல்லப்படுகின்றனர். நாஸத்யன், தஸ்ரன் இவ்விருவரும் அஸ்வினீதேவர்களென்று சொல்லப்படுகின்றனர். இவ்விருவரும் சூரியன்புத்ரர்கள்; ஸம்ஜ்ஞாதேவியின்மூக்கிலிருந்து பிறந்தவர்கள். இதன்பிறகு, ஜனங்களின்கர்மங்களுக்குச் சாக்ஷிகளாயிருப்பவர்களைச் சொல்வேன். மிருத்யு, காலன், விஸ்வேதேவர்கள்ஆகிய தேவஸ்ரேஷ்டர்களும் பித்ருக்கூட்டங்களும் தவத்தையேதனமாகவுடைய முனிவர்களும் தவத்தினால்மோக்ஷத்தைக்கருதும்வித்தர்களும் தேகமெடுத்துக்கொண்டு கண்ணுக்குப்புலப்படாமலே எல்லாப்பிராணிகளிடத்திலுமுள்ள யாகம்தானமுதலியநற்கருமங்களையும் பாவங்களையும்அறிகின்றனர்; அவர்களின்பெயர்களைச்சொல்லும்மனிதர்களுக்கு அவர்கள் இனியமுகமலர்ச்சியோடு நன்மையைத் தருகின்றனர். அவர்கள் எல்லாஉலகங்களிலுமுள்ள எல்லாக்காரியங்களிலும் ஊக்கம் வைத்துத் தங்கள் திவ்யசக்தியோடு பிரம்மாவினால்படைக்கப்பட்ட இவ்வுலகங்களில் வஸிக்கின்றனர். உயிரைஉடத்துகிறவர்களாகிய இவர்கள்பெயர்களைப் பரிசுத்தஞ்யிருந்து தினந்தோறும் கீர்த்தனம் செய்யும்மனிதன் தர்மார்த்தகாமங்களை மிகுதியாகப்பெற்று' லோகே

ஸ்வரர்களால் அளிக்கப்பட்ட புண்ணியலோகங்களையும் அடைவான். மேற்சொன்ன [1]மூப்பத்துமூன்று தேவர்கள் எல்லாப்பிராணிகளுக்கும் ஈஸ்வரர்கள். ருத்தீர்ஸ்வரன், மஹாகாயன், க்ராமணி, [2]விருஷபத்வஜன், [3]கணேஸ்வரன், விநாயகர் இவர்கள் எல்லாஉலகங்களுக்கும் ஈஸ்வரர். சாத்தர்களும் உக்ரர்களுமாகிய இத்தக்கணங்களையும் யோகிகளானபூதங்களுடையகணங்களையும் நிரகங்களையும் நதிகளையும் ஆகாயத்தையும் பக்ஷிராஜனைகருடனையும் பூமியில்தவஞ்செய்துவசித்திபெற்றஸ்தாவரங்களையும் (காமதேனுமுதலிய) ஜங்கமங்களையும் இமயமுதலானமலைகள்அனைத்தையும் நான்கு ஸமுத்திரங்களையும் சிவனுக்குச்சமமான மகிமையுள்ள சிவனைச்சேர்ந்தவர்களையும் விஷ்ணுவையும் இந்திரனையும்ஸுப்ரம்மண்யரையும்அம்பிகையையும் பக்தியுடன் சொல்லுகிறவன் எல்லாப்பாவங்களாலும் விடப்படுகிறான். இனி, மனிதர்களானரிஷிசிரேஷ்டர்களைச் சொல்வேன். யவக்ரீதர், ரைப்யர், அர்வாவஸு, பராவஸு, உசிக்கின் புத்திரரான கக்ஷீவான், அங்கிரஸின் புத்திரராகியபலர், மேதாதிதியின்புத்திரரானகண்வர் இவர்கள் எழுவரும் [4]பர்ஹிஷ்தரென்று சொல்லப்படுகின்றவர். இவரனைவரும் பிரம்மதேஜோமயமாயிருப்பவர்; நாமங்களைச் சொன்னமாத்திரத்தில் உலகங்களைப் பரிசுத்தப்படுத்துகிறவர். இவரனைவரும் தங்கள்புண்ணிய பலனையடைந்து ருத்ரர்களுக்கும் அக்நிக்கும் வஸுக்களுக்கும் ஸமமான ஒளியுள்ளவர்களாயிருக்கின்றனர்; பூமியில்புண்ணியகருமஞ்செய்து தேவலோகத்தில் தேவர்களுடன் மகிழ்ந்திருக்கின்றனர். இவர்களெழுவரும் இந்திரனுக்கு ஆசாரியர்கள்; கிழக்குதிசையைச்சார்ந்திருக்கின்றனர். பக்தியோடு இவர்களைச் சொல்லுகிறவன் இந்திரலோகத்தில் பூஜிக்கப்படுவான். உன்முசு, ப்ரமுசு, மகிமையுள்ளஸ்வஸ்த்யாத்ரேயர், த்ருடவ்யர், ஊர்த்வபாஹு, த்ருணஸோமாங்கிரஸ், மித்ராவருணர்களின்புத்ரரும் மகிமையுள்ளவருமான அகஸ்தியர் இவ்வெழுவரும் தர்மராஜனையமனுடையரித்விக்குக்கள்; தென்திசையைச் சார்ந்திருக்கின்றனர். த்ருடேயு, ருதேயு, புகழ்பெற்ற பரிவ்யாதர், ஏகதர், த்விதர், த்ரிதர், அத்ரியின்புத்ரரும் தர்மாத்மாவுமான ஸாரஸ்வதரிஷிஆகிய சூரியனுக்குச்சமமான இவ்வெழுவரும் வருணனுடையபுரோகிதர்கள்; மேற்றிசையைச் சார்ந்திருக்கின்றனர். அத்ரி, வஸிஷ்டபகவான், கஸ்யபமகரிஷி, கௌதமர், பரத்

---

1 ருத்ரர்கள் பதினொருவர். ஆதித்யர்கள் பன்னிருவர்; வஸுக்கள் எண்மர்; அஸ்வினிதேவர் இருவர்.

2 இரண்டுமூர்த்திகள்.

3 கணங்களைச்சேர்ந்தவன்.

4 அக்நியைப்போன்றவர்.

வாஜர், குசிகவம்சத்தவரானவிஸ்வாமித்ரர், ரிசிகர்புத்ரரும் உக்ரரும் மகிமையுள்ளவருமானஜமதக்னி இவ்வெழுவரும் குபேரனுடைய ஆசாரியர்கள்; வடதிசையைச் சார்ந்திருக்கின்றனர். (பின்கூறப்படும் ஸம்வர்த்தர்முதலிய) மற்றஸப்தரிஷிகள் எல்லாத்திசைகளிலுமிருக்கின்றனர். உலகத்தைக்காப்பவர்களான அவர்கள் தங்கள்பெயர்சொல்லும்மனிதர்களுக்குப் புகழையும் க்ஷேமத்தையும் செய்கிறவர். தர்மன், காமன், காலன், வஸு, வாஸுகி, அனந்தன், கபிலன், இவ்வேழுநாகர்கள் பூமியைத்தாங்குகிறவர். பரசுராமர், வ்யாஸர், த்ரோணபுத்ரரான அஸ்வத்தாமா, லோமசர் இவர்கள் தேவமுனிகள்; ஒவ்வொருவரும் [1]எவ்வேழுருவங்களாயிருக்கின்றனர். திக்பாலகர்கள் பெயரைச்சொன்னால் அவர்கள் உலகத்தின் கஷ்டநிவிருத்தியையும் ஸௌக்யத்தையும் செய்கிறார்கள். அவர்கள் எந்தஎந்தத்திசையிலிருக்கின்றனரோ அந்த அந்தத்திசையைநோக்கி நமஸ்காரம்செய்யவேண்டும். அவர்கள் எல்லாஉலகங்களையும்படைப்பவர்; நாமங்களைச் சொல்லுகிறவர்களின்பாவத்தைப் போக்குகிறவர். சிறந்ததவமுள்ளவரும் ஜிதேந்திரியருமாயிருக்கும் ஸம்வர்த்தர், மேருஸாவர்ணர், தர்மிஷ்டரானமார்க்கண்டேயர், ஸாங்கியர், யோகர், ந்ரதர், துர்வாஸமகரிஷி இந்த ஸப்தரிஷிகள்தாம் மூன்றுலகங்களிலும் பெயர்பெற்றவர்கள். ருத்ரனைப்போலப்பிரகாசிக்கும் மற்றும் சிலரிஷிகள் பிரம்மலோகத்திலிருப்பவர்களாகச் சொல்லப்படுகின்றனர். அவர்கள்பெயர் சொல்வதனால் புத்ரனில்லாதவன்புத்ரனையும் தனமில்லாதவன் தனத்தையும் அடைவார். மனிதனுக்குத்தர்மார்த்தகாமங்களென்னும் புருஷார்த்தங்கள்மூன்றும் லபித்திக்கும். ஸூர்யவம்சத்தில்பிறந்தவனும் இந்ரனுக்குச்சரியான பராக்ரமமுள்ளவனும் வேனனுடைய புத்ரனும் பிரஜைகளையும் பூமியையும்காப்பவனும் எல்லாப்பூமிக்கும்ஈச்வரனும் அரசரில்சிறந்தவனுமாகிய ப்ருதுசக்ரவர்த்தியைச் சொல்லவேண்டும். பூமியானது அவனுக்குப் பெண்ணாயிருந்ததனால் ப்ருதிவியென்றுசொல்லப்படுகிறது. இளையின்குமாரனும் புதனுக்கன்புள்ளபுத்ரனும் மூன்றுலங்களிலும்பெயர்பெற்றவனுமான புரூரவனென்னும் அரசனை உரைக்கவேண்டும். மூவுலங்களிலும் பிரஸித்திபெற்றவீரனுகிய பரதசக்ரவர்த்தியின்நாமத்தைச் சொல்லவேண்டும். கிருதயுகத்தில் கவாமயனமென்னும் யாகம்செய்தவனும் சிறந்த மகிமையுள்ளவனுமான ரந்திதேவனென்னும் மகாராஜனைச் சொல்லவேண்டும். உலகங்களைஜயித்தவனும் சிறந்ததவமுள்ளவனும்

[1] ஏழு உலகங்களுக்கும் ஏழுருவமென்பது.

ராஜலக்ஷணங்கள் பொருந்தினவனும் உலகங்களால் பூஜிக்கப்பெற்றவனும் சிறந்தமகிமையுள்ளவனுமான பிரஹ்மதேவனென்னும் ராஜரிஷியை உரைக்கவேண்டும். அவன் ஸகரருடைய புத்ரர்களைக் கங்கையினால் தனைத்துக் கதியேற்றினவன். பெரிய ருஷிகளும் சிறந்த சக்தியும் பயங்கரமானதோற்றமும் மிகுந்த தைரியமுமுள்ளவர்களும் பெரும்புகழ் பெற்றவர்களும் அக்நியைப்போன்றவர்களுமாகிய இந்த்ரதேவர்களையும் ரிஷிகளையும் பூஜிக்கத்தகுந்தவர்களான ஆசார்யர்களையும் உரைக்கவேண்டும். சிறந்தவையான ஸாங்கியயோகங்களையும் ஸ்ரேஷ்டமான வைராக்யங்களையும் எல்லாவேதங்களின்முகற்பொருளுமான ப்ரஹ்மஜ்ஞானத்தையும் எல்லாப்பிராணிகளுக்கும்மங்களத்தைக் கருதுகின்றவையும் வியாதிகளைப் போக்குகின்றவையும் மேன்மையைக் கருதுகின்றவையும் எல்லாக்கர்மங்களிலும் சிறந்தவையும் பாவனமுமான யஜ்ஞகர்மங்களையும் சொன்னேன். பாரதரே! மேற்சொன்னவர்களின்நாமங்களைக் காலைமாலைகளில் பரிசுத்தஜனங்கள் கீர்த்தனம்செய்யவேண்டும். இவர்கள்தாம் உலகமெல்லாம் செல்லுகின்றனர்; மழைபொழிகின்றனர்; ஒளிகொடுக்கின்றனர்; காற்றுவீசுகின்றனர்; உலகத்தைப்படைக்கின்றனர். இவர்கள் தூயரங்களைப்போக்குகிறவர்; சிறந்தவர்; ஸமர்த்தர்; பொறுமையுள்ளவர்; ஜிதேந்த்ரியர். இவர்களெல்லாரும் நூறுகள்பெயர்களைச் சொல்லும்மனிதர்களுக்குத் தீங்குகளைப் போக்குகின்றனர். இந்த மஹாத்துமாக்கள் பாவபுண்ணியங்களுக்குச் சாக்ஷிகளாயிருப்பவர். காலையிலெழுந்து இவர்களைக்கீர்த்தனம்செய்பவன் நன்மையையடைவான். அவனுக்கு அக்நியமும்சோரபயமும்இல்லை. அவனுக்குவழிகளில் இடையூறு உண்டாவதில்லை. இவர்களைத்தினந்தோறும் கீர்த்தனம்செய்யும்மனிதர்களுக்குத் துக்கம் உண்டாவதில்லை; எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டு மோக்ஷமடைந்து வீட்டைச்சேர்வர். பிராம்மணன் நிய்மமும் ஆசாரமும் ஆத்மஜ்ஞானமும் பொறுமையும் அடக்கமுமுள்ளவனுக்கும்பொருமையற்றவனுக்கும் தீக்ஷாகாலங்கள்எல்லாவற்றிலும் இதைப்படிக்கவேண்டும். பிணிபாளனும் மதோன்மியாதியுள்ளவனும் இதைப்படிப்பதனால் தூயரத்திலிருந்து விடுபடுவர். வீட்டினுள்புடிப்பவனுக்குத் தலத்திற்கு மோக்ஷமுண்டாகும். நிலத்தின்நடுவில்படித்தால் எல்லாப்பாபிரும் விருத்தியாகும். வேறுஊருக்குப் பயணமாகப்போகும்போது படித்தால் மோக்ஷமமாக வழிச்செலவான். இதைத் தனக்கும் பிள்ளைபெண்டுகளுக்கும் பொருளுக்கும் தான்யங்களுக்கும் பயிர்களுக்கும் ரக்ஷையாகஉபயோகிக்கவேண்டும். க்ஷத்தி

1 இவனே பகீரதன்.

ரியன் யுத்தகாலத்தில் இதைச்சொன்னால்பகைவர்களைஒழித்துக்ஷேம மாகத் திரும்புவான். தேவகாரியங்களிலும் பித்ருகாரியங்களிலும் இதைப்படிக்கும் மனிதனுடைய ஹவ்யகவ்யங்களைத் தேவர்களும் பித்ருக்களும் புசிப்பர்; வியாதிபயமும் துஷ்டஜந்துக்களின்பயமும் யானைபயமும் திருடர்பயமும் இரா; துக்கங்குறையும்; பாவம்விலகும்; ஒடத்திலும் வாகனத்திலும் தூரதேசப்பிரயாணத்திலும் அரண்மனை யிலும் சிறந்தகாயத்திரியைச்சொல்லுகிறவன் சிறந்தலாபத்தை அடை வான். அவனுக்கு ராஜபயம் பிசாசபயம் ராக்ஷஸபயம் அக்நிபயம் ஜலபயம் காற்றுப்பயம் ஸர்ப்பபயம் ஒன்றுமுண்டாவதில்லை. இந்தஉத் தமமானகாயத்திரியை இடைவிடாமற்படிப்பவன் நான்குவர்ணங்களுக் கும் ஆஸ்ரமங்களுக்கும்சிறந்தஸுகத்தைச்செய்கிறவனாகிறான். இந் தக்காயத்திரியைப்படிக்குமிடத்தில் கட்டைகளில் தீப்பிடிப்பதில்லை; எவனும் இளமையில் இறப்பதில்லை; ஸர்ப்பங்களிருப்பதில்லை; காயத் திரியின்மகிமையுள்ள இந்தச் சிறந்தமந்திரத்தைச் சொல்லும்போது கேட்பவரும் துன்பமடையார்; சிறந்தகதியையடைவார். பசுக்களின் நடுவில் இதைச்சொன்னால் பசுக்கள் அவனிடத்தில் மிக்க அன்புள்ள வையாகும். புறப்படும்போதும் அன்னியதேசத்திலிருக்கும்போதும் எந்தநிலைமையிலிருக்கும்போதும் இதைப்படிக்கவேண்டும். ராஜனே! எக்காலமும் ஜபஹோமங்களைச்செய்துகொண்டு மனத்தையடக்கின ரிஷிகளுக்கும் இந்தஜபம் மிக்கமுக்கியமும் ரகஸ்யமுமானது. இதை ஸரியாகஅனுஷ்டித்து லித்திபெற்ற பராசரருடைய சிறந்தபுராதன சரித்திரம் முன்னர்இந்திரனுக்குச்சொல்லப்பட்டது. பழமையும் ஸத் யமுமாகிய இந்தமந்திரத்தை உனக்கு இப்போது சொன்னேன். இது எல்லாப்பிராணிகளுக்கும் உள்ளம்போன்றது. இது அழியாதவேதம். சூரியவம்சத்திலும் சந்திரவம்சத்திலும் ரகுவம்சத்திலும் குருவம்சத் திலும் பிறந்தவரானவரும் தினந்தோறும் பரிசுத்தர்களாகி எல்லாப் பிராணிகளுக்கும்ஆதாரமான இந்தமந்திரத்தைப் படிப்பது வழக்கம். தேவர்களுக்கும் ஸப்தரிஷிகளுக்கும்த்ருவனுக்கும்ஸமீபத்தில் இதை நித்யமாகச்சொல்வது பயங்களையும் எல்லாக்கஷ்டங்களையும் விடுவிப் பது. காஸ்யபர், கௌதமர், ப்ருகு, அங்கிரஸ், அத்ரி, சுக்ரர், அகஸ்தி யர், ப்ருகஸ்பதிமுதலிய வ்ருத்தர்களான ப்ரம்மரிஷிகளிஞல் அனுஷ் டிக்கப்பட்டதும் பரத்வாஜரால் தியானிக்கப்பட்டதும் ரிசீகர்புத்ரர்க ளால் வஸிஷ்டரிடமிருந்து அடையப்பட்டதுமாகிய இந்தமந்திரம் கிடைத்தபிறகுதான் இந்திரனும் வஸுக்களும், தானவரானவரையும் ஜயித்தனர். பொன்மயமான கொம்புகளோடுகூடிய நூறுபசுக்களை

வேதங்களும் பலசாஸ்திரங்களும் கற்றுணர்ந்த பிராம்மணனுக்குத் தானம் செய்பவனுக்கும் இந்தச்சிறந்த பாரதகதையை நித்யமாகச் சொல்லுகிறவனுக்கும் பலன் ஒன்றுதான். ப்ருகுவைச்சொல்வதனால் தர்மம் விருத்தியாகிறது. வஸிஷ்டருக்கு நமஸ்காரம் செய்வதனால் மஹிமை விருத்தியாகிறது. ரகுவை நமஸ்கரிப்பதனால் யுத்தத்தில் ஜயமுண்டாகிறது. அஸ்வினீதேவர்களின் நாமஸங்கீர்த்தனம்செய்வதனால் பிணிநீங்கிவிடுகிறது. அரசனே! வேதத்திலுள்ள அழிவற்றதாகிய இந்தக்காயத்திரியை உனக்குச் சொன்னேன்; பாரதனே! உனக்கு இன்னும் என்னகேட்க விருப்பமிருக்கிறதோ அதையும் சொல்வேன்" என்றார்.

இருநூற்றைம்பத்தாருவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பிராம்மணமஹிமை.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பூஜிக்கத்தக்கவர் எவர்? நமஸ்கரிக்கத்தக்கவர் எவர்? யாரிடத்தில் எப்படிநடக்கவேண்டும்? யாரிடத்தில் எவ்வகை ஒழுக்கத்தோடிருந்தால் மனிதன் கெடாமலிருப்பன்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"யுதிஷ்டிர! பிராம்மணர்களே அவமதிப்பது தேவர்களையும் கெடுத்துவிடும். பிராம்மணர்களே நமஸ்கரிப்பவன் கெடான். பிராம்மணர்களே பூஜிக்கத்தக்கவர்கள். அவர்களே நமஸ்கரிக்கத்தக்கவர்கள். அவர்களிடத்தில் நீ புத்ரன்போல நடந்துகொள். அவர்கள் இவ்வுலகங்களனைத்தையும்தாங்குகிறவர்; ஞானிகள். பிராம்மணர்களேஎல்லா உலகங்களுக்கும் பெரியவர்கள்; தர்மத்திற்கு அணையாயிருப்பவர்கள். அவர்கள் தனத்தைவிட்டதனால் எல்லாருக்கும்இனியவராயிருப்பவர். மதுரமான சொற்களையுடையவர்! எல்லாப்பிராணிகளுக்கும் இனியவர்; தங்களனுஷ்டானங்களைத் தவறுமல் வகிப்பவர். உலகத்திற்கு நிதிகள்போன்ற சாஸ்திரங்களையுண்டாக்கிப் புகழ்பெற்றவர். அவர்களுக்கு எப்போதும் தவமேதனம்; சொல்லேபெரியவன்மை. அவர்கள் தர்மங்களுக்குத் தந்தைகள்; தர்மஸூக்ஷ்மங்களைக் கண்டறிந்தவர்; தர்மத்தில்விருப்பமுள்ளவர்; தர்மத்தில்நிலைபெற்றவர்; தங்கள் நற்செய்கைகளினால் தர்மத்தைத்தாங்கும் அணைகளாயிருப்பவர். நான்கு வகையான பிராணிகளனைத்தும் அவர்களே ஆதாரமாகக்கொண்டு நிற்கின்றன. அவர்களே எல்லாரையும் நடத்தும் வழிகள்; யாகங்களே

கடத்துகிறவர்; எக்காலமும் இருப்பவர்; தங்கள் தாதை மூதாதை பரம்பரையாக வந்திருக்கும் பெரியபாரத்தை எப்போதும்வகித்துக் கொண்டிருக்கின்றனர். கல்லுகுதிரைகள் கெட்டவுழியிலும் சோராம லிருப்பதுபோலச் சங்கடத்திலும் தங்கள் பாரத்தை வகிக்கச்சோர்வ தில்லை. (அவர்கள்) பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் அதிதிகளுக் கும் முதன்மையாயிருந்து ஹவ்யகவ்யங்களில் முதலில் பாகங்களைப் புஜிப்பவர்; தாங்கள் புஜிப்பதனாலேயே மூவுலகங்களையும்பெரும்பயத் திலிருந்து காப்பாற்றுகின்றனர்; எல்லாஉலகங்களுக்கும் தீபமாகவும் கண்ணுள்ளவர்களுக்கும் கண்ணாகவுமிருக்கின்றனர்; சிற்பமுதலிய எல்லாவித்தைகளுக்கும் நிதிகள்; பண்டிதர்கள்; ஸூக்ஷ்மத்தைஅறி யும்திறமையுள்ளவர்கள்; எல்லாப்பிராணிகளின்வினைப்பயன்களையும் அறிந்திருப்பவர்; ஆத்மாவையே கதியாகத்தியானிப்பவர்; சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களையறிந்தவர்; லக்ஷ்தேகமற்றவர்; மேல்கீழ் வஸ் துக்களின் வேற்றுமைகளையறிந்தவர்; உயர்ந்தகதிக்குச் செல்லுகிற வர்; பற்றற்றவர்; பாவங்களை உதறினவர்; சீதோஷ்ணம் ஸுகதுக்க முதலியவற்றையும் தமவென்னும் அபிமானத்தையும் விட்டவர்; பூஜிக்கத்தக்கவர்: ஞானிகளான மகாத்மாக்களினால் எப்போதும் பூஜிக்கப்பெற்றவர்; சந்தனம்பூசுவதிலும் அழுக்கான சேற்றைப் பூசுவதிலும் உண்பதிலும் உண்ணுமலிருப்பதிலும் வேற்றுமையில் லாதவர்; மெல்லிய ஆடையும் தார்மடியும் வெண்பட்டும் தோலும் அவர்களுக்குச்சரிதான். இவர்கள் அனேகநாள்கள் போஜனம் செய்யாமலுமிருப்பார்; இந்திரியங்களையடக்கி வேதாத்யயனங்களி னால் தேகங்களை வாடச்செய்வார்; தேவதையல்லாதவனை தேவதை யாகவும் தேவதையைத் தேவதையல்லாதவனாகவும் செய்வார்; அவர் கள் கோபமூட்டப்பட்டால் வேறுலோகங்களையும் வேறுலோகபாலர் களையும் படைப்பார். அந்தமகாத்மாக்களின் சாபத்தினாலேதான் ஸமுத்திரம் குடிக்கத்தகாததாகிவிட்டது. அவர்களின் கோபமென் னும் அக்நி தண்டகாவனத்தில் இன்னும் ஆறவில்லை. அவர்கள் தேவருக்குந்தேவர்; காரணத்திற்குங்காரணம்; பிரமாணத்திற்கும் பிரமாணம். ஆதலால், தெரிந்தவன் அவர்களை அவமதிக்கலாகாது. அவர்களில் கிழவர் சிறுவர் அனைவரும் கல்லமார்க்கத்தைக் காண்பிப் பவர். அவர்கள் தவச்சிறப்பினாலும் கல்விச்சிறப்பினாலும் ஒருவரை யொருவர் கௌரவிக்கிறார்கள். கல்வியில்லாதப்ராம்மணனும் தேவ தை; தானத்திற்குப் பரிசுத்தனான சிறந்தபாத்ரன். வித்வானோ வெனில் மிகச்சிறந்ததேவதை; பொங்கின்கடலுக்கொப்பானவன்.

பிராம்மணன் வித்வானாயிருந்தாலும் அவித்வானாயிருந்தாலும் பெரிய தேவதைதான். மந்திரத்தினால் சுத்தம்செய்யப்பட்டாலும் படாவிட்டாலும் அக்நி பெரியதேவதையன்றே? பெரியதேஜஸ்ஸுள்ள அக்நி மயானத்திலிருந்தாலும் கெடுவதில்லை. சாஸ்திரப்படி யாகங்களில் ஹோமம்செய்யப்பட்ட அக்நி இன்னம். அதிகமாகப் பிரகாசிக்கிறது. அப்படியே வேண்டாதகாரியங்களெல்லாவற்றையும் செய்தபோதிலும் பிராம்மணனைப்பூஜிக்கவேண்டும். அவன் பரதேவதையென்றறி" என்றார்.

இருநூற்றைம்பத்தேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வாயுவுக்கும், கார்த்தவீர்யார்ஜுனனுக்கும் ஸம்பாஷணை; பிராம்மணர்மகிமையைப் பற்றியது.)

யுதிஷ்டிரர், "வேந்தரே! சிறந்தபுத்தியுள்ளவரே! பிராம்மணபூஜைசெய்வதில் என்னபலனையும் என்ன விசேஷபுண்ணியத்தையும் கண்டறிந்து அவர்களைப் பூஜிக்கிறீர்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"பாரதனே! இதவிஷயத்தில் வாயுபகவானுக்கும் கார்த்தவீரியார்ஜுனனுக்கும் நடந்த ஸம்பாஷணையாகிய இந்தப் பழமையான இதிஹாஸத்தைச் சொல்லுகின்றனர். ஆயிரங்கைகளுள்ளவனும் சிறந்தபலிசாலியும் சிறப்புள்ளவனுமான கார்த்தவீரியார்ஜுனன் இவ்வுலகமனைத்திற்கும் ஈச்வரனாக மாகிஷ்மதியென்னும் நகரத்திலிருந்தான். தவறுதபராக்கிரமமுள்ள அந்த ஹைஹயதேசத்தரசன் ரத்தினங்களுண்டாகும் கனிகளுள்ளதும் ஏழுதீவுகளுள்ளதும் கடல்சூழ்ந்ததுமாகிய புவனியனைத்தையும்ஆண்டான். அவன் தன்னுடைய க்ஷத்திரிய தர்மத்தையும் அடக்கத்தையும் சாஸ்திரஞானத்தையும் முன்னிட்டுத் தன்தனத்தை ஒருஸந்தர்ப்பத்தில் தத்தாத்ரேயருக்குக் கொடுத்தான். அந்தக் கார்த்தவீரியார்ஜுனன் அம்முனிவருக்குப் பணிவிடையும்செய்தான். அந்தப்பிராம்மணர் ஸந்தோஷமடைந்து அவனைமூன்றுவரங்கேட்கச்சொன்னார். அவரால்வரங்கொடுப்பதாகச் சொல்லப்பட்ட அவ்வரசன், 'கடந்தவழுள்ளவரே! எனக்கு [1]ஸேனை நடுவிலிருக்கும்போது ஆயிரம்கைகளும் வீட்டிலிருக்கும்போது [2]ஸ்வபாவமாக இரண்டுகைகளும் இருக்கவேண்டும். போரில்படைச்

---

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

சேவகர் என்ஆயிரங்கைகளையும் பார்க்கக்கடவர். பரிாக்கிரமத்தினால் பூமியினத்தையும் வெல்லக்கடவேன். அந்தப் பூமியையடைந்தபின் சோம்பாமல் தர்மமாகப் பரிபாலனம்செய்யக்கடவேன். பிராம்மணோத்தமரே ! குற்றமற்றவரே ! நான் உம்மிடத்தில் நான்காவது வரமும் கேட்கிறேன். என்னை அனுக்கிரகிப்பதற்காக அதையும் கொடுக்கக் கடவீர்.. உம்மைச்சேர்ந்தவனுகியநான் ஒழுக்கந்தவறினால் பெரியோர்கள் என்னைத்திருத்தக்கடவர்' என்றுசொன்னன். இவ்வாறு சொல்லக்கேட்டஅந்தப்பிராம்மணர், ' 'அப்படியேஆகட்டும்' என்று அவ்வரசனுக்குச்சொன்னர். ஜ்வலிக்கும் பராக்ரமமுள்ள அவ்வரசனுக்கு வரங்கள் அவ்வாறே பயன்பட்டன. அவன்அக்நிக்கும் சூரியனுக்கும் சமமான ஒளியுள்ள ரதமேறிச்சென்று பராக்ரமகர்வத்தினால் ' தைரியத்திலும் ஸாமர்த்தியத்திலும் புகழிலும் சூரத்தனத்திலும் பிறரை வசப்படித்துவதிலும் மகிமையிலும் எவன் எனக்குச்சரியானவன் ?' என்றுசொன்னன். அவன்சொல் முடியும்போதே ஆகாயத்தில் ஓர் அசரீரவாக்கானது, 'மூடா ! பிராம்மணன் க்ஷத்திரியனேவிட்சிறந்தவனென்பதை நீ அறியவில்லை.இவ்வுலகத்தில்க்ஷத்திரியன்பிராம்மணனோடு சேர்ந்துதான் பிரஜைகளையாளுகிறன்' என்று சொல்லிற்று. அதற்கு அர்ஜுனன், 'நான் ஸந்தோஷமடைந்தால் பிராணிகளைஉண்டாக்குவேன் ; கோபித்தால் அழிப்பேன். செய்கையிலும் எண்ணத்திலும்வாக்கிலும்பிராம்மணன் எனக்குமேலாவதில்லை. பிராம்மணன் சிறந்தவனென்பது முந்தியவாதம். க்ஷத்திரியன் சிறந்தவனென்பது பிந்தியவாதம். உன்னுற்சொல்லப்பட்ட இரண்டுவாதங்களும் காரணமுள்ளவைதாம். ஆனால், அவற்றில் ஒருவிசேஷமிருக்கிறது. பிராம்மணர்கள் க்ஷத்திரியனைச் சார்ந்திருப்பதேயன்றி க்ஷத்திரியன்பிராம்மணர்களைச்சார்ந்திருப்பதில்லை. பிராம்மணர்கள் பூமியில் வேதத்தைக் காரணமாகக்கொண்டு க்ஷத்திரியர்களையடித்துப் பிழைக்கிறார்கள். பிரஜாபரிபாலனமென்னும் தர்மம் க்ஷத்திரியர்களிடத்தில் பொருந்தியிருக்கிறது. க்ஷத்திரியர்களால் பிராம்மணர்களுக்குஜீவனம். அந்த க்ஷத்திரியர்களைவிட ப்ராம்மணன் சிறந்தவனுவது எப்படி ? தாங்களே தங்களைக் கௌரவித்துக்கொண்டு எல்லாப்பிராணிகளிலும் முதன்மையாகிப் பிச்சையெடுத்துப் பிழைக்கும் அந்தப்பிராம்மணர்களை நான் எனக்கு வசப்படித்தி வைத்திருக்கிறேன். ஆகாயத்தில் பேசும் இந்தக்கன்னிகை சொன்னது பொய். எனக்குட்படாத தோளாடையுடித்த பிராம்மணர்களனைவரையும் ஜயித்துவிடுவேன். மூவுலகங்களிலும் தேவனுகட்டும் மனிதனுகட்டும் எவனும் என்னை

ராஜ்யத்திலிருந்து நழுவச்செய்யமுடியாது. ஆதலால், நான் பிராம்மணர்களை ஜயிப்பேன்; பிராம்மணன் மேலாயிருந்த உலகத்தில் இப்போது க்ஷத்திரியன்மேலாயிருக்கச் செய்வேன். யுத்தத்தில் என் சக்தியைத்தாங்குவதற்கு யாராலும் முடியாதன்றோ?' என்றுசொன்னன்.

கார்த்தவீரியார்ஜுனனுடைய சொல்லைக்கேட்டு அந்த அசரீர வாக்குச் சொன்ன ராக்ஷஸி பயந்தாள். பிறகு, ஆகாயத்திலிருக்கும் வாயு அவனைப்பார்த்து, 'ராஜனே! இந்தக் கெட்டஎண்ணத்தை விட்டுவிடு. பிராம்மணர்களுக்கு நமஸ்காரம் செய். அவர்களுக்குத் தீங்குசெய்கிறவனுக்குத் தேசத்தில்கலகமுண்டாகும். பிறகு, உன்னையும் பிராம்மணர்கள் அழித்துவிடுவார். சிறந்தவன்மையுள்ள பிராம்மணர்களின் உற்சாகத்தைக் கெடித்ததனால் அவர்கள் உன்னைத் தேசத்திலிருந்து ஓட்டிவிடுவார்' என்றுசொன்னன். அவ்வரசன் அவனை, 'நீ யார்?' என்றுகேட்க, வாயுபகவான் அவனைப்பார்த்து, 'நான் வாயு; தேவதூதன்; உனக்கு இதஞ்சொல்லுகிறேன்' என்றுசொன்னன். கார்த்தவீரியார்ஜுனன், 'ஆ! ஆ! பிராம்மணர்களிடத்தில் உனக்குள்ள பக்தியையும் அன்பையும் காண்பித்தாய். பிராம்மணனைத் தமன் பூமி, வாயு, அப்பு, அக்கி, சூரியன், ஆகாயம் இவற்றில் எதற்குச் சமமானவனென்பதை எனக்குச் சொல்' என்றுகேட்டான்.

இருநூற்றைம்பத்தேட்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வாயுவுக்கும் கார்த்தவீரியார்ஜுனனுக்கும் ஸம்பாஷணை; கஸ்யபர் முதலியோரின்மகிமை.)

வாயு, 'ராஜனே! மூடனே! மகாத்மாக்களானபிராம்மணர்களின்குணங்களில் சிலவற்றைச் சொல்லுகிறேன்; கேள். உன்னால் குறிக்கப்பட்டவையெல்லாவற்றினும் பிராம்மணன் சிறந்தவன். பூமி தேவியானவள் கஸ்யபரோடு சண்டைசெய்து பூமியுருவத்தையே இழந்து அழிந்துபோனள். அவளைப் பிராம்மணரான கஸ்யபர் நிலை நிறுத்தினர். ராஜனே! பிராம்மணர்கள் தேவலோகத்திலும் இவ்வுலகத்திலும் எக்காலமும் அழியாமலிருப்பவர். முற்காலத்தில் அங்கிரஸின்வம்சத்தில் பிறந்த உசத்யமுனிவர் தம்பிரபாவத்தினால் ஜலமெல்லாவற்றையும் குடித்தார். அம்மகாமுனிவர் அந்தஜலங்களைப் பாலைப்போலச் சலிக்காமல் குடித்தார். ராஜனே! அவரே பூமி

யினத்தையும் பெரியதீர்ப்பெருக்கினால் நிரப்பினர். அவர்கோபித்த காலத்தில் நானும் அவரிடத்தில்பயந்து அந்தப்பயநிவிர்த்திக்காக அந்தஉசத்தியரின்அக்கினிஹோத்திரத்தினிலேயே இருந்தேன். பகவானதேவேந்திரன் அகல்யையிலாசைப்பட்டதற்காகக் கௌதமரால் சபிக்கப்பட்டான். அவர், தர்மத்தினால் அவனை அழிக்காமல் விட்டார். ராஜனே! அப்படியே கல்லதண்ணீர்நிரம்பினதாகக்காணப்பட்ட ஸமுத்திரம் பிராம்மணர்கள்சாபத்தினால் உப்புநீராயிற்று.புகையில்லாமல் பொன்னிறமுள்ளதும் ஒன்றுசேர்ந்துஎழுந்த ஜ்வாலைகளோடுகூடியதும் மகிமைபொருந்தியதுமான அக்னி,அங்கிரஸ் கோபித்துச் சபித்ததனால் இந்தக்குணங்கள் இல்லாமற்போயிற்று. சிறந்த கீர்த்தியையுடையகபிலரென்னும் பிராம்மணரால்சபிக்கப்பட்டு மிகச் சிறந்தவர்களான ஸகரபுத்திரர்கள் கடலருகில் நீறுனதைப் பார். ராஜனே! பிராம்மணர்களின் கன்றுமதிப்புச் சிறந்ததென்றறி. அரசனவன் கர்ப்பத்திலிருக்கும் பிராம்மணர்களையும் எப்போதும் நமஸ்கரித்தல்வேண்டும். தண்டகனென்னுமரசனுடைய பெரிய ராஜ்யம் பிராம்மணனால் அழிக்கப்பட்டது. தாலஜங்கர்களென்னும் சிறந்த க்ஷத்திரியர்கள் ஔர்வரென்னும் ஒருபிராம்மணரால் அழிக்கப்பட்டனர். உனக்கும் கிடைக்க அரியவையான பெரியராஜ்யமும் சக்தியும் தர்மமும் கல்வியும் தத்தாத்ரேயர் அனுக்கிரகத்தினால் கிடைத்தன. அர்ஜுனா! நீ அக்கியை நித்யமாகப்பூஜிக்கிறாய். பிராம்மணனைப் பூஜியாமலிருப்பதேது? அவன் எல்லாஉலகங்களுடையஹவிஸ்ஸையும் தேவர்களுக்குச் சேர்ப்பிக்கும் பிராம்மணனன்றோ? அவனை நீ ஏன் அறியவில்லை? அல்லது, ஒவ்வொருபிராணியையும் காப்பாற்றுகிறவனும் ஜீவலோகத்தையே படைப்பவனுமாகிய பிராம்மணன் சிறந்தவனென்று அறிந்திருந்தும் வீண்கர்வப்படுகிறாய்? பரமாத்மாவினிடத்திலுண்டானவரும் அழியாதவரும் சராசரங்களாகிய இந்தப் பேருலகத்தைப் படைத்தவருமாகிய பிரம்மதேவரே பிராம்மணர்; அண்டத்திலுண்டானவரென்று சிலஅறிவீனர் நினைக்கின்றனர். அண்டம்வெடித்தபின் மலைகளும் திசைகளும் ஜலமும் பூமியும் ஆகாயமும்உண்டாயின. பிரம்மதேவர் இவற்றை அவ்விதமாகக்கண்டவர். பிறப்பில்லாதவர் பிறப்பதேது? பிரம்மதேவர் எந்தஅண்டத்தினின்றுண்டானாரோ அந்தஅண்டமாகிய இடம் ஆகாயமன்றோ? அதில் அவர் எப்படி நிற்பரென்றுசொல்லலாம்? அந்தக்காலத்தில் ஒன்றும் இராதன்றோ? எல்லாச்சக்திகளையுமடைந்த பிரம்மதேவர் [1]அகங்கார

[1] மஹத்திலிருந்துண்டான் அகங்காரம்என்னும் தத்வம்.

மென்று சொல்லப்படுகிறார். அவருக்கு முடிவில்லை. அந்தப் பிரம்ம தேவர் உலகங்களைப்படைத்து அவற்றிற்கு ஈச்வராயிருக்கிறார்' என்றுசொன்னான்; வாயுவினால் இவ்வாறு சொல்லப்பட்ட அவ்வரசன் அப்போது பேசாமலிருந்தான். திரும்பவும் அவனைப்பார்த்து வாயு சொல்லலானான்.

இருநூற்றைம்பத்தொன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வாயுவுக்கும் கார்த்தவீரியார்ஜுனனுக்கும் ஸம்பாஷணை ; உசத்யர் வரணனைவென்றகதை.)

'ராஜனே! முற்காலத்தில் அங்கனென்னுமரசன் இந்தப்பூமியைப் பிராம்மணர்களுக்குத் தக்ஷிணையாகக்கொடுக்கக்கருதினான். அப்போது பூமிதேவி கவலையுற்றாள். அவள், 'இந்தச்சிறந்தஅரசன் எல்லாப்பிராணிகளுக்கும் ஆதாரமும் பிரம்மாவின்புதல்வியுமான என்னையடைந்து பிராம்மணர்களுக்குத் தானம்செய்யநினைக்கிறானே. இதென்ன? ஆதலால், நான் பூமிஉருவத்தைவிட்டுப் பிரம்மலோகம் போவேன். இவ்வரசனும் இவன்ராஜ்யமும் இராமற்போகட்டும்' என்று நினைத்துச் சென்றாள். பிறகு, பூமிதேவிசெல்வதைக்கண்ட கச்யபர் உடனே மனத்தை யோகத்தில் மிகஉறுதியாகச்செலுத்திப் பூமிக்குள் பிரவேசித்தார். ராஜனே! பிறகு, அந்தப்பூமியானது எங்கும் புல்லும்பயிர்களும்நிரம்பினதாகவும் தர்மமிருந்ததாகவும் பயமற்றதாகவும் செழித்ததாகவும் இருந்தது. ராஜனே! பெருந்தவமுள்ள கச்யபர் இவ்வாறு முப்பதினாயிரம்தேவவருஷங்கள்சலியாமல்பூமியாயிருந்தார், மகாராஜனே! பிறகு, பூமிதேவி.வந்து கச்யபரைநமஸ்கரித்து அம்மகாத்மாவின்பெண்ணாகிக் காச்யபியென்று பெயர்பெற்றாள். அரசனே! அந்தக்காச்யபரென்னும்பிராம்மணர்இப்படிப்பட்டவராயிருந்தார், கச்யபருக்குமேலான வேறு எந்தக்ஷத்திரியனையாவது நீ சொல்' என்றான். அரசன் ஒன்றும்பேசவில்லை. வாயுபகவான் திரும்பவும் பேசலானான். 'ராஜனே! அங்கிரவின்குலத்தில்பிறந்தவரானஉசத்தியரின்சரித்திரத்தைக்கேள். சந்திரன்புதல்வியானபத்ரையென்பவள் அழகில்மிகச்சிறந்தவளாகப் பெயர்பெற்றிருந்தாள். சந்திரன் உசத்யரை அவளுக்குச் சரியானகணவராக நினைத்தான். புகழ்பெற்றமகாபாவையான அந்தப்பத்ரையும் உக்ரமான தவம் செய்

தாள். சந்திரன் மகானுபாவரானஉசத்யரை அவளுக்கர்க வரித்தான். பிறகு, சந்திரன் உசத்யரையழைத்து, 'புகழ்பெற்றபத்ரையைக் கொடுக்கிறேன்' என்றுசொன்னன். அந்தஉசத்யரும் மிகுதியான தக்ஷிணைகளைக்கொடுத்துச் சாஸ்திரப்பிரகாரம் அவளை மணைவியாக மணம்செய்தார். ஆனல், சிறந்த ஐஸ்வர்யமுள்ளவருணன் முதலி லேயே அவளைக் காதலித்திருந்தான். அவன் யமுனைக்கரையிலுள்ள வனப்பிரதேசத்திற்குவந்து அவளைத் தூக்கிக்கொண்டுபோனன். ஜலேஸ்வரனனவருணன் அவளையெடுத்துக்கொண்டுமிகஆச்சர்யமாக விளங்குவதும் அறுநூருயிரம் மடிக்களுள்ளதுமாகிய தனதுநகரத் திற்சேர்ந்தான். அதற்குமேலழகான சிறந்தபட்டணம் மற்றொன்று இல்லை. அது மாளிகைகளாலும் அப்ஸரஸுகளாலும் தேவபோகங் களாலும் விளங்குகிறது. ராஜனே! அந்தப்பட்டணத்தில் ஜலேஸ் வரனனவருணன் அவளுடன்கூடி மகிழ்ந்திருந்தான். இப்படித் தம் மனைவியைப் பறித்துக்கொண்டுபோனதை உசத்யர் நாரதர் சொல்லத் தெரிந்தார். எல்லாவற்றையும்நாரதரிடமிருந்துகேட்டஉசத்யர் அப் போது நாரதரைப்பார்த்து, 'நாரதரே! நீர் வருணனிடத்திற்கென்று, 'நீ என்னுடையமனைவியை விடு. நீ அவளை ஏன்கொண்டுபோனய்? லோகபாலகனனநீஉலகத்தைக்காப்பவனேயன்றிக் கெடுப்பவனன்று. ஸோமனல்எனக்குக்கொடுக்கப்பட்டமனைவியை நீ இப்போது அப கரித்தாய்' என்று நான்சொன்னதாகக் கடிந்துசொல்லும்' என்று சொன்னர். அவர்சொன்னதன்மேல் நாரதர் வருணனைப்பார்த்து, 'உசத்யருடையபார்யையை நீ ஏன்எடுத்தாய்? அவளை விட்டுவிடு' என்றுசொல்லினர். இவ்வாறு அவர்சொல்லியதைக்கேட்டவருணன் நாரதரைப்பார்த்து, 'எனக்கு இவள்மிகப்பிரியமானபாரியை. இவளை விட எனக்கு மனமில்லை' என்றுசொன்னன். வருணன் இவ்வாறு சொல்ல, நாரதர் அந்தஉசத்யமுனிவரிடம் வந்து மனத்தில் அதிகஸந் தோஷமில்லாமலே, 'மஹாமுனிவரே! வருணனல் பிடர்பிடித்துந் தள்ளப்பட்டேன். அவன் உமதுபாரியையைக் கொடுக்கிறதாகஇல்லை. நீர் செய்யக்கூடியதைச்செய்யும்' என்றுசொன்னர். நாரதர்சொல் லக்கேட்டஉசத்யர் கோபத்தினல் ஜ்வலித்தார். மிகச்சிறந்ததவ முள்ளஉசத்யர் தம்மகிமையினல் ஜலங்களையெல்லாம் கிரக்கச்செய்து குடித்துவிட்டார். ஜலமெல்லாம் குடிக்கப்படும்போது வருணன் அன் பர்களால்வேண்டப்பட்டும் அந்தப்பத்ரையை விடவேயில்லை. பிறகு, பிரம்மணேத்தமரான உசத்யர் கோபித்துப் பூமியைப்பார்த்து, 'அம்மா! அறுநூருயிரம்மடிக்களையும் தரையாகக்காண்பி' என்று

சொன்னர். உடனே, ஸமுத்திரம்ஓடிப்போனதனல் பூமியானது 1மருகாந்தாரமாயிற்று. அந்தப்பிராம்மணேத்தமர் ஸரஸ்வதிநதியைப்பார்த்தும், 'ஸரஸ்வதிநதியே! பயந்தவளே! நீயும் உன்தேசத்தைவிட்டுக் கண்ணுக்குப்புலப்படாமல் மருகாந்தாரத்திற்குச் சென்றுவிடு. சிறந்தவளே! உன்னல்விடப்பட்டதேசம் புண்ணியமில்லாததாகட்டும்' என்றுசொன்னர். அப்படி தேசமெல்லாம் புழுதியாகச்செய்யப்பட்டபோது, வருணன் உசத்யர்பார்யையான பத்ரையை அழைத்துவந்து அவரைச்சரணமடைந்து அவருக்குக் கொடுத்தான், பார்யையைப் பெற்றுக்கொண்டபிறகு அந்த உசத்யர் மனமகிழ்ந்து உலகத்தைக் கஷ்டத்திலிருந்து விடுவித்தார். தேவர்களும் துயரமற்றவரானர். ராஜனே! தர்மந்தெரிந்தவரும் மிகச் சிறந்த மகிமையுள்ளவருமான அந்தஉசத்யர் அந்தமனைவியையடைந்தபிறகு வருணனுக்குச்சொன்னதைக்கேள். 'ஜலாதிபதியே! என்தவத்தினல் உன்னை அழைத்து இவளைப் பெற்றுக்கொண்டேன்' என்றுசொல்லி அவளை அழைத்துக் கொண்டு தம்ஆச்ரமத்திற்குச் சென்றார். ராஜனே! இந்த உசத்ய ரென்னும் பிராம்மணஸ்ரேஷ்டர் இப்படிப்பட்டவரென்று சொல்லுகிறேன். உசத்தியரைவிடச் சிறந்தக்ஷத்திரியனை நீ சொல்' என்றான்.

இருநூற்றுமுப்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வாயுவுக்தும் கார்த்தவீர்யார்ஜுனஸம்பாஷணை;
அகஸ்திய வஸிஷ்டர்களின் கதை.)

இவ்வாறுசொல்லப்பட்டஅவ்வரசன்பேசாமலிருந்தான். பிறகு, வாயுபகவான் சொல்லலானன். 'அரசனே! அகஸ்தியரென்னும் பிராம்மண்ருடையமகிமையைக் கேள். தேவர்கள் அஸுரர்களால் ஜயிக்கப்பட்டு உற்சாகமற்றவர்களாக்கச் செய்யப்பட்டனர். ஹேஹய தேசாதிபதிகளிற் சிறந்தவனே! மனிதர்களால்செய்யப்படும் கர்மங்களும், தேவர்களுக்குரியயாகங்களும் பித்ருக்களுக்குரியஸ்ராத்தங்களும் அஸுரர்களால் அபகரிக்கப்பட்டன. பிறகு, தேவர்கள் ஐஸ்வர்யம்நீங்கிப் பூமியில் திரிந்தனரென்பது பிரஸித்தம். அரசனே! பிறகு, ஒருகால் அந்தத்தேவர்கள் சூரியனைப்போல ஒளியினல் பிரகாசிப்பவரும் மகிமையுள்ளவரும் சிறந்ததவமுள்ளவருமான அகஸ்தியரைக்

1 நீரில்லாத இடம்.

கண்டனர். ராஜனே! தேவர்கள் அம்மகாத்மாவைஉமஸ்கரித்துக் குசலப்ரஸ்னம்செய்து அவருடையஸமயம்பார்த்து,'ஓ! முனிஸ்ரேஷ்டரே! நாங்கள் அஸுரர்களால் யுத்தத்தில் வெல்லப்பட்டு ஐஸ்வர்யமில்லாமற்செய்யப்பட்டோம். ஆதலால், அந்தக் கொடியபயத்திலிருந்து எங்களைக்காப்பாற்றக்கடவீர்' என்று சொன்னார்கள். தேவர்களால் இவ்வாறு சொல்லப்பட்டபோது அந்தமகிமையுள்ளஅகஸ்தியர் கோபித்துப் பிரளயகாலாக்நிபோல ஜ்வலித்தார். மஹாராஜனே! அவருடையஜ்வலிக்கின்றகிரணங்களினால் எரிக்கப்பட்டஅவ்வஸுரர்கள் ஆயிரக்கணக்காக ஆகாயத்திலிருந்து விழுந்தனர். அந்தஅகஸ்தியருடையஒளியினால் சுடப்பட்ட அவ்வஸுரர்கள் தேவலோகம் பூலோகம் இரண்டையும்விட்டுத் தென்திசையைச் சேர்ந்தனர். பலிசக்கரவர்த்தியானவன் பூமிக்குள்போய் அஸ்வமேதயாகஞ்செய்தான். ராஜனே! பூமியிலும் பாதாளத்திலுமுள்ள மற்றஅஸுரஸ்ரேஷ்டர்கள் அவரால்எரிக்கப்படவில்லை. ராஜனே! உலகங்களைவிட்டுப்போன அஸுரர்கள் பயந்தீர்ந்த தேவர்களால் மறுபடியும் கண்டுபிடிக்கப்பட்டார்கள். பிறகு, தேவர்கள் அகஸ்தியரைநோக்கி, 'பூமியிலிருக்கும்அஸுரர்களைக் கொல்லும்' என்றனர். ராஜனே! இவ்வாறு சொல்லப்பட்ட அகஸ்தியர் தேவர்களைப்பார்த்து, 'பூமியிலுள்ளவர்களைஎரிக்க என்னால்முடியாது. என்தவம் கெடும். நான் எரிக்க மாட்டேன்' என்றுசொன்னார். அரசனே! தவத்தினால் ஆத்மசுத்தமடைந்த அகஸ்தியரால் அஸுரர்கள் அப்போது இவ்வாறு எரிக்கப்படவில்லை. குற்றமற்றவனே! இப்படிப்பட்ட அகஸ்தியரையும் உனக்குச்சொன்னேன். மற்றொருவரையும் சொல்வேன். அகஸ்தியருக்குமேலான க்ஷத்திரியன்இருந்தால் நீ சொல்லலாம்' என்றான். இவ்வாறுசொல்லக்கேட்ட அரசன் அப்போது பேசாமலிருந்தான். பிறகு, வாயுபகவான் சொல்லலானான்.

'ராஜனே! புகழ்பெற்ற வஸிஷ்டருடைய சிறந்த செய்கையைக் கேள்.தேவர்கள் [1]வஸிஷ்டருடையமகிமையையறிந்து அவரைமனத்தில் நினைத்துக்கொண்டு கங்கைக்கரைக்குச்சென்று அங்கே வைகானஸமென்னுந் தடாகத்தின் அருகில் வானப்ரஸ்தர்செய்யும் முறையாக ஸத்ரயாகஞ் செய்தனர். அவர்கள் எல்லாரும் யாகம்செய்து தீக்ஷையினால் இளைத்திருப்பதைக்கண்டு மலைகளுக்கொப்பான பலிகளென்னும் அஸுரர்கள் அவர்களை அடிக்கக்கருதினர். பிரம்மதேவரால் வரமளிக்கப்பட்ட வைகானஸமென்னுந்தடாகம் அவ்வஸுரர்

1 'தத்தஸ்யகௌரவம்' என்று பாடம்கொள்ளப்பட்டது.

களுக்கருகிலிருந்தது. அஸுரர்கள் கொல்லப்படக் கொல்லப்பட அத்தடாகத்தில் மூழுகிப்பிழைத்தார். அந்தப்பதினாயிரக்கணக்கான அஸுரர்கள் மிக்கபயங்கரமான மலைகளையும் பரிகாயுதங்களையும்மரங் களையும் எடுத்துக்கொண்டு அந்தஜலத்தை நாலுயோஜனைதூரம் மேலேஇளம்பும்படி கலக்கிக்கொண்டு தேவர்களை எதிர்த்தனர். அப் போது அவர்களால் பீடிக்கப்பட்ட தேவர்கள் இந்திரனைச் சரண மடைந்தனர். இந்திரனும் துயரப்பட்டுக்கொண்டு அவர்களுடன் வஸிஷ்டரைச் சரணமடைந்தான். பிறகு, பகவானை வஸிஷ்டமக ரிஷி அவர்களுக்கு அபயமளித்தார். தபோயோகத்தையுமுக்கியமாகக்கொண்ட அம்முனிவர் அப்போது அவர்கள் துக்கப்படுவதையறிந்து பிரகாசிக் கின்றதமதுபிரம்மதேஜஸினால் அஸுரர்களெல்லாரையும் அலக்ஷ்ய மாக எரித்தார். சிறந்த தவமுள்ள அந்தவஸிஷ்டர் கைலாயத்திற்குப் போகும் கங்காநதியை அந்த வைகாநஸமென்னும் சிறந்த தடாகத் தில் கொணர்ந்துவிட்டார். அந்த நதியினால் அந்தத்தடாகம் உடைக் கப்பட்டது. அந்தநதியினால் உடைக்கப்பட்ட தடாகத்திலிருந்து பெருகினதுதான் [1]ஸரயூநதியானது. அந்தப் பலிகளென்னும்அஸுரர் கள் எங்கே கொல்லப்பட்டனரோ அந்தத்தேசமும் பலினமென்று பெயர்பெற்றது. மஹாத்மாவான வஸிஷ்டரால் இவ்வாறு இந்திராதி தேவர்களும் காப்பாற்றப்பட்டனர். பிரம்மாவினால் வரமளிக்கப்பட்ட அஸுரர்களும் அழிக்கப்பட்டனர். குற்றமற்றவனே! வஸிஷ்டரது இந்தச் செய்கையையும் சொன்னேன். மற்றொருவரையும் சொல் வேன். வஸிஷ்டருக்குமேலான க்ஷத்திரியன் யாரையாவது சொல்' லென்றான்.

இருநூற்றுபத்தோராவது அத்யாயம்.

தாநதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வாயுவுக்கும் கார்த்தவீர்யார்ஜுனனுக்கும் ஸம்பாஷணை அத்ரி சீயவனர்களின் கதை.)

இவ்வாறு சொல்லியதைக்கேட்ட கார்த்தவீரியார்ஜுனன் பேசாம்விருந்தான். அவனைப்பார்த்து வாயு சொல்லலானான். 'ஹைஹயராஜர்களிற் சிறந்தவனே! மிக்கமஹாத்மாவான அத்ரியு டைய செய்கையைச் சொல்லுகிறேன்; கேள். தேவர்களும் அஸுரர்களும் சேர்ந்து கொடியஇருளில் யுத்தம்செய்தனர். அந்த

1 ஸ்ரஸ்=தடாகத்தில், யு=சேர்ந்தது.

யுத்தத்தில் ஸ்வர்ப்பானுவென்பவன் சந்திரசூரியர்களைப் பாணங்களால் அடித்தான். ராஜஸ்ரேஷ்டனே ! அப்போது இருளினால் மூடப்பட்ட அந்தத் தேவர்கள் பலசாலிகளான தானவர்களினால் ஒன்றுசேர்ந்து அடிக்கப்பட்டனர். அஸுரர்களாலடிக்கப்பட்டு வலிமைகுன்றின தேவர்கள் தவம்செய்துகொண்டிருக்கும்பிராம்மணரான அத்ரிமுனிவரைக்கண்டனர். கோபமற்றவரும் ஜிதேந்திரியருமான அம்முனிவரிடத்தில் தேவர்கள், ' பிரபுவே ! இந்தச் சந்திர சூரியர்களிருவரும் அஸுரர்களால் அம்புகளால் அடிக்கப்பட்டனர். இருள் மூடியிருப்பதனால் நாங்களும் பகைவர்களால் அடிக்கப்படுகிறோம். எங்களுக்கு ஸுகமில்லை. இந்தப்பயத்திலிருந்து எங்களைக்காப்பாற்றும்' என்று சொன்னார்கள். அதற்கு அத்ரி, 'உங்களை நான் ரக்ஷிப்பது எப்படி ?' என்றுகேட்க, அவர்கள், 'நீர் சந்திரனையும் சூரியனையும் இருந்து இருளைப்போக்கி எங்கள்சத்துருக்களைக் கொல்லுக்கடவீர்' என்று சொன்னார்கள். இவ்வாறு சொல்லக்கேட்ட அத்ரி அப்போதே இருளைப்போக்கும் சந்திரனை. சந்திரன்போலக் காட்சிக்கினியவரான அந்தரிஷி அன்புடன் பார்த்தார். அரசனே ! அந்தமஹரிஷி சந்திரனும் சூரியனும் ஒளியிழந்திருப்பதைப்பார்த்து உடனே தம்தவத்தினால் அவர்களுக்கு யுத்தகளத்தில் ஒளிகொடித்தார் ; அப்போது உலகத்தையே இருளில்லாமல் பிரகாசிக்கச்செய்தார் ; தேவர்களின் சத்துருக்கூட்டங்களையும் தம்ஒளியினால் ஜயித்தார். அம்மஹாஸுரர்கள் அத்திரியினால் எரிக்கப்படுவதைக்கண்டு அவரால் நன்முகக்காப்பாற்றப்பட்ட தேவர்களும் தங்கள்பராக்கிரமங்களினால் அஸுரர்களை அடித்தனர். உத்தமமான தேஜஸுள்ள அத்திரியினால் சூரியன் ஒளியுண்டாக்கப்பட்டான்; தேவர்கள் காப்பாற்றப்பட்டனர் ; அஸுரர்கள் கொல்லப்பட்டனர். அவர் தாமே சந்திரனுமிருந்தார். ராஜநிஷியே ! அக்நியைமட்டும் ஸகாயமாகவைத்துகொண்டு தோலாடையுடுத்துக் கனிகளைப்பக்ஷித்து ஜபம்செய்துகொண்டிருந்த அத்ரி என்னும் பிராம்மணரால் செய்யப்பட்டகாரியத்தைப் பார். சிறந்த மஹாத்மாவான அந்த அத்ரியினுடையகாரியத்தையும் விரிவாகச் சொன்னேன். மற்றெருவரைச் சொல்லட்டுமா ? அல்லது, அத்ரிக்கு மேற்பட்டகூத்திரியனை நீ சொல்லுகிறாயா ?' என்முன். இவ்வாறு சொல்லப்பட்ட அர்ஜுனன் பேசாமலிருந்தான். பிறகு, வாயு சொல்லலானான்.

'ராஜனே! மஹாத்மாவான ச்யவனருடைய சிறந்தகாரியத்தைக் கேள். ச்யவனர் அஸ்வினீதேவர்களுக்கு வாக்குத்தத்தம்செய்து இந்

திரனைப்பார்த்து, 'அஸ்வினீதேவர்களையும் தேவர்களுடன்சேர்த்து ஸோமபானம்செய்விக்கக்கடவாய்' என்று சொன்னர். இந்திரன், 'சிறந்ததவமுள்ளவரே! இந்தஅஸ்வினீதேவர்கள் எங்களால் இகழப் பட்டவர்கள். இவர்கள் ஸோமபானம்செய்வதெப்படி? இவர்கள் தேவர்களுக்குச்சமமானவரல்லர். ஆதலால், எங்களை நீர் இப்படிச் சொல்லலாகாது. அஸ்வினீதேவர்களுடன்சேர்த்து ஸோமபானஞ் செய்ய ஒப்பமாட்டோம். பிராம்மணரே! நீர் வேறுஎதுசொன்னாலும் அதை உமதுசொற்படி செய்வோம்' என்று சொன்னன். சியவனர், 'தேவேந்திரனே! இந்த அஸ்வினீதேவர்களும் உங்களுடன்சேர்ந்து ஸோமரஸத்தைக் குடிக்கட்டும். இவ்விருவரும் சூரியபுத்திரர்கள்; தேவர்கள். ஓ! தேவர்களே! நான்சொல்வதை நான் சொன்னபடி செய்யுங்கள். இதைச்செய்தால் உங்களுக்கு நன்மையுண்டாகும்; செய்யாவிடில் உண்டாகாது' என்றுசொன்னர். இந்திரன், 'பிராம்ம ணோத்தமரே! நான் அஸ்வினீதேவர்களோடுகூட ஸோமபானஞ் செய்யேன். மற்றவர்கள் இஷ்டமிருந்தால் குடிக்கட்டும்; எனக் குக் குடிக்கஇஷ்டமில்லை' என்றுசொன்னன். சியவனர், 'பலாஸுர னைக்கொன்றவனே! நான்சொன்னதைச்செய்யாவிட்டால் என்னால் நிர்ப்பந்தம்செய்யப்பட்டு இப்போதே யாகத்தில் ஸோமரஸத்தைக் குடிப்பாய்' என்றுசொன்னர். பிறகு, அஸ்வினீதேவர்களின் நண் மைக்காக சியவனரால் ஒருயாகம் ஆரம்பிக்கப்பட்டது. அதில் மந் திரங்களினால் தேவர்கள் அவமதிப்பை அடைந்தனர். அந்தக்கிரியை யாரம்பித்ததைக்கண்டு பகவானனஇந்திரன் கோபத்தினால் கண்கள் சுலங்கிப் பெரியமலையையும் வஜ்ராயுதத்தையும் ஒங்கிக்கொண்டு சிய வனரிடம்ஓடினன். சிறந்ததவமுள்ளசியவனர் அவன்வரவைக்கண்ட வுடன் ஜலத்தினால் ப்ரோக்ஷித்து வஜ்ராயுதத்தோடும் பர்வதத்தோ டுங்கூடவே இந்திரனை நிறுத்திவிட்டார். அம்மகரிஷி உடனே தமது ஆஹவநிகளினால் வாயைத்திறந்துகொண்டிருக்கும் மிகக்கொடியவ னான மதனென்னும்இந்திரசத்துருவைஉண்டுபண்ணினர். அவனுக்கு நூறுயோஜனைநீளமுள்ள ஆயிரம்பற்கள்இருந்தன. அவனுடையகோரப் பற்கள் இருநூறுயோஜனை நீளமுள்ளவை; மிக்க பயங்கரமானவை; அவனுடையமோவாய் பூமியிலிருந்தது; வாயின்மேற்பாகம் ஆகாயத் தைத்தொட்டது. இந்திரன்முதலிய தேவர்களனைவரும் பெருங்கட லில் பெரியமீன்வாயில்அகப்பட்டசிறுமீன்கள்போல் அவன்தொண் டையிலிருந்தனர். அந்தமதனுடையஸமீபத்தில்கப்பட்ட தேவர்கள் ஒன்றுசேர்ந்து ஆலோசித்து இந்திரனைப்பார்த்து, 'இந்தப்பிராம்

மணரை நமஸ்காரம்செய்.' அஸ்வினீதேவர்களுடன் நாம் ஸோமத் தைக்குடித்துப்பயமில்லாமலிருப்போம்' என்றுசொன்னார்கள். பிறகு, இந்திரன் அந்தச்யவனருக்குவணங்கி அவர்சொன்னதைச்செய்தான். ச்யவனர் இப்படி இந்த அஸ்வினீதேவர்களே ஸோமபானத்திற்குரிய வர்களாகச் செய்தார். பிறகு, அம்முனிவர் அந்தக்கிரியையை முடித் தார். பிறகு, சக்தியுள்ளஅம்முனிவர் அந்தமதனைச் சூதாட்டங்களி லும் வேட்டையிலும் மதுபானத்திலும் ஸ்திரீகளிடத்திலும் பிரித்து விட்டார். ராஜனே! அதனால்தான், மனிதர்கள் (சூதாட்டமுதலிய) இந்தத்தீமைகளால் நிச்சயமாய்க் கெடுகின்றனர். ஆதலால், மனி தன் இக்குற்றங்களை எப்போதும் தூரத்தில்விடவேண்டும். ராஜ னே! இந்தச்யவனருடையசெய்கையையும் உனக்குச் சொன்னேன். மற்றொருவரையும் சொல்லட்டுமா? நீயாவது பிராம்மணனுக்கு மேலானசூத்திரியனைச் சொல்லுகிறாயா?' என்றான்.

இருநூற்றுபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(வாயுவுக்கும் கார்த்தவீர்யார்ஜுனனுக்கும்ஸம்பாஷணை ; பூமியும் ஸ்வர்க்கமும் கபர்களால் ஆக்ரமிக்கப்பட்டதும், தேவர்கள் ப்ராம்மணர்களால் அவற்றைத் திரும்பப்பெற்றதும், '' கார்த்தவீர்யார்ஜுனனுக்கு ப்ராம்மணர்களால் பயமுண்டாகப்போவதும்.)

'கார்த்தவீர்யார்ஜுனன் பேசாமலிருந்தான். வாயுபகவான் திரும் பவும் பேசலானான்.

'ராஜனே! ப்ராம்மணர்களிடத்திலேயே மூக்கியமானகிரியை யிருப்பதை என்னிடங்கேள். எப்போது இந்திரன்முதலானதேவர் கள் மதனவாயில் அகப்பட்டுக்கொண்டனரோ அப்போதே ச்யவன ரால் அவர்களின்ஸ்வர்க்கமும் பூமியும் எடுத்துக்கொள்ளப்பட்டன. இரண்டுலோகங்களும் அபகரிக்கப்பட்டதைக்கண்டு அந்தத்தேவர் கள் துன்பமடைந்தனர். அவர்கள் வியஸனத்திலுல்வாடி மகாத்மா வானபிரம்மதேவரைச் சரணமடைந்து, 'உலகங்களால்பூஜிக்கப்பட்ட வரே! பிரபுவே! நாங்கள் மதனுடையவாயிலகப்பட்டுக்கொண்டிரு க்கையில் ச்யவனர், கபர்களைக்கொண்டு பூமியையும் ஸ்வர்க்கத்தை யும் அபகரிக்கச்செய்தார்' என்றுசொன்னார்கள். அதைக்கேட்டு, பிரம்மா, 'ஓ! இந்திராதிதேவர்களே! உடனே ப்ராம்மணர்களைச்

சரணமடையுங்கள். அவர்களைஸந்தோஷப்படுத்தினபிறகு முன்போல இரண்டுலகங்களையும் பெறுவீர்கள்' என்றுசொன்னர். பிறகு,' அந்தத்தேவர்கள் பிராம்மணர்களைச் சரணமடைந்தனர். அந்தப்பிராம்மணர்கள், 'நாங்கள் யாரை ஜயிக்கவேண்டும்?' என்றுகேட்டனர். இவ்வாறுகேட்க, அந்தத்தேவர்கள் அந்தப்பிராம்மணர்களைப்பார்த்து, 'இப்போது கபர்களை நீங்கள் ஜயிக்கக்கடவீர்கள்' என்றுகூறினர். பிராம்மணர்கள்,'பூமியிலிருப்பவர்களை நாங்கள் ஜயிப்போம்' என்று சொன்னர்கள். பிறகு, அந்தப்பிராம்மணர்கள் கபர்களை அழிப்பதற்காக ஒருகிரியைசெய்யத்தொடங்கினர். அதைக்கேட்ட கபர்களால் தனியென்னுந்தூதன் பிராம்மணர்களிடம் அனுப்பப்பட்டான். அந்தத்தனியென்பவன் அந்தப்பிராம்மணர்களைப் பார்த்துக் கபர்கள் சொல்லியனுப்பியபடி, 'கபர்களெல்லாரும் உங்களுக்குச்சமமானவர்கள். இங்கே என்னகாரியம் நடக்கிறது,? கபர்களெல்லாரும் வேதந்தெரிந்தவர்கள்; எல்லாரும் ஞானிகள்; எல்லாரும் யாகஞ் செய்பவர்கள்; எல்லாரும் ஸத்யத்தையே வ்ரதமாகக்கொண்டவர்கள்; எல்லாரும் மகரிஷிகளுக்கொப்பானவர்கள்; அவர்களிடத்தில் லக்ஷ்மியானவள் அன்புவைத்திருக்கிறாள். அவர்கள் லக்ஷ்மியைக் கரப்பாற்றிக்கொண்டிருக்கிறார்கள்; ஸந்ததியுண்டாகாமல் வீணாக மனைவிகளைச் சேருவதில்லை; வீணாகப் புலாலுண்பதில்லை; ஜ்வலிக்கின்ற அக்நியில் ஹோமஞ்செய்கின்றனர்; ஆசாரியர் சொல்லில் அடங்கியிருக்கின்றனர்; எல்லாரும் மனத்தைஜயித்தவர்கள்; சிறுவருக்கும் பங்குகொடுத்து அநுபவிப்பவர்கள்; மெதுவாகவந்து மெதுவாகப்போகின்றனர்; ரஜஸ்வலையாயிருக்கும் பெண்ணைச் சேருவதில்லை; ஸ்வர்க்கம் போகிறவர்; நற்கருமங்களுள்ளவர்; கர்ப்பமுள்ள பெண்கள் கிழவர் முதலானவர்கள் புசியாமலிருக்கத் தாங்கள் புசிப்பதில்லை; மூற்பகல்களில் சொக்கட்டான் ஆடுவதில்லை; ப்கலில் தூங்குவதில்லை; இவையும் இன்னும் பலவுமான குணங்களுள்ளகபர்களை நீங்கள் எப்படி ஜயிப்பீர்கள்? திரும்புங்கள். திரும்பிஎல்தான் உங்களுக்கு ஸுகம்' என்றான். பிராம்மணர்கள், 'கபர்களை நாங்கள் வெல்வோம். தேவர்களென்பவர் நாங்களே. ஆதலால், கபர்கள் எங்களால் கொல்லப்படத்தக்கவர். தனியே! வந்தவாறே செல்' என்று சொன்னர்கள். தனியானவன் கபர்களிடத்திற்சென்று,'பிராம்மணர்கள் உங்கள் விருப்பத்தைச் செய்கிறவர்களாயில்லை' என்று சொன்னான். பிறகு, கபர்களைவரும் அஸ்திரங்களை எடுத்துக்கொண்டு பிராம்மணர்களை எதிர்த்துப்போயினர். கொடிகளெடுத்துவருங்கபர்களைக்கண்டு பிராம்மணர்க

ளனைவரும் சபர்களின் உயிரைப் போக்குவதற்காக ஜ்வலிக்கின்ற த்ரேதாக்கினிகளை அனுப்பினர். ராஜனே ! அழியாத அக்கிகள் பிராம் மணர்களாலனுப்பப்பட்டுக் சபர்களைக்கொன்று ஆகாயத்தில் மேகங் கள்போல விளங்கின. தேவர்களனைவருஞ்சேர்ந்து போரில் அஸுரர் களைக்கொன்றனர். சபர்கள் பிராம்மணர்களாற் கொல்லப்பட்டனரென் பதை அப்போது அந்தத்தேவர்களறியவில்லை. பிரபுவே! பிறகு, சிறந்த மகிமையுள்ள நாரதர் வந்து, 'மஹானுபாவர்களான பிராம்மணர்கள் தங்கள் பிரம்மதேஜஸினால் சபர்களை அழித்தார்கள்' என்றுசொன் னார். தேவர்களனைவரும் நாரதர்சொல்லைக்கேட்டு, சிறந்த புகழ்பெற்ற வேதந்தெரிந்த பிராம்மணர்களைத் துதித்தனர். அதன்பிறகு, அந்தத் தேவர்களுக்கு ஒளியுஞ்சக்தியும் அதிகரித்தன. மூன்று உலகங்களி லும் கொண்டாடப்படும் அமரத்தன்மையையும் அவர்களடைந்தனர்' என்றான்.

சிறந்தகைகளையுடைய தர்மராஜனே! இவ்வாறுசொல்லிமுடித்த வாயுபகவானைக் கொண்டாடி, கார்த்தவீர்யார்ஜுனன் மறுமொழி சொன்னதைக்கேள். அவன், 'பிரபுவே! நான் எக்காலமும் எல்லாவகை யாலும் பிராம்மணர்களுக்காகவே பிழைத்திருக்கிறேன். பிராம்மணர் கள்மேல் அன்புவைத்து எக்காலமும் பிராம்மணர்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன். தத்தாத்ரேயருடைய அணுக்கிரகத்தினாலேதான் நான்இந் தச் சக்தியையும் உலகத்தில் சிறந்தபுகழையும் அடைந்து பெருந்தர் மத்தைச் செய்திருக்கிறேன். ஆ ! ஆ ! வாயுபகவானே! பிராம்மணர் களின் செய்கைகளை எனக்கு நீ உண்மையாகச் சொன்னாய்; நானும் ஊக்கத்துடன் முழுதும் அவற்றைக் கேட்டேன்' என்றுசொன்னான். வாயுபகவான், 'இந்திரியங்களையடக்கி க்ஷத்திரியதர்மத்தோடு பிராம்மணர்களைப் பரிபாலனஞ் செய். உனக்குப் பிராம்மணர்களாலே கொடிய பயமிருக்கிறது. ஆனால், அது காலங்கழித்துவரும்' என்று சொன்னான்'' என்றார்.

இருநூற்றுமூன்றுவது அத்தியாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணபகவானுடைய மகிமை.)

யுதிஷ்டிரர், "அரசரே ! நியமந்தவறாத பிராம்மணர்களை நீர் எக்காலமும் பூஜிக்கிறீர். ஜனங்களுக்கதிபதியே ! என்ன விசேஷதர் மத்தைக்கண்டு அவர்களைப் பூஜிக்கிறீர்? சிறந்த விரதமுள்ளவரே !

சிறந்த கைகளையுடையவரே! பிராம்மண பூஜையில் என்னபலனைக் கண்டு அவர்களைப் பூஜிக்கிறீர்? அதை முழுதும் எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"சிறந்த நியமமுள்ளவனே! பிராம்மணபூஜையிலுள்ள லாபத்தையும் நன்மையையும்கண்டிருக்கும் சிறந்தஞானியான இந்தவாஸுதேவர் உனக்கு எல்லாவற்றையும்சொல்வார். எனக்கு இப்போது தேகவன்மையும் காதுவாக்கு மனம் கண்களின் அறிவுமாகிய இவையொன்றும் தெளிவாயில்லை. தேகத்தை விடுவது இனி அதிகதாமதமிராதென்று நினைக்கிறேன். இப்போது சூரியன் அதிகவிரைவாகப் போகவில்லை. ராஜனே! குந்திபுத்திரனே! தர்மத்தை அனுஷ்டிக்கும் பிரம்மக்ஷத்திரியவைச்யசூத்திரர்களுக்குப் புராணங்களிற்சொல்லப்பட்டசிறந்ததர்மங்களைக் கிருஷ்ணனிடத்தில்தெரிந்துகொள். இந்தவாஸுதேவர் யாரென்றும் இவருடையபூர்விகமானசக்தியதுவென்றும் இவருடையஉண்மையை நான்தானே அறிவேன். கௌரவராஜனே! கிருஷ்ணபகவானுடையஸ்வரூபத்தை அறியமுடியாது. அவர் இப்போது இந்தத்தர்மமில்லாவற்றையும் உனக்குச் சொல்வர். இவர் பூமியையும் ஆகாயத்தையும் ஸ்வர்க்கத்தையும்படைத்தவர். இவருடைய தேகத்திலிருந்துதான் பூமியுண்டாயிற்று. இவரே எதிரிகளுக்குப்பயங்கரமான பலமுள்ள ஆதிவராகர். இவர்தாம்லோகளையும்திசைகளையும்உண்டாக்கினவர். காற்றும் ஆகாயமும் மேலுலகமும் நான்குதிசைகளும் நான்குமூலைகளும் ஆகிய இவ்வுலகமனைத்தும் இவரிடத்திலிருந்து பிறந்தவை. எல்லாவற்றிற்கும் முதன்மையான இவர்தாம் இவ்வுலகத்தைப் படைத்தவர். குந்திபுத்திரனே! தாமே அளவற்ற மகிமையுள்ளபிரம்மதேவராகஎந்தக்கமலத்திலுண்டானாரோ, அந்தப் பயங்கரமான பிரளயகாலத்திலுள் இவரால் எதனுல் போக்கப்பட்டதோ, அவருக்குப்படுக்கையாயுள்ள கடல்கள் எதிலிருக்கின்றனவோ அந்தக்கமலமானது இவரதுநாபியிலிருந்து பிறந்தது. குந்திபுத்ரனே! இந்தக்கிருஷ்ணமூர்த்தி கிருதயுகத்தில் நிரம்பினதர்மமாயிருந்தார்; த்ரேதாயுகத்தில் யாகரூபத்தையடைந்தார்; த்வாபரயுகத்தில் தேகவன்மையாயிருந்தார்; கலியில் அதர்மமாகப் பூமியிலேயே அவதரித்திருக்கிறார். இவர்தாம் முற்காலத்தில் அஸுரர்களைக் கொன்றார். இவரே தேவர்களையெல்லாம்ஆளும் தேவராகவுமிருந்தார். பிராணிகளையுண்டாக்குகிறவரும் பிராணிகளுக்கு மங்களங்களைக் கொடுக்கிறவரும் இவரே. இவ்வுலகமனைத்தையும்காப்பவரும் இவரே. 1 தேவர்களின்பக்ஷத்தில் தர்மம் எப்போதுகுறைகிறதோ அப்போது

1 யோக்கியர்கள்.

இவர் மனிதரிற்பிறக்கிறார்: பரிசுத்தாத்மாவான இவர்தாம் தர்மத்தி லிருந்துகொண்டே மேலுலகங்களையும் கீழ்லகங்களையும் காப்பாற்று கிறார்; அஸுரர்களை வதஞ்செய்து விடவேண்டியவற்றைவிட்டுக்காரிய காரணங்களையும் நித்தியமான ஆத்மாக்களையும் காப்புாற்றுகிறார். செய் யப்பட்டதும் செய்யப்படுகிறதும் இனிச்செய்யப்படுவதும் இந்தக் கிருஷ்ணன்தான். ராகுவும் சந்திரனும் இந்திரனும் இவரே என்றறி. எல்லாநற்கருமங்களையும் பெறுகிறவரும் உலகம்யாவுந்தாமாயிருப்ப வரும்எல்லாவற்றையுங்காப்பவரும் படைப்பவரும் எல்லாவற்றையும் ஜயிப்பவரும் இவர்தாம். இவர்தாம் சிவன். இவர்தாம் ரத்தத்தைப் போஷிக்கும்தேகவியாபியான பிராணன். புண்ணியகர்மம்செய்தவர் இவரையறிந்து துதிக்கின்றனர். அநேகநூற்றுக்கணக்கானகந்தர் வர்களும் அப்ஸரஸுகளும் தேவர்களும் எக்காலமும் இவரைப்பணி கின்றனர். ராக்ஷஸர்களும் இவரையே பேசுகின்றனர். அரசர்களை எல்லாம் வெல்லக்கருதுகிற ஒப்பற்றவீரர் இவர்தாம். யாகங்களில் சஸ்திரமந்திரங்களைச்சொல்லித்துதிப்பது இவரைத்தான். ஸாமகர் களும் ரதந்தரமென்னும் ஸாமத்தினால் இவரையே துதிக்கின்றனர். பிராம்மணர்கள் காயத்திரிமுதலானமந்திரங்களினால் இவரையேதுதிக் கின்றனர். அத்வர்யுக்களென்னும் ரித்விக்குக்கள் ஹோமஞ்செய்யப் படும்நெய்முதலியவற்றை இவருக்காகவே ஹவிஸாகஉண்டுபண்ணு கின்றனர். பாரதனே! இவர்தாம் பிரளயகாலத்தில் அனுதியாயுள்ள பிரம்மருகைஎன்னும்மூலப்ரகிருதியில் பிரவேசித்தார். ஆதிகாலத்தில் இவர்தாம் பூமிஸ்ருஷ்டியைக் கண்டவர். சிறந்தசெய்கையையுடைய இவர்தாம் தைத்தியர்களையும் தானவர்களையும் நாகர்களையும்ஜயித்துக் கடலில்முழுகினபூமியைத்தூக்கினர். பாரதனே! இந்திராதிதேவர்கள், இடைச்சேரிக்காகக் கோவர்த்தனம்எடுத்த இவரை வேதவாக்குக்களி னால்துதித்தனர். இவர்ஒருவர்தாம் [1]பசுக்களுக்கு ஈச்வரர். இவருக்கே பலவகைப்பக்ஷணங்களைநிவேதனம்செய்கின்றனர். இவரையேயுத்ஸங் களைநடத்துகிறவராகநினைக்கின்றனர். ஆகாயம் பூமி மேலுலகம்இவை அனைத்தும் நித்யரானஇவருக்கு உட்பட்டிருக்கின்றன. இவர்தாம் [2] சூடத்தில் (மித்திராவருணரென்னும்) தேவர்களின்சேதஸை விடு வித்தவர். அதிலிருந்துதான் வஸிஷ்டமஹரிஷியுண்டானதாகச்சொல் லுகின்றனர். இவரே காற்று. லோகமூன்றாகுதிரையாகச்சொல்லப் படும்-அக்நியும் இந்தப்பிரபுவே. கிரணங்களோடுகூடிய சூரியனும்

---

1 கோலோகத்திற்கும் ஆத்மாவிற்குமென்பது. [பது.

2 இவர்சக்தி பிரவேசிக்காமல் அவ்வளவுமகிமையுள்ளரிஷி உண்டாகாரென்

இவரே. இவரே ஆதிதேவர். இவரால்அஸுரர்களனைவரும் வெல்லப் பட்டனர். இவர்காலடிகளால் மூன்றுலகங்களும் ஜயிக்கப்பட்டன. தேவர்களிலும் மனிதர்களிலும் பித்ருக்களிலும் இவரே இருப்பவர். யாகத்தை அறிந்தவர்கள் இவரையே யாகமென்றுசொல்லுகின்றனர். காலத்தைப்பிரித்துக்கொண்டுதயமாகும்சூரியபகவான் இவரே.உத்தராயணம் தக்ஷிணாயனம்இரண்டும் இவருடையவையே. இவருடைய கிரணங்களே பூமியில் ஒளியையுண்டாக்கிக்கொண்டு மேலும் கீழும் குறுக்கிலும் பரவுகின்றன.வேதந்தெரிந்தபிராம்மணர்கள் இவரையே அடைகின்றனர். இவருடையகிரணங்களே உபயோகப்படுத்திக்கொண்டுதான் சூரியன் பிரகாசிக்கிறான். இவர்தாம் யாகங்களுக்காக [1]ஒவ்வொருமாஸத்தையும்பிரிக்கிறார். வேதந்தெரிந்தவர்கள் [2]இவரையே யாகங்களில் ஓதுகின்றனர். [3]மூன்றுநாபிகளோடுகூடியதும் எழுநூறு ரைகள்பூட்டியதுமாகிய இந்தக்காலசக்கரத்தை நடத்துகிறவரும், [4]மூன்றுஇடங்களையுடையவரும் இவரே. [5]ஹிரண்மயரும் [6]ஏழு தாதுக்களுள் மறைந்திருப்பவரும் ஸர்வஜ்ஞரும் நாலுகைகளுள்ளவரும்,ஆதிசேஷரூபியும்பத்மநாபரும் பேரொளியுள்ளவரும் ஸர்வவியாபியும் எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பவருமாகிய கிருஷ்ணன் ஒருவரே உலகங்களைத் தாங்குகிறவர். வீரனே ! குந்தீபுத்ரனே ! இந்தக்கிருஷ்ணனையே இருஷீகேசரென்றும் ஹம்ஸன்என்னப்படும் ஸரஸ்வதியும் கிருஷ்டிகர்த்தாவானபிரம்மதேவராகவும் எப்போதும் அறி. மஹாத்மாவான இந்தப்பிரபுதான் ஒருகாலத்தில் காண்டவவனத்தில் அக்னியாக , மரங்களில்பற்றித திருப்தியடைந்தவர். எங்கும்வ்யாபியான இவர்தாம் ராக்ஷஸர்களையும் நாகர்களையும்வென்று எல்லாவற்றையும் காண்டவாக்கியில் ஹோமம்செய்தவர். இவர்தாம் அர்ஜுனனுக்கு வெள்ளைக்குதிரைகொடுத்தவர். எல்லாக்குதிரைகளையும் உண்டு பண்ணினவர் இவர்தாம். [7]மூன்றுச்சக்ரங்களும் [8]மூன்றுதலைகளும்

---

1 சக்ரனுயிருந்து தம்கலைகளினால் தேவர்களுக்குஅமிருதம்கொடுத்து அமாவாசைவரையிலும் ஒவ்வொருமாஸத்தையும் பிரிக்கிறார்என்பது.

2 மந்த்ரமூர்த்தியென்பது.

3 அச்சுப்போடுங்குழை; 'த்ரிநாபி' என்பதற்கு 'குளிர், வெப்பம்மழை என்னும்மூன்றுகாலங்களே நாபியென்கிற கர்ப்பத்திலுடையது' என்பதும், 'த்ரிஸாமா' என்பதற்கு, மழை காற்று வெப்பம் என்று மூன்று விதமும் சூரியனோடுகூடியதுமாகிய ஸம்வத்ஸரசக்கரத்தை நடத்துகிறவரும் இவரே' என்பதும்பழையவுரை.

4 வைகுண்டம், திருப்பாற்கடல்,சூரியன்.

5 எல்லாருக்கும இதமாகவும் ரமணீயமாகவுமிருப்பவர்.

6 சாந்திபர்வம், 629-ம் பக்கம்குறிப்பிற்காண்க.

7 முக்குணங்கள். 8 பரகிருதி புருஷன் காலம்.

1 மூன்றுகாபிகளுமுள்ளதும், மூன்று 2சுற்றுள்ளதும்நான்குகுதிரை களுள்கட்டினதுமாகிய அழகான 4ரதம் இவருடையது. பஞ்சபூதங் களுக்கும்ஆதாரமாயுள்ள இவர் பூமியையும் ஸ்வர்க்கத்தையும் ஆகா யத்தையும் இடைவெளியையும் காடுகளையும் மலைகளையும் படைத் தார். இவரே ஐம்புலன்களையும் நடத்துகிறவர்; ஜ்வலிக்கின்ற அக் னிக்கொப்பான அளவற்றஒளியுள்ளவர்; பகைவரைக்கொல்வதற்கு 5 நதிகளைக்கடந்தார்; 6வஜ்ராயுதத்தைப்பிரயோகிக்கும் இந்திரனை ஜயித் தார். பெரியயாகங்களில் பிராம்மணர்களால் பழமையானஅநேகமந் திரங்களைச்சொல்லி மஹேந்திரனென்று துதிக்கப்படுகிறவர் இவரே. ராஜனே! பெரியமகிமையுள்ள துர்வாஸமுனிவரைவீட்டில்வைத்துக் கொள்வது இவர்தவிரமற்றெவராலும் முடியாது. இவரையே ஒப் பற்ற ஆதிரிஷிஎன்று சொல்லுகின்றனர். உலகங்களைப்படைக்கும் இவரே ஜனங்களைத் தம்மிடத்தில் பக்தியுள்ளவர்களாகச் செய்கிறார். தேவருக்குந்தேவரானஇவரே வேதங்களைஉபதேசிப்பவர். இவரே பழமையானசாஸ்திரோக்தகர்மங்களை அனுஷ்டிப்பவர். வேதத்திற் சொல்லப்படுபவையும்உலகத்திலுள்ளவையுமாகிய காம்யபலன்களனை த்தும்இந்தக்கிருஷ்ணனேஎன்றறி. எல்லாஉலகங்களிலும்தெளிவாகப் பிரகாசிக்கும் சூரியன் அக்கிமுதலானதேஜஸுகளும் மூவுலகங் களும் உலகங்களைக்காப்பவராகியமும்மூர்த்திகளும் த்ரேதாக்நிகளும், 'பூ: புவ: ஸுவ:' என்னும் மூன்று வியாஹ்ருதிகளும் எல்லாத்தேவர் களும் கிருஷ்ணனே. வருஷம், ருது, பக்ஷம், இரவுபகல்கள், 7கலை, 8 காஷ்டை, 9மாத்திரை, 10முகூர்த்தம், 11லவம், 12க்ஷணம்இவைஎல் லாம் கிருஷ்ணன்என்றே அறி. குந்திபுத்திரனே! சந்திரசூரியர் கள், மற்றக்கிரகங்கள், அச்வினிமுதலியநக்ஷத்திரங்கள், ஸாதா ரண நக்ஷத்திரங்கள், அமாவாஸை, பூர்ணிமை, நக்ஷத்திரங்களைச்

---

1 மூன்றுகாலங்கள். 2 மூன்றுஉலகங்கள்.

3 அதம், பொருள், இன்பம், வீடு.

4 மூலப்ரகிருதி, ஸம்ஸாரத்தைப்பூட்டுகிறவர்; 'ஸத்வம், ரஜஸ், தமஸ்என் னும்மூன்றுசக்கரங்களுடையதும் மேல்நடுகீழ்என்னும் மூன்றுபலகையுடை யதும் காலம், அதிருஷ்டம், ஈச்வரஸங்கல்பம், தனதுஸங்கல்பம் என்னும் நான்குகுதிரைகளையுடையதும் சுக்லம் கிருஷ்ணம் சுக்லகிருஷ்ணம் என்று மூன்றுகர்ப்பத்திலுடையதுமானரதம் அவருடையது' என்பது பழையவுரை.

5 ராமாவதாரத்திலென்பது. 6 கருடரூபியென்பது.

7 மூப்பதுகாஷ்டைகள். 8 பதினெட்டுநொடிக்காலம்.

9 ஒருநொடி. 10 பன்னிரண்டுக்ஷணம்; அல்லது, இரண்டுநாழிகை.

11 இமைகொடிக்கும்சிறியகாலம்; அணுஎன்னப்படுவது.

12 மூப்பதுகலைகள்.

சேர்ந்த த்ருவீமுதலியயோகங்கள், வஸுந்தமுதலியருதுக்கள் இவையனைத்தும் கிருஷ்ணனிடத்திலிருந்து உண்டானவை. ருத்ரர்கள், ஆதித்யர்கள், வஸுக்கள், அஸ்வினீதேவர்கள், ஸாத்யர்கள், விஸ்வேதேவர்கள், மருத்துக்கள், ஸ்ருஷ்டிகர்த்தாவான கஸ்யபர், தேவமாதாவான அதிதி, ஸப்தரிஷிகள் இவரனைவரும்கிருஷ்ணனிடத்திலுண்டானவர். விஸ்வரூபியான இந்தக்கிருஷ்ணன் காற்றுயிருந்து எல்லாவற்றையும் தள்ளுகிறார் அக்னியாயிருந்து எரிக்கிறார். ஜலம்போல் எல்லாவற்றையும் நனைக்கிறார். பிரம்மாவாக விருந்து உலகங்கள் எல்லாவற்றையும் படைக்கிறார். தாமே அறியத்தக்க பரம்பொருளாயிருந்து அறியத்தக்கபரம்பொருளை அறிவிக்கிறார். தாமே சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டகர்மரூபியாயிருந்து சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டகர்மங்களைச் செய்கிறார். தர்மத்திலும் வேதத்திலும் பலத்திலும் இவரே சிறந்தவர். சராசரங்களனைத்தும்கிருஷ்ணனேயென்று நீ அறி. விஸ்வரூபரான இந்தப்பரமபுருஷரே முதலில் சூரியனுயிருந்து ஒளியினால் பிரகாசித்தவர். எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மாவாகவும் காரணமாகவுமிருக்குமிவர். முதலில் ஜலத்தைச்சிருஷ்டித்துப் பிறகு எல்லா உலகங்களையும்ப்டைத்தார். வஸுந்தமுதலானருதுக்களும் உத்பாதங்களும் பலவகைஆச்சரியங்களும் மேகம், மின்னல், ஐராவதம், ஸ்தாவரம், ஜங்கமம்அனைத்தும் கிருஷ்ணனிடத்திலிருந்து உண்டானவை என்றுஅறி.இவரைஎல்லாருக்கும்ஆத்மாவானஷிஷ்ணுவென்றுஅறி. [1] குணங்களென்றுசொல்லப்படும் ப்ரகிருதிக்குவெளிப்பட்டவரான இவரை உலகங்களுக்காதாரமாகவும் உலகங்களுக்குஅந்தர்யாமியாகவும்இருப்பதனால் வாஸுதேவரென்றும் ஜீவாத்மாக்களுக்கு அதிஷ்டானதேவதையாயிருப்பதனால்ஸங்கர்ஷணரென்றும்('த்யும்நம்' என்னும் தனம்போன்ற ஸுகத்தைத்தருவதனால்) பிரத்யும்னரென்றும் (தடையை நீக்கிப் பிரவ்ருத்தியையுண்டாக்குவதனால்) நாலாவதான அநிருத்தரென்றும் சொல்லுகின்றனர். தாமே தமக்குஆத்மாவாயுள்ள இம்மகாத்மாவானவர் எல்லாவற்றையும் ஆஜ்ஞாபிக்கிறார். குந்திபுத்திரனே ! [2]ஐந்துகுணங்களோடுகூடி இவ்வுலகத்தைப் படைக்கத்தொடங்கி [3]ஐந்துவகைகளால் நடத்துவதற்காகப் பூமி காற்று ஆகாயம் தேயு அப்பு இவற்றை உண்டுபண்ணினார். அவர் ஜங்கமத்தையும்ஸ்தாவரத்தையும் [4]இந்நான்குவகைப் பிராணிகளையும் படைத்து அதன்

---

1 'நிர்க்குணம்' என்பதுமூலம்.

2 சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்கள்.

3 ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், நிக்ரஹம், அனுக்ரஹம்.

4 ஆதிபர்வம் 57-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

பிறகு ஆகாயம், பூமி, அக்நி, ஜலம், வாயுவென்னும் ஐந்துகாரணங்களடங்கியபூமியைப் படைத்தார். ராஜனே! இவ்வுலகம் இவரால் படைக்கப்பட்டதென்றறி. தம்க்குத்தாமேகாரணமாகவுடைய இவர் தம்மாலேயே இவற்றைக் காப்பாற்றுகிறார். மேன்மேலும் சிருஷ்டிக்கக்கருதின இத்தஸ்வரர் தேவர்கள் அஸுரர்கள் மனிதர்கள் ரிஷிகள் பித்ருக்கள்முதலான ஜனங்களையும் பற்பலஉலகங்களனைத்தையும் எப்போதும்காப்பாற்றுகிறார். நன்மை தீமைகள் ஜங்கமஸ்தாவரங்கள் இவையனைத்தும் கிருஷ்ணனுண்டானவையென்றறி. இவ்வுலகத்தில் எது இருக்கிறதோ, எது வரப்போகிறதோ அவையனைத்தும் கிருஷ்ணனென்றறி. தேகமெடுத்தபிராணிகளுக்கு முடிவுக்காலத்தில்வரும்யமனும் ஸாக்ஷாத் விஷ்ணுவாகியகிருஷ்ணனே. இவ்வுலகத்தில் நமக்குத்தெரியாதபொருள்கள் என்ன இருக்கின்றனவோ அவையனைத்தும் கிருஷ்ணனுண்டானவையென்றறி. உலகங்களில் சிறந்தவைகளும் புண்ணியமும் ஸுகதுக்கங்களும் ஆகியஎல்லாம் சிந்தைக்கெட்டாத இந்தக்கிருஷ்ணன்தான். இவருக்கு மேலானது ஒன்றுமில்லை. கிருஷ்ணன் இப்படிப்பட்டவர்; இங்கே சொல்லிய வைகளுக்கும் மேற்பட்டவர். எல்லாரிலுஞ்சிறந்தவரும் குற்றமற்றவரும் சராசரங்களின் ஆதிமத்தியாந்தங்களுக்குக் காரணமானவரும் மோக்ஷத்தைவிரும்புகிறவருக்கு ஆதாரமும் அழிவில்லாதவருமான நாராயணர் இவர் தாம்" என்றார்.

இருநூற்றுபத்துகொன்காவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன் பிராம்மணபூஜையின் சிறப்பையும் துர்வாஸமகரிஷியைப்பூஜித்ததலால் தமக்கு உண்டான மேன்மையையும் தர்மபுத்ரருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "மதுஸூதனரே! பிராம்மணபூஜையிலுள்ள பிரயோஜனத்தைச் சொல்லும். இந்தவிஷயம் உமக்குத்தானேதெரியும்? உம்மையறிந்திருப்பவர் எமது பிதாமகரன்றே?" என்று கேட்க, வாஸுதேவர் சொல்லலானார்.

"வேந்தரே! பரதஸ்ரேஷ்டரே! மிக்கஸத்புருஷரானகௌரவரே! பிராம்மணர்களுடைய குணங்களை உள்ளபடி சொல்லுகிறேன்; ஊக்கத்துடன்கேளும். கௌரவரைமகிழ்விப்பவரே! முன்னர் நான் துவாரகாநகரத்திலிருக்கையில் பிராம்மணர்களால் கோபமூட்டப்பட்ட

ப்ரத்யும்னன், "மதுஸூதனரே! பிராம்மணர்களைப் பூஜிப்பதில் என்ன பலனிருக்கிறது? இம்மைக்கும் மறுமைக்கும் அவர்களே அதிகாரிகளாயிருப்பது எப்படி? எப்போதும் பிராம்மணர்களைப் பூஜிப்பதனால் என்னலாபம்? கௌரவத்தைக் கொடுப்பவரே! இவற்றையெல்லாம் தெளிவாகச் சொல்லும். இதில் எனக்கு மிகப்பெரிய ஸந்தேகமிருக்கிறது' என்றுகேட்டான். மகாராஜரே! ப்ரத்யும்னன் இவ்வாறு சொன்னபோது நான் அவனுக்கு மறுமொழி சொன்னதைக் கவனித்துக்கேளும். 'ருக்மிணியின் மைந்தனே! பிராம்மண பூஜையிலிருக்கும் பயனை என்னிடம் தெரிந்துகொள். ருக்மிணியின் புதல்வனே! குழந்தாய்! பிராம்மணர்கள் சந்திரனை அரசனுகப் பெற்றவர்கள். இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் அவர்களே ஸுகதுக்கங்களுக்கு அதிகாரிகள். பிராம்மணன் தலைமையாயிருக்குங்காரியம்தான் சீர் பெறுவது. அதில் எனக்கு ஸந்தேகமில்லை. ஸௌக்கியம், ஆயுள், புத்தித்தெளிவு, புகழ், தேகவன்மை ஆகிய எல்லாம் பிராம்மணர்களால் உண்டாகின்றவை. உலகங்களும் உலகங்களுக்குஈச்வரர்களான தேவர்களனைவரும் பிராம்மணரைப் பூஜிப்பவரே. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமென்னும் நான்கு புருஷார்த்தங்களுக்காகவும், புகழ் ஐச்வர்யம் பிணிநீக்கம் இந்தக்காரியங்களுக்காகவும், தேவதாபூஜைகள் பித்ருச்ராத்தங்களுக்காகவும் பிராம்மணர்களையே நாம் திருப்தி அடைவிக்கவேண்டும். புத்திரனே! 'நான் ஈச்வரன்' என்றுநினைத்து அந்தப்பிராம்மணர்களை எப்படிப் பூஜியாமலிருக்கலாம்? நிறந்தகைகளையுடையவனே! உனக்கு இவ்வுலகத்தில் பிராம்மணர்களின் மேல் கோபமுண்டாகக்கூடாது. பிராம்மணர்கள்தாம் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் பெரும்பொருள். அவர்கள் கோபித்துக் கண்ணுல்பார்த்தால் இவ்வுலகத்தை நீருக்கிவிடுவர். அப்படியே உலகங்களையும் உலகங்களுக்கீச்வரர்களான தேவர்களையும் அவர்கள் அழிக்கவும் ஆக்கவும்கூடும். அவர்களில் நல்லஞானமுள்ளவரும் நல்லமகிமையுள்ளவரும் ஏன் இரார்? அப்பா! பசும்பொன்னிறமுள்ளவரும் மரவுரிதரித்தவரும் வில்வத்தடிபிடித்தவரும் மீண்டமீசைதாடியுள்ளவரும் இளைத்தவரும் நெட்டையானவருமான ஒருபிராம்மணர் என்னிருகத்தில் ஒளித்தார். அவர் பூமியில் உயரமாயுள்ளமனிதர்களெல்லாரையுங்காட்டிலும் அதிகஉயரமானவர். தேவலோகங்களிலும் மானிடலோகங்களிலும் நினைத்தபடி ஸஞ்சரிப்பவர். துர்வாஸஸ் என்னும்பிராம்மணரைப் பூஜித்து வீட்டில்வைத்துக்கொள்ளத்தக்கவன் எவன்? சிறியதவறுசெய்தாலும் எல்லாப்பிராணிகளின்மேலும்

அவர் கோபிப்பவர் இந்த என்னுடைய நிச்சயமானசொல்லைக் கேட்டபிறகு எனக்கு எவன் இடங்கொடுப்பான்? எவன் எனக்கு இடங்கொடுப்பானோ அவன் என்னைக் கோபிக்கச்செய்யாமலிருக்க வேண்டும்' என்னும் பொருளடங்கிய ஸ்லோகங்களை நாற்சந்திகளிலும் ஸபைகளிலும் பாடிக்கொண்டிருந்தார். அவரை யாரும் ஆதரியாமல்போனதனால் நான் வீட்டில் வைத்துக்கொண்டேன். அவர் ஒருவேளை அநேகமாயிரவர்புஜிக்கும்அன்னத்தைப் புஜிப்பர்; மற்றொருவேளைஸ்வல்பம் புஜிப்பர்; ஒருவேளை வீட்டிற்கே வரார்; காரணமில்லாமல்நகைப்பர்; காரணமில்லாமல் அழுவர்; பிராயத்தில்அவருக்கீடானவர் பூமியிலில்லை; சிறந்தமகிமையுள்ளரிஷி ஒருகால் தம்மிடம் போய்க் கட்டில் மெத்தைகளைஎரித்துத் தாமும் அவற்றிலிருந்துவிழுந்தார். உக்கிரமானதவமுடையஅந்தமுனிவர் திரும்பவும் ஒருகால் என்னைப்பார்த்து, 'கிருஷ்ணா! பாயஸம்சாப்பிடவிரும்புகிறேன்' என்று ஆவலோடுசொன்னர். அதற்குமுன்னமே நான் அவர்மனத்தையறிந்து எல்லாவகைஉணவுகளையும் பானங்களையும் பலவகைப் பக்ஷணங்களையும் நன்றாகச்செய்துவைக்கவேண்டுமென்று வீட்டிலிருக்கும் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டிருந்தேன்; அதனால் அவருக்கு உஷ்ணமானபாயஸத்தைக்கொடுத்தேன். அதை அவர் விரைவாகச்சாப்பிட்டு,உடனே என்னைப்பார்த்து, 'பாயஸத்தை உன்னுடையஅங்கங்களில் சீக்கிரம் தடவிக்கொள்' என்றுசொன்னர். நான் சங்கியாமலே அவர்சொன்னதை அப்படியே செய்தேன். அவர் எச்சிலை உடம்பின்அங்கங்களில் பூசிக்கொண்டேன். அவர் அப்போது அழகானமுகமுள்ள உன்தாய் என்னைமீபத்திலிருப்பதைக் கண்டார். புன்னகையோடிருக்கும்அவள்மேலும் அம்முனிவர் பாயஸத்தைத் தடவுவித்தார்; உடம்பில்பாயஸம்பூசப்பட்ட அவளைத்தேரில்கட்டி அந்தத் தேரின்மேலேறி என்னிருகத்திலிருந்து விரைவாகவெளியிற் சென்றார். அக்கிரமகஜ்வலிப்பவரும் சிறந்தஞானமுள்ளவருமான அந்தப்பிராம்மணர்சிறுமியானருக்மிணியை என்கண்முன்னே தேர்க்குதிரையைப்போலச் சாட்டையால்அடித்தார். அப்போது எனக்குக் கோபத்தினால் சிறிதும் வருத்தம் உண்டாகவில்லை. அப்படியே அவர் விசாலமான ராஜமார்க்கத்தின்வழியாக வெளியிற்சென்றார். அந்தப் பெரிய ஆச்சரியத்தைக்கண்டு, யாதவர்கள்சிலர் கோபமுள்ளவராக ஒருவரைஒருவர்அழைத்து, 'பிராம்மணர்களே உண்டாகவேண்டும். வேறுவர்ணம் எவ்வகையிலும் உண்டாகவேண்டாம். இவ்வுலகத்தில் வேறுஎந்த ஆண்பிள்ளை இவளைக்கட்டினதேரில் ஏறிப் பிழைப்பன்?

பாம்பின்விஷம் கொடித்து. அதிலும் மிகக்கொடியவன் பிராம்மணன். பிராம்மணனென்னும் பாம்பின்விஷத்தினால் எரிக்கப்பட்டவனுக்கு வைத்தியன் ஒருவனுமில்லை'என்றுரகஸ்யமாகப் பேசிக்கொண்டனர். யாராலும் வெல்லமுடியாதஅம்முனிவர் .போகும்போது வழியில் ருக்மிணி தடுக்கிவிழுந்தாள். [1]மகிமையுள்ள துர்வாஸஸ் அது பொறுமல் அவளை விரைவாக ஓட்டினர். பிறகு, அந்தப்பிராம்மணர் மிக்க கோபமுற்றுத் தேரிலிருந்து குதித்துக் கால்நடையாய் வழியில்லாத வழியில் தென்றிசையைநோக்கி ஓடினர். நான் 'வழியில்லாவழியில் போகும் பிராம்மணேந்தமரை, 'பகவானே ! கோபிக்கவேண்டாம் ' என்று சொல்லிக்கொண்டுபாயஸம்பூசிக்கொண்டபடியே தொடர்ந்து ஓடினேன். சிறந்தமகிமையுள்ள அந்தப்ராம்மணர் உடனே என்னைப் பார்த்து, 'கிருஷ்ணை!சிறந்தகைகளையுடையவரே! நீர் இயற்கையாகவே கோபத்தைஜயித்தவர். சிறந்தபுத்தியுள்ளவரே ! இப்போது உம் முடையபிழையொன்றையும் நான் காணவில்லை. கோவிந்தரே ! உம் மிடத்தில் அன்புள்ளவனாகிறேன். வேண்டினவரங்களைக் கேளும். ஐயா!' நான்ஸந்தோஷமடைவதின்பலன் எப்படிப்பட்டதென்பதைப் பாரும். மனிதர்களுக்கு ஆகாரத்தில் விருப்பமிருப்பதுபோல உம் மிடத்திலும் விருப்பமிருக்கும். உம்முடைய பரிசுத்தமானகீர்த்தி எவ்வளவுகாலம் உலகத்திலிருக்குமோ அவ்வளவுகாலம் மூவுலகங் களிலும் மேன்மையை அடைந்திருப்பீர். ஜனார்த்தனரே ! எல்லா உலகங்களுக்கும் மிக்க அன்பாளீர். ஜனார்த்தனரே ! உடைக்கப்பட் டும் எரிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் போனவையெல்லாவற்றையும் முன்போலவும் முன்னைவிடச்சிறந்தவையாகவும் பார்ப்பீர். மதுஸூ தனரே ! அச்சுதரே! உம்முடைய அங்கங்களில் பாயஸந்தடவப்பட் டிருக்கும்இடங்களில் நீர்நினைக்குங்காலம்வரையில் மரணபயமில்லை. நீர்உள்ளங்கால்களில்மட்டும் தடவிக்கொள்ளவில்லை.அதனால், அங்கே தான் உமக்குமரணம். அது எனக்குப் பிரியமாயில்லை' என்று அன் புடன்சொன்னர். அவரால் இவ்வாறுசொல்லப்பட்டநான் என்தேகம் சிறந்த ஒளியோடிருப்பதைக்கண்டேன். அவர் ருக்மிணியைப்பார்த் தும் அன்புடன், 'ஓ ! சிறந்தவளே ! எல்லாஸ்திரீகளுக்கும்மேலான மகிமையையும் உலகத்தில் மிகச்சிறந்தபுகழையும் அடைவாய்.பெண் ணரசியே ! மூப்பு, பிணி, நிறமாறுதல் இவைசிறிதும் உன்னை அணுகா. ' இனியமணமுள்ளவளாகிக் கிருஷ்ணனை ஸந்தோஷப் படித்துவாய். கிருஷ்ணனுடையபதினாயிரம்ஸ்திரீகளுள் மிகச்சிறந்த

1 வேறுபாடம்.

வளும் அவரோடுஒருலோகத்திலிருப்பவளும்ஆவாய்' என்றுசொன் னர். மிகச்சிறந்த மகிமையுள்ளவரும் அக்னிபோல ஜ்வலிப்பவரு மான துர்வாஸமுனிவர் உன்தாய்க்கு இவ்வாறுசொன்ன பிறகு, புறப்பட்டுப்போகும்போது திரும்பவும் என்னைப் பார்த்து, 'கேச வரே! பிராம்மணர்கள்விஷயத்தில், இதேஎண்ணம் உமக்கு இருக்க வேண்டும்' என்று சொன்னர். புத்ரனே! அவர் இவ்வாறு சொன்னவுடனே அங்கேயே அந்தர்த்தானமானர். ஸமர்த்தனே! அவர்மறைந்தபிறகு பிராம்மணன் எதைச்சொன்னலும் நான் அதையெல்லாம் செய்யக்கடவேனென்று எனக்குள் விரதம்வைத் துக்கொண்டேன். புத்ரனே! இந்தவ்ரதஞ்செய்துகொண்டு மிக்க மனமகிழ்ச்சியோடு உன் தாயுடன் வீட்டிற்குள் சென்றேன். புத் ரனே! வீட்டில் பிரவேசித்தவுடன் அந்தப்பிராமணரால் உடைக் கப்பட்டவை எரிக்கப்பட்டவையனைத்தும் புதியவையாயிருக்கக்கண் டேன். எல்லாம் புதியனவாகவும் உறுதியுள்ளனவாகவுமிருப்பதைக் கண்டபிறகு நான் ஆச்சரியமடைந்தேன். ருக்மிணியின் மைந்தனே! நான் எப்போதும் பிராம்மணர்களை மனப்பூர்வமாகப் பூஜிக்கிறேன்' என்றேன். பரதர்ரேஷ்டரே! ருக்மிணியின் மைந்தனை பிரத்யும் னன் கேட்டபோது பிராம்மணஸ்ரேஷ்டரான துர்வாஸரின்மகிமை யனைத்தையும் அவனுக்கு இவ்வாறு உரைத்தேன். குந்திபுத்திரரே! பிரபுவே! அப்படியே நீரும் மகானுபாவர்களான பிராம்மணர்களை எப்போதும் சொல்லினலும் கொடையினலும் பூஜிக்கக்கடவீர். பரதர்ரேஷ்டரே! பிராம்மணர்களுடைய அனுக்கிரகத்தினல்இவ்வித மானபலனை நான் அடைந்தேன். இந்தப்பீஷ்மர் என்னைப்பற்றிச் சொன்னது உண்மை" என்றார்.

இருநூற்றுபத்தைந்தாவது அத்யாயம்.

தா ன த ர் ம பர் வ ம் (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன் யுதிஷ்டிரருக்குச் சங்கரர்மகிமையைச்சொல்லியது.)

யுதிஷ்டிரர், "மாதவரே! சங்கருடைய அம்சமான துர்வாஸ ருடைய அனுக்கிரகத்தினல் நீர் அடைந்த ஞானத்தை எனக்கு உரைக்கக்கடவீர். புத்திமான்களிற் சிறந்தவரே! மகாத்மாவான அந் தச் சங்கருடைய மகிமையையும் நாமங்களையும் தெளிவாக முழுதும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்" என்றுகேட்க, வாஸுதேவர் சொல்லலானர்.

"அரசரே! சிவனுக்கு வந்தனம் செய்து, நான் அடைந்த நன்மையையும் ஸம்பாதித்த புகழையும் உமக்குச்சொல்வேன். அரசரே! காலையிலெழுந்து அநுஷ்டானங்களைச்செய்து கரங்குவித்துச் சதருத்ரீயத்தைப் படிப்பவனுக்குக் கிடைக்காதது ஒன்றும் இல்லை. எங்கும் வியாபித்திருப்பவரும் உலகத்தைப் படைப்பவருமாகியருத்ரரென்னப்படும்சிவனைப்பற்றிச் சொல்லுகிறேன்; கேளும். பிரம்மதேவர் பெருந்தவம்செய்து அத்தவத்தின்முடிவில்சங்கரரைப்படைத்தார். ஐயா! அந்தச்சங்கரர் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமாகிய பொருள்களனைத்தையும் படைத்தார். அரசரே! மஹாதேவருக்கு மேற்பட்டபொருள் ஒன்றுமில்லை. மூவுலகங்களிலுமுள்ள பிராணிகளுக்குக் காரணம் அவரன்றே? அம்மகாத்மாவின்முன்னிற்க யார்க்கும்முடியாது. அவருக்குச்சரியானபொருள் மூவுலகங்களிலுமில்லை. யுத்தத்தில்கோபித்த அவருடையவாஸனையிலும் பகைவர்கள் மூர்ச்சித்துப் பெரும்பாலும் உயிர்போய் நடுங்கிவிழுகின்றனர். யுத்தத்தில் மேகமுழக்கத்திற்கொப்பான அவருடைய உக்ரமானகர்ஜனையைக் கேட்டுத் தேவர்களின்மனங்களும் சிதறிப்போகும். அவர் கொடிய பார்வையிலெவ்வனைப்பார்த்தாலும் அவன்எரிக்கப்பட்டுக் கீழேவிழுவான். அவர்கோபித்தால் உலகத்தில் தேவர் அஸுரர் கந்தர்வர் நாகர் யாவரும் குகைகளிற்புகுந்தாலும் ஸுகப்படுவதில்லை. தக்ஷப்ரஜாபதிசெய்த பெரிய யாகத்தில கோபித்தசிவன் பயமில்லாமல் வில்லினால் அம்பைஏவி அந்தயாகத்தை அழித்து மிகப்பயங்கரமாகக் கர்ஜித்தார். மஹேஸ்வரர்கோபித்து அந்தயாகமும் அடிக்கப்பட்டபோது அந்தத்தேவர்கள் ஸுகத்தையும் ஸமாதானத்தையுமடையாமல் துயரமடைந்தனர். குந்திபுத்திரரே! அப்போது நாண் உள்ளங்கையில்படுஞ்சத்தத்தினால் எல்லாஉலகங்களும் ஸ்வாதீனந்தப்பிக் கலங்கிப்போயின; தேவர்களும் அஸுரர்களும் துன்பப்பட்டனர்; உலகங்கள் குழம்பின; பூமி நடுங்கிற்று; மலைகள் உருகின; ஆகாயமெல்லாம் பிளந்துபோயிற்று; உலகங்கள் மிக்க இருளினால் மூடப்பட்டு மறைந்துபோயின; பாரதரே! ஸூர்யன்முதலான கிரகங்களின் ஒளி மழுங்கிற்று. அப்போது ரிஷிகள் மிக்க பயமுற்று எல்லாப்பிராணிகளுக்கும் தங்களுக்கும்நன்மையுக்குருதித் தோஷபரிகாரத்தையும் மங்களகாரியங்களையும் செய்தனர். பயங்கரமான பராக்கிரமமுள்ள அந்தருத்ரர் அப்போது தேவர்களை எதிர்த்துப்போனார்; கோபத்தினால் அடித்துப் பகதேவதையின் கண்களை உதிர்த்தார்; பயங்கரமானவடிவத்துடன் சூரியனை எதிர்த்துச் சென்றார்; புரோ

டாசமென்னும் ஹவிஸைப் பக்ஷிக்கும் சூரியனுடைய பற்களை உதிர்த்தார். உடனே அந்தத் தேவர்கள் நடுங்கிக்கொண்டு சங்கரரை நமஸ்கரித்தனர். திரும்பவும் சங்கரர் மிகக்கூர்மையுள்ள ஜ்வலிக்கும் பாணத்தைத்தொடுத்தார். ருத்ரருடைய பராக்கிரமத்தைக்கண்டு தேவர்களும் ரிஷிகளும் பயந்தனர். பிறகு, தேவசிரேஷ்டர்கள் சிவனைப் பிரார்த்தித்தனர். அப்போது தேவர்கள் கங்கள்குவித்துச் சதருத்ரீயத்தை ஜபித்தனர். தேவர்களால துதிக்கப்பட்ட மஹேஸ்வரர் கோபம்நீங்கினர். பிறகு, தேவர்கள் யாகத்தில் சிவனுக்குச் சிறந்த பாகத்தை ஏற்படுத்தினர். அரசே! பயத்தினால் தேவர்கள் அவரைச் சரணமடைந்தனர். அவர் ஸந்தோஷமடைந்து அந்தயாகத்தை [1] ஒட்டினர். அந்தயாகத்தில் எது எப்படிக் கெடுக்கப்பட்டதோ அதை அப்படியே திரும்பவும் பிழைப்பித்தார். பராக்கிரமசாலிகளான (மூன்று) அஸுரர்களுடைய மூன்றுபட்டணங்கள் ஆகாயத்திலிருந்தன. ஒன்று எஃகு; ஒன்று வெள்ளி; மற்றொன்று பொன். அவற்றை இந்திரன் எந்த ஆயுதத்தாலும் பிளக்கமுடியவில்லை. அப்போது அஸுரர்களால் பீடிக்கப்பட்ட தேவர்களனைவரும் ருத்ரரைச் சரணமடைந்தனர். மஹாத்மாக்களானதேவர்களனைவரும் அவரிடம் வந்து, 'ருத்ரரே! எல்லாக்கிரியைகளிலும் பசுக்கள் ருத்ரரைச்சேர்ந்தவைகளே ஆகக்கடவன. பெருமையைக்கொடுப்பவரே! அஸுரர்களையும் அவர்கள் பட்டணங்களையும்அடித்து உலகங்களைக் காப்பாற்றக்கடவீர்,, என்று பிரார்த்தித்தனர். அவர்களால் வேண்டப்பட்ட சங்கரர், 'ஆகட்டும்' என்றுசொல்லி, விஷ்ணுவைச் சிறந்த அம்பாகவும் அக்னியை அதற்குமுனையாகவும் ஸூர்யபுத்திரனான யமனை அம்பின்காம்பாகவும் ஓங்காரத்தை வில்லாகவும் உத்தமமான காயத்ரியை நாணுகவும் பிரம்மாவை ஸாரதியாகவும்வைத்துக்கொண்டு மூன்று கணுக்களும் மூன்றுமுனைகளுமுள்ள அந்தப்பாணத்தைப்பிரயோகித்து அந்தப்பட்டணங்களெல்லாவற்றையும் பிளந்தார். பாரதரே! சூரியனுக்கும் பிரளயகாலாக்கினிக்கும்ஸமமான ஒளியுள்ள அந்தப் பாணத்தினால் அந்தஅஸுரர்களையும் அவர்கள் பட்டணங்களையும் எரித்துவிட்டார். திரும்பவும் [2]ஐங்குடுமியுள்ள, தலையோடுகூடிய சிறுவனைத் தன்மடியில்படித்திருக்கும் அவரைக்கண்டு உமாதேவி அறியக்கருதி, 'இவன்யார்?' என்றுகேட்டாள். இந்திரன் கோபித்து வஜ்ராயுதத்தினாலடிக்கத்தொடங்கினபோது கதவின்குறுக்கு

1 யாகபுருஷனுடைய அறுத்ததலையை ஒட்டினர்என்றகதை.

2 'பஞ்சசிகம்' என்பதுமூலம்.

மரத்திற்கொப்பான அவன்கையை வஜ்ராயுதம்பிடித்தபடியே அசைவற்றிருக்கச்செய்தார். 'தேவர்கள் உலகங்களுக்கு ஈஸ்வராகிய அவரோடு யுத்தம்செய்யமாட்டாமற்போயினர். பிரம்மாமுதலியவரனைவரும் அந்தஈஸ்வரரையறியாமலும் மயங்கினர். பிறகு, பகவானை பிரம்மா அளவற்றமகிமையுள்ள அந்தப்பாலகரை த்யானம்செய்து, 'இவர் எல்லாரிலும்சிறந்தவர்' என்றறிந்து அந்தஉமாபதிக்கு வந்தனம்செய்தார். பிறகு, தேவர்கள் உமையையும் சங்கரரையும் வேண்டினர். மறுபடியும் அவர் முன்போலப் பாலராகிச் சென்றார். அவர்தாம் மகிமையுள்ள துர்வாஸரென்னும் பிராம்மணராகித் துவாரகையில் வெகுநாள் என்கிருகத்திலிருந்தார்; என்வீட்டில் மிகவும்அதிகமான தீமைகளைச் செய்தார். மிகவும்பொறுக்கக்கூடாத அந்தத்தீமைகளை நான் அவருடையமேன்மையினால் பொறுத்தேன். அவர்தாம் ருத்ரர். அவர்தாம் சிவன். அவர்தாம் அக்னி. எல்லாம் அவரே. அவர் எல்லாவற்றையும்ஜயித்தவர். அவரே இந்திரன். அவரே வாயு. அவரே அச்வினீதேவர்கள். அவரே மின்னல். அவரே சந்திரன். அவரே ஈசானனென்னுந்திக்பாலகர். அவரே சூரியன். அவரே வருணன். காலபுருஷன் அவரே. எல்லாவற்றையும்அழிக்கும் மிருத்யு என்னப்படும்யமனும் அவரே. இரவு, பகல், மாதம், பக்ஷம், ருது, இரண்டுஸந்தி, வருஷம்ஆகியஎல்லாம் அவரே. அவரே தாதா. அவரே விதாதா. அவரே விச்வகர்மா. அவர் ஸர்வஜ்ஞர். நக்ஷத்திரங்களும் நவக்கிரகங்களும் திசைகளும் மூலைகளும் அவரே. அவர் உலகங்களை வடிவமாகவுடையவர்; அறிவுக்கெட்டாதஸ்வரூபமுள்ளவர்; சிறந்த மகிமையுள்ளவர்; சிறந்தஒளியுள்ளவர். அவரே ஒன்றாகவும் இரண்டாகவும் பலவாகவும்தாறாகவும் ஆயிரமாகவும் லக்ஷமாகவுமிருப்பவர். அம்மஹாதேவர் இப்படிப்பட்டவர்; இதற்கும்மேலான மகிமையுமுள்ளவர். அநேகநூற்றாண்டுகளாலும் அவர்குணங்களைச் சொல்வது இயலாது.

இருநூற்றுமுப்பத்தாறாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன் சங்கரர்மகிமையைத் தர்மபுத்திரருக்குச் சொல்லியது; தொடர்ச்சி.)

சிறந்தகைகளையுடைய யுதிஷ்டிரரே! பலஉருவங்களும்பலநாமங்களுமுள்ள மகாத்மாவான சங்கருடைய மகிமையை என்னிடம்

தெரிந்துகொள்ளும். உக்ரரென்றும் மகாதேவரென்றும் ஸ்தாணு வென்றும் மகேஸ்வரரென்றும்ஏகாக்ஷரென்றும்த்ரியம்பகரென்றும் விஸ்வரூபரென்றும் சிவனென்றும் அவரைச் சொல்லுகின்றனர். அவருக்கு ஒருமூர்த்திஉக்ரமென்றும் மற்றொருமூர்த்திசிவமென்றும் இன்னும் பலமூர்த்திகளும்உளவென்றும் வேதந்தெரிந்தபிராம்மணர் கள் அறிந்திருக்கின்றனர். அக்நி மின்னல் சூரியன் இவைதாம் அவரு டையகொடியமூர்த்திகள். சர்மம் ஜலம் சந்திரன் இவை அவருடைய ஸௌம்யமான சிவமூர்த்திகள். அவர்தேகத்தில் ஒருபாதி அக்னி யென்றும் மற்றொருபாதி சந்திரனென்றும் சொல்லப்படுகின்றன. அவருடையமூர்த்திகளில் ஒன்றுகியசிவமூர்த்தியானது பிரம்மசாரி வ்ரதத்தைச் செய்துகொண்டிருக்கிறது; மிக்க உக்ரமானமூர்த்தி உலகங்களுக்கு ஸம்ஹாரத்தைச் செய்கிறது. அவர் மகாதேவரும் ஈஸ்வரராகவுமிருப்பதனால் மகேஸ்வரரென்று சொல்லப்படுகிறார். எவ்வாவற்றையும் எரிப்பதனாலும் கோபித்திருப்பதனாலும் தாங்க முடியாமலிருப்பதனாலும் பராக்ரமமிருப்பதனாலும் மாம்ஸத் தையும், ரக்தத்தையும், கொழுப்பையும் புசிப்பதனாலும் [1]ருத்ர ரென்று சொல்லப்படுகிறார்; தேவர்களுக்கெல்லாம்மிகப்பெரியவரா யிருப்பதனாலும் எல்லா உலகங்களையும் ரக்ஷிப்பதனாலும் மகாதேவ ரென்று சொல்லப்படுகிறார்; அவருடைய ஜடி தாம்ரவர்ணமென்னும் செம்மட்டைநிறமாயிருப்பதனால் தூர்ஜடையென்று சொல்லப்படு கிறார்; எல்லாரையும் அவரவர்கள்கர்மங்களினால் எப்போதும்விருத்தி செய்து மனிதர்களின்க்ஷேமத்தையேவிரும்புவதனால் சிவனென்று சொல்லப்படுகிறார்; தாம்உயரமாயிருந்து மனிதர்களின்உயிரைஎரிப்ப தனாலும் தாம்அழியாமலிருப்பதனாலும் தமதுலிங்கம் எக்காலமும் அழியாமலிருப்பதனாலும் [2]ஸ்தாணுவென்றுசொல்லப்படுகிறார்; பூத விஷயத்வர்த்தமானங்களும் ஸ்தாவரஜங்கமங்களுமாகப் பலரூபங்கள் அவருக்கிருப்பதனால் பஹுரூபரென்று சொல்லப்படுகிறார்; எல்லாத் தேவர்களும் அவரைச்சார்ந்திருப்பதனால் விஸ்வரூபரென்று சொல் லப்படுகிறார்; ஆயிரம்பதினாயிரம்கண்களுள்ளவராகவும் எங்கும்கண்க ளுள்ளவராகவும்இருப்பதனாலும் அவர்கண்ணிலிருந்து ஒளியுண்டா வதனாலும் ஸர்வதஸ்சக்ஷுரென்று சொல்லப்படுகிறார்; [3]பசுக்களெல் லாவற்றையும்காப்பதனாலும் அவற்றுடன் மகிழ்ந்திருப்பதனாலும் அவற்றையாளுவதனாலும் பசுபதியென்று சொல்லப்படுகிறார். அவரு டையலிங்கமானது பக்தர்களையனுக்கிரகிப்பதற்காக நித்யப்ரம்மசாரி

[1] அழுவப்பவர். [2] ஸ்திரமானவர். [3] ஆத்மாக்கள்.

விரதத்தோடிருப்பதனால் [1]கூடலிங்கமென்று சொல்லப்படுகிறார். அவருடைய லிங்கத்தை உலகம் பூஜிக்கிறது. அந்தமகாத்மாவுக்கு அந்தலிங்கம் பிரியமானது. அந்தமகாத்மாவினுடையவிக்ரகத்தைப் பூஜிப்பவன் லிங்கத்தையும் பூஜிக்கவேண்டும். நாள்தோறும் லிங்கத்தைப்பூஜிப்பவன் பெரியஐஸ்வர்யத்தையடைவான். ரிஷிகளும் தேவர்களும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் மேலேக்கியிருக்கும் அந்த லிங்கத்தையே பூஜிக்கின்றனர். லிங்கத்தைப்பூஜித்தால் மகேஸ்வரர் ஸந்தோஷமடைகிறார். பக்தர்களிடத்தில் அன்புள்ளசங்கர் ஸந்தோஷமடைந்து பக்தர்களுக்கு ஸுகத்தைக் கொடுக்கிறார். இவர்தாம் மயானங்களில் எரித்துக்கொண்டிருப்பவர். வீரஸ்தானமென்னப்படும்வீரலோகத்தைவிரும்புகிறஜனங்கள் அவரை அங்கே பூஜிக்கின்றனர்.இவ்வுலகத்தில் பிராணிகளின்தேகங்களில் அவரே மரணகாலத்தில் மிருத்யுவாயிருக்கிறார்.பிராணிகளின் உயிரைக்காப்பாற்றும் பிராணவாயுவாகத் தேகங்களில் இருப்பவரும் அவரே. அவருடைய உக்ரமாகஜ்வலிக்கும்பலஉருவங்கள் உலகத்தில்பூஜிக்கப்படுகின்றன.அவற்றையறிகின்றவர்கள் வித்வான்களானபிராம்மணர்கள். அவருடைய நாமகங்களநேகங்கள் வேதங்களிலிருக்கின்றன. அவருடைய மகிமையினுலும் சக்தியினுலும் செய்கைகளாலும் அந்நாமங்கள் அர்த்தமுள்ளவைகளாகப் பகுத்துரைக்கப்படுகின்றன.வேதத்தில் அவரைப்பற்றியஉத்தமமானசதருத்ரீயத்தைப் பிராம்மணர்கள் அறிகின்றனர். அம்மகாத்மாவைப் பூஜிக்கும்வகையும்வ்யாஸரால்சொல்லப்பட்டிருக்கிறது. அவர் எல்லாஉலகங்களுக்கும் வேண்டினவற்றைக்கொடுப்பவர்; எல்லாவற்றிற்கும் ஸாக்ஷி; குறைவில்லாதவர்.பிராம்மணர்களும் ரிஷிகளும் மற்றவர்களும் அவரை ஜ்யேஷ்டரென்று சொல்லுகின்றனர். அவர் தேவர்களுக்குமுதல்வர்.., அவர் தம்முகத்திலிருந்து அக்நியையுண்டாக்கினர். அவரே அனேகப்ராணயாமங்களினுல் மூச்சை அடக்கிவிடுகிறார். ரக்ஷிப்பதில்ஸமர்த்தராகிய அவர் மகிழ்ந்து அனுக்ரஹம்வைத்துச் சரணுகதர்களுக்கு முக்தியளிக்கிறார். மனிதர்களுக்கு ஆயுளையும் ஆரோக்யத்தையும் ஐஸ்வர்யத்தையும் ஸுகத்தையும் நிரம்பினபோகங்களையும் கொடுப்பவரும் திரும்பியெடுப்பவரும் அவரே. அவருடையஐஸ்வர்யந்தான் இந்திராதிதேவர்களிடத்திலும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஸுவுலகங்களுக்கும் நன்மைதீமைகளின் பலன்களைக்கொடுப்பவர் அவரே. வேண்டினவற்றையெல்லாம் பெறும்சக்தியிருப்பதனால் ஈஸ்வரரென்று சொல்லப்படுகிறார். பெரிய

1 மறைவானலிங்கமுள்ளவர்.

உலகங்களுக்குஈஸ்வராயிருப்பதனால் மஹேஸ்வரனென்றுசொல்லப் படுகிறார். அவருடையபலவகையானரூபங்களாலேயே இவ்வுலகமனைத்தும் வியாபிக்கப்பட்டிருக்கிறது. கடலிலுள்ளவடவாமுகாக்கினியும் அந்தஈஸ்வரதுவாய்தான்" என்றார்.

இருநூற்றுமுப்பத்தேழாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் தர்மத்தைப்பற்றி ஸந்தேகம் வந்தால் நிச்சயிக்கும் வகையைத் தர்மபுத்ரருக்கு உரைத்தது.)

தேவகீபுத்ரரானகிருஷ்ணபகவான் இந்தச் சொல்லை இவ்வாறுசொன்னபிறகு, யுதிஷ்டிரர் சந்தனுபுத்திரரான பீஷ்மரை நோக்கி, "ஓ! சிறந்த புத்தியுள்ளவரே! தர்மம்தெரிந்தவர்களிலெல்லாம் சிறந்தவரே! ஒன்றைநிச்சயிப்பதற்குப் பிரத்யக்ஷம் சாஸ்திரம் இவ்விரண்டினுள் எது ஸரியானபிரமாணமாகும்?" என்று திரும்பவும் கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"சிறந்த புத்தியுள்ளவனே! நீ நன்றாகக் கேட்கிறாய். இதுவிஷயத்தில் ஸந்தேகமொன்றுமில்லையென்று எனக்கு அபிப்பிராயமிருக்கிறது. அதை உனக்குச் சொல்வேன்; கேள். இந்த விஷயத்தில் ஸந்தேகமுண்டாவது எளிது; நிச்சயம்வருவது கடினம். பார்ப்பதற்கும் கேட்பதற்கும் முடிவில்லை. அதனால், ஸந்தேகமுண்டாகிறது. ப்ரத்யக்ஷம் பிரமாணமாக யாவராலும் காணப்படுகிறது. பண்டிதனாக நினைத்திருப்பவனுக்கு யுக்திவாதம் பிரமாணமாகிறது. அவர்கள் ஸத்யவாக்யத்தையும் சாஸ்திர்த்தையும் இல்லாதவையாக நிச்சயிக்கின்றனர். அவர்கள் நினைப்பது பிழை. அவர் தங்களைப் பண்டிதராக நினைத்திருக்கும் அறிவீனர். எதையும், 'இது ஸரியானபிரமாணமாகுமா' என்று ஆராய்ந்து பார்க்கவேண்டுவதுதான். உலகவாழ்க்கையை நடத்தும் மனிதன் யுக்திகளாலும் சாஸ்திரவிசாரணைகளாலும் நீண்டகாலத்தினுல் நிச்சயிக்கமுடியும். ஒரு விஷயத்திலேயே ஊக்கம் வைத்தாலன்றி அந்தப்பிரமாணத்தை நிச்சயிக்க முடியாது. ஹேதுவாதங்களை நிறுத்தினபிறகுதான் எல்லா உலகங்களுக்கும் ஒளியாயிருக்கும் சிறந்த பேரறிவைத் தடையின்றி அறியலாம். வேந்தனே! யுக்திகளைக்கொண்டு அறிவது சரியான அறிவன்று. நம்பத்தகாததும் முடிவில்லாததுமான யுக்திவாதத்தை வாக்கினுல் சொல்லாமல் விட்டவேண்டும்" என்றார்.

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பிரத்யக்ஷம் உலகத்தில் ஏற்பட்டிருக்கிறது. உலகம் வேதத்தை முன்னிட்டதாயிருக்கிறது. சிஷ்டாசாரங்கள் பலவகைகளாயிருக்கின்றன. இவற்றைப்பற்றி எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர், 'துஷ்டர்கள் வலியர்களாகித் தர்மத்தைக் கெடுக்கும்போது எவ்வகைமுயற்சிகளினால் அதற்கு விய வஸ்தைசெய்தாலும் அது காலத்தினால் உடைபட்டுப்போகிறது. யுதிஷ்டிர! கிணறு புல்லால் மூடப்படுவதுபோல அதர்மமும் தர்மத்தின் வேஷத்தால் மூடப்பட்டிருக்கிறது. அதனாலேதான் சிலருடைய ஆசாரங்கள் வேறுபடுகின்றன. அவற்றையுங்கேள். சில புத்தியீனர் பிழைப்பில்லாமையால் சாஸ்திரத்தை விடுவதையே கார்யமாகக்கொண்டு தர்மத்தைப்பகைத்து இகழ்கின்றனர். அவர்களுக்குத்தான் இவ்விதமான ஸந்தேகமுண்டாவதாகச் சொல்லப்படுகிறது. ஸத்புருஷர்களோ மேன்மேலும் விரும்பிக்கொண்டு சாஸ்திரங்களெல்லாவற்றிலும் நம்பிக்கையுள்ளவரும் அதுவே சிறந்ததென்று திருப்தியடைந்திருப்பவரும் எவரோ அவரையடுத்துக்கேள். பொருளாசையையும் அறியாமையையும் அநுஸரித்திருக்கும் அர்த்தகாமங்களைவிட்டுத் தர்மமொன்றையே பார்ப்பவர் எவரோ அவரையடுத்துக் கேள். அவர்களின் ஆசாரமும் மாறுவதில்லை. யாகம் வேதாத்யயனம் ஆசாரம் இம்மூன்றும்பிரமாணங்கள்மூன்றும் ஒரே தர்மம்தான்" என்றுசொன்னார்.

யுதிஷ்டிரர், "கரையில்லாத ஸந்தேகத்தில்மூழ்கி அக்கரையைக் காணமலிருக்கும் மனம் இந்தவிஷயத்தில் திரும்பவும் மயங்குகிறது. வேதம், பிரத்யக்ஷம் சிஷ்டாசாரம்இம்மூன்றும் பிரமாணங்களாயிருந்தால் இம்மூன்றும் வெவ்வேறாக இருக்கின்றனவே? மூன்றும் தர்மமாவதெப்படி?" என்றுகேட்டார். பீஷ்மர், "அரசனே! துஷ்டர்கள் வலிமையுற்றுத் தர்மத்தைக் கெடுப்பதனால் நீ இப்படி தர்மத்தைப் பற்றி மூன்றுவகைகளில் ஸம்சயமிருக்கிறதென்று நினைக்கிறாய். தர்மம்ஒன்றேயன்றும் அதைஅறியும்வகை மூன்றென்றும் அறி. அம்மூன்றுவகைகளும் ஒன்றுக்கொன்று விரோதமாகாவண்ணம் நான் நினைக்கவில்லை. மூன்றுபிரமாணங்களின்ஒழுங்கையும்உனக்குச்சொன்னேன். அதைஅப்படியே அனுஷ்டிக்கக்கடவாய். பரதஸ்ரேஷ்டனே! தர்க்கங்களினால் தர்மத்தைவிசாரிப்பது ஒருபோதும் தகாது. உனக்கு இதில் ஸந்தேகம் வேண்டாம். நான் எதைச்சொல்லுகிறேனோ அதைக் கண்தெரியாதவன்போலவும் மூடன்போலவும் விசாரிக்காமல்செய். அஜாதசத்ருவே! சொல்லாமை, ஸத்யம், பொறுமை, கொடை இந்நான்கையும் அனுஷ்டிப்பாயாக. இவைதாம் அழியாத

தர்மம். சிறந்தகைகளையுடையவனே! பிராமணர்விஷயத்தில் உனது தந்தைபாட்டன்முதலிய பரம்பரையில்வந்த ஒழுக்கம்எதுவோ அதை அனுஸரி. அவர்கள்தாம் தர்மத்தின் வழியைக் காட்டுகிறவர்கள். அறிவில்லாதவன் பிரமாணத்தையும் அப்பிரமாணமாகச் செய்வானுயின் அவனைநம்பத்தகாது. அவன் துக்கத்தை உண்டுபண்ணுகிறவன். பிராம்மணர்களையே பூஜித்தும் வெகுமானித்தும் பணியக்கடவாய். இவ்வுலகங்களனைத்தும் அவர்களிடத்திலேயே இருக்கின்றன என்றறி" என்றுசொன்னர்.

இருநூற்றுபத்தெட்டாவது அத்யாயம்.

தான தர்ம பர்வம். (தொடர்ச்சி)

(தர்மபலன்களும் பலதர்மங்களும்.)

யுதிஷ்டிரர், "தர்மத்தை எவர் பகைக்கின்றனரோ, எவர் அதை அனுஷ்டிக்கின்றனரோ அவ்விருதிறத்தாரும் அடையும் கதிகள் எவை? அவர்கள் எங்கேபோகின்றனரென்பதை நீர் எனக்குச் சொல்லக்கடவீர்" என்று கேட்டனர்.

பீஷ்மர், "மகாராஜனே! ரஜோகுணத்திலுலும் தமோகுணத்திலுலும் மூடப்பட்டமனமுள்ள ஜனங்கள்தாம் தர்மத்தைப் பகைப்பவர்; அவர் நரகம்சேர்கின்றனர். சொல்சுத்தமும் மனச்சுத்தமுமுள்ளவர்களாகித் தர்மத்தையே எப்போதும் அனுஷ்டிக்கும் ஸத்புருஷர்கள்தாம் ஸ்வர்க்கலோகத்தையனுபவிப்பவர். அவர்களுக்குக் குருபணிவிடையிலுல் தர்மத்திலேயே விருப்பமுண்டாகும். மனிதராயினும் தேவராயினும் தேகத்தைவருத்தித் தர்மத்தைஅனுஷ்டிப்பவர்எவரோ அவர்தாம் ஸுகம்பெறுவர். பொருளாசையையும்வெறுப்பையும்விட்டுத் தர்மம்செய்கிறவர் ஸுகமாக அபிவிருத்தியடைகின்றனர். தர்மத்தைப் பிரம்மாவின் மூத்தகுமாரனென்று அறிஞர் கூறுகின்றனர். உண்ணுகிறவர் பழுத்தபழத்தைக் காப்பதுபோலத் தர்மிஷ்டர்கள் தர்மத்தைக் காக்கின்றனர்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "கெட்டவனுடையநடை எப்படிப்பட்டது? நல்லவன்நடை எப்படிப்பட்டது? ஸத்துக்களும் அஸத்துக்களும் எப்படியிருப்பவர்? இதனை நீர் எனக்குச் சொல்லக்கடவீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர். "[1]கெட்டஆசாரமும் துஷ்டவாக்குமுள்ளவர்களும்

---

[1] 'துராசார' என்றபாடம் கொள்ளப்பட்டது.

அடக்கமுடியாதவர்களும்மாயிருப்பவர்கள். அஸாதுக்கள். நல்லொழுக்கம் நிரம்பினவர்கள் ஸாதுக்கள். சிஷ்டாசாரத்தின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். அரசர்க்கரசனே! தர்மிஷ்டர் ராஜமார்க்கத்திலும் பசுக்களுடனிலும், ஜனங்கள்நடுவிலும் மலமூத்திரங்களைவிடார். ஸாதுக்கள் பஞ்சமகாயாகங்களைச் செய்தபிறகு அவற்றின் மிச்சத்தை உண்பர்; புஜிக்கும்போது பேசார்; ஈரக்கையோடு தூங்கார்; அக்நியையும் [1]வருணனையும் கொட்டிலையும் நாற்சந்தியையும் பிராம்மணனையும் தர்மிஷ்டனையும் பிராயமுதிர்ந்தவனையும் பிரதக்ஷிணஞ்செய்வர்; பிராயமுதிர்ந்தவருக்கும் சுமையினல்வருந்துகிறவருக்கும் பெண்களுக்கும் சிறுவருக்கும் பிணியாளருக்கும் பிராம்மணர்களுக்கும் பசுக்களுக்கும் அரசர்களுக்கும் வழிவிடுவார். எல்லா அதிதிகளுக்கும் வேலைக்காரருக்கும் சுற்றத்தாருக்கும் ஓரேபோஜனம் செய்விக்கவேண்டும்.. தான் சிறந்தபோஜனத்தைச் செய்யலாகாது. சொற்சுத்தம் மனச்சுத்தம்என்னும் தர்மங்களுக்குச் சரியானது மற்ற 'எதுவுமில்லை.. அந்தத்தர்மத்தினல் பஹுவேயென்னும் பசு சிறந்ததியையடைத்ததாகச் சொல்லப்படுகிறது. ஒரு பிராம்மணன் ரிஷிசாபத்தினல் புலியானான். அந்தப்புலி பகுவேயென்னும்பசுவையடைந்து அதைப் பக்ஷிக்கவிரும்பிற்று; அதைச் சபதத்தின்மேல் விட்டது. அந்தப்பசு சபதப்படி கன்றுக்குஊட்டக்கொடுத்துத் திரும்பிவந்ததைக்கண்டு அந்தப்புலி தன்பூர்வஜன்மத்தை நினைத்தது. அதனல்விடப்பட்ட அந்தப்பசு திரும்பவும் தன்தேசத்திற்குச்சென்று பிறகு புண்யலோகங்களையடைந்தது. ராஜனே! பரதஸ்ரேஷ்டனே! ஆதலால், நீயும்ஸத்தியத்தையும் மனத்தூய்மையையும்விடாமல்தேசத்தையும் அதிலுள்ளமனிதர்களையும் காப்பாற்றி எளிதில் ஸ்வர்க்கமடைவாய். அப்படியே சரணம்தேடுகிறவர்களுக்கு நல்வரவுசொல்லி அவர்களைக் காப்பாற்றவேண்டும். மனிதர்களுக்குக் காலைமாலைகளில் மட்டும் போஜனம் தேவர்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறது; இடையில்போஜனம் சொல்லப்படவில்லை. அப்படியிருப்பது உபவாஸம் செய்வதாகிறது. அக்நியானது ஹோமகாலத்தில் ஹோமத்தை எப்படி ஏதிர்பார்க்கிறதோ அப்படி பித்ருக்கள் ருதுகாலத்தில் கர்ப்பதானத்தை எதிர்பார்க்கின்றனர். ருதுகாலமல்லாதகாலங்களில் ஸ்திரீ ஸங்கமம் செய்யாமலிருப்பது பிரம்மசாரி வ்ரதமாகச் சொல்லப்படுகிறது. அம்ருதம் பிராம்மணர்கள் பசுக்கள் இம்மூன்றும் ஓரினம்.

1 'வ்ருஷபத்தையும் தேவதையையும்' என்பது வேறுபாடம்; அதில், 'வருணன்' என்பது

ஆதலால், கோக்களையும் பிராம்மணர்களையும் எப்போதும் சாஸ்திரப் படி பூஜிக்கவேண்டும். யாகங்களில் மந்திர சுத்தமான மாம்ஸத்தைப் புசிப்பவன் பாவமடையான். முதுகுமாம்ஸமும் யாகத்தில்சேராத மாம்ஸமும் புத்ரமாம்ஸமும் ஸமமானவை. ஸ்வதேசத்திலாகட்டும் பரதேசத்திலாகட்டும் அதிதியை உபவாஸமிருக்கச்செய்யலாகாது. கர்மங்களெல்லாவற்றையும் செய்தபின் குருவுக்குத் தெரிவிக்கவேண்டும். குருக்களை நமஸ்கரித்துப் பூஜித்து அவர்களுக்கு ஆஸனங்கொடுக்கவேண்டும். குருவைப்பூஜைசெய்வதனால் ஆயுளும் புகழும் ஐஸ்வர்யமும் அபிவ்ருத்தியாகின்றன. முதிர்ந்தவர்களை ஒருக்காலும் அவமதிக்கவும் அவர்களை வேலைகளில் ஏவவுங்கூடாது. அவர்கள் நிற்கும் போது உட்காரலாகாது. இப்படியிருப்பவனுக்கு ஆயுள் குறையாது. வஸ்திரமில்லாத ஆண்பெண்கள்யாரையும் பார்க்கலாகாது. ஸ்த்ரீ புருஷர்களின்கலவி எப்போதும்ரகஸ்யமாயிருக்கவேண்டும். தவஞ்செய்ய வேண்டும். குருக்கள் தீர்த்தங்களுக்கும் தீர்த்தம். மனமே சுத்தங்களுள்சுத்தம். ஞானம் கண்களுக்கும்சிறந்தகண். திருப்தியேபெரிய ஸுகம். காலைமாலைகளில் தர்மம்நிரம்பினபெரியோர்களின் சொற்களைக் கேட்கவேண்டும். பெரியோரை எப்போதும் அடிப்பதனாலே தான் மனிதன் கல்வியையடைவது. வேதாத்யயனஞ்செய்யும்போதும் போஜனம்செய்யும்போதும் வலக்கையைவெளியில்எடுத்து (உத்தரியத்தை யஜ்ஞோபவீதமாகப்போட்டுக்) கொள்ளவேண்டும். வாக்கையும் மனத்தையும் ஐம்புலன்களையும் எப்போதும் அடக்கவேண்டும். நன்றுகப்பாகம்செய்யப்பட்ட பாயஸான்னம் யவான்னம் க்ருஸரம் நெய் இவை எப்போதும் சுத்தமானவை. பித்ருதேவதைகளுக்கு அஷ்டகாஸ்ராத்தமும் நவக்ரஹங்களுக்குப்பூஜையும் நித்யமாகச்செய்யவேண்டும். க்ஷேத்ரத்தை மங்களமென்றுசொல்வதும் தும்மினபோது மங்களவசனங்களைச் சொல்வதும் வியாதியுள்ளவர்களுக்கெல்லாம் ஆயுள்வ்ருத்தியைச்சொல்வதும் அவசியம். எந்தஆபத்திலிருந்தாலும் பெரியோரை நீ என்றுபேசலாகாது. நீ என்று பேசுவதிலும் கொலைசெய்வதிலும் வித்வான்களுக்குப் பேதமில்லை. தாழ்ந்தவர்களுக்கும் ஸரியானவர்களுக்கும் சிஷ்யர்களுக்குமட்டும் நீ என்று பேசுவது ஆசாரமாகும். பாபிஷ்டர்களினுள்ளம் எப்போதும் பாபத்திலேயேசெல்லும். தெரிந்து செய்தகாரியத்தையும் அயோக்யர்கள் மறைத்துவிடுவர். 'என்னை மனிதர்களும் பார்க்கவில்லை; தேவர்களும் பார்க்கவில்லை' என்றுநினைத்து, புத்திபூர்வமாகச் செய்த பாவத்தைப் பெரியஸபையில் பெரியோர்களிடத்தில் மறைப்பவர்

கெட்டுப்போகிறார். பாவஎண்ணத்தினால்மறைக்கப்பட்டபாவம் மேன் மேலும் பாவத்தையே உண்டாக்குகிறது. வட்டிவாங்கிஜீவிப்பவன் நாள்தோறும் வட்டியை எதிர்பார்ப்பதுபோலத் தர்மத்தினால் பாவம் மறைக்கப்பட்டுத் தர்மத்தையே விருத்திசெய்கிறது. ஜலத்தில்போ ட்டப்பட்டஉப்பு எப்படிக் கரைந்துபோகிறதோ அப்படியே பிராயச் சித்தத்தினால் அடிக்கப்பட்டபாவம் உடனே அழிந்துபோகிறது. ஆத லால், பாவத்தை மறைக்கலாகாது. மறைக்கப்பட்டால் மேன்மேலும் வளரும். பாவத்தைச்செய்தும் யோக்யர்களிடத்தில் சொல்வதனால் அதை நிவர்த்திசெய்யலாம். ஆசையினால் ஈட்டப்பட்டபொருளைத் தானிருக்குங்காலத்தில் அனுபவியாமற்போனால் அவன்இறந்துபோன பின் மற்றவர்கள் அதை அனுபவிக்கின்றனர். ஆதலால், தனம் தர்மத் திற்குச் சாதனமென்றே நினைத்து அதை எப்போதும் சம்பாதிக்க வேண்டும். தர்மமே மேன்மைக்குக்காரணமென்று எல்லாப்பிராம்ம ணர்களின்மனத்திலுமிருக்கிறதாகத் தெரிந்தவர் கூறுகின்றனர். அதனாலேதான் எல்லாப்பிராணிகளும் இயற்கையில் தர்மத்தையே பற்றுகின்றன. தர்மத்தைத் தனித்தேசெய்யவேண்டும். தர்மக்கொடி கட்டலாகாது. தர்மத்தைக்கொண்டுஜீவிப்பவர் தர்மத்தை வர்த்தகம் செய்பவராகிறார். தேவர்களை மனஉண்மையோடு பூஜிக்கவேண்டும். குருக்களை வஞ்சகமின்றிப் பணியவேண்டும். காப்பாற்றிவைத்திருக் கும்தனத்தைப் பரலோகத்திற்குரியநிதியாக யோக்யர்களிடத்தில் வைக்கவேண்டும்" என்றார்.

இருநூற்றுறுபத்தோன்பதாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(விதிக்கும் முயற்சிக்குமுள்ள வித்தியாசமுதலியன.)

யுதிஷ்டிரர், "பரதஸ்ரேஷ்டரே! அத்ருஷ்டமில்லாதவன்மிக்க வலிமையுள்ளவனாயிருந்தாலும் தனத்தையடைவதில்லை. அத்ருஷ்ட முள்ளவன் இளைத்திருந்தாலும் சிறுவனாயிருந்தாலும் மிகுதியாகத் தனங்களையடைகிறான். முயற்சிசெய்தாலும் லாபம்வராதகாலத்தில் பொருளையடைவதில்லை. லாபகாலத்தில் முயற்சியில்லாமலே மிகுதி யான தனத்தை மனிதன் அடைகிறான். முயற்சிசெய்துபலனடையாத மனிதர்களனேகர் காணப்படுகின்றனர். முயற்சியில்லாமலே செல்வம் பெருகின ஜனங்கள்பலர் காணப்படுகின்றனர். முயற்சியேகாரணமா யிருந்தால் மனிதன் அதன்பலனெல்லாம் அடையவேண்டும். மனி

தர்களுக்குக்கிடைக்காதது ஒன்றும் காணப்படாது. முயற்சிசெய்தும் பலனில்லாதமனிதர்களைக்காண்கிறோம். வரவுக்குரிய அனேக வழிகளினால் ஒருவன் பொருள்களைத் தேடுகிறான். மற்றொருவன் தேடாமலே ஸுகப்படுகிறான். செய்யத்தகாத காரியங்களைத் தொடர்ச்சியாகச்செய்தும் பொருள்பெறுதமனிதர்கள் காணப்படுகின்றனர். மற்றும்சிலர் ஸத்கர்மங்களிலிருந்துகொண்டே பொருளுள்ளவராகவும் காணப்படுகின்றனர். ஒருவன் ராஜநீதிசாஸ்திரங்களுக்கற்றும் நீதியிற்சேர்ந்தவனுகக் காணப்படவில்லை. சாஸ்திரந்தெரியாதவனும் மந்திரிபதம்கொடுக்கப்படுகிறான். கல்வியுள்ளவனும் கல்வியில்லாதவனும் புத்தியில்லாதவனும் பொருளுள்ளவராயிருக்கிறார்கள். கல்வியைப்பற்றி மனிதன் ஸுகம்பெறுவானுயின் கற்றறிந்தவன் கல்வியில்லாதவனை ஜீவனத்திற்காக அடிக்கக்கூடாது. ஜலம்கிடைத்ததனால் மனிதன் தண்ணீர்த்தாகத்தைப் போக்குவதுபோல வித்தையினாலேயே வேண்டினபொருளையடையலாமானால் வித்தையையாரும்விடார். அனேகம்அம்புகளினாலடிக்கப்பட்டிருந்தாலும் காலம்வராமல் இறப்பதில்லை. காலம்வந்தபோது புல்முனைபட்டாலும் பிழைப்பதில்லை. இதற்கு என்ன காரணம்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

" யுதிஷ்டிர! அனேகமுயற்சிகளைச்செய்பவனும் பொருளையடையாமற்போவானுயின் அவன் கடிந்தவம் செய்யவேண்டும். விதையாமல் ஒன்றும் முளைப்பதில்லை. தானஞ்செய்வதனாலேதான் போகங்களையடையவேண்டும். பெரியோரை அடித்துத்தான் அறிவுள்ளவனுவான். அஹிம்ஸையினாலேதான் தீர்க்காயுள்பெறுவானென்றுதெரிந்தவர் கூறுகின்றனர். ஆதலால், கொடுக்கவேண்டும். யாசிக்கலாகாது. தர்மிஷ்டர்களைப் பூஜிக்கவேண்டும். இன்சொற்சொல்லியும் இனியதுசெய்தும் மனமடங்கியும் ஒருபிராணியையும் துன்பம்செய்யாமலுமிருக்கவேண்டும். கொசுகு புழு எறும்புகளுக்கும் ஸுகதுக்கங்களுக்குக்காரணங்கள் பிறப்பும் இறப்பும்தாம். நீ நிச்சயமாயிரு."

இருநூற்றெழுபதாவது அத்யாயம்.

தா ன த ர் ம ப ர் வ ம். (தொட்ர்ச்சி.)

(தர்மத்தைஅனுஷ்டிக்கும்முறைமுதலியன.)

நல்லதாகிய புண்ணியத்தையும் கெட்டதாகிய பாவத்தையும் மனிதன் பிறரால் செய்வித்துக்கொண்டும், தானேசெய்துகொண்டுமிருக்கிறானன்றே? அவற்றுள் நல்லதைச்செய்தபின் கவலையற்றிருக்

கலாம்; கெட்டதைச்செய்தபின் அவ்வாறு இருக்கலாகாது. காலந் தான் உள்ளிருக்கும்சக்தி. கெடுதலேயும் நன்மையையும் அதுவே கொடுக்கிறது. அதுதான் பிராணிகளின்புத்தியில்பிரவேசித்துத் தர் மத்தையும் அதர்மத்தையும் நடத்துகிறது. தர்மத்தின்பலனைக்காண் பதனால் இவனுக்குத் தர்மநிச்சயமுண்டாகுமானால் அப்போதுதான் தர்மசிந்தையுள்ளவன் அதில்நம்பிக்கையாயிருக்கலாம். அவ்வாறன்றி உறுதியானஎண்ணத்தோடு நம்பலாகாது. மனிதர்களுள் தெரிந்த வர்களின் இலக்கணம் இவ்வளவுதான். காலத்தினால் தூண்டப்பட் டாலும் தர்ம்மாதர்மங்களிரண்டையும் அறிந்து அவற்றில் எது முடி வில் நியாயமாகஇருக்குமோ அதை அனுஷ்டிக்கவேண்டும். ராஜ் யத்தையடைந்தமனிதர்கள் ஜனங்களை எப்படி கௌரவிக்கின்ற னரோ அப்படியே இவ்வுலகத்தில் தர்மிஷ்டர்கள் தம்மாலேயே தம்மை மேன்மையாகச்செய்கின்றனர். தவத்தினாலும் தேவதா பூஜையினாலும் முக்தியபுண்ணியத்தினாலும் கல்வியினாலும் தானத் தினாலும் ஜபத்தினாலும் உள்ளம் சுத்தமாகிறது. இந்தச்சுத்தமில் லாதவன் தர்மகார்யத்தில் தேவதாபூஜையை எவ்வகையிலும் செய்ய லாகாது. தர்மத்தைவிட்டால் தர்மபலனைக் காலம் எவ்வகையிலும் கொடாது. ஆதலால்தான், தர்மம்செய்யும்போது பரிசுத்தையிருப் பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். தொடர்ச்சியாகச் செய்யப்பட்ட அதர்மம் காலத்தினால் காப்பாற்றப்பட்ட தர்மத்தை எரியும்தீயைப் போல அணுகாது. தவத்தையும் தேவதாபூஜையையும் தர்மமா கவே செய்யவேண்டும். ஜயத்தைத்தருவது தர்மந்தான். மூன்றுல கங்களுக்கும் ஒளியன்றே ஆதாரமாயிருப்பது? எந்தஞானியும் மனி தனைக் கையில்பிடித்துநடத்துவதில்லை. தர்மத்தினால்தூக்கிக்கொண்டு போகப்பட்டுத்தான் எவனும் வழுவில்லாதமேற்பதத்தை அடைவது. நல்லவையாகக்காணப்படும்பலதர்மங்களில் நம்பிக்கைதான் வைக்க வேண்டும். சிலர், 'நான் சூத்திரன்; நான்குஆஸ்ரமதர்மங்களையும் அனுஷ்டிப்பதில்எனக்கு அதிகாரமில்லை'என்னும்பகுத்தறிவை மன த்தில்வைத்துக்கொள்வதில்லை. நாலுவர்ணங்களின் விசேஷதர்மத்தை யும் குறிப்பாகச் சொல்லுவேன். ஐந்துபூதங்களால் உண்டானதேக மூள்ளவர்களும் ஒரேஇயற்கையுள்ளவர்களுமான எல்லாவர்ணத்தா ருக்கும் உலகநடக்கையிலும் தர்மகாரியங்களிலும் வேறுபாடு செய் யப்பட்டிருக்கிறது. பிராணிகள் முடிவில் முக்தியடைவதற்கு ஒன்றே கத்தான் இருக்கின்றன. அதற்குள் பிரிவிருக்கிறது. அப்பா! உலகம் நிலையற்றதாகவும் தர்மமட்டும் நிலைபெற்றதாகவும் சொல்லப்படுவது

எப்படியென்றால், காலம் அழியாது. ஆதலால், தர்மம் அழியாது. எல்லாரும் ஒரேதேகமும் ஒரேதன்மையுமுள்ளவர்களாயிருந்தாலும் காலமானது தர்மத்துடன்சேர்ந்து அவர்கள்பின்னதிக்குத் தானே வழிகாட்டுவதாகிறது. இப்படியிருப்பதனால் பிராணிகள் தம்தம் தர்மங்களை அனுஷ்டிப்பதில் பிழையொன்றுமில்லை. இப்படியிருக்கையில் தர்மத்தை அனுஷ்டிக்காமையினால் திரியக்ஜாதியில் பிறந்த பிராணிகளுக்குத் தோஷமில்லை. உலகம்தான் யாவருக்கும் ஆசாரியனாக நினைக்கப்படுகிறது" என்றார்.

இருநூற்றெழுபத்தோராவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(தேவநாமங்களும் ரிஷிநாமங்களும்.)

கௌரவராஜரும் பாண்டுபுத்ரருமான யுதிஷ்டிரர் பாவத்தைப் போக்குவதாகிய ஹிதத்தை அறியக்கருதிச் சரதல்பத்திலிருக்கும்பீஷ்மரை நோக்கி, "இவ்வுலகத்தில் எது மனிதனுக்கு நன்மை? எதைச் செய்தால் ஸுகத்தை மிகுதியாகப்பெறலாம்? எதனால் மனிதன் பாவமற்றவனாவான்? பாவங்களைப் போக்குவது எது?" என்று கேட்டார். புருஷஸ்ரேஷ்டரான ஜனமேஜயரே! திரும்பவும் கேட்கக்கருதின யுதிஷ்டிரருக்கு உடனேபீஷ்மர் தேவர்களின் வம்சத்தை வரிசைப்படி சொல்லலானார்.

"குழந்தாய்! நான்சொல்லும் தேவவம்சத்தையும் ரிஷிவம்சத்தையும் காலை நடுப்பகல் மாலை இம்மூன்றுஸந்திகளிலும் படிப்பது பாவங்களைப் போக்குபவற்றுள் சிறந்தது. இந்திரியங்களினால் பிரவர்த்திக்கும் மனிதன் பரிசுத்தனாகி இதைச்சொல்வதனால் பகலிலும் இரவிலும் காலைமாலைஸந்திகளிலும் தெரிந்தும் தெரியாமலும் செய்யப்படும் பாவங்களெல்லாவற்றிலிருந்தும் உடனே விடுபடுவான். காலத்தில் இதைச் சொல்லுகிறவன் குருடனாவதில்லை; செவிடனாவதில்லை; எப்போதும் மங்களமுள்ளவனாயிருப்பான்; தீர்யக்ஜாதிகளிலும் ஸங்கரஜாதிகளிலும் பிறவான்; நரகம்புகான். அவனுக்குத்துக்கமும் பயமும் இல்லை; மரணகாலத்தில் புத்திமயக்கமிராது. 'தேவருக்கும் அஸுரருக்கும்பிதாவும் எல்லாப்பிராணிகளாலும் நமஸ்கரிக்கப்பட்டவரும்சிஷ்டைக்கும் சொல்லுக்கும் எட்டாதவரும் எல்லாருக்கும் உயிரும் கர்ப்பத்தில் பிறவாதவரும் உலகங்களுக்கு நாதரு

மான பிரம்மதேவர், பிரம்மதேவருடைய பத்நியாகியஸாவித்ரிதேவி, வேதங்களால் சொல்லப்படுகிறவரும் ஜகத்கர்த்தாவும் பிரபுவும் ஜகத்வியாபியுமான நாராயணர், உமையின்கணவராகிய விரூபாக்ஷர், தேவஸேனைக்குப்புதியாகிய விசாகரென்னப்படும் ஸுப்ரம்மண்யர், அக்நி, வாயு, ஒளியைச்செய்கிறவர்களாகிய சந்திரசூரியர்கள், சசியின் கணவனாகிய தேவேந்திரன், தூமோர்ணையென்னும் மனைவியுள்ள யமன், கௌரியென்னும் பத்நியுள்ளவருணன், ருத்தியென்னும் பத்நியுள்ள குபேரன், சாந்தமான காமதேனுவென்னும்கோதேவதை, விஸ்ரவஸ் மகரிஷி, ஸங்கல்பனென்னப்படுங்காமன், ஸமுத்ரராஜன், கங்கை, ஏழுமருத்துக்கள், தவஸித்திபெற்ற வாலகில்யர்கள், வ்யாஸர், நாரதர், பர்வதர், விஸ்வாவஸு, ஹாஹா, ஹூஹூ, தும்புரு, சித்ரஸேனன், [1]பெயர்பெற்ற தேவதூதன், சிறந்தமஹிமையுள்ள தேவகன்னிகைகள், உர்வசி, மேனகை, ரம்பை, மிஸ்ரகேசி, அலம்புஷை, விஸ்வாசி, க்ருதாசி, பஞ்சசூடை, திலோத்தமையென்னும் சிறந்த அப்ஸரஸுகள், ஆதித்யர்கள், வஸுக்கள், ருத்ரர்கள், அஸ்வினீதேவர்கள், பித்ருக்கள், தர்மம், கல்வி, தவம், தீக்ஷை, முயற்சி, [2]பிதாமஹர், இரவுகள், பகல்கள்; மரீசியின்புத்திரரான கஸ்யபர், சுக்ரர், ப்ருகஸ்பதி, குஜன், புதன், ராஹு, சனி, நக்ஷத்திரங்கள், ருதுக்கள், மாதங்கள், பக்ஷங்கள், வருஷங்கள், விநதையின் புத்ரர்கள், கடல்கள், கத்ருவின்பிள்ளைகளாகிய நாகர்கள், சதத்ரு, விபாசை, சந்த்ரபாகை, ஸரஸ்வதி, ஸிந்து, தேவிகையென்னும் நதிகள், ப்ரபாஸதீர்த்தம், புஷ்கரதீர்த்தம், மகாநதியான ஆகாசகங்கை, வேணை, [3]காவேரி, நர்மதை, குலம்புனை, விசல்யை, எப்போதும் ஜலம் ப்ரவஹிக்கும் கரதோயை, ஸரயு, கண்டகி, லோஹிதமென்னும்பெரிய [4]நதம், தாம்ராருணை, வேத்ரவதி, பர்ணாசை, கௌதமி, கோதாவரி, வேண்யை, கிருஷ்ணவேணை, அத்ரிஜை, த்ருஷத்வதி, காவேரி, [5]சக்ஷு, மந்தாகினி, ப்ரயாகை, ப்ரபாஸம், புண்ணியமான நைமிசாரண்யம், பரிசுத்தமான புண்ணியதீர்த்தமாகவும் சிறந்த ஜலமுள்ளதாகவுமிருக்கும் நிர்மலமான தடாகமுள்ள அந்த ஈஸ்வரருடைய ஸ்தானமாகிய குருக்ஷேத்ரம், ஸிந்தூத்தமம், தபோதானம், ஜம்புமார்க்கம், ஹிரண்வதி, விதத

1 விஸ்ருதன் என்னும் தேவதூதன் என்றும் கொள்ளலாம்.
2 ப்ரம்மதேவருக்குப் பிற்பட்டவர்.
3 இது இரண்டுமுறை வந்திருக்கிறது.
4 மேற்கடலில் விழும் ஆறு.
5 சக்ஷு, மந்தாகினி இரண்டும் ஆங்கையின் பிரிவுகள்.
6 இது இரண்டுமுறை வருகிறது.

ஸ்தை, ப்லக்ஷவதி, வேதஸ்ம்ருதி, வேதவதி, மாலவை, அர்வவதி இந்
நதிகளும், பூமியிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களும், கங்காத்வார
மும், விந்துநதியைச்சேரும் ரிஷிகுல்யைகள் என்னும் பரிசுத்தமான
நதிகளும் புண்ணியநதியான சர்மண்வதி, கௌசிகி, யமுனை, பீமரதி,
மஹாநதியான பாஹுதை, மாஹேந்திரவாணி, த்ரிதிவை, நீலிகை,
ஸரஸ்வதி, நந்தை, அபரநந்தை, தீர்த்தமகாஹ்ரதமென்னும் புண்
ணியதடாகம், கயை, பல்குனீதீர்த்தம், தேவர்களாற்சூழப்பட்ட
தர்மாரண்யம், புண்ணியமான தேவநதி, பிரம்மாவிஞலுண்டாக்கப்
பட்டதும் மூன்றுலகங்களிலும் பெயர்பெற்றதும் எல்லாப்பாவங்களை
யும் போக்குவதும் பரிசுத்தமும் ஸௌக்கியமுமான மானஸஸரஸ்,
சிறந்த ஓஷதிகளோடுகூடிய இமயமலை, பலநிறங்களான தாதுக்களும்
புண்ணியதீர்த்தங்களும் ஓஷதிகளும் நிரம்பியவிந்தியமலை, மேரு,
மஹேந்திரம், மலயம், வெள்ளிமயமான ச்வேதகிரி, ச்ருங்கவான்,
மந்தரம், நீலம், நிஷதம், தர்துரம், சித்ரகூடம், அஞ்சனபம், கந்தமா
தனம், புண்ணியமான ஸோமகிரிமுதலான மலைகளும், திசைகளும்,
மூலைகளும், பூமியும், எல்லாமரங்களும், விச்வேதேவர்களும், ஆகாய
மும், நக்ஷத்திரங்களும், நிரகங்களும் ஆகிய தேவர்களின் பேர்களை
நான் சொன்னேன். இந்தத்தேவர்கள் என்னை எப்போதும் காப்பாற்
றக்கடவர்' என்று இவர்களைப் பற்றிச்சொல்லும் மனிதன் எல்லாப்
பாவங்களாலும் விடப்படுவான். துதிப்பவனும் அதைக்கேட்டு ஸந்
தோஷிப்பவனும் எல்லாப்பயங்களிலிருந்தும் விடுபடுவார். இந்தத்
தேவஸ்தோத்திரத்தைக்கேட்டு ஸந்தோஷிப்பவன் ஜாதிலிங்கரத்
தினுலுண்டாகும் பாவங்களெல்லாவற்றிலிருந்தும் விடப்படுவான்.
தேவதைகளைச் சொன்னபின் சொல்லப்படுகிறவரும் தவவித்தி
பெற்றவரும் தவத்தில் சிறந்தவரும் எல்லாப்பாவங்களையும் விடுவிப்
பவருமான பிராம்மணர்களைத் தேவர்களுக்கடுத்தபடியில் சொல்
வேன். யவக்ரீதர், ரைப்யர், உசிக்கின் புத்ரராகிய கக்ஷீவான், ப்ருகு,
அங்கிரஸ், கண்வர், மகிமையுள்ள மேதாதிதி, குணங்கள் நிரம்பின
பர்ஹிஎன்பவர் இவர்கள் கிழக்குத் திக்கைச்சார்ந்தவர்கள்; உல்முக,
ப்ரமுச, மஹாநுபாவரான முமுச, மகிமையுள்ள ஸ்வஸ்த்யாத்ரே
யர், மித்ரஸுக்கும் வருணஸுக்கும் புத்ரரும் மகிமையுள்ளவருமான
அகஸ்தியர், த்ருடாயுஎன்றும்ஊர்த்வபாஹுவென்றும் பெயர்பெற்ற
இரண்டுரிஷிச்ரேஷ்டர்கள் ஆகிய இம்மஹாநுபாவர்கள் தென்திசை
யைச்சார்ந்திருக்கின்றனர். இனி, மேற்குத்திசையைச் சார்ந்திருப்ப
வர்களைக் கேள். ஸஹோதர்களோடுகூடிய உஷங்கு, சிறந்தமகிமை

யுள்ள பரிவ்யாதர், தீர்க்கதமஸ், கௌதமமகரிஷி, காஸ்யபர், ஏகதர், த்விதர், த்ரிதர் என்னும் மகரிஷிகள், அத்ரியின் புத்ரரும் தர்மாத்மாவும் ஸமர்த்தருமான ஸாரஸ்வதர் ஆகியஇவர்கள்மேற்குத்திசையைச் சார்ந்தவர்கள். இனி,வடக்குத்திசையைச்சேர்ந்து விளங்குகிறவரைக் கேள். அத்ரி, வஸிஷ்டர், சக்தி, சிறந்த மகிமையுள்ள வ்யாஸர், விஸ்வாமித்ரர், பரத்வாஜர், ஜமதக்நி, ரிசீகர்புத்ரரானபரசுராமர், உத்தாலகர்புத்ரரான ஸ்வேதகேதுமகரிஷி, கோஹலர், விபுலர், தேவலர், தேவசர்மா, தௌமியர், ஹஸ்திகாஸ்யபர், லோமசர், நாசிகேதர், லோமஹர்ஷணர், உக்ரஸ்ரவஸ், ப்ருகுவம்சத்தவரான ச்யவனர் இவர்கள் வடதிசையைச்சார்ந்தவர்கள். ராஜனே! ரிஷிகளும் தேவர்களும்சேர்ந்த இந்தக்கூட்டத்தைக்கீர்த்தனம்செய்வதுஎல்லாப் பாவங்களையும் விடுவிக்கும். நருகன், யயாதி, நகுஷன், யது, பராக்ரமசாலியானபூரு, துஷ்மாரன், திலீபன், பராக்ரமமுள்ள ஸகரன், க்ருசாஸ்வன், யௌவனாஸ்வன், சித்ராஸ்வன், ஸத்யவான், துஷ்யந்தன், பெரும்புகழ்பெற்ற பரதசக்ரவர்த்தி, பவனன்,ஜநகர், த்ருஷ்டரதனென்னும் அரசன், ரகுவென்னும் அரசன், தசரதமகாராஜர், ராக்ஷஸர்களைக்கொன்ற வீரராகிய ராமர், சசபிந்து, பகீரதன், அரிச்சந்த்ரன், மருத்தன்,த்ருடரதனென்னுமரசன்,மகோதர்யன், அலர்க்கன்,புரூரவராஜன்,கார்தமராஜன்,கத்மோபராஜன், தக்ஷன்,அம்பரீஷன்,குருரன், மிகப்புகழ்பெற்ற ரைவதன், குரு, ஸம்வரணன், தவருத பராக்ரமமுள்ள மாந்தாதா, ராஜரிஷியானமுசுகுந்தன், ஜாஹ்நவியாஹகங்காதேவியிலைடையப்பட்ட ஜஹ்நு, ஆதிஅரசனும் வேனன் புத்ரனுமானப்ருது, எல்லாருக்கும் பிரியத்தைச்செய்யும் மித்ரபானு,த்ரஸத்தஸ்யுராஜன், ராஜரிஷிகளிற்சிறந்த ஸ்வேதன், பெயர்பெற்ற மகாபீஷன், நிமிராஜன், அஷ்டகன், ஆயு, க்ஷத்ரனென்னும் ராஜரிஷி, கக்ஷேயுஎன்னுமரசன், ப்ரதர்த்தனன், திவோதாஸன், கோஸலதேசத்தரசனானஸுதாஸன், ராஜரிஷியான நளன், பிரஜைகளுக்கதிபதியான மனு,ஹவித்ரன்,ப்ருஷத்ரன்,ப்ரதீபன்,சந்தனு,அஜன்,பிரசீனபர்ஹி, பெரும்புகழ்பெற்ற இக்ஷ்வாகு, அரண்யராஜன், ஜானுஜங்கன், கக்ஷஸேனனென்னும் ராஜரிஷிஇவர்களையும் நான் சொல்லாத மற்றுமுள்ள ராஜரிஷிகளையும் நாள்தோறும் காலையில் எழுந்து ஸூர்யோதயம் ஸூர்யாஸ்தமனம் இரண்டு ஸந்திகளிலும் வீட்டிற்கு வெளியிலிருந்து பரிசுத்தனுகிக் கீர்த்தனம்செய்பவன் தர்மபலனை அடைவான். 'உலகத்திற்கதிகாரிகளாகிய தேவர்களும் தேவரிஷிகளும் ராஜரிஷிகளும் என்னல் துதிக்கப்பட்டு எனக்குத் தேகபுஷ்டி

யையும் ஆயுளையும் புகழையும் ஸ்வர்க்கத்தையும் கொடுக்கக்கடவர். எனக்கு இடையூறும் பாவமும் பகையும் இல்லாமலிருக்கக்கடவன. எனக்கு எப்போதும் ஜயமும் மறுமையில் நல்லகதியும் உண்டாகக் கடவன'என்று சொல்லவேண்டும். நீ மனத்தைஅடக்கி எல்லாஜனங்களையும் காப்பாற்று. உனக்கு வ்யாஸர்கண்ணுகவும் கிருஷ்ணன் ஆதாரமாகவும் இருக்கவேண்டும்'' என்றார். சிறந்தபுத்தியுள்ள பீஷ்மர் இவ்வாறுசொல்லித் தியானம்செய்வதற்காக ஒய்ந்தார்''என்றார்.

இருநூற்றெழுபத்திரண்டாவது அத்யாயம்.

தானதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் விடைகொடுத்ததும், யுதிஷ்டிரர் ஹஸ்தினபுரம் சென்றதும்.)

இந்தப்படி வைசம்பாயனர்சொல்லக் கேட்ட ஜனமேஜயர், ''பிராம்மணரே! கௌரவர்களுக்குத்தலைவரானபீஷ்மர்வீரசயனமான சரதல்பத்தில்படுத்துப் பாண்டவர்களால அடையப்பட்டிருந்தபோது என்தந்தையின்பாட்டனரும்சிறந்தஞானமுள்ளவருமானயுதிஷ்டிரர், தர்மசாஸ்திரங்களையும் தானவிதிகளையும்பற்றிய ஸந்தேகங்களெல்லாவற்றையுங்கேட்டுதெரிந்து தர்மார்த்தஸந்தேகங்கள் தீர்ந்தபின் வேறு என்னகாரியம்செய்தார்; அதனை எனக்குச் சொல்லக்கடவீர்'' என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லலானார்.

''அந்தப்பீஷ்மர் பேசிஒய்ந்தபிறகு, அந்தராஜக்கூட்டமனைத்தும் படத்திலெழுதினசித்திரம்போலச் சற்றுநேரம் அசைவற்றிருந்தது. ஸத்யவதியின்புத்ரரான வ்யாஸர் சிலநேரம்சிந்தித்து, படுத்திருக்கும் அரசரான பீஷ்மரைப்பார்த்து அவஸரமாக, '' புருஷச்ரேஷ்டரே ! ராஜரே! கௌரவராஜனுயுதிஷ்டிரன் தைரியமடைந்தான்; ஸஹோதரர்கள் அடித்திருக்கும்அரசர்கள்முதலியஎல்லாரோடும்சிறந்தஞானமுள்ளகிருஷ்ணரோடும் உம்மைக் காத்திருக்கிறான். பட்டணத்திற்குப்போகும்படி நீர் இவனுக்கு விடைகொடுக்கவேண்டும்'' என்று சொன்னர். வ்யாஸபகவான் இவ்வாறு சொல்ல, வேந்தரான பீஷ்மர் பிறகு யுதிஷ்டிரருக்கும் அவரோடுகூட இருக்கிறவருக்கும் விடை கொடுத்தார். சந்தனுபுத்ரரும் அரசருமானபீஷ்மர் தர்மராஜரைப் பார்த்து, '' ராஜனே ! பட்டணத்திற்குப் போ. மனத்தைத் தர்மத்தில்வை. நிரம்பின அன்னங்களும் தக்ஷிணைகளுமுள்ள பலவகை யாகங்களைச் செய். குந்திபுத்ரனே ! அரசர்க்கரசே ! யயாதிபோலவே

ஸ்ரத்தையோடி ஐம்புல்ன்களையும் அடக்கி க்ஷத்திரியதர்மத்தில் ஊக்கம்வைத்துப் பித்ருக்களையும் தேவர்களையும் திருப்திசெய். நன்மையையடைவாய். உனக்குமனத்தில் வருத்தம்வில்லகட்டும். பிரஜைகளை யெல்லாம் ஸந்தோஷிக்கச்செம். மந்திரிகள்முதலான ராஜ்ய அங்கங்களை நயப்படுத்திக்கொள். சினேகிதர்களுக்குப் பிரயோஜனங்களைச்செய்வதனலும் மர்யாதைகளைச்செய்வதனலும் அவரவருக்குத் தக்கபடி திருப்திசெய். அப்பா! அன்புள்ளசிநேகிதர்கள் கிராமத்தின்பக்கத்திலிருக்கும் பழுத்தமரத்தைப் பறவைகள் அடிப்பதுபோல உன்னை அடித்து ஜீவிக்கட்டும். ராஜனே! சூரியன் திரும்பி உத்தராயணம்வந்தபின் நான் குறித்தகாலத்தில் நீ வரலாம்?' என்று மதுரமானசொல்லைச் சொன்னர். அந்தத்தர்மராஜர், 'அப்படியே' என்று சொல்லிப் பீஷ்மரைநமஸ்கரித்துக் கூடஇருப்பவர்களோடுஹஸ்தினபுரத்திற்குச் சென்றார். ஜனமேஜயராஜரே! கௌரவஸ்ரேஷ்டரான தர்மராஜர் திருதராஷ்டிரனையும் பதிவ்ரதையான காந்தாரியையும்முன்னிட்டுக்கொண்டு எல்லாரிஷிகளோடும் ஸஹோதரர்களோடும் கிருஷ்ணனோடும் பட்டணத்திலும்தேசத்திலுமுள்ளஜனங்களோடும் முதிர்ந்தவர்களான மந்திரிகளோடும் ஹஸ்தினபுரப்பிரவேசம் செய்தார்.

தானதர்மபர்வம் முற்றிற்று.

இருநூற்றெழுபத்தொன்றுவது அத்யாயம்.

பீஷ்மஸ்வர்க்காரோஹணபர்வம்.

(உத்தராயணம் வந்தபின் தர்மபுத்ரர் பீஷ்மரிடம் சென்றது.)

பிறகு, குந்திபுத்திரரான தர்மராஜர் பட்டணத்துஜனங்களையும் தேசத்துஜனங்களையும் அவரவருக்குத்தக்கபடி மர்யாதைசெய்து தங்களுள் தங்கள்வீடுகளுக்குப்போக அனுமதிகொடுத்தார். அப்போது பாண்டுபுத்ரரான தர்மராஜர் யுத்தத்தில் புத்திரர்களும் கணவர்களும் இறந்துபோனஸ்திரீகளை முகுந்தியாகப்பொருள்கொடுத்து ஸமாதானப்படுத்தினர். இறந்தபுத்தியுள்ளவரும் புருஷஸ்ரேஷ்டரும் தர்மிஷ்டரிற்சிறந்தவருமான அந்தச்சிறப்புற்றயுதிஷ்டிரர், பட்டாபிஷேகஞ்செய்யப்பெற்று ராஜ்யத்தையடைந்து தம்ஜனங்களெல்லாருக்கும் நல்லவார்த்தைசொல்லிப் பிராம்மணர்கள் சேனைத்தலைவர்கள் நகரத்தில் முக்கியமானவர்கள் இவர்களெல்லாருடையசிறந்தஆசீர்வாதங்களையும் பெற்றுநகரத்தில்ஐம்பதுநாட்கள்வஸித்தபின்புகௌரவர்களிற்சிறந்த

வரான பீஷ்மர்குறித்தகாலத்தை நினைத்தார். அவர் உத்தராயணம் வந்து சூரியன்திரும்பினதைக்கண்டவுடன், புரோஹிதர்களால் சூழப் பெற்று ஹஸ்தினாபுரத்திலிருந்து புறப்பட்டார். பகைவரைஜயிப்ப வரே! குந்திபுத்திரரும் சிறந்தபுத்தியுள்ளவரும் சிறந்தபராக்கிரமமுள்ளவரும் கௌரவருமான யுதிஷ்டிரர் பீஷ்மருக்குஸம்ஸ்காரம் செய்வதற்காக நெய், புஷ்பமாலை, வாஸனைத்திரவியங்கள், பட்டுக்கள், சிறந்த சந்தனக்கட்டைகள், கறுப்பும்வெளுப்புமான அகிற்கட்டைகள் இவற்றை முன்னேயனுப்பிப் பூமாலைகளையும் விலையுயர்ந்த பலவகைரத்னங்களையும் எடுத்துக்கொண்டு திருதராஷ்டிரனையும், புகழ்பெற்றகாந்தாரியையும், தம் தாயான குந்தியையும், புருஷஶ்ரேஷ்டர்களான ஸஹோதரர்களையும் முன்னிட்டுக்கொண்டு, கிருஷ்ணனும் புத்திசாலியான விதுரரும் யுயுத்ஸுவும் யுயுதானனும் பின் செல்ல, அரசர்களுக்குரிய சிறந்த பரிவாரங்கள்சூழவும் எல்லாரும் துதிக்கவும் பீஷ்மருடைய அக்நிக்குப்பின் சென்றார். தர்மராஜர் அந்தகரத்திலிருந்து தேவேந்திரன்போலப் புறப்பட்டுக் குருக்ஷேத்திரத்தில் பீஷ்மரிடம் சென்றார். ஜனமேஜய ராஜரிஷியே! பராசரர் புத்ரரும் சிறந்தஞானியுமான வ்யாஸரும் நாரதரும் தேவலரும் அஸிதரும் பலதேசத்திலிருந்துவந்து அடிபடாமல் மிகுந்த அரசர்களாலும் ஸேவிக்கப்பட்டும் சுற்றிலும் காவற்காரர்களால் காப்பாற்றப்பட்டும் வீரசயனத்தில் படுத்திருக்கும் அம்மகாத்மாவைத் தர்மராஜர் கண்டார். உடனே, ஸஹோதரர்களுடன் ரதத்தினின்று இறங்கினர். பிறகு, தர்மராஜர் பகைவரையடக்குகிறவராகிய தமது பிதாமஹரையும் வ்யாஸர்முதலான பிராம்மணர்களையும் நமஸ்கரித்து அவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்றார். கௌரவரும் தர்மராஜருமான யுதிஷ்டிரர் ப்ரம்மாவுக்கொப்பான புரோஹிதர்களோடும் ஸகோதரர்களோடும் ரிஷிகளால்சூழப்பட்டுச் சரதல்பத்தில்படுத்திருக்கும் பரதஶ்ரேஷ்டரானபீஷ்மர் அருகில்சென்று, "கங்காபுத்ரரே! ராஜரே! நான் யுதிஷ்டிரன்; உம்மை நமஸ்கரிக்கிறேன். சிறந்தகைகளையுடையவரே! நான்சொல்வது உமதுசெவியில் படுகிறதா? நான் என்ன செய்யவேண்டுமென்பதைக்கட்டளையிடும். ராஜரே! ஸமர்த்தரே! நீர் குறித்தகாலத்தில் அக்நியை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். ஆசாரியர்களும் பிராம்மணர்களும் ரித்விக்குக்களும் என்ஸகோதரர்களும் வந்திருக்கிறார்கள். உமது புத்திரரும் சிறந்த பராக்கிரமசாலியுமான திருதராஷ்டிரமகாராஜரும் மந்திரிகளுடன் வந்திருக்கிறார். சிறந்தமஹிமையுள்ள வாஸுதேவரும் வந்திருக்கிறார். யுத்தத்தில்

அடிபடாமல் மிகுந்த அரசர்களும் குருஜாங்கலதேசத்தார் அனைவரும் வந்திருக்கின்றனர். புருஷஶ்ரேஷ்டரே! கண்களோத்திறந்து அவர்களைப்பாரும். நான்செய்யவேண்டிய காரியத்துக்குரிய பொருள்களையெல்லாம் இங்கேகொணர்ந்து சேர்த்திருக்கிறேன். நீர் சொன்ன காலத்திலேயே எல்லாம்செய்யப்பட்டிருக்கின்றன" என்றுசொன்னார்.

சிறந்தபுத்தியுள்ள தர்மராஜரால் இவ்வாறுசொல்லப்பட்ட பீஷ்மர் தம்மைச்சுற்றி நிற்கும் பரதவம்சத்தாரெல்லாரையும் பார்த்தார். சிறந்தவாக்குள்ள பீஷ்மர் பிறகு உடம்பைப்புரட்டித் தமதுபெரிய கையைத்தூக்கி கீருண்ட மேகமுழக்கம்போன்ற தொனியோடு அத்தக்காலத்தில் சொல்லலானார். "குந்திபுத்திரனே! யுதிஷ்டிரனே! மந்திரிகளோடு நீ வந்துசேர்ந்தது ஸந்தோஷம். ஆயிரம் கிரணங்களையுடைய ஸூர்யபகவான் திரும்பிவிட்டார். நான்பதிந்து ஐம்பத்தெட்டுத் தினங்கள் இன்றையோடு சென்றுபோயின. கூரான முனைகளையுடைய பாணங்களின்மேல் இருப்பதனால் இவை நூறு வருஷங்கள்போலிருக்கின்றன. யுதிஷ்டிர! புண்ணியமான மாகமாஸம் இப்போது வந்திருக்கிறது. இதில் [1]மூன்றுபாகம் மிச்சமிருக்கும். இது சுக்லபக்ஷமாயிருக்கவேண்டும்" என்றார். பீஷ்மர் தர்மபுத்திரரான யுதிஷ்டிரருக்கு இவ்வாறுசொன்னபின், தம்மூடிவுக்காலத்தில் திருதராஷ்டிரனை அழைத்துப் பேசலானார். "ராஜனே! நீ தர்மங்கள் தெரிந்தவன்; ராஜ்யகார்யங்களில் ஸந்தேகமில்லாமல் தெளிந்தவன். கல்விபிற்சிறந்த பிராம்மணர்கள் அனேகர்களை நீ பணிந்தாய். ராஜனே! நுட்பமான சாஸ்த்ரங்களையும் தர்மங்களையும் ஆறுஅங்கங்களோடுகூடிய நான்குவேதங்களையும் அறிந்திருக்கிறாய். கௌரவனே! விசனப்படவேண்டாம். அது அப்படி நடக்கவேண்டிற்று. வ்யாஸரிடத்திலிருந்து தேவரகஸ்யத்தையும் நீ கேட்டிருக்கிறாய். ராஜனே! பாண்டவர்கள் பாண்டுவுக்கு எப்படியோ அப்படியே உனக்கும் நியாயமாகப் புத்திரர்களாகிறார்கள். பெரியோருக்குப் பணிசெய்வதில் விருப்பமுள்ள அவர்களை, நீ, தர்மமாகநடந்து காப்பாற்று. தர்மராஜன் பரிசுத்தமான மனமுள்ளவனன்றோ? அவன் உன்கட்டளையில் நிற்பான். அவன் பிறருக்குத் தீங்குசெய்யாமையை முதன்மையாகக் கொண்டவனென்றும் பெரியோர்களிடம் பக்தியுள்ளவனென்றும் எனக்குத் தெரியும். உன்பிள்ளைகள் கெட்டமனமுள்ளவர்கள்; கோபமும் பொருளாசையும் மேற்கொண்டவர்கள்; பொறுமையால்மூட்டப்பட்டவர்கள்; ஓழுக்

1 பீஷ்மர் ஸ்வர்க்கம்புக்கது சுக்லபக்ஷம் அஷ்டமி.

கங்கெட்டவர்கள். அவர்களைப்பற்றி நீ விசனப்படத்தகாது" என்றார். அவர், புத்திசாலியான திருதராஷ்டிரனுக்கு இவ்வாறுசொன்ன பிறகு,மகாவீரரான கண்ணபிரானைப் பார்த்துச்சொல்லலானர். "பகவானே ! தேவஸ்ரேஷ்டர்களுக்கும் ஈஸ்வரரே ! தேவர்களாலும்அஸுரர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரே ! நிரிவிக்கிரமரே ! சங்கசக்ரகதாதரரே ! உம்மைநமஸ்கரிக்கிறேன். பொன்னுருவமுள்ளவரும் தேகங்களினுள்ளிருப்பவரும் உலகத்தைப்படைப்பவரும் விராட்புருஷரும் தமக்குத் தாமே ஒப்பானவரும் எக்காலமும் அழியாத பரமாத்மாவும் விஷ்ணுவுமாகியநீர் மனிதராகப்பிறந்திருக்கிறீர். தாமரைக்கண்ணரே! புருஷோத்தமரே ! எக்காலமும் உம்மிடத்தில் பக்தியுள்ளவனும் நீரே கதியாயிருப்பவனும் ஆசையற்றுப்பற்றுக்களைவிட்டு உயர்ந்திருப்பவனுமாகிய என்னைக் காப்பாற்றும். கிருஷ்ணா ! வைகுண்டரே ! புருஷோத்தமரே ! எனக்கு விடைகொடும். உம்மையே முக்கியமான தஞ்சமாகக்கொண்டபாண்டவர்களை நீர் காப்பாற்றக்கடவீர். கெடுமதியுள்ளவனும் அறிவில்லாதவனுமான துர்யோதனனுக்கு அப்போதே, 'புத்ரனே ! வாஸுதேவர் எங்குஇருக்கிறாரோ அங்கே தர்மமிருக்கும். தர்மம் எங்கிருக்கிறதோ அங்கே ஜயமிருக்கும். வாஸுதேவரையே இழியுந்துறையாகக்கொண்டு பாண்டவர்களுடன் ஸந்தி செய்துகொள். உனக்கு ஸந்திசெய்துகொள்ள இது நல்ல தருணம்' என்று பலமுறை சொன்னேன். சிறிதும் புத்தியில்லாதஅந்தமூடன் நான்சொன்னதைச் செய்யாமற்போனான்; பூமியையெல்லாம்ஒழித்துத் தானும் அழிந்தான். தேவரே ! நீர் ஆதிதேவதை. காரணடன் பதரிகாஸ்ரமத்தில் வெகுகாலம்வஸித்தரிஷிஸ்ரேஷ்டரானநாராயணரென்று நானறிவேன். நாரதரும், மிகச்சிறந்ததவமுள்ள வ்யாஸரும், 'இவர்களிருவரும் நாராயணர்கள் ; மனிதரிற்பிறந்திருக்கிறார்கள்' என்று எனக்குச் சொன்னார்கள். கிருஷ்ணா ! அப்படிப்பட்டநீர் எனக்கு விடைகொடும்.தேகத்தைவிடப்போகிறேன்.உம்மாலனுப்பப்பட்டு நான் உயர்ந்தகதியை அடையக்கடவேன்" என்றார்.

வாஸுதேவர், "பீஷ்மரே! வேந்தரே! உமக்கு அனுமதிகொடுக்கிறேன். நீர்வஸுக்களையடையக்கடவீர். உமக்குப் பாவம்லவமில்லை. பரிசுத்தாத்மாவானநீர் உம்முடையவஸுலோகத்தின்ஐஸ்வர்யத்தை அடைந்திருக்கிறீர். ராஜரிஷியே ! நீர் இரண்டாவதுமார்க்கண்டேயர்போலத் தந்தையினிடம் பக்திவைத்திருக்கிறீர். அதனால், யமன் சேவகன்போல வணங்கி உமதுஸ்வாதீனத்திலிருக்கிறான்" என்றுசொன்னார். கிருஷ்ணனால் இவ்வாறுசொல்லப்பட்ட

பீஷ்மர் பாண்டவர்களையும் திருதராஷ்டிரன்முதலானவேண்டினவர்களெல்லாரையும்பார்த்து, "நான் உயிரை விடப்போகிறேன். அதற்கு நீங்கள் அனுமதிகொடுக்கவேண்டும். நீங்கள் ஸத்யத்திற்கே முயலவேண்டும். ஸத்யந்தான் சிறந்தபலம். எப்போதும்மனத்தையடக்கித் தயையை முக்கியமாகக்கொண்டிருக்கவேண்டும். பாரதர்களே! பிராம்மணர்களிடத்தில் அன்புவைத்துத் தர்மத்தையும் தவத்தையும் ஒருபோதும் விடாமலிருக்கவேண்டும்" என்றுசொன்னார். ஜனமேஜயராஜரே! புத்திமானாகியபீஷ்மர் இவ்வாறுசொல்லி, வேண்டினவர்களெல்லாரையும்பூஜித்துப்பிராம்மணர்களுக்கு அனேகவிதமானதனங்களைக்கொடுத்துத் தர்மராஜரைநோக்கி, "ராஜனே! நீ பிராம்மணர்களையும் முக்கியமாகஅறிஞர்களையும் ஆசார்யர்களையும் ரித்விக்குக்களையும் எப்போதும் பூஜிக்கவேண்டும்" என்றுசொன்னார்.

இருநூற்றெழுபத்துநான்காவது அத்யாயம்.

பீஷ்மஸ்வர்க்காரோஹணபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர்ஸ்வர்க்கம்சென்றதும்,அவர் உத்தரக்ரியைகளும், கங்காகபுலம்பியதும், க்ருஷ்ணர்தேற்றியதும்.)

வீரரானஜனமேஜயரே! கௌரவரும் சந்தனுபுத்ரருமானபீஷ்மர் கௌரவர்களெல்லாருக்கும் இவ்வாறுசொல்லிச் சற்றுநேரம் பேசாமலிருந்தார்; கிரமப்படி த்யானத்தில் மனத்தைநிறுத்தினர். மகாத்மாவின் அடக்கப்பட்டமூச்சு மேலேநோக்கிச்சென்றது. பிரபுவே! வ்யாஸர்முதலானரிஷிகளுடன்சேர்ந்த அந்தமகாத்மாக்களின் நடுவில் அது ஓர் ஆச்சரியமாயிருந்தது. தியானத்திலிருந்த பீஷ்மர் எந்தஎந்தஅவயவத்தை முறையேவிட்டாரோ அந்தஅந்த அவயவங்களில் அம்புகளில்லாமற்போயின. அவர்கள்பார்த்திருக்கும்போதே ஒருநொடியில் அவருக்குப் பாணங்களே இல்லாமற்போயின. ராஜரே! வ்யாஸர்முதலான ரிஷிகளனைவரும் வாஸுதேவர்முதலானவர்களும் அதைக்கண்டு ஆச்சரியமடைந்தனர். அவரால் எல்லாஇடங்களிலும் அடக்கப்பட்ட பிராணனானது தலையைப்பிளந்துகொண்டு சென்றது. அவருடைய ஆத்மா ஸ்வர்க்கத்திற்குக் கிளம்பிற்று; தேவதுந்துபிகள் முழங்கின; பூமாரிபெய்தது. ரிஷிகளும் ப்ரம்மரிஷிகளும் மகிழ்ந்து, 'நல்லது! நல்லது' என்றுகூறினர். ராஜரே! பெரியஅக்னிஜ்வாலைபோன்றஜ்யோதி பீஷ்மர்தலையிலிருந்துபுறப்பட்டு ஆகாயத்தில்

பிரவேசித்து ஒருகொடியில் மறைந்தது. ராஜஸ்ரேஷ்டரே! சந்தனு புத்திரரும் பரதவம்சத்தில்சிறந்தவரும் அரசருமான அந்தபீஷ்மர் இவ்வாறு தமதுவஸுலோகத்திற்சேர்ந்தார். கௌரவரே! அதன் பிறகு, மகாத்மாக்களானபாண்டவர்களும் விதுரரும். யுயுத்ஸுவும் பலசந்தனக்கட்டைகளையும் பலவிதவாஸனைகளையும் கொண்டுவந்து சிதைசெய்தார்கள்; மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். யுதிஷ்டிரரும் திருதராஷ்டிரனும் அழுதுகொண்டு பட்டுக்களாலும் பூமாலைகளாலும் கௌரவராஜபீஷ்மரை மூடினர். யுயுத்ஸு அவருக்கு உயர்ந்தகுடைபிடித்தான். பீமஸேனன் அர்ஜுனன் இருவரும் இரண்டுவெண்சாமரங்கள் வீசினர்; நகுலஸகதேவர்கள் இருவரும் கிரீடம்வைத்தனர்; திருதராஷ்டிரன் யுதிஷ்டிரரோடுசேர்ந்து காலண்டையிருந்தான். பிராயமுதிர்ந்தகௌரவஸ்திரீகள் குருவம்சத்திற்குரேஷ்டரான பீஷ்மருக்கு நாலுபக்கங்களிலும் விசிறிகளையெடுத்துக் கொண்டு விசிறினர். அதன்பிறகு, அந்தமகாத்மாவுக்குப் பித்ருமேத மென்னும் ஸம்ஸ்காரத்தைச் சாஸ்திரப்படிசெய்தனர். ரித்விக்குக்கள் அக்நியில் ஹோமம்செய்தனர். ஸாமகர்கள் ஸாமங்களைப் பாடினர். பிறகு, சந்தனக்கட்டைகளாலும் மாமஞ்சளாலும் காரகில்முதலான கட்டைகளாலும் பலவாஸனைகளாலும் பீஷ்மரை மறைத்துத் தீமூட்டித் திருதராஷ்டிரன்முதலானவர்கள் அந்தச்சிதையை அபஸவ்யமாகச்சுற்றினர். கௌரவஸ்ரேஷ்டர்கள் கௌரவஸ்ரேஷ்டரானபீஷ்மருக்கு ஸம்ஸ்காரம்செய்தபின், வ்யாஸரும் நாரதரும் அவிதரும் வாஸுதேவரும் பரதவம்சத்துஸ்திரீகளும் வந்திருந்தபட்டணத்துஜனங்களும் பின்செல்ல, ரிஷிகளால் அடையப்பட்டதும் புண்ணியமுமானகங்கைக்குச் சென்றனர். அந்தக்ஷத்திரியஸ்ரேஷ்டர்களனைவரும் அந்தஜனங்களெல்லாரும் மஹாத்மாவானபீஷ்மருக்கு விதிப்படி ஜலதர்ப்பணம்செய்தனர். அப்போது, கங்காதேவியானவள் தன்பிள்ளைக்குஜலம்விட்டவுடன், துயரந்தாங்காமல் அந்தஜலத்திலிருந்துவழுந்து அழுது புலம்பிக்கொண்டு கௌரவர்களைப்பார்த்துச் சொல்லலானாள். 'அரசர்களே! நான் நடந்தபடி சொல்வதைக்கேளுங்கள். இவன் அரசஞ்ஞானத்திலும் அறிவிலும் குலத்திலும் சிறந்தவன்; கௌரவவம்சத்துப் பெரியோர்களைப் பூஜிப்பவன்; பித்ருபக்தியுள்ளவன்; எடுத்தவிரதத்தை விடாதவன்; பரசுராமர் முற்காலத்தில் சிறந்த அஸ்த்ரங்களைப் பிரயோகித்தும்வெல்லமுடியாதமகாவீரன். அவன் இப்போதுசிகண்டியினால் கொல்லப்பட்டான். அரசர்களே! என்மனம் எஃகினாற்செய்யப்பட்டிருக்கிறது; திண்ணம். என்அன்புள்ளபுத்திரனைப்பாராமல

ருந்தும் அது வெடித்துப்பேர்கவில்லையே. காசிப்பட்டணத்தில் வயம்வரத்திற்காகச்சேர்ந்திருந்த க்ஷத்திரியஜாதியான அரசர்களை வன் ஒருதேராளியாகி யுத்தத்தில் ஜயித்துக் கன்னிகைகளைக் கொண்டுவந்தான். பலத்தில் இவனுக்குச்சரியானவன் பூமிமுழுமை லும் எவனுமில்லை. அவன் சிகண்டியினால்கொல்லப்பட்டதைக் கட்டும் என்மனம் வெடிக்கவில்லையே. இந்தமகாத்மாவினால் பரசு ராமர் குருக்ஷேத்திரத்தில் அதிகப்பிரயாஸமில்லாமலே யுத்தத்தில் டிக்கப்பட்டார். அவன் இப்பொழுது சிகண்டியினால் கொல்லப்பட் ான் ' என்றாள். அப்போது, இவ்வாறு மிகுதியாகப்புலம்பும் அம் காகதியைப் பிரபுவான வாஸுதேவர் இன்சொல்லினால் தேற்றினார். சிறந்தவளே! தைரியப்படுத்திக்கொள். காட்சிக்கினியவளே! ர்யரப்படாதே. உன்னுடையஅந்தச்சிறந்தபுத்திரர் மேலானஉலகத் ற்குப் போனார். ஸந்தேகமில்லை. சிறந்தவளே! மிகுந்தபராக்கிரம ாலியான அவர் வஸுவாயிருப்பவர்; சாபதோஷத்தினால் மானிட ன்மத்தையடைந்தவர். அவரைப்பற்றி நீ துயரப்படவேண்டாம். தேவியே! அவர் க்ஷத்திரியதர்மத்தைப்பற்றிப் போர்க்களத்தில் த்தம்செய்து தனஞ்சயனால் கொல்லப்பட்டார்; சிகண்டியினால் கொல்லப்படவில்லை. பெரும்போரில் பாணத்தையெடுத்துக்கொண் ருக்கும் கௌரவப்புலியான பீஷ்மரையடிப்பதற்குத் தேவேந் ரனே நேரில் வந்தாலும் முடியாது. அழகியமுகமுள்ளவளே! உன் தல்வர் தம்மிச்சையினால ஸ்வர்க்கம்சென்றார். எல்லாத்தேவர்களும் சேர்ந்தாலும் யுத்தத்தில் அவரைக்கொல்லமுடியாதன்றோ! நதிகளிற் றந்தவளே! ஆதலால், அந்தக் கௌரவஸ்ரேஷ்டரைப்பற்றி நீ துய ப்படாதே. தேவியே! உன்னுடைய இந்தப்புத்திரர் வஸுக்களைச் சேர்ந்து விட்டார். துயரமற்றிரு' என்றார்.

மகாராஜரே! கிருஷ்ணனும் வ்யாஸரும் இவ்வாறு சொல் ப்பட்ட அந்தக் கங்காதேவி துயரத்தைவிட்டுத் தன்ஜலத்திற்குள் றங்கினாள். அரசரே! அந்தவாஸுதேவர்முதலான அரசரனைவரும் அந்தக்கங்காதேவியைப் பூஜித்து அவளால் விடைகொடுக்கப்பெற் த் திரும்பிச்சென்றனர்" என்றார்.

பீஷ்மஸ்வர்க்காரோஹணபர்வம் முற்றிற்று.

அநுசாஸனபர்வம் முற்றிற்று.